தொகுதி 01

ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம்

1950 வரை

CL. No. 894.8113
Acc No. 279321
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம்

(தொகுதி - 1)

1950ம் ஆண்டு வரை

UNIVERSITY OF JAFFNA LIBRARY
894.8113
ELA

R / MAIN / AH

REFERENCE

தொகுப்பும் பதிப்பும்:

கு.றஜீபன்
சி.ரமேஷ்
சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)
இ. இராஜேஸ்கண்ணன்

279321

279321

வெளியீடு:
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்.
2019

University of Jaffna
Library
279321

தலைப்பு:	ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம்
பதிப்பாசிரியர்கள்:	சு. ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) கு. றஜீபன் சி. ரமேஷ் இ. இராஜேஸ்கண்ணன்
முதற் பதிப்பு:	நவம்பர் 2019
பக்கங்கள்:	xxxiv + 1048
பிரதிகள்:	888
வெளியீடு:	பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்.
அச்சுப்பதிப்பு:	நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட் இல.693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 9893
ISBN:	9 789557 331072

வாழ்த்துச் செய்தி

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் ஈழத்து சிறுகதைக் களஞ்சியம் தொகுப்பு நூலுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன்.

இலங்கையின் எழுத்தாளர்களால் இதுவரை காலமும் எழுதப்பட்ட மற்றும் தற்சமயம் எழுதும் சிறுகதைகள் பல தொகுக்கப்பட்டு ஈழத்துச் சிறுகதைகள் என்ற ஆவணமாக வெளியிடுவது பாராட்டத்தக்கதாகும். கலைப்படைப்பாக்கங்கள் அந்தந்த சமூகத்தின் பண்பாட்டையும் வழமைகளையும் பிரதிபலிப்பவையாகும். 1950 ஆம் ஆண்டுவரை வெளியான சிறுகதைகளை முதல்பாகமாக வெளியிடு கின்றமை அன்றைய காலத்தின் நிலைப்பாட்டை இன்றைய சமூகத்தினர் அறியும் வாய்ப்பாக அமைகின்றது. இதிலிருந்து அன்றைய பண்பாடும் வழக்கங்களும் அறிந்து கொள்வதுடன், அவற்றிலிருந்து இன்றைய மாற்றங்களையும் இனங்கண்டு கொள்ளமுடிகின்றது. நேற்றைய சமூக நிலைப்பாடு இன்றைய சமூகத்தில் வரலாறு ஆகின்றது. வரலாற்றை அறிந்து கொள்வதில் இப்படைப்பாக்கங்கள் துணை புரிகின்றன. அந்த வகையில், பண்பாட்டு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் இவ் வெளியீடு பாராட்டுதற்குரியதாகும். இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் நூல்குழுவினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்.

வெளியீட்டுரை

தமிழில் களஞ்சியத் தொகுப்பு முயற்சிகள் பல காலமாக நிகழ்ந்து வருகின்றன. தென்னிந்தியாவில் கலைக்களஞ்சியம், வாழ்வியல் களஞ்சியம், அறிவியல் களஞ்சியம், அபிதானசிந்தாமணி போன்ற பாரிய களஞ்சியத் தொகுப்பு முயற்சிகள் இடம்பெற்றி ருக்கின்றன. இலங்கையில் இந்து கலாசார திணைக்களத்தின் இந்துக்கலைக்களஞ்சியம் எனும் தொகுப்பு முயற்சிக்குப் பின்னர் வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்பவற்று டன் இப்போது வெளியிடப்படும் ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம் என்பனவும் களஞ்சிய தொகுப்புமுயற்சியாக வெளிவருகின்றது. அகராதி தொகுப்பு முயற்சிக்குப் பின்னர் தமிழில் எழுந்த பாரிய தொகுப்பு முயற்சியாக, களஞ்சியங்களாக தொகுப்பு முயற்சிகளை வெளியிடுதல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இந்த வகையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இரண்டு களஞ்சியங்களின் தொகுப்பு முயற்சிகளை வெளியிட்டு இருப்பது ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த தொகுப்பு முயற்சிகளை பல காலமாக செய்துவருகின்றது. வடகிழக்கு மாகாணமாக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட "ஈழகேசரி சிறுகதைகள்" தொகுப்பு முயற்சி ஒரு பாரிய முயற்சியாகும். இதன் பின்னர் வடக்குமாகாணமாக பிரிவடைந்த நிலையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இத்தகைய பாரிய முயற்சிகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. வரலாற்றினை ஆவணப்படுத் தல் எனும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகள் ஈழத்திலக்கியத்தின் பல்வேறு இலக்கிய முயற்சிகளை அதன் வரலாற்றுப்புலத்தில் வைத்து ஆவணப் படுத்தல் முயற்சியில் ஈழத்து தமிழ்க்கவிதைக்களஞ்சியத்தினைத் தொடர்ந்து ஈழத்து சிறுகதைக்களஞ்சியம் அமைகின்றது.

இலங்கையின் இலக்கிய வரலாறு பல கனதியான இலக்கிய பங்களிப்புக்களை தமிழ் உலகிற்கு வழங்கி வந்திருக்கின்றது. அவற்றில் இலங்கையில் ஐரோப்பியர் வரு கையைத் தொடர்ந்து உருவாக்கிய புதிய இலக்கிய வடிவங்களில் ஒன்றான சிறுகதை ஈழத்து இலக்கியப் பரப்பினை வெகுவாகவே நிறைத்திருக்கின்றது. ஆனால் அதன் வரலாற்றுத் தொகுப்பு இதுவரை முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை. ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற அளவில் படைப்பாளிகளின் பெயர்களுடனான சிறு குறிப்பு டனேயே அமைந்திருக்கின்றது. அந்த வரலாற்றுத் தடத்தில் இருந்து ஈழத்து சிறுகதைக் களஞ்சியம் எவ்வாறு வேறுபடுகின்றது என்றால், இது வரலாற்று ஒழுங்கில் தொகுக் கப்பட்டிருப்பதோடு மட்டும் நின்றுவிடாது ஆசிரியரின் பெயர் அவர் பற்றிய

குறிப்புக்களோடு அன்றி அவர் எழுதிய சிறுகதைகளில் சிறந்த சிறுகதைகளைத் தெரிவு செய்து தொகுத்திருப்பதுதான் இதன் சிறப்பம்சம் ஆகும்.

மிக நீண்ட இலக்கிய வரலாற்றினையும் பெரும் எண்ணிக்கையான இலக்கிய ஆசிரியர்களையும் கொண்ட ஈழத்து சிறுகதை வரலாற்றில் இருந்து முதற்கட்டமாக 1950ஆம் ஆண்டுவரையான சிறுகதைகளை மட்டுமே இதன் முதல் பகுதியாக வெளியிடுகின்றோம்.

இந்த பாரிய தொகுப்பு முயற்சிக்கு அனுமதியளித்த கல்விஅமைச்சின் செயலாளர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இந்த முயற்சியில் ஈடுபட்ட பதிப்பாசிரியர்களான கு.றஜீபன், சி.ரமேஸ், சு.ஸ்ரீகுமரன், இ.இராஜேஸ்கண்ணன் (இயல்வாணன்) ஆகியோருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் இந்த தொகுப்பு முயற்சிக்கு பலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எனது நன்றிகள். ஈழத்து சிறுகதைக்களஞ்சியம் ஈழத்து சிறுகதை வரலாற்றினை ஆவணப்படுத்தி இருக்கின்றது. இலக்கிய உலகமும், ஆய்வுலகமும் இதனை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்லட்டும்.

திருமதி சுஜீவா சிவதாஸ்
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

பதிப்புரை

ஐரோப்பியர் வருகைக்குப்பின் தமிழகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, கல்வி அமைப்பில் ஏற்பட்ட பெருமளவு மாற்றங்களும் அச்சியந்திரத்தின் வருகையும் அதிலேற்பட்ட அதியுன்னத வளர்ச்சியும் நவீன புனைகதைகளுக்கு வித்திட்டன. கிழக்கிந்தியக் கம்பனியின் தோற்றமும் சென்னைக் கல்விச்சங்கத்தின் வளர்ச்சியும் இந்திய இலக்கியத்தின் மறுமலர்ச்சியும் தமிழகத்தில் சிறுகதைகள் வளர்வதற்குத் தூண்டுகோலாக அமைந்தன. குறிப்பாக, ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட கல்விமுறை இதனைச் சாத்தியப்படுத்தியது. குறிப்பாக, 1930களில் தமிழகத்தில் கல்லூரிப் பட்டப்படிப்பிற்கு "இன்றைய சிறுகதைகள்" என்னும் தலைப்பில் ரஸ்ய எழுத்தாளரான அன்டன் செக்காவ், பிரெஞ்சு எழுத்தாளரான மாப்பஸான் முதலான மேலைத்தேய எழுத்தாளர்களின் சிறுகதைகள் பாடங்களாக அமைந்திருந்தன. எட்கார் அலன்போ, வாஷிங்டன், ஹோர்தார்ன் முதலானவர்களின் கதைகளைத் தமிழக எழுத்தாளர்களைப் போன்று ஈழத்துச் சிறுகதையாசிரியர்களும் விரும்பிப் படித்தனர். அதனைப் படித்ததன் அருட்டுணர்வால் தாய்மொழி இலக்கியத்தில் புதிய வடிவங்களைப் படைக் கத் தொடங்கினர். அச்சியந்திரத்தின் பாவனை தனியாருக்கும் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் பத்திரிகைகள், சிறுசஞ்சிகைகள் வளர்ச்சியைப் பெற்றன. அவ்வகையில் இக்காலப் பகுதியில் மணிக்கொடி(1935), சூறாவளி(1939), பாரத தேவி(1939), பாரதமணி(1939), கலாநிதி(1939), கலாமோகினி(1942), சந்திரோதயம் (1945), முல்லை(1945) முதலான சிறுபத்திரிகைகள் தோன்றின.

ஆங்கில கல்வியின் பயனாக ஈழத்தில் கல்வியறிவும் அரசியல் உணர்வும் கொண்ட புதிய மத்திய நடுத்தர வர்க்கம் ஒன்று உருவாகியது. இலங்கையில் குறிப்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் தோன்றிய இம்மத்தியதர வர்க்கம் சீர்திருத்தக் கருத்துக் களையும் நவீன சிந்தனைகளையும் உள்வாங்கித் தம்மைப் புடம்போட்டுக் கொண்டன. 1833இல் உருவாக்கப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தம் ஜனநாயத்தின் கதவுகளைப் படிப்படியாகத் திறந்தது. மக்கள் தம் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வழி வகுத்த அச்சீர்திருத்தம் தனிமனித முக்கியத்துவத்தையும் உணரச் செய்தது. 1841இல் ஈழத்தில் தோன்றிய உதயதாரகைப் பத்திரிகைகளின் தோற்றமும் தமிழகப் பத்திரிகைகளின் காத்திரமான வருகையும் புதியது படைக்கவேண்டிய அவாவும் ஈழத்தில் சிறுகதைகளின் தோற்றத்துக்கு வித்திட்டன. இதன் காரணமாக ஈழத்தில் புனைகதைகள் பாங்கிலான இலக்கிய வடிவங்கள் தமிழில் தோற்றம் பெற்றன.

தமிழ்நாட்டைப் போலவே இலங்கையிலும் கதை சொல்லும் மரபு இருந்து வந்துள் ளது. தமிழில் ஆரம்பகாலத்தில் தோன்றிய இக்கதைகள், வாய்மொழிக் கதைகளாகவும்

கர்ணபரம்பரை இதிகாசக் கதைகளாகவும் காணப்பட்டன. இது போல விக்கிரமாதித்தியன் கதைகள், தென்னாலிராமன் கதைகள், மரியாதைஇராமன் கதைகள், மதுரை வீரன் கதை, அரபிக் கதைகள், தேசிங்குராஜன் கதை, ஈசாப்பின் நீதிக் கதைகள்(1853), மதன காமராஜன் கதைகள்(1855), முப்பத்திரண்டு புதுமைக் கதை(1869), மயில்ராவணன் கதை(1869), விவேகசாகரம்(1875), கதா சிந்தாமணி(1879) முதலான வாய்மொழியாக வழங்கி வந்த கதைகள் பல, நூல் வடிவில் அச்சுருப்பெற்று வெளியிடப்பட்டன. தமிழில் சிறுகதைகள் தோன்றுவதற்கு முன் எழுந்த ஆரம்பகாலக் கதைகள் இலக்கண விதிக்கமையாது வாழ்வின் மெய்மையில் இருந்து விலகியதாகவும் மிகை நவிற்சிப் பாங்கோடு எழுதப்பட்டதாகவும் நெகிழ்ச்சிப்பின்னல் உடையதாகவும் மாந்தர்களுக்கு இன்பமளிக்கும் விடயங்களைத் தன்பாற் கொண்டதாகவும் விளங்கின. இதனால் இவற்றை யாரும் சிறுகதைகளாகக் கொள்வதில்லை. உழைத்து உழைத்து ஓய்ந்த மாந்தர்கள் களைப்பைப் போக்குவதற்காக எழுதப்பட்ட இக்கதைகள் அன்றிரவே முடிவுறும் வகையில் சிறிய கதைகளாகவும் அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த உதயதாரகைப் பத்திரிகையில் 1857 முதல் 1881 வரை ஆசிரியராக இருந்த ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை 1820முதல்1895 காலப் பகுதிகளில் வாசகருக்குகந்த வகையில் சிறுகதைகளை எழுதினார். தமிழர்களுடைய பண்பாட்டில் நன்னெறிகளைப் போதனைகளாகப் புகட்ட வேண்டும் என்ற ஆவலில் எழுதப்பட்ட சிறுகதைகளாகவே இவையமைந்தன. 1869இல் தான் எழுதிய நாற்பது கதைகளைத் தொகுத்து "நன்னெறிக் கதாசங்கிரகம்" என்ற பெயரில் வெளியிட்டார். இச்சிறுகதைகள் சன்மார்க்க சாதனைக்கும் போதனைகளுக்குமுரிய விந்தைச் சிறுகதைகளாக அமைந்திருந்தன. இச்சிறுகதைகளின் துணைத்தலைப்பாகச் சேர்க்கப்பட்ட A collection Of moral Tales in tamil என்னும் ஆங்கில அடிகள் இதனை நினைவுகூர்கின்றன. ஆங்கில ஆசிரியர்களின் பாதிப்பில் இருந்து விடுபடாத நிலையினையே இது உணர்த்தி நிற்கின்றது. அக்காலத்தில் தமிழ்நாட்டில் ஆங்கிலத்தில் கற்ற மாணவர்கள் அம்மொழியில் பாண்டித்தியம் பெறுவதற்காக அடிசன் (Addison), ஸ்டீல் (Steele), டானியேல் டீஃபோ (Daniel Defoe) ஆகியோரால் அழகிய வசனங்களினால் எழுதப்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளை பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொண்டனர். இக்கட்டுரைகள் சிறு கதைப்பாணியில் எழுதப்பட்ட நன்னெறி உபதேசங்களாக அமைந்திருந்தன. இதனால் கவரப்பெற்ற ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை இதனைப் பின்பற்றி தன் சிறுகதைகளை அமைத்துக் கொண்டார். சதாசிவம்பிள்ளையால் எழுதப்பட்ட சிறுகதைகள் பல ஆங்கில மரபுக்கதைகளைத் தழுவி எழுதப்பட்டவையாக அமைந்திருந்தன. ஆயினும் இவருடைய சிறுகதைகளின் களங்களாக சென்னைப்பட்டணமும் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கிராமங்களும் அமைந்திருந்தன. பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி), சோ.சிவ பாதசுந்தரம் ஆகியோர் தாங்கள் இணைந்து எழுதிய "தமிழில் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்" என்னும் நூலில் இவரையே தமிழில் தோன்றிய முதல் சிறுகதையாசிரியராக விதந்து உரைப்பதாலும், கலாநிதி க.குணராசா தான் எழுதிய ஈழத்துச் சிறுகதை வரலாற்று நூலில் இவரையே ஈழத்தில் தமிழில் தோன்றிய முதல் சிறுகதை முன்னோடியாகக் கொள்வதாலும் இத்தொகுப்பும் இவருடைய சிறுகதைகளை முதலாவதாக வைத்து நோக்குகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் புதிதாக எழுத்தறிவாக்கம் பெற்றோரைக் குவியப்படுத்தி ஆக்கங்ககளை மேற்கொண்டோர்களில் முதன்மையானவர் திருஞானசம்பந்தப்பிள்ளை. யாழ்ப்பாணத்தின் சமய அசைவியக்கத்தை தர்க்கநிலையில் விளங்கிக்கொள்வதற்குரிய அறிகைத் தளங்களை உருவாக்கிய திருஞானசம்பந்தப்பிள்ளை மேலைப்புலோலி கணபதிப்பிள்ளை அவர்களின் மகனாக 1848 தை மாதம் எட்டாந் திகதி பிறந்தார். நாவலரிடம் இலக்கண, இலக்கியங்கள், சைவசித்தாந்த விளக்கங்களைக் கற்றுணர்ந்த இவர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை, சபாபதிநாவலர் முதலானோர்களிடமும் இலக்கணக் கல்வியைப் பயின்றவர். ஆங்கிலக் கல்வியின் பாண்டித்தியமே திருஞானசம்பந்தப்பிள்ளையை நாவலாசிரியராகவும், சிறுகதையாசிரியராகவும், நாடகாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் உயர்த்தியது. திருஞானசம்பந்தப்பிள்ளை "காசிநாதன் - நேசமலர்", "கோபால - நேசரத்தினம்", "துரைரத்தினம் - நேசமணி" முதலான தொடர்நவீனங்களை இந்துசாதனப் பத்திரிகையில் எழுதினார். முத்தனின் வாழ்க்கைப் படிநிலைகளை மையக்கருவாகக் கொண்டு எழுதப்பட்டு இந்துசாதனம் பொன்விழாமலரில் வெளிவந்த, "ஓம் நான் சொல்கிறேன்" சிறுகதையும், பல பிணக்குகளுக்கு முகம் கொடுத்து மைத்துனனைக் கரம்பிடிக்கும் சாந்தநாயகியின் வாழ்வை மையச் சரடாகக் கொண்டு எழுதப்பட்டுக், வச்சிரவிழா மலரில் வெளிவந்த "சாந்தநாயகி" சிறுகதையும் சம்பந்தப்பிள்ளையை சிறுகதையாசிரியராக இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது. விவரணப்பாணியில் சமய உணர்வைத் தூண்டும் வகையில் அறப்போதனைகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இவ்விரு சிறுகதைகளிலும் ஆசாரியசீலமும் மனிதநேயமும் விரவிக் கிடக்கின்றன.

1930 யூன் 22ஆம் திகதி வெளிவந்த ஈழகேசரி இதழ் சிறுகதைகளுக்கு முன்னுரிமை கொடுத்ததை அடுத்து ஈழத்தில் அளவில் சிறியவையாகவும் அமைப்பில் கட்டிறுக்கமும் கொண்ட கலையம்சம் நிறைந்த கதைகளை ஈழத்திலக்கிய அறிஞர்கள் படைக்கலாயினர். உருவப்பிரக்ஞையுடன் எழுதப்பட்ட இச்சிறுகதைகள் ஒருமைப்பட்ட உணர்வைக் காட்டக்கூடியனவாக அமைந்தன. 1930களில் நவீன உருவப் பிரக்ஞை கொண்ட சிறுகதை இலங்கையர்கோனால் எழுதப்பட்டு கலைமகள் இதழில் வெளிவந்தது. 1931இல் மலையகத்தைச் சேர்ந்த கோ.நடேசையர், "ஒரு இராமசாமி சேர்வையின் சரித்திரம்" சிறுகதையின் ஊடாக சிறுகதையுலகுக்கு காலடி எடுத்து வைக்கிறார். பிறருக்கு கூறும் உபதேசம் போல் அமையும் இச்சிறுகதை உழைப்பினால் உயர் நிலையை அடையலாம் என்பதை விளக்கி நிற்பதால் இதனைச் சிறுகதையாக ஏற்க மறுப்பாருமுளர்.

1934இல் சோ.நடராஜன் ஈழகேசரியில் எழுதிய "மாலினி" என்னும் சிறுகதை வாயிலாக தமிழ்ச் சிறுகதைத் துறைக்கு காலடி எடுத்து வைத்தவர். இதேயாண்டு ஆனந்த விகடன் இதழில் எழுதிய சோ.சிவபாதசுந்தரம் "தோட்டத்து மீனாட்சி" சிறுகதையைப் படைத்தார். இதனையடுத்து சு.நல்லையா "சுயா"என்ற புனைப் பெயரில் "அன்னை கட்டளையும் அதுதான்" என்ற சிறுகதை வாயிலாக இலக்கியவுலகுக்குப் பிரவேசித்தார். 1938இல் சம்பந்தன், ஆனந்தன், பாணன் போன்றோர் முறையே

"தாராபாய்", "ஹரிஜனங்களின் கண்ணீர்", "அவிந்த மலர்" சிறுகதை வாயிலாக அறிமுகமாயினர். 1939இல் சி.வைத்தியலிங்கம் "ஏன்சிரித்தார்" என்ற சிறுகதைக்கூடாக நாடறிந்த சிறுகதையாசிரியராகப் பிரவேசித்தார். இக்காலப்பகுதியில் பவன் "தியாகி" சிறுகதையினூடாக இலக்கியவுலகுக்குள் நுழைந்தார். துர்அதிஷ்டவசமாக இத் தொகுப்பில் ஈழத்தின் முதல் முன்னோடிகளான சோ.சிவபாதசுந்தரம், பவன், ஆனந்தன் ஆகியோர் முதன்முதலில் எழுதிய சிறுகதைகளைச் சேர்க்க முடியவில்லை.

1946பங்குனி மாதத்திலிருந்து 1948 ஐப்பசிமாதம் வரை வந்த 24மறுமலர்ச்சி இதழ்களில் 77கதைகள் வெளிவந்தன. இதில் மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், சிறு வருக்குரிய கதைகள், தொடர் கதைகள் முதலானவற்றை நீக்கிப் பார்ப்போமானால் 52 சிறுகதைகள் திட்பமும் நுட்பமும் வடிவ நேர்த்தியும் மிக்க சிறந்த சிறுகதைகளாகும். சமூகத்தில் உள்ள நம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் மையப்படுத்தி எழுதப்பட்ட இச்சிறுகதைகள் வாசகனின் ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் எழுதப்பட்டவை. மறுமலர்ச்சியில் எழுதிய இலங்கையர் கோனின் சிறுகதைகள் வெள்ளிப்பாதசரம் என்ற தலைப்பிலும், அ.செ.முருகானந் தத்தின் சிறுகதைகள் மனிதமாடு என்ற தலைப்பிலும், வரதரின் சிறுகதைகள் கயமை மயக்கம், வரதர் சிறுகதைகள் என்ற தலைப்புக்களிலும், சொக்கனின் சிறுகதைகள், சொக்கன் சிறுகதைகள் என்ற தலைப்பிலும் நூலுருப் பெற்றிருந்தன. ஆனால் மறுமலர்ச்சியில் எழுதிய க.பெரியதம்பி, இராஜநாயகம், பவன், சிவபாதசுந்தரம் முதலா னோரின் சிறுகதைகள் நூலுருப் பெறாத நிலையில் அவர்களுடைய சிறுகதைகளை இந்நூல் ஓரளவுக்குப் பூர்த்தி செய்துள்ளது.

ஆரம்பகால நாவல்களைப் போல் ஈழத்தில் வெளிவந்த ஆரம்பகாலச் சிறுகதை களின் தலைப்புக்களும் இரட்டைப் பெயர்களுடனேயே வெளிவந்துள்ளன. செ.சந்திர பாலகணேசனின் "கமலதீபம் அல்லது நாற்றச்சிப்பியின் நல்லமுத்து", "பொன்னழகு மைந்தன்" எழுதிய "கமலாவின் கனவு அல்லது கதருடைக் காதல்" முதலான சிறு கதைகள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டு.

உருவப்பிரக்ஞையுடன் எழுதப்பட்ட ஆரம்பகாலச் சிறுகதைகளின் பொது வான போக்கு அவை கடந்தகால வரலாற்றுச் சம்பவங்களை உணர்த்துவதுடன் புராண, இதிகாச சம்பவங்களுடன் தொடர்புபட்டதாகவும் காணப்பட்டன. இயேசுவின் நெருங்கிய சீடரான மதலேனா மரியாவின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டு கலைமகள் இதழில் எழுதப்பட்ட இலங்கையர்கோனின் மரியமதலேனா சமூகத்தில் பெண் கெட்டுப்போவதற்கு காரணம் ஆண்களே என்பதை எடுத்துரைக்கிறது. ஆண்கள் தூய்மையானவராக இருக்கும் வரை பெண்ணும் கற்புள்ளவளாக மதிக்கப்படுவாள் என்பதனை இலங்கையர்கோனின் இச்சிறுகதை எடுத்துரைக்கின்றது. சி.வைத்திய லிங்கத்தின் பூதத்தம்பிக்கோட்டை நெடுந்தீவுக் கடற்கோட்டையின் வரலாற்றுச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலகங்களையும், போர்த் துக்கீஸருக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் ஏற்பட்ட போர் ஏற்படுத்திய தாக்கங் களையும், அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அரச அதிகாரிகள்

எதிர்கொண்ட சிக்கல்களையும் இச்சிறுகதை விளக்கி நிற்கிறது. சம்பந்தனின் "தாரா பாய்" மராட்டிய மன்னனான வீரசிவாஜியின் அரசாட்சியையும், அவனது படை வீரர்களில் ஒருவரான பிரதாப்ராவின் வீரத்தையும், அவனது காதலியான தாராபாயின் நாட்டுப்பற்றையும் சித்திரித்துச் செல்கிறது. இராஜ்கோட் மன்னனால் நஞ்சிட்டு வஞ் சகமாகக் கொல்லப்பட்ட கணவனை இழந்த மோவார் நாட்டு அரசி பவானி இராஜ் கோட் படைகளுக்கு எதிராகப் போர் செய்து களப்பலியாவதை எடுத்து விளக்கும் சிறுகதையே செ.நடராசாவின் "ராணி பவானி", சரித்திரம், புராணம், இதிகாசக் கருத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்ட இச்சிறுகதைகளைப் போல் ஈழகேசரிப் பத்திரி கையில் பதினெட்டுச் சரித்திரச் சிறுகதைகள் வெளிவந்ததும் இங்கு நினைவுகூரப் படுகிறது. பரதவன் ஒருவனால் உருவாக்கப்பட்ட மாயக்குதிரையின் சாகசங்களை உள் வாங்கி எழுதப்பட்ட பண்டிதர் இராஜ ஐயனாரின் "மாயக்குதிரை" கடின மொழிநடை யில் வாசக நோக்கைக் கருதாது சந்தி பிரித்து புணர்த்தி எழுதப்படாத சிறுகதை. இச்சிறுகதை எளிய வாசிப்புக்குகந்ததல்ல. ஆயினும் இவரால் எழுதப்பட்ட "அவன்" முதலான சிறுகதைகள் கனக செந்திநாதன் முதலானோரால் சிலாகித்துப் பேசப்படும் சிறுகதைகளாக உள்ளன.

1930களில் இருந்து 1958வரை வெளிவந்த ஈழகேசரி நாளிதழில் 513சிறுகதைகள் இடம்பெற்றதாக அறியப்படுகிறது. அவ்விதழில் வெளிவந்த அத்தனை சிறுகதை களையும் இத்தொகுப்பில் இணைக்க முடியாது. காரணம் சுயா (38 சிறுகதைகள்), வ.அ.இராசரத்தினம் (28 சிறுகதைகள்) பவன் (12 சிறுகதைகள்) கு.பெரியதம்பி, அ.செ. முருகானந்தன் (18 சிறுகதைகள்), கசின் (14சிறுகதைகள்), வரதர் (28சிறுகதைகள்), இலங்கையர்கோன் (10 சிறுகதைகள்) ஆனந்தன் (9சிறுகதைகள்) முதலானோர் ஏராள மான சிறுகதைகளை இப்பத்திரிகையில் எழுதியுள்ளனர். ஈழகேசரிப் பத்திரிகையில் புனை பெயரில் எழுதிய பலரை இனங்காண முடியவில்லை. பாணன், விஜயன், சரஸ்வதிதாசன், சரஸன், உமா, கஜமுகன், த.தீ.சீ, பவன், வடிவு முதலானவர்களை இனங் காண முடியவில்லை. தொகுப்பாளரின் ரசனைக்கு ஏற்ற வகையிலேயே இச்சிறு கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன், 1950 களுக்கு முன் வெளிவந்த தினகரன், வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளைப் பெறுவதற்குப் பெருந்தொகை யான பணம் தேவைப்பட்டமையாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் நூலக ஆவணக் காப்பகம் சென்று உரிய பத்திரிகைகளைப் பெறுவதில் இடர்பாடுகளை எதிர் நோக்கியமையாலும் அப்பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் இத்தொகுப் பில் இடம்பெறவில்லை.

குறிப்பிட்ட பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் வகையில் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் நோக்கில் ஈழத்துச் சிறுகதைகள் தோன் றின. சமய காலாசார நிகழ்வுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என பிரதேச மண் வாசனையுடன் எழுதப்பட்ட ஆரம்பகாலச் சிறுகதைகள் பிரதேச மொழிகளை உள் வாங்கி எழுதப்பட்டன. மனித மனங்களின் உணர்வுகளை முதன்மைப்படுத்தி வெளி வந்த தொடக்க காலச் சிறுகதைகள் வாசகருக்கு ஈர்ப்பை அளிக்கும் வகையில் கதை சொல்லலை முதன்மைப்படுத்தின. தொடக்கம், மையம், முடிவு என நேர்கோட்டுத்

தன்மையில் எழுதப்பட்ட இச்சிறுகதைகள் வாசகனுக்கு நிறைவைத் தரும் வகையில் வாசித்து முடித்தவுடன் நிறைவடைந்து விடுகின்றன. கருத்தியல் ரீதியாக பல்வேறு விடயங்களைப் போதிக்க முனையும் இச்சிறுகதைகள் எவ்வித மனக்கிளர்த்தலையும் அளிப்பனவல்ல. சமூக உறவுகளை முன்வைத்து எழுதப்பட்ட சிறுகதைகள் மரபு வழிப்பட்ட குடும்ப வாழ்வில் உறவுகளுக்கிடையே நிகழும் காதல், பிரிவு, ஏமாற்றம், பாசம் என ஒரே வட்டத்தினுள்ளேயே சுழலும் இயல்புடையன.

மனித மனங்களின் நுண்ணிய மென்மையான உணர்வுகளை, ஆண், பெண் உறவுகளில் ஏற்படும் மனவிரிசல்களை, கருத்துவேற்றுமைகளை உணர்வுரீதியான மனப் போராட்டங்களைத் தம் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர்களில் முக்கியமானவர் இலங்கையர்கோன். இவருடைய வெள்ளிப்பாதசரம், சக்கரவாகம் முதலான சிறு கதைகள் கணவன், மனைவி உறவை நுண்ணியமுறையில் சித்திரித்துச் செல்கின்றன. மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் போராடும் செல்லம்மாளுக்கும் அவளுடைய கணவன் பிரம்மநாயகம்பிள்ளைக்கும் இடையில் நிலவும் உன்னத உறவை வெளிப் படுத்தும் புதுமைப்பித்தனின் “செல்லம்மாள்” சிறுகதையுடன் ஒப்பிட்டு நோக் கத்தக்கது. தெய்வானை சுகவீனமுற்றிருந்த நிலையிலும் அவள் இறந்த நிலையிலும் அவள் கணவன் வேலுப்பிள்ளை அவள் மீது கொண்ட பற்றுப்பாசத்தைச் சித்திரிக்கும் இலங்கையர்கோனின் சக்கரவாகம் சிறுகதை கச்சிதமான வடிவமைப்புக்கூடாகத் தன்னை நிலைப்படுத்திக் கொண்ட சிறுகதையாகும். மனோவோட்டத்தின் வழி சம்ப வங்களை அடுக்கி கதைசொல்லும் போக்கு இலங்கையர்கோனின் சிறுகதைகளில் வெளிப்பட்டன.

ஈழத்துச் சிறுகதைகளில் உருவ, உள்ளடக்கங்களை ஆழமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தியவர்களுள் சம்பந்தன் முக்கியமானவர். மொழிவழி எளிமையாகக் கட்டமைக்கப்பட்ட கதையாடல் சம்பந்தனுக்கு இயல்பாகவே கைகூடியுள்ளது. பிரக்ஞை பூர்வமான முறையில் மக்களின் வாழ்க்கை முறையை சிறுகதைகளில் வெளிப் படுத்திய சம்பந்தன் மனிதவாழ்வின் அபத்தங்களையும் அவலங்களையும் சிறுகதையில் அமையும் பாத்திரம் தொடர்ந்து நெருக்கடிக்குள்ளாகும் தருணங்களையும் மென்னுணர்வோட்டத்தில் வெளிப்படுத்தியவர். வடிவம், நேர்த்தி, செறிவு, நுட்பம் என்னும் தன்மையில் கட்டுறும் சம்பந்தன் பெரும்பாலான சிறுகதைகளின் பேசு பொருள் உண்மையின் தேடலாக அமைந்தன. இவரது “மதம்” சிறுகதை தமிழ்நாட்டில் நிகழ்ந்த இந்து முஸ்லிம் இனக்கலவரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். இரண்டு உள்ளங்களின் இணைபிரியாத பந்தத்தை எவ்வித மிகைப் படுத்தலுமின்றி உணர்வுபூர்வமாக இச்சிறுகதையில் முன்வைக்கிறார். இவருடைய சிறுகதைகளில் ஆத்ம தத்துவ விசாரம் அழுத்தமாகப் பதிந்திருக்கும். சந்தர்ப்பவாத சூழ்நிலையால் மனிதன் எதிர்கொள்கின்ற அனுபவங்களை காரண காரியத் தொடர் புடன் இணைத்து வாழ்வின் நுட்பமான தருணங்களை தம் சிறுகதைகளில் வெளிப் படுத்தியவர் சம்பந்தன். மனித வாழ்வின் முக்கிய தருணங்களான மரணம் மற்றும் திருமண ஊர்வலங்களை ஒரு புள்ளியில் இணைத்து தர்க்கபூர்வப் புனைவை “இரண்டு ஊர்வலங்கள்” சிறுகதையில் சாத்தியமாக்கியவர்.

பழமையின் நல்ல அம்சங்களை உள்வாங்கிக் கொண்டு அதில் புதுமைகளைப் புகுத்திய, அழகுசெல்வமுருகானந்தம் என்ற இயற்பெயரைக் கொண்ட அ.செ.மு.வின் சிறுகதைகளில் பிரச்சாரவாடை சிறிதும் இல்லை. அவருக்கு முன்னுள்ள "அ" என்பது அளவெட்டியைக் குறித்து நிற்கும் என உரைப்பாருமுளர். மறுமலச்சி எழுத்தாளரான அ.செ.மு. நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். பீஸ்மன், யாழ்தேவி, முருகு, நீலாம்பரி, காங்கேயன், கதிரவன், மயிப்புறவம், சோபனா, இளவேனில், தனுசு, கத்தரிக்குறளி, மேகலை, போர்வீரன், வள்ளிக்காந்தன் என்னும் புனைபெயர்களால் அறியப்பட்டவர். கிராமத்து மனிதர்களை யாழ்ப்பாணத்தின் பண்பாட்டுச் சூழலுடன் இணைத்துக் கதை சொன்னவர்களில் முதன்மையானவராகக் குறிப்பிடத்தக்கவர். இவரின் கிராமப்புறத்து இறைப்பிலே தொடங்கும் "வண்டிச்சவாரி" சிறுகதை வல்லிபுரக் கோயிலுக்கு வண்டி கட்டிச் செல்வதில் நிகழும் சம்பவங்களை விபரித்து, அதனால் தொடங்கும் வழக்கில் செல்லையா அண்ணை வெற்றி பெற்று "பூச்சியன் கந்தையாவின் திமிரை அடக்குவதோடு கதை நிறைவுக்கு வருகிறது. யாழ்ப்பாணப் பேச்சுவழக்கோடு தொடங்கும் ஒவ்வொரு அத்தியாயமும் நறுக்குத் தெறித்தாற் போல் அளவோடு எழுதப்பட்டுள்ளது. அ.செ.மு அக்காலத்தில் நிலவிய ஊழல்களைத் தம்சிறுகதைகள் வாயிலாகக் கண்டித்தார். பொய்புரட்டின்றி வியாபாரம் நேர்மையோடு செய்யப்பட வேண்டும் என்பதை குழந்தைக்கும் தகப்பனுக்கும் இடையில் நிகழும் உரையாடல் மூலம் கூற விளைவதே "வியாபாரியார்" சிறுகதையாகும். கண்டியை இறுதியாக அரசு செய்த ஸ்ரீவிஜயராஜசிங்கன் காலத்தில் இருந்த சிங்கக்கொடி எப்படித் தேசியக் கொடியாக உருமாற்றம் செய்யப்பட்டது என்பதை விளக்கி நிற்கும் "சிங்கக்கொடி சிரித்தது" சிறுகதை கேலியும் கிண்டலும் நிறைந்த அங்கதத் தொனியில் எழுதப்பட்டது. மகாஜனக் கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே ஸ்ரீவிஜயராஜசிங்கன் குறித்து தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த ஆனந்தபோதினி பத்திரிகையில் "கண்டிக் கடைசி அரசன்" என்ற உரைச் சித்திரத்தையும் எழுதியிருந்தார். சில்லையூர் செல்வராசனின் "கதவு திறந்தது" சிறுகதையும் தமிழனுக்குச் சிங்கக்கொடியின் தேவையை தர்க்க ரீதியாகப் பரிசீலிக்கிறது. தமிழனுக்குச் சிங்கக்கொடி வேண்டாம்" என்பதையும் எடுத்துரைக்கும் இச்சிறுகதை அரசியல்வாதிகள், பதவிப்பித்தர்களின் மத்தியில் அரசியல் சுழலில் அகப்பட்டு இலட்சியத்துக்காக வாழ்வைத் தொலைத்தவனின் கதையை எடுத்துரைக்கிறது.

மாண்புடைய மாட்சி மிக்க சமூகத்தைப் படைக்க எண்ணியதன் விளைவே மறுமலர்ச்சி எழுத்தாளரான வரதரின் சிறுகதைகள். சமூக அநீதிக்கு எதிராக ஒலித்த வரதரின் சிறுகதைகள் ஆண், பெண் உறவுச்சிக்கல்கள், குடும்ப வாழ்வின் பிணக்குகள், பேதங்களைக் கடந்த இலட்சியக் காதல் என்பனவற்றைப் பேசுபொருளாகக் கொண்டவை. வரதரின் "விபச்சாரி", "பாஞ்சாலிதேவி பதிவிரதையான கதை" இவ்விரு கதைகளும் ஆண், பெண் இருசாராரின் அகம்சார் உணர்வுச் சிக்கலையே பேசுகின்றன. சுப்பையாக் கிழவருக்கு வாழ்க்கைப்பட்ட செல்லம்மா மீது நல்லதம்பி விதானையாரின் பேரப்பிள்ளை கொள்ளும் பொருந்தாக் காதலை எடுத்துரைக்கும் "பாஞ்சாலிதேவி பதிவிரதையான கதை" மனிதவாழ்வின் யதார்த்தத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. மறு

மலர்ச்சி இதழில் வெளிவந்த வரதரின் சிறுகதைகளில் பெண் விடுதலை, ஆடவரின் வேட்கை, சமூகவிடுதலை, கயமை மயக்கம் முதலான பண்புகளைக் காணலாம். திரு மணமான ஆடவனொருவன் பெண்மீது கொண்ட வேட்கையை அங்கதமாக "ஜோடி" சிறுகதை தனிமனித உள்ளுணர்வுத் தளத்தில் கூறிச்செல்கிறது. சமூகத்தின் உயர்வை எண்ணி இலட்சியமாந்தரைப் படைத்து அதன்வழி சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை தன் சிறுகதைகளில் புகுத்தியவர் வரதர். உணர்திறன் கொண்ட அனுபவங்களை, மனித அவலங்களை, ஒழுக்கச் சிதைவுகளை மனித நேயத்தோடும் சமூக அக்கறையோடும் தம் படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

மீனா, அசோகன் என்ற பெயரில் எழுதிய தாளையடி சபாரத்தினம் தமிழன் இத ழில் "ஊமைப்பெண்" என்ற முதல் சிறுகதையை தன் பதினேழாவது வயதில் எழுதி னார். 1947ஆம் ஆண்டு கல்கி பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரின் "புதுவாழ்வு" என்ற சிறுகதை மூன்றாம் பரிசைப் பெற்றது. அ.செ.முருகானந்தத்துடன் இணைந்து திருகோணமலையில் "எரிமலை" என்ற பத்திரிகையை நடத்திய இவர் வீரகேசரி ஞாயிறு பத்திரிகையிலும் பணியாற்றியவர். இவருடைய புதுவாழ்வு, மறந்து விடாதே என்ற இருசிறுகதைத் தொகுப்புக்கள் வெளி வந்துள்ளன. மனித மனங்களில் இயல்பாகத் தோன்றும் அன்பு, கருணை, இரக்கத்தை தன் சிறுகதைகளுக்கூடாக வெளிப்படுத்தியவர் தாளையடி சபாரத்தினம். ஆலமரத்தை அண்டிப் பிழைக்கும் பிச்சைக்காரிக்கும் அவளோடு இணைந்து வாழும் நாய்க்கும் இடையிலான பரஸ்பர உறவுநிலைகளை எடுத்துரைக்கும் இவருடைய "ஆலமரம்" சிறுகதை ரயில்வண்டிப் போக்குவரத்தால் கிராமத்தின் இயல்புநிலை பாதிக்கப்படுவதையும் வலியுறுத்தி நிற்கி றது. இவரின் "சடையம்மா" சிறுகதை கணவன், மனைவிக்கிடையில் குழந்தையின்மை யால் ஏற்படும் உளவியல் சிக்கல்களைக் கூற விழைகிறது. சிறுவயதில் அறியாமல் செய்த தவறு ஆண், பெண் உறவு நிலையில் ஏற்படுத்தும் விரிசல்களைக் கூற முற்படுவதே "தெருக்கீதம்". இவரின் பாத்திரங்கள் தூய மனநிலையுடையவர்களாகவும் உண்மை யின் பாற்பட்டு வாழ்பவராகவும் காணப்படுகின்றனர். மனிதநேயங் கொண்ட சமுதா யத்தைக் காணவிழைந்ததன் வெளிப்பாடே இவரின் சிறுகதைகள்.

ஈழத்தில் நவீன இலக்கியப் போக்கும் தேசியவாதமும் முனைப்புப் பெற்ற ஈழகேசரிக் காலத்தில் புதுமையும் பொலிவும் கொண்டு சிறுகதைகளைப் படைத்தவர் க.சொக்கலிங்கம் எனப்படும் சொக்கன். ஆவரங்காலில் பிறந்து நாயன்மார்கட்டில் வாழ்ந்த சொக்கன் 1944களில் படிக்கின்ற காலத்திலேயே "குப்பையிலே மாணிக்கம்" என்ற சிறுகதையை எழுதியவர். இக்காலப்பகுதியிலேயே இவருடைய "தியாகம்" சிறு கதை வீரகேசரியில் பிரசுரமானது. இவருடைய சிறுகதைகள் அரசியல், சமூகம், வர லாறு எனப் பல்பரிமாணங்களைக் கொண்டவை. கருணை, இரக்கம், மனிதா பிமானத் துள் கட்டுண்ட இலட்சியப் படைப்பாக இச்சிறுகதைகள் விளங்குகின்றன. இவர் மறுமலர்ச்சியில் எழுதிய "பொன்பூச்சு" அக்காலப்பகுதியில் சாதியத்தால் உண்டான சமூக ஏற்றத்தாழ்வுகளைச் சித்திரிக்கிறது. ஆண், பெண் இருபாலானவருக்கிடையே ஏற்பட்ட தகாத உறவு ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்த பெண்ணுடைய வாழ்வைச் சீர்குலைத்துப் போட்டதை சொக்கனின் "பொன்பூச்சு" உணர்த்தி நிற்கிறது. கதை

அம்சத்திலும் கதை எழுதிய பாணியிலும் ஈழகேசரியில் இவர் எழுதிய "மாணிக்கம்" சிறுகதையே சிறந்து ஓங்கி நிற்கிறது என்பார் கனக.செந்திநாதன். 1946இல் மலையகத்தில் இருந்து வெளிவந்த மின்னொலி சஞ்சிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதி முதல் பரிசைப் பெற்ற சிறுகதையே "கடைசி ஆசை". இவருடைய சிறுகதைகளில் நாடகப் பண்புகளும் சம்பவ முக்கியத்துவமும் பாத்திரங்களின் உரையாடலும் மிகுதியாகக் காணப்படும். துட்டகைமுனுவின் இறுதிக்கால வாழ்வைச் சித்திரிக்கும் "கனவுக்கோயில்" சிறுகதையே இதற்குத் தக்க சான்றாகும். ருவான்வெலியின் எழுச்சியும் அது படைக்கப்பட்ட நோக்கமும் கதையின் காட்சிப் புலங்களாக விளங்குகின்றன.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் பிறந்த சோமசுந்தரம்பிள்ளை சிவபாதசுந்தரம் "சிவா" என்கின்ற புனைபெயராலும் அறியப்பட்டவர். 1938 முதல் 1942வரை ஈழகேசரியில் பணியாற்றிய சோ.சிவபாதசுந்தரம் ஈழகேசரியில் "பரிசுக்கட்டுரை", "வள்ளியின்கனவு", "பொன்னர் செத்த கதை", "வைரவர் கோயில் விளக்கு" முதலான சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவருடைய முதற் சிறுகதையான "தோட்டத்து மீனாட்சி" ஆனந்த விகடன் இதழில் வெளிவந்தது. நடப்பியல் உத்தியை உள்வாங்கி எழுதப்பட்ட இச்சிறுகதை வடிவத்தாலும் பொருளாலும் சிறந்து விளங்குகின்றது. கணவன், மனைவி இருவருக்குமிடையில் கதையெழுதும் போட்டியால் விளையும் உள்முரண்பாடுகளைச் சித்திரிக்கும் இவருடைய "பரிசுக்கட்டுரை" என்ற சிறுகதை வடிவமைப்பாலும் கதைசொல்லும் நேர்த்தியாலும் சிறந்து விளங்குகின்றது. அளவுக்கதிகமான பொன்னைச் சேர்த்த பொன்னர் தான் கொடூரமாகக் கொல்லப்படும் கனவை இரை மீட்பதாக "பொன்னர் செத்த கதை" என்ற சிறுகதை அமைய "வள்ளியின் கனவு" சிறுகதை கதிர்காமத்துக்குச் செல்லும் போது முருகனுக்கும் வள்ளிக்கும் இடையிலான நெருங்கிய பந்தத்தைக் கூறி நிற்கிறது. ஒற்றுமையான குடும்பவாழ்வில் ஏற்படும் சிறு பிணக்கினால் கணவனைப் பிரிந்து வாழும் பெண்ணின் மனோநிலையை, அவளின் அங்கலாய்ப்பை தன்னுணர்வுத் தளத்தில் விளக்கி நிற்கும் சிறுகதையே "வைரவர் கோயில் விளக்கு". குறித்த ஒரு சம்பவத்தால் மனிதமனம் படும்பாட்டை பாத்திரங்களின் இயங்குநிலைக்கூடாகத் தன் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர் சோ.சிவபாதசுந்தரம்.

யதார்த்த நிலையில் மரபு வழிப்பட்ட கதை சொல்லிகளான பொ.கதிராயிதேவி, பத்மாதுரைராஜா முதலியோர் மறுமலர்ச்சிச் சிறுகதைகளுக்கூடாக அறியப்பட்டவர்கள். இவ்விருவரின் உண்மைப் பெயர்களையும் அறியுமாறில்லை. கடினமாகப் படித்தும் பரீட்சையில் தேறமுடியாத காரணத்தால் எழுத்துலகுக்கு வந்த ஆசிரியர் ஒருவரின் வாழ்வியற் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு பொ.கதிராயிதேவியினால் எழுதப்பட்ட "சகுந்தலா சொன்னது" சிறுகதை வாழ்வின் துயரை மறக்க எழுத்து உந்துசக்தியாக அமைவதை படைப்பாளனின் உரையாடல்வழி உணர்த்தி நிற்கிறது. ஒருசதம் கூட உழைக்க முடியாது தடுமாறும் வயதான ஏழை உழைப்பாளியின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட பத்மாதுரைராஜாவின் "உப்பும்

சர்க்கரையும்" சிறுகதை வறுமைப்பட்ட மனிதனின் அனுபவக் கருத்தியல் ஒழுங்குடன் வடிவமைக்கப்பட்டதாகும்.

இலங்கையர்கோனின் எழுத்தினால் ஈர்க்கப்பட்டு எழுத்துலகில் பிரவேசித்த வ.ஐ.இராசரத்தினம் மகாவலிகங்கை கடலோடு கலக்கும் கொட்டியாரப்பற்று மக்களின் வாழ்க்கையையும் காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த அக்கிராமத்தின் அழகையும் அங்கு வாழும் மக்களின் வட்டார வழக்கையும் மனிதநேயங்களின் ஒளிக்கீற்றையும் தன் சிறுகதைகளில் சிறப்பாகக் கையாண்டவர். யுத்தம் அவர் எழுதிய ஆவணங்களையும் அவருடைய பதிப்பகத்தையும் அழித்த நிலையில் எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரையின் மகன் அனுரா வ.ஐ.இராசரத்தினத்தின் கதைகளை ஒன்று திரட்டி நூலாக வெளியிட முற்பட்ட வேளையில் தன் சிறுகதைகளைத் தேட அவர் பட்ட அவலத்தை "ஒரு காவியம் நிறைவு பெறுகிறது" தொகுப்பின் முன்னுரையில் குறிப்பிடுவார். யாழ்பாணத்திலுள்ள குரும்பசிட்டி பொன்னையாவின் நினைவு மன்றம் சென்று ஈழகேசரியைப் பெறமுடியாத நிலையையும் சுவடி காப்பகம் சென்று நீண்ட நாட்கள் தங்கியிருந்தும் தன் சிறுகதைகளைப் பெறமுடியாது வருந்திய, துயருற்ற கையாலாகாத தன் நிலையை உருக்கமாகப் பதிவு செய்கிறார். பின்னர் 1952க்கு முன் தான் எழுதிய ஆரம்ப காலச் சிறுகதைகள் பலவற்றைத் தவிர்த்து கிடைக்கப் பெற்ற சிறுகதைளைக் கொண்டு அவரின் தொகுப்பு நூல் "ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது" வெளிவந்தது. அவரின் தொகுப்பில் இடம்பெறாத ஐந்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இவருடைய தோணி சிறுகதைத் தொகுதி பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட பதினான்கு சிறுகதைகளை உள்ளடக்கி வெளிவந்தது. ஆயினும் அத்தொகுப்பில் 1950களில் எழுதப்பட்ட "பாலன் வந்தான்" என்ற ஒரே ஒரு சிறுகதை மட்டுமே இடம்பெறுகின்றது. நத்தார் தினத்தில் இயேசுபாலனின் வரவை எதிர்பார்த்து, காத்திருந்து ஆசை நிறைவேறாது தோற்றுத் துவண்டு தூங்கும் ஒரு குழந்தையின் உள்ளத்தை இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. இறையுணர்வுமிக்க கிராம மக்களின் நடப்பியல் வாழ்வை உள்வாங்கிப் பயணிக்கிறது இச்சிறுகதை.

பாடசாலை ஒன்றில் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் இருவருக்கிடையில் நிகழும் அகமனச்சிக்கல்கள் மற்றும் உணர்வுப் பரிமாற்றத்தைக் கோடிட்டுக் காட்டும் "இதயதாபம்" சிறுகதை நனவோடை உத்தியைக் கையாண்டு எழுதப்பட்டது. ஆழ்மனத்தின் அந்தரங்க ஆசையை வெளிப்படுத்த முனைந்து தோற்றுப் போன பெண் ஆசிரியரின் அடிமன வேட்கையும் தன் மீது வேட்கைகொண்ட சக ஆசிரியரின் மன நிலையை அறிய முடியாத ஆசிரியரின் அங்கலாய்ப்பும் மென்னுணர்வுத் தளத்தில் எடுத்துரைக்கப்படும் சிறுகதையாக வ.அ.இராசரத்தினத்தின் இதயதாபம் காணப்படுகிறது.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் குடும்பத்தின் வாழ்வை, அதன் நிம்மதியை கடுமையாகச் சீர்குலைக்கின்றன. குறைந்த சம்பளத்தோடு வாழ்வைத் தொடர்ந்து நடாத்த முற்படும் வேளையில் நடுத்தர மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைகள் பல எழுந்துள்ளன. வ.அ.இராசரத்தினத்தின்

"வாழ்க்கை" சிறுகதை குறைந்த சம்பளத்தில் அல்லலுற்று குடும்பம் நடாத்த முனையும் நடுத்தர மாந்தரின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையா கும். பொருளாதாரக் கஷ்டத்தால் சிற்றூண்டிச்சாலையில் உணவை ஒறுத்து வாழ முற்படும் ஒருவன் சக ஊழியர்களின் கேலிப் பேச்சால் உணவை நாடும்போது அவன் தன் குடும்ப வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களை மையச்சரடாகக் கொண்டு பின்னப்பட்டதே இச்சிறுகதை ஆகும். மத்தியதர வர்க்கத்தின் சமூக அந்தஸ்தை வறுமை விழுங்கிக் கொள்வதை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை அதனடியில் எழுந்த மனநிலையை கதை மாந்தரின் தனிப்பட்ட அனுபவமாகத் தன் சிறுகதையில் எழுதியவர் நடமாடி. கே.வி.இராசரத் தினம் என்ற இயற்பெயரையுடைய நடமாடி நாடகத்துறையிலும் சாதித்தவர். சிற்பி சரவணபவனுக்கு முன் "கலைச் செல்வி" என்ற பெயரில் பன்னிரண்டு இதழ்களை வெளியிட் டவர். நடமாடியின் முதற்கதை 1951இல் வெற்றிமணி இதழில் வெளிவந்தது எனக் க.குணராசாவின் ஈழத்துச் சிறுகதை வரலாறு நூல் கூறினாலும் இவரின் முதற் கதையான "பஞ்சப்படி" 3.12.50 "ஈழகேசரி" யில் வெளிவந்தது. அரசாங்கம் வழங்கும் பஞ்சப் படியை அடிப்படையாகக் கொண்டு ஒரு கல்யாணத்தரகர் எவ்வாறு பிழைத்துக் கொள்கிறார் என்பதை அங்கதமாகக் கூறி நிற்கும் இச்சிறுகதை ஒருமையும் அர்த்தமும் கொண்டது. பத்திரிகை ஒன்றில் இடம்பெற்ற கவர்ச்சிகரமான சுவாரசியமான செய் தியை மையச்சரடாகக் கொண்டு பின்னப்பட்ட இச்சிறுகதை தூண்டுணர்ச்சி (motive) குறிக்கோள் (purpose), செயல் (action) ஆகியவற்றின் ஒருமைப்பாட்டில் தன்னை நிலைப்படுத்திக் கொள்கிறது.

சரஸன், சரஸ்வதிதாசன் என்ற புனைபெயரில் எழுதியவர் ஒருவர்தானா என் பதை அறியமுடியவில்லை. ஆனால் இருவருடைய சிறுகதைகளையும் உற்று நோக்கும் போது ஒத்த தன்மைகள் பல காணப்படுகின்றன. இவ்விருவருடைய சிறுகதைகளும் எடுத்துரைப்பு முறையால் வேறுபட்டாலும் குறிப்பாக மொழிநடையில் ஒருங்கிசைவு காணப்படுகிறது. சமுதாயத்தின் இருப்பினை எதார்த்தவாத அழகியலோடு சிறு கதைகளில் வெளிப்படுத்தியவர்களுள் முதன்மையானவர் சரஸன். நுண்மன அடுக்கு களில் இசை ஏற்படுத்தும் பிரேமையை - ஆண், பெண் உறவை மென்னுணர்வோட் டத்தில் வெளிப்படுத்தும் பவானியின் நினைவு சிறுகதையை சரஸன் தேர்ந்த சிற்பியாகச் செதுக்கியுள்ளார். சங்கீதத்தை உயிரென நினைத்து வாழும் சாந்தாவும் சங்கீதத்தில் அதீத ஈடுபாடு கொண்டு கல்யாணி இராகத்தைப் பாடியபடி இறக்கும் பவானியும் சங் கீதத்தை ஆராதிக்கும் சுந்தரேசனும் இச்சிறுகதையில் அன்பும் தியாகமும் ஒன்று கலந்து படைக்கப்பட்ட பாத்திரங்கள். கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் சிந்தையும் பேச்சும் செயலும் கதையின் உயிர்ப்பைத் தக்கவைத்துக் கொள்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புலோப்பளையினைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் கனகசபை சிவகுருநாதன் "கசின்" எனும் புனைபெயரால் நன்கு அறி யப்பட்டார். ஈழகேசரிப் பண்ணையில் உருவாக்கப்பட்ட இவர் 1950களுக்கு முன்னர் "வனசஞ்சாரம்", "இது காதலல்ல", "கதவைச் சாத்தினாள்" முதலான சிறுகதைகள் பல

வற்றை எழுதினார். கசினுடைய சிறுகதைகளில் காதலே முதன்மைப் பொருளாக அமைந்திருக்கும். வக்கிரமற்ற மெல்லிய இயல்போட்டத்தில் மானிட வாழ்வில் நிலை கொண்டிருக்கும் பல்வேறு உறவுகளைத் தன் சிறுகதைகளில் சிறப்பித்தவர். வவுனியாவிலுள்ள பின்தங்கிய கிராமத்துக்குக் கற்பிக்கச் செல்லும்போது ஒரு ஆசிரியர் எதிர்நோக்கிய அவலங்களைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட வனசஞ்சாரம் சிறந்த அங்கதக் கதைகளுள் ஒன்று. புதிதாகத் திருமணமான தம்பதியினர் நண்பனின் இடையூறுகளால் அல்லாடுவதை நகைச்சுவையாகக் கூறும் சிறுகதையே "கதவைச் சாத்தினாள்". நேரடித்தன்மையில் கட்டுறும் இச்சிறுகதை ஆசிரியர் கூற்றுநிலை நின்று தன்னை வெளிப்படுத்துகிறது. "இது காதலல்ல" சிறுகதையும் பெண்ணிடத்தில் ஆண் கொண்டிருக்கும் அன்பை பல்நோக்குநிலையில் களச்சித்திரிப்பின் வாயிலாக எடுத்துரைக்கிறது. வாசகனை மகிழ்விக்கும் முகமாக எழுதப்பட்ட கசினுடைய சிறுகதைகள் நிகழும் சம்பவங்களுக்கூடாக அனுபவத்தொற்றை ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்டவைகளாகும்.

சமுதாய ஏற்றத்தாழ்வுகளை, அக்காலத்தில் சாதியத்தால் மக்களுக்கு இழைக்கப்பட்ட வன்கொடுமைகளை, அதற்கு எதிராக எழுந்த போராட்டங்களை, அடித்தள கூலித் தொழிலாளர் எதிர்நோக்கிய பிரச்சினைகளை இக்காலச் சிறுகதைகள் விபரித்துக் கூறுகின்றன. மக்களின் வாழ்க்கை நிகழ்வுகளுக்கும் பண்பாட்டு அடை யாளங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இச்சிறுகதைகள் எழுதப்பட்டிருந்தன. வரதரின் "வேள்விப்பலி" சிறுகதை சிறுபான்மை சமூகத்தினரின் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தும் அதேசமயம் கோயில்களில் நிகழும் வேள்விப்பலியைக் கண்டித்தும் எழுதப்பட்ட சிறுகதையாகும். இவ்விரு நடவடிக்கைகளையும் முன்னின்று நடாத்தும் போது இரு உயிர்கள் பலியாகிப் போனதை அக்காலப் பண்பாட்டுச் சூழலோடு இச் சிறுகதை பொருத்திக் காட்டுகிறது. மெய்பொருள் வெளிப்பாட்டுத்தன்மையில் சமூகம் சார்ந்த விமர்சனங்களை இச்சிறுகதை முன்வைக்கிறது.

ஆனந்தன் என்ற புனைபெயரில் கவிஞர் சச்சிதானந்தன் எழுதிய "தண்ணீர்த் தாகம்" சிறுகதையும் தீண்டாமைக்குச் சாவு மணி அடிக்கிறது. கொடுமையான கோடை வெயிலில் கடுமையான தாகத்தால் வருந்திய பெண் கிணற்றில் நீர் அள்ளியமைக்காக நடேசய்யரால் தண்டிக்கப்பட்டு வைத்தியசாலையில் யாருமற்று தனித்து முடங்கிய நிலையில் அவருக்கு நீர் கொடுத்து அவரின் தாகத்தைத் தீர்த்து வைத்தலை மையக்கருவாகக் கொண்டு புனையப்பட்ட தண்ணீர்த் தாகம் சிறுகதை சாதிகள் களையப்பட வேண்டிய அவசியத்தையும் தேவையையும் முன்வைக்கிறது. ஒடுக்கபட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்கள் கல்லூரிகளில் உள்வாங்க முற்பட்ட வேளையில் கல்லூரியில் கல்வி கற்கும், கற்பிக்கும் உயர் சாதிமான்களால் கல்லூரி நிர்வாகம் எதிர்கொள்ளும் இடையூறுகளைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையே "வேதனைச் சுடர்".

சில்வரம்புலியின் "தெளிவு" சிறுகதை அக்காலத்தில் சாதியத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களையும், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர்

மகாசபையின் பணிகளையும், தீண்டாமைக்கு எதிரான அக்கால இளைஞர்களின் தீவிரப்போக்கினையும், பாடசாலையில் யாவருக்கும் சமவிடம் கொடுக்கப்பட்டதை யும், திருச்செந்தூர், சிதம்பரம் கதவுகள் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டதால் இலங்கையில் ஏற்பட்ட சமூக மாற்றங்களையும் சொல்லிச் செல்கிறது. உடலாலும் உள்ளத்தாலும் சுற்றுச் சூழலாலும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கண்டு மனம் வெதும்பிய இளைஞர்களால் படைக்கப்பட்ட இச்சிறுகதைகள் மக்களுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தி நின்றன. எழுத்தாளனின் கருத்துக்கும் கற்பனைக்கும் ஏற்ப எழுதப் பட்ட இச்சிறு கதைகள் உயர்சாதி வர்க்கத்தினரால் இழைக்கப்பட்ட சமூகக் கொடுமை களை எடுத்தியம்பும் ஆவணமாக விளங்குகின்றன.

தமிழக எழுத்தாளர்களைப் போல் ஈழத்தவர்களும் காந்திய சிந்தனையின்பால் ஈர்க்கப்பட்டவராகவே காணப்பட்டனர். இந்தியச் சமூக வரலாற்றில் காலனித்துவச் சுரண்டலும் சமூக ஒடுக்குமுறையும் தலைவிரித்தாடிய காலகட்டத்தில், மக்களுக்காக நம்பிக்கை தரும் குரலாக காந்தியின் வரவு அமைந்தது. இந்தியாவில் ஆங்கிலேயருக்கு எதிராக இவர் நிகழ்த்திய சத்தியாக்கிரகப் போராட்டமும், தென்னாபிரிக்காவில் நிற வெறிக் கொள்கைக்கு எதிராக இவர் முன்னின்று நடாத்திய அகிம்சா போராட்டமும் சமூகமாற்றத்திற்கான செயல்வீரராகவும் சத்தியசீலராகவும் மகாத்மாவாகவும் இவரை அடையாளப்படுத்தியது. சர்வோதயம், அன்பு, அறம், உண்மை, சத்தியம், அகிம்சை, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, சுதேசியம், கதர் மற்றும் கிராமியத் தொழில்சார் வளர்ச்சி, பெண் விடுதலை என சமூகம், அரசியல், சமயம் மற்றும் பண்பாட்டுத் தளங் களில் இவர் உருவாக்கிய தாக்கம் பின்னாளில் காந்தீய நெறியாக வளர்ச்சி கண்டது. ஆரம்பகாலச் சிறுகதைகளில் காந்தீயத்தின் தாக்கம் தமிழ் இலக்கியத்தில் முக்கிய பரிமாணத்தை இனங்காட்டியுள்ளது. அ.செ.முவின் “வெறுப்பும் வெற்றியும்” சிறுகதை காந்திய செயற்பாட்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட சந்திரன், காந்திமதியின் வாழ்வைப் புடம்போட்டுக் காட்டுகிறது. தம் கொள்கையில் இருந்து நீங்காது இறுதி வரைக்கும் இலட்சியத்தின்பாற்பட்டு நின்ற பாத்திரங்களாக அவ்விருவரும் காணப்படு கின்றனர். வரதரின் “அவள் தியாகம்” இலட்சிய வேட்கை கொண்டு உலகுக்குச் சேவை யாற்ற முனையும் தம்பதியினரின் வாழ்வியற் புலத்தை மையச் சரடாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். காந்தியின் மது ஒழிப்பைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட ஏ.சந்திரசேகரத்தின் “மன்னிப்பாரா” சிறுகதை மனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் போதிக்கிறது. உள்ளொன்றும் வெளியொன்றும் வைத்துப் பழகும் சாலிஹூ எழுத்தாளரின் வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட இச்சிறுகதை, இளைஞர்களின் நியம வாழ்வைக் கூறிச் செல்வதுடன் குடிமக்களின் வாழ்வை எவ்வாறு சிதைக்கும் என்பதனையும் எடுத்துரைக்கிறது.

கதையின் மையத்தை உருவாக்கக்கூடிய ஆசிரியன் வாழ்வில் நிகழும் நடத்தை முறைகளைக் கலாபூர்வமாகச் சிருஷ்டிக்க முற்படும்போது அச்சிறுகதையில் யதார்த்த வாதப் பண்புகள் இயல்பாய்ப் பிறக்கிறது. மெய்நிகர் வாழ்க்கையனுபவத்தை படைப்பாளி வாசகனுக்குத் தரும்போது அவன் அனுபவங்களில் நிகழ்ச்சிகளில் சொல்லும் முறையில் விளைவை ஏற்படுத்த முனைகிறான். இத்தருணத்தில் படைப்

பாளியின் வாழ்க்கைச் சித்திரிப்பு யதார்த்தத்தை அர்த்தமுள்ளதாக்குகிறது. கொந்தளிப்பான அக யதார்த்தத்தைத் தன் சிறுகதைகளில் இயல்பாய் முன்வைத்தவர் சோ.தியாகராஜன். அவருடைய "முதல் இரவு" சிறுகதை கல்யாணம் கட்டி ஒரு பெண்ணைத் துய்ப்பதையும் கல்யாணம் கட்டாமல் பெண்ணைத் தீண்டுவதையும் சமூகம் எவ்வாறு நோக்குகிறது என்பதை ஆண் மனவோட்டத்தில் பதிவுசெய்கிறது. இரண்டும் துய்த்தல் என்னும் ஒரு நிகழ்வில் கட்டுண்டாலும் சமூகம் அதனை அடையாளப்படுத்தும் விதமும் அதனைப் பார்க்கும் விதமும் வெவ்வேறானவை என்பதை வித்தியாசமான கோணத்தில் இச்சிறுகதை எடுத்துரைக்கிறது. தியாகராஜனின் மாமிக்கும் மருமகனுக்கும் இடையிலான உறவைப் பிற்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட "நல்ல மாமி" சிறுகதையும் வாழ்வின் யதார்த்தத்தை நிதர்சனமாகக் காட்டிச் செல்கிறது.

தியாகராஜனைப் போன்று யதார்த்தவாதச் சிறுகதைகளைப் படைத்தவர்களில் முக்கியமானவர் ந.நாகலிங்கம். ந.நாகலிங்கத்தின் "வேதனை" சிறுகதை ஏழை வாத்தியாரின் இயங்கு நிலையை மனித நடத்தைவாத முறைகளுக்கூடாக நுட்பமாகச் சித்திரிக்கிறது. பாடசாலைக்கு உரியநேரத்துக்குச் சமூகமளிக்காத வாத்தியாரை மேலதிகாரிகள் கண்டித்த நிலையில் அவர் கைக்கடிக்காரம் ஒன்றை வாங்க நினைக்கிறார். அதனை வாங்க முனைகையில் அந்த ஏழை வாத்தியார் எதிர்நோக்கும் இன்னல்களை நிதர்சனமான வாழ்க்கைச் சூழலோடு பொருத்தி கலாபூர்வமாக விளக்கி நிற்கும் சிறுகதையே வேதனை. நாகலிங்கத்தின் "மானம் பெரிது" சிறுகதையும் பாடசாலைச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். பெண்ணாசிரியரின் முறைகேடான நடத்தைக்கு உடன்படாத ஆசிரியரின் நாடகம் ஒன்றினை குறிப்பிட்ட பெண்ணாசிரியர் பாடசாலை முகாமையாளரோடு இணைந்து தடுத்து நிறுத்துகிறார். இதனைச் சகிக்க முடியாத ஆசிரியர் தன் பதவியைத் துறந்து வெளியேறுகிறார். சமூக இயக்கங்களையும் அதன் புறச்சூழல் செயற்பாடுகளையும் தீர்மானிக்கும் சக்தியாக அதிகார வர்க்கமே ஒளிந்திருக்கிறது என்பதை இச்சிறுகதை கூறிச் செல்கிறது.

சமூக யதார்த்தவாதத்தில் இருந்து எழும் கூர்மைப்படுத்தப்படும் நடப்பியல் முரணும் அது ஏற்படுத்தும் சிக்கல்களுமே புனைவை வளர்த்துச் செல்கின்றது. சமுதாய மேம்பாட்டுக்குத் தடையாகவுள்ள சீரழிவுகளை குடும்ப வாழ்வுக்குத் தேவையான நலந்தரும் அம்சங்களை மனித நிலைப்பாடுகளின் வழி தன் சிறுகதையில் சித்திரித்த ந.நாகலிங்கம் இற்றைவரை ஈழத்திலக்கிய உலகால் அறியப்படாத ஒருவராகவே காணப்படுகின்றார். பவனின் "ஆசைச் சட்டம்பியார்" சிறுகதை ஆசிரியர்கள் மதிக்கத்தக்கவாறாக இருக்கவேண்டுமாயின் அவர்கள் மாணவர்களுக்கு மத்தியில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை விளக்கி நிற்கிறது. வாழ்க்கையின் முரண்பாடுகளை, அன்றாட கணங்களில் எழும் பேருணர்வுகளை எளிய உணர்வின் வழி இச்சிறுகதை எழுதிச் செல்கிறது.

குறிப்பிட்ட காலகட்டத்தின் வரலாற்றைப் பதிவு செய்வதால் இலக்கியத்தை காலக்கண்ணாடி எனக் கூறுவர். அவ்வகையில் அக்காலப் பகுதியில் கல்வி வளமிக்க கிறிஸ்தவப் பாடசாலைகள் இந்துக்களை எவ்வாறு மாணவராகச் சுவீகரித்துக்

கொண்டன என்பதை விளக்கி நிற்கும் சிறுகதையே பாணனின் "ஆறிய மனம்". இந்துப் பாடசாலைகளின் தேவையை வலியுறுத்தி எழுதப்பட்ட சிறுகதையாக இது காணப் பட்டாலும் யாழ்ப்பாண சமூகத்தின் அன்றைய இருப்பையும் மனோபாவத்தையும் இச்சிறுகதை எமக்குணர்த்தி நிற்கிறது. பரிதியின் "எதிர்பாராதது" சிறுகதை ஏழைக் குடும்பமொன்றின் இயல்பு வாழ்க்கையை தமிழ்ப் பண்பாட்டுச் சூழலோடு பொருத்திக் காட்டுகிறது. இச்சிறுகதையின் தடையற்ற மொழிநடை வாசகனை இறுதி வரை கதைக்குள் வைத்துள்ளது. செல்வச்சந்நிதி கோயிலின் அன்னதானத்தைப் பெற முயன்று தோற்றுப்போய், தன் மகனை இழக்கும் ஏழை மூதாட்டியின் வாழ்வைப் பின்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட யாழ்பாடியின் "ஒரு பிடிசோறு" சிறுகதை யாழ்ப்பாண சமூகத்தின் யதார்த்தவாழ்வை நுண்மையாகச் சித்திரிக்கிறது.

யாழ்ப்பாணப் பண்பாட்டுச் சூழலைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட சு.வே.யின் "பாற்காவடி" சிறுகதை சமூகத்தின், வாழ்க்கையின், தத்துவதரிசனத்தின் அடிப்படை முரண்பாடுகளை நம்பிக்கைகளை எடுத்துரைக்கிறது. நோயுற்ற கண வனுக்காக வள்ளி எடுக்கும் பாற்காவடியை தமிழர்களின் வாழ்வியற் பண்பாட்டுச் சூழலுடன் இணைத்துச் சொல்லும் சிறுகதையாக "பாற்காவடி" காணப்படுகிறது. இச் சிறுகதையில் கோயில் வழிபாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைபாடுகளை சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை எடுத்துக்காட்டியுள்ளார். சு.வே.யின் முதற்கதை "கிடைக்காத பலன்" என்பதாகும். வத்தகைக் கொடிகளைப் பயிரிட்டும் அதன் பலன் களை அனுபவிக்க முடியாது, இறந்த ஏழை விவசாயியின் வாழ்வைக் கூறும் இச் சிறுகதை தன்னைப்போல் பிறரை நேசிக்கும் மனித நேயத்தையும் வாழ்வின் அவலத் தையும் மண் வாசனையோடு உணர்த்தி நிற்கிறது. அழகு சுப்பிரமணியத்தின் "சேதுப் பாட்டி" சிறுகதை மூன்று குழந்தைகளுடன் போராடிக் கொண்டு தோசை சுட்டுப் பிழைப்பு நடாத்தும் சேது அம்மாளின் வாழ்க்கையை அடிச்சரடாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும். கடும் வெள்ளப்பெருக்கால் மக்களின் இயல்பு வாழ்க்கை எவ்வாறு சிதைந்து போனது என்பதை தனிமனித எண்ணவோட்டத்தில் இச்சிறுகதை எடுத்துரைக்கிறது. இராஜ அரியரத்தினத்தின் "வயலுக்குப் போட்டார்" சிறுகதையும் யாழ்ப்பாண சமூகவாழ்வை அதன் பண்பாட்டுக் கலாசாரத்தை உயிரோட்டமாகச் சித்திரித்த சிறுகதையாகும்.

காதலன் கைவிட்டுச் செல்ல துறவறத்தை நாடிய பெண்ணை மீண்டும் சந்தித்து தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டும் காதலனின் உளக் கிடக்கையை துச்சமென மதித்து உதாசீனம் செய்துவிட்டுச் செல்லும் பெண்ணின் வாழ்க்கைச் சரிதத்தை எடுத் துச் சொல்லும் N.சின்னத்தம்பியின் "வீணில் மயங்காதே" சிறுகதை லௌகீக வாழ்வை வெறுக்கும் பெண்ணின் மனோபாவத்தையும் எதிர்நிலையாளனின் இயங்கு நிலையை யும் நுட்பமாகச் சித்திரிக்கிறது. அடிப்படை வினாக்கள், புனைவுத் தருணங்கள், உணர்வுநிலைகள் மூன்று ஒத்தியைந்து எழுதப்பட்ட சிறுகதையாக இது அமைகிறது.

யதார்த்தமற்ற சிறுகதைகளும் இக்காலத்தில் தோன்றின. அ.ந.கந்தசாமியின் குருட்டு வாழ்க்கை சிறுகதை நேர்த்தியான வடிவமைப்பாலும் சொல்முறையாலும் வாச

கனைக் கட்டிப் போட்டாலும் கதையின் முடிவில் வாழும் துணைக்காக கண்ணைக் குருடாக்கிக் கொண்டவனின் வாழ்வை எழுதிச் செல்வதால் இதனை யதார்த்தப் படைப் பாகக் கொள்ளமுடியாது. பொதுப்புத்தியில் எழும் இயல்புச் சித்திரிப்பை இச் சிறு கதையில் காணமுடியாதுள்ளது. இது போலத்தான் எம்.எம்.ஸாலிஹ் எழுதிய "சதிகாரி" சிறுகதையும் வாழ்வின் நடப்பியலை உள்வாங்கிக் கொள்ளாது படைக்கப்பட்ட சிறுகதையாகும். பெண்ணின் பருவநிலைகள், அங்கலாய்ப்புகள், அபிலாசைகளைப் புரிந்து கொண்டு வாழத் தெரியாத கணவனைக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்ட பெண்ணின் உள்ளத்துணர்வுகளை எடுத்துரைக்கும் இச்சிறுகதை கொள்கை விளக்கக் கதையாகத் தன்னை முன்மொழிகிறது.

ஆண், பெண் இருபாலாருக்கிடையில் நிகழும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, உள்ளத் துய்ப்பு, வேட்கை, அக்கறை முதலான இன்னோரன்ன சம்பவங்களை மையச் சரடாகக் கொண்டு ஈழத்தில் பெரும்பாலான சிறுகதைகள் எழுதப்பட்டன. ஆண், பெண்ணின் மென்னுணர்வுகளின் பரிபாசைகளை வெளிப்படுத்தும் இச்சிறுகதைகளில் காதல் வயப்பட்ட ஆண், பெண்ணின் உள்ளத் தவிப்புகளும் அகம்சார் இச்சையினால் அவ்விரு வரும் படும் துயர்களும் ஆற்றாமையும் இயல்பாய் வெளிப்படுகிறது. க.தி.சம்பந்தனின் "கல்யாணியின் காதல்" புரிந்துணர்வின்மையாலும் வீண்சந்தேகத்தாலும் தன் காத லையே இழக்கத் துணிந்த கல்யாணியின் வாழ்வை நிகழ்புலமாகக் கொண்டு எழுதப் பட்ட சிறுகதையாகும். மனித உணர்வுகளைப் புனிதமாகப் போற்றி அவற்றுக்கு புனிதத்தைக் கொடுக்கின்ற சிறுகதைகளே சம்பந்தனின் சிறுகதைகள்.

புலோலியைப் பூர்வீகமாகக் கொண்ட கு.பெரியதம்பி சுவாரசியமான காதல் கதைகளைப் படைத்த சிறுகதையாசிரியர்களுள் ஒருவர். தமிழாசிரியரான இவர் குறித்து ஈழத்து இலக்கிய உலகு இன்றளவுவரை பெரிதும் கண்டு கொள்ளவில்லை. பூடகத்தன்மையற்று எளிமையாக வெளிப்படும் இவரின் சிறுகதைகள் ஒப்பனைகள் அற்றவை. சிறுகதையின் இறுதியைக் காணும் வரை வாசகனால் இவரின் கதைகளின் போக்கை மட்டிடமுடியாது. இவரின் ஆறு சிறுகதைகள் மறுமலர்ச்சியில் வெளிவந் துள்ளன. காதலை வெவ்வேறு முறையில் தம் சிறுகதையில் சித்திரித்தவர்களுள் கு.பெரியதம்பி முதன்மையானவர். கு.பெரியதம்பியின் "அம்மான் மகள்" என்ற சிறு கதை தியாகராஜன் என்னும் தன் முறைப்பையனைக் காதலித்து வரும் மாமா மகள் பெற்றோர்களால் வேறொருவருடன் திருமணம் நிச்சயிக்கப்பட்ட வேளையில்,வீட்டை விட்டு ஓடிவந்து தான் காதலித்தவனையே திருமணம் செய்து கொள்வதை வெளிப் படுத்தி நிற்கிறது.

"எட்டாப்பழம்" சிறுகதை முதலாளி மகள் கமலாசினியின் கரிசனையையும் பரிவையும் காதலெனத் தவறாகப் புரிந்துகொண்ட கார் டிரைவரின் மனவோட்டத்தின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகிறது. கதையின் ஈற்றில் "வீட்டிலே யாருக்கும் தெரியாமல் தபால்களை வாங்கி வா" எனக் கமலாசினி கூறும் போதே முதலாளி மகள் கார் டிரைவர் மீது கரிசனையும் பரிவும் ஏன் கொண்டாள் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. கமலாசினிக்கு காதல் இருப்பதையும் கமலாசினி எட்டாப்பழம் என்ப

தையும் இச்சிறுகதை சொல்லாமல் சொல்லிச் செல்கிறது. சுந்தரேசன் ஆசிரியரால் சாதாரணமாக அனுப்பப்பட்ட பொங்கல் வாழ்த்தை அவர் தன்மேல் கொண்ட பிரேமையால்தான் அனுப்பினார் என்று எண்ணி உள்ளம் பூரித்து மடல் எழுதத் துணிந்த கமலாம்பாளின் உணர்வுகளை எடுத்துரைக்கும் சிறுகதையே "பொங்கல் வாழ்த்து". ஆசிரியர் அத்தனை மாணவருக்கும் பொங்கல் வாழ்த்து அனுப்பினார் என்ற கதையின் முடிச்சு சிறுகதையின் ஈற்றிலேயே அவிழ்க்கப்படுகிறது. காதலனால் ஏமாற்றப்பட்ட சரஸ்வதியின் நிர்க்கதியான வாழ்வை "காதலே காதல்" சிறுகதையில் வெளிப்படுத்திய கு.பெரியதம்பி உயிருக்குயிராகக் காதலித்தவனை வீண் வதந்தியால் தவறாக நினைத்து மனம் பதைத்து, தவிக்கும் அபலையின் வாழ்வை "வீண்வதந்தி" சிறு கதையிலும் எடுத்துக்காட்டுகின்றார்.

இலட்சியவாதப் பாத்திரங்களின் வாயிலாக ஆண், பெண் உறவை உணர்வுத் தளத் தில் இருந்து வெளிப்படுத்தியவர் சரஸ்வதிதாசன். ஹூசேயினுக்கும் சித்திக்கும் ஏற் படும் காதல் ஹூசேயினின் தற்கொலையில் முடிவதை இவரின் "தியாகம்" சிறுகதை சித்திரிக்கிறது. கதை சொல்லியின் மொழிதல் உத்திக்கூடாகக் கட்டுறும் இச்சிறுகதை காலம், இடம், மொழி என்பவற்றைக் கடந்து நிற்கிறது. ஆனந்தராஜனின் "காதற் பீடம்" சிறுகதை இளவரசிக்கும் படை வீரனுக்கும் இடையிலான நிறைவேறாத காதலைக் கூறுகிறது. இதுபோன்று உமாவின் "அவன் உன்மத்தன்" சிறுகதை பாட்டுக்காரன் மீது பெண்ணொருத்தி கொண்ட ஒருதலைக் காதலைப் பேசுகிறது. ஏழையின் காதல் ஈடேறுவதில்லை என்பதை எடுத்துரைக்கும் ஆனந்தனின் "சாந்தியடையுமா", காதலனை இழந்து தவித்த நேரத்தில் பிறிதொரு ஆடவனால் ஆட்கொள்ளப்பட்ட பெண்ணின் உள்ளத்தை வெளிப்படுத்தும் கஜமுகனின் "நினைவுச்சுழல்", கௌரி வசந்தனின் காதலைக் கூறும் ந.சண்முகசுந்தரத்தின் "வசந்த விஜயம்", நாட்டியப் பெண் மீது கொண்ட மயக்கத்தைக் கூறும் சானாவின் "நாட்டியப்பெண்", நாகம்மாவுக்கும் குமாரசாமிக்கும் இடையிலான நேசிப்பின் பரிபாசையை எடுத்துச் சொல்லும் வே.குமாரசாமியின் "நகக்குறி" , தமிழ், சிங்கள பேதமழிய கலப்புத் திருமணமே ஒரே வழி என்பதை வலியுறுத்தும் எஸ்.கே.யின் "விடிவு" கல்யாணி - சந்திரநாதனின் மனவோட்டத்தின் எண்ணப்பதிவுகளை மென்னுணர்வுத் தளத்தில் பதிவுசெய்யும் சு.இராஜநாயகத்தின் "அந்தக்காலம்", பருவவயதுக் காதலை இரைமீட்டிப் பார்க்கும் கே.ஆர்.நாதனின் "மன்னிப்பு", காதலனையே இறுதி வரைக்கும் நினைத்திருந்து கைபிடிக்கும் கிரிஜாவின் "இரண்டு உள்ளங்கள்" என எண்ணற்ற சிறுகதைகள் காதலை மையச் சரடாகக் கொண்டு பின்னப்பட்ட இக்காலச் சிறுகதைகள் ஆகும்.

மடல் உத்திக்கூடாகப் பாத்திரங்கள் கதை சொல்லும் முறைமை ஈழத்தில் தொடக்க காலச் சிறுகதைகளில் காணப்பட்டன. கதாபாத்திரங்கள் பிறபாத்திரங் களைச் சந்திக்காத நிலையில் தம்முள் நேரில் கூற இயலாதவற்றைக் கடிதம் மூலம் வெளிப்படுத்துவதாக அமையும் உத்தியை "மடல் உத்தி" என்பர். சிலப்பதிகாரத்தில் மாதவியின் கடித வாயிலாக தமிழுக்கு நன்கு பரிச்சயமான இவ்வுத்தி முறையை ஆரம்பகாலத்தில் நுட்பமாக புதினத்தில் கையாண்டவர் மறைமலை அடிகள். மாப்பசானின் காதல் மொழிகள் (Mots d'mour), கடிதத் தொடர்பு (Correspondence),

இருமல் (laTous) முதலான சிறுகதைகளிலும் தாகூரின் மனைவியின் கடிதம் உட்பட ஒரு சில சிறுகதைகளிலும் இவ்வுத்தி சிறப்பாகக் கையாளப்பட்டது. தொடர் கடிதங்க ளுக்கூடாக அநாதரவான பெண்ணின் வாழ்வை வெளிப்படுத்திய சிறுகதை சண்முகத் தின் அபலை. இச்சிறுகதையில் பெண் எழுதிய தொடர் கடிதங்களே சிறுகதையின் வடிவத்தைத் தீர்மானிக்கிறது. மலாயா தேசம் சென்று நிர்க்கதியான குடும்பமொன்றின் வாழ்வை கடிதவாயிலாக வாசகருக்குக் கூறிச்செல்லும் சிறுகதையே ரா.சு எழுதிய "மலாயாக் கடிதம்". சரஸ்வதிதாசனின் தியாகம் சிறுகதையில் கதையின் போக்கை மாற்றியமைக்கக் கடிதம் சிறந்த உத்தியாகப் பயன்படுகிறது. "இவன் யார்" சிறுகதையில் தந்தையின் மறுபக்கத்தை மகனுக்குக் காட்ட எஸ்.நல்லையாவுக்கு கடித உத்தியே கைகொடுக்கிறது. ஆனந்தனின் "அன்பினால் மரணம் உண்டோ" சிறுகதையில் கதையை வளர்த்துச் செல்வதற்கும் கதையில் திடீர் திருப்பங்களை உருவாக்குவதற்கும் அடிநாதமாக அமையும் கடித உத்தி தாளையடி சபாரத்தினத்தின் "விழிப்பு" சிறுகதையில் பிரிந்திருந்த விஜயன் - திலகவதியை ஒன்று சேர்ப்பதற்கும் உதவுகின்றது. ஈழத்தில் ஆரம்ப காலத்தில் கடித உத்தியின் வாயிலாக அதிக சிறுகதைகளைப் படைத்த வர் வரதர். வரதரின் "பாஞ்சாலி பதிவிரதையான கதை" ,"ஜோடி", "அவள் தியாகம்" முதலான பல சிறுகதைகளில் கச்சிதமாகக் கடித உத்தி பயன்படுத்தப்பட்டது. உமா வினுடைய "சௌந்தரவல்லி" சிறுகதையின் தோற்றுவாயாக அமையும் கடிதமே பெண் ணுரிமைக் கருத்துக்களை அச்சிறுகதையில் விதைப்பதற்கு உந்துசக்தியாக அமைகிறது. கலைப்பித்தனின் "போராட்டம்" சிறுகதையின் முடிவில் கணவன் - மனைவியை இணைத்து வைப்பதற்குக் கையாளப்பட்ட உத்தியாக கடிதம் அமைகிறது. அ.செ.மு வின் "வெறுப்பும் வெற்றியும்", சொக்கநாதபிள்ளையின் "பாசம்" முதலான சிறுகதைகளி லும் கடித உத்தி சிறப்பாகக் கையாளப்படுகிறது.

ஈழத்துச் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்களில் பலர் பொதுவுடமைச் சித்தாந் தத்தைத் தழுவி சமவுடமைக் கருத்துக்களை வலியுறுத்தும் வகையில் சிறுகதைகளை ஆக்கினர். சொக்கனின் "மாணிக்கம்" சிறுகதை மாணிக்கத்தின் பிரேத ஊர்வலத்துடன் தொடங்கி அவனுடைய கடந்த கால வாழ்வை நனவோடை உத்திக்கூடாக முன்மொழி கிறது. சுடலை ஞானத்தோடு பிறக்கும் இச்சிறுகதை இலங்கைத் தாயுக்கும் இந்தியத் தந்தைக்கும் பிறந்த மாணிக்கம் தகப்பனோடு வண்டியோட்டியாக வாழ்ந்து பின் வய லில் வேலை பார்த்து பிறகு படிப்படியாக உயர்ந்து ஈற்றில் பஸ் சாரதியாகப் பணியாற் றும் காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொல்லப்படுகிறான். சமூ கத்தின் மாற்றத்தையும் அதன் இயக்கத்தையும் முழுமையாக வெளிப்படுத்தும் சிறு கதையாக இதுவமைகிறது. பாஞ்சாலியின் "புதுயுகம்" சிறுகதையும் பொருளாதார வர்க் கச் சுரண்டலுக்குள் அகப்பட்டு வாழும் ஏழை மக்களின் சுதந்திரமற்ற வாழ்வை வெளிப் படுத்தி நிற்கிறது. போடியாரின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு நசிவுண்டு வாழும் ஏழைக் கூலியாளரின் வாழ்வை எழுதிச் செல்லும் இச்சிறுகதை புதுயுகம் ஒன்றில் மலரப் போகும் மனிதநேயத்தையும் வர்க்கப் பேதமற்ற வாழ்வையும் வலியுறுத்தி நிற்கிறது.

சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கும் வகை யிலும் இக்காலச் சிறுகதைகள் அமைந்தன.முதலாளியின் சபலத்துக்குப் பலிக்

கடாவாகி தம்வாழ்வைத் தொலைத்த அப்பாவிப்பெண்ணின் வாழ்க்கையை மையக்கரு வாகக் கொண்டு "வடிவு" என்பவரால் எழுதப்பட்ட சிறுகதையே "ஏழைப் பெண்". சமூக ஒடுக்குமுறைக்குப் பயந்து ஊரைவிட்டுச் செல்வதைத் தீர்வாக முன்வைக்கும் இச் சிறுகதை குடியால் விளையும் கேட்டையும் உணர்த்தி நிற்கிறது. சி.கு. எனப்படும் சி.குமாரசாமியால் எழுதப்பட்ட "தோட்டத்து மீனாட்சி" கணவனால் வஞ்சிக்கப்பட்டு கண்டாக்கையாவின் காமப் பசிக்கு இரையாகி தன் மானத்தை இழந்த இலட்சுமி பின் னர் அவனோடு பிணக்கற்று இணங்கி வாழ முற்படுவதை எடுத்துரைக்கிறது. வறுமைப் பிணியில் சிக்குண்டு குடிக்கு அடிமையாகும் அடித்தள மக்கள் எவ்வாறு பாதிக்கப் படுகின்றனர் என்பதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. ராஜேஸ்வரியின் "கடைசிக் கந்தாயம்" சமுதாய சீர்திருத்தவாதி வெகுசன விரோதி என்பதை முன்வைக்கிறது. மக்க ளின் நலனில் அக்கறை கொண்டவரும் நீதியும் நேர்மையின்பாற்பட்டு நடப்பவரும் சமூக சீர்திருத்தவாதியுமான சின்னத்தம்பி சுதந்திரம் குறித்த கருத்துக்களை மக்கள் முன் விதைத்தமைக்காக கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார். இதனைப் பின்னணி யாகக் கொண்டு எழுதப்பட்ட கடைசிக் கந்தாயம் இக்கட்டான நிலையில் சின்னத்தம்பி யால் காப்பாற்றப்பட்டு அவருக்கு புதுவாழ்வு அளித்த நீதிபதியின் மனக்கிடக்கையில் இருந்து பிறக்கும் சுயவரலாறாகத் தன்னை முன்மொழிகிறது. மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த பாரதி சஞ்சிகையில் இரகுநாதனால் எழுதப்பட்ட "நடைப்பிணம்"சிறுகதை சமுதாயத்தால் ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட அறிவும் திறனும் கொண்ட மாணவன் வாழ வகையற்றுத் தற்கொலை செய்து கொண்டதை காட்சிப்படுத்துகிறது. சாதிக்குள் அகப்பட்டுப் புரையேறிப்போன சமூகத்தின் குறுக்கு வெட்டுமுகத்தை இச்சிறுகதை பதிவு செய்கிறது.

சிறுகதை படைப்பாளனின் கலையாற்றல் கற்பனைத்திறன், சொல்லாட்சியைக் கொண்டு முழுமைபெற்றதாக அமையவேண்டும். படிப்போரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நாவற்குழியூர் நடராஜனால் எழுதப்பட்ட சிறுகதையே "கற்சிலை". சிற்பியால் வடிக்கப்பட்டு சிலையும் அச்சிலை சிற்பியை ஆட்கொண்ட விதமும் மன அடுக்குகளின் விரிவும் நுட்பமாக மொழியினால் செதுக்கப்படுகிறது. நாவற்குழியூர் நடராஜனின் எழுத்து நடையும், கதைக் கருவின் உன்னதமும், அதிலிருந்து மேன்மேலும் சிந்திக்கத் தூண்டிய வகையும், காலத்தை வென்று நிற்கும் கலா சிருஷ்டியாக கற்சிலையை நிலைகொள்ளச் செய்கிறது. தமிழரின் தொன்மக் கலைகளில் ஒன்றான நெசவுக்கலை இன்று ஈழத்தில் படிப்படியாக அழிந்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் ஓரளவுக்கு இக்கலை நிலைபெற்றிருந்தாலும் யாழ்ப்பாணத்தில் இன்று இக்கலை இல்லாமலே போய்விட்டது. ஆடை அலங்காரத்தின் நிலைமாறி வரும் சூழலில் ஏழ்மையோடு போராடும் கைத்தறி நெசவாளரின் நொடிந்த வாழ்வைப் பிரதிபலித்துக் காட்டும் சிறுகதையே ஸ்ரீநிவாசனின் "முன்னேற்றம்".

ஈழத்தில் உருவகக் கதைகளும் இக்காலத்தில் எழுதப்பட்டன. தமிழில் இலக் கணை என்ற உத்தியை உள்வாங்கி எழுதப்பட்ட உருவகக் கதைகள் குறிப்பிட்ட சில விடயங்களை பூடகமாகச் சொல்வதற்கும் பயன்பட்டன. உருவகக்கதை என்பது உருவ கம், உள்ளுறை உவமம், இறைச்சி என்ற மூன்றின் கூட்டுறவால் பிறப்பவை என்பார்

சு.வேலுப்பிள்ளை. சிறுகதையின் வடிவமாக அதன் உருவகமாக உருப்பெறுவதால் இதனை உருவகக்கதைகள் என்ற பெயரால் அழைப்பர். உருவகச் சிறுகதைகள் தன்னுள் கருவுயிர்க்கப்பட்ட வித்தின் வன்மையில் உயிர் வாழ்கிறது. கூர்த்த மதிகொண்டு கண்டறிய வேண்டிய உரிப்பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் உருவகக் கதைகள் இயங்குதிணை பொருள்களுக்கூடாகவும் நிலைத்திணைப் பொருட்களி னூடாகவும் தன்னை வெளிப்படுத்தும். உருவகக்கதையின் முன்னோடியாக சு.வேலுப் பிள்ளையின் சிறுகதைகளைக் கூறலாம். சு.வேயின் உருவகக் கதைகளை ஒன்று திரட்டி எஸ்.பொன்னுத்துரை "மணற்கேணி" என்ற தலைப்பில் நூலாகப் போட்டுள்ளார். சு.வே.யின் பரோபகாரம், நிலைகேடு என்னும் இருகதைகளும் இத்தொகுப்பில் இடம் பெறவில்லை. சு.வே.யின் உருவகக் கதைகளின் நிலைகளனாக யாழ்ப்பாணமே விளங்கு கிறது. தாவரங்களும் பட்சிகளும் இயற்கையும் இவரது உருவகக் கதைகளில் மையங் கொள்கின்றன. சு.வே.யைப் போன்று இராஜநாயகனும் உருவகக் கதைகளைப் படைத் தார். இராஜநாயகனின் "தியாகம்" என்ற உருவகக்கதை நண்பருக்காகத் தன்னைப் பலி கொடுக்கும் புறாவின் வாழ்வைச் சித்திரிக்கிறது.

கிராமப்புற மக்கள் வாழ்வின் வெவ்வேறு அம்சங்களைப் பிரதிபலிக்கும் வகை யில் எழுதப்படும் ஈழத்துச் சிறுகதைகள் தனிமனித வாழ்வில் ஏற்படும் பிணக்குக ளையும் அதனால் சிதையும் குடும்ப உறவுகளையும் பின்னணியாகக் கொண்டு எழுதப் பட்டவையாகும். நாவற்குழியூர் நடராசனின் "மாமி" சிறுகதை தாய்க்கும் மருமகளுக் கும் இடையில் ஏற்படும் பிணக்குகளுக்குள் அகப்பட்டுத் தவிக்கும் மகனின் உள்ளத் தைக் கூறிச்செல்கிறது. நடத்தைப் பிறழ்வுகள் கோபத்தால் விளையும் சம்பவங்கள் சிறைச்சாலைக்கே இட்டுச் செல்லும் என்பதை விளக்கி நிற்கும் சிறுகதையே செ.நடராசாவின் "கைதி". நடனத்தின் "வாழ்வு" சிறுகதை மகனால் கைவிடப்பட்டு அநாதையாய் இறந்து போகும் தந்தையைச் சித்திரிக்கும் சிறுகதை. வாழும் மக்களைக் கதை மாந்தராகக் கொண்டு எழுதப்பட்ட இச்சிறுகதை வடிவம், உள்ளடக்க உத்தியால் தன்னை நல்ல சிறுகதைகளில் ஒன்றாக நிலைபெறச் செய்கிறது. இராஜநாயகனின் "உலகக் கண்கள்" சிறுகதை ஆணுக்கும் கணவனை இழந்த பெண்ணுக்கும் இடையி லான உறவைத் தவறாக உலகம் கருதும் தருணத்தில் அவ்விருவரும் எதிர்நோக்கும் சிக் கல்களை மென்னுணர்வுத் தளத்தில் பதிவு செய்கிறது. மஹாகவி எனப்படும் து.ருத்திரமூர்த்தியின் "தூக்கணாங்குருவி" கொடும் மழையில் விளையப்போகும் தீங்கை எண்ணி அல்லாடும் மனிதனின் உளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறது. மஹாகவி எழுதி கிடைக்கப்பெற்ற ஒரேயொரு சிறுகதை இதுவாகும். பல நாடுகளில் வேலை பார்த்தாலும் உயர்ந்த பதவியில் இருந்தாலும் தன் நாடு, வீட்டை நேசித்து மதித்து நடப்பவனே மனிதன் என்பதைக் காட்டி நிற்கும் விஜயனின் "வீட்டுவாசனை" சிறுகதை தாய், தந்தை என்னும் உணர்வின் தளத்தில் தன்னை வெளிப்படுத்துகிறது.

தமிழ்ப் பண்பாட்டோடு இணைந்து வாழ்க்கையின் உச்சங்களையும் பிளவுகளையும் உணர்வுகளையும் அன்றாட வாழ்வியற் சிக்கல்களையும் வெளிப்படுத்திய ஈழத்தின் ஆரம்பகாலச் சிறுகதைகள் இயல்பான தொடக்கம், மையத்தில் இருந்து முடிவுக்கு நகர்தல், சரளமான உரையாடல், நிகழ்வுகளிலிருந்து நினைவுகளுக்கு சென்று மீண்டும்

வருதல் என்னும் கட்டுமானத்திற்கூடாக நம்பகமான ஒரு வாழ்க்கைச் சித்திரத்தை எமக் களிக்கின்றன. உள்ளடக்கத்தைக் காட்டிலும் உருவத்துக்கு முக்கியத்துவமளித்துப் புனையப்பட்ட இச்சிறுகதைகள் கதைச் சம்பவங்களுக்கப்பால் உணர்ச்சிச் செறிவையே அதிகம் வெளிப்படுத்தி நின்றன. அக்கால நிகழ்வுகள், வரலாறுகள் முதலானவற்றின் கால உருக்காட்டியாகத் துலங்கும் தொடக்க காலச் சிறுகதைகள் சமுதாயச் சீர்த்திருத்தக் கருத்துக்களையும் சமூக முன்னேற்றத்தையும் எடுத்துரைப்பதையும் நோக்காகக் கொண்டு புனையப்பட்டன. சாதி, சமயப் பூசல்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், காதல் முதலானவற்றைப் பேசுபொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட தொடக்ககால சிறுகதைகள் புதிய கருத்தியல் தளங்களை உருவாக்கும் பரிசோதனைக் கூடங்களாகவும் விளங்கின.

தமிழ்ச்சிறுகதையின் போக்கையும் தனித்துவமான அதன் நோக்கையும் அறிந்து கொள்வதற்கு இச்சிறுகதைத் தொகுப்பு உதவும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் “ஈழத்துச் சிறுகதைக் களஞ்சியம்” என்னும் இத்தொகுப்பு வெளிவருவதால் ஈழத் திலக்கிய உலகம் பேருவகை அடைகிறது. இத்தொகுப்பை நல்லமுறையில் கொண்டு வர உறுதுணையாக நின்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்விசார் நூலகர் திருமதி அருளானந்தம் ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கட்கும் ஈழகேசரி பத்திரிகைகளைத் தேடி யெடுத்து தந்துதவிய ஜீவநதி ஆசிரியர் க.பரணிதரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக உதவியாளர் க.சிவலோகநாதன் மற்றும் நூலுருவாக்க முயற்சியில் உதவிய எவகிறீன் நிறுவனத்தவருக்கும் மற்றும் நூலில் இடம்பெறும் சிறுகதைகளை மெய்ப்பு பார்த்துத் தந்துதவிய ச. சத்தியதேவன், சி. ரமணராசா, எஸ்.ரி. குமரன், எஸ்.ரி. அருள் குமரன் ஆகியோருக்கும் இம்முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எம் நன்றி.

சி.ரமேஷ்.

பொருளடக்கம்

01. ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை - 01

1) சிதட கண்டீரவன் கதை- இணக்கம் வாழ்வு தரும் - 02

2) மூடசிகாமணி கதை - வீண் எண்ணம் சிரிப்புக்கிடம் - 08

02. ம.வே. தி.ச - 13

1) ஓம் நான் சொல்லுகிறேன்- முத்தன் முதலாளி முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையான முறை - 14

2) சாந்த நாயகி - 27

03. இலங்கையர்கோன் - 41

1) சக்கரவாகம் - 47

2) மரியா மதலேனா - 53

04. சி. வைத்தியலிங்கம் - 59

1) இப்படிப் பலநாள் - 60

2) ஏன் சிரித்தார் - 65

3) மின்னல் - 70

4) கழனி கங்கைக் கரையினிலே - 75

5) கங்கா கீதம் - 80

6) நெடுவழி - 87

05. சம்பந்தன் - 97

1) கல்யாணியின் கணவன் - 98

2) தாராபாய் - 105

3) இரண்டு ஊர்வலங்கள் - 111

4) அவள் - 117

5) மதம் - 123

06. அ.ந. கந்தசாமி - 135

1) குருட்டு வாழ்க்கை - 136

07. கோ. நடேசய்யர் - 143

1) திரு. இராமசாமி சேர்வையின் சரிதம் - 144

08. வரதர் - 149

1) நெஞ்சு கொதிக்குதையோ இந்த நீசத்தனங்களை நினைத்துவிட்டால் - 150

2) பாஞ்சாலிதேவி பதிவிரதையான கதை - 155

3) இன்பத்திற்கு ஓர் எல்லை - 169

4) ஜோடி - 175

5) வேள்விப்பலி - 182

- 189
6) அவள் தியாகம் - 193
7) விபச்சாரி - 200
8) கல்யாணமும் கலாதியும் - 203
9) காதற் பலி - **207**

09. சு. வேலுப்பிள்ளை - 208
1) பரோபகாரம் - 211
2) நிலைகேடு - 213
3) பாற்காவடி - **219**

10. கு. பெரியதம்பி - 220
1) பொங்கல் வாழ்த்து - 229
2) எட்டாப்பழம் - 235
3) அம்மான் மகள் - 239
4) வீண் வதந்தி - 245
5) காதலே காதல் - 250
6) குழந்தை எப்படிப் பிறக்கிறது? - 257
7) மன மாற்றம் - **267**

11. அ.செ. முருகானந்தன் (அ.செ.மு) - 268
1) வெறுப்பும் வெற்றியும் - 277
2) சிங்கக் கொடி சிரித்தது - 281
3) வியாபாரியார் - 286
4) பாடுபட்டுத் தேடி - 290
5) இன்னமும் சோதனையா - **295**

11. பவன் - 296
1) ஆசைச் சட்டம்பியார் - 302
2) ஒழிந்தது கவலை - **307**

12. தாழையடி சபாரத்தினம் - 308
1) விழிப்பு - 315
2) ஆலமரம் - 318
3) தெருக்கீதம் - 327
4) சடையம்மா - **333**

13. சோ. சிவபாதசுந்தரம் - 334
1) வள்ளியின் கனவு - 337
2) பரிசுக் கட்டுரை - 343
3) பொன்னர் செத்த கதை - 347
4) பாழும் மனம் - 353
5) வைரவ கோவில் விளக்கு

14. சொக்கன் - **357**
1) மாணிக்கம் - 358
2) பொன் பூச்சு - 369
3) கனவுக் கோவில் - 372
15. கதிராயித்தேவி - **377**
1) சகுந்தலா சொன்னது - 378
16. பத்மா துரைராஜா - **383**
1) உப்பும் சர்க்கரையும் - 384
17. நாவற்குழியூர் நடராஜன் - **387**
1) மாமி - 388
2) சாயை - 391
3) மோகினி - 396
18. நவாலியூர் சோ. நடராஜன் - **401**
1) கற்சிலை - 402
19. இராஜநாயகன் - **407**
1) உலகக் கண்கள் - 408
2) அவன் - 413
4) தியாகி - 418
5) வேதனைச் சுடர் - 423
6) இதயத் துடிப்பு - 427
7) அந்தக் காலம் - 433
20. நடனம் - **441**
1) நினைவுத் திரை - 442
2) வாழ்வு - 449
3) சிதைந்த வாக்கு - 453
21. சி. குமராசாமி - **457**
1) துள்ளிய உள்ளம் - 458
2) விடிவு - 462
3) தோட்டத்து மீனாட்சி - 467
22. சில்வரம்புலி - **471**
1) தெளிவு - 472
23. தியாகராஜன் - **479**
1) முதல் இரவு - 480
2) நல்ல மாமி - 483
24. அழகு சுப்பிரமணியம் - **487**
1) சேதுப்பாட்டி - 488

25. சானா - **493**

1) நாட்டியப் பெண் - 494

2) பூசாரிப் பூதர் - 498

26. பரிதி - **503**

1) எதிர்பாராதது - 504

27. பாஞ்சாலி - **509**

1) புது யுகம் - 510

28. எம் எம். ஸாலிஹ் - **515**

1) சதிகாரி - 514

29. S.K. ராஜ் - **519**

1) மங்கிய வெளிச்சம் - 520

2) பாவ மன்னிப்பு - 525

30. ஸ்ரீமான் இரகுநாதன் (வெண்ணிலா) - **531**

1) நடைப்பினம் - 532

31. N. சின்னத்தம்பி - **537**

1) வீணில் மாயாதே - 538

32. V. சந்திரசேகரம் - **543**

1) மன்னிப்பா - 544

33. கிரிஜா - **549**

1) இரு உள்ளங்கள் - 550

34. மூர்த்தி - **557**

1) நாகரிக பிச்சைக்காரன் - 558

2) நல்ல காலம் - 561

35. செல்வி. இ.தங்கம்மா - **563**

1) வறுமையின் கொடுமை - 564

36. குட்டி - **567**

1) கொழுத்த கடன் - 568

37. இராஜ அரியரத்தினம் - **571**

1) வயலுக்குப் போட்டார் - 572

38. ந. பாலசுப்பிரமணியம் - **577**

1) செல்லி - 578

39. யாழ்பாடி(கனகசெந்திநாதன்) - **583**

1) ஒரு பிடி சோறு - 584

2) இரும்பு இதயம் - 592

40. ராதாக்கிருஸ்ணன் - **595**

1) வேலை நிறுத்தம் - 596

41. செ. நடராசா - **599**
1) ராணி பவானி - 599
2) கைதி - 605
3) புஞ்சிமெனிக்கா - 611
42. மயில்வாகனன் - **617**
1) தராசு - 618
2) ஏழையின் கொடை - 621
43. பொ. பாலசிங்கம் - **625**
1) மன்னிப்பு - 626
44. ஸ்ரீ. க. சிதம்பரப்பிள்ளை - **631**
1) உயிர் எங்கே? உடல் எங்கே? - 632
45. "சேயன்" பொன்னாலை - **635**
1) கோபாலனின் விரதம்
46. சுயா - **639**
1) அந்தக் குறும்பன் - 640
2) நான்தான் துரோகி - 642
3) சீனிக்கட்டாடி - 648
4) மிகுந்தலைச் சந்நியாசி - 651
5) திருட்டுப்பிள்ளை - 654
6) யார் கள்வன்? - 656
7) "அன்னையின் கட்டளையும் அதுதான்" - 659
8) டிக்றெக்றர் ஒவ் எட்டுசேன் - 662
9) அவன் ஒரு உன்மத்தன் - 665
10) சந்திரவாசா - 668
11) இவன் யார்? - 672
12. படுகொலை - 676
13) யாழ்ப்பாணத்துப் பிரபல அப்புக்காத்து! அவரை உங்களுக்குத் தெரியுமா? - 681
47. S. ஸ்ரீநிவாசன் M.A - **683**
1) முன்னேற்றம் - 684
48. ஏ. சுப்பிரமணியம் - **689**
1) நகக்குறி - 690
49. து. ருத்திரமூர்த்தி - **693**
1) தூக்கணாங் குருவிக்கூடு - 694
50. இ. பொன்னுத்துரை - **699**
1) வண்டிக்காரச் சுப்பன் - 700

51. சில்லையூர் செல்வராசன் - **705**
1) கதவு திறந்தது - 706
52. ஆனந்தன் - **711**
1) அன்பினால் மரணம் உண்டா - 712
2) சாந்தி அடையுமா? - 721
3) தண்ணீர்த் தாகம் - 725
53. பாணன் - **731**
1) ஆறிய மனம் - 732
54. கே. கணேஷ் - **737**
1) சத்தியபோதி மரம் - 738
55. விஜயன் - **745**
1) வீட்டு வாசனை - 746
56. சோ. ஆனந்தராஜன் - **751**
1) கௌரியின் பரிசு - 752
2) காதற்பீடம் - 757
3) கௌரி - 762
57. சரஸ்வதிதாசன் - **765**
1) தியாகம் - 766
58. சண்முகம் - **773**
1) அபலை - 774
59. கமலாவதி சபாரத்தினம் - **779**
1) நிலா உலாத்து - 780
60. கே. ஆர் நாதன் - **783**
1) மன்னிப்பு - 784
61. சா. இ. கமலநாதன் - **789**
1) நினையாதது - 790
62. கஜமுகன் - **793**
1) நினைவுச் சுழல் - 794
63. ந. சண்முகரெத்தினம் - **801**
1) வசந்த விஜயம் - 802
64. திரு. பொ. சிவராமலிங்கம் - **807**
1) ஆயிரம் மோதகம் - 808
65. வடிவு - **811**
1) அடைக்கலம் - 812
2) ஏழைப் பெண் - 818

66. சரோஜினி - **823**
1) காதலும் கல்யாணமும் - 824
67. ஸ்ரீமத் பண்டிதர் வ.சு. இராஜ ஐயனார் - **827**
1) மாயக் குதிரை - 828
68. திரு. ஏ.சி. இராசையா - **845**
1) நவீன கோவலன் - 846
69. செ. சந்திரபாலகணேசன் - **853**
1) கமலதீபம் அல்லது நாற்றச் சிப்பியின் நல்ல முத்து - 854
70. ரா. சு. - **857**
1) மலாயாக் கடிதம் - 858
71. உமா - **863**
1) சௌந்தரவல்லி - 864
72. கசின் - **873**
1) வனசஞ்சாரம் - 874
2) இது காதலல்ல - 881
3) கதவைச் சாத்தினாள் - 886
73. கலைப்பித்தன் - **891**
1) போராட்டம் - 892
74. டி.எஸ்.வி.வேலு - **897**
1) சுமித்திரா - 898
75. தமிழ்மணி அம்பிகைபாகன் - **903**
1) புதுமையில்லை - 904
2) இலட்சியச் சோடி - 909
76. த.தீ.சீ - **917**
1) சுக்கிரதிசை - 918
77. ராஜேஸ்வரி - **925**
1) கடைசிக் கந்தாயம் - 926
78. எஸ்.என். சொக்கநாதபிள்ளை - **937**
1) பாசம் - 938
79. ரகுநாதன் - **947**
1) நோட்டுப்பணம் - 948
80. எம். எஸ். பாலு - **955**
1) பிள்ளைப் பாசமா? விதியின் சூழ்ச்சியா? - 956
81. அழகு - **961**
1) மன நிம்மதி - 962

82. பொன்னழகு மைந்தன் - **967**
1) கமலாவின் கனவு அல்லது கதருடைக் காதல் - 968
83. எஸ்.என் - **975**
1) விதியின் விளையாட்டு - 976
84. செல்வன் - **981**
1) சதி செய்த விதி - 982
85. வ. அ. இராசரத்தினம் - **987**
1) கோணற் தராசு - 988
2) இதய தாபம் - 994
3) வாழ்க்கை - 999
4) பாலன் வந்தான் - 1004
86. சேனநானா - **1009**
1) கற்புக்கு இலக்கியம் - 1010
87. ந. நாகலிங்கம் - **1017**
1) வேதனை - 1018
2) மானம் பெரிது - 1022
88. நடமாடி - **1027**
1) பஞ்சப்படி வாழ்க - 1028
89. சரஸன் - **1031**
1) பவானியின் நினைவு - 1032
90. அபலை - **1041**
1) விதி கிழித்த கோடு.... சமூகம் காட்டிய பாதை - 1042

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை (11.08.1826) மானிப்பாயில் பிறந்த அ. சதாசிவம்பிள்ளை பாவலர் உதயதாரகை பத்திரிகையின் ஆசிரியராக இருந்து சரித்திர தீபம் நூலை எழுதியவர். இல்லற நொண்டி, மெய்வேட்டசரம், திருக்கடகம், நன்நெறிக்கொத்து, வானசாத்திரம், வெல்வை அந்தாதி, கதாசங்கிரகம், முதலான நூல்களை எழுதியவர். 20.02.1896 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை விட்டு நீத்தார்.

- *சிதடகண்டீவரன் கதை - இணக்கம் வாழ்வு தரும்*
- *மூடகசிகாமணி கதை - வீண் எண்ணம் சிரிப்புக்கிடம்*

சிதடகண்டீரவன் கதை

இணக்கம் வாழ்வு தரும்

Union is Strength

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை

பரதகண்டத்துக்கு மேல் பாகத்திலுள்ள பெருஞ் சமுத்திரத்துக் கப்பால், அஞ்சனாபுரம் என்னுமோர் பட்டணமுண்டு. அதிலே நீல மேனியரும், பயங்கர ரூபிகளும், எதிர்த்த சத்துருக்களைக் கணப் பொழுதே சங்காரஞ் செய்யத்தகுந்த வீரசூரரும், நெருப்பிலுஞ் சிவந்த கோபக்கண்ணரும், மகா பலசாலிகளுமான இலட்சக்கணக்கான சனங்கள் வசித்தார்கள். இவர்கள் புயத்தினவுண்டாய் வீர வெறி கொண்டவுடன், ஆண்டுக்காண்டு தங்கள் அரசனுடைய அனுமதி யைத் தலைமேற் சூடிக், கச ரத துரக பதாதிகள் என்னும் சதுரங்க சேனா சமுத்திரத்தைத் திரட்டி, எறிவல்லயம், எறியீட்டி, தண்டம், பிண்டி பாலம், கப்பணம், தோமரம் ஆதியாம் பற்பல பேத வகை ஆயுதபாணிகளாய் அயலிலுள்ள இராச்சியத்துட் சென்று, தோள்வலியாலும், படைவலியா லும், அவர்கள் கோட்டைகள், கொத்தளங்கள், மாடங்கள், கூடங்க ளைத் தகர்த்துத், தவிடு போற் பொடிப்படுத்தி, அவர்கள் தேட்டங்கள், தோட்டங்களைச் சூறையாடி, மைந்தரைச் சிறைப்படுத்தி, மடந்தை யரைக் கற்பழித்து அவர்களுடைய இராச்சியம் முழுவதையும் மண் மேடும் பாழ்மேடுமாக்கிப் போவார்கள்.

ஆதலினால், அவ் அயலிராச்சியத்திலுள்ள பிரசைகளும், அவர்கள் அரசனும், அவனது மந்திரத்தவரும், அஞ்சனாபுரத்தரான அச்சத்துருக்கள் தங்கள் மேற் சருவிப் படையெழுச்சி செய்ய வருங் காலங்களை "எறும்புமுட்டை கொண்டு திட்டையேறினால் மழை பெய்யும்" என்றாற்போலச் சில குறிப்புகளாலுணர்ந்து, புற்றினின்று புறப்படும் ஈசற் கூட்டங்கள் போலத் தத்தம் வீடுகள், குடிசைகளில் நின்று புறப்பட்டுத், தங்கள் பிள்ளை குட்டிகள், மாடு கன்றுகள், பணம் பண்டங்களைக் கொண்டு, காடுகள், மலைகள், குகைகளைத் தேடிப் போய் ஒளித்திருப்பார்கள். அங்கே சிலகாலந் தங்கி, அணையைக் கடந்து பிரவாகித்து வந்த கடல் வெள்ளமானது அகப்பட்ட பொருட்களை வாரியள்ளி மறுபடியும் திரும்பினாற் போல, முன் வந்த அம் மாற்றலர் வெள்ளம் தங்கள் கைகளுக்கு அகப்பட்ட பொருட்களை வாரி ஊர்விட்டுப் போம் வரைக்கும் அவர்களுக்குத் தென்படாமலும் வெளிநாடாமலும் கரந்திருந்து, அப்புறம் அவர்கள் திரும்பிச் சரிந்தபின் மறுபடியும் பழையபடியே தங்கள் தங்கள் இருப்பிடங்களைச் சார்ந்து, வீடுவாசல்களைச் செப்பனிட்டுக் காணிபூமிகளைச் செய்கையிட்டு வாழுவார்கள்.

இவ்வண்ணம் இக் குறுநிலத்தரசைச் சேர்ந்த பிரசைகள் சத்துருவின் வருகைக்கு அஞ்சிக் குடிவாங்கிய ஒரு காலத்தில், அங்குள்ள அக்குடிசனங்களுக்குள்ளே, தன் மாதாவின் கர்ப்பத்தினின்று பிறந்தகாலந்தொட்டுக் கண் விழியா ஓர் அந்தகனிருந்தான். இவன் பிறவிக் குருடனாயினும், அதிவாசாலனும், யூகியும், சிங்கேறுபோற் திண்ணியனுமானவன். இவனது பெலத்தையுஞ் சமர்த்தையுமிட்டு இவனுக்கு அந் நகரத்தார் சிதடகண்டீரவன் என்னுங் காரண நாமங் கொடுத்தார்கள். இந்நகரத்திலே பிறவி தொடுத்துக் கால் நீட்டி நடந்தறியா ஓர் முடவனுமுளன். இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் முன்பின் அறியாதவர்களாய்ச், சீவனக் குறைவினாற் பேரிடர்ப்பட்டுத் தத்தம் உறைவிடநின்று புறப்பட்டு, "எல்லாருக்கும் சனியன் துரும்பு போலானால் எனக்குச் சனியன் எருமைபோல்" என்று தனித்தனியே தத்தமில் முறுமுறுத்துக்கொண்டு, தட்டித்தடவித் தவழ்ந்து நகர்ந்து, இராசபாதையில் வந்து, ஒரு நாற்சந்தியில் ஒருவரையொருவர் சந்திக்கலாயினார். குருட னானவன் தெருவில் வந்தவுடன் ஆட்சந்தடியையும் அசுமாற்றத்தையும் காதாற் கேட்டறிந்து, சிங்கம் போற் கருச்சித்து, அதாரங்கே? என்று முழக்கமிட்டான். முடவன் உத்தரமாய், அப்பா, குருட்டண்ணா, அது நான் தான் ஓர் முடவன் என்றான். அப்புறம் இருபேரும் ஒருவரை யொருவர் ஆசீர்வதித்து, தத்தம் குறைமுறைகளை எடுத்துப் பேசிக்கொண்டிருக்குஞ் சமயம், முடவன் பெருமூச்செறிந்து ஐயோ! தெய்வமே! காலிரண்டும் முடமான தாழ்வன்றி எனக்கு வேறுள்ள தாழ்வியாது; கண், கையாதி அங்கங்களிலே எனக்கு ஏதேனுமோர் பங்கமுமில்லையே; ஐயையோ! பசிபோட்டென்னை வாட்டுகின்றதே; "பசிவந்திடப் பத்தும் பறக்கும்" என்றது என்னிற் பலிக்கின்றதே. தெய்வமே! யான் இந்தப்படி உலைந்தலைய விதித்தாயோ? ஐயோ! அந்தே ! என்று மறுபடியும் பெருமூச்செறிந்து பசிக்களையாற் தெருவிற் சாய்ந்தான்.

அப்பொழுது சிதடகண்டீரவன் பெருமுச்செறிந்து, முடவனைத் தட்டி எழுப்பித் தூக்கி, அடா முடத்தம்பி, "எழுதா விதிக்கு அழுதாலாவதில்லை" என்று, உங்கள் அப்பன், ஆய்ச்சி, பாட்டன் பாட்டி சொன்னதை ஒருக்காலும் நீ கேட்டதில்லையா? தெய்வத்தை நொந்தும் தரையில் விழுந்துமாவதில்லை. உன்பாடு உரலின் பாடானால் என் பாடு மத்தளத்தின் பாடு போலிருக்கிறது. பொதுவில் இருவர் பாடுஞ் சலார்தான். குபேரன் பட்டினங் கொள்ளை போனாலும் அதிட்டங் கெட்டவனுக்குத் துடைப்பங்கட்டையும் அகப்படாது" என்றாற்போல

எங்களூரிலே எவ்வளவுகோடி திரவியத்தைப் பிறர் அபகரித்துப் போனாலும், நாமோ "பழைய காத்தானாக"வே பின்னுமிருக்கிறோம். ஆனால் இவ்வாறு பலவற்றையும் உளறி யாவதென்ன! அடா, முடத்தம்பி, எனக்கிப்பொழுது ஒரு நவக் கருத்து முளைக்கிறது. எனக்கு நயனங்களில்லை, உனக்குப் பாதங்களில்லை. அரையும் அரையுங் கூடினால் ஒரு முழுக கூறாகும். உன் கண்ணை என் காலோடு சேர்க்க நாமிருபேருங் கூடி ஒரு முழு ஆளாக லாமே. நீ எனக்குக் கண்ணாகவா, நான் உனக்குக் காலாக வருகிறேன்" என்றான். குருடன் வார்த்தை "சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி சொரிந்தாற் போல" இருந்ததினால் முடவன் கைகொட்டி ஆர்ப்பரித்துக், கொய்யோ கூறி, முக்காலும் எனக்குச் சம்மதம் என்றான். குருடன், "அல்லவோபின்னை" உன் சம்மதத்தையிட்டு நெடுந்தூரம் மெய்ச்சலாயினேன், அடா தம்பி, முடவா, ஒரு விரல் தனியே நொடிக்குமா? நாமிருபேரும் பின்னபேதமின்றிச் சிநேகிதங் கூடி உடலுமுயிரும் போல மயிரிடையும் பிரியாதிசைந்திருப்போமானால், கபட நாடக சிகாமணியையும் அவன் கூட்டாளிகளையும் போலக் குறைச்சலின்றி வயிறு வளர்க்கலா மென, முடவன் குருடனைப் பார்த்து, அண்ணா, நீ இப்பொழுது சொன்ன அக் கபடநாடகன் கதையை விஸ்தரி எனக், குருடன் கூறலுற்றான்:

அகோ! கேளாய், முடத்தம்பி, மாயாபுரி என்னும் தேசத்திலே சூதாகரம் என்னுமோர் கிராமமுளது. அக்கிராமத்திலே, கபடநாடகன், மடிபறிகரவடன், காரிய வீரியன் என்னும் மூன்று சிநேகிதருளர். இம்மூவரும் ஒருங்கு கூடி, மீனுக்கு வாலும் பாம்புக்குத் தலையுங் காட்டு மலங்கு மீன் போல, அங்கங்கே அவரவரோடு சேர்ந்து அவரவராய் நின்று, ஒருவன் கலைக்க, ஒருவன் வளைக்க, ஒருவன் அக்கிராமத்தார் பொருட்களைத் திருடி அபகரிக்க, இவ்வாறு அம்மூவரும் அவ்வூரவர்க்குப் பஞ்சத்திற் பறையனும் வெயிலிற் கறையானுமாய் அவர்களைச் சாடிக் குட்டிச்சுவராக்கித் தம் வயிறு வளர்ப்பார்கள். இம்மூவரும் ஒருமுறை சூதாகரம் என்னும் தம்மூர் விட்டுத் திசாபுரஞ் சென்று, செப்படி வித்தைக்காரர் போல அங்குள்ளார் கைப்பொருள் திருடியும், ஊருக்குத் திரும்பப் போதுமான பொருளில்லாததினால் இதற்குச் செய்வது ஏதென்று ஓரிடங் கூடி யோசித்த சமயம், மடிபறிகரவடன் எழுந்து, ஓ! சிநே கிதரே, உங்களிலொருவன் இக் கிராமத்துள்ள சனங்களை ஓரிடத்திலே எந்த உபாயத்தினா லாவது அழைப்பதுண்டானால் அவ்விடங் கூடுவார் மடிப்பொருட்களை நான் இலகுவிற் கைப்பற்றுகிறேன் என்றான். கபடநாடகன், சிநேகிதா, அவ்வாறு நான் அழைக்கிறேன் என, மூன்றாவதான காரிய வீரன், ஆ! நீவிரிருவரும் இப்போது சொல்லிய வண்ணம் நடத்திச் சனங்கள் பராக்காயிருக்கச் செய்வீரேல் நான் அங்குள்ள கிராமத்தைத் தனியே சூறையாடு வன் என்றான்.

இவ்வாறு மூவரும் யோசித்த பின் சனங்களை ஓரிடம் அழைக்கிறேன் என்ற கபடநாடகன் அக்கிராமத்திலுள்ள தலையாரியிடம் போய், ஓய்! பிரபு! நான் ஒரு புதுவகைச் சக்கரக் கூத்து விளையாட அறிந்திருக்கிறேன். கொலைக்களத்துக்கு அந்தண்டை உம்மு இடர்க் குற்றவாளிகளைத் தண்டிக்கும்படியாய் நீர் நாட்டிய அந்தச் சக்கரத்தின் மேல் ஏற எனக்கு உத்தரந் தந்தால், அவ்வாறு செய்து காட்டுகிறேன் எனத், தலையாரி தன்னோடொத்த ஆட்களுக்கும் பிரபுக்களுக்கும் அக்காரியத்தைத் தெரிவிக்க, அவர்கள் சக்கர நாடகமென்பது மிகப் புது நாடகமென்று சொல்லி, அவனுக்கு உருக்கொடுத்து, அதற்கடுத்த தினம் நியமித்துப், போதிய பெருந்திரவியத்துடன் குறித்த கூத்துக் களரியிற் தோற்றினார்கள். தேனின் மேல் மொய்த்த ஈ போலச் சனங்கள் கூடக், கபடநாடகன் சக்கரத்தின் மேல் ஏறிக் கூத்தை

ஆரம்பித்தான். எல்லவர் கண்ணும் இவன் மேலோட மடிபறிகரவடனே அங்கு கூடிய அச் சனங்களுள் நுழைந்து அவருக்கவராய் நின்று, அவரவர் மடியிற் தன் கைகளை மிட்டு அவரவரறியாது அவ்வவர் வசமிருந்த யாவற்றையுந் திருடினான். இப்பாற் திசாபுரத்திலுள்ள குழந்தைகள், பெண்கள் முதலாய் பெரியோரீறாய் அனைவரும் இப்புது நாடகங் கண் ணுறுங் கருத்தோடு கூத்துக்களரியில் வந்து பொருட்களை இழக்க, அப்பாற் காரிய வீரியன் தான் முன் சொல்லிய வண்ணம் அவரவர் வீட்டுட் புகுந்து அங்குள்ள யாவற்றையுந் திருடிப் போனான். சக்ரக் கம்பத்திலேறியவன்" சில கண வேளையாய் அதில் நின்று, ஆ.! ஊ! "ஆரை, ஆரை" என்று ஆர்ப்பரித்துத் தலையாரியை நோக்கி ஐயா, நான் கூத்தைத் தொடங்கமுன் எனக்குத் தைரியமாய் அவரவரே ஏதும் வெகுமதிகள் கொடுங்கள் என்றான்.

எனவே, தலையாரி முதலாம் கிராமச் சனங்கள் கொடுக்கிறோமென்று தங்கள் தங்கள் மடிகளிற் கைவைத்துத், தாம் முன் கொண்டுவந்த பொருட்களைக் காணாது சஞ்சலப்பட்டு, ஓ! இதுகாரியமெப்படியாயிற்று எங்கள் மடிகளைத் தடவிய கள்வர்கள் யாரெனக் கமறச், சக்கரக்கூத்தன், ஆண்டவர்மாரே, என்னை மாத்திரம் நினையாதிருங்கள், நான் இங்கே கம்பத்தில் நிற்கிறேனே எனச், சனங்கள் கோபமும் நாணமுங்கொண்டு கள்வன் இவனோ, அவனோ, அவனைப் பிடியுங்கள், இவனைப் பிடியுங்களென்று கண்டபடி உரப்ப, இந்த அமளியிற் கூத்தாடியானவன் சக்கரத்தாலிறங்கி ஒருவரும் அறியாது கெட்டவன் குடி கெட்ட தென்று தன்பாட்டிலோடினான். தலையாரி முதலாஞ் சனங்கள் பொருளையுமிழந்து கூத்தனையுங் காணாது வெட்கமடைந்து வீட்டுக்குப் போய், அங்குள்ள பணம் பண்டங்களை யுங் காணாமல் இழவு கொண்டாடினார்கள். கபடநாடகன் முதலாய மூவருங் கூடித் தம்மூர் போனார்கள். ஆதலால் முடத்தம்பீ, குருடராயிருந்தாலும் முடவராயிருந்தாலும் இருவர் கூடினால் எதையுஞ் செய்யலாம்." அடம்பங் கொடியுந் திரண்டால் மிடுக்கு"அல்லவா என்றான். அப்பொழுது முடவன் முன்னையிலும் பேரானந்தக் களிப்போடு, அண்ணா! அண்ணா! எனக் கெக்காலும் சம்மதந்தான். இன்று தொடங்கி நாமிருபேரும் ஈருடல் ஒருயிர் என்றான்.

எனவே சிதடகண்டீரவன் கொய்யோ கூறி, அந்த முடவனைத் தூக்கித் தன் இரு தோள்களின் மேற் சாங்கோபாங்கமாய் உளுக்காரச் செய்து, சாரதி செலுத்தச் செல்லும் ஓரிரதம்போல் அசைந்தசைந்து, நாடொருவி, நகரொருவிக், காடணுகி மலையணுகித், தங்கள் ஊர்ச்சனங்கள் சென்ற அடிச்சுவடு துருவி வரும்பொழுது, கானக சஞ்சாரியும் மிருகராசனுமாகிய ஓர் சிங்கத்தால் அடிப்பட்டிறந்த ஒரு கலைமான் மலையடிவாரச்சுனை யொன்றிற்கருகே கிடக்கிறதை முடவன் கண்டு, அண்ணா! மான்! என்றான். குருடன் அதற்கு முந்தி, மூக்குப் புலனினால் மோந்துணர்ந்து, தம்பீ, மானிறை ச்சியென்றான். இருபேரும் பசிக் களைக்காரரானதாற் பச்சைப்படியாக உட்கொள்ள நினைந்து, அதன்பக்கத்திற் தரித்து இளைப்பாறினார்கள். இதுவரையும் இருபேருஞ் சமாதானமாய் வந்தும், உண வுப்பொருளெனவே, "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறே" என்றாற் போல, வேற்றுக்குணங்கொண்டார்கள். குருடன் தலைமாடெனக்குக் கான்மாடுனக்கென்றான். இவ்வாறு காற் பக்கந் தலைப்பக்கமென்ற மட்டில் இருபேருக்கும் ஏச்சும் பேச்சும் அடியும் பிடியுந் தொடங்கின. இருவரும் பெரு வழக்கிட்டார்கள். முடவன் குருடனைப் பார்த்து மிக உக்கிரங்கொண்டு, அடா, நான் உனக்குக் கண்ணாயிருந்தபடியாலன்றோ நீ இக் கலையண்டை வரும் அதிஷ்டம் பெற்றாய், அல்லாது போனால் நீயும் இதற்காளோ அடா எனக், குருடன் முடவனைக் கூவி, முழக்கமிட்டு, இல்லாத வசை வார்த்தைகளைப் பேசித்,

தன் புயங்களிற் தட்டிச் சிரித்துப் போடா, போடா, சப்பாணி! "சொருகிக்கிடந்த அகப்பையுஞ் சோறள்ள வந்தது" என்றாற்போல நீயும் ஓராளென்று தொங்குகிறாயா? அடா, மோட்டு முடவா உனக்கித்தனை கருவமா நான் உனக்குக் காலாயிருந்துன்னை நடத்திவந்தபடியாலல்லவா, முழுமகனே, நீ இந்த இறைச்சியைக் கிட்டினாய்: அல்லது போனால் நீயும் இதற்கொராளோ? அடா "ஓடங்கடந்தால் ஓடக்காரனுக்கொருசொட்டு" என்றது போலல்லவா நீ எனக்குச் சொட்டுப்போடப் பார்க்கிறாய்." நல்லதும், என் புயபல பராக்கிரமத்தை நீ இன்னுங் கேட்டறிந்திலைபோலும், என்று, சண்டமாருதம் போல் ஆர்ப்பரித்தெழுந்தான். அப்போது முடவன் குருடனிலும் மும்மடி கோபங்கொண்டு, "வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்கால் அடிமை", என்றாற்போல உன் நல்ல காலுக்கு என் முடக்கால் அடிமையென்று பிலுக்கடிக்கிறாயா? நீ எனக்கு வாசியாயிருந்தது மெய், நான் உனக்குத் தரிசியாய் வராதிருந்தேனேயானால், நீ இதைக் கடைக்கண்ணாலுங் காண்பதெங்கன. அடா போடா, முதலுரிமை எனக்கென்றனன், அப்பொழுது சிதடகண்டீரவன் என்னும் அக்குருடன் அதிகோபங் கொண்டவனாய்க் குதித்தெழும்பி, முடவா, இதோ உன்னை மிதித்துச் சாறாக்குகிறேன் பாரென்று தன் வலக்காலையோங்கினான்.

இந்தப்படியே குருடனுக்கும் முடவனுக்கும் பெரும் வாக்கு வாதம் மூள, பெருங் கோபம் கனலென எழும்ப, இருவரும் ஒருவரையொருவர் ஏசிப்பேசிக் குத்தியுதைத்துப், பிய்த்துப்பிடுங்கி, விறாண்டிக்கடித்துக், கிள்ளி நுள்ளிக் " காடையும் புழுதியும்" போற சிலநாழிகைநேரம் சண்டை போட்டபின்பு, சிங்கம் போலும் பெலசாலியாகிய அக்குருடனுக்கு ஒருமாளுமில்லாப் பெருஞ்சினம் பின்னும் மூள, அவன் முடவனைப் பிடித்துப் பந்து போலுருட்டி ஆகாயத்திலெறிய எத்தனித்துக் கச்சைகட்டி எச்சரிப்பாய் நிற்குஞ் சமயத்திற் சாமசித்தன் என்னும் வழிப்போக்கன் மேற்படி சண்டைக்களரியிற் தற்செயலாய் வந்தான். அவன் அவ்விரு அங்க பங்கத்தாரின் ஆரவாரத்தையும் பரிதாப நிலையையும் கண்டு, அவர்கள் பேரில் இரங்கி மனசுருகி, அவ்விருவரையுஞ் சண்டையால் விலக்கி அப்புறம் இப்புறம் நிற்கநிறுத்தி, அவர்களை நோக்கி, ஆ ! மட மக்களே! பித்தலாட்டக்காரரே! "குதிரையின் குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்பு கொடாதது" என்னும் முதுமொழி உங்களிருபேரிலும் நன்றாயிணங்கி வருகிறதே. அகோ முட்டர்களே! "எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்" என்று உலகோர் கூறும் இம்முதுமொழியை நீவிரொருபொழுதேனுங் கேட்டதில்லையா? கழுதையானது கஸ்தூரி வாசத்தை அறியாதானாற்போலச் சமாதான சீவியத்தினினிமை உங்களுக்குத் தெரியாமையினாலல்லவோ இவ்வாறு பிளவுபட்ட சிந்தையராகி மோசம் போகிறீர்கள். இது காரியத்தை உங்களுக்கு விளக்கும்படி ஓர் பழங்கதை கூறுவல் கேட்குதிரென, அவர்கள் இருபேரும் அப்படியாகட்டுமென்று கைகட்டி மவுனமாயிருக்கச், சாமசித்தன் சொல்லுகிறான்.

கேளுங்கள் குருட பங்கரே, திருப்புரியென்னும் பட்டினத்திலே நுட்பாதிநுட்பம் என்னுமோர் சிற்றாறுளது. அதற்கு மேலே நுணுக்கா நுணுக்கம் என்னும் ஓர் சிறுபாலமுண்டு, அதன் விசாலம் ஒரு சாண். இப்பாலத்தின் வழியாகத் தற்செயலாய் ஒருமுறை தற்பிரியன் என்றும் ஆங்காரன் என்றும் பேர் கொண்ட இரண்டு முரட்டு மனுஷர் தருணத்திற் செல்லவேண்டியிருந்தது. தற்பிரியன் வடபுறத்திலிருந்தும், ஆங்காரன் தென்புறத்திலிருந்தும் வந்து இப்பாலத்தில் ஏறினார்கள், ஏறிய இருவருங் கொஞ்சத்தூரம் நடந்து போனபின் நடுப்பாலத்தில் ஒருவரையொருவர் சந்தித்தார்கள். அப்புறம் இப்புறம்

விலகிப்போகப், பாலமோ முன் சொன்னபடி பெரிதல்ல. முன்வைத்த அடியைப் பெயர்த்துப் பக்கம் சாய வைத்தால் இருவரும் ஒருத்தரத்தில் ஆழியில் முக்குளிப்பார்கள். வந்த பாதையிற் பஞ்சிப்பட்டுப் பின் முன்னாய்த் திரும்பி நடந்து பாலாந்தத்தில் நின்று, ஒருவர்க்கொருவர் இடங்கொ டுத்தாலன்றி மற்றும்படி போகமாளாது. ஆயின் முதற் திரும்ப மனசு காட்டுவதோ இருவர்க்கும் சங்கைத் தாழ்வு போன்றிருந்தது. ஆதலால், ஆங்காரன் தற்பிரியனைப் பார்த்துத் திரும்பென்றான். தற்பிரியன் ஆங்காரனைப்பார்த்து, நீ திரும்பென்றான். அது முதல் நான் விலகுவேனோ, நான் சாய்வேனோ, நான் இளைத்தவனோ, நான் குறைந்தவனோ, என்று இருவரும் ஒருவர்க்கொருவர் முந்தித் தருக்கமாடினார்கள். சொற்பரிமாற்றத்திற் பலன்படாமை கண்டு, இருவரும் கைப்பரிமாற்றத்திற் தொடங்கினார்கள், இருவருங் கட்டிப்பினைந்து கணப்பொழுதில் ஆற்றுள் விழுந்து அம்மிபோல ஆழத்திலாழ்ந்து சீவமோசமானார்கள்.

இந்த வர்த்தமானம் இம்மட்டிலிருக்கப், பின்னொருதரம் மேற்படி பாலத்தின் மார்க்கமாய் ஒருவரையொருவர் அறியாது, அன்பாழன் என்றும், நேசாழன் என்றும் இருபேர், ஒருவன் உத்தரத்திலும் ஒருவன் தெட்சணத்திலும் நின்று வந்து நடுப்பாலத்திற் சந்தித்தார்கள். உடனே இருவரும் முகமலர்ந்து கைகுலுக்கி, ஒருவர்க்கொருவர் ஆசீர்வாதஞ்சொல்லி, நான் திரும்புகிறேன், நான் திரும்புகிறேன், நீர்தான் வாரும், நீர்தான் வாருமென்று சொல்லிக், கனம் பண்ணிக்கொள்வதில் ஒருவர்க்கொருவர் முந்தி, இருவரும் ஒருவரையொருவர் அன்போடு வேண்டிக்கொள்ள, ஈற்றில் அன்பாழன் நான் திரும்புகிறேன் என்று ஆக முந்திக் கொண்டதினால் நேசாழன் அவன் பின் சென்றான். பாலத்தின் அந்தத்தில் மறுபடியும் ஒருவர்க்கொருவர் சலாஞ்செய்தபின், நேசாழன் தன் அலுவலிற்போக அன்பாழன் மறுபடி பாலத்தேறித் தன் அலுவவிற்போனான். - ஆதலால், குருடபங்கரே, ஒத்தாலன்றி வாழ்தல் கூடாது. வீண் சண்டை போட்டீரேற் தற்பிரியனுக்கும் ஆங்காரனுக்குமுற்றமேசம் உங்கட்கும் வரும். தலைப்புறவிறைச்சியைத் தின்றாலுங் காற்புறவிறைச்சியைத் தின்றாலும், பசி சமமே தணியத்தக்கதாயிருக்க, "இரண்டு வீட்டிலுங் கலியாணம், இடையிலே செத்தது நாய்க்குட்டி" என்றாற்போல இடையிலிருந்து நீங்கள் சாவானேன்? நானென்ற அகம்பிரமத் தினாற் தூண்டப்பட்டு மோசம் போகவேண்டாம். பேய்ப்பயல்களே, "மகன் செத்தாற் சாகட்டும் மருமகள் கோட்டமடங்கட்டும்" என்ற மாமியைப் போல, நான் செத்தாற்சாகிறேன், அவன் மதம் அடங்கட்டுமென்று நீவிரிருபேரும் வைரஞ் சாதிக்க வேண்டாம். உயிரின்றி உடலும், உடலின்றி உயி ரும், வாழுமா? நீங்களிருபேரும் ஒருவரையொருவரின்றி வாழ்தல் கூடுமா? முடவனது கண்ணில்லாதிருந்தாற் குருடா, உன் காலாற் காரியமென்ன? குருடனது காலில்லாதிருந்தால், முடவா, உன் கண்ணாற் காரியமென்ன? நீவிரிருபேரும் ஒருவரை யொருவர் கைவிட்டீரேற் சிறகுமுறிந்த பறவைபோலாவீர்கள். நீவிரிருபேருங் கூடியன்றோ இந்த மானண்டை வந்தீர்கள்: பின்னும் நீவிரிருபேருங் கூடியன்றோ சரிக்கட்டி அதைப் புசிக்கவேண்டுமென்று இருபேரையும் இராசிப்படுத்திப் போனான். அப்புறம் நம் இருபேருஞ் சரியென்றொத்துப் பின்னபேதமின்றிப் பச்சைப்படியே விருந்தருந்தி அது முதல் ஒருவரை யொருவர் புறக்கணி யாது ஒருவருக்கொருவர் உயிருமுடம்புமாய்ச் சமாதானமாய் நாள் விட்டு வந்தார்கள், இதனால், இணக்கம் வாழ்வு தருமென்றுணர்க.

மூடசிகாமணி கதை

வீண் எண்ணம் சிரிப்புக்கிடம்

Selling the skin before catching the bear

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை

சூனியபுரம் என்னுமோர் நகரத்திலே மூடசிகாமணி என்னுமோர் பார்ப்பானிருந்தான். இவனுக்கு மனோரதி என்னும் மனையாட்டியும் உல்லாசன் என்னுமோர் பாலனுமுண்டு. இப்பிராம்ணன் அதிதரித்திரனாதலால் அகோராத்திரஞ் சுற்றுக்கிராமங்கடோறுந் திரிந்து யாசகம் பண்ணி, நாள் வீதந் தன்னையுந் தன் மனைவியையும் புத்திரனையுந் தாபரித்து வந்தான். இவ்வாறு பலவாண்டுகளாக நடந்துவர, ஒருநாள் மனோரதி என்னும் அந்தப் பார்ப்பினி, தன் நாமகரணம் போல மேலாட்டமான எண்ணங்களில் எடுபாடுள்ளவளாய்த், தன் பத்தாவாகிய அப்பிராமணனைப் பார்த்து, அகோ! என் பத்தாவே, நம் அக்கிரகாரத்து வாசம்பண்ணும் அயலாராகிய நம் பந்துசனங்கள் எல்லவருந் தேவகடாட்சம் பெற்றுத் தனவான்களாகவிருக்க, நாமோ கலிக்கடலின் கரைகாணாமற் சாணேறி முழம் வழுக்குகிறோமே. தெய்வம் நமது தலையில் இவ்வண்ணம் லிபித்ததே; என்று துன்புற்றுப் பேசிக் கொண்டிருக்கவே, அண்டை வீட்டுப் பிள்ளைகளுடன் பண்டை போல விளையாடப் போயிருந்த உல்லாசன் என்னும் அவர்கள் புத்திரன், தன் மாமாவின்

வீட்டிலே மைத்துனப் பிள்ளைகள் பாலுஞ் சோறும் உண்டு கொண்டிருந்ததைக் கண்டு, அப்பச்சி "கௌபீனத்தைப் பருந்துகொண்டு போகிறது. பிள்ளை வீரவாளிப்பட்டுக்கு அழுகிறது என்ற கதைபோல் அப்பாந்சோற்றிற் சோட்டை உற்றவனாய், ஓட்டமெடுத்தோடிவந்து வீரிட்டழுது தாய் மடிமேல் விழுந்து, அம்மா, அம்மா, எனக்குப் பாச்சியும் சோச்சியுந் தா என்றான். "பாலருக்குப் பெலன் அழுகையாதலால் அவன் அழுகை மூடசிகாமணியின் மனசைச் சயங்கொண்டது.

அப்பொழுது அம் மூடசிகாமணி, விம்மல் பொருமலுடன் தன் மாதாமடியின் மேற் குப்புறக் கிடந்த தன் மைந்தனை, இருகரங்களாலும் வாரியேந்தி, உச்சிமோந்து மடிமேலிருத்தி, அணைத்துத் தாராட்டி, அன்போடு சீராட்டி, அவனைப் பார்த்து, அப்பா மகனே குலக்கொழுந்தே, உல்லாசனே, எங்கள் பிள்ளைக்கெலி தீர்க்கப் பிறந்த அமிர்த சஞ்சீவினியே, நாம் தினாந்தம் வறுமைப் பிணியால் வருந்துகிறோம். உன் கொண்டை பூவுக்கழுகிறது, நம் பண்டி கூழுக்கழுகிறது, நீ பாற்சோற்றுக்கு வருந்துகிறாய், நாம் பிச்சைச் சோற்றுக்கு வருந்துகிறோம். "ஆத்தை படும்பாடு குத்தியனுக்குத் தெரியுமா?" சவலைப்பிள்ளை முலைக் குத்தறியுமா?" இதென்னடா சங்கடம், இதென்னடா பாவம், என்று பெருமனக் கவலை யுற்றான். அப்பொழுது மனோரதியானவள் பெருமூச்செறிந்து பிராமணனை நோக்கி, அகோ! கேளும் பிராண நாயகரே, தேய்ந்தாலுஞ் சந்தனக்கட்டை மணம் போகுமார் நாம் வறியோராய்ப் பிறந்துவிட்டதுனால் நமது குலத்துக்கும் பிறப்பிற்குமுள்ள யோக்கியதையும் சொகுசும் அகன்று விடுமா? ஐயா! நடுவூருக்குள் நச்சுமரம் பழுத்திருந்தாற் போல நம்மயலிலே படுலோபிகளாகிய நம் பெந்து சனங்கள் சிறந்திருந்ததனால் நமக்கு வரும் லாபமென்னர் " நரி கொழுத்தென்ன எருக்கலைபழுத்தென்ன என்பதை நன்றாய் நம்மயலாரிற் கண்டிருக்கி றேன். ஆனாற் பிறர்காரியத்தைப் பேசிப் பெருமூச்செறிவதில் ஏதி லாபம்? நமது காரியத்தை நாமே பார்க்கவேண்டும். என் சீவ நேசரே, இப்பொழுது நமது சிறுவன் உல்லாசன் வந்தவர வைப்பார்த்தீரே, பால் மிக யோக்கிய உணவுதான் பல்லக்கின் மேலான சொகுசில்லை என்றும், பாலின் மேலான பவிஷில்லை என்றும் பலமுறையாய் "நம்மள்" பாட்டனார் கூறக்கேட்டிருக்கிறேன். நமது சிறுவனும் பாற்சோட்டையாற் தடுமாற்றம் அடைகின்றனன். "அரிசிப்பொதியோடே திருவாரூரும்" என்று ஊரார் பேசும் பாவனை போல் அவன் பேரைச்சொல்லி நானும் பால்குடிக்கப் பேராசைகொள்ளுகிறேன், என் எண்ணமும் எங்கள் குழந்தையின் எண்ணமும் திர்ப்தியாக ஒருபாயமும் சொல்லுகின்றேன். கேளும் என் அன்பிற்குரிய கண்ணாளரே, "தேடத்திசை இருந்தும் அனுபவிக்க இடமில்லை" என்றாற் போலவே "நம்மள்" பாடிருக்கிறது. இறுப் பானுக்குப் பண மருமையா? உழைப்பானுக்குப் பெண்ணருமையா? என்றாற்போல யாசகம் பண்ணும் நமக்கு எதுதானருமை? நீங்கள் உங்கள் தொழிலிற் சாக்கிரதையாயிருக்கிறவரையில் எங்களுக்கு ஒருநாளும் பட்டினியுந் தரித்திரமும் பஞ்சமும் வராவே. என் கணவனே, நரிக்குட்டிக்கு ஊழை பழக்க வேண்டு மானாற் போல உமக்கு நான் மெத்தப்படித்துக் காட்டவேண்டாம். ஆய னும் ஒருபாயமாத் திரஞ் சொல்வேன். நீங்களிதுவரையும் நாளாங்தரம் பத்தெட்டு வீடுகளில் மாத்திரமே யாசகம் பண்ணி வந்தீர்கள், அதையிட்டு நாமும் யாதோர் குறையின்றிச் சீவனம் பண்ணி வந்தோம். இனிமேல் நாளைத் தொட்டுப் பத்து வீடுகளில் மாத்தி ரமல்லப் பின்னும் அத்தனை வீடுகளில் ஐயம் வாங்குங்கள். அப்படி வாங்கினாற் "பல வீட்டுப்பிச்சை ஆறாய்ப் பெருகும்" என்றது போல ஐயமற மாசமொன்றிற்கு ஒரு ரூபாய் விழுக்காட்டுத்தேட்டமுண்டாம். இந்த வீதம்

ஓராண்டுக்குள்ளாகப் பன்னிரு ரூபாய்க்கு ஒரு வளமுண்டாம். அவற்றைக் கொண்டு நாமொரு கபிலைப்பசு வாங்கலாமே என்று “கிடக்கிறது ஒட்டுத்திண்ணை கனாக் காணுகிறது மச்சு மாளிகை” என்றாற்போலவே மனப்பால் குடித்தாள்.

மூடசிகாமணிக்கு அது சமையம் முகமானது செந்தாமரைப் புட்பம் போலலர, அவன் தன் மனைவி மனோரதியினது சீக்கிர புத்தியை விதந்தும் புகழ்ந்தும், அவளுடைய முதுகிற தட்டி, அவளை நோக்கி: ஆமெடி அம்மணி, ஆமெடி அம்மணி, அதுதான் காரியம், “நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி, குப்பைக்குள் இருந்தாலும் குன்றுமணி” என்பது போல நாமெப்படிச் சிறுப்பினையடைந்தும் பெரியோம் பெரியோமே என்பதை உனது சீக்கரபுத்தியிற் கண்டிருக் கிறேன். “நல்லவரை நாவிலுரை பொன்னைக் கல் விலுரை” என்பார்கள் பெண்ணே உன்னை இப்புத்தியிலுரைத்தேன். அடி அம்மாயீ, இந்தப் புத்தியை எங்கே கற்றாய்? சற்றே இங்கே சமீபத்தில் வா என்று அவளை அணைத்து முத்தமிட்டுக் கொஞ்சி, ஆகில் என் கண்ணாட்டி, பன்னிரண்டு ரூபாய்க்கறவையிற் பால் எத்தனை படிக்குண்டு, ஒளியாதுரை யென்று, “அவளைக் காண முன் பிள்ளையெத்தனை” என்ற கதைபோற் கணக்குக் கேட்க, அவளும் மகிழ்ந்து, பிரதியுத்தரமாய், என் பத்தாவே, நேரம் முப்படி பாலாயினும் இராதோ? என்றாள், யாசகிக்குப் பேரானந்தம் கிளம்ப அவனிருந்த இடத்தை விட்டுத் துள்ளிக் கிளம்பிக்கூத்தாடி, மனோரதியைப் பார்த்து, கண்ணாட்டி, அப்படியானால் நமக்கு நாள் ஒன் றிற்கு ஆறுபடி பாலுக்கு வளமுண்டு, எங்கள் உல்லாசன் பாலாய் உண்ணத் தயிராய் உண்ண, நீ உண்ண நானுண்ண, மோரெடுத்து நெய்யெடுத்துப் பின்னும் மீந்திருக்குமல் லவா? மீந்த அதை என்ன செய்யலாம் என்று விசாரமிட்டுக் குறாவி இருக்க, மனோரதி பிரதி வார்த்தையாக, அப்படியானால் என் அருமைக்கும் பெருமைக்கும் உரியபத்தாவே, திரவி யமே, கண்ணே, என் கண்ணின் மணியே, குளம் நிரம்பினாற் கீழ்வரை பொசியாதா? “செலவோடே செலவு கெந்தபொடிக்குக் காற்பணம்” என்றாற்போல உங்கள் புண்ணியத்தால் எங்கள் செலவில் எங்களவர் வாழ்ந்தானாகாதா? எஞ்சியதை நமது “தோப்பனார்” வீட்டுக்கு அனுப்பலாமே என்றாள்.

மாமனுக்கும் மருமகனுக்குங் கெருடனுக்கும் பாம்புக்கும் போற் பகையாதலாற் “தோப்பனார்” என்ற சொல்லுப்பிறக்கவே அவ்வுலக்கைப் பேயனுக்குக் கோபாக்கினி மண்டி எழும்ப, கண்கள் இரண்டுஞ் செம்பகப் பட்சியின் கண்கள் போற் சிவப்புநிறமாக அவன் தன் இதழைக் கடித்து, உறுக்கி விழித்து, அவளைக் கிட்டி, ஆமோ! அடி பெண்ணே, நான் நிதவிருத்திக்கு வீட்டுக்கு வீடு யாசகம்பண்ணிப் பணமீட்டிக், கறவைவாங்கி, உனக்கும் உன் மகனுக்கும் பால் கொடுக்கிறதும் போதாமற், பெண்ணே, உங்கள் அப்பன் வீட்டுக்கும் ஆத்தாள் வீட்டுக்கும் பால் சுமக்கட்டுமா? அடீ போடீ “கொள்ளைக்குப் போனாலுங் கூட்டாகாது” என்பது உனக்குத் தெரியாதோ? ஏனடி இந்த வீண் வார்த்தைகளைப் பகர்ந்தாய்? உனக்கு அற்பமேனும் அறிவில்லையா? ரோசமில்லையா? நாணமில்லையா? உன் கதைக்குக் காலுமில்லைத் தலையுமில்லை, அடீபோடீ என்று சொல்லித், தன் காலை உயர்த்தி “வளர்த்தகடா கையிற் பாய்ந்தா” லொத்துத் தன் அன்பியின் நெஞ்சிலே பாய்ந்து அவளுக்கு ஒரு உதை போட்டான். பால்குடிக்கக் காத்திருந்த மனோரதி பார்ப்பானின் காலுதைப்பட்டவுடன் தலைமேற் கைவைத்து, ஐயாகோ, அம்மாகோ, அண்ணாகோ என்று கூக்குரலிட்டு அடுக்கவிருந்த தகப்பன் வீட்டுக்கோட, உல்லாசன் வீரிட்டுப் பின்னாகவோடினான். நடந்த

வர்த்தமானத்தை மனோரதி கூற, அவள் தம்பி துட்ட ஐயங்கார் ஆக்கிரமத்தோடோடிச், "சுப்பா சீஷா வரதா கிஷ்ணா சுறுக்காய்ப் புறப்படுங்கோ" என்று தம்பியாதியரைக் கூப்பிட அவர்கள் யாவுரும் "அப்பா ஐயங்காரே, நாங்கள் அனைவரும் வந்திட்டோம், பருப்புஞ் சாதமுஞ் செரிக்க முன் ஒருகை பார்த்திடுவோம் வாரீர்" என்று அவன் கூடவோடித் தங்கள் கையிலிருந்த ஆயுதங்களால் மூடசிகாமணியின் முதுகின் மேற் சாத்துப்படி சாத்தினார்கள். முதுகு முறிய அவனும் ஊழையிட்டான். அயலார் கூக்குரலுக்கோடி நடந்த வர்த்தமானத்தின் மூலத்தை யறிந்து, பொரிக்க முன் கோழிக்குஞ்சுக்கு விலை பேசிய மடையர் போல, மாட்டைக் காணமுன் பாற்கணக்குப் பார்த்து இவர்கள் பட்டபாடு நன்று நன்றென்று கையோடு கைதட்டி நகைத்தார்கள்.

இதனால் மனோரதமேறி ஆகாயக் கோட்டை கட்டுவார் பாடு சிரிப்புக்கிடமாமென்று உணர்க.

●

ம.வே.தி.ச

1885 ஆம் அண்டு பிறந்த ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை சிறுகதை நாவல், நாடகம், கட்டுரை ஆகிய பல தளங்களில் இயங்கியவர். யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய இவர், இந்து சாதனம் இதழின் ஆசிரிய ராக இருந்து தமிழும் சைவமும் வாழ நன்குழைத்தார். 'உலகம் பலவிதம்' என்ற நெடுந் தொடர் மூலம் தமிழிலக்கிய உலகில் நன்றியப்பட்டவர். கோபால நேசரத் தினம், காசிநாதன் நேசரத்தினம், துரைரத்தினம். நேசமணி முதலான நாவல்கள் மூலம் நன்கறியப்பட்டவர். சரஸ்வதி விலாச சபையை நிறுவி நாடகத்திற்கும் பணி யாற்றிய இவர் 1955 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

- ஓம் நான் சொல்லுகிறேன்
  -முத்தன் முதலாளி முத்துக்குமாரசாமிப்பிள்ளையான முறை-
- சாந்தநாயகி

ஓம், நான் சொல்லுகிறேன்

முத்தன் முதலாளி முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையான முறை

ம.வே.தி.ச.

முத்தன் சிறுபிள்ளையாக இருக்கும் காலத்திலேயே அவனுடைய தகப்பனாகிய வல்லிபுரம் இறந்துபோனார்: ஆனாலும் அவருடைய தாயாகிய தையலம்மை அவனை வறுமையிற் செம்மையாய் வளர்த்து வந்தாள். ஐந்து வயதானதும் முத்தனைத் தாய் அயலிலேயுள்ள ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்திற் படிக்க வைத்தாள்: தையலம்மை தன் ஒரேயொரு ஆண் குழந்தையைச் சீராய் சிறப்பாய் வளர்த்ததற்குக் கஷ்டப்பட்டாள்: காலையில் அப்பம் சுட்டும் பிட்டவித்து விற்றும் அதால் வரும் ஊதியத்தைக் கொண்டே தானுந் தன் பிள்ளையும் காலங்கழித்து வந்தனர். படிக்கும் காலத்தில் முத்தன் நேரத்துக்கு உணவில்லாமையாலும் மாறிக் கட்டத் துணி இல்லாமையாலும் இடையிடையே பள்ளிக்கூட நேரத்துக்குப் பிந்திப் போவதும் போகாமல் விடுவதுமுண்டு. அப்படி ஒழுங்கீனமாக பள்ளிக்கூடத்துக்குப் போனானேனும் தன்னுடன் படிக்கும் பிள்ளைகளுள் அவன் திறமை வாய்ந்தவனாகக் காணப்பட்டான்.

சண்முகச் சட்டம்பியார்

ஒரு நாள் அயற் கிராமத்திலே ஏதோ வேடிக்கை நடந்தமையால் முத்தனுடன் படிக்கும் பிள்ளைகளுட் பலர் பள்ளிக்கூடத்திற்கென்று

புறப்பட்டு அங்கே போகாமல் ஒருங்கு சேர்ந்து யோசித்துக்கொண்டு அந்த வேடிக்கை பார்க்கப் போய்விட்டார்கள். முத்தன் அந்த வேடிக்கை பார்க்க அன்றைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போக வில்லையாயினும் வேறு ஏதோ வசதியீனத்தினாலேயே அன்று போக வாய்க்கவில்லை. அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்குப் வராமல் வேடிக்கை பார்க்கப்போனதை அங்கே கண்டவர்கள் யாரோ அடுத்த நாட் காலையில் வந்து சண்முகச் சட்டம்பியாருக்குக் கோள் மூட்டிவிட்டார்கள். சண்முகச் சட்டம்பியாரோ மிகவும் பொல்லாதவர். பிள்ளைகள் பாடத்தைச் சரியாகச் சொன்னாலும் அடிப்பார். தவறாகச் சொன்னாலும் அடிப்பார். தாம் படிப்பிக்கும் பாட்டுகளில் தமக்கு ஏதும் விளங்காவிட்டாலும் அதற்காகப் பிள்ளைகளைத் தான் தண்டிப்பார். சந்தேக விபரீதமற விளங்கிய ஒரு பாடத்தை, தடையறச் சொல்லக் கூடியதாய் பலமுறை இராப்பகலாகப் படித்து மனனம் பண்ணிய ஒரு பாட்டை, பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் சந்நிதானத்தில் பிள்ளைகள் ஒப்புவிக்கப் போனார்களாயின் உடனே ஏக்கங்கொண்டு மறந்து திகைத்து நிற்பார்கள். பேதிமருந்துண் ணாத பிள்ளைகள் சண்முகச் சட்டம்பியார் கையிற் பிரம்பெடுத்த மாத்திரத்தே மலசல விமோசனம் செய்த சந்தர்ப்பங்களும் உண்டு. இப்படிச்சிறு பிள்ளைகளை அடித்து மனதைக் கலக்கிப் படிப்பித்தலாகிய இரக்கமற்ற செயலோடு கூடியவராகவிருந்தாலும், அவர் தெய்வ பக்தியுள்ளவர். "அடா பிள்ளைகளே, தெய்வத்தைக் கும்பிட்டாற்றானெடா உங்களுக்குப் படிப்பு வரும். ஆனதால் நீங்கள் அயலிலேயுள்ள புளியடி வைரவர் கோவிலுக்கு வெள்ளி, செவ்வாயிலேனும்போய் தோத்திரம் பண்ணிக் கும்பிட்டுப் படிப்பைத் தர வேண்டும் என்று வைரவ சுவாமியைக் கேளுங்கள்" என்று சொல்வதுண்டு. பிள்ளைகளும் அப்படியே வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் போய் "சட்டம்பி பொல்லானாம் சற்றுமிரங்கானாம், கட்டைப் பிரம்பெடுத்து கட்டி அடிப்பானாம். நீட்டுப் பிரம்பெடுத்து நீட்டியடிப்பானாம்" என்று தோத்திரம் சொல்லி சுவாமீ படிப்புத் தா என்று கேட்பதை விடுத்து, "ஐயோ வைரவசுவாமி! நீ உங்கே இருப்பது மெய்யானால் எங்கள் சட்டம்பியாரைச் சடுதியிற் சாகப் பண்ணி எங்களைக் காத்துக்கொள்" என்று குறையிருந்து கும்பிட்டுக் கற்பூரம் கொளுத்துவார்களாம். இப்படிப்பட்ட சண்முகச் செட்டியார் அடுத்த நாள் காலை பள்ளிக்கூடம் வரும்போது ஒரு பிரம்பு, ஒரு புளியங்கம்பு, ஒரு கொய்யாத்தடி மூன்றையும் ஒரேயளவுக்குப் பாக்கு வெட்டியால் நறுக்குக் கக்கத்தில் வைத்துக் கொண்டு சர்வசங்கார உருத்திரமூர்த்தி போல வேகமாக வந்தார்.

சட்டம்பியார் பிரசன்னம் ஆவதைக் காணும்போதே ஏங்கும் பிள்ளைகள் மூன்று வகை யான கம்புகளுடன் அவர் வரும்போது என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? சட்டம்பியார் பள்ளிக்கூடத்துட் புகுந்தார், பள்ளிக் கூடந் தொடங்கிவிட்டது. "நேற்றுப் பள்ளிக்கூடத்துக்கு வராத பிள்ளைகள் இங்கே வந்து நில்லுங்கள்" என்றார் சட்டம் பியார். முதனாள் வராத பிள்ளைகள் அத்தனைபேரும் தூக்குமரத்திற்கு போவார் போல் சண் முகச் சட்டம்பியார் முன் பயந்து பயந்து மெல்லப்போய் நடுங்கிக் கொண்டு நின்றார்கள். சிலர் சண்முகச் சட்டம்பியாருடைய கோபத்தோடு கூடிய முகத்தைப் பார்த்தார்கள். சிலர் அவர் கொண்டுவந்த முக்கம்புகளையும் பார்த்தார்கள். சிலர் இரண்டையும் பார்த்தார்கள். நேற்று ஏன் வரவில்லை என்ற கேள்வியில்லை. "உங்களுக்குத் தனித்தனி மூன்றடி உள்ளங் கையில் உறைக்க அடிப்பேனென்றார் சட்டம்பியார். முறைமுறையாகக் கைநீட்ட மும்மூன்றடி கிரமமாக அடித்துக் கொண்டு வந்தார். முதலடியில் அழுபவரும் இரண்டாம் அடியில் கத்துப வரும் மூன்றடியும் வாங்கிக்கொண்டு கதறுபவரும், அடிக்க முந்தியே ஓலமிடுபவர்களாகக்

காணப்பட்டனர் பிள்ளைகள். இரண்டு பிள்ளைகளுக்கு அடித்தவுடனே கொய்யாத் தடி சின்னாபின்னமாகிப் போனது. இன்னும் நாலைந்து பிள்ளைகளுக்கு அடிக்கவே புளியங்கம்பு கிழிந்துபோய்விட்டது. இறுதியிற் சீற்றமேறிய சண்முகச் சட்டம்பியார் தமது திருக்கரத்திற் பிரம்பைப் பிடித்துக்கொண்டு கருமமாற்றத் தலைப்பட்டார். முறைமுறையாக அடித்து வந்தார். நல்லபிரம்பானதாற் சிறிது நின்று பிடித்தது. ஈற்றிலே முத்தன் தான் நின்றான். "முத்தன் வா" என்று உறுக்கி அதட்டிக் கூப்பிட்டார். பஞ்சப் புலன்களும் ஒடுங்கி ஒருவழிப்பட்டு சிவத்தியானத்திற் சிந்தையைவிட்ட யோகிகள்போல, முந்தியே தன் ஐம்புலன்களும் அடங்கி ஒடுங்கிச் சண்முகச் சட்டம்பியாரின் திருவுருவத்தையும் அவர் செய்யும் தண்டச் செயலையும் தியானித்துக்கொண்டு நின்ற முத்தன், அட்டை ஊர்வதுபோல் மெல்ல மெல்லச் சமீபத்தில் வந்தான். சட்டம்பியார் அடிக்கத் தடி ஓங்கினார். "ஐயோ சட்டம்பியார், நான் வேடிக்கை பார்க்கப் போகவில்லை, என்னைக் கேட்டடியுங்கள்" என்று மனம் பதற, சரீரம் நடுங்க முத்தன் கத்தினான். அவர் ஓங்கிய பிரம்பைக் கீழே தொங்கப் பிடித்துக்கொண்டு "முத்தா, பயப்படாதே: உள்ளதைச் சொல்லு" என்று கோபத்திடைய சற்று இரக்கம் பிறக்கச் சொன்னார். "சட்டம்பியாரையா, வேறு ஒன்றுமல்ல, மாறிக் கட்டிக்கொண்டு வருவதற்குத் துணியில்லாமையால் நான் நேற்றுப் பள்ளிக் கூடத்துக்கு வரவாய்க்கவில்லை. துண்டு ஒன்றைக்கட்டிக் கொண்டு உடுத்த துணியை உரிந்து தோய்த்து உலரப்போட்டேன்: மழைக் கோலம் இருந்தபடியால் அது உலரவில்லை. கட்டிக்கொண்டுவர வேறு துணியுமில்லை. என்ன செய்வது என்று என் அம்மாவைக் கேட்டேன். அம்மா அழுதுவிட்டு நீ இன்றைக்குப் பள்ளிக்கூடம் போகவேண்டாம் என்று சொன்னாள். ஆனதினாற்றான் நான் நேற்று வரவில்லை" என்று முத்தன் முழுவதும் விபரமாகச் சொல்லிக்கண்ணீர் விட்டான்.

"மகனே, பஞ்சம் போம்,
பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது"

முத்தன் சொன்ன பரிதாபத்தைக் கேட்ட மாத்திரத்திலே சண்முகச் சட்டம்பியாருடைய கல்மனமும் கரைந்தது. "முத்து, நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே, உனக்கு வேட்டி துணி நான் வாங்கித் தருகிறேன். உன் அப்பா இருந்த செல்வாக்கென்ன, பெருமையென்ன, உனக்குத் தெரியாது. அவருடைய பிள்ளையாகிய உனக்காக இந்த நிலைமை வந்ததென்று நினைக்க என் மனம் பயப்படுகிறது. உன் அப்பா எனக்கும் எவ்வளவோ உதவி அந்தக் காலத்திற் செய்தவர். ஆனதால் அவருடைய பிள்ளையாகிய உனக்கு நான் பதிலுதவி செய்யாவிட்டால் நான் நன்றிகெட்டவனாவேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. இன்று தொடக்கம் உன்னை என் பிள்ளையாக வைத்து நடத்துவேன்" என்று பரிவுடன் சொன்னார். முத்தன் அதற்கு ஒரு பதிலும் சொல்லாமல் கலங்கிக்கொண்டு நின்றான். பின்னர் சட்டம்பியார் கட்டளைப்படி வகுப்பிற் போயிருந்து படித்தான். பள்ளிக்கூடம் விட்ட பின் முத்தன் வீட்டிற்குப் போய் அன்று பள்ளிக் கூடத்தில் நடந்த கருமம் முழுவதையும் தன் தாயிடம் சொன்னான். கேட்ட தாய் பெரிதும் கலங்கிக் கண்களில் நின்றும் நீர் சிந்த பெருமூச்சுவிட்டுத் தன் பிள்ளையைக் கவலையுடன் பார்த்து "என் செல்வமே நான் பெற்ற முத்தே, நீ ஒருவரிடமும் ஒன்றும் வாங்கவேண்டாம். உன் அப்பா நல்ல குலங்குடியிற் செல்வஞ்செல்வாக்குடன் பிறந்தவர். நான் அவருக்குச் சொந்த மச்சாள். எனக்கும் என் பெற்றோர்கள் நல்ல சீதனம் கொடுத்த வர்கள். என்னை அவர் கல்யாணம் முடித்தபிறகு போதிய பொருள் பண்டமிருந்தாலும் ஏதும்

தொழில் செய்யாது சும்மாவிருப்பது சரியல்ல என்று யோசித்து நெல் வியாபாரம் செய்யத் தொடங்கினார். வியாபாரத்தினால் எங்களுக்கு நல்ல வரும்படி வந்தது.

இப்படி நடந்துவரும் காலத்தில்,58ஆம் ஆண்டு பெருமழை பெய்ய புயலும் அடித்தது. அந்த நேரத்தில் எத்தனையோ கப்பல்கள் கடலில் அமிழ்ந்திப் போயின.அரக்கனில் 500 மூட்டை நெல்வாங்கிவரும்படி பணம் அனுப்பியிருந்தவர் உன் அப்பா. பறுவதம் என்று சொல்லப்படும் கப்பலொன்று நெல் ஏற்றிக்கொண்டு நடுக்கடலில் வரும்போது புயலில் அகப் பட்டுக் கடலில் மூழ்கியது. கப்பற்காரரில் சிலர் மாத்திரம் தெய்வச்செயலால் உயிர் பிழைத்து எத்தனையோ மாசங்களுக்குப் பின் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். எங்களுக்கென்ற நெல் மூடைகள் அனைத்தும் கடலுக்குள் இரையாக பெருந்தொகைப் பணத்துக்கு அழிவு வந்தது. கடன்கொடுத்த செட்டிமார் உன் அப்பரைப் பணந்தரும்படி நெருக்கினார்கள். உடனே அவர் உள்ள பொருள், பண்டம், காணி பூமி எல்லாம் விற்றுக் கொடுத்தும் கடன் தீர்க்கப் போதா மையால் என்னிடத்திலிருந்து தாலிக்கொடி ஒன்றை விட்டுவிட்டு மற்றைய நகைகளை யெல்லாம் கழற்றி விற்றுவிட்டார்.

அதன் பின்னரும் பழைய நிலைக்கு வந்துவிடலாம் என்று அவர் எத்தனையோ முறை முயற்சி செய்தார். வாய்க்கவில்லை. பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும் என்றவிதமாக மேலும் மேலும் எங்களுக்கு இடைஞ்சலே வந்தது. தீராக் கவலையால் உன் அப்பா உணவை வெறுத்தார். நான் எத்தனையோ முறை சுவர் இருந்தாற்றானே சித்திரம் தீட்ட லாம், பொருளை மனுஷன் தேடுவதோ பொருள் மனுஷனைப் தேடுவதோ உங்கள் மனதை உப்படி விடாதீர்கள். கெட்டார் தழையாரோ கேடொருக்கால் நீங்காதோ? எல்லாந் தெய்வத்தின் செயல், கவலைப்படாதீர்கள், வாருங்கள் உண்ணுங்கள் என்று ஆறுதல் சொன்னாலும் அவர் ஓம் என்று கேட்டுக்கொண்டு கவலைக்கு ஆளானார். அந்த நேரத்தில் அவருக்கு நோயும் வந்து சேர்ந்தது. எங்களுக்குத் தரவேண்டிய கடன்காரர்களும் கொடுத்த கடனைத் தர மறுத்துவிட்டார்கள். மேலும் உன் அப்பர் நல்லாயிருந்த காலத்திலே தம் இனசனத்தவர் அயல வர் பலருக்கும் எல்லா வகையாலும் உதவி செய்தவர். படுக்கையிலே கிடந்து கொண்டு அப் படித் தாம் உதவி செய்தவர்கள் பலருக்கு ஆட்சொல்லி அனுப்பினார். சீட்டெழுதி அனுப் பினார். அவர்களில் பலர் நல்ல நிலையில் இருந்தாரேனும் ஒருவரும் வந்து வருத்தம் பார்க் கத்தானும் நினைக்கவில்லை. அவர்கள் செய்த நன்றிகெட்ட செயல் உன் அப்பா அதிக கவ லைக்காளாக நோயும் அதிகப்பட்டது. இன்னும் எங்களிடத்தில் உள்ளதையெல்லாம் ஈடு வைத்தும் அறுதி விற்றும் செலவழித்தோம். எங்கள் பொருள் முட்டுப்பாட்டை நான் அவருக் குக் காட்டாமல் இயன்றவரையில் நடந்தேன். எடியப்பா ஆரும் கடன்பட்டவர்கள், எங்களி டத்தில் உதவி பெற்றவர்கள் வந்தார்களா? ஏதுந் தந்தார்களா? என்று படுக்கையிற் கிடந்தபடி என்னை இடையிடையே கேட்பார். நான் ஒருவரும் வரவுமில்லை. ஏதுந் தரவுமில்லை. என்று பதில் சொல்லுவேன். மகனே அப்பொழுது அவர் சொன்ன பாட்டொன்று என் ஞாபகத்தில் இருக்கிறது. அது நல்லபாட்டு. ஞாபகத்தின்படி சொல்கிறேன் கேள் மகனே:-

"உண்டானபோ து கோடான கோடி
யுறமுறையர்
தொண்டாகவந் துதொழும்பு செய்வார்

செல்வந் துஞ்சிவிட்டாற்
கண்டாலும் பேசார் அழைத்தாலும் வாரார்
கௌவை கௌவை
சண்டாளரோடு உறவாகாது
ரத்னசபாபதியே"

என்ற இந்தப் பாட்டை உன் தகப்பனார் இடையிடையே சொல்லிக்கொள்வார். அவருடைய நோய் கடுமையாகிவிட்டது. வைத்தியரும் கைவிட்டுவிட்டார். ஆனால் வைத்தியர் எனக்கு உண்மையை அந்த நேரத்தில் சொல்லவில்லை.

வைத்தியருடைய முகக் குறிப்பிலிருந்து இவருடைய ஆபத்தான நிலைமையை நான் அறிந்து கவலைப்பட்டேன். என் கவலையைக்கண்டு அவர் ஒருநாள் கிட்ட இருக்கச் செய்து, நீ ஒன்றுக்குங் கவலைப்படாதே இது எனக்கு முடிவுக்கு வந்தநோய். விதியை விலக்கப் பிரம்மாவாலும் முடியாது. ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேள். நான் இல்லாக்காலம் நீ பெற்ற ஆண் குஞ்சினால் உனக்குப் பிற்காலத்தில் நன்மையுண்டு. அவன் நல்லாயிருப்பான். அவனுடைய சாதகம் அதிர்க்ஷ்டமான சாதகம். எங்கள் பிள்ளையையும் உன் மரியாதையை யும் நீ பாதுகாத்துக்கொள். எங்களுக்குத் தருமதியானவர்கள் ஏதுந் தந்தாலொழிய எவரிடத் தும் தருமத்திற்குப் பொருள் கேளாதே. கை நீட்டி வாங்காதே. நக்கினார் நாவெடார் என்று ஊரிலே சொல்லுவார்கள். இயன்ற வரையில் பாடுபட்டு உழைத்து உன் பிள்ளைக்குக் கொடுத்து நீயும் வறுமையிற் செம்மையாகக் காலங்கழி. அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் காசு கொடுத்தாலும் மீண்டு வரப்போவதில்லையென்று சொல்லுவார்கள். வறியவர் செல்வராவர். செல்வர் பின் வறியராவர். இது உலகத்தின் இயல்பு.

ஆலம்போல்நீலவிழி அங்கையற்க ணம்மையே
காலம்போம் வார்த்தை நிற்குங் கண்டாயோ – சாலப்
பசித்தார் பொழுதும்போம் பாலுடனே அன்னம்
புசித்தார் பொழுதும் போம் போம்,

என்று பெரியோர் பாடியிருக்கிறார்கள். ஆனை முதல் எறும்பு ஈறாகவுள்ள உயிரத்தனைக்கும் அமுதளிக்கும் ஐயனுக்கு நீயும் உன் பிள்ளையும் அதிக மென்றெண்ணிக் கவலைப்படாதே. எங்கள் குலதெய்வம் அந்த வைரவப் பரம்பொருளிடந்தான் நான் என் அருமை மனைவியாகிய உன்னையும் என் பிள்ளையையும் ஒப்பிவித்துவிட்டுப் போகப்போகிறேன். உலகத்தைக் காக்கிறபடியால் சேத்திரபாலன் என்று பாராட்டப்படும் வைரவப் பரம்பொருள் இந்த உலகத்திலுள்ள உங்கள் இருவரையும் காக்காது கைவிடுவாரென்றா நினைக்கிறாய். அந்தப் பெருமானை அனுதினமும் வழிபடு. உனக்கும் பிள்ளைக்கும் ஒரு குறையும் நேராது. நீ ஆறியிரு. தேறியிரு..... என்னால் அதிகம் பேசமுடியவில்லை. முட்டாகவிருக்கிறது..... என்றார். "ஐயோ, நீங்கள் ஏன் அப்படியெல்லாம் சொல்லுகிறீர்கள். நீங்கள் இப்பொழுது அதி கம் பேசவேண்டாம். உங்களுக்கு ஒரு பிழையும் வராது. அந்தச் சூலம் பிடித்த தெய்வம் ஒருபோதும் என்னையும் என் பிள்ளையையும் அந்தரிக்க விடமாட்டாது என்று அழுதழுது நான் ஆறுதல் சொன்னேன். என் கண்ணே, அதன் பின் உன் அப்பா ஒன்றும் பேசவில்லை. என் மனம் பதைபதைத்தது. சரீரம் பதறியது. நான் உடனேபோய் பால் கொண்டு வந்து பருக்கி

னேன். உட்கொண்டார். என்னை ஏறிட்டுப் பார்த்தார். பிள்ளை எங்கே என்றார். உன்னைப் படுக்கைக்குக் கிட்டக்கொண்டு வந்து காட்டினேன். உற்றுப் பார்த்தார். பரம்பொருளே, என் பெண்டிர் பிள்ளைகளைப் பாதுகாத்துக்கொள்: என்னை உன் திருவடி நிழலில் சேர்த்துக் கொள், அடைக்கலம்! என்று மெல்லச் சொன்னார். உயிர் அடங்கியது. என் குடி முடிந்தது என்று கதறினேன். என்று சொல்லி தையலம்மை அழுதாலும், "அம்மா அழாதீர்கள். நீங்கள் அழுதால் எனக்கும் அழுகை வருகிறது" என்று முத்து அழுதழுது சொல்ல தாய் பிள்ளையின் கலக்கத்தைக்கண்டு அழுகையையும் கலக்கத்தையும் அடக்கிக்கொண்டு சற்று நேரம் பேசாமலிருந்தாள். சிறிது நேரம் அப்படியிருந்துவிட்டு ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டு "ஆனதால், மகனே சண்முகச் சட்டம்பியாரிடத்தாயினும் வேறுயாரிடத்தாயினும் நீ ஒன்றும் வாங்க வேண்டாம். இது உன் தகப்பனார் கட்டளை. அவர் சொல்லை மீறவொண்ணாது அல லாமலும் என் அருமை மகனே! பஞ்சம் போம் பஞ்சத்திற்பட்ட வடுப்போகாது. நான் இன்னும் என்னால் இயன்ற வரையில் உன்னை மரியாதையாகத்தான் வளர்க்க எண்ணி யிருக்கிறேன்...." என்று கவலையுடன் சொல்லி முடித்தாள்.

முத்தன் கொண்ட விசாரம்

தாய் தன் வரலாற்றைச் சொன்ன நேரம் தொடக்கம் முத்தன் மனதிற் கவலை ஏற்பட்டது. படிப்பிலும் அவன் மனஞ்செல்லவில்லை. தன்னைப் பெற்றவளைத் துன்பப்படவிட வொண்ணா தென்பதே அவனுடைய சிந்தனை. அவனுடைய இனசனத்தவரும் அயலாரும் தன்னையும் தாயையும் அலட்சியமாக நடத்துவதைக்கண்டு அவன் பெருங்கவலை கொண் டான். தன் தகப்பன் தன் தாய்க்கு அந்தியகாலத்திற் சொன்ன "உண்டானபோது கோடான கோடி உறவுமுறையார்?" என்ற பாட்டைச் சொல்லிக் கவலைப்படுவான். அவன் ஒருநாள் தாய் ஆறுதலாய் இருக்கும் சமயம் பார்த்து "அம்மா, உங்களிடத்தில் ஏதும் பணம் ஐந்து பத்து உண்டோ"என்று கேட்டான்.

"கைம் பெண்டாட்டி, பிச்சைக்காரி, என்னிடத்தில் ஐந்து பத்து சதந்தானும் இந்த நேர மில்லையே. அது கிடக்க மகனே, ஏன் அப்படிக் கேட்கிறாய்: உனக்கு இப்பொழுது பணம் எதற்கு என்று அன்னை பரிவுடன் கேட்கிறாள். "அம்மா வேறொன்றுமல்ல, எங்கள் வர லாற்றை நீங்கள் சொன்ன நாள் தொடக்கம் நான் ஏதும் முயற்சித்துப் பார்க்கவேண்டும் என்ற என் தலையுட் புகுந்துவிட்டது. படிப்பிலும் மனம் போகவில்லை. இந்த ஊர் நீங்கள் நல்லா யிருந்த ஊர். செல்வம் செல்வாக்கோடு இருந்த ஒருவன் கெட்டுப்போனால், சொந்தவூராக இருந்தாலும் அந்தவூரிலிருந்தால் அவன் மானமிழக்கவேண்டி நேரும் என்ற கருத்துப்பட பஞ்ச தந்திரத்திற் படித்திருக்கிறேன். எங்கள் உற்றார் உறவினர்கள் எங்களுக்கு உதவி செய்யாது விடுவதோடு மாத்திரம் நில்லாமல் எங்களைப் புறக்கணித்து நடத்தவும் தலைப்பட்டுக் கொண் டார்கள். ஆனதால் அம்மா நீங்களும் வாருங்கள் நாங்கள் திருக் கோணமலைக்குப் போய் அங்கு ஏதும் முயற்சி பார்த்து மரியாதையாய் வயிறு வளர்ப்போம். எல்லாவற்றுக்கும் கடவுள் இருக்கிறார். இன்றைக்குப் புறப்படவும் எனக்குச் சம்மதம். ஆனால் தோணிச்செலவுக்குப் பணம் இல்லை என்பதுதான் கவலை" என்று முத்தன் வாடிய முகத்துடன் தன் மாதாவுக்குச் சொன்னான். பிள்ளை சொன்ன அறிவான வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தே பெற்றவ ளுடைய உள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெயென உருகியது. கண்களினின் றும் கண் ணீர் தாரைதாரையாக ஒழுகியது. "என் கண்ணே, எங்கள் கலிதீர்க்க வந்த குலக் கொழுந்தே:

இந்தச் சின்ன வயதில் உனக்கு இவ்வளவு ஞானம் பிறந்ததோடா என் துரையே, செல்வமே, நீ கவலைப்படாதே. நீ எண்ணியதுபோல் இந்த ஊரைவிட்டு வேறெங்கேனும் போய்ப் பிழைக்கலாமென்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் உன்படிப்பைக் குழப்பக் கூடாதென்று எண்ணித்தான் இவ்வளவு காலமும் பேசாமல் இருந்தேன். இருக்கக் குடிநிலந் தானும் இல்லாத எங்களுக்கு எந்தவூரும் சொந்தவூர் தானே! நீ துயரப்படவேண்டாம். இன்னும் ஒரு மாச காலத்துள் என் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டியாகினும் அப்பம் தோசை சுட்டு விற்கும் காசில் நாளுக்கு நாள் மிச்சம் பிடித்துச் சேர்த்து வைத்து உனக்குத் தருகிறேன். அதன் பின் தோணி யேறிக்கொண்டு திருக்கோணமலைக்குப் போவோம் என்று கண்கள் கலங்கச் சொன்னாள். தாயின் கலக்கத்தைக் கண்டமுத்தனும் கலங்கினான்.

தன் தாயை உண்ணாமல் தின்னாமற் பட்டினி கிடக்க விடுதல் முத்தனுக்குப் பிரிய மல்ல. "ஐயோ, என்னைப் பெற்ற பாவி பட்டினியும் கிடக்கப்போகிறாளே! ஆண்பிள்ளை என்று நான் இருந்துகொண்டு என் ஆத்தாளைப் பசிகிடக்க, வருந்த விடலாமா, இந்தப் பாதகம் என் னைத்தானே வந்து சூழும். பசுபதீசுரா! ஏன் இந்தச் சின்ன வயதில் இப்படிச் சோதிக்கிறாய். நீ சோதிக்கத் தொடங்கினால் யார் நின்றுபிடிப்பர்? மார்க்கண்டேயர், சண்டீசர், சம்பந்தர் என்னு மிவர்களும் என்போன்ற சிறுவர்தானே. அவர்களுக்கு மேலான வழியைக் காட்டிய நீ உயிர் களுக்கெல்லாம் தலைவனென்று பசுபதியென்று பெயர் படைத்த நீ, நானும் உன் பிள்ளை தானே. எனக்கு ஒரு ஐந்து ரூபாவுக்கு வழிகாட்ட உன்னால் முடியாதா? ஏன் ஒரு கண்மூடி ஒரு கண் விழிக்கிறாய்? சுவாமி! என்னைப் பெற்றவள் பட்டினி கிடக்க நான் சகிக்க மாட் டேன். நீ செய்கிறதைச் செய்" என்று முத்தன் தன் வீட்டுக்கு அயலிலுள்ள சிவன் கோவிற் சந்நி தானத்தில் நின்று தெய்வத்திற்கு முறையிட்டு விட்டுக் கவலையோடு தெருவழியே போனான்.

வேலாயுதம்பிள்ளை அந்த ஊரிலே ஒரு பெரிய மனுக்ஷன். குலங்குடியிற் பிறந்தவர். செல்வஞ்செல்வாக்கோடு கூடியவர் தரும சிந்தனையுடையவர். சமயாபிமானம் பூண்டவர். சைவப் பிள்ளைகள் அந்நிய மார்க்கப் பள்ளிக் கூடங்களிலே படித்துச் சமயாபிமானங்கெட்டு ஈற்றிலே சிலர் தம் மதத்தைவிட்டு அந்நிய மதத்திற் சேர்வதைக்கண்டு மனம் பொறாராய், தாமாகவே ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையைத் தனியே தொடங்கி ஏழைப்பிள்ளைக ளிடத்துக் கல்வி வேதனமும் பெறாமல் நடத்தி வருபவர். அவருடைய பள்ளிக்கூடம் இன்றும் நன்கு நடைபெறுகிறது. அவரை எல்லாரும் நன்கு மதித்து நடப்பார்கள். குடும்பத்தில் ஒரு பிணக்கு வந்தாலும் வேறு கலகஞ் சண்டை நேர்ந்தாலும் அந்தப் பெரியவர்க்கே அவர்கள் வந்து முறையிடுவார்கள். அப்படியான பிணக்குகளையெல்லாம். அவர் தீர்த்துச் சமாதான மாக்கிவிடுவார். அப்படிப்பட்ட அந்தப் பிரபு தமது வீட்டில் தெருப்பக்கமாகவுள்ள தலைவாசலில் சாய்மணை நாற்காலியில் சாய்ந்தபடி ஏதோ புதினப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். கோவிலிலிருந்து அந்தப் பக்கமாய் வந்த முத்தன் அவரைக் கண்ட மாத்திரத்தே தெருவில் நின்றபடி "இந்த ஐயாவை எல்லோரும் நல்லவர், பெரியவர் என்று சொல்கிறார்களே. இவ ரைக் காணவே என் பிதாவின் நினைவு வருகிறது. இவரிடத்தில் ஒரு ஐந்து ரூபா தரும்படி உள்ளதைச் சொல்லிக் கேட்டால் நிச்சயமாகத் தருவார். ஆனாலும் கேட்கக் கூச்சமாக இருக்கிறதே" என்று சிறிது நேரம் யோசித்தான். இப்படி நிற்கும்போது ஒரு பக்கமாகத் திரும்பிப்பார்த்த வேலாயுதம்பிள்ளை முத்தன் நிற்பதைக்கண்டுமுத்து வா, வா" என்றார். முத்தன் சமீபத்திற்போய் விநயமாக நின்றான். "மகனே நீ இப்பொழுது என்ன செய்கிறாய்?

உங்கள் பாடுஞ் சங்கடந்தான். உன் தகப்பன் இருந்த செல்வம் செல்வாக்கென்ன, பெருமை யென்ன, அப்படிப்பட்ட பெரியவனுடைய பிள்ளைக்கு இப்படி வந்துவிட்டது. சரி, என்ன செய்ய லாம். வாழ்வும் தாழ்வும் உலகத்தில் எங்குமுண்டு. ஏன் நிற்கிறாய், உந்த வாங்கில் இரு" என்றதும், இல்லை ஐயா, நான் இப்படி நிற்கிறேன்" என்று சொல்லிவிட்டு முத்தன் பின்னரும் கவலையுடன் நிற்கக் கண்ட வேலாயுதம்பிள்ளை "முத்து, என்னிடம் சொல்லக்கூசாதே. உனக்கு நான் ஏதும் உதவி செய்வதானாற் சொல்லு. நான் செய்கிறேன். என்ன வேணும்? என்று பரிவுடன் கேட்டார்.

முத்தன் தன்வரலாறு முழுவதையும் சொல்லி "ஐயா, நானும் என் தாயும் திரு கோணமலைக்குப் போக நினைக்கிறோம். தோணிக்காசு கொடுக்க வகையில்லை. நீங்கள் ஒரு ஐந்து ரூபா தந்தால் பெரிய உதவியாய் இருக்கும். ஐயா போன இடத்தில் ஏதும் பிழைப்புக் கிடைத்தால் உங்கள் பணத்தைத்தான் முதலில் திருப்பி அனுப்பி வைப்பேன். இல்லாவிட்டால் எனக்குப் புண்ணியத்துக்குத் தந்ததென்று எண்ணிக்கொள்ளுங்கள்" என்று கவலையுடன் சொன்னான். "மகனே,முத்து நீ கவலைப்படாதே. நான், நீ கேட்கும் பணம் தருகிறேன். மேலும் தேவையானாற் கேள் தருவேன். நான் தரும் பணத்தை நீ திருப்பித் தரவேண்டாம் என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் எழுந்து உள்ளே போய் ஆறு ரூபா எடுத்துக் கொண்டு வந்து முத்தன் கையிற் கொடுத்து "நீ சுகமே போய் வா, நீ நல்லாயிருப்பாய்" என்று ஆசி சொல்லிவிட, முத்தனும் அவரை நமஸ்கரித்துக் கொண்டு மீண்டான்.

திரைகடலோடியுந் திரவியம் தேடு

முத்தன் மனச்சந்தோசத்தோடு தன் வீட்டுக்குத் திரும்பி வந்து தாயிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு நடந்ததைச்சொன்னான். தாயும் மகனும் ஒரு நல்ல நாட் பார்த்து திருக் கோணமலைக்குப் புறப்பட்டனர். தோணி மார்க்கமாகப் போய் இருவரும் துறைமுகத்தில் இறங்கினார்கள்; அந்தவூர் அவர்களுக்குப் புதியது. எல்லாம் வேற்றுமுகமாகக் காணப் பட்டன. துறைமுகத்திலிருந்து சிறிது தூரம் மார்க்கமும் நோக்கமும் குறியாது போனார்கள். வில்லூன்றிக் கந்தசுவாமி புறப்படுதலும், அங்கே சென்று அங்குள்ள திருமடத்திற் போயிருந் தார்கள். அதன்பின் செய்வதென்னவென அவர்களுக்குத் தெரியவில்லை. இருவருக்கும் பசி அதிகம். திருமடத்துக் கிணற்றிற்றானே பல்துலக்கிக் கால்முகம் கழுவிக்கொண்டு சந்நிதா னத்திற்குப் போதலும் அங்கே அறுமுகத் தெய்வத்துக்குக் காலப்பூசை நடக்கும் சமயமாக இருந்தது. கோபுர வாசலில் விபூதி எடுத்துப் பூசிக்கொண்டு அடியவர் இடர் தீர்க்கும் ஆறுமுகப் பரம்பொருளுக்குத் தங்கள் குறையை முறையிட்டுத் தாயும் பிள்ளையும் வணங்கினர். பூசை முடிந்த பின் கோவிற் குருக்கள், குலத்திற்குரிய குணம் பூண்டவர், தமிழ், சமஸ்கிருதம் இரண்டும் நன்கு பயின்றவர், வந்த விருந்தோம்பி வருவிருந்தை எதிர்பார்த் திருப்பவர் தெய்வபக்தியுள்ளவர். அந்தணரென்று எவரும் சொல்லத்தக்கவர். எந்தநேரமும் பூராண ஆனந்தத் தோடு கூடியவர். விபூதிப் பிரசாதம் முதலியன வழங்கும்போது இவ்விரு வருக்கும் வழங்கினார். இவர்கள் அவ்வூருக்குப் புதியவர்களாக இருப்பதை மாத்திரம் குருக்கள் அவதானித்தார். கோவிலுக்கு வந்தவர்கள் எல்லோரும் சுவாமி தரிசனம் செய்து கொண்டு போய்விட்டார்கள். இந்த இருவர் மாத்திரம் சந்நிதானத்திலேயுள்ள கொட்டகை யின்கீழ் கவலையோடிருந்தார்கள். கோவிற் கருமமெல்லாம் முடித்துக்கொண்டு தம் வீட்டுக்குப் போகப் புறப்பட்ட குருக்கள் இவ்விருவரும் அங்கிருப்பதைக்கண்டு அவர்களிருக்கும் இடத்துக்குப்

போய் எந்த ஊர், எங்கு வந்தீர்கள்? என்பன முதலியவற்றை அன்புடன் வினவ, அவர்கள் தங்களுடைய வரலாறு முழுவதையும் தெய்வத்திற் முறையிடுவார்போலக் குருக்களுக்குச் சொன்னார்கள்." குருக்கள் அவர்களை போசனம் செய்வதற்குத் தம் வீட்டுக்கு அழைக்க, தையலம்மை "சுவாமி! கேட்டது பெரிய காரியம், எங்களுக்குப் பசி ஆற வேறு வசதியிருக் கிறது. குறைநினைக்க வேண்டாம். வேணுமானால் என் பிள்ளையை மாத்திரம் கூட்டிக் கொண்டுபோய் ஏதுங்கொடுங்கள்" என்று பணிவுடன் சொன்னாள். "அதைப்பற்றிக் காரிய மில்லை. நீரும் உண்ணலாம். பிராமணர்களிடத்தில் உண்பதில் ஒரு குறைவும் வராது. அல்லாமலும் கோவிற் பிரசாதம்...." என்று கோவிற் குருக்கள் பின்னரும் கேட்க தாய் மகனு டன் அங்கு போய் உணவுண்டாள். மடத்தின் ஒரு அறையில் அவர்கள் இருப்பதற்கான வசதி களையெல்லாம் குருக்கள் செய்வித்து வைத்தார். சில நாட்களாக அவ்விருவரும் அந்த மடத்தி லிருப்பதும் கோவிலில் தொண்டு செய்வதும் கோவிற் பிரசாதம் பெற்று உண்பதுமாகவிருந்து வந்தார்கள். அவர்களுடைய நடையையும் ஒழுக்கத்தையும் நல்ல வார்த்தையையும் கொண்டு குருக்களும் அயலிலுள்ளவர்களும் அவ்விருவரும் நல்ல குலங்குடியிற் பிறந்தவர் களென்பதையும் நல்லாயிருந்து கெட்டு நொந்தவர்கள் என்பதையும் அநுமானத்தினால் அறிந்து கொண்டார்கள். "குலத்தளவே யாகுங் குணம்;; என்றும் "சாதி சொல்லால் அறியலாம்; என்றும் பெரியோர்கள் பாடியிருக்கிறார்களல்லவா? இப்படி அவர்கள் அங்கே வசதியாக இருந்தாலும் வந்து சிலநாட் சென்றதும் இன்னும் ஒரு முயற்சியும் கிடைக்கவில்லையே என்று முத்தன் கவலைப்பட்டான். ஆனால் அவன் தன் கவலையைத் தாய் அறியாதவாறு; நடந்து கொள்வான். "ஐயோ கந்தசுவாமி, திரைகடலோடியும் திரவியம் தேடு என்றதை நினைத்து, அந்தவூரிலிருந்து உன்னுடைய இந்தவூருக்கு என்னைப் பெற்றவளையும் கூட்டிக்கொண்டு வந்தேன். மோட்ச வழியைக் காட்டுகிற நீ, நான் பிழைக்க ஒரு வழியைக் காட்டவொண் ணாதா? ஐயா! முருகா! எங்களைக் கடைக்கண் பார்" என்று அழுதழுது அந்தப் பெருமான் சந்நிதியிற் முறையிட்டான்.

ஆங்காலம் மெய்வருந்த வேண்டா

ஒருநாள் முத்தன் தன் தாயிடம் அனுமதி பெற்றுக்கொண்டு திருகோணமலைப் பட்டி னத்தைப் பார்க்கப் புறப்பட்டுப் போனான். அவன் தன்னுடன் வந்தவனோடு கடை வீதியைப் பார்த்துக்கொண்டு போகும்போது அங்கு ஒரு பெரிய கடை வைத்திருக்கும் வியாபாரியொருவர் கடையில் இருந்தபடி கை காட்டி முத்தனை அழைத்தார். முத்தன் உடனே அவரிடம்போய் மரியாதை யோடு நின்றான். "தம்பி நீர் யாழ்ப்பாணமல்லவா என்று அந்த வியாபாரி வினவ, "ஓம் அண்ணே" எனறு முத்தன் விடை சொன்னான். அந்த வியாபாரி முத்தனுடைய பெயர், ஊர் பரம்பரை எல்லாம் விசாரிக்க, முத்தனும் ஒன்றுமொழியாமல் அவைகளையெல்லாம் சொன்னான். அந்த வியாபாரி முத்தனையும் கூட வந்த ஆளையும் சற்று நேரம் இருக்கச் செய்து முத்தனைப் பார்த்து "தம்பி உன்னை எனக்கு இப்பொழுது நல்லாய் விளங்குகிறது. உனது தகப்பனாரை நான் நல்லாய் அறிவேன். அவருடைய பிள்ளை உனக்கா இந்தக் கதி வந்தது. நானும் யாழ்ப்பாணத்தவன்தான்; உங்களுக்கு அயலூரில் இருப்பவன்; நீ தயவு செய்து பின்னேரம் 4 மணிக்கு மேல் இன்றைக்கே தவறாமல் வந்து என்னைக் காண வேணும், போய்வாரும்" என்று சொல்லி அந்த வியாபாரி ஆதரவுடன் முத்தனை அனுப்பி விட்டார். முத்தன் இன்னும் தான் பார்க்க விரும்பிய சில இடங்களைப் பார்த்துக்கொண்டு விரைவாக மீண்டு தாயிடம்போய் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சொன்னான். தாயும்

"ஏதோ கந்தசாமியார்தான் எங்களுக்குத் துணை" என்று சொல்லிவிட்டுச் சிறிது ஆறுத லுடன் இருந்தாள். பின்னேரம் நாலு மணிக்கு முந்தியே முத்தன் தன்தாய்க்குச்சொல்லிவிட்டு அந்த வியாபாரியிடம் போனான்; வியாபாரி "தம்பி நீ என்னுடைய கடையில் இருக்க விரும்பு வாயோ" என்று கேட்க முத்தன் ஓம் என்றான். "நாளைக்கு நல்லநாள் வீட்டுக்குப் போய் உன் தாயிடம் சொல்லிச் சம்மதம் கேட்டுக்கொண்டு வா. சம்பளம் முதலியவைகளைப் பற்றி யோசிக்க வேண்டாம். நீ பெரிய இடத்துப் பிள்ளை என்பது எனக்குத் தெரியும். அதற்குத் தக்க படி நடத்திக் கொள்ளுவேன்" என்று சொல்ல முத்தன் அடுத்த நாட் காலை தான் வருவதாகச் சொல்லிவிட்டுத் தாயிடம் மீண்டான். அடுத்த நாள் காலை குறிக்கப்பட்ட நேரத்துக்கு முத்தன் கடைக்குச் செல்லுதலும் அங்கே முதலாளி தன் கடையிலுள்ள பிரதான கணக்குப் பிள்ளைக்கு முத்தனை இன்னானென விளங்கப்படுத்தி அவனையும் கடையில் வேலை கொள்ளும்படி சொல்ல அப்படியே அவன் செய்தான். முத்தன் வறுமையின் கொடுமையை உள்ளபடி உணர்ந்தவனாதலினாலும், குலத்திற்கு தக்க ஒழுக்கமுடையவனாக இருத்தலினாலும் தன் கடமையை நேர்மையோடும் விசுவாசத்தோடும் பார்த்து வந்தான். முதல்மாதம் முடிய முத்த னுக்கு ஐந்து ரூபா வேதனம் கொடுக்கப்பட்டது. அதனைக் கொண்டுபோய் தாயிடம் கொடுத் தான். பிள்ளையின் உழைப்பைத் தாய் முதன்முதல் வாங்கி அதில் ஒரு சிறு தொகையை கந்தசுவாமி கோவிலுக்கு நிவேதனத்திற்குக் கொடுத்துவிட்டு எஞ்சிய பணத்தைத் தன் செலவிற்கு வைத்திருந்தாள்.

முத்தனுடைய ஒழுக்கமான நடை, நேர்மை, ஆதரவான பேச்சு, சிக்கனம் முதலியவற் றைக்கண்டு அந்தக் கடையிலுள்ளவர்கள், கடை முதலாளி, கடைக்குப் பொருள் பண்டம் வாங்க வருவோர் அயலிலுள்ள கடைக்காரர் எல்லாரும் அவனிடத்திற் பிரியம் பாராட்டி நடந்தனர். முதலாளியும் முத்தனிடம் விசேஷமான நம்பிக்கை வைத்துக் காலத்துக் காலம் அவனுடைய வேதனத்தை ஏற்றிக்கொண்டு வந்தார். அவனிடத்தில் அன்புடையவராய் எல்லாரும் அவனை முத்தன் என்று கூப்பிடுவதை விடுத்து முத்து என்று அழைத்து வரு வாராயினர். முத்து கடையிற் சேர்ந்து ஆறு ஏழு வருஷங்கள் கழிந்துவிட்டன. காலக்கதியில் முத்துவே அந்தக் கடையின் பிரதான கணக்குப் பிள்ளையானான். முதலாளி தான் பிறந்த ஊராகிய யாழ்ப்பாணத்தில் வந்து நிற்குங் காலங்களிலும் முத்துவே கடையை நடத்தி வருவான். முத்துவுக்குச் சம்பளம் முப்பது ரூபாவுக்கு மேற்படவுண்டு. முதலாளி கணக்கில் கடைத் தெருவுக்குச் சமீபமாகத் தாயும் மகனும் இருக்கும்படி ஒரு வீடு குத்தகைக்கு எடுத்துக்கொடுக்கப்பட்டது. முதலாளி பல ஊர்களிலும் போய்ப்போய்ச் சரக்குகள் வாங்கி அனுப்ப முத்துவே அங்கிருந்து கடையை நடத்திவருவானாயினான்.

முதலாளி கொண்ட நோக்கம்

அந்தக் கடையின் முதலாளிக்கு ஒருயொரு மகள். அவள் பெயர் தனலட்சுமி. முதலாளி தன் ஏகபுத்திரியை நல்ல முறையிற் கல்வியூட்டி வளர்த்து வந்தான். அவள் மங்கைப் பருவம் அடைந்த பின் அதிக சீதன முண்டென்ற காரணம் பற்றி பல பகுதிகளிலிருந்து அவளுக்கு மணம் பேசி வந்தார்கள். ஆனாலும் தகப்பன் தன் பிள்ளைக்கு வயசு கொஞ்சமென்றும் சில வருடங்கள் கழித்துக் கல்யாணம் செய்துவைப்பதே தன் நோக்கம் என்றும் சொல்லிக் கடத்திவிட்டான். முத்துவினுடையகுலம் கோத்திரம் தன் குலங் கோத்திரத்தைக் காட்டிலும் சற்று மேலானதென்பதையும் அவன் அறிவான்.

முத்துவின் குண ஒழுக்கங்களையும் அனுபவத்தில் நன்கு அறிந்து கொண்டான். தன் மகளை முத்துவிற்கு மணம் முடித்து வைப்பதனால் தாங்களும் சாதியில் ஏறலாம் என்று அவன் நினைத்துக்கொண்டு ஊரில் வந்து நின்றபோது முத்துவின் மரபு ஒழுக்கம் முதலியவைகளையும் தனது நோக்கத்தையும் மனைவிக்கு வெளியிட்டான். அவளுஞ் சந் தோசத்துடன் அதற்கு உடன்பட்டாள். ஆனால் முத்துவின் தாய் இந்தச் சம்பந்தத்துக்கு சம்ம திப்பாளோ என்ற சந்தேகம் புருஷனுக்கும் மனைவிக்குமிடைய இருந்தது. முத்துவுக்கு அக்கா லத்தில் வயது இருபது வரையாகிவிட்டது. முதலாளியின் மகளுக்கும் பதினாறு வயது வரையி லிருக்கும். முதலாளி தன் கடையில் வந்து நிற்கும்போது முத்து கடையிலிருக்க அவ னுடைய தாயிடம் போய் பல கதைகளையும் பேசிவிட்டு ஈற்றிலே தனது உள்ளக்கிடக் கையை வெளி யிட்டான். அதனைக் கேட்ட மனிஷி சந்தோசப்பட்டு முதலாளியைப் பார்த்து, "அண்ணே, அவன் இனிமேல் உன்னுடைய பிள்ளை, உனக்கு எது இஷ்டமோ அதைச் செய்து வைக்க லாம். நீ செய்துவரும் நன்மையை நாங்கள் சாகும்வரையில் மறக்கமாட் டோம்" என்றாள். இதனைக் கேட்ட முதலாளியுள்ளத்திற் பெரும் சந்தோசம் பிறந்தது. மனிஷி ஓம் சொன்ன பிறகு முதலாளி முத்துவைத் தன் மருமகன் போலவே மதித்து நடத்தி வருவானாயினான்.

ஆனாலும் தனது உள்ளக்கிடக்கையைத் தன் மனைவிக்கு கடிதம் மூலமாகத் தெரி வித்தானேயொழிய வேறு எவருக்கும் வெளியிட்டானல்லன். கடைக்குப் பொருள் வாங்க வரு வோரும் அயலிலுள்ள கடைக்காரரும் முத்து என்று சொல்வது கௌரவமல்லவென எண்ணிப்போலும் அவனை முத்துக்குமாரு என்று அழைக்கத் தொடங்கினார்கள். முதலாளி கொண்ட நோக்கத்தைத் தாய் தன் பிள்ளைக்குச் சொன்னபோது "அம்மா, எல்லாம் இந்தக் கந்த சுவாமியின் திருவருளின்படி நடக்கும். எங்களுக்கு என்ன தெரியும், தாயே" என்று சொன்னான்.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை

மணம் பேசி ஒருவருடமளவில் விவாகத்திற்கு நாள் நிச்சயிக்கப்பட்டது. முதலாளியெ னிலோ தான் பிறந்த ஊரிலும் வியாபாரஞ் செய்யும் ஊரிலும் அதிகம் செல்வஞ் செல்வாக்குடையவன். ஆதலினால் விவாக விஞ்ஞாபனத்தை அச்சிட்டுத் தன் சுற்ற மித்திரர் அயலார் முதலிய எல்லோருக்கும் அனுப்பினான்.

அந்த விஞ்ஞாபனத்தில் இன்ன இடத்திலுள்ள எனது இல்லத்தில், இன்ன தேதியில், இத் தனை நாளிகையில் வருஞ் சுபமுகூர்த்தத்தில் செல்வச் சிரஞ்சீவி வ.முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைக்கும், எனது ஏகபுத்திரி சௌபாக்கியவதி தனலட்சுமியம்மாளுக்கும் விவாகம் செய்து வைக்க திருவருளை முன்னிட்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால்..... என்றிருப்பக் காணப் பட்டது. விவாகம் யாழ்ப்பாணத்தில் முதலாளியின் இல்லத்திற்றானே மிக்க ஆடம்பரத்தோடு விதிப்படி இனிது நிறைவேறியது. மூன்று நாட்களாகப் பலவகையான கொண்டாட்டங்கள் நடைபெற்றன. தம்பதிகள் இறைவன் அருளால் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இனிது வாழ்ந்தனர். முதலாளியும் தனக்கு ஒரேயொரு மகளாதலினால் தன் நிலம் புலம், கடை வீடுவாசல் பொருள் பண்டமெல்லாவற்றையும் தனக்கும் தன் மனைவிக்கும் சீவியங்கண்டு, மகளுக்குச் சீதனமாக எழுதிக்கொடுத்துவிட்டான்.

"ஓம் நான் சொல்லுகிறேன்"

விவாகம் முடிந்தபின் சிலகாலம் மாமன் கடையை நடத்த முத்துக்குமார சுவாமிப் பிள்ளை தாயாருடன் ஊரிலேயே தமது மனையாள் வீட்டில் இருந்தார். கல்யாண வீட்டின் முன் சிலரும் பின்பலரும் இந்த முத்துக்குமாரசுவாமிப்பிள்ளைதான் பழைய வல்லிபுரத்தின் மகன் முத்தன் என்பதை அறிந்தார்கள்.

பலர் அவனுடைய நிலைமையைப் பற்றிச் சந்தோஷப்பட்டார்கள். சிலர் பொறாமைப் பட்டார்கள். அவனை முந்திப் புறக்கணித்து நடத்திய இனசனத்த வரும் முறைபேசிக் கொண்டும் சொந்தம் பாராட்டிக்கொண்டும் முத்துக்குமார சுவாமிப்பிள்ளை வீட்டிற்குப் போய்க் கொண்டாடுவாராயினர். அவருடைய சுற்றத்தவர்களுட் செல்வத்தோடு இருந்த சிலர் மாத்திரம் "முத்தன் சீதனத்திற்காகச் சாதி விட்டு இறங்கிவிட்டான்" என்று தங்களுட் பேசிக் கொண்டனரேனும், அவன் வீட்டுக்குப் போய் சமபந்தி வகித்தல் மாத்திரம் செய்யாது கொண் டாடி வந்தனர். முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் எங்கே சென்றாலும் அவருக்கு மரியாதை செய்தல் முதலிய உபசாரங்கள் எல்லாம் நடந்தன.

வயசில் இளையவர்கள் மாத்திரமல்லாமல் மூத்தவர்களும் முத்துக்குமார சுவாமிப் பிள்ளையை வழிதெருவில் கண்டால் தங்கள் சால்வையைத் தாழ்த்துதல், செருப்பைக் கழற்றிவிட்டு ஒதுங்கி நிற்றல் "முதலாளி வாருங்கள்" என்று சொல்லுதல் எப்பொழுது வந் தீர்கள் என்று கேட்டு முப்பத்திரண்டு பல்லையும் காட்டி நமஸ்காரம் செய்தல் முதலிய உபசா ரங்களெல்லாம் நடந்தன. அந்த நேரத்தில் முத்தனுக்கு நடந்த நடப்பு அவன் மாமனுக்குத் தானும் இல்லையென்று சொல்லலாம்.

ஆனால் முத்துக்குமாரசாமிப் பிள்ளையில் ஒரு நூதனமான செயல் காணப்பட்டது. எவர் தம்மைக் கண்டு மரியாதை செய்தாலும் முத்துக்குமார சுவாமிப் பிள்ளை உடனே அவருக்கு "ஓம் நான் சொல்லுகிறேன்" என்று சொல்லிவந்தார்.

இப்படி இவர் சொல்வதற்கு நியாயம் என்னவெனப் பலர் அறிய விரும்பி னாலும் அவரை நியாயங்கேட்க எவருந் துணியவில்லை. முத்துக்குமார சுவாமிப்பிள்ளையும் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு மீண்டு போனவுடன் தமது பணப்பெட்டகத்தைத் திறந்து ஏதோ முணு முணுப்பார். இப்படி அவர் செய்வதை மனைவி இடையிடையே கண்டாளேனும், அவள் நியாயங்கேட்க நினைக்கவில்லை. இப்படி அவர் செய்துவருகிறாரென்பதை ஊர் முழுவதும் அறிந்தது. ஊரவர்கள் தங்களுள் இவர் இப்படிச் சொல்லுகிறாரே, சொல்வதன் நோக்கம் என்ன என்று கலந்து பேசிக்கொள்வார்கள்.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையின் கல்யாணத்தில் வேலாயுதம் பிள்ளையும் சமுகமா யிருந்தார். வேலாயுதம் பிள்ளைக்குத் தாம் கடமைப்பட்டவரென்பதை முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை மறந்து போகவில்லை. ஒருநாள் நமது பிள்ளையவர்கள் ஒரு தொகைப் பணத்தை எடுத்துத் மடியில் வைத்துக்கொண்டு வேலாயுதம் பிள்ளையைக் காணும்படி அவர் வீட்டுக்குப் போனார். அவர் வரவைக் கண்ட வேலாயுதம்பிள்ளை முதலாளி வாரும்வாரும் இப்படி உட்காரும் என்று சொல்லி அயலேயுள்ள ஒரு நாற்காலியைக் காட்டினார். ஆனால் வந்தவர் அப்படிச் செய்யாமல் அந்தப்பெரியவருடைய முன்னிலையில் விழுந்து கும்பிட, "சே.சே உது என்ன வேலை" என்று சொல்லி வேலாயுதம்பிள்ளை அவரைக் கையிற் பிடித்து எழும்பச்

செய்தார். முதலாளி கண்களில் நீர் பெருக ஒரு புறத்தே விநயமாக ஒதுங்கி நின்று, "ஐயா நீங்களே எனக்குத் தாய் தந்தையும் குலதெய்வமும் ஆவீர்கள். உங்கள் புண்ணியத் தினாற்றான் நான் இப்பொழுது நல்லாயிருக்கிறேன். நீங்கள் அந்த நேரத்திற் எனக்கு தந்துவிய ஆறு ரூபாவும் எனக்கு அறுநூறு ரூபாவுக்குச் சரி. ஆனதால் இப்பொழுது அறுநூறு ரூபா கொண்டுவந்திருக்கிறேன். நீங்கள் அரைச் சதமெனும் வாங்கமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனாலும் உங்கள் பள்ளிக்கூடத் தருமத்துக்கு நான் தரும் இந்த அற்ப பணத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உங்களைப் பணிந்து கேட்கிறேன்" எனக் கூறிக் குறித்த தொகையை வேலாயுதம்பிள்ளை முன்னிலையில் வைத்தார்.

"அதற்கென்ன நீர் விரும்பிய பிரகாரம் பள்ளிக்கூடத் தருமத்துக்கு உந்தப் பணத்தை உபயோகப்படுத்துகிறேன்" என்று சொல்லிவிட்டு, "முதலாளி உம்மை ஒன்று கேட்கவிருந் தேன்; இப்பொழுதுதான் ஞாபகத்தில் வந்தது; உம்மை யாரும் மரியாதை செய்யும்போது "ஓம் நான் சொல்லுகிறேன்; என்கிறீராமே. அதன் காரணத்தை அறியப் பிரியப்படுகிறார்கள். நானும் அறிய விரும்புகிறேன். அதை எனக்குச் சொல்லவொண்ணாதா" என்று கேட்டார். முத் துக் குமாரசுவாமிப்பிள்ளை மிக்க வணக்கத்துடன் "ஐயா என்னை முதலாளி என்று நீங்கள் சொல்வது சரியல்ல. முந்திச் சொன்னபடி முத்து என்று சொன்னாற் போதும். அந்த நியாயத்தை உங்களுக்குச் சொல்லாமல் நான் வேறு யாருக்கு ஐயா சொல்லுவது? அந்தக் காலத்திலே என் இன சனத்தவர்களும் ஊரவர்களும் என்னைப் புறக்கணித்து அலட்சியம் செய்ததையும் அவைகளைச் சகிக்க முடியாமல் நான் உங்களிடம் பணம் வாங்கிக்கொண்டு என்னைப் பெற்றவளையும் கூட்டிக்கொண்டு தோணியேறித் திருகோணமலைக்குப் போனதையும் நீங்கள் அறிவீர்கள். "அந்த முத்தன்; இந்த நிலைக்கு வந்தபிறகு, இப்பொழுது அவர்க ளெல்லாரும் பெரிய மரியாதை செய்கிறார்கள். யோசித்துப் பார்த்தேன். நான் பழைய முத்தன் தான் ஐயா.இந்த மரியாதைகளும் உபசாரங்களும் எனக்கல்ல. என்னிடத்திலுள்ள பணத்திற் குத் தான் என்பது புலப்பட்டது. ஆனதினால் யார் யார் மரியாதைகள் செய்கிறார்களோ அப்படிச் செய்தவர்களுடைய பெயர்களையெல்லாம் அவதானித்து வைத்துக்கொண்டு வீட்டுக்கு மீண்டவுடனே அங்கிருக்கும் பணப் பெட்டகத்தைத் திறந்து இன்னின்னார் இன்றைக்கு உனக்கு மரியாதை செய்தார்கள் என்று தனித்தனி அவர்களுடைய பெயர்களைப் பெட்டகத்தி லிருக்கும் பணத்துக்குச் சொல்லிவிடுவேன். இவர்களும் மரியாதை செய்யும் போது எனக் கல்ல என்னிடத்திலுள்ள பணத்திற்குத்தான் என்பதை நான் விளங்கியிருப்பதாற்றான் ஐயா, "ஓம் நான் சொல்லுகிறேன்; என்று அந்த நேரத்திற் அவர்களுக்கு சொல்லிச் சொல்லி வருகி றேன்" என்றார். இதனைக் கேட்ட வேலாயுதம்பிள்ளை பெரும் சிரிப்புச் சிரித்தார். இக்கதையைக் கேட்டவர்கள் எல்லாரும் நினைத்து நினைத்துச் சிரித்தார்கள்.

முத்துக்குமாரசாமிப்பிள்ளை புத்திரப்பேறு முதலாஞ் சகல சம்பத்துகளையும் பெற்று, தான தருமங்களைச் செய்து சத்கருமங்களில் ஈடுபட்டு உழைத்து இனிது வாழ்வாராயினர். அவருடைய தாயும் தனது மகன் வீட்டிற்றானே இருந்து பேரப்பிள்ளைகளையும் கண்டு சந்தோசமடைந்தாள்.

இந்து சாதனம் - பொன்விழா மலர்

894.8113
ELA
R/AH

சாந்தநாயகி

ம. வே. தி. ச

"மாசிலாக் குலத்தில் வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும் நேசமிக் குடையாள் கொங்கன் நினைத்தகொண்டொழுகு நீராள் தேசுறு வாய்மையுள்ளாள் சினந்திடல் என்று மில்லாள் பேசுதிண் கற்பு வாய்ந் தாள் பெற்றதே கொண்டுவப்பாள்"

"உங்கள் மருமகன் இப்படிச் செய்வானென நான் கனவிலும் எண்ணியிருக்கவில்லை" எனக் கவலையோடு சொன்னாள் பர்வத வர்த்தனி "ஏன் அப்படிச் சொல்லுகிறாய்" என்று ஒன்றுமறியார்போற் கேட்டார் பசுபதிப்பிள்ளை "என்ன, நீங்களும் பத்தா பூலோகமா என்ற வனைப்போல், உங்கள் சகோதரி மைத்துனன் மகன் இவர்களுடைய செய்கைகளையெல்லாம் அறிந்தும் அறியாதவர் போல என்னைக் கேட் கிறீர்களே. உங்கள் அக்காள் மகன் ஞானசுந்தரத்திற்கும், தங்கம்மா ளின் இரண்டாம் மகளுக்கும் சம்பந்தம் பேசி ஒழுங்குசெய்து, வருகிற பங்குனிமாசத்தில் கல்யாண நாளும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாமே நீங் கள் கேள்விப்படவில்லையா" எனப் பர்வதவர்த்தனி தன் கணவனாகிய பசுபதிப்பிள்ளையை "ஆத்திரத்தோடு" கேட்டாள்.

279321

REFERENCE

"அப்படி நான் இன்னமுங் கேள்விப்படவில்லை, அது நிசமோ, வீண் கதையோ அறியேன் நிசமாகத்தானிருந்தாலுமென்ன, அது கிடக்க, தங்கம்மா என்று சொல்லுகிறாயே, எந்தத் தங்கம்மா? அவளுக்குப் புருஷனில்லையா?" என்று அறியார்போல் வினவினார் பசுபதிப்பிள்ளை "புருஷனில்லாமலா பிள்ளைப் பெற்றவள்? வேறெந்தத் தங்கம்மா? அந்தக் கணபதிப்பிள்ளையுடையார் பெண்டாட்டி தங்கம்மாதான் ஆண் பிள்ளைகளாகிய நீங்கள் தகப்பன் பெயரைச் சொல்லுவீர்கள் பெண்களாகிய நாங்கள் தாய் பெயரைத்தானே சொல்லுவோம். இதுதானே ஊரிலுள்ள வழக்கம். இந்த நுட்பங்களெல்லாம் பேசுவீர்களேயொழிய, பார்க்கவேண்டிய கருமத்தைப் பார்க்கமாட்டீர்கள்" என்று கணவனைக் குறை கூறினாள் பர்வதவர்த்தனி.

"அதுசரி, பர்வதம், இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்" என்று பசுபதிப் பிள்ளை கேட்க, பர்வதம் "என்ன, இப்படியெல்லாம் கேட்கிறீர்கள்? மலாய் நாட்டிலிருந்து விடு முறை நாட்பெற்றுக்கொண்டு வருவதுதான் தாமதம், வந்தவுடனே தங்கள் மகனை எங்கள் மகளுக்கே கல்யாணஞ் செய்து வைப்பதென்று உங்கள் தமக்கையார், நேற்றின்றல்ல, உள்ள நாள் முழுவதும் உங்களுக்குச் சொல்ல நான் காதாரக் கேட்டிருக்கின்றேனே இப்பொழுது தங்கள் மகன் ஊரில் வந்து சேர்ந்தவுடனே, வேற்றிடத்திற சம்பந்தம் பேசி, உங்கள் அக்கா ளும் அத்தானும் ஒழுங்கு செய்திருக்கிறார்கள் கணபதிப்பிள்ளையுடையார் வீட்டிற்கும் உங்கள் குடும்பங்களுக்கும் முந்தி ஏதுந் தொடர்புண்டா? உடையார் வீட்டிலே நாங்கள் செம் புந் தண்ணீரும் எடுக்க மாட்டோமென்று, நீங்களும் முந்தி உங்கள் மரபைப்பற்றி மேன்மை பேசி வந்தீர்களே. இப்பொழுது அந்த உடையார் வீட்டிலே செம்புந் தண்ணீரும் எடாமல், உண்ணாமற் கொண்டாடாமலா இவர்கள் பெண் கொள்ளப்போகின்றார்கள்? பணம் பந்தியி லும் குலங் குப்பையிலுமென்று அறியாமலா சொல்லுகிறார்கள். பணத்துக்கு, சீதனத்துக்கு ஆசைப்பட்டுத்தானே உங்கள் தமக்கையும் மைத்துனரும் போகாத இடத்திற்குப் போகி றார்கள். பெண்ணெடுக்கத் தகாத குடியிலே பெண்ணெடுக்கின்றார்கள். ஆனாற் பஞ்சம்போம் பஞ்சத்திற்பட்ட வடுப் போகாதென்பதை அவர்கள் நினைக்கவில்லை. பணத்தைத் தேடலாம் சாதிமரபையுந் தேடலாமா? அல்லாமலும், பணத்திற்குக் குலத்தை விற்பதா" என்று கடுகடுத்து ஞாயம் பேசினாள் பர்வதம்.

பசுபதிப்பிள்ளை கடவுள் நம்பிக்கையுள்ள பெரிய மனுஷன் ஊழின்படி நடக்குமென்ற கொள்ளையுடையவர் அவர் மனத்திற் கோபம் பிறத்தல் அரிது. கல்வியறிவுள்ளவர். தம்மு டைய மருமகனுக்கு, அவனுடைய பெற்றார்கள், முந்தித் தமக்குச் சொன்ன வாக்கிற்கு மாறாக வேறு குடும்பத்திற் கல்யாணம் பேசுகிறார்களென்பதைப் பசுபதிப்பிள்ளை அறிவார் விதியின் வண்ணந்தானே எதுவும் நடக்கும், நாம் ஏன் மனம் நோவான், ஒருவரைக் குறை கூறுவான், எல்லாம் இறைவன் செயல் என்ற மனரம்மியத்தோடு இந்தச் சம்பந்தப் பேச்சைத் தம் மனை விக்கும் வெளியிடாமல் அவர் அறிந்தும் அறியார்போலிருந்தார். ஆனாற் பர்வதவர்த்தனி அன்று காலையிற்றான் அச்சம்பந்த ஒழுங்கைப்பற்றிக் கேள்விப்பட்டு ஆத்திரம்கொண்டாள்.

தம் மனையாள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட பசுபதிப்பிள்ளை புன்னகை செய்து அவளைப் பார்த்து "பர்வதம், எதற்கும் கவலைப்படாதே, எங்கள் செயலால் ஆவதொன்று மில்லை. எல்லாம் அவன் செயல். மனுஷன் நினைத்தபடியெல்லாம் முடிந்துவிடுமோ? அப்படி யானால், தசரதச் சக்கரவர்த்தியின் விருப்பத்தின்படி, முக்கால உணர்ச்சியுடையவரென்று

[stamp]

சொல்லப்படும் வசிட்டர் இராமபிரானுடைய பட்டாபிஷேகத்திற்கு நாள் நியமித்தாராமே அந்தச் சுபதினத்தில் இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் நடந்ததா? பெண் புத்தியினால் அவலப்படு கிறாய் நிதியுங் கணவனும் நேர்படினுந் தந்தம் - விதியின் பயனே பயன் என்றல்லாவா பெரி யோர் பாடியிருக்கிறார்கள் இங்கே நடக்க வேண்டுமென்ற விதியிருந்தால் இங்கே நடக்கும் அங்கேதான் அந்தக் கல்யாணம் நடக்க வேண்டுமென்ற ஊழிருந்தால் அங்கேதானே நடக் கும் சாதி மரபிலே எங்கள் குடும்பம் மேலானது என்று நாங்கள் எங்களைப் புகழ்ந்து கொண் டால், மற்றையவர்களும் சாதிமரபிலே தாங்கள் தாம் அதிகமென்று தங்களைச் சொல்ல லாந்தானேன். இடையிலுள்ளவர்களல்லவா, சாதிமரபில் எவர்கள் கூடியவர்கள் என்று சொல்ல வேண்டும் அல்லாமலும், அவர்கள் சாதிமரபை விட்டுப் பணத்திற்காசைப்பட்டுப் போகாத விடத்திற்குப் போகிறார்களென்கிறாய் பொன்னாசை, மண்ணாசை முற்றறத்துறந்த முனிவர்களைவிட மற்றை எவர்க்குமுண்டுதானே் எங்கள் பிள்ளைக்கும் ஆண்டவன் ஒரு மாப்பிள்ளையை அமைத்திருப்பானென்றல்லவா எண்ணி மனம் ஆறவேண்டும். பர்வதம், சஞ்சலப் படாதே அந்த வைரவப்பெருமான் எங்களைக் கைவிடமாட்டான்" என்று தேறுதல் சொன்னார் கேட்ட பர்வதவர்த்தனியும் அப்போதைக்கு ஒருவாறு மனந்தேறியிருந்தாள்.

பசுபதிப்பிள்ளையினுடைய மைத்துனரின் பெயர் சிற்றம்பலம், தமக்கையின் பெயர் சிவ காமியம்மை இவர்களுடைய வீட்டிற்கு ஒரு நாட் பின்னேரம் தங்கம்மாள், தங்கள் வேலைக் காரப் பெண்ணையுந் துணையாகக் கூட்டிக் கொண்டு குதிரை வண்டி மூலமாக வந்து சேர்ந்தாள். வந்த தங்கம்மாவைச் சிவகாமியம்மை எதிர்கொண்டழைத்து வந்து பாய் விரித்து இருக்கச்செய்து உபசரித்தாள். அந்த நேரம் உடையார் வெளியே போயிருந்தார். ஆனால் மகன் ஞானசுந்தரம் அந்நேரத்தில் வீட்டில் நின்றவன், "அம்மா, உவர்கள் யார்" என்று, வந்த வர்கள் அறியாவண்ணம் மெல்ல வினாவ, தாய், இவர்கள் தாம், மகனே, உனக்குப் பெண் பேசும் உடையார் வீட்டிலிருந்து வருகிறார்கள். ஒருத்தி உடையார் மனைவி, மற்றவள் வேலைக்காரி" என்று மெல்லச் சொன்னாள். கேட்டவுடனே மகன் கூச்சப்பட்டு, நின்ற இடத்தை விட்டு மெல்ல நழுவித் தலைவாசலின் பக்கலிலுள்ள அறையுட் போய் இருந்தான்.

ஞானசுந்தரன் மெல்லப் போனதைக் கண்ட தங்கம்மாள் "என்ன, உங்களுடைய மகன், நாங்கள் வரக் கண்டவுடனே ஓடியொளித்து விட்டார்" என்று சிறுநகையுடன் வினாவ, "மாமியாரைக் கண்டால் மருமகன் மறைவது சகசந்தானே" யென்று சொல்லிச் சிவகாமி யம்மை தானுஞ் சிரித்தாள். "எங்கள் மகள் உங்களைக் கண்டால் இப்படிக் கூச்சப்படமாட்டாள், பாருங்கள் அது வேறொன்றுமல்ல, பள்ளிக்கூடத்திலோ, கல்லூரியிலோ பெண் பிள்ளைகள் படித்து, தம்மோடொத்த பிள்ளைகளோடும் உபாத்தியாயர்களோடுங் கூச்சமின்றி ஊடாடுவ தினாலும் பள்ளிக்கூடங்களில் இடையிடையே கூட்டங்கூட்டி அந்தக் கூட்டங்களிற் பேசுவதி னாலும், வீணை முதலியன வாசித்தலினாலும் பெண்பிள்ளைகளுக்குள்ள கூச்சம் மெல்ல மெல்லத் தெளிந்து விடும் இப்படியான செயல்களினாலே கூச்சந்தெளியாதிருக்கும் பெண் பிள்ளைகளும், வேஷம் போட்டு, அதிலும் பெண்பிள்ளை ஆண் வேஷமிட்டு நடிக்க ஆரம்பித் தால், இந்தப் பொல்லாத கூச்சமென்பது அறவே நீங்கிவிடும் எங்கள் மகள், இனி உங்கள் மரு மகள் இவள் போனவருடம், தான் படிக்குங் கல்லூரியில், அல்லி அருச்சுனன் நாடகம் நடந்த போது, அர்ச்சுனனாக வேஷமிட்டு நடித்தாள், நானும் அவரும் போய்ப் பார்த்தோம், எங்கள் பிள்ளையை நாங்கள் புகழ்வது முறையல்ல, ஆனால் எங்கள் மகள் மூக்கின் கீழே போலி

மீசையையும் மாட்டிக்கொண்டு, தலையிற் கிரீடமுந் தரித்துக்கொண்டு, கையிற் காண்டீபம் என்னும் வில்லையும் பிடித்துக் கொண்டு நாடக மேடையிலே வந்து தோன்றிப் பாடியபோது, மச்சாள்! பொய்யென்று எண்ணாதீர்கள் சபையிலே இருந்தவர்கள் அத்தனை பேரும் ஆனந் தப்பட்டுக் கைகொட்டினார்கள். சிலர் இன்னுமொருக்காற் பாட வேண்டுமென்று இங்கிலீசிலே சொன்னார்கள். அந்த நேரம் அவரும் நானும் உண்மையாக ஒரு ஆண் பிள்ளையைப் பெற்ற ஆனந்தத்தையடைந்தோம்.

இது மாத்திரமல்ல, உங்களுக்கு வர இருக்கும் மருமகளைப் பற்றி இன்னுஞ் சொல்லு கிறேன் கேளுங்கள். இந்தப் பிள்ளைக்கு நாங்கள் சங்கீதம் பயிற்றுவிக்கச் செலவிட்ட பணம் கொஞ்சமல்ல. இந்தியாவிலிருந்து வந்த ஒரு ஐயர், பெரிய சங்கீத வித்துவானாம், அவரையே தினமும் காலை வேளையிற் பிள்ளைக்குச் சங்கீதஞ் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்து, மூன்று வருடகாலம், மாசம் இருபது ரூபா விகிதம் சம்பளமாக வாரிக்கொடுத்த பணத்தின் தொகை எவ்வளவென்று நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளலாமே. ஆனால், மச்சாள், கொடுத்த பணத்திற்கு மோசமில்லை. சங்கீதந் தெரிந்த அந்த ஐயர் எங்கள் பிள்ளையின் திறமையைக் கண்டு மனம் வைத்துத் தமக்குத் தெரிந்தவை முழுவதையும் எங்கள் மகளுக் குச் சொல்லிக் கொடுத்துவிட்டார்.அவள் ஹாமோனியப் பெட்டியைத் திறந்து சுதி கூட்டிக் கொண்டு பாடத் தொடங்கினாற் பட்டமரமுந் தழைக்கும். மச்சாள் , இது நிசம் அதிகஞ் சொல்லு வதென்ன, நாளைக்கு உங்கள் மகன் உத்தியோகத்தானத்திலிருந்து பசியோடு ஆயாசத் தோடு வந்தாலும், உங்கள் மருமகள் பெட்டியைத் திறந்து வாசித்துக்கொண்டு பாடினால், அதை உங்கள் மகன், எங்கள் மருமகன், கேட்டவுடனே அவர் பசியும் ஆயாசமும் பறந்து போம், இதை இருந்து பாருங்கள், இன்னும் ஒரு கருமத்தை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன் என்று தங்கம்மாள் பின்னருஞ் சொல்லுகின்றாள்:

“சில மாதங்களுக்கு முந்தி எங்கள் மகள் படித்த கல்லூரிப் பொறுப்பில், “காணிவல்” எனப்படும் பொருட் காட்சிக் களியாட்டு விளையாட்டுக் கொண்டாட்டம் ஒரு கிழமையாக நடந் தது. அந்தக் கொண்டாட்டத்தில் அழகுப் போட்டியும் ஒரு அமிசமாக விதிக்கப்பட்டது. எங்கள் பிள்ளையே அழகிற் சிறந்தவளென்பதை ஊரெல்லாம் அறியும், அதனாற் போலும் எங்கள் மகளை முந்திப் படிப்பித்த ஒரு உபாத்தியாயர் எங்களிடம் வந்து, எங்கள் மகளையும் அழகுப் போட்டியிற் பங்குபற்ற விடல் வேண்டும், விட்டால் முதற்பரிசு எங்கள் மகளுக்கே தப்பாமற் கிடைக்கும் என்று கேட்டார். பிள்ளையின் தகப்பனார் முதல் மறுத்து விட்டாரெனினும், நான் இரந்து கேட்டபடியால், ஒருவாறு உடன்பட்டார். பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டிய தில்லையென்றாலும், அழகுக்கு அழகு செய்வார்போல், இயற்கையழகமைந்த எங்கள் மக ளுக்குச் செயற்கையழகும் செய்தோம். செய்யவேண்டிய அலங்கார மெல்லாஞ் செய்து கொண் டைக்குப் பூமாலையுஞ் சூட்டிவிட்டு நிற்கும் போது, நான் முந்திச் சொன்ன அந்த உபாத்தியா யர் பிள்ளையையும் எங்களையும் அழைத்துப்போக மோட்டார் ரதமுங்கொண்டு எங்கள் வீட்டில் வந்து சேர்ந்தார்.

வந்த உபாத்தியாயர் பிள்ளையை நேரிற் பார்த்தார், நல்லாயிருக்கின்றதென்றார், நாவூறு பார்த்துவிடாதீர்கள் என்றேன் நான் எல்லாஞ் சரி, ஒரு குறைதான் உண்டு என்றார் உபாத்தியாயர் என்ன என்று கேட்டேன் ”அழகுப் போட்டிக்கு உந்தவிதமாகக் கூந்தலைப் பின்னி அந்தத்திற் குஞ்சங் கட்டி விட்டால், இக்காலத்துக் கண்களுக்கு இது கவர்ச்சி தராது,

கவற்சியையே தரும் இதனை ஒரு கணக்காகக் கத்தரித்து விட்டாற்றான் பார்ப்பவருக்கு அழகாகத் தோன்றும் போட்டியிலும் வெற்றிகிடைக்கும், பரிசு அகப்படும்" என்று அழுத்திச் சொன்னார் அந்த உபாத்தியாயர் ஐயோ, மச்சாள், கூந்தல் சோர்ந்தபடி நிற்கும்போது என் பிள் ளையின் கூந்தல் நிலத்திலே தோயும் அப்படிப்பட்ட கூந்தலைக் கத்தரிப்பதென்றால் எனக்கு மனம் வருமா? நான் என்னுடைய அவரைப் பார்த்தேன் ""அம்மா, இனி என்ன செய்யலாம் நாய்க்கு வேஷம் போட்டாற் குரைத்தே தீரவேண்டும் இப்போது உபாத்தியாயர் சொல்லுகிறபடி செய்வோம் கத்தரித்த கேசத்தை வீண்போகாமல் வைத்துக் கொள்ளுவோம் பின்பு பயன் படும்" என்று சொல்லிக் கூந்தலைக் கத்தரிக்க உடன்பட்டாள் எங்கள் அருமையான மகள். பின்னர் ஸ்நானஞ்செய்து அலங்கரித்து எங்கள் மகளுடன் அவரும் நானும் உபாத்தியாயரும் இரதத்தில் ஏறிக்கொண்டு போனோம்.

காட்சி முன்றிலிற் பலவகையான காட்சிகளும் விளையாட்டுக்களும் முடிந்தபின், அழகுப் போட்டி ஆரம்பமானது அதற்கென்று இயற்கையழகோடும், செயற்கையழகோடுங் கூடியவர்கள், அழகற்றவர்கள், ஆணோ பெண்ணோ என்று சந்தேகிக்க வேண்டிய தன்மை யிலுள்ளவர்களாக நூற்றுக் கணக்கான யுவதிகள் முந்தியே வந்து முற்பட்டு நின்றார்கள் இதற் கிடையிற் காட்சியை நடாத்தும் அதிகாரிகளுக்கிடையே ஏதோ பிணக்கு நேர்வது போற் காணப்பட்டது. என்ன என வினாவியவிடத்து, அழகுப்போட்டியில் மதிப்புச் சொல்வதற்கு நடுவ (மத்தியஸ்த) ராக இருக்க வேண்டியவர்கள் ஆண்களோ பெண்களோ என்ற ஆசங்கை அவ்வதிகாரிகட்கிடையில் எழுந்துள்ளதென அறிந்தோம். "பாம்பின் கால் பாம்பறியும்" என்ற வாறு பெண்களைப்பற்றிப் பெண்களே நன்கறிவார்கள், ஆதலாற் பெண்கள் தாம் மத்தியஸ் தர்களாக இருத்தல் வேண்டும் என்றார் சிலர் அப்படியல்ல ஆடவர்கள் தாம் பெண்களின் பேரழகை நுட்பமாக ரசிக்கத்தக்கவர்கள், அனுபவிப்பவர்கள், ஆதலால் அவர்களே நடுச்சொல் வோராயிருக்க வேண்டுமென்றார்கள் வேறு சிலர் அப்படியல்ல ஆண்களும் பெண்களுஞ் சேர்ந்து மத்தியஸ்தர்களாக இருப்பதுதான் உத்தமமென்றார்கள் இன்னுஞ் சிலர் இவர்கள் சொன்னபடி ஆண்களும் பெண்களும் கலந்து மத்தியஸ்தர்களாகவிருப்ப, அழகுப்போட்டி ஆரம்பித்தது. ஆனால் அதில் எங்கள் பிள்ளை இரண்டாவதாகத்தான் எடுக்கப்பட்டாள் அது அந்த மத்தியஸ்தர்களுட் சிலர் இலஞ்சம் வாங்கிக்கொண்டு அப்படிப் பட்சபாதமாகச் செய்தார்களெனப் பின்னர்த்தான் கேள்விப்பட்டோம்" என்று சொல்லி முடித்தாள் தங்கம்மாள்.

"உங்கள் மகள் தமிழ் இங்கிலிஸ் இரண்டும் நன்கு படித்திருக்கிறாளா" என்று சிவகாமி கேட்க, "தமிழ் அதிகம் படிக்கவில்லை, இங்கிலிஸ் லண்டன் மற்றிக் வரையிற் படித்தி ருக்கிறாள் ஒரேயொரு பிள்ளையென்ற ஞாயத்தால், தூரமான இடத்திற்குவிட்டு மேற்படிப்புப் படிப்பிக்கப் பிள்ளையின் தகப்பனாருக்குப் பிரியமில்லாததினால், படிப்பை அவ்வளவில் நிறுத்திவிட்டோம்" என்றாள் தங்கம்மாள் "சமையல் செய்ய, வீட்டுக் கருமங்கள் பார்க்க உங் கள் மகளுக்கு நன்கு பயிற்றியிருக்கிறீர்களோ" என்று சிவகாமி கேட்க, "பாருங்கள் மச்சாள், ஒரேயொரு பிள்ளை , நான் உயிரோடிருக்கும்போது எங்கள் பிள்ளையை அடுப்பு நெருப்புக்கு அணித்தாகப் போகவிடுவானேன் பிள்ளையைப்பற்றிச் சொல்வதென்ன, நானே அடுக்களைப் பக்கத்திற்குப் போவது அருமை. ஒன்றுக்கு இரண்டு வேலைக்காரர் வீட்டிலே சமையலுக் கென்றும் உணவு பரிமாற என்றும் இருக்கிறார்கள். அவர்களே வேளைக்கு வேளை எங்கள் குறிப்பறிந்து ஆக வேண்டிய ஆகாரஞ் சமைத்துக் கொண்டுவந்து " மேசை" யில் வைப்பார்கள்

அவரும் நானும் மகளும் ஒருங்கு இருந்து போசனஞ் செய்வோம் அதனாலே மகளுக்குச் சமையல் வேலை, வீட்டுப்பணி யென்னுமிவைகளை இன்னமும் பயிற்றவில்லை ஆனால் அப்படித்தான் அவைகளைச் செய்ய வேண்டி நேர்ந்தாலும், எங்கள் பிள்ளை விவேகி உடனே பயின்று விடுவாள், கண்கண்டாற் கை செய்யாதா? மச்சாள்" என்று சொல்லிமுடித்தாள் தங் கம்மாள். பின்னரும் சிவகாம சுந்தரியும் தங்கம்மாளும் நானாவித வார்த்தைகளையும் பேசி விட்டு, தங்கம்மாள் சிவகாமியிடம் விடைபெற்று வேலைக்காரியுடன் தன் வீட்டிற்குக் குதிரைவண்டியிலேறிக்கொண்டு மீண்டு போனாள். அவள் போய் ஒருமணி நேரம் வரை சென்றபின்பு சிற்றம்பலம் தம் வீட்டிற்கு மீண்டு வந்த போது சிவகாமசுந்தரி தங்கம்மாளின் வரவைக் கூறி நடந்தவற்றையெல்லாம் விபரமாகச் சொன்னாள் சிற்றம்பலமும் கேட்டு அப்ப டியா என்று தமக்கு மருமகளாக வரவிருக்கும் பெண்ணையும் பாராட்டிப் பேசினார் மகன் மறைந்து நின்று தங்கம்மாள் சொன்னவற்றையெல்லாங் கேட்டானென்பதையறியாத சிற்றம்பலமும் சிவகாமியும், அந்தப் பெண்ணைப் பாராட்டிப் பேசி "மகனே, உனக்கு எல்லாந் திருப்திதானே! இனி, விவாக சோபனத்திற்காகவேண்டிய ஆயத்தங்களெல்லாஞ் செய்ய லாந்தானே " என்று ஆவலுடன் கேட்க, " யோசித்துச் செய்வது நல்லது" என்றான் மகன் கேட்ட பெற்றார் முகவாட்டமடைந்தனர்.

இவை இங்ஙனமாக , பசுபதிப்பிள்ளை தம் மனையாளுக்குச் சமாதானஞ் சொன்னாரே னும், தம் மகளுக்குச் சின்ன வயது தொடக்கம் நிச்சயித்திருந்த கல்யாணம் தவறிவிட்டதே யென்பதையிட்டுத் தம்மளவிற் கவலைப்பட்டார் தம் மைத்துனனும் சகோதரியும் இப்படி வாக் குத் தவறுவார்களென அவர் எண்ணியதில்லை ஆனாலும் விதி அங்கே இருக்காதாம் அவர்க ளைக் குறை சொல்வது முறையல்ல என நிச்சயித்தார் கருப்பையுண் முட்டைக்கும் கல்லி னுள் தேரைக்கும் விருப்புற்று அமுதளிக்கும் ஆண்டவனுக்கு என் பிள்ளை விஷயத்தில் ஒரு கணவனைக் காட்டிவைப்பது பஞ்சமா என்று இறைவனைச் சிந்தித்து மனந்தெளிந்தார் அவர் அடுக்களையிற் சமையல் செய்து கொண்டிருந்த தம் மனைவியைக் கூப்பிட்டு, "நாளைக்குச் சித்திரைப்பரணித்தினமாகும் எங்கள் வைரவ சுவாமி கோயிலில் விசேஷ அபிஷேகம் பூசை திருவிழா சிறுத்தொண்ட நாயனார் புராணப்படிப்பு எல்லாம் நன்கு நடைபெறும், வைரவப் பரம்பொருள் சிறுத்தொண்டருக்கு அருள் புரிந்த புண்ணியதினம் நாளைக்குத்தான் ஆதலால் நீயும் நானும் போய் எங்கள் குறையை முறையிட்டு அந்தப் பெருமானைக் கும்பிட்டு வரவேண்டும்" என்றார் பர்வதவர்த்தனியும் அதுதான் நல்லது என்றாள். தங்கள் மகளுக்குச் சொல்லிவிட்டு இருவரும் ஆசார சீலராய், அர்ச்சனைக்குரிய பழம் பாக்கு, வெற்றிலை, திரு விளக்கிற்காகிய நெய் முதலிய திரவியங்களைக் கொண்டு போய்த் திருக்குளத்திற் கைகால் சுத்தி செய்து கொண்டு திருக்கோயிலை யடைந்தார்கள். அப்பொழுது வைரவ மூர்த்திக்கு விசேஷ அபிடேகம் முடிந்து பூசையாதற்காகிய சமயம் பூசை தொடங்கியது. இருவரும் தரிச னஞ் செய்து திருக்கோயிலை மும்முறை சுற்றி வந்து பெருமான் சந்நிதியிற் சாஷ்டாங்க மாகவும் பஞ்சாங்கமாகவும் முறையே வீழ்ந்து வணங்கினார்கள். எழுந்து விநயமாக நின்றார்கள் பசுபதிப்பிள்ளை . திருச்சிற்றம்பலம் விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை தரித்ததோர் கோல கால பயிரவனாகி வேழம் உரித்துமை யஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய் விள்ளச் சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே திருச்சிற்றம்பலம் என்னும் (அப்பர் சுவாமிகள்) தேவாரத்தைப் பத்தியுடன் ஓதித் தம் உள்ளத்தில் நேர்ந்துள்ள கவலையைப் பெருமானுக்கு முறையிட்டார் பருவதவர்த்தனியும் தன் மனோரதம் நிறைவேற

வேண்டு மென்று வைரவப் பரம்பொருளைக் கண்களில் நீர்ததும்ப நின்றிரந்தாள் அர்ச்சனை செய்வித்தார்கள் பின்பு புராணங் கேட்டுக்கொண்டு அர்ச்சகர் விபூதிப் பிரசாதம் முதலியன வழங்க இரு கரங்களாலும் ஏற்று அணிந்தார்கள்.

பசுபதிப்பிள்ளையுடைய மகளின் பெயர் சாந்தநாயகி பெயருக்கு ஏற்ற இயல்புடையவள் வனப்புடையவள் கல்வியறிவொழுக்கமுடையவள். ஆங்கிலமும் ஒரு அளவிற்குப் பயின்ற வள் மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்னும் நான்கு குணமும் அமைந்தவள் அந்த நேரத்திற் பதினெட்டு வயசுப் பராயமுடையவள் மயிலியலாள், குயில் மொழியாள், நுண்ணிய புத்தியும் தெய்வபத்தியும் வாய்ந்தவள் தன் சொந்த மைத்துனன் தன்னைப் புறக்கணித்து வேறு குடும் பத்திற் பெண்கொள்ளப் போகின்றானென்று தன் பெற்றார் பேசியதும், அதனையிட்டு அவர்கள் கவலைப்படுவதையும் சாந்தநாயகி அறிந்துள்ளாள் அதுபற்றி அவள் சிறிது சஞ்சலப் பட்டனளேனும், "எல்லார் செயலும் இறைவன் இயற்றுவதே" என்றெண்ணித் தன் மனத் தைத் தேற்றிக் கொண்டாள். தன் பெற்றார் வைரவப் பெருமானை வணங்கிக்கொண்டு கோயி லிலிருந்து பசியுடன் வருவார்களென்ற எண்ணத்தினாற் சாந்தநாயகி தங்கள் வேலைக்காரச் சிறுமியின் துணையைக் கொண்டு சமையல் வேலையைத் துரிதமாக முடித்துவிட்டு அவர்கள் வரவை எதிர்பார்த்த வண்ணம் தனக்குரிய அறையில் இருந்தாள், இருக்கும்போது யாரோ தலைவாசற் கதவில் மெல்லத் தட்டுஞ் சத்தம் சாந்தநாயகியின் காதிற்பட்டது. பெற்றார்தாம் வந்து கதவிலே தட்டுகிறார்களோ என்ற சந்தேகங் கொண்டாளாய்ச் சாந்தநாயகி சரேலென எழுந்து தலை வாசற் கதவைத் திறந்தாள் கதவிலே தட்டியவர் தன் பெற்றாரல்லர், ஒரு வாலி பன் என்பதைக் கண்டாள் சாந்தா கதவைத் திறக்கக்கண்ட வாலிபன் உடனே ஒதுங்கிநின்று "உங்கள் அப்பா இருக்கிறாரோ" என்று விநயமாகக் கேட்க, "இல்லை , அப்பாவும் அம்மாவுங் கோயிலுக்குப் போய்விட்டார்கள் சீக்கிரம் வந்துவிடுவார்கள்" என்று பாதிமுகந் தெரிய ஒதுங்கி நின்று பதில் சொன்னாள் சாந்தநாயகி. "அப்படியா, அவர் மத்தியானத்தில் வெய்யிலானதி னால் வீட்டிலேயே இருப்பாரென்று எண்ணி வந்தேன் நல்லது பிற்பகல் நாலு மணி வரையில் அவரை வந்து காணுவேன், போய் வருகிறேன், நமஸ்காரம்" என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் மீளும் போது, சாந்தநாயகியும் கதவண்டை நின்றபடி பிரதி நமஸ்காரஞ் செய்தவள் "அப்பா வந்தவுடன், ஆர் இங்கு வந்து தேடியதென்று நான் சொல்வது?" என்று கனிவுடன் வினவ, வாலிபன் "உங்கள் மருமகன் ஞானசுந்தரன் வந்து விசாரித்தான் என்று தெரி வியுங்கள்" எனச் சொல்லிவிட்டுப் போகத் திரும்பினான்.

இந்த வார்த்தை காதிற்பட்ட மாத்திரத்தே, கதவண்டை ஒதுங்கி நின்ற சாந்தநாயகி திடுக்குற்றாள், உளந்துடித்தாள் "ஆர்! என் அத்தானா?" என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்தாள் "அத்தான், வாருங்கள், இப்படியிருங்கள்" என்று சொல்லிய வண்ணம் மனம் பதைப்புற ஒரு நாற்காலியை இட்டாள். "அத்தான், சின்ன வயசிற் கண்டதற்குப் பின் உங்களை எத்தனையோ வருஷகாலங் காணாமையினால், இன்னார் என்று அயிர்த்துக்கொள்ள என் னால் முடியவில்லை குறையெண்ணாதீர்கள் ஏன் அந்நியர்போல் இன்னமும் நிற்கிறீர்கள் உந்த நாற்காலியில் அமருங்கள்" என்று இருக்கச்சொல்லி இரந்து நின்றாள். "சாந்தா, நீர் நிற்கின்றீரே" என்றான் ஞானசுந்தரன். "நீங்கள் இருப்பதும் நான் நிற்பதுந்தான் முறை" என்று பரிவுடன் பன்னினாள் சாந்தா.

ஞானசுந்தரம்: சாந்தா, என்னை இன்னானென நீர் அயிர்த்துக் கொள்ளவில்லையென்பதை, நீர்வந்து கதவு திறந்தபோதே கண்டு கொண்டேன். அதைப்பற்றிக் காரியமில்லை. நீர் ஏதுங் குறை செய்தாலல்லவோ நான் குறையெண்ணுவது. நீடித்த காலம் காணாமலிருந்து , உமமை இப்பொழுது கண்டது எனக்கு ஆனந்தம் (என்று சொல்வதற்கிடையிற் சாந்தா முகங் கறுத்து உங்களுக்கு மாத்திரந்தான் ஆனந்தமாக்கும் எனச் சொல்ல) இல்லை, உமக்கும் பேரானந்தம் ஆனாலும் என் மாமன் மாமி இல்லாமல் நீர் வீட்டிலே தன்னந்தனியே நிற்கும் போது நான் உம்முடன் வார்த்தையாடிக் கொண்டிருப்பது முறையல்ல, அதனாற்றான், நீர் பரிந்து கேட்கவும் நான் நாற்காலியில் இருத்தலின்றி நிற்கின்றேன் குறையெண்ணாதீர் மனம் வருந்தாதீர். இன்னும் இரண்டு மணி நேரத்தில் நான் மீண்டு இங்கே தவறாமல் வருகிறேன்.

சாந்தா : அத்தான், நீங்கள் சொல்வதைத் தட்டிப் பேசுகிறேன் என்று மனவருத்தப்படாதீர்கள். நீங்கள் ஒரு அந்நியர் வீட்டிற்குப் போனாற்றான் இந்த ஞாயங்கள் சொல்ல வேண்டும். பேசக் கூசவேணும் இது உங்கள் சொந்த அம்மான் வீடு. அல்லாமலும், அத்தான், நான் தன்னந்தனியே இருக்கிறேனென்று தவறாக எண்ணி விடாதீர்கள், தக்க பாதுகாப்போடுதான் இருக்கிறேன். ஆனதால் நீங்களும் கூசாமல் உந்த நாற்காலியில் இருங்கள் இருக்காவிட்டால் நான் மனம் வருந்துவேன்.

ஞான: (உடனே நாற்காலியில் இருந்து கொண்டு) தக்க பாதுகாப்பா? இங்கு வேறு எவரையுங் காணேனே.

சாந்தா: அத்தான், "சிறைகாக்குங் காப்பு எவன் செய்யும் மகளிர் - நிறைகாக்கும் காப்பேதலை" என்பது நீங்கள் அறியாததல்ல. அல்லாமலும், எங்கள் குலதெய்வமாகிய அந்த வைரவப் பெருமான் எந்த நேரமும் என்மனக் கோயிலில் இருக்கும் போது எங்களுக்கு என்ன பங்கம் வரப் போகின்றது.

ஞான: (சாந்தாவின் மனத் திண்மையையும் பத்தியையுங்கண்டு அற்புதமடைந்தவனாய் அவளை அன்புடன் நோக்கி) சாந்தா, நீர் இப்பொழுது என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்?

சாந்தா : நான் உங்களை வேறொன்றுஞ் செய்யச் சொல்லவில்லை, ஐந்து நிமிஷம் இங்கே தானிருந்து கொள்ளுங்கள் நான் தாகசாந்தியின் பொருட்டு ஏதுங்கொண்டு வருகிறேன்.

ஞான : சாந்தா, எனக்கு இப்போது தாகமில்லை, ஆனதால், நீர் சிரமப்பட வேண்டாம். வேணுமானால் இன்னமும் ஐந்து நிமிஷம் நான் இங்கிருக்கிறேன்.

சாந்தா: அத்தான், எங்கள் வீட்டிற்கு வந்த உங்களை உபசரிப்பது எங்கள் கடமை, அந்த உபசாரம் அற்பமாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வது உங்கள் கடமை.

ஞான: அப்படியானால்?

சாந்தா: அப்படியானால், நான் செய்யும் அற்ப உபசாரத்தை நீங்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

ஞான: சரி, ஏற்றுக்கொள்ளுகிறேன்.

சாந்தா: தனிமையைப் பொருட்படுத்தாது. சற்றுநேரம் இருங்கள் அத்தான், இதோ வந்து விடுகிறேன் (என்று சொல்லி விட்டுச் சாந்தநாயகி அடுக்களையுட்போய், அங்கிருந்த வேலைக்காரச் சிறுமியாகிய இலட்சுமியைத் தலைவாசற் பக்கத்திற் போய் நிற்கச் செய்து விட்டு, முந்தியே காய்ச்சப்பெற்ற பாலிற்குக் கற்கண்டிட்டுச் சேர்த்துப் பின்னருங் காய்ச்சி ஆற்றி ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் நிறைத்து, அதனையும் கொண்டு வந்து, அத்தான், இதனைப் பருகுங்கள் என்று விநயமாக இருகரங்களாலும் நீட்ட, ஞானசுந்தரன் இருக்கை விட்டெழுந்து இரு கரங்களாலும் ஏற்கின்றான். அந்த நேரத்தில் வைரவப்பெருமான் கோயிற் கண்டா மணியின் ஓசை கேட்க, சாந்தநாயகி பெருமானை உள்ள முருகச் சிந்தித்துக் கொண்டு கைகூப்புகின்றாள். ஞானசுந்தரன் அன்புடன் பாலை வாங்கிப் பருகிவிட்டு அவளை ஆதரவு டன் பார்த்து, "சாந்தா, நான் பாலைப் பருக மறுத்தால், எனக்குப் பலாத்காரமாகப் பாலைப் பருக்கி என்னுள்ளத்தையுருக்கி அன்பைப் பெருக்கி விடுவீர் போலும்" என்றான்.

சாந்தா: அப்படி யெல்லாஞ் செய்ய எனக்கென்ன அதிகாரம்? நான் ஏதுந் தவறு செய்திருந்தாற் பொறுத்துக் கொள்ளுங்கள். (என்று பணிவுடன் சொல்லி, நமஸ்காரஞ் செய்ய ஞானசுந்தர னும் பிரதி நமஸ்காரஞ் செய்து) "சாந்தா, நீர் எனக்குப் பெருந்தவறு செய்துவிட்டு தவறு செய்திருந்தாற் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று மாத்திரஞ் சொல்லி விட்டாற் போதுமா? நீர்செய்த தவறு பொறுக்க முடியாதது. ஒரு போது பொறுத்தாலும் மறக்க முடியாதது" என்றான்,

சாந்தா : (மனம் பதைப்ப, சரீரம் பதற , முகத்திற் குறுவியர்வை துளிப்ப) அத்தான் என்ன தவறு செய்துவிட்டேன்? புத்தி பூர்வமாய் உங்களுக்கு ஒரு தவறுஞ் செய்திருக்க மாட்டேன் (என்று பரிவுடன் கேட்டாள்)

ஞான: (புன்னகையுடன்) சாந்தா, பதறாதீர், நீர் செய்த தவறு வேறொன்றுமல்ல, என் உள் ளத்தை உம்பக்கமாக மாற்றிவிட்டீர். அப்படியில்லையென்று சொல்லுகிறீரா? சாந்தா: (தேறுதலடைந்து) நானொன்றும் அறியேன்.

ஞான: சாந்தா, கவலையொன்றும் வேண்டாம், போய் வரட்டுமா?

சாந்தா : இனி எப்போது வருவீர்கள்?

ஞான: இனி இப்போதைக்கு வருவது நானல்லேன். உமது அம்மானும் மாமியும் வருவார்கள். (என்று சொல்லி அவள் மனத்தைக் குளிரச்செய்து அவளிடம் விடைபெற்றுச் செல்ல, சாந்தாவும் அன்புடன் அனுமதியளித்துச் சில அடி தூரம் பிறகே சென்று வழிவிட்டு அவனிடம் உத்தரவு பெற்று மீண்டு தன் வீட்டுத்தலை வாசலிற் பெற்றார் வரவை எதிர்பார்த்த வண்ணம் மகிழ்ச்சி கூர இருக்கின்றாள்)

சற்று நேரஞ் செல்ல, சாந்தநாயகியின் பெற்றார் விபூதிப் பிரசாதம் முதலியன கொண்டு வீட்டிற்கு மீண்டு வந்தார்கள். வரவுகண்ட மகள் ஆனந்தத்தோடு எதிர்சென்று அவர்களுடன் மீண்டு வந்தாள். தாய் தன் பிள்ளையின் நெற்றியில், தான் கொண்டுவந்த விபூதியைத் தன் கையாற் பூசிச் சந்தனப் பொட்டிட்டு, தீர்த்தத்தை உட்கொள்ளச் செய்தாள் "அப்பா, அம்மா, சமையலாய்விட்டது வாருங்கள் போசனம் பண்ண என்று தன் பெற்றாருக்கு இதமுறச் சொல்ல, தகப்பன் எழுந்து அடுக்களைப் பக்கம் போக, தாயும் பிறகே போனாள் "அம்மா,

இன்றைக்குச் சமைத்த நானே, உங்களுக்குப் போசனம் பரிமாற ஆசைப்படுகிறேன் நீங்கள் இருவீரும் ஒருங்கிருந்து உணவருந்துங்கள், என் சமையல் சுவையாயிருக்கிறதோ என்று பாருங்கள்" எனக் கனிவுடன் சொல்லுதலும், பர்வதவர்த்தனி புன்னகையுடன், "மகளே, இது உன் விருப்பமானால், நீயும் நானும் பிறகு உண்போம், நீயே இப்போது உன் அப்பருக்கு உணவு பரிமாறு என்று சொல்ல, "அப்படியே ஆகட்டும்" என்றார் பசுபதிப்பிள்ளையும். மகள் போசனம் பரிமாறத் தகப்பனார் விருப்புடன் உண்டார். இதனை அவதானித்துக் கொண்டு பக்கலில் நின்ற பர்வதவர்த்தினி ஏதோ நினைத்துக் கவலைப்பட்டுப் பெருமூச்சுவிட்டு, "எங்கள் பிள்ளையின் செய்காரியத்தையும் அருமையையும் உங்கள் சகோதரியும் மைத்துனரும் அறிந்திருந்தால் அந்நிய குடும்பத்திற் சம்பந்தம் பேசப் போயிருக்கமாட்டார்கள். குணமிருந் தென்ன, அறிவிருந்தென்ன, பணமில்லாதவர் பிணந்தானே" என்று சொன்னாள் "உனக்குக் கனவிலும் உந்தக் கவலைதான் ஏதோ வைரவப்பெருமானிடம் எங்கள் குறையை முறையிட்டு வந்திருக்கிறோம். அந்தப் பெருமான் செய்வதைக்கண்டு கொள்வதல்லாமற் கவ லைப் பட்டாவதென்ன" என்று தேறுதல் சொன்னார் பசுபதிப்பிள்ளை" அம்மா, கவலைப்படா தீர்கள், என் மாமனும் மாமியும் என்னைப் பற்றி நன்கு அறியாவிட்டாலும், நான் எப்படிப்பட்ட வள் என்பதை என் அத்தான் அறிவார்" என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னாள் மகள். "நீ எப்படிப்பட்டவளென்பதை உன் அத்தான் அறிந்திருந்தால் தங்கம்மாள் வீட்டிற் சம்பந்தஞ் செய்யச் சம்மதித்திருப்பானா" என்று வெறுப்புடன் கேட்டாள் பர்வதவர்த்தினி.

இதற்கிடையிற் போசனமருந்திக் கொண்டிருந்த பசுபதிப்பிள்ளை "ஏன், மகளே, உன் அத்தான் இங்கு இப்பொழுது வந்ததுண்டா" என்று சிந்தனையுடன் வினாவினார். "ஓம் அப்பா, நீங்கள் கோயிலுக்குப் போய் ஒரு கால் மணி நேரஞ் செல்ல இங்கே வந்தவர், நான் தடுக்கவுங் கேளாமல் இப்பொழுது நீங்கள் வருதற்கு ஒரு பத்துப் பதினைந்து நிமிஷத்திற்கு முந்தித்தான் தம் வீட்டிற்குப் போகிறார்" என்று கூசிக் கூசிப் பன்னினாள் சாந்தநாயகி. கேட்ட இருவரும் அற்புதமடைந்தார்கள். "வந்தவரை, மகளே, நீ உபசரித்தாயா" என்று தகப்பன் ஆவலுடன்வினாவ, மகள் நடந்தவை முழுவதையும் மகிழ்ச்சிகூர விபரமாகச் சொன்னாள். மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்த இருவரும் பருவதவர்த்தனி 'நல்லது மகளே, உன் அத்தான் என்ன சொல்லிவிட்டுப் போனார்" என அன்புடன் கேட்க, "இனி எப்போது வருவீர்கள் என்று கேட்டேன்?" "இனி இப்போதைக்கு வருவது நானல்லேன் உமது அம்மானும் மாமியும் வருவார்கள் எனச்சொல்லிவிட்டுப் போகிறார்" என்றாள் "எல்லாம் அந்தப் பெருமான் செயல்" என்றார் பசுபதிப்பிள்ளை, பெருமானைத் தியானித்துக் கும்பிட்டாள் பருவதவர்த்தனி' பசுபதிப்பிள்ளை ஆகாரஞ் செய்தபின், தாயும் மகளும் மகிழ்வுடன் உணவருந்தினார்கள்.

ஞானசுந்தரன் தன் வீட்டிற்கு மீண்டு செல்லும்போது, தன் அருமை மைத்துனியாகிய சாந்தா, தன்னை உபசரித்த ஆர்வத்தையும் தன்னிடத்திற் பாராட்டிய அன்பையும் விசுவாசத் தையும் உன்னியுன்னி உள்ளமுருகினான். அவளிடத்துள்ள தெய்வபத்தி, மனத்திடம் என்னு மிவற்றை மெச்சினான். கனியிருக்கக் காய் கவர நினைத்தேனே யென்று கழிவிரக்கங் கொண்டான். தன் வீடு வந்து சேர்ந்தான். தாயிடம் போனான் 'அம்மா, ஒரு நல்ல செய்தி சொல்லுகிறேன், கவலைப்படாதீர்கள்" என்றான். "நல்ல செய்தி சொன்னாற் சந்தோஷப் படுவதேயொழியக் கவலைப்படக் காரணமில்லையே . "மகனே, செய்தியைச் சொல்லு" என்று அன்புடன் கேட்டாள் "என் அருமை மைத்துனி சாந்தாவையன்றி நான் வேறு எந்தக்

கன்னிகையையும் மணஞ் செய்ய மாட்டேன், எனது நோக்கத்தை அப்பாவுக்குத் தெரிவித்து விடுங்கள்" என்றான் மகன். கேட்ட தாய் திகைத்தாள். சற்றுநேரம் யோசித்தாள் "மகனே, தங்கம்மாளுக்கு நாங்கள் அவள் மகளை ஏற்றுக்கொள்வதாக வாக்குப்பண்ணி விட்டோமே. கல்யாண வீட்டிற்காகிய ஆயத்தங்களெல்லாம் நடக்கின்றனவே" என்று சிந்தனையுடன் சொன்னாள்.

மகன்: அம்மா, என் சொந்த மைத்துனிக்கு உன்னையே தாரமாகக் கொள்வேன் என்று நான் வாக்குப் பண்ணிவிட்டேன்.

தாய்: மகனே, உன்னுடைய சம்மதமுங் கேட்டுத்தானே உடையார் வீட்டிற் சம்பந்தம் பேசி ஒழுங்கு செய்தோம்.

மகன்: நீங்கள் சொல்வது நிசந்தான், அம்மா, ஆனால், அந்தப் பெண்ணின் தாயாகிய தங்கம் மாள், தங்கள் மகளைப் பற்றிப் பாராட்டிப் பேசியவெல்லாம் என்காதில் வீழ்ந்தன. அப்படியான கன்னிகையைக் கட்டிக்கொண்டு அழுவதேயல்லாமல், அவளைத் துணையாகக் கொண்டு இல்லறம் நடத்த முடியாதம்மா.

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டுய்ப்பி னல்லால் - ஒருவரால்,
இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லா தெற்றிற்று நின்று.

என்றல்லவா சொல்லுவார்கள். அல்லாமலும் இல்வாழ்க்கையென்பது இரண்டுநாள் நாலுநாளில் முடிந்து விடுங் கருமமா? உயிருள்ள வரையில் நடத்தப்படுவதல்லவா?

தாய்: மகனே, நீ சொல்வது நிசம் ஆனாற் பெண் பகுதியாருக்குச் சொன்ன வாக்கிற்கு என்ன செய்வது?

மகன் : மாப்பிள்ளைக்கு விருப்பமில்லையென்று சொல்லிவிடுங்கள்.

தாய் : முதல் உன் அப்பருக்கு விஷயத்தைச் சொல்லுகிறேன் அவர் யோசித்துச் செய்யட்டும்.

மகன்: அப்பர் என் விருப்பத்திற்கு உடன் படுவாரம்மா.

இவ்வாறு தாயும் மகனும் பேசிக்கொண்டிருக்கும் போது சிற்றம்பலமும் அங்கே வந்தார். மகன் அவ்விடத்தை விட்டு மெல்ல விலக, தாய் மகனுடைய நோக்கத்தைச் சிற்றம்பலத்திடம் தெரிவித்தாள். சிற்றம்பலம் சிறிது நேரம் யோசித்து விட்டு "அப்படியானால் அந்தப் பெண்பகுதியார் அதிகம் ஆயத்தங்கள் செய்ய முந்தி, மாப்பிள்ளைக்கு உந்த விவாகஞ் சம்மதமில்லையென்று சொல்லியனுப்பிவிடல் வேண்டும்" என்றார். "அந்தப் பெண்பகுதியார் குறை கூறார்களோ" என்று மனையாள் கேட்க, கூறுவார்களென்பது மெய், ஆனால், "மண மகனுக்கு விருப்பமில்லாத கல்யாணத்தைச் செய்வதனால் அவர்களுக்கும் காலகதியிற் கஷ்டந்தானே" என்று சமாதானஞ் சொன்னார் சிற்றம்பலம். சிற்றம்பலத்திற்குச் சொந்த மருமக ளையே தம் மகனுக்கு விவாகஞ் செய்ய வேண்டு மென்பதுதான் முந்தியுள்ள நோக்கம். சிவகாமியின் விருப்பத்திற்கும் தன் மகனின் விருப்பத்திற்கும் இசைந்தே புதிய குடும்பத்தில்

மணம் பேசி ஒழுங்கு செய்தார். சிற்றம்பலம் தாம் நேரிற் போகாமலும், தம் மனைவியைப் போக விடாமலும், ஒரு கல்யாணத் தரகனைத் தங்கம்மாள் வீட்டிற்கு அனுப்பி அவன் மூலமாகத் தங்கள் மகன் கல்யாணத்திற்கு உடன்படவில்லையென்பதைத் தெரிவித்தார். பெண்வீட்டுக்காரர் கேட்டவுடன் சீற்றங்கொண்டனரெனினும், தரகன் சொன்ன சமாதானத் தைக் கேட்டுத் திருப்தியடைந்தார்கள்.

ஒரு சுபதினத்தில், மத்தியான வேளையிற் சிற்றம்பலமும் சிவகாமியம்மையும் பசுபதிப்பிள்ளை வீட்டிற்குச் சென்றார்கள் அவர்கள் வரவைக் கண்ட பசுபதிப்பிள்ளையும் மனைவியும் மகளும் மனப்பூர்வமாக அவர்களை வரவேற்று உபசரித்தார்கள் அச் சமயத்திற் சிற்றம்பலமும் மனைவியும் தங்கள் மருமகள் தங்களிடத்துப் பாராட்டிய விசேஷ அன்பையும் நடந்து கொண்ட விநயத்தையும் அவதானித்து மகிழ்ந்தார்கள். பசுபதிப்பிள்ளை தமது மைத்துனராகிய சிற்றம்பலத்தையும் சகோதரியாகிய சிவாகாமியம்மையையும் பார்த்து "நாங்கள் செய்ய வேண்டிய தென்ன" என்று விநயமாக வினவுதலும், "வேறொன்றுமில்லை, எங்கள் மகனுக்காகிய விடுமுறை நாள் முடிவதற்கு இன்னும் இரண்டு மூன்று வாரம் மாத்திர முண்டு. ஆனதால் நாங்கள் முந்தியே நிச்சயித்திருந்த வண்ணம், உங்கள் மகளுக்கும் எங் கள் மகனுக்கும் திருவருளை முன்னிட்டு விவாகத்தை நிறைவேற்றி வைக்கலாமென்பதைத் தெரிவிக்கும் நோக்கமாக வந்தோம்" என்றார் சிற்றம்பலம். கேட்ட பசுபதிப்பிள்ளையும் பர்வத வர்த்தனியும் அதிக மகிழ்ச்சியுற்றனர் சாந்தநாயகி ஆனந்த மடைந்தாள். "நீங்கள் விரும்பு கிறபடி செய்வதுதானே எங்கள் கடமை" என்றாள் பர்வதவர்த்தனி. "எங்கள் புரோகி தருடன் யோசித்துப் பொன்னுருக்குதல், பந்தற்கால் நாட்டுதல், விவாகம் என்னுமிவைக ளுக்குப் பொருத்தமான சுபமுகூர்த்தங்களை நிச்சயித்துக் கொண்டு உங்களுக்குந் தெரிவிக்கிறோம்" என்று சிற்றம்பலஞ் சொல்லி, அம் மூவரிடத்தும் அனுமதி பெற்றுக்கொண்டு தமது மனைவி யுடன், வீட்டிற்கு மீண்டு தங்கள் மகனுக்கும் விஷயத்தைச் சொல்ல, அவன் மனத்திலடங்கா மகிழ்ச்சியடைந்தான்.

சிற்றம்பலம் தம் மகனுக்கு வேறு இடத்தில் முந்தி விவாகம் பேசி நிச்சயித்ததைப் பற்றிப் பசுபதிப்பிள்ளைக்காயினும், அவர் மனைவிக்காயினுஞ் சொன்னாரல்லர். அவர்களும் அப்படி வேறெங்கேனுங் கல்யாணம் பேசி நிச்சயித்ததோ என்று சிற்றம்பலத்தையாக அவர் மனையாளையாக வினாவியதுமில்லை . மணமக்கள் வீடுகளில் விவாக சோபனத்திற்காகிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. சுற்ற மித்திரர்கட்கு மணவோலையனுப்பப்பட்டன, நிச்சயித்த சுபமுகூர்த்தத்திலே செல்வன் சிரஞ்சீவி சி.ஞானசுந்தரனுக்கும் திருவளர்செல்வி சாந்தநாய கிக்கும் பல சுற்றமித்திரர் சமுகத்தில் விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவெய்தியது. மணமக னில் லத்திலும் மணமகளில்லத்திலும் அன்று தொட்டு மூன்று நாள் உபசரணைகளும் அன்னதானம் முதலியனவும் நன்கு நடைபெற்றன. தம்பதிகள் பதினாறு பேறும் பெற்று இனிது வாழ வேண்டுமெனப் பெரியோர் அவர்களை ஆசீர்வதித்தார்கள்.

சில தினங்கள் செல்ல, ஞானசுந்தரத்திற்குத் தன் சொந்தவூரை அடுத்த பட்டினத்திலுள்ள ஒரு பண "வங்கி"யிற் சிறாப்பராகக் கடமை பார்க்க முடியுமோ என்ற கேள்விப்பத்திரம் வந்த போது. அவன் அதற்குச் சம்மதித்து, தான் மலாய் நாட்டிற் பார்த்து வந்த உத்தியோகத்தி லிருந்து விலகுவதாகவும் அங்குள்ள அதிகாரிகட்குக் கடிதமெழுதியபின், வங்கிச் சிறாப் பராயிருக்கும் கடமையையே திறமையுடன் பார்த்து வருவானாயினான். தன் கணவருக்குத்

தூரதேசத்திலன்றிச் சொந்த ஊரிலேயே தக்க உத்தியோகம் கிடைத்துவிட்டதையிட்டுச் சாந்த நாயகியும், தெய்வத்தின் திருவருளைப் பாராட்டி மகிழ்ச்சியடைந்தாள் அவள்.

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் அழகும் புவிப்பொறையும் - வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசில் இவையுடையாள் பெண்"

என்ற நீதி வாக்கியத்திற்கு இலக்கியமாகத் தன் கணவனுக்கு வாழ்க்கைத் துணை யானாள். காதலனுங் காதலியும், பூவும் மணமும், மணியும் ஒளியும், கவியுஞ் சுவையும், மதனும் ரதியும், அன்பும் அருளும் போல ஐக்கிய முற்று வாழ்வாராயினர்.

சம்பூரணம்.

(இந்து சாதனம்: வச்சிர விழா மலர், அக். 1949, பக் 46 - 60. ம. வே. தி. ச என்ற பெயரில் வெளியானது)

இலங்கையர்கோன்

இலங்கையர்கோன், ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் மூவர்களில் ஒருவர். அவரது இயற்பெயர் ந. சிவஞானசுந்தரம். இவரது முதற் சிறுகதை 'மரியா மதலேனா' 1930 இல் கலைமகளில் வெளிவந்தது. கலைமகள், சூறாவளி, மணிக்கொடி, பாரதத் தாய், சக்தி, சரஸ்வதி ஆகிய தமிழக ஏடுகளிலும் ஈழகேசரி, கலைச் செல்வி, ஈழநாடு, வீரகேசரி, தினகரன் ஆகிய இலங்கை பத்திரிகைகளிலும் நிறைய எழுதியுள்ளார்.

30 சிறுகதைகள் வரை எழுதியிருப்பார். பதினைந்து சிறுகதைகளின் தொகுப்பாக 'வெள்ளிப்பாதசரம்' வெளிவந்துள்ளது. ஆங்கில புலமையுடையவர். பிறமொழி நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றினை மொழி பெயர்த்துள்ளார்கள். மேடை நாடகங்களையும் வானொலி நாடகங்களையும் எழுதி வெற்றி பெற்றவர். "லண்டன் கந்தையா" இவருக்குப் புகழ் தந்த நாடகம். இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக விளங்கியவர். வெள்ளிப் பாதசரம் ஈழத்தின் உன்னதமான சிறுகதைகளில் ஒன்று. இது 1942 இல் ஈழகேசரியில் எழுதப்பட்டது. பிரபல எழுத்தாளர் செ. யோகநாதன் தொகுத்து வெளியிட்டுள்ள ஈழத்து சிறுகதைத் தொகுதிக்கு வெள்ளிப் பாதசரம் என்றே பெயரிட்டுள்ளார். இவரது இன்னொரு சிறப்பான சிறுகதையாக 'வஞ்சகம்' விளங்குகின்றது. அல்லயன்ஸ் கதைக் கோவையில் இவரது 'முதற்சம்பளம்' என்ற சிறுகதை இடம் பிடித்துள்ளது. இவர் அமரராகி விட்டார்.

- ❖ சக்கரவாகம்
- ❖ வெள்ளிப் பாதசரம்
- ❖ மரியா மதலேனா

‘சக்கரவாகம்’

இலங்கையர்கோன்

வேலுப்பிள்ளை, நாடி நல்லாய் விழுந்துபோச்சு; வயதுமோ பின்னிட்ட வயது. இன்னும் இரண்டு மணித்தியாலத்திற்குள் எல்லாம் முடிந்து போய் விடும். மனதைத் தேற்றிக் கொள்.”

இந்தக் கொடிய தீர்ப்பைத் தன் இளம் வயதிற்கு உரிய யோசனை யின் மையோடு அநியாயமாக வீசி விட்டு, அதன் விளைவைப் பார்க்க விரும்பாதவன் போல் வைத்தியன் சால்வையை உதறித் தோளிற் போட்டுக் கொண்டு வீட்டு வாசலைக் கடந்து வேகமாக நடந்தான்.

வேலுப்பிள்ளை அசந்துபோய்த் திண்ணையிற் சாய்ந்தான்... மனத்தின் உந்துதல் இல்லாமலே அவனுடைய கை, அருகில் கிடந்த காம்புச் சத்தகத்தை எடுத்து யந்திரம் போலப் பனைஓலைச் சட்டங்களை வார ஆரம்பித்தது. உள்ளே அவள் - அவனுடைய மனைவி - வாங்குக் கட்டிலின் மேல். உடலில் பலம் எல்லாம் குன்றி, முகம் களையிழந்து, கண் கள் பஞ்சாடிக்கிடந்தாள். எந்தக் கஸ்டமான வேலையாயினும் பின் வாங்காமல். நாற்பது ஆண்டுகளுக்கு மேல் பம்பரம் போலச் சுழன்று கொடுத்த அவளுடைய ‘வரிச்சுத்’ தேகம் இன்று அசந்து போய்க்

கிடந்தது. அவளுடைய பிராணன் கொஞ்சம் கொஞ்சமாகப் போய்க் கொண்டிருந்தது. அதை அறிந்துகொள்வதற்கு வைத்தியன் தேவையில்லை... வேலுப்பிள்ளையின் வீட்டில், அவனுடைய பாதுகாவலின் கீழ் அவன் மனைவியினுடைய உயிரை யமன் கொஞ்சம் கொஞ்சமாக இழுத்துக் கொண்டிருந்தான். யமனுடைய சோரத்தை அறிந்தும் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அவளுடைய மக்களும் அறுவர். வாங்குக் கட்டிலைச் சுற்றி வளைத்துக் கொண்டு செயலற்று நின்றனர். அவளுக்கு-ஈன்று வளர்த்த அன்னைக்கு - சாவதற்கு உதவி செய்யத்தான் அவர்களால் முடிந்தது. ஒருத்தி நெஞ்சைத் தடவிவிட்டாள், இன்னொருத்தி வாயில் பால் வார்த்தாள்... யார் இருந்து என்ன?

அடுத்த வீட்டு அன்னமுத்து வண்ணான் கொண்டு வந்தபடி ஒரு சேலை உடுத்து. கழுத்தில் புதிதாக மினுக்கிய அட்டியலும் கையில் காப்புகளும், எண்ணெய் தேய்த்து வாரி முடித்த கொண்டை முதுகில் புரள அசைந்து அசைந்து வந்தாள். வேலுப்பிள்ளைக்கு அவளைக் காண ஆத்திரமாக வந்தது. "சாகமுன்னுக்கே செத்த வீடு கொண்டாட வாறாள் இந்தத் தேவடியாள்!"

"அம்மான், மாமிக்கு எப்பிடி?"

"அப்பிடித்தான் - போய்ப்பார்" என்று அலுத்துவிட்டு, வேலுப்பிள்ளை தன் புடலங்காய் போன்ற கால்களை மடக்கி நாடியின் கீழ் வைத்துக் கொண்டு மறுபடி தன்னுள் ஆழ்ந்தான்...

திடீரென்று நாற்பது வருடங்களுக்கு முன் தெய்வானை மணப் பெண்ணாய் முதல் முதல் 'தாறு பாய்ச்சி'ச் சேலை உடுத்து மருளும் கருவிழிகளால் அவனையும் நிலத்தையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டு - நாணிக் கோணி நின்ற காட்சி அவனுக்கு ஞாபகம் வந்தது. அன்று முதல் இன்று வரை அவன் அவளாய் அவள் அவனாய் ஒன்றுபட்டு, உழைப்பு நிறைந்த ஒரு கஷ்ட ஜீவனத்தின் ஒவ்வொரு அலுவலிலும் சமபங்கு எடுத்துக் கொண்டு வாழ்ந்த வாழ்வு!

காதல் என்ற வார்த்தை அவர்களுக்குத் தெரியாது. விவாகரத்து, கர்ப்பத்தடை முதலியனவற்றைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டதே இல்லை... ஆனால் வாழ்க்கை, கொடிய வறுமையிலும் செம்மையாய், பிணக்குகள் தடி அடிச் சண்டைகளுக்கிடையிலும் ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் கொண்ட தாய், பூவுலக மோட்சமாய்ப் பரிமளித்தது... நாற்பது வருஷம் - நாற்பது நாள்!

"அப்பு, ஆச்சிக்கு ஒரு மாதிரிக் கிடக்கு, வந்து பாரெணை" என்று அவனு டைய இளையமகள் பர்வதம் வாசலில் வந்து சொன்னாள்.

"ஐயோ! வந்திட்டுது, முடியப்போகுது" என்று நினைத்துக்கொண்டு வேலுப்பிள்ளை எழுந்து உள்ளே போனான். தெய்வானையின் கால்கள் நேராக நீட்டப்பட்டு, கைகள் மார்பின் மேல் பொருத்தப்பட்டிருந்தன, சாவுக்கு ஆயத்தமாய், 'அன்னமுத்தின் வேலை' என்று அவன் நினைத்தான். செயலற்றுக் கிடக்கும் மனைவியின் உடலை உற்றுப் பார்த்தான்... மூச்சு வேகமாக வந்து கொண்டிருந்தது. கழுத்துக் குழியில் ஏதோ படபடத்தது. 'ஐயோ ஐயோ' என்று அவன் உள்ளம் செயலற்று அலறியது. மறுகணம் 'தெய்வீதெய்வீ' என்று கெஞ்சியது....

தெய்வானையின் கண்கள் பாதி மூடியபடி கூரையில் பதிந்திருந்தன. அந்தகாரமான இருட்கடலின் மத்தியில் எப்பொழுதோ இறந்துபோன அவளுடைய தாயின் முகம் சொல் லொணா இளமையும் அழகும் கொண்டு புன்னகை புரிந்தது. அந்த இருட்கடலைத் தாண்டி அந்த முகத்தைப் பிடித்துவிட வேண்டும் என்று தெய்வானை தவித்தாள். அவளுடைய ஒடுங்கும் சிந்தையில் ஏதோ அர்த்தமற்ற வார்த்தைகள் இடைவிடாது ஒலித்துக் கொண்டி ருந்தன. "ஆச்சி பூச்சி அம்பட்ட வளவில் முள்ளு சூப்பி... ஆச்சி பூச்சி"

மூவுலகும் கொள்ளாத ஒரு கருணை தேங்கி நின்ற அன்னையின் முகம் தன்னுடன் ஒரு ஒளி வட்டத்தையும் கொண்டு இருட் கடலைத் தாண்டித் தெய்வானையை நோக்கி வந்து கொண்டிருந்தது. ".... ஆச்சி பூச்சி அம்பட்ட வளவு..."

வேலுப்பிள்ளை தனக்குத் தெரிந்த ஒரு திருவாசகத்தைப் பாட ஆரம்பித்தான். மனிதர் சாகும் தறுவாயில் தேவாரம், திருவாசகம் பாட வேண்டும் என்பது அவனுக்கு ஞாபகம் வந் தது.

"அம்மையே அப்பா..." அவனுடைய குரலிலே சிந்தமுடியாத ஒரு கண்ணீர்க் கடல் தேங்கி நின்றது.

தெய்வானைக்குத் தன்னை மறந்த ஒரு ஆனந்தம். "ஆச்சி பூச்சி, ஆச்சி, பூச்சி...!" இதோ அன்னை மிக அருகில் வந்துவிட்டாள். இருட்கடல் மறைந்து முழுவதும் ஒளிக்கடலாயது. "ஆச்சி ஆச்சி.... என்ரை ஆச்சி" அன்னையின் கண்கள் தெய்வானையை அகன்று மருட்டி அழைத்தன... இதோ...

"ஆச்சி! - "

"என்ரை ராசாத்தி போட்டியோ!" என்று வேலுப்பிள்ளை புரண்டழுதான். "ஆச்சி, ஆச்சி" என்று மக்கள் கதறினர். அன்னமுத்துதான் மனப்பாடம் செய்து வைத்திருந்த ஒப்பாரி வரிசை களைக் கண்ணீர் இல்லாமல் இராகத்துடன் எடுத்துவிட்டாள்.

◆◆◆

தெய்வானைக்கு அறிவு தெளிந்த பொழுது திடீரென்று விலங்குகள் தெறித்து, சிறைச் சாலைக் கதவுகள் தகர்ந்து விடுதலை கிடைத்து விட்டது போல் தெரிந்தது. ஆ! என்ன விடு தலை! அவள், தான் நினைத்தபடி மனோவேகமாக எங்கும் போக முடிந்தது. அவளுடைய உடல் காற்றாகி விட்டதோ? அல்லது உடலே இல்லையோ? அவளுக்கு இரவுபகல் தெரிய வில்லை. அவளுக்குக் குன்றாத இளமையும், வற்றாத ஊக்கமும், எதையும் கிரகித்து அறிந்து கொள்ளும் அகன்ற மனமும் வாய்த்துவிட்டது போலத் தெரிந்தது. தன்னுள்ளே ஒரு எல்லை யற்ற ஆனந்த சுதந்திர உணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்தது....

எண்ணரிய யோசனை தூரத்திற்கு அப்பால், பூவுலகில் இருந்து ஒரு தீனமான குரல் அவளுடைய இன்பத்தினிடையில் வந்து புகுந்து அவளுடைய நிம்மதியைக் குலைத்தது. "தெய்வி தெய்வி" என்ற அலறும், அந்தக் குரலில் நிறைந்திருந்த நம்பிக்கை இழந்த ஏக்கம் அவளுக்குப் பூவுலக வாசனையை ஊட்டி, பிரிவுத்தாகத்தைத் தேற்றுவித்தது. தன்னுடைய கணவன் துணையிழந்து நாதியற்றுக் கலங்குகின்றான், தன்னை நினைந்து ஏங்குகிறான்

என்பது அவளுடைய பரந்த மனதில் தெளிவாகப்பட்டது. ஓடிப் போய் அவனை அணைத்துக் கொள்ள வேண்டும் என்று அவள் உள்ளம் துடித்தது. ஆனால் அவளால் அவனை அணுக முடியவில்லை. அவன் மனித உடற்பிணிப்பிலே கட்டுண்டு கிடந்தான்...

கனவுகளில் மட்டும் அவன் தன்னை அறிந்து கொள்ளும்படி செய்ய முடிந்தது. ஆனால் அவைகளினால் அவளுடைய தாகம் அடங்கவில்லை. வைக்கோல் அடைத்த உயிரற்ற கன்றின் உடலைக்கண்டு இரங்கும் பசுப்போல் ஒரு ஊமைத் துயரம் அவளை வாட்டியது. அவன் என்று தன்னுடன் வருவான் என்பதே அவளுக்குச் சதா ஆவல். அவனது துணை இன்றி எந்த இன்பமும் நில்லாது என்று அவள் கண்டுகொண் டாள்.

◆◆◆

தெய்வானை இறந்த தினத்தில் இருந்து வேலுப்பிள்ளை வாழ்விலே பிடிப்பை இழந்து விட்டான். "தெய்வி தெய்வி" என்று உள்ளூர் எந்நேரமும் அலறிக்கொண்டிருந்தான். அவளுடன் தான் வாழ்ந்த வாழ்க்கை முதலில் இருந்து நினைத்து, நினைத்து ஏங்குவதே அவனுக்குத் தொழிலாய்ப் போய் விட்டது. "தெய்வி தெய்வி..."

இடையிடையே அவளைக் கனவிற் கண்டு படிப்படியாக அவன் ஏக்கம் அதிகரித்தது.

"அப்பு, என்னோடை வந்து கொஞ்ச நாளைக்கு இரென். எனக்கும் துணையாய் இருக்கும். உனக்கும் பிராக்காய் இருக்கும்" என்று அவனுடைய இரண்டாவது மகள் வள்ளியம்மை அழைத்தாள். இடம் மாறினால் ஒருவேளை அவனுடைய ஏக்கம் குறையலாம் என்று அவள் நினைத்தாள்.

"வேண்டாம் மேளே, நான் இங்கினைதான் கிடக்கப் போறேன்? என்று அவன் மறுத்து விட்டான். நாளடைவில் அவன் எதிலும் பற்றற்று ஒரு நடைப் பிணம் ஆகிவிட்டான்... மூன்று மாத காலத்திற்குள் அவனுடைய அறுபது வயது தொண்ணூறு வயதாகி யது.....

"கிழவன் படுக்கையாய் விழுந்திட்டுது அதுகும் போகப் போகுது போலை" என்று அன்னமுத்து தன் கணவனுக்குச் சோறு பரிமாறிக் கொண்டே சொன்னாள்.

"ஓமாக்கும். என்ன இருந்தாலும் கிழவனும் கிழவியும் நல்ல ஒற்றுமையாய் இருந்தவை..." என்று பொன்னம்பலம் இழுத்தான்.

வேலுப்பிள்ளை பிரக்ஞை இல்லாமல் அதே வாங்குக்கட்டிலிற் கிடந்தான். அவனுடைய மக்கள் அறுவரும் மீண்டும் வந்து கூடினர். "வாத ஜன்னி-தள்ளாத வயது; இன்றோ நாளையோ என்று வைத்தியன் கையை விரித்து விட்டான். அன்னமுத்து கழற்றி வைத்திருந்த அட்டியலை மினுக்கி அணிந்து கொண்டு வந்து சேர்ந்தாள்.

கனவோ உண்மையோ என்று சொல்லமுடியாதபடி தெய்வானையின் உருவம் அவ்வளவு தெளிவாக வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் மின்னிக் கொண்டிருந்தது. தன் உடலை அவனுக்கு முதல்முதல் அர்ப்பணம் செய்த பொழுது அவள் முகத்திலும் உடலிலும் காணப்பட்ட சோக - நாண - மகிழ்ச்சி இப்பொழுது காணப்பட்டது. கைகளை நீட்டி அவளை அப்படியே அணைத்துக் கொள்ள வேண்டும் போல் வேலுப்பிள்ளைக்குத் தோன்றியது. அவ

279321

REFERENCE

னுடைய இடக்கைச் சுட்டுவிரல் மட்டும் மெதுவாக ஒரு லயத்திற்கு அசைந்து கொண்டி ருந்தது. உடலின் வேறெவ்வித அசைவும் இல்லை.

அவனுடைய இளைய மகன் ராமலிங்கம் திருவாசகம் பாடினான். வள்ளியம்மை திரு நீற்றை அள்ளி வேலுப்பிள்ளையின் நெற்றியில் பூசினாள்...

சட்டென்று வேலுப்பிள்ளையின் கண்ணெதிரில் கோரமான இருள் சூழ்ந்தது. தெய் வானையைக் காணவில்லை. அவன் வாய்விட்டு அலறினான்.

"தெய்வி...!" என்று, "ஒரே பாய்ச்சலில் இருட்கடலைத் தாண்டிவிட்டான்!

அவனுடைய பெண்மக்கள் "அப்பூ ஊ! அப்பூ ஊ! என்று அலறினர். அன்னமுத்து சாவ தானமாகப் பிணத்தின் கால்களை நீட்டிப் பெருவிரல்களைச் சேர்த்துக் கட்டிவிட்டு, "கண்டி யிலே காத்தடிக்க, கைவிளக்கு நூந்ததல்லோ ஓஓஓ!" என்று ஆரம்பித்தாள்.

மறுமலர்ச்சி
சித்திரை - 1946

வெள்ளிப் பாதசரம்

இலங்கையர்க்கோன்

தன் வீட்டுக்கு ஓர் அடுக்குப் பெட்டியும் தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்கவேண்டும் என்று நினைத்து வந்தவளுடைய உள் ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்களும் மலைமலையாய்க் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி, தையற்பெட்டி, மூடற்பெட்டி, பின்னற் பெட்டி... ஊ! எத்தனை வகை! அரு கில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்து மாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக நுள்ளி "மாடு தன் பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ" என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனை மரங்க ளின் தலைகளை இன்னும் தடவிக்கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத்தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித்தான்.

அன்று வல்லிபுரக் கோவில் கடைசித் திருவிழா. "எவ்வளவு சனம் பாத்தியளே! இதுக்காலை எப்பிடிப் போறது" என்று சொல்லிக்

கொண்டே நல்லம்மா தன் கணவனின் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு-

"பயப்பிடாமல் என்னோடவா"

என்று தன் மனைவியின் கையைப் பற்றினான்.

கோவில் வீதிகளிலும் கடைகளிலும் காணப்பட்டவையெல்லாம் நல்லம்மாவின் மனதில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின. வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக் கொண்டே சென்றாள். ஐந்து வயதுச் சிறுமியைப் போல, முழங்கால்கள் தெரியும்படி, தன் ஆடையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு வீதியைச் சுற்றி ஒரு "கெந்தல்" போட வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது... செல்லையா மௌனமாகத் தன் மனைவியின் குதூகலத்தில் மெய்ம் மறந்து அவள் இழுத்த வழியெல்லாம் போய்க்கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர்வளமற்ற சொற்பநிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினா லேயே வளம்படுத்திச் சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவனும் ஒருவன். இரக்கமற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசை நார்கள் முறுக்கடைந்து வச்சிரம் போல இருந்தன. மன ஒருமைப்பாட்டினால் வாய் மௌனமாகவே இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவன் தன் வாழ்க்கைத் துணைவியைத் தேடிக் கொண்டான். அவளுடைய கலகலத்த வாயும், விடையில்லா ஒரு கேள்வியைக் கேட்பது போல அவனுடைய பார்வையை முறித்து நோக்கும் அவளுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்கமாட்டாமை போல் ஒசியும் நூலிடையும், நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண் ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் மறைந்திருக்கும்.

ஆனால் அவைகளைவிட மேலான ரகஸ்யங்களும் மணங்களும், புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன! ஓ! வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையை விட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப்பட்டிருந்த கைக்குழந்தைகள் அழுதன. பஞ்சகச்சம் அணிந்த பூசகர்கள் அங்குமிங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக்கிடையில் கர்ப்பக்கிரகத்தில் மணிச்சத்தங் கேட் டது. கூப்பிய கைகள் தலைகளுக்கு மேல் உயர்ந்தன. செல்லையா ஒரு தூணருகே கைக ளைக் கட்டியபடி சனங்களின் தலைகளைப் பார்த்துக்கொண்டு நின்றான். நல்லம்மா அவன ருகில் கை கூப்பியபடி மூலஸ்தானத்தை ஒரு தரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவைகளின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவம் கைகளை அசைத்துக்கொண்டு நிற்கின்றமை தெரிந்தது. அதற்குப் பின்னால் - அதுதானோ வல்லிபுரப்பெருமாள்...?

திருமாலின் திருமண பிரசாதத்தைப் பெறுவதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள் ஒரு பக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தன.

செல்லையாவும் நல்லம்மாவும் கோவிலை வலம் வந்து வணங்கினர்.

தவிற்காரன் தாளவரிசைகளை மெய்ம்மறந்து பொழிந்துகொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரந் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாகவிருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்ந்து கொண்டு "எல்லாருக்கும் பைத்தியம் பாருங்கோ!" என்றாள். மௌனியான செல்லையாவின் மௌனம் கலைந்து, "போதும், இனி, வாணை வெளியாலை போவம்" என்றான்.

வெளி வீதிகளிலும் தெருக்களிலும் சன சமுத்திரம் அலைமோதிப் புரண்டது. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறிவிட்டமை போன்ற அந்த அகன்ற வெண்மணற் பரப்பிலே கன்னித் தாயின் உள்ளத்திலே அன்பு வெள்ளம் பாய்வது போல நிலவு வெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச் சந்திரனின் கீழ் இரண்டோர் இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து மனிதர்கள் நிரம்பியிருந்தனர்.

சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான். மினுக்கு மினுக்கு என்று எரியும் ஒரு கைவிளக்கின் அருகில் உட்கார்ந்து, பொலிஸ்காரர்களின் காக்கியுடுப்பு எங்காவது தெரிகிறதா என்று கடைக் கண்ணால் பார்த்தபடி "ஒண்டுக்கு நாலூர்க்காரன், "ஓடிவா ஓடிவா - போனல் கடலைக் காசு, வந்தால் தேத்தண்ணிக் காசு" என்று ஓலமிட்டான்.

நல்லம்மாவும் செல்லையாவும் தம்மை அறியாமலே ஒரு வளையற் கடையின் முன்னால் போய் நின்றனர். விளக்கொளியில் சுடர்விடும் கண்ணாடி வளையல்களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக் கொடுத்தான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் அழகாக வளைத்து வைக்கப் பட்டிருந்த புது மாதிரியான ஒரு பாதசரம் செல்லையாவின் கண்களை ஈர்த்தது. நெருக்கமாகப் பின்னப்பட்ட வெள்ளி வளையம் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு வெள்ளிக் குண்டும் வேல் போன்ற ஒரு தகடும் தொங்கிக்கொண்டிருந்தன. முகப்பில் சிங்கமுகம். அதுபோன்ற ஒரு பாதசரம் அவன் முன் ஒருபோதும் பார்த்ததில்லை ... அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

குவளை மலரைப் பழித்த அவளது விழிகள் "காஸ்லைட்" ஒளியில் அகல விரிந்து பளபளத்தன. அவளிடம் சாதாரணமான காற்சங்கிலிகூட இல்லை. உருண்டையாகவும் வழுவழுப்பாகவும் இருந்த அவளுடைய கணைக் கால்களில் இதுபோன்ற ஒரு பாதசரத்தை அணிந்து பார்க்கவேண்டும் என்ற ஆசை செல்லையாவின் மனத்தில் தோன்றியது. இந்த ஆசையோடு வேறு எத்தனையோ ரகஸ்யமான இன்ப நினைவுகள் அவன் உள்ளத்தை மயக்கின அதை எப்படியும் வாங்கிவிட வேண்டும்! அதன் விலை என்னவென்று கடைக்காரனைக் கேட்டான்.

"முப்பத்தைந்து ரூபாய். வேறு விலை கேட்க வேண்டாம்" செல்லையாவின் மடியில் முப்பத்தொரு ரூபாய் தான் இருந்தது.

"இருபத்தைந்து தரலாம். சாமானைக் குடுத்துப்போடு"

"தம்பி! இது நாட்டுப் பெண்டுகள் போடுகிற கால்ச் சங்கிலிகள் அல்ல. ராசாத்தியின் கால்களுக்கேற்றவை. இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாய் வந்தது. உமக்கு இது சரிவராது ராசா. கடைசி விலை, முப்பது ரூபாய். குடுப்பீரா?

"சரி இந்தா ..."

பாதசரங்கள் கைம்மாறி, அவ்விடத்திலேயே நல்லம்மாவின் பாதங்களில் ஏறின.

வெண் மணலில் கால்கள் புதைய இருவரும் மறுபடி கடைகளைச் சுற்றி வந்தனர். மிச்சமாக இருந்த ஒரு ரூபாயைக் கொண்டு ஒரு தையற் பெட்டியும் வாங்கி, ஆளுக்கொரு சர்பத்தும் குடித்தனர். அடுக்குப் பெட்டி வாங்கவில்லை .

நல்லம்மாவின் கால்கள் ஓய்ந்துபோயின. "இனி வண்டிலடியில் போய்க் கொஞ்ச நேரம் இருந்திட்டு, திருவிழாப் பாத்துக்கொண்டு விடியப் போவம்" என்று இருவரும் முடிவு செய்தனர். செல்லையா அவளை ஒரு சனக் கும்பலுக்கூடாகக் கையில் பிடித்து நடத்திக்கொண்டு சென்றான் கும்பல் கழிந்து கொஞ்சம் வெளியான இடத்திற்கு வந்ததும் நல்லம்மா திடீரென நின்று தன் இடக்காலை உயர்த்திக் கையால் தடவிப் பார்த்தாள்.

"ஐயோ! காற் சங்கிலியைக் காணேல்லை ..."

"என்ன..... வடிவாய்ப் பார்!

"ஒரு காலான் எங்கையோ மணலுக்குள்ளை கழண்டு விழுந்திட்டுது"

"கொஞ்சம் கவனமாய் வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரி நாய்!"

மறுகணம் செல்லையா தன் நாக்கைக் கடித்துக்கொண்டான்.

குண்டூசியால் துளைக்கப்பட்ட றப்பர் பலூனைப் போல நல்லம்மாவின் உற்சாகம் அப்படியே சப்பளிந்து போய்விட்டது. மூன்றுமாத மணவாழ்க்கையில் இதுதான் முதல் தடவையாக இப்படி ஏச்சுக் கேட்கவேண்டி வந்தது. அதுவும் அம்பலத்தில் கூட்டிக்கொண்டு வந்துவிட்டு. அவள் மனத்தில் கோபம், அவமானம், துயரம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தோன்றின. கண்களில் நீர் மல்கியது.

"போதும், உங்களோட கோவிலுக்கு வந்த வண்டவாளம். இனி நடையைக் கட்டுவம்"

செல்லையா ஒரு படி கீழே இறங்கினான். "நல்லம்மா ஆத்திரத்திலை சொல்லிப் போட்டன். இஞ்சை பார்...."

"வேண்டாம். இப்பவே போக வேணும். வண்டிலைக் கட்டுங்கோ. நீங்கள் வராட்டி நான் தனியாக கால் நடையாய்ப் போறான். வழியிலை காறுக்குள்ளை வசுவுக்குள்ளை ஆப்பிட்டு நெரிஞ்சு போறன்"

செல்லையா மறுவார்த்தை பேசாமல் தன் திருக்கல் வண்டியை இழுத்து, மாட்டை அவிழ்த்துப் பூட்டினான். அவன் ஆண் மகன்.

மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்டயங்களின் தாளத்திற்கு ஏற்பக் கரடுமுரடான தெருவில் வண்டிச் சக்கரங்கள் "கடக், கடக்" என்று சப்தம் செய்தன. யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்துவிட்ட நிலபாவாடை போல் வளைந்து கிடந்த தெருவின் இரு மருங்கிலும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள்போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன.

செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளம்காளை உன்மத்தம் கொண்டமை போல் ஏற்காலைத் தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக்கொண்டு பறந்தது.... ஆத்திரத்தில் சிந்தனையில்லாமல் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமா? நிலத்தில் வியர்வை சொட்ட, கை கால் வலியினால் செயலற்றுப் போக, புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்ட வனுக்குத்தான் காசின் அருமை தெரியும்! அவன் ஆண்பிள்ளை, இரண்டு வார்த்தை பேச உரிமையுண்டு, அதைப் பெண் பொறுத்துக்கொண்டால் என்ன...? கொண்டு வந்த காசெல்லாம் அவளுக்காகத்தானே செலவு செய்தான்...? தனக்கு ஒரு சுருட்டுக்கூட வாங்கிக் கொள்ளவில்லையே...!

கால்களை வண்டியின் பின்புறம் தொங்கப் போட்டுக்கொண்டு, வண்டியின் கீழ் ஓடும் தெருவைப் பார்த்தபடி நல்லம்மா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எவ்வளவு அற்ப காரியம்!

ஒரு கஷ்டமும் இல்லாமல் திருவிழாப் பார்த்துவிட்டுச் சந்தோமோக வந்திருக்க லாமே... எல்லாம் அவளுடைய பிழைதான். கணவன் இரண்டு வார்த்தைகள் கடுமையாகச் சொல்லிவிட்டால்தான் என்ன ?

மாடு களைப்பினால் பலமாக மூச்சுவாங்கியது. நெல்லியடிச் சந்தியில், ஒரு பூவரச மரத்தின் கீழ்ச் செல்லையா வண்டியை நிற்பாட்டினான். அந்த நடுயாமத்திலும் கோவிலுக்குப் போகிறவர்களுக்காகக் கடைகள் எல்லாம் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர்க் கடைகளில் தேநீர் கலக்கும் "கட கட" என்ற சத்தத்தை விட, மற்றெங்கும் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டிருந்தது.

செல்லையா மாட்டின் களை தீர அதைத் தடவிக் கொடுத்தபின், ஒரு தேநீர்க் கடை இருந்த பக்கமாகச் சென்றான். அவனுடைய மடியில் ஒரு ஐந்து சதம்தான் இருந்ததென்பது நல் லம்மாவுக்குத் தெரியும். அன்று மத்தியானம் வீட்டில் சாப்பிட்டதுதான். அதன் பிறகு ஒன்றுமே இல்லை... "ஐயோ அவருக்கு எவ்வளவு பசியாயிருக்கும், வாய் திறந்து ஒன்றும் சொல்லாமல் இருக்கிறாரே...? " என்று அவள் அங்கலாய்த்தாள். அவளுடைய இதயம் இளகிக் கரைந்தது. தன் கணவனுடைய மனத்தின் பண்பும் அவன் தன்பால் வைத்துள்ள அன்பின் ஆழமும் அவள் மனத்தில் தெளிவாயிற்று. விவாகம் செய்துகொண்ட புதிதில் ஒருநாள் அவன் கூறிய வசனம் ஒன்றை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். "பெட்டை உனக்காக வேணு மெண் டால் என்ரை உசிரையும் கொடுத்து விடுவேன். நீ ஒன்டுக்கும் பயப்பிட வேண்டாம்"

அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல் இருந்தது. கண்கள் பொருமி உவர் நீரைப் பொழிந்தன. தன் கணவனை ஒரு குழந்தை போல் மடியில் வைத்துத் தாலாட்டி அவனுடைய உடலின் ஆயாசத்தையும் மனக் கவலையையும் போக்க வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது....

செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து, மனைவியருகில் ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்துவிட்டு, அவளுடைய முகத்தைப் பார்த்தான். அவளுடைய கண்ணீர் தோய்ந்த முகத்தின் ஒளி அவனை உலுக்கியது. தன்னுடைய நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையால் அவளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று அவன் மனம் அவாவியது.

"என்ன நல்லம்..."!

நல்லம்மாவின் கண்ணீர் வடிந்த முகத்தில், நாணம் கலந்த ஒரு புன்னகை அரும்பியது. "ஒண்டுமில்லை. உங்களுக்குப் பசி இல்லையே? வெளிக்கிடுங்கோவென் கெதியாய் வீட்டை போவும்..."

செல்லையா அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான். மாட்டின் வெண்டயம் மறுபடியும் பனந்தோப்புகளில் எதிரொலித்தது.

வல்லைவெளி!

இந்த அகன்ற பூமிப் பரப்பின் மகிமையை அறிந்தது போல இதுகாறும் வேகமாய் ஓடி வந்த மாடு, தன் சுதியைக் குறைத்து அடிக்கு மேல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்தது.

பேய்க் காற்று "ஹோ" என்று சுழன்றடித்தது.

வானம் கவிந்து, நாற்புறமும் நிலத்தைக் கவ்விக் கொண்டிருந்தது. வெளியின் நடுவே தேங்கி நின்ற நீரோடை, ஓர் அரக்கனது பிரம்மாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச் சரடுபோல் ஜொலித்தது. வான முகட்டின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த பளிங்குத் தகடுபோன்ற சந்திர தீபம் கீழே விழுந்துவிட எத்தனிப்பது போலக் கனிந்து பிரகாசித்தது.

சின்ன மனிதர்களையும் பெரிய எண்ணங்கள் எண்ணும்படி தூண்டும் இந்த வெளிப் பிரதேசத்தில்தான் மனிதனின் ஜீவநாடி நவநாகரிக முறைகளால் நலிந்துபடாமல் இன்னும் அந்தப் பழைய வேகத்தோடு அடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கோ வெகுதொலைவில் நிலத்தில் இருந்து இரண்டு அடி உயரத்தில் பொட்டிட்டது போன்ற ஓர் ஒளி தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெருவை நோக்கி நகர்ந்து வந்தது... செல்லையா அதைக் கண்டதும் அதை நோக்கிக் காறியுமிழ்ந்தான். நல்லம்மா, "அது என்ன?" என்று கேட்டாள்.

"ஆரோ மீன் பிடிகாரர் ஆள்கொண்டு போகிறான்கள்" என்று ஒரு பொய் சொல்லி மழுப்பிவிட்டுச் செல்லையா மாட்டின் வாலைப் பிடித்து முறுக்கினான். அந்த வெளிச்சம் தெருவைக் கடந்து வேகமாய் மற்றப் பக்கத்தில் போய் "பக்" கென்று அமிழ்ந்தது.

செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது.

அவனுடைய மனம் வல்லை வெளிபோல் விரிந்தது. மெய்மறந்த ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன் குரலை எழுப்பி, "ஞானகுமாரி" என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டைப் பாடினான்.... அவனுக்குப் பசியில்லை. தாகம் இல்லை. தூக்கம் இல்லை. எத்தனை கொள்ளிவாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிட முடியும்?

ஈழகேசரி - 09.16.04.1944

மரியா மதலேனா

இலங்கையர்கோன்

அவள் ஒழுக்கம் தவறியவள். மோட்ஷ வீட்டை நோக்கிச் செல்லும் மனித வர்க்கத்தின் ஞானபபாதையில் குறுக்கே படம் விரித்தாடும் கொடிய விஷசர்ப்பம். ஒன்றுமறியாத ஆண் மகனைத் தன் மாயா சக்தியால் வலிந்து இழுத்து மீட்சியில்லாத காமப் படுகுழியில் வீழ்த்தும் காந்தச் சுழல் அருவருத்து ஒதுக்கப்பட வேண்டிய வாழ்க்கை ரசத்தின் அடிமண்டி ..... சீ!

ஆமாம்! அவள் நிலை தவறியவள்தான். ஆனால் ஏன்?

அவளுடைய நடத்தையைக் கண்டனம் செய்த சுத்தப் பிரமுகர்க ளால் இந்தக் கேள்விக்கு மட்டும் விடை கண்டு பிடிக்கமுடியவில்லை. தங்களுடைய இருதயத்தின் மேல் கையை வைத்துத் தங்களுடைய மனச்சாட்சிகளைப் பரிசீலனை செய்யவும் அவர்களுக்குத் தைரிய மில்லை. மற்றவர்களைக் கண்டனம் செய்யும்பொழுது மட்டும் தாங்கள் நன்னடத்தையின் சித்திரங்கள் என்பதுவே அவர்களுடைய நினைப்பு. அதுதான் மனித இயற்கை போலும்!

அந்த வார்த்தையின் பூரணமான பொருளில் அவள் ஒரு மானம் வெட்கமற்ற வியபி சாரித்தான். தன் உடலைப் பொதுஉடைமைப் பொருளாகக் கருதுபவள் வெறும் தசை உணர்ச்சியா அல்லது பொருளாசையா? இரண்டும் அல்ல; தன் உடலையும் உயிரையும் ஒன்றாக வைத்துக் காப்பதற்கு அவளுக்குத் தெரிந்த வழி அது ஒன் தான்.

மரியா மதலேனா ஒரு பெரிய கப்பல் வியாபாரியின் மகள். பொருட்செல்வம் அளிக் கக்கூடிய போகங்களை எல்லாம் அவள் அனுபவித்தாள் நாளைக்கு என்ற கவலை கிடையாது அவளுக்கு. அவளுடைய வாழ்க்கைக் கிண்ணத்தில் சுவை மிகுந்த மதுரசம் நிரம்பியுள்ளது.

குழந்தைப் பருவம் ஓர் இன்பக் கனவுபோல் மறைந்தது. திடீரென்று ஒரு நாள் அவளுடைய தந்தை கடலில் கலம் கவிழ்ந்து மாண்டு போனார். அவன் தேடி வைத்த செல்வங்களையெல்லாம் தாயாதிகள் கைப்பற்றிக்கொண்டனர். மரியா தன் இளமையின் முழுமலர்ச்சியில் ஆதரவற்ற அநாதையாக விடப்பட்டாள். சமூக ஏணியின் முதற்படியில் கர்வத்தோடு நின்றவள் இப்பொழுது நிலத்தில் கிடந்து துடிக்கிறாள், விதியின் கொடிய விளையாட்டு அது.

நாலு திசைகளிலிருந்தும் வாழ்வின் சண்டமாருதங்கள் குமுறிக் கொண்டு வந்தன - வறுமை, தனிமை, சன்மார்க்கம், யௌவனத்தின் தூண்டுதல். அவற்றின் சீறுதல்களை எதிர்த்து ஒரு திசையிலும் அடியெடுத்து வைக்க முடியவில்லை அவளால். நின்ற நிலையிலே பாதாளத்தில் இறங்கிவிட வேண்டியது தானா?

போகத்தில் வாழ்ந்தவள் மீண்டும் போகத்தை விரும்பினாள். உண்பதற்கு ரஸம் மிகுந்த உணவு, அணிவதற்கு ஒய்யாரமான உடைகள், வதிவதற்கு நல்ல வீடு ஆகியவை வேண்டும் அதற்கு என்ன வழி? அவளை மானமாக மணம் செய்து கொள்வதற்கு ஒரு வாலிபனும் முன்வரவில்லை. அழகு மட்டும் இருந்தால் போதுமா? பணப்பை வேண்டாமா?

வழி தவறிய ஓர் ஆன்மா அலைவது போல, எவ்வளவு காலத்திற்குத்தான் இடம் தேடிக் கொண்டிருக்க முடியும்? கடைசியாகத் தனக்குத் தெரிந்த சுலபமான வழியில் இறங்கி விட்டாள். முதற் பிழை இரண்டாம் பிழைக்கு இடம் கொடுத்தது. சிறு துளிகள் பெருவெள்ள மாகி அவளைப் பிரவாகத்தோடு அடித்துக் கொண்டு போய்விட்டன. பிறகு கழிவீரக்கத்திற்கு இடம் இல்லாமற் போய் விட்டது.

நல்வழிப் போதகர்களின் போதனைகள் அவளுடைய செவிகளில் ஏறவில்லை அவை அர்த்தமற்ற வெறும் வார்த்தைக் குவியல்கள்தாமே ! மோஸஸ் யாத்த சட்டங்களுக்குக் கூட அவள் அஞ்சவில்லை.

ஆனால் அவளுடைய நெஞ்சத்தின் உள்ளே ஏதோ ஒரு தீனமான குரல் "நீ பாபி" என்று கூறிற்று.

எத்தனை நாட்களுக்குத்தான் சட்டத்தின் கழுகு நோக்கத்திற்குத் தப்பி இருக்க முடியும்? ஒரு நாள் அகப்பட்டுவிட்டாள்,

அக்காலத்தில் இப்பொழுது இருப்பது போல் நாகரீகமான சட்டங்கள் கிடையா. பல்லுக்குப் பல்லு. ரத்தத்திற்கு ரத்தம் என்று பழிதீர்த்துக் கொள்ளும் சட்டமே வழங்கி வந்தது.

ஏசுநாதரின் ஞான ஒளி சிறிது சிறிதாகப் பாமர இருளை ஓட்டிக்கொண்டு வந்தது. அவருடைய தேன் பொதிந்த ஞானவாசகங்களை ஏழை ஜனங்கள் ஆவலோடு போற்றி வந்தனர். ஆனால் அவரை வெறுப்பவர்கள் பல்லாயிரக்கணக்காக இருந்தனர். ராஜாங்கமே அவரைக் கண்டித்தது. அவர் இன்னும் ஒரு கிராமச் சாமியார் ஆகவே இருந்தார்.

சில பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து, ஒரு நாள் மரியாவைப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் ஏசுநாதர் முன் விட்டார்கள். "ஆண்டவனே, இவள் ஒரு வியபிசாரி, பாபி கையும் மெய்யுமாக அகப்பட்டிருக்கின்றாள். மோஸஸ் நிர்மாணித்த சட்டத்தின்படி இவளைச் சந்தியில் நிற்க வைத்துக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். அதுதான் வியபிசாரத்திற்குச் சரியான தண்டனை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அவர்கள் இப்படிக் கேட்டது ஏசுநாதரைத் தங்களுடைய தலைவராகக் கருதியோ அல்லது அவருடைய அபிப்பிராயத்தில் உண்மையான மதிப்பு வைத்தோ அல்ல. அவருடைய நியாயத் தீர்ப்பில் பிழை கண்டு பிடித்து அவரைத் தாழ்வு படுத்துவதுதான் அவர்களுடைய நோக்கம். அது அவருக்கும் தெரியும். அதனால் தான் அவர்கள் கூறியதைக் கேளாதவர் போலக் கீழே குனிந்து நிலத்தில் விரலால் ஏதோ கீறிக் கொண்டிருந்தார்.

அவர்கள் இரண்டாம் முறையும் தாங்கள் கூறியதையே திருப்பிக் கூறினார்கள்

ஏசுநாதர் அவர்களை நிமிர்ந்து பார்த்து, உங்களில் "யாரொருவன் தான் ஒரு பாவச் செயலையும் செய்யவில்லை என்று மனமார நினைக்கிறானோ, அவன் முதற்கல்லை அவள் மேல் விட்டெறியட்டும்" என்று கூறிவிட்டு மறுபடியும் கீழே குனிந்து கொண்டார்.

அவர் கூறிய வசனம் இறகு முளைத்த பாணம் போற் சென்று அவர்களுடைய இருதயங்களைத் தாக்கி அவற்றில் நிறைந்திருந்த குப்பைகளை வெளியே வாரி இறைத்தது. அவர்களுடைய பாவங்கள் எல்லாம் அவர்களுடைய கண்களின் முன் விசுவரூபம் எடுத்து. நின்றன. நினைக்க முடியாத கோரக் காட்சிகள் எல்லாம் அம்மந்திர வார்த்தைகளின் சக்தியால் தோன்றி மறைந்தன.

ஆதரவற்ற ஏழைப் பெண்மேல் குற்றம் சாட்டிய மனிதர்கள் தங்களுடைய மனச்சாட்சியே பயங்கரமான வடிவங்கொண்டு தங்களைக் குற்றம் சாட்டுவதை உணர்ந்தார்கள். அவர்களுடைய அங்கங்கள் நடுங்கின. இதுதான் ஆன்மாக்களின் கடைசியான தீர்ப்பு நாளோ? பேசாமல் ஒவ்வொருவராக வைகறையின் ஒளியின்முன் கலையும் இருள்போல, அவ்விடத்தைவிட்டு அகன்றார்கள்.

ஏசுநாதர் தலை நிமிர்ந்து பார்த்தார். மரியா தனியே நின்றாள், முடியிழந்த கோபுரம் போல் நிலைகுலைந்து நின்றாள்.

பெண்ணே! உன்மேல் பழி சுமத்தியவர்களெல்லாம் எங்கே? ஒருவனாவது உன்னைத் தண்டிக்கவில்லையா?

"எல்லாரும் போய் விட்டார்கள்." அவளுடைய குரலில் கழிவிரக்கம், வெட்கம், பரிதாபம், கெஞ்சும் பாவம் எல்லாம் நிறைந்திருந்தன. குனிந்த தலை நிமிரவில்லை. ஏசுநாதருடைய கருணை ததும்பும் கண்கள், அவளுக்குத் தன் பாவங்களைப் பிரதிபலிக்கும் இரு கண்ணாடிகள் போல் தோன்றின.

"நானும் சேர்ந்து உன் மேல் பழிசுமத்த மாட்டேன். நீ உன் வீட்டிற்குப் போ. இனிமேல் பாவம் செய்யாதே" என்று தேன் சொட்டுவது போற் கூறினார்.

அந்த வார்த்தைகள் அவளுக்கு என்றுமில்லாத ஒரு நம்பிக்கையையும், மனவுறுதியையும் கொடுத்தன. தன் ஆன்மா பரிசுத்தமாக்கப்பட்டதாக உணர்ந்தாள். அன்று தொட்டுத் தன் வாழ்க்கையிலே ஒரு புதுப்பருவத்தை உண்டாக்கி விடுவதென்ற திடசித்தத்தோடு அவ்விடத்தை விட்டு மெல்ல நகர்ந்தாள்.

மரியாமதலேனா இப்பொழுது முழுதும் மாறிவிட்டாள். பாவம் நிறைந்திருந்த வாழ்க்கையில் பரிசுத்தம் நிறைந்தது. போதனைகளும் ராஜதண்டனையும் செய்து முடிக்க மாட்டாத ஒன்றை ஏசுநாதருடைய கருணைப் பிரவாகம் ஒரு கணப்பொழுதில் செய்து முடித்துவிட்டது ஏசுநாதருக்குத் தொண்டு செய்வதிலும், அவருடைய போதனைகளைச் சாதனை செய்வதிலும் மரியாவிற்குப் பரமானந்தம், ஆன்மாவிற்குச் சாந்தி. அவள் அவருடைய உண்மையான சிஷ்யையாகிவிட்டாள் .

அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரால் மஞ்சனமாட்டித் தன் நீண்ட மெல்லிய கூந்தலால் சுத்தி செய்வதில் மரியாவிற்கு விவரிக்க முடியாத ஓர் உவகை ஏற்பட்டது. ஏசு நாதரும் அதை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்

ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு ஆவி நீத்தபின் ஜோஸப் என்ற அவருடைய உத்தம சிஷ்யன் ஒருவன் பைலேட்டிடம் உத்தரவு பெற்று அவருடைய உடலை எடுத்து ஒரு கல்லறையில் அடக்கம் செய்தான். மூன்றாம் நாள் வைகறையில் மரியா அக்கல்லறையின் சமீபமாக வந்து பார்த்தபொழுது அதன் மூடி நீக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. யாராவது யூதநாஸ்திகர்கள் கல்லறையை. அசுத்தப்படுத்திப் பிணத்தை அகற்றி விட்டார்களா?

ஓட்டமாக ஓடி பீட்டரிடமும் இன்னுமொரு சிஷ்யரிடமும் விஷயத்தைத் தெரிவித்தாள். அவர்களும் பிரமிப்படைந்து கல்லறையை நோக்கி விரைந்து வந்தார்கள். கல்லறையின் உள்ளே சென்று பார்த்தபொழுது பிணம் காணப்படவில்லை. பிணம் சுற்றப்பட்டிருந்த துணிகள் மட்டுமே அலங்கோலமாகப் புரண்டு கிடந்தன. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. செயலற்றுத் தங்கள் வீடு களுக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஆனால் மரியா மட்டும் அவ்விடத்தில் அழுதுகொண்டே நின்றாள். அழுதுகொண்டே சமாதியின் உள்ளே நோக்கி னாள். ஆ. என்ன ஆச்சரியம்! அங்கே ஏசுநாதரின் உடல் கிடந்த இடத்தின் தலைப் புறத்திலும் காற்புறத்திலும் இரண்டு தேவதூதர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர் களுடைய உதடுகள் அசைந்தன.

"பெண்ணே ! ஏன் அழுகின்றாய்?"

"என் ஆண்டவனைக் காணவில்லையே? அவரை நான் எங்கே தேடுவேன்?"

இப்படிக் கூறி விட்டுப் பின்புறம் திரும்பினாள். அங்கே ஏசுநாதர் நின்றுகொண்டிருந்தார். ஆனால் அவளுக்கு அடையாளம் புரியவில்லை. அவரை யாரோ தோட்டக்காரன் என்று நினைத்து, "ஐயா என் ஆண்டவனை எங்கே செண்டு போய் வைத்திருக்கிறீர் கூறும். நான் அவரை எடுத்து அடக்கம் செய்கிறேன்" என்று கேட்டாள்.

"மேரி" அதே மதுரம் சொட்டும் குரல்தான்; மேரிக்கு அடையாளம் புரிந்து விட்டது.

"என் ஆண்டவனே!" என்றாள், தாயின் குரல் கேட்ட புனிற்றினம் கன்று போல. அவளுக்கு மயிர்க்கூச்செறிந்தது. அவளுடைய அந்தராத்மாவில் இன்பப் புனல் கரை புரண்டோடியது.

ஏசுநாதர், "மேரி, என்னைத் தொடாதே. நான் இன் சுவர்க்கத்திலிருக்கும் என் தந்தையிடம் போகவில்லை. அவர் உனக்கும் தந்தைதான். உலகம் எல்லாருக்குமே தந்தை. நான் இப்பொழுது அங்கேதான் போகிறேன். இதை எல்லாம் நீ என் சிஷ்யர்களிடம் கூறு " என்றார்.

அவர் மறைந்து விட்டார்.

மரியா உன்மத்தம் கொண்டவள் போல் வெறும் வானத்தைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

●

சி. வைத்தியலிங்கம்

ஈழத்தின் சிறுகதை மூலவர்களில் ஒருவராக சி. வைத்தியலிங்கம் கணிக்கப பட்டு வருகின்றார். ஆங்கில சமஸ்கிருத மொழிகளில் நல்ல தேர்ச்சியுடையவர். கலைமகள், கிராம உழியன், ஆனந்த விகடன், ஈழகேசரி ஆகிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் வெளிவந்திருக்கின்றன. சமூக, சரித்திர கதைகள் 25 இற்கு மேற்பட்ட சிறுகதைகளை இவர் படைத்துள்ளார். இவரது மூன்றாம்பிறை என்ற சிறுகதை அல்லயன்ஸ் கம்பனி வெளியிட்ட கதைக் கோவையில் வெளிவந்தது. சிற்பி வெளியிட்ட ஈழத்து சிறுகதைகள் என்ற தொகுதியில் இவரது பாற்கஞ்சி சிறுகதை இடம் பிடித்திருக்கின்றது. இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுதி 1990 இல் கங்கா கீதம் என்ற பெயருடன் வெளிவந்துள்ளது. கிராமிய மக்களின் அன்றாட வாழ்க் கையின் அம்சங்கள் மண்வாசனையோடு இவரது சிறுகதைகளில் கலந்திருக்கும். கம்பீரமான உரைநடை கு.ப.ராவின் எழுத்துக்களில் ஈடுபாடு டையவர். ஜவான் தேகினிவ் எழுதிய மாலைவேளையில் என்ற நாவலை தமிழாக்க மும் செய்துள்ளார். ரவீந்திரன் என்ற புனைபெயரிலும் சிறுகதைகள், மொழி பெயர்ப்புக்கள் செய்துள்ளார். அமரராகிவிட்டார்.

- இப்படிப் பல நாள்
- ஏன் சிரித்தார்
- மின்னல்
- கழனி கங்கைக் கரையில்
- கங்கா கீதம்
- நெடுவழி

இப்படிப் பல நாள்

சி. வைத்தியலிங்கம்

காத்திருந்த ஞாயிற்றுக்கிழமையும் வந்தது. வாசுதேவன் அறை பின் மேசை முன்னால் உட்கார்ந்து கொண்டு கதை எழுத ஆரம் பித்தான். எழுதியதைத் திரும்பத் திரும்ப வெட்டியதே ஒழியக் கதையோ வளரவில்லை. கற்பனையோ வளரவில்லை. கற்பனையோ ஊற் றெடுக்கவில்லை. சை! என்று பேனையை எறிந்துவிட்டு ஆழ்ந்த யோச னையில் இருந்தான். "என்ன, கதை எழுதவென்று தொடங்கினீர்கள். இப்படி ஒரே யோசனையில் இருக்கிறீர்களே" என்று கேட்டுக் கொண்டு அவன் மனைவி குமுதம் கையில் ஒரு தட்டு நிறைய மாம்பழத்துடன் வந்தாள் அவன் மாம்பழத்தில் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு "அதெப்படி முடியும்? நான் ஒரு கட்டுரையோ கதையோ எழுதி வருசம் ஐந்தோ ஆறோ ஆகிறது. இதற்கிடையில் என் மனசிற் பாய்ந்து கொண்டிருந்த கற்பனை ஊற்றும், தூர்ந்து போய்விட்டதுபோல் தெரிகி றது. கதைதான் மனசில் உருவாகிக் கொண்டு வந்தாலும் அதை எழுத முடிகிறதில்லை. இதற்கு நான் யாரை நோக. "முன்னெல்லாம் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள முன்னர் நீங்கள் எத்தனை எத் தனை கதை எழுதினீர்கள். நீங்கள் எழுதிய "தேன்கூடு" என்ற

சிறுகதையில் தானே நான் உண்மையில் உங்களை முதல் முதல் சந்தித்தது. அந்தக் கதையை வாசித்த நாள் முதல் அதன் ஆசிரியரைக் காண வேண்டுமென்று என் ஆவலோ சொல்ல முடியாது. என் அப்பாவுக்குச் சொல்லவும் வெட்கமாயிருந்தது. "அதற்குப் பின்னர் நடந்ததுதான் எனக்கும் தெரிந்ததாயிற்றே. சும்மா இதைப் பற்றித் திருப்பித் திருப்பி எத்தனை தடவைதான் எனக்குச் சொல்லியிருக்கிறாய்" "ஓ.. நம் ஆசிரியருக்குக் கோபம் வந்துவிட்டது போல் தெரிகிறது. இல்லை, நான் அதைச் சொல்லவில்லை. பாருங்கள், எங்கள் மனசுக்குப் பிடித்த ஒரு இன்பமான விசயத்தைத் திரும்பத் திரும்ப எத்தனை தரம் சொன்னா லும் அதன் சுவை குறைகிறதேயில்லை. எனக்கோ அது எங்கள் "இந்துவை"த் தழுவத் தழுவ இன்பம் அதிகரிப்பதுபோல் என்றும் இன்பமாய்த்தான் இருக்கிறது.

"அதெல்லாம் சரி. நீ இப்படியெல்லாம் சர்க்கரையாய்ப் பேசுவாய் என்று எனக்குத் தெரியும். இப்ப என்னைக் கதை எழுத விடப்போகிறாயா, அல்லது இன்னும் ஏதாவது இருக்கா?" "நான் உங்கள் கையை வந்து பிடிக்கிறேன். நல்லாய் எழுதுங்கள். என்னைப் பற்றிப்... போவதாகச் சொன்னீர்களே, ஞாபகம் இருக்கிறதா?"

"இங்கே பார் குமு, நீ இப்படி வந்து ஏதோ அளந்து கொண்டுபோனால், என்னால் ஒன்றுமே எழுத முடியாது. மன நிம்மதியாய் இருந்து சிறிதுநேரம்..." "சரி, நான் வந்துதான் உங்களுக்குத் தொல்லையாயிருக்கிறது. நான் இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. அந்தக் கதவைப் பூட்டிவிடுகிறேன். குழந்தைகளையும் அடுத்த வீட்டுக்கு அனுப்பி விடுகிறேன். பார்ப்போமே, எங்கள் ஆசிரியரின் சமத்தை" என்று சொல்லிக் கொண்டு கதவையும் பூட்டிவிட்டுப் போய்விட்டாள். வாசுதேவன் "அப்பாடி" என்று நெட்டுயிர்த்துக் கொண்டு கையில் பேனாவை எடுத்தான்.

சிறிது நேரத்தில் முன் கதவை யாரோ தடதடவென்று தட்டும் சத்தம் கேட்டது. குமுதம் சமையலறையிலிருந்து போய் யார் என்று விசாரித்துக் கொண்டு ஓடோடியும் வந்து கதவைத் திறந்து "உங்கள் நண்பன் ராகவன் வந்திருக்கிறார். இங்கேயே வரச் சொல்லட்டுமா?" என்றாள்."யார்? நம் ராகவனா?" என்று கேட்டு விட்டு வாசுதேவன் எழுந்துபோய் "அடே ராகவா, வா அப்பா இப்படி உட்கார்ந்துகொள். உன்னைச் சந்தித்து எத்தனை நாட்களாகின்றன? எங்களை மறந்தே போனாய் என்றிருந்தேன். எப்படி வீட்டில் எல்லோரும் சோமந்தானே. குழந்தைகள் வேறும் ஏதாவது... ராகவன் கதைத்த வண்ணம் "இல்லை. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என் ஒரே குழந்தைக்குத்தான் அடிக்கடி ஏதோ ஒன்று வந்துகொண்டிருக்கிறது. அதோடு கந்தோர் வேலை. யாரையும் போய் காணவென்றாலும் அவகாசம் கிடைக்கிறதேயில்லை" "நீ அதிகம் சொல்ல வேண்டாம் ராகவா. எனக்குத் தெரியாததல்ல. குடும்பத் தொல்லைகள். அதிருக்கட்டும் நீ இப்பவெல்லாம் பத்திரிகைக்கு ஏதும் எழுதுவதில்லையா? உன் கதைகளை வாசித்துப் பல நாட்களாகிறதே?" "எழுத வேண்டுமென்று அதிக ஆசை இருக்கிறதுதான். ஒரு கதையோ கட்டுரையோ மனதில் உருவாகி வருவதற்குள் ஏதாவது ஒரு தொல்லை வந்து மனநிம்மதியைக் குலைத்துவிடுகிறது. முன்னெல்லாம் பாருங்கள், நாங்கள் கல்லூரி விட்டு உத்தியோகம் தேடிக் கொண்டிருந்த நாட்களில்..."

"அதை ஏன் நினைத்து ஏங்குவான்? நாங்கள் இருவரும் கைகோர்த்த வண்ணம் எங்கள் ஊர் வயல்வெளியில் வெயிலையும் காற்றையும் பொருட்படுத்தாமல் உலகத்திலுள்ள

கதைகளைப் பற்றியும் காவியங்களைப் பற்றியும் தர்க்கம் செய்து கொண்டு திரிந்த அந்தக் குதூகலமான நாட்கள் மீண்டும் வரப் போகின்றனவா? மூங்கிற் புதரிற் சென்று சலசலக்கும் காற்றுப்போலவும் விண்ணிலே சஞ்சரிக்கும் மேகம் போலவும் சர்வ தந்திரத்துடன் அலைந்து திரிந்த நாட்கள் என் ஞாபகத்துக்கு வருகிறது" அந்நாட்களில் தானே நாங்கள் முதன் முதல் காளிதாசரின் சாகுந்தலத்தைத் தமிழில் கண்டது"

"ஆம் அதை முதன் முதல் படித்த எங்கள் மனதில் கொந்தளித்த ஆர்வத்தையும் ரஸானுபவத்தையும் ஓர் இளம் பெண்ணைத் தொட்டதுபோன்ற ஒரு உணர்ச்சியையும் நினைத்தால் இன்று நான் இதைச் சொல்லும்போதும் மெய் சிலிர்க்கிறது. குமுதம் மெல்ல கத வருகில் வந்துநின்று வாசுதேவனை வரும்படி சைகை செய்தாள். அவன் எழுந்துபோய் "என்ன எங்களைக் கொஞ்சநேரம்தானும் - குமு - நாங்கள் எத்தனை நாட்களுக்குப் பிறகு சந்தித்திருக்கிறோம்...." அவன் முடிக்கும் முன்னரே தாழ்ந்த குரலில் அவள் "இப்ப என்ன நேர மானது பாருங்கள். மணி ஒன்றாகப் போகிறது. இன்று சமையல் மிக அபூர்வம் என்று சொல்லப்போகிறீர்கள். உங்கள் நண்பரையும் சாப்பிட்டுப் போகும்படி சொல்லுங்கள்" என் றாள். அப்பொழுதுதான் இந்த உலக நினைவு வந்தது வாசுதேவனுக்கு. இலக்கிய நண்பரைக் கண்டுவிட்டால் நேரமே போகிறது அவனுக்குத் தெரியவில்லை. "அடே ராகவா! இன்று நீயும் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் என்று என் குமு உனக்குக் கட்டளை போட்டிருக்கிறாள். எழுந்திரு" என்று சொல்லிக்கொண்டே "குமு இலையைப் போடு" என்றான்.

சாப்பாடு முடித்து ராகவனும் சிறிது நேரத்திற் போய்விட்டான்.உண்மையில் குமுதம் பிரமாதமாகச் சமயல் செய்திருந்தாள். வாசுதேவனும் வயிறு நிறையச் சாப்பிட்டு விட்டு ஒரு சிகறெற்றை எடுத்துப் புகைத்துக் கொண்டான். அயர்வும் தூக்கமும் சூழ்ந்துவர இரண்டு வரி யாவது எழுதலாமென்று மேசையின் முன் போய் உட்கார்ந்தான். அப்பொழுதுதான் நித்தி ரையில் இருந்து எழும்பிய குழந்தையையும் வைத்துக் கொண்டு கையில் வெற்றிலை பாக்குத் தட்டுடன் குமுதும் அவன் அருகே வந்து, "இன்று சமையல் எப்படி இருந்தது. உங்கள் நண்பர் என்ன சொன்னார்?" என்று கேட்டாள்."இப்படி மோசமான சமையலை தான் எங்கும் பார்த்ததில்லை என்று உனக்குச் சொல்லச்சொன்னான்" என்றான் வாசுதேவன்.

"அப்படியானால் உங்கள் நண்பனை ஒருநாளைக்கு சமையல் செய்து காட்டும்படி நீங் கள் சொல்லவில்லையா?" வாசுதேவன் சிரித்துக் கொண்டே அதைப்பற்றிப் பின்னர் யோசிப் போம். இப்போ நீ போய் இந்துவுக்கு ஏதும் கொடு. நான் என்னசெய்யப் போகிறேன் என்பது உனக்குத் தெரியுந்தானே" என்றான்."தெரியாமல் என்ன, நீங்கள் வழக்கம்போல நித்திரை செய்யப்போகிறீர்கள்: கதையில் ஒரு பாரா எழுதுமுன்னர் - பார்ப்பமே" வாசுதேவன் அயர் கட்டிக் கொண்டிருந்த கண்களைத் துடைத்துக்கொண்டு "இல்லை நான் எழுதிக் கொண்டு தான் இருக்கப்போகிறேன்" என்று தீர்மானமாய்ப் பதில் சொல்லிவிட்டு எழுத ஆரம்பித்தான். நித்திரையோ கண்களைச் சுற்றிக் கொண்டு வந்தது. அவனால் இருக்கமுடியவில்லை. போய்ப் பாயை விரித்துப் படுத்துக் கொண்டான். குமுதம் வந்து பார்த்த பொழுது குறட்டை விட் டுத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனைப் பார்க்க அவளுக்கு இரக்கமாய் இருந்தது. "அவர் கொஞ்சநேரம் தூங்கட்டுமே" என்று நினைத்துக் கொண்டு தன் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மணி ஐந்து ஆகியும் வாசுதேவன் தூங்கிக் கொண்டிருந்தான். குமுதம் வந்து அருகிற்போய் "இன்னுமா தூங்குகிறீர்கள்? எழுந்திருங்கள் மணி ஐந்தும்

அடித்துவிட்டதே" என்றாள். வாசுதேவன் "கதை எழுதி முடிந்ததா இல்லையா பார்" என்று சொல்லிக் கொண்டு எழுந்திருந்தான். முன்னால் குமுதம் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டு நின்றாள். மாலை வெய்யில் யன்னல் ஊடா வந்து அவன் படுக்கைமேல் வீழ்ந்து கொண்டிருந்தது. வெளி முற்றத்தில் அவன் குழந்தைகள் பந்தடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

"என்ன கனவா கண்டீர்கள்? எப்படியாவது கனவிலாவது கதை முடிவாகிவிட்டதே. அதேபோதும். தேநீர் வைத்திருக்கிறேன் மேசைமேல். எழுந்திருங்கள்" என்றாள் குமு. வாசுதேவனுக்கு எரிச்சலாய் இருந்தது. தன்னையே சபித்துக் கொண்டு, "சே, இவ்வளவு நேரமும் தூங்கி விட்டேன்"என்று சொல்லிய வண்ணம் எழுந்திருந்தான். அப்பொழுது அவன் மூத்த பையன் தலைதெறிக்க ஓடிவந்து "அப்பா, அப்பா, வாசலிலே கார் ஒன்று நிற்குது" என்று கத்தினான். வாசுதேவன் எட்டிப் பார்த்தான். அவன் தங்கையும் கணவனும் காரிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவன் தங்கை ஓடிவந்து "அண்ணா இன்று சந்திரலேகா படத்துக்குப் போகலாமென்று உங்களையும் கூட்டிப் போக வந்திருக்கிறோம். நேரம் ஆகிறது. நீங்களும் கட்டாயம் வரத்தான் வேணும். புறப்படுங்கள்" என்றாள்.வாசுதேவனால் ஒன்றுமே சொல்லமுடியவில்லை. சந்திரலேகா படத்தைப் பார்க்க வேண்டுமென்று அவனுக்கும் ஆவலாய்த்தான் இருந்தது.தன் தங்கையுடன் போனால் குமுவுக்கும் குழந்தைகளுடன் உதவியாயிருக்கும். ஆனால் அவன் ஆரம்பித்த கதை... கொஞ்சம் யோசித்தான். "இரவு நீண்ட நேரம் இருக்கிறது. எப்படியும் வந்து கதையைச் சமாளித்துக் கொள்ளுவோம்" என்ற முடிவுக்கு வந்துதான். "அப்படியானால் நாங்களும் வருகிறோம்" என்று சொல்லிவிட்டு "குமு, இன்று உனது யோகம். நாங்களும் படத்துக்குப் போயிற்று வரலாம். நேரமாச்சு. சீக்கிரம் ஆயத்தமாகுங்கள்" என்றான்.

குமுதத்துக்குச் சினிமா என்றால் குழந்தைகள், புருசன், ஒன்றுமே வேண்டாம். அவ்வளவு மோகம் அவளுக்கு. "இதோ" என்று சொல்லிய வண்ணம் பம்பரம்போல" சுழன்று கூத்தடித்துக் கொண்டு தயாரானாள். சந்திரலேகா படமோ நீண்ட படம். அவர்கள் படம் முடிந்து வீட்டுக்குத் திரும்பிய பொழுது இரவு மணி 10 அடித்துக் கொண்டிருந்தது. குழந்தைகள் சாப்பிட்டு நித்திரைக்குப் போக மேலும் ஒரு மணிநேரம் கழிந்தது. அறையின் யன்னலைத் திறந்துவிட்டு ஏகாந்தமாய் மேசை முன்னாலிருந்து கதையைப் பற்றித் தொடர்ந்து யோசித்து மனசில் உருவாக்கிக் கொண்டிருந்தான் வாசுதேவன்.

முன்னால் யன்னலுக்கு வெளியே ஜலத்தில் பிரதிபலிக்கும் சந்திரன் போல் விதானத்தில் மங்கிய நிலவு ஊர்ந்து கொண்டிருந்தது. முற்றத்தில் நின்ற மல்லிகைச் செடியிலிருந்து ஒரு குளிர்ந்த காற்று மல்லிகை மணத்தை அறை முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தது... வாசுதேவனுக்குத் தாகம் எடுத்தது. "குமு கொஞ்சம் ஜலம் கொண்டுவா" என்று எழுப்பினான். குமுதம் எழுந்து டம்ளரில் ஜலம் கொண்டுவந்து வைத்துவிட்டு "கதையில் இன்னும் அதிகம் எழுத இருக்கிறதா? இப்படி நித்திரை முழித்துவிட்டு நாளைக்குக் கந்தோர் போவதில்லையா" என்றாள்.

அவனுக்கு முன்னால் இரண்டு "பரா" மாத்திரம் எழுதிய ஒரு காகிதம் கிடந்தது. "கதை ஓடவில்லையே, நான் இதற்கு என்ன செய்ய? நாளைக்கு தபாலுக்குச் சேர்க்க வேண்டுமே" என்றான்."என்னாலும் குழந்தைகளாலும் தான் நீங்கள் ஒன்றும் எழுதமுடியவில்லை

என்றீர்களே. இது உண்மைதானா" என்று இரக்கம் நிறைந்த பார்வையுடன் கேட்டாள் குமு. வாசுதேவனுக்கு இதைக் கேட்டவுடன் நெஞ்சு குமுறியது. தளதளத்த குரலில் "இல்லை யில்லை குமு. இப்படியாக நீ நினைத்துவிட்டாயா? என் இல்லத்துக்கு ஒரு உயிர்க்காற்றுப் போல் நீ வந்தாய். என் வாழ்க்கையிலே புதுமையும் ஒளியும் வந்து நிரம்பியது. எங்கள் குழந் தைகளின் மழலையைக் கேட்டு இந்த வீடே கொந்தளித்துக் குதூகலிக்கிறது. நீங்கள் இல்லா விடில் உலகமே வரண்ட ஒரு பாலைவனமாகவல்லவா எனக்குத் தோன்றும். பார், குமு. முன்னெல்லாம் அதை எழுத வேண்டுமென்ற ஒரு தேவை இருந்தது. என் மனசுக்கு, அதில் அது ஒரு நிறைவையும் சாந்தியையும் கண்டது.

"அப்படியானால் இப்போ" "நீ இருக்கிறாய். எங்கள் குழந்தைகள் இருக்கின்றன. உன் தூய்மையான குழந்தைகளின் ஸ்பரிசத்திலே ஒரு சாந்தியையும் பூரிப்பையும் மனம் பெற்றுக் கொள்கிறது"

"நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகள் வளர்ந்துவர, என் தேகத்தின் எழில் குறைய" "இப்படி வா, குமு என்பக்கத்தில் நீ முதல் முதல் என்னிடம் வந்தபொழுது இருந்தது போலவா இப்பவும் இருக்கிறாய்? அன்றொருநாள் இப்படியான ஒரு ஏகாந்தமான இரவில். சந்திர கிரணங்கள் யன்னல் ஊடாக வீழ்ந்து கொண்டிருந்த படுக்கையில் உன்னை நான் தொட்ட பொழுது நீ நடுங்க, என் மெய் சிலிர்க்க" குமு அவன் வாயைப் பொத்திக் கொண்டாள். "சீ, உங்களுக்கு வெட்கமாயில்லையா? இப்பவெல்லாம் இதையேன்.." "அந்த இன்பமான லாகிரி போன்ற மயக்கந்தரும் நாட்கள் அவைகளின் நினைவு நீ கிழவியானாலும் இன்பம் தந்து வரும். அதற்காகச் சொன்னேன்" மணி இரண்டு அடித்தது. "குமு நீ ஏன் உன் நித்திரை யைக் குலைத்துக் கொள்கிறாய்? போய்த் தூங்கு" என்றான். அப்பொழுது சின்னக் குழந்தை நித்திரை குழம்பி எழுந்து கத்தத் தொடங்கியது. "சரி இனிக் கதை எழுதினாப் போலைதான். நீங்கள் வந்து தூங்குங்கள்" என்றான் குமுதம். வாசுதேவன் மெல்லப் படுக்கையை எடுத்து விரித்தான்.

●

ஏன் சிரித்தார்?

சி.வைத்தியலிங்கம்

அவர் ஏன் சிரித்தார்? அந்த நகை அறிமுகத்தினால் சாதாரண மாய் முகத்தில் பூக்கும் புன்னகை அல்ல அப்படி இருந்தால் அதைப்பற்றி யார்தாம் கவனிக்க போகிறார்கள். ஒருவேளை...? மனத்தில் ஏதேனும் வைத்துக் கொண்டு...? சிச்சீ அப்படியிருக்காது. அப்படி நினைத்தாலே பாவம். என் நெஞ்சுதான் பாழாய்ப் போன நெஞ்சு. ஆனால், அந்தக் கண்கள்... அவைகளுமா பொய் சொல்லும்? கண்களின் கடையிலே ஒளிந்து நின்று குறும்பு செய்த பார்வை?

சின்னம்மா தோட்டத்திலே கீரைகொய்து தன் முந்தானையில் போட்டுக் கொண்டிருந்தாள். கோபாலபிள்ளை வரப்பு வழியே தன் பயிர் ளைப் பார்த்த வண்ணம் வந்தார். அப்பொழுது தான் சின்னம்மா தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். அவர் சிரித்தார்.

சிரித்தது இதுதான் முதல் தடவை. இன்னும் வெவ்வேறு தரு ணங்களில் கோபாலபிள்ளை அவளை மேலும் பார்த்துச் சிரித்தார்.

சின்னம்மாவுக்கு இது ஒரு புரியாதபுதிர் போல இருந்தது.

தோட்டக்கிணற்று நீர் போல தெளிவாக இருந்த அவள் உள்ளத்திலே சிற்றலைகள் தோன்றத் தொடங்கின. அவர் ஏன் சிரித்தார்?

தோட்டத்திலிருந்து சின்னம்மாவின் குடிசையைப் பார்க்கலாம். கூப்பிடு தூரத்திலிருந்த பனந்தோப்பை வாரி அணைத்துக் கொண்டு செல்கிறது. ஒரு வெள்ள வாய்க்கால். அதைக் கடக்க வேண்டியதுதான். அந்தப் பனந்தோப்பில் கீழே வீழ்ந்து கிடக்கும் காவோலைகளுடன் ஒரு காவோலை போல் கீழே வீழ்ந்து கிடக்கிறது அவள் குடிசை. அவ்வளவு சிறிய எளிய குடிசை அது. அதில் தான் சின்னம்மா தன் புருஷன் சின்னப்பனுடன் குடித்தனம் செய்து வருகிறாள்.

கோபாலபிள்ளைக்கு நல்ல நிலபுலங்கள் இருந்தன. அவருடைய நிலங்களில் ஒன் றைக் குத்தகை எடுத்துச் சின்னப்பன் பயிர் செய்து வந்தான். சின்னம்மா கீரை, காய்கறி வகை களை வீட்டுக்கு வீடு கொண்டுபோய் விற்று வருவாள். வரும்படியை பற்றிக் கேட்க வேண்டாம் - சின்னம்மாவின் கந்தல் புடவையும், சின்னப்பனின் உருக்குலைந்த தேகமுமே பதில் சொல்லும்.

ஏழைமையில் கிடந்து உழல்பவர்கள் செய்யும் ஒரு தொழிலும் உருப்படாது சீரழிந்து போய் விடுகிறது. இயற்கையின் சக்திகளும் அவர்களுக்கு எதிராக செயல்பட்டு, இருப்பதையும் சூறையாடிக்கொண்டு போய்விடுகின்றன. அவர்களின் மனக்குடம் நிறையாமல் வாழ்க்கை விரசமாகி வறண்டுபோய் விடுகிறது. இது உலக விசித்திரங்களுள் ஒன்று.

இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையிலே மலர்ச்சியும், பூரிப்பும் நிறைந்திருந்தன. சின் னம்மாவுக்கு அவள் ஏழைக கணவனும், சிறிய குடிசையும் பனந்தோப்புமே அரும் பெரு நிதியம். சின்னப்பனுக்குச் சின்னம்மாவே எல்லாம். அவர்களிடம் ஒன்றுமே இல்லாவிட்டா லும் எல்லாம் இருந்தது....

இங்ஙனம் நீர் ஊற்றுப்போல தெளிவாய் ஓடிய அருவியிலே யாரோ ஒருவன் ஒரு கல்லை வீசி எறிந்துவிட்டான். குமுழிகளும், சிற்றலைகளும் எழுந்து கொண்டிருந்தன.

கோபாலபிள்ளைக்கு நாற்பது வயசாகியும் இன்னும் கல்யாணமாகவில்லை. வாழ்க் கைப் புயலுக்கும், சுழலுக்கும் அஞ்சி விவாகம் செய்யவில்லை என்று அவர் சினேகிதர்கள் கேலிபண்ணுவார்கள். அவர் அவைகளைப் பற்றிக் கவலைப்படமாட்டார், உண்மையில் அவர் வாழ்க்கையை மிகவும் நேசித்தார். திரைக்குப் பின்னால் இருந்து மதுவுண்ணும் அனுபவம் அவருக்கு நிறைய இருந்தது. சின்னம்மா அவர் வீட்டுக்கு அடிக்கடி காய்கறிச் சுமையோடு போவாள். அவருக்கு அவளைக் காணும் போது விதவித உணர்ச்சிகள் வேக மாய் சிறகடித்து வெளியில் வரத் துடித்துக்கொண்டிருக்கும்.

கோபால் தம்பலகாமத்தில் உள்ள தம்வயல்களை மேற்பார்வை பார்த்து வர ஓர் ஆளைத் தேடிக்கொண்டிருந்தார். சின்னப்பன் தான் அதற்குத் தகுந்தவன் என்று அவர் ஏன் நினைத்தார்?

சின்னப்பன் பயந்து போனான். சின்னம்மாவின் வாய் ஒரு கேள்விக் குறிபோல் திறந்து நின்றது. ஒரு நாளும் வாராத கோபாலபிள்ளை, அவர்கள் குடிசையின் முன்வந்து நின்றார்.

"சின்னப்பா, நீயும் இரவும் பகலும் மண்ணைக் கிண்டிக்கொண்டிருக்கிறாய். ஒன்றையும் காணவில்லை. தம்பலகாமத்திலே என் வயல்களைப் பார்க்க ஒருவருமில்லை. வருகிறவர்களும் பொய் புரட்டுக்காரராய் இருக்கிறார்கள். நீ போய் சில மாசங்களுக்கு அங்கே நின்றால் நல்லது. என்ன சொல்லுகிறாய்?"

சின்னப்பனுக்கு 'திக்' என்றது. சின்னம்மாவைப் பார்த்தான். அவள் முகத்தைக் கவிழ்ந்து கொண்டு ஒரு சிதைந்த சித்திரம் போல் நின்றாள். கோபாலபிள்ளைக்கு விளங்கிவிட்டது.

"அவளைப் பற்றி யோசிக்க வேண்டாம் சின்னப்பா. நான் இருக்கிறேன். ஏதேனும் மாசாமாசம் கொடுத்து விடுகிறேன். அவளும் கெட்டிக்காரி. சமர்த்தாய் எல்லாம் பார்த்துக் கொள்வாள்"

கோபலபிள்ளை போய்விட்டார். இது அவரது கட்டளையா? இல்லை. சின்னப்பன் அப்படி நினைத்தான்.

ஊரிலே பெரிய பணக்காரர். அவர் வாக்கு எவ்விடத்திலும் செல்லும். குடியிருப்பது அவர் பனந்தோப்பில், தோட்டக் குத்தகைப் பணம் இரண்டு வருஷமாய் பாக்கி நிற்கிறது. அவரை எப்படிப் பகைப்பது?

சின்னப்பன் தம்பலகாமத்துக்கு புறப்படும் போது "சின்னம்மா நீதானடி எனக்கு சகலமும். உன் நினைவே எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் தாங்க முடியாத வேதனை தரும். நீ என்னை மறந்திடுவாயா?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வி அவன் வாயிலிருந்து தவறி வந்துவிட்டது. அதற்கு மறுமொழியை அவன் எதிர்பார்க்கவில்லை. போய்விட்டான். அத்தருணம் சின்னம்மாவினால் ஒன்றும் பேச முடியவில்லை. அவள் எலும்பும் தசையும் உருகித் தவித்தாள்.

பின்புதான் "பாவி, கேட்ட கேள்விக்கு அவர் மனம் குளிர பேசாமல் இருந்து விட்டேனே" என்று நினைத்து நினைத்து மனம் கரைந்து போனாள்.

கோபலபிள்ளையின் விருப்பப்படி சின்னம்மா தினமும் அவர் வீட்டுக்கு காய்கறி வகைகள், மற்றும் சாமான்கள் யாவும் வாங்கிக் கொண்டுபோய் கொடுத்து வந்தாள். சின்னம்மாவை ஒரு நாளேனும் காணாமல் இருக்க அவரால் முடியவில்லை. அதற்கு இதுதான் அவர் செய்த வழி.

அவர் அவளிடம் பணம் கொடுக்கும் போது சில வேளைகளில் அவர் கை, அவள் கைகளின் மீது பட்டுவிடும். கோபாலபிள்ளை சிலிர்த்துப் போவார். அவளுடன் ஒரு பரிகாசப் பேச்சு, ஒரு புன்னகை, ஒரு கண் சிமிட்டு, பிள்ளையின் மனம் பூரித்துப் புளகாங்கிதமடையும்.

சின்னம்மாவுக்கு எரிச்சலாயிருக்கும். அவர் மேலும் பேச வேண்டும போலவும் தோன்றும்.

"மூன்று மாதமாய்ப் போச்சு. போனவர் ஒரு கடிதமாவது போட்டிருக்கலாம். காட்டூரிலே காய்ச்சலோ, என்ன கஷ்டமோ - பெருமூச்செறிவாள்.

சின்னப்பன் எழுதிய கடிதமெல்லாம், சாம்பலாகியதை, பாவம் சின்னம்மா எப்படி அறிவாள்?

தன் கணவன் கடிதம் போடவில்லையென்று சின்னம்மா பேசாமல் இருந்து விட வில்லை. யாரோ ஒருவரைக் கொண்டு இரண்டு, மூன்று கடிதங்கள் எழுதி கோலபாபிள்ளை யிடம் அவருடைய கடிதத்துடன் வைத்து அனுப்பும்படி கொடுத்திருந்தாள். ஆனால் அவர் அனுப்புவாரா?

"போனாரோ, அவளும் தனிச்சிருக்கிறாள். பெண்பிள்ளை, உற்றாரோ உறவினரோ, ஏதோ அள்ளிக்கொடுக்க வேண்டாம். எப்படி இருக்கிறாள் என்றொரு கடுதாசி போடலா மல்லவா? பிள்ளையவர்கள் இருக்கிறாரே, யாரோ பிறத்தியான். அவருக்கு என்ன கரிசனம், எவ்வளவு அன்பு? அதில் ஒரு பாதி இவருக்கு..... இப்படிச் சின்னம்மாவின் மனம் அங்கும் இங்குமாய் ஊசலாடிக் கொண்டிருந்தது."

சின்னப்பன் போய் ஒரு வருஷமாகப் போகிறது. அவனைப் பற்றிய தகவல் இவளுக்கு ஒன்றும் தெரியாது. தனிமையின் வெம்மை அவளைத் தாக்கியது. அவளால் எத்தனை நாட்களுக்கு இந்த ஏகாந்த வாழ்வின் கொடுமையைத் தாங்க முடியும்?

ஒரு நாள் கோபாலபிள்ளை அவளை அணுகி, சின்னம்மா நானும் இங்கே தனிமையில் கஷ்டப்படுகிறேன். நீயும் அங்கே உன் குடிசையில் தனிய எத்தனை நாட்களுக்கு இருக்கப் போகிறாய். என் வீட்டுக்காரியங்களுக்கும் துணையாய் இருக்கும். இங்கே வந்து விடேன்" என்று சாடையாய்க் கேட்டார்.

சின்னம்மா திடுக்கிடவில்லை. அவள் இதை எதிர்பார்த்திருந்தாள். ஒன்றும் பேசாமல் தன் குடிசைக்குப் போய்விட்டாள்.

தம்பலகாமத்துக்குப் போன சின்னப்பனுக்கு பெருந்திகிலைத் கொடுத்தது. சின்னம்மா வின் மௌனம். கோபாலபிள்ளை அவனுக்கு எழுதிய கடிதங்களும் அவனுக்கு சமாதானம் கொடுக்கவில்லை.

"நான் எழுதிய கடிதங்களுக்கு அவள் ஏன் மறுமொழி தரவில்லை. அவளைப் போய்க் காணலாமென்றால் கோபலபிள்ளை இன்னும சிலமாதங் கழித்து வரலாம். அவள் நல்ல சுகமாய் இருக்கிறாள் என்று ஏன் தடுக்கிறார்? அவர் கட்டளையை எப்படி மீறுவது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இன்னும் ஒரு வாரம் பொறுத்துப் பார்ப்பம் என்று மனசைத் தேற்றிச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

'ஒரு நாளைக்கா, இரண்டு நாளைக்கா? எத்தனை நாட்களுக்கு நான் தனிமையில் திண்டாடுகிறது. வருஷமும் ஒன்றாய்விட்டது. அவரைப் பற்றிய தகவல் ஒன்றுமே இல்லை. ஐயோ, அவர் எங்கே? கோபாலபிள்ளை தன் வீட்டில் வந்து இருக்கும்படி கேட்கிறார். அவரு டன் நான்போய் இருந்தால் செல்வாக்கும், பவுசும். ஆனால் ஊர் சிரிக்குமே? ஓ. என் வறுமைப்பிணி?

அந்த நள்ளிரவிலே சின்னம்மா தோட்ட வெளி ஊடாகப் போகும் பொழுது இந்த எண் ணங்களே அவள் மனத்தைக் கலைததுக்கொண்டிருந்தன. அவள் கோபாலபிள்ளையின் வீட்டை நோக்கிப் போகிறாள். அவருடன் இருக்க எண்ணித்தான் வெளிக்கிளம்பினாள்.

அவள் போகும் வழியிலே தங்கள் தோட்டத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும். தோட்டத்திலே முன்னர் சின்னப்பன் வழக்கமாய்க் கஞ்சி குடிக்கும் இடத்தைத் தாண்டிக் கொண்டிருந்தாள். அத்தருணம் மெல்லிய தென்றல் வீசிக் கொண்டிருந்தது. சின்னம்மாவுக்கு அவள் கணவன் அங்கே நிற்பது போல தோன்றியது. அவள் உடல் நடுக்கமெடுத்தது. தான் ஏதோ மகாபாவத்தைச் செய்வதாயும், உலகம் முழுவதுமே தன்னைத் தூற்றிக் கேலி செய்வதாயும் உணரலானாள். இந்த உணர்ச்சி கனவு போல மறையவே, திரும்பவும் கோபாலபிள்ளையின் தோற்றப் பொலிவு, பணம், சீர் சிறப்பு, புது வாழ்க்கை எல்லாம் கண் முன் வந்தன. தைரியங் கொண்டு மேலும் நடந்தாள்.

ஒரு கணம் அவள் மனச்சாட்சி அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும். 'துரோகமா, என்புருஷருக்கா, அவர் திரும்பி வருவாரா? சீ! மானங்கெட்டவளே, அவர் முகத்தில் முழிக்கமுடியுமா? பிறகு உயிர் வாழ்ந்து தான் என்ன?' மறுகணம், உலகம் என்ன சொன்னால் நமக்கென்ன, பயப்படவேண்டுமா, ஏன், சிலநாட்கள் வாயில் வந்தபடி பேசுவார்கள். நாளைக்கு எல்லாம் சரியாய்ப் போய்விடும். இதுதான் உலகம். இங்ஙனம் ஓர் அலைவர, எதிரே வேறோர் அலை வந்து அதையும் அடித்துக்கொண்டு போய்விடும்.

சின்னம்மா கோபாலபிள்ளையின் வீட்டை அடைந்த போது, தூரத்திலே ஒரு நாய் குரைப்பது கேட்டது. மெல்ல ஓசைப்படாமல் படலையைத் திறந்ததும், படலை 'கிரீச்' என்றது. சின்னம்மாவின் உடல் நடுக்கமெடுத்தது. யாரேனும் கண்டுவிட்டால்...? இல்லை , யாரோ கூவி அழைப்பது போல இருந்தது. 'என்னை மறந்திடுவாயா?" என்று அவள் புருஷன் கேட்பது போல் உணர்ந்தாள்.

சின்னம்மா அந்தக் கேள்விக்கு மறுமொழி கொடுக்கவில்லையே என்று முன்னொரு நாள் மறுகினாளல்லவா? அதே கேள்வி.

"இல்லை. என் உயிருள்ளவரையும் உன்னை மறக்க மாட்டேன், என் துரையே" என்று வாய் முணுமுணுத்தது.

இதுகாறும் கொந்தளித்துக் கொண்டிருந்த சின்னம்மாவின் உள்ளத்தில் இப்போ அலைப்பாய்ச்சல் இல்லை. மனம் தெளிந்து அமைதி பெற்றுவிட்டது.

கோபாலபிள்ளையிடம் நேரே போனாள். "எசமான் நான் என் புருஷனுக்குத் துரோகஞ் செய்யமாட்டேன். அவர் என்னைத் தொட்டு தாலி கட்டியவர். தெய்வத்துக்கு சமானம், என்னை மன்னித்துவிடுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன் குடிசையை நோக்கி ஓடினாள்.

கோபாலபிள்ளை ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றார்.

சின்னம்மா தன் குடிசையை அடைந்து கீழே வீழ்ந்து புரண்டு கதறினாள்.

பொழுது புலர்ந்தது. புஷ்பங்கள் குலுங்கின. "என்தாயே, பாவப்பட்டு குழியில் விழாமல் என்னைக் காப்பாற்றினாய். என் கணவரை நான் மறக்க மாட்டேன். அவர் சீக்கிரம் திரும்பி வர அருள் புரிவாய், அம்மா" என்று நிலத்தில் வீழ்ந்து வணங்கினாள் சின்னம்மா.

கலைமகள் - (1939)

மின்னல்

சி.வைத்தியலிங்கம்

நன்றாய் மலர்ந்த இல்வாழக்கையிலே அது ஒரு பெருங்குறையாயிருந்தது. முற்றிப்பழுத்த மாங்கனியிலே இருக்கும் புழுப்போல.

விசாலாட்சி தனது ஓய்வு நேரங்களிலெல்லாம் கிராமம் கிராமமாய்ச் சென்று தன்னைப் படைத்த இறைவனை நோக்கிக் கையெடுத்து வந்தாள். வாழ்க்கைப் பூங்காவிலே எல்லாமிருந்தும், அவளுக்கு எட்டாமல் எஞ்சி நின்றது ஒன்று. அவள் வீட்டின் முன்னால் நிற்கும் மயிர் மாணிக்கக் கொடி போல அவள் மனம் அப்பொருளைத் தேடி அலைந்து கொண்டிருந்தது.

இல்வாழ்க்கையின் இன்பரசத்தைத் தன் கணவர் சின்னத்தம்பியுடன் சுவைத்து வந்தாள். ஆம், சின்னத்தம்பியை வரித்து பதினைந்து ஆண்டுகளாகின்றன. இப்பொழுது இருவரும் அந்தரங்கத்தில் ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு காதற் பண்போல் ஓடிய இல்வாழ்க்கையின் காலம் முறிந்து கவர்ச்சி குறைந்து வந்தது. ஆனால் ஏன்?

மணவாழ்க்கைக்கு மகுடம் வைப்பது குழந்தை. குழந்தை ஒன்று தானும் இல்லாவிடில் அக்குறை நிவர்த்தி செய்ய முடியாத பெருங்

குறையே. விசாலாட்சியும் சின்னத்தம்பியும் எழுப்பிய வாழ்க்கைக் கோபுரமும் முடிவடையாமல் நின்றது.

சுற்றிலும் கேட்டும் கேளாமலும் சாசுவதமாய் இசைத்துக் கொண்டிருக்கும் விவிதராகங்களெல்லாம் இறுதியில் சோகரசத்திலே போய் முடிவடைகிறதா? துக்கமே உலகத்தில் நிரந்தரமானது. இன்பமெல்லாம் வாழ்க்கைப் பாலைவனத்தில் தோன்றி ஏமாற்றும் கானல் நீரா? சின்னத்தம்பியின் எண்ணங்கள் இப்படி ஓடவில்லை. உண்மையில் அவனுக்கு இத்தத்துவங்களெல்லாம் என்றுமே புரியாது.

ஆனால் சின்னத்தம்பியின் மனவிருப்பம் நிறைவேறாமற் போகவே அவனுக்கு மூடநம்பிக்கையிலும் தெய்வபக்தியிலும், ஒரு நம்பிக்கை பிறந்தது. வைதீகக் கொள்கைகளும், குருட்டுப் பழக்கவழக்கங்களும் அவன் மனத்தராசிலே முன்னிருந்ததிலும் பார்க்க நிறையிலும் மதிப்பிலும் உயர்ந்துவிட்டன.

கணவனின் மனமாற்றம் தனிவழியிலே சென்று கொண்டிருந்த விசாலாட்சிக்கு ஒரு துணை கிடைத்த மாதிரி. திடீரென அவர்கள் வீட்டிலே சோதிடர், ரேகை சாஸ்திரிகள், சந்நியாசிகளின் நடமாட்டம் கூடிவிட்டது. வழக்கத்துக்கு மாறாக இருவரும், தம்பதிகளாய் கோயில் குளமென்று போய் வரத் தொடங்கிவிட்டனர். ஏழை எளியவர்களுக்கு தங்களாலானதைப் பொருளாயும், பணமாயும் வாரி வழங்கினர். மனசிலேயிருந்த ஆசை நிறைவேறாமல் போனாலும், ஒரு வகையில் இச்செயல்களால் அவர்கள் மனத்தில் ஆறுதலும் அமைதியும் பிறந்தது.

அன்று புதன்கிழமை. அயல் வீட்டுக் குழந்தைகளின் விளையாட்டும், கூத்தும், கும்மாளமும் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தன. விசாலாட்சியும் புருஷனும் தங்கள் துர்ப்பாக்கியத்தை நினைத்துக் கொண்டு இருவரும் மௌனமாய் இருந்தார்கள். சட்டென குடு குடு குடு... குடுகுடு... என்ற சப்தம் வீதியில் இருந்து வந்தது. விசாலாட்சி வீட்டின் வாசலுக்கு ஓடினாள். அப்பொழுதுதான் கார்முகில் கூட்டங்களிலிருந்து விடுபட்ட சூரியன் வெளிக் கிளம்பிக் கொண்டிருந்தான். விசாலாட்சியின் வருங்கால வாழ்க்கையின் புலரிக்காலத்தை அறிவுறுத்தும் தேவதூதனா?

குடுகுடுப்பைக்காரன் பக்கத்து வீட்டிலிருந்து வெளியேறி வந்தான். குடு குடு... குடு குடு. அவன் விசாலாட்சியைக் கண்டுகொண்டான். பிச்சைக்காரருக்கும் குறிசொல்வோருக்கும் மனிதரின் முகத்திலிருந்தே அவர்களின் மனத்தை வாசிக்கும் ஆற்றல் வந்துவிடுகிறது. அது பலதரப்பட்ட மக்களுடன் பழகுவதாலும் நீண்ட அனுபவத்தாலும் வந்தது போலும்.

அவன் விசாலாட்சியைப் பார்த்து “சலாமுங்காச்சி, ஆச்சிக்கு நல்ல காலம் வருகுது... குடு குடு குடு... ஆச்சியின் மன வருத்தம் ஒரு பொருளைப் பற்றியல்ல, பணத்தைப் பற்றியல்ல... குடு குடு.... ஒரு உயிரைப் பற்றியது. ஆச்சியின் ஊட்டுக்கு மவராசன் வரப்போறார். குடு குடு... ஆச்சி ஓங்க மனசிலே ஏதோ ஒரு குறை நெடுநாளாயிருந்து வருதுங்க. அது ஒருநாளிலல்ல, ஒரு மாசத்திலல்ல, பத்து மாசத்தில் சரியாய்ப் போயிடுங்க...” குடு குடு குடு...... குடு குடு.”

விசாலாட்சிக்கு அப்பொழுதிருந்த மனநிலையிலே அவன் சொன்னதை தேவவாக்காகவே எடுத்துக்கொண்டாள். அவள் அதை முற்றிலும் நம்பி விட்டாள். இப்போது அவர்களுக்கு

எட்டிப்பிடிக்க இருந்தது ஓர் ஊன்றுகோல் - நம்பிக்கை. அது நாளுக்கு நாள் உறுதிபெற்று, அதைச் சுற்றி இருவரும் மனோராஜ்யங்களைப் புனைந்து இன்பத்திலே ஊறிப்போனார்கள். ஆ, அந்த நம்பிக்கை - அதிலல்லவா மனித வர்க்கம் முழுவதுமே சுழன்று கொண்டி ருக்கிறது.

"அவன் சொன்னதில் எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் என்னத் தைத்தான் சொல்லுங்களேன், ஏதோ எங்களுக்கும் நன்மையான காரியம்வரப் போகிற தென்று என் மனம் சொல்கிறது" என்றாள் விசாலாட்சி ஒரு நாள்.

"மாதமும் எட்டாகப் போகிறது. இன்னும் அவன் சொன்னதை நம்பி இருக்கிறாய்? ஏதோ வாயில் வந்ததைச் சொன்னான். அவன்தான் என்ன செய்வான். இதுதானே அவன் பிழைப்பு. நாங்கள் அல்லோ இதற்குக் கொடுத்து வைக்க வேணும்."

அன்றிரவு காலை நாலரை மணி இருக்கும். ஆம், சற்று முன்னர் தானே பக்கத்து வீட் டில் கடிகாரம் நாலடித்தது. அவர்கள் வீட்டு வாசலில் "குவா, குவா" என்ற ஒரு குழந்தை கத்தும் சத்தம் கேட்டது. விசாலாட்சி திடுக்கிட்டெழுந்தாள். உற்றுக் கேட்டாள். அது ஒரு குழந் தையின் அழுகுரல்தான். சந்தேகமில்லை. எழுந்து பரபரப்புடன் ஓடினாள். அவர்கள் வீட்டு வாசலிலே ஒரு கந்தைத் துணியால் சுற்றியபடி கிடந்தது, ஒரு ஆண் குழந்தை. பிறந்து மூன்று அல்லது நாலுமாதம் இருக்கலாம்.விசாலாட்சி அதைத்தூக்கி அன்புடன் அணைத்துக் கொண்டதும் அழுகை குறைந்துவிட்டது. சின்னத்தம்பிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. குழந்தையைக் கண்டதும் உள்ளம் குளிர்ந்து பூரித்துப் போனார். "கடைசியாக எங்களுக்கும் ஒரு குழந்தை... ஆனால் இது யாருடைய குழந்தை?" யாராவது இருக்கிறார்களோவென்று சுற்றிலும் பார்த்தார்கள். ஆனால் எங்கும் ஒரே அமைதியாய் இருந்தது.

"எங்களுக்கில்லாவிட்டாலும், கடவுள் ஒரு குஞ்சைக் கொடுத்திருக்கார். இப்படி விட்டு விட்டுப் போன பாவி யாரோ? நாங்கள் எங்கள் குழந்தைபோல வைத்திருந்து வளர்ப்போம்" என்று உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

விசாலாட்சிக்கு பிள்ளைகளை வளர்த்துப் பரிச்சியம் இல்லை. இது அவளுக்கு புது அநுபவம். குழந்தைக்கு வேண்டிய பால் அவளிடத்தில் ஏது? பசும்பால் கொடுத்து ஒருவாறு சமாளித்தாள் விசாலாட்சி. அவள் குழந்தையைத் தொட்டாலே தேள் கொட்டியது போல் 'வாள் வாள்' என்று கத்திப் பிடுங்கியது - குழந்தையை வைத்துப் பார்ப்பதற்கு ஒரு ஆயாவை தேடிக் கொண்டிருந்தார்கள்.

இரண்டு மூன்று தினங்களில் "அம்மா, தர்மங் கொடுங்கம்மா. நாலு நாளாய்ப் பட்டினி பசி காதை அடைக்குது. ஓங்களைக் கெஞ்சுறனம்மா. கோடி புண்ணியம் கிடைக்குமம்மா" என்று கேட்டுக் கொண்டு ஒரு பிச்சைக்காரி அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றாள். விசா லாட்சி குழந்தையை நித்திரையாக்க ஓராட்டிக் கொண்டிருந்தவள் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்தாள். குழந்தை நிததிரை கலைந்து கத்தத் தொடங்கியது. பிச்சைக் காரி "இப்படிக் கொடுங்கம்மா" என்று குழந்தையை வாங்கி பக்குவமாய் அணைத்துக் கொண்டாள். குழந்தையின் அழுகை ஓய்ந்து சிறிது நேரத்திலே நல்லாய்த் தூங்கத் தொடங்கியது.

விசாலாட்சிக்கு அந்தப் பிச்சைக்காரியைக் கண்டதுமே அவள் மேல் ஒரு விருப்பம் வந்தது. அவளை வீட்டில் வைத்திருந்தால் குழந்தையை வளர்க்க உதவியாயிருக்கும் என எண்ணலானாள். தன் விருப்பத்தைப் புருஷனிடம் தெரிவித்து அவளைத் தங்களுடன் இருக் கும்படி கேட்டாள். அவளும் ஒரு பிரபுவின் வீட்டில் ஆயாவாக இருந்து பழக்கப்பட்டவள். உடனே ஒத்துக் கொண்டாள்.

அவர்கள் குழந்தையைச் சுவீகாரம் எடுத்தது நேற்றுப் போல இருக்கிறது. ஆனால் பசுபதிக்கு (பசுபதி தான் குழந்தைக்கு அவர்கள் வைத்த பெயர்) பதினைந்து வயசாகப் போகிறது. சின்னத்தம்பி அவனை கொழும்பில் ஒரு கல்லூரியில் சேர்த்து உயர்தரக் கல்வி கொடுக்க விரும்பினார். விசாலாட்சிக்கு மகனை விட்டுப் பிரிய மனம் துணியவில்லை. “அவன் பச்சைக் குழந்தை பாருங்கோ. கொழும்பூரிலே அவனுக்கு யார் துணை? உற்றார், உறவி னரோ எவருமில்லை. ஏன் இங்கே படித்த எத்தனையோ பிள்ளைகள் உத்தியோகம் பார்க்கி றார்கள். அவன் இங்கே படித்துக் கொண்டு எங்கள் கண்முன்னே இருக்கட்டுமே” என்று வற்புறுத்திச் சொன்னாள். ஆயாவும் அம்மா சொன்னதைக் கேட்டு மன அமைதி பெற்றாள். அவள் அவர்களிடம் ஒன்றும் சொல்லவில்லை.

சின்னத்தம்பி அவனை கொழும்புக்கு அனுப்பும் கதையைத் திரும்பவும் எடுக்க வில்லை. உண்மையில் அவனுக்கும் பசுபதியைப் பிரிந்திருக்க முடியாது போல் தோன்றியது. ஆகவே பசுபதி ஊரில் ஒரு கல்லூரியில் தன் மேற் படிப்பைத் தொடர்ந்து வந்தான்.

அன்று கல்லூரியின் விடுதலை நாட்கள் தொடங்கும் நாள். பகல் பத்து மணியிருக்கும். பசுபதி கூட்டாளிகள் இருவருடன் வீட்டுக்கு வந்தான். “அம்மா, இன்றைக்கு கடற்கரையிலே ஒரே அமளியா இருக்கிறது. மாணவர்களெல்லாரும் கடலில் நீந்தி விளையாடப் போகி றார்கள். நானும் கோபாலனுடன் போய்வரப் போகிறேன் தாயாரை அனுமதி கேட்டான்.

விசாலாட்சிக்கு அவனைத் தனிய அனுப்ப மனமில்லை. சின்னத்தம்பியும் வீட்டில் இல்லை. அவனைப் போக வேண்டாமென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். ஆனால் அவன் ஒரே பிடிவாதமாய் நின்றான்.

விசாலாட்சியால் ஒன்றும் செய்ய முடியாமல் “சரி போயிட்டுவா ராசா. தம்பி கோபால், இவனைக் கவனமாய்க் கூட்டிட்டுப் போய் குளித்து விட்டு சீக்கிரம் வந்த விடுங்கள்” என்று கவனம் சொல்லி அனுப்பி வைத்தாள்.

பசுபதி கூட்டாளிகளுடன் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடினான். அவர்கள் போய் மறையுமளவும் பார்த்தபடி நின்றாள் விசாலாட்சி. அவளுக்கு மின்னல் மின்னி மறைந்தது போல் இருந்தது. ஏன் அவனை அனுப்பினேனென்று தன்னையே கடிந்து கொண்டாள்.

இரண்டு மணிநேரம் கழிந்தது. பூம், பூம், பூம்.... விசாலாட்சியின் வீட்டுக்கு முன்னால் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றது. விசாலாட்சி ஓடிப் போய் பார்த்தாள். ஓவெனக் கத்திக்கொண்டு கீழே வீழ்ந்து விட்டாள்.

சின்னத்தம்பி அப்பொழுதுதான் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார். தன் வீட்டுக்கு முன்னால் ஒரு ஜனக்கூட்டம் நிற்பதைப் பார்த்து ஓடி வந்தார். மோட்டாரில் ஒரு உருவம் கிடந்தது. ஆம் பசுபதியின் உடல் - ஐயோ...!

பசுபதி எப்படி இறந்தான்? ஊர் முழுவதும் அன்று அதே பேச்சு - அந்த இடத்திலே குளிக்கப்படாதென்று விளம்பரம் போட்டிருக்கிறார்களே! கடலின் கீழ் பயங்கரமான நீரோட்டம் இருக்கிறதென்று தெரிந்தும் இப்பிள்ளைகள் அங்கே போகலாமா? ஒன்றா, இரண்டா? எத்தனை உயிர்களைக் கவர்ந்து கொண்டான் இந்நீர் அரக்கன். ஆ, விசாலாட்சியும் சின்னத் தம்பியும் தான் பெரும்பாவிகள். கடவுள் கொடுத்த குஞ்சை அவரே எடுத்துக்கொண்டார். நாம் என் செய்வது என்று பேசி மனசை ஆற்றிக்கொண்டார்கள்.

விசாலாட்சியையும் சின்னத்தம்பியையும் பற்றியே எல்லோரும் அனுதாபப்பட்டார்கள். ஆயா ஒருத்தி இருக்கிறாளே - இவனைப் பாலூட்டி வளர்த்தவள். அவளைப் பற்றிய பேச்சே இல்லை. அவள் ஒரு அனாதைப் பிச்சைக்காரிதானே. அவளுக்கும் இதயம் ஒன்று இருக்கிற தேயென்று எவரும் கவலைப்பட வில்லை.

திரும்பவும் அந்த வீட்டில் கனத்த அந்தகாரம் சூழ்ந்திருந்தது - பசுபதியுடன் வந்த பிரகாசமும், விளையாட்டும், குதூகலமும் எங்கே?.. கார்முகிலிலே ஓடிய மின்னல் போல் மின்னி மறைந்து விட்டது.

ஆயாவால் இன்னும் அந்த வீட்டில் இருக்க முடியவில்லை. பசுபதியின் உடைகள், விளையாட்டுச் சாமான்கள், பள்ளிக்கூடப் புஸ்தகங்கள் எல்லாம் பசுபதியை நினைவூட்டிக் கொண்டிருந்தன. அவளைத் தங்களுடன் இருக்கும்படி விசாலாட்சி வற்புறுத்தியும் அவள் கேட்கவில்லை.

அவள் அவர்களை விட்டுப் பிரியும்போது, கண்ணீரும் கம்பலையுமாய் விசாலாட் சியைப் பார்த்து, "அம்மா என்னை மன்னியுங்கள், உங்கள் குழந்தை பசுபதிக்காக என்னை மன்னித்து விடுங்கள். அவன் நான் பெற்ற குழந்தை!" என்றாள்.

"உன் குழந்தை?" இரண்டு குரல்கள் ஒரே சமயத்தில் ஒலித்தன.

ஈழகேசரி
23.07.1939

களனி கங்கைக் கரையில்

சி. வைத்தியலிங்கம்

களனி ஆற்றிலே ஒரு படகு சென்று கொண்டிருந்தது. படகோட்டியோ தொண்டு கிழவன். என்றாலும் படகு நிதானமாய்ப் போனது. அதிலே ஒரு கிழவி மாத்திரம் இருந்தாள். இருவரும் ஒன்றும் பேசவில்லை. படகு கரையில் ஒதுங்கி நின்றது. பக்கத்தில் ஒரு சமாதி.

இருவரும் கரையை அடைந்தார்கள். அந்தி மயங்கும் சமயம் மாலைச் சூரியனின் கிரணங்கள் சமாதியின் மேல் வீழ்ந்து கொண்டிருந்தன. சமாதியைச் சுற்றி பல்வகைப் பூஞ்செடிகள் மலர் சுமந்து நின்றன. இருவரும் மலர்களைக் கொய்து சமாதி முன் அர்ச்சித்தார்கள். தீபம் ஏற்றி, கீழே வீழ்ந்து வணங்கினார்கள். எழுந்து போனார்கள் படகை நோக்கி.

படகு மெல்ல மெல்ல அசைந்து சென்றது.

◆◆◆

கந்தையன் இருபத்திரண்டு வயசை எட்டிக் கொண்டிருந்தான். நல்லகறுவல். எண்ணெய்க் கறுப்பென்று சொல்வார்களே,அதே நல்லெண்ணைக் கறுவல். களுத்துறை நகர சபையிலே அவன் ஒரு கூலி.

வழக்கமாய் மாலை நேரங்களிலே அவனைக் குமாரவீதியிலே காணலாம். சாலை ஓரத்திலே நிற்கும் தீபஸ் தம்பத்தண்டை நிற்பான். விளக்கேற்றிவிட்டு, அடுத்த விளக்கை நோக்கி நடப்பான். அவன் நடையிலே யௌவனம், தொங்கிக் கொண்டிருக்கும். அந்த வீதியிலே இருப்பவர்கள் எல்லோரையும் அவனுக்குத் தெரியும். அவனை எவனுக்கும் தெரியாது. அன்றாடம் உழைத்துத் தின்னும் தொழிலாளி. அவனை யார் கவனிக்கப் போகிறார்கள்?

அப்படிச் சொல்லாதீர்கள் - இரண்டு பெரிய கரிய விழிகள் அவனை எதிர்பார்த்து நின்றன. அதோ பாருங்கள் அந்தத்தீபஸ் தம்பத்தின் கீழ் அவள் நிற்பது நன்றாய்த் தெரிகிறது - கந்தையன் வரமுன்னரே அத்தீபஸ் தம்பத்தின் விளக்கை ஏற்றிப் போடுவாள். அதில் அவளுக்கு ஒரு தனி இன்பம்....

"பொன்னி, இன்னிக்கு என்ன கொண்டாந்தாய்" என்று வாயைத் திறப்பான் கந்தையன்.

"இல்லை, தரமாட்டன். என்ன சொல் பார்க்கலாம்"

"ரம்புட்டான்."

"இல்லை" என்று வெற்றிப் பார்வை பார்ப்பாள்.

"முந்திரி வத்தல்"

"இல்லை, இல்லை....."

"மாம்பழம்"

"ஆமாம்" என்று அவள் வாய்க்குள் போட்டுவிடுவாள்.

"என்ன சீனிவத்தாளைக் கிழங்கோல்லியோ?"

"பெரிய கெட்டிக்காரன்" என்று குறும்புச் சிரிப்புடன் அவனைப் பார்ப்பாள். இருவரும், கலகலவென்று சிரித்துக் கொண்டு போவார்கள்.

நிதமும் அவள் அவனுக்கு ஏதேனும் கொண்டு வந்து கொடுப்பது வழக்கம். கடலைச் சுண்டலோ, மாம்பழமோ வெற்றிலை பாக்கோ ஏதேனும் ஒன்று. இவைகளைத்தான் அவளால் கொடுக்க முடிந்தது.

இருவரும் கொட்டி அளந்து கொண்டு சாலையின் ஓரத்திலே நிற்கும் ஏனைய விளக்குகளை ஏற்றப் போவார்கள். இந்தச் சாலையிலேதான் அவர்கள் காதல் வளர்ந்தது. ஆம், இந்தப் பிரசித்த வீதியில்தான்... குருவிகள் ஜன நெருக்கமுள்ள இடங்களில் கொஞ்சி விளையாடுவதில்லையா? இவர்களும் இயற்கையின் குழந்தைகள் தாமே.

◆◆◆

நாட்கள் ஊர்ந்து கொண்டிருந்தன. அன்று மாலைப் பொழுதிலே, பொன்னி வழக்கமாய் நிற்கும் தீபஸ்தம்பத்திலே சாய்ந்தபடி நின்றாள், வெகு நேரமாகியும் கந்தையனைக் காணவில்லை. "ஒரு வேளை அந்த மனிதன் இன்று நண்பகல் சொன்னது உண்மையாக இருக்குமோ? அவன் ஏன் பொய் சொல்லப் போகிறான். ஆனால் அவர் நேற்றுத்தானே என்னைக் கண்டு கொண்டு போனார். எனக்கும் சொல்லாமலா போய் விடுவார். அவருக்கு

ஒடம்புக்கு ஏதேஞ் சுகமில்லாமல்... இங்ஙனம் ஆயிரம் சிந்தனைகள் அவள் மனதை அலைத்துக் கொண்டிருந்தன.

டங் டங்... டங்...

தூரத்து மணிக்கூண்டிலே மணி ஏழு அடித்தது. பொன்னியின் உடல் நடுங்கத் தொடங்கியது. அத்தருணத்தில்

அத்தருணம் கந்தையன் ஓடோடியும் வந்தான்.

"பொன்னி, ரேலுக்கு நேரமாயிடிச்சு, ஓடணும். ஊரிலேயிருந்து கடுதாசி வந்திச்சு. அப்பாவுக்கு ஒடம்புக்குச் சொகமில்லையாம். அப்பாடா, லீவு எடுக்கப் பட்டபாடு. நான் கழனிக்கு போயிட்டு வாரேன்,"

"இப்பவே போறயா?"

"உடனே போகணும்"

"என்னையும் விட்டா"?

புகைவண்டி ஸ்டேஷனில் வந்து ஊதும் சப்தம் காதைப் பிளந்து கொண்டு வந்தது." நேரமாச்சு, பொன்னு, உன்னை மறக்கவே மாட்டேன். இரண்டு நாளிலே வந்துடுறன். என் கண்ணல்லே," என்று சொல்லிக்கொண்டு ஓடினான்.

பொன்னி, தினமும் அவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். கந்தையன் போனவன் போனவன்தான் வரவே இல்லை.

◆◆◆

அவன் பக்கத்தில் இருக்கும் வரைக்கும் பொன்னி மலர்ச்சி பெற்று பூரணப் பொலிவுடன் விளங்கினாள். ஆகாயத்தில் மிதந்து சென்று சந்திரனைத் துரத்திக் கொண்டிருப்பாள்.

ஆனால், இன்று கந்தையன் இல்லை - அவள் மனம் எண்ணாத தெல்லாம் எண்ணி அழுது கொண்டிருந்தது. தானே கழனிக்குப் போய் அவனைத் தேட வேண்டுமென்று மனத்திடம் கொண்டாள்.

இந்நாட்களில் பொன்னியின் தாயும் இறந்து போனாள். அவள் பாட்டி தினமும் வெயிலில் போய் ஏதாவது தொட்டாட்டு வேலை செய்து கொஞ்சப் பணத்துடன் வந்தால் தான் அவர்கள் அடுப்பில் நெருப்பெரியும். அதுவும் இல்லையென்றால் பட்டினிதான். அநாதைகளை ஆதரிப்பார் எவருமில்லை.

அந்தப் பட்டணத்திலே பிச்சைக்காரர்கள் ஆயிரக்கணக்கில் இருந்தார்கள் - ஆனால் தர்மம் செய்வோர் இல்லை. பிரபுக்களிடம் எல்லாம் இருந்தது. நெஞ்சில் ஈரம் மாத்திரம் இல்லை. சமூக முன்னேற்றச் சங்கங்கள் இருந்தன என்றாலும் மிருகங்களிலும் கேடாக எளிய ஜனங்கள் நடத்தப்பட்டனர். 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாடிக்கொண்டிருந்தார்கள். இருந்தும், ஆயிரக்கணக்கான வறிய ஜனங்கள் பரமதரித்திரர்களாய் உணவின்றித் திரிந்தார்கள்.

பொன்னிக்கு கழனிக் கிராமம் எந்தத் திசையில் இருக்கிறதென்றும் தெரியாது. அது வெகுதூரத்தில் இருக்கிறதென்று அறிந்திருந்தாள். கந்தையனை எப்படியும் சந்தித்து விட வேண்டுமென்ற பேராவல் அவளுக்குத் தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது. அவனைத் தேடி ஊரார் சொன்ன திசையை நோக்கி மனம் போன போக்கிலே நடந்து சென்றாள்.

பாருங்கள், சில வேளைகளிலே 'குருட்டு வாக்கில' சில காரியங்கள் கைகூடி விடுகின்றன. அந்தத் திசை பொன்னிக்கும் அடித்தது.

அவள் கழனிக் கிராமத்தை அடைந்துவிட்டாள். அது அவளுக்கே தெரியாது. கழனி கங்கை கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டு நெடுநேரமாய் நின்றாள் - அவளுக்குப் பசி எடுத்தது - சுற்று முற்றும் பார்த்தாள். சமீபத்தில் ஒரு குடிசையிலிருந்து புகை கிளம்பிக் கொண்டிருந்தது. தாகத்துக்குத் தண்ணீராவது வாங்கிக் குடிக்கலாமென்ற எண்ணத்துடன் அந்தக் குடிலை அடைந்தாள்.

வெளியில் எவரும் தென்படவில்லை. உள் அறையிலிருந்து யாரோ இருவர் பேசும் அரவம் கேட்டது. பொன்னி உற்றுக் கேட்டாள். ஒன்று பொன்னிக்குப் பழக்கமான குரல், முன் எங்கோ கேட்ட ஆணின் குரல். மற்றது ஒரு பெண்ணின் குரல்...

"பொன்னி குடுப்பாள் வெத்திலை, சீனி வத்தாளை கடலை..."

"ஊம், பொன்னியா அவள் பேரு. நன்றா வைத்தாங்கோ"

"ஆமடி... அவள் மாயக்காரி. கம்பன் வெச்சிருந்தானே, தாசி பொன்னி, அவள் மாதிரி"

"மயக்கிட்டாளே சிறுக்கி. இன்னும் எத்தனை பேரை மயக்கிட்டிருக்காளோ?....

பொன்னி இந்த சம்பாஷணையைக் கேட்டதும் அதிர்ந்து போனாள். மேலும் அங்கே நிற்கவிரும்பாமல் "ஐயோ, அடபாவி, மோசம் போனேனே!" என்று கதறிக் கொண்டு கழனித் தாயை நோக்கி ஓடினாள். யாரோ நீரில் குதித்தது போன்ற சப்தம் எழுந்தது. ஒரு கணம் கழனித்தாய் சீறி விழுந்தாள். அடுத்த கணம் அடித்த கையாலே அந்த உருவத்தை அணைத்துக் கொண்டாள். யாரோ கூக்குரலிடுவதைக் கேட்டதும் குடிசையில் கதைத்துக் கொண்டிருந்த மனிதன் வெளியில் ஓடி வந்து சுற்றிலும் பார்த்தான். சட்டென ஆற்றுக்குள் குதித்து விட்டான். அந்த உடலை, ஆற்று நீர் வெகுதூரம் இழுத்துக் கொண்டு போய்விட்டது. துரிதமாய் நீந்திச் சென்று அவ்வுடலைத் தூக்கிக் கொண்டு கரையேறினான். தேகம் முழுவதும் உஷ்ணம் கொடுத்து உயிர்ப்பிக்க பிரயத்தனஞ் செய்தார்கள். ஆனால் எல்லாம் வியர்த்தமாய் போயிற்று.

கந்தையன் வீட்டில் ஒரு சிறுகும்பல் கூடியிருந்தது. ஊர்பேர் தெரியாத பெண்ணொருத்தி, வந்த இடத்தில் இப்படி ஆற்றில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டாள். இதன் மர்மம் தெரியாமல் எல்லோரும் கூட்டம் கூட்டமாய் நின்று குசு குசுத்துக் கொண்டிருந்தனர். அத்தருணம், கந்தையன் தங்கள் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வீட்டுக்கு முன்னால் ஜனக்கூட்டத்தைக் கண்டதும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. உள்ளேபோக காலடி எடுத்து வைத்தவன், அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான். கட்டிலில்

ஒரு உடல், வெள்ளைத் துணியால் மூடப்பட்டுச் கிடந்தது. அவன் மெல்லப் போய் நடுங்கும் கைகளுடன் முகத்தை மூடியிருந்த சீலையை அகற்றிப் பார்த்தான்.

அதிர்ந்து போய், "ஐயோ, பொன்னி!" என்று அதிர்ச்சியில் அலறிக் கொண்டு வீழ்ந்து விட்டான். அவன் நெஞ்சம் உறைந்து மனமும் உறைந்து போய்விட்டது. அவன் மீண்டும் எழுந்திருக்கவில்லை.

கந்தையனின் பெற்றோர் இருவருக்கும் திகைப்பிலிருந்து மீள சில நிமிஷங்கள் எடுத்தன. கந்தையனின் தந்தை ஆழ்ந்து யோசித்த போது மெல்ல மெல்ல எல்லாம் புரியத் தொடங்கியது.

நானும் என் மனைவியும் பேசிக்கொண்டிருந்ததை பொன்னி வெளியில் நின்று கேட்டிருப்பாள். நாங்கள் அவளை இகழ்ந்து ஏளனமாய்ப் பேசியதை அவள் கந்தையனும் புதுமணப் பெண்ணும் பேசியதாக தவறாக நினைத்து விட்டாள். என் குரல் சில சமயங்களில் அவன் குரல் போலவே இருக்குமென்பதை அவள் அறிய மாட்டாள். தன்னைக் கந்தையன் ஏமாற்றி விட்டான் என்ற ஆத்திரத்தால் இங்ஙனம் விபரீதமாய் நடந்து கொண்டாள்.

நாம் அவனுக்கு வேறோர் பெண்ணை ஒழுங்கு செய்து அவளையே கல்யாணம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி வந்தோம். அவன் அதை மறுத்து பொன்னி உயிருடன் இருக்கும் வரை வேறொரு பெண்ணை மனத்தாலும் தீண்ட மாட்டேன் என்று சங்கற்பத்துடன் சொல்லி வந்ததை அவள் எப்படி அறிவாள்? அவன் தன் வேலைக்குப் போவதில்லை; வீட்டில் தங்கு வதில்லை. எங்கோ போவான். வருவான்... பித்துப் பிடித்தவன் போல இரவோ பகலோ சுற்றிக் கொண்டு திரிவான்.

காதற் பீடத்திலே இரண்டு ஜீவன்கள் பலியாகினர். பெருவெள்ளத்திலே இன்னும் இரு துளிகள்.

◆◆◆

காதலர் இருவரும் தகனம் செய்யபபட்ட இடத்திலே ஒரு சமாதி எழுந்திருக்கிறது. கந்தை யனின் பெற்றோர் தினமும் அச்சமாதிக்குப் போய் விளக் கேற்றி வருகிறார்கள். இச்சேவை யால் அவர்கள் மனம் சாந்தி பெறுகிறது.

அந்திப் போது, இரவுடன் தழுவும் செக்கர் நேரம். சாயும் பொழுதின் அமிர்த கிரணங்கள் களனி கங்கையில் பிரதிபலித்துக் கொண்டிருந்தன. தூரத்திலே ஒரு படகு சமாதியை நோக்கி வந்து கொண்டிருந்தது.

கலைமகள் - 1939

கங்கா கீதம்

சி.வைத்தியலிங்கம்

அத்தருணம் பௌத்தப் பள்ளியில் நின்ற மாமரங்கள் ஆடவுமில்லை, அசையவுமில்லை. மாஞ்சோலையில் ஊதிக் கொண்டிருந்த காற்று, சலன மற்று இருந்தது. பள்ளியைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்த மஹாவலி கங்கையும் ஒரு கணம் தயங்கி நின்றுதான், திரும்பவும் ஓட ஆரம்பித்தது.

மகாநாயக தேரர் புத்தகோஷர், திரும்பிப் பார்த்தார். பௌத்தப் பள்ளியின் வாசலைத் தாண்டி மறைந்து கொண்டிருந்தது ஒருயௌவன பிக்ஷுவின் உருவம். அது கையில் பிக்ஷாபாத்திரத்துடன் நிலத்தை நோக்கிய வண்ணம் சென்றது. இதைப் பார்த்த அவருடைய கண்களிலே நீர் நிறைந்து கொண்டிருந்தது. ஆனால், இது அவர் இட்ட கட்டளை.

இது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். சமனலகந்த மலையின் அடிவாரத்தில் ஆற்றோரமாய் "ஞானோதயப் பிரிவினா" என்ற ஒரு பௌத்தப் பள்ளி. அதைச் சுற்றிலும் குன்றுகள். ஒரு புறத்தில் குறிஞ்சி நாட்டு மக்களின் குடிசைகள். இடையில், உன்னதமாய்

நிமிர்ந்து நின்றது ஒரு புத்த விஹாரை. புத்தகோஷர் அப்பள்ளியின் மஹாநாயக தேரர் பீடத்தில் அமர்ந்ததும், அந்தப் பிரிவினாவின் பெயரும் புகழும் கடல் கடந்து, சீனா, திபெத், இந்தியா முதலிய தேசங்களையும் எட்டியிருந்தது. அந்நாடுகளிலிருந்து புத்த பிக்குகள், மஹா வித்வானாகிய புத்த கோஷரிடம் பாடங் கேட்க வந்து கொண்டிருந்தனர். காஞ்சியிலிருந்து உபாலி என்ற ஒரு யௌவன சந்நியாசி யும் வந்திருந்தார்.

புத்த கோஷர் அந்நாட்களில் 'விசுத்தி மார்க்கம்' என்ற பௌத்த நூலைப் பாலி பஷையில் எழுதிக் கொண்டிருந்தார். உபாலியின் குருபக்தியையும், புத்திக்கூர்மையையும், திரிபிடகத் தில் அவனுக்கு இருந்த பரிச்சியத்தையும் கண்டு, புத்த கோஷருக்கு அவன் மேல் விசேஷ மதிப்பும் அன்பும் இருந்து வந்தது. அவர் சொல்லிக் கொண்டே போக, அவன் ஏடுகளில் அவை களை எழுதிக் கொண்டே போவான். இடையில் அவன் சட்டென்று ஒரு கேள்வியைப் போட்டு விட்டு, ஆசாரிய குருவையே பார்த்துக் கொண்டிருப்பான். அவரும் அவனுடைய தீஷண் யமான புத்தியைக் கண்டு மனசில் வியந்து கொண்டு, 'உபாலி, தக்க சமயத்தில் இந்தக் கேள் வியைக்' கேட்டு விட்டாய். இல்லையானால், நூலில் குறை ஏற்பட்டிருக்கும்" என்று சொல்வார்.

அந்தி வேளை, இப்படித் தரிசன ஆராய்ச்சியிலும், நூல் எழுதுவதிலும், உபதேசங்க ளிலும் கழிந்து விடும்.

காலையானதும் சங்கத்திலுள்ள பிக்குகள் எல்லோரும் உபாலியும் சேர்ந்து பிச்சைப் பாத்திரத்துடன் ஊர் மனைக்குப் போய் விடுவார்கள்;

உபாலி வழக்கமாய்ப் பிச்சை வாங்கி வரும் ஒரு குடிசையில், ஓர் இளம் பெண்ணும், அவள் தந்தையும் குடியிருந்தனர். டிங்கிரி மெனிக்கா என்ற அந்தப் பெண், பிச்சைப் பாத்திரம் நிறைய உணவு நிரப்பி, உபாலியின் கால்களில் வீழ்ந்து வணங்கி உபசரித்து அனுப்புவாள்.

இலையுதிர் காலம் முடிவடைந்து விட்டது. பௌத்தப் பள்ளியில் இருந்த மாஞ்சோலை யில் மரங்கள் இளந்தளிர் விட ஆரம்பித்திருந்தன. குயிலும், மைனாவும், நாகணவாய்ப் புள் ளும் மாஞ்சோலையில் வந்து ஆரவாரஞ் செய்யும் நாட்கள். சாலையோரத்தின் இரு மருங் கும் நிற்கும் அசோக மரங்கள் பூச்சுமந்து நின்றன. மழை விட்டு ஆற்றுநீர் தெளிவுடன் ஓடிக் கொண்டிருந்தது.

உபாலி வழக்கம் போல் டிங்கிரி மெனிக்காவின் குடிசைக்கு முன்னால் வந்து கண்மூடிய வண்ணம் நின்றான். முன்னால் மஹாவெலி கங்கை, நித்திய யௌவனத்துடன் பாடிக் கொண்டு போனது. பிரகிருதியே அப்பாட்டில் மயங்கி, உற்றுக் கேட்டுக் கொண்டு மௌனமாய் நின்றது. டிங்கிரி மெனிக்கா பிச்சைப் பாத்திரத்தை உணவினால் நிரப்பி விட்டு. பிக்குவின் கால்களில் விழுந்து வணங்கினாள். அப்பொழுது அவள் கைகள் அவனுடைய பாதங்களில் பட்டுவிட்டன.

உபாலி போய் விட்டான். ஆனால் டிங்கிரி மெனிக்கா அப்படியே நின்று விட்டாள். பிக்கு வின் வடிவத்தில், முன் அவள் கண்டிராத ஒரு புதுமையையும், மாயத்தையும், மயக்கத்தையும் இன்று கண்டுவிட்டாள். ரோஜாச் செடியின் இலைகளுள் மறைந்திருக்கும் ரோஜாப் புஷ்பத்தின் இதழ்கள் போல் வெளிக் காட்டாதிருந்த ஓர் இன்பமயமான உணர்ச்சி, அவள் மேனி முழுவதும் பரவி அவளை மெய் சிலிர்க்கச் செய்தது.

மறுமுறை அவள் உபாலியைக் கண்ட பொழுது, அவளுக்கு ஆனந்தத்தினால் கூத்தாட வேண்டும் போல் இருந்தது. சந்திரகிரணங்களைக் கண்ட சந்திரகாந்தக் கல் போல் உள்ளம் நெகிழ்ந்து போனாள். அவளுடைய நடையிலும், பார்வையிலும், கீழே வீழ்ந்து வணங்கும் முறையிலும் ஆடவரைப் பித்தாக்கும் ஒரு மோகன சக்தி எப்படியோ வந்துவிட்டது. இதையெல்லாம் உபாலி எதிர்பார்க்கவில்லை. அபசுரம் போல் ஏதோ ஒலிப்பதாக அவன் உணரலானான். பௌத்த பள்ளிக்கு அவன் திரும்பும் பொழுது மனம் அமைதியுடன் இருக்கவில்லை. மனிதன் இப்படித்தான்! ஊருக்குள் விஷமி யாரோ ஒரு விதையை விதைத்து விட்டான். அது விஷவிருக்ஷமாகிப் பௌத்த பள்ளியின் புனிதமான காற்றையும் நஞ்சாக்கிவிட்டது. உபாலியைப் பற்றிப் பிக்குக்களுக்கிடையில் பலவிதமான கதைகள் உலாவத் தொடங்கின.

உபாலி வழக்கம் போல் பிச்சைக்குப் போய் வந்தான். அவனது உள்ளம் உலக விவகாரங்களில் படியாமல், மேலும் பரமார்த்திக விஷயங்களிலே உறவாடியிருந்தது. நியமமான வாழ்க்கையினாலும், தியானத்தினாலும் அவனது உள்ளும் புறமும் தூய்மை பெற்று, முகத்திலே சாந்தப் பொலிவு நிறைந்து கொண்டு வந்தது. புத்தகோஷர் தனக்குப் பின்னர் ஆசாரிய பீடத்தில் இருக்கத் தகுதி வாய்ந்த ஒருவன் இருக்கிறான் என்று பெருமை கூடக் கொள்வார்.

ஒரு நாள் டிங்கிரி மெனிக்கா கேட்டாள். "சுவாமி நானும் நேற்று "சில" அனுஷ்டித்தேன். அதனால் என்ன பயன் சுவாமி எனக்கு?"

"நல்லது, அது உனக்கு மனச்சாந்தியும், தூய்மையும் கொடுத்திருக்கும்" என்றான் உபாலி.

"ஆனால் எனக்குப் பெரிய வேதனையாயல்லவோ இருக்கிறது சுவாமி. கடலலை போல் என் நெஞ்சம் ஓயாது புலம்பிக்கொண்டிருக்கிறதே!"

"இந்த வேதனையையும், தீராத் துக்கத்தையும் கண்டு தானே பகவான் உலகத்தையே துறந்தார். உன் மனசை அடக்கப் பழகிக் கொள்ள வேண்டும்."

"மனசைப் பற்றிப் பேசுவானேன். இந்தச் சரீரத்தையே கட்டியாள முடியாமல் போய்விடுகிறது. அக்கினி வீசுவது போல் ஒரு கனல் என் தேகம் முழுவதையும் தகித்துவிடும் போல் உணர்கிறேன். இது ஏனோ சுவாமி?"

"உன் மனந்தான் எதற்கும் மூலகாரணம். இன்று உனக்கு உடல் தளர்ச்சியுடன் மனத் தளர்ச்சியும் இருக்கிறது."

"எனக்கா தளர்ச்சி சுவாமி? சில வேளைகளில் கார்மேகத்தைக் கண்ட மயில் போல் என் மனம் கூத்தாடுகிறது. ஆற்றோரத்திலிருந்து நான் தண்ணீர் மொண்டு வரும் பொழுது, நடை கொள்ளாமல் குதிக்கச் சொல்கிறது. மெல்லிய இளம் காற்று என் கன்னத்தில் பட்டதும், முகமும் நாணிச் சிவந்து விடுகிறது. இவைகளை உங்களைப் போன்ற ஒருவர் ஒளிந்திருந்து பார்க்க வேண்டு மென்று ஏங்குகிறேன். இந்த ஏக்கத்திலும் ஓர் இன்பம்தான் உண்டாகிறது. இவையெல்லாம் ஏனோ சுவாமி?"

"இதெல்லாம் தளர்ச்சியால் ஏற்பட்ட மயக்கம்."

"மயக்கம்... அப்படியானால் நீங்கள் இருப்பது மயக்கமா சுவாமி? நான் இருப்பது மயக் கமா? என் பொற்கனவுகளெல்லாம் மயக்கமா? என் இருதயத்தில் பொங்குகிற உணர்ச்சி யெல்லாம் மயக்கமா?"

உபாலி ஒன்றுமே பேசவில்லை. சட்டென்று அவ்விடத்திலிருந்து போய் விட்டான்.

டிங்கிரி மெனிக்கா ஓடோடியும் போய்த் தன் அறையின் மூலையிலிருந்து கதறினாள். நெருப்புக் கண்ணீர் அவள் கண்களில் பொங்கிக் கொண்டிருந்தது. அவளுடைய தந்தை வந்து கூப்பிட்ட பொழுதும் அவள் ஒன்றுமே பேசவில்லை.

உபாலி நேரே தன் அறைக்குப் போய் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். நடுயாமம் வரையிலும் அவன் அறையிலிருந்து, "புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்ற ஒலி கேட்டுக் கொண்டி ருந்தது.

புத்தகோஷர் இந்தியாவைச் சேர்ந்தவர். புத்த சமயத்தின் ஒரு கிளையாகிய ஹீனயான மதக் கொள்கைகளைப் பயிலும் எண்ணத்துடன் இலங்கைக்கு வந்து, நாயக தேரரானார். திரிபிடகத்தின் உரை நூல்களும், பாஷியங்களும் சிங்கள பாஷையில் இருந்தன. அவை களைத் தகுந்த ஆசாரியர் மூலம் படித்துணர்ந்து மஹா பண்டிதராய் விளங்கினார். இவை களுக்குப் பாலிபாஷையில் வியாக்யானம் எழுத வேண்டுமென்று அவருக்குப் பெரும் ஆவல் இருந்தது. இந்நாட்களில் அவர் தீர்க்க நிக்காயம்" என்ற நூலை எழுதத் தொடங்கியிருந்தார். உபாலி பாலி பாஷையுடன் சிங்களமும் நன்கு அறிந்திருந்தமையால், புத்த கோஷருக்கு மிகவும் உதவியாயிருந்தான்.

குருவும் சிஷ்யனும் ஒருநாள் வெளியுலகத்தையும் மறந்து இரவு நெடு நேரமாய் இவ்வேலையில் ஆழ்ந்திருந்தார்கள். பிக்குகள் யாவரும் நித்திரைக்குப் போய்விட்டனர். இருவரும் தனிமையாய் இருக்கும் பொழுது புத்தகோஷர், 'உபாலி, உன்னை ஒரு விஷயம் கேட்க வேண்டுமென்ற ஆவல் சில நாட்களாய் இருக்கிறது. விஹாரையில் கண்டெடுத்ததாக ஒரு பிக்கு என்னிடம் கொடுத்தான். "இதோ பார். இந்த ஓலையை" என்று ஓர் ஓலையை அவனிடம் நீட்டினார். உபாலி அதை வாங்கி விளக்கில் வாசித்தான். அது காதல் வாசகங்கள் கொண்ட ஓர் ஓலை, உபாலிக்கு டிங்கிரி மெனிக்கா எழுதியிருந்தாள். உபாலி ஒன்றுமே பேசாது மௌனமாய் இருந்தான். அப்பொழுது புத்தகோஷர் "உனக்கு இதைப் பற்றி ஏதாவது தெரியுமா?" என்றார். "ஒரு தேவா, நான் ஒன்றுமே அறியேன்" என்றான். "நல்லது. நானும் அப்படித்தான் நினைத்தேன். எப்படியானாலும் ஜாக்கிரையாய் இரு" என்று சொல்லிவிட்டு மீண்டும் வேலையைத் தொடங்கினார்.

வானத்திலே கார் முகில்கள் ஓடத் தொடங்கி விட்டன. மழைக்காலத்தின் ஆரம்பம். இனி ஆற்றிலே புதுப்புனல் ஓடிக் கொண்டிருக்கும்.

டிங்கிரி மெனிக்கா அந்திவேளையில் இந்த மஹாவலி ஆற்றங்கரையில் வந்து நின்று மணிக்கணக்காய் ஏதோ யோசனையில் ஆழ்ந்து போவாள். நாணத்தோடு கூடிய ஓர் இன்ப வேட்கையுடன் உபாலியின் வடிவத்தை மனதில் கொண்டு வந்து நிறுத்தி, உள்ளங் குமுறுவாள். ஓயாமல், சலிப்பே இல்லாமல் பாடி ஓடிக் கொண்டிருக்கும் அந்த நதியின் நித்திய

யௌவனத்தைக் கண்டு, நீறுபூத்த நெருப்புப் போல அடங்கியிருக்கும் உள்ளத்தீ ஆவேசத்துடன் சுடர் விட ஆரம்பிக்கும். அது காட்டுத்தீ போன்று வேகங்கொண்டது. மின் வெட்டுப் போல் திடீரென்று தோன்றி எதையும் நீர்த்துளியாக்கிவிடும். இப்படியான மனத் தளர்ச்சி கொண்டகாலம் அவளுக்கு. நிறைமதி நாலைந்து முறை பௌத்தப் பள்ளியின் வாச லிலே வந்து காய்ந்து விட்டுப் போய்விட்டது. புத்தகோஷர் எழுதிவந்த "சுமங்கல விலாசினி" "மனோரத பூரணி" என்ற திரிபிடக நூலின் பாஷ்யங்கள் சில நாட்களில் முடிவடைந்து விடலாம். புத்தகோஷர் சில சிக்கலான பகுதிகளை விளக்கி உரை கூறிவந்தார். உபாலி அவைகளை எழுத்தாணி கொண்டு ஏடுகளில் எழுதிக்கொண்டு வந்தான். அச்சமயம் டிங்கிரி மெனிக்காவின் தந்தை அவ்விடம் வந்தான். அவன் அலட்சியமாய் புத்தகோஷரைப் பார்த்து, "சுவாமி, நான் சொல்வதைச் சிறிது கேட்க வேண்டும். என் மகள் இன்று கர்ப்பவதியாய் இருக்கிறாள். நான் அவளைக் கேட்டேன். அதற்குப் பொறுப்பு உங்கள் எதிரில் நிற்கும் உபாலி என்று சொல்லுகிறாள். இதற்கு வேண்டியதைச் செய்வது உங்கள் கடமை" என்றான்.

புத்தகோஷர் கூட ஒரு முறை திகைத்து விட்டார்; பின்னர் தான் நிதானம் வந்தது அவருக்கு. உபாலியைப் பார்த்தார்.

"தேவா, நான் ஒன்றும் அறியேன்" என்றான் உபாலி.

"ஆனால் உனக்கு அந்தப் பெண்ணைத் தெரியுமா?"

"தெரியும் சுவாமி. நாலைந்து வருஷங்களாய் அறிவேன்."

"நீ அவளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"அவள் என் மேல் அன்பாய் இருக்கிறாள். பிக்ஷைப் பாத்திரத்தை உணவால் நிரப்பி உபசரித்து அனுப்புகிறாள்.

"நல்லது. நான் அவளை இங்கு அழைத்து..."

"வேண்டாம் சுவாமி. வேண்டாம். அவள் மனம் உடைந்து போகும்; இறந்தே போவாள்."

"அப்படியானால் நீ இக் குற்றத்தை ஒப்புக் கொள்கிறாயா?"

உபாலி ஒன்றுமே பேசவில்லை. அவனுடைய கண்களிலிருந்து நீர் உதிர்ந்து கொண்டிருந்தது.

புத்தகோஷரின் மனசிலே பெரிய போராட்டம் சூறாவளி போல் எழுந்தது. "பௌத்தப் பள்ளியின் தூய்மைக்கும், ஆசாரத்துக்கும், கௌரவத்துக்கும் பங்கம் வரக் கூடிய கொடிய விஷயம் இது. உபாலியோ தவ ஒழுக்கத்திலும், சீலாசாரத்திலும் - ஆனால் இனி அதைப் பற்றி யோசிக்க இடமில்லை. அவன் நிரபராதியோ அல்லவோ - நிரபராதி என்றாலும் அவனுக்குப் புத்த சங்கத்தில் இனி இடமேயில்லை..."

உடனே புத்தகோஷர் கம்பீரமாய் நிமிர்ந்து நின்றார். "உபாலி, மூன்றாவது முறையாக இந்த அவதூறான வார்த்தைகள் என் காதில் விழுந்திருக்கின்றன. பகவானின் கௌரவம், தர்மத்தின் கௌரவம், சங்கத்தின் கௌரவம் - இவைகளைக் காப்பாற்ற வேண்டியது என்

கடமை. இந்தக் கணமே நீ இவ்விடத்திலிருந்து வெளியேறுதல் வேண்டும்" என்று அக்ஞை பிறப்பித்தார்.

நாயகதேரரின் கண்களில் நிறைந்து கொண்டு வந்த கண்ணீரை அவரால் மறைக்க முடியவில்லை.

உபாலி இப்போது சமூக சாம்ராஜ்ய நீதி மன்றத்தின் முன்னிலையில் பாரதூரமான அபராதத்தைச் செய்துவிட்ட குற்றவாளி. பார்த்தாலும், கேட்டாலும், சித்தித்தாலும் கூட உலகம் அவனை மிதித்து நசுக்கிவிடும். ஒதுக்கிடத்தில், வழிப்போக்கர் தங்கும் ஒருமடத்தின் திண்ணையில், இராப்பொழுதைக் கழித்து வந்தான். அவன் தன்கொடிய விதியை நினைத்து வருந்த வில்லை. எவர் மேலும் கோபங்கொள்ளவில்லை. அந்த மடத்தை விட்டுப் போய்விட விரும்பவுமில்லை. மலையின் அடிவாரத்தில் இருந்த அந்த மடத்தில் இருப்பது, புத்தபகவானின் நிழலில் இருப்பது போன்ற ஓர் உணர்ச்சியை அவனுக்குக் கொடுத்தது.

புத்தகோஷர் அநுராதபுரத்துக்குப் போய், சங்க பாலராகிய அவரது குருதேவரை மஹாவிகாரையில கண்டு தரிசித்து நாலைந்து மாசங்களில் திரும்பிவிட்டார். திபெத், சீனா முதலிய இடங்களிலிருந்து இன்னும் அநேக பிக்குகள் பௌத்தப் பள்ளிக்கு வந்திருந்தனர். புத்த விஹாரையில் ஒரு புத்த சிலை புதிதாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுவிட்டது. அதன் சுவர்களிலே தேவஸேனன் என்ற பிரசித்த பெற்ற சைத்திரிகன் சித்திரங்கள் எழுதத் தொடங்கி யிருந்தான்.

இன்னொரு விஷயம்; மறந்தே போனேன். டிங்கிரி மெனிக்காவுக்குக் குழந்தை கூடப் பிறந்து விட்டது.

வானத்திலே, வளரும் அர்த்த சந்திரன் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. இன்னும் சில நாட்களில் அது வட்ட வடிவம் பெற்றுவிடும். அன்றுதான் 'போசங்' திருவிழா. சமனலகந்த மலையின் உச்சியில் புத்தபிரானின் அடிச் சுவடுகள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஹிந்துக்களும், பௌத்தர்களும் சிகரத்துக்குப் போய் வருவார்கள்.

'போசங்' பண்டிகையும் வந்தது.

மலையடி வாரத்திலிருந்து உச்சிக்குப் பெருந்திரளாக ஜனங்கள், செங்குத்தான பாதை வழியாய்க் கொடிவிட்டுப் போய்க் கொண்டிருந்தனர். உபாலியும் ஜனங்களுடன் தானும் ஒருவனாய் வெளிக்கிளம்பினான். வழியில் ஆற்றைக் கடந்து வரும்பொழுது ஆற்றிலே தண்ணீர் நிமிஷத்துக்கு நிமிஷம் கூடிக் கொண்டு வருவதை அவனும் கவனித்தான். ஆற்றோரமாய்ப் போய்க் கொண்டிருந்த பாதை, வழியாய் வரும் பொழுது, ஆற்றில் ஜலம் கடுவேகமாய்ப் பாயத் தொடங்கிவிட்டது. மலைப் பிரதேசத்தில் எங்கெங்கோ வெல்லாம் கடுமழை பொழிந்திருக்க வேண்டும். ஆற்றில் வெள்ளம் பெருக் கெடுத்து இரு கரைகளையும் மோதியடித்துக் கொண்டு வந்தது.

டிங்கிரி மெனிக்காவின் வீடு ஆற்றோரத்தில் எதிர்க்கரையில் இருந்தது. அவள் ஆற்றைக் கடந்து இக்கரையிலுள்ள கடைக்குப் போய்விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். ஆற்றில் ஜலம் பெருக்கெடுத்து விட்டதையும், அதைக் கடக்க முடியாதென்பதையும் கண்டாள்.

உடனே அக்கரையில் உள்ள தனது குடிலில் தூங்கும் தன் குழந்தையின் ஞாபகம் வந்தது. தந்தையும் மலைக்குப் போய் விட்ட ஞாபகம் வரவே, "ஐயோ, என் குழந்தை" என்று அலறிக் கொண்டு ஆற்றில் பாய ஓடினாள். பக்கத்தில் இதற்குள் கூடிவிட்ட ஜனக்கூட்டம், அவளை இழுத்துப் பிடித்துக் கொண்டது. உபாலியும் அப்பொழுது தான் அவ்விடத்தை அடைந்தான்.

எந்தச் சமயத்திலும் அவளுடைய குடிசை இடிந்து அழிந்து விடலாம். அக்கரையிலிருந்த குடியானவர்கள் அநேகர் மலை உச்சிக்குப் போய்விட்டார்கள். எஞ்சியிருந்தவர்களும் ஒதுக்கிடந் தேடி ஓடிவிட்டனர். ஆற்று வெள்ளமோ சூறாவளியின் பேரிசைச்சலுடன் கரை மரங்களை வீழ்த்தி இழுத்துக் கொண்டும், சிறுகுடிசைகளைச் சூறையாடி இடித்து அள்ளிக் கொண்டும் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. இந்த ஆற்றைக் கடக்க எவர் முன் வருவார்? ஆனால், உபாலி திடீரென்று ஆற்றில் குதித்துவிட்டான். ஜனங்கள், "என்னவாயிருந்தாலும், தந்தையின் இரத்தம் துடிக்காதா?" என்று சொல்லிக் கொண்டனர். உபாலி ஒரு மரக் கொம் பின் உதவியைக் கொண்டு ஆற்றுப் பெருக்குடன் மிதந்து சென்று கொண்டிருந்தான்.

அதிர்ஷ்டவசமாய் ஒரு தென்னைமரம் ஆற்றின் குறுக்கே வீழ்ந்து நடுவில் நின்ற ஒரு பாறையில் தங்கி அசையாமல் கிடந்தது. உபாலி அதன் உதவியால் ஆற்றைத் தாண்டி கட்டிலில் படுத்திருந்த குழந்தையையும் தூக்கிக் கொண்டு இக்கரை நோக்கி வந்தான். வெள்ளப் பெருக்குக் கூடிக்கொண்டிருந்தது. ஒரு கையில் குழந்தையைப் பற்றிக் கொண்டு, மற்றொரு கையின் உதவியால் சிரமப்பட்டு நீரின் விளிம்புக்கு நீந்தி வந்து ஜலத்தின் கீழ் இருந்த ஒரு கல்லின் மேல் நின்றான். டிங்கிரிமெனிக்கா ஆவலுடன் ஓடி வந்து தன் கைகளை நீட்டினாள். குழந்தையை எடுத்துத் தாயின் கைகளில் கொடுக்கும் பொழுது, அவன் நின்ற கல், நிலை குலைந்தது. திடீரென்று அவன் குப்புற வீழ்ந்து போனான். வெள்ளம் அவனை அள்ளிக் கொண்டு போய்விட்டது.

"ஹாமதுரு" என்று கத்திக்கொண்டு கரையோரமாய்ப் பலர் தொடர்ந்து ஓடினார்கள். அவர்கள் ஓர் அரைமைல் தூரம் சென்றதும், ஒரு பாறையின் ஒதுக்கில் அவனுடைய தேகம் சிக்குண்டு கிடந்தது. அவர்கள் அதை எடுத்துவந்து மலையின் உயர்ந்த ஓர் இடத்திலே கிடத்தி, செய்யக்கூடிய சிகிச்சையெல்லாம் செய்து பார்த்தார்கள். உபாலி பிரேதமாய்க் கிடந்தான்.

டிங்கிரி மெனிக்கா பாய்ந்து வந்து கையில் குழந்தையுடன் அவன் காலடியில் வீழ்ந்து கதறினாள். பிறகு எழுந்து நின்று, "இக் குழந்தையின் தந்தை இவரல்ல. நான் இவர் மேல் கடுங்காதல் கொண்டிருந்தேன். இவர் அதை அலட்சியஞ் செய்வதைக் கண்டு ஆற்றாமல் ஆத்திரத்தினால் நான் என் அயலான் ஒருவனுடன் கூடிச் செய்த பாதகச் செயலை இவர் மேல் சுமத்தி னேன். பாதகி" என்றாள்.

மஹாநாயக தேரர் புத்தகோஷரும் இதைக் கேட்டுக் கொண்டு தான் நின்றார்.

கிராம ஊழியன் (ஆண்டுமலர்) 1944

நெடுவழி

சி.வைத்தியலிங்கம்

உலகம் அவளுக்கில்லை. அவள் உலகத்திலில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாத கனத்த இருள் சூழ்ந்த உலகம் அது இருக்கிறதோ இல்லையோ என்பதையும் அறிய மாட்டாள். கால் முன்னே செல்கிறது. மனம் நிதானமில்லாமல் ஓடுவதும் நிற்பதும் குமுறுவதும் ஓய்வதுமாய் ஏதோ ஒரு அந்தர நிலையில் தொங்கி நிற்கிறது. நடக்கிறாள்... நடக்கிறாள் .... அது நெடுவழி.

அவள் பெயர் முத்துமெனிக்கா. அவள் தோளின் மேல் அவளுடைய குழந்தை. ஆறோ ஏழுமாதக் குழந்தை அயர்ந்து தூங்குகிறது. பச்சைக் குழந்தைக்குத் தாயின் தோளும் மார்பும் சுவர்க்கபூமி. அது பேசாமல் தூங்குகிறது. வெளியே உலகம்: இருள் படர்ந்த உலகம். இரக்கம் தயை இல்லாத ஒரு முரட்டு உலகம். இதை அக்குழந்தை அறியாது. இரக்கமுள்ள கடவுளே இந்தக் குழந்தையை என்றும் குழந்தையாய் இருக்கவிடு.

காலமோ கார்த்திகை மாசத்து நள்ளிரவென்றாலும் தைரியத்துடன் முத்துமெனிக்கா நடக்கலானாள். அவள் தோள்மேல் கிடக்கும்

குழந்தை அதில்தான் அவள் உயிர்வைத்துக் கொண்டிருக்கின்றாள். குழந்தையின் நினைவுவரும் வேளைகளில்தான் அவள் கிணற்றுக்கும், குளத்துக்கும், ஆற்றுக்கும் பயப்பட்டாள். இல்லை, தன் இனத்தவராகிய மனித ருக்கும் அவள் அஞ்சினாள்.

அதிக தூரம் வந்து விட்டாள். மனம் இளைத்துப்போயிற்று. காலும் ஓய்ந்து போய் விட்டது. தன் குழந்தையை ஒரு முறை இறுக அணைத்துக் கொண்டாள். மெல்ல மெல்ல மன மும் நிதானமடைந்து வந்தது. உலகம் இருப்பதையும் உணரலானாள். காற்று ஹோவென்று வீசுவதும் அவள் காதுகளில் கேட்டது. இருள்... இருள்... முன் இருள். அதையும் அறிந்தாள். மனமும் எங்கெங்கோவெல்லாம் சுற்றிச் சுழன்று வந்து கடைசியாய் அவள் வாழ்க்கையைக் கோல் கொண்டு அளவிடத் தொடங்கியது.

துக்கம் வரும்பொழுது மனிதன் தன் பழையகால நிகழ்ச்சிகளை மனதிற் கொண்டு வந்து அதில் ஒரு ஆறுதலும் பெற்றுவிடுகிறான். இச்சமயங்களிலே சாரமற்று வரண்ட வாழ்க்கையும், ஏதோ ஒருவகை இன்பத்தை மனிதனுக்குக் கொடுக்கிறது.

முத்துமெனிக்கா உலகம் அறியாத சிறு பெண்ணல்ல: சரத்கால சந்திரனின் வனப்போ, சிலப்பதிகாரத்தின் சாயலோ, மென்மையோ இவைகளொன்றும் அவளிடத்தில் இல்லை. ஆனால் கர்நாடக சங்கீதத்தில் தொனிக்கும் விறுவிறுப்பும், காரமும், ஓட்டமும் போன்ற ஒரு தனி உடைமை அவளிடம் நிரம்பியிருந்தது. அவள் உலக மேடையில் நடித்த சென்ற இருபத் தைந்து வருஷங்களிலும் சோகரசமும், இன்பரசமும் மாறிமாறித்தான் கலந்திருந்த தென் றாலும், அவள் மற்றப் பெண்களைப் போலல்லாமல் ஒரு அபூர்வமான சிருஷ்டி கல்வியறி வில்லாவிட்டாலும் பகுத்தறிவும் கற்பனையும் நிறைந்த ஒரு பெண்!

இத்தருணம் குழந்தைப்பருவத்தின் நினைவுகள் வந்து தோன்றி மறைந்து கொண்டிருந்தன. தந்தையின் ஞாபகம் - அது ஒரு நீதி வாசகம்போல் நினைவுக்கு வந்தது. தாய் - முன்னெப்பொழுதோ எவ்விடத்திலோ கேட்ட இன்னிசையின் நினைவு போல - அவளும் வந்து தோன்றினாள். தன் தாய் இன்று உயிருடன் இருந்தால் அவள் மடியில் வீழ்ந்து குழந்தை போல் தன் துக்கத்தைச் சொல்ல வேண்டுமென்று ஆவலாயிருந்தது. அவள் ஒருத்தியால் மாத்திரமே தன் மனவேதனையைப் பரிபூரணமாய் அறியமுடியுமென்று நினைத்தாள். ஆனால் அவள் இன்று அவள் பக்கத்தில் இல்லை. அவள் ஆறுதல் மொழிகள் காதுகளில் ஒலிக்கமாட்டா. அன்புக் கரங்களின் மென்மையான பாசமும் கிடையாது. அவள் கோபித்தாலும் அந்தக் கோபத்திலிருக்கும் தன்நலமற்ற தூய்மை வேறெவ்விடத்திலும் இல்லை. மெனிக்காவுக்குக் கதறி அழவேண்டும் போலிருந்தது.

அழுகை ஓய்ந்தது. கன்னத்தில் கண்ணீர்விட்ட வடுவும் காய்ந்து போய்விட்டது. தன் வாழ்நாளில் கண்ட கனவுகள். கட்டிய கோட்டைகள் இடிந்துபோனவைகள். ஆ, அப்பொழுது அவளுக்குத் தன் புருஷன் நினைவு வந்தது. அவள் வாழ்க்கை இடிந்துதான் போய்விட்டதா? அன்று தன்னை வீட்டிலிருந்து வெளியேற்றிய கணவன்பால் அவளுக்கு ஒரு குரோதமும் தோன்றவில்லை. அவர் ஒரு பரிசுத்த ஆத்மா என்று நினைத்தாள். அவரைக் கொண்டுபோய் நடுச்சமுத்திரத்தில் நிறுத்திவிட்டது போன்ற உணர்ச்சி அவள்மேல் ஈட்டிபோல குத்தத் தொடங்கியது. உடனே, "நான்தான் பாதகி, துரோகி, எல்லாம் என்னால் தான் வந்தது. நானே என் தலையில் மண்ணையள்ளிக் கொட்டிக்கொண்டேன் என்று கத்தினாள்.

"அவர் ஒரு பாவமும் அறியாதவர். நான் அவரை மணக்கும் பொழுது வயசு இருபது. நான் அவரை நேசித்தேன். அவரோ என்னை ஆவேசத்துடனும் முழு மனதுடனும் காதலித்தார். பொல்லாத காலம் எவர்க்கும் வருவதுதான். நான் ஒருநாள் அவருடன் சண்டை போட்டுக்கொண்டேன். அது ஒரு சாதாரண மனஸ்தாபத்தினால் 'தன்வயிற்றுக்கு இரண்டு பணம் சம்பாதிக்கத் தெரியாத மாப்பிள்ளைக்கு வீட்டில் என்ன வேலையிருக்கிறது' என்று கேட்டுவிட்டேன்.

என் நாக்குக் கொடியவாளினும் கூரியதாய் அவர் இயத்தை அறுத்திருக்க வேண்டும். அதன் பின்னர்....."

பிரிவு: ஆம், பிரிவுடன் கூடியது தனிமை. மனிதனைச் சில வேளைகளில் மிருகமாக்கும் தனிமை . முத்துமெனிக்கா தன் குடிசையில் தனியே இருந்தாள். அப்பொழுதெல்லாம் தன் கணவர் திரும்பி வருவார் என்று தினமும் எதிர்பார்த்திருந்தாள் வருவார்.... வருவார்....... இப்படிப் பல மாதங்கள் கழிந்து போய்விட்டன.

அவனோ வரவில்லை; அவளோ ஏழை. அதிலும் கட்டழகு குலையாத பெண். வயலில் போட்டது விளைந்தால்தான் வயிற்றை நிரப்ப முடியும். அவளுக்கு ஒரு துண்டு வயல் காணி இருந்தது. அதில் அயலவர் சிலருடைய உதவியுடன் சிறு தானியம் விதைத்திருந்தாள். வீட்டில் இருக்க நேரம் கிடையாது. காலை முதல் மாலை வரையில் வயலில் நின்று கிண்டினால்தான் ஏதேன் கிடைக்கும் இடைக்கிடை யாரும் வந்து முத்துமெனிக்காவுக்கு ஒத்தாசை செய்வார்கள். அவர்கள் எல்லோரும் தர்மசிந்தை கொண்டவர்கள்,

அவள் வயலுக்குப் பக்கத்தில் இருந்தது டேவிட்சிங்கோவின் வயல். அவன் நல்ல கட்டமைந்த வாலிபன் அவனும் வந்து உதவிகள் செய்து கொடுப்பான்...

ஒருநாள் பெரு மழை பெய்தது. இல்லை, மழை நீர்வீழ்ச்சி போல வீழ்ந்ததென்று சொல்ல வேண்டும். இலங்கையின் மலைப்பிரதேசங்களில் மழை பெய்வதில்லை. ஆறுகளும், குளங்களும் நீர் நிலைகளும் பெருக்கெடுத்து வயல்களைச் சூறையாட ஓடிவந்தன. முத்துமெனிக்காவின் வயல் பள்ளத்தாக்கில் வெள்ளம் வந்து நிறைந்து பயிர்களை அமுக்கி விட்டது. உழவர் மண்வெட்டியுடன் வந்து தங்கள் வயல்களின் வரம்புகளை வெட்டி வெள்ளத்தை ஓடச் செய்து கொண்டு நின்றனர். முத்துமெனிக்காவுக்கு உதவி செய்வோர் யாருமில்லை. நீரில் அமிழ்ந்து போகும் குழந்தையைப் பார்க்கும் தாய் போல் தன் வயலை வந்து பார்த்துக்கொண்டு நின்றாள். வயிறு பற்றி எரியத் தொடங்கியது. நெடுநேரம் இப்படி நின்றாள்.

டேவிட்சிங்கோ தன் வயலில் வேலை செய்துகொண்டு நின்றவன் இவளைக் கண்டான். தன் வேலைகளின் ஒரு பகுதியை முடித்துக்கொண்டு, ஓடோடியும் வந்து இவளுடைய வயலிலே வேலை செய்யத் தொடங்கினான். முத்துமெனிக்கா இதையும் பார்த்தாள். அவளுக்குத் தன் கணவரின் நினைவு வந்தது. அவர் இப்பொழுது இவ்விடம் இருந்தால் ...... தன் கணவனின் தேவையை இருந்தாற்போல் நினைத்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு நெடு மரம் போல் தனித்து நின்றாள்.

டேவிட்சிங்கோ இங்கு சிறிது அங்கு சிறிதாய் வயலின் அணைகளை உடைத்துவிட வெள்ளம் மெல்ல மெல்லப் படிந்துகொண்டிருந்தது. அப்பொழுது அவள் அவனைப் பார்த்து சிங்கோ. நீ இன்று என் வயிற்றில் பால் வார்த்தாயப்பா. இல்லாவிடில் என் பச்சைக் குழந் தைகள் எல்லாம் நீரில் அழிந்துபோயிருக்குமே" என்றாள். அவள் முகத்தில் நன்றியறிதலுடன் கூடிய ஒரு பாவம் நிறைந்து நின்றது.

"இல்லை. மெனிக்கா நாங்களோ குடியானவர்கள். என் வயலைப் போலத்தான் உன் வயலும். இந்த இளம் பயிர்கள் அழிந்து போவதை எங்களால் பார்க்கவே முடியாது. பயிர் என்றால் என்ன உயிரில்லாத ஏதோ ஒன்றா? எங்களுக்கு அவைதானே எங்கள் பிள்ளை குட்டிமாதிரி. அதனால்தான்."

"நல்லாய்ச் சொன்னாய். ஆனால் இப்படி ஆபத்துக்குதவுறவர்கள் ஆயிரத்தில் ஒன்று. எல்லாரும் இப்படிச் செய்துவிடுவார்களா? நான் இதை என் உயிர் உள்ளளவும் மறக்க மாட்டேன்."

டேவிட்சிங்கோவுக்கு இந்த வார்த்தைகளில் ஏதோ ஒரு இன்பம் என்றும் சுவைக்காத ஒரு சுவைபோல். கேளாத ஒரு இன்னிசை போல். காணாத ஒரு புதுமை போல் அவனுக்கு ஒரு தனிப்பட்ட அனுபவம் அன்று....

இப்பொழுது மாரிக்காலம்... என்று சொல்லுதற்கு முன்பே. மாரி காலமும் போய் விட்டது. இனி மாசுமறுவற்ற ஆகாயம்: கண்ணைக் கூசும் வெயில்: எங்கும் ஒரே தேசோ மயமான பிரகாசம். மெல்லிய தென்றல்... அறு வடைக்காலம் முடிவடைந்துவிட்டது.

முத்துமெனிக்கா தன் வயலில் ஒரு துண்டில் அவரைச்செடி போட்டிருந்தாள். இன் னொரு பகுதியில் புடலங்கொடி படர்ந்து கொண்டிருந்தது.

டேவிட்சிங்கோ பயறு விதைத்திருந்தான். பாகற்கொடி படர்ந்து பூத்திருந்தது. புடலங் கொடிகள் நடக்கத்தொடங்குங் குழந்தை தட்டுத்தடுமாறி தாயின் சேலைத்தலைப்பைப் பிடிப்பது போல தென்னங்கயிற்றில் தாவிக்கொண்டி ருந்தன. அவன் வயலில் வேலை செய்துகொண்டு நின்றான்.

காலமோ மாலை நேரத்து மயக்கமில்லாத தெளிந்த புலரிக்காலம் இந்த நேரத்துக்கு நிலா வீசும் இரவு போன்ற ஓர் கன்மையும் மென்மையும் உண்டு.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. முத்துமெனிக்கா அவரைக்காய் ஆய்ந்து கொண்டு நின்றாள்... டேவிட்சிங்கோ புடலம் பிஞ்சுகளுக்குக் பக்கட்டில் தூங்கவிட்டுக் கொண்டி ருந்தான்.

ஆழ்ந்த அமைதி புலரிக்காலத்தில் இருக்கும் அமைதி. ஊழிக் கால முடிவில் இருக்கும் அமைதி மாதிரி. புல்பூண்டுகள். பட்சிகள். மிருகங்கள். ஆம் காற்றும் இந்நேரத்தில் ஆழ்ந்த உறக்கத்துக்குப் போய்விடுகிறது. பமெனிக்கா "தனிமை" என்றால் என்ன? என்பதை இன்று உணர்ந்தாள்.

தனிமை - இளமை - பிரிவு... பயங்கரமான வார்த்தைகள்தான். நகம் இல்லை. மும்மூர்த்திகள் போல் மூன்றும் ஒன்று சேர்ந்தால் ஒரு பேதையால் என்ன செய்ய முடியும்?

அவள் எதையோ எதிர்பார்த்தாள். என்ன அது? அது அவளுக்கே வாய்ப் புரியவில்லை . ஆனால் மனம் கட்டிலடங்காமல் துடித்தது. இடைக்கிடை ஏதாவது அரவங் கேட்கும். திரும்பிப் பார்த்து நடுங்குவாள்... எதற்கோ அவள் உள்ளம் ஏங்கி ஓலமிடும்....

அவரைக்காய்க் கூடையும் நிறைந்து விட்டது. இனி அவளுக்கு இங்கே பயனில்லை. பலவிதமான உணர்ச்சிகள் அவள் உள்ளத்தில் நிறைந்து இருண்ட மேகம் போல இருந்தது. எந்நேரத்திலும் அந்த உணர்ச்சிகளின் அதிர்ச்சியிலே அவள் உள்ளம் வெடிக்கக்கூடும். அந்த வேளையில்தான் டேவிட்சிங்கே எதிரில் வந்தான். அவள் அருகில் திடீரென அவள் கையைப் பற்றினான்.

இதென்ன இது? என்னை விட்டுவிடு சிங்கோ." என்று அவள் மெதுவாய்ச் சொன்னாள் ஆனால் அவன் பிடி இறுகியது. அவன் பிடியிலிருந்து விடுவிக்க முயன்று பார்த்தாள். ஆற்றாமல் குனிந்து அவன் கையைக் கடித்து விட்டாள். கையில் கடித்தும் பிடி இன்னும் நெகிழவில்லை. கரத்திலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

புலரிக்காலத்தின் மங்கிய பொழுதில் முத்துமெனிக்கா அவனை இரக்கத்தோடு பார்த்தாள். தோள்கள் உயர்ந்து வலுவேறியிருந்தன. பார்வையில் காந்தம் ஒளிவீசியது. கைகள் இரும்பெனத்திரண்டிருந்தன.

பெட்டை நாய் கடிக்கக்கடிக்க ஆண்நாய் தொடர்ந்து போய் வென்று விடுகின்றது. ஆண்மயில் ஆடும் அழகு கண்ட பெண்மயில் மயங்குகிறது. சேவலின் வீராப்புக் கூவலையும் நடையையும் கண்டு பேடு அடங்கித் தலை குனிகின்றது.

இப்பொழுது முத்துமெனிக்காவின் மேனி முழுவதும் பெண்மை பரவியது. மென்மை , இனிமை, ஏக்கம், வாஞ்சை , அவள் குனிந்து இரத்தம் கசிந்த இடத்தை நாக்கால் நக்கினாள். டேவிட் சிங்கோ காதலுடன் அவளைத் தூக்கிக் கொண்டான்.

அத்தருணம் உலகமே ஸ்தம்பித்தது. மரங்கள் நடுங்கின. காற்றுச் சுழன்று அடித்தது. பூமி அதிர்ந்தது.

கிழக்கு நன்றாக வெளுத்துவிட்டது, டேவிட்சிங்கோ எழுந்து சென்று கொடிகளைப் பார்த்தான். பிஞ்சு பிடித்திருந்தது.

முத்துமெனிக்கா மனப்பூரிப்பில் கூடையின் சுமை உணராமல் மிதந்து கொண்டிருந்தாள். அவளுடைய கையாட்டத்திலேயே உலகம் சுழல்வது போலிருந்தது.

அன்று அந்திப்பொழுது சந்தையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். வழியில் ஒரு கிழவனையும், கிழவியையும் - புருஷனும் மனைவியும் வந்து கொண்டிருந்தனர்.

கிழவன் தோல் சுருங்கிக் கூனி நடக்க முடியாமல் மெல்ல மெல்ல நடக்க, அவன் மனைவி தாங்கும் ஒரு கழிபோல அவனை அணைத்துக் கொண்டு போனாள். முத்து மெனிக்கா இதைக் கண்டாள். கிழவியிடத்தில் அவள் எதையோ கண்டாள் பரிவாக? தியாக உணர்ச்சியா? இரக்கமா? அது என்னவென்று சொல்ல முடியாது. உடனே அவள் நெஞ்சில் வெட்டவெளி உண்டானது போல் ஓர் உணர்ச்சி தோன்றியது. மனம்பகீரென்றது. கிழவன் மேல் காட்டும் உணர்ச்சி கிழவிக்கு எப்படி வந்தது? கிழவனிடம் ஆண்மையில்லை?

அழகில்லை ... ஆனால் இருவரையும் ஏதோ ஒன்று சங்கிலிபோல் பிணைக்கிறது. அது பரிசுத்தமானது. தெய்வீகமானது. பவித்திரமானது என்று உணர்ந்தாள்.

அப்பொழுதுதான் அவளுக்குத் தான் அன்று காலை நடந்துகொண்டது மஹா பாவச் செயல்போலத் தோன்றி அவளை உயிருடன் சித்திரவதை செய்யத் தொடங்கியது.

நேற்று - இன்று இரண்டும் அவள் வாழ்க்கையில் இரண்டு தீப ஸ்தம்பங்கள். இரண் டுக்குமிடையிலே மனோதீதத்துக்கு எட்டாத கற்பனையாலும் கடக்க முடியாத பெரும் பிளவு.

நேற்று அவளுக்கு தனிமையான உருவம் ஒன்று இருந்தது. இன்றோ அவள் உருவமற்ற ஒரு உருவம் பேச்சற்ற ஒரு பேச்சு...

முத்துமெனிக்கா மாத்திரம் ஏதோ உலகத்தில் இப்படி ஒன்றைப் புதுமையாய்ச் செய்துவிட்டாளென்று நான் இதைப் பிரமாதப்படுத்திச் சொல்லவில்லை. அவளைப் பார்த்தால் உண்மையில் எனக்கு இரக்கம்தான் உண்டாகிறது. அவள் பச்சாத்தாபப்படுவதைப் பார்த்து நான் அவளை மன்னிக்கவும் தயாராய் இருக்கிறேன். அவளும் பெண்தான். உலகத்தை வெறுத்த சந்நியாசினி அல்ல. அவள் அன்று இருந்த சூழ்நிலையில் தருணம், தனிமை, பிரிவு. இளமை - அவள் இயற்கை விதியின் ஒரு கட்டளையை மீற முடியாத ஒரு நிலையில் இருந்தாளென்றுதான் சொல்ல வேண்டும்...... அதனாற்தான் அவளைப்பார்க்க என் கண்ணும் கலங்குகிறது.

அவள், தான் செய்த தவறைக் காலப்போக்கில் மறந்திருக்கலாம். ஆனால் அவளுடன் அவள் உடலுக்குள் வளர்ந்துவரும் ஒரு ஜீவன் அந்த நினைவுக்கு நெய் வார்த்துக்கொண்டு வந்தது. சில சமயங்களில் நேரமே கழியாமல் பாரத்துடன் கனத்து தொங்கி இருக்கும் வேளை களில் தன் வீட்டு வாசலிலே இருந்து தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையின் வாழ்வைப்பற்றி எண்ணாததெல்லாம் எண்ணி மனம் ஏங்குவாள். தன் கணவர் திரும்பி வருவார் என்று அவளுக்கு நம்பிக்கை இருந்தது. அவர் வந்ததும் அவருடன்

எப்படித்தான் நடந்துகொள்ள வேண்டுமென்று அநேக நாட்களாய் மனத்தைத் திடப்படுத்தி வைத்திருந்தாள். என்ன நடக்குமென்று அவளுக்குத் தெரியும். தண்டனையை அனுபவிக்கவும் அவள் தயங்கவில்லை. ஆனால் தன் குழந்தையைப் பார்த்து உலகம் நகைக்குமே என்ற நினைவு வரும் சமயங்களில் தான் என் மண்டை சுக்குநூறாய் வெடிக் காதா? ஐயோ" என்று கதறிக் கண்ணீர் வடிப்பாள்.

இப்படி இன்னும் எட்டு மாசங்கள் அவள் வாழ்க்கையில் கழிந்தது.

டேவிட் சிங்கோவுடன் கூடி வாழவேண்டுமென்ற ஒரு எண்ணமும் அவள் நெஞ்சில் சிற்சில வேளைகளில் உதிப்பதுண்டு - இயற்கைதானே: குழந்தையின் வருங்கால வாழ்க் கைக்கும் அது உசிதமாய் இருக்கும் என்று நினைப்பாள். ஆனால் தன்னைத்தொட்டு மணந்த புருஷனின் ஞாபகம் வரும். முன்னொருநாள் கண்ட கிழவனின் தோற்றமும் அவனைத் தாங்கிப்போன கிழவியின் தோற்றமும் மனக்கண் முன் தோன்றின. தன்னையே சபித்துக்கொள்வாள். "இல்லை. என் உயிர் போனாலும், அவனிடம் போக மாட்டேன்." என்று மனத்திடம் கொள்வாள்.

குழந்தையும் பிறந்தது... தான் ஒரு தாய் என்ற அந்தப் பெருமையிலே தாய்மை உணர்ச்சி உள்ளுக்குள் அடங்கிக் கிடந்த மனவேதனையைத் தணித்து, அவள் மனசிலே அன்புப் பெருக்கை ஊறச் செய்தது. தன் குழந்தையின் பேச்சற்ற பார்வையும், "கிளி கலைக்கும் அமிர்த ஒலியும் அவளை ஒரு ராணிபோல் ஆட்டி வைத்தன. குழந்தையின் மழலை மிழற்றலிலே மற்றவர்க்குத் தோன்றாத ஒரு அபூர்வ ஆறுதல் மொழியை அவள் கண்டு நெஞ்சு பூரிப்பாள். ஆனால் சிலவேளைகளில் தன் குழந்தையின் மதுரமான விளையாட்டுக்களில் அடிமையாகி அமரரும் அறியாத ஆனந்தத்திலே மூழ்கியிருக்கும் பொழுது உணவில் கடிபடும் கல்லுப்போல் அதன் பிற்கால வாழ்க்கை பற்றிய நினைவு ஓடிவரும். நெஞ்சு தடுமாறுவாள். தற்கொலை செய்துகொள்ளலாமென்றும் நினைப்பாள். வேறு வழி அவளுக்குத் தோன்றாது. ஆனால் திடீரென்று குழந்தையின் அழுகைக்குரல் கேட்கும் .... குழந்தைக்காக எதையும் சகிக்கத்தக்க ஒரு மனோபலம் பிறந்துவிடும்.

எதையும் எதிர்த்துப் போராடத் தயாராயிருப்பாள்.

இப்பொழுது அவள் எவருக்கும் பயப்படவில்லை. உலகத்துக்கும், தன் வேதனைக்கும், தன் கணவருக்கும் அவள் அஞ்சவில்லை ...

ஆனால் குழந்தை பிறந்த ஏழாவது மாசம் ஒரு காலை, அவள் பயம் எல்லாம் எப்படிக் குலைந்ததோ - அவளே அறியமாட்டாள். யாரோ வைத்துச் சுட்டது போல் அவள் நடுங்கினாள்... அன்று அவள் புருஷன் வந்திருந்தான்,

அவள் எதிர்பார்த்துக் காத்திருந்தவள் இத்தினத்தை. இன்னது தம் என்பதையும் ஒருவாறு அறிவாள். எதையும் தாங்குவதாக மனத்திடம் கொண்டிருந்தவள். ஆனால் - அது ஏனோ?

அவன் இதொன்றையும் எதிர்பார்க்கவில்லை. மனக் கோட்டைகளுடன் வந்தவன் - குழந்தையைக் கண்டான் முத்து மெனிக்காவையும் தான் - அவள் நெஞ்சு படபடக்கவில்லை. அவன் அழவில்லை, சிரிக்கவில்லை, மனம் சாந்தமாய் இருந்தது.

அன்று முழுவதும் அவர்கள் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. கழிந்து மாலையாய் மாறிக்கொண்டிருந்தது. முத்துமெனிக்கா அவனிலும் விழிக்க முடியாமல் தைரியம் குன்றி ஒரு மூலையில் படுத்துக்கொண்டாள். அவன் மெல்ல அவளை அணுகி "மெனிக்கா என்று கூப்பிட்டான். எழுந்திருந்து தலையைக் கவிழ்த்துக்கொண்டாள். கண்ணீர் கண்களிலிருந்து ஓடிக்கொண்டிருந்தது. "என்னை நீ எதிர்பார்க்கவில்லையல்லவா?" கேட்டான் அவள் புருஷன்.

“ஆ அப்படிச் சொல்லாதீர்கள்.”

“அப்படியானால்?”

“நான் உங்கள் வரவுக்காக இன்றும் நேற்றும் சென்ற மூன்று வருஷங்களாய் எதிர் பார்த்திருந்தேன்.”

“ஊம்...” என்று ஒரு பெருமூச்சுக் கிளம்பியது. பின்னர் உரக்கச் சிரித்தான். அவன் சிரிப்பைக் கேட்டு அவள் பயந்து போனாள். உடல் நடுங்கியது.

"நீங்கள் நான் சொல்வதை நம்பவில்லையா?"

"நம்பாமல்? நீ இருப்பதும் நிஜம்தான். உன் குழந்தை இருப்பதும் நிஜம்தானே"

"அது என் குற்றமில்லையே."

"என்ன?" என்று உரக்க கத்தினான், அவள் கணவன். வீடு அதிர்ந்து விடும் போலிருந்தது.

"துரோகி. உன் குற்றமில்லையென்றா சொல்கிறாய்? உண்மையில் உன்னைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"என்னைப்பற்றி ஒன்றுமே வேண்டாம். நான் சொல்வதை மாத்திரம் முதல் கேட்டு விடுங்கள். நீங்கள் வரவில்லை; ஒரு கடிதம் இல்லை; என்னைப்பற்றிய நினைவு உங்க ளுக்கு இல்லை... இங்கே எனக்கு ஒரு நாய் துணையில்லை. நான் ஒவ்வொருநாளும் உங் கள் வரவுக்காக ஏங்கிக்கொண்டிருந்தேன்... தன்னந் தனியே. ஒரு பெண்... தனிமை இருந் தது. அதை நினைத்தாலே இப்பொழுதும் என் உடல் நடுங்குகிறது. பிரிவினால் உண்டான மன ஆத்திரம், வேதனை எல்லாம் இருந்தது. அத்துடன் இருந்தது பயங்கரமான இந்த இளமை - இவைகளுக்கு அடிமையானேன். என் வல்லமையில் இல்லாத ஒரு பொல்லாத காலத்தில் என் மேல் வலை வீழ்ந்துவிட்டது. இதை முன்பே நீங்கள் அறிந்திருக்க வேண்டும்."

"சரி சரி: உன்மேல் குற்றமில்லை... என்று சொல்லிக்கொண்டு திரும்பவும் உரக்கச் சிரித்தான். பின்னர் மெனிக்கா. நீ மிருகம் போல் நடந்து கொண்டாய். அதன் பயனை அனுபவிக்க வேண்டுமென்பதும் உனக்குத் தெரியுந்தானே" என்றான். இப்பொழுது அவன் குரல் மாறி வேதனையுடன் இருந்தது.

"நான்தான் எதற்கும் தயாராய் இருக்கிறேனே"

"அப்படியானால் இந்த வீட்டை விட்டுப் போய்விடு. அது இருவருக்கும் நல்லது .

"சென்ற ஒன்றரை வருஷமாய் நான் அதற்கு மனதைத் தயார் செய்துவைத்திருக்கி றேன். வேறு வழியில்லை என்பதையும் நன்றாய் உணர்கிறேன். நான் தவறு செய்துகொண் டேனாகில் தண்டனையை அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். ஆனால் நான் உங்களை ஒன்று கேட்கிறேன். கருணை வைத்து... அவளால் பேசமுடியவில்லை. தொண்டை தளதளத்தது. என் பிழைகளை மன்னித்து விட்டதாக ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள். அந்தச் சொல், பட்டமரம் போல் தனித்து நிற்கும் எனக்கு ஒரு வேளை ஏதாவது நன்மை செய்யலாம்." என்றான்.

அவன் ஒன்றுமே பேசவில்லை; அவன் கண்களிலிருந்து எரியும்: கண்ணீர் பொங்கி வழிந்தது...

முத்துமெனிக்கா திடீரென்று பாய்ந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள் பின்னர் கீழே விழுந்து அவன் பாதங்களைத் தொட்டுத் தன் கைகளில் ஒற்றிக்கொண்டாள். அப்பொழுது அவள் உருக்கம் நிறைந்த குரலில் தன்னிக்கா என் மன்னிப்பு உனக்கு வேண்டாம். உலகம் உன்னை மன்னிக்க வேண்டும் முதல் அதைப் பெற்றுவா" என்றான்.

அவள் எழுந்து தன் குழந்தையை எடுத்து மார்புடன் அணைத்த ரணம் வீட்டிலிருந்து வெளியே காலடி வைத்தாள் நள்ளிரவு....

முத்துமெனிக்காவின் சிந்தனைகள் அறுந்து போயின. இப்பொழுது நிற்கும் நிலை, இடம், காலம், யாவும் நினைவுக்கு வரவே துரிதமாய் நடக்கத்தொடங்கினாள். மெல்லிய குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது. ஒரு முச்சந்தி குறுக்கே வந்தது. அதன் மத்தியிலே ஒரு பிரமாண்டமான அரசமரம். அதன் நிழலில் நிஷ்டைகூடும் நிலையில் ஒரு புத்தவிக்கிரகம்; வழிப்போக்கன் ஏற்றிப்போன ஒரு மெழுகுவர்த்தி எரிந்து அவியும் தறுவாயில் இருந்தது.

முத்துமெனிக்கா அந்த விக்கிரகத்தின் முன்னால் போய்நின்று அதையே உற்றுப் பார்த்த வண்ணம் நின்றாள். கண்கள் கலங்கிக்கொண்டிருந்தன. தன் குழந்தையை எடுத்து அந்த விக்கிரகத்தின் முன்னால் வைத்து கீழே வீழ்ந்து வணங்கினாள். பெருமானே, சாந்தமூர்த்தியே, இந்தக் குழந்தையை உனக்கு அடைக்கலமாய் ஒப்பிக்கிறேன். நான் காற்றுக்குப் பயப்படவில்லை மிருகங்களுக்கும் பயப்படவில்லை . ஆனால் என் இனத்தவராகிய மனிதரை நினைத்தாலே என் மனம் நடுங்குகிறது. இந்தக் குழந்தையை அவர்களிடமிருந்து காப்பாற்று...."

அத்தருணம் வெளியே செபாலிமலர்கள் மலர்ந்துகொண்டிருந்தன .....

முத்துமெனிக்கா தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு யுகம் யுகாந்தரமாய்ப் போய்க் கொண்டிருக்கும் அபாக்கியவதிகளான தாய்மாரின் அடிகளைப் பின்பற்றிச் சென்று கொண்டிருந்தாள். முன்னே குரூர உலகம்... வழியோ நெடுவழி.

ஈழகேசரி
05. 6.1942

சம்பந்தன்

பயிற்றப்பட்ட தமிழாசிரியரான க.ஞானசம்பந்தன் என்ற சம்பந்தன் இலக்கியத் துறையில் செய்த சாதனைகள் பலவாகும். ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மூத்த சிறுகதை ஆசிரியர்களில் ஒருவர். கலைமகள், கிராம ஊழியன், மறுமலர்ச்சி, ஈழகேசரி முதலான பத்திரிகைகளில் இருபத்திற்கு மேற்பட்ட சிறுகதைகள் எழுதியுள்ளார். அல்லயன்ஸ் வெளியிட்ட கதைக் கோவையில் அவரது "விதி" என்ற சிறுகதை இடம்பிடித்துள்ளது. சிற்பி வெளியிட்ட ஈழத்துச் சிறுகதை என்ற தொகுப்பில் அவரின் "மனிதன்" என்ற சிறுகதை வெளிவந்துள்ளது. வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சி சிறுகதைகள் என்ற தொகுப்பில் அவரின் "அவள், இரண்டு ஊர்வலங்கள்" ஆகிய சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அவரது சிறுகதைகளை செங்கை ஆழியானும் செம்பியன் செல்வனும் தொகுத்து அண்மையில் சம்பந்தன் சிறுகதைகள் என்ற தொகுதியாக வெளியிட்டுள்ளனர். சம்பந்தனின் உரைநடை தனித்துவமானது. கம்பீரமானது. சாகுந்தல காவியம் என்ற காவிய நூல் ஒன்றின் படைப்பாளி. அவரது "தர்மவதிகள்" என்ற நூல் நவீன இலக்கியத்திற்குக் கிடைத்திருக்கும் புத்திலத்தியமாகும். புனைகதை பற்றி நாம் கொண்டிருக்கும் வடிவில், உத்தியில், நடையில் அது மாற்றத்தைச் செய்திருக்கின்றது. - "பாசம்" அவர் ஈழகேசரியில் தொடராக எழுதிய நாவல் ஆகும். இவர் அமரராகிவிட்டார்.

- கல்யாணியின் கனவு
- தாராபாய்
- இரண்டு ஊர்வலங்கள்
- அவள்
- மதம்

கல்யாணியின் கணவன்

சம்பந்தன்

அம்மா கல்யாணி! நீ சின்னக் குழந்தையாக இருக்கும் போதே உனது தாய் மறைந்துவிட்டாள். அப்போது கசந்து போன என் வாழ்வுக்கு நீ தான் ஆறுதல் கொடுத்தாய். உன்னை வளர்த்ததில் ஏற்பட்ட திருப்தியே இத்தனை காலத்தையுங்கடத்த எனக்கு உதவி செய்தது. என்னைப் பார்; அனுபவித்த துன்பங்களின் சின்னங்களாகத்தோலில் எத்தனை மடிப்புக்கள் விழுந்துவிட்டன. மயிரும் பஞ்சாகி நரைத்து விட்டது. இவ்வளவுக்கும் நான் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. ஆனால், இப்பொழுது என் மனத்தில் ஓர் அலைப்பு ஏற்படுகிறது.

“உன்னிடத்தில் வசந்தத்தின் சோபை கவிந்துவிட்டது. பூத்துக் குலுங்கும் பொன் கொடி போல விளங்குகிறாய். ஆனால் நீ இதை உணரவில்லை. உலகம் பொல்லாதது. மனிதர்களோ ஆசைகாட்டி ஏமாற்றுபவர்கள். உன்னைக் கண்டும் ஒருவனுக்குத் துடிப்பு ஏற்படா விட்டால் அவனைத் துறவி யென்றுதான் சொல்ல வேண்டும். வெறும் வார்த்தைகளில், மோகப் பார்வையில் ஒரு போதும் உண்மையான சுகம் இருக்காது. உனக்கு அநுபவம் போதாதல்லவா?

மாதவ் ஒரு டாம்பீகப் பேர்வழி. அவனுக்குச் சுகம் அனுபவிப்பதிலேதான் காலமும் கருத்தும் போகிறது. அதனால் இருந்த சொத்துக்களையெல்லாம் இழந்துவிட்டான். அந்த ஆசைக்காரப் பையனுக்கு இனி அப்படி நடக்க வசதியுமில்லை. அடிக்கடி அவன் இங்கு வரும் போது என் மனம் துடித்தது. இவ்வளவு காலமாகியும் இதைச் சொல்ல எனக்கு மனம் வரவில்லை. சொல்லுவதனாலே துன்பப்படுவாயென்றே நினைத்தேன். இனி என்னாற் பொறுக்க முடியவில்லை. நீ அநுபவிக்கப் போகும் துன்பத்தின் சாயலை என் மனந்தொட்டுக் காட்டுகிறது.

“அம்மா! ஏன் பேசாதிருக்கிறாய்? நான் உன் மனத்தைப் புண்ணாக்க விரும்புவேனா? நீ எப்படியோ சுகமாக வாழ்வதைக் கண்டால்தான் என் ஆத்மாவுக்குச் சாந்தி கிடைக்கும். சாகுந் தருவாயிலிருக்கும் என்னை வருந்தக் கூடிய எதையும் நீ செய்து விடமாட்டாயென்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் நீ சிறியவள். உலகச் சுழற்றியில் மொத்துண்டு போவாய்.

“அவன் இத்தனை காலத்துள் எவ்வளவோ பெண்களுடன் குலாவியிருப்பாரென்றே தோன்றுகிறது. சந்தியில் - நடுவழியில் - ஊர் சிரிக்க உன்னைத் தவிக்க விட்டு அவன் போய் விட்டால் உனது நிலைதான் என்னவாகும்? நீ ஆதரவற்று அழுது துடிப்பாய். எனது இருதயத்தில் ஆணிகளை வைத்து அறைவது போல அது இருக்காதா? கல்யாணி! நீயே இதை யோசித்துப் பார். உன்னைவிட உலகததில் எனக்கு வேறொன்றுமில்லை. கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுக்க நீ சம்மதிப்பாயா? எனது சக்தியிழந்த கிழ இருதயத்தைத் தொட்டுப் பார். அது உனக்குக் கேட்கும்படி பேசுகிறது” என்று கோவிந்தபாபு அமைதியாகப் பேசினார்.

“அப்பா! ஏன் ஏங்கித் தவிக்கிறீர்கள். அவர் மிகவும் நல்லவர். நீங்கள் அப்படி நினைப்பதெல்லாம் பிசகென்றே எனக்குப்படுகிறது. நான் எதிர்த்து பேசுகிறேனென்று கோபிக்காதீர்கள். காலத்தின் கொடுமையால் எப்படியோ சொத்துக்கள் மறைந்துதான் போய்விட்டன. நேர்மையையும் குணங்களையும் விடவா சொத்துக்கள் உயர்ந்தவை? பயங்கரமாக உங்கள் மனத்தில் எழும்புகிற எண்ணங்களை அடக்க எனக்கு வழி தெரியவில்லை. நீங்கள் என்னை நடு வழியில் விட்டுச் சோதிக்கிறீர்கள். நான் இனி வேறொரு முடிவு செய்து கொண்டு வாழ முடியுமா? எத்தனையோ காலமாக அன்புப் பயிரை வளர்த்தேன். அது பிரயோசனந் தருகிற காலங்கிட்டும் போது இப்படியொரு புயக்காற்று ஏனோ வீசி அதைப் பிடுங்க நினைக்கிறது. நான் சிறியவள் தான். ஆனால் எனது வழியிற் பிசகில்லை. நீங்களும் உலகத்தைப் பார்த்து விட்டுச் சொல்லுகிறீர்கள். அதிலும் பிழையில்லை. அவர் உயிரில்லாத - ஆசை காட்டுகிற உலகத்தின் ஈழற்காற்றல்லர்.

“பதியென்று நினைத்த அவரைச் சோதிப்பதுதான் தர்மமாகுமா? நம்பிக்கைதானே உயர்வைக் கொடுப்பது. எனது நம்பிக்கை வெறும் பேச்சன்று. நானோ உங்களுக்குஞ் சொல்ல முடியாதபடி நடந்துவிட்டேன். அந்தப் பாசம் சென்மங்களோடு தொடர்புடையதாகவே எனக்குப் படுகிறது. அதுவே உங்களது அந்திய காலத்துக்கு மிகுந்த ஆறுதலைத் தரக்கூடியது. தாழ்வென்றுஞ் சோர்வென்றும் வாழ்வில் எத்தனையோ சம்பவிக்கின்றன. நல்லவர்கள் போல இருந்துவிட்டுப் பிறகு சந்தியிலே இழுத்து விடுகிறவர்கள் தான் அநேகர். என்னுடன் முதலிலே பழகும் பொழுதே அவர் வெகுளி போல இருந்தார். அவருடைய உண்மை

நிலையை இது காட்டுகிறதல்லவா? சொத்துக்கள் இல்லையென்று நீங்கள் சொல்லலாம். அதனாலென்ன? திரண்ட சொத்து ஒருவனுக்கு இருப்பதனாலேயே அவன் வண்டுபோல ருசி பார்க்க எண்ணுகிறான்.

"எனது வாழ்வுப் பிரயாணத்தையோ ஒருவரையுங் கேட்காமலேயே தொடங்கி விட்டேன். அது எப்படியோ பிசகுதான். உங்களுக்குத் துன்பஞ் செய்வது என் கண்களைக் குத்திக் கொள்வது போலவிருக்கும். ஆனால் அவரை மறக்கச் சொல்வது என் உயிரைப் பறிப்பது போலவே தெரிகிறது. உங்களை வருத்துகிறேனென்று கவலைப்படாதீர்கள். எல்லாவற்றையும் யோசித்துப் பாருங்கள்" என்று கல்யாணி பதில் சொன்னாள்.

கிழவருக்கு ஒன்றுஞ் சொல்லத தோன்றவில்லை. கல்யாணியைப் பார்த்துப் பார்த்துக் கசிந்தார். பிறகு "அம்மா! உன் பேச்சிலும் உண்மையிருக்கிறது. நான் சொன்னவற்றிலும் சில வேளை தப்பு இருக்கலாம். ஆனாலும் என் மனத்தை உனக்குத் திறந்து காட்டிவிட்டேன். இந்த உலகம் எனக்குப் பல ஏமாற்றங்களைக் காட்டி வருத்திவிட்டது. அதனாலேதான் இவற்றையெல்லாஞ் சொல்லிக் களையாறினேன். உனக்குக் கடவுள் துணை செய்வார்" என்று சொன்னார்.

கல்யாணி எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு மௌனமாகவேயிருந்தாள்.

2

மாதவன் பெரிய ஐஸ்வரியத்துக்குள்ளேதான் பிறந்தான். எப்பொழுதும் டாம்பீகத்திலே பிரியங் கொண்டவன் போலவே காணப்பட்டான். அவனது உடை பாவனைகள் அப்படி நினைக்கச் செய்தன. ஊரில் அநேகர் அவனிடம் பிரியம் வைத்திருந்தார்கள். எல்லோருடனும் சங்கோஜமின்றியே பழகி வந்தான். இளம் பெண்களும் அவனோடு வித்தியாசமாக நடந்துகொள்வதைக் காணமுடியாது.

அவனது பொருளெல்லாம் அநேகமாகப் போய்விட்டது. குடியிருக்கும் வீடும் இன்னுஞ் சில நிலங்களுந்தான் மிச்சமாக இருந்தன. இவற்றையிட்டு எப்போதேனும் அவன் சிந்தித்ததாகத் தெரியவில்லை. அவனது முகத்தில் துன்பத்தின் குறிகள் இதுவரை பட்டதேயில்லை.

"ஊரிலுள்ள பெண்களுக்கெல்லாம் காசை வாரியிறைத்து ஆண்டியாகிறான்" என்று சிலர் பேசிக்கொண்டார்கள். இந்த வார்த்தைகள் கோவிந்த பாபுவின் காதுக்கும் எட்டிவிட்டன. அவர் அவனுடைய வாழ்க்கையை ஊன்றிக் கவனித்தார். தங்கள் வீட்டில் எப்படிப் பழகுகிறானோ, அப்படியே பல வீடுகளில் அவனது வாழ்க்கை அமைந்திருந்தது. அவருக்கு ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. இளம் பெண்களுள்ள அநேக வறிய குடும்பங்களில் அவன் கால் வைத்த நாளிலிருந்து ஒருவித செழிப்புக் காணமுடிந்தது. எல்லோரும் மாதவனை அன்பாக விசாரித்து வந்தார்கள். இவையெல்லாம் பாபுவுக்குப் பெரிய ஏமாற்றத்தையே காட்டின. உண்மையில் இப்படியான நடத்தையுடையனென்று இவர் முதலில் நினைத்திருக்கவில்லை. இதை முன்னரே அறிந்திருந்தால் தங்கள் வீட்டில் காலெடுத்து வைக்கவும் விட்டிருக்கமாட்டார்.

"கல்யாணியோ அவன் மாயவலைக்குள் அகப்பட்டுப் போனாள். அவளுக்கு இதை எப்படிச் சொல்லுவது?" என்று கிழவர் வெகுநாளாகத் தவித்துக்கொண்டிருந்தார். சில வேளைகளில் தன் பெண் அவனோடு சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து. அதைக் கெடுக்கக்

கூடாது என்று சோதிப்பார். மாதவனுடைய போக்கு வரவரப் பயங்கரமாகவே தெரிந்தது. "இனியும் பொறுத்தால் கல்யாணியின் வாழ்வு மண்ணோடு மடிவதுதான்" என்று நினைக்கும் போது அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ஒருவாறு அடக்கிக்கொண்டு ஆறுதலாகவே பேசினார். ஆனால் கல்யாணியின் பதிலைக் கேட்டதும் அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அவளை வற்புறுத்தினாலும் பெரிய பிசகாகவே முடியும் போலிருந்தது. "எல்லாம் கடவுளது கட்டளைப்படி நடக்கிறது" என்று தனக்குள் நினைத்துக் கொண்டுதான் நான் சொன்ன வற்றிலும் சில வேளை தப்பு இருக்கலாம்" என்று பெருமூச்சு விட்டார்.

அப்பொழுது கல்யாணி மௌனமாகத்தான் இருந்தாள். ஆனால் அவள் மனத்தில் புயலடிக்கத் தொடங்கிவிட்டது. தந்தையின் பேச்சை முற்றாகத் தள்ள அவளுக்குச் சக்தி வர வில்லை. தன் நம்பிக்கையை இழந்துவிடவும் முடிய வில்லை. "அவருடைய வாழ்வில் நானே குறுக்கே போய்நின்று திருப்ப வேண்டும்" என்று நினைத்தான். அதற்காக அவனது வெளி வாழ்க்கையை அவதானித்ததோடு ஊர்க்கதைகளையும் மனத்தில் வாங்கி வைத்தாள்.

3

கோவிந்த பாபு குடியிருந்த தெருக்கோடியில் மகேந்திரதேவின் வீடிருந்தது. இவருக்குக் கமலமணியென்றொரு பேத்தியிருந்தாள்.அவள் கல்யாணியிலும் சிறியவள். அழகிலும் குறைந்தவளல்லள். அவள் தந்தை ஏதோ கோபத்தால் வெகுநாட்களுக்கு முன்னரே தேசாந்த ரம் போய்விட்டார். கமலமணி மகேந்திரதேவின் ஆதரவிலேயே இருந்து வளர்ந்தாள். காலஞ் செல்லச் செல்ல செல்வமும் அவர்களை விட்டு மறைந்து போய்விட்டது. அதனால் அவர்களது வீடு மங்கிப்போய் ஒளியிழந்து கிடந்தது.

மாதவன் எப்பொழுது அந்த வீட்டிலே கால் வைத்தானோ அன்று தொடக்கம் அவர்க ளிடத்தில் ஒரு குதூகலம் தோன்றிவிட்டது. அவனும் அடிக்கடி அங்கு போய்வந்தான். உறவு முறை கொண்டாடுபவர்களைப் போலவே வேற்றுமையின்றிப் பழகினான். ஜனங்களுடைய வாயிலும் இந்தக் கதை விழுந்து வளர்ந்து வந்தது. இப்படியே இன்னும் பல கதைகள் அவனைப் பற்றியெழுந்து ஊரார் வாயில் அடிபட்டன.

இவற்றையெல்லாம் கேட்டுக் கல்யாணி தன்மனத்தை நிறைத்து வைத்திருந்தாள். நாளுக்குநாள் அவள் மனத்திலே பெரிய பாரம் ஏறிக்கொண்டு வந்தது. உள்ளத்தில் ஒளி யின்றி எதற்காக இருக்க வேண்டும் என்பதுக்கிணங்கவே அவன் செய்கைகள் அமைந் திருநதன. மாதவன் வழக்கம் போலவே பாபு வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். அவன் வருகிற சமயங்களிலெல்லாம் வேலைகளைக் கவனிக்கச் செல்பவள் போலக் கல்யாணி மறைந்து விடுவாள். அல்லது போய்ப்படுத்துக்கொள்வாள். அவன் கல்யாணியின் உள்ளப் போக்கை இன்னும் நன்றாக அறியவில்லை. ஆனாலும் அவள் நடந்து கொள்ளும் மாதிரி சந் தேகத்தையே தந்தது. ஒருநாள் அதை வெளியாகவே கேட்டான். உள்ளே கிடக்கிற விஷத் தையெல்லாம் கொட்டிவிடுவதற்கு ஒரு சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டுதான் கல்யாணி இருந்தாள். இப்படி அவன் கேட்டதும் தன் முழுமனத்தையுந் திறந்து காட்ட முடியாதபடி ஆத்திரப்பட்டுப் பேசினாள்.

"என் விஷயத்தில் இவ்வளவு கவலைப்படுவது ஏனோ?"

"ஏனப்படிச் சொல்லுகிறாய்?"

"மிகவும் கவனமெடுத்துக் கொள்ள வேண்டிய இடங்கள் எத்தனையோ இருக்கவும் தவறுதலாக என்னைக் கேட்டுவிட்டீர்கள் என்றுதான் சொன்னேன்."

"கல்யாணி! நீ யாரைக் குறித்துப் பேசுகிறாய்?"

"உங்களுக்கு இதில் ஒன்றும் விளங்கமாட்டேனென்கிறதே! எத்தனை அபலைப் பெண்கள் சந்தி சிரிக்கும்படி அழுது தொலைக்கக் காத்துக் கொண்டி ருக்கிறார்களோ?"

"உண்மையாக எனக்கொன்றும் விளங்கவில்லை. தெளிவாகத் திறந்து சொல்லி விடேன்."

"மறந்துவிடக் கூடிய விஷயங்களைத்தான் வெளித்திறந்து சொல்ல வேண்டும். ஒவ் வொருநாளும் சிரத்தையாகக் கவனித்து வருவனவற்றையுமா மனிதர்கள் மறந்துவிடு வார்கள்? இப்படியாக என்னை ஏமாற்றுவதற்கு அனுபவித்துத்தானாக வேண்டும். மகேந்திர தேவின் வீடு உங்களுக்குச் சுவர்க்கம் போல இல்லையா? இதையும் மறந்துவிட்டீர்கள்? ஐயோ, பாவம்! ஒன்றுமே ஞாபகத்துக்கு, வராது."

"அதனால்....

"எனக்கொன்றுமில்லை. அந்தப் பேதைப்பெண் கமலமணியும் ஒரு நாளைக்கு ஏங்கியேங்கிக் கண்ணீர வடிக்கப் போகிறாளே, உங்களுக் கென்ன? அழகான - ஏமாந்து போகும் பெண்கள் வசிக்கும் குடிசைகள் இன்னும் அநேகமிருக்கின்றன!"

மாதவன் சிரித்தான். கல்யாணிக்கு ஒன்றுமே விளங்கவில்லை. பாம்பு போலவே அவள் சீறிக்கொண்டு நின்றாள். அப்போது கோவிந்தபாபுவும் உள்ளே வந்தார்.

"மாதவ்! நீ எங்களைச் சந்தியில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்க்கிறாய். உனக்குச் சிரிப்பு வருகிறது. எங்களுக்கு உயிர் துடிக்கிறது" என்று கோபமாகவே பேசினார். இதற்கு மாத வன் ஒரு பதிலுந் தரவில்லை. ஏனோ மறுபடியுஞ் சிரித்தான். கிழவருக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"மாதவ்! தெருவில் இழுத்துவிட்டு அவள் மானத்தைப் போக்க நீ இங்கு வரவேண்டாம்; போ" என்று சொல்லித்தானும் வெளியே போனார்.

அவன் கல்யாணியைப் பார்த்து, "நீயும் என்னை நம்பமாட்டேனென்கிறாய்!" என்று சொல்லிக் கொண்டே வெளியே போனான். கல்யாணி சிலைபோலச் சமைந்து நின்றாள். சிறிது நேரத்தாலேதான் அவளுக்குச் சுய நினைவு சரியாக வந்தது. பாபுவிடம் போய், "அப்பா! திடீரென்று அவரை வெளியே போகச் சொல்லிவிடடீர்களே, உங்களுக்கு அவ்வளவு கோபம் ஏன் வந்தது!" என்று பொருமினாள்.

கிழவருக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. பேசாமல் பெருமூச்சு விட்டுக் கொண்டு மட்டும் இருந்தார்.

4

மாதவன் வீட்டை விட்டு வெளியே போகும் போதும் கவலையற்றவனாகவே காணப் பட்டான். ஆனால் ஒரு வருஷமாகியும் அவனது காலடிகள் அந்த வீட்டுப் படியைத் தீண்ட

வில்லை கல்யாணியின் உள்ளத்தில் இருண்ட மேகங்கள் கவிந்துவிட்டன. உள்ளுக்கு உருகிக் கொண்டிருந்தாள். தன்னுடைய வாழ்வு இப்படிப் படு மோசமாகிவிடுமென்று அவள் ஒருக்காலும் நினைத்திருக்கவில்லை. மாதவனை வெகுகாலமாக நம்பியேயிருந்தாள். பாபு அவனைப் பற்றிச் சொன்ன போதுகூட எதிர்த்துப் பேசினாள். இப்பொழுது எல்லாம் சரியாகவே முடிந்ததைக் காண அவளுக்கு ஒன்றுஞ் செய்ய முடியாதிருந்தது. இன்றைக்கோ நாளைக்கோ உதிர்ந்துபோகும் பழம்போல இருந்த தந்தையார் தனக்காகப் படுந்துன்பத்தைப் பார்த்திருக்க அவளால் முடியவில்லை.

அடிக்கடி சோர்வடைகிற தன் மகளைப் பார்த்துக் கிழவரும் தவித்தார். மாதவனைப் பற்றி வெளியில் விசாரித்துப் பார்த்தார். அவன் ஊரை விட்டுப் போய் ஒரு வருஷத்துக்கு மேலாகிறதென்று மட்டுந் தெரியவந்தது. “இன்னும் எந்த ஊர்ப் பெண்களது ஜீவனை வாங்கப் போயிருக்கிறானோ?” என்று தனக்குள்ளேயே பல தடவை சொல்லிக்கொண்டார். கல்யாணியை அழைத்து, “அம்மா! ஏன் இத்தனை விசாரப்பட்டு வருந்துகிறாய்” அவனுடைய சுபாவத்தை நீயே நன்கு கண்டுவிட்டாய். ஊரைவிட்டுப் போனவன் இத்தனைக்கும் ஒருக்கால் உன்னை நினைத்திருப்பானென்று கருதுகிறாயா? எங்கேயோ போயிருந்து வலை வீசுகிறான் போலிருக்கிறது. எத்தனையோ கோடீஸ்வரர்கள் நல்லவர்கள் உன்னைக் கேட்கிறார்கள். அது எங்கள் செல்வப் பெருக்கைக் கருதித்தான் என்று நீ நினையாதே. உன் குணமும் அழகும் அமிருதம் போல உலகத்தில் கிடைக்கக் கூடியனவல்ல. உனது எண்ணத்தை இனி மாற்றித்தானாக வேண்டும். கமலமணியோடும் அவன் எவ்வளவு கலந்து பழகினான். அதுவும் ஊரறிந்த கதைதானே. அவளுக்குக் கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறுகின்றன. அவள்தான் இந்த உலகத்துக்கும் சரியானவள். உலகத்தில் வாழ வேண்டுமானால் அவளைப் போலத்தான் நீயும் இருக்க வேண்டும்” என்று சொன்னார்.

“அப்பா! கடவுள் எங்களைக் கடுமையாகச் சோதிக்கிறார். இடிந்துபோன என்மனத்தில் உங்கள் வார்த்தைகள் இவ்வளவு தூரம் உறுத்துகின்றனவென்று என்னாற் சொல்ல முடியவில்லை. என்னை அவர் மறந்தும் இருக்கலாம். ஆனால் நான் எப்படி மாறமுடியும். எப்பொழுதோ என் சரீரத்தை அவரிடம் ஒப்படைத்துவிட்டேன். இத்தனை நாளும் பொறுத்து விட்டீர்கள். எனது இருட்டுக்காலம் கெதியில் விடிந்து விடும். கொஞ்சம் பொறுத்திருங்கள் ” என்று கல்யாணி வேண்டினான்.

கல்யாணியின் வார்தைகளைத் தட்டிக் கழித்துவிட அவரால் முடியவில்லை. ஆனால் அவள் வாழாமல் அழுது கொண்டிருப்பதையும் பார்க்க முடியாதிருந்தது. ஒன்றுஞ் செய்யமுடியாது பாபு தவித்தார்.

5

கமலமணியின் விவாகம் பெரிதாக நடந்தது. “மாதவனே எல்லாவற்றையும் நின்று நடத்தினான். மாப்பிள்ளையும் அவனுக்கு வேண்டிய சிநேகிதன்தானாம்” என்று ஜனங்கள் சொன்னார்கள். “கல்யாணீ! அவன் உனக்குமொரு புருஷனைத் தேடிக் கொண்டுதான் வருவான் போலிக்கிறது” என்று சொல்லிப் பாபு சிரித்தார். அந்தச் சிரிப்பில் ஒரு வெறி கலந்திருந்தது. இதற்குக் கல்யாணி ஒன்றுஞ் சொல்லாமலே நின்றாள்.

கமலமணியின் கல்யாணத்துக்குப் பிறகு ஒருநாள், பொழுதும் விடிந்து வெகுநேரமாகி விட்டது. கிழவரும் கல்யாணியும் படுக்கையை விட்டு எழும்பவில்லை. கமலமணியும்

மாப்பிள்ளையும் பாபு வீட்டிற்குள் நுழைந்தார்கள். மாதவனும் பின்னாலோன் வந்தான். கமலமணி நேரே கல்யாணி படுத்திருந்த அறைக்குள்ளே போனாள். எதிர்பாராதபடி அவள் வருவதைக் கண்ட கல்யாணி மிரண்டு போனாள். அதனால் ஒன்றுமே பேசாது எழுந்து படுக்கையில் இருந்தாள். அவளது பரிதாபமான தோற்றத்தைக் கண்டு கமலமணி கலங்கி னாள். அவள் கல்யாணியின் கைகளைப் பற்றிக்கொண்டு, "அம்மா! தங்கள் பிரபு கொஞ் வும் பிழையில்லாதவர். எனது வாழ்வை பிரகாசிக்கச் செய்தவரும் அவர்தான். எனக்காகத் தான் வெளியூருக்குச் சென்று கஷ்டப் பட்டார். ஊரார் கதைகளை நம்பவேண்டாம். எல்லாவற றையும் மன்னித்து விடுங்கள்" என்று நமஸ்கரித்தாள். அப்பொழுதுதான் மாதவனும் உள்ளே நுழைந்தான்.

கல்யாணி உடனே எழுந்துவிட்டாள். ஆனால் திரும்பி நின்று விம்மி விம்மி அழுதாள். "கல்யாணி! உன்னை ஏங்கி உருகும்படி செய்த இந்தப் பாவியை உன் இஷ்டப்படியே தண்டித் துக்கொள்" என்று சொல்வதுபோல மாதவன் தலைவணங்கி நின்றான்.

கலாநிதி 1948.01

தாராபாய்

சம்பந்தன்

பிரதாப்ராவ், சிவாஜி மகாராஜாவின் மெய்காப்பாளருள் ஒருவன். அவனுக்கு இன்னும் 25 வயது நிரம்பவில்லை. வாட்போரிலும், மற் போரிலும் அவன் நிகரற்றவன். மார்பிலும் முகத்திலும் உள்ள தழும் புகள் அவனுக்கு வீர முத்திரைகளாக அமைந்திருந்தன. அந்த மராட் டிய வீரனது முகத்தில் ஸ்ரீதேவி எப்பொழுதும் நடமாடிக் கொண்டே யிருப்பாள். அவனுடைய வீரப்பிரதாபங்களைப் புகழாத வீரர்களே யில்லை. சிவாஜி மகாராஜா அடைந்த வெற்றிகளின் போதெல்லாம், அவன் படைகளின் முன்னணியில் நின்று திகழ்ந்து கொண்டி ருந்தான்.

சிம்மகட் (துர்க்கம்) பகைவர்களால் அணுகமுடியாதது. சிவாஜி யின் வீரர்கள் பலத்த சண்டையின் பிறகே அதைச் சுவாதீனப்படுத்திக் கொண்டார்கள். படைகளின் முன்னணியில் நின்று சலிக்காமல் யுத்தம் செய்த சில வீரர்களை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி சொல்லி, மகாராஜா பொன்னும் மணியும் அள்ளிக்கொடுத்தார். பிரதாப் மட்டும் பேசாமல் நின்றான். மகாராஜா அவனை நோக்கி "பிரதாப் நீயும் கொஞ்சக்காலம் ஓய்வெடுத்துக்கொள். வேண்டும் போது அழைக்கிறேன்" என்றார். தாய்

நாட்டின் சேவையிலும் மகாராஜாவின் வெற்றிகளிலுமே கண்ணாக இருந்த அந்த வீரனுக்கு ஓய்வெடுத்துக் கொள்வதில் கொஞ்சங்கூடப் பிரியம் வரவில்லை. அதனால் தலை குனிந்த படியே பேசாமல் அவன் நின்றான். மகாராஜா மறுபடியும், "பிரதாப் நீ போய் வா" என்றார். அவன் சிவாஜி மகாராஜாவை வணங்கிவிட்டுப் புறப்பட்டான்.

ஜாவல்லிக் கோட்டைக்குச் சமீபத்தில் காயத்திரி நதி ஊற்றெடுத்துப் பாய்கிறது. அந்த நதியின் உற்பத்தி ஸ்தானத்திற்கு அருகில் மலைகள் பத்தி பத்தியாகத் தொடர்ந்து செல் கின்றன. அங்கு ஒரு மலைச்சாரலில் பிரதாப்ராவின் வீடு இருந்தது. அவனுக்கு 15 வயது இருக்கும் போது தாராபாயை மணஞ் செய்து வைத்தார்கள். அதைப் பற்றிய நினைவே அவ னுக்கு இல்லை. ஜாவல்லிக் கோட்டையைச் சிவாஜி மகாராஜா சந்தாராவிடமிருந்து சுவாதீனப் படுத்திக் கொண்ட காலத்திலேயே பிரதாப் அவரது சேனையிற் சேர்ந்து தொண்டு புரியத் தொடங்கினான். அதன் பிறகு இப்பொழுது தான் அவனை வீட்டுக்குப் போகும்படி மகாராஜா நிர்ப்பந்தம் செய்தார். இதற்கிடையில் எப்படியோ பத்து வருடங்கள் கழிந்தோடின. இந்த அவ லங்களில் போர் வீரர்களோடு சேர்ந்து கொண்டு பல யுத்தங்களில் புலி போலப் பகைவர்களின் சேனைகளுக்குள்ளே புகுந்து புகழ்பெற்றான். எப்படியோ யுத்தங்களைக் கண்டு கழித்து விட்டான். சிவாஜியின் அன்பும், வீரமும், தேசப்பற்றுமே அவனை இழுத்துக் கட்டி வைத்துக் கொண்டிருந்தன. ஆகையினால்தான் மகாராஜா 'ஓய்வெடுத்துக் கொள், போ! 'என்று இரண் டாம் முறை வற்புறுத்தும் வரைக்கும் பேசாதிருந்தான்.

ஜாவல்லியை நோக்கி மலைப்பாதையிலே அவன் தன் குதிரையைத் தட்டி விட்டான். மனித சஞ்சாரமற்ற பாதைகளில் குதிரை போய்க் கொண்டி ருந்தது. கடந்த யுத்தங்களின் நினைவுகளே அவன் மத்தியில் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விழுந்து கொண்டிருந்தன. எத்தனை வீரர்களின் உடம்புகளைத் துண்டு துண்டாக அவன் வெட்டி மகிழ்ந்திருக்கிறான். குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடந்த பகைவர்களின் கூக்குரல் இப்பொழுதும் அவன் செவிகளில் கேட்டுக்கொண்டிருந்தது. இப்படியே பிணக் குவியல்கள் கலந்த நாட்கள் எல்லாம் அவன் மனக்கண் முன் வந்து நினைவுத் திரையாக விழுந்து கொண்டிருந்தன. தன் புயங் களையும், வடுக்களையும் தொட்டுப் பார்த்துக் கொண்டே அந்த வழியைக் கடந்து சென்றான். வெகுதூரத்துக்கப்பால் தெரியும் தான் பிறந்து வளர்ந்த மலைப்பிரதேசம் அவனுக்கு ஓர் உற்சாகத்தைக் கிளப்பிவிட்டது. யுத்த வெறி குடிகொண்டிருந்த இரும்பு போல வைரம் பாய்ந்திருந்த அவனது மனத்தில் இப்பொழுதும் இயற்கையின் இனிமை புக ஆரம்பித்தது.

தாரா வெளி மகவில் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். குதிரையின் காலடிச் சத்தம் கேட் டதும் திரும்பினாள். யுத்த உடையணிந்து பிரதாப் கம்பீரமாக நின்றான். ஒருவரை ஒருவர் திடீரென்று அடையாளங் கண்டுகொள்ள முடியவில்லை. தாரா இப்பொழுது குழந்தையாக இல்லை. வனம் அவளை சந்து எழில் செய்து கொண்டிருந்தது. அவள் அங்கங்கள் இளமை யின் எழில் நாதத்தை வீசின. கண்களில் இத்தகையதென்று சொல்ல முடியாத ஒரு ஜோதி வந்தது. அவளைக் கண்டதும் முதலில் திகைத்து நின்றான் பிரதாப். விரைந்து உள்ளே போய்த் தன் வாளை எடுத்து அவளிடம் கொடுத்தான். தாரா இரு கரங்களையும் நீட்டி அதை வாங்கிக்கொண்டு நமஸ்கரித்தாள். அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு உள்ளே சென்றான் பிரதாப். யுத்தங்களில் அடிபட்டதால் ஏற்பட்டிருந்த களைப்பு அவனை விட்டுப் பறந்து போய் விட்டது. யுத்தங்களின் சின்னங்கள் மட்டும் முகத்திலும் மார்பிலும் புயங்களிலும் கொஞ்சங்

கூட அழியவில்லை. ஆனால் மனத்தில் மட்டும் அவற்றின் அடையாளமே இல்லாமல் மறைந்துவிட்டது. அதற்கு மாறாகக் கருணையும், அன்பும் குமுறிப் பாய்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு நிமிஷமும் அவளைத் தன்னுடன் வைத்துக் கொண்டு பிரியாதிருந்தான். இந்த நாட்களிற் பிரதாப் கந்தர்வர்களது உலகத்தில் வாழ்ந்து கொண்டிருந்தான். மலைச்சாரல்களி லும் நதிக்கரைகளிலும் அவளுடன் கூடிக் குழந்தை போல விளையாடித் திரிந்தான். இவ்வளவு காலமும் மரமும் செடியும் நிறைந்து கிடந்த மலைப்பிரதேசம் புதிய ஒளி பெற்றுப் பிரகாசித்தது. செங்குத்தான மலைப்பாறைகளில் ஏறும் போதும் இறங்கும் போதும் அவளைத் தன் கைகளில் ஏந்திச் செல்வான். அந்தச் சமயங்களில் அவள் நாணத்தால் ஒடுங்கிச் சிவந்து பொலிவுற்று விளங்குவாள். அவன் அதைக் கண்டு இன்பவெறி கொள்வான். தன் மனதில் கோயில் கொண்டிருந்த சிவாஜி மகாராஜாவையும், யுத்த களங்களையும் மறந்து போய்த் தாராபாயுடன் பல மாதங்களை நிமிஷங்களாகக் கழித்தான்.

தக்ஷிணத்தில் சிவாஜியின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டேயிருந்தது. பீஜபூர் ராஜ்யத்தின் பல கோட்டைகளைச் சிவாஜி வென்று அடிமைப்படுத்திக் கொண்டார். பீஜபூர் சுல்தானான அலி அதில் இவற்றைக் கண்டு கொதிப்படைந்தான். சிவாஜியை எப்படியேனும் கொன்று ஒழித்து விட வேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு வரவர மேலோங்கி வளர்ந்து வந்தது. சுல்தான் படைத் தலைவர்களையும் உபேதார்களையும் அழைத்து ஒரு சபை கூட்டினான். சபையி லுள்ள எல்லோர் கண்களிலிருந்தும் நெருப்புப் பொறி பறந்தது. சுல்தான் கட்டிடமே தகர்ந்து விழுந்துவிடும்படி கர்ஜித்துக் கொண்டு இருந்தான். ஒவ்வொருவரும் சுல்தானைச் சமாதானஞ் செய்ய எண்ணித் தத்தமக்குப் பட்டவற்றைச் சொன்னார்கள். சிவாஜியிடம் அவர்களுக்கு உள்ளூரப் பயம் நிறைந்திருந்தது. சபையில் அமைதி நிலை கொள்ளவிடாமல் சுல்தான் அடிக்கடி குழப்பிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது, சமஸ்தானத் தலைமைக் காரியஸ்தன் அப்ஸில்லா கான் எழுந்து, "பாதுஷா" குகைக்குக் குகை புகுந்து வெளிப்படும் அந்த மலை எலி (சிவாஜி)யை நானே சென்று பிடித்துக் குதிரையோடு கட்டி ஊரார் பிடிக்கும்படி கொண்டு வருகிறேன் என்று கூறி னான். கான் நல்ல கட்டு வாய்ந்த உடலமைப்புள்ளவன். போர்த் தொழிலில் மிகவும் ஈன உற வாடிக் கொள்ளும் அதிபாதகன். பீஜபூர் கல்தானின் பேகத்திற்கும் நெருங்கிய உறவினன் சுல் தான் மனம் குளிர்ந்தது. கானுக்குத் துணையாக 12,000 குதிரை வீரரைத் தயார் செய்தான். வலிமை கொண்டு திரண்ட குதிரைப் படையோடு கான் புறப்பட்டான். வழியிலுள்ள சில கோட்டைகளை வென்று சுவாதினப்படுத்தினான். பல ஊர்களையும், கோவில்களையும் சூறையாடிக் கொண்டு வயா நகரில் வந்து தங்கி னான்.

அப்பொழுது சிவாஜி மகாராஜா பெருமை பொருந்திய பிரதாப்கட் துர்க்கம் வந்து தங்கி யிருந்தார். ஒரு தூதுவனை அனுப்பி சிவாஜியை வஞ்சனையால் வரச் செய்து லேசாகச் சிறைசெய்து விடலாமென்று கான் நினைத்திருந்தான். ஆனால் சிவாஜி அதை அறிந்து கொண்டார். அதனால் கானே பிரதாப்கட்டுக்கு வர நேர்ந்தது. கானைக் கொன்று அவன் கடையையும் அழிக்க வேண்டிய ஏற்பாடுகளை மகாராஜா துரிதமாகச் செய்தார். ஓய் வெடுத்துக் கொள்ளும்படி விடப்பட்ட வீரர்களிடம் தூதுவரை அனுப்பினார்.

ஒரு நாள் மாலை நேரம் சூரியன் மலைச் சிகரங்களில் மறைந்து கொண்டிருந்தான். மலைச்சாரல் ரம்மியமாகப் பொலிவு பெற்று விளங்கியது. பறவைகள் ஆரவாரஞ் செய்தன.

தூரத்திலிருந்து வரும் அருவிகளின் சல சலப்பு மெதுவாகக் கேட்டுக் கொண்டிருந்தது. பிரதாப்ராவ் தாராவையுங் கூட்டிக் கொண்டு காயத்திரியின் கரையில் வந்து சேர்ந்தான். அங்குள்ள இயற்கையின் சௌந்தர்யத்தில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். பிரதாப் தாராவைத் தன்னருகில் அணைத்துக்கொண்டு விளையாடினான். தங்களைச் சூழ்ந்துள்ள இயற்கையின் பொழிலை ஒவ்வொன்றாக அவளுக்குக் காட்டிக் கொண்டிருந்தான். முன்பெல்லாம் யுத்த பூமியில் வாளும் கையுமாகத் திரிந்து உயிர்க்கொலை புரிந்து மகிழ்ந்த அந்த மராட்டிய வீரனது உள்ளத்திலே கவித்துவமும், அமைதியும் ததும்பி வழிந்தன. அவர்கள் வெளியுலகத்தை மறந்து இன்பத்தில் லயித்திருந்தார்கள்.

மலையில் அடியிலிருக்கும் ரஸ்தா மலைமேல் இருப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். இதனால் ரஸ்தாவின் குதிரையில் வந்து கொண்டிருந்த ஒருவனை அவர்கள் கண்டார்கள். சிவாஜி மகாராஜாவின் கட்டளைப்படி தன்னை அழைத்துச் செல்வதற்காகவே அவன் வந்திருக்கின்றான் என்பதைப் பிரதாப் தெரிந்து கொண்டான். திடீர் என்று அவன் முகத்தில் இருள் குவிந்து கொண்டது. சடுதியில் ஏற்பட்ட இம்மாற்றத்தைத் தாரா நன்கு கவனித்துக் கொண்டாள். பிரதாப் அவளை அழைத்துக் கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான். போகும் பொழுது அவன் உள்ளத்தின் வேட்கை தானாகவே வெளிக் கிளம்பிவிட்டது.

"தாரா! மகாராஜாவே அவனை என்னிடம் அனுப்பியிருக்கிறார். இனி மகாராஜாவிடம் போக எனக்குப் பிரியமில்லை."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்"

"ஐயோ! இனி எனக்கு யுத்தஞ் செய்ய இஷ்டமில்லையே!"

"தாய்நாட்டின் கௌரவத்தைக் காப்பது கடமையல்லவா?"

"அதற்கு நான் என்ன செய்வது?"

"உடனே மகாராஜாவிடம் புறப்பட்டுச் சென்று அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டியதுதான்."

"தாரா! உன்னைப் பிரிந்தால் எனக்குச் சோர்வு ஏற்பட்டுவிடும். எப்படி யுத்த பூமியில் நினைத்துப் போர் செய்ய என்னால் இயலும்?"

"தாங்களுடன் கூட நானும் வருகிறேன்."

"நீ அங்கே வந்து என்ன செய்வாய்?"

"தங்களுடன் கோட்டை வரையிலும் வருகிறேன். யுத்தம் முடிந்ததும் உடனே சந்திக்கலாம். கடமையைச் செய்யத் தவறினால் நமக்குச் சுகம் ஏது? தாய் நாட்டின் சாபத்துக்கு இலக்காக வேண்டுமல்லவா?"

இதற்குள் வீட்டை அடைந்து விட்டார்கள். தாராவின் வார்த்தைகளைத் தட்ட அவனுக்குச் சக்தி வரவில்லை. அதனால் அவள் பேச்சுக்குக் கட்டுப் பட்டான். தூதன் சிவாஜி மகாராஜாவின் முத்திரையிட்ட ஓலையைப் பிரதாப்ராவின் கையில் கொடுத்தான். மூவரும் குதிரைகளிற் புறப்பட்டார்கள். வழியெல்லாம் தாரா அவனுடைய மனத்தில் உற்சாகம் உண்டாகும்

படியான பேச்சுக்களைப் பேசிக்கொண்டே போனாள். அவனுடைய மனத்தில் அடிக்கடி சபலம் தட்டிக் கொண்டிருந்தது. வரவர அமைதியற்றவனாகவே காணப்பட்டான். பிரதாப்கட் நெருங்கிவிட்டது. தாராவை ஒரு பந்தோபஸ்தான இடத்திற்கு கொண்டு போய் விட்டு அவன் மகாராஜாவிடம் புறப்படத் தயாரானான். தாரா அவனது உடைவாளை எடுத்து "பவானி தேவி! எங்களுக்கு வெற்றியும் இன்பமும் தந்தருள்" என்று வணங்கிப் பிரதாப்ராவின் கையில் அதைக் கொடுத்து உற்சாகமாக வழி அனுப்பினாள்.

அடுத்த நாளே அப்ஸீல்லாகான் பிரதாப் கட்டுக்கு வருவதாக இருந்தான். இதற்குரிய ஏற் பாடுகள் மகாராஜாவின் கட்டளைப்படி நடந்துகொண்டிருந்தன. மகாராஜா படைத் தலை வர்களை அழைத்து. கானின் படைகளை எதிர்க்க வேண்டிய வசதிகளைச் சொல்லிக் கொண் டிருந்தார். மகாராஜாவைக் கண்டதும் பிரதாப் வணங்கி நின்றான். அவர் அவனை அன் போடு வரவேற்று ஒரு பெரும் படையை நடத்தும் பொறுப்பை அளித்ததைப் பெருமையாக ஏற்றுக் கொண்டான்.

மறுநாள் கான் தன் பெரிய படையுடன் வந்து கொண்டிருந்தான். முன் பேசிக்கொண்டி ருந்தபடி அப்படை துர்க்கத்துக்கு வெளியில் நிறுத்தப்பட்டிருந்து. கான் கள்ள நெஞ்சுடனே சில மெய்க்காப்பாளர்களோடு உள்ளே புகுந்தான். ஆனால் அவன் மறுபடியும் அதனின்று வெளி யேறி சிவாஜியுடைய படையை எதிர்க்க வேண்டியதற்கான குறிப்பொன்று துர்க்கத்திலிருந்து எழுந்தது. இந்த எதிர்பாராத நிலைமையைச் சமாளிக்க முடியாமல் கானினுடைய சைனியம் புறங்காட்டியது. ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அநேகர் சிவாஜியின் வீரர்களுக்குத் தலைவணங்கி நின்றார்கள்.

பிணங்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. மராட்டியர்களுடைய உடைகளும் வாள்களும் ரத்தந்தோய்ந்து பிரகாசித்தன. வெற்றியின் அறிகுறியாக முழங்கும் முரசுகளின் ஓசை வெகு தூரம் வரைக்கும் கேட்டுக்கொண்டிருந்தது. பிரதாப் வெற்றி கொண்டு நின்ற தனது படையைக் கோட்டையை நோக்கி நடத்திக் கொண்டு வந்தான். வீரர்கள் வெற்றியின் சந்தோஷத்தால் வெறிகொண்டு ஆரவாரஞ் செய்து குதிரைகளை நடத்திக் கொண்டிருந்தார்கள். பிரதாப் ராவின் குதிரை எல்லோருக்கும் முன்பு கம்பீரமாக நடந்து சென்றது. சிறிது தூரத்தில் ஒரு மராட்டிய இளைஞன் வந்துகொண்டிருந்தான். கையில் வாளும், வீரக் கழலும் கச்சையும் வழிந்து கொண்டிருக்கும் ரத்தமுடைய அவன் தோற்றமும் அந்த யுத்த பூமியை அழகு செய் தது. யுத்தத்திற்பட்ட அடியினாற் தளர்ந்து தடுமாறிக் கொண்டே வந்து விழுந்து விட்டான். பிர தாப் குதிரையை விட்டு இறங்கிச் சென்று அவனை எடுத்து நிறுத்தினான். சிறிது நேரம் வரை பிரதாப் அசையாதிருந்தான். அவன் சரீரம் நடுங்கியது. கண்களில் நீர் நிறைந்து வழிந் தோடியது. சடுதியில் எங்கும் அமைதி நிலவியது.

பிரதாப் யுத்த வீரன் வேஷத்தில் விளங்கிய தன் காதலியைக் கைகளில் ஏந்திக் கொண்டு துர்க்கத்தை நோக்கி நடந்தான். தாராவின் கையிலுள்ள வாள் இன்னும் நழுவிவிடவில்லை. அவள் கண்களினின்றும் நீர் ரத்தத்தோடு வழிந்தோடிக் கொண்டிருந்தது. சிவாஜி தூரத்தில் வந்து கொண்டிருந்த பிரதாப்ராவின் தோற்றத்தைக் கண்டு எல்லோரையும் விலக்கிக் கொண்டு அவனுக்கு அருகில் வந்து நின்றார். அவன் மகாராஜாவை வணங்கித் தன் காத லியை மடியில் வைத்துக் கொண்டு விம்மினான். தாரா சிறிது கண்ணை விழித்துப் பார்த்

தாள். தன் கையிலிருந்த வாளைச் சிவாஜியின் பாதங்களில் வைத்து "மகாராஜா! தங்களுக்குப் பவானி வெற்றியைக் கொடுப்பாள்" என்றாள். கணவன் பக்கம் திரும்பி "நான் என் கடமையைச் செய்து விட்டேன். தாங்களும் தவறிவிடலாகாது. நாம் மராட்டியர்" என்று சொல்லித் தன் பதியை அணைத்துக் கொண்டு கண்ணை மூடினாள். சிவாஜி மன்னர் கண்களும் கலங்கின.

அவள் ஞாபகத்துக்காகத் தான் சிவாஜி அங்கே பவானிக்கு ஓர் ஆலயம் கட்டுவித்தார்.

கலைமகள், 1938

இரண்டு ஊர்வலங்கள்

சம்பந்தன்

மரணத்தோடு போராடிக்கொண்டிருந்த சமயத்திலும் விதி அவளுடைய படுக்கையை அந்த அரசமரத்தடியிலிருந்து மாற்றி வைக்க விரும்பவில்லையென்றே சொல்லவேண்டும். அவளுக்குப் பக்கத்தில் ஸ்வாமி மட்டும் உட்கார்ந்திருந்தான். சற்றுத் தொலைவில் ஒரு கிழவன் விழுந்து கிடந்தான். மற்றவர்களை அங்கே காணவில்லை. ஸ்வாமி அடிக்கொருதரம் அவளைக் கூப்பிட்டுப் பார்த்தான். ஒருவேளை பிரக்ஞையற்றுக் கிடக்கும் அந்தப் பெண் திடீரென்று எழுந்திருந்து பேசுவாள் என்று எண்ணினான் போலும்!

இப்படி ஆகிவிடுமென்று அவன் கனவிலும் எண்ணியிருக்கவில்லை. சாயந்தரமெல்லாம் படுத்தபடியே கிடந்தாளேனும் நன்றாகப் பேசினாள். அப்படி வெகுநேரமாக அவளோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டு "இன்றைக்குக் கொஞ்சம் ஓடிப்போய் கஞ்சி வைத்துக் கொடுக்கட்டுமா" என்று கேட்டுக் கொண்டே எங்கோ ஓடிப்போய், கொஞ்சம் அரிசியும் கொண்டு வந்தான். அப்பொழுதும் அயர்ந்து கிடப்பது போலவே அவள் காணப்பட்டாள். ஆனால் கஞ்சியை வைத்துக் கொண்டுவந்து எழுப்பிப் பார்த்த பொழுதோ...!

வழக்கம் போல அங்கே வந்து விழுந்து கிடக்கும் மற்றப் பிச்சைக்காரர்கள் எல்லோரும் அன்று அந்த நகரத்துப் பிரபு ஒருவருடைய பெண்ணின் கல்யாண வைபவத்தைப் பார்க்கப் போய்விட்டார்கள். எல்லா ஜனங்களுக்குமே அது ஒரு ஆனந்தமான சம்பவமாக இருக்கும் போது, சாதாரணமான அந்த ஏழைகளுடைய நிலையைச் சொல்லவேண்டியதில்லை. ஆயிரக்கணக்காக ரூபாய்களைச் செலவு செய்து கொட்டகைகள் போட்டு அலங்காரங்கள் செய்து இருந்தார்கள். வாத்தியக்காரனும் மற்றும் வித்துவான்களும் பல தேசங்களிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்தனர். நண்பர்களென்றும் பந்துக்களென்றும் வந்து குவிந்த கும்பலே பார்ப்பதற்கு அதிசயமாக இருந்தது. இந்தக் காட்சிகளைப் பார்ப்பதைவிட்டு, இருள்சூழ்ந்த அந்தமரத்தடியிலே விழுந்து கிடக்க யார்தான் விரும்புவார்கள்? அல்லாமலும், அவள் சுக மாகக் கிடந்ததை நேராகப் பார்த்து விட்டே அவர்கள் மாலையில் அங்கே ஓடிச்சென்றார்கள். ஆனால், ஸ்வாமியும் அந்தக் கிழவனும் அவளை விட்டுப் போக விரும்பவில்லை.

ஸ்வாமி கொஞ்சநாட்களுக்கு முன்புதான் இந்தக் கூட்டத்தாரகளோடு வந்து சேர்ந்தான். அதற்கு முன்பெல்லாம் உணவுக்காகத் தேசாந்தரஞ் செல்லும் பறவைகள் போல எங்கெங்கோ சுற்றி அலைந்து கொண்டிருந்தான். அப்பொழுது நிரந்தரமாகச் சில மாதங்களுக்கேனும் அவன் ஒரு இடத்தில் நிலைத்து இருந்ததில்லை. இங்கு வந்தபிறகே அவனது இயல்பான பழக்கம் மாறியது. உயர்ந்த அந்தஸ்துக்களில் இருந்து கொண்டு வாழுகிற மனிதர்களை விட இந்தக் கூட்டத்தவர்களிடம் அமைந்திருந்த அற்புதமான இயல்புகளே அப்படி அவனை ஓடவிடாமல் தடுத்து வைத்திருந்ததென்று சொல்ல வேண்டும்.

காலையிலே அவர்கள் அந்த இடத்தைவிட்டுத் தனித்தனியாக ஒவ்வொரு திசையால் போவார்கள். மாலைக் காலமானதும் திரும்பிவந்து கூடுவார்கள். எல்லோரும் வந்து சேர்ந்ததும், இன்றைக்கு யாராவது வயிற்றுக்குக் கிடைக்காமல் வந்தீர்களா? என்று விசாரித்து வைத்திருக்கிறவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவார்கள். பிறகு எல்லோருமே சேர்ந்துகொண்டு தங்கள் துன்பங்களை மறந்து சிறு குழந்தைகள் போல விளையாடுவார்கள், பாடுவார்கள். இந்தச் சமயங்களிலெல்லாம் அவள் எல்லோருடைய கண்களின் முன்பும் நிற்பாள். அவளுடைய ஒவ்வொரு செய்கையும் மற்றவர்களை வசீகரித்து ஒரு புதுமையின் சுகத்தில் ஆழ்த்திவிடும். அவளுக்கு யாரிடமும் வித்தியாசம் பாராட்டி நடக்கவுந் தெரியாது. எல்லையற்ற இருட்கடலிலே தோன்றிய லட்சியதீபம் போலவும் பரந்த பாலைவனத்தின் நடுவிலே கிடந்த அமிர்தமயமான தடாகம் போலவும் அவர்களது ஆழ்ந்த துயர்நிலையில் அவள் ஒரு தன்னம்பிக்கையை உண்டுபண்ணிக் கொண்டிருந்தாள். அதாவது, வாழ்விலே சிரித்துப் பழக்கமில்லாத அந்த ஏழைகளை அவளுடைய ஒவ்வொரு செய்கையும் தங்களை மறந்து ஆரவாரஞ் செய்யும்படி உற்சாகமூட்டிக் கொண் டிருந்தது.

சில சமயங்களிலே அவள் ஒரு “தர்பார்” நடத்துவதுண்டு. ஸ்வாமி முதன் முதல் அங்கே வந்த அன்றைக்கும் அது நடந்தது. எல்லோரும் அவளைச் சுற்றி உட்கார்ந்தார்கள். அவளுடைய கண்கள் நாலாப்பக்கமும் ஒருமுறை சுற்றி வந்தன. புதிதாக அன்றைக்கு வந்து சேர்ந்த ஸ்வாமியைக் கண்டதும் “ஓகோ! நமது கூட்டத்துக்குள் உத்தரவில்லாமலே யாரோ ஒரு புதியவன் வந்து நுழைந்து விட்டதாகத் தெரிகிறதே! உடனே அந்த மனிதனைப் பிடித்துவந்து என் முன்னால் நிறுத்துங்கள்” என்ற கட்டளை பிறந்தது. ஸ்வாமி சிரிப்பை அடக்கிக் கொண்டு “நானே வந்து விடுகிறேன்” என்று சொல்லியபடி அவளுக்கு முன்னால் வந்து நின்றான்.

“வேண்டுமானால் உத்தரவில்லாமல் வந்து புகுந்த குற்றத்தை மன்னிக்கிறோம். ஆனால், மன்னிக்க முடியாத வேறொரு குற்றமுண்டு!”

“புதியவனானாலும் கட்டளைப்படி நடக்க உத்தரவை எதிர்பார்க்கிறேன்.”

“நமது கூட்டத்துள் நுழைகிற எந்த ஆசாமியும் குறைந்தபட்சம் இரண்டு மூன்று கிழிச லில்லாத உடையை உடுத்திருக்கலாகாது. நீ அதற்கு மாறாக நடந்துவிட்டாய் அல்லவா? ஏன் நீங்களே சொல்லுங்கள் தண்டிக்காமல் விடலாமா?”

“விட முடியாது. விட முடியாது” என்று ஏக காலத்தில் பல குரல்கள் எழுந்து கேட்டன. அவ்வளவில் அவன். “உங்களுடைய சட்டந் தெரியாமல் இந்த அபராதத்தைச் செய்து விட் டேன். இதோ நானாகவே கிழித்துவிடுகிறேன்” என்று சொல்லியபடி கிழிப்பதற்குத் துணியைப் பிடித்தான். உடனே “மன்னித்துக் கொண்டோம். இனிமேல் இவ்விதமான பிழைகள் வராமற் பார்த்துக்கொள்ள வேண்டும்” என்ற தீர்ப்புக் கூறப்பட்டது.

அதோடு அன்றைய நியாயசபை கலைந்துவிட்டது. பிறகும் வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருந்துவிட்டு, ஒவ்வொருவராக அங்கங்கே விழுந்து தூங்கிவிட்டார்கள். ஸ்வாமி மட்டும் ஒரு புறத்திலே கிடந்து யோசித்துக் கொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் என்றைக்குமே கண்டிராத ஒரு இன்ப வெள்ளம் கரைபுரண்டோடிக் கொண்டிருந்தது. அதனால் அன்று வெகு நேரத்தின் பிறகே அவனுக்கு நித்திரையும் வந்தது. தினமும் அவர்களுடைய வாழ்வு இப்படியே இருந்ததால் நாளைக்கு என்ற விசாரம் யாரிடமும் இருந்ததில்லை. உணவு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ஒரே மாதிரியே சலன மற்ற நிலையில் காணப்பட்டார்கள். எந்த நிலையிலும் தங்களைத் தேற்றிக் கொள்ளக் கூடிய வீரம். அவர்களது பிறப்புரிமை யானது என்று கூடச் சொல்லலாம். எல்லோராலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட போதிலும், அவர்க ளிடம் தன்னம்பிக்கையிருந்தது. மானமற்ற ஈனப் பிச்சைத் தொழிலையே செய்தாலும், அவர் களே அந்த மானத்தின் உயிர்நிலையாக இருந்தார்கள் எனலாம். வாழ்க்கையின் சுகங்களை கனவிலும்காணாமல்துன்பச்சூழல்களில்அடியுண்டும், நிமிர்ந்துநிற்கும்அவர்களைப்போன்ற மனிதரது மூச்சிலிருந்தே புதுயுகத்தின் உயிர் தோன்றப் போகிறதல்லவா?

இந்த இடத்தில் ஏற்பட்ட கூட்டுறவை எல்லாம் தனக்குக் கிடைத்த ஒரு பாக்கியமாகவே கருதினான். மற்றவர்களைவிட அவனுக்கு உயர்ந்த ஒரு அந்தஸ்தும் கிடைத்தது. அதுவும் அவளுடைய கடாட்சத்தினாலேயே கிடைத்ததென்று சொல்ல வேண்டும். வாழ்க்கை என் னும் முள் நிறைந்த பாதையிலே காலமெல்லாம் நடந்ததில் சலிப்படைந்த அவனுக்கு அவள் ஒரு மருந்தாகவே விளங்கினாள். ஒரு நாள் அவர்களது சம்பாஷணைக்குள் இந்த பிச்சையெ டுக்கிற தொழிலைப் பற்றிய பேச்சும் வந்தது. அப்போது அவள் தன் மனதில் வெகுகாலமாக வேரூன்றியிருந்த இந்த அபிப்பிராயத்தையும் சொன்னாள்.

“வெட்கமின்றி எல்லோரிடமும் யாசிக்கிறோம். வயிற்றுக் கொடுமையினாலே கேட்கிறார்கள் என்று எண்ணாமல் ஜனங்களும் வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்கள். கடவுள் தந்த உடம்பு இருக்கும் போதாவது வேலை செய்து இந்த வயிற்றை நிரப்பக் கூடாதா என்று அடிக்கடி தோன்றுகிறது.”

சிறிது நேரம் வரை சும்மா இருந்துவிட்டே அவன் பதில் சொன்னான்.

"நீ சொன்னதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். உண்மையில் அது நல்லதுதான். ஆனால்... எல்லோருக்கும் வேலை கிடைப்பது. பிறகு வேலைக்குக் கூலி கிடைப்பது இவையெல்லாம் எனக்குப் பெரிய பிரச்சினைகளாகவே தோன்றுகின்றன.

அவள் இதைக் கேட்டதும் ஒரு மாதிரிச் சிரித்துக் கொண்டு "நீங்களும் ஒரு பெரிய கோழை என்றே சொல்வேன். ஆனால் உங்களைப் பாரக்கும்போது அப்படிச் சொல்ல முடிய வில்லை" என்றாள்.

"அனுபவமில்லாத ஒரு பெண் சொல்லக் கூடியதைத்தான் நீயும் சொல்லுகிறாய்"

"என்ன உலகத்தில் வேலை கிடைப்பதென்பது பெரிய பிரச்சினையா? நன்றாகச் செய்கிறவர்களை எல்லோருமே வரவேற்கத் தயாராக இருக்கி றார்கள்."

"சரி நான் இன்றையிலிருந்து அப்படியே செய்கிறேன். ஆனால் நீ..."

"நானும் அப்படித்தான் செய்வேன்..."

"அதற்கு நான் சம்மதிக்கமாட்டேன்".

"அப்படியானால் நான் நெடுகிலுமே பிச்சைதான் எடுக்க வேண்டுமாக்கும்?

"எனக்குக் கிடைப்பதில் ஒரு பகுதியைக் கொடுகிறேனே!"

அவனைப் பற்றி நன்றாகத் தெரிந்திருந்தும் இதைக் கேட்டவுடன் கொஞ்சம் யோசித்து விட்டே 'என்ன?" என்று கேட்டாள்.

"நான் வெகு காலமாகக் கூலி வேலை செய்து சீவித்த ஒருவன் என்பதை நீ ஞாப கப்படுத்திக் கொள்ளவேண்டும். முதலாளிகள் என்று இருக்கிறவர்கள் ஓயாமல் வேலை வாங்கிக்கொண்டும், அதற்குரிய சம்பளத்தைக் கொடுப்பார்களா? மனிதனிடம் நியாயப்படி கொடுக்கிற மனமிருந்தால் ஒருவனும் கோடிஸ்வரனாய் வந்திருக்க முடியாது. பத்து ரூபா செலவு செய்ய வேண்டிய ஒரு வேலையை பத்துப் பணத்தோடு செய்கிற ஒருவனையே ஒவ் வொரு மனிதனும் தேடிக் கொண்டிருக்கிறார்களென்பதை நீ அறிவாயா? அந்தக் காலத்தில் வேலை செய்து செய்து எலும்பாகிச் சாகிற நிலைக்கு வந்துவிட்டேன். பிறகு. வேலை செய் யவும் முடியாது போய்விடவே இந்தப் பிச்சையெடுக்கிற தொழிலிலிறங்கினேன். என்னுடைய இந்த அனுபவத்தைக் கொண்டே "நீ செய்ய வேண்டாம் என்று தடுத்தேன். உன்னாலும் அப்படிப் பாடுபட முடியாது.

"எப்படியிருந்தாலும், ஒவ்வொருவரும் தங்கள் வயிற்றுக்குத் தாங்கள் தானே பாடுபட்டுத் தீர வேண்டும்?"

"உண்மைதான். ஆனால், ஒரு குழந்தை தன் சாப்பாட்டுக்குச் சம்பாதித்தேயாக வேண்டுமென்று அதன் தாய் எவ்வளவு ஏழையானாலும் விரும்புவாளா?"

அவளுக்கு இந்த வார்த்தைகள் ஒருவித இன்பங் கலந்த மயக்கத்தையே உண்டு பண் ணின. ஆயினும் சாதுரியமாகப் பதில் சொன்னாள்.

"தானே பாடுபட்டுக் கொடுக்கும் பருவம் வந்த பிறகும், வாழ்க்கையிலே அடிபட்டுச் சோர்ந்து போன ஒரு தாயிடம் எதிர்பார்ப்பது எந்தப் பிள்ளைக்கும் ஏற்ற தல்ல. அல்லாமலும் தன் குழந்தைக்கு சம்பாதிக்கத்தக்க பருவம் வந்த பிறகும், அடைத்து வைக்கிற ஒவ்வொரு தாயும் தன் குழந்தைக்கே பெரிய தீமை செய்தவளாகிறாள்."

"நியாயம் வேறு, தாயினுடைய உள்ளம் வேறு. அது சட்டங்களுக்குள் கட்டுப்படக் கூடியதுமல்ல."

மேலே அவளால் ஒன்றுமே பேசமுடியவில்லை. உண்மையான அன்பு கனிந்த அவனது முகத்தைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதிலே கூட அவள் ஆனந்தம் அடைந் தாள். இதுவரை காணாத ஒன்றைக் கண்டது போல அவளுடைய உள்ளம் உள்ளே குமுறிக் கொண்டிருந்தது. பாவம் அவளுக்குத் தன் தாயின் அன்புகூட இப்படித்தான் இருக்குமென்று தெரியாது. அதனாலேதான் புதிதாகக் கிடைத்த இந்த இனிமை அவளுக்கு அமிர்த மயமா கவே தெரிந்தது. அவனும் உள்ளபடி ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்து கொண்டே தன் உள் ளத்தைத் காட்டினான். ஆயினும் அது இன்ன பாதையிலேதான் ஓடி வருகிற தென்று அவளால் நிதானிக்க முடியவில்லை.

இயற்கையிலே துள்ளி விளையாடுஞ் சிறுவர்கள் போன்ற அவளுடைய சுபாவம், நாளடைவில் அடங்கிவிட ஒருவித அமைதியான நிலை தானாகவே தோன்றி நிலைத்து விட்டது. அவளிடத்து தோன்றிய இந்த மாறுதல் மற்றவர் களுக்குக் கூட ஆச்சரியத்தையே உண்டு பண்ணியது. அந்தக் கிழவன் மட்டும் அம்மா. நீ அவனோடு சுகமாக வாழ்வதைப் பார்த்துவிட்டுத்தான் நான் சாக வேண்டும் என்ற அடிக்கடி வெளியாகத் திறந்து சொல்லு வான். முதலே தாத்தா! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா" என்று கேட்டவள், வரவரச் சிரித்து மௌனமானாள். நியாயமின்றி மற்றவர்கள் இப்படியே நினைக்கின்றார்கள் என்பது தெரிந்திருந்தும் அதை வரவேற்பதற்குத் தயாராகவே அவளுடைய நெஞ்சு திருந்தி விட்டது. ஆனால்..." காலக்காற்று திடீரென்று வேறு திசை நோக்கிச் சுழன்றடிக்கத் தொடங்கிவிட்டது. ஒரு காரணமுமின்றி அவளுக்கு ஏதோ ஒன்று சொல்ல முடியாதபடி வந்தவிட்டது. இத்தனை நாளும் வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அலைந்தபோது கூட வராத அந்த வரத்து ஒருவன் பக்குவஞ்செய்ய வந்த பிறகே எங்கிருந்தோ ஓடிவந்து பிடித்துக் கொண்டது. ஏன் சாயந்தரம் அவன் அரிசிக்காக போகும்வரைக்கும் சௌக்கியமாகத் தானே இருந்தாள்! படுத்தபடி கிடந்த போதிலும் வேடிக்கையாகப் பேசினாள் ;சிரித்தாள்! "கஞ்சி வைத்துத் தரட்டுமா?" என்று கேட்டபோது "இந்த நேரத்தில் எங்கே அரிசி கிடைக்கப் போகிறது" என்று அவனுக்காகத் தன் அனுதாபத்தைக் கூடத் தெரிவித்தாளே! இப்போதோ...

பிரக்ஞையற்றுக் கிடக்கும் அந்தப் பேதையின் தலையைத் தன் மடி மீது வைத்தபடியே அவனும் உணர்ச்சியற்ற நிலையிலே உட்கார்ந்திருந்தான். அப்பொழுது தான் ஒவ்வொருவராக அவர்களது கூட்டத்தவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். வெளியில் நிறைந்திருந்த இருளின் எதிரொலிபோல எல்லோருடைய இதயங்களும் பயங்கரமாக இருண்டு கிடந்தன. ஆனால் அந்த இருளின் கோரமான சிரிப்புப் போலவே தூரத்திலே வந்து கொண்டிருந்த கல்யாண ஊர்வலத்தில் தீபங்கள் பிரகாசித்தன. வாத்தியங்களின் ஓசையும் சனங்களின் ஆரவாரமும் ஒன்றாகி விதி தூரத்தில் நின்று கொண்டு தன் வாயைத் திறந்து ஊளையிடுவது போலவே கேட்டது.

மூச்சு நின்றபிறகும் அவளுடைய உடலைத் தன்மடியிலிருந்து இறக்கி வைக்க விரும் பாதவன் போலவே ஸ்வாமி விறைத்துப் போயிருந்தான். அவனுடைய கண்களிலிருந்து ஆறாக ஒழுகிய நீர் உயிரற்ற அவள் முகத்தின் வழியா ஓடிக்கொண்டிருந்தது.

கல்யாண ஊர்வலம் அந்த மரத்தடிக்குச் சற்றுத் தொலைவில் வந்ததும் திடீரென்று ஒரு பரபரப்புண்டாகிவிட்டது. எல்லோரும் நின்று ஒருவரோடொருவர் ஏதோ பேசிக் கொண் டார்கள். பிறகு ஒரேயொரு மனிதன் மட்டும் அந்த இடத்தை நோக்கி வந்தான். அவனுடைய உடம்பு ஆத்திரத்தினால் ஆடிக் கொண்டிருந்தது. அந்த மங்கிய மர நிழலிலே கூடத் தெரிந்தது. வார்த்தைகளும் துடித்துக் கொண்டே வெளிவந்தன. ஆனால் எட்டி நின்று பேசினான்.

"யாரெடா அங்கே! ஊர்வலம் வருவது தெரியவில்லையா? எப்படித் தெரியும்! எந்த நாயின் பிணத்தை வைத்துக்கொண்டு வழியிலே அபசகுனம் மாதிரி நிற்கிறீர்கள். எல்லோருக்கும் அந்தக் கதி வாரமுன் இழுத்துக்கொண்டு ஓடிப்போகிறீர்களா அல்லது...?"

ஸ்வாமி அப்படி இரைந்து கொண்டு நின்ற அந்த மிருகத்தின் பக்கமாக ஒருமுறை திரும்பிப் பார்த்து விட்டுத் தன் உயிரினுமினிய அவளது உடலைத் தூக்கித் தோள்மீது வைத்துக்கொண்டு ஏதோ ஒரு திசையை நோக்கி நடந்தான். அவளைச் சேர்ந்த மற்றவர்களும் ஒருவர்பின் ஒருவராக அவனைத் தொடர்ந்து நடந்தார்கள்.

அந்த உயர்வான மனித ஜாதியின் ஆடம்பரமான கல்யாண ஊர்வலம் நகரத் தொடங் கியபோது. அவர்களால் ஒதுக்கித் தள்ளப்பட்ட அந்த ஏழை மனிதர்களின் அபசகுணமான மரண ஊர்வலமும் இருளோடு ஐக்கியப்பட்டு மறைந்துவிட்டது.

ஒரு வேளை நவயுகத்தைச் சிருஷ்டிக்க எண்ணிய விதியின் ஆரம்ப ஊர்வலங்க ளாகவும் இவை இருக்கலாமல்லவா?

மறுமலர்ச்சி
பங்குனி - 1946

"அவள்"

சம்பந்தன்

எப்பொழுது ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறினாய்?'

"நானா?"

"இல்லை; எப்போது உன்னை வெளியே தள்ளி விட்டார்கள்?

"நேற்று"

"இதுதான் உனக்கு முதல் பிரசவமா?"

"ஆமாம், இதுவே முதலும் கடைசியுமென்று எண்ணுகிறேன்."

பெரியவள் சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இதுவே முதலும் கடைசியுமாக இருக்கலாமென்றாயே அதை எப்படி உன்னால் சொல்லிவிட முடியும்?"

"ஏன் முடியாது?"

அவ்வளவோடு நிறுத்திவிட்டு அவள் ஒரு நீண்ட மூச்சு விட்டாள். மற்றவள் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும் ஆரம்பித்தாள்.

"உனக்கு இப்பொழுது என்ன வயது?"

"பதினெட்டு"

"புருஷன் உன்னை விட்டுவிட்டானா?"

"இல்லை"

"செத்துப்போனா?"

"இல்லை"

அவளுடைய தொண்டை கரகரத்தது.

"அப்படியானால்?"

அவள் ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருந்தாள். மற்றவள் அவ்வளவில் நிறுத்தி விட விரும்பவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டேயிருந்தாள்.

"ஏன் பேசுகிறாயில்லை? ஒருவேளை அவனை உனக்குத் தெரியதாக்கும்!"

"என்னை அப்படிப் பிசகாக நீ எண்ணக்கூடாது."

அவளுடைய வார்த்தைகளில் ஒருவித ரோசமும் ஆத்திரமும் கலந்து காணப்பட்டது.

மற்றவள்தான் இப்பொழுது பேச்சற்றிருந்தாள். அவளே தொடர்ந்து பேசினாள். 'அவரை எனக்கு நன்றாகத் தெரியும். பல வருஷங்களாகத் தெரியும். வருஷக்கணக்காக அந்த வீட்டிலேயே சீவித்திருக்கிறேன்.'

"அப்படியா?"

அவள் பிறகு மௌனமாகி இரண்டொரு பெருமூச்சு மட்டும் விட்டாள்.

"உனது வாழ்வைக் கெடுத்தவன் எவனானாலும், அவனை "அவர்" என்று சொல்ல உனக்கு வெட்கமாயில்லை?"

"பழக்கத்தினாலே சொல்லிவிட்டேன். உண்மையில் மரியாதை செய்ய வேண்டும் என்று நான் கனவிலும் எண்ணுவதேயில்லை."

"அவன் இப்போது எங்கே இருக்கிறான் என்று நீ அறிவாயா?"

"ஆமாம் நன்றாகத் தெரியும். ஆனால் அதைக் கேட்காதே!"

"ஏன் அதை மறைக்க வேண்டுமென்று விரும்புகிறாய்?'

"அதனால் யாருக்குமே பிரயோசனம் கிடைக்காது."

"நீ உனக்கு எப்படிப் பிரயோசனம் அற்றவளோ, அப்படியேதான் எனக்கும் பிரயோசனப் படமாட்டாய் என்பதை நான் தெரிந்து கொண்டேன்."

"எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நீ யார் என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

"நீ புத்திசாலியானால் இதற்குள்ளாகத் தெரிந்திருக்கமுடியும் இல்லா விட்டாலும் என்னை நன்றாகக் கவனித்துப் பார்!"

அப்பொழுது அவள் மடியில் கிடந்த அந்தச் சிசு வீரிட்டழுதது. அதைப் பார்த்துக்கொண்டே பெரியவள் மீண்டும் சொன்னாள்.

"இதையாவது ஆஸ்பத்திரியில் விட்டு வரவேண்டும் என்று உனக்குப் படவில்லையே"

"என்னுடையது என்ற இது ஒன்றுதானே இருக்கிறது. இதையும் இழந்து விட்ட பிறகு நான் எதற்காக வாழவேண்டும்?"

"நான் அல்லது என்னைப் போன்ற எவளும் உன்மாதிரி எண்ணுவதில்லை."

அவள் இந்தப் புதுமாதிரியானவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் வெயில் மரக்கிளைகளைக் கடந்து அவர்களைச் சுடத் தொடங்கியது. இரண்டு பேரு மாகவே எழுந்து மரத்தடியிலே போய் உட்கார்ந்தார்கள். குழந்தை அந்த ஏழைத்தாயின் அணைப்பிலே பாலைக் குடித்தபடி அயர்ந்து கிடந்தது. அவர்களுடைய பேச்சு மேலும் தொடர்ந்து சென்றது. பெரியவளே பிறகும் ஆரம்பித்தாள்.

'உனக்கு வேறு யாரும் இல்லையா? இனி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாய்."

'எங்கேயாவது வேலை செய்து தானே வயிற்றை வளர்க்க வேண்டும்?'

'இந்தக் குழந்தையையும் வைத்துக்கொண்டு அப்படிச் செய்ய முடியுமா?

பெரியவள் மிகுந்த பரிவுடனேயே இதைக் கேட்டாள். சிறிது நேரம்வரை அங்கே மௌனமே நிலைத்திருந்தது.

'உனக்குக் குழந்தைகள் இல்லையா?'

இதற்கு ஒருமாதிரியான தொனியிலே அந்தப் பெரியவள் பதில் சொன்னாள். பதிலும் மிகவும் சுருக்கமாகவேயிருந்தது.

'இருக்கலாம்'

இந்தப் பதில் அவளுக்குத் திகைப்பேயே உண்டுபண்ணியது. அதனால், மறுபடியும் அவளே,"இருக்கலாம்" என்றால் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே" என்று நிறுத் தினாள்.

'ஆமாம், அவைகள் 'எங்கே' இருக்கின்றன. ஒருவேளை இல்லை தானோ என்றும் என் னால் நிச்சயமாக சொல்ல முடியாது.'

'பிள்ளைகளைப் பெற்ற எந்தத் தாயும் உன்னைப் போல இருக்க முடியாதென்றே எனக் குப்படுகிறது. என்னளவில் நிச்சயமாகச் சொல்லமுடியும். என்னால் முடியாது"

"நீ சொல்லுவது வேறு உலகங்களுக்குப் பொருத்தமாக இருக்கலாம். ஆனால்? நம்முடைய இந்த உலகம் இருக்கிறதே. இதற்கு முற்றிலும் பொருந்தாது. நானும் முதலில் உன் மாதிரியே தயங்கினேன். கொஞ்சக் காலத்தின் பிறகே கேவலமான இந்த உலகத்தைப் பழி வாங்க வேண்டுமென்று முடிவு செய்து கொண்டு எல்லாவற்றையும் உதறித் தள்ளினேன். என் ஆசை உண்மையில் நிறைவேறிவிட்டது. பணம் படைத்த மிருக இச்சை கொண்ட மனிதப் பிசாசுகள் தங்கள் இச்சைக்கு ஏழைகளாகிய எங்களைப் பலியெடுக்கிறார்கள். பிறகு பாவப் பெயரையும் சூட்டி உதைத்து தள்ளிவிடுகிறார்கள். அந்த நிலையில் தாசீ என்ற அவப்பெயரோடு அலைவதைத் தவிர வழியுண்டா? நீயே யோசித்துப்பார்! தாசியாகவே இருக்காமல் தாசி என்ற பெயர் கேட்ட ஒருத்தி ஏன் அந்தத் தொழிலில் இறங்கக்கூடாது? உண்மையில் உன்னுடைய கதையோடு சேர்த்து இதை யோசித்துப்பார். நான் சொல்வதில் எவ்வளவு 'சரியிருக்கும் என்பதை உணர்வாய்!"

அவள் மௌனமாகவே கேட்டுக் கொண்டிருந்தாள். பெரியவள் தொடர்ந்து பேசிக் கொண்டே போனாள்.

"மனுஷ உள்ளமே இல்லாத உலகத்தில் நீ மட்டும் எதற்காக அந்த உள்ளத்தை வைத்துக்கொண்டு அழவேண்டும்?"

குழந்தை திடீரென்று வீரிட்டு அழுதது. அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு மறுபடியும் பாலை ஊட்டினாள் அந்தத் தாய். அப்பொழுது எதைத்தான் கண்டாளோ, மற்றவளுடைய கண்ணும் கலங்கியது. ஒருவேளை தன் குழந்தைகளினுடைய நினைப்புக்கள் தோன்ற அவளுள்ளமும் அலறியிருக்கக் கூடும். சிறிது நேரம் வரை ஒருவரும் பேசவில்லை. வெயில் காய்ந்துகொண்டே இருந்தது. முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு. 'சாப்பிட்டாயா?' என அந்தப் பெரியவளே மற்றவரைப் பார்த்துக் கேட்டாள்.

"நேற்று இரவுக்குப் பிறகு இல்லை"

"காலையிலிருந்து ஒன்றும் அகப்படவில்லையா?"

ஒருபதிலுமே கிடைக்கவில்லை.

"நான் இன்று உனக்கு விருந்து போடப்போகிறேன்" என்று மறுபடியும் அவள் தொடங்கினாள்.

உடனே "எதற்காக அப்படி விரும்பினாய்?" என்று கேட்டாள் அந்தப் புதிய தாய்.

"உன்னைப் போலவே ஒரு காலத்தில் நானும் தெருத்தெருவாக அலைந்திருக்கிறேன். இதைத்தான் காரணமாகச் சொல்ல முடியும். ஆனால் என்னோடு வந்து என்னைப் போலவே வாழ்க்கையை நடத்து என்று சொல்ல நான் விரும்பவில்லை. நீ மட்டும் விரும்பினால் தாராளமாக வரலாம். என்னால் இயன்ற உதவிகளைச் செய்து வழிகாட்டுவேன்"

பேச்சு முடிந்ததும் அவள் மௌனமாக இருந்தாள். மற்றவளும் சும்மா இருந்தாள்.

பேசினவளே மறுபடியும் தொடங்கினாள்.

"நேற்று வழக்கத்துக்கு மாறாக ஒருவன் நிறையப் பணந்தந்தான். அவனும் எங்கோ சூதில் அடித்துக்கொண்டு வந்ததுதானே! அவ்வளவும் இங்கே தான் இருக்கிறது. அதை உனக்கே கொடுத்துவிடப் போகிறேன்."

அவள் பணத்தை எடுத்தாள். அதற்குள் 'எனக்கு ஒரு ரூபா மட்டும் கொடுத்தால் போதும்' என்றாள் மற்றவள்.

"எப்படி உனக்கு அது போதுமென்று எண்ணினாய்?"

"ஒரு தடவை நிறையச் சாப்பிட ஒரு ரூபா போதுமல்லவா? அவ்வளவு தான் இனி எனக்குத் தேவை என்று முடிவுசெய்துவிட்டேன்."

"நல்லது உன்னுடைய எந்த முடிவுக்கும் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை" என்று சொல்லிக் கொண்டே ஒரு ரூபாவை மட்டும் எடுத்துக் கொடுத்து விட்டு, "நான் போய் வரட்டுமா?" என்று எழுந்தாள் அந்தப் பரோபகாரி.

குழந்தையை மடியிலே அணைத்து வைத்தபடியே நமஸ்கரித்து விட்டு, 'கடவுளுடைய கணக்குப் புஸ்தகத்தில் உன்னைப் பற்றி நிச்சயமாக நன்றாகவே எழுதப்படும்' என்றாள் அந்த அபலை.

"அந்தக் கடவுள் செத்துப் போனான் என்ற கதை நீ இதுவரை கேட்ட தில்லையாக்கும்!" என்று ஒரு மாதிரிச் சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு அவள் நடந்து மறைந்தாள்.

எங்கோ சாப்பாட்டை முடித்துக்கொண்டு மறுபடியும் அந்த மரத்தடிக்கே வந்து அவள் உட்கார்ந்தாள். அவளுடைய கண்கள் அடிக்கடி மேற்கே சரிந்து செல்லும் சூரியனையே பார்த் துக் கொண்டிருந்தன. அஸ்மித்ததும் குழந்தையையும் ஏந்திக் கொண்டு நடக்கத் தொடங் கினாள். இளைத்து வலுவற்ற அந்த நிலையிலும் அவளால் வேகமாக நடக்க முடிந்தது. நடுச்சாமமாவதற்குள் தான் போகவேண்டிய வெகுகாலம் நடக்க முடிந்தது. பழகின அந்த இடத்துக்குப் போய்விட்டாள். ஒருநாள் எந்தத் தோட்டப் பக்கத்தால் எந்த நேரத்தில் வெளியே றினாளோ, அதே பாதையால் அதே நேரத்தில் உள்ளே நுழைந்தாள். வீட்டிலிருந்த எல்லோ ரும் நன்றாகத் தூங்கிவிட்டார்கள். அங்கே படுத்துக்கிடந்த அவள் வளர்த்த நாய் மட்டும் ஒரு முறை உறுமிவிட்டு அடையாளங் கண்டுகொண்டு ஓடிவந்து வாலையாட்டிற்று. அதைத் தடவிக் கொடுத்து விட்டு நடந்தாள். நாயும் பின்னாலே நடந்தது.

அந்தப் பக்கத்தில் உள்ளே நுழைய ஒரு கதவு மட்டும் இருந்தது. சில சமயங்களில் அதையும் பூட்டிவிடுவார்கள். அந்த நினைவு வந்ததும் மெல்ல அதில் கையை வைத்தாள். அது தானாகவே திறந்து வழிவிட்டது. நேராக உள்ளே சென்றாள். அவள் கால்கள் மாடிய றையை நோக்கி நடந்தன.

அங்கேதான் அவள் இந்த நிலைக்குக் கொண்டு வந்த உத்தம பிரமச்சாரி தூங்குவது வழக்கம்.

ஒரு முறை அறையின் வாயிலுக்கு வந்ததும் அவள் உள்ளம். உயிர் எல்லாம் கலங்கிய நிலைக்கு வந்தன. பிறகு குழந்தையை தன் அணைப்பிலிருந்து எடுத்து முத்தமிட்டாள்.

மெல்ல முனகியது. அவள் கண்களிலிருந்து தாய்மையின் உதிரம் போல் கண்ணீர் பீறிக் கொண்டு வந்தது. ஆயினும் அவள் தைரியத்தை இழந்துவிடவில்லை. தான் கிழித்து வைத் திருந்த பாதிப்புடவையை விரித்து குழந்தையைக் கீழே படுக்க வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

திடீரன்று கதவு திறக்கப்பட்டது. 'யாரது?' என்று கேட்க வாயெடுத்தவன், அவளைக் கண்டதும் திகைப்படைந்து நிறுத்திக்கொண்டான்.'

அதற்குள் அவள் திரும்பினாள். அவனோ அப்பொழுதும் பேசவிரும்பாதவன் போல வாயடைத்து நின்றான். ஆனால் அவள் பேசினாள்.

"உனது மானத்தைக் காப்பாற்றவே ஒரு நாள் வெளியேறினேன். உன்னுடையது அதோ இருக்கிறது உன் வீட்டிலிருந்த அடிமை ஒருத்தி பெற்றதானாலும் அது உனது சொத்து ஏன்? மறுக்கிறாயா?"

அவன் அப்பொழுதும் மரமாகவே நின்றான். அவள் தலையை ஒரு முறை தூக்கி அவ னைப் பார்த்துவிட்டுக் கீழே கிடந்த குழந்தையையும் பார்த்தாள். அந்தப் பார்வையில் அவனை நடுங்கச் செய்யும் ஏதோ ஒரு சக்தியிருந்தது.

அவள் திரும்பி இரண்டு படி இறங்கிய பிறகே அவனால் பேச முடிந்தது. வந்த இரண் டொரு வார்த்தைகளும் கிணற்றினுள்ளேயிருந்து கேட்பது போலவே ஒலித்தன.

"நீயும் இங்கேயே இருக்கலாம்."

"நான் அதற்காக இந்த நேரத்தில் வரவில்லையே?"

நிதானமாகவும் உறுதியாகவும் அவள் இதைச் சொல்லிவிட்டு நடந்தாள். அவளுடைய நடையிலும் ஒரு கம்பீரம் இருந்தது.

தோட்டத்தின் எல்லையைக் கடந்து தெருவுக்கு வரும் வரை அந்த நாயும் அவளுடன் சென்று திரும்பியது.

தெருவில் நின்று அந்த வீட்டை ஒருமுறை பார்த்தாள். குழந்தையின் மிருதுவான கீச்சுக் குரல் மட்டும் கேட்டது. உடனே கைகளினால் காதுகளை அடைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினாள். அந்த நடை தனக்கே தெரியா ஏதோ ஒரு உலகத்தை நோக்கி நடக்கிறாள் என்பதையே காட்டிற்று.

மறுமலர்ச்சி
கார்த்திகை - 1947

மதம்

சம்பந்தன்

லீமா!"

அவள் அசையவில்லை. சந்திரநாத் அவளைப் பார்த்தபடியே நின்றான். நிமிஷங்கள் ஒவ்வொன்றாகக் கழிந்துகொண்டே இருந்தன. அவள் தலையில் முக்காடு விலகி ஒரு புறத்திலே கிடந்தது. முதல் நாள் வாரிவிட்ட கூந்தல் கலைந்து பறந்து கொண்டிருந்தது. முகத்தை மேசையோடு சேர்த்தபடி கவிழ்ந்திருந்தாள். ஆயினும் அவள் விம்மி விம்மி அழுது கொண்டிருப்பது நன்றாகவே தெரிய வந்தது. சந்திரநாத் மறுபடியும் "சலீமா!" என்று கூப்பிட்டான். அப்பொழுது அவனுடைய குரலிலும் ஒரு வித கரகரப்பு தட்டியது. சில நிமிஷங்கள் கழிந்தன. அவள் அசையாமல் அப்படியேதான் இருந்தாள். மூன்றாம் முறையாகவும் கூப்பிட்டுக் கொண்டு அவன் மெல்ல மெல்ல நடந்து அவளுக்கரு கில் வந்தான். அப்பொழுதுதான் அவள் தலையைத் தூக்கினாள். கண்ணீர் அவளது பொன் போன்ற கன்னங்களில் கோடு கிழித்து ஓடிக்கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவனும் பேசமுடியாமல் அழுபவன் போலவே நின்றான். சிறிது நேரம் சென்றது. பிறகு அவள் அவனைப் பார்த்து ஒருவித ஏளனம், ஆவேசம் எல்லாம் கலந்த குரலில் இதைக் கேட்டாள்.

"உங்கள் ஹிந்து சமூகத்திற்கு மேலும் மேலும் வெற்றிக்கு மேல் வெற்றி கிடைக்கிறது. இல்லையா?"

சந்திரநாத் ஒன்றுமே பேசவில்லை. அவள் அதே தொனியில் மறுபடியும் பேசினாள். ஆனால் விஷயம் வேறொன்றாக இருந்தது.

" என்னை எதற்காக இங்கே கொண்டு வந்து வைத்திருக்கிறீர்கள்?"

இப்படியாக ஒரு கேள்வி கிளம்பும் என்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அதனால் சிறிது நேரம் யோசித்துக்கொண்டே நின்றுவிட்டு பிறகு சொன்னான்.

"உன் தந்தையும் இதையே விரும்பியிருந்தார். என் கடமையும் இது தானே."

அவள் மேலும் பேச விரும்பாதவள் போலவே மௌனமாக இருந்தாள். சந்திரநாத் அவளைப் பார்த்தபடியே அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றதும் அவள் மீண்டும் ஆரம்பித்தாள். அதற்குள்ளாக மறுபடியும் அவளுடைய கண்கள் கலங்கி விட்டன.

"அந்தப் பக்கத்தில் வசிக்கும் நம் ஜனங்கள் எல்லோருமே கொல்லப்பட்டு விட்டார்களா?"

"எனக்கு நிச்சயமாக ஒன்றுமே தெரியாது, சலீமா. நான் இங்கே வருவதற்கு முன்பே எல்லாம் நடந்துவிட்டது. உன் தந்தையார் உன் விஷயமாக அறிவித்திருந்தாராம். அதைக் கேட்டதுமே புறப்பட்டு உன்னிடம் வந்தேன்."

அவள் மறுபடியும் விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அதைப் பார்த்ததும் அவன் கிட்டச் சென்று, "சலீமா, எப்படியோ எல்லாம் நடந்து விட்டது. வீணாக அழாதே. அழுதுதான் வரப்போவது என்ன? நீ ஒரு குழந்தையா?" என்று ஆறுதல் சொன்னான்.

அவளுடைய கண்களும் முகமும் சிவந்து பொங்கி இருந்தன. அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

அப்போது வேலைக்காரி ஒருத்தி ஒரு தட்டில் ஏதோ உண்ணுவதற்கும் குடிப்பதற்கும் கொண்டு வந்து அவள் முன்னிலையில் வைத்து விட்டுச் சென்றாள். அவளை இடைமறித்து, "இது யாருக்காக?" என்று சலீமா கேட்டாள். அந்த வேலைக்காரி ஒன்றுமே பேசாது சந்திர நாத்தையும் அவளையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

அப்போது அவன் பதில் சொன்னான். "வீணாக உன்னையே வெறுத்துக் கொள்ளு கிறாய். நீ படித்தவள். அதிலும் அறிவுள்ளவள். வாழ்க்கையிலே எல்லோருக்குமே துன்பங்கள் எதிர்பாராத நிலையில் மலைபோல வந்து விழுகின்றன. அதற்காக எல்லோருமே இறந்து விடுகிறார்களா?"

அவள் ஆவேசத்துடன் எழுந்து நின்று சொன்னாள்.

"இது தற்செயலாக நிகழ்ந்த ஒன்றா, மறந்து விட? பழிக்குப் பழி வாங்க முடிந்தால் ஒரு சமயம் நான் மறக்கக்கூடும். என் ஆசையும் அதுவே."

"பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்னும் எண்ணமே இன்று தேசம் முழுவதும் நடக்கும் எல்லாக் கொடுமைக்கும் காரணம் என்பதை நீ உணரவில்லையா சலீமா?"

"எங்கோ எவனோ யாரையோ கொன்றதற்கு வேறு ஒரு மூலையிலே வாடும் ஒன்று மறியாத மக்களைக் கொண்டு சூறையாட நான் விரும்பவில்லை. என் பெற்றோர்களை, உறவினர்களை, காரணம், நீதி, நியாயம் ஒன்றுமே இன்றி யார் கொன்றார்களோ அவர் களையே தண்டிக்க வேண்டும் என்று உயிர் துடிக்கிறது. இதில் நியாயம் இல்லை என்று சொல்ல யாராலும் முடியாது."

"சலீமா, நீ சொல்வது சரியாகவே இருக்கலாம். ஆனால் அதில் ஒரு பிரயோஜனமும் கிடைக்கப் போவதில்லை. பதிலுக்கு இன்னும் அனேகருடைய கண்ணீரால் நமது நாட்டு மண் நனைக்கப்படும் என்பது மட்டும் நிச்சயமாகும்."

இந்த வார்த்தைகள் அவளிடத்தில் ஒரு மாறுதலையும் உண்டு பண்ணிவிடவில்லை. அவள் முன்போன்ற உணர்ச்சிகளுடனேயே காணப்பட்டாள். பேச்சை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தபடியே சந்திரநாத் மௌனமாக இருந்தான். சிறிது நேரத்திற்குள் அவள் மறுபடியும் எழுந்து நின்று, "இவ்வளவிற்குப் பிறகும் என்னை எதற்காக இங்கே பாதுகாத்து வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? நான் போக வேண்டும். இதைத் தவிர என்னால் இப்போது வேறு ஒன்றும் சொல்ல முடியாது" என்று சொன்னாள்.

"எங்கே போக வேண்டும் என்கிறாய்?"

"எங்கேயா? என்னுடைய இடத்திற்குத்தான். முஸ்லிம்கள் என்று பிறந்த ஒரு குற்றத்திற்காக அநியாயமாக யார் யார் கொல்லப்பட்டார்களோ அவர்கள் செத்துக் கிடக்கும் இடத்திற்குத்தான் நான் போக வேண்டும்."

சந்திரநாத் இதற்கு ஒரு பதிலும் சொல்ல விரும்பவில்லை. நிலத்தைப் பார்த்தபடி எதையோ சிந்தித்துக் கொண்டு சும்மா இருந்தான்.

அவள் தொடர்ந்து பேசினாள். வரவர அவளுடைய வார்த்தைகளில், தோற்றத்தில் ஒருவித வேகமும் வர்மமும் கலந்து காணப்பட்டன.

"இனி எனக்கு யாருமே உரிமையானவர்களல்ல. என்னுடைய துன்பத்திற்கு, மரணத்திற்கு கண்ணீர் விடத்தக்கவர்கள் எல்லோருமே பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டார்கள். இனி எனக்கு மரணம்தான் சுகம் தரும். நானும் அதையே விரும்புகிறேன்.

மேலே அவளால் பேச முடியவில்லை. திரும்பவும் மேசை மீது முகத்தை வைத்துக் கொண்டு விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

அதைப் பார்த்தவுடன் சந்திரநாத் அவளருகில் போய் நின்று, 'சலீமா!" என்று உருக்கமாகக் கூப்பிட்டான். அந்தக் குரலுக்குச் செவிமடுக்காமலிருக்க அவளால் முடியவில்லை. அதனால் தலையைத் தூக்கிப் பார்த்தாள். அவன் அவளது கையைப் பிடித்துக்கொண்டே இதைச் சொன்னான்:

"நீ மறுபடியும் குழந்தையைப் போலவே பேசுகிறாய். நடக்கக் கூடாதது நடந்துவிட்டது என்பது உண்மைதான். இந்த நிலையிலும் நிதானமான பாதையில் நியாயத்தோடு நடக்கக் கூடிய ஆற்றலைச் சம்பாதித்துக் கொள்வதுதான் மனித தன்மை. அதை இழந்துவிடுவது

மிகவும் இலேசு. ஆனால் அதைக் காப்பாற்றுவது எல்லோருக்கும் இயலாத காரியமாகும். ஒரு வேளை நீ என்னிடத்திலே சந்தேகப்படுகிறாயா?"

சிறிது நேரம் வரையில் மௌனமாக இருந்துவிட்டு மறுபடியும் தொடங் கினாள்.

"இதோ பார், நீ யாருக்காக இவ்வளவு கவலைப்பட்டு அழுகிறாயோ அவர்களையும் காப்பாற்றி உன்னையும் அழாமல் செய்திருப்பேன். துரதிஷ்டமாக நான் அப்பொழுது இங்கே இருக்கவில்லை. கடைசியில் உன்னை மட்டுமே காப்பாற்ற முடிந்தது. இனி உன்னைப் பாதுகாத்து வைப்பதும் உன் மனத்திற்கு ஆறுதலைத் தேடித் தருவதும் என் கடமை."

அவன் பேச்சை நிறுத்தினதும் அவள் தொடங்கினாள்.

"தயவு செய்து பெரிய மனசு வைத்து என்னைச் சாகவிட்டு விடுங்கள். இதுதான் நீங்கள் எனக்குச் செய்யும் பெரிய ஆறுதல்."

சந்திரநாத் அவளைப் பார்த்தபடியே சிலைபோல இருந்தான். அவளுடைய உள்ளம் எந்தவிதமான சமாதானத்தாலும் ஆறுகிற நிலையில் இல்லை என்பது நன்றாக விளங்கியது. சிறிது நேரம் வரையில் அவனாலும் ஒன்றும் பேச முடியவில்லை. பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "சலீமா, என்னை ஒரு கெட்டவன், மனிதத்தன்மை இல்லாதவன் என்று சொல்லும்படி செய்து விடாதே. எனக்காகக் கொஞ்சம் பொறுத்திரு" என்று வேண்டினான்.

அவள் மேலே ஒன்றுமே பேசவில்லை. வேதனைகளை அடக்கிக் கொண்டு ஒருவாறு மௌனமாக இருக்க முயன்றாள்.

அப்போது வெளியே கொஞ்ச தூரத்துக்கப்பால் வெறிகொண்ட ஜனங்களின் குமுறல் கடலின் அலைபோலக் கேட்கத் தொடங்கியது. அந்தச் சத்தம் காதில் விழுந்ததும் அவன் எழுந்து நின்று, "சலீமா இன்றும் தொடங்கி விட்டார்கள் என்றே தோன்றுகின்றது. நான் போக வேண்டும். ஐயோ மனிதர்கள் தர்மத்தையும், கடமையையும் மறந்து எப்படி மிருகங்களாக மாறுகிறார்களோ, தெரியவில்லை. நான் போய்ச் சீக்கிரமாகத் திரும்பிவிடுகிறேன். சலீமா!" என்று சொன்னான்.

"வேண்டாம் நீங்கள் அந்த இடத்திற்குப் போகவே கூடாது. ஒரு வேளை உங்களையும் நான் இழந்தவிட நேரிடும்."

"திடீரென்று இப்படி ஏன் சொன்னேன்?" என்று அப்போது அவளுக்குத் தெரியவில்லை. ஆனாலும் அவளுடைய மிருதுவான பெண் உள்ளம் இதையேதான் விரும்பியது. சந்திரநாத் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஏனோ மிகுந்த ஆறுதலடைந்தான். பிறகு, "சலீமா, நீ ஒன்றுக்கும் பயப்படாதே. எனக்கு ஒரு தீங்குமே வந்து விடாது. நான் இந்த சமயத்தில் வீட்டினுள்ளே இருப்பது பெரிய துரோகமாகும்" என்று சொல்லிக்கொண்டே வெளியேறினான். போகும் போது வாசலிலே நின்ற வேலையாளைப் பார்த்து, "ஜாக்கிரதை!" என்று எச்சரித்து விட்டுச் சென்றான்.

தெருவில் இறங்கினதும் கூக்குரல்கள் வருகிற திக்கை நோக்கி வேகமாக நடந்தான். சிறிது நேரத்திற்குள் ஜனங்களின் வெறி கொண்ட பேய்க்கூத்து அவன் கண்ணுக்கு நன்றாகத் தெரிந்தது. மேலே அவன் ஓடியே சென்றான். வேங்கையின் கோரமான இயல்புடைய அந்த

ஜனக்கூட்டமும் அவனைக் கண்டதும் மெல்ல விலகியது. சிலர் உண்மையாகவே பயந்து ஒதுங்கினார்கள். இன்னும் சிலருக்கு அவனுடைய இரக்கம் அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆனாலும் அவர்களும் மெல்ல ஒதுங்கி அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.

அதற்கிடையில் அந்தப் பகுதியில் வசித்த முஸ்லீம்கள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லோருமே அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். பரிதாபகரமான அவர்களது முகத்தைப் பார்த்ததும் சந்திரநாத் அழுதுவிட்டான். பிறகு அவர்களுக்கு வேண்டிய ஆறுதல் சொல்லித்தன் ஆட்களின் உண்மையான சிலரை அவர்களுடைய பாதுகாப்புக்காக நிறுத்தி வைத்து அவர்களுக்கு நம்பிக்கை தந்த பிறகே வீட்டை நினைத்தான்.

சலீமா சாளரத்தின் வழியாகத் தெருவைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். ஜனங்கள் பிரேதக் களையுடன் அங்குமிங்குமாகப் போய்கொண்டிருந்தார்கள். “இது ஏன்?”என்று சிந்திக்கவும் அவளால் அப்பொழுது முடியவில்லை. சிறிது நேரத்தில் ஒரு கூட்டத்தவர்கள் அந்தப் பக்கத்தில் வந்தார்கள். அவர்களைப் பார்த்ததுமே இன்ன இடத்தில் இருந்துதான் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அவள் தெரிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது.

அவர்களில் பலர் இளைஞர்கள். சிலர் நடுத்தர வயதினர். இரண்டொரு கிழவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஒரு வெற்றிக்குப் பின் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் வருகிற யுத்த வீரர்களைப் போல அவர்களும் உல்லாசமாகவே வந்தார்கள். அதைப் பார்த்ததும் அவளுக்கு உடம்பெல்லாம் பற்றிக் கொண்டது. எழுந்து சாளரத்துக்குப் பக்கத்திலே வந்து நின்று கையைக் காட்டி ஒருவனைக் கூப்பிட்டாள். எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள்.

“நீங்கள் மனித ஜன்மங்கள் தானே? அல்லது பிசாசுக் கூட்டமா?”

இந்த வார்த்தைகளைப் பேசும் போது அவளிடம் அலாதியான ஒரு கம்பீரம் காணப்பட்டது. வந்தவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் அதில் நின்றபடியே தடுமாறினார்கள். மறுபடியும் அவள் பேசத் தொடங்கினாள்.

“ஒன்றுமே அறியாத ஏழைகளை வதை செய்தீர்கள். கொள்ளையடித்தீர்கள். எல்லாம் மறுபடியும் வட்டியோடு சேர்த்து அனுபவிக்கும் நாள் தூரத்தில் இருக்கவில்லை. அடே! நான் யார் தெரியுமா? உங்களால் கொல்லப்பட்ட கொள்ளையிடப்பட்ட அந்த நிரபராதிகளான முஸ்லீம்களின் கூட்டத்தில் தவறியிருக்கும் ஒருத்திதான். பதிலுக்கு வஞ்சம் தீர்க்கும் வரையில் உயிரோடு இருக்கிறேன் என்பதை மறந்துவிட வேண்டாம்.”

அவள் துர்க்கை போலவே அப்போது விளங்கினாள். அதற்குள் சிலர் நிமிர்ந்து பார்த்து விட்டு “இது சந்திரநாத் அவர்களின் வீடு” என்றார்கள். உடனே எல்லோருமே மேலே பார்த்து விட்டு யோசித்துக்கொண்டு நின்றார்கள். ஒருவனுக்கு மட்டும் அவளுடைய வார்த்தைகள் பொறுக்கவில்லை. அவன் வாசல் பக்கமாக ஓடினான். அதற்குள் வாயிலிலே நின்று வேலையாள் அவனை வெளியே தள்ளிக் கதவைத் தாளிட்டு விட்டான்.

அப்பொழுதுதான் சந்திரநாத் அங்கே வந்து சேர்ந்தான். வீட்டின் அருகே நின்ற ஜனங்களைப் பார்த்ததும், “என்ன?” என்று கேட்டான். அவனைக் கண்டதும் அந்த ஜனங்கள் நழுவ ஆரம்பித்தார்கள். அவன் எல்லோரையும் மறித்து நிறுத்திக்கொண்டு இரண்டொரு வார்த்தை மட்டும் பேசினான்.

"நீங்கள்தானா உண்மையான ஹிந்துக்கள்? ஐயோ! நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மதத்தின் பழம் பெருமைக்கு, தர்மத்திற்கு அழிவு தேடிவிட்டீர்கள். பரம்பரையாக வந்த சகிப்புத் தன்மை எப்படி உங்களிடம் இருந்து மறைந்தது? பதிலுக்கு இராட்சகர்களாகி விட்டீர்களே? உங்களைப் பார்க்கவே என் கண்கள் கூசுகின்றன."

கடைசியில் அவன் தொண்டை குழறியது. அவ்வளவில் பேச்சை நிறுத்தி விட்டு படிமீது ஏறி நின்று அந்த ஜனங்களை ஒருமுறை பார்த்தான். எல்லோரும் கணத்தில் அந்த இடத்தை விட்டு மறைந்துவிட்டார்கள்.

சந்திரநாத் மேலும் சிறிது நேரம் வரையில் அதிலேயே நின்றுவிட்டு உள்ளே நுழைந்தான். எதிரில் சலீமா நின்றாள். அப்போது அவளிடம் நிரந்தரமாக உறைந்து கிடந்த சோகத்தின் திரை முழுவதும் விலகி இருக்க ஒருவித ரௌத்திரமே காணப்பட்டது. அவன் அவளை ஒரு முறை உற்றுப் பார்த்து விட்டு மெல்லச் சிரித்துக்கொண்டே, "சலீமா, உள்ளே போ. இது என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று ஒரு மாதிரியாகச் சொன்னான். அவளோ அதை அலட்சியமாகக் கேட்டுக்கொண்டு அங்குமிங்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

அப்பொழுதுதான் அந்தத் தந்தி வந்தது. சந்திரநாத் அதை வாங்கிப் படித்ததும், "சலீமா, எல்லோரும் சௌக்கியமாக டாக்காவிலே இருக்கிறார்களாமே" என்று தந்தியை நீட்டினான். உடனே, "உண்மையாகவா?" என்று கூச்சலிட்டுக் கொண்டே அவள் ஓடி வந்தாள். பிறகு கொஞ்ச நேரமாக அங்குமிங்குமாகச் சிறு குழந்தையைப் போலவே குதித்துக் குதித்து ஓடித் திரிந்தாள்.

பிறகு அவனுக்கருகில் வந்து உட்கார்ந்து கொண்டு "என்னை எப்போது டாக்காவிற்கு அனுப்பப் போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"நீ எப்போது போக விரும்புகிறாய்?"

"எவ்வளவு சீக்கிரமாகப் போக முடியுமோ அது உங்களையே பொறுத்தது."

சந்திரநாத் சிறிது வரையில் யோசித்துக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னான்.

"சலீமா, எதிர்பாராமல் திடீர் திடீரென்று எங்குமே கலகங்கள் முளைத்து விடுகின்றன. அதனால் தான் யோசிக்கின்றேன். அல்லது...."

அதற்குள் அவள் இடைமறித்து, "நீங்கள் கஷ்டப்பட வேண்டாம். என்னை வண்டியிலே ஏற்றிவிட்டாலே போதும். எப்படியாவது நான் போய் விடுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்டதும் அவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. சலீமா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு சந்திரநாத் இதையே சொன்னான். "ஒன்றுக்கும் அவசரப்படாதே சலீமா! எப்படியாவது உன்னை அங்கே கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். நினைத்த உடனே எதையும் செய்துவிடக் கூடிய நேரம் இதுவல்ல என்பதை நீயே நன்றாக உணருவாய்."

அவள் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு மௌனமாக இருந்தாள். பிறகு எழுந்து சென்று அங்கே கிடந்த பட்சணத்தட்டை எடுத்துக்கொண்டு வந்து அவனுக்கு முன்பாக வைத்திருந்தாள்.

"விருந்தாளி சாப்பிடுமுன் வீட்டுக்குடையவனான ஒரு ஹிந்து சாப்பிடுகிற வழக்கம் இல்லையே?"

"அது உண்மையாக இருக்கலாம். ஆனால் நீங்கள் சாப்பிடு முன் நான் எதையும் தொட மாட்டேன் என சத்தியஞ் செய்து விட்டேன் என்று வைத்துக் கொண்டால்...."

அவள் பேச்சை நிறுத்திவிட்டுத்தட்டை எடுத்து நீட்டினாள். அவன் அந்தத் தட்டை வாங்கித் தனக்கு முன்னால் வைத்துவிட்டு அவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். மறுபடியும் அவள் தொடங்கினாள். "ஒரு முஸ்லிம் பெண் கொடுக்க, உயர்ந்த ஹிந்து குடும்பத்திலே பிறந்த நீங்கள் உண்ணக் கூடாது என்று இருக்கிறீர்களா?"

அவ்வளவில் அவன் சாப்பிடத் தொடங்கினான். அப்பால் இரண்டு பேருமாகவே பட்சணங்களைக் காலி செய்தார்கள்.

பிறகு அவள் சந்திரநாத்தைப் பார்த்து. "உங்களிடம் ஒன்று கேட்கிறேன், ஒளிக்காமலே சொல்லுகிறீர்களா?" என்று கேட்டாள். அவன் வெறுமனே தலையை மட்டும் அசைத்துத் தன் சம்மதத்தைத் தெரிவித்தான்.

"சில மணி நேரத்திற்கு முன் நான் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு நீங்கள் என்மீது வெறுப்புக் கொள்ளவில்லையா? மறைக்காமல சொல்லுங்கள்."

அவன் சாந்தமான குரலிலே "சலீமா, எதற்காகவும் நான் கோபிக்கிறதில்லையே" என்றான்.

"ஆனாலும் என் அறிவில்லாத வார்த்தைகளை நீங்கள் மறந்து விட வேண்டும்."

"நீ அப்படி எதையும் சொல்லிவிடவில்லை."

"என்னுடைய மனம் சாந்தியடையவில்லை."

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

"உங்களுக்கு எது இஷ்டமோ அதன்படி என்னைத் தண்டித்து விடுங்கள்."

''சரி தண்டிக்கிறேன். அதற்குரிய நேரம் வரட்டும்."

ஏனோ. இரண்டு பேருமாகவே சிரித்தார்கள்.

மறுநாள் அதிகாலையிலேயே அந்த வீட்டு வாசலிலே ஒரு வண்டி வந்து நின்றது. சந்திரநாத் அது யார் என்று பார்க்க ஆளை அனுப்பினான். அதற்குள் அந்தக் கிழவர் உள்ளே வந்துவிட்டார். முதிர்ந்த நிலையிலுமே அவருடைய வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இளமையைத் தொட்டுக்காட்டின.

"சந்திரநாத்!" என்று முதலில் ஆத்திரத்தோடு கத்தினார். அவன் ஒன்றும் புரியாமலே ஓடிவந்து "நமஸ்காரம் தாத்தா" என்று வணங்கினான். அவர் அவனுடைய வணக்கத்தை ஏற்கவில்லை.மேலும் ஆத்திரம் கொண்டவராய், "நீ அந்நிய மதத்தைச் சேர்ந்த ஓர் இளம்பெண்ணை இங்கே வைத்திருக்கிறாயாமே?" என்று உறுமினார்.

அவன் ஒன்றுமே பேசவில்லை. அவருடைய கோபம் மேலும் உச்ச நிலையைக் கிட்டியது.

"எதற்காக அவளை நீ இங்கே வைத்திருக்க வேண்டும்? எங்கள் ஹிந்து தர்மத்துக்குச் சாவுமணி அடித்துவிட்டாயே."

அப்பொழுதான் அவன் வாயைத் திறந்து மெல்லப் பதில் சொன்னான்.

"தாத்தா. இதனால் நான் ஹிந்து தர்மத்துக்குச் சாவுமணி அடிக்கவில்லை. உண்மையில் ஹிந்து தர்மத்தைச் சாகவிடாமல் காப்பாற்றிவிட்டேன்."

கிழவர் தம் வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டே வெளியே சென்று வண்டியில் ஏறிவிட்டார். அவன் அவர் பின்னோடு போய் நமஸ்கரித்து விட்டுத் திரும்பி வந்தான். அதுவரைக்கும் உள்ளே நின்ற சலீமா அப்பொழுது தான் முன் ஹாலுக்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய முகம் கொஞ்சம் வாடியிருந்தது. அதைப் பார்த்ததும், "இந்த மனிதர்களுடைய எந்த விதமான வார்த்தைகளையும் நீ பொருட்படுத்தக்கூடாது. அவர்கள் "பாட்டன் சொன்னான்", "அப்பன் செய்தான்" என்று தர்மம் பேசுபவர்கள். சலீமா, இது என் வீடு. ஆதலால் உனக்கும் உரிமை உண்டு. எனவே நீ சிந்திக்க நியாயமே இல்லை" என்று ஆறுதல் சொன்னான். அவள் சிறிது நேரம் வரையில் ஒன்றுமே பேசாமல் இருந்துவிட்டு, "எப்படியானாலும் என்னைச் சீக்கிரம் அனுப்பி விடுங்கள்" என்று கேட்டுக் கொண்டாள்.

இதைக் கேட்டதும் அவனும் "சரி" என்று தலையை அசைத்தான்.

அன்றைக்கே புறப்படுவதற்குரிய எல்லா ஆயத்தங்களையும் செய்து முடித்தார்கள். அவனுடைய மோட்டார் வண்டியைச் சாரதி வாயிலிலே கொண்டு வந்து நிறுத்திவிட்டு வெளியே வந்து நின்றான்.

சந்திரநாத் தன் அறையிலிருந்து புறப்பட்டு நேரே அவள் இருந்த அறையை நோக்கி நடந்தான். அவன் வருவதைக் கண்டதும் சலீமா எழுந்து நின்று "புறப்பட ஆயத்தமா" என்று கேட்டாள்.

"ஆம் இதை உன் கைப்பெட்டியினுள்ளே வை."

"எதற்காக இதை நான் வைத்துக் கொள்ள வேண்டும்?"

"அவர்களும் எல்லாவற்றையும் இழந்தே போயிருக்கிறார்கள். அது அவசியம் உங்களுக்குத் தேவைப்படும்."

"ஆனாலும் இவ்வளவும் எதற்கு?"

"பரவாயில்லை"

"ஐயோ! இதில் எத்தனை ஆயிரம் தந்திருக்கிறீர்கள்?"

"பாரமாக இருக்கிறதா?"

அவள் பேசாமல் நின்றாள். அதை வாங்கி அவளது கைப்பெட்டியைத் திறந்து அவனே வைத்து விட்டான்.

மோட்டார் வண்டி பாதையிலே போய்க்கொண்டிருந்தது. சந்திரநாத்தே வண்டியை ஓட்டிக்கொண்டு போனான். சலீமா பின்புறத்து ஆசனத்தில் உட்கார்ந்திருந்தாள். இடையில் "எதற்காக மோட்டார் ஓட்டியை நிறுத்திவிட்டு வருகிறீர்கள்?" என்று அவள் கேட்டாள். "நான் இப்பொழுது உங்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் வாழுகிற இடத்துக்கு வருகிறேன். அவர் களோ இன்று ஜாதி, மத வெறியில் நமக்கும் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். அபாயம் வந்தா லும் நான் அமைதியாகவும் சந்தோஷமாகவும் ஏற்பேன். எனக்காக மற்றவர்கள் ஏன் அகப் பட்டுக் கொள்ள வேண்டும்? என்று எண்ணியதால்..." என்று இழுத்தான்.

அவள் உடனே "வண்டியை நிறுத்துங்கள்" என்று கூச்சலிடத் தொடங்கிவிட்டாள். கடைசியில் வண்டியை நிறுத்தியே அவளைச் சமாதானம் செய்ய முடிந்தது. பிறகு அவளும் முன்பக்க ஆசனத்துக்கு வந்து உட்கார்ந்து கொண் டாள்.

வண்டியும் மறுபடியும் போய்க் கொண்டிருந்தது. இடையில், "சலீமா நீ ஒரு முஸ்லிம் பெண். உங்கள் ஜாதிப் பெண்கள், ஆசாரப்படி வெளியே தலையைக் கூட நீட்டுவதில்லை. அப்படியிருக்க அந்நிய மதத்தவனாகிய ஒருவனுக்குப் பக்கத்தில் நீ உட்கார்ந்திருக்கிறாயே... என்று அவன் பேசி முடிப்பதற்குள்ளாகவே அவள் தொடங்கிவிட்டாள்.

"எல்லா மதத்திலும் இப்படியான உளுத்துப்போன கட்டுப்பாடுகள் இருக்கத்தான் இருக்கின்றன. அது உண்மையில் நியாயமென்றே வைத்துக் கொண்டாலும் நீங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் என்னை யாரும் தடுக்க முடியாது."

அவன் திரும்பி அவளைப் பார்த்துக்கொண்டே "ஏன் அப்படி" என்று கேட்டான்.

"அது என் இஷ்டம்."

மறுபடியும் சந்திரநாத் திரும்பி அவளைப் பார்த்தான்.

இரண்டு பேருடைய உள்ளத்திலும் உண்டான மலர்ச்சி அவர்கள் முகங்களில் வெளி யாகி மறைந்தது. வண்டி மேலே போய்க் கொண்டிருந்தது.

"இன்னும் எத்தனை மைல் போக வேண்டும்?" என்று இடையில் சலீமா கேட்டாள்.

"பாதி தூரத்துக்கு மேலே வந்துவிட்டோம். இனி ஹிந்துக்களினால் எந்த அபாயமும் வராது. நீ பயமின்றி இருக்கலாம்."

அவள் இதைக் கேட்டதும், "ஆனால் இனித்தான் நான் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அல்லவா? என் உயிர் போன பிறகே உங்களுக்கு ஏதேனும் தொந்தரவு வரலாம்" என்று சொல்லி விட்டு மெல்லச் சிரித்தாள்.

"சலீமா, நீயோ ஒரு பெண். எப்பொழுதும் பெண்களைக் காப்பாற்ற ஆண்கள் தங்க ளைத் தியாகம் செய்வதுதான் தர்மம். நீ நினைப்பது தப்பு."

"இந்தத் தர்மங்களைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆனாலும் நான் அப்ப டித்தான் செய்வேன். அதை யாரும் தடுக்க முடியாது."

சந்திரநாத் மௌனமாகவே வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான். "போக வேண்டிய தூரத்தில் பெரும்பகுதி கழிந்து விட்டதல்லவா?" என்று இடையில் அவள் கேட்டாள். அவனும் "ஆம்" என்று தலையை அசைத்தான்.

ஒரு சந்திப்பில் திரும்பியவுடனே திடீரென்று ஒரு ஜனக்கூட்டம் எதிரே காட்சிகொடுத்தது. அவர்களது நிலையைக் கண்டதும் சந்திரநாத் திகைத்து வண்டியை நிறுத்தினான். அந்த கூட்டத்திலிருந்த சிலர் வேகமாக அவர்களது வண்டியை நோக்கி ஓடி வந்தார்கள. அதற்குள் ஒருவன் தூரத்திலிருந்தே கல் ஒன்றை வீசி எறிந்தான். அது வண்டியின் முன்புறத்திலே பட்டுத் தெறித்துக் கண்ணாடியை உடைத்து விட்டது. ஒரு கண்ணாடித் துண்டு சந்திரநாத்தின் நெற்றியில் பறந்து ரத்தத்தைப் பெருகச் செய்தது.

கணத்துள் சலீமா அந்த ஜனக்கூட்டத்தின் முன்பாக நின்றாள். அவளைப் பார்த்ததும், இவள் ஓர் உயர்ந்த ஜாதி முஸ்லிம் பெண்' என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். உடனே சிலர் பின்வாங்கி ஒதுங்கினார்கள். மற்றவர்கள் வெறிகொண்டுதான் நின்றார்கள். அதற்குள் ஒருவன் சொன்னான். "அடே இவன் ஒரு ஹிந்துவாகவே இருக்கவேண்டும்."

எல்லோரும் சந்திரநாத்தையே பார்த்தார்கள். அந்தக் கூட்டத்தின் ராட்சத எதிர்ப்பை அடக்கிச் சலீமாவின் குரல் எழுந்து கேட்டது.

"எல்லோரும் விலகுங்கள். உங்கள் ஜாதியை உங்கள் மதத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்களைப் பாதுகாத்த இந்த மகான் யாராக இருந்தாலும், எந்த மதத்தவராக இருந்தாலும் என்ன? நீங்களும் உங்கள் மதத்தாரும் அவர் காலடியில் மண்டியிட்டு வணங்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்."

"நான் யார் என்று இன்னும் நீங்கள் உணரவில்லையா? என்னையும் என்னைப் போன்ற உங்கள் மனிதர்களையும் காப்பாற்றிய உங்கள் ஆண்டவனின் அன்பரது புனித உள்ளத்தைப் புண்படுத்தி விட்டீர்களே."

பேச்சை நிறுத்திவிட்டு எல்லோரையும் ஒருமுறை நிமிர்ந்து பார்த்தாள். அத்தனை பேரும் அசையாமல் அப்படியே நின்றார்கள். பிறகு அவள் தன் புடவையின் ஒரு தலைப்பைக் கிழித்து அவனது நெற்றியில் வழிந்த ரத்தத்தைத் துடைத்துக் கட்டுப் போட்டாள்.

சந்திரநாத் அசையாமல் அப்படியே இருந்தான். முன்புறத்தில் நின்றவர்களில் சிலர் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள்.

உள்ளே அவன் வண்டியை விட்டு இறங்கி நின்று இதையே சொன்னான். "நான் ஹிந்துவாகப் பிறந்துவிட்டேன். நீங்கள் முஸ்லிம்மான்களாகப் பிறந்துவிட்டீர்கள். ஆயினும் என்ன? நாமெல்லோரும் இந்த நாடு பெற்ற குழந்தைகள் தாமே!"

அவ்வளவோடு நிறுத்திவிட்டு அந்தக் கூட்டத்தை நோக்கி நமஸ்கரித்தான். அதைப் பார்த்துக்கொண்டு நின்ற ஒரு வயோதிபர் அருகில் வந்து அவன் கைகளைப் பிடித்துக் தன் கண்களில் ஒத்திக் கொண்டார்.

வண்டி புறப்படும் பொழுது கூட்டத்தினர் எல்லோருமே அமைதியாக நின்று வணக்கத்தைத் தெரியப்படுத்தினார்கள்.

வண்டி போய்க் கொண்டிருந்தது.

"சலீமா!" என்றான் சந்திரநாத்.

அவள் தன் கையினால் அவனது நெற்றியைத் தடவிக்கொண்டே "வலிக்கிறதா" என்று கேட்டாள்.

சந்திரநாத் சொன்னான். "வலி எப்பொழுதோ மறைந்துவிட்டது. அதற்கு மாறாக உடம்பு முழுவதும் குளிர, உள்ளம் இனிக்கிறது. சலீமா!"

உடனே அவள் அவனது கையைப் பிடித்து தன் கண்களில் ஒத்திக் கொண்டாள். அந்தக் கையில் இரண்டு துளி நீர் ஒட்டிக் கொண்டிருந்தது.

கலைமகள்
மாசி - 1948

அ.ந.கந்தசாமி

அ.ந.கந்தசாமி ஈழகேசரியில் தனது முதலாவது சிறுகதையை எழுதிய போது வயது பதினேழு. அதன் பின்னர் அவர் தேசாபிமானி, சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய கால வேளையில் கிட்டத்தட்ட 40 சிறு கதைகள் வரையில் எழுதியுள்ளார் என அறியக் கிடைத்திருக்கிறது. இரத்த உறவு, ஐந்தாவது சந்திப்பு என்பன தரமான சிறுகதைகள். முற்போக்குக் கருத்துக்களைக் கொண்டவர். அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக எழுத்தினை வரித்தவர். நாடக ஆசிரியர் இரவது "மதமாற்றம்" சிறந்ததொரு நாடகம் என விமர் சகர்களின் மதிப்பினைப் பெற்றது. இது நூலுருப் பெற்றிருக்கின்றது. கவீந்திரன் என்ற பெயரில் நல்ல பல கவிதைகளையும் படைத்துள்ளார். மனக்கண் அவர் எழுதிய நாவலாகும். சிற்பி என்ற புனை பெயரில் பகல் வெள்ளி (1941) என்ற வொரு சிறுகதையினையும் ஈழகேசரியில் எழுதியுள்ளார். அமரராகிவிட்டார்.

❖ குருட்டு வாழ்க்கை

குருட்டு வாழ்க்கை

அ.ந.க.

எனது பழைய நண்பன் சேகரனை எதிர்பாராத விதமாக அன்று சந்தித்தேன்.

நான் றோட்டோரமாக பைஸிக்கிளில் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் அவன் வந்தான். என்கூடப் பள்ளிக்கூடத்தில் படித்த அதே ஆள்தான். நின்று கதைக்க வேண்டுமென்று தோன்றிற்று. நான் சேகரா"என்றுகூறிக்கொண்டேபைஸிக்கிளிலிருந்துஇறங்கினேன்.

அதே ஆள்தான். சிவப்பு நிறம், சுருட்டைமயிர் எல்லாம் அப்படி யேயிருந்தன. ஆனால் அவன் கண்கள் குருடடைந்தவைபோல் காணப்பட்டன. நான் "சேகரா" என்று மீண்டும் கூப்பிட்டேன். ஆனால் அவன் என்னை அறிந்துகொள்ளவில்லை. எனக்கொரு சந்தேகமுண் டாயிற்று; ஒரு வேளை குருடாய்த்தான் போய்விட்டானோ?

"யாரது?" என்றானவன்.

"என்ன தெரியவில்லையா? ராமலிங்கம், உன்னோடு படித்த வன்."

"சா ராமலிங்கமா!" என்று கூறியவண்ணம் அவன் என்னைப் பிடிப்பதற்குக் கையை நீட்டினான்.அப்போதும் நான் கவனித்தேன்.அவன் எங்கெல்லாமோ கையை அலைத்து விட்டுப் பின்னரே என்னைக் கண்டு கொண்டான்.

"என்ன சேகரா, கண்ணில் ஏதாவது கோளாறோ?"

"ஆமாம்,நான் குருடனாய்ப் போய்விட்டேன். அதுதானே இந்தப் பிரம்பு?" அவன் பிரம்பை மேலே உயர்த்திக் காட்டினான்.

நான் திகைத்துவிட்டேன். அவன் பள்ளிக்கூடத்தில் என்னுயிர்த் தோழன். அப்படிப்பட்ட வன் குருடனாவதென்றால்…? எனக்குப் பெரிய மனக்கஷ்டமாயிருந்தது.

"எனக்கொன்றும் தெரியவில்லையே, விளங்கச் சொல்லன்."

"அது ஒரு நீண்ட கதை. சொல்கிறேன். என்று கூறி என்னென்னெல்லாமோ அறிவுரை யின் பிறகு சொல்ல ஆரம்பித்தான்.

"நான் இப்போது குருடாகியிருப்பது இரண்டாவது தடவை. அதாவது முதல் ஒருதரம் குருடாகிச் சொஸ்தமானேன். பிறகு நானே என்னை மறுபடியும் குருடாக்கிக்கொண்டேன்.""
"உன்னுடைய புதிர் எனக்கு விளங்கவில்லை. விளங்கும்படி சொல்லு - அந்த மரநிழலில் போயுட்கார்ந்து சம்பாஷிப்போம் வா" என்றேன் நான்.

"இருவரும் போயுட்கார்ந்தோம். அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்."

"உனக்கு நாங்கள் பள்ளிக்கூடத்தில் படித்த காலம் நினைவிலிருக்கிறதா? எவ்வளவு சந்தோஷமாய்க் காலத்தைக் கழித்தோம். அதை இப்போது நினைத்துப் பார்த்தால் ஏதோ அரைகுறையாய் நினைவிலிருக்கும் சொப்பனம் போல்தான் எனக்குத் தோன்றுகிறது. அப்போது நீதானே என் உயிர்த்தோழன்? இப்படி அரைவாசியில் நாங்கள் ஒருவருடன் ஒருவர் சம்பந்தமில்லாது போய்விடுவோமென்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அந்தக் காலத்தில் உன்னைக் காணாது ஒருநாளைக் கழிப்பதென்றால் எனக்கெவ்வளவு மனக்கஷ்ட மாயிருந்தது? அப்படிப்பட்ட இரண்டு சிநேகிதர்கள் இவ்வளவு காலம் பிரிந்திருந்தது ஒருவரை யொருவர் காணாமல் - ஒருவர் புதினம் ஒருவருக்குத் தெரியாது - இப்படியெல்லாமிருப்பது ஆச்சரியமில்லையா?"

அவன் இங்கே கதையை நிற்பாட்டி ஒரு பெருமூச்சு விட்டான்!

"இதென்னடா, கதையைச் சொல்லாமல் இவன் வேறு ஏதேதோ சொல்கிறான்" என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். அவன் தொடர்ந்தான்.

"ஆமாம். உனக்கொன்றும் தெரியாது. உன்னிடம்தான் என் அந்தரங்கங்களையெல் லாம் சொல்லுவது வழக்கம். ஆனால் உன்னிடம் கூட நான் அவளைப் பற்றிச் சொல்லியது கிடையாது."

அவள் எங்கள் பாடசாலைக்கணித்தாயிருந்த பெண்கள் கல்லூரியில் மற்றிக்குளேஷன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். எங்களுக்கிடையில் எப்படியாக முதன் முதல் பரிச்சய முண்டாயிற்று என்று எனக்கு நினைவில்லை. ஆனால் நாங்கள் எப்படியோ உயிர்க் காதலராகிவிட்டோம்.

அவளையேயல்லாமல் வேறொருவரையும் மணப்பதில்லை என்று அந்தரங்கத்தியாக நான் அவள் முன்னிலையில் எத்தனையே தடவை கூறியிருக்கிறேன். ஆனால் விதிதான் ஒன்று எதற்கும் குறுக்கே நிற்கிறதே? மனப்பூர்வமாக என்னைக் காதலித்து வந்த அவளுக்கும் எனக்கும் எதிராக அது சதிசெய்துவிட்டது. நான் படிப்பு முடிந்து எனது கிராமத்திற்குச் சென்றேன். அங்கு சென்ற பிறகு அவளிடமிருந்து எனக்குப் பல கடிதங்கள் வந்தன. ஒவ்வொன்றும் உணர்ச்சிப் பிரவாகமாயிருக்கும். அவற்றைக் காணும்போது அவளையே காண்பதுபோல் எனக்குத் தோன்றும். ஏதோ கிட்டாத பாக்கியத்தை அடைந்து விட்டது போல் நான் புளகாங்கிதமாவேன். ஆனால் இது தெய்வத்திற்குப் பொறுக்கவில்லையோ? அவளுடைய மோஹன சொரூபத்தை நீண்டகாலம் நான் கண்டுகளிக்கவில்லை.

கண்கெட்ட கடவுள் என் கண்களைக் கெடுத்துவிட்டது. எங்களூரில் இருந்தாற் போலிருந்து அம்மை நோய் திடீரெனப் பரவ ஆரம்பித்தது. எங்கள் வீட்டில் என்னுடைய தாயாருக்கும் எனக்கும் அம்மை வார்த்தது. அதனால் நான் குருடானேன். இரண்டு கண்களும் பொட்டையாகிவிட்டன. ஆனால் வேறு இடங்களில் ஒரு குருடனுக்கேற்படக்கூடிய கஷ்டம் எனக்கேற்படவில்லை. எனக்கு வேண்டிய பண வருவாயிருந்தது. ஆகையினால் வாழ்க்கைக்கு உழைக்க வேண்டுமென்று இருக்கவில்லை.

எனக்கு இருபத்தைந்து வயதாகியிருந்தது. அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நான் ஒரே ஒரு செல்லப்பிள்ளை. எனக்குக் கலியாணம் கட்டிவைத்து விட வேண்டுமென்று அவர்களுக்கு ஆவலாயிருந்தது. வேண்டிய பொருள். படிப்பு. அழகு. குணம் எல்லாம் எனக்கமைந்திருந்தபடியால் "குருடனாகிவிட்டானே என்றும் பார்க்கமாட்டார்களென்பது அவர்களது எண்ணம். ஒரு நாள் இதைப்பற்றி என்னோடு கதைத்தார்கள். நான் கலியாணம் முடிப்பதென்றால் இப்படி அட்வகேட் சிங்காரவேலுவின் மகள் ராஜம்மா என்ற பெண் பட்டினத்தில் என்கூடப் பரிச்சயமாயிருந்தவள், அவளைத்தான் கலியாணம் பண்ணிக்கொள்வேன். இல்லாவிட்டால் இல்லை" என்று தீர்க்கமாய்க் கூறிவிட்டேன்.... இங்கு கதையை அவன் நிறுத்தினான்.

எனது மனம் படபடத்தது. "திகீர்" என்ற உணர்ச்சி என்னுடம்பில் ஓடிச் சென்றது. நான் அதை மறைத்துக்கொண்டு கேட்க ஆரம்பித்தேன். அவன் தொடர்ந்தான்.

"நான் எனது முடிவைத் தெரிவித்துவிட்டேனா? பின்னர் என் மனத்தில் ஒரு சந்தேகமுண்டாகியது. ராஜம் நான் குருடென்று தெரிந்து என்னை மணக்க மறுத்துவிட்டால் ...... ஆனால் அவள் கொண்டுள்ள காதல் எவ்வளவு உண்மையானது என்று எனக்குத் தெரிந்திருந்தபடியால் அந்தச் சந்தேகத்தை மேலும் நான் வளரவிடவில்லை. அப்படி ஒன்றும் நேராது என்று திடப்படுத்திக்கொண்டேன்.

சில நாட்கள் சென்றபின் என்னுடைய தந்தையார் என்னைக் கூப்பிட்டு, துக்கமும், சோர்வும் கலந்த குரலில் சொன்னார்.

"நீ சொன்ன பெண்ணின் தகப்பனார் சிங்காரவேலுவைக் கண்டேன். அவருக்கு எல்லாஞ் சம்மதந்தான். ஆனால் உன் கண்கள் பொட்டையென்பதால்" அவர் இதைக் கூறும்போது தேம்பியழ ஆரம்பித்து விட்டார். என்னாலும் தாழ முடியவில்லை. என் மனமும் மிக வருந்திற்று.

இதற்கு இரண்டு வாரங்களின் பிறகு பின்னரும் என்னைக் கூப்பிட்டுக் கதைக்க ஆரம்பித்தார்.

"வேறொரு இடத்தில் ஒரு பெண் பார்த்திருக்கிறேன்."

"எனக்கு வேறொரு பெண்ணும் வேண்டாம்."

"என்னடா செய்வது? நீ கொடுத்து வைத்தது அவ்வளவு. இவளும் நல்ல அழகு."

எனக்குச் சிரிப்பு வந்தது: "காணக் கண்ணில்லை. அழகிருந்தென்ன பிரயோசனம்?"

"மேலும் படித்திருக்கிறாள். நன்றாய்ப் பாடுவாள்."

"அதெல்லாம் அவளோடேயே இருக்கட்டும் நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வில்லை அப்பா: என்னைத் தொந்தரவு படுத்தாதேயுங்கோ."

இது நடந்து இரண்டு மாதம் கடந்தது. பின்னருமொருதரம் என்னைக் கூப்பிட்டுக் கதைத்தார். இந்த முறை அவருடைய பேச்சு உற்சாகமாயிருந்தது. மகிழ்ச்சி பொங்குவது போலிருந்தது.

"அட்வகேட் சிங்காரவேலுவைப் பின்னரும் கண்டேன். கடைசியாய் நிச்சயமாகி விட்டது. நீ சொன்ன பெண்ணே உனக்குக் கிடைத்து விட்டாள்."

எனக்கென் காதுகளை நம்பமுடியவில்லை. எனது குருட்டுக் கண்களில் ஒளிவந்து சேர்ந்துவிட்டது போன்ற சந்தோஷமுண்டாயிற்று. கடைசியில் என் ராஜம் எனக்கேயாகி விட்டாளென்று மகிழ்ந்தேன்.

கலியாணமும் ஆர்ப்பாட்டமாய் முடிந்தது. குருட்டுக் கண்ணுடன் அவள் கழுத்தைத் தடவிக் கண்டுபிடித்த நான் தாலியைக் கட்டும்பொழுது என் கண்களில் ஜலம் ததும்புவதுபோலி ருந்தது. ஆனந்த பரவசத்தால் உண்டாகிய கண்ணீர் அது. "குருடனாகிவிட்டேனே" என்று நினைத்து நான் விட்ட கண்ணீ ர் என்று சிலர் அதைக்கருதியிருக்கலாம்.

ஆனால் என்ன ஆச்சரியம்: கலியாணமாகி இரண்டு நாட்கள் கடந்தன. நான் பள்ளிக கூடத்தில் படித்த ராஜம்மாவை நேசித்தது போல் இப்போதிருக்கும் ராஜம்மாவை நேசிக்க முடியவில்லை போல எனக்குத் தோன்றியது. இவ்வளவுக்கும் நானவளிடத்தில் ஒரு வித்தியா சத்தையும் காணவில்லை. மூன்று வருடங்களின் முன்னர் கேட்ட அவள் குரலுக்கும், இப்போது கேட்ட குரலுக்கும் எனக்கு வித்தியாசந் தோன்றவில்லை. அவள் நடந்ததைப் போல் தான் இவளும் நடந்தாள். அவள் சிரித்து விளையாடியது போல்தான் இவளும் சிரித்து விளை யாடினாள். ஆங்கிலங்கலந்து பேசினாள். ஆனாலும் என் மனதில் ஒரு அதிருப்தியிருந்தது. ஆனால் அவள் நான் குருடனென்பதை லட்சியம் செய்யாது மிக நேர்மையாக நடந்து கொண்ட முறையும், அன்பொழுகப் பேசிவந்த ரீதியும் எனக்கு ஆச்சரியத்தையும், அவளிடம் ஒருவித நன்மதிப்பையும் பெருக்கிக்கொண்டு வந்தன.

ஒரு வாரந்தான் கழிந்தது. எனது நண்பன் வரதன் என்னைப் பார்க்க வந்தான். அவன் என்னிடம் "பட்டினத்தில் ஒரு ரஷ்யன் ஐ ஷ்பெஷலிஸ்ட்" (கண் வைத்தியம்) வந்திருக்கிறார்.

உன்னைப்போல் இடையிட்டு வந்த குருட்டைச் சில இடங்களில் சொஸ்தமாக்கியிருக்கிறாராம். ஏன் நீயும் அவரிடம் போய் சிகிச்சை பெறக்கூடாது?" என்று கூறினான்.

எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ஆனால் சொஸ்தமாகி விட்டால்......? ஆகா! எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்? ராஜம்மாவுக்கு மனத்தில் "என் கணவன் குருடன்" என்ற குறை. கவலையிருந்தால் அது நீங்கிவிடுமே! அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

கடைசியாய், "எதற்கும் பார்ப்போம்" என்று கிளம்பிவிட்டேன். ஒரு ஒன்றரைமாத காலத்தின் பின்னர் ஆச்சரியப்படும்படியாய் எனக்கு தெளிவான கண்பார்வை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய தகப்பனார் பட்ட சந்தோஷம் சொல்லி முடியாது.

ஐயாயிரம் ரூபாவை டாக்டருக்கு "பீஸா"க்க் கொடுத்தார். வழிநெடுக ராஜாத்திக்கேற்படக் கூடிய சந்தோஷம் பற்றி மனராஜ்யம் செய்தபடியே வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டு வாசலில் ஆவலும் மகிழ்ச்சியும் பொங்குகின்ற முகத்துடன் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். என்னை ஆச்சரியத்துடன் நோக்கினாள். ஆனாலிவள் ஏன் இங்கு வந்தாள்? ஒரு வேளை ராஜத்தின் சிநேகிதி யாராவதாயிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டே உள்ளே போனேன்.

"ராஜம் ராஜம்" என்று ஆவலுடன் கூவினேன். "என்ன" என்றுகொண்டே அந்தப்பெண் என்னிடம் ஓடிவந்தாள். "உன்னையல்ல ராஜம் எங்கே? காணவில்லை?"

அவள் என்னைப் பரிதாபகரமாய்ப் பார்த்தாள். "நான் தான் ராஜம். என் பெயர் கமலா. உங்களுடைய தகப்பனார்தான் அந்தப் பெயரை எனக்கு வைத்தார்" என்று அந்தப் பெண் தழதழத்த குரலில் சொன்னாள்.

நான் திகைத்துவிட்டேன். என்னால் பேசமுடியவில்லை. "இது இமிட்டேஷன் ராஜம். அதனால்தான் இவளை அவள்போல் நேசிக்க முடியாதிருந்தது. என்று கண்டுகொண்டேன். என் மனத்தில் ஏதோ பெரிய சூறாவளி ஏற்பட்டுவிட்டது போலிருந்தது. ஒன்றும் பேசாமல் என் அறைக்கு ஓடினேன்.

நான் அங்கே செய்யத் துணிந்து செய்து முடித்துவிட்ட காரியத்தை நினைக்க இப்போதும் மனநடுக்கமுண்டாகிறது. ஒரு முரட்டு உணர்ச்சி என்னை அந்நேரத்தில் ஆட்டி வைத்தது. மேசையிலிருந்த ஒரு குண்டூசியை எடுத்து ஏமாற்றமடைந்த என் கண்களை நானே குத்திக்கொண்டேன். அப்படி நான் குத்திக்கொண்டு விட்டாலும் நல்லதாய்ப் போயிற்று. இல்லா விட்டால் பொன்னிருதயம் படைத்த அந்த உத்தம மனைவியை நான் அவளை நேசிக்க வேண்டியளவு நேசித்திருக்க மாட்டேன். விழித்துக்கொண்டிருக்கும் போது அவளை என் ராஜம்மாபோல் கருத முடியவில்லை. ஆனால் குருடாகியிருக்கும் பொழுது அவளிடம் ராஜத்தின் அம்ஸங்கள் தலைதூக்கி நிற்பதைக் காண்கிறேன். இப்பொழுது நீ என்னைக் கேட்டாயானால் அந்த ராஜத்தைவிட இவளை மேலாக நேசிக்க நான் கற்றுக்கொண்டேன். அவளே இந்தக் குருட னுக்குக் கண்ணாய் விளங்குகிறாள்."

அவன் இங்கு நிறுத்தினான்.அவளுடைய மனத்தில் ஒருவித சாந்தம் பிறந்தது போலிருந்தது. அவன் முகத்தில் ஒருவித அமைதி நிலவிற்று.

ராஜம்மாவைப்பற்றி எனக்குத் தெரிந்த கதையைச் சொல்லி அவனைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. "நான் போய் வருகிறேன்" என்று கிளம்பினேன். வழி நெடுகிலும் ஒரே சிந்தனை. என்னுடைய மனைவியைப்பற்றி தான். என் மனதில் நெடுங்காலமாக விடை தேடிக்கொண்டிருந்த ஒரு கேள்விக்கு இன்றுதான் மறுமொழி கிடைத்தது. நான் ஆபீஸி லிருந்து நேரஞ்சென்று திரும்ப சில நாட்களில் அவள் கண்கலங்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறேன். தன் நிரப்பிரயோசனமான இளமைக் கனவுகள் பலிதமாகாததையிட்டுத்தான் அவள் அப்படி உள்ளம் வெதும்பியிருக்க வேண்டும். அவள் மனக் குறைவுக்கு இந்த ஜன்மத்திலை மருந்து கிடைக்கப்போவதில்லை. ஒரு வேளை மறுஜன்மத்தில் கிடைக்குமோ?

ஈழகேசரி - 15, 05. 1947

கோ. நடேசய்யர்

14 சனவரி 1887 அன்று தமிழகத்தில் பிறந்து இலங்கையின் மலையத்தில் குடியேறிய தமிழறிஞர் கோதண்டராம நடேசய்யர் பதிப்பாளராகவும் அரசியல் வாதியாகவும் இதழாசிரியராகவும் எழுத்தாளராகவும் பன்முகதளங்களில் இயங் கியவர். 1924 முதல் இலங்கை சட்டசபையிலும், பின்னர் இலங்கை அரசாங்க சபையிலும் உறுப்பினராக இருந்தவர். 1914இல் வணிகர்களுக்காக வர்த்தக மித் திரன் என்ற பத்திரிகையை மாதமிருமுறையும், பின்னர் வாரமொரு முறையும் நடத்தினார். ஒற்றன் என்ற புதினத்தையும் எழுதினார் 1921-ஆம் ஆண்டு தேச நேசன் என்ற நாளிதழைத் தொடங்கினார். கொழும்பு நகரில் வாழ்ந்த இந்தியத் தமிழர்களின் வேதனைகளை விவரிப்பதற்காகவே, தி சிட்டிசன் என்ற ஆங்கில வார இதழையும் தொடங்கினார். “தேசபக்தன்” இதழின் முகப்பில் புதிய மலையக ஆத்திசூடிப் பாக்களை எழுதி நடேசய்யர் வெளியிட்டார். வெற்றியுனதே, நீ மயங்குவதேன், இந்திய இலங்கை ஒப்பந்தம், தொழிலாளர் சட்டப் புத்தகம், அழகிய இலங்கை என பதினான்குக்கு மேற்பட்ட நூல்களை எழுதிய நடே சய்யரால் எழுதப்பட்ட சிறுகதையே “ராமசாமி சேர்வையின் சரிதம்” ஆகும்.

❖ திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்

திரு. இராமசாமி சேர்வையின் சரிதம்

கோ. நடேசய்யர்

ஒருவன் தன் உழைப்பால் எவ்விதம் உயர் நிலையை அடையலாம் என்பதைப் பற்றி விளக்க ஒரு நண்பரது சரித்திரத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏழ்மையில் பிறந்து ஏழ்மையில் வளர்ந்து. பிறர் உதவியின்றி கல்வியில்லாதிருந்தும் உற்றார் உறவினரை விட்டு அந்நிய நாட்டில் தன் முயற்சியால் உயர்நிலையை அடைந்த திரு. ராமசாமி சேர்வையின் சரித்திரத்தைக் கேள். அவர் லட்சாதிகாரியாய் இறக்கவில்லை. ஏன் பொருளே வாழ்க்கையின் லட்சியமாய்க் கொண்டவர் அல்லர்.

தன்னாலியன்ற உதவி தன் இனத்தவர்களுக்கும், பிற பொது மக்களுக்கும் செய்து அவர்களது கஷ்டங்களை நீக்குவதே தனது வாழ்க்கையின் நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டவர் என்பதை மறக்கலாகாது. காலஞ் சென்ற நண்பர் இராமசாமியாருக்கு எழுதப் படிக்கவும் நன்றாய்த் தெரியாது. மாடுமேய்த்துக் கொண்டிருந்த இராமசாமி வறுமையின் கொடுமையால், விரட்டப் பெற்று தாய்க்குத் தெரியாமல் இலங்கைக்கு வந்தவர்களில் ஒருவர் என்பதை மறந்துவிடாதே.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில், திருமயம் தாலுக்கா மூவூர் என்னும் கிராமத்தில் இராமசாமி சேர்வை என்னும் ஓர் ஏழைக்குடி

யானவன் வயிற்றுதித்தவர். தகப்பன் பஞ்சத்தின் காரணமாய் இலங்கைக்குக் கூலி வேலை செய்ய வந்துவிட்டார். 12 வயதிலேயே தாயையும் பிறரையும் பாடுபட்டுக் காப்பாற்றும் பாரம் இராமசாமிக்கு ஏற்பட்டிருந்தது. இந்தியாவில் மாடு மேய்க்கும் பண்ணைக்காரனுக்கு என்ன வருமானம் கிடைக்கும் என்பதை கவனியுங்கள்! தன் தலைவிதி மாடு மேய்ப்பதே என்று எண்ணிச் சும்மாவிருக்கவில்லை. காலையில் கஞ்சியும் இல்லாது மாடுமேய்க்கப் போய் வெயிலில் வாடி குட்டைத் தண்ணீரில் இருகைத் தண்ணீரைப் பருகிப் பசியாறி மர நிழலில் சாய்ந்திருக்கும் சமயம், தனது "ஆண் டைகளைப் போல் (முதலாளிகள்) தானும் வரமுடியாதா என்ற கனவு காண்பதுண்டாம்! தான் நினைக்கும் நினைவு முடிவு பெறுமோ, பிறரிடம் சொன் னால் ஏளனம் செய்வார்களோ என்ற எண்ணத்தால் தன் தாயிடம் அவற்றைச் சொல்லிய தில்லை. காலை முதல் மாலை வரையில் ஒரு வேளைக் கஞ்சிக்குக் கஷ்டப்படவேண்டிய நிலைமையைக் கசிந்து எண்ணியெண்ணிப் பல நாள் இராமசாமி கண்ணீர் விட்டதுண்டு.

இளமையில் தேடிப் போடும் தகப்பனும் அயல் நாடு சென்றான். அவர் உள்ள இடமும் தெரியாது. பட்டினியால் உடல் மெலிந்த தாய் ஒரு பக்கம். என் செய்வான் சிறுவன்! தன் தகப் பன் சென்ற கண்டிப் பிரதேசத்தில் தேனும், பாலும் வடிவதாகக் கேள்விப்பட்டதுண்டு. அவ் விதம் செழுமை கொண்ட ஊரிலுள்ள தன் தகப்பன் ஏன் அது வரையில் தன்னை அழைத்துக் கொள்ளவில்லை என்ற - கவலையும் நமது இராமசாமிக்குண்டு.

கண்டிக்குப் போகவேண்டும். அங்கே தானும் தன் தாயும் பசியாதிருக்க வேண்டும் என்ற ஆசை நாளுக்கு நாள் நமது இராமசாமிக்குப் பலப்பட்டுக் கொண்டே வந்தது. கண்டியோ வெகுதூரம். தண்ணீரில்லாக் குட்டைகளைத் தவிர வேறு சமுத்திரங்கண்டிலாத இராம சாமிக் குக் கடல் தாண்டக் கப்பலில் போகவேண்டுமே என்ற பயம் ஒரு பக்கம். கையில் காசு மில்லை. வழியும் தெரியாது. இவ்வித இடையூறுகள் இருந்த போதிலும், கண்டிக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்தை அவன் விட்டு விடவில்லை.

கோவில் திருநாள் பார்க்கத் திருமயம் சென்றான் ஒரு நாள் இராமசாமி. அத்தினமே இராமசாமிக்கும். பெரு நாளாய் முடிந்தது. திருவிழா பார்க்கத் தாயிடம் விடை பெற்றுச் சென்ற வன் கோவில் பக்கம் செல்லவேயில்லை. கடைகளில் ஜனங்கள் கூட்டமாய் நின்று தேவை யானவற்றை வாங்கும் காட்சியையும்,கையில் காசில்லாது தான் நிற்க வேண்டி யிருப்பதையும் எண்ணிய வண்ணமாயிருந்தான்.அச்சமயம் வயது சென்ற ஒருவன் இராமசாமியைப் பார்த்து "என்ன பேராண்டி சுகமா? வா பலகாரம் சாப்பிடுவோம்" என்றான். பையன் திரும்பிப் பார்த்தான். ஆள் யாரெனத் தெரியவில்லை. முன்பின் பார்த்த ஞாபகமும் இல்லை. "பலகாரம் சாப்பிடவா" என்று அழைப்பதைக் கண்டு ஒருவிதத்தில் சந்தோஷம் கொண்டான். ஆயினும் முன்பின் தெரியாதவர் பலகாரம் வாங்கிக் கொடுப்பானேன் என்ற திகைப்பும் ஏற்பட்டது. ஆச்சரியத்தோடு தன்னைக் கூப்பிட்ட ஆளைத் திரும்பிப் பார்த்தான் இராமசாமி.

காதில் பொன் கடுக்கனாடத் தலையில் சரிகை வேஷ்டி, கையில் தங்கக் காப்பு, 10 விரல் பொன் மோதிரங்கள், இடுப்பில் புதுவேஷ்டி, கையில் புதுக்குடை, காலில் புதிய செருப்பு போட்டு வெகு உல்லாசமாய் அந்தக் கிழவன் காணப்பெற்றான். மேற்சொல்லிய கிழவனுடன்

வேறு ஒரு ஆளும் நின்று கொண்டிருந்தான். இராமசாமி ஆச்சரியப்பட்டு நின்றதைக் கண்டு "தம்பி! பயப்படாதே. உன் அப்பா வந்துவிட்டாரா?" என்றான் கூட நின்ற ஆள்.

"அப்பா கண்டிச் சீமையில் இருக்கிறார் வரவில்லை" என்றான் இராமசாமி.

இராமசாமியின் தகப்பன் கண்டியில் இருப்பது அந்த புதிய ஆளுக்கு அப்பொழுதுதான் தெரியும். ஆயினும், இராமசாமியின் தகப்பனுடன் நெருங்கிப் பழகியவன் போல்,

"ஆம் அது தெரியும். உன் தகப்பன் எனக்கு மச்சான் தான் வேணும். கண்டிச் சீமையில் பெரிய வீடுவாசல்களுடன் நல்லாயிருக்கிறான். நான் வந்த கப்பலில் தானும் வருவதாகச் சொன்னான். ஆனால் வரமுடியாமற் போய்விட்டது. உன்னை எப்படியாவது கூப்பிட்டுக் கொண்டு வரும்படி சொன்னான். உன்னைக் காணாமல் உன் அப்பன் மிச்சம் கவலையுடனி ருக்கிறான். உன்னைப் பார்த்தால் அவன் உயிரை விட்டுவிடுவான். வா போவோம்" என்றான்."

இராமசாமிக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. தகப்பனுடைய உறவினன் என்கிறார். உறவினனாயில்லாவிட்டால் நமக்கேன் பலகாரம் கொடுக்கிறான்?" எனப் பலவாறாக எண்ணி மேற்சொல்லிய இருவருடன் ஓர் பலகாரக் கடையில் நுழைந்து வயிறாரத் தின்று வெளிக்கிளம்பும் சமயம் கூட வந்த பெரியவன் "பேராண்டி வா கண்டிக்குப் போகலாம்." என்றான். அந்த வயது சென்றவன் யார் தெரியுமா? அவன் தான் இலங்கைக்கு ஆள் சேர்க்கும் கங்காணி. கங்காணி அவன் என்ற இரகசியம் இராமசாமிக்குத் தெரியாது. தன் உற வினன் என்றே அவனை எண்ணியிருந்தான். கண்டிக்குப் போக வேண்டுமே என்ற வருத் தம் மறுபக்கம் தாய் சம்மதிப்பாளோ என்ற சந்தேகமும் இடையே. இந் நிலையில் கங்காணி யைப் பார்த்து "அம்மாவைக் கேட்டுக் கொண்டு போகலாம்" என்றான்.

"பேராண்டி, நான் அவசரமாய்ப் போக வேண்டும். உன் அப்பன் உன்னை எப்படியும் அழைத்து வரச்சொன்னான். அதனால் நேராக உன் வீட்டுக்குப் போய் உன் அம்மாவைக் கேட்டேன். நீ திருமயம் வந்திருப்பதாகவும் உன்னைத் தேடி அழைத்துப் போகும்படி சொன் னாள். வந்து தேடி உன்னைக் கூப்பிட்டேன்" என்றான் கங்காணி.

இராமசாமிக்கு ஒன்றும் சொல்ல முடியவில்லை. கங்காணியை விட்டுப் போகவும் மனமில்லை. அதற்குள் கங்காணியும், ஒரு புது வேஷ்டியும் சட்டையும் வாங்கி இராமசாமிக் குக் கொடுத்து விட்டான். ஒன்றும் பதில் சொல்லாமல் கங்காணி பின்னே போகும் சமயம், "பேராண்டி, நீ இனி ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நீ மாடு மேய்க்கப் போக வேண்டாம். கண்டிச் சீமை மிகவும் நல்ல சீமை. நீ சும்மாயிருந்தாலும் நாள் ஒன்றுக்கு 1 ரூபாய் கொண்டு வந்து கொடுப்பார்கள். செலவு உனக்கு ஒன்றுமில்லை. நீ வந்து இரண்டொரு மாதம் கழித்து அம்மாவையும் அழைத்துப் போகலாம். ஏன் கஷ்டப்பட வேண்டும். எனக்கு ஒரு பெண் இருக்கிறது. அதை உனக்குக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று உன் அப்பன் சொன்னான். அதற்குச் சரி என்றிருக்கிறேன்" என்றான் கங்காணி.

"நல்ல சம்பளம், போதாக் குறைக்குக் கலியாணம் வேறு செய்து கொடுக்கிறான்". என்று எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டு தாயையும் மறந்து தொண்டித் துறைமுகம் சேர்ந்தான். கங்காணி கையில் அகப்பட்ட சிறுவன் என் செய்யமுடியும். தொண்டிக் கரைக்கு வந்து கப்ப லுக்குக் காத்திருந்து கப்பலேறி மன்னார் வந்திறங்கி, கண்டிக்குக் காட்டு மார்க்கமாய் நடக்கத் தலைப்பட்டார்கள். தலையில் சாக்கு மூட்டை திருமயம் சந்தையில் "பேராண்டி" என்றது

அன்புடன் கூப்பிட்ட வார்த்தையெல்லாம் போய்விட்டது. அதிகார வார்த்தைகள் இலங்கைக் கரைக்கு வந்ததும் ஏற்பட்டு விட்டது.

தன் தகப்பனைக் காணப்போகிறோம். பட்டினியாலும் பசியாலும் வாடாது உயர் நிலையில் இருக்கப் போகிறோம் என்ற ஆசை பின்னே பிடித்துத் தள்ள, கங்காணி ஆடம்பர மாய் முன்னே செல்லக் கண்டிக்கு வரும் கூட்டத்தாருடன் அநுராதபுரம், தும்பளை, பன்னா மம் முதலியவிடங்கள் வழியாய் நடந்து 15வது நாள் கண்டி நகரம் வந்து சேர்ந்தான் நமது இராமசாமியும்.

கண்டி வந்ததும் இராமசாமிக்குக் குளிர் தாங்க முடியவில்லை. "கங்காணியைப் பார்த்து, அப்பா எங்கேயிருக்கிறார்" என்றான் இராமசாமி. "நாளைக்குப் போகலாம்" என்று சொல்லி மறுநாள் கலகாப் பகுதியில் உள்ள கடுதாசித் தோட்டத்திற்கு சுமார் 55 வருஷங்க ளுக்கு முன் நமது இராமசாமியைக் கங்காணி அழைத்து வந்தான். தோட்டத்திற்கு வந்ததும் தகப்பனைப் பற்றி விசாரித்தான். போகவும் ஆசை ஒரு பக்கம். பயம் ஒரு பக்கம். தாயை விட் டுப் போன இராமசாமி. "கம்பளைக்குப் போயிருக்கிறார் நாளைக்கு வருவார்" என்றான் கங் காணி முதல் நாள். அன்று யாதொரு வேலையும் இராமசாமிக்குக் கொடுக்கவில்லை. 10க்கும் 10க்கும் உள்ள ஓர் அறையில் படுத்துறங்கினார்கள். காலையில் தப்படிக்கப் பெற்றது. புலியால் விரட்டப்பட்ட ஆடுகள் போல் அறைகளை விட்டு ஆட்கள் அவசர அவசரமாய் வெளியேறி னார்கள். இராமசாமியும் கிளம்பினான். தன்னை அழைத்து வந்த கங்காணியைக் காண ஒருவித பயமேற்பட்டது. கங்காணி போட்ட சப்தம் காட்டின் நாலு பக்கங்களிலும் எதிரொலி கிளம்பியது. யாதொரு வேலையும் இல்லாமல் சோறு போடுவதாகவும் பெண்ணைக் கலியா ணம் செய்து கொடுப்பதாகவும் சொன்ன கங்காணியைப் பார்க்க பயங்கரமாயிருந்தது. வேலைக்குப் போகாமல் தங்க எண்ணித் தயங்கி நின்றான். இராமசாமியைப் பார்த்து "ராசா வீட்டுப் பிள்ளையோ என்ன பார்க்கிறே" என்றான் கங்காணி. இராமசாமி இன்னது செய்வது என்று தெரியாமல் வேலைக்குப் போனான்.

காலையில் 8 மணியளவில் மாட்டின் மேல் ஏறிக் கொண்டு காட்டுப் பக்கம் போய் உடல் நோகாது வேலை செய்து வந்த இராமசாமிக்குத் தோட்ட வேலை சுகமாயிருக்குமா? அவ னுக்கு வேலை ஓர் பாரமாயிருந்தது. தகப்பன் எங்கே என்று மறுநாள் விசாரிக்க கங்காணி ஒரு அடி இராமசாமியின் முதுகில் வைத்தான். அப்பொழுதுதான் இராமசாமிக்கு உண்மை விளங்கியது. என் செய்வான்?

எப்படியும் தோட்டம் விட்டுப் போக வேண்டும் என்றெண்ணிச் சமயம் பார்த்திருந் தான். கங்காணிக்குத் தெரியாமல் ஓடுகிறவர்கள் காவற்காரர்களால் பிடிக்கப்பட்டு கங்காணி யின் வீட்டு முன் நிறுத்தப்பெற்றிருக்கும் கம்பத்தில் கட்டப்பட்டு அடிக்கப்படுவதைத் தினந் தோறும் காணும் ராமசாமிக்கு ஓடவும் தைரியம் வரவில்லை. விதியை நொந்து ஒரு வேளை பலகாரத்திற்கும் நாலு பணம் வேட்டிக்கும் அடிமையானோமே என்ற எண்ணத்தால் வருந்தி மற்றைய தொழிலாளர்கள் போல் வேலை செய்யத் தலைப்பட்டான். சிறுபிள்ளையெனினும் இராமசாமி புத்திசாலி. படிப்பில்லை எனினும் நன்மையிது தீமையிது என்பதைப் பகுத்தறியும் குணம் உடையவன். தாயையும் பிற உறவினர்களையும் விட்டு வந்தோம் வீணாய் ஓடி அடிபட்டுச் சாகவேண்டாம். உண்மையில் உழைத்து நாமும் கங்காணியைப் போல் வரப் பார்ப்போம் என்ற ஆசை நமது இராமசாமிக்கு ஏற்பட்டது. தானும் கங்காணியாய் வரவேண்

டும். அதற்கு உழைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் கங்காணியின் கட்டளையை உண்மையுடன் ஏற்று உழைத்து அவனுடைய தயவை சம்பாதிப்பதே நன்மையென்று திட்டம் செய்து கொண்டான். கங்காணிக்குத் தன் மேல் பிரியம் ஏற்படும்படியும் நம்பிக்கை உண்டாகும்படியும் நடந்து வந்தான். தனக்குக் கொடுக்கப் பெற்ற வேலை கஷ்டமெனினும், எப்படியும் செய்து முடிக்க வேண்டும் என்று சந்தோஷத்துடன் ஏற்றுச் செய்து வந்தான். கஷ்டமான வேலை கங்காணி கொடுக்கிறானே என்ற முகக்குறி இராமசாமியிடம் ஒரு சமயமும் ஏற்பட்டதில்லை. இதன் காரணமாய் கங்காணிக்கு இவன் பேரில் நம்பிக்கையும் அன்பு மேற்பட்டது. தன்னுடைய பண வரவு செலவு முதலியவையெல்லாம் இராமசாமியின் மூலமாகச் செய்து வரத் தலைப்பட்டான்.

இராமசாமி, பெரிய கங்காணியின் வேலையாய் கடைக்காரர்களிடமும் செட்டிமார்களிடமும் அடிக்கடி போய் வரவேண்டிய நிலைமையில் அவர்கட்கு இவனிடத்தில் நம்பிக்கை ஏற்பட்டது. இராமசாமி யோக்கிய ஊக்கமுள்ளவன், நம்பிக்கைக்கு பாத்திரமுள்ளவன் என்ற பெயர் ஏற்பட்டது. காலக்கிரமத்தில் இராமசாமி கருவானை, பசுமலை முதலிய தோட்டங்களில் வேலை செய்து கடைசியாய் ஓர் சில்லரைக் கங்காணியாய் சுமார் 45 வருட காலத்திற்கு முன் நூரளை வம்பரக் கொல்லைத் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான். இச்சமயம் அத் தோட்டத்தில் வேலை பார்த்த துரைக்கு இராமசாமியின் வேலையில் திருப்தியேற்பட்டது. நம்பிக்கையும் ஏற்பட்டது. இவனைப் பெரிய கங்காணியாக்கி முன்னேற வைத்தான். போதிய பொருளுதவியும் தோட்டத்துரையே செய்தான்.

தனக்குப் பெரிய கங்காணி வேலை கிடைத்து விட்டதே என்ற பெருமை இராமசாமிக்கு ஏற்படவில்லை தன்னிடம் உள்ள தொழிலாளர்களைத் தன் சகோதரர்களைப் போல் நடத்தி வந்தார். தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களைத் தன் கஷ்டங்கள் போல் பாவித்து அவற்றைத் தன்னால் இயன்ற அளவு நீக்கி வந்தார். அக்காரணம் பற்றியே ஒரே தோட்டத்தில் சுமார் 45 வருஷ காலமாய் பெரிய கங்காணி வேலை பார்த்து வர ஏதுவாயிற்று.

திரு. இராமசாமி சேர்வை தனது ஆட்களுக்கு மாத்திரம் நன்மை செய்து வந்தார் என்று சொல்ல முடியாது. இந்தியர்களுக்கு ஆகவேண்டிய பொது நன்மைக்கான காரியங்கள் ஒவ்வொன்றையும் தன்னால் கூடிய அளவு கவனித்து உதவி செய்து வந்தார் என்பது மிகையாகாது. நூரளைப் பகுதியில் இவரைப் பற்றி நன்மையாகச் சொல்லாதவர் இல்லை.

●

வரதர்

தி. ச. வரதராஜன் வரன், வரதர் என்ற புனைப்பெயர்களில் ஈழகேசரியில் பதின்மூன்று சிறுகதைகளுக்குமேல் எழுதியுள்ளார். மறுமலர்ச்சி என்ற சஞ்சிகை ஒன்றினை நடாத்தி 1936, 1938களில் ஈழத்துப் புனைகதைத் துறைக்குப் பங்களிப்புச் செய்துள்ளார். ஆனந்தன், புதினம், தேன்மொழி, வெள்ளி எனக் காலத்திற்குக் காலம் சஞ்சிகைகளை நடாத்திப் புதிய எழுத்தாளரை அறிமுகம் செய்து வைத்தவர். ஈழத்துப் புதுக்கவிதையின் ஆரம்ப கர்த்தா. நூல் வெளியீட்டாளர்.- இவரது சிறுகதைகளைக் கொண்ட தொகுதி "கயமை மயக்கம்" 1960களில் வெளிவந்தது. பின்னர், "வரதர் கதைகள்" என்ற பெயரில் 1996இல் வெளியிடப்பட்டது. இவர் எழுதிய யாழ்ப்பாணத்தார் கண்ணீர், தீ வாத்தியார் (மலரும் நினைவுகள், என்பன இலக்கியத்திற்குப் "புதிய வடிவங்களாகும். இவரது கற்பு , வீரம் ஆகிய சிறுகதைகள் ஈழத்திலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பண. நம்மிடையே வாழ்ந்து இலக்கியப் பணியாற்றிக்கொண்டிருக்கும் மூத்த எழுத்தாளர். மூதறிஞர், பொன்னாலைக் - கிராமத்தில் பிறந்தார். "மீண்டும் மறுமலர்ச்சியை வெளிக்கொணர்வதற்கான முயற்சியிலீடுபட்டுள்ளார் இந்த மூதறிஞர்.

- நெஞ்சு கொதிக்குதையோ - இந்த
  நீசத்தனங்களை நினைத்துவிட்டால்
- பாஞ்சாலிதேவி பதிவிரதையான கதை
- இன்பத்திற்கு ஓர் எல்லை
- ஜோடி
- வேள்விப் பலி
- அவள் தியாகம்
- விபச்சாரி
- கல்யாணமும் கலாதியும்
- காதற் பலி

நெஞ்சு கொதிக்குதையோ- இந்த நீசத் தனங்களை நினைத்துவிட்டால்!

வரதர்

"**தா** தெய்; தரிகிட - தரிகிட..." என்று தாளக்காரர் ஆரவாரித்தார். பிள்ளையார் கோயிலின் வெளி மண்டபத்திலே சின்ன மேளக்காரி துகள் பறக்க ஆடிக்கொண்டிருந்தாள். பெண்களும், குழந்தைகளும் அந்த வேடிக்கையைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவளோ அடிக்கடி கண்ணை வெட்டி, பல்லைக் காட்டி வெளிச சம் போட்டுக்கொண்டிருந்தாள், ஆண்பிள்ளைகள் இருந்த பக்கத்தைப் பார்த்து! கிழவர்களுக்கு மனத்துள்ளே வாலிபம் துளிர்த்துக்கொண்டிருந் தது. நிகழ்கால வாலிபர்கள் - குறிப்பிடத்தக்க புள்ளிகள் - பின்னாலே வரிசையாக - ஸ்டைலாக - நின்று கொண்டிருந்தார்கள். அந்த வரிசை யிலே பெற்றோ மாக்ஸ் லைற்றின் ஒளிமோத, அங்கிருந்து மோதிரக் கற்கள் டாலடித்தன; கைக்கடிகாரங்கள் பளிச்சிட்டன. இடையிடையே கழுத்துச் சங்கிலிகளும் மின்னின.

"உனைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ" என்ற பாட்டின் அடியைப் படித்துவிட்டுச் சின்ன மேளக்காரி ஜிகுஜிகு என்று ஜில் வட்டம் சுழன்று வந்துகொண்டிருந்தாள்...

ஆதிமூலத்திலே, அழுது வடிந்து கொண்டிருந்த தேங்காயெண்ணெய் விளக்குகளும் தானுமாய்ப் பிள்ளையார் கவனிப்பாரற்றுக் கிடந்தார்!

பிள்ளையாருக்கும் பெரியவராய், கண்கண்ட கல்நெஞ்சராய்ப் பிரசித்தி பெற்ற டொக்ரர் சுந்தரமூர்த்தி அவர்களுக்கு இந்த அசலான சந்தர்ப்பத்திலே ஒரு நப்பாசை தோன்றிற்று. சதிராட்டம் நடந்துகொண்டிருந்த பாதைவழியே சின்ன மேளக்காரியின் பக்கமாக இங்கிருந்து மறுபக்கம் போய்ச்சேரவேண்டு மென்பதுதான் அந்த ஆசை. அந்த ஆசையின் வேகத்திலே முகம் பூரிக்க, அங்குமிங்குமாய் நரைத்துக்கொண்டிருந்த மீசையைக் கையினால் தடவி விட்டுக்கொண்டு எழுந்தார். இடுப்பிலே மல்வேட்டி கசமுசக்க, பட்டையாக மடித்து அரையிலே சுற்றியிருந்த சேலம் பட்டுச் சால்வையின் அகலச் சரிகை தகதகக்க, ஒரு ராஜநடை போட்டுக் கொண்டு வந்தார். உடலெங்கும் ஒரு வித புல்லரிப்பும், ஆயிரக்கணக்கான கண்கள் தம் மையே நோக்குவதுபோன்ற உணர்ச்சியினால் ஒரு தளதளப்பும் மோதிக்கொள்ள ஒரு விதமாகச் சின்ன மேளக்காரியின் சமீபத்தில் வந்து சேர்ந்தார். அவள் வட்டம் போட்டுச் சுழன்று வந்து இவரோடு மோதிக்கொள்ளப் போனவள், மெல்ல மரியாதையாக ஒதுங்கி, ஒரு மோனகப் புன்னகையை உதிரிந்துவிட்டு ஆட்டத்தைத் தொடர்ந்தாள். கூட்டத்தின் ஓரத் திலிருந்து “உஸ்ஸ்” என்று ஒரு மெல்லிய சிரிப்பொலி இலேசாகத் தலைதூக்கிற்று. டொக்ரரும் அசட்டுச் சிரிப்புடன் லட்சியத்தை எட்டிப் பிடித்துவிட்ட மனநிறைவுடன் அக்கரை போய்ச் சேர்ந்தார்.

◆◆◆

சின்னமேளக்காரியின் இந்த மோஹனமான ஒயிலாட்டத்தையும்,அதன் காரண கர்த்தாவான - திருவிழா உபயகாரரான டொக்ரர் சுந்தரமூர்த்தி யின் பக்திப் பெருக்கையும் பற்றி எழுதிக்கொண்டிருப்பதன்றால் - ஆஹா, ஆனந்தந்தான்! அதை எழுதிய எனக்கும், படிக் கிற உங்களுக்கும், படிப்பதைக் கேட்கிற உங்கள் நண்பர்களுக்கும் கூட மோட்ச லோகத்திலே இடமொதுக்கப்பட்டிருக்லாம். ஆனால்...

சுந்தரமூர்த்தி அவர்களின் பக்திச் செல்வம் இந்த வருடம் ஏன் இவ்வளவு தூரம் கடல் மடை திறந்தாற்போலப் பெருக்கெடுத்து இருக்கிறது என்ற விஷயத்தைக் கொஞ்சம் ஆராயப் புகுந்தால் - ஐயோ, நெஞ்சுசு துடிக்குதையோ, இந்த நிலைகெட்ட மாந்தரை நினைந்து விட்டால்!

பரவாயில்லை. தயவுசெய்து இதைப் படியுங்கள். இதைப் படிப்பதனால் மோட்ச லோகத் திலே இடம் கிடைக்காவிட்டாலும், இந்தலோகத்து ஊழல்களிடையே சற்றுநேரம் நீந்தும் பாக்கியமாவது கிடைக்கலாம்!

◆◆◆

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. சுந்தரமூர்த்தி அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து, அனுஷ்டானம் பார்த்து விபூதியைத் தண்ணீரிலே குழைத்துப் பட்டை பட்டையாகக் குறிகளை இழுத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே ஒரு மூலையில் புனிதமாக மாட்டப்பட்டிருந்த சுவாமி படங் களருகே போனார். அங்கே ஒரு தட்டில் புஷ்பங்களும், விபூதி, கற்பூரம், சாம்பிராணிக் குச்சி முதலியனவும் தயாராக இருந்தன. புஷ்பங்களை எடுத்துப் படங்களின் மேலிருந்த சிறு வளை யங்களிலே சொருகினார். இரண்டு படங்கள்: ஒன்று பிள்ளையார் - வருகிற விக்கினங்

களையெல்லாம் தீர்த்துவைப்பதற்கு; செய்கிற பாவங்களையெல்லாம் மன்னித்துக் கடைத் தேற்றுவதற்கு, மற்றது லட்சுமி - செல்வத்தை அள்ளிக் குவிப்பதற்கு.

புஷ்பங்களைச் சாத்திவிட்டு, சாம்பிராணிக் குச்சிகளைக் கொழுத்தி வைப்பதற்காக நிமிர்ந்தார். அட, தூண்டாமணி விளக்கைக் கொழுத்த வேயில்லை, போய்த் தொலைகிறது; அவர்தான் கொழுத்தி விடலாமென்றாலும் விளக்கில் திரிகூட இல்லையே! சுந்தரமூர்த்திக்குச் சற்றுக் கோபம் வந்தது. "மீனாட்சி! மீனாட்சி!" என்று அவர் கூப்பிட்ட சத்தத்தின் வேகத்தைக் கேட்ட அவருடைய இல்லாள், "ஏன் ஐயா, கூப்பிட்டியளா?" என்று கேட்டுக் கொண்டே தொப்புத் தொப்பென்று நடந்து வந்து கதவருகே நின்றாள்.

"இந்த விளக்குக் கொழுத்துகிறதில்லையோ? திரிகூடப் போடவில்லை!"

"திரிகூடப் போடவில்லையா? அந்தக் கழுதையிடம் எத்தனை தரம் சொன்னேன். மூதேவி வர வர மோசமாய்ப் போகுது!.. பாக்கி! பாக்கி!" என்று அந்த மீனாட்சியம்மாள் அலறி னாள்.

"பாக்கி" என்று சொல்லப்பட்ட அந்தப் பாக்கியலட்சுமி "அம்மா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே ஓடிவந்தாள்.

"உனக்கு எத்தனை தரமடி சொல்கிறது? அந்த விளக்குக்குத் திரிபோட உனக்கு என்ன கேடடி வந்தது?" என்று சொல்லிக்கொண்டே அந்தப் பத்து வயதுச் சிறுமியின் கையைப்ப பிடித் துத் தர தரவென்று இழுத்துக்கொண்டு பின்பக்க விறாந்தைக்குப் போனாள். மீனாட்சி யம்மாள். அங்கிருந்து வந்த "சுளீர் சுளி"ரென்ற பிரம்படியின் ஓசையும், "அம்மா! அம்மா! ஒரு நாளும் இல்லையம்மா!... சின்னம்மாதான் பேப்பர் வாங்கியரச் சொல்லிப் போகச் சொன்னா!... ஐயோ, அம்மா! அம்மா!" என்ற பரிதாபகரமான குரலும் பூசையறையிலேயிருந்த டொக்ரரின் செவிகளில புகுந்து மனத்திலே திருப்தியை உண்டாக்கின. படத்திலே - கண்ணாடிச் சட்டத்துள்ளே கிடந்த அந்தத் தெய்வங்கள் கூடத் திருப்திப்பட்டனவோ?

சற்றுநேரத்துக்கெல்லாம் பாக்கியம் ஒரு கையில திரியும், மறுகையில் தேங்காயெண் ணெய்ப் போத்தலும், கண்களில் ஜலமும், கன்னத்தில் நகக் கீறலும், முதுகிலே பிரம்பின் அடையாளங்களுமாக வந்துசேர்ந்தாள். அவளுடைய தலைமயிரை எப்படி வர்ணிப்பது, என்ன உபமானத்தைச் சொல்லுவதென்று தெரியவில்லை. கார் மேகம் போன்ற கூந்தலை யும், மயில் தோகை போன்ற கடல் அலை போன்ற, புகை போன்ற - இன்னும் எத்தனையோ விதமான கூந்தல்களைப் பற்றியெல்லாம் நிறையப் படித்திருக்கிறோம். ஆனால் இந்தப் "பாக்கி"யின் கூந்தலை யாரோ வர்ணிப்பார்! "தலையிலே காகம் கூடுகட்டப் போகிறது!" என்ற ஒரு வார்த்தைதான் ஞாபகம் வருகிறது. அழகான முகந்தான் ஆனாலும் பேணுவாரற்று பெட் பழிந்து போயிற்று. இடுப்பிலே ஒரு சீலை. அதிலே ஒரு நீளப் பீற்றல், அதன் நிறம் - ஆராய்ச் சிக்குரிய ஒரு விஷயம்!

அதோ அந்தக் கண்ணாடிச் சட்டத்துக்குள்ளே இருக்கிற - உயிரற்ற - படமாகிய - பாக்கிய"லட்சுமி" யையும், இந்த உயிருள்ள பாக்கியலட்சுமியையும் ஒத்துப் பார்க்கும் போது.... ஐயோ, இந்தப் பேதைப் பெண்ணும் அப்படி ஒரு படமாகப் பிறந்திருக்கக் கூடாதா? எத்தனை பூஜைகள், படையல்கள்...! படமாக இல்லாவிட்டால், சிலையாக, கல்லாக, மரமாக,

மண்ணாங்கட்டியாக - ஏதேனும் உயிரற்ற ஜடமாகப் பிறந்திருக்கக் கூடாதா? இவளுக்கு "உயிர்" என்று ஒன்று இருந்தால் தானே. எட்டு ரூபாவுக்கும் சாப்பாட்டுக்குமாக கண்கண்ட நரகலோகத்திலே கதிகெட்டுக் கலங்குகிறாள்!...

சுந்தரமூர்த்தி சாம்பிராணிக் குச்சியைக் கொழுத்தி படங்களின் கீழ் ஆணியிலே மாட்டி விட்டு. கற்பூரத்தைக் கொழுத்தி விபூதித் தட்டிலே வைத்து விட்டு. கண்களை மூடி. இரு கைகளையும் ஏந்திக்கொண்டு - ஆஹா. என்ன பரவச நிலை! என்ன பரவச நிலை!... அவர் வாய் ஏதோ முணுமுணுத்தது. "...பொல்லாப் பிழையும் இல்லாப் பிழையும்..."

திடீரென்று வாசலிலே "சிவ சிதம்பரம்! சிவ சிவ சிதம்பரம்!!" என்ற வார்த்தைகள் கணீரென்று ஒலிததன. சுந்தரமூர்த்தி டக்கென்று கண்ணை விழித்துத் திரும்பி. "வாருங்கோ சாமி! வாருங்கோ!" என்று இரு கைகளையும் நீட்டி உபசரித்தார்.

"சிவ சிதம்பரம்... இன்றைக்கு என்ன விசேஷம்? எல்லாம் கொஞ்சம் வெள்ளெனவே நடக்கிறது? என்று சிவானந்தசாமி விசாரித்தார்.

"ஆஸ்பத்திரிக்குப் போகமுன்னம் வேறு ஒரு இடத்துக்குப் போகவேணும் சாமி! அதனாலே தான்..."

டொக்ரருக்கு சிவானந்தசாமி என்றால் உயிர். அந்த வீட்டிலே சாமியின் சொல்லுக்கு உயர்ந்த மதிப்பு உண்டு. சாமி "தளதள"வென்றும், "கொழுகொழு" வென்றும் வேஷம் குறையாமல் பூமிக்குப் பாரமாய். டொக்ரரின் ஆத்மீக(!) வழிகாட்டியாய் விளங்கினார்.

"இன்றைக்கு நானும் ஒரு பயணம் வெளிக்கிட உத்தேசம்..."

"எங்கே சாமி? எனக்கு இதுவரை ஒன்றும் சொல்லவில்லையே?"

"சிவசிதம்பரம்!... எனக்கே தெரியாததை நான் எப்படிச் சொல்லியிருப்பேன்? இராத்திரித்தான் கதிரமலையான் கனவிலே வந்தான் "ஏன்ரா. என்னை மறந்துவிட்டியோ?" என்றான்...?

"சாமி கதிரமலையானை மறந்தாலும் அவன் சாமியை மறக்கவில்லை!" என்று டொக்ரர் பக்திப் பரவசமாய்ச் சிரித்தார்.

"சிவசிதம்பரம்!... "அவ"னுக்கு எப்போதும் பக்தனின் நினைவு இருக்குந் தானே!"

"அப்ப சாமிக்கு... இருங்கோ சாமி. வந்து விட்டேன்" என்று சொல்லிவிட்டு டொக்ரர் அந்த அறையை விட்டு வெளியே போனார். அடுத்த அறையில் பெட்டி திறக்கும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்த டொக்ரர். விபூதித் தட்டத்திலே பத்து ரூபா நோட்டுக்களில் ஐந்து சேர்த்து மடித்த ஒரு மடிப்பை வைத்து அதைச் சாமியின் முன்பாக நீட்டி "சாமி" என்றார்.

"சிவசிதம்பரம்... இது என்ன இது?"

"இல்லைச் சாமி! ஏதோ என்னால் ஆனது. ஏற்றுக்கொள்ளவேணும்!"

"உம். கதிரமலையான் சித்தம்!" என்று சொல்லிச் சாமி எடுத்துக் கொண்டார்.

சுந்தரமூர்த்திக்கு ஒரு ஆறுதல். காலையில்தான் அந்தக் காசு வந்தது. அந்த ஐம்பதோடு இன்னும் ஒரு இரு நூற்றைம்பது சேர்த்து முந்நூறு ரூபாவாக வந்தது. அட்வகேட் முருகேசு அதிகாலையில் வந்து ஒரு ரகசிய வேலைக்காக அதைக் கொடுத்தார். அந்த ரகஸ்ய வேலையைக் கவனிப்பதற்காகத் தான் இன்று ஆஸ்பத்திக்குப் போகுமுன்னர் அட்வகேட் முருகேசு வீட்டுக்கு அவர் போக வேண்டியிருந்தது. அந்த வேலையைச் செய்வது "பாவம் பழியோ" என்று உள்நெஞ்சிலே இது வரை ஒரு தாக்கம் இருந்தது. அந்தக் காசிலே ஒரு பகுதியை இப்போது ஒரு நல்ல - விஷயத்தில் - சாமிக்குக் கொடுத்துவிட்டால் மனம் ஆறுதல் அடைந்தது! அட்வகேட் முருகேசுவின் செல்வப் புதல்வி - கணவன் சிங்கப்பூரிலே இருக்க, இங்கே அவளுக்கு வயிற்றிலே ஏதோ தொந்தரவாம். அதை நீக்கிவிட வேண்டுமென்று அட்வகேட் பெரிதும் வேண்டிக் கொண்டார்." இது, பெரிய பாவமா? பழியா? அப்படித்தான் ஏதோ அற்பதினையத்தனை பாவம் வந்தாலும், டொக்ரர் செய்து வரும் எத்தனையோ பெரிய - மலையத்தனை புண்ணியங்களுக்கிடையே இது மறைந்து ஒழிந்து மண்ணாகிப் போகாதா?

டொக்ரரின் உள்ளம் பளிங்குபோலத் தெளிந்தது....

◆◆◆

இங்கே சின்னமேளக்காரி ஒரு பாட்டை முடித்துவிட்டு நிற்கிற சமயம், யாரோ ஒரு வாலிபன் எழுந்தோடிப்போய் ஆர்மோனியக்காரனின் அருகில் குந்தியிருந்து ஏதோ குசுகுசுத்தான். ஆர்மோனியக்காரன் பெட்டியிலே புதிய பாட்டை வாசித்தான். சின்னமேளக்காரியும் அதைக் கவனித்துவிட்டு, "அய்யய்யய்ய - சொல்ல வெட்கம் ஆகுதே!" என்று ஆரம்பித்தாள்.

சபையோர் - பக்த சிரோன்மணிகள் - அந்தப் புது ஆட்டத்தை ரகிக்கத் தொடங்கினார்கள்.

வஸந்தமண்டபத்திலே எழுந்தருளிப் பிள்ளையார். தும்பிக்கையையும் மூடி வரிந்து கட்டி விட்டதனால் மூச்சுவிடவும் முடியாமல் புதிதாய் முளைத்த கை கால்களுடன் கத்தரித் தோட்டத்து வெருளி மாதிரி ஜம்மென்று உட்காரந்திருந்தார்!

வரதர் புதுவருஷ மலர் - 1950

பாஞ்சாலிதேவி பதிவிரதையான கதை

வரதர்

அடேடே! அது யாரது? பாஞ்சாலியா? என் ஆசைக்கிளி பாஞ்சாலி யேதானா!... பாஞ்சாலி! பாஞ்சாலி!... அவள் ஏன் இங்கே வந்தாள்? - என்னைக் கண்டும் காணாதவள் மாதிரிப் போகிறாளே! அவள் பாஞ்சாலிதானா?...

(என்ன இது? பாஞ்சாலியாவது, ஆசைக்கிளியாவது! அது யாரது பாஞ்சாலி? முதலில் நீர் யார் காணும்?)

நான் அப்போது ஒரு சிப்பாய். மகா யுத்தம் ஓய்ந்து விட்டது. எனக்கு இனி வேலையில்லை. ஆனாலும் பட்டியைப் பிரித்து எனக்கு இன்னும் சுதந்திரம் வழங்கவில்லை. பரதேசமெல்லாம் அலைந்து படாது பாடெல்லாம் பட்டு, "பிராஞ்சு நாட்டுச் சுதந்திரத்தைப் பிடிச்சுக் கொடுத்து", "போலந்துக்குச் சுதந்திரத்தை வாங்கித் தந்து" - எல்லாம் முடிந்த பிறகு என்னுடைய அடிமை நாட்டிலே பழையபடி காலவைத் திருந்தேன். அப்போது ஒருமாத லீவு கிடைத்திருந்தது. லீவு கிடைத்த வுடனேயே வீட்டு நினைவுகள் உள்ளத்தில் பொங்கி எழுந்தன. "தம்பி பேசாமல் பறையாமல் ஓடிப்போய்ப் பட்டாளத்திலே சேர்ந்தானே" என்று

அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நிற்கும் அருமைத் தாயாரைப் பார்க்க வேண்டும். அதற்கும் மேலாக என் அருமைப் பாஞ்சாலியைப் பார்க்க வேண்டும். ஊரிலே என்னை வரவேற்கக் காத்திருக்கும் நண்பர்களிடம் என்னுடைய அனுபவங்களை - வீரப்பிரதாபங் களைச் சலிக்கச் சலிக்கப் பேச வேண்டும் - இத்தகைய ஆசைகள் முன்னேயிருந்து பிடித் திழுக்க ரயில் ஏறினேன். பிரயாணம் செய்துகொண்டிருக்கையிலே இன்னொரு ஞாபகம் வந்தது.

"தம்பி தம்பி" என்று என்மேல் உயிராயிருக்கும் சித்தப்பாவையும், சின்னம்மாவையும் போகிற வழியில் இறங்கிப் பார்த்துக்கொண்டு, அடுத்த ரயிலில் ஊருக்குப் போகலாமென்று தீர் மானித்தேன். பாவம், அவர்களும் தங்கள் மலட்டுச் சொத்துக்களெல்லாவற்றையும் எனக்கே தந்து, என் கையால "கொள்ளி" வாங்க வேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தீர்மானித்தபடி இடைவழியில் இறங்கினேன். என்னைக் கண்டதும் அவர்கள் அடைந்த ஆனந்தம்! - எவ்வளவு உபசாரம் நடந்தது!

சின்னம்மா உள்ளே சமையல் வேலையில் ஈடுபட்டிருக்க, சித்தப்பாவும் ஏதோ அலுவலாக வெளியே போக, எனக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்தது. அறைக்குள்ளே போய் "அப்பாடா" என்று கட்டிலில் படுத்துக்கொண்டேன். தூக்கம் வரவில்லை. ஊர் நினைவுகள் - முக்கியமாக தாயாரின் அன்பு முகமும், பாஞ்சாலியின் இன்ப வதனமும் மாறிமாறி என் நினை வுகளில் குறுக்கிட்டன. இந்த நினைவுகளில் ஆழ்ந்திருந்தபோதுதான் சமையலறையில் பேச்சுக் குரல் கேட்டது. "பாஞ்சாலியாவது, இங்கே வரவாவது! வீண் பிரேமை" என்று முதலில் நினைத்தேன். ஆனால், வரவரச் சந்தேகம் அதிகரித்தது. போய்ப் பார்த்து விடுவதென்று தீர் மானித்தேன். நான் அறையைவிட்டு வெளியே வந்ததும், அவள் வந்த காரியம் முடிந்து வெளியே போனதும் சரியாக இருந்தது. என்னால் சரியாக அவதானிக்கமுடியவில்லை. படலையைத் திறந்து போகையில் திரும்பிப் பார்த்தாள். என்னைக் கண்டதும் ஒருகணம் ஆச்சரியப் பட்டவள் போலத் தயங்கி நின்றாள். பிறகு டக்கென்று படலையைச் சாத்தி விட்டுப் போய்விட்டாள்!

அவள் பாஞ்சாலிதானா? பாஞ்சாலியென்றால் என்னைக் கண்டபிறகும் அப்படிப் போவாளா?... பாஞ்சாலி இல்லையென்றால் எதற்காகத் திரும்பி நின்று அப்படி மலைத்துப் பார்த்தாள்?... ஒன்றும் விளங்கவில்லை. சின்னம்மாவிடம் கேட்டுப் பார்த்தால் தெரிகிறது!.... ஏதோ சாதாரணமாகக் கேட்பதுபோல, "சின்னம்மா! அது யார், இங்கே வந்துவிட்டுப் போகிறது?" என்றேன்.

"உனக்குத் தெரியாதா தம்பி? உங்கள் ஊர்க்காரிதானே? செல்லம்மா என்று..."

"ஓ! அவளா?" என்று என் வாய் சொல்லிற்று. நெஞ்சு "பட் பட்" என்று பலமாகத் துடிக்க ஆரம்பித்தது. பதறும் குரலோடு மறுபடியும் கேட்டேன்.

"அவள் இங்கே ஏன் வந்தாள்?"

"இரண்டு மாசத்துக்கு முன் அவளுக்குக் கல்யாணம் நடந்திருக்கிறது. உனக்குத் தெரியாது, "நாகலிங்கம் என்று - அவன் இரண்டாம் தாரமாகக் கட்டியிருக்கிறான்!".

"ஓ!"

நான் திரும்பி அறைக்குள் வந்து கட்டிலில் சரிந்தேன். அடித்துப் போட்ட பாம்பு போல்!

(இது என்ன ஓய்! யாரோ ஒரு செல்லம்மாவுக்குக் கலியாணம் நடந்தால் உமக்கேன் உடல் பதறுகிறது? உம்முடைய பாஞ்சாலி கதையைச் சொல்லும்!)

செல்லம்மா!

அவள் ஊருக்கெல்லாம் "செல்லம்மா." எனக்கு மட்டும் "பாஞ்சாலி" நான் ஆசையாக வைத்த செல்லப்பெயர் அது. "அவளை நான் காதலித்தேன்" என்று சொன்னால், நீங்கள் என்னென்னவோவெல்லாம் தவறாக நினைத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு விளங்கக் கூடிய வார்த்தையிலே சொல்கிறேன்: "அவளோடு நான் சினேகிதமாயிருந்தேன்."

அவளுடைய கிழக் கணவன் - முதல் கணவன் ஒரு வருடத்துக்கு முன்னரே, செத்துப் போனான் என்ற செய்தி நான் தபால் மூலம் அறிந்த விஷயம். ஆனால் அவள் மறுபடி - இரண்டு மாதத்துக்கு முன்பு கலியாணம் செய்துகொண்டு ஊரை விட்டு வந்துவிட்டாளென்ற செய்தி இப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

அவள் கலியாணம் செய்துகொண்டதில் எனக்குக் கொஞ்சங்கூடக் கவலையில்லை. உண்மையைச் சொன்னால், அவள் ஊரைவிட்டு வந்து விட்டாளே என்று சிறிது கவலை யேயல்லாமல், கலியாணம் நடந்ததைப் பற்றி எனக்கு மகிழ்ச்சிதான்.

ஆனால்...

என்னைக் கண்டும் காணாதவள்போலப் போகிறாளே, ஏன்? ஏன்? ஏன்?...

என்னை மறந்துவிட்டாளா?

அவளாவது, என்னை மறப்பதாவது! பின் எதற்காக இந்தப் பாராமுகம்?

?????

ஒன்றும் விளங்கவில்லை. ஒரே குழப்பமான சிந்தனைகள். இதிலே ஒரு ஏக்கம் -

(உம்முடைய பழைய சரித்திரம் சுவையாக இருக்கும் போலிருக்கே, அதையும் சொல்லி விடுமேன்!)

அவளுடைய தாயார் அவளை ஒக்கலையிலே தூக்கிக்கொண்டு திரிந்த நாள் முதல் எனக்கு அவளை நன்றாகத் தெரியும். "செல்லம்மா செல்லம்மா" என்று அவளை வெகு செல்ல மாகத்தான் வளர்த்தார்கள். நானும் அந்தக் காலத்தில் செல்லம்மா என்றுதான் கூப்பிடுவேன். அவள் வீட்டுக்குப் பக்கத்திலேயே என் வீடும் இருந்தது. ஒரே வேலி. மண் விளையாட்டுக் காலம் முதல் நானும் அவளும் சினேகிதம். எத்தனை நாட்கள் சண்டை பிடித்துக்கொண்டு "கோபம்" விட்டிருப்போம். அந்தக் காலத்துக் கோபமெல்லாம் எத்தனை நிமிஷத்துக்கு? உட னேயே "உறவு"ம் ஆகிவிடுவோம்.

இப்படியே பல வருடங்கள் போயின. வயது வளர வளர, உள்ளமும் வளர்ந்தது. உலக இயல்புகள் தெரிந்தன. "ஆண் - பெண்" என்ற வேற்றுமை உள்ளத்தில் புகுந்தது. இப்போ

தெல்லாம் நாங்கள் முன் போலல்ல. ஏதாவது அவசியம் உண்டானால் இரண்டொரு வார்த் தைகள் பேசுவோம். அவள் உலகம் வேறு ; என் உலகம் வேறு என்றாகிவிட்டது.

இந்த நிலையில் அவள் "பருவம்" எய்தினாள். பிறகென்ன, கிராமத்துப் பெண்களுக்கு இந்தநிலை வந்துவிட்டால், "படலையைத் திறந்து வெளியே வருகிற சுதந்திரமில்லை. அவளை நான் காண்பதும அருமையாகிவிட்டது. எப்போதாவது எங்கள் வீட்டுக் கிணற்றுக் கட்டில் நிற்கையில திருப்பிப் பார்த்தால் அவள் உருவம் தெரியும். யாராவது எனது செயலைக் கவனித்துக் விடுவார்களோ என்ற பயம் உடனே இறங்கி வந்து விடுவேன். ஆனால் அவ ளுடைய நினைவுகள் அடிக்கடி வந்து மனத்தை அரித்துக்கொண்டுதான் இருந்தன. வீட்டில எனது தாயார் இல்லாத சமயத்திலே கிணற்றடியில் நான் பொழுது போக்குவது வழக்கமாகி விட்டது. எனது பார்வை சில சமயங்களில் அவள் பார்வையைச் சந்தித்துவிடும். "டக்"கென்று அவள் வீட்டுக்குள்ளே போய் விட்டாள்.

ஏன் கதையை வளர்த்துகிறீர்? உமக்கு அவள் மீது காதல் ஏற்பட்டு விட்டதென்று சொல்லும்?

காதல்!

நான் அவளைக் காதலித்தேனென்று சொல்லமுடியாது. அவளுக்காக நான் எல்லாவற் றையும் துறந்துவிடத் தயாராக இல்லை. என் மனத்திலே அவ்வளவு துணிவுமில்லை. காத லின் முடிவு "கல்யாணம் என்றேயிருந்தால், நான் அவளை நிச்சயமாகக் காதலிக்கவில்லை.

நல்லதம்பி விதானையாரின் பேரப்பிள்ளையான நானெங்கே, அவளெங்கே! எவ்வ ளவோ சொத்துப்பத்துக்களுக்கு ஒரே வாரிசாக இருக்கிற நானெங்கே, அடுத்தவேளைக் கஞ்சிக்குக் கஷ்டப்படுகிற அவள் எங்கே!

காதல்!... அது வந்துவிட்டால் எல்லாவித உயர்வு தாழ்வும் மறைந்து விடுமென்று சொல் கிறார்களே. இதிலே எனக்கு நம்பிக்கையில்லை. "அவளை நான் கல்யாணம செய்யலாம்" என்று நினைப்பது கூட முடியாத காரியம். "உன்னை நான் கலியாணம் செய்கிறேன்" என்று அவளிடம் நான் சொல்லி விட்டால் -அவள் நடுநடுங்கி உயிரையே விட்டுவிடக்கூடும்!

சம அந்தஸ்து இல்லாத இருவரிடையே "காதல்" தோன்றலாம். ஆனால் கல்யாணம் தோன்றுமென்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. கதைகளில்தான் அது நடக்கும். வாழ்க் கையில் யாராவது சில தீரர்கள் துணிந்துவிடலாம். பொதுவாக இது நிஜமனிதனின் சுபாவமல்ல.

அவளுடைய தாயார் அதிகமாக வீட்டில் இருப்பதில்லை. ஆண்பிள்ளையில்லாத குடும்பம். அவளின் தாயார்தான் வெளியே போய் ஏதும் "பிய்த்துப் பிடுங்கி"க் கொண்டுவர வேண்டும். அந்தச் சமயங்களிலெல்லாம் அவள் வீட்டில் தனியாகவேயிருப்பாள்.

இப்படியான ஒரு சமயம். அவளுக்கு என் மனவிருப்பத்தைத் தெரிவிக்க வேண்டு மென்றுதுணிந்து விட்டேன். எப்படித் தெரிவிப்பது? தெருவிலே போய் அவள் வீட்டுப் படலை யைத் திறக்கும் தைரியம் இல்லை. போகும் போதோ வரும்போதோ யாராவது பார்த்து விட் டால்? ஒரு கடிதம் எழுதி வேலியால் கொடுப்பதென்று தீர்மானித்தேன். ஐந்தாம் வகுப்புவரையும் படித்தவள் அவள்.

ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து எழுதினேன்:

"அன்பே,

உன்னை நினைத்து நினைத்து ஏங்குகிறேன். உன்னோடு ஒரு வார்த்தை கூட இப் போது பேச முடியவில்லையே! என் மனநிலை உனக்குத் தெந்திருக்குமென நம்புகிறேன். நீயும் மனம் வைத்தாயானால் ஒவ்வொரு இரவையும் எங்கள் இன்ப இரவாக்கிவிடமுடியும்.

"உன் அன்பான பதிலை உடனே தருக."

- இவ்வளவு தான். அவளுடைய பெயரும் இல்லை என்னுடைய கையொப்பமும் இல்லை. நேர் நேராகக் கொடுக்கும் போது அவையெல்லாம் எதற்கு?

கிணற்றுக்கட்டில் ஏறிப்பார்த்தேன். அவள் நிற்பது தெரிந்தது. ஏனோ நெஞ்சு "படபட" வென்று துடித்தது. இனியென்ன திரும்பிப் போவதா? ஏதோ ஒரு "முற்று"க் கண்டே விடுவது. தலையா போய்விடப் போகிறது?...

"உஷ்ஷ்.." என்று மெதுவாக சீக்காயடித்தேன். அவள் திரும்பிப் பார்த்தாள். இதயம் படபடத்தது. இனிப் பின்வாங்க முடியுமா?

"இங்கே வா!" என்று தலையசைத்தேன்.

திகைத்தவள் போல நின்றாள்.

மறுபடியும் தலையசைத்தேன்.

என் சொல்லை மீற முடியவில்லைப் போலும்! வந்தாள்.

தயாராக வைத்திருந்த கடிதத்தை அவள் முன்பாகப் போட்டேன்.

எடுத்துப் பார்த்தாள்.

அவள் வாய் திறப்பதற்கு முன் "இன்னும் கொஞ்ச நேரத்தில் வருகிறேன். பதில் எழுதி வைத்திரு" என்று சொல்லிவிட்டு டக்கென்று திரும்பி வந்து விட்டேன். அதற்குமேல் அங்கே நிற்கத் தைரியமில்லை.

உடம்பெல்லாம் இன்னும் பதறிக்கொண்டு தானிருந்தது. மனத்திலே ஒரே குழப்பம். "கடிதத்தைத் தாயாரிடம் காட்டி விடுவாளோ" என்ற ஏக்கம். அப்படியானால் - ஆகாயமே தலையில் இடிந்து விழுவது போன்ற ஒரு உணர்ச்சி!

சே. அப்படிச் செய்யமாட்டாள். அவளுக்கும் என்மீது ஆசை இருக்காதா? பருவகால உணர்ச்சிகள் அவளுக்கு மட்டும் இல்லையா? அவள் அன்பான பதில் வரும். பிறகு... மனத் திலே இன்ப அலை மோதிற்று.

நேரமோ போகமாட்டேனென்கிறது. "ஒன்று, இரண்டு, மூன்று.. " என்று மனதுக்குள் எண்ண ஆரம்பித்தேன். ஐநூறு எண்ணி முடியப்போனால் சரியாக இருக்குமென்ற நினைவு. வாய் எண்ணிக்கொண்டிருந்தது. மனத்தில் என்னென்னவோ எண்ணங்கள் அலை போலப் புரண்டன.

ஐநூறு!

சே, இதற்குள் எழுதிவிடுவாளா? மறுபடியும் ஒரு ஐநூறு எண்ணலானேன்.

மறுபடியும் எல்லை வந்துவிட்டது. இனிப் போகலாம். அதிக தாமதித்துவிட்டேனோ? ஒருவேளை வந்து காத்துக்கொண்டிருக்கிறாளோ?

கால்கள் விரைவாக நடந்தன. கிணற்றுக் கட்டில் ஏறினேன்.

அவளைக் காணவில்லை. நெஞ்சு "திக்" என்றது. புறக்கணித்து விட்டாளோ!... இன்னும் கொஞ்சநேரம் பார்கக்லாம்.

"ஒன்று, இரண்டு, மூன்று .... முன்னூற்றி நாற்பத்தேழு..."

அதோ, வருகிறாள்!

தேகமெல்லாம் ஒரு கிளர்ச்சி. ஒன்றும் பேசக் கூட முடியாது போலிருக்கிறதே! உதடுகள் நடுங்கும் ; நாத் தடுமாறும்.

வந்தாள்.

அவள் கையிலிருந்த கடிதம் வேலிக்கு மேலாகப் பறந்து வந்தது. நிலத்தில் விழ விடாமல் எட்டி ஏந்திக்கொண்டேன்.

நான் எழுதிய அதே கடிதத்தின் மறுபக்கத்தில் பென்சிலால் எழுதியிருந்தாள்:

"நீங்கள் இந்தமாதிரி நினைப்பீர்களென்று கருதவில்லை. உங்களைப் பற்றி மிக மரியாதையாக எண்ணியிருந்தேன். நீங்கள் செய்ய எண்ணிய காரியம், இன்னொருவர் அறியும் போது எப்படியிருக்கும், பலநாள் திருட்டு ஒரு நாளாயினும் அகப்படுவது நிச்சயந்தானே!

உங்களுக்கு வயது வந்துவிட்டது. உங்களுக்கக் தகுதியான இடத்தில் நல்ல பெண்ணைக் கலியாணம் செய்யுங்கள்.

இனிமேல் இவ்விதம் எண்ணமாட்டீர்கள் என்று நம்புகிறேன்."

வாசித்து முடிந்ததும் மனதிலே சொல்ல முடியாத ஒரு வேதனை தோன்றிற்று. கிளுகிளுத்துக் கொண்டிருந்த உற்சாக உணர்ச்சியெல்லாம் "புஸ்"ஸென்று அணைந்துவிட்டன.

பிரேதம் போன்ற நிலையில தலையை நிமிர்த்தினேன். அவள் போய் விட்டாள். வீட்டுக்கு வந்தேனோ! படுக்கையில் குப்புற வீழ்ந்தேனோ!

(பிறகு? பிறகு?)

பிறகு நான் கௌரவமாகத்தான் நடந்து கொண்டேன். அவள் மேல் கெட்ட எண்ணம் தோன்றவேயில்லை. மரியாதையுடன் அவள் மறுத்துக் கடிதம் எழுதியதையும், புத்திசாலித் தனமாக என் கடிதத்தைத் திருப்பிக் கொடுத்ததையும் நினைக்க நினைக்க அவளைப் பற்றிக் கீழ்த்தரமாக எண்ண முடியவில்லை. நடந்த விஷயங்களை அவளும் மறந்துவிட்டவள் போல இருந்து விட்டாள்.

இப்படிப்பட்டவள் இப்போது உம்மைக் கண்டும் காணாதவள்; மாதிரித் தானே போவாள்? இதற்காக நீர் ஏன் வருந்துகிறீர்?... ஓ! அவள் முதலில் ஒரு கிழவனைக் கல்யா ணம் செய்து கொண்டதாகச் சொன்னீரே, அதென்ன சங்கதி?

அவளுக்குக் கல்யாணம் நடந்தது.

யாழ்ப்பாண மண்ணிலே பிறந்த ஒரு பெண்ணுக்கு அழகும் புத்திசாலித் தனமும் மாத் திரம் இருந்தால் போதாது. அவளுக்குச் "சீதனம்" வேண்டும்; பொன்னுடமை" வேண்டும். இந்த இரண்டுமில்லாவிட்டால்... அவளுக்கு நரகம் இங்கேதான் காத்திருக்கிறது.

அவளுக்கு அந்தக் கிழவனின் ரூபத்தில் நரகம் வந்தது. அந்தக் கிழவனைச் சொல்லி என்ன, அவனில்லாவிட்டால்;இன்னொரு கிழவன்; அல்லது நோயாளி ;ஒரு முடம்;குருடு - இப்படி ஏதாவதொன்று வந்து அவள் கழுத்திலே தாலியைக் கட்டியிருக்கும்.

அந்தக் கிழவன்...

அவன் சிறுபெண்ணாக இருக்கும் போது நேராகக் கூப்பிடும் போது "பெரியப்பா!" என்றும், வெளியில் பேசும் போது "சுப்பையாக் கிழவன்" என்றும் அவளால் சொல்லப்பட்ட வன்தான். சுப்பையாக் கிழவனுக்கும் அவளுடைய தாயாருக்கும் ஏதோ தொடர்பு இருந்த தென்று கூடச் சொல்லுவார்கள். நன்றாகத் தெரியாத விஷயங்களை நாம் எதற்காகப் பேச வேண்டும்?

அவளுக்கும் சுப்பையாக கிழவனுக்கும் கலியாணம் நடந்தது. அவனுக்கு இவள் மூன்றாவது தாரம்!

சுப்பையாக் கிழவனுக்கு ஊரிலே ஒரு சின்னக் கடையும் கொஞ்சக் காணி பூமியும் இருந்தன. "ஏதோ சாப்பாட்டுக்கும் சீலை துணிக்கும் கஷ்டப்படாமலிருக்கக் கூடிய இடத்தில் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டேன்" என்ற திருப்தியோடு அவள் தாயாரும் கண்மூடிவிட்டாள். கிழவிக்குத் தெரியாதா? பெண்ணுக்குச் சீலை துணியும் சாப்பாடும்தானா பிரதானம்? அல்லது கந்தையைக் கட்டிக்கொண்டு பட்டினி கிடந்தாலும்....

கிழவிக்குத் தெரிந்திருக்கும். ஒருகாலத்தில் அவளும் இவளைப் போல யௌவன ஸ்தி ரீயா இருந்தவள்தானே! ஏதோ இயன்றதைச் செய்து திருப்திப்பட்டாளோ? அல்லது வாழ்க் கையின் கசப்பான அனுபவங்களைக் கடந்து வருகையில் பழைய உணர்ச்சிப் போக்குகளை மறந்துவிட்டாளோ?

சுப்பையாக் கிழவனோடு அவள் வாழ்வு ஒடிக் கொண்டிருந்தது - அல்லது தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தது - இதில் எது சரி? அவளுடைய ஓட்டத்துக்கும், அவனுடைய தள்ளாட்டத்துக்கும் எப்படித்தான் ஒத்துப் போயிற்றோ? அவனால் நிச்சயமாக ஓடமுடியாது. ஆகவே அவள் தான் தன் ஓட்டத்தை அடக்கவேண்டும். அடக்கி அடக்கி அந்த நெருப்பிலே துடித்திருக்க வேண்டும். பாவம்! பாவம்!...

எப்படியிருந்தாலும் மஞ்சள்கொடி கழுத்திலே ஏறியபின், அவளுக்குப் படலையைத் திறந்து வெளியிலே வரும் சுதந்திரம் கிடைத்தது. பக்கத்து வீடுதானே, இடையிடையே எங்கள்

வீட்டுக்கு வருவாள். அம்மாவோடு பேசுவாள். போவாள். நான் அவள் இருக்கிற பக்கம் கூடத் தலையைக் காட்டுவதில்லை. ஒருநாள் வந்தாள் அம்மா வீட்டில் இல்லை. "அம்மா இல் லையே!" என்றேன். பேசாமல் போய்விட்டாள்.

இப்படித்தான் சில நாட்கள் மௌனமாக ஓடிக் கழிந்தன.

ஒருநாள் நான் படித்துவிட்டு வைத்த "கள்வனின் காதலி"யைத் தேடினேன். காணவில்லை.

"அம்மா, மேசையில் ஒரு புத்தகம் இருந்ததே, எடுத்தாயா?" என்றேன்.

"அதுவா? செல்லம்மா படித்துவிட்டுத் தருகிறேன் என்றாள். "கொண்டு போ" என்று சொல்லிவிட்டேன். இப்போதே தேவையானால் சொல்லு; கூப்பிட்டு வாங்கித் தருகிறேன்."

"கிடக்கட்டும். கெதியாகப் படித்துவிட்டுத் தரச்சொல்!" என்றேன்.

ஓ! அவள் கதைப்புத்தகங்களும் படிக்கிறாளா? அவை - அந்தக் காதல் கதைகள் அவள் வேதனையை அதிகரிக்கத்தானே செய்யும்? ஏதாவது புண்ணிய புராணப் புத்தகங்களைப் படித்தாலாவது...

மூன்று நாட்கள் கழிந்தன.

"அம்மா!" என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தேன்.

அவள். கையில் புத்தகம்.

"அம்மா இல்லை" என்றேன்.

"புத்தகம்" என்று சொல்லி நீட்டினாள்.

வாங்கிக்கொண்டேன். ஒன்றும் பேசாமல் மொட்டையாக இருப்பதா?

"கதை எப்படியிருந்தது?"

"நல்ல கதை!"

"...."

அவள் போகவில்லை. நின்றாள்.

"வேறே..."

"இப்படி நல்ல கதைப்புத்தகம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?"

"இப்போது இல்லை, நாளைக்கு வா; தருகிறேன்"

பின்பும் கொஞ்ச நேரம் நின்றாள்.

மௌனம்தான். என்ன பேசுவதென்று தெரியவில்லை.

"அம்மா வருவதற்கு அதிக நேரமாகுமோ?"

"அப்படித்தான் நினைக்கிறேன்."

அப்போதும் அவள் போகவில்லை.

எனக்கு ஏதாவது பேசிக் கொண்டிருக்கவும் தெரியவில்லை.

"நான் போய்விட்டுப் பிறகு வருகிறேன்" என்று சொல்லித் திரும்பினாள். அந்தத் திரும்ப லிலே ஒரு தயக்கம்.

நாலடி நடந்தபின் திரும்பி ஒரு பார்வை. அந்தப் பார்வை என்ன சொல்லிற்று என்பது எனக்குச் சரியாக விளங்கவில்லை.

என்ன? இது!...

என் மனத்தில் வித்தியாசமான உணர்ச்சிகள் ஒன்றுமில்லை. அன்றொரு நாள் அவளு டைய கடிதத்தை உடனே கிழித்தெறிந்துவிட்டது உண்மைதான். ஆனாலும் அதிலிருந்த வார்த்தைகளை அவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடுவேனா!

"... உங்களைப் பற்றி மிக மரியாதையாக எண்ணியிருந்தேன்... இனிமேல் இவ்விதம் எண்ணமாட்டீர்களென்று நம்புகிறேன்."

இந்த வார்த்தைகளை நான் எப்படி மறக்க முடியும்? நான் மனிதன் தான்; மிருக மில்லை.

இப்படி இன்னுஞ் சில சந்தர்ப்பங்கள் நிகழ்ந்தன. இந்தச் சந்தர்ப்பங்களின் போக்கைச் சரியாகப் புரிந்துகொள்ள அப்போது என்னால் முடியவில்லை. "நல்ல மாட்டுக்கு ஒரு சூடு" என்பார்கள். நான் நல்ல மாடாகத்தானிருந்தேன். என் ;இதயத்தில் பட்ட அந்த "முதற் சூட்டின் விறுவிறுப்பு" என் கண்பார்வையை மறைத்தது. உண்மையை உணரும் சக்தியை இழந் திருந்தேன்.

அதெல்லாம் இருக்கட்டும். இந்தச் "செல்லம்மா"வுக்கு நீர் "பாஞ்சாலி" என்று செல்லப் பெயர் கொடுத்ததாகச் சொன்னீரே. அதெல்லாம் எப்போது நடந்தது?

நான் நினைத்திருந்ததற்கு முற்றிலும் மாறான பாதையில் அவளின் போக்கு மாறி விட்டது. என்னுடைய கடிதத்தைக் கௌரவத்துடன் திருப்பி விட்டுப் புத்திமதியும் சொன்னவள், இந்த மாதிரியெல்லாம் நடக்க ஆரம்பிப்பாளென்று நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. முதலில் நான் "ஊர்க் கதை"களை நம்பவேயில்லை. ஆனால், காலப்போக்கில் - கண்ணால் நேருக்கு நேராகக் காணாவிட்டாலும் - நம்பவேண்டித்தானிருந்தது.

ஆம், அவள்... பச்சை பச்சையாகச் சொன்னால் - அவள் வேசையாட ஆரம்பித்து விட்டாள்!

மூன்று பேர்களை எனக்கு நிச்சயமாகத் தெரியும். தமிழ்ப் பள்ளிக் கூடத்துப் புதிதாக வந்த உபாத்தியாயர் ஒருவர் - அவருக்கு அவள் வீட்டிலே தான் சாப்பாடு. பிள்ளையார் கோவி லுக்குப் பூஜை செய்கிற ஐயர் இரண்டாவது பேர்வழி. செக்கச் செவேலென்று நல்ல நிறமும்,

"குழுகுழு" வென்று நல்ல உடம்பும், நடுத்தர வயதும் - ஆள்பிழையில்லை. ஆனாலும் "கிளி" போல அவருக்கு ஒரு மனைவி வீட்டிலே இருந்தாள்! மூன்றாவது புள்ளி கொஞ்சம் பெரிய புள்ளி. ஊருக்குள்ளே கொஞ்சம் நடப்பானவர். நாற்பது வயதுக்குக் கிட்டத்தட்ட இருக்கும். அழகான ஆண்பிள்ளையென்று சொல்ல முடியாது. ஆனால், நல்ல சோக்கானி. பொருள்பண்டம் நிறைய உள்ளவர்.

இந்த மூன்று பேர்களைத் தவிர வேறு யாரும் போவதாகவும் தெரியவில்லை.

அவளுடைய போக்கு இப்படியாகிவிட்டதென்பதை நிச்சயமாக அறிந்ததும் என்மனம் குறுகுறுத்தது. கலியாணம் முடிந்த சில நாட்களின் பின் அவள் என்னோடு நடந்துகொண்ட மாதிரிகள் ஞாபகத்துக்கு வந்தன. "அட முட்டாள்தனமாக நடந்து கொண்டோமே!" என்று நொந்து கொண்டேன்.

அவள்தான் என்ன செய்வாள்? அவளுடைய வயிற்றுப் பசியைத் தீர்க்கத்தான் சுப்பையாக் கிழவனால் முடிந்தது. அது மாத்திரம் அவளைத் திருப்தி செய்யவில்லை. பருவப் பசியையும் அவள் தீர்க்கத்தான் வேண்டி யிருந்தது.

என் இதயத்திலே ஒரு துடிப்பு. மூடிய பெட்டி ஒன்று எனக்காகவே வந்தது. "வெறும் பெட்டிதான்" என்ற எண்ணத்தோடு நான் அதைத் திறக்காமலே இருந்துவிட்டேன். யாரோ ஒரு "மூன்று பேர்" அதைத் திறந்து அதற்குள் இருந்த சுவையான உணவுகளை...

நாளுக்குநாள் என் துடிப்பு அதிகமாயிற்று. அவள் வீடு பக்கத்தில்தானே! சந்தர்ப்பம் வராமலா போகப்போகிறது!

ஒருநாள் ஒரு பெரிய புத்தகத்தைக் தூக்கிக்கொண்டு வந்தாள். என் தாயார் வீட்டிலில்லை. புத்தகத்தை என்னிடம் கொண்டு வந்தாள். வாங்கிக் கொண்டே, "என்ன புத்தகம் இது?" என்றேன்.

"பாரதம் அம்மாவினுடையது!"

"ஓ! பாரதமா படிக்கிறாய்!" என்று சொல்லி அவளை ஒரு "பார்வை" பார்த்துச் சிரித்தேன். அந்தப் பார்வையின் வேகம் அவள் முகத்தைச் சிவக்க வைத்தது. அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. சிரித்தாள்.

"பாரதம் படித்துத்தான் சரியாக பழக்கம் பழகுகிறாய்!"

"என்ன பழக்கம்?"

"பாஞ்சாலிப் பழக்கம்!"

"........"

அன்று அவள் பிரியும்போது, "உன்னை இனிமேல் "பாஞ்சாலி" என்று தான் சொல்லிக் கொள்வேன். கோபம் வருமோ உனக்கு?" என்றேன்.

"இனிமேல் நான் "பாஞ்சாலி" மாதிரியில்லை!"

".......?..."

"எந்தப் பெண்ணுக்காவது இரண்டு புருஷர்கள் இருந்ததுண்டா? வேண்டுமானால் அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுங்கள்!

"ஓ!" என்று சொல்லி அவள் கன்னத்தை இலோசாகக் கிள்ளினேன். "இப்படி நீ மாறிவிடு வாயென்று எனக்குத் தெரியும். இருந்தாலும் "பாஞ்சாலி" என்ற பெயர்தானே உன்னை என் னிடம் கொண்டுவந்து சேர்த்தது!"

"உங்கள் இஷ்டம்!"

"பாஞ்சாலி"

"நானும்..."

"என்ன?"

அவள் திரும்பி நடந்துகொண்டே மெதுவாக "உங்களை "அர்ச்சுனராஜா" என்றுதான் சொல்வேன்!" என்று சொல்லி மறைந்துவிட்டாள்.

பூரித்து நிறைந்துவிட்ட உள்ளத்தோடு மேசை மேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து விரித்துப் பார்த்தேன். ஒரு எழுத்தும் தெரியவில்லை. அவளின் உருவந்தான் தெரிந்தது. பக்குப் பக்கென்று நெஞ்சு துடிக்கும் சத்தமும் கேட்டது.

இதற்குப் பிறகு...

அருச்சுனாராஜாவும் பாஞ்சாலிதேவியும் உயிரும் உடலும்போல, மணமும் மலரும் போல, வீணையும் நாதமும் போல... எப்படியெல்லாமோ இன்ப வாழ்வு வாழ்ந்து வந் தார்கள்...

பிறகு, நீர் பேசாமல் பறையாமல் ஓடிப் போய் பட்டாளத்திலே சேர்ந்ததும், ஒரு வரு டத்துக்கு முன்னால் சுப்பையாக் கிழவனின் மரணச் செய்தியைத் தபால் மூலம் அறிந்ததும் தெரிந்த விஷயங்கள்...

சித்தப்பா வீட்டு அறையிலே படுத்திருந்த அந்த நிலையிலேயே எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது.

அடி பாஞ்சாலி, உன்னைப் பார்க்கவேண்டும் என்று எவ்வளவு ஆவலாக ஓடிவந்தேன்! நீ... நீ... இவ்வளவு அலட்சியம் செய்து விட்டாயா என்னை? நான் உனக்கு என்ன தவறு செய்தேன்? அந்த இன்பகரமான நாட்களையெல்லாம் எப்படித்தான் மறந்தாயோ!

பெண்கள்!

உன் குலத்தின் இயற்கைக்குணம் இதுவேதானா? "ஆலகால விஷத்தையும் நம்ப லாம்..."

(ஆச்சரியமாகத்தானிருக்கிறது! பாஞ்சாலிதேவி எப்போதாவது அர்ச்சுன ராஜாவை மறக்க முடியுமோ? கொஞ்சங்கூடப் பொருத்தமாக இல்லையே!)

வெகு நேரம் கழிந்துவிட்டது!

மறுபடியும் சமையலறையில் பேச்சுக் குரல்.

அவள்தான்!

அவளைத் தனியாகச் சந்தித்தால் இந்த மூடுபணியை நீக்கி உண்மையைக் கண்டு விடலாம். ஆனால் அவளைத் தனியாகச் சந்திப்பது முடியாது போலிருக்கிறதே!

திடீரென்று ஒரு யோசனை உதித்தது. ஒரு துண்டுக் கடதாசி எடுத்து எழுதினேன் :

"என் பாஞ்சாலி, என்னை மறந்துவிட்டாயா? நீ கூட அடையாளம் தெரிந்து கொள்ளாதபடி நான் உருமாறிவிட்டேனா? பாஞ்சாலி, உன் அர்ச்சுனராஜாவை உனக்குத் தெரியவில்லையா? அல்லது உன் மனமே தான்....

நாளைக்காலையில் ஊருக்குப் புறப்படுவதாக இருந்தேன். இனி உனக்காக எத்தனை நாட்களும் தங்குவதற்குத் தயார். முதலில் உன்னை தனிமையில் சந்திக்க வேண்டும். எங்கே? எப்போது? உன் வீட்டுக்கு வரலாமா?

உனது
அர்ச்சுனராஜா"

கடிதத்தை மடித்துக் கையினுள் மறைத்து வைத்துக்கொண்டு அவள் இருந்த இடத்துக்குப் போனேன்.

"சின்னம்மா. குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கொஞ்சம்!"

"தேத்தண்ணீர் வைக்கட்டுமா?"

"இல்லையில்லை. சும்மா நல்ல தண்ணீர்!"

தண்ணீரை வாங்கிக் குடித்துக்கொண்டு நிலைமையைக் கவனித்தேன். சின்னம்மா "அடுப்போடு" தன்வேலையில கவனமாயிருந்தாள். பாஞ்சாலியின் கண்கள் "எங்கேயோ" கவனமாக இருந்தன. இடையிடையே என் பக்கம் சுழன்றடித்தன.

தண்ணீரைக் குடித்துவிட்டுத் திரும்பினேன். பாஞ்சாலி நின்ற பக்கமாக வந்து சின்னம்மாவைப் பார்த்தேன்...

சரி கடிதத்தை நீட்டினேன்.

தயக்கத்துடன் சின்னம்மாவின் பக்கம் பார்த்தாள்; வாங்கிவிட்டாள். நான் வந்து விட்டேன்.

பிறகு அவளைத் தனியாகச் சந்தித்தீரா?

வெகு சீக்கிரமாக அவள் வீட்டுக்குப் போய்விட்டாள். அரைமணி நேரம் கழிந்திருக்கும். என் அறையின் கதவருகே ஒரு முகம்.

பாஞ்சாலி!

ஒரு துண்டுக் காகிதத்தை உள்ளே வீசி எறிந்தாள். போய்விட்டாள்.

கடிதத்தை எடுத்தேன். முன்போல நான் எழுதிய அதே கடிதத்தின் மறுபக்கத்தில்,

"மன்னிக்க வேண்டும். ஏதோ அறியாமையினாலே அந்தக் காலத்தில் கெட்ட வழியில் பிரவேசித்தேன். அந்த நாட்களை மறந்துவிட்ட நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள்? அந்த நாட்களை நீங்களும் மறந்து விடுங்கள்! "பாஞ்சாலி" எப்போதோ இறந்துவிட்டதாக எண்ணிக்கொள்ளுங்கள்!

இனியாவது ஒழுங்கான வாழ்க்கையை நடத்தவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறேன். இக்கடிதத்தைக் கிழித்துவிடுங்கள்! உங்களை நம்பித் தருகிறேன். நீங்கள் கிழித்து விடுவீர்களென்று எனக்குத் தெரி யும்" என்று எழுதியிருந்தது.

கடிதத்தைக் கைக்குள்ளே கசக்கினேன். கடிதம் மாத்திரமா - என் இதயமும் கசங்கிற்று!

என்ன இது! இந்த "ஞானம்" இவளுக்கு எங்கிருந்து வந்தது? எப்படிப் "பதிவிரதை" யானாள்?

அவள் கேட்டுக் கொண்டபடி கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டேன்.

◆◆◆

பொழுதுபடுகிற சமயம். வெளியே போய்க் கொஞ்சத் தூரம் உலாவி வரலாமென்ற நினைவோடு படலையைத் திறந்தேன்.

"ஹலோ!..."

அவனைக் கவனித்தேன்.

"அடேடே, லிங்கமா!"

லிங்கம் என்னோடு கலாசாலையில் ஒன்றாகப் படித்தவன்.

"மறந்துவிட்டாயா? எப்போது இங்கே வந்தாய்?... அதோ, அதுதான் என்னுடைய வீடு. வா, போகலாம்!" என்றான் லிங்கம். பேசாமல் அவனோடு நடந்தேன்.

"என்னிலும் ஒரு வயதுதானே நீ குறைவு - இந்த வயதுக்குள் நான் இரண்டு பெண்களின் கையைப் பிடித்துவிட்டேன் " நீயானால்..."

"உன் அதிர்ஷ்டம்!" என்றேன். இதற்கிடையில் அவன் வீட்டுக்கு வந்து விட்டோம்.

"இப்போது என் வீட்டுக்கு வந்திருக்கிறாளே அவளை அவள் அழகுக்காகவே செய்தேன். பிறகுதான் அவளுடைய பொன்னான குணத்தையும் கண்டுகொண்டேன். என் அதிர்ஷ்டம்தான்... நீ கேட்டால் ஆச்சரியப்படுவாய். அவள் ஏழை... அவளுக்கும் நான் இரண்டாவது புருஷன்!..." என்றான் லிங்கம்.

என் உடம்பெல்லாம் என்னவோ ஒரு நடுக்கம். நின்றிருந்தால் விழுந்திருப்பேன். நல்லவேளை, நாற்காலியில் உட்கார்ந்த பிறகுதான் இதைச் சொன்னான்.

"செல்லம்! என்ன செய்கிறாய்? வெற்றிலைத் தட்டத்தைக் கொண்டுவா, இங்கே!"

அவள் வந்தாள்.

மரியாதையாக வெற்றிலைத் தட்டை மேசை மீது வைத்துவிட்டுப் போய் விட்டாள்.

பாஞ்சாலி! அவள் பாஞ்சாலி!

நான் அதிக நேரம் அங்கே தங்கவில்லை.

◆◆◆

லிங்கம் - அவனைப்போல அழகும், யௌவனமும், செல்வமும் உள்ள ஒரு கணவன் வாய்த்த பிறகு எந்தப் பெண்தான் விபசாரியாவாள்? அதுவும் பாஞ்சாலியா?

அவள் பதிவிரதையாகிவிட்டாள்!

வரதர் புதுவருஷ மலர் - 1950

இன்பத்திற்கு ஓர் எல்லை

வரதர்

இரண்டு மாதங்களின் முன்பு ஒரு முறை மாமா வீட்டில் சில தினங்கள் தங்கியிருந்தேன்.

அப்போது....

பார்வதியின் வீடு மாமா வீட்டுக்கு அடுத்த வீடுதான். பார்வதி அடிக்கடி அங்கே வருவாள். மாமாவின் குழந்தைகளோடு விளை யாடுவாள். என்னை முதல்முதல் கண்டபோது ஒரு பார்வை பார்த் தாள். அவ்வளவோடு சரி. அந்தப் பார்வையிலே என்ன அர்த்தம் இருந்த தென்று சொல்ல முடியாது. பிறகு அநேக தடவைகள் என்னுடைய பார் வையோடு அவள் பார்வை சந்தித்தது. ஆனால் அடுத்த நிமிஷம் என்ன செய்வதென்று தெரியாமலே அவை பிரிந்து விடும்.

பிறகு மெல்லிசாக ஒரு இளமுறுவல் அந்தப் பார்வையோடு கலந்து வந்தது. நானும் பதிலுக்கு முறுவல் காட்டினேன். அவளுடைய உள்ளத்திலே இருந்தது எனக்கென்ன தெரியும். ஆனால் என்னுடைய உள்ளம் பட்டபாட்டைக் கடவுளே அறிவார். சதா அந்தப் பார்வையும் இள முறுவலும் என் மனக் கண்முன்னே அபிநயம் பிடித்துக் கொண்டி

ருந்தன. வாழ்வுப் பாதையிலே அவளோடு கை சேர்த்து நடக்க நான் பேராவல் கொண்டேன். ஆனால் ஐயோ அது இந்த ஜன்மத்தில் நடக்காதென்பது எனக்குச் சர்வ நிச்சய மாகத் தெரியும்!

எனக்கும் என் தங்கைக்கும் சேர்த்து ஒரே வீட்டில் பெண்ணும் மாப்பிள்ளையும் எடுக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. இந்தப் பார்வதிக்காக நான் அந்த இடத்தை உதறித் தள்ளினால், என் தங்கைக்குத் துரோகம் செய்தவனாவேன். என் தங்கைக்குத் தனியாக ஒரு மாப்பிள்ளை தேடித் திரிவதென்றால், அத்தகைய ஒரு வாலிபன் அகப்படவேமாட்டான்! என்னுடைய காதல் லீலைக்கு முன்னால் என் தங்கையின் வாழ்வையா பலி கொடுப்பேன்.

என் நிலைமை இவ்வளவு நிச்சயமாக இருந்தும், ஏனோ பார்வதியைப் பார்ப்பதிலும் சிரிப்பதிலும் தீராத தாகம் கொண்டேன். அவளோடு பேசுவதற்கு ஏதாவது சந்தர்ப்பம் கிடைக்காதா என்று ஏங்கினேன்.

நானும் அவளும் ஒருவரோடொருவர் நன்றாகப் பேசவில்லையென்பது உண்மை தான். ஆனால் எங்களுக்குள் எத்தனையோ ஆசை விளையாட்டுக்கள் நடந்தன. கண் பார்வையிலும், வாய்ச்சிரிப்பிலுமே எத்தனையோ விதமான லீலைகள்!

அவள் என்னைக் காதலிக்கிறாள் என்பது சந்தேகமில்லாமல் எனக்குத் தெரிந்துவிட்டது. என் மனமுந்தான் கொள்ளை போய்விட்டது. ஆனால்... ஐயோ, இது ஈடேறாத காதலல்லவா?

இந்த விளையாட்டை நிறுத்திக் கொள்ளலாமென்றாலோ, பேய்மனம் கேட்கிறதா? எனது நிலைமையை அவளுக்குச் சொல்லி விடலாமென்றாலோ, எப்படிச் சொல்வது!' அழகான ரோஜாப் புஷ்பத்தைத் தூர வீசிவிட முடியுமா? ரோஜாவுக்கும் ஜீவன் இருந்தால்?... ஜீவன் உள்ள ரோஜா தான் பார்வதி.

அவளுடைய உள்ளத்தில் காதல் தீயை ஏற்றிக் கொண்டேயிருந்தேன். என்னையுமறியாமல். இந்த இன்ப விளையாட்டை நிறுத்தவுமோ முடியவில்லை. ஊருக்குப் போகும் நாட்களையும் பிற்போட்டுக்கொண்டே வந்தேன். மலையிலிருந்து கால் தவறிப் பாதாளத்தில் விழுந்து கொண்டிருப்பவன் இடையிலே நின்றுவிட முடியுமா? அதே மாதிரித்தான் எங்கள் விளையாட்டும் இருந்தது. ஆரம்பமாகிவிட்டது நிறுத்த முடியவில்லை.

என் மனதில் பல்வேறுபட்ட உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்த இந்த நிலைமையில்தான், இதற்குப் முற்றுப் புள்ளி வைத்தது போல் ஒரு நாள் மாமா பேசினார். "இங்கே வருவாளே, பக்கத்து வீட்டுப் பெண்; அவளைப் பார்த்தாயா?" என்றார்.

"பார்த்தேன்."

"அவளைக் கல்யாணம் செய்து கொள்ளேன்!".

நான் சிரித்துக் கொண்டே,"உங்களுக்குத் தெரியாததா மாமா என் நிலைமை?" என்றேன்.

மாமாவும் அசட்டுச் சிரிப்புடன், "ஆமாம், சும்மாதான் கேட்டேன். பெண்ணுடைய தகப்பனார் உன்னைப்பற்றி விசாரித்துக் கேட்டார். நான் உடனேயே அவருக்குப் பதில் சொல்லி விட்டேன்."

"என்ன சொன்னீர்கள்?"

"சொல்வதென்ன! அவள் விஷயம் இன்ன இன்ன மாதிரியிருக்கிறது. நீங்கள் அதில் தலையிடுவதால் பிரயோசனமில்லை" என்று சொல்லிவிட் டேன்."

மாமாவின் இந்த வார்த்தைகளைக் கேட்டபின், நான் என் உள்ளத்தை மிகவும் கண்டித்துக் கொண்டேன். இனிமேல் பார்வதியுடன் விளையாட்டு வைத்துக் கொள்ளக்கூடாது. உடனே இந்த இடத்தை விட்டு வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

அடுத்த நாள் காலையில் பார்வதி வந்தாள். அவள் தகப்பனார் என்னைப் பற்றி மாமாவிடம் கேட்ட விஷயம் அவளும் அறிந்திருந்தாளோ இல்லையோ தெரியாது.

என்னைக் கண்டாள்.

அதே பார்வை ; அதே சிரிப்பு.

என் மனம் கூசிற்று. என் முகத்திலும் அது தெரிந்திருக்கும் என்றே நினைக்கிறேன்.

அன்று மாலையில் உண்மையாகவே புறப்பட்டுவிட்டேன். புறப்படும்போது என் பக்கத்தில் மாமியும் குழந்தைகளும் நின்றார்கள். பார்வதி கொஞ்சத் தூரத்துக்கப்பால் என்னையே பார்த்துக்கொண்டு நின்றாள். மாமி வேறு எங்கேயோ கவனமாயிருந்த சமயத்தில், பார்வதியைப் பார்த்து "போய்வரட்டுமா?" என்கிற மாதிரியில் தலையசைத்தேன். அவளும் தலையசைத்து விடை கொடுத்தாள். ஐயோ, அந்தப் பார்வையிலே ஏதோ ஒரு ஏக்கம்! மலர்ந்த இதழிகளிலே விவரிக்க முடியாத ஒரு சோகம். அவைகளின் அர்த்தம் எனக்கு நன்றாகத் தெரிந்துதானிருக்கிறது. எனினும், என் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டேன்.

இரண்டு மாதங்களின் பின் இப்போது மறுபடியும் வந்திருக்கிறேன், அவளைத் தேடிக் கொண்டு, அவளுக்கு விவாகம் நடந்துவிட்டது. கையிலிருந்த ஒரு புதையலைத் தவற விட்டது போல ஒரு ஏக்க உணர்ச்சி என் உள்ளத்தில் தோன்றிய போதிலும், ஒரு நல்ல அமை தியும் ஏற்பட்டது. ஆயினும் தீராத ஆசை ஒன்று மனதைக் கிளறிக்கொண்டிருந்தது. "இன்னொரு வாலிபனைக் கைப்பிடித்த பார்வதியின் முகம் எப்படியிருக்கும்? அவளுடைய உள்ளத்தில் எனக்குரிய அந்தஸ்து குறைந்து போயிருக்குமா? என்னைக் கண்டால் அந்த மனோகரமான பார்வையைக் காட்டுவாளா? இன்பம் சொரியும் அந்த இதழ்கள் என்னைக் கண்டதும் அழகாக மலருமா...?" என்பன போன்ற விஷயங்களையெல்லாம் அறிந்துவிட வேண்டுமென்ற புதிய ஆவல் உள்ளத்தில் குமுறியது.

ஒரேயொரு சமயம் மனச்சாட்சி என்னைப் பலமாகக் கண்டிக்கும். "இன்னொரு வாலிபனுக்கு உரியவளாகி விட்டவளோடு இனி உனக்கு என்ன விளையாட்டு? உன்னுடைய விளையாட்டு அவள் ஹிருதயத்தில் புண்ணிட்டுவிடும். அவளைத் துன்புறுத்தாதே! உன் கௌரவத்தையும் குறைத்துக் கொள்ளாதே...!" என்று மனச்சாட்சி எச்சரிக்கும். ஆனால் தடுக்க முடியாத மன ஆவலின் முன்னே அவை பிரயோசனமற்றவையாகி விட்டன.

என் உள்ளத்தில் இன்னும் எத்தனையோ சிந்தனைகள் வந்து குவிந்தன. பழைய இன்பகரமான நினைவுகளெல்லாம் சினிமாவைப்போல மனத்திரையில் காட்சியளித்தன. என் உள்ளம் கட்டுக்கு மீறி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தது.

திடீரென்று யாரோ வரும் சப்தமும், அதைத் தொடர்ந்து கைவளைகளின் ஒலியும் கேட் டன. சந்தேகமில்லை அது பார்வதிதான்! என் நெஞ்சு "படபட" வென்று அடித்தது. அவள் போகும்போது நான் இருந்த அறையின் பக்கம் பார்க்க நேரிடும். அப்போது...? நான் எதிர் பார்த்த சமயம் நெருங்கிக் கொண்டிருந்தது. அதை எவ்விதம் சமாளிப்பதென்று தெரியாமல் மனம் பதறிற்று.

"அக்கா! அக்கா!" என்ற குழந்தைகளின் ஆரவாரம். அதைத் தொடர்ந்து, "அக்கா அத்தான் வந்திருக்கிறார்!" என்ற (மாமாவின் மூத்த பையன்) பாலுவின் குரல்.

காலோசை நெருங்கிவிட்டது. நான் சமாளித்துக்கொண்டு, உள்ளப்பதட்டத்தைக் காட்டாமல், முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு தயாராகி விட்டேன்.

இதோ... வந்து விட்டாள்!

என்னைப் பார்த்தாள். ஆஹா, அதே பார்வை! அதே சிரிப்பு! கொஞ்சமேனும் மாறுத லில்லை. சிறிது நாணத்தின் சாயல் மாத்திரம் லேசாகப் படர்ந்திருந்தது போல் தெரிந்தது. ஒரு சமயம் என் கண்களுக்கு அப்படித் தெரிந்ததோ என்னவோ!

அவள் அப்பாற் போய்விட்டாள்.

"அத்தானைக் கண்டாயா அக்கா?" என்ற பாலுவின் குரல்.

"கண்டேன்; கண்டேன்" என்ற அவளுடைய பதில். அந்த வார்த்தையில் தொனித்தது ஏளனமா, சந்தோஷமா?...

நானிருந்த அறைக்குப் பக்கத்து அறையில்தான் அவளும் குழந்தைகளும் போயிருந் தார்கள். அங்கே பேசுவதெல்லாம் ஸ்பஸ்டமாக எனக்குக் கேட்டன.

"அக்கா, நேற்று ஒரு 'சாத்திரக்காரன்' வந்தான். என் கையைப் பார்த்துச் சொன்னான்."

"என்ன சொன்னான்?"

"என்னவோ சொன்னான். அவன் பேசியது எனக்கு விளங்கவில்லை."

"எங்கே, உன் கையைக் காட்டு?"

"உனக்கும் 'சாத்திரம்' தெரி யுமோ அக்கா?"

"தெரியும். எங்கே... பாலு! உனக்கு அப்பா ஒருவர் இருக்கிறாரென்று ரேகை சொல்லுகி றது. அம்மா கூட ஒன்றுதான்... உனக்கு இப்போது எட்டு வயது.... நான் சொல்வதெல்லாம் சரி தானே?...."

இந்தக் குறும்புக்காரியின் விளையாட்டைக் கேட்டதும் எனக்கு ஒரு தைரியம் உண் டாயிற்று. அந்தத் தைரிய உணர்ச்சி மாறிப்போகுமுன்னரே எழுந்து, 'விறு விறு' என்று அடுத்த அறையில் நுழைந்தேன். என்னைக் கண்டதும் சாஸ்திரம் சொல்லுவது நின்று போயிற்று. எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். நானும் சிரித்துக் கொண்டே பார் வதியைப் பார்த்து, "என்னுடைய கையையும் பார்த்துச் சொல்கிறாயா?" என்றேன்.

முன்போல அவ்வளவு கூச்சம் கூட இல்லாமல், "என்ன சொல்கிறது?" என்றாள் அவள்.

நான் கொஞ்சம் திகைத்துப் போனேன். என்றாலும் சமாளித்துக் கொண்டு, "சாஸ்திரம்" என்றேன்.

"அது சரி; எதைக் குறித்துச் சொல்ல வேண்டும்?"

அவளுடைய உள்ளத்தைக் குத்திக் கிளறி வேடிக்கை பார்க்க வேண்டுமென்ற என் ஆவல் இப்போது வெறி மாதிரியாகிவிட்டது. நான் 'டக்'கென்று சொன்னேன்; "இன்னும் எத்தனை பேர் என்னை ஏமாற்றுவார்கள் என்று சொல்லேன்!".

அவள் முகத்தில் திடீரென்று ஒரு அதிர்ச்சி ஏற்பட்டது.

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால்..."

"என்ன தோன்றுகிறது?"

"இதற்கு முன் ..."

"ஆமாம். நம்பி ஏமாந்து போனேன்..."

"யார்....?"

"யார்...? நீதானே ஏமாற்றிவிட்டாய்!" என்று நான் துடுக்காகப் பதில் சொன்னேன். முழுப் பொய்தான். ஏமாற்றியது அவளா, நானா? இத்தகைய துணிவான பொய்யைச் சொல்லி, ஒரு விவாகமான பெண்ணின் உள்ளத்தைக் கிளறிவிட எனக்கு எங்கிருந்துதான் தைரியம் வந்ததோ!

அவள் ஒரு நிமிஷம் ஒன்றும் பேசவில்லை. என் சொல்லை மிகவும் நம்பிவிட்டாள் என்று நான் மிகவும் தைரியம் அடைந்தேன். உற்சாகமில்லாத குரலில் ஏக்கத்துடன் அவள் சொன்னாள்.

"நீங்கள் பரிகாசம் செய்கிறீர்கள்..."

"பரிகாசமா? உன்னிடம் பரிகாசம் பண்ண எனக்கு என்ன உரிமை இருக்கிறது?"

அடிபட்ட மான் போல அவள் சோர்ந்துவிட்டாள். அவள் முகத்திலிருந்த குதூகலம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது. என்னுடைய இரும்பு மனதுக்கு இதெல்லாம் வேடிக்கையாகவே இருந்தது.

அவள் மறுபடியும், "நீங்கள் நம்பக்கூடிய விதமாகவா நடந்தீர்கள்?" என்றாள்.

நான் ஆத்திரம் கொண்டவன் போல, ஆகா, வேறு எவ்விதமாக நடந்தேன்? உன்னைப் பற்றி எனக்கு அக்கறையில்லாவிட்டால் உன்னைத் திரும்பிப் பார்த்திருப்பேனா?.. பழைய விஷயமெல்லாம் அதற்குள்ளாகவா மறந்து போய்விட்டாய்?" என்றேன்.

நெருப்பிலே காட்டிய ரோஜாவைப் போல அவள் வாடிப் போய்விட்டாள். என்னுடைய வெறியோ மேலும் மேலும் அதிகரித்தது. "ஆலகால விஷத்தையும் நம்பலாம்; ஆற்றையும்

பெரும் காற்றையும் நம்பலாம்; இன்னும் எதை எதையெல்லாமோ நம்பலாம்; ஆனால் சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தயங்கித்தவிப்பரே... என்று சும்மாவா சொன்னார்கள்?" என்றேன்.

அவள் நடுங்கிய குரலில் மெதுவாக, "நானும்தான் அப்போது உங்களை நம்பியிருந் தேன். நீங்கள் திடீரென்று போய்விட்டதும்..." என்றாள். இதைக் கேட்டதும், வெறிமூண்ட என் உள்ளத்தில் ஒரு விபரீத உணர்ச்சி தோன்றிற்று.

"பொய் சொல்லாதே?" என்றேன்.

"ஏன் சொல்கிறேன்?"

சீ.... இதற்குமேல் நான் செய்த காரியத்தைச் சொல்லவும் வெட்கமாயிருக்கிறது. ஒரு மிருகத்தைப் போல நான் அவளை நோக்கி எட்டி ஒரு அடி வைத்து "பார்வதி! நீ சொல்வது உண்மையானால்..." என்று சொல்லிக் கொண்டு நெருங்கினேன்.

என் கண்களிலே உணர்ச்சியின் விபரீதப் போக்கை அவள் கண்டிருக்க வேண்டும். 'ஆ!' என்று, அவள் பின்வாங்கினாள். அந்த அதிர்ச்சியில் நான் திகைத்து நிற்கும் போதே, மின்னலைப் போல மறைந்துவிட்டாள்!

◆◆◆

கண்ணியம் வாய்ந்த நிரபராதி ஒருவன், பொய் வழக்கினால் சிறை செல்வது போல, நானும் என் அறையில் நுழைந்தேன். உண்மையில் அந்த நிரபராதியின் மனவேதனை விட, என் மனவேதனை ஆயிரம் ஆயிரம் மடங்கு பெரிதாகவே இருந்தது. மனச்சாட்சி என்னை வாள் கொண்டு அரிந்தது; வேல் கொண்டு குத்தியது. நான் துடித்தேன் தூண்டிற் புழுவினைப் போல் துடித்தேன்.

'ஆகா, மிருக வெறியின் போதையிலே எத்தகைய கொடிய காரியத்தைச் செய்யத் துணிந்தேன்? மதிப்புடன் கொலுவீற்றிருந்த ஒரு பெண்ணின் இதய சிம்மாசனத்திலிருந்து சாக்கடையிலல்லவா குதித்து விட்டேன்! மீண்டும் எழுந்திருக்க முடியாதபடியல்லவா ஆழப் புதைந்துவிட்டேன்! இனி...

மன்னிப்பு!

சீ. மன்னிப்பா? எனக்கா?.... பார்க்கக் கூடத் தகுதியற்றவனாகிவிட்டேன்.!

ஐயோ, அந்தத் தகுதி எனக்கு மீண்டும் வருமா?

மறுமலர்ச்சி - 02
சித்திரை - 1946

ஜோடி

வரதர்

"வென்றுவிட்டாயடி, ரத்தினா!" "வென்றுவிட்டாயடி ரத்தினா!" "வென்றுவிட்டாயடி ரத்தினா!..." என்று திருப்பித் திருப்பி மனதுக் குள்ளே சொல்லிப் பார்த்துக் கொண்டேன். அடுத்தாற்போல் எழுதப் போகும் ஒரு கதைக்கு இந்தப் பெயரைத்தான் போடுவதாக நிச்சயித் திருந்தேன். கண்ணை மூடிக்கொண்டு அந்தக் கதையை எப்படி ஆரம் பிப்பதென்ற சிந்தனையில் ஆழ்ந்தேன்.

திடீரென்று யாரோ என் கழுத்தைப் பிடித்து நெரிக்கவே, திடுக்கிட் டுக் கண்ணை விழித்தேன். என் நண்பன் சோமுதான் இந்தப் பயங்கர மான காரியத்தில் ஈடுபட்டிருந்தான்.

"அடே, டே டே!... இதென்ன வேலையடா இது!" என்றேன் மூச்சுத் திணற,

"இதுவா? இந்த வேலைக்குத்தான் 'கொலை செய்தல்' என்று பெயர் தெரிந்ததா? இப்படியே உன்னுடைய கழுத்தை நெரித்து..."

"ஐயையோ, நான் என்ன செய்தேனப்பா உனக்கு?"

"ஓகோ! இது வேறே கேட்கிறாயா? நான் ஒருவன் வந்து உன் மூஞ்சிக்கு நேரே நிற்கி றேன் ; நிற்கிறேன் ; நிற்கிறேன்.... நீ உன் பாட்டுக்குக் கண்ணை மூடிக்கொண்டு...."

"தப்பு; தப்பு; தப்பு! மன்னித்துக் கொள்ளப்பா... அடேடே! கழுத்தை வலிக்கிறது; கையை விடடா!"

"இனிமேல்..."

"இல்லை! இல்லை!"

இதற்கு மேல் சோமு மனமிளகி எனக்கு உயிர்ப்பிச்சை அளித்தான். நான் கழுத்தைத் தடவிக்கொண்டே, "என்னடா இது, இன்றைக்கென்ன இவ்வளவு உற்சாகம்?" என்று கேட் டேன். சோமுவுக்கு ஏதாவது உற்சாக மேற்பட்டால்தான் அவன் இந்தமாதிரி 'பயங்கர' வேலை களில் ஈடுபட்டு விடுவது வழக்கம்.

"எனக்குக் கல்யாணம்!" என்றான் சோமு.

நான் கண்களை அகல விழித்து, "உண்மையாகவா? நிச்சயமாச்சா?" என்றேன். அவன் திடீரென்று என் மூக்கைப் பிடித்து என் தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டே, "நிச்சயமாச்சு நிச்சயமாச்சு! இந்த மாதம் 27-ம் தேதி முகூர்த்தம் தெரிந்ததா?" என்றான். நான் மூக்கை விடுவித்துக்கொண்டு, நாற்காலியை - அவன் கைக்கெட்டாத தூரத்தில் பின்னுக் கிழுத்துக் கொண் டேன்.

அவன் மேலும் சொன்னான்:

"கல்யாணம் என்றால் சும்மா ஏதாகிலுமொரு பெண் ரூபத்துக்குத் தாலி கட்டப் போகி றேன் என்று நினைக்காதே..."

"பெண்ணைப் பார்த்தாயா?"

"இல்லை.உன்னைப்போல ஒரு நாட்டுப்புறத்தைக் கண்ணை மூடிக் கொண்டு கல் யாணம் செய்யப் போகிறேன்..."

"பரிகாசஞ் செய்கிறாயே!"

"பின்னே என்னடா! நான் பெண்ணைப் பார்த்தேன்; அவளோடு பேசினேன்.... பெண் ணென்றால், அவள் அழகிலே 'ரதி'. பேச்சிலே கிளி, மனிதரோடு பழகிறதிலே.... 1947ஆம் ஆண்டு நாகரீகமடா! இங்கிலீஷ் எஸ்.எஸ் ஸி.வரைபடித்திருக்கிறாள். உன்னுடைய கதை களில் எழுதுவாயே, அந்த மாதிரிக் 'கதாநாயகி'யடா!"

"புழுகு! புழுகு!"

"புழுகா? நீ அவளைப் பார்த்தால்...!"

"அதல்ல என்னுடைய 'கதாநாயகி'யைப் போல என்றாயே, நீதான் கதையே படிக்காத ஜன்மமாச்சே!"

"இல்லையடா, எப்போதோ ஒரு நாள் படித்தேன். ஆனால் இனிமேல் அதற்குக் கூட நேரம் வராது. உன்னுடைய கதையைப் படிக்கிறநேரம், அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் அவளுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கலாம்..."

"அவளுடைய கண்கள் கயல்மீனைப் போலவும், மூக்கு எள்ளுப்பூவைப் போலவும், உதடுகள் கொவ்வைப் பழத்தைப போலவும்..."

"ஓகோ, உனக்குப் பகிடியாய் இருக்கிறதோ? எல்லாம் வந்து பார்த்து விட்டுச் சொல்லு... அது சரி; 27ந் தேதி முகூர்த்தம். இரண்டுநாள் முன்னாகவே நீ வந்துவிட வேணும். தெரிந்ததா?"

"இரண்டு நாட்களுக்கு முன்னர் என்னை எதற்கு?"

"எதற்கா? உனக்குத்தான் தாலி கட்டப் போகிறேன்..... நான் சொல்கிறேன், பார் அவரை! 25-ந் தேதியே வராவிட்டால் பிறகு தெரியும்?.... வரமாட்டாய்தானோ?...." என்று சொல்லிக்கொண்டு அவன் என்னை நோக்கி எழுந்து வந்தான். அவனுக்கு அப்போதிருந்த உற்சாகத்தில் என்னுடைய மூக்கைப் பிய்த்து நெற்றியிலே ஒட்டினாலும் ஒட்டிவிடுவான். அவன் என்னைத் தொடுமுன்னரே, "வருகிறேனடா,வருகிறேன் இருபதாந்தேதியே வேணுமானாலும் வந்துவிடுகிறேன்!" என்று கூச்சல் போட்டேன்.

"அப்படிச் சொல்லு, நல்லபிள்ளை!... சரி. எனக்கு எத்தனையோ வேலை இருக்கிறது. நான் போய் வரட்டுமா?" என்றான்.

"சரி; சரி. இந்தச் சமயத்தில் உன்னை மினைக்கெடுத்தக் கூடாது. போய் வா அப்பா! ஏதோ புத்தியைச் சரியாக வைத்துக்கொள்" என்றேன்.

"சரிதான்" என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

◆◆◆

இவ்வளவு தூரம் சோமு பயப்படுத்தியிருந்தும் என்னால் அவனுடைய கல்யாணத்துக்கு இரண்டுநாள் முன்னர் போகமுடியவில்லை; கல்யாணத்தன்றும் போகவில்லை. அதன் பிறகு ஒருவாரம் வரைக்கும் நான் வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை. நானென்ன செய்யமுடியும்? தெய்வத்தின் சோதனை போல அந்தச் சமயம் பார்த்து என்னைச் சுகவீனம் பிடித்துக் கொண்டது. அவனுடைய கல்யாணத்தின்பின் ஒருவாரம் கழித்து, சோமு தம்பதிகளைப் பார்ப்பதற்காகப் போனேன். நான் சுகவீனமாயிருந்த விஷயம் ஏற்கனவே சோமுவுக்குத் தெரிந்திருந்ததால் என்னுடைய மூக்குக்கோ, கழுத்துக்கோ ஆபத்து ஏற்படவில்லை.

"கல்யாணத்துக்கு வரவேணுமென்று உனக்கு உள்ளூர விருப்பமில்லை;அதனால் தான் அந்தச் சமயம் பார்த்து படுக்கையில் கிடந்துவிட்டாய்!" என்றான் சோமு.

"ஓமோம், அதனால்தான் இப்படி இன்னும் நல்ல சுகமாகும் முன்னமே எழுந்தோடி வந்தேன், உன்னைப் பார்ப்பதற்கு!"

"உன்னையா? 'உங்களை' என்று சொல்லடா! என்னை மாத்திரமா பார்க்க வந்தாய்?" என்று கூறி அவன் 'கலகல'வென்று சிரித்தான். பிறகு, உள்ளே பார்த்து, 'உமா! உமா!.... உமா

ராணி! ....ஓ, மிஸிஸ் சோமசுந்தரம்...!" என்று சத்தம் போட்டான். இந்த 'வாயாடி'யின் காரியம் என் மனதை என்னவோ செய்தது. அந்தப் பெண்ணைப் பிறர் முன்னிலையில் இப்படி 'லோட்டி' அடிக் கிறானே! பாவம்; அவள் தலையில் பிரமன் எழுதிவிட்டான், சீவியகாலம் வரையும் இந்த 'நட்டாமுட்டி'யோடு காலந்தள்ளும்படி!

"ஓ! கோபிக்க வேண்டாம், என் துரையே! இதோ வந்துவிட்டேன்" என்ற வீணாகானம் உள்ளிலிருந்து கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு தோகை மயில், மான்போலத் துள்ளி வந்தது. அட....!

நான் கண்களை அகல விழித்துப் பார்த்தேன்

'அட, இவளா!'

நான் திகைத்துக் கொண்டிருக்கும் போதே, அவள் என்னைப் பார்த்து, "அ! மிஸ்ரர் சிவஞானம்! நீங்களா?" என்றாள்.

◆◆◆

ஆம். நான்தான். இந்த சிவஞானத்தை இரண்டு வருடங்களுக்கு முன்னரே அவள் அறிந்திருந்தாள். நானும் உமாராணியை நன்றாகத் தெரிந்திருந்தேன். அப்போது... அது ஒரு கதை. என்னால் மறக்கமுடியாத நினைவு.

இரண்டு வருடங்களின் முன், நான் கல்யாணம் செய்து சில மாதங்கள் தான் கழிந்திருந்தன. என் மனைவியை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் அவளைக் காதலித்துக் கல்யாணம் செய்யவில்லை. 'பெரியோர்கள் நிச்சயம் செய்துதான் நடந்து, அந்தக் கல்யாணம். ஆனாலும் கல்யாணத்தின் பின்னர் அவளை நான் காதலித்தேன். அவள் ஏதோ கொஞ்சம் படித்திருந்தாலும், பெரிய சங்கோசி. என்மேல் தனக்குள்ள ஆசையை, அட்டகாசமாகக் காட்டிக் கொள்ள மாட்டாள். மௌனமாக தலையைக் குனிந்து கண்ணிதழ்களைச் சற்றே உயர்த்தி அவள் பார்க்கையில், நான் தெரிந்துகொண்டு விடுவேன்: அவளுக்கு நான் உயிர்.

எங்களிடையே ஒட்டிக்கொண்ட இந்த உறவுக்குக் குறுக்கே வந்தவள் தான் உமா ; இப்போது ஸ்ரீமதி சோமசுந்தரமாகி விட்டவள்.

என் மனைவி பானுமதிக்கும், உமாவுக்கும் சம வயதேயென்றாலும், உமா அப்போதும் படித்துக்கொண்டிருந்தாள். எங்கள் ஊரில் அவளுடைய சித்தப்பா வீடு இருந்தது. இரண்டு வருடங்களின் முன் ஒருசமயம் கிறிஸ்மஸ் லீவின்போது அங்கே வந்திருந்தாள். பானுமதி அவளுடைய பள்ளித்தோழி. எனவே உமா அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள். சோமுவைக் கண்டால் எனக்கு எப்படி இருக்குமோ அதுமாதிரித்தான் பானுமதிக்கும் உமாவைக் கண்டுவிட்டால்! பானுமதியைக் கேலி பண்ணி அவமானப்படுத்துவதில் உமாவுக்கு வெகு உற்சாகம்.அவளால் எவ்வளவு அவமானப்பட்டாலும் பானுமதிக்கு அவளைக் கண்டால் வெகு குதூகலம்.

முதலில் உமாவின் மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எந்த நேரமும் அவள் பானுமதியோடு முஸ்பாத்தி பண்ணிக்கொண்டிருந்தால். நான் என்ன செய்கிறதாம்? அவளை

எப்படியாவது கடத்திவிடும் கெட்டித்தனம் பானுமதிக்குக் கிடையாது. 'இங்கே ஒரு ஆண் பிள்ளை பானுமதிக்காகக் காத்திருக்கிறானே' என்ற எண்ணம் அந்த நாசமாய்ப் போன உமாவுக்கும் கிடை யாது. எனக்கு ஆத்திரம் வராதா? எனக்கு மாத்திரம் கொஞ்சத் 'தபோபலம்' இருந்திருந்தால்.... பாவம், அந்த உமாவின் கதி என்னவாயிருக்குமோ?

கொஞ்ச நாளில் இந்த நிலைமை மாறிவிட்டது. ஏனெனில், உமா-பானுமதி சம்பாஷணையில் நானும் கலந்துகொள்ள ஆரம்பித்தேன். இத்தகைய சந்தர்ப்பத்தை நானாக வலியச் சென்று பயன்படுத்தும் வழக்கம் இல்லை. ஆனால் இங்கு வலிந்திழுக்கப்பட்டேன் உமாவினால்! மெல்ல மெல்ல அவள் என்னையும் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக் கொண் டாள். அடேயப்பா! 'பானுமதியும் ஒரு பெண்; இவளும் ஒரு பெண்; என்று சொல்ல முடியுமா! இவளிருக்குமிடத்தில் 'கலகல'வென்று எந்த நேரமும் வெண்கலநாதம் கேட்டுக் கொண்டே யிருக்கும். பானுமதி என்னவோ நல்ல பெண்தான்; என்மேல் ஆசையாயிருப்பவள்தான். ஆனால், உமாவின் கலகலப்பும் மிடுக்கும் அவளுக்கு ஒரு தனிக்கவர்ச்சியை அளித்தன. பச்சையாகச் சொன்னால், உமா என் மனதைக் கவர்ந்தாள். அவளைப் பார்ப்பதிலே, அவளோடு பேசுவதிலே, பழகுவதிலே ஒரு தனி இன்பம் கண்டேன் நான். ஆனால், உமா! அவளுடைய பேச்சுகள், நடத்தைகள், சிரிப்பு, தலையசைப்பு, கண்வெட்டு... ஓ, உமாவுக்கும் என்மீது... ஏன், நான் ஒரு அழகான வாலிபன் தானே!

உமாவினால் நான் கவரப்பட்டேன; நானும் உமாவைக் கவர்ந்து விட்டதாக நிச்சயமாக நம்பினேன். என்னுடைய சில சிருங்காரச் சாடைகளை அவள் குதூகலத்துடன் அங்கீ கரித்ததை அனுபவத்தில் கண்டேன்.

இத்தனைக்கும் பானுமதியோ தன்பாட்டில் சாதுவாய், வழக்கம் போலச் சந்தோஷ மாகவே இருந்தாள். பாவம், உலகம் தெரியாதவள். இவளை ஏமாற்றுகிறோமே' என்று சில சமயம் தோன்றும். அடுத்த நிமிஷம், உமாவின் 'கலகல'வென்ற ஒரு ஒலியினால் இந்த உணர்ச்சி மறைந்துவிடும்.

எனக்கும் உமாவுக்குமிடையே இப்படிச் சில சிருங்காரச் சேட்டைகள் நடந்தனவானா லும், என்னால் நிச்சயமாக இன்னும் அவளை நம்பமுடியவில்லை. 'ஒருவேளை அவள் தன் னுடைய இயற்கையான முஸ்பாத்திக் குணத்தினால் செய்யும் சேட்டைகளை நான் தப்பர்த்தம் செய்துகொண்டேனோ' என்ற சந்தேகம் இடையிடையே தோன்றும். ஆனால், அவளுடைய நடத்தைகள் மறுபடியும் எனக்கு நம்பிக்கை அளிக்கும். ஒருநாள் இந்த உறவை நிச்சயம் செய்துகொள்ள விரும்பினேன். மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, உமாவுக்கு ஒரு கடிதம்- காதல் கடிதம் எழுதினேன். அவள்மீது எனக்குள்ள காதலை அலங்காரமான எழுத்துகளிலே அள்ளி வீசினேன். நான் முன்பின் யோசியாமல் கல்யாண விஷயத்தை 'பெரியோர்கள் நிச்ச யிக்கும்படி' விட்டுவிட்டேன் என்றும், அதனால் என் வாழ்க்கையே பாழாய்ப் போய்விட்டதென் றும் எழுதினேன். இப்போதும் அவளாக ஒரு புதிய பாதையை -ஆனந்தமயமான பாதையைக் காட்டுவாளானால், அதன் வழியே செல்லத் தயாராயிருக்கிறேனென்றும் குறிப்பிட்டேன்.

கடிதத்தைப் பத்திரமாக ஒரு கவரில் போட்டு மேலே அவளுடைய பெயரையும் அழகாக எழுதித் தயாராக வைத்திருந்தேன். ஒருநாள் உமா எங்கள் வீட்டை விட்டுப் புறப்பட்ட போது, பானுமதிக்கு வேறு ஏதோ பராக்குக்காட்டி, அவளை உள்ளே போகும்படி செய்தேன். பிறகு, வெளியே போய்க்கொண்டிருந்த உமாவிடம் ஓடிப்போய், "உமா!" என்றேன்.

"ஓ" என்று அவள் திரும்பிப் பார்த்தாள். என் முகத்தில் எதைக் கண்டாளோ, அவளு டைய முகத்தில் ஏதோ ஒரு புதிய பாவத்தைக் கண்டேன். என்னால் அதிகமாக ஒன்றும் பேச முடியவில்லை. அவளிடம் கடிதத்தைக் கொடுத்து "இதை வீட்டிலே போய் வாசித்துப் பார்!" என்றேன். என் கைகளிலும், குரலிலும் என்றுமில்லாத ஒரு பதட்டம் தோன்றிற்று. அவள் கடிதத்தை வாங்கினாள். தன் வேல்விழிகளால் என்னை ஆராய்ந்தாள். பிறகு பேசாமல் தலையசைத்து விட்டுத் திரும்பி நடந்தாள்.

அவளுடைய இந்த நடத்தை எனக்கு ஒரு விஷயத்தை நிச்சயமாக எடுத்துக் காட்டிற்று. அதாவது கடிதத்திலிருக்கும் விஷயத்தின் போக்கை அவள் இப்போதே ஊகித்துக்கொண்டாள். அவளால் எப்படி இந்த விஷயத்தை 'டக்' கென்று அறிய முடிந்தது? ஆம், அவளுடைய உள்ளத்திலும் இதே சிந்தனைக் குமுறல் இருந்ததென்பது நிச்சயம்....

அடுத்தநாள் அவளுடைய கடிதம் கிடைக்குமென்றும், அதிலே என்மேல் அவளுக்குள்ள ஆசையைத் தேனினுமினிய வார்த்தைகளால் வர்ணிப்பாளென்றும் எதிர்பார்த்தேன். இன்னும் அவளுடைய யோசனைகள்...

ஆனால்,.....அடுத்தநாள் அவள் வரவேயில்லை; அதற்கடுத்தநாளும் அவள் வர வில்லை!

எனக்கு யோசனையாய்ப் போய்விட்டது! இரண்டாம்நாள் மெதுவாகப் பானுமதியிடம் கேட்டேன்: "ஏன், இரண்டு நாட்களாய் உன் தோழியைக் காணவில்லையே?" என்று, சாதார ணமாகக் கேட்பது போலத்தான் கேட்டேன்.

"அவளா? அவள் நேற்று வந்தாள். "ஊருக்குப் போகிறேன்" என்று சொல்லி விட்டுப்போய் விட்டாள்" என்றாள் பானுமதி.

.....?

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

இப்போது இரண்டு வருடம் கழிந்துவிட்டது. உமாவின் விஷயத்தில் நான் நடந்து கொண்டதை நினைத்தால் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. நல்லவேளை; நான் செய்த 'வெட்கங்கெட்ட வேலை'யை அவள் பானுமதியிடம் சொல்லவில்லை. 'இனிமேல் அவ ளுடைய கண்ணிலே படக்கூடாது; அவள் இருக்குந் திக்கையே நோக்கக்கூடாது!' என்று நினைத் திருந்தேன்.

இந்த நிலையில்தான்....

◆◆◆

"ஆம்! மிஸ்ரர் சிவஞானம் ! நீங்களா?" என்று உமா கேட்டுக் கொண்டே வந்தாள்.

என் நெஞ்சு துடித்தது;உடல் பதறிற்று. என்ன பேசுவது, என்ன செய்வது என்று தெரி யாமல் தடுமாறினேன். வாயைத் திறந்தால் சத்தம் வெளியில் வராது போல் தோன்றிற்று.

"அடே, சிவஞானம்!உனக்குத் தெரியுமா உமாவை!" என்று வாயைப் பிளந்தான் சோமு.

என் முகத்தில் அசடு வழிந்தது.

உமா சொன்னாள்:

"ஓ ; அவருடைய மனைவி பானுமதி என்னுடைய தோழி......"

உமா மெதுவாகத் திரும்பி என்னைப் பார்த்துக் குறும்புச் சிரிப்புச் சிரித்தாள். பிறகு சோமுவைப் பார்த்து. 'நான் சொன்னேனே. முன்பு?.... எனக்கு 'அந்த'க் காதல் கடிதம் எழுதிய வர்..." என்று சொல்லிச் சிரிப்பை அடக்க முடியாமல் வாயைக் கையினால் மூடிக்கொண்டு கலகலத்தாள்.

"ஓஹோஹோ!... நீதானா அது!.... அடேடே!..... சபாஷ்!.... ஆளைப் பார்த்தால் பூனைமாதிரி.... " என்று சொல்லிச் சோமுவும் விழுந்து விழுந்து சிரித்தான்.

நான்..."?

என்னுடைய நிலைமை எப்படி இருந்ததென்று தெரியவில்லை. ஏதாவது சொன்னேனா. அல்லது தலையைக் குனிந்து கொண்டேனா - எனக்கு ஒன்றும் இப்போது நினைவில்லை.

◆◆◆

வீட்டுக்குத் திரும்பி வருகையில் ஒரு விஷயம் மாத்திரம் தெரிந்து கொண்டேன்: அந்த இருவருந்தான் சரியான ஜோடிகள்; ஆளுக்காள் சளைக்காத வாயாடிகள்.

மறுமலர்ச்சி
சித்திரை - 1947

வேள்விப் பலி

வரதர்

"பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு மலேயாவிலிருந்து மறுபடியும் என்னுடைய ஊருக்கு வந்திருக்கிறேன். இந்த ஊர்தான் எப்படி எப்படியெல்லாம் மாறிப்போய்விட்டது! வீடு, வாசல்; மரம், தடி - எல்லாமே உருமாறிவிட்டன. மனிதர்களையும் யார் யாரென்று விசாரித்துத்தான் அறிய வேண்டியிருக்கிறது. முன்னே நான் இங்கே இருந்த போது, மாமா! எனக்கு "ஆ"னா எழுதத் தெரியும்" என்று சொல்லிக் கொண்டு என் மடி யில் ஓடிவந்து ஏறிய அடுத்த வீட்டுப் பெண் என்னைப் பார்க்க வந்தாள்; வரும்போது ஒக்கலையில் தனது குழந்தையையும் சுமந்து கொண்டு வந்தாள்!

முன்னெல்லாம் என்னோடு இணைபிரியாத என் நண்பர் முத்தையா, என் வரவறிந்து ஸ்டேஷனுக்கே ஓடி வருவாரென நினைத்திருந்தேன். நான் இங்கே வந்தும் ஒரு பகல் கழியப்போகிறது; இன்னும்தான் அவர் முகத்தைக் காணவில்லை. பழைய ஞாபகங்கள் முத்தையாவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டின. பொழுது படும் சமயத்தில் அவர் வீட்டுக்குப் போனேன். "ஓ! வாருங்கள்; வாருங்கள்! நானே வரலாமென்று இருந்தேன். தெரியாதா, என்பாடு..." என்றார்.

"குடும்பத் தொந்தரவுகளோ? எல்லாமாக எத்தனை கூப்பன் வைத்திருக்கிறீர்கள்?"

"மூன்று சாதாரணம், இரண்டு பிள்ளை, ஒரு குழந்தை - இன்னும் இரண்டு மாதத்தால் இன்னும் ஒரு குழந்தைக் கூப்பன் கிடைக்கும்...."

- இப்படியே பேச்சு வளர்ந்து சென்றது. அவையெல்லாம் இந்தக் கதைக்குத் தேவையற்றவை. முக்கியமான பகுதிக்கு வந்து சேருகிறேன். ஏதோ பேசிக்கொண்டிருக்கையில்,

"பௌர்ணமிக்கு இன்னும் மூன்று நாள் தானே இருக்கிறது?" என்றார் முத்தையா.

"பங்குனி மாதப் பௌர்ணமியல்லவா? பத்திரகாளிகோயில் வேள்வியும் அதோடு வரவேண்டுமே?" என்றேன்.

திடீரென்று அவர் முகத்தில் புயல் அடித்து ஓய்ந்தது போன்ற பாவம் தோன்றிற்று. ஏதோ ஒரு மயிர்க்கூர்ச் செறியும் சம்பவம் அவர் ஞாபகத்தில் துடித்தது போன்றிருந்தது.

நான் அப்படி என்ன சொல்லிவிட்டேன்? பத்திரகாளி கோயில் வேள்வி எப்போது என்று தானே கேட் டேன்! "ஏன், பேசாமலிருக்கிறீர்கள்!" என்றேன்.

"... அந்த ஞபாகம் என் நெஞ்சை உடைக்கிறது"

"நீங்கள் சொல்வது..."

முத்தையா சால்வைத் தலைப்பினால் கண்களைத் துடைத்துக் கொண்டு, "இப்படி வாருங்கள்" என்று என்னை உள்ளே ஒரு அறையினுள் அழைத்துச் சென்றார். "இந்தப் படங்களைப் பாருங்கள்" என்றார்.

அமரராகிவிட்ட மகாத்மாஜியின் படம் ஒன்று, மற்றப் படத்தில் ஆணும் பெண்ணுமாக இருவர் இருந்தனர். அந்த மனிதரை எங்கேயோ பார்த்த மாதிரி இருந்தது. ஞாபகம் வரவில்லை. "யார் இது? தெரியவில்லையே?" என்றேன்.

"இதோ இந்த மகாத்மாஜி சென்ற 30-01-48ல் தெய்வமானவர்; மற்றப் படத்திலிருப்பவர் இரண்டு வருடங்களுக்கு முன்னால் தெய்வமாகிவிட்டவர். மகாத்மாஜியின் சிஷ்யர் என்றே சொல்லலாம். - குருவை மிஞ்சிய சிஷ்யர் என்று சொல்வேன்".

"அந்தப் பெண்....."

"அவருடைய தர்ம புத்திரி. அவருடைய மனமெனும் தோணியைச் சரியான பாதையில் திருப்பிவிட்ட சுக்கான்!"

"அந்த மனிதரை எங்கேயோ பார்த்தமாதிரி..."

"மாதிரியென்ன, உங்களுக்கு நன்றாகத் தெரிந்தவர்தான்; இராமலிங்க உபாத்தியாயரின் மகன் -"

"அ! ... சுந்தரமூர்த்தியா? அவர் ......"

"அவர் தான்!"

"என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்கள்!"

"சுந்தரத்தினுடைய குணம் தான் உங்களுக்குத் தெரியுமே!"

"தங்கப்பவுணாயிற்றே! நல்லொழுக்கமும், தெய்வபக்தியும் - இராமலிங்க உபாத்தி யாயர் வளர்த்த வளர்ப்பல்லவா?"

"ஆனாலும், பரம்பரை பரம்பரையாக வந்த பழக்கத்தை விட்டுவிட அவருக்குத் துணி வில்லை. வருடந்தவறாமல் பத்திரகாளிக்கு ஒரு முதல் தரமான ஆட்டுக்கடாப்பலி கொடுத்து வந்தார்."

"அதிலே "

"தவறு இல்லை, செய்ய வேண்டிய காரியமென்றுதான் அவரும் எண்ணிக்கொண்டி ருந்தார். அவருக்கு உண்மையை எடுத்துக் காட்டி அந்த வழக்கத்தை நிறுத்தி விட்டவள் அவருடைய மனைவிதான். அவரைத் தங்கப்பவுண் என்று சொன்னீர்களே. அந்த மங்கையர்க்கரசியை எப்படிச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. அவளைத் தெய்வ மாக வணங்கலாம். ஒவ்வொரு பெண்ணும் அவளை லஷ்யமாகக் கொண்டு வாழலாம். மங்கையர்க்கரசி என்ற பெயர் அவளுக்கே பொருந்தும்!"

"பிரமாதமாகப் புகழ்கிறீர்களே, புருஷன் மனம் கோணாமல், அவனுடைய விருப்பப்படி நடப்பவளல்லவோ - "

"மங்கையர்க்கரசி அப்படியில்லையென்று யார் சொன்னது? சுந்தரத்தின் இஷ்டத்திற்கு மாறாக அவள் என்றும் நடந்ததில்லை. அவளுடைய இனிய பேச்சுக்களும், சீரிய நடத்தை யுமே ஒருவரைத் தெய்வமாக்கி விட்டனவென்றால், - அவளுடைய பெருமை...."

"சுந்தரம் தமது பலியை நிறுத்தினார். அதனால் - ?"

"அவர் அவ்வளவோடு நிற்கவில்லை. காந்தீய வாழ்வில் விறுவிறென்று முன்னேறிச் சென்றார். வெகு சீக்கிரத்தில் அவர் ஒரு தூய்மையான, ஒழுங்கான வாழ்க்கையை அமைத் துக் கொண்டார். அந்த வாழ்வின் தூய்மை அவர் முகத்தில் "பளிச்" சென்று தெரிந்தது. எந்த முரடனும் அவரைக் கண்டால் பணிந்து செல்வது வழக்கமாகி விட்டது"

"பிறகு?..."

"காந்தீயத் தொண்டர் சபை" என்பதாக ஓர் சபையை அவர் நாலு வருடங்களுக்கு முன்னால் ஆரம்பித்தார். அநேகமாக ஊரிலுள்ள எல்லா இளைஞர்களும் அதில் சேர்ந்திருந் தார்கள். அறிவும், பண்பாடும் உள்ள நாலைந்து இளைஞர்கள் உண்மையான ஆர்வத்துடன் சபையின் வளர்ச்சிக்காக சுந்தரத்தோடு ஒத்துழைத்தார்கள். சுந்தரத்தின் "முகத்துக்காக" முதலில் சேர்ந்தவர்கள் கூட நாளடைவில் பண்பட்டு வந்தார்கள், சபை ஆரம்பித்து ஒரு வருடமாவதற்குள் ஒரு முக்கியமான காரியத்தைச் செய்வதற்கு இளைஞர்கள் தீர்மானித் தார்கள்".

"வேள்வியை நிறுத்தவா?"

"இல்லை, எங்கள் முருகமூர்த்தி கோயிலை ஹரி ஜனங்களுக்குத் திறந்துவிட வேண டுமென்று துடித்தார்கள். சுந்தரம் முதலில் கொஞ்சம் தடுத்துப் பார்த்தார். "சபையின் வளர்ச்சி இன்னும் அதிகமாகட்டும். உங்கள் பண்பாடும் வளரட்டும். அடுத்த வருடம் இந்த வேலை யைச் செய்வோம். அதற்குள் பொது ஜனங்களின் மனதையும் பக்குவப்படுத்தப் பிரசாரங்கள் செய்யலாம்" என்றார். குறுகுறுத்த இளைஞர்களின் மனம் கேட்கவில்லை. அப்போதே அந்த முயற்சியில் நிச்சயமாக வெற்றியடையலாம் என்றார்கள்!"

ஆலயப் பிரவேசம் நடந்ததா?"

"இல்லை, நடக்க முயற்சி நடந்தது. இளைஞர்களின் எண்ணத்துக்குச் சுந்தரமும் சம்மதித்து விட்டார். தேதி குறிப்பிட்டு விளம்பரம் ஒட்டினார்கள். கூட்டங்கள் நடத்தினார்கள். "பழையவர்"களின் எதிர்ப்பும் இருந்தது. கொஞ்சநாள் ஊரெங்கும் இதே பேச்சாக இருந்தது. குறிப்பிட்ட தேதியில் கோயிலில் ஒரேகும்பல். ஹரிஜனங்கள் ஆலயப்பிரவேசத்துக்கு - திகி லுடன் - தயாராக இருந்தார்கள். திடீரென்று அட்டகாசமான ஒரு குரல் கேட்டது. பொன்ன னைத் தெரியுமல்லவா? - அவன் குடித்துவிட்டு யமன் மாதிரி வந்தான். சுந்தரத்துக்கு முன் னால் போய் தாறுமாறாகப் பேசினான். இளைஞர்கள் சிலர் துடித்தார்கள். சுந்தரம் அவர்களை - அவர்களுடைய கொள்கையை ஞபாகப்படுத்தி - எச்சரித்துவிட்டு, பொன்னனுக்குச் சாந் தமாக ஏதோ பதில் சொன்னார். அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே திடீரென்று பொன்னன் கைத்தடி உயர்ந்தது. மறுகணம் "படீர்" என்று சுந்தரத்தின் தலையில் அது வீழ்ந்தது!"

"அடடா!"

"முருகா!" என்று சத்தத்துடன் சுந்தரம் நிலத்தில் சரிந்தார். "கிசுகிசு" என்று தரையெல் லாம் இரத்தம் பெருகிற்று. ஒரே அல்லோல கல்லோலமாகிவிட்டது. பொன்னன் ஓடிவிட்டான். நல்லவேளை! நின்றிருந்தால் அந்த இளைஞர்களைத் தங்கள் அஹிம்சா தர்மத்தை விட்டு விலகச் செய்திருப்பான்!"

"சுந்தரம் அதோடு -"

"இல்லையில்லை. ஆஸ்பத்திரியில் மூன்று மாசம் கிடந்து எழும்பி வந்தார்!....... பொன்னனுக்குக் கோர்ட்டிலே எட்டு மாதச் சிறைத் தண்டனை கிடைத்தது!"

"ஆலயப் பிரவேசம்?"

"அன்று நடக்கவில்லை. ஆனால் சுந்தரம் ஆஸ்பத்திரியிலிருக்கும் போதே, இளைஞர்கள் ஜனங்களைப் பக்குவப்படுத்தி வைத்திருந்தார்கள். அந்தச் சம்பவம் நடந்த பிறகு யாரும் எதிர்க்கத் துணியவில்லை. சுந்தரத்தின் வருகைக்காக காத்திருந்தார்கள். சுந்தரம் ஆஸ்பத்திரியிலருந்து வந்த அதே தினத்தில், ஒருவித எதிர்ப்புமில்லாமல் மிகக் கோலாகல மாக ஆலயப் பிரவேச விழா நடந்தது!"

"மகாத்மாஜியின் ஆயுதம் லேசானதல்லவென்பதை இன்று தான் சரியாயறிந்தேன். இல்லாவிட் டால் இந்தச் சனங்கள் "

"அஹிம்சையும், தியாகமும் யாரைத்தான் வசமாக்காது?"

"சொல்லுங்கள், சொல்லுங்கள்! சுந்தரத்தின் வாழ்க்கையில் முக்கியமான பாகத்தை இன்னும் சொல்லவில்லைப் போலிருக்கிறதே?"

"அதைத்தானே சொல்ல வந்தேன். ஆலயப்பிரவேச விழா நடந்த அதே வருடத்தில் காந்தீயத் தொண்டர்சபை இன்னொரு முக்கியமான காரியத்தைச் செய்யத் துணிந்தது. - பத்திரிகாளி கோயில் வேள்வியை நிறுத்திவிடுவதென்று தீர்மானித்தார்கள்!"

"ஆலயப் பிரவேசத்தைப் போல இது லேசான காரியமல்லவே? பல முரடர்களுடைய கடுமையான எதிர்ப்புகளை மீறிக் கொண்டு வெற்றி காண வேண்டுமே!"

"எல்லாம் சுந்தரத்துக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால், இதில் முழுப்பொறுப்பையும் தாமே தாங்கிக் கொண்டார். ஆலயப் பிரவேசத்தின் போது இளைஞர்களுடைய துடிப்பைக் கண்டவராதலால், எது நேர்ந்தாலும் அவர்களுடைய கொள்கையை - லக்ஷியப் பாதையை - விட்டு விலகக் கூடாதென்பதை மாத்திரம் படித்துப் படித்துச் சொல்லிவைத்தார். ஜனங்களிடையே பிரசாரம் செய்வது மட்டும்தான் இளைஞர்களுடைய வேலை. எதிர்ப்புகளுக்கெல்லாம் சுந்தரம் தாம் ஒருவராகவே "ஜவாப்" சொல்லத் துணிந்து விட்டார்?"

"அப்படியென்றால்?"

"வேள்விக்குப் பதினைந்து தினங்களுக்கு முன்னதாகவே உண்ணாவிரதம் அனுஷ்டிக்கத் தொடங்கி விட்டார். ஒரு உயிர் கூட வேள்வியில் பலியாகக்கூடாது. அப்படிப் பலியிடப்பட்டால் சாகும் வரை உண்ணாவிரதம்!" என்றார்."

"ஐயையோ -"

"காந்தீயத் தொண்டர் சபையார் எவ்வளவோ தடுத்துப் பார்த்தனர். அவர் கேட்கவில்லை. எல்லோருக்கும் பெரிய ஏக்கந்தான். வெற்றியோ நிச்சயமில்லை. சுந்தரமும் சொன்ன வார்த்தையை மீறப்போவதில்லை. மங்கையற்கரசியே பதறிவிட்டாள். "இந்த முரட்டுச் சனங்களின் மத்தியில் நீங்கள் கருணையை எவ்விதம் எதிர்பார்க்கலாம்? வேண்டாம்; உண்ணாவிரதமிருக்க எண்ணியிருப்பதை விட்டுவிடுங்கள். இன்னும் சிலகாலம் பிரசாரம் செய்ததன் பின்னர் போராட்டத்தை ஆரம்பிக்கலாம்" என்றாள். சுந்தரம் சிரித்தார். "மங்கையர்க்கரசி! நீயே தடுமாறிவிட்டாயே? காந்தி மஹானின் அஹிம்சா தர்மத்தின் பலத்தை நீ கூடவா உணரவில்லை? நிச்சயம் வெற்றியடைவேன். ஒரு சமயம் தோற்றுவிட்டாலும்கூட, அந்தத் தோல்வியே என் கடமையைச் செய்து முடிக்கும்!" என்றார். "ஐயோ, நீங்கள் இல்லாத போது, அந்த வெற்றி -" என்று விம்மினாள் மனைவி. "அடடா, துயரத்தினால் அறிவையும் இழந்து விட்டாயே? வெற்றியை அனுபவிப்பதற்காகவா, நாம் போராடுகிறோம். நம்முடைய வேலை கடமையைச் செய்ய வேண்டியது. பலனை அனுபவிக்க வேண்டியது நமது சமூகமல்லவா! உன்னைப்பற்றி நான் மிகவும் பெருமையாக நினைத்திருந்தேனே, ஏன் இப்படியாகி விட்டாய்? வீரத் தமிழ்ப் பெண்மணிகள், போர்க்களம் செல்லும் தம் கணவரை எப்படி விடை கொடுத்து அனுப்பினார்கள் என்பதைப் படித்துவிட்டால் மாத்திரம் போதுமா?" - என்று மனைவியைத் தேற்றினார். சுந்தரம், அவள் விம்மிக்கொண்டே, "உண்மைதான், என்னை மன்னியுங்கள், இறைவனருளால் நீங்கள் நிச்சயம் வெற்றி பெறுவீர்கள். ஒரு வேளை தவறிவிட்டால் - எனக்கு ஒரு வரமளித்துச் செல்லுங்கள். உங்கள்

போராட்டத்தை எந்த இடத்தில் விட்டீர்களோ, அதே இடத்திலிருந்து தொடர்ந்து நடந்த என்னை அனுமதியுங்கள்!" என்றாள். "மிகவும் சந்தோஷம், அதுதான் சரி" என்று அவளைத் தட்டிக் கொடுத்தார் சுந்தரம்".

"உண்ணாவிரதம் நடந்ததா?"

"குறிப்பிட்ட தேதியில் ஆரம்பமாயிற்று. பத்திரகாளி கோயிலிலேயே இருந்து விரதத்தை ஆரம்பித்தார். மங்கையர்க்கரசியும் பக்கத்திலேயே இருந்து வந்தாள். ஏதோ கடமைக்காக அவள் உணவருந்தி வந்தாள். இரவும் பகலும் தொண்டர்கள் சூழ்ந்திருந்தார்கள். ஜனங்களுக்குப் பொதுவாக நம்பிக்கையில்லை. "பதினைந்து நாளாவது ஒன்றுமில்லாமல் கிடப்பதாவது! ஏழெட்டு நாளிலேயே விட்டு விடுவார்!" என்று பலர் நினைத்தார்கள். ஏழெட்டு நாளும் போயிற்று. சுந்தரம் படுத்தபடுக்கையாக ஆகிவிட்டார். வரவரப் பலவீனம் அதிகரித்து வந்தது".

"அடடா, ஊரிலே நீங்களெல்லாம் - "

"நாங்களெல்லாம் சும்மாயிருக்கவில்லை. கோயிலதிகாரி லேசில் சம்மதிக்கவில்லை. "ஊரார் குறை சொல்வர்" என்று அவர் சாட்டுச் சொன்னாலும், வரும்படி போய்விடுமே என்ற ஏக்கந்தான் அவருக்கு. பத்து நாளும் கழிந்துவிட்டது. கோயிலதிகாரி ஒரு விதமாகச் சம்மதித்தார். அதன் பிறகு ஊரிலே முக்கியமான சில பிரமுகர்களையும் சம்மதிக்கப் பண்ணுவதற்குள் மேலும் இரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. சுந்தரத்தின் நிலை மிக மோசமாகி விட்டது. எல்லோரும் அவரிடம் போய் பலியை நிறுத்தி விடுவதாகச் சொன்னார்கள். அவர் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கினார். பிறகு ஈனஸ்வரத்தில் "தெய்வசித்தம். வேள்வியன்று விரதத்தை முடித்துக் கொள்கிறேன்" என்றார். அதற்கு மேல் அவரை நெருக்க முடியவில்லை. என்றாலும் ஓரளவுக்கு எல்லோர் மனத்திலும் ஒரு ஆறுதல் பிறந்தது. "மகாத்மா காந்திக்கு ஜே! சுந்தரமூர்த்திக்கு ஜே!" என்ற கோஷங்கள் அடிக்கடி கேட்டன!"

"நல்லவேளை! பிறகு - "

"பிறகுதான் அந்தக் கொடுமையான சம்பவம் நடந்தது. வெண்ணெய் திரண்டபோது தாழி உடைந்துவிட்டது!"

"சொல்லுங்கள்,சொல்லுங்கள்! என்னதான் நடந்தது?"

"வேள்விக்கு முதல்நாள் இரவு. நடுச்சாமமிருக்கும். தொண்டர் சபையைச் சேர்ந்த நாலைந்து பேர்கள்தான் சுந்தரத்தோடு இருந்தார்கள். அவர்களுக்கும் நல்ல தூக்கம். மங்கையர்க்கரசி கூட அயர்ந்துபோய்க் கொண்டிருந்தாள். "ஹூம்" என்ற பயங்கரமான ஒரு சப்தம் கேட்டது. மங்கையர்க்கரசி திடுக்கிட்டு விழித்தெழுந்தாள்....."

"பொன்னன்! அவனுடைய சிறை முடித்து அன்றுதான் வெளிவந்திருந்தான். சுந்தரத்தின் மீது தீராத ஆத்திரம். மனித ஹிருதயத்தை நாசமாக்கிவிடும். மதுபானமும் சேர்ந்திருந்தது. மங்கையர்க்கரசி பார்த்த போது ஒரு பெரிய நொடுவாட் கத்தியை அவன் ஓங்கிக் கொண்டிருந்தான்..."

"ஐயையோ!"

"கண்ணிமைக்கும் நேரத்துக்குள் மங்கையர்க்கரசி நிலைமையைத் தெரிந்து கொண்டாள். "ஐயோ" என்று கதறிக்கொண்டே சுந்தரத்தைத் தாவி அணைத்துக் கொண் டாள். அந்தப் படுபாதகனின் கை கூசவில்லை. ஓங்கிய கையின் வேகம் சற்றும் குறையாமற் கீழே விழுந்தது!..... ஒரே வெட்டுத்தான்!... தெய்வத் தன்மை பொருந்திய இந்த இரு உயிர் களையும் பலியெடுத்து விட்டது.... மங்கையர்க்கரசி நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டு இறைவனடி சேர்ந்தாள். சுந்தரம் ஒரே ஒரு வார்த்தைதான் சொன்னார்: அவனை மன்னித்துவிடுங்கள்! என்றார்.

"முருகா! முருகா!! அவனை......"

"நமது அரசாங்கம் அத்தகைய நிலைமைக்கு இன்னும் வரவில்லையே! அவனுக்குத் தண்டனை கிடைத்தது. தூக்குத் தண்டனை!"

"பத்திரகாளி-"

"சுந்தரமூர்த்தி தம்பதிகளின் தியாகக்கனல், கல்லினாற் செய்த பத்திரகாளியின் இதயத் தைக் கூடத் தான் சுட்டிருக்கும்! இந்தச் சம்பவத்துக்குப் பிறகு, எந்த மனிதன் தான் பத்திர காளிக்குப் பலியிடத் துணிவான்?... இந்த ஒரு கோயிலில் மாத்திரமல்ல; இந்தச் சுற்றுப்புறத் திலுள்ள எல்லாக் கோவில்களிலுமே உயிர்ப் பலி செய்வதை நிறுத்தி விட்டார்கள்!..."

நண்பர் முத்தையாவின் குரல் உணர்ச்சிப் பெருக்கினால் தழதழத்து விட்டது. என் உள்ளத்தில் கூட - ஏதோ எல்லாம் விறைத்துப்போய் ஒரு சூன்ய நிலை ஏற்பட்டுவிட்டது போலிருந்தது. கைகூப்பி அந்தப் படங்களுக்கு வணக்கஞ் செலுத்தினேன்.

மறுமலர்ச்சி
சித்திரை - 1948

அவள் தியாகம்

வரதர்

மஹாத்மா காந்திஜி ஒரு வெறியனுடைய துப்பாக்கிக் குண்டுக்குப் பலியானார்" என்ற செய்தி...

சுற்றிலும் பத்து முரடர்கள் நின்று, பத்துச் சம்மட்டியினால் ஓங்கி அடித்தால்.... அதைக்கூடத் தான் சகித்துக்கொள்ள முடியும். ஆனால் "மஹாத்மா சுடப்பட்டார்" என்ற செய்தி, வார்த்தைகளின் சக்தியிலே அடங்காத ஒரு வேதனையை என் உள்ளத்திலே சொரிந்தது.

என்னைச் சுற்றிலும் எல்லாம் மறைந்து விட்டன. காந்திஜி இல்லாத ஒரே இருண்ட உலகத்தைத்தான் நான் கண்டேன். அதிக வேதனையிலே தோன்றிய ஒரு மயக்கநிலை. அந்த நிலையிலே என் "கண்மணி" யின் ஞாபகம் புரண்டது....

அன்றைய தினம் கண்மணி என் வீட்டில் காலடி எடுத்து வைத்தாளோ, அன்றைய தினந்தான் என்னுடைய காந்திப்பித்தும் ஒரு நிரந்தரமான நிலையை அடைந்தது. அவருடைய தகப்பனாரோ காந்தீயத்தில் மூழ்கியவர். "காந்தி - வேலுப்பிள்ளை" என்று தான் அவரைச் சொல்வார்கள். அந்தப் பெருமகனுக்கு ஏற்ற சற்புத்திரியாகத்தான் கண்மணி பிறந்தாள்.

அவள் சத்தியத்தின் உருவம். அழகுக்கு அழகு செய்யும் நவீன நாகரீக ஆபரணங்களைக் கூட அவள் விரும்பவில்லை; - அன்பே அவள் அணிகலன்.

தொட்டதற்கெல்லாம் முட்டைக் கண்ணீரையே ஆயுதமாக உபயோகிக்கும் பெண் குலத்துக்கு அவள்புறம்பானவள்; - அஹிம்சையே அவள் ஆயுதம்.

அவளுடைய இனிமையிலே நான் மயங்கிவிட்டேன். அவளுடைய அன்புக் கயிற்றிலே நான் கட்டுண்டு விட்டேன். அவளுடைய அன்புக் கயிற்றிலே நான் கட்டுண்டுவிட்டேன். அவள் தன்னுடையை லக்ஷியங்களுக்காகத் தன் கணவனை - என்னை - என்றும் மீறி நடந்ததில்லை. நான் அவளுக்கு அத்தகைய சந்தர்ப்பத்தை அளிக்கவும் இல்லை.

இவ்விதம் நாங்கள் கருத்தொருமித்த காதல் வாழ்க்கை நடத்தி வருகையிலேதான், நம் வாழ்விலே ஒரு சூறவாளி தோன்றிற்று. - இந்தச் சூறாவளி தோன்றுவதற்குக் காரண மானவரும் மகாத்மா காந்தியேதான்!

ஒரு நாள் இரவு நான் என்னுடைய அறையில் இருந்து ஏதோ ஒரு காதற் கதையைப் படித்துக் கொண்டிருந்தேன். கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கடைக்கண்ணால் என் கண் மணி வருவதைக் கவனித்துக் கொண்டேன். "அவள் வந்து தன் மெல்லிய விரல்களால் என் கண்களைப் பொத்துவாள்; நான்..." என்ற எண்ணத்தோடு திரும்பிப் பாராமல் புத்தகத்தில் கவனமாயிருப்பவன் போலிருந்தேன்.

நான் ஏமாற்றம் அடைந்தேன். அவள் என் கண்களைப் பொத்தவில்லை. அதற்குப் பதில் என் கண்களை நன்றாகத் திறந்து பார்க்கும்படி செய்தாள். ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து என் முன்பு வைத்தாள். அதிலே சில வரிகளின் கீழ் பென்சிலால் அடையாளமிடப் பட்டிருந்தது.

"ஒரு மனிதன் ஒரு ஸ்திரீ மீதும், ஒரு ஸ்திரீ ஒரு மனிதன் மீதும் அன்பு செலுத்துவார் களாகில், எவ்வாறு அன்பு செலுத்த முடியும்?... ஒரு புருஷன் தன் மனைவியைச் சகோதரி யாகவும், ஒரு மனைவி தன் புருஷனைச் சகோதரனாகவும் பாவிக்கத்தொடங்கி விட்டால், உலகத்துக்குச் சேவை செய்ய அவர்கள் தகுந்தவராகி விடுகின்றனர்".

இதை எழுதிய ஆசிரியருக்கு முட்டாள் பட்டம் சூட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு, எழுதியவரின் பெயரைப் பார்த்தேன். திடுக்கிட்டேன். நாக்கின் நுனிவரை வந்துவிட்ட என் வசைச் சொற்களைத் திருப்பி உள்ளே அனுப்பிவிட்டேன்.

எழுதியவரின் பெயர் "மகாத்மா காந்தி" என்றிருந்தது!

நான் போக எண்ணிய பாடை அடைபட்டவுடனே, சட்டென்று வேறு பாதையைக் கண்டு பிடிக்க முடியாமல் தடுமாறினேன்.

அவள் சொன்னாள்: "உங்கள் மனத்திலே உறுதியிருந்தால்...."

"இல்லாமலென்ன, மஹாத்மா காந்தியே சொல்லியிருக்கும் போது!..... நீ தயார்தானே?"

"இல்லாமல் உங்களைக் கேட்பேனா?" - அவள் முகத்தில் தோன்றிய பொலிவு......

"நல்லது; இன்று முதல் நீ என் சகோதரி!"

"தளரமாட்டீர்களே?"

"என்னுடைய வார்த்தையில் நம்பிக்கையில்லையா? மஹாத்மாவின் உபதேசதத்தை மீறுவேனா?"

அவள் மகிழ்ச்சி! ஆயிரமாயிரம் வருடங்கள் தவங்கிடந்தவனுக்குத் தெய்வம் வரமருளும் போது கூட இவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுமோ!

வெகு லேசாக என் வாயைத் திறந்து வரமளித்துவிட்டேன். ஆனால் என் நெஞ்சிலே ஒரு சூன்ய உணர்ச்சி படர்ந்தது.

படாடோப வாழ்வு நடத்தும் ஒருவன், தன்னுடைய கௌரவமான நண்பனுக்கு முன்னால் ஒரு நல்ல விஷயத்திற்கு ஆயிரம் ரூபா நன்கொடை தருவதாக வாக்களிக்கிறான். ஆனால், அந்த ஆயிரம் ரூபாவுக்காக அவன் என்னென்ன கஷ்டங்கள் பட நேருகிறதோ? மனைவியின் பிரிய நகைகளைத்தான் விற்க நேரிடுகிறதோ?

நானும் இதே நிலையில்தான் வரமளித்துவிட்டேன். கண்மணிக்கு முன்னால், என்னுடைய போலித்தனத்தைக் காட்டக் கூடாதென்று எண்ணிவிட்டேன். ஆனால்... என்ன மடத்தனம்! ஆவளுடைய "பெண்மை"யின் இனிமைக்காகத்தானே அவளைத் திருப்திசெய்ய விரும்புகிறேன்? அந்தப் பெண்மையே எனக்கு உதவாமற் போகும்போது...? கூந்தல் தைலம் வாங்குவதற்குப் பணமில்லையே என்பதற்காக எந்தப் பெண்ணாவது தன்னுடைய கூந்தலையே வெட்டி விற்றதுண்டா? ஆனால் நான்..

சாரமற்ற இரு நாட்கள் கழிந்தன. மூன்றாவது நாள் என்னுடைய நண்பரொருவருடன் சினிமாவுக்காகப் புறப்பட்டேன். இரண்டாவது காட்சிக்குத்தான். இப்படியாவது என் உள்ளத்தின் சூன்யத்தை அகற்றிவிடலாமா என்ற நினைவு.

அது ஒரு ஆங்கிலப் படம் - காதற் கதை. அந்த நடிகன் என்ன பாக்கியம் செய்தானோ? அவனுடைய தொழிலே... ஒரு அழகிய பெண்ணை மார்புறத் தழுவி அவள் அதரங்களில் முத்தமிடுந்தொழில்...

நான் குளிக்கப் போனேன்; ஆனால் சேற்றைத்தான் பூசிக் கொண்டு, தியேட்டரிலிருந்து வெளி வந்தேன்.

நெஞ்சிலே வேட்கைக்கனல் எரிய வீட்டை அடைந்தேன். "பரவாயில்லை; தோல்வியை ஒப்புக்கொண்டு விடுவோம் - அவளை ஒரு மாதிரிச் சமாதானம் செய்துவிடலாம்" என்ற நினைவோடு அவளின் அறையருகே வந்தேன். கதவு உள்ளே பூட்டியிருந்தது!

"தட்டலாமா?"...

ஒரு நமிஷம் நின்றேன். மனம் துணியவில்லை; மெதுவாகத் திரும்பினேன்.

"யாரது? - அவள் குரல்! அவளுக்குத் தூக்கம் வரவில்லைப் போலும்!

"நான்தான்; கதவைத்திற!

"ஏன்? ஏதாவது... திறக்க வேண்டுமென்றால்..." அவள் குரலில் ஏதோ ஒரு நடுக்கம். திறந்தாள். விளக்கைத் தூண்டி விட்டாள்.

"ஏன்?... இந்த நேரத்தில்..." ஒரு நிமிஷம் சொல்லிவிடலாமா" என்ற நினைவு. ஆனால், வாயிலே வந்தவை வேறு வார்த்தைகள்தான்.

"ஏதோ கெட்ட கனவு கண்டேன், உனக்கு ஏதோ ஆபத்து வந்ததாக! மனம் கேட்க வில்லை; பார்த்து விட்டுப் போகலாமென்று வந்தேன்"

அவள் சிரித்தாள். என் வார்த்தையின் போலித் தன்மையைக் கண்டு கொண்டாளோ?

"இதுதானா? நான் பத்திரமாயிருக்கிறேன். போய்ப் படுத்துக்கொள்ளுங்கள்!"

அதற்கு மேல் நான் அங்கே நிற்கவில்லை. திரும்பி என் அறையில் வந்து படுத்துக் கொண்டேன்.

ஒரு வாரத்துக்குள் இத்தகைய பல சம்பவங்கள்! - என் உள்ளத்திலே வெறியின் வேகம் தாங்க முடியாமல் வளர்ந்தது...

எட்டாவது நாள் ஏதோ சாதாரண காய்ச்சல் கண்மணியைப் பிடித்தது. சாதாரணமான நோயேயானாலும் வைத்தியரை அழைத்து வந்து மருந்து கொடுப்பித்தேன். இரண்டு நாட்கள் கழிந்தன. ஒருநாள் மாலையில் அவள் என்னை அவசரமாக அழைத்தாள். அவள் முகமெல் லாம் ஏதோ வித்தியாசமாகத் தோன்றிற்று. தன் பக்கத்தே அமரச் சொன்னாள்; அமர்ந்தேன்.

"என்னை மன்னியுங்கள், நான் இன்னும் அதிக நேரம் உயிரோடு இருக்க மாட்டேன்...."

"சீ! என்ன வார்த்தை...."

"வீண் வார்த்தையல்ல; நான் விஷம் குடித்து விட்டேன்.... அமைதியாக இருங்கள். தீர ஆலோசித்த பிறகுதான் இக்காரியத்தைச் செய்தேன்... காந்திஜி கூறியபடி நீங்கள் பிரமச்சரிய வாழ்வு நடத்துவதற்கு நான் இடையூறாக இருந்தேன். கட்டாயத்தின் பேரில் உடலுறவை மாத் திரம் நீக்கி வைக்கமுடிந்தது. ஆனால், உண்மையான பிரமச்சரியம் ஐம்புலன்களாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமல்லவா?... எனக்கு வருத்தம் தோன்றியதுமே தான் இந்த நினைவு வந்தது: "நான் இறந்து போய்விட்டால் உங்கள் வாழ்வு பரிசுத்தமடையும். ஆனால் இந்த வருத்தம் என் உயிரையே மாய்க்கக்கூடிய - அவ்வளவு கொடியதல்லவே? ஆகவே தான் இக்குறுக்குவழியில் இறங்கினேன். வீண் பழி ஏதும் வராமலிருப்பதற்காக அரசாங்கத் தாருக்கு ஒரு கடிதம் எழுதி என் தலையணையின் கீழே வைத்திருக்கிறேன்.... என்னுடைய இந்தச் செய்கையை மகாத்மா காந்தியே ஏற்றுக்கொள்வாரோ என்னவோ?-ஆனாலும் எனக்கு இப்படிச் செய்வதிலே பூரண மனத்திருப்தி இருக்கிறது - உங்களிடம் பூரண நம்பிக் கையும் இருக்கிறது. இனி, உங்கள் வாழ்வும் பரிசுத்தமடையும். - என்னை மன்னி யுங்கள்...."

"நான் சிலையாக விறைத்து விட்டேன்..."

சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் தெய்வமாகி விட்டாள்!

அவள் இந்த அரும்பெரும் உயிர்த்தியாகத்தை எதற்காகச் செய்தாள்? மஹாத்மா காந்திஜியின் கொள்கைகளுக்காகவா? அல்லது எனக்காகவா....?

நல்லவேளை ! அவள் போய் விட்டாள். அல்லது இந்த 30.01.48ந் தேதிச் சம்பவத்தின் கொடுமையைத் தாங்கவேமாட்டாள்!

விபச்சாரி

வரதர்

கிணற்றுக் கட்டின் மேல் நான் உட்கார்ந்திருந்தேன். அது ஒரு விசித்திரமான கிணறு, இல்லை பல இடங்களில் இப்படி இருக்கக்கூடும். எங்கள் வீட்டுப் பக்கத்தில் பாதியும், அடுத்த வீட்டு நிலத்தில் பாதியுமாக அந்தக் கிணறு இருந்தது. கிணற்றுக்கு மேலாக, எல்லைக்கு நேராய் மதில் கட்டப்பட்டிருந்தது. கிணற்றுக்கு இந்தப்பக்கத்தில் இருந்தவர்கள் அந்தப்பக்கத்தில் இருப்பவர்களைப் பார்க்க முடியாது உயரமான மதில்தான்.

நான் கிணற்றுக்கட்டின் மேல் இருந்தேன். கிணற்று நீர் சுத்த மான கண்ணாடி போலிருந்தது. அங்கே என்னுடைய நிழல் தெளிவாக வும், அழகாகவும் தெரிந்தது. என்னுடைய விம்பத்தின் அழகிலேயே நான் மயங்கிப்போய் பெருமையுடன் இருந்தேன்.

மதிலுக்கு அந்தப்பக்கத்தில் ஏதோ சத்தம் கேட்டது. அடுத்த நிமி டம் கிணற்றுக்குள்ளே அவளுடைய உருவம் தெரிந்தது." அவளை எனக்கு நன்றாகத் தெரியும். "சுபத்திரை"யை தெரியாதவர்களும் இந்த ஊரில் இருக்கிறார்களா?

அவள் அழகி. நீருக்குள்ளேயே தோன்றிய அந்த நிழலில் அழகு இன்னும் சோபித்தது. அவளுடைய கையில் வாளி இருந்தது தண்ணீர் அள்ளுவதற்காக. ஆனால் அவள் கிணற்றுக்குள் விடவில்லை. என்னைப் பார்த்தாள் - என்நிழலை. நானும் அவள் உருவத்தைத் தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

என்ன வெக்கக்கேடு! அவள் சிரித்துவிட்டாள் என்னைப்பார்த்து! நான் கலங்கி விட்டேன். அங்கே இருக்க என்னால் முடியவில்லை. எழுந்து ஓடி வந்துவிட்டேன்.

பிறகுதான் யோசித்தேன். அன்று முழுக்க யோசினைதான். வேறு ஒன்றிலும் மனம் செல்லவில்லை. அதை ஒரு அற்ப விஷயமன்று தள்ளிவிடவும் முடியவில்லை . நான் ஏன் ஓடிவந்துவிட்டேன்? அதற்கு அவளுடைய சிரிப்புத்தான்... என்னைப்பற்றி அவள் என்ன நினைத்திருப்பாள்? உணர்ச்சியற்ற உருவம் என்று நினைத்திருப்பாளே? நினைக்கட்டுமே. அந்த விபச்சாரி எப்படியாவது நினைக்கட்டும்.

ஆம், அவள் விபச்சாரிதான். விவாகமானவள். அவளுடைய கணவன் அவளை விட்டுவிட்டு ஓடிவிட்டான் என்று சொல்கிறார்கள். வேறு சிலர் இவள்தான் அவனைத் துரத்தி விட்டாள் என்று சொல்கிறார்கள். எனக்கு ஒன்றும் நிச்சயமாகத் தெரியாது. அவளும் அவளுடைய தாயாரும் மூன்று மாதங்களுக்கு முன்புதான் அடுத்த வீட்டுக்கு வந்தார்கள். அவள் - சுபத்திரை அழகானவள். இருபது வயதுவரையில் இருக்கும் அவளுடைய தாய்க்கு நாற்பது நாற்பத்தைந்து .... அவள் கிழவியாகிவிட்டாள்!

சுபத்திரையின் வீட்டுக்கு பிரதானமாக மூன்றுபேர் வருவதாக நான் கவனித்திருக்கிறேன். ஒருவன் சாடையாக தலை நரைத்தவன். ஆனால் நல்ல தனவந்தன் போல காணப்பட்டான். இன்னொருவன் ஒரு பிராமணன். முப்பது வயதிருக்கும். கடைசிப் பேர்வழி ஒரு இளைஞன். பதினெட்டு வயதுதான் இருக்கும். இந்த மூவரும் சேர்ந்தோ தனித்தனியாகவோ சுபத்திரையின் வீட்டுக்கு அடிக்கடி போகிறார்கள். அந்த மூன்றுபேர்களுக்கும் அவள் இடமளித்துக்கொண்டுதான் இருந்தாள் .

அன்று மாலை நடந்த விசயம் என் மனதை கலைத்துக் கொண்டே இருந்தது. அவள் எதற்காகச் சிரித்தாள்? என்னையும் தன் வலையில் இழுத்துவிடவா? விபச்சாரி.... ஒருவேளை பக்கத்து வீட்டுக்காரன் என்ற முறையினாலோ?... எப்படியிருந்தாலும் நான் அப்படி அவளுடைய முகத்தை முறித்து ஓடிவந்திருக்க வேண்டியதில்லை. கவனியாததுபோல் இருந்திருக்கலாம். ஏன் நானும் சிரித்தால்தான் என்ன வந்தது?... அவள் அழகானவள்தான் !... அழகு!- விசமுள்ள மலரைப்போல!

அடுத்த நாளும் கிணற்றுக்கட்டில் போயிருந்தேன். வேண்டுமென்றேதான் "அவள் வரமாட்டாளா?" என்று என் மனம் நினைத்தது. ஏன் நினைத்தது என்று எனக்கே தெரியவில்லை. நான் இருக்கிறேன் என்று அவளுக்குத் தெரிவதற்காக மெல்ல - ஆனால் அவளுக்குக் கேட்கும்படியாக - ஒரு பாட்டை வாய்க்குள் முணுமுணுத்தேன் அது கேட்டுத் தானோ என்னவோ அவள் வந்தாள்.

அவள் பார்த்தாள். நானும் பார்த்தேன் - நீருக்குள்தான்!

ஆனால் அவள் சிரிக்கவில்லை அவள் பார்வையிலே ஒரு கனிவு, இரக்கம், நாணம், மரியாதை - எல்லாம் தெரிந்தன.

நான் சிரித்துவிட்டேன்.

நான் ஓடவில்லை. என்னுடைய மானத்தைக் காப்பாற்றி விட்டாள் பதிலுக்குச் சிரித்தாள்.

"நேற்று ஏன் ஓடிவிட்டீர்கள்?" என்று கேட்டாள் துணிந்து.

என்னுடைய நெஞ்சில் ஈட்டியால் குத்தியதுபோல் இருந்தது. என்னுடைய கோழைத் தனத்தை நினைத்து வெட்கினேன். அவள் முகத்தைப் பார்க்க முடியவில்லை. நல்லவேளை ! என்னுடைய நிலைமையை அறிந்துதான் போலும், சிரித்துக்கொண்டே, "தொம்மென்று வாளியைக் கிணற்றுக்குள் விட்டாள். நீர் கலங்கிற்று. நிழல்கள் மறைந்தன. என் மனம் ஆறுதல் அடைந்தது.

"ஏன் கலங்கிவிட்டாய்?" என்றேன். தண்ணீருடன் வாளியை மேலே இழுத்தாள் சுபத் திரை. சிறிது நேரத்திற்கெல்லாம் தண்ணீரின் அசைவு நின்றுவிட்டது. எங்கள் இருவரின் உருவமும் தெரிந்தது.

அவள் சிரித்துக் கொண்டே "இப்போது பாருங்கள்!" என்றாள்.

நான் குறும்பாகவே "எதை?"என்றேன்.

"நீங்கள் பார்க்க விரும்புவதை!" என்று அவள் சாமர்த்தியமாய் பதில் சொல்லி விட் டாள்.

நான் வெட்கிப்போனேன்.

"நான் போகட்டுமா?" என்றேன்.

"அவசரமோ?"

"இல்லை. இருந்தாலும், இங்கே ஏன் நிற்கவேண்டும்?"

நான் மறுபடியும் மௌனியானேன். "எங்கேயோ போகிறோமா? நினைத்த போதெல் லாம் சந்திக்கலாமே!" என்று சமாதானம் கூறிவிட்டு அவள் போய்விட்டாள்.

நான் பெருமூச்சு விட்டேன்.

என் உள்ளத்தில் பலபல எண்ணங்கள். கற்பனைகள் சஞ்சாரம் செய்தன அவற்றை அடக்கிக்கொள்ள என்னால் முடியவில்லை.

"எங்கேயோ போகிறோமா? நினைத்த போதெல்லாம் சந்திக்கலாமே!" என்ற வார்த் தைகள் என் மனதில் இடைவிடாது சுழன்று கொண்டே இருந்தன.

அவள் என்னை அடிக்கடி காணவும் பேசவும் விரும்புகிறாளென்று அந்த வார்த்தைகள் எனக்குத் தெரிவித்தன. இது கூடவா தெரியாமல் போகும் ? இதனால் என்மனம் ஏனோ பூரிப் படைந்தது. உண்மையைச் சொல்லுவதில் வெட்கம் என்ன? நான் அவளை அவளுடைய ஈனமான வாழ்வை வெறுத்தேன். ஆனால், என் மனதைக் கட்டுப்படுத்த என்னால் முடிய

வில்லை. அது சுபத்திரையின் மோகனத்திலே லயித்துவிட்டது. அவள் மேல் - அந்த விபச்சாரியின் மேல் நான் காதல் கொண்டு விட்டேன். அவள் வெற்றிபெற்று விட்டாள்.

சுபத்திரையைக் காணவும் அவளோடு பேசவும் நான் ஆவல்கொண்டேன். அதுவே என் இன்பத்தின் லக்ஷியமாகவும், வாழ்வின் உன்னதமான நேரமாகவும் ஆகிவிட்டது. அடிக்கடி அவளோடு பேசுவதாலேயே என் வாழ்க்கை இன்பமுடையதாகின்றது. கிணற்று நீருக்குள்ளே அவளுடைய அழகிய உருவத்தை காணுவதனாலேயே என் உள்ளம் ஆறுதலடைகின்றது.

அவளாகக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவளுடைய வீட்டுக்கும் நான் போகலானேன். அவளுக்குப் பக்கத்தில் - நேர் நேராக - இருந்து சல்லாபிக்கலானேன். அவளுடைய பேச்சுக்கள் எனக்கு மிகவும் பிடித்தன. அவளுடன் பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியாது. தங்கம் போன்ற இருதயம் உடையவள். அவளுடைய அகத்தின் அழகுதான் முகத்தில் தெரிகிறது. லட்சுமிகரமாய் அவள் எப்படி விபச்சாரியானாள் என்பது எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. ஆகா, எவ்வளவு நல்ல பெண்! அவளுக்கிருக்கும் கெட்டபெயரைப்பற்றி கேட்டுவிடலாம் என்றால்.... எப்படிக் கேட்பது? மனத்திடம் வரவில்லையே?

அவளுடன் பேசிக்கொண்டிருக்கும் போதே அந்த இளைஞன் வந்தான். அதற்குமேல் அங்கே இருக்க எனக்கு விருப்பமில்லை.

"நான் போகிறேன்" என்று எழுந்தேன்.

"ஏன்?" என்றாள் சுபத்திரை, திகிலுடன்.

நான் அந்த இளைஞனைப் பார்த்தேன் அவளுக்குத் தெரிந்துவிட்டது. அவள் ஒன்றும் பேசவில்லை. வாட்டமுற்ற அவள் முகத்திலே, சிறிது கோபமும் தெரிந்தது. நான் வெளியே வந்தேன்.

தெருவுக்கு வந்ததும், உள்ளே சுபத்திரை பேசுவது கேட்டது :

"இனிமேல், இங்கே நீர் வரவேண்டாம். போய்விடும்!"

நான் எங்கள் வீட்டுக்குள்ளே போய் விட்டேன். யோசனை அதிகரித்துக்கொண்டே வந்தது. "இவள் எதற்காக அவனைத் துரத்துகிறாள் ?... என்னைத் திருப்திப்படுத்தவா?

சுபத்திரையின் மனப்போக்கை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. கடைசியில், அவளையே கேட்டுவிடுவது என்று தீர்மானித்தேன். அந்தத் தீர்மானத்தோடுதான் அன்று அவளுடைய வீட்டுக்குப் போனேன்.

சுபத்திரை ஆனந்தத்துடன் என்னை வரவேற்றாள். நான் எதிர்பார்த்த கேள்விதான் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தது :

"நாலுநாளாய் ஏன் இந்தப்பக்கம் வரவில்லை ,"

"வரவில்லை ..."

விஷயத்தைச் சொல்லிவிடலாமாவென்று பார்த்தேன். ஆனால் ஏனோ தயங்கினேன்.

"என்மீது ஏதாவது கோபமா?"

"உன் மீதா!"

"பின்?..."

"அந்த வாலிபர்..." நான் துணிந்து கேட்டேன்.

" ஆமாம். அவன் ஏன் இங்கு வருகிறான்?"

அவள் முகம் சொல்லமுடியாத விகாரமடைந்தது. பரிதாபத்துடன் என்னைப் பார்த்தாள்.

"நீங்கள் அவசியம் அறியவேண்டுமோ?"

"அறியவேண்டியதுதான், நீ இஷ்டப்பட்டால்! என்னுடைய சிந்தனையை அது குழப்பிக் கொண்டிருக்கிறது."

"அப்படியானால் சொல்கிறேன். உங்களிடம் நான் எதையுமே மறைக்கப்போவ தில்லை ..."

என்னுடைய உள்ளம் நடுங்கிற்று. அவள் என்மீது உண்மையான பாசம் வைத்து விட் டாளென்பதை அறிந்துகொண்டேன். அவள் தயக்கத்துடன் சொன்னாள்:

அவர் மாத்திரம் அல்ல, வேறும் இரண்டுபேர் வருகிறார்கள்..."

"எனக்குத் தெரியும். அவர்கள் ஏன் வருகிறார்கள் என்பதுதான்... என்னைப்போல அவர்களும் உன்னுடைய நண்பர்களா?"

"உங்களோடு அவர்களை ஒப்பிடாதீர்கள்!... அவர்கள் கெட்ட எண்ணத்துடன் வருகி றார்கள்... நான்...நான் அவர்களுக்கு இடமளித்துவிட்டேன்..."

சுபத்திரை கரங்களில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். பார்க் கப் பரிதாபமாயிருந்தது. ஏன் இந்தக் குப்பையைக் கிளறினேன்?" என்று என்னையே நொந்து கொண்டேன்.

"சுபத்திரை..!

அவள் நிமிர்ந்து பார்த்தாள். நான் மௌனமாக அவளுக்கு அனுதாபம் தெரிவித்தேன் .

சிறிதுநேரம் கழிந்தது.

"நான் தெரிந்திருந்தும் உன்னுடைய புண்பட்ட உள்ளத்தைக் குத்திவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்!"

"இல்லை. என்றோ ஒருநாள் சொல்லிவிட வேண்டியதுதான். உங்களிடம் சொன்ன பிறகு சிறிது ஆறுதலாயிருக்கிறது."

"உன்னுடைய குற்றத்தை உணர்ந்து விட்டாயல்லவா?"

"உணர்ந்துவிட்டேன். இனி உணர்ந்தென்ன? இன்பத்தேன் நிறைந்து கிடக்க வேண் டிய இந்தப் புஷ்பம் கொடிய விஷப்பாண்டமாகிவிட்டது..."

அவள் தேம்பித்தேம்பி அழுதுகொண்டேயிருந்தாள். நான் எழுந்துபோய், அவள் கரங்களைப் பிடித்து என்னோடு அணைத்துக்கொண்டேன். அவள் தன்தலையை என் மார்பின் மீது பொருத்திக்கொண்டாள். அவளுடைய சுவாசத்திலே, பார்வையிலே, முகபாவத்திலே சாந்தி பிறந்தது. ஆனால், விம்மிக்கொண்டேயிருந்தாள்.

"சுபத்திரை!...நான் உன்னைக் காதலிக்கிறேன்"

அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் ஆனந்தத்தால் அகல விரிந்தன.

"எனக்குப்போதும்!" என்றாள், பெருமூச்சுடன்.

"உன் களங்கம் அழிந்துவிட்டது...."

"நீங்கள் அழித்துவிட்டீர்கள்!"

"உன்னை என் மனைவியாக்குகிறேன்." அவள் என்னை இறுக அணைத்தாள். "இந்த உலகத்தில் எந்த இன்பத்தையடைய வேண்டுமென்று தவித்தேனோ அந்த இன்பத்தை அடைந்துவிட்டேன்" என்றாள்.

- அடுத்தநாள். அடுத்தநாள்.

என் உள்ளம் 'கிளுகிளு'த்துக கொண்டிருந்தது. அதிகாலையில் கிணற்றடிக்குப் போனேன். ஒரு விபச்சாரியின் உள்ளத்துக்கு ஆறுதல் கொடுப்பதற்காக என்னை - என் அந்தஸ்தை தியாகம் செய்தேனென்ற ஒரு நினைப்பு. அதில் கொஞ்சம் பெருமை. ஆனால், உண்மையை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் ஒரு தியாகமும் செய்யவில்லை. அவளுடைய சௌந்தர்யத்திலும் தங்கமான குணத்திலும் நான் மயங்கிவிட்டேன்.

கிணற்றடிக்குப் போனேன். அவள் வரவில்லை. என்னுடைய காரியங்களை மிகவும் ஆறுதலாகவே செய்தேன். ஆனால் அதுவரையும் அவள் வரவேயில்லை. ஒரு சின்ன ஏமாற்றந்தான். அதனால் அவளைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மிகவும் அதிகரித்தது.

அவளுடைய வீட்டுக்குப் போனேன்.

படலை பூட்டியிருந்தது. நான் பிரமித்தேன். கொஞ்சநேரம் மௌனமாக நின்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பினேன்.

சுபத்திரை எங்கே? அவளுடைய தாயார்....?

கேள்விகளும் சமாதானங்களும் உள்ளத்தை நிரப்பின. இந்தச் சமயத்தில் சுபத்திரையின் வீட்டு வேலைக்காரப் பையன் வந்தான். என்னுடைய உணர்ச்சி அதிகமாயிற்று.

"என்னடா?" என்றேன். அவனும் கொஞ்சம் படபடப்போடுதான் சொன்னான். "அம்மாவும் பெரியம்மாவும் ராத்திரியே போய்விட்டார்கள்." "போய்விட்டார்களா?"

"உம்"

"எங்கே ?"

"எங்கேயோ!"

"உனக்குத் தெரியாதா?"

"அவர்கள் சொல்லவில்லை "

நான் மௌனமாக இருந்தேன். உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது.

"இங்கே ஏன் வந்தாய்?"

அவன் மெதுவாக மடியிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து என்னிடம் கொடுத்தான்!

"உங்களிடம் அம்மா கொடுக்கச் சொன்னார்."

என் இருதயம் திக்திக்கென்று அடித்தது.கைகள் நடுங்கின,கடிதத்தை வாங்கிக் கொண்டு, அவனைப் போகும்படி - தலையசைத்தேன். அவன் போய்விட்டான். நடுங்கிய கைகளுடன் கடிதத்தை விரித்து வாசித்தேன்.

தேகமெல்லாம் பதறிற்று.

"பிரியமுள்ள என் காதலருக்கு:

வணக்கம், நான் ஏதாவது தவறுதலாகக் காரியங்கள் செய்துவிட்டால் என்னை மன்னியுங்கள்.

இன்றிரவே இந்த ஊரைவிட்டுப் போகிறேன். என்னுடைய வாழ்வில் எனக்குக் கிடைக்க முடியாததாக எந்த இன்பம் இருந்ததோ, அந்த இன்பத்தை அடைந்து விட்டேன். விஷமுள்ள இந்த மலருக்கு அமிர்தத்தின் இனிப்பை நீங்கள் காட்டிவிட்டீர்கள். இதுவே எனக்குப் போதும். என் உள்ளம் ஆறுதலடைந்துவிட்டது.

எந்த நட்சத்திரம் என் வாழ்வில் ஒருகண நேரமேனும் ஒளியைக் காட்டியதோ, அந்த நட்சத்திரம் மங்கிப்போவதை நான் விரும்பவில்லை.

உங்களுடைய மேன்மையான ஹிருதயத்தில் அமரத் தகுதியற்ற இந்தப் பாவியை மறந்துவிடுங்கள். கறைபட்ட என் வாழ்வு சாம்பலாகிப்போகட்டும்.

வருத்தத்துடன் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். என்னை மறந்துவிடுங்கள்.

எவ்வளவு கஷ்டத்துடன் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன் என்பது ஈஸ்வரனுக்கே தெரியும். என் ஆயுள் முழுவதும் அந்த ஒருகணநேர இன்பத்தை நினைத்துக்கொண்டு ஆறுதலடைகிறேன்.

ஸ்வாமி, என்னை மறந்துவிடுங்கள். உங்கள் உள்ளம் கறைபடக்கூடாது. என்னை மறந்துவிடுங்கள்.

சுபத்திரை

என் கையில் பிரித்தபடியே கடிதம் கிடந்தது.

என் உள்ளத்திற்கு எப்போதைக்கு ஆறுதல் வரும்?

அவளை எப்படி மறப்பேன்?

ஈழகேசரி
27.06.1943, 04.07.1943.

கல்யாணமும் கலாதியும்

வரதர்

"கல்யாண வீட்டிலன்றைக்கு ஏதாவது கலாதி கிளம்பும் போலிருக்கே!" என்றேன்.

"கலாதியில்லாமலென்ன, சுப்பர் கல்யாண வீட்டுக்கு வந்தால் நமசிவாயம் வரமாட்டாராம். சுப்பருக்கும் நமசிவாயத்துக்கும் ஏழெட்டு வருசமாகப் பகை. சுப்பர் ஒற்றுமையாய்ப் போனாலும் நமசிவாயம் கொஞ்சம்கூட இணங்கமாட்டார்" என்றாள் என் மனுஷி.

"சின்னத்தம்பி, சுப்பருக்குச் சொல்லாவிட்டாலும், நமசிவாயத்துக்குத்தானே சொல்லுவார்"

"சேச்சே, நமசிவாயம் பணக்காரரென்றாலும், சுப்பர்தான் கிட்டின சொந்தம். பார்க்கிற மாதிரியில் இரண்டு பேருக்கும் சின்னத்தம்பி சொல்லிவிடுவார் போலிருக்கிறது"

"அப்படியானால் நமசிவாயம் வரமாட்டார். வந்தால் ஏதாவது கலாதி நடக்கும்"

"ஓமோம்,அதற்காகச் சின்னதம்பி ஒருத்தருக்குச் சொல்லி, ஒருத்தருக்குச் சொல்லாமல் விடுவாரோ? அவருக்கென்ன பாரபட்சமில்லாமல் சொல்லிவிடுவார். வாறவன் வந்து, போறவன் போகட்டுமே!"

"ஓமோம், அதுதான் சரி, எங்களுக்கென்ன, கலியாண வீட்டுக்குச் சொல்லுவார்கள். கலாதி நடந்தால், தெருவில சண்டை கண்ணுக்குக் குளிர்த்திதான்!"

◆◆◆

புதன்கிழமை கல்யாணம் என்று, சின்னத்தம்பியும் பெண்சாதியும் வந்து எங்கள் வீட்டில் சொன்னார்கள்.

"வந்த நீங்கள் வெற்றிலை பாக்கைப் போட்டுக் கொண்டு போங்கோவேன்" என்று என் மனுஷி சொன்னாள்.

"அதெல்லாம் வேண்டாம். இங்கே வாயிலேயிருக்கு: நாங்கள் உங்காலே எங்கும் போகவேணும். பொழுது கருகுது" என்று சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள்.

அவர்கள் போனபிறகு "அவர்கள் வெற்றிலைபாக்குப் போட இருந்தால், நமசிவாயம் அப்பருடைய கதையைக் கேட்கலாமென்றிருந்தேன். அவர்களுக்கு நேரமில்லை போகிறார்கள். இப்ப என்ன, நாளையின்றைக்குப் போய்ப் பார்த்து விடுவோம்" என்று என் மனைவி சொன்னாள். பெண்களுக்குத்தான் இந்த மூளையெல்லாம் ஓடும். ஆண்பிள்ளைகளுக்கென்ன தெரிகிறது. வெறும் வாயாகப் பேசிவிட்டுப் போகிறோம்.

சின்னத்தம்பியும் மனைவியும் எங்கள் வீட்டுக்கு வந்து சொன்னபடியால், நானும் என் மனைவியும் கட்டாயம் போகவேண்டியிருந்தது. அவர்கள் சொல்லாவிட்டால் கூட, எங்களுக்குப் போக ஆசைதான். "கலாதி நடக்கிற இடங்களுக்குப் போகக்கூடா" தென்று மற்றவர்களுக்குச் சொல்வோமே தவிர, அங்கே போவதற்கு நாங்கள் வெகுவாக ஆவல் கொள்கிறோம். இது மனித சுபாவம்.

கலியாண வீட்டுக்கு நாங்கள் இருவரும் கொஞ்சம் வெள்ளெனவே போனோம். என் மனைவி பெண்கள் பக்கமாகப் போனாள். நான் போய் ஆளுக்கிடையில் உட்கார்ந்தேன். யாரோ ஒருவர் வெற்றிலைத் தட்டத்தைக் கொண்டு ஓடிவந்தார். அவர் யாரென்று எனக்குத் தெரியாது. சின்னத்தம்பியின் உறவினராகத்தானிருக்க வேண்டும். ஆனால் எங்கேயோ தூரத்து மனுசனாயிருக்கவேண்டும்.

முடுக்குகளில் இருக்கும் உறவினரெல்லாம் வந்து சேருகிறார்கள். வெற்றிலைத் தட்டிலிருந்து வெற்றிலையை எடுத்து என் பக்கத்தில் வைத்து விட்டு அதில் அக்கறையில்லாதவன் போல இருந்தேன். இதுதான் நாகரிகம். வெற்றிலையின்மேல் "கண்ணாயிருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளக் கூடாது.

உண்மையிலே எனக்கு வெற்றிலைமேல் கவனமில்லை. சுப்பர், நமசிவாயம் முதலியோர் வருகிறார்களா என்றுதான் கவனமாயிருந்தேன்.

கொஞ்சநேரமாயிற்று. முதலில் சுப்பர் வந்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் நமசிவாயமும் வந்து சேர்ந்தார். நமசிவாயம் வந்தவுடன் ஏதாவது கலாதி நடக்குமென்று எதிர்பார்த்திருந்த

எனக்குப் பெரிய ஏமாற்றமே கிடைத்தது. சுப்பர் இருந்து இடத்திற்குத் தூரத்திலேயே நமசிவாயம் உட்கார்ந்திருந்தார். நான் அவர்களிருவரையும் மாறி மாறிக் கவனித்துக் கொண்டிருந்தேன்.

கல்யாணச் சடங்குகளெல்லாம் நடந்தேறின. சாப்பாட்டு விசயத்தில் தான் ஏதாவது சண்டை நடக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால் என்ன அதிசயம் 2 பேரும் சாப்பிடக் காத்துக் கொண்டிருந்தார்கள் போலிருந்தது.

நான் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினேன். "கல்யாண வீடு என்னமோ கொஞ்சங்கூடச் சோபிக்காத மாதிரியிருந்தது. எங்கேதான் கல்யாணம் நடந்தாலும் ஒரு சின்னக் கலாதியும் கூடவே நடப்பது வழக்கம். ஆனால் இங்கே நான் ஒரு பெரிய கலாதியை எதிர்பார்த்துக் கொண்டு போக ஒரு சின்னச் சண்டைகூட நடக்கவில்லையென்றால்?

◆◆◆

வீட்டுக்குப் போகுமட்டும் நான் மனைவியோடு இந்த விசயத்தைப் பற்றிப் பேசவில்லை. தெருவிலே போகும்போது ஊர் விசயங்களைப் பற்றியெல்லாம் பேசலாமா?

வீட்டுக்குப் போனவுடன் "இந்தாபார், இன்றைக்கென்ன இப்படி எதிர் பாராத விதமாய் நடந்துபோச்சு" என்றேன்.

"என்ன?" என்றாள், என் சம்சாரம்.

"அறியாத மாதிரிக் கேட்கிறாயே, நமசிவாயம் - சுப்பர் சங்கதிதான்!"

"நீங்கள் கலியாண வீட்டுக்கு வரவில்லையா?" என்று ஆச்சரியத்துடன் என் மனைவி கேட்டாள்.

"உன்னோடேதானே வந்தேன்"

"அப்படியானால் நமசிவாயம் - சுப்பர் சங்கதி கேட்கிறீர்களே! அவர்கள் தான் ஒற்றுமையாகப் போய்விட்டார்களே!"

"ஒற்றுமையாகவா?"

"ஓமோம்; இது தெரியாமல் கல்யாண வீட்டில் என்ன பார்த்தீர்கள்? நேற்றுச் சாயந்தரம் நமசிவாயத்தினுடைய நடுவில் பையன் கிணற்றுக்குள்ளே விழுந்துவிட்டானாம். அந்தப் பக்கமாகப் போன சுப்பர், கூக்குரலைக் கேட்டு ஓடிப்போய்க் குழந்தையைத் தூக்கினாராம். நமசிவாயம் எங்கேயோ போய்விட்டுப் பிறகுதான் வீட்டுக்கு வந்தார். அவர் வரும்போது சுப்பருடைய மடியில் குழந்தை கிடந்தது. பிறகு கேட்கவேணுமோ? எல்லாம் ஒற்றுமையாகப் போய் விட்டார்கள்"

"ஓகோ, அப்படியா?" என்று நான் ஆச்சரியப்பட்டேன். என்ன இருந்தாலும் பெண்டுகளுக்குக் கெட்டித்தனம் கூடத்தான். நான் "ஆண்பிள்ளை" என்று கல்யாண வீட்டுக்குப் போயும் விசயத்தை அறிய முடியவில்லை. என் மனைவி எப்படியோ அறிந்துவிட்டாளே!

●

காதற் பலி

வரதர்

சரஸ்வதி நல்ல அழகாயிருக்கிறாளே ! பால்போல வெள்ளையாய் இருக்கிறதைப் பார்த்துத்தானோ "சரஸ்வதி" என்று பெயர் வைத்தாய்? என்று செல்லம் கேட்டாள்.

சற்றுத் தூரத்தில் கட்டிநின்ற பசுவைக் கனிவுடன் பார்த்துக் கொண்டே "ஓமோம், சரஸ்வதியின் தேகத்தில் ஒரு மறுவைக்கூடப் பார்க்க முடியாது !" என்று மகேஸ்வரி கொன்னாள்.

"என்னைப்பற்றி என்ன பேசிக்கொள்ளுகிறீர்கள்?" என்று கேட்பது போல சரஸ்வதி தலையை ஆட்டிற்று அதன் கழுத்தில் கட்டப்பட்டிருந்த மணி "டிங்" என்று ஒலித்தது.

மகேஸ்வரி பசுவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மனக் கண்முன், நடந்துபோன பல சம்பவங்கள் திரையிடப்பட்டன. அவள் கண்கள் ஜலத்தைப் பெருக்குவதற்குத் தயாராயிருந்தனவென்பதை அவளுடைய முகம் எடுத்துக் காட்டிற்று அந்தக் கண்கள் சரஸ்வதியை நேராக்கிக் கொண்டிருந்தபோது இமை வெட்ட மறுத்தன, ஆனால்

அவள் உண்மையில் சரஸ்வதியைக் கவனிக்கவில்லை! நாம் எங்கேயாவது பார்த்துக் கொண்டிருக்கும்போது நமது மனதில் ஏதாவது யோசணை தோன்றிவிட்டால், எமக்கு முன்னிருக்கும் பொருளை நாம் கவனிப்பதில்லையல்லவா ?

"மகேஸ்! என்ன யோசிக்கிறாய்" என்று செல்லம் கேட்டாள். அவளுடைய கண்கள், மகேஸ்வரியின் முகத்தை ஊன்றிக் கவனிக்க ஆரம்பித்தன.

மகேஸ்வரி திடுக்கிட்டுப்போனாள், அதே சமயத்தில் அவள் கண்களிலிருந்து இரண்டு நீர் முத்துக்கள் தவறி விழுந்தன. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ஒரு யோசனை யுமில்லையே !" என்றாள். வலிய வரவழைத்த புன்சிரிப்பு அவள் முகத்தில் தவழ்ந்தது.

மகேஸ்வரி ஏதோ துக்கப்படுவது செல்லத்திற்கு நன்றாகத் தெரிந்து விட்டது.

ஏன் மகேஸ்! என்னிடம் சொல்லக்கூடாத விசயமா?

இல்லையே, அப்படி ஒன்றும் இல்லையே!

சரி சொல்லக்கூடாத விசயமானால் விட்டுவிடு நான் தூண்டிக்கேட்கவில்லை கோபித் துக்கொள்கிறாயே செல்லம்! அப்படியொன்றுமில்லை. சரஸ்வதியைப் பற்றிக் கேட்டாயே, அதுதான்...!

அதென்னது!

சரஸ்வதி வெள்ளையாய் இருப்பதற்காக மாத்திரம் அந்தப் பெயர் வைக்கவில்லை அது ஒரு விசயம் சொல்கிறேன் கேள்!

செல்லம் நீ இந்த ஊருக்குப் புதியவளானதனாலே இதைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரி யாது. இந்த ஊரிலே எல்லாருக்கும் இந்தக் கதை தெரியும் சரஸ்வதி வேறு யாருமல்ல என்னு டைய தங்கைதான்.என்னோடு கூடப்பிறந்த தங்கைதான். என்னிலும் பார்க்க இரண்டு வய துக்கு இளையவள் கொஞ்சம் கூட வித்தியாசமில்லாமல் என்னைப் போலவே இருப்பாள் என் னிலும் பார்க்க அழகானவள் என்றுதான் சொல்லலாம். குணத்தில்கூட என்னைவிட அவள் எவ்வளவோ உயர்ந்தவள் செல்லம் ! நான் பாவி வஞ்சகி!

சரஸ்வதி என்மேல் எவ்வளவோ அன்பாயிருந்தாள். நான்கூட அவளோடு உயிராயிருந் தேன். கடைசியில் எனக்கு அப்போது பதினாறு வயது. சரஸ்வதிக்குப் பன்னிரண்டு வயது. அன்றைக்கு எங்கள் மாமா சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தார். வரும் போது அவருடைய மகனும் வந்திருந்தார். அவருக்கும் அப்போது பதினாறு வயதுதானிருக்கும் அப்போதே நல்ல அழகாக மினுமினுவென்றிருந்தார்.

நானும் சரஸ்வதியும் ஒரு பக்கததில் விளையாடிக்கொண்டிருந்தோம் அப்போது அவர் வந்தார் அவர் கையில் ஒரு பிஸ்கோத்துப் பெட்டி இருந்தது. எங்கள் கிட்ட வந்ததும் இந்தா என்று பெட்டியை நீட்டினார். அவர் யாரைப் பார்த்துச் சொன்னார் என்று தெரியவில்லை நான் பேசாமலிருந்தேன். சரஸ்வதியை சிரித்துக்கொண்டே பெட்டியை வாங்கிவிட்டாள். இதைப் பார்த்துக்கொண்டிருந்த மாமா, ஓகோ ! சுப்பிரமணியனுக்கு சரஸ்வதியின் மேல் தான் பிரியம் போலிருக்கும் ! என்று கூறி சிரித்தார். கூட இருந்தவர்களும் சிரித்தார்கள். சரஸ்வதி முகத் தைச் சுளித்துக்கொண்டாள்.

என் மனதில் என்னவோ மாதிரியிருந்தது. இருந்தாலும் நானும் சேர்ந்து நகைத்தேன்.

அன்றையிலிருந்து பிடித்தது சனியன் எனக்கும் சரஸ்வதிக்கும் பெரிய போட்டி. எங்கள் மைத்துனர் சம்பந்தமான காரியங்களைச் செய்வதில் நாங்களிருவரும் முன்னுக்கு நின்றோம். ஆனால் நான் இதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. சரஸ்வதியோ வெளிப்ப டையாக அவரோடு உறவு கொண்டாட ஆரம்பித்தாள்.

மூன்று வருடங்கள் கழிந்தன. எங்களிருவரில் சரஸ்வதியைத்தான் எங்கள் மைத்து னருக்கு விவாகம் செய்யலாமென எல்லோரும் தீர்மானித்திருந்தனர். என் உள்ளமோ படாதபாடுபட்டது. அவரை விவாகம் செய்யாவிட்டால், உயிரையே விட்டுவிடுவதென்று தீர்மானித்திருந்தேன்.

என்னுடைய வாழ்க்கை பாழாய் போய்விட்டதென்றே அப்போது நினைத்தேன். ஏனெ னில் அவரும் சரஸ்வதியை காதலிக்க ஆரம்பித்தார்.

நான் வாழ்க்கையை நீத்து விட தீர்மானித்து விட்டேன் அதற்காக என் அறையிலிருந்து ஒரு கடிதமெழுதினேன் அந்தக்கடிதத்தில் என் உள்ளத்தில் இருந்தவற்றையெல்லாம் எழுதி யிருந்தேன். எழுதிமுடிகிற சமயம் என் தங்கை உள்ளே வந்தாள் எனக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை கடிதத்தை மறைப்பதற்கும் கையெழவில்லை. சரஸ்வதி கடிதத்தை வாசித்தாள் அவள் கண்களில் நீர் துளிந்தது. ஆனால் அடுத்த நிமிடம் கலகலவென்று சிரித்தாள்.

ஐயோ, அந்தச் சிரிப்பில் நான் ஏமாந்து போனோன் அக்கா! விடயத்தை நன்றாக அறியா மல் செய்கிறாயே என்னை அவர் பார்க்கவில்லையே தவிர நீ இருக்கும் போது நான் அவரை விவாகம் செய்து கொள்வது கூடத் தவறு என்று சொன்னாலும் பைத்தியமா ? என்றாள் நான் அந்த வார்த்தைகளை நம்பி விட்டேன் அன்று இராத்திரியே தற்கொலை செய்து கொண்டாள் ஐயோ நான் பாவி.

சரஸ்வதி தன்னுடைய அவரை தியாகம் செய்து, என்னையும் என் கணவரையும் பிணைக்க உயிரைத் தியாகம் செய்தது மட்டுமல்ல எங்களிருவருக்கும் எங்கள் தன்னுடைய காதலை விட்டாள்.

என் கணவர் என்னோடு தானிருக்கிறார் ஆனால் அவர் என்னை விரும்புகிறார் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. சரஸ்வதியின் மனச் சாந்திக்காகவே அவர் என்னை விவாகம் செய்து கொண்டுமிருக்கலாம்.

இந்தச் சமயத்தில் மகேஸ்வரியின் கணவன் வரவே, அவள் பேச்சை நிறுத்தினாள். செல்லமும் மெதுவாக எழுந்து வெளியே சென்றாள். மகேஸ்வரியின் கணவன் மகேஸ்வரி யின் பக்கத்தில் வந்து, மகேஸ்வரி உள்ளத்தை சிதறவிடாதே, சரஸ்வதிக்குப் பிறகு உன்னைத்தான் நான் காலிக்கிறேன்" என்றார்

மகேஸ்வரியின் உள்ளத்திலிருந்து ஒரு பெரிய பாறாங்கல் நழுவி விழுந்தது.

●

சு.வேலுப்பிள்ளை

நாவற்குழியைச் சேர்ந்த சு.வே.யின் இயற்பெயர் சு.வேலுப்பிள்ளை. மூத்த எழுத்தாளர். ஈழகேசரிப் பண்ணையைச் சேர்ந்தவர். இவரது பதினொரு சிறு கதைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. அத்தோடு பல உருவகக்கதைகளையும் தரமாகத் தந்துள்ளார். ஈழத்தின் உருவகக் கதையின் முன்னோடி சு.வே. ஆவார். இவரின் மணற்கோயில். வெறுங்கோயில் என்பன இலக்கிய அறிஞர்கள் பலரின் பாராட்டினைப் பெற்றவையாகும். பாற்காவடி, மண்வாசனை என்பன இவரின் சிறப்பான சிறுகதைகளாகும். இவரது சிறுகதைகள் மண்வாசனை என்ற தலைப்பில் ஒரு தொகுதியாக வெளிவந்தள்ளது. சமூகத்தின் மூடநம்பிக்கை களுக்கும் மானிட ஏற்றத்தாழ்விற்கும் எதிராக இவரது எழுத்துக்கள் அமைந்துள் ளன. பல இலக்கியப் பாட நூல்களை யாத்துள்ளார். அத்துறையில் கூடிய கவனம் செலுத்தி வந்தமையால் பின்னர் புனைகதைத் துறையில் ஈடுபடுவது அரிதாகி விட்டது. இவரது பரோபகாரம், நிலைகேடு என்ற சிறுகதைகள் வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சிச் சிறுகதைகள் என்ற தொகுப்பில் இடம்பிடித்திருக்கின்றன.

- பரோபகாரம்
- நிலைகேடு
- பாற்காவடி

பரோபகாரம்

சு.வே.

வரண்ட பாலைவனம் போன்ற மணல் வெளி. அங்கே சில பனை மரங்கள் நின்றன. ஒரு மரம் சமீபத்திலேதான் கங்குகள் உதிர்ந்து காட்சியளித்தது. இளமை கழிந்து கன்னிப்பருவமடைந்ததற்கு அறிகுறியாக.

கங்குகள் உதிர்ந்தும், அவற்றின் சின்னங்கள தெறித்திருந்தன. வாலிப முறுக்கிலும் இளமை நினைவுகள் தோன்றுவது போல அந்தக் கங்குச்சி தர்களொான்றிலே ஒரு பனங் கற்றாளை.

அதன் நடுவிலே இளங் குருத்துகள், சுற்றிவர முதிர்ந்த இலைகள், வாளின் முனையைப்போல, ஒரே ஒரு பனங்கற்றாளைதான். ஆனால்.... அது மலடல்ல. பெற்றுப் பெருகிப் பெருவாழ்வு பூண்டது. என்றாலும் அந்தப் பெரிய குடும்பம் இருந்து இல்லறம் செய்ய ஒரு குழி மண்ணையாவது 'அவன்'-எல்லாம் வல்லவன் என்று சொல்கிறார்களே, அவன் - கொடுக்கவில்லை. பாவம்! அது என்ன செய்யும்? இந்தப் பனைமரத்தை ஒட்டிக் கொண்டது. நம் நாட்டின் ஏழைச் சகோதரர்களைப் போல்.

ஒட்டுக்குடித்தனம்தான், ஆனாலும் கண்ணியமானது. நம் மலர்களைப் போல் கிள்ளல். சுரண்டல் பழக்கங்களைப் பிறப்பிலும் அறியாதது. என்ன விந்தை! நிலத்திலும் அதன் வேர் இறங்கவில்லை;பனைமரத்தையும் சுரண்டவில்லை; பின் அதற்கு ஊண் எங்கே?ஆம்; அகதிக்கு ஆகாயமே துணை.

ஒரு நாள் மாலை நான் அந்தப் பக்கமாகப் போனேன். கலகலத்த சிரிப்புடன் பேச்சுக் குரல் கேட்டது. கேட்டேன் :

"அக்கா !" என்றது கற்றாளை, கொஞ்சம் குரலில்.

"என்னடி?" என்றது பனை, பாசக்குழைவுடன்.

"நான் உன்னுடன் ஒட்டுக்குடித்தனம் செய்ய ஆரம்பித்து எத்தனை வருஷம் ஆகிறது தெரியுமா? என்றது கற்றாளை.

"ஆமாம்; அதெல்லாவற்றையும் தான் நான் யோசிக்க வேண்டும், விரோதிகளின் நினைவுபோல்!"

"என்னக்கா, இவ்விதமான பாந்தவ்ய வாழ்க்கை இவ்வுலகில்…"

"இந்த உலகிலா!" என்று பனை 'கலகலத்தது"

'ஆகவே நாங்கள் மனிதர்களிலும் சிறந்தவர்கள்"

"எப்படி?"

"எப்படியா அக்கா? அவர்களில் ஒரு சிலர் உண்டும் உடுத்தும் சுகித்திருப்பார்கள். அதே சமயத்தில் அவர்களைப் போன்ற எத்தனையோ கோடி ஜனங்கள் பட்டினியால் சாவார்கள்! இந்த ஏழைகளைப் பார்க்கக் கூட பெருந்தீனிக்காரர்கள் அருவருப்பார்கள்; எச்சிற்கையால் அவர்களை விரட்டார்கள்; மனித ஜாதியிடம் ஈவிரக்கம் மறந்தேபோயிற்று.'அன்பு'என்ற உணர்ச்சி 'காற்றுப் பிடித்த கற்பூரக் கட்டிபோல்' என்றோ குடி போய்விட்டது."

"அப்படியானால் அவர்கள் வாழ்வில் இன்பம்…"

"இன்பமா? தூய்மையே நிறைய வேண்டிய அவர்கள் உள்ளத்தில், சுய நலமென்ற கள் வன் கோட்டைகட்டி ஆளுகிறான். இதயபீடத்திலே அன்பரசன் ஆட்சி புரியவேண்டும், எல்லோ ரும் ஓர்குலம், எல்லோரும் ஓரினம்; எல்லோரும் உண்ண வேண்டும்; உடுக்க வேண்டும், சீரிய வாழ்வு நடத்த வேண்டும். பரோபகார சிந்தை இருக்கவேண்டும்.இந்த நினைவு ஏற்படும் போதுதான் மனிதன் மீது இன்பக்காற்று வீசும்."

நான் விறைத்துப்போய் நின்றேன்.

அந்தப் பனங்கற்றாளையின் திருட்டுக்கண்கள் என்னைக் கண்டு விட்டன.

மனோரம்யமான சிறுதென்றலொன்று அசைந்து சென்றது.

அவ்வளவுதான், பனங்கற்றாளை தன் தளிர்க்கரங்களை அசைத்து பனைமரத்தை மெல்லச் சுரண்டியது.

பனைமரமும் என்னைப் பார்த்துவிட்டுக் 'கல கல' வென்று சிரித்தது.

அறநனைந்தவனுக்குக் கூதலென்ன? குளிரென்ன?

"ஆகா, இந்த வரண்ட பூபாகத்திலே, அதுவும் இவைகளிடமா, பரோபகாரம்" என்றேன், ஏதோ ஒரு சூன்யப் பிரதேசத்தை நோக்கிக் கொண்டு.

'ஆமாம்' என்று சொல்வன போல இரண்டு காக்கைகள் 'கா, கா' என்று ஓலமிட்டுக் கொண்டு வந்தன.

வந்த காக்கைகள் தம் கூட்டையடைந்தன. அவைகளின் கூடெங்கே?

அதோ, அந்தப் பனைமர வட்டிலேதான்!

காக்கைகளைப் பனைமரம் தன் தளிர்க்கரங்களால் ஆதரித்து அணைத்தது. பாந்தவ்ய வாழ்வின் எல்லையில்லா இன்ப உணர்ச்சி, பனைமரத்தின் மேனி எங்கும் செறிந்ததோ என்னவோ! ' கல கல' வென்று அடுத்த சிரிப்பும் சிரித்தது.

மறுமலர்ச்சி
ஆனி - 1949

நிலைகேடு

சு.வே.

காலை -"குளுகுளு" என்று சீதந் ததும்பும் காலை. அந்தக் காலையின் சௌந்தர்ய சிகரம்தான் அதோ விளங்கும் தாமரைத் தடாகம். ஆழ்ந்த தபஸ்வியின் ஞான விளக்கம் போல் தெளிந்திருந்தது அதன் ஜலம்.

அதில் ஒரு மலர் - தாமரை மலர் - மொட்டுவிடும் போது. இன்று மலர்ச்சிரிப்பு. அதன் ஹிருதயத்திலே ஊறியிருக்கிறது. ஆனால் மலரவில்லை. ஏன்?

அதோ! ஒய்வின் முழுப் பொலிவுடனே ஆதவன் வருகிறான். அவன் எழுச்சிதான் உலகின் எழுச்சி. ஏன், அதுதான் அந்த மலரிதய அரிப்பையுந் தூண்டுகிறது. அவன் கதிர்க் கரங்களின் அணைப்பிலே அந்தப் போது மலராக விரிகிறது. தந்தையின் அணைப்பிலே மகனறிவு விரிவது போல.

அந்த மலருக்கு அவன், தந்தை - பொலிவு தரும் தந்தை.

அதோ மலர்.

நீரின் மேற்பரப்பிலே அழகுத் தெய்வமாகப் பொலிகிறது. கன்னிப் பெண்ணின் எழின் முறுக்கை யொத்து.

நீண்டு வளர்ந்த தண்டொன்றின் நுனியிலே கம்பீரமாகக் கொலுவிருந்து, தென்றலின் அசைப்பிலே அசைந்தாடுகிறது. தாளவொழுங்கற்ற நடனத்தைப் போல.

அந்தத் தண்ணிய நீர் அதைத் தாங்குகிறது; வளர்க்கிறது; எழிலுறுத்துகிறது; தாயின் அணைப்பிலே வாழும் இளங்குழவி போல.

நீர் அதன் தாய் - உயிர் மூச்சளிக்குந் தாய்.

ஐயோ! அதைச் சொல்லவா!

அழகு கொளிக்கும் அந்த மலருக்கும் இன்றுதான் முடிவு நாளோ? பாவம்!

தண்ணீர் சலசலக்கிறது. ஒரு சிறுவன் நீந்திச் செல்கிறான், அந்த மலரை நோக்கி

அடுத்தகணம்..... பூ கொய்யப்பட்டது.

ஜலத்தில் தண்டு துடிதுடிக்கிறது, தலைபோன உடலைப் போல,

பூ கரையிலே கிடக்கிறது, சாவின் சோர்வுடனே.

அது தன் ஏக்கம் நிறைந்த கண்களை வீசி வாய்விட்டுச் சொல்கிறது:

"ஆம், இனி என் வாழ்நாள் முடிந்தது. எனக்குத் தந்தையான சூரியனே இனி என்னைத் தகிப்பான். எனக்குத் தாயான தண்ணீரே என் உடலை - தண்டை அழுகச் செய்வாள். அவரவர் நிலைகெட்டு விட்டால் தாழ்வடைவதுடன் பல இன்னல்களையும் அனுபவிக்க நேரிடும். இது இயற்கை நியதி. இதற்கு நானே சாட்சி"

அடுத்த கணம் ஒரு வேதனைத் தீண்டல்.

மலரைக் காணவில்லை.

மறுமலர்ச்சி
வைகாசி,ஆனி - 1947

பாற்காவடி

சு.வே

அன்று திருக்கார்த்திகை. அந்தக் கிராமத்திலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஒரே கலகலப்பு. போவோர் வருவோரின் நடமாட்டம் ஒருபுறம். தெய்வ சந்நிதானத்தை உலக விவகாரங்கள் பேசுவதற்கேற்ற இடமாக்கிக் கொண்ட கும்பல் ஒருபுறம், பலவர்ணப் புடைவைகளையணிந்து கொண்டு வானவில்லின் நிறத்தைத் தெறிக்கவிட்டு நடமாடிய பெண்கள் கும்பல் ஒருபுறம் இப்படியாகக் காட்சி தந்து. அந்தத் திருக்கோயில். பூசைக்குரிய எவ்வித ஆயத்தங்களும் தென்படவில்லை. ஆனால் அங்குள்ள கலகலப்பு சந்தையிரைச்சலையும் வென்றுவிட்டது. ஆத்மசாந்திக் குறைவிடமான அந்தச் சந்நிதானம் வெறும் கலகலப்பில் மூழ்கிப்போய்க் கிடந்தது. இது தெய்வத்தின் சம்மதமன்று. மனித வர்க்கத்தின் ஏகோபித்த அபிப்பிராயம்.

சிறிது நேரஞ்சென்று அந்தக் காலகலப்புக் குறைந்ததோ அல்லது வேறொரு ஒலி அதைக் கபளீகரம் செய்ததோ என்னவோ? அந்தக் கொட்டுமேளம் முழங்கத்தொடங்கியது. உள்ளேயமுக்கிருக்கப் புறச்சுவர் தீற்றும் டாம்பீககாரர்களை போல். அதையடுத்து நாதஸ்வரம்

முதலிய ஏனைய வாத்தியங்களும் முழங்கத்தொடங்கின. பெரிய "கண்டா மணி"யும் தனது பேரொலியைக் காற்றுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தது. என்ன? பூசைக்கு ஆயத்தமா?

அதோ வரிசையாகப் பல காவடிகள் வைக்கப்பட்டிருக்கின்றனவே. அவை ஒவ் வொன்றும் பல பேதப்பட, அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றனவே. ஆனால் ஒரேயொரு ஒற் றுமை; எல்லாவற்றிலும் மயிற்றோகைகள் கற்றை கற்றையாகக் கட்டப்பட்டிருந்தன. எவ்வ ளவு அழகிய தோகைகள், ஒவ்வொரு தோகைக் கண்களும் கண்ணைச் சிமிட்டி விளையா டுகின்றன. ஆனால் இந்த அழகில் எத்தனை வேதனைகள் மர்மமாக மறைந்திருக்கின் றனவோ? அந்தத் தோகைகள் அத்தனையும் மயிலின் அன்பளிப்பா? மயில் மனங்கனிந்து உதிர்த்த இறகுகளா? மனிதனிடத்தில் மிருகபாவம் மறைந்திருக்கிறது. தெய்வத்தின் பேரால் புனிதமாக்கலாமென்பது மரண வேதனையில் - கடைசி மூச்சில் ஈய்ந்த தோகைகள் தான் அவை. அஹிம்சையின் சிகரமான தெய்வத்துக்கு அஹிம்சையினால் வந்ததோகை ஒரு புனித வஸ்துவாம்.

அந்தக் காவடிகளுக்குப் பக்கத்திலே அதனதன் சொந்தக்காரர் நிற்கின்றனர். அவர்கள் அரையிலே உயர்வான சரிகை இழைத்த பட்டு வேஷ்டி; அதை அவர்கள் கச்சை யாகக் கட்டியிருக்கின்றனர். அதன் மேலே அதே சாதிச் சால்வை. மார்பிலே மூன்று பட்டுச்சங்கிலி அரைகிறது. அட்சரக்கூடு வேறு. அவர்கள் மார்பிலும் கைகளிலும் எண்ணி லடங்கா வேற்கள். சூரிய ஒளியில் மீன் செதில்கள் மின்னுவது போல அவை ஒளிகயிறுகளின் ஒருபக்க நுனிகளிலே பிணைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற நுனியிரண்டும் அவர்கள் தோளின் மேல் அநாயசமாக - ஒரு நாகரீகமாக எறியப்பட்டி ருக்கின்றன.

எல்லாவித ஆயத்தங்களிலும் செய்கைகளிலும் பணத்தின் செழிப்பு பரிபூரணமாகத் தெரிந்தது. ஆம்; அன்று அந்தக் கோவிலிற் காவடி எடுக்கும் அந்தனை பேரும் அந்த ஊரின் பெரும்புள்ளிகள்; நட்புக்காரர்; பணக்காரர். எனவே மேளக் கூட்டங்களுக்கும் பாட்டுச் சமாவுக் கும் பரிமளிப்புக்கும் சொல்லவா வேண்டும்.

வானைத்தொடும் கோபுரங்கள் கொண்ட அந்தச் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குக் கிழக்கே ஒரு கூப்பிடு தூரத்தில் ஒரு அம்மன் கோயில் இருந்தது. பரந்து சடைத்துப் போய் எத்தனையோ தலைமுறைகளைக் கண்ட அந்த ஆலமரத்தின் கீழே வெயிலும் மழையும் கூசாமல் உட்பிரவேசிக்கக் கூடிய ஒரு சிறுகொட்டிலிலே அவள் இருந்தாள். பெருஞ் செல் வர்களின் அந்தக் கோயிலுக்கும் வெளிப்பார்வைக்கும் பெரும் வித்திசாயந் தான் என்றாலும் இரண்டிலும் தெய்வம் உண்டு என மனிதன் நம்பினான். மனிதன் எந்தெந்த அந்தஸ்தில் இருந்தாலும், அவன் மனம் தனக்கென ஒன்றை வைத்திருப்பதில் திருப்தியடைகிறது. அந்த ஏழைப் பஞ்சமர்களும் தங்களுக்கென்று உண்டாக்கப்பட்ட அந்த கோயிலினால் பரம திருப் தியடைந்தார்கள். அந்தத்திருப்தியை அவர்கள் வருஷத்துக்கொரு நாள் காட்டி வந்தார்கள். அன்றுதான் அந்த ஜெகன்மாதா எண்ணெய்த் திரியையும் கர்ப்பூர ஒளியையும், சாம்பிராணி மணத்தையும் காண்பாள். மற்றநாள் எல்லாம் அவள் ஏகாந்தத்தில் யோகஞ்செய்ய வேண் டியதுதான்.

ஆனால் அந்த வழமையை அன்று அந்தத் திருக்கார்த்திகைப் புனிதத்தினத்தன்று யாரோ கெடுத்து விட்டார்கள்!

அந்த உலகமாதாவின் அனுக்கிரகத்தின்பேரில், அன்று அந்தச் சந்நிதியிலே யாரோ காவடி எடுக்கப்பபோகிறார்கள். ஆனால் அங்கே கொட்டுமேளத்தின் ஒலி கேட்கவில்லை. ஜனக்கூட்டத்தின் கூச்சல் கேட்கவில்லை. பகட்டின் பிரதிபிம்பம் கண்ணை மயக்கவில்லை. மனித முயற்சியினாலே எத்தனையோ வேதனைகளை மறைத்து வைத்து உருப்பெற்று விளங்கும் காவடிகள் அங்கு காணவில்லை. ஆனால் அங்கு தெய்வீக அமைதியும், பக்தியும் பரிசுத்தமும் மாத்திரம் இருந்தன. இரண்டேயிரண்டு பேர்தான் அந்தத் திருக்கோயிலில் நின்றார்கள். ஆணும் பெண்ணுமாக.

எலும்புகள் தம் தன்மையை மறந்து வெளியே புறப்பட்டுக் காணப் பட்டன. தோலிலே அங்கங்கு சுருக்கங்கள் காணப்பட்டன. வேப்பமரத்தின்மேற் பட்டையைப்போல தலை பல நாள் செப்பனிடப்படாமல் பின்னிப் போய்த் தொங்கிக்கொண்டிருந்தன. அவனையும் அறியா மல் ஒரு இளைப்பு அவனில் ஒளித்துக்கொண்டிருந்து. ஆம், துன்பத்தில் நோயினாற் பீடிக் கப்பட்டு எழுந்தவனைப்போற காணப்பட்டான். அம்பாளை நோக்கிக் கைகூப்பிக் கொண்டு தன் பக்தியைக் கண்ணீர் மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தான் வீரன்.

ஆனால், வள்ளி ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தான். அவள் தன்னுடைய பாற் கவாடியைப் பத்தி சிரத்தையுடன் ஆக்கிக்கொண்டிருந்தாள். பளபளென ஒளிவீசும் பால் நிறைந்த செம்பு. அதன்வாயில் வேப்பிலை, அதன் மேல் தேங்காய் அதன் மேல் ஒரு பூ. அவ்வளவுதான்.

பாற்காவடி தயாராகிவிட்டது. இனி அதைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டி ருப்பதுதான். தூரத்திலே கேட்ட மேள ஒலியின் “கிறுதா” வேலைப்பாடுகள் அந்தப் பணக்காரக் காவடிகள் புறப்பட்டுவிட்டன என்பதை அறவித்தன. வள்ளி இடுப்பிலே சொருகியிருந்த கர்ப் பூரத்தை எடுத்துக் கொழுத்தினாள். உள்ளே எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கைத் தூண்டிவிட்டாள். அவள் கைகள் கூப்பின? கண்கள் மூடின. “தேவீ! உன்செயல்தான்!” என்று வாய் முனுமுனுத்தது. மனம் சிறிது நேரம் தெய்வ பக்தியில் ஈடுபட்டது. இந்த மனம் சிறு குழந்தைகளைப் போன்றது. எப்படிச் சிறுகுழந்தைகள் ஒன்றி லேனும் லயித்திரார்களோ அதைப் போல மனதிற்கும் சுயேட்சையாக அங்குமிங்கும் ஓடித்திரியத்தான் விருப்பம். அதிலும் கழிந்த சில சம்பவங்களை அசைபோடுவதென்றால் மிகுந்த பிரீதி. அவள் மனமும் கழிந்த சில சம்பவங்களை நினைத் துக் கொண்டது.

இயற்கைக்கு பாரபட்சமற்ற தன்மைதான் சிறந்த பண்பு போலும்! வள்ளியினுடைய அநாதைத் தன்மையை ஆற்றொணா மனவேதனையைச் சிறிதும் பொருட்படுத்தாமலும் அந்த மழை கொட்டிக்கொண்டிருந்தது. இன்னது செய்வதென்றறியாத மனநிலையில் அங்கு மிங்குமோடினாள். உக்கியிருந்த கூரையிலிருந்து “ஒழுக்கு” விழுந்துகொண்டிருந்தது. வேதனையால் சிதறுண்ட அவள் மனதிலிருந்தும் எண்ணற்ற சிந்தனைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

அந்தத் தென்னந் தோட்டத்தின் ஏக மூலையிலே காவற்காரன் ஒருவனின் குடிசை. ஏழ்மையின் சகல விதமான லட்சணங்களுக்கும் அது வாசஸ்தலமாக விளங்கியது. அந்தக் குடிசையின் ஒரு பக்கத்திலிருந்து முனகற் சப்தம் கேட்கிறது. மரண வேதனையின் கைப் பிடியில் நசியும் ஆத்மாவின் துடிதுடித்த குரல்போல. இடையிடையே வேதனையின்

உச்சநிலையைப் புலப்படுத்தும். ஐயோ! ஐயோ! என்ற ஓலம். ஏதோ வள்ளியின் கணவன் வீரன் நோயாகப் படுத்திருக்கிறாள். கடுமையான நோய். ஆளையே கொல்லக்கூடிய வியாதி சுவாத சன்னி. தகுந்த வைத்திய சிகிச்சைக்கோ பராமரிப்புக்கோ ஏற்ற பணம் அவனிட மில்லை.

அவன் பக்கத்திலே வள்ளி நிற்கிறாள். அழுதழுது கண்கள் சிவந்து போயிருக் கின்றன. வீரனின் ஒவ்வொரு முனகற் சப்தமும் கூரிய ஈட்டி போல அவள் மார்பை ஊடுரு வின. பாசத்தினாற் பிணைக்கப்பட்ட ஒரு உள்ளத்தின் வேதனை மற்ற உள்ளத்திலும் பிரதிப லித்தது. இரு உள்ளங்களின் அன்புப் பிணைப்பு உண்மையான இன்பத்தை உண்டாக்கு மென்பது உண்மைதான். ஆனால் அந்த அன்பின் பயனாக விளைந்த வேதனையும் மனதைக் கொல்லுமென்பது அவ்வளவுக்கு உண்மையே!

அவளும் என்ன செய்வாள் பாவம்! தன்னாலான மருந்துகள் பரிகரிப்புகள் எல்லாம் செய்து விட்டாள். அந்தக் கொடிய வியாதிக்குத்தான் எவ்விதமான மனப்பண்புகளும் இல்லையே. காலையிலே வந்திருந்த அந்த சுதேச வைத்தியன் சொன்ன ஒவ்வொரு சொல்லும் நினைவு ரூபமாக வந்து கொன்றன.

“ஆ! சுவாத சன்னியாம். முற்றிவிட்டதாம். ஐயோ! நான் என்ன செய்வேன்!, ஏழ் மையை அஸ்திபாரமாகக் கொண்டு, அன்புக் கற்களாற் கட்டிய இன்பக் கோட்டையில் ஒரு பெரிய இடியாக வந்ததே வியாதி. இந்த நோய்க்கு நல்ல வைத்தியம் செய்ய வேண்டுமாம்..... இல்லாது போனால் .... ஐயோ என்னால் நினைக்கவே முடியவில்லை. நல்ல வைத்தியம் - இங்கிலிசு வைத்தியம் - நான் எங்கே போவேன் அநாதை. அதற்கும் பணம் வேண்டும். பணம்.... பணம். அது இருந்தால் இந்த நிலையே வந்திராதே. எத்தனை பகல். எத்தனை யிரவு பட்டினியாக வேலை செய்தோம்; அதன் பயன்தானே இந்த நோய். ஆ! தெய்வமே! மாரியம்மா! வெறிகொண்டவன்போல் காணப்பட்டாள் வள்ளி.தலைமயிரைக் கைகளாற் பிசைந்தாள்; மார்பிலே அவளுடைய இந்த நிலைக்கு முற்றுப்புள்ளியிட்டு விட்டது. வீரனின் “தண்ணீர், தண்ணீர்” என்ற தீனக்குரல்.

அன்று இரவு வெளியாந்தகாரம் வள்ளியின் மன அந்தகாரத்துடன் போட்டியிட்டது. மழையும் கொட்டிக் கொண்டிருந்தது. புயற்காற்றுச் சீறிக்கொண்டிருந்தது. இயற்கையின் கொந்தளிப்புக்கு முன்னால் எந்தச் சீவராசியும் தன்னாண்மையைக் காட்ட விரும்பவில்லை. ஆனால் அந்த ஒற்றையடிப் பாதைகளில் மாத்திரம் ஒரு உருவம் விரைவாக நடந்து கொண்டிருந்தது; தலைவிரி கோலமாக நனைந்த துணியிலிருந்து நீ சொட்டச் சொட்ட நடந் தது. அந்தக் கரியவிருளிலும் அதன் கூடிய கண்கள் வழி பிடித்தனவோ? அல்லது பாசம் வழி காட்டியதோ? யாரறிவார்? ஆனால் ஒன்று மாத்திரம் உண்மை. திடமான பிடிவாதத்தின் பேரில் ஏதோ ஒன்றைச் சாதித்துவிடும் துணிவில் சென்றது அது.

வானத்தில் ஒரு மின்னல் ஓடிற்று. ஒரே சோதி வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. அத்துடன் கூடவே வள்ளியின் பரிதாபகோலத்தையும் எடுத்துக் காட்டியது.

வள்ளியின் நெஞ்சம் தகுந்த வைத்தியத்தையும் நம்பவில்லை; தகுந்த பராமரிப் பையும் நம்பவில்லை. தன் குலதெய்வத்தின் கருணையைத் தான் நம்பியது. அந்தப் பக்திப் பெருக்கால் - வெற்றியான இயற்கையின் கொந்தளிப்பு அவளுக்குத் தெரியவில்லை. எதுவும்

பயங்கரத்தைக் கொடுக்கவில்லை; வெகுவிரைவாக நடந்து மாரியம்மன் கோயிலைய டைந்தாள்.

அந்தக் கோயில் இருளோடிருளாய்ப் பயங்கர தோற்றத்தையளித்தது. அந்தப் பயங்கரத்தை மிகைப்படுத்துவது போல ஆலமரத்திலிருந்த ஆந்தை அலறியது. ஆனால், வள்ளி கண்ட கோயிலிலே இவையொன்றுமில்லை.அவள் வேறொரு உலகில் கனவு கண்டுகொண்டிருந்தாள். தேவிமாரியம்மா! எங்கள் குலதெய்வமே! இதுவுமுன் சோத னையோ? என் கணவனைக் காப்பாற்ற உன்னால் முடியும். வைத்தியம் பரிகரிப்பு. இவை யொன்றும் எனக்குத் தெரியாது. நீதான் என் கணவனைக் காப்பாற்றியாக வேண்டும். அல் லது போனால் என்னையும் கொன்றுவிடு. என் மாரியாத்தா! உனக்குத் தெரியாததொன்று ண்டோ? என் மனம் படும்பாடு நீயறியாததோ? என் தேவி! நான் பாற்காவடி எடுக்கிறேன் என்று உரக்க ஓலமிட்டாள். அதன் எதிரொலியால் போலும் அந்த ஆந்தையின் குழறலும் இல் லாமற் போய்விட்டது.

கொட்டு மேளத்தின் ஓசையிலே, மனிதகும்பலின் மத்தியிலே, பணத்தின் இறு மாப்பிலே பகட்டின் பிரதிபலிப்பை அஹிம்சையின் பதிவிலே செல்லும் காவடிகள் - செடிற் காவடிகள் ஒரு கூப்பிடுதூரத்துக்கு முன்னாற் சென்றுவிட்டன. பக்திக்கனலிலே அன்பின் பெருக்கிலே எடுக்கப்பட்ட பாற்காவடி ஒன்று அதன் பின்னால் மெல்லமெல்லச் சென்றது. அதனோடு ஓர் ஆணுருவம் எலும்புந்தோலுமாகப் பின்தொடர்ந்தது.

ஈழகேசரி
12.01.1947

கு. பெரியதம்பி

மறுமலர்ச்சி சஞ்சிகை மூலம் எழுத்துலகிற்கு வந்தவர் கு. பெரியதம்பி புலோலியைச் சேர்ந்தவர். பத்துச் சிறுகதைகள் வரையில் எழுதியுள்ளார். அவை கனதியானவை. "மறுமலர்ச்சி" சிறுகதைத் தொகுதியில் இவரது குரு சிறுகதைகள் இடம்பிடித்துள்ளன.

- பொங்கல் வாழ்த்து
- எட்டாப்பழம்
- அம்மான் மகள்
- வீண் வதந்தி
- காதலே காதல்
- குழந்தை எப்படிப் பிறக்கிறது?
- மனமாற்றம்

பொங்கல் வாழ்த்து

கு. பெரியதம்பி

ஸ்நானஞ் செய்துவிட்டு ஈர வஸ்திரத்தை உடுத்தபடியே தன் அனுஷ்டானங்களை முடித்துப் புதுப்பானையில் நீர்மொண்டு தோள் மீது சுமந்து வந்துகொண்டிருந்தார். வீட்டில் உள்ளவர் வயிரக்கற்களை எடுத்து அடுப்புத் தயார் செய்துகொண்டிருந்தார்கள். அடுத்தடுத்த வீடுக ளில் அதற்கு முந்தியே பொங்கல் ஆரம்பித்திருக்க வேண்டும். ஒரு மெல்லிய புகைப்படலம் மேல் நோக்கி எழுந்துகொண்டிருந்தது. அதனால் அவசரம் அவசரமாக வீட்டை நோக்கி நடந்தார்.

அடுப்பிலே பானையை வைத்தார். கமலாம்பாள் நெருப்புமூட்டி விறகடுக்கினாள். தாய் மற்ற ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந் தாள். சிறுவர்கள் சீனவெடியும் கையுமாக அயலிலே வந்து நின்றார்கள். இடையிடையே இரண்டோர் வெடியைக் கொளுக்கியெறிந்தார்கள்.

தபாற்காரன் தெருவில் நின்று மணியடிக்கும் சத்தம் கேட்டது. சிறு வர்கள் வெளியே ஓடினர். கமலாம்பாளும் அவர்களைத் தொடர்ந்து சென்று வாசலிலிருந்து சிறிது தூரம் உள்ளேயே நின்றாள். மூன்று கடி தங்களோடு சிறுவர்கள் திரும்பினார்கள். அவற்றை வாங்கிப்

பார்த்தாள். ஒன்று தந்தைக்கு மற்ற இரு கடிதங்களும் அவளுக்கு அருமையாக எப்போதாவது அவளுக்கு ஒரு கடிதம் வரும். ஆனால் அவள் தினமும் தனக்குக் கடிதம் வரும். ஆனால் அவள் தினமும் தனக்குக் கடிதம் வரும் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைவாள். இன்று ஏதோ ஏமாற்றமடையாது கடிதம் வந்ததிலே அவளுக்கு ஒரு திருப்தி. இரு கடிதம் வந்ததினால் அது ஆனந்தமாகவே மாறிவிட்டது.

ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்தாள். உறை ஒட்டப்படாமலே இருந்தது. அதைக் கண்டதும் அவள் ஆவல் குறைந்தது. ஏதோ அச்செழுத்துப் பிரதியாக இருக்கும். அதில் ஒருவருக்கு என்ன ஆனந்தம் வரமுடியும். என்றாலும் "என்ன என்று பார்த்துவிடுவோமே" என்றது மனம், பிரித்துப் பார்த்தாள். சாதாரண வாழ்த்துக்கடிதம். தைப்பொங்கல் வாழ்த்து.

யார் அனுப்பியது? "சுந்தரேசன்" என்று கையொப்பமிடப்பட்டிருந்தது! "எந்தச் சுந்தரேசன்?" - விலாசத்தையும் பார்த்தாள். "ஆம், அவர்தான்; ஆசிரியர் சுந்தரேசன்" - அவளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. சுந்தரேசனிடமிருந்து வாழ்த்துக் கடிதம் வருவதென்றால் - அதுவும் அந்த விருந்துக் கொண்டாட்ட நிகழ்ச்சி இன்றும் அவள் மனக்கண் முன் அப்படியே இருக்கிறதே!

அவன் கையெழுத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள். வைத்தகண் வாங்காது ஒரே பார்வையாகப் பார்த்தாள். அவன் கையெழுத்து வைத்திருக்கும் அழகு! அதை நன்றாக நயந்தாள் - "கே"யை என்ன லாவகமாக எழுதியிருக்கிறார். "எஸ்"ஸை வளைத்திருக்கும் அழகு - ஒவ்வொரு எழுத்தாக ஒவ்வொரு வளைவு நெளிவு எல்லாவற்றையும் பார்த்து நயந்தாள். பார்க்கப் பார்க்கப் புதுநயம்.

"அவரும் அழகு; அவர் எழுத்தும் அழகு. எனக்கு ஏதோ கோணமாணல் எழுத்துத்தானே வருகிறது." தமையன் அங்கே வந்தான். அவள் அவனைக் காணவில்லை. இயற்கைக் காட்சியைக் கண்டு அதில் தன்னையே மறந்து இரண்டறக் கலந்தனுபவிக்கும் கவிஞன் நிலைமையிலே அவள் இருந்தாள்.

"தபாற்காரன் போய்விட்டானா?" என்று தமையன் கேட்டான்.

விரைவாகக் காகிதத்தை மடித்தபடி திரும்பி "என்ன?" என்று கேட்டாள்.

"தபாற்காரன் போய்விட்டானா?"

"ஓம்"

"எனக்குக் கடிதம் இல்லையா?"

"இல்லை"

தமையன் போய்விட்டான்.

மற்றக் கடிதத்தின் ஞாபகம் அவளுக்கு வந்தது. உறையைக் கிழித்தாள். கையெழுத்துப் பார்த்தாள். "சாரதா" - அதை அப்படியே மடித்தாள். என்ன எழுதியிருக்கிறது என்றே பார்க்கவில்லை. இரண்டு பக்கம் நிறைய எழுத்தாக இருந்தது. அதை அவள் பாராது இந்தச் சாதாரண வாழ்த்துக் கடிதத்தையே மறுபடியும் எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

"பொங்குக பொங்குகவே - பால்
பொங்குக மங்களமே
..............."

இதுதான் முதல்வரி. உலையிலும் பொங்கல்; இங்கே அவள் உளத்திலும் பொங்கல். எல்லாம் ஒரே பொங்கல்.

"உடனேயே இதற்குப் பதில் எழுதிவிட வேண்டும். இப்பொழுதே எழுதி வைத்துத் தபாலிற் சேர்த்துவிட வேண்டும்.... இதுதான் அவர் முதற்கடிதம். இது வாழ்த்திலே ஆரம்பிக்கிறது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுத - அதற்கவர் பதிலெழுத - அப்படியே வளராதா?"

பேனையும் காகிதமும் எடுத்துக்கொண்டு கடிதம் எழுதுவதற்காக மேசைக்குப் போனாள். அப்போது தாய் அவளைக் கூப்பிட்டாள்.

"தங்கச்சி, இங்கே வந்து விட்டுப்போ"

கமலாம்பாளுக்கு ஆத்திரமாக இருந்தது. ஏதோ முணுமுணுத்தபடி பேனையை மேசை மீது வைத்துவிட்டு எழுந்து சென்றாள்.

"வீட்டினுள்ளே பால் இருக்கிறது. எடுத்து வா" என்று தாய் கூறினாள். விரைவாக அதை எடுத்து வந்து கொடுத்துவிட்டுப போவதற்காகத் திரும்பினாள். அவளுடைய அவசரத்தையும் மனநிலையையும் தாய் அறிவாளா?

"வெற்றிலைக்காம்பையும் நோண்டி விடு" என்றாள்.

"என்னால் முடியாது" என்று ஒருதரம் உடலை அசைத்துவிட்டுத் திரும்பி நடந்தாள். அவளுடைய இச்செயல் அவள் தந்தைக்குப் பிடிக்கவில்லை.

"என்ன பழக்கம்! நல்லநாட் பெருநாளிலே இப்படியா நடந்துகொள்கிறது! அம்மா சொல்லுவதை நீ செய்தால் குறைந்து போவாயா?" என்றார்.

திரும்பிவந்து "சகுனம் மாதிரி!" என்று தாயைச் சபித்தபடி வெற்றிலைக் காம்புகளை நறுக்கினாள். ஒரு யந்திரம்போல இருந்தே அந்த வேலையைச் செய்தாள். மனம் கடிதம் எழுத விரைந்து கொண்டிருந்தது.

மறுபடியும் மேசைக்குச் சென்று கடிதம் எழுதத் தயாரானாள். எழுதத் தொடங்கும் போது தடைவந்த காரியம் ஆபத்தாக முடியுமோ என்று அஞ்சினாள். எதற்கும் ஜாக்கிரையாக இருக்க வேண்டும். ஒருசமயம் இக் கடிதத்தை அண்ணா கண்டுவிட்டால்! எழுதிவிட்டு எங்கேயாவது மறைத்து வைத்துப் பின் இரகசியமாகத் தபாலிற் சேர்த்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தவளாக எழுதத் தொடங்கினாள்.

முதலில் தன்னுடைய விலாசத்தை எழுதினாள். அதற்குக் கீழே தேதியை 14 .... என எழுதினாள். ஆனால் அப்பாலே மாதம், ஆண்டு இவை எழுத அந்தப் பேனையில் மை யில்லை. இந்தப் பேனையைக் குத்தி முறித்துவிட்டால் என்ன?" என்று அவள் மனம் எண்ணியது. இப்பொழுதுதானா இந்தப் பேனையில மை ஒழிந்து போகவேண்டும். பேனையை

மேசைமீது வைத்துவிட்டு ஆயாசமடைந்தவள் போல சாய்மான நாற்காலியிற் சாய்ந்தாள். கண்ணை மூடியபடி சிறிதுநேரம் படுத்திருந்தாள். மறுபடியும் சிந்தனை புரண்டது.

"நான் இதற்கு உடனே பதில் எழுதாதுவிட்டால் அவர் ஒருசமயம் நான் இதை விரும்பவில்லை என எண்ணக்கூடும். அப்படியானால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய் விடும். வலிய வந்த சீதேவியைக் காலால் உதறி எறிவது போல முடிந்துவிடும்."

எழுந்து மறுபடியும் மேசை மீதுட்கார்ந்தாள். பேனைக்கு மை விட்டுக் கொண்டு எழுதத் தொடங்கினாள். அப்போது தமையன் அங்கே வந்தான். அவனும் மேசைமீது உட்கார்ந்து யாருக்கோ கடிதம் எழுதினான். அவன் முன்னிலையிலிருந்து இக்கடிதத்தை அவளால் எழுதமுடியவில்லை. எல்லாவற்றையும் எடுத்து வைத்துவிட்டு எழுந்து நடந்தாள்.

"ஏன், இப்படி வந்து இந்த அடுப்புக்கெரித்தால் என்ன" என்று தந்தை கேட்டார். உடனே அவள் அங்கே சென்று பொங்கலுக்கு ஒத்தாசை செய்தாள். ஆனால் மனம் விருந்துக் கொண்டாட்டத்திலேயே ஈடுபட்டிருந்தது.

அன்று முதுகில் "மான்" என்றெழுதிய சீட்டைக் குத்தியது யார்? ருக்குமணியா? இல்லை. அவள் மறுகரையிலே குத்தினாள்... சொர்ணமா? இல்லை; அவளுமல்ல. அப்போ யார்? ஆமாம். அவள்தான் திலகம். திலகேஸ்வரி தான் குத்திவிட்டாள். அது எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது. பாடசாலை தொடங்கட்டும். அவளுக்கு நன்றி கூற வேண்டும்.

"வாழை மடல் அறுத்துவா" என்ற தந்தையின் கட்டளை மறுபடியும் அவளை அங்கே அழைத்து வந்தது. அப்போதுதான் பொங்கல் முடிந்துவிட்டது என்பதை அவள் உணர்ந்தாள். தோட்டத்திற்குப் போய் வாழை மடலை அறுத்து வந்து அதில் விபூதியும் போட்டுத் தந்தையிடம் கொடுத்தாள். தந்தை பொங்கலைப் படைத்து விட்டுக் கற்பூரத்தையும் எரித்தார்.

அவள் மனம் தொடர்ந்து பாடசாலை விருந்து வைபவ நிகழ்ச்சிகளையே நினைவு கூர்ந்து அன்று நடைபெற்ற விருந்துக்கொண்டாட்டத்தில் மாணவிகள் பலரும் பங்குபற்றக் கூடியதாகச் சில விளையாட்டுகளை ஏற்படுத்தியிருந்தார்கள். அதற்காக விருந்தினரை நாலு குழுவாக வகுத்துவிட உத்தேசித்தார்கள். ஒவ்வொருவருடைய முதுகிலும் அட்டைகளைக் குத்தினார்கள். ஒவ்வொர் அட்டையிலும் ஒவ்வோர் பெயர் இருந்தது. மாடு, ஆடு, அணில், மண்ணுணி, கமுகு, கழுதை, பூவரசு, மூக்கறைச்சி, நுள்ளான் இப்படிப் பல பெயர்கள். மிரு கங்களின் பெயர் உள்ளவர் ஒரு குழுவாக உட்காரவேண்டும். இப்படிப் பறவை, ஊர்வன, தாவரம் ஆக நாலு குழு.

எல்லோரும் ஒவ்வோர் குழுவாகச் சேர்ந்தார்கள். சுந்தரேசன் முதுகில் "எருது" என்று எழுதப்பட்ட அட்டை தொங்கியது. அவன் மிருகக் குழுவிலே இருந்தான். கமலாம்பாளும் மிருகக் குழுவிலேயே சேர வேண்டியவள். அவள் எழுந்து அங்கே சென்றபோது - அவளு டைய அதிர்ஷ்டம் என்றுதான் கூறவேண்டும். சுந்தரேசனின் அயலிலேதான் ஒரு இடம் காலியாக இருந்தது. தனக்குக் கிடைத்த அந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது அதில் உட்கார்ந்தாள்.

ஆண்கள் கல்லூரி ஆசிரியனான சுந்தரேசன் பல மாணவிகளின் கவனத்தைக் கவர்ந் திருந்தான். பலரும் அவன் அழகிலே மனதைப் பறிகொடுத்திருந்தார்கள். அப்படியான ஒரு

வாலிபனின் அயலிலே உட்காரச் சந்தர்ப்பம் கிடைத்தற்காக அவளுக்கு அளவு கடந்த ஆனந்தம்.

அங்கே அவன் அயலில் அவள் இருந்தபோது நடந்த ஒவ்வோர் நிகழ்ச்சி யும் இப்பொழுது அவள் மனக்கண் முன் வந்துகொண்டேயிருந்தது.

பெண்கள் பங்குபற்றக் கூடிய போட்டிகளில் எல்லாம் அதிகமாகக் கமலாம்பாள் வெற்றி யெடுத்தாள். அதைக்கண்டு சுந்தரேசன் அவளை உற்சாகப்படுத்தினான். இடையிடையே அவள் திறமையைப் புகழ்ந்தான். கமலாம்பாள் அவன் வார்த்தைகளால் உள்ளம் பூரித்தவ ளாகப் புன்முறுவல் பூத்தபடி சிறிது நாணமுங்கொண்டவளாக இருந்தாள்.இதைப் பல மாணவிகள் கவனித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் உள்ளத்திற் பொறாமையும் அரும்பியது.

சுந்தரேசன் போகும் போது அவளுக்கு வந்தனமளித்து விட்டுப் புன்முறுவலோடு விடை பெற்றுச் சென்றான். அவன் போனபின்பு மாணவிகள் செய்த "பகிடி" சகிக்கமுடியாதிருந்தா லும், அதிலே அவள் ஆனந்தத்தையும் அனுபவித்தாள்.

இவையெல்லாம் அவள்மனக்கண்முன் வந்து போயின. ஒவ்வொரு மாணவியும் தன்னை எங்ஙனமெல்லாம் "பகிடி" பண்ணினாள் என்பதை நினைக்க இப்பொழுது வெட்கமாயும், அதே சமயத்தில் இன்னதென்று கூற முடியாத ஆனந்தமாயும் இருந்தது.

சிறுவர்கள் சுட்ட வெடி ஒன்று காலிற் பட்டதும் அவள் சிந்தனை கலைந்தது. பாடசாலைக் கொண்டாட்டத்திலிருந்து வீடு வந்து சேர்ந்தாள். கற்பூரம் அணையுந்தறுவாயிலிருந்தது. சாம்பிராணி வர்த்திகளிலிருந்து புகை மேலெழுந்தது. அவள் நாசியிலும் புகுந்தது அந்த வாசனை.

கற்பூரம் அணைந்ததும் தந்தை விபூதியை எடுத்து அணிந்தார். பின்பு மற்றவர்களுக் குக் கொடுத்தார். தாயும் கமலாம்பாளும் எல்லாவற்றையும் வீட்டினுள்ளே எடுத்துச் சென்றார்கள்.

எல்லோருக்கும் கமலாம்பாளை உணவு பரிமாறும்படி கூறிவிட்டுத் தாய் வெளியே ஏதோ அலுவலாகச் சென்றுவிட்டாள். அவள் பரிமாறிய முறை மிக வேடிக்கையாக இருந்தது. சாதம் போடென்ற போது தயிரை ஊற்றினாள். ஒருவர் கறிகேட்க மற்றவருடைய இலையிற் போட் டாள். சிறுவர்கள் தண்ணீர் கேட்ட போது பழத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"என்ன தபால் வந்த நேரந்தொட்டு ஒருமாதிரி இருக்கிறாயே? ஏன் என்ன விசேடம்" என்று தமையன் கேட்டான்.

"பசியல்லவா, பசிக்களையிலே தடுமாறுகிறாள். கெதியாக எல்லோருக்கும் பரிமாறி விட்டு நீயும் சாப்பிடு" என்றார் தகப்பன்.

"அக்கா நல்லக்கா. அக்கா என்றால் அப்படித்தான் இருக்கவேணும். தண்ணீர் கேட்டால் பழம் தருவா. இன்னொரு தரம் தண்ணீர் தாக்கா... இன்னொருதரம் தண்ணீர்... கெதி யாய்த் தா அக்கா" என்று சிறுவர்கள் தமாஷ் பண்ணினார்கள்.

அவள் நிலைமை பெருஞ் சங்கடமாக இருந்தது. தானே தனிமையில் இருந்து சாப்பிட நேர்ந்தது. அவளுக்கு நல்லதாகப் போய்விட்டது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எதிர்வீட்டுப் பாட்டுப் பெட்டி பாடியது. அந்தப் பக்கவாத்தியத்தின் எஃறிக் குதிக்கும் ஓசையும், அவற்றைத் தொடர்ந்து வெளியேறும் சிருங் காரப் பாடல்களும் அவளைப் பரவசப்படுத்தின. அன்றிலிருந்து கொண்டாட்டத்தில் ஆசிரி யரின் அருகில் இருந்தபோது இது இன்னும் அவளை நன்கு உணர்ச்சியூட்டியது. மாலை நேரம் அந்தப பூச்செடிகளின் அயலிலே இம்மாதிரி ஓசை எப்படியெல்லாம் அவளைப் பரவசப் படுத்தியிருக்கும். அப்போது ஒருசமயம் சுந்தரேசன் அவளைப் பார்க்க, அவளும் சுந்தரேச னைப் பார்க்க இருவர் கண்களுஞ் சிக்கிக்கொண்டன. இருவர் உதடுகளிலும் புன்முறுவல் அரும்பியது. அதை அவளால் என்றுமே மறக்க முடியாது.

போசனம் முடிந்ததும் மேசையருகே சென்றாள். தமையன் எங்கோ வெளியில் சென்று விட்டான். ஆறுதலாக எழுதலாம் என எண்ணியவனாகப் பேனையை எடுத்து எழுதினாள்.

இப்பொழுது அவரை எங்ஙனம் விளிக்க வேண்டும் என்ற சிந்தனை அவள் எழுது வதற்குத் தடையாக இருந்தது. "கனந்தங்கிய மாஸ்ரர்" என எழுதுவதா? அல்லது "அன்புள்ள மாஸ்ரர்" என்று எழுவதா? எது சரியென்பதை அவளால தீர்மானிக்க முடியவில்லை.

"அவர் முதலிற் கடிதமெழுதினால் எப்படி விளிக்கவேண்டுமென்பதை நான் இலகுவாக அறிந்துவிடலாம். அவர் எப்படி விழிக்கிறாரோ அதற்கு ஏற்ற மாதிரி நானும் விளித்துக் கொள்ள லாம். ஆனால் அவர் தந்திரமாக வாழ்த்துக் கடிதத்தை அனுப்பி இந்தக் கஷ்டத்தை என்மீதே சுமத்திவிட்டார். நல்ல சாதுரியம்!" என்று தன் மனதுட் கூறியபடி வாழ்த்துக் கடிதத்தை எடுத்து அதில் இதற்குச் சாதகமான விழிப்பு ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். வாழ்த்துக் கடிதத்தில் அதற்கு இடமேது?

அதை மேசை மீது வைத்துவிட்டுக் கடிதத்தை எழுதத் தொடங்கினாள். எப்படி விளிப்பதென்பது இன்னும் பெரும் பிரச்சினையாகவே இருந்தது. "காதற் கடிதங்கள்" என்ற ஒரு ஆங்கிலப் புத்தகம் தமையனுடைய புத்தக அலுமாரி யிலே இருந்தது. அதை இரண்டோர் முறை இரகசியமாக எடுத்து வாசித்திருக்கிறாள். ஆனால் இதைப் பற்றி அப்போது அவள் கவனிக்கவில்லை.

திருட்டுப் பூனைமாதிரி அங்குமிங்கும் பார்த்து விட்டு எழுந்து அலுமாரியின் பக்கமாகச் சென்றாள். ஆனால் அவளுடைய கஷ்டகாலம், அந்தப் புத்தகத்தை அன்று அங்கே காண வில்லை. அவன் இரவல் வாங்கிய புத்தகம், வாங்கியவனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

திரும்பி வந்தாள். "கனம் தங்கிய மாஸ்ரர் அவர்களுக்கு" என்று ஆரம்பித்தாள். அதுதான் சரி என்று அவள் மனதிற் பட்டது.

"உங்கள் வாழ்த்துக் கடிதம் கிடைத்தது. அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்..."

மேலே எழுதுவதற்குள் அவளுடைய இளைய சகோதரன் வந்தான். தங்களோடு சதா விளையாடுவதும் செல்லங் கொஞ்சுவதுமாக இருக்கும் தமக்கை இன்று ஏதோ பேயடித்தவள் மாதிரித் திரிவதைக் கண்டு அவன் மனத்திற்குத் திருப்திப்படவில்லை. வழமை போலவென் றால் வெடிசுடும்போது வேடிக்கையாக அதில் பங்குபற்றியிருப்பாள். இன்று அவளோடு

அளவளாவி விளையாட முடியாமற் போனது அவனுக்குத் திருப்தியைக் கொடுக்கவில்லை. அதற்காக அவளோடு விளையாட வந்திருக்கிறான்.

"அக்கா, தாயம் உருட்டுவோம் வாறியா" என்று கேட்டான்.

"இப்போ வர முடியாது ; அங்கே போ" என்றாள்.

"ஏன் என்ன செய்கிறாய்?"

"வியாசம் எழுதுகிறேன். இப்போ விளையாட முடியாது."

"என்ன வியாசமக்கா? விடுதலையிலும் பாடமா? நீ சும்மா!" என்று கூறியபடி அதை வாசிப்பதற்காக அண்மையிலே போனான். அவள் கடிதத்தை மறைத்தாள்.

"ஏனக்கா மறைக்கிறாய். நீ வியாசமெழுதவில்லை. பாத்தியோ நான் சொன்னேன். நீ வேறென்னமோ எழுதுகிறாய்."

"நான் என்னென்றாலும் எழுதுவேன். அதற்குனக்கென்ன? போ; நீ போய் விளை யாடு."

"இல்லை காட்டினாற்தான் போவேன்."

"குழப்படி செய்தால் தெரியுமோ, ஐயாவுக்குச் சொல்லுவேன்."

தகப்பனுக்குச் சொல்லுவேன் என்று பயப்படுத்தியதும் அவன் போய் விட்டான். அவள் மறுபடியும் எழுதத் தொடங்கினாள்.

அவன் சிறிது நேரம் பொறுத்துச் சத்தஞ் செய்யாதபடி அவளின் பின் புறத்தில் வந்திருந்து எட்டிப்பார்தான். முதல்வரியை வாசித்ததும் கடிதம் என்பது தெரிந்துவிட்டது.

"வியாசமா? கனந்தங்கிய மாஸ்ரருக்கு" என்றிருக்குது... வியாசமா?" என்றான்.

அவள் இதை எதிர்பாரக்கவில்லையாகையால் அவன் அப்படிக் கூறியது ஆத்திரத்தை யுண்டாக்கியது. திரும்பி அடிப்பதற்குக் கையை ஓங்கினாள். ஆனால் அவன் அந்த அடி விழுவதற்கிடையில் அப்பால் நழுவி ஓடி விட்டான்.

அவள் அங்குமிங்கும் திரும்பிப் பார்த்தாள். அவன் கூறியதை யாரும் கண்டு விட்டார் களோ என்று அஞ்சினாள். ஆனால் ஒருவருமே அந்தப் பக்கத்திலில்லை அவளுடைய நல்ல காலம் அப்பபோதுதான் அடுத்த வீட்டுப்பையன் வந்து கொடி ஏற்றப் போவதற்காக அவனை யழைத்தான். அவனும் துள்ளிக் குதித்துக்கொண்டு வயற்கரைக்குப் பட்டமேற்றப் போய்விட்டான்.

"இனி எந்தக் கரைச்சலுமில்லை. விரைவாக எழுதி முடித்து விட வேண்டும். இன்னுஞ் சிறிது நேரஞ் சென்றால் புஷ்பமும், ராணியும் வந்து விடுவார்கள் ; "ரீச்சர்" வீட்டுக்குப் பொங்கற் கொண்டாட்டத்துக்குப் போக வேண்டும். அதற்கிடையில் எழுதிமுடித்துவிட வேண்டும்" என்று எண்ணிக் கொண்டு உட்கார்ந்தாள்.

அவர் என்மீது காதல்கொண்டு என் விலாசத்தைத் தேடியெடுத்து இப்படி வாழ்த்துக் கடிதம் அனுப்ப, நான் "கனந்தங்கிய மாஸ்ரர்" என்று எழுதுவது சரியல்ல. "அன்புள்ள" என்றே

எழுதவேண்டும். அன்பென்ற சொல் சாதாரணமானதுதானே. காதலிருந்தால் காதலுக்காக அதுபேசும். இல்லாவிட்டால் சாதாரண அன்பைப் புலப்படுத்தும். ஆகவே "அன்புள்ள" என்றெழுதுவதுதான் நல்லது" என்று அவள் மனம் சிந்தித்தது.

"அன்புள்ள மாஸ்ரர் அவர்களுக்கு" என்று ஆரம்பித்து "தங்கள் வாழ்த்துக் கடிதம் கிடைத்தது. அன்போடு இந்த நல்லநாளில் அனுப்பிய வாழ்த்திற்காக என் நன்றியைத் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.நான் எங்கள் கல்லூரியில் கடந்த நடந்த விருந்தின்பின் தங்களிட மிருந்து ஒரு கடிதம் வரலாம் என எதிர்பார்த்தேயிருந்தேன். அது வாழ்த்துக் கடித ரூபத்திலே தான் முதலில் வரும் என நான் எதிர்பாரக்கவில்லை. உங்களுக்கு என் விலாசத்தைத் தராது வந்ததற்காக மிக வருந்தினேன். எப்படி என் விலாசத்தைத் தங்களுக்கு அறியத் தரலாம் என் பதை நான் சிந்தித்துக்கொண்டேயிருந்தேன். ஆனால் இப்போது என் விலாசத்தை எப்படி அறிந்துகொண்டீர்களென்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தேடித்துரந்து என் விலா சத்தை அறிந்துகொண்டீர்களே. அதுவே நீங்கள் என்னிடம் கொண்டிருக்கும் அன்பைப் புலப் படுத்துகிறது...."

இப்படியே இன்னும் என்னவெல்லாமோ எழுதி உறையிலிட்டு, சுந்தரேசன் விலாசத்தை யுமெழுதிக் கடிதத்தை ஒரு மறைவான இடத்தில் வைத்தாள். வைத்துவிட்டு புஸ்பமும், ராணி யும் வருகிறார்களா என்று வாயிலில் வந்து நின்று பார்த்தாள். அவர்களைக் காணவில்லை. "இன்னும் சிறிதுநேரத்தில் வந்துவிடுவார்கள்" என்று எண்ணிக்கொண்டு உள்ளே போய் உடுப்பணிந்தாள்.

உடுப்பணிந்துகொண்டும் அதிகநேரம் காத்திருக்க நேர்ந்தது. மூன்று மணிக்கு வருவதாகக் கூறியவர்கள் நாலு மணிக்குத்தான் வந்தார்கள். அவர்கள் வாயிலில் வரும்போதே,

"பொங்குக பொங்குகவே - பால்
பொங்குக மங்களமே"

என்று கூறிக்கொண்டு வந்தார்கள். அதைக் கேட்டதும் கமலாம்பாள் சிறிது அதிர்ச்சிய டைந்தாள். இந்தப் பாடலை இவர்கள் எங்கே கண்டார்கள்?

"என்ன புதுப்பாட்டாக இருக்கே" என்றாள் கமலாம்பாள்.

"ஏன் உனக்கு வாழ்த்துக் கடிதம் வரவில்லையா"

"என்ன வாழ்த்துக் கடிதம்?"

"பொங்கல் வாழ்த்து......."

"இல்லையே! யார் அனுப்பியது?"

"சுந்தரேசன் மாஸ்ரர்"

"இல்லை, அப்படி எனக்கொன்றும் வரவில்லை"

"என்னடி, உனக்கா அனுப்பாது விட்டிருப்பார்? எங்கோ தவறியிருக்கும்... நல்லாய்த் தான் உனக்கவர் அனுப்பாது விடுவார்" என்றாள் புஷ்பம் பகிடியாக.

"ஒரு சமயம் தபாலிலேதான தவறியிருக்கும்" என்று கமலாம்பாள் அவள் கூறியதை ஆமோதித்தாள். வேறென்ன செய்யலாம்! ஆனால் முகம் சோர்ந்து விட்டது. இருந்த ஆனந்தமெல்லாம் இடந்தெரியாமல் பறந்துவிட்டது.

"நேரம் போய்விட்டது. புறப்படு" என்றாள் ராணி.

கமலாம்பாள் உள்ளே சென்று மறைவிடத்தில் வைத்த காகிதத்தை எடுத்துத் தாறுமாறாகக் கிழித்துக் குப்பைப் பெட்டியில் போட்டாள். மனம் செத்து வாடிவிட்டது.

"அது எல்லா மாணவிகளுக்கும் அனுப்பப்பட்ட சாதாரண வாழ்த்துச் செய்திதானா?

"கமலா, கெதியாய்!..." என்ற குரல் வந்தது.

"இதோ வந்துவிட்டேன்!" என்ற தனது குரல் நடுங்கிப் பதறுவது போலக் கமலாம்பாளுக்குத் தோன்றிற்று!

வரதர் புதுவருஷ மலர் - 1950

எட்டாப் பழம்

கு.பெரியதம்பி

"உன்னைப் போல நல்ல குணமுடையவனை அடைய அவள் கொடுத்து வைக்க வேண்டும். அதனால்தான் சொல்லுகிறேன்" என்ற வார்த்தை அவன் நினைவிலே அப்படியே ஊடாடிக் கொண்டிருந்தது. வேறு யாரும் கூறியிருந்தால் அதை அவன் அவ்வளவு பிரமாதமாகக் கொண்டிருக்கமாட்டான். ஓர் உயர்ந்த குடும்பத்திலே பிறந்த ஒரு இளம் பெண்ணின் வாயிலிருந்துதான் இந்த வார்த்தைகளை அவன் கேட்டான்.

இதைச் சிந்தித்தபடியே அவன் பழக்கடைக்குச் சென்றான். அவனுக்கு இன்று ஒரு ஐந்து ரூபா நோட்டுக் கிடைத்திருந்தது. அதற்குப் பழம் வாங்குவதற்காகவே கடைக்குச் சென்றான். அவனுடைய வயதான தாய் பல தினங்களாகவே படுத்த படுக்கையாக இருக்கிறாள். அவளை இருமலும் பீடித்திருந்தது. பழங்கள் வாங்கிக் கொடுத்தால் நல்லது என்று வைத்தியர் கூறியிருந்தார். சில பழங்கள் வாங்கினான்.

தாய், தந்தையை இழந்துவிட்ட மருமக்கள் - குழந்தைகள் "பாவைப்பிள்ளை" வாங்கித் தரும்படி பல தினங்களாகக் கேட்டுக்

கொண்டிருந்தார்கள். கையிலே காசிருக்கும்போது அவர்களுக்கும் ஒரு பொம்மையை வாங்கிவிடலாம் என்று யோசித்தான். பாவம், தாயில்லாக் குழந்தைகள் வேறு யாரிடம் கேட்பார்கள்? ஒரு பொம்மையும் வாங்கினான்.

பழக்கூடையை ஒரு கையிற் பிடித்தான். பொம்மையை மற்றக் கையிற் பிடித்துக் கொண்டு தெருவோரமாக நடந்தான். அந்த மாலை வேளையில் தெருவோரத்திலிருக்கும் புல் காலிற்பட 'ஜில்' என்றிருந்தது.

தெருவோரமாக இருந்த மரங்களைப் பார்த்தான். அவை மாலைப்பொழுதில் தங்களுக் குரிய கம்பீரத்தோடு காணப்பட்டன. அவற்றின் தளிர்களை அசைத்துக்கொண்டு மெல்லிய காற்று வீசியது. அவற்றிற்கு மேலே வானமும் பொன்மயமாகத் திகழ்ந்தது. மரங்களின் பசு மையை நிமிர்ந்து பார்த்தான். மேற்குப் புறமாக அந்த அழகான வானத்தின் காட்சியையும் பார்த்தான். அவன் உந்தியிலிருந்து ஒரு மூச்சு வெளியேறி வந்தது. ஐயோ, எத்தனை மாலைக் காலம் என் வாழ்க்கையில் வீணாகக்கழிகிறது!" என்று அவன் எண்ணியிருப்பான்!

காலை தொடங்கி மாலை வரை எஜமானரின் மோட்டார் வண்டியை ஓட்டவேண்டும். ஓய்வே கிடையாது. காலையில் எஜமானரைக் கந்தோருக்குக் கொண்டு போக வேண்டும். கமலாசினி - எஜமானர் மகள்; அவளைப் பெண்கள் கலாசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். அதுவும் முடிந்தால் எஜமானியின் தொல்லை அவள் அடுத்த வீட்டிற்குச் செல்வதென்றாலும் வண்டி எடுத்தாக வேண்டும். சாயந்தரம் எல்லோரையும் திருப்பி அழைத்தவர வேண்டும். எல்லாம் முடிந்தது என்று வீட்டிற்குச் சென்றால் அங்கே அன்னையின் நோய்க்குப் பரிகாரம் செய்ய வேண்டும். இடையில் குழந்தைகளின் சண டைக்கு வகை சொல்லியாக வேண்டும். தெருவில் நடந்து செல்லும் போதுதான் சிறிது ஓய்வு. அதையும் தடைசெய்ய ஒரு சிந்தனை அவன் மனத்தில் இன்று இடம்பெற்றுவிட்டது.

கமலாசனியைக் கலாசாலையிலிருந்து அழைத்துக் கொண்டு வரும் போதுதான் அது நடைபெற்றது. சில தினங்களாகக் கமலாசனி அவனுடைய சுகதுக்கங்களைக் கரிசனையாக விசாரித்து வந்தாள். அவனுடைய தாய் நோயாக இருப்பதும் அவளைப் பராமரிக்கப் பணமின்றி இவன் கஷ்டப்படுவதும் அவளுக்குத் தெரியும்.

மோட்டார் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தது. "பாவம் உன் அம்மா கஷ்டப்படுவ தாகச் சொல்லுகிறாள். இந்தா; இதைக் கொண்டு போய் அவளுக்கு ஏதாவது வேண்டியதை வாங்கிக் கொடு" என்று கூறி ஐந்து ரூபா பணம் கொடுத்தாள்.

சிறிது தயக்கத்தின்பின் மிகவும் நன்றியறிதலுடன் அதை வாங்கிக் கொண்டான்.

"உன் அம்மா. இப்படியெல்லாம் நோயால் கஷ்டப்படுவதாகச் சொல்லுகிறாயே, நீ விவா கஞ் செய்து கொண்டால், அவள் அவவைக் கவனித்துக் கொள்ளுவாள். உன் கஷ்டம் குறையும் என்று சிறிது நேரத்தின் பின் கமலாசனி சொன்னாள்.

அவள் அப்படிக் கூறியது அவனுக்கு என்னமோ ஒரு மாதிரி இருந்தது. என்றாலும் அவள் கூறியதற்குப் பதில் கூறவேண்டுமே! "எல்லாவற்றிக்கும் பணமல்லவோ வேண்டும்?" என்றான்.

"அது வேண்டுந்தான். ஆனால் உன்னை மணப்பவள் தன்னளவிலே அதிர்ஷ்டமுடையவளாகவே இருப்பாள்." "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?" 'உன்னைப் போல நல்லகுணமுள்ள ஒருவனை அடைய அவள் கொடுத்து வைக்க வேண்டும்."

"உடனே திரும்பி அவள் முகத்தைப் பார்க்க வேண்டும். அவள் முகத்திலே என்ன பாஷை இருக்கிறதென்பதைக் கவனிக்கவேண்டும்" என்ற ஆசை அவன் உள்ளத்தில் எழுந்தது. ஆனாலும் யோக்கியமான அவன் மனம் அப்படிச் செய்யவிடவில்லை. வண்டி வீட்டு வாயிலுக்கு வந்துவிட்டது. கமலாசனி இறங்கி உள்ளே போய்விட்டாள்.

அதன் பின்புதான் அவனும் பழம் வாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போனான். பழங்களைத் தாயிடம் கொடுத்தான். பொம்மையைக் குழந்தைகள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டுவந்து பறித்தெடுத்தார்கள். "இந்தப் பழங்களை எதற்காக வாங்கினாய்? எனக்காக ஏன் இப்படிப் பணத்தை வீணாக்கிறாய். இன்னுஞ் சில நாட்கள்தான் நான் உயிருடன் இருப்பேன் என்று நினைக்கிறேன். குழந்தைகளும் நீயும் இன்னும் போன மாதச் சம்பளத்தில் அரைவாசி நாட்களைக் கூடகழிக்கவில்லை. இப்படியாகப் பணத்தைச் செலவு செய்துவிட்டு என்ன செய்வாய்?" என்று தாய் கூறினாள்.

'எஜமானரின் மகள் கொடுத்தது' என்று கூற அவனுக்கு மனமில்லை. அப்படிக் கூறினால் தன்னைப் பற்றித் தாய் ஏதாவது நினைத்துக் கொள்ளுவாளோ என்று அவன் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

'அம்மா, என்ன கஷ்டப்பட்டாவது உனக்கு வேண்டியவற்றை நான் செய்தே கொடுக்க வேண்டியவன். இல்லாவிட்டால் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்க முடியாது" என்றான்.

அப்போது "மாமா அண்ணா நெடுக வைத்து விளையாடுகிறான் எனக்குத் தருகிறானில்லை" என்று முறைப்பாடு கொண்டு வந்தான் இளையவன்.

"நடராசா! தம்பிக்கும் கொடு; அவனும் வைத்து விளையாடட்டும்" என்று உரக்க கூறி அவனை அனுப்பினான். 'மாமா'

"இந்தக் குழந்தைகளின் தொல்லை. பொறுக்க முடியவில்லை. பகல் முழுவதுமே சண்டையிட்டுக் கொண்டிருந்ததுகள். இந்த வருத்தத்தோடு அந்தத் தொல்லை ஒருபுறம்" என்றாள் தாய்.

பிறகு தொடர்ந்து அவளே சொன்னாள்.

"அவர்களைக் கவனிக்கவாவது நீ ஒரு கலியாணம் செய்துகொள் என்று எத்தனைதரம் கூறிவிட்டேன். நான் உயிரோடு இருக்கும் போது நீ கலியாணம் செய்து விட்டால். அதைப் பார்த்துக்கொண்டு நான் சந்தோஷமாகச் சாவேன். நான் இந்தப் பொறுப்புக்களையும் உன்னையும் ஒருத்தியிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாகச் செத்துப் போவேன்."

இதை அவள் கூறி முடிப்பதற்கிடையில் அவன் மனம் பெருஞ் சுற்றுப் பிரயாணம் ஒன்றை முடித்தது.

"அம்மா, உன்னையும் இந்தக் குழந்தைகளையும் காப்பாற்ற என்னால் முடியவில்லை. அப்பாலே இன்னுமொரு சீவனையும் சேர்த்துக் கொண்டால் வேடிக்கையாகத்தான் இருக்கும்" என்றான்.

"நல்லவளாய், கஷ்டமறிந்த குடும்பத்தில் பிறந்தவளாய்ப் பார்த்து மணந்து கொள். அவளும் ஏதோ கால்வயிற்றுக்காவது உண்டு, உன்னுடன் சேர்ந்து இந்தக் குடும்பத்தைக் கொண்டிழுப்பாள்... எத்தனைபேர் இங்கே உனக்கு மணம் பேசி வந்தார்கள். எல்லாரும் நல்லவர்களென்று நான் சொல்லவில்லை. முத்தையா நல்லவன்; அவனுடைய மகளும் தங்கமானவள்..."

அவனுடைய மூளை குழம்பிக் கொண்டிருந்தது. நிம்மதியாக நின்று இவ் விஷயங்களைக் கேட்க அவன் மனநிலை ஏற்றதாக இல்லை. "எல்லாம் பிறகு யோசித்துச் செய்யலாம். இப்போது பசிக்கிறது" என்று கூறிக்கொண்டு சமைக்கப் போய்விட்டான்.

எல்லாவற்றையும் முடித்துத் தாய்க்கும் சிறுவர்களுக்கும் உணவு கொடுத்துத் தானும் ஏதோ சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போனான். சமையல் செய்து கொண்டிருக்கும் போதும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும் அவன் மனம் பெரும் போராட்டத்திலேயே இருந்தது.

படுத்திருந்தான். நித்திரை வர மறுத்துவிட்டது. எப்படி வரும்? சாயந்தரம் வண்டியிலே நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி. என் குணத்தைப் புகழ்ந்தாள், எனக்கு வர இருக்கும் மனைவி தன்னளவிலே அதிஷ்டக்காரி என்றாள். எதற்காக இப்படியாக அவள் புகழவேண்டும்?... ஒரு நாளும் இப்படியாகப் பேசாதவள் ஏன் இன்று இப்படிக் கூறினாள். என்னிடத்திலும் அம்மா மீதும் எவ்வளவு இரக்கம்! ஐந்து ரூபா... அவளுக்கு அது அற்பமாக இருக்கலாம். ஆனாலும் வீணாக... ஒரு சமயம் என்னிடத்திலே... இல்லை. அப்படியிருக்க முடியாது என்ன பயித்தியக்காரத்தனமான யோசனை!

பொம்மையை யாருடைய பாயில் கிடத்தி நித்திரையாக்குவது என்ற விஷயத்திலே சிறுவர்களுக்கிடையே சண்டை வந்துவிட்டது. வந்து முறையிட்டார்கள். நடுவிலே பொம்மையை வைத்துக்கொண்டு இருவரையும் இரு பக்கத்திலும் படுக்கும்படி சமாதான ஆலோசனை கூறி அனுப்பினான்.

பழையபடியும் அதே சிந்தனை 'என்ன நினைத்தேன்... ஒரு சமயம் அவளுக்கு ... இல்லை. அப்படி இருக்க முடியாது.'

சிறிது நேரஞ் சென்று "ஏன் அப்படி இருக்க முடியாது. எத்தனையோ பெரிய இடத்துப் பெண்கள் டிரைவர்மாரைக் காதலித்து இருக்கிறார்கள். சில இடங்களிலே அது கலியாணத்திலும் வந்து முடிந்திருக்கிறதே!...அவளுக்கு ஒரு வேளை என்னிடம் காதல் இருக்கலாம்" என்று கற்பனை புரண்டது.

இப்பொழுது தாய் அவனை அழைத்தாள். அவன் எழுந்து சென்றான். "எஜமானர் உன்னிடத்திலே எப்படி" என்று கேட்டார்.

"பிழையில்லை" "எப்பொழுதும் அவர் மனங் கோணாதபடி நடந்து கொள். விசுவாசமாகவும் இருந்துகொள். அப்படி அவருக்குப் பிடித்தமாக நடந்தால் உன் கல்யாணத்திற்கு ஏதாவது ஒத்தாசை செய்வார்."

"சரி அம்மா! பேசாமல் படுத்துக்கொள். அதெல்லாம் நான் நல்லமாதிரி நடந்து கொள் கிறேன்" என்று கூறிவிட்டு மறுபடியும் படுக்க வந்தான்.

தாயின் உபதேசம் மனத்திலே சுழன்றது. "ஆம் அவள்தான் காதல் வைத்தாலும், நான் அதிலிருந்து விலகி நடந்துகொள்ள வேண்டும். எஜமானர் என்னிடத்தில் வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாதகம் செய்யக் கூடாது.!"

என்றாலும் அந்த விஷயத்தை அவனால் மறக்க முடியவில்லை. மறக்க முயன்றான்; மனக் கண் முன் வந்துகொண்டே இருந்தது. விசுவாசத்தைப் பற்றி யோசித்த போதிலும் பேதை மனம் குறுக்கேதான் இழுத்துக் கொண்டி ருந்தது.

எஞ்சினியர் துரையின் மகள் டிரைவரோடு ஓடிப் போனதையும் மரியாதைக்குப் பயந்த எஞ்சினியர் போன கழுதை போகட்டும். அது எக்கேடு கெட்டாலும் காரியமில்லை' என்று மௌனமாக இருந்துவிட்டதையும் எண்ணும் போது அவனுக்குச் சிறிது சந்தோஷமாக இருந்தது. தொடர்ந்து பிரபல நியாயவாதி சோமநாதருடைய மகள் டிரைவரைக் காதலித்து அவனோடு ஓடியதும் பின்பு அந்த நியாயவாதி 'பொலிஸ்' உதவியுடன் அவளை மீட்டு பலாத் காரஞ் செய்ததாக வழக்கு வைத்ததும் அந்தப் பெண் காதலனுக்கு மாறாக சாட்சி சொல்லி அவனைச் சிறைக்கு அனுப்பியதும் அவன் ஞாபகத்தில் வந்த போது ஒருவித அச்சம் கலந்தது.

எப்படித்தான் இருந்த போதிலும் அவளுடைய உருவமும், அழகும் அவள் அன்று கூறிய வார்த்தைகளும், பணம் கொடுத்தாளே, அந்த அன்பும், இவை எல்லாவற்றையும் மறந்துவிட அவன் மனம் அவனுடன் ஒத்துழைக்கவில்லை.

அதிக நேரம் சிந்தித்தபடி நித்திரை இன்றியிருந்துவிட்டான். அவனுக்கு நித்திரை வந்த போது இரண்டுமணி இருக்கும். ஆனால் விடிய வழக்கமாக எழ வேண்டிய நேரத்திற்கு எழுந்துவிட்டான். காலையிலே தான் செய்யவேண்டிய கருமங்களை முடித்துக் குழந்தை களுக்கும் தாய்க்கும் ஏதோ உணவு கொடுத்துத் தானும் உணவருந்திக்கொண்டு புறப் பட்டான்.

வழமைக்கு மாறாக இன்று சிறிது அலங்காரஞ் செய்து கொண்டான். ஏனோ மனம் அப் படித்தான் தூண்டியது. செல்லும் வழியிலே தபாற்கந்தோருக்குச் சென்று எஜமானர் வீட்டு விலாசத்திற்கு வருங் கடிதங்களையும் வாங்கிக் கொண்டு சென்றான்.

நேரமானதும் மோட்டாரை வெளியில் கொண்டு வந்து நிறுத்தினான். கமலாசினி காரில் ஏறும்போது வழக்கத்திற்கு மாறாக ஒரு மின்வெட்டுப் பார்வையும் கூடவே ஒரு இள முறுவலையும் அவனை நோக்கி வீசிவிட்டாள். மோட்டாரும் வழக்கத்திற்கு மாறாகக் கடு வேகமாகப் பறந்தது.

வழியிலே தற்செயலாக ஒரு முறை பின்னே திரும்பிப் பார்த்தான். அவள் முகத்தில் இன்னும் அதே முறுவல். 'அம்மாவுக்கு எப்படியிருக்கிறது?' என்று ஆவலோடு கேட்டாள்.

"அம்மாவுக்குப் பழம் வாங்கிக்கொடுத்தேன். இன்று காலையிலே அவவுக்கு இருமல் தணிந்திருக்கிறது. உங்களுக்குக் கடவுள் நல்ல வாழ்வு கொடுக்க வேண்டும், என்று வாழ்த்

தினா" என்று சொன்னான். அவன் அவசியமில்லாமற் பொய் கூறுவதில்லை. பொய் கூற வேண்டி வந்த அவசிய சந்தர்ப்பத்தில் இதுவுமொன்று.

அவள் தாய் கூறிய வாழ்த்திற்கு மகிழ்பவன் போன்று மெல்ல நகைத்தபடி 'உனக்கு ஏதாவது இப்படி அவசியமான தருணம் வந்தால் என்னிடம் கேள்; நான் பணம் தருகிறேன். உன் தாயை நீ கஷ்டப்பட விடுவது நல்லதல்ல" என்றாள்.

அவள் தன்னிடம் காட்டும் அன்பிலே அவன் உள்ளம் குளிர்ந்தது. முகம் மலர்ந்தது. முறுவல் பூத்தது.

இன்னுஞ் சிறிது தூரஞ் சென்ற பின்பு "நீ எனக்கொரு உதவி செய்ய வேண்டும்" என்ற கமலாசனி தாழ்ந்த குரலிலே அவனைக் கேட்டாள்.

"உங்களுக்குச் செய்யாத உதவியை வேறு யாருக்குச் செய்யப் போகிறேன்" என்றான் மிக ஆனந்தமாக.

"உன்னுடைய நல்ல குணத்திலே எனக்கு ஒரு நம்பிக்கை உண்டு. அதனாலேதான் உன்னிடம் கேட்கிறேன். வேறு யாரிடமும் இந்த உதவியை நான் கேட்க மாட்டேன்."

அவள் பார்த்த அந்தப் பார்வை அவனை என்னவோ செய்தது!

அவள் கேட்கப்போகும் உதவியை அறிவதற்கு அவன் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

"தினமும் காலையில் வரும் போது தபால் வாங்கி வருவாயல்லவா? இனிமேல்... என் பெயருக்கு ஏதாவது தபால் வந்தால் அதை ஒருவரிடமும் கொடுத்துவிடாதே. என்னிடம் கொண்டு வந்து இரகசியமாகத் தந்துவிடு" என்றாள் கமலாசனி!

ஆவலுடன் அவளைப் பார்த்துக் கேட்டவன். ஏமாற்றத்துடன் தெருவைப் பார்க்க முகத்தைத் திருப்பிக் கொண்டு, "அதற்கென்ன அப்படிச் செய்கிறேன்" என்றான். சிறிது தூரம் வண்டி ஓடியபின் 'நீ வராத நாட்களிலே ஏதாவது கடிதம் வந்தால் தபாற்காரனையே வைத் திருக்கும்படி சொல்லு பின்பு. நீ வரும் நாட் களில் வாங்கி வா. வேண்டுமானால் அவனுக்கும்... ஏதாவது... உதவி செய். நான் பணம் தருகிறேன்" என்றாள்.

ஏமாற்றத்துக்கு அப்பாலே. ஒரு மெல்லிய அருவருப்பும் உண்டாயிற்று. 'ஆம்' என்ப தற்கு அடையாளமாக அவன் தலை அசைந்தது. ஆனால் மனம் அசைந்ததோ!

மறுமலர்ச்சி
பங்குனி - 1948

அம்மான் மகள்

கு. பெரியதம்பி

நான் தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். ஒரு மோட்டார் வண்டி தோட்டத்தின் மத்தியிலிருந்த வீட்டினெதிரே வந்து நின்றது. முதலாளி வந்திருப்பார் என எண்ணி விரைவாக அங்கே போனேன். ஆனால் முதலாளி வரவில்லை. அவர் மகன் தியாகராசன் வந்திருந்தான். தந்தையைப் போலவே அவனும் மிக நல்லவன்.

வண்டியில் ஒரு பெண்ணும் இருந்தாள். அவள் யாரென்று என்னால் மட்டிட முடியவில்லை. தலைவிரி கோலமாய் அழுது கொண்டிருந்தாள். முகத்தில் நீர்த்திவலை நிரம்பியிருந்தது. கௌரவமான குடும்பத்திற் பிறந்தவள் போலவே காணப்பட்டாள். தியாகராசன், வீட்டைத் திறந்து சுத்தம் செய்யும்படி கூறிவிட்டு தானும் வந்து ஒத்தாசை செய்தான். நாற்காலிகளை ஒழுங்காக அடுக்கி வைத்தான். மெத்தையைத் தட்டிப் போடும்படி என்னிடம் கூறினான். எல்லாம் எனக்குப் புதுமையாயிருந்தது.

வெளியே வந்தபோது அவளுடைய கழுத்தை உற்றுக் கவனித்தேன். ஒரு சங்கிலி மாத்திரம் அணிந்திருந்தாள். ஏன் அழுகிறாள்?

என்ன நிகழ்ந்தது? ஒன்றுமெனக்குப் புலனாகவில்லை. அவளை வண்டியிலிருந்து இறங்கி வரும்படி தியாகராசன் தயவாகக் கேட் டான். அவள் வரவில்லை. அழுது கொண்டிருந்தாள். அவள் செய்கையிலிருந்து அவன் மீது நிரம்பிய கோபம் கொண்டிருக்கிறான் என்பது தெரிந்தது. அவன் அறையினுள்ளே போனான். நானும் பின்னே போய், "ஏன் அழுகிறா? இனமுறையில் யாரும் இறந்து விட் டார்களா?" என்று கேட்டதற்கு 'அப்படியொன்றுமில்லை, நீ போய் உன் காரியங்களைக் கவனி என்றான்.

சிறிது நேரத்தின்பின் அவள் தானாகவே மோட்டாரை விட்டுக் கீழே இறங்கிவந்து, மெத்தையிற் குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள். மோட்டாரிலிருந்து இறங்கி, அந்தக் துக்கத்தினிடையேயும் எவ்வளவு அழகாக நடந்து சென்றாள்! நான் அவளிடம் போய் "ஏனம்மா அழுகிறீர்கள்" என்று கேட்டேன். நான் அப்படி அவளிடம் கேட்டிருக்கக் கூடாது. அது தவறு என்று பின்பு தானுணர்ந்தேன். அவள் எனக்குப் பதில் சொல்லவில்லை.

தியாகராசன் கடைத்தெருவுக்குப் போய், கோப்பியும் பலகாரமும் வாங்கி வந்தான். சிறிது கோப்பியைக் கிளாசிலே ஊற்றி அவளிடம் கொடுக்கும்படி சொன்னான். ஆனால் அவள் அதை வாங்கிக் குடிக்கவில்லை.

அவனும் பக்கத்திலே வந்து 'கமலா, இந்தக் கோப்பியை வாங்கிக் குடி" என்று சொன்னான். அவள் மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள். அவன் பேச்சு இன்னமும் அவளுக்கு நாரசமாகவே இருந்தது. ஒன்று: அவளைப் போலச் சாந்தமும் சாதுரியமும் நிறைந்த பெண்ணை நான் கண்டதில்லை! அவனுக்குச் சுடச்சுடப் பதில் சொல்லியிருக்கலாம். ஆனால் அவள் கௌரமாகவே நடந்து கொண்டாள்.

மாலையிலே நான் அறையில் விளக்கேற்றி வைத்தேன். விளக்கொளியில் அவள் சோர்ந்த முகம் நன்கு பிரகாசித்தது. இன்னும் அவள் அழுது கொண்டே இருந்தாள். மங்கிய விளக்கொளியில் நீர்த்துளிகள் முத்துப்போல என் கண்ணுக்குத் தோன்றின.

நான் படுக்கைக்குப் போவதற்கு முன் ஒருமுறை அங்கே போனேன். அவர்களுக்கு ஏதாவது உதவி வேண்டியிருந்தால் செய்து கொடுத்துவிட்டுப் போவது நல்லதல்லவா? அப்பொழுதும் அவள் அந்த மெத்தையிலே படுத்துக்கொண்டிருந்தாள். பாவம். கூனிக் குறுகிக் கொண்டு மடங்கியபடி படுத்திருந்தாள். அவன் ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி 'சிகரெட்' புகைத்துக் கொண்டிருந்தான். சிந்தனை நிறைந்த நேரத்திலே 'சிகரெட்' புகை ஏதோ ஆறுதலளிக்கிறதாம். அவனுடைய முகபாவத்தில் தவறு செய்தவன் போலக்காணப்படவில்லை. இவளை எப்படி வழிக்குக் கொண்டுவரலாம் என்று எண்ணியி ருப்பான். அவளை அழைத்து அவன் ஏதாவது கூறும் போதெல்லாம் அதிக நாட்பழக்கமுள்ளவன் போல் உரிமையும் அன்பும் கலந்த தொனியிற் பேசினான்.

எனக்குப் பூரண உறக்கமில்லை. உறங்குவதும் கலைவதுமாக இருந்தேன். இப்படியான சந்தர்ப்பங்களில் மாடுபோல உறங்க முடியுமா? சாமம் இருக்குமென எண்ணுகிறேன். அவன் பேசுவது கேட்டது. கமலா, வருந்தாதே! நான் ஒரு முரடன்தான். ஆனால் மனச்சாட்சியையும் விற்றுவிட வில்லை. நீ சிறுபருவத்தில் அன்பாக இருந்தாய்; இப்பொழுது துர்ப்போதனையால் உன் மனம் மாறிவிட்டது. இப்படிப் பிடிவாதஞ் செய்வாய் என்று நான் எண்ண

வில்லை. சரி. விடிந்ததும் உன்னைக் கொண்டுபோய் விட்டு விடுகிறேன். அந்த உத்தியோகப் பிரபுவை மணந்துகொண்டு சிறப்பாக இரு" என்று அவன் சொன்னான்.

விஷயம் இன்னதென்பது இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. பின்நான் விசாரித்தள வில் என் உத்தேசம் பெரும்பாலும் சரியாகவே இருந்தது. ஒருநாள் அவள் பாடசாலையிலி ருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் போது, இவன் மோட்டாரிற் தூக்கிப் போட்டுக் கொண்டு வந்து விட்டான். அவ்வளவு துணிச்சலுள்ளவனல்ல; சொந்த மைத்துனியை அதுவுஞ் சிறுபருவத்திலிருந்தே அன்பாக இருந்த ஒருத்தியை அந்நியன் மணந்து கொள்ள போவதென்றால் யாருக்குத்தான் ரோசம் வராது?

மறுநாள் விடிந்தது. அவள் படுக்கையிலேயே படுத்துக்கொண்டிருந்தாள். முகம் வெளி றிப்போயிருந்தது. இப்பொழுது அவள் அழவில்லை. ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல் சலனமற்றிருந்தாள். தியாகராசன் அவளைச் சாப்பிடும்படி கேட்டான். அவள் மௌன மாயிருந்தாள். "மீண்டும் ஒருமுறை கமலா சாப்பிடமாட்டாயா?" என்று விறுவிறுப்பாய் கேட் டான். பதில் இல்லை. கொதிக்கும் உள்ளத்துடன் விரைவாய் அவன் வெளியே வந்தான். மனத்திடமற்றவன் சிக்கல்களை சமாளிக்கும் ஆற்றலற்றவன். மோட்டரை எடுத்துக் கொண்டுவந்து வாசலில் விட்டான். இறங்கி வந்து "கமலா! வா. வண்டியிலே ஏறு! உன்னைக் கொண்டு போய் உன் வீட்டில விட்டுவிடுகிறேன். எனக்குப் இந்தப் பழி வேண்டாம்" என்று சொன்னான். அவள் ஒன்றும் பேசவில்லை. "வந்து ஏறவில்லையா? வா.. .. வந்து ஏறு. என்னாற் சகிக்க முடியாது" என்று கூறி அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

"வேண்டாம்; இனிமேல் அங்கே எதற்கு? நாயுந் தேடாது! இங்கேயே இருந்து அழுதழுது தொலைந்து போகிறேன்" என்றாள்.

தியாகராசன் என்ன செய்வதென்று தோன்றாமல் நாற்காலியிற் போய் உட்கார்ந்தான்.

"வண்டியில் வெயில் படுகிறது" என்று நான் கூறியபின், வந்து வண்டியை உள்ளே விட்டான்.

மத்தியானமாகிவிட்டது.காலையிலே வாங்கிவந்த உணவிலே எறும்பு மொய்த்துக் கொண்டிருந்தது. எடுத்துக் காகத்திற்கு வீசி விட்டேன்!

சாயந்தரம் அவன் தோட்டத்திலே உலாவிக் கொண்டிருந்தான். அவள் என்னைக் கூப்பிட்டாள். "இது யாருடைய தோட்டம்?" என்று கேட்டாள்

"இவர்களுடைய தோட்டந்தான்?" என்றேன். "அப்படியானால் வேறே எங்கேயாவது கூட்டிக் கொண்டு போகும்படி சொல்வது. இங்கே இருப்பது நல்லதல்ல" என்று சொன்னாள். அவன் வந்தபின் அவனிடம் சொன்னேன். ஐந்து மைல்களுக்கப்பாலிருந்த இன்னோர் தோட் டத்திற்கு அவளைக் கூட்டிக் கொண்டு போனான். என்னையும் வரும்படி அவள் அழைத்ததால் நானும் போனேன். அது வேறோர் முதலாளியின் தோட்டம். நாங்கள் அங்கே போனபோது நன்றாக இருண்டுவிட்டது. நானும் இந்தத் தோட்டக் காவற்காரனுமாகச் சமையல் செய்தோம். அவள் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள். அவன் இடையிடையே வந்து எங்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தான். உணவை மேசை மீது வைத்து "அம்மா எல்லாம் தயாராகிவிட் டது" என்றேன்.

தியாகராசனும் கால்முகம் கழுவிக்கொண்டு விரைவாக வந்து உட்காந்தான். அவள் பரிமாறினாள்;அவன் அருந்தினான். கடைசியில் அவளும் அற்பமாக உண்டாள். எனக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. நாங்களும் போசனத்தை முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போனோம். தியாகராசன் மறுநாட் காலையிலே கடைத்தெருவுக்குப் போய் சாதாரணமாக குடும்பஸ்தர்களுக்கு வேண்டிய பொருட்களை யோசித்து வாங்கிக்கொண்டு வந்தான். இரண்டு அழகான சேலைகளும் சட்டைகளும் வாங்கிக் கொண்டு வந்தான். மாலையிலே அவள் குளிக்கப் போனாள். அவள் கஷ்டப்படுவாள் என்ற அவனும் போனான். "நானே இறைத்துக் கொள்ளுகிறேன்" என்று அவனைத் தடுத்துவிட்டாள் அவள். அவன் வாங்கி வந்த சேலையைக் கட்டிக் கொண்டு விறாந்தையிலே அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த சேலை அவளுக்கு அது மிகவும் பொருத்தமாக இருந்தது.

' 'கமலா, உன் அப்பா வருந்துவார். அங்கே போய்விடுவோமோ?" என்று தியாகராசன் பரிவோடு கேட்டான். "வேண்டாம்" என்று மறுத்து விட்டாள் அவள்.

"பாவம், அந்த மாப்பிள்ளை வீட்டார் உன் தந்தையை மிகவும் வருத்துவார்களே!"

"என்தலை சுற்றுகிறது. அந்தப் பேச்சை எடுக்க வேண்டாம்" என்று கமலா சீறிவிழவே, தியாகராசன் அப்படியே அந்தப் பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அவளுக்கு விவாகம் நிச்சயமாகி நாளும் குறித்திருந்தார்கள். இப்பொழுது அங்கே போனால்...? மறுநாள் சாயந்தரம் வேறோர் மோட்டார் வண்டி அங்கே வந்து நுழைந்தது. இரண்டு பொலிஸ் சேவகர்களும் சாதாரண உடை தரித்த வேறோர் மனிதனும் இறங்கி னார்கள். சாதாரண உடையில் வந்தவன், தியாகராசனைக் காட்டி "அதோ அவன்தான்" என்றான். தியாகராசன் அப்படியே அசையாமல் நின்றான்.சேவகர்கள் அவனை பிடிப்பதற் காக நெருங்கினர்.

"நில்லுங்கள்! எதற்காக?" என்ற கமலாவின் கம்பீரமான குரல் எல்லோரையும் ஸ்தம்பிக்க வைத்தது. யாவருக்கும் பெரிய ஆச்சரியம்! பொலிஸ் இன்ஸ்பெக்டர் கமலாவைப் பார்த்துச் சொன்னார். "உங்களை இவர் பலாத்காரமாக..." யார் சொன்னது அப்படி? இவ ரையன்றி வேறு யாருக்கும் நான் வாழ்க்கைப்பட விரும்பவில்லை. அதனால் நான்தான் இவரிடம் வந்து விட்டேன்!"

தியாகராசன் தன்னை மறந்தான். அவன் உள்ளம் ஆனந்தத்தினால் பொருமி வெடித்துவிடும் போலிருந்தது. அம்மான்மகள் என்ற உறவு உரிமையும் சுயமதிப்பும் உணர்ச் சியும் நிரம்ப கம்பீராக நின்ற கமலா அவன் கண்களுக்கு இப்போ ஒருதனி அழகுடன் பிரகா சித்தாள்.

மறுமலர்ச்சி
ஐப்பசி - 1946

வீண் வதந்தி

கு.பெரியதம்பி

என் அன்பு நிறைந்த காதலருக்கு :

'காதலர்' என்று தங்களை விளிப்பதா? வேறெந்தவிதமாகவாவது விளிப்பதா? ஒன்றும் எனக்குப் புலனாகவில்லை. காதலர் என்ற வார்த்தையைக் கண்டதும் உங்களுக்கு ஒருசமயம் சிரிப்பு வரவுங்கூடும். சிரித்தாலும் சிரியுங்கள். நான் அப்படித்தான் எழுதுவேன். அதை என் மனப்பூர்வமாகத்தான் எழுதுகிறேன்.

இராமநாதனுக்கு என்னிடத்திலே காதல் இருந்தது. உண்மையே ஆனால் நான் அவரைக் காதலிக்கவில்லை என்று உங்களுக்குக் கூறியதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். அவ்விஷயத்தைப் பற்றி நாம் இருவரும் சம்பாஷித்து ஒரு வாரந்தானே ஆகிறது! அதற்கிடையில் மறந்து விடுவீர்களா!

அவரை நான் காதலிக்கவில்லை என்பதன் அர்த்தம் நான் அவரை விரும்பவில்லை என்பது அல்ல. நான் அவரை மிகச் சிறு பருவத்திலே கண்டதற்குப் பின்பு சந்தித்தது கிடையாது. அவர் என்னைக் கண்டிருக்கலாம்;காதலித்திருக்கலாம். அவர் என்னைக் காதலிக்கிறார்

என்பதும் எனக்குத் தெரியாது. 'அவன்' என்று கூறாமல் 'அவர்' என்று கூறுவதற்கு மன்னி யுங்கள். அப்படிக் கூறுவதுதான் இந்த இடத்தில் சரியாக இருக்கும் என எண்ணுகிறேன். அவர், தான் என்னைக் காதலிப்பதை முன்பே எனக்கு அறிவித்திருந்தார். நான் ஒரு சமயம் அவர் காதலை ஏற்று நானும் அவரைக் காதலித்திருப்பேன்; ஓர் சமயம் காதலியாமல் இருந்திருக்கவுங்கூடும். ஆனால், பின் நிகழ்ந்த விடியங்களைப் பார்க்கும்போது அவர் தன் காதலை எனக்கு வெளியிட்டு நான் அதை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்திருப்பின், அவர் தற்கொலை செய்ததை அறிந்து அதேகணம் நானும் தற்கொலை செய்து இருந்திருப்பேன்.

நான் தங்களுக்கு எழுதும் முதற் கடிதத்தில் எனக்குத் தங்களிடம் இருக்கும் காதற் பெருக்கையும், கலியாண நாட்களில் நான் அனுபவித்த இன்பத்தையும், அதை நினைத்து நான்படும் அவஸ்தைகளையும் பற்றி எழுதாமல், இடையிலே நானும் அறியாது நீங்களும் அறியாது காட்டிலே பூத்த மலரைப்போல அவருடைய உள்ளத்திலே மலர்ந்து அங்கேயே வாடிக்கருகிப பூண்டோடே அழிந்துவிட்ட ஒருவர் காதலைப் பற்றி எழுத நேர்ந்தமைக்காக வருந்தி இருக்கிறேன்.

அவ்விஷயத்தைப் பற்றி நீங்கள்அறியாமலிருப்பது நல்லது. அதை அறிவதால் என் னிடத்திலே தங்களுக்கு அன்பு குறையலாம் என்று எண்ணினேன். கொழும்புக்குச் செல் வதற்கு முதல்நாள் அதைப் பற்றிப் பிரஸ்தாபித்தீர்கள். நீங்கள் அவ்விஷயங்களை ஓரளவு அறிந்திருப்பீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நேருக்குநேர் கேட்பீர்கள் என நான் எண்ணவில்லை. அன்று அவ்விஷயத்தை நீங்கள் கேட்டபோது என் நெஞ்சில் ஈட்டி கொண்டு தாக்கியது போல இருந்தது. ஆனால் அதைக் கேட்டது ஓரளவிற்கு நல்லது என்றே எண்ணு கிறேன். நான் குற்றவாளியல்ல என்று கருதியே நீங்கள் என்னை மணந்ததாகக் கூறினீர் களல்லாவா? அது உண்மைதான். என்றாலும் சிறு சந்தேகங்கள் தங்கள் உள்ளத்திலிருந்தது என்பது தங்கள் சம்பாஷணையிலிருந்து புலனாகிறது. அச்சந்தேகங்களை முற்றாக நீக்கி, நான் நிரபராதி என்பதை நிலை நிறுத்துவதற்கு உங்கள் கேள்வி அரிய சந்தர்ப்பமளித்தது. அதனால் நான் பெரிதும் ஆறுதலைடைந்தேன்.

அவர் என்னை மணப்பதற்காகப் பலவித முயற்சிகள் செய்திருந்தாராம். பல நண்பர்கள் மூலமும் என் பெற்றாரிடம் எனக்கு மணம் பேசுவித்தாராம். இவையெல்லாம் நான் முன்பு உங்களுக்குத் கூறிய விஷயந்தான். ஆனால் இன்னும் என் மனச்சுமை நீங்கியபாடில்லை. ஆகையால் இரண்டாம்முறை இக்கடிதத்திலே ஆறுதலாகவும் விரிவாகவும் எழுதி, என் சுமையைக் குறைத்துக் கொள்கிறேன். அன்று உங்கள் எதிரில் நான் அதிர்ச்சியடைந் திருந்தமையால் பல விஷயங்களைக் கூறமுடியாமற் போய்விட்டது.

அவர் மணம் பேசுவித்தபோதிலும் அவர் பெற்றாரின் சம்மதத்தோடு மணம் பேசப் படவில்லை. என் பெற்றார் அப்பேச்சிற்கு முதலில் சம்மதம் அளித்தார்கள். ஆனால் அவரு டைய பெற்றார் சம்மதிக்காமையினாலேயே மணப்பேச்சுக் குழம்பியது. ஆனால், என்மீது இத்துணைக் காதல் கொண்டிருந்தவர், பெற்றாரின் தடையை மீறிவந்து மணக்க முடியா திருந்திருக்கமாட்டார். அவருடைய பெற்றார், எங்கள் குடும்பத்தின் மீது சில இழிவுகளைச் சுமத்தியே அப்பேச்சைக் குழப்பினார்கள். அது என் பெற்றாருக்கு எட்டிவிட்டது. முதலில் சம்மதம் தெரிவித்தவர்கள், பின்பு இதை அறிந்ததும் அவர் தமது பெற்றாரின் தடையை மீறி வந்து என்னை மணந்து கொள்வதையும் விரும்பவில்லை.

அவன் தன் காதலை உன்னிடம் வெளியிட்டிருந்தால் அவனை நீ மணந்திருப்பாயா? என்ற கேள்வியை நீங்கள் மிகவும் அழுத்தமாகக் கேட்டது இன்னும் எனக்கு நினை விருக்கிறது. அவர் தற்கொலை செய்துகொண்டு இறந்த பின்புதான் அவருடைய காதல், மனி தத் தன்மைக்கு அப்பாற்பட்டது என்று எண்ணினேன். அதற்குமுன் அவர் என்னிடம் தன் காதலை வெளியிட்டிருந்தாலும் அது உண்மையான காதல்தானா, அல்லது ஏமாற்றும் வகை யில் சேர்ந்ததா என்று எப்படி என்னால் தீர்மானிக்க முடியும்? அதிகமாக நான் அவர் காதலுக் காக இரங்கினாலும், மணஞ்செய்ய உடன்பட்டிருக்கமாட் டேன் என்றுதான் எண்ணுகிறேன். ஆனால் அவர் நேரிற்கண்டு என்னிடம் தன் காதலை வெளியீடாதது நல்லது என்றும் எண்ணுகிறேன்.

இன்னுமொன்று அவர் தற்கொலை செய்து இறந்ததன் பின்புதான் அவரை எனக்கு மணம் பேசிய விஷயமும் அது முறிந்த வரலாறும் எனக்குத் தெரிய வந்தது. பெற்றார் விவாகப் பேச்சை ஒரு ஒழுங்கிற்குக் கொண்டுவந்து என் சம்மதம் கேட்பதற்கிடையிலேயே பேச்சு முறிந்துவிட்டது. அதனாலேதான் அதை அறிய எனக்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

'இதற்காக ஒருவன் தற்கொலை செய்வானா? என்ற கேள்வியையும் நீங்கள் கேட்டீர்கள். இது என்னையும் அவமானப்படுத்துவதாக இருந்தது. நீங்கள் 'இதில் ஏதாவது மர்மம் இருக்க வேண்டும். எனக்கும் அவருக்குமிடையில் ஏதாவது நேசம் இருந்திருக்க வேண்டும். அல்லாவிட்டால் அவர் விரைவிலே இப்படித் தற்கொலை செய்திருக்கமாட்டார் என்ற பொருள் தொனிக்கத்தான் அப்படிக் கேட்டீர்களோ என்று நான் எண்ணினேன். ஆனால் நீங்கள் அப்படி நினைத்திருக்கமாட்டீர்கள். எதை நினைத்துத்தான் நீங்கள் கேட்டபோதிலும் அது என்னை அவமானப்படுத்தும் கேள்வியாகவே எனக்குப்பட்டது.

ஒரு சமயம் அவர் தற்கொலை செய்துகொண்டதைக் கேட்க உங்களுக்குப் பகிடியாக இருக்கலாம். இதில் ஏதோ முற்பிறவித் தொடர்பிருக்க வேண்டும். அல்லாவிட்டால் அவர் என்மீது இத்துணைக் காதல் கொண்டிருக்க நியாயமில்லை. அவர் என்மீது வைத்திருந்த காதலுக்காக நான் இரங்குகின்றேன். நீங்கள்அவரைப்பற்றி இப்படி ஏளனம் தோன்றப் பேசு வதை என்னால் சகிக்க முடியவில்லை. அன்று நீங்கள் இதைக் கேட்டபோது உங்கள் பேச்சில் எனக்குச் சிறிது வெறுப்புக்கூட உண்டாயிற்று. நீங்கள் என்மீது வைத்திருக்கும் காதல் மட்ட மானதோ என்று ஒரு சமயம் நான் எண்ண வேண்டியும் வந்தது. ஆனால் நான் அப்படி எண் ணியது தவறு. என்னை அதற்காக மன்னித்து விடுங்கள். இறுதியில் நீங்கள் காட்டிய கடிதத் தையும் அதில் எழுதப்பட்டிருந்த அபாண்டமான பழியினையும் நீங்கள் பொருட்படுத்தாமல் என்மீது இத்துணை அன்பு செலுத்தியதிலிருந்து நான் முதலில் அப்படி எண்ணியதற்காக என்னையே நொந்து கொண்டேன்.

என்னை மணந்தால் மணப்பது, அன்றேல் இந்த வாழ்க்கையை முடித்துக்கொள்வது. இரண்டில் ஒன்று என்று அவர் தீர்மானிதிருந்திருக்கிறார். இப்படியான காதல் அருமையாக வேதான் நிகழ்கிறது. இதைப் பற்றி நான் கூறிய போது அப்படியான ஒரு காதலை அனுபவிக்க உனக்குக் கொடுத்து வைக்கவில்லை! என்று நீங்கள் கூறினீர்கள். அதை நீங்கள் பகிடியாகக் கூறினீர்களோ, உணர்ச்சியுடன் கூறினீர்களோ, ஒன்றும் என்னால் தீர்மானிக்க முடிய வில்லை. ஆனால், காதல் என்பதையே உணரச் சக்தியற்ற உலக மனிதர்களுக்கு இது

அதிசயமாகவே இருக்கும். அல்லாவிட்டால் இப்படிக் கேவலமான கதையைக் கட்டிவிட்டிருக்க மாட்டார்கள். அவருக்கிருந்த பரிசுத்தமான காதலையும், அதற்காக இந்த மனிதர் கட்டிய கதைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது என் தலை சுற்றுகிறது.

அவர்கள் கட்டிய கட்டுக் கதையிலே உங்களுக்கு நம்பிக்கை இல்லாதிருந்த போதிலும் நெருப்பின்றிப் புகை எழும்ப இடமில்லை என்று நீங்கள் எண்ணிவிட்டீர்கள். நெருப்பின்றிப் புகையாது என்பது உண்மைதான். ஆனால் ஆதாரமின்றி வதந்திகள் பரவும். ஆம். அது அளவுப்பிரமாணமின்றிப்பரவும். இதற்கென்றே உலகில் எத்தனையோ பிரகிருதிகள் உயிர்வாழ்கின்றன.

நெருப்பின்றிப் புகைய நியாயமில்லை என்ற முடிவுகொண்டு தான், "நீ எப்பொழுதாவது அவனைச் சந்தித்தாயா?" என்று கேட்டீர்கள். உங்களுடைய அந்தக் கேள்வி என்னை மிக வருத்தியது. மீண்டும் மீண்டும் வற்புறுத்தி மறுத்த போதிலும் அதை நம்பாது நீங்கள்அப்படிக் கேட்டது என் வேதனையை இன்னும் கூட்டியது. ஏதோ அதோடு வரும் இரகசிய வதந்தியை வெளியிடவே அங்ஙனம் பீடிகை போட்டுக் ஆரம்பித்தீர்கள் என நான் எண்ணவில்லை.

"நான் இதுவரையும் கூறியதைக் கேட்டபின்பும் இப்படிக் கேட்டீர்களே! சத்தியமாகக் கூறுகிறேன். வீட்டோடு தங்கிய பின் நான் அவரை ஒருநாளாவது கண்டதுகூட இல்லை" என்று நான் சிறிது உணர்ச்சியுடன் கூறியபோதுதான் நீங்கள், வருத்தப்படாதே. நான் உன் மீது சந்தேகப்படவில்லை. ஆனால் உலகத்தில் என்ன பேசிக் கொள்கிறார்கள், தெரியுமா?" என்று கேட்டீர்கள். யாரும் வித்தியாசமாக எதுவும் பேசிக் கொள்வதாக எனக்குத் தெரியாது. என்னைத் தவிர்த்து, என்னைச் சூழவுள்ள எல்லோருமே நீங்கள் கூறிய விஷயத்தை அப் பழியை அறிந்திருந்தார்கள். ஆனால் என் காதில் மட்டும் எட்டவிடாது காப்பாற்றிக் கொண் டார்கள் என்று நான் இப்பொழுது அறிகிறேன்.

"தெரியாது; சொல்லுங்கள்" என்று நான் கேட்டேன். அதற்கு 'தெரியாவிட்டால் அதை நான் சொல்ல விரும்பவில்லை: தெரியாமல் இருப்பதுதான் நல்லது" என்றீர்கள். உடனே ஏதோ ஆபத்தான பழிதான் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அதைக் கேட்டு விடுவ தற்கு என் மனம் துடித்தது.

"இல்லை. சொல்லுங்கள்" என்று நான் வேண்டிக் கேட்டேன். "இல்லை. நான் சொல்ல விரும்பவில்லை" என்றீர்கள் நீங்கள். இப்படியாக அருக்க அருக்க, அதை அறிந்துவிட வேண்டுமென்ற ஆவலும்,அதில் பொதிந்து கிடக்கும் துன்பத்தின் வேகமும் பெருகத் தொடங்கின.

எப்படித்தான் கேட்டபோதிலும் நீங்கள் கூறமாட்டீர்கள் என்று கருதியே இறுதியில் என் மீது ஆணையிட்டுக் கேட்டேன். அப்போதும் நீங்கள் கூறத் துணிவு கொள்ளவில்லை. "கேட் டால் உன்மனம் வருந்தும்" என்றீர்கள். "இல்லை. வருந்தமாட்டேன்; கூறுங்கள்" என்று கேட்ட போது வேறு வழி யின்றிப் பெரும் பீடிகையுடனே ஆரம்பித்தீர்கள். நீங்கள் இப்படியாக என் மனம் வருந்தக்கூடாது என்ற எண்ணத்தால் அதை மறைக்க எண்ணினீர்கள். என் மனம் வருந்தச் சகியாத தங்கள் அன்பு என்றும் இங்கே தனிமையில் என்னை வருத்துகிறது.

"நீ வருந்தாதே. இவை ஒன்றையும் நான் நம்பவில்லை. நீ வற்புறுத்திக் கேட்பதாற் கூறுகிறேன்.." என்று பீடிகை போட்டீர்கள். அப்பால் என்முன் அதைக் கூற உங்களுக்குத்

தைரியம் வரவில்லை. உங்கள் வாயால், எனக்கு முன்நின்று கூறமுடியாத கொடிய பழிகாரி நான்! ஐயோ. கொடுவினையே! உங்கள் பெட்டியில் கடிதத்தை எடுத்து வந்து என் கையில் தந்துவிட்டு என்முன்னே நில்லாது அப்பாலே சென்று மறைந்து விட்டீர்களல்லவா?

அக்கடிதத்தில் 'விஜயலட்சுமி என்ற என் நாமத்தைக் கண்டதுமே என் தலை சுற்றியது. அப்பாலே இராமநாதனின் பெயரையும் கண்டேன் என் மூளை கலங்கியது. வாசிக்க முடிய வில்லை. சாதத்தைச் சிறிதுநேரம் அப்படியே வைத்திருந்துவிட்டு என் கண்களைக் கசக்கிக் கொண்டு மீண்டும் வாசித்தேன்.

'விஜயலட்சுமிக்கும் இராமனுக்கும் பல தினங்களாகவே காதல். இராமநாதனை மணப் பதாக அவள் உறுதி கூறியிருந்தாள். ஆனால் அவளுடைய விருப்பத்திற்கு மாறாக அவளு டைய பெற்றார் உனக்கு மணம் பேசினர்...."

இப்படியாகப் போய்க்கொண்டிருந்தது. நீங்கள் எத்தனையோ முறை இதை வாசித்திருப் பீர்கள். ஆனால், இக்கடிதத்தை வாசித்த பின் இதைப்பற்றி நான் உங்களுடன் விபரமாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஏதோ அந்நேரம் சொல்ல முடிந்ததைச் சொன்னேன். மறுநாள் கொழும்புக்குப் போக நேர்ந்துவிட்டது.

இராமநாதனுக்கு ஏதோ என்மீது காதல் இருந்தது உண்மைதான். ஆனால், எனக்கும் தங்களுக்கும் மணம் முடிவாகி இருக்கும் சமயத்தில் தற்கொலை செய்து கொள்ள விரும்பியது அவருடைய காதலுக்குச் சிறிது இழுக்கை உண்டாக்கிவிட்டது. ஏனெனில் அதனால் என் னைப் பழிகாரியாக்கி விட்டார். பாவம்! இந்தப் பொல்லாத உலகம் இப்படிப் பழிகூறும் என்று அவர் கண்டாரா? அத்தருணத்தில் தங்களைப் போன்ற வீண்பழிக்குச் செவிசாய்க்காத ஒரு உத்தமனுக்கு மணம் பேசாது யாராவது ஒரு சந்தேகப் பிராணிக்கு மணம் பேசியிருந்தால், அன்றுடன் எனது வாழ்நாள் முடிவடைந்திருக்கும். எனக்கு அபயமளித்து என் வாழ்விற்கு மலர்ச்சி தந்த உங்கள் மனதை மாற்றிவிட முயன்றார்கள் அப்பாலே.

"....இராமநாதனுக்கு அவள் இரகசியமாகக் கடிதம் எழுதினாள். அவன் ஒருநாள் இரவு அங்கே வந்து அவளை அழைத்துச் செல்ல முயன்ற போது தற்செயலாக அவளுடைய பெற் றார் கண்டு அவனை அடித்தார்கள். அடி உயிர்நிலையத்திற் பட்டிருக்க வேண்டும். அவன் இறந்துவிட்டான்.."

கடிதத்தில் இந்த வரிகளுக்கு அப்பால் நான் வாசிக்கவில்லை. இவ் வரிகளை வாசித்துக் கொண்டிருக்கும் போது நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின்பு கண்ணீர் தெளித்து உணர்ச் சியுண்டாக்கியதாக நீங்கள் கூறினீர்களே!

இவைகளெல்லாம் முழுப்பொய். கட்டுக்கதை, நீங்கள் பின் எல்லாம் அறிவீர்கள்! உங்க ளுக்கு நான் கூறவேண்டியதில்லை. இதற்கெல்லாம் நான் இந்த உலகத்திற்கு என்ன குறைதான் செய்தேனோ? எப்படித்தான் இருந்த போதிலும் ஒரு பழிகாரியை மணந்த துன்பம் தங்களை வருத்தும் என்பதை எண்ண என்னுள்ளம் வேதனையடைகிறது. இந்த விஷயத்தை நீங்கள் அறியாதிருந்தால் எத்துணை இன்பமாக என்னை நேசிப்பீர்கள்! ஐயோ நான் கொடுத்து வையாத பாவி"

நான் ஒரு கொலைப் பழிகாரி என்று எண்ணும் போது கொடிய பயம் என்னை வந்து சூழந்துகொள்ளுகிறது. தனிமையிலே அது என்னை அவஸ்தைப்படுத்துகிறது. நான் அதை மறந்துவிட முயல்வேன்; ஆனால் முடிவதில்லை.

மாலையும் மதியமும் தென்றலும் தினந்தினம் வந்து போகின்றன. அப்போதெல்லாம் தாங்கள் என் அயலில் இல்லாமையைப் பற்றி வருந்துகிறேன். இந்தத் தனிமையுணர்ச்சி யிலேதான் இராமநாதனின் மரண நினைவு தொடர்ந்து வந்துவிடுகிறது அதை எப்படி என்னால் நினையாமல் இருக்க முடியும்?

தங்கள் அன்புப் பெருக்கிலே, அரவணைப்பிலே ஆறுதல் வார்த்தைகளிலேதான் நான் இந்தத் துன்பத்தை ஆற்ற முடியும். தாங்கள் இப்பாவியின் அயலிலிருந்து. உலக வீண் பழி யைப் பொருட்படுத்தாது அன்புடன் நோக்கும் போது, நான் இத் துன்பத்தை மறந்துவிடுவேன். இத்துன்பத்தை மாத்திரமல்ல. இந்த உலகத்தையே மறந்துவிடுவேன். நேற்று நீங்கள் எழுதிய கடிதத்தில் உனக்கு வேண்டியவற்றிற்கு எழுது' என்று எழுதியிருந்தீர்கள். எனக்கு வேண்டியது இது ஒன்றேதான். என் தனிமையை நீக்க வேண்டுமென்று தான் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்
உங்களுக்கே உரிமையான
விஜயலட்சுமி.

மறுமலர்ச்சி
தை - 1948

காதலே காதல்!

கு.பெரியதம்பி

தலைமாட்டில் எரிந்துகொண்டிருந்த கைவிளக்கை அணைத்து விட்டுப் படுக்கலாமென்ற எண்ணத்துடன் தெய்வானை நிமிர்ந்தாள். அப்போது தான் வாசல்பக்கமாக அந்தச் சப்தம் கேட்டது. 'எக்எக்' என்ற விக்கலின் ஓசையும், வேதனையின் பிரதிபலிப்பான அனுங்கல் சப்தமும்...... ஐயையோ, யாரோ பெண்குரல் போலிருக்கிறதே!

"யாரது!" என்று கேட்டுக் கொண்டே, பதிலை எதிர்பாராமல் தெய்வானை எழுந்து, கையில் விளக்கையும் எடுத்துக்கொண்டு வாசல் பக்கம் போனாள். அங்கே வேதனை அலைகளை எழுப்பிக் கொண்டிருந்தது ஒரு பெண்தான்; யாரோ ஒரு இளம்பெண். விளக்கு வெளிச்சத்திலே தெய்வானை அந்தப் பெண்ணின் நிலைமையை ஆராய்ந்தாள்.

சிசு இருக்கும் வயிற்றுடனே உடலின் முழுப் பாரத்தையும் ஒரு காலிற் தாங்கி மறுகாலை இலகுவாகப் பெயர்த்து நடந்துவந்து தொடர்ச்சியான விக்கலுடனும், வெளிறிய முகத்துடனும் நிற்கும் அந்தப் பேதைப் பெண்ணைப் பார்த்தபோது தெய்வானையின் மனம் வேதனைப்பட்டது. 'யாரோ ஒரு அயோக்கியன் கசக்கி எறிந்துவிட்டான் ;

பாவம்!' என்று அவள் எண்ணினாள். தலைவாசலிலே அவளை உட்காரவைத்துவிட்டு அடுப்பிற் கொதித்துக் கொண்டிருந்த நீரில் சிறிது தேநீர் தயாரித்துக் கொண்டுவந்து அவளிடம் கொடுத்தாள். அதைக் குடித்தபோது சிறிது தெம்பு வந்து விக்கலும் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டு வந்தது.

தெய்வானை அவளை மிக ஆதரவாக அழைத்து உள்ளே உட்கார வைத்து "மகளே, நீ யார் என்பதை நான் அறியக்கூடாதோ" என்று கேட்டாள்.

அவள் உண்மையைச் சொல்ல விரும்பவில்லை. "நான் ஒரு அநாதை" என்றாள்.

"மகளே, ஒழியாதே, உண்மையைச் சொல்! நீ சொகுசாக வாழ்ந்த பெண். உன் மேனி யிலே நிழலில் வளர்ந்த அந்த மெல்லிய சாயல் இன்னும் முற்றாக மறைந்துவிடவில்லை" என்று தெய்வானை சொன்னாள். இந்த உலக நிகழ்ச்சிகளிலே பழமுந்தின்று வித்துமெறிந்த தெய்வானைக் கிழவியிடமும் பொய் சொல்ல முடியுமா?

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணுக்கு - சரஸ்வதிக்கு - அழுகையே வந்தது. தான் இந்த விஷயமறிந்த மனுஷியிடம் பொய் சொன்னதற்காகவும் நாணப்பட்டாள். நிலத்தைப் பார்த்தபடி இருந்தாள்; கண்ணில் நீர் துளித்தது. தன் அழுகையை அடக்கிக்கொண்டு தெய் வானைக்கு ஏதோ சாட்டுச் சொல்லித் தன்னைக் காப்பாற்ற எண்ணினாள் ; முடியவில்லை.

"இதெல்லாம் இப்பொழுது உலகத்தில் இயற்கை. இதற்காக வருத்தப்படாதே" என்று தெய்வானை தேறுதல் கூறினாள். அவள் நிலைமையைக் கண்டு அவளிடம் ஒன்றும் கேளாமல் விட்டிருக்க வேண்டும். பாவம், அவளுடைய பரிதாப நிலையைக் கண்டு இரங்கியே இப்படிக் கேட்டாள்.

சரஸ்வதி சேலைத் தலைப்பை எடுத்துக் கண்ணத் துடைத்தாள். தெய்வானை மேலே ஒன்றும் கேட்கவில்லை. அவளுக்கு ஆறுதல் கூறி அவளை அழைத்துக் கொண்டுபோய் பசியாற்றினாள். மத்தியானம் தனக்குச் சமையல் செய்து வைத்திருந்த சோற்றில் இருவரு மாகப் பகிர்ந்து சாப்பிட்டார்கள். அந்த உலர்ந்த சாதம் உள்ளேபோகக் கஷ்டப்பட்டது. ஆனா லும் வயிற்றிலே பசி இருக்கிறதல்லவா? ஒருவாறு கஷ்டப்பட்டு இடையிடையே நீரைக் குடித்து அதைச் சாப்பிட்டிறக்கினாள். சாப்பிடும் போது "மகளே, நீ செல்லமாக வளர்ந்த பெண் போலக் காணப்படுகிறாய்! இப்படியாக அலைந்து கொண்டு திரியாதே, பிரசவகாலம் நெருங்கு கிறது. இங்கேயே இரு நான் உனக்கு வேண்டிய ஒத்தாசை செய்கிறேன். பிரசவம் முடிந்த பின்னும் விரும்பினால் போ. "இங்கேயே இருப்பதானால் இன்னும் நல்லது. எனக்கும் உதவி யாக இருக்கும்" என்று தெய்வானை சொன்னாள்.

தெய்வானையின் பரோபகார சிந்தையைக் கண்டு சரஸ்வதி உள்ளம் குளிர்ந்தாள். இதுவரை எத்தனையோ பேர் அவளைப் பார்த்து 'வேசி' என்றார்கள்; 'கெட்டுப்போனவள்' என்றார்கள். அவளைப் பார்த்துக் காதோடு காது குசுகுசுத்து நகைத்தார்கள். பெண்களே இப்படி எல்லாம் செய்தார்கள். அப்படியானவளுக்குத் தெய்வானையின் ஆதரவு பெரிதல்லவா?

சரஸ்வதி தன் சொந்த வீட்டை விட்டுப் புறப்பட்டபின் இன்றுதான் இந்த சொகுசான படுக்கை. அதிற்படுத்தவுடன் அந்தப் படுக்கையின் சுகத்தை அவள் நயக்கவில்லை. பழைய

நினைவுகள் வந்து சிந்தனைக்குள்ளாக்கி அவளை வருத்தின. இடையிலே தெய்வானை சொன்னாள்: "பெண்ணே, நான் உன்னைப் போல அனாதரவாகவே இருக்கிறேன். பிறக்கும் போதே தாயைத் தின்றுவிட்ட என் பேரனை வளர்த்தேன். அவன் காவாலிகளுடன் கூடி ஒவ்வோர் பண்டமாகக் கொண்டு போய்த் தாரைவார்க்கிறான். இன்றைக்கு எங்கே எந்தக் காட்டிலே நிற்கிறானோ அறியேன். கையிலே இருப்பது செலவானவுடன் வருவான். காணியை விற்றுக்கொண்டு போவதற்கு. அந்தக் கழிசறையால் எனக்கொரு ஆறுதலும் கிடையாது."

தெய்வானை வருந்துவதைக் கண்ட சரஸ்வதிக்கு 'உலகிலே துன்பம் சகஜம்' என்ற எண்ணத்தினால் சிறிது ஆறுதலும் பிறந்தது. சிறிது நேரம் இருட்டிலே இருவரும் மௌனமாகப் படுத்திருந்தார்கள். பின்பு தெய்வானை ஆரம்பித்தாள் : "உனக்கு இந்த அநீதி இழைத்தவன் யார்?" - இதை கேளாமலிருக்க அவளால் முடியவில்லை.

"இல்லை ; எனக்கு யாரும் அநீதி செய்யவில்லை" என்று சரஸ்வதி சொன்னாள்.

"அப்படியானால், நீ விவாகஞ் செய்து உன் புருஷன் இறந்து ..."

"அப்படி நான் விவாகஞ் செய்திருந்தால் விதவையானாலும் சுகமாக வாழ்ந்திருப்பேன். இக்கதி நேராது."

"என்ன நடந்தது? விஷயத்தைச் சொல்லேன்"

"அவர் என்னைக் காதலித்தார்....." என்று தொடங்கியவள் அப்பாலே என்ன சொல்வது, எப்படிச் சொல்வதென்று தெரியாதவளாய் நிறுத்திக் கொண்டாள்.

"காதலித்தாரா?... ஆனால் இந்த அயோக்கிய வாலிபர்கள் இருக்கிறார்களே, காதல் காதல் என்று வட்டமிடுவார்கள், கோழிக்குஞ்சைக் கண்ட பருந்து மாதிரி! ஆனால் இவர்களுக்குக் காதல் என்றால் என்னவென்று தெரியாது. எத்தனை மலர்களில் தேனுறுஞ் சலாமோ, அத்தனை மலரையும் நாசமாக்கி விடுவார்கள்!" என்று தெய்வானை தான் அறிந்தவரையிலே சொன்னாள்.

"அவர் அப்படியானவரல்ல!" என்றாள் சரஸ்வதி.

"அவர் இப்பொழுது எங்கே!"

"நான் இருப்பது பட்டணம்; அவருடைய ஊரின் பெயரை மறந்து விட்டேன். எனக்கு நல்ல நினைவிலிருந்தது; மறந்துவிட்டேன்...."

"உன்னைக் காதலித்தார் என்றாயே; பின் ஏன் பிரிந்தார்?"

'என் பெற்றார் அறியாமல் அவருடன் நான் செல்வதென்று தீர்மானித்தோம்..."

"அவரை விவாகஞ் செய்ய உன் பெற்றார் விரும்பமாட்டார்களா?"

"விரும்பவில்லை"

"பல சீரையும் நோக்கியே பெற்றார் மணம் முடித்து வைப்பர். நான் காதல் மணம் கூடாது என்று சொல்லவில்லை. இது காதல்தானா அல்லது மோகமா. நிரந்தரமானதா அல்லது அந்த நேர அவதியைப் பொறுத்ததா. என்று தீர்மானிக்கு முன் உணர்ச்சித் துடிப்பிலே அவதிப்பட்டு

விடுவீர்கள். பிற்காலத்தை நோக்கமாட்டீர்கள். நன்மையாக முடிந்தால் சரி;அல்லது பேரா பத்து!" என்றாள் தெய்வானை.

பிறகு, "அப்பால் என்ன நடந்தது" என்று கேட்டாள்.

"தன்னூருக்குப் போய் எல்லா ஒழுங்குகளும் செய்துவிட்டு என்னை அழைத்துக் கொண்டு போவதாகச் சொன்னார். ஆனால் அவர் மீண்டு வரவில்லை. என்ன ஆபத்தோ! என்னைப் பெற்று வளர்த்த பெற்றோருக்கு அவமானத்தை வைத்து அவர்களின் கண் முன்னே இருக்க நான் விரும்பவில்லை."

"நீ என்னதான் சொன்ன போதிலும், அவன் உன்னை அணாப்பியே விட்டான்!" என்றாள் தெய்வானை.

"ஐயோ, அநியாயம்! அப்படிச் சொல்லாதீர்கள்! அவர் ஒருபோதும் அணாப்பவில்லை" என்று சரஸ்வதி திடமாகக் கூறினாள்.

"நீ சிறு பெண். உலகம் தெரியாதவள். என்ன சொன்ன போதிலும் நான் நம்பமாட்டேன். அவன் உன்னை அணாப்பியே விட்டான்.நிஜமனிதனிலும் நடிகன் கைதேர்ந்தவன். பிடி படாமல் நடப்பதே அவன் முதற்கடமை" என்றாள் தெய்வானை.

"கடவுள் மீது சத்தியஞ் செய்து கொடுத்துவிட்டுப் போனார். அப்படி ஒருபோதும் செய்தி ருக்க மாட்டார் அவர்!"

"சரி, மகளே ; நீ நித்திரை செய். முடிந்த காரியத்திற்கு வாதாடி என்ன?"

"என்றோ ஒருநாள் அவரைச் சந்திப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஏனோ தெரியாது"

"சரி சரி பேசாதே. ஆறுதலாக நித்திரை செய்" என்று தெய்வானை பேச்சை முடித்தாள்.

ஒருவர்க்கொருவர் ஆதரவாக இப்படியே நாட்களைக் கடத்திக்கொண்டு வந்தார்கள். தான் ஒரு அந்நிய வீட்டில் வசிப்பதாகச் சரஸ்வதி எண்ணவில்லை. உடம்பு சிறிது சிறிதாக மினுங்கிக்கொண்டு வந்தது. பரட்டை மயிர் கறுத்துப் பழைய நெளிவும் விட ஆரம்பித்தது. முகம் வெளிறிய நிலையிலும் சிறிது பிரகாசமடைந்தது. தெய்வானையின் ஆதரவில் துன்பத்தை அதிகமாக மறந்து கொண்டே வந்தாள் சரஸ்வதி.

◆◆◆

ஒருநாள் அங்கே ஒரு வாலிபன் வந்தான். அவனைக் கண்டதும் சரஸ்வதி ஸ்தம்பித்துப் போய்விட்டாள். என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. ஓடிப்போய் ஆனந்தக் கண்ணீர் பெருக அவன் கால்களில் விழுந்தாள். தன் எண்ணம் வீண்போகவில்லை என்று பூரித்தாள். அவன் அவளைப் பொருட்படுத்தவில்லை. காலை விடுவித்துக் கொண்டு உள்ளே போனான்.

'பாட்டி, யார் இந்தப் பெண்!' என்று ஒன்றுமறியாதவன் போலக் கேட்டான். வெளியே நிகழ்ந்ததைத் தெய்வானை காணவில்லை.

'பாவம் அனாதைப் பெண்' என்றாள் தெய்வானை.

'சரிதான். இது என்ன விபசார விடுதியா, தெருவாலே போகிறவர்களையெல்லாம் அழைத்து வைத்துக் கொள்ள!' என்று தெய்வானை மீது கோபித் தான், அருமைப் பேரன்!

'பாவம் கெர்ப்பணி. அவள் எங்கே போவாள்?'

'கிழட்டுப் பிணமே! நான் சொல்லுகிறேன்: மறுவார்த்தை பேசாது உடனே அனுப்பிவிடு!" என்று பாட்டியைப் பார்த்து அதிகாரத் தொனியோடு கட்டளையிட்டான் அவன்.

உள்ளே இந்த நாடகம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, சரஸ்வதி வெளியே புறப்பட்டுக் கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தாள். எல்லை காண முடியாத சமுத்திரந்தான் இனிமேல் அவளுக்கு இந்த உலகத்திலே தஞ்சம் கொடுக்கக் கூடியது.

மறுமலர்ச்சி
மாசி - 1947

குழந்தை எப்படிப் பிறக்கிறது?

கு.பெரியதம்பி

விளையாடச் சென்றிருந்த இடத்திலே புதிய பிரச்சினை ஒன்று அவனுக்கு உதயமாகிவிட்டது. விளையாட்டையும் நிறுத்தி விட்டுத் திரும்பி வந்து சேர்ந்தான். அப்பொழுது நான் விறாந்தையிலிருந்து வாசித்துக் கொண்டிருந்தேன். மனைவி அடுப்படியிலே சமையல் செய்து கொண்டிருந்தாள். அவன் என்னிடம் வரவில்லை; நேரே தாயிடஞ் சென்றான். "அம்மா, நடராசனுக்கு ஒரு தங்கச்சி இருக்கிறள். ஏனம்மா எனக்கில்லை?" என்று கேட்டான்.

பொறுத்த தருணத்திலேதான் இந்தக் கேள்வியைக் கேட்டான். நேற்று எதிர்பாராத வகையிலே மழை பெய்து விறகு நனைந்திருந்தது. அதை எடுத்து வந்து அடுப்பிலே வைத்து ஊதுகிறாள். ஊதுகிறாள்; பற்றியபாடில்லை. ஒரே புகைமயம். புகை குடித்து அவளிரு கண்களிலிருந்தும் நீர் பெருகிக்கொண்டிருந்தது. மூச்சு விடுவதே கஷ்டமாக இருந்தது. இந்த நிலைமையிலேதான் அவன் அலட்டுவதற்கு வந்திருக்கிறான்!

விழுந்து விழுந்து அடுப்பை ஊதிக்கொண்டிருந்தவள் நிமிர்ந்து பார்த்துப் "போடா அங்காலே!" என்று சீறினாள். புகையின்

அகோரத்தால் பெற்ற பிள்ளை என்று கூடக் கவனிக்க வில்லை. அடுப்புப் பற்றாமலிருந்தால் அம்மாவுக்குக் கோபம் வருமென்பதை அவன் முன் கூட்டியே அறிவான். ஆகையால் இப்பொழுது அவள் கோபத்தைக் கண்டு அவன் வெருண்டு விடவில்லை. "அம்மாவுக்கு உதவி செய்து அடுப்பைப் பற்றவைத்து விட்டால், அதன்பின் அவள் கோபம் தணிந்துவிடும். பின்பு எது வேண்டுமானாலும் அவளிடம் கேட்கலாம் என்று எண்ணியவனாய் வெளியே சென்று அங்குமிங்குமாகக் கண்ணைச் செலுத்திக் கவனித்தான். கோடித் தாழ்வாரத்திலே ஒரு பன்னாடை மழையிலே நனையாது தப்பியிருந்தது. அவனுக்கு அதைக் கண்டதும் பெருஞ் சந்தோஷம் வந்துவிட் டது. ஓடிச்சென்று அதை எடுத்து வந்துதாயிடம் கொடுத்தான்.

"ஏனம்மா, அடுப்புப் பற்றமாட்டேனென்கிறதோ? இந்தா, காய்ந்த பன்னாடை; இதை வைத்து ஊது" என்றான். அவளுக்கு அப்பன்னாடையைக் கண்டு அளவற்ற ஆனந்தம் வந்து விட்டது. அடுப்பிலே வைத்து ஊதினாள். ஒரே முறையில் நெருப்புப் பிரகாசமாகப் பற்றி எரியத் தொடங்கியது. அவள் சிறிது நிம்மதியாக மூச்சு விட எண்ணி வாசற்புறமாக வந்தாள். இனி மேற் கேட்டால் அம்மா கோபிக்க மாட்டாள் என்ற துணிவு அவனுக்கு வந்து விட்டது.

"நடராசனுடைய தங்கச்சி சிரிக்கிறாள், அம்மா!" என்றான். இதைச் சொல்லிக் கொண்டு அவன், அவள் காலோடு சாயந்து விட்டான். அவனுடைய சாதுரியத்தைக் கண்டு ஆனந்தமுங் கொண்டான்.

"சிரிக்கத்தானே வேணும். சிரிக்கட்டுமேன்; அதற்கென்ன?"

"இல்லையம்மா, நடராசன் தான் அவளுக்குச் சிரிப்புக் காட்டுகிறான். அவன் விளை யாட விளையாட அவள் பார்த்துச் சிரிக்கிறாள்!"

"சரி; அவன் விளையாட்டுக் காட்டினால் நீயும் போய்க் கூட விளையாட்டுக் காட்டு. அவள் நன்றாகச் சிரிக்கட்டும்" என்று தாய் கூறினாள். உடனே அவன் தன் முகத்தைத் தொங் கப் போட்ட படி, "அவன் என்னை விடுகிறானில்லை" என்றான்.

"ஏன்?"

"தன்னுடைய தங்கச்சியாம்; நான் அவளுக்கு விளையாட்டுக் காட்டக்கூடாதாம்"

"அவனுக்குத்தான் ஒரு தங்கச்சி. விடமுடியாதென்றால் இருக்கட்டும். நீ போய்ப் பம்ப ரத்தை எடுத்து வைத்து விளையாடு!"

இப்படிக் கூறினால் அவன் சென்று விடுவான்: அப்பால் தன் காரியங்களைக் கவனிக் கலாம் என்று அவள் நினைத்தாள். ஆனால் அவனா இதற்கெல்லாம் எடுபடுபவன்? தான் கேட்க வேண்டி வந்த முதற் கேள்வியை இப்போது கேட்டான்.

"நடராஜனுக்குத் தங்கச்சி இருக்கிறாள்; பத்மநாதனுக்குக் கூட ஒரு தங்கச்சி இருக் கிறாள்; ஏன் எனக்கில்லை?"

இதற்கென்ன பதில் கூறுவதென்று அவளுக்குத் தெரியவில்லை. பதில் கூறாவிட்டால் அவன் விடப்போவதுமில்லை."அப்படித்தானடா, அவர்களுக்கெல்லாம் தங்கச்சிமார் பிறந் தார்கள். உனக்கு அப்படிக் கிடை க்கவில்லை" என்றாள்.

"அதுதானம்மா நான் "ஏனென்று" கேட்கிறேன்"

"அப்படித்தானடா!" என்று கூறி மழுப்பினாள் தாய்.

"நடராசனுடைய தங்கச்சியை அவனுடைய அம்மா பெற்றா என்று சொல்லுகிறான். அப்போது நீ ஏன் எனக்கொரு தங்கச்சி பெற்றுத்தரக் கூடாது?

இதுவரை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வந்துவிட்டாள். ஆனால் இது மிகவும் கஷ்டமான ஒரு சந்தர்ப்பம். இக்கேள்விக்கு என்ன விடையளிப்பதென்பது அவளுக்குப் புலனாகவில்லை. "அடுப்பு அணைந்து விட்டது; பற்றவைத்துவிட்டு வருகிறேன்" என்று கூறி அப்பாலே சென்றாள். தான் சென்றவுடன் அவன் அதை மறந்து விடுவான் என்று எண்ணி னாள். ஆனால் அவனோ அவள் மீண்டு வரும் வரை அங்கேயே நின்று அதே கேள்வியைத் திருப்பிக் கேட்டான்.

"அதற்கென்ன, அதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். இப்போ நீ போய் விளையாடு; சமைக்க வேணும்; நேரம் போய் விட்டது. அப்பா கோபிக்கப்போகிறார்!"

"எப்போ அம்மா பெற்றுத் தருவாய்" - இன்னோர் உபவினாவையும் வினவினான். நடராசன் தன் தங்கச்சியுடன் விடாது தடுத்ததிலே அவனுக்கு அவ்வளவு கோபம். விரைவாக தனக்கொரு தங்கச்சி கிடைத்து விட்டால் அவனுக்கு ஒரு நல்ல பாடம் படிப்பித்து அவனை வெட்க வைக்கலாம் அல்லவா?

ஆனால் அவனுடைய கேள்வியைப் பார்க்க அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவ னுடைய கேள்வியைப் பொருட்படுத்தாதவள் போல வேறு பக்கம் புலனைச் செலுத்துவதாகப் பாசாங்கு செய்தாள். அவன் விடவில்லை. அவளைச் சுரண்டிச் சுரண்டிக் கேட்டான்.

"எப்போ அம்மா பெற்றுத் தருவாய்?"

"இப்போ நீ போய் விளையாடு. பெரியம்மாவினுடைய தங்கச்சியை வாங்கிக் கொண்டு வந்து தருகி றேன். நீ அவளுடன் விளையாடலாம்"

"நீ சும்மா?"

"இல்லை, உண்மையாக!"

அவனுக்கு இந்தப்பதில் சற்றே ஆறுதலளித்தது. உடனே இந்தச் சந்தோஷ செய்தியை நடராசனுக்குக் கூறிப் பெருமை கொள்வதற்காக அங்கே ஓடி விட்டான்.

மனைவியின் சங்கடமான நிலைமையைக் கண்டு எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது. அவன் வெளியில் சென்றதும் அவன் அவன் முகத்தைத் திரும்பிப்பார்த்தேன். துக் கம் பொங்கி வந்து கொண்டிருந்தது. "கண் கெட்ட கடவுள்" என்று கடவுளைச் சபித்துக் கொண் டிருந்திருப்பாள் போலவுந் தோன்றியது. இன்று அவன் கேட்ட கேள்விகள் அவளுள்ளத்தில் பழைய நினைவுகளைத் தூண்டி விட்டிருக்கும். ஒரு பெண்குழந்தை இல்லாத துக்கத்தையும் கிளறி விட்டிருக்கும். அவனைப் பெறுவதற்கு அவள் கிடந்த தவம் பெரிது. அங்ஙனம் அருமை யாகப் பெற்ற குழந்தைக்கு இன்று ஒரு தங்கச்சி வேண்டி யிருக்கிறது. அவள் என்ன செய் வாள்? இவற்றையெல்லாம் யோசிக்கப் பழைய நினைவுகள் எனக்குத் தொடர்ச்சியாகப் புரண்டு வந்தன.

விவாகஞ் செய்து பல வருடங்களாகிவிட்டன. தான் தாயாவதற்கான தன்மை தன்னிடம் காணப்படும் என்று மாதந்தோறும் எதிர்பார்த்துப் பார்த்து அலுப்படைந்துவிட்டாள் என் மனைவி. வருஷக் கணக்கிலே நாட்கள் ஓடிய பின்பு அவன் துன்பம் இன்னும் பெருகி விட்டது. மனோன் மணிக்கு நாங்கள் விவாகஞ் செய்த மறு வருஷமே விவாகம் நடைபெற்றது. அவளும் நாலு குழந்தைக்குத் தாயாகி விட்டாள். அவள் என் மனைவியைக் காணும் போது, "என்னடி, நான் உனக்கடுத்து வருஷம் தானே கலியாணஞ் செய்து கொண்டேன். இப்பொழுதெல்லாம் நாலு குழந்தைக்குத் தாயாகி விட்டேன்" என்று நோகாமற் குத்துவாள். இப்படியே அவள் தோழியர் ஒவ்வொரு வரும் "பகிடி" பண்ணிக் கொண்டிருக்க அவள் துன்பம் கங்கு கரையின்றிப் பெருகி விட்டது.

மருதடிப் பிள்ளையாருக்கும், ஆலடி விநாயகருக்கும், உள்ளூர்க் கணேஸ்வரனுக்கும் - இன்னும் இல்லாத பொல்லாத தெய்வங்களுக்கெல்லாம் விண்ணப்பங்கள் செய்தாள். பூஜைகள், அபிஷேகங்கள், குளிரச் குளிரச் செய்வித்தாள். பிள்ளை பிறந்தால் எல்லாம் தருவதாக ஆசை காட்டினாள். ஒன்றிலும் பிரயோசனத்தைக் காணோம். எத்தனையோ "சாமி"களும், சந்நியாசிகளும், சாத்திரம் சொல்லியும், ஆசீர்வாதம் புரிந்தும் ஆளுக்கு இரண்டும் மூன்றுந் தட்டிக்கொண்டு போய்விட்டார்கள்! ஒரு நேரம் பசிகிடக்கமாட்டாதவள், எத்தனை எத்தனை விரதங்களெல்லாம் பிடித்தாள்! என்ன செய்தபோதும் அந்தக் "கண் கெட்ட தெய்வம்" கண் திறந்து பார்க்க வில்லை!

கதிர்காமக்ஷேத்திரத்தைப் பற்றி யாரோ அவளுக்குக் கூறிவிட்டார்கள். என்னிடம் வந்து கதிர்காமம் ஒரு புதுமையுள்ள ஷேத்திரம் என்றும், அங்கே சென்று வணங்கினால், நிச்சயம் பலன் கிடைக்கும் என்றும் கூறினாள். அவள் விருப்பத்தைத் தடைசெய்ய நான் விரும்ப வில்லை. ஒரு முறை அப்புண்ணிய தலத்தின் மகிமையையும் பரிசோதித்து விடுவது என்ற நோக்கத்துடன் புறப்பட்டோம்.

அங்கே போய்த் தரிசித்து வந்த பலனும் ஏமாற்றந்தான். ஆனால் ஆறு மாதங்கழித்து சில மாற்றங்கள் மனைவியிடத்திலே தோன்றின. "ஆறுமாதஞ் சென்றாலும் காரியமில்லை; அது கதிர்காமத்தையன் கிருபைதான்" என்பது மனைவியின் அபிப்பிராயம்.

ஓங்காளம், புரட்டல், உணவுக்கு மனமின்மை இப்படியாகத் தொடர்ந்தது. பத்துமாத இறுதியிலே மருத்துவப் பெண் "யார் வெளியிலே; கூரையிலே தட்டு" என்றாள். ஆண் பிள்ளையல்லவா! அதற்குத் தந்தையாகிவிட்ட உசாரிலே கூரையிலே பெருமையுடன் தட்டினேன்.

இன்றைக்கு அவனுக்கொரு தங்கச்சி வேண்டுமாம்!

"எப்போ அம்மா பெற்றுத் தருவாய்?" என்ற கேள்விக்குத் தாய் சரியான பதில் கொடாது, "பெரியம்மாவின் தங்கச்சியை வாங்கித் தருகிறேன்" என்று கூறியது அவனுக்குத் திருப்தியாயிருந்தது. போனான். ஆனால் அங்கே நடராசன் சும்மாவிட்டானா? "பெரியம்மாவினுடைய தங்கச்சியை, அவளண்ணன் சிவபாலன் விடுவானா? விடமாட்டான். உன் அம்மா, உன்னை அணாப்பி இருக்கிறாளடா!" என்று சொல்லி விட்டான். அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. அவமானமாயும் இருந்தது. மனம் போனபடியே ஏதேதோ எல்லாம் சிந்தித்துப் பார்த்தாள்.

"என்னைப் பெற்றது யார்? அம்மாதானே பெற்றாள்? அப்படியானால், அவள் ஏன் ஒரு தங்கச்சியும் பெறக்கூடாது?மீண்டும் மீண்டும் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். அப்பொழுது "என்னை எப்படி அம்மா பெற்றாள்?" என்ற எண்ணம் உதயமாகி விட்டது. திரும்பி வந்தான்.

"அம்மா, என்னை நீ தானே பெற்றாய்?"

"ஆமாம்"

"எப்படியம்மா பெற்றாய்?"

மீண்டும் ஒரு கஷ்டமான சந்தர்ப்பம் வந்துவிட்டது. முன் போலவே , ஏதோ சிந் தனையிலிருப்பவள் போலக்காட்டி அதைக் கவனியாதவள் போலப் பாசாங்கு செய்தாள்.

"சொல்லேன், நான் எப்படிப் பிறந்தேன்?" என்று மீண்டும் கேட் டான்.

அப்பொழுது அயல் வீட்டுக் கிழவி ஏதோ பொருள் இரவல் கேட்டு வந்தாள். அவள் முன் னிலையில் இதே கேள்வியைக் கேட்டால் அவள் பரிகசிப்பாளே என்ற எண்ணம் தாய்க்கு வந்தது. உடனே "வீட்டுக்குள்ளே வடை இருக்கிறது; அதை எடுத்துச் சாப்பிடு!" என்று கூறி னாள். அவன் வடையை எடுப்பதற்காகப் பறந்து சென்றான். இதற்கிடையில் அயல் வீட்டுக் கிழவி வந்த காரியத்தை முடித்து விரைவாக அனுப்பி விட்டாள்.

"அம்மா, வடை சாப்பிட்டு விட்டேன்.... எப்படியம்மா என்னைப் பெற்றாய்? என்று கேட் டுக்கொண்டே வந்தான்.

"கத்தியைக் காணவில்லை. வீட்டுக்குள்ளே சென்று அதைத் தேடி எடுத்துக் கொண் டுவா" என்று கூறினாள். அதை அவள் உயரத்திலே வைத்திருந்தாள். அவனுக்கு எட்டாது. அதை எடாது வந்தால் மீண்டும் கத்தியை எடுத்து வரும்படி அனுப்பலாம். இப்படியாகக் கடத்தி விட எண்ணினாள். ஆனால் ஏதோ உபாயமாக உயரம் வைத்து கத்தியை எடுத்து வந்து தாயிடம் கொடுத்து விட்டு, "எப்படி யம்மா பிறந்தேன்" என்று மீண்டும் கேட்டான்.

வேறு வழியின்றி "அப்படிக் கேட்கக்கூடாது ராசா! என்று தாய் கூறினாள்.

"ஏனம்மா?"

"சீ! அது கூடாது?"

"ஏனம்மா அது கூடாது?"

"அப்படித்தான்; அது கேட்கக் கூடாது"

"ஏனம்மா... நீ சும்மா சொல்லுறாய்... நன் எப்படிப் பிறந்தேன்?... சொல்லு!"

"அப்பாவிடம் போய்க்கேள்; அவர் சொல்லுவார்.

"ஏனம்மா உனக்குத் தெரியாதா?"

"நான் சமைக்க வேணும், நீ அப்பாவிடம் போய்க் கேள்!"

கடைசியாக என்னிடம் வந்தான்.

"அப்பா, நான் எப்படியப்பா பிறந்தேன்?"

"எனக்குத் தெரியாது. அம்மாவிடம் போய்க் கேள்!"

"அவ உங்களிடம்தான் கேட்கச் சொன்னா"

"இல்லை, அவளிடம் தான் போய்க்கேள், அவள்தான் உன்னைப் பெற்றவள்"

மீண்டும் தாயிடம் போய் "நீ தான் என்னைப் பெற்றாயாம். அப்பா அப்படித்தான் சொல்லு கிறார்... நான் எப்படிப் பிறந்தேன். சொல்லம்மா!" என்றான்.

அவள் வெளியே பார்த்துச் சற்றுப் பலமாக, "என்னவாம் உங்கள் குழந்தை!" என்றாள்.
"ஏன்?" என்று கேட்டேன்.

"அப்பரைப்போல, மகனும் விடுப்புப்பிடுங்கி" என்றாள்.

"ஏன் சொல்லிவிடேன்; நீ தானே பெற்றாய்!"

நான் இப்படிக் கூறியதும் அவளுக்குக் கோபம் வந்து விட்டது. நான் ஏதாவது உபா யமாக அவனைச் சமாளித்து விடுவேன் என அவள் எண்ணினாள். அவ்வெண்ணமும் வீணாகப்போகவே அவளுக்கு அவன் மீது கோபம் வந்து விட்டது.

"போடா, போய் வெளியே விளையாடு!" என்றாள்.

"சொன்னால்தான் போவேன்" என்றான், தீர்மானமாகத் தலையை ஆட்டிக் கொண்டே.

கோபம் வந்தால் தெரியுமா? என்றான்.

நான் இன்னும் தாமதித்தால் அவனுக்கு அடி விழுந்து விடும். அந்த அடி அவனுக்கு மாத்திரம் அடித்த அடியாக இராது; எனக்கும் சேர்த்து அடித்த அடியாகவே ஆகும். அதற்கு முன், "தம்பி, இங்கே வாடா! நான் சொல்லுகிறேன்" என்றேன். ஓடி வந்து "சொல்லுங்கோ, சொல்லுங்கோ" என்றான்.

"உன்னை அம்மா பெற்றது என்று கூறியதெல்லாம் சும்மா"

"அப்போ?"

"விலைக்கு வாங்கினோம்"

"எங்கே?"

"கோவிலிலே!"

"எந்தக் கோவிலிலே அப்பா?"

"கதிர்காமத்தில்"

"பொய்"

"இல்லை, உண்மையாய்!"
"அப்போ ஒரு தங்கச்சியும் வாங்கித் தருகிறீர்களா? என்று கேட்டான்.

"ஓ" என்றேன்

"எப்போ?"

"திருவிழாவுக்கு இன்னும் காலமிருக்கிறது; அப்போது வாங்கித் தருகிறேன்" என்றேன். உடனே "நடராஜனுக்குச் சொல்லப் போகிறேன்" என்று கூறியவாறே கையிலே தட்டிக் கொண்டு ஓடினான். அடுக்களைப் பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

அவள் முகம் மலர்ந்தது!

மறுமலர்ச்சி
கார்த்திகை - 1947

மனமாற்றம்

கு. பெரியதம்பி

"பெண் படித்தவள், அழகானவள், நாகரிகமானவள், நிரம்பச் சீதனமுண்டு" என்று அவர் கூறினார். அதைக்கேட்டு அவன், இரை கிடையாமல் அவஸ்தைப்பட்ட நரி உயரத்திலே கிடந்த திராட்சைக் குலையைக் கண்டு வாயூறியது போல அங்கலாய்த்தான். தனக்குச் சீதனம் பிரதானமல்ல. அழகும் நாகரிகமும் இருந்துவிட்டாலே போது மென்று முருகேசு எண்ணியிருந்தான். சீதனமுங் கிடைத்தால் யார் வேண்டாமென்று சொல்லுவார்கள்! அவனுக்கு ஒரே ஆனந்தம்.

இந்தக் கல்யாணம் தப்பிவிட்டால் அவன்பாடு அதோ கதிதான். வேறு யார் அவனுக்கு மணம் பேசுவது? தாய் தந்தையர் வள்ளி யம்மையை முடித்தாற் சரி, அல்லது அவளுக்கு எங்கேயாவது கல்யா ணம் ஆகும்வரை உனக்கு வேறு பெண்ணைக் கட்டிதர முடியாது" என்று கூறிவிட்டார்கள். வள்ளியம்மை அவனது மைத்துனி. அந்தப் பெயரைக் கேட்கவே முருகேசுவுக்கு மிக வெறுப்பாயிருந்தது. லீலா, நீலா, புஷ்பம், ராணி என்றெல்லாம் இரண்டு மூன்று எழுத்தில் அழ கான பெயர்கள் இருக்கும்போது இதென்ன பெயர்! "அம்மையைத் தள்ளி

விட்டுச் சுருக்கமாக அழைத்தால், "வள்ளி" என்றுதான் அழைக்க வேண்டும். அவனுக்கு ஒரே அருவருப்பாக இருந்தது. படிப்புக் குறைவு. அழகும் மட்டம். நாகரிகமே அறியாத பட்டிக் காட்டுப்பெண். அவளைக் கல்யாணம் முடித்துப் பட்டினத்துக்கு அழைத்துச் சென்றால் அங்கே கதிரையில் உட்கார்ந்து கொள்ளவே அவளுக்குத் தெரியாது. ஆடவர்களைக் கண்டால் ஓடி ஒளிந்து விடக் கூடும். நித்திய பிரம்மச்சாரியாக இருந்து வாழ்க்கையை அனுபவியாது இறந்து விட்டாலும் காரியமில்லை் அந்த வள்ளியம்மையை மட்டும் மணப்பது இல்லை" என்று அவன் தீர்மானித்து விட்டான். பட்டணத்திலே அரைக்குக் கீழே இறங்கியதும் இறங்காததுமான சட்டை அணிந்த பள்ளிக்கூடப் பெண்கள் இரட்டைப் பின்னலைச் சிலுப்பி மாறிமாறித் தோள் மீது எறிந்து நடக்கும் காட்சியைப் பார்த்துப் பார்த்து அவன் நன்கு நயத்திருக்கிறான். நடு மார்பை மாத்திரம் மறைத்துத் தாவணியணியும் நாரீமணிகள் உயர்ந்த குதிச் செருப்பிலே சறுக்கிச் செல்வதைக் கண்டு மனதைப் பறிகொடுத்து, "இதுதானோ அந்த அன்னநடை" என்று இன்னுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறான். இந்தக் காட்சிகளையெல்லாம் கண்ட கண்ணுக்கு வள்ளியம்மை பொலிவாக இருக்கவில்லை. உலகிலே இப்படியாக மினுக்கித் தளுக்கி ஒயிலாய் நடக்கும் சிங்காரிகள் எத்தனையோ பேரிருக்க அவன் இந்த வள்ளியம்மையையா மணந்து கொள்ள வேண்டும்!

இத்தனைக்கெல்லாம் அவன் ஏதோ பிரபு வீட்டுச் சுகுமாரனல்ல. நாகரிகத்திலே பிறந்து நாகரிகத்திலே சுழியோடி முக்குளித்தவனல்ல. அசல் நாட்டவன். பட்டிக்காட்டுத் தாய்க் கும் தந்தைக்கும் புத்திரனாகப் பூமிப்பிரவேசஞ் செய்தவன். பாவம், அப்படியாகப் பிறந்ததற்காக இன்று அவனுக்கிருக்கும் மனவருத்தம்! அது அவனுக்கும் அவனைப் படைத்த அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். தந்தை இன்னமும் அந்தச் செம்பாட்டுக்காவி ஊன்றித் தடித்த நாலுமுழ வேட்டியை முழங்காலுக்கு மேலே கட்டிக்கொண்டிருந்தார். பரட்டைத் தலைமயிர் நிரம்பிய பொலிவற்ற முகம் வெய்யிலிலே காய்ந்து கறுத்த மேனி இவை இன்னு மின்னும் பெருகினவேயன்றிக் குறைந்தபாடில்லை.

"அம்மா, நீ குறுக்கே கட்டுவதை நிறுத்திவிட்டு இனிமேல் இறவுக்கையும் மாறாடியும் போடம்மா" என்று சொல்லிப் பார்த்தான். "இதுவரையும் மில்லையாம். இந்தக் கிழட்டுக்கு இனி ஏனடா அதெல்லாம்" என்று அவள் மறுத்துவிட்டாள். இந்தப் பட்டிக்காட்டுச் சவங்களைத் தன் தோழர் கண்டுவிட்டால் தன் கௌரவத்திற்கு இழுக்கு வந்துவிடும் என்று அஞ்சியதால் நண்பர்களை அவன் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வதில்லை.

அவன் முதன்முதல் கொழும்பிற்குச் சென்றபோது நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் இப்போது மறந்துவிட்டான். "யாழ்ப்பாணத்தில் இருந்து எப்போ வந்தது" என்று சிங்கள வாலிபர்கள் ஆங்கிலத்திலே கேட்டு நகைத்தார்கள். கண்டால் தெரியாதா கம்பளி ஆட்டு மயிரை! அசல் நாட்டவன் என்று அப்படியே தெரிந்தது. சப்பாத்துக்காலை இழுத்திழுத்து நடந்தபோது நண்பர்கள் செய்த ஏளனந் தாங்காது ஒரே ஒரு நாள் மாத்திரம் அழுதிருக்கிறான்.

அதெல்லாம் இப்போது அவன் நினைவில் இல்லை. அவ, அது பெரிய நகரவாசி. நாகரிகம் நன்றாய்ப் பிடிபட்டுவிட்டது. அப்பட்டணவாசி முருகேசுவுக்கு இந்தப் பெரியவர் பேசிய பெண், வாழ்க்கைத் துணையாக வந்துவிட்டால் பட்டிக்காட்டிலிருந்து விலகி முற்றாகவே நாகரி உலகில் திளைத்து விடுவான். ஆம், அவன் மனம் அப்படித்தான் எண்ணியது.

இப்படி அழகான நாகரிகமான பெண்ணை மணம் பேசிய பெரியவரைக் கண்டு ஆரம்பத்திலே அவன் வெறுப்புக்கொண்டான். அவருடைய தோற்றம் தந்தையின் தோற்றம் போல் நாட்டுப்புற மாதிரியிலே இருந்தது. இப்பொழுது நாட்டவரைக் கண்டால் அவனுக்கு ஒரே வெறுப்பு. ஆனால் அதைப் பெரியவர் கவனியாதது போல் அவனோடு பேச்சுக்கொடுத்தார். அவர் ஆரம்பத்தில் "தம்பி, இது வெய்யிலல்ல நெருப்பு என்று அகோரமான வெயிலை விஷயமாக எடுத்து கொண்டார்.

அவன் பதில் கூறாது வேறெங்கோ புலனைச் செலுத்தியிருப்பவன் போலப் பாசாங்கு செய்தான்.

"என்ன தம்பி, நான் சொல்லுவது சரியில்லையா?" பதிலில்லை .

"ஏன் உமக்கு இந்த வெய்யில் குளிருகிறதா?"

இப்பொழுதும் பதிலில்லை.

பெரியவர் இலேசானவரல்ல. இவன் முந்தநாட் பிறந்தவன். இவனா அவரை அசட்டை செய்வது! அவருக்கு இவனையும் தெரியும், இவனப்பனையும் தெரியும்."

"அது உம்முடை குற்றமில்லைத் தம்பி....."

இந்த வார்த்தைகளைக் கேட்டு மெல்ல அவரை நோக்கினான். ஆனால் அதற்கிடை யில் அவர் கூறி முடித்துவிட்டார்:

".... பருவக்கோளாறு, வெய்யில் குளிரும்; நிலவு சுடும் அது இந்தப் பருவத்தின் இயல்பு."

அசடு வழிய அவரை நோக்கினான்.

"ஆமாம். அப்படித்தான்" என்று இன்னும் வலியுறுத்தினார். ஒரு கன்னத்தில் அடி விழுந்த அதிர்ச்சி நீங்குவதற்கிடையில் மறு கன்னத்திலும் அடி விழுந்தது போல் இருந்தது அவனுக்கு.

நீங்கள் கூறுவதைக் கவனிக்கவில்லை. மேலே இருந்த குருவியைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டேன்" என்று சமாளிக்க முயன்றான். குரல் தளர்வாக இருந்தது.

"குருவியிலே மனதைப் பறிகொடுக்கக்கூடிய பருவந்தான்" என்றார் குமாரர்.

இன்னுமின்னும் அவர் வார்த்தைகள் அவனைத் தாக்கி அதிர்ச்சி அடையும்படி செய்தன.

இது அந்தப் பெரியவர் குமாரருடைய இயல்பான சுபாவம். தலைக்கிறுக்குப் பிடித்த பேர்வழிகளை முதலில் தன் வாய்ச்சாதுரியத்தால் மடக்கிவிடுவார். பின்பு இயல்பாகவே பேசிக் காரியம் பார்ப்பார். அல்லாவிட்டால் அவருக்கு வெற்றி கிட்டுவது அசாத்தியம்.

குமாரர் கீழிறங்கிப் பதுமையாகப் பேசினார். முருகேசுவுக்கு நெஞ்சிலே சிறிது சிறிதாகத் தண்ணீர் வந்தது. அவனுடைய ஊர், பெயர், தொழில் இவற்றைப் பற்றி விசாரித்தார்.

அவனுடைய ஊரிலே இருக்கின்ற பெரிய மனிதர்களின் பெயர்களைக் கூறி அவர்க ளெல்லாம் தமக்குச் சிநேகிதம் என்றார். தம்முடைய மருமகனும் கிளாக் உத்தியோகத்தில் இருப்பதாகக் கூறிப் பெருமை கொண்டார்.

பேசிக்கொண்டிருக்கும் போது குமாரர் அவன் கையில் மோதிரம் இருக்கிறதா என்று பார்த்தார். "நீ கல்யாணமானவனா? என்று கேட்கலாமோ என்றும் யோசித்தார். ஆனா அப்படிக் கேட்கக்கூடாது" என்று அவர் மனம் கூறியது.

எதற்காக மூளையைப் போட்டு உடைக்க வேண்டும். வெற்றிலைப்பை இருக்கிறதே. அதை வெளியே எடுத்தார். தானும் வெற்றிலையைப் போட்டுக்கொண்டு அவனையும் போடும்படி நீட்டினார். "நான் போடுவதில்லை " என்றான். "ஒருநாளும்..." "இல்லை " "அப்படியானால் இன்னும் உமக்குக் கல்யாணமாகவில்லையா?"

"இல்லை " என்றான். "இன்னும்" என்ற போது அவர் சிறிது அழுத்தமாக உச்சரித்தார். அந்த அழுத்தம் அவன் நெஞ்சிலும் சென்று அழுத் தியது. அப்போது அவன் முகமிருண்டது. ஆனால் அதைக் கண்டு குமாரர் முகம் மலர்ந்த காட்சி அவனிடமிருந்த முகமலர்ச்சியும் இவரிடமேதான் வந்துவிட்டதோ என்று எண்ணும்படியாக இருந்தது. அவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். புன்முறுவலை வெளித் தோன்றவிடாது அடக்கிவிட்டார்.

"நீர் விவாகம் செய்த ஆள் என்று எண்ணினேன்" என்றார். அவன் துக்கம் அதி கரித்துவிட்டது. அது பெற்றோர் மீது ஆத்திரமாக மாறியது. இதுகால வரையில் அவனுடைய உத்தியோகத்திற்கும் " கௌரவத்திற்கும் தக்கதாக ஒரு பெண்ணை முடித்துக் கொடுக்க வில்லையே! "வள்ளியம்மையாம் வள்ளியம்மை! அந்தச் சவத்தை யாருக்கு வேணும்? அம்மானுக்கு முன்கூட்டி முடிவு சொல்லி விட்டால்..... யாரைக் கேட்டுச் சொன்னார்கள்? எனக்கா அவர்களுக்கா கல்யாணம்? என்னைக் கேளாது முடிவு சொல்ல இவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?" இவற்றை யோசிக்கும் போது அவனுக்கு ஒரே சினமாக இருந்தது.

குமாரர் மெல்லக் குறுக்கு விசாரணையில் இறங்கினார்.

"நீர் ஏன் இன்னும் விவாகம் செய்யவில்லை?"

பதில்கூற அவனால் முடியவில்லை . "கடனிருக்கிறதா?"

"இல்லை"

"கரை சேராத குமர்...?"

"இல்லை "

இல்லை இல்லை என்று கூறுகிறானேயன்றிக் காரணத்தைக் கூறவில்லையே!

"உமக்கு விருப்பமற்ற இடத்திலே மச்சாள் கிச்சாள்."

"ஓ. அந்தத் தொல்லைதான்" என்று ஓய்ந்த குரலிலே கூறினான் முருகேசன்.

"இது பெரிய அநியாயந்தான்" என்றார் குமாரர். தொடர்ந்து "அவனவன் விருப்பத்திற்கு மணக்க விட வேண்டும். பெற்றார் இதிலே தலையிடுவது தவறு" என்றார்.

அப்போது அவன் நோக்கிய நோக்கு முற்றுஞ் சரி“ என்று கூறுவது போல இருந்தது. “நான் அவளை முடிக்கப் போவதில்லை ” என்றான் அவன்.

“ஏன் அழகில்லையா? பணமில்லையா?... நீர் விரும்பாததற்குக் காரணம் என்ன?” “அழகும் பணமும்! சுத்தப் பட்டிக்காடு.”

“அவனவன் உத்தியோகத்திற்குத் தக்கதாக நாகரிகமான பெண் வேண்டும். நீர் சொல்வது நியாயமே” என்றார் குமாரர்.

“நான் இறந்தாலும் அவளை முடிக்கப் போவதில்லை” என்றான் அவன்.

“அப்படியானால் விவாகஞ் செய்யாமலிருக்கப் போகிறீரா?” ”ஏதோ பார்ப்போம்.”

“சரி தம்பி, நான் உமக்கு ஒரு கல்யாணம் பேசட்டுமா?” என்று குமாரர் கேட்டார். அவர் கேட்ட தொனியில் அவன் நிலைமைக்கு இரங்கிப் பரோபகார சிந்தையுடன் அதை ஒழுங்கு செய்து கொடுக்க முயல்வதாகவே தோன்றியது.

அவன் யோசித்தான். “ஏன் யோசிக்கிறீர்? உமது கஷ்டத்தைப் பார்த்துத்தான் கூறுகி றேன். இங்கிலீஷ் நிரம்பப் படித்த பெண். அழகானவள். உமக்காகத்தான் ஒழுங்கு செய்வ தாகக் கூறினேன். விரும்பாவிட்டால் விடும். எனக் கென்ன?”

”வேண்டாம்“ என்று கூற அவன் மனம் துணியவில்லை. எப்படித் துணியும்? அவர் மேலும் கூறினார் பெற்றாருக்கு ஒரே பெண். இப்பொழுது காசாகப் பதினையாயிரம் கொடுப் பார்கள். சொத்து வேறே. மீதி ஏதாவது இருந்தால் அதுவும் அவளுக்குத்தான் !”

“யாருடைய மகள்?” என்று அலட்சியமாகக் கேட்டான்.

“மாலியூர்ச் சரவணமுத்தருடைய பெண். அவளை முடிக்கப் பலர் விரும்புகிறார்கள். ஆனால் நான் உமக்குச் செய்து தந்தால் நல்லது என்று எண்ணுகிறேன். நீர் கஷ்டப்படுகிறீர். நல்லவராயுமிருக்கிறீர்.”

சிறிது சிறிதாக அவன் முகம் மலர்ச்சியடைந்து வந்தபோதிலும் தன் விருப்பத்தை இன்னும் வெளிப்படையாகக் கூறவில்லை.

“தம்பி, நீர் யோசிக்க வேண்டாம். ஏதோ அந்தப் பெண் உமக்குக் கிடைப்பதாக இருந் தால் உமது பூர்வ புண்ணியந்தான். வயலின் கூட வாசிப்பாள். வாய்ப்பாட்டு - அது கேட்க வேண்டியதில்லை. தங்கக் கிளியாட்டம். பார்த்துக்கொண்டிருந்தாலே பசி தீர்ந்துவிடும்.”

அவனுடைய முகமலர்ச்சியைக் கொண்டே அவன் விரும்புகிறான் என்பதை அவர் அறிந்து கொண்டார்.

“பெண்ணின் பெயர் என்ன?” என்று அவன் கேட்டான். ஏதாவது வள்ளியம்மை கிள்ளியம்மையாக இருந்தால்......! இந்தப் பெயரிலேயே எவ்வளவோ இருக்கிறதாம்!

“சீதாலக்ஷ்மி” என்று அவர் சொன்னார்.

“சீதா என்று அழைக்கும் போது என்ன அழகாகவிருக்கும்! இதைச் செய்துகொண்டால்

நல்லதுதான்" என்ற முடிபிற்கு வந்துவிட்டான் முருகேசு. இதை விட்டுவிட்டு வேறென்ன செய்வான்? கண்ணடித்துக் காதல் கொண்டு கடிதமெழுதிக் கண்ணியிலே பட வைக்கும் தந்திரத்தைக் கூடக் கையாண்டு பார்த்திருக்கிறான். அந்த வித்தையிலே வல்லவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்தான். ஆனால், அதிலே முருகேசு வுக்குச் சிறிதும் வெற்றி கிடைக்கவில்லை. அவமானம் நேர்ந்ததும் உண்டு. தானாகவே தனக்கொரு பெண்ணைத் தேடிக் கொள்ளுஞ் சக்தியும் தனக்கில்லை என்பதை அறிந்து விட்டான். குமாரர் பேசுமிந்த விவாகத்தையும் நழுவவிட்டால் பின்பு அதோகதிதான்.

"ஏன் தம்பி, விருப்பமா, இல்லையா? இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லும்" என்று கேட்டார் குமாரர்.

"விரும்பாமலென்ன?...." என்று அவன் கூறினான். கூறிய தொனியில் ஏதோ மனக் கஷ்டமிருப்பதாகத் தெரிந்தது.

தாய் தகப்பனுக்குத் தெரியாமல் எங்கேயாவது மணஞ் செய்வது என்று தீர்மானித்த போதிலும், இப்போது அப்படியான ஒரு வசதி வந்த போது இதுகாலவரை இருந்த தீர்மானம் தளர்ந்துவிட்டது. பெற்றார் ! அறியாமல் தன் எண்ணப்படி எங்கேயாவது முடிப்பது பெரிய தவறு போலத் தோன்றிற்று. யோசித்தான்.....

"என்ன? ஒளியாமற் சொல்லும். உமக்கிருக்கும் கஷ்டம் என்ன?" என்று குமாரர் கேட்டார்.

அவன் மனதிலுள்ளதைக் கூறினான்.

"இதெல்லாம் எனக்குப் பெரிய காரியமல்ல. அவர்கள் மனத்தைத் திருப்பி ஆனந்தமாக இந்தக் கல்யாணத்தை முடித்துத் தருவேன்..... இதெல்லாம் எனக்குப் பெரிய காரியமல்ல."

அவர் நிமிர்ந்திருந்து இதைக் கூறினார். அவருக்கு அத்துணை திறமையுண்டு என்பதனையும் முருகேசு நம்பினான். அவனுடைய முகத்தில் மெல்ல மகிழ்ச்சிக்குறி தோன்றியது. அதைக் குமாரர் நன்கு கவனித்தார்.

"ஆனால் ஒரு விஷயம். அப்படி அவர்கள் மனதைத் திருப்பி இதை ஒழுங்கு செய்வ தாக இருந்தால், இது இரண்டொரு நாளில் முடியக் கூடிய விஷயமல்ல. பல நாட் செல்லும். அதனால் என் தொழில்துறை கெட்டுவிடக்கூடும்" என்றவர் மேலும் சொன்னார்: "தம்பி நான் சொல்வது விளங்கிறதா? எனக்கு அதனால் வரக்கூடிய நஷ்டத்தை நீர் சரிக்கட்ட வேண்டும்...... குறைந்தது இருநூற்றைம்பதாவது தரவேண்டி இருக்கும்"

முருகேசுவுக்கு நெஞ்சிலே ஈட்டிகொண்டு தாக்கியதுபோல் இருந்தது. இருநூற்றைம்பதென்றால் கொஞ்ச நஞ்சமா? அதனால் அவன் திகைப்படைந்தான்.

இந்தக் கல்யாணமே வேண்டாமென்றாற் பிழையில்லைப் போல இருந்தது. ஆனால் இதை விட்டால் அவனுக்கு வேறு கதியில்லையே! ஒரே கல்யாணப் பயித்தியத்தில் மூழ்கியிருக்கிறான், எப்படி அங்ஙனம் கூற மனம் வரும்?

“தொகை அதிகமாயிருக்கு” என்றான்.

“நான் பிள்ளை குட்டிக்காரன். என் தொழிலை விட்டு மினைக்கெட வேணும். இருநூற்றைம்பது தந்தாலுமே போதாது. ஏதோ உமக்காக இப்படி ஒப்புக் கொள்கிறேன்” என்று அவர் இடம் வையாது பேசினார்.

அவன் "நூற்றைம்பது தரலாம்" என்றான். நூறு கேட்க என்று விரும்பியவன் பயத்தினால் நூற்றைம்பது என்றான்.

“இல்லைத் தம்பி எனக்குக் கட்டாது.”

“இல்லை , அது போதும் பாருங்கோ ....”

அதிக நேரம் விவாதித்தனர். தனித்தனி ஒவ்வொருவரும் தமக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைக் கூறினர். இறுதியிலே இருநூறுக்கு இருவரும் சம்மதித்தனர்.

“சரி, உம்முடைய வீட்டிற்கு எப்போது வர?” என்று குமாரர் கேட்டார்.

“நாளைக்கே வாருங்கோ. நான் விரைவிலே பயணம் போக வேண்டும்” என்றான்,

“சரி, நாளைக்குச் சரியாகப் பத்து மணிக்கு உம்முடைய வீட்டில் நிற்பேன். நீர் அங்கே காத்திருக்க வேண்டும்... எல்லாம் வெற்றியாகும். இதெல்லாம் எனக்குப் பெரிய காரியமல்ல.”

அவன் பத்து மணிக்கு அங்கே காத்து நிற்பதாகக் கூறினான். “சரி, தம்பி! நான் போய் வருகிறேன்." நல்லது."

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தனர். மறுபடியும் “சரி, தம்பி நான் வாறேன்” என்றார் குமாரர். "வாருங்கோ " என்றான் அவனும்.

ஆனால் அவர் போவதாகக் காணவில்லை. அவன் ஆச்சரியப்பட்டான். அதற்கிடையில் நீர் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?" என்று மறுபடி தொடங்கினார்.

“முதலில் வீட்டுக்கு வாருங்கோ. அதெல்லாம் ஆறுதலாகப் பார்ப்போம்” என்றான் அவன். பெண்ணைப்பார்க்க அவனுக்கு விருப்பந்தான் என்றாலும் அப்போது அப்படிச் சொன்னான்.

சிறிது நேரம் தயங்கி நின்றுவிட்டு, "தம்பி கையிலே காசிருந்தால் இருபத்தைந்து ரூபா தாரும். பின் அந்த இருநூற்றிலே கழித்து விடுகிறேன்" என்றார். அவனேன் அங்கே இருபத்தைத்து ரூபா கொண்டு வருகிறான்? “பத்து ரூபா மாத்திரம் இருக்கிறது” என்றான்.

“சரி, அதையாவது தாரும்” என்றார்.

அவன் 'மனிபாய்க்கை வெளியே எடுத்தான். அப்போது ஒரு வாலிபன் பைசிக்கிள் வண்டியில் அங்கே வந்து இறங்கினான்.

குமாரர் ஏதோ கூற உன்னுவதற்கிடையில் "உம்மிடம்தான் போய் வருகிறேன்" என்றான் மிடுக்காக அந்த வாலிபன்.

"ஏன், என்ன விசேஷம்?"

"எனக்கு அந்தப் பெண் வேண்டியதில்லை. நீர் சரியான ஏமாற்றுக்காரன்" என்றான் வாலிபன்.

முருகேசுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"என்ன நீர் சொல்வது விளங்கவில்லை. அவசரப்படாமற் சொல்லும்" என்றார் குமாரர்.

"நீர் நேற்றுக் காட்டிய பெண்தானா மணவறைக்கும் வரும்?"

"வேறென்ன!"

"சரி இருக்கட்டும். அந்தப் பெண் எனக்கு வேண்டியதில்லை. மரியாதையாகப் பணத்தைக் கொடுத்துவிடும்" "ஏன்? எதற்காக?"

"என்னை ஏமாற்றிவிட்டீர். நீர் பேசிய பெண் வேறு நேற்றுக் காட்டிய பெண் வேறு"

உடனே குமாரர் மிகவும் கோபத்தோடு சொன்னார்: "எந்த மடையன் சொன்னான்? நான் அப்படியான அயோக்கியன் என்றா எண்ணுகின்றீர், நீர்! விளங்காமற் பேசுகிறீர்"

"இல்லை, நான் விளங்கித்தான் பேசுகின்றேன்"

இருவரும் பலமாகப் பேசினர். கோபமும் மிஞ்சிக்கொண்டிருந்தது. நிலைமையைச் சமாளிப்பதற்காக முருகேசு இடையே குறுக்கிட்ட போது அந்த வாலிபன் சொன்னான்: "இவர் எனக்கு ஒரு கல்யாணம் பேசினார் பாரும். நேற்றுப் பெண் பார்க்கப் போனோம். ஒரு அழகான பெண்ணைக் காட்டினார். ஆனால், மணவறையில் வேறொரு மூளிப் பெண் வரும்"

"பொய்" என்றார் குமாரர்.

"உமக்கெப்படித் தெரியும்?" என்று வாலிபனிடம் முருகேசு கேட்டான்.

"பேசின பெண்ணைத்தான் நான் காட்டினேன் தம்பி" என்று குமாரர் குறுக்கிட்டுக் கூறினார்.

"இல்லை. அந்த வீட்டிலே மூன்று பெண்கள்....." என்று அந்த வாலிபன் ஆரம்பித்தான்.

குமாரர் அவனைச் சொல்லவிடாது தான் குறிக்கிட்டு "யார் சொன்னான்? நீர் சரியான புரட்டுக்காரனாயிருக்கு" என்றார்.

"யார் புரட்டுக்காரன், நானா? நீரா?" என்று கூறியபடி கைச் சட்டையைச் சுருக்கிக் கொண்டு அவரை நோக்கிப் பாயத் தயாரானான் அவன். முருகேசு அவனைப் பிடித்துக் கொண்டு "பெரியவர், கொஞ்சம் பொறுங்கோ! அவர் தன் நியாயத்தைக் கூறட்டும். பிறகு நீங்கள் சொல்ல லாம்" என்றான்.

அந்த வாலிபன் மீண்டும் கூறினான்: "பாரும் மிஸ்டர்! அந்த வீட்டிலே மூன்று பெண். முதல் இரு பெண்களும் அழகில்லை. எத்தனையோ இடங்களில் மணம் பேசியும் எல்லோரும் மறுத்து விட்டார்கள். இறுதியில் இவர் ஒரு சூழ்ச்சி செய்தார். மூத்த பெண் என்று

கூறி மூன்றாவது பெண்ணைக் காட்டி, மூத்த பெண்ணைக் "கட்டி அடித்து விட்டார். நம்பி மோசம்போன அந்த மாப்பிள்ளை நாலு நாளிலே கோபித்துக்கொண்டு வெளியேறிவிட்டான். அவன்தான் இந்த இரகசியத்தை என்னிடம் கூறினான். எனக்கு இரண்டாவது பெண்ணைப் பேசினார். ஆனால், காட்டப்பட்டது அந்த மூன்றாவது பெண்ணாம். இந்த லட்சணத்தில் என்னிடம் பெற்றாருக்கு இவள் ஒரேயொரு மகள் தான் என்றும் சொல்லியிருக்கிறார்."

இவன் இதைக் கூறிக்கொண்டிருக்கும்போது குமாரர் இடையிடையே குறுக்கிட்டு, "பொய்", "புரட்டு", "சுத்தப்பொய்" என்றெல்லாம் மறுத்துக் கொண்டிருந்தார். விஷயத்தைக் கேட்டு முடித்த முருகேக, ஒரேயொரு பெண் என்று அவன் கூறிய வார்த்தையைக் கேட்டதும், "யாருடைய மகள்?" என்றான்.

"மாலியூர்ச் சரவணமுத்தருடைய மகளோ, யாரோவாம்!" என்றான் வாலிபன்.

முருகேசு ஆச்சரியப்பட்டான்.

"அந்தப் பெண் வேறு. உமக்குப் பேசியது வேறு" என்று குமாரர் அவசரமாகக் கூறினார்.

"சரவணமுத்தருடைய மகளைத்தானே எனக்கு இப்பொழுது பேசினீர்" என்று முரு கேசு கேட்டேன்.

"எனக்கும் உமக்கும் என்றா எண்ணுகிறீர்? அகப்பட்ட இடமெல்லாம் வலைவீச வேண்டியதுதான். ஏதோ ஒன்று அகப்படும் என்பது அவருக்குத் தெரியும்!" என்று வந்தவன் கூறினான்.

குமாரர் நிலத்தைப் பார்த்துக்கொண்டு இருந்தார். "என்னுடைய காசு தருகிறீரா, என்ன?" என்று அந்த வாலிபன் முறைப்பாகக் கேட்டான்.

"உமக்குக் காட்டிய பெண்ணை முடித்துத் தந்தாற் சரிதானே!" என்று தயவாகக் கூறினார் குமாரர்.

"நீர் எங்கே கழித்துவிடுகிறீரோ! அதை யார் கண்டது? அந்தப் பெண்ணும் வேண்டாம், வேறு பெண்ணும் வேண்டாம். பணத்தைத் தந்துவிடும்."

அப்போது றோட்டிலே பஸ்வண்டி ஒன்று வந்துகொண்டிருந்தது. "நான் இப்போது யாழ்ப்பாணம் போகிறேன். வீட்டிற்கு வாரும் தருகிறேன்" என்று கூறிக்கொண்டு எழுந்தார் தரகர். கிட்ட வந்த பஸ் யாரையோ இறக்குவதற்காகச் சிறிது தாமதித்தது. தருணத்தைத் தவற விடாது ஓடிப்போய் ஏறிக்கொண்டார் குமாரர்.

பஸ்வண்டி போய்விட்டது. ஏமாந்த வாலிபர் இருவரும் என்ன செய்வது என்று தெரி யாது விழித்துக்கொண்டு நின்றார்கள். அந்த வாலிபன் பற்களைக் கடித்தான். அதற்குமேல் வேறென்ன செய்யமுடியும் அவனால்?

சிறிது மௌனம். "சரியான ஆசாமி!" என்றான் அவன்.

"நல்ல காலம் தருணத்திலே நீர் வந்தது. அல்லாவிட்டால் நான் நிச்சயமாக அணாப் பப்பட்டிருப்பேன். ..... சீ! இதென்ன உலகம், எங்கே போனாலும் அணாப்பு!" என்றான் முருகேசு.

"ஒரு நாளும் தரகர்மாரை நம்பக்கூடாது" என்று ஒரு அநுபவ சித்தாந்தம் மற்றவனிடமிருந்து எழுந்தது.

"நீர் எவ்வளவு பணம் கொடுத்தீர்?" என்று முருகேசு கேட்டான்.

"அதையேன் கேட்கிறீர்! ஐம்பது ரூபா மண்ணாய்ப் போச்சு!" என்றான் அவன்.

இன்னும் சிறிது நேரம் அந்த அனுபவமற்ற வாலிபர் இருவரும் தங்களுக்கு இதிலே கிடைத்த அநுபவத்தைப் பற்றிப் பேசினார்கள். இறுதியிலே இருவரும் பிரிந்து சென்றார்கள். சுடலை ஞானம் வெளித்த முதியவர்களின் மனநிலையிலேயே அப்போது அவர்கள் மன நிலையும் இருந்தது. தரகர்மாரை நம்பினால் வாழ்க்கை முழுவதுமே திண்டாட வேண்டும் என்ற எண்ணம் உதயமாகிவிட்டது.

வழியிலே முருகேசுவின் மனம் இதைப்பற்றி நன்கு சிந்தித்தது. இந்தத் தரகர் வலையிலே சிக்கியிருந்தால் அவன் நிலைமை என்ன! அவன் பெற்றோர் மற்றும் உறவினர் கண்ணிலே விழிக்க முடியுமா?

வீட்டிலே சாப்பிட உட்கார்ந்தபோது தாய் வழமையான பல்லவியைத் தொடங்கினாள்.

"தம்பி, கொம்மான் இன்றைக்கும் வந்து போகிறார்...." என்றாள்.

வழமையிலே இந்த வார்த்தைகளை அவள் கூறினால் அவன் சினப்பதுண்டு. இன்று மௌனமாகக் குனிந்தபடி சாப்பிட்டுக்கொண்டு இருப்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அந்தப் பெண் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்க உன்னுடைய வாழ்க்கை ஒரு நாளும் உருப்பட மாட்டாது" என்றாள் மறுபடியும்.

"அது சரி இப்ப அவளுக்கென்ன வயது போய்விட்டதா? பதினாலு வயதுதானே! எல் லாம் ஆறுதலாகச் செய்யலாம். கொஞ்ச நாளைக்கு போடிங்கில் இருந்து படிக்கவிடச் சொல்லு. தையலும் பழகிவிடுவாள். பழக்கமும் திருந்திவிடும்" என்றான். தாய்க்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை.

"வாறகிழமை போடிங்கில விடுகிறதென்றுதான் கொம்மான் எண்ணிக்கொண்டிருக்கிறார்" என்றாள் அவள்.

"அவளுடைய பெயரை எப்படி மாற்றி வைக்கலாம் என்று சிந்தித்துக் கொண்டே ஆறுதலாகச் சாப்பிட்டான் முருகேசு.

மறுமலர்ச்சி
ஆவணி - 1948

அ.செ.முருகானந்தன் (அ.செ.மு)

அ.செ.மு. என்ற அ.செ. முருகானந்தன் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு பெருமை கூட்டிய எழுத்தாளர். இரண்டாம் பரம்பரை எழுத்தாளர். ஈழகேசரி பண்ணையைச் சேர்ந்தவர். ஈழகேசரியின் ஆசிரியராகப் பணியாற்றியவர். மறு மலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவர். மறுமலர்ச்சியின் இணை யாசிரியராகவும் எரிமலை என்ற சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்கியவர். வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியப்பீடங்களில் பணியாற்றி யவர். பல்வேறு புனைபெயர்களில் நிறைய எழுதியவர். அவரது சிறுகதைகள் யாழ்ப்பாண சமூககளத்தில் மட்டுமன்றி மலையக்திலும் மண் வாசனையோடு வரையப்பட்டிருக்கின்றன. இவர் எழுதிய "புகையில் தெரிந்த முகம்" நூல் உருவில் வெளிவந்தது. காளி முத்துவின் "பிரஜாவுரிமை" என்ற சிறுகதை துரைவி வெளியீடான "உழைக்கப் பிறந்தவர்கள்" என்ற பெரும் சிறுகதைத் தொகுப்பில் வெளிவந்துள்ளது. அவரது பல சிறுகதைகளைத் தொகுத்து யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை "மனித மாடு" என்ற தொகுதியை வெளியிட்டிருக்கிறது. இவர் அமரராகிவிட்டார்.

- ❖ வெறுப்பும் வெற்றியும்
- ❖ சிங்கக்கொடி சிரித்தது
- ❖ வியாபாரியார்
- ❖ பாடுபட்டுத் தேடி
- ❖ இன்னமும் சோதனையா

வெறுப்பும் வெற்றியும்

அ.செ. முருகானந்தன்

அவன் சம்பந்தப்பட்ட வகையில் நிகழ்ந்துவரும் ஒவ்வொரு சம்பவங்களும் அவனுக்கு உலகத்திலிருந்த பாசத்தை மென்மேலும் தகர்த்தெறிபவையாயிருந்தன. அவனுடைய உறவினர்களில் அநேகர் வெறுஞ் சுயநலமிக்கவர்களாகவும் வஞ்சகர்களாகவும் இருப்பதை மிக இளவயதிலேயே அவன் உணர்ந்து கொண்டான் மற்றவர்கள் கஸ்டப் படுவதில் ஒரு திருப்தி ஒரு இன்பத்தைக் காணும் மனித சமூகத்தைப் பார்த்து வெறுப்புடன் நகைத்தான்.

சந்திரனுடைய இந்த விபரீத மனப்பான்மை மேலும் வளர்ந்து முதிர்வதற்கு அவன் மாமனார் ஒரு தடையாக இருந்தார். கூரிய முட்கள் நிறைந்த ரோஜாச் செடியில் மலர்ந்திருக்கும் அழகிய மென்மையான புஸ்பம் போல் சூழ்ச்சியும் வஞ்சனையும் நிறைந்த மனிதர்களுள் அவன் மாமனார் ஒர் அபூர்வ பிறவியாக விளங்கினார். இது சந்திரனுக்குப் பெரும் ஆச்சரிய மட்டுமல்லாமல் அவனுடைய கலங்கிய ஆறுதலற்ற உள்ளத்திற்கு ஒரு நிம்மதியாகவுமிருந்தது.

மிகப் பால்யத்திலேயே சந்திரன் தாய் தந்தையரை இழந்து விட்டான் இறந்தவர்கள் மற்றவர்களைப் போல சாதாரணமாக

இறந்திருக்கப்படாதா. குழந்தை சந்திரனுக்கு ஓர் பேரதிச்சியை உண்டாக்கும்படியாக அவ்வருடத்தில் நேர்ந்த பெரிய வெள்ளத்தில் வீட்டுச் சுவர்கள் இடிந்து விழுந்தபோது அதன்கீழ் அகப்பட்டு நசுங்கி இறந்தனர். ஈமக்கிரிகைகள் நிறைவேறுகையில் பெற்றோர்களின் உருக்குலைந்து சிதறுண்ட பிரேதங்களைப் பார்த்துச் சந்திரன் அறிவு கெட்டு விழுந்தான்.

அன்றுதொட்டே அவனுடைய ஏழை மனம் பேதலித்துவிட்டது. அந்தச் சம்பவம் நிகழ்ந்து எத்தனையோ காலமாகிவிட்ட போதிலும் சந்திரனுடைய உள்ளத்தை மட்டும் சிறிதும் விட்டகலாது நேற்று நடந்தது போல் அவனை வதைத்துக் கொண்டிருந்தது. இத்துடன் ஊரவர்களின் பழிச்சொல் ஒருபுறம், பத்து வயதுக்கிடையில் இரண்டு மலைகளை விழுங்கிய பாவிப் பயல் என்று அவனைக் காணும்போதெல்லாம் பல்லவி பாடுவர் ஊர்ச்சனங்கள். அவன் மனமுடைந்து ஓடிவரும் கண்ணீரைப் பார்ப்பதிலும் ஒரு சந்தோசமா அவர்களுக்கு?

இந்தச் சமயத்தில்தான் சந்திரனுடைய மாமனார் அவனை ரட்சித்தார். சந்திரனுடைய தாயும் இராமநாதரும் சகோதரர்கள். தாய் தந்தையற்ற சந்திரனைப் பார்த்து மனமுருகி மிகவும் வருத்தப்பட்டார். ஆகவே அவனைத் தன்னுடன் அழைத்துச் சென்று சொந்தப் பிள்ளைபோல் பராமரித்து வந்தார். அவருக்கு ஆண் குழந்தை ஒனறு இல்லாத குறையும் சந்திரனால் நிவர்த்தியடைந்தது.

◆◆◆

......

காந்திமதியும் சந்திரனும் ஒருவர் பேரில் ஒருவர் உண்மையான அன்பு கொண்டிருப் பதைக் கண்டு இராமநாதரும் உள்ளூரச் சந்தோசப்பட்டார்.

காந்திமதியின் படிப்பு ஆங்கில எட்டாம் வகுப்புடன் முடிவடைந்தது. காரணம் அவள் மங்கைப்பருவம் எய்தியதுதான். ஏதோ உலக சம்பிரதாயத்துக்காக ஆங்கிலம் படிப்பித்தோம். இனிமேல் வீட்டிலிருந்து கொண்டு நன்றாகத் தமிழைப் படிக்கட்டுமேன் என்பது இராம நாதரின் எண்ணம். ஆனால் சந்திரன் மேலே தொடர்ந்து படித்தான். அவனை நன்றாகப் படிக்கவைத்துப் பட்டதாதரியாக்க வேண்டுமென்று இராமநாதர் விரும்பினார். இதற்கு முற்றி லும் மாறாகச் சந்திரனுடைய மனப்பான்மை இருந்தது. "இந்தப் படிப்பு எப்போ தொலையும்" என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

ஆங்கிலம் அரசாங்க பாசையாயிருப்பதினாலும் பொதுவாக உலகத்தில் ஊடாடுவதற்கு அது உதவியாக இருப்பதினாலும் அதனை ஓரளவுக்குக் கற்றிருத்தல் நல்லது என்னும் ஒரே நோக்கத்திற்காக மட்டுமே சந்திரன் "மற்றிக்குலேஷன்" வகுப்புவரை படித்தான். அதை மேலும் தொடர்ந்து படித்துப் பட்டதாரியாகி அந்நியர் காலில் விழுந்து மன்றாடுவதை அவன் விரும்பவில்லை. இந்த வெறுப்பை இன்னும் அதிகப்படுத்தியது அவனுக்குச் சூன்யமாயிருந்த ஒரு பாடம்.

கணிதம் என்றால் சந்திரனுக்குப் பெருத்த தலையிடி. கீழ் வகுப்புக்களிலிருந்தே கணிதத்தில் "கழிவு" என்று பெயர் வாங்கினவன். இவ்வளவு காலமும் இந்தக் குறையினால் அவனுடைய கல்வி பாதிக்கப்படவில்லை. ஆனால்.. இப்போ இந்த வகுப்பிற்கு கணிதம் கட்டாய பாடம். அதாவது அதில் சித்தியெய்தினாலன்றி தராதரம் கிடையாது. அந்நியர்க

ளுடைய சூழ்ச்சிக்காரர்களுடைய நிர்ப்பிரயோசனமான கல்வி முறையைக் கட்டிக் கொண்டு நாம் ஏன் எமது வாழ்நாளைப் பாழ்படுத்த வேண்டும்? என்று சந்திரன் சிந்தித்தான்.

இந்த மனப்போக்கை மேலும் உறுதிப்படுத்தியது சந்திரனுக்குச் சிறு வயது முதல் அவன் அந்தரங்க உள்ளத்தி ஒளிந்து கொண்டிருந்த ஒரு தியாக உணர்ச்சி. சுயநலங் கருதாது தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச சேவைக்குப் பலியிடும் தியாக ஆத்மாக்களிடம் அவனுக்கு ஒரு எல்லையில்லாத காதல் ஏற்பட்டிருந்தது. காந்தி மகாத்மா அவனுடைய கருத்தை எப்பொழுதோ கவர்ந்துகொண்டுவிட்டார். சந்திரனுடைய குல தெய்வம் காந்தி. அவருடைய உபதேசங்கள் அவனுக்குத் தேவ வாக்காயிருந்தன. அவர் சீவிய சரித்திரம்தான் அவனுடைய வேதநூல். மகாத்மாவுக்கு மிகவும் இஷ்டமான கீதையைச் சந்திரனும் விரும்பிப் படித்தான்.

தினந்தோறும் சிறிது நூல் நூற்பதை அவன் வழக்கமாக்கிக் கொண்டான். ஜவஹர், சுபாஸ் முதலி தேசத் தொண்டர்களின் உருவப்படங்களும் விவேகானந்தர், இராமகிருஷ்ணர் முதலான தத்துவ ஞானிகளின் படங்களும் அவன் இருக்கும் அறைவை அலங்கரித்தன. இல்லற வாழ்க்கை அவன் அடியோடு வெறுத்திருந்தான் தேச சேவை செய்து சிறைக்குச் செல்லும் பாக்கியம் எப்போது தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

◆◆◆

சந்திரன் "மற்றிக்குலேஷன்" வகுப்பில் படித்துக் கொண்டிருந்தானல்லவா? இரண்டு வருடப் படிப்பு முடிந்ததும் பரீட்சைக்குத் அனுமதிப்பவர்களின் தராதரம் அறிவதற்காக ஓர் உப பரீட்சை பள்ளிக்கூடத்தில் நடத்தினார்கள். அதில் திருப்தியில்லாதவர்களைப் பரீட்சைக்கு எழுதியிருந்தான். பள்ளிக்கூடத்திலிருந்து அறிக்கையும் வந்தது; ஆனால்.... எல்லாம் வெறும் ஏமாற்றம்...! துயரம்!

இராமநாதர் கேள்விப்பட்டதும் ஆச்சரியப்பட்டார். ஏனெனில் சந்திரனுக்கிருந்த பூரணமான அறிவை அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். ஆனால் உண்மையான விசயத்தை ஆசிரியர்கள் அனுப்பியிருந்த அறிக்கை சொல்லிற்று. வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். "ஆமாம்! கணிதம் சரியில்லாவிட்டால் பரீட்சை சரியாகாதுதான். கல்விமுறை அப்படி விசித்திரமாக அமைந்திருக்கிறது. ஆனாலும் என்ன? அப்படி ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. எனக்கும் வயதாகிவிட்டது. உத்தியோகம் பார்ப்பதும் கஷ்டமாய்த்தானிருக்கிறது. ஆனபடியால் நான் இளைப்பாறிக் கொண்டு அந்த இடத்தில் சந்திரனை வைத்து விட்டாலென்ன?"

இந்த யோசனைதான் அவருக்குச் சரியாகப்பட்டது. சந்திரனை அழைத்துச் சொன்னார். "தம்பி, நீ இன்னும் மேலே தொடர்ந்து படிப்பது நல்லதல்ல. இந்தக் கேடுகெட்ட கல்விமுறை உன்போன்றவர்களுக்கு வராது. நான் என்னுடைய வேலையிலிருந்து விலகி, உன்னை அதில் நியமிக்க உத்தேசித்திருக்கிறேன். உன்னுடைய இஷ்டம் எப்படி?"

சந்திரனுடைய முகம் சோர்ந்துவிட்டது. அவன் பரீட்சைக்கு அனுமதிக்கப்படாததிற்குக் கூட அவ்வளவாகக் கவலைப்படவில்லை. அந்தக் கல்வியினின்றும் விடுபட்டதை நினைத்தே

மிகவும் சந்தோசப்பட்டான். ஆனால் இப்போ அவனுடைய மாமனார் சொன்னதைக் கேட்டதும். அவன் உள்ளம் இருளடைந்துவிட்டது. தூக்குத் தண்டனை தீர்க்கப்பட்டவன் விடுதலையடைந்து மீண்டும் அதே தண்டனையில் அகப்படுவதுபோல் சந்திரனுடைய நிலை இருந்தது.

சந்திரனுடைய மனதில் பெரிய பிரச்சினை எழுந்தது. உயிருக்கு உயிரளித்து ரட்சித்தவர் மாமனல்லவா? அவரை மீறி என்று ஒரு மனது சொல்லதையும் இன்னொரு மனது தேசத்திற்காக உழைத்து வாடிச் சிறை சென்ற தியாகிகளை அவன் மனத் திரை கொண்டு வந்து நிறுத்தியது.

உயிர்கொடுத்த தெய்வம் முதலாவது மனது திரும்பத் திரும்ப இடித்துக் கூறியது. சந்திரன் வேறுவழியில்லை. "ஆம், இந்த விடயத்தில் மாமாவை மீறப்படாது. செய்த மனம் குன்றினால் ஐவினைப் பயன் அழிந்துபோகுமல்லவா? இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் பொறுப்போம்" என்று தீர்மானித்து உள்ளத்திலெழுந்த குழப்பங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்.

சந்திரன் புதுப்பதவி ஏற்று ஒழுங்காக உத்தியோகம் பார்த்து வருவது பற்றி இராமநாதர் குடும்பத்திற்கு எல்லையற்ற சந்தோசம். இது விடயத்தில் பூரணமாக நிஷ்களங்கமாக இன்பம் அனுபவித்தது அந்த வீட்டில் இருந்த ஒரே ஒரு ஆத்மாதான். அது வேறு யாருமல்ல, இராமநாதர் செல்வப் புதல்வி காந்திமதிதான்.

சந்திரனும் காந்திமதியும் ஒன்றாகப் படித்தவர்களல்லவா? ஒரு தாய் பிள்ளைகள் போல வெகு அந்நியோன்யமாய்த்தான் இருந்து வந்தார்கள். இது காலதேவனுக்குப் பொறுக்கவில்லையோ? அவன் ஓடிக் கொண்டிருக்கும் போதே உலக சிருஷ்டியில் எத்தனையோ மாற்றங்களை உண்டாக்கி ஒவ்வொன்றையும் தலைகீழாக்கிவிடுகிறான்.

காந்திமதி படிப்பை நிறுத்தி வீட்டில் தங்கியது முதல் அவள் அத்தானைக் காண்பது வெகு அபூர்வமாயிற்று. அவனைக் காணதிருந்த ஒவ்வொரு நிமிடமும், அவளுடைய பால்ய அன்பினின்றும் மாறுபட்ட ஒருவித உணர்ச்சி வளர்ந்துகொண்டே வந்தது. இது காலதேவனின் விளையாட்டு. காந்திமதியின் இருயத்திலிருந்த சகோதர அன்பைக் காதலாக, என்றென்றும் சிதைந்துபோகாத தூய காதலாக மாற்றிவிட்டான்.

சந்திரனுடைய ஒரு தனிப்பட்ட புறம்பான போக்கைக் கண்டு சிறிது கவரப்பட்டாள் காந்திமதி. "அவருக்கென்ன மனக் கவலையேயா?" என்று வருந்தினாள். ஆனால் இப்போ, தன்னுடைய தகப்பாரின் சொற்படி ஒழுங்காக நடந்து வருவதைக் கண்டு மனம் பூரித்தாள். சந்திரன் உத்தியோகம் ஏற்றதும் "அவர் சரியாக வந்துவிட்டார்!" என்று நினைத்துப் பரமானந்தடைந்தாள்.

மனித சுபாவமே இப்படித்தான். ஒருவனுடைய வெளித் தோற்றத்தைக் கொண்டே எல்லாவற்றையும் முடிவு கட்டிவிடுவார்கள். அவன் அந்தரங்கத்தை ஆராய்ந்து பார்ப்பதில்லை.

காந்திமதியின் பரிசுத்தமான காதலை சந்திரன் அங்கீகரித்தானா? பரஸ்பரம் அவனும் அவளைக் காதலித்து வந்தானா? அதுதான் இல்லை. சந்திரன் பால்யத்தில் காந்திமதி பேரில்

கொண்டுள்ள அதே அன்பு எள்ளளவும் மாற்றமடையாமல் அசைவற்றிருந்தது இராமநாதர் சந்திரன் பால் கொண்டுள்ள அன்பை - இன்னும் கூடுதலாக சந்திரன் காந்திமதிபேரில் வைத்திருந்தான். அதாவது ஒரு தாய் வயிற்றில் பிறந்த குழந்தைகள் ஒன்றின்மேல் ஒன்று எவ்வித அன்பு வைத்திருக்குமோ அதேபோல். ஆம்! சகோதரபாசம்தான். அவனுடைய மாசற்ற இருதயத்தில் காதலுக்கு இடமில்லை. ராமகிருஷ்ணரும் விவேகானந்தரும் அவன் உள்ளத்தில் குடியிருக்கும்போது காதல்நோய் அவனை என்ன செய்யும்? கருங்கற் பாதையில் விழுந்து சிதறும் மழை நீர்போல் சந்திரனுடைய இருதயத்திற்பட்ட காதலும் சிதறவேண்டியது தான்.

காந்திமதி தன்பேரில் தணியாத காதல் கொண்டுள்ளாளென்பதைச் சந்திரன் அறிவானா? நன்றாக அறிவான். ஆனால் அதை அவன் ஏற்க முடியாதது பற்றி மிகவும் வருந்தினான். அதை அவளிடம் துணிந்து கூறவும் அவனுக்குத் தைரியமில்லை. ஏனெனில் அவளுடைய மனம் அதனைத் தாங்காது வெடித்துவிடும் என்பதை அவன் நன்கு அறிவான். இல்லற வாழ்க்கையிலேற்பட்ட வெறுப்பு எவ்வளவு தூரந்தான் அவனுடைய தேகத்தில் செறிந்திருக்கிறது.

◆◆◆

"மனக்குரங்கு" என்று வெகு அழகாக ஒருவர் சொல்லிவைத்தார். அரைக் கணமும் சும்மாயிராது. அநாவசியமான விசயங்களிலெல்லாம் தலையிட்டு வீணாக மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கும். எதிர்காலத்தைப் பற்றி வெறுங்கனவு கண்டு பிரமாண்டமான கோட்டைகளையெல்லாம் கட்டி எழுப்பும். இது இயற்கையாக மனித சமுதாயத்தில் அமைந்த ஒரு குணம். இதற்குப் புறநடைகள் அபூர்வம்.

அப்படியானால் இராமநாதர் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமோ?

சந்திரனுடைய வருங்கால வாழ்க்கையை மனத்தில் சிந்திக்க ஆரம்பித்தார். "சந்திரனுக்கும் வயசாகிவிட்டது. அவனுடைய நடைமுறைகள் ஒன்றிலுஞ் சேராது ஒரு தனி ரகமாயிருக்கின்றன. கலியாணஞ் செய்து வைத்துவிட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும். இதில் என்ன கஷ்டம் ஏற்படப் போகிறது. பெண் முதற்கொண்டு வீட்டிலேயே இருக்கும் பொழுது? ஆமாம், இதில் வீணாகக் காலதாமதஞ் செய்வது நல்லதல்ல" என்று முடிவடைந்தது அவருடைய ஆலோசனை.

தன்னுடைய மகள் சந்திரன் பேரில் வைத்துள்ள காதலின் மதிப்பை அளவிட்டு அறிந்திருந்தபடியினாலே இவ்வளவு சுலபமாக எல்லாவற்றையும் தீர்மானித்துவிட்டார். சந்திரனுடைய அபிப்பிராயம் எவ்விதம் இருக்குமோ என்று சற்றும் நினைத்தாரில்லை. பாவம் அவரும் அவருடைய மகளுமாகச் சேர்ந்து கட்டிய மனக்கோட்டையை சந்திரன் பொலபொலவென்று இடித்துத் தகர்க்கப் போகிறானென்று அவர்கள் கனவிலும் கருதவில்லையே.

மனிதனுக்கு என்றும் ஒரே நிலையாக இன்பதுன்பங்கள் நிற்பதில்லை. அவனைச் சுற்றி எந்நேரமும் சுகதுக்கங்கள் சுழன்று கொண்டேயிருக்கின்றன. சந்திரன் தனது வாழ்க்கையின் அனுபவத்திலேயே இதனை நன்று அறிந்திருநதான்.

அரசாங்க சேவையில் அமர்ந்தது முதல் சந்திரனுக்கு மனச்சாந்தி என்பதே கிடையாது. மனத்தை எவ்வளவோ முயன்றும் அடக்கியும் அது வீறிட்டுக் கொண்டு நின்றது. தேசத்

தொண்டர்களின் அழைப்பைக் கேட்டு அது துடிதுடித்தது. சந்திரன் பகீரதப் பிரயத்தனப்பட்டே மாமனாரை மீறாது, அவருக்குத் துரோகஞ் செய்யாது மனத்தை அடக்கி ஆள முடிந்தது.

இந்தச் சமயத்தில்தான் அவன் செவிகளில் நாராசம் உருக்கி வாக்கப்பட்டது. அவனுடைய இருதயம் பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சுடப்பட்டது. ஆமாம், அப்படிப்பட்ட வேதனையைக் கொடுக்கும் செய்தி ஒன்று தான் சந்திரனுக்கு அப்போது எட்டியிருந்தது. இராமநாதர் ஒழுங்குபடுத்தி வரும் விவகாத் திட்டந்தான் அது.

சிறு சிறு வெடிப்புகளுடன் காணப்பட்டது எனது ஹிருதயம். இப்போது முற்றாக உடைந்துவிட்டது. அவன் உள்ளத்தில் பெரும் புயல், பேரிடி, சூறாவழி எல்லாம் தோன்றின. சிந்தனைச் சக்கரம் எத்தனையோ படங்களை அவன் மனத்திரையில் காட்டிக் கொண்டிருந்தது. ஒன்றிலும் மனம் செல்லவில்லை. அவன் திருஷ்டியில் எதிர்ப்படும் ஒவ்வொரு பொருளிலும் வெறுப்புத் தட்டியது.

அன்றிரவு அறையை நன்றாகப் பூட்டிவிட்டு உள்ளே படுத்துக் கொண்டான். அவனுடைய கண்கள் திருதிருவென்று விழித்தபடியே இருந்தன. ஆனால் அவனது மனம் எங்கேயோ சிந்தனை உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

◆◆◆

மறுநாள் விடிய நித்திரையினின்றும் எழும்பி இராமநாதர் வெளியே வந்தார். சந்திரனுடைய அறைக் கதவு திறந்திருந்தது. உள்ளே ஒருவருங் காணப்படவில்லை. இப்படி நடப்பது மிகவும் அசாதாரணமாகையால் சிறிது சந்தேகத்துடன் உள்ளே நுழைத்தார். அங்கு காணப்படாத சில சாமான்கள் அவருடைய சந்கேத்தை இன்னும் ஊர்ஜிதப்படுத்தியது. நெஞ்சு "படபட"வென்று வெகு வேகமாக அடித்தது. மேசை மீது விரிக்கப்பட்டிருந்த ஒரு நீண்ட கடதாசியைக் கையிலெடுத்தார். அதில் எழுதியிருந்ததை முற்றாக வாசிக்க அவரால் முடியவில்லை. அவருடைய பார்வையிலும் வேகமாக, அதில் எழுதியிருப்பதை அறிய மனம் துடித்தது. கடிதத்தை மேலும் கீழுமாகப் பார்த்தார். ஒன்றும் விளங்கவில்லை.

இவ்வளவு பதட்டத்தையும் அடக்கிக் கொண்டு, நிதானமாக அவசரப்படாமல் அக்கடிதத்தை வாசித்து முடிப்பதற்கு எவ்வளவோ நேரம் சென்றது. கடிதம் படித்து முடிந்ததும் அவர் முகத்தில் கூத்தாடிய ஏமாற்றமும், துக்கமும் சந்திரன் இராமநாதருக்கு ஏதோ நீண்டவால் நீட்டிவிட்டான் என்று சொல்லின.

சந்திரன் எழுதிவைத்த கடிதம் பின்வருமாறு ஓடியது.

அன்பிற் சிறந்த தேவரீர்

மாமாவும் அத்தையும் அறிவது,

தாங்கள்தான் எனக்குத் தந்தையும் தாயும். ஆதரவற்று அலைந்து திரிந்தவனை இரட்சித்து தாங்கள் உயிர் கொடுத்தீர்கள். அவன் இப்போது உங்களுக்குப் பெருந்துரோகஞ் செய்திருக்கிறான். அந்த கெட்டநாயை தயவுசெய்து தாங்கள் மன்னிப்பீர்களா.

தந்தையை எனது செய்நன்றி கொன்ற உள்ளத்தை தேசத்தொண்டர்களும் தத்துவ ஞானிகளும் பங்கு போட்டுவிட்டனர். அவர்களிடமிருந்து தப்புவதற்கு எனக்குச் சக்தியில்லை.

இல்லற வாழ்க்கையை நான் வெறுக்கிறேன். "அந்த மாயவலையில் அகப்பட்டு விடாதே" என்று குருவும் சிஷ்ணாவும் என்னைத் தடை செய்கின்றனர். சேவை செய்வதற்கே இந்த உடம்பின் உற்பத்தி என்று காந்தி மகாத்மாவும் தியாகிகளும் கூவி அழைக்கின்றன. இந்த நிலைமையில் தாங்கள் ஒழுங்கு செய்துவரும் விசயம் ஒன்று என்னைப் பிடித்து வெளியே துரத்திவிட்டது நான் என்ன செய்வேன்?

செல்வி காந்திமதியை நான் ஏமாற்றிவிட்டேன். அதை நினைக்க என்னை மன்னிக்க மாட்டாளா? நான் கொண்டுள்ள அன்புக்கும் ஒருகாலமும் சிதைவு கிடையாது.

ஒருகாலத்தில் தங்களிடம் நான் சுத்தமான உள்ளத்துடன் வருவேன். அபிலாசைகள் யாவும் பூர்த்தியாகிதோடு இருப்பனேயாகில் நிச்சயமாகத் ஒருமுறை தரிசிப்பேன். இதை அருள் புரியட்டும்.

இங்ஙனம் தங்கள் நன்றிகெட்ட
ஆனால் அன்புள்ள
சந்திரன்.

மனிதனைச் சுற்றி சுகதுக்கங்கள் சுழன்றுகொண்டேயிருக்கின்றவென்று கூறினேனல் லவா? இப்போது இராமநாதர் குடும்பத்திலேயே அதைப் பிரத்தியட்சமாய்ப் பார்க்க முடியாது.

"இன்னுஞ் சொற்ப நாட்களுக்குள் திருமண வைபவம் ஒன்றைப் பார்க்கப் போகிறோம்" என்று சந்தோசப்பட்டுக் கொண்டிருந்தார்கள் இராமநாதரும் மனைவியும். காந்திமதியோ ஆனந்த பரவசமாகி இன்பத்தின் சிகரத்தையே அடைந்து அடுத்தாற் போல் அவர்களை வந்து சூழ்ந்த துயர் இருள். சிரிப்பும், சந்தோசமும் நர்த்தனம் புரிந்த அவர்கள் முகங்கள் சோபையற் றுச் சுடுகாடாகிவிட்டது. காந்திமதி முன்னர் எவ்வளவுக்கெவ்வளவு ஆனந்தடைந்தாளோ அவ்வளவுக்கவ்வளவு இப்போது கவலைப்பட்டாள்.

அவன் எந்நேரமும் கண்ணீருங் கம்பலையுமாய் நிற்பதைக் காணக்காண அவளு டைய பெற்றோர்களுக்கு அதிக வேதனையாயிருந்தது.

காந்திமதிக்கு சந்திரனுடைய பிரிவு ஓர் பேரதிர்ச்சியாகவே இருந்தது. தூசு பட்ட கண்கள் போல அவளது மனமும் சுழன்று கலங்கியது. அத்தான் எழுதிய கடிதத்தைப் பார்த்துப் பார்த்து அழுதாள். "ஆமாம்! இல்லறத்தை நானும் வெறுக்கிறேன். அது சூழ்ச்சி வலை" என்று வாய்விட்டுக் குழறினாள்.

இராமநாதர் அன்றைய தினசரியைப் பிரித்தார். ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டே வந்தார். நாலாம் பக்கத்தைப் புரட்டியதும் அவருடைய பார்வையும் கைகளும் அப் பால் செல்ல மறுத்துவிட்டன. அப்படியே பிரமித்துப்போய் அந்தப் பக்கத்தை வெகு நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். எடுத்துச் சேர்த்துப் படிக்கப் பழகிக் கொண்டிருக்கும் சிறுபிள்ளை கூட அந் நேரத்தில் எத்தனையோ தடவை திருப்பித் திருப்பிப் படித்திருக்கும். ஆனால் இராமநாதர் மட்டும் படித்து முடியவில்லை.

அவருடைய மகள் காந்திமதி அவரைப் போசனத்திற்கு அழைக்க வந்தாள். அப்பா பத்திரிகை படிப்பதில் லயித்திருப்பதைக் கண்டதும் பதில் லயித்திருப்பதைக் கண்டதும் "என்ன விசேஷம் இன்றைய பத்திரிகையில்?" என்று கேட்டாள்.

அப்பொழுதுதான் இராமநாதருக்கு சுய உணர்வு வந்தது. திடுக்குற்று எழுந்தார். "உன்னுடைய அத்தானிருக்கிறானேடி - அடேயப்பா பொல்லாத பேர்வழியாயிருக்கிறானே. இதோ பார்த்தாயா அவன் "போட்டோவை" சென்னையில் சத்தியமாக்கிரக இயக்கத்தில் சேர்ந்து அரசினருக்கெதிராகக் கடுமையான ஒரு பிரசங்கத்தைப் பத்திரிகைகள் எல்லாம் பிரமாதமாகப் புகழ்ந்திருக்கின்றவாம். ஆறுமாதம் ஜெயிலுக்கு போய்ச் சேர்ந்துவிட்டான் கடைசியாக" என்று துள்ளிக் குதித்தார் இராமநாதர்.

சந்திரனுடைய "போட்டோவை" பத்திரிகைகளில் பார்த்ததும் அவனை நேரிலேயே கண்டுவிட்டவள் போல் பரவசமடைந்தாள் காந்திமதி. "அப்பனே! புருஷர்களையே நம்பக் கூடாது. பொல்லாத சுயநலமிகள். தாங்கள் மட்டும் தேசத்திற்குழைத்து "தியாகி" என்று புகழ் பெறலாமாம். ஆண்களுக்குள்ள உரிமை ஏன் எங்களுக்கு- பெண்களுக்கு - மட்டும் கிடையாது? பெண் சமூகம் என்ன அடிமையின் சாகரமா? இருக்கட்டும்; இதற்கு நான் பழிக்குப் பழி வாங்காமல் விடுவேனோ?"

இராமநாதருக்குப் பெரிய ஆச்சரியமாகவிருந்தது. "முந்தநாள் பிறந்த பிள்ளைகளுக்கு இருக்கும் யோசனையும் உயர்ந்த நோக்கங்களும், எங்களுக்கு - கிழக்கட்டைப் பிணங்களாகிய எங்களுக்கு - இன்னும் உதயமாக வில்லையே! சந்திரன் என்றால் பெரிய தேசத்தொண்டாகவும், வேதாந்தியாகவும் வெளிக்கிளம்பிவிட்டான். இங்கே காந்திமதி என்றாலோ,தான் உள்ளம்புடன் நேசித்த ஒருவனையேயன்றி வேறெவனையும் விவாகஞ் செய்வதில்லையென்று பிடிவாதஞ் செய்கிறாள். சந்திரனைப் போலவே, தானும் பிரமசாரி விரதம் அனுஷ்டித்து பொதுஜன சேவை செய்யப்போகிறாளாம். இவர்களுக்கென்ன இந்த இளம் வயதிலிவ்வளவு விபரீத புத்தி. காலத்தின் கோலமா?" என்று ஓயாது சிந்தித்துக் கொண்டேயிருந்தார். இறுதியில் அவரையுமவருடைய மகளுக்கும் மருமகனுக்கும் தோன்றிய பயித்தியமே பிடித்து விட்டது. "ஆம்! பெற்றதாயும் பிறந்த நன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தனவல்லவா?" என்று திரும்பத் திரும்ப உச்சரித்தது. யார் என்ன செய்தாலும் செய்யாவிட்டாலும் கால தேவன் மட்டும் தனது கடமையில் அற்பமும் பிசருவது கிடையாது. அவனும், அவனது நிதானமும் புரவிகளும் எந்நேரமும் வாயுவேகமாகப் பறந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றிற்கிடையில் உலகத்தில்தான் எத்தனை மாற்றங்கள்! எவ்வளவு புதுமைகள்.

ஐந்து வருசங்களுக்கு முன்னே திறம்பட்டிக் காடாயிருந்த திருநெல்வேலிக் கிராமம் இப்போது ஒரு புது எழிலுடன் விளங்குகிறது. அந்தக் கிராமத்துக்கும் மோட்டார் ரதங்களுக்கும் வெகுகாலமாக இருந்து வந்துபெரும்பகை இப்போது ஓய்ந்து சமாதானமாகிவிட்டன. கைத்தொழிலும், கமத்தொழிலும் அவ்வூர்ச சனங்களுக்கு உணவு கொடுக்கும் சாதங்கள். பிரமாண்டமான தொழிற்சாலைகளும் பள்ளிக்கூடங்களும், கண்ணுக்கெட்டிய தூரம் பச்சைப் பசேலென்று பரந்து காணப்படும் வயல் வெளிகளும் புத்துணர்ச்சியை நம் மனத்தில் எழுப்புகின்றன. பனை விருட்சங்களுக்கும் இப்போ நல்ல காலம் பிறந்திருக்கிறதோ? பனைப் பொருட்கள் யாவையும் பதப்படுத்தி நாகரிக பண்டங்களாக்கி, அபிவிருத்தி செய்வதற்குப் புறம்பான தொழிற்சாலை ஒரு பக்கத்தில், பருத்திச்செடி பயிரிட்டு பஞ்செடுத்து நூல் நூறறு நெசவு தொழில் செய்யும் சாலையொன்று வேறொரு பக்கத்தில்.

இவையெல்லாவற்றையும் விட ஒரு அமைதியான, அழகான இடத்தில் அமைந்திருக்கிறது சிறிய ஆச்சிரமம் ஒன்று. ஒவ்வொருநாள் மாலையிலும் அந்த ஆச்சிரமத்திலிருக்கும்

மகான் ஒருவர் பிரசங்கஞ் செய்வார். தேசமுன்னேற்றத்தையும் ஆன்மீக முன்னேற்றத்தையும் தான் முக்கியமாகப் போதிப்பவையாயிருக்கும் அவர் பிரசங்கங்கள். அவற்றைக் கேட்பதற்குத் திரள்திரளாக ஜனங்கள் கூடுவார்கள். இதில் ஒரு விசேசம். அவருடைய போதனைகளைச் சனங்கள் கேட்பதுடன் மட்டும் நிற்கமாட்டார்கள். நடைமுறையிலும் கையாண்டுதான் வருகிறார்கள். அல்லாவிடில் ஐந்து வருடங்களுக்கு முன் ஒப்பற்ற பட்டிக் காடாயிருந்த திருநெல்வேலி இப்போது இவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்து மற்றைய கிராமங்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகயிருக்க முடியுமா?

சுயநலமின்றி பொதுநல ஊழியம் செய்துவரும் அந்த யோகீஸ்வரருடைய சகல காரியங்களையும் கண்ணுங் கருத்துமாக நின்று அவருக்குத் தொண்டு செய்து வருவது ஒரு இளம் பெண். அந்தப் பெண்ணைப் பற்றிய உண்மையான தகவல் ஒன்றும் எவருக்குமே தெரியாது. அவள் அவருடைய சிஷ்யை என்று மட்டுமே தெரியும்.

ஈழகேசரி - 23.03.1941

பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு 135 வருஷங்களுக்கு முன்னே சிங்கக் கொடியைக் காட்டிக் கொடுத்தவர்கள், இன்றைக்கு அதே கொடியைத் தூக்கிப் பிடிக்கிறார்களே.

சிங்கக்கொடி சிரித்தது

அ.செ.மு

சைக்கிள்களும் ஆள்களுமாக சுமார் ஒரு மைல் நீளமுள்ள ஊர்வலம் அது. முழுவதும் சிங்களவர்கள். "ஜயவிஜயீ பவா" என்று எழுதிய ஒரு கொடியை ஒருவன் ஊர்வலத்துக்கு முன்னே பிடித்துக் கொண்டிருந்தான். அதன் பின்னால் "2000 வருஷங்களாக இலங்கை மக்களின் சொந்தக் கொடி சிங்கக்கொடி" என்று பெரிய எழுத்தில் எழுதிய சீலையை இருவர் சேர்ந்து உயர்த்திப் பிடித்திருந்தார்கள்.

இப்படி ஊர்ந்துபோகும் ஊர்வலத்தை அவதானித்துக் கொண்டு ஒரு கடையில் நின்றேன். வெகு உற்சாகமான வாலிபர்கள் அநேகம் பேர் ஊலர்வலத்தில் கலந்து தொண்டைகிழியக் கத்திக்கொண்டு போனார்கள்.

இந்தக் கொடி இலங்கையின் தேசீயக்கொடிதானா? அல்லது ஒரு வகுப்பினருக்கு மட்டும் உரிமையான கொடியா? - என்ற இந்தப் பிரச் சினையில் மனம் இறங்கவில்லை. அதற்குள்ளே ஊர்வலத்தில் கண்ட ஒன்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டேன்.

ஒரு முடவன்;கால்கள் இல்லை. இயற்கையாகவோ இல்லையோ அல்லது இடை நடுவில்தான் இல்லாமற் போனதோ தெரியாது. மூன்று சில்லுப் பெட்டிவண்டி ஒன்றுதான் அவனுக்குக் கால்கள். அதற்குள்ளே இருந்து கொண்டு முன்சக்கரத்தோடு இணைக்கப்பட்ட "பெட"லைக் கைகளால் சுற்றுவான். அது அவனைச் சுமந்து கொண்டு ஓடும்.

அதிகமாக அவனைப் பெருந்தெருவில் ஒரு மரத்தின் கீழே பார்க்கலாம். பிச்சைக் காரனிடம் கூட சுயமரியாதை உண்டு. எல்லாப் பிச்சைக்காரர்களுமே நாயாக நடந்துகொள்வ தில்லை. - இதை முதலில் அவனிடம் தான் கண்டேன். தெருவில் தனக்கு முன்னே போகிற ர்களை "ஐயா!" என்று ஒரு தரம் கூப்பிடுவான். பிறகு "ஐயா, ஐயா!" என்று இரண்டு தடவை பணிவாகக் குழைந்த குரலில் கூப்பிடுவான். அவ்வளவுக்கும் முறைத்துக்கொண்டு திரும்பிக் கூடப் பார்க்காது அலட்சியமாய் யாராவது போனார்களானால் அவனுக்குக் கோபம் வந்து விடும். "ஓய்! ஓய்! " என்று கொஞ்சம் உரத்த சத்தத்திலேயே பிறகு கூப்பிடத் தொடங்குவான்.

"பிச்சைக்காரனுக்கு இத்தனை திமிரா" என்று பலர் ஆத்திரப்படுவதுண்டு. ஆனாலும் அவன் பிச்சைக்காரன் தானே! அவனோடு முரண்டி என்ன செய்வது?

ஊர்வலத்தின் முன்னணியில் சைக்கிள்களின் அணிவகுப்பின் மத்தியில் அந்தப் பிச்சைக்கார முடவனது பெட்டிவண்டியும் சரிநிகர் சமானமாகப் போய்க் கொண்டிருந்தது. மற்ற எந்த சைக்கிள் வண்டிகளுக்குமில்லாத கொடி அலங்காரம் அவன் வண்டியில் காணப்பட்டது. அந்த ஊர்வலத்தில் யாரிடமும் இல்லாத உற்சாகத்தோடும் முகமலர்சசி யோடும் அவன் "ஜய வேவ" என்று கோஷமிட்டான். ஊர்வலம் பட்டணம் முழுவதும் வலம் வந்து போயிற்று.

இது நடைபெற்ற மறுதினம் நான் பெருந்தெரு வழியே போய்க் கொண்டி ருந்தேன்.

அவன் வழக்கம்போல அந்த மரநிழலிலிருந்தான். அந்தப் பக்கம் திரும்பாமல் விசுக்கு விசுக்கென்று போய்க்கொண்டிருந்தேன். அவனுக்கு முன்னாலே போனதும் வழக்கம் போல அவன் "ஐயா" என்றான். நான் திரும்பிப் பார்க்கவேயில்லை. அவன் திரும்பவும் "ஐயா, ஐயா!" என்றான். எனக்கு அவனோடு கொஞ்சம் கதைக்க வேண்டியிருந்தது. அதற்காக முறைத்துக் கொண்டு போவது போல் போய்க் காட்டினேன். நான் எதிர்பார்த்தது நடைபெற்றது. "ஓய்! ஓய்!" என்று நையாண்டி பண்ணினான் அந்தப் பிச்சைக்காரன்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. அதாவது கோபம் வந்துவிட்டது போலப் பாசாங்கு பண்ணினேன். "விறுக்"கென்று திரும்பி அவ்விடம் நேரே போய் "என்னப்பா, குதிரை விடு கிறாய்?" என்றேன். முகத்தைக் கடுகடுப்பாகவே வைத்துக் கொண்டேன். ஆனால் அவன் இதற்கெல்லாம் மிரண்டு போகிற பேர்வழியாகத் தெரியவில்லை.

"குதிரைமாதிரி நடந்துகொள்ளுகிறவர்களிடம் குதிரை விடுவதில் என்ன பிசகு இருக்கிறது?" என்று திருப்பி என்னைக் கேட்டான்.

"பிச்சைச் சோற்றிலே குழைந்த சோறு வேறு பார்க்கிறயா? தெருவிலிருந்து பிச்சை எடுக்கிறாய்! அதற்குள்ளே மதிப்பு வேறே உனக்கு. தலைக் கர்வம் வேறே" என்றேன்.

அவனுக்கு இது "சுருக்"கென்று தைத்திருக்க வேண்டும். "படபட" வென்று பேசினான்:

"பிச்சை எடுத்தாற்போலே மனுஷன் மிருகமாகிவிடுவதில்லை. மனுஷனுக்கு மனுஷன் கொடுத்து உதவி செய்தாற் போலே அவன் தேவனாகிவிடுவதுமில்லை. அது மனுஷன் கடமை. இல்லாதவர்களுக்கு இருப்பவர் கொடுப்பது தான் பகுத்தறிவு பார்க்கப்போனால் இந்த இருப்பவர்களின் சிருஷ்டிகள்தான் இல்லாதவர்கள் என்று சொல்லலாம். உலகத்திலே உயர்ந்த மலைகள் இருப்பதினாலேதான் சமுத்திரத்தில் பள்ளம் விழுந்திருக்கிறது. "பிச்சைக்காரன் நாய்மாதிரி மனிதன் காலடியில் விழுந்து கிடந்தாலே உதவிசெய்ய வேண்டும்" என்னும் எண்ணம் மகா கொடியது. பிச்சைக்காரன் மனுஷ ஜென்மமில்லையா? அவனுக்குச் சுயமரியாதை இல்லையா?"

அவன் வைத்த பிசரசங்கத்தைக் கேட்டு நான் விறைத்துப் போய் விட்டேன்.

"கையில் கொஞ்சம் சேர்ந்துவிட்டது போலிருக்கு. அதுதான் இவ்வளவு தடிப்பாகப் பேசுகிறாய்?" என்றேன்.

"என்னுடைய ஆஸ்தியெல்லாம் இந்த வண்டிதான். இது இல்லையானால் நான் இல்லை. இந்த வண்டியைப் பார்த்துவிட்டுத்தான் அப்படிக் கேட்கத் தோன்றுகிறது போலிருக்கு. அதோ பாருங்கோ ஐயா!" என்று சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய பக்கம் திரும்பிப் பார்த்தேன். யாரோ ஒரு பணக்காரக் குழந்தையைத் தள்ளுவண்டியில் வைத்து "ஆயா" ஒருத்தி தள்ளிக்கொண்டு போனாள்.

அவன் அதைக் காட்டி விட்டு மேலும் சொன்னான்:

இந்த உல்லாச வண்டியிருக்கிறதே, அதன் விலையில் நூறிலொரு பங்குகூட எனது இந்த வண்டிக்குக் கிடையாது. ஆனாலும் இது எனக்குச் சோறு தருகிறது. இதில்லாவிட்டால் என் வாழ்க்கையே அஸ்தமித்துப் போய்விடும். நான் உலகத்தில் கட்டுப்பட்டிருப்பது இது ஒன்றுக்குத்தான். இதைவிட வேறு எதற்கும், யாருக்கும் நான் அடிமைப்பட்டிருக்கவில்லை; வளம் ;செழித்த பூமித்தாயிருக்க, குளக்கோட்டன் கட்டிய நீர்நிலைகளிருக்க அந்நியர் முன் போய் கைகட்டி வாய் புதைத்து அடிமை செய்து வயிற்றை வளர்க்கிறார்களே மனுஷர்கள், அவர்களைப் போல இந்தப் பிச்சைக்காரனையும் எண்ணிவிடாதே. இவன் சுயமரியாதையுள்ளவன். பூமியில் யார்க்கும் அடிமை செய்யான். நாமிருக்கிற நாட்டுக்கு நாமே ராஜாக்கள். இது நமக்கே சொந்தம்..."

"அது சரி அப்பனே! உன் வண்டியிலே போட்டிருக்கும் இந்தக் கொடியைப் பார்த்துவிட்டு உன்னை அநேகர் ஆதரிக்கமாட்டார்களே! உனது சீவனத்துக்கு......"

"ஆதரிக்காதவர்கள் போகட்டுமே! பிச்சை எடுத்தாற்போலே மனச்சாட்சியை விற்றுவிட நான் தயாராகவில்லை. இந்தக் கொடியை எற்றியவனது தேசபக்தியின் ஞாபகத்துக்காகவே இதனை நான் நாட்டிவிட்டிருக்கிறேன். சுதந்திரமிழந்து அடிமைகளாகப் போயிருக்கும் நம்மவர்களுக்கு கண்டிராசன் வாழ்க்கை ஒர் சிறந்த ஆதர்சமாயிருக்க வேண்டும். இதோ வண்டியிலிருக்கும் கொடி காற்றிலே "பட்பட"வென்று அடித்துக்கொள்ளும் போது அது எவ்வளவோ கதைகளைச் சொல்லுகிறது! அதன் ஒவ்வொரு அடிப்பும் விக்கிரமராச சிங்கனின் வீராவேஷம் நிறைந்த இதயத்துடிப்பாகவே எனக்குப்படுகிறது!" என்று உணர்ச்சியோடு பேசினான்.

"விக்கிரமராசசிங்கன் யார் தெரியுமா?"

"அவன் யாராயிருந்தாலென்ன! இலங்கைநாடு அந்நியர் வசப்படுகிற சமயத்தில் தாய்நாட்டைக் காப்பாற்றக் கடைசிவரை சமர்புரிந்த ஒரு மகாவீரன் என்ற மட்டிலேதான் அவனை என் லட்சிய புருஷனாகக் கொள்ளுகிறேன். அதற்காகவேதான் அவன் கொடியை நான் நாட்டியிருக்கிறேன்...."

"உனது தலைவர் பக்தியைப் பாராட்டுகிறேன். ஆனால் விக்கிரமராச சிங்கன் ஒரு தமிழ் அரசன் என்று அறிந்துகொள். சிங்கக்கொடியைப் பறக்க விட்டு எதிரிகள் மீது சிங்கம்போலப் பாய்ந்த அந்த அரசனைக் காட்டிக் கொடுத்த வஞ்சக மக்கள் யார் என்றால்... உன் இனத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள்தான். அன்றைக்குச் சிங்கக்கொடியைக் காட்டிக் கொடுத்தவர்கள், இன்றைக்கு அதைத் தூக்கிப்பிடிக்கிறார்கள். பட்டத்துக்கும் பதவிக்கும் ஆசைப்பட்டு அன்று சிங்கக் கொடியைக் காட்டிக் கொடுத்தார்கள். இன்றைக்கு எதற்கு ஆசைப்பட்டு அதைத் தூக்கிப்பிடிக்கிறார்கள்?" என்றேன். பிச்சைக்காரன் சிரித்தான். காற்றினால் படபடத்த சிங்கக்கொடியும் அவனோடு சேர்ந்து சிரித்தது!

வரதர் புதுவருஷ மலர் - 1950

வியாபாரியார்

அ.செ.மு.

"சீனி இருக்குதா?"

"இல்லை"

கிராமப் பக்கத்தான் ஒருத்தன் வந்து பல்லைக் காட்டினான், "அண்ணே, சீனி கொஞ்சம் எடுக்கலாமோ?"

சின்னத்தம்பி - கடைக்காரன். அவனை ஏற இறங்க வைத்துப் பார்த்தான்.

"எவ்வளவு வேணும்?"

"ஒரு இறாத்தல் அண்ணே!"

"அறுபது சதம்"

வேட்டி முடிப்பை அவிழ்த்து அவன் அறுபது சதத்தை எடுத்துக் கொடுத்தான். கடைக்காரன் சீனியைக் கட்டிக்கொடுத்தான்.

ஒரு தடியன் வந்து மளமளவென்று படிக்கட்டுகளில் ஏறினான்.

"சீனி என்ன விலை?" என்று கடைக்காரனிடம் சற்று அதிகாரத் தொனியில் கேட்டான்.

"முப்பத்திரண்டு சதம்"

"இரண்டு இறாத்தல் மட்டும்"

"கூப்பனை எடும் பார்ப்போம்"

வந்தவன் "தலையிறங்கி"ப் போய்விட்டான்.

"இல்லை அண்ணே , கூப்பனுக்கல்ல கள்ளமாகக் கொஞ்சம்..."

"இங்கே என்ன கள்ள வியாபாரம் நடைபெறுகின்றது என்று எண்ணிக் கேட்டாயோ? நாங்கள் என்ன கள்ளர் கூட்டமோ?"

வந்தவன் பேச்சு மூச்சின்றி வந்தவழியே திரும்பி விட்டான். கடைக்காரன் அவனைப் பார்த்து வாய்க்குள் சிரித்தான்.

"நயினர்"

"யாரது?"

மகாதீனமான குரலில் வார்த்தைகள் எழுந்தன. கிழட்டு உருவம் ஒன்று தலையிலிருந்து சுமையை படிக்கட்டில் இறக்கி வைத்துவிட்டு நயினாரிடம் "முறையிட்டது".

"நயினார்தான் காப்பாற்ற வேண்டும். வீட்டில் இரண்டு காய்ச்சல்காரர் நயினர். இரண்டு கிழமையாக தேத்தண்ணீர் தான் சாப்பாடு. தேத்தண்ணி வைக்கவும் வழியில்லை . நயினர் மனமிரங்கி..."

"நயினர்" குறுக்கிட்டு கண்டிப்பான வார்த்தையில் பதில் கூறினார்.

"றாத்தல் அறுபத்தைந்து சதம் விருப்பமென்றால் எடு"

"ஐயோ நயினர் எவ்வளவையும் எடுத்துக்கொள்ளுங்கள். அகப்படுவதே பெரிய காரியம். அறுபது சதம் இருக்கு நயினார் அதற்கு மட்டாகத் தா"

"ஒரு றாத்தல் சீனியை நிறுத்து அதில் ஐந்து சதத்துச் சீனியை அள்ளி கிள்ளிக்கொண்டு கிழவியிடம் கட்டிக் கொடுத்தான். அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொண்டு அவள் போய் விட்டாள். போகும் போது இரண்டு பக்கமும் பார்த்து முழுசிக்கொண்டு போனாள். பயம் வேறே!

சின்னத்தம்பியின் எட்டு வயசுக் குழந்தை இதெல்லாவற்றையும் கடையில் காசுப் பெட்டிக் கருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தது.

கிழவி போய்விட்டாள்.

"அப்பா "

"என்ன?"

"இது என்ன அப்பா?"

"என்ன?"

"நாலு சாக்கு நிறைய சீனி இருக்கிறதே அங்கே!"

"இருக்கட்டும் வாயை மூடு"

"அப்பா "

"சொல்லு"

"அப்போதை வந்த இரண்டு பேருக்கு ஏன் இல்லை என்று சொல்லி விட்டாய்?"

சின்னத்தம்பிக்கு அவன் ஒரே ஒரு குழந்தை

அவன் கேட்பதற்கெல்லாம் அவனும் பதில் சொல்லிக் கொண்டு வந்தான் சலிக்காமல்.

"அது உனக்குத் தெரியாது கண்டபடி எல்லோருக்கும் கொடுக்கக் கூடாது"

"கொடுத்தால் என்ன அப்பா?"

"சில வம்பன்கள் பிடித்துக் கொடுத்து விடுவான்கள்"

"யாரிடம்?"

"பொலிசிடம்?"

"சீனி விற்றால் அது குற்றமா அப்பா?"

"இல்லை, களவாக சீனி விற்கக் கூடாது?"

"பின் நீ ஏன் அப்பா விற்கிறாய்?"

போகிற போக்கில் யாரோ ஒருத்தன் ஓடி வந்து கேட்டான். சீனி இருக்குதா அண்ணே ?"

"இல்லை "

"அப்பா "

"ஓய்"

"எனக்கு பயபாய் இருக்கு அப்பா"

"என்னத்துக்கு?"

"நேற்றைக்கு வாத்தியார் சொன்னார், களவெடுக்கிறவன்களையும், பொய் சொல்கிற வன்களையும் பொலிஸ்காரர் மறியல் வைத்து ஈட்டியால் குத்துவான்களாம். அவர்கள் செத்த பிறகு கடவுள் அவர்களை நரகத்தில் போட்டு நெருப்பால் கொளுத்துவார்களாம்."

"அப்பா" சிரித்தார்.

"ஏன் அப்பா சிரிக்கிறே?"

அந்தச் சமயம் பார்த்து யாரோ ஒருத்தன் "அப்பா" வோடு கதைக்க வந்து விட்டான். கள்ளச் சந்தை வழக்குகள் பற்றி சுவாரசியமான சம்பாசனை நடைபெற்றது.

குழந்தைக்கு ஒன்றிலும் புலன் போகவில்லை.

"இதென்ன நூதனம்? இந்தப் பெரிய அப்பா கூடப் பொய் சொல்கிறாரே, களவும் செய்கிறாரே.மூட்டை மூட்டையாக சீனியை வைத்துக் கொண்டு சீனி இல்லை" "சீனி இல்லை" என்று எத்தனை பேரைக் கலைத்து விட்டார்? அந்தக் கிழவியிடம்"-ஐயோ அந்தப் பாவத்தாரிடம் அறுபது சதம் வாங்கினார். வேறொருவனிடம் ஐம்பத்தைந்து சதம் வாங்கிக்கொண்டு சீனியைக் கொடுத்தார். சில பேருக்கு அடியோடு இல்லையென்று விட்டார். அவர்கள் அப்பாவின் கோவக்காரர்களோ? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக ஏன் இப்படி வஞ்சகம் செய்கிறார். சீனி விற்கக்கூடாதாம், பின்னர் ஏன் களவாக விற்கிறார்? ஐயோ அப்பாவை பொலிஸ்காரர் பிடித்துக் கொண்டு போய்விட்டால் ...."

அங்கே வந்து கதைத்துக் கொண்டிருந்தவன் பேப்பரில் படித்ததாகச் சின்னத்தம்பியிடம் சொன்னான் "ஒரு இறாத்தல் சீனி களவாக இரண்டு சதம் கூட்டி விற்றதாக ஒருவன் ஆறு மாசம் சிறை தண்டனை பெற்றான்."

இதையும் கேட்டுக்கொண்டு சின்னத்தம்பி சோர்ந்து போய் திரும்பி வந்தான்.

"அப்பா "

"என்ன?"

"கடையை மூடிவிட்டு வீட்டிற்குப் போவோம் வா அப்பா, இனிமேல் இந்தக்கடையே வேண்டாம். எனக்கு பயமாய் இருக்கு அப்பா. நீ எல்லாம் பொய்சொல்லவும், களவெடுக்கவும் பழகி விட்டாய் -"

சின்னத்தம்பி சிரித்தார். இல்லை, அவர் வாய் சிரித்தது. அவர் மன மலர்ச்சியோடு சிரிக்கவில்லை. மனம் சிந்திக்க ஆரம்பித்து விட்டது. பேப்பர் புதினம் அவர் மனதை கிளறியது. குழந்தையின் வார்த்தைகளும் அதோடு சேர்ந்து கொஞ்சம் வேலை செய்ய ஆரம்பித்தன.

"ஓ குழந்தை சொல்வதும் ஒரு மாதிரியாத்தான் இருக்கு, இந்த வியாபாரத் தொழிலே இப்படித்தான். இன்றைக்கு விடிந்த பிற்பாடு எத்தனை பொய்கள் சொல்லி விட்டேன்! எத்தனை களவுகள் செய்து விட்டேன். ஆனால் - ஓ ! - வியாபாரம் என்றால் பொய் களவு இல்லாமல் முடியுமா? உண்மைதான். ஆனால் அப்போது அவன் ஒருத்தன் களவாகக் கொஞ்சம் சீனி" என்றதும் ஏன் கோபம் வந்தது எனக்கு? "நாங்கள் என்ன கள்வர் கூட்டமா?" என்று எரிந்து விழுந்தேனே அவன் மேல் சந்தேகம் என்ன? நான் கள்ளன் தான். பொய்யன்தான். நான் மட்டுமா? வியாபாரிகள் எல்லோரும் அப்படித்தான். பொய்யர்கள்! கள்ளர்கள் சீ இந்தத் தொழிலைப் போல் கேவலமான தொழில் வேறு என்ன? மனிதனைமிருகமாக்கிற தொழில். அந்தக் கிழவி ஒருத்தி நின்று துடித்தாளே சீனிக்கு . அப்போதுதான் பாழும் மனம் இரங்கிற்றா? இந்தப் பணவெறி குறைந்ததா? முப்பது சதத்துச் சீனியை அறுபத்தைந்து சதத்தற்கு விற்றேன். சூ · இந்த ஆசை - பண ஆசை மனிதனை எத்தனை குரூரமாக்கி விடுகிறது?

என்னுடைய களவும், பொய்யும், ஆசையும் ஐயோ - என் குழந்தைக்குக் கூடத் தெரிந்துவிட்டதே. அது என்னைப் பற்றி என்னவெல்லாம் நினைக்கப் போகிறது! இப்படி அநியாயமாக-அதர்மமாக சம்பாதித்துத்தான் என்ன செய்கிறது கடைசியில்? இந்த ஒரு அதர்மத்

திற்குள் இன்னும் எத்தனை வேறு அதர்மங்கள்! நாய்போலச் சாவடியில் வந்து விழுகிற வர்களுக்குத்தான் உதவி அளிக்கிறோம். வசதி கண்ட இடத்தில் ஏழையோ, பிச்சைக்காரனோ அவனிடம் கொள்ளையடித்துவிடப் பார்க்கிறோம்

எத்தனை துணிகரமான பொய்? அதோ முழித்தாற்போல நாலு மூட்டை சீனி இருக்கிறது. இல்லை, இல்லை" என்று எத்தனை பேருக்கு வாய் கூசாமல் சொல்லி விட்டேன். "றாத்தல் முப்பத்திரண்டு சதம்" என்று அதோ எழுதிப் பகிரங்கமாகத் தொங்கவிட்டிருக்கிறேன். அதை எழுதிய அதே கையினால் அறுபத்தைந்து சதமும் ஐம்பத்தைந்து சதமும் வாங்கியிருக் கிறேனே! அப்பா - எவ்வளவு கேவலமான தொழில் இது. இதே சின்னத் தம்பிக்குத்தான் பள் ளிக்கூடத்தில் ஒரு காலத்தில் நேர்மைக்குப் பரிசு கிடைத்தது!

இப்பொழுதோ?

தெருவால் போய்க்கொண்டிருந்த ஒருத்தன் வந்தான்.

"சீனி இருக்குதா?"

"இல்லை - இருக்கிறது இருக்கிறது"

"றாத்தல் என்ன விலை?"

"அறுப....... முப்பது சதம்"

"பெரிய காரியம், இரண்டுறாத்தல் தாருங்கோ "

சின்னத்தம்பி நிறுத்துக் கொடுத்தான். புனர் ஜென்மம் அடைந்தவன் போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

ஈழகேசரி
26.09.1943

'பாடுபட்டுத் தேடி'

அ.செ. முருகானந்தன்

இன்று கிளறிக்கல் மெஷின்; மற்றது சமையல் மெஷின். ஒன்று படித்தது; மற்றது படிக்காதது. ஒன்று ஆண்; மற்றது பெண். ஒன்று புருஷன்;மற்றது மனைவி. ஒன்று மகத்தான பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இயங்க தினமும் வேலை செய்வது; மற்றது அது வேலை செய்வதற்கு வேண்டி வேலை செய்வது. ஓர் உபயந்திரம், ஒன்றுக்குப் பெயர் ராமலிங்கம்; மற்றதுக்கு பொன்னம்மா.

ராமலிங்கமும் பொன்னம்மாவும் உற்பத்தியானது யாழ்ப்பாணத்திலே. ராமலிங்கத்துக்கு வேலை கொழும்பில் ஒரு அரசாங்கக் கந்தோரில், மாசம் 75 ரூபா சம்பளம். இந்த வேலை கிடைத்த சில நாட்களுக்குள் ராமலிங்கம் பொன்னம்மாவைச் சேர்த்துக் கொண்டது. ஒரு வீட்டில் இருபது ரூபாவுக்கு ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு இரண்டும் தனிக்குடித்தனஞ் செய்தனர்.ராமலிங்கம், சிக்கனக் கலையில் கைதேர்ந்த பேர்வழி. அதாவது, மிகச் செட்டு. வசதி வந்தால் 75 ரூபாவையுமே மிச்சம் பிடித்து விடவேண்டு மென்று ஆசை அதற்கு. ஆனால் அது முடிகிற காரியமா? எப்படியோ அது நமக்குத்

தெரியாது. அந்தத் தொகையில் பாதியை ராமலிங்கம் ரொக்கமாக மிச்சம் பிடித்துவிடும். கொழும்புப் பட்டினத்திலே ராமலிங்கம் - அதன் சிக்கனத்துவம் ஒரு நூதனம்; அதன் வீடு ஒரு நூதனசாலை. நூதனமான ஒன்று இருக்குமிடம் நூதனசாலையில்லாமல் வேறென்ன?

8.30 மணிக்குக் கந்தோர். ராமலிங்கத்திடம் ஒரு நல்ல பழக்கம். வைகறைத் துயிலெழுந்துவிடும். 5.00 மணிக்கெல்லாம் படுக்கையில் ஆளைக் காண முடியாது. சுய நலமில்லாமல், அயர்ந்து நித்திரை போய்க் கொண்டிருக்கும் பொன்னம்மாவையும் கூட எழுப்பிவிடும். ஆரம்பத்தில் சில நாட்கள் தான் இப்படி. பிறகு நாலாவட்டத்தில் பொன்னம்மா இராமலிங்கத்துக்கு முன்பாகவே நித்திரை விட்டெழுந்து ஆறுமணி அடிக்க எல்லாக் காரி யங்களையும் முடித்து வைத்துவிடும். ராமலிங்கம் சாப்பிட்டுவிட்டு மத்தியான உணவையும் கட்டி எடுத்துக் கொண்டு 6.30 மணிக்குக் கந்தோர் புறப்பட்டுவிடும்.

பஸ், டிராம், ரயில் என்றெல்லாம் பட்டணங்களிலே குறுக்கும் மறுக்குமாக ஓடித் திரி கின்றனவே - அவற்றின் பக்கமே ராமலிங்கம் திரும்பிப் பார்ப்பதில்லை. ஐந்து மைல் தூர முள்ள 'அலுவலகத்துக்கு தெய்வம் கொடுத்த திருக்கால்களின் உதவியைக் கொண்டே போய்ச் சேர்ந்துவிடும். கொழும்பிலே ராமலிங்கத்தின் 'நூதன' வாழ்க்கை இரகஸ்யங்களில் இது ஒன்று.

மாலையில் கந்தோர் முடியும். நாலரை மணிக்கு ராமலிங்கம் மற்றவர்களைப் போலப் பறந்தடித்துக் கொண்டு வெளியேறுவதில்லை. பொழுது கருகும்வரை வேலை செய்யும். பிறகு சாவகாசமாக எழுந்து வேலையை முடித்துக் கொண்டு, வீட்டிலிருந்து கொண்டுவந்த வெற்றிலை பாக்கில் ஒரு வாய் போட்டுக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பும். கால் கோச்சில் ஆடி ஆடி வீடு போய்ச்சேர 8.00 மணியாகும். பொன்னம்மா சோறும் வடித்து ஒரு பச்சடியும் அரைத்து ஒரு ரசமும் வைத்து விட்டு ராமலிங்கத்தைக் காத்துக் கொண்டிருக்கும்.

காலையில் அவிழ்த்துவிட்டுப் போன வேட்டி சால்வை காற்றிலே படபடவென்று அடித்துக் காய்ந்து கொண்டிருப்பதைப் பார்க்க ராமலிங்கத்தின் மனம் மலரும். "வெந்நீர் வைத்திருக்கிறது குளிக்க" - என்று பொன்னம்மா சொன்னதும் ராமலிங்கத்துக்கு ஒரு புது உற்சாகம் பிறந்துவிடும். அதோடு, அடுப்பிலே கொதித்துக் கொண்டிருக்கும் மிளகுரசத்தின் வாசனை மூக்கில் வந்து தட்டவும்.... ராமலிங்கத்துக்கு ஒரே ஆனந்தம். பகல் பன்னிரண்டு மணி நேரமும் கந்தோரில் திரும்பத்திரும்ப கூட்டியும் கழித்தும் கொண்டிருந்த அலுப்பு, அயர்வு, எல்லாம் நீங்கி ஓர் உல்லாசம் உண்டாகி வாய் இலேசாக ஒரு பாட்டையும் முணுமுணுக்க ஆரம்பித்துவிடும்!

ஸ்நானம், சாப்பாடு எல்லாம் ஆகி முடிய இரவு பத்தரை மணியாகி விடும். சாப்பாட்டில் ராமலிங்கம் மிக எளிமை. அதாவது வாய் ருசிபார்த்து நாக்குக்கு அடிமைப்பட்டு அது வேணும், இதுவேணும் என்று அவதிப்படுவதில்லை. ஏதோ பசிக்கும் வேளையில் எதை யாவது போட்டு வயிற்றை நிரப்ப வேண்டியது தான் - என்பது ராமலிங்கத்தின் சித்தாந்தம்.

சாப்பாடு முடிய அன்றைய வரவு - செலவும் கணக்குகள் பரிசோதனை நடைபெறும். பொன்னம்மாவின் செலவினங்கள் யாவும் புள்ளி விபரமாக இருக்கும். அவற்றைப் பார்த்து அவற்றுக்கு ஒரு சிறு விமர்சனமும் செய்யப்படும். பொன்னம்மாவின் கை ஓட்டைக் கை

என்று ராமலிங்கம் தினமும் கண்டிப்பதுண்டு. செலவுகளைக் கொஞ்சம் இறுக்கிப் பிடிக்கும்படி உபதேசஞ் செய்யும். இந்தக் குறை குற்றங்கள், உபதேசம் ஒன்றுக்கும் பொன்னம்மா வாய் திறக்கக் கூடாது. பேசாமலிருந்து எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக் கொள்ள வேண்டும். இடையிலே ஒரு வார்த்தை சொன்னால்... ராமலிங்கத்துக்குப் பிரமாத கோபம் பிறந்து விடும். பெண்களுக்கு எந்த விஷயத்திலாகட்டும் பேச்சு என்ன வேண்டியிருக்கிறது? - என்பது ராமலிங்கத்தின் கட்சி.

போசனம், 'பட்ஜெட்' யாவும் முடியப் பதினொரு மணியாகிவிடும். அதற்குப் பிறகுதான் படுக்கை. இதோடு ராமலிங்கத்தின் தினசரி வாழ்க்கை அலுவல்கள் முடிகின்றன. இதற்கு மேல் சினிமாவோ, கூத்தோ, கேளிக்கையோ, அரசியலோ, பொது விஷயமோ - ஒன்றிலுமே பிரவேசிப்பது கிடையாது. ராமலிங்கம் உண்டு, ராமலிங்கத்தின் மனைவி உண்டு; உத்தி யோகமுண்டு, சம்பளமுண்டு, பெரியதுரை உண்டு - இவ்வளவுதான் ராமலிங்கத்தின் உல கம். ராமலிங்கத்தின் வாழ்க்கை இன்பதுன்பங்கள், அனைத்தும் பொருளாதாரத்தில் - வீட்டிலேயிருக்கும் இரும்புப் பெட்டகத்தில் அடக்கம்.

ராமலிங்கத்துக்கு மனத்தில் எவ்வளவு பயம் உண்டோ அவ்வளவுக்குத் தெய்வ பக்தி யும் உண்டு. மனத்தில் பயம் அதிகமாகும் சமயங்களிலே தெய்வத்தின்மீது தீவிர பக்தி உண்டாகி ராமலிங்கம் தேவார, திருவாசக பஜனாமிருதத்தில் இறங்கிவிடும். பொழுதுபட்டு விளக்கேற்றி விட்டால் ராமலிங்கம் தனியாக வீட்டு வாசலைவிட்டு வெளியே இறங்க மாட் டாது. பொன்னம்மா துணைக்குப் போகவேண்டும்! நடுச்சாமத்திலே வெளியே சத்தம் சலனம் ஏதும் கேட்டால் லேசாக விளக்கைத் தூண்டி விட்டு கந்தரலங்காரம் சொல்லத் தொடங்கி விடும். பட்டணத்திலே உத்தியோகம் பார்க்கும் அநேகர் இப்படிச் சூரப்புலிகளாயிருந்தபடியால் ராமலிங்கத்தின் இந்தக் குணவிசேஷம் அவ்வளவாக ஒருவரையும் கவரவில்லை. ராமலிங்கத்தின் கெட்டித்தனத்திலோ, துணிச்சலோ அப்படி ஒரு விசேஷ பார்வை யாருக்கும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை;

ஆனால்... ராமலிங்கத்தைப் போன்ற பேர்வழிகள் மீது விசேஷ பார்வை செலுத்து வதற்குப் பட்டணத்திலே வேறே ஆட்கள் இருந்தார்கள். அவர்கள் ராமலிங்கத்தைக் கவனிக்க வுஞ் செய்தார்கள்.

'சிவனே'யென்று தானுந்தன்பாடுமாகவிருந்த ராமலிங்கத்துக்கு இருந்தாற்போலிருந்து பொல்லாத காலம் வந்தது.

அது கிறிஸ்மஸ் சமயம். கிறிஸ்மஸ் லீவு ஒன்றும் வேண்டாமென்று விட்டு ராமலிங்கம் சம்பாத்தியத்தில் அக்கறையாயிருந்தது. வீட்டிலே கூடவிருந்த மற்றக் குடும்பங்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு விடுதலை கொண்டாட ஊருக்குப் போய்விட்டன. ராமலிங்கம் தம்பதிகள் தனியே.

ஒருநாள் நடுச்சாமத்தில் வெளியே கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ராமலிங்கம் துடித்துப் பதைத்து எழுந்தது. விளக்கைத் தூண்டிவிட்டு ஒருதரம் உரக்கச் செருமி விட்டு "அடல ருணைத்திருக் கோபுரத்தே...." என்று ஆரம் பித்தது.

ஆனால் வந்தவர்கள் யமகாதகப் பேர்வழிகள்.

ராமலிங்கம் வேலை செய்யும் கந்தோரையும், பெரிய துரையின் பெயரையும் குறிப் பிட்டு "அவசரமான செய்தி ஐயா..." என்று ஆங்கிலத்தில் இழுத்து விட்டார்கள். கந்தோர் துரை யின் பெயரைக் கேட்டதும் ராமலிங்கம் ஏமாந்து போய்விட்டது. கதவைத் திறந்துவிட்டது. நீட்டிய கைத்துப்பாக்கியும் பளிச்சிடும் கத்தியும் கொண்டு இரண்டு தடியர்கள் உள்ளே நுழைந் தார்கள். அப்பொழுதுதான் பேர் வழிக்கு விஷயம் விளங்கிற்று. வெலவெலத்துப் போய் விட்டது. பாவம்.

'மூச்சுக் கேட்கக்கூடாது - என்று வந்தவர்கள் கைத்துப்பாக்கியை மார்புக்கு நேரே நீட்டியதும் ... ராமலிங்கம் தம்பதிகள் உண்மையில் மூச்சை அடக்கிக் கொண்டுவிட்டனர்.

"பெட்டகத்துச் சாவியைக் கொடு" என்று அவர்கள் கேட்க, ராமலிங்கம் இரண்டாவது பேச்சின்றி எடுத்துக் கொடுத்தது. "நகை அடைவு பிடிக்கத் தத்துவம் பெற்றவர்" என்று வெளியே விளம்பரம் ஒன்றும் போடாமலிருந்தும் வந்தவர்கள் அதை எப்படி அறிந்தார்கள் என்று ராமலிங்கத்துக்கு ஒரே ஆச்சரியமாகயிருந்தது.

சிறந்த பாதுகாப்பு என்று ராமலிங்கம் எண்ணியிருந்த இரும்புப் பெட்ட கம்.... அது பாது காப்பாகவேதானிருந்தது. ஆனால், அந்தத் தடியன் பளபளக்கும் கத்தியைக் காட்டிய போது பாவம் - ராமலிங்கத்துக்குப் பிராணனே போய்விடும் போலிருந்ததே!

அலுவலை முடித்துக்கொண்டு அவர்கள் போகும்வரை ராமலிங்கம் கண்ணை மூடிக்கொண்டு குப்புறப்படுத்துவிட்டது.

பொன்னம்மாவின் கழுத்தில் கிடந்த தாலியைக் கழட்டும்படி வந்த தடியர்களில் ஒருத் தன் கேட்டபோது பொன்னம்மா ராமலிங்கத்தைச் சற்றுச் சுரண்டிப் பார்த்தும் ராமலிங்கம் அந்தந் சமயம் மரக்கட்டை போல அசையாமல் கிடந்துவிட்டது!

கடைசியில் அவர்கள் போன பிற்பாடு திரும்புப் பெட்டகத்தைப் போய்ப் பார்க்க... ஐயையோ ஒரே .... வயிற்றெரிச்சல்!

எறும்பு அரிசி சேர்ப்பது போலச் சேர்த்து வைத்த ராமலிங்கம் ஏங்கிப் போய்விட்டது.

அதிலிருந்து ராமலிங்கத்துக்கு காய்ச்சல் அடிக்க ஆரம்பித்தது. காய்ச்சல் வரவரக் கடுமையாகிக் குளிராக்கி குளிர் முற்றி ஜன்னியாக்கி எட்டாவது நாள் ராமலிங்கம் இந்தப் பொல்லாத கொள்ளைக்கார உலகத்திலிருந்து விடுதலை பெற்றது.

அடைவு பிடித்த நகைகளுக்குச் சொந்தக்காரர்கள் செய்தி அறிந்து ஓடி ஓடி வந்தார்கள்.

ஆனால் அங்கே வீடு பூட்டியிருந்தது. ராமலிங்கத்தின் துணை மெஷின் எங்கே போனது, என்னவாயிற்று - என்று யாருக்குமே தெரியவில்லை.

ஒருசமயம் ராமலிங்கத்துக்குத் துணையாகவேதான் போய்விட்டதோ என்னவோ!

மறுமலர்ச்சி - 03
ஆனி - 1946

இன்னமும் சோதனையா?

அ.செ. முருகானந்தன்

"பிருந்தாவனம்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஞானகுமாரன் ஒரு கலாரசிகர். சங்கீதம், நாட்டியம் முதலான இன்பக்கலைகளை உண்மையாக மெய்மறந்து அநுபவிப்பார். அநுபவிப்பது போலப் பொய் வேஷம் போடமாட்டார்.

ஒருசமயம் சங்கீதப் பள்ளிக்கூடம் ஒன்று கட்டுவதற்கு நிதி சேர்க்க ஊரிலே ஒரு கதம்பக் கச்சேரி நடைபெற்றது.

கச்சேரி நடத்தியவர்கள் பிருந்தாவன ஆசிரியருக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். அழைப்பை ஏற்றுக்கொண்டு ஆசிரியர் கச்சேரிக்கு வந்திருந்தார்.

அன்றைய நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கது, தேவகி என்ற பெண்ணின் பாட்டு. குழைவும் இனிமையுங் கலந்த அவளுடைய சாரீரம் கொட்டும் மதுர கீதத்தில் மனத்தைப் பறிகொடுக்காதவர்களேயில்லை. லட்சுமி தாண்டவமாடும் அந்த இளம் மங்கையின் எழில் முகத்தில் சொக்கிப்போகாதவர்கள் மனித ஜென்மமே அல்ல.

"பிருந்தாவனம்" ஆசிரியர் நல்ல ரசிகர். என்றேனோ? அன்றைக்கென்று தேவகி என்னவோ அபாரமாகத்தான் பாடினாள். உள்ளமும், உடலும் ஒன்றாக உருகிப் பாடினாள். அவளது இதய ஒலிகளைக் கேட்கச் சபையில் ஓர் உண்மையான ரசிகர் வந்திருக்கிறார் என்று அறிந்தாளோ என்னவோ! 'இன்னமும் சோதனையா?'என்ற பாட்டை மோகனத்தில் குழைந்து குழைந்து பாடினாள்' கண்ணீர் வராத ஒரு குறை.

ஆனால், கண்ணீர் 'பிருந்தாவன' ஆசிரியருக்கு வந்தது. ஸ்தூல தேகத்தில் தாம் ஒரு சாதாரண மனிதனாகச் சபையில் இருப்பதாக அவருக்குத்' தோன்றவில்லை. அலங்காரமான மேடையில் ஜெகஜ் ஜோதியான மின்சார வெளிச்சத்தின்கீழ் ஒய்யாரமாகவிருந்த அந்தப் பூலோகரம்பையின் ஒயிலும். அவளுடைய கந்தர்வ கானமும் சேர்ந்து அவரை ஆகாயத்தில் எங்கேயோ பூரண சந்திரிகையின் கீழே கொண்டு போயிற்று.

அவள் பாடிக்கொண்டிருந்த போது அவருக்கு மனம் உருகி அழவேண்டும் போல இருந்தது. ஓடிப்போய் அவள் கால்களிலே விழவேண்டும போலத் தோன்றியது. கதிரையோடு தலையை பின் பக்கம் சாய்த்து மேடையைப் பார்த்தபடி அப்படியே மெய்மறந்து போயிருந்தார். தலை அவரை மீறி ஆடியது. வாய் 'ஆஹா' என்றது.

சபையின் முன்னணியில் நாகரிக "மரங்களின் மத்தியில் ஒரு 'பைத்தியம்' இருந்தது. அக்கம்பக்கத்திலுள்ளவர்களுக்கு 'ஆச்சரியமாகத்தானிருந்தது. வெட்கமாகவுங்கூட இருந்தது. ஆனால் பாடகிக்கோ அதுவொரு உற்சாகத்தைக் கொடுத்தது. 'யாரோ இவர்?' என்று தனக்குள்ளே கேட்டுக் கொண்டாள். இரவு 10 மணியளவில் கச்சேரி முடிந்து எல்லாரும் வெளியேறினார்கள்.

அடுத்தவார 'பிருந்தாவன' த்தில் அந்தக் கதம்பக் கச்சேரி பற்றி ஒரு ரஸமான விமரிசனம் வெளியாகியிருந்தது. கச்சேரிக்குச் சமுகந்தந்திருந்த ஆசிரியரே அதை எழுதியிருந்தார். அதில் தேவகியின் சங்கீதத்தைப் பற்றித் தான் முக்கியமான வானளாவப் புகழ்ந்து எழுதியிருந்தார். தாம் அநுபவித்த உணர்ச்சிகளை ஒழிக்காமல் வெளிவெளியாகவே கூறியிருந்தார்.

அவளது பாட்டும் அழகும் சேர்ந்து பண்ணொடு இசை சேர்ந்தாற் போல ரம்யமாக விருந்ததென்றும், அது ஒரு அற்புதமோ சொப்பனமோ என்றெல்லாம் தம்மைப் பிரமிக்கும்படி செய்துவிட்டதென்றும் வர்ணித்திருந்தார். முடிவில், பாடகி இடையிடையே செருமியதுகூட ஒரு இன்னிசையாவே பரிமளித்த தென்று ஒரு விளம்பரமான குறிப்போடு தமது பாராட்டுதலை முடித்திருந்தார்.

இது வெளியான பத்திரிகை இதழ் தேவகியின் கைக்குப் போயிற்று என்று சொல்லவேண்டியதில்லை.

கதம்பக் கச்சேரி விமர்சனத்தை அவள் ஆவலோடு படித்தாள். தன்னைப் பற்றி எழுதிய பகுதியைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். ஆயிரந்தடவை படித்தாள். ஒவ்வொருமுறையும் படிக்கப் படிக்க அவளுக்குப் புதுப்புது உணர்ச்சிகள் மனத்தில் உதித்தன. மகாகாவியத்தைப் போல புதுப்புதுக் கருத்துக்கள் தெரிந்தன. ஒருசமயம் மட்டற்ற மகிழ்ச்சி உண்டாகும்; மற்றொருசமயம் அதைப் படிக்கும் போது, அதை எழுதியவரை உடனே பார்க்க வேண்டும்,

அவரோடு மனங்குளிரப் பேசவேண்டும் என்ற தாகம் உண்டாகும். "பாடகி இடையிடையே செருமியதுகூட நன்றாகத்தானிருந்தது" இந்த வசனத்தைப் படித்த போது அவளது முகம் நாணத்தால் சிவந்தது. பத்திரிகையைச் சட்டென்று மடித்து எடுத்துக்கொண்டு அறைக் குள்ளே தனியாப் போயிருந்து மீண்டும் படிக்கத் தொடங்கினாள். முடிவில், இப்படியெல்லாம் தன்னைத் தூக்கி வைத்து எழுதிய ஆசிரியருக்குத் தனது நன்றியைத் தெவித்துக் கடிதம் எழுதுவதென்று தீர்மானித்தாள்.

"இவ்வளவு பாராட்டுதலுக்கு அடியேன் தகுதியுடையவளா ஆசிரியரே!".. என்று எழுதிய தேவகியின் கடிதம் ஞானகுமாரனுக்குப் பெரும் மனப்பூரிப்பைத் தந்தது. பேனையை எடுத்து உடனேயே அவளுக்கு என்னென்னவோ எழுதினார்; எவ்வளவோ எழுதினார்... எழுதி அதைத்தபாலில் சேர்த்த பிறகு தான் அவருக்கு மனநிம்மதி பிறந்தது.

இதற்கு பிறகு அவர்களிடையே பல கடிதங்கள் போய் வந்தன. "சில காலமாகப் 'பிருந் தாவனத்தில் உணர்ச்சியான நல்ல கதைகள், கட்டுரைகளே வருவதில்லை" என்று அதன் வாசகர்கள் குறைகூறினார்கள் என்றால் அதற்குக் காரணம் ஆசிரியரின் அசிரத்தையல்ல; தேவகிதான் ஞானகுமாரனின் சர்வ உணர்ச்சிகளையும் கொள்ளை கொண்டிருந்தவள் அவ ளல்லவா!

கடித உறவு முற்றி நாளடைவில் அவர்கள் நேரிலும் சந்திக்கத் தொடங்கினார்கள். தன்னைத் தேடி அவர் தன் வீட்டுக்கு வருகிறார் என்பதை நினைக்க நினைக்க ... அவளுக்கு அது ஏழேழு ஜன்மத்திலும் கிட்டாத ஒரு பாக்கியம் போலத் தோன்றியது! ஞானகுமார னுக்கோ... அவள் வீட்டிலேயே குடியிருந்து விட்டால் பிறவிப்பயன் தீர்ந்துவிடாதா என்றிருந் தது. சந்தித்த போதெல்லாம் அவர் அவளைப் பாடச் சொல்லிக் கேட்டு அவள் பக்கத்தே அமர்ந்து 'ஆஹா! ஊஹூ!' என்று பரவசப்பட்டார். பல மணிக்கணக்கான அவளைப் பார்த்துக் கொண்டே 'ஆசைக்காதலி! நீ பாட்டிசைத்துக் கனிவோடு கூடுவையேல் ஏது மினிக் கவலை யில்லை; இவ்வுலகில் இதுவன்றோ பரமபதம்!" என்று சொன்னார்.

கலைஞர் - ரசிகர் காதல் என்னவோ மகோன்னதமாகத்தாகிருந்தது. ஆனால் .... இந்த ஆனால் என்ற 'முறிவு' அவர்களிடையேயும் இல்லாமற் போய்விடவில்லை. அழகான தாமரைப் புஷ்பம் தடாகத்திலே எத்தனை நாளைக்குப் பூத்திருக்க முடிகிறது?

தேவகியின் பெற்றோருக்கு அவளை ஞானகுமாரனுக்குக் கல்யாணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று ஓர் எண்ணம் உண்டாயிற்று. விஷயத்தை மெள்ள வெளிவிட்டார்கள்...

ஞானகுமாரன் தேவகி வீட்டுக்குப் போவது சட்டென்று நின்றுவிட்டது. அவர்கள் திகைத் துப் போனார்கள். வருவார் வருவார் என்று தேவகி பல நாட்களாக எதிர்பார்த்தாள். அவர் போகவேயில்லை. மனங்கொதித்துக் கடைசியில் ஒரு கடிதம் எழுதினாள் ஞானகுமாரனுக்கு.

ஐயா,

நான் ஒரு தாசியின் பெண் என்று தெரிந்து என்னை ஏற்றுக்கொள்ள உங்கள் மனம் இசையவில்லைப் போலும். அடுத்த ஜன்மத்திலாவது உங்களைப் போல உயர்ந்த குலத்தில் பிறக்க வேண்டுமென்று கடவுளை வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. என் இதயத்தை நீங்கள் அறிய வில்லை. ஒருமுறை வந்தீர்களானால் என் நெஞ்சைப் பிளந்து

உங்களுக்குக் காட்டுகிறேன். உங்களைப் போல எழுத்து வன்மையை எனக்குப் பகவான் தந்திருக்கவில்லையே! எப்படியும், ஒன்றை நிச்சயமாக நம்புங்கள். இந்த இதயத்திலே ஞானகுமாரரைத் தவிர வேறு ஒரு மனித ஜென்மத்துக்கு என்றைக்குமே இடமில்லை. ஆனால் என் உடல் - அது என் பெற்றோர்களுக்குரியதல்லவா? என்னை மறக்காதீர்கள்!

- தேவகி

கடித்தைப் படித்துவிட்டு ஞானகுமாரன் நீண்ட பெருமூச்சு விட்டார். அவ்வளவுதான்.

◆◆◆

இதற்குப்பின் ஐந்து வருஷங்கள் உருண்டோடி விட்டன. தேவகிக்கு யாரோ ஒருவ னோடு கல்யாணம் ஆகியது. அவர்கள் எங்கெங்கோ எல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.

"பிருந்தாவன"ப் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் இப்போது வேறு யாரோ ஒருவர் இருந்தார். ஞானகுமாரன் பல வருஷங்களுக்கு முன்பாகவே அதிலிருந்து விலகிக்கொண்டு விட்டதாகச் சொல்லப்பட்டது.

சுற்றுப்பிரயாணம், க்ஷேத்ராடனம் எல்லாம் முடித்துக்கொண்டு ஊர் திரும்பியிருந்த தேவகி - அனந்தராமனுக்கு, ஒருநாள் பட்டணத்தில் ரேடியோ நிலையத்திலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், அந்த மாசம் 26ந் தேதி மாலை 6.30 மணிக்கு அவளுக்கு ரேடியோவில் ஒரு புரோகிராம் கொடுத்திருப்பதாகக் கண்டிருந்தது.

26ந் தேதி மாலை 5.45 மணிக்கு பக்கவாத்தியக்காரர்களையும் தனது சிநேகிதி மார்கள் இரண்டு பேரையும் அழைத்துக்கொண்டு ரேடியோ நிலையத்து வாசலில் காரில் போய் இறங்கினாள் தேவகி.

மணி 6.15 ஆனதும் உள்ளே இசைத்தட்டுக்கள் வைத்துக் கொண்டிருந்த அறிவிப் பாளர் வெளியே 'வெயிற்றிங்ஹாலுக்கு வந்து பக்கவாத்தியக்காரன் ஒருவனைக் கூப்பிட்டு இரண்டாவது 'புரோட்காஸ்டிங்' அறைக்குவரும் படி சொல்லிவிட்டுத் திரும்பினார்.

தோழிமார்களோடு பேசிச் சிரித்துக்கொண்டு எங்கேயோ பராக்காகவிருந்த தேவகி அறிவிப்பாளரின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுப்போய்த் திரும்பிப் பார்த்தாள். ஞானகுமாரனே ரேடியோ அறிவிப்பாளரென்று தெரிந்து அவள் ஒருகணம் பிரமித்துப்போய்விட்டாள். உற்சாகமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தவளுடைய முகம் திடீரென்று இப்படி ஏன் வாடிப்போயிற்று - என்று அவளது சிநேகிதிகள் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்.

6.30 மணி ஆயிற்று. "..... ரேடியோ நிலையம். அடுத்த 45 நிமிஷத்துக்கு தேவகி - அனந்தராமன் பாடுகிறார்" என்ற அறிவித்தலோடு கச்சேரி ஆரம்பமாயிற்று.

அன்றைக்கு ரேடியோவைத் திருப்பியவர்கள் சொக்கிப்போனார்கள்.

'இன்னமும் சோதனையா?' என்ற பாட்டைக் கேட்டவர்கள் உண்மையாகவே மனம் உருகினார்கள். 'இவ்வளவு சோகபாவத்தோடு பாடியவள் யாரப்பா அது!' என்று ஒருவரை யொருவர் கேட்டார்கள். 'நாங்கள் கேள்விப்பட்ட தில்லையே!' என்றார்கள்.

பைத்திரயக்காரர்கள்! அப்பேர்ப்பட்ட சங்கீதத்தைப் பூலோகத்தில் கேள்விப்படலாவது அது. கேவலம். கண்டத்துக்கு மேலிருந்து கிளம்பும் சங்கீதமா என்ன?

இறந்துபோன கணவனைக் கனவிலே கண்டவள்போல. மனங் குழைந்து உடலும் உயிரும் உருகிப் பாடினாள். தேவகி அன்றைக்கு.

'இன்னமும் சோதனையா' என்ற பாட்டை ஐந்து வருஷங்களுக்கு முன்னே அவள் பாடிய போது. அன்று கண்ணீர் வரவில்லை. ஆனால் இன்றைக்கோ இரண்டு கண்களிலும் கண்ணீர் வழிந்து ஓடிற்று.

"இதுவரை பாடியவர்.... தேவகி - அனந்தராமன்" என்று முடிவில் அறிவித்தபோது ரேடியோ அறிவிப்பாளரின் குரல் தளதளத்தது; பெருமூச்சோடு நடுங்கியது.

மறுமலர்ச்சி
ஆடி - 1947

பவன்

பவன் என்ற புனை பெயருக்குரிய சொந்தக்காரன் எவரென அறியமுடிய வில்லை. ஈழகேசரியில் கனதியான சிறுகதைகள் பவனால் எழுதப்பட்டுள்ளன. ஆசைச்சட்டம்பியார் ஒரு காலகட்டத்து யாழ்ப்பாணச் சமூகத்தின் கல்வி நிலை யைச் சித்தரிக்கின்றது. 1946 இல் இவரது தியாகி என்ற சிறுகதை ஈழகேசரியில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து 1946 வரை பன்னிரண்டு சிறுகதைகளை எழுதியுள்ளார்.

- ஆசைச் சட்டம்பியார்
- ஒழிந்தது கவலை

ஆசைச் சட்டம்பியார்

பவன்

செல்லத்துரைச் சட்டம்பியார் அந்த வீட்டை விட்டுப் போய் வாரம் ஒன்று கழிந்து விட்டது. அவரிருந்த அறையில் அவரை இப்போது ஞாப கப்படுத்துவதற்குக் கிடந்தது ஆகக்கூடி அவருடைய மூக்குப்பொடி டப்பி ஒன்றுதான். அதையுங்கொண்டு சண்டையிட்ட வண்ணம் வீட்டி னுள்ளே நுழைந்த இரு பிள்ளைகள் “கும்”, “ராணி” என்னும் இருவரும் ஐந்து வயது வரைக்கும் குழந்தைகளின் வளர்ப்பு முழுவதும் ஆயாக் களின் பொறுப்பிலிருந்தபடியினால் அந்தப் பருவத்து இன்பங்களையோ தொந்தரவுகளையோ அனுபவிக்கத்தக்கதாய் விஸ்ஸாவுக்கு (பெற்றோர் இட்ட பெயர் விசாலம்) கொடுத்து வைக்கவில்லை. எப்போதும் அவர் களைப் பார்ப்பதும், மேய்ப்பதும் பணிப்பெண்களாவர்.

பிள்ளைகளுக்குப் படிக்கும் வயது வந்துவிட்டபடியாலும், சுதேச பாஷைகளுக்கு மதிப்பு ஏற்படத் தொடங்கிக்கொண்டிருந்தபடியாலும் வீட்டிலேயே அதற்கென ஒரு சட்டம்பியாரையும் வைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று சில பணக்கார வீடுகளில் ஏற்பட்டது. சட்டம்பியார் இல்லாத வேளைகளில் பிள்ளைகளை வீட்டில் வைத்துச் சமாளிப்பதென்றால் விஸ்ஸாவுக்கு ஒரே தலையிடிதான். ஆனால் அதே

பிள்ளைகளைச் சட்டம்பியார் சற்றே உரத்த குரலில், உறுக்கி அதட்டினால் போதும், உடனே விஸ்ஸாவுக்குக் கண்ணீர் ஆறாகப் பெருக ஆரம்பித்துவிடும்.

பிள்ளைகள் பண்ணும் அமளிகளைப் பொறுக்கமுடியாத விஸ்ஸா வெளிவிறாந்தையில் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த தன் புருஷன் அருகே சென்று, "புதுச் சட்டம்பியார் எப்போ வருகிறார்? ஒருவரையும் இன்னும் ஒழுங்கு பண்ணவில்லையா?" என்று பெருந்தொகைப் பணம் செலவிட்டு அரிதிற் படித்து ஓரளவில் வீட்டுப் பாஷையாக்கிய இங்கிலீ சிலே கேட்டாள்.

உடனே "போய்" (பையா) என இராட்சதத் தொனியில் சத்தமிட்டார் நாக்லின்கன் (நாகலிங்கம்) 'coming sir' (இதோ வந்திட்டன்) என்று இங்கிலீசில் சொல்லிக்கொண்டே அவர் முன்னிலையில் வந்து நடுங்கி நின்றான் ஒரு ராமன்".

"இன்றைத் தபால் இன்னும் வரக் காணோம். தபாற்காரர் வேலை நிறுத்தம் செய்யத் திடீரென்று தொடங்கினாலும் தொடங்கி இருக்கலாம். எதற்கும் நீ தபாற்கந்தோருக்குப் போய் தபால் பார்த்து வா" என்று கட்டளையிட்டார் லின்கன்.

"அப்படியே செய்கிறேன்" என்று பணிவுடன் சொல்லிவிட்டுப் போன ராமன், கால் மணித் தியாலத்திற்குள்ளாக நாலைந்து காகிதங்களுடன் வந்து சேர்ந்தான். லின்கன், காகிதங்களை வாங்கி, உடைத்துப் படித்தார். பின்பு மனைவியை அழைத்து, "மிஸ்டர் ஆறுமுகம் என்றொருவரை ஒழுங்குபடுத்தியிருக்கிறார்களாம்.வருகிற திங்கட்கிழமை கட்டாயம் வந்து சேருவாராம்" என்றார்.

விஸ்ஸா, "வருகிறவர்கள் ஏதாவது கல்யாணம் என்றும் அதென்றும் இதென்றும் சாக்குப் போக்குச் சொல்லி அடிக்கடி இவ்விடத்தை விட்டுப் போய்விடுகிறார்களே? இவர் எப்படிப்பட்டவரோ தெரியவில்லை" என்றாள்.

லின்கன், "சட்டம்பிக்கு ஒரு வருஷமாவது நின்று பிடிக்க வேணும் என்று சொல்லியிருக்காம். எதற்கும் ஆள் வந்து சேரட்டும். நாங்கள் "நறுக்காய் பேசிக்கொள்ளுவோம்."

விஸ்ஸா, "எப்படியும் பிள்ளைகள் சந்தோஷமாகப் படிக்க வேண்டும். சட்டம்பியார் என்றாற் செல்லத்துரைச் சட்டம்பியாரைப் போல் வந்து வாய்க்க வேணும். எந்த நேரமும் பிள்ளைகளை அவர் மடியிலேதானே காணலாம். பிள்ளைகளை அவர் செல்லமாய் நடத்தினபடியால் அல்லவோ பிள்ளைகள் எங்களை எள்ளளவும் நினைக்காமல் நாள் முழுதும் அவரோடேயே பொழுது போக்கி வந்தார்கள்."

லின்கன்: "எதுவும் கணக்கு வழக்காய் அளவாய் இருக்கவேணும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. நீ அளவுக்கு மிஞ்சிக் காட்டுகிற செல்லத்தினாலேதானே பிள்ளைகள் உருப்படுகிறார்கள் இல்லை. இத்தனை சட்டம்பிமார் வைத்துப் பார்த்தும் ஒரு மண்ணாவது இன்னும் மூளையில் ஏறவில்லையே?"

விஸ்ஸா: "என்னவோ . இப்போதே சொல்லி வைக்கிறேன். எந்தக் கவரணரானாலும் சரி. என் பிள்ளைகளின் மேலே மாத்திரம் கைவைக்க விடமாட்டேன். படிப்பிக்கிறதானால் அடிக்காமற் படிப்பிக்கட்டும். அவருக் கென்ன! சம்பளந்தானே தேவை."

லின்கன் "அதெல்லாம் அவர் வரட்டும். பேசிக் கொள்வோம்." மேலே ஒவ்வொருவரும் தத்தம் கருமத்தின் மேற் செல்லலாயினர்.

◆◆◆

திங்கட்கிழமையும் வந்தது. ஆறுமுகச் சட்டம்பியாரும் வந்து சேர்ந்தார். வந்தவரை உபசரித்து, அவருக்கு வேண்டுவன செய்து, நிபந்தனைகளையும் பேசி முடித்து, அவரை அவருக்குரிய விடுதி அறையிற் சேர்த்தார்கள்.

"காட்டுப்பூனை போன்ற அவரது கடுகடுத்த முகத்தைப் பார்க்க எனக்கே பயமாயிருக்கிற பொழுது பிள்ளைகளுக்கு எப்படித்தான் படிப்பு ஏறப் போகுதோ தெரியாது" என்று சற்றே ஏக்கங்கொண்டாள் விஸ்ஸா.

"படிப்பைப் பற்றி உனக்கே இவ்வளவு கவலை ஏற்படுகிறது நல்ல சகுனம்தான். அந்தக் கவலையை இப்போதைக்குச் சட்டம்பியாருடன் விட்டால் நல்லது. நாங்கள் கண் மூடினால் இந்தப் பிள்ளைகளுக்கு நடக்கிறதைப் பற்றி ஏதாவது அறியப் போகிறோமோ? படிக்கிற வேளையிலாவது அவர்களுடைய செல்லத்தை நினைக்காமற் கொஞ்சம் கண்ணை மூடிக் கொண்டிரு. அவர்கள் உருப்படுவார்கள். அது கிடக்க சட்டம்பியார் இன்றைக்குத்தானே வந் திருக்கிறார். அவருடைய தோற்றத்தைக் கொண்டு அவருடைய குணத்தைக் கணிக்காதே. பலாப் பழம் போல் உள்ளே தித்திப்பும் வெளியே முள்ளுமாய் இருக்கினும் இருக்கலாம்" என்று சமாதானம் பண்ணினார் லின்கன்.

பிள்ளைகளும் கொலைக்களத்திற்குச் செல்வார் போல் வெகு அச்சமுடையராய்ப் படிப்பறைகளுக்குப் போகலாயினர்.

"வரலாம், வரலாம். வந்து உட்காரலாம் என்று அதிகார தோரணையிலே சொல்லி எதிரிலிருந்த கதிரைகளைச் சுட்டிக்காட்டினார், வீட்டுக்குக் காகிதம் எழுதிக்கொண்டிருந்த சட்ட ம்பியார்.

காலிற் சப்பாத்து கிறீச் கிறீச்சென்று சப்தமிட உள்ளே மெதுவாக நுழைந்தனர் பிள்ளைக ளிருவரும். உள்ளங்காலிலிருந்து உச்சிவரையும் அவர்களை ஏறிட்டுப் பார்த்துச் செருமிக் கொண்டு பின்வருமாறு உறுமினார் சட்டம்பியார்.

"கிட்ட வாருங்கள். உங்கள் காலுக்குச் சப்பாத்து இப்போ அவசியம் தேவைதானோ? ஆண்டவன் தந்த காலை ஏன் இப்படித் தோலினாலே மூடி வரைந்து இறுக்கிக்கட்டி பலவீனப் படுத்தி அலங்கோலமாக்குகிறீர்கள். கழற்றி எறியுங்கள். சுத்தமான காற்றக் கொஞ்சமாவது காலிலும் படட்டும். ஒருவேளை காலிலே அழுக்குப் பிடிக்கும் என்றெண்ணமோ? இது ஆரு டைய வீடு? உங்களுடைய வீடுதானே! உங்களுடைய வீட்டை ஆர் சுத்தமாய் வைத்திருக்க வேண்டாம் என்றது? கழற்றுங்கள் சப்பாத்தை. இந்த அறையினுள்ளே நீங்கள் வெறுங் காலுடனேதான் வர வேண்டும்" என்றார். பிள்ளைகள் இடி விழுந்தது போலத் திகிலடைந்து ஒன்றும் செய்ய முடியாதவர்களாய்ச் சிறிது நேரம் மிரள விழித்துக் கொண்டு நின்றுவிட்டுப் பின்பு ஒருவாறு சப்பாத்தைக் கழற்றிச் சுவரோரமாக வைத்துவிட்டுத் தங்கள் ஆசனத்தில் உட்காரலாயினர்.

உட்கார்ந்த பின்பு, தாம் அறிய வேண்டிய விஷயங்களைப் பிள்ளைகளிடம் விசாரிக் கலானார் சட்டம்பியார்.

"தம்பீ! உன் பேரென்ன?" (மெதுவான குரலிலே) "கும்"

சட்டம்பியார். "என்ன?" என்று காதிற் கையைச் சேர்த்துச் சற்றே குனிந்து உறுமினார்.

"கும்" என்ற மறுமொழியே மீண்டும் வந்தது. "அதென்ன "கும்" என்றால்? முழுப் பெயரையுஞ் சொல்லு

" குமாரசுவாமி"

"தெய்வமே! ஆண்டவனை நினைவூட்டும் அருமந்த பேரை இப்படியா கொலை பண்ணவேண்டும்? நான் கூப்பிடும் பொழுது முழுப் பெயரையுந்தான் சொல்லிக் கூப்பிடு வேன். கதிர்காமத்தையனை, நல்லூர்க் கந்தனை, செந்தூர்த் தேவனை நினைப்பூட்டி எங்கள் பிறவிப் பிணியைத் தீர்க்கிற திருநாமத்தைக் கொலை பண்ணாதே."

"பிள்ளை ! உன் பேரென்ன?"

"ராணி"

"என்ன ராணி?"

"கமலராணி"

"நல்லது. அந்த லஷ்மீகரமான பெயர் முழுதும் என் காதிலே விழ வேண்டும்."

"சரி - எங்கே - உங்கள் புத்தகங்களைப் பார்ப்போம். எடுங்கள்"

"புத்தகங்கள் சட்டம்பியார்தான் வைத்தெடுத்துத் தருகிறவர். எங்களிடம் இல்லை ."

"படிக்கிறது யார்? நீங்களா? சட்டம்பியாரா? இந்த நிமிஷம் கொண்டு வந்து காட்ட வேணும் புத்தகங்களை - உ.ம்...ம்!"

"உந்த மேசையின் லாச்சியினுள்ளேதான் வைத்தவர் பழைய சட்டம்பியார். இப்புறம் வந்தெடுங்கள் கெதியாய்."

வாயில் விரல் சூப்பியவண்ணம் மேசையருகே மெதுவாகப் போனார்கள்.

"வாயில் விரலை எடுங்கள். பசித்தால் வீட்டுக்குப் போய் ஏதாவது சாப்பிட்டு வாருங்கள். முதலிலே கையைக் கழுவி வாருங்கள்."

பெருமூச்செறிந்து கொண்டு அடுத்த அறையொன்றிற் போய் கை கழுவின பின்பு, திரும்பி வந்து மேசை லாச்சியின் உள்ளிருந்த தங்கள் புத்தகங்களை எடுத்து அம்மேசையின் மீது வைத்தார்கள்.

"ஏன் இந்தப் புத்தகமெல்லாம் இவ்வளவு அழுக்கேறி உருவங் கெட்டு கிழிந்து போயி ருக்கு? ஒவ்வொரு புத்தகமும் உறையிட்டுச் சுத்தமாய் வைத்திருக்கவேணும். இப்பொழுதே எனக்கு முன்னாலிருந்து சீர் படுத்துங்கள் பார்ப்போம்."

அவர்கள் புத்தகங்களை சீர்படுத்திக் கொண்டிருக்கும்போது, அவர்கள் மீது கவலை கொண்டு வீட்டில் ஒரு கருமமும் பார்க்க முடியாத வளாய் தவித்துக் கொண்டிருந்த விஸ்ஸா,

அவர்களைப் பார்க்கும் பொருட்டு, அங்கே சென்று, அடிமேல் அடிவைத்து மெதுவாக அவர் களுக்கருகே போய்க்கொண்டு,"சட்டம்பியார் இன்றைக்கு எப்படி? எல்லாம் ஒழுங்காய் நடைபெறுகிறதுதானே?" என்று கேட்டாள்.

"பிள்ளைகள் படிக்குமிடத்திலே பிற அலுவல்களுக்கு இடமில்லை. படிப்பறையின் உள்ளே திறந்த வீட்டினுள் நாய் புகுவது போல் ஒருவரும் வர வேண்டாம்" என்ற பதில் காதில் விழுந்ததே அவளுக்குத் தலை கிறுகிறுக்கத் தொடங்கியது. அவர் தன் பிள்ளைகளுக்கு கட்டளையிடும் பொழுது அவர்கள் ஆடாமலும், அசையாமலும் சித்திரப்பாவை போலிருந்து கேட்டுப் பணிகளை நிறைவேற்றுதலையும், அவருடைய தொனி ஏதோ எளியார் வீட்டுப்பிள்ளைகளை ஏவுதல் போலிருத்தலையும் அவள் கண்டாள். சப்பாத்துக்கள் சுவரோரம் இருப்பதையும் பிள்ளைகள் வெறுங்காலுடன் இருப்பதையும் கண்டாள். வந்த ஆத்திரம், துக்கம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு தலை குனிந்தவண்ணம் வந்த வழியே திரும்பிவிட்டாள் விஸ்ஸா .

அன்றெல்லாம் தான் கண்ட காட்சியையிட்டுப் புருஷனிடம் பிணங்கினாள். ஆனால் அவரோ, "சிவபூசையிலே கரடி விட்டாட்டுவது போல - நீயேன் பிள்ளைகளுடைய படிப்பு வேளையில் அங்கே போனாய்? படிப்பறையை என்னத்திற்காக வீட்டினின்றும் இவ்வளவு தூரம் தள்ளிக் கட்டி வைத்திருக்கிறோம்? சட்டம்பியார் தனக்கு ஏதாவது வேணுமென்றால் அவர் தானாகவே எங்களுக்குத் தெரிவிப்பார். வரமுந்தியே அவரைக் கலைக்க..... முயலாதே..... அவர் கண்டிப்பானவர் என்று கேள்விப்பட்டபடியினால் அல்லவா அப்படியான வரையும் ஒரு முறை பார்ப்போம் என்று நான் உடன்படலானேன், எதற்கும் அவசரப்படாதே. இனிமேல் ஆகவேண்டியதைச் செவ்வனே செய்து கொள்" என்று சற்றே கண்டிப்பாகத்தான் மறுமொழி சொன்னார்."இதுவும் என் தலைவிதி தான்" என்றெண்ணி மௌனஞ் சாதிக்க லானாள் விஸ்ஸா.

அடுத்தது காட்டும் பளிங்கு போலப் படிப்பறையிலிருந்து வந்த பிள்ளைகளின் முகம் அன்றைய அனுபவத்தின் கசப்பைத் தெளிவாகக் காட்டியதை விஸ்ஸாவன்றி லின்கனும் அவ தானித்திருந்தபோதிலும் வெளியே பிள்ளைகளுக்கு உற்சாக வார்த்தைகளையே சொல்லிக் கசப்பைப் போக்க முயன்றார் அந்த லின்கன். முதல்நாள் இப்படிக் கழிந்தது.

காலச்சக்கரம் விரைந்து சென்றது. பிள்ளைகளுடைய நடையுடை பாவனை வாழ்க்கை என்னுமிவையெல்லாவற்றிலும் அநேக மாறுதல்கள் உண்டாகிக் கொண்டன. குறித்த குறித்த நேரங்களிலே அவ்வக் காரியங்களைச் செய்யத் தலைப்பட்டுக் கொண்டனர். தாங்களே தங் கள் பல்லைத் துலக்கலாயினர். தங்கள் உடைகளைத் தாங்களே களைந்து தோய்த்துலர்த்தி உடுக்கத் தொடங்கிக் கொண்டனர். தங்களை பொறுத்த வரையில் ஆயாமாருடைய சேவை யையும் வேலைக்காரருடைய சேவையையும் கூடிய விரைவிலேயே நீக்கி நடக்க முயல் வாராயினர். சமயாசார சீலங்களைக் கைக்கொள்ளலாயினர். தும்பி, வண்ணாத்துப்பூச்சி முதலானவைகளைப் பிடிப்பதுமில்லை, அவைகளுடைய சிறகை ஒடித்து வருத்துவது மில்லை. பேச்சிலும் "கீழோராயினும் தாழவுரை" என்னும் மூதுரைக்கு ஓர் இலக்கியமாய் அமையலாயினர். இவைக்கெல்லாம் காரணம் யாது?

"அணுக்கள் சேர்ந்தே அண்டமானது. அணுக்களின் குணமே அண்டத்தின் குண மாகப் பரிணமிக்கிறது. ஆனபடியால் அணுவை நல்லணுவாக்கினால் அண்டம் நல்லண்ட மாகும். பிள்ளைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் நல்லவர்களாயிருந்தால் உலகம் முழுவ துமே நல்லதாயிருக்கும். பணச்செருக்கு ஆகாது. முடி மன்னரும் பிச்சை எடுக்கலாயினர். பணத்திமிரினாலே தொழிலிலே வேறுபாடு கற்பித்துப் பிறரைத் தாழ்த்திக் கெட வேண்டாம். சாதித் திமிர் ஆகாது. பிறரெல்லாம் தங்கள் சாதிக்கே அடிமைகளாம் என்று இறுமாப்புக் கொண்டெழுந்த ஹிட்லரின் வீழ்ச்சியை நீங்களே காணவில்லையா? இப்பொழுது அவரு டைய நாடே உலகத்திற்கு அடிமையாகிவிட்டது. நிறத் திமிர் ஆகாது. நிறத் திமிருக்கும் அதோ கதிதான். நிறத் திமிர் கொள்ளுகின்ற வீடு ஒவ்வொன்றும் தென்னாபிரிக்காவாகிக் கொந்த ளிக்கத் தொடங்கி விடும். திமிர் கொண்டோரது நீதியெனப்படுவது எல்லாம் பிறருக்கு வாத்தி யார். தனக்கு வாத்தியாரல்ல" என்னும் பழிமொழிக்கு இடமாகிவிடும். வசையுற்றும் மான முடையார் போலப் போலி வாழ்வே வாழ நேரிடும். பிறரைப் பழித்தலாகாது. அவர்களுடைய நிலையில் உங்களை வைத்துப் பாருங்கள். உண்மை விளங்கும். தெய்வமொன்று உண்டு. தேவகட்டளைகளை மீறவேண்டாம். மீறாதோரே பெரியோராவர்......." என்றிப்படியான போதனைகளை இடித்திடித்துரைத்த பின்பே சட்டம்பியார் தினசரிப் பாடங்களை ஆரம்பிப்பது வழக்கமாகி விட்டது. கற்ற போதனைகளைச் சாதிக்கவும் பயிற்றி வந்தார். ஆதலினாலே பிள்ளைகளுக்கு ஆரம்பத்திலேற்பட்ட கசப்பு நாளடைவிலே அறவே தொலைந்து விடடது.

பிள்ளைகளுடைய வாயிலிருந்து "அவர் மிகவும் நல்லவர்" என்பதைத் தவிர வேறெவ் விதமான அபிப்பிராயத்தையும் வெளிப்படுத்த முடியாமற்போன விஸ்ஸா இரண்டாம் வருட முடிவிலே தனது பிடிவாதத்தினாலும் தலையணை மந்திர வலிமையினாலும் ஒருவாறு ஆறுமுகச் சட்டம்பியாரை நீக்குவித்து வேறொருவரை அமரப்பித்துக் கொண்டாள். பிள்ளைகளோ மடியில் வைத்துச் செல்லம் பண்ணின செல்லத்துரைச் சட்டம்பியாரை நினைத்து - ஒரு சொட்டுக் கண்ணீராயினும் விடாதவர்கள் ஆறுமுகச் சட்டம்பியார் பிரிவை ஆற்றாது கண்ணீர் பெருக்கிக் கொண்டு இப்போது மேல்வந்த புதுச் சட்டம்பியாரிடம் படித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஈழகேசரி
28.04.1946

ஒழிந்தது கவலை

பவன்

முத்து மிகவும் நல்ல பிள்ளை. அவனைப் பார்க்கிறவர்கள் அவன் மிதித்தவிடத்துப் புல்லும் சாகாது என்று சொல்லுவார்கள். அவ்வளவு பரமசாது. சதா புன்னகை தவழும் பூரணச் சந்திரமுகம். நீறு பூத்த நெற்றி. பெற்றோரும் உபாத்திமாரும் சொல்கிறபடியே நடந்து கொள்வான். தானாக ஒரு தொந்தரவும் தேடிக்கொள்ள மாட்டான். பள்ளிக்கூட வாழ்க்கை கவலையின்றி சந்தோசமாய் கழிந்தது.

அந்த வாழ்க்கை எக்காலமும் நிலைத்திருக்குமா? மேல் வகுப் புப் படிப்பு முடித்த பின்பு வயிற்றுப் பிழைப்பின் பொருட்டு யாழ்ப் பாணத்தை விட்டுப் புறப்பட்டு வெளியூரிலே வேலை தேடி அலைந்து ஒருவாறு கொழும்பிலே "கொம்பனி" ஒன்றிலே கிளார்க்" ஆகினான். வருடமிரண்டு கழிந்தது. சம்பளம் இன்னும் ஐம்பது ரூபாவிற்கு மேலே போகவில்லை. ஆனால் நாலு புறத்திலுமிருந்து எத்தனையோ கல்யா ணப் பேச்சுக்கள் வரத் தொடங்கிவிட்டது. இளந்தாரியை சும்மா இருக்க விடுவார்களா? பெண் பெற்றவர்கள் தங்கள் குமர் கரையேற வேண்டு மென்பது அவர்கள் கவலை. இளந்தாரியின் பெற்றோருக்கோ தங்கள் மகன் பிறஊரிலே என்னென்ன வலையிலே சிக்கி விடுகின்றானோ

என்ற கவலை. இளம் பையன். இந்த சம்பளத்தைக் கொண்டு குடும்பப் பாரத்தைத் தாங்கு வானா? குடும்ப சுமை யோடு தன் பெற்றோரையும் தாராளமாகக் கவனிக்க முடியுமா? உத்தி யோகத்தன் என்று பாராட்டி உறவு கொண்டாட வருகிற ஊரவர்களையெல்லாம் செவ்வனே உபசரிக்க ஆற்றலுண்டா. இவர்களைப்பற்றி ஒருவராவது சிந்திப்பதில்லை. ஏதோ சம்பளம் அற்பமாய் இருந்தாலும் மேல்வெட்டு" வரும்படிக்குக் குறைவிராது என்பதுதான் அநேக ருடைய எண்ணம்.

அவனுக்குப் பேசி வந்த பெண்கள் பெரும்பாலும் இங்கிலிஸ் பள்ளிக்கூடத்திலே "லற்றீன்" "ஹிஸ்றரி" "டொமெஸ்ரிக் ஸயன்ஸ்" எல்லாம் படித்து பெரும் பரீட்சைகளிலும் தேறினவர்கள். முகத்தில் பவுடர் பூசி, மூக்குக் கண்ணாடி தரித்து, கையில் "ரிஸ்லெட்" கட்டி, காலில் செருப்புப் பணித்து, விரித்த கூந்தலோடு வீசியெறிந்த தாவணி பின்னே நிலங்கூட்ட, ரக சியம் பேசினும் எட்டு வீடாவது கேட்கும்படியான மென் குரலிலே வம்பளந்து கொண்டு கழுதை பரதேசம் புறப்பட்டது போல எந்நேரமும் ஊர் சுற்றித் திரியவும் சந்தை கடைக்குப் போய் வீட்டிற்குத் தேவையான காய்கறிச் சாமான்கள் வாங்கத் தெரியா விட்டாலும் சாய்ப்புக்குப் போய் தங்களுக்குத் தேவையான போக்கியப் பொருள் வாங்கவும் வீண் டம்பா சாரிகளால் நடக்கவும் நன்றாய் பழகிக் கொண்டவர்கள் அவர்கள். "உவர் கொம்பனிக் கிளார்க்குத்தானே உதில் என்ன சந்தோசம்" என்போரும், "உவரென்ன யூனியர்தானே. பாஸ் பண்ணினவர்" என்போ ரும் உவருடைய சம்பளம் என்ன? மூக்குத்தூள் போடவும் காணாது, "என்போரும், "தெய் வர்தின்னியோடு மாரடிக்கிறதார்" என்போருமாய் பல காரணங்களையிட்டு முத்துவை மணக் கச் சம்மதிக்கவில்லை.

ஆனால் நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைப்பதுதானே வழக்கம். எப்ப டியோ முத்துவுக்கு உத்தியோகமாகி மூன்று வருஷம் கழிவதற்கிடையில் நவநாகரீக நாரி மணி சொர்ணலட்சுமி அவனுடைய வாழ்க்கைத்துணைவி ஆனாள். அவளுக்குப் பேர் சொர்ணமானாலும் நீரிற் கழுவிய நெருப்புத்தான். ஆனபடியிலேதான் அவளுக்கு வித்தியாகர்வமும் செல்வச் செருக்கும் சற்றே இருந்த போதிலும் அவள் முத்துவை அலட்சியம் பண்ணாமல் விவாகம் பண்ணவேண்டியவள் ஆனாள்.

விவாகமாகி சில மாதம் கழிந்த பின்பு கொழும்பிலே குடித்தனம் ஆரம்பமாகிற்று. முத்து இயன்றவரையிலே சிக்கனமாகத்தான் நடந்து வந்தான். ஆனாலும் சம்பளத்தைக் கொண்டே சமாளிப்பது வெகு கஷ்டமாகி வந்தது. அவனுடைய படிப்பிற்கு செலவிட்டதெல்லாம் இப்பொழுதுதான் வட்டியும் குட்டியுமாக அறவிட வேண்டும் என்று கங்கணம் கட்டின மாதிரி இருந்தது தகப்பனுடைய போக்கு. என் மகனுடைய உழைப்பினாலேயே நான் ஆறுதல் அனுபவிக்கிறேன்". என்றொரு பெருமை மற்றவர்களுக்கு பேசிக் காட்டுதற்காக அவர் தான் செய்து வந்த கமத்தொழிலை கைவிட ஆரம்பித்தார். அடிக்கடி கொழும்பிற்குப் போய் வரவும், போய் வருகிற ஒவ்வொரு பயணமும் அயலவர்களுக்கும் கூட்டாளிமாருக்கும் விநோதப் பொருளும் போக்கியப் பொருளும் வழங்கவும் தலைப்பட்டார். போலிப் புகழே இதற்கெல்லாம் காரணம், தொடக்கத்திலே நாலைந்து வருஷம் கஷ்ரமர் ஒருவருக்கும் மற்ற ஒருவருக்கும் வெளிப்படையாகத் தோன்றவில்லை. ஏனென்றால் சார்ணம் சீதனக்காரியல்லவா. பவுசும், பெருமையும் பாராட்டிக் கொள்ளுதற்காகவும் எவருக்கும் நல்லவன் என்று எல்லோரிடமும் பெயர் பெறுதற்காகவும் தாராளமாக செலவு செய்து வந்தாள்.

வருஷமும் பன்னிரண்டு கழிந்தது. அவளுடைய கையும் எவ்வளவோ வறண்டுவிட்டது. பிள்ளைகளுமோ அரை டயனாகி விட்டனர். முத்துவிற்கு வருஷந்தோறும் ஏறின சம்பளம். பிள்ளைகளுடைய செலவிற்கே காணாது. சினிமாப்படம், விருந்துக் கோஷ்டி, விடுதலைக் காலத்து உல்லாச யாத்திரை முதலியவற்றையெல்லாம் சொர்ணம் எவ்வளவோ குறைத்துக் கொண்டாள். தீபாவளி, வருடப்பிறப்பு முதலான விசேட காலங்களிலன்றி மற்றும் வேளைகளிலே சேலை முதலியன வாங்குவதையும் நிறுத்தி விட்டாள். அப்படியிருந்தும் ஏதாவது நகை அடைவு வைக்கவும் அஃவ்கன் பாய்மாரிடம் கடன் பெறவும் வேண்டிய நிர்ப்பந்தம் முத்துவிற்கு ஏற்பட்டே விட்டது. கடன் பட்ட அவனது நெஞ்சிலே கவலை குடிகொள்ளலாயிற்று.

நல்லாயிருக்கிற வேளையிலே நாலுபேர் வந்து போவார்கள். பத்தும் பலதும் பேசி ஊக்கமூட்டுவார்கள். இப்பொழுதோ பரிகாசம் பண்ணுகிறவர்கள் தான் அதிகம். புத்திமதியோ, ஆறுதலோ சொல்லுகிறவர்கள் வெகுகுறைவு. "இல்லானை இல்லாளும் வேண்டாள் ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்" என்பதை முத்து சிறிது சிறிதாக அனுபவத்திலேயே காணலானான். காலம் போகப் போக அவனுக்கு சீவியத்திலே பெரும் வெறுப்பு வளரத் தொடங்கியது. அது முற்றி முறுகுந்தோறும் அவன் தற்கொலையாவது செய்தாலோ என்று கூட எண்ண தலைப் படலானான்.

இவ்வளவு மனக்கசப்பு ஏற்பட்ட போதிலும் மனைவி மக்கள் மீதுள்ள பாசம் அவனுக்கு அற்றுப் போகவில்லை. பேயோடு பழகினும் பிரிய முடியாதென்பார். உலகியல் அறிந்தோர். அப்படியிருக்க முத்துவிற்கு மாத்திரம் பெஞ்சாதி பிள்ளைகளை விட்டுப் பிரிய இலகுவில் முடியுமா? அவனுக்கு உண்டானது மனக்கசப்பின்றி மெய்யுணர்வல்லவே. ஆனபடியால் அவனுடைய மனத்திலே பெரும் போராட்டம் நடக்கலாயிற்று. இருப்போமா? தற்கொலை செய்வோமா? இதுவே அவனுக்கு பெரும் பிரச்சினையாகிவிட்டது.

மனநிலை இப்படியாயிருக்கும் பொழுது, ஒரு ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் செய்வதின்ன என்றறியாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டவன், ஐந்து மணியளவிலே "கோல்பேஸ்" மைதானத்தை அடைந்தான். கடலோரத்தை அடுத்துக் கிடந்த அந்த மைதானத்திலே மாலை வேளையிலுள்ள காட்சி அங்கே நடமாடிக்கொண்டிருந்த நூற்றுக்கணக்காண மக்களுக்கு இன்பமே ஊட்டிக் கொண்டிருந்தன. ஆனால் முத்துவிற்கு அந்தக் காட்சியிலும் புலன் செல்லவில்லை. ஒதுக்கமான இடம் பார்த்து உட்கார்ந்து யோசனைக் கடலுக்குள் ஆழ்ந்து சிறிது நேரம் தன்னையும் மறந்திருக்கலானான்.

கால் மணித்தியாலம் கழிந்திருக்கும். யாரோ ஒருவன் பின்புறமாக வந்து தமது கைகளினாலே திடீரென்று அவனுடைய கண்களைப் பொத்தின பொழுதுதான் திகைத்து விழித்து தன் நினைவு வரப்பெற்றான். இந்த வயதிலே அவனுடன் இவ்விதமாக தோழமை பூண்டு நடப்பவர்கள் கொழும்பிலே ஒருவருமில்லை. எனினும் தன்னுடன் நெருங்கி முசுப்பாத்தியாய் நடக்கின்ற சிலருடைய பெயரைச் சொல்லி இன்னாரோ இன்னாரோ என்று கேட்டுப் பார்த்தான். வந்தவன் அவன் சொன்னவர்களுள் ஒருவரல்ல. அவர் தமது குரல் காட்டினார். குரலிலிருந்து ஆளை மட்டிட்டுக் கொள்ள அவனால் முடியவில்லை. ஆகவே அவர் பொத்தினை கைகளை தாமாகவே அப்புறம் எடுத்தார். எடுத்தவுடனே அவன் அவருடைய முகத்தை ஆவலோடு பார்த்தான். பார்த்ததும் அவனையறியாமலே அவனுக்கொரு மகிழ்ச்சி

உண்டாயிற்று. வந்தவர் அவனுடன் சிறுவயதிலே ஒன்றாய் படித்தவரும் அன்னியோன்ய மாய் பழகினவரும் சற்குணவானுமாகிய சிவானந்த ஐயர். அவர் பள்ளிக்கூடப் படிப்பு முடித்த பின்பு இந்தியாவெங்கும் சுற்றியடித்துக் கொண்டு சிங்கப்பூருக்குப் போய் அங்கே ஒரு தமிழுபாத்தியாராயிருந்து நல்லாய்ச் சம்பாதித்துக் கொண்டு தமது முதிய பெற்றோரைக் காணுவதற்கு இலங்கைக்கு திரும்பினவர். சில கருமத்தின் பொருட்டு கொழும்பிலே ஒரு வாரம் தங்கி நிற்கிறார். பொழுது போக்காக "கோல்பேஸ்" வந்தார். வந்தவிடத்திலே யோசனை யில் ஆழ்ந்திருந்த முத்துவைச் சந்தித்தார்.

இருவரும் ஷேமலாபங்கள் விசாரித்து தங்கள் நயநட்டங்களைப் பற்றி சம்பாசிக்க லாயினர். பல கதையும் பேசிப் பேசி முத்துவின் தற்கால மனநிலைக்கும் வந்து சேர்ந்தனர். ஐயர் எப்படியோ சாத்துவித குணம் படைத்தவர். அவனுக்கு எவ்வளவோ புத்திமதியெல்லாம் கூறலாயினார். பின்னடியில் நடந்த சம்பாசனையிலே வெகு சுவையும் அற்புத சக்தியுமுண்டு. அன்பும் இரக்கமும் நிறைந்த ஐயர் "முத்து உனக்கும் தற்கொலை செய்கிற எண்ணம் வரலா யிற்றோ . சிறு வயதில் நீ எவ்வளவு பொறுமைசாலியாய் இருந்தாய். இப்பொழுது அதெல்லாம் எங்கே?" என்று கேட்க, முத்து "ஐயா என்ன செய்கிறது? கடன்பட்ட வாழ்க்கையின் விளைவாக கவலையைச் சகிக்க முடியவில்லையே" என்று சொல்லிப் பெருமூச்செறிந்தான்.

"அப்படியானால், தற்கொலை செய்து கொண்டால் கடனும், கவலையும் போய் விடுமோ? இந்த தேகம் போனால் இன்னொன்று வந்து சேர்ந்து விடுமே! விட்ட குறையும் கொலைக் குற்றமும் சேர்ந்து வட்டியும் குட்டியுமாக அந்தத் தேகத்திலிருந்து இன்னுமெல்லவா அதிக துன்பம் அனுபவிக்க வேண்டி வரும் அல்லாமலும் உன் கடனைத் தீர்க்கஉன் மனைவி மக்களுக்கும் தங்கள் வாழ்நாள் முழுவதும் வருந்த நேரிடுமே. கடனிருந்தால் அதைத் தீர்ப் தற்கான வழியையல்லவோ நாட வேண்டும். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பது உனக்குத் தெரியாதா? வீண் ஆடம்பரத்திற்கு இடங்கொடுக்கலாமோ. இந்தப் பேய்த் தனத்திற்காகத் தற்கொலை செய்ய எண்ணினாயே! உயிர்களெல்லாம் கடவுளுக்கு திரு மேனிகள். அவ்வுயிர்களுக்கு கிளைக்களமாகிய உடம்புகளெல்லாம் ஆலயங்கள் ஆல யத்தை இடிக்க முற்பட்டாயே"

"வந்த கஷ்ரத்தைச் சகிக்க மனம் பொறுக்குதில்லை"

"நீ ஏன் மனத்திற்கடிமையாகிறாய்? எதையும் பொறுத்துக் கொள்ளப் பழகு, பொறு மையே தவம். சுக துக்கங்களை சமநோக்குடன் பார். துன்பத்தைக் கண்டு பயப்படாதே.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்பது ஞாபகமிருக்கட்டும். ஒவ்வொரு நாளும் கொஞ் சம் கொஞ்சமாக ஆன்ம விசாரணை செய்து பார்"

இந்தத் தோரணையிலே சென்றது அவர்களுடைய சம்பாசனை. பொழுதுபட்டு ஜனங்கள் மைதானத்தை விட்டுப் போனது கூட அவர்களுக்குத் தெரியாது. சுமார் எட்டு மணி வரையிலே அவர்கள் சம்பாசணையை ஒருவாறு முடித்துக் கொண்டு அரிதிற் பிரிந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

அன்று முதலாக முத்துவின் வாழ்க்கையிலே பெரும் மாறுதல் ஏற்படலாயிற்று. அவசியமில்லாச் செலவு ஒன்றுமே கிடையாது. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்

பதை தன் மனைவி மக்களுக்கும் உணருமாறு செய்து நாலு வருஷ்திற்குபட்ட கடன் முழுதும் தீர்த்துவிட்டான். அவனுடைய குழந்தைகளுள் ஒன்று நோய்வாய்ப்பட்டிருந்த பொழுது சொர்ணம் பட்ட துயரத்திற்குக்களவில்லை. ஆனால் முத்துவோ அவளைப் போல் வீணே புலம்பி மனங்கலங்கவில்லை. “சாதலும் புதுவதன்று” என்று தானே தன் மனைவியைத் தேற்றிக்கொள்ளலானான். அவ்வளவு திடநிலையடைந்து விட்டது. அவனுடைய மனம் சற்சன சம்பாசணையிலிருந்து பிறந்த ஆன்ம விசாரணையிலே அவரை விட்டொழிந்தது கவலை.

●

தாழையடி சபாரத்தினம்

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களில் கணிசமாயும், கவனஈர்ப்புக்குரிய தாகவும் எழுதியவர் தாழையடி சபாரத்தினமாவார். 'கல்கி' நடத்திய சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றதன் மூலம் பலராலும் விதந்து பேசப்பட்ட வர். ஆனந்தன் சஞ்சிகையில் 1954 இல் "குருவின் சதி" என்ற சிறுகதையைப் படைத்ததன் மூலம் தன்னை ஒரு தரமான படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். இவரது சிறு கதைகளின் தொகுப்பு புதுவாழ்வு ஆகும்.

- விழிப்பு
- ஆலமரம்
- தெருக்கீதம்
- சடையம்மா

விழிப்பு

தாழையடி சபாரத்தினம்

சிறுபராயத்திலிருந்தே விஜயன் பட்டணவாசி. கிராமத்திலி ருந்த தன் மாமன் வீட்டிற்கு விடுமுறையில் வந்திருந்தான். அவன் அடிக்கடி மாமா வீட்டிற்கு வருவது வழக்கம். இப்பொழுதெல்லாம் திலகவதி அவனோடு முன் போல பழகுவதில்லை. கண்ணில் படுவதே வெகு அபூர்வம். பெண்பிள்ளைகளோடெல்லாம் கூடிவிளையாடும் பாடசாலை மாணவனுக்குத் தன் மாமன் மகள் திலகவதியின் நடவ டிக்கைகள் வியப்பையும் வெறுப்பையுந் தந்தன. "பட்டிக்காட்டுச் சனி யன்" என்று மனத்துள்ளேயே சபித்துக்கொண்டான். அவள் கண்ணில் படும் போதெல்லாம் விஜயனின் உள்ளம் படபடக்கும். அவனோடு அவள் ஊடாடிய காலத்தில் அவள் இவ்வளவு அழகாயிருக்கவில்லை. பருவத்தின் பூரிப்பும் அவள் அங்கங்களில் இப்படிக் குமுறிக் கொண் டிருக்கவில்லை. ஸ்ரீதிலகவதியை விட அவன் எத்தனையோ அழகிக ளோடு பழகியிருக்கிறான். உடலும் உடலும் உராய றெயில்களிலும் பஸ் களிலும் பிரயாணஞ் செய்திருக்கிறான். ஆனால் இவளில் மட்டும் அவ னைப் பித்தனாக்கும் சக்தி எப்படி ஏற்பட்டதென்று அவனால் உணர முடி யவில்லை. அவளிடமிருந்து வெகுதொலைவில் அவள் விலகியிருப்

பதே அந்தக் கவர்ச்சிக்குக் காரணமென்பதை அவனால் அறிய முடியவில்லை. அவளை நேருக்நேர் சந்தித்து ஒரு வசனமாவது பேசவேண்டுமென்று சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இராச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு கையிலொரு சிகரட்டோடு ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டு படுக்கையறையினுள்ளிருந்தான். புத்தகத்தில் அவன் பார்வையிருந்த தேயல்லாமல் உள்ளம் திலகவதியைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தது.தற்செயலாக ஜன்னனூடே வெளியே நோக்கிய அவன் கண்களுக்கு கிணற்றடியில் யாரோ தண்ணீர் அள்ளுவது தெரிந்தது. "காமாலைக் கண்ணுக்குச் காண்பதெல்லாம் மஞ்சள்" என்பது போலத் திலகவதியின் நினைவோடேயே இருந்தவனுக்குத் தண்ணீர் அள்ளும் அந்த உருவம் அவளைப் போலவே தென்பட்டது. உடனே அறையை விட்டு வெளிக் கிளம்பிக் கிணற் றண்டை சென்றான். அவன் எண்ணியது போல உண்மையில் திலகவதிதான் நின்று கொண்டிருந்தாள். கள்வனைப் பிடிப்பவன் போல வேகமாகச் சென்றவன், அவளை நெருங்கி யதும் பேசாமல் நின்றான்.

தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்த திலகவதி போவதா நிற்பதா என்று தெரியாமல விழித்தாள்.அவள் உள்ளத்தில் ஒருவித உணர்ச்சியும் எழவில்லை. அம்மாவுக்கு மட்டுந் தான் அவள் பயந்தாள்.

"திலகவதி என்மீது கோபமா?"

"ஏனத்தான் அப்படிக் கேட்கிறாய்? நீ எனக்கு என்ன பிழை செய்தாய்?"

"நான் வந்து இன்று ஐந்து நாளாகிறதே! இன்றுவரை நீ என்னோடு கதைக்க வேயில் லையே!"

"அத்தான் வருவதாகக் கடிதம் போட்டிருக்கிறான். அவன் முன்னாலே நீ போகக் கூடாது" என்று அம்மா எச்சரித்திருக்கிறபோது நான் எப்படியத்தான் உன்னோடு கதைக்க முடியும்?..."

"என்ன ! மாமி அப்படிக் கூறினாளா? ஏன்?"

"எனக்கெப்படித் தெரியும்?"

"உனக்கு என்னோடு கதைக்க வேண்டுமென்று ஆவலில்லையா திலகவதி?"

"எனக்கு எவ்வளவு ஆசை! நேற்றுப்பின்னேரம் அழுகையே வந்து விட்டது. எங்கள் வீட்டுக்குப் பின்னால நிற்கிற நாவல்மரம் இப்போது பழுத்துக் குலுங்குது. உன்னையுங் கூட் டிக் கொண்டு போனால் ஏறிப் பறித்துக் கொடுப்பாயல்லவா? நேற்றுப் பக்கத்து வீட்டுப் பையன்களெல்லாம் பறித்தார்கள்; எனக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை. போனவருஷம் நீ வந்தபோது... உனக்கெல்லாம் ஞாபகமிருக்கிறதா அத்தான்!"

"அதற்குள் எல்லாம் மறந்துவிடுவேனா திலகவதி! மாமி எழுந்திருக்க முன் நாங்கள் போய் பழம் பறிக்க முடியாதா?"

"ஓ! ஆனால் அம்மா ஐந்துமணிக்கே எழுந்து விடுவாளே!"

"எழுந்திருக்கட்டுமே ;நாங்கள் அதற்கு முன்னமே போய் சீக்கரமாய் வந்துவிடுவோம்."

"அதோ, அம்மா வருகிறாளத்தான், நான் போகப் போகிறேன்."

"போய்வா திலகவதி, மறந்துவிடாதே. நாளை நீதான் வந்து என்னை எழுப்பவேணும்."

அவள் "ஓம்" என்று தலையை அசைத்துவிட்டு வேகமாய் நடந்தாள். அத்தானோடு தனிமையில் கதைக்கச் சந்தர்ப்பம் கிடைத்தையிட்டு அவள் மிகவுங் குதூகலமடைந்தாள். ஆனால் வேறுவித உணர்ச்சி ஒன்றும் அவளிடம் மலரவில்லை. அத்தானுக்கும் அவளுக்கு மிடையே அம்மா திரைபோடாதிருந்தால் அவள் சந்தோஷமாக அத்தானோடு கைகோர்த்து விளையாடுவாள். அவன் மாமரத்திலேறிப் பறிக்கும் மாங்காய்களை அவள் முந்தானையில் பொறுக்குவாள். பனங்கொட்டைகளைப் பிளந்து அவன் பூரான் எடுக்கும் போது இவள் தட்டிப் பறித்துச் சாப்பிட்டுவிடுவாள். உடனே இருவருக்கும் சண்டை உண்டாகிக் கோபமாய் விடுவார்கள். கோபத்தை மறந்து உடனே கைகோர்த்துக் கொண்டு ஓடுவார்கள். இவைகளுக்கெல்லாம் எதிராக வந்த அம்மாவின் தடையுத்தரவு அவளுடைய இளம் உள்ளத்தைப் புண்படுத்தியது. இவ்வித உத்தரவுக்குத் தகுந்த காரணத்தைக் கண்டுபிடிக்கக் கூடிய வலிமை அந்த உள்ளத்திற்கு ஏற்படவில்லை.

விஜயனின் நிலை திலகவதியினுடைய நிலைக்கு நேர் விரோதமாக இருந்தது. அவனுடைய உள்ளம் விளையாட்டுகளிலும் மாங்காய் பறிப்பதிலும் செல்லவில்லை. பட்டண வாசத்திற்கு ஏற்றவாறு அவனுள்ளம் பண்படைந்திருந்தது. திலகவதியின் கிணற்றடிச் சந்திப்பில் அவனுள்ளம் சிறிது திருப்தியடைந்ததென்றாலும், அத்தருணம் அவன் எதையோ தான் புத்திக்கு குறைவால் இழந்துவிட்டவன்போல அங்கலாய்த்தான். உடல் கொதித்துக் கொண்டிருந்தது. நாக்கு வரண்டு போயிருந்தது. தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். கண்கள் கொஞ்சம் அயர்ந்தவுடன் நாவற்பழம் பறிக்கப் போகத் திலகவதி வந்து எழுப்புவது போன்ற உணர்ச்சியோடு கண் விழிப்பான். அடிக்கடி வெளியே சென்று வானத்தைப பார்த்தான்; விடிவெள்ளி காலித்து விட்டது. இன்னும் திலகவதி வரவில்லை. அவன் மனம் அமைதியின்றித் தவித்தது. அங்குமிங்கும் நடந்தான்.

அவன் மனம் இருக்கை கொள்ளவில்லை. உள்ளத்தில் பலவித உணர்ச்சிகள் தலை காட்ட உள்விறாந்தையை நோக்கிப் பூனைபோல் நடந்தான். திலகவதி ஒரு மூலையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.அவள் குறட்டை விட்டுத் தூங்குவதைப் பார்த்ததும் அவனுக்கு ஆத்திரமாக இருந்தது. இரவு முழுவதும் தூக்கமில்லாமல் அவன் தவிக்கிறான்; அவள் கவலையில்லாமல் இங்கே தூங்கிக் கொண்டிருக்கிறாள்!

"திலகவதி" என்று கூறி மெதுவாக அவளைத் தொட்டான். அவள் திடுக்கிட்டு எழுந்தாள்.

"நாவற்பழம் பறிக்கப் போகவில்லையா?"

"மறந்தே விட்டேனத்தான். வா; மெல்ல அம்மாவுக்குத் தெரியாமல் சீக்கிரம் போய் வருவோம்."

இருவரும் புறப்பட்டனர். விஜயனின் நெஞ்சு ஏனோ படபடவென்று அடித்தது. இராத்திரி நித்திரையில்லாததினாலோ என்னவோ கண்கள் கோவைப்பழம் போற சிவந்திருந்தன. இருவரும் அமைதியாகவே சென்று கொண்டிருந்தனர். இடைவழியில் அவளின் இடக்கரத்தைப்

பற்றினான் விஜயன். "என்ன அத்தான்," என்று ஒருவித பதட்டமுமில்லாமல் நடந்தபடியே கேட்டாள் திலகவதி.

"ஒன்றுமில்லை. இருட்டாயிருக்கிறது; பாதை தெரியவில்லை."

இடையிடையே அவள் கையை நெரித்து நெரித்துப் பிடித்தான். "ஏனத்தான் இறுக்கிப் பிடிக்கிறாய்? கை நோகிறது!"

"சனியன்; ஒன்றுமே விளங்காத மூடம்!" என்று வாய்க்குள் முணுமுணுத்தான்.

மரத்தடியைப் போயடைந்தனர். கீழே பரவிக் கிடந்த பழங்களை அவள் ஆர்வத்தோடு பொறுக்கினாள். அவன் இமைவெட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். ஏதோ ஒருவித உணர்ச்சி அவனை உன்மத்தனாக்கியது. அவளின் கையைப் பிடித்து அருகே இழுத்தான். அவள் ஒன்றும் விளங்காமல் திகைத்துப்போய் நின்றாள். திடீரென்று அவள் உதடுகளில் மாறி மாறி முத்தமிட்டான். அவளையறியாமலே அவன் கைகள்... வெகு சிரமத் தோடு அவள் தன்னை அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டு வேகமாக ஓடினாள். "போக்கிரி நாயே! நீயுமொரு மனிதனா?" என்ற சொற்கள் அவள் வாயிலிருந்து கூரிய அம்புகள் போற் புறப்பட்டன.

அவன் அசையாமல் நின்றான். உணர்ச்சிகளெல்லாம் போன இடம் தெரியாமல் மறைந்து விட்டன. இருதயம் கனத்தது. கொஞ்ச நேரத்துள் அவள் எவ்வளவு கொடியவனாக மாறிவிட்டான். அவள் போய்த் தாய், தந்தையரிடங் கூறியவுடன் என்ன ஆபத்து நேரப் போகிறதோ! ஒருவருக்குத் தெரியாமல் பட்டணத்திற்கே போய் விட்டால்?.... அதுதான் பெரிய ஆபத்தாக முடியும். நேராக வீட்டுக்குச் சென்றான்.

மேலும் பத்துநாட்கள் அங்கேயே தங்கினான். ஆனால் ஒரு நாளாவது அவளை அவனால் பார்க்க முடியவில்லை. உயிரற்ற பிரேதம் போலவே நடமாடினான். எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு பட்டணம் புறப் பட்டான்.

இரண்டு மூன்று விடுமுறைகள் வந்துபோய்விட்டன. அச்சம்பவத்திற்குப் பின் ஒரு முறையாவது அவன் கிராமத்தை எட்டிக் கூடப் பார்க்கவில்லை. பரீட்சையில் தேறியதும் உத்தியோகம் அவனுக்காகக் காத்துக்கிடந்தது. எத்தனையோ பேர் தங்கள் பெண்களைக் கொடுக்க முன்வந்தனர். "கிராமத்தில் அவன் மகள் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்" என்று தாயார் திட்டமான பதிலை எல்லோருக்குங் கூறிக்கொண்டு வந்தாள். "திலகவதி மட்டுமல்ல வேறுயாராயிருந்தாலும் கிராமப்பெண் என்ற கதையே என்னோடு பேசக்கூடாது" என்று தன் முடிவான தீர்மானத்தை அவன் தெரிவித்துவிட்டான். திலகவதியின் தாய், தந்தையர் பலமுறைவந்து வேண்டியும் விஜயன் திடமாகவேயிருந்தான். "என் பெண்ணின் கழுத்தில் கல்லைக் கட்டிக் கிணற்றில் தள்ளினாலும் இவனுக்கு இனிக் கொடுப்பதில்லை" என்று ஆக்கிரோஷத்தோடு கூறிவிட்டு மாமா சென்றுவிட்டார்.

நாட்கள் மாசங்களாகி உருண்டு கொண்டிருந்தன. விஜயன் வீட்டாருக்கும், திலகவதி வீட்டாருக்கும் கடிதப் போக்குவரத்தே நின்றுவிட்டது. ஒருநாள் திடீரென்று ஒரு கடிதம் கிராமத்திலிருந்து விஜயன் பேருக்கு வந்தது. ஆச்சரியத்தோடு கடிகத்தைப் பிரித்தான். மணி

மணியான எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருந்த அக்கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறதென் பதை அறிய முதலில் கையெழுத்தையே பார்த்தான். "திலகவதி" என்றிருந்ததும் கடித்தைப் படித்தான்.

அன்புள்ள அத்தானுக்கு,

எங்கோ உள்ள ஓர் கிராமப் பெண்ணின் கடிதந்தானே என்று அலட்சியமாகக் கடிதத் தைக் கிழித்து எறிந்துவிடாமல் படித்துப் பார்ப்பீர்களென்று நம்புகிறேன். கடந்த சில மாதங் களாக அப்பாவின் உடல்நிலை சரியில்லாமலிருக்கிறது. இறந்தாலும் உங்கட்குத் தெரிவிக்கக் கூடாது என்று அப்பா கூறுகிறார். ஆயினும் நாளுக்கு நாள் அப்பாவின் நிலை கவலைக்கிட மாகி வருவதால் அவருடைய அனுமதியின்றி உங்கட்கு இக்கடிதத்தை வரையத் துணிந் தேன். பட்டணவாசிகளின் வயிற்றுக்கும் கிராமத்து ஏழைகளின் கையிற்கும் எவ்வளவு சம்பந்தமிருக்கிறது என்பதை உணராமல், நீங்கள் கிராமமக்களையும். ஜென்மபூமியாகிய கிராமத்தையும் வெறுத்தாலும், உடன்பிறந்த ஒரே சகோதரனின் அந்தியகாலத்திலும் குறு கிய மனப்பான்மையோடு கோபத்தைப் பாராட்டி மாமிக்குத் தெரிவியாமலிருப்பது நியாயமல்ல என்று எண்ணி என் கடமையைச் செய்துவிட்டேன். அதற்காக மன்னிக்கவும்.

-திலகவதி

குறிப்பு:- உங்களையும் பார்க்க ஆவலாயிருக்கிறது. உங்களையுங் கண்டு
நான்கு வருடங்கள் கழிந்துவிட்டனவல்லவா? அவசியம் வரவும்.

- திகலவதி

கடிதத்தை மடித்து மேசையில் வைத்துவிட்டுச் சிந்திக்கலானான் விஜயன். அந்த அசட்டுத் திலகவதியின் கடிதம் இதுவென்று அவனால் நம்பவே முடியவில்லை. "அதோடு என்னையும் வரும்படியல்லவா எழுதியிருக்கிறாள்..."

கடிதத்தைப் பார்த்ததும் வாயிலும் வயிற்றிலுமடித்துக்கொண்டு ஓலமிட ஆரம்பித்து விட்டாள் விஜயன் தாயார். அன்றே புறப்பட்டுக் கிராமத்திற்குச் சென்றனர்.

திலகவதியின் தாய் மாசக்கணக்காகப் புருஷனுக்குச் சேவை செய்ததால் துரும்பாக மெலிந்து போயிருந்ததாள். திலகவதிதான் ஓடி ஆடி வேலை செய்து கொண்டிருந்தாள். திடீ ரென்று வண்டி வந்து நின்றதும் வாசலுக்கு ஓடிப் போனாள். விஜயனும் தாயாரும் இறங்கி னார்கள். திலகவதியைக் கண்டதும் அடக்கி வைத்திருந்த துக்கமெல்லாம் வீறிட்டெழ ஓவென்று கத்திவிட்டாள் விஜயனின் தாயார். திலகவதியும் விக்கி விக்கி அழுதாள். விஜய னுக்குக் கூடக் கண்களில் நீர் வந்துவிட்டது. மறுநாள் இரவு முற்றத்தில் உலாவிக்கொண்டி ருந்தான் விஜயன். பின்னால் யாரோ வருங் காலடிச் சத்தங் கேட்டுத் திரும்பினான். திலகவதி நின்று கொண்டிருந்தாள்.

"யார் திலகவதியா?"

"ஆமத்தான். உங்களிம் மன்னிப்புக் கேட்கலாமென்று வந்திருக்கிறேன்."

"மன்னிப்பா எதற்காக?"

"அன்று உங்களை நான் கடுமையாகப் பேசிவிட்டதற்காக"

"என்னைக் கேலி செய்கிறாயா திலகவதி? அன்று அவ்விதம் கேவலமாக நடந்து கொண்டதற்காக நானல்லவா மன்னிப்புக் கோரவேண்டும்."

"நீங்கள் அவ்விதம் எண்ணியிருந்தால் எங்களைக் கோபிப்பதற்கு வேறு காரணம் இருக்கவேண்டுமே?"

"நான் உங்களைக் கோபித்திருந்தால் இப்பொழுது வந்திருப்பேனா?"

"உண்மையை ஒழிக்கவேண்டாமத்தான். நான் இப்பொழுது வந்தது நீங்கள் என்னை விவாகஞ் செய்ய வேண்டுமென்று கேட்பதற்காகவல்ல. உங்களோடு சிறிது நேரம் கதைப்ப தற்காகவே வந்திருக்கிறேன். நீங்கள் என்னை வெறுப்பது மட்டுமல்ல. கிராமப் பெண் களையே வெறுக்கிறீர்களென்பதை நான் நன்கு அறிந்திருக்கிறேன். பட்டிணப் பெண்களைப் போல அவர்களுக்குப் பகட்டாக ஆண்களோடு கைகோர்த்துக்கொண்டு திரியத் தெரியாவிட்டா லும், பதிசேவையில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். ஆங்கில முறையில் அவர்களுக்குக் காத லிக்கத் தெரியாவிட்டாலும் நளாயினி, சாவித்திரி, சீதையைப் பற்றிய கதைகளை அவர்கள் ஐந்தாம் வகுப்பிற்குள் அறிந்திருப்பார்கள். எனது அத்தான் நேர்மையும் ஒழுக்கமும் நிறைந்த ஒரு சற்குணன் என்று உலகங் கூறும்போது நான் எவ்வளவு சந்தோஷமடைவேனென்று இப்பொழுது நான் நிரூபிக்க முற்படவில்லை... பெண்கள் மலருக்குச் சமானமானவர்கள் என்று கூறிக்கொண்டு ஆண்கள் வண்டுகளாக மாறிவிடக் கூடாது. அன்று உங்கள் செயலால் நான் உங்கள் மீது வெறுப்புக் கொண்டேனென்பது உண்மை. ஆனால் அதற்குப் பிரதியாக நீங்கள் என்னைப் பயித்தியக்காரியாக்கி விட்டீர்கள். என்னுள்ளத்தில் ஏதோ ஒருவித உணர்ச்சியைத் தூண்டிவிட்டு விட்டீர்கள்!.... அத்தான், அன்று உங்கள் கைக்குள் நான் அடங்கி விட்டேனென்று வைத்துக்கொள்ளுங்கள். அப்புறம் என்கதி என்னவாவது? நீங்களென்னை விவாகஞ் செய்துகொண்டாலும் நான் உலகத்தின் கண்ணில் விழிக்க முடியுமா? பெண்களின் மகாசக்தி பொருந்திய - விலைமதிக்க முடியாத மாணிக்கமென்ன வென்று இவ்வளவு கற்ற உங்களுக்கு நானா எடுத்துக் கூறவேண்டும்? உங்களுடைய இஷ்டம்போல நீங்கள் வேறு யாரையாவது மணந்துகொள்ளுங்கள். ஒரு பாபமுமறியாத என்னைக் கோபித்து என் நெற்பமான இதயத்தை வதைக்க வேண்டாம்..." - மேலும் அவள் என்னவோ கூற ஆரம்பித்தாள். பின்னால் விஜயனின் தாயார் வரவே அவள் உள்ளே போய் விட்டாள்.

நோயாளி கொஞ்சம் சுகமடைந்ததும் விஜயனும் தாயாரும் பட்டணம் போய்விட்டனர். அவனுடைய தாய், தந்தையர் அவனுக்குப் பல இடங்களிலும் பெண் பார்த்தனர். விஜயன் வெட்கத்தோடு தலை குனிந்தபடியே "அம்மா, திலகவதி இருக்கும் போது நாம் ஏன் பெண் தேடி அலைய வேண்டும்" என்று மெதுவாகக் கூறினான்.

"என்ன! உண்மையாகவா!" என்று கண்களை அகல விரித்தபடியே கேட்டாள் தாய். அவள் குரலில் ஆனந்தம் தாண்டவமாடியது.

◆◆◆

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. மாமாவோடு பேசிக் கொண்டிருந்தான் விஜயன். அடிக் கடி அவன் கண்கள் மன்றாடும். பாவனையிலும் மன்னிப்புக் கோரும் பாவனையிலு மிருந்தன. இவர்கள் கதைப்பதைக் கதவோரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தாள்

திலகவதி. அவள் இமைரோமங்களில் நீர் துளித்துப் போயிருந்தது. வெற்றி கொண்ட வீரனைப் போல் எழுந்து சென்றான் விஜயன்.

"நாவல்பழம் பறிக்கப் போகலாமா?" என்று அவள் கன்னத்தைக் கிள்ளியபடியே கேட்டான் விஜயன்.

"அம்மா விழித்துக்கொண்டால்... என்று கூறிச் சிரித்தாள் திலகவதி. அதிகஞ் சிரிக்க முடியாமல் அவன் உதடுகள் மூடப்பட்டுவிட்டன.

வரதர் புதுவருஷ மலர் - 1950

ஆலமரம்

தாழையடி சபாரத்தினம்

அவளுடைய மூதாதைகள் அவளுக்கென்று வைத்து விட்டுப் போனது அந்த ஆலமரமொன்றைத்தான். அந்த உடைந்தசட்டி, விளிம் பில்லாத பானை, அடுப்பாக உபயோகிக்கும் மூன்று கற்கள், தென்னம் பாளை, யாவும் அவளாகத் தேடிக்கொண்டவை. அவள் அறிந்த மட்டில் அவளுக்கு இனபந்தங்கள் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. எலும்பி னாலுந் தோலினாலும் மாத்திரமே ஆக்கப்பட்டது போன்ற ஒரு நாய் தான் அவளுடைய பந்து; உயிருக்குயிரான காவலாளியுங் கூட.

காலையில் எழுந்தவுடன் தென்னம் பாளையினால் அம்மரத்தைச் சுற்றி நன்றாகச் சுத்தஞ் செய்வாள். அருகே இருக்கும் நீரோடைக்குச் சென்று பானையில் நீர் கொண்டு வந்து தான் கூட்டிய இடங்கட்குத் தெளிப்பாள். பின் பழைய சோறு ஏதாவது இருந்தால் தானுமுண்டு தன் நாய்க்குங் கொடுப்பாள். பொழுது நன்றாகப் புலர்ந்ததும் அந்த உடைந்த சட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்படுவாள். போகும்போது தன் நாயை வாத்சல்யத்தோடு தடவி விட்டுச் செல்வாள். அதுவுந் தன் வாலைக்குழைத்து இருதயபூர்மான நன்றியை கண்கள் மூலந் தெரிவிக்கும்.

தெருத்தெருவாக அலைவாள். மூலை மூலைமுடுக்கெல்லாம் போவாள். யாராவது இரங்கி ஏதாவது உணவு கொடுத்தால் அதைப் பத்திரமாக உண்ணாமல் வைத்துக் கொள் வாள். "ஏன் சாப்பிடாமல் கொண்டு போகிறாய்" என்று யாராவது கேட்டால் நடக்க முடியாத ஒரு கிழவனுக்குக் கொண்டு போகிறேன்" என்று கூறுவாள். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த் துக் கொண்டு ஏங்கியிருக்கும் அந்த நாயின் அருமை அவளுக்கல்லவோ தெரியும். ஆலமரத் தடியில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் கந்தல்களையும் மற்றப் பொருட்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காவலாளி அல்லவா அது!

சுமார் இரண்டு, மூன்று மணிக்குத் தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்வாள். அவ ளுக்கு முன்னால் அவளுடைய உள்ளம் பறந்து கொண்டிருக்கும். தூரத்தில் வரும்பொழுதே கரிய முகில்கூட்டத்தைப் போல ஆலமிலைகளின் கூட்டம் காட்சியளிக்கும். அவளுடைய உரு வங் கண்ணிற் பட்டதும் தாயைக் கண்டவுடன் துள்ளிக் குதித்தோடும பசுக்கன்றைப்போல் அந்தநாய் ஓடிச்சென்று அவளைச் சற்றிச்சுற்றி வாலைக் குழைக்கும் அவளும் அன்போடு அதைத் தடவிக் கொடுப்பாள்.

ஆலமரத்தின் கீழே உட்கார்ந்ததும் அவளுடைய களைப்பெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். கொண்டுவந்ததை நாயோடு பகிர்ந்து உண்பாள். சிறிது நேரஞ்சென்றபின் பக்கத்திலுள்ள நீரோடைக்குச் சென்று குளிப்பாள். சுமார் ஆறு, ஏழுமணியளவில் அரிசி இருந் தாற் சோறாக்குவாள். இதற்கிடையில் அவளுடைய நண்பர்கள் - காகங்கள், குயில்கள் முதலி யன. கா.கூ.என்று ஆரவாரித்துத் தாங்கள் வந்திருப்பதை அவளுக்குத் தெரிவிப்பார்கள். எல்லோருமுறங்கிய பின் அவளும் அந்த வேரில் தன் தலையைச் சாய்ப்பாள். அந்த ஆலம் வேர்தான் அவளுடைய தலையணை. அவளுடைய குருட்டுத் தாத்தா உறங்கியதும் அதே வேரில் தலை வைத்துத்தான். சீமெந்தால் மெழுகப்பட்ட சுவரைப் போல் அந்த வேர் அழுத்தமாக இருந்தது.

அன்றும் அவள் அதே வேரிலேதான் தலை வைத்துக்கொண்டு நிம்மதியாகத் தூங்கி னாள். அந்த நாயும் அவளின் காலடியில் தூங்கிக் கொண்டிருந் தது. திடீரென்று ஒரு பயங்கர மான கனவுகண்டு துடித்து எழுந்தாள். வாய் என்னவோ கூறி உளறியது. மரத்தைச் சுற்றி ஒருமுறை வந்தாள்.

அப்பொழுது அவளுக்குத் திருப்தி உண்டாகவில்லை. நன்றாக ஒரு முறை அண் ணாந்து பார்த்தாள். மரம், மரமாய்த்தானிருந்தது. அதுமுறிந்து வீழ்ந்து விடவில்லை. கண்ட தும் வெறுங்கனவாக இருந்தாலும் அவளுடைய உள்ளத்தில் சகிக்க முடியாத வேதனை குடிகொண்டது. பொங்கிவருங் கண்ணீரை அடக்கினாள். ஆனால் அடக்கமுடியவில்லை. அருகே கவலை தேங்கிய முகத்தோடு நின்ற நாயை அருகிலிழுத்து அணைத்துக் கொண்டாள். அதுவுந் தன்னுடைய நாவால் அவளுடைய கரத்தை நக்கியது. இரவு முழுதுந் தூங்காமல் விழித்துக்கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்ததும் வழக்கம் போல சட்டியைக் கையிலே எடுத்துக் கொண்டு புறப்பட் டாள். அவளுடைய மனம் சஞ்சலப்பட்டது. தான் கண்ட பயங்கரமான கனவை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள். ஒரு வேளை உண்மையில் அப்படி நடந்தால்... நினைக்கவே அவளு டல் நடுங்கியது. கால்கள் செல்ல மறுத்தன. எத்தனை நாட்களுக்குப் போகாமலிருக்க முடி

யும்? ஒருநாள் பிச்சைக்குச் செல்லாவிட்டால் அவளுடைய கதியென்ன? அவளையே நம்பிக் கொண்டிருக்கும் நாயின் கதிதானென்ன? மனக்கலக்கத்தோடு புறப்பட்டாள். மரத்திலிருந்து இரண்டு மூன்று பனித்துளிகள் அவள்மேல் வீழ்ந்தன. பரிதாபத்தோடு அண்ணாந்து பார்த்தாள். மறுபடியும் பனித்துளிகள் வீழ்ந்தன. அவள் அதைக் கேவலம் பனித்துளிகளாக நினைக்கவில்லை. "நிராந்தரவாக என்னை விட்டுப் போகிறாயா" என்று அந்த ஆலமரங் கதறிப் பெருக்குங் கண்ணீர்தான் அத்துளிகள் என்று நினைத்தாள் அவள். கண்களும் நீரைச் சொரிந்தன.

அவள் பிச்சைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் மனம் மட்டும் நிம்மதியாயில்லை. வழக்கத்திற்கு விரோதமாகப் பன்னிரண்டு மணிக்கே இருப்பிடத்தை நோக்கி நடந்தாள். எல்லோருங் கூட்டங் கூட்டமாக நின்று எதையோ பற்றி ஆனந்தத்தோடு பேசிக்கொண்டு நின் றார்கள். அதை என்னவென்றறிய அவளுக்குமாசைதான். ஆனால் அவர்களிடம் சென்று அறியக்கூடிய தகுதி அவளுக்கில்லை. அவ்வழியால் வந்த ஒரு சிறுமியிடம் விசாரித்த பொழுது எங்கள் கிராதத்திற்கு றெயில்பாதை போடப் போகிறார்களாம். இன்னுமிரண்டு மாசத்துக்குள் றயில் ஓட ஆரம்பித்துவிடும் என்று அப்பா சொன்னார் என்றாள் சிறுமி.

றயில் வந்தாலென்ன, ஆகாயக்கப்பல் வந்தால் என்ன? பிச்சைக்காரியாகிய அவளுக்கு இரண்டுஞ் சரிதானே? இருப்பிடத்தை நோக்கி அவள் விரைவாக நடந்தாள்.

இதென்னடா சனியன் வேலை செய்ய விடமாட்டேனென்கிறதே! என்றானொருவன். ஆங்கில உடையில் நின்ற எஞ்சினியரின் கைத்துப்பாக்கி டுமில் என்ற சத்தத்தோடு வெடித் தது. இவ்வளவு நேரமும் மரத்தைச் சுற்றிச் சுற்றித் தன் எஜமானியின் பொருட்களுக்காகப் போராடிய அந்த நாய் மண்ணிற் சாய்ந்தது.

சுமார் கால் மைல் தூரத்தில் வரும்பொழுது தென்படும் ஆலமரம் இன்று வெகுசமீபத்தில் வந்தும் அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆலமரம் இருந்த இடம் ஒரே வெளியாக இருந்தது. இரவு கண்ட கனவு அவள் ஞாபகத்துக்கு வந்தது. கையிலிருந்த சட்டி திடீரென்று வீழ்ந்தது. மரத்தடியை நோக்கி ஓடினாள். அவளுடைய சாமான்கள் ஒரு பக்கத்தில் எறியப்பட் டுக் கிடந்தது. இன்னொரு பக்கத்தில் அவளுடைய நாய் உயிரற்றுக் கிடந்தது. மறுபக்கம் திரும்பினாள். மாறி மாறி விழும் கோடாரிக் கொத்தைத் தாங்கமாட்டாமல் தவிக்கும் மரத்திலி ருந்து உதிரம் பெருகுவது போல் இருந்தது அதிலிருந்து வடிந்த பால் ! ஐயோ என்று கத்திக் கொண்டு ஓடிப்போய் வீழ்தாள். திடீரென்ற ஒரு கோடாரிக்கொத்து அவளுடைய தலையில் வீழ்ந்தது. எல்லோருந் திகைத்துப் போய் நின்றார்கள். வெண்ணிரத்தமும் செவ்விரத்தமும் கலந்து அடிமரத்தைக் கழுவிக்கொண்டு பாய்ந்தன!

மறுமலர்ச்சி
ஆவணி - 1947

தெருக்கீதம்

தாழையடி சபாரத்தினம்

அப்பொழுது நான் ஒரு பாடசாலை மாணவன். பட்டினத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அண்ணன் வீட்டிலிருந்து கொண்டு பாடசாலைக்குத் தினமும் போய் வந்தேன்.

கிறிஸ்மஸ் விடுமுறைக்காகப் பாடசாலைகளெல்லாம் மூடப்பட்டன. சொந்த ஊருக்குச் சென்று கொண்டிருந்தேன். புகைவண்டி புகையைக் கக்கிக் கொண்டு நெளிந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது. எல்லோரும் கண்களை மூடுவதும் விழிப்பதுமாக இருந்தார்கள்.

அச்சம்பவம் இன்று நடந்ததுபோல இன்னும் என் உள்ளத்தில் அப்படியே இருக்கிறது. கையில் தம்புராவுடன் கிழிந்த அழுக்குப் படிந்த உடையணிந்து கொண்டு பாட்டுப்பாட ஆரம்பித்தாள் அவள். அழுக்குப் படிந்த ஆடைக்குள்ளிருந்து யௌவனத்தின் பூரிப்புக் குமுறிக் கொண்டிருந்தது. சுமார் பதினெழு வயசிருக்கும். உற்று நோக்கிய என் கண்களுக்கு அவள் சரஸ்வதிதேவியாக மாறிவிட்டாள். ஒவ்வொரு சதத்திற்கு மேல் பரிசு அளிக்க ஒரு மகானாவது முற்படவில்லை. ஆம். ஒவ்வொ ருவரும் பரிசு என்றுதான் அளித்தார்கள். அந்த ஒரு சதப் பரிசை ஏழையின் துடித்த குடல் திருப்தியோடு அங்கீகரித்தது.

எனக்கு அருகில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் தன் கரங்களை நீட்டினாள். ஒரு சதத்தை கையில் தயாராக எடுத்து வைத்திருந்த அவர் ஒரு இராக மாலிகை பாடு தருகிறேன் என்றார்.

இராகமாலிகையா! அது எனக்குத் தெரியாதே என்றாள் அந்தப் பேதைப் பெண்.

இவ்வளவு நன்றாகப் பாடுகிறாயே இராகமாலிகை தெரியாதது சரி ஒரு விருத்தம் பாடு.

அவள் வாயைத் திறந்தாள். சுருண்டு சுருண்டு இருந்த அவளுடைய கூந்தல் நெற்றியில் புரண்டு விளையாடுவது போல் அவளுடைய தொண்டையிலிருந்து உருண்டு உருண்டு வரும் தேவகானம் நாக்கில் துள்ளி விளை யாடியது. ஆனால் தான் பாடுவது என்ன இராகம் என்பது அவளுக்கே தெரியாமல் இருந்திருக்கலாம். எல்லோரிடமும் ஒருவித அமைதி குடிகொண்டது.

அவள் அடுத்த பெட்டிக்குப் போய்விட்டாள். சற்று நேரம் கழித்து விதவிதமான இராகங்களில் பாட்டுக்கள் காற்றில் மிதந்து கொண்டிருந்தன. ஆனால் என்னுள்ளத்தில் எளியவர்கள் வயிறாற உண்ண வேண்டும் என்று அவள் பாடிய பாட்டுத்தான் திரும்பத் திரும்ப ஒலித்தது.

கிறிஸ்மஸ் விடுமுறை கழிந்துபோக மறுபடியும் பட்டினம் வந்து சேர்ந்தேன். படிப் பிலோ, விளையாட்டுக்களிலோ என் மனம் செல்லவில்லை. அந்த ரெயில் சம்பவம் சதா என் உள் ளத்தை விட்டு நீங்காமலே இருந்தது.

பஸ் ஸ்ராண்டில் பஸ்சுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். சிறிது தூரத்திற்கப்பால் ஒரே கூட்டமாக இருந்தது. கூட்டத்தை நாடி இன்னும் சனங்கள் ஓடிக்கொண்டு இருந்தார்கள். நானும் அவ்விடத்தை நோக்கி விரைந்து சென்றேன். இரண்டு பொலீஸ்காரர்கள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நின்றார்கள். மெதுவாக உள்ளே எட்டி நோக்கினேன். குற்றுயிராக இரத்த வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்த ஓர் நடுத்த வயதுள்ள பெண்ணைப் பார்க்கப் பெரிய பரிதாபகரமாயிருந்தது. விஷயத்தை ஆராய்ந்த போது ஓர் ராணுவ 'லொறி' அந்தப் பிச்சைக் காரியை அடித்துவிட்டது என்று தெரிய வந்தது.

தயாராக வந்து நின்ற ஓர் அம்புலன்ஸில் அந்தப் பிச்சைக்காரியை ஏற்றினார்கள். 'அம்மா' என்று அலறிக்கொண்டு கூட்டத்திற்குள்ளால் ஒரு பெண் ஓடி வந்தாள். அவளுடைய கரங்களைப் பற்றி இழுத்து அப்புறப்படுத்தினான் ஒரு பொலிஸ். அம்புலன்ஸ் புறப்பட்டுவிட்டது.

"ஐயோ, அம்மா! அம்மா!..." என்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டே நிலத்தில் விழுந்தாள் அந்தப் பேதை. அவளுடைய கையிலிருந்த தம்பூரா தரையினொரு மூலையிலிருந்து என்னைப் பரிதாபத்தோடு பார்த்தது. அன்று அவளுடைய இனிய சாரீரத்தோடு ரீங்காரம் செய்த தம்பூரா அல்லவா அது?

என்னுள்ளம் துடிதுடித்தது. தரையில் அறிவின்றிக்கிடந்த பெண்ணைத் தூக்கி நிமிர்த்தினேன். அவளுடைய கண்கள் மூடியிருந்தன. கூட்டத்தில் இருந்த யாவரும் போய்விட்டார்கள். ஆனால் வேடிக்கை பார்க்கச் சில சிறுவர்கள் மட்டும் நின்றுகொண்டிருந்துார்கள். அவர்களுள் ஒரு சிறுவன் நான் கொடுத்த காசைப் பெற்றுக்கொண்டு ஒரு பேணியில் கோப்பி கொண்டுவந்து கொடுத்தான். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த அந்தப் பெண் மறுபடியும் "அம்மா, அம்மா" என்று அலற ஆரம்பித்தாள்.

பிச்சைக்காரியாயிருந்தலென்ன, சீமாட்டியாயிருந்தாலென்ன? பெற்றவள் தாய்தானே. "அம்மாவை எங்கே கொண்டு போய்விட்டார்கள்?" என்று தழுதழுத்த குரலில் கேட்டாள்.

"பயப்படாதே. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள்!"

ஐயா , உங்களுக்குப் பெரிய புண்ணியமாகவிருக்கும்; என்னையும் அந்த ஆஸ்பத்தி ரிக்குக் கொண்டுபோய் விடுகிறீர்களா? அம்மாவோடு நான் பக்கத்திலிருந்து..."

"சரி, வா!" என்று அவளை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனேன். ஆனால்...

அவள் 'அம்மா'வைப் பார்க்க முடியவில்லை! பார்க்க முடியாத உலகத்துக்கு அந்த 'அம்மா' போய்விட்டாள்!

பாவம். இந்த ஏழைப் பெண்ணுக்குத் தேறுதல் கூறுவது பெரும்பாடாய் விட்டது! இது என்ன விந்தை! இந்தப் பிச்சைக்காரியோடு ஏன் என்னுடைய பொழுதை வீணாக்குகிறேன்? ஜீவகாருண்யமா? இவளுடைய கோகில கானமா? அல்லது அழகு ததும்பும் யௌவனமா?... சே... சே!

"பெண்ணே, வீணே அழுது கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இந்தா, இந்த ஐந்து ரூபாவை வைத்துக் கொள் நான் போகிறேன்"

'ஐயோ, நான் எங்கே போவேன்? என்ன செய்வேன்? தன்னந் தனியாக இந்தத் தெருக்களில் அலையப் பயமாக இருக்கிறதே! அம்மா இருந்தால்..."

அவள் மறுபடியும் விம்ம ஆரம்பித்தாள்.

அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. "இதேதடா, வீண்தொல் லையை விலைக்கு வாங்கி விட்டோமே? என்று ஒரு நினைப்பு, ஆனால் அவளுக்கு உதவி செய்வதில் அவ ளோடு பேசி கொண்டிருப்பதில் ஒரு இன்பம்.

"அழாதே! தெருக்களில் இத்தனை நாளாய் அலைந்தவள்தானே. இப்போது என்ன பயம்?... அர்த்தமில்லாமல் பேசிக்கொண்டு வந்தவன். அவளுடைய முகபாவத்தைக் கண்டு நிறுத்திக்கொண்டேன். ஆம் அவள் பயப்படத்தான் வேண்டும்! அவள் வயது அழகு... அவள் பயப்படத்தான் வேண்டும். ஆனால் நான் இவளுக்கு என்ன உதவி செய்ய முடியும்?

"இவளைக் கல்யாணம் செய்து கொண்டால்..."

இந்த எண்ணத்தில் ஒரு சிறு இனிப்பு. ஆனால் என் உதடுகள் லேசாக, கேலியாக மலர்ந்து இந்த எண்ணத்தின் நிலைமையை - நிறைவேறாத நிலைமையை தெரிவித்தன. அதோடு அந்த எண்ணம் காற்றில் கரைந்து விட்டது.

திடீரென்று ஒரு யோசனை!

"எனது தமையனார் வீட்டில் நீ வேலை செய்வாயா?"

அவள் நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வை மூலம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டாள்.

◆◆◆

மாசங்கள் நான்கு மறைந்தன. பரீட்சைக்காகப் படித்துக்கொண்டு இருந்தேன். அன்று ஆசிரியர் கொடுத்த குறிப்பில் முழுக்கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்த எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. எதிரே இருந்த கடிகாரத்தில் மணி ஒன்று அடித்தது. அறையினின் றும் வெளியே வந்தேன். சாப்பாட்டு மேசைக்கருகில் - அவள் நின்று கொண்டிருந்தாள்.

"நீ இன்னுந் தூங்கவில்லையா?"

"நீங்களின்னும் சாப்பிடவில்லையே?"

"என்னுடைய சாப்பாடு இங்கேதான் மேசை மேல் இருக்கிறதே!... நீயுமின்னும் சாப்பிடவில்லையா?"

பதில் சொல்லாமலே அவள் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டாள். அவளுடைய மார்பு ஒருமுறை விம்மித் தாழ்ந்தது. பாவம், என்மீது எவ்வளவு அன்பை வைத்திருக்கிறாள்!

இன்பத்தில் இருப்பவர்கட்கு இன்பத்தையும், துன்பத்திலிருப்பவர்கட்குத் துன்பத்தையும் மூட்டும் சந்திரன். அன்று எனக்கு என்னத்தை ஊட்டினானோ? அவசர அவசரமாகச் சாப் பாட்டை முடித்துக் கொண்டு படுக்கையில் படுத்துக் கொண்ட என் உள்ளத்தில் ஜன்னலூடாக வந்த சந்திரன் இறுமாப்புடன் ஆட்சி செலுத்த ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் உள்ளத்திலும், உருவத்திலும் முற்றாக மாறிவிட்டேன். வெறிபிடித் நாயைப் போல் வெளிக்கிம்பி என் கால்கள் தானாகவே அவள் தூங்கிக் கொண்டிருந்த அறையின் கதவருகில் போய் நின்றன. ஆனால் என் உள்ளம்..."

"மூடனே! நீதானா சத்தியவாதி? உன் லட்சியம்தான் என்ன? காம வெறி கொண்ட மனித மிருகங்களிடமிருந்து என்னைக் காப்பாற்று" என்று உன்னைச் சரணபுகுந்தாளே. அவளுக்கு நீ செய்யும் உதவி இதுதானா?" என்று இடித்து இடித்துக் கூறியது.

என் இருதயம் அமைதியை நாடியது. தனிமையில்தானே அமைதி? வீட்டின் பின்புற முள்ள அடர்ந்த மாமரத்தின் கீழ் உட்கார்ந்தேன்.'ஜிலு ஜிலு' என்று குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. சந்திரன் தன் கடமையைச் செய்து கொண்டிருந்தான். 'சந்திரனைப் பற்றிய செயல்களெல்லாம் கவிகளின் வெறும் கற்பனாசக்தி என்று எண்ணியிருந்த என்னுள்ளத்தில் அவன் திருவிளையாடல்கள் எல்லாம் எந்தமட்டில் உண்மை என்பது அன்றுதான் புலனாயிற்று. எனக்கும் என் உள்ளத்துக்குமிடையில் நீண்டநேரம் விவாதம் நடந்து கொண்டி ருந்தது.

கிண்ணற்றுக் கட்டில் ஓர் உருவம் உட்கார்ந்து கொண்டிருந்ததைக் கண்டு அது யாரென்றறிய அவ்விடம் நோக்கிச் சென்றேன்.

"என்ன, நீயா?"

கொலைக் குற்றவாளியைப் போல அவள் நடுநடுங்கினாள்.

"இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்?" என்றேன் மறுபடியும்.

தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வந்தேன்.

"இந்த நடுச் சாமத்திலா? அதுவும் குடமில்லாமலா?"

அவள் பதிலொன்றும் பேசாமல் நின்றாள். அவள் நெற்றியில் துளிர்த்த வியர்வை நிலவில் மினுங்கியது.

"பெண்ணே, நீ..." இப்பொழுது பேசும் பொழுது என்குரலில் ஓசையில் கீறல் விழுந்தது. என்னுடைய நிலைமையை அவள் நன்றாக உணர்ந்து கொண்டுதான் இருக்க வேண்டும். நிமிர்ந்து என்னைப் பார்த்தாள். அவள் கண்களில் நிரம்பியிருந்த கண்ணீர் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது.

இந்த நிலமையைச் சமாளிக்க முடியவில்லை.

"சரி ; நான் போகிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பி நடந்தேன்.

"சுவாமி" என்ற கத்தினாள் அவள்.

திடுக்கிட்டுக் திரும்பி நின்றேன்.

அவள் ஓடிவந்து என் "கால்களைப் பிடித்துக்கொண்டு" ஸ்வாமி இன்னமும் என் மனதைத் தெரிந்து கொள்ளவில்லையா?" என்று கூறிக்கொண்டே, தனது கண்ணீரால் எனது பாதங்களைக் கழுவினாள்.

நான் அவள் தோள்களைப் பிடித்துத் தூக்கினேன். வாடிய மலர்க் கொடிபோல என்முன் துவண்டு துவண்டு நின்றாள். இருவர் முகங்களும் ஒன்றையொன்று நோக்கின. வாய்ப் பேச்சில் என்ன பயன்? எங்கள் உள்ளம் ஒன்று கலந்தது போல்...

அவளை என்னோடு அணைத்துக் கொண்டேன்.

மறுநாள் விடிய விழிக்கும் போது ஒன்பது மணியிருக்கும். படுக்கையை விட்டு வெளியே செல்ல என்மனம் ஒப்பவில்லை. நான் எவ்விதம் அவளின் முகத்தில் விழிக்க முடியும்? படுக்கையிலிருந்தபடியே சிந்தனைக் கடலில் ஆழ்ந்தேன்.

"என்ன. உனக்கின்னுந் தூக்கமா? அவளைத் தேடிச் சென்ற அப்பா "இன்னும் வரவில்லையே" என்று அம்மா கலங்கிக்கொண்டு இருக்கிறாள். நீயின்னும் கொட்டாவி விட்டுக் கொண்டு இருக்கிறாயோ!" என்று என் அண்ணனின் மகள் கூறியதைக் கேட்டவுடன், இடியேறு கேட்ட சர்ப்பம் போல் அப்படியே சமைந்துவிட்டேன். நான் செய்த துரோகம் என்பது எனக்கு அப்பொழுது தான் நினைவிற்கு வந்தது. "அவள் எங்கே போயிருப்பாள்?"

கால்கள் தள்ளாட வெளியில் வந்தேன். எங்கும் ஒரே சூன்யமாய் என் கண்களுக்குத் தெரிந்தது. "காமக்கண்களால் நோக்கும் மனித மிருகங்களிடமிருந்து அவளைக் காப்பாற்றி விட்டாயா?" என்று யாரோ ஏளனமாக கூறி நகைப்பது போல என் உள்ளத்தில் பட்டது.

"இவள் ஏன் சொல்லாமல் ஓடவேண்டும்?" என்று என் அண்ணர் கேட்டார்.

"எனக்கு எப்படித் தெரியும்" என்று கூறினேன். வாயால் மட்டுந்தான் கூறினேன். ஆனால் என் உள்ளம்...?" சகிக்க முடியாத மன்னிக்க முடியாத ஒரு குற்றம் என் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருப்பதை அவர்களால் எப்படி அறிய முடியும்?

◆◆◆

காலச் சக்கரத்தின் வேகத்தில், என் உள்ளத்திலிருந்த அந்த ஏழைப் பெண் சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருந்தாள். ஆனால் ஆசிரிய கலாசாலையில் படிக்கும் போது எனக்கும் வசந்தாவுக்கும் இடையில் காதல் உற்பத்தியான பின் முற்றாக அப்பெண் அழிந்துவிட்டாள் என்றுதான் கூறு வேண்டும். சில சமயங்களில் சந்தர்ப்பத்தையொட்டி அவளுடைய நினைவு வந்தாலும் அது வெகுநேரம் நிலைத்திருப்பதில்லை.

"இந்த விடுமுறைக்கு ஊருக்குப் போகமுன் கட்டாயம் எங்களுடைய வீட்டுக்கு வந்துவிட்டுத்தான் போகவேண்டும்" என்றாள் வசந்தா.

"வசந்தா! என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இல்லையா? அண்ணனும், மனைவியும் கூடவரும் போது நான் எப்படி உன்னிடம் வரமுடியும்? எனக்கு மட்டும் உன்னோடு ஒரு நாளை ஆனந்தமாய்க் கழிப்பது இஷ்ட மில்லையா?"

"எங்களுடைய வழியில் இந்த அண்ணனும் தம்பியும் எங்கிருந்துதான் முளைக்கிறார்களோ?" என்று கூறி அவள் அலுத்துக் கொண்டாள். பிறகு...

'அடுத்த மாசம் இருபத்தோராந் திகதி! இந்தச் சனியன் எத்தனை நாட்களைக் கவ்விக் கொண்டிருக்கிறது. "இந்த விடுமுறையே இல்லாவிட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றாள்.

"அப்படிக் கூறமுடியுமா வசந்தா? எத்தனை பேர் இந்த விடுமுறையை ஆனந்தமாய் கழிக்க ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.நாளை பொழுது புலர்ந்தால் அவர்கள் உள்ளங்கள் புகையிரதத்திலும் பார்க்க வேகமாக ஓடிக்கொண்டிருக்குமே! இன்று எங்கள் விடுதி அமர்க்களப்படுவதை பார்த்தாயா?" அதோ, வண்டியும் வந்து விட்டது!

"ஏன் நீ இன்றைக்கே புறப்படுகிறாயா?"

"ஆம். நான் இன்றைக்கே போய்விட்டால் நீங்கள் நாளை வரும் போது வரவேற்க வசதியாகயிருக்குமென்று நினைத்து அதிபரிடம் நான் இன்றைக்கே போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஆனால் நாம் நினைத்தபடி எதுவும் நடக்கிறதா?"

உண்மையில் வசந்தாவைப் பிரிவதென்றால் என்னவோ போலத்தான் இருந்தது. அவள் கண்கள் கலங்குவதைப் பார்க்கும் போது என் கண்களிலிருந்து குமுறிக் கொண்டு வரும் கண்ணீரை எப்படி என்னால் அடக்க முடியும். "வாரத்திற்கு இரண்டு கடிதங்களாவது போடு" என்ற என் துக்கத்தை அடக்கிக் கொண்டு கூறினேன்.

சரி என்று தலையசைத்தாள் அவள். பேசமுடியாமல் அவள் குரல் கம்மி விட்டது. பிரிவு பசாரம் கூறி அவள் கையைப் பற்றினேன். நாணத்தின் மெல்லிய ரேகை அவள் நெற்றியில் படர்ந்தது. ஸ்படிகம் போன்ற கன்னங்கள் நாணத்தால் சிவந்தன. அவளுடைய ரோஜா? இதழ் போன்ற உதடுகள் என்னிட மிருந்து எதையோ பெறத் துடித்தன.

பின்பு கலகலவென்று சத்தத்தோடு ஓடிக் கொண்டிருந்த வண்டிக்குள்ளிருந்து கண்ணீர் நிறைந்த இரு கண்கள் என்னை நோக்கிக் கொண்டிருந்தன.

பாடசாலை தொடங்க இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே ஊரிலிருந்து புறப்பட்டேன். வசந்தாவின் வீட்டை அடையும் போது மாலை சுமார் நாலு மணியிருக்கும். முன்அறிவித்தல் இல்லாமலே வந்துவிட்டீர்களே! என்று அன்பு ததும்பக் கூறிக்கொண்டு என்னை வரவேற்றாள் வசந்தா?

நான் வருவதை முன்கூட்டியே உனக்குத் தெரிவித்தால் நீ என்ன செய்வாய்."

செய்வதென்ன நீங்கள் வந்தால் உள்ளேயே வரவிடக்கூடாது என்று கூறி கவாற்காரனை வாசலிலேயே நிற்கவிட்டிருப்பேன்.

நல்ல வேளையாக உனக்கு அந்தச் சிரமங் கொடுக்காமல் விட்டேனே அது போதும்.

எந்தச் சிரமம்.

காவற்காரனை நியமிக்கும் சிரமந்தான்!

கலகலவென்று சிரித்துகொண்டு உள்ளே ஓடிய அவள், பிறகு நிமிஷத்திற்கு ஒரு தரம் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக இருந்தாள். நான் வெளியே போடப்பட்டிருந்த ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

"என்னை மன்னிக்கவேண்டும். உங்களை வெகுநேரம் தனிமையில் இருக்க விட்டு விட்டேன்."

"பரவாயில்லை. இப்பொழுதாவது நீ உன் வேலைகள் முடித்து வந்தாயே!

"என் வேலைகள் இன்னும் முடியவில்லையே! எழுந்திருங்கள். உங்கள் உடைகளை மாற்ற வேண்டாமா?" என்று கூறிக்கொண்டு எனக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட ஓர் அறைக்கு என்னை அழைத்துச் சென்றாள்.

சுமார் அரைமணிநேரம் கழித்து வசந்தா வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டு நித்திரை போற பாசாங்கு செய்தேன். கலீல் என்ற சப்தத்தைக் கேட்டுக் கண்ணை விழித்தபோது பரக்கபரக்க விழித்துக்கொண்டு கைகால்கள் வெடவெட என நடுங்க அவள் நின்று கொண்டிருந்தாள். நிலத்தில் நூறு துண்டுகளாக வெடித்துப் போய்க் கிடந்த தேநீர் கோப்பை என் உள்ளத்திற்கு ஓர் உதாரணமாகக் கிடந்தது. துக்கமும் பயமும் அவள் முகத்தல் மாறி மாறிக் காட்சியளித்தன. என்னையே சற்று நேரம் உற்று நோக்கிய வண்ணம் நின்ற அவள் அவசர அவசரமாக உடைந்த துண்டுகளைப் பொறுக்க ஆரம்பித்தாள். சத்தத்தைக் கேட்டு உள்ளே நுழைந்த வசந்தா "கீழே போட்டு உடைத்து விட்டு அழுகிறாயா? கழுதை முகத்தைப் பார்!" என்று வசைமாரி பொழிய ஆரம்பித்தாள். அப்பொழுது சுமார் மூன்று வயசுக் குழந்தையொன்று தட்டுத் தாடுமாறி உள்ளே நுழைந்தது. தன் குஞ்சுக் கரங்களால் அவளின் சேலையைப் பிடித்துக்கொண்டு ஏம்மா அழுறா என்று கொஞ்சும் பாவனையில் கேட்டது. விக்கிவிக்கி பலத்து அழுது கொண்டு வாஞ்சையோடு குழந்தையைக் கட்டி மார்போடு அணைத்துக் கொண்டாள் அவள்.

என் வாழ்க்கையின் இன்பம் அஸ்தமித்துவிட்டது. கொலைகாரனைப் போல் உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

எழுந்திருங்கள் சாப்பாடெல்லாம் தயாராய் விட்டது என்று கூறிக்கொண்டு மறுபடியும் உள்ளே நுழைந்தாள் வசந்தா.

நான் தலையை நிமிர்த்தினேன். வெளிறிப் போயிருந்த என் முகத்தில் இரு கண்கள் கண்ணீரில் மிதப்பதைக் கண்டவுடன் என்ன அது என்று ஏக்கம் நிறைந்த தொனியுன் கேட்டாள் வசந்தா.

வசந்தா இந்தப் பாவியை மறந்து விடு. நான் கொலைக்காரன் மற்றவர்கள் .... துன்பத்தில் இன்பம் அனுபவிக்கும் நான் பெண்மையின் தெய்வீகத் தன்மை அறியாத மூர்க்கன் துரோகி. என்னை மன்னித்து விடு வசந்தா.

எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. அதற்குள் உங்களுக்கு என்ன நடந்துவிட்டது.

வசந்தா நீ என்னை உண்மையாய் காதலிக்கிறாயா? இது என்ன கேள்வி.

"நீ என்னைக் காதலிப்பது உண்மையானால் உண்மையான ஓர் இன்பத்தை நாடிச் செல்லும் உன்காதலின் உள்ளத்திற்கு ஒருவழி காட்டுவது உன் கடமையல்லவா?"

"இது என்ன விளையாட்டு. ஐயோ! இந்த இருதயம் மென்மையானது. அதில் சுமக்க முடியாத பாரத்தைச் சுமத்தி என்னைக் கொல்ல வேண்டாம். என் நெஞ்சைத் தொட்டுப் பாருங்ள். இந்தப் பேதையின் உள்ளங் கொதிப்பது உங்களுக்கு விளங்கும். அரை மணித் தியாலத்திற்குள் உங்களுக்கு என்ன பிடித்து விட்டதென்று தெரியவில்லையே! உங்கள் காலில் விழுகிறேன் ; நடந்தது என்னவென்று கூறமாட்டீர்களா?"

"வசந்தா. நான் உன்னிடம் கூறாமல் ஒழிப்பதற்கு என்ன இருக்கிறது? நான் மகா பாவி யென்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.என்னையே கதியென நம்பி வந்த - என் அன்பிற்கு அடிமைப்பட்ட. பரிசுத்தமான மகாலட்சுமி போன்ற ஒரு ஏழைப் பெண்ணை என் காமக் கருவியாகப் பாவித்தேன். அவள் தியாக குணம் பெண்களுக்கே உரியது என்பதை நிரூபித்து விடடாள். ஆனால்....

கூறி முடிப்பதற்குள் "ஐயோ! ஐயோ அம்மா! அம்மா!" என்று யாரோ அவலக் குரலில் அலறுவதைக் கேட்டு இருவரும் வெளியே ஓடினோம்.

'என்ன நடந்தது' என்று படபடப்புடன் கேட்டாள் வசந்தா.

"மேல் மாடியிலிருந்து தவறி..."

என் முன் தெரியும் பொருட்களெல்லாம் சுழல்வதுபோல இருந்தது. "ஐயோ" என்றலறிக் கொண்டு இறக்குந்தறுவாயிலிருக்கும் அவளின் தலையைத் தூக்கி என் மடி மீது வைத்தேன். என் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது. "என் கண்ணே. உன் பெரு மையை உணராது உன் வாழ்க்கையைக் கெடுத்து அதற்கு முற்றுப்புள்ளியிட்ட இந்தப் பாவிக் குப் பாடங் கற்பித்து விட்டாயே! அழிய வேண்டியவன் நான் இருக்க. உன் பொன்னான உயிரை ஏன் மாய்த்துக் கொண்டாய். என் செல்வமே? உன் அருமைக் குழந்தையை யார் கையில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறாய்?"

"சுவாமி. என் வாழ்வில் நான் என்றும் அடையாத இன்பத்தை இன்று தான் அடைகிறேன்.என் உயிர்க்குயிரான அன்புக் காதலரின் மடியில் உயிர்விட நான் எத்தனை ஜென்மங்களில் புண்ணியஞ் செய்தேனோ? என் உயிர் சாந்தி அடைவதற்கு உங்கள் வாயிலிருந்து வந்த 'என் கண்ணே' என்ற அந்த ஒரு சொல்லே போதுமே! என் பிரபு. குழந்தையைப் பற்றிய கவலை எனக்கு எதற்கு? உங்கள் குழந்தையைப் பாதுகாக்கும்படி நான் உங்களிடம் கேட்க வேண்டுமா? என்று அலறிக்கொண்டு அருகில் ஒன்றும் விளங்காமல் மிரள. மிரள விழித்துக் கொண்டு நின்ற குழந்தையின் கரங்களைப் பிடித்து என்னிடம் ஒப்படைத்தாள்.

"என் செல்வமே. இனி இதுதான் உனது அம்மா. இந்த ஏழை அம்மாவை மறந்துவிடு" என்று கூறி வசந்தாவின் கரங்களை அன்போடு வருடினாள்.

"எங்கேம்மா போறாய்?" என்று கேட்டுக்கொண்டு வரண்ட முகத்தோடு நின்ற குழந்தையின் மெல்லிய கைகளைப் பிடித்துத் தனது மார்போடு அழுத்தினாள் அவள். பிறகு...

அவளுடைய ஆத்மா. நிம்மதியான ஓர் உலகத்தை நாடிச் சென்று கொண்டிருந்தது.

மறுமலர்ச்சி
தை, மாசி - 1947

சடையம்மா

தாழையடி சபாரத்தினம்

செல்லச் சந்நிதி முருகனுடைய கோவில் சரித்திரப் பிரசித்தி பெற்ற புண்ணிய ஷேத்திரங்களிலொன்று. உற்சவ காலத்தில் பத்து இருபது மைல்களிலிருந்தும் பக்தர்கள் வண்டிகளிலும் கால் நடையிலும் வந்து குவிவார்கள்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. காளை எருதுகள் பூட்டிய இரட்டை மாட்டு வண்டியிலிருந்து இரு பெண்கள் பால், தேங்காய், வெற்றிலைப் பாக்குடன் கோவிலுக்குள் செல்கிறார்கள். ஒரு பெண்ணுக்கு நாற்பத்தைந்து வயசிருக்கும். மற்றையவர் இளம் பெண். இருபத்தி ரண்டு, இருபத்தி மூன்று வயசிருக்கலாம். இளம் பெண்ணின் கண்க ளில் நீர் துளிர்த்துப் போயிருந்தது. பக்தியோடு ஒவ்வொரு விக்கிர கத்தையும் மூன்று முறை வலம் வந்த அவள் நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை அரும்பியிருந்தது.

"அம்மா சடையம்மாவிடம் போகலாமா" என்றாள் அந்தப் பெண்.

"பிரசாதம் வாங்கிக் கொண்டு போவோம்" என்றாள் தாயார்.

வண்டியில் பட்டுத் துண்டால் மூடப்பட்டிருந்த ஒரு தட்டை எடுத்துக்

கொண்டு இருவரும் சடையம்மா இருந்த மடத்திற்குச் சென்றனர். தட்டைக் கீழே வைத்துவிட்டு வீழ்ந்து சடையம்மாவை நமஸ்கரித்தாள். அந்தப் பெண். சடையம்மா நமஸ்காரத்தை விரும்பாதவள் போல் திடீரென்று எழுந்து இருவரையும் உட்காரும்படி அன்பாய் வேண்டினாள்.

சடையம்மாவுக்குச் சுமார் இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதிருக்கும். நல்ல சிவந்த மேனி. வருடக்கணக்கான எண்ணெயைக் தலைமயிர் சடைப்பிடித்துப் போயிருந்தது. அந்தச் சடைக்குள்ளிருந்த அவளது அழகான முகத்தில் கண்களும் ஒளி வீசிக் கொண்டிருந்தன. இளமையிலே சந்நியாசத்தை ஏற்றுக் கொண்ட அந்த யௌவன சந்நியாசினியின் வாழ்க்கை வரலாறு! எல்லோருக்குமே புதிராயிருந்தது. அவள் கபட சந்நியாசிகளைப் போல் "சம்போ மகாதேவா" ஒன்றுங் கூறவில்லை. விபூதியை அள்ளிக் கையில் வைத்து மந்திரம் செபிக்கவில்லை. தன் சகோதரியையும், அன்னையையும் போல் இருவரையும் வாதத்சல்யத்தோடு தழுவினாள். தான் ஒரு தெய்வப் பிறவியென்றோ யோகியென்றோ அவள் பிரசாரம் செய்யவில்லை. ஆனால், குழந்தையில்லாத பெண்கள் அவளின் ஆசீர்வாதம் பெற - குழந்தை வரம் பெற வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். சடையம்மாவின் நிம்மதிக்கு இவை இடையூறாயிருந்த போதிலும் அவளோடு கூடப்பிறந்த சகிப்புத்தன்மை சீறிச் சினக்காமல் எல்லோருடனும் அன்பாய் நடத்த இடங்கொடுத்தது. வரங்கொடுக்கும் சக்தி தன்னிடமில்லை என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால், ஜனங்கள் பக்தி தேவியே மானிட உருவில் வந்திருக்கிறாளென்று போற்றினர். அவள் தரிசனத்தால் வருடக் கணக்காய் குழந்தையில்லாதவர்கள் பிள்ளைப் பாக்கியம் பெற்றனராம்.

இன்று வந்திருந்த இளம் பெண் பூரண கர்ப்பவதி. இற்றைக்குச் சுமார் ஒரு வருடத்திற்கு முன் சடையம்மாவைத் தரிசித்து ஆசீர்வாதத்தைப் பெற்றமையாலே தான் கர்ப்பவதியாகியிருப்பதாக அவள் எண்ணிக் கொண்டிருக்கிறாள். பிற ஊரில் உத்தியோகம் வகிக்குங் கணவரோடு குடித்தனம் நடத்தியவளைப் பிரசவத்திற்காகத் தாயார் போய் அழைத்து வந்திருக்கிறாள்.

“எப்படியம்மா சௌக்கியமாயிருக்கிறாயா? என்றாள் சடையம்மா .

“உங்கள் அனுக்கிரகத்தாலும் ஆசீர்வாதத்தாலும் சுகமாயிருக்கிறேன் தாயே" என்றாள் அந்த இளம் பெண் பக்திப் பெருக்கோடு.

தட்டில் கொண்டுவந்தவற்றையெல்லாம் எடுத்து வைத்தாள் அந்தக் கர்ப்பிணி. சடையம்மா தரித்தாள். “என்னை ஏனம்மா இப்படி உபத்திரம் செய்கிறாய். பணத்தையும் எடுத்துக் கொண்டுபோ பழங்களை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். பணத்தை வைக்க என்னிடம் பெட்டி இல்லையே?"

அந்த இளம் பெண்ணின் முகம் வாடிவிட்டது. பதில் பேசாமல் பணத்தையும் பட்டுத் துண்டையும் எடுத்துக் கொண்டாள். “அபசாரத்தை மன்னிக்க வேண்டும்" என்றாள். அவள் தொண்டை கம்பிப் போயிருந்தது.

சடையம்மாவின் முகத்திலும் வருந்தக் குறிகள் தென்பட்டன. ஏனம்மா வருதப் படுகிறாய். உன் அபரிமிதமான அன்பை யாராவது அபசாரமாகக் கருதுவார்களா? உனக்குப்

பிறக்கப் போகும் போக்கிரிப் பயலுக்கு என்னை நினைத்துக் கொண்டு இந்தப் பட்டுத் துண்டில் சட்டை தைத்துப் போடு".

அந்த இளம் பெண்ணின் கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. சடையம்மாவின் வாயிலிருந்து ஆண் குழந்தை என்ற சொல் வெளி வந்ததே அந்த ஆனந்தத்திற்குக் காரணம். அவள் அதை அவள் தெய்வவாக்காக எண்ணினாள். பட்டுத்துண்டை எடுத்துப் பத்திரமாக வைத்துக் கொண்டாள். தனக்கு ஆண் குழந்தை பிறந்துவிட்டது என்ற உணர்ச்சி அவளுக்கு.

ஒரு வருடங் கடந்துவிட்டது. அன்று ஏனோ சடையம்மாவின் மனம் அலைமோதிக் கொண்டிருந்தது. அவளிடமிருந்த மடத்து வாசலிலிருந்த பவள மல்லிகை மரம் பூத்துச் சொரிந்துகொண்டிருந்தது. மெல்லிய தென்றலில் மலர்களின் இதமான வாசனை மிதந்து வந்து கொண்டிருந்தது. கோவிலில் ஜன சந்தடி அற்ற நேரம். அமைதி கலந்த தனிமை சடையம்மாவின் உள்ளத்தே பழைய வாழ்க்கைச் சம்பவங்களைக் கிளறிவிட்டுக் கொண்டிருந்தது.

இன்றோடு சடையம்மா கணவனைப் பிரிந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவளுடைய கணவன் சாதாரணமானவனல்லன். அவனொரு பிரபல எழுத்தாளனும் ஒரு பத்திரிகையின் ஆசிரியனுமாவான். அவன் புகழ் பரவிக்கொண்டிருக்கும்போதே அவள் அவனைக் கைப்பிடித்தாள். அவள் பணக்காரியல்லள். அவனும் பணக்காரனல்லன். அவளிடம் நகையொன்றுமே கிடையாது. அவனும் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. அவளும் அதைப்பற்றி எண்ணவில்லை. அவனது புகழ் மாலைகளே அவள் ஆபரணங்கள். அறிவின் சிகரமான கணவனைப் பெற்ற அவளுக்கு வேறு எந்த ஆபரணமும் வேண்டிக் கிடக்கவில்லை.

ஒரு வருடங் கழிந்தது. இரண்டு வருடங்கள் கழிந்தன. வாழ்க்கை இன்பமாகவே ஓடிக் கொண்டிருந்தது. அவன் எழுதும் கட்டுரை, கதைகளின் பாணி மாறிக் கொண்டிருந்தது. அநேகமாக எல்லா - எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகளிலும் அவர்கள் உள்ளத்துடன் பிரதிபலிக்கிறது. விவாகமாகாத ஓர் எழுத்தாளனின் காதல் சம்பவங்களே உதயமாகின்றன. விவாகமான புதிதில் தாம் பத்திய வாழ்வின் சிறப்புப் பற்றியே கற்பனை ஓடிக்கொண்டிருக்கும். சிறிது காலம் சென்ற பின் பண நெருக்கடி குடும்பக் கஷ்டங்கள். இப்படியெல்லாம் கற்பனை வரும். ஆனால், எல்லா எழுத்தாளனின் விஷயத்திலும் இந்த அபிப்பிராயம் ஒத்து வருவதில்லை.

"தாயன்பு" "குழந்தைப் பாசம்" இப்படியெல்லாம் ஏராளமான கதைகளை எழுதிக் குவித்தான். அவன் எழுத்தில் அவனுக்கொரு குழந்தை இல்லாக்குறை நன்றாகப் பிரதிபலித்தது. வாசகர்கள் ரசித்துப் படித்தனர். அவன் தன் இதயத்தைக் கையால் பிடித்துக் கொண்டு எழுதினான். அவள், அவன் எழுகின்றமையைக் கண்ணீர் சிந்தியபடியே வாசித்தாள்.

புருஷனின் மனக்குறை அவளுக்கு நன்றாகத் தெரியும். இயற்கையிலேயே அவனுக்கு குழந்தைகளென்றால் உயிர். ஊர்க்குழந்தைகளை அவன் அன்புடன் அணைக்கும் போது அவள் இதயம் குமுறும். அவளுக்கு மட்டும் குழந்தையிருந்தால்...

விவாகமாகி மூன்று வருடங்களாகிவிட்டன. ஒரு குழந்தையில்லை. ஒரு குழந்தை வேண்டுமென்ற நினைவு அவனை வாட்டிக் கொண்டிருந்தது. அவளைவிட அதிகமாக அவன்தான் ஆசைப்பட்டான். தன் மனதிலுள்ள ஆசையை அவன் வெளிக்காட்டிக் கொள்ளு பவன் அல்லன். ஆனால், எப்படியோ தன் புருஷன் மனத்திலுள்ளதை அவள் அறிந்திருந்தாள். அதிர்ஷ்டக் கட்டையான கணவன் மேல் அவளுக்கு அனுதாபமேற்பட்டது.

"நீங்கள் இன்னொரு விவாகம் செய்து கொண்டாலென்ன" என்று கேட்டாள். அவள் தொண்டை கனத்துப் போயிருந்தது.

"எனக்கு ஒரு மனைவி போதாதென்று உனக்கு யார் சொன்னார்கள்" என்றான் சிரித்துக் கொண்டே.

"நீங்கள் விளையாடுகிறீர்கள். நான் உண்மையாகத்தான் கேட்கிறேன்."

"இவ்வித தண்டனைக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?"

" போதும் உங்கள் பரிகாசம் என்னை நீங்கள் மணந்து என்ன சுகத்தைக் கண்டீர் கள். நீங்கள் வைத்துக் கொஞ்சிக்குலாவ ஒரு குழந்தை..." மேலே அவளால் பேச முடிய வில்லை. தொண்டை கம்மி விட்டது. அவள் கண்கள் நீரைப் பெருக்கின.

அன்போடு அவள் கண்ணீரைத் துடைத்தானவன். அவன் இதயமும் துடித்தது. "பைத்தியமே, ஏன் சிறு குழந்தையைப் போல் அழுகிறாய் இப்போது ஒரு குழந்தைக்கு என்ன அப்படி அவசரம் வந்துவிட்டது."

"நீங்கள் உண்மையாகத்தான் கூறுகிறீர்களா?"

"உண்மையாகத்தான் கூறுகிறேன்"

"அப்போ உங்கள் கதைகள் கட்டுரைகளெல்லாம் ...."

"ஓ அதைக் கொண்டா அனுமானிக்கிறாய். அப்போ யோகி சுத்தானந்த பாரதி காதல் கதைகளெல்லாம் எழுதுகிறாரே அதைக் கொண்டு அவர் காதல் பித்துத் தலைக்கேறி அலை கிறாரென்று கூறிவிட முடியுமா? எழுத்தாளன் கற்பனை எல்லாம் திசைகளின் மோகம். அவன் கற்பனையையும் வாழ்க்கையையும் ஒன்றுபடுத்திப் பார்க்க முடியுமா?"

அவன் சாதுரியமாக ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தான். ஆனால், அவள் உள் ளம் சாந்தியடையவில்லை. அவன் உண்மையை மறைக்கிறானென்பதை அவள் திடமாக நம்பினாள். நாள்கள் ஓடிக் கொண்டிருந்தன. அவளுடைய மனக்கவலைஅதிகரித்துக் கொண்டே வந்தது. அவள் மீது அவன் கொண்டுள்ள அன்பு அளவு கடந்தது என்பது அவ ளுக்கு நன்றாகத் தெரியும்தான். உயிருடனிருக்கும் வரை அவன் மறுவிவாகம் செய்யமாட்டா னென்பது அவளுக்குத் தெரியாத விஷயமல்ல. சிந்தனை செய்த பின் ஒரு முடிவுக்கு வந்தாள்.

மழை சோவென்று கொட்டிக் கொண்டிருந்தது. போர்வையை நன்றாக இழுத்து மூடிக் கொண்டு நித்திரை செய்தானவன். இரவு சுமார் பதினொரு மணியிருக்கும். கடைசி முறை யாக அவன் பாதங்களை நமஸ்கரித்துவிட்டு பொருமுமிதயத்தைக் கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டு வெளிக் கிளம்பினாள். சில நாள் எங்கெல்லாமோ அலைந்தாள். சதி செய்யும் அவள் பருவமும், அழகும் கயவர் கண்களில் அவளைக் காட்டிக் கொடுக்கப் பார்த்தது. உலகம்

இவ்வளவு பயங்கரமானது என்று வீட்டைவிட்டு வெளிக்கிளம்பும் முன் அவளறிந்திருக்க வில்லை. தற்பாதுகாப்புக்காகவே கோவிலுக்குள் சரண் புகுந்தாள். கோவிலுக்குள் புகுந்த அவ ளைச் சனங்கள் சுவாமியாக்கிவிட்டார்கள். பால சந்நியாசினியின் பெருமை எங்கெல்லாமோ பரவிவிட்டது. இப்பொழுது அவளிடம் குழந்தை வரம் பெற இளம் பெண்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றனர். எண்ணெயைக் காணாத பரட்டைத் தலையினால் அவளுக்குச் சடையம்மா என்ற பெயர் பக்த கோடிகளால் வழங்கப்பட்டது.

கணவனைப் பிரிந்து வாழ்ந்த ஐந்து வருட காலத்தில் சடையம்மாவுக்கு எவ்வளவோ அனுபவம் ஏற்பட்டுவிட்டது. ஐந்து வருடமாய்க் குழந்தையில்லாமலிருந்தவள் குழந்தை பெறுவதும். பத்து வருடமாயிருந்து குழந்தை பெறுவதும் இயற்கையென்று அவளுக்குத் தோன்றியது. தான் அவசரப்பட்டுத் தன் அன்புக் கணவனைப் பிரிந்து வந்தது எவ்வளவு மகா தப்பிதமான செயல் என்று இப்பொழுதுதான் அவளுக்குத் தோன்றியது. அந்த நடு ராத்தியில் தன்னைத் தேடித் தன் அருமைக் கணவன் கொட்டும் மழையில் எவ்வளவு கஷ்டப்பட்டானோ என்ற நினைவு அவள் உள்ளத்தே பேய்க்காற்றாய் வீசியது. ஒரு வேளை என் பிரிவைச் சகிக்காமல் அவர் தற்கொலை செய்திருப்பாரானால்? அவளை அறியாமலே அவள் வாய் ஐயோ என்றலறிவிட்டது.

அவள் அவனிடம் போகத் தீர்மானித்து விட்டாள். அவளை முந்தி அவளிதயம் பறந்தது. ஐந்து வருடம் அவனைப் பிரிந்து அமைதியாக வாழ்ந்தவள் போல் சென்று கொண்டிருந்தாள்.

காடுகளையும், மலைகளையும் தாண்டி புகையிரதம் வேகமாய் அலறிக்கொண்டு சென்றது. ஆனால் அது ஆமை போல் ஊர்ந்து செல்வது போலிருந்தது. அவள் பறக்குமுள் ளத்திற்கு எப்படியோ பட்டணம் போய்ச் சேர்ந்துவிட்டாள். கால்கள் அவள் பழைய வீட்டை நோக்கி வேகமாய்ச் சென்றன. தன் கணவன் உயிரோடு சுகதேகியாயிருக்க வேண்டுமே என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் நிரம்பியிருந்தது.

அவள் வீட்டையடையும் போது இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். வெளிக்கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டுவோமா என்று ஒரு கணம் சிந்தித்தாள். அடுத்த நிமிஷம் தன் முன்தோன்றப் போகும் கணவனை எண்ணியதும் அவள் நெஞ்சு "திக் திக்" என்றடித்துக் கொண்டது. பாதி திறந்திருந்த ஜன்னல் வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. கதவைத் தட்டாமல் ஜன்னலூடாய் உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அவள் கணவன் ஒரு சோபாவில் படுத்திருந்தாள். அவன் மார்பில் ஒரு குழந்தை உட்கார்ந்து கொண்டு " பாப்பா" என்று மழலை பொழிந்தபடியே தளிர்க் கரங்களால் அவன் கன்னங்களைக் கிள்ளிக் கொண்டிருந்தது.

அப்பாவை ஒன்றுஞ் செய்யாதேடா போக்கிரிப் பயலே" என்று செல்லமாகக் கோபித்துக் குழந்தையின் கன்னங்களில் தட்டினான். சோபாவின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பெண். அவள் தான் அன்று சடையம்மாவிடம் சென்ற இளம் கர்ப்பிணி.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த அவள் கரங்கள் தளர்ந்தன. கால்கள் தள்ளாடி அசைந்தன. தன் அன்புக் கணவனின் வாழ்வில் ஆத்ம திருப்தி கொண்டவள் போல் இருளில் அவள் சென்று மறைந்தாள்.

சுதந்திரன் - 10.12.1950

சோ. சிவபாதசுந்தரம்

சோ. சிவபாதசுந்தரம் ஈழகேசரியின் ஆசிரியராக சில வருடங்கள் கடமையாற்றி உள்ளார். பின்னர், இலங்கை வானொலியில் பணி செய்தார். ஒலிபரப்புக் கலை எனும் நூல் பலராலும் விதந்துரைக்கப்பட்ட ஒரு நூல். தோட்டத்து மீனாட்சி என்ற ஆனந்த விகடன் கதை மூலம் புனை கதைத்துறையில் பிரவேசித்த சிவபாதசுந்தரம் அழைப்பு, காண்பேன், பரதேசி நண்பர்கள், வைரவகோவில் முதலிய சிறுகதைகளை எதியுள்ளார். ஈழகேசரியில் கடமையாற்றிய காலவேளையில் பல புனைகதை ஆசிரியர்களைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்தார். மாணிக்கவாசகர், அடிச்சுவட்டில், புத்தரின் அடிச்சுவட்டில் என்ற இவரது யாத்திரையும், ஆய்வும் இணைந்த நூல்கள் இலக்கியத்திற்குக் கிடைத்த அருட் செல்வங்கள். சிட்டியுடன் இணைந்து தமிழ் நாவல்கள் என்ற ஆய்வு நூலையும் ஆக்கித் தந்துள்ளார். புத்தமார்க்கம், வசந்தமாலா ஒத்திகைக்கு முன்னும், பின்னும் முதலான நாடகங்களையும் எழுதியுள்ளார்.

- வள்ளியின் கனவு
- பரிசுக் கட்டுரை
- பொன்னர் செத்த கதை
- பாழும் மனம்
- வைரவ கோவில் விளக்கு

வள்ளியின் கனவு

சோ. சிவபாதசுந்தரம்

அம்மா! நானும் வருகிறேன்; என்று எவ்வளவோ கெஞ்சி அழுது பார்த்தும் வள்ளியின் தாயார் உடன்படவில்லை; சென்றவரும் தானே உன்னை அழைத்துக் கொண்டு போனேன். இம்முறை தம்பியைக் கூட்டிக் கொண்டு போக வேண்டும். அடுத்த வீட்டுக் கமலத்தோடு விளை யாடிக் கொண்டிரு உனக்கு நான் விளையாட்டுச் சமான்களெல்லாம் வாங்கி வந்து தருகிறேன். என்னுடைய கண்மணியல்லவா!" என்று சொல்லித் தேற்றிவிட்டு கதிர்காம யாத்திரைக்குப் புறப்பட்டாள் வள்ளியின் தாயார்.

கடந்த வருடந்தான் வள்ளி கதிர்காமம் போய் விட்டு வந்தவள். அது நேற்று கடந்த சம்பவம் போல் அவள் மனதிற்கு தெரிந்தது. கதிர் காமக் கடவுளின் தரிசனம் பெறமுடியவில்லையே என்று குழந்தை வள்ளி வருந்தினாளல்ல. தன் வயதுக் குழந்தைகள் பலர் கதிர்காமம் போகத் தான் மாத்திரம் வீட்டிலிருப்பதென்றால் எங்ஙனம் பொறுப்பாள். தன்னையெப்பொழுதும் பரிகாசம் செய்து வருத்தும் முருகனும் கதிர்காமம் போவதாகச் சொல்லி யிருக்கிறான். போய் விட்டு வந்து; நான்

அதைக் கண்டேன் இதைக் கண்டேன்; என்று சொல்லிப் பெருமை பாராட்டிக் கொள்வதைத் தான் எங்ஙனம் பொறுத்திருப்பாள்.

மறுநாள் மத்தியானம். பாட்டி கொடுத்த சோற்றையும் கறியையும் பூனைக்குங் காக் கைக்கும் பகிர்ந்து கொடுத்து விட்டு. முதல் நாளையே நினைவு மனதை வருத்த அப்படியே கண்ணயர்ந்து விட்டாள் வள்ளி. இம்முறை முன்னரிலும் பார்க்கச் சனம் ஏராளமாகக் கதிர காமத்துக்குத் திரண்டு விட்டது. மூன்றாவது வகுப்பு றயிலில் வள்ளியும் தாயாரும் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர். வழி நீளம் தென்படும் காடுகளும் சோலைகளும் வள்ளியின் றயில் வண்டிக்கு எதிர் முகமாய் ஓடுகின்றன. அவளது மகிழ்ச்சிக்கு அளவில்லை. சிறிது நேரத்தில் கொழும்புப் பட்டினம் வந்து சேர்ந்தாள். முன்னிருந்த கட்டிடங்களெல்லாம் ஓங்கி வளர்ந்து விட்டன. இராத்திரிகளிளெல்லாம் நட்சத்திரங்கள் ஆகாயத்திலிருந்து கீழே பூமி யிலும் நிறைந்திருக்கின்றன.

மிட்டாய் கடைகள் எங்கு பார்த்தாலும் அழகாக இருக்கின்றன. வள்ளியின் ஆனந்தத் துக்கு அளவேயில்லை.

நள்ளிருள் திசமஹாறாமையில் வள்ளியும் அவளுடைய தாயாரும் தங்கியிருக் கின்றனர். யாத்திரிகள் கூட்டம் கூட்டமாய்க் கதிர்காமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தனர். வள்ளி திரும்பிப் பார்த்தாள் தாயாரைக் காணவில்லை. ஆனால் அவளுக்குப் பதிலாக அங்கு வள்ளியின் விளையாட்டுத் தோழன் முருகன் நின்று கொண்டிருந்தான். அவளின் சந்தோஷத் துக்கு அளவில்லை. முருகனின் புன்முறுவல் அவளுக்கு ஒருவித உற்சாகத்தைக் கொடுத்தது. உடனே அவள் "முருகா, வா நாம் கதிர்காமத்துக்கு நடந்து போவோம்"

அம்மாவைக் காணவில்லை. ஆனால் நாம் அவளுக்காக காத்திருக்க வேண்டாம்; என்று சொல்லி அழைத்தாள். அந்தக் குறும்பன் "வழியெல்லாம் புலியும் யானையும் இருக்கே உன்னைப் பிடித்து தின்று விடும்" என்று அச்சங் காட்டினான். வள்ளிக்கு பயமுண்டாகி விட்டது. நடுங்கினாள் பிறகு அந்தப் பயல் "ஆனால் ஆண் பிள்ளைகளைக் காட்டு மிருகம் ஒரு தீங்கும் செய்யாது. நானிருக்கும் பொழுது நீ பயப்பட வேண்டாம்" என்று சொல்லிப் புரளிச் சிரிப்போடு வள்ளியை அழைத்துச் சென்றான்.

முருகனும் வள்ளியும் போகும் நெறியில் சன நடமாட்டமே கிடையாது. அழகிய பறவை யினங்கள் அங்கும் இங்கும் பறந்து கூவித்திரிந்தன. தாயுடன் சென்று கொண்டிருந்த மான் குட்டியொன்று வள்ளியும் தன்னினந்தானெனக் கருதி. அருகே வந்து மருண்டு நின்றது. மறுகணம் முருகனின் கரங்களில் அகப்படுவதற்கு பயந்து ஓடியது. பக்கத்தே படர்ந்து கிடந்த முல்லைக் கொடிகளைப் பிடுங்கி முருகன் வள்ளியை அலங்கரிப்பான். காட்டுக்கனிகளைப் பறித்து வள்ளிக்கும் கொடுத்துத் தானும் புசிப்பான். முருகனின் வீரச்செயல்கள் வள்ளியை ஆனந்திக்கும். அவனை ஒருபோதும் விட்டுப் பிரிவதில்லையென்று பிரத்திக்கனை செய்வாள். ஆனால் இடையிடையே அவன் செய்யும் குறும்புகள் தான் வள்ளிக்குப் பிடிக்கிறதில்லை.

கதிர்காமக் கோயிற் சன்னிதானத்தில் நண்பரிருவரும் நின்று கொண்டிருந்தனர். வள் ளிக்குப் பசி அதிகமாகி விட்டது. முருகனைப் பார்த்து ஏதாவது வாங்கி வரும்படி சொன்னாள். அந்தக் கள்ளன் அவளை ஓரிடத்தில் இருக்கச் சொல்லி விட்டுப் போனவன் தான் திரும்பி வர வில்லை. நெடு நேரம் பொறுத்துப் பார்த்தாள் வள்ளி. முருகன் வந்தபாடில்லை பசியோ வயிற்

றைப் பிடுங்குகின்றது. மெதுவாக எழுந்து சுற்றிலும் நோக்கினாள். ஒரு மடத்தின் வாயிலில் சுவாமி ஒருவர் குழந்தைகளுக்கு வாழைப்பழம் கொடுத்துக் கொண்டு நின்றார். அங்கே சென்று பார்த்த போது வாய்நிறைய வாழைப்பழத்தை யதிக்கிக் கொண்டு பல்லைக்காட்டி நின்றான். முருகன். வள்ளிக்குக் கடுங்கோபம் வந்தது. அவளால் ஒன்றும் பேச முடிய வில்லை. முருகன் இவ்வித சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்று நன்றாயறிவான். மடியில் கட்டியிருந்த வாழைப்பழங்களையும் அவலையும் வள்ளிக்குக் கொடுத்து; வள்ளி உனக்காகத் தானே நான் இவ்வளவு கஷ்ரப்பட்டு இதையெல்லாம் வாங்கி வைத்திருக்கிறேன். சீக்கிரம் சாப்பிட்டு விட்டு மலைக்குப் போவோம் வா! என்று சொன்னான். வள்ளியும் மகிழ்ச்சியோடு புசித்து விட்டு கதிரைமலைக்குப் புறப்பட்டாள்.

வள்ளிக்குத் தாகம் வந்தபோதெல்லாம் முருகன் தண்ணீர்ப் பந்தல்களில் தண்ணீர் வாங்கிக் கொடுப்பான். மரங்களில் கனிபறித்துக் கொடுத்து மகிழ்வான். செங்குத்தான இடங்களில் அவளைத் தூக்கி தன் தோளில் வைத்துக் கொண்டு மேலேறி தனது வீரச் செயல்களைக் காட்டிப் புகழ்வான். முருகனின் செயல்கள் யாவும் வள்ளியை மகிழ்வித்தன. அவனுடைய குறும்புத்தனங்கள் அவளுக்குப் பிடிக்காது. ஆனால் அவனை விட்டுப் பிரியவும் பயமாயிருக்கிறது. காட்டு மிருகங்களுக்குத் தப்ப முடியாது. இருந்தாற் போலிருந்து விட்டு எங்கேயாவது நழுவி விடுவானோ என்று சந்தேகித்து அவனது கையை இறுகப்பிடித்துக் கொண்டு சென்றாள்.

இருவரும் மலைச்சிகரத்தை அடைந்தனர். கதிரைமலையைச் சுற்றியுள்ள இயற்கை வனப்பு வள்ளியின் கண்களைக் கவர்ந்தது. அவள் இதில் ஈடுபட்டிருக்கும் சமயம் பார்த்து முருகன் மாயமாய் மறைந்து விட்டான். பார்த்தாள் வள்ளி. பாவம் தனித்துப் போனாள். பயம் ஒரு புறம்: கோபம் மற்றொரு புறம் இனிமேல் அந்தத் துஷ்டனை திரும்பியும் பார்ப்ப தில்லை என்று தீர்மானித்தாள். ஆனால் திரும்பிப் போகும் பாதையில் காட்டு மிருகங்கள் எதிர்ப்பட்டால் என்ன செய்வதென்ற பயம் வருத்தியது. மலைச்சிகரத்தில் பூசை முடிந்தது....

பரிசுக் கட்டுரை

சோ. சிவபாதசுந்தரம் (சோ.சி)

பதினைந்து தரம் எழுதியெழுதி அலுத்துப்போய்க் கிழித்தெறிந்து விட்டு அப்பொழுதுதான் பதினாறாவது தடவை ஒரு கட்டுரையுடன் மண்டையைப் போட்டுடைத்துக் கொண்டிருந்தேன். அந்த வேளை பார்த்து அறையின் கதவைத் திறந்துகொண்டு "கேட்டியளா!" என்ற பீடிகையுடன் நுழைந்தாள் ராஜி.

பிடித்து விழுங்கி விடலாமா என்றிருந்தது எனக்கு வந்த ஆத்திரம்! கொஞ்சம் நிம்மதியாக உட்கார்ந்து ஏதாவது எழுதலாமென்று பார்த்தால் அந்தப் பொறுத்த வேளையில் குழப்ப வந்துவிட்டாள் அவள். வந்த கோபத்தில் எனது பவுண்டன் பேனா மை முழுவதையும் அவளுடைய மூஞ்சியிலே கொட்டியிருப்பேன். ஆனால், ராஜியின் முகத்தில் தோன்றிய ஒரு மோகனப் புன்னகை அப்படிச் செய்யவிடாமல் தடுத்து விட்டது. ஒருவாறு ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, "எனக்கு காது கீது ஒன்றும் செவிடாகிவிடவில்லை. வேண்டியதைச் சொல்லித் தொலைத்துவிட்டு அப்புறம் போ" என்று எரிந்து விழுந்தேன் நான்.

அவளுடைய புன்னகை கலகலத்த சிரிப்பாக மாறியது. "பூ! அதற்கிடையில் மூக்கு நுனிக்கு வந்துவிட்டது கோபம்? அப்படியென்ன

பிரமாதமான எழுத்து? ஆமாம், உங்கள் எழுத்துக்கள்தான் சந்தையில் விலைப்படுகின்ற னவே. ஏதோ இரண்டொரு கட்டுரை யாரோ குட்டிப் பத்திரிகைக்காரர் இடம் நிரப்பவேண்டி பிரசுரித்துவிட்டால் அதற்காகக் கர்வம் ஏற்றிக்கொள்வதா?"

"உன்னை யார் இங்கே கூப்பிட்டது நியாயம் பேச உனக்குத்தான் வாய் இருக்கிறதென்ற மாதிரி அதிகப் பிரசங்கம் செய்யத் தொடங்கி விட்டாய்!" என்று கடிந்தேன் நான்.

ராஜி மீண்டும் ஒரு புன்னகை புரிந்துகொண்டே, "இந்தாருங்கோ! இதற்கெல்லாமா இத் தனை கோபம்? அடேயப்பா, இப்படியானால் ஆயிரம் தடவை பிரயத்தனப்பட்டாலும் ஒரு கட்டுரை முடிவு பெறாது, தெரியுமா?" என்று சொல்லிக்கொண்டு வந்து என் பக்கத்தில் உட் கார்ந்தாள். ஏதோ ஒரு நாடகத்துக்கு ஆயத்தப்படுத்துகிறாள் என்பது எனக்குத் தெரியும். நான் சொன்னேன், "ராஜி, உன்னை ஆயிரம் தடவை வேண்டுமானாலும் கேட்டுக்கொள்கிறேன். உனக்கு என்ன தேவை இப்போது என்று சொல்லித் தொலைத்துவிட்டுக் கொஞ்சம் என்னை நிம்மதியாக இருக்கவிடேன்."

"அப்படி வாருங்கோ! நல்ல குழந்தையைப் போலப் பேசுவதை விட்டுச் சும்மா சீறிவிழுந்தால் காரியம் ஏதும் ஆகிவிடுமா?" என்றிடித்தாள் அவள். தனது காரியங் கைகூடுவ தற்கு அவள் இம் மாதிரிப் பல தடவைகளில் சாமர்த்தியமாக நடந்து கொள்வாள். அதன்பின் ராஜி தொடர்ந்து சொன்னதுதான் என்னைத் திகைக்கச் செய்தது: "கேட்டியளா! அன்று நாம் இரண்டு பேரும் அனுப்பினோமோ இல்லையோ இரண்டு கட்டுரைகள்! அதிலே எனது கட்டு ரைதான் போட்டிக்கு ஏற்கப்பட்டிருக்கிறதாம். உங்களது....." என்று அவள் சொல்லி முடிக்கு முன்நான் குறுக்கிட்டு, "சும்மா அலட்டாதே. வெறும் பொய் சொல்லப் பழகிவிட்டாய்" என்றேன்.

ராஜியின் முகம் திடீரென்று மாறியது. அந்தச் சொற்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை. "நானா பொய் சொல்லுகிறேன்? இதோ பாருங்கள் கடிதத்தை !" என்று சொல்லி என் முன்னால் ஒரு கடிதத்தை வீசி எறிந்து விட்டு ஒரு மிடுக்கான நடை நடந்து வெளியேறினாள். போகும் போது வாசலில் சிறிது நின்று ஒரு பார்வை பார்த்தாள் போலிருந்தது. அவள் நின்ற நிலையைப் பார்த்தேனேயொழிய ராஜியின் முகத்தை நான் பார்க்கவில்லை..

ஆம், என் மனைவி சொன்னது உண்மைதான். அந்தக் கடிதத்தில் அது எழுதப்பட்டுத் தானிருந்தது. நான் எழுதிய அந்தக் கட்டுரை - எத்தனை இரவு நித்திரையின்றித் திருப்பித் திருப்பிப் பாடுபட்டெழுதிய அருமையான சிறுகதை-போட்டியிலே ஏற்கப்படத்தானும் அருகதை அற்றதாம்! குப்பைக் கூடைக்குள்தான் போடத் தகுந்ததாம். ஆனால் அவள் எழுதியது. அந்தப் பேதைப் பெண்ணொருத்தி எழுதியது - வெறுங் குப்பையுங் கூழமும் - அவர்களுக்குப் பிடித்தி ருக்கிறதாம்! என்ன விபரீதம்? கொஞ்சமும் நாகரிகம், பழக்க வழக்கங்கள் தெரியாத முட்டாள் கள் இந்தப் பத்திரிகாசிரியர்கள்! ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தில் புருஷனும் மனைவியும் எழு திய கட்டுரைகளில் இப்படித் தாரதம்மியம் இல்லாமல் நடத்துவது நன்றாயிருக்கிறதா? கட்டுரை களின் குணவிசேஷங்களை இப்படியும் எந்தக் கழுதைகளாவது மோசமாக மதிப்பார்களா? அதிலும் கட்டுரை கூடாவிட்டால் பேசாமல் திருப்பி அனுப்புவதை விட்டு இம்மாதிரி மரியாதைக் குறைவாகக் குறிப்பெழுத வேண்டுமா?

எனக்குப் பொறுக்கமுடியாத மனவேதனையாயிருந்தது. அதுவரை நான் எழுதிக் கொண்டிருந்த கடதாசிகளைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்து ஒரு மூலையில் எறிந்தேன். எறிந்த

பின்னும் எனக்கு ஆத்திரம் தீரவில்லை. எழுந்து போய் அந்தத் துண்டுக் கடதாசிகளை யெடுத்து நெருப்பு மூட்டினேன். அதுதான் எனக்குத் திருப்தியளித்தது. இனி எழுதித்தான் பிர யோசனமென்ன? இவ்வளவு பாடுபட்டு நான் அதி உன்னதமான கதை என்று எழுதியனுப் பிய கட்டுரை, அவள் எழுதிய ஒரு வெறும் சாரமற்ற - நயமற்ற - கட்டுரைக்குத் தோற்று விட் டது. அது மாத்திரமா? கட்டுரை நயமற்றதெனத் தள்ளிவைத்தால் போதாதா? அதற்கு ஒரு குறிப் பும்! "இந்தப் பஞ்ச காலத்திலே இம்மாதிரி உதவாத கட்டுரைகளை எழுதிக் கடதாசியை வீணாக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்கின்றோம்!" எப்படியிருக்கும் பாருங்கள்! இதற்கு ஒரு நாகரிகமான யுத்தகால ஹாஸ்யமொன்று தேவையோ? இந்தப் பத்திரி காசிரியர் மாரை எல்லாம் திரட்டி யுத்தமுனைக்கனுப்பிப் பீரங்கி வாயில் வைத்துவிட்டால் என்ன என்றிருந்தது எனக்கு!

பேசாமல் எழுந்து போய்க் கட்டிலின் மேற் படுத்துக்கொண்டேன். ஆனால், அதிகம் ஆத் திரப்பட்டால் அது பொறாமை என்பதை ராஜி அறிந்துகொண்டு மனங்கோணி விடுவாள் என் றும் எனக்குப் பயமாய் இருந்தது. எப்படியாவது அதைச் சமாளித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சிறிது நித்திரை கொள்ளப் பிரயத்தனப்பட்டேன்.

அறையின் கதவை யாரோ திறக்கும் சத்தங் கேட்டது. மெதுவாகக் கண்களைக் கொஞ் சம் போலத் திறந்து பார்த்தேன். ராஜிதான் அங்கு தோற்றினாள். ஆனால் அவள் முகத்தில் முன்னைய குறும்பும், அதிகார தோரணையும் காணப்படவில்லை. பயமும் இரக்கமும் காணப்பட்டன. சந்தடி செய்யாமல் அவள் வந்து படுக்கையின் மேல் உட்கார்ந்து கொண்டே, "என்ன, உடம்புக்கு ஏதாவது செய்கிறதா?" என்று கேட்டாள். அவளுடைய குரலில் மிகுந்த கனிவு சொட்டியது. கண்களில் இரக்கமும் பச்சாதாபமும் அப்படியே எழுதப்பட்டிருந்தன. முகத்தைப் பார்த்ததும் என் இருதயம் குழைந்து விட்டது. நான் இத்தனை நேரமும் மனம் புழுங்கியதற்கு, பொறாமை கொண்டு எரிந்ததற்கு, இது ஒரு தண்டனை போலிருந்தது எனக்கு. அவளுடைய இனிய சுபாவமும் இன்சொற்களும் என்னிருதயத்தை ஈட்டிபோலு றுத்தின. அவள் தாராளத்தை என்னாற் பொறுக்கமுடியவில்லை. "என் உடம்புக்கு ஒன்றும் செய்யவில்லை, ராஜி. சும்மாதான் படுத்திருக்கிறேன். கொஞ்சம் களைப்பாயிருக்கிறது,

"அவ்வளவுதான்" என்றேன். ஆனால் என் வஞ்சக நெஞ்சை அவள் அறிந்தாளானால்? "அப்பா! நான் என்னவோதான் என்று பயந்துவிட்டேன் இதுதானா? எழுந்திருங்கள், கொஞ்சம் காப்பி போட்டு வைத்திருக்கிறேன். சாப்பிட்டு விட்டுக் கடற்கரையிற் போய்ச் சிறிது உலாவினால் எல்லாம் சரியாய்ப் போய்விடுகிறது!" என்று அவள் தன் வழக்கமான கிள்ளை மொழியில் கொஞ்சினாள்.

ராஜேஸ்வரியை மணந்து ஒரு வருடந்தானாகிறது. நான் பத்திரிகைகளுக்கு எழுதுவது அவளுக்கு அளவற்ற பிரியம். முன் இரண்டொரு தடவைகளில் என் கதைகளை அவள் புகழ்ந்து பாராட்டியிருக்கிறாள். ஐம்பது ரூபா ஒரு நாள் ஒரு செக்காக வந்து கிடைத்தது எனக்கு. அதைப்பற்றி ராஜி எத்தனை பேருக்குத்தான் பெருமையோடு சொல்லித் திரிந்தாள் ! தனது கணவன் பிரபல எழுத்தாளராய் இருப்பது எந்தப் பெண்ணுக்கும் பெருமையாக விருக்குந் தானே! ராஜேஸ்வரி ஒரு இலக்கியப் பிரியை. நல்ல ரஸிகத் தன்மையும் விமர்சனத் திறமை யும் உள்ளவள். ஒரு கட்டுரையில் இன்ன இடம் கவைக்கும், இன்ன இடம் அழகா யில்லை

என்று அளவிடுவதில் கெட்டிக்காரி. ஆனால், அவள் எழுதப் பழகியிருக்கவில்லை. சந்தர்ப்பம் கிடைக்கவில்லை அதுதான் காரணம்.

ஒரு நாள் மிக ஆவலோடு அவள் என்னிடம் வந்து, "நான் கூடக் கட்டுரை எழுதப் போகிறேன்" என்றாள். எனக்குச் சிரிப்பு வந்தது. "நீ மாத்திரமா, எத்தனையெத்தனையோ பேர்தான் கட்டுரைகளும் கதைகளும் எழுதுகிறார்கள் பத்திரிகைகளுக்கு. ஆனால் பிரசுரமாக வேண்டாமா?" என்று குத்தலாய்க் கூறினேன்.

"பூ! எனக்கென்ன எழுதத் தெரியாதா? நன்றாயிராதா? பார்க்கிறேன் ஒருகை" என்று சொல்லி ராஜேஸ்வரி பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினாள். ஒரு மணி நேரம் பேனாவை வாயில் வைத்துக் கடித்ததைத் தவிர அவளால் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

நான் இதில் பிரவேசிப்பதில்லையென்று தீர்மானித்தேன். பிரவேசித்து உதவி செய்வதும் ராஜிக்குப் பிடிக்காது. உன் எண்ணம்" என்று சொல்லி விட்டுவிட்டேன்.

◆◆◆

கடற்கரையில் உலாவிவிட்டு ஒரு வாங்கிலே சிறிது நேரம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். நிலவு அப்பொழுதுதான் புறப்பட ஆயத்தமாயிருந்தது. அங்கு நடமாடிக்கொண்டிருந்தவர்களில் இரண்டொருவரைத் தவிர மற்றவர்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி விட்டனர். கடலலைகள் ஒன்றையொன்று விட்டுத் துரத்தி மே விளையாடின. அதிலிருந்தெழும் நுரையைப் பார்த்துக்கொண்டே நான் சொன்னேன், "ராஜி, நீ அதிஷ்டசாலிதான்" என்று.

ராஜியின் முகத்தில் ஒரு முல்லைக் குறுநகை தோற்றியது. "சும்மா ஏன் முகஸ்துதி கூறுகிறீர்கள்? அப்படி எனக்கேதாவது அதிஷ்டம் இருந்தால் அதில் பாதி உங்களுக்குந்தானே" என்றாள் அவள்.

"அதெப்படிச் சொல்வாய்? உன்னுடைய உருவகத்தினால் நீ வெற்றி பெறுகிறாய். நானோ அவ்வளவு அறிவாளியல்ல. எனது கட்டுரைதான் குப்பைக் கூடைக்குள் போய்ச் சேர்ந்துவிட்டதல்லவா? உனது கட்டுரை போட்டியில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இனி அது பரிசு பெறுவது நிச்சயம். இந்தப் பெருமை உனக்கா எனக்கா?"

"நிச்சயமாய் எனக்குத்தான்!" என்றாள் ராஜி. இப்பொழுது எங்கிருந்தோ அகங்காரமும் பெருமையும் அவளுக்கு வந்து சேர்ந்தன. கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தாள். எனக்கு இந்த நிலை ஆச்சரியமாகத் தானிருந்தது. பின்னும் அவள், "அதெல்லாம் பாருங்கோ , அதிஷ்டம் கிதிஷ்டம் ஒன்றுமில்லை. நானனுப்பிய கதை உண்மையில் விசேஷமானதுதான். அதில் வரும் கதாபாத்திரங்கள் உயிருள்ளவை. வெறுமனே கதைக்காகச் சோடிக்கப்பட்ட பொம்மைகளல்ல. ஜீவன் நிறைந்த கதை அது. நீங்கள்தான் பார்த்தீர்களே, அதில் கிருஷ்ணமூர்த்தி என்ற கதாபாத்திரத்தின் வாயினால் எவ்வளவு உலகானுபவங்களை, நீதி மொழிகளை எடுத்துப் புகட்டப்பட்டிருக்கின்றது என்று?"

"அது பழையகால சம்பிரதாயம். இந்த நாட்களிலே இப்படி நீதி வாக்கியங்களும் முது மொழிகளும் சனங்களுக்குப் பிடிக்காது. நேரே விஷயத்தைச் சொல்லிவிட வேண்டியதல் லாமல் பிரசங்கம் செய்து நாண்டிருந்தால் அலுப்புத் தோற்றிவிடும்."

"அதெல்லாமில்லை. சொல்லும் பாவனையில் தங்கியிருக்கிறது அது. குழந்தைகளுக் குச் சர்க்கரையில் வைத்து மருந்தையும் சேர்த்துக் கொடுத்து விடுகிறார்களல்லவா? அது மாதிரி லேசாக ஒவ்வொன்றையும் புகுத்தி விட்டால் போகிறது"

"துப்பறியும் அந்தப் பெண் இவ்வளவு பயங்கரமான - நம்பத்தகாத - காரியங்களைச் செய்வது இயற்கைக்கு மாறாகவில்லையா? கதையென்றால் கற்பனையைக் கடந்து விடுவதா?"

"யாரோ சில நவயுக எழுத்தாளர் என்று சொல்லிக்கொள்ளும் போலி விமர்சனக்காரர் கதைகளை நம்பிக்கொண்டு என்னுடன் வாதாட வந்துவீட்டீர்களாக்கும்! எது இயற்கை, எது தான் இயற்கையில்லை என்று உங்களால் வரையறுத்துச் சொல்லமுடியுமா? தெருவிலே போனவனை மோட்டார் அடித்து விழுத்தினால் அது இயற்கை, ஆனால், மோட்டார் ஒருவன் மேல் தாக்கிவிட அந்த மோட்டாருக்கே காயமென்றால் இயற்கையல்ல என்று சொல்வீர்களாக் கும்? ஏன், அம்மாதிரி ஒரு சம்பவம் சிலநாட்களுக்கு முன் கொழும்பில் காலி றோட்டிலே நடை பெற்றதை நீங்கள் பத்திரிகையில் படிக்கவில்லையா?"

"சரி, சரி, உன் கட்டுரைதான் திறமானது" என்று சொல்லி நான் கதையை அதிகம் வளர்க்க விரும்பவில்லை...

ராஜி விடுவதாயில்லை. "நீங்கள் எழுதிய "கண்ணீர்கடல் தான் திறம் என்று சொல்லவும் எண்ணமோ?" என்று கிண்டத் தொடங்கினாள் அவள். "உங்கள் கதாநாயகிதான் என்ன தீரச் செயல்களைச் செய்து விட்டாள்? சதா அழுதமூஞ்சி. அடுக்கடுக்காகத் துன்பங்கள், கடைசியாக ஆற்றிலே விழுத்திவிட்டீர்கள் ! கொஞ்சமும் தாக்ஷண்யமற்ற மனிதர் நீங்கள்! இது ஒரு சம்பிர தாயமாம் இந்தக் காலத்தில். சில வங்காளக்காரரைப் பின்பற்றி யாராவது ஒரு இளம்பெண் ணைக் கொண்டு போய் ஆற்றிலோ குளத்திலோ தள்ளிக் கொன்றுவிடுவதுதான் சிறுகதைக ளுக்கு லக்ஷியம் என்று கைக்கொண்டிருக்கிறார்கள்! துக்க சமாச்சாரம் நிறைந்ததுதான் உணர்ச்சிகளைத் தட்டிவிட்டு அனுதாபத்தை வருவிக்கும் என்ற நோக்கமாம்! ஆகத்தான் என்ன பெண்கள் பிசாசுகளா இப்படிக் கோரப்படுத்துவதற்கு?"

"சரி, சரி, உன்னோடு பேசுவதற்கு என்னால் முடியாது. "வழவழ" என்று வாயுளையா மல் பேசிக்கொண்டிருப்பாய். வா வீட்டுக்குப் போகலாம், நேரமாகிவிட்டது" என்று சொல்லிக் கொண்டு எழுந்தேன் நான்.

"முடியாது, நீங்கள் மரியாதையாகத் தோல்வியை ஒப்புக் கொள்ளுங்கள். என்னுடைய கட்டுரைதான் விசேஷமென்று சொல்லுகிறீர்களா இல்லையா?" என்று ராஜி பிடிவாதமாக நின்று கொண்டாள். வேறு வழியில்லை. நான் தோல்வியை ஒப்புக்கொண்டுதானே ஆக வேண்டும்? ஆத்திரம் உள்ளே கிடந்து அறுத்துக் கொண்டிருந்தது. அந்தப் பெருமைக் காரியோ விடுவதாயில்லை. வாக்குவாதத்திலிருந்து தப்புவதற்காக, "ஆமாம், உனது கட்டுரைதான் விசேஷம்" என்று சொல்லிவிட்டு நடந்தேன். ராஜி தனக்கு வந்த சிரிப்பை யடக்கிக் கொண்டு பக்கத்தில் நடந்தாள்.

◆◆◆

வருஷப்பிறப்பு நெருங்கிவிட்டது. அன்றொருநாள் கடைத்தெருவிலே பார்த்துவந்த ஜரிகை போட்ட பட்டுப்புடவையை வாங்கித்தர வேண்டும் என்று ராஜி இட்ட கட்டளையை எப்படி நிறைவேற்றுவதென்று ஆலோசித்துக்கொண்டே காலையில் எழுந்து எனது நண்பன் ஒருவனைக் காணச் சென்றுவிட்டேன். எனக்கு மனம் நிம்மதியாயில்லை. மாதத் தொடக் கத்தில் சம்பளமெடுத்து அது முழுவதும் கடன்காரருக்குப் போய் விட்டது. இப்பொழுது வருஷப் பிறப்புச் செலவுக்கு யாரிடம் போவது? ராஜிக்கு ஒரு புடவையாவது எடுத்துக் கொடாவிட்டால் அவள் இருக்க விடமாட்டாள். என்ன செய்யலாம் என யோசித்துக்கொண்டே நடந்தேன்.

மணி பத்தாகிவிட்டது வீடு திரும்பும் போது. வாசலில் என்னை எதிர்பார்த்தபடி நின்றாள் ராஜி. அவள் முகத்தில் ஒரு ஆவல் துடித்துக் கொண்டிருந்தபோதும் அவள் அதைப் பாடுபட்டுச் சமாளிக்கப் பார்த்தாள். அவளையறியாமல் சிரிப்பு வந்தது. கண்கள் துடித்தன. கைகளிரண் டும் பின்னாலே ஏதோ ஒரு பொருளை மறைத்து வைத்திருந்தன. நான் வாசலினுள்ளே காலெடுத்து வைத்ததும், "இவ்வளவு நேரமாக எங்கே போயிருந்தீர்கள்" என்றாள் அவள்.

“அதெல்லாம் உனக்குச் சொல்லிக் கொண்டிருக்கத்தான் வேண்டுமோ?" என்று கேட்டுக் கொண்டே நான் போய் ஒரு நாற்காலியில் அமர்ந்தேன். ராஜியும் கூடவந்து அந்த நாற்காலி யின் சட்டமொன்றில் உட்கார்ந்து கொண்டே “இதைப் படியுங்கள்!" என்று சொல்லி ஒரு பத்திரி கையை என் மடியில் விரித்து வைத்தாள்.

அந்தப் பக்கத்தை நான் பார்த்ததும் அப்படியே ஸ்தம்பித்துப் போனேன்! "சிறுகதைப் போட்டி முதலாவது பரிசு ரூபா நூறும் “கண்ணீர்க் கடல்“ என்ற கட்டுரை எழுதிய ஸ்ரீமதி ராஜேஸ்வரிக்கு அளிக்கப்பட்டுள்ளது."

“அடி திருடீ! என்ன காரியம்......" என்று நான் ஏதோ பேசுவதற்கு ஆரம்பிக்க விடாமல் ராஜி என் வாயை இறுகப் பொத்திக்கொண்டாள்! பிறகு என் தோளிற் சாய்ந்து காதோடு காதாக, "அதற்கென்ன, உங்கள் பெருமையை நான் - உங்கள் மனைவி - திருடிக்கொள்ளலாகாதா? அப்பொழுது நீங்கள் என்னிடம் தபாலில் சேர்க்கும்படி தந்தபோது நான் பெயர்களை மாற்றி எழுதிவிட்டேன்! அதற்கு நஷ்டஈடு வேண்டுமானால் இந்தாருங்கள்!" என்று சொல்லி என் கையில் நூறு ரூபா செக் ஒன்றைக் கொடுத்தாள் ராஜி!

“இதற்காகத்தானா இத்தனை நாட்களும் உன் கட்டுரையைப் பற்றி ஏதோ பிரமாதமாகப் பேசிக்கொண்டு திரிந்தாய்?" என்று நான் கேட்டேன்,

“நானா சொன்னேன்? நீங்கள்தான் அன்றொரு நாள் என்னுடைய கட்டுரையே விசேஷ மானதென்று உங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லையா? இப்போது நான் சொன்ன புடவையை மாத்திரம் மறந்து போக வேண்டாம்" என்று சொல்லி அந்தக் குறும்புக்காரி கலகலவென்று சிரித்துக்கொண்டே சமையலறைக்குள் ஓடிவிட்டாள். கடைசியாக, எனது கட்டு ரைபெற்ற பெயரும் பரிசும் அவளுக்குத்தான்! நான் தோல்விதானே?

ஈழகேசரி ஆண்டுமலர் - 1940"

பொன்னர் செத்த கதை

சோ. சிவபாதசுந்தரம்

கா. சு. பொ. என்றால் கொழும்பிலே பெரிய புள்ளி. நாலைந்து. கடைக்கு முதலாளி. அஞ்சுலாம் படியிலே சாய்ப்புச் சாமான் சுருட்டுக் கடை இரண்டாம் குறுக்குத் தெருவில் எரு புடைவைக்கடை செட்டித் தெருவிலே ஒரு கிட்டங்கி இதற்கு "ஸ்டோர்" என்று மாத்திரம் பெயர்; ஐந்தாம் குறுக்குத் தெருவிலே கருவாட்டுக்கடை கும்பனித்தெருவிலே ஒரு கடை - தனிப்பட்ட ஒரு இனமில்லாத கதம்ப வியாபாரம். இனி எல் லாக் கடைக்கும் சீனி பேர்மிட் வேறுண்டு: எல்லாமாக நூறு மூடைக்கு சீனிக்கு வழி பண்ணி வைத்துக்கொண்டார். இது குறைந்த கணக்குப் பதினாயிரம் ரூபா கொண்டுவரும் எப்படியென்ற ரகசியம் சீனி வியா பாரிகளுக்குத் தான் தெரியும். இதைவிட. புடைவை பேர்மிட், கூப்பன் வகையறாக்கள். பலவிதமான சுளியோட்டங்களுமுண்டு.

பொதுவாகச் சொல்லப் போனால் காவன்னா, சூனா "போனா கொழும்பிலே வியாபாரம் செய்யும் யாழ்ப்பாணத்தவர்களில் ஒரு பெரிய புள்ளிதான். எச்செலவுந் தள்ளி மாதம் ஐம்பதினாயிரம் மிஞ்சும். அது வும் கடைகளைப் பார்க்கும் கணக்குப்பிள்ளை ஐந்தொகைப்படி நம்ம முதலாளி புத்தகங்களைப் புரட்டிப்பார்ப்பதில்லை என்று கேள்வி.

காவன்னா சூனா போனா விலாச முதலாளி ஸ்ரீமான் காசிப்பிள்ளை சுப்பிரமணியம் பொன்னம்பலப்பிள்ளையின் இந்த ஐஸ்வரியங்களெல்லாம் போன மூன்று வருஷத்துச் சமாச் சாரம்தான். ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு வெறும் "சுப்பற்றைபொன்னர்" யாழ்ப்பாணம் பறங்கித்தெருவிலே "திறம் சாப்பாட்டுக்கடை" போர்ட் ஒன்று தொங்கவிட்டுக் கொண்டு ஈயோட்டி வந்தவர். அவர் சமுசாரம் செல்லாச்சி தற்போது ஸ்ரீமதி செல்வநாயகியம்மாள் - குடித்தன சிக்கனத்தில் மகா கெட்டிக்காரி. ஏதோ கிடைத்ததைக் கொண்டு இரண்டு பேருடைய வாயையும் வயிற்றையும் கழுவிச் சமாளித்து வந்தாள். குழந்தை குட்டி ஒன்றுமில்லை. பன்னிரண்டு வருஷகாலமாகத்தான் செல்லாச்சி சோமவார விரதம் தவறாமல் பிடித்து வருகிறாள். ஆனால் பலனில்லை. கோட்டை முனியப்பர் கூட உதவி செய்ய மறுத்துவிட்டார்.

திறம் சாப்பாட்டுக்கடை சுப்பற்றை பொன்னருக்கு வாய்க்கவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு கொஞ்சநாள் இருந்து பார்த்தார். முடியவில்லை. இந்த நிலையில் தான். ஒருநாள், அவர், மூன்று வருஷங்களுக்கு முன்பு, செல்லாச்சியைத் தமையன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, மூட்டையும் முடிச்சுமாக கொழும்புக்கு வந்தார். செக்கடித்தெரு நெடுகே முருகேசம்மான் சோத்துக்கடை இப்போ முப்பது வருஷகாலமாகப் பெயர்போன கடை சுப்பற்றை பொன்னர் நாணயமான மனுஷனாகக் காணப்பட்டதிலிருந்து முருகேசம்மானுக்குப் பிடித்துவிட்டது. கடையிலே வைத்துக்கொண்டார்.

1942ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ம் திகதி ஜப்பான்காரன் ஆகாயத்தில் வந்து முழங்கின அன்றைக்கு கொழும்புப் பட்டணம் பட்டபாடுதான் எல்லாருக்கும் தெரியுமே. முப்பது வருஷ காலமாக அம்மிக்கல்லுப்போல உட்கார்ந்து சம்பாதித்து வந்த நெடுவல் முருகேசம்மான் கூட அசைந்து விட்டார். கதிகலங்கிப்போய், அகப்பட்டதைக் கையிலெடுத்துக் கொண்டு இரண்டாம் பேருக்கும் சொல்லாமல் ரயிலேறி விட்டார். சுப்பற்றை பொன்னர் மாத்திரம் கலங்கவில்லை. முருகேசம்மான் சோத்துக்கடை பொன்னரம்மானுக்காயிற்று. மூன்று மாசத்திலே கிளம்பி விட்டார் மேலே.

அப்புறம் என்ன, ஆனைவிலை குதிரைவிலை காலத்திலே "சுப்பற்றை பொன்னர் பொன்னம்பலம்பிள்ளையாகி, காவன்னா சூனா போனா விலாசம் தரித்து நாலைந்து கடைக்கு முதலாளியானது பெரிய கதை. அதையெல்லாம் சொல்லாமல் அவர் செத்த கதையை மாத்திரம் கேட்போம்.

ஊரிலே பேயடிச்சான் ஒழுங்கையிலிருக்கிறது காவன்னா சூனா போனா வின் பங்களா கட்டிக் குடிபுகுந்தது போன தையிலேதான். ஸ்ரீமதி செல்வநாயகியம்மாள் ஏக சக்கிராதி பத்தியப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றாள். சித்திரை வருஷப்பிறப்பிற்காக ஒரு வாரத்திற்கு முன்புதான் "போனா" ஊருக்குப் பயணம் கட்டினார். சகதர்மினிக்கு வேண்டிய பட்டுப் புடைவைகள் வீட்டுச் செலவுக்கு வேண்டிய மிளகாய், உள்ளிப்பூடு, சீனி முதலிய விலை பெற்ற சாமான்கள், வருஷப்பிறப்புக் கொண்டாட்டத்திற்கு வேண்டிய மற்றும் சாமான்கள். அக்கம் பக் கத்திலேயுள்ள சிலருக்குப் புடவை-துணி பெரிய முதலாளி - ஊருக்கு விஜயம் செய்வ தென்றால் சும்மாவா? அன்று வீடு ஒரே அமர்க்களப்பட்டது.

அன்று மத்தியானம் ஸ்ரீமதி செல்வநாயகியம்மாள் பிரத்தியேக அன்போடு கொடுத்த கோழிக்கறியும் சோறும் பறங்கித்தெரு திறம் சாப்பாட்டுக்கடை அனுபவம் இதற்குள் மறந்து

போகுமா? சாப்பிட்டுவிட்டு நல்ல கட்டை கொரனேஷன் சுருட்டொன்றை வாயில் வைத்துக் கொண்டு ஈசிசேரில் சாய்ந்து விட்டார். சற்றுநேரம்தான் கண்ணயர்ந்தார். பாவம் அதற்குள் அப்படி யெல்லாமா நடக்க வேண்டும்? யாரோ இரண்டு தடியன்கள் வந்து உச்சந்தலையில் ஒரு போடு போட்டார்கள். அவ்வளவுதான் ! பொன்னரின் உயிர் பிரிந்துவிட்டது!

போன உயிர் அந்த இடத்தைவிட்டு அசையமாட்டேன் என்று விட்டது. தடியன்கள் இருவரும் பல்லை இழித்துக்கொண்டு நூறு மூட்டை சீனிபேர்மிட். கத்தை கத்தையாக வைத் திருந்த புடவைக்கூப்பன், இரும்புப் பெட்டிச்சாவி இவற்றைச் சுருட்டிக் கொண்டனர். இதைப் பார்த்துவிட்டு பொன்னரின் உயிர் போய்விடுமா? எவ்வளவோ வாதாடிப்பார்த்தார் கெஞ்சினார் முரட்டாத்மாக் கள் கம்பி நீட்டிவிட்டனர் பொன்னர் பாடு திண்டாட்டமாகிவிட்டது.

"செத்த வீட்டுக்கு" ஊர்முழுவதுமே திரண்டு வந்து விட்டது. "சுப்பற்றை பொன்னர் " யாரோ என்று தள்ளிவைத்திருந்தவர்கள் எல்லாரும் இப்போ சொந்தம் கொண்டாடி வந்து பங்கு பிரிக்க அவதிப்பட்டனர் ஸ்ரீமதி செல்வநாயகியம்மாள் என்ற செல்லாச்சி தலைதலை யென்று போட்டுக் கொண்டாள். இந்தக்காட்சியின் நடுவே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற பொன்னரின் ஆவி" யை யமதர்மராஜன் வந்து பற்றிக்கொண்டான். திரும்பிப் பார்த்தார் பொன் னர்: எங்கேயோ அந்த ஆசாமியை பார்த்த ஞாபகமாய் இருக்கிறது. யோசித்து யோசித்துப் பார்த்தார். ஆனால் மட்டுக்கட்ட முடியவில்லை. யமதர்ம ராஜன் விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டு திக்குத்திசை தெரியாத இடமெல்லாம் சுற்றிவிட்டு ஒரு பெரிய பட்டணத்திற்குக் கொண்டு சென்றான். தெருவாசலில் ஒரு குதிரை வண்டி நிறுத்தப்பட்டு இருந்தது. அதற்குள் ஒரு சவப்பெட்டி. கன்னங்கரேலென்று இருந்தது. அந்தப் பெட்டியைப் பார்த்ததும் திகைத்துப் போய் பொன்னர் தன் கூடவந்த யமதர்ம ராஜனை நிமிர்ந்து. பார்த்தார். சட்டென்று ஞாபகம் வந்ததும் ஆச்சரியத்துடன் "அடே டேய், நம்ம முருகேசம்மானா!" என்று கதறிவிட்டார். நெடு வல் முருகேசம்மான் சற்றும் ஈவிரக்கமின்றி பொன்னரின் குரல்வளையை நெருடினார். பொன்னர் விழி பிதுங்க விலவிலத்துப் போனார். தடியன்கள் அடித்துக் கொன்ற போது அவ்வ ளவு கஷ்டப்படவில்லை அவர். ஆனால் முருகேசர் கைப்பிடியில் உடல் நொருங்கியது. "அம் மான்! விட்டுவிடு, நான் கொடுத்து விடுகிறேன். உனக்குப் புண்ணியம் உண்டு என்று விம் மினார்.

"உண்மையைச்சொல். எவ்வளவு எடுத்தாய்?" என்று கேட்டார். முருகேசர்.

"நான் எண்ணிப்பார்த்தது ஆகப் பதினான்காயிரம். அதற்குமேல் எவ்வளவிருந்த தென்று தெரியாது".

"அம்மான். எல்லாம் உனக்காகவே வைத்திருக்கின்றேன். உன்னாணை சொல்கி றேன். எல்லாம் உன் சொத்துதான். வா. இன்றைக்கே வேண்டுமானால் எல்லாம் எழுதித் தருகிறேன். எனக்கேன் அம்மான் இந்தச் சொத்து? எனக்கு யார் பிள்ளையா? குட்டியா. வா. திரும்பி கொழும்புக்குப் போவோம்" என்றார் பொன்னர் சமயோசிதமாக

யமதர்மராஜன் நெடுவல் முருகேசம்மான் வாயைப் பிளந்தார். "என்ன? எனக்கா! எல்லாமா?".

"இந்தமாதிரிக் கழுத்தை முறித்துக்கொண்டு தானா தூங்கவேண்டும்? போய்க் கட்டி லில் படுக்கிறதுக்கென்னவாக்கும்.?" என்று சொல்லிக்கொண்டே ஸ்ரீமதி செல்வநாயகி

யம்மாள் வந்து தன் கணவனைத்தட்டியெழுப்பினாள். திடுக்கிட்டெழுந்த பொன்னர், உடம்பெல்லாம் வியர்வை பாய்ந்தொழுக, "செல்லி, நான் சாகவில்லையா?" என்று திகைப்புடன் கேட்டார்.

"சீ சீ, இதென்ன, வருஷமும் பெருநாளுமாக இந்தப் பிரமசத்தி பிடித்த வார்த்தைகள். உங்களுக்கென்ன பைத்தியமா?" என்றாள் செல்லாச்சி. பொன்னர் சமாளித்துக்கொண்டு, அடுத்த கேள்வி. ஒன்று போட்டார். "நெடுவல் முருகேசம்மான் இப்போ எங்கேயிருக்கிறார், தெரியுமா?"

அவர்தான் போய் ஆட்டைதிவசமும் முடிந்துவிட்டதே!" என்றாள் ஸ்ரீமதி செல்வநாயகியம்மாள்.

"நல்லவேளை" என்று தனக்குள் சொல்லித் திருப்திப்பட்டார் பொன்னர்.

ஈழகேசரி
13.04.1945.

பாழும் மனம்

சோ. சிவபாதசுந்தரம்

"இன்று டில்லி புறப்பாடு இரண்டு நாட்கள் தங்கள் வீட்டில் தான் தங்க வேண்டும்" என்று மாதவன் அனுப்பிய தந்தியை வாசித்ததும் நடேசனின் மனம்வாடிச் சுருங்கி விட்டது. அவன் உள்ளத்திலும் இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பாஷணை உதித்தது. மனப் புற்றில் எங்கேயோ ஒரு இருண்ட வலையில் சுருண்டு மறைந் திருந்த கருநாகம்போன்ற அந்த எண்ணம் படமெடுத்து ஆடத் தொடங்கியது. "அது என்ன தந்தி?" என்ற வனிதாவின் குரலைக் கேட்டு மறுபடியும் தன் முகத்தில் சந்தோஷத்தின் குறியை வலிந்து அழைத்துக் கொண்டான் நடேசன்.

நடேசனுக்கும் லளிதாவுக்கும் திருச்சிராப்பள்ளிதான் பிறந்த ஊர். அவர்கள் உறவு ஏற்பட்ட ஊரும் அதுதான். நடேசனின் பெற்றாரும் அவன் மாமாவும் ஒவ்வொரு காரணத்தினால் அவன் வனிதாவைக் காதலிப்பதை விரும்பவில்லை. அவர்கள் காதலைத் தடுப்பதற்காக நடே சனின் பெற்றார் அவனைப் படாதபாடுபடுத்தி வந்தார்கள். எத்த

னையோ சூழ்ச்சி செய்தார்கள்: ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் அவன் மாமாவின் அபார மூளையில் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது.

எல்லாக் காதலரைப்போல நடேசனும் ஜாதி, மதம், பணம், பதவி எல்லாவற்றையுங் கடந்தது காதல் என்று வருணித்தான். உண்மைதான். உண்மையான காதல் எல்லாவற்றையுங் கடந்ததுதான். இதனை அறிந்து கொண்டும் சில காதலர்கள் ஜாதி, மதம், பணம், பதவி என்பவற்றிற்கு அடிமைப்பட்டுப் போகிறார்கள்; அல்லது அடிமைகளாக்கப்படுகிறார்கள். இது யாருடைய குற்றம்? அந்தக் காதலர்களுடைய குற்றமென்றால், நடேசன் இந்தக் குற்றத்துக்கு ஆளாகவில்லை என்பது அவன் மட்டுமல்ல அவளும் பெருமைப்பட வேண்டிய விஷயமே.

அவள் என்றேன்; அந்த லளிதா கட்டழகி. முகத்தழகில் மட்டுமல்ல, அகத்தழகிலுங் கூடக் கட்டழகிதான். பிறந்த நாள் முதல் ஒரு ஊரில் வாழ்ந்தவர்கள். இளமையில் ஒருவரையொருவர் அறிந்தவர்கள். ஒருவரையொருவர் காதலித்தார்கள். இளமையில் லளிதாவை நடேசன் எத்தனையோ முறை கண்டிருக்கிறான். அப்பொழுதெல்லாம் அவள் சாதாரண ஒரு பெண்ணாகவே அவனுக்குக் காட்சியளித்திருக்கிறாள். இப்பொழுதோ, மாலையில் அடிவானத்தில் நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுபடும் மனத்தை மயக்கும் வர்ணஜாலம்போல் அவள் அவனுக்குக் காட்சியளித்தாள்.

இவர்களுடைய காதலும், கவர்ச்சியும் பெருகப் பெருக நடேசனின் அம்மா, அப்பா, மாமா என்பவர்களுடைய சூழ்ச்சிகளும் வசைகளும் அதிகமாகிக் கொண்டே வந்தன. இவைகள் அவன் பிடிவாதத்திற்கு உரமிட்டு வளர்த்தன. தன் மூளையில் தோன்றிய அபார யோசனையின்படி செய்வதற்காக மாமா, நடேசனை ஒரு தனியிடத்திற்கு அழைத்துச் சென்றார். மாமா இதமாகப் பேசுவதில் நிபுணர். முதல் ஒரு அத்தியாயம் உண்மையான அன்பைப் புகழ்ந்தார். இது நடேசனுடைய மனத்தை மகிழ்விப்பதற்குப் பதிலாக ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது. மாமாவா இப்படிப் பேசுகிறவர் என்று அவன் அதிசயித்தான். மாமா தன் அஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்கினார். லளிதாவின் அன்பு உண்மையானதா? என்று ஒரு வஞ்சகச் சிரிப்புடன் கேட்டார். நடேசனுக்குச் "சுருக்" என்றது. மாமாவுக்குப் பயித்தியம் இல்லை என்பதை அவன் நன்றாக உணர்ந்து கொண்டான். மாமா மறுபடியும் பேச ஆரம்பித்தார். "நடேசா! மாதவனை உனக்குத் தெரியுமல்லவா? அவனை இந்த லளிதா ஒரு காலத்தில் காதலித்தாள். அவன் இவளை உதாசீனம் செய்தான். இந்தப் பெண் லளிதா வெட்கமின்றி அவன் காதலுக்காக இரந்து எழுதிய கடிதங்கள் இப்பொழுதும் மாதவனிடம் இருப்பதாக அறிகிறேன். மாதவனுக்காகக் கட்டிய வலையில் இன்று நீ அகப்பட்டுக் கொண்டாய். இதனால்தான் நாங்கள் தலையிலடித்துக் கொண்டோம்; இனி உன்பாடு, அப்பனே!" என்று இவ்வளவையும் மூச்சு விடாமல் சொல்லிவிட்டு நடேசனின் பதிலை எதிர்பார்க்காமலே மாமா போய்விட்டார்.

நடேசன் கல்லாய்ச் சமைந்து போனான். அவனால் இந்த விஷயத்தை நம்ப முடியவில்லை. ஆனால் இந்த எண்ணம் - மாமாவின் கற்பனை - அவன் மனம் முழுவதையும் ஆகர்ஷித்துக் கொண்டது. சந்திரன் ரணமாகத் தானிருக்கிறது. ஆனால் அதன் ஒளியைப் பூமியின் நிழல் மறைத்துக் கொண்டு விடுகிறது. நடேசனின் மனத்திற் பிடித்த கிரகணம் முகத்திற் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

இந்த விஷயத்தைப் பூரணமாக நம்பினால் அல்லது நம்பாவிட்டால் ஒரு முடிவுக்கு வருவது சுலபம். நடேசன் என்ன செய்தான். லலிதாவைப்பற்றி இவ்வளவு கேவலமாக, நினைப்பது கூடப் பெருந்தவறு என்று எண்ணினான். அதே எண்ணத்தோடு கூட மாமா சொன்ன அந்த அவதூறு அவன் மனக்குகையில் ஒரு கருவண்டு போல ரீங்காரம் செய்து கொண்டிருந்தது. லளிதா துரோகியா என்று நினைத்த மறு கணமே "லளிதா" - "துரோகி" இந்த இரண்டு சொற்களுக்கும் எவ்வளவு தூரம்! என்று எண்ணினான். வெட்கமில்லாமல் மாதவனிடம் போய் உண்மையை அறிய நடேசன் விரும்பவில்லை. அது லளிதாவைச் சந்தேகிப்பதாகவே முடியும். அப்படியானால் அந்த எண்ணம் ஏன் உண்டானது? அது பொய்யானால் ஏன் மனக்கவலை? கிரகணம் சந்திரனையறியாமல் கௌவிக்கொள்கிறது. மெல்ல மெல்லத்தான் நீங்குகிறது. சந்திரன் விரும்பியபொழுது கிரகணத்தை நீக்கிவிட முடியுமா? மாமாவின் அஸ்திரம் ஊடுருவிப் பாயவில்லை; ஆனால் புழுப்போல் அரித்துக் கொண்டிருந்து.

விதவையின் கண்ணீரையும் குழந்தையின் அம்மா என்ற அலறலையும் மாற்றும் காலதேவனுக்கு நடேசனின் துயரத்தைத் தீர்ப்பது மிகவும் சுலபமாகவேயிருந்தது. நாளாக ஆக லலிதாவின் அன்புப் பார்வையும் இன்ப மொழிகளும் அவன் சந்தேகத்தைப் போக்கி "மாமாவின் அக்கிரமமான பொய்யை நம்பி இந்த உத்தமியைச் சந்தேகிக்கப் பார்த்தேனே" என்று பச்சாத்தாபப்படும்படி செய்து விட்டன. ஆத்திரப்பட்டு மாமா சொன்ன விஷயத்தை லளிதாவிடம் விசாரியாமால் இருந்ததற்காகத் தன்னைத்தானே மெச்சிக்கொண்டான் நடேசன்.

பலவித சத்தஞ் சந்தடிகளுக்கிடையில் லலிதாவுக்கும் நடேசனுக்கும் திருமணம் நடந்தேறியது. சீக்கிரத்தில் நடேசன் உத்தியோக மாற்றங் காரணமாகத் தன் சகதர்மிணியுடன் டில்லி வந்து சேர்ந்தான். டில்லியில் இறங்கியதும் இருவரும் அப்பாடா என்று பெருமூச்சு விட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். இணை பிரியாத இத் தம்பதிகளின் இன்ப வாழ்க்கையைக் கண்டு சிலர் பொறாமைப்பட்டார்கள். சிலர் சந்தோசப்பட்டார்கள். இரண்டு வருட இன்ப வாழ்வுக்குப் பின் ஒருநாள் மேலே சொன்ன வண்ணம் மாதவனின் தந்தி கிடைத்தது. மாதவன் இப்பொழுது ஒரு இன்ஜூர் ஏஜண்டாக இருந்தான். ஏதோ அலுவலாக டில்லியிலுள்ள தலைமை ஆபீசுக்குப் போக வேண்டியிருந்தது. டில்லியில் தன்னையறிந்தவர்கள் யாரிருக்கிறார்கள் என்று யோசித்த பொழுதுமாதவனுக்கு நடேசனின் ஞாபகம் வந்தது. நல்ல சிநேகம் இல்லாவிட்டாலும் பழக்கமானவன். எப்படியோ நமது ஊரவனல்லவா, இரண்டு நாட்கள் தானே நிற்கப் போகிறோம் என்று எண்ணியே நடேசனுக்குத் தந்தியனுப்பினான். தந்தியில் மாதவனின் பெயரைக் கண்டதும் நடேசனின் மனம் ஒரு கணத்தில் மூன்று வருடங்களைத் தாவிச் சென்று அவனுடன் மாமா செய்த சம்பாஷணையைப் பற்றிக் கொண்டது. அது பொய்யென்றுதான் அவன் நம்பியிருந்தான். ஆனால் மாதவன் வரப் போகிறான் என்றதும் அவன் மனதில் பீதி குடிகொண்டதேன்? சம்பவம் பொய்யானதானால் அது மாதவனுக்கோ லளிதாவுக்கோ எப்படித் தெரிந்திருக்க முடியும். ஆகையால் இதில் கூச்சப்படுவதற்கும் இடமில்லை. ஆனால் தான் மறந்து விட்டதாக நினைத்திருந்தான் பொய்யென்று நம்பிய அந்தச் சம்பவம் பழைய வலிமையோடு... ஏன் இன்னும் கூட என்றுஞ் சொல்லலாம் - தன் மனத்தில் பேயாட்டம் ஆடுவதை அறிந்து நடேசன் அசந்து போனான்.

மனிதனின் மனம் அலையில்லாத ஸ்படிகத்தை ஒத்த கிணற்று நீர் போன்றது. நாம் காண முடியாதவாறு கிணற்று நீர் சுரந்து கொண்டிருப்பது போல மனத்திலும் எத்தனையோ

எண்ணங்கள் சுரந்து கொண்டிருக்கின்றன. நீர் ஊறிக் கொண்டிருக்கிற பொழுது கூட அந்தத் தெளிந்த நிலத்துள் என்ன இருக்கிறது என்பதை நாம் நன்றாகக் காணலாம். ஆனால் வெளியிருந்து ஒரு சிறு கல் உள்ளே விழுந்து விட்டால் போதும், ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக எத்தனையோ அலைகள் - பெரிய அலைகள் சிறிய அலைகள் எழும்புகின்றன. அந்த அலைகளோ மூலை முடுக்குகளெங்கும் மோதி எதிரலைகளையும் எழுப்பி விடுகின்றன. எல்லாம் அல்லோல கல்லோலந்தான். கிணற்றுள் என்ன இருக்கிறது என்பதை நம்மால் அறிய முடியவில்லை. நேரம் செல்லச் செல்ல அலை ஓய்ந்து நீர் சலனமற்று விடுகிறது. ஆனால் விழுந்த கல்லோ எங்கேயோ ஒரு மூலையில் போய்ப் பதுங்கியிருக்கிறது.

தன் புருஷன் கையிருந்து தந்தியை வாங்கி வாசித்த லளிதா " யார் இந்த மாதவன்?" என்று நடேசனைக் கேட்டாள். நடேசனுக்குத் தன் மனைவியின் குரலில் கரகரப்புத் தொனித்தது. அவள் பார்வை அவனுக்கு அந்த ஒரு கணத்தில் நஞ்சாகத் தோன்றியது. " எனக்குப் பழக்கமான ஒருவன், நமது ஊரவன், ஏன் உனக்கு...." என்று வார்த்தையை இடையில் நிறுத்திக் கொண்டான். அடுக்களையில் ஏதோ சத்தம் கேட்டதினால் லளிதாவும் தீடீரென்று போய்விட்டாள். நிதானத்தை இழந்து விட்டிலிருந்த நடேசன் தன் வாழ்வில் முதன் முதலாக லளிதாவைக் கள்ளத்தனமாகப் பின் தொடர்ந்தான். தோசையைப் புரட்டிப் போடும் போது திரும்பிய நிஷ்களங்கமான அந்த முகம் நடேசன் மனத்தில் எதை நினைக்கச் செய்ததோ பேசாமல் திரும்பி வந்து 'ஈசிச்சேரில்' சாய்ந்து கொண்டான்.

விருந்தாளியை உபசரிப்பதில் லளிதா தன் கணவனையே சில சமயங்களில் மறந்து விடப்பார்த்தாள். ஆனால் தன் புருஷன் இன்று முன் இருந்தது போலில்லை என்பதை அவள் அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. கலியாணத்துக்கு முன்பே அவனோடு பழகியவள், இரண்டு வருட தாம்பத்திய வாழ்கையில் அவன் அந்தரங்கம் அறிந்தவள். தன் கணவனின் மனத்தடுமாற்றம் அவள் நெஞ்சை உறுத்தியது. ஆரம்பத்தில் விருந்தினனாகிய மாதவனை உற்சாகத்தோடு உபசரித்த லளிதா அந்த முதல் நாளிலேயே உற்சாகம் குன்றிப் போனாள். நடேசனின் கபடப் பார்வை அவள் நெஞ்சை வாள் போலுருவிச் சென்றது. ' ஏன் இப்படியானார்?" என்று தன்னைத்தானே பலமுறை கேட்டுக்கொண்டார்.

நடேசன் தன் மனைவியின் முகத்தின் மாறுதலைக் கவனித்த வண்ணமேயிருந்தான். அவள் முகத்தில் பயமும் தடுமாற்றமும் பிரதிபலிப்பது போலிருந்தது. அவனுக்கு நான்தான் ஒன்றும் பேசாமலிருந்தும் இவள் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும். மாதவனைக் கண்டதும் இவள் நடத்தை முழுவதுமே மாறிப் போனதேன்? யாரோ ஒருவர் " பெண்ணை நம்பாதே" என்று ஆரம்பித்திருந்த பாட்டு அவன் ஞாபகத்துக்கு வந்தது. 'மாமா சொன்ன விஷயம் உண்மையாக இருக்குமோ?' என்று அவன் தன்னைத் தானே ஆயிரம் தடவை கேட்டுக் கொண்டான்.

அவன் சந்தேகத்தை அவள் அறிந்து கொண்டாள். ஆனால், அவள் துயரை அவன் அறியவில்லை. ஒரு உத்தமப் பெண்மணி எதையும் சகித்துக் கொள்வாள், தன் கணவன் தன்னைச் சந்தேகிப்பதை மட்டும் அவளால் சகிக்க முடியாது. லளிதாவுக்குத் தன் புருஷன் மேல் ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஆனால் அதை எப்படிக் காட்டலாம் என்பது தான் தெரியவில்லை. வீட்டில் வந்திருந்த விருந்தாளிதான் எல்லாவற்றிற்கும் தடையாயிருந்தான். அவள் கோபம் முழுவதும் இப்பொழுது மாதவன் மேல் திரும்பியது. ஆனந்த மயமான தங்கள்

வாழ்க்கையில், சனியன் போல் வந்து குறுக்கிட்டானே என்று திட்டினாள். அடுத்த கணமே தன் கணவனின் விபரீத புத்திக்காக இன்னொருவனை, குற்றமறியாதவனைத் திட்டுவது பிழை என்பதை உணர்ந்து மனம் வருந்தினாள்.

கிரகணமும் மெல்ல மெல்லத் தான் நீங்குகிறது. அலைக்கப்பட்ட கிணற்று நீரும் அமைதி பெற நெடுநேரம் செல்கிறது. எல்லாவற்றையும் காலதேவன் தன் தேர்ச் சக்கரத் தின் சுழற்சியால் சீர் செய்கிறான். மாதவன் தூமகேது போலத் தோன்றி மறைந்து விட்டான். நடேசனின் மனம் சாந்தியடையத் தொடங்கியது. ஆனால் லளிதா, அவள் மனம் சீக்கிரத்தில் நிம்மதி அடையவில்லை. 'எங்கள் இல்லற வாழ்க்கையில் இப்படி எத்தனையோ விருந்தா ளிகள் வந்து போயிருக்கிறார்கள். மாதவனிலும் எத்தனையோ மடங்கு அதிகமாக நெருங்கிப் பழகியிருக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் முன்னிலையில் நாங்கள் எவ்வளவு குதூ கலத்துடனிருந்திருக்கிறோம். நண்பர்கள் முன்னிலையில் கூட எத்தனையோமுறை விளை யாட்டுக்காகப் பரிகாசம் பண்ணி என்னை வெட்கத்திலும் ஆனந்தத்திலும் மூழ்கடித்திருக் கிறார். மனிதன் மனம் எவ்வளவு உறுதியைக் காட்டுகிறதோ அவ்வளவு பலவீனத்தையும் உடையதாகவல்லவா இருக்கிறது என்று எண்ணமிட்டுக் கொண்டே லளிதா யன்னலுக் கூடாக வெளியே எதையோ பார்ப்பது போல சூனியமான பார்வையோடு நின்றாள். நடேச னுக்கோ அவளை அணுகுவது என்பது சுவாலித்து எரியும் அக்கினியை அணுகுவது போல இருந்தது. அவன் மனத்திலிருந்த சந்தேகம் நீங்கிப் பயம் குடிகொண்டுவிட்டது. தொண்டை யைக் கனைத்துக் கொண்டே "லளிதா" என்று கூப்பிட்டான். தன் கணவனின் குரல் கேட்டுத் திரும்பினாள் லளிதா.

"லளிதா ஒரு விஷயம்"

" என்ன சொல்லுங்கள்"

"அன்று மாமா சொன்ன அபர வார்த்தை...."

வார்த்தையை நடேசன் சொல்லி முடிக்க முடியாமல் தவித்தான். லளிதாவின் மனம் சென்ற கால சம்பவத்தை தாவிச் சென்றது. 'மாமா' 'அபவாதம்' என்ற சொற்களிலிருந்து விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண்டாள். தங்கள் காதலைத் தடை செய்வதற்கு நடேசனின் மாமா அரும்பாடுபட்டார் என்பது லலிதாவுக்குத் தெரியும். அவள் நடேசனைப் பார்த்து:

"தயவு செய்து விளக்கமாகச் சொல்லுங்கள்" என்றான்.

"அந்தப் பழியை..."

"நம்பினீர்களா....?"

" இல்லை....."

"நம்பவில்லையா?"

இதற்கு என்ன பதில் சொல்வதென்பது நடேசனுக்கு தெரியவில்லை. தன் கணவ னின் பரிதாபகரமான பார்வை லளிதாவின் மனத்தை உருக்கிவிட்டது. அவள் அவன் அருகிற் சென்று அவளை அணைத்துக் கொண்டே இந்த விஷயத்தை நீங்கள் உடனேயே என்

னிடம் சொல்லியிருக்க வேண்டும். என்னிடம் இதனை நீங்கள் சொல்லாமல் மறைத்ததி னால் உங்கள் மனத்தின் ஆழத்தில் இந்த இரகசியம் அமுக்கிக் கொண்டு கிடந்தது. சரியான தருணத்தில் மனம், தான் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருந்த சுமையை வெளியே தள்ளி, உங்களைப் பழிக்குப் பழி வாங்கிவிட்டது; பாழும் மனமே! என்றான்.

ஈழகேசரி
13.10.2019

வைரவ கோவில் விளக்கு

சோ. சிவபாதசுந்தரம்

மாலைப்பொழுது வந்ததும் சேற்றுக்குளத்து வைரவகோவில் கிணற்றடியில் வழக்கம்போல் பெண்கள் கூடிவிட்டனர். நாகம்மாவுக்கும் பாக்கியத்துக்கும் ஏதோ நல்லகாலமாய் முன்னிருந்த பழைய கோபம் மாறி இன்று சிநேகமேற்பட்டு வெற்றிலை பாக்குப் பகிர்ந்துமென்று கொண்டு அடுத்த வீட்டுத் தங்கமுத்துவின் கணவன் செல்லப்பா கொழும்பிலிருந்து தனது மனைவிக்குப் புதுவருடத்துக்கனுப்பிய பாடிப் பேட்டைச் சேலையின் நிறத்தைப் பற்றி இழிவாகப் பேசி நகைத்தனர். கைம்பெண்ணான சின்னத்தங்கச்சி இவர்கள் பேசுவதையெல்லாம் காதில் போட்டுக்கொண்டு தன் பழைய சீவியத்தை நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

இக்கூட்டம் நெடுநேரம் தங்கள் இட்டல் இடைஞ்சல்களையும் அயல் விட்டு எதிர் வீட்டுக் கதைகளையும் பேசி முடித்துக்கொண்டு குடங்களில் நீர்நிரப்பி எழுந்திருக்கையில் தான் நமது சின்னத்தங்கத்தின் பேத்தி சிவக்கொழுந்துவந்து கொண்டிருந்தாள். எப்பொழுதுமே வாய்க்காரியான பாக்கியம் சிவக்கொழுந்துவின் நெற்றியில் துலக்கும்

குங்குமப் பொட்டையும் அவளது அன்ன நடையினழகையும் கண்டு சகியாது மற்றவர்களிடம் பாருங்கள் அவளுக்கு அலங்காரம் மாத்திரம் குறையாது" என்று சொல்லிவிட்டுச் சிவக் கொழுந்தை நோக்கி ! "என்ன சிவக்கொழுந்து இப்போதான் வாறாய். விரைவாகக் குடத்தை மினுக்கித் தண்ணீரெடுத்துக் கொண்டு வருவாயானாற் சொல்லு நிற்கிறோம். நாங்கள் வந்து நெடுநேரமாய் விட்ட து" என்றாள்.

சிவக்கொழுந்து மிகவும் பணிவாக "ஐயோ எனக்காக நீங்களெல்லாரும் காத்திருக்க வேண்டாம். குழந்தைப்பிள்ளைக்காரி சுந்தரத்தைம் மறித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்க ளே! நான் ஆறுதலாகத் தண்ணீர் அள்ளிக்கொண்டு வாறேன். விளக்கும் கொழுத்த வேண்டும். நீங்கள் போங்கள்" என்று சொல்லி மற்றவர்களையனுப்பிவிட்டுத் தன் வழி நடந் தாள்.

நிலப்பான்மையோ. தெய்வகடாட்சமோ? அல்லது அவ்வூர்ப் பெண்கள் கூடிப் பேசு வதற்கோ சேற்றுக்குளத்து வைரவகோவிலடியில் நல்ல தண்ணீர்க் கிணறொன்றிருந்தது. குளத்தடியில் அரசமரமொன்றும் பூவரச மாமொன்றும் இணைந்து கொண்டு நின்றபடியால் ஒருகாலத்தில் வைரவ சூலமொன்றைக் கந்தர் வளவு மூத்த தம்பியார் நாட்டி வைத்தார். அது அக்கிராமத்தில் சேற்றுக்குளச் சனங்களால் பொங்கல் பொங்கியும் இளைக் கட்டியும் ஆதரிக் கப்பட்டு இப்பொழுது மூத்த தம்பியார்பூட்டன் பொன்னரால் அதன் மேல் ஒரு சிறு கொட்டில் போடப்பட்டிருக்கிறது. பொன்னர் இறந்து பத்துப் பன்னிரண்டு வருடங்களாகின்றன. அவரு டைய தாய்க் கிழவி சின்னத்தங்கமும் தங்கச்சியின் மகள் சிவக்கொழுந்து வந்தான் அந்த வைரவ கோவிலுக்கு வெள்ளியும் செவ்வாயும் விளக்கு வைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். பொன்னர் உயிரோடிருக்கும்பொழுது குளக்கரையில் தோண்டுவதற்குச் சுலப மாயிருந்தபடியால் குளத்தில் குளிக்க வரும் பள்ளர் சிலரைக் கொண்டு கிணறொன்று தோண்டுவித்திருந்தார்.

அது "திருமஞ்சன"க் கிணறாகப் பாவிக்கப்பட்டு வந்தது. அவ்விடத்திலுள்ள கிணறுகளி லும் பார்க்க நல்ல தண்ணீருடையதாகையால் யாவராலும் குடிக்கப் பாவிப்பதற்கும் விரை வில் துவரம் பருப்பு அவிய விடுவதற்கும் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதனாற்றான் மேலே சொல்லப்பட்ட நமது பெண்மணிகள் காலைமாலைகளில் ஒன்று கூடுவார்கள்.

வெள்ளிக்கிழமை பொழுதுபடும் நேரம் சிவக்கொழுந்து வழக்கம் போல் தனது சருவக் குடத்தை மினுக்கிக் கழுவி நீர் நிரப்பிவிட்டுக் கால்முகம் சுத்தி செய்து கொண்டு வைரவகோ வில் விளக்கேற்றச் சென்றாள். அருகே குளத்திலிருந்த தவளைகள் ராக தாளமின்றிப் பாடின. அரசமரத்தின் கிளைகளில் நாள் முழுதும் பறந்து தி ரிந்து வயிறார உணவருந்தி வந்து கூடிய காக்கைகள் தம் மனைவிமக்களுடன் ஆனந்தங்கொண்டு ஆரவாரித்தன. பக்கத்திலே படர்ந்து கிடந்த முல்லைக் கொடியில் மொய்த்த வண்டுகளின் ரீங்கார ஒலியுடன் முருக மூர்த்தி கோவில் பண்டாரம் ஊதிய சங்கின் ஒலியும் சேர்ந்து முழங்கின. இந்த ஒலிகளின் நடுவே "பித்தா பிறைசூடி" பாடிக்கொண்டு சென்ற சிவக்கொழுந்து. கறையானரித்த விட்டமொன்றில் தொங்கிக்கொண்டிருந்த கண்ணாடி விளக்கில் தேங்காயெண்ணெயை வார்த்துத் திரியைத் தூண்டிவிட்டு நெருப்புக்குச்சி தட்டிப் பற்றவைத்தாள். கோவிலின் எதிர் முகமாய் நின்றாளா தலால் பளிச்சென்று உள்ளிருந்த வெள்ளிச் சூலாயுதம் மின்னியது.

சாதாரணமாய் இருட்டிலிருந்த சூலாயுதம் வெளிச்சத்தைக் கண்டவுடன் மின்னிப் பிரகாசித்த தெனச் சிவக்கொழுந்துவுக்குத் தோற்றவில்லை. ஒருவித உணர்ச்சி பெற்றவளாய் அதிசய சம்பவமொன்று நிகழ்ந்தது போல மெய் விதிர்ப்ப இருதயம் துடிதுடிக்கப் பயமும் களைப்பும் கொண்ட முகத்தோடு சூலாயுதத்தையே நோக்கினாள். சிறிது நேரத்தில் அற்புதமானதொன் றும் நிகழவில்லையென்று திடமுற்றாளேனும் சிவக்கொழுந்துவின் மனதில் தனது வாழ்நாளில் நடந்த பல சம்பவங்கள் ஒன்றின் பின்னொன்றாய் உதயமாயின.

சூலாயுதத்தின் தோற்றத்துடன் இரும்பிலடித்து நாட்டப்பட்டிருந்த அதற்கு, ஐந்து வருடங்களின் முன் வெள்ளித் தகடு சாத்திய தனது கணவன் சிற்றம்பலத்தின் நினைவு வந்தது. கடந்த நான்கு வருட காலமாய் ஏதோ ஒரு சிறிது அபிப்பிராயபேதம் காரணமாக ஏழைக்கிழவி சின்னத்தங்கத்தையும் பேத்தியையும் விட்டு "நீள நெடுகச் சென்ற சிற்றம்பலத் தைப் பற்றி அறிவிப்பார் யாருமில்லை. விவாகமாகி ஒருவருட காலம் இன்பமாயிருந்த குடும்பத்தில் திடீரென இப்பிரிவு நேர்ந்தது. இதற்கெல்லாம் காரணம் சீதனப்பணமென்று கேள்வி. சிவக்கொழுந்து 8 வயதாயிருக்கையில் பெற்றார் இறந்து போயினர். தாயினுடைய சீதனக் காணியாயிருந்த பனங்காணியொன்றும் மரவள்ளி நடப்பட்டிருந்த இரண்டரைப் பரப்புத் தோட்டமும் சிவக்கொழுந்துவைச் சேர்ந்தன. தகப்பனாரும் ஏதோ புகையிலை வியாபாரத்தில் 80 பவுண் தேடி வட்டியில் போட்டிருந்தார். சின்னத்தங்கந்தான் இடியப்பமும் புட்டும் அவித்து விற்றுச் சிவக்கொழுந்துவை வளர்த்து இராமநாதருடைய மகன் சிற்றம் பலத்தை விவாகம் செய்துவைத்தார். பனங்காணியும் தோட்டமும் 75 பவுண் ரொக்கமும் 35 பவுணுக்கு நகையும் சீதனமாகக் கொடுபட்டது. சின்னத்தங்கத்தின் வீட்டிலே தான் புருஷனும் மனைவியும் வசித்து வந்தார்கள். " இந்தக் கட்டைபோன பின் இந்தவீடுமுங்களைத்தானே சேரும்"" என்று கிழவி அடிக்கடி சொல்வது வழக்கம்.

சிற்றம்பலம் இளமை தொடக்கம் ஒரு சுருட்டுக்கடையில் சம்பளத்துக்கு நின்று மாதம் மாதம் தனக்குக் கிடைத்ததைச் சேர்த்துவைத்துச் சிலகாலம் சென்றதும் தனக்கென ஓர் கடை இரத்தினபுரியில் தொடக்கிப் பிரதானமாகப் புகையிலையும் சுருட்டும் சிறிது புடைவையும் வைத்து வியாபாரம் நடத்திவந்தார். கால வித்தியாசத்தால் நட்டமதிகமாகிக் கடையை மூட வேண்டி வந்துவிட்டது. இதனால் மனம் நொந்த சிற்றப்பலம் தனது மனைவியிடம் வந்து யாவற்றையும் சொல்லிச் சீதனப்பணத்தைக்கொண்டு வியாபாரத்தைக் காப்பாற்றலாமென்று யோசனை கூறினார். குணவதியான சிவக்கொழுந்து தானெப்போது தனது கணவனுக்கு உதவி புரிவதென்று காத்துக்கொண்டிருப்பவளாதலால் இந்த யோசனைக்கு மறுத்தாளல்லள். ஆனால் சின்னத்தங்கம் குறுக்கிட்டு வாயில் வந்தபடி ஏசத்தொடங்கினாள். "சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடேறாது. ஏதோ பெரிய வியாபாரியென்று சொல்லிச் சம்மந்தம் செய்து விட்டு இப்போ என்னடா என்றால் பெண்டாட்டி சொத்தையுமழிக்க யோசனையாம். இரு வருமாய்ச் சேர்ந்து என்னத்தையாலும் செய்யுங்கள். ஆனால் இன்று தான் கடைசி நாள். நாளைக்கு இந்த வீட்டுத் திண்ணையிலும் உட்கார முடியாது" என்று அடக்குமுறைச் சட்டம் கொடுத்து விட்டாள். நினையாப் பிரகாரம் பேத்தியாரின் சொற்கள் கிளம்பவே சிவக்கொழுந்து வின் கண்களில் நீர் வடிந்தது. என்ன செய்வதெனத் தோற்றாது விழித்தாள். கணவனின் கதியை நினைத்துப் பரிதவித்தாள். ஆனால் சிற்றப்பலத்துக்குக் கோபமதிகரித்தது. கிழவியின் சொற்கள் நாராசமாயிருந்தன. கிழவியில் கொண்ட கோபம் சிவக்கொழுந் துவின் மேலா தீர்க்க வேண்டும்? முன்தானைச் சேலையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தலை வாசல் தாணோடு சாய்ந்து கொண்டு விம்மி விம்மியழுத சிவக்கொழுந்துவின் கண்களில் பளீரென்று

இரண்டு அடிகள் விழுந்தன. அவ்வளவுதான். தோற்பெட்டியொன்று தயாரானது. பெட்டகத்திலிருந்த சரிகைச் சால்வையையெடுத்துக் தோளில் போட்டுக்கொண்டு குடையுடன் வெளிக் கிளம்பினார் சிற்றம்பலம். இன்னும் வந்து சேரவில்லை. நிற்குமிடத்தையறிவாருமில்லை.

இந்தச் சங்கதிகள் யாவும் தொடுத்தாற்போல் ஒன்றன் பின்னொன்றாய் வைரவகோவில் முகப்பில் நின்ற சிவக்கொழுந்துவின் மனத்தில் தோன்றின. பாவம் இளம் பெண். ஆ ஒருவருட காலம் அன்றிலும் பேடும் போல இணைபிரியாது இல்லத்திருந்த இவர்களுக்கு அகாலப்பிரிவு துன்பத்தைக் கொடுத்தது. நான்கு வருடப் பிரிவு நாற்பது வருடம் போல் சிவக்கொழுந்துவின் முகத்தில் முதுமையைக்காட்டியது. இப்பொழுது அவளேற்றிய விளக்குத்தானும் சிறிது ஒளிபெறச் செய்யவில்லை. நெடுநேரம் யோசனையிலிருந்தவள் திடீரெனத் தன் பேத்தியாரை நினைத்து, "என்ன செய்துவிட்டேன் ஒரு காரணமுமில்லாமல் இவ்வளவு நேரமும் நிற்கிறேனே" என்று பரபரப்புடன் தண்ணீர்ச் சருவத்தைத் தலையில் எடுத்துக்கொண்டு கடுகி நடந்தாள்.

பின்புற வாயிலால் வீட்டையடைந்ததும் தண்ணீர்க்குடத்தை வைத்து விட்டுப் "பெத்தாச்சி" என்றழைத்தாள். பால் கறந்து கொண்டிருந்த சின்னத்தங்கம் "அங்கே வைத்துப் போட்டு அடுப்பிலிருக்கிறதைப் பார்த்துக்கொள் இந்தப் பாற்சொட்டைக் கறந்து கொண்டு வாறேன்" என்றாள். சிவக்கொழுந்து முன்தானைச்சீலையால் முக வியர்வையைத் துடைத்துக்கொண்டு தலைவாசல் விளக்கேற்றுவதற்காக முற்றத்தில் வந்தாள். வந்ததும் திடுக் கிட்டாள். இரண்டு "டிறங்கு"ப் பெட்டிகள் முற்றத்தில் கிடந்தன. அருகில் நின்ற வேப்பமரவேரில் கையில் குடையுடன் ஒரு ஆணுருவம் உட்கார்ந்திருந்தது. அது தான் "காணாமற்போன சிற்றம்பலம். சிவக்கொழுந்துவின் மார்பு துடித்தது. ஆச்சரியமும் சந்தோஷமும் பெருக அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். சிற்றம்பலம் மெதுவாக எழுந்து வந்து "சிவக்கொழுந்து! ஏனிப்படி வாடிப் போயிருக்கிறாய். அதிகமாகப் பட்டினி கிடந்திருக்கிறாய் போலிருக்கே" என்று சொல்லி அன்பொழுக அவளைத் தழுவி நின்றார். சிவக்கொழுந்துவின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் சொரிந்தது. நாத்தடுமாற "நாதா! இவ்வளவுகாலமும் ஏறிட்டுப் பார்க்கமாட்டேனென்றிருந்தீர்களே! முன்னை வினைப்பயனா இது? ஆயினும் என்னைப் போற பாக்கியசாலி யார் இருக்கிறள்? சென்ற கணவனைப் பெற்றுவிட்டேனல்லவா?" என்று சொல்லிக் கனிந்த நகையுடன் நிமிர்ந்து கணவனை நோக்கினாள். "பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ. காதலர்களின் இந்த நிலையை அப்பொழுது தான் பாற்செம்புடன் வந்த சின்னத் தங்கம் கண்டதும் திகைத்துப் போனாள். சென்ற சிற்றம்பலத்தார் திரும்பி விட்டார். அதைவிட முற்றத்தில் இரண்டு பெரிய பெட்டிகள் கிடக்கின்றன. உள்ளம் பூரித்தது. அநுபவசாலியான படியால் சின்னத்தங்கம் சமயோசிதமாய் "என்ன தங்கச்சி பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? இங்கேவா அடுப்பிலிருந்த சொதியை இறக்கிச் சோற்றைக்கொடு" என்றாள்.

உணவருந்திய பின்னர் சிற்றம்பலம் தன் மனைவிக்குத் தான் சிங்கப் பூருக்குச் சென்றிருந்ததாயும் அங்கேயொரு சிறு உத்தியோகத்திலிருந்து பொருளீட்டியதாயும் பழைய நினைவு வரவே திரும்பி வந்ததாகவும் சொன்னார். சிவக்கொழுந்துவின் ஆனந்தத்துக்கு அளவில்லை. இருவரும் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு வெளியே காற்று வாங்க வந்தனர். அப்பொழுதும் சேற்றுக்குளத்து வைரவ கோவில் விளக்கு மின்னி மின்னியெரிந்தது. சந்திரனும் புன்னகை புரிந்தான்.

ஈழகேசரி - 29. 03. 36

சொக்கன்

சொக்கன் மூதறிஞர். பயிற்றப்பட்ட ஆசிரியர், பட்டதாரி, முதுகலைமாணி அதிபராக ஓய்வு பெற்றவர். ஈழகேசரிப் பண்ணையில் உருவானவர். சிறுகதை, நாடகம், கவிதை, இலக்கியக் கட்டுரைகள் என அகலக்கால் பதித்தவர். ஈழ கேசரியில் கனவுக் கோயில் உட்பட ஐந்து சரித்திர கதைகள் வெளிவந்துள்ளன. சிலம்பு பிறந்தது, கிரிங்கைக்கிரி காவலன், துரோகம் தந்த பரிசு முதலான நாட கங்கள் எழுதியுள்ளார். இவற்றில் சிலம்பு பிறந்தது, சிரிங்கைக்கிரிக் காவ லன் என்பன நூல்களாக வெளிவந்துள்ளன. இவரது உரை நடை சிறப்பினை இவரது சரித்திரச் சிறுகதைகள், நாடகங்கள் என்பவற்றில் அவதானிக்கலாம். இவரது சிறு கதைகள் அடங்கிய தொகுதி கடல் ஆகும். வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சிச் சிறுகதைகள் தொகுதியில் இவரது கதை இடம்பிடித்துள்ளது. சாதிப்பிரச்சினையை வைத்து முதன் முதல் நாவல் படைத்த பெருமை இவருக்குரியது. "சீதா" என்ற நாவல் வீரகேசரிப் பிரசுரமாக வெளி வந் துள்ளது. மலர்ப்பலி, செல்லும்வழி இருட்டு என்பன இவரது சிறப்பான நாவல்க ளாகும். வீரத்தாய் இவரது கவிதைத் தொகுதியாகும். இவர் எழுதிய சலதி முற்றி லும் வித்தியாசமான இவரது ஓர் ஆக்கம். இவரது நாடகங்கள் கலைக்கழகத்தின் முதற் பரிசுகளைத் தொடர்ந்து பெற்றிருக்கின்றன.

- மாணிக்கம்
- பொன் பூச்சு
- கனவுக் கோவில்

மாணிக்கம்

சொக்கன்

தங்கமான பையன் பாவம்; நேற்றுக்கூட என்னுடன் சிரித்துக் கதைத்துவிட்டுப் போனான். இன்றைக்குப் பாடையிலே போகிறான். இது தான் உலகம்"

"தெரியாமலா பெரியவர்கள் "காயமாவது பொய்யடா, காற்றடைத்த வோர் பையடா" என்று பாடியிருக்கிறார்கள். "வாழ்வானது மாயம். இது மண்ணாவது திண்ணம்"

"என்றாலும் இது ஒரு அவலச்சாவுதான். பாவம், சாகும்போது எதை எதையெல்லாம் எண்ணியிருப்பானோ"

"சாவும் வாழ்வும் எம் கையிலா தங்கியிருக்கிறது. எல்லாம் அந்த ஆட்டுவிப்பான் கையில் அல்லவா இருக்கிறது?"

பிரேதம் ஒரு கோயிலின் வழியாகச் செல்லலாயிற்று. பறையொலி நின்றது. பிரேதத்தைத் தொடர்ந்து சென்றவர்களுள் இரு முதியவர்கள் மேற் சொன்னவாறு சம்பாஷித்துக் கொண்டு சென்றார்கள். ஒருவர் வார்த்தைகளில் உருக்கம் மிகுந்து காணப்பட்டது. மற்றவரோ வரட்டு வேதாந்தம் பேசினார்.

சராசரியாக அம்மரண ஊர்வலத்திற் கலந்து சென்றவர்கள். ஏதோ வெல்லாம் பேசினார்கள். அது மாணிக்கத்தின் பிணத்தின் காதில் விழவாபோகிறது? அவன்தான் மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டானே!

அவன் வாழ்வில் நிகழ்ந்தவை, நிகழாதவை எல்லாமே பேசப்பட்டன. அவனுடைய புகழ்ப் பிரதாபங்களைப் பாராயணம் செய்துகொண்டு அவர்கள் சென்றார்கள்.

அவர்களுடைய சம்பாஷணை ஒரே ரீதியில் செக்குமாட்டு ரீதியில் அசைபோட்டுச் சென்று கொண்டிருந்தது.

அவர்கள் கலந்துகொண்ட ஒவ்வொரு மரண ஊர்வலத்திலும், சொல்லிக் கொண்ட வார்த்தைகள் தாம், சிந்தனை செய்து செய்து மரத்துப் போய், அர்த்தமற்றுப் போனவை; சம்பிரதாய ரீதியில் உதிர்க்கப்பட்டு, அடுத்த நிமிசமே மறக்கப்படுபவை.

சுடலைஞானம் என்று சொல்வார்களே: அது ஒரு பரவணி வியாதி போலும்!

பிணம் சிதையில் ஏற்றப்படுகிறது. உணர்ச்சியால் உந்தப்பட்ட ஒருவர் எழுந்து போகிறார். எல்லோரும் மௌனமாகத் தலைகுனிந்து நிற்கிறார்கள்.

“தம் சகோதரர்க்காக, உழைத்துழைத்து ஓடாகும் பாட்டாளிகளுக்காகத் தம் உதிரத்தைச் சிந்தி மரணத்தை அரவணைத்த மாணிக்கத்தைச் சிதையேற்றுவதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம். நேற்று அவர் நம்மிடையே இருந்தார். தொழிலாளி வர்க்கம் என்ற மாளிகையின் பலம் வாய்ந்த தூணாக நம்மிடையே இருந்தார். இன்று முதலாளி வர்க்கம் எமனுலகுக்கு அவரை அனுப்பிக் கொக்கரிக்கிறது. அவர்களின் துப்பாக்கி முனைக்கு நம் மாணிக்கம் முதற்பலியானார்.

“இன்னும் சிறிது நேரத்தில் கொழுந்துவிட்டெரியும் அக்கினி அவரைச் சாம்பலாய் உலகுக்களிக்கும். ஆனால் அவரை எங்கள் உள்ளங்களிருந்து எவருமே வேறுபடுத்த முடியாது. காலனுக்கும் அந்தச் சக்தி கிடையாது.

“முதலாளி வர்க்கம் அஸ்தமனமாகும் நான் வெகு தூரத்திலில்லை. மாணிக்கத்தின் உதிரம் வீணுக்கு இம்மண்மிசை ஓடவில்லை. தூங்கிக் கிடந்த எம் உள்ள உணர்ச்சிகளை அவர் மரணம் தட்டி எழுப்பியுள்ளது.

“அவர் சிந்தனையின் வீரம் நிரிந்தரம் வாழ்க”

“மாணிக்கம் வாழ்க! முதலாளி வர்க்கம் வீழ்க!” அவர் கோஷத்தைத் தொடர்ந்து அங்கு நின்றோர் யாவரும் கோஷமிட்டனர்.

சிதையில் தீ மூட்டப்பட்டது. சிறிது நேரத்தில் அது கொழுந்துவிட்டெரியத் தொடங்கிற்று. ஒவ்வொருவராக மயானத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் வார்த்தைகள் திசைமாறின. மாணிக்கத்தைப் பற்றி ஒரு வார்த்தை பேச வேண்டுமே! கிடையாது. கொரியா விவகாரம், கள்ளச் சந்தை, அரிசிப் பங்கீடு, இந்தியாவில் எங்கோ ஓரிடத்தில் ஒரு பெண் ஒரே சூலில் ஐந்து குழந்தைகள் பெற்றமை, என்று பல விசயங்களையும் அலசிக் கொண்டு சென்றது அச்சந்தைக் கூட்டம்.

காந்திஜிக்கு ஞாபகச் சின்னம் எழுப்புகிறோமென்று அவர் கொள்கைகளை அஞ்ஞாபகச் சின்னங்களிடையே சமாதி வைத்த மனிதக் கும்பல், கேவலம் “கார்” சாரதி மாணிக்கத்தையா நினைத்துப் பார்க்கப் போகிறது?

2

மாணிக்கத்தின் பிரேத ஊர்வலத்துடன் சென்று திரும்பிய நான் ஸ்நானம் செய்து, சாப்பிட்டானதும் வெளிவராந்தாவில் விசிறியும் கையுமாக வந்து ஒரு சாய்மனைக் கதிரையிற் சாய்ந்தேன்.

பங்குனி மாதம். புழுக்கத்துக்கு யாழ்ப்பாணத்தில் பேர் போன மாதம். இந்தப் பங்குனிதான், சூரியன் மேல் திசையை அடைந்துங் கூடத் தரை உஷ்ணம் குறையவில்லை.

வயல்வெளியிலிருந்து மந்தைகள் திரும்பிக் கொண்டிருந்தன. தரித்திரமும், அழுக்கும் போட்டியிட்டு ஆக்கிரமிக்கும் உடலுடனும் எருக்கடகத்துடனும் கிராமச் சிறுவர்களும் சிறுமிகளும் அவற்றைப் பின் தொடர்ந்து வந்தார்கள். பகலவன் மறைவுக்குச் சாவு கீதம் பாடுவன போல பறவைகள் கலகலத்துக் கூடுகள் நோக்கி பறந்தன.

எங்கள் வீட்டுக்கு நாலு ஐந்து வீடுகள் தள்ளியிருந்த மாணிக்கத்தின் வீட்டிலிருந்து வந்த அவன் மனைவியின் ஒப்பாரி ஒலி என் காதுகளில் விழுந்தது.

என் உள்ளத்திலும் வேதனை புகாரிட அதிகநேரம் எடுக்கவில்லை. பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ்திலும் என்னிலும் குறைவுள்ளவனானாலும் மாணிக்கம் என் அன்புக்குரியவனாகவே இருந்து வந்தான். "தம்பி" என்று அவன் என்னை ஆதுரத்துடன் கூப்பிடுவதை நான் எவ்வாறு மறக்க முடியும்?"

மாணிக்கம் மாணிக்கம்தான். உருவில் மாணிக்கம்: குணத்தில் மாணிக்கம் அறிவில் மாணிக்கம்; மாந்தருள் மாணிக்கம் என்றே அவனைச் சொல்லலாம்.

அவனைப் பற்றிய நினைவுகள் என் உள்ளத்தே படையெடுத்தன. நான் சிந்தித்தேன்.

3

மாணிக்கத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் ரவீந்திரரின் கோரா என்ற புத்தகத்தின் ஞாபகந்தான் எனக்கு வரும். ஆஜானு பாஹுவாக, அமானுஷ்ய மான கெம்பீரத்துடன் காட்சியளிக்கும் அவன் எவர் உள்ளத்தையும் எளிதிற் கவர்ந்தது ஆச்சரியமல்லவே?

எடுப்பான அகன்ற நெற்றியும் ஆழமான பெரிய கண்களும் ஈடுஇணையற்றுக் கடைந்தெடுத்தது போல் விளங்கும் அவன் நாசியும் எவரையும் வசீகரித்து விடும். அவ்வளவு அழகாக, கெம்பீரமாக, நேரான நிறுதிட்டத்துடன் ஒரு நாசியை நான் வேறு எங்குமே காணவில்லை.

மாணிக்கம் சிறுவயதிலிருந்தே துடிதுடியாகத்தான் இருந்தான். அசாதாரணமான, சுறு சுறுப்புடையவன். தன்வாழ்க்கை விரைவில் முடிந்து விடும் என்று தெரிந்துதான் அவன் விரைவாக எல்லாவற்றையும் செய்தானோ, என்னவோ? அவ்வளவு சுறுசுறுப்பு அவனிடம் காணப்பட்டது.

அவனுடன் சமமாக நடப்பதென்றால் எவருமே ஓடித்தானாக வேண்டும். எந்தக் கூட்டத்திலிருந்தாலும் அவனது பிரத்தியேகத்தன்மை நட்சத்திரங்களிடையே ஒளிகாலும் சந்திரன் போல வெளிவராமல் விடாது.

ஒருவேளை நான் அன்பின் மிகுதியால் அவனை இவ்வாறெல்லாம் புகழ்கிறேனோ என்று நினைப்பவர்கள் அவனைத் தெரிந்த வேறுயாரிடமாவது விசாரித்துப் பாருங்கள். அப்பொழுது நான் அவனைப் பற்றி வர்ணித்தவை குறைவே என்று முடிவுக்கு வருவீர்கள்.

அவன் இலங்கைப் பெண் ஒருத்திக்கும் இந்தியத் தந்தைக்கும் பிறந்தவன். மாணிக்கம் இதைப் பற்றி மிகவும் பெருமையே கொள்வான். "நான் ஒரு இந்தியனின் மகன்" என்று அவன் சொல்லும்போது, அவ்வார்த்தைகளிற் காணப்படும் மிடுக்கையும் கெர்வத்தையும் என்னென் பேன்.

இதைச் சொல்லும்போது சிறுவயதில் நிகழ்ந்த ஒரு சம்பவம் ஞாபகத்தில் வருகிறது.

ஒருநாள் நானும் மாணிக்கமும் இன்னும் சில நண்பர்களும் வயல் வெளியில் கிளித்தட்டு மறித்து விளையாடிக் கொண்டிருந்தோம். அப்பொழுது மாணிக்கத்துக்கும் வேறொருவனுக்குமிடையில், சிறு சச்சரசு ஏற்பட்டது. மாணிக்கத்துடன் சச்சரவிட்டவன் வயதாலும் தோற்றத்தாலும் மாணிக்கத்திலும் பெரியவன். அவன் கோபத்தில் போடா வடக்கன் என்று ஏசினான். மாணிக்கத்திற்கு வந்த கோபத்தைப் பார்க்கவேண்டுமே. அவன் முகத்தில் ஒரு பைசாத் சதத்தில் குரூரம் பிரதிபலித்தது. இரத்தச் செம்மை படர்ந்து உருத்தும் வழிகளுடனும் நெறித்த புருவத்துடனும் காட்சியளித்த அவனைப் பார்க்க மகாபயங்கரமாயிருந்தது. மண்படைத்த முனியின் கோபத்தை ஒத்திருந்தது அவன் கோபமும்.

மாணிக்கம் அவ்வாறு சொன்னவன் மீது பாய்ந்த பாய்ச்சலில் அவன் கீழே விழுந்து விட்டான். மாணிக்கம் வெளுவெளுவென்று வெளுத்து வாங்கிவிட்டான். அவனை அச்செயலிலிருந்து விலக்குவது பகீரதப் பிரயத்தனமாகிவிட்டது. எத்தகைய உணர்ச்சி வாய்ந்தவன் அவன். அவனைப் போன்ற உணர்ச்சியுள்ள ஒரு பத்துப் பேர் முனைந்து வெளிப்படில் எந்த நாடுமே அடிமை, மிடிமை முதலிய பிணிகளில் அழுந்த மாட்டாது. இப்படி நான் அன்று சிந்திக்கவில்லை. ஆனால் அந்தச் சிறுவயதில் இருந்து அவனிடம் பயமும் அன்பும் நிறைந்த ஒரு மதிப்பை நான் செலுத்தி வந்தது மட்டுமே உண்மை.

அவனைப் போன்ற உணர்ச்சியுள்ள ஒரு தகப்பன் உடனிருந்த வரை மாணிக்கத்திற்கு ஒரு குறையும் வைக்கவில்லை. அவன் எங்கள் வீட்டில் வண்டியோட்டியும் வயல் வேலைகளில் உதவி புரிந்தும் வந்தான்.

4

மாணிக்கத்தின் தந்தை மாணிக்கத்தின் குணங்களுக்கு நேர் மாறானவன். மகா சாது. "மிதித்த இடத்துப் புல்லும் சாகாது" தானுண்டு, தன் கருமமுண்டு என்றிருப்பான்.

அவன் தன் மகனுக்கென்று மீத்து வைத்தவை, ஒரு துவரந்தடியும், பெரிய எழுத்து தேசிங்கு ராஜன் கதையும் சில சில்லறைக் கடன்களுந்தான்.

தகப்பன் இறந்தபொழுது மாணிக்கத்திற்கு பத்து, பதினொரு வயதிருக்கும். ஐந்தாம் வகுப்பி சித்தியெய்தி ஆறாம் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்தான். படித்தல் அவனுக்கு எட்டிக் காயாகக் கசந்தாலும் படிப்பு அவனை விடமாட்டேனென்று ஒரே பிடியாய்ப் பிடித்து வகுப்பில் முதலாமவனாகவும் ஆக்கி, வருடந் தவறாமல் வகுப்புயர்த்தியும் வந்தது. மாணிக்கத்தின் விவேகம் கூர்வாள் போன்றது என்பதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும். புத்தகமும் கையுமாக, வீட்டிலும் பாடஞ் சொல்லித்தந்தும் நான் ஒவ்வொரு வகுப்பிலும் பாந்தல்யத்துடன்

இரண்டு மூன்று வருடங்களுக்கு ஓட்டிக் கொண்டிருக்க, மாணிக்கம் போன்றவர்கள், வகுப்புத் தவிர்ந்த மற்றைய இடங்களில் புத்தங்களைத் தொடாமலே சித்தியெய்தி விடுகிறார்கள்.

தகப்பனின் இறப்போடு மாணிக்கத்தின் படிப்பும் தடைப்பட்டது. தாய், வீட்டில் கஷ்டப்பட்டு நேரத்திற்கு உணவு கொடுக்க, வயிறு புடைக்க உண்டுவிட்டு மாட்டுக்காரச் சிறுவர்களுடன் விளையாடுவதே தொழிலாய் விட்டது. அவர்களுடன் சேர்ந்து நாளுக்கொரு சண்டை பிடித்துக் கொண்டு வீடு திரும்புவான்.

தாய் எங்கள் வீட்டில் நெல்குற்ற வரும்போதெல்லாம், மாணிக்கத்தின் தறுகுறும்புகளுக்காக ஒரு தரம் கண்ணீர் விடாமலிராள். பாவம்! அவளது ஒரே நம்பிக்கை மாணிக்கந்தானே.

என் தகப்பானர் அடிக்கடி அவனை அழைத்து நயமாகவும் பயமாகவும் புத்தி கூறுவார். அவன் அடக்க ஒடுக்கமாயிருந்து அவற்றையெல்லாம் கேட்டுவிட்டு அடுத்த நிமிடம் தன்நினைவுக்கே நடப்பான்.

ஆனால் இந்நிலை நீடிக்கவில்லை. சில காலத்தில் தாயும் இறந்துவிடவே மாணிக்கம் தன் வாழ்க்கை பற்றிய ஒரு கேள்விக்குறியைப் போட்டுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அவன் ஒருநாள் எங்கள் வீட்டுக்கு வந்தான். அப்பாவின் காலடியில் வீழ்ந்து தனக்கு ஏதாவது வேலை தரும்படி கேட்டான்.

அப்பா இயற்கையிலேயே இரக்க சுபாவம் உள்ளவர். அநாதையாய் விட்ட மாணிக்கத்தின் மீது கருணைகொண்டு சிறு வேலைகளை செய்து கொண்டு வீட்டிலேயே இருக்குமாறு சொல்ல, அவன் மகிழ்வோடு சம்மதித்தான். சிறிது காலத்தில் எங்கள் குடும்பத்தில் ஒருவனாகவே ஆகிவிட்டான்.

5

நாட்கள் சென்றன. மாணிக்கம் வளர்ந்து பெரியவனாகிவிட்டான். இப்போது தகப்பன் செய்த வேலைகளான வண்டியோட்டித் தலையும் வயல் வேலையையும் மேற்கொண்டான்.

அவன் இளமை உடல் உரம் விவேகம் யாவும் எங்களுக்குக் கிடைத்தற்கரிய நிதிகளாயின. நான்குபேர் செய்ய வேண்டியவைகளைத் தனியே செய்யக்கூடிய ஒரு தொழிலாளி எங்கள் தந்தைக்கு வேறு எங்கே கிடைப்பான்?

மாணிக்கம் தனிக் குடிசை கட்டிக் கொண்டு, தானே சமைத்து உண்டு வந்தான். அதில் அவனுக்கு ஓர் தனி இன்பம். எதிலும் சுயாதீனத்தையே விரும்புந் தன்மை, அவன் பிறவிக் குணமல்லவா? வேலைகளில்லாத நேரத்தில் மாணிக்கத்தைக் கிராமவாசிக சாலையிற் காணலாம். சிறுவயதில் இழந்துவிட்ட படிக்கும் சந்தர்ப்பத்தை அவன் இப்போது பயன்படுத்துவதில் மிகவும் ஊக்கம் காட்டிவந்தான். எங்கள் வீட்டுக்கு மாணிக்கம் ஒரு புதினப் பத்திரிகை. இரவில் அவனைச் சூழ்ந்திருந்து பத்திரிகைப் புதினங்களைக் கேட்காவிட்டால் எனக்கும் என் தந்தைக்கும் பொழுதுபோகாது. அமைதியாக கால்களை மடித்தவண்ண மிருந்துகொண்டு அவன் உலகப் புதினங்களைச் சொன்னது இன்று கூட நினைவிருக்கிறது.

"கல்வி ஆர்வமுள்ள பெரிய குடும்பமொன்றில் பிறந்திருந்தால் அவன் நிலையேவேறு" என்று அடிக்கடி என் தந்தை சொல்வார். உண்மைதான்!

தலையில் ஒரு துண்டைக் கட்டி, நெற்றியில் துலங்கத் திருநீறிட்டு அதன்மேல் சந்தன திலகமும் இட்டுக் கொண்டு அவன் ஆசனப் பலகையில் உட்கார்ந்த பாட்டுப்பாடியபடியே மாடு களை ஓட்டுவது கண்கொள்ளாக்காட்சி.

என் தந்தை அவனுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுத்து வந்தார். அவன் அவற்றில் தன் செலவுபோக மீதியை என்னிடம் தந்துவிடுவான். நான்தான் அவன் வங்கி என்று கூடச் சொல்லிவிடலாம்.

6

மாணிக்கம் விகாகம் செய்துகொண்டான்.

அவன் மனைவி அழகி என்று கூறமுடியாவிட்டாலும் கிராமப் பெண்களுக்கே உரிய தான கடைந்தெடுத்தது போன்ற தேக அமைப்பும், உடல் வலுவும் கொண்டவளாய் இருந் தாள்.

மாணிக்கத்திற்கேற்ற நல்ல சோடி. கலகலப்பான பேச்சும். சலியாத உழைப்புத் திற னும்,அடக்க ஒடுக்கமும் கொண்ட பெண். முன்கோபியான மாணிக்கம் அடிக்கடி அவளைக் கோபித்துக் கொள்வான். அவன் கோபம் என்ற தீங்கு அவளுடைய அமைதியான பதில்களும், மயக்கும் சிரிப்பும் நீராக அமைந்தன. அவள் அவனை மயக்கிவிட்டாள். அவன் அவளின் கைப்பாவை போலானான் என்றும் சொல்வதற்கில்லை. ஏன்?

அவன்தான் தனித்துவம் வாய்ந்த பிறவித் தலைவனாயிற்றே! பொதுவில் சொன்னால் புயலற்ற அமைதியான கடலிற் செல்லும் படகு போன்று, அவர்கள் வாழ்க்கை அமைதியாகச் சென்று கொணடிருந்தது.

7

அன்று மாணிக்கம் என்னிடம் வந்து தான் கொடுத்திருந்த பணத்தைத் தருமாறு கேட் டான். எனக்கு ஆச்சரியமாயிருந்தது.

அடுத்த மாதம் வரும் பணத்தையும் சேர்த்துத் தன் மனைவிக்கு ஒரு நேரடி வளையல் செய்து போடவேண்டுமென்று சொல்லியிருந்தான். சடுதியாக இன்றைக்கு ஏன் கேட்கிறான்? எனக்கு விளங்கவில்லை.

"ஏன்" என்று நான் கேட்ட கேள்விக்கு அவன் சரியான பதில் அளிக்கவில்லை. இன்னும் இரண்டு கிழமையால் வந்து சொல்கிறேன். தம்பி! என்று சொல்லிவிட்டு, அதுவரை சேர்த்து வைத்திருந்த இருநூறு ரூபாயையும் வாங்கிக் கொண்டு அவன் போனான்.

இரண்டு கிழமை அவனை ஊரிற் காணவில்லை. உழவேண்டிய காலம், அவனுக்காக எல்லாம் பின்போடப்பட்டிருந்தன. என் தந்தைக்கு அவன் மீது கோபம் கோபமாய் வந்தது. "எங்கோ போனான் ஏன் போனான்?" என்று யாருக்குமே தெரியாது. மனைவியைக் கேட்டபொழுது அவளும் "தெரியாது இன்னும் இரண்டுகிழமையில் வந்துவிடுவேன் பத்திரமாய் இரு" என்று மட்டும் சொல்லிவிட்டுப் போனார்" என்று கையை விரித்தாள்.'

வீட்டில் இரவில் அவனைச் சுற்றி உட்கார்ந்து கேட்கும் புதினங்கள், இல்லாமற் போயின. வீடு கலகலப்பற்றுக் காணப்பட்டது. அவன் மனைவியைவிட, நாங்களே அவன் வருகையை நிமிசந்தோறும் எதிர்பார்த்திருந்தோம் என்று சொல்லவேண்டும்.

அவன் வந்தான். "மோட்டோர்கார்" செலுத்தும் பயிற்சி பெற்றதற் அடையாளமான அத் தாட்சிப் புத்தகத்தோடும், ஏதோ கோட்டையைப் பிடித்து விட்டோமென்று சொல்லக் கூடிய குதூகலத்தோடும் அவன் வந்தான்.

எங்கள் புதினப்பத்திரிகை ஒரு கிழமை வரை, தான் "கார்" ஓட்டப் பழகிய பிரதா பங்களை வர்ணனைகள், அணிகள், உவமைகள் ஆதியாம் உத்திகளுடன் வெளியிட்டுக் கொண்டிருந்தது. சலிப்பின்றி அவனைச் சூழ்ந்திருந்து முன்போல அவற்றைக் கேட்பதில் நாங்கள் ஆர்வத்தைக் காட்டினோம்.

அவன் எங்களிடமிருந்து பிரிந்து செல்லப் போகிறான் என்று நாங்கள் நினைத்தோமா? அவன் அதற்காக ஒரு சூசகத்தைக் கூட வெளியிடவில்லையே!

ஆயினும் முன் போலின்றி அவன் அடிக்கடி கிராமத்தை விட்டு வெளியேசென்று ஒரு நாள், இருநாள்,தங்கி வருவது இயற்கையாகிவிட்டது.

இவன் எங்கே போகிறான்? இது யாருக்குமே விளங்காத ஒரு புதிர். அவனைக் கேட் டால் அவன், விசயத்தைச் சொல்லாது மழுப்பிவிடுவான். வாழ்க்கை முழுதும் உண்மையே பேசிவந்த ஒருவன், பொய் பேசிக் விசயத்தை மழுப்புகிறான் என்பதை அறிவதற்கு, கஷ்டப்பட வேண்டியதே இல்லையன்றோ?

8

ஒரு நாள் மாணிக்கம் எங்கள் தந்தையிடம் வந்து தான் வேலையை விடப்போவ தாகவும் பட்டினத்தில் யாரிடமோ சாரதி வேலையில் அமரப் போவதாகவும் கூறினான். இதற்குத்தானோ அடிக்கடி வெளியே போய்வந்து கொண்டிருந்தான்? நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை.

ஆயினும் தந்தை அவன் முன்னேற்றத்தைத் தடை செய்யவிரும்பவில்லை. அப்படித் தான் தடை செய்தாலும் அவன் நிற்பானா? எப்பொழுதும் முன்னேற்றம் முன்னேற்றம் என்று அவாவிக் கொண்டு சுதந்திர வானிலே பறந்து திரியும் சிட்டுக்குருவியல்லவா அவன்?

தந்தை ஒரு இருபத்தைந்து ரூபாயை அவனிடம் கொடுத்து சில புத்திமதிகளையும் கூறி அனுப்பிவைத்தார். அவன் அவரை வணங்கிவிட்டுச் சந்தோசத்தோடு சென்றான்.

எங்கள் வீட்டில் இனி கழியப்போகும் இரவுகள் மாணிக்கமின்றியே கழியும். உலகப் புதினங்களை இனி எங்களுக்குச் சொல்வார் யார்?

அம்மா பெட்டி இழைத்துக் கொண்டிருக்க, தந்தை புகையிலைய வார்ந்து சுருட்டு சுருட் டிக் கொண்டிருக்க மாணிக்கம் மாடுகளுக்கு ஓலை கிழித்தபடி இருந்து மினுமினுக்கும் மண்ணெண்ணெய் விளக்கில் உலகப் புதினங்களையெல்லாம் சொல்ல, நான் புத்த கத்தையும் மூடிவிட்டுத் திறந்து மூடாமல் அவற்றைக் கேட்பது இனி எக்காலம்.

மாணிக்கம் போய்விட்டான். எங்கள் உள்ளங்களிலெல்லாம் அன்பென்னும் விதை விதைத்துவிட்டுப் போய்விட்டான்.

இனி அடிக்கடி அவனைக் காணமுடியாது. தன் புருசத்துவத்தால் சூழ இருந்தவர்களை யெல்லாம் கவர்ந்த அவன் எங்கோ யாருக்கோ தொண்டு செய்யச் செல்கிறான்.

மாணிக்கம் அமைதியான கிராம வாழ்க்கைகயையும் தூய்மையான வரும், உன் மீது பாசம் கொண்டவருமான மனிதரையும் விடுத்து நீ செல்கிறாய். பட்டின வாழ்க்கையில் வஞ்சகமும், கோழைத்தனமும் கொண்ட பாம்புகளும் நரிகளும் நிறைந்த சூழலில் நீ வசிக் கப் போகிறாய். உன்னைக் கடவுள் காப்பாற்றட்டும்.

மழை பெய்துவிட்ட ஒரு மாலைப் பொழுதில் வண்டியில் ஏற்றிய சாமான்களுடனும், தன் மனைவியோடும் அவன் அக்கிராமத்தைவிட்டுச் சென்றான். இலட்சியத்தின் அந்தத்தையே அடைந்துவிட்டோமென்ற பெருமை அவன் முகத்திற் பிரதிபலித்தது.

பட்டினவாசியான புதிதில் சில கடிதங்கள் அவனிடமிருந்து எங்களுக்கு வந்தன. பின்பு அவையும் நின்றுபோக, எங்கள் தொடர்பு சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டு வந்தது.

9

இரண்டு வருடங்கள் கழிந்தன. புதுமையற்றும் அர்த்தமின்றியும் சலிப்புடன் கழிக்கப் பட்டன இவ்விரண்டு வருடங்களும்.

ஒருநாள் யாவரும் அதிசயிக்குமாறு மாணிக்கம் பழையபடி தன் பொருள்கள் ஏற்றிய வண்டியோடு தன் மனைவியோடும் கிராமத்திற்கு வந்தான்.

அவன்தான் எவ்வளவு மாறியிருந்தான். இயற்கையின் மடியில் வளர்ந்த கிராமப் புதல்வன் மாணிக்கம் அல்ல இவன். இவன் நாகரிக புருசன். மாணிக்கத்தின் காதுகளை அலங்கரித்த கடுக்கன்களைக் காணவில்லை. வேட்டி "சேட் கோட்" டுகளுடன் முற்றிலும் புதிய ஒருவனாகக் காட்சியளித்தான். அவன் மனைவிகூட மாறியிருந்தாள். கோணல்வகிடும் முன் கொய்சகமுமாக ஒரு நாகரிக யுவதியாக, பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக, எங்கள் முன் நின் றாள் அவள். முந்தைய கலகலப்புப் போய், வார்த்தைகளை அளந்து பேசுபவளாயும், அலட் சியம் குடிகொண்ட பார்வையினளாயும் அவள் மாறிப்போயிருந்தாள்.

மாணிக்கம் தம்பதி பழைய வீட்டிலே மீண்டும் குடியேறியது. பழையபடி எங்கள் வீட்டிற் கலகலப்பு உண்டாகுமென்றும் எங்கள் வண்டியின் ஆசனப்பலகை மாணிக்கத்தால் அலங் கரிக்கப்படும் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் அந்த எண்ணம் வெறும் கனவாய்ப் போய் விட்டது. மாணிக்கம் உடையால் மட்டுமன்றி மனத்தாலும் எவ்வளவோ மாறிப்போயி ருந்தான்.

கிராமத்திற்கு வந்த அன்றே மாணிக்கம் எங்கள் வீட்டிற்கும் வந்தான். ஆள் எவ்வளவு தான் மாறியிருந்தாலும் அவனுடைய சிரிப்பிலே முன் இருந்த மயக்கம் இப்போதும் இருக்கத் தான் செய்தது. நாங்கள் அவனைப் பற்றிக் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்கள் யாவும் அவன் சிரிப்பொன்றினாலே தவிடுபொடியாயின.

"பழையபடி வயல்வேலை முதலியவற்றைச் செய்து கொண்டிரு" என்று என் தந்தை அவனைக் கேட்டபோது அவன் சொன்ன பதில் அதிர்ச்சி தருவதாய் இருந்தன.

"வெயில் கானலென்று பாராது அல்லற்பட என்னால முடியாது. நிழலிலிருந்து உல்லாச மாகச் செய்யக்கூடிய வேலைகள் எவ்வளவோ இருக்க கஷ்டம் நிறைந்த வயல் வேலை வண்டியோட்டுதல் போன்ற வேலைகளை நான் ஏன் செய்ய வேண்டும்?"

சில நாட்களில் பஸ் கொம்பனி ஒன்றில் "பஸ்" சாரதியாக மாணிக்கம் அமர்ந்து கொண் டான். பகட்டான சீவியம் சீவிப்பதில் அவனுக்கு ஏனோ ஒரு ஆவல்?

10

நாட்கள் உருண்டன.

எவ்வளவுதான் உறுதிமனப்பான்மை கொண்டவனாயினும் அடிக்கடி நிறம்மாறும் பச்சோந்தித் தன்மை கொண்டவனாயிருந்தான் மாணிக்கம்.

அவன் சமதர்ம வாதியாக மாறிவிட்டான். பகட்டுச் சீவியத்திற்குத் தலை முழுகிவிட்டு, எந்நேரமும் சிந்தனை செய்பவனாக அவன் மாறத் தொடங்கினான்.

எந்நேரமும் நெற்றியை அலங்கரித்து வந்த திருநீறு சந்தனம் என்பவை இப்போது காணக்கூடாதவையாயிருந்தன. மாணிக்கத்தை அது பற்றிக்கேட்ட பொழுது மதம் மக்களுக்கு அபினி போன்றது என்றும், அதன் சின்னங்களை அணிவது தனக்கு வெட்கமாயும் அவமான மாயும் இருக்கிறது என்றும் அவன் கூறினான்.

செஞ்சடை, தாடி வளர்ப்பு எதையும் எடுத்தெறிந்து பேசும் பேச்சு போன்ற ஒரு சமதர்ம வாதிக்குத் தேவையான இலக்கணங்கள் யாவும் அவனிடம் குடிகொள்ளத் தொடங்கின.

நல்லகாலம்! சிந்தனையின் பட்டறை என்று கூறப்படும், கார்ல் மாக்ஸை எல்லா வழிக ளிலும் பின்பற்றுகின்றோமென்று, அவரிலுள்ள குறைபாடான மதுபானஞ் செய்தல் போன்ற வற்றையும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றும் அதிதீவிர சமதர்மவாதியாக மாணிக்கம் மாறிவிடவில்லை. அதுவரையிற் சந்தோசம்தான்!.

11

ஒருநாள் மாணிக்கம் வீட்டிற்குச் சென்றேன். அவனுடைய சமதர்ம எண்ணங்கள், கொள்கைகள்யாவும்அங்குள்ளபொருள்கள்ஒவ்வொன்றிலும் காணக்கூடியனவாயிருந்தன.

அறையின் கதவின் மேற்சுவரில் சமதர்மத்தின் அடையாளமான, அரிவாளும் சம்மட் டியும் தீட்டப்பெற்றிருந்தன. அத்துடன் மாக்ஸ் லெனின் ஆகியோரின் படங்கள் மாட்டப்பட்டி ருந்தன.

தொழிலாளி வர்க்கம் வாழ்க! முதலாளித்துவம் வீழ்க! என்ற வார்த்தைகள் பெரிய எழுத்துக்களில் சுவரை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

சமதர்ம வாதிகளின் பாசறை ஒன்றில் நுழைந்து விட்டேனோ என்ற ஐயப்பாடு என் உள்ளத்தில் எழுந்தது. இந்த ஐயப்பாடு கேள்வியாக உருவெடுக்கமுன், பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த மாணிக்கம் "வா, தம்பி! வா!" என்று என்னை வரவேற்றான்.

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையுடன் நடந்த நாலு ஐந்து வருடங்களாக மல் யுத்தம் செய்துவரும் எனக்கு மாணிக்கத்தின் அரசியல் தத்துவங்கள் விளங்க நியாயமில்லை. ஆனாலும் அவனும் அவனோடு சேர்ந்த சமதர்மவாதிகளும் ஏதோ ஒரு பெலவீனமான மயிர்ப் பாலத்தில் நடப்பவர்கள் போன்றும்,

உண்மைக்குத் திரையிட்டு மறைக்க முயற்சிப்பவர்கள் போன்றும் எனக்குத் தோன் றின. நான் மௌனமாயிருந்தேன்.

மாணிக்கம் விடவில்லை. அவன் தொடர்ந்து பேசிக் கொண்டே போனான். "கஷ்டம் இன்னதென அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் கனவுலகிற் சீவிப்பவர்கள். தொழிலாளியின் கண்ணீர் அவன் இருதயப் புண்ணின் உதிரமென்று நினைக்கும் மனப்பாங்கு அவர்களிடம் கிடையாது" மாணிக்கம் எவ்வளவு வாசித்திருக்கிறான். ஆனால் குதர்க்கம் செய்வதில் தானே அவன் அறிவு பயன்படுகிறது. எத்தகைய துரதிஸ்டம் என்று வருந்தினேன் நான்.

நான் வெளியே வந்தபொழுது மாணிக்கம் பாரதியாரின் விடுதலையை உணர்ச்சியுடன் முழக்கத்தொடங்கினான்.

12

மாணிக்கம் வேலை செய்து கொண்டிருந்த பஸ் கொம்பனித் தொழிலாளர் யாவரும் வேலைநிறுத்தம் செய்தனர். சம்பள விகிதத்தைக் கூட்ட வேண்டுமென்பது அவர்கள் வேண்டுகோள்.

தொழிலாளிகளும் பிடிவாதமாயிருந்தார்கள். முதலாளிகளும் அவர்களுக்கு மேல் பிடி வாதம் காட்டினார்கள். இரு பகுதியாரும் சிறிதளவு விட்டுக் கொடுத்திருந்தால் சமரசமாகி யிருக்க வேண்டிய வேலை நிறுத்தம் அவர்கள் பிடிவாதத்தால் மிகைப்பட்டுக் கொண்டே வந்தது.

வேலை நிறுத்தம் வாரக் கணக்காக நீடித்தது. இறுதியில் துணிந்த முதலாளி வர்க்கம் வேறு டிறைவர்கள் சிலரையும் பொலிசாரையும் துணையாகக் கொண்டு "பஸ்" ஓட்டத் தொடங்கியது. உயிருக்குத் துணிந்த ஒரு சிலரே பிரயாணஞ் செய்தார்கள். அதைப்பற்றி முத லாளி வர்க்கத்திற்கு என்ன அக்கறை? தனக்கு மூக்கறுபடினும் எதிரிக்குச் சகுனப்பிழை யாயிருந்தால் போதும்" என்பது தானே அதன் குறிக்கோள்.

தொழிலாளிகளுக்கு இது சகிக்க முடியாத ஆத்திரத்தை விளைவித்தது. அவர்களை முன்னின்று நடந்தும் மூலநாயகர்களுள் மாணிக்கமும் ஒருவனாய் இருந்தான்.

தொழிலாளிகள் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் அவன் பின்வருமாறு பேசினான்.

தோழர்களே!

தொழிலாளர்கள் கேவலம் புழுக்களல்ல. அவர்கள் கிருமிகள். முதலாளி வர்க்கத்தைக் கடித்து அவர்கள் உதிரத்தைக் குடிக்கும் சக்தி பாட்டாளிகளுக்கு உண்டு என்பதை நிரூபிக்கச் சமயம் வந்துவிட்டது.

"எழுமின் விழிமின் கருதிய கருமம் கைகூடும் வரை உழைமின்" என்று விவேனாந்தர் கூறியது போன்று நானும் கூறுகிறேன்.

வெற்றிக்கொண்டு கொக்கரிக்கும் முதலாளிவர்க்கத்தை வேரறுக்கச் சமயம் வந்துவிட்டது இன்று நாங்கள் அவர்களுக்கு இடம் கொடுத்தால் நாளை நாம் அழிந்தொழிவது திண்ணம். ஆதலின் வாருங்கள்.

அவனுடைய அந்தச் சிறுபிரசங்கம் தொழிலாளரைத் தட்டி எழுப்பி வீறு கொள்ளச் செய்தது.

13

முன்னுக்கும் பின்னுக்கும் பொலிஸ் வான்கள் காவலாக பஸ் சென்று கொண்டிருந்தது.

கட், தட், தட

கற்கள் வந்து விழுந்தன. ஒரு பிரயாணியின் மண்டை உடைந்தது.

பின்னும் பின்னும் கற்கள் வந்துகொண்டே இருந்தன. பஸ் நின்றது. வான்களும் நிறுத்தபபட்டன.

பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகம்.

துப்பாக்கியின் வேட்டுச் சத்தம் கேட்டதுதான் தாமதம். கல்லெறி நின்றது. கல்லெறிந்தவர்கள் உயிர் தப்பினாற் போதும் என்று ஓடத் தொடங்கினார். மாணிக்கத்தின் உணர்ச்சிப் பிரசங்கம் மலையிலிருந்து வேகத்துடன் வந்த அருவி, தரையில் அமைதியாக ஓடுவதுபோன்று அந்நேரம் உணர்ச்சியைத் தந்து சாவைக் கண்டதும் ஓடுமாறு தொழிலாளர்களைத் தூண்டியது.

மாணிக்கம் ஓடவில்லை. சிம்மம் போன்று நிமிர்ந்து நின்ற அவன் மார்பகத்தைப் பொலிசாரின் துப்பாக்கி வேட்டு ஊடுருவிச் சென்றது.

அவன் அமைதியுடன் தொழிலாளர் வாழ்க என்று கோசித்து யாழ்ப்பபாணத்தின் கௌரவத்தைக் காப்பாற்றி, மண்ணை முத்தமிட்டான். தியாகம் வாய்ப்பேச்சில் தான் செயலில்லை. இது யாழ்ப்பாணத்துக்கே உரிய பண்பு என்று நிருபிப்பார் போன்று மாணிக்கத்துடன் வந்தவர்கள் அவன் விழுந்ததையும் கவனியாது தலைதெறிக்க ஓடினர். இவர்கள் தாம் தியாகிகள். மாணிக்கம் மாணிக்கமாய்ப் பிறந்து மாணிக்கமாய் வாழ்ந்து மாணிக்கமாய் மரணத்தை அரவணைத்தான்.

◆◆◆

என் சிந்தனை கலைந்து நான் எழுந்திருந்தபோது,

"பாவிகளால் பரதேசம்
பறந்தோடிப் போனாயோ
ஆவி துறந்தாயோ
அருமை மணவாளா"
என்று மாணிக்கத்தின் மனைவி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள்.

ஈழகேசரி - 27.08.1950

பொன் பூச்சு

சொக்கன்

நீண்ட காலத்தின் பின் நானும் விசுவநாதனும் ஒருவரையொரு வர் சந்தித்துக் கொண்டோம். அவனுடைய மாறுதலைக் கண்டு நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போனேன்.

ஒரு சிறு குடிசை. அதனுள் ஒரு மேசையும், உடைந்துபோன நாற்காலியும், மேசையின் மேல் அப்போதுதான் வெறுமையாக்கப்பட்ட மதுக்கிண்ணம் கவனிப்பாரற்றுக் கிடந்தது. யௌவனத்தின் பொலிவு டன் கம்பீரமாயிருந்த விவநாதன் தானா இவன்? தாடி மீசையுடன், ஒட்டியுலர்ந்த முகமுடைய எலும்புக் கூடொன்றல்லவா என் முன் காட்சியளிக்கிறது! ஆச்சரியத்தை மீறித் துக்கந்தான் முதலில் வந்தது. வெறியால் சிவப்பேறிய கண்களுடன், முகத்தில் புன்னகை தவழ அவன் என்னை வரவேற்றான். ஆனால் அந்தச் சிரிப்புக்கூட பலாத் காரமாய் வரவழைக்கப்பட்டது தானென்பதை எனக்கு ஊகிக்க அதிக நேரம் செல்லவில்லை.

"தேவதையை நான் தரிசிக்க விரும்பினேன். அந்தத் தேவதை, பிசாசால் மறைக்கப்படுமென நான் காத்திருக்கவில்லை" என்

றேன். விசுவநாதன் 'கலகல'வென்று சிரித்தான். அவனுடைய சிரிப்பு அசுரச் சிரிப்பாயிருந்தது. 'துக்கம் அளவு மீறிப்போகும் பொழுது மனிதன் தன்மைகளும் மாறிவிடுகின்றன. "இதில் ஆச்சரிப்படுவதற்கு ஒன்றுமில்லையே?" என்றான்.

"இருக்கலாம். ஆனால் உனக்கு அப்படியாகத் துக்கம் வரக் காரணம் இல்லையே?"

'சற்குணன் பெருந்தன்மையுள்ளவன், செல்வந்தன் என்றெல்லாம் ஒரு காலத்தில் நான் புகழப்பட்டேன். எனது அந்தஸ்தென்னும் பலிபீடத்தில் ஒரு பெண்ணின் வாழ்க்கை பலியாக் கப்பட்டது. எதற்காக? அப்பெண்ணின் நன்மைக்காகவா? இல்லை; எனது கௌரவம் காப் பாற்றப்படுவதற்கு! என் சுயநல வெறியில் மணந்தந்த மலரொன்றைக் கசக்கித் தூர எறிந் தேன். நான் செய்த குற்றத்தை இன்று உணர்கிறேன். அந்த உணர்ச்சி என்னை நிம்மதி யற்றவனாகச் செய்கிறது. எனது இருதயத்தில் கொழுந்து விட்டெரியும் துக்காக்கினியை அவிக்கும் அருவி இந்த மதுதான்" என்று சொல்லிப் புட்டியிலிருந்த மதுவைக் கிண்ணத்தில் ஊற்றினான்.

"மதியை மயக்கும் சக்தி மதுவுக்குண்டு; தெளிவாக்கும் சக்தி அதற்கில்லையே" என்றேன்.

"மதி மயங்கியிருப்பதால் எனது சிந்தனைக்கு வேலையற்றுப் போகிறது" நிம்மதியா யிருக்கிறேன். ஒரு நாளைக்கு எத்தனை தரம் குடிக்கிறேன் என்பது எனக்கே தெரியாது. நான் நிம்மதியற்றிருக்கும் நேரத்தில், நடந்தவைகளைச் சிந்திக்க நேரிடும் சமயத்தில் மது எனக்குப் பிரயோசனமாகிறது" என்று அவன் சொன்னான்.

"உனது துக்கத்தைக் கிளறும் சம்பவத்தை நானும் அறியலாமா?" என்று கேட்டேன்.

"நீ விரும்பினால் சொல்லுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினான்.

"அவ்வருடம் வைத்திய பரீட்சைக்கு எழுதிவிட்டு, எனது கிராமத்துக்குப் போயிருந்தேன். எனது பெற்றோருக்கு அளவு கடந்த சந்தோஷம், பட்டின வாழ்க்கை எனக்குச் சலித்துப் போயி ருந்தது. நாள் முழுதும் பச்சைப் பசிய வயல்களின் வரப்புக்களில் உலாவுவேன். ஆரம்பத்தில் குளத்தில் குளிப்பது எனக்குப் புதுமையாயிருந்தது. நாட் செல்லச் செல்ல ஸ்படிகம் போன்ற அந்த நீரில் குளிப்பதைவிட ஆனந்தம் வேறு ஒன்றும் இல்லையென்று தோற்றியது. காலம் முழுவதும் மோட்டார் சத்தத்தைக் கேட்டுப் புளித்துப் போயிருந்த என் காதுகள், வண்டியில் பூட்டிய மாடுகளின் சலங்கைச் சப்தம் கேட்டு இன்புற்றன. கிராம வாழ்க்கை எனக்கு எவ்வ ளவோ இன்பமாயிருந்தது.

"ஒரு நாள் எங்கள் வீட்டுக்கு ஒரு பெண் வந்தாள். இளமை அவளுக்கு மெருகு பூசியிரு ந்தது. கட்டான தேகம். நெஞ்சுவரை சேலையால் மறைத்திருந்தாள். அதற்கு மேல் மறைப் பதற்கு அவளுக்குச் தகுதியில்லை. ஏனென்றால் அவள் தீண்டாச் சாதியைச் சேர்ந்தவள்.

"நெல் குத்துவதும், வயலிலிருந்து புல்லுச் சுமப்பதுந்தான் அவளுக்கிடப்பட்ட வேலை கள். அவள் வந்த நாள் தொடக்கம் என் மனம் ஒரு நிலையிலில்லை. அவள் அழகொழுகும் முகத்தைப் பார்த்து மெய்மறந்து நிற்பேன். நாட் செல்லச்செல்ல அவளும் கடைக்கணித்தாள். சொல்ல வேண்டுமா? இருவரும் அன்பால் பிணைப்புண்டோம். எத்தனை நாள் அவள் முகம் சிவக்கச் சிவக்க இரக்கமின்றி பின்னும் பின்னும் முத்தமிட்டிருப்பேன்! நிலா மலர்ந்த

எத்தனையோ இரவுகளில் எங்கள் வருங்காலத்தைப் பற்றிச் சிந்தித்திருப்போம். அவை யெல்லாம் இன்று கனவுகளாகிவிட்டன" என்று சொல்லி கிண்ணத்திலிருந்த மதுவை ஒரு முறை சுவைத்தான். பின்னும் கூறினான் :

"அவள் கர்ப்பவதியானாள். கன்னியாயிருந்த அவள் கர்ப்பவதியானது எவ்வாறு? - என்று வீட்டிலுள்ளவர்கள் முணுமுணுத்தார்கள். நான் மெதுவாய் விஷயத்தை வெளியிட்டேன். அப்பாவுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! என்னையும் அவளையும் தாறு மாறாகப் பேசினார். அத்துடன் விட்டாரா? அவளை எங்கேயோ துரத்திவிட்டார்! நான் பெலவீனனாய் விட்டேன். என்னுடைய அந்தஸ்தைக் கருதிய போது அவள் நாடு கடத்தப்பட்டதை யிட்டுச் சந்தோஷமுற்றேன். "கடைசிவரை உன்னைக் கைவிடமாட்டேன்" என்று எந்தச் சந்திரனைப் பார்த்து அவளுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்தேனோ, அதே சந்திரன் தன் பூரணப் பொலிவுடன் என்னை ஏளனம் பண்ணிக் கொண்டிருந்தான்."

இதைச் சொல்லியதும் சூனிய திருஷ்டியுடன் ஆகாயத்தை ஒருமுறை அவன் பார்த்தான்; மீதியிருந்த மதுவை உட்செலுத்தினான். கதை தொடர்ந்தது.

"இரண்டு வருடங்கட்குப் பின் .... நான் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் வைத்தியராக இருந்தேன். ஒரு நாள் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டு வரும் பொழுது... திகைப் பூண்டை மிதித்தவன் போலிருந்தது, என் நிலைமை! மயக்கம் வரும்போலிருந்தது. அவள் - என்னால் பாழாக்கப்பட்ட அதே பெண்தான் எலும்பாய்க் கிடந்தாள். மதியை மயக்கும் அந்த மலர் முகம், இன்று காய்ந்து கருகிக் குழி விழுந்திருந்தது. பார்க்கச் சகிக்கவில்லை. கிட்டப் போனேன். என்னைக் கண்டதும் அவள் மறுபக்கம் திரும்பி விட்டாள். ஏன் பார்க்கிறாள்? தன் வாழ்க்கையைப் பாழாக்கிக் காலமெல்லாம் உழன்று திரியச் செய்த துரோகியைப் பார்த்துக் கடைசிச் சமயத்தில் பாவமூட்டையைச் சுமப்பதா? நான் ..... வந்துவிட்டேன்.

"வீடு வந்தேன். எதைக் கண்டாலும் அவள்தான் என்று பயந்தேன். அன்று தொடக்கம் நிம்மதி என்பக்கம் தலைகாட்டவில்லை. மறுநாள் நோயாளரைப் பார்க்கப்போன பொழுது அவள் இருந்த இடம் வெறுமையாயிருந்தது. விசாரித்ததில் அவள் அன்றிரவே இறந்துவிட்டாளென்றும், பிரேதத்தை அப்புறப்படுத்தியாயிற்றென்றும் சொன்னார்கள். வைத்தியசாலையே இடிந்து என்மேல் விழுந்தது போலிருந்தது. என்னுடைய பாதகத்தன்மை கூரிய அம்பு போல் என் உள்ளத்தில் தைத்தது. மலருடன் சேர்ந்து மணம் பிறக்கிறது; மலர் காய்ந்து கருகி உதிரும் போது மணமும் அற்று விடுகிறது. ஆனால் வண்டு மலரில் இருப்பது தேன் பெறும் வரையில் தானே?

வைத்தியப் பதவியை அன்றைக்கே துறந்தேன். இப்படி ஏகாந்தத்தில் வந்துவிட்டேன். உலகம் என்னை மாற்றுயர்ந்த பசும் பொன்னென்று நினைத்தது. ஆனால் 'மின்னுவதெல்லாம் பசும் பொன்னல்ல,பொன்பூச்சிட்ட பித்தளையுந்தான் மின்னுகிறது"என்பதை உணரவில்லை."

போத்தலிலிருந்த மதுவை கிண்ணத்தில் பின்னும் ஊற்றினான் விசுவநாதன். நான் மௌனியானேன். நான் வெளியே வந்த பொழுது அவன் கிண்ணத்திலுள்ள மதுவை மடமடவென்று குடிக்கும் சத்தம் கேட்டது.

மறுமலர்ச்சி
ஐப்பசி - 1946

கனவுக் கோவில்

சொக்கன்

கைமுனுவுக்குப் படுக்கை கொள்ளவில்லை. அவன் பட்ட மகிஷி மஞ்சத்தில் நிம்மதியாயுறங்கிக் கொண்டிருந்தாள். அவனுக்கு மட்டும் அந்த நிம்மதி கிடைத்தபாடில்லை. மரணத்தின் ரேகை அவன் ஒவ்வொரு அங்கத்திலும் படிந்திருந்தது.

கைமுனு எழுந்தான். அவன் கால்கள் தள்ளாடித் தள்ளாடி நிலா முற்றத்தை அடைந்துவிட்டன.

நிறைமதியின் குளிர் கிரணங்கள் அனுராதபுரியின் கோட்டை களில் படிந்து ஒரு புதுவித சோபையை அவற்றிற்கு அளித்தன. நிலவின் போதையில் ஆழ்ந்து உலகம் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. நீலவானை அழகு செய்த தாரகைக் கும்பல்களையாவது, மலர்களின் மணத்தில் படிந்து இன்பகரமாய் வீசிய வசந்தகாலத் தென்றலையாவது கவனிப்பவர் எவருமில்லை.

அவன் மயங்கிய கண்கள் அதை நோக்குகின்றன. ஏன் அவன் முகத்திற் சோகப் பாசி படர்கிறது?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் இறுப்பது போன்று தூரத்தில் ரூவான்வெலி சமாதி காட்சி அளித்தது. நிலவின் ஒளியிலே தெரிந்த பாதி முடிக்கப்பட்ட அந்தக் கட்டிடம் அவன் கண்களை உறுத்தியது போலும்...

பனிவரையிலிருந்து ஓடும் நீரூற்றுப்போன்று கிழஅரசனின் பால்போல் வெளுத்த தாடியின் வழியாகக் கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது: அவன் குழந்தை போல் தேம்பித் தேம்பி அழுதான். அவன் தேகம் நடுங்கியது.

"மகாராஜா" என்ற குரலைக் கேட்டுத் திரும்பிப்பார்த்தான். பட்டமகிஷி பக்கத்தில் நின்றாள். "மகாராஜா! எவ்வளவு நேரமாக இங்கிருக்கிறீர்கள்"என்று அவள் கேட்டாள்.

"தேவி! மகாராஜா என்று சொல்லிச் சொல்லி என் பிராணனை வாங்காதே நான் வெகு சாதாரணன். அந்தத் தகுதியைத்தாங்க நான் அருகதையற்றவன்" இதை அவன் சொன்னான். அவன் குரலில் ஆழ்ந்த துக்கத்தின் சாயல்.

அவளுக்கு ஆச்சரியமாகவிருந்தது. "சுவாமி! அப்படி உங்களுக்கு என்னதான் நேர்ந்துவிட்டது. ஈழத்தின் ஏகசர்க்கரவர்த்தியா இவ்விதம் கூறுவது?"

அரசன் சிரித்தான். ஏமாற்றத்தால் சூழ்ந்த அவன் உள்ளாக்கினி சிரிப்பாக வெளி வந்தது. அக்கனலின் வெம்மையைத் தாங்க முடியாது போன்று அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

தேவியின் ஆச்சரியம் இன்னும் பன்மடங்காயிற்று. "ஏதோ புதிர் போடுகிறீர்களே! விஷயம் ஒன்றுமாய் விளங்கவில்லையே?" அவன் கரங்களை அவள் பற்றினாள். அவை மிகவும் குளிர்ந்து மிருதுவாயிருந்தன. போர்க்களத்தில் வெல்லற்கரிய எல்லாளனை வென்று வாகை மாலை சூடியபோதும் அவன் கரங்களை அவள் பற்றியிருக்கிறாள். ஆனால் அன்றைக்கும் இன்றைக்கும் எவ்வளவு வித்தியாசம். இளமையின் வைரம் பாய்ந்த முரட்டுத் தன்மையிருந்தது. அந்தக் கரங்களில்! இன்று பிணியால் மூடுண்டுள்ள ஒருவன் கரங்களையல்லவா அவள் பிடித்திருக்கிறாள்? இந்தச் சிந்தனைக்கு முடிவு ஏற்படுவது போல் அவள் கரங்களில் சில கண்ணீர்த்துளிகள் விழுந்தன. வெப்பமான அக்கண்ணீர்த்துளிகளைக் கண்டு பிரமிப்படைந்த அவள் அரசனை நோக்கினாள்.

இவற்றையெல்லாம் கைமுனு கவனிக்கவில்லை. அவன் பைத்தியக்காரர் போல் பேசிக் கொண்டே போனான். தேவி! என்னால் முடியாத காரியமில்லை. நான் அரசன் என்று ஒரு காலத்தில் இறுமாந்திருந்தேன். என் இறுமாப்பும் வீண் போகாமல் நான் எடுத்த காரியங்களெல்லாம் வெற்றி மேல் வெற்றியையளித்தன. ஆனால் இன்று நான் ஒரு சாதாரண மனிதனிலும் கீழானவன் என்ற உண்மை புலனாகிறது. என் கனவுக்கோவில் என்னுடனேயே அழிந்துபோக வேண்டியதுதான். அதோ பார் ரூவான்வெலி சமாதியை அரைகுறையாயிருக்கும் அதைப் பார்க்கப் பார்க்க என் துக்கம் மேலிடுகிறது. என் முன்னிருந்த அரசர்களின் பிரதாபங்களெல்லாம் நான் கட்டும் இதன்முன் மண்டியிடப் போகின்றன என்று நினைத்தேன். ஆனால் புத்ததேவன் என்னை இவ் விதமாகச் சோதனை செய்கிறான். அதற்கு மேல் பேச முடியாதபடி அரசன் நா தழு தழுத்தது.

பட்டமகிஷிக்குப் பின்னும் பொறுக்கக்கூடவில்லை. அவன் கண்களும் கலங்கின. "சுவாமி! தாங்கள் மனம் கலங்கலாமா?தங்கள் பிணி மாறித் தங்கள் கனவும் நிறைவேறாமற் போகப் பேகிறதா? பனிபெய்யும் இவ்விடத்தில் இருந்தால் உடம்பு என்னத்துக்காகும் வாருங் கள்!" என்று அழைத்தாள்.

"எனக்கு அந்த நம்பிக்கை எப்போதோ போய்விட்டது. இன்னும் ஒரு நாளோ, இரண்டு நாளோ என் உயிர் தங்குவதும் சந்தேகந்தான். அதற்குள் இந்த உடலுக்கு இந்திரபோகம் வேறேயா?" அவன் வதனத்தின் புன்சிரிப்பு இழை ஓடியது. எழுந்து நடக்க முயன்றான். கூடவில்லை. பட்டமகிஷியின் தோளின் உதவி கொண்டு மெது மெதுவாய் நடந்து சயன அறைக்குச் சென்றான். அறையில் தீபம் ஒன்று மங்கி மங்கி எரிந்து கொண்டிருந்தது. எந்த நிமிஷத்தில் அது அணைந்து விடுமோ? யார் கண்டார்?

"இந்தத் தீபத்தின் நிலையில்தான் நானும் இருக்கிறேன்" என்று அவன் சொன் னான். அவன் கண்களில் நீர் ததும்பிற்று. அந்த நிலையில் அரசனைப் பார்க்க வெகு பரிதாப மாயிருந்தது.

"நிம்மதியாய் உறங்குங்கள்" என்று சொல்லி பட்டமகிஷி அவனை மஞ்சத்தில் படுக்கவைத்தாள். சிறிது நேரத்தில் அவளும் தூங்கி விட்டாள்.

ஆனால் அவன்...! சாளரக் கம்பி வழியாக நிலவின் கிரணங்கள் அறையுள் தெறித்தன. பழைய ஞாபகங்களும் அவன் உள்ளத்தில் தெறித்துக்கொண்டிருந்தன. இரவு முழுவதும் சிந்தனைக் கடலிலேயே மூழ்கியிருந்தான்.

விஷமக்காரச் சிறுவன் கைமுனு: வீரனாக வேண்டித் தந்தையை எதிர்த்த துட்டகை முனு; போர்க்களத்தில் வாகை மாலைசூடிய வீரன் கைமுனு. புத்ததேவனின் பக்தன் கைமுனு; தன் மகன் நீசப் பெண்ணை மணந்தானென்று அவனுக்கு அரசு ரிமை கொடாத தந்தை கைமுனு. இவ்வெல்லாப் பருவங்களும் அவன் கண்முன் வந்து நின்றன. ஆனால் இப்போதைய பருவம்! முதுமையால் தோல் சுருங்கித் தட தடவென்று நடுக்கத்துடன்....! ஐயோ அதை நினைக்கவே வேண்டாம்.

இவற்றினும் மேலாக அவன் மனத்துக்கத்தில் ஆழ இருந்த காரணம் ரூவான் வெலி சமாதிதான். அதைக் கட்டுவதற்காக அவன் போட்ட திட்டங்களெல்லாம் வெறுங் கனவுகள் தானா?

அடிவானம் வெளுத்தது. தினகரனின் பொன்னிறக்கதிர்கள் உலகைத் துயி லெழுப்பின. முதல் நாள் மலர்ந்த மலர்கள் யாவும் தங்கள் வாழ்க்கையின் சாரத்தை இழந்தவை போன்று வாடிக்கிடந்தன. நேற்று மொட்டுக்களாக விருந்தவை இன்று மலர்ந்து வாழ்க்கை இன்பத்தை நோக்கி ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தன. இரவு அமைதியில் துயின்ற நகரம் இப்போது அமர்க்களப்பட்டது. யாவரும் துயிலெழுந்து தங்கள் தங்கள் கருமங்களை நாடிச் சென்று கொண்டிருந்தார்கள்.

கைமுனு சக்தியற்றுத் தன் மஞ்சத்திற் படுத்திருந்தான். அவன் கண்கள் பொலி விழந்திருந்தன. பேச்சுக்கூட எங்கோ ஆழ்ந்த குகையிலிருந்து எழுவது போன்றிருந்தது.

எல்லாரும் துக்கப்பட்டார்கள். வைத்தியர்கள் அவன் நாடியைப் பார்த்து விட்டு முகத்தைச் சுழித்தார்கள். ஒவ்வொரு விநாடியும் கழிவது ஒரு யுகமாயிருந்தது.

கைமுனுவின் கண்கள் சுற்றியிருந்த சுவர்ச் சித்திரங்களை ஒரு முறை நோக்கின. அங்கே!... அவன் விழிகள் அந்தச் சித்திரத்தில் நிலைத்துவிட்டன.

தந்தை கவந்தீசன் கைமுனுவினதும் கதாதீசனதும் உணவை முப்பிரிவாக்கி ஒவ்வொரு பகுதியையும் தான் சொல்வது போல் சபதம் செய்து உண்ணும்படி கேட் கிறான்.

முதலாவது: சகோதரர் யாவரும் எந்நாளும் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.

அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டு அப்பகுதியை உண்கிறார்கள்.

இரண்டாவது: புத்த பிக்குகளை எந்நாளும் ஆதரிக்க வேண்டும்.

அதற்கும் இணங்குகிறார்கள்.

மூன்றாவது: தமிழருடன் சண்டை செய்யாமல் அவர்களுடன் ஒற்றுமையாய் இருக்க வேண்டும்.

இதற்கு அவர்கள் இணங்காது கோபத்துடன் வெளியேறுகிறார்கள்.

அரசனின் கண்களில் ஒரு புது ஒளி தோன்றியது. நான் இறந்தாலும் என்னை வாழ்விலும் தாழ்விலும் பின்பற்றிய சதாதீசன் - என்தம்பி இருக்கிறானல்லவா? என்று அவன் சிந்தனை அலை பாய்ந்தது. அவன் சதாதீசனை ஏக்கம் ததும்ப ஒரு முறை பார்த் தான்.

சதாதீசன் மனம் கொந்தளித்தது. "அண்ணா! என்ன வேண்டும்" என்று அவனருகில் வந்து நின்றான்.

கைமுனு சொன்னது இவ்வளவுதான். "சதா! ரூவான்வெலி சமாதி!

சதாதீசன் வேகமாய்த் திரும்பினான். அவன் கால்கள் ரூவான் வெலியை நோக்கி வேகமாய்ச் சென்றன.

அந்த மங்கும் நேரம். ஒரு பல்லக்கு ரூவான்வெலியை நோக்கி வந்தது. பல்லக்கின் திரைகள் விலக்கப்படவும் கைமுனு ரூவான்வெலிச் சமாதிப் பக்கம் தன் கண்களைத் திருப்பினான் ஆச்சரியத்தால் அவன் கண்கள் மலர்ந்தன.

நேற்று வரை அரைகுறையாகக் கிடந்த அது இன்று வான முகட்டை எட்டி நின்றது. கைமுனுவின் கனவுக் கோவில் உலகில் சாசுவதமாக இடம்பெற்றுவிட்டது. அவ்வளவுதானே அவன் வேண்டியிருந்ததும்.

அவன் கண்கள் மலர்ந்தன. மலர்ந்தபடியே நின்றுவிட்டன. அவன் முகத்தில் புன்னகை நர்த்தனம் புரிந்தது. மரண தேவதையின் அரவணைப்பில் அவன் நிரந்தரமாய்ச் சரணடைந்து விட்டான்.

திரைச் சீலைகளாலும் மூங்கில்களாலுந்தான் அது முடிவுபெறச் செய்யப்பட்டது என்பதை அவன் அறிந்தானா? ஆனால் அவனளவில் "கனவுக்கோவில்" நிறைவேறிய மாதிரித்தான்.

ஈழகேசரி - 05.01.1947

பொ. கதிராயித்தேவி

மறுமலர்ச்சியில் எழுதிய பொ. கதிராயித்தேவியின் உண்மைப் பெயரை அறியுமாறில்லை. மறுமலர்ச்சியில் இவர் எழுதிய 'சகுந்தலா சொன்னது' சிறுகதை, பரீட்சையில் தோல்வியடைந்து இலக்கிய உலகுக்கு வந்த பிரசித்தம் பெற்ற பெண் எழுத்தாளரின் வாழ்வை மையக் கருவாகக் கொண்டு எழுதப் பட்டது. இவரின் ஒரே ஒரு சிறுகதையே எமக்குக் கிடைக்கப் பெறுகிறது.

❖ சகுந்தலா சொன்னது

சகுந்தலா சொன்னது

பொ. கதிராயித்தேவி

பிரசித்தி பெற்ற பெண் எழுத்தாளரான "சகுந்தலா"வைக் காணும் பாக்கியம் எனக்கு ஒரு முறை கிடைத்தது. அவருடைய கதைக ளை ஒன்றும் தவறவிடாமல் மிகுந்த ஆவலோடு வாசிப்பேன். நான் மாத்திரமென்ன பதினாயிரக் கணக்கான வாசகர்களல்லவா? அவருடைய எழுத்தோவியத்தைப் படித்துப் பரவசமடைகி றார்கள்!

அவரோடு பேசுவதற்குக் கிடைத்த சொற்ப நேரத்தைப் பயன் படுத்திக்கொண்டு, என்னுடைய தீராத ஆசையை அவரிடம் வெளி யிட்டேன்:

"உங்களைப்போல ஒரு சிறந்த எழுத்தாளராக வரவேண்டு மென்பது என்னுடைய பேராவல். அதற்கு வழியென்ன?"

இதைக் கேட்டதும் சகுந்தலாதேவி லேசாகச் சிரித்தார். பிறகு என்னைப் பார்த்து, "நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?" என்று கேட்டார்.

"எட்டாம் வகுப்பில்"

"இங்கிலீஸ்தானே"

"ஆமாம்"

"நல்ல சந்தர்ப்பம். கவனமாகப் பாடங்களைப் படி; பரீட்சையில் திறமையாக எழுது; ஆனால் எப்படியாவது பரீட்சையில் சித்தியடையாமலிருக்க வேண்டும். அதனால் மனதிலே பெரிய ஏமாற்றம் ஏற்பட வேண்டும் ! - இதுதான் சிறந்த எழுத்தாளராவதற்கு வழி!" என்று கூறிச் சிரித்தார் சகுந்தலா.

"நீங்கள் சொல்வது...."

"என்னுடைய அனுபவம்!"

எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சகுந்தலாதேவி கடைசியில் "விஷய"த்தைச் சொன்னார்.

அவர் சொன்னது இது;

சகுந்தலா தனது பதினைந்தாவது வயதில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள்; பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பாள். சிறிது அகன்ற நெற்றியும் குறுகுறுத்த பார்வையும், அறிவில் மற்றவர்களைவிட அவன் மேம்பட்டவன் என்பதைக் காட்டின. நெற்றியிலிருந்த சுருக்கங்களும், கண்மீது கவிந்திருந்த கரிய புருவங்களும் அவளது விடா முயற்சியின் அறி குறிகள். அவள் கல்வியின் அழகைக் கண்ணாரக்கண்டு பருகினாள்; அதிற் காதல் கொண் டாள்.

இரவு பகலாய் உழைத்தாள்; எதற்காக? பரீட்சையின் முடிவில் புகழொடு தோன்று வதற்காக! இதே லட்சியத்திற்காக ருசியுள்ள உணவை உட்கொள்ளத் தவறினான். உட லையே அலட்சியமாகப் பாவித்தாள். வயதிற்குரிய விளையாட்டை மறந்தாள். இயற்கை எழி லின் அழகையும் பாராள். இவளை என்னென்று சொல்லுவது? காட்டிலே கடுந்தவம் புரியும் யோகியா? அல்லது விடுதலைக்காகப் போராடும் தேச சேவகீயா? ஒன்றுமேயில்லை; அவன் லட்சியமெல்லாம் வரப்போகும் பரீட்சைதான் ! "பார்த்த வெளியெல்லாம் பகலொளியாய் மின் னும்" காலைப் பொழுதை மறந்தாள்; "தென்னை மரத்தின் கிளையிடையே போய் வன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச் சென்ற தென்றலை மறந்தாள். "செவ்வொளி வானில் மறைந்த இளந்தேன் நிலவை" வெறுத்தாள். அவள் கவனம் முழுவதும் பள்ளிப்படிப்பிலே சென்றது.

மணங்கமழ் மலர் பூக்கும் வசந்தமும் வந்தது; சென்றது. மறுபடி தேன் சொரியும் காலமும் வந்து சென்றது. இவ்வாறு கால சக்கரம் சுழன்றது. காலத்தின் போக்கை அறிந்தாளா சகுந்தலா?

மழைபொழியும்மாரியும், கூதல்நடுக்கும்கூதிரும்நெருங்கிக்கொண்டிருந்தன. காலக் கடிகாரமும்"டக்டக்"என்றுமெல்லநகர்ந்துகொண்டிருந்தது. பரீட்சைவரும்தினத்தைசகுந்தலா, தனது படிப்பு மேசை மேல் இருக்கும் கலண்டரில் குறித்து வைத்திருந்தாள். தனது நாட்குறிப்புப் புஸ்தகத்திலும் பதிந்து வைத்திருந்தாள். மார்கழி மாதத்தில் திருவெம்பாவைக்காக சங்கு, சேமக்கலம், மணி, சகிதமாய், பண்டாரம் திருவெம்பாவை பாடிக்கொண்டு வீதி வழியே செல்வான். அபஸ்வரமானஅவன்தேவாரம், சகுந்தலாவைப்படுக்கையிலிருந்துஎழுந்திருக்கச் செய்யும். மிகுந்த அலுப்புடன் நீட்டி நிமிர்ந்துகொண்டு எழுந்திருப்பாள். பெரிய கொட்டாவியுடன் கால்முகங்கழுவிக்கொண்டு தனது பாடங்களைப் படிக்க ஆரம்பித்துவிடுவாள்.

அவள் படித்தாள், படித்தாள், படித்தாள் ..." என்னென்னவெல்லாமோ படித்தாள்! அமேசன் நதியின் அகலத்தையும், மிசூறிமிசிசிப்பியின் நீளத்தையும் எத்தனையோதரம் அளந்தாள்! வடதுருவத்துச் ஜனங்கள் தங்களுடைய விளக்கை எப்படி எரிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்தாள்; அமெரிக்காவில் எங்கோ ஒரு மூலையிலே கோதுமைப்பயிரை எப்போது அறுவடை செய்கிறார்களென்பதையும் படித்தாள்; இதைவிட, Aயும் Bயும் 31 நாளில் செய்த வேலையை Cயும் Dயும் 5 நாளில் செய்வார்கள். Aயும் Cயும்... இப்படி ஏதோ மண்டையை உடைத்தாள்.

இவ்வாறு சென்றது அவள் படிப்புக்காலம் பரீட்சைக்காக கல்லூரியின் வாயிலில் "சிர்" என்ற சத்தத்துடன் மோட்டார் வந்து நின்றது. கடவுளை ஒரு முறை சிந்தித்தாள். மறு நிமிஷம் பரீட்சை எடுக்கும் ஸ்தானத்தின் வாயிலைக் கண்டாள். உள்ளே பரீட்சை மண்டபத்துள் சென்று இரண்டோ மூன்றோ பக்கங்களை வரைந்து தள்ளினாள். ஒவ்வொரு கேள்விக்கும் சிறந்த பதில்கள் எழுதினாள். நாலு நாட்கள் சென்றன.

மறுபடி வசந்தம் வந்தது. மாருதம் தவழ்ந்தது. சகுந்தலா ஒரு நாள் தன் கல்லூரி வாசகசாலையில் அடுத்த வகுப்புக்குத் தேவையான ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் வகுப்பு மாணவி ராஜம் மிகுந்த பரபரப்புடன் பிரசன்னமானாள். "என்ன சங்கதி?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள் சகுந்தலா.

ராஜத்தின் பதில் இரண்டே இரண்டு வார்த்தைகள்தான்! "சகுந்தலா... சகுந்தலா பரீட்சையில் தவறி விட்டாள்!"

சகுந்தலாவுக்கு என்னவோ போலிருந்தது. தன்னுடைய கால்களை விட்டு பூமியே நழுவி விடுவது போன்ற ஒரு உணர்ச்சி! உலகம் தன்னைத்தானே சுற்றுகிறதென்பதை அவள் புத்தகத்திலே படித்திருந்தாள். இன்று அதை நேராகப் பார்த்தாள். பிறகு... என்ன நடந்ததோ!

வீட்டிலே படுக்கையில் கிடந்த சகுந்தலாவுக்கு எத்தனையோ பேர் "ஆறுதல் தேறுதல்" சொன்னார்கள்.

பாடசாலை உபாத்தியாயர்கள் கூட, "ஏதோ காலப்பிழை சகுந்தலா உண்மையிலேயே கெட்டிக்காரி, இந்த வருஷம் நிச்சயம் தேறி விடுவாள் !" என்றார்கள்.

அடுத்த வருஷமா?.... சகுந்தலாவுக்கு "ஞானோதயம்" வந்து விட்டது! இனி அடுத்த வருஷமுமில்லை; ஒரு வருஷமுமேயில்லை.

யார் யாரோவெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். சகுந்தலா ஒரேயடியாக மறுத்து விட்டாள். "பள்ளிக்கூடத்துப் படியிலே கால் வைக்க மாட்டேன்" என்று சத்தியம் பண்ணி விட்டாள்.

பிறகு ...

பிறகுதான் மல்லிகையின் மணத்தையும், மாலைப் பொழுதின் லாவண்யத்தையும் கவனித்தாள். "தென்னை மரத்தின் கிளையிடையே சென்று வன்னப் பருந்தினுக்கு மாலையிட்டுச் சென்ற தென்றலை அனுவித்தாள்.

கம்பராமாயணத்தையும், காண்டேகர் நூல்களையும் படித்தாள். பாரதி பாடலை அனுபவித்தாள். மேல் நாட்டு நல்லறிஞர் இலக்கியங்களை ரசித்தாள். எழுத வேண்டுமென்ற ஆவல் தோன்றிற்று. எழுத ஆரம்பித்தாள். புகழ் அரசி அவளைத் தேடி வந்தாள்!

ஸ்ரீமதி சகுந்தலா தேவியிடம் நான் விடைபெற்று எழுந்த போது "இதைக் கேட்டுக் கொண்டு போ: என்னுடைய கதையை நம்பி அசட்டுத்தனமாய் படிப்பைக் கெடுத்துவிடாதே; "ஹஸ்மேனியா" எத்தனையாம் அட்சத்தில் இருக்கிறது தெரியுமா?.... பார்த்தாயா, தெரியவில்லையே! கவனமாகப் படி!" என்றார்!

மறுமலர்ச்சி
ஐப்பசி - 1946

பத்மா துரைராஜா

மறுமலர்ச்சி சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவரான பத்மா துரைராஜா "உப்பும் சர்க்கரையும் என்ற சிறுகதையை எழுதியவர். வறுமையின் கோரப் பிடிக்குள் அகப்பட்டு அன்றாட வாழ்வுக்குப் போராடிக்கொண்டிருக்கின்ற ஏழைக்கூலித் தொழிலாளியின் உளக்கிடக்கையை அப்பட்டமாகச் சித்திரித்தவர் பத்மா துரைராஜ அவர்கள். இவருடைய உண்மைப் பெயர் அறியுமாறில்லை.

❖ உப்பும் சர்க்கரையும்

உப்பும் சர்க்கரையும்

பத்மா துரைராஜா

மாலை ஐந்து மணி.அன்று வேலை செய்த களையால் ஆற்றங்கரைக்குப் போய்வர உத்தேசித்துப் புறப்பட்டேன். அங்கு சென்று இயற்கை அன்னையின் அழகை அனுபவித்தவாறு இங்கும் அங்கும் உலாவி னேன். சிறிது நேரத்தில் ஆற்றின் நீர் சிவந்த நிறமாகக் கண்டு நிமிர்ந்து பார்த்தேன். அப்பொழுது நான் கண்ட கண்கவர் காட்சியை என்னென்றெடுத்துரைப்பேன்!

இளந்தென்றல் ஜிலு, ஜிலு என்று இன்பமாக வீசிற்று. செங்கதிர வன் மேற்றிசையை நோக்கி மிக மௌனமாய்ச் சென்றான். பல வர்ணங்கள் தீட்டப்பெற்ற அந்த ஆகாயம் எல்லோர் மனதையும் கொள்ளை கொள்ளக் கூடியதாயிருந்தது. அதனுடைய பிரதி பிம்பமே அந்த ஆற்று நீரில் தெரிந்தது. ஆற்றங்கரையிலிருந்த மரங்கள் பரிதியின் பிரிவாற்றாமையால் மெள்ள, மெள்ளத் தலை குனிந்தன. ஆங்காங்கு இருந்த மலர்கள் தங்கள் நாயகன் போவதைக் கண்டு அதிக துக்கத்துடன் குவிந்தன.

காகங்களும், கொக்குகளும் கூட்டம் கூட்டமாக தங்கள் தங்கள் இருப்பிடத்தை நோக்கிச் சென்றன. அங்கே அடர்ந்து வளர்ந்த மரக்கிளைகளில் இருந்த கூடுகளில், தங்கள் பெற்றோருக்காகக் காத்திருந்தன அந்தக் காகக் குஞ்சுகள்; "எங்கே வருகிறார்கள், எப்போ வருவார்கள்" என்று பெற்றோரை எதிர்நோக்கி ஏங்கிக்கொண்டிருந்தது அவற்றின் உள்ளம்.

வீடு திரும்ப நேரமாகிவிட்டது என்றறிந்து வீடு திரும்பினேன். வழியில் இடைச் சிறுவர்கள் தங்கள் மந்தைகளை வீட்டிற்குச் "சாய்த்துக்" கொண்டு போனார்கள். அவர்கள் வாயில் வைத்திருந்த புல்லாங் குழலின் கீதத்தைக் கேட்டு அம்மந்தையிலிருந்த குட்டிகள், தாங்கள் தங்கள் வீட்டிற்குப் போகிற சந்தோஷத்தினால் நீயோ நானோ என்று துள்ளிக் குதித்து ஓடின.

அன்று பௌர்ணமி ஆகையால் பூரண சந்திரன், நான் வீட்டிற்குப் போவதற்குள் வெளியே வந்துவிட்டான். பகல் முழுவதும் கண்ணயர்ந்த மல்லிகை, முல்லை அரும்புகள் முழுமதியின் ஒளியைக் கண்டதும் ஆனந்தத்தால் கண் விழித்தன. அதனால் அம் மலர்களின் நறுமணம் நாற்றிசையும் கமகமவென்று வீசியது. சடுதியாய் பூங்கொல்லையிலிருந்த தாமரைத் தடாகத்தை நாடின என் கண்கள். அங்கே தெரிந்தது தடாகமா, அல்லது உருக்கின வெள்ளியா? ஆம் தடாகந்தான்! சந்திரனின் வெண்கிரகணங்கள் தடாக நீரில் பாய்ந்து அந்நீரையும் வெள்ளிபோல் மின்னச்செய்தன.

எங்கெங்கேயோ நாள் முழுவதும் உணவுக்கலைந்து திரிந்த "ஆள் காட்டிக்" குருவி, தனது கூட்டிற்குத் திரும்ப நேரம் சென்றமையால் "கீச், கீச்" என்று கத்திக்கொண்டு பறந்தது. தூரத்திலே கோவில் மணி ஒன்று "டாங், டாங்" என்று பக்தர்களை வரவழைத்தது. மிகவும் மனோகரமான காட்சிதான்... ஆனால், இதையெல்லாம் என்னால் தனியாக அனுபவிக்க முடியவில்லையே! இனிய ரோஜா மலரைப் போன்ற என் காதலியும் இன்று என்னோடு வந்திருந்தால்...!

பால் என்னவோ மிக இனியது தான்; ஆனால் அதற்குச் சர்க்கரை போடாமலிருக்கும் போது சுவைக்க முடிவதில்லையே!

ஐயோ, பொழுதுபடுகிறதே! இன்று ஒரு சதம் கூட உழைப்பில்லையே. காலையில் யாரோ ஒரு கால்சட்டை போட்ட பிரபு, அவருடைய இரண்டு பெரிய பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஒரு கட்டை தூரம் நடந்ததற்காக ஒரு பத்துச் சதம் தந்தார். மத்தியானம் வயிற்றுக் கொடுமையைத் தாங்காமல் இரண்டு வடை வாங்கி உள்ளே தள்ளி விட்டேன். பிறகு, அப்படிக்கூட ஒன்றும் சந்திக்கவில்லையே! ஒரு சீமான் பெரிய ஒரு பெட்டியோடு இறங்கினார். எலும்புத் துண்டைக் கண்ட நாய்களைப் போலப் பத்துப் பேர் ஓடிப்போனோம். நான் தான் முன்னுக்கு நின்றேன். என்னுடைய தளர்ந்து வாடிய தேகம், களை இழந்த முகம், குழி பாய்ந்த கண்கள் - பாவம், போலும் ! பெட்டியை வேறொரு தடியனிடம் கொடுத்து விட்டார். என் தேகம் மேலும் தளர்ந்தது; முகத்தில் பிரேதக் களைதான் வந்திருக்கும். பிறகு, பிறகு ... ஒரு சதம் கூட உழைப்பில்லை.

ஐயோ, பொழுதுபடுகிறது! ஆகாயம் என்ன சிவப்பாக்கிய பெருமை எனக்குத்தான் உண்டு, ஏனெனில், என்னைப் போன்ற ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி எடுத்துத்தானே தெய்வம் அங்கே இரத்த வர்ணம் தீட்டுறது?

ஆற்றங்கரை! "ஜல ஜல" என்று ஓடும் இந்த ஆற்று நீர், என் குழந்தைகளின் கண்ணீர் வெள்ளத்தைத்தான் எனக்கு ஞாபகமூட்டுகின்றது. சூரியன் மறைவதைக் கண்டு என் உள்ளத்தைப் போல இந்தத் தாமரை மலர்களும் கூம்புகின்றன. ஆனால் அவை நாளைக் காலையில் மறுமலர்ச்சி அடையும்; எனக்கோ? எனக்கு வாழ்விலே மறுபடியும் மலர்ச்சி கிடைக்காது!

கொக்குகளும் காகங்களும் கலகலப்புடன் வீட்டுக்குத் திரும்புகின்றன. தங்கள் குழந்தைகளைக் காண அவை ஆவலோடு பறக்கின்றன. ஆனால் நான்... என்ன முகத் தோடு என் "கூட்டு"க்குப் போவேன்? என் குஞ்சுகளின் முகத்தை எப்படி நிமிர்ந்து பார்ப்பேன்? பகல் முழுவதும் பள்ளியிலும், விளையாட்டிலும் ஏதோ ஒரு மாதிரி அவர்கள் பொழுது கழிந்திருக்கும். இனி...?

ஒட்டிப்போன வயிறு துடிதுடிக்க சோர்ந்துபோன முகத்திலே "அற்ப ஆசை" தாண்டவமாட, பொருத்தி வைத்த எலும்புக் கூடுகள்போல அவர்கள் ஓடி வந்து என் மடியைத் தடவும் போது... ஐயோ நான் என்ன செய்வேன்? அவர்கள் அழுவார்கள், அழுவார்கள்!....

நான் தனியாக என்ன செய்வேன்?... அவள் - இவர்களைப் பெற்ற அந்தப் பாவி - இருந்தால், இந்தக் குழந்தைகளுக்கு ஏதும் ஆறுதலாவது சொல்வாளே!

வெறும் ஒடியற் கூழானாலும் அதற்குக் கொஞ்சம் உப்புப் போட்டால் சகித்துக் கொள்ளலாமல்லவா?

மறுமலர்ச்சி
கார்த்திகை - 1946

நாவற்குழியூர் நடராஜன்

கவிஞராக கணிக்கப்பட்டிருக்கும் நாவற்குழியூர் நடராஜன் ஈழகேசரியிலும் மறுமலர்ச்சியிலும் சிறுகதைகள் சில எழுதியுள்ளார். ஈழகேசரியில் நான்கு சிறு கதைகளும் மறுமலர்ச்சியில் சாயை என்றொரு சிறுகதையும் எழுதியுள்ளார். அச் சிறுகதை வடக்கு, கிழக்கு மாகாண கல்வியமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சி சிறு கதைகள் என்ற தொகுப்பில் இடம்பிடித்துள்ளது. கவிதைகளுக்கு இவர் அளித்த பங்களிப்பு அதிகம். சிலம்பொலி என்ற கவிதைத் தொகுப்பில் இவரது சிலம் பொலி என்ற கவிதை இடம்பிடித்துள்ளது. இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகக் கடமையாற்றியவர். இவர் அமரராகிவிட்டார்.

- மாமி
- சாயை
- மோகினி

மாமி

நாவற்குழியூர் நடராஜன்

இவங்கள் கொடுக்கிற இடந்தானே இதெல்லாம். நாலு மணியாய் விட்டால்போதும்: "டாங்கு டீங்" கென்று சோடித்துக் கொண்டு நாட்டியக் காரிகள் மாதிரிக் கிளம்பி விடுகிறார்கள். புருஷன் என்று ஒருவன் இருக் கிறானே. அவன் ஆபிசால் வேர்த்துக் களைத்து வரும்பொழுது கொஞ் சம் கோப்பியைக் கீப்பியைக் கொடுத்து... சிச்சிச்சீ... அந்த நினைவே கிடையாது. என்ன பிறவிகளடி இது!.என்று இரைந்து கொண்டு "குசினிக்கும்" கூடத்துக்குமாக நடந்துகொண்டிருந்தாள் தங்கம்மாள்.

"ஆம்... ஆம்..." என்று சொல்லுவதுபோல மணியும் "டாங்... டாங்..." என்று நாலு அடித்தது.

அப்பொழுதெல்லாம் உள்ளே நின்று அந்த மாதிரியாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு இருந்த கமலாவுக்குச் "சுளீர்...சுளீர்..." என்று ஏதோ உடம்பெல்லாம் ஏறிற்று.

என்ன செய்வது. கலியாணமாகி இரண்டு வருஷங்களாவது போயிருந்தால், "திடீர் திடீர்" என்று தக்க பதில்கொடுக்க அவளும் பழகித்தானிருப்பாள்.

ஆனால் அப்படியெல்லாம் சட்டென்று விழ இன்னும் அவள் தெரிந்து கொள்ளவில்லை. எப்படியென்றாலும், ஏதோவொன்று உள்ளே கிடந்து வெந்து வெடித்துக் கொண்டிருந்தது அவளுக்கு. என்னவோ வெளியே மட்டும் வரவில்லை.

"ஒரு புருஷனுக்குப் பெண் என்று வந்துவிட்டார்கள். இந்த சோடினைக்காரிகள் வராவிட்டால் பெற்ற தாய் என்றிருப்பவள் மகனைப் பார்க்க மாட்டாளாக்கும். கொடிக்குச் சுரைக்காய் பாரமாய்விடுமா என்ன?. என்று மேலும் சீறியடித்துக்கொண்டு அங்குமிங்குமாக நடந்து, அடுப்பில் எதையோ பார்ப்பதும் அறையில் கமலா செய்யும் கோலாகலத்தைக் கூடத்தில் இருந்து பார்த்து எரிவதுமாக இருந்தாள் தங்கம்மாள்.

முகத்தைக் சுழித்துக்கொண்டு கூடப்பக்கத்துச் சுவரைப் பார்த்து தலையை ஒரு ஏளன அசைப்பு அசைத்துவிட்டு கொண்டைமாலை சரியாக அமைந்திருக்கிறதா என்று கழுத்தைத் திருப்பித் திருப்பி கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலா.

மீண்டும் தங்கம்மாளின் குரல்தான். "இல்லை....; புருஷர்களுக்கு இவர்கள் என்ன தான் பிரமாதமாகப் பண்ணிவிடுகிறார்கள் என்று கேட்கிறேன். இராமுழுதும் "குசுகுவென்று" கூடிக் கதைத்துத் தூக்கத்தைக் கெடுப்பதும், பகல் முழுதும் ஆபிசிலிருந்து களைத்து வருகின்றவனை ஒரு நிமிஷ நேரம் ஓயவிடாமல் சினிமாவுக்கு வா, அதுக்கு வா, இதுக்கு வா என்று அரித்தரித்து இருக்கவிடாமல் வீதிக்கு வீதி இழுத்துக்கொண்டு திரிவதும் இதுதானே!"

இவ்வச வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கேட்டு, "அவர் வரட்டும் இன்றைக்கு அவர் வரட்டும்" என்று பொருமிக் கொண்டிருந்தது கமலாவின் மனம்.

"என்னடி இது!" என்று முகத்தை ஒரு திருப்புத் திருப்பிக், கொஞ்சநேரம் நாடியில் கையை வைத்துக்கொண்டிருந்துவிட்டு, "அம்மா அம்மா என்று தாயிடம் கன்று போல வருகிற பிள்ளை, இப்பொழுது அதை ஏன் பேசுவான்: ஒருத்தி கையில் கொடுத்தோமே!. வீதி வீதியாக இழுபட்டுத் திரிகிறது. உண்ண நேரமோ? உறங்க நேரமோ? என்று அடுக்கிக்கொண்டு போனாள் கூடத்தில் இருந்து.

"இவவுக்கு என்னவாக்கும்?" என்று கேட்பதுபோல வேகமாகத் துடித்தன கமலாவின் உதடுகள்.

◆◆◆

"டக் டக்..." என்று வாசற்படியில் சிலிப்பர் சத்தம் கேட்டது. மேசைக் கண்ணாடிமுன் நின்றுகொண்டிருந்த கமலா, அப்படியே தாவிப் படுக்கையில் மெதுவாக இருந்து முன்கையை தலையணை மேற்போட்டு, நெற்றியை அதன்மேல் வைத்து அழுத்திக்கொண்டு குப்புறக் கிடந்தாள். முகப்பூச்சுக்கள், சேலை மடிப்புகள் ஒன்றுமே கெட்டு விடாதபடி.

"என்ன இது?" என்று கமலாவைப் பார்த்துக் கேட்டுக்கொண்டே கோற்றைக் கழற்றினான் சுந்தரன்.

அவள் மறுபக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள் துக்கத்தில் தோய்ந்த பெருமூச் சொன்றையே பதிலாக விட்டுக்கொண்டு.

"இஞ்சாரும்! இதென்ன இது?" என்று பக்கத்தில் அமர்ந்து கெஞ்சலாகக் கேட்டான் அவள் தலையைத் தடவித்தடவி.

தலையைக் குழப்பிவிடப் போகிறானே என்றோ என்னவோ விறுக்கென்று தலையை ஒருபுறமாக இழுத்துக்கொண்டு "உங்கள் அம்மாவைத்தான் கேளுங்கள்?. அவவுக்குத் தானே எல்லாந்தெரியும். எனக்கு என்ன தெரியப் போகிறது?" என்று விம்மி விம்மிச் சொன்னாள்.

"அம்மாவைக் கேட்கத் தெரியாமலா உம்மைக் கேட்கிறேன்? அவவின் குணந் தான்....."

"உங்களுக்குத் தங்கமாகப் பிடிக்குமே..."

"எனக்குத் தெரியுமே நான் சொல்வதற்கு எதிராகத்தான் சொல்லுவீர் என்று."

"ஆம், ஆம்: நான் எதிராகத்தான் சொல்லுவேன் உங்கள் அம்மா என்றால்..."

"அதையெல்லாம் ஆர் கேட்டது? என்ன இப்படி வாடிப்போயிருக்கிறீரே என்று கேட்டால்..."

"இந்த மாமியென்று இருக்கிறவர்களோடு இருக்க முடியாது. முடியாது என்று சொன்னால்...."

"மாமிக்கு என்னவாம்?" என்று கேட்டுக்கொண்டே சமையற்கட்டிலில் இருந்து வந்தாள் தங்கம்மாள்.

சுந்தரன் "என்னம்மா? எனக்கு மட்டும் ஒரு மருமகள் வந்தால் என்னமாதிரிப் பார்ப் பேன் என்று சொல்லிக்கொண்டிருந்தீர்களே. அடுத்த வீட்டு மாமி மருமகளைப் படுத்துகிற பாட்டைப் பார்த்து"

தங்கம்மாள்:- "அதுக்கு இப்ப என்ன வந்துவிட்டது? இப்படி ஆபிசால் வந்ததும் வராததுமாக உள்ளதும் இல்லாததும் சொல்லி. நான்தான் சொன்னேனே தாய்க்கும் பிள்ளைக்கும் இருக்கிற அன்பைக் கெடுத்துப்போடுவாள் ஒருத்தி வந்தால் என்று."

கமலா: "கெடுத்துப்போடாமல் உங்கள் மகனை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறது தானே!"

தங்கம்மா: "வைத்துக்கொண்டிராமல் என்னடி....."

சுந்தரம்: அம்மா போதும்போதும் நீங்கள் மட்டும் என்னவோ விதிவிலக்கான மாமியாக அமையப்போகிறீர்களாக்கும் என்றுதான் பிரமாதமாக எண்ணிக்கொண்டிருந்தேன். எப்பிடி யென்றாலும் மாமி மாமிதான். இஞ்சாரும்! காட்சிக்கு நேரமாகிறது: வாரும்" என்று கமலாவின் கையைப் பிடித்து இழுத்தான்.

அவளும் ஊடல் தணிந்து இணங்கியவளாய் எழுந்து பின்சென்றாள். கடைக் கண்ணால் மாமியை ஒரு மின்வெட்டுப் பார்வை பார்த்துவிட்டு.

◆◆◆

"பிள்ளைகளைப் பெற்று வளவுமன்" என்றாள் தங்கம்மாள் ஒரு ஏக்கம் நிறைந்த குர லில். தன் மகன் தன் பக்கத்துக்குப் பேசவில்லையே என்ற ஆத்திரத்தில் போலும்.

ஈழகேசரி - 01.10.1944

சாயை

நாவற்குழியூர் நடராஜன்

"முதற் கோணம்."

"அதோ பார்த்தாயா சோமு.காற்றிலே புடவைத் தலைப்புப்பட படக்க, கம்பீரமாக நடந்து போகிறாளே..."

"அந்தப் 'புலிவரிக் கோட்டு'ப் புடவைக்காரியா? அவள் யார்?"

"அவள் யாராயிருந்தாலென்ன புடவையைப் பார்த்ததும் எனக்கு ஒரு ஞாபகம் வருகிறது."

"ஓ! இத்தகைய ஞாபகங்கள் கேட்பதற்கு மிகவும் சுவையாயிருக்கும் சொல்லுங்கள்!"

"குமரைக் கரைசேர்த்தால் கோடி புண்ணியமுண்டு என்று எதற்காகச் சொல்லிக் கொள்ளுகிறார்களோ தெரியாது. ஆனால்,ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு வருஷம் வருஷம் பத்து மாதங்களுக்கு, இல்லாத உபத்திரமெல்லாவற்றையும் அவளுக்கு உண்டு பண்ணச் செய்

யும் கிரகஸ்தர்களிலும் பார்க்கப் பிரமச்சாரிகளே உண்மையாகப் பெண்களின் நன்மைக்காக உழைக்கிறார்கள் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. அதனால் நானும் பிரமச்சாரியாகவே இருந்து விடுவதென்று தீர்மானித்தேன்!

பெண்களுக்காக ஏதோ பிரமாதமாக உழைத்துக் கொட்டிவிட வேண்டும் என்பதல்ல... ஒரு பெண்பிள்ளைக்கு ஒரு உதவியைச் செய்யும் போது, பாரதூரமான ஒரு காரியத்தைச் சாதித்து முடித்துவிட்டாற் போன்ற ஒரு இன்ப உணர்ச்சி. மனோ திருப்தி ஏற்படத்தான் செய்கிறது... அடடா! இதல்ல நான் இப்பொழுது சொல்ல வேண்டியது. அது வேறு விஷயம்.

எவ்வளவோ சோதனைகளுக்கூடாக என் மனத்தைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டிய கஷ்டம் தினந்தினம் வந்துகொண்டேயிருந்தது. பறந்து திரிவதற்கென்று பிறந்த ஒன்றைக் கட்டுப்படுத்தி வைப்பதென்றால், கட்டுப்படுத்துவதும், கட்டுப்படுத்தப்படுவதும் ஆகிய இரண்டிற்குமே வேதனைதான்.

ஊர்வசியோ, மேனகையோ என்று சந்தேகப்படும்படியாக மேக்கப் எல்லாம் பண்ணிக் கொண்டு கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றி, வீதி வழியே அங்குமிங்குமாக இடித்தெறிந்து கொண்டு திரியும் முன்னேற்றக்காரிகள் எவன் பெண்ணாயிருந்தாலென்ன யார்தான் பார்க்க மாட்டார்கள்? பார்த்து என்னென்னவெல்லாமோ ஏன் நினைக்கமாட்டார்கள்' தங்களை மற்றவர்கள் பார்க்க வேண்டும் என்பது தானே இந்த ஜோடினை போட்டுக் கொண்டு திரியும் சிங்காரிகளின் எண்ணமெல்லாம்! இல்லாவிட்டால் பெண்கள் முன்னேற்றத்திற்கும் இந்தத் தழுக்கு மினுக்குக்கும் என்ன சம்பந்தம்?

தீபாவளித் தினமென்றுதான் நினைக்கிறேன். ஆமாம். தீபாவளிக்கு முதல் நாள்தான். தையற்காரனிடம் கொடுத்த துணியைச் சட்டையாகப் பெற்றுக் கொள்வதற்காகப் பெரியகடை வீதியாற் போய்க் கொண்டிருந்தேன். சமருக்கு ஆற்றாது தோற்று விழும் சண்டைக்காரனைப் போலப் பொழுது மங்கி விழுந்து மண்ணைக் கவ்விற்று. அரம்பையர்களைப் போல அந்தரத்தில் நின்று மின்சாரவிளக்குகள் பல்லைக் காட்டத் தொடங்கின. நடமாடித் திரிந்த ஒரு புலி வரிக் கோட்டுப் புடவைக்குள் மறைந்திருந்த ஒயில், உருவமும் தன் பல்லைக் காட்டிக் கொண்டு நான் சென்ற அதே தையற்காரனிடம் வந்து சேர்ந்தது.

நேரத்துக்குத் தைத்துத்தர முடியாதென்று வேளையோடு சொல்லி இருந்தால் நான் வேறெங்காவது கொடுத்துத் தைக்க ஒழுங்கு செய்து இருப்பேனே. இதென்ன இது, நாளைக் குத் தீபாவளியும் தினமாக என்று அவனோடு சற்று உறைப்பாகப் பேசிக்கொண்டிருந்தேன்.

தைத்து முடிந்ததா? என்ற ஒரு மணிக் குரல் என்னையும் விலத்திக் கொண்டு தையற் காரனிடம் போய்ச் சேர்ந்தது. சாதாரணமாக நான் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்திருக்க மாட் டேன். அது என் கொள்கைக்குப் பிழையானது என்று எனக்குத் தெரியும். ஆனால், இல் லையே என்ற குறிப்புப்படலைத் தையற்காரன் தன் முகத்தை ஏழ்மை தோன்றச் சுழித்துக் கொண்டு காட்சியைப் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியாமற் போய்விட்டது. நான் அதை அவ தானிக்காதது போலக் காட்டிக் கொள்வதற்காக ஏதாவது ஒருபுறமாகக் கண்களைக் திருப்ப வேண்டியிருந்தது. அதற்கிடையில் அந்த மணிக் குரலைத் தொடர்ந்து அதை அனுப்பிய உருவமும் என் கண்பார்வை சென்ற பாதையை வெட்டிக் கொண்டு வந்தது.

புலிவரிக் கோட்டுப் புடவையொன்று நடமாடித் திரிகிறது. நமக்கென்ன என்று நான் அதைக் கவனியாமலே இருந்திருக்கலாம். சந்தர்ப்பம் அதற்கு விட்டுக்கொடுக்கவில்லை. மேலும் ஒரு மணித்தியாலத்துக்கிடையில் எப்படியாவது அந்த தையற் பிரமானிடமிருந்து என் துணியை சட்டையாகப் படைப்பித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு என்மேல் குவிந்திருந் தது. அதை நான் அலட்சியம் செய்தால் அடுத்தநாள் வரவிருந்திருந்த தீபாவளியே அலட்சியம் செய்ய வேண்டியதுதான்.

இன்னும் ஒரு மணித்தியாலம் இருக்கிறது. கடைசி பஸ்ஸுக்கு. அதற்கிடையில் எப்படி யாவது என் சட்டையைத் தைத்துத்தான் தரவேண்டும் என்று கண்டிப்பாகச் சொன்னேன் தையற்காரனிடம் அந்தப் பெண்ணுருவம் வேறு பேச்சை ஆரம்பிப்பதற்கு முன்.

என் வார்த்தைகள் சற்றுக் கடினமானதாக இருந்தாலும் அதையெல்லாம் அவன் காதிற் போட்டுச் சகித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டவன் என்பதை அவன் செய்கை பிரதிபலித்தது. அவசர அவசரமாக அவன் தைத்துக் கொண்டிருந்த பாதி உருப்பெற்ற சட்டையை ஒரு பக்கமா கத் தள்ளிவிட்டு என் கதர்த் துணியை எடுத்துக் கத்தரித்துக் கொண்டே ஐந்து நிமிஷத்தில் தந்து விடுகிறேனே என்று ஆறுதல் கூறினான் எனக்கு.

அவன் கையில் கிடந்து விளையாடிய கத்தரிக்கோல் அக் கதர்த் துணியின் எத்த னையோ கோடி நூல்களைக் கறித்துத் கறித்துக் கணப்பொழுதிலேயே துணியைத் துண்டு துண்டாக்கி வைத்தது. சுதேச மக்களைப் பிரித்து வைக்கும் அந்நிய அதிகாரிகளின் செயலைப் போல்.

அவன் முகத்தில் ஒரு அதிருப்திக் குறிப்பு அலை பாய்ந்தது. எதிரே தொங்கிக் கொண்டி ருந்த ஒரு வெள்ளை நெஞ்சக் கண்ணாடி அதையெல்லாம் சிறிதும் கவனியாதது போலிருந்த எனக்கு இரகசியமாக எடுத்துக்காட்டிற்று.

'என் சட்டை...?' என்று ஒரு வெறுப்பும் அதிகாரமும் இந்த தொனியிற் கேட்டாள். அத் தையற்காரனைப் பார்த்து அப்பொழுது நான் அங்கே இல்லாவிட்டால். இதோ ஐந்து நிமி ஷத்தில் தந்து விடுகிறேனே என்ற அவளுக்கு ஏதாவது ஆறுதல் செய்திருப்பான். ஆனால் அந் தச் சந்தர்ப்பத்தில் அவன் சாமாத்தியம் எதுவும் அவளின் உதவிக்கு வரமறுத்துவிட்டது.

இதென்ன! மழை தூறுகிறதே! சோமு! ஓடி வா... ஓடி வா.. வீட்டுக்கு..."

"கதை...?"

"பிறகு"

இரண்டாம் கோணம்:-

"இவ்வளவு அந்தரங்கமான விஷயங்களையெல்லாம் உனக்குச் சொல்லாமல் வைத்தி ருக்கவே முடியவில்லை என்று சொல்லி உன்னையும் என்னையும் ஏமாற்றிக்கொள்ள எனக்கு இஷ்டமில்லைப் பார் சுசீலா. அதை உனக்குச் சொல்வதனால் எனக்கு ஒரு திருப்தி - ஒரு சந்தோஷம்

"நல்ல கதைதானடி. சொல்லு சொல்லு என் கதையும்..."

நான் சொல்லுவான் ஏன்" அந்தத் தையற்காரன் கடையிலே தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடியை நீ அப்பொழுது பார்த்திருக்க வேண்டும். என் சட்டை...' என்று நான் அந்தத் தையற்காரனைக் கோபித்துக் கேட்ட பொழுது அந்தக் கண்ணாடிக்குள் ஆடிக்கொண்டிருந்த கண்களுக்கு எங்கிருந்து தான் அந்த இரக்கப் பார்வை வந்ததோ!

கண்ணாடி சொல்லிற்று. அவர் பிரேமையில் ஆழ்ந்துவிட்டார் என்று அதை அந்தத் தையற்காரன் எப்படித்தான் தெரிந்து கொண்டானோ தெரியாது.முன்னரே வெட்டி வைத்திருந்த என் சட்டைத் துணியை எடுத்து ஒரு தையல் வைத்தான். மேலும் ஒன்று பின்னும்.... பின்னும்....

அவர் கண்களில் ஆசை வழிந்தது. தையற்காரனின் செயலைப் பார்த்துக்கொண்டே இருந்தார். கண்ணாடியில் கண்கள் மௌனமாக.

"என்ன வெட்கப்படுகிறாய் போலிருக்கிறதே! ஒரு சிநேகிதிக்குச் சிநேகிதி தன் கதையைச் சொல்வதில் என்ன வெட்கம்? எல்லோருக்கும் உள்ளது தானே.... ம் ..... பிறகு?"

"பிறகென்ன, அவ்வளவுதான்" தையற்காரன் தன் தொழிலைச் செய்து கொண்டிருந்தான். எங்கள் கண்களும் தங்கள் தொழிலை கண்ணாடியின் உதவியை நாடாமலே செய்யத் தொடங்கின.நேரம் செல்லச் செல்ல உதடுகளும் கண்களைப் பின்பற்றத் தொடங்கும் போலிருந்தது. எங்கள் நாணமெல்லாம் எறும்பூர்ந்து கற்குழிந்த கதையாகிக் கொண்டே வந்தது. அந்தத் தையற்கார யமன். அதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பது போல, என் சட்டை யைத் தைத்து முடித்து நீட்டினான். பிறகு அங்கே நிற்க என்ன உரிமை உண்டு?"

"அவர்...?"

"நான் வெகுதூரம் போகும் வரை திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அந்தக் கடையிலிருந்து. நானும் பிடி கொடுக்காமல், வேறு எதையோ பார்ப்பது போலக் கடைக் கண்ணாற் கவனித்துக் கொண்டே..."

"ஸ் ஸ் .... அம்மா வாறா" இதிலே இந்த மாமரம் இல்லாவிட்டால் இந்த வெய்யிலுக்கும் ஓட்டு வெக்கைக்கும் இங்கே இருக்கவே முடியாதப்பா!"

"வேர்க்கிற வேர்வை!"

- ஹிருதய பாகம் -

"மழை விட்டும் தூவானம் விடவில்லையே! அதற்குள்ளாக ஏன் இவ்வளவு அவசரப் பட்டு வந்துவிட்டாய் சோமு?"

"அப்போது சொன்னீர்களே அந்தத் தையற்கடைக் கதை. அதை..."

"கதைதான் கதை..." பள்ளிக்கூடத்துக்குப் போவதென்றால் நேரே போய் நேரே வர வேண்டாமா வயது வந்த பிள்ளைகள்? ஒரு ஒழுக்கம், மட்டு மரியாதை ஒன்றுமே கிடையாது; இதுகளுக்கெல்லாம் இன்னும் அடித்துக் கொண்டே இருப்பதென்றால்...? சிச்சிச்சீ..."

"என்ன, என்ன நடந்தது?"

"நாலு பேர் அறிந்தால் இவனைப்பற்றி என்ன சொல்லுவார்கள் தெரியுமா? ம்? கழுதைப் பயல்... மழைக்காக அந்தக் குறுக்கு வழியால் வந்தபடியாலல்லவோ கண்டேன்."

'யார் உங்கள் தம்பியா?"

"தம்பி; தம்பி ; அவனை என் தம்பியென்று சொல்லக் கூட எனக்குப் பெரிய அவமான மாக இருக்கிறது. பாருங்காணும். அந்தச் சனப்புளக்கமான வழியில் நின்று உந்தச் சுப்பை யரின் மகளை எட்டி எட்டிப் பார்த்து கொண்டு நிற்கிறானே! இவனை என்னதான் செய்யக் கூடாது. இந்த இந்தா .

"... மடைப் பயலை? ம்... டேய்! ...டேய்!... வாடா இங்காலே?

மறுமலர்ச்சி
ஆடி - 1946

மோகினி

நாவற்குழியூர் நடராஜன்

வெறும் சதுப்பு நிலம், அங்கும் இங்குமாக நீர் கட்டுப்பட்டு கிடந்தது. அந்தப் பள்ளங்களில் எங்கு பார்த்தாலும் ஒரே சேறும் சகதியுந்தான். கேட்க வேணுமா அங்கே "கொள்ளி வாலி"ன் உற்பத்திக்கு? கட்டாயம் இப்படியொன்றாகத்தான் இருக்கவேணும். அந்த மோகினி விஷயமும் என்று இப்பொழுது எனக்கு ஒரு தென்பு ஏற்பட்டது. அதையுந்தான் பார்த்துவிடுவோமே என்று அந்தப் பக்கமாகப் போனேன் கொஞ்சம் மனத்தைரியத்தோடு.

அதே புல்லாங்குழல் ஓசை, ரீங்காரச்சத்தம், மெல்லிய காற்று, முதலில் சொன்னேனே "ஜில்" என்று வீசிக்கொண்டிருந்ததென்று, இந்தக் காற்றைத் தான்,

அப்படியும் இப்படியுமாக நடந்துகொண்டிருந்தேன். ஏதோ யோசித்துக் கொண்டு, என்ன ஆச்சிரியம்! இப்படியுமா அந்தச் சத்தம் என்னைச் சுற்றிச் சுற்றிக் கேட்க வேண்டும்! எனக்குப் பெரும் அதிர்ச்சியாயிருந்தது. அப்படியே விறைத்துப் போய் நின்றேன் மரக்கட்டை மாதிரி, வாய்மட்டும் கொட்டைப் பெட்டியாகப் பிளந்து போயிருந்தது. அந்த

ஊதற்சத்தம் என் வாயிலேயே கேட்க ஆரம்பித்துவிட்டதே! உதடுகள் ஒன்றோடொன்று அடித்துக் கொள்ளும் போலிருந்தது. கெட்டியாகப் பிடித்தேன் பற்களை. எங்கே வாயடியிற் கேட்ட சத்தம்? காணோமே!

மறுபடியும் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்து கொண்டேன். மறுபடியும் அதே சத்தம்.

"என்ன!" என்று எனக்குள்ளேயே ஒரு வியப்பு ஓகோ என்று கொண்டே வாயை மூடிப் பார்த்தேன். கேட்கவில்லை. திறந்தேன் கேட்டது!

இப்பொழுதுதான் என் "சயெனல்" எல்லாம் பலிக்க ஆரம்பித்திருக்கிறது என்று எனக்கு பெரிய திருப்தி.

"சரிசரி இந்த மோகினியையுந்தான் ஒருகை பார்த்துவிடுகிறேன்" என்று மேலே போனேன். சண்டையில் வென்ற வீரன் மாதிரி எனக்குத் தெரிந்து போய் விட்டதல்லவா, எப்படி அந்த வீசுங்காற்று என் வாயிலே சத்தத்தை உண்டாக்கினதென்று.

"இப்படியாகத்தான் ஏதோ வாயைப் பிளந்துகொண்டிருக்க வேணும், அதில் தான் இந்தக் குழல் ஓசையும்"என்று எனக்குப்பட்டது. எங்கே எங்கே எது எது வாயைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறது என்று பார்த்துப் பார்த்துக்கொண்டே போனேன். போகப் போகத் தொனியும் உச்சஸ்தானத்திற்குப் போய்க்கொண்டிருந்தது.

சடுதியாக ஒரு மாற்றம் "வீர்ர்...." என்ற சத்தந்தான்.

ஒரு பொந்தில் ஒரு மரப்பொந்தில் பாம்பொன்று தலையை நீட்டிக் கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தேன் வாயைத் திறந்திருக்கிறதா என்று. கண்கள் திறந்திருந்தன. எதையோ பார்த்துக் கொண்டிருந்ததோ தெரியவில்லை. ஏன்! அதை எப்படித்தான் தெரிந்து கொள்வது? எண்ணும் காதும் அதற்கு வேறு வேறா!

திடீரென்று பாம்பு உள்ளே போனது. போனதோ இல்லையோ, எவ்வளவு தான் தெரிந்து கொள்வது? அந்த ஊதற் சத்தம் மறுபடியும் கேட்க ஆரம்பித்தது. ஆனால் இப்பொழுது மிகவும் அண்மையில் தான். ஆம், அந்த மரத்தடியில்.... அந்தப் பொந்திலிருந்துதான் என்றுகூடச் சொல்லிவிடலாம்.

"ஒருவேளை இந்தப் பாம்புதான்..... இருக்கவே முடியாது. அப்படியென்றா எல்லாப் பாம்புகளுமல்லவா இப்படி விதவிதமாகக் கத்திக் கொண்டிருக்க வேணும்.

பக்கத்தில் கிடந்த நீண்ட தடியொன்றை எடுத்துக்கொண்டேன். அந்தப் பொந்தை ஒரு தரம் அடைத்துப் பார்த்தால் தெரிந்து போய்விடுகிறது என்று எண்ணிக்கொண்டே தடியின் தலைப்பைப் பொந்தின் வாயில் வைத்தேன். அல்ல வைத்ததன் "ர்ர்..." என்றது. வெளியே எழுந்தேன். "ஊ..." என்றது.

இப்பொழுது எனக்குக் கொஞ்சம் கர்வம்கூ... என்! அந்த மோகினியின் ஸ்வருபத்தை... இவ்வளவு காலமாகக் கேட்டுக் கொண்டிருந்த அந்த மோகினியின் கானத்தை... வரன்தான் தெரிந்துகொண்டேன்.

"விட்டேனா பார். இந்த மோகினியைத் தொலைத்துவிடுகிறேன். என்று கிளம்பினேன். ஒரு மந்திரவாதி மாதிரி கிளைகளிலிருந்து கழைகளைப் பாய்த்து பாய்த்து பிடுங்கினேன். பொந்திற்குப் பார்வை பார்க்கவல்ல, அதை அடைப்பதற்கு. அந்த நீண்ட தடியைக்கொண்டு மறுநிமிஷமே அதை அடைத்து விட்டேன்.

எங்கும் ஒரே நிசப்தம். நான் முதலில் நின்றுகொண்டிருந்தேன். அந்த மரத்தடியிற் கூடப்போய்ப் பார்த்தேன். அங்கும் அப்படியே இருந்தது. முன் எல்லாம், அந்தப் பொந்திலிருந்து வந்த சத்தம் மரத்துக்கு மரம் எதிரொலித்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படி?

"ஊர்தோறும் எத்தனை மரங்கள்! அந்த மரங்கள்தோறும் எத்தனை பொந்துகள்! அந்தப் பொந்துகளில் எல்லாம் இந்த வீசுகிற காற்றுப் படாமலா இருந்தது? அப்படியென்றால் ஏன் அதிலெல்லாம் இந்த மாதிரிச் சத்தங் கேட்கக் கூடாது? ஏன்று ஒரு குறுக்கு யோசனை ஓடிற்று. ஆனால் ஒன்று அந்த அடைபட்ட பொந்தின் அமைப்பே ஒரு தனி அல்லவா?

இப்பொழுது வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். புதிதாக ஓர் உண்மையைக் கண்டறிந்த ஒரு விஞ்ஞானியின் பெருமையோடு. தூரத்தில் கேட்பது போலிருந்தது ஒரு குரல்... ஒரு தீக்குரல் யாழோ குழலோ என்று தான் பார்த்தேன். "கலீர், கலீர்" என்றது அவள் கையிலிருந்த வளையல்கள். ஆம் அவ்வளவு சமீபமாக வந்துகொண்டிருந்தாள். மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன் சந்தேகமென்ன? ஒரு பெண்தான். "டக், டக்" என்று அடித்துக்கொண்டது என் நெஞ்சு. கண்கள் பெருத்தன. கால்கள் நடுங்கின. என் ஆச்சரியமும் பயமும் அளவை மீறின. புலி புலி என்றவன் செய்திதான் ஞாபகத்திற்கு வந்தது. ஏன்! கடைசியாக அந்த நிஜமோகினியே வந்துவிட்டதே! அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் வேறு என்னவாகத் தோன்றும்?

"உடம்பு சரியில்லைப போலிருக்கிறதே" என்ன! மோகினியாவது உடம்பைப் பற்றி விசாரிப்பதாவது!" என்று எண்ணிக்கொண்டே, அதன் பாதங்கள் நிலத்திற் படிந்திருக்கின் றனவா அல்லவா என்று பார்த்தேன். அல்லாமல் என்ன? படிந்துதான் இருந்தன. அந்த மெல்லிய சேலை அங்குமிங்குமாக ஆடி. ஆடி அவற்றைத் தேய்த்துக்கொண்டிருந்தது. உடையெல்லாம் அழுக்கேறிக் கிடந்தது. ஆனால் கடை, அதில்தான் என்ன தளுக்கு! கூந்தல், காற்றினால் எற்றுண்டு சின்னபின்னப்படுத்தப்பட்டிருந்தது. முகம், கருமுகில்களைக் கிழித்துக்கொண்டு வருகிற வெண்திங்கள் இருக்கிறதே. அதேமாதிரி, ஆனால் அதில் ஒரு வாட்டம். மாலை ஒளியில் "பளிச், பளிச் என்று மின்னிக் கொண்டி ருந்தன. அந்த வைர "டோலக்குகள்" அதிகம் சொல்வானேன்? மோகினி என்றால் அவளைத்தான் சொல்ல வேணும். அவ்வளவு அழகு.

எப்படியென்றாலும் தைரியத்தை இழந்துவிடலாமா?

"ஆமாம், கொஞ்சம் காய்ச்சல் அடிக்கிறது! அதுதான்" என்றேன் சிறிது தளர்ந்த குரலில்.

பேச்சு முற்றியது. முற்ற முற்ற, "மோகினி" என்ற எண்ணமே எங்கோ ஓடி, ஒளித்தது. இருவருக்கும் இடையே இருந்த தூரம் ஏதோ மாயமாக குறைந்து கொண்டே வந்தது. எனக்கு உடம்பெல்லாம் என்னவோ செய்தது.

நீங்களே பாருங்கள். ஒருவனும் ஒருத்தியும் தனிமையில் எதிர்ப்பட்டால் இந்த உலகமே அவர்களுக்குத் தெரிகிறதில்லை. என்னென்னவோ உணர்ச்சிகளெல்லாம் கிளம்பிவிடு கின்றன. இப்படித்தானா இந்த உலகம் இருக்க வேணும்? ஆம், இப்படித்தான் இல்லாவிட்டால் என்ன உலகம்?

அடுத்த கணம் குறுக்கே ஒரு ஓட்டம் நெடுக்கே ஒரு ஓட்டமாக ஓடினாள் அந்த மோகினி. ஓடியோடிக் கடலின் ஆழத்தைக் கூட அளந்துகொண்டே போனாள். அவள் உருவம் சிறிது சிறிதாக மறைந்தது.

"கடவுளே! பைத்தியக்காரியா?" என்றேன் ஆச்சரியத்தோடு.

"ம், ம்" என்றன தோப்பிலிருந்த இரண்டு ஆந்தைகள்.

ஈழகேசரி
கார்த்திகை - 1946

நவாலியூர் சோ. நடராஜன்

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகன் நவாலியூர் சோ. நடராஜன். ஆவர். கவிஞர் நவாலியூர் சத்தியநாதன் என்ற பெயரிலும் சிறுகதைகள் எழுதியுள்ளார். ரவீந்திரநாத் தாகூர், ராதாகிருஷ்ணன் போன்ற மேதைகளின் நாடகங்களையும், கட்டுரைகளையும் மொழிபெயர்த்துள்ளார். "மருதக்கலம்பகம்" இவரது கவி தைத் தொகுதி ஆகும். காளிதாசரின் மேகதூதத்தையும், தாகூரின் கீதாஞ்சலி யையும் தமிழில் தந்துள்ளார்.

- கற்சிலை

கற்சிலை

நவாலியூர் சோ. நடராஜன்

கல்லிற் கோதிய அந்த உருவம் முடிந்து தன்னெதிரே நின்றதைக் கண்ட கணேசாச்சாரி புன்முறுவல் செய்தான். அக்கற்சிலையின் புன் முறுவல் போல. இந்த முறுவலின் வனப்புத்தானென்ன! புதிதாய் உல கத்தைக் கண்டு ஆச்சரியமடையும் குழந்தையின் அப்பழுக்கில்லாத தூய உள்ளத்திலிருந்து எழும் மனோரம்மியமான புன்முறுவல் போன். றது. என்ன பூரணமான அமைவு , விஸ்வகர்மாவும் செய்ய முடியாத கற் சிலை! "என் உள்ளக்கோவிலில் இத்தனை காலமாகக் கண்ணாம் பூச்சி விளையாடிக்கொண்டிருந்த என் இலட்சியம் இன்றே இக்கல்லில் அமைந்தது " தன் வாழ்க்கையின் நோக்கமெல்லாந் திரண்டு சிற்றுளி மூலம் திவ்வியமான உருப்பெற்ற அச்சிலைமுன் கணேசாச்சாரி தெண்டனிட்டு அஞ்சலி செய்தான். சந்தோஷத்தினால் தன்னை மறந்து ஆனந்தக்கூத்தாடினான். இளமை முழுவதும் அவன் மனதில் தாண் டவமாடிய பல்வேறு உணர்ச்சியின் வரலாறுகள் போல் அச்சித்திர சாலை யெங்கும் சலவைக்கல்லிற் சமைந்த உருவங்கள் கிடந்தன. அந்தோ அந்த வாசற் கதவண்டை இரண்டு மோகினிச் சிலைகள், உயர

உள்ள மரக்கட்டையில் கிருஷ்ணனை நினைந்து அழுங்கும் இராதையின் சாயல். இந்த மூலையில் காமனை எரித்த சங்கரர் நிஷ்டை. அங்கே பர்வத குமாரியின் தவக்கோலம். இவற்றையெல்லாம் தன் மனத்தில் கர்ப்பமாக்கிக் கையினாற் பிரசவித்த கணேசாச்சாரி தன் சித்திரசாலையில் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாதெனத் தடுத்துவிட்டான். எனது மனோ விலாசத்துக்கும் உள்ள அமைதிக்கும் ஏற்பட்ட இச்சிற்பசாலையில் மற்றவர்களுக்கு என்ன வேலை! இதென்ன தாசிகள் வீடா? நாடக சாலையா? இவர்களெதற்காக இங்கே வர வேணும்? இது நூதனசாலையுமல்ல, மிருகசாலையுமல்ல. எனது மனச் சாந்திக்காக நான் செய்யும் விளையாட்டை மற்றவர்கள் பார்த்து அதிசயப்படவும் வேண்டாம். சிரிக்க வும் வேண்டாம்.

ஆனால், இது ஒரு நூதனசாலை"தான். கணேசாச்சாரியின் உள்ளம் அங்கே திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஒரு கல்லில் மின்னிடை மனதில் மின்னல் போல உதயமான ஒரு குறிப்பைக் கல்லில் உருவாக்க எண்ணி, உளியினால் உரமாக மோதுண்டு பிளவுபட்ட கற்கூட்டங்கள். கை ஒன்று, கால் ஒன்று, அதரம் ஒன்று, கண்ணிமை ஒன்று, பவளவாய் ஒன்று. இவ்வாறாக மனித அங்கங்களைக் காட்டும் சிலைகளும் தலைகளும் சம்பூர்ணமான உருவ அமைப்பையுடைய பல்வேறுவகைப்பட்ட உருவங் கள், போரில் வெட்டுண்டு கிடக்கும் வீரர் போலக் கல்லிற் காட்சியளித்தன. கணேசாச்சாரியின் மனோதர்ம வரலாற்றுச் சின்னங்களா? அல்லது ஆவேச மின்னலின் இடிகளா?

இந்தக் கோலாகலத்துக்கிடையே சிதைந்து கிடக்கும் வெண்முகிற் கூட்டங்களின் மத்தி யில் பூர்ண சந்திரன் உதயமானது போல அவன் கல்லிற் செதுக்கிய மணிமேகலையின் உரு வம் தோன்றியது. அசிரத்தை உடன் அவிழ்ந்து சொரிந்த கூந்தல், அதன் சௌந்தரியத்தைப் பார்த்து மகிழ்வது போல முகக் கண்ணாடி போன்ற கையை நோக்கிக் குனித்த புருவம். இவற் றிற்கெல்லாம் அழகு முத்திரையிட்டாற்போல புராணங்களில் வரும் ஊர்வசி, திலோத்தமை ஆகிய தெய்வ அரம்பையர்க்குரிய கடவுளரும் காதலிக்கும் தெய்வ சோபையையும் ஊட்டிவிட் டான் கணேசாச்சாரி.

அன்னநடையென்பார்கள். துடியிடை என்பார்கள். கைகளின் வனப்புத்தானென்ன?

வெண்மையான தூசி படர்ந்த தனது உள்ளங்கைகளை உற்று நோக்கினான் கணே சாச்சாரி. "அநித்தியமே உருவான இந்தக் கரங்கள் தானா இந் நூதனச் சிலையை உண்டாக் கின. தெய்வங்கள்தான் மகா சௌந்தர்யமுடையனவாம். அந்த அழகுப் பொக்கிஷத்தை நான் களவாடி விட்டேன். அழிவில்லாத சனாதனமான ஒரு பெரிய சிற்பத்தை ஒரு அபூர்வ சக்தியினால் சிருஷ்டி செய்துவிட்டேன்."

இவ்வாறு எண்ணிய கணேசாச்சாரி பூரணம் பெறாது, முடிவுறாது குவிந்து கிடந்த சிற்பக் கலைகளைக் கண்டு தனது அபஜயங்களை நினைந்து வருந்தினான். திறமையற்ற கைகளே! மந்தமான என் மனமே!

அந்திமாலை. செஞ்ஞாயிறு ஒளி குறைந்து குறைந்து கடலில் மறையவே இருள் சூழ்ந்தது. ஆனால், கணேசாச்சாரியின் சித்திர சாலையில் நின்ற கற்சிலைகள் ஒளிவீசின.

இரவினால் அவை சோபித்தன. இருட்டில் இவ்வாறு ஒளி பெற்று நூதனமாக விளங்கிய சிலை களைக் கணேசாச்சாரி பார்த்தான். அவையெல்லாம் சலவைக் கல்லினாற் சமைந்த சிலை களாக அவனுக்குத் தோன்றவில்லை. அவை உயிர் பெற்று மூச்சுவிட்டுக் கொண்டிருப்பது போலத் தோன்றின.

மனிதருள்ளத்திற் காதற்றீயை மூட்டிக்கொண்டு மந்தமாருதம் அந்த மாலையில் ஊதிற்று. பக்கதேயுள்ள கடல் மேலே சுக்கிரன் உதயமானான். கணேசாச்சாரியாரின் மனதில் பரந்த மகிழ்ச்சிக் கடலில் இம் மணிமேகலையின் கற்சிலை சுக்கிரன் போல் உதயமானது - "எனக்கு இச்சென்மம் பலனளித்தது. ஏழேழு சந்ததிக்கும் நான் பிறந்த நவாலி என்னு மிவ்வழகிய கிராமத்துக்கும் இவ்வூருக்குமே இச்சிலையினால் உலகப் பிரசித்தி ஏற்பட்டது. என்ன? இது சிலைதானா?" என்று எண்ணிக் கொண்டிருக்கையில் ஓங்கி ஒளிவிட்டுக் கொண் டிருந்த அந்தச் சுக்கிரச் சோபை இவ்வழகிய சிற்பசாலையிற் கதிர்விட்டு அம் மண்டபத்தைப் பிர காசிக்கச் செய்தது. காற்றில் அசையும் மெல்லிய பாவாடைக்கூடாக அச்சிலையின் கோமள மான தொடையும், காலும், கணைக்காலும், சதங்கை அணிந்த பாதங்களும் அப்பொழுது கணேசாச்சாரிக்கு ஒரு புதிய உணர்ச்சியை உண்டு பண்ணின. மாணிக்க மயமான மேகலையும், அவன் கையினாற் செதுக்கிய நுண்ணிடை மேல் சுருங்கிக் குவிந்து திரண்டு விளங்கிய அடிவயிறும் அதற்கு மேலே சொல்லொணா வனப் பும் கம்பீரம் உடையதாய் மாணிக்கவாசகர் கூறியது போன்ற "ஈர்க்கிடை போகா" இளங் கொங்கை மூச்சொடு பொங்கிப் புறகிடும் சாட்சாத்காரமான சித்திர பாவமும் அவனை, அவன் உள்ளத்தே ஒளித்து மறைத்து வைக்கப்பட்ட ஓர் உணர்ச்சியின் ஆழத்தைக் கலக்கத் துவங்கின. அவ்வுணர்ச்சிகள் சப்த சமுத்திரங்களும் புயலிற் சீறியது போல் பொங்கிப் புரண்டு சுழன்று அலைந்தன. கமுகின் திரட்சி போன்ற கழுத்து இந்த உணர்ச்சிப் புயலில் சுழிகளை உண்டுபண்ணின. யௌவ னத்தின் புதுமை கட்டுக்கடங்காது வெளிவந்தாற் போன்ற கைகளின் வனப்பு. சௌந்தர்யமே கொடிவிட்டுப் படர்ந்தாற் போன்ற காந்தள் விரல்கள். கண் என்றால் தூங்கி விழித்துக் கொண்டால் ஆனந்தமான காட்சியொன்றைக் கண்டு திகைத்துக் கொண்டது போல் என்று மாத்திரம் கூறமுடியாது. நீண்டவை, கரியவை, சஞ்சலம் உடையவை் சிகிரியா குசைச் சித்தி ரத்திற் தீட்டிய பெண்களின் பார்வைக்கு இலக்கணமானவை. . இவ்வளவில் கணேசாச்சாரி விட்டுவிடவில்லை. பிரமதேவன் உலகில் உத்தமமான ஒவ்வொரு சுந்தர வஸ்துக்களிலும் திலப் பிரமாணம் எடுத்துத் திலோத்தமை என்ற பெண்ணணங்கைச் சிருட்டித்த பின் அதனழகிற் சொக்கி உன்மத்தன் ஆனானாம்.

கணேசாச்சாரி கல்லிற் செதுக்கிய சிலையின் கொண்டையழகே அதற்குப் போதுமா னது. வெள்ளி வெளிச்சத்தில் கணேசாச்சாரி தன்முன் நின்ற இந்த ஜகன் மோகினியைக் கண்ணாற் பார்த்து, இதுவரை வெளிவராத ஒரு உணர்ச்சியில் ஈடுபட்டுத் தன்னை மறந்து போனான். கற்சிலை புன்முறுவல் பூத்துத் தலை அசைத்தது.

கணேசாச்சாரிக்கு உடலம் பதறிற்று. கையிலிருந்த உளி கீழே விழுந்தது. உரை தழு தழுத்தது. அகலிகையைக் கனவிற் கண்ட இந்திரன் போலத் தான் சிருஷ்டித்த அந்த அற்புதச் சிலை முன் உணர்ச்சி பொங்க நின்றவன் அதை வேகமுற்ற தன் கைகளால் கட்டித் தழுவிக் கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் சித்தப்பிரமை கொண்டவன் போல் ஏதேதோ

வெல்லாம் குழறினான். சிறிது நேரத்தில் தீ புன்முறுவல் பூத்துத் தலையசைத்த அக்கற்சிலை திண்ணெண்றிருந்தது.

அவனுக்குத் திக்பிரமை தீர்ந்தது போல், கையிலிருந்து விழுந்த உளியை எடுத்துக் கொண்டே இன்னொரு முறை சிலையைப் பார்த்தான். சிலையின் தேஜஸாம், சீவ களையும் அழகுச் சோபையும் எல்லாம் அஸ்தமனமான மாதிரியே இருந்தன. பவளம் போன்ற அச் சிலையின் அதரத்தில் அம்மந்தஹாசத்தைப் பிறப்பிப்பதற்கு ஒரு சிறிய செதுக்கல் வேண்டி யிருந்தது. உளியைக் கையிலெடுத்து அதரப் பாகத்தில் ஒரு சிறு பொறி போட உன்னித்தவன் சிறிது உரமாக உளியை வைத்தானோ என்னமோ, மறுகணமே ஜகன் மோகினியான அச்சிலை கல்லோடு கல்லாய் வெடித்துச் சுக்குநூறாயுடைந்து அச்சிறப்ச் சாலையெங்கும் சிதறியது.

ஈழகேசரி
29.06.1941

இராஜநாயகன்

சு. இராஜநாயகன் ஈழகேசரிப் பண்ணையில் சம்பந்தனின் அடிச்சுவட்டில் முகிழ்ந்தவர். ஈழகேசரி, மறுமலர்ச்சி, கலைச் செல்வி. தினகரன், வீரகேசரி, ஈழநாடு சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் சிறுகதை எழுதியுள்ளார். இவரது "அவன்" என்ற சிறுகதை சிற்பியின் ஈழத்துச் சிறுகதைகள் என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சு வெளியிட்ட மறு மலர்ச்சிச் சிறுகதைகள் என்ற தொகுப்பிலும் இவரது இரு சிறுகதைகள் வெளி வந்துள்ளன.

இவரது சிறுகதைகள் எண்ணிக்கையில் குறைவாயினும் குறிப்பிடத் தக்கவை. சமூக அநீதிகளுக்க எதிராகக் குரல் தந்த ஒரு முற்போக்காளர். பொத்தல், நாகதோ ஷம் என்னும் இவரது சிறந்த சிறுகதைகள் கலைச் செல்வியில் வெளிவந்துள்ளன. தெரிந்த சொற்களைப் பயன்படுத்தி நனவோடை உத்தியில் எழுதியவர். ஈழநாடு தன் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய நாவல் போட்டியில் இவரது "பிரயாணி" என்ற நாவல் முதற் பரிசு பெற்ற இரண்டு நாவல்களில் ஒன்றாகும். மற்றையது செங்கையாழியானின் "போராடப் பிறந்தவர்கள்". இவரது நாவலோ, சிறுகதைகளின் தொகுப்போ எதுவும் இதுவரை வெளியிடப்பட வில்லை. இன்று அமரராகிவிட்டார்.

- உலகக் கண்கள்
- அவன்
- தியாகி
- வேதனைச் சுடர்
- இதயத் துடிப்பு
- அந்தக் காலம்

உலகக் கண்கள்

இராஜநாயகன்

ஆசிரியர் ஜகதீசனால் பள்ளிக்கூட வாழ்க்கையில் இரண்டு வருஷங்கள் கூட தரித்திருக்க முடியாதுபோல தோன்றிற்று. ஆனால் அவன் அதே வாழ்க்கையில் பத்து வருஷங்கள் தோய்ந்திருக்க வேண்டும் என்பது போல விதி ருக்மிணியின் முகத்திலே மீற முடியாத ஒரு கட்டளையின் சாயலை எழுதியிருந்தது. எட்டு வயது நிரம்பாத அந்தச் சிறுமி ருக்மிணியின் முகம். உருவம் எல்லாம் ஜகதீசனுக்கு அந்தக் கட்டளையின் சாயலைக் காட்டி அவனைத் திணறவைத்துவிட்டன. பள்ளிக்கூடத்திலிருந்த அத்தனை மாணவருள்ளும் அவள்தான் மனித ரீதியிலே உள்ள ஒருத்தியாக ஜகதீசனின் மனத்திலே தோன்றினாள். அந்தத் தொழிலே வேண்டாம் என்று அவன் வெறுப்படைந்து புறப்பட எண்ணியபோதுதான் ருக்மிணி பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்தாள். அவளைக் கண்ட பிறகு, 'எங்கேயாவது தொலைந்துவிட வேண்டும்' என்ற அவனது எண்ணம் உருக்குலைந்து சிதைந்து போய்விட்டது.

ருக்மிணியின் கண்கள்,நெற்றி, வாய், உருவம், அசைவு, நெளிவு எல்லாம் ஜகதீசனுக்குப் புதுமையாகவே தோன்றின. மோகனத்தைப் பொழிந்து கொண்டிருக்கும் அவளது கண்களுக்கு மெருகிடுவதுபோல

அமைந்திருந்த நெற்றி - புதுமையுடன் கூடி, மழலைக் குவியலை அள்ளி அள்ளிக்கொட்டும் அந்த வாய் - மயக்கத்தைக் கொடுத்துக் கூத்தாடும்படி செய்துவிடும் அந்த மோகனச் சிரிப்பு - எல்லாம் ஜகதீசனுக்கு எவ்விதம் தோற்றம்? உணர்ச்சியற்ற ஜடங்களின் நடுவிலே கிடைத்த தெய்வக் குழந்தையல் லவா அவள்?

வெறுப்புத் தட்டியிருந்த வாழ்க்கைக்கு அவள் புத்துயிர் கொடுத்தாள். ஜகதீசனது மனத்திலே நிரம்பிக்கிடந்த வெறுப்புணர்ச்சிகள் எல்லாவற்றையும் படிப்படியாக அவள் மறையச் செய்து, இன்ப அலைகளை அவனது மனத்தில் தோன்றுபடி செய்தாள். அத்தனை பெருமைக்கும் அந்தச் சிறுமி உரித்துடையவள் ஆனதைக் கண்டபோது ஜகதீசனுக்குமே ஆச்சரியமாகத்தான் இருந்தது. விதியின் விசித்திரமான போக்கைக் கண்டு யாருக்குத் தான் ஆச்சரியம் உண்டாகாது?

அன்று ஞாயிற்றுக்கிழமை. மாலை வேளையில் உலாவி வரலாம் என்று ஜகதீசன் புறப்பட்டான். வழியிலே - வீதியில் ருக்மிணி அவனை நோக்கி ஓடி வந்தாள். அவளைக் கண்டதுமே ஜகதீசன் நின்றுகொண்டு, "அம்மா, ருக்மிணி! ஓடாதே;விழுந்துவிடப் போகிறாய்!" என்று எச்சரித்தான். ஆனால் ருக்மிணி ஓடுவதை நிறுத்தவில்லை.நெருங்கி வந்து அவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

"வாத்தியார், உங்களை அம்மா கூட்டிக்கொண்டு வரச்சொன்னா"

களைப்பினால், அவளது வார்த்தைகள் நடுங்கின. ஜகதீசன் அவளது தலையைத் தடவிக்கொண்டே "அம்மா கூட்டிக்கொண்டு வரச் சொன்னாளா? ஏன்?" என்று கேட்டான்.

ஜகதீசனுக்கு ருக்மிணியைத் தெரியுமே தவிர அவளது தாயைத் தெரியாது. வீடும் தெரியாது. ஆனால் அவளுக்கு அப்பா இல்லை என்பது மட்டும் தெரியும்.

ருக்மிணி அவனை நிமிர்ந்து பார்த்துக்கொண்டே "எனக்குத் தெரியாது, வாருங்கோ" என்று அவனது கையைப் பிடித்து இழுத்தாள். "உங்கள் வீடு எங்கே அம்மா?" என்று கேட்பதைவிட வேறொன்றையுமே அவனால் கேட்க முடியவில்லை.

' 'அதோ, அந்த ஆலமரத்துக்குப் பக்கத்து வீடு" என்று சொல்லிக்கொண்டே ருக்மிணி முன்னால் நடந்தாள். காந்தத்தின் அசைவுக்கேற்பத் தானும் அசைந்து கொடுக்கும் இரும்புத துண்டு போல ஜகதீசன் அவள் பின்னால் நடந்தான். இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சூழ்நிலையிலே அவனது உள்ளம் அகப்பட்டுத் தத்தளித்ததோ - ஆனந்தமடைந்ததே என்று சொல்ல முடியவில்லை.

அவனது மனம் வலையிட்டுத் துழாவிப் பார்த்தது. எங்கோ கண்டு பழகிய முகமல்லவா அது? ஆனால் எங்கே, எப்பொழுது என்பது மட்டும் ஞாபகத்துக்கு வரவில்லை. அந்த முகம் சிந்தனையின் பழைய ஏடுகளைத் திறந்து காட்டியது. தூசி படிந்திருந்த அந்த ஏடுகளை வாசிக்க முதலில் முடியவில்லை, பிறகு தூசிகளைத் துடைத்துவிட்டுக் கூர்ந்து படித்தான்.

அடடா! அவள் - லக்ஷ்மி - அனாதைச் சிறுவனாக ஜகதீசன் வீதியிலே திரிந்தபோது அழைத்துச் சென்று ஆதரித்து, பிறகு அனாதாஸ்ரமம் ஒன்றில் சேர்த்து விட்ட புண்ணிய புருஷனின் மகளல்லவா? அனாதாஸ்ரமத்தின் உதவியினால் படிப்பை முடித்துக் கொண்டு ஜகதீ

சன் அவர்களின் வீட்டைத் தேடிச் சென்றபோது, அவர்கள் எங்கோ போய்விட்டார்கள் என்று அறிந்தான். தனது வாழ்க்கைக்கு அத்திவாரமிட்ட அந்த மனிதனைக் காணாததால் ஏற்பட்ட துயரம் அவரது மகளைக் கண்டதே ஆனந்தமாக மாறிவிட்டதைக் கண்டு ஜகதீசனின் கண் களில் நீர் துளித்தது. அதைக் கண்டு லக்ஷ்மியின் கண்களும் கலங்கின. ருக்மிணிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவளும் கண்களைக் கசக்கினாள். குழந்தையல்லவா?

"ருக்கு உங்களைப் பற்றிச் சொன்னாள்."

இதைச் சொல்லும்போது லக்ஷ்மியின் குரல் தழதழத்தது. குங்குமம் இடப்படாத அவளது நெற்றியின் பிரகாசம், அதிலே தோன்றிய வியர்வைத் துளிகளை முத்துக்கள் போல மிளிரச் செய்தது. மஞ்சள் நூலற்ற தன் கழுத்தைத் தடவிக் கொண்டே, "அப்பா இல்லாத அவளுக்கு உங்கள் அன்பு பெருத்த ஆறுதலாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே சொல்லப் போனால், எனது நன்றியை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொன்னாள்.

ஜகதீசனது சிந்தனை வெகுவேகமாகச் சுழன்றது. லக்ஷ்மியின் வார்த்தைகளில், தன்னை மறந்த நிலையில் அவள் செய்த செய்கைகளில் எந்தக் கோணத்திலிருந்து அவளது உள்ளக் கருத்தை அவன் அறிந்துகொள்ள முடியும்? அந்தகாரத்தின் தொடர்ச்சியிலே, இடை யில் சொருகப்பட்ட ஒரு சிறிய ஒளிக்கதிர் போலவே அவள் சொன்ன 'தனிப்பட்ட முறையிலே' என்ற வார்த்தைகள் இருந்தன. அவற்றை வைத்துக் கொண்டு அவள் எதை உணர்த்தி னாள்?

வெகுநேரமாக நிகழ்ந்த சிந்தனைச் சுழற்சியின் பின்னணி போல அவனது வாய்" ஆசிரியன் என்ற முறையில் எனது கடமையைச் செய்யக் கிடைத்த ஒரேயொரு பாத்திரம் ருக்கு தான். அதற்காகவும் உங்கள் தகப்பனாரின் உதவிக்காகவும் நான்தான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய நிலைமையில் இருக்கின்றேன்" என்ற வார்த்தைகளை உழறிக் கொட்டிற்று.

தயங்காமல் அவள் பதில் சொன்னாள்: "ஒருவருக்கொருவர் பரஸ்பரம் நன்றி செலுத்திக் கொள்ளுவதென்றால் அது அன்பின் சின்னம் என்றாகிறதல்லவா?"

ஜகதீசன் திகைத்துப் போனான். அந்தப் பதிலுக்கும், அவளது பார்வைக்கும் தலை குனிந்து வணங்காமலிருக்க அவனது உள்ளத்தில் தைரியம் பிறக்கவில்லை. ருக்மிணி யைப் பாரத்தபடி பேசாமல் நின்றான். "கால்வலிக்க நின்றுகொண்டிருக்க வேண்டாம். உட்காரலாமே" என்று லக்ஷ்மி சொன்ன பிறகுதான் அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

அவள் தேநீர் கொண்டுவந்து கொடுத்தாள். அதைக் குடித்துக் கொண்டிருக்கும் போதே "எனக்கு வேண்டியதெல்லாம் இதுதான். எனது சுகங்களை எல்லாம் எப்பொழுதோ உதறித் தள்ளிவிட்டேன். என் ருக்குவுக்காகத்தான் என் உயிர் தரித்திருக்கிறது. அவள் வாழுவதைப் பார்க்கவேண்டும் என்பதுதான் எனக்கிருக்கும் ஆசை எல்லாம். உங்கள் அன்பின் நிழலிலே அவள் செழித்து வளர்வதற்கு, உங்களை அவள் மாமா என்று அழைக்க மட்டும் அனுமதி தாருங்கள். நீங்கள் அங்கே விடுதிச்சாலையில் இருக்கவேண்டும். அவர் விட்டுப்போன இந்த வீடும் பொருளும் இருக்கின்றன. அவற்றை உபயோகிக்க உங்களுக்கு நிரம்பிய உரிமை இருக்கிறது. என்ன சொல்லுகிறீர்கள்?" என்று அவள் உணர்ச்சி மேலிட்டுக் கூறினாள்.

குடித்த தேநீரைக் கீழே வைத்துவிட்டு ஜகதீசன் நிமிர்ந்து பார்த்தான். லக்ஷ்மியின் கண்களிலிருந்து கன்னத்தின் வழியாக நீர் ஓடிக்கொண்டிருந்தது. அவளது உதடுகள் துடித்தன. அதை மறைப்பதற்காக ருக்குமிணியைத் தூக்கி முத்தமிட்டுக் கொண்டே அவள் ஜகதீசனைத திரும்பிப் பார்த்தாள். தாய்மை உள்ளம் எப்படி எல்லாம் செய்யத் தூண்டுகிறது?

'ஆம்' என்று ஜகதீசனது வாய் அவனை அறியாமலே கூறிற்று. அவனுக்கும் உணர்ச்சிக் கோளங்கள் உண்டுதானே! அவனது வாழ்க்கைப் பாதையில் அவன் கண்ட இரண்டாவது அமிர்த ஊற்று அவள் - அவனது சகோதரியாய் விட்ட அந்த லக்ஷ்மி. இனி அந்த ஊற்றையடுத்துச் செழித்த தரைகளை அவன் காண முடியுமா? ஆனால்..." செழித்த தரையிலும் காஞ்சிமரம் நிற்கத் தானே செய்கிறது?

◆◆◆

அவர்களைப் பிணைத்திருந்த பாசம் அந்தக் கிராமத்து ஜனங்களின் கண்களை உறுத்திற்றோ என்னவோ, அவர்கள் அதைக் கண்டு சும்மா இருக்கவில்லை. சாக்கடை போன்ற தங்கள் மனம் திருப்தியடையும் வரை ஊளையிட்டார்கள். தன்னை அறியாத ஒருவன் மற்றவர்களைப் பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்கள் எந்த அளவுக்கு உண்மையாக இருக்கும். வெறிகொண்ட நாய் குரைப்பதற்கும், அவன் சொல்வதற்கும் அதிக தூரம் வித்தியாசம் இருக்க முடியாது.

ஜகதீசனுக்கு முதலில் இது ஆத்திரத்தைக் கொடுத்ததென்றாலும், பிறகு அவனது உணர்ச்சியுள்ள உள்ளம் தனது லட்சியரேகையிலிருந்து தவறி மறுபக்கம் பார்க்க விரும்பவில்லை. லட்சியவாதியின் நிதான புத்தியை இப்படியான விஷயங்களிலிருந்தான் காணமுடிகிறது.

ருக்குமிணி - அவளது தாயார் லக்ஷ்மி இருவரையும் சேர்த்துப் பிணைத்திருந்த பாசக் கயிற்றின் நடுவிலே ஜகதீசனும் அகப்பட்டுவிட்டான். ஜகதீசனைப் பொறுத்த மட்டில், அவனுக்கு அந்தப் பாசக் கயிற்றின் நடுவிலே ஓர் ஸ்தானம் கிடைத்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

"ருக்மிணி படிக்க வேண்டும். தன் படிப்பின் உதவி கொண்டு அவள் தன் வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொள்ள வேண்டும். பிறகு எனக்கும் ஒரு வழிதானாகவே தோன்றி வழி காட்டும்" என்ற தீர்மானம் ஜகதீசனின் ஒவ் வொரு அசைவிலும் பொருத்தப்பட்டிருந்தது.

"மாமாவைப் போல ஆசிரியர் தொழிலில் இறங்கி, உண்மைக்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்ற பேரவா ருக்குமிணியின் வளர்ச்சியுடன் பின்னிக்கொண்டே வளர்ந்தது.

லக்ஷ்மியின் அன்புடன் ஜகதீசனின் நிதான புத்தியும் கலந்து கொண்டு ருக்மிணியைப் 'பெரியவளாக்கிவிட்டன. ஜகதீசன் அநுபவ ரீதியாகச் சொன்னவற்றைக் கேளாது அவன் ஆசிரியனாக இருந்த அதே பள்ளிக்கூடத்தில் ஆசிரியையானாள். அவளது ஆசையைக் கட்டுப்படுத்த ஜகதீசன் விரும்பவில்லை.

இனி அவளுக்கு ஒரு விவாகம். அதுதான் ஜகதீசனின் மனத்திலிருந்த ஒரேயொரு குறை. அதையும் தீர்த்து வைத்துவிட்டால் அவன் நிம்மதியாகத் தனது போக்கிலே போய்விடலாமல்லவா? நெடுக அந்த ஊரிலே இருந்து அபத்தமான வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டி

ருப்பதிலும் மனிதரே இல்லாத கொடிய மிருகங்கள் வாழும் காட்டில், அவற்றின் பேரிரைச் சலைக் கேட்டுக் கொண்டிருந்து விடலாம்.

லட்சுமியுடன் யோசித்து இதை ருக்மிணிக்கு எட்டவிட்டபோது அவள் "அது இப்பொழுது அவசரமாக வேண்டிக் கிடக்கவில்லை" என்று ஒரே பதிலாகச் சொல்லிவிட்டாள்.

பத்து வருஷங்கள் அந்தக் கிராமத்தின் மிருகத்தனத்தின் மத்தியிலிருந்த களை தீர எங்காவது சற்றி வரலாம் என்று ஜகதீசன் புறப்பட்டான். லட்சுமியையும் ருக்மிணியையும் விடடுப் பிரிவது கஷ்டமாக இருந்தது. ஆனாலும் போயே ஆகவேண்டும என்று மனம் சொல் லிற்று. தனது உதவி தேவையான போது கடிதம் எழுதும்படி கூறிவிட்டு அந்தக் கிராமத்தை விட்டுப் போயே போய் விட்டான்.

ஒரு வருஷமாக எங்கெல்லாமோ அமைதியை நாடி அலைந்து திரிந்தான். லக்ஷ்மியும், ருக்குவும் இல்லாத இடத்தில் கிடைப்பதெல்லாம் அமைதியே அல்ல என்று சொல்வதுபோல மனம் அலை பாய்ந்தது. கடையில் அவர்களை ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பலாம் என்று எண்ணி அவன் வந்தான்.

அவன் அவர்கள் வீட்டை அடைந்தபோது, லட்சுமியின் வீட்டிலிருந்தாள் "அண்ணா" என்று ஓடிவந்து நமஸ்கரித்தாள். ருக்மிணி பள்ளிக்கூடத்துக்குப் போயிருந்தாள். அவளை உடனே பார்க்கவேண்டும் என்று மனத்திலேயிருந்து ஏதோ சொல்லிற்று ; பள்ளிக்கூடத் துக்குச் சென்றான்.

ஜகதீசனைக் கண்டதே 'மாமா' என்று கூவிக்கொண்டே ருக்மிணி ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டாள். மற்ற ஆசிரியர்கள், மாணவர்கள் பார்க்கிறார்களே என்று அவ ளுக்குத் தோற்ற வேண்டுமே! கண்களிலிந்து நீர் சொரியத் தன் மாமாவின் முகத்தைப் பார்த் தாள்.

"ஏன் அம்மா அழுகிறாய்?" என்று ஜகதீசன் கூறிக்கொண்டே கண்ணீரைத் துடைத்து விட்டான். ஆனால் அவனுக்கும் அழுகைதான் வந்தது.

மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்ற எண்ணம் இந்த உலகத்தில்தான் தோன்றும். இவர் கள் சஞ்சரித்துக்கொண்டிருந்தது அன்புலகத்தில்லல்லவா? வேறு எண்ணங்கள் தோன்ற முடி யுமா?

அங்கிருந்த மற்ற ஆசிரியர்கள் கண்களின் மூலம் தாங்கள் நிகழ்த்திக் கொண்டிருந்த சம்பாஷணைகளை நிறுத்திக்கொண்டு, வாய்களினாலேயே சம்பாஷிக்க ஆரம்பித்து விட் டார்கள்.

"ஜகதீசனை மயங்க வைத்த அந்த மோகினியின் பெண்ணல்லவா இவள்?" என்று அந்த ஆசிரியப் பூண்டுகள் சொன்ன வார்த்தைகள் இவர்களுக்குக் கேட்கவே இல்லை.

உலகம் தனது கெட்டுப் போன குருட்டுக் கண்களுக்கு நிறமூட்டிய மூக்குக் கண்ணாடி உபயோகிப்பதைத் தடுக்க யாராலும் முடியாது. அது 'பரவணி வியாதி'யாயிற்றே!

மறுமலர்ச்சி - சித்திரை - 1947

அவன்

இராஜநாயகன்

அவன் பெயர் -

என்னவோ! பெயரிலே என்ன இருக்கிறது. எத்தனையோ அழகான பெயர்கள் காற்றிலே மிதக்கின்றன.

அவன் உருவம் மறக்க முடியாதது. அத்தனை “அழகு” என்று நான் சொல்லவில்லை; இளமையிலே பழகிய தோஷம் அவ்வளவு தூரம் அவனது உருவத்தை மனத்திலே நிலைக்கச்செய்து விட்டுது. அந்தக் குற்றம் -

நிச்சயமாக என்னுடையதல்ல.

நான் ஒரு பொழுதுமே அவனைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை. அவன்தான் மெதுவாக - இனிமையாக என்னைப் பெயர் சொல்லி அழைப்பான். அவன் அப்படி அழைக்கிற ஓசையைக் கேட்கிறதற்காக, நான் வேண்டுமென்றே பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறேன். அப்படி நான் செய்ததுகூட, என்னுடைய குற்றமல்ல.

சீ! உண்மையைச் சொல்வதிலே என்ன வெட்கமிருக்கிறது.

உண்மையை அப்படியே கொட்டி விடுகிறேன்.

இரண்டு பேரும் ஒன்றாகத்தான் படித்தோம். அந்தத் தமிழ்ப்பள்ளிக்கூடத்திலே, குழந்தைப் பருவத்துக் கனவுகள் முளை கொள்ளுகிற காலமாகிய அந்தச் சில வருஷங்கள் -

சரியாக எட்டு!

அரிச்சுவடி தொங்கித் தமிழ் எட்டு வரை ஒன்றாகத்தான் படித்தோம். ஒரு வகுப்பிலாவது அவன் தனது முதல் ஸ்தானத்தைக் கைவிட்டானா? சில சமயங்களில் எனக்கே அவன் மேல் பொறாமை ஏற்பட்டதுண்டு. ஒரு தடவையாவது அவளை முந்திவிட்டேன் என்றால்" என்று பல தடவைகளில் எண்ணியிக்கிறேன்.

அது எண்ணக் கூடிய ஒரு விஷயமாக இருந்ததே தவிர, செய்யக் கூடிய ஒரு விஷயமாகக் காணப்படவில்லை.

ஒருநாள் -

நான் அழுது விட்டேன்.

"எப்பொழுதாவது என்னை முந்தியிருக்கிறாயா? பாவம்; உன்னுடைய மூளையும், திறமையும் அடுப்பு எரிக்கத்தான் உதவும்"

இப்படி அவன் விளையாட்டாகச் சொன்னதுமே எனக்கு ஆத்திரம் பற்றி எரிந்தது." என்னால் பதில் கூறமுடியவில்லை; தொண்டை அடைத்துக்கொண்டது. முன்னால் நின்ற அவனது உருவம் மறைந்து விட்டது; கண்களை நீர்ப்படலம் ஒன்று மூடித்திரையிட்டிருந்தது.

அவனது பேச்சு மறுபடியும் கேட்டது. "ஐயோ, அழுகிறாயா?" பக்கத்திலே ஒருவருமே இல்லை.

"அதை நீ பார்க்க வேண்டாம்" என்ற வார்த்தைகள் உடைந்து, சிதைந்துபோய் என் வாயிலிருந்து ஆத்திரத்தோடு வெளிவந்தன. அவனுக்கு முகத்தைப் புதைத்துக் கொண் டேன். நன்றாக அழவேண்டும் போல இருந்தது. ஆத்திரம் தீர அழுதேன்.

நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு -
"விஜயா!" என்றான் அவன்.
நான் ஒன்றும் பேசவில்லை.

கொஞ்சம் செல்ல, பயத்தினால் நடுங்கும் கைகளால் எனது தலையைத் தொட்டு நிமிர்த்தி னான்.

கண்களைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தேன். காளி போல "போடா!" என்று எனது வாயிலிருந்து பீரங்கி ஒன்று வெடித்தது!

வெற்றி கொண்ட வெறியோடு அவளை நிமிர்ந்து பார்த்தேன். அவனது கண்களிலிருந்து நீர் ஓடிக்கொண்டி ருந்தது!

என் மனது "படீர்" என்று வெடித்தது. அவனது மனதும் வெடித்துத்தான் இருக்க வேண்டும்.

இருவருக்கும் மத்தியில் நிலவிய மௌனத்தைக் கௌரவிக்கிற மாதிரியில் அவன் அடிமேல் அடிவைத்து, நகர்ந்து சென்றான். மௌனத்தின் கூரியமுனை எனது இருதயத்திலே குத்திற்று. இரக்கமின்றி, அதிலும் துளி கூட இரக்கமில்லாமல் அவன் போய்க் கொண்டிருந் தான். "அவனைக் கூப்பிட்டுச் சமாதானம் பண்ணு; ஓடு!" என்று எங்கிருந்தோ கேட்ட தொனி, என் உடலையே நடுங்கச் செய்தது.

நான் அவனைக் கூப்பிடவில்லை; சமாதானம் பண்ணவுமில்லை. நான்தான் அவ னைப் பெயர் சொல்லி அழைப் பதில்லையே!

மறுநாள் -

நான் மயக்கமடைந்து விழுந்துவிட்டேன்.

வகுப்பிலே, ஆசிரியர் ஏதோ கேட்டார். நான் எழுந்து நின்று பதில் சொன்னேன்; பதில் பிழையாகப் போய்விட்டது. மற்றவர்களையும் கேட்டார். எல்லாருமே பிழையாகத்தான் சொன் னார்கள். அவன் பிழையாகச் சொல்லவில்லை; சரியாகச் சொல்லிவிட் டான்.

ஆசிரியர் அவனை மட்டும் உட்காரும்படி சொன்னார். மற்றவர்கள் எல்லாம் கால் வலிக்க நின்றோம். எனக்கு உடலும் வலித்தது; தலை - மூளை கூட வலித்தன; உணர்ச்சி களும் வலித்தன. மயங்கி விழுந்துவிட்டேன்.

நான் விழித்துப் பார்த்த போது ஆசிரியர் ஒரு புத்தகத்தால் விசிறிக் கொண்டு நின்றார். வாங்கின் மேலே நான் படுத்திருந்தேன். யாரோ ஒருவரின் மடியின் மேல் எனது தலை கிடந் தது. மெதுவாகத் தலையை நிமிர்த் திப்பார்த்தேன்.

- பார்த்தேன், அவன்!

"நீயா? என்று பாவனையால் கேட்டுக் கொண்டேன். அவன் மெதுவா என் தலையைத் தடவினான்.

மறுபடியும் மயக்கமாக இருந்தது; கண்களை மூடிக் கொண்டேன். அவனுடைய மடியிலே தலை வைத்துப்படுத்திருக்கலாமல்லவா?

அந்த ஞாபக மாலையிலே, இவைகள் ஒன்றிரண்டு மணிகள், அவன் தான் அந்த மாலையைக் கோக்க ஆரம்பித்தான்; நானும் கோத்தேன். மாலை பூரணமாவதன் முன் னமே, இருவரும் பிரிந்துவிட்டோம்.

உருக்குலையாத அந்த ஞாபகமாலைக்கு, இன்னும் ஒரு மணி!

சென்ற மாதம்; மாட்டு வண்டியிலே, கலாசாலையிலிருந்து வீட் டுக்கு வந்து கொண் டிருந்தேன். தெருவோடு, ஒழுங்கை ஒன்று வந்தது சந்திக்கிற சந்திப்பிலே தான் அவனைக் கண்டேன். கையிலே ஒரு புத்தகம், அதைப் படித்துக்கொண்டு, தெருவோரமாக வண்டிக்குப் பின்னால் வந்துகொண்டிருந்தான்.

வண்டி ஓர் ஏற்றத்திலே ஏறிக் கொண்டிருந்தது. அதனால் அதன் வேகம் படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்தது. அவன் வண்டியை நெருங்கிக்கொண்டே வந்தான். அவன் கையிலே இருந்த புத்தகத்தைப் பார்த்தேன். -காண்டேகரின் "இரு துருவங்கள்!"

இரண்டு துருவங்களும் நெருங்கிக் கொண்டிருந்தன. வண்டிக்காரன் உச்சஸ்தாயி யிலே மாட்டை உரப்பிக் கொண்டிருந்தான். அவன் நிமிர்ந்து பார்த்தான். நான்!

இரண்டு துருவங்களும் ஒன்றையொன்று கவர்ந்தன. இரண்டுக்குமிடையே தீவிரம் கூடிய காந்தப் புலம் ஒன்று -

என் உடம்பு விறு விறுத்தது.

வைரமணி ஒன்ற தெறித்து உருண்டு ஓடிற்று.

நான் அதை எடுத்து அவனிடம் கொடுத்தேன். அவனே அந்த ஞாபக மாலையை மறுபடியும் கோக்க ஆரம்பிக்கட் டுமே!

ஒரு மாதப் பத்திரிகையின் ஆண்டுப் பேரிதழ். அதிலே என் பெயரும் விலாசமும் எழுதியிருந்தேன். அதற்குப் பக்கத்திலே - "கடிதம் எழுதுகிறீர்களா?" என்று எழுதினேன் கை நடுங்க, உயிர் துடிக்க, அந்த இதழை அவன் பக்கமாக எறிந்தேன்.

அட பாவி! பத்திரிகை இதழ் ஒன்று தனக்கு முன்னால் விழுந்ததை அவன் நன்றாகக் கண்டான்; அதைக் குனிந்து எடுக்க அவனுக்குக் கர்வம் விடவில்லை.

அபபடித்தான் எண்ண வேண்டியிருந் தது.

என் உடம்பு பயத்தால் நடுங்கிற்று. அந்த இதழ் வேறு மனி தரது கையிலே அகப்பட்டு விட்டால் -

எனது பெயர் அம்பலத்திலே அடிபடும். பார்த்தேன்; வேறு எவருமே கிட்ட இல்லை. அவனை நோக்கிக் கையை வீசினேன். அவன் பார்த்தான். பத்திரிகை இதழைச் சுட்டிக் காட்டி னேன்.

நல்லவேளை! அவன் திரும்பிப் போய் அதை எடுத்துக் கொண்டான். எடுத்ததும் நிமிர்ந்து பார்த்தான்; நானும் பார்த்தேன். எதிரே ஒரு மோட்டார் - பின்னால் இரண்டு பைக் கிள்கள் வந்துகொண்டிருந்தன. வண்டியும் திரும்பிற்று வீடு போகிற திருப்பத்திலே அவன் நின்று பார்த்தான். வண்டி பிறகும் திரும்பிற்று ஒரு மூலையிலே, அவன் என் பார்வை யிலிருந்து மறைந்து போனான்.

"நெடுக நின்று பார்த்திருப்பான்" என்று எனது கர்வம் சொல்லிற்று.

***

மறுபடியும் ஒரு மணி.

அவன் அதை அனுப்பி இருந்தான். அதை நான்தான் கோக்க வேண்டும்.

அந்த மணி -

"விஜயா!" என்று ஆரம்பித்தது.

“என்ன?” என்று லஜ்ஜையுடன், ஆவலாகப் பார்த்தேன்.

“கடிதமா வேண்டும்” என்னால் எழுதவே முடியாது, வேண்டும் என்றால் என் இருதய ஏட்டினைத் திறந்து பார். உன்னைப்பற்றி என்ன எழுதியிருக்கிறது என்று.

“கடிதம் எழுத என்று பல முறை ஆரம்பித்தேன். ஆனால் அது முடிகிறதா? பேனாவைத் திறந்து ஏழுத ஆரம்பித்ததும், உனது மாயம் நிறைந்த, மனித உணர்ச்சிகளைப் பிய்த்து விடுகிற முகம் கடதாசியின் மேல் தோன்றிப் புன்னகை பூக்கிறது. கண்கள் நடனமாடுகிற வேகத்திலே எனது சக்திகள் எல்லாம் சிதறுண்டு போகின்றன. ஒரு விதமாகச் சக்திகளைச் சேர்த்து, எழுத என்று ஆரம்பித்துவிட்டாலும் கூட -

“பேனாவின் கூரிய முனையின் கீழே மோகனப் புன்னகையோடு உனது உருவம் நர்த்தனமாடுகிறது. உனது உருவத்தின் மேலே பேனாவின் கூரிய முனையினால் கீற என்னால் எப்படி முடியும்.

“என் உயிரே போய்விடும், வேண்டாம்; எழுத முடியாது. வேண்டுமானால், இதோ - உன்னால் முடியும். என் இருதய ஏட்டினைத் திறந்து பார். இயற்கையின் பாஷையிலே, பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருப்பதைப் படித்துப் பார். உன்னால் படிக்க முடியும், உன்னால்தான் முடியும். வேறெவராலுமே முடியாது.

“விஜயா - இனியும் உன் முகத்தில் பேனாவால் கீற முடியாது.

“பதில் எழுதுகிறாயா?”-

இவ்வளவோடு அவன் கையெழுத்துப் போட்டிருந்தான், அவன் பெயர் -

தெரியும்; சொல்லமாட்டேன்.

***

புதிதாக அந்த மாலைக்கு இரண்டு மணிகள்.

ஒன்று என்னுடையது; மற்றது அவருடையது.

இனி -? நான்தானே ஒரு மணி கொடுக்க வேண்டும்? கொடுத்தாலும் பதிலுக்கு அவர் ஒரு மணி தர எத்தனையோ நாட்கள் செல்லும்.

அத்தனை நாட்களும் சகித்துக் கொண்டிருக்க முடியாது,

ஆனால் -

ஒரு ரகஸ்யம்,

அவரும் நானும் நக்ஷத்திரங்களைப் போல, எண்ணிக்கையற்ற எத்தனையோ மணிகளை உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளுவோம்.

பிறகு மாலை பூர்த்தியாகிவிடும். அதை அணிவதற்கு -

அவரை விட்டு நான் மட்டும் அணியக்கூடாது. என்னை விட்டு அவரும் அணியக் கூடாது.

“பொறுத்துப் பார்க்கிறது தானே!” என்று ஒரு குரல் கேட்கிறது.

மறுமலர்ச்சி - பங்குனி, 1948

தியாகி

இராஜநாயகன்

இரண்டு அழகிய வெண்புறாக்கள்; ஒன்று ஆண், மற்றது பெண், இரண்டும் ஒன்றை ஒன்று அணைத்துக் கொண்டு ஒரு மரக் கிளையில் இருந்தன. பிறைச்சந்திரனைப் பார்த்துக் குதூகலித்துக் கொண்டிருந்த அவைகள், குளிர்ந்த காற்று வீசவே இன்னும் நெருங்கி உட்கார்ந்து கொண்டன. அவற்றின் இன்ப மாளிகையை அலங்கரிக் கும் தீபங்கள் போல, மேலே நக்ஷத்திரங்கள் மின்னிக்கொண்டிருந் தன.

நீண்ட நேர மௌனத்தின் பிறகு பெண் புறா ஆண் புறாவைப் பார்த்துக் கேட்டது: "ஏன் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறீர்கள்?"

"என்ன சொல்ல வேண்டும் என்று விரும்புகிறாய்?"

"சொல்வதற்கு ஒன்றும் இல்லையே?"

"எனது உள்ளத்தில் இருந்த எல்லாவற்றையுமே உன்னிடத்தில் பாடம் ஒப்புவிப்பது போல ஒப்புவித்து விட்டேனே. இனியும் ஏதாவது இருக்கும் என்று எண்ணுகிறாயோ? சில நாட்களின் முன் நண்பனை

இழந்து, மிகவும் பாரமாக இருந்த எனது உள்ளம் உன்னைக் கண்ட பிறகு மிக லேசாகி விட்டது. இப்பொழுது அது இன்பக் காற்றில் மிதந்து கொண்டி ருக்கிறது.

“எதுவாயிருந்தாலும் அதை வாங்கி வைத்துக்கொள்ள வேண் டுமே என்று இங்கே ஓர் உள்ளம் ஏங்கிக் கிடக்கிறதே!" “அப்படியானால் அதோ, அந்த நட்ஷத்திரங்கள் சொல்லும் கதைகளை வாங்கி வைத்துக் கொள்ளேன்!"

“அவைகள் சொல்லும் கதைகளை வாங்கி வைத்துக்கொள்ள நான் தயாராயில்லை!"

“ஆனால் அந்தக் கதைகள் இன்பமானவை"

“இன்பமானவையா?"

“ஆமாம்! அந்த இரண்டு புறாக்களும் ஒன்றை ஒன்று அணைத்துக்கொண்டு எவ்வ ளவு இன்பமாக இருக்கின்றன. பார்த்தாயா? என்று ஒரு நக்ஷத்திரம் சொல்லிக் கொண்டிருக் கிறது. வேறொரு நட்க்ஷத்திரம் “அந்த மரக்கிளையில் இருப்பது ரதியும், மன்மதனுமா? அல்லது ...." என்று தனது காதலனைக் கேட்டுக் கொண்டிருக்கிறது!"

“இன்னும் ஒரு நக்ஷத்திரம்......"

“இந்த இன்பகரமான காட்சியைக் காணாமல் அறிவற்ற மனிதர் கள் வீடுகளில் அடைந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று மனித வர்க்கத்தைப் பரிகசித்துக் கொண்டி ருக்கிறது!"

“பிறகு வேறொரு நட்சத்தி ரம்...?"

“ஆமாம்! வேறொரு நட்சத்திரம் “மண்ணுலகில் சுவர்க்க போகத்தை அநுபவித்துக் கொண்டிருக்கும் அவ்விரு புறாக்களும் பரந்த மனம் படைத்த மகான்களின் உள்ளம் போல எவ்வளவு அமைதியாக இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருக்கிறது!"

“அப்படியானால் எத்தனையோ நட்சத்திரங்கள் எங்களைப் பார்த்துப் பொறாமை கொண்டு தங்களுக்குள் ஏதோ ரகசியமாகச் சொல்லிக் கொள்ளுகின்றன. அப்படித்தானே?"

இதைக் கேட்டுச் சிரிக்காமல் இருக்க ஆண்புறாவால் முடியவில்லை. இரண்டுமாகச் சேர்ந்து சிரித்தன. பிறகு “விர்" என்று எழுந்து பறந்து போய்விட்டன.

அடுத்த நாட் காலையில் ஆண் புறா தனது காதலியைக் கூட்டில் இருத்திவிட்டுத் தான் மட்டும் உணவு தேடிவரப் புறப்பட்டது. வழியிலே காணாமற் போன தனது நண்பனைக் கண்டு “நண்பா!" என்று அழைத்தது.

நண்பனாகிய மற்றப்புறா திரும்பிப் பார்த்துவிட்டு “நண்பா! சௌக்கியந்தானே?" என்று கேட்டது.

“சௌக்கியந்தான்; ஆனால் நீ இவ்வளவு நாளும் எங்கே போயி ருந்தாய்?" என்று முதற் புறா கேட்டது.

மற்றப் புறா சொல்லிற்று: “உன்னுடன் கடைசியாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்து விட்டுப் போனேனே. அப்போது வழியிலே தானியம் இறைந்து கிடப்பதைக் கண்டு, தானி

யத்தை உண்ணுவதற்காக நிலத்தில் இறங்கினேன். அங்கே ஒரு வலை கிடந்ததை நான் காணவில்லை. அந்த வலையில் நன்றாகச் சிக்கிக் கொண்டேன். எங்கோ இருந்து வந்த ஒரு முரட்டு மனிதன் என்னைப் பிடித்து கூட்டிலடைத்துக் கொண்டுபோய் தனது வீட்டிலே வைத்துத் தினமும் தானியம் தந்தான். ஆனால் கூட்டை மட்டும் திறந்து விடவில்லை. நேற்று வரையும் கூட்டிலேயே அடைபட்டுக் கிடந்தேன்"

"ஆனால் எவ்விதம் தப்பித்துக் கொண்டு வந்தாய்?" என்று முதல் புறா கேட்டது.

"நேற்று அவன் கூட்டைத் திறந்து, தனது வீட்டு முற்றத்தில் தானியத்தை நிறைய இறைத்து, என்னை முற்றத்தில் விட்டான். கொஞ்ச நேரம் முற்றத்தில் நின்ற பின்பு திடீரென்று பறந்து வந்து விட்டேன்" என்றது அந்தப் புறா நண்பன்.

"அதாவது, உனது வாழ்க்கையில் ஒரு கண்டம் கழிந்து விட்டது என்று சொல்லேன்!" என்று முதல் புறா சொல்லிற்று.

"ஆமாம் என்று கூறிக் கொண்டே, "எதற்காக நீ கொஞ்சத் தானியம் சேமித்துக் கொண்டு போகிறாய்?" என்று கேட்டது மற்றப் புறா.

"அடே, அதைச் சொல்ல மறந்து விட்டேன்; அது எனது காதலிக்கு!" என்று புன்னகை செய்தது முதல் புறா.

"காதலிக்கா?"

ஆச்சரியத்தாலும், சந்தோஷத்தாலும், மலர்ந்த கண்களுடன் இப்படிக் கேட்டது மற்றப் புறா.

"ஆம்! எனது காதலி உன்னைக் காணாமல் தவித்துக்கொண்டிருந்த எனக்கு. வரண்ட பாலைவனத்தின் மத்தியிலே சோலையும், சுனையும் கிடைத்தது போலக் கிடைத்தாள்"

"பிறகு?" என்று சிறிய ஒரு வினாவைப் போட்டது புறா நண்பன்.

"மனிதருள்ளே இருக்கும் சிறந்த சைத்ரீகரின் சித்திரங்கள் எல்லாம் எனது காதலியின் கால்படத் தகுதியற்றவை! கண்களை மூடிக்கொள்ளும் சமயங்களில் எனது மனக்கண்களில் நடனமிடும்அவள்,தேவருலகின் பாரிஜாதம் போன்றவள்; சௌந்தர்ய தேவதை கூட அவளிடம் பிச்சை வாங்க வேண்டும்!" என்று முதல் புறா பெருமை அடித்துக் கொண்டது.

சிறிது நேரத்தின் பிறகு இரண்டும் பிரிந்து போய் விட்டன.

மறு நாள் அதே இடத்தில் இரண்டும் சந்தித்தன. சந்தித்துச் சம்பாஷித்துக் கொண்டிருந்தன.

முதல் புறாவைப் பார்த்து மற்றப்புறா "நண்பா! நான் உனது காதலியைப் பார்க்க விரும்புகிறேன். அதற்கு ஒருவித தடையுமில்லையே?" என்றது.

"பார்க்க விரும்புகிறாயா? நேற்றே நீ என்னுடன் வந்து பார்த்திருக்கலாமே! பரவாயில்லை வா" என்று அதை அழைத்துக் கொண்டு தனது கூட்டை அடைந்தது.

தன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தன் காதலியை நண்பனுக்கு அறிமுகம் செய்து வைத்தது.

சிறிது நேரம் மூன்றுமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தன. பிறகு கொஞ்சத் தூரம் சுற்றி வரலாமென்று புறப்பட்டன.

சிறந்த சிந்தனையாளரின் கற்பனை போல அவை மூன்றும் மிக உயரத்தில் பறந்து சென்றன. வழியிலே மிகவும் அழகாகக் காணப்பட்ட ஒரு சோளக் கொல்லையில் இறங்க வேண்டும் என்று பெண்புறா விரும்பிற்று. அதன் காதலனும் அதற்குச் சம்மதித்தது. ஆகவே மூன்று புறாக்களும் அச்சோளக் கொல்லையில் இறங்கின. "குறு குறு" என்று வட்டமிடும் கண்களைத் திருப்பி அவை நாற்புறமும் பார்த்தன. வெற்றிடமாக இருந்த ஓரிடத்தில் அதிக தானியம் சிதறிக் கிடப்பதைக் கண்டு, அந்த ஜோடிப் புறாக்கள் அங்கே போக விரும்பின.

ஆனால் அவற்றின் நண்பன் அவற்றை அங்கே போகவிடவில்லை. அது "நண்பா! அங்கே தானியம் கிடக்கிறது என்று எண்ணுகிறாய். ஆனால் அங்கே உண்மையில் இருப் பது எங்களைச் சிக்க வைக்கும் வலை. தானியம் இறைத்திருப்பது எங்களைச் சிக்க வைக்க ஒரு சூழ்ச்சி" என்று கூறிற்று.

"அங்கே இருப்பது வலையா? அதிலே நாங்கள் சிக்கிக் கொள்வோம் என்றா சொல்லு கிறாய்? அதையும் தான் ஒரு முறை பார்த்து விடுவோமே!" என்று அலட்சியம் நிறைந்த குரலில் கூறிற்று, காதலன்.

"உனக்கு இதிலே அனுபவம் இல்லை. உன்னைப் போல எண்ணித்தான் நானும் வலையிற் சிக்கினேன். அங்கே இருப்பது தானியமல்ல. சூழ்ச்சி நிறைந்த வலை என்பதை நிதானி" என்று நண்பன் தடுத்தது.

பெண்புறா தன் காதலனையும், நண்பனையும் பார்த்ததே தவிர வேறொன்றும் பேச வில்லை.

"வலையிருந்தால் என்ன, நிறையத் தானியத்தைக் கண்டபின் அதை விட்டுப் போக மனம் வருகிறதா?" என்று ஆண்புறா அனுபவமில்லாத வார்த்தையைச் சொல்லிற்று.

நண்பன்"வாஸ்தவந்தான்! ஆனால் வலையிலே சிக்கி, ஒரு முரட்டு மனிதனால் சிறையில் அடைபட வேண்டி நேரிடுமே!" என்றது.

ஆண்புறா ஒன்றையும் கேட்கவில்லை. கட்டாயம் போயே தீர வேண்டும் என்று பிடிவாதஞ் செய்துது.

கடைசியில் நண்பனாகிய மற்றப்புறா "நண்பா! அப்படியானால் நீங்கள்இங்கேயே இருந்து கொள்ளுங்கள்; நான் அருகில் சென்று வலை இருக்கிறதா என்று அறிந்து வருகிறேன்!" என்றது.

ஆண் புறாவும் அதற்குச் சம்மதித்தது. ஆனால் ஒரு கணத்துள் அதன் உள்ளம் துடித்தது.

தானியத்தை நோக்கிப் போன புறா எவ்விதமோ அங்கிருந்த வலையில் சிக்கிக் கொண்டது. திடீரென்று எங்கோ இருந்து ஓடி வந்த ஒரு மனிதன் அதைப் பிடித்து ஒரு கூட்டிலே அடைத்துக் கொண்டு போக ஆரம்பித்தான்.

இதைக் கண்ட அந்த ஜோடிப்புறாக்கள் "வலையிருக்கிறதென்று நிச்சயமாகத் தெ ரிந்தும் எங்களைக் காப்பாற்ற அதிலே போய் மாட்டிக் கொண்டானே!" என்று உள்ளம் பதைத் தன. தங்கள் நண்பனைக் கூட்டிலடைத்துக் கொண்டு போகும் அந்த மனிதனைப் பின் தொடர்ந்து பறந்து வந்தன.

சிறைப்பட்ட புறா, சாதிக்க முடியாதவற்றைச் சாதித்து விட்ட லட்சியவாதியைப் போல வும், மகத்தான தியாகத்தைச் செய்த தியாக புருஷனைப் போலவும் கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி அந்த ஜோடிப் புறாக்களைப் பார்த்துப் புன்னகை செய்தது!

வாழ்க்கையில் என்றுமே காணாத இன்ப வெள்ளம் அதனது உள்ளத்திலே கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது!

மறுமலர்ச்சி
ஆவணி - 1946

வேதனைச் சுடர்

இராஜநாயகன்

"பொய்யான விபரம் எதையுமே, என்னை ஏமாற்றும் நோக்கமாக, அவள் சொல்லவில்லை" என்று சிந்தனை சிதறும் நிலையில், மற்றவர்களின் வரம்பெற்ற பேச்சுக்களுக்கு வரம்புகட்டும் தீர்க்கத்தோடு, கையிலிருந்த கடிதமொன்றைக் கிழித்துக் கசக்கி எறிந்து கொண்டே, நிதானமாக, ஆனால் கொஞ்சம் பலமாகத் தலைமை ஆசிரியை சொன்னாள்.

முறுக்கேறிய நூலிழை அறுந்துவிடத் தயாராக இருப்பதுபோல, முறுக்கேறி-சூடேறியிருந்த ஆசிரியை ஒருத்தி, ஆசனத்திலிருந்து எழுந்து கொண்டே "வழக்கத்துக்கு விரோதமான ஒன்றைச் செய்த போது நீங்கள் எங்களையும் கலந்து ஆலோசித்திருக்க வேண்டும் என்பதே எங்களுடைய அபிப்பிராயம்" என்று விவாதத்தை முடித்துவிடுகிற பாவனையிற் கூறினாள்.

மற்றைய ஆசிரியைகளும் அதை ஒத்துக்கொள்ளுகிற மாதிரியில், மௌனமாய், தலைமை ஆசிரியையின் பதிலுக்காக, அவள் முகத்தைப் பார்த்தார்கள்.

சாந்தமும் அமைதியும் அணிகுலைகிற நிலைமையிலே தலைமை ஆசிரியை தலையை நிமிர்த்தி, "எனக்கிருக்கிற விசேஷ அதிகாரத்தைப் பிரயோகிக்கிற அளவுக்கு என்னைப் போகவிடமாட்டீர்கள் என்ற நம்பிக்கையை இன்னுமே இழந்துவிடவில்லை!" என்றாள்.

மற்றவர்கள் பரபரப்படைந்து, பேசாமடந்தைகளாய்த் தலைமை ஆசிரியையே பார்த்தார்கள்.

"அவள் உள்ளதை உள்ளபடி சொல்லித்தான் அனுமதி பெற்றாள். நான் பார்த்த அளவிலேயே அவளது திறமையைப் பற்றி நல்லபிப்பிராயம் கொண்டுவிட்டேன். அது என் பிழையா?

இந்தத் தடவை அனைவரும் தலைமை ஆசிரியையின் வாயையே பார்த்தபடி இருந்தார்கள்.

"எல்லா மாணவிகளும் அவளோடு எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? அவள் ஏழையாக, பரம ஏழையாக இருக்கிறாள் என்பதற்காக அவளை ஒருத்தியுமே தள்ளி வைக்கவில்லை. சாப்பிடுகிறபோதுகூட, தன்னுடைய வட்டிலையோ, கிண்ணத்தையோ அவளுக்குக் கொடுக்க ஒவ்வொருத்தியும் சண்டையிட்டு முன்வருகின்றதை நான் நேரிற் கண்டிருக்கிறேன்."

இப்படி விளையாட்டுக் கருவிபெற்று தன் அபிலாஷையை நிறைவேற்றிக் கொண்டே குழந்தைபோலத் தலைமை ஆசிரியை சொல்லிக்கொண்டே போனாள்.

"சகமாணவிகள் அனைவருமே அவளிடம் காட்டும் அன்பும் மரியாதையுமே அவளது திறமைக்கு அறிகுறி. என்னிடம் சொன்னதுபோல, ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவள் என்று, வேறெருவரிடமும் சொல்லக்கூடாது." இவ்வாறு நான் சொன்னபோது, அவள் "ஏன்" என்று கேட்கும் தோரணையில் நிமிர்ந்து பார்த்தாள். நான் அவளுக்குத் தாக்கமில்லாதபடி, சரஸமாய், "ஏன் என்று பிறகு சொல்லுகிறேன்" என்று சொல்லி வைத்தேன்.

"இக் குறுகிய கால எல்லைக்குள் அவள் அனைவரதும் மதிப்பையும் பெற்றுவிட்டாள். இப்பொழுது அவளைப் பற்றிய உண்மையைச் சொல்வதால் மாற்றம் எதுவும் ஏற்படாது என்று எண்ணி, ஆனாலும் பயந்து கொண்டேதான், இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் அவளைப் பற்றிச் சொன்னேன். உங்களிடம் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதேயன்றி, மாணவிகளிடம் ஏதாவது மாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

"தயவுசெய்து அவளையும் மற்றவர்களைப்போலவே நடத்த வேண்டும் என்று உங்களை வேண்டுகின்றேன். நமஸ்காரம்."
"நமஸ்காரம்"

கணீர்.......

வேகமாக, மிக வேகமாக, ஜன்னலினூடே பறந்துவந்த கண்ணாடி "டம்ளர்" ஒன்று, எதிரேயிருந்த சுவரில் மோதி, அடித்தளமற்ற கற்பனைபோல, உடைந்து சிதறிற்று. அதைத் தொடர்ந்து ஒன்று, இரண்டு, மூன்று.... எத்தனையோ "டம்ளர்"கள் சுவருக்கு ஊறு செய்து, உருவழிந்து சில்லம் சில்லமாய், மெய்ப்பொருள் காணாது உருப்படியற்றிருக்கும் சிந்தனைகள் போலச் சிதறிச் சுவரோரத்திலே கிடந்தன.

மண்டபத்தினுள்ளே, பெண்களின் கூட்டம் ஒன்று, சமநிலை கெட்டு, வீறுகொண் டோடும் பைத்தியங்கள்போல, பயப்படும் நிலையை அகங்காரம் போக்கிவிட, சாப்பாட்டு மண்டபத்தை அடுத்திருக்கும் கோப்பைகள் வைக்கும் தட்டை நோக்கி ஓடி, அதை மோதி விழுத்திப் பயங்கரமான சப்தத்தோடு அழிவு செய்தபோது மண்டபத்தின் எதிர்க்கோணத்திலே தன்னருகில் நின்ற கண்ணம்மாவைச் சரஸ்வதி பிடித்திழுத்துக் கொண்டு தன்னறைக்குள் சென்று கதவைச் சாத்திப் பூட்டினாள்.

நல்லவேளை, தலைமை ஆசிரியை எங்கோ போயிருந்தாள். வெளியே, அகங்காரம் கொண்டவர்களின் மனத்திடைத் தோன்றிய கலவரம் பிரளயமாய், அவர்களின் மனத்தையே பிய்த்துப் பிடுங்கி, அடிபட்ட நாகப்பாம்பின் ஆணவங் கொண்ட துடிப்புப்போல, நிதானமற்று நிலைமை கெட்டு, எல்லாப் பண்புகளிலும் எதிர்மறை தழுவி வளர்ந்து கொண்டே இருந்தது.

உள்ளே, சரஸ்வதியின் அறையில், வெதும்புகிற மனப்புழுக்கம் அணுச்சுழற்சிபோல் அலைச்சல் கொடுக்க, முகத்தில் வேதனைத் தீச்சுடர நின்ற கண்ணம்மாவைச் சரஸ்வதி அணைத்து, "இரு" என்று இருத்தினாள்.

சுயநலம் பிடித்தவர்கள்: அவர்கள் சரஸ்வதியின் அறைக்கு வெளியே வந்து நின்று கொண்டு ஏளனமாக, எலும்பற்ற நாக்கினால் தீவிரமான புரட்சிகாட்சி, உள்ளே இருக்கும் இரண்டு உயிர்களை உலைத்துவிடும் வசை மொழிகளை, சொந்தச் சரக்கைக் கொண்டு சிங்காரித்த உண்மையைத்தான், கொட்டினார்கள்.

ஏளனச் சிரிப்பினொலி திரண்டு, மண்டபத்தை அசைத்துவிடும் பலம் பெற்று, அறைக் கதவை உதைத்து ரகளை செய்யுமாறு அவர்களைத் தூண்டியபோது, ஒருத்தி, பொறுமை யற்ற துணிச்சலோடு, உச்ச ஸ்தாயியிலே "தீண்டாதாள் கண்ணம்மா ஒழிக!" என்று கோஷித் தாள்.

"ஒழிக" கோஷம் எல்லார் வாயிலிருந்தும் உக்கிரத்தோடு பிறந்து உச்சி வானைத் தொட்டது.

கண்ணம்மாவின் கொதித்த முகத்தைக் கண்டதே சரஸ்வதியின் கண்கள் உதிரம் துளித்தன. அவள் ஆவேசத்தோடு, உயிரை வெறுக்கும் நிலையிலேற்படும் பேராவேசத்தோடு, திடீரென்று கதவைத் திறந்து வெளியேவந்து, "உங்களுக்கு இப்பொழுது என்ன வேண்டும்?" என்று காளி போலக் கர்ச்சித்தாள்.

வாயடைத்து நின்ற அந்தக் கும்பலில் அத்தனை பெண்களுமே சரஸ்வதியைக் கண்டு நடுங்கினார்கள்.

திடீரென்று அமைதிகொண்டு, சாந்தம் தவழும் முகத்தோடு அவள் அவர்களைப் பார்த்து, "தயவுசெய்து போய்விடுங்கள்" என்றாள்.

வெட்கம் இரக்கமின்றிப் பிடுங்கித்தின்ன, குற்றமுள்ள நெஞ்சு தலையைத் தாழ்த்திக் குனியச் செய்ய, கூனிக்குறுகிய மனப் பண்போடு ஒருத்தியாய் ஒருத்தி போய், மறைவிடத் திலே, வேறொருத்தியோடு சேர்ந்து ஏதோ பேசிக் கொண்டாள்.

தலைமை ஆசிரியை வந்து தனது அறையில் நுழைந்ததுமே, கலாசாலை "மேட்ரன்" அன்று மாலை நடந்த ரகளையை அப்படி அப்படியே சொல்லி வைத்தாள்.

முகமிருண்டு, நம்பிக்கை மயானத்துச் சாம்பலாய்த் தோல்வியை இடித்திடித்துக் காட்ட, கனவு நிலையில் தலைமை ஆசிரியை நினைவில் இருளைக் குவித்து மெதுவாக நகைத்தது.

சாப்பாட்டு விடுதியைக் கடந்து, சயன விடுதிக்குப் போகிற வழியிலே, பிரார்த்தனைக் கூடத்தில், ஒற்றை அகலின் சிறு வெளிச்சத்தில் இரண்டு மாணவிகள், நிற்பது தெரிந்தது. தலைமை ஆசிரியை சப்தமின்றிச் சமீபத்திற் போய்நின்று பார்த்தாள்.

அவள், சரஸ்வதி, கண்ணம்மாவின் அணைப்பில் நின்றுகொண்டு, அவள் கூறுவதைக் கேட்கலானாள்.

"மூடராகவே வாழப் பிறந்தவர்கள் அதை நினைத்து அழாமலிருக்கிறார்கள். புத்திசாலியாய், உலகத்துக்கும் அவர்களுக்கு தொண்டு செய்யப் பிறந்த நீ, இப்படி அழுவதுதானா முன்னேற்றத்தின் அறிகுறி?"

இப்படிக் கண்ணம்மா பேசி விம்மினாள். அவளால் அழாமலிருக்க முடியவில்லை.

தலைமை ஆசிரியை உணர்ச்சிப் பிழம்பாய் ஓடிச் சென்று இருவரையும் தழுவிக் கொண்டாள்.

"சமநிலைபெறும் போதுதான் மனிதன் தேவனாகிறான் என்று சொல்வதுபோல அவளது கண்கள் நீர் வழிந்தன."

ஈழகேசரி
18.09.1949

இதயத் துடிப்பு

இராஜநாயகன்

கண் எரிந்தது.

புத்தகத்தை மூடி வைத்து விட்டு மேசை மீது முகத்தைக் கவிழ்ந்து கொண்டேன்.

சிந்தனையில் நெருப்பெரிந்தது, சுழன்று சுழன்று எரிந்தது.

அந்த உருவம் தீக்குவியலிடையே நின்று, எரிந்தது.

காணச் சகிக்கவில்லை, கண்களிலே பாஷணம் பாய்ந்த ஊசியால் குத்துவது போல் அல்லவா இருந்தது!

தொடர்புகளும் செப்பிழை அறுத்த மின்சார விளக்குப் போலச் சிந்தனையூற்றுத் திடீரென்று நின்றது, அதற்கு ஒளியூட்டுவதற்கு அக மகிழ்ச்சி ஏற்பட வேண்டும். மின்சாரவிளக்கு மண்ணெய்யால், தாவர நெய்யால் எரிகிறதை ஒருபொழுதுமே காணமுடியாது.

என் நண்பன், ஓர் ஆசிரியன்,விவாகமாகிச் சில மாதங்கள். மனைவியை வீட்டிலே விட்டுப் பொருள் தேடப் போயிருந்தான். நாட்டின்

மத்தியிலே, வெயில், அரசியற்றும் பூமியிலே, ஆரம்பப் பாடசாலை ஒன்றில் வேலை கிடைத்தது.

தன் ஊரிலே இலஞ்சம் கொடுக்கிற யோக்கிய தாம்ஸத்தோடு, நல்ல ஓர் இடம்பிடித்திருக்க முடியும். இலஞ்சம் கொடுத்து, அதுவும் தன் கைப்பணம் அல்லா பணத்திலே இலஞ்சம் கொடுத்து வேட்டையாட வேண்டும் என்றதை யோசித்தபோது, சூன்யத்தின் சிகரத்திலே தவம் செய்தால் என்ன என்றது போல் இருந்தது அவனுக்கு.

இப்பொழுது வேலை கிடைத்துவிட்டது.

வேலை! உணர்ச்சிகளுக்கும் உயிருக்கும் உன்மத்தம் பிடிக்கிற வேலை! அரசினரின் கல்விப்பகுதி அவனை, அந்த ஆசிரியனை அங்கீகாரம் செய்து வேதனம் கொடுக்க, மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவில்லை.

ஓர் ஓட்டுவீட்டின் மேல் மாடியில், ஒரு சிறிய அறையில் அடைப்பட்டுக் கிடக்கிற அந்த ஆசிரியனுக்கு உன்மத்தம் பிடித்தது. சூழவுள்ள காட்டு வெப்பம், மேலேயுள்ள ஓட்டுவெப்பம், எல்லாம் அவனது உடலைத் தகித்தன. சட்டைப் பையிலே கிடந்த "ஏன் பதில் எழுதவில்லை" என்று ஏங்கும் மனைவியின் கடிதங்கள் அவன் மனத்தைச் சுட்ட கோல்கொண்டு தொட்டன.

தபால் முத்திரை ஒட்டாமல் எனக்கு ஒரு கடிதம் போட்டான்.

"நண்பா உள்ளம் உயிர் எல்லாம் கொதிக்கின்றன, கொதித்துக் கொண்டிருக்கிற தெரு நெடுக லஷியமின்றி, ஓடவேண்டும்போல இருக்கிறது. என் மூளையின் கொதிப்பு, தபதிந்தச் சாரலைக்கூட வரட்டிப் பாலைவனமாக்கி விடும்போல இருக்கிறது.

"என்னோடு சம்பந்தப்பட்டவர்களை நினைத்ததும், மின்சார அதிர்ச்சி பட்டுச் சுட்டுப் போகிற "மின்சார ஒளிக்குமிழ்" போல என் உணர்ச்சிகள் தம் வயமிழந்து கருகிவிடுகின்றன. பெற்றார், மனைவி, அத்தோடு இங்கே மூன்று மாதத்துக்கு மேலாக எனக்குச் சோறு படைக்கிற பிராமணக் கிழவரின் பொறுமை, அத்தனையும் வெட்டவெளியிலே தோன்றிப் புன்னகை செய்கிறதைப் பார்க்கும் போது என் உயிர் அலறுகிறது.

"புத்தகத்தின் பக்கங்களிடையே வைத்த புதிய மலர்கள் போல, நீங்கள் எல்லாம், என் விதியின் பலமான, இறுக்கமான மடிப்புகளிடையே அகப்பட்டுத் தவிக்கிறீர்கள்.

"என் பெற்றார், மனைவியின் பெற்றார் எல்லாரும் உடனே வேண்டிய பணம் தரத் தயாராக இருக்கிறார்கள். அது என் கைப்பணம் போல இருக்குமா?

"என் விவாகத்தின்போது நீ தந்த பரிசு கீதாஞ்சலியும் பத்து ரூபாவும் கைப் பெட்டியிலே இருக்கின்றன. கீதாஞ்சலியைத் தினமும் படிக்கிறேன். அந்தப் பத்து ரூபாய்த் தாள்? அதை எடுத்துச் செலவு செய்ய என்னால் முடியுமா? உயிரை அடகு வைப்பேன், உன் அன்புப் பரிசைச் செலவு செய்ய என்னால் முடியாது.

"ஆறுதலாக இரண்டு வார்த்தை சொல்ல ஒருவரும் இல்லை. உன் கடிதங்களைத் தான் நம்பியிருக்கிறேன், கொதிக்கிற என் உள்ளத்துக்கும் மூளைக்கும் குளிர்ச்சி தரும் என்று"

முன்னால் மூடிக்கிடந்த புத்தகத்திலுள்ளே இருந்த அந்தக் கடிதம் முன்னால் எழுந்து நின்று புயல்போலப் பேசிற்று.

என் இருதயம் உருகி ஓடிற்று. அப்படியே உறங்கிவிட்டேன்.

2

ரயிலிலே நடந்த அரசியல் - பொருளாதார - இலக்கிய சர்ச்சைகள் ஆரம்பத்திலே என்னை இழுத்தன. ஆனால் கொஞ்ச நேரத்தில் சிந்தனைக் குவியல்களிடையே அகப்பட்டுப் புழுங்க வேண்டிய நிலைமையை, என்னை அறியாமலே, நான் ஏற்படுத்திக் கொண்டேன்.

நானும் ஓர் ஆசிரியன். எனக்கும் ஏதோ சம்பளம் கிடைக்கின்றது. அது குடும்பச் செல வுக்குத் தேவையான பணத்தில் காற்பங்குதானும் இராது. அந்த நிலையிலே நண்பனுக்கு உதவ என்று ரயிலேறிப் போகிறேன். என் கையிலே இருந்த பணம் ரயில் செலவுக்குத்தான் போதுமானது.

நண்பனுக்கு உதவி செய்யப் போவதாகவே எனது மனதிலே எண்ணம். சொற்களை விட வேறு ஒன்றையுமே என்னிடம் இருந்து அவன் பெற்றுக் கொள்ளமாட்டான். அதுதான் அவன் என்னிடம் இருந்து பெறும் உதவி!

அவனது அறைக்குப் போனேன். அறைக் கதவு வெறுமனே மூடிக் கிடந்தது. தொட்டதும் அது திறந்து கொண்டது. உள்ளே அவன் இல்லை. அவனது பொருள்கள், ஒரு படுக்கை - ஒருகைப்பெட்டி - ஒரு சிறு விளக்கு - இவைகள் தளத்திலே கிடந்தன. படுக்கையை விரித்து அதன் மேற் சரிந்தேன்.

அவன்வர அதிகநேரமாகவில்லை. வந்ததும் "சொல்லிக்கொள்ளாமல் வந்துவிட்டாயே" என்றான்.

"ஏன், வரக்கூடாதோ?" என்றேன்

சட்டையைக் கழற்றிச் சுவரில் அடித்திருந்த ஆணியில் மாட்டிவிட்டு, "யார் அப்படிச் சொன்னார்கள்?" என்று சொல்லிச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பிலே உயிரில்லை. "சாப்பிட்டாயா?" என்று கேட்டான்.

"ஆம்" என்று சும்மா சொன்னேன்.

"பொய் சொல்லுகிறாய். வா, ஸ்நானம் செய்துவிட்டு இருவரும் சாப்பிடலாம்" என்றான்.

என் பசி ஸ்நானம் செய்யாமலே சாப்பிடலாம் என்பது போல வயிற்றைக் கிள்ளியது. சட் டையைக் கழற்றிச் சுவரிலே மாட்டிவிட்டுத் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு தயாரா னேன்.

3

உணவை முடித்துக்கொண்டு திரும்பினோம்.

வழியிலே அவன் ஆரம்பித்தான்.

"உன்னைக் கண்டபிறகு இப்படி என்று விவரிக்க முடியாத குளிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது"

இது வெறும் முகமன் வார்த்தைத் தொகுப்பாக இருக்க முடியுமா?

எனக்குத் தெரியவில்லை.

சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு அவனே மறுபடியும் சொன்னான்.

"பார், எங்களைச் சூழவிருக்கிற காட்டின் மத்தியிலே, காடு திருத்திப் பயிர் செய்கிற ஏழைச் சனங்களின் குழந்தைகளுக்காகத்தான் இந்தப் பாடசாலையை அரசினர் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். குழந்தைகளிடம் புத்தகம் இல்லை, நல்ல உடையில்லை, வேண்டிய வைத் திய உதவி கிடைக்காது. என்னிடம் படித்த ஒரு பையன் நெருப்புக் காய்ச்சலால் இறந்து போனான். இன்னும் ஒரு பையனுக்கும் அதே நோய். ஒரு பெண் குழந்தைக்கு அம்மை வந்திக்கிறது...."

மேல் ஸ்தாயிலே போய்க் கொண்டிருந்த அவனது பேச்சுத் திடீரென்று நின்றது.

மௌனம் எங்களை வழிநடத்தியது. அவனது நெஞ்சிலுள்ளே வீசிய புயலின் வேகத்தை அவனது முகம் காட்டிற்று.

"நான் அந்த ஏழைக் குழந்தைகளைப் பார்க்கவே போகவில்லை...."

இப்பொழுது கீழ்த்தொனியிலே அவன் பேசினான். அவன் குரல் தளதளத்தது. முடிவிலே நெஞ்சினுள்ளேயே அமுக்கிவிட்டது.

திரும்பிப் பார்த்தேன். அவனது கண்கள் கலங்கியிருந்தன. எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை.

மௌனத்தின் சூழலிலே தன் உணர்ச்சிகளுக்கு ஓய்வு கொடுத்தபிறகு அவன் தொடர்ந்து சொன்னான்.

"அவளுக்கு - லக்சுமிக்கு அம்மை வந்திருக்கிறது. மருந்துக்கு, உணவுக்கு அவளு டைய ஏழைத் தந்தை என்ன செய்வான். இந்த வரட்சியின் மத்தியிலே வைத்திய உதவியின்றி அவன் தப்பிப்பிழைப்பதென்றால் -

"பணம்! உயிரை மீட்பதற்கு அது உதவமாட்டேன் என்கிறது. ஒரு பணக்கார நாய் செய் கிற பஞ்சபாதகங்களுக்கும் அது உதவியாக, முன்னணியில் நிற்கிறது..."

மறுபடியும் அவனது குரல் உச்ச ஸ்தாயிக்கு ஏறிற்று. இந்த ரீதியிலே போனால் அவனுக் குப் பைத்தியம் பிடித்துவிடுமோ என்றுகூட எனக்குத் திகிலேற்பட்டுவிட்டது.

இடையில் மறித்து, "அப்படியானால் இப்பொழுதே போய் அந்தக் குழந்தைகளைப் பார்த்து வருவோம். வா" என்றேன்.

அவன் திரும்பி என்னைப் பார்த்துவிட்டுச் சிரித்தான்.

"நாங்கள் வெறுமனே பார்த்துவிடுவதால் அவர்கள் சுகமடைந்து விடமாட்டார்கள் என்றான்.

"நீ சொல்லுகிறது எனக்கு விளங்கவில்லையே" என்றேன்.

"ஏதாவது உதவி செய்ய வேண்டாமா?"

"முடிந்ததைச் செய்கிறதுதானே" என்றேன்.

அவன் நடக்க ஆரம்பித்தான் "சரி மாலை ஐந்து மணிக்குப் போய் வரலாம்" என்றான்.

4

லக்சுமியின் வீடு அரைமைல் தூரத்திலிருந்தது. வழியிலே நாங்கள் ஒன்றுமே பேச வில்லை. அடிக்கடி அவனைத் திரும்பிப் பார்த்தேன். உருகியோடுகிற செம்புபோல, கொதிப்படைந்த அவனது முகம் சிவப்பேறியிருந்தது.

லக்ஸ்மியின் வீட்டிலே.... குடிசையிலே.... அவளது தகப்பன் மட்டுமே இருந்தான். வேறெவருமே காணப்படவில்லை. லக்சுமியின் தகப்பன் எங்களைக் கண்டதும் எழுந்து நின்று வணங்கினான்.

நண்பனின் மனம் மற்றவர்களைக் காணவில்லையே என்று ஏங்கியிருக்க வேண்டும். அவன் ஒன்றுமே பேசாமல் நிலத்தில் உட்கார்ந்துவிட்டான். "மற்றவர்கள் எங்கே?" என்று நான் கேட்டேன்.

லக்ஸ்மியையும் தாயையும் அவன்... லக்சுமியின் தகப்பன் அடுத்துள்ள கிராமத்துக்குக் கொண்டுபோய் விட்டிருந்தான். அங்கே இருந்தால் நோய் படிந்துவிடும் என்று அவன் எண்ணினான்.

அங்கே, வேண்டிய பண்டங்களை வாங்குவதற்கு அவனிடம் ஒரு பைசாக்கூடக் கிடை யாது. அவன் நாலு மைலுக்கு அப்பாலிருக்கும் அந்தக் கிராமத்துக்கு, நோயின் வேகத்தால் துடிக்கும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு நடந்துதான் போய்ச் சேர்ந்தான்!

இவற்றைக் கேட்டபோது என் மனம் கொதித்தது. சட்டைப் பையிலே கிடந்த காசுப் பைகூட கொதித்தது. அதை இழுத்தெடுத்து லக்ஸ்மியின் தகப்பனிடம் கொடுத்தேன். அவன் அதைப் பெற்றுக்கொண்டு, நிலத்திலே விழுந்து நமஸ்கரித்தான்.

நண்பன் எழுந்தான் லக்ஸ்மியைக் கவனமாகப் பார்த்துக்கொள். நாங்கள் போய் வருகிறோம் என்று மெதுவாகக்கூறி விடைபெற்றுக் கொண்டான்.

அவன் அறையை நோக்கியே நடந்தான். வழியிலே கேட்டேன் "நெருப்புக் காய்ச்சல் பிடித்திருக்கிற பையனைப் பார்க்கத்தானே போகிறோம்.!"

அவன் "இல்லை" என்றான்.

"ஏன்" என்று கேட்டேன்,

"அவனைப் பார்க்கப்போக உன்னிடம் தைரியம் இருக்கிறதா? அவனது குடும்பம் லக்ஸ் மியின் குடும்பத்திலும் பார்க்க வறுமை மிஞ்சியது. அங்கே போனால்..."

அவன் இடையிலே நிறுத்திக்கொண்டான். இப்பொழுது அவனது குரலிலே ஓரளவு திடம் இருந்தது.

அவன் சொன்னது உண்மை அங்கே போனால் சில சமயம் பைத்தியம் பிடித்து விடவுங் கூடுமல்லவா?

அறைக்குப் போனதும் நான் படுக்கையை விரித்துக் கொண்டு படுத்தேன். அவன் விளக்கை ஏற்றிவைத்துவிட்டு, எனக்கு எதிரிலே சுவரோடு உட்காந்தான்.

அவனது அமைதியைப் பார்த்து அதிசயித்துக் கொண்டிருக்கும் போதே அவன் கேட்டான்

"நீ எப்பொழுது போக வேண்டும்?"

"என்" என்று நான் கேட்டேன்.

"நாளைக்கே புறப்பட்டுவிடு" என்றான்.

"மாட்டேன்" என்று சொல் வாயெடுத்தேன். அதற்கிடையில் அந்த எண்ணமும் முன்னே வந்து நின்று தடுத்தது.

"புறப்படவேண்டும். பணம் - ?'

எனக்கு ஒன்றமே ஆதான்றவில்லை. நீண்ட நேரத்துக்குப் பிறகு சொன்னேன் : "நான் இங்கிருந்து போகமாட்டேன்."

அவன் நகைத்தான். அதில் "இங்கேயே இருக்கப் போகிறாயோ?" என்ற கேட்பது போல் போலிருந்தது.

அவன் சொன்னான்:"நாளைக் காலையே புறப்பட்டுவிடு. இங்கிருந்தால் நீ பைத்தியமாகி விடுவாய். காலை ரயிலைத் தவறவிடக்கூடாது. தெரிகிறதா?"

"நான் சொல்ல வாயெடுத்தேன்". அவன் தடுத்து. போகவேண்டும் என்று நான் சொல்லு கிறேன். நீ போயே ஆகவேண்டும்." என்றான்.

அது அவன் கட்டளை!

05

அவன் கட்டளையை மீற என்னால் முடியவில்லை.

அவனோடு சில நாட்களாவது நின்று அங்குள்ள ஜனங்களோடு கூடிப் பழகவேண்டும் என்ற மனம் துடித்தது. அவர்களின் வாழ்க்கையில் ஒரு துளியைக்கண்டு கொண்டேன். அவன் "நீ போ" என்று கட்டளையிட்டான்.

அதிகாலையில் அவனே என்னை எழுப்பினான். ரணிலுக்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. கைப்பெட்டியைதத் திறந்து ஒரு புத்தகத்தை எடுத்தான். பார்த்தேன்! நான் பரிசளித்த கீதாஞ்சலி!

கிதாஞ்சலியின் பக்கங்களைப் புரட்டினான். நடுவிலே இருந்த ஒரு பத்து ரூபாத் தாளை எடுத்து, "இந்தா இதை ரயில் செலவுக்கு வைத்துக்கொள்." என்று தந்தான்.

அந்தப் பத்துரூபா நோட்டு! அதை வாங்க எனது கைகள் நீளவில்லை. அவனை நிமிர்ந்து பார்த்தேன். "என்ன உன்னிடம் ரயிலுக்கு பணம் இருக்கிறதா?" என்று கேட்டுவிட்டு சிரித்தான். என் கண் கலங்கிற்று.

ஈழகேசரி - 3.10.1948

அந்தக் காலம்

இராஜநாயகன்

அண்ணா வரவில்லையா?" என்ற ஒரு பெண்ணின் சப்தம் கேட்டுத் திரும்பினான் சந்திரநாதன்.

நதியின் சலசலப்பிலும், அழகிலும், மாலைக் காற்றின் ஸ்பர்சத் திலும் மெய்மறந்து போயிருந்த அவன், நதிதான் அவள் உருவில் வந்து காட்சி அளிக்கிறதோ என எண்ணினான்.

"அண்ணாவா? யார் எனக்குத் தெரியவில்லையே!" என்றான்.

"அவர்தான் என் சுவாமி நாதன்"

அவர்தான் என் அண்ணா சுவாமிநாதன் " என்றாள் அவள்.

"ஆஹா! நீ அவனது சகோதரியா? நீ தினமும் நதிக்கு வரும்போது உன்னை யாரோ என்று எண்ணினேன், ஸ்வாமியைக் காணவில் லையே, எங்குபோயிருப்பான்?" என்றான் சந்திரநாதன்.

"தெரியவில்லை, நீங்கள் தனியாக இருக்கிறீர்கள் என்றுதான் கேட்டேன்! நான் போகவேண்டும்" என்று கூறிவிட்டு நீர்க்குடத்துடன்

திரும்பினாள். போகும் போது அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். சந்திரநாதனுடைய இருதயம் மலர்ந்தது.

சந்திரநாதன் ஒரு புதுப்பிறவி. பிரகிருதியின் புதியமொட்டு. "பெண்கள் விடுதலை அவசியம். அவர்களுக்குச் சமத்துவம் கொடுக்கவேண்டும்." என்று கர்ச்சிப்பான். "கேவலம் மிருகங்களைப் போன்று, உணர்ச்சியற்ற மனிதர் பலர் "காதலர்" என்று கூறிக் கன்னித் தெய்வங்களை அவமதிக்கிறார்கள். காதல் என்றால் என்ன? அன்புதானே! ஆகவே சரீர சம்பந்தமான அன்பை மட்டும் மடையர்கள் வேண்டுவதேன்? சகோதரத்துவத்துடன் கூடிய அன்பை வேண்டினால் என்ன?" என்று முழங்குவான்.

2

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் அன்னியோன்னியமானவர்கள். சந்திரநாதனுடைய தந்தையார் வேலை மாற்றமாகி, ஸ்வாமிநாதனுடைய கிராமத்தில் வசிக்க நேரிட்டது.

ஸ்வாமிநாதனுக்குத் தாயோ, தந்தையோ இல்லை. போதிய சொத்தை விட்டுவிட்டு இறந்துவிட்டனர். அவனுக்கும் அவன் சகோதரி கல்யாணிக்கும் துணை அவர்கள் பாட்டிதான். வெளியூரிற் சில பந்துக்களும் இருந்தார்கள்.

ஸ்வாமிநாதனுடைய ஊருக்குத் தகப்பனாருடன் வந்த சந்திரநாதன், அங்கே உள்ள கல்லூரியில் தனது படிப்பை மேற்கொண்டான். ஸ்வாமிநாதனும் சந்திரநாதனும் ஒரேவகுப்பு. இருவரும் ஒரே தன்மையான கொள்கையுடையவர்கள். நட்பு வளர்வதற்குத் தடை ஏது?

மாலைவேளைகளில் நதிக்கரையில் இருவரும் உட்காந்து சம்பாஷிப்பார்கள். அப்பொழுதெல்லாம் ஸ்வாமிநாதனுடைய சகோதரி கல்யாணி குடத்துடன் நதிக்கு வருவதுண்டு. கல்யாணி ஸ்வாமிநாதனுடைய சகோதரி என்று முதலில் சந்திரநாதனுக்குத் தெரியாது.

கல்யாணியைச் சந்திரநாதன் அறிந்து கொண்டபிறகு அவளைக் காணும்போதெல்லாம், அவளது குழந்தையுள்ளத்தைப் பிரதிபலிக்கும், ஒளி வீசும் கருவிழிகள் பாரதியின் "சுட்டும் விழிச்சுடர்தான்" ஞாபகத்தை அவனுக்கு உண்டுபண்ணும். அவர்களது அன்பை வளர்ப்பதற்கு இடையிடையே சில சம்பாஷணைகள் படர்கொடியாயிருந்தன. சந்திரநாதன் கல்யாணியை, "கல்யாணி!" என்பான் அன்பொழுக "அண்ணா" என்பாள் கல்யாணி.

3

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் நதிக்கரையிலிருந்து வந்துகொண்டிருந்தார்கள். இன்றுதான் சந்திரநாதன் ஸ்வாமிநாதனுடைய இல்லத்துக்கு வருகின்றான். நண்பர்களின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்" என்ற பாரதிபாடலின் ஈற்றடி கல்யாணி இராகத்தின் உச்ச ஸ்தானத்தில் மிதந்து கொண்டிருந்தது. அந்த கானவெள்ளத்தில் மனத்தை மிதக்கவிட்ட சந்திரநாதன் பதுமைபோல் வீட்டினுள் காலை எடுத்துவைத்தான். உள்ளே கல்யாணிதான் பாடிக்கொண்டிருந்தாள் என்று சந்திரநாதன் உடனே அறிந்துகொண்டான். சந்திரநாதனைக் கண்டதும் கல்யாணி பாடுவதை நிறுத்திக்கொண்டாள்.

"ஏன் பாடுவதை நிறுத்திக் கொண்டாய்?" என்றான் சந்திரநாதன்.

"........."

"தொடர்ந்து பாடாமல் நிறுத்திக் கொள்வதுதான் வழக்கமோ?"

"இல்லை, பாடுகிறேன், ஆனால் தாங்கள் இன்னும் எங்கள் விருந்தாளியை உபசரிக்க வில்லையே?"

"உங்கள் விருந்தாளியான பாக்கியசாலி யார்?"

"எங்கள் விருந்தாளி பாக்கியசாலியோ என்னவோ, ஆனால் அவரை விருந்தாளியாகப் பெற்ற நாங்கள் பாக்கியசாலிகள்தான்"

கல்யாணியின் முகத்தில் வெற்றியின் சின்னமாகப் புன்முறுவல் ஒன்று தோன்றிற்று.

"வெற்றி எவருடையதாயினும் பெருமை மட்டும் என்னுடையதே" என்றான் சந்திர நாதன் விட்டுக்கொடாமல்.

சந்திரநாதனும் ஸ்வாமிநாதனும் சிற்றுண்டி அருந்திக்கொண்டிருந்தனர். இருவருக் கும் "காப்பி" கொண்டுவந்த கல்யாணி குறும்பாக "அண்ணா" என்றாள்.

ஒரு முகமாகத் திரும்பிப் பார்த்த இரண்டு "அண்ணா"க்களும் கல்யாணியின் குறும்பத் தனத்தைக் கண்டு நகைத்தனர்.

விருந்து முடிந்தது. விருந்தாளியும் உவகையுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தான். சம்பாஷனைகள் ஒரு முடிவை அடைந்தன. சந்திரநாதன் எழுந்தான். ஸ்வாமிநாதனும் எழுந்து நின்றான்.

"கல்யாணி, போய்வருகிறேன்" என்று விடைபெற்றுக் கொண்டான் சந்திரநாதன்.

" அடிக்கடி உங்கள் திருஷ்டி இப்பக்கத்தில் விழட்டும் என்றாள் கல்யாணி. "தாராளமாய்" என்று கூறியபடியே சந்திரநாதன் படிக்கட்டுக் கடந்து அப்பாற் சென்றான்.

4

கூடப்பிறந்தால் மட்டுந்தானா சகோதரியும் சகோதரனும்?" என்று சொல்லிக் கொண்ட சந்திரநாதனுடைய திருஷ்டி ஸ்வாமிநாதனுடைய வீட்டின் அடிக்கடி விழுந்து கொண்டு தானிருந்தது.

வருஷம் ஒன்று கழிந்தது. கல்யாணியின் பிறந்த தினத்திற்குச் சந்திரநாதனும் அழைக் கப்பட்டான். மாலையிற்றான் விருந்து. ஆனால் காலையிலேயே சந்திரநாதன் வரவேண்டும் என்பது கடின வேண்டுகோள்.

சந்திரநாதன் காலையில் அங்கு சென்றான். அவன் போன சமயத்தில் ஸ்வாமிநாதன் வெளியிற்சென்றிருந்தான். யாரோ இரண்டொருவர் மூலைக்கொருவராய் ஏதோ செய்து கொண்டிருந்தார்கள். கல்யாணி இரண்டொரு தடவை வெளியே வந்தாள். தன்னைக் கண்டு கல்யாணி ஒருவார்த்தைதானும் கூறாதது, சந்திரநாதனைச் சுவர்க்கத்தில் இருந்து பாதா

ளத்தில் வீழ்த்தியது போலிருந்தது. கல்யாணியினிடத்துக் காணப்பட்ட வாட்டம் சந்திர நாதனுக்குப் புலனாகாத புதிராகக் காணப் பட்டது.

சந்திரநாதனுடன் சம்பாஷிப்பதற்காகச் சந்தர்ப்பங்களை வருவித்துக்கொள்ளும் கல் யாணி, இன்று சந்தர்ப்பங்கள் தாமாகவே கிடைத்தபோது சம்பாஷிக்கவில்லை என்றால் சந்திராநாதனுக்குத் தலைவலிக்காமல் வேறென்னதான் செய்யும்?

ஸ்வாமிநாதன் வந்ததும் தலைவலி என்று சாக்குச் சொல்லி வீட்டிற்குத் திரும்பினான். ஸ்வாமிநாதன் பலமுறை வேண்டியும் சந்திரநாதன் பிடிவாதஞ் செய்தான். அங்கே தங்குவது அரைகணமேனும் சகிக்கமுடியாத வேதனையாகப்பட்டது சந்திரநாதனுக்கு. உணவு கொள்ளவும் மறுத்துவிட்டான்.

சந்திரநாதன் போய்விட்டான்! "காப்பி" கூடக் கொடுத்து உபசரிக்கவில்லை! ஸ்வாமி நாதன் சமயத்தில் இருந்தாலாவது உபசரித்திருப்பான். கல்யாணி "காப்பி எடுத்துக்கொள் ளுகிறீர்களா?" என்ற மூன்று வார்த்தைகளைத்தானும் கேட்டாளா?

இவற்றையெல்லாம் எண்ணிக் கல்யாணியின் உடைந்த உள்ளம் உருகிக்கொண்டி ருந்தது.

5

இரண்டு தினங்கள் கழிந்தன. சந்திரநாதனைக் கல்யாணி நதிக்கரையில் சந்திக்க நேர்ந்தது. சந்திரநாதன் தனது கண்கள் திறந்தபடிதானிருந்தன. ஆனால் அவனது திருஷ் டியில் எதாவது பட்டதாகத் தெரியவில்லை.

கல்யாணி "அண்ணா!" என்றாள்.

சந்திரநாதனின் மௌனம் கலையவில்லை.

மறுபடியும் "அண்ணா!" என்றாள் கல்யாணி. சிந்தனாலோகத்திலிருந்த சந்திரநாதனின் கண்கள் கல்யாணியை நோக்கின. சடுதியில் ஏற்பட்ட ஒருவித உணர்ச்சியால் அவனது உடலில் இரத்தோட்டம் அதிகப்பட்டதை அவனது கண்கள் ஸ்பஸ்டமாகத் தெரியப்படுத்தின.

"கல்....யாணியா?" என்று அவனை அறியாமலே அவனது வாய் கூறிற்று.

"ஆம், நான் உங்களை இரண்டு தினங்களாக இங்கே தேடினேன், உங்களைக் காணவில்லை. அன்றைக்கு நீங்கள் உணவு கொள்ளாமற் சென்றதை எண்ணி எண்ணி எனது இருதயம் வெடித்துவிடும் நிலைமையில் இருந்தது. இப்பொழுது உங்களைச் சந்தித்ததால் அந்நிலைமையில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அண்ணா! உங்கள் வாட்டத்திற்குக் காரணம் பாவிநான்தான். அதையிட்டு உங்களிடம்....

கல்யாணியின் நயனங்களிலிருந்து தொடர்ந்தாற்போல் பல முத்துக்கள் உதிர்ந்தன.

சந்திரநாதனும் உணர்ச்சி உள்ளவன் தானே? அவனது கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. அதைக் கல்யாணி கண்டுவிடுவாளோ என்று முகத்தை மறுபக்கம் திருப்பிய சந்திரநாதன், தூரத்தில் ஸ்வாமிநாதன் வந்து கொண்டிருப்பதைக் கண்டான்.

அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்ட சந்திரநாதன், "கல்யாணி! அண்ணா வருகிறான். அழவேண்டிய அவசியம் என்ன?... நானும் தகப்பனாரும் நாளைக்கு எங்கள் கிராமத்துக்குப் போகிறோம். நிகழ்ந்தவற்றை இனிமாற்றி அமைக்க முடியாது. நிகழப் போவதையிட்டுச் சிந்தனை செய். என்மேற்றான் தப்பு முழுவதும் அதற்காக என்னை மன்னித்து விடு. உன்னிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்", என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பாராமலே ஸ்வாமிநாதனை நோக்கி விரைவாகப் போய்விட்டான்.

6

மறுதினம் சந்திரநாதன் தந்தையாருடன் தனது ஊருக்குப் போய்விட்டான். ஸ்வாமிநாதனுடைய கிராமத்திலிருந்து சந்திரநாதனுடைய கிராமம் சுமார் முப்பது மைல். சுவாமிநாதனும் அவர்களுடன் சென்று இரண்டு தினங்கள் தங்கிவிட்டு திரும்பினான்.

அடுத்த வாரத்தில் சந்திரநாதனுக்கு, கல்யாணியிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. கடிதத்தில் காணப்பட்ட வார்த்தைகள் ஒரு சில என்பது உண்மைதான். ஆனால் அச்சில் வார்த்தைகளின் சக்தி மட்டும் மிக அதிகம்.

கடிதம் இது தான்:

அண்ணா!

கண்களை மூடிக்கொள்ளும் காயங்களில் எல்லாம் எனது மனக்கண்களில் தோற்றுவது தங்கள் தோற்றந்தான். என் உடைந்த இருதயத்தை மட்டும் உடலில் இருந்து பிரிக்க முடியுமானால், அதை நிச்சயமாக உங்கள் பார்வைக்கு அனுப்பியே தீருவேன். "கல்யாணி! மன்னித்தேன்" என்ற இரண்டு வார்த்தைகளை மட்டும் ஒரு கடிதத்துண்டில் எழுதி அனுப்பி விடுங்கள் எனது நன்றி... கல்யாணி.

கடிதத்தில் காணப்பட்ட ஒவ்வொரு வார்த்தையும் சந்திரநாதனை நிலைகுலையச் செய்தது. சாதாரண வேளையிலெனில் கணக்கிலடங்காத கடிதங்கள் எழுத அவனது கைகளே முனைந்து நிற்கும். ஆனால் இன்று அவனது மனப்பான்மை கடிதம் எழுதுவதற்கு குறுக்கே நின்றது. அவன் பதில் எழுதவில்லை.

ஐந்து நாட்கள் கழித்து மற்றுமொரு கடிதம் சந்திரநாதனுக்குக் கிடைத்தது. "அண்ணா, எனது வேண்டுகோளை தாங்கள் நிராகரித்து விட்டீர்களா? எனது மனச்சாட்சிக்கு விரோதமாக, நான் தங்களோடு சம்மந்தப்பட்ட மட்டில் ஒன்றும் செய்யவில்லை. நான் என்னை அறியாமல் ஏதாவது தவறு செய்திருந்தாலும் அவற்றிற்காக என்னை மன்னியுங்கள். அன்று, எனது பிறந்ததினத்தன்று நீங்கள் வந்து திரும்பிப்போனபோது எனது மனம் அலையிடப்பட்ட துரும்புபோல இருந்தது. கிராமத்திலிருந்து வந்திருந்த எனது மூட பந்துக்களில் ஒருவரினது கடினமான கட்டளையினால், அன்று நான் உங்களுடன் சம்பாஷிக்கவோ, உங்களை உபசரிக்கவோ முடியவில்லை. வயது வந்த பெண்கள் ஒரு ஆணுடன் சம்பாஷிக்கக் கூடாது என பது அம்மூடாத்மாவின் கொள்கை. அண்ணாவும் சமயத்தில் இல்லாது போனது என்னால் சகிக்கமுடியாததாகிவிட்டது. அண்ணா எனது இருதயம் நல்ல நிலைமையை அடைவதற்கு தங்களிடம் தான் ஔடதம் இருக்கிறது. "மன்னித்தேன்" என்று ஒரு வார்த்தை எழுதி அனுப்புங்கள். எனது அஜாக்கிரதையால் ஏற்பட்ட பெரு நெருப்பைத் தணிக்கக்கூடியது. தங்கள் ஒரே ஒரு வார்த்தைதான். அந்த ஒரு வார்த்தையை மட்டும் எழுதி அனுப்பி விடுங்கள்." - கல்யாணி - என்றிருந்தது கடிதம்."

சந்திரநாதன் கடிதம் எழுத எண்ணினான். ஆனால் எழுத முடியவில்லை. சந்திரநாதன் நேரிலே சம்பாஷிப்பதை விரும்பினான். ஆகவே அவன் சுவாமி நாதனுடைய கிராமத்திற்குப் போகத் தீர்மானித்தான்.

7

கல்யாணியின் வீடு அந்தத் தெருவின் ஒரு கோடியில் இருக்கிறது. தெருவின் இந்தக் கோடியில் கால்களை வைக்கும்போதே சந்திரநாதனுடைய நெஞ்சு உலர்ந்து போயிற்று. எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும், அவனது இருதயத் துடிப்பு அதிகரித்தது. கல்யாணி வீட்டு வாசலில் போனபோது வீசிய மந்தமாருதம் கூட சந்திரநாதனுக்கு வெப்பமாக இருந்தது.

கல்யாணி குறிப்பிட்டிருந்த மூடாத்மா தனது கிராமத்திற்குப் போய்விட்டதை முன் கூட்டியே அறிவான். அவன் வீட்டினுள் நுழைந்த போது கல்யாணி மேஜை அருகில் ஏதோ யோசித்த வண்ணம் உக்காந்திருந்தாள். சுவாமிநாதன் வெளியே சென்றிருந்தான்.

சந்திரநாதன், "கல்யாணி! அண்ணா எங்கே போய்விட்டான்?" என்றான் தீனமான துவ ணியில் சந்திரநாதனைக் கண்டதும், முன்பே சுருதி சேர்த்து வைத் திருந்த கல்யாணியின் கண்கள் தமது ஆர்வத்தனத்தை ஆரம்பித்து விட்டன.

இதை சந்திரநாதனால் சகிக்கமுடியவில்லை.

"என்னம்மா அழுகிறாய்! என்னை மன்னிக்க முடியாது என்றா? என்னை, இப்பாவியை மன்னித்துவிடு. கல்யாணி! இதோ, நீ முன்பு என்னிடம் கேட்ட புஸ்தகம் இருக்கிறது. இதை வாங்கிக்கொண்டு என்னை மன்னித்துவிடு" என்றான் விம்மலுடன்.

நீண்ட ஒரு மௌனத்தை சந்திரநாதன்தான் கலைக்கவேண்டி நேரிட்டது.

"கல்யாணி! இப்புஸ்தகத்தை உனது கைகளால் வாங்கிக்கொண்டு என்னை க்ஷமித்து விடு." என்றான்.

"கைகளால் வாங்கிக்கொள்ளும் அந்தக்காலம் போய்விட்டது: இப்பொழுது கடிதத்திற்குப் பதில் எழுதாத காலம் அல்லவா நடக்கிறது?"

இவை கல்யாணியின் விம்மலுடன் கலந்து வந்த வார்த்தைகள்.

"கல்யாணி! நான் சொல்வதைக் கேள். பிறகு....."

"முதலில் இதை மட்டும் சொல்லுங்கள். எனது கடிதத்தைப் பெற்றுக் கொண்டீர்கள் தானே?"கல்யாணி இதைக் கேட்டு முடிப்பதன் முன்னர் தெருவிலே ஸ்சுவாமிநாதன், தனது நன்பன் ஒருவனை அழைத்துக்கொண்டு வருவது தெரிந்தது. இரண்டு உள்ளங்களின் பிணக்குகள் அறுக்கப்படும் சமயத்தில்க் கூட அதற்கு ஒரு இடையூறு!

சம்பாசனை நின்றுவிட்டது மனப்புயல் மட்டும் ஓயவில்லை.

சந்திரநாதனுடைய உள்ளம், "கைகளால் வாங்கிக்கொள்ளும் காலம் மட்டும் தானே போய்விட்டது? அன்பு உரிமைகூட போய்விட்டதா? அவை போகமுடியாது. போய் முடிந்த அந்தக் காலம் கூட திரும்பிவரத்தான் செய்யும்." என்று கூறிற்று.

துரதிஷ்டத்தால் நேர்ந்த சில அச்சந்தர்ப்பங்கள், ஒன்றுமில்லாத சிறுவிசயத்தை எவ்வ ளவு பெரிதாக வளர்த்துவிட்டன! இந்தக் கொடிய காலப்போக்கை சித்திரவதை செய்தால் கூட பாதகமில்லை. இப்பொழுதுதான் என்னபோய்விட்டது? அவர் என்ன உணர்ச்சியற்றவரா?" என்றது கல்யாணியின் உள்ளம்.

"இரண்டு உள்ளங்களின் கூற்றும் நியாயமானவைதான்"

என்று ஒலிப்பதுபோன்றிருந்தது. தூரத்தில் செல்லும் நதியின் சல சலபப்பு...

ஈழகேசரி
20.01.1946

நடனம்

நடனம் இவரின் இயற்பெயர். நடனசபாபதி ஐயர். ஈழகேசரியில் நினை வுத்திரை (1946), சிதைந்த வாக்கு(1947) ஆகிய இரு சிறுகதைகள் எழுதியுள்ளார். மறுமலர்ச்சியில் இவர் எழுதிய வாழ்வு என்ற சிறுகதை வடக்குக் கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு வெளியிட்ட மறுமலர்ச்சிச் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கின்றது. ஓய்வுபெற்ற அரச பணியாளர் எழுதிய சிறுகதைகள் ஐந் திற்குள் ஆயினும் சிறுகதைக்குயிரான வடிவத்தையும் உத்தியும் தெரிந்து வைத் திருக்கிறார் என்பது அவரது சிறுகதைகளில் இருந்து புலனாகின்றது.

- நினைவுத் திரை
- வாழ்வு
- சிதைந்த வாக்கு

நினைவுத்திரை

நடனம்

அன்று இரண்டு மணியிருக்கும் சாப்பாடு முடிந்ததும் ஒரு பத்திரிகையை கையில் எடுத்துக் கொண்டு வெளி விறாந்தைக்கு வந்து சேர்ந்தேன். அங்கே இருந்த சாய்மனைக் கதிரையில் சாய்ந்து கொண்டு பத்திகையைப் படிக்கத் தொடங்கினேன்.

தரையில் ஏதோ புஸ்கத்தை முற்றுகையிட்டு அதிலுள்ள படங்களுக்கெல்லாம் பெயர் கொடுப்பதில் முனைந்திருந்தான் என் குழந்தை சோமு. " ஐயோ! அப்பா இந்தா உனக்கு தபால் திருக்கோணமலையில் மாமா போட்டது." என கத்திக் கொண்டு வந்தான்.

உண்மையில் அன்று நான் திருகோணமலையில் இருக்கும் எனது நண்பர் ஒருவரின் கடிதத்தை எதிர்பார்த்திருந்தேன். ஆதலால் பையன் சொன்னது மெய் என்று நினைத்துப் பத்திரிகையைப் போட்டு விட்டு " எங்கேடா எங்கே?" என்று ஆவலுடன் கையை நீட்டினேன். அவன் தன் கையில் இருந்த கடதாசியைத் தந்துவிட்டு " ஏசசுப் போட்டேனே அப்பரையே ஏச்சுப்போடேனே!" என்று பாடத் தொடங்கினான்.

அவன் கொடுத்த கடதாசியைப் பிரித்தேன். அது ஒரு பழைய கடிதம். எனக்குக் கோபமும் சிரிப்பும் ஏக காலத்தில் வந்தன. இவ்வளவு சாதுர்யமாக ஏமாற்றப் பழகிவிட்டானே என்று ஆச்சரியமாய் இருந்தது. " எங்கேடா தபால்... சின்னப் பயலே! இந்த வயதிலே இவ்வளவு குள்ளப் புத்தி...." என்றேன். சிரித்துக் கொண்டே அவனும் தனது சாமர்த்தியத்துக்கு முன் நான் தோற்றுவிட்டேன் எண்ணியோ என்னவோ தானும் சிரித்துக் கொண்டு நின்றான். "இது எங்கே இருந்தது" என்று கேட்டேன். ஏதோ கோபம் கொண்டவன் போல " இந்தப் புத்தகத்துக்குள் இருந்தது அப்பா" என்று தரையில் கிடந்த புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு வந்து காட்டினான். " போடா போ.... உள்ளே அம்மா கூப்பிடுறா" என்று அவனைத் தந்திரமாக உள்ளே அனுப்பிவிட்டு, " இந்தக் கடிதத்தில்தான் என்ன இருக்கிறது பார்ப்போமே" என்று அதி லிருந்த இரண்டு வரிகளைப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! இது சோமுவின் நண்பன் தியாகி, சோமுவால் எழுதப்பட்ட கடிதமல்லவா. ஆமாம், ஏழு வருடங்களுக்கு முன்னால் எழு தப்பட்டது. இதுதான் அவனது கடைசிக் கடிதம். அதை நான் ஏதோ புஸ்கத்துக்குள் பத்திரமாக வைத்தேன். அந்தப் புஸ்தகம் என் குழந்தை சோமுவின் கையில் அகப்பட்டுவிட்டது. அதற்குள் இருந்த இக்கடிதத்தை எடுத்துக் கொண்டு என்னை ஏமாற்ற வந்துவிட்டான் இந்தப் பயல்...! அவன் கடிதத்தை மட்டும்தான் கொண்டு வந்தானா? ஐயோ! எங்கேயோ மறைந்திருந்த என் நண்பனை நினைவிற் கொண்டு வந்து பலமாக உறைந்து கிடந்த என் உள்ளத்தை அல்லவா கிளறிவிட்டான்.

நண்பன் சோமுவும் நானும் சிறு வயதில் இருந்தே ஒன்றாக வளர்ந்தோம். ஒன்றாகப் படித்து வந்தோம். அக்காலம் தொட்டு சிறிதும் வேறுபாடின்றி பழகி வந்தோம். சிறுவயது தொடங்கியே பரோபகார சிந்தனை இருந்து வந்தது.

சில சமயங்களில் நான் பாடசாலைக்குப் போகும் போது எனது பென்சிலையோ பேனை யையோ வீட்டில் விட்டு போய்விட்டால் அவன் தனது பென்சிலையோ பேனையையோ எனக்கு கொடுத்துவிட்டு எனக்காக தானே தண்டனை ஏற்று வாங்கில் ஏறியதும் உண்டு. என்னை எந்த இடத்திலும் கலங்கவிடமாட்டான். எனக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பான். எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக தனது வாழ்க்கையையே தியாகம் செய்த தியாகி அவன். ஆ! இனி எப்போது அவனைக் காண்பேன். தனது உண்மையை என் னிடம் சொல்லியிருந்தால் இவ்விதம் சேர்ந்திருக்கமாட்டான். ஒரு நண்பனுடைய இன்பத் துக்காக எண்ணம் ஈடேற்றத்திற்காக அவன் செய்த இத்தியாகத்தை தனது தேசத்திற்காகச் செய்திருந்தால்... என்ன? ஒரு தனிமனிதனுடைய இச்சை பூர்த்தியாவற்காகவா இவ்வித குரூர பலி!

எட்டு வருடங்களுக்கு முன் ஏதோ பரீட்சையின் பொருட்டு பட்டணத்துக்கு சென்றிருந் தேன். அங்கு என் சித்தப்பா வீட்டில் நான் தங்கியிருந்தேன். பரீட்சை நான்கு நாட்களாக நடந்தது. முதல் நாள் பரீட்சை முடிந்து நான் வீடு திரும்பும் பொழுது எனக்கு முன் ஒரு யுவ தியும் போய்க்கொண்டிருந்தாள். அவளை அழகி என்றே கூற வேண்டும். அவள் அதே பரீட் சைக்கே வந்தவள். ஒருமுறை அவளிடம் ஏதாவது பேசிப் பார்க்க வேண்டும் என்று எண்ணி னேன். ஆனால் காரணமின்றி எவ்விதம் அவளோடு பேசுவது? அதனால் ஒன்றும் பேசாமல் வந்து கொண்டிருந்தேன். இடையிடையே அவள் என்னைத் திரும்பிப் பார்த்ததாகவும் ஞாபகம். சித்தப்பா வீடு கிட்டியது. அவள் அதற்குப் பக்கத்து வீட்டில் நுழைந்தாள். ஒருவேளை

அது அவளுடைய வீடாகத்தான் இருக்கும். இவ்விதம் நினைத்துக் கொண்டு சித்தப்பா வீட்டிற்குள் நுழைந்தேன். இரண்டாம் நாள் பரீட்சையில் இருந்து வந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளித் திண்ணையில் உள்ள கதிரையில் படுத்தபடி அடுத்த நாளுக்குரிய பாடத்தை ஆயத்தம் செய்ய வேண்டும் என்று புஸ்தகத்தைத் திறந்தேன். அதற்கிடையில் நினைவுத் திரை திறந்து கொண்டது. முதலில் நேற்றைய காட்சிப் படலமும் பின்பு கற்பனைப் படலமும் விரிந்தன. இந்நிலையில் படிப்பு ஓடவில்லை. அப்பொழுது படலை திறக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டேன்.

அவளை யாரென்று தீர்மானிக்கும் முன் அவள் எனக்கு முன்னால் நாணமும் ஈகையும் தோன்ற வந்து நின்றாள்.

" என்ன அலுவல் என்றேன் " அலட்சியமாக.

" அப்படி ஒன்றும் இல்லை சும்மா மாமியிடம் அலுவலாக வந்தேன்" என்று சொன்னாள் உள்ளே பார்த்துக் கொண்டு.

" மாமி எங்கோ போய்விட்டார்" என்றேன். உள்ளே தூக்கமாய் இருப்பது தெரிந்தும்!
சிறிது நேரம் மௌனம். மீண்டும் அவளே பேசினாள்.

" வினாப் பத்திரத்தாள் இலகுவாக இருந்தனவா?"

மாமியிடம் அலுவலாக வந்தவள் வலிய என்னை கதைக்கிழுத்தாள்.

" இலகுவாகத்தான் இருந்தன. அவ்வளவு கடுமையல்ல!..."

" நாட்காலியில் உட்காரலாமே" எதிரில் உள்ள நாட்காலியைக் காட்டினேன். அவளுக்கு நாட்காலியை இழுத்து அதன் சட்டத்தைப் பிடித்த வண்ணம் நின்றாள். நவநாகரீகப் பெண்களைச் சிறப்பிற்கும் வழிகளில் அதுவும் ஒன்றாய் இருக்கலாம் என்று எண்ணினேன்.

" அப்போ எல்லாம் சரியாகத்தான் எழுதியிருப்பீர்கள்? அப்படித்தானே?"

" எல்லாம் என்று சொல்வதற்கில்லை பெரும்பாலும் சரியாகத்தான் எழுதியிருக்கிறேன்."

" நானும் அவ்வளவு திறமாக எழுதவில்லை. என்றாலும் 'பாஸ் மார்க்ஸ்' எடுத்துவிடுவேன்"

"...ம்...ம்..." என்றேன். மீண்டும் மௌனம் நிலவியது. இம்முறை நான் முந்திக் கொண்டேன். "உன்னுடைய பெயர் என்ன அறியலாமா" என்று மெல்லமாகக் கேட்டேன்.

" என் பெயரை அவ்வளவு அவசியமாக அறிய வேண்டுமா?" என்றாள் குறு புன்னகையுடன்.

" அவசரம் இல்லை. யாராவது உன்னைப் போன்ற அழகிகளைக் கண்டால் அவர்களுடைய பெயர்களை அறிய வேண்டும் என்று ஆவல் உண்டாவது சகஜம் தானே.! இதில் என்ன தப்பு"

" அப்படியானால்.... நான் அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்!" அவள் என்னை கடைவிழிகளால் நோக்கினாள்.

" பின்னே....! அழகில்லாமல்...?

" அப்படி என்றால் நீங்கள் என்னை ஏன் புகழ வேண்டும்? இரண்டு வார்த்தை பேச முன் இவ்வளவுக்கு பேச்சில் தொடங்கிவிட்டீர்கள் என்றால் பழகிவிட்டால் என்ன செய்வீர களோ?"

" நான் இவை ஒன்றையும் உன்னிடம் கேட்கவில்லை. பெண்கள் அதிகப் பிரசங்கிகள் என்பது எனக்குத் தெரியும். உன்னுடைய பெயரைச் சொல்கிறாயா இல்லையா?"

"சொல்லா விட்டால் என்ன செய்வீர்களாம்? ஆண்கள் மிரட்டல்காரர்கள் என்பதும் அவர் களை நம்பக் கூடாது என்பதும் எனக்குத் தெரியும்தானே!" என்று சொல்லிவிட்டுப் பலமாகச் சிரித்தாள் அவள்.

" திரும்பவும் பிரசங்கம் செய்ய வந்துவிட்டாயா? உன் பெயரைச் சொல்வாய மாட்டாயா?"

" என் பெயர் கமலா"

"கமலாவா? நல்ல பெயராக இருக்கிறதே!" அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. கைக் குட்டையால் தனது முகத்தை மறைத்தாள்.

"அடடே இதழ்கள் வாடிவிடப் போகின்றனவே! கைக்குட்டையை எடுத்துவிடு!" என்றேன் சிரிப்புடன். அவள் கைக்குட்டையை எடுத்துவிட்டு கைக்குட்டை படுவதால் இந்த இதழ்கள் வாடிவிடமாட்டா! சந்திர கிரகணத்தின் சக்திபட்டால் ஒரு வேளை வாடக் கூடும்." என்று சொல்லி அவளும் பலமாகச் சிரித்தாள்.

" அப்படி என்றால் என் முகம் சந்திரனா?"

" அதற்கும் சந்தேகமா?"

" அது சரி சந்திர கிரணம் பட்டால், தாமரை வாடுவது சகஜம்தான். ஆனால் தாமரையே சந்திரனைத் தேடி வந்திருக்கிறது" என்று கூறிக் கொண்டு அவளைப் பிடிக்க எழுந்தேன். நகையொலியும் வளையொலியும் சேர்ந்தே ஒலிக்க அவள் எழுந்து ஓடி விட்டாள்.

மற்றும் மூன்று நாட்களிலும் கூடச் சந்தர்ப்பம் கிடைத்த போது எல்லாம் அவள் மாமி யிடம் அலுவலாக வந்து என்னுடன் கதைத்துவிட்டுப் போவாள். சில சமயங்களில் நானே அவள் வீட்டிற்குப் போனேன். நான்கு நாட்களை எவ்விதம் கழிப்பது என்று எண்ணிய எனக்கு நான்கு மாதம்..... நான்கு வருடங்களை இங்கு கழித்தால் என்ன? என்றாகிவிட்டது.

பரீட்சை முடிந்தது. வேண்டா வெறுப்பாக நான் வீட்டிற்குக் கிளம்பினேன். கமலாவிட மும் போனேன். அவள் எனது விலாசத்தை வாங்கிக் கொண்டு வழியனுப்பி வைத்தாள்.

கமலாவுக்கும் எனக்குமிடையில் கடிதப் போக்குவரத்து நடக்கத் தொடங்கியது. இதெல்லாம் எனது நண்பன் சோமுவுக்குத் தெரியாமல் இருக்குமா? நான்தான் அவனிடம் ஒன்றும் மறைப்பதில்லையே! அவளிடமிருந்து வரும் கடிதங்களைக்கூட அவனிடம் காட்டு வேன். சந்தோசத்துடன் அவன் அவைகளைப் படிப்பான். இதற்குப் பிறகு நான் சித்தப்பா வீட் டிற்கு மிகவும் கிரமமாகப் போய்வரத் தொடங்கினேன். எனக்குச் சித்தப்பா வீட்டிற்குப் போவதிலுள்ள சிரத்தையைக் கண்டு என் பெற்றோர் சந்தோஷமடைந்தார்கள்.

ஒரு நாள் நண்பன் சோமுவும் நானும் சம்பாசித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது தபால்காரன் ஒரு கடிதத்தைத் தந்து விட்டுச் சென்றான். ஆவலுடன் பிரித்தேன் அதன் சாரத் தைக் கேளுங்கள்.

"அப்பாவும், அம்மாவும் எனக்கு ஒரு கல்யாணத்தைப் பேசி விட்டார்கள். அவர் எனது சொந்த மைத்துனர்தான். எனது அம்மாவிடம் இந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கவில்லை யென்று எத்தனையோ தரம் சொன்னேன். அவர்கள் எவ்விதத்திலும் இதை நிறுத்துவதில்லை யென்றும் இதற்கு மறுத்தால் வீண் தொந்தரவுகட்கு உள்ளாகவேண்டுமென்றும் கூறி னார்கள். இப்பொழுது இருக்கும் இந்த நிலை என்னை எந்த வழியிற் கொண்டு போய்ச் சேர்க் கும் என்று சொல்ல முடியாது. பெற்றோருடைய தொந்தரவு சகிக்க முடியாததாகிவிட்டது. இன் னும் எத்தனை நாட்களுக்கு இந்தப் பூமியில் ஜீவிப்பேன் என்பது சொல்ல முடியாது. ஆனால் ஒரு வார்த்தை எந்த விதத்திலும் உங்களைத் தவிர வேறு ஒருவரையும் கல்யாணம் செய்ய மாட்டேன். வேறு எதை எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை."

என்னுடைய தலை "கிர்" என்றது. நான் குறிபார்த்தெறிந்த கல் வேகத்தோடு பழத்தை யும் நெடுந்தூரம் கொண்டு சென்று விட்டது. நான் அதை எப்படிப் பெற்றுக்கொள்வதென்று தெரியவில்லை. பித்துப்பிடித்தவன் போல் பேசாதிருந்தேன்.

அப்பொழுது சோமு சொன்னான். "அடே சும்மா வருந்தாதே. அவள் கட்டாயம் உன் னைத்தான் கல்யாணம் செய்வாள். இதற்கு முட்டாள்தனமாக மண்டையை உடைக்கி றாயே!" என்றான். அவனது வார்த்தை எனக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்ததாயினும் என் னால் அதை நம்பமுடியவில்லை. "எப்படி உனக்குத் தெரியும்" என்றேன் "நாளை காலை பார் எல்லாம் விளங்கிவிடும்" என்று சொல்லிச் சிரித்தான்.

மறு நாள் காலை சூரியன் உதித்தது. உலகத்திலுள்ள இருள் அகன்றது. பறவைகளு டைய கீதம் அன்றைக்கு ஏதோ புதிய மாதிரியாகப்பட்டது எனக்கு.

சோமு வீட்டு வேலைக்காரன் வந்தான். "என்னடா" என்றேன்.

உங்களுடைய சினேகிதன் இங்கு வரவில்லையா?

எனக்குப் பெரு வியப்பாக இருந்தது. "இல்லை" என்றேன்.

திரும்பவும் "அவன் அங்கு இல்லையா"? என்றேன்.

இரவு பன்னிரண்டு மணிவரைக்கும் அறையிலேயே புரண்டு கொண்டு ஏதோ புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அதற்குப் பின் என்ன நடந்ததென்று தெரியவில்லை. இரண்டு மணி இருக்கும் மாடு கட்டவிழ்த்து விட்டுக் கலாட்டா பண்ணியது. நான் தனியே அதைப் பிடிக்க முடியாமல் அவரை எழுப்பப் போனேன். அங்கே அவர் இல்லை. இந் நேர மாகியும் ஆள் வரவே இல்லை" என்று ஒரு மூச்சில் சொல்லி முடித்தான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. முதல் நாள் நாளைக் காலை பார் எல்லாம் விளங்கும்! என்ற வார்த்தைதான் என் காதில் ஓயாமல் ஒலித்தது. ஆனால் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று தான் எனக்கு விளங்கவில்லை.

காலையில் கதிரவனுடைய கதிர் அம்புகட்குப் பயந்து உலகத்தை விட்டோடிய அந்த காரம் என் மனத்துள் ஒளிந்து கொண்டது.

நான் சோமுவை அவன் போகக்கூடிய இடமெல்லாம் போய்த் தேடினேன். வியர்த்தமாக முடிந்தது. "ஏதாவது வீட்டில் கதைவழி உண்டோ" என்று அவன் வீட்டாரைக் கேட்டேன். ஏதோ கல்யாணம் ஒன்று பேசினதாகவும் அதற்கு அவன் மறுத்ததாகவும் அதில் இருந்து சிறு வாக்குவாதம் உண்டானதென்றும் அன்றிரவு சாப்பிடவேயில்லையென்றும் கூறினார்கள். "ம்! அப்படியா?" என்று பெருமூச்சுடன் வீடு நோக்கி நகர்ந்தேன். சஞ்சலமாகிய பாரம் கீழ்நோக்கித் தள்ளியது. வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டில் ஒரு கடிதம் வந்திருந்தது. கமலாவிடமிருந்துதான் வந்திருக்குமென்று எண் ணிக் கொண்டு பிரித்துப் படித்தேன். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அதைச் சோமுதான் எழுதியிருந்தான்.

"என் அருமை நண்பா! என்னால் அதிகம் எழுத முடியவில்லை. கமலா எனது மைத் துனி. எங்களுக்குக் கல்யாணம் முடித்து வைப்பதற்கு இருபகுதியாரும் நிச்சயித்து விட்டனர். இந்த விஷயத்தை இவ்வளவு நாளாக உனக்கு மறைத்து வைத்திருந்ததையிட்டு வருந்தாதே!

கமலாவுக்கு உன்னைத் தவிர மற்றையவர்களை மணப்பதில் விருப்பமில்லையென அறிகிறேன். நீயும் அவளைத்தான் காதலிப்பதாகப் பல தடவை கூறியிருக்கிறாய். நான் இங்கு இருந்தால் உங்கள் இருவருடைய வாழ்க்கையும் சிதையும் தவிர நண்பனுக்குத் துரோகியுமாவேன். உங்களுடைய வாழ்க்கை சிதைவுறக்கூடாது. உங்களுடைய வாழ்க்கை ரம்மியமாக இருந்தால் நான் எங்கிருந்தாலும் பராவாயில்லை.

"நண்பா எனது - இல்லை உனது மாமனாருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதா வது கமலாவை உனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கும்படி. நான் பிரிந்த துக்கத்திற்காக அவளை மணவாது விட்டுவிடாதே! உங்கள் வாழ்க்கை நீடிக்கக் கடவுள் அருள் புரிவாராக! நண்பா!

"இனி எனக்கு "யாதும் ஊரே யாவரும் கேளீர்" தெய்வ சங்கற்பமிருந்தால் என்றாவது ஒரு நாள் திரும்பச் சந்திப்போம்."

இதைப் படித்து முடித்தேன். அதிகம் வர்ணிப்பானேன். எனக்கு உலகமே வெறுத்து விட்டது. கமலாவை மணக்க வேண்டுமென்ற இலட்சியம் பீரங்கியின் அதிர்ச்சியிற் பறந்த தூசு போல் பறந்து விட்டது. நண்பன் போன பின் எப்படி என் மனம் சாந்தி அடையும். அவனை எப் பொழுது சந்திப்பேன் என்ற ஆவல் மற்றைய ஆவல்களைத் தள்ளி உள்ளத்தைப் பிளந்து கொண்டு கிளம்பியது. ஆனால் அன்று போனவன் போனவன் தான்! இன்று வரைக்கும் திரும்பவில்லை!

கமலாவை மணப்பதில் பின் எனக்கு ஒருவித ஆவலும் இல்லை. என்றாலும் அவ ளுடைய வாழ்க்கையைக் கெடுக்கக் கூடாதென்பதற்காகவும், நண்பனது விருப்பத்துக்கு மாறாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் உலக சம்பிரதாயமாகக் கல்யாணம் செய்து கொண் டேன். இதோ! இந்தக் குழந்தைக்கும் நண்பனுடைய பெயரையே வைத்து விட்டேன்.

கையில் கிடைத்த கடிதம் ஏழு எட்டு வருடங்கட்கு முன் நடந்தவற்றை ஒன்றன் பின் ஒன் றாக நினைவூட்டியது. அப்பொழுது என் குழந்தை சோமு வந்து எனது மடியில் உட்கார்ந்து கொண்டு சுவரில் மாட்டியிருந்த படத்தைக் காட்டி "அப்பா அது ஆர்?" என்றது.

"அது மாமா" என்றேன்.

"எந்த மாமா"

"அவனை உனக்குத் தெரியாது. அவன் இப்போ இங்கில்லை.

"எங்கே போட்டார்?"

"தெரியாது"

"எப்போ வருவார் அப்பா! எப்போ வருவார்?

பல தடவை இக் கேள்விகளைக் கேட்டான். எனக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. பேசாதிருந்தேன்.

திரும்பத் திரும்ப "எப்போ வருவார்" என்ற கேள்வியையே குழந்தை கேட்டுக் கொண்டிருந்தது.

என் கண்கள் நீரில் நிறைந்தன.

ஈழகேசரி
03.11.1946

வாழ்வு

நடனம்

பொழுது புலரும் சமயம். தெருவிலே யாரோ பேசிக் கொண்டு போனார்கள்.

“ஆரோ ஒரு கிழவன்; கோயில் மடத்திலே செத்துக் கிடக்கிறான்; ஊரிலே இருக்கிறவர்கள்தான் அதைப் போய் ஏதும் “ஒரு வழி பண்ண வேணும்.......”

நான் திடுக்கிட்டேன். கோயில் மடத்திலா?.... கிழவனா?....

நேற்றுப் பின்னேரம் நடந்ததெல்லாம் என் நினைவுக்கு ஓடி வந்தன.

முதல்நாள் பின்னேரம், நாங்கள் நாலைந்துபேர் பாடசாலையிலிருந்து வீடுநோக்கி வந்துகொண்டிருந்தோம். மடத்தின் அருகிலுள்ள அரச மரத்தடியில் வழக்கம் போல சிறிதுநேரம் பேசிக்கொண்டு நின்றோம். அப்பொழுது ஒருபயங்கரமான இருமல்சப்தம் ஒன்று கேட்டது. திரும்பிப் பார்த்தோம். அந்தச் சப்தம் மடத்துத் திண்ணையிலிருந்து வந்து கொண்டிருந்தது. திண்ணையின் ஒரு பக்கத்தில் ஒரு உருவம்

சுருண்டு கிடந்தது. அந்த உருவம் ஓர் கிழவன். அது யாரென்றறிய ஆவல் உண்டாயிற்று. எல்லோரும் மடத்துத் திண்ணையை அடைந்தோம்.

அவன் இருமிய பொழுது அவனுடைய மூச்சே அடங்கிவிடும் போலிருந்தது. இருமும் பொழுதெல்லாம் அவனது உடல், கடல் அலைபோல் எழுவதும் விழுவதுமாக இருந்தது. முன் ஒருநாளும் அவ்விதக் காட்சியை நான் கண்டதில்லை!

அவன் வெறுந்தரையில் சுருண்டு படுத்திருந்தான். மறுபக்கமாகத் திரும்பிக் கிடந்த படியால் அவன் எங்களைக் காணவில்லை. கொசு ஒருபுறம் அவனைத் துன்புறுத் தியது. கொசுக்களைத் துரத்துவதற்காக அவன் ஏதோ இலைகுழைகளைக் கையில் வைத்து அசைத்துக் கொண்டிருந்தான்.

ஒருவாறு இருமலின் கொடுமை தீர்ந்ததும் இந்தப் பக்கமாகத் திரும்பினான். அப் பொழுது நண்பன் சோமு கேட்டான். "உங்களுக்கு எந்த ஊர்? நீங்கள் இவ்வித வருத்தத்துடன் எங்கு வந்தீர்கள்?"

நண்பனுடைய கேள்விக்குப் பதிலேயில்லை.

சிறிது பொறுத்து"பள்ளிக்கூடத்திலிருந்தோ வருகிறீர்கள்?" என்ற பதிற் கேள்வி அவனிடமிருந்து வந்தது.

"ஆமாம்" என்றோம் ஒரே தருணத்தில்.

திரும்பவும் நண்பன் தன்னுடைய கேள்வியைப் போட்டான்.

கிழவன் ஒருமுறை செருமி, எங்களெல்லோரையும் ஒரு பார்வை பார்த்து விட்டுச் சொல் லத் தொடங்கினான்.

"நான் இருப்பது தீவுப்பக்கம். முகாந்திரம் - சுப்பையாபிள்ளை என்று கேள்விப்பட்டிருப் பீர்கள்... அவன் எனது மகன்தான். சிறு வயதிலேயே நான் எனது தாயை இழந்துவிட்டேன். என்னைத் தவிர மற்றைய உடன் பிறந்தோரும் என்னை விட்டு... " என்று முடிக்குமுன் ஒரு பாட்டம் இருமல் வந்து அவனை உலுப்பிவிட்டுப் போனது. நன்றாக இருமிக் காறித் துப்பிவிட்டு அவன் தனது கதையைத் தொடர்ந்தான்.

"அவளும், என்னையும் என் இரு பிள்ளைகளையும் பரிதவிக்கவிட்டுப் போய்விட்டாள். சுப்பையாதான் இளையவன். மூத்தது ஒரு பெண் குழந்தை. சுப்பையாவுக்கு இரண்டு வய தாக இருக்கும் போது என் மனைவி இறந்து போனாள். ஆகையால் நான் பாடாத பாடுபட்டுக் குழந்தைகளை வளர்த்தேன். என் மகன் சுப்பையாவைப் போதியளவு இங்கிலீசு படிக்க வைத்தேன்.

படிக்கும் பொழுதே அவன் பெரிய காவாலியாகிவிட்டான். என்றாலும் படிப்பை மட்டும் கைவிடவில்லை. அதன் பலன்தான் இப்பொழுது முகாந்தரம் என்ற பட்டத்தோடு..." திரும்ப வும் ஒருமுறை இருமல் வந்து பெரும் புயல் போல அடித்துவிட்டுச் சென்றது.

"ஏதோ மேல்வகுப்புச் சோதனை 'பாஸ்' பண்ணிவிட்டுச் சும்மா இருந்தான். அந்த நாட்க ளில் அவன்செய்த காவாலித்தனத்திற்கு அளவில்லை. என்ன சொன்னாலும் எதிர்த்து ஏதா வது சொல்லாமல் விடுவது அவனது சுபாவத்திலில்லை. சிறிதும் என் புத்திமதி கேட்பதில்லை. இதைக் கண்டு என் மனமிரங்கியது. இந்த நிலையில் என் மகளுக்குக் கல்யாணம் செய்யக்

கூடிய வயது வந்தது. அப்புவும் கட்டாயப்படுத்தினார். தான் கண் மூடுமுன் அவளுடைய கல்யாணத்தைப் பார்த்துவிட வேண்டும் என்று எங்கெங்கோ அலைந்து மகளுக்கும் ஒரு மாப் பிள்ளை தேடிக் கல்யாணம் செய்துவைத்தேன். கல்யாணம் முடிந்து சில நாட்களில் மக ளையும் கூட்டிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டான் அவன். நான் தடுத்துச் சொன்னேன். "தம்பீ எனக்கு வயது அறுபதுக்கு மேலாகிவிட்டது. அப்புவும் படுத்தபடுக்கையாய் விட்டார். நீங் கள் இப்படி அந்தரத்தில் விட்டுச் செல்வது சரியல்ல" என்று தடுத்தும் கேளாமல் அவன் ஓரே பிடி வாதமாக நின்று மகளையும் கூட்டிச் சென்றுவிட்டான். சிலநாளின் பின் அப்புவும் இறந்துவிட்டார்.

என்மகனை நினைக்கும் போது என் மனம் கலக்கமுற்றது. அவனுக்குப் பெருந் தொகைச் சீதனத்தோடு ஒருபெண்ணையும் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தேன்.

அவனுடைய காவாலித்தனங்கள் முற்றாய் அடங்கின. அதேபோல் அவனும் பெருந் தொகைச் சீதனத்தால் அகங்காரம் பிடித்த மனைவிக்குக் கீழ் பெட்டிப் பாம்பாய் அடங்கினான். அவள் இட்டதே சட்டம்.

அவளுடைய இஷ்டம் இவனுடைய சொர்க்கம். வேலைக்குப் போகும் நேரந் தவிர ஏதாவது படித்த வண்ணமே இருப்பான். அவனது விருப்பம் படிப்பிலே தீவிரமாக இருந்தது இதைப் பார்க்க நான் மிகச் சந்தோஷமடைந்தேன். ஆனால் நாளாந்தத்தில் திரும்பவும் துக் கம் என்னைப் பீடிக்கத் தொடங்கியது.

அப்பொழுதெல்லாம் நான் ஒருவேலையும் செய்வதில்லை. செய்ய இயலுவதுமில்லை. வீட்டுக்குப் பாரமாக மட்டும். இருந்தேன். என்னை இருமல் பிடித்தக் கொண்டது. பின்பு கசமாக மாறியது.

என் மருமகள் பொல்லாத அகங்காரி. எனக்குச் சாப்பாடு போடுவதென்றால் எரிந்து விழு வாள்; ஏசுவாள்; திட்டுவாள்; இல்லாத பொல்லாததெல்லாம் மகனிடம் சொல்லுவாள். அவளு டைய அக்கிரமங்களை அவன் கேட்பதில்லை.அவன் தான் பார்க்கிற வேலை போதாதென்று ஏதோ மேல் உத்தியோகத்திற்குப் படித்துக்கொண்டிருந்தான். அவளுடைய முறைப்பாட்டி னால் தனது படிப்புக்கு ஏதாவது தடைவந்தால் அந்த ஆத்திரத்துக்காக என்மேல் சீறுவான். இதுதான் அவன் எனக்குச் செய்த நன்மை!

ஒருநாள் ஏதோ அற்பவிஷயம் பெரிதாகிவிட்டது. கைகேசி இராமனுக்கு உத்தரவு இட் டது போல எனது மருமகள் என்னை வீட்டை விட்டு வெளியேறும் படி கட்டளையிட்டாள்....

நான் வெளிக்கிளம்பி மகளுடைய வீட்டிற்குப் போனேன். நான் போகக் கூடிய இடம் அது ஒன்றுதான் இருந்தது. மகளும், மருமகனும் பட்டினத்திலே குடியிருந்தார்கள். அவர்களுக்குக் குழந்தை குட்டி ஒன்றுமில்லை. மருமகனுக்கு கச்சேரியில் உத்தியோகம். நான்அங்கே போனபோது மகள்தான் ஏதோ வீட்டுக் காரியங்கள் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் போன வுடன் எனக்குப் பெரிய உபசாரங்கள் செய்தாள். என்னுடைய நிலைமையை அறிந்து மிக வருத்தமுற்றாள். அவள் தமையனைப் போலல்ல. நற்குணமுள்ளவள்.

இனி எனது பிற்காலத்தை இங்கே கழித்துவிடலாம் என நினைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டு அங்கே படுத்திருந்தேன்.

பின்னேரம் என்னுடைய மருமகன் கச்சேரியிலிருந்து வந்தான். என்னைக் கண்டதும் அவனுடைய முகம் மாறிவிட்டது. நான் அங்கே தங்கப் போவதை அறிந்தபோது அவளோடு இரகசியமாக ஏதோ வாதாடினான்.

மறுநாள் என் மகள் என்னிடம் வந்தாள். ஏதோ கதைப்பதற்கு. புருஷனுடைய ஆணைக் கும். தகப்பனுக்கு செய்ய வேண்டிய கடமைக்கும் இடையில் அவள் பரிதபிப்பது நன்றாகத் தெரிந்தது.

"அப்பு ! நான் என்ன செய்ய? அவர் தன்னுடைய சிநேகிதர்மாருக்கு இன்றைக்கு இங்கே 'டின்னர்' கொடுக்கப் போகிறாராம். அவர்களிலே சிலர் கொஞ்ச நாளைக்கு இங்கே தான் தங்கப் போகிறார்களாம். நீ எங்கே அப்பு இருக்கப் போகிறாய்?" என்று கேடடுவிட்டு அடக்க முடியாத துக்கத்தால் விம்மினாள்.

"எனக்குத்தான் இடமில்லையா? எங்கேயாவது இருந்துவிட்டு கொஞ்ச நாளைக்குப் பிறகு ஆறுதலாக வருகிறேன்" என்று அவளுக்குச் சமாதானம் சொன்னேன்.

"இந்தா அப்பு இதைச் செலவுக்கு வைத்துக்கொள்" என்று ஐந்து ரூபா காசை நீட்டினாள். எனக்கு ஏன் காசு? நான் காசையா எதிர்பார்த்தேன்? இந்த வயது போன காலத்தில் அன்பு, ஆதரவான ஒரு துணையை அல்லவா எதிர் பார்க்கிறேன்! பாடுபட்டு வளர்த்த பிள்ளைகளில் ஒன்றினுடைய பூரண அன்பை - ஆதரவை அடையாத இந்தப் பாவிக்கு இந்த ஐந்து ரூபா காசு எதற்கு?

"எல்லாம் இருக்கட்டும் பிள்ளை! பிறகு பார்த்துக்கொள்ளுவம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டேன்..... இன்றைக்கு இங்கு கிடக்கிறேன். நாளைக்கு செல்வச்சந்நிதி முருக னிடம் போகப் போகிறேன். நான் வருத்தக்காரன். மற்றவர்களால் விரும்பக்கூடிய எவ்விதத் திலும் நானில்லை. நடுச் சமுத்திரத்தில் விடப்பட்ட ஒற்றைக் காகம் போல அலைகிறேன். என்னை என் அப்பன் - முருகன்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவனிடம் தான் போகப் போகிறேன் அப்பா! முருகா!!..."

அவனுக்கு இருமல் தொடங்கிவிட்டது. மிகக் கடுமையாக. நம்மால் அந்தக் கோரத்தைத் தடுக்க முடியுமா? அதைப் பார்க்கச் சகியாமல் வந்து விட்டோம்.

◆◆◆

சிந்தனை கலைந்து, மடத்தடிக்குப் போய்ப் பார்ப்பதற்காக எழுந்தேன்.

அப்பொழுது பத்திரிகைக்காரப் பையன் தினசரியைச் சுழற்றி எறிந்து விட்டுப் போனான். பத்திரிகையை பிரித்தபோது அதிலிருந்த அரசர் பிறந்த தினப் பரிசாக "முதலியார்" பட்டம்பெற்ற முகாந்தரம் சுப்பையாபிள்ளைக்குப் பகிரங்க வரவேற்பு நடத்தப்படும்" என்ற செய்தி என் கவனத்தை இழுத்தது. திருப்பித் திருப்பிப் பார்த்தேன்... இங்கே தகப்பன் மடத்தில் கிடந்து 'மனிதன் என்ற பெயரையும் இழந்து 'பிணம்' என்னும் பெயர் பெறுகிறான். அங்கோ மகன் முகாந்தரப் பட்டத்திலிருந்து முதலியார்ப் பட்டத்திற்கு ஏறுகிறான். அங்கே அவனை வரவேற்க மங்கள வாத்தியங்கள் முழங்கப் போகின்றன. இங்கோ ஒரு சாவீட்டுப் பறைதானுமில்லை!

என்ன உலகம் இது?

மறுமலர்ச்சி - கார்த்திகை, 1946

சிதைந்த வாக்கு

நடனம்

"ரகுநாதையரே நமஸ்காரம்" என்று கூறிக்கொண்டே வந்தார் சுப்பராமையர். "நமஸ்காரம்" என்று கூறிவிட்டு அவரை உட்காரச் செய்துதாமும் உட்கார்ந்தார் ரகுநாதையர். "என்ன இன்றைக்கு இந்தப் பக்கம்?"என்றுதான் வந்தேன்." "என்ன, பார்த்துவிட்டுப் போகவா? விஷயமில்லாமல் நீர் இந்தப்பக்கம் திரும்பமாட்டீரே!"

"ஆமாம் விஷயமில்லாமலா பேய்விடும். அது கிடக்க; உமக்கு ராகவையரைத் தெரியுமல்லவா?"

"நன்றாய் தெரியும்"

"அவருக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறாள். சரோஜா என்று பெயர்.....

"அவளைக்கூட எனக்குத் தெரியும்"

"நல்லது"

"சரி. அவர்களைப்பற்றி இப்போது என்ன?"

உம்முடைய மகனுக்கும் அவளுக்கும் கல்யாணம் செய்து வைக்கலாமே என்றுதான் கேட்கிறேன்"

"அப்பா..... இதற்குத்தானா இவ்வளவு பீடிகை... அது நடக்காத விஷயம்."

"ஏன் நடக்காது? பெண் என்ன அழகில் குறைவா? அல்லது ஜாதியில் குறைவா? இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்து விடுகி றேன். அப்புறம் என்ன?

"இரண்டாயிரத்தைக் கொண்டு போய்க் குப்பையில் எறி யும்... இப்போதானே பையன் ஏதோ படிக்க வேண்டுமென்று புஸ்தகத்தை எடுத்திருக்கிறான். அதற்குள்ளே கல்யாணத்தை கொண்டு வந்து கெடுக்கப் பார்க்கிறீர்களே!"

"எதற்காக நான் அவனைக் கெடுக்கிறேன்? கலியாணத்தை முடித்துக் கொண்டு படிக்கிறதுதானே!"

"அது என்னவோ இப்போது அவனுக்குக் கல்யாணம் அவசியமில்லை. அல்லாமலும் இப்போதுதானே அவனுக்குப் பத்தொன்பது வயது! இந்த விஷயத்தில் மட்டும் நீர் குறை வைத்துக்கொள்ளக் கூடாது."

"குறை என்ன குறை. இரண்டாயிரம் வாங்கித் தந்துவிடுகிறேன். அதற்கு மேல் அவரிடம் சக்தி இல்லை. பெண் அழகானவள். உமது மகனுடன்தான் படிக்கிறாள். இரண்டு பேருக்கும் நல்ல..."

"சுப்பராமையரே நீர் இந்த விஷயத்தை அழுத்துவது நல்லதல்ல. எவ்வளவு கொடுத் தாலும் சரி. சரிப்படாது. முதலில் இந்த விஷயம் என் மகன் காதுக்கு எட்டினால் போதும். உடனே சண்டைக்கு வந்துவிடுவாள். அவன் இருபத்தைந்து வயது வருமுன் கல்யாணம் செய்து கொள்வதில்லையென்று சொல்லியிருக்கிறான். அல்லாமலும் அவனுடைய விஷயத் தில் தலையிடுவது இல்லையென்றும் நான் நிறுத்தியிருக்கிறேன். ஏதோ படித்து இரண்டு சம்பாதிக்கத் தொடங்கிய பின்பு அவனே தன்னிஷ்டம்போல செய்து கொள்ளட்டும்" என்று கூறி வேறு என்ன என்பது போல் பார்த்தார். இனித் தாமதிப்பதில் பிரயோசனம் இல்லையென்று நினைத்து சுப்பராமையர் விடைபெற்றுக் கொண்டு சென்று விட்டார்.

சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு அறையிலிருந்த தேவராஜனுக்கு உள்ளங் குளிர்ந்தது. தன்னைத்தேடி எத்தனையோ சம்பந்தங்கள் வருகின்றன என்று ஒரு தனிக் கர்வம்.

ரகுநாதையர் முன்பு மிக ஏழ்மை ஸ்திதியிலிருந்தவர். அவருடைய மூன்று பெண் களையும் கரை சேர்ப்பது எப்படியொன்று யோசித்து வருந்தினார். "காலக் காற்று" என்று சொல் வார்களே! அது எப்பொழுதும் ஒரே திசையை நோக்கி வீசுவதில்லை. சில சமயங்களில் அது பெரிய சூறாவளியாக மாறிப்பெரிய அனர்த்தம் கூடச் செய்வதுண்டு. இந்தக் காற்று ரகுநாதை யருக்குச் சேர்ந்தது. அந்தப் பணத்தைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கிப் பெரிய பணக்காரராகிவிட்டார். அவருடைய பெண்களும் ஒருவர் பின் ஒருவராகக் கரை சேர்க்கப் பட்டனர்.

தேவராஜன்தான் ரகுநாதையரின் கனிஷ்டபுத்திரன். அவன் நல்லூரிற் படித்துக் கொண்டிருந்தான். சரோஜாவும் இவனுடைய வகுப்பில்தான் படித்து வந்தாள். இவர்களுக்குக் கல்லூரியில் அதிகம் சம்பாஷிக்க நேரமேது? தேவராஜனுடைய வீட்டிற்குப் பக்கத்தில் அவன் சிறியதாயின் மகன் ராஜத்தின் வீடு. அங்கு சரோஜா அடிக்கடி போவாள். தேவராஜனும் சந்திப்பான்.

சரோஜாவின் தகப்பனார் எத்தனையோ வரன்களுடைய ஜாதகத்தைக் கொண்டு வந்து பார்த்துவிட்டார். ஒன்றும் வாய்க்கவில்லை. பாவம் ராகவையர் வரன் தேடுவதை தற்காலிகமாக நிறுத்திக்கொண்டார். சரோஜா தனது மாமியாரின் மகளிடம் தேவராஜனைப் பற்றிக் கூறியிருக்க வேண்டும். விஷயம் அவளுடைய தகப்பன்வரைக்கும் வந்துவிட்டது. ராகவையரும் தொல்லை தீர்ந்தது என்று சுப்பராமையரைத் தூண்டி விட்டார்.

அன்றிரவு முழுவதும் படுக்கையிற் புரண்டாள். தனது பழைய காதற் சம்பாஷணை களையும் காதற் கடிதங்களையும் எண்ணும் பொழுது அவள் பெரிய அவமானம் அடைந்த தாக எண்ணிக் கொண்டாள். அந்த நேரமே எழுந்து அவன் தனக்கு எழுதிய கடிதங்களை அவனிடம் கொண்டு போய் அவன் முன் எறிந்து அவனை வாயாரத் திட்டவேண்டும் போலிருந்தது அவளுக்கு. மறுநாள் எழுந்ததும் என்ன விதமும் அவனை நேரிற் கண்டுவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டு பாடசாலைக்குப் புறப்பட் டாள்.

பாடசாலையில் மத்தியான லீவுக்காக மணி அடித்தது. அனைவரும் வகுப்பை விட்டு வெளிக்கிளம்பினார்கள். தேவராஜனும் வெளியே போவதற்காக எழுந்தான். அப்பொழுது சரோஜா ஏதோ தேவராஜனுக்குச் சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அவனால் பேச முடி யவில்லை. தேவராஜன் சறோஜா சங்கடப்படுவதைக் கண்டு விட்டான். "ஏதாவது அலுவலா? என்று கேட்டான். "ஆம் என்னை மன்னிக்க வேண்டும். அவளுக்குத் தொண்டை அடைத்து விட்டது. ஒரு முறை கனைத்து அக்கம் பக்கத்தில் யாராவது நிற்கிறார்களா என்று பார்த்து விட்டுப் பேசத்தொடங்கினாள். "நேற்று சுப்பராமையர் வந்த பொழுது நீங்கள் அங்குதானே இருந்தீர்கள்!" இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. ஏதோ பழைய ரீதியில் கதைப்பாள். என்று எண்ணினான். சம்பந்தத்தைப் பற்றிய விஷயம் அவளுக்குத் தெரியும் என்பதை அவன் அறியவில்லை. பேசாது நின்ற தேவராஜன் ஒருவாறு சமாளித்துக் கொண்டு "ஆமாம், எதற்காக கேட் கிறாய்"

"இந்தக் கேள்வி எதற்காக?"

"அவர் உங்கள் தகப்பனாரிடம் எங்கள் கல்யாணத்தைப்பற்றிப் பேசிய பொழுது உங்கள் அப்பா எல்லாம் உங்களிஷ்டப்படி நடக்கப் போவது என்றும் அதுவும் வெகு நாட்களுக் கப்புறம் என்று கூறினாராம். அதற்காக உங்களைக் கேட்கிறேன் நீங்கள் என்னை நிச்சயமாக கல்யாணம் செய்து கொள்வீர்களா? - அப்படியானால் நான் எவ்வளவு காலமும் உங்களுக்காகக் காத்தி ருப்பேன்!"

"நான் இப்பொழுது எதுவுங் கூற முடியாது"

"அப்படியானால் அன்று நீங்கள் கொடுத்த வாக்கு - சத்தியம்?

"அது காற்றோடு போயிருக்கும். அதை இன்னும் நீ ஞாபகத்தில் வைத்திருந்தால் அந்தத் தோஷம் என்னுடையது அல்ல!" இதைக் கேட்ட சரோஜா அறையைவிட்டு "விறுவிறு" என்று போய் விட் டாள்.

இது நடந்து ஆறு மாதம் கழிந்து விட்டது. ரகுநாதையரின் வியாபாரம் விருத்தியடைந்து வந்தது.

மழைக்காலத்தில் இருந்தாற் போலிருந்து கறையானுக்குச் சிறகு முளைத்து விடுகிறது. "ஏ பூமியே இனி உன்னிடம் அடைபட்டுக் கிடப்பேனா?" என்று கூறிக் கொண்டே அந்தரத்தில் பறக்கின்றது. ஆனால் சிறிது நேரத்தின் பின்பு பார்த்தால் பூமியில் பல சிறகுகள் காற்றிலடிபடும். பூமியைவிட்டுக் கிளம்பியவைகள் பூமியிலேயே நகருவதைக் காணலாம்.

ரகுநாதையர் நஷ்டப்படு குழியில் வீழ்ந்தார். கடன் வந்து சூழ்ந்து கொண்டது. ஒன்றும் செய்ய முடியவில்லை. தேவராஜனுக்கு ஒரு நல்ல கல்யாணம் செய்து வைத்தால் அந்தப் பணத்தைக் கொண்டாவது சிறிது தேறலாம். அப்பொழுது அவருக்கு சுப்பராமையர் பேசிய இரண்டாயிரம் ரூபாவுடன் கூடிய சம்பந்தம் ஞாபகத்துக்கு வந்தது ஆனால்... "எப்படி சௌக்யந்தானே நான் உம்மிடம் ஒரு பிரதானமான அலுவலாக வந்திருக்கிறேன்...." என்று இழுத்தார் ரகுநாதையர். "அப்படி என்ன அலுவல்" என்றார் சுப்பராமையர்.

"நீர் முன்பு பேசிய அந்தப் பெண்ணைத் தேவராஜனுக்குக் கல்யாணம் செய்து வைக்கலாம் என்று யோசிக்கிறேன்... நீர்தான்"

"என்ன நானா?

"ஆம். நீர்தான் ஏதாவது வழி பண்ண வேண்டும்"

"அவள் இப்போது" ஏதோ பரீட்சைக்குப் படிக்கிறாள். பி.ஏ.வரை படித்து விட்டுத்தான் கல்யாணம் செய்து கொள்வாளாம்" என்றார் சுப்புராமையர்.

ஈழகேசரி
13.04.1947

சி.குமாரசாமி

சி. குமாரசுவாமி ஈழகேசரியில் 1944 இல் துள்ளிய உள்ளம் என்ற சிறுகதை எழுதியதன் மூலம் புனை கதைத்துறைக்கு வந்தார். அதன் பின்னர் வாயில்லாப் பிராணிகள், பஞ்சும் பசியும் பொல்லாதவன், படகு, விடிவு, தோட்டத்து மீனாட்சி ஆகிய சிறுகதைகளை எழுதியுள்ளார். எஸ்.கே. என்னும் புனை பெயரிலும் எழுதியவர்.

- துள்ளிய உள்ளம்
- விடிவு
- தோட்டத்து மீனாட்சி

துள்ளிய உள்ளம்

சி.குமாரசாமி

மேற்கே வானம் சிவந்தது. இராமபிரான் முன்னர் காட்சியளித்த தாடகையைப்போல... எவ்விடயத்தையும் தசையாய்த் தகித்த அந்த அக்கினிக் கோளம், ஊடலின்பின் கூடும் காதலரைப்போலத் தன் பொற்கிரணங்களால் மரங்களின் உச்சிகளைத் தழுவிக்கொண்டிருந்தது. முகில் வளைந்து கடலை முத்தமிடும் அடிவானத்திற்கு மேல், எத்தனையோ விதமான ரூபங்களும் காட்சிகளும் தோன்றின. ஆனால் மறுகணம் மறைந்து போயின. ஏன்! இந்தப் பாழுங்காற்று விட்டால்தானே!

கடல் கொந்தளித்துக் குமுறியது!

அமுத உள்ளமோ விசித்திரமானது. அது குதூகலத்துடன் இருந்தால் ஒரு தனிப் புல்லிதழிலே எத்தனை எழிலை, எத்தனையோ வனப்பை அனுபவிக்கிறது. பார்க்கப் பார்க்க அதில் எந்நாளும் புதுமை தளிர்க்கும். ஆனால் துன்பத்தின் சாயல் அதைக் கௌவிக் கொண்டால், இயற்கையன்னையே தன்னோடு கட்டியழுவதற்கு ஆயத்தமாயிருப்பது போல் தோற்றுகிறது. வசந்தகாலமும் அப்பொழுது உலாவும் இளந்தென்றலும் ஏன், இளஞ்சந்திரனுங் கூடத் தன்னைச் சுட்டு விடுவதாக

மயங்குகிறது. மிகவும் அழகான ஓர் சோலை. வரண்ட பிரதேசம். அதற்கு மனநிலைக்கேற்ப மாறிவிடுகிறாள் இயற்கை அன்னை .

சூரியன் அமிழ்வதும், எழுவதுமாய் இருந்தான். கடலின் ஆரவாரம் ஆனந்தத்தைக் கொடுத்தது சிறுவர்களுக்கு. அவர்கள் மணலில் வீடு கட்டியும் குலைத்தும் ஆடியோடி விளை யாடினார்கள். சிலர், அலைகள்கரையை நோக்கி வரும்போது அவற்றின் முன்னேயும், திரும்பும்போது அவற்றைக் கலைத்துக்கொண்டும் மான்குட்டிகளைப்போலத் துள்ளித் திரிந்தார்கள். சூரியன் எத்திசையில் தோன்றினால் என்ன! அவர்களுக்கு.

ஆண் பெண் சோடி "சோடியாய் ஒவ்வோர் மூலையிலிருந்து ஏதோ பிரமாதமான விஷயம் பேசுவது போன்ற முகபாவத்துடன் காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் பேசுவது அடுத்த வீட்டுக் கதையேதான். மணம் முடித்துக் கொள்ளாத வாலிபர் - மங்கையர் தம்மை எதனைச் சிறப்பாக அலங்கரிக்க முடியுமோ அத்துணைச் சிறப்போடு காட்சி கொடுத்தார்கள். அவர்கள் குறுக்கும் நெடுக்கும் அவசர அவசரமாக ஏதோ வெட்டி விழுத்தப் போகிறவர்கள் மாதிரி தோளோடு தோள் உரோஞ்ச நடமாடினார்கள். முழந்தாளை எட்டிப் பார்க்கும் கவுண்"! காற்றில் பறக்க விடப்பட்ட நாகரிகமுறையில் சுருட்டப்பட்ட கரிய கேசம். மூக்கு அடியில் பற்றிக கொண்டிருக்கும் கண்ணாடி இவை உலகத்திற்கு நாகரிகத்தின் சிகரம்.

சிறிது தூரத்தில் ஒரு சிறிய குடில். உள்ளேயிருந்தாள் பொன்னி. கடலலைகளுக்கு கப்பால் ஏதோவொன்றைத் தேடித் தேடி அலைந்தன அவள் கண்கள். அவை அழுது அழுது சிவந்து விட்டன. இமைகளில் இன்றும் கண்ணீர்த் திவலைகள் காய்ந்து போகவில்லை. அந்த மான்நோக்கு இப்போது இல்லை. வெற்றிலைக் காவியேறிய சிவந்த அதரங்கள் வெளிறியிருந்தன. அவை. இளந்தளிர் காற்றில் நடுங்குவது போலத் தவித்தன. அதில் தொனித்தது அவள் உள்ளத் துடிப்பு. அவளுடைய அகன்ற முகத்தில் துன்பத்தின் சாயல் பதிந்திருந்தது. முழுமதியைக் கருமுகில் மறைப்பது போல! அதில் ஓர் ஏக்கம்! ஏமாற்றம் வேறு! இடையிடையே ஒரு பொருமல்! ஒரு பெருமூச்சு! வாயைத் திறந்தால் விம்மலுடன் அழுகைவந்து விடுகிறது. முகத்தில் துளிர்த்த வியர்வை இன்னும் போகவில்லை. அவள் இதயம் துடித்துக் கொண்டிருந்தது. இல்லாவிட்டால் அவளுடைய அகன்ற பெரிய மார்பு கடலலைபோல உயர்ந்து தாழ்ந்து கொண்டிருக்குமா?

அலைகள் ஒவ்வொன்றும் வானை முத்தமிட வரும். அவற்றின் உயர்வும் தாழ்வும் மனிதன் வாழ்க்கைப் பாதையில் ஏற்படும் வெற்றி தோல்விகளை உணர்த்தின. அந்த அலைகள் அவளுடைய உள்ளத்திற் கூட மோதத் தொடங்கிவிட்டன. ஒவ்வொன்றும் கரை யில் மோதி அடிக்கும் போது உண்டாகும் சப்தத்தில் நெஞ்சம் "பகீர்" என்றது. காலையில் கட்டு மரத்தில் ஏறும்போது அவன் கூறிய உறுதி மொழிகள், அவள் மனக்கண்முன்னே உருப் பெற்று எழுந்து நின்றன. - எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எத்தனை இன்பக் கோட் டைகள் எழுந்தன. அவனோடு சேர்ந்து அனுபவிக்கும் இன்பம் தான் பெற இருக்கும் குழந்தை! அதனுடைய மழலைமொழிகள்! அதோடு கொஞ்சிக் குலாவும் சுகம்! அவன் தனக் குப் போட இருக்கும் 'லோலாக்' எல்லாம், மணற்கோட்டை மாதிரித்தான்.

அவள் கண்கள் கடலுக்கும் அப்பால் வெகுதூரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தன. ஆனாற் குறித்த ஒரு இடம் எதையும் பார்க்கவில்லை. அவள் பார்வையெல்லாம் வெறு

மையில் லயித்து விட்டது! இல்லாவிட்டால் ஆகாயமும் . கடலும் கட்டித் தழுவும் அடிவானத்தில் தென்பட்ட உருவங்களைக் கவனித்திருக்கமாட்டாளா?

"எடியே அங்கே தெரியுதே கட்டு மரங்கள். முன்னுக்கு வருவது தான் உன்ரை மனியன்ரை. அடுத்தாபோல் வருவதுதான்ரி என்ரை ஆளின்ரை" என்று பிரார்த்தனை செய்தாள் வள்ளி.

பொன்னி குதித்து ஓடினாள் கரைக்கு. "இண்டைக்குப் பிடிக்கிற மீனை விற்று எனக்கு ஒரு சரடு வாங்கித் தாரேன் எண்டு சொன்னது. அம்மாளாச்சீ! பெரிய மீனாய் வலையில் படப்பண்ணு" என்று சொன்னாள் வள்ளி.

பொன்னி மௌனமாகக் கடலுக்குள் வரும் கட்டுமரங்களைப் பார்த்துக் கொண் டிருந்தாள். அவள் கயற் கண்கள் கடல் தமது இருப்பிடம் என்று அதனுள் துள்ளிவிழ அந்த அகன்ற இறைக்குள் சுழன்றன! மனம் எதையோ யோசித்துக் கொண்டிருந்தது. "ஏனடி வாய்க்கை முட்டையோ பேசமாட்டேன் என்கிறாய். இப்ப கொஞ்சநாளாய்த் தங்கச்சிக்குப் பெருமை வைச்சிட்டுது" என்றாள் வள்ளி. "இல்லை அக்கா அது கடலுக்குப் போயிருக்க அதுக் குள்ளே இழவெடுத்த காத்தும் அலையுமாயிருக்கு. அதுதாண்டி அக்கா எனக்குப் பயமாக கிடக்குது" "சூ! இதுவுமொரு காத்தோ! எங்களை ஆம்பிளை யாங்கடை வீரத்தை நீ எப்படி அறிவாய்! நீ நேற்று வந்தவள் தானே" என்று சொல்லிக் கொண்டு கரையை நோக்கி நடந்தாள் வள்ளி, தளர்ந்திருந்த குறுக்குக் கட்டைத் திருத்தி யமைத்துக்கொண்டு.

பொன்னி நேற்று வந்தவள் தானே! அவள்தந்தை உள்ளூர்க் குளங்களிலும் ஆற் றோரங்களிலும் அரையளவு நீரில் நின்று மீன் பிடிப்பதைக் கண்டிருக்கிறாள். ஆழ்ந்த சமுத் திரத்தில் அலைகளுக்கிடையில் "உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே" ஊதியந் தேடுவதை எங்கே கண்டாள். ஏதோ அவனுடைய வார்த்தடைத்த மாதிரியான தேகம் அகன்றமார்பு "சவள்" வலிப்பதால் ஏற்பட்ட திண்ணியதோள் இவற்றைக் கண்டு ஆசைப்பட்டுவிட்டாள். அன்று வரையும் அமைதி நிலவிய அவளுடைய அந்தக் குழந்தை உள்ளத்தில் அலை களைக் கிளப்பி விட்டான். அவளைக் காணாத போதெல்லாம் - தனிமையை உணர்ந்தாள். அவளுடைய தாய் தோழியர் மத்தியிலுங்கூட அவள் உள்ளத்தைத் தனிமை நின்று வாட்டியது. அவன் உள்ளமொன்றே தனது மனத்திற்குக் களிப்பை உண்டுபண்ணக் கூடியது என்று உணர்ந்தாள். அவனே தன் ஜீவநாடி - அவன் இல்லாவிட்டால் தன் வாழ்க்கைநதி வரண்டுவிடும் போலிருந்தது அவளுக்கு.

ஆள் அடங்கும் நேரம்! ஒரு பற்றை மறைவில் அவளைச் சந்தித்தான். அருகே ஓடிக்கொண்டிருந்தது அருவி. "மனிதன் பிறப்பான் மனிதன் இறப்பான். நானோவென்றால் என்றும் பாய்ந்து கொண்டிருப்பேன்" என்று பாடிக்கொண்டே நகர்ந்து சென்றது. அவன் "நீ என்னைக் கட்டிக் கொள்வாயா இராசாத்தி" என்று விட்டான். அவளால் அவனை எப்படித் தள்ளமுடியும். பின்னொருநாள் ஒருவருமறியாமல் ஓடி வந்து விட்டாள் பொன்னி அவனோடுகூட.

இன்று அலைகளுக்கிடையில் எற்றுண்டு எற்றுண்டு வரும் காட்சி அவள் மனத்தில் திகிலை உண்டுபண்ணிவிட்டது. கட்டுமரம் ஒரு சமையம் அலைகளுடன் சேர்ந்து ஆகாய

முகடுவரை உயரும். பின்பு மறைந்து விடும். ஆழிப் பள்ளத்தில் வாழ்க்கை என்ற கடலில் மனிதன் பயணம் செய்வதுபோல. காதலன் வந்து விட்டாலே போதும் உணவு இல்லாமல் போனாலுங்கூட காரியமில்லை. "ஏ காளியாச்சி! நீதான் காப்பாத்திக்கொள். எம் புருஷன் படுங்கஷ்டம். இந்த வயிற்றுக்குத்தானே! ஆ! பாழும்பசி! தாயே உனக்கு வருகிற வெள்ளிக் கிழமை விளக்கு ஏத்திறேன் என் வாழ்க்கைத் தீபத்தை அணைத்திடாதே" என்று தன் நம்பிக் கையைத் தெய்வத்திற்கு வேண்டுதல் செய்தாள். கண்மூடி மௌனமாக இருக்கும்போது "பொன்னி" என்று ஒரு குரல் கிளம்பியது வேறுயார்? அவனேதான்!

ஈழகேசரி
15.10.1944

விடிவு

சி. குமாரசாமி (எஸ்.கே)

இரவு 11.30 போட்டர் மணியை அடித்தான். "ஸ்ரேசன் மாஸ்டர்" ஊதலை வாயில் வைத்து ஒருமுறை ஊதிவிட்டுப் போனார். புகையிரதம் கண்டியை விட்டு வதுளையை நோக்கிப் புறப்பட்டது.

ஸ்ரீபாதம் போகும் காலம். சனம் வண்டியில் நிரம்பிச் சொரிந்து கொண்டிருந்தார்கள். பட்டையிற் பனங்கிழங்கு குத்தி அடுக்குவதைப் போல! அவ்வளவு சனநெருக்கம். மிதி பலகையில்கூடப் பலர் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

சோமாவதியும் சுசிலாதேவியும் "சாது! சாது! சா.....து" என்று தேனொழுக ஒலிபரப்பிக் கொண்டிருந்தார்கள். பாட்டிமாரின் தளர்ந்த குரலின் பின்னே! என் வாயும் சாது! சாது! என்று முணுமுணுத்தது. என் மனம் சுசிலாதேவியின் அழகில் மயங்கியிருந்த நேரத்தில் கூட புகையிரதத்தின் வேகம் குறைந்தது. பிறகு நின்றுவிட்டது.

நாவலப்பிட்டியில் நெருங்கி அடித்துக் கொண்டு திடகாத்திரமான வாலிபர் நால்வர் ஓடி வந்தனர். உள்ளே நுழைந்தார்கள். "கோட்"

கண்ணாடி பட்டுச்சாரம் அணிந்திருந்தார்கள். ஏதோ பெரிய வீட்டுப் பிள்ளைகளைப் போல "மகாத்மா" என்று சொல்லிக்கொண்டே ஓர் ஓரத்தில் ஒருவன் இருந்துவிட்டான். மற்றவர்கள் மூலைக்கொருத்தராய் பிரயாணிகள் சாய்ந்து கொள்வதற்கு விடப்பட்ட சட்டங்களில் ஏறி உட்கார்ந்தார்கள். புகையிரதம் முக்கி முனகிக் கொண்டே மலை மேல் நத்தை வேகத்தில் ஊரத் தொடங்கியது.

எவ்வளவு நேரத்திற்கு மனிதனுக்கு அலுப்புத் தட்டாமல் இருக்கும். அதுவும் இந்த ஜனநெருக்கத்தில் சிலர் தூங்கி விழத்தொடங்கினார்கள். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தி ருந்தவன் மாதிரி சுசிலாவை என் மனோரதத்தில் ஏற்றிக் கொண்டு மெல்ல நழுவினேன். காடுகளையும் மலைகளையுந் தாண்டி ஓர் அழகிய புஸ்பவனத்தை அடைந்தது இரதம். சந்தி ரன் பால் வெண்ணிலாவை அள்ளி இறைத்து பவனி வந்து கொண்டிருந்தான். காட்டு முல் லைச் செடியொன்று குலுங்கிக்கொண்டிருந்தது. சந்திர ஒளி அவள் அழகுக்கு மெருகிட்டது. தங்க விரக்கிரகம் போலத் தோன்றினாள். கறுத்தடர்ந்த கூந்தலை நடுவில் பிளந்து வாரி முடித்திருந்தாள். நாகரீக முறையில் வாரிப் பின்னி மாய விந்தை செய்யும் ஆற்றல் அவருக்கு இல்லை. காதுகளில் இரண்டு லோலாக்கு ஊசலாடிக்கொண்டிருந்தன. பட்டுப்போன்ற கன்னமிரண்டோரமும் கட்டுக்கடங்காத இரண்டு மயிர்க்கற்றைகள் சுருண்டு தொங்கிக் கொண்டிருந்தன...?

ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஐம்பதுக்கைம்பது வேண்டுமென்று கத்தினாரே. சிங்களத் தலைவர் அதை மறுத்துவிட்டார்களே! வாருங்கள் தோழர்களே தாராளமாக வழங்குகின் றேன். உங்களுக்கு ஐம்பதுக்கு ஐப்பது (பனாட்ட பணாய்) என்று தொடங்கினான். இடுக்கில் உட்கார்ந்த வாலிபன்! என் இரதம் ஓட மறுத்தது. திரும்பிப் பார்த்தேன்.

மடிமேல் ஒரு தலையணையை வைத்துவிட்டு மூன்று சீட்டுக்களை எடுத்துப் போட் டான். மாறிக் கவிழ்த்து வைப்பான் "ஒரு சீட்டில் என்ன படமுண்டு" என்று சொல்லிப் பணயம் கட்ட வேண்டும். படம் இருந்து விட்டாற் கட்டிய பணயமளவு கொடுக்கப்படும். இன்றேல் கட்டிய பணம் தோல்வி! ஆரம்பத்தில் மிகவும் ஆறுதலாகவும், இலேசாகவும், சொல்லக்கூடியதாகவும் மாறிக் கொண்டே இருந்தான். யாரும் பணம் கட்டவேயில்லை!

"அதோ! நடுச்சீட்டு ரூபா பத்து" ஓர் மூலையிலிருந்து ஓர் குரல் கிளம்பியது. ஆம்! அவ னுக்கு வெற்றி. உடனே அவன் கைகளுக்கு ரூபா பத்து பறந்தது. மீண்டும் சீட்டுக்களை மாறிக் கொண்டிருந்தான். இடதுகைப் பக்கச் சீட்டு ரூபா பதினைந்து" என்றது இன்னொரு குரல். அட பாவமே! ஏது படம்? வெற்றுச்சீட்டுத்தான். இழந்தான் ரூபாவை! இப்படி ரூபாக்கள் கைமாறிக் கொண்டிருந்தன. நால்வர் மாத்திரம் இதில் ஈடுபட்டிருந்தனர். வேறு யாரும் பங்குபற்றாததை உணர்ந்த ஒருவன், அருகேயிருந்த கங்காணியையும் சேர்த்து. "கங்காணியும் நானும் பணையம் கட்டுகிறோம். நடுச்சீட்டு ரூபா முப்பது என்றான்! ஆம் வெற்றிதான்! கங்காணி கைக்கு வந்தது ரூபா முப்பது!

இலேசான வழியில் பணம் வந்தால் யாருக்குத்தான் ஆசையில்லை? மனிதனை ஏமாற்றும் வித்தையில் இதுவும் ஒன்று தானே! தோட்டத் தொழிலாளர் ஏமாந்ததில் என்ன ஆச்சரியம். அவர்கள் பைகளை விரைவில் காலியாக்கி விட்டார்கள்!

"ஐயா! ஏழைகளை ஏமாற்றுகிறீர்கள்" என்று ஒருவர் கூறினார். "யாரடா அவன்? யாரை நாம் ஏமாற்றினோம்" என்று மார்பு தட்டி எழுந்தார்கள் நால்வரும். அவர் ஒருவர் நால்வருக்குமிடையில் என்ன செய்யமுடியும்? நாமேன் இதில் வீணாகத் தலையை மாட்டிக்கொள்வான் என்று மௌனமாக இருந்து விட்டார்கள். சுயநலப்பூண்டுதானே மனிதன். தன்னினத்தவன் எக்கேடு கெட்டாலென்ன என்று எண்ணும் அற்ப புழுக்கள்!

புகையிரதத்தின் வேகம் குறைந்தது. பின்பு நின்று விட்டது. கைகாட்டி விழவில்லை என்றார்கள். வெளியே எட்டிப் பார்த்தேன். ஒருவர் பின் ஒருவராக நால்வரும் வெளியே குதித்துப் போய்க்கொண்டிருந்தார்கள். அடுத்த ஸ்தானம் தொப்பி தோட்டம். ஒரு வேளை மேலதிகாரிகளிடம் சொல்லித் தம்மைக் கைது செய்து விட்டாலும் என்ற பயத்தாற்போலும்!

ஒரு முறை கூவிவிட்டு புகைவண்டி புறப்பட்டது. அவள் கண்கள் மூடியிருந்தன. குவிந்திருக்கும் இரண்டு குமுதங்களைப் போல! மறுபடியும் என் இரதம் புறப்பட்டுவிட்டது நின்றவிடத்திலிருந்து. புற்றரையில் உட்கார்ந்தேன். மடிமேல் தலையை வைத்துக்கொண்டு நிமிர்ந்து படுத்திருந்தாள். அவிழ்ந்து புரண்டு கொண்டி ருந்த கூந்தலைச் சரிசெய்து கொண்டி ருந்தது என்னை

"ஒரு கதை சொல்லுங்களேன்" என்றாள்.

இந்த நிலையில் கதை சொல்லத்தான் தோன்றுமா? எத்தனையோ ஆயிரமாயிரங் கதைகளை வாசித்த எனக்கு ஒன்றாவது ஞாபகத்திற்கு வந்தால்தானே! பிறகு எங்கோ என்றோ படித்த ஞாபகம் தட்டியது.

காதலி காதலைக் கதை கூறும்படி கேட்கிறாள். காதலன் தம்மிருவருக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் காதலை வேறு இருவர் தலைமேல் போட்டுக் கூறிவிடுகிறான்.

அதே போல அவள் மேல் எனக்கு ஏற்பட்டிருக்கும் காதலைக் கதையாக வைத்துக் கட்டினேன். உண்மையை எப்படியோ அறிந்து விட்டாள். கதை முடிவில் அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். வெட்கத்தால் முகம் அப்படியே சிவந்து விட்டது. இதழ்களுக்கிடையில் ஓர் முறுவல் நெளிந்தது. அவள் இதழ்களில் என் இதழ்களைப் பொருத்தக் குனிந்தேன்...!

புகையிரதம் ஓர் குலுக்குக் குலுக்கி இழுத்தது. என் மனோரதம் தடைப்பட்டது. கண் களை விழித்தேன். அவளும் விழித்தாள். கண்கள் சந்தித்தன. பெண்கள் வாயால் மாத்திரம் பேசுபவர்களில்லையென்பதை அறிந்தேன் அன்று.

அவள் ஸ்ரீபாதத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள். நான் என் இன்ப ஸ்ரீயின் பாதத்தைத் தொடர்ந்தேன். மலைச்சிகரத்தில் நல்ல நிலவு காய்ந்துகொண்டிருந்தது. ஆனால் குளிர் தாங்க முடியவில்லை. பல்லும் பல்லும் கட கட என்று அடிக்கத் தொடங்கி விட்டது. போதி மரநிழலில் போதம் தெளிந்த பெருமான் அடிச் சுவட்டைக் கண்டு ஆனந்தங் கொண்டாள் அவளும் அவள் பாட்டியும்.

மெல்ல மெல்லக் கீழே வந்தோம். பாட்டியைக் கையில் பிடித்துக் கொண்டு சமத்தாக இறங்கினாள். நானும் அவர்கள் பின்னே வந்து கொண்டிருந்தேன். பாட்டிக்குக் கால் தவறியது கீழே! கீழே இருவரும் அகப்பட்டது. அப்படியே இருவரையும் அணைத்துப் பிடித்துக்

கொண்டேன். அவள் கைபனிக் கட்டியைப் போலக் குளிர்ந்தது. "போமஸ் துதி" என்றாள் பாட்டி. பிறகு சாது! சாது! என்று முணுமுணுத்துக்கொண்டே கீழ் இறங்கத் தொடங்கினாள். நன்றி நிறம்பிய கண்களோடு என்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள் அவள். அவ்வளவுதான்.

அலுப்புத் தீர்த்துக்கொள்ள அருகேயிருந்த அம்பலத்தில் படுத்துக்கொண்டாள் பாட்டி. நான் அருகில் ஓர் வெளியான இடத்தில் சமுக்காளத்தை விரித்துப் புகை குடித்துக்கொண்டிருந் தேன். நடு இரவு; எல்லோரும் தூங்கி விட்டார்கள். எங்கும் ஒரே அமைதி. கண்ணுக்கெட்டிய தூரம்வரை என் கண்கள் பலமுறை சுற்றிவிட்டன. கைதேர்ந்த ஓவியன் வரைந்து விட்ட மாதிரியிருந்தது மலைப்பக்கம். மனம் தேன் எடுக்கும் வண்டு பூவை வட்ட மிடுவதைப்போல அவளை வட்டமிட் டுக்கொண்டிருந்தது.

அடிமேல் அடிவைத்து என் பின்னால் யாரோ வருவது போல் தோன்றிற்று. திரும்பி னேன். அவள் வந்து கொண்டிருந்தாள். "கொஞ்சம் தேநீர் சாப்பிடுகிறீர்களா?" என்று சொல் லிக்கொண்டே ஓர் கிளாஸ் தேநீரை என் முன்னால் வைத்தாள். "இல்லை, ஏன் இந்தச் சிரமம்" என்றேன். இதில் என்ன சிரமம். குளிர்தான் தாங்க முடியவில்லையே. கொஞ்சம் சாப்பிட்டால் உஷாராயிருக்குமே!" என்றாள். "சரி, இப்படி உட்கார்" என்றேன். சிறிது நேரத்தில் உட்கார்ந் தாள். தேநீரைக் கையில் எடுத்தேன். கண்கள் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தன. தேநீர் குடிப்பதையும் மறந்து விட்டேன். "தேநீர் குளிர்ந்து விடுமே! அதைப் பருகுங்கள் முதலில்; குடிப்பதையும் மறந்து விட்டேன். "தேநீர் குளிர்ந்துவிடுமே! அதைப் பருகுங்கள் முதலில்; பிறகு உங்கள் கண்கள் வேண்டுமென்றால் என் அழகைப் பருகட்டும் என்றாள் குறும்பாக.

சந்தர்ப்பத்தை நழுவவிடாது "உன் இதழ்... தவங்கிடக்கிறேன்" என்று இழுத்தேன். வெட்கத்தால் முகம் சிவந்தது.

"நீங்கள் தமிழன்! நான் சிங்களத்தி!"

"அப்படியென்றால் என்ன? காதலுக்கு ஜாதி, மதம், உயர்வு, தாழ்வு என்ற பேதம் உண்டோ?

"சகோதர பான்மையோடு நடந்த எங்களை வெறுத்துத் தமிழன் வேறு. சிங்களவன் வேறு, ஐம்பதுக்கைம்பது கொடு" என்று கோஷமிட்டாரே உங்கள் தலைவர்? பிறகு எங்களுக் கிடையில் பிணைப்பு எப்படி ஏற்படும்?

"அவற்றை விட்டுத்தள்ளு! எனக்கு வேண்டியது உனது காதல்!"

"உங்கள் தமிழ்ச் சமூகம் உங்களைப் புறக்கணித்துவிடுமே!"

"யார் புறக்கணித்துமென்ன? நீ என் அருகிருந்தால்"

"இளமையில் மிடுக்கு இப்போ பேசுகிறது! பிறகு........."

"பிறகு என்ன?"

"பிறகு என்னவா? குடித்து விட்டு எறியப்பட்ட பிழாவைப்போலக் கிடந்து உக்க வேண்டியதுதான்!"

"இவ்வளவு மதிப்புத்தானா என் காதலுக்கு! அதோ அந்தச் சாதுவின் பாதத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன்; உன்மேல் ஏற்பட்டிருக்கும் காதல் என்றும் அழியாது! அது தூய் மையானது!"

"அந்தச் சாது தன் அருமை மனைவியை ஏமாற்றியது போல் ஏமாற்ற மாட்டீர்களே?" என்று சொல்லிக் கொண்டு சிறிது நெருங்கி உட்கார்ந்தாள்.

எஞ்சியிருந்த தேநீரைப் பருகிவிட்டு அவள் தளிர்க்கரங்களை என் கைகளில் எடுத் தேன். பிடியினின்றும் விடுவித்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. இருதயம் வேகமாக அடித்துக் கொண்டதை அவள் பருத்த மார்பு காட்டிற்று. "தமிழர் சிங்களவர் என்ற பேதம் ஒழிய வேண்டுமென்றால் கலப்பு மணம் சட்டப்படி கட்டாயமாக்கப்பட வேண்டும். என்று சட்டமாக்கப் படுகிறதோ அன்று தான் இலங்கைக்குக் கதி மோட்சம்!" என்றேன்.

அப்படியென்றால் இரு சாதியினரின் ஒற்றுமைக்கும் இலங்கையின் விடிவுக்கும் நாமே இன்று அஸ்திவாரமிட்டவராவோம் என்று சொல்லிக்கொண்டே என் தோள் மீது சாய்ந்து கொண்டாள். ஊசலாடிக் கொண்டிருந்த மயிர்க்கற்றையைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தது.

பிறகு பொழுது புலர்ந்தது.

ஈழகேசரி
21.09.1947

தோட்டத்து மீனாட்சி

சி. குமாரசாமி (சி. கு)

அந்த வார்த்தைகள் மீனாட்சியின் காதுகளில் நாராசம் போல் வீழ்ந்தன. "புல்லுவெட்டியைத் தூர எறிந்துவிட்டு வெடுக்கென்று நிமிர்ந்து நின்று "சீ துப்புக்கெட்டவனே! மூடு உன் வாயை. இந்தத் தோட்டம் இல்லாவிட்டால், பரந்த இந்த உலகத்தில் எனக்கு இடமேயில்லையா? என்ன வார்த்தைகள் இவை? நீயும் ஓர் ஆண்மகனா? உன் மனைவியை வேறு ஒரு ஆடவனுடன்.." துக்கம் நெஞ்சை அடைத்துக் கொண்டது! வார்த்தைகள் வெளிவர மறுத்துவிட்டன. கண்கள் கலங்க "புல்லுவெட்டி"யை எடுத்து மறுபடியும் தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள். ஆனால் மனமோ எண்ணாதவெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தது. மீனாட்சி தோட்டத்துக்கு புதியவள். அவள் கணவன் அந்தக் கண்காணியின் காதுகளில் தொங்கிக்கொண்டிருந்த குவளைக் கடுக்கனிலும் விரல்களில் பிரகாசித்த கணையாழிகளிலும் அவன் பசப்பு வார்த்தைகளிலும் எடுபட்டு மனைவியுடன் இலங்கைக்கு வந்தான். அவள் தனது அடர்ந்து வளர்ந்த கூந்தலை நடுவில் வெட்டி பிளந்து வாரி முடிந்திருப்பாள். கட்டுக்கடங்காத மயிர்கற்றைகள் காற்றிலே பறந்து கொண்டிருக்கும்.

அவள் நடக்கும்போது அவள் கால்களில் உள்ள தண்டைச் சிலம்புகள் கட்டியம் கூறும். இவளைப் பார்த்த மற்றப் பெண்கள் "அடிபார்ப்போமே இவள் குலுக்கும் மினுக்கும் எத்தனை நாளைக்கு" என்று தம்முள் பேசிக் கொண்டனர். கச்சுக்குள்ளே பம்பிக்கொண்டிருந்த மார்பு - மருண்ட பார்வை - கைதேர்ந்த சிற்பி செதுக்கிவிட்ட சிலைபோன்ற பொன்மேனி- ஒருபிடி இடை - பட்டுப்போன்ற கன்னம்- இவை அத்தோட்டத்திலுள்ள ஒவ்வொருவர் மனத்தையும் சிதற அடித்தன. அவள் அதர அமுதத்தை சுவைத்துவிட ஏங்கிக் கொண்டிருந்தனர். ஆனால் அவள் கபடம் அறியாதவள். எத்தனையோ பேர் அவளுக்குக் கண்களால் பேசிப்பார்த்தார்கள். அவளுக்கு அப்பொழுது அவர்களின் பாசையின் அர்த்தமே புரியவில்லை.

வேலை பார்க்க வரும் "கண்டாக்கையா" அவளருகே வந்துவிட்டால் வேலைபார்ப்பதை விட்டு அவள் அழகைப்பாரத்து மயங்கி நிற்பான். மது உண்ட நரியைப் போல. அவள் வேலை யைப் புகழ்ந்துகொள்வான். ஆமா ! அவ வேலை மிகவும் உசத்தியாயிடுச்சு. நம்ம வேலை ஏன் பிடிக்க அவாவைப் போல குலுக்கி மினுக்க நம்மளுக்குத் தெரிஞ்சாத்தானே என்பாள் அருகிலிருக்கும் கறுப்பாயி. கண்டாக்கையா பல்லை இளிப்பார். அவ்வளவுதான்.

அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று தீர்மானித்த கண்டாக்கையா கங்கா னியிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டான்.

நாணத்தையும் சுயமரியாதையையும் அந்தஸ்தையும் தூர எறிந்துவிட்டு!"ஏ குட்டி நீ நினைத்தால் மகாராணியாட்டம் இருக்கலாமோ இல்லையோ? தலையில் நின்று தவசு பண் ணினால் கூட இப்பாக்கியம் எல்லோருக்கும் கிட்டுமா? சும்மா வருகிற சீதேவியை உதைத்துத் தள்ளுகிறாயே. நான் சொல்லுவதைக் கேள். இன்று மாலை குளித்துவிட்டு புதுசு உடுத்து அவர் பங்களாவுக்குப் போ! அப்போ பிழைத்தாய். இல்லையோ, நம்ம துரை உன்னைத் தொலைத்துப்புடுவார் தெரிஞ்சுக்கோ" என்றான் கங்காணி. இவ்வார்த்தைகள் நாராசம் போல் பட அன்று அவள் கோவித்தாள். "சரி உன் வாய்த் துடுக்கையெல்லாம் அடக்குகிறேனோ இல்லையோ பார்" என்று வாய் நிறைய இருந்த வெத்திலைப் பாக்குத்துவையலை உமிழ்ந்து விட்டு எட்டி நடந்து விட்டான் கங்காணி.

நாட்கள் சென்றன. மாற்றங்கள் அநேகம் ஏற்பட்டன. இராமசாமி மீனாட்சியின் கணவன் நண்பர்களுடன் கூடி குடிக்கத் தொடங்கிவிட்டான். ஒருநாள் "இது என்ன என்றுமில்லாத மணம் ஒன்று வீசுகின்றதே" என்றாள் இராமசாமியைப் பார்த்து.

"அது..... வா.... அ....து.... என்....னு....டை... தேன்... இ...லை... இல்...லா... வி...ட்... டா...ல்... நா..ன்... செத்... த...வி...ட...த...துப்;...புல்லும் ;... என்று மது வெறி யிலே பிதற்றத் தொடங்கி விட்டான்.

"ஆ! தெய்வமே இது என்ன சோதனை. இதன் நாற்றத்தையே என்னால் சகிக்க முடிய வில்லையே. இதை எப்படிக் குடிக்கக் கற்றுக் கொண்டீர்கள். இதையா தேன் என்கிறீர்கள் என்றாள் மீனாட்சி.

"தேன்....தேனா...சீ... அதனி...லும் இனி.. மையானது அதை... க்குடி...த்...து... வி...ட்... டால்... பூலோகமே ... தேவ...லோகம்.. மாதிரி... என்ன... குஷி.. தெரியுமா?

சும்ம... போடி... சும்மா.. நீ... என்... இந்திராணி... இங்கே.. வா.. என் அருகில்" என்று அவளை அருகில் இழுத்தான்.

"சும்மா விடுங்கள்! இந்த அரக்கனுக்கு அடிமையாகவா அந்தச் சீமையிலிருந்து இங்கே வந்தோம். இந்தச் சீமையும் இப்படியா சீர்கெட்ட நிலையில் இருக்கிறது. என்ன மழை, வெய்யில் என்றும் பாராமல் ஏறாதமலையேறி உயிரையும் மதியாமல் உதிரத்தைப் பிளிந்து உழைத்து இந்த மது அருக்கனுக்கா தாரை வார்ப்பது. அடி! மாரியம்மே, நீ என் புருசனை இவ் பாபத்தினின்றும் காக்கமாட்டாயா? உனக்குப் பெரிதாகப் பொங்கல் பண்ணுகிறேன்" என்றாள் மீனாட்சி.

"குடித்தால் பிறக்கும் குஷியையும் உற்சாகத்தையும் எங்கே அறிவாய்! நாளைக்கு வரும் பொழுது கையோடு உனக்கும் ஒரு சுண்டு கொண்டு வந்து விடுகிறேன். நீயும் நானும் குடித்துவிட்டு..."

அவள் கையைப் பிடித்து அருகே இழுத்தான்.

"சீ! விடுங்கள் என்னை.இனிமேல் குடிப்பதில்லையென்று வாக்குக் கொடுங்கள். இன் றேல்..." (இடைமறித்து) "அடியே வேண்டாம்; வேண்டாம் உன் நிபந்தனை. இன்றுடன் விட்டுவிடுகிறேன் குடிப்பதை" என்றான் இராமசாமி.

ஆனால் "குடிகாரன் பேச்சு விடிந்தாற் போச்சு" என்பார்களே. அவ்விதிக்கு இவன் மாத் திரம் விலக்கா? என்ன?

மறுநாளும் அப்படியே... இப்படித் தினம் குடித்துவிட்டு வருவதாயிருந்தான். சிற்சில சமயங்களில் காலம் கழித்தும் வருவான். அப்பொழுதெல்லாம் விழித்திருந்து வரவேற்பாள். அவள் கண்கள் அழுது அழுது வீங்கியிருப்பதை மதுவெறியில் வருபவன் எங்கே காணப்போகிறான். என்றைக்காகவது தூங்கிவிட்டால் நல்ல அடியும் உதையும் கிடைக்கும்.

அன்று தீபாவளி தோட்டம் "குடியிலும் கூத்திலும்" பெரும் அமர்க்களப்பட்டது. ஆண்-பெண் குழந்தை குட்டி எல்லோரும் குடித்து குதூகலம் கொள்ளும் திருநாள். இவற்றைப் பார்த்த மீனாட்சிக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. ஏதோ தனக்கென இருக்கும் வீட்டைச் சுத்தஞ் செய்து தீபங்களை வரிசையாக ஏற்றி வணக்கம் செய்தாள். "இதோ வந்து விட்டேன்" என்று வெளியே சென்ற இராமசாமியை இரவு மணி பன்னிரெண்டாகியும் காணவில்லை. இரவு பகலாய்ப் பாடாய் உழைக்கும் தேகமோ இல்லையோ, வாயிற் கதவைச் சாத்திவிட்டுக் கயிறுக் கட்டிலிற் பாயை விரித்துச் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளப்படுத்தாள். மனம் வேதனைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது. பழைய சம்பவங்கள் "சினிமா றீல்" மாதிரியோடிக் கொண்டிருந்தன. தாம் புதுத்தம்பதிகளாய் அனுபவித்த சுகம் - அந்த இன்ப லாகிரி அவன் அணைப்பிலே அவள் பெற்ற உற்சாகம் - எல்லாம் எங்கே? கற்பனை செய்து பார்த்தாள். கற்பனைக்கும் அப்பாற்பட்டு விட்டது. "அவர் குடிக்கிறாராம். அதுமட்டுமல்ல அந்தச் சிறுக்கி ஆ! தெய்வமே ஏன்!! என்னை இவ்விதம் சோதிக்கிறாய்? இங்கே கணவன் குடித்து விட்டு உபத்திரவம்; அங்கே கண்டாக்கையாவின்... மற்றவர்கள் கூறுவதுபோல் மண் ணோடு மண்ணாகும் தேகம்தானே வேண்டுமென்றால் மனிதன் தன் மிருக இச்சையை"

கட்டிய கணவனுக்கு இரண்டகமா? ஒருபொழுதும் முடியாது; உயிர் போவதானாலும் முடியாது.

அவள் நினைத்தது ஒன்று விதி நினைத்தது வேறு. கள்வனைப் போல அடிமேல் அடி வைத்து ஒருவன் உள்ளே நுழைந்தான். அவள் படுத்திருந்தாள். அருகே மின்னிக் கொண்டிருந்தது ஒரு சிறு கைவிளக்கு. அவள் கூந்தல் அவிழ்ந்து புரண்டுகொண்டிருந்தது கரு நாகங்கள் போல. அவள் முந்தானை சிறிது விலகியிருந்தது. நீண்ட கண்கள் மூடியிருந்தன. கட்டிலருகே மெல்ல மெல்ல நகர்ந்தான். தூரத்திற் கூகையொன்று தன் ஜோடியைத் தேடி அலறி அடித்துக் கொண்டி ருந்தது.

அவள் மார்பு மேலே கையை வைத்தான்....

"சீ! எடு ஐயா உன் கையை இந்நேரத்தில் இங்கே யார் உன்னை வரச்சொன்னது. தயவு செய்து மரியாதையாக வெளியே போய்விடு என் கணவன் வந்தால்..."

"அவன் எங்கே வரப்போகிறான். அவன்தான் குடித்துவிட்டு அந்தச் சிறுக்கி வீட்டிலே விழுந்து கிடக்கிறானே"

"வீணாகச் சப்தம் செய்யாதே" என்று சொல்லிக் கொண்டே அவள் அதரங்களில்... "பளீர்" என்று கன்னத்தில் அறைந்தாள். அவன் பிடியினின்றும் விலகத் திமிறினாள். ஆனால் அந்த இரும்புப் பிடியின்றும் ஒரு ஏழைப் பெண்ணால் விலகமுடியுமா, எவ்வளவோ முயன்றும் பார்த்தாள். பல்லைக் காட்டி இரந்தாள். ஒன்றும் வாய்க்கவில்லை.

அடிபட்டவனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது... அவளை வலுவில் கட்டி...

பிறகு அவன் மனம் வேதனைப்பட்டது. தன்செயல் ஓர் ஆண்மகன் செயலாவென்று திரும்பித் திரும்பிச் சிந்தித்தது. வெட்கம் அவனைப் பிடுங்கித் தின்னத் தொடங்கிவிட்டது. அவள் முகத்தைப் பார்க்க அவனுக்கு இப்போது தைரியம் இல்லை. இரவோடு இரவாகச் சவுக்கடிபட்ட நாய்மாதிரித் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு ஓடிவிட்டான்.

அவள் தண்ணீரில்லாது துவண்டு சோர்ந்து கிடக்கும் கொடியைப் போலக் கிடந்தாள். மனம் பதறியது. கண்களிலிருந்தும் நீர் பெருகியது. கூந்தல் அலங்கோலமாகத் தோள்மேலும் மார்பு மேலும் கிடந்து புரண்டது. மதிக்க முடியாத இரத்தினத்தைப் பறிகொடுத்த நாகம்போல மனம் எதை எதையோ சிந்தனை செய்து பதறியது. ஏதோ முடிவுக்கு வந்தவள் மாதிரி அலங்கோலமாகக் கிடந்த உடைகளைச் சீர்ப்படுத்திக்கொண்டாள்.

அன்று கங்காணி சொன்ன மாதிரி இன்று அவள் இராணி: உச்சி மலையில் ஓர் அழகிய வீடு. அவள் வேலைக்கே போவதில்லை. ஆனால் பெயரேட்டில் மட்டும் அவள் வரவுக்கே குறைவுஇல்லை. "கண்டாக்கையா" கடாட்சமோ இல்லையோ? பகலெல்லாம் தன்னிடமுள்ள ஆபரணங்களை வைத்துச் சிங்காரிப்பாள். பிறகு புறப்பட்டு விடுவாள். இப்போது அவள் ஓர்....

●

சில்வரம்புலி

வடமராட்சியைச் சேர்ந்த சைவப்புலவர் கலாஜோதி சி.வல்லிப்புரம் அவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். குருக்கவி வே.மகாலிங்கசிவம், வித்துவான் ந.சுப்பையாப்பிள்ளை, கோப்பாய் பண்டிதர் பஞ்சாட்சரசர்மா முதலியோரிடம் கல்வி பயின்ற வல்லிபுர ஆசான் 1931ஆம் ஆண்டு ஆரிய திராவிட பாஸாவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையில் முதல் மாணவனாக சித்தி பெற்றவர். பழமையில் நாட்டங் கொண்டவராயினும் புதுமையை விரும்பி வரவேற்பவர். யா / தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து தமிழ், சைவம், கணிதம், ஓவியம் போன்ற பாடங்களைப் போதித்த பேராசான். தோத்திரப் பாடல்களையும் ஊஞ்சற் பாடல்களையும் பாடியவர். 1933இல் ஈழகேசரியில் கவிதை, கட்டுரைகள் வாயிலாக இலக்கிய உலகில் நன்கறியப்பட்ட வல்லிபுரம் அவர்கள் 1947இல் சில்வரம்புலி என்ற பெயரில் ஈழகேசரியில் "தெளிவு" என்ற சிறுகதையை எழுதினார். அக்காலத்தில் நிலவிய சமூக ஒடுக்கு முறையையும் அதற்கு எதிராக இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்களையும் தம் சிறுகதையில் பதிவுசெய்தவர்.

❖ தெளிவு

தெளிவு

சில்வரம்புலி

கோயிற் பூசையைப் பகல் இரண்டு மணி வரையில் முடித் துக்கொண்டு பஞ்சாட்சர ஐயர் வீட்டுக்குத் திரும்பி வந்தார். வழியில் தம் முடைய வடலிக் காணிக்குள்ளே அயல்வீட்டு அருணாசலம்பிள்ளை யின் பசுமாடு ஒன்று புகுந்து நின்று, அங்கொன்றும் இங்கொன்றுமாய் இருந்த காய்ந்த புற்களை மேய்ந்து கொண்டு நிற்பதைக் கண்டார். உடனே கண்ணுக்கு எதிர்ப்பட்ட கற்களை எல்லாம், சிறிது நேரத்துக்கு முன்பு கல்வடிவிலே காட்சி தந்து வீரபத்திரப் பெருமானுக்குப் பாலாபி ஷேகம் செய்த, தமது கைகளாற் பொறுக்கினார். அருணாசலம்பிள்ளை பேரில் தமக்கிருந்த வெறுப்பு முழுவதையும் அந்தக் கற்களிலே தாபனஞ் செய்து பசுமாட்டுக்கு எறிந்து அதனைக் கலைத்துவிட்டு நேரே வீடு வந்து சேர்ந்தார். அருணாசலம்பிள்ளையை நேர்முகமாகச் சந்தித்துத் தண் டித்துவிட்டதாகவும் அவர் தமக்குப் பயந்து வாய் பேசாது ஓடிவிட்டதாக வும் எண்ணிக்கொண்டே ஐயர் தமது வீட்டுத் திண்ணையில் விரிக்கப் பட்டிருந்த அழுக்கு நிறைந்த மான்தோல் மீது சால்வையை உதறிப் போட்டு விட்டு உட்கார்ந்து கொண்டார்.

அவருடைய சிந்தனை முழுவதும் அருணாசலம்பிள்ளை மீதே குவிந்திருந்தது. அருணாசலம்பிள்ளையின் வளவுக்குள் நின்ற

பனையிலிருந்து ஐயர் வளவுக்குள் விழுந்து மாயமாய் மறைந்த ஒரு பனங்காய் முக்காழியை அயலவர்களாய் இருந்த காரணத்தால் நாளுக்கு நாள் புதுப்பிக்கப்பட்டு வளர்ந்து ஆண்களுக்கிடையிலுங் கூடப் பெரிய பகையை உண்டாக்கி விட்டது. இப்பொழுது அவர்கள் பரம விரோதிகளாய்க் கொடுக்கல் - வாங்கல், பேச்சு - வார்த்தை ஒன்று மின்றி இருந்தார்கள். அந்தப்பனை, குறித்த பனங்காய் முக்காழியைத் தங்களுக்குத் தானங் கொடுத்ததாக ஐயரின் மனைவியார் சமாதானங் கூறியிருந்தபடியால் திருட்டுக் குற்றத்துக்காக இரகசியத்தலாதல் பிராயச்சித்தம் நடத்தப்படவில்லை.

சிற்றூர் என்பது தென்மராட்சியில் உள்ள ஒரு சிறு கிராமம். இந்த ஊருக்குள்ள சிறப்பெல்லாம் இங்குள்ள வீரபத்திரகோயில் ஒன்றினாலேதான். ஆடு வெட்டுவதில் சுன்னாகம் ஐயனார் கோயிலுக்கு அடுத்த படியாகப் பிரசித்தி பெற்றிருந்தது. இந்தச் சிற்றூர் வீரபத்திர கோயிலே. பஞ்சாட்சர ஐயரின் பாட்டனார் காலம் முதல் இன்று வரை ஒருவித மாற்றமுமின்றி நடந்து வருகிறது. இப்பொழுது இதன் சொந்தக்காரர், பூசகர், பரிசாரர், ஏன் பேய் பிடித்தவர்களுக்குக் குழையடித்துப் பார்வை செய்கையில் இதன் மூர்த்தியான வீரபத்திரர்கூட எல்லாம் பஞ்சாட்சர ஐயரே. மூன்றாம் வகுப்பு வரை வாசித்துள்ள இவருக்குப் பஞ்சாட்சர ஐயர் என்று பெயரிடப்பட்டிருந்ததும் பஞ்சாட்சரத்தில் எழுத்துக்கள் ஆறோ அல்லது ஏழோ என்று எழுந்த ஐயம் இன்னுந் தீர்ந்தபாடில்லை. யாரையேனும் விசாரித்துச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்து கொள்ளுதல் தமது கௌரவத்திற்குக் குறைவாகும் என்ற மனப்பான்மை உடையவர். பஞ்சாட்சரத்தில் ஐயமுடையவர்" என்ற கருத்தில் இவருக்குப் பெயரிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி இவர் கல்வியறிவைப் பரிகசிப்பதில் அருணாசலம்பிள்ளைக்கு ஒரு தனித் திருப்தி உண்டு. ஐயரின் தொழிற்பயிற்சி நெறியைப் பொறுத்து உண்டான பழக்கமேயன்றிக் கண்ணையோ கையையோ உபயோகித்தும் நடப்பதன்று. மந்திர சுலோகங்களைத் தப்புந் தவறுமாக ஒப்பிப்பினும் உரத்த தொனியுடையவராயும் ஊருக்கே ஒற்றைப் பிராமணராயும் இருந்ததால் நல்ல பேரும் புகழும் வருமானமும் பெருகி வந்தன.

பட்டினத்தில் ஆங்கிலங் கற்றுக்கொண்டிருந்த ஐயரது ஏகபுத்திரன் மகேஸ்வரன் படலை திறந்து கொண்டு உள்ளே வருதலைக்கண்ட அவர் மிகுந்த கலக்கமடைந்தவராய்த் திண்ணையை விட்டு எழுந்தார். "என்ன தம்பி. ஏன் வந்தாய்? கல்லூரியில் மறுபடியும் தொற்று நோய் பரவியுள்ளதா?" என்று பரபரப்புடன் கேட்டார். "அப்படி ஒன்றும் எங்கள் கல்லூரி யில் நடக்கவில்லை. இந்தியாவிலே தான் நடந்து கொண்டிருந்ததே ஹரிஜன ஆலயப் பிரவேசம் என்னும் தொற்றுநோய். அது சிதம்பரத்திற்கும் தொற்றி விட்டதென்று இன்றைய பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. சிதம்பரக் கதவும் கடைசியாக ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்டுள்ளதைப் பாராட்டிப் பத்திரிகை ஆசிரியர் அரியதொரு தலையங்கம் எழுதியிருக்கிறார். அவரும் எங்களைப் போல ஒரு பிராமணராமே. இனித் தாமதமேன்? முன்பு தாங்கள் எனக்கு வாக்களித்தபடி எங்கள் கோயிலைத் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் திறந்து விடுவதுதானே. இதன்பொருட்டாகவே நான் கல்லூரியிலிருந்து ஒரு கிழமை "லீவு" எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லி நிறுத்தினான் மகேஸ்வரன்." ஐயர் ஒன்றும் பேச இயலாதவராய் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு திண்ணையிலேயே மறுபடியும் அமர்ந்து சிந்திக்கலானார்.

சிற்றூரில் சைவப்பாடசாலை ஒன்றுமில்லை. பழுத்த சைவாபிமானி யாகிய அருணாசலம்பிள்ளையின் தூண்டுதலால் "இந்துசமய பாதுகாப்பு மகா சபையார்" பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பலமுறை முயன்றும் பலிக்கவில்லை. "மகாசபையிற் போதிய பணமில்லை" என்றும் "மகாசபைக்குப் பெருங் கடன் இருக்கிறது" என்றும் வெளியில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உண்மைக் காரணம் சாதி இந்துப்பிள்ளைகளும் தாழ்த்தப்பட்டோர் பிள்ளைகளும் ஒன்றாகப் படிக்க நேர்ந்துவிடும் என்று பயந்தான். அங்கு இருந்தது மிஷன் பாடசாலை ஒன்றுதான். அதுவும் ஒரு பிரதம பாடசாலை. அவ்வூர்ப் பிள்ளைகளின் மேற்படிப்பு ஐந்தாம் வகுப்பு வரைதான். அந்தக் கிராமத்தில் பிராமண வீடு ஒன்றும் வேளாள வீடுகள் பதினைந்தும் தாழ்த்தப்பட்டோர் வீடுகள் இருபத்து நான்கும் இருந்தன. கிராமப் பிள்ளைகள் எல்லோரும் அந்தப் பாடசாலையிலேயே கல்வி கற்று வந்தார்கள். பாடசாலையின் தலைமை ஆசிரியர் ஒரு கிறீஸ்தவர். அருணாசலம்பிள்ளையின் சொந்தக்காரர். இப்பாடசாலையின் தலைமை ஆசிரியர் பதவியை முன்னிட்டே கிறீஸ்தவ சமயம் புகுந்தவர். சாதி வித்தியாசம் பாராட்டுவதில் மகாசமர்த்தர். இவர் போன்ற புதிய வெளிக் கிறீஸ்தவர்களாலேயே கிறீஸ்தவ சமயம் கிராமப் பக்கங்களில் பரவாயில்லை என்பது பாதிரிமார்கள் அறிய மாட்டார்கள். இவர் குடும்பத்தைத் தவிர வேறு கிறீஸ்தவ குடும்பம் ஊரில் இல்லை.

சமீபத்தில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் ஆண்டு விழாவில் நிறைவேற்றப் பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள் பெரும்பாலாராய்க் கல்வி கற்கும் பாடசாலைகளிலே அச்சமூகத்தைச் சார்ந்த ஆசிரியர்களுக்கும் படிப்பிக்க இடம் அளிக்கவேண்டும் என்று கல்வி மந்திரியாரையும் பாடாசலை முகாமைக்காரர்களையும் இந்த மகாசபை பணிவாக வேண்டிக்கொள்கிறது என்னும் தீர்மானம் ஒன்றும் மேற்படி பாடசாலை முகாமைக்காரர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து அதில் இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பாரிய நிர்வாகசபை அங்கத்தினர்கள் சிற்றூருக்குச் சென்று கூட்டம் வைத்துக் குறித்த ஆசிரியர் நியமன விஷயத்திலே கிளர்ச்சி செய்யுமாறு அங்குள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புப் பரம்பரைக் கிறீஸ்தவ உபாத்தியாயர் ஒருவரை உதவி ஆசிரியராக நியமித்துத் தாழ்த்தப்பட்டவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு அந்த உபாத்தியாயர் செய்யும் பொது சன சேவைகள் மூலமாகக் காலக்கெதியில் தாழ்த்தப்பட்டவர்களைக் கிறீஸ்தவர்களாக்கி விடலாம் என்ற ஆசையும், தானியேல் உபாத்தியாயரின் நியமனத்தால் சாதி இந்துப் பிள்ளைகள் பாடசாலையைப் பகிஷ்கரித்துவிட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் முகாமைக்காரரை ஒரு முடிவுக்கு வராமற் செய்துகொண்டிருந்தன.

மகேஸ்வரன் இந்தப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படிப்பை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் மணிவாசக ஆங்கிலக் கல்லூரியில் தனது ஆங்கிலக் கல்வியை ஆரம்பித்து இப்பொழுது சீனியர் வகுப்பிற் படித்துக்கொண்டிருந்தான். இக்கல்லூரியில் மகேஸ்வரனுக்கு உயிர்த் தோழன் ஒருவன் உண்டெனில் அவன் உமாபதி என்ற தாழ்த்தப்பட்ட சமூக மாணவனே அல்லாமல் வேறு யாராகவும் இருக்க முடியாது. இந்தக் கல்லூரி சென்ற ஆண்டிலே தான் அதன் வெள்ளி விழாவைக் கொண்டாடியது. வெள்ளி விழாவரை எந்தத் தாழ்த்தப்பட்ட பையனையும் சேர்க்கவில்லை என்ற பெருமையோடு அது நடந்து வந்தது. ஆனால் இக்கல்லூரியும் சமீபத்திலே நிகழ்ந்த தடுக்க முடியாத ஒரு சம்பவத்தால் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிள்ளைகளை கல்வி கற்பதற்கும், விடுதியிலே தங்கி வசிப்பதற்கும் உரிமை அளித்துவிட் டது.

கல்லூரி மனேஜர் சம்பந்தநாதர் பிற்போக்கு மனப்பான்மை கொண்ட யாழ்ப்பாணச் சாதி இந்துக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவர். அதனால் அவர் துணிந்து ஒரு கருமத்தைச் செய்யின் மற்றவர்கள் ஆட்சேபிப்பதில்லை. செல்வாக்குடையவரே அல்லாமல் செல்வமுடையவர் அல்லர். ஆனால் பெரிய தனவந்தர் என்ற பட்டினத்திலே பேசிக்கொள் வார்கள். அவருடைய வருமானத்தைப் பற்றிய அந்தரங்கம் கல்லூரியிற் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குத் தெரியாததன்று. அவரின் தந்தையார் சிங்கப்பூரிலே பெரிய உத்தியோகம் பார்த்தவர். உத்தியோக ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்திற்கு மீண்ட போது இக்கல்லூரிக் கென்றே பெரும் பொருளைச் சிங்கப்பூரிலுள்ள சைவாபிமானிகளிடம் பெற்று வந்தார். தந்தையார் இறந்த பின்புதான் சம்பந்தநாதர் கல்லூரி மனேஜரானார். இப்பொழுது கல்லூரி இவருடைய சொந்தச் சொத்து. "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்...." என்றும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என் றும் சைவத் திருமுறைகளில் பெரியார்கள் கூறிய அமுத மொழிகளும் இந்து மதத்திலே இடைக் காலத்திலே புகுந்து கொண்டு அதன் புனிதத் தன்மையை மாசுபடுத்திய தீண்டாமையை நாட்டை விட்டு ஓட்டத் தவங்கிடந்து அதிலே பூரண வெற்றியும் பெற்ற காந்திஜியின் போதனைகளும், ஒருவித மாற்றத்தையும் உண்டாக் காத அவர் மனத்தைச் சில மாதங்களுக்கு முன்பு தேர்தல் ஏசண்டுகள் சிலரின் தூண்டுதலால் ஏற்பட்ட பதவி மோகம் ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. புதிய பாராளுமன்றத் தெரிவுக்கு ஓர் அபேட்சகராக முன்வந்திருந்த சம்பந்தநாதர், தமது தொகுதியிலுள்ள வாக்காளரின் அட்ட வணையைப் புரட்டித் தமக்கும் தமக்கு எதிராகப் போட்டியிட நிற்பவருக்கும் ஆதரவாய் இருக்கும் வாக்காளர்களைக் கணக்கிட்ட போது தாம் ஒரு முந்நூறு வோட்டுகளால் தோறகப் போவது நிச்சயம் என்று கண்டு கொண்டார். போட்டிக்கு நில்லாமல் விலகிவிடவும் மனம் இடந்தரவில்லை. இந்த நிலைமையில் இருந்த போது இவருடைய குட்டித்தம்பியோடு ஆலோ சனை நிகழ்த்தினார். அப்போது குட்டித்தம்பி மூளையிலே ஒரு யோசனை பளிச்சென்று உதய மாயிற்று. அதன் பயனாகவே உமாபதியும் வேறுஞ் சில தாழ்த்தப்பட்ட சைவமாணவர்களும் இந்தக் கல்லூரியில் இடம்பெறலாயினர்.

பட்டின எல்லையிலிருந்து இரண்டுமைல் தூரத்தில் இருந்தது புத்தோடை என்ற பெருங்கிராமம். இங்கு, தாழ்த்தப்பட்டவர்கள் மட்டும் நூறு குடிகளுக்கு அதிகமாக உண்டு. இவர்களில் ஏறக்குறைய முந்நூறு வாக்காளர்கள் இருந்தார்கள். தமது கட்சி முந்நூறு வாக்கா ளர்களால் தோற்கக்கூடும் என்று சம்பந்தநாதர் கூறிய போது குட்டித்தம்பியின் கவனம் இந்தத் தாழ்த்தப்பட்டவர்களின் மீது விழலாயிற்று. "அவர்கள் தங்கள் முந்நூறு வாக்குக்களையும் ஒரே மனமாக மற்ற அபேட்சகருக்கு அளிக்கப் போகிறார்கள்". என்ற வதந்தியும் ஊருக்குள்ளே அடிபட்டது. அவர்களை மட்டுந் தங்கள் கட்சிக்குத் திருப்பி விட்டால் வெற்றி நிச்சயம். ஆனால் அவர்களைத் திருப்ப வழி என்ன? என்ற கேள்விக்கு விடையாகவே "கல்லூரியைத் தாழ்த் தப்பட்ட மாணவர்களுக்குத் திறந்துவிட்டுக் கிராமத்திலுள்ள முந்நூறு வாக்குக்களையும் பெறுதல்" என்ற யோசனை குட்டித்தம்பிக்குண்டானது.

இந்த யாழ்ப்பாணப் பட்டினத்திலே எத்தனையோ தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வியூட்டி அவர்களையும் முன்னேறச் செய்த கிறீஸ்தவர்களின் கல்லூரி ஒன்றிலே சீனியர் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்த உமாபதி, தாயாரின் நோயும் குடும்பத்திலே ஏற்பட்ட இடைஞ்சலுங் காரணமாக மூன்று மாதங்களுக்கு மேலாகக் கல்லூரிக்குப் போய்ப் படிக்க

முடியாமல் வீட்டிலேயே தங்கவேண்டி நேரிட்டது. இதற்கிடையில் வேறுபல புதிய பிள்ளைகள் "சீனியர்" வகுப்பிலே சேர்த்துக்கொண்டதால், பிந்தி வந்த மாணவர்கள் பலருக்கு இடமில்லை என்று சொல்லித் திருப்பிவிட்டார்கள். இவர்களில் தாழ்த்தப்பட்ட மாணவன் உமாபதியும் ஒருத்தனே. மற்ற மாணவர்கள் அங்கொருவனும் இங்கொருவனுமாகச் சைவக் கல்லூரிகளிற் சேர்க்கப்பட்டனர். உமாபதிக்கு ஓர் இடமுங்கிடைக்கவில்லை. சிறுவனின் படிப்புத் தடைப்பட்டுவிட்டதே என்று ஏக்கமடைந்திருந்த அவன் தகப்பனாரைக் குட்டித்தம்பி சந்தித்ததின் விளைவாகவே இப்பொழுது உமாபதியும் வேறு சில புதிய மாணவர்களும் மணிவாசக ஆங்கிலக் கல்லூரி மாணாக்கராயினர்.

சிவஞானசுந்தரம் பி.ஏ.பி.எஸ்லி. இலங்கைச் சர்வகலாசாலையிலே சேர்ந்து பட்டப் படிப்பை முடித்துக்கொண்டபின், கொழும்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பிரவேசித்து ஆசிரியப் பயிற்சியும் பெற்று யாழ்ப்பாணம் வந்ததும் மணிவாசகர் ஆங்கிலக் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சர்வகலாசாலையிலிருந்து வெளிவந்த போது பணம் படைத்த ஓர் உத்தியோகத்தருக்கு மருமகனாகும் சந்தர்ப்பமும், அந்த உத்தியோகத்தர் மூலமாகக் கொழுத்த சம்பளமுள்ள ஓர் அரசாட்சி உத்தியோகம் பெறும் வாய்ப்பும், இவரை வீடு தேடி வலியவந்தும் இவர் அந்த இரண்டையும் நிராகரித்துவிட்டார். காந்தீயத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்த இவர் யாழ்ப்பாணத்திலே நிலவும் கொடிய சாதி பேதத்துக்கும், சமயச் சச்சரவுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கத் தகுதியுடையவர்கள் இளைஞர்களோ என்ற திட நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த நம்பிக்கையே இவரை ஆசிரியப்பயிற்சி பெற்று ஆசிரியராகத் தொண்டாற்றுமாறு தூண்டியதாகும். மண், பெண், பொன் என்னும் மூவாசைகளையும் இளமையிலேயே துறந்து கல்லூரி மாணவர்களின் முன்னேற்றத்திற்காக இவர் ஆற்றி வந்த வேலைகள் மாணவர்கள் உள்ளத்தை மிகுதியுங்கவரலாயின. அதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இந்த ஆசிரியர் தமது உயர்நோக்கங்களைப் படிப்படியாக மாணவர்கள் உள்ளத்திலே படிய வைத்தார். எடுத்ததுக்கெல்லாம் "இந்தியாவைப் பாருங்கள், காங்கிரசைப் பாருங்கள் : காந்தியடிகளைப் பாருங்கள்." என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆசிரியர் சிவஞானசுந்தரத்தால் புனிதர்களாக்கப்பட்டிருந்த அக்கல்லூரி மாணவர்களுக்குத் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளின் பிரவேசம் குதூகலத்தையே அளித்தது : இதனால் என்ன நேரிடுமோ என உள்ளூரப் பீதியடைந்திருந்த மானேஜர், சாதி இந்து மாணவர்களினதும் தாழ்த்தப்பட்ட பிள்ளைகளின் பிரவேசம் குதூகலத்தையே அளித்தது.

திருச்செந்தூர் முருகப் பெருமான் திருக்கோயில் ஹரிஜனங்களுக்குத் திறக்கப்பட்ட நாட்களில் வீட்டுக்குச் சென்றிருந்த மகேஸ்வரன், தங்கள் ஆலயத்தையும் திறந்துவிட வேண்டும் என்பதையிட்டு முதன் முதலாகத் தகப்பனரோடு பேசினான். அப்பொழுது இருவருக்குமிடையிற் பெரிய விவாதம் ஏற்பட்டது. பஞ்சாட்சர ஐயருக்கு மகேஸ்வரன். பிறப்பதற்கு முன்பு ஆணும் பெண்ணுமாய் ஆறு பிள்ளைகள் பிறந்து பிறந்து இறந்துவிட ஏழாவது பிள்ளையாகப் பிறந்தவன் மகேஸ்வரன். மகாபத்தராகிய தாம் புத்தெனும் நரகத்திலே விழாதபடி காப்பாற்ற வீரபத்திரே மகேஸ்வரனாக அவதாரஞ்செய்துள்ளார் என்பது ஐயரின் நம்பிக்கை. இன்றுவரை ஐயரோ மனைவியாரோ மகனுடைய எண்ணத்துக்கு மாறாக நடந்தறியார்கள். இதுவும், இந்த யாழ்ப்பாணத்துக்கே வழிகாட்டக்கூடிய இப்பெரிய கருமத்தில் தகப்பனாரை நெருக்க அவனுக்குத் துணிவை உண்டாக்கியவற்றுள் ஒன்றாகும். மகேஸ்வரன்

எவ்வளவோ எல்லாம் எடுத்துக்கூறியும் ஐயர் ஆலயத்திறப்புக்கு உடன்படாததைக் கண்ட அவன் கடைசியில் ஒரு பெரிய வெடிகுண்டை ஐயர் முன்பாகப் போட்டுவிட்டான்.

“பத்துத் தினங்களுக்குள் ஆலயத்தைத் திறக்க வேண்டும். இல்லையேல் உண்ணா விரதம் மேற்கொண்டு உயிர் துறப்பேன் இது சத்தியம்” என்று பிரதிக்னை செய்துகொண்டான் மகேஸ்வரன். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தஞ் செய்து வெற்றியை ஈட்டிக்கொண்ட காந்தி அடிகளின் ஒப்பற்ற கடைசி ஆயுதமல்லவா? ஐயர் கதிகலங்கிவிட்டார்.

“மகனே சற்றுப் பொறுத்துக்கொள். சிதம்பரம் இன்னுந் திறக்கப்படவில்லையாமே அது திறக்கப்பட்டதும் நாங்களும் எங்கள் கோயிலைத் திறந்து விடுவோம்.” என்று வாக்குப பண்ணி மகனைச் சமாதானப்படுத்தினார் அவர். எந்தக் கோயிலை யார்தான் திறந்தாலும் சிதம்பரத்தைத் தீக்ஷிதர்கள் ஒரு போதுந் திறக்கப் போவதில்லை என்பது ஐயரின் எண்ணம்.

ஐயரின் இந்த எண்ணத்திலும் மண்விழுந்து போயிற்று. சிதம்பரம் ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்ட செய்தி பத்திரிகைகளிற் கொட்டை எழுத்துக்களிலே வெளிவந்ததும் மகேஸ்வரன், கல்லூரியில் “லீவ்” பெற்றுக்கொண்டு வீடு வந்து முன் கூறியவாறு தகப்பனரோடு பேசிக் கொண்டிருந்தான். மகேஸ்வரனுக்கு மறுமொழி ஒன்றுஞ் சொல்லித் தட்டிக் கழிக்க முடியாமல் அகப்பட்டுக் கொண்ட ஐயர், அடுத்த நாள் முடிவு சொல்லுவதாகக் கூறிவிட்டு யாரையோ பார்ப்பதற்காக வெளியே போனார். ஊரிலுள்ளோர் பலரோடு ஆலோசித்த அளவில் பெரும்பான்மையோருடைய அபிப்பிராயம் மகேஸ்வரனுக்குச் சாதகமாகவே இருந்தது. அருணாசலம்பிள்ளை முதலிய சிலர் மட்டும் எதிர்க்கச் செய்தார்கள். மறுதினம் தினசரிப் பத்திரிகையில், கொழும்பு விவேகானந்த சபையார் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்துச் செய்துகொண்ட தீர்மானம் வெளிவந்திருந்ததால் அருணாசலம்பிள்ளை முதலியவர்களும் ஆதரவுகாட்டத் தொடங்கினர். அன்றியும் ஹரிஜனர்களை ஆலயத்திலே பிரவேசிக்க விடுவதால் உண்டாகும் - சரித்திரப் பிரசித்திபெறும் - புகழ் யாழ்ப்பாணத்தில் தங்கள் ஊருக்கே முதலிற் கிடைக்கிறது என்றதற்காக இவ்விஷயத்தில் அதிக ஊக்கமும் எடுத்துக்கொண்டார்கள். ஆலயப் பிரவேசத்திற்கு ஒரு தேதி குறிக்கப்பட்டு விளம்பரங்கள் விநியோகிக் கப்பட்டன.

அந்தத் தினத்தில் ஊரிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும், வெளியூரிலுள்ள பல சமூகத்தவர்களும் அங்கு வந்திருந்தனர். மணிவாசக ஆங்கிலக் கல்லூரி ஆசிரியர் சிவஞானசுந்தரமும் மாணவர்களும் இதில் பங்குபற்றிக் கொண்டனர் என்பது சொல்ல வேண்டியதில்லை. ஆலயப் பிரவேசம் மிக்க பக்தி சிரத்தையுடன் வெகுமரிசையாக நடந்தேறியது. பிரவேச வைபவத்தை ஒட்டிக் கோயில் வீதியில் ஆசிரியர் சிவஞானசுந்தரம் தலைமையில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. கூட்டத்தில் மகேஸ்வரனுடைய அருந்தொண்டைப் பாராட்டிப் பலர் பேசினர். தாழ்த்தப்பட்டவர்களின் பிரவேசத்தால் வீரபத்திர கோயில் புனிதமடைந்து விட்டதால், இனிமேல் அங்கு பலியிடும் வழக்கத்தை நிறுத்த வேண்டுமென்றும், சிற்றூர்ப் பாடசாலையில் இப்பொழுது இருவருக்கு இடமிருப்பதால் தானியேல் உபாத்தியாரையும், தாழ்த்தப்பட்ட ஒரு சைவ உபாத்தியாரையும் அங்கு நியமிக்க வேண்டு மென்றும் கொண்டுவரப்பட்ட இரு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. கூட்டத்திலே பேசியவர்களுள் உமாபதியும் ஒருவன். தலைவர், அவனைத் தாழ்த்தப்பட்டவன் என்று

சபைக்கு அறிமுகஞ் செய்துவைத்த போது பஞ்சாட்சர ஐயர் அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்ததை ஒருவருங் கவனிக்கவில்லை. ஐயர் வீட்டுக்கு முன்னரே இரண்டொரு தடவை மகேஸ்வரனுடன் கூடிக்கொண்டு வந்திருந்தவனும், கோயிலுக்கு வந்து உட்புகுந்து வணங்கிச் சென்றவனுமாகிய அதே பையன்தான் இந்த உமாபதி என்பதில் ஐயருக்கு ஐயமே உண்டாகவில்லை.

ஈழகேசரி
28.09.1947, 05.10.1947

தியாகராஜன்

தியாகராஜன் எழுந்தாளர் சோ. சிவபாதசுந்தரத்தின் சகோதரர் ஆவார். இவரை சிறந்ததொரு கவிஞனாகவே தமிழுலகம் அறிந்துள்ளதெனினும் ஈழ கேசரியில் தரமான சிறு கதைகள் சிலவற்றைப் படைத்துள்ளார். ஆசைமுகம், நல்ல மாமி ஆகிய சிறுகதைகளும் அன்னாரின் திறமைகளை வெளிப்படுத்தின. மெல்லிய மனித உணர்வுகளுக்கு அவர் உருவம் கொடுத்திருக்கிறார். பயிற்றப் பட்ட ஆசிரியர், இலக்கிய கண்டனக்காரராகப் பெயர் பெற்றவர். ஆசிரியப் பயிற்சி பெற்றிருந்தாலும் அவர் கிராமவிதானையாராகக் கடமையாற்றினார். பின்னர் ஆசிரியத் தொழில் பார்த்தார். குழந்தைக் கவிதைகள் பலவற்றினை ஆக்கி யுள்ளார்.

- முதல் இரவு
- நல்ல மாமி

முதல் இரவு

தியாகராஜன்

டிங்!

முதல் இரவு நகரத்தொடங்கிற்று. பகலில் இருந்த "கல்யாண வீட்டு" ஆரவாரங்கள் எல்லாம் அடங்கிவிட்டன. இரவின் பேரமைதியை இரண்டொருவருடைய குறட்டைகள் துளை போட்டுக் கொண்டிருந்தன.

வாசலருகில் வளையல்கள் கலகலத்தன, அவள் வருகையை அறிவித்து. அவளுக்கு முன்னால் வந்த காற்று வாசனை பரப்பி அவளுக்கு வழியமைத்தது. மணம் நிறைந்த மலர்க்கொடி காற்றில் வருவது போல் அவள் வந்து கொண்டிருந்தாள்.

அவள் வந்து கொண்டிருந்தாள். எனது சிந்தனை வேகமாக ஓடிற்று. செயலை நோக்கி. அமைதி அலைகள் பொங்கி ஒன்றோடு ஒன்று மோதின.

அவள் வந்து முடியவில்லை. மேலே எனது செயலுக்கோ - சிந்தனைக்கோ இடமில்லாமல் செய்துவிட்டது. அடுத்த வீட்டில் எழுந்த

கூக்குரல். துளை போடும் சமயத்தில் திடீரென்று வெடிப்பு ஏற்படுவது போல அமைதி வெடித்துக் குழம்பியது. எல்லாரும் ஓடினார்கள்; நானும் சென்றேன்.

தற்கொலை! கிணற்றடியில் அடுத்த வீட்டு மாலதியை வளர்த்தியிருந்தார்கள். அவள் செத்திருந்தாள்-பிரேதமாகிவிட்டாள். கிணற்றைச்சுற்றிநின்றகூட்டம்-சமூகம்-தீர்ப்பளித்தது.

அவள் - மாலதி - ஒருவனைக் காதலித்திருந்தாளாம். அன்று காலை யாரோ அவளைப் பெண் பார்க்க வந்தபோது அவள் உண்மையைச் சொல்லி, "அவனுடன் போய் விடுகிறேனே" என்று மன்றாடினாள். தன்னுடைய மானம் கப்பலேறிவிடுமேயென்று அவளுடைய 'புரபஸர்' அண்ணன் கூத்தாடினானாம்.

அந்தக் கூத்து நெருப்பாக இருந்தது. அவள் மூன்று மாதக் கெர்ப்பனி என்பதும் தெரிந்துவிட்டால் - ?

அவனுடைய கூத்து எரிமலையாய்விடும்.

இது அவளுடைய தீர்ப்பு. அவர்களால் தீர்க்க முடியாத - விடுவிக்க முடியாத பிரச்சினையை அவள் விடுவிப்பதாய் நினைத்து - அவளுடைய, அவனுடைய, அவர்களுடைய - மானத்தைக் காப்பாற்றுவதாய் எண்ணி, இந்த ஆழமான கிணற்றைச் சரண் புகுந்திருக்கிறாள்.

ஆனாலும் பிரச்சினை தீர்ந்து போய்விடவில்லை.

அவளைப்பற்றிய ரகஸ்யத்தைக் கிணற்று நீரோடு கரைத்து, அவனைக் காட்டிக் கொடுக்காமல், தானும் சிசுவும் இல்லாமல் போகிறோமே என்ற ஆறுதல் அவளுக்கு ஏற்பட்டிருக்கும். ஆனால் - ?

"இப்பொழுது மாத்திரம் என்னுடைய மானம் நிலைத்து விட்டதா?" என்று ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்தான் அவள் அண்ணன்.

சீலை துவைக்கும் கல்லில் உட்கார்ந்து சிந்தித்தேன். அந்தச் சிந்தனை வட்டங்கள் கடந்த இரண்டு வருட அநுபத்தோடு கலந்து சுழன்றன.

2

என்னுடைய காதலியே இன்று தொடங்கி என்னுடைய மனைவி. அந்த நீண்ட "காதலர்ப்பருவ"த்தில் ஒரு நாள் கூட நாங்கள் நிறைவாகச் சந்தியாமலிருந்தும், கண்களும் கடிதங்களுமே காதலை வளர்த்தன. என்னுடைய கோழைத்தனங்களைக் கூட அவள் காதலித்திருக்கிறாள், இல்லாவிட்டால் -?

அவளும் - நானும், மாலதியும் - "அவ"னும்,

வாழ்வில் எதிர் எதிரான கோணங்களை அடைந்து விட்ட இந்த இரண்டு "ஜோடி" களைப்பற்றியும் என் சிந்தனை எடை போட்டது.

சமூகத்தின் முன்னால் நாங்கள் ஒழுக்கமுள்ளவர்கள் - புத்திசாலிகள். உயர்ந்த முறையில் காதலித்து ஒழுங்காக மணம் செய்தவர்கள்.

அவர்கள்

அவர்கள் ஒழுக்கந் தவறியவர்கள் - விவேகமற்றவர்கள். காமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டார்கள். சமூகம் கேட்கிறது: " இந்தக் கீழ்த்தரமானவர்களால் காமத்தை அடக்க முடியாமல் போய்விட்டதா?" என்று.

தண்டனை?

சமூக அசைவு அவளைக் கொலைசெய்து, அவள்மேல் குறி சுட்டுவிட்டது!

சிந்தனை மாறிச் சுழன்றது.

எனக்கும் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால்...? ஆரம்ப விஷயங்களைப்பற்றித் திட்டமிட்டுக்கொண்டு போயிருப்பேன். நாடகபாணியில் சம்பாஷணை ஆரம்பமாகவே, நினைத்துக்கொண்டு போனவைகள் மறந்து விடப்படும். வரவர வார்த்தைகளின் வலிமை குறைந்துவிடும். பிறகு, அவள் கரங்களையாவது பற்றிவிடவேண்டும் என்ற துடிப்பு உண்டாகும். காந்த சக்தி ஏறிக்கொண்டே வரும்.

அப்பால் - அது நரகமாகவோ சுவர்க்கமாகவோ மாறி விடும். பின்பு -

என் கதி - அவள் கதி - சமூகத்தின் தீர்ப்பு...

அப்...பப்...பா! அதை எண்ணவே மனம் தாங்க முடியாமல் அலறிற்று. உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிற்று.

3

விசாரணைக்கு வந்த பொலீஸ் அதட்டினான். அவன் மேசையாய் உபயோகித்து எழுத நான் இருந்த கல் தேவையாயிருந்தது. சிந்தனையின் சுழற்சி இழுத்து நிறுத்தப்பட்டது.

இரவின் பெரும்பகுதி கழிந்திருக்கும். தூரத்திலே கேட்கும் தெளிவற்ற, தெளிவுள்ள ஒலிகளைப்போல இரவின் அமைதி வேதனை தருவதாய் இருந்தது. வீட்டுக்குத் திரும்பினேன்.

கதவு பூட்டியிருக்கவில்லை. அது செலவழித்துவிட்டதா? வேறு உணர்ச்சிகளால் அமுக்கப்பட்டுவிட்டதா? ஒன்றுமே விளங்கவில்லை.

ஒவ்வொருவரும் முதல் இரவு எப்படியிருக்கும் என்று முன்கூட்டியே கற்பனை செய்து கொண்டுதான் முதல் இரவை எதிர்பார்ப்பரா?

அப்படி என்றால் அவளுடைய கற்பனை என்னவாயிருந்ததோ?

ஒன்று மாத்திரம் நிச்சயம். முதல் இரவு விஷயத்தில் அவளும் நானும் பக்தனும் குடிகாரனும்போல எதிர்க்கோணங்களில் இருந்திருக்கிறோம்.

அவள் நித்திரையிலே புரண்டு படுத்தாள்.

அந்த முகத்தில் பிரார்த்தனைக்குப் பின் மகாத்மாக்களிடம் தோன்றும் அமைதி பிரதிபலித்தது.

அவள் என்னை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கவில்லை!

மறுமலர்ச்சி - வைகாசி, ஆனி - 1948

நல்ல மாமி

தியாகராஜன்

படுத்துக்கிடந்த நிலையிலேயே தலையை நிமிர்த்தினேன். பதற வேண்டும் போல இருந்தது. ஆனால், அதுதான் முடியவில்லையே. தூர்ந்து வரண்டு போன கிணறு மாதிரி இருந்தது இதயம். தூக்கக் கலக்கத்திலும், அமைதியானது நெஞ்சை அமுக்கிக் கொண்டிருந்தது.

மாமியின் விம்மல் நானா திக்கையும் நடுங்கிக்கொண்டே பார்க் கச்செய்தது. நடுவிலே கட்டிலில் மாமா. கால்மாட்டிலே, பொருமிக் கொண்டு தலைவிரிகோலத்துடன் இருந்தாள் மாமி. அவரைக் காலிலி ருந்து தலை வரை வெள்ளைத்துணி மூடிக்கிடந்தது. அவர்தானே போர்த்திக் கொண்டதல்ல, யாரோ போர்த்திவிட்டார்கள். இவருக்கு இந்த ஜடத்துக்கு இனி எதுவுமே தேவையில்லை. உடம்புப் போர்வையில் இருந்து, உயிர் சிறிது நேரத்துக்கு முன்புதான் பிரிந்தது.

அவர் செத்துப்போனார்

அது பிரேதம், ஆம் உயிரற்ற ஜடம்

மாமி-?

அவளுடைய விம்மல் கூட ஒரு நாளைக்கு நின்றுவிடவே போகிறது. ஆனால் இப்போது உணர்ச்சி உடல் யாவுமே ஓய்ந்து குழைந்து கிடந்தாள். வாய்விட்டு ஓலமிட, அலறித் துக்கத் தைக் குறைக்க அவளுக்குத் திராணி இல்லை.

தலைமைமாட்டிலே குத்துவிளக்கு மெதுவாக எரிந்து கொண்டிருந்தது. சதிரக்கூட் டத்தின்போது எழும்ப வேண்டும் என்பதற்காகக் கோயில் வடக்கு வீதியிலே போய்த் துண்டை விரித்து தூங்குபவர்போல பலர் மாமாவைச் சுற்றி, பிரேதத்தைச் சுற்றித், தூங்கிக் கொண்டிருந்தனர். விடியுமுன்பே அவர்கள் மற்ற வேலைகளைப் பார்க்க வேண்டும். பிறகு - ? மாமாவைப் பற்றிய நினைவு அவர்களுக்குக் கனவாகிவிடும்.

மாமிக்கு -

அது கனவா?

அந்த ஒரு வருட வாழ்விலே, அவளின் எதிர்காலத்திட்டங்களின் சட்டமாக இருந்த அவர், அவளது இருதயத்தின் பார்வையிலே முழுக்க முழுக்க உண்மையாக இருந்த மாமா, அன்றுவரை சிரஞ்சீவியாக இருந்த மாமியின் புருஷன், இப்பொழுது பேச்சு மூச்சற்று, வெள்ளைத் துணியினுள்ளே அடங்கிக் கிடக்கின்றார்.

அது கனவல்ல. அப்படியானால் அது உண்மையா?

குத்துவிளக்கிலிருந்து ஒரு சுடர் தெறித்து எரிந்து கொண்டே கீழே விழுந்தது. மாமிகூட மெதுவாக நிமிர்ந்து மேலே சுற்றிவரப் பார்த்தாள். அவள் கண்களில் தேங்கியிருந்த ஏக்கத்தைக்காண என்னாற் சகிக்க முடியவில்லை. நான் வேறு திசையில் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

நானும் விழித்துக்கொண்டு அவளை, அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்று அவள் அறியக்கூடாது. அறிந்தால் - ?

அது பழைய ஞாபகக் குவியலைக் கிண்டிக்கிளறிச் சிறிதளவாவது அணைகட்டப்பட்டி ருக்கிற சோக வெள்ளத்தை, மடைதிறந்ததுபோல ஆக்கிவிடும்.

இதேபோதன்ற ஒரு இரவில் நான் தூங்கவில்லை. மாமியும் விழித்திருக்கிறாள் : மாமா சும்மா படுத்திருக்கிறார். இந்த ஞாபகக்குவியலைக் கிளறினால், அது எந்த நினைவைக் கொண்டுவரும் என்று எனக்குத் தெரியும்.

அது ....

என் வாழ்க்கையின் நினைவு தெரிந்த பருவத்தில் இருந்து அரம்பிக்கிறது.

அப்போது எனக்குத் தாய் இல்லை என்று நினைத்து நான் திடுக்கிடவில்லை. அந்தக் குறையை மாமி நிவர்த்தி செய்திருந்தாள். என்னை ஏமாற்றிக் காக்கா காட்டி உணவூட்டக் கதைகள் சொல்லி உறங்க வைக்க அவளுக்குத்தான் தெரிந்திருந்தது. அவளுடைய, இடையை அணைத்துக் கொண்டு தூங்காவிட்டால் எனக்குத் தூக்கமும் வராது.

மாமி அப்போது கன்னிப் பெண். அவள் விவாகம் செய்துகொண்டு புருஷன் வீட்டிற்குப் போனால் பிறகு என்ன செய்வாய்?" என்று என்னைப் பலர் கேலி செய்வார்கள்.

நான் மாமியைப் பார்ப்பேன். "அவள் அணைத்துக்கொள்வாள். அந்த அணைப்பிலே, நான் கேள்விக்கு விடை காண வேண்டும் என்பதை மறந்து விடுவேன் என்றாலும் மாமியின் கலியாண நாளை ஒரு பயங்கர நாளாகவே எதிர்பார்த்தேன்.

அந்த நாளும் வந்தது. மாமியைப் பெண் பார்க்க வந்தவர்கள் திருப்தியுடன் போனார் கள். அன்று நிலவிலே உணவூட்ட அழைத்துச் சென்ற மாமி "அவரைப் பார்த்தாயா?" என்று கேட்டாள்.

"பார்த்தேன் மாமி நல்லவர் போல இருக்கிறார்" என்றேன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் கழித்து "நல்லவர் என்று உனக்கு எப்படியடா தெரியும்" என்று கேட்டாள்.

"குடுமி வைத்திருக்கிறார் : மீசை இல்லை" என்றேன்.

அவளுடைய முகபாவத்தைக்கொண்டு, அவளுடைய உணர்ச்சிகளை அளந்தறிய எனக்கு விவேகம் போதாமல் இருந்திருக்கலாம். அல்லது நிலவிலே அவள் முகம் மறைந் திருக்க வேண்டும். மறந்து விட்டேன். இப்போது ஞாபகமில்லை.

கலியாணத்துக்கு நாள் குறித்தார்கள். விவாகம் சிறப்பாக நடந்தேறியது. அன்றே மாமா வின் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். நானும் போனேன். அங்கே புதுஇடத்தைப் பார்ப்பதில் பொழுது கழிந்து, இரவு வந்தது. நேரத்தோடு மாமி எனக்கு உணவூட்டி என்னைத் தூங்க வைத்தாள். அவள் அரவணைப்பிலே மெய்மறந்து தூங்கினேன்.

நடுநிசி, ஏதோ கனவு கண்டு விழித்தேன். எங்கும் இருள். பக்கத்திலே என்னுடைய அணைப்பிலே அகப்பட்டுக் கிடந்தது தலையணையா? கைக்கு எட்டிய தூரம் வரை தடவிப் பார்த்தேன். வெறும்பாய், தரை, அப்பால் யாரோ படுத்திருந்தார்கள். மாமியினுடைய "ஸ்பரிசம்" எனக்குத் தெரியும். அது யாரோ அவள் - மாமி - அங்கு இல்லை.

அழுகை ஆரம்பித்தது. விம்மிக்கொண்டே சிறிது நேரம் காத்திருந்தேன் வெளியே போய் இருந்தால் வரட்டும் என்ற யோசனையில் அவள் வரவில்லை...!

மாமீ....... என்று கூப்பிட்டுக் கொண்டே வெளியே பார்த்தேன். ஆகாயம் வழக்கமில்லாத புதிய இடத்தில் தெரிந்தது. புதிய மால்கள். புதிய வீடு, புதிய புதிய

எல்லாம் வெளிச்சமாகி விட்டது. அவள் வேண்டுமென்றே என்னை ஏமாற்றி இருக்கி றாள். அழுகையின் ஸ்தாயி மாறிற்று. சப்தம் பலத்துக் கொள்ளவே பக்கத்து அறைக் கதவிலே திறப்பின் சப்தம் கேட்டது.

"திறக்க வேண்டாம்" என்று யாரோ கூறியது - அழுகையின் இடையிலே மெதுவாகக் கேட்கவே, ஆத்திரத்தோடு கத்தினேன். மாமீ... மாமி...... மாம்

விளக்கொளி வந்தது. எல்லோரும் வந்தார்கள். ஆனால் எல்லாம் புதிய முகங்கள். அவர்களுக்குள்ளே மாமியைக் காணவில்லை. பல்லவியிலாரம்பித்த அழுகை அனுபல் லவியிலேறிற்று.

"மாமி எங்கே? மாமியைக் கொண்டு வா" என்று கத்தினேன். மாமி வந்தபிறகே அழுகை ஓய்ந்தது. என்னை அலங்கார அறைக்குள்ளே கொண்டுபோய் தனக்கும் அவருக்கும் இடையே என்னை வளர்த்தினாள். வெற்றி அடைந்த பெருமிதத்தில் எப்போது தூங்கினேன். என்று தெரியாமல் தூங்கினேன்.

அடுத்த நாளைப் பற்றிய குறிப்பு என்னுடைய நினைவுப் புத்தகத்திலே பதியப்படவில்லை. அன்று அவர்களுடைய முதல் சம்பாஷணை என்னைப் பற்றியதாகத்தான் இருந்திருக்கும்?

இன்று மாமி ஒப்பாரி வைத்துக் கதறி உலகறியச் சம்பாஷிக்கிறாள். கேட்பதற்கு அவர் .... இல்லை.

ஈழகேசரி
16.10.1949

அழகு சுப்பிரமணியம்

அழகு சுப்பிரமணியம். - ஈழம் பெற்ற ஆங்கில இலக்கிய கர்த்தா, இவனின் சேதுப்பாட்டி என்ற இச்சிறுகதை இராஜ அரியரெத்தினத்தால் மொழிபெயர்க் கப்பட்டு ஈழகேசரியில் வெளிவந்துள்ளது. ஆங்கில மூலமாயினும் அழகு சுப்பிர மணியத்தின் பார்வையும் பரிவும் யாழ்ப்பாண மண்ணில் நிலைபெற்றிருப்பதைக் காணலாம். இவரது கணிதவியலாளன் என்ற சிறுகதை - உலக இலக்கியத்தின் உன்னத சிறுகதைகள் என்ற தொகுப்பில் இடம்பிடித்திருக்கிறது. சட்டத் துறையில் பாரிஸ்டர். The big girl. Closing Time and other Stories என்பன இவரது சிறுகதைத் தொகுதிகளாகும். ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகளி லும் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

❖ சேதுப்பாட்டி

சேதுப்பாட்டி

அழகு சுப்பிரமணியம்

யாழ்ப்பாணத்தில் மழை ஒழுங்காகப் பெய்வதில்லை. இந்த வரண்ட நிலத்திற் பயிர்பச்சை அதிகமாக இல்லாதிருந்தாலும் குடிசனத்துக்குக் குறைவில்லை. யாழ்ப்பாணத்தவர்கள் எல்லோருமே சுறுசுறுப்பானவர்கள். அதிலும் கமக்காரர்கள் கருமமே கண்ணானவர்கள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்து தோட்டந் துரவுகளுக்குப் போய்விடுவார்கள். போகும்போது மத்தியானம் சாப்பிடுவதற்காகச் சோறும் ஒரு குழம்பும் சேர்த்துப் பொட்டணத்திற்கொண்டு போவார்கள். வாய்க்கால் கட்டித் தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்த பின்னர் விழுந்து கிடக்கும் தேங்காய், மட்டை, என்பனவற்றைப் பொறுக்கி ஓர் இடத்திற் குவிப்பார்கள்.இப்படிப் பிரயாசப்பட்டு உழைத்து வானம் பார்த்த பூமியை வளம் செறிந்த நிலமாக்குவதில் அவர்கள் நிகரற்றவர்கள். ஆழமான கிணற்றிலிருந்து தினமும் நீர் அள்ளுவதென்றால் அதைப்போற் பரம சங்கடமான விஷயம் வேறொன்றுமில்லை.

ஆனால், ஒரு சனிக்கிழமை பெருமழை பெய்தது. அதிகாலையில் ஆரம்பித்த மழை அரை நிமிஷந்தானும் ஓயவில்லை.

எனது தகப்பனார் புறுபுறுத்துக் கொண்டேயிருந்தார். சனிக்கிழமைகளில் அவர் நீதிஸ்தலத்துக்குப் போவதில்லையென்றாலும் அன்றுதான் புரக்டர்மாரும் வழக்குக்காரரும் அவரிடம் வருவதுண்டு. இடி மின்னலுடன் புயலும் சேரவே மழை மிக உக்கிரமாகப் பொழிந்து கொட்டியது. அன்று ஒருவரும் அந்தப்பக்கம் தலைகாட்டதபடியால் அடுத்த கிழமை அவருக்கு வரும்படி குறைவென்பது அர்த்தமாகிவிட்டது.

சனிக்கிழமை எனக்கு என்றுமே ஒரு திருநாளாகவேயிருந்தது. அந்நாளை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அன்று பெய்த மழை எனது வேலைகளையும் தடைசெய்து விட்டது. எனது தாயாரோ என்னைப் படியிற்றானும் இறங்கவிடவில்லை. கம்ப ளியால் என்னை என்னை மூடிக்காலுக்கும் கால் "மேஸ்" போட்டு என்னை அறைக்குள் இருத்திவிட்டார். தலையிலே ஒரு கம்பளித் தொப்பியையும் அணியும்படி கட்டளை வைப்பார். எனக்கோ ஒரே தவிப்பாகத்தான் இருந்தது. மழை எப்போது விடும். நண்பர்களுடன் சேர்ந்து வண்ணாத்துப்பூச்சி பிடிக்கலாம் என்று எனது மனம் அலைபாய்ந்தது.

எங்களது வீட்டிலிருந்து சொற்ப தூரத்துக்கப்பால் சேதுப்பாட்டி அம்மாள் வசித்து வந் தாள். சின்னஞ்சிறு பலசரக்குக் கடைதான். அவளுக்கு உயிரான கணவன் இறந்துபோகவே மூன்று குழந்தைகளையும் அவளே பார்க்க வேண்டியிருந்தது. இவர்கள் அனைவரும் ஒரு சிறுகுடிசையிற்றான் வசித்து வந்தனர். அதிகாலையிலிருந்து நடுநிசி வரையும் சேது அம்மாள் மாடு போல வேலை செய்வாள். இவள் வாட்டசாட்டமாக இருந்தாலும் உடை குப்பைத்தனமாக வேயிருந்தது. தலைமயிரை அள்ளிச் சொருகியிருந்தாள். எந்தநேரம் பார்த்தாலும் தனது வருத்தங்களைப் பற்றிப் புறுபுறுத்துக்கொண்டேயிருப்பாள். சில வேளைகளில் வாடிக்கை காரர் மீது எரிந்து புகைவாள். பக்கத்து வீட்டுக்காரர் மீதும் துள்ளிப் பாய்வாள்.

சேதுலட்சுமி அம்மாளின் தோசைக்கு எங்கள் பக்கத்தில் நல்ல மதிப்பு எனவே "பலார்" பற்றி விடியுமுன்னர் சேதுஅம்மாள் வீட்டைச்சுற்றி ஒரு கூட்டம் கூடிவிடும். தோசை வாங்கு வதற்காகக் குழந்தை குஞ்சுகள் தொட்டுப் பல்லு வீழ்ந்த கிழவர்கள் வரை பெட்டியும் கையு மாக நிற்பார்கள். அந்தச் சிறு குடிசைக்குள் அத்தனைபேரும் எப்படி இருக்க முடியும்.?" குடிசை யின் ஒரு பகுதியில் வியாபாரம் நடைபெற்றது. இப்பகுதி தெருவைப் பார்த்து நின்றது. மற்றப்பகு தியிற் சேது அம்மாளும் பிள்ளைகளும் படுத்து உறங்கினர். இரண்டு சதத்துக்குச் சீனி, மூன்று சதத்துக்கு எண்ணெய் இப்படித்தான் சேதுலட்சுமி அம்மாளுக்கு வியாபாரம்.

வண்ணாத்திப்பூச்சிகளைத் துரத்திவிட்டு வெயர்வைத்துளி முதுகிலே மணி மணி யாகச் சிந்துகின்ற கோலத்தில் நாங்கள் அடித்து விழுந்து கொண்டு சேது அம்மாளின் கடைக் குள் புகுவோம். களையைத் தீர்த்துக் கொள்வதுடன் தோசையையும் பதம் பார்த்துக் கொள்ள லாமல்லவா? எங்களிடம் சில சமயங்களில் இரண்டு மூன்று சதம் இருந்தால் அதை அப்படியே சேதுவின் கைக்குள் வைத்து விடுவோம். அவள் வேறு ஆட்களுடன் பேசிக்கொண்டு வியா பாரம் நடத்தும் வேளைகளில் நாங்கள் சேதுவின் தோசைகளை அங்குமிங்கும் கிள்ளி வாயிற் போட்டுக் கொள்ளுவோம். தற்செயலாக நாங்கள் செய்யும் துடியாட்டத்தை அவள் கண்டு விட்டால் எங்களை அந்தப்பக்கம் அடி வைக்கக்கூடாதெனச் சத்தம் போட்டு வெருட்டுவாள்.

நானும் எனது நண்பனும் சேதுவைச் சரியாகப் பரிகாசம் செய்து வந்தோம். இராக்காலத்திற் கிழவி பழங்காலத்துப் போத்தல் விளக்கை ஏற்றுவாள். நான் கடைக்குப் பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கையில் எனது நண்பன் மெதுவாகத் தவழ்ந்துபோய்க்

கிழவியின் கடையில் எரியும் விளக்கை அணைத்து விடுவான். கிழவி எங்களைப் பார்த்துத் திட்டமுன்னர் நாங்கள் அப்பால் ஓடி மறைந்து கொள்வோம்.

இத்தனைக்கும் சேது இரக்கம் நிறைந்தவள். பிறருக்கு உதவி செய்யப்பின்னிற்பதில்லை. வறியவர்களே அவளுடைய கடைக்குப் போய்வருவதுண்டு இவர்களில் அநேகருக்குச் சேது கடன் கொடுப்பதுமுண்டு.

"நான் ஒரு பேச்சி! வெறும் மடைச்சி! இருந்தாலும் வேறு என்ன செய்ய முடியும். குழந்தைப்பிள்ளை ஒன்று தோசைக்கு வந்தால் நான் எப்படி இல்லையென்று சொல்லுவேன். என்னுடைய பிள்ளை குட்டிகளையும் நான் தானே பார்க்க வேண்டும். என்றாலும் மற்றப் பிள்ளைகள் பசியால் வாடுவதை நான் எப்படிச் சகிப்பேன். என்னுடைய பாடு அப்படியும் இப்படியுமாகிவிட்டது. மல்லி உள்ளி வாங்கத்தானும் கையிலே துட்டுக் காசுமில்லையே" சேதுக்கிழவி குடிசைக்குள் நின்றுகொண்டு புலம்பினாள்.

சேதுவைப் போய்ப்பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னைப் பிடர்பிடித்து உந்தியது. ஆனால் மழையோ விட்டபாடாயில்லை. எனது தாயார் தேநீருடன் அறைக்குள் வந்தார். தேநீர் என்று அதைச்சொல்ல முடியாது. ஏனெனில் அதிகமான பாலே அதிற் கலக்கப்பட்டிருந்தது. தேநீரைக் குடிக்கும் போது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. மழையானது எனது விளையாட்டையும் குழப்பிவிட்டதே என்று நினைத்து அழ ஆரம்பித்தேன். வண்ணாத்திப்பூச்சி பிடிப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அதற்கும் மழை தீவினை தேடிவிட்டதே.

அன்று முழுவதும் மழை பொழிந்து கொண்டேயிருந்தது. சூரியன் இருண்ட மரங்களுக்கூடாக எட்டியேனும் பார்க்க முடியவில்லை. அவ்வளவு மப்பு மந்தாரம். இருட்டுக்கட்டும் நேரமாகி விட்டது. வீட்டின் பின்பக்கத்து விறாந்தையுடன் வெள்ளம் மருவிக்கொண்டு நின்றது.

எனக்குத் தூக்கம் ஒரு பக்கம். பயம் மறுபக்கம். மனவேதனை தாங்கமுடியாதவனாய்ப் படுக்கைக்குப் போய் விட்டேன். கூனிக் குறுகிக் கொண்டு நல்லாகப் படுத்து தூங்கினேன். காலையில் அவசர அவசரமாக எழுந்த போதும் மழை பெய்து கொண்டேயிருந்தது.

எங்கும் ஒரே வெள்ளம். சில இடங்களில் நாலு அடிக்கு வெள்ளம் மேவி நின்றது. பெருகிவரும் வெள்ளத்தைக் கண்டு ஒருவரும் வெளியே போக எத்தனிக்கவில்லை.

நான் சாளரத்தின் ஊடாகப் பார்த்தேன். அதிக தூரத்தில் செத்த ஒரு நாயும் நாலைந்து கோழிகளும் மிதந்து சென்றன. இரவு அடித்த புயலுக்கு எத்தனையோ வீடுகளும் உயிர்களும் இரையாகிவிட்டன. அக்கம் பக்கத்தில் இருந்தவர்களில் அநேகர் எங்கள் வீட்டிற்கு வந்தனர். அடுத்த வீட்டிலிருந்தவர்களுக்கு எங்கள் அறைகளில் இடம் கொடுத்தோம். கட்டாடிமாரும், நாவிதரும், தச்ச வேலை செய்பவரும் எங்கள் வீடுதான் தஞ்சமென வந்தடைந்தனர். அவர்களுக்கும் ஏற்ற இடங்களைக் காட்டினோம். அவர்களுடன் கூடவே அவர்கள் வளர்த்த நாய், பூனை, கோழி போன்ற பிராணிகளும் வந்து சேர்ந்தன.

இவ்வளவு சந்தடிக்குள்ளும் எல்லோரும் சேதுலட்சுமி அம்மாளை மறந்து விட்டனர். சேதுவின் தோசையைத் தின்று உடம்பெடுத்தவர்கள் கூட அவளின் உதவிக்குச் செல்ல

வில்லை. நான் அம்மாவிடம் ஓடோடியும் சென்று சேதுவைக் கூட்டிக்கொண்டு வருவதற்கு யாரேனும் ஒருவரை அனுப்பும்படி வேண்டினேன்.

"மகனே, இந்த அடைமழைக்குள் நான் யாரைப் போகும்படி கேட்கலாம். புயலோ உக்கிரமாக அடிக்கின்றது. நான் என்ன செய்யமுடியும்? சேதுவின் பிள்ளைகளில் வளர்ந்த வர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் தாய்க்கு உதவி செய்வார்கள் தானே. நீ பயப்படாதே" என்று பரிவாகப் பேசினார் எனது தாயார்.

"அதுசரி அம்மா : சேதுவின் பிள்ளைகள் வீட்டிலே இல்லை. அவர்கள் வேறு வீடுகளில் வேலைக்கு நிற்கிறார்கள்."

"மகனே, நான் சொல்வதைக்கேள் : சும்மா சிணுங்காதே. ஒருவரையும் இப்போது சேதுவின் இடத்துக்கு அனுப்ப முடியாது." என்று சொல்லிக் கொண்டே சரிந்து கிடந்த எனது கம்பளித் தொப்பியைச் சரிப்படுத்தினார்.

ஆனால் மழை தொடர்ந்து பெய்து கொண்டேயிருந்தது. மூன்றாம் நாள் பெரும் புயல் ஒன்று சீறி எழுந்து பட்டினம் முழுவதையும் ஒருகை பார்த்துவிட்டது. மணித்தியாலக் கணக் கில் நின்று நர்த்தனம் புரிந்த அந்தப் புயல் எத்தனையோ நாசங்களை விளைத்து விட்டது. கடலின் இரைச்சலும், மழையின் குமுறலும், காற்றின் வேகமும் ஒன்று சேர்ந்து மிகுந்த பயங் கரத்தை உண்டாக்கின. தென்னைமரங்கள் ஓலைகளுடன் சூழலும்போது எனது குடலே கலக்கமெடுத்தது. மழை சிறிது ஓயும் போதெல்லாம் புயலின் உக்கிரமும் குறைந்து கொண்டே போனது. ஆனால் மறுகணம் மேகங்கள் ஒன்று திரண்டு அலறிப் புடைத்துக் கொண்டு சோனாவாரியாக மழையைக் கொட்டியது. எங்கும் பயம் குடிகொண்டது. சலப்பிரளயம் வந்து உலகத்தையே அழிக்கப்போகின்றதாம் எனப் பலர் பேசிக்கொண்டனர்.

எனக்கோ அன்றிரவு அதிக நேரமாக நித்திரை வரவில்லை. அம்மாவின் அரு கணைந்து அவருடன் படுத்துறங்கினேன். அம்மா இடைக்கிடையே எழுந்து ஒழுக்குக்கென வைத்த வாளியை எடுத்துத் தண்ணீரை அப்புறப்படுத்துவாள். பின்னர் என்னுடன் வந்து படுத்துக்கொள்வார்" கண்ணே பயப்படாதே. மழை இப்போது குறைந்துவிட்டது." என்று சொல்லிக் கொண்டே என்னைப் படுத்துறங்கும்படி இதமாகச் சொல்லுவார்.

அடுத்தநாட் காலை நான் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தபோது மழை நின்று விட்டது. எங்கும் ஒரே குதூகலம். மப்பு மந்தாரமாக இருந்தபோதும் மழை பெய்யவில்லை. ஆனால் ஒருவரும் வீட்டை விட்டு வெளியே போக விரும்பவில்லை. இதற்கிடையில் வெள்ளத் தால் நேர்ந்த விபத்துக்களைப் பார்க்கவும் அள்ளுப்பட்ட மதகுகளைத் திருத்துவதற்காகவும் ஓவசியர்மாரும், வேலையாட்களும் அங்குமிங்குமாக வீதிகளிற் கூடி நின்றனர். பொலீஸ் காரரும் வீதிகளைச் சுற்றிப் பார்த்தனர். பட்டின வாழ்க்கை மீண்டும் பக்குவமடைந்து வரலா யிற்று. வழக்கம்போலவே காலை ஒன்பது மணிக்கு நான் புத்தகப் பையுடன் பள்ளிக் கூடத்திற்குச் சென்றேன். அந்தப் பைக்குள் எனக்காக அம்மா செய்து வைத்த கணக்குகளும் பத்திரமாக ஊறிக்கிடந்தன. என்னுடன் எனது நண்பனும் பள்ளிக்கூடத்திற்கு வந்தான். அன்று நாங்கள் தினமும் சந்திக்கும் சேதுப்பாட்டியைக் காணவில்லை. பேரீச்சம்பழம்போற் காய்ந்து சுருங்கிய அவளுடைய முகத்தைக் காணும் போதெல்லாம் எங்கள் உள்ளம் பூரிப்பது

வழக்கம். "சேதுப்பாட்டி சேதுப்பாட்டி எப்படி சுகம். தோசை இருக்கிறதா" என்று அவளை பரிகாசமாகக் கேட்போம். அன்று அந்த பழகிய முகத்தைக் காணவில்லை.

சின்னஞ்சிறு கடையிருந்த அந்த இடத்தில் ஜனங்கள் கூடி நின்று ஒருவரோடு ஒருவர் குசுகுசுத்தனர். நாங்கள் அவர்களிடம் சென்று சேதுவைப் பற்றி விசாரித்தோம். சிலர் எங்களைத் திரும்பித்தானும் பார்க்க மறுத்தனர். வேறு சிலர், "குழந்தைப் பொடியலுக்கு இந்த இடத்தில் என்ன அலுவல் பள்ளிக்கூடத்திற்கு நேரமாகிவிட்டது ஓடுங்கள்" என்று உரப்பினர்.

அன்று தொடக்கம் நாங்கள் அந்தப் பக்கத்தாற் போகும் போதெல்லாம் சேதுப்பாட்டியின் கடைப்பக்கம் திரும்பிப் பார்ப்போம். ஆனால் சேதுலட்சுமி அம்மாள் அங்கு தென்படவில்லை. பாட்டியுடன் பரிகசித்துப் பேசுவது நின்றது போலவே, கிழவியின் தோசைச் சாப்பாடும் நின்றுவிட்டது.

ஈழகேசரி
17.07.1949

சானா

செ. சண்முகநாதன் என்ற சானா - ஈழகேசரியில், மூன்று - சிறுகதைகளை எழுதியுள்ள போதிலும் அவரை ஒரு நாடக ஆசிரியராகவும் நடைச்சித்திரங்களைத் திறனோடு படைக்கும். படைப்பாளியாகவும் தமிழுலகம் அறியும். இவர் ஓவியர், நாடக ஆசிரியர், நடிகர், இயக்குநர், இலங்கை வானொலியின் தமிழ் நாடகப் பகுதிப் பணிப்பாளர் எனப் பல நிலைகளில் விளங்கியுள்ளார். யாழ்ப்பாண மக்களை வகை மாதிரியாக வைத்துப் பல நடைச்சித்திரங்களை எழுதியுள்ளார். "பரியாரி பரமர்" இவரது நடைச்சித்திர நூல். இவர் இயக்கிய "லண்டன் கந்தையா 230 தடவை மேடை ஏறியுள்ளது. இவர் தெல்லிப்பழையில் பிறந்தவர். கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடக மாணவரான இவர் அமரர் ஆகிவிட்டார்.

- நாட்டியப் பெண்
- பூசாரிப் பூதர்

நாட்டியப் பெண்

சானா

மத்தியான நேரத்தில், நாடகசாலையில் பின்பக்கமாயுள்ள ஒத்தி கையறை ஜனசந்தடியில்லாமல் வனாந்தரமாகவேயிருந்தது. "சோம நாத்" நடனக்கோஷ்டியைச் சேர்ந்த நடிகர்களும் நடிகைகளும் பெரும் பாலும் மத்தியான போஜனத்திற்கே போயிருக்கவேண்டும். இரண்டு மூன்று வேலையாட்கள் மாத்திரம் அங்குமிங்கும் உட்கார்ந்த வண்ணம், அன்றிரவு நடக்கப்போகும் நடனத்திற்குத் தேவையான உடுப்புகள் திரை, ஜோடிப்பு முதலியவற்றைப்பற்றி திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார்கள். மூலையில் ஓர் இளம் நங்கை தனது ஜரிகைப் பாவாடையொன்றிற்கு மணி சேர்த்துத் தைத்துக் கொண்டிருந்தாள்.

நடு அறையில் ஐம்பது அல்லது ஐம்பத்திரண்டு வயது என்று - மதிக்கத்தக்க பெண் ஒருவள் சாயுங் கதிரையில் சாய்ந்துகொண்டு ஏதோ வாசித்துக்கொண்டிருந்தாள். காலடிச் சத்தங் கேட்டதும் புத்த கத்தை மடிமேல் வைத்துவிட்டு, நிமிர்ந்து, தனது மூக்குக் கண்ணாடிக் கூடாக உற்று நோக்கியதும், யாரோ ஒரு வாலிபன், அழகிய வாலிபன், சுந்தரரூபன், அங்கவஸ்திரம் அணிந்து, ஜரிகைக்கெண்டைச் சால்வை

தோளில் பறக்க, கையில் பிரம்புடன் நிற்பதைக் கவனித்தாள். புன்னகையுடன் அவன் வரவழைக்கவே அவனும் அவளிடத்தில் வந்தான்.

"மன்னிக்கவேணும்" என்று சொல்லும் போது தடுமாறித் தனது பிரம்பைக் கீழே தவறவிட்டான்.

"அப்படி உட்காரும்" என்று அங்கிருந்த நாற்காலியைச் சுட்டிக் காட்டினாள் அந்தப் பெண்.

விழுந்த பிரம்பை கையில் எடுத்து, நாற்காலியில் உட்கார்ந்து "நாட்டியக்காரர்கள் எல்லோரும் எங்கே?" என்று வினவினான்.

"மத்தியான போஜனத்திற்குப் போயிருக்க வேண்டுமென்றே நினைக்கின்றேன். யாரையாவது அவசரமாகப் பார்க்கவேண்டுமோ?" என்று கேட்டேன்.

" இல்லை, இல்லை" என்று சொல்லும் பொழுது அவனது முகத்தில் ஓடிய இரத்தத்தைப் பார்த்த அப்பெண் அவன் பொய் புழுகுகிறானென்று தீர்மானித்துவிட்டாள்.

"உள்ளே வந்தது உமது அதிஷ்டம். எவ்வாறு வந்தீர்?" என்று அப்பெண் கேட்க, தனது சட்டைப் பையில் இருந்த ஓர் காகிதத்தை எடுத்து "உங்கள் தலைவர் சோமநாத் எனது மாமனின் ஓர் வேண்டிய நண்பன், சோமநாத்தே இக்கடிதத்தைத் தந்தார்" என்று அவளிடம் நீட்டினான். அவள் வாசித்ததும் அதில் "இதனால் வெங்கடேசனை அறிமுகப் படுத்துகிறேன் - சோமநாத் என்று எழுதியிருந்தது.

"அப்படியானால் நீர் மிகவும் அதிர்ஷ்ட சாலி. ஏனெனில் சோமநாத் ஒருவரையும் இங்கு விடுவதில்லை." என்றாள் அப்பெண்.

"ஆமாம், இங்கிருக்கும் நடன மாதர்கள் எல்லோரும், கன்னிகா மடத்திலிருக்கும் பெண்கள் போலவே சீவிக்கிறார்கள் என்று கேள்வியுற்றிருக்கிறேன் - ஆனால் கலாநிதியும் மற்றவர்கள் போலத்தானே இருக்கிறாள்" என்று தலையசைத்துக் கேட்டான்.

அவ்வண்ணம் கூறியதும், இந்த வாலிபன் கலாநிதியைப் பார்க்கத்தான் வந்திருப்பதாக அறிந்து "ஆம், அப்படித்தான் அவளும் இருக்கிறாள்" என்று ஆமோதித்தாள். மூலையிலிருந்த அப்பெண்ணைப் பார்த்து "மனோன்மணி! நீ தைக்கும் அந்தப் பாவாடையை இங்கே கொண்டுவா. இந்தக் காலத்துப் பெண்களுக்கு என்னதான் தெரியும். ஓடிப்போய் சாப்பிட்டு விட்டுவா" என்று சிரித்தபடியே அதட்டினாள். மனோன்மணியும் கிழவியின் மடியில் பாவா டையை, வைத்துவிட்டுக் கதவண்டையோடினாள்.

போனதும் வெங்கடேசன் "அம்மணி, தயை செய்து கலாநிதியைப் பற்றிக் கொஞ்சம் எனக்குக் கூறவேண்டும். ஒரு கிழமையாக. ஒவ்வொரு இரவும் இந்த நடனக் கச்சேரிக்கு வந்துகொண்டேயிருக்கிறேன்" என்று பரிதாபமாகக் கேட்டான்.

அவள் விடை கூறுவதற்கு முன், யாரோ ஒரு வேலையாள் வந்து "அம்மணீ! இரவு பத்து மணிக்கு என்ன போஜனம் வேண்டும்" என்று விசாரித்தான். அதற்கு அவள் "பாலும் பழமும் கொண்டுவா - ராமு, ஏதாவது பலகாரமுங் கொண்டுவா. இராத்திரி நான் நன்றாகச்

சாப்பிடவில்லை. உனக்குத் தெரியுந்தானே பல்லில்லை. இலேசாகக் கடிக்கக்கூடியது ஏதாவது - போ" என்றாள்.

வெங்கடேசன் பக்கந்திரும்பி "தம்பி ஒரு நடனப் பெண்ணைப் பற்றி, அவள் நடனத்தைப் பார்ப்பதல்லாமல், நீர் அறிய வேண்டியது வேறு என்ன இருக்கிறது. அவர்கள் தங்கள் உடல், பொருள், ஆவி இம்மூன்றையுந் தியாகஞ் செய்தே நடனமிடுகிறார்கள். கலா நிதியும் அப்படியே" என்று சிரித்தாள்.

"அப்படியல்ல. கலாநிதிக்கு நிகர் இக்கோஷ்டியில் ஒருவருமில்லை . அவள் முன் மற்ற வர்கள் எல்லோரும் கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி மாதிரி, ஏதோ உடம்பை அசைத்து நெளித்து ஆடப்பார்க்கிறார்கள். எவ்வளவு மெல்லியதாக வளைய வேண்டிய இடங்களெல்லாம் வளைந்து கொடுத்தபடியல்லவோ இருக்கிறது. அவள் அந்த மயூரா நடனம் ஆடும்பொழுது" என்று பெருமூச்செறிந்து வர்ணிப்பதற்கு சொற்கள் கிடையாமல் திணறி னான்.

பின்பு மெதுவாக எழுந்து இரகசியம் சொல்வதுபோல் "அவளுக்கு யாராவது காதலர்கள் இருக்கிறார்களோ? இருக்கத்தானே வேண்டும்" என்று மனவருத்தத்துடன் கேட்டான்.

"இவைகளெல்லாம் உமக்கேன்? நீரேதாவது பத்திரிகை நிருபரோ? கலாநிதிக்கு நாட்டியத்தைவிட வேறு வாழ்வே கிடையாது. நீர் பார்த்து மகிழ்ந்த நடனந்தான் அவள் வாழ்வு. வேறொன்றும் கிடையாது" என்றாள்.

"காதலர்கள். இல்லை!" என்று குளறிக்கொண்டே வெங்கடேசன் துள்ளிக் குதித்தான்.

"கலாநிதி, நாட்டியத்தின் மேற்தான் காதல் கொண்டிருக்கிறாள். ஆனால் அவளுக்கு சிநேகிதன் ஒருவர் தானுண்டு என்று சொன்னாள்.

"சிநேகிதன்!" என்று வெங்கடேசன் வியந்தான்.

"உம்மைப் பார்த்தால் வேஷ்டியின் நுனியைப் பிடித்த வேட்டைநாய் போலல்லவா இருக்கிறீர். அவள் சினேகிதன், உமது மாமனின் நண்பன். அதாவது எங்கள் தலைவர் சோமநாத் தான்" என்று சிரித்தாள்.

"அந்தக் கிழவனா?" என்று ஆவேசம் பொங்க எழுந்தான்.

"என்ன கிழவனா? அவருக்கென்ன ஐம்பத்தைந்திருக்கும்."

"ஆனால் கடவுளே! கலாநிதி ஒரு இளமங்கையல்லவா? அவளுக்கு என்ன, இருபது தானே இருக்கும். அவளுக்குச் சிநேகிதனாக தன் வயசினனாக ஒருவன் அல்லவா இருக்க வேண்டும்" என்று மிகவும் ஆண்மைத்தனத்தோடு சொன்னான்.

"அவளைப்பற்றிய குறிப்புகள் நீர் எங்கே தேடியெடுத்தீர்?" "சொல்லவா வேண்டும். பார்த்தால் தெரியாதோ? அவள் தேகத்தில் ஒவ்வொரு அங்கங்களும், மென்மையான கால் களும்" என்று வெட்கத்தோடு கூறி "நான் அவளை எப்படியாவது பார்க்க வேணும்" என்று கெஞ்சினான்.

அப்பெண் தனது தோள்களைச் சுளித்துக்கொண்டு "சரி, ஏதாவது செய்யலாமென்னு தான் பார்க்கிறேன். சோமநாத் எனக்கு மிகவும் வேண்டியவர். நான் அவருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அவர் செய்வாரென்றே நினைக்கிறேன். ஆனால் அவளை ஒருதரம் பார்த்த பின்பு நீர் இங்கு வருவது அவ்வளவு அழகல்ல. உமக்குத் தெரியுந்தானே, அவர்கள் வாழ்வு! உம்மையொத்த ஆடவர்கள் இங்கு வந்ததும், ஒருவேளை அவர்களை மயக்கி விடுவீர்களோ என்னமோ" என்று புன்னகை புரிந்தாள்.

அங்கிருந்த வேலையாட்களில் ஒருவனைக் கூப்பிட்டு கடதாசியும், மையும் . பேனை யும் வரவழைத்து, ஒரு கடிதம் எழுதி உறையில் போட்டொட்டி, வெங்கடேசனிடம் கொடுத்து "இதை சோமநாத்திடம் கொடுங்கள். ஒருவேளை கலாநிதியை ஒரு நிமிஷமாவது பார்க்க இது உதவும்." என்று கண்ணைச் சிமிட்டினாள்.

"மிகவும் நன்றி. ஒரு நிமிஷம் பார்த்தாலே போதும்" என்றான் .

"ஆம் அதற்குப்பின் இறந்தாலும் மோசமில்லை. போய்வாரும்" என்று விடைகூறி அனுப்பினாள்.

சோமநாத் வெங்கடேசன் கொடுத்த காகிதத்தை வாசித்ததன்பின் மடித்து கையில் வைத்துக்கொண்டு . "ஏதாவது உமக்குதவி புரியலாமென்றே எனக்குத் தோன்றுகிறது" என்று சிரித்தான்.

வெங்கடேசன் கொடுத்த கடிதம் "நண்பர் சோமநாத்! இப்பொழுது ஒரு மணித்தியால மாக என்னுடன் பிதற்றிக் கொண்டிருந்த இந்த இராஷத வாலிபன், கலாநிதியைப் பார்க்க வேண்டுமாம். நான் மயூரா நடனம் ஆடி முடிந்தபின் முகப் பூச்சுடனும், பொய்க்கூந்தலுடனும் வரும் பொழுது எனது மேசையருகிலிருக்கும் வெளிச்சமொன்றே போதும். நான் நடனமாடிக் களைத்திருப்பதால் பேசமுடியாதென்று சொல்லும். நான் அவனுக்கு வந்தனம் கூறியபின் சீக்கிரத்தில் வெளியே அழைத்துச் செல்லும். அல்லாவிடில், நான் ஞாபகமறதியில் என் மூக்குக் கண்ணாடியைப் போட்டு வந்திருப்பவர் யார் என்று அறிய விரும்பினாலும் விரும்புவேன். கலாநிதி" என்று இருந்தது.

ஈழகேசரி
16.02.1941

பூசாரி பூதர்

சானா

நாலடி உயரம். ஸ்தூல சரீரம், பொலிவு நிறைந்த முகம். ஆசாரி ஜாதி, ஐம்பத்திரண்டு வயது, மொட்டைத் தலை, மண்டையிலே ஒரு வடு பக்திசிரத்தை நிறைந்தவர். வாய் நிறையப் பாக்கையடக்கிக் கொண்டு, தனது சிறு வல்லுவத்தையவிழ்த்து வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவுகிறாரே, அவர் தான் கதிரவேலு பூதப்பிள்ளை. பாரம்பரியமான பரம்பரையில் பூசாரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஆகையால் எங்கள் ஊரில் பூசாரிப் பூதர் என்று சொல்லி வந்தனர்.

அழகான கறுப்பு நிறமாயிருந்த போதிலும் பூசாரிப் பூதர் நல்ல வைதிகக் குடும்பத்தைச் சார்ந்தவர் போற காணப்படுவார். ஒவ்வொன்றும் கால் அங்குலகணமுள்ள மூன்று திருநீற்றுப்பட்டைகள் நெற்றியில் துலங்கும். மையத்தில் ஒரு சந்தனப்பொட்டு இலங்கும். அதன் மத்தியில் ஒரு துளி குங்குமம் மினுங்கும். ஆடை ஆபரண அலங்காரம் புனிதமாகச் செய்து கொள்வார். தலைமுறை தலைமுறையாகப் பூசாரித் தொழிலே இவர் குடும்பத்தாருக்கு ஆதரவு அளித்து வந்தது. இதன் காரணம் தெரியாது. பூதர்பூசிக்கும் காளியம்மனுக்கு ஒருவேளை தெரிந்தாலும் தெரியலாம்.

ஆசாரிக் குடிகள் இருக்கும் கோடியிற் பூசாரி பூதர் ஓர் குடிசையில் வசித்து வந்தார். ஒரு சிறு தோட்டம் இவர் குடிசையைச் சுற்றி இருக்கிறது. அத்தோட்டத்திற்கு பூச்செடிகளும், மருந்துச் செடிகளும் உள. பூதருக்குப் பக்கத்துணையாக அவரது இரு மனைவிகளும் இளையாளின் பதினாறு வயதுப் பெண்குழந்தையும் இருந்து குடும்ப வேலைகளைக் கெட்டித்தனமாய் நடாத்தி வந்தார்கள்.

காத்திராப்பிரகாராமாகக் காளைகளுக்கு வரும் தீவிர நோய்களைச் சிகிச்சை செய்து வந்தனாற் பூசாரி பூதர் ஒரு சிறந்த கால்நடை வைத்தியர் என்று பிரசித்திபெற்று வந்தார். காளியம்மாளின் கருணைதான் இதுவென்று எங்களூரிற் பேசிக்கொள்வார் சிலர். குழந்தை வைத்தியமும் செய்வார். நிதானமான வைத்தியம் கைதேர்ந்த வைத்தியர் என்றே சொல்ல வேண்டும். "தாய், தந்தையர்களின் பாவங்களெல்லாம் குழந்தைகளின் தலையில் தான் விடியும்" என்ற நன்மொழியைக் கருதியோ என்னவோ, குழந்தைக்கு வருத்தம் வந்தால் தாய்க்குத்தான் மருந்து கொடுத்துவருவார்.

கத்திவெட்டு, புலிமுகச் சிலந்திக்கடி, உளுக்கு முதலிய நோய்களுக்கும் வைத்தியம் செய்யும் விதம் விநோதமானது. கையிற் கத்திவெட்டென்றால், மருந்தைக் காலிற்கட்டச் சொல்வார். கத்திவெட்டுக் காலக்கிரமத்தில் ஆறிவிடும். செய்யக்கூடிய சின்ன வைத்தியமெல்லாம் பூதர் கைக்குள்ளேயே அடக்கி நிற்கும். அம்பாளின் அகிலாண்ட அருள் இருக்கும்போது யார்தான் என்ன செய்யமுடியும்.

பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் கையும் பார்ப்பார். அதுவும் பூசாரி புதரின் சாஸ்திரம் என்றால் பெண்கள் பூராவும் நம்பிவிடுவார்கள். பொய்யைப் புராணமாக்கிப் புராணத்தைப் பொய்யாக்கும் பெரும் வல்லமை பூதருக்கே உரித்தாயது. கல்யாண விஷயங்களிலும், இடையிடையே தலையிடுவார். பஞ்சாங்கம் பார்த்து நாட்குறிப்பதிற் பழுத்த அனுபவம் வாய்ந்தவர் என்றால் எங்களூராரும் சும்மா விடுவார்களா?

காளிகோயிற் காலைப்பூசை முடிந்ததும் ஒழுங்கை வழியாகப் பூதர் சமஸ்கிருத சுலோகம் சொல்லிக்கொண்டே வருவார்போற் காணப்படுவார். நாங்கள் அவரைத் தொடர்ந்து சென்றால் சுலோக உச்சரிப்பை நிறுத்திவிடுவார். அவருக்கு சமஸ்கிருதம் தெரிந்தாற்றானே! வாலிபராகி எங்களுக்கும் தெரிந்தாற்றானே! எங்களுக்கும் பூதருக்கும் ஒன்றிலும் ஒத்து வராததற்குங் காரணங்கள் வேறும் பல உள. இதனால் எங்களைக் "காவாலிப் பொடி யன்கள்" என்றே அழைத்து வந்தார்.

பூதருடைய குடிசைக்கருகாமையில் அனாதிகாலம் தொட்டு எழுந்தருளியிருக்கும் காளியம்மன், ஒரு சிறு கோயிலைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டாள். கோயிற் கதவு தாளிடப்பட்டிருக்கும். கெஞ்சும் பார்வையுடன் வருவார் பூதர். கதவைத்திறப்பார். அண்டையிற் கிணறு அதிலிருந்து அம்மனுக்கு ஒரு வாளி நீரபிஷேகம். அதன் பின் அன்னாபிஷேகம். (இதைப் பூதர் வீட்டிலிருந்து ஒரு தூக்குச் சட்டியில் எடுத்து வருவார்) இதன்பின் தான் திவ்ய பூசை. இப் பூசைக்குக் கிராமமாய்த் தினம் சென்று வருவார் பூசாரி பூதர் ஒருவரேதான்.

கோயிலின் தர்மகர்த்தா வேலையும் நேசிக்கும் சேவையும் பூதரின் திருக்குடும்பத்தைவிட்டு இதுநாளும் வெளியே சென்றதில்லையென்று பெருமையாகச் சொல்வர்.

அக்காலத்திற் பெருமைக்குக் குறைச்சல் ஏது? ஒரு வருஷத்தில் இரு திருநாள் ஒரு மடை, ஒரு உற்சவம், மடை என்பது வடை முறுக்குப் போன்ற பலகாரவகை பரவிக்கொண்டாடும் ஒரு வகைப் பூசையைக் குறிக்கும், உற்சவம் என்பது அம்மன் பவனி வருதல். இந் திருநாட் களுக்கு ஊரார் சேர்ந்து வரத் தவறமாட்டார்கள்.

பொழுது விடியுமுன் பறைகேட்கும், கோயிலடியில் தீபாலங்காரங்கள் தெரியும். கோயில் மடைகாலங்களில் நாதஸ்வரம் அளவெட்டிப் பொன்னரும் வந்திருப்பார். ஒரு ஆவர்த்தனம் பறைமேளம் முடிந்தபின், பொன்னர் தன் குழலை எடுத்தூதுவர். (இங்கு ஒரு ஆவர்த் தனமென்பது சுமார் ஒருமணி நேரத்தைக் குறிக்கும்)

சோடாக்கடைச் சோமர் ஒரு மேசை வைத்துச் சர்பத் விற்பார். கடலைக் கார வள்ளி யம்மை பக்கத்திலிருந்து கடலை விற்பாள். இரு வியாபாரிகளுமே அன்றைய வியாபாரத்தைச் சேமிக்கச் செய்வர். சீனவெடி தொடக்கம், எறி வெடிவரையும் பூசைக்கு முன், பூசைக்காலத்தில் மத்தாப்பு, விறீசு, அடக்கவறீசு முதலியவைகள், பூசை முடிந்ததும் பொங்கல், வடை, முறுக்கு முதலியவற்றை மடை பரவுவார்கள்.

இந்நேரத்தில்தான் பூசாரி பூசருக்கு உருவேறும்

காதலாகிக்
கசிந்துகண் ணிர்மல்கி
ஓதுவார் தம்மை
நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு
மெய்ப் பொரு ளாவது
நாதநாத
மச்சி வாயவே.

என்று தமது சொந்தப் "பிடி"யில் கௌசிக இராகத்திற் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி, அம்மாளே என்று அபிநயம் பிடிக்கத் தொடங்குவார். ஆட்டம் ஆடுவார். மணிப்புரி, கதக்களி முதலிய அன்னிய தேச ஆட்டங்கள் எல்லாவற்றையும் கலந்தாடுவர். "பொடியங்கள் தொந்த ரவு பொறுக்கமாட்டேன். சோதனையில் அவர்கள் தேறவேண்டுமா. அதற்காக கற்பூரம் கொழுத்துகிறார்கள். தேங்காயுடைக்கிறார்கள். என்னுண்டியலில் மாதாந்திரம் ஒரு" சத மேனும் போடமாட்டார்கள்." என்று அம்மன் அவர் மூலமாகச் சொல்வாள். அப்பொழுது ஊரெல்லாம் "இல்லை. இன்று தொடக்கம் உண்டியலிற் போடுவோம்." என்று கூறுவார்கள். வேர்த்தொழுக பூசாரி பூதர் கீழே விழுவார். விசுக்கிறவர்கள் ஒருபுறம் தண்ணீர் தெளிக் கிறவர்கள். மற்றப்புறம் இந்த ஆரவாரத்தில் ஐந்து நிமிடம் வரையில் ஓய்ந்து எழும்பிச் சிரிப்பார் பூதர். பூதர் சிரிக்க நாம் சும்மா இருப்போமா. நாமும் சிரிப்போம்.

சுகத்தைப் பார்த்து சந்தோஷம் அடைவது மனித இயற்கை. சந்தோஷமடைந்தாற் சிரிப்பதுவும் மனித இயற்கை. சுகமாய் இருந்து, சந்தோஷமடைகிறவரைப் பார்த்துச் சிரிப்பது எந்த இயற்கை வகையிற் சேர்ந்தது?

பூசை யாவும் முடிந்ததும் பூசாரியார் அங்கு வந்திருக்கும் பக்தசிகாமணிகளுக்கு அம்மாளின் அனுக்கிரகத்தை கொடுக்கவல்ல சின்னங்களாகிய விபூதி, சந்தனம், பத்திரம், தீர்த்தம் முதலியவைகளை கைகளில் ஏந்திக்கொண்டு பிரசன்னமாவார். பூசாரி பூதர் விபூதி கொடுப்பதுவும் ஒரு தனி ரகம். முவ்விரல்களினாலே திருநீற்றையள்ளி வயோதிபர் தொடக்கம் சிறுவர்கள் வரையும் வரிசை கிரமத்திற் பட்டதும் படாததுமாக கைகளிலே போட்டுக்கொண்டு வருவார். தீர்த்தத்தை தீர்த்தமாகவே கொடுப்பார். இந்த பங்கீட்டு முறையில் வந்திருந்தோர் களிற் சிலருக்கு திருப்தி ஈனமும் ஏற்படும். இதுவும் அம்பாளின் கிருபைதான் என்று விட்டு வீட்டுக்கு செல்வர். 1ம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்பு வரை ஒவ்வொரு சோதனையிலும் என்னை சித்தியடைய செய்த காளியம்மனுக்கு பூசை செய்த பூசாரி பூதரை சந்திக்கலாம் என்று அவர் வீட்டிற்கு சிறு நாட்களுக்கு முன் சென்றபோது அவர் வீட்டிலில்லை. விசாரித்த பொழுது அவர் பரலோக பரமகதி அடைந்து விட்டார் என்று அவர் இளைய மனைவியின் மகளின் மகன் சொன்னான். ஒருவர் இல்லாத போது மேலும் அவரைப் பற்றி பேசுவது முறையல்ல பூசாரி பூதரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

ஈழகேசரி
06.03.1949

பரிதி

ஈழகேசரியில் பரிதி என்ற புனை பெயரில் எழுதப்பட்டிருக்கும் ஒரே ஒரு சிறுகதை "எதிர்பாராதது" ஆகும். இப் புனைபெயரின் கதாசிரியர் எவரென அறியப்படவில்லை. எனினும் 1942 களில் புதியதொரு உத்தியைக் கையாண்டு எதிர்பாராதது எழுதப்பட்டுள்ளது. சோ. தியாகராஜா "சோதி" என்ற புனை பெயரிலும் தன் படைப்புக்களைத் தந்துள்ளார். "சோதியே பரிதியாக" இருக்கலாமென சிற்பி எழுதுகிறார்.

❖ எதிர்பாராதது

எதிர்பாராதது

பரிதி

வெளியே .

அலைகடல் பேரொலி போட்டுக் குமுறியது. அகன்ற வானில் யாதொரு நட்சத்திரங்களும் இல்லை. இடையிடையே வாள் வீச்சுப் போன்ற மின்வெட்டு.

ஐப்பசிமாசம் அடைமழை தொடங்க அறிகுறிகள் தென்பட்டன. ஒரு கணம் தென்மேற்கு மூலையில் ஒரு பெரிய மின்னல் கண்ணைப் பொறித்தட்டியது.

ஒரே இரைச்சல். மழை பொழியத் தொடங்கிவிட்டது என்று சொல்லுமுன் வெள்ளம் போட்டுவிட்டது. ஒவ்வொரு துளியும் ஒவ்வொரு பாறாங்கல்லைப் போல விழுந்தன.

எங்கும் நிசப்தம். ஆனால் இடையிடையே ஆந்தையின் அலறல் மாத்திரம் கேட்டது. அதற்கும் மழைக் குளிரின் விறைப்புப்போலும்.

திடீரென்று ஒரு இடி மேல் முகட்டிலிருந்து கற்கள் உருளுவது போல. தொட்டிலில் ஆடு மிரண்டு கயிற்றை இழுத்துக் கதறியது. தூரத் தில் படுத்திருந்த குழந்தை பயத்தில் தாயை இறுக அணைத்துக் கட்டியது.

இரண்டு நாழிகையாகப் பெய்த மழை ஓய்ந்துகொண்டிருந்தது. ஆனால் காற்றுத் தொடங்கிவிட்டது. பக்கத்திலிருந்த கறிமுருங்கை "படார்" என்று முறிந்தது. அவள் மனத்திலும் திரும்ப துயரம் ஆரம்பமாயிற்று.

உள்ளே.

அவளின் மனத்திலும் பெரும் புயல். அந்தக் குடிலில் மழை ஒழுக்குக்குச் சட்டி பானை வைக்கிறதும் எடுக்கிறதுமாய் அலுத்து விட்டாள் அவள், இனி காற்றின் ஆவேசம் இதற்கு அவளால் செய்ய என்ன இருக்கிறது?

அவன் இருந்தால்?
அது இப்போது நடக்கக்கூடிய காரியமா?
ஒரு நீண்ட பெருமூச்சு....

குளிரில் போர்த்து மூடிக்கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறிசின் முனகல். கோடிப்புறத்தில் நின்று நடுங்கும் ஆட்டின் அழுகை பட்டி பெருக்கிய பெட்டைநாயின் உறுமல் அவனைப் பற்றிய அளவிலா எண்ணம்` ஊரார் தன்னைப்பற்றிக் கூறும் வசை புராணம் எல்லாம் உருத்திரண்டுதான் பெருமூச்சாய் வெளிவந்தது. கண்மூடி முழிக்கும் நேரம்.

முகட்டின் ஓலைகள் காற்றின் உக்கிரத்தால் சரசரவென்று பிடுங்குண்டன, சிறு மழைத் தூறல் அதன் வழியாகத் தலைமேல் விழுந்தன. "பாழாய்ப்போன காற்று என்ன பாடுபடுத் துகிறது" என்று மனத்துள் சொல்லிக் கொண்டு மகனை எடுத்து மார்போடணைத்தாள்.

நிலம் தெப்பமாய் நனைந்துவிட்டது. குந்தியிருப்பதற்கு அந்தக் குடிலில் ஒருசாண் இடம் கூடக் கிடைக்காது. ஒழுகாத இடம் எங்கே இருக்கிறது என்று பார்ப்பதற்குள் விளக்கு அணைந்து விட்டது.

தெய்வமே! என்று ஆகாயத்தைப் பார்த்தாள் கமலி கூரையில் இருந்த சுரைக்கொடியின் பூ இவளின் பரிதாபம் பார்த்துக் கசிந்து நீர் சொட்டிக் கொண்டிருந்தது.

தெருவில்.

கைக் குழந்தையோடு நின்று தவிக்கும் அவளுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. இடுப்பில் மெல்லிய கந்தைத் துணியால் மூடிய அவள் குழந்தை. கையில் மழைத் தூறல் பிடிக்காமல் வைத்திருக்கும் ஒரு பழஞ் சுளகு, மடியில் அன்று மாலை புல்லு விற்றுக்கொண்ட இரண்டு பணத்துக்கு வாங்கிய வெற்றிலையும் பாக்கும்.

இவ்வளவுதான் - வெளிக்கிளம்பி விட்டாள் - எங்கே? "நாடோடியாய் வந்து தம் மகனை மயக்கி வைத்திருக்கும் பாவி" என்று கூறும் மாமன் மாமி வீட்டுக்கா? "தன்னுடைய சம்மத மின்றி தனியாய் - கள்ளத்தனமாய் ஐம்பது ரூபாய் நகையோடு போனவள் போனவளே" என்று புறங்கூறும் தகப்பன் குடிசைக்கா?

காவியங்களிலும், புராணங்களிலும் காதல் என்றால் ரசிப்போடு வாசிப்பதும், காதல் கொண்டு வந்தவளைத் தாசி - என்று வசைபுராணம் பாடுவதுமாய் இருக்கும் அந்தவூர் உயர்சாதி மக்கள் வீட்டுக்கா?

எங்கே? அதைத்தான் அவள் அந்தத் தெருவில் - தெருவென்று சொல்லும் கிராமசங்கம் மண்போட்ட ஒழுங்கையில் - நின்று யோசித்தாள்.

பக்கத்துக் கேணியில் இருந்த சொறித் தவளைகளும் எங்கே? எங்கே? என்று கேட்பது போல் கூப்பிட்டன. கரைகாணாக் கலத்திலிருக்கும் மாலுமி மனம் போல இருந்தது அவள் மனம்.

ஆம்! கடற்கரையில் இருந்த கலங்கரை விளக்கும் சுழன்று கொண்டு தான் இருந்தது.

அவள் அதைத் தற்செயலாகப் பார்த்தாள். அதே திக்கில் அவளுக்கும் ஒரு கலங்கரை விளக்கும் தெரிந்தது. அது அவ்வூர் அண்ணமார் கோவில். அதன் வாசலில் உள்ள விளக்கு "மினுக், மினுக்" என்று எரிந்து கொண்டிருந்தது. காற்றுக்கு அது அசைவது அவளை "வா, வா" என்று அழைப்பது போல இருந்தது. அதன் அழைப்பு இல்லாவிட்டாலும் அவள் அங்கு போகாமல் வேறெங்குதான் போவது!

கோவிலில்.

காலடி எடுத்து உள்ளே வைப்பதற்கு முன்னும் ஒரு நீண்ட பெருமூச்சு!

"இராப்பொழுதை இனியாயினும் நிம்மதியாய்க் கழிக்கலாம்" என்ற மனவமைதியில் - இவ்வளவும் பட்ட துயரத்திற்கு எல்லை வந்துவிட்டது என்ற சந்தோஷத்தில் பிறந்த பெருமூச்சு அது.

"சுவாமி! உன் அமைதியான இருப்பிடத்தில் அடியாள் அடைக்கலமாக வந்திருக்கிறேன்" என்று அவள் வாய் தன்னையறியாமல் சொன்னது. இடுப்பில் இருந்த குழந்தையை நிலத்தில் இறக்கிவிட்டாள். அவள் முழங்கால் ஊன்றி விழுந்து கும்பிட்டாள். ஆத்தை ஆத்தை என்று அலறியது குழந்தை .

"யாரது? உள்ளே வா! காற்றில் நில்லாதே" என்றது ஒரு குரல்.

கமலிக்கு ஒரே பயமாய்விட்டது. எழுந்து ஓடிவிடலாமா? என்று கூடப் பார்த்தாள். ஆனால் "நீயா! இந்த நேரத்தில் ஏன் வந்தாய்?" என்ற கேள்வியின் குரல் முன் கேட்ட தொனியாய் இருந்தது. திரும்பிப் பார்த்தாள்!

அவள் தன் கண்களைக்கூட நம்பவில்லை. மனப்பிராந்தி என்று கூட நினைத்தாள். ஆனால் தன் குழந்தையை அவன் எடுத்து அணைத்தவுடனே அதன் அழுகைச் சப்தம் நிறைவுடனே - உண்மை - தன் கணவன் கந்தனே அவ்வுருவம் என்பது தெரிந்தது. உடனே அவள் அவன் காலைக்கட்டிக் கொண்டு அழுதாள் - சிரித்து மகிழ வேண்டிய அவள் அழுதாள்.

அழுதுகொண்டிருந்த குழந்தை சிரித்தது - அணைத்துப்பிடிக்க ஆள் வந்துவிட்டதல்லவா? அவளின் இந்த அழுகை அவனுக்குப் பழைய கால அழுகைகளை நினைப்பூட்டியது - ஒரு நிமிடம்.

முன்பு.

அதே அண்ணமார் கோவில் உற்சவத்திற்கு மணல் தேவை. வேள்வி - உற்சவம் - கல்யாணம்-காவடி எல்லாவற்றையும் நடப்பிப்பது கந்தன்தான். தன் வடக்கன் மாட்டு வண்டியுடன் மாஞ்சோலைக்குச் சென்றான்.

மாஞ்சோலை கடற்கரைக் கிராமம். தென்னையும் பனையும் கூடலாக இருக்கும் அந்த ஊருக்கு மாஞ்சோலை என்று எந்தப் புண்ணியவான் பெயர்வைத்தானோ தெரியாது. என்றாலும் அங்கு கடற்கரையில் வசிக்கும் வெள்ளையன் தன் மகளுக்குக் கமலி என்று பெயர்வைத்ததற்குக் காரணம் உண்டு.

அதன் கதை வேறு.

கந்தனை தனக்குதவியாக மணல் அள்ளுவதற்கு வெள்ளையன் சேர்த்துக்கொண்டான். ஆடி மாசத்துப் பூரணை நிலவு அள்ளிப் பொழிந்து கொண்டிருந்து. மெல்லிய கடற்காற்று வீசிக்கொண்டிருந்தது. வளையிலிருக்கும் நண்டுகள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தன. புதரிலிருக்கும் நரிகள் ஊளையிடுவதும் விடுவதுமாக இருந்தன. கமலியும் போவதா நிற்பதா என்ற மனத்தோடு வந்துகொண்டிருந்தாள்.

வெள்ளையன் தாகசாந்தி செய்வதற்குத் தண்ணீர் கொண்டு வரும் கமலியைக் கூப்பிட்டான். பிற மனிஷன் நிற்பதால் வரும் வெட்கம் அவளுக்கு அவள் சிறு குழந்தையா என்ன? அந்த நிலவொளியில் அவள் முகவிலாசம் பலமடங்கு எடுத்துக்காட்டியது. புடவை கட்டிய மாதிரியும் கொண்டை முடிந்த கோலமும் அவனுக்குப் பிடித்திருந்தது. கந்தன் அவளைக் கோவில் விக்கிரகம் பார்ப்பது போலப் பாதாதிகேசம் பார்த்து முடித்தான். அவளும் பாராதது போல பார்த்து நின்றாள். வெள்ளையன் வண்டியில் மணல் போட்டுவிட்டு வந்து பார்க்கும் போது அரைக்கடகம் மணல்தான் அள்ளிக்கொண்டு நின்றான் கந்தன். வெள்ளையன் கமலி கொண்டு வந்த தண்ணீரைக் குடித்துவிட்டு அந்தக் கடகம் மணலைத் தலையில் வைத்தான். வைத்து இரண்டு கவடு வைக்க முன்பு - அவளும் தன் மனம் போன்ற வெறும் பாத்திரத்தைக் கையில் கொண்டு திரும்பி இரண்டடி வைத்தபின்பு - ஐயோ! என்ற சத்தம் கந்தர் வாயினின்றும் பிறந்தது. கடகமும் மணலும் தரையிற் புரண்டன. அவள் மனமும் பாத்திரமும் மண்ணில் சிதறின.

தகப்பனும், மகளும் ஓடிவந்து பார்த்தனர். காலில் மண்வெட்டிபட்டு இரத்தம் பெருகியது. வெள்ளையன் அவனைத் தாங்கிப்பிடித்தான். அவள் சீலையைக் கிழித்துக் கடல் தண்ணீரில் நனைத்துக் கட்டினாள். அவள் கண்களிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளிகளும் அதோடு தான் சேர்ந்து விட்டன.

அவளைப் பார்த்துக்கொண்டு மணல் அள்ளுகையில் காலை வெட்டிவிட்ட கந்தனுக்குத் தெரியும்.

அதற்காக தன்னை முன்பின் அறியாத அவள் ஏன் அழ வேண்டும் என்பதுதான் அப்போது புரியவில்லை .

பின்பு.

பல மாதங்கள் சென்றுவிட்டன. ஒரே வசனந்தான். ஆனால் அதற்குள் நடந்த காரியங்கள் பல. கந்தனும் கமலியும் அடைந்த இன்பதுன்பங்கள்தான் எவ்வளவு? எதிர்பாராத விதமாக கந்தனின் பெற்றோர் விவாகத்திற்குத் தடை செய்யாமலிருந்தது - பெருங் குடியனாய் மாறிய வெள்ளையன் கமலியைத் தன் மருமகனுக்கு - கணபதிக்கு - கொடுப்பேனென்று பிடிவாதம் செய்ததுதான் மிக முக்கியம். கமலியும் ஐந்து ரூபா தட்டு மணியோடு

இரவுக்கிரவாய்க் கந்தனைத் தேடிவந்ததும் வெள்ளையன் ஐந்தை ஐம்பதாக்கியதும் உலகத்தில் நடக்காத விடயங்களல்ல. கந்தன் கமலியை விவாகஞ்செய்தபின் பெற்றோரை அலட் சியம் செய்ததும் அவர்கள் கமலியை ஏசியதும் விதியின் விளையாட்டுத்தான்.

எதுதான் நடவாது? எதுதான் நடக்கும்?

நாம் எதிர்பார்ப்பதுதான் நடக்குமா? அவர்கள் விஷயத்தில் அப்படி யொன்றுமே நடைபெறவில்லை.

துர்அதிஷ்டக்காரி என்று சொல்லும்படி அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றாள். மனதில் உள்ளதை விளையாட்டாக அவன் சொன்னது வினையாய் முடிந்தது. பெரும் பூசல் ஏக ரகளை.

"முன்னிருந்த தட்டுமணிதான் இப்போதும். என்ன சுகம் கண்டேன் நான்" என்ற கமலியின் குறைக்கும் கந்தனால் பதில் சொல்ல முடியவில்லை .

அவன் உடனே புறப்பட்டு விட்டான். அவளும் விசித்து விசித்து அழ ஆரம்பித்து விட்டாள்.

ஒருநாளா? ஒரு மாசமா? அவள் எண்ணிக்கையில் பல யுகம் போய்விட்டன. அவன் வந்தபாடில்லை . இன்று .

"ஏன் அழுகிறாய் - நான் வந்தது - என்னைக் கண்டது உனக்குப் பிடிக்கவில்லையா, என்ன? அன்று மணலில் அழுதாய் - போகும்போது வீட்டில் அழுதாய் - இன்று கோவிலில் அழுகிறாய். அழுகையோடு பிறந்து வளர்ந்தாயோ?" என்று கேட்டான் கந்தன்.

"நீங்கள் கல்மனத்தோடு பிறந்து வளர்ந்தால் நான் அழுகையோடு பிறந்தது நூதன மல்ல" என்றாள் அவள். குழந்தையின் ஈரத்தைச் சால்வையால் துடைத்துக்கொண்டு நின்றான் அவன்.

"அதை ஏன் துடைக்கிறீர்கள்? ஆண் குழந்தையானால் வீடாவது ஒழுகாமல் மேயுமல்லவா?" என்றாள் குத்தலாக.

"சீச்சீ - பெண் குழந்தைதான் தாயோடு எப்போதும் இருக்குமே - ஆண் குழந்தைக்குக் கல்மனது படைத்து விட்டால்" என்றாள் கிண்டலாக.

"போதும்! விடுங்கள். நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள் கமலி.

"இன்று நான் போய் ஒரு வருடம் - நான் உழைத்த இருநூறு ரூபா வையும் கொண்டு வந்தேன் - உனக்குத்தான் - நகைப் பயித்தியமாச்சே மழை பொழிந்தது. இதில் இருந்தாற் போல் அயர்ந்து தூங்கிவிட்டேன்".

"நானும் எங்கே போவது என்பது தெரியாமல் இருக்கும் பொழுது கோவில் விளக்கு அழைத்தது - வந்தேன் - எதிர்பாராத விதமாய்த் தங்களைக் கண்டேன்."

எங்கள் விடயம் முழுவதுமே அப்படித்தான் என்று சொல்லிக்கொண்டு அவள் கையைப் பிடித்துக்கொண்டு கந்தன் முன்னடந்தான். புலரிக் காலத்தில் கோழி கூவியது.

ஈழகேசரி - 16.02.1941

பாஞ்சாலி

மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த பாரதி சஞ்சிகையில் புது யுகம் சிறுகதையை எழுதியவர். பாரதி சஞ்சிகையில் 'தலைமுறை தலைமுறையாய்' என்ற உரையாடலையும் எழுதியுள்ளார். இவரின் உண்மைப் பெயரை அறிந்து கொள்ள முடியவில்லை.

- புது யுகம்

புது யுகம்

பாஞ்சாலி

“எங்கும் ஏழைப் பாட்டாளி மக்களின் நிலை பரிதாபமாகவே இருக்கிறது. சுதந்திரம் கிடைத்தும் சுரண்டுதல் ஒழியவில்லை . வியர்வை சிந்தி வீணருக்குழைத்து மாய்கின்ற ஏழை மக்கள் எதிர் பார்க்கும் புதிய யுகம் எப்படியிருக்கிறது என்பதுடன், இன்று அது எங் கேயிருக்கிறது என்பதையும் கதையில் காணுங்கள்”.

“ஜல்” "ஜல்” என்ற சதங்கைச் சத்தம் கந்தனின் காதுகளிலும் நுழையத்தான் நுழைந்தது. ஆனாலும், ஆழ்ந்த தூக்கத்திலிருந்து அவ னைத் தட்டியெழுப்பும் சக்தி உயிரற்ற அந்த வெறும் ஓசைக்கு இல் லையோ என்னவோ? “கந்தா” “ஏய் கந்தா” என்று வெடித்த கடுமை தொனிக்கும் மனிதக் குரலோசை தான் அவனை உலுக்கிவிட்டது. துடித் துப் பதைத்து ஏழுந்தான். வாசலிலே கம்பீரமாகத் தலைதூக்கி நின்ற காளைகளையும் பெட்டி வண்டியையும் பார்த்ததுமே கந்தனுக்கு நாடி தளர்ந்துவிட்டது. பின்னே விடியற் காலையிலேயே வயலுக்குப் போய் உழவுக் காரியத்தைப் பார்க்க வேண்டியவன் இத்தனை நாழி தூங்கிக் கொண்டிருந்தால்? போடியாரே வந்துவிட்டார் கந்தனைத்தேடி. “வேறே

ஆள் அமர்த்தி விட்டேன் என்பதைச் சொல்லத்தான் அவராகவே வந்திருக்கிறாரோ? இல்லையென்றால் யாரையாவது அனுப்பியிருக்கமாட்டாரா? போடியாரின் சுபாவம் கந்தனுக்குத் தெரியாதா? அவனுக்குப் பேசவே நா எழவில்லை. ஓசை வெளிவராமல் ஏதோ குழறினான். "சரி, சரி, சீக்கிரமா வயலுக்குப் போய்ச்சேரு. பொழுது ஏறிப்போகுது. இன்னும் நேரத்தைப் போக்கிக் கொண்டு நிற்காதே" என்று சொல்லி, காளைகளைத் தட்டிவிட்டு வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார் போடியார். கந்தன் பிரமித்துப் போனான். கண்டிப்புக்கும், கடுமைக்கும் பெயர் போன போடியார் காலத்தோடு வேலைக்கு வரவில்லையென்பதற்காகக் கடிந்து கொள்ளாமல் வீடு தேடி வந்து சொல்லிவிட்டுப் போகிறார்? ஆச்சரியந்தான்! ஆனாலும், இதில் அதிசயப்பட ஒன்றுமேயில்லை என்பது போல புறம் நடந்த சம்பவங்கள் கந்தனைத் திக்குமுக்காடச் செய்தன.

எவ்வளவோ உற்சாகமாகத்தான் உழவு மாடுகளைத் துரத்திக் கலப்பையை ஓட்டி னான். ஆனால், ஏனோ வெயில் ஏற ஏற அவன் கால்கள் துவண்டன. அதனால் நிழலிலேயே போய் நின்றுவிட முடியுமா? அப்படி ஏதாவது செய்தால் போடியாருக்குப் பொல்லாத கோபம் வருமே! அதோ, அவரும் வந்து விட்டார். "தா... வடி" என்று மாடுகளைத் தட்டிவிட்டான் கந் தன். வரப்பில் நின்றபடியே வயலைப் பார்த்துக் கொண்டு நின்ற போடியார் சட்டென்று கந்த னைக் கவனித்தார். அவன் ஏரைச் செலுத்த முடியாது இடறுவதைப் பார்த்ததும் அவருக்கு விசயம் புரிந்தது. "அட பாவி, நீ அப்போதே சொல்லியிருக்கப்படாதடா? நீ இன்னும் வரவில் லையே என்று சொல்லும் போதே நினைச்சேன். மாடுகளை உருவிவிட்டு வீட்டுக்குப் போய்ச் சேருடா" என்றார். இதற்கு முன் எத்தனையோ தடவை அவன் உடல் சோர வயலில் வேலை செய்யவில்லையா? அப்பொழுதெல்லாம் அவனோடு உழைத்த மாடுகள் மீது உண்டான இரக்கம் கூட போடியாருக்கு கந்தனிடம் ஏற்படுவதில்லை . "என்னடா, மாடுகள் களைத்துப் போச்சுப் போல இருக்கே? போதும் அவுத்து விடு என்பார். பாவம், கந்தன் கண்களில் படுவதில்லை! ஆனால் இன்று அவனிடம் எப்படி இரக்கம் பிறந்தது? இதையெல்லாம் எண்ணிப் பார்க்க முடியவில்லை. தலை அப்படிக் கனத்தது. கண்கள் இருண்டு ஒரே மயக்க மாக வந்தது.

கந்தன் வீட்டில் நுழையும் போதே அவனுடைய நிலைமையைப் பார்த்த அவன் வள்ளி, ஓடிவந்து அவனைத்தாங்கிக் கொண்டாள். "ஐயையோ, உடம்பு நெருப்பாகிறதே" என்று பதறிப்போய் பாயில் படுக்க வைத்தாள். கந்தன் விழுந்தவன் நாலு நாட்களாக சுய நினைவு இல்லாமலே கிடந்தான். வள்ளியும் ஏதோ கையிலுள்ளதைக் கொண்டு வைத்தியம் பார்த் தாள். ஒரு நாள் கந்தனைப் பார்ப்பதற்கென்று போடியார் வந்தார். அவரைக் கண்டதும் கந்தன் எழுந்திருக்க முயன்றான். "உடம்பை அலட்டாமல் சும்மா படுத்திரடா" இப்போ எப்படியிருக் குது? என்று கேட்டுக்கொண்டே போடியார் அவன் பக்கத்தில வந்தார். "இதற்குள்ளாக நல்லாய் வசக்கெட்டுப் போனானே. டாக்டரை அழைச்சு வந்து காட்டவில்லையா?" என்று வள்ளியைக் கேட்டார். "இங்கே வந்து பார்க்கிறதானால் காசு கொடுக்க வேணும். அதனாலே நான் போய்ச் சொல்லி மருந்து வாங்கி வந்தேன்" என்றாள் வள்ளி. போடியார் தம் மடியிலிருந்து ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்து வள்ளியிடம் கொடுத்து, "இந்தா இதை வைத்துக்கொள். டாக்டரைக் கூட்டி வந்து காட்டு" என்று சொல்லிவிட்டுப் போனார். வள்ளி திகைத்து நின்றாள். கஷ்டமான இரண்டொரு சமயங்களில் போடியாரிடம் கடனாகப் பணம் கேட்டிருக்கிறாள் வள்ளி. அப்

பொழுது அலட்சியமாக நடந்து கொண்ட போடியாரா இப்படி தானாக வந்து தாராள மனசுடன் பணங் கொடுத்துவிட்டுப் போகிறார்? போடியார் பொல்லாத மனுஷன் என்றுதான் இத்தனை நாளாக அவள் எண்ணியிருந்தாள். இப்பொழுதே அவர் மனசு தங்கம் என்று தெரிந்து கொண் டாள். கந்தனோ அன்று வயலில் நடந்து கொண்ட சம்பவத்திலிருந்தே தன் அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டிருந்தான். ஏழைகளை ஒட்ட உலர வேலை வாங்கி விட்டு வயிறார உண்பதற்கே கூலி கொடாத உலுத்தர் என்ற எண்ணந்தான் போடியாரைப் பற்றி அவள் மன தில் பதிந்திருந்தது. இப்போதாவது அவர் மனம் இளகியிருக்கிறதல்லவா? என்னவானாலும் அவரை ஈவு இரக்கமற்ற கல் மனத்தவரென்று சொல்லி விட முடியாதுதான்!

எப்படியோ கந்தன் டபிள் நிமோனியாவின் பிடியிலிருந்து தப்பி விட்டான். இப்பொழுது அவனால் எழுந்து நடமாட முடிந்தது. போடியாரும் அடிக்கடி வந்து விசாரித்துவிட்டுப் போனார். எப்பொழுது வயலுக்குப் போய் போடியார் மனங்குளிர வேலை செய்யப் போகிறோமென்று இருந்தது கந்தனுக்கு. சும்மா பார்த்து வருவோமே என்று ஒரு நாள் வயல் பக்கம் , போனான். வழியிலே போடியாரின் இரட்டை மாட்டு வண்டி வந்து கொண்டிருந்தது. கந்தனைக் கண்ட தும் போடியார் வண்டியை நிறுத்தி விசாரித்தார். உடம்பு நன்றாக குணமாவதற்குள் இவ்வ ளவு தூரம் நடந்ததற்கு அவனைக் கடிந்து கொண்டு தம்முடன் கூட வண்டியிலேயே அவனை யும் அழைத்துப் போய் வீட்டில் விட்டார். போடியாரின் போக்கு கந்தனுக்குப் பெரிய புதிராகவே யிருந்தது. பரம்பரையான பணச்செருக்கும் குலத்தடிப்பும் நெஞ்சத்தில் ஊறி உறைந்துவிட்ட ஒருவர் திடீரென இப்படி மாறி விடுவதென்றால் சாமானியமா என்ன ?

கந்தன் கல்வியறிவில்லாதவன்தான். ஆனாலும் அவனுடைய உள்ளம் எவ்வளவு மேலானது? போடியாரிடம் ஆயுள் முழுவதும் நாயாக உழைக்கவும் தயாராயிருந்தான் அவன். வாடிய பயிர் முகத்தில் மழை பெய்தது போல இருந்தாற் போலிருந்து போடியார் காட்டிய அளவற்ற அநுதாபம் ஏழைக்கந்தனின் கபடமற்ற மனதை அவ்வளவாகக் கவர்ந்து விட்டது. இந்த அன்பு ஒன்றுக் காகத்தான் எண்ணற்ற ஏழை மக்கள் ஏங்கித் தவிக்கிறார்களோ என் னவோ? கை நிறையக் காசு பணத்தை அள்ளிக் கொடுத்தாலும் உள்ளத்தைத் தொடும் ஒரு துளி அன்புக்கு அது எப்படியும் ஈடாகாதுதான்!

நோய்வாய்ப்பட்டதனால் வேலைக்குப் போக முடியவில்லையே என்று கந்தன் கவ லைப்பட இடமில்லாமல் அவ்வவ்போது செலவுக்குப் பணம் கொடுத்து வந்தார் போடியார். அதா வது, கந்தனுக்கு சம்பளத்துடன் லீவு. அவனுக்கானால் வீட்டில் உட்கார்ந்திருக்க முடிய வில்லை. சும்மாவாவது வயலை எட்டிப்பார்த்துவிட்டு வருவான். பசுமை படர்ந்த வயல்வெளி யைப் பார்க்க அவனுக்கு வசமுண்டாகும். தளதளவென்று கதிர்மின்ன தலை சாய்ந்து நின்ற பயிர்கள் கவிகளின் நெஞ்சில்தான் கற்பனையைக் கிளறி விடக்கூடும். நித்தமும் பார்த்துச் சலித்துப் போனதினாலோ என்னவோ, ஏழைக் கந்தனுடைய உள்ளத்தில் ஒரு இன்பத்தை யும் அவை கொடுத்ததில்லை. கதிர்கள் காற்றில் அலைவதனாலுண்டாகும் கலகலப்புக் கூட ஏனோ அவனை ஏளனம் செய்வது போலத்தான் இத்தனை காலமும் அவனுக்குப்பட்டது. ஒருவனுடைய உழைப்பை உறிஞ்சி வளர்ந்து இன்னொருவனுக்குப் பயன்தரப் போகிற அவற்றைப் பார்த்து எப்படி அவன் மகிழக்கூடும்? இவையெல்லாம் பழங்கதைகள். இப் பொழுதே என்றுமில்லாது உற்சாகத்துடன் வயல்களைக் கவனித்து வந்தான். கந்தன்.

அறுவடைக்கு இரண்டொரு தினங்களிலிருந்தன. அன்று போடியார் வீட்டில் வேலை செய்கைக்காரர் எல்லோரும் கூடியிருந்தார்கள். கந்தனும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந் தான். போடியார் வந்தார். யாரையும் எழுந்திருக்கவிடாது தாமும் அவர்களோடு வெகு சகஜ மாக உட்கார்ந்து கொண்டார். பின்பு பண்ணையாட்களைப் பார்த்துச் சொன்னார். "இன் றைக்கு உங்களுக்கெல்லாம் ஒரு நல்ல சமாச்சாரம் சொல்லப்போகிறேன். நம்ம நாட்டிலேயே உங்கள் மாதிரி பாடுபடுகிற பண்ணையாட்களெல்லாரும் ஏழைகளாயிருக்கிறதற்கு எங்களைப்போலப் போடிமார்கள்தான் காரணமென்பது உங்களுக்குத் தெரியாமலிராது. முன் காலம் மாதிரி இப்போ பூமி விளைகிறதில்லையென்று சொல்கிறார்களே. அதுக்குக் கார ணம் என்ன தெரியுமா? உங்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கிறதில்லை. அத னாலே. நீங்கள் உற்சாகமாக உழைக்கிறதில்லை. இப்போ நமக்கு சுயராச்சியம் கிடைச் சிருக்க இனி நாடு செழிக்க வேணும். விளைவு பெருக வேணும். அப்போதான் பஞ்சமும் பசியும் ஒழியும். இது உங்களாலேதான் ஆகும். முதலிலே உங்கள் குறையெல்லாம் தீர வேணும். நீங்கள் ஏகப்பேர் உழைக்க. அதனால் இரண்டொருவர் சுகப்படுவது கூடாது. வாடக் கூடாது. வயல்களில் விளைகிறதையெல்லாம் போடிமாருக்கு அளந்துவிட்டு வயிற்றுக்கில் லாமல் நீங்கள் வாடக்கூடாது. வயல்களை உங்களிடமே ஒப்படைச்சுவிட்டால் இந்தக் குறை யொன்றும் இல்லாமற் போய்விடும். ஆனால். அதை அரசாட்சியார்தான் செய்ய வேணும். என்னைப்போல போடிமார் வேறே எவ்வளவோ செய்யலாம். இந்த வருஷம் விளைவிலே முதல் தள்ளி மீதம் முழுவதையும் உங்களுக்கே தரப்போகிறேன்". "ஏய் கந்தா. எழும்புடா" என்று யாரோ முதுகில் தட்டியதும் கந்தன் விழித்துக்கொண்டான். எதிரில் நின்ற பொன்னன். "ஏண்டா விடிஞ்சு இவ்வளவு நேரம் படுத்திருக்கிறாயே. அங்கே போடியார் முணு முணுத்துவிட்டு வந்துட்டார்" என்றான். முதல் நாள் இரவு கோழி கூவும் வரை வயலில் உழுத சோர்வினால் கந்தன் நன்றாகத் தூங்கி விட்டான். அவ்வளவும் தூக்கத்தில் கண்ட கனவு தான்! "இப்பதானே விடியச்சாமம் வந்து படுத்தாரு அதுக்குள்ளே" என்று வாயெடுத்தாள் வள்ளி. "என்ன செய்யலாம்" போகாட்டி தெரியாதா போடியார் சேதி என்று சலிப்புடன் வயலுக்குப் புறப்பட்டான் கந்தன்.

பாரதி

எம்.எம்.ஸாலிஹ்

சொல்வளமும் கவிவளமும் கொண்ட எம்.எம்.ஸாலிஹ் புரட்சிக்கமால் என்ற புனைபெயரில் நன்கறியப்பட்டவர். ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட எம்.எம்.ஸாலிஹ் ஆசிரியராகப் பணியாற்றி அதிபராக உயர்ந்தவர். மதிநுட்பமும் மார்க்க சிந்தனையும் கொண்ட புரட்சிக்கமால் அவர்களின் கவிதைகள் இஸ்லாம் வலியுறுத்தும் அன்பு, இறைத்துவம், நம்பிக்கை, சமத்துவம், தியாகம், சகோதரத் துவம் முதலான பண்புகளில் கட்டுண்டவை. இஸ்லாமிய சிந்தனை வழிநின்று தமிழ் இலக்கியச் செழுமை குன்றாது கவி படைத்த புரட்சிக்கமால் எம்.எம். ஸாலிஹ் என்ற பெயரில் "சதிகாரி" என்ற சிறுகதையை மட்டக்களப்பு மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதியில் எழுதினார்.

❖ சதிகாரி

சதிகாரி

எம்.எம்.ஸாலிஹ்

சூரியோதயத்திற்கு, இன்னும் இரண்டொரு மணித்தியாலங்களேயிருந்தன. ஆனால் நஸிமாவை மட்டும் தூக்கம் அணைந்து கொள்ளவில்லை. படுக்கையில் கிடந்த அவளுடைய இதயம், குமுறிக் கொண்டிருந்தது. மெல்லத் தனது தலையையுயர்த்திக் கட்டிலைப் பார்த்தாள். நஸீமாவின் கணவன், சமாதி நிலையிலே தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய குறட்டைத் தொனியைத் தவிர, எங்கும் நிசப்தம் நிலவியது. நஸீமா சந்தடியில்லாமல் வாரிச் சுருட்டிக்கொண்டெழுந்தாள். அவளுடைய தோற்றம் பயங்கரத்தின் பிம்பமாகயிருந்தது. மங்கிக் கொண்டிருந்த விளக்கொளியைத் தூண்டினாள். இது அவளுடைய வாழ்க்கையொளியைத் தூண்டுவதாகவேயிருந்தது. விளக்கொளியின் தெளிவிலே, கணவனின் முகத்தைக் கவனித்தாள். வயோதிபத்தைக் காட்டும் நெற்றிக் கீறல்களையும், கன்னங்களின் சொடிவையும் அவளாற் சகிக்க முடியவில்லை . தன் கண்களை இறுக மூடிக்கொண்டாள். இதய ஆழியிலிருந்து பீறிட்ட பெருமூச்சு "மரக் கட்டையில் செய்த பொம்மை" என்ற கருத்தையுள்ளடக்கியதாயிருந்தது. நஸீமா மீண்டும் தன் கணவனைப் பார்த்தாள். கட்டிலுக்குப்

பக்கத்திலிருந்து தண்ணீர் கோப்பையைப் பார்த்தாள். நீரின் மோன நிலை அவளைப் பார்த்து எக்காளமிடுவது போலி ருந்தது. "இன்ப இரவு! இரண்டு உள்ளங்களின் நீடிய அபிலாசைகளும் சங்கமமாகும். மகத்தான இரவு, கற்பனையிற் சஞ்சரித்துக் கொண்டிருந்த பருவ நிலைகள், பரஸ்பரம் கொண்டாடும் குதூகல இரவு. இல்வாழ்க்கை என்ற கட்டுரையின் தலையங்கமாய் விளங்கும் முதலிரவு. நஸீமா பேதைப் பெண்ணே! இழந்தால் மீளமுடியாத இன்ப இரவை. அனுபவிக்கும் தகுதியற்றவளாகி விட்டாயடி. பன்றியின் முன் முத்துக்களைத் தூவும் சமூகத்தில் உங்கள் நிலையே இப்படித்தான்!" நஸீமா திகைத்தாள். தண்ணீர் பேசுவதாகவே அவள் கருதினாள். ஆனால் கொதிப்பின் தாக்குதலினால், நீராக மாறியிருக்கும் தனது இதயத்தின் கேள்வியென்பதை அவளால் யூகிக்க முடிய வில்லை. ஏக்கம் தோய்ந்த உள்ளம், பன்னாடையாக மாறி, கெட்ட நினைவுகள், கொடிய செயல்கள் என்ற கந்தல்களையே இறுகப்பிடித்துக் கொள்கின்றன. நஸீமாவின் இதயம், இதற்கு விதிவிலக்காகிட முடியவில்லை .... கத்தியைச் சுண்டியிழுத்ததால், இரத்தம் பீறிட்டடித்தது. அவளுடைய உள்ளம் தள்ளாடியது. கத்தியிலிருந்து சொட்டிக் கொண்டிருக்கும் இரத்தத் துளிகளைக் கவனித்தாள். ஒவ்வொரு துளியிலும் ஒவ்வோர் காட்சிகள் நடனமாடின. முதல் துளியைப் பார்த்தாள். கோவலனின் அழகு மார்பிலே, கண்ணகி இறுமாந்து கிடக்கின்றாள். இரண்டாவது துளியைப் பார்த்தாள். அமராவதியின் கற்கண்டுக் கன்னத்தை அம்பிகாபதியின் தளிர்க்கரம் வருடிக் கொண்டிருக்கின்றது.

மூன்றாவது துளியைப் பார்த்தாள். லைலாவின் நுதலிலே மஜ்னுவின் அதரங்கள் இன்ப முத்திரையிடுகின்றன. நான்காவது துளியைப் பார்த்தாள். சாஜகானின் இதயத்திற்குள், மும்தாஜ் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருக்கிறாள்! ஐந்தாவது துளியை நஸீமா நன்றாகக் கவனிக்கவில்லை . ஒரு மரக்கட்டையில் அழகு யுவதி சாய்ந்து கொண்டிருக்கிறாள்!

நஸீமா சிறிதும் தாமதிக்கவில்லை. கத்தி முனையைத் தன் மார்புக்குத் திருப்பிக் கொண்டாள். அவளுடைய இன்ப மார்பிலே, இரத்தக் கேணி முளைத்தது. சாட்சிக் கூண்டிலே றாமல், எந்த நீதிபதிக்கும் தொந்தரவு கொடுக்காமல் தன் வாழ்க்கையைத் தானே முடிவு செய்துவிட்டாள். தனது இன்ப இரவை மகத்தான சமாதியில் புதைத்து விட்டாள் ! அதில் அவ ளுக்கு எவ்வளவோ ஆனந்தம்.

"நஸீமா சதிகாரி. கொண்டவனைக் கொன்ற பாதகி" என்றெல்லாம் சமூகம் பேசுகிறது. உண்மையில் இந்த வசவுக்கெல்லாம் காரணம் நஸீமாவா அல்லது நஸீமாவின் பணக்கார உலகமா என்பதை யார் சிந்திக்கப் போகின்றனர்.

பாரதி

S.K. ராஜு[6]

புனை கதை ஆசிரியர்களுள் ஒருவரான S.Kராஜூ மட்டக்களப்பு மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதியில் சிறுகதைகளை எழுதியவர். எளிமையும் இனிமையும் கொண்ட இவர் சிறுகதைகள் மென்னுணர்வுத் தளத்தில் கட்டுண் டவை. ராஜூ என்ற பெயரிலும் பாரதியில் சிறுகதைகளை எழுதியவர். இவர் பாரதியில் எழுதிய ‘மங்கிய வெளிச்சம்’ சிறுகதைக்கு ஊடாக அறியப்பட்டவர்.

- மங்கிய வெளிச்சம்
- பாவ மன்னிப்பு

மங்கிய வெளிச்சம்

S.K. ராஜ்[6]

பொட்டிட்ட நெற்றியுடனும் பூச்சூடிய கூந்தலுடனும் அச்சௌந்தர்ய வடிவைக் காணும் போதெல்லாம் என் உள்ளம் மகிழும். ஆம். அது என் சுகிருடைய சௌந்தர்ய வடிவம் தான்.

சுகிர்தம் பன்னிரண்டு, பதின்மூன்று வயது மதிக்கக் கூடியவள். அவளது வீடு என் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது. நான் அப்போது எங்கள் ஊர் பாடசாலையில் எஸ்.எஸ்.சி வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தேன். பாடசாலை இறுதித் தேர்வுப் பரீட்சைக்கு இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் மாத்திரம் இருந்தன. எப்படியும் பாஸ் பண்ணிவிட வேண்டுமென்று கவனமாகப் படிப்பதில் ஈடுபட்டேன். இடையிடையே இந்நாட்களில் குறுக்கிட்டாள் என் சுகிர்.

நீங்கள் இந்த இரண்டு கணக்கையும் போட்டுக் கொடுங்கள். நான் இரண்டு மூன்று தடவை போட்டுப் பார்த்தேன் சரியாக வரவில்லை என்று கூறிக்கொண்டே என்னிடம் வருவாள். அண்டை வீடாய் இருந்தபடியால் என் வீட்டாரும் அவள் வீட்டாரும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். இதனால் அவள் என் வீட்டிற்கு அடிக்கடி

வருவதுண்டு. சில சமயம் நான் படித்துக்கொண்டிருக்கும் போது என் அருகில் வந்து உட்கார்ந்து கொள்வாள். அவளது சடைப்பின்னல் என் மடியில் விழும். நான் படிக்கும் புஸ்தகங்களை வேடிக்கையாய்ப் பறிப்பாள், உனக்கு வேறு வேலையே இல்லையா போ என்று அவளது மெல்லிய றோசாக் கன்னங்களில் லேசாகத் தட்டுவேன்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் பொழுது முழுவதும் என் படிப்பறையிலே கழிப்பாள். வீட்டாரின் ஒப்புக்கு இரண்டு மூன்று புஷ்தகங்களைக் கொண்டு வருவாள். ஆனால் புஸ்தகங்கள் திறந்தபடியே இருக்கும் அவள் நளினப் பேச்சு மட்டும் நடந்தபடி இருக்கும். உங்கள் கையைக் கொஞ்சம் நீட்டுங்கள் என்பாள். நான் நீட்டுவேன், அதில் அவள் பெயரை வரைந்து விடுவாள். என் எழுத்து எப்படி இருக்கிறது, ஒரு கதை சொல்லுங்கள் என்பாள். தினம் காலையில் எழும்புவது, குளிப்பது, சாப்பிடுவது, பாடசாலை செல்வது, அத்துடன் சுகிருக்குக் கணக்குப் போட்டுக் கொடுப்பது இதுதான் என் நாளாந்த கடமையாய் இருந்தது.

சுகிர் யாரென்று உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவில்லை. அவள் புதிதாக எங்கள் கிராமத்திற் கணித்தாய் உள்ள பட்டணத்திற்கு ஓவசியராய் வந்துள்ளவரது ஏக புதல்வி பட்டணத்தில் வாடகை வீடு கிடைப்பது துலபமாய் இருந்தபடியால் அவர் கிராமத்திலே வீடு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டார்.. நிரம்பச் சொத்துள்ளவர்கள் என்று கூறினால் மிகையாகாது. தந்தைக்கும் தாய்க்கும் அவள் ஒரே பெண்ணாய் இருந்தபடியால் அவர்களது உயிர்நிலையாகவே காணப்பட்டாள் சுகிர். சுகிர்தம் எனும் அவளது பெயரை அன்பின் நிமித்தம் சுகிர் என்றே அழைந்து வந்தனர். ஆகவே அவளை எல்லோரும் சுகிர் என்றே அழைத்து வந்தனர். அப்போது அவள் எங்கள் பகுதியில் இருந்த பெண் பாடசாலையில் ஆறாவது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தாள்.

காலம் காற்றிலும் கடுவேகமாய்ச் செல்கின்றதல்லவா? நாம் ஒவ்வொருவரும் அதன் இழுப்புத் துடிப்புகட்கு விட்டுக் கொடுத்துத்தானேயாக வேண்டும். காலப்புயல் அடுக்கிய பக்கந்தானே வாழ்க்கைப் படகு திரும்புகின்றது. எனது எஸ். எஸ்.சி பரீட்சை முடிவுற்றதின் நிமித்தம் என் பெற்றோர் என்னை ஆங்கில பாடசாலையில் சிறிது காலம் படிக்கும்படி வற்புறுத்தினர். நானும் அதை சிரமேற்கொண்டேன். ஆனால் சுகிர் இப்போதெல்லாம் என் பக்கம் வருவதில்லை. பீர்க்கக் கொடியும் பெண் கொடியும் ஒன்றென்பார்கள். பிறைமதி பூரண சந்திரனாயிற்று. முன்பெல்லாம் நிலத்தில் தாவிக்குதித்த அவள் பாதங்கள் தற்போது பூமியை அடி மேல் அடிவைத்து அளந்து செல்கின்றன. மண்வீடு கட்டி உடைத்த அவள் கரங்கள் மலர் மாலை தொடுக்கின்றன. அவள் உலக அனுபவ அறிவில் வளர்ச்சியடைந்தது போல் அவள் அவயவங்களும் வளர்ச்சியடைந்தன. சுருங்கக்கூறின் அவள் யுவதியானாள்.

முன்பெல்லாம் பாடசாலை சென்று வீட்டிற்கு வந்து கொண்டிருந்த சுகிர் தற்போது சனி ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் தன் வீட்டிற்கு வருவதில்லை. நான் படிக்கும் ஆங்கில பாடசாலையும், அவளது பெண் பாடசாலையும் சமீபத்தில் இருந்தபடியால் நான் அடிக்கடி அவளை சந்திக்க நேரிடும். சந்தித்தாலும் ஒன்றும் வாய் பேசமாட்டாது. ஆனால் அவளது கண்கள் மாத்திரம் மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியாத நயன பாஷையில் ஏதோ எல்லாம் பேசிக்கொள்ளும். பெண்களின் கண்கள் வாழ்வின் கலைக்கூட்டம் வா அதில் இருந்து படிக்கும் அறிவினை எந்த ஆசிரியரிடமும் அறிந்து கொள்ள முடியாது என்று ஓர் ஆங்கில ஆசிரியர்

கூறுவது போல நான் அவளது கண்களில் இருந்து படித்த பாடங்கள் காவியத்தில் அடங்கா என்றே கூறிவிடலாம்.

அவளைக் கண்டால் முன்பு உலகமே விளங்காத நிலையில் இருந்த என் மனம் தற்போது வருங்காலத்தையிட்டு கற்பனை பண்ணும். அவளது நடையில் உள்ள தாளம் என் நரம்புகட்கு முறுக்கேற்றும். அவளது அலை போல் சுருண்ட முறுக்கிவிடப்பட்ட கூந்தல் காற்றில் அசைந்தால் என் இதயம் பலவாறுவசைந்து சிந்தித்துக் கொண்டேயிருக்கும்.

அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நிம்மதியாய் இருந்தேன். சுகிர்தத்தின் வீட்டில் இருந்து அழைப்பு வந்திருந்தது. என் பெற்றோரிடம் கூறிவிட்டு அவள் வீடு சென்றேன். அவள் தகப்பன் வாருங்கள் தம்பி என்று கொண்டே என்னை வரவேற்றார். அப்போ சுகிர சமீபத்தில் நின்றாள். சுகிரின் தகப்பன் என்னை விளித்து ஒரு உதவி செய்ய வேண்டும் என்றார். நான் என்ன என்பதற்கு வாயெடுக்கு முன்பே சுகிர கடுதாசிகளையும் கலர்ப்பென்சில்களையும் மேசைமீது கொண்டு வந்து வைத்து படம் என்று உதடசையாத பதிலாய்ப் பேசினாள். நான் ஒப்புக் கொண்டேன். நான் படம் கீறி முடிக்கும் முன்னே சுகிர் தன் உளக்கருத்தை ஒருவாறு தெரவித்தாள். நான் உணர்ந்து கொண்டேன். தற்போது எல்லாம் சுகிரின் மனக்கருத்து எனக்கு ஒருவாறு புலப்பட்டு விட்டது. இடையிடையே சுகிர் வரைந்த சில கடிதங்கள் எனக்கு கிடைக்கும். அக்கடிதங்களில் அவள் மன நிலையை அப்படியே வரைந்திருப்பாள். நான் அவற்றைப் பார்த்து மனம் பூரிப்பேன். சில உதவிகள்செய்து தரும்படியும் கேட்பாள். நானும் மறுக்காது அவற்றையெல்லாம் உடனுக்குடன் செய்து கொடுப்பேன். சனி ஞாயிற்றுக் கிழமை களில் வீடு வந்து நிற்பாளேயானால் சந்தர்ப்பம் பார்த்து இருவரும் அவள் வீட்டிற்கணித் தாயுள்ள புளிய மரத்தடியில் சந்தித்துக்கொள்வோம். எங்கள் சந்திப்பின் போது எங்கள் வருங் காலத்தையிட்டுப் பலவாறு பேசிக்கொள்வோம். நாணம் எனும் திரைமறைவில் இளமையின் மிதமிஞ்சிய உணர்ச்சியினால் இளம் காதலர்களின் சந்திப்புத்தான் பேரின்பம் என்பார்கள். ஆம் என்னைப் பொறுத்தமட்டிலும் எங்கள் புளியமரத்தடிச் சந்திப்பைப் போன்ற வேறொரு இன்பம் உண்டா என்று கேட்டால் இல்லை என்றே கூறுவேன்.

இப்படியே எங்கள் வாழ்க்கைப் படகு நகர்ந்துகொண்டிருந்தது. நான் பாடசாலை செல்லும் போதும் வரும் போதும் அவள் படிக்கும் பாடசாலை (கொன்வன்ற்) வாசலில் அவ ளைக் காணாவிடில் எனக்கு உலகம் சூன்யமாய் இருக்கும். அன்பாற்றினில் இன்ப ஓடம் விட்டுக்கொண்டிருந்த எங்கள் வாழ்க் கையில் கொடிய சூறாவளி அடிக்க ஆரம்பித்தது.

அன்று சனிக்கிழமை பிற்பகல் வழக்கம் போல் புளிய மரத்தடியில் சுகிரைச் சந்தித் தேன். முழு நிலாவாக இருந்த அவள் முகத்தில் வேதனை மேலும் படர்ந்திருந்தது, கண்களில் நீர் கலங்கியிருந்தது. எனது மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மலைத் தொடர்ந்தாள். மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தினேன். சோபை இழந்திருந்த அவள் முகம் வாடித் துவண்ட மலர் போல் காட்சியளித்தது. கன்னங்களின் வழியே வடிந்த கண்ணீர் அவள் அழுவதற்குச் சாட்சி கூறியது. நான் மெல்லிய குரலில் சுகிர் ஏன் அழுகிறாய் என்றேன். என் தகப்பனார்க்கு மாறுதல் என்று கொண்டே அழுதாள். அதைக் கேட்டதும் எனக்கு உலகமே இருண்டது. நாம் நினைத்தபடி எதுவும் நடந்தால் கடவுள் ஆடிக்காற்று இலவம் பஞ்சு அல்லவா? கவலையை விடு , காலம் மாறும் என்றேன். அவள் அழுகையை விட்டபாடில்லை.

என் வாழ்க்கையை மங்கிய வெளிச்சமாக்க மாட்டீர்கள் அல்லவா என்றாள். நான் உன்னை மணந்தால் மணப்பேன் அன்றி எனக்கு விவாகமே வேண்டாம் என்று உறுதி கொடுத்து அவளை வீட்டுக்கனுப்பிவிட்டேன்.

இரண்டொரு தினங்களில் சுகிருடையை குடும்பம் எங்கள் கிராமத்தை விட்டகன்றது. எனக்கு ஒன்றிலும் மனம் ஓடவில்லை. நிர்மலமான ஆகாயத்தில் கார்மேகம் படர்ந்தது போல் என் உள்ளத்திலும் கவலை படிந்தது. இரவில் மென்மலர்ப் படுக்கை கூட எனக்கு முள்ளாகத்தான் தோன்றியது. அந்த நாட்களில் எனது எஸ்.எஸ்.சீ பரீட்சை முடிவு நன் முடிவாக வந்தது. ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை எடுத்து விட்டு வீட்டில் இருந்தேன். கிராமத்தில் பொழுது போவது கஷ்டமாய் இருந்தபடியால் எனது தமையன் கொழும்பில் தபால் ஆபீஸில் குமாஸ்தாவாக இருந்தார். சிறிது காலம் அங்கே சென்றிருந்தேன். அப்போதெல்லாம் சுகிர் அடிக்கடி தன்மன நிலையை தளிர்க் கரத்தினால் வரைந்து கொண்டேயிருந்தாள்.

இப்படியே தேதிகள் கழிந்தன. நாட்கள் மறைந்தன. மாதங்கள் உருண்டோடின. வருட மலரில் நான்கு இதழ்கள் உதிர்ந்துவிட்டன. நாம் ஆசிரிய கலாசாலை பயிற்சியை முடித்து விட்டு அரசியல் காட்டிலே உத்தியோக வேட்டையில் ஈடுபட்டிருந்தேன். தற்போதெல்லாம் சுகிரது கடிதங்கள் கிடைப்பதில்லை. அவள் நிலையெப்படி என்பதையும் பற்றி எனக்கும் ஒன்றும் தெரியாது. எனது உத்தியோக வேட்டையின் பயனாய் எனக்கு கண்டிப் பகுதியில் ஓர் அரசினர் பாடசாலையில் உத்தியோகம் கிடைத்தது. நான் தற்போது பழைய மாணவனாய் இருந்த ராஜு அல்ல. ஆசிரியர் ராஜு ஆக மாறிவிட்டேன். கடமையுண்டு, நான் உண்டு என்று நாட்களைக் கழித்துக் கொண்டே இருந்தேன்.

நான் வசித்த வீட்டிற்கு எதிர்வீட்டில் சிறிது நாட்களில் ஓர் குடும்பம் புதிதாய் வந்திருந்தது. வந்திருந்தவர். ஏதோ தந்தி இலக்காவில் இன்ஸ்பெக்டர் என்று அடுத்துள்ளவர்கள் பேசியது என் காதிலும் நுழைந்திருந்தது. அவர் புதிதாய் குடியேறியவர். ஆகையால் எனக்கும் அவருக்கும் பேச்சே கிடையாது. ஆனால் சிலசமயம் அவர் மனைவியைக் கண்டுகொள்வேன். அவளைக் கண்டால் என்மனம் சுகிரையிட்டுச் சிந்திக்கும். அவள் பழைய சுகிரையே ஒத்திருந்தாள். முத்துப்பதிந்த மென்முறுவல். அதிலே மயங்கச் செய்யும் காந்த இழைவு, வேல்விழி, தளர்மேனி அதில் பருவ வளர்ச்சியின் பூரித்த அங்கங்கள் இவைகள் யாவும் சேரந்து அவள் சுகிரையே ஒத்திருந்தாள். ஆனால் எனக்குச் சந்தேகந்தான். சுகிர் என்றால் என்னை மதித்திருப்பாளே! அல்ல, அவள் சுகிர் அல்ல... இல்லை அவள்தான். அப்படியே என்மனம் குரங்காட்டம் ஆடிக்கொண்டிருந்தது. என் சந்தேகம் தீர்ந்தது. அவர்கள் வேலைக்காரப்பையனின் உதவியால்.

ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் வழக்கமாக சினிமா பார்க்கப் போவதுண்டு. அன்று படம் பார்க்க என் மனம் நாடவில்லை. மணி ஐந்திற்கெல்லாம் அவள் கணவன் வீட்டைவிட்டு உலாத்தலுக்கு வெளிக்கிட்டார். சுகிர் வாசற்படியில் வந்து நின்று எனக்கு தரிசனம் தந்தாள். அவளைக் கண்டதும் என் மனம் என் உளச்சந்தேகம் அடியோடு மறைந்துவிட்டது. அன்று அவள் ஆடம்பரமற்ற வெண்மை நிறப் புடவை அணிந்திருந்தாள். சிறிது நேரத்தில் அவள் மறைந்தாள். வேலைக்காரப் பையன் என்னை அழைத்தான். என் மனம் பலவாறு சிந்தித்தபடியே சென்றது. வீட்டினுள் சென்றதும் அவள் என்னை வாருங்கள் என்று அழைத்து உபசரித்

தாள். நானும் அமர்ந்தேன். என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும் என்றே கதையை ஆரம்பித்தாள். எதற்காக மன்னிப்பு என்றேன். இன்று வரையும் தங்களை அறிந்திருந்தும் வாழா இருந்ததற்காய் என்றாள். அதையிட்டுப் பரவாய் இல்லை சுகிர் என்றேன். எனக்குப் பழைய ஞாபகங்கள் - ஒன்றன் பின் ஒன்றாய் திரைப்படம் போல் ஓடின.

அவள் மீண்டும் தொடர்ந்து தன் வாழ்க்கை சரிதையைக் கூறத் தொடங்கினாள். பேசிக்கொண்டேயிருக்கும் போது அவளது முக கமலம் உலர்ந்து இனிமையற்றுக் காணப் பட்டது. மலர்ந்த பெரிய கண்கள் மங்கிக் காணப்பட்டன. திடீரென்று அவள் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீரைக் கொட்டின. உடல் நடுங்கியது. அவள் பேசிய பேச்சில் இருந்து அவள் கணவன் குடிகாரன் என்பதையும் அவளைக் கஷ்டங்களுக்குட்படுத்துகின்றான் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

அவள் பேச்சை மீண்டும் கேட்க என் மனம் விரும்பவில்லை. என் செய்யலாம். சுகிர் தடாகத்தில் தாண்டவமாட வேண்டிய செந்தாமரை: "நீ பாலைவனத்தில் பதறிக்கொண்டிருக் கின்றாய். உனது வாழ்க்கை இப்படி மங்கிய வெளிச்சமாகும் என்று நான் எண்ணவில்லை" யென்றேன்.அவள் குமுறிக் கொண்டே "நான் இனி மங்கிய வெளிச்சம்தான்" என்றாள். அப் போது வேலைக்காரப் பையன் கொண்டு வைத்த பிரகாசமுள்ள லாம்பு அறையைப் பிரகாசிக் கச் செய்ததேயன்றி. என் உள்ளத்தையோ சுகிர் உள்ளத்தையோ பிரகாசிக்கச் செய்ய வில்லை. நான் விடைபெற்றுக் கொண்டு என் வீட்டையடைந்தேன்.

பாரதி

பாவ மன்னிப்பு

S.K. ராஜ்[6]

அந்தி சிவந்து அழகைக் கக்கிக் கொண்டிருந்தது. அங்கும் இங்கும் மலர்கள் விரிவதும், குவிவதும் இயற்கை அன்னையின் விசித்திரத்தை நினைவூட்டியது. ரீங்காரம் செய்துகொண்டே வண்டுகள், மலருக்கு மலர் தாவி மதுவைப் பருகிப் போட்டியிட்டுக் கொண்டிருந்தன. "சுசீலா" மடியிலிருந்த அவளின் ஆறுமாதக் குழந்தை அவ்வண்டுகளைத் தன்னுடன் விளையாட வரும்படி அழைப்பது போல் கைகளை அசைத்து மழலை பேசியது. அடிக்கடி உன்னி அன்னையின் அரவணைப்பை மீறிக்கொண்டிருந்தது. அழகில் லயித்துக்கொண்டிருந்த சுசீலாவின் மனம் திடீர் என்று ஏதோ பலவற்றையிட்டு எண்ணி எண்ணி ஏங்கத்தொடங்கியது. மனத்திரையில் அவளின் பழைய நினைவுகளெல்லாம் தோன்றி மடிந்து கொண்டிருந்தன.

டாண்! டாண் என்ற மணி ஒலி எழுந்ததும், சுசீலா புத்தகக்கட்டுகளுடன் கல்லூரியிலிருந்து வெளியேறித் தனக்கென்று காத்துக் கொண்டிருந்த ஒற்றை மாட்டுவண்டியில் ஏறிக்கொண்டாள். ஆம் அவள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலந்தான். வண்டி நகரத் தொடங்கியதும் வழக்கம் போல் சுசீலா புத்தகப் பூங்காவுள் நுழைந்து விட்டாள்.

பழக்கமான காரியம் ஆகையால் எவ்வித சலனமும் சுசீலாவின் படிப்புக்கு இடைஞ்சலாக இருக்கவில்லை. "கல்வி என்பது புத்தகத்திலே தான் தங்கியுள்ளது" என்னும் கொள்கையின் வயப்பட்ட ஏனைச் சகோதரர்களைப் போல் சுசீலாவும் நடந்து கொண்டதில் வியப்பு எதுவுமில்லை. "பரீட்சை" என்னும் கோரத் தீ, அவர்களை அக்கொள்கைக்கும் அச்செய்கைக்கும் இருப்பிடமாக்கியது.

கால்மணி சென்றிருக்கும், ஓடிக்கொண்டிருந்த மாடு எதிரே விகார ரூபத்துடன் உறுமிக் கொண்டு வந்த லொறி ஒன்றைக் கண்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. அவ்வளவுதான் வண்டியில் கவலையீனமாக இருந்த சுசீலா தவறி விழுந்து விட்டாள். வண்டியும் பாதையை விட்டு இறங்கி விட்டது. வண்டிக்காரன் செய்வதின்னதென்று அறியாதவனாய் திக்குமுக்காடினான். கையும், காலும் படபடத்து நடுங்கிக்கொண்டிருந்தன. இதே நேரத்தில் கால் நடையாக அவ்வழியே வந்த கோபாலன் இந்த ஆபத்தான காட்சியைக் காணலுற்றான். கண்டதும் ஓடிவந்து சுசீலாவைத் தூக்கி அவளுக்கு ஒத்தாசை செய்தான். நல்ல வேளையாக அவ்வளவு காயங்கள் ஏற்படவில்லை. ஏனெனில் வண்டிப் பிடியைச் சுசீலா துப்பரவாக விட்டு விடாததால். சிதறிக் கிடந்த புத்தகங்களையெல்லாம் கோபால் மீண்டும் வண்டியுள் போட்டான். சுசீலாவையும் வண்டியில் ஏற்றிவிட்டான். இத்த னைக்கும் சுசீலா விழுந்ததனால் ஏற்பட்ட நோவைவிட, ஒரு வாலிபன் தன்னைத் தொட்டு ஒத்தாசை செய்ய நேர்ந்ததையிட்டு வெட்கப்பட்டுக்கொண்டாள். கடைசியாகக் கோபாலனுக்கு ஒரு "தாங்ஸ்" சொன்னாள். பதிலாக ஏதோ சொல்வதற்குக் கோபாலன் உன்னினான். அதற்குப் பதிலாக அவர்களிருவரதும் மோகனப் புன்னகை இடையில் ஏதோ பலவற்றையிட்டுப் பேசிவிட்டது.

ஆண்டுகள் சில நகர்ந்து விட்டன. கோபாலனுக்கும் சுசீலாவுக்கும் இடையில் ஏற்பட்ட புன்னகை பல நாடகங்களை உண்டாக்கிப் பின் காதலாக மாறிவிட்டது. சுசீலாவும் படிப்பை முடித்துவிட்டாள். கோபாலனும் கல்லூரிப் படிப்பை முடித்து ஏற்கனவே குமாஸ்தாவாக வேலை செய்து கொண்டிருந்தான். குமாஸ்தா வேலுப்பிள்ளையின் மகள் சுசீலாவை மணந்து கொள்வதில் தனக்கு எவ்வித ஈனமும், குறைவும் வரப் போகாததால் அவளின் காதலை உயிர்க் காதலாகவே, ஏற்றுக்கொண்டிருந்தான். காலாகாலத்தில் ஏற்படும் சந்திப்புகளினாலும், கடிதங்களினாலும் அவர்களின் காதல் செடி கந்து கவருடன் செழித்து வளர்ந்து கொண்டே வந்தது.

கோபாலன் கடமையாற்றிக் கொண்டிருந்த காரியாலயத்தில் தலைவராக ஒருவர் இருந்தார். தலைவரென்றால் தலைவரேதான். அத்தனை சர்வாதிகாரமும் காட்டிக் கொண்டிருந்த தலைவரின் பெயர் ராமநாதன். குமாஸ்தாக்கள் அவரை ஹிட்லரின் அவதாரமென்று கூறியதில் கற்பனை எதுவுமிருக்கவில்லை. ஆனால் ஒன்று, ராமநாதனை ஹிட்லரின் அவதாரம் என்று கூறுவதிலும், ஹிட்லரின் அவதாரமாக மாறிவிட்டார் என்று கூறுவது தான் பொருத்தமானதாகும்.

கோபாலனுடன் அன்னியோன்யமான முறையில் கடமைகளை நடத்திக்கொண்டும், நல்லவர் என்று பெயர் எடுத்துக் கொண்டுமிருந்த ராமநாதன் நாளா வட்டத்தில் ஏதோ மன மாறுதல் கொண்டவன் போல் தோற்றலானார். கோபாலனிடம் எடுத்ததற்கெல்லாம் எரிந்து

விழத் தொடங்கினார். கடமைகளில் விசித்திரமான பிழைகளையெல்லாம் கற்பிக்கத் தொடங் கினார். துரும்பான தவறுகளையெல்லாம் தூணாகச் சித்தரித்தார். காரணம் தெரியாத கோபா லனும் சற்றுத் தயங்கிக் கொண்டே கடமைகளில் கண்ணுங் கருத்துமாக நடக்கத் தொடங் கினான்.

ஒரு நாள் மணி பத்து இருக்கும். குமாஸ்தாக்கள் தத்தம் கடமைகளில் கவனத்தை ஓட் டிக்கொண்டிருந்தனர். அந்த நேரம் தடார் என்ற ஒரு சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார்கள். கணக்கை ஒப்புவித்துக் கொண்டிருந்த கோபாலனின் முகத்தில் கணக்குப் புத்தகம் முத்தம் கொடுத்து விழுந்து கொண்டிருந்தது. என்ன அத்தனை கோபம், ராமநாதனுக்கு ஏற்பட்டதா? அப்படி ஏற்படத்தான் நடந்த கோளாறு யாது? பூனையைப் போலிருந்து புலி போல் பாய்கிறாரே என்றெல்லாம் பல கேள்விகளைத் தங்களுக்குள்ளே கேட்டுக் கொண்டார்கள். கோபாலன் முக வாட்டத்துடனும் பொறுமையுடனும் தனது மேசைக்கு மீண்டு விட்டான். ராமநாதன் அவர்க ளுக்கு இந்த அதிகாரப் பித்து ஏறியதையிட்டு குமாஸ்தாக்கள், ஆராய்ச்சி நடத்துவதில் தாமதம் செய்யவில்லை. ஆராய்ச்சியின் பயனும் விரைவில் வெளியாயிற்று.

பாவம் அதற்காக கோபாலனை நெருக்கி என்ன பயன். சுசீலாவின் தந்தையாருக்கும் அதே காரியாலயத்தில்தான் குமாஸ்தா வேலை. ராமனாதனுடன் அவருக்கு நல்ல பரிச்சய முண்டு. தாரமிழந்து போயிருக்கும் தனது தலைவன் ராமநாதனுடைய வேண்டுகோட்படி தனது மகளைக் கொடுப்பதாக வாக்குப் பண்ணியிருந்தார். ஆகையால் ராமநாதனவர்கள் மனப்பால் குடித்துக் கொண்டிருந்த எண்ணம் அத்தனைக்கும், கோபாலன் முட்டுக்கட்டை யாக இருந்ததில் ஆச்சரியமில்லைதானே. கோபாலன் - சுசீலா தொடர்பை, ராமநாதன் அவர்கள் அறிந்து கொண்டார்கள். இதை அறிந்த நாள் தொட்டுத்தான், ராமநாதனவர்களுக்கு, கோபாலன் கண்ணிலிட்ட கந்தலாக மாறினான். நாளடைவில் விசயம் எங்கும் பரந்து விட்டது. கோபாலன் - ராமநாதன் பகையும் வளரத் தொடங்கிவிட்டது. பொருளாசையாலும், உத்தி யோக மோகத்தாலும் பிணைக்கப்பட்ட சுசீலாவின் தந்தை, ராமநாதனையே சரணடைந் திருந்தார். சுசீலாவுக்கு இவ் விசயம் எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றியது போலாயிற்று.

ராமநாதனுக்கு எத்தனை எத்தனையோ எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. அப்படிச் செய்யலாமா? இப்படிச் செய்யலாமா? என்றெல்லாம் பல மானதக் கோட்டைகளைச் சிருட்டி செய்தார். கடைசியாக கடைசியாக கோபாலனை இன்னும், இங்கு வைத்துக் கொண் டிருந்தால் புத்தியாகாது என்ற முடிவை அடைந்தார். அவ்வளவுதான். பல மைல்களுக்கு அப்பாலுள்ள மற்றுமோர் காரியாலயத்திற்கு மாறும்படி உத்தரவு பிறந்து விட்டது. வேறு வழியற்ற கோபாலனும் புறப்படச் சித்தமாகிவிட்டான்.

ராமநாதன் கட்டிய கற்பனைக் கோட்டைகளெல்லாம் இப்படிச் சிதையுமென்று யாரும் எண்ணியிருக்கவில்லை. காலையானதும் கோபாலன் போய்விட்ட செய்தி ஊரெங்கும் பரவியது மாத்திரமல்லாமல் அப்படியே குலுக்கியும் விட்டது. ராமநாதன் அவர்களை, உன்மத்தனாகச் செய்தது மாத்திரமல்ல உயிரையே திணறும்படி செய்தது. அதுதான் சுசீலாவைக் காணவில்லை என்னும் செய்தி.

துள்ளிக் குதித்துக்கொண்டே குமாஸ்தா வேலுப்பிள்ளையவர்கள் அங்கும் இங்கும் தந்தியடித்தும் ஆள்விட்டும் அல்லோலகல்லோலப் பட்டுக்கொண்டிருந்தார். "ஆத்திரக்கார னுக்குப் புத்தி மத்திமம்" என்பது போல குமாஸ்தா அவர்கள், மேசையின் மேல், பெரிய

எழுத்தில் விலாச மிடப்பட்டிருந்த கடிதமொன்றைக் கண்டு கொள்ளும் சக்தியற்றவரானார். சகல அலுவல்களும் ஏற்பாடான பின்னர்தான் கடிதத்தைக் காணும் பாக்கியம் பெற்றார். அந்தக் கடிதம் அவரை ஒரு குலுக்கு குலுக்கி, இனிமேல் சுசீலாவைத் தேடுவதில் பயனில்லை என்றும் எடுத்துக் காட்டியது. கோபாலனுடன் சுசீலா புறப்பட்டுச் சென்றால், அவளைத் தடுக்க யாராலும் முடியாதுதானே. தகப்பனாரின் பேரம் பேசும் பொருளா சுசீலா , அவளின் உணர்ச்சி வேகத்தைத் தந்தையாரின் அறியாமைக்கு அடகு வைக்க முடியுமா? உத்தியோகங்களின் உயர்வையும், பணத்தின் வீக்கத்தையும் கண்டு காதலிக்கும் காதல் உண்மைக் காதலாகாது என்பதை நிரூபித்துவிட்டாள். சுசீலா தன் தலைவனைப் பின்தொடர்ந்து விட்டாள். யார்தான் என்ன செய்யமுடியும் நடந்தது நடந்ததுதானே! என்று பெருமூச்சு ஒன்று விட்டுக் கொண்டார். வேலுப்பிள்ளை, ராமநாதன் அவர்களின் முகத்தைப் பார்ப்பதற்குக்கூட வெட்கப்பட்டுக் கொண்டார். ராமநாதனும் அணிலை ஏற விட்ட பூனை போல் ஏமாந்து ஏங்கலானார்.

கர்ப்பவதியான சுசீலாவைத் தாய் வீட்டிற்குக் கொண்டு வந்து விடுவதற்காக அன்றுதான் திரும்பி முதல் முதல் வந்திருந்தான் கோபாலன். பெற்ற குடலல்லவா? பிள்ளையைக் கண்டவுடன் குமாஸ்தா வேலுப்பிள்ளையோ யாரோ கோபங்கொள்ளவில்லை. அன்புடன் வரவேற்று ஆதரவளித்தனர். ஆனால் கோபால் நெடுநாளைக்கு நிற்க முடியவில்லை. ராம நாதனின் அக்கினி அங்கேயும் வீசிக்கொண்டிருந்தது. எடுத்த விடுதலை வருவதற்கு வருவதற்கும் போவதற்குந்தான் போதுமாகையால் கோபால் உடனே திரும்பி விட்டான். மாதங்கள் பல சுழன்றோடிவிட்டன. பிள்ளையும் பிரசவித்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அன்று போன கோபாலன் இதுவரை மீண்டபாடில்லை. விடுதலை என்பது ராமநாதன் கடாட்சத்தால் முயற்கொம்பாகிக்கொண்டே வந்தது.

எப்போ வருவார்? நாம் செய்த பாவங்கட்கு மன்னிப்பு இல்லையா? என்றுதான், அன்று அந்திப் பொழுதில் அவளின் சிந்தனை அறுதியிட்டுக் கொண்டிருந்தது. கண்கள் கலங்கி நீரைத் துளித்தன. இதே நேரத்தில் ஒருவித கலகலப்பு அவளின் சிந்தனையைச் சிதைத்தது. ஏதோ கனவுலோகத்திலிருந்து திரும்பியவள் போல் கண்களை அகல விரித்துக் குழந்தையை நோக்கினாள். குழந்தையின் கையில் ஒரு "கிலுக்கி" தென்பட்டது. அதிபயமும், அச்சமும் கொண்டவளாய்த் திடீரென்று திரும்பினாள். அவளின் கண்களையே நம்பமுடியவில்லை. கோபாலன் பலவித பொருளுடன் நின்றுகொண்டிருந்தான். என்ன செய்வதென்றே அவளுக்குத் தோன்றவில்லை. இன்பத்தால் பூரித்த அவர்கள் உடலங்கள் ஒன்றையொன்று அரவணைத்துக் கொண்டன. சுகமா? என்று கோபாலன் கேட்ட கேள்விக்கு, எப்படி விடுதலை பெற்றீர்கள் என்று, மற்றுமோர் கேள்வியைப் போட்டாள் சுசீலா - குழந்தையின் உச்சியை மோந்து அணைத்த மாதிரியே - இனி நமக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது இதோ பார் என்று ஒரு கடிதத்தை நீட்டினான் கோபாலன். அவசரம் அவசரமாகப் பிரித்து வாசித்தாள்.

அன்புள்ள

கோபால்,

நான் செய்த பிழை அத்தனையையும் மன்னித்துக்கொள். நீ போன நாள் தொட்டு என் காரியாலய வேலைகளெல்லாம் தலைகீழாய்விட்டது. உன்னுடைய இடத்திற்கு இத்துடன் பத்துப்பேர் வந்து கடமையாற்றிவிட்டார்கள். ஆனால் நிலைத்தவர் எவருமில்லை. என்ன செய்யலாம், என் அதிர்ஷ்டத்திற்கு உன்னைப் பகைத்து யாது பயன், பழைய செய்திகள்

யாவற்றையும் மறந்து விடு. மீண்டும் உம்மை இந்த மாதம் 1ஆம் திகதியுடன் இங்கு மாற்றியி ருக்கிறேன். கடமையை ஏற்றுக்கொள்ளத் தவறமாட்டாய் என நம்புகிறேன்.

இப்படிக்கு

ராமநாதன்,

தலைவர். பாவங்கட்கு மன்னிப்பு இல்லையா? என்று ஏங்கிக் கொண்டிருந்த சுசீலா வின் காலடியில் தானாகவே "மன்னிப்பு" வந்து சேர்ந்ததென்றால் எப்படி யிருக்கும். உள்ளப் பூரிப்பினால் குழந்தையை ஒரு கிள்ளு கிள்ளிவிட்டாள்:

●

ஸ்ரீமான் இரகுநாதன் (வெண்ணிலா)

ஸ்ரீமான் இரகுநாதன் மட்டக்களப்பு பாரதி சஞ்சிகை 1949 இல் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். வெண்ணிலா என்ற புனை பெயரில் இவர் எழுதிய நடைப்பிணம் சிறுகதை சமதர்மமில்லா நாட்டில் நீதி செத்துப் போய் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து நடைபிணமாகிப் போன கோபாலனின் வாழ்வைச் சித்திரிக்கிறது.

❖ நடைப்பிணம்

நடைப்பிணம்

ஸ்ரீமான் இரகுநாதன் (வெண்ணில்லா)

"உடனே புறப்பட்டு வா" என்று அவசர அழைப்பு வந்திருந்தது. பகல் முழுதும்,மழை, வெயில், காடு, மேடு எதையும் பொருட்படுத்தாமல் சுற்றியலைந்து விட்டு சுமார் 4 மணியளவில் வீட்டிற்குள் நுழையும் போது அம்மா இந்தத்தந்தியை என் கையில் கொடுத்தாள். அப்பாதான் தந்தி அனுப்பி இருந்தார்.

கடைசி முறையாக அவர் வீட்டுக்கு வந்து போகும் போது "தம்பி! போனவுடனேயே எங்காவது கொம்பனிகளிலோ, ஸ்டோர்களிலோ ஒரு வேலை தேடிவிட்டு தந்தியனுப்புகிறேன். வந்து விடு சும்மா ஊர் சுற்றித் திரிந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. வேலை நிறுத்தங்கள். தொழிலாளர் கூட்டங்கள் இவைகளில் கலந்து கொண்டு திரிவதாகக் கேள்விப்படுகின்றேன். உனக்கே உழைக்க வழி தெரியவில்லை. அப்படியிருக்க பாட்டாளிகளுக்கு உரிமை வாங்கித்தர புறப்பட்டு விட்டாயா?" என்று என்னவெல்லாமோ விஷயங்களையெல்லாம் அடக்கி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து விட்டுப் போனார் அதன் பலன்தான் இந்தத் தந்தி அப்பாவுக்கு நான் மிகவும் மரியாதையானவன். அதனால் அவர் என்ன

பேசினாலும் பதில் சொல்வதில்லை. "ஏனப்பா படித்த வாலிபர்களுக்கு அரசியலார் உடனேயே வேலை கொடுத்தால் அவர்கள் ஏன் தொழிலாளர் கூட்டங்கள், வேலை நிறுத்தங்களில் பங்கெடுக்கப் போகிறார்கள். பங்கெடுத்துக் கொள்ள நேரங்கிடைக்குமா? அதிகமாக படித்த இளைஞர்கள் தானே இப்படிக் கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள்" என்று சொல்வதற்கு என் மனம் துடித்தது. ஆனாலும் இதயத்தினின்றும் வெளியே சத்தம் கிளம்பவில்லை .

மறுநாள் என் அம்மா, தங்கை எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு கிளம்பி னேன். அப்பாவிருக்குமிடத்திற்கும், எங்கள் வீட்டிற்கும் அதிகதூரம். ரயில் வண்டியில் தான் பிரயாணம் செய்ய வேண்டும். எங்கள் ஊரிலிருந்து 20மைல் தூரத்தில்தான் புகையிரத நிலையம் இருக்கிறது. அதற்கு பஸ் போக்குவரத்து உண்டு. பஸ், ஸ்டாண்டிலிருந்து புறப்பட்டு சுமார் இரண்டு மைல்கள் வந்திருக்கும். பஸ்ஸை மறித்து ஒரு வாலிபன் ஏறினான். வாலிபன்தான் ஆனால்..?

கிழிந்து போன ஒரு வேட்டியும், ஷேர்ட்டும் அவன் அங்கங்களை மறைத்திருந்தன. இல்லை! அந்த உடைகள் எவ்வளவோ முயன்றும் இடை இடையே உடல் தெரியத்தான் செய்தது.

ஜடை போல வளர்ந்து போன அவன் தலைமயிர் முகத்தில் விழுந்து கண்களை மறைத் துக் கொண்டிருந்தன. நாடியில் மட்டும் முளைத்துக் கொண்டிருந்த கொஞ்ச உரோமம் "லெனின் தாடியை" ஞாபகப்படுத்திற்று. இவையெல்லாம் பஸ் நின்று அவன் ஏறியதற்கிடை யில் நான் கண்டு கொண் டேன்.

என் அருகில்தான் கொஞ்ச இடம் இருந்தது. அதில் அந்த இளைஞன் மெதுவாகயிருந்து கொண்டான். உட்காரும் போதே என்னைக் கண்ட அவன் இதழ்கள் ஒரு சிறு புன்னகையை உதிர்க்க முற்பட்டாலும், ஏக்கம், துக்கம் எல்லாம் நிறைந்த ஏக பெரிய பாரம், அந்த இதழ்களை அழுத்தி நசித்து விட்டது. என்னதான் மணிக்கணக்காக மேடை மீது கால் வலிக்க நின்று நா வறள ஏழையின் பரிதாப நிலையைப் பேசினாலும், ஒரு ஏழை அருகில் உட்காரும் போது உடல் சில்லிடத்தான் செய்கிறது. காரணம், அவனோடு சேர்ந்து கிடக்கும் அழகுதான். படித்த களை வீசிய அந்த முகத்தில் எவ்வளவோ இன்னல்களுக்கிடையில் ஒரு புன்னகை தோன்றி மறைந்தது. என்னை சிந்தனாலோகத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டது. பார்த்த முகம் போலிருக்கே" என்று பஸ் முகட்டைப் பார்த்துக்கொண்டே யோசித்துக் கொண்டிருக்கும் போது "ரகு என்ன யோசிக்கிறீர்? என்னைத் தெரியவில்லையா?" என்று அவன் அமைதியாகக் கேட்ட குரல் அவன் பக்கம் திரும்பியது.

"மன்னிக்கவும், மறந்து போய்விட்டேன். அதுதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்"

"ஆமாம்; எப்படி ஞாபகம் வரும், நாங்கள் ஏழைகள் அதிலும் தாழ்த்தப்பட்டவர்கள். மேடை மீது கால் வலிக்க நின்று பேசுவது வேலையில்லாத் திண்டாட்டம் தானே"

"படித்தவன்" என்று நான் முன்பே சாடையாக எண்ணியது இப்போது நிரூபணமா யிற்று. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் என் இதயத்தை மொட்டைவாள் கொண்டு இருத்தி இருத்தி அறுப்பது போலிருந்தது. ஆனாலும் தொடர்ந்தேன். "நண்பா! உண்மை யாகவே, நான் தத்தளிக்கின்றேன். நீர் என்னைக் கிண்டல் செய்கின்றீர்"

"ரகு தெரிந்து கொள். நான் உன் பாடசாலை நண்பன் கோபாலன்" அவன் சொல்லி முடிப்பதற்குள்"கோபு! என்று அவனைக் கட்டிக் கொண்டேன். அவன் நிலை என்னைக் கதிகலங்க வைத்தது. அவனும் நானும் படிக்கும் போதே சமூகத்தின் அழுக்குகளைக் களைவதற்கு "என்னென்ன செய்ய வேண்டும்" என்று தீட்டிய திட்டங்கள்?

கோபாலன் படிப்பிலே மிகவும் சுட்டிப் பேர்வழி. இருவரும் ஐந்தாம் வகுப்பை முடித்துக்கொண்டு பிரிந்தோம் (உடல்தான் பிரிந்தது). நான் பணக்காரன். அவன் ஏழை. நான் ஆங்கிலக் கல்லூரியிலும் அவன் தமிழ்க் கல்லூரியிலுமாகச் சேர்ந்தோம். இங்கிலீஸ் படிக்க அவனிடம் பணமேது? அப்போது இலவசக் கல்வி" இல்லை. மளமள வென்று அவன் பத்தாவது வகுப்பையும் முடித்துக்கொண்டு பயிற்சிக் கலாசாலையிலும் நுழைந்து விட்டான். நான் எஸ்.எஸ்.ஸியிலிருந்தேன். கடிதப் போக்குவரத்துகள் எம்மிருவருக்குமிடையில் நடந்து கொண்டிருந்த போது இவைகளை நான் அறிந்ததுண்டு. சிலகாலமாக நான் அவனுக்கு எழுதிய கடிதங்களுக்கு பதில் வருவதில்லை . மாறி விட்டான் போலிருக்கிறது" எப்போதாவது ஒரு நாளைக்குச் சந்திக்காமல் விடுவேனா? என்று எண்ணிக்கொண்டிருந்து விட்டேன். நான் எஸ்.எஸ்.ஸியிலும் தேறிவிட்டு வேலைக்கு அலைந்து கொண்டிருக்கிறேன். இன்னும் அதற்காகத்தான் பிரயாணம்.

என் சிந்தனைகள் கலைந்து சித்தம் தெளிந்து கோபுவைப் பார்த்தபோது அவன் கண் ணீர் வடித்துக்கொண்டிருந்தான்.நான் அவனை ஆசுவாசப்படுத்தினேன். சில நிமிஷ அமை திக்குப் பின் கோபு ஏன் இந்த நிலை?" என்று நான் கேட்கும் போது என் குரல் கம்மிற்று.

கோபு!

எனக்கு நீர் ஏன் இப்போது அதிகமாகக் கடிதம் எழுதுவதில்லை . அங்குள்ள யாராவது" உமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டார்களோ? அதனால்தான் என்னை மறந்துவிட்டாயோ? என்று எண்ண வேண்டியிருக்கிறது. கவனம்! உயர்ந்த ஜாதிகள் விஷ ஜந்துக்கள்" என்று நீர் எழுதிய கடிதத்துக்குப் பிறகு என்னிடம் உம்முடைய கடிதமோ. உம்மைப்பற்றிய தகவலோ எதும் கிடைக்கவில்லை. " உயர்ந்த ஜாதிகள் விஷ ஜந்துக்கள்" என்று ஆணித்தரமாக நீர் வற்புறுத்தியது உண்மையாய் விட்டது.

தான் சொல்லப்போகும் கதைக்கு முன்னுரையாக இதை சொல்லி விட்டு நிறுத்தினான். நல்ல நாவலைப் படிக்கும் போது அடுத்த ஒற்றையை புரட்டுவதற்கு விரல்கள் துடிதுடித்துக் கொண்டிருக்குமல்லவா? அது போல அவன் வாயிலிருந்து உதிரப்போகும் ஒரு சோக ரசக் கதையைக் கேட்க என் செவிகள் துடித்தன.

"உம்" எழுந்த நாதத்தோடு எழுந்த ஒரு பெருமூச்சு விண்ணையும் மண்ணையும் தாவிற்று. அதன் முடிவோடு தொடுத்துக்கொண்டே அவன் தன் சோகக் கதையைத் தொடங்கினான்.

"கலாசாலைக்குள் நான் காலடி எடுத்து வைத்த வருஷந்தான் கனகம் வந்து சேர்ந்தாள். நான் தாழ்த்தப்பட்டவன் என்ற முறையில் எவருடனுமே அதிகமாகத் தொடர்புகளோ, கதை களோ வைத்துக் கொள்வதில்லை. கனகம் நல்ல அழகி. அவளோடு தொடர்புறுவதற்கு பல இளைஞர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தும் பலன் கிட்டாது வெட்கமுற்றனர். ஆத்திரமடைந் தவர்களுமுண்டுதான்.

என்னோடு அவள் நடந்து கொள்ளும் முறையிலிருந்து அவள் என்னை நேசிக்கிறாள் என்று தெரிந்தது. நான் அவள் எண்ணத்திற்கு இடம்கொடுக்கவில்லை. விலகிக்கொண்டிருந்தேன்.

எப்போதோ ஒரு நாள் இருவரும் தற்செயலாக ஒரு தனி அறையில் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. இரவு நேரம், சதி செய்தது. நெருப்பில் மிதித்தவன் போல திடுதிப்பென்று நடந்தேன். கோபால். இதோ என்னைப் பார் என்று சொல்லிக் கொண்டு என் கையைப் பிடித்து நிறுத்தினாள். எவ்வளவோ கெஞ்சினாள். என்னைக் கைவிடாதீர்கள் “எனது” உண்மையைச் சொல்கிறேன் . “பெண்கள் விஷயத்தில் நான் மிகவும் கோழை, ஆனாலும் நான் விட்டுக் கொடுக்கவில்லை. கனகம் நான் தாழ்த்தப்பட்டவன். எமது காதல் நிறைவேறாது. கழுகுப் பார்வையினர் கண்டால் நசித்துவிடுவர்”. “நீர் தாழ்த்தப்பட்டவரென்றுதான் நான் காதலித்தேன். எமது தூய்மையான காதலுக்கு முன்னே கழுகுப் பார்வை மங்கிவிடும்”. “தான் விரும்பி ஒரு கணவனுக்கு மாலையிட தமிழ் நங்கைகளுக்கு உரிமையில்லை.”

“அதை நான் செயலில் செய்து காட்டுவேன்.” இதை அவள் சொல்லும் போது மிகவும் உற்சாகத்தோடு சொன்னாள். ஆனால் சமூகம் அதற்கு இடம் கொடுக்குமா? எவ்வளவோ நேரம் வாக்குவாதம் நடந்தும், என் வாயிலிருந்து "நல்ல ஒரு பதிலை” அவளால் எதிர்பார்க்க முடியவில்லை . என்றாலும் கடைசியில் நான் தோற்றுவிட்டேன். அவள் இன்ப வேதனையில் விம்மும் போது, உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடும் போது நான் ஒரு மரக்கட்டையாக வல்லவா இருக்க வேண்டும்? அவளுடைய “இன்ப வேதனை” நோய்க்கு நான் அது தீர்க்கும் டாக்டராக” மாறிவிட்டேன். அவள் நெஞ்சிலிருந்து கரை புரண்டோடும் அன்பு வெள்ளம், என்னை அடித்துக்கொண்டு ஓடிற்று. கலாசாலை வாழ்க்கை காதல் வாழ்க்கையில் ஆறு மாதங்கள் ஆறு நாட்கள் போல மறைந்து விட்டன. ஒரு நாள், அதே நாள்...

நீர் எனக்கு உயர்ந்த ஜாதிகள். விஷ ஜந்துக்கள்” என்று எழுதிய கடிதத்தை இருவருமாக வாசித்துக் கொண்டிருந்தோம். உம்மைப்பற்றியெல்லாம் அவள் நன்றாகத் தெரிந்து கொண்டதும் அன்றுதான். இங்குள்ள யாராவது உமது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார்களோ” என்று நீர் எழுதியதைப் படித்து விட்டு இருவருமே” மெய்மறந்து போனோம்.

அன்றுதான் எங்கள் காதல் இன்னொருவனுக்குந் தெரிந்தது. வேண்டுமென்றே தேடித் தேடித் திரிந்த அந்தப் பொட்டுப் பூச்சியின் கண்களுக்கு நல்ல விருந்து.

கலாசாலைக் காதல் - அம்பலத்துக்கு வந்தது. அதிபருக்கும் தெரிந்தது. “ஏன் ஸார் எளிய சாதிக்கு உங்கள் கலாசாலையிலே இடமும் கொடுத்து காதலிக்கவும் இடங்கொடுக்கிறீர்களாமே” என்று யாரோ சில காலிகள் கொஞ்சம் காரசாரமாகவும் கிண்டலாகவும் கேட்கத் தொடங்கிவிட்டனர். அப்புறம் விசாரணையில்லாமலே நான் மட்டும் வெளியேற்றப்பட்டேன்.

இதையறிந்த என் தாய்-தகப்பன்தான் எப்பவோ போய்விட்டாரென்று உமக்குத் தெரியுமே. அதிபரிடம் போனாள். கும்பிட்டாள், மன்றாடினாள், கெஞ்சினாள். அழுதாள்! சீதனமின்றிக் கலியாணம் செய்ய மறுக்கும் வாலிபர்கள் நிறைந்த இந்த உலகிலே என் அரும் மகளைக் கரை சேர்க்க இந்த ஒருவனைத் தானே நம்பியிருந்தேன்” என்று ஓலமிட்டாள், பலன் கிடைக்கவில்லை.

கல்லும் கரையும், அதிபரின் மனம் கரையுமா? அன்றிலிருந்து நான் கிளம்பிவிட்டேன். ஒரு குமாஸ்தாவாகக்கூட இருக்க முடியாமலா போகப் போகிறது என்று எத்தனையோ படிகள் ஏறி இறங்கினேன். பலன் கிடைக்கவில்லை. இன்று கூட என்று அவன் முடிப்பதற்குள் கதைத்தது போதுங்க எடுங்க காசை என்று கண்டக்டர் கொஞ்சம் பரிகாசம் கலந்த குரலில் கேட்டான். இப்போது அவனைப் பரிகாசம் செய்வார்கள்தானே! கிழிந்த சட்டைப் பைக்குள்ளே கையை விட்டுத் துளாவினான் கோபால். அது கீழே போய் விட்டது" என்பதை அவன் முக மாறுதல் எடுத்துக்காட்டிற்று. "ஏனப்பா விழிக்கிறே எடுப்பா கெதியா" என்று கொஞ்சம் அதட்டி னான் கண்டக்ரர். உடனேயே நான் கண்டக்டரைப் பேசிவிட்டு இருவரின் காசையும் விட்டெ றிந்தேன். சிறிது தூரம் சென்றதும் தான் இறங்கப் போவதாக கோபாலன் பஸ்ஸை மறித்தான். அவன் இறங்கும் போது என் பார்ஸிலிருந்து ஒரு பத்து ரூபா நோட்டை எடுத்து அவன் கையில் வைக்கும் போதே கோபால் இப்போது நான் வேலைக்குத்தான் போகிறேன், போய் கடிதம் போடுகிறேன் வா. என்னோடேயே அங்கே ஏதாவது வேலை பார்க்கலாம். என்றேன். கையில் விழுந்த பணத்தை உடனேயே என் மடியில் போட்டு "வேண்டாம் ரகு எனக்கெதற்கு?" என்று சொல்வதற்குள் பஸ் கிளம்பிவிட்டது. அவன் உருவம் மறையும் மட்டும் பார்த்துக் கொண்டே வந்தேன்.

நான் போன காரியம் வெற்றி பெறவில்லை. என்னிலும் பார்க்கத் தகுதி கூடிய ஒருவர் அதைத் தட்டிக்கொண்டு போய்விட்டார். படித்தவர்களுக்கு மரியாதை கொடுக்காத ஆளவந் தார்களை திட்டிக்கொண்டு திரும்பினேன். ரயிலிருந்து இறங்கிப் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்ததும் கோபுவின் எண்ணம் உண்டாயிற்று. சிந்தனைச் செறிவின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்த என்னை தெருவில் நின்ற ஒரு கூட்டம் கவர்ந்தது. தெருக் கூட்டம் கவனித்துக் கொண்டிருந்த திக்கை நோக்கி என் கவனத்தைத் திருப்பினேன்.

ஐயோ! என்ன அக்கிரமம் என் கோபால் உலகப் பற்றுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டு நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். இல்லை! அவன் உடலம் மரக்கிளையொன்றில் தொங்கிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் கழிந்து, அதே இடத்தில் இன்னொரு செயல் இடம் பெறுவதை சினிமாத் திரை யில் நாம் கண்டிருக்கிறோம். அதே போல அன்று அவன் "நடைப்பிணம்" இன்றைய தினம் இந்தக் காட்சி என் நெஞ்சில் பொறிக்கப்பட்டு விட்டது. என்றும் அழியாது.

பாரதி
மட்டக்களப்பு

N. சின்னத்தம்பி

பாரதி சஞ்சிகையில் N.சின்னத்தம்பியின் 'வீணில் மாயாதே' சிறுகதை வெளிவந்தது. சிறுகதையில் கனாக்காட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்தவர்.

❖ வீணில் மாயாதே

வீணில் மாயாதே

N. சின்னத்தம்பி

மாயா என்பது ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதி. திடீரென்று பெருகும். அதேமாதிரி வற்றும். இந்த மர்மத்தைக் கொண்டுதான் அதை மாயா என்றனர் போலும். அந்த மாயா, மணல்களைக் கொண்டு வந்து பரப்பியிருந்தது அதன் தீரத்தில். உயர்ந்த மரங்களுக்கிடையில் அமைந்திருந்த மணல் வெளியும், சல சலவென்று தென்றலோடு கூடிய குளிர்மையும், மாயாவை அழகுபடுத்தின. மாலை நேரமாயிற்று. மரங் களுக்கிடையில் போகிறேனென்று பல்லை இழித்தது பகற்பொழுது.

வெயில் சாந்தமென்று, மந்தமாய்க் கண்ணை மூடிக்கொண்டி ருந்தது. அதை இன்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒரு நங்கை. அவள் மாயா நதிக்கரையில் அமைந்துள்ள கற்பாரில் வீற்றிருந்தாள். இளம் வயது. அழகோடு கூடிய உடல், சாந்தமான பார்வை. ஆனால் அவள் அழகுக்கும் அவள் சாயலுக்கும் வெகு தூரத்தை எடுத்துக்காட் டியது, காணப்பட்ட சில மாற்றங்கள். தலையில் சடாமுடி வைத்திருந் தாள். கழுத்தில் உத்திராட்சம், கையில் செபமாலை, நாகரிகத்தை உதறித்தள்ளிய உடை, மாய வாழ்விலே நீயேன் மயங்குகின்றாய்,

என்பதை எடுத்துரைத்தது அவள் தோற்றம். அவள் வானத்தை நோக்கி ஏதோ காணாததைக் கண்டு கொண்டிருந்தாள். சற்றுத் தூரத்தில் சில வாலிபர்கள் குதூகலமாய்ப் பேசிப் பொழுதைப் போக்கிக்கொண்டிருந்தனர். ஒரு வாலிபன் அப்பெண் சாதுவை நோக்கி வந்து கொண்டிருந்தான். கம்பீரமான தோற்றம், அழகான உடை, முகவாக்கும் அழகானதுதான். அவனைப் பார்ப்பவரெவரும் அவனை ஒரு பிரபுவின் மகனென்றே கண்ணை மூடிச் சொல்லிவிடலாம்.

பாவம், அப்படிப்பட்டவன் ஏன் அந்த உலகத்தை வெறுத்த, சாதுப் பெண்ணின் காலுக்கு மண்டியிட வேண்டும். சாந்தா! நீ என்னை மன்னித்துக் கொள். சத்தியமாக நீ என்னை மன்னித்துக்கொள். சத்தியமாக நீ என்னை மன்னித்துக்கொள், என்று அவன் கெஞ்சிக் கேட்டுக் கொண்டே அவள் பாதங்களைப் பற்றினான். சாந்தா துடித்தாள். "சிவசிவா" என்று பலமுறை கூறினாள். சுவாமி என்னைத் தீண்டாதீர்கள் என்று கூறிச் சற்று நகர்ந்து நின்றாள். அவள் மனத்திரையில் எண்ணங்கள் தொடரலாயின.அவள் வாழ்க்கையின் நிகழ்ச்சியெல்லாம் மனக்காட்சியிற் பிரதிபலித்தன. அன்றொரு நாள் சாந்தாவுக்குக் கிடைத்த கடிதமிது. இதுதான் அவள் எண்ணத்தின் ஆரம்பம். எனதாருயிர் அன்பே!

உனதாருயிர் நண்பன் உயிர்க்குயிராக எழுதுகின்றேன். நான் திடீரென்று வியாபார நோக்கமாய்த் தேசாந்திரம் போகவேண்டி ஏற்பட்டுவிட்டது. கடைசி நாளல்லவா? பேச வேண்டியவை அதிகம். என்னை எப்படியும் அந்த இடத்திற் சந்திப்பாய் காத்திருக்கிறேன், உன் அன்பான வரவை எதிர்பார்த்து.

இப்படிக்கு,
உண்மைக் காதலன்
சுந்தரராசன்.

கடிதத்தைக் கண்ட யௌவன மாது தவித்தாள். அழகுக்கழகு செய்யும் அவள் பூரண உடல் துடித்தது. மரமாய்க் காட்சியளித்த அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு வேண்டிய வேலைகளைச் செய்தாள். மருந்து முதலானவைகளைப் பக்குவமாய்க் கொடுத்தாள். தந்தையின் உடலை இழுத்து மூடினாள். எலும்புக் கூடாய்க் காட்சியளித்த அவ்வுடல் உயிர் போகுந் தறுவாயில் இயங்கிக்கொண்டிருந்தது. பாவம், ஒருபக்கம் இளம்பருவத்து முற்றிய காதல். மறு பக்கம் உயிர் முற்றாகப் பிரியாத தந்தையின் உடல், மனம் கொந்தளிக்கப் புறப்பட்டாள் அவள்.

ஆ சண்டாளி! பெற்ற தந்தையின் உயிர் உடலைவிட்டுப் பிரியப் போகின்றது. அவள் கணப்பொழுதிற் கண்ட காதலனைக் காணப் புறப்பட்டுவிட்டாள், என்று அவள் மனம் உறுத்திக் கூறியது. அலங்கோலமாய்க் கிடந்த ஓலைக் குடிசையைப் பின்வைத்து முன்னடந்தாள் அவள். கால்கள் முன்னும் பின்னும் இழுத்தன. காதல் பொல்லாதது அல்லவா? அதற்குச் சந்திரனுஞ் சலுகை செய்பவன் போல் தன் உதயகரத்தை நீட்டினான்..

மணி பன்னிரண்டு இருக்கும். உலகமே அமைதி அமைதியென்று நிசப்தமளித்தது. பேய்களுமுறங்கும் அந்த அர்த்தசாமத்தில் பூலோக கன்னிகை மாத்திரம் விழித்துக்கொண்டிருந்தாள். அவளை வானலோகச் சந்திரன் காதலித்து நட்சேத்திரப் பூங்காவில் உலவிக்கொண்டிருந்தான். மரஞ்செடி கொடிகளெல்லாம் அமைதியாய் அசைவற்று நின்றன. வானை நோக்கிய கோபுரங்கள் இரண்டு தலையை நீட்டி உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தன.

கூரிய இளமுலைகளை நீட்டிய கற்சிலைகளின் மேல்,வெண்ணிலவை ஊற்றிக்கொண்டிருந் தான் சந்திரன். அவைகளுக்கிடையில் வனதேவதை போல், மெல்ல நடந்துகொண்டிருந்தாள் அந்த நங்கை.

அப்போது விரிந்திருந்த மல்லிகை மலர்கள் ஒன்றுகூடிச் சிரித்தன. அடிபோடி காமப் பைத்தியகாரியென்று ஒரு ஆந்தை அமைதியைக் குலைத்து ஒரு தரம் அலறிற்று. அப்போது அவள் இதயம் நடுங்கி மயிரும் சிலிர்த்தது. ஆந்தை, கோட்டான், பக்கிள் என்பனவெல்லாம் யமதூதர்கள் என்ற ஊரவர்களின் சாதாரண பேச்சு அவள் தந்தையின் உயிரை ஞாபக மூட்டி ற்று, அவள் கற்சிலையொன்றிற் சாய்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். அப்போது தென்றலும் ஒருதரம் அசைந்து மறைந்தோடிற்று.

காமந்தலைக்கேறிய சுந்தரராசன் கற்சிலையை அந்த நங்கையென்று தழுவி ஏமாந்து பின் அவளை முத்தமிட்டான். அந்த முத்தத்தின் பலன் அவன் வாயிற் கண்ணீர்ச் சுவைதான் பட்டது. அவன்,கண்ணே! ஏன்? இந்தக் கோலமென்றான். காதல்! அதைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம். அப்பாவுக்குக் கடுமையான வருத்தம். நான் கெதியாகப் போகவேண்டு மென்று அவள் சுருக்கமாகக் கூறி முடித்தாள். சுந்தரராசன் சிறிது நேரத்துள் அவளை விடுவித் தான். அவள் அவன் திரும்பி வந்து தன்னை விவாகஞ் செய்வானென்று நம்பி விடுபட்ட கைதி போல் நடந்தாள். அப்போது மேகச் சிறையுள் அடைபட்டுக் கிடந்த சந்திரன் ஒய்யாரமாக வெளிவந்தான். அந்த நிலா வெளிச்சத்தில் சுடுபட்ட விட்டிற் பறவைபோற் பறந்து சென்றாள் அப்பாவிப் பெண்.

ஓடிச் சென்ற அவள் தந்தையின் உடலை முதலில் நாடினாள். அது வெறுங் கட்டையாக மாறியிருந்தது. கண் கண்ட காதலின் பலன் பெண்ணைப் பெற்ற பிதாவுக்குச் சதியா என்று கண்ணீர் சொரிந்தாள். நாட்கள் பல துன்பமாகவே கழிந்தன. சுந்தரராசனின் கடிதமாவது, அவனைப் பற்றிய வதந்தியாவது, அவளுக்கு எட்டவில்லை. தாசி, வேசியென்று ஊரார் அவளை வசைமொழி பேசினர். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், அவள் சுந்தரரா சனை நினைந்து உருகிய வண்ணமிருந்தாள்.

ஒருநாள் அவள் சுந்தரராசனுக்காகக் கோயிலில் அர்ச்சனை செய்து விட்டு, அவனைப் பற்றியும், வருங்கால வாழ்க்கையைப் பற்றியும் கற்பனைச் சித்திரம் வரைந்து கொண்டிருந் தாள். அவள் கற்பனையில் வான மண்டலத்துக்கு மேல் கோபுரமொன்றைக் கட்டி, நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையில் மாய வண்டாகப் பறந்து திரிந்தாள். வாழ்க்கைப் பூங்காவில் மலர் மணமாக மாறி மாறி வீசினாள். பெண்ணுள்ளங்களில் புகுந்து என் வாழ்க்கை புதிய வாச னையடி, என்று கூறி வந்தாள். இப்படி அவள் உள்ளத்தின் அலைகள் பெருகிக் கொண்டே யிருந்தன.

பாவம், அவள் மனம் ஓடிச் சென்ற வேகத்தைக் கலைத்தது அந்த ஊரின் தெற்குக் கோடி யில் நடைபெற்ற நாத கீதம் கூர்ந்து கவனித்தாள் அவள். மேளக் கச்சேரிகள், வாணம், வெடி என்பவற்றின் பீறிட்ட ஓசைகள் என்பனவெல்லாம் அவள் மன நிலையைக் குலைத்தன. அவள் என்ன வேடிக்கையென்று பார்ப்பதற்காக விரைந்தோடினாள். கண்டாள், கண்டந் தக்கணமே ஓவென்றலறி வீழ்ந்தாள்.

வேறொன்றுமில்லை, அவள் காதலன் சுந்தரராசன் வேறொரு பெண்ணை மணந்து, ஒய்யாரமாகப் பவனி வந்துகொண்டிருந்தான். கணப்பொழுதில் அந்தக் கோஷ்டி அவளைத் தாண்டிச் சென்றது. தெருவில் போன ஒருத்தி அவளைப் பார்த்து, அடி! நீ தெருவோடு தெருவாய்த் திரிய வேண்டியதுதான் என்று வன்மமாகப் பேசிவிட்டாள். என்ன கொடுமை, அவள் மனம் கல்லாக மாறியது. கண் திறந்து பெருகிக் கொண்டிருந்த மாயா நதியை நோக்கி விரைந்து சென்றாள். மாயாவும் அவளை ஏற்கத் தயாராக இருந்தது.

அந்திவானம் அபாயம், அபாயம் என்று எழுதிக்காட்டியது. ஆற்றின் ஓம் ஓம் என்ற இரைச்சல் வா வா என்றழைப்பது போல் இருந்தது. வேகமாய் வீசிய புயல்காற்று அவள் பிடரியைப் பிடித்துத் தள்ளிச்சென்றது. சாந்தா ஆற்றில் பாய்ந்தாள். சாந்தா, சாந்தா.

சாந்தா யாருமில்லை, உயிரை மாய்க்கத் துணிந்த இச்சண்டாளத் துறவிதான். ஆனால் சாந்தா உயிரை மாய்த்திருப்பாள். கணப்பொழுதில் அவள் மனம் மாறி விட்டது. அதை ஏன் என்றுதான் கேட்பீர்கள்.

நினையாப் பிரகாரமாய்க் கேட்கிறது. என்ன அருமையான கீதம். என்ன அருமையான குரல். மாயா நதியோரத்தில்,மரக்கிளையொன்றில் அமர்ந்த, சிறுவனொருவன் பாடுகின் றான். அவன் பாட்டின் இனிய நாதம் காற்றில் இரண்டறக்கலப்பதாயிற்று. சிறுவன் மேய்த்த பசுக்கள் கடித்த புல்லுடன் அசையாது நின்றன. கன்றுகள்தானும் விளையாட்டை நிறுத்திக் கொண்டன. காகமும் ஏறப் பழமும் விழுவது போன்ற அந்த நிகழ்ச்சி என்ன புதுமை!

கனவெனும் வாழ்வினில் கலங்கி விடாதே
காதலால் யாரையும் நம்பி மாளாதே - மனமே
ஈசன் நாமத்தைப் போற்றுவாய் தினம் போற்றுவாய்'

இதுதான் அவன் பாட்டின் சில அடிகள்.சிறுவனைப் பார்த்த அளவில் அவன் செவியேற லிற் பொறுக்கியெடுத்த அடிகள் எனலாம். இந்த அடிகள் சாந்தாவின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன போலும். அவள் சுய உணர்வு வரப் பெற்றவளானாள். யார் பாடுவது, மாடு மேய்க் கும் இடையனா? ஆம். இல்லை. மாடு மேய்க்கும் மடையனுக்கு ஏது இந்த மதிநுட்பம். ஆகா சாட்சாத் பரமேஸ்பரன்தான் என்னை நல்வழிக்குத் திருப்பியிருக்கிறார் போலும்.

சுவாமி நான் என்னை மறந்து வாழ்ந்துவிட்டேன். இன்பமே உலகமென்று அதிலே சுகிர்த்துவிட்டேன். காதலே பெரிதென்று அதைக் கங்கணமாகக் கொண்டேன். கடைசியாய் அதற்காக உயிரை விடவும் துணிந்தேன். என்ன மதியீனம். என்னை மன்னியுங்கள். இந்த அபலை உங்கள் அடிமை என்றென்றும் உங்கள் நாமத்தை உச்சரித்து, உயிர் வாழும் பாக் கியம் பெற்றேன். இதுதான் அவளின் துறவுக்கோலத்துக்கு ஆரம்பமுண்டாக்கிற்று. சிவசிவா" என்று கூறி அவள் வெளிக்கிளம்பினாள். இப்படியே அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச் சிகள், எண்ண அலைகளாகத் தோன்றிக்கொண்டிருந்தன.

இதற்கிடையில் என்னை மன்னித்துக்கொள் என்று கேட்டுக்கொண்டு நின்ற சுந்தரரா சன், சாந்தா! சத்தியமாக உன்னைக் கைவிடமாட்டேன். திரண்ட செல்வத்துடன் அரண் மனையில் வாழும் இன்ப வாழ்க்கையை அவமதிக்காதே என்று கெஞ்சிக்கொண்டே அவள் கையைப் பற்றினான். அவள் சிவசிவா என்று கூறிக்கொண்டே சுவாமி! தயவு செய்து என்னை

மன்னியுங்கள். எல்லாவற்றையும் வெறுத்துத் துறவு பூண்டஅடிமைக்கு அரண்மனை வாழ்வும் சுகபோகமும் நீக்கப்பட்டன. அந்த நாளையில் காதலைப் பெரிதாக மதித்தேன். உங்கள் செல்வத்தை மேலாக எண்ணினேன். அந்த ஆசையெல்லாம் எனக்கு மறைந்து விட்டது சுவாமி. நான் அப்போது சாந்தாவாக இருந்தேன். இப்போது இந்தச் சாந்தா என்னுடையதல்ல. இது ஈசனுக்குடையது. என்னைப் போகவிடுங்கள் சுவாமி.

சாந்தா நீ என்னை வீணே வெறுக்காதே. நான் உன்னை உண்மையாகவே காதலித்தேன். விதி என்னை வேறொருத்தியிடம் மாட்டிவிட்டது.

அவள் இப்போது இறந்தொழிந்தாள். நாம் உண்மை வாழ்வு வாழலாம் மறுக்காதே வா.

சுவாமி! விதியென்பதெல்லாம் நியாயம் கூறமுடியாதவிடத்து. எடுத்துரைக்கும் சாட்டு என்பதை நம்புங்கள். நீங்கள் விரும்பாமல் எதுவும் நடக்கமுடியுமா? பணம் பணத்தைத்தான் விரும்புகின்றது. நான் ஏழையாக இருந்தேன். நீங்கள் பணப்பேழையாக இருந்தீர்கள். உலகத்தில் செல்வர்கள் கெடுத்து வைத்த ஏழைக் கன்னிப்பெண்களின் வாழ்க்கை அதிகம் சுவாமி. ஏழைப்பெண்கள் பணத்தை விரும்பி, வாழ்க்கையைப் பிணமாக்கிக்கொள்கிறார்கள். இதைக் கண்டும் கேட்டும் அறிந்துமிருக்கிறேன் சுவாமி. ஆனால் இந்த ஏழை உங்கள் பணத்தை நம்பிக் காதல் கொண்டவளில்லை. காதல் தெய்வீகமானது. அது அழிக்க முடியாதது. பிரிக்க முடியாதது. தெய்வத் தன்மை பொருந்தியது. உண்மை வாழ்வுக்கு வழித்துணையாவது. பரலோக வாழ்க்கைக்கு வழிகாட்டுவது. சுவாமி! நீங்கள் மேற்கொண்ட காதலை நான் கைக்கொண்டவளல்ல. காதல், காதலின்றேல் சாதல். என் காதல் இறந்து விட்டது. சுவாமி அந்த மனம் இப்போது இல்லை. அது மடிந்து விட்டது. அது எப்படி உயிர் பெறும். இறந்த உயிர் மீண்டும் வருவதில்லை. அதுபோல் இழந்த காதல் மீண்டும் காதலாவதில்லை. என் காதலெல்லாம் இப்போது ஈசனிடத்தில் தான். தாங்கள் அக்காதலுக்கு உதவி செய்தீர்கள். எனக்கு வழிகாட்டினீர்கள், சுவாமி! அதற்காக அடியேன் உங்களுக்கு வணக்கம். நான் போய் வருகின்றேன். என்னை மன்னியுங்கள்.

சாந்தா! போகாதே, தயவுசெய்து கேள். நான் என்ன செய்ய வேண்டு மென்று சொல். அப்படியே செய்து வைக்கின்றேன். நீ தெய்வப்பிறவியாகி விட்டாய், நான் அதை இழந்த பாவியானேன். என்ன செய்யலாம்.

சுவாமி! எல்லாம் மனிதனைப் பொறுத்த விஷயந்தான். எடுத்ததற்கெல்லாம் விதியையும் கடவுளையும் பழி சுமத்தலாகாது. தாங்கள் தங்களை விரும்பும் ஒரு ஏழையை மணந்து கொள்ளுங்கள். காதலென்று கூறி ஏழையின் வாழ்க்கைக்குப் பாழ் செய்யும் பணக்காரப் பித்துகளுக்குப் போதனை செய்யுங்கள். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளினை ஒக்கும் எனப் பகருங்கள் என்று கூறிக்கொண்டே நகர்ந்தாள் சாந்தா. அந்த நேரம் மாலை வேளை மாறி விட்டது. வானத்தில் தாரகைகள் விசிறிக்கிடந்தன. வெண்மதி உதயமாகிக்கொண்டிருந்தான். சுந்தரராசன் வானத்தை நோக்கியவாறே நின்ற நிலையில் மரமாகக் காட்சியளித்தான்.

பாரதி - மட்டக்களப்பு

V. சந்திரசேகரம்

மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரசேகரம் பாரதி சஞ்சிகையில் தன் முதற் கதையான 'மன்னிப்பா' சிறுகதையை எழுதியவர். பொதுவுடமை சிந்தாந்தத்தில் நம்பிக்கை கொண்டவர். பாடசாலை ஆசிரியராக இருந்து அதிபராக ஓய்வு பெற்றவர்.

❖ *மன்னிப்பா*

மன்னிப்பா

V. சந்திரசேகரம்

நான் பிரின்ஸ்பல் அறையை விட்டு வெளிவந்ததைக் கண்ட சாலிஹுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவனிலும் கூடிய மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டதென்பதை அவன் உணர்ந்தால் தானே!

"என்ன குமார்? காயா? பழமா?" என்றான்." குமார் கால் வைத்தால் குதிரைக்கொம்பாகவா போய்விடும்" என்றேன். இதிலிருந்தே அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சாலிஹ் விர்ரென்று பறந்து சென்றான். அவன் போன போக்கிலேயே சரணுக்குத் தந்தி கொடுத்துவிட்டு வரத்தான் போகிறான் என்று தெரிந்து கொண்டேன். நானும் என் அறைக்குச் சென்று புதியதோர் கட்டில் கொண்டு வந்து போட்டு ஆக வேண்டிய ஒழுங்குகளைக் கவனித்தேன்.

சரண் என்பது திருகோணமலையிலுள்ள ஒரு கம்பெனிக் குமாஸ்தா. எங்களுக்குச் சற்றுப் பரிச்சயமானவர்தான். அவர் எங்களுக்கு மாற்ற லாகியிருந்தமையினால் என்னையும், சாலிஹையும் ஒரு ஜாகை பார்த்துத் தரும்படி எழுதியிருந்தார். உண்ண உணவு

கிடைத்தாலும், உறங்க வீடு கிடையாத இந்தக்காலத்தில், காலேஜ் மாணவர்களாகிய எங்க ளுக்கு வீடு தர யாரும் முன்வரவில்லை. எனவே இருவரும் செய்த யுக்திதான் காலேஜ் பிரின் ஸிபலின் உத்தரவு பெற்று எங்கள் அறையில் அவருக்கும் ஒரு இடம் கொடுப்பதெனத் தீர்மா னித்தோம். இதற் காகத்தான் நான் முதலில் பிரின்ஸிபலின் உத்தரவு பெற்றுக்கொண்டு வந்தேன்.

இடையில் சாலிஹூம் போஸ்ட் ஆபீஸிலிருந்து வந்து சேர்ந்தான். இருவரும் அறையை ஒழுங்கு செய்து வைத்து விட்டு உலாவப் புறப்பட்டோம். சரணுக்கு நாங்கள் இடங்கொடுக்கச் சம்மதித்தது அவர் ஆபீஸ் குமாஸ்தா என்பதற்கல்ல. அவர் ஒரு சிறந்த எழுத்தாளனும்கூட. பிரபல இந்தியப் பத்திரிகைகளிலும் எழுதிப் பரிசுகள் பெற்ற ஒருவர். அவர் எங்களுடனிருப்பதால் எங்களுக்கே ஒரு தனி மதிப்பு ஏற்பட்டாலும் ஏற்படலாமல்லவா? அன்றி யும் அவரது எழுத்து வன்மையும் கலையனுபவமும் எம்மைச் சார்ந்தும் நாமும் ஒரு சின்ன எழுத்தாளனாகவாவது வரமாட்டோமா? இதையெல்லாம் உத்தேசித்துத்தான் காரியத்திலி றங்கியுள் ளோம்.

அடுத்த நாள் காலை ரயிலில் சரண் வந்து சேர்ந்தார். எங்களுடன் இருக்கையும் எங்கள் ஹாஸ்டலுக்குப் பக்கத்திலுள்ள மணி ஹோட்டலிற் சாப்பாடுமாகக் காலந்தள்ளினார். அவர் சில சமயங்களில் எங்கள் கிளாஸூக்கு வருவார். "பிறீ" பீரியட்டாக இருந்தால் எல்லோரும் அவரைச்சூழ்ந்து கொள்வோம். ஏதாவது சில ருசிகர சம்பவங்களைச் சொல்வார். அதிலிருந்து அவருக்கு, பேச்சு வன்மையும் உண்டென்று உணர்ந்துகொண்டோம். எனவே, அவ்வாரம் எங்கள் காலேஜில் நடைபெறவிருந்த மதுவிலக்கு இளைஞர் மகாநாட்டிற்கு அவரையும் அழைத்தோம். அவரும் அதற்கு இணங்கினார்.

"எதிர்கால உலகத்தின் அஸ்திவாரத் தூண்களாகிய இளைஞர்களே! மது என்னும் கொடிய அரக்கனை நம் நாட்டினின்றும் விரட்ட உம் போன்ற ஏறுகளாற்தான் முடியும். நீங்கள் ஒவ்வொருவரும் முன்வந்து மது விலக்குக்காகச் சத்தியாக்கிரகம் செய்தாலன்றி நம் நாடு சுபீட்சமடையாது. மதுவிலக்குக்காக நாம் தோளோடு தோள் கோர்த்துத் தொண்டாற்ற வேண் டியது மிக மிக முக்கியமானதொன்று. வீறுபெற்று விழிப்படைந்து மதுவரக்கனை நாட்டை விட்டு ஓட்டுவோம்" என்றெல்லாம் உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றினார்.

இதனால் எங்கள் ஆசிரியர்களுக்கெல்லாம் அவரைப்பற்றி ஒரு நல்லெண்ணம் ஏற்பட்டுவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. கூட்டம் கலைந்ததும் எல்லோரும் ஹாஸ்டலுக்குப் போனோம் அங்கு சென்றதும் அவர் தனக்கு எங்கோ தேநீர் விருந்தொன்று இருப்பதாகக்கூறி வெளியே சென்றார்.

சாய்வு நாற்காலியில் இருந்தவாறே அவர் வைத்துச் சென்ற புத்தகத்தை எடுத்துப் புரட்டிக்கொண்டிருந்தேன். "என்ன குமார்? சரண் எங்கே?" என்று கேட்டவாறே உள்ளே நுழைந்தான் சாலிஹ். ஆளுக்கொரு புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தோம். "குமார்? இது என்ன?" என்று ஒரு கவரை நீட்டினான். கவரின் ஒரு மூலையில் இரகசியம்" என்று ஆங்கி லத்திற் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அது சரணுடைய எழுத்தென்பது எனக்குப் புரிந்துவிட்டது. தபால் கூட சரணுக்குத்தான் வந்திருந்தது. "சரி! என்னதான் இரகசியம் பார்ப்போமே "என்று கையிலிருந்ததைப் பறித்தான் சாலிஹ்.

பிரிய சரண்!

இவ்வளவு ஆஷாடபூதித் தனமாக நீங்கள் இருப்பீர்களென்று எனக்கு இதுவரை தெரியாது. இருந்தும் தாங்கள் இவ்வளவிற்குப் பிறகு இனியும் பாராமுகமாயிருப்பது நியாயமற்றது என்று எனக்குப்படவே நண்பன் என்ற ஹோதாவில் என் கடமையைச் செய்து வைக்கின்றேன்.

நேய! கமலா ஒரு பாவமும் அறியாதவள். அறுபது வயதுக் கிழவன் பதினாறு வயது யுவதியை மணப்பது நியாயமற்றது என்ற உமது சீர்திருத்த மேடைப் பிரசங்கத்தை நம்பி, தன் உணர்ச்சிக்கு அடிமையாகித் தன் கணவனைக்கூட வெறுத்து உன்னையே சதமென்று வந்தது அவள் பிழையல்ல. இருந்தும் ஆறுமாதக் கர்ப்பிணியாகிய அவளை நடுத்தெருவில் "விபச்சாரி" என்று சந்தி சிரிக்க வைத்துவிட்டு விமலாவை மணம் செய்வதாக அவள் தந்தையிடம் கூறி இரகசியமாக விவாகப் பதிவுகூட வைத்துவிட்டு ஒரு பாவமும் அறியாதது போல நடிப்பது நியாயமல்ல.

நடுத்தெருவிற் பிரக்ஞையடைந்து கிடந்த கமலா அனாதையாக ஆஸ்பத்திரியிற் சேர்க்கப்பட்டிருக்கிறாள். போனது போக அவள் வயிற்றிற் பிறந்த உனது குழந்தை வரதனையாவது வந்து ஏற்றுக்கொள்ளுங்கள். இது உன் கடமையென்பதை நான் வற்புறுத்திக்காட்ட வேண்டிய அவசியமில்லை. இந்தத் தபாலையும் நீர் ஏற்கமறுத்தால் இதுவே நமது நட்பின் இறுதி.

நண்பன்,
யோகம்

சாலிஹ்! என்றேன். “ஏன் குமார்? மோசம் போனது நாம்தான். இதற்கு முடிபு ஒன்று விரைவிற் தேடியாக வேண்டும்” என்றான் ஆத்திரத்துடன். எனக்கு உடம்பை என்னவோ செய்தது. சொல் ஒன்று செயல் ஒன்றாகும். இவர் பான்மையைக் கண்டு உள்ளம் கொதித்தது. இவ்விதம் ஹிம்சிக்கப்படும் சகோதரிகள் மீது எனக்கே ஓர் பச்சாதாபம் ஏற்பட்டது. இதுதான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று கொள்ளும் உத்தமரது பான்மையோ? மற்றோர்க்கு நல்வழி காட்டுகிறோமென்று இருட்டில் போய் முட்டிக்கொள்ளும் உவர்ந்த நோக்கமோ? “தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்த பிறர் குறுகும் வெங்குறை தீர்க்கிப்பார் விழுமியோர்.” என்ற விளக்கமோ? என்றெல்லாம் என் உள்ளம் பொருமியது.

இரவு மணி எட்டாயிற்று, எட்டரையுமாயிற்று சரண் வந்தபாடில்லை. ஹோட்டல் பையன்கூட ஒரு தரம் வந்து “விசிற” பண்ணிவிட்டுப் போனான். அறைக் கதவைச் சாத்திவிட்டுப் படுத்துக்கொண்டேன். கதவு தடாரென்ற சப்தம் கேட்டுக் கண்விழித்தேன். சரண் அவரது கட்டிலிற் கிடந்தார். என்ன என்றுமில்லாத மாதிரி வந்ததும் வராததுமாக உடுப்புக்கூட மாற்ற நேரமற்று படுத்துக்கொண்டீர்களே? என்றேன். பேசவேயில்லை. - லைற் வெளிச்சத்தில் முகத்தை உற்றுநோக்கினேன், சந்தர்ப்பம் ஒன்றியதாய் ஏதோ ஒரு வாசனை என் முகத்திற் தட்டியது. நான் திணறிப் போனேன்.

பேசாது படுக்கையை அடைந்தேன். அவரது பட்டத்தையும், பதவியையும் நம்பி மோசம் போனோமே என்று என் மனம் எண்ணாததெல்லாம் எண்ணிற்று. “யாவர் ஒருவர் ஒருவர் தம் உள்ளத்தை தேருடமையுடையவர்” என்ற சமணரது வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. இவர்

குடியர் என்ற விஷயம் ஒருகால் பிரின்ஸிபலுக்குத் தெரிந்தால் அப்புறம் என்கதி என்ன ஆகுமோ? காலேஜையே விட்டு நம்மையும் வெளியேற்றி விடுவாரோ? இந்த மயக்கத்திலே அவரை எங்கேயாவது கொண்டு போய் ஒரு நண்பரது வீட்டில் விட்டு வந்து விடுவோமா? சேச்சே! அப்படியார் இருக்கிறார்கள்? என்றெல்லாம் எண்ணியவாறே கண்ணயர்ந்தேன்.

குமார்! என்ற அதட்டல் கேட்டு விழித்தேன். வைஸ் பிரின்ஸிபல் நின்ற நிலையில் எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. "இது என்ன இந்தப் பிணம்? இவனைத் தானா நல்லவன் என்றாய் என்று அதட்டினார். "மன்னியுங்கள் ஸார்! இப்படியாகுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றேன். இந்த ஆரவாரம் கேட்ட சாலிஹ் அங்கு வந்தான். அந்தக் கணத்திலேயே அவனுக்கு விசயம் புரிந்துவிட்டது. "இதை நாங்கள் சுத்தம் செய்து விடுகிறோம் சார் மன்னியுங்கள் என்றான் அவன், "மன்னிப்பாம் மன்னிப்பு. ஊரளப்பையெல் லாம் முன்பின் அறியாமலேயே அள்ளிப்போட்டுக்கொள்கிறது. அப்புறம் மன்னிப்பாம் கத்தரிக்காயாம்" என்று உறுமியவாறே "கம்ஹியர் குமார்"" என்று கட்டளையிட்டு நகர்ந்தார். அதைக் கவனிக்கும்படி சாலிஹுக்கு சமிக்ஞை செய்து விட்டு அவரைப் பின்தொடர்ந்தேன்.

அவர் நேரே தனது ரூமுக்குப் போனார். "இப்படி உட்கார்" என்றார் சாந்தமாக. என்னை நிமிர்ந்து பார்த்து அவர் "ஏன் அழுகிறாய்? இவைகளெல்லாம் மனித சமூகத்தில் நடைபெறாதவையல்ல. இது விஷயம் பிரின்ஸிபல் அறிந்தால் என்ன நடக்குமென்று உனக் குத் தெரியாதா?" என்றார். "ஸார்! அவர் குடிப்பவர் என்று எனக்குக் கனவிலும் தெரியாது. தெரிந்திருந்தால்", "அது சரி குமார்! அவனை எதுவிதத்திலும் வெளியிலே ஜாகை பார்த்துக் கொண்டு போகச் சொல். இது உனக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும். இது விஷயத்தை வெளியில் விடாதே. பிரின்ஸிபல் அறிந்து விடுவார். அன்றியும் நமது காலேஜுக்கே அவமான மில்லையா? சரி! போ காலை வேளைக்குள் இடத்தைச் சுத்தஞ்செய்து விடுங்கள்: என்றார். - நேரே அறைக்குச் சென்றேன். அங்கே சாலிஹ் அவர் வாந்தியெடுத்ததைச் சுத்தம் செய்து கொண்டு நின்றான். பின் இருவரும் அவரைத் தூக்கிக் கட்டிலிற் கிடத்தினோம். ஒன்று மறியாதவர்கள் போல் அவரவர் படுக்கைக்குச் சென்று படுத்துக்கொண்டோம்.

காலையில் நானும் சாலிஹும் நேரே வடிவேலிடம் சென்றோம். வடிவேல் என் உடன் மாணவன். ஊர் முழுவதும் அவருக்கு நன்கு பரிச்சயம். இதனால் அவரது உதவியோடு ஜாகை தேடிப் புறப்பட்டோம். எங்கெல்லாமோ அலைந்து கடைசியாக நூறு ரூபாய் லஞ்சம் கொடுத்து இருபத்தைந்து ரூபாய் வாடகையில் ஒன்றை அமர்த்திக் கொண்டோம். மணியும் பன்னிரண்டானதினால் வடிவேலின் வீட்டிலேயே மத்தியானம் எங்களுக்கு விருந்து நடந்தேறியது. இரண்டு மணி சுமாருக்குக் ஹாஸ்டலுக்கு வந்தோம்.

நேரே என் அறைக்குச் சென்றேன். அங்கு சாய்வு நாற்காலியிற் சரணபடுத்திருந்தார். கையில் முதல் நாளைய இரகசியக் கடிதம் காணப்பட்டது. நாங்கள் பார்த்துவிட்டதை அவர் அறிந்துவிட்டாரென்று அவர் முகமே சான்று பகன்றது. முகம் பேயறைந்தது போன்று காணப் பட்டது. குமார் ! என்றார் தழதழத்த குரலில். எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. நன்றாக உதைத்து வெளியே துரத்தி விடுவோமா? என்று கூட எண்ணினேன். சே! இது என்ன மடமை என்று பேசாதிருந்தேன். "அதிகம் பிரயாசையோ" என்றார். "தெய்வச் சோத னைக்கு நாம் ஆளாகாதிருக்க முடியுமா?" என்றேன் நான். "இல்லை குமார் சிறிதுதான் குடிப்

பது வழக்கம். குடிக்காமல் என்னால் ஒரு எழுத்துக்கூட எழுத முடிவதில்லை . அன்று விருந் தல்லவா? அதனாற்தான் சற்றுக் கூடிவிட்டது. பிரயாசை உண்டாக்கியதற்கு மன்னியுங்கள்." "அப்போ நீங்கள் அன்று சென்றது தேநீர் விருந்திற்கல்ல. மது விருந்திற்குத்தான் என்று சொல்லுங்கள்" என்று கூறிக்கொண்டே வந்தான் சாலிஹ். ஸார்! மாதம் இருபத்தைந்து ரூபாயில் ஜாகை ஒன்று கிடைத்திருக்கிறது என்றான். "அப்படியானால் உங்களைவிட்டு உண் மையாகவே பிரிகின்றேனா? உங்கள் வாழ்வில் பொறுக்கமுடியாத அபசாரமொன்று செய்து விட்டேனே" என்றார் துக்கத்துடன்.

என்ன ஸார்! கண் மூக்குத் தெரியாமல் குடித்துவிட்டு அபசாரமாவது! சுண்டைக் காயாவது என்று முணுமுணுத்தான் சாலிஹ். ஏன் சாலிஹ்! ஒருவரது மனத்தைப் புண்ணாக்குகிறாய் என்றேன் நான் இரகசியமாக. "இது அவரது காதுகளில் விழுந்ததோ என் னமோ? சட்டென்று எழுந்தார். என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சிறு குழந்தை போல் விம்மி விம்மி அழத்தொடங்கினார். என்னை மன்னித்து விடு குமார்! என்றார். ஸார்! ஸார்! இது என்ன திருவிளையாடல். விடுங்கள் என் காலை என்று மெதுவாக அவரைத் தூக்கி உட்கார வைத்தேன். விம்மிக் கொண்டேயிருந்தார். அவரது பரிதாப நிலையைக் கண்ட எனக்குக்கூட துக்கம் நெஞ்சையடைத்தது.

ஸார்! இனிக் குடிப்பதேயில்லை என்று சங்கற்பம் செய்து கொள்ளுங்கள். அதுவே எங்க ளது மன்னிப்பாக இருக்கட்டும். என்றான் சாலிஹ். பேச்சை ஆமோதிப்பது போல் எதிர்க் கோவில் மணி டாண் - டாண்-என்று ஒலித்தது. அவர் தமது இரு கரங்களையும் கூப்பிய வாறே மணியோசை வந்த திக்கை நோக்கினார். மணி பின்னும் டாண் - டாண்என்று அடித்து ஓய்ந்தது.

பாரதி
மட்டக்களப்பு

கிரிஜா

1949 இல் பாரதி நடாத்திய சிறுகதைப் போட்டியில் தேர்வு செய்யப்பட்ட சிறுகதைகளில் ஒன்றே இவரின் "இரு உள்ளங்கள்" இவர் தொடர்ந்தும் சிறு கதைகளை எழுதினார என்பதை அறியமுடியவில்லை.

- இரு உள்ளங்கள்

இரு உள்ளங்கள்

கிரிஜா

என் பரீட்சையும் நெருங்கிக் கொண்டு வந்தது. நானும் இரவும் பகலும் கண்ணும் கருத்துமாகப் படித்தேன்.

என் சொந்த ஊர் பவனம். என் அப்பாவும் ஒரு பெரிய உத்தியோகத்திலுள்ளவர். அவரை இந்த மட்டக்களப்புக்கு மாற்றி விட்டார்கள். அப்பாவோடு நாங்களும் இங்கேயே வசிக்க வேண்டியதாயிற்று. இங்கே குடியிருக்க வந்து ஒரு கிழமையால் இங்கேயுள்ள பெரிய பாடசாலையில் நான் எஸ்.எஸ்.ஸி வகுப்பில் சேர்ந்து படித்தேன். நான் முன் இரண்டு முறைகள் பரீட்சையெடுத்தேன். இரண்டு முறையும் தவறிவிட்டேன். எனக்குப் போதாத பாடம் தமிழ். தமிழிலேயே இரண்டு முறையும் சித்தியடையவில்லை, நான் மற்றப் பாடங்களைவிட தமிழையே ஊக்கமாகப் படிக்க ஆரம்பித்தேன். இப்பாடசாலையிற் சேர்ந்த முதல் நாளே நான் தமிழ் வகுப்புக்குப் போனேன். ஒரு ஆசிரியர் வந்தார். இளம் வயதானவர்தான். பாவைப்பிள்ளை போன்ற முகம். கோபம் என்பது அவர் முகத்தில் கடுகளவேனுங் கிடையாது. மலர்ந்த முகத்தோடுதான் பேசிக் கதைப்பார். எல்லோராலும் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய

இலகுவான தமிழ்நடையில் சிக்கலான பெரிய விஷயங்களை எல்லாம் தெளிவாக விளக்கினார். என் மனம் இவரல்லவா ஆசிரியர், இப்படிப்பட்டவரிடம் பாடம் படித்திருந்தால் முதல் முறையே சித்தியடைந்திருப்பேனே என்று நினைத்தது. நானும் உற்சாகமாகத் தமிழ்ப்பாட வகுப்புக்குச் செல்லுவேன். பாடநேரத்தில் தெரியாத விஷயங்களைக் கேட்டால் அவரும் கோபியாமல் சந்தோஷத்தோடு பதிலிறுப்பார்.

ஒருநாள் பாடசாலை முடிந்து வீட்டிற்குப் போனதும் அப்பா என்னை அழைத்தார். போய் அவரிடம் அழைத்த காரணத்தைக் கேட்டேன். அவர் என்னைப் பார்த்து "இனிமேற்பட்டு உனக்கு விளையாட நேரமில்லை,கெட்டித்தனமாகப் படித்துப் பரீட்சையெடுத்து எப்படியாகிலும் இம்முறை சித்தியடைய வேண்டும். இன்று நாலு மணிக்கு முன் உன் படிப்பறையைச் சுத்தம் செய்து பாடப் புத்தகங்களை எல்லாம் ஆயத்தப்படுத்தி வைத்துக்கொள். உனக்குப் பாடம் சொல்லித்தர ஒரு ஆசிரியரை நியமித்திருக்கின்றேன். அவர் வந்துவிடுவார். போய்ச் சீக்கிரம் ஆயத்தப்பட்டுக் கொண்டிரு" என்றார்.

நானும் உடனே சென்று எல்லாவற்றையும் ஒழுங்கு செய்து வைத்துக் கொண்டு ஆசிரியர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஏனோ என் மனம் பலவாறு சிந்திக்கத் தொடங்கியது. வரும் ஆசிரியர் எப்படிப்பட்டவரோ? என்ன குணமானவரோ? கெட்டித்தனமானவரோ? அல்லது நான் சித்தியடையாத வருடங்களில் தமிழ்ப் படிப்பித்தவர்கள் போன்றவரோ? அல்லது என் பாட வகுப்பு ஆசிரியரோ? இவராயிருந்தால் நான் உண்மையில் பாக்கியசாலிதான் என்று மனம் பல சந்தேக வினாக்களை உற்பத்தியாக்கிக் கொண்டிருந்தது.

மணி நாலாகப் போகின்றது. ஆசிரியர் வந்துவிடுவார். டக்... டக்... கென்று கேட்டது சப்பாத்தின் ஓசை. என்மனமும் டக் டக்கென்று அடிக்கத் தொடங்கியது. அவரும் உள்ளே வந்தார். நான் வந்தவரைப் பார்க்காமல் தலையைக் குனிந்து பிடித்துக் கொண்டு "குட் ஈவினிங் சேர்" என்றேன். அவரும் "குட் ஈவினிங்" என்றார். சத்தத்தைக் கொண்டு அவர் என் வகுப்பு ஆசிரியர் சிவம் என்றறிந்து தலையை நிமிர்த்தினேன். அவர் என்னை உற்றுப் பார்த்துவிட்டு லீலா ! நீதானா படிக்கும் ஆள், இதுதானா உங்கள் வீடு என்று சிரித்துக் கொண்டு கேட்டார். நானும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டு "ஆம்" என்றேன். என் படிப்பும் ஆரம்பமாகி ஆறு மாதங்களும் இன்பமாய்க் கடந்துவிட்டன.

எனக்கு அவர் குணத்தையும் அழகையும் கண்டு அவர்மேல் அளவு கடந்த அன்பு ஏற்பட்டுக் கொண்டு வந்தது. நான் என் உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டவில்லை. அவரும் அதற்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கவில்லை. ஒருநாள் படித்துக் கொண்டிருக்கும்போது வீம்பாகத் திருக்குறளிலே

"கண்ணொடு கண்இணை நோக்கொக்கின்
வாய்ச் சொற்கள் என்ன பயனுமில"

என்னும் குறளின் பொருளை விளங்கப்படுத்திவிடும்படி கேட்டேன். அவருக்கு விளங்கிவிட்டது என்மன எண்ணம். "லீலா" என்றது அவர் வாய். அவர் அதைச் சொல்லும் போது எவ்வளவு இனிமையாகக் கேட்டது. அவருக்குப் பதில் பேச என் நா எழவில்லை. நாணம்

என்னைத் தாவிப் பிடித்துவிட்டது. வெட்கத்தோடு அவரை நோக்கினேன். அவரும் என்னை நோக்கினார். எங்கள் கண்கள்தான் சிறிது நேரம் பேசின. அவர் என் அருகில் எழுந்துவந்து மெய்தானா என்றார். "ஆம்" நான் உங்களையே என் மனதில் இருத்திவிட்டேன். என் மனதில் உங்களைத் தவிர வேறொருவருக்கும் இடமில்லை என்றேன்.

அப்படித்தான் லீலா. நீ மட்டும்தான் என் மனதில் சீவிக்கின்றாய். உன்னைக் கண்ட காலம் தொடக்கமாக என் மனம் உன்னிலேயே லயித்து விட்டது. அதை வெளிக்காட்ட நீ சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்றார்.

எங்கள் இருவர் அன்பும் மாசற்றது. மனிதர் அறியாதது. என் பரீட்சையும் நெருங்கிக் கொண்டு வந்தது. எங்கள் காதல் நாடகமும் வளர்ந்து கொண்டு வந்தது. எத்தனை நாட்கள் தான் இந்த இரகசிய வாழ்க்கை எப்படிப்பட்ட இரகசியமும் பரகசியமாதல் இயல்புதானே.

என் டயறியில் கெட்ட நாள் என்று எழுதப்பட்ட அந்த நாள். பாடம் முடிந்தது. "நான் போய் வருகிறேன்" என்றார். நானும் இல்லை என்று தலையசைத்து விட்டு பாடம் விளங்கவில்லை என்று சாட்டுச் சொல்லி இருட்டு மட்டும் வைத்திருந்து விட்டேன். அவர் போக எழுந்த போது ஆகாயம் எல்லாம் இருட்டிருந்தது. சீறிக்கொண்டு வந்த பெருங்காற்று மழையையும் கூடக் கொண்டுவந்தது. தலை வாயிலடி மட்டும் போன அவரை மழை தடுத்தபடியால் போக முடியாமல் திரும்பி ஓடிவந்தார். அப்பாவும் அவரைப் பார்த்து மழை விட்டபின் போகலாம் இந்தக் கதிரையில் இருங்கள் என்று ஒரு கதிரையைச் சுட்டிக்காட்டினார். நான் படிப்பறைக்குச் சென்று விளக்கை ஏற்றி வைத்துவிட்டு வந்து அவரைக் கூட்டிக்கொண்டு போய் எனக்கு விளங்காத சில விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

காற்றின் வேகம் வர வரக் கூடியது. தோட்டத்தில் நின்ற மரங்களின் கந்துகள் முறிந்து விழும் சப்தங்கள் என் காதில் கேட்டன. "படார்" என்றது. என் அறை ஜன்னல் கதவு காற்றின் வேகத்தால் உடைத்தெறியப்பட்டது. என் மேசை மேல் இருந்த விளக்கும் அணைக்கப் பட்டுவிட்டது. உச்சியின் மேல் காது செவிடாகும்படியான இடி முழக்கம் கேட்டது. பயத்தால் - ஓடிச்சென்று அவரைப் பிடித்துக் கொண்டேன். அவர் என்னைப் பயப்பட வேண்டாம் என்றார். "ஆம் பயப்படத் தேவையில்லை சிவம்" என்று கண்களில் நெருப்புப் பொறி பறக்க என் அப்பா கையில் லாம்போடு அறைக்குள் நுழைந்தார். நாங்களிருவரும் விறைத்து விட்டோம். "பளீர்" என்ற அறைச் சத்தம் கேட்டது. பார்த்தேன். அன்பர் கீழே விழுந்து எழுந்து நிற்கத் தெண்டிக் கிறார். ஓடிச் சென்று அவரைத் தூக்கினேன். நானும் ஓர் பக்கத்திலேயே சென்று விழுந்தேன். "ஆம்" அப்பாவின் அடங்காக் கோபந்தானிது. உருத்திரன் போலக் காட்சியளித்தார். சிவம் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தார். அவர் கண்களால் நீர் பெருக்கெடுத்தோடியது. அப்பாவின் கண்கள் மட்டுமா என் கண்களும் கோபத்தாலும் தாபத்தாலும் கொவ்வைப்பழம் போல் சிவந்து விட்டன. அப்பாவுக்கு என்ன செய்யலாம். அன்பருக்கு என்ன உதவி செய்யலாம். "ஓ" வென்று அழுதேன்.

"சீ.. வாயை மூடு சனியன்" என்று என் வாயிலும் ஒரு அடி போட்டார். "நீ ஒரு ஆசிரியனா? "நாயே" ஆசிரியனுக்குரிய இலட்சணம் இதுதானா? இதற்காகத்தானா உங்களை ஆண்களும் பெண்களுமாக கலந்து வைத்து ஆசிரிய கலாசாலையில் பயிற்சியளித்தார்கள். உங்களைப் போன்ற காமுகனால் அல்லவா இன்று ஆசிரிய பட்டத்திற்கு கெட்டபெயர் சூட்டி

அழகு பார்க்கின்றார்கள். கூத்தும் குடியுமல்லவா இன்று உன்போன்ற ஆசிரியர்களிடம் நிறைந் திருக்கின்றது.

"போக்கிலி நீ என்ன சிவவேடம் போட்டு நடித்தாயடா? உன் குணத்தைப் புதைத்து வைத்தல்லவா நடந்தாய். நீ நல்லவன் என்றல்லவா நினைத்து ஏமாந்தேன். உங்களைப் போன்ற காமிப் பிரமச்சாரிகளால் தான்டா இன்று இந்த உலகம் இன்னிலைக்கு வந்தது."

"கடப்பளி என் கண் முன்னே நில்லாதே ஓடிப்போய் விடு" என்று அந்தரத்தில் நின்று கொண்டு சொல் தாண்டவம் புரிந்தார் என் அப்பா. அன்பர் அசையாமல் மௌனமாக நின்றார். அப்பா அவர்மேல் பாய்ந்து அவரை இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளி விட்டு விறு விறென்று நடந்துவிட்டார். அன்பர் விழுந்த வேகத்தில் பூச்சட்டிகள் உடைந்துருண்டன. நான் ஓடிச்சென்று அவரைத் தூக்கப் போனேன். அவர் தானாகவே எழுந்து என் காலைப் பிடித்து நமஸ்கரித்து விட்டு "இதுதான் கடைசியும் முதலுமாயிருக்கட்டும்" என்று சொல்லி என்னை விறைத்துப் பார்த்தார். அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தோடியது. நான் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து வாயில் வந்தவைகளை எல்லாம் சொல்லி மன் னிக்க மாட்டீர்களா என்று நிமிர்ந்தேன். அவரை அந்த இடத்தில் காணவில்லை. அப்பா எமன் போலே என் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓர் அறையில் போட்டு பூட்டி வைத்தார்.

ஒரு மாத காலத்திற்கு என்னை வீட்டை விட்டு வெளியில் அனுப்பவில்லை. எனக்குச் சுகமில்லை என்று பாடசாலைக்கு அறிவித்திருந்தார் அப்பா. ஒரு மாதத்தின் பின் நான் பாடசாலைக்குச் சென்றேன். அன்பரைக் காணவில்லை. அவர் வேறு பாடசாலைக்கு மாறுதல் எடுத்துக்கொண்டு போய்விட்டாராம் என்று மாணவர்கள் சொன்னார்கள். என் வாழ்க்கையே சோபை இழந்து விட்டது. S.S.C பரீட்சையும் சித்தியடைந்து விட்டேன். சித்தியடைந்துமென்ன சித்தியடையச் செய்தவரையல்லவா நான் இழந்து விட்டேன். என்னை உயர்தர படிப்புக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைத்தார்கள். நான் அங்கு சென்று ஒரு வருடமும் கழிந்து விட்டது.

விடுமுறையில் வந்த நான் கொழும்புக்குப் போக வேண்டி ஒருநாள் ரயில் பிரயா ணத்திற்கு ஆயத்தப்பட்டேன். என் உடன் மாணவிகளும் வந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு ரயிலில் பிரயாணத்தைத் தொடங்கினோம். இடையில் குடிப்பதற்கு தேவை யான தண்ணீரை போத்தல்களில் எடுத்து வைத்துக் கொண்டோம். ஒரு ஸ்தானத்தில் புகையி ரதம் நின்றது. ஜனங்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தார்கள். போத்தலில் தண்ணீர் பிடித்துக் கொண்டு பெட்டியில் (ரயில் பெட்டி) ஏறப்போகும் ஒருவரை என் சினேகிதிகள் கூப்பிட்டு தங்கள் போத்தலிலும் கொஞ்சம் தண்ணீர் நிரப்பித் தரும்படி கேட்டார்கள். அந்த ஆள் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். நானும் உடனே என் போத்தலை எடுத்து குறை நினையாமல் தயவுசெய்து இதிலும் கொஞ்சம் தண்ணீர் பிடித்துத் தாருங்கள் என்று ஜன்னலால் எட்டிப் போத்தலை நீட்டினேன். ஓர் இடத்திலே என் கையில் இருந்த போத்தலும் இவர் கையிலிருந்த போத்தலும் விழுந்து சுக்குநூறாய் உடைந்து பறந்தன. என்னை அவர் மதித்து விட்டார். நானும் அவரை மதித்து விட்டேன். நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தோம். எங்கள் போத்தல்கள் நழுவி விழுந்த விதம் எங்களுக்கே தெரியாது. அவர் கண்களில் நீர் சொரிந்தது. போய் அவர் பெட்டியில் ஏறி விட்டார். நானும் கண்ணீரைக் காட்டாமல் கைலேஞ் சால் கண்ணைக் கசக்கினேன். என் சினேகிதிகள் என்னைப் பார்த்து "லீலா! இதென்ன நீ

குழந்தையா? போனால் போகிறது போத்தல்தானே கவலைப்படாதே" என்றார்கள். இவர்க ளுக்குத் தெரியுமா என் கண்ணீரின் அர்த்தம். ஜன்னலடியிலிருந்து அவர் ஏறிய பெட்டியையே பார்த்துக் கொண்டிருந் தேன். அவர் இடையில் ஒரு இடமும் இறங்கவில்லை .

மருதானைச் சந்தியில் வந்து புகையிரதம் நின்றது. என் அன்பர் இறங்கினார். உடனே நான் என் சினேகிதிகளைப் பார்த்து எனக்கு - இங்கே ஓர் அலுவல் இருக்கின்றபடியால் இறங்கி முடித்துக் கொண்டு வருகின்றேன் "நீங்கள் போங்கள்" என்றேன். "போய் விட்டுப் பின்னேரமாக எல்லோரும் வருவோம் நீ இறங்காதே" என்றார்கள். "அப்பா கண்டிப்பாகப் பார்த்து, விஷயம் வெற்றியா? தோல்வியா? என்று பன்னிரண்டு மணிக்கு முன் தந்தி மூலம் அறிவிக்கச் சொல்லி இருக்கின்றார்" என்று பொய் ஒன்று சொல்லி விட்டு இறங்கிவிட்டேன்.

நான் அவரைப் பின்தொடர்ந்து அவர் கண்களில் படாமல் நடந்தேன். அவர் ஒரு ஹோட்டலின் வாசலில் தான் கொண்டு வந்த பெட்டியை வைத்தார். ஹோட்டல் வேலைக் காரன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே நடந்தான். அவரும் அவன் பின்னாலே போனார். நான் இதைப்பார்த்துக் கொண்டு போய் வை.யு.சீ.ஏ. கட்டிடத்தில் (யங் வுமன் கதலிக் சொசைட்டி) ஒரு அறை ஒழுங்கு செய்து அதில் தங்கினேன்.

பின்னேரம் நாலு மணிக்கு வெளிக்கிட்டு அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குப் போய் மனேச்சரிடம் மிஸ்ரர் சிவம் இருக்கின்றாரா என்று கேட்டேன். அவர் 26ஆம் இலக்க அறையிலிருக்கின்றார் என்று பதில் கிடைத்தது. 26ஆம் இலக்க அறைக்குச் சென்றேன். அவர் எங்கோபோவதற்கு அவசர அவசரமாக உடை உடுத்துக் கொண்டு நின்றார். என்னைக் கண்டதும் அவர் முகம் மாறுபட்டது. கோபத்தோடு "பின்தொடராதே போய்விடு" என்றார். நான் அவர் பாதங்களிலே விழுந்து இன்னும் என்னை மன்னிக்க மாட்டீர்களா என்று கேட்டேன். பதில் வரவில்லை. "சுவாமி என்னை மன்னியுங்கள், என்னால் தங்கட்கேற்பட்ட - அவமா னத்தை மறந்துவிடுங்கள்" என்று அழுது கொண்டு கேட்டேன்.

அவர் என்னைப் பார்த்து "குற்றம் நம்முடையதல்ல எல்லாம் நம் விதியின்படிதான் நடந்தது. முன் நடந்த விஷயங்களைச் சிந்தியாதே. கெட்டித்தனமாகப் படித்து புகழோடு வாழ்ந்தால் மட்டும் போதும். நீ போய்விடு. திரும்பத் திரும்ப என் மனதில் சிந்தனைகளைத் தூண்டி விடாதே, என்னை மறந்துவிடு" என்று அவர் ஆண் உள்ளத்தைத் திறந்து சொன்னார். "என்னால் மறக்க முடியவில்லையே" என்றேன். "நீ உன் அப்பாவிடம் சொல்லி நல்ல இடத்திலே விவாகம் செய்துகொள். கொஞ்ச நாட்களால் என்னை மறந்துவிடுவாய். என் எதிரே நில்லாதே போய் சுகமாய்ச் சீவி" என்று சொல்லிக் கொண்டு எனக்கு முன்பே சென்று விட்டார். நானும் ஏமாற்றத்தோடு திரும்பி விட்டேன்.

என் கலாசாலைப் படிப்பையெல்லாம் முடித்து விட்டு ஒரு பெண் பாடசாலையின் பொறுப்பையேற்று நடத்தி வந்தேன். என் தாய், தகப்பன் தெண்டித்தும் கல்யாணம் முடிப்பதில்லை என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டேன். அவர்களும் உன் விருப்பப்படியே நட என்று சொல்லி விட்டார்கள். என் பாடசாலையுள்ள ஊரிலேதான் மிஸ்ரர் சிவமும் இருந்தார். "சூடுபட்ட பூனை அடுப்படியை நாடுமா" நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கப் போகவில்லை. அவரே என்னிடம் மன்னிப்புக் கேட்க வரட்டும். இல்லாவிடில் இந்நிலையிலேயே இவரை மறந்து விடுவதுதான் என் இலட்சியம். என் மனதைவிட்டு அவரைப் பிரிக்க இயலாமல் போய்

விட்டது. ஒருநாள் பாடசாலையை விட்டு பக்கத்திலுள்ள கடைக்குச் சென்று நூற்பந்துகள் வாங்கிக் கொண்டு திரும்பினேன். பாதையைக் கவனிக்கவில்லை. என்மேல் ஒரு ஆள் விழுந்தார். அவர் வந்த துவிச்சக்கர வண்டி இன்னுமொரு இடத்தில் விழுந்து உடைந்தது. விழுந்ததும் அந்த ஆள் என்னை ஏற இறங்கப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன். அவர் யாருமில்லை அன்பர் சிவம்தான். கோபித்துக் கொண்டு போய் விடுவாரோ என்று நான் அவரிடம் மன்னிப்புக் கேட்கவில்லை. இருவரும் மௌனமாக எழுந்தோம். அவர் முழங்கை யிலிருந்து இரத்தம் ஓடியது. அவரை என்னுடன் அழைத்து வந்து பாடசாலையிலுள்ள மருந்துப் பெட்டியை எடுத்து அவர் கையில் போட்டேன். அவர் என்னை நன்றியோடு பார்த்து "லீலா" இன்னும் நீ எனக்காகத்தானா காத்துக் கொண்டிருக்கின்றாய். உன் உள்ளம் களங்கமற்றது தான்" என்று என்னைப் பற்றிப் பலவாறாகப் பேசினார். உங்களைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. எழுந்து போய் விடுங்கள் என்றேன். அவர் சிரித்துக்கொண்டே வந்து "காற்றடிக்கிறது. மழை பொழிகிறது. இடி இடிக்கின்றது. பயமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு என்னைக் கட்டிப்பிடித்தார்.

சரசம் போதும். வருகின்ற 2ஆம் திகதியோடு இப்பாடசாலைக்கு மாறுதல் எடுத்துக் கொண்டு வாருங்கள் என்றேன். சட்டைப்பையிலிருந்த கடிதம் ஒன்றை எடுத்து என்னிடம் தந்தார். கடிதத்தை விரித்தேன் என்ன ஆச்சரியம்

கொழும்பு 27.12.48
திரு. பண்டிதர் சிவம் M.A அவர்கட்கு,

தங்களை "லீலா பெண் பாடசாலைக்கு" 1.1.49 தொடக்கம் தமிழ்ப் பேராசிரியராக நியமித்திருக்கின்றோம். தாங்கள் சென்று கடமையைக் கையேற்று எங்களுக்கு அறிவிக்கவும்.

இங்ஙனம், A.B. சுந்தரராசன் M.S
முகாமைக்காரர்.

வாசித்து முடிந்ததும் நிமிர்ந்தேன். அவர் என் கரங்களைப் பிடித்தார். நானும் அவர் கரங்களைப் பிடித்தேன். எங்களிடம் மௌனம் நிலவியது. எங்கள் கண்கள் இணை நோக்கின. இனி யாரும் அவற்றைப் பிரிக்க முடியாது.

பாரதி
மட்டக்களப்பு

மூர்த்தி

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்ட மூர்த்தி பாரதி சஞ்சிகைக் கூடாக அறியப்பட்ட எழுத்தாளர். இவருடைய 'நாகரீக பிச்சைக்காரன்' என்ற சிறுகதை பாரதியில் வெளிவந்தது.

- நாகரிக பிச்சைக்காரன்
- நல்ல காலம்

நாகரிக பிச்சைக்காரன்

மூர்த்தி

அன்று நிரம்பவும் கூட்டமாதலால் இருப்பதற்கு இடம் கிடைக்க வில்லை. பதுளைக்குச் செல்லும் பஸ்ஸில், அண்ணார்ந்து பார்த்தேன். ஆதாரக் கம்பியும் ஆதாரமின்றி இருந்தது. இருப்பதற்கு ஒரு சிறு இட மாகுதல் கிடையாதா இன்று ஒவ்வொரு சீற்றாக நோக்கினேன். நாலா வது சீற்றிலிருந்த ஒர் நபர் தம்மிடத்திற்கு வரும்படி புன்முறுவலுடன் சைகை செய்தார்.

இடம் கிடைத்த குஷியில் அவருக்கு மரியாதைக்கு ஒரு புன்சிரிப்பு போட்டுவிட்டு அருகில் உட்கார்ந்தேன். “கொய்த யன்னே” என்றார். புரி யாத சிங்களத்தில் என்னை நோக்கி. “வதுல்ல” என்றேன் சிங்களம் புரிந்தது போல். எனவே அவர் மேலும் ஏதோ சிங்களத்தில் அடுக்கிக் கொண்டே போய் "செவன்ரி பைவ் சென்ஸ்” என்ற ஆங்கிலத்தையும் கலந்து முடித்து விட்டு என்னை நோக்கினார். என் பதிலை எதிர்பார்த் துத்தான் என்னை நோக்கி இருக்க வேண்டும். “75 சதம் தா” என்பது தான் அவரின் பேச்சிலிருந்து யான் அறிந்து கொண்டவை. எனினும், திடீரென்று நான் ஒன்றும் பதில் கூறவில்லை . இத்தனைக்கும் ஆசாமி

11ஆம் நம்பர் ஆள். அதாவது - நீண்ட காற்சட்டை தரித்தவர். "கிளீன்ஷ்ட் எம்ரி பொக்கெட்" என்னும் ஆங்கிலப் பழமொழிபோல் லாவண்யமான உடுப்புகள் - அணிந்துள்ள ஆசாமிக்கு ஏன் இந்த பிச்சைக்காரப் பிழைப்பு என்று அறிவது அவசியம் போல் தோன்றிற்று எனக்கு. "மட்ட சிங்கள தன்னனே" என்று அரைகுறை சிங்களத்தில் கூறிவிட்டு "முடியுமானால் தமிழிலோ. ஆங்கிலத்திலோ பேசவும்" என்றேன் ஆங்கிலத்தில்.

எனவே அவர். தான் ஒரு காலத்தில் பெரிய வியாபாரியாக இருந்ததாகவும். துரதிஷ்டமாக வியாபாரத்தில் நட்டமடைந்து விட்டதாகவும். சமீபத்தில். ஒரு எஸ்ரேற் கிளாக் வேலைக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சென்று திரும்புவதாகவும். நாளை கொழும்புக்குப் போவதாகவும். கையில் பணமில்லையென்றும். தயவு செய்து ஒரு ரூபா தந்தால் பெரிய உபகாரமாய் இருக்குமென்றும் அப்பழுக்கற்ற ஆங்கிலத்தில் பேசி முடித்தார்.

கதையோ ரொம்பவும் சோகமாய்த்தானிருக்கிறது. ஒரு காலத்தில் பெரிய செல்வந்தனாயிருந்தவன் இன்று இந்நிலையிலிருக்கிறான். இது தான் மனித வாழ்வு என்று எனக்குள்ளேயே எண்ணிக்கொண்டேன். இரக்கம் பிறந்துவிட்டது அந்த மனிதனிடத்தில்.

"தயவுசெய்து மன்னிக்கவும். என்னிடம் அதிக பணமில்லை. ஐம்பது சதந்தான் தர முடியும்" என்றேன். தனக்குக் கண்டுதானே தானம் வழங்க வேண்டும்.

"ரொம்ப சரி. இப்போதே தாருங்கள்" என்றார் பிடிவாதமாக. "வதுளையில் இறங்கியதும் எடுத்துக் கொள்ளலாமா" என்றேன் நான்.

இல்லை. இல்லை தயவு செய்து இப்பொழுதே தாருங்கள். அவசரமாக வேண்டும். உங்கள் காலில் விழுந்து கும்பிடுகிறேன். இப்பொழுதே தந்துவிடுங்கள்" என்றார் மீண்டும் பிடிவாதமாக

"சரிதான்" என்று ஐம்பது சதம் கொடுத்தேன். "ரொம்பவும் தாங்ஸ்" என்று கொண்டே அதை வாங்கிக் கொண்டார்.

இதுவரை பஸ்வண்டி மூன்று மைல்கள் சென்றுவிட்டது. இன்னும் மூன்று மைல் செல்ல வேண்டும் வதுளைக்கு. என்ன ஆச்சரியம் கடந்த மூன்று மைல்களிலும் தன் நிலைமை யையிட்டுப் பிரலாபித்து வந்த அந்த ஆசாமி பேசாமடந்தையாகிவிட்டார். எனவே மீண்டும் பேச்சுக் கொடுத்தேன் நான். "ஆமாம். இந்த ஐம்பது சதத்தில் நீர் எப்படி கொழும்புக்குப் போகப் போறீர்" என்றேன்.

"ஓ... வதுளையில் நமக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் பணம் பெற்றுக் கொள்வேன்" என்றான் ஒருவகைப் பதட்டத்துடன். இதுதான் அவன் என்னுடன் பேசிய கடைசி வார்த்தை. அவன் முக பாவத்திலிருந்து முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கிறானென எண்ணிக்கொண்டேன். பஸ்ஸிலிருந்து எல்லோரும் இறங்கினர். ஆசாமி எப்பக்கம் செல்கிறானென அவனைக் கவனித்துக் கொண்டிருந்தேன். பஸ்ஸிலிருந்து இறங்கிய சில பிரயாணிகளுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான். "சில்லறை இல்லிங்களே. இருந்தால் தருவனே" என்றது ஒரு குரல். "ஓகோ. ஆசாமி மோசமில்லை. அங்கும் பணம் கேட்டிருக்கிறான்" என்று ஊகித்துக் கொண்டேன்.

"என்ன மிஸ்டர் எங்கேயோ பார்த்துக் கொண்டு நிற்கிறீர்?" என்று கொண்டே என் முதுகில் தட்டினார் எனது நண்பர்.

விஷயத்தை விபரமாகச் சொல்லி ஆசாமியையும் காட்டினேன் அவருக்கு.

"ஓகோ.... இவனா!" என்ற பீடிகையில் தொடங்கினார். "இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன் "இரிகேசன்" டிப்பாட்மென்ரில் கிளாக்காக இருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டான் இவன். சதா கள்ளுக் குடிப்பது. இப்போது மட்டுமல்ல முன்புமிருந்த பழக்கந்தான். வரும்படி இல்லாததால் கொழும்புக்குப் போவதாகவோ, கண்டிக்குப் போவதாகவோ பொய் சொல்லிப் பணம் சம்பாதித்துக் கொள்கிறான் குடிப்பதற்கு" என்று சொன்னார். "ஆமாம், முன்னர் மட்டக்களப்பு பஸ் நிலையத்தில் திரிந்தானே ஒரு பிச்சைக்காரன் மூன்று பிள்ளைகளுந் தாயும் பட்டினியால் கோயிலடியில் கஸ்டப்படுகின்றன. ஏதோ நீங்கள் மனமிரங்கி நாலு பணம், அஞ்சு பணம் தந்தால் என்று கெஞ்சுபவன். அதே ரகத்தைச் சேர்ந்தவன்தான் இவனும்" என்று பழைய சம்பவமொன்றையும் ஞாபகப்படுத்தினார்.

"ஆமாம். பொய் சொல்லி பணம் பறித்து "அபினி" உண்டு வந்தான் அந்தப் பிச்சைக்காரன். ஆனால் இவனோ காற்சட்டை மேற்சட்டை போட்ட பிச்சைக்காரனாயிருக்கிறான். நாகரிகப் பிச்சைக்காரன்" என்று எண்ணிக் கொண்டேன்.

பாரதி
மட்டக்களப்பு

நல்ல காலம்

மூர்த்தி

எழுபது ரூபா சம்பளத்தில் குடும்பத்தை நடத்துவது எனக்கு என்னமோ முடியாத காரியமாயிருந்தது. குடிக்கும் தண்ணீருக்கு முதல், எரிக்கும் விறகுக்கு ஈறாக, கையிலிருந்து தம்படி செலவாகிக் கொண்டே வந்தது, அப்பட்டண சீவியத்தில்.

சம்பள உயர்ச்சிக்காக ஆபீஸ் மனேஜரைப் பேட்டிகண்டும், ஆயிரம் சலாம் போட்டும் அலுத்துப் போயிற்று. போதாததிற்கு "ஹெட் - கிளாக்"குக்குப் பந்தம் பிடித்த செலவு வேறு. இவற்றினால் ஒரு பலனையும் காணாத எனக்கு வேலையை ராஜினாமா செய்வதே உசிதம் போல் தோன்றிற்று. அன்று ஆபீஸில் நடந்த ஓர் சம்பவமும் இதற்குத் துணைக் காரியமாயிருந்தது.

எங்கள் ஆபீஸில் இரண்டாவது "கிளாக்" காக கடமையாற்றி வந்த ஆசாமி வேறு ஊருக்கு மாற்றப்பட்டான். எனவே, அந்த இடத்தை எதிர்பார்த்திருந்தேன். பத்துவருடமாக சம்பள உயர்வு, பதவி உயர்வு இன்றி மூன்றாம் கிளாக்காக வேலை பார்க்கும் நான், ஆனால் "ஹெட் கிளாக்" கோ, மனேஜரைப் பந்தம் பிடித்து, மிலிட்டேரியிலிருந்து வந்து

"லாட்டரி" அடித்துத் திரிந்த தன் மருகனை அந்த இடத்தில் அமர்த்தி விட்டான். எனவே மனேஜருக்கு ராஜினாமா கடிதத்தை அன்றே அனுப்பி விட்டுத்தான் மறு காரியம் பார்த்தேன்.

அன்று காலை பத்து மணியிருக்கும். கடைக்கணக்குக் கொப்பியை எடுத்துக் கணக்குக் கூட்டிக்கொண்டிருந்தேன். ஆமாம். எவ்வளவு பாக்கி என்று அறிவதற்குத்தான். ஐயோ "பால் காசு" என்று கொண்டே எதிரே நின்றான் நாலைந்து மாத பால் காசை எதிர்பார்க்கும் பாற்காரச் சின்னத் தம்பி. "இப்போ என்ன அவசரம். மாதம் முடியட்டும் வா" என்று சாக்குச் சொல்லி அவனை அனுப்பிவிட்டேன். கடைக்காரனின் பாக்கித் தொகையுடன் பாற்காரனின் பாக்கித் தொகையையும் சேர்த்துக் கூட்டினேன். மொத்தம் நூற்றி இருபத்தொரு ரூபா அறுபத்தேழு சதம் கடன். சம்பளமோ ரூபா 70 கிடைக்கும். வேறு புதிய வேலை தேடும் வரையும் அதுதான் கிடைக்கும் கடைசிச் சம்பளம். போதாததிற்கு "பள்ளிக்கூடக் காசு ரூபா 50 இம்மாதத்தில் கட்டியாக வேண்டும்" என்ற என் பையனின் கடிதமும், புதிய பாஷனில் செய்யவிருக்கும் காப்புக் கூட்டத்திற்குப் பணமனுப்பவும் என்ற என் சகதர்மிணியின் கடிதமும் சேர்ந்து என்னைப் பைத்திய காரனாக்கப் பார்த்தன. ஆமாம்- எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டுத் தானே. எந்தச் செலவுக்கு சாக்குப்போக்கு சொல்வதென்றே புரியவில்லை. உத்தியோகமாகுதல் இருந்தால் ஒரு இடமில்லாவிட்டால் ஒரு இடமென்று கடனைக்கட்டை வாங்கலாம். வாலறுந்த பட்டம் போல இருந்தது என் நிலைமை. "ஏனடா வேலையை ராஜினாமா செய்தோம்" என்று பச்சாதாபப்பட்டேன். மனேஜருக்குக் கடிதம் கிடைத்து பதிலும் வந்துவிடும். செய்தது செய்ததுதானே. வருவதெல்லாம் நன்மைக்கே என்று என்னையே யான் தேற்றிக் கொண்டேன். அசட்டுத் தைரியம் பிறந்துவிட்டது.

வாசலில் கணகணவென்று மணியடித்தது. தபாற்காரன் இரண்டு கடிதங்களைக் கொடுத்தான். ஒன்று ஆபீஸிலிருந்து வந்திருந்தது. மற்றது என் நண்பனிடமிருந்து வந்தது. ஆபீஸ் கடிதம் - ஆமாம். பார்ப்போமே ஆறுதலாய். "உனது ராஜினாமாவை ஏற்றுக் கொண்டோம்" என்று தானே இருக்கும் என்று எண்ணிக்கொண்டே நண்பனின் கடிதத்தைத் திறந்தேன். என்ன ஆச்சரியம் - மனேஜருக்கு நான் எழுதிய ராஜினாமாக் கடிதம் அதனுள்ளிருந்தது. ஆபீஸ் விலாசத்துக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை தவறுதலாக நண்பனின் விலாசமிட்ட கவரில் அடைத்து அனுப்பிவிட்டேனென அப்பொழுதுதான் அறிந்தேன். என் நண்பன் அதைப் பார்த்துவிட்டு உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா என எழுதியிருந்தான்.

ஆபீஸ் கடிதத்தைத் திறந்தேன். என் கண்களையே நம்பமுடியவில்லை. "நமது கம்பெனியின் கிளை ஆபீஸ் ஒன்று கல்முனையில் அடுத்த மாதம் திறக்கப்படும். முதலாந்தேதி தொடக்கம் உம்மை அதன் ஹெட்- கிளாக்காக நியமித்திருக்கிறோம்" என்றிருந்தது அக் கடிதத்தில்.

●

செல்வி இ. தங்கம்மா

செல்வி இ. தங்கம்மா 'வறுமையின் கொடுமை' என்ற குட்டிச் சிறுகதையை பாரதியில் எழுதியவர். இவர் குறித்த செய்திகள் ஏதும் அறியுமாறில்லை.

❖ வறுமையின் கொடுமை

வறுமையின் கொடுமை

செல்வி. இ. தங்கம்மா

வேலையின்மையாலும் வறுமைப் பிணியினாலும் நெருங்குண்டு வேலை தேடி அலைந்து களைத்த இளைஞனொருவனும் கொழும்பு நகருக்குச் செல்லப் புகைவண்டியில் ஏறிக்கொண்டான். ஆனால் அவன் 3ஆம் வகுப்புப் பெட்டிக்குச் சீட்டுப் பெற்றுக்கொண்டு 1ஆம் வகுப்புப் பெட்டியில் விமலாவோடு சென்றான். விமலா பணம் படைத்த ஒரு செல்வன் மகள். இவனது மனம் விமலாவின் விலையுயர்ந்த ஆபரணங்களை எவ்வாறு களவாடலாம் என்னும் ஒரே எண்ணத்தில்தான் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிற்பதையும் பரிசோதகர் இடையிடை பிரயாணிகளைப் பார்வையிட வருவதையும் அறிந்து புத்தியாகத் தப்பிக்கொள்ளும் வழிவகைகளைக் கையாளுவதில் இவன் மனம் சிறிதும் செல்லவில்லை.

விமலாவோவெனில் பெண்களுக்குரிய நாணம், மடம், பயிர்ப்பு, அச்சம் என்னும் நான்கு குணங்களையும் அரசர்க்குரிய யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நான்கு படைகள் போலவும் மெய்,

வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் நல்ல புத்தியுடைய மந்திரி போலவும் தன்னைச் சூழவைத்துக்கொண்டு ஓர் ஒப்பற்ற மதியுடை மன்னவன் போல் தனக்குப் பகைய ரசன் போல் காட்சி அளித்த அவ் விளைஞன் பக்கம் தனது கவனமாகிய தேரைச் செலுத்திக் கொண்டிருந்தாள்."கொடிது கொடிது வறுமை கொடிது. அதிலும் கொடியது இளமையில் வறுமை" என்றார் பெரியோரும். அந்தோ பாவம். ஏழை அவன் என் செய்வான். எண்ண மெல்லாம் மண்ணாய்ப் போனது.

கடல் வற்றிக் கருவாடு தின்னக் காத்திருந்து குடல் வற்றிச் செத்த கொக்கைப் போல்" விமலாவின் தூக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தஅவனை சனியன் பதினைந்தின் பாதியானவன்தான் ஆட்டத்தொடங்கினானோ? அல்லது அவனது காலகஸ்டமோ? யார் அறிவார். இளைஞன் இவ்வாறு அன்றிரவு முழு வறுமை நோய் காரணமாய்த் தூக்கமின்றி - மனப்பால் குடித்துக்கொண்டிருந்து காலையானதும், சற்று அயர்ந்து தூங்கலானான். புகையிரதமும் குறித்த நிலையத்தில் நின்றது. புகையிரதப் பரிசோதகர் ஒருவர் அங்கு விரைந்து வந்தார். அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த இளைஞனைத் தட்டி எழுப்பிச் சீட்டைக் காட்டும்படி கேட்டார்.

ஐயோ ஏழை இளைஞன் எழுந்தான் திகைத்தான் மெய்மறந்து பதைபதைத்தான். மிகுந்த நடுக்கத்தோடு பரிசோதகரிடஞ் சீட்டைக் கொடுத்தான். பரிசோதகர் பார்த்தார். 3ஆம் வகுப்புச் சீட்டு, 1ஆம் வகுப்புப் பெட்டியில் இருக்கிறான். ஆத்திரம் பொங்க உரத்த குரலில் கட்டடா மீதிப்பணத்தை, எங்களை நீ ஏமாற்றவா முற்பட்டாய் ? எனச் சினந்து கூறினார். இளைஞன் அறிவற்ற மரம் போல் நின்றான். சில நாட்களின் முன்னும் அவன் இவ்வாறு பிடிபட்டதுண்டு. அச்செய்தி அக்கணமே பரிசோதகர் ஞாபகத்திற்கு வந்தது. அவர் அதிக கோபத்தோடு அவனைச் சிறைச்சாலை அனுப்பினார்.

பாரதி
மட்டக்களப்பு

குட்டி

குட்டி, பாரதி சஞ்சிகையில் 'கொழுத்த கடன்' என்ற குட்டிக் கதையை எழுதியவர். சொற்ப வருமானமுள்ள ஒருவர் வரவுக்கேற்ற செலவு செய்ய அறியாத ஒரு பெண்ணையும், செலவாளியான ஒரு மகனையும் பெறுவதனால் இறுதியில் தற்கொலை செய்துகொள்ள நேரிடுகிறது என்பதனைக் கதாசிரியர் ஹாஸ்யமான முறையில் அமைத்திருக்கின்றார்.

❖ கொழுத்த கடன்

கொழுத்த கடன்

குட்டி

மடமையெனும் ஊரில் "வருகை சிறிது" என்ற ஒரு வாலிபர் வசித்துவந்தார். "முப்பதுக்குள் மூன்றிலொன்றைத் தேர்" என்னும் முதுமொழியைப் பாழாக்கச் சித்தம் சிறிதுமில்லாது "செல்வதிகம்" எனும் மாதுசிரோன்மணியை அவ்வூருக்குள்ளேயே சிரமமில்லாது மணம் செய்து கொண்டார். மனம் பெயராமலே இனிமையை நுகர்ந்து வாழ்ந்தனர் இருவரும். இன்பமனுபவிப்பதென்றால் வெறும் போலியா? பெறுபேறும் மாதக்கணக்காக எண்ணிக்கொண்டு வந்தது.

முடிந்தது மாதமும் பத்து. அழகிய ஓர் தனயன் பிறந்தான். அவன் தான் இன்றைய நம் நண்பன் "கடன் பெரிது" இவரது வாழ்க்கையைச் சொல்லவா வேண்டும். உல்லாசமே உல்லாசந்தான். கறுத்துக் கொழுத்துக் கஸ்ட உருவமேதான். நாட்செல்லச் நாட்செல்ல வண்டியும் வளரத் தொடங்கியது.

ஸ்ரீமான் "வருகை சிறிது" என்பவரோ நம்மகன் "கடன் பெரிது" இருக்கும் போது இதன் மேல் என்னடி வரப்போகுது நெய்யில் பொரியடி மீனை என்பார். சௌபாக்கியவதி "செல்வதிகம்" அம்மாளோ நீ உடை

போத்தலை என்பா. அருமை மகன் "கடன் பெரிது" என்பவர் தான் சும்மா தூங்குவாரா? அவருக்கு வண்டி கொழுத்ததோடு குண்டியும் கொழுத்து விட்டது. இரண்டு பாகம் நடந்தாலோ தொடைகள் உரோஞ்சி கிரீச்சென்று பாயும் இரத்தம். இதைப் பார்த்த பெற்றோருக்கு மனம் சகிக்க முடியவில்லை. பரவாயில்லை என்று துணிந்து பெட்டியைத் திறந்து பத்தேக்கர் நீர்ப்பாய்ச்சல் குளிகை ஒன்றை நொத்தாரிஸ் மூலமாகக் கொடுத்தார். அப்பாடி கொஞ்சம் வண்டி குறைந்தது. அந்த ஆனந்தம் சும்மா விடுமா?

நல்ல படமாம் என்பார் நான். "வருகை சிறிதார்" அதுக்कென்ன எடுங்க "கார்" என்பா பத்மினி " செலவதிகம்" பிறகு ஏன் பாப்பான்.

"கடன் பெரிது" கொஞ்சம் கொழுக்கத் தொடங்கினார். ஐயோ இது என்ன பாவம் என்று பயந்த தம்பதிகள் முப்பத்திரண்டு ஏக்கர் தென்னங் குளிகையை முன்போலவே கொடுத்தனர். கற்று சகல கொழுப்பும் குறைந்தது. விஷயங்களை உற்றுநோக்க, நோக்க போலும் "கடன் பெரிசார்" சற்று மெலியத் தொடங்கினார்.

வருகை சிறிதாருக்கு உலகமே கசந்து விட்டது போல. என்ன நம்ம குளிகையெல்லாம் இந்தக் கடன் பெரிது" பிறந்த பிறகுதானே தொலைந்தது என்று ஒரே சள், புள். இவர்கள் இருவருக்கும் இடையில் அகப்பட்ட செலவதிகத்துக்குத்தான் பெரும் ஏக்கம். ஏன்? அன்பாக வளர்த்த மகன் "கடன் பெரிது" கஸ்டப்படுகிறானே என்றுதான். இந்த ஏக்கத்தால் போலும் சிறிது நாட்களாய் அருமருந்தன்ன தாயார் செல்வதிகம்" இம் மண்ணுலகை விட்டு நீத்தார். இந்த ஏக்கம் மகனைப் பீடித்தது போலும். கடன் பெரிது சிறிது நாளால் மாண்டொழிந்தான்.

வருகை சிறிதாருக்கோ ஒருவர் உதவியும் இல்லை, வீட்டுக் குளிகை மாத்திரம் கையில் இருந்தது. துணையொன்று வேண்டும்தானே என்று ஒரு பிள்ளையை வளர்த்தார். அவள் பெயர்தான் "செலவில்லை" இவளுக்கோ கொழுப்பும் இல்லை,மெலிவும் இல்லை. குளிகை யும் தேவைப்படவில்லை. அப்போதுதான் மகன் கடன் பெரிதின் நிஷ்டூரத்தை மனமார அறிந்தார். அறிந்தும் கடன் பெரிதுதான் என்ன செய்வான். எல்லாம் செலவதிகத்தைத் தாலி கட்டினதாலல்லவா இந்தக் கஸ்டமெல்லாம் வந்தது. தாலியைத்தான் கட்டினாலும் அவளை மனமார நேசித்து நடந்தேனே என்று தனக்குள்ளே நொந்து இம்மண்ணுலகே வேண்டாம் என்று சினந்து ஓர் நீண்ட கத்தியால் பாய்ச்சினார் வண்டியில் அன்றே இழந்தது அவர் உடலை மடமை.

பாரதி
மட்டக்களப்பு

இராஜ அரியரத்தினம்

ஈழகேசரியின் பிற்கால ஆசிரியராகவும் பின்னர்-ஈழநாடு, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் விளங்கியவர் இராஜ அரியரத்தினம், அரியம், அரியரத்தினம், சோணாசலம் ஆகிய பல புனைப்பெயர்களில் பல்வகைத் துறைகளிலும் எழுதியுள்ளார். இராஜ அரியரத்தினம் எழுதிய சிறுகதைகள் எண் ணிக்கையில் குறைவாயினும் தரமானவை. அவர் எழுதிய சிறுகதையான வயலுக் குப்போட்டார், வெள்ளம் என்ற பெயருடன் சிற்பியின் ஈழத்துச் சிறுகதைகள் என்ற தொகுதியில் இடம் பிடித்திருந்தது. ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையில் ஒரு இலக்கியப் பாலமாக அவர் விளங்கியுள்ளார். அவர் ஆசிரி யராகப் பத்திரிகைகளில் இருந்த காலத்தில் பல எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கல்கி பிறந்தார் அவர் எழுதிய ஒரு நூல் வெளிவந்துள்ளது. மொழிபெயர்ப்புக ளும் செய்துள்ளார். அமரமாகி விட்டார்.

❖ வயலுக்குப் போட்டார்

வயலுக்குப் போட்டார்

இராஜ அரியரத்தினம்

தொடர்ந்து நிகழ்ந்த ஊழிக்கூத்தைப் படம்பிடிக்க வேண்டிய தில்லை. இப்படித்தான் வானம் பார்த்து நிற்கும் யாழ்ப்பாணத்தில் இருந்தாற்போல் வெள்ளம் வரும். ஒரு கலக்குக்கலக்கும். மக் களை அல்லோல கல்லோலப் படுத்திவிட்டு அகப்படுகின்ற எல்லாவற் றையும் அள்ளிக்கொண்டு போய்விடும்.

சிங்கப்பூர்ப்பணத்தில் முளைத்த கல்வீடுகள் நிமிர்ந்து நிற்கும். ஏழை மக்களின் குடிசைகளைச் சின்னாபின்னமாக்கும். தலைசாய்க்க இடமில்லாமற் தவிக்கச் செய்துவிடும். கல்வீடுகளில் இருந்து பணக் காரர்களையும் அந்த முறை வந்த வெள்ளம் பீதி கொள்ளச் செய்து விட்டது.

இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசைய வில்லை. திடற்பூமி. வெள்ளம் வந்தாலும் எங்கேயோ ஓடி மறைந்து விடும்.

காலையில் எழுந்ததும் கந்தப்பருக்குக் கண்ணிற்பட்டது வெள் ளத்தில் நீச்சுப் பழகும் ஒரு "நுகம் சுருட்டுப்பிடிப்பதையும் மறந்து

கொட்டிற் பக்கம் போனார். நுகம் அங்கில்லை. சரி , என்று சொல்லி தவித்துத்திரிந்த நுகத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டுவந்து பத்திரமாக வைத்துவிட்டார்.

ஒரு பசுவும் இரண்டு நாம்பன்களும் சிலிர்த்துக்கொண்டு வெள்ளத்தில் நின்றன. அவிழ்த்து அக்கம் பக்கத்தில் கட்டுவது முடியாத காரியம். கந்தப்பர் "லொக் லொக்" என்று இருமிக்கொண்டு. மாடுகளைப்பார்த்தபடி நின்றார்.

கந்தப்பர். இப்போதெல்லாம் எலும்புந் தோலுந்தான் . ஆளில் ஒருபிடி இரத்தமில்லை. நரம்புகளெல்லாம் உடம்பிலே பச்சைபசேலென்று நெளிந்து மிதந்து கிடந்தன. போதாக் குறைக்குக் கொடிய இருமலும் அவரை ஆட்டும் வரை ஆட்டி வைத்தது.

சிவகாமி அப்போது தான் பாயைச் சுருட்டி அசைவில் வைத்து விட்டுப் புகைச்சட்டியைத் தூக்கிக்கொண்டு அடுக்களைப் பக்கம் போனாள். வாயிற் சுருட்டில்லாமற் கந்தப்பர் அன்று சோர்ந்து நின்றது சிவகாமிக்குப் புதுமையாகவிருந்தது.

"வெள்ளத்திக்கை நில்லாதே அப்பு. அது கொஞ்சநேரத்தால் வத்திப்போம். நீ வந்து புகைச்சட்டியிலை காலைக் காச்சு" என்றாள் மகள்.

கிழவனுக்கு அப்போதுதான் சுருட்டின் ஞாபகம் தட்டியது. "தலைமாட்டுக்கை போயிலை கிடக்கிது. பாதி கிள்ளிக் கொண்டுவா - பிள்ளை" என்று சொல்லித் திண்ணையிற்போய்க் கையை ஊன்றிக்குத்தினாரோ இல்லையோ... வெள்ளத்தை விழுங்கி. மிக வீங்கிக்கிடந்த திண்ணை . அழுகிய பழம்போல் நெகிழ்ந்து விட்டது .

அடுக்களைக்குள் இருந்த சிவகாமி அப்பு என்று சொல்லி சிரித்தும் விட்டாள்!

அப்பு எரிந்து புகையவில்லை. அடிச்சுருட்டைச் சப்பிப் புகைவிட்டுக் கொண்டிருந்தார்.

"மேனே. காவோலை விழக் குருத்தோலை சிரிக்குமாம்" என்று சொல்லி ஒரு மாதிரிச் சமாளித்து ஒல்லித் தேகத்தைத் தூக்கிக்கொண்டு. எழும்பிவிட்டார்.

மகள் அடுக்களையிலே தேனீர் ஆயத்தம் செய்துகொண்டு இருந்தாள். இப்படித்தான் பெருமழைபெய்து "விர்" என்று குளிராக இருந்தாற் கந்தப்பருடைய குடிசையிலும் தேயிலை வாசனை கமகமக்கும்.

"இந்தா அப்பு இருமலுக்குமிது நல்லது. சுடச்சுடக் குடித்தாற் சுகமாகவிருக்கும்" என்று சொல்லி சிரட்டையைக் கையிற் கொடுத்து மட்டிக்குள்ளே கிடந்த தேனீரைப் பக்குவமாக ஊற்றினாள் மகள். கிழவன் சீனியை உள்ளங்கையிற் கொட்டி நாக்காற்தடவி பொச்சடித்துக் குடிக்க மகள் பார்த்துக்கொண்டிருந்தாள்.

தாயார் இறந்து இவ்வளவு காலமாகியும் சிவகாமி தகப்பனாருக்குச் செய்ய வேண்டிய தொண்டுகளை மறந்துவிட வில்லை.

◆◆◆

சிவகாமியின் முகத்தில் அழகு பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஒளி கட்டும் விழிகள். மாந்துளிர்மேனி. சூரியனின் கூரிய அம்புகள் அவளுடைய மார்பைக் கிழித்துக் கொண்டு போகும் வேளைகளிலெல்லாம். அவளுடைய உடம்பு அப்படியே பளபளக்கும். பொன் -

தோடுகள் காதுகளில் ஒட்டிக்கொண்டு கிடந்தன. ஒரு சின்னப் பொன் மூக்குத்தி மின்னி மின்னி அவளுடைய முகப்பொலிவுடன் போட்டியிட்டது. கூந்தலை அள்ளிவாரி ஒரு பெரிய கொண்டை கட்டியிருந்தாள், கொத்துக் கொத்தாக மலர்கள் அவளுடைய கொண்டையை அலங்கரிக்கவில்லை. சேலையைக் கட்டி இடுப்பிலே இறுக்கமாகச் சொருகி குடமும் கையுமாகக் கிணத்தடிக்குச் செல்லும் போதும், தண்ணீருடன் திரும்பும் வேளைகளிலும், சிவகாமி ஒருகைவீசி ஒய்யாரமாக அடி எடுத்துவைப்பதே ஒரு தனி அழகு.

இதையெல்லாம் கண்டு அவஸ்தைப்பட்டு, உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தவியாய்த் தவிக்க, அக்கம்பக்கத்தில் ஒருவாலிபன் இருந்தானோ இல்லையோ, கடவுளுக்குத் கான் தெரியும். அப்படியில்லாவிடில், இந்தக் கடவுள் அவளிடம் ஏன் அவ்வளவ அழகையும் வாரியிறைத்திருக்க வேண்டும்?

◆◆◆

கிழட்டுக்கட்டை, சிரட்டையை இறப்பிற் சொருகிவிட்டு, சுருட்டைப் பிய்த்துக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தது நெருப்புக்காக.

"மேனே,ஒருநாளுமில்லாத பெருமழை. வயல் என்ன பாடோ தெரியாது. போன கிழமை அங்கினை ஒருமாதிரி எல்லாம் பச்சையாய்க் கிடந்தது. இந்தமுறை கடவுள் கண் பார்த்துவிட்டார்; குறையில்லை. என்று கிடக்க வெள்ளம் அடித்துக் கொண்டு வந்திட்டிது. ஒருக் காப் போய்ப் பார்த்துக்கொண்டு வாறேன். ஆடுகாற் சுப்பர்வந்தால் இருக்கச் சொல்லு" என்று சொல்லிக்கிழவர் தலைப்பட்டையை எடுத்துத் தட்டித் தலையிற் போட்டுக்கொண்டு வயற்பக்கம் திரும்பினார்.

"அப்பு நல்லவெள்ளம். இப்ப என்ன அவசரம். நீயும் போக வேணுமெண்டு நிக்கிறாய். வாய்க்காற்பக்கம் போகும் போது கவனமாய்ப்போ இந்தா இந்தத் தடியையும் கொண்டு போ" என்று மகள் சொல்லிக் கிழவனுக்கு ஒரு சிறு துண்டு பனாட்டும் தேங்காய்ச் சொட்டுகளும் கொடுத்து அனுப்பினாள்.

கந்தப்பர் வீட்டுப்பக்கம் ஒரு குருவியும் தலைகாட்டுவதில்லை . இத்தனைக்கும் அந்த மனுசன் ஒரு பொல்லாத ஆள் அல்ல. தானுந் தன்பாடும். ஆனால் ஆடு காற்சுப்பர். கந்தப் பரைக்கண்டு அரட்டைக் கச்சேரி வைக்காமல் விடுவதில்லை.

ஏன்? அம்மாக்குட்டியும் சிவகாமியிடம் அன்பு வைத்திருந்தாள். "அப்படிச் செய்மேனே இப்படிச்செய் மேனே." என்று அம்மாக்குட்டிதான் சிவகாமிக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது. அப்பெண் ஓர் ஏழை. என்றாலும் நல்ல மனுஷி.

அந்த வெள்ளத்தைத் தாண்டி ஒரு மாதிரி வயற்பக்கம் சேர்ந்துவிட்டார் கந்தப்பர். கிழடுதட்டிய காலத்தில் இப்படியெல்லாம் வெள்ளத்திலே நீந்த வேண்டியிருந்தது அந்த உயிருக்கு! வயல் இருந்ததாகத் தெரியவில்லை. வெள்ளம் எல்லாவற்றையும் விழுங்கிக் கக் கிக்கொண்டு பாய்ந்தது. செத்த பசுக்கன்றும், ஒரு கறுத்தை நாயும் மரக்கிளைகளுடன் சிக் குண்டபடி கிழவனை நோக்கி வந்து கொண்டிருந்தன. சொற்பதூரத்திலே ஒரு குடில் மிதந்து திரிந்தது. குடிலின் உச்சியில் ஒரு சேவலும் பெட்டைக்கோழியும் கூனிக் குறுகிக்கொண்டி ருந்தன.

கந்தப்பர். காவல்மரத்தைக் கண்டுவிட்டார். மரத்தருகேதான் வாய்க்காலென்பது அவருக்குத் தெரியும். வாய்க்காலைக் கடந்துவிட்டால் முதலிற் கால்படுவது கந்தப்பருடைய நிலத்தில். ஆனால் அங்கே எதற்காகப் போகவேண்டும்? நீச்சுப்பழகவா? கிழவனுக்குக் குளிர் வெடு வெடு" என்று நடுக்கங்கொடுத்தது.

வாய்க்காற்பக்கம் போய்க்கால் வைத்தாரோ இல்லையோ, குபுக் என்று சறுக்கிவீழ்ந் தார் ! வாய்க்கால் வரம்பு இருந்த இடமும் தெரியாமல் வெள்ளத்தோடு அள்ளுப்பட்டு விட்டது. அந்த இடத்தைப் பார்த்துத்தான் கந்தப்பரும் காலைவைத்தார். "வாய்க்காற்பக்கம் போகும் போது கவனமாய்ப்போ" என்று சிவகாமி ஏற்கனவே சொல்லியிருந்தாள். சிவகாமியும் அடுக்களையும், கந்தப்பரின் கண்முன் மின்னிமின்னி மறைந்தன.

திக்குமுக்குப்பட்டு எழுந்துவிடலாமென்றால் அது அவரால் முடியவில்லை. அந்தப் பக் கம் ஒரு குருவிகூடப் பறக்கவில்லை. தூரத்தில் எங்கோ ஓர் ஆந்தை அலறியது. மகள் கொடுத்த தடியைப் பிடித்தபடி கந்தப்பர் செத்துக் கொண்டிருந்தார்...

சிவகாமி அப்புவைப் பார்த்த வண்ணம், கொதித்துப் பறக்கும் உலைக்கு அரிசி போடு வதற்காக, அரிக்கன் சட்டியில் அரிசியை அலசிக் கொண்டிருக்கின்றாள். பக்கத்திலே ஒரு சட்டியிற் பிட்டுக்காக. ஒடியல்மா தண்ணீரில் ஊறுகின்றது.

அப்புவைக் காணவில்லை ஆடுகாற் சுப்பர் வருவார். அவரிடம் சொல்லி வயலுக்கு அனுப்பலாம்.... என்றால் அவரும் அன்றைக்கு வந்தபாடில்லை.

அதிக தூரத்தில் இருக்கும் பள்ளன் ஒருவன் ஒருநாளுமில்லாத திரு நாளாக அன்று வந்தான். "நாச்சியார் கமக்காரன் எங்கே?" என்றான் பள்ளன் .

வயலுக்குப் போட்டுவிட்டார். இன்னும் வரவில்லை" என்றாள் சிவகாமி. பள்ளன் நில்லாமற் போய்விட்டான்.

அம்மாக்குட்டிக்குக்கூட அன்று வர அவ்வளவு நேரமாகிவிட்டது. "அப்பு எங்கே" என்றாள்.

"வயலுக்குப் போட்டார். ஆடுகாற்சுப்பர் வந்தால் அப்புவைப் பாத்துவரச் சொல்ல வேணும்".

"ஓம், பிள்ளை ஒருக்கா அனுப்பிவிடு" என்று சொல்லிவிட்டு அம்மாக் குட்டி பறந்து சென்றுவிட்டாள்...

ஆடுகாற்சுப்பர் கந்தப்பரின் வீட்டுக்குப் போகவில்லைதான். ஆனால் வெள்ளத்தின் வேடிக்கையைப் பார்க்கலாமென்று வாய்க்காற்பக்கம் போனவர். கந்தப்பரை அங்கு கண்டு கண்ணீர் வடித்தார். சுப்பரின் கண்ணீர் துளிகள் வெள்ளத்துடன் கலந்துகொண்டன. அவர் அங்குமிங்கும் பார்த்தார். ஒருவருமில்லை. கந்தப்பருடைய தலைப்பட்டை மாத்திரம் தண் ணீரிலே தவித்துக் கொண்டு வருவதும் போவதுமாக. இருந்தது.

நண்பனின் உடலைத் தூக்கி கவர்விட்ட மரமொன்றில் வைத்துவிட்டுக் கந்தப்பரின் குடிசையை நோக்கி, ஆடுகாற் சுப்பர் "விறு விறு" வென்று நடந்தார். .

◆◆◆

வெள்ளம் வந்தது.

இத்தனைக்கும் கந்தப்பருடைய குடிசை அசையவில்லை.

இப்போது ஆடுகாற் சுப்பர் கந்தப்பருடைய குடிசையை அசைக்கப் போகின்றார்.

சுப்பர் போகின்ற போக்கிலே குடிசை "பொலு பொலு" என்று இடிந்து. மண்ணோடு மண்ணாகிவிடுமா?

ஈழகேசரி
18.02.1945

ந.பாலசுப்பிரமணியம்

ஈழகேசரியின் சிறுகதைகளை எழுதியவர். இவருடைய 'செல்லி' என்னும் சிறுகதை 1945 ஆம் ஆண்டு ஈழகேசரியில் வெளிவந்தது.

❖ செல்லி

செல்லி

ந. பாலசுப்பிரமணியம்

நாகேந்திரன் பீ. ஏ. றொம்ப நளைக்குப் பிறகு ஊருக்குப் போயிருந்தான். கொழும்புப்பட்டினத்தில் ட்ராம் வண்டிகளையும் "ரூடல்டை"களையும் பார்த்து அலுத்துப்போன அவன் கண்கள் நாலைந்து மாதத்துக்கு ஒருதடவை கிராமத்துக்குப்போய் பனந்தோப்புக்களையும் , -பசும் வயல்களையும் பார்க்க வேண்டுமென்று துடிக்கும். ஏரொப்பிளேன் இரைச்சலையும். ஐரோப்பிய சங்கீதத்தையும் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன அவன் செவிகளுக்கு சோளகம் தென்னோலையில் மீட்டும் இசையும் மேளக் கச்சேரியும் காந்தர்வ கானம். சுருக்கமாக ஐந்து மாதங்கள் அவனால் கொழும்பில் சீவிக்க முடியாது. அவனது ஐம்பொறிகளுமே நாகரீகத்தை எதிர்த்து ஆட்சேபிக்கும்.

நாகேந்திரனுக்கு வலந்தல் கிராமத்தில் சின்னானைத்தவிர வேறோருவரையுந் தெரியாது. சிறுவயதில் தந்தை. தாய். இனப்பந்துக்கள் எல்லாரையும் இழந்து விட்டான். தகப்பன் கட்டி வைத்த ஒரு கல் வீடும் சில தோட்டங்களுந்தான் அவனையும் வலந்தலையும் பிணைப்பது. பி. ஏ. வரை கொழும்பிலே படித்தவனானாலும் நவநாகரீகம் என்ற

பிசாசுக்குப் பலியாகாதவன். சிறிது காலம் டவீட் குட்டிலும், ஜாஸ் சங்கீதத்திலும் அவன் மனசை விட்டுப்பார்த்தது உண்மைதான். ஆனால் அது அவற்றில் லயிக்கவில்லை. அந்நிய நாட்டான் என்ற நினைவு அவன் உள்ளத்தை உறுத்தியது. விட்டுப்போட்டுக் கதர் கட்டிக்கொண்டான். சுருட்டுக் குடிக்க முயற்சித்தான் அதன் காரம் தாளாமல் புகைப்பதையே விட்டுவிட்டான்.

வலந்தலுக்கு வந்த மறுநாள் இரவு இரண்டு மணியிருக்கும். நாகேந்திரனுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தவன் திடீரென எழுந்து ஏதோ தீர்மானித்துவிட்டவன் போலக் கதர்ச் சால்வையைப் போர்த்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான். வலந்தல் ஆழ்ந்த துயிலில் மூழ்கிவிட்டது. பின்னிலவு குளிர்ந்த மங்கல் வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டிருந்தது. எங்கேயோ நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டு ஒரு பூவரசங் கதியாலை முறித்துக்கொண்டு வயல் பக்கம் நடந்தான் நாகேந்திரன்.

தகப்பனார் இறந்துபோன காலந்தொட்டு நாகேந்திரனின் நிலம் புலங்களைச் சின்னான்தான் செய்கை. சின்னானுக்கு நாகேந்திரன் ஊருக்கு வருவதென்றால் குஷி. கள்ளுக் கொஞ்சம் அதிகமாகக் குடிப்பான். நாகேந்திரன் ஊரிலிருக்கும் அளவும் அவனுக்கு மரியாதையும் கூட. வயலில் அவன் குரல். சற்று உரக்கத்தான் கேட்கும்.

தன்னையறியாமல் நாகேந்திரன் கால்கள் பள்ளத்துக் காணிப்பக்கம் அலைந்தன. "நம் மடை பள்ளக்காணியில் இந்தக் கொசு முளகாய் கொஞ்சம் போட்டிருக்கிறன் தம்பி" என்று நேற்று மாலையில் தான் சின்னான் சொல்லியிருந்தான். மிளகாய்ச் செடியில் காய்கள் சிவந்து கொண்டிருந்தன. இரண்டு வயல்களுக்கு நடுவேயுள்ள ஒரு புல் வரம்பில் உட்கார்ந்து கொண்டு சோழகத்தையும் நல்லிரவையும் அனுபவித்துக் கொண்டிருந்தான் நாகேந்திரன்.

திடீரென்று அவனுக்குப்பின்னால் ஓர் அரவம் கேட்கவே திரும்பிப்பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு உருவம் நின்றது. யாரோ மிளகாயல்லவோ திருடவந்திருக்கிறார்கள் என்று நினைத்து நாகேந்திரன் மெதுவாகச் சத்தமின்றி அதனருகே சென்றான். மங்கிய இருளில் அவனுக்கு எதுவும் சரியாகப் புலப்படவில்லை . எட்டித்தாவிக் கரத்தைப் பற்றிக் கொண்டதும் தான் அவன் மனம் திக்கென்றது. ஓர் இளம் பெண்ணை அவன் எதிர்பார்க்கவில்லை. என்ன வாயிருந்தாலும் மிளகாய் திருட வந்தவள் தானே என்று மனசை திடப்படுத்திக்கொண்டான்.

“நீ யார்?” என வெருட்டினான். அந்தப் பெண் முதலில் திகைப்புற்றவள் போலக்காணப் பட்டாள், கையை விடுவிக்க முயன்றாள். பிடி நெகிழவில்லை. பின் அவன் முகத்தை உற்று நோக்கிவிட்டுச் சிரித்தாள்.

நாகேந்திரன் மறுபடியும் ஆச்சரியத்தோடு. "நீ யார்? என்னைத் தெரியுமா?” என்று கேட்டான்.

“நான் சின்னான்ரை மோள் உங்களை நல்லாய்த் தெரியும்” என்று சொன்னாள் பெண்.

“எ.. சின்னான் மகளா? அப்ப என்னத்துக்கு இந்த நேரத்திலே மிளகாய் பிடுங்க வந்தாய்?

“நான் காவலுக்கு வந்தனானோ. மிளகாய் புடுங்க வந்தனானோ?” என்று கேட்டுவிட்டு.

"அப்பு ராத்திரி நல்லாய் குடிச்சிட்டு படுத்திருக்கிறார் எழும்பமாட்டாமல். பின்னைதான் " ஆச்சி என்னைப் போகச் சொன்னவ காவலுக்கு" என்று விளங்கப்படுத்தினாள் செல்லி.

இந்த வினாவிடை நடக்கும் போதெல்லாம் செல்வியின் கைகள் துவண்டு நெளிந்து கொண்டு. நாகேந்திரனிடம் தானிருந்தன. அவற்றைவிட்டு விடலாமென்று அவன் யோசிக்க வில்லை . காரணம், அந்த ஸ்பரிசம் அவனுக்கு ஒரு விபரீத உணர்ச்சியை. ஒரு ஆறுதலைக் கொடுத்ததுதான்.

"கையை விடுங்கோ ! ஆராலும் வரப்போயினம்" இப்பதான் நாகேந்திரன் தெரியாமல் செய்தவன் போலப் பாசாங்கு செய்து கொண்டு கையை விட்டான்....... ஆனால் அவ்விடத்தை விட்டு விலக அவன் விரும்பவில்லை.

உட்கார்ந்து - சிறிது நேரம் செல்லியிடம் கதைகொடுத்தான். உன் பெயரென்ன? அண்ணன் தம்பி இருக்கிறார்களா? என்று கேட்டுக் கொண்டுபோய் உனக்குக் கல்யாணம் முடிந்ததா?" என்று முடித்தான்.

செல்வி நாணிக் கோணிக் கொண்டு இல்லை யென்றாள்.

வீடு திரும்பிய நாகேந்திரனுக்கு மறுபடியும் தூக்கம் பிடிக்கவில்லை . போகிற வழியிலே அவனுக்கு தலை சுழல ஆரம்பித்து விட்டது. என்னவோ ஒன்று தன் உள்ளத்தில் விதை போட்டு விட்டதென்பதை உணர்ந்தான். செல்வியின் ஸ்ருங்காரமொன்றை விட வேறு சிந்த னைகளை மறுத்தது அவன் மூளை. இளமை கொந்தளித்து குமுறும் அவள் முகமும் சிற்ப சைத்திரிகனுக்கு லட்சியம் போன்ற அவளது சர்வாங்க அமைப்பும், அந்த மோகனப் புன் சிரிப்பும் ஆஹா நினைத்து நினைத்து பரவசமெய்தினான். முன்பெல்லாம் நாவல்களில் ஒவ் வொரு கணமும் அவளையே சிந்தித்தான். "சதா உன் எண்ணந்தான். என்று நாவலா சிரியர்கள் எழுதுவதை முடியாத காரியமென்று தட்டிவிட்டுக் கேலி செய்பவன். நாவலாசிரி யர்கள் மிகுந்த அனுபவசாலிகளாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்று இப்பொழுது எண்ணமிட்டான். இந்த ஸ்திதியில் நாகேந்திரனை விட்டுவிட்டு இருள் அகன்றது.

பொழுது விடிந்ததும் சின்னானை வரும்படி ஆள் சொல்லி அனுப்பினான். சின்னானும் வந்தான். இருவரும் நெடுநேரமாகச் சம்பாஷித்தார்கள். பின் தர்க்கித்தார்கள். நாகேந்திரன் கைகளை இங்குமங்குமாக வீசி ஏதோ ஞாயங்கள் எடுத்து வாதிப்பவன் போலக் காணப் பட்டான். சின்னான் முதலில் மிகவும் அடக்கமாக எல்லாவற்றிற்கும் மறுத்துத் தலையசைத்து வந்தவன். தர்க்கம் நீடிக்கக் கொஞ்சம் விட்டுக் கொடுப்பவன் போலக் காணப்பட்டான். என்ன முடிவோ எங்களுக்குத் தெரியாது.

இரண்டு வாரம் கழிந்தது. கொழும்புப் பட்டினத்தில் ஒருநாள் காலையில் எல்லாத் தினசரிப் பத்திரிகைகளிலும் நாகேந்திரன் பி.ஏ. அவர்களுக்கும் செல்வபூஷணி அம்மாளுக் கும் சமீபத்தில் திருமணம் இனிதாய் முடிந்ததென்ற செய்தி - பிரசுரிக்கப்பட்டிருந்தது. நாகேந் திரனுடைய நண்பர்கள் குடும்ப சகிதமாய் வந்து தம்பதிகளை ஆசீர்வதித்துச் சென்றார்களாம். கார் விரைந்து ஓடிய போதிலும் இன்னும் வைதீகசூரியிலேயே புதைந்து கிடக்கும் பெரிய பெரியதமிழ் மணிகளும் பிரசன்னமாகி இருந்தார்களென்று இடையில் கேள்வி. இந்த மணிகளின் தேவிமார் வீடு திரும்பியதும் செல்வபூஷணியின் சௌந்தர்யத்தையும், அவளது

அடக்க ஒடுக்கமான நடையையும் நாக்கு வரள புகழ்ந்தார்களாம். "நன்றாகப் படித்தவள் போலவே இருக்கின்றாள் என்று சொல்லியதாம் ஒரு தமிழ்மணியின் சம்சாரம்! இந்தப் புகழ்மாலை எல்லாம் சின்னான் "மகளுக்கு கிடைத்திருக்குமா?

◆◆◆

வலந்தலில் ஒருநாள் கூசுபொழுதில் ஊரிலுள்ள நாட்டாண்மைக்காரர் கதிரனின் கள்ளுக் கொட்டிலில் பனம் பால் பருகுவதற்கு குடியிருந்தார்கள்.

தலை சுழல், நாக்கு உளர ஆரம்பித்தது. "கல் வீட்டுப் பொடியன் (அதாவது. நாகேந் திரன்) பள் பொடிச்சியை கூட்டிக் கொண்ட பொருள் பற்றிப் பிரசங்கங்கள் நடந்தன. இந்தப் பிரசங்கங்களில் சாரத்தைத் திரட்டித் தருவதுபோலப், புளியடிச் சுப்பர் "உப்படித்தான் அறப்படிச்ச வன் கூழ் பானைக்குள் விழுகிறது. என்று சொல்லி, புளாவைச் சுழட்டி எறிந்து விட்டு நடந்தார்.

ஈழகேசரி
06.05.1945.

யாழ்பாடி (கனகசெந்திநாதன்)

இரசிகமணி கனகசெந்திநாதனின் இன்னொரு புனைபெயர் யாழ்பாடி. இப் பெயரில் ஈழகேசரியில் மூன்று சிறுகதைகள் எழுதியுள்ளார். குரும்பசிட்டி தந்த பெருமக்களில் ஒருவர். மண்வாசனை மிக்க நயமான சிறுகதைகள் பலவற்றினை எழுதியுள்ளார். மானிட அநீதிகளுக்கு எதிராக குரல் தந்தார். பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர். பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் மாணாக்கர். நடமாடும் வாசிகசாலை. ஆட்களைப் பாராது எழுத்தினை இரசிப்பவர். மனந்திறந்து பாராட்டுபவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சி நூல் அவருடையது. ஈழகேசரியில் ஈழத்து பேனா மன்னர் நாற்பது பேரை அறிமுகம் செய்து நமது இலக்கிய இருப் பினை வெளியுலகம் அறியவைத்தார். விமர்சகர் , வெறும்பானை. விதியின் கை, என்பன இவர் ஈழகேசரியில் எழுதிய நாவல்கள் விதியின் கை வீரகேசரி வெளி யீடாக வெளிவந்தது. யாழ்பாடி, உபகுப்தன், கனக செந்திநாதன் என்பன ஈழத்துக் குப் பெருமை தரும் சிறுகதைகளாகும். இவரது சிறுகதைகள் அடங்கிய தொகுதி வெண்சங்கு ஆகும். யாழ். இலக்கிய வட்டத்தின் பிதாமகர். அமரராகிவிட்டார்.

- ❖ ஒருபிடி சோறு
- ❖ இரும்பு இதயம்

ஒரு பிடி சோறு

யாழ்பாடி

யாழ்ப்பாண மாதா மலடியென்று பெயர் கேளாமல் - சத்திர சிகிச்சையோடு பெற்றெடுத்த நொண்டிக் குழந்தை தொண்டைமான் ஆறு. கடலிலே இருந்து வெட்டப்பட்ட அந்த உப்புக்களிக்கு "ஆறு" என்று பெயர் இட்டதே விசித்திரம். அதனிலும் விசித்திரம் அந்தக் களிக் கரையில் முருகப்பெருமான் இருக்க எண்ணம் கொண்ட கதை.

இந்த விசித்திரமான முருகன் பல திருவிளையாடல்களைப் புரியச் சாதிபேதமில்லாமல் எல்லா நோயாளரும் அவனைத் தஞ்ச மடைந்தனர். இப்படித் தஞ்சமடைந்த பலபேருக்கும் அன்னமளிக்கும் பொறுப்பை பல பணக்காரப் புள்ளிகளுக்கு நோய் கொடுப்பதனால் தீர்த்து வைத்தான்.

வெள்ளிக்கிழமை மடம். இந்த மடத்திற்கு ஒரு கௌரவ ஸ்தானம் அந்தக் கோயிலில் உண்டு. எவர் அன்னதானம் பெரிதாக நடத்தினாலும் அந்தப் பெருமையை அடைவது அந்த மடந்தான்.

இன்று மடத்திலே புகைகிளம்பிக் கொண்டிருந்தது. பக்கத்திலே இரண்டு வண்டிகள் பொருட்களை இறக்கியவண்ணம் இருந்தன.

ஆமாம்! சனங்கள் ஊகித்தது சரி . யாரோ பெரிய இடத்து "அவியல்" குதூகலம்! பிச்சைக்காரர் - கஷாயம் தரித்தவர் - தீராத நோயாளர் - சோம்பேறித் தடியர்கள் எல்லோருக்கும் குதூகலந் தான் ! ஹறிசனங்களின் மடம் அந்த மடத்திற்கு வெகுதொலைவிலே பற்றைகளுக்கு மத்தியில் மனிதர்தான் "எட்டப்போ - எட்டப்போ" என்று சொல்லாத அந்தக் கோவிலில் மடம் மாத்திரம் ஏன் அப்படித் தீண்டத் தகாததாகக் கட்டப்பட்டது என்று விளங்கவில்லை .

புண்ணியம் சம்பாதிக்க அந்த மடத்தைக் கட்டிய புண்ணியவானைத் திட்டிக் கொண்டே ஒரு கிழவி வந்து கொண்டிருந்தாள். கட்டையிலே போறவன் ஏன் இவ்வளவு தொலைவிலே கட்டினான் நான் என்னமாய் நடக்கிறது என்பது அவள் வாழ்த்தின் ஒருபாகம்.

உம்-உம்-உம்-ஆ-அப்பனே முருகா!! என்னைக் கொண்டு போ" என்ற முனகலைக் கேட்டுக் கிழவி திட்டுவதை நிறுத்தி விட்டுக் கெதியா நடந்து வந்தாள்.

"ஆத்தை தண்ணீர் - தண்ணீர் தா" என்றது அவளை எலும்பும் தோலுமாய் முனகிய உருவம். கிழவியும் அடுப்பில் இருந்த தண்ணீரை முட்டியிலே வார்த்து அந்த உருவத்தின் வாயுள் ஊற்றினாள். கை நடுங்கியது. தண்ணீர் கழுத்து தோள் எங்கும் சிதறியது. .

கொடுத்து முடிந்ததும் "மோனே என்ன செய்யுது. காய்ச்சல் காயுதா? அப்பிடி என்றால் வீட்டை" என்று இழுத்தாள்.

"வீடா ...... எங்கே?.... உம் பேசாமல் போய் சோத்தைக் காச்சு" என்றது அந்த உருவம்.

"எனக்கு கொஞ்சப் பழஞ்சோறு இருக்குது. உனக்கு காச்ச அரிசியும் இல்லை: காய் கறியும் இல்லை. அந்த கட்டயிலே போறவள் இண்ணைக்கு கொண்டுவாறேன் என்றாள்... அவளையும் இன்னும் காணலை. பொழுதும் ஏறிட்டு போகுது என்ன செய்ய...." என்று கிழவி முணுமுணுத்தாள்.

"அப்போ பட்டினியாய் கிடக்க சொல்லுறியோ?" என்றான் சின்னான். ஆம் அவன்தான் அந்த குடும்பத்தின் கடைசிப் பிள்ளை. அவளின் கடுந்தவத்தினால், நான்கு பெண் பிள்ளைகளுக்குப் பின் சந்நதிக்கு ஈசன் கொடுத்த ஆண்பிள்ளை:

"வெள்ளிக்கிழமை மடத்திலே யாரோ அவிச்சுப்போடுறாங்களாம். நான் போய் ஒரு பிடி சோறு உனக்கு வாங்கிவாறன்" என்றாள் கறுப்பி.

"உம் போடுவாங்கள். உனக்கா....? தடியன்கள் சோம்பேறிகள் - சாமிகளுக்கு இடிபட்டு வாங்குகிறவர்களுக்கு கிடைக்கும். ஏழைகளுக்கா? கையைக் காலை உடைச்சிக்கினுதான் வருவே "ஒண்ணும் தராங்கள். போ சோத்தைக் காச்சு" என்று உபதேசித்தான் அவன்.

மத்தியானத்து மணி ஓசை கேட்டது. "தம்பி! மணி ஓசை கேட்குது: வாறியா கோயில டிக்கு" என்று கறுப்பி ஆதரவாகக் கேட்டாள்.

2

"இண்ணைக்கி என்னால் வர ஏலாது. காச்சல் ... இருமல் தலையிடி - - எல்லாம் நீபோய் கும்பிட்டு விட்டு திருநீறு சந்தனம் தீர்த்தம் எல்லாம் வாங்கி வா நான் இங்கேயே படுத்திருக் கிறான்" என்ற அவன் பதில் ஈனஸ்வரத்தில் கேட்டது.

கிழவி ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு தடியை ஊன்றிய படியே கோயிலுக்கு வந்து கொண்டிருந்தாள்.

மனிதக் கூட்டத்தின் அவசரம் ஒருவரை ஒருவர் மோதிமிதித்து தள்ளி ஓடிக்கொண்டி ருந்தார்கள். கிழவி - "பொல்லையும் ஆட்டிக்கொண்டு காலையும் எட்டி வைத்து நடந்தாள்.

பறைமேளத்தின் ஓசை "படீர் படீர்" எனக் கேட்டது. நாதஸ்வரத்தின். கீதம் அதற்குள் அமுங்கியும் மிதந்தும் ஒலித்தது.

கிழவியின் அவசரம் பையன் எறிந்த வாழைப்பழத் தோலுக்குத் தெரியுமா? தடியை ஊன்றும் போது அந்தத் தோல் சறுக்கிவிட்டது. "ஐயோ! முருகா!!" என்ற சப்தத்தோடு கிழவி ஒருபுறம் விழுந்தாள். டிங்-ங்-ங்" என்ற ஓசையோடு தடிகறகளின் மேல் உருண்டது. பின்பக்கத்தில் அவசரமாய் வந்த மோட்டாரில் இருந்த கனவான் திட்டியபடியே "கோணை" அமுக்கினார். "பெத்தா!...விழுந்தாபோனாய்? எழும்பு... எழும்பு" என்று பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த பையன் தூக்கி நிறுத்தித் தடியையும் எடுத்துக் கொடுத்தான். "நீ நல்லாயி ருக்கவேணும்" என்று ஒரு வாழ்த்துரை கூறி விட்டு நடந்தாள் கிழவி. "கிழடுகட்டைகளுக்கு ஒரு கோயில் வரத்து" என்று காரில் போகும் கனவான் கூறியது அவளுக்குக் கேட்கவில்லை. குன்ற மெறிந்தாய் குரைகடலில் என்று ஒரு பக்தர் பாடும் பாட்டு. "முருகா! வேலா" என்று இரண்டு கைகளையும் நீட்டிப் பிள்ளைவரம் வாங்கும் பெண்ணின் ஓலம்.

"புன்னெறி அதனில் செல்லும்" என்று புராணத்துடன் நிலத்தில் விழுந்து கிடக்கும் அடியவர் புலம்பல்.

"பாராயோ என்னை முகம்" என்று பஞ்சத்து ஆண்டி பாடும் ஒலி. சங்குகளின் ஓசை. தவில்காரனின் 'கிறுதா' நாதஸ்வரத்தின் அழுகை எல்லாம் ஒன்றாய்த் திரண்ட ஒரே ஆரவாரம்.

இவ்வளவுக்கும் மத்தியில் முருகா! நீ தந்த சின்னான்: உன்னை நம்பிவந்து கிடக்கி றான் நீயே காப்பாத்த வேணும் என்ற அழுகை கேட்டது. அது கறுப்பியின் வேண்டுகோள் அல் லாமல் வேறு யாருடையது? அவளுக்குத் தேவாரமோ புராணமோ தெரியாது. உண்மை தான்! பிள்ளையார்வாசல் வள்ளியம்மன் இருப்பிடம் - நாகதம்பிரான் புற்று - முருகனின் மூலஸ்தானம் எல்லாம் சுற்றிவந்து ஒவ்வொரு இடத்திலும் தன் வேண்டுகோளைக் கேட்டு முடித்தாள் கறுப்பி.

பூசை முடிந்தது. அதிசயம்! இத்தனை பக்தகோடிகளில் பத்திலொரு பங்குபேர்கூட அவ்விடத்திலில்லை. அவர்கள் வயிற்றுப் பூசைக்காக மடத்துக்கு ஓடும் காட்சியைக் கண்டு கறுப்பி சிரித்தாள். ஆமாம் ! முருகப்பெருமானும் சிரித்திருக்கவேண்டும்.

அவ்வளவுபேருக்கும். வயிற்றுப் பூசை "தேவையாக இருந்ததோ - என்னவோ - அவள் அறியாள். ஆனால் அவளுக்கு - இல்லை - அவள் பெற்ற அருமைச் சின்னானுக்கு ஒருபிடி சோறு தேவையாகத்தான் இருந்தது. எல்லாரும் மடத்தை நோக்கி ஓடியபோது தலை சுத்துது. போ - சோத்தைக் காச்சு என்று கேட்ட தன் மகனின் ஞாபகம் அவள் மனக்கண்முன் நின்றது. விபூதி. சந்தனம் எல்லாம் வாங்கி இலையில் வைத்து மடித்து தன் சீலைத் தலைப்பில் முடிந்தாள். ஒரு சிரட்டையில் கொஞ்சம் தீர்த்தம் வாங்கினாள். பெட்டியையும் "பொல்லை"யும் எடுத்துக்கொண்டு மடத்துக்கு வந்துகொண்டிருந்தாள். பக்கத்துப் பூவரசமரத்துப் பல்லி

என்னகாரணமோ "இச் - இச்" என்றது. அவள் வாய் "ஐயோ! முருகா!! நீதான் துணை" என்று முணுமுணுத்தது.

3

ஆரவாரம்! ஒருவரோடு ஒருவர் இடிபட்டுக் கொண்டும் ஏறி விழுந்து கொண்டும் இருந்தார்கள். உள்ளே போவோரையும் வெளியே வருவோரையும் அவியல் முடிந்ததா? என்று ஆவலாகக் கேட்கும் கேள்வியும் திண்ணையில் இருந்து பண்டாரங்கள் அரட்டை அடிக்கும் ஓசையும் வானைப் பிளந்தன.

அந்த நேரத்தில் கறுப்பி மடத்தைக் கடந்து கொண்டிருந்தாள். "விபூதியை மகனுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பி வந்து சோறுவாங்கலாம்" என்று ஒரு கணம் யோசித்தாள். ஆனால் நேரம் போய்விட்டால் ஒரு பிடி சோறும் வாங்க முடியாதே" என்று மறுபடி நினைத்தாள். இருதலைக் கொள்ளி எறும்பு போல" என்று புலவர்கள் வர்ணிக்கிறார்களே அதே நிலை அவளுக்கு. தங்கள் மடத்தை ஒருமுறை பார்த்தாள். "ஐயோ! போயிட்டு வர ஒரு மணியாவது செல்லுமே என்று அவள் மனம் "திக்" கிட்டது.

இந்தளவுக்கும் பொறுத்த பொடியன் எப்பன் நேரம் பொறுக்கமாட்டானா? என்று அவள் முணுமுணுத்தாள். தீர்த்தச் சிரட்டைகளை மனிதப் பிராணிகளின் காலடிபடாத ஒரு பற்றை மறைவில் வைத்துவிட்டுத் திரும்பினாள். ஒரு நிமிஷம் கூட்டத்தின் மத்தியிலே நடுங்கிய கையோடு ஒரு பெட்டி மேலெழுந்து நின்றது.

சரி எல்லோரும் வரலாம் என்ற உத்தரவு பிறந்தது. ஒவ்வொரு மனித மிருகங்களும் பலப் பரீக்ஷை செய்தபடி உள்ளே போனார்கள்.

"ஐயா! ஆறு நாளாய்ப் பட்டினி மவராசா!! என்று கதறும் ஒரு கிழவனின் தீனக்குரல்

"ஐயோ! சாகிறேனே" என்று கூட்டத்தின் மத்தியில் இடிபடும் குழந்தையின் அலறல்.

"அடா! உனக்குக் கண் பொட்டையா? காலில் புண் இருப்பது தெரியலையோ என்று கோபிக்கும் தடியனின் உறுமல்.

"சம்போ! சங்கரா!! மகாதேவா!!" என்று இழுக்கும் தாடிச் சாமியின் கூப்பாடு .

சாமி! கொஞ்சம் வழிவிடுங்களேன்!" என்று மன்றாடும் சிறுமியின் அழுகை. நாய்களின் குரைப்பு. காகத்தின் கொறிப்பு. இத்யாதி! இத்யாதி!! -

இவ்வளவுக்கும் மத்தியில் ஒரு பிடி சோறு. - ஒரு பிடி சோறு என்ற சப்தம். அந்தக் கிழட்டுப் பிணத்தின் சத்தத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்.?

முதலாவது பந்தி நிரம்பியது. கதவு மூடும் சத்தம் கிழவிக்குக் கேட்டது. "ஐயா! ஒரு பிடி சோறு என்று பலமாகக் கத்தினாள். கடைசி முறையாக அதுவும் பிரயோசனமற்ற வெறுங் கூச்சலாய் முடிந்தது.

இனி அடுத்த முறைக்கு எவ்வளவு நேரமோ?... அதுவும் முடிந்துபோனால்... அடுத்த முறை...ஐயோ! என் மவன் சின்னான்... அவன் சொன்னது சரியாய்ப் போய்ச்சு... தடியன்கள் ... சாமிகள் ...

சோம்பேறிகளுக்குப் போடுவான்கள்... நமக்கா? உடைச்சிக்கினுதான் வருவே என்றானே அதுசரி... மெத்தச்சரி " என்று மனதுக்குள்ளே புகைந்தாள்.

நெடுநேரம் தாமதிக்க முடியாது என்பது அவளுக்குத் தெரியும். ஒவ்வொரு நிமிடமும் பசி பசி என்ற ஓசை கேட்டவண்ணமாய் இருந்தது. அவள் மனதில் இனி வெறுங்கையோடு திரும்ப வேண்டியதுதான் என்பதை நினைக்கையில் ஏதோ குற்றம் செய்தவள் போல் அவள் துடித்தாள். ஆம்!! குற்றமில்லாமல் வேறென்ன! இந்த விபூதி சந்தனத்தையாவது கொடுத்து விட்டு வந்தமில்லை என்ற நினைப்பு முன்போலக் குத்திக் கொண்டிருந்தது. இடையிடையே அந்த முடிச்சைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. "மறுபக்கம் போய்ப் பார்த்தால் ஒருவேளை கிடைக்கலாம். அங்கு பெண்கள் இருப்பார்கள் அவர்களிடம் பல்லைக் காட்டி னால் ஒரு பிடி போடமாட்டார்களா?" என்பதுதான் அது. இந்த எண்ணம் பிடர் பிடித்து உந்த" பொல்லையும் பெட்டியையும் எடுத்துக் கொண்டு சமையற் பக்கம் போனாள். "அம்மா ஒரு பிடி சோறு என்றது அவள் வாய். கதவு மெல்லத்திறந்தது ....

4

ஒரே சமயத்தில் இரண்டு கதவுகள் திறந்தன. ஒன்று வெள்ளிக்கிழமை மடத்து சமையல் பக்கக் கதவு. மற்றது பள்ளர் இருக்கும் மடத்துப் பெரிய அறையின் கதவு..

அதைத் திறந்தவள் பூதாகாரமான ஒரு சீமாட்டி. இதைத் திறந்தவன் எலும்பும் தோலுமான சின்னான்.!

மலேரியாக் காய்ச்சலின் உக்கிரத்திலே - டாக்டர்களுக்குப் பணம் கொடுக்க முடியாத நிலைமையிலே சந்நிதி முருகனைத் தஞ்சமடைந்த அந்தச் சின்னான் தனக்குத் துணை செய்ய வந்த அதிதையின் வரவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் வந்தபாடில்லை . காய்ச்சல் உதறியது. தலை சுழன்றது. நா வரண்டது. தண் ணீர் விடாய் ... பசி... எல்லாம்..! பக்கத்தில் இருந்த முட்டியை எடுத்துப் பார்த்தான். ஒரு துளி தண்ணீர் கூட இல்லை ... படீர்! முட்டி - சுக்கல் சுக்கலாய்ப் போய்விட்டது. அவன் ஆத்திரம் அவ்வளவு...

"இவ்வளவு நேரமாய் எங்கே போனாள். பாழ்பட்ட கிழவி"? என்று பல தடவை திட்டினான். அவன் என்ன பிரயோசனம்? எல்லாம் பழையபடி தான் ... பசி... தண்ணீர்.

கம்பளியால் எடுத்து மூடிக் கொண்டு சிறிதுநேரம் படுத்தான். கண்களைக் கெட்டியாக மூடிப் பார்த்தான். ஒன்றாலும், திருப்தியேற்படவில்லை வயிற்றில் பசி மிகுந்தது... தண்ணீ ர் விடாய் கூடியது.

"தண்ணீர் தண்ணீர் தண்ணீர்" என்று அவன் அலறினான். வெறும் சொற் கூட் டந்தான். தொண்டை கூட அடைத்துவிட்டது,

எழுந்திருந்து யோசித்தான். கிழவியோ வந்த பாடில்லை. "அவள் சோறு வாங்கப் போனாள் சோறு கொடுப்பார்கள். தடியர்.... சோம்பேறிகள்.... சன்னாசிகளுக்கு.... நமக்கா? இந்தக் கசப்பான உண்மையைப் பல தடவை திருப்பித் திருப்பி பைத்தியகாரன் மாதிரிச் சொன்

னான். கண்ணை மூடினான். ஒரு கணம் எலம்பும் தோலுமான அவனின் ஆத்தை சனக்கூட்டத்தின் மத்தியிலே நசிக்கப்பட்டு “ஐயோ! ஐயோ!” என்று கத்தும் சத்தம் அவன் மனத்திரையில் "எனக்குச் சோறு வேண்டாம்.....வா?.... ஆத்தை...வா!!” என்று பலமாககவும் பரிதாபமாகவும் கூப்பிட்டான். வந்த பாடில்லை .

கண்ணைத் திறந்தான். “செத்தல் நாயொன்று” தான் வாயிலை நோக்கி வந்து எட்டிப் பார்த்தது.

“உம்.... உனக்கும் பசியா?... அல்லது... எட்டிப் பார்க்கிறியே..... அங்கை ஒன்றும் இல்லை ... இல்லையா?... இருக்கிறது” என்று ஏதேதோ பார்த்து...

“இருக்கிறது... இருக்கிறது” என்றான் மௌனமாக. “ஓம்! அங்கை பழஞ்சோறு இருக் குது என்று சொன்னாளே ஆத்தை அட.... இவ்வளவும் என் மூளைக்குப் படவில் லையே: நில் நில் உனக்கும் தாறேனே” என்று முணுமுணுத்தான். தெளிவு...மகிழ்ச்சி எல்லாம் அவன் முகத்தில் தோன்றின.

மெல்ல எழுந்து சுவரைப் பிடித்துப் பிடித்து வாயிலுக்குப் போய்ச் சேர்ந்தான். கதவைத் தள்ளினான். அது மெல்லெனத் திறந்தது. - பைத்தியம் மாதிரி இருந்தவன் அதிக மகிழ்ச்சியில் அசல் பைத்தியமாகி விட்டான்.

“சோறு தண்ணீர்.... எல்லாம். தண்ணீர்.... சோறு எல்லாம்” என்று பலமுறை கூவி னான்”பாவம் கிழவி ஒருபிடி சோத்துக்கு அலையுதே... இங்கை எத்தனை பிடி சோறு... போதும் போது மென்ன இருக்கே” என்று பலதரம் தன்னுட் தானே கூறினான்.

இருந்த சோறு அவ்வளவையும் சட்டியிற் போட்டுப் பிசைந்தான். ஒவ்வொரு கவளமாய் வாய்மென்று விழுங்கியது. "ஆகா! பலே!!” என்று ஆனந்தமிகுதியில் பிதற்றினான். அந்த நாயும் அப்போது ஆவலாகக் கிட்டவந்தது. “பாவம் நீயும் தின்” என்று ஒரு கவளத்தை எடுத்து இருந்தபடியே எறிந்தான்.

சாப்பிட்டு முடிந்தது. குளிர்... நடுக்கம்... உதறல். எழுந்திருக்கவே முடியவில்லை. கைகூடக் கழுவியபாடில்லை. பானை சட்டி எல்லாம் வைத்தது வைத்தபடிதான்.

எழுந்ததும் விழுந்துவிடுவான்போல் இருந்தது. மார்பால் தவழ்ந்து தவழ்ந்து பாய்க்குப் போய்ச் சேர்வதே சங்கடமாகிவிட்டது.

“ஐயோ முருகா.... என்னைக் கொண்டுபோ” என்று அலறினான். கம்பளியால் இழுத்துப் போர்த்தான். தேகம் ‘ஜில் என்று குளிர்ந்துவிட்டது. ஒரே விறைப்பு. பிதற்றல்... ஆத்தை ...ஆ...த்தை ...வா.

5

அவன் போட்ட சத்தம் அவளுக்குக் கேட்கமுடியாது. என்றாலும் அவள்தன் பலம் கொண்ட மட்டும் விரைவாகத்தான் வந்துகொண்டிருந்தாள். தான் வாங்கிய சோற்றைக் கொடுப்பதற்கல்ல. இனிமேலாவது சமைத்துக் கொடுக்கலாம் என்பதற்காக.

ஒரு பிடி சோறும் அவளுக்குக் கிடைக்கவில்லையா! கிடைக்குந் தருணத்தில் இருந்தது. ஆனால்...... அவளுக்கு வாங்கப் பிரியமில்லை ... ஆச்சரியத்திலும் ஆச்சரியம்!

"ஒரு பிடி சோறு... "ஒரு பிடி சோறு" என்று அலறிய அந்தக் கறுப்பிக்கு சோறு போடுவ தற்கு அந்தச் சீமாட்டி திரும்பவந்து பார்க்கும்போது அவள் தூரத்தே போய்க்கொண்டிருப்பதைக் கண்டாள். ஏனோ? "நமக்கு மானம் ரோசம் இல்லியோ?...கறுமி.....மலடி...சண்டாளி. இவள் கையால் ஒரு பிடி சோறா? வேணாம்...வேணாம்" என்று அலட்டியபடி அந்தக் கிழவி போகும் கருத்தென்ன?

"இன்னும் அவள் செருக்கு மாறவில்லை. இங்கேயும் வந்து தன் சாதிப்புத்தியைக் காட்டிவிட்டாளே" என்று இந்தச் சீமாட்டி பொருமுவதன் மர்மமென்ன?

இருவருக்கும் முன் அறிமுகம் உண்டா ?... உண்டு . அறிமுகம் அல்ல, பெரும்பகை. அவர்களை சீமான் சீமாட்டி ஆக்கியதெல்லாம் தன்னுடைய மகனின் உழைப்பு என்பது கிழவியின் எண்ணம். இதில் உண்மை இல்லாமல் இல்லை .

வற்றாத ஊற்றைக் கொண்ட "நிலாவரைக்கேணி" இருந்தும் "நவக்கிரி" என்னும் - அந்த ஊரை - இயற்கைத்தேவி தன் திருக்கண்ணால் பார்க்கவில்லை. ஒரே கல்லும் முள்ளும். சிறுபற்றைக் காட்டில் முயல்பிடிக்கும்- கௌபீன கோலச் - சிறுவர் வேட்டை நாயுடன் திரிவர். அந்த ஊரைவிட்டு "வன்னித்தாயைச் சரணடைந்த கந்தர் - கந்தவனம் - கந்தப்பபிள்ளை - வட்டிக்கடை முதலாளி ஆகியது பெரும் புதினம்.

அந்தக் கந்தப்பபிள்ளையின் வீட்டுவாயிலில் "நகை அடைவு பிடிக்கத் தத்துவம் பெற்றவர்" என்ற விளம்பரப் பலகை ஏறிய அன்றைக்கே அவரின் கீழ் வன்னிநாட்டில் கமத் தொழில் செய்யவந்த சின்னானுக்கு மலேரியா "ஏறியது"

மூன்றாம் நாள் அவன் வன்னி நாட்டைவிட்டுத் தன் "தாய்த் திருநாட்டுக்கு" மலேரியாக் காய்ச்சலோடு வந்து சேர்ந்தான்.

ஏமாற்றம். "ஒரு வருடத்துக்குப் போதுமான நெல்லோடு தான் வந்து இறங்குவான் " எனக் கற்பனை பண்ணிக் கொண்டு இருந்த கறுப்பிக்கு, இது எப்படி இருக்கும்?

பெரிய ஏமாற்றம். தங்கள் முதலாளி கந்தப்பபிள்ளையின் வீட்டை அடைந்து " சமையல் பக்கம்" போன கறுப்பியோடு அந்த வீட்டுச் சீமாட்டி முகம் கொடுத்துப் பேசவில்லை. சீமாட்டிக் குப் "பிள்ளைப் பேற்றிற்காக அந்தத் தாடிக்காரச்சாமி சொல்லிய முறைப்படி வருகிற வெள்ளிக் கிழமை அவிச்சுப் போட எத்தனை பணம்-ரூபாபவுண் தேவை" என்ற செலவைப் பற்றிய எண்ணம்.

கறுப்பிக்கு தன் ஒரு மகனை எப்படியாவது உயிர் பிழைக்கச் செய்ய வேண்டும் என்ற நினைப்பு.

இந்த நினைப்பில் ஒரு மூடை நெல்லு: "ஒரு பறை நெல்லு ஒரு கொத்து நெல்லு: பத்து ரூபாய் - ஐந்து ரூபாய் - ஒரு ரூபாய்" என்று கண்ணபிரான் துரியோதனனைக் கேட்ட ரீதியாகக் கேட்டுப் பார்த்தாள் - மன்றாடினாள்-அழுதாள் - கத்தினாள்

சீமாட்டி ஒன்றுக்கும் 'மசி'வதாயில்லை .

கடைசியில் கறுப்பியின் ஆத்திரம் மலடிகளுக்குப் பிள்ளையின் அருமையைப் பற்றித் தெரியுமா? என்ற பெருநெருப்பாக வெளிவந்தது.

இந்த 'நாவினாற் சுட்ட வடு சீமாட்டியை ஒரு உறுக்கு உறுக்கிற்று:

"போடி வெளியே, பள்ளுப் பறைகளுக்கு இந்தக் காலம் தலைக்கு மிஞ்சின் செருக்கு. உன் மகன் எங்களுக்கு அள்ளி அள்ளி சும்மாதான் கொடுத்தானோ? வேலை செய்தான் கூலி கொடுத்தோம். அதற்கு வேறு பேச்சென்னடி? மலடி... மலடி ... என்கிறாயேடி.... கடவுள் கண் திறந்தால் இனியும் பிள்ளைப் பாக்கியம் வராதா....?" என்று ஆத்திரத்தைத் தீர்த்தாள் சீமாட்டி. கடவுள் கண் திறப்பார்!...உங்களுக்கா? என்று அநாயாசமாய்ச் சிரித்து விட்டு வெளியேறிய கறுப்பி. தன் மகன் உழைப்பால் தின்று கொழுத்து ஊராருக்கு அவிச்சுக் கொடுத்துப் "புண் ணியம் சம்பாதிக்க " வந்த சீமாட்டியிடம் இன்றும் ஒரு பிடி சோறு" வாங்கச் சம்மதிக்காதது அதிசயமல்ல.

கிழவி மடத்துக்கு வந்து சேர்ந்தாள். நாய் அவளைக் கண்டு வெளியே போயிற்று.

தீர்த்தத்தை வாயில் விட மகனை எழுப்பினாள். அவன் அசைவதாக இல்லை. மூக்கடியில் கையை வைத்துப் பார்த்தாள். ஏமாற்றம்தான்.!

"அவள் கொன்று விட்டாள். சீமாட்டி கொன்றுவிட்டாள். என் மகனை பட்டினி போட்டுக் கொன்றுவிட்டாள்." என்று அலறினாள்.

"சந்நிதி முருகா!! நீயும் பணக்காரர் பக்கமாய் ஏழைகளை காப்பாத்தாமல் விட்டு விட்டாயோ" என்ற கதறினாள்.

அந்த இரவில் வண்டிகளின் கடாபுடாச் சத்தமும் வெண்டயம் சதங்கைகளின் ஓசையும் தூரத்தே கேட்டன.

"புண்ணியம்.....சம்பாதிச்சியா?... போ போ" என்று பல்லை அவள் நெருடினாள்.

"உடைந்த முட்டியும் ஒரு பிடி சோறு" வாங்கச் சென்ற ஓலைப் பெட்டியும் தவிர இந்தச் சொற்களைக் கேட்க அங்கு வேறு மனிதர்களாக யார் இருக்கிறார்கள் ?

ஈழகேசரி
22.07.1945,
29.07.1945.

இரும்பு இதயம்

யாழ்பாடி

இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். உலகம் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தது. நான் என்னறையில் படித்துக் கொண்டு படுத்திருந்தேன்...

பக்கத்தில் தொழுவத்தில் கட்டியிருந்த மாடுகள் கதைக்க ஆரம்பித்தன.

"அண்ணே கழுத்துப் புண் இப்ப எப்படி இருக்கு?"

"எப்படி இருக்கும்?" அந்தக் கொலைகாரன் இன்றைக்குந்தான் முரட்டு நுகத்தை வைத்து விட்டு அழுத்திவிட்டானே...."

"வேதனையாய் இருக்கோ !"

"வேதனை பொறுக்க முடியவில்லை. காயம் வர வர இடிந்து பொருத்தி வருகிறது. போதாக்குறைக்கு இந்த இலையான் பூச்சிகளின் கொடுமை வேறு. இன்னும் இரண்டு இரவு இப்படி என்றால் பிறகு செத்துப் போவதை விட வேறு வழியில்லை . பிறகு உன்னோடு யார்...?"

"ஐயோ அப்படியெல்லாம் சொல்லாதே அண்ணே! அதெல்லாம் ஒன்றும் வராது. இரண்டு நாள் வெய்யில்பட புண் காய்ந்து போய்விடும். கவலைப்படாதே. எங்கே இப்படித் திரும்பு... அடடே பாவி மகன் என்ன மாதிரி சிதைச்சு விட்டிருக்கிறான் காயத்தை ! இவ்வளவு குரூரப் பிராணியா இந்த மனிதன்?"

"மனிதனா? அவனை இன்னும் உனக்குத் தெரியாதா? வாயில்லாத சீவன்களை வதைக்கவென்று பிறந்திருக்கும் மிருகமல்லவா அவன்"

"அண்ணே ஒரு புதினம் தெரியுமோ?"

"என்ன?"

"வாற வழியிலே தெருவோரமாக அரச மரத்தடியில் ஒன்று நின்றதைப் பாத்தியா?"

"பார்த்தேன் அது என்ன அப்படிபூதகாரமா...!"

"அதுதான் நான் எங்கள் கஷ்டங்களுக்கெல்லாம் ஒரு முடிவு காண வந்திருக்கிறது. தெய்வம் மனமிரங்கி அனுப்பினாற் போல...."

"என்ன உளறுகிறாய் -?"

"கொண்ணே! அதென்னவோ ரோட் எஞ்சினாம் உருளையின் வேலையை இனிமேல் அதுதான் செய்யப் போகிறதாம்.

"மெய்யாகவோ அப்படியானால் நாங்கள்"

"ஓமோம்,நாங்கள் இனிமேல் வேண்டியதில்லை. அது தானாகவே எல்லாம் செய்யுமாம்.

"இதெல்லாம் உனக்கு யார் சொன்னார்கள்?"

"ஒருத்தரும் சொல்லவில்லை. அங்கே பேசிக்கொண்டதைக் கேட்டுத் தான் சொல்லு கிறேன்.

"அப்படியானால் நாளைக்கே அது வேளைக்குத் தொடங்க மாட்டுதோ?"

"என்ஜினில் ஏதோ கோளாறாம். அது சரிப்பிடிக்க இரண்டு மூன்று நாட்கள் பிடிக்குமாம்"

"ம்.... என் விதி அவ்வளவுதான். நாளைக்கும் இண்டையப் போலவென்றால்... முடியாது .. வரட்டுக்கும் நாளைக்கு ஒரு முடிவு பார்த்து விடுகிறேன்"

என்னுடைய அறைக்குப் பக்கமாக காலையில் ஏதோ சத்தம் கேட்டு

விழித்துக் கொண்டேன். ஜன்னலைத் திறந்து மாட்டுக்கொட்டிலைப் பார்த்தேன். உரு ளைக்காரன் மாடுகளைப் போட்டு அடித்துக்கொண்டிருக்கிறான். மாடுகள் இரண்டும் அசைய வில்லை. பிறகு இரண்டு மூன்று தடியன்கள் வந்து மாடுகளைக் கட்டி இழுத்துக்கொண்டு போனார்கள். ஒரு மாட்டின் கண்களிலிருந்து நீர் சொரிந்து கொண்டிருந்தது. எல்லாம் ஒரே அதிசயமாகவிருந்தது எனக்கு. இரவு கேட்ட சம்பாசனை - அது கனவு இல்லையா? மாடுகளின் பின்னால் நானும் போனேன் - வேடிக்கை பார்ப்பதற்கு

உருளைக் கல்லுக்கு முன்னால் இரண்டு காளைகளையும் கொண்டு போய் நிறுத் தப்பட்டன. தூரத்தில் றோட் எஞ்சின் நின்றது. உருளையின் நுகத்தைத் தூக்கி உருளைக் காரன் மாடுகளின் கழுத்தில் வைத்தான். அவ்வளவுதான்.

“அம்மா என்று ஒரு வீரிட்ட அலறல் வானைக் கிழித்துக் கொண்டு எழும்பிற்று. அடுத்த நிமிஷம் அந்த மாடுகளில் ஒன்று கீழே விழுந்து துடித்தது. அதன் கழுத்திலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. கொஞ்ச நேரம் அப்படியே கிடந்து துடித்த பிறகு அதன் கண்கள் சோடிக் காளையைப் பார்த்தவாறே நிலைத்து விட்டன. இதெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு நின்ற இரண்டாவது மாட்டிற்கு திடீரென்று ஒரு ஆவேசம் உண்டாயிற்று. பின்னங்காலால் உருளைக்காரனுக்கு ஒரு பலத்த உதை கொடுத்து விட்டு பூட்டாங் கயிற்றையும் அறுத்துக் கொண்டு மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தது அது.

அன்று பின்னேரம் “மெக்கானிக்” ஒருத்தன் வந்து றோட் எஞ்சினுக்குள் தலையை நுழைத்து வெகு நேரமாக ஏதோ வேலை பார்த்தான். பொழுது சாயும் வேளையில் எஞ்சின் புகைவிட்டுக் கொண்டு கிளம்பியது. ஜனங்கள் அதை சுற்றி மொய்த்து விட்டார்கள்.

இருட்டு ஆரம்பிக்க வீடு வந்து என் அறை யன்னலை மூடப் போனேன். அங்கே அந்த மாடு நின்றது பக்கத்திலுள்ள வெறுங்கட்டையைப் பார்த்து அது அசைபோட்டுக்கொண்டு கிடந்தது. அதன் இரு கண்களிலிருந்தும் நீர் தாரையாக வழிந்து கொண்டிருப்பதைப் பார்க்க என் கண்களிலிலும் ஜலம் துளிர்த்தது.

21.10.1943
ஈழகேசரி

ராதாகிருஸ்ணன்

ராதாகிருஸ்ணன் என்கின்ற ராதாகிருஸ்ண ஐயர் வண்ணார் பண் ணையைச் சேர்ந்தவர். ஆசிரியர். 1942 இல் சில்லறை வியாபாரி என்ற சிறுகதையுடன் ஈழகேசரியில் பிரவேசித்தவர். 'வேலை நிறுத்தம்' மிகச் சிறிய கதையாயினும் எடுத்துக் கொண்ட விடயமும் கதை கூறும் முறையும் சிறப்பாகவுள்ளன.

❖ வேலை நிறுத்தம்

வேலை நிறுத்தம்

ராதாகிருஸ்ணன்

நீதிமன்றத்திலிருந்து வந்த நேரம் முதல் அவர் மனம் அமைதியாகவில்லை. ஒரே கவலை. மேஜை மீது வைத்திருந்த "காப்பி" பச்சைத் தண்ணீராகக் குளிர்ந்திருந்தது. அவர் முன்னால் அவருடைய இரண்டு வயதுச் சிறுமி ஏதோ மழலை வார்த்தைகள் சிந்திக் கொண்டிருந்தாள். வழக்கத்தில் தன்னை தூக்கி எறிந்து முத்தமிடும் தகப்பனார் அன்று தன்னை ஏறெடுத்தும் பார்க்காததைக் கண்டு குழந்தையும் வாடிய முகத்துடன் போய்த் தாயிடம் அம்மா ..... அப்பா..... என்று என்னவோ எல்லாம் முறையிட்டது. குழந்தையை மெதுவாக அணைத்துக் கொண்டாள் தாய்.

"காப்பியை அருந்திவிட்டு நடிகன் மேடையில் ஒத்திகை செய்து பார்ப்பதுபோல் ஏதோ எல்லாம் முகத்தைக் கோணலாக வைத்துக் கொண்டு. சைய்! சை! என்று முணுமுணுத்தவாறே மேலும் கீழும் அவ் வறையில் நடக்கலானார். பொலிஸ் நீதிபதி ராமநாதன்

சாயங்காலப் பத்திரிகையைச் சாளரத்தின் வழியாகப் போட்டு விட்டுப் பத்திரிகைப் பையன் போய்விட்டான்.

பத்திரிகையை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். அதிலும் அதே புதினம் விரிவாகப் போடப் பட்டிருந்தது.

"பாதுகாப்புச் சட்டப்படி வேலை நிறுத்தஞ் செய்து கைதியாக்கப்பட்ட மூவர் இன்று பொலீஸ் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டனர். மேற்படி வழக்கை விசாரணை செய்த நீதிபதி திரு. ராமநாதன் எதிரிகள் ஒவ்வொருவருக்கும் ஆறுமாதச் சிறைத் தண்டனை விதித்தார்."

செய்தியை வாசித்துவிட்டு ஓர் நீண்ட பெருமூச்சுடன் பத்திரிகையை கீழே எறிந்தார்.

ராமநாதன் ஓர் அப்புக்காத்தாக இருந்து நீதிவானாக வந்தவர். சிவில் உத்தியோகப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று உலகமே தெரியாது தீர்ப்புக் கூறி அப்பீலில் தன் தீர்ப்புத் தவிடு பொடியாகும் போக்கைப் பார்த்து பெருமூச்சு விடும் வர்க்கத்தில் அவரைச் சேர்ப்பதற்கில்லை. அவர் சட்டக் கல்லூரியில் படிக்கும் காலத்தும், அப்புக்காத்துவாக தொழில் நடத்தும் காலத்தும், ஓர் தீவிரவாதி. தொழிலாளர் இயக்கம். தேர்தல்கள், பொதுநலச் சங்கங்கள் எல்லாம் அவரின்றி நடைபெறா. அவருடைய எண்ணமோ பெரிசு. தம் நாட்டை ஓர் குட்டி ரஷ்யாவாகச் செய்துவிடத் தம்போன்ற சில இளைஞர்களால் மாத்திரமே முடியும் என்று கோட்டை கட்டியவர் அவர். ஆனால் அப்புகாத்துத் தொழிலில் அவருக்குக் கிடைத்த வரும்படி அவர் மன உற்சாகங்களையும் தீவிர வாதங்களையும் பறக்கச்செய்து விட்டது. வாரத்தில் ஓர் கட்சிக்காரனாவது அவர் கதவைத் திறந்ததில்லை .

ஏதோ நான்கு பெரிய மனிதர்களின் தயவினாலும் சிபார்சினாலும் அவர் "மாஜிஸ்ரேட்" ஆனது பழங்கதை. மூன்று வருஷங்களின் முன் நடந்த சம்பவங்கள் அவை. அதற்குள் எத்தனையோ வழக்குகளை விளங்கிவிட்டார். எத்தனையோ தீர்ப்புகள் சொல்லிவிட்டார். பட்சபாதமில்லாமல், மனசாட்சிக்குப் பிழையில்லாமலும் ஆனால் இன்றைய வழக்கு பாதுகாப்புச் சட்டத்தின் கொடூர கண்களில் அவன் குற்றவாளி. ஆனால் தாரதம்மியமுள்ள பகுத்தறிவுள்ள மனிதனின் முன் ...

சட்டத்தைத் திருத்த எனக்கொரு அதிகாரமுமில்லை. என்ன பேய் எண்ணம்!
ஐயோ அவன் சொன்ன பதில்!

ஐயா! நான் குற்றவாளி அல்ல. தாங்கள் என் கதையை நன்றாகக் கேட்டுவிட்டுத் தீர்ப்புக் கூறுங்கள். நான் அந்த ஸ்தாபனத்தில் இருபத்தைந்து வருடங்களாக வேலை செய்கிறேன். தினக்கூலி அலவன்ஸ் உட்பட 1 ரூபர் 1 சதம். என் மனைவி ஆறு குழந்தைகள். வீட்டு வாடகை, துணி, மனைவி நோயாளி வைத்தியச் செலவு எல்லாமாக மாதத்தில் எனக்கு இருநூறு ரூபா உழைப்பு இருந்தாலும் போதாது ஐயா.

என் சம்பளம் 600 ரூபாய் அலவன்ஸ் முதலியன எல்லாஞ் சேர்த்து 800 ரூபாய் கிடைக்கும். மிச்சம் பிடிப்பது குதிரைக் கொம்பு, தன் மனைவி பாயும் படுக்கையுமாக இருந்தபோது தான் செலவு செய்த ரூபாவை எண்ணிப்பார்த்தார் அவர் டொக்டர் பில் உட்பட ரூபா 500.

ஏழைத் தொழிலாளி இவ்வளவு தொகைக்கு எங்கே போவது. சம்பள உயர்வு கோரியது நியாயம் தான். ஆனால் சட்டம்.

சட்டம் ஒரு கழுதை என்று ஒரு பிரபல ஆசிரியர் சொன்னது அவர் ஞாபகத்திற்கு வந்தது. என்ன செய்யலாம்.

ஐயோ அந்த மூவரின் குடும்பமும் என்ன பாடுபடுமோ அவர்கள் நிலைமை என்ன நான் போய்ப் பார்க்கலாமோ.

அவர்கள் என்ன நினைப்பார்கள். தன் நண்பர்கள் உத்தியோகம், அந்தஸ்து, சீ இவை யெல்லாம் எதற்கு. மூன்று ஏழைக் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன.

சட்டமா, நானா அல்லது உண்மையில் தொழிலாளிகளா குற்றவாளிகள் இல்லை. அரசாங்கந்தான். அன்னிய அரசாங்கந்தானே நடைபெறுகிறது. நாங்கள் அடிமைகள். -

"டிறைவர் !"

"டிறைவர்!" ஐயா!"

"ஐயா !"

"காரைக் கொண்டுவா... வேண்டாம்"

"ஐயா ?"

"வேண்டாமென்றேன்" "சரி ஐயா!"

வேஷ்டியுடனும் சட்டையுடனுமே புறப்பட்டார். அவர்களின் வீட்டு விபரம் முன்னமே முதலியார் மூலம் விசாரித்தறிந்திருந்தார். சட்டைப் பையில் அன்று வந்த சம்பளம் இருந்தது. மூன்று குடும்பங்களும் அதைப்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

திடீரென்று ஸ்ரீ ராமநாதன் தமது வேலையை உதறித் தள்ளி விட்டதை அறிந்து அவர் நண்பர்கள் திகைத்தனர்.!. இப்போது அவர் ஒரு அப்புக்காத்து.

ஈழகேசரி
06.01.1945

செ. நடராசா

ஈழகேசரியில் செ. நடராசா புஞ்சிமெனிக்கா, கைதி, ராணி பவானி முதலான சிறுகதைகளை எழுதியுள்ளார். அழகான சமூகக் கருத்துக்கள் இவரது சிறுகதைகளில் விரவி நிற்கின்றன. அளவெட்டியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர், சிந்தாமணி, வீரகேசரி, ஆகிய பத்திரிகைகளில் பத்துக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் அறுபதிற்கு மேற்பட்ட நகைச்சுவை கட்டுரைகளையும் எழுதியுள்ளார். வானொலி, நாடகங்கள், இசைச்சித்திரம், உரைச்சித்திரம், கவிதை முதலியவற்றையும் படைத்துள்ளார். அரங்கேற்றம், புலவன், ஈந்த பரிசு என்பன இவரால் எழுதப்பட்டு மேடை ஏறிய நாடகங்கள்.

- ❖ ராணி பவானி
- ❖ கைதி
- ❖ புஞ்சிமெனிக்கா

ராணி பவானி

செ. நடராசா

ஆழ்ந்த அமைதி. இயற்கையன்னையின் மடியில் அவனுடைய செல்வக் குழந்தைகள் இன்பமாகத் தூங்குகின்றன. தாயின் பால் குடித்து அவளுடைய ஸ்தனங்களின் இடையிலே தலைவைத்து நித்திரை புரியும் பச்சிளங்குழந்தைகள்போல.

ஆனால், மேவார்நாட்டு அரசி பவானி உப்பரிகையில் தூக்கமில் லாமல் மஞ்சத்தில் புரண்டுகொண்டிருந்தாள். அடிக்கடி அவள் கண் விழிக்கும் போது காரிருள் கவிந்த வெளி அவளுக்கு இதயத்தில் பயங் கரத்தை வருவித்தது. நடுஜாமத்தை அறிவிக்கும் மணி "டாண்" என்று ஒலித்தது. மணி நாதத்தினால் அரசி திடுக்கிட்டாள். பேயின் பயங்கர அல றலாகத் தோன்றியது அந்தச் சப்தம் அவளுக்கு. பவானி நாற்புறமும் பார்த்தாள். அவளது முகத்தில் வியர்வை முத்து முத்தாக அரும்பி இருந்தது.

"அம்மணி! ஏன் பயப்படுகிறீர்கள். ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டீர்களா?" என்று கேட்டாள் சந்திராவதி மயில் விசிறியால் விசிறிய படியே. அரசியின் புருவங்கள் விரிந்து சுருங்கின.

"சந்திராவதி! பெரிய ஆபத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என் மனம். ராஜ்கோட் சென்ற அரசர் இன்னும் ஏன் வரவில்லை?"

"தேவி! இதென்ன கேள்வி? மேவார் நாட்டு மகாராணியின் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகளா இவைகள்? வீர ராஜவம்சத்திலுதித்த வீர மன்னனின் ராணியாக இருக்கும் தங்களுக்கு இத்தகைய பலவீனம் ஏற்படக் காரணமென்ன?" என்று கூறிப் பவானியின் கலைந்த கூந்தலைச் சரிப்படுத்தினாள் சந்திராவதி.

"சந்திரா! மகாராணி என்றால் மனம் வேதனையில் வெதும்பாதா? அரசனும் ஆண்டியும் அதற்கொன்றுதானே! அவர் ராஜ்கோட் போய் ஒருவாரமாகிறதே; ஏன் இன்னும் வரவில்லை?"

"ராணி! நீங்கள் வீணாக மனதை அலட்டிக் கொள்ளாதேயுங்கள். அரசர் எங்கும் போக மாட்டார்; சீக்கிரம் வருவார்" என்று கூறி கிழக்கு வானத்தைப் பார்த்தாள் சந்திராவதி. மூலையில் பளபளவென்று பிரகாசித்துக் கொண்டிருந்த தாரகையொன்று பூமியில் உதிர்ந்தது. சந்திராவதியின் உணர்ச்சித் தந்தி படார் என அறுந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"மகாராணி! நீங்கள் இப்படித் தினம் நித்திரையின்றிக் கண்விழித்திருந்ததால் உங்கள் முகம் பொலிவிழந்திருக்கிறது. நீங்கள் சிறிது கண்ணயருங்கள். அவருக்கு ஒரு துன்பமும் வராது" என்றாள் சந்திரா. அவளது முகத்தில் பயங்கரத்தின் சின்னம் லாவகமாக ஒட்டிக் கொண்டிருந்தது.

பவானி ஏகலிங்கேஸ்வரன் கோவிலைப் பார்த்துக் கைகுவித்தாள். "தேவி! புவனேஸ்வரி! தங்களின் கிருபையே எங்கள் தஞ்சம். எனது மங்கல நாண் உனது அடைக்கலம்" பவானியின் வார்த்தையில் நடுங்கல் கண்டது. பிறகு தன் குமாரன் அமரனை எடுத்துத் தன்பக்கலில் வைத்துக் கொண்டு தூங்கினாள் அரசி பவானி.

வைகறையின் மெல்லிய ஒளியைக் கண்டு இருள் மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டிருந்தன. மந்திரி மன்வார்சிங் அந்தப்புர வாயிலில் தலை குனிந்து நின்றார். மந்திரி நாக்குளற "சந்திரா! மகாராணி எங்கே? இன்னும் நித்திரை விட்டு எழவில்லையா?"

"இரவு முழுவதும் தூக்கமேயில்லாமல் அரசரை நினைத்தபடி மஞ்சத்தில் புரண்டு கொண்டிருந்தார். இப்பொழுதுதான் இளவரசர் அமருடன் தூங்குகிறார். அரசருக்கு ஏதாவது..." அவளது குரலில் படபடப்பு அதிகரித்தது.

மந்திரி மன்வார்சிங் முகத்தில் கலவரக்குறி தோன்றியது. கண்களில் நீர் துளிர்த்தது.

சந்திரா! அரசர் வஞ்சகமாக இராஜ்கோட் மன்னனால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். ராஜ்கோட்படைகள் மேவார் நாட்டின் மேல் படைடியடுத்து வருகின்றார்கள். அதை இப்பொழுதுதான் ஒற்றர் மூலம் அறிந்தேன்" என்று சொல்லும்போதே சந்திராவதி ஐயோ! மகாராணி! என்று வீரிட்டுக் கொண்டே சாய்ந்தாள்.

அந்தச் சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டாள் பவானி. பரபரப்புடன் வெளியே ஓடி வந்தாள். கலைந்த கூந்தல், கசங்கிய ஆடை, பயம் படர்ந்தமுகம், இவற்றைக் காணச் சகியாது தலைகவிழ்ந்தார் மந்திரி.

"அரசர் எங்கே?" என்று வெறிகொண்டவள் போல் கூவினாள் ராணி.

"அரசர்..."

"சீக்கிரம் சொல்லும் என் நாதர் எங்கே?" என்று கதறினாள் மறுபடியும் பவானியின் முகம் பத்திரகாளியின் முகம்போல் மாறியது. கண்கள் சிவந்து வீங்கியிருந்தன.

"தேவி, அரசர் ...." மந்திரி மன்வார்சிங்கின் வார்த்தைகள் நடுங்கின. "ராஜ்கோட்டுக்குச் சென்ற அரசர்" அரசியின் வார்த்தையில் கரகரப்பு அதிகமாகியது. சினம் பொங்கியது.

"நஞ்சிட்டு வஞ்சகமாகக் கொல்லப்பட்டார். கொன்றுவிட்டான் பிரதாபசிம்மனின் பிள்ளை" ராணி பயங்கரமாகச் சிரித்தாள். அதில் கோபக்கனல் வீசியது. சிரிப்பின் ஒலி மண்டபத்தில் எதிரொலித்தது.

"ஷத்திரியதர்மம் தெரியாத அதர்மன்! வஞ்சகமாக நஞ்சூட்டிக் கொல்வது ராஜ்கோட் ராஜபரம்பரையின் தர்மமோ! வீரமில்லாத அற்பன்" சந்திராவதி ராணியைக் கட்டிக் கொண் டாள். சிலர் ராணிக்கு மூர்ச்சை தெளிவித்தனர். பவானியின் முகம் அக்னிக் குண்டம்போல் இருந்தது.

"என் நாதரைக் கடைசி முறையாகப் பார்க்கமுடியுமா? அவர் உடல்"

"அதைக்கூட எடுத்துவரமுடியாமல் ராஜ்கோட் வீரர்கள் மேவார் நாட்டின் மேல் படையெடுத்து வந்துவிட்டனர்" என்றார் மந்திரி.

ராணியின் கண்கள் நீரை உகுத்தன, உதடுகள் துடித்தன, முகத்தில் படர்ந்திருந்த சோகப்படலம் மறைந்தது. வீராங்கனையாக மாறிவிட்டாள் பவானி.

பசித்த பெண் புலிபோல்..."ஹீம்" என்றாள் அவள்.

"மன்வார்சிங்! என்னுடலில் உயிர் இருக்கும்வரையில் அந்தத் துரோகியின் படைகள் மேவார் நாட்டினுள் பிரவேசிக்க இடங்கொடேன்! என் நாதனைக் கொன்ற அந்தப் பாவிகளை நிர்மூலமாக்குவேன். நமது படைகளை அணிவகுத்துக் கோட்டையைச் சுற்றி நிற்க வையுங்கள். சேனாதிபதி சேவக்ராமை கோட்டையின் தென்புறம் கஜனாவின் முகத்து வாரத்திற்கருகில் நிறுத்துங்கள். வஜீதமாரை வடபுறவாயிலில் நிற்கச் சொல்லுங்கள். மேற்கு, அந்தப் புரவாயிலில் தாங்கள் தலைமை தாங்கி நில்லுங்கள். கிழக்குப்புறம் நான் நிற்கிறேன். ஆனால், முதலில் சபையைக் கூட்டுங்கள்" என்று கூறி தனது பூஜாக் கிரகத்தினுள் நுழைந்தாள் பவானி.

புவனேஸ்வரியின் முன் மண்டியிட்டு "தாயே உன் கருணையினாற்தான் எங்கள் குலம் செழித்தது. மேவார் நாட்டுக்கு ஆபத்துச் சூழ்ந்திருக்கும் இந்த நேரத்திலும் உனது கரு

ணையை அபேட்சிக்கின்றேன். அம்பிகையே! எனது நாதனை வஞ்சித்துக் கொன்ற பகைவர் மேற் போர் தொடுக்கிறேன். சத்திரிய தர்மம் இன்னதென்றறியாத முட்டாள்களின் மேற் பழிக்குப் பழிவாங்கப் போகிறேன். தேவி! அதற்குத்தக்க வீரத்தை எனக்கருள் தாயே! ஒரு சமயம் நான் போரில் தோற்று எதிரிகளால் சம்ஹாரம் செய்யப்பட்டால் எங்கள் குலவிளக்கு அமரனை நீயே காப்பாற்றி அவனை அரியாசனத்திலேற்றிவை. அம்மா! உன்னை நம்பிப் போருக்குச் செல்கிறேன்"

அரசியின் கண்கள் குவிந்தன. கண்ணீர் முத்து முத்தாகக் கன்னத்தில் வழிந்தோடியது. பவானி எழுந்து வெளியே வந்தாள். சந்திரா அமரனை இடுப்பில் வைத்துக் கொண்டு வாசலில் நின்றாள். குழந்தை அமரன் தாயைக் கண்டதும் தனது முல்லைப் பற்கள் தெரியச் சிரித்துக் கொண்டே தாயிடம் தாவினான். அமரனின் முகத்தை வருடிக் கைகளைப் பிடித்தாடியே கூறிக் குழந்தையை பூஜாக்கிரகத்தினுள் எடுத்துக் கொண்டு போய் புவனேஸ்வரியின் பாதங்களிற் குழந்தையைக் கிடத்தி "தாயே! என் மகன் மேவார் நாட்டு இளவரசை நீ காப்பாற்று. வீரமிக்க மேவார் நாட்டு மன்னர்க்குப் புத்திரனாகப் பிறந்து சிம்மாசனம் ஏறக் கொடுத்து வைக்க வில்லை என்ற அபகீர்த்தி உனக்கு வேண்டாம்" என்று கூறிக் கண்ணீர் வடித்தாள். தனது கண்ணீரை புடவைத் தலைப்பால் துடைத்துவிட்டு குழந்தையுடன் வெளியே வந்தாள். அங்கு சந்திராவதி நின்று கொண்டிருந்தாள்.

"அருமைத்தோழி! சந்திரா நீ என்னுடன் சிறுவயது முதல் ஒன்றாகப் பழகினாய், உயிரும் உடலும்போல் வாழ்ந்தோம். ஆனால், இப்பொழுது நிர்க்கதியாய் விட்டாய் - விடமாட்டாய் என்றே தோன்றுகிறது. தற்செயலாக யுத்தகளத்தில் நான் வீரமரணமெய்தினால் அமரனை நீ காப்பாற்று. இன்றுமுதல் அமரனின் தாய் நீ. என் நாதனைக் கொன்ற காதகர்களின் உயிரைவாங்காமல் மேவார் நாட்டு அந்தப்புரவாயிலை மிதியேன். வெற்றியுடன் மீண்டு வீரத்தாயாக அமரனுடன் விளையாடுவேன். அல்லது வீராங்கனையாகச் சுவர்க்கத்தில் அவருடன் விளையாடுவேன்" என்று கூறிக் குழந்தையைச் சந்திராவதியிடம் கொடுத்தாள்.

மேவார் நாட்டுக் கோட்டையை வளைத்துவிட்டனர் எதிரிகள். ராஜ்கோட் வீரர்களின் எண்ணிக்கை அதிகமாயினும் அவர்களது வீரம் மேவார் நாட்டு புலிகளிடம் பலிக்கவில்லை. கிழக்கு வாயிலிலே ராணி பவானி படைகளுக்குத் தலைமை தாங்கி நின்றாலும் யுத்தமுனை ஒவ்வொன்றிலும் காட்சி அளித்து மேவார் நாட்டு வீரர்களை உற்சாகமூட்டிக் கொண்டிருந்தாள். பவானியின் தளிர்க் கரங்கள் அலைமோதுவதைப் போல் வரும் ராஜ்கோட் வீரரை அனாயாசமாய் வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தது. மேவார் நாட்டு வீரர் உற்சாகமடைந்து பழிக்குப் பழி என்ற கோசத்துடன் எதிரில் வரும் வீரர்களை ஆவேசத்துடன் தாக்கினர்.

இரண்டாம் நாளில் ராஜ்கோட் படைகள் குறைந்துவிட்டன. போர்க்களத்தில் இரத்த ஆறு ஓடத் தொடங்கியது. கைகால் இழந்த முண்டங்கள் எங்கும் காணப்பட்டன. உதிரம் குடித்த புலிபோல் மேவார் நாட்டு வீரர் குதித்துக் கொண்டிருந்தனர்.

மூன்றாம் நாள் யுத்தம் ஆரம்பமாகியது. கிழக்குக் கோட்டை வாயிலில பவானி நின்று எதிரிகளை எதிர்த்தாள். சந்திராவதியின் சகோதரன் ராஜ்கோட் மன்னனை முன்னுக்கு விடாமல் தடுத்து அகோர யுத்தம் செய்து கொண்டிருந்தாள். ராஜ்கோட் வீரர் மேவார் நாட்டு வீரரை எதிர்க்க முடியவில்லை. ராஜ்கோட் மன்னனின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் போலிருந்தது.

முதல்நாள் செய்த இரகசியத் திட்டத்தின்படி யுத்தகளத்தில் மாண்டு கிடக்கும் மேவார் வீரர்களின் உடையைச் சில ராஜ்கோட் வீரர்களணிந்து பவானியின் படையுடன் இரகசிய மாகச் சேர்ந்து மன்னனின் சமிக்ஞையை எதிர்பார்த்திருந்தனர்.

யுத்த நிலைமை மாறி வருவதைக் கண்ட ராஜ்கோட் மன்னன் தன்னுடைய இரகசியப் படைகளுக்குச் சமிக்ஞை செய்தான். உடனே அரிசியின் படைகளுடன் சேர்ந்திருக்கும் ராஜ்கோட் படைகள் அரசனைக் காப்பாற்றுவதற்காகப் பவானியின் முதுகுப்புறம் அம்பை எய்தனர்.

"வீரர் செய்யும் செய்கையா இது" என்று உறுமினான் ஒரு மேவார் வீரன். பின்பக்கத்தில் சத்தம் கேட்டுத் திரும்பினாள் பவானி. முன்புறமும் எதிரி, பின்புறமும் சத்துரு. இடது கையில் பிடித்திருக்கும் அம்பை அப்படியே இடது கால் கட்டை விரலால் தட்டிவிட்டபடியே வலது கையால் முதுகில் பாயும் அம்பை ஏந்தினாள் அந்த வீரவனிதை. அவளது யுத்த சாக சத்தைக் கண்டு வீரர்கள் எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். போர்க்களமெங்கும் "ராணி பவானிக்கு ஜே" என்ற கோசம் வானை எட்டியது. அந்தச் சமயத்தில் விச அம்பொன்று பவானியின் மார்பில் பாய்ந்துவிட்டது.

"ஐ...யோ! அமரா! தேவி! புவனேஸ்வரி! உன் அருள் இப்படியா?" என்றலறினாள் பவானி. அகங்காரத்துடன் மார்பில் தைத்திருந்த அம்பை இழுத்துக் கடைசி முறையாக நாணேற்றி ராஜ்கோட் மன்னனின் மேல் எய்தாள். குதிரையிலிருந்து சுருண்டு விழுந் தான் மன்னன். "பழிக்குப் பழி தீர்த்துவிட்டேன்" என்று பவானியின் வாய் முணுமுணுத்தது.

குதிரையின்மேல் மல்லாந்து சாய்ந்தாள் பவானி.

ஈழகேசரி
09.11.1947

கைதி

செ. நடராசா

இந்தக் கைதியைப் பார்த்தது முதல் எனக்கு அவனிடம் அனு தாபமாய் இருந்தது. பாவம்! இளம் வயது. வாலிபத்தின் முறுக்கு கலை யாமல் இருந்தது. அவனது களை பொருந்திய முகத்தில் பச்சாதாபத்தின் சின்னாங்கள் படிந்திருந்தன. "ஐயோ, பாவம்! வாலிபத்தின் இன்ப நாட்க ளைத் திறந்த வெளியிலே கழியாமல் பாழுஞ் சிறையில் ஏங்கிக் கிடக்கிறானே" என்று எண்ணி வருந்துவேன்.

ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை. எனக்கு அன்று விடுதலை நாளா னாலும் சிறை அதிகாரியின் அனுதாபத்தைப் பெறுவதற்காக அவருக்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்ய அதிகாரியின் வீட்டுக்குச் சென்றேன். அங்கிருந்து திரும்பி வரும் வழியில் மேற்கூறிய கைதி ஜெயில் கம்பிகளுக்குள் அதன் ஓரமாக மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தான். அவனுக்கு அதுதானே வீடுவாசல் பூங்கா எல்லாம்!

"என்ன சுந்தரம்! பலமான யோசனையோ" என்றேன் நான். "இல்லை" என்று கூறி நிமிர்ந்தான். அவனது முகம் சிறிது வீங்கிக் கண் கள் சிவந்திருந்தன. பலத்த அழுகையின் பின் தோன்றும் அறிகுறியது.

என்மனமும் இளகிவிட்டது. "சுந்தரம் உன்னைப் பார்த்த நாள்முதல் உன்னில் எனக்கு அனுதாபமாயிருக்கிறது. சீ செய்த குற்றமென்ன" என்றேன் நான்.

"அது பெரிய கதை" என்றான் கண்களில் பொங்கிவந்த நீரைத் துடைத்துக் கொண்டே.

"பரவாயில்லை சொல்லு. உனக்கும் ஆறுதலாயிருக்கும்" என்று கூறி அவ்விடத்தில் அமர்ந்தேன். அவனும் உட்கார்ந்தான்.

காத்தான்குடி இரும்புக் கடை முதலாளி மகாலிங்கத்தின் பிள்ளை என்று இப்பொழுது இந்த ஸ்திதியில் நான் கூற நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! ஒரு காலத்தில் இலட்சக்கணக்காக அப்பா சம்பாதித்த பணக்குவியலின் மேல் உல்லாசமாக வீற்றிருந்தவன் நான்.அதையெல்லாம் இப்பொழுது நினைத்தால் என் மனது என்னமோ செய்கிறது" என்று கூறிக் கண்ணீரைத் துடைத்தான்.

"வாழ்வில் மேன்மையும் தாழ்மையும் ஏற்படுவது இயல்புதானே. சுந்தரம் வருத்தப் படாதே மேலே சொல்லு" என்று உற்சாகப்படுத்தினேன்.

"என் அப்பா என்னைப் படிக்க வைப்பதற்கு எவ்வளவோ பிரயாசை எடுத்தார். பால்ய வயதில் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்க்க விடாமல் வீட்டிலேயே உபாத்தியாரை ஏற்படுத்திப் பாடஞ்சொல்லி வைத்தார். நான் விரும்பும் பொருட்கள் எதுவாயிருந்தாலும் எவ்வளவு அருமையாக இருந்தாலும் அதை எனக்கு வாங்கித் தருவார். இதனால் என் தந்தைக்கும் எனக்கும் நித்திய சண்டை.

எனக்கு வயது வந்தவுடன் அந்தவூரிலுள்ள கலாசாலையில் அப்பா என்னைச் சேர்த்தார். நானும் வகுப்புக்களில் "சூடிகை"யாக இருந்து வருடம் தவறாமல் வகுப்பு மாறி வந்தேன். கடைசியாக "சீனியர்" வகுப்பில் தங்கி விட்டேன். அப்பால் போவதற்கு எனக்குக் கண்தெரியாமல் போகவில்லை அல்லது வகுப்புக்கள் இல்லாமலில்லை. மேல் வகுப்புக்களில் தொந்தரவு கொடுக்கும் அதி பயங்கரமான பிசாசு என்னையும் பிடித்துக் கொண்டது. அதன் கோர ரூபங்கள் என்னில் பற்பல விதமாகப் பிரதிபலித்தன. மது அருந்தத் தொடங்கினேன். இதனால் படிப்பில் கவனமெடுக்கவோ பள்ளிக்கூடத்திற்குப் போகவோ அவகாசம் அகப்படவில்லை.

"கொடுத்து வைத்த பிள்ளை தாராளமாய்ச் செலவழிக்கிறான். அப்பனின் கருமித்தனத்திற்கு ஏற்றபிள்ளை" என்று காற்றுவாக்கில் வந்த பேச்சை நானும் காற்றுவாக்கில் விட்டு விட்டேன். கையில் காசில்லாமல் டாம்பமாகச் செலவழிக்க ஆசைகொண்ட சில சில்லறைகளும் என்னுடன் சேர்ந்து கொண்டார்கள். சினிமாவா? முதல் வகுப்பு எங்களுடையது. இப்படியாக ஏக தடபுடலாகக் காலங்கழிந்தேன். காத்தான்குடியில் என் பெயர் அடிபடாத மூலை முடுக்குகளே கிடையாது. அப்பாவுக்கு இது விடயங்கள் தெரிந்துபோய் அவர் வேண்டிய மட்டும் புத்தி சொன்னார். ஆனால் எல்லாம் வியர்த்தமாய்விட்டது. ரத்த ருசி கண்ட புலிபோல் ஆடம்பர வாழ்விலிருந்த மோகம் என்னை விட்டபாடில்லை. என்னமோ அந்தக்காலத்தில் எனக்கு அந்த மாதிரி விகற்பபுத்தி ஏற்பட்டது உங்களுக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும். இவ்வளவோடு நின்றிருந்தாலும் அப்பா சிறிது சாந்தியடைந்திருப்பார். எனது விளையாட்டு இதற்கு மேலும் போய் அதன் உச்ச ஸ்தானத்தையே தொட்டுவிட்டது!

மதுரையிலிருந்து சொர்ணம் என்ற நாட்டியக்காரி எங்களுக்குச் சமீபமாயுள்ள மலை யாத்தாங்குடி சிவன்கோயில் திருவிழாவுக்கு விசேடமாக அழைக்கப்பட்டிருந்தாள். கோயிலிற் பார்த்த தோசம் அவளைச் சுற்றிக் கொண்டலையச் செய்துவிட்டது. அவளது தங்கநிற மேனியும் சுழலும் கண்களும் கவர்ச்சி வாய்ந்த நடனமும், ஒளிவீசும் முகமம் என்னை அவ ளுக்கு அடிமையாக்கிவிட்டது. அவளது அன்பைப் பெறுவது அது போலியோ உண்மையோ அப்பொழுதெனக்குத் தெரியாது. முடியாத காரியமாக எனக்குப்படவில்லை. பணத்தை வாரி வீசிக் கொண்டிருக்கும் ஒரு வாலிபனை எந்த விலைமாது தான் விரும்பமாட்டாள்? அவள் என்னை விரும்பியது ஆச்சரியமான காரியமல்ல. நான் அவள் பாதத்தில் விழுந்தேனே அது தான் ஆச்சரியம்! முதலில் இரகசியமாகப் பேசிக் கொண்டவர்கள் பிற்பாடு என் பெயரையும் சொர்ணத்தின் பெயரையும் சேர்த்துப் பேசிக்கொண்டார்கள். இதனால் என் பெயர் சுற்றுப் புறங்களிலும் அடிபடத் தொடங்கியது.

திரை மறைவுச் சங்கதிகள் எத்தனை நாளைக்கு? அப்பாவின் காதிலும் இது விழுந்து விட்டது. அப்பாவும் அம்மாவும் துள்ளிமிதித்தார்கள்.

குளத்திலிருந்து நீரை எடுத்தாலும் அது வற்றிப் போகையில் அப்பாவின் பொக்கிசம் எம்மாத்திரம்? எனது விபரீதப் போக்கைக் கண்ட என் அப்பா கடையையே விற்றுவிட்டார். எனக்கு ஆணிவேர் அறுந்துவிட்ட மாதிரியிருந்தது அப்பாவின்செய்கை. இருந்தாலும் முன் னர் இருந்த பிரபல்யத்தில் நான் யாரைப் பணங்கேட்டாலும் கடனாகத் தந்துதவு வார்க ளானதால், பண விசயத்தில் ரொம்பவும் முட்டுப்பாடும் ஏற்படவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் என் தங்கைக்கும் விவாகம் நடந்தேறியது. பிள்ளை வீட்டார் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் என் விஷயத்தை அம்பலத்திற்கு கொண்டு வந்து பேசிய பணத் திலும் இரண்டு மடங்கு கூட வாங்கிவிட்டார்கள். அன்பின் சீர்வகைகளையும் அப்பா அது போலச் செய்துவிட்டார். இந்த விஷயத்தால் அப்பாவிடம் இருந்த நிலத்திற்கும் ஆபத்து வந்து விட்டது. எப்படியோ கஷ்டப்பட்டு கொஞ்ச நிலத்தை மீதிப்படுத்தி வைத்திருந்தார்.

ஒரு சமயம் அப்பா என்னிடம் சொன்னார். சுந்தரம் நீ ஏனெடா எங்கள் குலத்திற்கே வசையுண்டாக்குகிறாய்? இந்தத் தள்ளாத வயதில் என்னை ஏன் மனம் நோகப் பண்ணு கிறாய்? நல்லவனென்று இந்தப் பொல்லாத உலகில் பேரெடுப்பது மகாகஷ்டம். நாலு சல்லி உழைக்க உனக்குச் சக்தியில்லாவிட்டாலும் என் பிராணன் போகும்பொழுது நீயொரு நல்ல பிள்ளையாய் இருக்கிறாய் என்று மற்றவர்கள் சொல்வதை நான் கேட்டால் என் ஆம்மா சங்கடமில்லாமல் போகும்" என்றார். அம்மா எப்பொழுதும் அழுத கண்ணுடனேயே இருந் தாள். பெற்ற வயிறு எரிகிறதடா என்று ஒவ்வோர் சமயம் அம்மா சொல்லும்போது எனக்கு இருதயத்தின் அடிவாரத்தில் ஒரு அதிர்ச்சியேற்படும்.

அப்பாவின் வேண்டுகோளும் அம்மாவின் அணுக்குண்டும் ஒருவாறு என்னை நல்ல வனாக்கத் தொடங்கியது. நடந்தது நடந்து விட்டது. இனியாகிலும் நல்ல பிள்ளையாக இருப் போம் என்று எண்ணினேன். எதிர்காலத்தை அறியக் கூடிய சக்தி எங்களுக்கிருந்தால் நாமேன் சிரஞ்சீவிகளாய் வாழ முடியாது? என்னைப் பொறுத்தவரையில் எதிர்காலம் கார் கால முகில் கூட்டம்போல் இருள் கவிந்திருக்கிறதென்பதை அப்பொழுது நான் உணரவில்லை. மாதங்கள் சுழன்றன. சொர்ணத்தின் மோகம் எங்கோ போய் அடங்கிவிட்டது. சொர்ணத்தின்

வீட்டுப்பக்கம் நான் போவதில்லை. அவளும் மதுரைக்குப் போய்விட்டாள் என்று கேள்விப் பட்டேன். எனக்கும் சற்று நிம்மதியேற்பட்டது. மீதமாய் இருந்த நிலபுலங்களைப் பார்த்துக் கொண்டு காலங்கழித்தேன். எனது நல்லபிள்ளைத்தனத்தைக் கண்டு அப்பா எனக்கு விவாகஞ் செய்து வைத்தார். அவர் வாக்கைக் காப்பாற்றவோ என்னமோ எனக்குத் திருமணம் முடிந்த மறுமாதமே இவ்வுலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டார். நானும், அம்மாவும், மனைவியுமாகக் குடித்தனம் நடத்தினோம். அப்பா இருந்தபொழுது எனக்கொன்றும் கஸ்டமாகத் தெரியவில்லை. வீட்டுப்பொறுப்பு முழுவதும் அவர் கையிலிருந்தது. பொறுப்பு எனக்கு மாறியதும் குடும்பப் பாரத்தைத் தாங்க முடியாமல் தத்தளித்தேன்.

"இந்தக் கஷ்டமான சந்தர்ப்பத்தில் என் தங்கையும் கணவன் வீட்டி லிருந்து வந்து சேர்ந்தாள். அவள் புருஷன் பாகம் பிரித்துக் கொண்டுவரும்படி அவளை அனுப்பிவிட்டாராம். அப்பா இருக்கும்பொழுது பக்கத்தாருக்கு எவ்வளவோ செய்தார். அதையெல்லாம் மறந்து வேகிற வீட்டில் பிடுங்கின தறுதி என்று மேலும் அவளை அனுப்பிவிட்டார்கள். அவர்களையிட்டு ஆத்திரப்படுவதில் பயனில்லை என்று எனக்கிருந்த நிலத்தை அவளுக்கே கொடுத்து அனுப்பிவிட்டேன். உடன் பிறந்த குற்றத்திற்கு இது என் கடமை என்று அப்பொழுது சாந்தியடைந்தேன்.

"இப்பொழுது எனக்குப் பெருங்கஷ்டமாகிவிட்டது. வயது போன தாயார், மனைவி இவர்களைக் காப்பது என் பொறுப்பாய்விட்டது. இருப்பது ஒரே ஒரு வீடு. வெறு வரும்படி எதுவும் கிடையாது. வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்குவிட்டு அதில் வரும் பணத்தைக் கொண்டு ஒரு மாதிரிக் காலங்கழித்தேன். சொந்தம் கொண்டாடினவர்கள் என்னை ஆகாயத்தில் தூக்கி வைத்துப் பேசினவர்கள் என் முகத்தைப் பார்ப்பது கிடையாது. நான்பட்ட கஷ்டத்தை நினைத்தால் என்று கூறிக் கண்ணைத் துடைத்தான் சுந்தரம்.

"மேலே பகவான் இருக்கிறார்: பட்டகஷ்டம் வீண்போகாது மேலே என்னப்பா நடந் தது" என்றேன் நான். "இனிமேலும் குடும்பத்தைத் தாங்க முடியாத நிலைவரவே வந்தது வரட்டுமென்று "மிலிட்டரி"யிற் சேர்ந்தேன். பல காரணங்களை முன்னிட்டுத்தான் அதில் சேர உடன்பட்டேன். எனக்குஞ் சம்பளம் கிடைக்கும். மனைவிக்கும் "அலவன்ஸ்" வரும். என் சம்பளத்திலும் கொஞ்சம் மீதப்படுத்தி வீட்டுக்கனுப்பினால் மனைவியும் தாயாரும் ஒரு மாதிரி காலங்கழிக்கலாம் என்ற காரணந்தான் அது. என் பெற்றதாய் நான் இராணுவத்தில் சேர்ந்ததையிட்டு மிகவும் வருந்தினார். என் மனைவியின் வருதத்தை நான் இலகுவில் சாந்தப் படுத்திவிட்டேன்.

"எனக்கு ஆங்கிலம் தெரியுமாதலால் ஆர்.ஏ.எஸ்.ஹி படையில் என்னை லிகிதராக எடுத்துக் கொண்டார்கள். சேர்ந்த மறுநாளே வட இந்தியாவிலுள்ள ஒரு குக்கிராமத்திற்குப் பிரயாணமானேன். அந்த இடத்தில்தான் எங்கள் "காம்ப்" இருந்தது. அங்கிருந்து என் குடும்பத்தாருடன் தொடர்பு வைத்துக் கொண்டேன். ராணுவத்தில் உள்ளவர்களுக்கு பலவித கேளிக்கைகளை ஏற்படுத்தியிருந்தார்கள் அதிகாரிகள். அதில் தமிழருக்குப் பிரத்தியேகமாகத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட பெண்கள் நடனம் - பாட்டு இவைகள் நடத்துவார்கள். இவற்றில் எனக்கு அதிக விருப்பமில்லாமவிட்டாலும் என் சகாக்களின் வற்புறுத்தலின் பேரில் சேருவேன்.

"ஒரு சமயம் எங்கள் "காம்"புக்குப் புதிதாக தமிழ் "கேணல்" அதிகாரியாக வந்தார். அவரைக் கௌரவிப்பதற்காகப் புதிதாகத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நாட்டியப் பெண்களின் நடனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அந்த வைபவத்தில் நானும் கலந்து கொண்டேன். ஏற்குறைய பந்தல் போன்ற ஒரு சிறிய மேடையில்தான் நடனம் நடைபெறும். நாங்கள் திறந்தவெளியில் இருந்து நடனத்தைப் பார்ப்போம். அதிகாரிகள் நாற்காலிகளில் இருப்பார்கள்.

"நடனம் ஆரம்பமாகிவிட்டது. சில வீரர்கள் குடித்துவிட்டுப் போதையில் அவர்களுடன் சேர்ந்து ஆடத் தொடங்கினார்கள். அவர்களைப் பிடித்து அடக்குவதே பெரிய சிரமமாகப் போய்விட்டது. அந்த நடனப் பெண்களை ஒவ்வொருவராகக் கவனித்துக் கொண்டு வந்த நான் ஒரு குறிப்பிட்ட பெண்ணைப் பார்த்ததும் எனக்கே "போதை" உண்டாகிவிட்டது. அவள் வேறுயாருமல்ல சொர்ணாதான்.

"அடங்கி இருந்த அக்கினி. சுவாலை விட்டு எரியத் தொடங்கி விட்டது. அவளை நான் தனியாகச் சந்திக்க நேர்ந்த சமயம் அந்த வஞ்சகி என்னைப் பிரிந்ததால் தனக்கேற்பட்ட மனவியாகூலத்தை அவளுக்கே இயற்கையாக உள்ள சாகசங்களுடன் கூறினாள். எனது பேதரித்த மனம் பிறகும் அந்தக் காதகியை வட்டமிடத் தொடங்கிவிட்டது. அதிகம் வளர்த்துக் கூறாமல் ஒரே சொல்லில் சொல்லுகிறேன். அவள் என்னை நெருங்கியதும் எனது தாய் - மனைவி எல்லோரும் தூர ஒதுங்கி விட்டார்கள்.

"சுந்தரம் நீதானே சொர்ணத்துக்கு ஒரு பெரிய முழுக்குப் போட்டுவிட்ட நல்ல பிள்ளையாக இருந்தாயே பிறகு எப்படியப்பா இந்தத் துர்க்குணம் ஏற்பட்டது" என்றேன் நான்.

"அந்தக் காலத்தில் எரிந்த நெருப்புக்கு அப்பாவும் அம்மாவும் தற்காலிகமாக ஏதோ போட்டு அடக்கினார்களே தவிர அந்த நெருப்பு முழுவதும் அணையவில்லை. அதன் தணல்கள் எந்நெஞ்சில் இருந்துகொண்டே வந்தது. சூறாவளியும் பன்னாடையும் சேர்த்து தணலைச் சுடர் விட்டெரியச் செய்துவிட்டது" என்றான் அவன்.

"பிறகு" என்றேன் நான்.

"குடிக்கக் கற்றேன். அதிகாரிகளிடம் எவ்வளவு விரைவாக நல்ல பெயர் எடுத்தேனோ அவ்வளவு விரைவாகக் கெட்ட பேரும் சம்பாதித்துக் கொண்டேன். சில "பித்துக்குளி" "சோல்ஜர்" கள் மட்டும் என்னைப் புகழ்ந்தார்கள்.

"ஒருநாள் சுமார் பத்துமணியிருக்கும். சொர்ணம் இருந்த வீட்டிற்குப் போனேன். வழக்கத்திற்கு மாறாக அவள் அறையில் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. கதவும் லேசாகத்திறந்திருந்தது. மெதுவாக எட்டிப்பார்த்தேன். நான் "கண்டகாட்சி" என்னை அசந்து போகச் செய்துவிட்டது. "கேணல்" மார்பில் அவள் "சொர்ணம்" சாய்ந்திருந்தாள். போதையில் அவன் அவள் கரத்தை முத்தமிட்டுக் கொண்டிருந்தான். என் உணர்ச்சி என்னை மீறிவிட்டது. "காதகி" என்று கூறிக்கொண்டு சொர்ணத்தின் மேற் பாய்ந்தேன். சொர்ணம் நடுங்கிக் கொண்டு மூலைப்பக்கம் ஓடினாள். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியாலும் "போதை" யினாலும் கேணல் கீழே விழுந்துவிட்டான். அவனிடமிருந்து "ரிவோல்வரை" எடுத்து அந்தக் காதகியைச் சுட்டுவிட்டேன். அதன் பின் "ரிவோல்வரை" கேணல் பக்கந் திருப்பினேன். ஆனால் அதில் "ரவை" இருக்கவில்லை.

"இந்தச் சத்தங்கேட்டு அயலவர்கள் ஓடிவந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள். என்னைக் "காம்"பிற்கு கொண்டு போனார்கள். நான் நடந்ததை ஒன்றுவிடாமல் மேலதிகாரிக்குச் சொன்னேன். கடைசியில் நீதிஸ்தலத்தில் விசாரணை நடந்தது. திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியினால் நான் அப்படிச் செய்ததாக நீதிபதி தீர்ப்புக்கூறிப் பத்து வருடச் சிறைத் தண்டனை அளித்தார்" என்றான் சுந்தரம்.

"உனது தாயாரும் மனைவியும் எங்கே" என்றேன் நான்.

"தாயார் போனவருடம் இறந்துவிட்டாராம். என் மனைவி பறிந்தகத்திற்குப் போய்விட்டதாகக் கேள்வி" என்றான் அவன்.

"இப்பொழுது எத்தனை வருடங்கள் கழிந்துவிட்டது சுந்தரம்?"

"இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. இன்னும் எட்டு வருடங்கள்.. இனிமேல் நான் சிறையைவிட்டுப் போய்த்தான் என்ன பிரயோசனம்? ஒருவேளை நான் சிறையிலேயே இறக்க நேர்ந்தால் என்னைத் தகனஞ் செய்தவிடத்தில் ஒரு ஆலமரம் இந்தச் சமூகத் துரோகியின் கதையைச் சொல்லட்டும்" அப்போதுகண்கள் கலங்கின. என்னைப் பார்த்தபொழுது அவன் முகத்தில் சிறிது பிரகாசம் தென்பட்டது. தனது வாழ்க்கை விசித்திரத்தை ஒருவருக்காவது சொல்லிட்டோமே என்ற திருப்தியோ, என்னவோ?

ஈழகேசரி 12.10.1947
19.10.1947

புஞ்சிமெனிக்கா

செ. நடராசா

நண்பன் கணேசனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எங்கள து சோகக் கதையொன்று ஞாபகம் வரும். அந்தச் சோகக்கதையை அவன் மொழிந்ததாகவே கூறுகின்றேன்.

வசந்தகால விடுமுறையின்போது நண்பன் கிராமத்துக்குச் சென் றேன். நகரிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்திலுள்ள அழகிய கிராம மது. கிராமவாசிகள் தமிழரல்ல சிங்களவர். விவசாயத்தில் தமிழருக் குச் சளைத்தவரல்ல என்பது அவர்கள் கிராமத்தில் மிதித்தவுடனேயே தெரிந்துவிட்டது. வழி நெடுகிலும் வயல்கள். வயல்கள் இல் லாவிடத்து வேறு தானியங்கள். எங்கும் ஒரே குளிர்ச்சிதரும் பச்சை நிறம். ரம்மி யமாக இருந்தது அந்தக் கிராமம்.

நண்பன் வீட்டையடைந்து இளைப்பாறியதும், நண்பன் அங்குள் ளவரின் ஒழுக்க வழக்கங்களைப்பற்றி ஒரு குட்டி உபதேசம் செய்தான். அந்நிய சாகியத்தாருடன் அதிக சம்பந்தம் வைத்துக்கொள்ளாத எனக்கு அவன் கூறியவை வியப்பை அளித்தன. அடுத்த நாளே ஊர் சுற்றப் புறப் பட்டோம். மூலை முடுக்குகளில் கிடந்த இயற்கை அழகெல்லாம்

ஒருங்கே திரண்டு வந்தது போன்றிருந்தது அந்தக் கிராமத்தின் லாவண்யம். இடையிடையே தோன்றிய புத்த விகாரைகள் கிராமத்திற்கு அதிக வனப்பாக இருந்தன. என் மனமும் கட்டுக்கடங்காமல் தாவித் தாவிக்கொண்டேயிருந்தது.

அன்று சாயந்திரம் நண்பனுக்கும் சில அவசர ஜோலிகள் இருந்தமையால் நானே ஊர் சுற்றப் புறப்பட்டேன். தோப்புகள் துரவுகள் எல்லாம் சுற்றிவிட்ட சமநிலமுள்ள ஒரு மேட்டிற்கு வந்து ஒரு கல்லின் மீது உட்கார்ந்தேன்.தூரத்தில் உள்ள மலைகளில் முகில் செய்யும் விளையாட்டுக்களையும் கதிரவன் மறையும் போது தோன்றும் வர்ண ஜாலங்களையும் கண்டு என்மனம் லயித்துவிட்டது. இருட்டுஞ் சமயம். ஆனால் கதிரவன் ஒளி இன்னும் மங்கவில்லை. “களுக்“ என்ற சிரிப்பின் ஒலி கேட்டுத் திரும்பிப்பார்த்தேன். என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை . புராண இதிகாசங்களில் நான் படித்த கற்பனைப் பெண்கள் உயிர் பெற்றுவந்தது போன்றிருந்தது அவள் தோற்றம். ரம்பை யென்றும் ஊர்வசி யென்றும் நான் படித்திருக்கிறேன். ஆனாலவர்களைக் கண்டதேயில்லை. அந்த மாயப் பெண்கள் எத்தனையோ தவசிரேஷ்டர்களை மயக்கி இருக்கிறார்களென்றும் காவியங்கள் கூறுகின் றன. ஆனால், அந்த மாயப்பெண் அவர்களின் பிரதிநிதியாகவே தோன்றினாள். இயற்கை எழிலில் வளர்ந்த மேனி - பூரித்து நிற்கும் உடல் வனப்பு, - மேதாவிலாசம் பொருந்திய வதனம் - ஒளி வீசும் கண்கள்-எல்லாம் என்னைச் சொறபன உலகிற்குக் கொண்டு சென்றன.

பக்கத்தில் உள்ள ஓடையில் நீர் மொள்ளவந்த அவள் பேயறைந்தவன் போல் நான் உட் கார்ந்திருந்ததைப் பார்த்து புன்னகைத்ததில் அர்த்தமில்லாமலில்லை. இயற்கையாக எழும் லஜ்ஜையையும் அடக்கிக் கொண்டு அவளைக்கவனித்தேன். அவள் என்னைக் கவனிக் காததுபோல் நீர் மொண்டதும் தான் வந்த வழியே போய்விட்டாள்.

ஒரு இடத்தில் லயித்திருந்த மனம் பல்கிளைகளாகப் பிரிந்தது. அதன்பின் மலைகளெல் லாம் மலைகளாகவே காட்சியளித்தன. அவற்றில் உள்ள அழகுகளை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை.

நன்றாக இருட்டியதும் நண்பன் வீட்டுக்குச் சென்றேன். அவன் கேட்ட கேள்விக்கும் என்னால் தகுந்த பதிலளிக்க முடியவில்லை.

அடுத்த நாள் அந்தக் கிராமத்தவர்கள் புத்த பகவானுடைய விசேட தினமொன்றைக் கொண்டாடினார்கள். நண்பனின்-அழைப்பின் பேரில் அங்குள்ள புத்த விகாரைக்குச் சென்றேன். சத்திய ஒளியைப் பரப்பி அஹிம்சையை நிலைநாட்டிய புத்தனின் கோவில் அன்று தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கும் நறுமணம் கமழ்ந்தது. நானும் புதியவனா கையால் கிராமத்தவர்கள் செய்யும் பயபக்தியுட னும் ஆச்சரியத்துடனும் கவனித்துக்கொண்டி ருந்தேன். ஆராதனை முடிந்ததும் பெண்களும், ஆண்களும் நறுமலர்த்தட்டுக்களைக் கையிலேந்திக் கொண்டு கோவிலை வலம் வந்தார்கள். நண்பன் கூறியதற் கிணங்கி மலர்த் தட்டுக்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

என் சிந்தனையைச் சிதற அடித்து - என் நெஞ்சத்தைக் கொள்ளைகொண்ட அந்த மோஹினியும் மலர்த்தட்டைக் கையில் ஏந்தி வலம்வந்தாள். அவன் தனது குறுகுறுத்த விழிக ளால் என்னை ஒருதரம் பார்த்துவிட்டு மலர்த்தட்டை என்னிடம் நீட்டினாள். நான் தொட்டுக்

கண்களில் ஒற்றியதும் மறுபடியும் என்னை நோக்கிவிட்டு அப்பாற் சென்றாள். அவளது மோகனப் பார்வை என்னை மேகமண்டலமெல்லாம் தூக்கிச்சென்றது. என் இருதயத்தின் உள்ளே - உள்ளே சென்று என் நெஞ்சைப் பதற அடித்துவிட்டது.

நண்பன் "போகலாம் வா" என்று கூறும்பொழுதுதான் எனக்குச் சுய உணர்ச்சி வந்தது. நண்பன் வழி நெடுகிலும் ஏதோ கூறிக்கொண்டே வந்தான். ஆனால் அவன் என்ன சொன் னான் என்பது எனக்கே தெரியாது.

அடுத்தநாளும் அந்திப் பொழுதில் அதே கல்லில் உட்கார்ந்திருந்தேன். நெஞ்சு துறுதுறுத்துக்கொண்டிருந்தது. காலடிச்சத்தங் கேட்டுத் திரும்பினேன். அந்த மாய மங்கை நீர்க் குடத்துடன் வந்துகொண்டிருந்தாள். எப்படியாவது அவளுடன் நாலு - வார்த்தை பரிமாற வேண்டும் என்றிருந்த எனக்கு அவள் நெருங்கி வந்ததும் நாக்கு அடைத்துக்கொண்டது. சொல்ல முடியாததொன்று நெஞ்சை அமுக்கியது. கல்லாய்ச் சமைந்துவிட்டேன்.

அந்த மாய மங்கை என்னைப் பார்த்துச் சிங்களத்தில் ஏதோ கூறினாள். நான் சிங்களம் தெரியாதென்று கூறவே மழலைத் தமிழில் "இன்றும் நல்ல "பிங்கம" வருகிறீர்களா?" என்றாள் அவள்.

நான் ஆச்சரியமும் வியப்புந் தோன்ற "வருகிறேன்" என்றேன். வரும்பொழுது நறு மணமுள்ள மலர்கள் கொண்டுவந்து அர்ச்சியுங்கள். நீங்கள் ஊருக்குப் புதிது. "உங்கள் நண் பர் சொல்லவில்லையா" என்றாள் மறுபடியும். நானும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் "நான் புதிதென்பது உனக்கு எப்படித் தெரியும்" என்றேன். அவள் பவள இதழ்களில் ஒரு புன்னகை சுழித்தோடியது. "இது கூடவா தெரியாது. நீங்கள் வருவதற்கு முன்னமே உங்களைப்பற்றிய செய்தி பரவிவிட்டது. நீங்கள் காலேஜில் படிக்கிறீர்களல்லவா?" என்று கூறி என்னை மறுபடியும் திணற அடித்தாள்."

"ஏதேது உங்களுக்குத் தெரியாத விஷயமே கிடையாது போல் இருக்கிறதே" என்று நான் கூறும் பொழுது யாரோ வருவதுபோற்றோன்றவே கடைசி வார்த்தையை "நசுக்கி" விட்டேன். அவளும் அதைக் கவனித்தவளாய் 'கட்டாயம் வாருங்கள்" என்று கூறி நீர்க்குடத் துடன் போய்விட்டாள். அந்தச் சொற்ப நேரச் சம்பாஷணையில் அவள் என் நெஞ்சையும் உடம்பையும் வேறாகப் பிரித்து விட்டாள். என்மனம் பராதீனமாய்விட்டது.

பொழுது விடிந்தால்-மறைந்தால் அவள் தியானமாகிவிட்டது எனக்கு. அவளுடன் வார்த்தையாடுவது தெவிட்டாத இன்பமாகத் தோன்றியது. அந்தக் கல்லில் அவள் தியானமாகவே தவஞ் செய்யத் தொடங்கிவிட்டேன்.

வழக்கம்போல் ஒருநாள் அந்தக் கல்லில் உட்கார்ந்திருந்தேன். திடீரென மழை தூற்றத் தொடங்கியது. சமீபத்தில் தங்குவதற்கு ஏற்ற வசதிகள் இல்லாமையின் எழுந்து விரைந்து நண்பன் வீட்டை நோக்கி நடந்தேன்.

இதற்கிடையில் மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. நான் ஓடத் தொடங்கினேன். எதிரே வந்த அவள் நான் படும் கஷ்டத்தைக் கண்டு நீங்கள் எங்கள் குடிசையில் வந்து தங்கி மழை விட்டதும் போகலாம். ஏன் மழையில் ஓடுகிறீர்கள்" என்றாள். பிறகு ஏதோ நினைத்த

வள் போல் "குடிசையில் தங்குவீர்கேளோ?" என்று பதட்டத்துடன் கேட்டாள். அவள் வசம் நான் இருக்கும்பொழுது குடிசையாவது மண்ணாங்கட்டியாவது எல்லாம் கற்பகப் பூஞ்சோலை தான். மறுமொழி கூறாது அவள் பின்னாலே சென்றேன். அவள் குடிசையை அடைந்ததும் ஒரு நாற்காலியைக் காட்டி அதில் இருக்கும்படி வேண்டினாள். எனக்கு எல்லாம் கனவுபோல் இருந்தது.

"பட்டணத்தில் பழகிய உங்களுக்கு இந்தக் குடிசையில் இருப்பது கஷ்டமாகத் தானிருக்கும்" என்று கூறிப் பேச்சைத் தொடங்கினாள் அவள்.

"உன் போலொத்த பெண்கள் வசிக்கும் இடம் குடிசையானாலும் அரண் மனையாகவே எனக்குத் தோன்றுகிறது" என்று கூற வாயெடுத்த நான் இல்லை ஆபத்திற்கு இதுவாதல் உதவியதே அதற்கு உன்னைப் பாராட்ட வேண்டும்" என்று கூறி வைத்தேன்.

அவளது முகத்தில் லேசாக ஒரு புன்முறுவல் தவழ்ந்தது.

"உன் தகப்பனாரெங்கே? காணவில்லையே" என்றேன். நான் இதைக் கூறியதும் அவள் முகத்தில் துக்கக் குறி தோன்றியது.

"எங்கள் வாழ்க்கையே இப்படித்தான். காலை முதல் மாலை வரை வயலில் வேலை செய்யவேண்டும். அதன்பின் கஞ்சியோ கூழோ உண்டு உறங்கவேண்டும். எனது தந் தையோ வயோதிபர். வயல் வேலைக்குச் சென்றவர் இன்னுந் திரும்பவில்லை ." என்றாள் அவள். ரத்தினச் சுருக்கமாக அவள் கூறிய வார்த்தையிலிருந்து துக்கத்தின் எக்காளமும், சோகத்தின் நாதமும் ஒலித்தன. எனது மனமும் இளகிவிட்டது.

"நீ படித்திருக்கிறாயா?" என்றேன் நான்.

"ஆம் கிராமப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாவது வகுப்புவரை படித்திருக்கிறேன். அதற்குமேல் எங்கள் கஷ்ட சீவியம் இடந்தரவில்லை ." என்றாள் அவள்.

"பட்டணத்தில் எங்காவது ஒரு வீட்டில் வேலைக்கமர்ந்து உன் தந்தையைக் காப்பாற்றக் கூடாதா? என்று நான் வீம்புக்காகக் கேட்ட கேள்வி. அவளின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டது.

"அவ்வளவு தூரம் எங்கள் கஷ்ட நிலை போகவில்லை. இறப்பதானாலும் மானமாகவே இறப்போம்" என்றாள் அவள். அந்தப் பெண் கூறிய வார்த்தைகள் என்னைப் பிரமிப்படையச் செய்துவிட்டது. மீண்டும் அவளின் ஆத்திரத்தைக் கிளற மனமில்லாமல் கதையை வேறு வழி யில் திருப்பினேன். இதற்கிடையில் மழையும் நின்றுவிடவே நான் எழுந்து "நான் வருகிறேன் உனது பெயர் என்ன" என்றேன். "இன்னும் மழை நன்றாக ஓயவில்லையே ஆறிப்போகலாம்" என்றாள் அவள். ஆறிய மழையுடன் போவது நல்லது. உனது பெயர் என்ன , என்றேன்." "எனது பெயரா... புஞ்சிமெனிக்கா" என்றாள் அவள்.

நான் சிரித்துக் கொண்டே "நல்ல பெயர்தான் நீயும் சாமர்த்தியசாலிதான். எங்காகிலும் நன்றாக இருக்கவேண்டும் என்று கூறி அவ்விடத்தைவிட்டு நகர்ந்தேன். நான் மறையும் மட்டும் அவள் என்னை கவனித்ததை நானும் பார்க்காமலில்லை.

அந்த நிகழ்ச்சியின் பயனாய் என் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. இவள் யார்? நான் யார்? முன்னறியாத பெண்ணிடம் என் மனம் வாத்சல்யம் கொள்வானேன் ? இது வெறும் புதிராக எனக்குத் தோன்றியது. இதுதான் மனிதயத்தனத்துக்கும் அறிவுக்கும் எட்டாத பிரச்சனை.

எப்படியாவது அவளின் துன்பத்தில் ஒரு பகுதியை நிவர்த்திக்கச் சங்கற்பம் செய்து கொண்டேன்.

மறுநாள் வேண்டுமென்றே அவள் குடிசைப் பக்கம் போனேன் கனிந்த முகத்துடன் வரவேற்றாள்.

“உன் தந்தை வந்துவிட்டாரா?” என்றேன் நான்.

“ஏன்? என் தந்தையைப் பார்க்கத்தான் வந்தீர்களா” என்று கூறி என்னைக் குறும்பாகப் பார்த்தாள்.

“நான் ஒன்று கூறுகிறேன். நீ விபரீதமாக எண்ணக் கூடாது.” என்றேன் நான்.

வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

“ஆண்களின் இருதயத்தில் உள்ளதைப் பெண்கள் சுலபத்தில் அறிந்து கொள்வார்கள்.” என்று கூறியதில் அவள் மனநிலை எப்படிப்பட்ட தென்பது எனக்கும் தெரிந்து விட்டது.

“பட்டணத்தில் எங்காவது உன்னைப் படிக்க வைத்து மேனிலைக்கு கொண்டு வருகிறேன். உனது சம்மதமென்ன” என்றேன்.

அவளது முகத்தில் பலத்த ஏமாற்றத்தின் அறிகுறி தென்பட்டது. "என்ன யோசிக்கிறாய். உன் தந்தையுடன் ஆலோசித்து மறுமொழி சொல்” என்றேன் மறுபடியும் .

“என் தந்தை வயோதிபரானாலும் பிடிவாதக்காரர். இதற்குச் சம்மதிப்பாரென்று நான் நம்பவில்லை.” என்றாள் அவள்.

“தெண்டித்துப்பார்” என்ற கூறிவிட்டு நான் புறப்பட்டபோது தன் சொந்தக் கைப்படப் பின்னிய கைலேஞ்சி“ ஒன்றைத் தந்து அதை எடுத்துக் கொண்டு போகும்படி வற்புறுத்தினாள்.

அந்தப் பேதைப் பெண்ணின் கற்பனையை அப்பொழுது நான் அறியமுடியாமலில்லை .

மறுநாள் அவளைச் சந்தித்த பொழுது என் ஏற்பாட்டிற்கு அவள் தந்தை உடன்பட வில்லை என்பதை வருத்தத்துடன் கூறினாள்.

எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவளின் விதியும் அவ்வளவு தான் என்று எண்ணினேன். இருந்தும், மனமில்லாமல், உனது முடிவான அபிப்பிராயம் என்ன” என்றேன்.

அவள் நீர் நிறைந்த கண்களுடன் கூறினாள். “நீங்கள் சொன்னது சிறந்த ஏற்பாடுதான். ஆனால் என் தந்தை அதற்கு ஒருப்படவில்லை. இளம்பெண்கள் தனிமையில் வெளியில்

இருக்கப்படாது என்ற கட்டுப்பெட்டி" எண்ணங் கொண்டிருக்கிறார். அதுவுமல்லாமல் நீங்கள் எங்கள் ஜாதிக்காரரில்லையாம். அந்நியனுடன் என்னை அனுப்புவது எங்கள் வம்சத்திற்கு இழுக்காம்." என்று கூறி வரும் போதே அவள் அழுது விட்டாள்.

"நீ அழாதே! சாதி மதம் எல்லாம் கடந்தது தான் அன்பு என்பதை உன் தந்தை அறி யவில்லை. போகிறது. நீ இங்கேயே இரு. முடிந்தவரையில் உன் தந்தையைத் திருப்திப் படுத்தி உன் எண்ணத்திற்கு வரச் செய். அதன்பின் ஆக வேண்டியன செய்யலாம்." என்றேன் நான்.

அவளது முகத்தில் கவலைக்குறி சிறிதளவாவது நீங்கியதாகத் தெரியவில்லை .

"நாளைக்கு நான் பட்டணம் போகிறேன். இரண்டு மாதத்தில் திரும்பியும் வருவேன். அதற்கிடையில் உன் தந்தையை வசப்படுத்து" என்று சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கூறினேன்.

அவளது முகத்தில் தாரை தாரையாக நீர் வழிந்தோடியது. அவளைக் காண சகிக்காமல் "நான் வருகிறேன் புத்தபகவான் மனம் வைத்தால் உனது விடயம் கைகூடும்" என்று கூறி விட்டுப் புறப்பட்டேன்.

அடுத்தநாள் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தேன். நண்பன் வண்டி கொண்டு வருவதாக புறப்பட்டுப்போன சிறிது நேரத்தில் திரும்பி வந்து வண்டியோட்டுபவன் இன்றைக்கு வரமாட்டான்" என்றான் துக்கத்துடன். .

"ஏன்?" என்றேன் நான்....

"அவனது மகள். பாவம் இளம் பெண் நேற்று இரவு தற்கொலை செய்து கொண்டாள்." என்றான் நண்பன்.

"அவள் பெயரென்ன?" என்றேன் பதற்றத்துடன்

"புஞ்சிமெனிக்கா" என்றான் நண்பன்.

ஈழகேசரி - 24.02.1946.

மயில்வாகனன்

தொடக்க கால சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவரான மயில்வாகனன் ஈழகேசரியில் சிறுகதை, கட்டுரைகளை எழுதியவர். இவரின் ஏழையின் கொடை, தராசு முதலான சிறுகதைகள் உருவ, உள்ளடக்கத்தால் சிறந்து விளங்குகின்றன. கலை பட்டதாரியான இவர் மறுமலர்ச்சியில் பிரயாணக் கட்டுரைகளையும் எழுதியவர்.

- தராசு
- ஏழையின் கொடை

தராசு

மயில்வாகனன்

ஒரே படுக்கை எழும்பமுடியாது வைத்தியரின் மருந்துதான் அவ ளுணவு. அவனுக்குத் தாயும் தாய்க்கு அவனும் உதவியாக இருந் தார்கள். சொத்து யாவையும் அப்பன் அப்பவே அழித்துவிட்டான். குடும் பச் செலவுக்குத் திண்டாடும் ரங்கன் பிறருக்கு உதவி செய்கிறதைப் பார்த்தால் யார்தான் பேச மாட்டார்கள். அதுவும் கல்லூரியிற் படித்த லக்ஸ்மிக்கு உதவிசெய்ய முற்பட்டுவிட்டால்....!

ஊரார் பேசுவதும் அவனுக்குத் தெரியும். அன்னை பிச்சையெடுக் கத் தம்பி தானம் வழங்குகிறதைப் போல இருக்கிறதே. என்ன. லக்ஸ்மி. லக்ஸ்மி என்று உயிர்விடுகிறானே. கல்யாணம் செய்யத்தானே என்று பேசுவதைக் கேட்க அவனுக்கு வெட்கமாக இருந்தது. ஆயினும் அவனை அறியாமல் அவனுக்கு அவள்மேல் ஒரு பாசம் அன்னையின் கடமைகளை முடித்துவிட்டு லக்ஸ்மியையும் ஒருமுறை பார்த்துவிட்டுத் தான் மறுவேலை.

ஊரார் பேசுவதைக் கேட்கும் லக்ஸ்மிக்கும் அவனது நடத் தையில் ஐயமுண்டானது. தன்னையறியாமலே தற்பெருமை

அவளிடம் குடிகொண்டது. தன்னுடைய எண்ணப்படியெல்லாம் அவனை ஆட்டலாமென எண்ணினாள். கல்லூரியிற் படிக்கும்போது அவள் அவனிடம் கூறியதை மறந்துவிட்டான். அவனோ அவள் கூறியதை மறக்கவில்லை. லக்ஸ்மியின் சகோதரியும் வெளிப்படையாக லக்ஸ்மிக்குக் கூறினாள். "ஏதோ இங்குமங்கும் அவன் அலைகிறான். ஊரார் அவனைத் தூற்றுகிறார்கள். நீ கல்யாணம் செய்வதாகக் கூறினாற் சொல்லிவிடு. இல்லையேல் முடியாது என்று கூறிவிடு". லக்ஸ்மி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவன் அவளுக்குச் செய்கின்ற உதவிகளை அவளால் மறக்க முடியாது.

ரங்கன் அன்று சாயந்திரம் லக்ஸ்மியின் வீட்டுக்குப் போனான். லக்ஸ்மியின் அத்தான் அங்கேயில்லை. சகோதரியும் அவளுந்தான். அவனைக் கண்டதும் லக்ஸ்மி உள்ளே போய் விட்டாள். சிறிதுநேரம் நின்று பார்த்தான். அவள் வரவில்லை. ஒருநாளும் அவ்விதம் நடவா மல் அன்று அவ்விதம் நடந்தது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆனால் லக்ஸ்மியின் சகோதரியோ சந்தோக்ஷமாகப் பேசினாள். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மணித்தியாலம் வரை நின்று பார்த்துவிட்டு வீடு திரும்பினான். மறுநாட்காலையும் அங்கே சென்றான் ஒரே ஏமாற்றம்...."

ஓடும் இயந்திரத்தைத் திடீரென நிறுத்தமுடியுமா? பின்னேரமும் அதே வீட்டுக்குச் சென்றான். கதவு பூட்டப்பட்டிருந்தது. தட்டினாள். சப்தமில்லை. மீண்டும் தட்டினான் . சப்த மில்லை. திரும்பி ஆறேழடி நடந்தான். மனம் எழவில்லை. கதவண்டை சென்றான். கதவு மெல்லத் திறந்தது. அத்துடன் ஒரு முகம் 'லக்ஷிமீ' என்றான் அவன். அளிடம் ஏமாற்றம் குடி கொண்டது. அவள் ஒன்றும் பேசவில்லை. 'கதவு பூட்டப் போகிறாயா?' என்றான். அவள் பேசா மல் நின்றாள். அவன் அவளுடைய பேச்சை எதிர்பார்க்கவில்லை. உள்ளே சென்றான். ஒரு கதிரையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான். அவளும் வந்து நின்றாள். ஒருவரோடொரு வர் சிறிது நேரம் பேசவில்லை. அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு 'நான் வரு கிறேன்' என்றான். அவள் தலையை அசைத்தாள். என்னுடன் பேச மனமில்லையா என்ன?' என்றான்.

"மனமில்லாமலென்ன" என்றாள்
"அப்படியானால்"
" ஊரார் கதைப்பது"
"எப்படியும் கதைகடக்டும் அதற்கென்ன?"
"எனக்கு விருப்பமிருக்க வேண்டுமே"
"உமக்கு விருப்பமில்லாவிட்டால்...?"
"நீங்கள் ஏமாந்ததாக முடியுமே"
"எதற்கு நான் ஏமாந்ததாக முடியும்"
"கல்யாணத்துக்கு"
அந்த வார்த்தை அம்பு குத்தியது போலிருந்தது.

"அன்றொருநாள் அந்தி நேரத்தில் புத்தகம் வாங்கவில்லை என்று உபாத்தியாயர் உன்னைப் பேச வில்லையா? நீ அழுதமுகத்துடன் வீடு திரும்பவில்லையா? நான் ஒரு புத்த கத்தை உன்னிடம் நீட்டி லக்ஷ்மி! நீ என்னைப் பார்த்து 'ரங்கா! நான் தான் தந்தையற்றவள். எனக்கு உதவி செய். நான் சத்தியமாக என்னாலாகக் கூடிய உதவியைச் செய்வேன்' என்று

கூற வில்லையா? " நான் தாய் தந்தையற்றவள்" என்ற வார்த்தைகள் என் மனத்திற் பதித்து விட்டமையாலேதான் நான் உன்னிடம் அன்புகொண்டேனேயன்றி உன்னைக் கல்யாணம் செய்வதற்காகவில்லை. ஊரார் பேசும் இழந்த வார்த்தையக் கேட்டும் நான் இங்குவர நீயும் உன் அக்காவும் சேர்ந்து என்னைக் கதவண்டை காக்க வைத்தீர்களே....

"ஆண்களெல்லாம் பெண்களின் பின்திரிவோரென நீ எண்ணுதல் பிழை. ஆனால் அன்று என்னைக் காப்பாற்றிய அப்பன் இன்று இல்லை. படுக்கையிற் கிடக்கும் அன்னையே என் உதவி. இன்று வறுமைதான். ஆயின் உலகம் ஓர் தராசு என்பதை நீ விரைவிலறிவாய். லக்ஸ்மி உன் அன்புக்கு வணக்கம்" என்று கூறிவிட்டுத் திரும்பிப் பாராமல் வெளியேறி விட்டான்.

துவிச்சக்கரத்தில் ஓடுபவனை ஒரு கல்லுத்தடைப்படுத்தினால்....? அதுபோல ரங்க னின் மனமும், மாலையாய் விட்டது. அன்னை தண்ணீர்த் தாகத்தினால் "ரங்கா...ம்ம்" என் றாள். ரங்கனாற் தலை நிமிர்த்த முடியவில்லை. ஒரே தலையிடி காய்ச்சல். "அம்மா....." என் னால், அவனது கடைக் கண் வழியே நீரோடிக் கொண்டிருந்தது. ஒரு உதவியுமில்லை. இரு வரும் படுக்கையிற் கிடந்தார்கள், கடவுள் கைவிடுவாரா? வைத்தியர் வந்தார். ரங்கன் எழும்ப வில்லை. விளக்கு ஏற்றப்படவில்லை. "ரங்கா" என்றார், அவன் "ஐயா" என்று மெல்லக் கூறி னான். அவர் மங்கிய வெளிச்சத்தில் அவனருகே சென்று விளக்கை ஏற்றினார். ரங்கனின் தலையை தொட்டுப் பார்த்தார்! கையைப் பிடித்துப் பார்த்தார்! இருவருக்கும் சுடுநீர் வார்த்துக் கொடுத்தார். ஒரு வண்டி பிடித்துக்கொண்டு வந்து தன் வீட்டுக்கு இருவரையும் கொண்டுபோய் விட்டார்.

இரண்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. ரங்கனுக்கு லக்ஸ்மியின் எண்ணம் அடிக் கடி நினைவுக்கு வரும். ஆனால் அது பெட்டிப் பாம்பு போல அடங்கிவிடும். ரங்கன் இப்பொழுது கமவேலை, கல்லூரிப் படிப்பு அவன் வாழ்க்கைக்கு ஓரளவுக்கே பயன்பட்டது. அவன் மேல் முன்பு ஊரார் கொண்டிருந்த எண்ணமானது மாறிவிட்டது. லக்ஸ்மியின் வீட்டுக்கு ஏன் வரு வதில்லை? அவனுக்கு அவளை மணஞ்செய்யும் எண்ணமில்லை என்பார் சிலர், அவன் விரும்பியதை நிறைவேற்றிவிட்டபடியால் வருவதில்லை என்பார் சிலர். இதுவும் லக்ஸ்மியின் காதுக்கு எட்டியது. ரங்கனின் ஒவ்வொரு செயலையும் லக்ஸ்மியால் மறக்க முடியவில்லை. அவனைக் காண மிக ஆசை கொண்டாள். கடிதம் எழுதிப் போட்டாள். பதிலில்லை. இரண் டொரு நாளின் பின் லக்ஸ்மியின் அத்தான் வைத்தியர் வீட்டுக்கு ஓடினார். ஊர் முழுவதும் ஒரே பேச்சு, லக்ஸ்மிக்குப் பைத்தியம். ரங்கா, ரங்கா என்று கத்துகின்றாள் என்ற கதை.

"அவளை நீயே காப்பாற்ற வேண்டும். இல்லாவிடில் அவள் வாழ்வு பாழ் அடையும்" என்று சொன்னார் வைத்தியர். ரங்கனுக்கு வைத்தியர் பேச்சை அவனாலே தட்ட முடியுமா? பேசாமல் அவர் பின்னே நடந்தான். லக்ஸ்மி வைத்தியர் வீட்டில் இருந்தாள். அவளைப் பார்க்க அவனால் முடியவில்லை. பைத்தியத்துக்கு அவனே வைத்தியனானான். இனியென்ன "லக்ஸ்மி போகலாமா" என்றான்.

லக்ஸ்மி ரங்கனை அணைத்துக் கொண்டாள். அன்று அவன் "உலகம் ஒரு தராசு" என்ற வார்த்தைகள் அவளுடைய நினைவுக்கு வந்தன.

ஈழகேசரி
17.02.1946

ஏழையின் கொடை

மயில்வாகனன்

முருகையன் கோயிலில் இன்று பூசை. முக்கியமாக நின்று நடத்தியவர் நல்லையா. வெயிற்காலம் சுவாமிக்கு அபிசேகஞ் சிறப்பாக நடத்தினால் மழைவரும் நோய்கள் வரமாட்டா என்று வீடுவீடாகச் சொல்லி ஏற்படுத்திய பூஜை. அதன்பின் ஊரிருள்ள வேறு சிலரும் அவருடன் சேர்ந்து கொண்டு அன்றைக்குக் கோயிலிலே சோறவித்துக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அதன்படி ஒவ்வொரு வீட்டாரிடமும் அரைப்படி அரிசி குறையாமல் வாங்குவதெனத் திட்டம் போடப்பட்டது.

அன்று காலை இருவர் கையில் சாக்குடன் ஒவ்வொரு வீட்டிற்கும் போய் அரிசி தண்டினார்கள். சிலர் ஒருபிடி கொடுத்தார்கள். சிலர் இரண்டு படி கொடுத்தார்கள். சாக்கும் வரவர ஊதத்தொடங்கியது.

சாக்கைச் சுமந்த கொண்டு சென்றான் சொக்கன். முன்னே நடந்தவன் அருளம்பலம்.

"அடே சொக்கா, அதோ பார் வாசலில் இராசலிங்கம் நிற்கிறார். அவரிடம் போவோம்" என்றான் அருளம்பலம். சொக்கனுக்கு ஆத்திரம் வந்தது.

“அடே பாவமே. இவன் சுமை சுமக்கின்றானே. என்று இரங்காது அவன் வீட்டு வாசலிலும் போய் நிற்கவேண்டும் என்கிறாயே?” என்று தலையிலிருந்த பாரத்தை இரு கைக ளிலும் தாங்கிக் கொண்டு கதறினான். இதற்கிடையில் இராசலிங்கம் கைநீட்டி இவர்களை அழைத்தார். அவர்களும் விரைவாகச் சென்றனர்.

“நல்ல காரியந்தான். ஊரிலே நோய் வரவரக்கூடி வருகிறது. இப்படி ஒன்று நடக்கிறது. நல்லது தான். சரி நான் இருபத்தைந்து கொத்தரிசி கோயிலுக்கு அனுப்பிறன்.” என்றார் இராசலிங்கம்.

சொக்கனும் அருளம்பலமும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர். அந்தச் சிரிப்பில், இந்த உலோபியும் அரிசி கிடைக்காத காலத்தில் இவ்வளவு கொடுக்கிறானே என்ற தொனி கலந்திருந்தது.

தாங்கள் கொணர்ந்த அரிசியைக் கோயிலில் சேர்த்துவிட்டு வெறும் சாக்குடன் அடுத்த வீட்டிற்குப் போனார்கள்.

அந்த வீடோ சிறியது. மண்சுவர் தானுமில்லை. சுற்றிவரக் கிடுகுகளால் மறைக்கப் பட்டிருந்தது. வீட்டின் முன் ஒரு பூவரசமரம் சற்று உயர்ந்தது. இலைகள் நிறைந்திருந்தன. அந்த வீட்டின் அம்மாவின் மனம் போல அந்த மரம் தண்ணிழல் தந்து கொண்டிருந்தது.

அந்த மரத்தின் கீழே ஒரு பெண். ஐம்பது வயதிற்கு மேலிருக்கும். கழுத்தில் - நகை யொன்றுமில்லை. காதிலிருந்து ஆபரணம் பழைய நாகரீகத்தை விளக்கியது. யாழ் வல்லு னனின் கைவிரல்கள் எவ்விதம் ஒவ்வொரு தந்தியையும் மாறி மாறித்தட்டுகின்றதோ அப்படி அந்தக்கிழவியின் கைவிரல்கள் பனயோலைப் பெட்டியை இழைத்துக் கொண்டிருந்தன. மனம் சஞ்சலப்பட்டது.

“இரவு என்ன செய்வது? பாவம் ஓடித்திரிகின்ற பிள்ளை. பட்டினியால் வாடுகின்றது. அவன் ஒத்த பிள்ளைகள் எப்படியிருக்கின்றன. தொழில் செய்வதென்றால் வேலையுமில்லை. ஐயோ முழுப்பட்டினி. இன்றிரவும் பட்டினியா? தெய்வமும் அப்பக்கமே. கூப்பன் வாங்கக் காசில்லையே? பணக்கார பிள்ளைகளாக எங்களைப் பிறக்க வைத்திருக்கக் கூடாதா” என உள்ளம் பேசியது.

“அம்மா பூசைக்கரிசி” என்றான் சொக்கன். கலங்கியிருந்த கண்களைத் துடைத்துக் கொண்டே நிமிர்ந்து பார்த்தாள் “அரிசி... உம் ... சாமிக்குத் தானே என்று கேட்டாள். “ஆமாம் சாமிக்குத்தான். ஆனால் எல்லாம் சாமி தின்னமாட்டாது” என்றான். சொக்கன். “அப்பனே! சாமி எங்களை அரிசி கொடுக்கக்கூடிய நிலையில் வைக்கவில்லை. உண்மையாகவே இந்தக் கிழமை கூப்பனுக்குச் சாமான் எடுக்கவில்லை . என்ன செய்ய..... சரி இந்தக் காசை கோயி லுக்குக் கொடுத்துவிடு” என்று ஒரு பத்து சதத்தை நீட்டினாள் அருளம்பலம் வாங்கிக் கொண் டான்.

“சரி பூஜைக்கு வருவீர்கள் தானே” என்றான் சொக்கன். அதிலிகழ்ச்சி கலந்திருந்தது. அதையறியாள் அந்தக் கிழவி. “இன்றைக்குச் சந்தையிலே பெட்டி நல்ல விலையாயிருக்கும்

நான் சந்தைக்குப் போகிறேன். என் மகனே..." என்றிழுத்தாள் கிழவி. சொக்கன் தலையை யாட்டினான்.

மத்தியானம் ஒரு மணி இருக்கும். சுப்பு குளித்துவிட்டு வந்தான் : "சுப்பு, மரவள்ளிக் கிழங்கு சுட்டு வைத்திருக்கிறேன் தின்றுவிட்டு கோயிலுக்குப் போ. இப்போதுதான் மேளம் கேட்கிறது. சாமிக்கு அபிஷேகம் முடிந்ததும் சோறு கொடுப்பார்கள்." என்று அவனது முதுகைத் தடவிக் கொண்டே கிழவி கூறினாள். அவளின் மகன்தான் சுப்பு. வீட்டு நிலைமை மோசம். சொல்லைத் தட்ட மனமில்லை. அதனால் அவன் "உம்..." என்று ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே கூறிவிட்டு, "நீ கிழங்கைத் தின் நான் கோயிலுக்குப் போகிறேன்" என்று சொல்லிப் போய்விட்டான்.

சுப்பு வருவதைத் தூரத்தே கண்டான் சொக்கன். "சரிவரட்டும்... அடே சுப்பு வந்தவுடன் நான் சிரிப்பேன் நீங்களும் சிரியுங்கடா" என்று ஆயத்தப்படுத்திக்கொண்டு சுப்பு கிட்ட வந்ததும் சொக்கன் கொல்லென்று சிரித்தான். கூட நின்றவர்களும் சிரித்தார்கள். சுப்புவும் காரண மறியாமற் சிரித்தான். பக்கத்தே நின்றவர்கள் திரும்பிப்பார்த்துச் சிரித்தார்கள். அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் கூடிவிட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டான். "ஏது சாமி இந்தப் பக்கம்" என்று கேட்டதும் தன்னையிகழ்ந்தே சிரித்தார்கள் எனத் திடம் பண்ணிக்கொண்டு "இல்லை மேளங்கேட்டது. அதனால் வந்தேன் என்று சுப்பு சொன்னான். "ஓகோ! அப்படியா!இங்கு சோறு போடுபவர்கள் என்று தெரியாதோ?" என்று சட்டெனக் கேட்டான் சொக்கன். "தெரியும்... என்றான் சுப்பு. "தெரிந்ததா? எவ்வளவு அரிசி கொடுத்தாய் என்று புண்ணில் வேலை நுழைத் தது போலக் கேட்டான் சொக்கன். சுப்பு ஒரு கணம் அப்படியே தம்பித்து நின்றான். சொக்கா" என்று நல்லையர் கூப்பிட்ட சத்தங்கேட்டு சொக்கன் ஓடிவிட்டான். கூட்டங் கலைந்தது.

"எவ்வளவு அரிசி கொடுத்தாய்? உண்மைதான், உரிமையில்லாவிடத்து உனக் கென்ன வேலை?" "உரிமையா? ஆண்டவன் சந்நிதியில் ஏழையுஞ் செல்வனும் வேறா?"

"மானத்தைக் கைவிட்டு ஒருவயிறு சோற்றுக்காகப் போலி நியாயங்களைக் காட்டுகிறாயே!"

"போலி நியாயமா? அப்படித்தானிருந்தாலும் ஐயோ வயிறு பசிக்கிறதே!"

"அட மூடமே! வயிற்றுப் பசியை நினைத்துத்தானே இந்தக் கூட்டத்தில் மரியாதை கெட்டாய்"

"மரியாதைக் கேடா. சொக்கன் பேசினதால் என் மரியாதை குறைந்து விட்டதா"

"மரியாதை குறையவில்லை. இன்னும் கேவலமடையப்போகிறாய்"

"கேவலமா? ஏன்" நீ அரிசி கொடாததினால்...

"அப்படியானால்"

"நீ சாப்பிடும்போது எல்லாரும் பார்த்துச் சிரிப்பார்கள்"

"அப்படியானாற் சாப்பிடவேண்டாமா"

"வேண்டாம்"

"ஆண்டவன் கோபிப்பாரா"

ஏழை, செல்வம் என்று பிரித்துவைத்து இகழச்செய்யும் ஆண்டவன் கோபிக்கிறதாவது.

"இப்போ என்ன செய்ய"

"போ"

"எங்கே"

"வீட்டுக்குத்தான் போ... போ"

"ஐயையோ பசிக்கிறதே"

"உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில் உண்ணாமை கோடி பெறும் போ"

"பிறர் நகைப்பாரே"

"உன்னைக் கவனிப்பார் ஒருவருமில்லை நீ போ" இதுவேறுயாருமல்ல. சுப்புவின் மனதில் நடந்த போராட்டம். ஈற்றில் சாப்பிடாமலே போய் விடுவதென்று தீர்மானித்துக் கொண்டான்.

கோயிலில் அபிஷேகம் முடிந்து பூஜையும் முடிந்தது. அப்பொழுது கோயில் வாயிலில் சனக்கூட்டமில்லை. வெளியில் நின்று பார்த்தான். முருகன் விக்கிரகம் பூரண அழகுடன் சோபித்தது. பார்த்தான் சுப்பு. "சுவாமி! உம் மனம் பூரிக்க இன்று அபிஷேகம் நடந்தது. அதனால் ஊராரும் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால் வறுமைப் பிணியினால் நானிகழ்ச்சியடைந்தேன். அதுவும் உன் செயலே." என்று கூறி விம்மினான்.

அவன் நேரே வீடு சென்றான். வீட்டிற் தாயாரில்லை. சந்தைக்குப் போய்விட்டாள். சுப்புவுக்குப் பசி பொறுக்க முடியவில்லை. யாரைக் கேட்பது? தெய்வத்துக்குத்தானும் இரக்கமில்லையே! என நேரஞ்செல்லச் செல்லப் பசி வயிற்றைப் பிடுங்கியது. முகத்தில் வெயர்வைத் துளிகள் அரும்பின. தலை சுழன்றது. நிற்கவும் முடியவில்லை .

பார்த்தான் முற்றத்தில் குடம் இருந்தது. ஆம் இயற்கையன்னையின் பானம் அதில் இருந்தது. தானுமுணவாகி உணவுப் பொருள்களைத் தருவதற்குக் காரணமுமாகிறது அந்தப் பானம் அதனால் முகத்தைக் கழுவிக் கொண்டான் பசியாறப் பருகினான்.

மெல்லிய காற்று வீசியது. "ஆ! என்ன சுகமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே முற்றத்திலிருந்த மரத்தின்கீழ் படுத்துக்கொண்டான்.

சந்தையினின்றும் தாய் வந்ததும் மகனைப் பார்த்தாள். "பாவம்! கிடக்கட்டும் என்று எண்ணிக்கொண்டே கிடந்த கிழங்கை உண்டுவிட்டு உறங்கினாள்.

ஈழகேசரி - 10.03.1946.

பொ. பாலசிங்கம்

ஈழத்தின் ஆரம்பகாலச் சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர். இவருடைய சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்தது.

❖ மன்னிப்பு

மன்னிப்பு

பொ.பாலசிங்கம்

கமலாவதியை மணம் முடித்த ஆறாவது மாதத்திலேயே, தியாக ராஜனுக்குப் பொருளீட்ட வேண்டுமென்ற ஆசை உதித்துவிட்டது. மாமனார் சின்னையா மலாயாவுக்குச் சென்று உத்தியோகம் பார்த்த வர். இப்போது "பென்சன்" பணத்திற் சீவிப்பவர். இதனால் தியாகராஜ னுக்குத் தானும் மலாயா சென்று ஏதும் உத்தியோகம் பார்ப்பதுதான் நல்லது என்று தோன்றிற்று. மாமனாருக்கும் இது பிடித்தது. தியாக ராஜன் பிரயாணத்திற்கு ஆயத்தமானான். கமலாவதி பிரயாணஞ் செய்யக்கூடாதென்று அவள் பெற்றோர் தடுத்துவிட்டனர். அவள் பெற் றோருடன் இருந்தால் பிரசவகாலத்திற்கும் எவ்வளவோ உதவியா யிருக்குமென்று தியாகராஜனும் அவளை விட்டுப் பிரயாணத்திற்குக் கிளம்பினான். அவனின் உற்ற நண்பன் நடராஜன் அவனைப் பயண மனுப்பிவைக்கச் சென்றன்.

கப்பல் புறப்படுவதற்குத் தயார்! "நடா" எனக்கு வேண்டும் பொழு தெல்லாம் நீ எவ்வளவு உதவிகளைச் செய்தாயோ அதுபோல் கமலா ஸ்ரீவதிக்கும் வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும். "ஓ... நீ சொல்லாமலே... ஆனால் பிரசவம் முடிந்ததும் கமலாவை நீ அழைத்துச் செல்லவேண்டும்."

"தடையென்ன? நான் சொன்னவற்றை மாத்திரம் நீ கவனமாய்ப் பார்த்துக்கொள்."

அன்பர்கள் விடைபெற்றுக்கொண்டனர்.

கப்பலும் கடலைக் கிழித்துக்கொண்டு சென்றது.

தியாகராஜன் மலாயாவில் உத்தியோகமொன்றைத் தேடிப்பிடிப்பதற்கும் காலம் அவ்வளவு தாமதமாகவில்லை, கமலாவதிக்கும் தியாகராஜனுக்கும் இடையிற் கடிதப் போக்குவரவு நடந்து கொண்டுதான் இருந்தது. ஒருமுறை தியகராஜன் தனக்கு ஒரு மகன் பிறந்திருப்பதாக ஒரு நற்செய்தியை வரவேற்று மகிழ்ந்தான். அவனின் சந்தோஷம் கரைகடந்துவிட்டது. தன் மனைவியை அழைப்பதற்கேற்ற காலம் வந்துவிட்டதென்று பேருவகை எய்தினான். தன்னுடைய செல்வ மகனின் தோற்றத்தைத் தன்னுள்ளே படம் பிடித்துப் பார்க்கலானான்.

கமலாவை விரைவில் மலாயாவுக்கு அனுப்பி வைக்கும்படி மாமனாருக்கும் நண்பன் நடராஜனுக்கும் கடிதம் எழுதிவிட்டான். கமலாவுக்கு ஒரே சந்தோஷம். கணவனைப் பார்ப்பதற்கு அவள் மிகவும் ஆவல் கொண்டாள். பயணத்திற்குரிய நாளும் குறித்தாய்விட்டது. தன் குழந்தையைக் கணவனுக்குக் காட்டவேண்டுமென்ற ஆசை அவள் மன்திற் பொங்கித் ததும்பியது. தந்தை மகனைக் கையிற்பெறுங் காட்சியைக் காணத் தவித்தாள்.

***

இதற்கிடையில் ஜப்பானியர் மலாயாவக்குள் நுழைந்து விட்டனர். சிங்கப்பூரில் யுத்தம். ஜப்பானியர் தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். பத்திரிகைகளில், இவ்விஷயத்தைக் கமலாவதி படித்து ஏங்கிவிட்டாள். சிங்கப்பூரைவிட்டு ஒரு கப்பல் புறப்படுகிறதென்றும் அதிலே தான் வருவதாகவும் தியாகராஜன் - "ஏயர் மெயில்" மூலம் ஒரு கடிதம் போட்டிருந்தான். தன் கணவன் வருகிறானென்று கமலாவதி மனந்தேறினாள். ஆனாற் - சிங்கப்பூரிலிருந்து புறப்பட்ட ஒரு கப்பலை ஜப்பானியர் ஆழ்த்திவிட்டனர் என்ற செய்தி கமலாவுக்கு எட்டிற்று. யாழ்ப்பாணத்தவர்களும் அதிலிருந்தனரென்று தெரிந்தது. கமலாவதியாற் பேசவும் முடியவில்லை .

நாட்கள் பல சென்றன. கமலாவதியைத் துக்கம் வாட்டிற்று. அவள் உருவம் இப்போது முற்றிலும் மாறிவிட்டது. கண்ணீர் விடுவதினால் ஒளியிழந்து மங்கிப்போன கண்கள், கவலையால் வாடிவதங்கிய முகம் கமலாவதிக்கு.

இரண்டு வருடங்கள் பறந்தோடின.

"கமலா! இன்றுந்தான் நீ துக்கம் நிரம்பியவளாக, காணப்படுகின்றாய். இனிமேலும் இப்படி இருப்பாயாயின் நான் இங்கு வருவதைக்கூட நிறுத்திவிடுவேன்" என்று ஒருநாள் தனியேயிருந்த கமலாவதியைப் பார்த்துக்கொண்டே கூறினான் நடராஜன்.

"நடா! எனக்கு இந்த உடம்பைப்பற்றி என்ன தேவையிருக்கிறது. நான் யாருக்காக இந்த உடம்பைப் போற்ற வேண்டும். கணவனை இழந்தேனென்றிருந்த எனக்குச் சிறிது ஆறு தலளித்த குழந்தைகூட இறந்துவிட்டது. இவைகள் போதாதென்று, நீ இங்கு வருவது போவதைப்பற்றி ஊரவர்கள் கூறும் வார்த்தைகள், எரிகிற நெருப்பில் நெய்யூற்றுவதுபோல எனக்கிருக்கின்றன. இதைவிடத் துக்கம் வேறென்ன? எதற்காகத் துக்கப்பட வேண்டும்?"

நடராஜன் கமலாவதிக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறான். அவள் குழந்தை வருத்தமாகப் படுத்திருந்தபோது அவன் பட்டபாடு கொஞ்சமல்ல. சிறுவன் உயிரைப்

பாதுகாக்கலாமென்று நடராஜன் பட்ட சிரமத்தைக்கண்டு கமலாவதிகூட ஆச்சரியப்பட்டாள். அதிலிருந்து அவளுக்கு நடராஜன் மீது மதிப்பும் அன்பும் இருக்கத்தான் செய்தது. ஊராரின் வசைமொழிகளைக் கூடப் பொருட்படுத்தாது. அவன் செய்யும் உதவிகளைக்கண்டு கமலாவதி பிரமித்துப்போனாள். தன்மீது கொண்ட அன்பினாலேதான் தனக்காக நடராஜனுக்கு இவ்வளவு பாடு என அவளுக்குத் தெரிந்தது. அவள் கூறிய கடைசி வார்த்தைகள் நடராஜனின் உள்ளத்தை உறுத்தின.

"கமலா! நான் ஊரவர்களுடைய போற்றலுக்கும் தூற்றலுக்கும் செவி கொடுப்பதில்லை. அதனாலேதான் இன்றும் இவ்விடம் வருகின்றேன். இன்றும்

நான் இங்கு வருவதும் போவதும் தியாகராஜனுக்காகத்தான். இனிமேல் நான் இங்கு வராமல் விட்டால் ஊரவர்களும் கதைக்க மாட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே "விர்" என்று நடந்தான்.

"நடா! நடா!" என்று கத்திக்கொண்டே கமலாவதி ஓடிப்போய் முன்னுக்கு மறித்தாள்.

நடராஜன் பேசாமற்போய்க் கதிரையில் உட்கார்ந்தான். கமலாவதி அவன் முகத்தைப் பார்த்தாள் : அவன் கண்களில் நீர் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

"கமலா நீ இப்படித்தான் எப்பொழுதும் இருந்து காலத்தைக் கழிக்கப் போகிறாயா?" என்று கேட்டான் நடராஜன்.

"பின் என்ன செய்வது. எனது விதியை நான்தானே தொலைக்க வேண்டும்."

"துக்கப்பட்டால் விதி தொலைந்துபோமா? இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்புதானே."

"இல்லை நடா! என் வாழ்வில் அப்படியல்ல. எனது வாழ்விலே இனிமேல் இன்பமென்ப தையே காணமுடியாது."

"கமலா! ஏன் இன்பத்தைக் காணமுடியாது. விதியை மதியாலும் வெல்லலாமல்லவா. நீதானே எப்பொழுதும் துன்பத்தை வரவழைத்துக் கொண்டிருக்கிறாய். சுகமாக வாழவேண் டும் என்று உனக்குத் தோன்று வதில்லையா?" ;

"ஏன் தோன்றுவதில்லை. நானும் மனித வர்க்கத்தைச் சேர்ந்தவள் - தானே!".

"அப்படியானால் நீ துன்பத்தைத் தொலைக்கத்தானே வேண்டும்!"

"அதற்கு வழி"

"நீ உன் வாழ்வைப் புதுமையாக்க வேண்டும். அதுதான் உன் துக்கம் அகலுவதற்குச் சிறந்தவழி."

அவளால் ஒன்றும் பேச முடியவில்லை . கட்டிலின் மீது முகங்குப்புற விழுந்து விம்மி விம்மி அழுதாள்.

"கமலா! நீ தொட்டதெல்லாவற்றிற்கும் அழுதுகொண்டுதான் இருக்கின்றாய். உனது விருப்பத்தை அறிய விரும்புகின்றேன். எல்லாவற்றையும் யோசித்துச் செய்" என்று கூறிவிட்டு நடராஜன் போய்விட்டான்.

***

"எப்படி சுகந்தானே?" என்று சொல்லித் தியாகராஜன் மாமன்முன் நின்றான். அவனை வரவேற்கவோ அல்லது அவனுடன் ஏதாவது பேசவோ அவர்களால் முடியவில்லை. தியாக ராஜனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வீட்டுக்குள்ளிருந்து அப்பொழுதுதான் வெளியில் வர முடியவில்லை. தான் "காணுவது கனவுதானா என்றுகூட நினைத்தான். எங்கு நிற்கிறா னென்பதுகூட அவனுக்குத் தெரியவில்லை. தன் நிலையழிந்தவனாய்ப் பேசாமல் நின்றான். நடராஜன் அங்கு நிற்பதைக் கண்ட தியாகராஜன் அவனிடம் ஓடிவந்து, "நடராஜா! என்ன நடந்துவிட்டது. ஏன் எல்லோரும் பேசாமல் நிற்கிறீர்கள்? கமலா எங்கே? குழந்தையெங்கே?" என்று பதைபதைத்துக்கொண்டே கேள்விகளை அடுக்கினான். நடராஜனுக்குத் தொண்டை கட்டிக் கொண்டது. தியாகராஜன் அவன் தோள்களைப் பிடித்து அசைத்துக்கொண்டே "நடராஜ்! என்ன நடந்துவிட்டது? கமலா எங்கே? இறந்துபோய்விட்டாளா? என்று பதைபதைப்புடன் கேட்டான்.

"மன்னிக்கவேண்டும்" என்றான் நடராஜன்.

"மன்னிப்பு? நம்பிக்கைத் துரோகத்துக்கு மன்னிப்பா? என்று தியாகராஜனின் வாய் முணுமுணுத்தது.

"இல்லை! நம்பிக்கைத் துரோகமில்லை" என்று கத்தினான் நடராஜன். "சிங்கப்பூர்ச் சண்டை தொடங்கியபோது நீ கப்பலில் புறப்பட்டாய். அந்தக் கப்பல் ஜப்பானியரால் ஆழ்த்தப் பட்டது. நீ இறந்துவிட்டாயென்று..."

மண்டியிட்டு அவன் காலடியில் கிடந்த நடராஜனைத் தூக்கினான். தேம்பித் தேம்பி அழுத நண்பனைத் தியாகராஜன் தேற்றினான். சவம்போலப் படுக்கையிற் கிடந்தாள் கமலாவதி. அவளின் மயக்கம் சிறிது சிறிதாகத் தெளிவடைந்தது. அவள் கண்களைத் திறந்து பார்த்தாள். தியாகராஜனும் நடராஜனும் பக்கத்தில் நின்றனர். அகன்று விரிந்து அவள் கண் கள் தியாகராஜனை நோக்கின. அப்பார்வையில் அவனிடம் மன்னிப்புக் கோருவது போன் றிருந்தது.

கடவுள், கமலாவதியை மேன்மேலும் சோதிக்க விரும்பவில்லை.

கமலாவதியின் கடைசி மூச்சு அங்கு நின்றவர்களின் உள்ளங்களை ஊடுருவிப் பாய்ந்தது.

***

தியாகராஜன் மறுபடியும் தனது பிரயாணத்தை ஆரம்பித்தான். ஆம்! அவன் இனி யாருக்காக இருக்க வேண்டும்? மனைவியையும் மகனையும் அழைத்துக்கொண்டு போகலா மென்று வந்தான். அன்று அவனது பிரிவாற்றாமல் மனைவி வருந்தினாள். பயணமனுப்ப நடராஜன் கூடிக் கொண்டு வந்தான். ஆனால் இன்று? அவன் தனித்தவனே தனித்தவன் தான். தியாகராஜன் சமுத்திர அலைகளைப் பார்த்துக்கொண்டே கப்பலுள் இருக்கிறான். கப்பல் சோககீதத்தை இசைத்துக்கொண்டே செல்லுகிறது.

அதோ! அந்தக் குடிசையில் சில சிறுவர்களுக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருக்கும் இளஞ் சன்னியாசியைப் போன்றிருக்கும் அவன்யார்? எதற்காக அவன் முகம் சோபையற்றிருக்க வேண்டும்? ஒருவேளை அவன்தான் நடராஜனோ?

ஈழகேசரியில் - 17.03.1946

ஸ்ரீ.க. சிதம்பரப்பிள்ளை

ஆரம்பகால சிறுகதை ஆசிரியர். கலாநிதியில் எழுதியவர். ஆசிரியராகப் பணிபுரிந்தவர். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

❖ உயிர் எங்கே? உடல் எங்கே?

உயிர் எங்கே? உடல் எங்கே?

ஸ்ரீ. க. சிதம்பரப்பிள்ளை

காலம் இளவேனில். ஆகாயமெல்லாம் ஒரே வெண்மையாகத் தங்கு தடையின்றி சூரியன் தன் கிரணங்களை நீட்டுகின்றான். களங்கமற்ற பகற் காலம். தென்றல் சில்லென்று வீசுகின்றது. தெற்கே கடல் கும்மாளங் கொட்டுகிறது. வடக்கே எக்கர் நுண்மணல் இடை நிலம் நீண்டகன்று பரந்த வெளி. சித்திரைப் பத்துப் பன்னிரண்டு இருக்கும். புற்கள் பசுமையாய் அடர்ந்தோங்கி புஷ்பித்திருக்கின்றன. இவ்வாறு என்றும் செழுமையும் பசுமையும் நீங்காப் பசுந்தரை அக்கடற்கரை,

வெளியின் நாப்பண் தண் நிழல் தரும் ஓர் ஆல் சாகோப சாகை யாய்ப் பரந்தோங்கி வளர்ந்திருக்கின்றது. அலுத்தோர், களைத்தோர் எல்லோர்க்கும் ஆறுதல் சொல்லக்கூடியது அவ் ஆல். செல்வோர், வரு வோர் எல்லோர்க்கும் செல்லிடமாய் உள்ளதும் அது. வெயிற் காலத்தில் அவ்வாலைக் காண்போர் கற்பகதரு அதுதானோ என்று ஐயுறுவர். மழைக்காலத்தில் அதன் அருமைமை பல்லோர்க்கு விளங்காது. உப் பில்லாவிட்டாலன்றோ உப்பின் அருமை தெரியும். இவ்வித அருமை

உடையது அந்த ஆல். அதன் பக்கல் ஓர் அருஞ் சுனை உண்டு. நீர் முத்துப் போன்றிருக்கும். கடல் பெரிது மண்ணீருமாகாது. அதனருகே சிற்றூறல் உண்ணீ ரும் ஆகிவிடுமல்லவா? இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு அச்சுனை.

வெளியின் சுற்றாடலெல்லாம் இடையர் சேரி. காலை பத்து மணிக்கெல்லாம் இடையச் சிறுவர்கள் மந்தைகளை வெளிக்குக் கொண்டு வந்து விடுவர். ஆலங் கொப்புக்களிற்றெங்கு வன மாட்டுக்காரப் பையன்களின் சோத்துப் பெட்டிகள் வரிசை வரிசையாக பார்வைக்கு அழகாக இருக்கும். இடைச்சிறுவர்கள் பகலில் அவ் ஆலை தங்குடியென்று வாழ்வர். மந்தைகள் வெளியே தங்குடியென்று வாழும். மாடு மேய்ப்பதில் அவர்கட்கு ஒரு வித அலுப்புமில்லை. வெளிக்கு வந்து விட்டால் அவர்கள் எல்லோரும் இராசா வீட்டுப் பிள்ளைகள் போலத்தான். மாட்டுக்காரப் பையன்கள் ஒருவர் இருவரல்ல. ஐம்பது அறுபது வரை இருப்பர்.

ஆலின் கீழெல்லாம் ஒரே ஆரவாரமாய் இருக்கும். ஓர் பாற் சங்கீதக் கச்சேரி மேளச்சமா ஒரு பக்கம் உடுக்கைகள் அடித்துப் பாடி ஆடும் ஆட்டங்கள் ஒரு பக்கம், கைப்பந்து, கால்ப்பந்து முதலிய மேல்நாட்டு விளையாட்டுக்கள் ஓர் பக்கம், ஓர் பக்கம் கிளித்தட்டு முதலிய கீழ்நாட்டு விளையாட்டுக்கள். கோலாட்டம், கீலாட்டமெல்லாம் நடக்கும். சண்டை சச்சரவு மாத்திரம் இல்லையெனலாம். அளப்பம் குழப்பம் விட அவர்களுக்கு அடியோடே தெரியாது. இடைச் சிறுவர்களாயினும் குணசீலர்கள் . ஆலின் மேல் ஆரவாரிப்பன பலவிதப் பட்சி சாலங்கள்.

இன்றைக்கு ஒரு சிறந்த நாடகம் நடிக்கப் போகிறார்கள். முதல் நாளே 7 இந்நாடகம் என யோசித்தாயிற்று. சங்கேதப்படி சுப்பிரிங்கோடு வைத்து நடத்துவது இன்றையது. (சமீபத்தில் சுப்பிரிம் கோர்டில் நடந்த ஒரு வழக்கில் சம்பந் தப்பட்டவன் இவர்களுள் ஒருவன். அவன் தான் இதைத் தொடங்கியிருக்க வேண்டும்) வழக்கிற்காகிய பலவித எத்தனங்களும் ஆயின. நீதவான், அப்புக்காத்து, வழக்காளி, எதிரி, சேவகன். சாட்சிகள், யூரிமார், முதலியார் முதலியோர் யார் யார் என்பது முதன் நாளே தெரிந்தாயிற்று. காலை பதினொரு மணியளவில் எல்லாரும் வந்து சேருகின்றனர்.

கோட்டுச் சேவகன் முன்னமேயே பையன்களின் எருக்கடகங்களை அடுக்கி நீதவானின் மேசையைத் தயாரித்தான். இரு கடகங்களை ஒன்றன் மேல் ஒன்று கவிழ்த்து நீதவானின் நீதாசனம் ஆக்கினான்.மை, பேனை, கடதாசிகளெல்லாம் ஆயத்தமாக மேசை மேல் வைக்கப்பட்டன. யூரி, அப்புக்காத்து, பிறக்கிராசிமாருக்கெல்லாம் இவ்வாறே மேசை , கதிரைகள் தயாரிக்கப்பட்டன. காவோலையில் கட்டிய "பங்கா" வும் ஒன்று. ஆலின் மேல் தொங்கவிடப்பட்டது. எல்லாம் இவ்வாறே தயார் செய்யப்பட்டன. நீதவான் வருமுன்னமேயே வழக்காளி, எதிரி, சாட்சிக்காரர் எல்லோரும் தங்கள் வழக்குகளை ஆயத்தஞ் செய்கின்றனர். வழக்குப் பார்க்கப் பலர் வந்து சேருகின்றனர். எங்கும் ஒரே ஆரவாரமாய் இருக்கின்றது. இதற்கென்றே தேநீர்க் கடையுமொன்று பக்கததில் வந்து விட்டது.

பதினொரு மணி நாற்பத்தைந்து நிமிசத்திற்கெல்லாம் நீதவான் வருகிறார். தனக்குரிய இடத்தில் உட்காருகிறார். எங்கும் அமைதி நிலவுகின்றது. பறவைகள் கூட சத்தமிடாது ஆலங் கொப்புகளில் சித்திரைப் பாவை போல் அசையாது இருக்கின்றன.

சட்டப் புஸ்தகங்கள் எல்லாம் சேவகனாற் கொண்டு வரப்பட்டன. வழக்கு ஆரம்பமானது. சில வழக்குகள் கூப்பிட்டுத் தவணை போடப்பட்டன. ஈற்றில் சோமன் வைரவன்

என்பவனின் தோட்டத்தில் இருந்த ஓணானை. வீமன் நாராயணன் கொன்றதாக ஏற்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விளக்கம் நாலு மணிவரை நடந்தது. எதிரி தான் கொன்றதை ஏற்றுக்கொண்டான். ஆனால் குற்றவாளி என்பதை ஒத்துக் கொள்ள வில்லை. குறுக்கு விசாரணைகள் பல நடந்தன. எதிரி பயப்படவுமில்லை, சோர்வுமில்லை. பிடிவாதமாய் தான் சுற்றவாளி என்றான். ஐயோ பாவம் பின் வருவதைக் கூட யோசியாமல் நீதவானைக் கூட ஏளனம் செய்யத் தொடங்கிவிட்டான். இவன்தான் சமீபத்தில் சுப்பிறீங் கோர்ட்டில் நிகழ்ந்த வழக்கில் சம்பந்தப்பட்டவனும், இந் நாடகத்தைத் தொடங்கியவனும் எல்லாம் விளையாட்டுத்தானே என்பது அவன் எண்ணம். ஈற்றில் தீர்ப்பு யூரிமாரின் ஆலோசனைக்கு விடப்பட்டது. யூரிமார் நெடுநேரம் சட்டப்புஸ்தகங்களையும் புரட்டி தர்க்கித்தனர். ஈற்றில் இவன் உண்மையாய் கொலை செய்தமையாலும் நீதவானை ஏளனஞ் செய்தமையாலும் இவனுக்கு கொலையே தண்டனை என்ற முடிவிற்கு வந்தனர்.

உடனே நீதவானுக்கு முகம் கூட கறுத்து விட்டது. நீண்ட ஆலோசனை செய்தார். கொலைத் தீர்ப்பையே தன் தீர்ப்புமாக்கினார். கறுப்புடையணிந்து மேசைக்குக் கிட்ட வந்து பேனையை எடுத்து, எதிரி பாரதூரமான கொலையைச் செய்தமையால் அவனுக்கு ஒருவித மன்னிப்பும் கொடுக்க யூரிமார் சம்மதிக்கவில்லை. ஆதலால் மரண தண்டனையே விதிக்கப்படுகிறது. மாலை ஆறுமணிக்கெல்லாம் இவ்வாலிபன் இவ்வாலின் தென்பக்கமுள்ள பெரிய கொப்பில் தூக்கப்படுவான். என்றெழுதி உடனே பேனையை குத்தி முறித்து விட்டு சபையோருக்கு வாசித்துக் காட்டினார். அத்துடன் கோடு கலைந்தது.

ஐந்து மணிக்கெல்லாம் தூக்குக்கு ஆயத்தஞ் செய்யப்படுகிறது. ஆலங் கொம்பில் கயிறு ஒன்று தொங்கவிடப்பட்டது. கடகங்களை ஒன்றன் மேல் ஒன்று கவிழ்த்து அதன் மேல் நாராயணன் நிறுத்தப்பட்டான். தூங்கிய கயிறு கழுத்தில் மாட்டப்பெற்றது. கொலை செய்யும் சேவகன் ஒன்றல்ல மூன்று மணிக்கூடுகளை அவதானித்த வண்ணம் நிற்கின்றான். ஆறு மணிக்கு ஐந்து நிமிசம் இருக்கையில் நீ நின் குலத் தேவதையை நினை உனக்கு மரணம் சம்பவிக்கப் போகின்றது" என்று சொன்னான். சொல்லிய சற்று நேரத்தால் சேவகன் கட கங் களை இழுத்து விட்டான். படக்கென்ற சப்தம் கேட்டது. முடிச்சு தெறித்த சப்தமாக இருக்க வேண்டும். உடல் ஆலங்கொப்பிற்றான் தூங்குகின்றது. ஆனால் உயிர் யமன் கையிலாய் விட்டது.

எல்லோரும் திடுக்கிட்டனர். அல்லோல கல்லோலமாய் எல்லோரும் ஓடுகின்றனர். பொலிஸ் உத்தியோகத்தருக்குக் கூட சிலர் அறிவித்து விட்டனர். பொலிஸ் உத்தியோகத்தினர் உடனே வருகின்றனர். ஆவலுடன் ஆலங் கொப்பைப் பார்க்கின்றனர். கயிறு மாத்திரம் தொங்கியது. எல்லோரும் ஆச்சரியப்பட்டுத் தேடுகின்றனர். பொலிஸ் உத்தியோகத்தர் பல வாறு ஆராய்ச்சி செய்கின்றார். சற்று நேரத்தால் நாராயணன் வருகின்றான். உடலில் ஒரு வித இடையூறுகளும் காணப்படவில்லை. எல்லோரும் பெரும் இறும்பூதெய்து கின்றனர். ஆனால் நாராயணன் ஒன்றும் அறியாதவன் போல் நடிக்கின்றான். பொலிஸ் உத்தியோகத்தர் வெட்க மடைகின்றனர். இந்த நாராயணன் யாராய் இருக்க வேண்டுமென்பது உங்கள் எண்ணம். ஆயர் பாடியில் வளர்ந்த கோபாலனாய் இருக்க வேண்டுமென்பது எனது எண்ணம்.

1943.01

"சேயன்" பொன்னாலை

ஈழகேசரிப் பண்ணையில் வளர்ந்தவர். பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

❖ கோபாலனின் விரதம்

கோபாலனின் விரதம்

"சேயன்" பொன்னாலை

பஞ்சநாதம் ஓர் பிரபல வக்கீல். மாடு கன்று, நிலம் புலம், பெண்டு பிள்ளை எனும் இவைகளால் யாதும் குறைவில்லை . இவரை சகல சம்பத்தும் பொருந்திய தனவந்தர் எனலாம். பொன்னாலை ஓர் குக்கிரா மம். பணம் பத்து விதமும் செய்யுமல்லவா? அவர் அக்கிராமத்திற்கு அதிகாரியாய் இருந்தவர். காலேஜில் அவர் மகன் எட்டாவது பாரத்தில் வாசித்து வந்தார். கோபாலன் என்னால் போதும் மீதியாய் சொல்வ தையும் கேட்பதற்கு காது கொடுத்துக்கொண்டு இருப்பார்கள். யாரும் வீட் டிற்கும், காலேஜிற்கும் இரண்டு மைல் தூரம் இருக்கலாம். அதற்கிடை யில் உள்ளவர் எவரும் இவனை அறியாமல் இருக்க முடியாது. அழகென்ன அதற்கிசைந்த படிப்பென்ன ஒழுக்கமென்னவென்று எல் லோரும் வாய்ப்பறை கொட்டுவார். இவ்வளவிற்கும் காரணம் இவன் செலவு செய்யும் பணம்தான்.

ஒரேயொரு மகனல்லவா? கோபாலன். அவன் பேரில் தந்தைக்கு அன்பு அளவற்றிருந்தது. ஆனால் தன் வீட்டுப் பணத்தை வீணாய் செலவு செய்கின்றானே, இவனை எப்படித் திருத்தலாம்? என்று சிந்தித்துக் கொண்டு விறாந்தையில் இருந்த கதிரையில் சாய்ந்தார் பஞ்சநாதம்.

சனிக்கிழமை, அதுவும் புரட்டாதியில் எட்டு மணிக்கெல்லாம் வழக்கமாய் சாப் பாடாய்விடும். அன்றே காலை காப்பி சாப்பிடவுமில்லை. யோசனையில் அல்ல. உண்மையில் அவர் விரதம் வயிறு எரிந்து கொண்டிருந்தது.

மெல்ல, மெல்ல வந்தான் கோபாலன். தந்தை முகத்தில் குறும்பு குடிகொண்டிருந்த தைக் கவனித்தான். உடனே அவனுக்கு இரவு பார்த்த "ஸேவாஸ்தனத்தின்" ஆய்க்டர் ஆன நடேச ஐயரின் முகம் ஞாபகத்திற்கு வந்தது.சிரிப்பு ஓர் புறமாக,பயந்து நிற்பது போல் காட்டிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மறுபுறம் உதித்தது. தாழ்த்திக் கொண்டான் தலையை..

"அடே, அசடே! உனக்கு எத்தனை நாளுக்கு இப்படிப் புத்தி சொல்வது..." என்று தொடங் கினார் நாதம் அவர்கள். உள்ளேயிருந்த லட்சுமி தேவி ஓடோடியும் வந்து, உள்ளே நின்றபடி யன்னல் வழியே கண்களை விட்டுக்கொண்டு நின்றாள். மகன் கோபாலனுக்கு அடிக்க மாட்டார் என்பது மாத்திரம் பூராவாகத் தெரியும். ஆதலின் ஒன்றும் பேசவில்லை. ஐந்து நிமிஷ நேரம் இடைவிடாது பேசினார், இளைப்பு வந்து விட்டது. உடனே காபி என்றார். தன் பேரிலும் நெருங்குவாரோ என்றிருந்த தேவி உடனே "கப்"இல் கொண்டு வந்தார். காபியை மடமட வென்று குடித்தார். தன்னையுமறியாமலே அயர்ந்து தூங்கினார். கோபாலன் தலை நிமிர்ந்தது.

தந்தையின் நிலையைக் கவனித்தான். உள்ளே சென்றான். ஒரு மூலையில் இருந்தான். நாகு இரை மீட்கும் போது நடைபெறுவது போல, பேச்சுக்களெல்லாம் வாய்க் கல்ல, செவிக்கு வந்துகொண்டிருந்தன. எண்ணமே யெல்லாமல் உண்மையில் இப்பொழுது ஒருவரும் பேசவில்லை. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. நாதர் பகீரதப் பிரயத்தனப்பட்டும் அழுகையை நிறுத்தவாவது சாப்பிடச் செய்யவாவது முடியவில்லை. அவளும் உடனிருந்து அழுதாள்.

அழுகைச் சத்தம் காதில் விழவே அருண்டு எழும்பினார் பஞ்சநாதம். கடிகார முட்கள் பதினொன்டரையைக் காட்டின. ஸ்நானம் செய்தார். சாப்பிடுவதற்காய் உள்ளே சென்றார். "காகத்திற்கு சோ..." என்று தொடாங் கவே மனக்கொதிப்போடு இருந்த தேவி" "இது என்ன அமா வாசையென்று நினைத்தீரோ? காலையில் காபி கடும்பகலில் விரதம் என் பிள்ளை என்னும் காலையிற்றென்னும் காபி சாப்பிடவில்லை" என்று வாயில் வந்தவாறு பேசினாள். அப்போது தான் காப்பி சாப்பிட்ட ஞாபகம் பஞ்சநாதத்திற்கு வந்தது. உடனே அவர் மகனை அழைத்து விரதம் அனுட்டிக்கும்படி சொல்லி அவனுண்ட பின் தான் உண்டார். கோபாலனும் சாப்பிட்டி ருந்தால், பஞ்ச நாதத்தின் விரதம் எப்படியாகும்.

ஈழகேசரி - அநுபந்தம்

சுயா

திரு. எஸ்.நல்லையா என்ற இயற்பெயரைக் கொண்ட சுயா ஈழகேசரியில் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரின் இயற் பெயர் சு. நல்லையா. ஈழத்து சிறுகதைத்துறையில் முதன் முதலாக சிறுகதை எழுதியவர்கள் சுயா, ஆனந்தன், பாணன் என்பார்கள். ஆனால் சுயா கவனிப் புக்குள்ளாமைக்குக் காரணம் அவருடைய சிறுகதைகள் ஆழமாக சமூகப் பிரச்சி னைகளைக் கையாளாமையாகும். 1936 ஆம் ஆண்டு அன்னையின் கட்டளையும் அது தான் என்ற சிறுகதையுடன் ஈழகேசரியில் ஆரம்பித்து 1957 வரை முப்பத் தெட்டுச் சிறுகதைகள் வரையில் ஈழகேசரியில் எழுதியுள்ளார். ஆண்டு மலரில் ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார். தமிழாசிரியர். யாழ்ப் பாணத் தமிழில் பல நகைச்சுவைக் கட்டுரைகளைக் கதையாக்கிக் கூறிவிடுவார். தினகரனில் ரவீந்திரன் என்ற தொடர் கதையை எழுதியுள்ளார்.

- அந்தக் குறும்பன்
- நான்தான் துரோகி
- சீனிக் கட்டாடி
- மிகிந்தலைச் சந்நியாசி
- திருட்டுப் பிள்ளை
- யார் கள்வன்?
- "அன்னையின் கட்டளையும் அதுதான்"
- டிக்றெக்றர் ஒவ் எட்டுகேசன்
- அவன் ஒரு உன்மத்தன்
- சந்திரவாசா
- இவன் யார்?
- படுகொலை
- யாழ்ப்பாணத்துப் பிரபல அப்புக்காத்து! அவரை உங்களுக்குத் தெரியுமா?

அந்தக் குறும்பன்

சுயா

கல்யாணம் பண்ணி ஒரு வருஷமாக என் மனைவிக்கு நான் என்றால் உயிர். எனக்கும் அவள் மேல் அப்படித்தான். பின் என் துரதிஷ்டமாக்கும் எனக்குப் போட்டியாக எங்கிருந்தோ ஒருவன் முளைத்தானையா! இப்பொழுது அவளுக்கு அவன் மேல் ஏகப்பட்ட அன்பு. எந்த நேரமும் அவளுக்கு அவன் பேச்சு; அவன் சிந்தனை; நான் இல்லாத நேரம் பார்த்து அண்டை அயற்பெண்களோடு அவன் கதையே தவிர வேறு கதை கிடையாது; அவன் போட்டோவை வைத் துக் கொண்டு "சீ, இந்தப் போட்டோக்காரர்களுக்கு இது கூடப் பிடிக்கத் தெரியாதாக்கும்; அவன் கண் என்ன அழகு; மூக்குக் கிளி மூக் கல்லவா? இது என்ன போட்டோ? என்று போட்டோக்காரர்களிலும் சிலவேளை எரிந்து விழுவாள். இது மாத்திரமா! என் உணவுகளிலெல் லாம் அவனுக்குத் தான் முதற் தினிசு; பாருங்கள்! நான் இந்தக் கிழிந்த ஒரு உடுப்பையே மாதக்கணக்காகப் போட்டு அடிக்க, அவனுக்கு அவள் அசல் பட்டுத் துணிகளிலெல்லாம் எத்தனையோ விதம்விதமான உடுப்புகளெல்லாம் தைத்துக் கொடுத்திருக்கின்றாள். எனக்குப் பட்டு என்றால் வாயிற் சலம் ஊறுகின்றதே; அல்லும் பகலும் நெற்றி வியர்வை

நிலத்திற் சிந்த நான் ஒருவன் பாடுபட்டு உழைக்க, என் மனைவியின் அன்பையுங் கவர்ந்து கொண்டு பிறன் ஒருவன் என பணத்திற் சோக்குப் பண்ணுவதென்றால் இந்த அக்கிரமத்தை யார் தான் பொறுத்திருப்பார்கள். ஒரு முறை இதை அவளுக்குச் சொல்லலாம் என்றாலும் எங்கே அவள் என்னோடு கோபித்துக் கொள்ளுவாளோ என்று பயமாயிருக்கின்றது. இதற்கு ஒரு வழியும் தெரியாது கிடந்து விழிக்க வேண்டியிருக்கின்றதே.

என் மனைவிதான் இப்படியென்றால் அந்தத் துஷ்டனுக்குத்தான் என்ன எண்ணம்? பிறன் மனைவியாச்சே என்று கொஞ்சமாவது எண்ணுகின்றானா? நான் என் சொந்தக் கண்களினாலேயே பார்த்துக் கொண்டிருக்க என் மனைவியைக் கட்டிப்பிடித்து முத்தமிடு கின்றான். நான் பார்த்தால் அவன் என்னைப் பார்த்துக் குறும்பாகச் சிரிக்கின்றான். அப்போது எனக்கு வரும்...க்கு நானும் அவனுக்குக் கன்னத்தில் இரண்டு....கொடுத்தாலோ என்று எண்ணுகின்றேன். இரவில் அவன் சயனிப்பதும் என் வீட்டிற்றான். அதுவும் என் மனைவியோடுதான் சயனிக்கின்றான். இதென்ன அக்கிரமமையா?

இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு உங்களில் யாரேனும் என்னைப் போற பொறுமையாயிருப்பீர்களா? சிலவேளை அந்தக் குறும்பனைத் தொலைத்தாற்தான் எனக்கு மனம் நிம்மதி அடையும் என்று சொல்வீர்களாக்கும்! ஐயோ! அவன் என் அருமை மகனாச்சே!

ஈழகேசரி ஆண்டுமடல் - 1938

நான்தான் துரோகி

சுயா

நரசிங்கம் பெரும் தனவந்தர். ஏராளமான காணி பூமிகளுகட்குச் சொந்தக்காரர். என்றாலும் பணக்காரப் பிரபுக்களிடம் காணப்படும் துர்ஆசை, கபடம், வீண்டம்பம் முதலிய துர்க்குணங்கள் ஒன்றும் இவரிடம் கிடையா. பணம் சம்பாதிப்பது எளிது. அதைப் போற்றிக் காப்பது தான் கஷ்டம். சிலர் பணத்தைப் பேணிக்கொள்வதிற் கை தேர்ந்தவர்கள். ஆனால் அதைக் சற்பாத்திரத்திற் செலவுசெய்ய அறியார்கள். இப்படிப்பட்டவர்களின் செல்வம் தான் சில ஊதாரிகளுக்குச் சொந்தமாகி அவர்களையெல்லாம் ஆட்டும் வரையும் ஆட்டி கடைசியில் அவர்களை ஒன்றுக்கும் உதவாத தாக்கிவிடுகின்றது. இவர்களின் வகையைச் சேர்ந்தலால்லர் நரசிங்கம். இந்தச் செல்வம் ஒருகால் வரும், மறுகால் பேசாமலேயே நகர்ந்துவிடும் என்று எண்ணிக் கொண்டு அதை உபயோகிப்பதில் மிகவும் சாவதானமாவயிருந்து வந்தார். இல்லையென்று இரந்த ஏழைகளுக்கு அவர் ஈயாத நாளே கிடையாது. தன் இல்லத்துக்குவந்த ஏழைகள் சந்தோஷ முகத்துடன் திரும்புவதைக் காண்பதில் அவருக்கு ஒரு திருப்தி. "இடது கை கொடுப்

பதை வலது கை அறியாவகையில் அவர் செய்த தான தருமங்கள் இருந்தன. அரசாங்கச்சபை முதலிய உத்தியோகப் பதவிகளில் இவருக்கு வேட்கை கிடையாது. யாரேனும் பல வந்தப்படுத்தினால் " என் பணம் அதற்காகத் தேடப்பட்டதல்ல" என்று ஒரே பதிலில் அவர்களின் முகத்திற் கரிபூசிவிடுவார் -தெய்வபக்தியுள்ளவனுக்குத் தான, தருமங்களிற் சிந்தனை செல்லுமல்லவா? அவ்வகையிற் கோயிற் குருக்கள் கூட இவரிடம் பாடம் கேட்கவேண்டும். ஒவ்வொருநாட் காலையிலும் ஒரு பிள்ளையார் கோவிலுக்குப் போய்ச் சுவாமியைக் கும்பிட்டு விட்டு அங்கேயுள்ள ஓர் கல்லில் இருந்து இந்த உலகத்தையும் அதன் நிலையாமையையிட் டும் அவர் சிந்தித்துவிட்டு வெய்யிலான பின்னர வீடு திரும்புவது வழக்கம். அவர் மனைவியும் உத்தம பத்தினி. சொந்தக் குழந்தைகள் போல இரண்டு பிள்ளைகளை எடுத்து வளர்த்து வந்தனர். ஒன்று ஆண் குழந்தை - வயது பத்துவரையில் இருக்கும். மற்றது எட்டு வயதுப் பெண் - இந்தக் குழந்தைகளின் மேற்கொண்ட அன்பினாலே தமக்குக் குழந்தைகளில் லையே என்ற கவலை அந்தத் தர்மப்பிரபுவிடமும் அவர் பத்தினியிடமும் கிடையாது. பிள்ளைககளை உயிரைப் போலப் பேணிவந்தனர் - அதிற் பெண்குழந்தைக்கு இப்பொழுது கடுமையான நோய் கண்டிருந்தது.

2

டாக்டர்! குழந்தைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்கள்?" என்று கண்களில் நீர்வடிய டாக்டரை நோக்கிக் கேட்டார் நரசிங்கர்.

"ஐயா! உங்களிடம் நான் எதையும் மறைத்துக் கூறவிரும்பவில்லை. நோய் கடுமை யானதுதான்; வரவரக் கூடிக்கொண்டுதான் போகின்றது."

"நம்பிக்கைக்குரிய குறிகளில்லையா?" இதைக்கேட்கும் போது நரசிங்கரின் தொண்டை கம்மிக்கொண்டது.

"சொல்ல முடியாது; இன்றொருநாள் போகவேண்டும் "வேறுயாரை யேனும் அழைத் துக்காட்ட விரும்புகின்றீர்களா?"

"வேண்டாம் " நீங்களே போதும் அப்பாற் தெய்வசங்கற்பம்"

"குழந்தை பிழைக்க வேண்டுமானால் முதல் நீங்கள் தைரியமாய் இருக்கவேண்டும் ; உங்கள் சம்சாரமும் குழந்தையின் பேரிலுள்ள அவாவினாற் தன் உடம்பையும் கெடுத்துக் கொள்ளுகின்றாள்; அப்படியானாற் குழந்தையை எப்படிக் கவனமாய் பார்க்கமுடியும்."

"ஐயா! குழந்தை என்னைக் காட்டிலும் அவள் மேற்தான் ரொம்பப் பட்சம். ஏன், நோய் அவஸ்தையிலும் அம்மா! அம்மா! என்று அவளை அழைப்பதை நீங்கள் காணவில்லையா. அப்படியிருக்கும்போது எந்தக் கல்நெஞ்சுள்ளவள் மனதும் கரையாமலிருக்குமா?"

"சரிதான்: என்றாலும் இவர்கள் உங்கள் குழந்தைகளல்லவே" இவர்கள் எப்படி உங்களிடம் வந்தார்கள்.

3

"இன்றைக்கு ஆறுமாதங்களுக்கு முன் நான் வழக்கமாகப் போகும் பிள்ளையார் கோவி லுக்குப் போய்ச் சுவாமியைக் கும்பிட்டுவிட்டு வழக்கமாக இருக்கும் ஓரிடத்தில் இருந்து பலவித

சிந்தனைகளிலுமாழ்ந்திருந்தேன். அன்று இந்த இரண்டு குழந்தைகளும் அங்கே வந்து கோவிலைச் சுற்றிவந்து வாசலில் நின்று ஏதோ முணுமுணுத்தார்கள். பின் அவர்களும் என்னைப் போலச் சுவாமியைக் கும்பிட்டுவிட்டுப் போகும்போது கோயில் அர்ச்சகர் கொஞ்சச் சாதம் கொண்டுவந்து கொடுத்தார்; அதையும் வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள். இப்படி நாலைந்து நாள் நடந்து வந்தது. ஒருநாள் என்ன நியாயத்தினாலோ தெரியாது. இவர்கள் என்ன சொல்லிச் சுவாமியைக் கும்பிடுகின்றார்கள் என்பதை அறிய என்மனம் தூண்டிற்று. அன்று நான் வழக்கமாக இருக்கும் இடத்துக்குப் போகாமல் கோயில் வாசலிலேயே இருந்துவிட்டேன். அப்போது இச்சிறுவர்களும் சுவாமியைக் கும்பிட வந்தார்கள். என்ன சொல்லுகின்றார்கள் என்று கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டேன். சிறுவன் "சுவாமி! அப்பு!! அம்மாவைக் காப்பாத்தவேணும்" என்று வாய்விட்டுச் சொல்லிக் கும்பிட்டான். சிறுமியும் தன் அண்ணனைத் தொடர்ந்து "சாமி... அப்பு... அம்மாவைக் காப்பாத்தணும்" என்று சொல்லிக் கும்பிட்டான். இதன் பின் வழக்கமாகப் பூசாரி கொடுக்கும் சாதத்தையும் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினார்கள். நானும் ஒருவித காந்த சக்தியால் இழுக்கப்பட்ட வனைப்போல இவர்கள் பின்னே சென்றேன்... வீடு திரும்பிய இவர்கள் நேரே வீட்டுக்குச் செல்லாமல் "ஒரு பஸ் ஸ்ராண்ட்டுக்குச் சென்று ஒரு பஸ் அண்டை நின்று அதிலிருந்தவர்க ளிடம் ஐயா... என்று கையைநீட்டி இரந்தார்கள். அப்போது அதிலிருந்த ஒரு சூட் அணிந்த பிரபு "போடா கழுதை: ஆளைப் பார்த்தால் தடியன் மாதிரி பிச்சையாவேணும் வா என்னோடே, சாப்பாடும் சீலையும்,தர்றேன்" என்று பையன்மேற் சினந்து விழுந்தார். அப்பொழுது அங்கே யிருந்த ஒரு வாலிபன்; கொஞ்சம் ஏழ்மை நிலையிலுள்ளவன் போல் அவன் உடையிலிருந்து தெரிந்தது; என்ன ஐயா இப்படியும் பேசலாமா? யாரோ குழந்தையள்; தாய் தகப்பன் இல்லை யாக்கும் உண்டானாற் குடுக்கிறது இல்லையென்றால் விடுகிறது" என்று அந்தப் பிரபுவை அதட்டிவிட்டு "இந்தா தம்பி!" என்று பையனைக் கூப்பிட்டுத் தன் முடிச்சை அவிழ்த்து ஒரு ஐந்து சதம் கொடுத்தான். இதைக் கண்ட பிரபு நாணித் தலைகுனிந்த வண்ணமாயிருந்தார். கஷ்டமனுபவித்தவனுக்குத்தான் கஷ்டமனுபவிப்பவர்களைப் பற்றிய உணர்ச்சியுண்டு. இந்த வாலிபனின் செய்கையைக் கண்டதும் பஸ்சிலிருந்த மற்றவர்களும் தங்களால் இயன்றளவு அந்தக் குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள். குழந்தைகளுக்கு அன்று மனம் திருப்திப்பட்டது போல அவர்கள் முகக்குறி தெரிவித்தது. பின் அவர்கள் நேரே ஒரு கடைக்குச் சென்று நாலு மூன்று வறுத்த அப்பமும் வாங்கிக்கொண்டு அவசரமாக வீட்டை நோக்கிப் போகத் தொடங்கினார்கள். இவைகள் யாவையும் பார்த்துக்கொண்டு நானும் ஒரு புறத்தில் அசையாமல் நின்றுகொண்டிருந்தேன்.

4

நானும் பிள்ளைகளைத் தொடர்ந்துபோய் வழியில் அவர்களுடன் சேர்ந்துகொண்டேன். பின்வருமாறு எங்கள் சம்பாஷணை நடந்தது.

"யாருக்கு அப்பம் வாங்கிக்கொண்டு போகிறீர்கள்"

(சிறுமி) "அம்மாவுக்கு வருத்தம்"

"என்ன வருத்தம்"

(சிறுமி தமையனைப் பார்க்க, தமையன்) "காய்ச்சல்"

(சிறுமியும் தமையனைத் தொடர்ந்து) "காய்ச்சல்"

"உங்களுக்கு அப்பு இல்லையா"

(இருவரும்) "இல்லை"

"எங்கே"

(சிறுவன்) "அப்பு எங்கேயோ போட்டாராம்"

"ஆர் சொன்னது"

"அம்மா"

"கடுதாசி எழுதுகிறதில்லையா"

"இல்லை"

இப்படிச் சம்பாஷித்துக் கொண்டு போகும் போது வழியில் ஒரு குடிசை வந்தவுடன் சிறுமி என்னைப் பார்த்து "இதுதான் எங்க வீடு அம்மா இஞ்சை வத்தமாய்ப் படுத்திருக்கா" என்று தன் மழலைச் சொல்லாற் சொன்னது என் உள்ளத்தை எரித்தது. தகப்பனோ இக்குழந்தைகளையும் தாயையும் அந்தரிக்கும் நிலையில் விட்டுப் போய்விட்டான். தாயும் நோயாய்ப் படுத்திருக்கின்றாள். ஐயோ! பாவம் இச்சிறு குழந்தைகள் தான் பாடுபடவேண்டி வந்துவிட்டதே என்று எண்ணியதே என் மனம் பகிரென்றது. நான் அவர்களைப் பார்த்து "நானும் வந்து உங்கள் அம்மாவைப் பார்க்கட்டுமா" என்று கேட்டேன். இருவரும் "ஓம்" என்று தலையசைத்தனர். நானும் அவர்களுடன் தொடர்ந்து அவர்கள் வீட்டுக்குப் போனேன். வீட்டுக்குப் போனதும் சிறுமி என்னையும் தமையனையும் கவனியாது தமையனின் கையிலிருந்த பிஸ்கொத்தைப் பறித்துக் கொண்டு தாயிடம் ஓடி "இந்தா அம்மா பிஸ்கோத்து தின்: என்று அன்புடன் கொடுத்தாள். தாயும் அன்போடு அதை வாங்கிக் கொண்டு மகளைப் பக்கத்திலிருந்தி அன்புடன் தடவிக்கொண்டு "எங்கேயம்மா இவ்வளவும் போயிருந்தீர்கள்" என்னவோ ஏதோ என்று பயந்து வந்து விட்டேன். நான் பட்டிணி கிடந்தாலும் நீங்கள் ஒரு இடமும் போக வேண்டாம்" என்று ஈனக் குரலில் மகளுக்குச் சொல்லும் போது நானும் உள்ளே சென்றேன். அந்த மாது கிடந்த தோற்றத்தை என்னாற் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. நான் அவள் அருகிற் சென்று "தாயே உனக்கு என்ன துன்பம்? நான் ஏதும் உதவி செய்யவேண்டுமா? டாக்டரை வரவழைக்கட்டுமா" என்று கேட்டேன். அதற்கு அவள் "நீங்கள் யார்? எப்படி இங்கு வந்தீர்கள்? என்று என்னை நோக்கிக் கேட்டாள். நான் விஷயங்களைச் சொல்ல வாயெடுக்க முன்பே தாயின் பக்கத்திலிருந்த சிறுமியே யாவையுஞ் சொல்லிவிட்டாள். பின்பு அவள் என்னைப் பார்த்து ஐயா!" எனக்கு எவ்வகையான நோயும் கிடையாது; என் நோய்க்கு எந்த வைத்தியனும் மருந்து செய்யவும் முடியாது; இன்றைக்கு அல்லது நாளைக்கு நான் இவ்வுலகை விட்டுப் போய்விடுவேன். அப்பொழுது என் இக் குழந்தைகள் தெருவில் நின்று அலையப் போகின்றனவே" என்று விம்மி விம்மி அழுதாள். என் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிந்தது. "அம்மா! இக்குழந்தைகளின் தகப்பன் எங்கே" என்று கேட்டேன். அவள் ஒருவாறு தன் துயரை அடக்கிகொண்டு சொல்லத் தொடங்கினாள்.

இவர்களின் தந்தை; என் பர்த்தா; மகா யோக்கியன்; மிகுந்த சற்குணன். அந்நாளில் அவர் என்னை அரைக்கணமும் விட்டுப் பிரிந்திரார். நானும் அவரை என் கடவுளாகவே மதித்து

வழிபட்டு வருகின்றேன். என்றாலும் விதியை விலக்க முடியுமா? நாங்கள் இருவரும் காலேசில் படிக்கும்போதே எங்கள் தாய் தந்தையரின் அனுமதியின்றியே விவாகம் செய்து கொண்டோம். இதனால் எங்கள் இருவரையும் புறக்கணித்துவிட்டனர். நாங்கள் இருவருமாகவே குடும்ப சீவியத்துக்காகப் பாடுபடவேண்டி வந்தது. முதன் முதல் எங்களுக்கு ஒரு சிறுவன் பிறந்தான். இவனைக்கொண்டு உய்ந்தோம் என்று மகிழ்ந்திருந்தோம். சிறுவன் பிறந்து இரண்டு வருஷங்களின் பின் இந்தக் குழந்தை பிறந்தது. இவள் பிறந்த பின்புதான் எங்களுக்குக் கஷ்டகாலம் தோன்றிவிட்டது. ஒன்றுமேலொன்றாக எங்களுக்குப் பல கஷ்டங்கள் வந்தன. இவைகளினால் என் புருஷனின் மனம் உடைந்து போய்விட்டது. சிலவேளைகளில் அடுத்து இரண்டு, மூன்று நாளைக்கே நாங்கள் யாவரும் கஞ்சிக்கு வழியின்றிப் பட்டினி கிடந்துமிருக்கின்றோம். இப்படிக் குழந்தைகளும் அவஸ்தைப்படுவதைக் காண மனம் சகியாத என் கணவன்தான் மலேயாவுக்குப் போய் ஏதேனும் தொழில் பார்க்கப் போவதாகவும் என்னை அனுமதி வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். நான் முதலில் ஒப்பவில்லை யானாலும் எங்கள் கஷ்டத்தையே எண்ணி அவருக்கு விடை கொடுத்து அனுப்பினேன். போய் ஒரு வருஷ காலமாகக் கடிதம் எழுதியும் ஏதேனும் சிறுதொகைகள் அனுப்பியும் வந்தார். இப்பொழுது ஏழு வருஷங்களாக அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடையாது. நான் விசாரித்தபோது சிலர் அவர் இறந்துவிட்டதாகவும், சிலர் அவருக்குப் போன வருஷமே ஒரு தங்கப்புதையல் அகப்பட்டதாக வும் அதன்பின் வேறு ஒரு பெண்ணை மணஞ்செய்து கொண்டு சுகமாயிருப்பதாகவும் கூறுகின்றனர். இதுதான் ஐயா என் வருத்தம். அவர் எப்படியானாலும் சுகமாயிருந்தாற் போதும்; கடைசியிற் பிள்ளைகளைத் தேடியாவது வருவார் என்பது நிச்சயம். அவரை ஒரு முறை என் கண்கொண்டு பார்த்துவிட்டு, என் குழந்தைகளையும் அவரிடம் ஒப்படைத்துவிட்டுச் சாகலாம் என்றால் விதி விடுமா? என்று கண்ணீர் வடித்தாள் அப்பெண். என்னாலும் துயரைத் தாங்க முடியவில்லை. வரவர அவள் கண் பார்வையும் மங்கிக் கொண்டே வந்தது. இவ்வள வும் என்னோடு பேசி வந்தவளுக்கு இவ்வளவு சீக்கிரத்தில் முடிவு வரும் என்று நான் எண்ணவில்லை. அவள் ஒருமுறை கண்ணை மூடினாள். மறுமுறை கண்ணை அகல விழித்து என்னை உற்றுப் பார்த்துச் சிரித்தாள். பின் என்னை நோக்கி "ஐயா இவர்கள் உமது குழந்தைகள். தகப்பனை அறியாப் பாலர்கள். கவனம்!" என்றதும் கண்ணை மூடிக்கொண் டாள். நானும் ஏதோசொல்ல வாயெடுத்து அம்மா! அம்மா!! என்றேன்.

"குடம்பை தனித் தொழியப் புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு."

தாயிறந்தபின் சிறுவர்களை என்னிடமே கொண்டு வந்து வைத்துக் கொண்டேன். இதுதான் சிறுவர்கள் வந்த வரலாறு. ஐயா என்று டாக்டரை நோக்கி நரசிங்கர் சிறுவர்களின் வரலாற்றைச் சொல்லிவிட்டு "இச் சிறுவர்களின் தந்தையைப் பற்றி என்ன சொல்லுகின்றீர்கள் ஐயா!" என்று டாக்டரை நோக்கிக் கேட்டார்.

"தன் பதிவிரதை போன்ற மனைவியையும், இரு சிறுவர்களையும் தவிக்கவிட்டு விட்டுப் போன அவன் இன்னமும் உயிரோடிருப்பானானால் அவன் மகாதுரோகி; மனிதப்பதர்" என்று தன் எண்ணத்தைச் சொன்னார் டாக்டர். உடனே நரசிங்கர் எழுந்து டாக்டரின் பக்கத்தே போய் "ஐயா! நான் தான் அத்துரோகி" என்று கண்ணீர் வடித்தார்.

இவ்வளவும் கூறியபின், சிறுமியின் சுகம் எப்படியென்று அன்பர்கள் அறிய விரும்பு வாராகையால், சிறுமி இப்பொழுது துள்ளி விளையாடிக்கொண்டு திரிகின்றாள் என்பதை அறிவிக்கின்றேன்.

(கு-பு) : இச் சிறு கதையிற் சிறுமியைக் கொன்று போடவே விரும்பினேன். என் சிறு கதைகளை வாசிக்கும் அன்பர்கள் இறுதியிற் துக்கமான செய்தியோடேயே கதைகள் முடிந்து விடுகின்றவென்று குறை கூறுவதாக அறிந்தபின்பே இந்த முடிவுக்கு வந்தேன்.

ஈழகேசரி ஆண்டுமடல் - 1938

சீனிக் கட்டாடி

சுயா

என் சிறுவயதுமுதல் எங்கள் வீட்டுக்குத் துணிமணிகளைச் சுத்தஞ் செய்து கொடுப்பவன் சீனிக் கட்டாடிதான். சீனிக் கட்டாடிக்குக் குஞ்சு குழந்தைகள், சம்சாரம் என்ற அவஸ்தைகளே கிடையாது. தானுண்டு தன் பாடுண்டு. நானறிந்தவரையில் எங்கள் ஒரு வீட்டுக்கு மாத்திரம் தான் இவன் தொழில் செய்துவருகிறான். கட்டாடித் தொழில் மாத்திர மல்ல, இவனுக்கு எல்லாத் தொழிலும் தெரியும். தூர ஓடுவான், விறகு கொத்துவான். தோட்டம் செய்வான், வேலி அடைப்பான், உழுவான், இப்படியே இவன் அறியாத தொழில்களே கிடையா. ஆளும், குண்டோ தான்மாதிரி. இவனுக்கு என்று எங்கள் வீட்டிற் புறம்பாக அரிசி போடு வது வழக்கம். இவனால் வாழ்ந்த குடும்பங்களுமனேகம். கெட்ட குடும்பங்களுமனேகம். ஒரு வாலிபன் அண்டை அயல்வீட்டுப் பெண் பிள்ளை ஒன்றிற் கண்போட வேண்டியதுதான். அதைச் சீனிக் கட்டாடி யின் காதில் மெதுவாகப் போடவேண்டியது; அப்புறம் பேசுவா னேன்! எதுவிதமோ அந்த வீட்டுக்குச் சீனிக் கட்டாடி போய் விடுவான்; பிறகு அந்தப் பெண்ணுக்கு I,C.S., C.C.S. மாப்பிள்ளைகளைத்தான் பேசிப்

பாருங்களேன்! இந்தத் தொழிலில் சீனிக்கட்டாடிக்கு இப்பொழுது மங்கு திசை: அவ்வளவு செயங்கிடைப்பதாய்க் காணவில்லை.

இவ்வளவெல்லாம் செய்கின்றானே, தொழிலில் எப்படி என்று கேட்பீர்களாக்கும். அதைத்தான் சொல்ல வந்தேன். இவன் எங்கள் வீட்டுக்கு வந்த புண்ணியத்தினால் எனக்கும் இவன இப்பொழுது வண்ணாரத்தொழில் கொஞ்சம் கைவந்திருக்கின்றது. முதலில் இவனை ஒருவாரத்துக்கு ஒருமுறை தவறாமல் வரவேண்டும் என்று பெரியவீட்டுப்பிள்ளைகளைப் போலக் கட்டளையிட்டிருந்தேன். அவன் அதைச் சட்டைபண்ணினாற்தானே! நான் ஒரு வாரத்திற்கு ஒருமுறையென்ன. அவன் இரண்டுவாரத்துக்கு ஒருமுறை தான் வந்துகொண்டி ருந்தான். என் கட்டளையை இவன் மீறுவதினால் இவனில் வீணாகக் கோபம் வைத்திருக்க வேண்டி வருகின்றதேயென நான் எண்ணி "கட்டாடி! நீ இரண்டு வாரத்துக்கு ஒருமுறை கிரமமாய் வந்தாற் போதும்" என்று என் கட்டளையை மாற்றிவிட்டேன். பின் அவன் என்ன எண்ணினானொ தெரியாது மூன்று வாரத்துக்கு ஒருமுறைதான் வரத் தொடங்கினான். கொஞ்சநாள் பல்லைக் கடித்துக் கொண்டிருந்துவிட்டு "நீ மூன்று வாரத்துக்கு ஒருமுறை ஒழுங் காய் வந்தாற் போதும்" என்று என் முந்திய கட்டளைகளை ரத்துச்செய்து விட்டேன். என் சொற்படி நடக்கக்கூடாது என்று இவன் எண்ணமாக்கும். அவன் இப்பொழுது ஒரு மாதத்தக்கு ஒரு முறைதான் வருகின்றான். இனி ஒரு மாதத்துக்கு ஒருமுறை வா என்று சொல்லப் பயமாயிருக்கின்றது. அவன் கட்டாயம் அதை இரண்டு மாதத்துக்கு ஒருமுறையாக மாற்றியே விடுவான். அப்புறம் நான் என்ன பண்ணுவது? விருப்பபடி வந்து தொலையட்டும்.

கொடுக்கும் துணிகளில் அரைவாசிதான் வீட்டுக்கு வரும்; அரை வாசிக்கும் அவன் சில சாட்டுகள் வைத்திருக்கின்றான்."வேறை துணியளோடு மாறியிருக்கும் பார்த்து எடுத்து வாறேன்; அது தண்ணீரிலை கரைஞ்ச போச்சு; நனைஞ்ச உக்கினது; அடிக்கக் கிழிஞ்சு போச்சு விளக்குத் திரிக்குங் கூடாது; அங்கை கிடக்கு "மற்றக்கிழமை கொண்டுவாறேன்." இவைகள்தான் அவன் சாட்டுகள். நான் கிழியாமல் வேட்டி கட்டுவது புதிதாய் எடுக்கும் போதுதான். ஒருமுறை இந்தச் சீமானிடம் போட்டுவந்தால் அதில் நூறு இடத்தில் பொன்னல் இருக்கும். எனப்பா; இப்படி என்று அவனிடம் கேட்டும் கோபித்தும் எனக்கும் அலுத்துப் போய்விட்டது. ஒரு முறை எனக்கு ஒரு நண்பன் தீபாவளிக்கென்று ஒரு பட்டு வேட்டி சால்வை தந்திருந்தான். அதை ஒரே ஒரு நாள் மாத்திரம் உடுத்து விட்டு மினுக்கிக் கொண்டுவா என்று இவனிடம் கொடுத்திருந்தேன். அவனோ ஒரு மாத காலமாக எனக்குத் தெரியாமல் குசாலாய் அதைக் கட்டித் திரிந்தானாம்.

ஒருநாள் நாலு பெரிய மனுஷர் மத்தியிற் போக வேண்டிய அவசிய கருமம் எனக்கிருந்தது. கட்டாடியிடமிதற்கென்று வீடுதேடிப்போய் "நாளைக்குப் பின்னேரம் ஒரு கூட்டத்துக்குப் போகவேணும், நாளைக் காலையில் ஒருசோடி உடுப்புக் கொண்டுவா" என்று கட்டாயம் பண்ணிவிட்டு வந்தேன். அவனும் நிச்சயம் வருவதாகச் சொல்லி என்னைக் கடத்தி விட்டான். மற்றநாள் வந்தாற தானே! இருக்கும்வரையும் இருந்து பார்த்து விட்டுக் கிடைசியாக ஒருவழியுங் காணாமல் அழுக்குடுப்போடுதான் போனேன். அன்று எனக்கிருந்த வெட்கம் சொல்ல முடியாது. அங்கேயும் ஒரு நண்பன் "ஏன் உனக்கு வேறு உடுப்புக் கிடையாதா?" என்று வாய்திறந்து கேட்டும் விட்டான். எனக்கு ஆடை அவிழ்ந்த் மாதிரித் தான். சீனியனைத் (கட்டாடி) தின்னவேணுமென்ற கோபம் வந்தது அவனுக்கு நல்ல கல்தாக் கொடுத்து

அனுப்புவது என்று எண்ணிக்கொண்டு வீடு வந்தேன். நான் சொன்ன நாளுக்கு அடுத்த நாள் தான சீனியனும் வந்தான். எனக்கு வந்த கோபத்தில் கன்னத்தில் ஒன்று கொடுத்து "இனி என் முற்றத்தில் கால் வையாதே" என்று துரத்திவிட்டேன். உடனே அவன் கோட்டுக்குப் போய் கேஸ் கொடுத்து என்னை அவமானப்படுத்திவிட்டான் என்று எண்ணி விடாதீர்கள். என் கல்தாவை வாங்கிக் கொண்டு கொஞ்ச நேரம் மௌனமாய் இருந்து விட்டுப் போய்விட்டான். மறுநாள் நான் ஒரு ஒழுங்கான கட்டாடியைத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து "இவனிடம் துணிகளைப் போடு" என்று என் மனைவியிடம் சொன்னேன். அவளோ ஒன்றும் பேசாது மௌனமாய் என்னைப் பார்த்துச் சிரித்தாள். "ஏன் சிரிக்கிறாய் துணிகளைப் போடேன்" என் றேன். அதற்கு அவள் கொஞ்சம் பதுங்கிக்கொண்டு "அவன் வந்து எடுத்துக் கொண்டு போய் விட்டான்" என்றாள். இந்த வகையிலும் அவன் என்னைப் பலமுறையும் அவமானப்படுத்தி யிருக்கின்றான். ஆனால் அவனுக்கு அடித்தவன்று எனது சொந்தக் குழந்தை ஒன்றுக்கு அடித்த மனவேதனை எனக்கிருந்தது. ஏனோ தெரியாது.

என் மனைவி மாத்திரம் இவனைக்கொண்டு தனக்குத் தேவையான நேரங்களுக்குத் துணிகளை வெளுப்பித்துக் கொள்ளுகின்றாள். அவள் கையாளும் உபாயம் இது தனக்கு எப்போது துணி தேவையோ அந்தநாளை அவனுக்குச் சொல்லாமல் அதற்கு ஒரு கிழமைக்கு முந்திய நாளை அவனுக்குச் சொல்லி விடுவாள். இந்த இரகசியம் அவனுக்கு இன்னும் தெரி யாது. நானும் இந்த உபாயத்தைச் செய்யலாம் என்றால் எனக்கு எப்போது துணிதேவை வரும் என்று தெரிந்தாற்தானே!

இவ்வளவெல்லாம் சொன்னபிற்பாடு அவனுக்கு நான் கொடுக்கும் சம்பளத்தைச் சொல் லாமல் விடுவது சரியல்ல. பத்து வருஷத்துக்கு அவனுக்கு ஒரு தம்படிச் சல்லியாவது கொடுத்த ஞாபகம் எனக்கில்லை. அவனும் சம்பளம் என்று வாய்திறந்து கேட்பது கிடையாது. ஏதோ ஒருவிதமாய் நடைபெற்றுப் போய்விடுகின்றது. எப்படியிருந்தாலும் அவனை விட்டுவிட எனக் கும் மனம் வருவதாயில்லை. நான் எப்படி ஏசினாலும் பேசினாலும் அவனும் என்னை விட்டுப் பிரிகின்றானில்லை. என்னவோ கிரகப் பொருத்தமாக்கும்!

ஈழகேசரி ஆண்டுமலர் - 1938

மிகுந்தலைச் சந்நியாசி

சுயா

அநுராதபுரத்திலிருந்து பதினைந்து மைல் தூரத்திலுள்ளது மிகுந் தலைக் காடு. சிங்களராசர் காலத்தில் சிறப்புற்றோங்கிய ஓர் நகரம். இன்றும் இடிந்த கோயில்களையும் சமாதிகளையும் எங்குங் காண லாம். சரித்திர ஆராய்ச்சிக்காரர்களும் நூதனம் பார்ப்பவர்களும் காமிராக்களுடன் இக்காட்டில் திரிந்த வண்ணமேயிருப்பர்.

பதினைந்தாம் கட்டை அருகில் ஓர் ஒற்றை அடிப்பாதை. இதுதான் காட்டினுட் புகுவோர்க்கு வழி. இவ்வழியே அரை மைல்தூரம் செல்லும் போது ஓர் புத்தசமாதி தென்படும். சமாதியின் முன் அழகிய வதனத் தோடு கூடிய ஓர் புத்த விக்கிரகம் கையே தலையணையாகப் படுத்தி ருக்கும் தோற்றம் எவரையும் வசீகரித்து விடுகின்றது. சிங்கள ராட்சியம் அழிந்து ஐந்நூற்றுக்கு மேற்பட்ட வருஷங்களாகியும் விக்கிரகத்தின் பிரபை அணுவளவும் குறைந்ததில்லை. பதில் கூடிக்கொண்டு வரு கின்றது என்று கூறலாம். விக்கிரகத்தின் பக்கத்தில் எள்ள ஒரு தெற்றி யில் பகல் முழுவதும் ஒரு பால சந்நியாகி வீற்றிருப்பதைக் காணலாம். தங்கநிறமேனி. பிரபையோடு கூடிய முகம். முக அழகைக்கண்டு பிறர்

மயங்காவண்ணம் முகத்தை மறைத்து எழுந்த தாடியின் தோற்றம். புன்னகை தவழும் உதடு. வயது முப்பது அல்லது ஒன்றிரண்டு கூடியுமிருக்கலாம். சிலவேளை யோக நித்திரையில் இவர் இருக்கும்போது புத்த பகவான் தான் இரண்டாவது ஜென்மம் எடுத்தாரோ என்று எண்ணவும் இடமுண்டு. இவர்தான் காட்டுட் செல்பவர்கட்கு வழிகாட்டி வடமத்திய மாகாணச் சர்க்காரும் இவரளவில் வெகு மரியாதையே காட்டி வருகின்றனர்.

இவர் வரலாற்றை அறியப் பலரும் தெண்டித்ததுண்டு. சுவாமியின் பெயர் என்ன? ஊர் எது? நாங்கள் ஏதேனும் உபகாரஞ்செய்தால் ஏற்றுக்கொள் வீர்களோ? என்று பலரும் போட்டுக் கொண்டிருக்கும் கேள்விகட்கெல்லாம் ஓர் புன்னகைதான் மறுமொழி. எவரோடும் அதிகம் பேசுவதில்லை. ஒன்றிரண்டு வார்த்தை வந்தாலும் அது அவரைப்பற்றிய செய்தியை அறியக்கூடியதாயிராது. துஷ்டவிலங்குகள் கூட இவரைக் கண்டு வழிவிலகிச் சென்றதை நான் கண்டிருக்கின்றேன். புலி, கரடி, யானை முதலாம் விலங்குகள் இரவில் இவரோடே கூடச் சயனிக்கின்றனவென்றும் சிலர் கூறுவதுண்டு. "உண்மை தானா சுவாமி" என்றால், அதற்கும் உதட்டிற் தவழும் சிறு நகைதான் விடை. இப்பால சந்நியாசியின் பெயர் இலங்கைத் தேசமுழுவதும் அடிபட்டுவிட்டது. ஓர் நாள் என்தங்கை விலாசவதி என்னிடம் வந்து "அண்ணா" அம் மிகுந்தலைச் சாமியைக் காண எனக்கும் அதிக விருப்பமாயிருக்கின்றது என்றாள். விவாக மாகாதவள். பலமுறைதெண்டித்தும் மறுத்து விட்டேன். வயது இருபத்து இரண்டு வரையிலிருக்கும். இது வரையில் எந்த வகையிலும் அவள் மனம் கோணாத வகையில் நான் நடந்து கொண்டவனாகையால் அவள் விருப்பத்தைப் பூர்த்திசெய்வது என்று உடன்பட்டேன். ஆவணி மாசம் பதினைந்தாந் தேதி என்று எண்ணுகின்றேன். சாயங்காலம் எங்கள் மோட்டார் மிகுந்தலையில் பதினைந்தாம் கட்டையடியில் நின்றது. நான் இறங்குமுன் என் தங்கை ஒற்றையடிப்பாதையில் அரைவாசித்தூரம் சென்றுவிட்டாள். பூர்வ வாசனைப் பயனாக்கும். சந்நியாசியைக் கண்டோம். பழைய புன்னகைதான் எங்களை வரவேற்றது.

என் தங்கை சந்நியாசியிடம் பல கேள்விகளைக் கேட்டாள். என்று மில்லாத மாதிரி இன்று சந்நியாசியும் பதிலிளித்து வந்தார்.

"சாமியின் பெயர் என்ன?"

என்று இழுத்தாள் என் தங்கை. "என் தாய் தந்தையரும் மற்றோரும் என்னை ஜெய சீலன் என்று அழைத்தார்கள். என் ஊர் கண்டி. இப்போ எனக்கு ஊர் ஏது? பேரேது? "தாங் கள் எதற்காக இவ் இளவயதில் துறவை மேற் கொண்டீர்களோ? சந்நியாசியின் முதக்தில் புன் னகை தவழ்ந்தது.

பலரும் இதையே கேட்கின்றார்கள். என்னில் எல்லோருக்கும் அன்பு தான். என் சரித் திரம் விசித்திரமானது.அதை ஒருவர் மனத்திலும் போட்டுக்கொள்ள நான் விரும்புவதில்லை. என்றாலும் நீங்கள் பலவந்தப் படுத்துவதால் சொல்கின்றேன்" என்று தொடங்கும் போது தங்கை இடிகேட்டு சர்ப்பம்போல அசைவற்று சந்நியாசியின் வாயையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

"கண்டியில்" விஜயசிங்கன் என்பவர் என் பிதா. ஓர் கால் பெரிய வியாபாரஞ் செய்து கஷ்ட திசையினாற் பொருள் யாவுந் தொலைந்து வறுமையை அடைந்தார் என்றாலும் புத்திரனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் அவர் அணுவளவும் பிசகியதில்லை.

எனக்கும் போதிய கல்வி அளித்து வந்தார். என் இளவயதில் தாயார் விண்ணுலகேகிவிட்டாள். கஷ்ட திசை வந்த போது யாவரும் எங்களைக் கைவிட்டு விட்டனர். சில நாட்களின் பின் என் தந்தையையும் இழந்தேன் என்னைத் தேடுவாரிலில்லை. நான் பாடசாலையில் படிக்கும் போது எனது தூரபந்துவான ஒருவரின் மகளும் என் கீழ் வகுப்பிற் படித்து வந்தாள். அவள் பெயர் விலா சவதி. அவள் தந்தை ஓர் தனவந்தர். வாலிப வயதானபடியால் ஒருவரையொரு வர் காதலித் தோம். இதை இவள் தாய் தந்தையர் அறியார். அவள் பாடசாலையை விட்ட பின்பும் நாங்கள் இடைக்கிடை ஒருவரை ஒருவர் சந்தித்தும் கடிதங்கள் எழுதியும் வந்தோம். அவள் தந்தை ஓர் சர்க்கார் உத்தியோகஸ்தரானபடியால் கண்டியை விட்டுச் சில காலம் வேறிடம் உத்தியோகம் பார்க்கப் போகவேண்டியிருந்தது. போகும் போது குடும்பத்தையும் அழைத்துச் சென்றார். விலாசவதி என்னைப் பிரியும்போது மிகுந்த வருத்தத்தோடு தான் சென்றாள். அவர்கள் போன சில வாரங்களின் பின் அவளுக்கு ஓர் கடிதம் எழுதினேன். ஒரு பதிலும் கிட்டவில்லை. இவ்வளவு அன்பு கொண்டவள் மறப்பாளா என்று ஓர் சந்தேகமும் நான் வறியவனாகையால் வேறு நல்ல ஆடவனை விரும்புகின்றாளோ என்னும் ஓர் சந்தேகமும் என்னை வாட்டின. அதோடு ஜீவனத்துக்காகப் பாடும் படவேண்டியிருந்தது. தூக்கத்துடன் பல நாளைக் கழித்தேன். ஓர் நாள் விலாசவதியிடமிருந்து ஒரு கடிகம் வந்தது. ஆவலுடன் பிரித்தேன். தான் என்னை மணஞ் செய்ய முடியாதென்றும் தனக்கு ஓர் C.C.S. படித்த உத்தியோகத்தனை ஒழுங்கு செய்திருக்கின்றார்கள் என எழுதியிருந்தாள். அன்று கொண்டதுதான் இவ்வேஷம். இவையெல்லாம் பழைய சங்கதி. இவைகளை எண்ணும் போது இப்போது எனக்கு அவை யெல்லாம் விளையாட்டாகவே தோன்றுகின்றன. என்னைப் போலத்தானே இப்பகவானும் தன் மனைவியைப் பிரிந்தவர் என்று பக்கத்திருந்த புத்த பகவானின் சிலையைச் சுட்டிக்காட்டிச் சிரித்தார். இக் கதையைச் சொல்லும் போதெல்லாம் ஓர் விளை யாட்டாகவே சொல்லி வந்தார். அவரது முகத்தில் எவ்வித மாறுபாட்டையும் நான் காணவில்லை. “அப்பெண் என்ன வானாள் சுவாமி” என்று நான் ஆவலுடன் கேட்டேன். அவளைப் பற்றிப் பின்பு யான் ஒன்று மறியேன். அவள் நல்லாய் இருக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை. புத்த பகவானின் போதனையும் அதுதான். “அவள் இன்னும் விவாகஞ் செய்துகொள்ளவில்லை. அப்பாவியை யும் அடிமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சந்நியாசியின் பாதத்தில் விழுந்தான் என் தங்கை. என் சந்தேகமும் நீங்கியது.

இல்வாழ்க்கைகுரியவர்களை யெல்லாம் சந்நியாசிகள் ஆக்குவது என் நோக்கமல்ல. நீ போய்ச் சந்தோஷமாய் வாழ் என்று சொல்லிக் கொண்டே கெம்பீரம் நடையுடன் எழுந்து நாட்டி னூடே விறுவிறு என்று சென்று விட்டார் சந்நியாசி.

இப்பொழுது நீங்கள் மிகுந்தலைக்குச் செல்வீர்களானால் அதே இடத்தில் ஓர் பெண் சந்நியாசியைக் காண்பீர்கள் எவருடனும் பேச்சுக் கொடுக்க மாட்டார். நான் பலமுறையும் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. சிலர் தாங்கள் அவரை உறுகுணையிற் கண்ட தாகக் கூறுகின்றார்கள்.

ஈழகேசரி ஆண்டுமடல்
1936

திருட்டுப்பிள்ளை

சுயா

பெரிய இடத்துப் பையன். அப்பா அம்மா இல்லை. தக்க இடத்தில் வளர்ந்து வருகின்றான். சுவீகாரப்பிள்ளையாக! பையனைச் சுவீகாரஞ் செய்து கொண்டு விட்டால் மாத்திரம் போதுமா! அவனை நல்ல மாதிரி வளர்க்கவும் பழக வேண்டாமா? பெரிய இடத்துப் பையனாகையால் அவனைப் பற்றி ஒன்று பேசவோ, அல்லது அவன் வீட்டாருக்கு அவனைப் பற்றி ஒன்று சொல்லவோ எல்லாருக்கும் பயம். இப்படிப் பெரிய வீட்டுச் சங்கதி என்று பயந்து பயந்து எத்தனை நாளைக்கென்று ஒட்டுக் குடித்தனம் பண்ணுவது? "ஒரு நாளைக்காவது துணிந்து ஒன்று செய்தால்தான் அவனுக்கும் அவன் வீட்டாருக்கும் புத்திவரும்" என்று நான் தீர்மானித்திருந்தேன்.

என் வீடு மாளிகையல்ல;வெறும் குடிசை வீடுதான். இதனால் எனக்குப் பெருமைகூட. மகாத்மாகாந்தியும் குடிசை வீட்டில்தானே வசிக்கின்றார் என்று எண்ணும் போது நான் எனது சின்னக் குடிலைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளாமலிருக்க முடியுமா, என்ன? இந்தளவில் நானும் அந்த மகாத்மாவும் சமம் தானே!

அதிகாரி வீட்டுக் கோழிமுட்டை குடியானவன் வீட்டு அம்மியை உடைக்கு மென் பார்களே! அதுபோல அடுத்த மாளிகை வீட்டாரால் நான் படும்பாடு கொஞ்சமல்ல - பிரதான மாக இந்தப் பையனால், வெறும் கள்ளப்பயல்! அங்கே அவனுக்கு வயிற்றுக்குப் போதுமானது கொடுக்கின்றார்களில்லையோ என்னவோ தெரியாது. நான் வீட்டிலில்லாத நேரங்களிலும் நான் தூங்கும் இரவு நேரங்களிலும் என் அடுப்பங்கரையிற் புகுந்து ஏதும் திருடித்தின்று விடு கின்றான் படுபாவி. இந்தத் துப்புக்கெட்ட பையனால் இரவில் நான் கண்ணோடு கண் மூடாமலிருக்க வேண்டியிருக்கின்றதே இது என்ன அநியாயம்! முதலில் இவனைப் பற்றிப் பலரும் பலவிதமாய்ச் சொன்னபோதெல்லாம் "சீ! இதென்ன வார்த்தை: அவன் பெரிய இடத் துப்பிள்ளை; அங்கே அவனுக்கு என்ன குறை வைத்துவிட்டார்கள்; இதெல்லாம் வேறுயாரோ போக்கிரியின் வேலை" என்று மற்றவர்களுக்குத் தட்டிக் கழித்து வந்தேன். ஆனால் கையும் மெய்யுமாக இவனை நான் அகப்படுத்திய போதுதான் என் தவறை உணர்ந்து கொண்டேன்.

ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி வரையிலிருக்கும். என் அடுப்பங்கரையில் சட்டி பானைகள் மெதுவாகச் சடசடக்கும் சத்தம் கேட்டது. கையில் தடியையும் எடுத்துக் கொண்டு போய் மெதுவாகக் கதவைத் திறந்தேன். என்னைக் கண்டதும் ஒரு முறை இந்தத் திருட்டுக் கழுதை, என்னை முழிசிப் பார்த்து விட்டுச் செத்தையைப் பிரித்துக்கொண்டு ஓடித் தப்பி விட்டான். பின் பல முறைகளிலும் என்னிடமகப்படாமலேயே இரவுதோறும் என் அடுப்பங் கரையிற் புகுந்து பழையதையெல்லாம் திருடித் தின்று விட்டுப் போய்விடுவான். வயிற்றுப் பசிக் குத் திருடித் தின்னுகின்றான்; பாதகமில்லை. என் சட்டிபானைகளை உடைத்துவிட்டுப் போவதில் இந்தக் காவாலிப் பயல் என்ன சுகத்தைக் கண்டுவிட்டானோ தெரியவில்லை!

ஒரு தடவை இவன் திருடவந்து எதிரும் புதிருமாக என்னிடம் அகப்பட்டுக் கொண்ட போது இவன் இடுப்பே ஒடிந்து போகக்கூடிய அளவுக்கு இவனுக்கு நல்லாகக் கொடுத்து அனுப்பிவிட்டிருந்தேன். மானங்கெட்ட பயல்! இதன்பின் சிலநாள் என் குடிசைப்பக்கம் நாடா மல் இருந்தான். இப்போ பழைய பாடத்தைத் தொடங்கி விட்டான். முன் நான் கற்றுக் கொடுத் ததை மறந்துவிட்டான் போலிருக்கின்றது.

மறுமலர்ச்சி
மாசி - 1947

யார் கள்வன்?

சுயா

அணுவைப் பிளந்தும் நியாயங் காணக்கூடியவர் என்ற பெயர் வாங்கிய ஜட்ஜ் சங்கா ஐயருக்கு இன்று மனக்கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது மாதவன்கேஸ். மாதவனின் பிரகாசமான முகமும், ஒளி வீசும் கண்களும், எதையும் அலட்சியமாக நோக்கும் பார்வையும் அவனைக் குற்றவாளி என்று நினைக்க, சங்கா ஐயருக்கு இடம் கொடுக்கவில்லை. முன்னுக்கு வரக்கூடியவன் போலத் தோன்றும் இரு பத்திரண்டு வயது வாலிபனை ஜெயிலில் போட்டு வருத்துவது தர்ம மாகாது. இவன் குற்றமற்றவன் என்று விடுதலைடைந்துவிடவே விடவோ என்றும் ஜட்ஜின் மனம் பதை பதைத்துக்கொண்டிருந்தது. ஜட்ஜ் விரும்பினால் முடிந்து போகக் கூடிய காரியமா இது. சட்டமும் இடங்கொடுக்க வேண்டாமா?

"நீ, கோடீஸ்வரர் தர்மபூபதி முதலியாரிடம் வழிபறி செய்ததாகப் பொலிசார் உன்மேல் குற்றஞ் சாட்டுகின்றனர். நீ குற்றவாளியா? அல் லவா? என்று ஜட்ஜ் சங்கா ஐயர் மாதவனைப் பார்த்துக் கேட்டார்.

"துரை அவர்களே, நான் வழிபறி செய்தது என்னவோ உண் மைதான் ஆனால் நான் குற்றவாளியல்ல"

"குற்றத்தை ஒப்புக்கொள்வதால் உனக்கு வரக்கூடியவைகளை நீ அறிந்திருக்கிறாயா?"

"அறிந்திருக்கின்றேன்"

"சொல் பார்க்கலாம்."

"சிறை வாசம்"

"அதோடு"

"ஊர் அவமானம்

"சிறைவாசம் இலகுவானது. ஆனால் இந்த ஊர் அவமானம் உன் வாழ்வைக் கெடுத்து விடுமே"

"உண்மைதான். அறியாமையுள்ள சனங்கள்தான்"

"ஏன் அப்படிச் சொல்கின்றாய்?"

"துரை அவர்களே! நான் வழிபறி செய்த சந்தர்ப்பத்தை தாங்கள் நோக்க வேண்டும். வழிபறி செய்ததினால் நான் கள்வனாகி விடுவேனா? நான் மாத்திரம் கள்வனா? எனக்கு மாத்திரம் ஊர் அவமானமா? இந்த முதலியார் கோடீஸ்வரரானது எப்படி? ஏழைகளின் பணத்தை கள்ள வழியில் சுரண்டித்தானே அப்படியாயின் இவர் கள்வனல்லவா? இந்த யுத்த காலத்தில் ஏழைகளின் வயிற்றில் மண்ணடித்து. அவர்களுக்குக் கொடுக்கும்படி அரிசியில் கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்து வைத்துக் கொண்டு. பின் அதை சேர் இரண்டு இரண்டரை ரூபாவிற்கு விற்கும் வியாபாரிகள் கள்வர்களல்லவா? இந்தப் பகற் திருடர்களுக்கு. என்னைப் பார்த்து கள்வன் என்று சிரிக்க என்ன யோக்கியதை உண்டு. எனக்கு ஒரு புரொக்டரைத் தெரியும் யாரும் ஏழைகள் உறுதி சாசனம் செய்ய முத்திரைக்குப் பணம் கொடுத்தால் அவற்றை எடுத்து செலவு பண்ணிவிட்டு இன்று வா நாளை வா என்று ஏமாற்றுவது அவர் வழக்கம். இந்தப் புறொக்டர் கள்வனில்லையா? இவர் என்னைப் பார்த்து ஏளனம் பண்ண முடியுமா? அயலான் காணி பூமிகளை கள்ள வழிகளில் தமக்காக்கிக் கொள்ளும் எத்தனை துஷ்ரர்கள் இருக்கின்றனர். இவர்கள் எப்படிப்பட்டவர்கள்? இவர்களும் என்னைப் பார்த்துச் சிரிக்கக் கூடியவர்களா? சாராயத் தவறணைகளில் ஆட்களை ஏவிவிட்டு. ஒரே முறையில் பத்து பதினைந்து போத்தல் சாராயம் எடுத்து வைத்துக் கெண்டு. பின் அவைகளைக் கள்ள விலைக்கு விற்கும் எத்தனை பணக்காரர்கள் இருக்கின்றனர். இவர்கள் செய்கை எப்படிப்பட்டது? இவர்களும் என்னைப் பார்த்து சிரிக்கக் கூடியவர்களோ? உணவுப் பொருட்களை சேகரித்து வைக்கக் கூடாதென்ற அரசாட்சிய சட்டத்தையும் மீறி எத்தனை தனவந்தர்கள் கள்ள விலைக்கு மூடை மூடையாக அரிசி நெல் வாங்கி வைத்து விற்பனை செய்து ஏழை மக்களை கொள்ளையிடுகின்றார்கள். இவர்கள் கள்வர்களல்லாமல் வேறென்ன? இப்படியான யோக்கியக் கள்வர்களின் அவமானத்தையும் நான் சட்டை செய்ய வேண்டுமா? உங்கள் பொலிஸ்காரரைப் பற்றி உங்களுக்கு உண்மையான அபிப்பிராயம் என்ன? அவர்கள் யாரிடமேனும் களவாய் லஞ்சம் வாங்கவில்லையென்று பிரமானஞ் செய்வார்களா? உலகிற்கே வழிகாட்ட வேண்டிய ஆசிரியர்களில் சிலர் பிள்ளைகளுக்கு அரசாட்சியார். மத்தியான போசணத்திற்கு கொடுக்கும் பணத்தில் மாதாந்தம் எவ்வளவைச் சுரண்டுகிறார்கள்? இவர்கள் எப்படிப்பட்ட

வர்கள்? சட்டப்படி இந்தக் கள்வர்களுக்கு என்ன தண்டனை விதிக்க வேண்டும்? அவர்கள் நல்லகாலம். அவர்களைத் தண்டனையினின்றும் காப்பாற்றுகின்றது. இந்தக் கள்வர்களால் எனக்கு வரும் அவமானத்திற்கு நான் பயந்து போக வேண்டுமோ?

"உலகத்தில் யார் கள்வனில்லை? நான் மாத்திரம்தான் கள்வனோ? எனக்கு மட்டும் தான் அவமானமோ? நான் வழிபறி செய்து அகப்பட்டுக் கொண்டேன் ஆகையால்தான் நான் கள்வன் எனக்கு அவமானம் மற்றவர்கள் களவு செய்கின்றார்கள் ஆனால் அகப்படவில்லை அதனால் அவர்கள் யோக்கியர்கள் ஆகிவிட முடியுமோ?

"நான் யோக்கியன் நன்றாக வாசித்தவன் எனக்கு எவருமில்லை. எத்தனையோ பிரபுக்களிடமெல்லாம் சென்று நான் யோக்கியமாய் சீவிப்பதற்கு எனக்கு ஏதன் வழி பண்ணும்படி இரத்தேன் எல்லோரும் கையை விரித்து விட்டார்கள் பாழும் படிப்பினால் எனக்குக் கூலி வேலை கூடத் தர மறுக்கின்றார்கள் நான் என்ன செய்ய முடியும்? நானும் ஒரு சீவன் தானே! நான் சீவிக்க வேண்டாமா? முதலியாரோ கோடீஸ்வரர். பலவந்தமாக அவரிடம் கொஞ்சத்தை நான் தட்டிக்கொண்டால் அவருக்கு என்ன கேடு வந்துவிடப் போகிறது என்று எண்ணினேன். நல்ல வழியில் போனால் இப்படிப்பட்ட பிரபுக்கள் வழிக்கு வாரார்கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆகையால் அவரிடம் வழிப்பறி செய்தேன். நான் சொல்லக் கூடியது இவ்வளவுதான். இனி, அப்பால் சட்டம் உங்கள் கையில் இருக்கின்றது தானே".

"சட்டப்படி இது தண்டனைக்குரியதுதானே"

"உங்கள் சட்டம் என்னை ஜெயிலில் தள்ளலாம். இதனால் என் மனம் மாறிவிடப் போகிறதா? ஜெயில் மனிதனின் மனதை மாற்றக்கூடியதா? ஒரு வேளை ஜெயில் வாசத்தால் என் மனம் கூட மாறுகிறது என்று ஒத்துக்கொள்வோம். அப்படியென்றாலும் முதலியாருக்கு வரப் போகிறது என்ன? அவர் போன பொருள் வந்துவிடுமா? இனி உங்கள் சட்டப்படி செய்யுங்கள்"

எத்தனையோ பெரிய பெரிய கேஸ்களையெல்லாம் தன் பேனா நுனியினால் கீறித் தள்ளி முடிவிற்குக் கொண்டு வந்து விடுகின்ற ஜட்ஜ் சங்கா ஐயருக்கு இந்த வாலிபனின் நூதன விவாதம் மூளையைக் குழப்பி விட்டது. "ஐயோ! சட்டமே" என்று பெருமூச்சு விட்டார். சிறிது நேரம் வாலிபனை அனுதாபத்தோடு பார்த்தார். பின் தலையைக் கவிழ்த்தபடி "ஆறு மாசம் கடுங்காவல்" என்று கம்மிய குரலில் தீர்ப்புக் கூறினார். மாதவனின் முகத்தை அவர் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. பார்த்திருப்பாரேயானால் இந்தத் தீர்ப்பைக் கேட்டதும் அவன் முகத்தில் உண்டான ஒரு வித நூதனமான ஒளியைக் கண்டு பிரமித்துப் போயிருப்பார்.

ஈழகேசரி - 07. 11 . 1943

"அன்னையின் கட்டளையும் அதுதான்"

சுயா

உகாபுரிக்கும் பீஜப்பூருக்குமிடையில் கடும்போர். உதயபுரிச் சேனைபை நடத்துபவன் ராணாசிங். பீஜப்பூர் சேனைத் தளபதி பீமசிங். மூன்று நாட் கடும்போர் நடந்தது. மூன்றாம் நாள் உதயபுரிச் சேனை சிறிது பின்வாங்கியது. ராணாசிங் பீமசிங்குக்கு எவ்வகையிலும் இளைத்தவனல்லன். ஒருபடி கூடியவன் என்றாலும் பொருந்தும். சேனைகளுக்குள் ஒற்றுமையின்மையே தோல்விக்குக் காரணம். ராணாசிங் தோல்வியால் ஏற்பட்ட மனஸ்தாபத்தோடு நாளை நடக்க விருக்கும் போரையும் எண்ணிப் படுக்கையிற் புரண்டவண்ணமாய் இருக்கும் போது பீஜப்பூரில் ஒரு குடிசையில் நடக்கும் சம்பாஷணை யைக் கவனிப்போம்.

மகனே! முதல் இருநாட் போரிலும் உதயபுரிக்கே வெற்றிகிடைக் குமென்றிருந்தேன். இன்றைப் போரில் அதற்கு மாறாய் முடிந்தது. உதய புரிச் சேனைக்கே வெற்றி கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகின் றேன். ஆகையால் நீ உதயபுரிச்சேனைக்கு உதவிக்காகப் புறப்படு."

"அன்னாய்! மாற்றாருக்கு நம் தேயத்தைக் காட்டிக்கொடுக்க லாமா? நான் பீஜப்பூர் சேனைக்கல்லவா உதவி செய்ய வேண்டியவன்."

"குழந்தாய்! நீ சொல்வது சரியே. எனினும் இம்முறை யுத்தத்தில் நீ உதயபுரிக்கே உதவி செய்யவேண்டியவனாகின்றாய். உன் தாயின் சொல்லைத் தட்டாதே. சீக்கிரம் புறப்படு. பொழுது புலரப்போகின்றது. யாருமறியாது தளபதி ராணாசிங்கைப் போய்க் காண். ஒன்றில் வெற்றி அன்றேல் மரணம் என்று எண்ணிப் போ. உயிரோடு மீளுவாயேல் பின் எல்லாம் கூறுவேன் தயாராயிரு."

அன்றிரவு உதப்புரிச் சேனா வீரருக்கு உறக்கமே கிடையாது. கூட்டங் கூட்டமாகத் தாம் அன்று காட்டிய ஒற்றுமையீனத்தைபிட்டு வருத்தப்பட்டவர்களாய்ச் சம்பாஷித்துக் கொண் டிருந்தனர். நாளைப் போரில் எல்லோரும் ஒன்றுபட்டு எதிரிகளைத் தாக்கவேண்டுமென்பது அவர்கள் எண்ணம். இப்படி அவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது ஓர் வாலிபன் போர்க்கோலங் கொ ண்டவனாய் ஓர் புரவிமீது சவாரி செய்து கொண்டு உதயபுரிச் சேனாவீரர் தங்கியிருக்குமிடத்துக்கு வந்தான். தளபதி ராணாசிங்கைப்பார்க்க விரும்புவதாகக் காவல ரிடம் கூறினான். உடனே ராணாசிங்கின் முன் நிறுத்தப்பட்டான்.

ராணாசிங்:- நீ எந்த ராச்சியத்தைச் சேர்ந்த வீரன்?

வாலிபன் :- பீஜப்பூரை.

ராணாசிங்:- இவ் அகாலத்தில் வரவேண்டியதேன்?

வாலியன் :- உங்கள் சேனைக்கு உதவிசெய்ய.

ராணாசிங் வாலிபனை ஏற இறங்க ஒருமுறை பார்த்தான். வாலிபனின் முகம் அவன் கபடமற்றவன் என்பதைக் காட்டிற்று. "சொந்தத் தேயத்துக்கல்லவா தொண்டு செய்ய வேண் டும்."

"வாஸ்தவமே. நானுமப்புடியே எண்ணியிருந்தேன். இது என் அன்னையின் கட்டளை."

"உன் அன்னை யார்?"

"சாந்து பீபி."

ராணாசிங்கின் மனதிற் "பலவித எண்ணங்கள் தோன்றின. சிலகாலங்களுக்குமுன். தூக்கிப்போடப்பட்டான். கண்கள் கலங்கின. சாந்துபீபி சாந்து பீபி என்று இரண்டு தரம் உச் சரித்தான்.

"சரி. சேனையில் எவ் உத்தியோகம் ஏற்க விருப்பமோ?

"சேனாபதிக்குக் குறைந்த எதுவும் ஏற்க எண்ணமில்லை. அன்னையி ன் கட்டளையும் அதுதான்."

"நான்"

"நீரா, நீர் உபதளபதியாகவேண்டியது தான்."

வாலிபனின் வார்த்தைகள் அவன் சேனாபதிக்குத் தகுதியானவன் தான் என்பதை உணர்த்தின. ராணாசிங்கும் அவன் வார்த்தைக்கும் தோற்றத்துக்கும் கீழ்ப்படிந்தான். வாலி பனே. உன் இஷ்டப்படி சேனாபதியாகிக் கொள். நான் உனக்கு உதவியாளாகின்றேன்.

நாளைப்போரை நடத்தவேண்டியவன் நீதான், என் சேனைகளுக்கும் இதை அறிவித்து விடுகின்றேன்.

மற்றைநாள் வாலிப சேனாபதியின் கீழ் உதயபுரிச் சேனாவீரர் உற்சாகமாகப் போர் புரிந்தனர். பீஜப்பூர் சேனைகள் புறங்கொடுத்தோடின. வாலிபனின் போர்த்திறனைக் கண்டு ராணாசிங் மெச்சினான். இருதேச அரசர்களும் சமாதானம் செய்து கொண்டனர். வாலிபனோ ராணாசிங்கிடமாவது உதயபுரி அரசனிடமாவது எவ்வித உபகாரத்தையும் கருதாது தன் தாயைக் காண ஓடிவந்தான். வந்மென்? தன் தாயைப் பீஜப்பூர் அரசன் ராசதுரோக குற்றத்திற்காகச் சிறை செய்திருப்பதாக அறிந்து நேரே அரசனிடஞ் சென்றான். காவலாளர் இவனையுஞ் சிறைசெய்து தாயோடு அரசன் முன் நிறுத்தினர்.

“சாந்து பீபி! இதோ உன் மகனும் வந்துவிட்டான். இராஜ புத்திர மங்கையாய் இருந்தும் உன் தேயததுக்கும் உன் அரசனுக்கும், விரோதமாக உன் மகனை மாற்றார் படைக்கு உதவி செய்ய அனுப்பலாமா? இதுதான் இராசபுத்திரர்களுக்குரிய வீரமோ? நீ பெண்ணாக இருந்தாலும் உனக்கும் உன் மகனுக்கும் இராசததுரோகம் செய்ததற்கு விதிக்கப்படும் மரண தண்டனையை விதிக்கவேண்டியிருக்கிறதே என்று வருந்துகின்றேன்.“

“அரசே! இன்றைக்கு இருபது வருஷங்களுக்கு முன் உதயபுரி அரசன் இந்த அரண்மனைக்கு விருந்தாளியாக வந்தபோது அரசனின் மெய்க்காவலனாக ஒரு இளம் வாலிபனும் வந்திருந்தான். ஒருநாட் சாயங்காலம் நான் எங்கள் குடிசைப்பக்கம் உலாவிக்கொண்டு நிற்கும் போது அவ்வாலிபன் குதிரையிற் சவாரிசெய்து கொண்டு கிராமங்களைப் பார்த்துக்கொண்டு வரும்போது என்னையும் கண்டான். ஒருவரையொருவர் அன்புடன் நோக்கினோம். அன்று தொடங்கி அவன் அவ்விராச்சியத்தினின்றும் தங்கள் தேசத்துக்குப் போகும்வரையும் அடிக்கடி என்னை வந்து சந்திப்பதுண்டு. தங்கள் தேசத்துக்குப் போனபின் அரசனின் உத்தரவு பெற்று என்னை அழைத்து முறைப்படி மணம் புரிந்து கொள்வதாகவும் வாக்களித்தான். கடைசிநாள் அவனைப் பிரிந்தபோது என் மனம் பட்டபாட்டை என்னென்று கூறுவது. “காதல்” கட்டாயம் என்னை அழைத்துக்கொள்ளுங்கள் என்னைப் புறக்கணித்து விடாதீர்கள் என்று இரந்தேன். “சூரியன் திசைமாறினும் உன்னை மறவேன்” என்று சத்தியம் கூறிச் சென்றவன் இன்னும் என்னை அழைத்ததுமில்லை; மணம் செய்ததுமில்லை. பின் அவன் வேறொரு பெண்ணை மணந்து கொண்டதாக அறிந்தேன். அவனுக்குப் பிறந்தவனே இப்பாலன். அவன் தான் இப்பொழுது உதயபுரிச் சேனையின் தளபதி சாணாசிங் என்பவன். அரசே! ராஜபுத்திர மங்கையர் ஒரே கணவனையே தெய்வமென்று கொள்பவரன்றோ ? இவன் தன் தந்தையின் புகழை நிறுவினான். நான் என் கணவனுக்குச் செய்ய வேண்டியதைச் செய்தேன். மரண தண்டனைக்கு இருவரும் ஆயத்தம்” என்று மகனின் முகத்தைப் பார்த்தாள். வாலிபன் முகம் மலர்ந்தது.

வியப்போடு கதையைக் கேட்டுக்கொண்டிருந்த அரசன் ஆனந்த மேலீட்டால் “சாந்து பீபி! உன்னை மன்னித்தேன். உன் மகனே இனி என் சேனைக்கு அதிபதி. கவலை ஒழி என்று ஆறுதல் கூறி வாலிபனை அழைத்துத் தழுவிக்கொண்டான். பீஜப்பூர் சேனாபதி குமாரசிங் என்றால் அக்கால மற்றைய இராச்சியங்கள் எல்லாம் நடுங்கிக்கொண்டேயிருந்தன. கற்புடைய மங்கையரையும் சுத்த வீரரையும் போற்றுபவனன்றோ அரசன்?.

(கதை நடந்தகாலம் எது என்று கேளாதீர்கள்)

ஈழகேசரி - 15.03.1936

டிக்றெக்றர் ஒவ் எட்டுகேசன்

சுயா

உம்மைச் சிலோன் டிறெக்றர் ஒவ் எட்டுகேசனாகத் தெரிந்திருக் கின்றோம். மாதம் முதற்றேதியோடு வேலையை ஒப்புக்கொள்ளவும் என்று எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. சோவியத் ரூஷியாவோ என்று திடுக்கிட்டேன். சும்மா மண்ணைக் கிண்டிக் கொண்டிருக்கும் எனக் கும் இவ்வேலை கிடைக்குமா? மூச்சின்றி முதற்றேதியோடு வேலையை ஒப்புக்கொண்டேன். ஆபீஸ் குமஸ்தாக்களெல்லோரும் ஒரு வாவேற்பு வைத்தனர் வரவேற்புகளும், தேநீர்க் கச்சேரிகளும் ஏக தடபுடல், இருவாரம் சூரியனே அஸ்தமிக்கவில்லைப்போற் தோன் றிற்று. இரண்டாம்வாரம் உத்தியோகத்தைத் தொடங்கினேன். பியூன்! கெட் கிளாக் பரிபூரணத்தை ஆசராகச்செய் என்றதும் மிஸ்ரர் பரிபூர ணம் முன்னின்றார்.

மிஸ்ரர் பூரணம் "நான் ஒருமுறை சிலோன் முழுவதும் எடுகேசன் விஷயமாய்ச் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகின்றேன். எவரும் நான் போகுமிடங்களிலெல்லாம் வந்து எடுகேசனைப்பற்றித் தங்கள் அபிப்பி ராயத்தைச் சொல்லலாம்" என்று ஒரு சுற்றுநிருபம் விடும். "போம், சீக்கிரம் ஆகட்டும்: நீரும் கூடவே வரவேண்டும். முதன் முதல் யாழ்ப் பாணம் இரண்டுவாரம்.

சுற்றுப் பிரயாணம் தொடங்கிற்று. யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். முதன் முதல் ஆண்களும் பெண்களுமாகச் சேர்ந்து முன்னூற்றுக்கு மேற்பட்ட வாலிபர் எங்களைத் தரிசித் தார்கள். கையிலே ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொப்பியையும் கொண்டு வந்திருந்தார்கள. "நீங்கள் யார்? பத்திரிகைப் பிரதிநிதிகளோ" என்று கேட்டேன்.

இல்லை ஐயா! படித்து செக்கன்ட் கிளாசும் பாசுபண்ணி வேலையில்லாமல் திரியும் தமிழ் உபாத்தியாயர்கள் நாங்கள். இவை நீங்கள் தந்த சேட்டிபிக்கட்டுகள். ஏதேனும் வழிகாட்ட வேணுமையா!" என்று இரந்தார்கள். என் வயிறு பகீர் என்றது. பரிபூரணத்தைப் பார்த்தேன். அவர் முகட்டைப் பார்த்தார். "சரி நீங்கள் போங்கள் மூன்று வருஷத்துள் உங்கட் கெல்லாம் வேலை கிடைக்கச் செய்கின்றேன்" என்றதும், அன்றே உத்தியோகமும் சம்பள உயர்ச்சியும் பெற்றவர்கள் போல ஆனந்தமாய்ச் சென்றனர்.

மிஸ்ரர் பூரணம் இவ்வருஷத்தோடு ரேயினிங் ஸ்கூல்களெல்லாம் மூடப்படவேண்டும் என்று குறித்துக்கொள்ளும்.

அடுத்தாற்போல் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தொகையினர். இவர்களும் இளம் வயதினர் மிக்சராய்த்தான் வந்திருந்தார்கள். "ரோக்கிஸ் பார்க்கவோ" என்றேன்.

"ஐயா! பாமும் தமிழைச் சிறு வயது தொடங்கிக் கற்று வந்தோம். S.S.C. யும் படித்தோம். ஆசிரிய கலாசாலைகளில் படையெடுத்தோம். கதவைச் சாத்தித் தாளிட்டுக்கொண்டு உங்கட் கெல்லாம் இங்கே இடமில்லை சீனியர் படித்தவர்கள் இருக்கின்றார்கள் என்று சொல்லிக் கையை விரித்து விட்டார்கள். என் செய்வோம் ஐயா!" என்று இரந்தார்கள். "பயப் படாதே யுங்கள் இனி அவர்களின் தமாசுகள் எல்லாம் ஆடாது. இவ்வருஷம் உங்களையும் எடுக்கச் செய்கின்றேன். சந்தோஷமாய்ப் போய்ப் படியுங்கள்" என்று தட்டிக் கொடுத்து அனுப்பினேன்.

அடுத்தநாட் காலை கண்ணைத் துடைத்துக்கொண்டு எழும்பினதும் பெரிய பெரிய புஸ்தகக்கட்டுகளுடன் நூற்றுக்கு மேற்பட்ட கொஞ்சம் வயது சென்ற மனிதர்கள் மிகுந்த ஆத் திரத்துடன் உள்நுழைந்து, "ஐயா! இப்புஸ்தகங்கள் யாவையும் உங்கள் முன்னிலையில் அக்கினி பகவானுக்குப் பரிசளிக்கப்போகின்றோம் என்ன சொல்கின்றீர்கள்" என்று படபடத் தார்கள். எனக்கு விஷயமொன்றுமே புரியவில்லை. கொஞ்சம் பொறுங்கள். அவைகள் என்ன புஸ்தகங்கள் என் று விநயமாய்க் கேட்டேன்.

நன்னூல், தொல்காப்பியம். நேமிநாதம், யாப்பருங்கலம், தண்டி, என்று ஒரே கூச்சல் கிளம்பிற்று, "நல்ல விலைக்கு விற்கலாமே. ஏன் அவைகளை நெருப்பிற் போடுகிறீர்கள்" என்றேன். "அப்படியாயின் எடுத்துக்கொண்டு பணத்தைத் தாருங்கள். யார் இவைகளை வாங்கப்போகின்றார்கள். நீங்கள் தானே இலக்கணப் பாடத்தைத் தள்ளிவிட்டீர்கள். நாங்கள் எல்லாம் பண்டிதர்கள் என்று இருந்து என்ன பிரயோசனம். யார் இலக்கணம் கற்கப் போகின்றார்கள். எங்களைக் கண்டதும் பள்ளிக்கூடப் பசங்களெல்லாம் பண்டிதர்! பூனை எத் தனை குட்டி ஈனும். வண்ணாத்திப் பூச்சிக்கு எத்தனை கால். பாம்புக்கு எத்தனை வாய் என்று பிராணணை வாங்குகிறார்கள். என்ன ஐயா உங்கள் கொடுமை!" என்று கடுகடுத்தார்கள்.

மிஸ்டர் பூரணம் "பாடசாலைகளிலெல்லாம் இலக்கணம் கட்டாய பாடமாய்க் கற்பிக் கப்படவேண்டுமென்று குறித்துக்கொள்ளும்" என்றேன். பண்டிதர்களை ஏன் பேசுவான். ஒவ் வொரு புஸ்தகம் எனக்கு இனாமாகத் தருவார்கள் போற காணப்பட்டது.

இவர்களை அனுப்பியதும் ஒரு கூட்டம் சனம் கையில் சிதைந்த செடி, கொடி, இலை, குழை, பூ, காய், பழங்களோடு விறுவிறு என்று உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் ஆத் திரத்தைக் கண்ட பூரணம் உயிரை எங்கோ அனுப்பிவிட்டவர் போலிருந்தார். வந்தவர்கள் என்னை அலட்சியமாய்ப் பார்த்தபடி "இது தானோ உங்கள் பள்ளிக்கூடப்படிப்பு. பொடி யங்களைப் கூப்பிட்டுச் சட்டம்பிமார் எல்லாரும் தோட்டத்திலே நடுகிற கண்டுகாலிகளை யெல்லாம் பிடுங்கச்சொல்லி விடுகிறார்கள் போலிருக்கிறது. கண்டுகளைப்பிடுங்கி வேர் அப்பிடி, பூ இப்பிடி என்று அழித்துப்போடிறாங்கள் பையன்கள்" என்று சீறினார்கள். நாட்டு ஜீவன சாஸ்திரப்படிப்புச்செய்யும் அழிவைக் கண்டுகொண்டேன். அவர்களை ஒருவகையாகச் சாந்தப்படுத்தி அனுப்பினேன்.

கடைசி நாள் கொஞ்சம் நாணய உடையணிந்த எட்டுப் பத்துப் பேர் வரையில் வந்தார்கள். கொட்டாப்புளி போலநின்ற ஒருவர் "வி ஆர் தி டிறேயினிங்" என்று தொடங்கவும் "சட்" நிறுத்தும், ஆங்கிலத்தை நல்ல செந்தமிழிற் பேசும்" என்றதும், "நாங்கள் ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்கள்" என்றார்கள். ஒகோ நல்லதும் உங்களைக் காணவில்லையே என்றிருந்தேன். ஒருபடி வந்து விட்டீர்கள். நீங்கள் தமிழ்க் கல்விக்குப் பெரிதும் கொடுமை செய்கிறீர்கள். தமிழ் படித்த மாணவர்கள் எத்தனை பேர் தெருவிற் திரிகிறார்கள். பண் டிதர்களை நீங்கள் முற்றாகப் புறக்கணிக்கிறீர்கள். விவாகம் செய்யாத ஆண்களைப் பெண் பிள்ளைகளைக் கற்பிக்கும்படி விடுகின்றீர்கள். சம்பளத்திற்காக நீங்கள் மாரடிக்கிறீர்களேயல் லாமல் தமிழுக்காக நீங்கள் உழைக்கவில்லை. வருகிற கவுன்சிலுக்கு உங்களில் எத்தனை பேர் போக விரும்புகிறீர்கள். நான் போய்ப் புதிதாக உங்கட்கு ஒரு "சேக்குளர்" அனுப்புவேன். போய் வாருங்கள் என்று அவர்களின் ஒருவார்த்தையையும் எதிர்பாராது அனுப்பிவிட்டேன். எனது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு ஆபீசில் வேலை தொடங்கியதும் ஒரு சுற்றுநிருபம் பாடசாலைகட்கு அனுப்பினேன்.

பின்வரும் விஷயங்கனை நீங்கள் எதிர்பார்த்தேயிருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

1. ஆசிரிய கலாசாலைகளெல்லாம் இன்னும் ஒருவருஷத்திற்குள் மூடப்படல் வேண்டும்.
2. தனித் தமிழ் கற்றவர்கட்கு விசேட மரியாதை காட்டப்படல் வேண்டும்.
3. நாட்டுச் ஜீவன சாஸ் திரக் கல்விநீக்கப்படல் வேண்டும்.
4. பெண் பாடசாலைகளில் ஆண்களும் (கல்யாணம் பண்ணாதவர்கள் கட்டாயமாக) ஆண்பாடசாலைகளில் பெண்களும் கற்பிக்கக்கூடாது.
5. பயிற்சிமாலை, சரித்திர வினாவிடை முதலிய மாணவரின் விரி ந்த அறிவைக் குறுக்கும் புஸ்தகங்கள் நீக்கப்படல் வேண்டும்.
6. சுதேசிகளைப் பிறதேசத்தவர் படிப்பிக்கக்கூடாது.
7. ஆங்கிலம் கற்றவர்களுக்குத் தமிழ் ப்பாடசாலைகளில் இடம் கொடுக்காது அவர்களைத் தெருவில் அலைய விடவேண்டும். -

இச் சுற்று நிருபத்தைக் கண்ட தும் அநேகர் என்ன பாடு பட்டிருப்பார்கள் என்று எண்ணுகின் றீர்கள். மாதம் முடிந்ததும் ஈராயிரம் ரூபாவுக்கு என் சம்பளத்திற்காக ஒரு செக் வந்தது. கையொப்பம் வைத்து மாற்றுவதற்காகப் "பியூன் பியூன்" என்றேன். "நேரம் போய்விட்டது. மணி மூன்றாகிவிட்டது புகையிலைக் கன்றுக்குத் தண்ணீர் வார்க்கப் பியூனையா கூப்பிடு கின்றீர்கள்" என்று கடுகடுத்துக்கொண்டு என் மனைவி என்னை எழுப்பினாள். மத்தியான நித்திரையின் வேகத்தைப் பாருங்கள்.

அவன் ஒரு உன்மத்தன்

சுயா

அவன் ஒரு வெறும் பைத்தியம்; வெயில், மழை, மாரி கோடை, இரவு பகல் என்று அவனுக்குப் பேதாபேதமில்லை. எங்கும் போவான், எங்கும் வருவான், எந்நேரமென்றாலும் அவனுக்குக் கவலை கிடையாது. பருக்கைக் கற்களென்றாலும், பஞ்சணை மெத்தையென்றாலும் அவனுக்கு ஒன்றுதான்; இன்பம், துன்பம், பசி, தாகம், சுகம் துக்கம் இவை ஒன்றும் அவனுக்கில்லை; உண்டானால் உண்பான், இல்லையென்றால் அவன் அதைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டான்; திறந்த வெளிகளிற் சிலவேளை திரிவான்; பாழடைந்த கொத்தளங்களிற் படுத்துறங்குவான், நல்ல பட்டினங்களிற் சில வேளை காணப்படுவான்.

எந்நேரமும் அவன் வாயிலிருந்து பாட்டுக்கள் வந்தபடியேயிருக்கும், தங்கக் கம்பியை அடித்து உருட்டி அச்சிற் கோத்திருந்தது போலிருக்கும் அவன் குரல், தூரத்தில் அவன் வருகின்றான் என்பதை அருவி நீர் போலத் தெளிந்த அவன் குரலினின்றும் உண்டாகும் பாட்டின் ஓசையே முன்கூட்டி அறிவித்துவிடும். அவன் குரலும்

அதினின்றுண்டாகும் அவன் கவிதைகளும் மது மயக்கத்திலிருக்கும் பேதைகளையும், ஞானமயக்கத்திலிருக்கும் யோகிகளையும் காதல் மயக்கத்திலிருக்கும் போகிகளையும் விழிக்கச் செய்துவிடும். சிலநேரம் சீட்டியடித்துக் கொண்டு வருவான். சில நேரம் மெல்லிய குரலிற் பாட்டிசைத்துக் கொண்டுவருவான், யாருடனும் அவனுக்குப் பேயசில்லை, யார் எது பேசினாலும் அவனுக்கு அதைப் பற்றி ஒன்றுமில்லை. சிலர் பயித்தியக்காரன என்பார்கள், சிலர் கவிஞன் என்பார்கள், அவனுக்கு இரண்டும் ஒன்றுதான். "ஒரு பாட்டுப்பாடு" என்று ஆயிரம் பொன் வைத்தாலும் அவன் பாடுவதில்லை. தான் எண்ண வேண்டும்; தன் மனதிற் குஷி பிறக்கவேண்டும்; அப்போது பார்க்க வேண்டும் அவன் கவிதைகளை! வான முகட்டை எட்டி ஆகாய வெளியிற் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் அவன் குரலோசை. பிறர் கஷ்டப்பட்டுக் கட்டிய கவிதைகள் அவனுக்குப் பிடியாது. செய்யுள் இலக்கணம் அவனுக்குத் தெரியாது. எதுகை மோனைகளை அவன் அறியான்; என்னவோ பாடுகின்றான்; அவ்வளவும் புலவன் வாய்ச் சொறகள்தான்! இயற்கைப் பிரகிருதிகளே அவன் கவிதைகளுக்கு இலக்காயிருக்கும். அவன் பார்த்து மகிழுபவைகளில் பிறர்க்கு மகிழ்ச்சி தோன்றாது. ஒருவரும் ஒன்றும் கண்டுபிடிக்க முடியாதவைகளில் இவன் என்னதான் கண்டுவிடுகின்றானோ தெரியாது!

அவனுக்குச் சாதியில்லை, சமயமில்லை, பெரியவர் சிறியவர் என்றில்லை. எல்லோரும் அவன் பார்வையில் ஒன்றுபோலவே. அவனுக்கு யாரிலும் அன்பில்லை, ஆனால் அவனுக்கு வெறுப்பானவர்களுமில்லை; அவனைக் காணவேண்டுமென்று எல்லோருக்கும் ஆசை; அவன் வருகின்றான். நான் முந்தி, நீ முந்தி என்று எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொள்வார்கள். ஆனால் அவன் யார் வீட்டுக்கும் போகான்; எது கொடுத்தாலும் வாங்கியுண்பான்.

அவன் தங்கநிற மேனி, பூரண சந்திரன்போன்ற களங்கமற்ற முகம், பருத்துத் திரண்ட புயம், எண்ணெய் சீப்புக் காணாது சுருண்டு தொங்கிய கேசம், இவைகளில் மருளாத பெண்களே கிடையாதெனலாம். என்றாலும் அவனுக்கு மருட்சியில்லை; காதலில்லை.

சிறிசில் அவன் என்னோடு கூடப் பள்ளியிற் படித்தான்; என்னோடு வளர்ந்தான்; என்னோடு விளையாடினான்; கடைசியில் என் மனதையும் கொள்ளை கொண்டு விட்டான். முடிவில் அவன்இப்படிப் பயித்தியகாரனாய்ப் போய்விடுவானென்று நான் கண்டேனா? என் காதலை அவன் உணரவில்லை; உணரத்தக்க அறிவும் அவனுக்குக் கிடையாது, காதல் என்பது என்னவென்றே அவன் அறியான்; அவனுக்கு எல்லாவற்றிலும் காதல். சோலைகள், புஷ்பங்கள், நீரோடைகள், அடர்ந்து நெருங்கிய காடுகள், அவைகளில் துள்ளிவிளையாடும் மிருகங்கள், உல்லாசமாய் வானிலுலாவும் பட்சிகள், உயர்ந்து வானை முட்டிய சிகரங்களையுடைய மலைகள் யாவும் அவன் காதலிகள். நான் அவனை எண்ணி எண்ணி வாட, அவன் இவைகளின் மேற்காதல்கொண்டு உன்மத்தனாய்த் திரிகின்றான். அவைகளில் ஒன்றுதானே நானும் அவனுக்கு. கேவலம்! உலக நடைமுறையில் அவன் என் கணவனல்லத்தான். ஆனால், அவன் என்னால், என் உள்ளத்தினால் வரித்துக் கொள்ளப்பட்ட கணவன். அவனைக் காணாதபோதெல்லாம் நீரின்றி வாடிய பயிர்போலாய் விடுகின்றது. என்னுள்ளம். அவனைக் கண்டுவிட்டாலோ அன்றலர்ந்த ரோசா மலர் போல் அது மர்கிக்னறது. இதை அவன் உணர்வதுமில்லை; உணரச் சக்தியுமில்லை அவனுக்கு. எப்போதேனும் வருவான். விரும்பியபோது ஒன்றும் பேசாது புறப்பட்டு விடுவான்.

சிலவேளை உச்சி வெயிலில் வியர்க்க வியர்க்க வந்து சேருவான்; சில வேளை அர்த்த சாமத்தில் வந்து கதவை இடிப்பான்; காலம், அகாலம் என்று ஒன்றையும் அவன் யோசிப்பதில்லை. வந்ததும் வராததுமாக "லீலா (என் பெயர் வேறு. இது அவன் என்னை அழைக்கும் செல்லப்பெயர். யார் சொல்லிக் கொடுத்தார்களோ தெரியாது) தாகத்துக்கு ஏதும் கொடு" என்பான்; அறுசுவை உண்டி கொடுத்தாலும் சரி, வெறும் கஞ்சி கொடுத்தாலும் சரி, சந்தோசத்தோடு மடமடவென்று உண்பான்; முடிந்ததும் ஒரு நன்றியான வார்த்தையோ ஒன்றோ ஒன்றுமில்லை; சிரித்துக் கொண்டு பாட்டிசைத்துக் கொண்டு வெளியிற் போய்விடுவான். "சங்கர்! (அது அவன் பெயர்) நல்ல கும்மிருட்டு; பேய் பிசாசு: வெளியிற் போகாதே" என்று தடுப்பேன். "பேய் பிசாசா!" என்றுவிட்டுக் கலகலவென்று சிரிக்கும் தொனியும் அதைத் தொடர்ந்து பாட்டும் தூரத்தே கேட்கும். அவன் போய்விடுவான். ஒருமுறை அவன் போய் விட்டானோ மறுமுறை எப்பொழுது வருவானோ என்று என்னுள்ளம் அவனைத் தேடியலையும்.

எத்தனை நாளைக்கென்று என்னுள்ளக் கிளர்ச்சியை, என் காதலை மறைத்து வைப்பது! ஒருநாள் "சங்கர்! நீ என்னைப் பயித்தியக்காரியாக்கி விடுவாய்போலிருக்கின்றது, நானுன்னை காதலிக்கின்றேன்; என்னை ஏற்றுக்கொள்" என்று நாணம், வெட்கம் ஒன்றையும் பாராது அவனிடம் மனம் விட்டுக் கூறிவிட்டேன். அவன் வாயிலிருந்து என்ன விடை வருமோ என்று அங்கலாய்த்தேன். அவனோ சட்டென்று "காதலா!" என்றுவிட்டுக் கலகல என்று நகைத்தான்; அதோடு எழுந்தும் போய்விட்டான். இவன் செய்கை ஆயிரம் ரம்பங்களைக் கொண்டு ஏக காலத்தில் என்னுள்ளத்தைப் பிளப்பது போன்றிருந்தது. ஆனாலும் அந்தப் பயித்தியகாரனின் மேற்கொண்ட காதலை மறக்க முடியாமலிருக்கின்றது. அவன் என்னைக் காதலிக்காமலிருக்கட்டும்; என்னை வெறுத்துவிட்டாலும் விடட்டும்; என்றாலும் அவன் குழந்தை முகத்தையும் அவன் இன்னிய கவிதைகளையும் காணாமலும், கேட்காமலும் என்னால் இருக்க முடியவே முடியாது. அவைகளுக்காகத்தான் நான் உயிர் வைத்திருக்கிறேன். அவனிடத்திலிருந்து அவைகளைக் கூட நான் பெற்றுக் கொள்ளாவிட்டால் என் திக்கற்ற உள்ளத்துக்குத் துணையேது!

அநேக நாட்களுக்குப் பின் நேற்றுத்தான் வந்தான்; சில நிமிசங்கள் வரை இருந்தான்; பின் மெல்லிய சீட்டியடித்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்; மறுபடி எப்போது வருவானோ தெரியாது.

◆◆◆

உனக்கு வியாதி வந்துவிட்டால் தைரியத்தைவிடாதே. குணப்படாதென்று நினைக்காதே. கடைசிவரையில் பிழைக்க முடியுமென்றே எதிர்பார். வைத்திய உதவிகள் ஆனவரையில் செய். பூரண சுகம் தந்தருமாறு கடவுளை நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்.

ஈழகேசரி
13.04.1941

சந்திரவாசா

திரு. எஸ். நல்லையா (சுயா)

மலேயா தீபகல்பத்தின் தலைநகரமாகிய சிங்கப்பூர்த் துறைமுகத் தினின்றும் புறப்பட்ட "தகமாட்ஸ்" என்ற யப்பானிய கப்பல், கடலைக் கிழித்துக் கொண்டு அலைமேல அலையாகத் தலைவைத்து இலங் கைத்தீவை நோக்கி வந்துகொண்டிருந்தது.

"சிலோன் இன்னும் ரொம்பத்தூரமா அப்பா?" என்று கொஞ்சும் குரலிற் தன் தந்தையை நோக்கிக் கேட்டாள் பதினெட்டு வயது என்று மதிக்கத்தக்க ஓர் அழகிய சிறுமி.

"இல்லைமகளே; இன்னும் ஒருநாட் பிரயாணம் தான்; நாளைக் காலை எட்டுமணிபோல் கொழும்புத் துறைமுகத்தைக் கப்பல் பிடித்து விடும்" என்றார் அவள் தந்தை.

"அப்படி எண்டாப்பா...?"

"ஐஞ்ஞாறு மைல் வரையில் இருக்கும்"

2

மலேயாவில் பிரபல தனவந்தராய், ஏராளமான றப்பர்த் தோட் டங்களுக்குச் சொந்தக்காரராய் இருந்து தங்கள் சுயநாடு நோக்கிச்

செல்பவர்கள் தான் மேற்கூறிய பிரபுவும் மகளும். பிரபுவின் பெயர் ராமானந்தர், அவர் மகள் விஜயலட்சுமி. விஜயலட்சுமி சிறுமியாய் இருக்கும் போதே தன் தாயை இழந்துவிட்டாள். பிரபு அவளைத் தன் கண்ணின் மணியைப் போலப் பாது காத்து வந்தார். காற்று வாங்குவதற்காகப் பிரபுவும் மகளும் மேற்தட்டில் வந்து நின்ற போதுதான் மேற்கூறிய சம்பாஷணை தகப்ப னுக்கும்; மகளுக்குமிடை யில் நடந்தது.

மேற்தட்டில் இருவரும், மலேயாவில் தாங்கள் நடத்திய சீவியத்தைப் பற்றியும், இந்திய கூலிச் சனங்கள் வேலை முடிந்தபின் மாலை நேரங்களில் நன்றாகக் குடித்து விட்டு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொள்ளும் மாதிரியைப் பற்றியும் நொண்டிக் கங்காணி, மாரியப்பக் கவுண்டன் தன் சுயதேசத்தவரென்றும் பாராது கூலிச் சனங்களை மிலாறு கொண்டு தாக்கும் கொடுமையைப் பற்றியும், கூலிப்பெண்கள் அன்று பிறந்த பச்சைக் குழந்தைகளைக் கூட முதுகிற் போட்டுக்கொண்டு பால் எடுக்கப்போகும் ஏழ்மை நிலையைப் பற்றியும், வேலைக் கார முனியன் தான் வளர்த்த கோழிக்குஞ்சுகளைப் பிடித்துக் கொண்டு போகும், பூனையைப் பிடிக்கும்படி வைத்த சுருக்கில், அவனின் ஆடு அகப்பட்ட கேலிக் கதையைப் பற்றியும், சீன ரின் , யப்பானியரின் விளையாட்டுப் பொம்மைகள், வங்காளிகளின் தாடி, இந்தியரின் கூத்து என்று இன்ன பலவற்றைப் பற்றியும் சம்பாஷித்துக் கொண்டு நிற்கும் போது, ஒரு பிரமாண்ட மான அலைவந்து கப்பலை ஒரே குலுக்குக் குலுக்கிற்று. அதே வினாடி குளுக்கென்று கடலில் ஒரு வஸ்து விழும் சப்தம், அதைத் தொடர்ந்து “ஐயோ” என்று ஒருவர் ஓலமிடும் ஓசை. இவைகளுக்கிடையே இன்னொரு வஸ்துவும் தொப்பென்று கடலுள் விழுந்தது. உடனே மேற் தட்டில் எல்லோரும் கூடிவிட்டார்கள். எங்கும் அமளி; எல்லோரும் கட லையே ஆவலோடு நோக்குகின்றார்கள்; அதோ கடல்மச்சம்; பயமில்லை. பயமில்லை... எறியுங்கள் கயிற்றை...எறியுங்கள் கயிற்றை... என்று கப்பல் அதிகாரிகளின் ஆரவாரம்... இப்படியிருக்க, ஒரு வாலிபன் கடலில் விழுந்த பிரபுவின் மகளை முதுகில் ஏற்றிக் கொண்டு, கயிற்றின் மூலம் மேற்தட்டுக்கு வரவும். “ஐயோ மகளே” என்று கொண்டு பிரபு மகளை ஏந்திக் கொண்டார். வாலிபன் தன் செய்கையை ஒரு பொருளாய் எண்ணாதவன் போற தன் இருப்பிடத்திற்குப் போய்விட்டான். டாக்டர்கள் சிகிச்சையின்பின், பெண் மூர்ச்சை தெளிந்து விட்டாள். பின் பழையபடிஅமைதி. இவைகள் யாவையும் மறந்தது போலக்கப்பலும்ஓடிக்கொண்டிருந்தது.

3

பிரபு ராமானந்தர் தன் முன்னின்ற கப்பற் சிப்பந்திகளைப் பார்த்து, “அவ்வாலிபன் யார்? அவனை நான் காணவிரும்புகின்றேன்;அவனுக்கேற்ற சன்மானம் செய்யவேண்டும்” என்றார்.

“பிரபோ! அவன் ஒரு தமிழ் வாலிபன். ஐந்து வருஷங்களுக்கு முன் எங்கள் கப்பலில் வந்து சேர்ந்தான். எந்தப் புயல்காற்றையும் லட்சியம் செய்யாது கடலிற் குதித்து நீந்துவதில் சமர்த்தன். அதனால் அவனைக் கடல் மச்சம் என்று அழைத்து வருகின்றோம். இப்படியே கட லிற் தவறிப் போபவர்களைக் காப்பாற்றுவதுதான் அவன் வேலை. இதற்காக அவன் யாரி டத்திலும் எவ்வித உபகாரங்களையும் விரும்பியது கிடையாது. எங்கள் கம்பனியார் அவனின் திறமைக்காக ஏராளமான பணம் கொடுத்து வருகின்றார்கள். இந்தக் கப்பலில் கற்பித்தானுக்கு அடுத்தபடியான மரியாதை அவனுக்குத்தானுண்டு. அவன் கப்பலின் முகட்டிலேயே இருந்து

கொண்டு, யாரேனும் கடலிற் தவறிவிடுகின்றார்களோ என்று கவனித்துக்கொண்டே இருப்பான். இப்போதும் அங்கேதான் இருப்பான். தங்கள் விருப்பத்தை அவனுக்கு அறிவிக் கின்றோம்" என்று கூறிக்கொண்டு சிப்பந்திகள் ஓடினார்கள்.

சிறிது நேரத்தின்பின் வாலிபன் ஆடம்பரமில்லாமல் மிகு பணிவோடு பிரபுவின் முன் வந்து ஐம்பதினாயிரம் ரூபாவை அவர் முன் வைத்து "ஐயா இது என் தந்தையால் தங்களுக் குச் செலுத்தப்பட வேண்டிய கடன்தொகை; இதை ஏற்றுக்கொண்டு என் தந்தையை விடுவிக்க வேண்டும்; இலங்கைக்குப் போய் மலேயா திரும்பியபின், உங்களை, வந்துகண்டு என் தந்தையை விடுவிக்கலாம் என்றிருந்தேன்;அதற்கிடையிற் தாங்கள் புறப்பட்டு விட்டீர்கள்; மன்னிக்கவும்" என்று வணங்கி நின்றான் வாலிபன்.

"யார் இது? சந்திரனா...? என்று பிரபு வியப்போடு வாலிபனை நோக்கினார். விஜய லட்சுமியையோ நன்றி கலந்த முகத்தோடு சந்திரனை விழுங்கி விடுபவள்போல இமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தாள்.

4

விஷயம் என்னவென்றால்:- மலேயாவில் ராமானந்தரும் சந்திரனின் தந்தையும் கூட்டாளிகள். இரத்தினவேல் (சந்திரனின் தந்தை) ஒரு பிரபல வியாபாரி. வியாபாரத்தில் ஒரு கப்பல் கடலில் ஆழவே, பெருநஷ்டம் அடைந்து பின், ராமானந்தரிடம் ஐம்பதினாயிரம் ரூபா கடன்பட்டு வியாபாரம் செய்து வந்தார். கெட்ட காலம் அதையும் நஷ்டமடையவிட்டுத் திக்கற்ற வராக இருக்கும் போது, ராமானந்தர் நண்பன் என்றதையும் பாராது இரத்தினவேலைக் கடனுக்காகப் பதினைந்து வருஷச் சிறைவாசமும் அடையும்படி, செய்து விட்டார். அப்போது சந்திரனுக்கு வயது பதினெழு. "என் தந்தையின் கடனை நீக்கி அவரைச் சிறையினின்றும் மீட்பேன்" என்று சபதம் செய்துகொண்டு சந்திரன் ஒரு யப்பானிய கப்பற் கம்பனியிற் போய்ச் சேர்ந்தான். ரத்தினவேல் தன் சிறைவாசத்துக்காகக் கவலைப்படாமல் தன் தாயில்லா ஒரே ஒரு குழந்தை எவ்வண்ணம் சீவிக்கப்போகின்றதோ என்ற கவலையுடனேயே சிறை போய்ச் சேர்ந்தார். அதன்பின் நடந்தவைகள் தான் மேற்கூறியவைகள்.

"என்னப்பா யோசனை ; பணத்தை எடுக்கப் போகின்றீர்களோ...?"

"இல்லை மகளே; அதைச் சந்திரனிடமே கொடுத்துவிடப் போகின்றேன்; இவன் உன் பள்ளிக்கூடத் தோழனல்லவா?"

"அதுதான் சரி அப்பா; அவர் என் உயிரைக் காப்பாற்றினாரே..."

"அதற்காக இதைக் கொடுக்கச் சொல்லுகிறயோ?"

"ஆம் அப்பா..; அதுகாணாது" இன்னும் ஒரு ஐம்பதினாயிரம் கூடக் கொடுங்கள்..." என்று புன்னகை புரிந்தாள் சிறுமி.

"ஐயா! அது கூடாது; நான் தந்தைக்கு மகன், அவரின் மரியாதையைக் காக்க வேண்டி யவனும் நானே; ஆகையால், அவரின் கடன்பழுவைத் தீர்த்து அவரை விடுவிக்க வேண்டிய வனும் நானேதான்; இதில் ஒரு சதமும் தொடேன்" என்றான் வாலிபன்.

"நாங்கள் ஏற்காவிட்டாலோ" என்று படபடப்புடன் கேட்டாள் சிறுமி.

"கோர்ட்டில் கட்டி என் தந்தையை விடுவிப்பேன்; தன் நண்பன் என்றதையும் பாராது உன்தந்தை என் பிதாவைச் சிறையில் வைக்கவில்லையா? பணக்காரருக்கு, அதுவும் பணத்தாசை பிடித்தவர்களுக்கு நண்பர்களும் சரி; சத்துராதிகளும் சரிதான்."

"சந்திரா! நான் செய்தது தப்புத்தான், அதை நான் அப்பொழுது உணரவில்லை. என்னை மன்னி ; நீ சற்குணன்; உத்தம புத்திரன்; உன்னைப் பெற்ற உன் தந்தையைப் போன்ற பாக்கியசாலிகள் உலகத்தில் வேறு யாருமில்லை; உன் விருப்படி என் பணத்தை ஏற்றுக்கொள்ளுகின்றேன். இப்பொழுது என் நண்பனை விடுவிக்கும்படி அறிவித்து விடுகின்றேன். ஆனால் நீ என்னிடமிருந்து ஒரு பிரதி உபகாரத்தையும் விரும்பாயோ?"

"இல்லை ஐயா; அவ்வகையான ஒன்றையும் நான் விரும்பேன்; இது என் தொழிலல்ல"

" அப்படியாயின் , நீ கடலில் இருந்து எடுத்த வஸ்துவையும் நான் ஏற்கத் தயாரில்லை; அதை நீயேதான் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று குறுஞ் சிரிப்புடன் சந்திரனையும் மகளையும் மாறி மாறிப் பார்த்தார் பிரபு ராமானந்தர். வாலிபன் முகம் மலர்ந்தது. அப்பாற் பேச அவர் நா எழவில்லை. சிறுமியோ நாணாத்தாற் தலை குனிந்து கொண்டு தன் தகப்பனின் தோற் மேற் சாய்ந்து கொண்டாள். ஆனால் இருவரின் கடைக்கண்களும் சும்மா இருக்கக் கூடியவைகளா? நல்ல யவ்வன தசைதானே.

அடுத்த வாரம் 'விக்டோரியா' என்ற ஆங்கிலேய அக்கப்பல் மலேசியாவிலிருந்து புறப்பட்டுக் கொழும்புத் துறைமுகத்தில் வந்து நங்கூரம் பாய்ச்சியது. ரத்தின வேலை வரவேற்க அவர் மகன் சந்திரன் ஓடி வந்தான். அவன் பின்னே ராமானந்தரும் விஜயலட்சுமியும் ஓடி வந்தனர். ரத்தினவேலும், ராமானந்தரும் முன்போலக் கூட்டாளிகளாகி விட்டனர். ஆனாற் சமானிய கூட்டாளிகளல்ல.

இப்பொழுது விஜய லட்சுமி என்ற ஒரு கப்பல் மலோயாவுக்கும், இலங்கைக்கு மிடையில் ஓடிக்கொண்டிருக்கின்றது. இதன் சொந்தக்காரன் சந்திரன் தான். பரோபகாரத்தமாக இக்கப்பல் ஓடிக்கொண்டிருந்தாலும் ஏராளமான வருவாயும் அதற்கு வந்து கொண்டி ருக்கிறது. பிரபு ராமானந்தர் தன் மருமகன் பெயரால் "சந்திரவாசா" என்ற ஒரு மாளிகையைக் கொழும்புப் பட்டினத்திற் கட்டப் போவதாகச் சொல்லிக் கொள்கின்றார்.

●

இவன் யார்?

திரு. S. நல்லையா (சுயா)

ஜெயராமன் கண்டியில் ஒரு தோட்டத்துப் பெரிய கங்காணி. வயது இருபத்தேழு வரையிற்தானிருக்கும். இவ்வளவு சின்ன வயதில் இவன் பெரிய கங்காணியானதையிட்டுப் பலருக்கு இவன் பேரில் உள்ளூர் எரிச்சல்தான். இவனுக்கும் அடுத்த தோட்டத்துக் கங்காணி வீரப்பனின் மகளுக்கும் விவாகம் செய்து வைக்கப்பட்டது. வீரப்பனிடம் கொஞ்சம் ஆஸ்தி உண்டு. ஜெயராமனும் அந்த நிலைக்கு வரக் கூடியவன்தான். இளவயதுதானே. ஜெயராமனை விவாகஞ் செய்து கொண்டதில் வீரப்பனின் மகள் பொன்னுக்கண்டுவுக்கு மிகுந்த ஆனந்தம். நல்ல அழகன். எண்பது ரூபா வரையிற் சம்பளம். மூன்று வருஷ காலம் இல்வாழ்க்கை இன்பமாய்ப் பறந்தது. இருவரும் கொஞ்சி விளையாட ஒரு பாலனும் உண்டு. இவ் இளம் குடும்பத்தின் வாயிலும் மண் விழவேண்டுமா? யாரோ கோள்சொல்லிகளின் சதியாக்கும். (பிரதானமாய்ப் பொன்னுக்கண்டுவின் சகோதரி புருஷன்தான். இவன்தான் கீழ்க்கங்காணி.)

ஒரு நாள் தோட்டத்துரை ஜெயராமனை அழைத்து நீ கூலிச் சனங்களோடு நடந்து கொள்ளும் வகை எனக்குப் பிடிக்கவில்லை. மூன்று

மாதச் சம்பளம் முற்பணமாகத் தருகிறேன். இன்றோடு வேலையை விட்டுவிடு என்று சொல்லி அனுப்பிவிட்டார். ஜெயராமன் நல்ல யோக்கியன். பிறர் பணத்தில் ஒரு துட்டையும் விரும்பாதவன். துரை இப்படிச் சொன்னதே இடிவிழுந்தவன் மாதிரியானான். என்றாலும் நான் வேறு துரையிடம் வேலை தேடிக்கொள்வேன் என்று தன் வல்லமையில் நம்பிக்கை கொண்டு வீட்டையடைந்தான். தன்மனைவிக்கு நடந்தவற்றைச் சொன்னான். பறுவா யில்லை. வேறு எங்கேனும் வேலை தேடுவதுதானே என்று மனைவி தேறுதல் கூறினாள்.

ஜெயராமன் வேலை தேடுவதில் பல மாதங்களைச் செலவிட்டான். இதற்கிடையில் துரை கொடுத்த இருநூற்றுநாற்பது ரூபாவும் முடிந்துவிட்டது. பொன்னுக்கண்டு "இப்படி நெடுக இருக்கிறியளே. நம்மபுள்ளை படிக்க என்ன பண்ணறது. சாப்பாடு சும்மாவருமா" என்று இடையிடையே முறுமுறுத்து வந்தாள். இதையெல்லாம் கின்டிவிடுகிறவன் பொன்னுக் கண்டு வின் சகோதரி புருஷன் இருளப்பன் தான். ஜெயராமனுக்குத் தன் மகனின் மேல் உயிர். பிள்ளை வருந்துவதை அவன் ஒரு போதும் சகியான். எங்கேனும் கடன்பட்டும் மகனுக்கு ஏதேனும் தீன்பண்டங்கள் வாங்கி வந்து கொடுத்துக் கொண்டேயிருப்பான். தன்னில் அன்பு கொண்ட மனைவியும் பணமில்லாதபோது தன்னை வெறுப்பதை அவன் உணராமலில்லை.

சிலவேளை ஜெயராமன் எங்கேனும் போனால் வெளியில் இரண்டு, மூன்று நாள் வரையில் நின்றுவிடுவான். பொன்னுக்கண்டுவும் தேடுவதில்லை. குழந்தைக்கு என்ன தெரியும். மூன்று வயதுப் பாலன்தானே. ஒருநாட் காலை வெளியிற் சென்ற ஜெயராமன் பொழுதுபட்டு ஒன்பது மணியாயும் வரவில்லை. பலபல தோட்டங்களுக்கும் சென்று வேலை விசாரித்தும் கிடைக்கவில்லை. இரவு பதினொரு மணியிருக்கும். சோவென்ற மழை நல்ல கும்பிருட்டு. இதைத்தான் புலவர்கள் தூங்கிருள் என்று சொல்வதாக்கும். ஒருகை அள்ளிக் கொள்ளக் கூடிய இருள். வானம் இடி இடித்துக் குமிறி மழை பொழியும் அவ்விருளில் ஜெயரா மன் எங்கிருந்தோ வீட்டிற்கு வந்தான். ஈர உடையை மாற்றிக்கொண்டு மகனை எடுத்து ஒரு முறை முத்தமிட்டு விட்டுக் கெஞ்சிய குரலில் "பொன்னு, பகல் முழுதும் வயிற்றுக்கொன்று மில்லை பசி உயிரைக் குடித்துவிடும் போல இருக்கிறது. கொஞ்சக் காப்பி தரமாட்டாயா" என்று தன் மனைவியை இரந்தான்.

"பகல் முழுதும் என்ன உத்தியோகமோ? எங்கையாலும் துலைஞ்சிடுவாய் எண்டாலும் துலையிறாயில்லை. உன்றை ஆக்கினை போதாதெண்டா உன் மகன்றை ஆக்கினையும். இந்த நேரத்திலை காப்பி வைச்சிடாக்கா உன்றை உழைப்பை இனிமே தராயாக்கும். பேசாமற் போய்த் தூங்கு. இல்லாரக்கா போய் வைச்சுக் குடி" என்று சீறிக்கொண்டு பொன்னுக் கண்டு மறுபக்கம் திரும்பித் தூங்கிவிட்டாள். இவ்வார்த்தைகளை ஜெயராமன் தன் மனைவி வாயிலிருந்து எதிர்பார்த்தவனேயில்லை. அவன் பசியெல்லாம் பறந்துவிட்டது. ஒரு மூலையிற் போய் படுத்துக்கொண்டு சிறிது நேரம் யோசித்தான். பின் மெதுவாய் எழும்பித் தன் தாயின் பக்கத்தில் நித்திரை செய்யும் தன் மகனை எடுத்து வந்து தன் அருகில் வளர்த்திக் கொண்டு ஆசைதீர முத்தமிட்டான். இப்படியே ஒரு மணி நேரம் முத்தமிட்ட பின் பித்துக் கொண்டவ னைப் போல வெளியிற் புறப்பட்டான். அழுதும் கண்படுக்கும் அந் நள்ளியாமத்திற் சென்றவன் பின் திரும்பவேயில்லை. பல நாட்களாயும் அவன் திரும்பாததைக் கண்ட பின்புதான் பொன் னுக்கண்டுவும் கவலைகொண்டாள். இனிக் கவலைகொண்டும் என்ன பயன்? குழந்தை தகப்பனைத் தேடும் போதெல்லாம் "அவன் செத்துப்புட்டான்" என்று சொல்லி வந்தாள்.

குழந்தை கருணாகரன் படிப்பில் மகா சமர்த்தன். பேரன் வீரப்பன் அவன் படிப்பில் கவனம் செலுத்தி வந்தான். பையனுக்கு இருபது வயதான போது அவன் ஒரு சர்வகலா சாலையிற் சேர்க்கப்பட்டான். சர்வகலாசாலையில் முதல் தரமாய்ச் சித்தியடைந்ததினிமித்தம் அரசாட்சியாரே அவனைச் சீமைக்குப் படிப்பிக்க அனுப்ப ஒழுங்கு செய்தனர். சீமைக்கவன் போவதற்கேற்ற சகல ஏற்பாடுகளும் நடைபெற்றன. பயணமாவதற்கு இரு நாட்களுக்கு முன் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. மேலுறையிலிருந்தே அது ஆபிரிக்காவிலிருந்து வந்தது என்று உணர்ந்து கொண்டு வியப்போடு கடிதத்தைப் பிரித்தான். அதில்,

"என்அருமை மகனே!

இற்றைக்குப் பதினெழு வருஷங்கட்கு முன் ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி போல் உன்னைப் பிரிந்து இவ் ஆபிரிக்க தேசத்திற்கு வந்தேன். அப்போது நீ மூன்று வயதுப் பாலன். சொந்தத் தேசத்திலே வேலை கிடையாததினிமித்தமும் உன் தாய் என்னை வரவரப் புறக்கணித்து நடத்தியதினிமித்தமுமே நான் இந்தத் தூரதேசத்துக்கு வர நேரிட்டது. உன் தாய் என்னைக் கொஞ்சமாவது அன்பாய் நடத்தியிருப்பனேல் உன்னை நான் ஒருபோதும் விட்டுப் பிரிந்திரேன். நான் இங்கு வந்தாலும் என் அருமை மகனாகிய உன்னை மறந்த தில்லை. கொஞ்சப் பணம் சேர்த்துக்கொண்டு ஊருக்குத் திரும்பவே எண்ணியிருந்தேன். இப்படியிருக்கும் போது உன் சிற்றன்னை இறந்து போனதாகவும் உன்தாய் உன் சிற்றப்பன் இருளப்பனோடு வாழ்ந்து வருவதாகவும் அறிந்தேன. என் மனக்கோட்டை இடிந்துவிட்டது. மகனே! இனி இவ் ஆபிரிக்க தேசத்திலே மண்ணோடு மண்ணாய்ப் போவதென்று தீர்மானித்துவிட்டேன். நீ சீமைக்குப் போவதாகப் பத்திரிகை மூலம் படித்தறிந்து கொண்ட பின்பே இக்கடிதத்தை உனக்கு எழுது கின்றேன். மத்திய தரைக்கடலில் போர்ட்செயிட் துறை முகத்தில் கப்பல் இரண்டு மணி நேரம் நிற்கும். இக்கடிதத்துள்ளிருக்கும் வான்கோழி இறகை நான் உன் அடையாளம் கண்டுகொள்வதற்காக உன் தொப்பியில் அணிந்துகொண்டு வா. உன் தாயோடு நேசமாயிரு.

உன் அன்புள்ள தந்தை
"ஜெயராமன்"

என்று எழுதியிருந்தது.

படித்த வாலிபனாதலில் அவன் சிறிது கலங்கிவிட்டான். தன் தந்தை இறந்தது பொய்யோ? அல்லது இது யாரேனும் வம்பர்களின் சூட்சியோ? என்று யோசித்துக் கொண்டே பிரயாணத்துக்குரிய ஏற்பாடுகளைச் செய்து வந்தான். இது உண்மையானபின் போர்ட்செயிட் துறைமுகத்திற் தந்தையைக் காணலாம் தானே என்று எண்ணிக்கொண்டு இச் சமாச் சாரத்தை யாருக்கும் வெளியிடாது பயணத்துக்குப் புறப்பட்டான்.

கருணாகரன் செல்லும் கப்பல் செங்கடலைக் கிழித்துக்கொண்டு மத்திய தரைக்கடலில் தலைவைத்து போர்ட் செயிட் துறைமுகத்தில் வந்து நின்றது. கருணாகரன் துறைமுகத்திற்கு ஆவலோடு ஓடினான். அங்குமிங்கும் ஆவலோடு பார்த்துக்கொண்டு நின்றான். வெகு நேரமாக ஒருவரும் அவனைத் தேடிவருவதாகக் காணவில்லை. கப்பல் புறப்படச் சிறிது நேரத்துக்கு முன் ஆபிரிக்கா உஷ்ண வெய்யிலால் கறுத்தும் விசனத்தால் வாடியும் ஓர் மனிதன் அவனிடம் வந்து உன் தந்தை இதை உன்னிடம் கொடுக்கும்படி கூறினார். நீர்

தானோ கருணாகரன் என்று சொல்லிக்கொண்டு ஓர் பார்சலை அவனிடம் கொடுத்தான். கண்ணிலும் இரண்டொரு துளிநீர் துளித்தது. "நான் தான் கருணாகரன். தகப்பன் எங்கே" என்று ஆவலுடன் கேட்டான்? அவர் இதிலிருந்து 150 மைல் தூரத்தில் நோயாய்ப் படுத்திருக்கிறார். நீர் சீமையிலிருந்து சுகமாய்த் திரும்பும் போது காணுவதாகவும் கூறினார் என்று சொல்லிக் கொண்டு மனுஷன் திரும்பிவிட்டான். அம்மனுஷன் துறைமுகத்தைக் கடந்ததும் விம்மி விம்மி அழுதுகொண்டு போனதைக் கருணாகரன் கண்டாற்றானே.

கருணாகரன் ஆவலோடு கப்பலுள் தன்னறைக்குச் சென்று பார்சலைப் பிரித்தான். அதில் கொஞ்சம் பேரீச்சம் பழங்களும் இரு கடதாசிச் சுருள்களும் கிடந்தன. ஒரு சுருளைப் பிரித்தபோது பத்துப் பத்து ரூபாவாக இருநூறு ரூபா நோட்டுக்கள் இருந்தன. அதை ஒருபுறம் வைத்துவிட்டுக் கடிதத்தை ஆவலுடன் பிரித்துப் படித்தான்.

"என் செல்வ மகனே!

இப்பார்சலை உன்னிடம் தந்த துர்அதிஷ்டமுள்ளவனாகிய நானே உன் தகப்பன். உனக்கு விசனத்தை உண்டாக்கக் கூடாதென்றதற்காகவே நான் என்னை உனக்கு வெளிப் படுத்தவில்லை. இதில் இரண்டாயிரம் ரூபா வைத்திருக்கின்றேன். தந்தையாகிய நான் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாவிட்டாலும் இப்பணத்தை நீ அன்புடன் ஏற்றுக்கொண்டால் அதுவே எனக்கு மன ஆறுதலைத் தருவதாகும். நீ ஜெயமாய்த் திரும்பிவரும் போது நான் மறுபடியும் இத்துறைமுகத்திற் கண்டு சந்தோஷமடைவேன். சுகமாய்ச் சென்றுவா.

உன் துர்அதிஷ்டமுள்ள தந்தை
"ஜெயராமன்"

என்று எழுதியிருந்தது. கருணாகரன் துக்கத்தால் தன் அறையை மூடிப்படுத்துக் கொண்டான். சீமை செல்லும்வரை.

ஈழகேசரி ஆண்டுமலர் - 1936

படுகொலை

சு. நல்லையா (சுயா)

பாலியாற்றங்கரையில் ஐந்து ஏகரா விஸ்தீரணத்திற் சர்க்காருக்குச் சொந்தமான ஒரு சந்தனமரக் காடுண்டு. ஊரவர்கள் திருட்டுத்தனமாக வந்து, சந்தனக் கட்டைகளை வெட்டிக்கொண்டு போய் வியாபாரிகளுக்கு விற்றுப்போடா வண்ணம், சர்க்காரால் நியமிக்கப்பட்டு, இதைக் காவல் செய்பவன், பொடிசிங்கோ என்றவோர் சிங்கள வாலிபன். பொடிசிங்கோவுக்கு இருபது வயது வரையிலிருக்கும் புதிதாகத்தான் இக்காட்டுக்குக் காவலாளியாக வந்தவன் றொம்பத் துணிகரமுள்ளவோர் சிங்களச் சிறுவன் பகல் முழுவதும், அக்காட்டினுள்ளேயுள்ள குடிசையில் உறங்கிக்கொண்டு கிடப்பான். இராவானதும், துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டு காடு முழுவதும் சுற்றி வருவான் பேய், பிசாசு, பூதங்கள் என்றால் அவனுக்கு நம்பிக்கையில்லை. அப்படி யாரேனும் சொன்னால், "அவைகள் என்னோடு சீட்டாட வருமா?" என்று கேட்கக்கூடிய அத்தனை துணிச்சலுள்ளவன். இவனுக்கு முன், இந்தக் காட்டைக் காவல் செய்தவன், பீரிஸ் என்ற மற்றோர் சிங்களக் கிழவன் அவன் அறுபது வயதானதும், சர்க்கார் கொடுக்கும் பென்ஷனையும் வாங்கிக் கொண்டு, ஊரில் தன் குடிசையில் வசித்து வருகின்றான்.

II

கார்த்திகை மாதம் பதினைந்தாம் திகதி நடு இரவு பன்னிரண்டு மணிவரையிலிருக்கும் நல்ல இருட்டு மெதுவாக மழையும் தூறிக்கொண்டிருந்தது. அந்த நேரம், இருளிலேயிருந்து மற்றோரிருள் புறப்பட்டது போல, பொடிசிங்கோ தன் துப்பாக்கியையும் தோளிற் சுமந்து கொண்டு, காட்டைச் சுற்றி, யாரேனும் திருட்டுத்தனமாய் மரம் வெட்டுகிறார்களோவென்று, அங்குமிங்கும் கூர்ந்து பார்த்தபடி வந்து கொண்டிருந்தான். ஒரு இடத்துக்கு வந்ததும், "பட், பட்" என்று யாரோ நடுக் காட்டினுள்ளே மரம் வெட்டும் சத்தம் கேட்டது. பொடிசிங்கோவுக்குக் கோபம் பீறிட்டுக்கொண்டு வந்தது என்ன! என் காவலுக்குள்ளேயா இந்த வேலை? இவ்வளவு துணிச்சலுள்ளவனும் இந்தக் கிராமத்திலிருக்கின்றானா?" என்று எண்ணிக்கொண்டு, பூனை போல் பதுங்கி நாலடி முன்னுக்கு வைத்தான். மரம் வெட்டும் சத்தம் நின்று போய், "ஐயோ! கொலை! கொலை!!" என்று ஒரு அபயக்குரல் அதேயிடத்திலிருந்து புறப்பட்டுக் காடு முழுவதும் பரவிச் சென்றது. அப்பாற் பொடிசிங்கோவிற்கு ஒன்றுமே புரியவில்லை. துப்பாக்கியையும் முன்னுக்கு நீட்டிக் கொண்டு, ஒரே துள்ளில் அந்த இடத்தையடைந்தான். அங்கே அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது! ஒருவன் தலை வேறு, முண்டம் வேறாக இரத்த வெள்ளத்துள் பிணமாய்க் கிடந்து புரண்டான் இன்னொருவன். இரத்தம் தோய்ந்தவோர் கூரிய கத்தியுடன், காட்டினுள்ளே ஓடிக்கொண்டிருந்தான். பொடிசிங்கோ, ஓடும் கொலைகாரனைப் பிடிப்பதற்காக அவனைத் தொடர்ந்து ஓடிப்போனான். கொலைகாரன் அகப்பட்டாற்தானே! கடைசியாகத் தன் துப்பாக்கியாற் சுட்டும் பார்த்தான். ஆனால் கொலைஞன் அதற்குள் மாயமாய் மறைந்து விட்டான். பொடிசிங்கோவுக்குக் கொலைகாரனைத் தப்ப விட்டது ரொம்ப விசனம். சரி இனிக் கொலையுண்டவனையாவது கவனிப்போம்" என்று எண்ணிக் கொண்டு, அந்த இடத்துக்கு ஓடிவந்தான் அங்கே இறந்தவனாவது, கொலையின் அடையாளங்களாவது ஒன்றுமே காணப்படவில்லை. ஒருக்கால் இடத்தைத் தவற விட்டுவிட்டேனோ என்று எண்ணிக் கொண்டு, அந்த இருளில், அந்தக் காடு முழுவதும் துருவித் துருவி ஆராய்ந்து பார்த்தான். ஒரு இடத்திலாவது கொலையுண்டவனையாவது, கொலையின் அடையாளங்களையாவது அவனாற் கண்டு கொள்ளமுடியவில்லை. இச்செய்கை அவனுக்கு பெருத்த திகிலையும், அச்சத்தையும், ஆத்திரத்தையும் ஏககாலத்தில் மூட்டிவிட்டன. ஒருவனாக இக் கொலையைச் செய்யவில்லை. பலபேர் இதிற் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் இதில் ஒரு முடிவு காணாவிட்டால் நான் பொடிசிங்கோவா?" என்று எண்ணிக் கொண்டு எல்லாவற்றிற்கும் கிழவன் பீரிஸையும் கண்டு ஒருமுறை யோசனை கேட்போம் சிலவேளை அவன் காலத்திலும், இப்படியான செய்கைகள் நடந்திருக்கவும் கூடுந்தானே" என்று சிந்தித்தவனாய் இரவோடிரவாய்ப் பீரிஸ் வீட்டை நோக்கி நடந்தான்.

III

பொடிசிங்கோ பீரிஸ் வீட்டை அடையும் போது பொழுது புலர்ந்து விட்டது. கிழவன் பீரிஸ் ஒரு கணப்புச் சட்டிக்குப் பக்கத்தில் குளிர் காய்ந்து கொண்டிருந்தான். வாயில் ஒரு சுருட்டும் புகைந்து கொண்டிருந்தது. கிழவனுக்குப் பக்கத்திலே ஒரு கோரைப்பாயில், சிறுவனொருவன் இன்னும் குறட்டையடித்துத் தூங்கிக் கொண்டிருந்தான். அவன் தூங்கிய மாதிரியில், உலகம் கவிழ்ந்தாலென்ன! நிமிர்ந்தாலென்ன! என்று எண்ணிக்கொண்டு உறங்குபவன் போல

இருந்தது. அச்சிறுவன் கிழவனின் பேரன். பொடிசிங்கோ கிழவனின் குடிசையுள் நுழையுஞ் சமயம், பத்து வயதுச் சிறுமியொருத்தி ஒரு பாத்திரத்தில் காப்பி எடுத்துக்கொண்டு வந்து கிழவன் முன்வைத்து விட்டுப் போகும்போது பொடிசிங்கோவையும் ஒருமுறை விறைக்கப் பார்த்துக்கொண்டு சென்றாள். இதனர்த்தம் அவனுக்கு விளங்கவில்லை. அவள் பார்வையைக் கண்டு அவன் பயந்தே போனான். இவள் கிழவனின் மற்றோர் பேரப்பிள்ளை

பொடிசிங்கோவைக் கண்டதும் கிழவன் பீரிஸ், கணப்புச் சட்டியை அப்புறம் நகர்த்தி வைத்துவிட்டு, அவனை ஒரு இடத்தில் அமரச்செய்து, அடக்கமான குரலில், "என்ன மகனே இவ்வளவு தூரம்! முகமும் வெளிறினதுபோற் காணப்படுகின்றதே! இரவு நித்திரை இல்லையோ?" (என்றுவிட்டு பொடிசிங்கோ மறுமொழி கூறுமுன்னரே) "ஓகோ! மறந்து விட்டேன்! இரவு நடந்த கொலையைக் கண்டு பயந்து விட்டாயோ?" என்று கேட்டுக்கொண்டு, பொடிசிங்கோவின் முகத்தை உற்றுப் பார்த்தான். எவ்வளவு ஆச்சரியத்தோடும், திகிலோடும் பொடிசிங்கோ கிழவனிடம் வந்தானோ, அதிலும் பன்மடங்கு ஆச்சரியப்பட்டான் பொடிசிங்கோ, கிழவனின் இந்தக் கேள்வியால்.

"என்ன! நீங்களும் இதிற் சம்பந்தப்பட்டிருக்கின்றீர்களோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் பொடிசிங்கோ.

கிழவன் கொஞ்சநேரம் மௌனமாய் இருந்துவிட்டு, "இல்லை" என்று அழுத்தமாய்க் கூறினான்.

"பின்னை, கொலை நடந்தது உங்களுக்கு எப்படித் தெரியவரும்! இதில் என் சொந்தத் தகப்பனேயானாலும் நான் விடப் போகிறதில்லை"

"மகனே! கொஞ்சம் அவசரப்படாதே. நான் சொல்பவைகளைக் கேட்டபின், நீ செய்ய வேண்டியதை யோசி" என்று கிழவன் சொல்லி விட்டு ஒரு பெரிய பெருமூச்சோடு சொல்லத் தொடங்கினான்.

IV

"எனக்கு உக்கு பண்டா என்றோர் மகனிருந்தான் அவனுக்கு ஐந்து வயது நடந்து கொண்டிருக்கும்போதே அவன் தாய்... என் மனைவி... எங்களிருவரையும் ஆதரிப்பாரில்லாமல் விட்டுவிட்டு இவ்வுலகை நீத்து விட்டாள் தாயில்லாப் பிள்ளையென்று நானும் அவனை மிகுந்த அன்போடு வளர்த்து வந்தேன் பள்ளியில் வைத்துப் படிக்கவுஞ் செய்தேன் நான் எவ்வளவு அவனிற் பிரியமாய் நடந்து வந்தேனோ அவனும் என்னில் அத்தனை அன்பு காட்டி வந்தான் என் சொல்லை அவன் ஒருபோதும் தட்டி நடந்ததே கிடையாது. நல்ல புத்திரனைப் பெற்றேனென்று நானும் மகிழ்ந்திருந்தேன் இருபது வயதானபோது, அவனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து விவாகமும் செய்து வைத்தேன் ஏனோ தெரியாது அப்பெண்ணை மணந்துகொள்ள ஆரம்பத்தில் அவன் விரும்பவில்லை மகனே! தந்தை சொற் தட்டலாமா? என்று நான் பல முறையும் வருத்தத்தோடு கேட்டுவந்தபடியால் என்னைப் பிரியப்படுத்தும் நோக்கமாக அவளை விவாகம் செய்வதாக ஒப்புக்கொண்டான் மணமும் முடிந்தது. புருஷனும் மனைவியும் ரொம்ப இஷ்டமாகச் சீவித்து வந்தார்கள் இரண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்தார்கள் அவர்கள்தான் (சிறுவர்களைக் காட்டி) இச்சிறுவனும், அந்தப் பெண்ணும்

(இந்நேரத்திற் கிழவனின் கண்களிலிருந்து, கண்ணீர் வடிந்தது.) நானும் அவர்களின் குடும்ப சீவியத்தைக் கண்டு மகிழ்ந்திருந்தேன் குழந்தைகள் பிறந்த பின்பு, இடையிடையே புருஷன் மனைவிக்கிடையில் சச்சரவு நடப்பதாகப் பிறர் கூறுவதுண்டு இதை நான் ஆரம்பத்தில் நம்ப வில்லை. ஒருநாள் என் மகனை அழைத்து, நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா என்று விசாரித்தேன். பீதிரிஸ் என்ற ஓர் வாலிபன் அடிக்கடி தங்கள் குடிசைக்கு வருவதாகவும், அவனைப் பற்றித் தன் மனைவியைக் கேட்டபோது, அவன் தன் அண்ணன் முறையா னென்று அவள் கூறுவதாகவும், ஆனால், அவர்கள் சம்பாஷணைகளைப் பார்க்கும் போது, தனக்கு அவர்களிற் சந்தேகம் உண்டாகிறதென்றும், அவனின் உறவை விட்டுப்போடென்று தன் மனைவியிடம் கூறினால் அவள் அதைக் கேட்பதாயில்லையென்றும் என் மகன் என் னிடம் கூறினான். நானும் ஒருமுறை என் மருமகளை ..... அந்தக் கொடியவளை..... கண்டு வேண்டிய புத்திமதிகளை எல்லாம் சொல்லி வைத்தேன் சில நாட்களின் பின் என் மகன் மறுமுறையும் என்னிடம் வந்து, அவன் தன் வீட்டுக்கு அடிக்கடி வருவதாகவும், அதுவும் தான் இல்லாத சமயங்களிலேதான் அவன் அதிகமாக வந்து போவதாகவும், ஒருமுறை தானே தன் கண்களால் அவர்களின் கூடா ஒழுக்கத்தைக் கண்டுவிட்டதாகவும் எனக்குச் சொல்லி அழு தான் இதைக் கேட்டதும் எனக்கு இடிவிழுந்த மாதிரியாய் விட்டது. என் அருமைக் குழந்தைக்கு மீளாத் துயரத்தைத் தேடி வைத்து விட்டேனே என்று வருந்தினேன் கோட்டு மூலம் விவாக பந்தன நிவிர்த்தி செய்து கொள்வோம் என்று ஆறுதல் கூறி அவனை அனுப்பி விட்டு அதற்கான ஆயத்தங்களையுஞ் செய்து வந்தேன்"

"ஒருநாள் கார்த்திகை மாதம் பதினைந்தாம் திகதி பகல் பன்னிரண்டு மணி வரை யிலிருக்கும். என் மகன் மறுபடியும் என்னைத் தேடி வந்தான். அன்று அவன் சந்தோஷத் தோடிருப்பவன் போலக் காணப்பட்டான். அப்பா, நான் பீதிரிசோடு ரொம்பச் சினேகிதனாய் விட்டேன்" என்றுங் கூறினான். ஆனால் அவன் முகம் மாத்திரம் ஏதோ செய்யச் சங்கற்பம் செய்து கொண்டிருக்கிறானென்பதைத் தெளிவாய்க் காட்டிற்று. "மகனே!! புத்தியாய் நட" என்று மாத்திரம் நான் அன்று அவனுக்குச் சொன்னேன். அன்று என்னுடன் கூடவே மத்தியானப் போசனமும் உண்டான். போகும் போது என்றுமில்லாத மாதிரியாய், என்னைத் தாவிப் பிடித்து என் இரு கன்னங்களிலும் முத்தமிட்டான். (இதைச் சொல்லும் போது, கிழவனின் குரல் கம்மிற்று. விம்மி விம்மி அழுதான். பின் திடப்படுத்திக்கொண்டு) ஏனப்பா இதெல்லாம்" என்று கேட்டேன். யாதும் பேசாமல் என்னையே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு போய் விட் டான். அன்றிரவு எனக்கு நித்திரையே கிடையாது. பொல்லாத கனவுகளெல்லாம் கண்டேன். மூளை குழம்பிக்கொண்டு கிடந்தது.

மற்றநாள், அதாவது பதினாறாந் திகதி அதிகாலையில், ஒரு பொலீஸ் இன்ஸ்பெக்டரும், ஐந்து ஜவான்களுமாக என் குடிசையை நோக்கிச் சந்தனக்காட்டுள் வந்தார்கள். நான் நடுங் கிப்போய், "என்னையா சமாச்சாரம்?" என்று இன்ஸ்பெக்டரை நோக்கிக் கேட்டேன். "உன் மகன் உக்குபண்டா, பீதிரிஸ் என்பவனை இக்காட்டினுள்ளே வெட்டிக் கொலை செய்து விட்டா னாம்." என்று என்னைப் பார்த்து இரக்கத்தோடு கூறினார் இன்ஸ்பெக்டர். "யாரையா சொன்னார்கள்?" என்று படபடப்புடன் கேட்டேன் நான். அப்போது என் இருதயம் பிளந்துவிடும் போலிருந்தது. தலை திருகிருவெனச் சுழன்றது. ஏன்! உன் மகனே தான் கொலை செய்த கத்தியோடு பொலீஸ் ஸ்டேசனில் வந்து தன் குற்றத்தை ஒப்புக் கொண்டிருக்கிறான்" என்று

கூறிவிட்டு என்னையும் அழைத்துக்கொண்டு, கொலை நடந்த இடத்துக்குப் போனார்கள். ஐயோ! அங்கே நான் கண்ட காட்சி, என்னைப் பயித்தியக்காரனாக அடித்துவிடும் போலிருந்தது. பீதிரிஸ் தலை வேறு, முண்டம் வேறாக இரத்த வெள்ளத்தில் பிணமாய்க் கிடந்தான்."

"எதிர் வழக்காடலாம் என்று பிரயாசப்பட்டேன். ஆனால், என் மகனின் வாக்குமூலத்தைக் கேட்டபின், பிரயோசனமில்லை என்று விட்டு விட்டேன். "பீதிரிஸைச் சிநேகம்பண்ணி, களவாய்ச் சந்தனக்கட்டைகள் வெட்டலாம் வாவென்று அழைத்துக்கொண்டு போய், அவன் கட்டைகள் வெட்டும் போது, என் கத்தியால் ஒரே வெட்டில் தலை வேறு, முண்டம் வேறாக வெட்டினேன்" என்று வாக்குமூலங் கொடுத்திருந்தான். அவன் தூக்கு மேடைக்குப் போகும் போது, அப்பா என் பிள்ளைகள் உன் பொறுப்பு என்று கண்ணீரோடு என்னைப் பார்த்துக் கூறினான். இது நடந்து எட்டு வருஷங்களாகின்றன" என்று கிழவன் கதையை முடித்து விட்டு, "மகனே! பொடிசிங்கோ! அந்த இருவரும் அகாலத்தில் மடிந்தபடியால் அவர்களின் ஆவிகள் தான் ஒவ்வொரு வருஷமும் நடந்த அதே நாளில் தோன்றி மறைகின்றன. அவைகளையிட்டு நீ பயப்படாதே! அவை ஒன்றுஞ் செய்யா. நான் காட்டிலிருந்த காலத்தில் ஒவ்வொரு வருஷமும் அதேநாளில் மறைந்திருந்து, என் மகனின் ஆவிரூபத்தைக் காண்பதில் என் மனத்துயரை அடக்கி வந்தேன்" என்றான் கிழவன் பீரிஸ்.

"நான் இதை நம்பேன் ! ஒருபோதும் நம்பேன்" என்றான் பொடிசிங்கோ .

"நீ நம்பமாட்டாய்தான் ஆனால், என் மகனின் பெண்ணாகிய அக்கொடியவள், தன் சுற்றத்தாரோடு போய் வசிக்கின்றாள். அவளிடம் போய்க் கேள். சந்தனக் காட்டைப் பற்றிய சர்க்கார் தஸ்தாவேஜுகளையும் போய்ப் பார். அல்லது பொறுமையோடு அடுத்த வருஷமும் இந்த நாளிற் போய்ப் பார்" என்று சொல்லிவிட்டுக் கிழவன் தன் அலுவலாக எழுந்து போய்விட்டான்.

ஈழகேசரி ஆண்டுமலர் - 1936

யாழ்ப்பாணத்துப் பிரபல அப்புக்காத்து! அவரை உங்களுக்குத் தெரியுமா?

சுயா

நமது யாழ்ப்பாணத்திற் பற்பல வாலிபர்கள் இக்காலத்தில் "லோக் கொலீச்சிற்" படித்துப் பிறக்றர்மாராகவும், அப்புக்காத்து மாராகவும் "பாஸ்" பண்ணி வருகிறார்கள். இவர்களுட் பலபேர் கோடுகளிற் போய்க் கதிரைக்குப் பாரமாய் இருந்துகொண்டு "மோனமென்பது ஞான வரம்.." என்ற முதுமொழிக்கு இவர்களே இலக்கானவர்கள் என்று மற்ற வர்கள் சொல்லிப் புளுகத்தக்கதாகத் தமது திறமையைக் காட்டி விடு கிறார்கள். சிலர் மாத்திரம் ஏதோ "பீஸ்" (காசு) வாங்கிக்கொண்டு நீதிபதி யோடும் வருபரோடும் வாதமிட்டுத் தலையை உடைக்கிறார்கள். இவர்களுள் புகழும் புண்ணியமும் யாருக்கு அதிகமென்பதை வாசகர் கள் யோசிப்பார்களாக. நிற்க,

உத்தியோகப் பஞ்சம் வளரவளர இந்தப் புண்ணியத் தொழிலுக் காகப் படிப்பவர்கள் தொகையும் அதிகப்பட்டு வருகின்றது. இந்த இலங்கையிலே சில பேர் பெரும் பொருளும் புகழும் நிறைந்து அப்புக் காத்துமாராக இருக்கிறார்களால்லவா! யாழ்ப்பாணத்திலும் இரண்டொ ருவர் இருக்கிறார்கள்தான்! ஆனால் யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு

அப்புக்காத்துவைப் போல இந்த உலகத்திலே வேறு எவரும் இல்லையென்று சொல்லலாம். அவர் வாங்கும் "பீஸ்" அதிகமல்ல. அவரை வழக்குக்கு ஏற்படுத்துகில் வேறொரு பிறக்றராவது அறிந்த ஆட்களாவது தேவையில்லை! எவரும் தனியே ஏற்படுத்தலாம். இவரேற்பட்ட வழக்கு நிச்சயமாய் வெற்றியடையும்! ஆனால் இவரை ஏற்படுத்துபவர்களிடம் வாக்கு வன்மையிலும் பார்க்க மனவன்மையே மேலானதாய் இருக்கவேண்டும்.

இவருக்குக் காசிலும் பார்க்கப் பொருள்களைப் பீசாகக் கொடுத்தால் மிகவுஞ் சந்தோஷ மாம். அப்படித்தான் அவர்கள் செய்கிறார்கள். வழக்கிற் கேற்பட்டாலும் கோட்டினுள்ளே இவரை எல்லாருங் காண்பது கஷ்டம். வீட்டிலிருந்தே வழக்குகளை நடத்தி வெல்லுகிறராம்! இப்படியான அற்புதம் நிறைந்த அப்புக்காத்து இரண்டு பகுதிக்கும் ஏற்படுவதுதான் ஒரு பெரிய குறை. என்றாலும் அவரிலே குறைசொல்ல எனக்கு விருப்பமில்லை. வழக்காளி எதிரியாகிய இருபகுதியாகும். இவர் ஒரு பகுதிக்கு ஏற்பட்டிருப்பாரென்பதை முற்றாக அறிந்த பின்பும், இவரைத் தம் வழக்குக்கு ஏற்படுத்துகிறார்கள். இப்படியான பெருமையுள்ள அப்புக்காத்துவை, யாரென்று உங்களுக்குத் தெரியுமா? அவர் யாழ்ப்பாணம் "ரவுனிற்" தான் இருப்பவர். பொருள் வரும்படி பொதுவாகக் குற்றிமில்லையென்றாலும், இவரின் வீடு,வாசல் பெரிய டாம்பீகமானாதல்ல. அவரின் வீடு ஒன்றெயொன்றுதான். போட்டிக்கோலாவது விறாந்தை களாவது இல்லை. அவருக்கு மனைவியாவது மக்களாவது கிடையாது. இப்போது விளங்கு கிறதா? இவரை. இல்லையென்றால் இன்னுங் குறிப்புச் சொல்லுகிறேன் கேளுங்கள். யாழ்ப்பாணக் கோடுகளைப் பார்த்த படியே இவரின் வீடு இருக்கின்றது. வீட்டுத்திரைக்கு இன்னுமொரு நூதனம். இவரிடம் காணப்படுகிறது. மற்றைய அப்புக்காத்துமாருக்கு முதலி லேயே காசு கொடுக்க வேண்டும். இவருக்கு வழக்கு முடிந்த பின்பே கொடுக்கலாம். இப் போது உங்களுக்குத் தெரிகிறதுதானே. இவரை இன்னாரென்று.

இவர்கள் ம.எ.எ. ஸ்ரீமான். முனியப்பர் அப்புக்காத்து. இவர் யாழ்ப்பாணக் கோட்டைக் குக் கிழக்கே சமீபத்தில் ஒரு சிறு வீட்டில் இருக்கிறாரல்லவா? வழக்குப் பேசுவோர்க்களுள் அதிகமானோர் - வழக்காளிகளானாலுமென்ன - எதிரிகளானாலுமென்ன - ஒரு பெரிய ஆட்டுக்கிடாயோ அல்லது ஐந்து பத்துக் கோழியோ ஆயிரம் மோதகமோ இவருக்கு நேர்ந்து விட்டு வழக்கை நடத்துவார்கள். நிச்சயம் ஒரு பகுதி வெற்றி பெறுந்தானே. அப்பால் இவருக் குப் பூசை பொங்கல் பலி முதலியன கடத்தப்படும். ஆகவே இவரேற்பட்ட வழக்கு நிச்சயம் வெற்றி பெறுமென்று நான் மேலே கூறியதும் எழுதிய ஏனைய குறிப்புக்களும் உண் மைதானா என்பதை இன்னுமொருமுறை வாசித்து யோசித்துப் பாருங்கள். பொய்யென்று தாபிப்போர்களுக்குத் தக்க பரிசில் வழங்கப்படும்.

ஈழகேசரி ஆண்டுமலர்

S.ஸ்ரீநிவாசன் M.A

மறுமலர்ச்சி சஞ்சிகைக் கூடாக சிறுகதையுலகுக்குட் புகுந்தவர். இவர் தொடர்ந்து எழுதியதை அறியமுடியவில்லை.

❖ முன்னேற்றம்

முன்னேற்றம்

S. ஸ்ரீநிவாசன் M.A

அவன் ஒரு சிறு வீட்டில் குடியிருந்தான். முன்னால் இரண்டு அறைகள்; பின்புறத்தில் ஓர் முற்றம்; அதில் சிறிய ஓர் நெசவுதறி. அதற்கப்பால் ஓலையால் வேயப்பட்ட - அவரைப் பந்தல் போன்ற ஓர் சமையலறை. சீலனூரில் அவன் நூற்கும் நூலும், அவன் நெய்யும் துணிகளும் மிகவுஞ் சிறந்தவை. முன்னே மகம் மதிய சக்கரவர்த்தி அவுரங்கசீப்பின் இளைய புதல்வி ராஜசபையில் போதிய அளவு ஆடை கட்டவில்லை என்று கர்ச்சித்த போது அவள், தான் 40 முழப்புடவை கட்டியிருந்ததாகச் சொன்னது, இவன் மூதாதையர் நெய்த 'மஸ்லின்' துணி என்று அவன் பெருமையோடு சொல்லுவது வழக்கம். தன் முன் னோர்கள் வடஇந்தியாவிலிருந்து தென்னிந்தியா வந்து குடியேறினார் களாம். அன்று தொட்டு பரம்பரையாக அதே தொழில் நடைபெறுகிறது. தன் தொழிலைக் கௌரவமாக நடத்துவதிலும், வர்த்தக முறையில் நாணயமாக நடப்பதிலும் அவனைப் போல் ஒருவரும் கிடையாது. ஆடம்பரமாவது வீண் விளம்பரமாவது அவனுக்குப் பிடிக்காது. துணி கள் வேண்டுமென்றால் அவனிடம் முன்னாடியே சொல்லிவிட வேண் டும். ஆளுக்கு ஏற்றமாதிரித் துணி நெய்து கொடுப்பான். அவசரப்பட்டு

மட்டதரமான துணிகளை ஒருபோதும் நெய்வதில்லை. தான் கொடுப்பதாகச் சொன்ன தவணையை ஒருபோதும் தவறி விடுவதுமில்லை. நெசவுத் தொழிலில் அவன் மனைவி காமாட்சியே அவனுக்கு உதவி. வீட்டில் தன் இரு குழந்தைகளைக் கவனிக்கும் வேலையோடு அவனோடு கூட ஒத்தாசையாக நூல் நூற்பது மாத்திரமன்றி நெசவுக்குக் கூட உதவி செய்வாள்.

நான் வேறு எவரிடத்திலும் துணி வாங்குவது கிடையாது. என் மனைவிக்குப் புடவைகள், குழந்தைகளுக்குச் சட்டைத்துணி, பாவாடைத் துணிகள் எல்லாம் அவனிடம் தான் வாங்குவேன். என் மனைவியைக் கூட்டிப் போகும் போதும் , அவன் உடனே "காமு, காமு" என்ற தன் மனைவியைக் கூப்பிடுவான். "அம்மாவுக்குப் புது தினுசுப் புடவை வேண்டுமாம்" என்பான். அவள் போன முறை கனகாம்பரம் உடலும், அரக்குக்கரையும், பங்களூர் தலைப்பும் போட்டோம். இம்முறை மேக வர்ண நூல் இருக்கிறதே. அதில் உடல் போட்டு மஞ்சட்கரை போடலாமே. உங்கள் நிர்மலாவுக்கு நல்ல கறுப்பில் பாவாடை தைத்தால் நல்லது. சிவப்புத் தேகத்திற்கு எடுத்துக்காட்டும்" என்பாள்.

அவன் துணிகள் சீக்கிரம் கிழிவதே இல்லை. விலையோ மிகக்குறைவு. அதிக இலாபம் சம்பாதிப்பது அவன் வழக்கமில்லை. என் மாமா தான் முதல் முறை என்னை அவனிடம் அழைத்துச் சென்றார். அவன் அப்போது நெய்த பட்டுக்கரை வேஷ்டியை இன்னும் நான் மறக்கவில்லை. மாதம் ஒரு முறையாவது நான் அவனிடம் செல்வது வழக்கம். அவனிடம் பேசும்போதெல்லாம் அவன், தான் ஒரு பெரிய குடும்பத்தில் அதிக செல்வத்தோடு பிறந்தவன் போல கௌரவமாக நடந்து கொண்டான். தன் கஷ்டங்களை வறுமையைப் பொறுமையோடு சகித்து வந்தவன் போலத் தோற்றியது.

மூன்று மாதங்களாக அவனிடம் நான் போகவில்லை. துணிகள் கிழிந்தால்தானே போக வேண்டும். என் மனைவிக்கோ வர வர அவன் கர்நாடகப் புடைவைகள் பிடிக்கவில்லை. ஜர்மன் சாயங்களும், ஜப்பான் பட்டுக்களும் எடுத்துக்காட்டும் மாதிரி ஏழை நெசவுக்காரன் துணி காட்டுமா? ஆனால் நான் மாத்திரம் அவனிடமே துணிகள் வாங்கி வந்தேன். நான் ஒரு முறை அவனிடம் சென்ற போது அவன் வீட்டில்லில்லை. அவன் மனைவி மாத்திரம் வந்து வாடிய முகத்துடன் "உட்காருங்கள். அநேக நாட்களாக உங்களைக் காணவில்லை. அம்மா சவுக்கியமாக இருக்கிறார்களா? அவர் வெளியே போயிருக்கிறார். குழந்தை கிருஷ்ணனுக்கு ஐந்து நாளாய் ரொம்ப ஜுரம். நானும் கைமருந்து எவ்வளவோ செய்து பார்த்தேன். கேட்கவில்லை. டாக்டரை அழைத்துத்தான் ஆக வேண்டுமென்று தோன்றியது. அவர் டாக்டரை அழைத்துவரப் போயிருக்கிறார். இரண்டு நாளைக்கு முன்பே யோசனை பண்ணியிருந்தால் டாக்டர் வந்து பார்க்கும் சார்ஜ் மிஞ்சி இருக்கும்" என்றாள். அவள் வாடிய முகத்தையும், வீட்டின் மங்கலான விளக்கையும் பார்க்க எனக்கு மனதில் சொல்ல முடியாத துயரம் ஏற்பட்டது. அப்பொழுது அவன் தொங்கப் போட்ட முகத்துடன் வீட்டுக்கு வரப் பிரியப் படாதவன் போல வந்தான். முகத்தில் ஒரு கவலை சூழ்ந்து கொண்டிருந்தது. அவன் குரல் தழுதழுத்தது.

"அடி, காமாட்சி! 15 ரூபாய் இல்லாமல் டாக்டர் வரமாட்டாராம். தனக்கு இப்போது வேலை அதிகமாம். விசாலத்துக்கு வந்து பார்த்ததிற்கே நாம் ஒன்றும் கொடுக்கவில்லையாம். இலவச வைத்தியம் செய்யும் டாக்டர் தானல்ல என்று கடுகடுத்த முகத்தோடு சொன்னார்.

நான் என்ன செய்வேன்!" என்று சொல்லிக் கொண்டே என்னைப் பார்த்தான். 'வாருங்கள் ஐயா. உங்களுக்கு என்ன வேண்டும்? அனேக நாட்களாகக் காணோமே!" என்று கேட்டான். நான் "ஏன் இப்போது உன்னிடம் துணி வாங்க வருபவர்கள் அதிகம் இல்லையா? நூலோ துணியோ வீட்டில் அதிகம் காணோமே?" என்று கேட்டேன்.

"ஐயா! மில் துணி மலிவாகவும் நயமாகவும் கிடைக்கின்றதே. என்ன பகட்டும்! கண் ணைப் பறிக்கும் நிறங்கள்! கையில் தொட்டால் என்ன வழ வழப்பு! துணியின் உழைப் பையும் அதில் அழகையும் யார் கவனிக்கிறார்கள்! என் கையால் நெய்யும் துணியில் என் இருதயத்திலிருக்கும் ஆன்மாவின் ஓர் பங்கும் அடங்கியிருக்கிறது என்று நான் சொன்னால், என்னைப் பயித்திய ஆஸ்பத்திரியில்லவோ சேர்ப்பார்கள். ஏழை நெசவுத் தொழிலாளி இருந் தாலென்ன. இறந்தாலென்ன! மில் துணி சீக்கிரம் கிழிந்த போதிலும், கட்டுவதற்கு என் துணி யைப் போல சிறப்பில்லாமலிருந்தாலும் அவர்கள் விளம்பரமும் வியாபார முறையுமே போதுமே! துண்டுப்பத்திர விளம்பரங்களென்ன, சினிமா படங்களிலென்ன, பேப்பர்க ளிலென்ன, எங்கே பார்த்தாலும் விளம்பரங்கள்! அந்தத் துணி கட்டாதவன் "காட்டுப் பிராணி" என்ற எண்ணம் வரும்படியான விளம்பரங்கள் ஐயா! தவிர, நான் அந்த முதலாளிகளைப் போல, திண்டிவனம் ஜமீன்தாரருக்கு வேஷ்டி "சப்ளை" செய்கிறேனா? ஏன் - சில மில்கள் கவர்னர்களுக்கும் அரசர்களுக்குங் கூட துணிகள் கொடுக்கின்றனவாம். சீலனூரிலேயே மூன்று மில்கள் உண்டாகிவிட்டனவே! எங்களுக்கு இனி ஏதையா பிழைப்பு? ஏன், ஆதி காலத்தில் எங்கள் முன்னோர்களின் கட்டை விரல்களைப் பொறாமையினால் வெட்டி விட்ட தாக சரித்திரம் கூறுகிறதே! இந்தக் கஷ்டத்திலும் அந்தக் கஷ்டம் பரவாயில்லை ஐயா!" என்று தன் மனத் துயரத்தை வெளிப்படுத்தினான்.

"கிருஷ்ணன் ஜுர வேகத்தில் ஏதோ உளறுகிறான்" என்று மனைவி திடுக்கிட்டுக் கூப்பிட, அவன் உள்ளே போக எத்தனித்தான். நான் 50 ரூபாவை அவனிடம் கொடுத்து, "இரண்டு ஜோடி நூறாம் நம்பர் வேஷ்டியும், என் மனைவிக்கு இரண்டு பதினாறு முழப்புட வைகளும், பாவாடைத்துணி பத்துகளும் வேண்டும். பாக்கிப் பணம் அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு என் வீடு சேர்ந்தேன்.

அந்த இரண்டு மாதத்திற்கு முன் அவன் கொடுத்த வேஷ்டி சட்டென்று உட்காருகையில் நடுவில் கிழிந்தது எனக்கு ஆச்சரியம். அவன் வீட்டிற்கு நான் போனவுடன் அவன் வெளியே வந்த போது நான் அவனை அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லை. தலைமயிர் முழுவ தும் ஒரே நரைப்பாக இருந்தது. வாட்டமே குடி கொண்ட முகம். ஒருவாராம் பட்டினி இருந்த வன் போன்ற தோற்றம்.

'ஐயா! துணி ஏதாவது வேண்டுமா? பருத்தி விலை இப்போது குறைந்திருக்கிறது. சீக்கிரம் ஏறிவிடுமாம். நல்ல பட்டு நூல்கள் சாயம் போட்டு வைத்திருக்கிறேன். அம்மாவுக்கும் குழந்தைகளுக்கும் ஏதாவது வேண்டுமா?" என் றான்.

"நீ போனமுறை தந்த வேஷ்டிகளில் ஒன்று உட்காரும் போது நடுவில் கிழிந்து விட்டது..." என்று சொன்னவுடன், அவன் முகத்தைப் பார்த்தேன். அதற்கு மேல் சொல்ல நாவெழவில்லை. ஏன் அவனிடம் இதைச் சொன்னேன் என்று மன வருத்தம் மேலிட்டது.

"காமு, காமு! இங்கே வா" என்றான். அவள் வந்தவுடன் "ஐயாவுக்குக் கொடுத்த நூறாம் நம்பர் வேஷ்டி எப்போது நெய்தோம்? நூல் எப்படி நூற்றாய்? உனக்கு இப்போது வேலை சரியாக ஓடுவதில்லையோ? .... ஆ! உன் மேல் தப்பில்லை. கிருஷ்ணன் சாகக் கிடக்கும் போது அவர் 50 ரூபாய் கொடுத்தாரே. அப்பொழுது நான் செய்த வேஷ்டிதானே ஏன் கிழிந் தது?..." என்று சொல்லி மனத்தில் ஏதோ ஆலோசனை செய்தான். அவன் மனைவி "அந்த நூல் நாம் நூற்கவில்லையே. யாரிடமோ வாங்கி வந்தோமல்லவா? தவிரவும் கிருஷ்ணன் சாகும் நாள் யாரோ ஒருவரை அந்த வேஷ்டியில் பாதி நெசவு செய்யச் சொன்னீர்களே!" என்று மெதுவாக வருத்தத்தோடு சொன்னாள். இந்த மாதிரி உண்மையே கடவுள்" என்ற குடும்பத்தில் ஏன் வீணாக அவர்கள்படும் வருத்தத்தோடு இன்னும் மனவருத்தத்தைக் கூட்டினேன் என்று எண்ணினேன். "ஒருவேளை பலகையில் உட்கார்ந்த பொழுது ஆணி மாட்டிக் கிழிந்திருக்கும்" என்று சொல்லிப் பார்த்தேன். அது பயன்படாமல் போயிற்று.

"அதைக் கட்டாயம் அனுப்புங்கள் ஐயா. வேறு வேஷ்டி நான் கொடுக்கிறேன். என் மேல் முழுத்தப்பு. வேறு நூல் வாங்கியதும் தப்பு. வேறு ஆள்களை நம்பினதும் தப்பு. அதனால் தான் கிருஷ்ணனைக் கடவுள் அழைத்துக் கொண்டான் போலும்..." என்றான். அவன் கண்களில் நீர் ததும்பிற்று. அவன் மனைவி ஒன்றும் பேசாம நின்றாள். "அதற்கு அவசர மில்லை அப்பா! மில் வேஷ்டிகள் கிழிவதில்லையா? யாரிடம் போய் அதை நான் சொல்லிக் கொள்ள முடியும்? எனக்கு அங்கவஸ்திரம் நாலு வேண்டும். வேஷ்டி நாலு ஜோடி. பாவாடை களுக்குத் துணி... இந்தா ஐம்பது ரூபாய்" என்று அவன் கையில் வைத்துவிட்டு வீடு திரும்பினேன். வேஷ்டிகளும் அங்கவஸ்திரங்களும் பெட்டி நிறைய இருந்தும் ஏன் அவ்வளவு ஏராளமாக அவனிடம் நெய்யச் சொன்னேனென்று அப்போது நான் நினைக்கவில்லை.

"அந்த மில் வேஷ்டி என்ன புது தினிசாக இருக்கிறது! கரை என்ன ஒய்யாரம்! என்ன வழவழப்பு! ஆனால். அது ரொம்ப நாளைக்கு உழைக்காது. கட்டுக் கடை நூல், சீக்கிரம் 'பட் பட்டென்று கிழியும்" என்று பின்னால் ஒரு குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவன் குரல் தான். உடனே அவனை அடை யாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. எலும்புந் தோலுந்தான். அவன் முன்னால் அந்த வேஷ்டி கட்டி வந்ததே எனக்கு வெட்கமாக இருந்தது. "உன்னிடம் வர அவகாசம் இல்லை அப்பா! என் நண்பன் கல்யாண வீட்டிற்குப் போவதற்கு வேஷ்டி இல்லை. இதை வாங்க வேண்டி வந்தது. வீட்டிற்குப் போகலாமா? எனக்குத் துணி அதிகம் வேண்டும். என் தங்கை புருஷன் வந்திருக்கிறார். அவரும் என்னைப் போல கையால் நூற்று நெய்த துணிதான் கட்டுகிறார்" என்றேன்.

ஏன் நான் மில் வேஷ்டி வாங்கியதும், தங்கை புருஷன் வந்ததும் இவனிடம் சொல்ல வேண்டும்? வேஷ்டி நெய்பவன் தானே! அவன் வேஷ்டியைக் கட்டினால் அவனுடன் உறவாட வேண்டுமா? ஹக்கிங்காம் மில் மனேஜரிடம் சுகதுக்கம் ஏன் நான் விசாரிப்ப தில்லை?

"வீடு இல்லை ஐயா. எனக்கு. அதெல்லாம் விற்றாய்விட்டது?" "என் மனைவிக்குத் துணி...." "இப்போ நான் புடவைகள் நெய்வதில்லை ஐயா. கிருஷ்ணனோடு காமாட்சியும் போய்விட்டாள். எனக்குப் புடவை மாதிரிகள் என்ன தெரியும். கண்ணும் மங்கலாய் விட்டது.

விசாலம் மாத்திரந்தான் குடிசையிலிருக்கிறாள். என் தறியைக்கூட விற்றுவிட்டேன். துணிகளுக்கு ஆட்கள் அவ்வளவு வருவதில்லை. இப்போது தறி வாடகைக்கு வாங்கித்தான் வேலை. நம் வேலை இனி நிலைக்காது. பரம்பரையாகச் செய்து வந்த தொழில் என்னோடு அற்றுப்போகும். கிருஷ்ணன் புண்ணியம் செய்தவன். எனக்குப் பின் அவன் நெசவுத் தொழிலை எப்படிச் செய்வான்? அவன் அங்கே ஈஸ்வரனுக்கு ஆடைகள் அழகாக நெய் யட்டும்! இங்கே விளம்பரமும் யந்திரமும்தான் கடைசியாக நிலைபெறும். அது கிடக்கட்டும். உங்களுக்கு என்ன வேணும் ஐயா!"

"வேஷ்டி நாலு ஜோடியும், துண்டுகள் எட்டும் போட்டுக் கொடு" என்று சொல்லி என் வீடு திரும்பினேன்.

முப்பது நாளாய் நான் ஊரில் இல்லை. ஏதோ காரியமாக அயலூர் சென்றிருந்தேன். திரும்பி வீடு வந்ததும் என் மனைவி, "ஒரு பெண் பத்து நாட்களுக்கு முன்பு 4 ஜோடி வேஷ்டிகளும், 8 துண்டுகளும் கொடுத்து விட்டு பாக்கி பணம் கேட்டாள். நீங்கள் முற்பணம் 25 ரூபாய் கொடுத்தாகச் சொல்லி, பாக்கி 25 ரூபாய் தரும்படி கேட்டாள். அவள் முகம் வாட்டமாயும் கண்ணின் பார்வை யதார்த்தமாயும் இருந்தபடியால் உங்களைக் கேட்காமலே கொடுத்து விட்டேன்" என்றாள். இது எனக்கு அளவிலா ஆச்சரியமாயிருந்தது. அது வரையில் அவன் பணமே கேட்டது கிடையாது. நான்தான் கொடுப்பது வழக்கம். எப்போது கொடுப் பேனோ அப்போது வாங்கிக்கொள்வான். ஏன் இப்படிச் செய்தான். பண முடை தானோ? என்று எண்ணி அவன் வீடு சென்றேன்.

அவன் வீட்டில் வேறு யாரோ இருந்தார்கள். சமையலறைக் குடிசை மூடப்பட்டு இருந் தது. வீட்டில் இருந்தவர்களைக் கேட்டேன். விசாரித்ததில் சாப்பாடில்லாமல் தன் பெண்ணை எப்படியோ போஷித்துவிட்டு ஐந்து நாட்களுக்கு முன்பு இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். திடுக்கிட்டேன்; கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டேன். "நீங்கள் அவனுக்கு உற வினரா?" என்று பக்கத்திலுள்ளவர்கள் கேட்டதற்கு, "ஆம், உறவினரை விட நெருங்கிய சொந் தம். என்னை மரியாதையாகத் துணிகட்டச் செய்தவன் அவன்!" என்றேன். அவர்கள் ஆச்ச ரியத்துடன் என்னைப் பார்த்தார்கள்!

மறுமலர்ச்சி
வைகாசி,ஆனி - 1947

வே. சுப்பிரமணியம்

மறுமலர்ச்சிச் சஞ்சிகைகளுக்கூடாக அறிமுகமாகியவர். மறுமலர்ச்சிக்குப் பின் தொடர்ந்து எழுதியதை அறிய முடியவில்லை.

- நகக் குறி

நகக் குறி

வே. சுப்பிரமணியம்

"நாகம்மா வீட்டு வேலியோரமாக நின்று உள்ளே எட்டிப் பார்த் தான் குமாரசாமி...

இனிமேல் தைத்து உடுத்தும் தொழிலை இழந்த வேட்டி ;இருபத்தி ரண்டு வயசாகியும் நாவிதன் கத்தியைக் காணாத முகம்; தன் மூத்த சகோதரி, தமயன், மைத்துனர் - இவர்களால் வஞ்சித்து ஒதுக்கித் தள் ளப்பட்ட அதிர்ச்சியாலேற்பட்ட சஞ்சல தோற்றம்; சிறுவயதில். தானே வாய்க்குள் நுளைத்த மரவள்ளிக் கிழங்கை, நாகம்மா விரல் விட்டுப் பறிக்கும் போது நகம் கீறிக் காயப்பட்ட உதடுகள் உடம்பெல்லாம் அழுக் கேறியிருப்பினும் இயற்கையாய் அமைந்த வசீகரத் தோற்றம்; - இவன் தான் குமாரசாமி. இவன் பட்டியிலிருந்து பிரித்து வீட்டில் அன்புடன் வளர்த்த ஆட்டுக்குட்டியைத் தேடி வேலியால் உள்ளே எட்டிப் பார்த்தான்.

நாகம்மாவின் தந்தை நாட்டாண்மைக்காரன். அவர் கூப்பன் மாப் பிட்டுத்தின்னார். எங்கோ இருட்டுச் சந்தையில் முப்பத்திரண்டு ரூபாவிற்கு ஒரு பறை நெல் வாங்கிப் போட்டிருந்தார். அந்த நெல்ல ரிசியின் ஒரு சிறு பகுதியை மாவாக்கி, அதை வறுப்பதற்கு உக்கிப்போன

வேலியில் ஓலை முறிக்கப் போனாள் நாகம்மா. வேலியோடு வேலியாய்க் குமாரசாமி வேலியிற் சாய்ந்து கொண்டு தலையை உள்ளுக்கு நீட்டியதும், வேலியில் உள்ள கறையான் மண் விழுகிற சத்தம் கேட்டு இரண்டு முழத்துக்கு அப்பால் நின்ற நாகம்மா நிமிர்ந்து பார்ப்பதும் சரியாயிருந்தது. முன்பெல்லாம் குமாரசாமியின் தாயாரிருக்கும் போது ஒரு நாளுக்குப் பத்து முறை மாமி என்று கூவிக்கொண்டு ஓடி வருபவள் அல்லவா நாகம்மா? வந்தால் சும்மா இருப்பாளா! குமாரசாமியின் புத்தகங்களை எடுத்து ஒளிப்பாள். அவன் தினம் படுக்கும் சாக்குக் கட்டிலின்மீது மண்ணை அள்ளி மூன்று நாலு குவியலாகக் குவிப்பாள். அவன் கஞ்சி குடிக்கும் சிரட்டையைத் தேடியெடுத்து, மாமி எச்சில் துப்ப அதில் மண்ணை அள்ளிக்கொடுப்பாள். இதையெல்லாம் குமாரசாமி பார்த்து விட்டானோ, தாய்க்கு மறைவில் அவள் வரும்வரை பார்த்திருப்பான். வந்தவுடன் அவள் கன்னத்தில் இரண்டு கிள்ளுக் கிள்ளி, அவள் கண்ணால் இரண்டு சொட்டுக் கண்ணீரை யாவது கறந்து விட்டுத்தான் ஆறுதலடைவான்!

அவன் என்ன செய்தாலும், நாகம்மா ஒரு நாளைக்கு நாலுதரமாவது மாமியிடம் வராமல் விடவும்மாட்டாள். ஒன்றும் அகப்படாமல் விட்டால் குமாரசாமி சாப்பிடுகிற தட்டுவத்தையாவது ஒளிக்காமல் போகவும் மாட்டாள்.

காலம் சுழலும் வேகத்தை யார் உணருகிறார்கள்? அன்னமுத்து - குமாரசாமியின் தாய், கள்ளங்கபடமற்றவள். புதன்கிழமை மத்தியானம், பிள்ளைகள் நால்வருக்கும் ஒடியற் கூழ் கொடுத்துவிட்டுத் தகப்பனுக்கும் ஒரு பெரிய சட்டியில் கூழை வார்த்து வைத்து, மீதியாயிருந்ததில் இரண்டு மூன்று பலாவிலை கூழைக் குடித்தாள். பாவம், கூழுக்குப் போட்ட கெழுத்துமீன் முள், தொண்டையில் மாட்டிக் கொண்டது. அன்னமுத்து தன்னாலான மட்டும் பார்த்தாள். கையையுந்தான் உள்ளுக்கு விட்டுப் பார்த்தாள். எடுக்க முடியவில்லை. தேகம் முழுவதும் வியர்வை ஆறாகப் பெருகியது. மனுஷிக்கு விஷயம் விளங்கி விட்டது போலும்! குமாரசாமியின் அண்ணன் கந்தவனத்தையும் அக்காள் காமாட்சியையும் அருகிலழைத்தாள்: "நான் செத்துப் போவேன். குமாரசாமியின் குறைப்படிப்பை விடாமற் படிப்பித்துப் போடுங்கோ. குழந்தை சரசு..."

கூக் குரல்!...

சர்வ அதிகாரமும் காமாட்சி கையில் வந்தது. பெயருக்கேற்ற 'தொழிலாளி'அவள். வசதியாகக் காமரூபனாகிய கைலாசபிள்ளையும் பொறுப்பற்ற நட்பில் புகுந்துவிட்டான். கேட்பானேன், கைலாசபிள்ளை வீட்டிற்கு வர வேண்டியதுதான், குழந்தை சரசு படலைப் பக்கம் விளையாடப் போக வேண்டும்! இச் செய்கையெல்லாம் புத்தியுள்ள குமாரசாமிக்கு நெஞ்சைப் பிளந்தது. எது சொல்லியும் யார் கேட்கப்போகிறார்கள்...?

◆◆◆

கைலாசபிள்ளை தூரத்தில் வருவதைக் கண்டு கண்ணீர் சொட்டிச் சொட்டிக் குமாரசாமி முற்றத்தில் வெட்டுக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தான். கைலாசபிள்ளை சமீபித்து விட்டான். கத்தி உயர்ந்தது! "ஐயோ சண்டாளன் வெட்டுகிறான்!" என்று கத்திவிட்டாள் காமாட்சி! கந்தவனத்தின் கைப்பிடியிற் கிடந்து திமிறினான் குமாரசாமி....

தப்பிக்கொண்டு திரும்பியோடிச் சென்ற கைலாசபிள்ளை, இருபது யாருக்கப்பால் நின்று கத்தியைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

"பின்னைத்தான் இதென்ன வேசை வீடோ? உவன் வாறதும் போறதும் உலகம் எத்தனை கதைக்குது!" என்று முணுமணுத்துக்கொண்டு வந்தாள் அடுத்த வீட்டு ஐயாத்தைக் கிழவி. தெருவாலே போன விதானை சண்முகமும் சத்தம் கேட்டு அங்கே வந்தார். "தம்பி, கைலாயபிள்ளை! ஓடாதே. இங்கே வா! நீ என்ன இந்தப் பெட்டையைக் கட்டப் போறியோ, இல்லையோ? உண்மையைச் சொல்லு!" என்று கேட்டார்.

''சரி நான் கட்டுகிறேன். உவன் இந்த வீட்டில் இருக்கக் கூடாது."

"ஓ! நான் போகிறேன். நீ இருக்கிற முறையாய் இரு" என்று வெளியே போய்விட்டான் குமாரசாமி. பின் கலிணாயப் பதிவு ;கலியாண வீடு ; எட்டாம் மாசம் குழந்தை ஒன்று....

பக்கத்திலே பள்ளிக்கூடம் ஒன்று. படுக்க இருக்க அவ இடம் கொடுத்தது குமாரசாமிக்கு. எஞ்சிய நேரமெல்லாம் ஆடுகள் மேயும் மேய்ச்சல் நிலநிழல் மரங்களில் புத்தகமுங் கையுமாயிருப்பான் இவன். இந்தக் காலத்தில் நாகம்மாவின் தந்தை அவளுக்கு ஒரு "கால்சட்டை மாப்பிள்ளை ஒழுங்குபண்ணி இருக்கிறார்" என்று கூட்டு ஆட்டுக்காரர்கள் சொல்ல நெடுமூச்சுடன் 'அது நல்லதுதானே' என்பான் குமாரசாமி.

வேலியிற் சாய்ந்த குமாரசாமி நோக்கிய இடமொன்று நாகம்மா நோக்கியவிடம் இன்னொன்று. இங்கே கண் சந்திப்பு ஏற்பட இடமில்லாமற் போய்விட்டது.

'என் நகக்கீறல்பட்ட உதடு கிழங்கால நேர்ந்த கீறல், சின்னத்தான் கிள்ளிய கிள்ளுக்கெல்லாம் கொடுத்த நன்கொடை!' முதலில் அவளுக்கு வந்தது. அடங்காச்சிரிப்பு. சிரிப்பு மின்னல் போல் மறைந்தது ;பிறகு துக்கம்;இதென்ன தலை! இதென்ன உடை! ஐயோ, இதென்ன கோலம்!" என்ற எண்ணம் உகந்த, "சின்னத்தான்! என்ன பேசாமல் நிற்கிறீர்கள்?" என்றாள். குமாரசாமி நிமிர்ந்து பார்த்தான்.அவள் முகத்தை. அவன் நெஞ்சு உயர்ந்து தாழ்ந்தது. ஒருமுறை அல்லப்பன் முறை.

'சின்னண்ணா!' என்று கூவிக்கொண்டு கையிலோர் கடிதத்துடன் ஓடி வந்தாள் சரசு. கதாநாயகர் இருவரது கண்களும் ஓய்வுபெற்றன. ஆனால் இருதயம்...!

கடிதம் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற உரிமை உணர்த்தும் அழைப்புப் பத்திரம்.

காலம் மறுபுறமாகச் சுழலுகிறது; நாகம்மாவின் உண்ணாவிரதம் தந்தையின் கடின சித்தத்தை உடைத்து, குமாரசாமிக்கு அடிமையாக்கி அவன் உண்மை மாமனுமாகிவிட்டது...

குமாரசாமியின் உதட்டிருந்த நகக்குறியைத் தடவிக் கொடுத்து,'உங்களுக்கு இது போதாது சின்னத்தான்!" என்றாள் நாகம்மா.

"தெரியுமா? இனிமேல் உந்த "சின்னத்தான்' பாஷையை விட்டுவிட வேணும்!"

"பின்னை"

"இஞ்சாருங்கோ!" - என்று கூப்பிடவேணும்!"

"களுக்" கென்று நாகம்மா சிரித்தாள். குமாரசாமியின் சிரிப்பொலியும் அதோடு கலந்தொலித்தது.

மறுமலர்ச்சி - மார்கழி - 1946

து.ருத்திரமூர்த்தி

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட துரைசாமி உருத்திரமூர்த்தி இலக்கிய உலகில் மஹாகவி என்ற பெயரால் நன்கறியப்பட்டவர். கல்லழகி, சடங்கு, ஒரு சாதாரண மனிதனது சரித்திரம், கண்மணியாள் காதை, சந்தர்ப்ப சபதம் முதலான காவியங்களைப் பாடியவர். வள்ளி, குறும்பா, மஹாகவியின் ஆறு காவியங்கள், கோடை வீடும் வெளியும், ஒரு சாதாரண மனிதன் சரித்திரம், புதியதொரு வீடு, மஹாகவி கவிதைகள், பொருள் நூறு முதலான நூல்கள் இவர் பெயரில் வெளிவந்துள்ளன. 26 யூன் 1974 அன்ற இவ்வுலக வாழ்வை நீத்தார்.

❖ தூக்கணாங் குருவிக்கூடு

தூக்கணாங் குருவிக்கூடு

து.ருத்திரமூர்த்தி

சூரியன் உதித்துச் சுமார் ஐந்து நாழிகைப் பொழுதாகவும், கண் விழித்து, மறுபக்கம் திரும்பிப்படுத்தேன். ஆனால், அருகில் அந்தக் "குட்டி மேசை"யில் வைக்கப்பட்டிருந்த காப்பியையும், அதில் பகலவனையும் கண்டு, முகம் தாமரையாக, எழுந்து உட்கார்ந்து, சாவகாசமாகக் குடித்தேன். உஷார் ஏறியபடியால் வெளியில் வந்தேன். தலைவாசலில் புள்ளியிட்டுப் பாம்புக் கோலம் போட்டிருந்தது - ஓஹோ - இன்று மார்கழி மாசமா? நேற்றெல்லாம் கார்த்திகையாயிருந்ததே- ஆமாம் சும்மாவா சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள் 'பெரியவர்கள்' - இன்றைக்கிருந்ததை நாளைக்கு....

வெளிமுற்றத்தில் வந்து பார்த்தால், இலைகளின் நுனிகளிலெல்லாம் மழைத்துளிகள் வந்து நின்றுகொண்டிருந்தன; அவற்றில் சூரியன் பளிச்சிட்டது. வீட்டு வாசல்களில் வந்து நின்று கொண்டு சிரிக்கும் வேசிகளைப் போலிருந்தது காட்சி.- இரவு நல்ல மழைபோல் இருக்கிறது. அதுதான் முற்றத்தில் விளங்க வேண்டிய கோலமும் தலைவாசலுக்குப் பின்வாங்கியதாக்கும்.... என்னவோ படுக்கையறையிற் கிடந்தால் மழை பெய்கிறதைப் பற்றித் தெரியாது.

யாழ்ப்பாணத்து மரபையொட்டிக் கால் கட்டைகளில் இடர்ந்து, முற்றத்தில் இறங்கி னேன்; தெருவுக்கு வந்தேன். சுத்தமான காற்று அடித்தது. அந்தச் சுகத்திலே தெருவோடு சற் றுத் தூரம் நடந்தேன்.

தெருவோடு அருகில் சென்று கொண்டிருந்தது வெள்ளவாய்க்கால். அதில் வெள்ளத் தைக் காணவில்லை. அது அவ்வழி பாய்ந்த மாதிரியும் தெரிய வில்லை. – இரவு மழை சும்மா சிணுக்கம் போல்தான் இருக்கிறது.

நூறு யார் வந்தேன். வயல்வெளியும் வந்துவிட்டது. அதன் இக்கரையிலே ஒரு குடிசை. அதில் புகை போய்க்கொண்டிருந்து. சரியாகச் சொன்னால் அதற்கு முன்னாலிருந்த அடுப்பில்தான் போய்க்கொண்டிருந்தது புகை.

குடிசையின் வாசலிலே ஒரு புளியமரம். மரத்தடியில் நிலத்துக்குமேல் எழுந்திருந்த இரண்டு வேர்கள். அவைகள் இரண்டும் ஆக்கிய மூலையில் மூன்று கற்கள் அடுப்பு – அந்த அடுப்பிலே ஒரு முட்டி. உள்ளே எரிந்து கொண்டிருந்த சுள்ளிகளிலிருந்துதான் புகை வந்தது. முட்டிக்குள் என்னவோ? – வெறும் தண்ணீர், அல்லது வென்னீராய்த்தானிருக்க வேண்டும்.

பனையோலையால் வேய்ந்த குடிசை அது. முகடு ஆறடி உயரம். பக்கத் துக்கச் சுவர் – இல்லை. எப்படியிருக்கும்? ஆனால் 'தட்டி' கூட இல்லையே! – கூரையின் சரிவே நிலத்தை அடைந்து பக்கத்தையும் அடைத்துக் கொள்கிறது! அந்தக் கூரை மூடிய பத்துச் சதுர முழத்துச் சுற்றி வெள்ளம் உட்புகாமல் வரம்பு கட்டியிருந்தது.

ஆமாம். இரவு மழை சும்மா சிணுக்கம்போற்றான் இருக்கிறது. அல்லாவிடில் இப்படி 'நிற்குமா' இந்தக் குடிசை?

குடிசைக்குள்ளே இருட்டிருந்தது. அதற்குள்ளே ஒரு குழந்தை அழுது கொண்டிருந்தது. நிலத்தில் ஒரு சாக்கு; அதற்கு மேல் ஒரு பனையோலைத் தடுக்கு; அதற்கு மேலே குழந்தை.

வெளியிலே சற்றுத்தள்ளி, ஒரு பள்ளத்தில் தேங்கிநின்ற 'கொஞ்ச' வெள்ளத்தில் இந்தக் குழந்தையின் 'சகோதரங்கள்' இரண்டு விளையாடிக் கொண்டிருந்தன. ஒன்றுக்கொன்று மாறி மாறிச், சேற்றைக் காலால் ஏற்றிக் கொண்டி ருந்தன.

தாய் நாற்றுநடப் போய்விட்டாள். தந்தை மண்வெட்டி கொண்டு கொத்தப் போய் விட்டான்.

"டேய்" என்று ஒரு அதட்டல் போட்டுக் கொண்டு ஒரு பத்து வயதுச் சிறுவன் குடிசைக்கு வந்தான். அவர்களின் தமையன் அவன். வயலிற் பிடுங்கிய பச்சை மிளகாய்களும் கடையில் வாங்கிய ஒரு பாணும் அவன் கைகளில் கிடந்தன. அவர்களின் சாப்பாட்டிற்காகத் தாய் கொடுத்துவிட்டுப் போன காசுக்குப் 'பாண்'வாங்கி, அவள் கட்டளையை நிறைவேற்ற வந் தான். 'டேய்' என்று அதட்டினான். மறுபடியும் 'அதுகள்' பள்ளத்தில் வெள்ளம் ஏற்றி விளை யாடிக் கொண்டிருந்தன. இப்போது அது இதுக்கும், இது அதுக்குமாக மாறிமாறித் கிள்ளியும் கொண்டன.

இரண்டுக்கும் நாலு குத்துப் போட்டு இழுத்துக்கொண்டு வந்து பாணையும், பச்சை மிளகாயையும் காட்டிவிட்டு அவன் சிட்டாய்ப் பறந்தான்.

வழியில் பனையில் தொங்கிக் கொண்டிருந்த தூக்கணாங்குருவிக் கூடு ஒன்று அவன் பார்வையில் விழுந்தது. தெருத் திருத்துவதற்காகப் பக்கத்தில் ஒரு கல்லுக் குவியலும் போட்டி ருந்தபடியால், ஒவ்வொரு கல்லாயெடுத்து அதற்கு வீசத் தொடங்கினான். கற்கள் தோல் வியுற்றுத் திரும்பி ஒரு வயற்காணிக்குள் வந்து விழுந்தன.

தூக்கணாங்குருவி ஒன்று பறந்துவந்து 'பளிச் சென்று உட்புகுந்தது. உள்ளே சுகமா யிருந்த மூன்று குஞ்சுகளும் கலகலத்தன. சந்தோஷத்தினால் அவைகளுக்கென்ன தெரி யும்.இவன் கல்லால் எறிந்து கொண்டிருப்பது? ஒன்றின் இறகை ஒன்று கோதிக் கொண் டிருந்தது.

அவன் சிறிது நேரம் எறிந்து கொண்டிருந்தாள். வயலுக்குள் கல் விழுகிறதேயென்று அவ்வழி சென்ற ஒரு உழவன் அதட்டினான். பிறகு 'ஆளை'க் காணவில்லை! எங்கேயோ போய்விட்டான்.

◆◆◆

இரவு தாயும், தகப்பனும், எல்லோரும் வீடு திரும்பிவிடுவார்கள் அல்லவா? மொத்தம் ஆறு பேர்கள் - எங்கே படுத்துக்கொள்வார்களோ?

மழையில்லாவிட்டால் புளியமர வேரில் தலையை வைத்து நிலத்தில் படுத்துக்கொள்ள லாம். மழையென்றால்...? குடிசைக்குள் ஒரு மாதிரி அடைந்து கொள்ள வேண்டியதுதான். பின், பெரிதாய் மண்டபம் மண்டபமாய்க் கட்டி விட்டிருக்கும் கோயில்களிலா இடம்கொடுக்கப் போகிறார்கள்? அங்கே தனிமையும், நிசப்தமும் நிலவும். அதாவது. பக்தி பெருக்கெடுப்பதற்கு வாய்க்கால் தோண்டிவிடும் மாதிரியில் இருக்கும்!

குளிர்காற்று வீசிக்கொண்டேயிருந்தது. அதில் பனையோலையொன்றின் இரண்டு இதழ்கள் அடித்துக்கொண்டேயிருந்தன. அண்ணாந்து மேல் வானத்தைப் பார்த்ததில், கார் முகில்கள் சிக்துண்டு கிடப்பது தெரிந்தது.

'ராவைக்கு நல்ல மழைபோல இருக்கு" என்று தோளில் நுகங்கொண்டு கையில் இரண்டு மாடுகளின் கயிறு பிடித்துக்கொண்டு போனவன் மாடுகளைத் தட்டி விட்டுக் கொண்டே சொல்லிக்கொண்டு போனான்.

"சும்மாவோ கொடும்பாவி கட்டினது?" என்ற கேள்வியில் மறுமொழியிளுத்துக் கொண்டு ஏர்கொண்டு போனவன் போனான்.

ஆமாம். மழை வரத்தான் போகிறது. ஆனால் சாதாரண மழையாயிருக்காது ; மழை யுடன் பெரும் காற்றும் சேரும் வெள்ளம் போடும் போலிருக்கிறது.

மரங்களும் முறிந்து விழும். கொட்டில்கள் குடில்களும் சரியலாம்.

அந்தக் குடிசையும் ஒருவேளை விழலாம்!

ஒருவேளையென்ன; கட்டாயம்!

அப்படியானால், அவர்கள் என்ன செய்வார்கள்? எங்கே போவார்கள்?

தெரியாது!

ஆனால் தூக்கணாங்குருவிகள் மட்டும். சுகமாக ஒன்றின் இறகை ஒன்று சொண்டினால் கோதிக்கொண்டிருக்கும்.

மறுமலர்ச்சி
ஆனி - 1946

இ.பொன்னுத்துரை

1940களில் எழுத்துலகுக்கு அறிமுகமானவர். மறுமலர்ச்சி சஞ்சிகையில் இவருடைய 'வண்டிக்காரச் சுப்பன்' என்னும் கதை வெளிவந்துள்ளது.

❖ வண்டிக்காரச் சுப்பன்

வண்டிக்காரச் சுப்பன்

இ.பொன்னுத்துரை

பங்குனி மாதம். பொறுக்க இயலாத சூரிய வெப்பம். மருந்துக்கும் மழையில்லாக் காலமது. வெயிலின் தீட்சண்யத்தால் மரங்கள் வாடி வெதும்பியிருக்கின்றன. மத்தியான வேளை பள்ளிக்கூடம் பகல் பன்னிரண்டு மணிக்கு விட்டாயிற்று. நாங்கள் கற்பலகையைத் தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு வீடு திரும்பினோம். சுடும் மணலில் புழுவாகத் துடித்து ஓடி வந்து ஒரு மரவேரில் இருந்தோம். ஆனால் மத்தியான வேளையில் எல்லார் உள்ளமும் புழுங்குகையில் ஒருவர் மட்டும் மிகவும் குசாலாக வருகிறார். அவருக்கு இந்த பங்குனி மாத வெயில் பால் நிலவு போலிருக்கிறது. ஏன்? வயிற்றுள் இருபோத்தல் 'கள்' தம்பாடு கையில் எல்லாம் ஒரு குதூகலமாகத்தானே இருக்கும். யாருமில்லை. எங்களுக்குப் பழக்கமான வண்டிக்காரச் சுப்பையாதான். கையில் ஒரு பூவசரசங் கம்பு. வாயில் ஒரு நாட்டுப் புகையிலைச் சுருட்டு. வரிந்து கட்டிய வேஷ்டி இவை சகிதம் வண்டியையும் மாட்டையும் தானே இழுத்து வருகிறான். சுப்பன், பாவம். அவன் ஒரு ஏழை. அனுக்குப் பிள்ளைகுட்டி இல்லை. அவனுக்கு பராமரிக்க இவ்வுலகில் ஒருவருமேயில்லை. மாடும் வண்டியுந்தான் அவனுக்குக் கதி மோட்சம்.

ஒருசாண் வயிற்றை நிரப்புவதற்கு இத்தள்ளாத வயதிலும் அவன் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது.

மாட்டுவண்டி கனகசபை வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்த புகையிலை மூட்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து வீசினான். அப்போது எமக்கிருந்த குதூகலம் சொல்லி முடியாது ஏன்? வண்டி புகையிலையை இறக்கியதும் வீடு திரும்பும். நாம் அதில் ஏறிய பிரயாணஞ் செய்யலாமல்லவா? வண்டியும் வந்தது. நாங்கள் கேட்டும் கேளாமலும் வண்டியில் ஏறினோம். "எனக்கு ஒரு வண்டி குழந்தைகள்" என்று பொக்கைவாயின் முரசைக் காட்டிச் சிரித்தான் சுப்பன். நாமும் அதை ஆமோதிப்பவர் போல் சேர்ந்து சிரித்தோம். ஆனால் சுப்புவின் மாடோ ஒத்துழையாமை இயக்கத்திலிறங்கி விட்டது. ஒருவிதமாய் விகடராமன் குதிரையை நடப்பித்தது போல் எங்கள் சுப்பன் மாட்டையும் நடத்தினோம்.. அது நத்தை வேகம். ஆமை வேகம் என்று நடந்தது. அதன்பின் சத்தியாக்கிரகம் என்னும் சாத்வீகப் போருக்கு அடிகோலிற்று. ஆனால் சுப்பனுக்கோ அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நெகிழும் என்பது மனப்பாடம். அந்தப் படிப்பைச் செய்கையில் பரீட்சித்துப் பார்த்தான்.

மாடும் பிடிவாதத்தால் பிரயோசனமில்லையென அறிந்ததுபோலும் அசையத் தொடங்கியது. "எப்படிச் சுப்பப்பா. மாடு நடக்கிறமாதிரியில் வண்டிச் சில்லைக் கறையான் தின்றுவிடுமே" என்கிறோம். சுப்பனுக்கு எப்படியோ இது வாலிப இரத்தம் இப்போது நரம்பினூடே ஓடுவதுபோல்தோன்றிற்று.சுப்பன் தனது இராமாயணத்தைப் பாரதம்போற் சொன்னான்.

"தம்பி! ஏன் அந்த வயிற்றெரிச்சலைக் கிளப்புவான்? எனக்கு இவையெல்லாம் நேற்று நடந்த மாதிரியிருக்கிறது. நேற்று நான் ஒரு வாலிபன். நேற்று என்னையும் என் மாட்டு வண்டியையும் வைத்த கண்வாங்காது யாவரும் பார்த்துப் பிரமித்தனர். இன்று என்னையும், வண்டியையும் இகழ்ச்சிக் குறிப்போடு பார்க்கிறது உலகம். காவோலை விழக் குருத்தோலை சிரிப்பதுதானே வழக்கம் தம்பிமாரே! நீங்கள் அப்போது பிறந்திருக்கவும் மாட்டீர்கள். ஏன் உன் தகப்பனே மீசை கூட முளைக்காத ஒரு சிறு பையனாக இருந்தார். நான் அந்த நாளில் ஒரு மாட்டுவண்டி வைத்திருந்தேன். அதைப் பார்ப்பதற்கு அப்போதிருந்த பெரியகோட்டுச் சக்கிடுத்தாரே என் வீட்டுக்கு வந்துவிட்டார். எனக்கு இருபத்திரண்டு வயது அப்போதுதான் நடக்கிறது. நான் வைத்திருந்த ஒரு ஜோடி கிளிக்கூடனின் அழகை இப்பொக்கை வாயால் சொன்னாலே எச்சியாகிவிடும். அதன் மேனியில் ஈ இருந்தாலே வழுக்கி வீழ்ந்து விடும். அவ்வளவு வழவழுப்பான தேகம். நான் பிராமணப் பிள்ளை போல இருந்தேன். அசை வண்டியும் கிளிக்கூடன்மாடும். முழுகிவிட்டு முடித்துவிட்டிருக்கும் எனது நீண்ட கூந்தலும், கிணீர்! கிணீர் என நாதஞ் செய்யும் மாடுகளின் சலங்கையும் - காணுவதற்கு எத்தனை பேர் வேலிக் கரைக்கு வருவதுண்டு. எல்லோரும் என்னைப் பார்க்க வந்தாலும் நான் ஏன் அவர்களைப் பார்க்கப் போகிறேன்? அந்த வழக்கமே என்னிடம் அன்றுமில்லை! இன்றுமில்லை. இந்த நல்ல குணத்துக்கு அவ்வூர்ப் பெண்கள் எங்கு போகிலும் என்னுடைய மாட்டுவண்டியையே பிடிப்பார்கள்.

எங்கள் பிள்ளையார் கோயில் ஐயர் ஒருநாள் பருத்தித்துறைக்குப் போகவேண்டியிருந்தது. நான் ஒழுக்கமான பையனல்லவா? ஆனபடியால் ஐயருடன் அவர் மனைவியும்

வருவதற்கு புறப்பட்டனர். இருவரையும் ஏற்றிக் கொண்டு வண்டி புறப்பட்டது. பருத்தித் துறையை இரவு பன்னிரண்டு மணிக்கு அடைந்தோம். நல்ல இருட்டு. நிலவு இல்லை. ஆன படியால் ஐயர் என்னை அங்கு தங்கி அடுத்தநாள் புறப்படச் சொன்னார். எனக்கு அது பிடிக்க வில்லை. இந்த நிமிடமே வீடுபோய்ச் சேரவேண்டும் என்று சொல்லிவிட்டு மாட்டை வண்டி யிற் பூட்டினேன். ஐயா குறுக்கிட்டு, "தம்பி! வேளையில்லாத வேளையில் போகாதே. இங்கு வெளியே பிசாசுகள் நிறைந்த இடம் நீயோ வாலிபன். தீட்சை பெறாதனீர்" என்று தடுத்தார். நான் ஐயரைப் பார்த்து "இந்த வேலைகளுக்கு நான் பயப்படுவதில்லை. முனியும் கினியும் என்னைப் பிடிக்காது. அவையை விரட்டிவிட ஓடிவிடும்" என மார்புதட்டிப் பேசிவிட்டு மாட்டைத் தட்டிவிட்டேன். அவை, வாயு வேகமாய் பாய்ந்து சென்றன. மாட்டு வண்டி போகும் சத்தத்தை விட வேறோர் சத்தமும் அவ்விடத்தில் கேட்கவில்லை. வீடுகளில் இருந்த விளக்குகளையும் தணித்துவிட்டார்கள். தெருவீதியில் சனசஞ்சாரமேயில்லை. எங்கும் மையிருட்டும் குளிர் காற்றுமாக இருந்தது. வல்லைவப் பாலத்தை நெருங்குகையில் மணி 2 இருக்கும். மாடுகளுள் ஆறி ஆறிச்சென்று கொண்டிருந்தது. ஆனால் ஐயர் சொன்ன பிசாசும், முனியும், காளியும் ஒன்று மாறி ஒன்று என்கண்முன் வந்து தோன்றியபடியே பயம் வந்துவிட்டது. இவ்வேளை யில் ஒரு உருவம் தனிவெள்ளையாகத் தோன்றியது. "உனக்கிது காணாது உனக்கிது காணாது!" என்று வேகமாக கத்திக் கொண்டு வண்டி முன்சென்றது. நான் மாடுகளை விரட்டி னேன். அவை சென்றன. ஆனால் அந்த உருவமோ பாய்ந்து வண்டிக்கு முன்னே சென்றது. பஞ்சு போல் பறந்தது. உண்மையில் பஞ்சுகள் அவ்வுருவத்தினின்று பறந்து வந்தன. மா டுகள் ஈற்றில் ஒரு தாவுத் தாவி அவ்உருவத்தை முந்திவிட்டன. ஆனால் அவ்வுருவமோ என் வண்டி யைத் தொடர்ந்து ஓடிவந்து வண்டியில் ஏறிவிட்டது. அதன் பிற்பகுதி பாரமான படியால் மாடுகளால் ஓடமுடியவில்லை. உண்மையில் எனது வாழ்க்கைக்குச் சாவுமணி அடித்தா யிற்று என்று ஏங்கினேன். பின் அவ்வுருவம் பின்னிருந்து ஒரு ஆணியால் எனது தலையில் குத்திக்கொண்டேயிருந்தது. இப்படித்தானாக்கும் முனி இரத்தம் குடிப்பது. எதுவிதப்பட்டும் இந்த முனிக்கு எனது துவரங் கட்டையால் ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென்று தோன்றிற்று. இதுவரை பின்னாலேயே பார்க்காமல் இருந்த நான் இப்போது துணிவுகொண்டு பின்பக்கம் திரும்பி ஊன்றியொரு அடிபோட்டேன். அவ்வுருவத்திற்கு. அது "உனக்குது காணாது! உனக் கிது காணாது! என்று கத்திக்கொண்டு கீழே விழுந்தது. வண்டியும் விரைந்து சென்றது. ஒரு மணித்தியாலத்தினுள் அருகிலிருக்கும் ஒரு சிறு கிராமத்துக்கு வந்தேன். அங்கு ஒரு ஆல மரத்தடியில் இருவர் உறங்கிக்கொண்டிருந்தனர். அவர்களை எழுப்பி நடந்ததைச் சொன் னேன்.

அவ்விருவரும் பதைபதைப்புடனே. 'ஐயோ பாவம்! அவன் அங்கேதான் நிற்கிறானா? என்றனர்.

"என்ன, என்ன? யாரைக் கேட்கிறீர்கள்?" என்றேன்.

'உன்னிடம் அடிபட்டானே அவனைத்தான்!"

"அது முனியல்லவா!"

"இல்லையில்லை. அவன் எங்கள் தம்பி. அவன் இந்தப் பக்கத்தில் நிற்பதாகக் கேள் விப்பட்டு அவனைத் தேடிக்கொண்டு வந்தோம். இருண்டுவிட்டதால் இங்கே படுத்தோம்" என்

றனர். பிறகு வண்டியிலிருந்த விளக்கையும் அவிழ்த்தெடுத்துக்கொண்டு, வல்லைவெளியை நோக்கிப் போனோம்.

என்ன அநியாயம்! நாம் கண்ட காட்சி பரிதாபகரமானது. அங்கே ஒரு மெலிந்த வாலி பன் திரேகம் முழுவதும் பஞ்சொட்டப்பட்டு அங்குமிங்கும் அடியின் நோ பொறுக்கமுடியாது ஓடித்திரிந்தான். அவன் முதுகிலிருந்து இரத்தம் குமுறிப் பாய்கிறது. ஆனால் அவனோ, "உனக்கிது காணாது! உனக்கிது காணாது!" என்று ஜெபம் சொல்லுவதுபோல் சொல்லிக் கொண்டு செல்கின்றான். அவனைத் தெண்டித்துக் கூட்டிக்கொண்டு வந்து சேர்த்தோம். அவனுக்கு மூளை வடிவாக வேலை செய்யவில்லை என்பது மட்டும் எனக்கு விளங்கிற்று.

அவனுக்கு விசர்வந்த விதத்தை அவன் சகோதரர் விளங்க வைத்தனர். இவன் சகோதரியொருத்தி கூடுதலாகப் பணம் வைத்திருந்தாளென்றும், அதைப் பெறுவதற்கு அவளுக்கு இவன் நஞ்சூட்டினானென்றும் அவளிறந்த செய்தியை அறிந்த மற்றச் சகோதரர்கள் இவனை உருட்டி உருட்டி அடித்ததையும் அன்று தொடக்கம் பைத்தியம் வந்து, 'இது உனக்கு காணாது' என்று சொல்லிக் கொண்டு காயப்பட்ட புண்ணுக்கும் மேனிமுழு வதற்கும் பஞ்சை ஒட்டித்திரிகிறானென்பதையும் அவர்கள் சொன்னார்கள்.

இவ்விதம் கதையை முடித்தான் வண்டிக்காரச் சுப்பன். வண்டியும் எங்கள் வீட்டின்முன் வந்து நின்றது. பேய்க்கதை கேட்டதனால் பயந்து பதறும் மனத்தோடு நாங்கள் இறங்கி னோம்.

சுப்பன் உடம்பை நெளித்துக் கண்ணைமூடி, வாயருகில் வைத்து ஒரு கொட்டாவி விட்டான். கூடவே ஒரு பெருமூச்சு வாலிபத்தை நினைத்தானோ, என்னவோ!

வண்டியும் கடக்குப் படக்கு என்று அசைய ஆரம்பித்தது.

மறுமலர்ச்சி
வைகாசி - 1947

சில்லையூர் செல்வராசன்

சில்லையூர் செல்வராசன் புகழ்பூத்த கவிஞர். நாடகாசிரியர். வானொலிக் கலைஞர். சிறுகதை ஆசிரியர், சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரிய குழுவில் ஒருவராக ஆரம்பத்தில் விளங்கியவர். பல்கலைவேந்தன். தான்தோன்றிக் கவிராயர் என்பது அவரது புனைப் பெயர்களில் ஒன்று. அவருடைய கவிதைகள் தொகுதிகளாக்கப்படாதிருந்தன. அவருடைய மனைவி கமலினி அண்மையில் இரு தொகுதிகளை வெளியிட்டுள்ளார். "ஊரடங்கப் பாடல்கள்" என்பது அவரது குறும்பா தொகுதி.

❖ *கதவு திறந்தது*

கதவு திறந்தது

சில்லையூர். செல்வராசன்

ஆபீஸ் பையன் கடிதங்களைக் கொண்டு வந்து மேசையின் மீது வைத்து விட்டுச் சென்றான்.

செல்வநாயகன் ஒரு கடிதத்தைப் பிரித்துப் படித்தான். இதயத் தைப் பிழிந்தெடுத்த சோக சாலைகளிலே தோன்றிய ஒரு கோரப் புன்னகை அவன் கடைக்கோணங்களில் மலர்ந்தது. காதலியின் காரணமில்லாத உள்ளக்குமுறலை எழுத்து வடிவத்திலே பார்த்துச் சிரித்தான். ஆம்! பாக்கியத்தின் கடிதம் தான் அது. "என்னைக் காதலிப்பதாகக் கூறி ஏமாற்றி விட்டுப் புதுமலர்களிலே மதுவருந்துகிறாயே" என்று கதாபாத்திரம் சொல்வதாக எழுத்தாளர்கள் வரையும் அந்தக் கொடூரச் சொற்கள் கடிதத்தில் இடம் பெறவில்லை. அப்படி எழுதியிருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கமாட்டான்."பெண்களுக்குச் சந்தேகம் இயற்கைதானே" என்ற எண்ணத்தால் ஆனால், கடிதத்தில் சிதறிக் கிடந்த அந்தக் கருத்துக்களை. அந்த வார்த்தைகளைத்தான் அவனால் சகிக்க முடியவில்லை. கண்கள் மீண்டும் கடிதத்தை நோக்கி அந்த வார்த்தைகளை மறுபடி ஒரு முறை முணுமுணுத்தன அவன் உதடுகள்.

நீர் ஒரு புரட்சி மோகன். ஆனால் நான் ஒரு சாந்த குமாரி "பாக்கிய" வாழ்வு வேண்டும் எனக்கு. நீர் தமிழனுக்குச் சிங்கக் கொடி வேண்டாம் எனப் புரட்சிப் பிரசாரம் செய்கிறீர். தனியாட்சி வேண்டும்-

தமிழாட்சி வேண்டும் எனக் கோஷம் செய்கிறீர். மேடைகளிலே ஆனால் நான் அதை விரும்பவில்லை. ஏனெனில் என் தந்தை முதல் பல தமிழர்கள் வெளியூர்களில் வியாபாரிகள். சிங்களவரின் கையை எதிர்பார்த்து தான் நம் ஜீவியம் நடக்கிறது. கொடிதகாததாயிருக்கலாம். ஆனால் உம் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் இருக்கத்தக்கதாக நீர் நான் அதற்கெதி ராகக் கிளம்ப வேண்டும் என்று அர்த்தமில்லை. ஓர் வார்த்தை அதுதான் என் கடைசி வார்த்தை . உமது புரட்சியில் காதல் அல்லது எனது காதலன் இரண்டில் எது வேண்டும்? தோழமையா? விரோதமா?"

அவனுடைய கை விரல்களுக்கிடையே அந்தக் கடிதம் கசங்கியது. ஆனால் அவன் உள்ளம் மலர்ந்தது. அவன் சிரித்தான்

முன்பெல்லாம் "கண்ணே" என்று அன்புடன்தான் அவளை அழைப்பான். ஆனால் இன்று? அவள் உள்ளக்கண் குருடாகிவிட்டதே!

இரவு பன்னிரெண்டு மணி. பாக்கியத்தின் அறையில் விளக்கு அணைக்கப்பட வில்லை. அது தன் பாட்டிற்கு எரிந்து கொண்டிருந்தது. பாக்கியம் கட்டிலில் படுத்திருந்தாள். கண்கள் மூடியிருந்தன. ஆனால் உறங்கவில்லை .

கதவு திறந்தது அவன் வந்தான். அவள் விழித்தாள். அவர்கள் சந்தித்தனர். அவன் மேன காதுஷ்யந்த நாடகம் நடத்திக் காண்பிக்க அங்குவரவில்லை. தன் வாழ்க்கைப் பிணைப்பிலிருந்து விடுபட அங்கு வந்தான். அவன் சாந்தமாகப் பேசத் தொடங்கினான்.

"நான் எண்ணெய் நீ தண்ணீர் இரண்டும் கலந்து கொள்ளாமல் பிரிந்துதான் இருக் கும். நீ என் போக்கை விரும்பவில்லை!? நான் செய்ய வேண்டியது என்ன என்பதுதான் என் சிந்தனையைத் தவிர. நீயோ பிறரோ அதைப் பற்றி என்ன எண்ணுவார்கள் என்பதல்ல. நீ விரும்பாததற்கு காரணம் உன் சுயநலம்"

வர வர அவன் வார்த்தைகளில் சூடேற ஆரம்பித்தது. அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

தந்தை வியாபாரத்தை விட்டுவிட்டால், நடைக்கொரு குலுக்கும், வெளிக்கொரு பகட்டும், விழிக்கொரு சிமிட்டும். மொழிக்கொரு பசப்பும் செய்து உலவ முடியாததல்லவா? ஒரு சிறு தியா கம் செய்ய உன் மனம் ஒப்பவில்லை. சீ.... நீ ஒரு தமிழச்சியா? தியாக பூமி என்று புகழப் படும் தமிழ்நாட்டில் பிறந்தவளா நீ?"

கொந்தளித்த கடல் அடங்கியது போல, அவன் கொதித்தவார்த்தைகள் அடங்கின. அவள் பதிலுக்குப் பத்திரகாளி வேசம் போடவில்லை. வெட்கத்தால் தரையை நோக்கித் தாழ்ந்தது அவள் தலை.

"பாக்கியம்! என் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் யாவரும் பதவிப் பித்தர்கள்! சுயநலவாதிகள்!! பரசிரம ஜீவிகள்!!! ஆகவே என்போன்ற இளைஞர்கள் யாவரும் கிளம்ப

வேண்டும். விதை முளை போடுவதற்கு ஒவ்வோர் மழைத்துளியும் உதவி புரியவில்லையா? நீ என்னை எனக்காகக் காதலித்தாய் என்றிருந்தேன். ஆனால்..... பாக்கியம்..... என்னை என் கொள்கைக்காக கடத்திவிட்டாயே! கடலினும் பெரிது காதல்! ஆனால் காதலினும் பெரிது கடமை! தமிழனுக்கு உழைப்பது எம் கடமை! நான் தோழமை பூண்டுவிட்டேன். பாக்கியம் உன்னோடு அல்ல - கடமையுடன் என் வாழ்விலிருந்து நீ விடைபெறுகிறாய். போய் வரு கிறேன். உன்வாழ்க்கையை விட்டே! வந்த நம் பாக்கியம்!"

மறுபடி கதவு திறந்தது. அவன் வெளியேறினான். அவன் இதயக் கதவும் திறந்தது. அதிலிருந்து அவள் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

நீர் துளிர்த்த அவள் கண்கள் நிலத்தை நோக்கின. கடிகாரத்தில் "டங்" என்று வித ஓசை. நிலத்தை நோக்கிய கண்கள் நிமிர்ந்து நோக்கின. நேரம் பன்னிரெண்டரை. நாளி கைக்கு முன் இறுகப் பற்றக் கட்டி முத்தமிட்டுக் கொண்டிருந்த கடிகாரத்தின் பெரிய முள்ளைச் சிறிய முள்ளு கீழே வீழ்த்திவிட்டது. அவன் அவளை விலக்கியமை போல.

மூன்று தினங்களுக்கு முன் செல்வநாயகத்தின் தந்தை அவளிடம் வந்திருந்தார். அவருக்கு, அவர்களின் காதலைப் பற்றி நன்கு தெரியும். ஆனால், அவர் அதற்குக் குறுக்கே நிற்பவர் அல்லர். ஏனெனில் அவள் ஒரு பணக்கார வியாபாரியின் மகள். ஆதனம் சீதனம் அபரிதமாகக் கிடைக்குமென்ற எண்ணம் - அவருக்கு.

வந்தவர், "அவன் அரசியல் சூழலிலே சிக்கிச் சிதையப் போகிறான். அவன் மனதை நீதான் மாற்றிவிட வேண்டும்" என்றார் பாக்கியத்திடம்.

"அவர் உறுதிபடைத்த நெஞ்சராகிற்றே" அவள் சந்தேகக் குரலில் கேட்டாள்.

"மாற்ற வழியுண்டு பாக்கியம். நீ ஒன்று செய். அவன் தனது போக்கை மாற்றிக் கொள் ளாவிடில், நீ அவனைக் காதலிக்க முடியாது. என்று சிறிது கடூரமாக ஒரு கடிதம் வரைந்து விடும். பிறகு பையன் உன் காலடியில் வந்து விழுந்துவிடுவான்."

சிக்கலைக் குலைப்பதற்கு அவர் கூறியவழி இது. அவளும் - இயைந்து விட்டால் கடிதம் என்ற கத்தி, அவர்களின் வாழ்க்கையைப் பிணைந்திருந்த காதற் கயிற்றை அறுத்துவிட்டது.

மறுபடியும் "டாங்" என்ற அந்த ஓசை அவள் சிந்தனை உலகிலிருந்து விடுபட்டாள். நிமிர்ந்தாள் ஒரு மணி.

இன்னும் ஐந்து நிமிடங்களில் அந்த ஊசிகள் மறுபடியும் ஒன்று சேர்ந்துவிடுமே! ஆனால், அவனும் அவளும்? அந்த ஊசிகள் ஒன்று சேருவதை ஆசையுடன் பார்த்தாள். ஆனால் ஒன்றும் தெரியவில்லை. ஏனெனில் இருள் சூழ்ந்துவிட்டது. காரணம் கவனிப் பாரற்று எரிந்து கொண்டிருந்தமையால் எண்ணெய் தீர்ந்து போய் விட விளக்கு அணைந் விட்டது. அவள் வாழ்க்கையைப் போல் கண்ணில் துளிர்ந்த நீரை அவள் துடைத்துக் கொண் டாள். அந்த இருட்டில் யாருக்குத் தெரியப் போகிறது. செல்வநாயகத்தின் தந்தை, பாக்கியத் திடம் உதவிக்குச் சென்றமைக்குக் காரணங்கள் இல்லாமலுமில்லை.

அதோ அவன் மேடையில் நின்று, சிங்கத்திற்கெதிராகக் கிளம்ப வேண்டுமென்று சிங்கம் போற் கர்ச்சிக்கிறான். ஆம்! செல்வநாயகன்தான்.

ஆனால், கூட்டம் தடுக்கப்படுகிறது. தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. தடுப்பவர்கள் ஜனநாயக அரசாங்கத்தவர்கள். ஆட்சிப்பீடத்தவர்களின் பிரதிநிதியாக ஒரு தமிழன் தான் கூட்டத்தைத் தடுக்க வந்திருந்தான். தமிழன் கையாலேயே அவன் தொண்டையை நெரிக்கும் தந்திரம் இது. பின்பு நாம் துரோகம் செய்யவில்லை . உங்கள் இனம் உங்களைக் காட்டிக் கொடுத்தது என்று அரசாங்கம் காரணம் காட்டலாமல்லவா?

கூட்டத்துக்குத் தடைபோட வந்த "தரகர்" வேறு யாருமல்லர். செல்வநாயகத்தின் தந்தைதான். கூட்டம் கலைகிறது. தந்தையையும் மைந்தனையும் தவிர.

“குடும்பப் பெயரைக் கெடுக்கப் புல்லுருவிகளுடன் சேர்ந்து கூச்சலிடுகிறாய்.”

“குறியில்லாத கூக்குரல். கொள்கையில்லாத கூச்சல் - நீங்கள் போடுவது”.

“தமிழ்த் தலைவன் சீர்திருத்தவாதி என்று ஊர் பூராகவும் உங்களைப் பற்றிப் பேசுகின்றனரே! சீர்திருத்தவாதியின் வாயிற்சிந்தும் சொற்களா இவை?”

“சீர்திருத்தம் ஊருக்கு! நமக்கல்ல. உனக்காக நான் என் பதவியை விட்டு விடுவதா? வேண்டாம் நாயகம் நான் தந்தை என்று ஹோதாவிற் கூறுகிறேன். அரசியல் மேடையில் தந்தை மகன் என்ற பேதம் பாராட்ட முடியாது. நீ கைது செய்யப்படுவாய். நானே கைது செய்ய வேண்டி ஏற்பட்டு விடும். என் கடமை அது. நீ உன் பாதையிலிருந்து விலகிக் கொண்டால் தான் உனக்கு நன்மை.”

“இல்லை நீங்கள் உங்கள் பதவியிலிருந்து விலகிக் கொண்டால் தான் தமிழனுக்கு நன்மை .”

இது தந்தைக்கும் மகனுக்குமிடையில் நடந்த உரையாடல் இப்போது அவன் போய் விட்டான். தந்தையின் மனக்கதவு திறந்தது. கடமை, பாசம் என்ற இரு பயில்வான்களும் உள்ளே சென்று மற்போர் நடத்தின. பாசம் சிறிது தலைதூக்கியது.

“காதலின் முன்னே தேசபக்தி பறந்துவிடும்” என்று எண்ணினார் நாயகத்தின் தந்தை. இதுதான் அவர் அவளிடம் சென்று உதவி கோரியமைக்குக் காரணம். ஆனால், அவர் எதிர்பார்ப்பதற்கு மாறாக விஷயங்கள் நடந்துவிட்டன. அவன் தன் காதலைத் தியாகம் செய்துவிட்டான் என்று அறிந்ததும் அவருடைய மனம் கல்லாகிவிட்டது. அவரும் தன் பாசத்தைத் தியாகம் செய்துவிட்டார்.

அன்று அவனுடைய கட்சி மாநாடு. அறிஞர்கள் பேசினார்கள் அவனும் பேசினான்.

மொழி ஒரு நாட்டின் விழி! அதை உயர்த்த வழி தமிழரசு ஒன்றுதான். ஆனால், நாம் கோடிட்ட ஒரு குட்டிச் சிங்கக் கொடியை மண்டியிட்டுக் குடங்கிக் கிடக்கின்றோம். அடி மையாக்கும் கொடி, அருகில் கோடிட்ட கொடி, அருவருக்கத் தகுந்த கொடி நமக்கு வேண்டாம்.

உங்கள் முன் இரண்டு வழிகள்! ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி! மற்றுமொன்று புரட்சிப் புதுவழி. பிந்தியது கடியது. ஆனால் வீரர் வழி அது. புன்மை இருட் கணங்களைப் ‘புஸ்’ வாணமாக்கிவிட்டு கிளம்புங்கள் போரொலியுடன்! எங்கே!? நடக்கட்டும் உங்கள் நற்பணி!

தொடங்கட்டும் உரிமைப் போர்ப்படை எதிர்ப்பு! கேட்கட்டும் வெற்றிக் கோஷம்! வீழட்டும் வெறிபிடித்த ஆட்சி".

இது அவன் பேச்சில் ஒரு பகுதி திடீரெனக் கூச்சல்கள் ஆர்ப்பாட்டம் சண்டைகள். கூட்டத்தின் மீது தடையுத்தரவு! செல்வநாயகன் கையில் விலங்கு! தமிழ் நாட்டிலே பிறந்தும் தன் மானமற்றுப் போன அத்தமிழ் நீதிபதி, மாத வருவாய்க்காக. குற்றமற்ற தமிழனை அனுப் பிய இடம் சிறை. ஜெயில் கதவு திறந்தது. அவனை வரவேற்க.

உரிமைக்காகப் போராடி. உண்மையை எடுத்துக்கூறி, தாய் - நாட்டின் தரத்தை உயர்த்த முயற்சித்தமைக்காக அவனுக்கு 6 மாதச் சிறைத் தண்டனைவெலிக்கடைச் சிறை யில் அல்ல. தமிழ் நாட்டிலேயே சிறை.

கூட்டத்தில் ஏற்பட்ட எதிர்ப்புக்களையும், ஆர்ப்பாட்டங்களையும் அடக்கிய 'தீரப்' பணிக் காக அவன் தந்தைக்கு உதவிப் பொலிசுப் பிரிவின் ரென்டென்ட் என்ற பட்டம் வெறுமனயேல்ல - பாராட்டுக் கூட்டங்களுடன்.

மறியற் கூண்டின் சிறு துவாரங்களினூடாக இயற்கையழகை ரசித்துக் கொண்டி ருந்தான் - நாயகன் இயற்கையின் ஒவ்வோரசைவும் ஆறு மாசங்களின் முன் நடந்தவை களை அவன் ஞாபகத்திற்குக் கொண்டு வந்து காட்டின.

கதவு திறந்தது. காவற்காரன் " ஆறுமாசாங்கள் கடந்துவிட்டன. தம்பி இன்று உனக்கு விடுதலை" என்றான் சந்தோசத்துடன் நாயகன் திரும்பினான். "உண்மையாகவா?" என்று கேட்டன- கண்கள்.

திறந்து கிடந்த கதவினூடாக தொலையில் ஒரு கோபுரம் தெரிந்தது. அதிலே ஒரு கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. தமிழனின் தன்மானக் கொடியல்ல - அது சிங்க(ள)க் கொடி! தமிழ் நாட்டுக் கோபுரத்தில் வேறு கொடி. காற்று ஒரு முறை பலமாக வீசியது. கொடி கிழக்கும் மேற்குமாகக் கூனி ஆடி வளைந்து கொடுத்துவிட்டு இப்போது நிமிர்ந்து நிற்பதைக் காண அவன் மனம் வெதும்பியது.

"ஒரு சிரிப்பொலி. சிங்கம் சிரித்தது. அவன் மனக் கண்முன் பாக்கியமும் சிரித்தாள். கேலிச் சிரிப்புக்கள்! அவனால் அக்காட்சியைக் சகிக்க முடியவில்லை. திரும்ப அந்தத் துவாரங் களினிடம் அடைக்கலம் புகுந்துவிட்டான். இயற்கையன்னை அவன் மனத்தைப் பறித்துக் கொண்டாள்.

கதவு திறந்தது. ஆனால், அவன் வெளியேறவில்லை. உள்ளேயிருந்துவிட்டான். வெளி உலகுக்கும் வேதனைச் சிறைக்கும் வித்தியாசம் கிடையாது என்ற எண்ணத்தால்.

சுதந்திரன்
10.12.1950

ஆனந்தன்

நாடறிந்த கவிஞரும் விபுலானந்தரின் மாணவருமான பண்டிதர் க.சச்சி தானந்தன் ஈழகேசரியில் ஆனந்தன், பண்டிதர், சச்சி, ஆகிய புனை பெயர்களில் சிறுகதைகளை எழுதியுள்ளார். இச் சிறுகதைகள் 1938 - 1944 காலகட்டத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர் ஈழத்தின் மிக மூத்த எழுத்தாளர், பட்டதாரி, பண்டி தர், முதுமானி. "ஆனந்ததேன்" இவர் ஆக்கிய கவிதைகளின் தொகுதியாகும். "சாவில் தமிழ் படித்து சாக வேண்டும்- எந்தன் சாம்பல் தமிழ் மணக்க வேக வேண் டும்" என்ற பாடல் இவருடையது. "அன்னபூரணி ஈழகேசரியில் இவர் எழுதிய நாவலாகும். இக்கவிஞர் அண்மைக்காலக் காவியமான "யாழ்ப்பாணக் கவியம்" தமிழ் உலகிற்கு பெருமை சேர்த்துள்ளது. இவர் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் விருது பெற்றவர். மாவட்டபுரத்தினைச் சேர்ந்தவர். "தமிழர் யாழியல்" இவரது சிறப்பு நிகழ்ச்சியாகும். பருவப் பாலியர் படும் பாடு என்றவொரு பெருங்காவிய மும் பாடியுள்ளார். " இயங்கு தமிழியலுக்கு மஞ்சுகாசினியம்" என்ற இலக்கண நூலையும் யாத்துள்ளார்.

- அன்பினால் மரணம் உண்டா?
- சாந்தி அடையுமா?
- தண்ணீர்த் தாகம்

அன்பினால் மரணம் உண்டா?

ஆனந்தன்

கணபதி ! கணபதி!... என்ன? சொல்லவே முடியாதா...?

"நான்தான் சொல்லிவிட்டேனே. இதில் என்ன சொல்ல இருக் கிறது. என்னத்தைச் சொல்லவேண்டும்?"

"என்ன பிடிவாதஞ் செய்கிறாய்? உன்னுடைய நண்பனுக்கு இதைச் சொல்லாமல் வேறு யாருக்குச் சொல்லப்போகிறாய்? கணபதி இந்தா, ஏன் வருத்தப்படுகிறாய் சொல்லிவிடேன்"

"சங்கர், இப்பொழுது நீ திரும்பத் திரும்ப என்ன கேட்கிறாய். என்ன தர்மசங்கடமான நிலையாயிருக்கிறது. என்னதான் ஆனாலும் சொல்ல முடியாததென்றாற் பிறகென்ன?"

"ஐயோ ஒரு வருடம் உன்னைக் காணாது ஆர்வத்தோடு உன் னைச் சந்திக்கும்போது இப்படியுமா வரவேண்டும். உன் சொற்கள் ஒவ் வொன்றும் என்னைஅறுக்கிறதே. உன் மௌனமாக விடை என்னைப் பிளக்கின்றதே. ஐயோ என்னிடம் கண்ட குறையென்ன சொல்லேன்?"

"சங்கர், என்னதான் சொன்னாலும் ஒருபோதும் என் உதடுகளிலிருந்து அதைப் பெறமாட்டாய்"

"ஏன் அப்படி நான் உனக்கு என்ன துரோகம் செய்தேன். எங்கள் நட்பிற்கு யார் விசம் கலந்தார்கள். அல்லது ஏதோ எனக்கு மூளை குழம்பிப் போயிற்று"

"சங்கர், இது எனக்குப் பெரிய வேதனையாயிருக்கிறது. இதோ பார் நேரம் ஐந்தேகலாகி விட்டது. என்னைக் காத்திருப்பார்கள். நான் போகிறேன். ரொம்ப வந்தனம்."

"இந்தா கணபதி நில்லு அதை ஒரு வார்த்தையிற் சொல்லிவிடு"

"எல்லாம் சரிதான் போய்வருகிறேன்"

கணபதி போய்விட்டான். போயே விட்டான். சங்கர் கீழே குனிந்தான். மணலைக் கீறத் தொடங்கினான். பக்கத்திலே பெரிய நீலக்கடல் கொந்தளித்து ஓலமிட்டது. வெள்ளைக்காரர்கள் துரைச்சாணிகள் அவர்கள் நாய் எல்லாரும் சந்தோசமாய் ஓடியாடினார்கள். அவர்கள் மோட்டார்கள் கூட நிசப்தமான சாந்தத்திலிருந்தன. மேற்கே மெல்ல மெல்லச் சூரியன் போய்க் கொண்டிருந்தான். உலகம் இருள் ஆரம்பித்தது. சங்கரின் நெஞ்சிலும் காரிருள் படரத் தொடங்கியது. அவன் நெஞ்சு முழுவதும் மையிருட்டாயிற்று. அவனுடைய பழைய நன்றிகள் எல்லாம் மனதை அறுத்தன. கணபதியின் தோற்றம் கண்முன் நின்றது. அவன் காருண்ய மான வசீகரத் தோற்றத்தின் முன் தன்னுடைய அனாதைத் தோற்றம் கெஞ்சுகிறது. அவன் தன் படிப்பிற் கபயமளித்த நன்றித் தோற்றம் பெரிய விஷ பாணம்போல் பாய்ந்தது. மூளை குழம்பியது. கடந்த நான்கு மாதங்களாக கணபதி ஏன் கடிதத்திற்குப் பதில் போடவில்லை. கணபதிக்கு நான் செய்த துரோகம் என்ன, ஐயோ என்னை ஏன் வெறுக்கிறாய்? அவன் சொல் வது என்ன?

2

வாயிற் கையையூன்றிய வண்ணம் யோசிக்கலானான்.

சங்கருடைய மனது மல்லிகைப் பூவைப் போல் மிகவும் மிருதுவானது. அது எந்தப் பழியையும் தாங்காது. அடிக்கடி அவன் மனம் மாறிக்கொள்ளும் இயல்புடையது. அதில் எவ்வளவோ கொடுமைகள் கூட நிறைந்திருக்கும். ஆனால் அதற்காகப் பச்சாத்தாபப்படு வதுமுண்டு. சில மனிதர்களே இப்படித்தான். அவர்கள் இயற்கையில் நல்லவர்கள். ஆனால் பொறாமை முதலியவற்றால் எவ்வளவோ கொடியவர்கள் ஆகிறார்கள். அவர்களின் இயல்பு டையவன் சங்கர். சங்கரின் கவித்துவசக்தியிலும் ரசிகத் தன்மையிலும் எழுத்து வன்மை யிலும் கணபதிக்கு அபாரமான பிரேமை. அதற்காகவே அவன் சங்கருக்கு உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்திருந்தான். இருவருடைய உள்ளமும் சந்தித்து வளர்ந்து வந்தது கலையிலே. இப்படி இருவருக்கு அமைவதே கஷ்டம். சங்கர், கணபதி தன் படிப்பிற்கு உதவி செய்ததற்காக அவனை உயிர்த்தோழனாகவும் தன் வாழ்க்கைத் தெய்வமாகவும் பூஜித்து வந்தான்.

சங்கரின் மனதில் அலைமேல் அலை மோதத் தொடங்கியது. யார் இதைச் சாந்தி செய் வார்கள். இதில் என்ன மர்மம் அடங்கியிருக்கிறது. திடீரென்று ஒருவரின் உருவம் கண்முன்

நின்றது. ஓகோ இது அவனுடைய சூழ்ச்சியாக. ஆம் நிச்சயம் அவன்தான். சரி சரி அந்தப் பாதகனா. அந்தத் துரோகியா இப்படிக் கலவரம் புரிந்தான். பல்லை இறுக்கிக் கடித்துக் கொணடான். வஞ்சகமற்ற தெளிவான பளிங்கு போன்ற புலமை படைத்த நெஞ்சிலே ஒரு இருள் படரத் தொடங்கியது. தானே வன்சினம் கூறிக் கொண்டான். "சரி நாளைக்கு இந்த மர்மமெல்லாம் விளங்கிவிடும். ருக்குமணியை விசாரிப்போம். கணபதி நாளைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போய்விடுவான். ருக்மணி வீட்டிலேதானிருப்பாள். காலை ஆகட்டும் என்று பின்னொரு பெருமூச்சு விட்டான். மனம் நிம்மதியடைந்தது. யன்னலைச் சாத்தக் கையை எடுத்தான். வானத்திலே ஒரு நட்சத்திரம் எரிந்து விழுந்தது. இந்தச் சகுனம் என்னவாகுமோ யாரறிவார்கள்.

5

ருக்மணி கணபதியின் மனைவி. ஆனால் சங்கருக்கு ஒரு தெய்வம். கணபதியின் மேல் எவ்வளவு காதலும் பிரேமையும் உண்டோ, அவ்வளவு சங்கரின் மேல் ஆழ்ந்த விசுவாசமும் நம்பிக்கையும் உண்டு. தன் கணவனின் நண்பன் என்ற நம்பிக்கை ஆழமானது. தன்னுடைய பிரிய சகோதரன் போலவே பாவித்து வந்தாள் ருக்மணி. சங்கரும் தாய்போலே பணிந்து வந்தான்.

சங்கர் கணபதியின் வீட்டினுட் பிரவேசித்தான். அவன் கேட்டான் "கணபதி எங்கே போய்விட்டான்"

"பள்ளிக்கூடத்துக்குப் போய் விட்டார். அப்படி உட்காருங்களேன். ஏதோ அவசரம்போல இருக்கிறதே"

"நமக்கென்ன அவசரம் இருக்கிறதா. அவசரப்பட்டும் தான் என்ன"

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்"

"கவி ஒன்று என் வாயிலே நுழைந்துகொண்டது. அதன் முடிவு வரமாட்டேனென்கிறது. எவ்வளவு அவசரப்பட்டாலும் வரப்போகிறதா"

" அப்படித் தொந்தரவு பிடிக்கும் கவி என்ன?"

"வேறு என்னவாயிருக்கலாம். உங்களைப் பற்றியதுதான் அது. காலம் மாறமாறக் கவியும் மாற வேண்டியிருக்கிறது"

"மாற்றமா என்ன மாற்றம்"

பேதைப் பெண் உங்களுக்கு ஏன் அதைச் சொல்லி மனதைக் கசக்க வேண்டும். நானே நொந்து கொண்டு போய்விடுகிறேன். உம் போய்விட வேண்டும்.

"சங்கர் என்ன என்ன இங்கேயிரு. நீ சொல்வது என்ன?"

இல்லை, அம்மா. பிறகு ஒரு நாளைக்கு இந்தப் பாவியை நொந்து கொள்ளுவீர்கள். அதுவுமின்றி இதனால் எத்தனை விபரீதம் விளைந்துவிடுமோ என்று பயப்படுகிறேன். என்னை மன்னித்துவிடுங்கள். இந்தப் பாவிமேல் நம்பிக்கை வைத்ததற்கு ஒரு நாளைக்கு கண்ணீர் விடப் போகிறீர்கள்.

"என்ன சங்கர் நீயே இப்படிச் சொல்லுகிறாயே?" நடந்தைச் சொல்லு. என்ன ஆகிவிட்டது என்ன கெட்டுவிட்டது"

"நான் சொல்வதற்குத் தடையென்ன. ஆனால்..."

" ஆனால் என்ன?"

உண்மையைச் சொல்லிவிட்டால் என் சிநேகிதனுக்குத் துரோகம் செய்பவனா கின்றேன். அதைச் சொல்லாமல்விட்டால் உங்களுக்குத் தீங்கு புரிந்தவனாகிறேன். இதற்கு என்ன செய்வது நெஞ்சைப் பிளப்பதா? இதை நான் சொன்னேனென்றால் எனக்கும் கணபதிக் கும் என்ன ஆகும் தெரியுமா?

"சரி, சரி, பேதைப் பெண் என்னை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்களோ?"

ருக்குமணியின் கண்களில் நீர்த்துளிந்தது. மெதுவாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"ஐயோ சங்கர் உன்னை கெஞ்சுகிறேன் யாருக்கும் நீ சொன்னதென்று சொல்ல வில்லை. நான் உன் மேல் வைத்த நம்பிக்கைக்காவது சொல்வேன். நீயுமோ என்னை வஞ்சிக்கிறாய்"

"சரி, நான் என்னத்தைச் சொல்வது என்பாட்டு என் உயிர்கவி உண்மைக்கவி . அதுதான் பிழைத்துப் போய்விட்டது வேறொன்றுமில்லை"

"இதுதானா பிரமாதம். இதுவா பெரிய விபரீதம் விளைப்பது"

"அடடா நீங்கள் என்ன அறிவீர்கள். நான் உங்கள் கலியாணத்திற்குப் பாடித்தந்த கவி யெங்கே. அந்தக் கைக்குட்டையில் வைத்து இருவருக்கும் தந்தேனே. அதுதான் சுத்தப் பொய் யாகிவிட்டது. அதை இங்கே கொண்டு வாருங்கள்"

ருக்குமணிக்கு எல்லாம் பெரிய மர்மமாயிருந்தது. கவி பிழையாம். அது விபரீதமாம். இதென்ன,

அவளும் உள்ளேபோய்க் கைக்குட்டையை எடுத்துச் சங்கர் கையில் கொடுத்து விட்டாள். அவன் தலையை குனிந்துகொண்டு சொல்லலானான். "இதோபார். இதில் உங்களையும் கணபதியையும்வைத்துப்பாடி உயிர்கொடுத்துவிட்டேன். ஆனால்இதுஇன்னொரு...."

"இன்னொரு பெண்மேல் ஆகுமென்று எப்படி அறிவேன். பொய்க்கவி தான்" ருக்கு மணிக்கு வெறிபிடித்தது.

"என்ன சங்கர், இன்னொருத்தியா" மனம் வெடித்துவிடும் போலிருந்தது. முகம் வியர்க் கத் தொடங்கியது. அவள் தொண்டை அடைத்துவிட்டது. "யாரது? அந்தக் காதகி யார். சொல்லு சங்கர், சொல்லு,

"அவளா - இந்த விசம் உங்களுக்குத் தீற்றியது கணபதியின் புதிய நண்பன் - மறந்து விட்டேன் புதிய உண்மை நண்பன். அவன் சோதரிதான்.

பல்லை நெறு நெறு என்று கடித்தாள். கண்கள். சிவந்தன. நெஞ்சு அடித்துக் கொண்டது. கைகளைப் பிசைந்தாள்.

“இதைச் சொல்லாமலா என்னைக் கொல்லப்பார்த்தாய்”

“எல்லாம் சரி தான் இப்பொழுது நான்தான் துரோகியானேன். நீங்கள்தான் சொன் னேனென்பீர்கள். பிறகு என்ன ஆகும் தெரியுமா?

“அதெல்லாம் ஆகாது. நீ போப்பா சங்கர்.”

கதவையிறுக்கித் தாளிட்டாள் ருக்மணி. கண்களை இறுக்கி மூடினாள். விம்மி விம்மி அழலானாள். நெருப்பிலிட்ட புழுவைப் போற்றுடித்தாள். கண்ணீர் முத்து முத்தாக உதிர்ந்தது. கூந்தல் குலைந்தது. மனவேதனையெங்கன கூறமுடியுமா?

சங்கர் திருப்தியோடு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தான். சங்கர் உண்மையிலே வஞ்சகமற்ற குணசீலன்தான். அவன் அபலை மனதில்நிலையற்ற மனதில் பொறாமை மூண்டுவிட்டது. பொருள் பற்றியோ அல்லது இராச்சியம் பற்றியோ வந்த பொறாமையல்ல. அது கணபதியின் அன்பை தானன்றி எவரும் பெறக்கூடாது என்ற பொறாமை அது. கண பதியும் புதிய நண்பனும் உயிர்த் தோழராகிவிடுவார்களோ? கணபதி என்னைக் கைவிடு வானோ என்ற பயத்தில் விளைந்த பொறாமை அது.

கணபதியின் புதிய நண்பனைப் பற்றி ஒன்று கூறவேண்டும். வஞ்சகமற்ற உண்மை யான நல்லொழுக்கமுள்ள தூயமனிதன் அவன். உலகத்தார் அவன்மேற் பொறாமை கொண்டு எதைப் பேசினாலும் உண்மையில் அப்பழுக்கற்ற வெளிவேசமில்லாத தூய ஒழுக் கம் படைத்தவன் அந்த நண்பன். உள்ளத்தைக் கவரும் கவித்துவ சக்தியும் விவேகமும் விக டங்களும் ரசமான பேச்சுக்களும் இந்த மனிதனுக்கில்லை. அவன் சாந்தன், உண்மை மனி தன் சுந்தரன். சுந்தரனை ஒரு உயிர்த் தோழனாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டியான குரு வாகவும் மதித்து வந்தான். ஆனால் ஊரிலுள்ளவர்கள் அவன் ஒரு கெட்டவன், மூடனென்றே கருதினார்கள்.

நாம் சங்கரைப் பின்தொடர்ந்து போனால் அவன் நேரே வீட்டிற்குப் போகவில்லை. அந் தப் புண்ணியாத்மாவின் வீட்டுக்குள்ளே புகுந்தான். அப்பொழுது சுந்தரன் மேசைக்கு அப் புறத்தே சாய்வு நாற்காலியிற் “ஹறிஜன சேவை” என்ற பத்திரிகையைக் கவனமாய்ப் படித்துக் கொண்டிருந்தான்.

“ஓ! சுந்தரம்”

“ஆம் வாருங்கள்” இதோ இதில் உட்காருங்கள்”

“இல்லை இப்படி உட்காருகிறேன்” என்று மேசைக்குக் கிட்ட இருந்த கதிரையில் உட் கார்ந்து கொண்டான். மேசையில் எத்தனையோ பெரிய பெரிய புத்தகங்கள் அடுக்கியிருந் தன. பக்கத்திலே யொரு பகவத்கீதை திறந்திருந்தது.

“சங்கர் எது விசேஷம் அநேக நாட்களாகக் காணவில்லையே” “இல்லை, ஒருவருடமாக வேறு இடத்திற்குப் போயிருந்தேன். அதுதான்”

"சரிதான் ஏதோ அலுவலாக வந்தீர்களோ?"

"இல்லை கணபதியைக் காணவேண்டும். இங்கேயிருப்பானென்று சொன்னார்கள். அவன் இருக்கிறானா என்று பார்க்க வந்தேன். அவன் இல்லைபோலிருக்கிறது"

"அவன் பள்ளிக்கூடத்திலேயிருப்பான். பின்னேரம் வந்துவிடுவான்"

"கொஞ்சம் தண்ணீர் கொடுத்தால் நல்லது தாகமாயிருக்கு"

"ஆகா, கொண்டு வருகிறேனே"

இது அர்த்தமற்ற செய்கை, ஆனால் எவ்வளவோ வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்தது. சங்கருடைய கற்பனையுள்ளத்திற் சூழ்ச்சி வளரத் தொடங்கியது. தண்ணீர் கொண்டு வந்த பின் வாங்கிக் குடித்துவிட்டுப் போய்விட்டான். ஆனால் கிருஸ்ணபரமாத்மா ஒருதரம் சிரித் திருப்பார். ஏனென்றால் விரித்திருந்த கீதைக்குள் ஒரு விசப்பாம்பு செருகப்பட்டது.

5

மர்மமான இரவு கடந்து மனோகரமான காலைவேளை. சூரியன் மெல்ல மெல்ல உச் சிக்கு வந்துகொண்டிருந்தான். கீழ் வகுப்பிற்குட் கணபதி உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசித் துக் கொண்டிருந்தான். அருவருப்பு, துன்பம், சிடுசிடுப்பு எல்லாம் கலந்திருந்து முகத்திலே. வகுப்பிலே பெரியவன் ஒருவன் சொல்கிறான்.

"ஏது உபாத்தியாயர் இன்றைக்கு இப்படி அடிக்கிறார். ஏதோ வீட்டிலே கோளாறு நடந்து விட்டதோ?" இதற்கிடையில் வகுப்பிற்குட் சங்கருடைய மருமகன் நுழைந்தான். தன் கையி லிருந்த கடிதத்தைக் கணபதிக்கு நீட்டினான். கணபதியின் மனம் சள்ளென்றது. கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

பிரிய நண்பனுக்கு

நீ என்மேல் என்ன பழியைச் சுமத்தினாலும் நான் எங்கே போவது, நீ என்னை எப்படியாவது வெறுத்துக்கொள். என்மேல் இல்லாத பழியைச் சுமத்திவிடு. நான் அதற்கு யாதும் பரிகாரம் தேடமுடியாது.

ஆனால் உனக்கு வரும் துன்பத்தைப் பற்றித்தான் சொல்லிவிடுகிறேன். நீ உன் புதிய நண்பனை ஏதோ தெய்வமென்று கொண்டாடுகிறாய். ஆனால் என் கழுத்துக்குச் சுருக்குப் போடும் கபடமான கொலையாளி அவன். நீ அந்தப் பாம்பை முத்தமிடத் துணிந்துவிட்டாய். ஏன், ஏன் நான் சொற்களால் விரிக்க வேண்டும். என் அன்புக்குகந்த ருக்மணியைத் தன் காமத்திற்றிரையாக்கப் பார்க்கிறான் சுந்தரன். யான் என்ன சொல் வேன். அதற்காகவே உன்னைச் சினேகித்திருக்கிறான் அறிந்துகொள்.

இங்ஙனம்
உனது பிரிய நண்பன்
சங்கர்.

உடனே கணபதிக்கு முகம் கறுத்தது. கணபதி தான் எதையோ கண்டுபிடித்து விட்டது போல் எழுந்தான். அவன் மனதில் ஆத்திரமும் ஆவேசமும் அருவருப்பும் ஒருங்கே எழுந்

தன. கைகளைப் பிசைந்து கொண்டான். "ஓகோ இந்த வஞ்சகனில் நான் எவ்வளவு ஏமாற்ற மடைந்துவிட்டேன். அவன் எத்தனை ஆசாடபூதித்தனங்களை வைத்திருக்கிறான். ஜபம், தவம், ஹரிஜன சேவை, நல்லொழுக்கம் இவற்றைப் பற்றி எப்படிச் சொல்லுவான். என்ன மாதிரியான சாதுவாய் இருப்பான். கொக்குபோற் கண்ணை மூடிக்கொண்டு என்னை மயக்கிவிட்டான். காமப்பிசாசு, வஞ்சகன், துரோகி!

என்ன என்னுடைய மனையிலா புகுந்தான். ஐயோ கடவுளே இனி யாரை நம்புவது. இனி எந்த மனிதனை நம்புவது. பல்லை நறநறவென்று கடித்தான். ஆத்திரம் மேலிட்டது. கண்களில் கோபாக்கினி பொங்கியெழுந்தது. கால் கைகள் பதறத் தொடங்கின. நேற்று அந்தக் காதலை கூடத் துரோகம் செய்து விட்டாள். பெண்ணென்று வீட்டிலே அக்கினியை வைத்துவிட்டேன். அவளுடைய தொண்டையைப் பிடித்து என் கையால் திருகிவிடுகிறேன். என்மேல் நேற்று அவள் கொண்ட வெறுப்பிற்குக் காரணம் இதுதான் எத்தனை ஜாலம் செய்தாள். வரட்டும் என்று ஆவேசத்தோடு மேசை மீது குத்தினான்.

வகுப்பிலே சத்தம் அடங்கி மௌனம் நிலவத் தொடங்கியது பிள்ளைகள் ஆவேசமாகக் கணபதியின் முகத்தைப் பார்த்தார்கள். அப்பொழுதுதான் கணபதிக்கு நிலைமை தெரிந்தது. வஞ்சக உலகம். சே! கெட்ட உலகம். யாரை நம்புவது - அந்த இரு விசப்பாம்புகளையும் என் கையாற் கொன்றுவிடுறேன். அன்றைக்குக் கணபதி திடீரென்று அரைவாசியிலேயே வகுப்பை விட்டுப் போய்விட்டான்.

உண்மையிலே கணபதிக்கு அந்தப் புண்ணிய ஆத்மாமீது ஆவேசமும் அவநம்பிக்கையும் வந்திராது. அவனை இவ்வளவு கொடியவனாக எண்ணியிருக்கமாட்டான். ஆனால் நேற்று ருக்மணியின் மன நிலைமை தான் கணபதியை இப்படியாக்கிவிட்டது. அவள் கணபதியோடு யாதும் பேசவேயில்லை. பள்ளிக்கூடத்திலிருந்து வருவதை எதிர் பார்த்திருப்பவன் அன்றைக்குப் படுத்துக் கொண்டாள். அவன் பேச்சு ஒவ்வொன்றுக்கும் சீறிச் சினத்தாள். ஆனால் ஒரு வார்த்தையாவது நாவெடுத்துப் பேசவில்லை. சங்கரின் பேச்சில் வைத்த நம்பிக்கை அப்படியாக்கிவிட்டது. அவள் நிலைமையும் இவன் கடிதமும் ஆணி அறைந்தது போல் ருசுவாகிவிட்டன.

6

ஆனால் பள்ளிக்கூடத்திலிருந்து வெளிப்பட்ட கணபதிக்கு கடக்க கடக்கச் சிறிது ஆத்திரம் அடங்கிற்று. எப்படியென்றாலும் திடீரென்று சுந்தரனை அவன் குணசீலத்தை, இவ்வளவு குரூரமாய் எப்படி மாற்றுவது. ஐயோ அவன் புண்ணியசீலன். அவன் ஒழுக்கம் காருண்யம் எப்படிப்பட்டது. எப்படியானாலும் ஒருகாலும் இப்படியிருக்காது என்று எண்ணிக் கொண்டு அவன் வீட்டை நோக்கி நடக்கலானாள்.

நேரம் பன்னிரண்டு மணியடித்துவிட்டது. அப்பொழுதான் சுந்தரம் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"சுந்தரம்! சுந்தரம்!" என்று கூப்பிட்டான்.

"இருந்துகொள், ஐந்தே நிமிடத்தில் வந்துவிடுகிறேன்" என்று பதில் வந்தது. மேசைக்கு அருகில் உட்கார்ந்து யோசிக்கலானான்.

யோசித்துக் கொண்டிருந்தவன் தற்செயலாக கீதையின் மேல் மட்டையைத் திறந்தவுடன் திடுக்கிட்டுப் போனான். ஐயோ, அந்த விசப்பாம்பு தலையை நீட்டிக் கொண் டிருந்தது. கணபதியின் மூளை அப்படியே ஒரு தரம் சுழன்றது. கணபதிக்கு வியர்த்தது. அவன் கண்டதென்ன? அவன் கண்ட பாம்பு என்ன? அந்தப் பாழும் கைக்குட்டைதான். சங்கர் ருக்மணியிடம் பெற்றுக் கொண்டு வந்தானல்லவா - தாகத்துக்கு நீர் கொண்டு வரும்படி கேட்டானல்லவா - அது, அப்பொழுது செய்தது. ஒரு அர்த்தமற்ற செய்கை, ஆனால் இப்பொழுது அது ஒரு பெரிய சூழ்ச்சியாகிவிட்டது. தண்ணீர் கொண்டு வருவதற்கிடையிற் கைக்குட்டையைக் கீதைக்குள் வைத்துவிட்டான் சங்கர். பகவான் சிரித்ததும் அதற்காகத் தான்.

கணபதி உடனே எழுந்தான். சர்ரென்று வெளியே போய்விட்டான். அவன் எண் ணாத எண்ணமெல்லாம் எண்ணினான்.மயிரைப் பிய்த்துக் கொண்டான். பசியும் மனோ வேதனையும் ஆத்திரமும் ஆவேசமும் அவன் வசீகர முகத்தைக் கோரமாக்கிவிட்டன. உதடுகளைக் கடித்தான். எங்கள் இரகசியமான கைக்குட்டை. இது சுந்தரன் கையில் எப்படி வந்தது. ஆமாம். ருக்குமணியிடம் காதற் பரிசாகப் பெற்றாயா காதகா. அவனுடைய கழுத்தை யும் அந்தப் பெண் பேயினுடைய கழுத்தையும் இந்தக் கையினால் நெரித்துச் சாறாகப் பிழிந்து, தரையோடு அரைத்துச் சாம்பலாக்குகிறேன். பற்களைக் கடித்தான். கொலை! கொலை! கொலை! என்று கத்தினான். நல்லவேளையாக அது சனநடமாட்டம் இல்லாத பிள்ளையார் கோவிலடி.

அதே சமயத்தில் வீட்டில் ருக்மணி விம்மி விம்மி அழலானாள். ஆடவர்கள் என்றால் இப்படித்தானே, உன்னையன்றித் தொடேன் என்று சத்தியம் செய்தார். சுந்தரம் என்ற அந்தக் கொடியவனா இப்படிச் செய்தான். அவனை என் காதலுக்கு வாள்வீசினான். இனி ஏன் நாம் உலகில் இருக்க வேண்டும். கசக்கின மலர்போல் என்னை எறிந்துவிட்டார். இனித் தற்கொலை செய்துகொள்ள வேண்டியது தான். ஐயோ பகவானே நான் ஏன் இப்புவியில் இருக்கிறேன். படுக்கையில் விழுந்தாள். நேற்று முழுவதும் ஆகாரமேயில்லை. கண்களை மூடித் தேம்பித் தேம்பி அழுதாள்.

7

அன்றைக்கு இரவாகியும் கணபதி வீட்டுக்கு வரவேயில்லை. மணி பதினொன்று அடித்துவிட்டது. ருக்மணிக்கு ஒரே களைப்பு. அதனாற் கண்களை மூடி நல்ல உறக்கத் திலிருந்தாள். நல்ல இருள் மூடியிருந்தது உலகத்தை. வானத்திலே ஒரு நட்சத்திரம் கூட இல்லை. தெருவில் சன நடமாட்டம் ஒடுங்கிவிட்டது. ஓர் உருவம் ருக்மணியின் வீட்டை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தது. வந்தது யார், கணபதிதான். கோரப் பிசாசு ரூபம். கண்களில் பொறி. தன் படுக்கையின் கீழ் வைத்திருந்த கத்தியை எடுத்தான். ருக்மணியின் தலைமாட்டிலே ஒரு மங்கலான வெளிச்சம் எரிந்து கொண்டிருந்தது. அவள் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தாள். முகம் சாந்தத்தின் சாயையையப்படியே பிரதிபலித்துக் கொண்டிருந்தது. அவள் ஏங்கும் மனதிற்குச் சாந்தம் அளித்தது என்ன? அவள் கண்ட கனவு. தானும் கணபதியும் பிறையின்மேற் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறார்கள். கணபதி பிறையைத் தொட்டு சொல்லுகிறான் " என் கண்ணே, யார் எதைச் சொன்னாலும் யான் உன்னையன்றி

ஒருவரைத் தொடவுமில்லை. ஏன் வீண் சந்தேகம் கொள்கிறாய். ஆகா, எங்கே என்னைப் பாருங்கள் உண்மையாகவா" என்று கேட்கிறாள் ருக்கு. கணபதி ஓசைப்படாமற் கத்தியை கழுத்துக்கு நேராக ஓங்கினான். மாங்கல் வெளிச்சத்திலே வாள் மின்னிற்று. எத்தனை தரம் கட்டி ஆலிங்கனம் செய்த கை அதே கழுத்திற்கு நேரே கத்தியை ஓங்கிற்று. கத்தி கழுத்திற் பாயப்போகிறது. அவள் சாந்தமான உதடுகளிலே ஒரு நகை தோன்றியது. அது என்ன பிறை மேல் இருந்து கொண்டு கணபதி அவளுக்கு இரண்டு அன்னாங்கள் நீந்துவதைக் காட்டு கிறாள். அதுதான் அந்த நகை. "ஐயோ என்ன சாந்தமான முகம். குற்றமுள்ள நெஞ்சு இதுவா, என்னைக் கண்டு மலரும் தாமரையல்லவா? அவளையா கொலை செய்ய எண்ணினோம். சீ ஐயோ அந்த முகத்தில் என்ன குறுநகை தோன்றுகின்றது. இந்தக் கத்தியின் வீச்சுக் குற்றமற்ற குறுநகை தண்டனையா? அந்தோ!"

இரண்டு அடிகள் பின்வாங்கினான் கணபதி. "என் பச்சைக்கிளியையா கொல்ல எண்ணினோம்" பின்னும் பின்வாங்கினான்.

"அப்படியானால் இவள் அந்தக் கைக்குட்டையை அவனிடம் கொடுப்பானேன். இவளை விடுவதா? இவளுக்கு காருண்யமா? ஒரே குத்து கத்தியை ஓங்கினான். அவள் உதடுகளில் நகை இன்றும் மறையவில்லை. அவன் மனம் பிறகும் பின்வாங்கியது. அறையை விட்டு வெளியே வந்தான். அவள் என்ன செய்வாய் பேதை. அந்த வஞ்சகனல்லவோ ஏழைச் சிறு மியை ஏமாற்றினான். அவனையல்லவோ இந்தக் கத்தியாற் பழிவாங்கவேண்டும். ஒரே யோட்டமாக ஓடினான். வெறிபிடித்தவன் போல் ஓடினான்.

ஈழகேசரி
01.06.1941,
08.06.1941

சாந்தி அடையுமா?

ஆனந்தன்

நினைத்தாலே நெஞ்சை ஏதோ அடைக்கிறது. உள்ளத்தை வாட்டிக் கொண்டு தண்ணீர் தளும்பிவிடுகிறது. என் வாழ்வில் நான் செய்த கொடிய துரோகம் அதுதான். அபலையின் வாழ்வைக் கெடுத்த மகா பாவிக்கு அதைச் சொல்ல வாய் வருமா? இதோ பாருங்கள் விக்கிக் கொண்டு உடையும் அழுகையை. நானென்ன செய்வேன்? என் சாம்பலாய்ப்போன இருதயத்தின் விம்மல் யாருக்குத் தான் கேட்கப்போகிறது!

அதோ, அந்த முல்லையின் ஏளனச் சிரிப்பை, என் எரியும் உள்ளத்திற்கு அது நெய் வார்த்துவிடுகிறதே. அதுதான் எத்தனை சொற்களால் என்னைக் கடிந்துகொள்கிறது. அதைத் தான் கேட்டுப்பாருங்கள்.

இந்த முல்லை அப்பொழுது என் உள்ளத்தைக் கிளறிவிடவில்லை. அதன் பச்சென்ற இளங்கொழுந்துகள் மெல்லிய காற்றில் நர்த்தனம் செய்து கொண்டிருந்தன. அவள் நடையைப் பயிலுவதற்காகத் தான் அசைந்தனவோ என்னவோ.அது என் மனதைப் போன்ற வரண்ட காலமல்ல; மென்மையும் குளிர்ச்சியும் கலந்திருந்த வசந்த காலம். நான் உள்ளே ஏதோ எழுதிக் கொண்டிருப்பேன். இடை

யிடையே அதோ அந்தப் பாழும் யன்னல் வழியாய் எட்டிப்பார்ப்பேன். ஆகா, அந்த முல்லை யின் நறுமணம் தென்றலிலே தவழ்ந்து கொண்டிருக்கும். அதன் பசுமையிடையே கொத்துக் கொத்தாய்க் குலுங்கும் முல்லைப்பூக்கள் என்னை அப்படியே சிலையாக்கிவிடும். ஆனால் நான் துரோகி; என் உள்ளத்தில் கிழமையில்லை.

அந்தப் பைங்கிளியின் குரல் என் காதில் மெல்ல அசைந்து கொண்டுவரும். அதன் இனிமை காற்றைக் கூடச் சொக்கச் செய்துவிடும். காதை அப்படியே கீதத்தின் வழி பறக்க விட்டு விடுவேன். ஒரு குடத்தோடு அசைந்து வருவாள். பாட்டை நிறுத்தாமலே முல்லைக்கு நீரூற்று வாள். அதோடு என்னவெல்லாமோ பேசுவாள். தன் குழந்தையைச் சீராட்டுவதுபோல சீராட்டி வளர்ப்பாள் அந்த முல்லையை. இடையே ஒருதரம் என்னைக் கடைக்கண்ணால் திரும்பிப் பார்ப்பாள். அப்பொழுது அவள் முகம், பார்வை, கண்கள் - பகவானே இப்படியே முழுவதும் வைத்திருக்கக் கூடாதா?

உண்மையாகவே சொல்லுகிறேன், அவள் கண்களில் அப்படியொரு சக்தியுமில்லை. வேல் போலக் கொல்லுங் கண் என்றெல்லாம் சொல்கிறார்கள் தான். ஆனால் நான் அவளி டங் கண்டது வெறும் குழந்தைப் பார்வை. அதில் கள்ளமோ கபடோ கிடையாது. அவள் கடை வரியில் ஒழுகும் புன்னகையும் அதேபோலத்தான்; வெறும் குழந்தைச் சிரிப்பு. ஆமாம் அவள் வெறும் குழந்தைதான்.

இதையெல்லாம் ரசிக்க எனக்கு உள்ளமுண்டு; ஆனால் ஏனோ அவளை என் மனம் நாடவில்லை; மேல்நாட்டு மோகமென்னும் சர்ப்பம் என்னைத் தீண்டிவிட்டது. அதன் விசம் தலைக்கேறியிருந்தது. பட்டினத்து லீலாவிடம் மனதைப் பறிகொடுத்திருந்தேன். ஐயோ இவளை வெறும் பட்டிக்காடென்று நினைத்தேனே. அந்த ஏமாற்றமான கானல்நீரைத் தேடியலைந்தேனே. நவநாகரிகப் பேயிடமா என் மனதை ஒப்படைத்தேன்.!

2

அதே வஸந்த காலத்தில்தான் இதுவும் நடந்தது. அவள் கரங்களை ஸ்பரித்த என் கைகள் இப்பொழுது பதறி நடுங்குகின்றன. அப்பொழுதுதான் பட்டினத்திலிருந்து லீவில் வந்திருந்தேன். பரீட்சைக்கு எழுதியாய் விட்டது. இன்னமும் அந்த விசப் பொக்கிசத்திடம்தான் என் மனது லயித்திருந்தது. அந்த நாகரிகப்பெண் லீலாவுக்குத்தான் கடிதம் எழுதிக் கொண்டி ருந்தேன். அறைக்கதவு திறந்திருந்தது. யாரோ நடந்து வரும் காலோசை மெல்ல என் காதிற் பட்டது. "அத்தான் இந்தாருங்கள்" என்று ஒரு குரல் என் காதில் மென்மை செய்தது. உள்ளே கதவோரத்தில் நின்று கொண்டிருந்தாள் ரேவதி. அவளுக்கு நாணமேயில்லைப்போலும்; நான்தான் சொன்னேனே அவள் வெறுங் குழந்தையென்று.

கையிலே ஒரு மல்லிகை மாலை வைத்திருந்தாள். அதன் மலர்ச்சியையும் அவள் மலர்ச்சியையும் மாறி மாறிப் பார்த்தேன். அதற்குள் அவள்,

"அத்தான், இந்தாருங்கள், உங்களுக்காகத்தான் இந்த மாலையைக் கோத்தேன்; பார்த் தீர்களா முற்றத்து முல்லையை" என்றாள்.

இந்தப் படுபாவிக்கு எங்கிருந்து வந்ததோ அந்தப் பிரமாதமான கோபம்? அவள் கரங் களைப் பிடித்து வெளியிலே தள்ளிவிட்டேன். "ரேவதி என் படிப்பில் மண்ணைப் போடாதே.

போ" என்று ஈரமில்லாச் சொற்கள் கூறினேன். அவள் மாலையைச் சுக்குநூறாக்கி முற்றத்தில் சிந்தி விட்டேன்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு பிறகும் எழுதலானேன். என் கர ஸ்பரிசம் பட்டபோது அவளுக்கு எப்படித்தான் இருந்ததோ? அவள் அன்பின் என்பென்பாய்க் கோத்த மாலை சிதறிப் போய்க் கிடந்தது. அவள் மனதும் உடைந்து சின்னாபின்னமாய்ப் போயிருக்கும். பின் பக்கக் கோடியிலே யாரோ விம்மி விம்மி அழுங்குரல் கேட்டது. பாவி என் மனதில் அது உறைத்தால்தானே.

3

எனக்கு அப்பாவும் அம்மாவும் உண்டு. ரேவதி பாவம் அபலை. அவள் வளர்க்கும் முல்லைக்கொம்பு காற்றில் பறப்பதுபோல் அவள் வாழ்வு. நாளைக்குப் பாட்டி கண்ணை மூடினால் அவள் திக்கற்ற அனாதை. அவள், அப்பாவின் சகோதரியின் புத்திரி. தாய் இறந்து விட்டாள். "பாட்டிக்கு, அப்பாவும் ரேவதியின் தாயும்தான் குழந்தைகள். அப்பா பணக்காரர். ஆனாலும் பாட்டியோடுதான் அவளிருந்தாள். அப்பாவும் நாங்களும் பட்டினத்திலே குடியிருந்தோம். விடுமுறை காலங்களில் அம்மாவின் தொல்லை பொறுக்க முடியாது. பாட்டியையும் ரேவதியையும் பார்த்துவிட்டு வரும்படி தொந்தரவு செய்தாள்.

அந்தத் தடவை நாலைந்து நாட்கள் தங்கிவிட்டுப் பட்டினம் திரும்பி விட்டேன். பிறகு பட்டினத்திலேயே இருந்துவிட்டேன். இப்படி அழுவதற்குத் தானோ என்னவோ? பரீட்சையில் தேறி விட்டேன். விவாகப்பேச்சு மும்முரமாயிருந்தது அம்மாவின் பிடிவாதம் ஒரே கட்டாயிருந்தது. ஐயோ அம்மாவின் சொல்லைக் கேட்டுக்கப்படாதா!

"குழந்தாய், ரேவதி அபலையப்பா; தாய் தகப்பனில்லை, பொருளில்லை. அவளைக் கட்டிக் கொள்" என்றெல்லாம் உபதேசம் பண்ணினாள். அப்பாவும் அப்படியே வற்புறுத்தினார். எல்லாம் மண்ணோடு மண்ணாயிற்று. "நாட்டுப்பெண் சரியில்லை; படிப்பில்லை, நாகரிகந் தெரியாது. என்றெல்லாம் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி விட்டேன். எத்தனை எத்தனை பொய் மூட்டைகளையும் பழிகளையும் திக்கற்றவள்மேல் சுமத்திவிட்டேன்.

லீலாவை நான் முதன்முதற் சந்தித்தது சினிமாவில்தான். அப்புறம் கடற்கரை றோட்டில். இப்படியெல்லாம் நாங்கள் குதூகலத்துடன் காலங்கழித்தோம். ஆனால் என்னைச் சதா நினைத்து ஏங்கும் ஏழைக்கு நான் கை கொடுக்கவில்லை. ஐயோ, என் வாழ்வில் இடிவிழ, அனாதையின் வாழ்வை வெறும் கனவாக்க, லீலாவென்னும் யந்திரத்தின் கைப்பிடியைப் பற்றிக் கொண்டேன். தனிக்குடித்தனம் நடத்த ஆரம்பித்தேன்.

ஆபீஸிலிருந்து வந்து பார்த்தால் அவளைக் காணமுடியாது. வீட்டில் ஒன்றுஞ் சாப்பாடு கிடையாது. அவள் தனக்குச் சமைக்கவே தெரியாது என்றுவிட்டாள். என் செய்வேன், என் கையாலேயே அவளுக்குக் காப்பி தயாரித்துக் கொடுக்க வேண்டியிருந்தது. ஒருநாள் எனக்குச் சுரம் வந்துவிட்டது. படுக்கையில் விழுந்து விட்டேன். அவள் என்கிட்டவே வரவில்லை.

"லீலா, தலைவலிக்கிறது. இந்தத் தைலத்தை நெற்றியில் தடவு" என்றேன். வாசலில் மோட்டார் ஊதுகுழல் உறுமியது. அவள் எழுந்துபோய்விட்டாள். பிறகு எப்பொழுது வீடு வந்து சேர்ந்தாளோ நானறியேன்.

நாளொரு புடவை, தினமொரு கைக்கடிகாரம் அணிந்து கொள்வாள். ஆனால் என்னை ஒரு திரணமாய் மதித்தாள். ஒருநாள் மாலையில் எங்கோ புறப்பட்டுவிட்டாள். பத்து மணியாயிற்று, சாமமாயிற்று, விடிந்தது. நாளிரண்டு பறந்தது. அவள் வீட்டுக்கு வரவேயில்லை. எங்கோ பெண்களோடு சுற்றுப் பிரயாணம் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டேன். ஐயோ! இந்த யந்திர வாழ்வின் கைபிடிக்காகவா அனாதையை வெறுத்தேன்.

4

கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கையிற் கிடந்தேன். ஒவ்வொரு துக்க அலையும் என்னை விழுங்க வாயைப் பிளந்தது. என் அந்தகாரமான மனதிலே ஒரு மின்மினி அங்கு மிங்கும் பறந்தது. அவள்முகம், அவள் பார்வை, மாலை, கொஞ்சும் மொழிகள் - எல்லாம் என் கண்முன்னே நின்றன. என்னைக் கடிந்து கொண்டேன். எழுந்து அவளிருக்கும் திசையை நோக்கிக் கைகளை நீட்டினேன். மண்டியிட்டுக் கொண்டேன்.

திடீரென்று யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. தந்திக்காரன் தந்தியை நீட்டி னான். ஈரம் வற்றிக் காயாத கண்ணீர்த் திவலையோடு அதை வாசித்தேன். அதிலே கண்டிருந்தது என் வாழ்வின் பேரிடி. ஒரே ஓட்டமாக ஓடி ரயிலேறினேன்.

"ரேவதி, உன் உடம்பு ஆபத்தான நிலையில் இருக்கிறதா? பாவியை நினைத்துத்தான் அப்படியானாய் போலும்! அனாதையே, இந்தத் துரோகியின் கண்களில் விழியாமல் தான் நீ போய்விடப் போகிறாய்!"

பாட்டியின் வீட்டுக்குள் பிரவேசித்தேன், பழைய மரக்கட்டிலிலைச் சுற்றிப் பாட்டி ஏங்கிக் கிடந்தாள். அது பயங்கரமான இரவு. அதன் ஆழ்ந்த நிசப்தத்தைக் கலைக்க நாயொன்று தீனமான குரலில் அழுதது. கட்டிலின் பக்கத்தே மங்கல விளக்கு அலைந்து கொண்டிருந்தது. உள்ளே பிரவேசித்தேன்.

ரேவதிதானோ அது. ஐயோ தளிர்க்கை எங்கே? காலதேவன் குடித்த எலும்பையும் தோலையுமா பார்ப்பது? பாட்டி கதறிக்கொண்டு காலடியில் விழுந்தாள். என்னையறியாமலே கண்களைக் கசக்கினேன். ரேவதியின் குழிந்த கண்களின் இமைகள் திறந்தன. என்னைப் பார்த்தாள். வெறும் எலும்பான முகத்திலே தாண்டவமாடிய ஆனந்தக் கடலில் பெருக்கை எப்படிச் சொல்லுவேன்.

"அத்தான் நீங்கள் காணாத ஒரு கை என்னைச் சமிக்ஞை செய்து அழைக்கிறது. நீங்கள் காணமுடியாத காதற் பட்சியின் சிறகுகளில் நான் பறக்கப் போகிறேன். என் வெறும் உடம்பில் காதல் இல்லை. இதோ என் அகத்தில் விரியும் காதல் மொட்டைக் கண்டாயா? என்று அவள் சொல்வது போலிருந்தது. அவள் முகத்தின் மலர்ச்சிக் கருத்து அதுதான்.

"அத்தான், வந்துவிட்டீர்களா?" என்று முக்கி முனகி மெல்லிய குரலிற் சொன்னாள். ஐயோ, ரேவதியெங்கே? தீபம் அவிந்தது.

பாட்டி கோவென்று கதறுகிறாள். அவளை ஆற்றுவாரில்லை. ஐயோ கொடும் பாவியான நான், இந்தக் கல்லின் மேல் இருந்து விம்மி விம்பி அழுதால் காதலாற் பரிமளித்த அவள் ஆத்மா சாந்தியடையுமா?

ஈழகேசரி - 21. 07 . 1940

தண்ணீர் தாகம்

ஆனந்தன்

பங்குனி மாதம். வெயில் மிகவும் காய்தலாக அடித்துக் கொண்டிருந்தது. றோட்டில் அவ்வளவு நடமாட்டமில்லை. தூரத்தில் மாத்திரம் ஒருவன் குடை பிடித்துக்கொண்டு வியர்க்க வியர்க்க விறுவிறுக்கத் தார் றோட்டில் அவசரமாய்ப் போய்கொண்டிருந்தான். அதற்கப்பால் ஒரு கட்டை வண்டி "கடா கடா" என்று ஆடி ஆடி வந்து கொண்டிருந்தது. பன்னிரண்டு மணி வெயிலிலே யாரும் தலை காட்டவில்லை. பகல் முழுவதும் வெயிலிலே திரியும் நாய்கூட சுவரோரத்தில் கிடந்த சிறு நிழலில் இளைத்துக் கொண்டிருந்தது. அவ்வளவு உக்கிரமான வெயில். பலர் பகலுறக்கம் போட்டார்கள். சிலர் புழுக்கம் தாளாமல் தவித்தார்கள். செட்டியார் புதினப் பத்திரிகையோடு தூங்கி வழிந்துகொண்டிருந்தார்.

அந்த அரசமரத்தின் கீழ்த்தான் பகல் முழுவதும் மீனாட்சிக்கு வேலை. நியாஸ்தலத்துக்குப் போகும் கிளை றோட்டும் பெரிய தெருவும் கோணமாய்ச் சந்திக்கும் சந்தி அது. அந்த அரசமரத்தைச் சுற்றி வெயில் கடுமைக்கு உகந்த குளிர் நிழல். தட்டுச் சுளகிலே சின்னச் சின்னக் கூறாகக் கத்தரிக்காய், பிஞ்சு மிளகாய் நன்றாக அடுக்கிப் பக்குவமாக

வைக்கப்பட்டிருந்தன. அவளுக்குச் சோம்பேறித்தனமோ கொட்டாவியோ இல்லை. அன்றைக்கு வியாபாரம் அவ்வளவு ருசியாகவில்லை. கோடு கலைந்ததும் பள்ளிக்கூடம் விட்டதும்தான் வியாபாரத்தின் ருசி தெரியும். கொண்டுவந்த பெட்டியைக் காலி செய்து விட்டே வீடு திரும்புவாள். அப்பொழுது அவள் உள்ளத்தில் எழுவது ஆனந்தக்கடல்தான்.

தலையைக் கோதிக்கொண்ட பள்ளமான அடியிற் சாய்ந்தாள். அரசமிலைகளை இடை யிடையே அசைக்கும் காற்று அவள் கூந்தலையும் ஆட்டிக்கொண்டிருந்தது. ஒரு காகம் மாத்திரம் கொப்பிலே இருந்து பலத்த தொனி - வைத்தது.

அவளைப் பார்த்தால் யாருமே இழிகுலத்தவள் என்று சொல்லமாட்டார்கள். அவ ளுடைய சிவந்த மேனியும் கருவண்டுக் கண்களும் யாரையும் கொள்ளை கொண்டு விடும். அவள் ஜாதியைப் பற்றி யாருமே கேட்டதில்லை.

அப்படி அவர்கள் அறிந்திருந்தால் எப்பவோ அவள் வியாபாரத்தில் மண் விழுந்தி ருக்கும். ஊரார் மாத்திரம் அவளிடம் எதுவும் வாங்குவதில்லை. அவர்களுக்குத்தான் விசயந் தெரியுமே?

வெயில் எரிய எரிய அவளுக்குத் தாகம் எடுக்கத் தொடங்கியது. பொறுத்துப் பார்த்தாள். நா வறளத் தொடங்கியது. இனி அவளால் சகிக்க முடியாது. மெதுவாக அவற்றைப் பெட்டியிலே போட்டுக்கொண்டு கிளம்பினாள். பக்கத்தில் வீடுகளில்லை. அவையெல்லாம் காய்கறி விளை யும் பூமியும் பற்றைக்காடுகளுந்தான்.

செழித்த கமுகுகளும் வாழைகளும் அங்கே கிணறு இருக்க வேண்டுமென்பதை ருசுப் படுத்தின. மெல்ல மெல்ல வீட்டின் அருகே வந்தாள். தெருவழியே ஓடிய சேற்றுத் தண்ணி இன்னும் அந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. உள்ளே பெட்டியை வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

கிணற்றைக் காணக்காண மேலும் தாகம் அவளை வாட்டியது. அடிநாவிலே சொட்டு ஜலமில்லாமல் வறண்டு போயிற்று. அந்த வெயிலின் அகோரத்திற்கு யாருக்குத்தான் தாகிமில்லை!

கிணற்றுக் கட்டிலே விளக்கினைத்தம்பிலே நிறையக் குளிர்ந்த ஜலத்தைக் காண அவள் உள்ளமும் வாயும் அதிலே ஆழ்ந்துபோயிற்று. பாவம், அந்த விடாயை அடக்க இன் னொரு விடாய் உதவியாய் - இருந்தது. தான் அந்த விடாயைத் தீர்க்க அருகதையற்றவள் என் பதை அவள் அறிவாள். இழிகுலத்தில் பிறந்த பெண்கள் எல்லாம் தாகசாந்தி செய்யக்கூடாது என்று கடவுள் கட்டளையிட்டிருக்கிறார் என்பது அவள் அபிப்பிராயம். அந்தச் செம்பை " மாறிப் பார்த்தாள். யாரையும் காணவில்லை .

II

"என்னடி செய்தாய் பாதகி" என்று மிரட்டல் கேட்டது அதிகார தோரணையில்.

ஏங்கி விலவிலத்துப் போனாள் மீனாட்சி. உடம்பு சொட்ட நெஞ்சு திக்திக் என்று அடித்துக் கொண்டது. கண்கள் மிரள மிரள விழித்தன. அவள் தான் செய்த களவு பிடிபட்டதை எண்ணிக் கல்லாய்ச் சமைந்து போனாள்.

"உனக்கு அவ்வளவு மமதையா பறைச் சிறுக்கி" என்று ஆத்திரத் தோடு ஓடிவந்தார் நடேசய்யர். விபூதியைப் பொத்திக்கொண்ட கைகள் ஆத்திரத்தால் அங்குமிங்கும் எதையோ தேடின. கோபாக்கினி கண்களிலிருந்து பறந்தது.

"அவ்வளவு நெஞ்சுத் துணிவு. கிணற்றுக்குக் கிட்ட வந்து செம்புச் சலத்திலும் தொட்டு விட்டாயே? அனுஷ்டான ஜலத்தில் தொட உனக்கு அவ்வளவு தைரியம் வந்துவிட்டது" பல்லைக் கடித்துக் கடித்து ஆத்திரத்தோடு அவளை விழுங்கப் போனார். பாவம் பறைப் பெண் அல்லவா? கோயிலுக்குப் போனால் எப்படிப் பிராயச்சித்தம் செய்வது என்று விட்டுவிட்டார் போலும்.

"மூதேவி நாயே, இனி என்னுடைய கிணற்றை நான் என்ன செய்வது? அனுஷ்டான பாத்திரத்தை வைத்துவிட்டு விபூதி எடுத்து வருவதற்கிடையில் இப்படிச் செய்துவிட்டாயா? இனி இந்தச் செம்பை.....! நீ அந்தக் கதிரன் மகளல்லவா? என்னுடைய அனுஷ்டான ஜலத்தைத் தொட்ட நீ கொள்ளையிலே போகமாட்டாயா? சிவன் உன்னை வதைக்க மாட்டானா?"

ஒரு மின்னல் மின்னியது போல் இருந்தது. உலகமே இருண்டு மடமடத்து அவள் தலையில் கவிழ்ந்தது போல் இருந்தது. பூமியே அவள் கால்களிலிருந்து நழுவிவிட்டது. இரத்தம் நெற்றியிலிருந்து குபீரிட்டது. களங்கமற்ற பார்வைக் கண்ணீரோடு இரத்தம் சேர்ந்து ஓடியது. செம்பு அலங்கோலமாய் உருண்டு போய்விட்டது. அது அவள் கனிவாயைப் பற்றப்போய்த் தோல்வியடைந்ததற்காக அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தது. - "மூதேவி, இனி இந்தப்பக்கம் தலைகாட்டு, உன் தலையை நுள்ளி எடுத்துவிடுகிறேனோ இல்லையோ பார். உனக்கு இது போதாது பேர் நாயே வெளியே. சனியன்கள் வீட்டில் வந்து கூசாமற் கால் வைக்குதுகள்'

தங்கச்சிலைபோல இவ்வளவும் நின்ற உருவம், இரத்த ஆற்றோடு பெயரத் தொடங்கியது. பெட்டியை எடுத்துத் தலையில் வைத்துக் கொண்டு மெதுவாக வெளியே போய் விட்டாள். அவர் எறிந்தபோது வாய்ச்செம்பு அவள் நெற்றியில் நன்றாய்க் கணீரிட்டுவிட்டது. தீண்டாமை அசுரனின் அசுரத்தன்மை அவள் பிறைநுதலில் இரத்தத்தை வாங்கி விட்டது.

பாவம் தர்கவிடாய் தீர்ந்தபாடில்லை. களவுக்கேற்ற தண்டனை கிடைத்து விட்டதல்லவா? ஒரு பிராமணனின் அனுஷ்டானப் பாத்திரத்தைத் தொட்டுவிட்டாளல்லவா? எவ்வளவு பொல்லாத கோரக்களவு. இதற்கு இந்தத் தண்டனை போதுமா? சிவனுடைய அனுஷ்டானத்தை முடிக்க விடாமல் தண்ணீரைத் தொட்டு தீட்டாக்கியவளல்லவா? பெண்ணைத் திட்டிய திட்டுக்களைப் பார்த்துப் பகவான் சிரித்துக்கொண்டிருந்தார். "என் பிள்ளையின் கடூர நா வரட்சியைத் தணிக்காத உனக்கு என் மீது ஒரு அன்பா? உன்னுடைய அனுஷ்டானம் கொடிய நரகிற்கு வாயிலல்லவா" என்று அழுகையோடுதான் அவர் சிரித்துக் கொண்டிருந்தார்.

சந்திரனுக்கும் இவள் முகத்திற்கும் நெடுங்காலம் ஓர் வித்தியாசம். அது இன்றோடு பூர்த்தியாகிவிட்டது. அவள் மதிவதனத்திலும் மறு ஏற்பட்டுவிட்டது.

ஏழையின் தண்ணீர் விடாய் என்றுதான் தீருமோ?

III

நடுநிசி. எங்கும் ஒரே நிசப்தம். ஆனால் அறைகளில் இருமும் சப்தமும் குழந்தைகளின் கீச்சுக்குரலும் இன்னும் ஒழிந்தபாடில்லை. "ஐயோ அம்மா" என்று அடுத்த அறைகளில்

வியாதிக்காரர் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. குழந்தைகளைத் தாலாட்டும் தாய்மாரின் பல தினுசான குரல். அங்கங்கே மின்சார விளக்குகள் தூக்கிக்கொண்டிருந்தன.

ஒரு கிழவன் பூநூலை இழுத்துவிட்டுக் கொண்டு மூலையிலே செருமிக் கொண்டு நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான். கஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டு முக்கி முனகிக் கொண்டிருந்தான். அவனை யாரும் கவனிப்பார் இல்லை. அவன் சுற்றமெல்லாம் இன்று அவனைக் கைவிட்டு விட்டன. அவன் அவர்கட்கெல்லாம் என்ன செய்தான்? ஒரே ஒரு பிழை. வாலிபமாய் இருந்த காலத்திலே தெரியாமல் தூரத்திலே உள்ள வெள்ளாளப் பெண்ணைப் பார்ப்பனத்தி என்று கல்யாணம் செய்தான். சிலநாட்கள் சென்றதன் பின் சுற்றம் எல்லாம் அவனை இகழ்ந்து தள்ளிவிட்டது. அதன் பின்புதான் அவனுக்கு விஷயம் புரிந்தது. தான் வெள்ளாளப் பெண்ணைக் கட்டிவிட்டான் என்று உணர்ந்ததும் மெல்ல அவளைக் கைவிட்டான். பெண்வழியால் லாபமும் இல்லை. இனசனமும் இல்லை. இன்றுவரையும் தனியேதான் காலந் தள்ளினான். இன்றைக்கு வியாதியாய்ப் போனான். கவனிப்பார் இல்லை. தர்ம ஆசுப்பத்திரியிலே கிடக்கிறான்.

அவனுக்கு மேலும் மேலும் மூச்சுவாங்கத் தொடங்கியது. தண்ணீர் விடாயெடுத்தது. அடிநாவிலே ஈரலிப்பில்லை. இருமி இருமி வரண்டு போயிற்று. தாகவிடாய் வரவர அதிகரித்தது. பேச்சுக் கொடுத்தாலோ இருமல் வாட்டுகிறது.

"அம்மா, தண்ணீர்! நாவை வறட்டுகிறது" என்று சொன்னான் அந்தக் கிழவன் கெஞ்சும் குரலில். பதிலே இல்லை. அடுத்த அறையில் இருந்து ஒரு இருமல்தான் அதற்குப் பதில். கொஞ்சநேரம் நிசப்தம்.

அம்மா,என்னால் சகிக்க முடியவில்லை.தண்ணீர் விடாயால் செத்துப் போய்விடுவேன். தண்ணீர் கொடுங்களம்மா."

யாருமே மூச்சு விடவில்லை. தாதிகள் எல்லாம் ஒரே உறக்கம் போலும்.

ஒரு பெண்ணுருவம் அந்த மூலையருகே வந்தது. ஆமாம் அவளும் ஒரு தாதிப் பெண்தான். அந்த ஆஸ்பத்திரியில், காலதேவன் கீறிய கோடுகள் பதிந்த அவன் முகத்தை உற்றுப் பார்த்தது. ஆனாலும் அந்த முகம் அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. கிழவன் தண்ணீருக்காக வாயைத் திறந்தான்.

"ஐயா, பறைச்சி தொட்டுத் தண்ணீர் தந்தால் குடிப்பீர்களா? தாங்கள் பிராமணரல்லவா?" என்றாள் அவள்.

"அம்மா, அம்மா, குழந்தாய், பிராமணனானாலென்ன? பறையனா னாலென்ன? என் தாகத்திற்கு நீர் கொடம்மா! கொடிய மரணதாகம் நெஞ்சை அடைக்கிறது."

அவள் ஒரு சின்னப் பாத்திரத்தில் இளஞ்சூடான நீரைக் கொண்டு வந்தாள். கிழவன் விடாய் அலாதியால் வாயைத் திறந்தான். ஆகா! உள்ளம் பூரிக்க ஆத்மா சாந்தியடைய மெல்ல மெல்ல நீரை வார்த்தாள் பெண்மணி.

"அம்மா, இந்த மரணவிடாயில் என்னைக் காப்பாற்றினாய். உன் குலம் நன்றாக வாழட்டும். நீ யாரம்மா?"

"ஐயா, என்னைத் தெரியாதா? நன்றாக உற்றுப் பாருங்கள்" என்று குனிந்தாள் அந்தத் தாதி. "ஞாபகம் இல்லையே?"

தன் நெற்றியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தாள். "இதோ பாருங்கள் இந்த மறுவை. தண்ணீர் விடாய்த்து அன்றொருநாள் உங்கள் வீட்டில் வந்தேனல்லவா? தாகவிடாய் தாங்காமல் சிறுபிள்ளைத் தனத்தால் ஏதோ அனுஷ்டானச் செம்பைத் தொட்டுவிட்டேனென்று நீங்கள் செம்பால் எறிந்த காயம் இதுதான்" அவள் நெற்றியைக் காட்டினாள் கிழவனுக்கு.

கிழவன் முகம் காட்டிய குறியின் உணர்ச்சி, ஏதோ புதிதாய் இருந்தது. "ஆமாம், கதிரன் மகளல்லவா? எப்படியம்மா இங்கே வந்தாய்? தாதியாகவும் வேலை பார்க்கிறாயே?"

"ஆம் ஐயா, எல்லாம் அந்தக் கிறிஸ்தவப் பெரியாரின் கிருபைதான். அன்றைக்கு நீங்கள் தீர்க்காத தாகத்தை அந்தப் பெரியார்கள் தீர்த்தார்கள். கல்வியளித்து இந்த நிலைமையில் வைத்தார்கள்"

கிழவன் உள்ளம் வெடித்துவிட்டது. என் மரண தாகத்தை நீக்கிய கரங்களுக்கா அன்று இரத்தக்கறை ஏற்பட வேண்டும்! இந்த விடாய் தானே அந்தப் பசலைக்கும் அன்று!'

"அம்மா என்னை மன்னி. ஜாதிக் கர்வத்தால் அன்று உன்னை எறிந்த என்னை மனப்பூர்வமாய் மன்னி!"

கிழவன் அவள் காலடியில் விழ எழுந்தான். பாவம்! அப்படியே தொப்பென்று விழுந்தான். விடாய் அடங்கியதோடு, அவன் கண் திறக்கவேயில்லை.

ஈழகேசரி
12.02.1939

பாணன்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவர் பாணன் ஆவார். இவரது சிறு கதைகள் பல ஈழகேசரியில் வெளிவந்துள்ளன. இப்புனை பெயரில் மறைந்துள் ளவர் எவரென அறியமுடியவில்லை.

❖ ஆறிய மனம்

ஆறிய மனம்

பாணன்

எப்படி மிஸ்ரர் தாமோதரம் என்ன சாக்கு வைத்துக்கொண்டு பென்ஷன் வாங்கிக்கொண்டு வந்தீர்? டக்ரர் சபேதார் இடந்தானே மெடிக்கல் சேர்டிவிக்கேற் வாங்கினீர் ? மூத்த பையன் படித்தானே கிங் கொலீஜில் அவனையும் கொண்டு வந்து விட்டீர்களோ? அவ்விடத்துப் புதினங்கள் என்ன?" என்றிவ்வாறு அடுக்கிக்கொண்டே வந்து உட்கார்ந்தார் சுப்பிரமணியம். "நீங்கள்தானே பழைய பூடுகள் நீங்கள் காட்டிய வழிகள் எங்களிடம் எப்படித் தப்பமுடியும் ஒருமாதிரி பென்ஷனும் வாங்கிக்கொண்டு வந்துதான் விட்டோம். எப்படி, உங்களுக்கு இந்த யாழ்ப்பாணம் பிடித்துக்கொண்டதா, என்ன?"என்று தம் உள்ளே அவாவிய எண்ணத்திற்கு ஒரு அத்தியாரம் போட்டார் தாமோதரம்.

தாமோதரம் நாளது 1937-ம் வருஷம் டிஸம்பர் மாசத்தோடு எவ் எம். எஸ். இல் தம்மைப் பிடித்து வைத்திருந்த வேலையையும் உதறித் தள்ளிவிட்டு தம் இரண்டு புத்திரர் - மனைவியோடும் ஜன்ம தேசத்துக்கு வந்து சேர்ந்தார். அவருடைய மூத்த பையன் கோலாலம்பூரிலே கிங் கொலீஜில் மூன்றாம் போமில் படித்தவன். அவனைக் கொழும்பில்

றோயல் கொலீஜில் படிக்க வைக்கலாம் என்னும் எண்ணத்தோடுதான் அழைத்து வந்தார். ஆனால் ஜன்ம தேசத்தில் அவருடைய எண்ணம், தம்மைப் போன்ற இரண்டொரு பென்ஷனர்களுடைய தரிசனத்தால் மாறிவிட்டது. அதனாலேதான் மணியம் தம்மிடம் வந்தபோது, யாழ்ப்பாணம் எப்படி?" என்னும் கேள்வியைப் போட்டு அவரை ஒருமுறை விழிக்கச் செய்தார். பாவம், மணியம் எப்படி யாழ்ப்பாணத்தைப் பற்றி அறிவார். அவருக்கு வெளுத்ததெல்லாம் பால். மனதில் அப்பழுக்கில்லாத மனுஷன். மதுரநாயகனின் ஏதோ ஒரு நல்ல வினையாற் போலும், கந்தையா உபாத்தியாயர் சிபார்சு செய்தபடி நம்பி அவர் தமது மகன் மதுரத்தை இந்துக் கொலீஜுக்கே படிக்க அனுப்பி வைத்தார். அவன் அங்கே ஜூனியர் வகுப்பில் வாசித்துக் கொண்டு வருகிறான்.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள் மணி, மாமாவுக்கு ரீ கொண்டு வா சீக்கிரம்" என்று தம் இளைய மகனிடம் தூண்டினார். மணியம் தலை தூக்கி உட்கார்ந்தார். "யாழ்ப்பாணம் என்ன அப்படி இப்படி ஒரு சிறிசு பட்ட ஊரா? வந்து இரண்டு மாசங்கூட ஆகவில்லை. இதற்கிடையில் நான் எதை என்ன அறிந்து உங்களுக்குச் சொல்லுவது? இங்கே மனிதர்கள் எல்லாம் ஒரு மாதிரியாய்த்தான் இருக்கிறார்கள் எனக்கு. ஒருவர் இன்றைக்கு ஒன்று சொல்லுவர் நாளைக்கு உடனே அதை மாற்றிப் பேசுவர். ஒரு நாளைக்குக் கடவுள் இல்லை என்கிறார். மற்ற நாளைக்கு "ஆ! கடவுளே இப்படியும் வரலாமோ" என்கிறார். நேற்றுச் சொன்னார்: "சிங்களவர் எங்கள் சோதரர்தான் அவர்களோடு ஒத்துழைத்து வாழ வேண்டும்" என்று. இன்று சொல்கிறார்: "சிங்களவர் நமது விரோதிகள் உத்தியோக வேட்டைக்குப் பாடுபடுகிறார்கள் உத்தியோகத்தை மடக்கிக்கொண்டு தமிழனைத் திண்டாட வைக்கிறான்" என்று. ஒரு பத்திரிகையில் ஒருநாள் ஒருவர் எழுதுகிறார்: "எங்கள் சமயத்துப் பிள்ளை எங்கள் சமயப் பள்ளியில்தான் படிக்க வைக்க வேண்டும். பிற சமயத்துப் பிற பள்ளியிலே படிக்கவைத்தால் பிள்ளைகளும் பரமோக மாகி ஒன்றுக்கும் உதவாக்கரையாகிறார்கள்"

"சைவர்கள் சைவப்பள்ளியிற் படிக்கட்டும்! அப்படியே மற்றவர்களும் அந்த நாளில் நாவலர் ஒருவர் இருந்தார் அவர்தான் யாழ்ப்பாணத்தை யாழ்ப்பாணம் என்று சொல்ல வைத்தவர் எத்தனை குறைத் தமிழ் பேசும் மனிதர் யாழ்ப்பாணத் தமிழைக் கண்டு மயங்குகின்றார்கள்; சைவம் - தமிழ் இரண்டுக்குமாகப் பிறந்தவர்தான் நாவலர்....." என்று, மற்றொரு நாள் மற்றொரு பத்திரிகையிலே ஒருவர் எழுதுகிறார்: "அப்பா, எங்கள் பிள்ளை உத்தியோகம் பார்க்கவேண்டும். வைத்தியராவதற்கு நல்ல படிப்பு வேண்டும். நல்ல படிப்புள்ள பள்ளிக்குத்தான் நமது பிள்ளைகளையும் அனுப்ப வேண்டும். நல்ல உபாத்திமாரில்லாமல் சம்பளத்தைக் கருதிப் படிப்பிக்கிற உபாத்திமாரிடம் எங்கள் பிள்ளைகளை அனுப்பி, அவர்கள் மூளையைக் குழப்புதல் கூடாது. பிள்ளை உத்தியோகமான பிறகு சமயத்தையோ தமிழையோ கட்டியழட்டும்! எல்லாம் வயிறு குளிர்ச்சியாக இருந்தால்தானே வரும்....." என்று. பாரும் இன்னும் எத்தனை? ஒருநாளைக்கொருவிதம்! பனையடி போகமுன் ஒருவிதம் - பின் வேறு ஒருவிதம். அப்பப்பா! எனக்கு ஒன்றுமாய்ப் புரியவில்லையே!" என்று இவ்வாறு தம் மனசில் இரண்டு மாசமாகக் குமுறிக்கொண்டிருந்த எண்ணங்களை எல்லாம் கொட்டி அளந்தார்.

தாமோதரம் திறந்த வாய் மூட மறந்தே கேட்டுக்கொண்டிருந்தார். மணி கொண்டு வந்த "ரீ அப்படியே கிடந்து ஆறியது! தாமோதரத்தின் சம்சாரம் கதவோரத்தில் நின்று இப்பிரசங்கமெல்லாம் கேட்டவள், ஒரு பெருமூச்சுடன் சமையலுட் போனாள். தாமோதரம்

மணியத்தின் வரவையே எதிர்பார்த்திருந்தவர் மற்றொன்றையும் கவனித்தாரில்லை.. தாயின் சமிக்ஞைப்படி போன மணி சுடச் சுடக் காப்பியுங் கொண்டுவந்து "மாமா காப்பி குடி யுங்கள்" என்று வேண்டினான். அப்பொழுதுதான் அந்த இருவரும் தம்மை உணர்ந்தார்கள்.

"மாமா, மதுரமண்ணா எங்கே படிக்கிறான்? அவன் ஸ்கூலால் வந்த பிறகு கூட்டி வருகி றீர்களா? அண்ணாவும் பார்க்கவேண்டும் என்று சொன்னார் ஏன், அவன் இங்கேதானே படிக்கிறான்" -

"தம்பீ, மாமாவுக்கு வெற்றிலை வாங்கிக்கொண்டு வாரும் அம்மாவிடம்." மீனாக்ஷி உள்ளே தயாரபடுத்தி வைத்திருந்த வெற்றிலைத் தட்டுடன் வந்து சேர்ந்தான் மணி.

"மிஸ்ரர் மணியம், என் மூத்த பையன் இருக்கிறானே சிற்றம்பலம் அவனைக் கொழும் பில் றோயல் கொலீச்சுக்குப் படிக்க அனுப்பலாம் என்றுதான் இருந்தேன் அவர் பொன்னம் பலமும் சோமரும் சொன்னார்கள்: "அங்கே வீண்செலவு" என்று தாங்களும் தங்கள் மக்களை அந்தப் பாதிரியார் பள்ளிக்கே அனுப்பியிருக்கிறார்களாம் என்னை அங்கேதான் அனுப்பச் சொன்னார்கள். நானும் பார்த்தேன் - அது பழுதில்லைப் போலத்தான் இருக்கிறது! முந்தாநாள் அங்கே போனேன் - பெரிய உபாத்தியார் எல்லா இடங்களையும் காட்டினார் என்ன! ஸயன்ஸ் றூம் - ஜியோக்றபி றூம் - ஹைஜீன் றூம் - பிறேயர் ஹோல் - ஆ! என்ன அழகான டொமிற்றறி! பாத்றூம் ஊ! எல்லாம் என்ன சௌகரியம்! இரண்டு பேரையும் அனுப்பினால் ஒன்றரைச் செலவில் படிப்பிக்கிறார்களாம்" - இவ்வாறு தாமோதரம் தமது விஷயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியிட்டார்.

"ஏதோ எனக்கு அவ்வளவு பிடிமானமாக இல்லை எப்படி இருந்தாலும் அவர்கள் அந்நியர்கள்தானே, தாழ்விலும் கவனிப்பார்களா என்ன் இப்போது பச்சையாய்த்தான் இருப் பார்கள் பிறகு எப்படிப் போகுமோ யார் கண்டார்? அந்தக் கந்தையா உபாத்தியாயர் ஒரு நல்ல மனுஷன் அவர் சொன்னார் சொன்னபடி அந்த இந்து கொலீச்சுக்கே மதுரத்தை அனுப்பி இருக்கிறேன் பாடுபட்டுத் தேடிய பணம் அப்பா! கடவுள்தான்," சுப்பிரமணியம் விடை பெற்றுச் சென்றார். அவருடைய வார்த்தைகளால் தாமோதரத்தின் மனசில் ஒரு மெல்லிய திரை வீழலா யிற்று. அந்தத் திரைக்கூடாகவும், பூர்வபீடிகைகளையே அவர் கண்டார். :

ஒரு கிழமை கழிந்தது. சிற்றம்பலத்தையும் மணியையும் தாமோதரம் தாம் நினைத்த அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒன்றரைச் செலவுடன் எத்தனையோ பிளீஸ்"கள் பண்ணிச் சேர்த்து விட்டார். மு. பணமாகவும் ஒரு சிறு தொகை கட்டப்பட்டது. வெள்ளிக்கிழமை சிற்றம்பலமும் மணியும் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வந்தார்கள் அம்மாவிடம் போய் ஏதோ முறை யிட்டார்கள். (அந்தப் பள்ளிக்கு இனிப் போகமாட்டோம் என்றுதான்!) தாய் கெஞ்சியும் பார்த் தாள் மணி ஒரே பிடிவாதமாய் நின்றபடியால் மீனாக்ஷியும் அவர்களுடன் சேர்ந்து கொண் டாள் - பிள்ளைப் பாசத்தால்! சகல விஷயங்களையும் தெளிவாக அவளுக்குச் சிற்றம்பலம் சொல்லி வைத்தான்.

தமது இரத்தினங்களின் படிப்பையும் பள்ளியையும் பற்றி அறிய ஆவலோடிருந்த தாமோதரம் அவர்கள் படித்துக் கொண்டிருந்த அறைக்கே வந்துவிட்டார். அங்கேதான் மீனாக்ஷியும் அவர்கள் படிப்பதை ஆசையாய்ப் பார்த்துக்கொண்டு இருந்தாள். தாமோதரம்

"மணி! எப்படியடா பள்ளி? உபாத்தியாயர் பிடித்துக்கொண்டதா?" என்று தம் வேட்கையைப் புலப்படுத்தினார்.

"ஹூம் - ஐயா, நான் அந்தப் பள்ளிக்கு இனிப் போகமாட்டேன் அண்ணாவும் வரார் கேளும்!" என்றான் தாயின் புன்சிரிப்பிற் கடைக் கண்ணை எறிந்து கொண்டே!

"ஏன்? அங்கே என்ன? அடித்தார்களா?" "சை - இல்லை ." "பின் எதற்காக மாட்டாய்?" "அம்மாவைக் கேளுங்கோ."

"ஏன் பெரியதம்பி, பள்ளிக்கூடம் பிடிக்கவில்லையோ? மணி குழப்படி பண்ணு கிறானோ?"

"அப்படி ஒன்றும் இல்லை, ஐயர் பள்ளிக்கூடம் நன்றாய்த்தான் இருக்கு. உபாத்தியார்க ளும் அப்படித்தான்! ஆனால் எல்லாம் ஒரு புது - மாதிரியாக இருக்கு. காலையில் பிறேயர் ஹோலில் என்னமோ எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள்! அதில் ஒன்றும் விளங்காத ஒரு பாடம்! அவர்கள் சொல்லித் தருகிறதை அப்படியே சாப்பித் தின்ன வேண்டும்! அங்கே எல்லா ரையும் பார்க்க வேறுவிதமாய்த்தான் தோன்றுகிறார்கள்! அப்பா, நாங்கள் ஏன் அந்த அந்நிய மதப் பள்ளியில் படிக்க வேண்டும்? எங்கள் சமயத்தில் எங்கள் சமய உபாத்தியார். படிப்பிக்கிற பள்ளிக்கூடங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லையே? இருக்கின்றனதானே? என்னுடைய மனசுக்கு சரியென்று ஒன்று செய்தல் கூட மிகப் பெரிய குற்றமாக இருக்கிறதே! எங்கள் மனிதர் படிப்பிக்கும் பள்ளியில் தான் படிக்க வேண்டும். இல்லையேல் படிப்பே வேண்டாம்" என்று சிறிது அழுத்தந்திருத்தமாகச் சொன்னான்.

அங்கேதான் படிப்பு நல்லாய் இருக்கிறதாகச் சொல்லுகிறார்களே! பழக்க வழக்கமும் தான் நீ கொஞ்சம் விருப்பம் வைத்துத்தான் சிறிது காலம் அங்கே படித்துப் பாரேன்" என்றார். - "ஐயா, நான் அந்தப் பள்ளிக்குப் போதல், என்னவோ ஒருபொழுதும் முடியாது சும்மா இருப்பேன் சுதந்திரமும் போகாது" என்று அவன் முணுமுணுத்தான்.

"தம்பி, இந்தக் கிழமையும் போய் வா; நான் பெரிய வாத்தியாரோடு எல்லாம் பேசி ஒழுங்கு பண்ணுகிறேன் மனசைக் கஷ்டப்படுத்தாதே?"

"ஐயா, அம்மாவிடம் அல்லாமல் ஒரு சட்டைக்காரியிடம் என்னைச் சோறு வாங்கிச் சாப்பிடச் சொல்வது போல இருக்கிறது. நீங்கள் அங்கே போகச் சொல்லுவது. ஏன் இந்த ஊரில் வேறு பள்ளிக்கூடம் இல்லையா நாங்கள் படிக்க" என்று சிறிது கம்பீரத்துடன் சொன்னான் சிற்றம்பலம்.

"சைவப் பள்ளிக்கூடம் எத்தனையோ இருக்கிறதுதான் தம்பி கல்வி நன்றாயில்லையே - என்ன செய்வது? சும்மா காசைக் கொட்டுகிறதா?"

"அப்படியானால் அதற்கேற்ற வழிகளை செய்யவேண்டியது சைவர் கள் எல்லாருக்குங் கடமைதானே! உங்களுக்கும் அது உரியதுதானே?"

"நான் என்ன செய்ய முடியும்? நான் ஒருவன் சொன்னால் கேட்பார்களா?"

"ஐயா, இப்படியே ஒவ்வொருவரும் நாம் என்ன செய்வது; நம்பாட்டைப் பார்ப்போம்" என்று இருந்தால் காரியம் எப்படி உருப்படும்"

"சரி, சரி. எத்தனை பென்ஷனர்மார்கள் இப்படிச் சொல்லிச் சொல்லி, தம் மந்த புத்தியால் தமது பிள்ளைகளை அநியாயமாகத் திருப்ப இடங்கொடுத்தார்களோ? தனிப்பட்ட முறையில் ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், சேர்ந்தாவது சைவர்களைக் கண்விழிப்பிக்கச் செய்ய வேண்டியது எங்கள் கடமைதான்! அன்று மணியம் சொன்ன போதும் நான் உணர வில்லையே!"

மீனாக்ஷி உள்ளூர வந்த மகிழ்ச்சியைக் காட்டிக்கொள்ளாமலே சமையலுள்ளுட் சென்றாள்.

ஈழகேசரி
01.01.1939,
8.01.1939

கே. கணேஷ்

02.03.1920இல் கண்டியிலுள்ள அம்பிட்டியில் பிறந்த கே. கணேஷ் குறைவாக எழுதினும் நிறைவாகப் படைத்தவர். 'பாரதி' என்ற சஞ்சிகையை கே. இராமநாதனுடன் இணைந்து நடாத்தியவர். முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தாபகர்களில் முக்கியமானவர். மொழி பெயர்ப்பாளர். கலாபூஷணம் மற்றும் இயல் விருதுகளைப் பெற்றவர். மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும் திருவையாறு ராஜா கல்லூரியிலும் கல்வி பயின்றவர். நவசக்தி. லோகசக்தி ஆகிய இதழ்களில் கவிதை எழுதிய கே. கணேஸ் 1940 களில் மணிக்கொடி இதழில் இரண்டு சிறு கதைகளை எழுதியவர். இவரின் சிறுகதைகள் வீரகேசரி தேசாபிமானி பத்திரிகை களிலும் வெளிவந்துள்ளன. 1940 களில் வீரகேசரியிலும் 1950 களில் சுதந்திரனி லும் பணியாற்றியவர். முல்கராஜ் ஆனந்தின் நாவலை 'தீண்டத் தகாதவன்' என்ற பெயரிலும் கே. எ. அப்பாசின் நாவலை 'குங்குமப் பூ' என்ற பெயரிலும் மொழி பெயர்ந்தவர். ஹோசிமின் கவிதைகள், உக்ரேனிய கவிஞர் இவன் ஃபிராங்கோ கவிதைகளையும் தமிழில் மொழி பெயர்த்தார். லூசுனின் சிறுகதைகளையும் மொழிபெயர்ந்த கணேஷ் 2004 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

- சத்தியபோதி மரம்

சத்தியபோதி மரம்

கே. கணேஷ்

அன்று திங்கட்கிழமை ஆனதால் பஸ்ஸில் அதிகமான நெருக்கடி. சந்தை நாளானபடியாலும் "கோடு கச்சேரி" என்று போனவர்கள் நிறைந்திருந்தபடியாலும் பஸ் நிறைய ஜனங்கள் இருந்தனர். சட்டப்படி முப்பத்திரண்டு பிரயாணிகள் ஏற்றப்படவேண்டிய பஸ்ஸில் எழுபத்திரண்டு பிரயாணிகளாவது ஏறியிருப்பார்கள். ஒரு ஆசனத்தில் இரண்டு பேர்தான் உட்கார வேண்டியது. ஆனால் மூன்று பேரை அமர்த்தி இருந்தான் கண்டக்டர். என் பக்கத்தில் அமர்ந்திருந்த பால்கார கிரிபண்டாவோ இரட்டை நாடி ஆசாமி. மூன்று பேர் அமர்ந்ததும் என் பாடு சிரமமாகி விட்டது. நெருக்கிப் பிடித்துக்கொண்டு ஒருவகையாக உட்கார்ந்தோம். பஸ்ஸும் புறப்பட்டுச் சென்றது. பாதித் தூரத்திற்குக் கிட்டத்தட்ட வந்தி ருக்கும். எவனோ ஒருவன் சைக்கிளில் சென்றவன், சைகை காட்டி விட்டுச் சென்றான். "பொலிஸ்காரர்கள் இருக்கிறார்கள்" என்பது தான் அதன் பொருள். டிரைவர் உடனே பஸ்ஸை நிறுத்தி பிரயாணிகள் எல்லோரையும் உட்கார வைக்கத் தொடங்கினான். இரண்டு பேர் உட்கார வேண்டிய இடத்தில் நான்கு பேரை உட்கார வைக்கும் சிரமமான

காரியத்தில் ஈடுபட்டான் கண்டக்டர். வெளிப்பார்வைக்கு ஓவர் லோடாகத்தோன்றாமலிருக்கும் என்பது அவன் எண்ணம். மீண்டும் பஸ் புறப்பட்டது.

வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடுவது எங்கள் இலாகா அல்ல என்று நிலைநாட்டுவது போல ஒரு இன்ஸ்பெக்டரும், ஒரு சார்ஜனும் பஸ்ஸை நிறுத்தினார்கள். நிறுத்தியதும் கான்ஸ்டபிள் ஒருவன். பிரயாணிகள் தொகையை எண்ணினான். டிரைவர் இறங்கி வெளியே இன்ஸ்பெக்டரிடம் தலையைச் சொறிந்தவாறு பல்லைக் காட்டிக் கொண்டிருந்தான். பஸ் நின்ற இடத்திற்கு அருகில் அரசமரம் ஓங்கி வளர்ந்திருந்தது. வயதின் முதுமையைக் காட்டுவது போல மரம் பரந்து விசாலமாக இருந்தது. அதனைப் பொதுவாக "தியுரும் போதி" (சத்திய அரச மரம்) என அழைப்பார்கள். அவ்வூரின் சுற்று வட்டாரங்களிலிருந்தும் இன்னும் தொலைவு தூரங்களிலிருந்தும் சத்தியம் செய்வதற்கு அங்குதான் வருவார்கள். அங்கு சத்தியம் செய்து விட்டால் அவர்களின் சர்ச்சைகளும் பூசல்களும் அத்துடன் நின்றுவிடும். பொய்ச் சத்தியம் செய்தவன் அழிந்தே விடுவான் என்பது அவர்களது நம்பிக்கை. அந்த அரச மரத்தின் கீழுள்ள பௌத்த ஆலயந்தான் அத்தகைய சக்தி வாய்ந்ததாம். அதிலே அன்று ஆள்நடமாட்டம் அதிகமாக இருந்தது. கிராம உத்தியோகத் தேவதைகள் அங்குமிங்குமாக நடமாடின. பொலிஸ்காரர்கள், பஸ் டிரைவரிடமும் கண்டக்டரிடமும் வாக்குமூலம் வாங்கிக் கொண்டு அந்தக் கோவிலுக்குள்ளேயே சென்றனர். பஸ் டிரைவரும் கண்டக்டரும் டிஸ்ட்ரிட் கோர்ட் நீதிபதியே கோவிலுக்கு ஒரு வழக்கு விஷயமாக வந்திருக்கிறாராம். அதற்குக் காவலாகப் பொலீஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள். அவர் வருவது முன்னமே தெரியாது போய்விட்டது என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். மீண்டும் பஸ் புறப்பட்டுவிட்டது.

"ஆமாம் நானும் மறந்துவிட்டேன். அந்த ரேஸ் டிக்கட் வழக்குத் தீர்ப்பல்லவா இன்றைக்கு. நான் கூட அந்த இரண்டு பேர்களை அங்கே கண்டேன்" என்றான் ஆசனத்தில் நகர்ந்து கொண்டே கிரிபண்டா!

"அது என்ன ரேஸ் டிக்கட் வழக்கு?" என்று ஏக காலத்தில் பல குரல்கள் கேட்டன.

"தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, கடைக்காரன் ஒருவனிடம் இரண்டு ரூபாய் கொடுத்து கண்டிக்குப் போகும் பொழுது ரேஸ் டிக்கட் ஒன்று எழுதிவிட்டு வரச் சொன்னான். கடைக்காரன் தன் பெயருக்கே எழுதிவிட்டான். தற்செயலாகப் பரிசும் கிடைத்துவிட்டது. தொழிலாளி அதை அறிந்து பரிசைக் கேட்டேன். கடைக்காரன் வேண்டுமென்றால் இரண்டு ரூபாயைத் திருப்பித் தருவதாகக் கூறினான். முடிவில் பலர் உதவியுடன் தொழிலாளி வழக்குத் தொடர்ந்தான். ஆதாரம் எல்லாம் கடைக்காரன் பக்கம் இருக்கவே, தொழிலாளி தியுரும் போதியில் சத்தியம் செய்தால் போதும் என்று கூறிவிட்டான். இதுதான் விஷயம்" என்று விஷயம் அறிந்தவனது கம்பீரத்தில் தனது புஷ் கோட்டை முட்டிக்கொண்டு தொந்தி தெரிவதை அறிந்து கோட்டை இழுத்து விட்டுவிட்டுக் குடுமியை முடிந்தான் பண்டா.

"ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும்பொழுது தாராளமாய் எவனும் பொய்ச்சத்தியம் செய்வான். சத்தியத்திலெல்லாம் என்ன இருக்கிறது?" என்றேன்.

"அப்படிச் சொல்லாதீர்கள். மற்ற இடத்தில் சத்தியம் செய்வதைப் பற்றி எனக்குத் தெரியாது. இந்த அரச மரத்தில் சக்தி இருக்கத்தான் செய்கிறது" என்றார் எனக்கு எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்த கடைக்காரர் ஒருவர்.

"அதர்மம் செய்பவர்கள் அழிந்துவிடுவதாகக் கூறுவதெல்லாம் சுத்தப் பொய். உண்மையில் பார்க்கப் போனால், அயோக்கியனுக்கும், தில்லுமுல்லுக்காரர்களுக்குந்தான் நல்ல காலமாகத் தெரிகிறது. பண்டைக் காலத்தில் ஏன் இன்றைக்குந்தான் என்ன? மக்களின் வயிற்றிலடித்துக் கொழுத்த கடைக்காரர்களுக்கும் தண்ணீரில் பாலை ஊற்றி பணம் பெருத்த வர்க்கங்களுக்கும் என்ன வந்துவிட்டது? அவர்கள் எல்லாம் நன்றாய்ச் சௌகரியமாய்த்தான் இருக்கிறார்கள். வீடு, வயல், தேயிலைத் தோட்டம் என்று வாங்கிக் கொழுத்துத்தான் இருக்கிறார்கள்" என்றேன்.

பக்கத்திலமர்ந்திருந்த பண்டாவும் எதிரில் அமர்ந்திருந்த கடைக்காரரும் தங்களையே கூறியதாக நினைத்துக் கொண்டார்கள் என்பதை அவர்கள் முகம் காட்டியது.

"தம்பீ, நன்மையான காரியம் செய்தால் நன்மை சம்பவிக்கும். தீமை செய்தால் தீமை கிட்டும். எதை நாம் செய்கிறோமோ அது நமது வாழ்க்கையில் பிரதிபலிக்கும். இது நமது பௌத்த மதத் தத்துவம். இது என்றும் பொய்யானதில்லை" என்று அடுத்து அமர்ந்திருந்த ஆப்பக் கடை ஆச்சி கூறினாள்.

"என்னவோ என் அனுபவத்தில் நன்மை செய்தவர்கள் நன்மை அடைவதையும் தீமை செய்தவர்கள் தீமை அடைவதையும் கண்டதில்லை. நடைமுறையில் எதிராகத்தான் நடக்கிறது" என்றேன்.

"உனக்கு என்ன வயது வந்துவிட்டது. மகா அனுபவஸ்தன் மாதிரிப் பேசுகிறாய். என் ஐம்பத்தைந்து வருட அனுபவத்தில் எத்தனை எத்தனையோ பார்த்திருக்கிறேன். இந்தத் தியுரும் போதியைப் பற்றிய ஒரு சம்பவம் உண்டு. அதைத் தெரிந்த பின் நீ நம்பிக்கை அடைவாய்" என்று தாத்தா முறையான ஒருவர் என்னை நோக்கிக் கூறத் தொடங்கினார். அவர் மேல் பகுதியிலிருந்து வருகிறவர்.

"இது நடந்து இருபது முப்பது வருஷம் இருக்கும். சம்பந்தம்பிள்ளை என்பவர் பெரிய முதலாளி. நம்மூரில் முதல் முதல் கடை வைத்தவரும் அவர்தான். நல்ல தாராளமான மனசு. பலருக்கும் உதவி செய்தார். அவர்கள் தகப்பனார் தேடிய பூர்வ சொத்தான தோட்டம் இருந்தது. விலைவாசிகளும் அன்று நன்றாக விற்றது. செலவு இன்றைக்குச் செலவழிப்பதில் பத்தில் ஒரு பங்கு கூட ஆகாது. இன்றைக்குத்தான் பஸ் என்றும் கார் என்றும் வந்து விட்டது. தொகக்கென்று எடுத்ததற் கெல்லாம் கார், கொஞ்ச தூரம் போக வேண்டுமென்றாலும் டவுன். பஸ்சுக்கு மணிக்கணக்காக கால்கடுக்க நிற்பார்களே ஒழிய நடக்கமாட்டார்கள். அப்பொழுதோ இந்தத் தூரமெல்லாம் காலாலேதான் நடந்து தீர்ப்போம்."

"இன்றைக்குத்தான் நன்றாகப் பளபளவென்று கருத்த ரோட்டிலே லொறிகளில் சாமான்களைக் கொண்டு வருகிறார்கள். அப்பொழுதெல்லாம் பொதி மாட்டின் மேல்தான் கொண்டு வருவது வழக்கம். ஓ...! மறந்து விட்டேனே, எதையோ சொல்லிக் கொண்டு வருகிறேனே.... வந்து... வந்து.... ஆமாம் சம்பந்தம் பிள்ளைக்குச் செலவு மிகக்குறைவு. ஆனால் வருமானம்

நிறைய வந்தது. எனவே நல்லமிச்சம். அவருக்கு ஒரு அண்ணன் இருந்தார். அவர் பெயர் சிங்காரம்பிள்ளை. அவர் இந்தியாவிலுள்ள சொத்துக்களைப் பார்த்துக் கொள்வார். பூர்வீகச் சொத்துக்களின் வருமானத்தை இருவரும் பிரித்துக் கொள்வார்கள். இப்படியாகச் சிறிது காலம் நடைபெற்றது. உள்ளூர்க் கடையில் நல்ல லாபமென்றவுடன் மேலும் பணம் சம்பாதிக்க ஆசை ஏற்பட்டுவிட்டது. பணம் இருக்கிறதே அதுவும் கஞ்சா, அபின் போன்ற ஒரு போதை வஸ்துதான். மேலும் மேலும் சம்பாதிக்க ஆசை ஏற்படுகிறதே ஒழிய, போதும் என்று ஒரு எல்லை ஏற்படுவதில்லை."

"கொழும்பிலுள்ள எவனோ ஒரு சினேகிதன், பலசரக்கு மொத்த வியாபாரம் தொடங்கினால், நல்ல மிச்சம்" என்று கூறினான். தூத்துக்குடி மிளகாயை, தூத்துக்குடியிலிருந்தும், பெல்லாரி வெங்காயத்தை பெல்லாரியிலிருந்தும் நேரே வரவழைத்தால் கொள்ளை லாபம் கிடைக்கும் என்றும் எடுத்துக் காட்டினான். சம்பந்தம்பிள்ளையும் ஒரு கூட்டாளி ஆகி தொழிலை ஆரம்பித்தார். தொழில் கொஞ்சக்காலம் நன்றாகத்தான் நடந்தது. அதில் வேலை செய்த தெக்கித்திச் சீமைப் பயல் ஒருவன், பெருச்சாளி மாதிரி சுரண்ட ஆரம்பித்துவிட்டான். பெரும் நஷ்டம் ஏற்படத் தொடங்கிவிட்டது. கொழும்பு போய்வந்த சிலர், இதனை சம்பந்தம் - பிள்ளையிடம் கூறி, எச்சரித்து வைத்தார்கள். கிராமத்துக் கடையில் டா டு" என்று ஏதோ பொட்டை அதிகாரம் செய்ய முடியுமே ஒழிய கொழும்பில் போய் இவரால் என்ன செய்ய முடியும்? பொதுவாக, அவர் கடை கொழும்பில் எந்தத் தெருவில் இருக்கிறது என்று அவரைக் கேட்டாலே தான் சரியாகச் சொல்ல முடியாது. என்றைக்கோ எப்பொழுதோ அங்கு போக போய்விட்டு புதுமை வீடு, துறைமுகம், மிருகக்காட்சிச்சாலை என்பவற்றைப் பார்த்ததோடு தன்னுடைய கடையையும் பார்த்துவிட்டு வந்தார். அவ்வளவுதான். கடையில் நஷ்டம் ஏற்பட்டால் கடைக்குக் கடன் கொடுத்தவர்கள் எந்தப் பங்காளியிடமும் வசூல் செய்யலாம் என்று சட்டம் இருக்கிறது என்று ஒருவன் கூறினான். உடனே முன்னெச்சரிக்கையாகத் தனது பாகமாக இலங்கை இந்தியச் சொத்தை எல்லாம் சுத்தக் கிரயமாக அண்ணன் பேருக்கே எழுதி வைத்தார்."

"எதிர்பார்த்தபடி கொழும்புக் கடை நொடித்துவிட்டது. கடன் கொடுத்தவர்களும் சம்பந்தம் பிள்ளையின் சொத்தை ஜப்தி செய்ய முயன்றார்கள்.

அவர் பெயரில் சொத்து இல்லை என்றறிந்ததும் சும்மா இருந்து விட்டார்கள். கடன்காரர்களிடமிருந்து சொத்துக் காப்பாற்றப்பட்டது. ஆனால் அண்ணனிடமிருந்து சொத்தைக் காப்பாற்ற முடியவில்லை. சொத்தெல்லாம் தன் பெயருக்கிருக்கவும் சிங்காரம்பிள்ளை முழுதும் தனக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாடி தம்பியையும், தம்பியின் மகனையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டார். சம்பந்தம்பிள்ளை வழக்குத் தொடர்ந்தார். ருசு இல்லாத பொழுது வழக்கு என்ன செய்யம். முடிவில் சத்திய போதியில் சத்தியம் செய்துவிட்டால் போதும் என்றார். அதன்படி அந்தப் படுபாவி சிங்காரமும் கூசாமல் சத்தியம் செய்தேவிட்டான்.

"சம்பந்தம்பிள்ளை மனமுடைந்தவராய் இந்தியாவிற்குப் போய் மாமனார் வீட்டில் ஒட்டுக் குடித்தனம் நடத்தினார். அதே மன வருத்தத்தால் வியாதி வாய்ப்பட்டு விரைவில் மாண்டுவிட்டார். மகன் சுந்தரம் அனாதையாகி விட்டான். ஊரில் மாடு ஓட்டிக்கொண்டு வயிறு வளர்த்து வந்தான். பின்னர் சிலர் தயவால் இலங்கையில் ஒரு கடையில் பொடியனாக வேலை கிடைத்தது."

"பணம் கிடைத்தால் பத்தும் கிடைக்கத்தான் செய்கிறது. பவிசும் பெருமையும் எங்கிருந்துதான் வருமோ? சிங்காரம்பிள்ளையின் சொத்தும் மதிப்பும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தன. சொல்லி வைத்தாற்போல் தேயிலைக் கூப்பன் ஏற்படுத்தினார்கள். பணம் பணமாகக் காய்த்துத் தள்ளியது. சிங்காரம்பிள்ளை வெகுவிரைவில் லட்சாதிபதியாகிவிட்டார். யாரோ எவரோ என்றிருந்த சிங்காரம்பிள்ளையைத் தேடி பெரிய மனிதர் என்று சொல்லப்பட்டவர்கள் எல்லாம் சுற்றத் தொடங்கினார்கள். சர்க்கரையைக் கண்ட இடத்தில் ஈ மொய்க்கிறது. பணமுள்ள இடத்தில் பலரும் மொய்க்கிறார்கள். யோசனை கூறுகிறார்கள் கைகட்டி வாய்புதைக்கிறார்கள். பணந்தானே இன்று மூலமந்திரமாக இருக்கிறது. ஆமாம்! பல விதத்திலும் பணத்தைச் சிங்காரம்பிள்ளை பெருக்கிவிட்டார். கார்க் கம்பனியென்றும் பெட்ரோல் ஷெட்டென்றும் பல ஸ்தாபனங்களின் சொந்தக்காரராகி விட்டார். கொஞ்சக்காலம் இப்படி ஓடியது யாதொரு குறையுமின்றி. நவீன மயமான பங்களாவில் சுகமாகக் குடும்பத்துடன் வாழ்க்கை நடத்தி வந்தார் சிங்காரம்"

"பங்கு முறிந்து விட்டது" பிஸ்னஸ் முறிந்துவிட்டது என்று யாராவது கூறப் போகிறீர்கள்" என்றேன் அவசரக்குடுக்கையாகிய நான்.

"அதெல்லாம் இல்லை தம்பி. முறிந்தது வேறு விஷயம். அதற்குள் ஏன் அவசரப்படுகிறாய்? கொஞ்சம் பொறுமையுடன் கேளேன். கரடு முரடாயிருந்த ரோடெல்லாவற்றையும் நேராக்கி ரோடு போட்டார்கள். சிங்காரம்பிள்ளை கார்கூட வாங்கிவிட்டார். அந்தக் காலத்தில் கார் என்பதை நமது பகுதியில் அபூர்வமாகத்தான் பார்ப்பார்கள். யாராவது உத்தியோகஸ்தர்கள்தான் வாங்குவது வழக்கம். இன்றைக்குத்தான் கார் தண்ணீர்பட்டபாடுபடுகிறதே. அப்படி அபூர்வமான சமயத்தில் கார் வைத்திருந்தார். ஒரு நாள் குடும்ப சமேதராக கண்டியில் பெரஹறா பார்த்துவிட்டு சிங்காரம் வந்துகொண்டிருந்தார். வரும் வழியில்தான் சத்திய போதி இருந்தது. பாரேன் அதிசயத்தை. சிறிது நேரத்துக்கு முன்னால் யாதொரு பின்னமும் இல்லாமல் இருந்த அந்த அரச மரத்தின் கிளையொன்று அவர்கள் காரில் திடீரென்று விழுந்து சிங்காரத்தின் குடும்பத்தைக் கூண்டோடு கைலாசத்திற்கு அனுப்பி விட்டது. கோர்ட்டும், சமூகமும் தண்டிக்க முடியாத மனிதனை அந்த சத்திய போதி மரமே தண்டித்துவிட்டது. மேலும் அதிசயம் தெரியுமா? அக்காரின் டிரைவருக்கு ஒரு சின்ன சேதமாவது இருக்கவேண்டுமே! கொஞ்ச நேரம் மயக்கம் போட்டிருந்தான். அவ்வளவுதான். ஆனால் காரும், சிங்காரம் பிள்ளையும் குடும்பத்தாரும் சட்டினி. சிங்காரம்பிள்ளை மாண்ட செய்தி சுந்தரத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. தந்தி கிடைத்த இரவு ஒரு மணிக்கு சுந்தரம் என்ன செய்துகொண்டிருந்தான் தெரியுமா? புடவைக் கடையில் புடவை அடுக்கிக் கொண்டிருந்தான். இரவு ஒரு மணிக்கா? ஷாப்புச் சட்டமாச்சே என்கிறாயா? அதெல்லாம் ஏட்டிலே தானே. கதவடைத்த பிறகு உள்ளே நடப்பது சிப்பந்திகளுக்குத் தானே தெரியும்? முடியாது என்றால்தான் வயிற்றிலடி, என்ன செய்வது, சிவனே என்று செய்ய வேண்டியதுதான். இதை எதற்காக சொன்னேன் என்றால் அவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான் சுந்தரம் என்பதற்காகத்தான். சிங்காரம் பிள்ளையின் குடும்பத்தில் ஒருவரும் மிஞ்சவில்லையாதலாலும், அடுத்த வாரிசு சுந்தரமானதாலும் சொத்தெல்லாம் அவனுக்கே சேர்ந்தது. இதுதான் என்றைக்கிருந்தாலும் தருமம் வெல்லும் என்பது" என்று முடித்தார்.

"வில்லம்பை விடச் சொல்லம்பு கொடுமையானது" என்று கம்பர் சொன்னாரல்லவா? அவர் வாய்ச் சொல்லால் பாண்டியன் குலம் கெட்டதைப் போல் சிங்காரம்பிள்ளையின் குல

மும் சாம்பாறாய் போயிற்றுப் போலும்" என்று தமது தமிழறிவைக் காட்டினார் சென்டிரல் ஸ்கூல் வாத்தியார் சிவஞானம்பிள்ளை.

"கதை நன்றாயிருக்கிறது" என்றேன் நான்.

"கதை இல்லையடா. நிஜமாக நடந்தது" என்றார் அவர்.

மலையகச் சிறுகதைகள் - 1949

விஜயன்

ஈழகேசரி சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவர். இவரது உண்மைப் பெயரை அறிய முடியவில்லை.

❖ வீட்டு வாசனை

வீட்டுவாசனை

விஜயன்

அன்று அவன் வீட்டுக்குத் திரும்பி வருவதாக எழுதியிருந்தான். சரியாக ஐந்து வருடங்களாகிவிட்டன. அவன் வீட்டை விட்டுப் போய் "மற்றிக்" பரீட்சையின் முடிவு தெரியுமுன்னரே, அவன் இராணுவத்திலே சேர்ந்து விட்டான். "மற்றிக்" பரீட்சைக்குப் போய் விட்டு வீட்டில் வந்து ஆக நாலே நாலு மாதம் சும்மா இருந்தான். பிறகு தாய் தகப்பனிடம் கொழும்புக்கு ஏதோ அலுவலாகப் போவதாகச் சொல்லிவிட்டுப் போனான். இரண்டுகிழமை கழித்து, தான் இராணுவத்திலே ஒரு "கிளாக்" ஆகச் சேர்ந்திருப்பதாகவும், ஆறுமாத பயிற்சி முடிந்தபின், ஒருமாத விடுதலையில வீட்டுக்கு வருவதாகவும் எழுதினான்.

அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் சரவணமுத்து அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. மகன் இப்படிச் செய்வான் என்று அவர் கற்பனைக்குக்கூட எண்ணிப் பார்த்தவரல்ல. அவரிலும் பார்க்க அவர் மனைவி செல்லம்மா பட்ட பாட்டை எழுத்தில் எழுதவே முடியாது. இப்ப கொழும்புக்குப் போய் அவனை கையோடு கூட்டிவந்தாலல்லாது சாப்பிடவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தாள். பாவம், சரவணமுத்து

வுக்கு மாத்திரம், மகன் இப்படிச் செய்து விட்டதையிட்டு கவலை கொஞ்சமா? மறு "பஸ்"ஸி லேயே ஏறி யாழ்ப்பாணம் போய், பின்நேர ரயிலிலேயே கொழும்புக்குப் போனார்.

ஆனால், இராணுவத்தில் அவன் மகன் கனகரத்தினம், முறையாகவே சேர்ந்தி ருந்தான். அவனது உடல் வலிமை, புத்திகூர்மை, ஆங்கில பாஸா ஞானம் இவற்றின் மேன் மையை பலவழிகளிலே - மானிட சாஸ்திர முறையுற்பட - தெரிந்தெடுத்த இராணுவ அதிகாரி கள், அவனை யுத்தம் முடிந்த பின்னர்தான் நீக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். கொழும் பிலிருந்து அவர் வெறும் கையோடுதான் திரும்ப வேண்டியதாயிற்று. திரும்பி வந்ததும், செல்லம்மாவை சமாதானப்படுத்த அவர் பட்ட கஸ்ரம் இம்மட்டல்ல.

கொழும்பிலிருந்து ஆறுமாத பயிற்சி பெற்று முடிந்ததும், கனகரத்தினம் வீட்டுக்கு ஒரு மாத விடுதலையில் திரும்பி வந்தான். ஆறுமாசத்திற்குள்ளேயே ஆளுருவத்தில் மெத்த மாற்றமடைந்திருந்ததைக் கண்டு தாய்க்கு ஆச்சரியத்தோடு சற்றே ஆறுதலும் ஏற்பட்டது.

ஒருமாத விடுதலையில் அவன் பெரும் பொழுதை வீட்டிலேயே கழித்தான், சினேகி தர்கள் அவனை பரிகாசம் பண்ணினார்கள். சண்டை முடியும் வரையும் "கிளாக்" ஆகத்தான் இருப்பான் என்று சபதம் கூடப் பிடித்தார்கள்.

அந்த ஒருமாத விடுதலையின் பின் போனவன்தான். அவன் போல் இன்றோடு ஐந்து வருஷத்துக்கு மேலாகிவிட்டது. இப்போது அவன் ஒரு "லெவ்டினன்ட்" இந்த ஐந்து வருஷமும் அவன் தவறாமல் ஒவ்வொரு மாதமும் வீட்டுக்குக் கடிதம் போட்டபடியே இருந்தான். முதலில் இரு கடிதங்கள் பம்பாயில் இருந்து வந்தன. பின் எகிப்து, எல்அலாமின், மோல்ற்று, லண்டன், இத்தாலி, இப்படி பல இடங்களிலிருந்து கடிதங்கள் வந்தன.

இன்று காரைநகரிலுள்ள தனது கிராம வீட்டுக்கே வருவதாக எழுதியிருந்தான். சண்டை முடிந்தபடியால் ஒருமாதிரி இராணுவத்திலிருந்து அவனை நீக்கிவிட்டார்கள்.

முற்றத்திற் போட்டிருந்த கட்டிலிலிருந்தபடியே, சரவணமுத்து தமது மனைவியைப் பார்த்தார். அவள், நன்றாக பள பளவென்று மினிங்கிக் கொண்டிருந்த பாத்திரங்களை மேலும் மினுமினுப்பாக்குவதில் ஊக்கமாக ஈடுபட்டிருந்தாள். அதிகாலையிலேயே முழுகி விட்டு மகனை வரவேற்பதில் ஆர்வமாக முனைந்திருந்தாள்.

"செல்லம்மா!"

திகைப்படைந்தவள் போல தனது கணவரை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்வை கண வன் முன்னால் இருப்பதை இதுவரை அறியாத மாதிரி இருந்தது, "ஏன் இவ்வளவு ஆர்ப்பாட் டம், செல்லம்மா! அனாவசியமாக உன்னை நீயே கஸ்ரப்படுத்திக் கொள்கிறாய். கொஞ்சநேரம் நீ, உந்த வேலைகளையெல்லாம் விட்டு விட்டு, சும்மா ஆறுதலாயிருந்தால் என்ன?"

இந்த வார்த்தைகள் சரவணமுத்துவின் வாயிலிருந்து கனிவோடு பிறந்தன.

"நல்லாயிருக்கு. இவைகளைக் கொஞ்சம் சுத்தப்படுத்தாட்டில், பார்க்கிறதுக்கு வடிவாயி ருக்குமோ?"

ஒரு தாயினது அன்பு எப்படியிருக்குமென்பதை உணர சரவணமுத்துவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவர் எழுந்து போய், செல்லம்மாவின் கையைப்பிடித்து அவளை லேசாகத் தூக்கிவிட்டார்.

இவ்வளவும் போதும். ஏதோ பெரிய மகாராசா ஒருத்தனை வரவேற்கிற மாதிரியல்லவோ இருக்கு. நீ செய்யும் ஏற்பாடுகளைப் பார்த்தால்" இதைச்சொல்லும்போது அவருடைய குரலில் களிவுக்குப் பதிலாக சிறிது கடுமைதான் செல்லம்மாவிற்குத் தென்பட்டது.

"அவன் ஒரு அதிகாரியாக மாறாமல் இருந்திருக்கக் கூடாதா என்று என்னால் எண்ணாமலிருக்க முடியவில்லையே! யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, அதெல்லாஞ் சரிதான். அவை இப்போ....." செல்லம்மாவின் கண்கள் அடுக்களையை நோக்கின. ஐந்து வருஷத்துக்குப் பிறகு அவன் இதைப் பார்க்கும்போது எப்படியிருக்கும் என்று அவளால் எண்ணாமலிருக்க முடியவில்லை. ஒரு "லெவ்டினனட்" இந்த அடுக்களையை விரும்பிப்பார்ப்பானா என்பதுதான் அவள் கவலையெல்லாம்.

"இந்த வீட்டைத் தம்பி முன்போல், ஆசையோடு விரும்புவானென்று நினைக்கிறியளா?" கடைசியாக இந்த வார்த்தைகள் மன ஏக்கத்தோடு அவளிடமிருந்து வந்தன. சரவணமுத்துவும் ஒரு மாதிரித் திடுக்கிட்டவர் போலத் திரும்பிப்போய்க் கட்டிலில் உட்கார்ந்து விட்டார்.

கனகரத்தினத்துக்கு இன்னும் சரியாக 25 வயது கூட முடியவில்லை. இந்தச் சொற்ப வயதிற்குள் அவன் "லெவ்டினனட்" ஆக உத்தியோகத்திலே உயர்ந்துவிட்டான். அவனை ஐந்து வருஷத்துக்கு முன் அவன் நண்பர்கள் எப்படிப் பகிடி பண்ணினார்கள்.

ஆனால், செல்லம்மாவுக்கு அவன் கடிதங்களை மாதா மாதம் தவறாமல் வாசித்து வந்தபோதே எல்லாம் விளங்கிவிட்டது. பட்டணத்தில் "மற்றி"க் படிக்கும் போது அவனுக்கு இலக்கணப் பிழையில்லாமற் சரியாகத் தமிழ் எழுதத் தெரியாது. ஆனால், இராணுவத்திலே சேர்ந்த பிறகு, அவனுடைய எழுத்தில் மாற்றம் ஏற்பட்டது. வீட்டிலிருந்து அவனுக்குப் பதில் எழுதும் பொழுதெல்லாம், அவன் வாங்கி அனுப்பும்படி எழுதிய பல தமிழ்ப் புத்தகங்களையும் அனுப்புவது சரவணமுத்துவுக்கு வழக்கமாகிவிட்டது. வீட்டுக்கு எழுதும் கடிதங்களை நல்ல தமிழில் எழுத வேண்டுமென அவன் விரும்பியதில் வியப்பொன்றுமில்லை. ஆனால் அந்த "நல்ல தமிழ்" வர வர, சரவணமுத்துவுக்கும் செல்லம்மாவுக்கும் விளங்கிக்கொள்வதற்குக் கஷ்டமான தமிழாய்விட்டது. அவனுடைய எழுத்துக்கூடவல்லவா, வரவர சுத்தமாயும் ஒழுங்காயும் வந்துவிட்டது. ஒவ்வொரு கடிதத்திலும் தான் வாசித்த புத்தகங்களைப் பற்றி எழுதுவது அவன் வழக்கமாகிவிட்டது. அத்தோடு, புதுப்புதுப் புத்தகங்களுக்கு எழுதுவதும் வழக்கமாகிவிட்டது. அவ்வளவு நீண்ட கடிதங்களை எழுத, இராணுவ சேவைக்கிடையிலே, எப்படித் தான் அவனுக்கு ஓய்வு கிடைக்கிறதோ என்று பெற்றோரிருவரும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

அவர்களைப் பிரிந்து ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் அவன் இருந்தது மெய்தான். ஆனால் அவன் தாய் தகப்பனுக்கு நல்ல பிள்ளை. மாதம் மாதம் தவறாமல் அவனிடமிருந்து வரும் நீண்ட கடிதங்கள் அவர்களுக்கு எவ்வளவோ ஆறுதலை அளித்தன. கடிதங்களுடன் "மணி ஓடர்" களும் வரத் தொடங்கின.

"எனக்கிப்போது ஒருவித பணக்கஷ்டமும் இல்லை. இம்முறை நல்ல விளைச்சல். எங்களுக்கு நீ பணமனுப்ப வேண்டிய அவசியமே இல்லை. நீ உழைக்கிற பணத்தை யெல்லாம் நீயே உனக்கு உவப்பான நல்ல வழியிலே செலவழித்துக்கொள். இது உன் ஆச்சியின் விருப்பம்" என்று முதல் வந்த "மணி ஓடரைத்" திருப்பி அனுப்பும் போது சரவணமுத்து எழுதினார்.

ஆனால், பணம் மாதா மாதம் வந்து கொண்டுதான் இருந்தது. சரவணமுத்துவுக்கும் தாய்க்கும் இது பொல்லாத மனவருத்தத்தைச் சில சில சந்தர்ப்பங்களில் அளித்தது. தனக்குப் பணம் அனுப்பும்படி அவன் அவர்களுக்கு எழுதியிருந்தாலானால் அது அவர்களுக்கு சந்தோஷமாயிருந்திருக்கும். அது இயற்கையாகக் கூட இருந்திருக்கும். அவன் கலாசாலையிலே படித்த காலத்தை எண்ணிப் பார்த்தால் பதினைந்து நாளைக்கொருதரமல்லவா "பணமனுப்பு" என்று எழுதுவான்!

நாடியை இருகைகளிலும் ஏந்திய வண்ணம் சிறிதும் அசையாமலே சரவணமுத்து கட்டிலில் இருந்தார்.

திடீரென்று, "என்ன இன்னும் காணவில்லையே! மணி பத்துக்கு மேல் இருக்காதா கடிதத்தில் காலை ரெயிலிலேயே வருவதாகவல்லவா எழுதினான். ஒன்பதுக்கு ரெயில் வந்தாலும் பட்டணத்திலிருந்து இங்கேவர பஸ்சுக்கு ஒரு மணித்தியாலமா?" என்றாள் செல்லம்மா.

"ரெயில் சிலவேளை பிந்தியிருக்கலாம்" "சிலவேளை அவன் வராமல் இருக்கலாம்" கடைசி நேரத்தில் வீட்டுக்கு ஏன் போவான் என்று அவன் தீர்மானித்திருக்கக்கூடுமா? இங்கே தான் அவனுக்கு என்ன இருக்கிறது. ஆனால்.... கனகரத்தினம் அப்படிப்பட்டவன் அல்ல. தாய் தகப்பனென்றால் உயிரும் பிராணனும்.என்னதான் இருந்தாலும் வராமலிருக்க மாட்டான்.

சரவணமுத்து கட்டிலிலிருந்து குதித்தான். வாசலுக்குப் போய் படலையைத் திறந்தான். அப்போதுதான் ஒழுங்கையிலிருந்து திரும்பிய கனகரத்தினத்தைக் கண்டதும் அவருக்குத் திகைப்பாய்விட்டது. கனகரத்தினம்தானா அது? ஐந்து வருஷத்தில் ஆழ் அடியோடு உருவத்தில் மாறியிருந்தான். நல்ல வேளை! ஐந்து வருஷத்துக்கு முன்னால், ஒரு மாத விடுதலையில் வந்தபோது வந்தது போல காக்கி காற்சட்டையோடு வரவில்லை: வெள்ளை வேட்டி சேட் இவற்றோடு தான் வந்தான்.

படலையை நன்றாகத் திறந்தபடியே "வா,தம்பி"என்று வரவேற்றார். அவன் கையிலிருந்த "பாக்" கையும் வாங்கிக் கொண்டார்.

படலையிலிருந்து வீட்டுக்குப் போகும் வழியிற் கனகரத்தினத்தின் நடை தளர்ந்து விட்டது. வாசலிலே தாழ்வாரத்திற் கட்டி நின்ற ஆட்டையும், பக்கத்தில் நின்ற ஒன்றோடொன்று குத்திவிளையாடும் இரு குட்டிகளையும் பார்த்தபோது அவன் முகம் சற்று விகாரமடைந்த மாதிரியிருந்தது.

மகனைக் கண்டதும் ஆச்சரியத்தினால் செல்லம்மாவின் வாயிலிருந்து ஒரு வார்த்தை தானும் உடனே வரவில்லை. கண்களை அகல விழித்தபடியே அவனை வரவேற்றாள்.

முற்றத்திலிருந்த கட்டிலில் அவள் உட்கார்ந்தாள். 'தம்பிக்குக் கோப்பிப் போட்டுக் கொண்டு வாறேனென்று சொல்லிவிட்டுச் செல்லம்மா அடுக்களைக்குப் போய்விட்டாள்.

தகப்பனும் மகனும் ஒன்றுமே சிறிது நேரம் பேசவில்லை. மகன் அடுக்களையையும் தாழ்வாரத்தையும் வீட்டையும் மாறி மாறிப் பார்த்தாள். பார்க்கப் பார்க்க ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. இதை அவன் முக வேறுபாட்டிலிருந்து தகப்பன் அறிந்து கொண்டார். திடீரென்று ஏற்பட்ட மாற்றத்தால் தம்பிக்கு மன அமைதி ஏற்படவில்லை என்பது அவருக்கு விளங்கி விட்டது. இராணுவத்திலிருந்து விலக்கப்படும் பல இளைஞர்களுக்கும் இந்த மாதிரித் தானே இருக்கும். எத்தனை பேரோடு எத்தனை இடங்களிற் பழகியிருப்பார்கள். அல்லாமலும் மேல் நாடுகளில் நாரீகம் அதிகம் என்பார்களே அந்த நாரீக நாடுகளில் வாசஞ் செய்துவிட்டுத் திடீ ரென்று. புழுதித் தெருக்களும்,பனை,தென்னைகளும் நிறைந்த காரை நகர்க் கிராமத்துக்கு வந்தால் எப்படியிருக்கும்?

தாய் கோப்பியைக் கொண்டு வந்து "முதலிலே இதைக் குடி தம்பி" என்று அன்புடன் கையிலே கொடுத்தாள். பேணி என்னவோ பளபளவென்று தான் மினுங்கிற்று. ஆனால், இத்தனை நாளும் 'கப்' ஸாஸர்களிலல்லவா அருந்திப் பழக்கம்.

மகன் தயங்குவதைக் கண்டு "என்ன தம்பி பேசாமலிருக்கிறாய்" இதைக் குடியேன்" என்றாள். கெஞ்சும் பாவனையாக.

கனகரத்தின் முகம் சட்டென்று மாற்றமடைந்தது.

" ஆச்சி நீ நல்லாய் மாறிவிட்டாய். கிழவி மாதிரியல்லோ இருக்கு" என்று சிரித்தபடி கோப்பியைக் கையில் வாங்கினான்.

மகன் மனம் இவ்வளவு கெதியில் மாறும் என்று தாய் எதிர்பார்க்கவில்லை. வந்ததும், இந்தப் பட்டிக்காட்டுக்கு ஏன் வந்தோமென்று வருத்தப்பட்டுக் கொண்டு திரும்பிப் போய் விடு வானோ என்று அவள் பயந்தாள். நல்லவேளை! அவன் சிரிப்பு ஐந்து வருஷத்துக்கு முந்தியது போலல்லவா இருக்கிறது என்று எண்ணினாள். தோற்றம் ஐந்து வருஷத்தில் மாறினாலும் அவன் முன்னைப் போலகுழந்தையுள்ளமாகிவிட்டதைக் கண்டு தாய்க்கு ஒரே மகிழ்ச்சிதான்.

"தம்பி, வேண்டாம் வேண்டாம்மென்றுமெழுத நீ காசனுப்பினாய். அதெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறோம் . பம்பாயிலிருக்கும் போதே 'மற்றிக்' பாஸெண்டு மறுமொழி வந் தது. இனி, வீட்டோடே இருந்து கொண்டு மேலை படித்தாலும் சரி, நாலைந்து மாதம் கழித்து கொழும்புக்குப் போய் படிச்சாலும் சரி, உன்னிஷ்டப்படி செய்துகொள்' என்றாள். செல்லம்மா ஆதரவுடன்.

"அதெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் ஆச்சி, இப்ப கொஞ்ச நேரம் நான் படுக்கப் போறேன். ஒருத்தரும் என்னைக் குழப்பக் கூடாது."

◆◆◆

சரவணமுத்துவுக்கு, மகன் பழையபடி ஆகிவிட்டதில் மட்டற்ற சந்தோஷம். அவர் சிரித்தபடியே, வண்டிலைக் கட்டிக் கொண்டு வயலுக்கு நடந்தார். செல்லம்மாவும் மத்தியானம் தம்பிக்கென்று 'ஸ்பெஷல்' சாப்பாடு தயாரிக்க அடுக்களைக்குப் போனாள்.

ஈழகேசரி - 27.01.1946

சோ. ஆனந்தராஜன்

சோ. ஆனந்தராஜன் ஈழகேசரியில் நிறைவான கதைகளை எழுதியவர். கௌரியின் பரிசு, கௌரி, காதற்பீடம் முதலான கதைகள் ஈழகேசரியில் வெளி வந்தன. இவருடைய கதைகளில் அகவுணர்வுச் சித்திரிப்புக்களே அதிகம் இடம்பெற்றன.

- கௌரியின் பரிசு
- காதற் பீடம்
- கௌரி

கௌரியின் பரிசு

சோ. ஆனந்தராஜன்

"அப்பா"

"சந்திரா"

"எங்கள் தோட்டத்தில் அன்று ஒரு துக்கமான சம்பவம் நடந்து விட்ட தப்பா?

"என்னது? சந்திரா"

"அதையேன் கேட்கிறீர்கள் என்னுடன் விளையாடி வந்த என் மான்குட்டி இன்று என்னைப் பிரிந்து விட்டது. என்னால் சகிக்க முடிய வில்லை அப்பா."

"என்ன? போய்விட்டதா? வேலையாட்களைத் தேடச் சொல்லுவது தானே."

"ஓடிப்போகவில்லை. அடுத்த தோட்டத்திலிருந்து ஒரு ஆணினம் வந்தது. அதைக் கண்டவுடன் இதன் குதூகலத்தை என்னென்று

சொல்வது! அதனுடன் கூடிக்கொண்டு ஓடிச் சென்று விட்டது. கிட்டப் போனாலுங்கூட என்னைக் கவனியாமல் அந்த மானுடன் திரிகிறது.

"ஆம், அது வயதடைந்துவிட்டது. தன் சோடியுடன் சேர்ந்து இன்பமாகத் திரிகிறது. அது உயிர்களின் இயற்கையான குணம்."

"என்ன? நான் அதற்குமாறு. என் அப்பாவுடன் என்றும் நானிருப்பேன். அவரைப் பிரிவது இப்பிறவியிலில்லை."

"அது முடியாத காரியம், சந்திரா."

"முடியாதா நான் உங்களைப் பிரிய வேண்டுமா?"

சந்திராவின் ஒளி வீசும் வதனத்தைப் பார்த்தேன் முத்துக்கள் போல் கண்ணீர் துளித்தது. சந்திராவை ஏற இறங்கப் பார்த்தேன். அவள் நாகரிக யுவதியாய்த் தோன்றினாள். அவள் தோற்றம் என் மனக்கூண்டிலிருந்து விடை பெற்றுச் சென்ற காதல் குயில் நெதல் ஒத்திருந்தது. பல வருஷங்களுக்கு முன் நடந்தவையெல்லாம் என் மனக்கண் முன் தோன்றின.

◆◆◆

எனது மாணவப் பருவம் இன்பமாயிருந்தது. வாழ்க்கையின் முட்கள் தீண்டாத பருவம். பெற்றோர்களின் பணத்தில் "சோக்" செய்த பருவம். புதியதை அறிய ஆவல் கொண்ட பருவம். கதாசிரியர்களின் கற்பனைத் தடாகத்தில் மலர்ந்த காதற் புஷ்பங்களைக் கண்டு மகிழ்ந்து, அதன் நறுமணத்தில் மனதைப் பறிகொடுத்தேன்.காதலின் இன்ப ஸ்பரிசத்தில் என்னை மறந்து, பல மனக் கோட்டைகள் கட்டிய காலமும் உண்டு. எனக்கும் ஒரு காதலி இருந்தாலென்ன? எங்கள் இருவருக்கும் உண்டாகும் காதல் தெய்வீகமானதாயிருக்க வேண்டும். உலகத்தில் நடக்கும் காதல் நாடகங்களுக்கு, நாங்கள் நடிக்கவிருக்கும் நாடகமே, வழிகாட்டியாகவும் இருக்க வேண்டுமென்று எண்ணினேன். காதலியைத் தேடப் பல நாட்கள் செல்லவில்லை.

◆◆◆

கௌரியின் பெற்றோர்களே எனக்குச் சந்தர்ப்பத்தை வருவித்தார்கள். பாடம் சொல்லிக் கொடுக்குமாறு என்னை வேண்டினார்கள். அன்று மனநிலை இன்பச் சிகரத்தை அடைந்தது. ஆனால் நான் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. என் தந்தையிடம் உத்தரவு பெற்று வந்து முடிவு கூறுவதாக அவர்களுக்குச் சொன்னேன்.

கௌரிக்குப் பாடம் சொல்லத் தொடங்கிப் பல நாளாயிற்று. காதலர்க்கு வேண்டியது ஏகாந்தம். அதுவும் எனக்கு எளிதில் கிடைத்தது. பெண்ணின் வீட்டார் எங்களிருவரையும் தனிமையில் விட்டார்கள். படிக்கும் பாவனையில் நாங்கள் இருவரும், காதல் நாடகத்தின் முதலாம் கட்டத்தைத் தொடக்கி , நடித்தோம்.

நாட்கள் பல சென்றன. என் வாழ்வில் இளந்தென்றல் வீசிக் கொண்டிருந்தது. வெட்கம் எங்களிருவரையும் பேசவொட்டாமல் தடை செய்தது. மார்க்கட் விடுதலை நாட்களும் முடிவடைந்தன. நான் என் கௌரியைப் பிரிந்தேன்.

விடுதலைகள் பல வந்து போயின. முன் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் இப்பொழுது கிடைக்கவில்லை. பாடம் சொல்லிக் கொடுக்கக் கூப்பிடுவாருமில்லை.

கௌரியின் சகோதரன் என்னுடைய நண்பன். என்னையறியாமல் அவன் மேல் எனக்குப் பாசமுண்டாயிற்று. நாளடைவில் அப்பாசம் எங்களை இறுகப் பிணைத்துவிட்டது. அவன் வயதிற் சிறியவனாக இருந்த போதிலும், உலக அனுபவத்தில் முதியவனாகவேயிருந் தான். அவன் உதவியும் எனக்கு எளிதில் எட்டியது. பிறகு பேசுவானேன். எனக்கு பௌரிக் குமிடையில் பல காதற் கடிதங்கள் பறந்தன. இடையிடையே சிறு மனஸ்தாபங்கள் உண்டாகு ம். அச்சமயங்களில் கௌரி என் காதலின் மேல் ஐயுறுவாள். "இவருடைய பசப்பு வார்த்தை களைக் கேட்டு மோசம் போனேன்" என்று தன் தம்பியிடம் கூறியதுமுண்டு. அவர்களின் மனம் காதலைப் பயிர் செய்வதற்கு உவந்தது. ஆனால் சந்கேம் இப்பயிர்களை அழித்து விடும். நான் சந்தேகங்களை கௌரியின் மனதில் நிலைநிற்க விடுவதில்லை. சிறிதிலேயே கிள்ளி எறிந்து விடுவேன். அதனால் கௌரி என்னிடம் அதிகம் அன்பு காட்டினாள்.

எங்கள் காதல் நெடுங்காலம் மறைந்திருக்கவில்லை. விதியின் கொடிய கரங்கள் என்னைத் தீண்ட ஆரம்பித்தன. நான் எழுதிய கடிதமொன்று, கௌரியின் தந்தையிடம் சிக்கியது. அவர் அதையென் தந்தையிடம் காட்டினார். நான் நடுங்கினேன். ஆனால் கலங்கவில்லை. எங்கள் காதல் பரிசுத்தமானதென்றும், அதை யொருவராலும் தடை செய்ய முடியாதென்றும் என் தந்தையிடம் சொன்னேன். என் தந்தை சீறினார். என் தாய் அழுதாள். அவன் சொற்படி என்றும் நடப்பேனென்று வாக்குக் கொடுத்தேன். அப்பெண் எனக்கு ஏற்றவ ளல்லள் என்றாள் என் தாய், சொற்ப சீதனமுடையவள் என் படிப்புக்கும், கௌரவத்திற்கும் தகுதியுடையவளல்ல என்பது அவள் கருத்து.

நான் என் வாக்கைக் காப்பாற்றினேன். ஆனால் கௌரியை மறக்கவில்லை. அவள் என் மனக்கண் முன் என்றும் தோன்றியபடியேயிருந்தாள். என் படிப்பும் ஒருவாறு முடி வடைந்தது. கௌரி மணம் முடியாமலேயிருந்தாள். அவளுக்கும் பேசுவதற்கு எனது தாயின் தடையுத்தரவு இடராயிரந்தது. எனக்குப் பல இடங்களிலிருந்து விவாகப் பேச்சுகள் வந்தன. நான் எல்லாவற்யையும் பின்னால் வைத்துக் கொள்வோம்" என்று ஒரு பொய்ச் சாக்குக் கூறிக் கடத்தினேன்.

தாயின் தூண்டுதலில், கௌரிக்கு ஒரு வரன் நிச்சயிக்கப்பட்டான். இதைக் கேட்ட என் நெஞ்சம் கலங்கிற்கு. என் மதி விதியை நொந்தது. கௌரியை அன்றிரவு, பத்து மணியளவில், அவள் வீட்டுத் தோட்டத்தில் எனக்காக காத்திருக்கும்படி ஒரு கடிதமெழுதி, அவளிடம் சேர்ப்பித்தேன்.

எங்கும் ஒரே நிசப்தம், அன்று கௌரி பத்து மணியளவில் அவள் வீட்டுத்தோட்டத்துக்கு வந்தாள். நிலவில் அவளின் வாட்டத்தைக் கண்டு கொண்டேன்.

"கௌரி, என்னை மன்னி"

"விதி கொடியது. என்னை மறவுங்கள்"

"உன்னை மறப்பதா? அதுதானில்லையே"

என்னை மறக்க வேண்டாம், ஆனால் என்னை அடைவதை மறவுங்கள். தாயின் சொல்லைக் காப்பாற்றிய உத்தமனென்பதை உலகறியட்டும்."

"உண்மையாகவா?"

"ஆம்"

"கௌரி எங்கு வேதாந்தம் பேசக் கற்றுக் கொண்டாய். என் தாயின் சொல்லைக்கேட்ட உத்தமனென்றாய். அது மட்டுமல்ல காதலிக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய காதல னென்று, என்னை உலகறியட்டும்; நான் நித்திய பிரமச்சாரி."

"என்ன சபதம்? விடுங்கள்"

"கௌரி, என்னை வருத்தாதே."

கௌரியின் கண்களில் நீர் அரும்பியது. என்னை நோக்கினாள். அப்பார்வை என் நொந்த இருதயத்தைத் துளைத்தது.

"நான் போகிறேன். அடுத்த ஜென்மத்திலாவது நாங்கள்...."

அவன் அதை முடிக்கவில்லை. துக்கம் அவன் நெஞ்சை அடைத்துக் கொண்டது. அவள் போய் விட்டாள்.

நான் பிறந்த இடத்தை விட்டு நீங்கிப் பலகாலமாயிற்று. தென் ஆபிரிக்காவில் வைத்தியம் செய்து கொண்டிருந்தேன்.

இடையிடையே என் தந்தையிடமிருந்து வரும் கடிதங்கள், பழைய எண்ணங்களைக் கிளப்பி விடும். ஒரு நாள் என் தாய் அபாய நிலையிலிருக்கிறாளென்று ஒரு தந்தி வந்தது. எனக்குப் பாலூட்டித், தாலாட்டிச் சீராட்டி, அறிவூட்டி வளர்த்த என் இன்பத் தாயல்லவா? என் ஊருக்குச் சென்றேன். என் தாய் அப்படியொரு "அபாயநிலை"யிலில்லை. ஆனால் அவள் இளைத்துத் துரும்பாய் விட்டாள். என்னைக் கண்டவுடன் "ஓ" வென்று அழுதாள். எனக்குச் செய்த துரோகத்தை மறக்கும்படி என்னை வேண்டினாள்.

அன்று சாயங்காலம் கௌரியிடம் சென்றேன். அவள் வதனம் சோபையிழந்து, வெளுத்திருந்தது. என்னைக் கண்டவுடன் அழத் தொடங்கிவிட்டாள். அவள் கணவன் அவ ளைத் தேற்றிப் பழைய சம்பவங்களை மறக்கச் சொன்னான், என்ன? அவன் எங்கள் பால்ய ரகசிய நட்பை அறிந்திருந்தும் கௌரியைப் பின்னும் நேசித்து வந்தான்.

"சந்திரா" என்று கூப்பிட்டாள். "கிளீங், கிளீங்" என்று வளையல்கள் சப்திக்க, ஆறு வயது டைய ஒரு பெண் குழந்தை ஓடி வந்தது. அவன் கௌரியின் பிரதிபிம்பமோ என ஐயுற வேண்டி யிருந்தது. அவளின் மோகன முறுவல் என்னை அவளிடம் கொண்டு சென்றது.

"அம்மா, இவர் யார்?"

"இனிமேல், இவர் தான் உன்னுடைய அப்பா"

"எனக்கு இவள் ஒரே குழந்தை. அவளை உங்களிடமே ஒப்புவிக்கிறேன். இவளே உங்களுடைய துன்பத்தைத் தீர்ப்பாள். இதுவே என் பரிசுத்தமான காதலின் பரிசு?

◆◆◆

"அப்பா, என்ன அபாரமான யோசனை போலிருக்கிறதே. வாருங்களேன் வீட்டுக்குப் போவோம். மான் குட்டியைப்பற்றி கவலை வேண்டாம். அது திரும்பி வரும்" என்று என்னை அணைத்தாள் என் அருமைச் சந்திரா.

ஈழகேசரி
18.08.1946

காதற் பீடம்

சோ. ஆனந்தராஜன்

வனப்பு வாய்ந்த அன்றைய மாலைப்பொழுதின் மனோகரமான மயக்கத்தில் குலாப்ஜான் மனதைப் பறிகொடுத்தாள். மொகலாய அந்தப்புரத்து நந்தவனத்தில், ஒரு மணல் திடலில் படுத்துக் கொண்டு மரத்திலிருந்து நீண்டு தொங்கிக் கொண்டிருந்த ஒரு கொடியைப் பிடித்து இழுத்தவண்ணம் தன்னை மறந்து கிடந்தாள். புள்ளினங்களின் கீதம் அவளின் இதயத்தை மலரச் செய்தது. மார்பும் விம்மிக் கொண்டேயிருந்தது. மென்மையாக வீசும் இளந்தென்றலின் ஸ்பரிசத்தில் அவள் நினைவு மலர்ந்தது. தோழிமார் யாழில் இன்னிசை மீட்டிக் கொண்டிருந்தனர். ஆனால் குலாப்ஜான் எண்ணங்களை மாலையாகத் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"குமாரி" என்று கூப்பிட்டுக் கொண்டே அவன் மகளிடஞ் சென்றான்.

"அப்பா, என்ன விசேஷம்?" என்றாள் அவள்.

"குமாரி, இந்த நிலவில் குதிரைச் சவாரி செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும். அரசியல் வேலைகளிற் பகல் முழுவதும் முழுகியிருக்கும்

என் உள்ளம், இயற்கையின் ரூபலாவணியத்தைப் பார்த்து மகிழ வேண்டாமா?" "ஆமாம்; அது நல்லது அப்பா"

◆◆◆

அரண்மனை வாயிலில் இளவரசியின் வெண்புரவியைக் கொண்டு வந்து நிறுத்தியிருந்தான் கான்.

"கான் நான் குதிரையில் ஏறு மட்டும் அதைத் தடவிக்கொடு" என்று சொல்லிக் கொண்டே குதிரையில் ஏறினாள். அப்பொழுது கான் கைகள் அவளுடைய கைகளில் பட்டது. உடனே அவளுக்குப் புதியதொரு உணர்ச்சி ஏற்பட்டது.

"கான்" என்று தன்னையறியாமல் கூப்பிட்டாள்.

"இளவரசி" என்று அவள் முன் வந்து நின்றான்.

குலாப்ஜான் அவனை ஏற இறங்கப் பார்த்தாள். அவளின் காதளவோடிய கருவிழிகள் அவனுடைய திரண்டு பருத்திருந்த தோள்களைக் கூர்ந்து பார்த்தன. அவனுடைய களை நிறைந்த முகத்தில் வீசிய ஒளியைச் சகிக்க முடியாதவளாய் மருண்டு நோக்கினாள்.

"கான் இன்றிரவு மதியம் உச்சி வானத்திலிருந்து பிரகாசிக்கும் பொழுது என் நந்த வனத்தில் வந்து என்னைச் சந்திக்க வேண்டும். இது உன் இளவரசியின் உத்தரவு"

"உத்தரவு இளவரசி" என்று தலையசைத்தான் கான்.

◆◆◆

நிலவொளியில் அயர்ந்து தூங்கும் இயற்கையின் அழகைப் பருகிக்கொண்டே அரசனும் இளவரசியும் சென்றனர். தடாகங்களிலுள்ள தாமரைகள் குவிந்து போயிருந்தன. இளவரசியின் இதய கமலமும் குவிந்து போயிருந்தது. அவள் எங்கு திரும்பினாலும் கானின் அழகிய தோற்றமே தெரிந்தது. "இவ்வளவு காலமும் எனக்கு அடிமையாயிருந்த கானின் கம்பீரத்தை இன்றே கண்டேன். வறுமையிலும் அடிமைத் தனத்திலும் வீரபுருஷன் கான். குறுகுறுத்த பார்வை சிவந்த கண்கள். ஒளிவீசும் வதனம். ஆம்... கான்..."

"உம்" என்று பெருமூச்சுவிட்டாள். என்ன இருந்தாலும் கான் ஒரு அடிமைதானே.

அவள் குதிரையில் ஒரு பாவை போலிருந்தாள். நிலவும் தென்றலும் அவளை வாட்டின. நடைப்பிணம் போல் தந்தையுடன் சென்று அரண்மனை திரும்பினாள்.

நீலக் கடலிலே மிதக்கும் வெள்ளிப் படகுபோல் சந்திரனும் மேல் வானை நோக்கிப் பவனி வந்து கொண்டிருந்தான். பளிங்காசனமொன்றில் உட்கார்ந்திருந்தாள் குலாப்ஜான். அவளின் காதலும் வைராக்கியமும் நாணத்தைக் கலைத்துவிட்டன. ஏங்கியபடியே சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கட்டழகி குலாப் ஜான்.

கானும் வந்துவிட்டான். "இளவரசி" யென்று வணக்கத்துடன் கூப்பிட்டான். காதல் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். தன் முன்னால் நிற்கும் உருவத்தை நோக்கினாள்.

"கான்" என்று தடதடத்த குரலில் அவனைக் கூப்பிட்டாள்.

"இளவரசி" என்று கான் அவளருகில் சென்றான்.

குலாப் ஜான் மௌனமாயிருந்தாள்.

"தேவி, என்ன மௌனம்?"

"ஒன்றுமில்லை; கான் மலருக்குக் கவர்ச்சி கொடுப்பது எது?"

"நறுமணம், தேவி"

"ஆடவனைஅலங்கரிப்பது எது?"

"வீரம், தேவி"

"பெண்ணை அலங்கரிப்பது எது?"

"நாணம்"

"இல்லை, இல்லை. காதல் . ஒரு ஆடவன் மேல் சாதி, சமய, அந்தஸ்துப் பேதமின்றிக் கொள்ளும் திவ்விய காதலே ஒரு பெண்ணை அழகு செய்யும்"

"ஆம், தேவி"

"நான் அழகுள்ளவளா?"

"ஆம். கட்டழகி, குணவதி, உம்முடைய சுந்தரப் புன்னகையில் உம்மையடையும் பாக்கியசாலி சுவர்க்கத்தின் சுவையை காண்பான். உம்முடைய காந்தச் சிரிப்பில் மயங்கிக் கிடக்கிறார்கள் பல மன்னர்கள்"

"ஆகா, நல்ல ரசிகன். என்னையடையும் பாக்கியசாலி நீராயிருந்தால்?;"

"அடிமையுடன் இப்படிப் பேசலாமா? தேவி" என்றான் கான் பதற்றத்துடன்.

"யார் அடிமை? உமக்கு நானே அடிமை" குலாப்ஜான் அவனை மருண்டு நோக்கினாள். காரிகையின் கருவிழிகளிற் சொக்கினான்.

"தேவி, இதையரசன் அறிந்தால்?"

"கான், பரிசுத்தமான காதலரைப் பிரிக்கக் கொடிய விதியாலும் முடியாதே" கானின் புயங்களில் அவளின் நீண்ட கூந்தல் புரண்டது. காதலர்கள் ஒருவரை யொருவர் தழுவி நின்றார்கள். நெஞ்சோடு நெஞ்சம் கலந்த அந்தத் தழுவலில் தங்களை மறந்து நின்றார்கள்.

◆◆◆

நாட்கள் பல ஓடிக் கொண்டிருந்தன. குலாப் ஜான் என்றுமில்லாதவாறு சோபையுடன் விளங்கினாள். அந்திப்பொழுதை ஆசையுடன் நோக்கியிருப்பாள். பகல் முழுவதும் ஒரு தூய்மையான காதலுலகைச் சிருஷ்டித்து அதில் கானைத் தெய்வமாக வைத்து.அன்பெனும் மலரால் அவனைப் பூசித்து வந்தாள். என்றும் விளையாடிக்கொண்டிருக்கும் அவள்,

இப்பொழுது தன் தோழிகளுடன் பழகுவதையே கைவிட்டாள். மாலை மதியமும் வீசு தென்றலும் அவளைப் பரவசப்படுத்தின.

தன் புத்திரியின் மாற்றத்தைத் தோழிகள் வாயிலாக அறிந்தான் மன்னன். வயது வந்த செல்வக் குழந்தைக்குத் திருமணஞ் செய்ய எண்ணினான். அவளின் போக்கை அறிய அவன் மனம் துடித்தது.

அன்று பௌர்ணமி. பூரண சந்திரன் வானத்தையும் பூமியையும் அழகுபடுத்திக் கொண்டிருந்தான். தன் புதல்வியைக் காணும் பொருட்டு அந்தப்புரத்துக்கு வந்தான். ஆனால் அவள் அங்கில்லை. தோழிகளை விசாரித்தறிந்ததில், அவள் நந்தவனத்தில் இருப்பதாயும் அவள் அங்கிருக்கும் பொழுது ஒருவரும் உட்பிரவேசிக்கக் கூடாதென்றும் கட்டளையிட்டிருக் கிறாளென்று மன்னன் அறிந்தான். சந்தடி செய்யாமல் நந்தவனத்தில் பிரவேசித்தான்.

பூங்கொடிகளின் இடைவெளி வழியாகத் தாரை தாரையாக வெண்ணிலா ஒழுகிக் கொண்டிருந்தது. அவன் அங்கு கண்ட காட்சி கோபாக்கினியை மூட்டியது. கானின் தொடை யைத் தலையணையாக வைத்துக் கொண்டு குலாப்ஜான் படுத்திருந்தாள். அவனது கைகள் அவள் கருங்கூந்தலை வருடிக் கொண்டிருந்தன. குலாப்ஜான் கருவிழிகளால் கானின் முகத்தை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மன்னனின் கைகள் உடை வாளைத் தேடின. உறையிலிருந்த வாளைக் கையிலெடுத் தான். ஒரு நீண்ட மூச்சுடன் அதைக் கானின் மார்பில் வீசினான். "ஆ" வென்ற ஈனக் குரலுடன் சாய்ந்தான் கான். அவன் மார்பில் ஏறியிருந்தது ஒரு உடைவாள். குலாப் ஜான் பதைத்து எழுந்தாள். அவள் அழகிய மேனி வெளிறியிருந்தது. விழுந்துகிடக்கும் தன் காதலனைப் பரிதாபத்துடன் பார்த்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாகக் கானின் காயம்பட்ட மார்பில் விழுந்து கொண்டிருந்தது.

"கான்" என்று அன்புடன் அவன் முகத்தைத் தடவினாள். கான் குற்றுயிராகக் கிடந்தான். மெல்லிய கரங்களின் ஸ்பரிசத்தால் கண்களைத் திறந்தான்.

"இளவரசி, என் உயிர் போகிறது. எங்கள் இரு உயிர்களும் பிணைக்கப்பட்டுவிட்டன. அடுத்த பிறவியிலாவது..." கூறி முடிப்பதற்குள் அவன் உயிர்போய்விட்டது.

ஆ" வென்று அலறி அவன் மேல் விழுந்தாள். தன் காதலனின் உயிரைக் கவர்ந்த அந்த வாளை நோக்கினாள்.

பதறியபடியே வாளைக் கையிலெடுத்துக் கொண்டு திரும்பினாள். அங்கு தன் தந்தை நிற்பதைக் கண்டு வெகுண்டாள். அவள் கண்கள் கோபாக்கினயை அள்ளி வீசிக் கொண் டிருந்தன. தந்தையைக் கண்டவுடன் எல்லாம் உணர்ந்தாள். கோபத்தினால் உருமாறி நிற்கும் தன் புதல்வியைக் கண்டதும் மன்னனின் உள்ளம் சற்று அஞ்சியது.

"பரிசுத்தமான எங்கள் காதலை நீங்களா கொலை செய்தீர்கள்? ஒழிந்திருந்து ஒன்று மறியா ஒருவனைக் கொன்றதுதான் உங்கள் நீதியோ? ஒன்றையும் தீர விசாரியாமற் தண் டிப்பதுதான் மன்னர்களின் தர்மமோ? உடல் இச்சையால் நான் இந்த அடிமையின் மேற் காதல் கொள்ளவில்லை. உயிர் சம்பந்தமான காதலை விரும்பியதனால் நாங்கள் குற்ற வாளிகளா?

அவர் என் உயிரின் நாதன். எங்கள் உயிர்கள் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கின்றன" என்று கோபாவேசத்துடன் உரைத்தாள். மன்னனின் கண்களில் நீரரும்பியது. மகளைப் பார்க்க முடியவில்லை.

"ஊ" என்ற ஈனக்குரல் அவன் காதைத் துளைத்தது. வெகுண்டு திரும்பினான். கானின் சரீரத்தில் , மார்பில் ஏறிய வாளுடன் புரண்டு கொண்டு கிடந்தாள் குலாப் ஜான். மன்னன் ஓடி அவளை அன்புடன் தழுவினான். ஆனால் அவன் உயிரில்லாத ஒரு உடலைத் தழுவினான்.

ஈழகேசரி
02.11.1947

கௌரி

சோ. ஆனந்தராஜன்

வசந்த காலம், ஓடையின் அருகிருந்த கல்லின் மேல் உட்கார்ந்து, காலத்தின் சேவையைப் பார்த்து மகிழ்ந்தேன். சுற்றிலுமுள்ள வானளாவிய விருட்சங்கள் அந்த ஓடைக்குத் தனியழகைக் கொடுத்தன. காலைக் கதிரவனும் தன் கிரணங்களை ஓடையின்மீது வீசினான். அவைகளை உபசரிப்பது போன்று ஓடையிலுள்ள மீன்களும் துள்ளி விளையாடின. மரங்களிடையே இளந்தென்றல் மெல்லெனப் புகுந்து அன்புடன் என்னை அணைத்தது. மரங்களிலிருந்து விழும் புஷ்பங்கள், ஓடையில் மெல்ல மிதந்து நீர்க்குமிழிகளுடன் மோதுண்டன.

ஐந்து வருஷங்களின் முன்புதான் கல்லூரி மாணவனாயிருந்தேன். கல்வியில் சிரத்தையுடையவனாக இருந்த போதிலும், பள்ளிக்கூடத்து மாணவருடன் அதிகம் பழகி வந்தேன். அவர்களுக்கு என்னுடன் பேசும் பொழுது அளவிலாத இன்பம். நாங்கள் நேரம் வாய்ந்த போதெல்லாம் "காதலை"ப் பற்றியே பேசுவோம். காதலாவது கத்தரிக்காயாவது என்று சொன்னவர்களில் நானுமொருவன்தான்.

ஒருநாள், கடற்கரையோரமாக உலாவச் சென்றேன். சூரியன் மறையும் சமயம் அடி வானம் செக்கச் சிவந்திருந்தது. சூரியனும் மெதுவாகச் சமுத்திரத்திற்குள் மறைந்துவிட்டான். பூரண சந்திரன் கடற்கரையிலுள்ள மணல் திடர்கள் மீது வெள்ளிமயமாக்கியது. இயற்கை யின் அழகில் ஈடுபட்ட நானும் மணலில் உட்கார்ந்து, கடலை நோக்கியவண்ணமிருந்தேன்.

பக்கத்திற் பெண்களும் குழந்தைகளும் விளையாடிக்கொண்டிருந்தனர். இயற்கை அழ கில் என்னைப் பறிகொடுத்ததால், அவர்களின் விளையாட்டைக் கவனிக்க முடியவில்லை.

"களுக்" என்று ஒரு பெண் சிரிக்கும் சத்தம் கேட்டுப் பின்புறம் திரும்பினேன். வன தேவதை போல் நின்றாள் ஒரு கன்னி. அவளது மேனி வசந்தத்தின் புதுத்தளிர்களை ஒத்தி ருந்தது. அவளது அழகில் மயங்கியிருந்த என்னைப் பார்த்து, ஏளனஞ் செய்வதுபோல் புன் னகை அவள் வதனத்தில் அரும்பியது. அவளது கண்கள் என் கண்களுடன், ஏதோ ஒரு விளங்காத பாஷையில் பேசிக்கொண்டன. ஆனால் அது நீடிக்கவில்லை.

அன்று கடற்கரையில் என் மனதைக் கவர்ந்த கட்டழகி கௌரி இன்று என் ஆருயிர்க் காதலி. அவள் தந்தை தாயற்ற ஒரு அனாதை. தன் பாட்டியுடனும், தமையனுடனும் வாழ்ந்து வந்தாள். அவர்கள் தங்கள் நிலங்களிலிருந்து வரும் ஊதியத்தைக் கொண்டே காலங்கழித்து வந்தனர். எவ்விதக் கஷ்ட திசையிலிருந்த போதினும் கௌரி படித்த பெண்ணாகவே இருந்தாள்.

இதே ஓடையினருகில், இக்கல்லில் இருவரும் உட்கார்ந்து மனக்கோட்டைகள் கட்டு வோம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையை எண்ணி குதூகலிப்போம். இந்தக் காதல் வாழ்க்கை நீடித்திருக்குமென எண்ணி மகிழ்ந்தோம். ஆனால் காலதேவனின் கொடிய கரங்கள் எங்களைச் சும்மா விடவில்லை.

எக் காரணத்தையிட்டோ என் தந்தை காசி சர்வகலாசாலைக்குப் போகும்படி என்னைக் கேட்டார். நானும் தந்தையின் சொல்லைத் தட்ட முடியாமல் ஒப்புக்கொண்டேன். அன்று இதே ஓடையில் தான் நான் கௌரியைக் கடைசியாகச் சந்தித்தேன். என் முகத்தில் துன்பரேகை படர்ந்திருந்ததைக் கண்டு கொண்டாள் கௌரி. நானும் அவள் மனத்திலெழுந்த சந்தேகப் புயலை அடக்கும் பொருட்டு, தந்தை எனக்கிட்ட கட்டளையை அவளிடம் சொன்னேன். அவள் முகத்தில் முன்னிருந்த இன்பக் குறி மாறி, துன்பக்குறி தென்பட்டது. அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவியாகப் பாயத் தொடங்கியது. அவள் வதனத்தில் முன்னிருந்த இளமுறுவல் எங்கோ மறைந்துவிட்டது. நான் அவளுக்குச் சமாதானம் சொல்லித் தேற்றினேன். கௌரி யின் பரிசுத்தமான காதலே எனக்குத் தைரியமளித்தது. "இந்த ஏழையை மறக்கவேண்டாம். என்னை நீர் மணக்காவிட்டால் நான் எவனுக்கோ அடிமையாவது நிச்சயம். ஆனால் என் வாழ்க்கை சோபையற்றதாயிருக்கும்" என்று கௌரி கூறியது இன்றும் என் உள்ளத்தைத் தாக்கியபடியே இருக்கிறது.

படிப்பை ஒருவாறு முடித்துக்கொண்டு என் ஊரை அடைந்தேன். என் மனம் எண்ணாத எண்ணங்கள் எண்ணின. கௌரியைக் காணும் காலத்தை எதிர்பார்த்தேன். அன்று அந்திவேளையில் காற்றுவாங்கும் பொருட்டு கடற்கரைக்குப் போனேன். என் மனம் கௌரியின் நினைப்பில் மூழ்கிப் போயிருந்தது. அப்பொழுது "மனோகரா" என்று கூப்பிடும்

ஒரு பெண்ணின் குரல் என் உள்ளத்தில் பாய்ந்தது. இவ்வளவு காலமும் எந்தக் குரலைக் கேட்க வேண்டு மென்று இருந்தேனோ அதை இன்று கேட்டேன். என் பெயரைக் கூறி அழைக் கும் பெண், கௌரியை விட வேறு யார்? வியப்புடன் திரும்பினேன். தூரத்தில் ஒரு குழந்தை விழுவதும் எழுவதுமாக என்னிடம் ஓடிவந்து கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து அதன் தாய் வந்துகொண்டிருந்தாள். "அம்மா" என்று கூறியபடியே என் முன்நின்றது. அக்குழந்தை. குழந்தையின் மழலை விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்த நான் அதன் தாயைப் பார்க்க நேர்ந்தது. என்ன? என் முன் கௌரியே நின்றுகொண்டிருந்தாள். மனத்தில் நிலவிய அமைதி சூறாவளியாக மாறியது. எல்லாம் உணர்ந்துகொண்டேன் இரண்டு வருஷங்களின் முன்பு நவநாகரீக அலங்காரங்களுடன் திகழ்ந்த கௌரிக்கும் இன்றைய கௌரிக்கும் எவ்வளவு வித்தியாசம்?

"கௌரி" என்று என்னையறியாமல் வாய்விட்டுக் கூப்பிட்டேன். "என்னை மன்னி யுங்கள்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினாள் கௌரி. இதே இடத்தில் அன்று என் உள் ளத்தைக் கவர்ந்த வன தேவதையை. இன்று என் முன் வாடிய வதனத்துடன் நிற்கும் பத் தினியுடன் ஒப்பிட்டேன். கௌரியை ஏற இறங்கப் பார்த்தேன் அன்று அவள் கூறியது. முற்றி லும் உண்மையாகவே இருந்தது. அன்று என் காதலின் சொருபமாக விளங்கிய கௌரி இன்று என் சோகத்தின் சிகரமாகக் காட்சியளித்தாள். அவளின் கண்களில் நீர் வடிந்து கொண்டேயிருந்தது. பெண் இதயம் மலரல்லவா? வாடத்தானே செய்யும்.

இருட்டுக்கட்டிவிட்டது. என் மனத்தில் விதியின் சூறாவளி அடித்துக் கொண்டிருந்தது. என் வீட்டு மேல்மாடியிலிருந்து என் விதியை நொந்தேன். கீழே என் பெற்றோர்கள் பேசிக்கொண்டுருந்தார்கள்.

"என் சூழ்ச்சியினாலன்றோ, மனோகரன் கௌரியை இழக்க நேரிட்டது" இது என் தந்தையின் குரல்.

"பாவம், அந் ஏழைப் பெண்ணின் எண்ணங்கள்" இது என் தாயின் குரல். மீண்டும் இதை என் காதுகள் கேட்க மறுத்தன.

ஆ! என் தந்தையே எனக்கு விரோதி காதலை உணராத பேதை. மலரிலும் மெல்லிய காதலைப் பறித்துக் கசக்கி எறிந்தாரே என் தந்தை. காதல் உயிரோடு இணைக்கப்பட்டிருப் பதை அவர் அறியவில்லை. என் வாழ்க்கையின் இன்பத்தைப் பாழாக்கிய இவர்களின் எண் ணங்களைச் சிதற அடிக்கிறேன். எனது இளமையின் இன்பத்தைப் பரித்தியாகம் செய்தேன். நான் நித்திய பிரமச்சாரி. என் வாழ்க்கை சந்திரனற்ற வானம் போலாயிற்று.

கோகிலங்களின் கானம். என் சிந்தனையைக் கலைத்தன. சூரியனும் மேல் வானில் பிரகாசிக்கிறான். இப்படியெல்லாம் யோசித்துவிட்டேனே என்று நினைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தேன்.

ஈழகேசரி
05.05.1946

சரஸ்வதிதாசன்

சரஸ்வதிதாசன் ஈழகேசரியில் எழுதியவர். இவர் எழுதிய தியாகம் சிறுகதை மாமனாரின் சூழ்ச்சிக்குப் பலியாகி வாழ்க்கையை முடித்துக் கொண்ட இரு உள்ளங்களின் கதை. இவருடைய உண்மைப் பெயர் அறியுமாறில்லை.

❖ தியாகம்

தியாகம்

சரஸ்வதிதாசன்

ஹுசேயின் ஆங்கிலம் எட்டாவது வகுப்புவரை படித்தவன், கடையொன்றில் எழுத்து வேலை செய்து கொண்டிருந்தான். தாய் தந்தையரை இழந்தவன். தனது மாமனார் வீட்டிலேயே வாழ்ந்து வந்தான். ஒரு புகையிரத வீதி வழியாகவே காலையிலும் மாலையிலும் நடந்து செல்வான். அங்குள்ள சேலம்பாலத்தைக் காணும்போது அன்றொருநாள் நிகழ்ந்த வெள்ளப்பெருக்கு உள்ளத்தில் உதியாது விடுவதில்லை. இப்படிப் பல மாதங்கள் கழிந்துவிட்டன.

ஒரு நாட்காலை 8 மணியிலிருக்கும் அதே பழைய மணல் மேட்டில் பெண் ஒருத்தி விறகு வெட்டிக் கொண்டு நிற்கிறாள். ஹுசேயினும் அங்கு வருகிறான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அப்பெண் யாருமில்லை. ஹுசேயினால் காப்பாற்றப்பட்ட பழைய சித்திதான். சித்தியோ நாணத்தினால் தலையைக் குனிந்து கொண்டாள். ஹுசேயினும் வெட்கக் கொண்டானாயினும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. "எப்படி? சுகந்தானே?" என்றான் சித்தியைப் பார்த்து, "சகலரும் சுகமே இருக்கிறோம்" என்றாள் சித்தி, இந்த இனிமையான

பதிலை ஹுசேயின் எதிர்பார்க்கவே இல்லை. "என் தயவு ஒன்றுமில்லை. அனைத்தும் அல்லா அருளால் நிறைவேறின" என்று கூறி ஹுசேயின் நடக்க ஆரம்பித்தான். ஹுசேயினே பின்னாற் திரும்பிப் பார்க்க வெட்கங் கொண்டவனாய் மனப் போராட்டத்தோடு நடந்தான். சித்தியோ நாணத்தையும் மறந்து ஹுசேயின் மறையும்வரை கண்ணிமை கொட்டாது வார்த்த சிலைபோல் நின்றாள். ஹுசேயின் அகலவில்லை. ஹசேயின் உருவம் மறைந்தது அவள் உள்ளத்தை விட்டு.

பக்கத்திலே தேயிலைச் செடிக்குள் நின்ற அவள் தங்கை அக்கா என்று கூப்பிட்டதும் சித்தி திடுக்குற்றுவிட்டாள். அன்று தொடக்கம் சித்தியும் ஹுசேயினும் சந்தித்துச் சம்பாஷித்தல் சாதாரண விக்ஷயமாகிவிட்டது. காதலர் இருவரையுங் கால்வாய் ஒன்றுதானே பிரித்து வைத்தது?

எனக்கு உயிர் கொடுத்தவர் அவரே. ஆனபடியால் இவ்வுலகில் எனக்குத் தெய்வம் அவரன்றி வேறொருவர் இருக்க முடியாது என்பது சித்தியின் நம்பிக்கை. எனது சீவியத்தில் ஒரு பெண்ணைக் கையாற்றொட்டுக் கண்ணாற் பேசி என்னுள்ளத்தைக் கொள்ளை கொண்ட சித்தியைத் தவிர இனிமேல் எனக்கொரு பெண் தெய்வம் இருக்க முடியாதென்பது ஹுசேயின் சித்தாந்தம். ஆனால் இதுவரை அவர்களிருவரும் இதைப்பற்றி வேறு எவருடனும் பேசியது கிடையாது.

1942ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் யப்பான்காரன் கொழும்பிற் குண்டு போட்டான். இலங்கையிற் படைக்கு ஆள் சேர்த்தனர். ஹுசேயினும் படையிற் சேர எண்ணங் கொண்டான். தன் விருப்பத்தை மாமனார்க்கு மாத்திரம் தெரிவித்து உத்தரவு பெற்றுக் கொண்டான். அதே வருடம் மே மாதம் 23ந் திகதி காலை 8 மணிக்கு சேலம்பாலத்தில் ஹுசேயின் வந்து கொண்டிருக்கிறான். மணல் மேட்டில் ஓர் உருவம் ஹுசேயினைக் கண்டுங் காணாதது போல் நிற்கிறது. அவள் அன்றுதான் அவனைப் பெயர் சொல்லி அழைக்கிறாள். எப்போதுமே சாறத்துடன் காட்சியளித்த ஹுசேயின் அன்று காற்சட்டையுடன் காட்சியளித்தவுடனே சித்தியின் மனதில் ஏதோ ஒரு பரபரப்பு ஏற்பட்டது. நீங்கள் எப்போ திரும்புவீர்கள் என்றாள். நிச்சயமாகச் சொல்வதற்கில்லையென்றான் ஹுசேயின். உங்களுயிர் இவ்வுடலிலே தங்கி இன்றோடு ஒரு வருடமும் ஒரு நாளும் ஆகிறது என்றாள் சித்தி. இவ்வன்பான வார்த்தைகள் ஹுசேயினின் கண்களை நீரால் நிறைந்துவிட்டன. ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனாற் சொற்கள் வரவில்லை. திரும்பிப் பார்த்தான். மாமனார் அவனைப் பயணம் அனுப்ப வந்து கொண்டிருந்தார். உடனே ஹுசேயின் நடையைத் துரிதமாக்கினான். நாட்கள் சென்றுவிட்டன. சித்தியின் மனத்திற்கு இரம்மியத்தைக் கொடுத்த மணல் மேட்டு இப்பொழுது வெறும் பாலைவனமாகக் காட்சியளித்தது. முன்பு மாமரத்தில் இருந்து பெடையை அழைத்த ஆண்குயிலின் குரல் ஆந்தையின் அலறல்போற கேட்கின்றது. மலர்ந்த பூக்களுடன் காட்சியளித்த றோசாச் செடிகள் இப்போது நரக உலகத்து முள்ளுவேலிகளாகத் தோன்றின. ஏதோ ஒன்று தன் மனத்துள்ளே இருந்து பறந்துவிட்டதாக உணர்ந்தாள் சித்தி.

சித்தி வயது வந்த பெண்ணல்லவா? வீட்டிற் பெற்றார்க்குக் கலியாணக் கவலை உண்டாயிற்று. சித்தியின் உள்ளத்தை யாரறிவார். சித்தியின் மைத்துனன் காதருக்குப் பெற்றார் பெண் கொடுப்பதாகச் சம்மதம் கொடுத்து விட்டனர். சித்திக்கு இவ்விஷயம் பெருந்துயரை உண்டாக்கியது. காதலரை மணக்க அவள் மறுத்து விட்டாள்.

சித்தியின் பிடிவாதத்தை கண்ட தாயும் தந்தையும் காதரின் பெற்றாருக்கு விஷயத்தைத் தெரிவித்து அவர்களை வேறு எங்காவது பெண் பார்க்கும்படி சொன்னார்கள்.

ஹுசேயினின் மாமனாரிடம் ஹுசேயினின் விவாகத்தைப் பற்றிப் பலர் பிரஸ்தாபித்தனர். ஹுசேயினுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுப்பதாகவே அனேகர் முன்வந்தனர். ஹுசேயினின் மாமனாரோ தனது தம்பியாரின் மகள் ரூபிலாவையே மனதில் நிச்சயித்திருந்தார். ரூபிலா பெயருக்கேற்ற அழகும் அழகிற்கேற்ற குணமும் உடையவள். இதுவே ஹுசேயினின் மாமனார் மனதைப் பெரிதுங் கவர்ந்தது. அவர் வேறு விவாக ஒழுங்குகளைத் தட்டி விட்டார்.

ஹுசேயின் திரிகோணமலைக்குப் போய் வருடம் ஒன்றாகிவிட்டது. ஒரு கிழமை விடு முறையில் வீட்டிற்கு வந்தான். வந்த அன்றே மாமனார் கலியாணப் பேச்சை ஆரம்பித்தார்.

"நான் இப்போதைக்கு விவாகம் செய்யப் போவதில்லை"யென்றான் ஹுசேயின்.

"எனக்கோ வயதாகிவிட்டது. நான் உயிரோடு இருக்கும் போதே உனக்குக் கல்யாணஞ் செய்து பார்க்க வேண்டும்" என்றார் மாமனார்.

"அப்படியானால் நீங்கள் சொல்லும் பெண்ணை நான் கட்ட முடியாது."

நீ பெண் பார்த்து வைத்திருக்கிறாய் போலிருக்கிறதே?"

"ஆம் ஆற்றங்கரைச் சித்தியைத்தான் மணம் முடிப்பதாகத் தீர்மானித்து விட்டேன்"

"காரியம் அவ்வளவுக்கு வந்து விட்டதா?"

"ஆம் என் உயிர் இவ்வுடலில் இருக்கும்வரை சித்தியைத் தவிர வேறு பெண்ணை நான் விவாகம் செய்யப் போவதில்லை."

"சித்தி மறுத்துவிட்டால்"

"பிரம்மசாரியாகவே காலங்கழிப்பேன்."

ஹுசேயின் அடுத்தநாள் பாலத்தை நோக்கி நடந்தான். பாலத்தின் பக்கத்தே உள்ள கல்லின் மேற் காக்கி உடையுடன் ஒரு மணித்தியாலம் வரை உட்கார்ந்திருந்தான். சித்தியின் தங்கை மணல் மேட்டிற்கு வந்தாள். ஹுசேயினைக் கண்டாள். ஓடோடியுஞ் சென்று சித்திக்குச் சொன்னாள். சித்தியுந் தங்யும் அப்பழைய மணல் மேட்டிற்கே வந்தனர். ஹுசேயினின் தோற்றம் சித்திக்குப் புதிதாகவிருந்தது. ஹுசேயினுக்கும் சித்தி புதியதோர் அழகு பெற்றிருப்பதாகத் தெரிந்தது. இருவரும் சம்பாஷிக்க ஆரம்பித்தனர். "சித்தி இன்னும் 2, 3 மாதத்தில் நான் இலங்கையை விட்டுப் போக வேண்டும். திரும்பி வர 3 வருடமாவது பிடிக்கும். நீ அவ்வளவு காலமும் காத்திருப்பாயா?"

"இந்த உயிர் உங்களுடையது. சீவியகாலம் முழுதுமே காத்திருக்கவும் தயார்."

"மாமா எனக்கு வேறு கலியாணங்கள் எல்லாம் பேசினார். நானோ இப்போ விவாகஞ் செயவதில்லையென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்."

"எனக்கும் வீட்டில் எவ்வளவோ கஷ்டங்கள் நேர்ந்தன. அம்மாவின் அன்பினால் அவையெல்லாம் ஒருவாறு நீங்கிப் போய்விட்டன."

"சித்தி காதலர் பாடு கஷ்டமானது. காதலுக்காக அநேகர் தமது உயிரையே துறந்திருக் கிறார்கள். சென்றகிழமைப் பத்திரியையில் யாழ்ப்பாணச் செய்தி ஒன்றைப் படித்தேன். இரண்டு காதலர் விவாகம் செய்து கொள்வது அவர்களுடைய பெற்றோருக்கு விருப்பமில்லையாம். ஆனபடியால் அவர்கள் இருவரும் ஒரே கிணற்றில் விழுந்து உயிர்விட்டனராம். எங்கள் காதலிலும் இன்னும் எவ்வளவு சோதனையிருக்கிறதோ யாரறிவார்?"

"சித்தி உனக்கு ஏதாவது கொண்டு வரலாம் என்று கடையெல்லாந் தேடினேன். மன திற்குப் பிடித்தது ஒன்றுமே அகப்படவில்லை."

"உங்களிலும் பார்க்க உயர்ந்த பொருள் இவ்வுலகில் எனக்கு இருப்பதாகத் தெரிய வில்லை."

"அடேயப்பா இப்படியெல்லாம் சாதுரியமாகப் பேசுவதற்கு யாரிடம் கற்றுக் கொண்டாய்."

"ஏன் உங்களிடம் தான் கற்றுக் கொண்டேன்."

இப்படி இனிமையாகப் பேசிவிட்டுக் காதலரிருவருங் கலைந்தனர்.

மாமனாருக்கு ஹுசேயின் மனத்தைத் திருப்புவது எப்படியென்று விளங்கவில்லை. கடைசியாகப் பாவம் பழியெல்லாவற்றையும் ஒரு பக்கத்திலே வைத்து விட்டுத் தீர்க்கமான முயற்சியில் இறங்கினார்.

ஹுசேயின் மாமனார் வாரம் ஒரு முறையாவது சித்தியின் வீட்டிற்குப் போகத் தவறு வதில்லை. ஹுசேயின் மணத்திற்கு இடையூறு இல்லாதவர் போல் நடித்து வந்தார்.

ஹுசேயின் மாமனார் ஹுசேயின் பேரில் காணி ஒன்று வாங்குவதற்காக இரண்டு காணிகளைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதில் எது விருப்பம் என்று தெரிவிக்கும்படியுங் குறிப்பிட்டிருந்தார். அதற்கு ஹுசேயின் மாமனாருக்கு எழுதிய கடிதம் பின்வருவாறு.

சீனன்வரடி,
திரிகோணமலை,
15-3-46

அன்பு நிறைந்த மாமா!

அல்லா அருளால் ஷேமம். தங்கள் ஷேமத்திற்கும் தங்கள் அன்பான கடிதம் கிடைக்கப் பெற்று யாவும் அறிந்தேன். தாங்கள் குறிப்பிட்ட பிரகாரம் நான் ஏமாந்து போகிறவனல்லன். நீங்கள் என்னதுதான் சொன்னாலும் ஆற்றங் கரைப் பக்கத்து விஷயம் என் மனத்திற்குப் பிடிக்கவில்லை. அது ஒரு தனித்த இடம். நான் ஏமாந்து போவேன் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். அவர்களுடைய சூழ்ச்சியெல்லாம் எனக்குத் தெரியும். அந்த விஷயமாக நீங்கள் எதைச் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். அதில் நான் நன்றாகப்

பட்டுப் பழுத்துவிட்டேன். எனக்காகத்தான் நம்பி வைத்திருந்தவர்கள் என்றால் யாரைக் கேட்டு வைத்திருந்தார்கள். எதோ என்னைக் கண்மூடிக் கொண்டு விழும்படி சொல்லுகிறார்கள் போலிருக்கிறது. நீங்கள் முன்பு கூறினீங்களே அதை ஒழுங்கு செய்யுங்கள். நான் எப்படியும் 1ம் திகதியளவில் எகிப்துக்குப் போக எண்ணம். அதற்கிடையில் உவ்விடம் வந்து எழுத்தை முடித்துவிட்டுப் போகலாம் என உத்தேசம். மற்றையெல்லாம் பின்பு பார்த்துக் கொள்வோம். ஆற்றங்கரையாரிடம் நான் முற்றாக மறுத்துவிட்டதாகவும் எனக்காக் காத்து வைத்திருக்க வேண்டாம் எனவும் கூறுங்கள்.

தங்களன்புள்ள

ஹுசேயின்

கடிதத்தை வாசித்துப் பார்த்தார் மாமனார். தன் யுக்தி பலித்தது என்று மனதார மகிழ்ந் தார். உடனே கடிதத்துடன் சித்தி வீடு நோக்கி நடந்தார். ஹுசேயினின் கல்யாண விஷயமா கப் பேச ஆரம்பித்தார். நான் ஒரு கடிதம் எழுதினேன். ஏதோ இந்த மாசமாவது லீவில் வந்து கலியாண எழுத்தை முடித்து விட்டுப்போ. என்னுயிர் இருக்கும்போது சித்தியையும் உன்னையும் ஒருமிக்க இருத்திப் பார்க்கவேண்டுமே என்று ஆவலோடு எழுதினேன். அதற்கு அவன் எழுதிய மறுமொழி என் வயிற்றிலே நெருப்பைக் கொட்டினது போல் இருக்கிறதே. சித்தி இந்தா இதோ கடிதத்தைப் பார் என்று சொல்லிச் சித்தியிடம் கடிதத்தை நீட்டினார். கடிதத்தைப் படித்து முடிக்கமுன் சித்தியின் கன்னத்தில் கண்ணீர் நனைத்தது.

25ந் திகதி காலை 9 மணியளவில் தந்தியொன்று ஹுசேயின் மாமனாருக்குக் கிடைத்தது. அதில் ஹுசேயின் அன்று வருவதாகக் கண்டிருந்தது. மாமனார் தந்தியைக் கையில் எடுத்துக் கொண்டு சித்தி வீட்டுக்குச் சென்று விஷயத்தைத் தெரிவித்தார்.

சித்திக்கு எங்கிருந்தோ புதுப்பெலம் வந்துவிட்டது. தங்கையையும் கூட்டிச் சென்று தேயிலைச் செடியில் மறைந்து இருந்தாள். ஹுசேயினும் மாமனாரும் ஆனந்தமாகப் பேசிக் கொண்டே வருகின்றனர். மணல் மேட்டிற்கு அருகாமையில் வரும்போது மாமனார் கேட்ட கேள்வியொன்றிற்கு ஹுசேயின், “மாமா நீங்கள் மாத்திரம் இந்த விஷயத்தில் அவர்களுக்கா கப் பரிந்து பேசவேண்டாம். எல்லா விஷயங்களையும் நான் என் கண்ணாரக்கண்டுதான் அதுவேண்டாமென்று கடிதம் எழுதினேன். என்னை அவர்கள் கொண்டு போய் மாட்ட இருப் பதைப் பற்றிக் காதர் கடிதம் எழுதியிருந்தான். நீங்கள் இன்று 5 மணிக்கே எழுத்திற்கு ஆயத் தஞ் செய்யுங்கள் நான் நாளை புறப்பட வேண்டும்.

அவ்வார்த்தைகள் ஒன்றும் சித்தியினை இதயத்தை வாள் கொண்ட உறுத்தின. “ஆண்களையும் நம்பலாமா? அவரை நான் அல்லவா நம்பி மோசம் போனேன்” என்றெல் லாம் மனத்துடன் போராடினாள். அவள் தங்கையை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆழ்ந்த யோசனையில் ஆற்றங்கரையோரத்தில் இருந்தாள்.

மாலைபொழுதாகிவிட்டது. மணல்மேட்டை நோக்கிக் ஹுசேயின் சென்றான். ஆற்றங் கரையிற்கூடிய ஜனங்கள் பேசிய பேச்சுக்கள் அவனது உள்ளத்தை உடைத்தன. கரைபுரண்டோடும் ஆற்றுடன் முணுமுணுத்த வண்ணம் ஹுசேயின் காணப்பட்டான்.

மறுநாட்காலை சேலம் பாலத்திலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கும் குறுக் கோயாப் பாலத்திற்கருகில் இரு பிரேதங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக ஊர் எங்கும் ஒரே கதை. மங்கையில் மலர்ந்த காதல் கங்கையில் உதிர்ந்துவிட்டதெனச் சிலர் பேசிக் கொண்டனர். அன்று வீட்டை விட்டு வெளிக் கிளம்பிய ஹுசேயினின் மாமனார் எங்கு சென்றாரோ தெரியவில்லை. அவர் பக்கிரியாகப் போய்விட்டார். பைத்தியம் பிடித்து அலைகிறார் என்றும் வேறு சிலர் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

ஈழகேசரி
24.03.1946

சண்முகம்

ஈழகேசரியின், சிறுகதை, கட்டுரைகளை எழுதியவர். ஈழகேசரியில் இவர் எழுதிய 'அபலை' சிறுகதை வெளிவந்தது. கடிதம் மூலமாக கதை சொல்லுதல் என்னும் உத்தியைக் கையாண்டு இக்கதையை எழுதியிருந்தார். இக்காலப் பகுதியில் சிறுகதைகளை எழுதிய சண்முகரெத்தினமா இவர் என்பதை அறிய முடியவில்லை.

❖ அபலை

அபலை

சண்முகம்

பிறருக்கு உபதேசம் செய்பவர்கள் தங்களைத் திருத்திக் கொள் வதில்லை என்பதை அது பலர் மூலமாக உணருவதற்கு எனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது. எனது உயிர்த் தோழன் ரகுநாதனின் விருந் தினனாக அவன் வீட்டிலே தங்கியிருந்தேன். பள்ளிக்கூடப் படிப்பு முடிந்த பிறகு காலச்சக்கரம் எங்களை மூலைக்கு ஒருவராகப் பிடித்துத் தள்ளியது. சுமார் இரண்டு வருடங்களுக்குப் பிறகு இதுதான் எங்கள் முதற் சந்திப்பு.

இரவு மணி சுமார் பத்துக்கு மேலிருக்கும், ரகு குறட்டையிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான். எனக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு பார்த்தும் பலன் இல்லை. தூக்கம் வரும்வரை எதையாவது படித்துக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணத்தோடு எழுந்தேன். மேஜையின் மீது மங்கலாக எரிந்து கொண்டிருந்த விளக்கைத் தூண்டிவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்தேன்.

மேஜையின் சொருகுப்பெட்டியை இழுத்து அதனுள் ஏதாவது கதைப் புத்தகம் இருக்கிறதா? என்று தேடியபோது, பல கடிதங்கள்

திணிக்கப்பட்ட ஒரு உறை என் கண்களிற்பட்டது. அழகான எழுத்துக்களிற் ரகுநாதனின் விலசாம் எழுதப்பட்டிருந்தது.

"பிறர் கடிதங்களை, அவர்களது உத்தரவில்லாமற் பார்ப்பது மன்னிக்க முடியாத குற்றம்" என்று எத்தனையோ பேருக்கு உபதேசம் செய்த நான் கொஞ்சம் சிந்தித்தேன். பெண்களைக் கண்டாலே தலையைக் குனிந்து கொள்ளும் சங்கோஜ சுபாவமுள்ள ரகுநாதனுக்கு எந்தப் பெண் கடிதம் எழுதியிருக்கப்போகிறாள்?

நியாயத்தை நழுவவிட்டு உறையினுள் இருந்த ஐந்தாறு கடிதங்களை வெளியே எடுத்தேன். கடிதங்கள் வரிசையாக ஒரு நூலினாற் கோர்த்து வைக்கப்பட்டிருந்தன. திரும்பிப் பார்த்தேன். ரகு நல்ல உறக்கத்தில் இருந்தான். முதற் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

அன்பரே!

ஒரு பெண் திடீரெனத் தங்கட்குக் கடிதம் எழுதுவது வியப்பாகத்தான் இருக்கும். நான் யார் என்பதை உணர்ந்திருப்பீர்கள் என்றே நினைக்கிறேன். தயவு செய்து கடிதம் முழுவதையும் படியுங்கள், அலட்சியமாக எண்ணிப் படிக்காமல் இருந்து விடாதீர்கள்.

நான் தாசி குலத்திற் பிறந்தவள் என்பதை முதலிலேயே கூறிவிடுகிறேன். தாசி என்ற பெயரைக் கேட்டு நான் விபசாரியாகத்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்து விடாதீர்கள், கொடிய கண்களையுடைய சிறுத்தைகள் வாழும் காடுகளிலே குளிர்ந்த பார்வையுள்ள மான் இனங்களும் வாழ்கின்றன என்பதை மறந்துவிடாதீர்கள்.

எதற்காக இப்படியெல்லாம் எழுதுகிறேன் என்று எண்ணுகிறீர்களா தயவுசெய்து கொல்லைப்புறத்திலே உள்ள நீரோடைக்கு அருகில், இன்றிரவு எட்டு மணிக்கு என்னை அவசியம் சந்தியுங்கள். மற்றவை நேரில்.

அன்புள்ள - குமுதம்

இரண்டாவது கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தேன்.

அன்பரே!

என் கடிதத்தைத் தாங்கள் படித்திருப்பீர்கள் என்றே எண்ணுகின்றேன். ஆனால் எக் காரணத்தாலோ நான் குறிப்பிட்ட இடத்துக்கு வரவில்லை. நொந்த உள்ளத்தோடு வீடு திரும்பி னேன். நான் என்னை "ஒரு தாசி" என்று கூறிக் கொண்டது தங்களுக்கு அருவருப்பை அளித்திருக்கலாம். இரவிலே தனியிடத்தில் ஒரு தாசியைச் சந்திப்பது கேவலமானது என்று உங்கள் உள்ளம் தடுத்திருக்கும் எங்கள் குலத்தொழிலைச் செய்வதற்கு வீசிய வலையென நினைந்து அஞ்சியிருப்பீர்கள். ஒரு ஆடவனின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நான் தங்களுக்குக் கடிதம் எழுதியது வெட்கக்கேடான செயல் என்று கருதியிருப்பீர்கள்.

ஆனால் உறுதியாகச் சொல்கிறேன். தங்களை நான் சந்திக்க விரும்பியது பற்றிக் கேவலமாக எண்ணிவிடாதீர்கள். வேதனை நிறைந்த என் வாழ்க்கைக்கு ஏதாவது பரிகாரங் கிட்டாதா என்ற ஆவல் காரணமாகவே கடிதம் எழுதினேன். இன்றைக்காவது நான் குறிப்பிட்ட இடத்தில் அவசியம் சந்தியுங்கள், நான் சொல்ல இருக்கும் விஷயங்களைக் கேட்டுப் பின் என்னைப் பற்றி முடிவெடுங்கள்.

அன்புள்ள - குமுதம்.

வியப்புடன் மூன்றாவது கடிதத்தையும் புரட்டினேன்.

அன்பரே!

தங்களது மௌனம் என்னைச் சித்திரவதை செய்கின்றது. என்னைப் பற்றி உண்மையாகவே தப்பபிப்பிராயங் கொண்டுவிட்டீர்கள். தயவு செய்து சிறிது கூர்ந்து கவனியுங்கள்.

தாசி குலத்திலேதான் பிறந்தேன். குலச் சம்பிரதாயங்களெல்லாம் எனக்குக் கற்பிக்கப்பட்டன. பருவமடைந்தேன். வழக்கப்படி குலத்தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று தாய் வற்புறுத்தினாள். சீர்திருத்த வாழ்வை விரும்பிய நான், யாராவது ஒரு வாலிபருக்கு வாழ்க்கைப்பட்டு அவருடன் வாழ விரும்பினேன். வீட்டில் எழுந்த எதிர்ப்பைச் சமாளித்து என் இலட்சியத்தில் முன்னே என்னால் இயலவில்லை.

வயது சென்ற பணக்காரர் ஒருவருக்கு ஆரம்பத்தில் எனது உடலை விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆடம்பரமான ஏற்பாடுகளுக்கு இடையே, எனது வாழ்க்கையின் பரிதாபகரமான முதல் இரவை அந்த மனிதருடன் மனவேதனையோடு கழித்தேன்.

இரண்டாவதாக வசீகரமான ஓர் இளைஞர் வந்தார். என் மனவேதனை எல்லையைக் கடந்து விட்டது. அழுது கதறினேன். அவர் பிரமித்துவிட்டார். அன்போடு என் கைகளைப் பற்றிக்கொண்டு “எதற்காக அழுகிறாய்” என்று இனிமையாகக் கேட்டபோது நான் பெற்ற இன்பத்தைச் சொல்ல முடியாது.

நான் என் உள்ளத்தைத் திறந்து அவருடன் பேசினேன். அவர் கொஞ்ச நேரம் சிந்தனை செய்தார். பிறகு பொழுது விடிவதற்குள் என்னை யாருக்கும் தெரியாமல் அழைத்துப்போய் விடுவதாகவும் என்னைத் தன் மனைவியாக ஏற்றுக்கொள்வதாகவும் வாக்களித்தார். பொழுது விடிவதற்குள் நாங்கள் இருவரும் வெளியேறிவிட்டோம்.

அவர் “கார் டிரைவர்“ வேலை செய்பவராம். ஆனால் ஒரு இடத்திற் கூட அவர் நிலைத்து நிற்கவில்லை. பல ஊர்களைச் சுற்றிவிட்டுக் கடைசியாகத் தான் இங்கு வந்தோம்.

ஆரம்பத்தில் எனது வாழ்வு இன்பமாகத்தான் கழிந்தது. அவர் என்னை அன்போடு தான் நடத்திவந்தார். ஆனால் அந்த வாழ்வு நீடிக்கவில்லை. தென்றல் மாறிச் சூறாவளியாகின்றது. அவரது குணங்களும் மாறிக் குடிக்கவும் ஆரம்பித்தார்.

எனது இன்னல்கள் வரவர அதிகரித்தன! எவ்வளவோ முறை சகித்துப் பார்த்தேன்.

நாலைந்து நாட்களுக்கு முன் ஒரு நாள் இரவு அவரது இரண்டு மூன்று மனிதர்களைத் தன்னுடன் அழைத்துவந்து, அவர்கள் தனது நண்பர்கள் என்றும் அவர்கள் இச்சைக்கு நான் இணங்க வேண்டுமென்றும் வற்புறுத்தினார். நான் பலமாக மறுக்கவே என்னை நையப் புடைந்தார்.

பொதுவாக எனது வாழ்வு நரக வேதனையுடன் கழிகின்றது. தங்களது நடவடிக்கைகளைக் கவனித்தேன். தங்களது பெருந்தன்மையான போக்கு என்னைக் கவர்ந்தது. என்னை மணந்து கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. ஒரு வேலைக்காரி முறையில் என்னை வைத்து ஆதரிப்பீர்களாயின் அதுவே போதுமானது. தங்கள் கருத்தை

என்னிடம் நேரிற் சொல்வீர்களென தாழ்மையுடன் எதிர்பார்க்கிறேன். ஓடையருகே இன்றிரவு அவசியம் சந்தியுங்கள்.

அன்புள்ள - குமுதம்.

நான் படித்துக் கொண்டிருப்பன கடிதங்களா என்று கூட எனக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. என் கண்களிலே துளிர்த்த நீர்த்துளிகளைத் துடைத்தபடி அடுத்த கடிதத்தைப் படித் தேன்.

அன்பரே!

என்னை மன்னித்துவிடுங்கள், உள்ளத்திலே கொழுந்துவிட்டு எரியும் வேதனைத் தீயின் கொடுமைக்கு ஆற்றுவது ஒன்றன்பின் ஒன்றாகப் பல கடிதங்கள் எழுதிவிட்டேன். என்னைப் பற்றித் தாங்கள் என்ன எண்ணிக் கொண்டீர்களோ தெரியவில்லை. எனது கடி தங்கள் காரணமாகத் தங்கட்கு ஏதாவது தொந்தரவுகள் ஏற்பட்டிருந்தால் அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்.

இது தான் எனது கடைசிக் கடிதம். இதற்கும் பதில் இல்லையென்றால்.....?

உடலை விற்று உல்லாசமாக வாழவேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்போதுமே கிடையாது. என்னை ஆதரிப்பதாக அழைத்து வந்தவரிடம், நான் பொருளை எதிர்பார்க்க வில்லை. ஆபரணங்களை வேண்டவில்லை. அலங்கார ஆடைகளை விரும்பவில்லை. அன்பை எதிர்பார்த்தேன். அடி, உதை, வசைகள் தான் கிடைத்தன. அன்பை மட்டும் அளிக்கத் தயாராக உள்ள ஆடவர் யாராவது என்னை ஏற்றுக்கொள்ள விரும்பினால் என் வாழ்நாள் முழுவதும் அவருக்கு அடிமையாக வாழத்தயார். தற்கொலை செய்துகொள்ள என் மனம் இன் னும் இடந்தரவில்லை. நேரில் சந்திக்க விருப்பமில்லாவிடில் நான் குறிப்பிட்ட இடத்திலாவது இக் கடிதத்துக்குப் பதில் எழுதிவையுங்கள்.

அன்பை விரும்பும் - குமுதம்

"கடிதங்கள் எப்படி இருக்கின்றன?" என்று யாரோ கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன், வேறு யார்! ரகுநாதன்தான்.

"உன் உத்தரவின்றி உனக்கு வந்த கடிதங்களைப் பார்க்க நேர்ந்ததற்கு வருந்துகி றேன்" என்றேன். அவன் சிரித்துவிட்டு "இவற்றை உன்னிடம் நான் காண்பிக்கத்தான் எண் ணியிருந்தேன். நீ என் வேலையைச் சுலபமாக்கி விட்டாய்" என்றான்.

"குமுதம் என்ன ஆனாள்" என்று வியப்போடு கேட்டேன் அவனது முகத்திலே துயரத் தின் சாயை படர்ந்தது. "தனக்கு உதவி செய்ய இந்த உலகில் யாருமே இல்லை என்று அறிந்த பிறகு அவள் இந்த உலகத்தை விட்டு போய்விட்டாள்" என்றான் பெருமூச்சுடன்.

"அப்படியானால் அவள் இறந்து போனாளா?" என்று பதட்டத்துடன் கேட்டேன்.

ரகுநாதன் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தான். பிறகு பேச ஆரம்பித்தான்....

கடிதம் எழுதிய பெண் பக்கத்து வீட்டிலேயே இருந்தாள். பதினாறு, அல்லது பதினேழு வயது இருக்கும். நல்ல அழகு வாய்ந்தவள்.

“தாசி குலத்தைச் சேர்ந்தவள் என்று அவள் குறிப்பிட்டிருந்ததை என்னால் நம்பவே முடியவில்லை. அவ்வளவு ஒழுங்காக அவள் வாழ்க்கை நடத்தினாள்.

“அவள் கடிதம் எழுதுவதற்கு முன்பே அவளைப் பற்றிய விஷயங்கள் என் காதுகளுக்கு எட்டின.

குடித்துவிட்டு அந்த மனிதன் செய்யும் ரகளைகளையெல்லாம் நான் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன்.

இந்த ஜன்னல் வழியாகத்தான் அவள் கடிதங்களைப் போட்டுக் கொண்டி ருந்தாள்.

“மாலை நேரங்களில் இங்கு நான் இருக்கும்போது ஜாடையாக அவள் இந்தப் பக்கம் கவனிப்பாள். அப்பொழுது அவளது முகத்திலே எவ்வளவு ஆவல் படர்ந்திருக்கும் தெரியுமா? ஆனால் நான் ஒரு மரக்கட்டையாக நடந்து கொண்டேன். என்னாற் செய்ய முடிந்தது அது தான். பேசிப் பயன் என்ன? அவள்தான் இந்த உலகத்தில் இல்லையே!”

ஈழகேசரி
07.04.1946

கமலாவதி சபாரத்தினம்

இவருடைய சிறுகதை ஈழகேசரியில் வெளிவந்தது. இவருடைய உண்மைப் பெயரை அறியுமாறில்லை.

- நிலா உலாத்து

நிலா உலாத்து

கமலாவதி சபாரத்தினம்

அன்று பௌர்ணமி நிர்மலமான வெளியில் பூரண சந்திரன், தனது கிரணங்களை அள்ளிப்பொழிந்து கொண்டிருந்தான். பொன் உருண்டை போன்ற பூரண சந்திரன் ராணியைப் போல் நடுவில் வீற்றிருக்க சுற்றிவர தோழிகள் போல் நட்சத்திரங்கள் இருந்தன.

மோகனாவும் நானும் வெளித்திண்ணையில் இருக்கும் கட்டிலிலிருந்தோம். எங்கும் நிசப்தம்.

பத்துமணி என்று கடிகாரத்தால் அறிந்தோம், "மோகனா இன்று இச் சந்தோஷமான நேரத்தில் நிலா உலாத்துக்கு வருகிறாயா?" என்று கேட்டேன். மோகனா சம்மதிக்க இருவரும் நிலைக்கண்ணடியில் முன்னின்று அலங்கரித்துக் கொண்டு போனோம்.

கடற்கரையை அடைந்து, அங்கு இருக்கும், வெள்ளை கற்பாறை மீது உட்கார்ந்து ஒன்றன் பின் ஒன்றாகவரும் அலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தோம். அவ்வின்பக் காட்சியைக் கண்டு மகிழ்ந்துவிட்டு இருவரும் அவ்விடத்தை விட்டுச் சென்றோம்.

இருவரும் ஒரு பூஞ்சோலையை அடைந்தோம். எல்லாச் செடிகளும் மரங்களும் வர வேற்றன. ஆ! என்ன வரவேற்பு? எல்லாம் இயற்கை வரவேற்புத்தான். அங்குள்ள நதியின் கரையிலிருக்கும் மணலில் உட்கார்ந்தோம். அங்கு சிறுவர்களும், பெண்களும், ஆண்களும் பொழுதைப்போக்குவதற்காக அங்கு வந்து சந்தோஷமாய் கூச்சலிட்டுக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்கள். ஒரு பாட்டுப் படிக்கும்படி கேட்டாள் மோகனா. நான் "பூரண சந்திரனும் தென்றலும்" என்னும் ராகமாளிகை பாட்டைப் படித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் பொழுது ஏதோ ஒரு இனிமையான குரல் கேட்க நான் பாட்டை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்ந்தேன். மோகனா திடுக்குற்றாள். "ஏன் அக்குரல் கேட்டதும் இப்படி இருக்கிறாய்?" என்று கேட்டாள். நான் "அது பெரிய கதை" என்று சொன்னேன். அவள் என்னை சொல்லும்படி கேட்டாள். நான் சொல்லத்தொடங்கினேன்:-

"அப்போது எனக்கு ஒன்பது வயது இருக்கும். என் இணைபிரியாத சினேகிதி வனஜாவும் நானும் ஒரே வகுப்பில் படித்துக்கொண்டிருந்தோம். நான் என்ன செய்தாலும் அவளும் அதையே செய்வாள் அவளை எங்கு காண்கிறார்களோ அங்கு என்னையும் பார்க்கலாம்.

எனது பிறந்ததினம் வந்தது. வீட்டில் பெரிய விருந்து வைத்தோம். மாலை நாலு மணி யளவில் எங்கள் வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்துநின்றது. நான் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். வனஜா வந்து கொண்டிருந்தாள். என் சந்தோஷத்துக்கு எல்லை இல்லை. நான் அவளை அழைத்துக் கொண்டு போய்ச் சிற்றுண்டிகள் எல்லாம் பரிமாறினேன். அவள் எனக்கு உபகாரமாய் தந்த புதுச்சட்டையை அணிந்து கொண்டு உலாத்துக்கு வரும்படி சொன்னாள்.

நாங்கள் இருவரும் சென்றோம். ஒரு பூந்தோட்டத்தை அடைந்தோம். அங்கு இருக்கும் ஒரு ஆசனத்தில் அமர்ந்தோம். இருவரும் அங்கு இருக்கும் புஷ்பங்களை பிடுங்கி விளை யாடிக் கொண்டிருக்கும் பொழுது கதிரவன் தனது பிரகாசத்தைக் குறைத்துக் கொண்டு ஆறு தல் எடுப்பதற்காக மறைந்தான். சந்திரன் ஆகாயத்திலிருக்கும் நீலமாகிய கடலில் ஒரு கப்பல் போல் உதித்தான்.

நாங்கள் வீடு திரும்பினோம் அவள் "நாளை காலை வருகின்றேன்" என்று சொல்லி விட் டுப் போனாள். அடுத்தநாள் காலை அவள் வரவில்லை. அவர்கள் வீட்டிலிருக்கும் வேலைக் காரியிடம் விசாரிக்க அவள், "இராத்திரி எல்லோரும் எங்கேயோ போய்விட்டார்கள்" என்று சொன்னாள்.

ஏழுவருஷம் ஆகிறது வனஜாவை இன்னும் காணவில்லை. அப்பொழுது கேட்ட குரல் அவளுடையதாக இருக்கலாம் என்றுதான் யோசித்தேன்" என்று சொன்னேன்.

"அப்பொழுது சொல்லியிருந்தால் போய்ப் பார்த்திருக்கலாம். இப்போது அவர்கள் போயிருப்பார்கள். நாளியாகிவிட்டது. வா வீடு செல்வோம்" என்றாள் மோகனா.

நாங்கள் இருவரும் வீடு சேர்ந்தோம்.

ஈழகேசரி
13.02.1949

கே.ஆர்.நாதன்

கே. ஆர். நாதன் மறுமலர்ச்சியில் எழுதியவர். இவரின் 'மன்னிப்பு' சிறுகதை நனவிடை உத்தியைக் கையாண்டு எழுதப்பட்ட சிறுகதை. எளிமையான உரை நடையில் தெளிவாகக் கதை எழுதிய இவர் பரவலாக அறியப்படவில்லை. நேர்த்தியான இவரின் மொழி நடைக்கு மன்னிப்புக் கதை சிறந்த சான்றாகும்

❖ மன்னிப்பு

மன்னிப்பு

கே.ஆர். நாதன்

ஐந்து வருட காலத்தின் பின் இன்றுதான் என் பிறந்த வீட்டிற்கு வந்தேன். எங்கள் வீட்டில் என் தங்கையும், அவள் கணவனும் தவிர வேறுயாருமில்லை. அப்பாவும் அம்மாவும் இறந்து இப்போது எட்டு வருடங்களாகின்றன. இரவில் பிரயாணம் செய்த அலுப்பினால் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தேன். குழந்தைகள் முற்றத்தில் கூச்சலிட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். உறக்கம் வரவில்லை. குழந்தைகளின் விளையாட்டைக் கவனித்துக்கொண்டேன். தங்கையின் பிள்ளைகளுடன் வேறு யாரோ ஒரு பெண்குழந்தையும் விளையாடிக் கொண்டிருந்தது. சுமார் 3 வயதிருக்கும். மூக்கும் முழியுமாக நல்ல அழகாக இருந்தது. எழுந்து போய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தேன். மற்றக் குழந்தைகள் எல்லாரும் விழித்தார்கள். சாய்வுநாற்காலியில் படுத்துக் கொண்டு குழந்தையை நெஞ்சில் இருத்திக் கதை கேட்டுக் கொண்டிருந்தேன். குழந்தை ஒன்றும் சொல்லாமல் நான்கு பக்கமும் பார்த்து திரு.திருவென்று விழித்தது. அப்படியே அணைத்து முத்தமிட்டுக் கொண்டு “பெயர் என்ன?” என்று கேட்டேன்”

குழந்தை ஒன்றும் பேசவேயில்லை.

இரவு கொண்டுவந்த விசுக்கோத்து டின்னிலிருந்து இரண்டை எடுத்த குழந்தையின் கையில் கொடுத்தேன். ஒரு விசுக்கோத்தை கையில் வைத்துக் கொண்டு மற்றதை வாயில் கடித்துத் தின்றது. குஷி பிறந்துவிட்டது எம்பேர் சி- ன்- ந மணி என்று இழுத்துச் சொல்லிற்று: "உன் ஐயா பெயர்" "ஐயாத்தான்" "அம்மா பெயர்" "அம்மாத்தான்". மாம்பழ வாயைத் திறந்து அது பேசிய சொற்கள் மதுரமாக விழுந்தன. குழந்தையை அள்ளியள்ளி முத்தமிட்டேன். ஆனால் குழந்தையின் தாய் தந்தையைத் தெரியவில்லையே.

"தேநீர் ஆறிவிட்டது சாப்பிடுங்கோ" என்ற சத்தத்துடன் வந்த கமலா "ஓகோ! சின்ன மணியும் சிநேகம் போலிருக்கே!" என்றாள்.

"ஆமாம், பிள்ளை என்னுடன் சிநேகம்தான். ஆனால் அப்பா அம்மா வைத்தான் தெரியவில்லை?"

"தெரியவில்லையா அடுத்தவீட்டுக் காமாச்சியின் மகள்தான்" என்றாள்.

என் மனம் ஒருகணம் பதட்டமடைந்தது.

ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு மணியின் அப்பாவின் பேரென்ன என்றேன்.

சேதுராமனாம் பேர் தபாற்கந்தோரில் ஏதோ அறுபது ரூபாவில் "கிளாக்" வேலையாம் என்று சொல்லிக் கொண்டே போனாள். இதற்கிடையில் என் சகோதரி சரஸ்சு கூப்பிடவே எழுந்து சென்றுவிட்டாள்.

"காமாச்சியின் மகள்தான்" என்ற சொற்களின் மனதிலிலுள்ள பழைய எண்ணங் களைக் கிளறிவிட்டன. என் மனக் கண்முன் ஒன்றின்பின் ஒன்றாக்கத் தோன்றின.

காமாட்சி என் அடுத்த வீட்டுப் பெண் சிறுவயதாயிருக்கும் போது நாங்கள் இருவரும் எங்களூர் மிஷன் பாடசாலையில் தான் படித்து வந்தோம். வீடு திரும்பியதும் சாப்பிட்டுவிட்டு விளையாடுவோம். சோறு கறி ஆக்க வேண்டியது (உண்மையான சோறு கறியல்ல மண் ணில்தான்) காமாட்சியின் கடமை. உண்ண வேண்டியது என் கடமை. உண்ணும் பொழுது கறிக்கு உப்பில்லை, சோறு அவியவில்லை - இப்படிப் பேசுவேன் நான். உப்பு வாங்கக் காசு இல்லை - நெருப்புமூட்ட விறகில்லை என்பாள் அவள். அவள் என்னை தன் விழிகளால் பார்க்கும்போது அப்படியே விழுங்கிவிட வேண்டும் போலிருக்கும் எனக்கு.

கன்னத்தில் கிள்ளிப் போட்டு ஓடுவாள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு ஓட வேண்டியது தான். பூப்புடுங்கிச் சூடுவோம். தண்ணீர் அள்ள கொட்டி விளையாடுவோம். இப்படி எங்கள் அனேக விளையாட்டுக்கள் இவைதான் மாலை நேர பொழுதுபோக்கு. இரவில் இருவரும் சேர்ந்து படிப்போம், கணக்குகள் செய்வோம், பாட்டுப் பாடுவோம்.

காமாச்சிக்கு வயது 14 ஆகிவிட்டது, என்னைத் தேடுவதில்லை. தாயம் போடவும் வருவ தில்லை. அவளுக்கு வெட்கம் அதிகம். அவளுடைய முகத்தில் இப்போது சில மாறுதல்கள். இனிய பார்வை....

அமுதூறும் இதழ்கள்..... என் தங்கையுடன் பேசுவதற்காக வீட்டுக்கு வருவாள் அவள். என்னையும் கூப்புடுவாள் என்று காத்துக் கொண்டிருப்பேன். ஆனால் அவள் என்னுடன் பேசவேயில்லை. இவ்விஷயத்தில் நான் பின்னிற்கவில்லை. ஒரு நாள் சரசுவுடன் விளையாடிவிட்டு தன் வீட்டுக்குப் போவதற்காக நடைகூடத்திற்குள்ளாலே ஓடிவந்தாள். மணி 5 இருக்கும். ஒருவரும் இல்லாதபடியால் உடனே அவள் கைகளை எட்டிப்பிடித்து "காமு என்மேல் உனக்குக் கோபமோ? என்று கெஞ்சுவது போல் கேட்டேன்."

பதில் ஒன்றுமில்லை "உனக்கு நான் என்ன தீங்கு செய்து விட்டேன்" என்று கேட்டேன். அந்தக்குரலில் எவ்வளவு மென்மை.

"ஒரு கோபமும் இல்லை." என்று கனிவாகக் கூறினாள்."

"எனக்கும் ஒரு கோபமும் இல்லை" என்று கூறிவிட்டு கையைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டாள்.

சில தினங்கள் சென்றன காமுவைக் காணவில்லை. என் மனம் வெறிச்சென்று வறண்ட பாலவனம் போலிருந்தது. பாடசாலைக்குப் போவதும் படிப்பதும் வீட்டிற்கு வருவதுமாகவே இருந்தேன். ஒருநாள் காலை பாடசாலைக்கு புறப்பட்டாயிற்று நடை கூடத்திலுள்ள நிலைக்கண்ணாடியில் தலை சீவிக்கொண்டிருந்தேன் பின் பக்கமாக யாரோ வருவது தெரிந்தது. பாவாடை அணிந்திருந்தாள். "டொலக்" பளிச்சென்று கொண்டிருந்தன கண்ணாடியில் பார்க்கும் போது ஏதோ சித்திரைப் பாவை போலவே தோன்றினாள். நான் தலை வாருவதை விட்டு அச்சித்திரைப் பாவையில் மயங்கிக் கொண்டிருந்தேன். அருகில் வந்து "உன்னிலும் நான் என்ன அழகா?" என்றாள். அவள் பார்வை அழகில் நிலைக் கண்ணாடியில் நான் சொக்கியே விட்டேன். திரும்பி அவளை அப்படியே அணைத்து காற்றில் பறந்த கேசத்தை மற்றக்கையால் ஒதுக்கித் தலையைப் பிடித்துக்கொண்டு முத்தமிட்டேன் நேரம் போனதே தெரியவில்லை.

"காமு நீ என்னை கலியாணம் செய்வாய் தானே!" என்றேன்

"நான் உன்னையன்றி வேறு யாரைக் கட்டிக்கொள்வது." என்றாள்.

"சத்தியம் செய்" என்றேன் என் கையைக் கொடுத்தேன் என் கைமேல் தன் கையை வைத்தாள். அன்றைய தினம் பாடசாலைக்குப் போனது பற்றி ஞாபகமேயில்லை.

இரண்டு மாதங்கள் ஓடிச்சென்றன மேற்படிப்புக்காக வேறு இடம் செல்ல வேண்டியிருந்தது. வாசலில் வண்டி வந்து நின்றது. சாமான்கள் ஏற்றப்பட்டன காமாட்சியும் வாசலில் வந்து நின்றாள். நான் வண்டியில் ஏறியதும் "ஜிங் ஜிங் ஜிங் ஜிங்" என்று குலுக்கிக்கொண்டு வண்டி கிளம்பிற்று வண்டி மறையும் மட்டும் காமு பார்த்துக் கொண்டேயிருந்தாள். நானும் அவளை மறையும் மட்டும் இமைவெட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

தலைவிதியாரைத் தப்பவிட்டது. படிக்கப்போன இடத்திலே எனக்குக் கலியாணமும் நிறைவாகிற்று. என் சிற்றப்பாவின் எண்ணப்படி இப்போது நானும் கமலாவும் நன்றாகத்தான் வாழ்க்கையை நடத்தி வருகின்றோம்.

"கமலா! நீ எப்ப வந்தாய். நான் இப்படித்தானே அறிந்தேன் - வந்துவிட்டாய் என்று" இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தாள் காமாட்சி. கமலா ஒருமுறை ஊருக்குத் தனியே வந்திருந்தாள். அப்போது இருவரும் பழகிக்கொண்டார்களாக்கும். சின்னமணி என்னரு கிலிருந்து விசுக்கோத்து தின்ற காமாட்சி "மணி வா!" என்று கூப்பிட்டாள். அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். என்னை மன்னிக்கும்படி என் மனம் மன்றாடியது. அவள் பார்வை - முந்திய பார்வையல்ல-"பழைய ஞாபகங்களையெல்லாம் மறந்துவிடுங்கள்" என்று கெஞ்சு வன போலிருந்தன.

புழுக்கம் தாங்க முடியாமல் மணியை (சின்னமணி) தாயுடன் சேர்ந்து விட்டு மேசை யிலிருந்த அன்றைய தினசரி பத்திரிகையை எடுத்து விசிறிக் கொண்டே வெளியே நடந்து சென்றேன்!

●

சா.இ.கமலநாதன்

இலக்கிய கலாநிதி வித்துவான் சா. இ. கமலநாதன் மட்/புனித மிக்கேல் கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்களை மீள் கண்டுபிடிப்புச் செய்து வெளிக்கொணர்ந்தவர். இவரின் "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" என்ற நூல் கிழக்கு மாகாண வரலாற்றின் "திறவு கோல்" என கலாநிதி பாலசுகுமார் கூறுவார். இவரின் 'நினையாதது' சிறுகதை ஈழகேசரியில் வெளிவந்தது.

❖ நினையாதது

நினையாதது

சா. இ. கமலநாதன்

இதை எழுதுகின்ற இந்த நேரத்தில், நான் வயோதினாயிருக்கி றேன். என் வாலிபம் எப்போதோ கலைந்து விட்டது. இது என் வாழ்க்கை யின் அஸ்தமன காலம்.

"காதல்!" சீ! வேண்டாம். இச் சொல் என் காதிற்கு நாராசம் போன் றிருக்கிறது. என் வாழ்வைப் பாழாக்கிய அந்தக் "காதலை" நினைக்கும் போது இப்போதும் எனது உடல் நடுங்குகிறது.

மாலை நேரம். சூரியனின் கடைசிக் கதிரை இருள் மறைந்தது. தெருவோர வெளிச்சங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரகாசித்தன. என் மனம் எதையோ குறித்து ஏங்கிக்கொண்டிருந்தது. அந்த ஏக்கத்தில் என்றுமில்லாத ஓர் இனிமை தொனித்தது. எதையோ எதிர்பார்ப்பவன் போலவும் ஆச்சரியப்படுபவன் போலவும் இருந்தேன். மலரைச் சுற்றி வட்டமிடும் வண்டுபோல, என் மனம் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஆகாயக் கோட்டைகளும், பகற் கனவுகளும் என்னை வதை செய்தன. "அன்றலர்ந்த றோசா மலர்" என்று சொல்லுகிறார்களே, அது அவள் முகத்துக்கு ஈடாகுமா? என்று என் மனம் என்னையே கேட்டுக் கொண்டது.

அன்று அவள் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். என் முகத்தை எவ்வளவு ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவள் முகம் மலர்ந்து சிரித்தது. வெண்பற்கள் மின்னின. அன்றே அவள் உருவம் என் உள்ளத்திற் பொறிக்கப்பட்டு விட்டது. இருட்டுக்கட்டியபடியால் வீட்டுக்குத் திரும்பினேன்.

என் படிப்பு மேசையிலிருந்த "லாந்தர்" என்றுமில்லாதவாறு, கண்களை மூடி, விழித்தது; இது கூடவா என்னை இப்படிப் பயமுறுத்த வேண்டும்? என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தேன். எங்கும் அமைதி. "அம்மா அம்மா" என்று பல தடவை கூப்பிட்டேன். பதில் கிடைக்கவில்லை. வேலைக்கார மாரிமுத்துவிடம் "அம்மாவும் அப்பாவும் எங்கே?" என்று கேட்டேன்" அவர்கள் மாமா வீட்டிற்குப் போய்விட்டார்கள் என்று கூறினான்.

நான் மேசையில் அமர்ந்தேன். ரூஷிய எழுத்தாளரான விலாட்மீர் எழுதிய 'பள்ளிக் கூடக்' காதல் என்னும் நாவலில், கதாநாயகன் போடும் சபதம் என் உள்ளத்தைத் தட்டி எழுப் பியது.

"பூதகணங்கள் என்னை வெருட்டினாலும் அரச அதிகாரம் என்னைத் தடுத்தாலும் அத்லாந்திக் சமுத்திரத்திற்குள் உன்னை ஒளித்தாலும், உன்னைப் பின் தொடர்வேன். வாழைக்குருத்துப் போன்ற உன் தொடைகளைத் தட்டி, அதன் சப்தத்தைக் கேட்டு இன்பு றாமல் மரியேன்" இவ் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தேன். சற்று நேரத்தால் மாமா வீட்டிற்குச் சென்ற அப்பாவும் அம்மாவும் திரும்பி வந்தார்கள். அவர்களு டைய கையில் என் சாதகமிருந்தது. அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். என்றுமில்லாத சந்தோஷம் தாண்டவமாடியது. அப்பா அம்மாவுடன் ஏதோ குசுகுசுத்தார். "தம்பி! உனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது" என்றாள் அம்மா. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "உன் னுடைய மாமா உன்னுடன் மிகவும் பிரியமாயிருக்கிறார். உன்னை லண்டனுக்கு அனுப்பிப் படிப்பிக்கப் போகிறாராம்" என்றார் தந்தை.

"ஆனால் ஒன்று..."

"என்ன?"

"நீ சந்திராவை விவாகம் செய்ய வேண்டும்."

எதிர்பாராத இந்த வேண்டுகோள், என்னை நடுநடுங்கச் செய்தது. எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நானும் அவளும் ஒன்றாகத்தான் படித்தோம். ஆனால் அவள் என் நண்பன் ராஜேந்திராவைக் காதலித்திருந்தாள். அவள் அவனுக்கு எழுத்திய காதற் கடிதங்களைக் கூட என்னிடம் காட்டியிருக்கிறான். அவர்களது ஒப்பற்ற காதலுக்கு நான் ஓர் இடறு கட்டையாக இருக்க, விரும்பவில்லை. அதுதான் ஒருபுறமிருந்தாலும் என் மனதைக் கொள்ளை கொண்ட கமலாவதியைத் தவிர எவரையும் கண் நிமிர்ந்து பாரேன். எனச் சபதம் பூண்ட யான் இதற்கு எப்படி உடன்பட முடியும்?

ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு கதையை ஆரம்பித்தேன்;
சந்திராவை ராஜேந்திரா காதலிக்கிறானாம்.

ராஜேந்திராவா? என்ன அந்தப் பயலுக்கா உன் மாமா பெண் கொடுக்கப் போகிறார்?" என்றாள் அம்மா.

அவர் கொடுக்காவிட்டாலும் அவள் அவனைக் காதலிப்பது உண்மை.

“அந்தப்பயலை நாளைக்கே துரத்துகிறேன் பார். உன் மாமாவின் மகள் உனக்கே சொந்தம்” என்று பல்லை நெருமினார் தந்தை.

ஏதோ பார்க்கலாம் என்று சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்றேன்.

மறுநாள் அவசரம் அவசரமாக என் நண்பன் ராஜேந்திராவைக் காணச் சென்றேன். அவனுடைய முகத்தில் துக்கம் படர்ந்திருந்தது.

“ஏன் சந்திரா உன்னுடன் கோபித்துக் கொண்டாளா?” என்றேன்.

அவனுடைய முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் போலிருந்தது.

“நான்தான் விஷயத்தை எப்போதே அறிந்து விட்டேனே. எப்போது உனது அம்மான் மகளுக்கும் உனக்கும் கலியாண எழுத்து என்று ஏமாற்றத்துடன் கேட்டான்.

அடடா! இதற்காகவா இப்படித் துக்கப்படுகிறாய். இதை உன்னிடம் நேரே சொல்லவேண் டும். என்பதற்காகத்தான் வந்தேன். நான் உங்கள் காதலைத் தடை செய்ய விரும்பவில்லை. சந்திராவை விவாகம் செய்யும்படி என்னை வற்புறுத்துகிறார்கள். ஆனால் அவள் உன்னை மனமாரக் காதலிக்கிறாள். உங்கள் களங்கமற்ற காதல், நிறைவேறட்டும்! என்று சொல்லி பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தேன்.

ராஜேந்திராவின் முகம் மலர்ந்தது. நான் கதையை மீண்டும் ஆரம்பித்தேன்.

இவ்வுலகில் கமலாவதியைத் தவிர எவரையும் நான் கண்ணெடுத்துப் பார்க்கப் போவ தில்லை என்று சொல்லி முடிவதற்குள் ராஜேந்திரா இடை மறித்து,

“யார் நாம் அன்று வீதியில் கண்டவள் தானே!”

ஆம்! ஆம்!! அவளேதான்.

“நேற்று மாலையில் அவள் றிக்ஷோவில் போகும்போது”

என்ன நடந்தது, என்று துடிதுடித்துக் கேட்டேன்.

“பஸ் மோதி வைத்தியசாலையில் இருக்கிறாள்” என்றான். அவ்வளவு தான், ஐயோ! என்று கத்திக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினேன்.

அவள் தன் கடைசி நிமிடத்தில் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். நீண்ட கரு விழிகள் என்னை ஆவலுடன் பார்த்தாள். வாடி வதங்கிய அவளுடைய கரங்கள் மேலெ ழுந்தன். அதை என் கைகளால் பிடித்தேன். கண்கள் மூடின. அப்புறம் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. மறுநாள் கண் விழித்த போது நான் என் வீட்டிலிருந்தேன். பக்கத்தில் என் தாய் நின்றாள்.

கடவுள் மீது பழியைப் போட்டு விட்டு உருத்திராக்கம் அணிந்து ஊரை விட்டுக் கிளம்பி விட்டேன். கமலாவின் காதல் இப்போது கடவுளின் காதலாக மாறிவிட்டது!

ஈழகேசரி - 15.09.1946

கஜமுகன்

ஈழகேசரியில் இவருடைய 'நினைவுச் சுழல்' சிறுகதை இடம்பெற்றுள்ளது. அகத்தின் நுண்ணுணர்வுகளைத் தம் சிறுகதையில் சிறப்பாக வெளிப்படுத்துபவர் கஜமுகன். இவரின் இயற்பெயரை அறியமுடியவில்லை.

❖ நினைவுச் சுழல்

நினைவுச் சுழல்

கஜமுகன்

அகிலம்மா ஆற்று வெள்ளத்தைப் பார்த்துப் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தாள். ஒரு வருசத்துக்கு முன்னர் அதே தினத்தில் தான் அந்தக் கோர சம்பவம் நிகழ்ந்தது. ஆம், அவளது அருமை அத்தானைப் புது வெள்ளம் பலிகொண்டுவிட்டது. இளம் பருவம் முதல் அவளுக்கென்றே வளர்ந்து வந்த அத்தானைப் பொன்னி நதி தன்னகம் கொண்டதை அவளால் எப்படித் தாங்க முடியும்? "அகிலா, அகிலா?" என்ற அவனது குரல் சதா ஒலித்துக் கொண்டிருந்தது. இரவிலும் பகலிலும் அந்தக் குரல் இடைவிடாமல் அவளுக்குக் கேட்டது. எல்லளவோ முயன்றும் அத்தானை அவளால் மறக்கமுடியவில்லை. ஒரு வருசத்துக்கு முன் அவள் முகத்திலும் அகத்திலும் பொங்கி நிறைந்த மகிழ்ச்சிக்கும், இன்று அவள் ஒரே சோகச் சித்திரமாக விளங்குவதற்கும் எவ்வளவு வித்தியாசம்.

அகிலம்மா எவ்வளவோ யோசித்தாள். அந்த இடத்தை விட்டுப் போவதைத் தவிர வேறு வழி ஏதும் அவளுக்குப் புலப்படவில்லை. அத்தான் நினைவை மறப்பதற்கு இடம் மாற்றந்தான் சரியான பரிகாரம்

என்று அவன் முடிவுக்கு வந்தாள். அன்றே அதற்கு ஏற்பாடு செய்வதென்று எழுந்தாள். அகத் தான் உயிரை வாங்கிய மதகுச் சுழலை ஒருதடவை பார்த்துப் பெருமூச்சுவிட்டாள். கண்களில் நீர் ததும்ப அவ்விடத்தைவிட்டுத் தன் குடிசையை நோக்கி நடந்தாள்.

அகிலம்மா குடிசையை அடைந்தபோது விளக்கு வைத்தாகிவிட்டது. அவளுடைய பாட்டி தட்டித் தடவிக் கொண்டு ஏதோ செய்து கொண்டிருந்தாள். காலடி ஓசை கேட்கவே "இவ்வளவு நேரமும் எங்கு போயிருந்தாய்?" என்று கேட்டாள்.

"எங்கேயும் போகவில்லை. ஆற்றங்கரையிலே உட்கார்ந்து கொண்டிருந்தேன்" என்று சலிப்புடன் கூறினாள்.

"அவன்தான் பாவி போட்டான். நீ அங்கே போய்ப் போய் நிற்பதிலே என்னம்மா புண்ணியம்? இருட்டிலே அங்கெல்லாம் தனியாகப் போகாதே அம்மா"

அகிலம்மா பதில் கூறவில்லை.

சிறிதுநேரம் கழித்து அவள் பேச ஆரம்பித்தாள்.

"பாட்டி, என்னால் இங்கே இருக்க முடியாது. என் சித்தி வீட்டிலே போய்க் கொஞ்ச நாள் தங்கியிருந்தால் தான் என் மனம் அத்தானை மறக்கும். இரவு பகலாக அத்தான் ஞாபகம் என்னை அரித்தெடுக்குது. இரவெல்லாம் அத்தான் தான் என்னைக் கூப்பிடுவது போலவும், என்னோடு பேசுவது போலவும் இருக்கின்றது. இன்னும் கொஞ்ச நாள் இங்கேயிருந்தாற் பைத்தியம் பிடித்துவிடும். நான் போகட்டுமா?" என்று கேட்டாள்.

கிழவியும், அகிலாவின் போக்கைக் கண்டு கலங்கிப் போயிருந்தாளாகையால், அவள் கொஞ்சநாள் அந்த இடத்தை விட்டுச் செல்வது நல்லது என்றே அவளுக்குத் தோன்றியது.

"உன் யோசனைப்படியே செய்யம்மா. ஆனால் நான் தனியாக இருப்பதா?"

"நீயும் வா பாட்டி. குடிசையிலே யாரையாவது இருத்திவிடுவோம்" என்றாள்.

"ஐயோ வேண்டாம், தள்ளாத வயதிலே என்னால் எங்கேயும் வர முடியாதம்மா. நீ நாளைக்கே போ. நல்ல துணையாகப் பார்த்து அனுப்புகிறேன்" என்றாள் கிழவி.

6

மறுநாள் அகிலா பக்கத்துக் கிராமத்திலுள்ள தன் சித்தி வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

2

காவேரி நதி பாயும் கிராமங்களிங் பொன்னியூரும் ஒன்று. அதில் முத்துவேலுப்பிள்ளை சொற்ப நிலபுலனுடையவர். அகிலம்மா அவருடைய ஒரே அருமை மகள். காவேரி ஆற்றின் கரையோரம் சற்றுத் தள்ளி அவருடைய சிறு வீடு அமைந்திருந்தது. அது நல்லவீடாயினும் குடிசை என்றே அதைத் தன்னடக்கத்துடன் கருதி வந்தனர். பிள்ளையின் சகோதரியின் மகனும் அவர்கள் வீட்டிலேயே வளர்ந்து வந்தான். அவனையே அகிலம்மாவுக்குக் கட்டிக் கொடுத்து விடுவதென்று பிள்ளை தீர்மானித்திருந்தார். அதேபோல் அப்பையனும் அகிலாவும் குழந்தைப் பருவம் முதுல் வெகு இதயமாகப் பழகி வந்தார்கள்.

அகிலாவுக்கு அத்தானிடம் உயிர் "அத்தான்! அத்தான்!" என்று எப்போதும் அவனையே சுற்றி வளைய வந்து கொண்டிருப்பாள்.

அவர்கள் இருவரும் வளர்ந்து பருவமெய்தினார்கள். அதற்குள் பிள்ளை அவர்களும் அவரது மனைவியாரும் ஒருவர் பின் ஒருவராகப் பரகதியடைந்து விட்டனர். தாய் தந்தையை இழந்த அகிலம்மாவுக்கு அத்தான் ஒருவன்தான் பற்றுக்கோடாக இருந்தான். அவர்களுக்குத் துணையாக அக்கிழவி ஒருத்தி இருந்தாள்.

குழந்தைப் பருவத்து நேசம் இப்போது காதலாகப் பரிணமித்தது. தாய் தகப்பன் மறைந்த துக்கத்தில் விவாகத்தைப் பற்றி யோசனை ஏதுமில்லாமல் இருந்தார்கள். ஆனால் கிழவியோ கல்யாணத்தை விரைவுபடுத்தத் துடித்துக் கொண்டிருந்தாள். முத்துவேலுப்பிள்ளையின் சொற்ப ஆஸ்தியும் அகிலம்மாவைத்தான் போய்ச் சேருமென்றாலும், பையன் மனம் மாறி விட்டால் என்ன செய்வதென்று அவள் கவலைப்பட்டாள். தை பிறந்ததும் கலியாணத்தை முடித்துவிட அவள் தீர்மானித்தாள். அதை அகிலாவிடம் தெரிவித்தபோது அவள் அடைந்த ஆனந்தத்தைச் சொல்லி முடியாது. இத்தனை நாள் தனது தோழனாக இருந்த அத்தான், வாழ்க்கைத் துணைவனாகப் போகிறான் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒருவகை இன்பக் குதுகுதுப்பை உண்டாக்கியது.

கிழவியின் தீர்மானம் தெரிவிக்கப்பட்டு ஆனந்த சாகரத்தில் அவள் அமிழ்ந்து கிடக்கையில்தான் அந்தப் பேரிடி அவளைத் தாக்கி, அவள் வாழ்வை நிலைகுலைய வைத்தது.

பொன்னி ஆற்றிலே புது வெள்ளம் போனால் அது பொன்னியூருக்கே தனிச் சோபையைத் தரும்.

பொன்னியூர் இளமட்டங்களுக்கு ஒரே உற்சாகம்; நுங்கும் நுரையுமாக அடித்துப் புரண்டு போகும் ஆற்றின் வெள்ளத்தில் நீந்திக் கும்மாளமடிப்பதில் நீந்திக் கும்மாளமடிப்பதிற் சிறுவர்களும் சரி, இளைஞர்களும் சரி, ஒரே மாதிரியாக ஈடுபடுவார்கள். வருசாவருசம் பொன்னியூரின் விகிதத்துக்குக் காவேரி அம்மன் ஓரிரண்டு பேரைப் பலிகொண்டுவிடுவது வழக்கம். அந்த வருசம் அகிலம்மாவின் அத்தான் முறைபோலும்! அவன் எப்போதும் நீந்துவதில் வல்லவன். புதுவெள்ளம் வந்துவிட்டால் தன்னுடைய திறமைகளையெல்லாங் காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததாக எண்ணிப் பெருமகிழ்வு கொள்ளுவாள்.

அத்தானின் அற்புத நீச்சல் வல்லமையை ஒரே ஆச்சரியத்துடனும், பெருமையுடனும் கண்டு பூரித்துப் போவாள் அகிலா! அத்தானுக்கு நீந்துவதில் எவ்வளவு குதூகலமோ அதை விடப் பன்மடங்கு அவன் நீந்துவதைக் காணுவதில் அவளுக்கு மகிழ்ச்சி உண்டாகும்.

அன்றும் வழக்கம்போல் அத்தான் நீந்துவதைப் பார்க்கப் போயிருந்தாள். பாட்டி தெரிவித்த சமாச்சாரம் ஏற்கனவே மனதில் சந்தோசமூட்டியிருந்தது. இன்ப நினைவுகளுடன் நதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அத்தான் நடு ஆறுவரை நீந்திப்போய்விட்டான். திடீரென்று வெள்ளம் பெருக ஆரம்பித்தது.

அவன் கரை திரும்பலாமென்று நீரோட்ட வழியாகவே சிறிது தூரம் சென்றான். ஆனால் அந்தச் சிறிது தூரம் அவனை மதகடியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. மதகடியில் ஆழமும் சுழலும் அதிகம். பிரவாகம் வேறு அதிகரித்திருந்தது. அவனால் சமாளிக்க முடியவில்லை. அவனது தந்திரங்கள் அந்த சுழலிடம் பலிக்கவில்லை. ஒரேயடியாய்க் கொண்டு போய்ச் சொருகி விட்டது. அகிலா "ஐயோ" என்று அலறினாள்...

அத்தானை எண்ணி எண்ணி ஏங்கினாள். கனவிலும் நினைவிலும் அத்தான் அவளுடன் பேசுவது போன்றதொரு பிரமை. ஒரு வருசமாகியும் அவனை அவளால் மறக்க முடியவில்லை.

3

சித்தியின் வீட்டுப் புதுச் சூழ்நிலை அகிலாவின் வாழ்க்கையில் அதிகமாக மாறுதல் செய்யவில்லை. அத்தானின் நினைவுத் தொடர்பை அவளால் அறுக்கமுடியவில்லை. இரண்டு மூன்று மாதங்கள் சென்றன. பாட்டி அசௌக்கியமுற்றிருப்பதாகச் செய்தி கிடைத்தது. அவள் ஊர் திரும்பவேண்டியதாயிற்று.

ஊருக்குப் போனபோது தன் வீட்டிலே புதிதாக ஒரு இளைஞனைக் கண்டு திடுக்குற்றாள். அந்த இளைஞன் அகிலாவைக் கண்டதும் நெடுநாள் பழகியதுபோல் புன்முறுவல் செய்து வரவேற்றான். அதை அவள் சட்டை செய்யாமல் நேராகப் பாட்டியிடம் சென்றாள். பாட்டியின் நிலைமை கேவலமாகவேயிருந்தது.

"பாட்டி, இதுயார்? எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறார்" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"அந்தப் பையன் எனக்குத் தூரத்து உறவு. என்னைப் பார்க்க வந்திருக்கிறான். எனக்குப் பின் உன் விவகாரத்தைப் பார்க்க அவனைத்தான் கேட்டிருக்கிறேன். நல்ல குணமான பையன். நீ அவனைப் பற்றிப் பயப்படாதே" என்று கிழவி கூறினாள். அகிலாவுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இந்தப் புதிய உறவு நன்மைக்கோ தீமைக்கோ என்று அவள் கலங்கினாள்.

அகிலம்மாவின் பணிவிடைகளினால் கிழவியின் உடம்பு தேறிவிட்டது. அந்த இளைஞன் இராமலிங்கமும் ஊருக்குப் புறப்பட்டு விட்டான். அங்கு தங்கியிருந்த சொற்ப தினங்களில் அவன் அகிலாவின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டான் என்றே சொல்லவேண்டும். அகிலாவின் வாழ்விற் குடிகொண்டிருந்த துயரத்தைப் பாட்டி மூலம் அவன் அறிந்திருந்தான். அதைப் போக்கத் தன்னாலியன்ற உதவி புரியவும் அவன் தயாராக இருந்தான்.

ஆனால் அவளிடம் இதுபற்றி எப்படிக் கேட்பது? பாட்டியின் உடம்பு குணமாகிறவரை அவளுடைய பணிவிடைகளில் ஈடுபட்டிருந்ததால் அத்தானை அகில சற்று மறந்திருந்தாள். பாட்டி உடம்பு குணமாகி இராமலிங்கமும் ஊருக்குப் புறப்பட்டதால் அவளுக்கு அத்தான் நினைவு முழு வேகத்துடன் தோன்ற ஆரம்பித்து விட்டது. அவளுக்கு அந்த வீட்டில் இருக்கவே பயமாக இருந்தது. மறுபடியும் சித்தி வீட்டுக்குப் போகலாமா என்று யோசித்தாள்.

"பாட்டி, என்னால் இங்கு இருக்கமுடியாது போலத் தெரியுது. நான் சித்தி வீட்டுக்கே போகிறேன். இராமலிங்கத்தை உன்னுடன் இருக்கச் சொல்லேன்" என்றாள்.

"உனக்கென்றே வீடு வாசல் இருக்கும்போது ஊரார் வீட்டிலே போய்ச் சும்மா குந்துவது நல்லதல்ல அம்மா. நாளைக்கு நாலுபேர் பேச இடம் வைக்கப்படாது. நீ எத்தனை நாள் இப்படித் தனியாக இருக்கமுடியும்?"

"என்ன பாட்டி செய்யச் சொல்லுகின்றாய். அத்தான் ஆவி வந்து என்னை விரட்டு கின்றதே! நான் எப்படி இங்கே இருப்பது?" என்று கவலையுடன் கேட்டாள்.

"அகிலம்மா நான் சொல்கிறேன் கேள். ஆவி கீவி என்று நீ சொல்லுவது எல்லாம் நீ அவ னையே நினைத்துக் கொண்டு இருப்பதால்தான். அவனை மறந்துவிட்டால் எல்லாம் சரியாகி விடும். இராமலிங்கத்தை இங்கேயே இருக்கச் சொல்கிறேன். உனக்குப் பிடித்தால் அவனையே கலியாணம் செய்துகொள்"

கிழவியின் நோக்கம் அவளுக்கு விளங்கிவிட்டது. வேறு பரிகாரமும் தோன்றவில்லை. அத்தானை மறந்து முடியவில்லை. தனியாகவும் வாழ்க்கை நடத்த முடியாது. அகிலம் தத்தளித்தாள்.

இராமலிங்கத்தின் ஊர்ப்பிரயாணம் நின்றுபோய்விட்டது.

4

இராமலிங்கத்துக்கும் அத்தானுக்கும் எவ்வளவோ மாறுபாடுகள் உண்டு. இராமலிங் கம் பட்டணத்திற் படித்தவன். நவநாகரிகயுவன். அகிலாவின் மனதை எளிதில் கவரக்கூடிய சக்திகள் அவனிடமிருந்தன. கிழவி எணணியது போலவே இராமலிங்கம் ஊருக்குப் புறப்படு வதாகக் கூறிய போது அகிலா ஆச்சரியமடைந்தாள். அவன் எதற்காகப் போகிறான் என்று அவளுக்கு விளங்கவில்லை.

"ஊருக்குப் போய்விட்டு எப்போது திரும்புவீர்?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"எதற்காக வரவேண்டும்?" என்றான்.

"எதற்காகவா? பாட்டி ஒன்றுமே உங்களிடம் சொல்லவில்லையா?"

"இல்லையே..." என்றான் இழுத்தாற்போல்.

அகிலா மனதை ஏதோ சங்கடப்படுத்தியது. அவன் முன்நின்று அவளால் பேச முடிய வில்லை. பாட்டியிடம் ஓடினாள்.

"பாட்டி, இராமலிங்கம் ஊருக்குப் போகிறாராமே!" என்று பரபரப்புடன் கேட்டாள்.

"ஆமாம், அவன் இங்கே எத்தனை நாள் இருக்கமுடியும்? நீதான் அவனைக் கல்யா ணம் செய்ய இஷ்டப்படவில்லையே!"

"நான் அப்படிச் சொன்னேனா பாட்டி?" பாட்டி ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தால் அகிலாவின் முகம் குப்பென்று சிவந்தது. "அப்படியானால் ஏற்பாடு செய்யட்டுமா?" அகிலா சம்ம தத்துடன் தலையை ஆட்டினாள்.

இராமலிங்கத்தின் பிரயாணம் மறுபடியும் தடைப்பட்டது. ஆனாலும் பாட்டி உற்சாக மாகக் காணப்படவில்லை. கல்யாணத்துக்கான ஏற்பாடுகளிலும் அவள் முனையவில்லை. அகிலா பொறுமை இழந்தாள்.

பாட்டியைத் தூண்டித் துருவிக் கேட்டாள். இராமலிங்கம் கல்யாணத்துக்கு சம்மதிக்க வில்லை என்று தெரிந்தபோது அவளுக்கு ஒரே ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. "பின் எதற்காக அவர் நான் அத்தானை மறப்பதற்காக அவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டார்?" என்ற கேள்வி எழுந்தபோது அவள் சீற்றமடைந்து இராமலிங்கத்தைத் தேடிப் போனாள்.

அகிலாவின் முகபாவத்தைக் கண்டு இராமலிங்கம் சற்று வியப்படைந் தான்.

"என்ன அகிலம்மா?" என்று குழைவுடன் கேட்டான்.

"நீங்கள் உங்கள் மனதிலே என்னதான் வைத்திருக்கிறீர்களோ?" என்றாள் ஆத்திரத் துடன்.

"யாரைப் பற்றி?"

"என்னைப் பற்றித்தான்!"

"நல்லாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்"

"எவ்வளவு நாள் ஆகும் உங்க மனசு என் பக்கம் திரும்ப..."

"எப்போதும் உன்னிடந்தானே என் மனசு இருக்கு..."

"அப்படியானால் ஏன் கல்யாணம் செய்ய மறுக்கிறீர்?"

"கல்யாணத்துக்கும் நான் உன்னை நினைப்பதற்கும் என்ன சம்பந்தம் அகிலா?"

"சம்பந்தமில்லையா?"

அப்படியானால் நீங்கள் இவ்வளவு நாளும் என்னிடம் காட்டிவந்த அன்பெல்லாம் வெறும் வேசந்தானா? என் அத்தான் நினைவை மறக்கடிக்க அவ்வளவு பாடுபட்டீர்களே? எதுக்காக?"

"உன்னுடைய மனப்பிராந்தியைப் போக்கி நீ சந்தோசமாய் இருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடுதான் நான் எல்லாம் செய்தேன். உன்னைக் கல்யாணம் செய்யும் யோசனை எதுவும் எனக்கு இருந்ததில்லை. நான் இவ்வளவு நாள் இங்கே இருந்ததே தப்புத் தான்!"

"நீங்க சொல்வது நியாயமல்லவே! என் அத்தான் நினைவை மறக்கச் செய்ததுமன்றி மறுபடியும் என் மனசை அலையச் செய்துவிட்டீர்கள். உங்களை நம்பித்தானே. உங்களை நினைச்சுத்தானே. குழந்தை முதல் உயிராயிருந்த அத்தானை மறந்தேன். இரவு பகலாக "அத்தான்" அத்தான்" என்று துடித்துக் கொண்டிருந்த மனசை மாற்றிவிட்டு அவர் சிக்குண்டது போல என்னையும் நட்டாற்றில் விட்டுப்போகிறீர்களே" என்று ஆவேசம் வந்தவள்போல் காவேரியை நோக்கி ஓட ஆரம்பித்தாள்.

இராமலிங்கம் துணுக்குற்றான். ஒரு நொடிப் பொழுதில் அகிலாவின் உள்ளம் அவனுக்கு விளங்கிவிட்டது. அத்தானை மறந்து தனக்கு இடமளித்து விட்டாள். அதை உணராமல் நடந்து கொண்டது பெரும் தவறு என்று அவனுக்கு அப்போதுதான் பட்டது. தான் அகிலாவின் மனசு கிலேசத்தைப் போக்கப் புரிந்த உதவி பெரியதல்ல. அவள் அத்தானை மறந்து தன்னை ஏற்றுக் கொள்ளத் துணிந்தது பெருந் தியாகமெனப்பட்டது. எட்டி ஓடிப்போய் அகிலாவின் கரத்தைப் பற்றினான்.

ஈழகேசரி
09.07.1950

ந.சண்முகரெத்தினம்

ஈழகேசரி சிறுகதையாசிரியர்களுள் ஒருவரான ந. சண்முகரெத்தினம் 1940 களில் இலக்கிய உலகுக்கு அடியெடுத்து வைத்தவர். மரபுவழிப்பட்ட கதை சொல்லியான ந. சண்முகரெத்தினத்தின் சிறுகதைகளில் அகவுணர்வே பிரதான இடம் வகிக்கின்றது.

❖ வசந்த விஜயம்

வசந்த விஜயம்

ந. சண்முகரெத்தினம்

மாலை நேரம். வசந்தன் வீட்டு முற்றத்தில் கௌரி ஊஞ்சலாடுகிறாள்: நிலத்திற் காலையூன்றி விசையாயெழுந்தாடுகிறாள். அவள் அணிந்திருக்கும் சிவந்த பட்டாடை பொங்கிப் பொங்கிப்படிகிறது : நெற்றியில் அரும்பும் குறுகிய பார்வை முத்துக்கோலை கும்பும் குறுவியபார்வை முத்துக்கோவை போற் புருவத்தை வளைந்திருக்கிறது. பின்பு காற்றிலடியுண்டு சிதைகிறது.

கௌரியின் தோழிப்பெண்கள் அயலில் உட்கார்ந்து கொண்டு பாட்டுகளைப் பாடிக் களிப்புறுகின்றனர்.பக்கத்தில் சிறுவன், வசந்தனின் தம்பி கௌரியக்கா என்னைத் தானே அடுத்ததாக என்று துணிவுடன் கைகளைப் பிற்புறத்தில் கட்டிக்கொண்டு கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறான். தூரத்திலுள்ள திண்ணையில் கௌரியின் தாயாரும் வசந்தனின் தாயாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கௌரியின் தாயார் பத்து வயது கூட இல்லா பச்சைப்பசேலென்றிருக்கும் தன் குழந்தை ஊஞ்சலாடுவதை இடையிடையே பார்த்து உள்ளூர மகிழ்வாள்.

வீதிப் புறத்தே இருக்கும் கதவு திறபட்டது. வசந்தன் கையில் சில தாமரை மலர்களுடன் உள்ளே வந்தான். கௌரி ஊஞ்சலை விட்டுக் குதித்தோடி அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அண்ணா பூ அண்ணா பூ என்று குளறினாள் "உனக்கல்லாது வேறு யாருக்கடி கொண்டு வந்தேன் இப்பூக்களை" என்று சொல்லி ஒரு பூவை அவள் முடியில் சூடி மற்றவைகளை அவள் கையில் கொடுத்து அவளை தூக்கி ஒரு முத்தமிட்டு விட்டு தன் தாயாரிடம் சென்றான் வசந்தன்.

வருடங்கள் ஓடி மறைந்தன. வசந்தன் தகப்பனார் விருப்பப்படி இருநூறு மைலுக்கு அப்பால் தலைப்பட்டனத்தில் ஸ்தாபித்திருக்கும் சர்வகலாசாலையில் உயர்தரக்கல்வி பயின்று கொண்டிருக்கிறான். இங்கு கௌரி பராயமடைந்த மங்கையாய்ச் சந்தோசமாய் இருக்கிறாள் ஆனால் ஓய்வு நேரங்களில் அவளுக்குப் பழைய ஞாபகங்கள் வருகின்றன. வசந்தனும் தானும் சிறுதேர் கட்டி விளையாடியதும், அவன் தன்னை ஊஞ்சலில் வைத்து ஆட்டியதும், அவனுடன் கூட பாடசாலைக்குச் சென்றதும். இவையெல்லாம் அவள் மனதில் பச்சையாய் தோன்றும். உடனே வசந்தனின் பிரிவாற்றாமையினால் அவன் மனம் வெயிலில் போட்ட மலர் போல வெதும்பும்.

அருமை அன்பை வளர்க்கும் என்ற பிரகாரம். வசந்தனுக்கும் கௌரிக்கும் ஒருவர் மேல் ஒருவர் வைத்த பாசம் அவர்களிடையே உள்ள தூரத்தினால் பூரித்து வளரத் தொடங்கியது.

வருசா வருசம் வரும் கோடை விடுமுறை வந்ததும் வசந்தன் தன் வீடு போய்ச்சேர்ந் தான். அவன் வீட்டுக்கு வந்த அன்று காலை - சுமார் ஏழு மணி இருக்கும், கௌரி தலை வாயிலிலிருந்து மாலை தொடுத்துக்கொண்டிருந்தாள் இவ்வண்ணம் கௌரி இருந்து வசந்த னையே நினைந்து "வேலவரே உனைத் தேடி ஒரு மடந்தை" என்று பாடிக்கொண்டிருக்கை யில் வசந்தன் தான் "எப்போ காண்பனோ எப்போ காண்பேனா!" என்று அலறிக்கொண்டிருந்த கௌரியையும் அவளது தாய் தந்தையரையும் பார்க்கும் பொருட்டு அவ்விடம் வந்தான். அவன் வருகையைக் கண்ட கௌரியின் தாயார் "வாடா கண்ணே! வசந்தா எப்படா வந்தாய்" என்றழைத்தார். இவ்வகை வரவேற்பைக்கேட்ட கௌரி மாலையில் ஊக்கமாய் இருந்ததை விட்டு வசந்தனைக் கண்டதும் எழுந்து "இருங்கள் அண்ணா இருங்கள்" என்று ஓர் நாற் காலியைத் தூக்கி வைத்தாள். தாயார் "அண்ணாவுக்கு காப்பி தயாரி" என்று அன்புடன் சொல லுதலும் கௌரி துள்ளிக் கொண்டு சமையலறைக்குச் சென்றாள். காப்பி தயாரிக்கும் பொழுதெல்லாம் வசந்தனுடைய மேனியின் பொன்னிறமும் மலர்ந்த முகமும் அன்பே உருக் கொண்டார் போல அன்பேயுருக்கொண்டாற் போல விளங்குமவனுடம்பும் இவையெல்லாம் அவளெண்ணத்திற்கு வந்தன. அன்பு மிகுந்து விட்டது. காதலரும்பத் தொடங்கியது. காப்பியை விரைவிற் கொண்டுபோய்த் தாயாரிடம் கொடுத்துவிட்டு வெட்கத்தினாற் தலை யைக் குனிந்து கொண்டு, கைவிரல்கள் ஓர் செவ்வந்தி மலரை ஆலிங்கனம் செய்யக் கதவுநிலையுடன் ஒதுங்கி நின்றாள்.

கௌரியின் தாயாரும் வசந்தனும் பல கதைகளையும் பேசிக் கொண்டிருக்கும் போதெல் லாம் வசந்தன் இடையிடையே கௌரியையும் அவதானித்துக் கொண்டான். கௌரியின் லாவண்ய ரூபத்தை ஏற இறங்கப் பார்ப்பான். பார்ப்பவரெவரையும் வருத்தும் மான்விழி

போன்ற கொடிய கண்களும், மின்புரையிடையும், தங்கக் கம்பிபோல் வளையும் குரலும் அவள் பெயருக்கொப்ப வெண்மை மிகுந்த பசியநிறமுள்ள அவள் மேனியும் இவையெல்லாம் அவனால் சகிக்க முடியவில்லை. சுவாலையாய்க் கண்முன் பொங்கி நிற்கும் அவளிளமை அவன் கண்களைக் கூசச்செய்தன.

வசந்தன் எழுந்து "எனக்கு கொஞ்சம் வேலையிருக்கிறது. மாமி, பிறகு வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டு கௌரியை நோக்கி "கௌரி வரட்டுமா" என்றான் "போய் வாருங்கள் அண்ணா ஆனால் இதர நேரங்களில் அடிக்கடி எங்களையும் கவனிக்க வேண்டும்" என்று தயவாகச் சொன்னாள்.

◆◆◆

வசந்தன் தன் வீட்டு முற்றத்திலிருந்து யோசிக்கும் வண்ணமாயிருக்கிறான். மடியிலே தாகூரின் நூலொன்று கிடக்கிறது. அவன் புலனெல்லாம் எங்கேயோ பறந்து திரிந்தது.

"பிரமா கொடிய தொழிலாளி தான். பங்கையாசனத்திலிருந்து எவ்வளவு அற்புதமான நகாசு வேலைகளை அவன் தன் மலர்க்கையாற் செய்கிறான்! அவன் இந்த யவ்வனமிகுந்த கௌரியை எப்படிப்படைத்தான்? ஏன் படைத்தான் என்னை இம்சிப்பதற்குப் போலும் அந்தப் பாதகன் இப்பெண்ணரசியைச் சிருட்டித்தான்".

இப்படி மனந்துடிக்கும் வசந்தன் முன்னாற் துலங்கும் பூஞ்செடிகளைப் பார்த்தான். ஒரு ரோஜா மலர் அவன் கண்களுக்குத் தென்பட்டது. அதையவனாற் பார்க்க முடியவில்லை. ஏன்? காதலர்களுக்குப் பூக்களைக் கண்டாற் பயித்தியம்தான், எனிலும் வசந்தனுக்கு ஓர் உற் சாகம் ஏற்பட்டது. கௌரியின் முகத்தை அப்பூவின் முகத்திற் கண்டுவிடலாமென்று தைரியம் அவனுக்கு வந்தது. பூவைக் கவினித்தான். உற்று நோக்கினான். அவனை நோக்கினாற் போலிருந்த மலர் காற்றுகாடியதும் அவனுக்கு அதுவே பயம் கொடுத்தாற் போலிருந்தது.

"பயப்படாதே, பயப்படாதே" என்ற உறுதியை அம்மலர் அபிநயித்துக் காட்டிற்றோ ?

சந்தோசத்தினாலவன் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. கௌரியின் மனமும் நிம்மதி யில்லை. "அண்ணாவுக்கு நான் அவர் மீது வைத்திருக்கும் காதலைப்பற்றித் தெரியு...? தெரி யாது, அதை எப்படி அவரிடம் தெரிவிப்பது ? இப்படியெல்லாமவள் மனம் அலைத்துக் கொண் டிருக்கும். அவளுக்குத் தோழிப்பெண்களோடு கூடப் பிரியமேயில்லை. வேடிக்கைகள் பார்ப்ப தென்றாற் கசப்புத்தான். வெகு கெம்மாக உடுத்துக் கொள்ளவோ நடந்துகொள்ளவோ அவள் மனம் இடங்கொடுக்கவில்லை. தனிவேளைகளில் நந்தவனத்திற் சௌந்தரிய காட்சிகளைப் பார்த்தின்புறுவாள் அல்லது காதல் நூல்களைப் படிப்பாள்.

நாட்கள் பதினைந்து கழிந்தன. ஒருநாள் மாலை நேரத்தில் அயல்வீட்டுப் பாட்டி யொருத்தி கௌரியின் தாயாருடன் வெளித் திண்ணையில் பேசிக்கொண்டிருந்தாள். ஐயோ பாவம் ! நாலு நாட்களுக்கு முன்னர் ஊரிலுள்ள கல்லூரியொன்றில் அதன் பொன்விழா நடக் கும் போது வசந்தன், தற்காலப் போலி நாகரீகத்துக்குப், தன்னுடன் சர்வகலாசாலையிற் கல்வி பயிலும் ஓர் பெண்மணியுடன் கூடிக்கொண்டு அவ்விழாவிற் பங்கு பற்றினான். அவனது இந்நடத்தையை நாட்டுப் பெண்கள் பலவாறாக மொழி பெயர்த்தனர்.

“வசந்தன்” என்னும் சத்தத்தைக் கேட்டதும், கௌரி கையிலிருந்த வேலையை விட்டு விட்டு யன்னலண்டை சென்று வெளியே பார்த்தாள். அந்தப்பெட்டையோடு கூடித்திரிகிறா னாம். அத்தான் அவளைத்தான் கல்யாணம் செய்யப்போறானென்று ஊர்க் கதைக்குது தங்கச்சி என்று பாட்டி சொல்லிக் கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது.

கௌரியின் முகம் ஓடிக் குளிர்ந்த மேனி கருகியது. கூந்தல் கலைய கண்களில் நீர் ததும்ப, தளர்ந்த நடையுடன் உட்சென்றாள். அம்பிகையின் பாதங்களில் அடியற்ற மரம் போல் வீழ்ந்தாள். உடல் பதறியது. மனம் அலறியது, உதடுகள் துடித்தன. “தாயே! ஆருமற்ற பாவியாய் அந்தரித்தேன! அவர் என்னைக் கொன்று விட்டார் போலும்! இல்லை! இல்லை!.... என் காதலை அவர் எப்படியறிவார்? தேவி !நீயன்றி எனக்கு வேறு யார் இந்நேரத்தில் துணை புரிவார் ? நீயாவது போய் என் காதலை அவருக்கு உரைக்கக் கூடாதா ? தயாபரி, நான் இனி என் செய்வேன் ! என் செய்வேன் !” என்று புலம்பிக்கொண்டு சோர்ந்து மயங்கினாள். அவளி ருதயத்தைத் துக்கக்கடல் சூழந்து விட்டது. இருளும் உலகைத் தழுவியது.

அன்று முதல் கௌரியின் நடவடிக்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. தேவி பூசை யிலேயே அதிக நேரம் செலவழிப்பாள். உணவையும் சுருக்கிக் கொண்டாள், ஒரு பொழுது தான் உண்பாள். அவள் உடம்பும் வாடி மெலிந்தது. தவிர, வசந்தன் வீட்டிற்கு வந்தால் அவள் வெளிப்புறம் போவதேயில்லை. அவனைப் பார்ப்பதுமில்லை. ஏன்? அவன் மீது அவளுக்குக் கோபமல்ல, அவனைப் பார்க்க அவளுக்குச் சகிக்கமுடியவில்லை. வசந்தன் இவையெல்லா வற்றையும் கவனித்தான். மனங் களைத்தான்.

◆◆◆

நள்ளிரவு எங்கும் கருமுகில்கள் மேகத்தை மறைக்கின்றன. சந்திரன் ஆகாயத்தில் இருக்கிறான் என்பதே சந்தேகம். இருள்: எங்கும் காரிருள். தூரத்திலிருக்கும் காளிகோயில் மணி விளக்கு மங்கி மங்கி எரிகிறது. அதோ அந்த ஆலமரத்தின் மீதிருந்து ஒரு கோட்டான் பயங்கரமாகக் கத்துகிறது. உடனே நிறுத்திவிடுகிறது. மீண்டும் நிசப்தம். வசந்தனுக்குப் பயங்கரமான எண்ணங்களெல்லாம் மனதிலெழுகின்றன. நித்திரையில்லாமற் படுக்கையிற் புரளுகிறான். எழுந்து உட்காருகிறான். அறையில் அங்குமிங்கும் நடக்கிறான். “கௌரி எனை மறந்தனையோ? நான் இனியுயிர் வாழேன்! அவளை நான் எப்படிக் குற்றம் சொல்வது ? அவளை நான் காதலியாகப் பாவித்து நடத்தினேனோ ? இல்லை ! அவளுக்கு என் மனநிலை எப்படித் தெரியும் ?..... பெருவிரலைக் கடித்துக் கொண்டு யோசிக்கிறான். மனதில் ஓர் வெளிச் சம் தோன்றியது. ஆம் ஆணித்தரமாக நிச்சயித்துக் கொண்டான்.

வைகறையாயது. குயில்கள் பாடின. கோழிகள் கூவின. இருள் கலைந்து அஸ்தமன சந்திரனும் முகில்கள் நீங்கிக் காலை வீசினான். எதுவும் புத்துயிர் பெறுமாப்போலிருந்தது. கௌரி தலைவாயிலிலிருந்து சங்கீதப் பாடல்களை அப்பியாசப்படுத்துகிறாள். வீணையைத் தடவிக் காம்போதி இராகத்தை ஆலாபனம் செய்கிறாள். “கல்லையும் உருகச் செய்யும் இராக

மல்லவாவிது? என்று அவள் மனம் நினைக்கிறது. “நீ வசந்தன் மனத்தையுருக்க வல் லாயோ வென்று சொல்லுகிறது பேசாதே ! அது உண்மையாக வசந்தன் மனதைக் கவருகிறது.

“கௌரி!” என்ற சத்தம் கேட்டதும் அவள் எழுந்தாள். கண்களினின்றும் நீர் தாரை தாரை யாகப் பெருகின. வசந்தன் வந்துவிட்டான். “கொடும் சுரம்போன்று உலர்ந்திருக்கும் என் நெஞ் சத்தினிடையே உன் நினைவு ஒன்றன்றோ தனியரு விதந்த தண் மலர்ச் சோலையாயிருக் கிறது ! என் மனமாகிய பாற்கடலிலெழுந்த அமுத கலசமே ! என்னை ஏன் வெறுத்தாய் ? என்று புனைந்துரைத்தலும், கௌரி தன்னை மறந்து, அவன் கைகளுக்கிடையே வீழ்ந்தாள். அவளை மார்போடணைத்தான் வசந்தன்.

ஈழுகேசரி
30. 03. 1941

திரு.பொ. சிவராமலிங்கம்

திரு.பொ. சிவராமலிங்கம் ஈழகேசரியில் 'ஆயிரம் மோதகம்' என்ற சிறு கதையை எழுதியவர். மரபுவழி கதை சொல்லியான இவர் சமய நம்பிக்கைகள், தமிழ்ப் பண்பாடுகளை இணைத்து அங்கதமாக கதை சொல்வதில் வல்லவர்.

❖ ஆயிரம் மோதகம்

ஆயிரம் மோதகம்

திரு. பொ. சிவராமலிங்கம்

அன்று பௌர்ணமி மாத தோழமை முழுமதி எங்கும் பாலா பிஷேகம் செய்தது போல வெண்மை வீசியது.

நிர்மலமான அந்திவெளியில் மங்கை நல்லாளொருத்தி தெருக் கோடியிலிருந்த ஆஸ்மாத்தடிக்கு வந்து சேர்ந்தாள். மெல்லென வீசிய மந்த மாருதத்தினால் அவ்மரக்கிளைகள் அசைந்தமை அவனை வா வா என வரவழைத்தது போன்றிருந்தது. எனினும் எங்கும் நிசப்தம்.

அம்மரத்தடியிலிருந்து விக்கிரகத்தை மிகுந்த பிரயாசத்துடன் அப்பெண் நிமிர்த்தி வைத்தாள் பின் அதை இறுகத் தழுவியபடியே விம்மி விம்மி அழலானாள் அவ்விம்மலின் ஒலி அலைகள் இரவின் நிசப்தத்தை கலைத்துக் கொண்டு நெடுதூரம் சென்றன.

அப்பெண் யார் அர்த்த ராத்திரியில் அவன் அங்கே வருவானேன் அவன் தழுவிய விக்கிரகம் யாது? அவள் விம்மலின் அர்த்தமென்ன?

2

அது ஒரு சிறு கிராமம். அங்கே வாழ்வோர்களுள் அனேகர் வேளாண்மைத் தொழில் புரியும் விழுமியோர் நலவாழ்க்கை முறை

கள் வருவதன் முன் அனேகமாக எல்லோரும் பெருவாழ்வு வாழ்ந்தனர் என்றே சொல்ல வேண்டும் இப்பொழுது சில குடும்பங்களைத் தவிர மற்றைய குடும்பத்தினர் எல்லோரும் கையடித்தே உண்ணல் வேண்டும்.

கந்தசாமிப் பிள்ளையின் குடும்பம் அதிக செல்வமானதுமல்ல ஏழ்மையானதுமல்ல வயல், தோட்ட நிலங்கள் போதிய அளவிற்கு இருந்தன. அவருடைய குடும்பமும் பெரியதன்று அவர் மனைவி மகள் சரஸ்வதி ஆக இருவர்.

மிகுந்த நல்லகுண சம்பத்துடைய குடிகொண்டிருந்தது அது மதுபானம் அருந்தலே மரவரி வந்ததன் பின் மரியாதையாக வீட்டிலிருந்து குடித்தனம் என்று தோன்றிய பின்பே அப் பழக்கத்தில் ஈடுபட்டார். குடி விசயத்தில் மிக மட்டாகவே இருப்பார். மதுபானத்தினால் எத்தனையோ குடும்பங்கள் சீர்குலைந்து போயினவென்றாலும் அவருடைய குடும்பத்திற்கு ஒருவித விபரீதமும் நேரிடவில்லை.

அவருடைய மகள் சரஸ்வதி மணப்பருவத்தை அடைந்து விட்டாள். அக்கிராமத்திலுள்ள அனேக வாலிபர்கள் கனா உலகில் வாழ்ந்தார்கள். ஏன் வாலிபர்கள் மட்டுந்தானா ? முன் இரு தாரங்களை இழந்து விட்ட சந்திரசேகரத்திற்குக் கூட இரவில் சரியான தூக்கம்வருவதில்லை. அநேக வைத்தியர்களை கலந்தாலோசித்ததில் அவரிற்கு நித்திரை வருவதற்கு தகுந்த மருந்து விவாகமே எனக் சொன்னார்கள் எனவே அவரும் சரஸ்வதியின் மீது தம் திருஸ்டியைச் செலுத்தினார்.

சந்திர சேகரத்திற்கு நிறைந்த செல்வம்; நல்ல குடும்பத்திற்கு பிறந்தவர். இடையிடையே தோன்றிய இரண்டொரு நரையைத் தைலம் பூசிக் கறுப்பாக்கிக் கொண்டார்; அத்துடன் உத்தியோகத்தர்; மாதச் சம்பளம் வந்து கொண்டிருந்தது. எனவே அவர் தண்ணீர்சாமி தம் பையனை அனுப்பி கந்தசாமிப்பிள்ளையை தம் எண்ணத்திற்கு ஒப்பச் செய்தார். இவருக்கு தனத்திரகாரம் குற்றம் பொருந்தியிருந்தால் அதற்குப் பாவம் சரஸ்வதியா பலி; விவாக முகூர்த்த தினத்திற்கு ஐந்து தினங்கள் இருந்தன.

அந்த விக்கிரகம் எத்தனை வருட காலமாக அவ்வருட மரநிழவில் கிடக்கிறதோ யார் அறிவார் அது ஊர் பலசக்தி உகந்தவளும் விக்கின விநாயகருடைய விக்கிரகம் அதன் அங் கங்கள் சில சிதைவுற்றிருந்தன. கிராமக் குழந்தைகள் பூவரசு அலரி எருக்கலை முதலியவற்றின் பூக்களைச் சூட்டி உற்சவம் நடத்துவதைத் தவிர வேறு பூசனை உற்சவம் முதலியன நடந்தனவென யாரும் அறியார்.

மற்றைய குழந்தைகளைப்போலவே சரஸ்வதியும் அவ்விக்கிரகத்தைத் தன் இளமைப்பருவத்தில் விளையாட்டுச் சாமானாகக் கருதினாள். தன் சிற்றாடையில் நனைத்த நீரைக்கொண்டு அதற்குத் திருமஞ்சனமும் ஆட்டியிருக்கிறாள். அவையெல்லாம் பாலிய விளையாட்டுக்கள் சுத்தமான குழந்தை உள்ளத்தின் செயல்கள்.

அவளுடைய விளையாட்டுத் தோழன் பிரமானந்தனம் வேறு பல சிறுவர்களுடன் விளையாடியிருக்கிறாள். எனினும் அவனைப்போல் அவள் உள்ளத்தைக் கவர்ந்தாள் வேறொருவருமில்லை. அவன் அவளின் மாமி மகன் என்பதல்ல அவன் பிரேமைக்குக் காரணம் அவனும் அவளைத் தன் கண்ணினுள் மணிபோல நேசித்து வந்தான். அவள்

விளையாட்டில் தோற்றுவிட்டால் தான் தோற்றுவிட்டதிலும் பார்க்கக் கூடுதலாக மனங்கவல் வான். பிறக்கும்பொழுதே அவர்களிருவர் உள்ளத்தையும் இறைவன்பிணைத்திருந்தான் போலும்.

சந்திரசேகரருக்கும் தனக்கும் விவாகம் நடக்கப்போகிறதென்பதை அறிந்த அன்றிரவே நாம் முதலிற் கூறியபடி ஆலமரத்தின் அடியிற் கிடந்த விக்கிரகத்தைத் தழுவிச் சரஸ்வதி அழுதாள். "ஆ! கடவுளே யான் எவ்வித பாவமும் செய்தறியேனே! நான் ஒருவருக்கும் என் சிந்தனையினாலும் தீங்கு செய்ய நினைத்ததில்லையே! என் அப்பனே என்னால் இக்கொடிய தண்டனையைச் சகிக்க முடியுமா? என்னை இவ்விதம் சோதனை செய்தல் முறையா? உன்னிடம் சீவன் இல்லையா? சக்தியில்லையா? முறம்போன்ற செவிகளையுடைய உனக் குச் செவிப்புலனும் அற்றுப் போய்விட்டதா?. இல்லாவிடில் எனது அரற்றல் உன் செவியில் விழுந்திராதா? என்னை இத்துன்பத்தினின்று மீட்டு எனக்கு இன்பகரமான வாழ்வைத் தரமாட்டாயா...?" இவ்வாறு அரற்றியபடியே அவ்விடத்தில் எவ்வளவு நேரம் இருந்தாள் என்பது அவளுக்குத் தெரியாது. பக்ஷி சாலங்களின் சப்தங்கேட்டுத் திடுக்கிட்டுப் பார்த்தாள். கீழ்வானத்தில் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். இந்த விவாதம் தடைப்பட்டு எனக்கும் என் நேசதுரை பிரமானத்தருக்கும் விவாகம் நடந்தேறுமேயானால் உனக்கு ஆயிரம் மோதகம் அவித்துப் படைப்பேன். இவ்விதமாக முணுமுணுத்துக் கொண்டே அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

அந்த வருடம் கோடை வெயில் சகிக்கக் கூடியதாயில்லை. அநேகமாகக் கிணறு குளங் கள் யாவும் வரண்டு விட்டன. வெயில் உக்கிரத்துடன் கிராமத்தில் நெருப்புச் சுரம் பரவுவது சகஜந்தானே.

சந்திரசேகரிக்கும் கலியாண ஆயத்தங்கள் செய்வதனால் மிகுந்த அலைச்சல். ஆயாசம் தேகத்தில் மெதுவாகக் காணப்பட்ட சூடு தலைவலி அலைச்சலால் ஏற்பட்டதென்று பேசாதிருந்துவிட்டார். மறுநாள் சுரம் 105 டிக்கிரிக்கு ஏறிவிட்டது. அதிகம் ஏன் சரஸ்வதியின் விண்ணப்பத்தின் முதற் பாகம் நிறைவேறிவிட்டது. ஒரு சமயத்தில் இரு ஆத்மாக்கள் சாந்தியடைந்திருந்தன.

சரஸ்வதியின் விவாகம் தவணை போடப்பட்டது. கணேசர் அவளைத் துன்பத்தினின் றும் மீட்டுவிட்டார். இனி அவளிற்கும் பிரமானந்திற்கும் மணப்புரிவித்து இன்பவாழ்வை அளிப்பதுதானா பிரமாதம்? ஒரு வேளை இன்னும் சந்திரசேகரர்கள் தோன்றுவார்களா? என்ன வந்தாலும் கணபதிக்கு மோதகம் என்றால் விருப்பந்தானே.

ஈழகேசரி
09.02.1941

வடிவு

ஈழகேசரியில் வடிவு என்னும் புனை பெயரில் சிறுகதைகளைப் படைத்தவர் யார் என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. வாழ்க்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவினை தம் சிறுகதைகளில் அழுத்தமாகப் பதிந்தவர் வடிவு. இவருடைய அடைக்கலம், ஏழைப்பெண் முதலான சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்தன.

- அடைக்கலம்
- ஏழைப்பெண்

அடைக்கலம்

வடிவு

அன்று எங்கள் ஆபீசில் விடுமுறை தினம். விடுமுறை என்றால் கேட்கவா வேண்டும். ஒரே குசிதான். காலையில் பார்க்க வேண்டிய நண்பர்களையெல்லாம் பார்த்துக்கொணடு வந்து மத்தியானம் போசனையை முடித்தேன். பின்னர் சற்று உண்ட களைப்பை மாற்றதற்காய் வெளிவரந்தாவிற் போடப்பட்டிருந்த சாய்மான நாற்காலி ஒன்றிற் சாய்ந்து அன்று வந்த தினசரியைப் பிரித்துக்கொண்டிருந்தேன்.

"காயமே இது பொய்யடா காற்றடைந்த பையடா" என்று தொடங்கும் பட்டனத்தடியார் பாடலை மிகுந்த உருக்கமாகப் பாடிக்கொண்டே ஒரு சந்நியாசி என் பங்களா கேற்றைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்.

தினசரியை மடித்துப் பக்கத்திலிருந்த ரீபோவில் வைத்து விட்டு எழுந்து நின்றேன். அதற்குள் சந்நியாசியும் என்னை நெருங்கிவிட்டார். சந்நியாசியுடன் சம்பாஸிப்பதிலும் அவர்களைப் பரிகாசஞ் செய்வதிலும் எனக்கு அதிகப் பிரேமை. ஆனால் அன்று என்னமோ அச் சந்நியாசியைக் கண்டவுடன் ஏன் சப்தநாடிகளுக்கு மொடுங்கியது போன்ற ஒரு பரவச நிலையை அடைந்திருந்தது. என்னை அந்நிலையை

அடையச்செய்தது. இளமை வழியும் அச்சந்நியாசியின் முகமும் வாலிபத்து முறுக்கை எடுத்துக் காட்டும் அந்த உடலுறுதியும் தான்.

"சாமீ அப்படி உட்காருங்கள்" எனச் சொல்லி ஒரு ஆசனத்தைக் காட்டி நானும் என் ஆச னத்தில் உட்கார்ந்திருந்தேன். சந்நியாசியும் முதல் பாடிய பாட்டையே தொடர்ந்து பாடிக்கொ காண் டிருந்தார். நானும் அவர் பாட்டையும் உடல் வனப்பையும் ரசித்துக்கொண்டிருந்தேன். திடீரெ னப் பாடுவதை நிறுத்தி விட்டு எழுந்தார் அவர்.

கையை பிடித்து இழுத்து மறுபடியும் ஆசனத்தில் இருத்திவிட்டு "சுவாமி! இவ்வளவு இளமை வயசில் நீங்கள் சந்நியாசிக்கோலம் கொள்ளவேண்டி உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவ மென்ன?" என்று கேட்டேன். சிரித்தார் அச்சந்நியாசி "என் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவத்துக் கும் அறிவுக்கும் என்ன தொடர்பு" எனக்குப் புரியவில்லை என்றார்.

"சுவாமி தன் வாழ்க்கையில் நிகழும் இன்பதுன்பங்களாற் சுவைகுன்றி அலுப்பு ஏற்படுவதினாலேயே மனுசன் துறவு பூணுகிறான் என்பது என் சித்தாந்தம்" என்கிறேன். உன் னைப் பார்த்தால் எனக்கு ஏதோ என் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவத்தைச் சொல்லியே தீர வேண்டும் போலத்தான் தோன்றுகிறது ஆனால்... என இழுத்தார்.

நான் எழுத்து அவர் தோள்களைப் பற்றிக்கொண்டு சுவாமி! தங்கள் இரகசியத்தைக் கட்டாயஞ் சொல்லியே தீரவேண்டும் எனக் கெஞ்சினேன்.

"அப்பப்பா ! நீ சும்மா விடமாட்டாய் போல இருக்கே உட்காரு சொல்லுகிறேன்" எனக் கூறிக் கொண்டே என்னை என் ஆசனத்தில் உட்காரச் செய்தார். நானும் உட்கார்ந்து கொண்டு விழித்த கண்ணிமைக்காது அவரையே நோக்கிக் கொண்டிருந்தேன் பின்வருமாறு சொல் லத்தொடங்கினார்.

எங்களூர் கோயில்களில் பழமையானதும் மூர்த்தி கரம் நிறைந்ததும் மாரியம்மன் ஆலயம் ஒன்றுதான். அந்த மாரியம்மன் ஆலயத்தில் வெகு விமர்சையாய் நடைபெறுவது எட்டாந் திருவிழா. ஜனங்கள் சாப்பிடுவதை மறந்தாலும் ஆண்டுதோறும் அவ்விழாவைக் காண் பதற்கு மறப்பதில்லை. அன்று மாலை ஏழுமணிக்கெல்லாம் சாப்பாட்டை முடித்துக் கொண்டே கோயிலுக்கும் போகும்பொழுது தன்னையும் அழைத்துக்கொண்டு போகுமாறு நண்பன் கோபாலன் சொல்லிச் சென்றது ஞாபகம் வந்தது. நேரே அவன் வீட்டுக்குப் போய்க் கூப்பிட்டேன் அவன் அங்கு இல்லை. திருவிழாவுக்குச் சென்று விட்டான் என்ற பதில் வந்தது. அவன் மீதுண்டான ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு ஒருவாறு ஆலயத்தைப் போய்ச் சேர்ந்தேன்.

அப்பப்பா ! ஜனக்கூட்டமா? ஜனசமுத்திரமா? இருக்கவும் இடமில்லை; நிற்கவும் நிழ லில்லை; என்ற பல்லவியைத்தான் எல்லோரும் பாடிக் கொண்டிருந்தார்கள். பின்னால் நின்ற ஜனங்கள் நின்ற எனக்கு ஜனங்கள் நெருக்கடித்துக் கொள்வதும் அதனால் ஏற்படுஞ் சச்சர வுகளுந்தான் எனக்குக் கண்களுக்குத் காட்சியாயிருந்தன. அன்று வந்திருந்திருந்த வித்துவான்களின் நாதஸ்வர வாத்தியத்தைக் கேட்டு ஆனந்திக்கலாமென எண்ணிக் காதுகளைத் துப்புரவாக்கிக்கொண்டு வந்த எனக்கு. ஜனக் கூட்டத்தில் எழுந்த கர்ண

கடூரமான வார்த்தைகள் காதுகளுக்குப் பஞ்சடைக்க வேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டன. இதனால் என் மனதில் வெறுப்பேற்பட்டுவிட்டது. வசதி ஏற்பட்டால் சுவாமி வீதிவலம் வரும் பொழுது வந்து பார்த்துவிடுகிறது என எண்ணிக்கொண்டு வீடு திரும்பினேன்.

என் வீட்டுக்கும் மாரியம்மன் கோவிலுக்கும் இடையில் ஏறக்குறைய ஒரு மையில் வித்தியாசமிருக்கும். ஆனால் கல்லும் முள்ளுஞ் செறிந்த அந்தக் கரடுமுரடான பாதையால் போனால் எப்படியும் மூன்று நாலு மைல் நடந்தது கஸ்டத்தை அனுபவிக்கத்தான் வேண்டும். அந்தச் சிரமத்தையும் பாரது "கும்" என்றிருக்கும் அந்த இருளை ஊடுருவிப் பாயும் என் டோச் சலைற் வெளிச்சத்தின் உதவியுடன் திரும்பிக் கொண்டிருந்தேன். பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த என்னுடல் குளிர் காற்று வீசியதால் இருமடங்காயிற்று. குளிர்காற்று வீசு கிறதே! ஒரு போதும் மழைவரப்போகிறதோ என எண்ணி வானத்தை நோக்கினேன். என் கண்களைப் பிளந்துவிடுவதுபோல் ஒரு மின்னல். அதனைத் தொடர்ந்து வானமும் பூமியும் உருளுவது போல் ஒரு இடி. அடுத்த வினாடி காற்றும் மழையும் கலந்தது. ஒதுங்கி நிற்க அண் மையில் வீடுகளேதும் இருக்கின்றனவா எனப் பார்ப்பதற்காய் டோர்ச்லைற் பொத்தானைப் பெருவிரலால் அழுத்தினேன். முந்திய இருள்தான் பல்ப் எரிந்து விட்டது. நான் ஒரு சு.ம. தோழர் என்றாலும் அந்நேரம் என் உள்ளம் என்னை அறியாமலே பகவானை ஸ்தோத்த ரிக்கத் தொடங்கியது. பகவான் செயலாக்கும் அந்த நேரம் உண்டான மின்னல் அண்மையில் பாழடைந்து கிடந்த ஒரு குடிசையைக் காட்டிச் சென்றது. தட்டுத்தடுமாறி அக்குடிசையினுள் நுழைந்தேன். அங்கு நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்கச் செய்து விட்டது. மினுக்கு மினுக்கென்றெரிந்து கொண்டிருந்த விளக்கில் அந்தப் பரிதாபகரமான காட்சியை என் கண்கள் பார்ப்பதற்கு இலகுவாயிருந்தது. கிழிந்து சிதைந்து போய்க்கிடக்கும் ஒரு பாய் அதன் மேல் அழுக்கேறிய கந்தைத் துணிகள் விரிக்கப்பட்டிருந்தன. அதன்மேல் எலும்புத் தோல் என்பவற்றால் செய்யப்பட்ட கூடு போன்ற ஒரு உருவம் ஒட்டிய கன்னங்கள் முதுகுடன் ஒட்டிய வயிறு என வர்ணிக்கக்கூடிய ஒரு பெண்ணுருவம் படுத்திருந்தது. அப்பெண்ணின் ஒளியி ழந்த கண்களைப் பார்த்தபடி விட்டு விட்டிழுக்கும் பெருமூச்சினால் தாக்கப்படும் நெஞ்சத்தை தடவியபடி அப்பெண்ணின் பக்கத்தில் இளங்குமரி ஒருத்தி இருந்தாள். அவள் வதனம் வாடி வதங்கிப்போயிருந்தது. பிரகாசமற்ற அவள் கண்கள் நீரைக் கக்கி கொண்டிருந்தன. திடீரென நான் உள்புகுந்த அதிர்ச்சியால் கூர்ந்து ஒரு பயங்கரமான பார்வை பார்த்தாள். அவள் முகத்திற் பயங்கரம் நிறைந்திருந்தாலும் அவ் ஒளி இழந்த கண்கள் என்னை அன்பால் வரவேற்பது போலிருந்தன. அடடா என் பக்கத்தில் ஒரு புத்துணர்ச்சி. உள்ளத்தில் உணர்ச்சிப் அலைகளின் கொந்தளிப்பு. என்றுமில்லாப் புத ஆர்வம். இவை யாவும் ஒரு வினாடிதான். படுத்திருந்த அப்பெண்மணியின் புலம்பலும் பரிதாபகரமான அப் பார்வையும் மேற்படி புத்துணர்ச்சிகளைப் பஸ்மீகரமாக்கிவிட்டன. குமரி மேல் வைத்த கண்கள் திடீரென அப்பெண்மணியின் மேற் பாய்ந்தது. வாயைத் திறந்தபடி என்னைப் பார்த்து ஏதோ சைகை காட்டினாள். குமரி தாயின் வரண்ட நாவில் சிறிது ஜலத்தை ஊற்றியபடியே தொண்டையைத் தடவிக் கொடுத்தாள். தடவிய கரங்களைப் பிடித்தாள் தாய். உள்ளமுடைந்து ஊற்றுண்ணுவது போல் என்னை நோக்கினாள். "சுவாமி எ...ன்...ம..க....ள்... உனக்... கே.... அ...டை....க்... ல..ம்" எனச் சொல்லிக் கொண்டு தான் பிடித்திருந்த கரங்களை என்மீது வைத்தாள். அலை கடல் ஒய்ந்தது போன்ற நிசப்தம். அவள் இந்த மாய உலகிலிருந்து விடுதலை அடைந்து விட்டாள். கோவென்று கதறினாள் தாயின் பிரிவாற்றாத குமரி. நீண்ட நாள் நண்பன் போன்று அவளுக்கு தேறுதல் கூறினேன் நான். என் கைக் கடிகாரமுமுஞ் சரியாய் பன்னிரண்டு

காட்டிக்கொண்டிருந்தது. மேற்படி சம்பவம் மழை ஓய்ந்து வானம் வெளித்ததையும் நேரம் சென்ற தையும் தெரியாது தடுத்து விட்டது.

அங்கே இருந்த ஒரு உடைந்த மண்வெட்டியின் உதவி கொண்டு ஒரு குழி தோண்டி அப்பிணத்தைப் புதைத்தேன். சற்றுநேரம் ஆறதலாயிருந்துவிட்டு என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கன்னியைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டு அவள் வரலாற்றை அறிந்து கொண்டேன். அவளின் தாய் கூறிய கடைசி வார்த்தைகள் என் உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந்தன. இவளை என்னுடன் கூட்டிச் சென்றால் என் தந்தையார் என்ன செய்வாரோ என்ற பயம் ஒரு பால். இலட்சுமி (அவள் கூறிய வரலாற்றிலிருந்து அவளின் பெயர் இலட்சுமி என்பதைத் தெரிந்து கொண்டேன்) யின்மேல் நான் வைத்த ஆசை இன்னொரு பால். ஆக என்னை வருத்திக் கொண்டிருந்தது. இங்ஙனம் ஆழ்ந்த யோசனையிலிருந்த யான் அப்ப டியே தூங்கி விட்டேன் என்பதை இலட்சுமி, "பொழுது புலர்ந்துவிட்டது எழும்புங்கள்" என்று தட்டிய பொழுதுதான் தெரிந்தது.

அதிகாலை இலட்சுமியைக் கூப்பிட்டு 'உடுத்தியிருந்த கந்தையை மாற்றி வேறு புடவை கட்டிக்கொள்ளும்படி' சொன்னேன். மாற்றிக் கட்டிக்கொள்ள வேறு புடவை இல்லை என்றாள். சரி காரியமில்லை வா என்று சொல்லிக் கூட்டிக்கொண்டு புறப்பட்டேன். வழியில் நான் இலட்சு மியுடன் அதிகமாய் பேசவில்லை. என் தகப்பனாரைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தேன். சரியாய் ஏழுமணிக்கு என்வீடு வந்து சேர்ந்துவிட்டோம். நல்லவேளை அப்பா அங்கில்லை அம்மா மட்டுந் தனியாயிருந்தாள். அம்மாவின் அருகில் இலட்சுமியைக் கூட்டிச் சென்று நடந்த வரலாற்றில் ஒன்றையும் ஒளியாமற் சொன்னேன். அம்மா இயற்கையிலேயே இரங்கம் கொண்டவளானமையாலும் இலட்சுமியின் தாயார் இறக்கும்பொழுது உனக்கே அடைக்கலம் என்று சொன்ன வார்த்தையால் அவளுக்குப் பயப்மேற்பட்டுவிட்டமையாலும் அவளை அங்கே வைத்துப் போஷிக்கச் சம்மதித்தாள்.

இலட்சுமி எங்கள் வீட்டுக்கு வந்த பின்னர் அம்மாவுக்கு பென்சன் கொடுத்துவிட்டு அவளே எல்லா வேலைகளையும் செய்யத் தொடங்கினாள். இதனால் அம்மாவின் பிரியத் தைக் சம்பாதித்துக் கொண்டாள். சில நாட்களால் அப்பாவும் வந்துவிட்டார். இலட்சுமி பற்றி அம்மாதான் சொல்லியிருக்கவேணும் அதனால் அவர் என்னை ஒன்றுங் கேட்கவில்லை.

ஒருநாள் இருவர் எங்கள் வீட்டிற்கு வந்து அப்பாவுடன் வெகு நேரமாய்ப் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சென்றுவிட்டார்கள். அம்மா என்னைக் கூப்பிட்டு எனக்கு விவாகம் பேசி வந்தார்கள் என்றும் ஒரு வக்கீலின் புத்திரி என்றும் சீதனம் மட்டும் அரை லட்சத்துக்கு மேல் என்றும் சொன்னாள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. காரியம் மிஞ்சி விட்டது. இனி பேசாமலிருந்தால் திண்டாட்டம்தான் என நினைத்துக் கொண்டு "அம்மா எனக்கு ஒருவரும் கல்யாணம் பேசவேண்டியதில்லை. நான்தானே இலட்சுமியை அன்றி வேறொருவரையும் கட்டிக்கொள்ளமாட்டேன் என்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்" எனக் கடுகடுத்துப் பேசிவிட்டு அப்பாற் சென்றேன். இது அப்பாவின் காதுக்கு எட்டிவிட்டது.

என் அறைக்குள் வந்தார். "அடே, என்ன! குலத்தைக் கெடுக்க வந்து விட்டாயோ மடையா. இலட்சுமியைத் தான் கட்டிக்கொள்ளுவேனென்று சொன்னியாமே என்னடா

துணிவு. அவளார்? நீயார்? அவளின் அந்தஸ்தென்ன? உன் அந்தஸ்தென்ன இனந்தெரியாத ஒரு அநாதைப் பிண்டத்தைக் கட்டிக்கொண்டு அழப்போகிறாயா?" எனப் பலவாறு தூஷித்துப் பேசி விட்டுச் சென்றார். இலட்சுமியை நான் கல்யாணம் செய்ய யாராவது தடுத்தால் உண்மையாய் தற்கொலை செய்துகொண்டு விடுவேன் எனப் பயமுறுத்தியிருந்தேன். அதனால் அப்பாவும் என் விசயத்தில் தலையிடுவதில்லை. இலட்சுமியை விவாகஞ் செய்ய அப்பா இனித் தடை செய்ய மாட்டார் என எண்ணிக்கொண்டேன். இந்த விசயங்களொன்றும் இலட்சுமிக்குத் தெரியாது.

இப்படியே நாள்களும் கழிந்து கொண்டிருந்தன. ஒருநாள் அப்பா என்னை அழைத்து சில காரியார்த்தமாய்க் கொழும்புக்குப் போய்வரும்படி கட்டளையிட்டார். இலட்சுமிக்கு விசயத்தை அறிவித்துவிட்டுக் கொழும்புக்குச் சென்றிருந்தேன். சில நாட்களில் வீடு வந்து சேர்ந்தேன்.அங்கே பழைய இலட்சுமீகரத்தைக் காணவில்லை. கலகலப்பைக் காணவில்லை. அப்பாவையும் அம்மாவையும் பார்த்தால் எனக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது. இலட்சுமியைக் கேட்டால் எல்லாம் தெரிந்து விடுகிறது என எண்ணிக்கொண்டு சமையற் கடடுக்கோடினேன். அங்கே என் இலட்சுமியைக் காணவில்லை. அங்கே தோட்டக்கார முனியன் நின்று கொண்டிருந்தான். "என்னடா சங்கதி" என்று கேட்டேன். அவன் சொன்னதாவது "ஐயா இலட்சுமியைக் காணவில்லை. எங்கு தேடியும் ஓரிடமும் கிடைக்கவில்லை." எனக்கு மூளை குழம்பியது. சித்தப் பிரமையோ என ஐயுறவேண்டியிருந்தது. இது அப்பாவின் சூது தான் என்பது எனக்கு நன்கு விளங்கிவிட்டது. புறப்பட்டேன் தேடுவதற்காய். ஆனால் எங்குந்தான் தேடுகிறேன். என் செல்லம் அகப்படவில்லை. கண்ணே! உன்னை அடைக்கலம் வாங்கிய எனக்கே அடைக்கலம் தருவாரைக் காணவில்லை என்று சொல்லிக் கதையை முடித்தார்.

அவர் கதை சொல்லிக்கொண்டு வரும் பொழுது இடையிடையே சுவரில் மாட்டியிருந்த என் மனைவி இலட்சுமியின் படத்தைப் பார்ப்பதையும் பெரும் மூச்சு விடுவதையும் கண்ணைத் துடைத்துக் கொள்வதையும் கவனிக்காது விடவில்லை.

ஒருவேளை இச் சந்நியாசி வாழ்க்கையில் குறுக்கிட்ட இலட்சுமிதானோ என் மனைவி என நினைத்துக்கொண்டு பரீட்சிப்பற்காய் சமையற்கட்டிலிருந்த இலட்சுமியின் கிட்டப் போய் காப்பி கொண்டு வருமாறு கட்டளையிட்டேன். சீக்கிரத்தில் இலட்சுமியும் காபி தயார் பண்ணிக் கொண்டு வந்தாள். காப்பியுடன் வந்த என் மனைவியைத் திருப்பி பார்த்தார் சந்நியாசி. "தலை சுற்றுகிறது" எனச் சொல்லிக்கொண்டே எழுந்தார் திடீரென மயக்கமுற்று கீழே விழுந்தார்.

நானும் என் மனைவியும் சேர்ந்து அவரைத் தூக்கி நிறுத்தி வேண்டிய சிகிச்சைகளை செய்து சிறிதுநேரம் படுக்க வைத்தோம்.

வெளி விராந்தையில் விளையாடிக் கொண்டிருந்த என் குழந்தை ராஜு "அப்பா...! அப்பா..!!." எனக் கூப்பிட்டுக்கொண்டே ஓடி வந்தான். அவன் கையில் ஒரு 'பொய்த்தாடி' ஒன்றை வைத்துக் கொண்டிருந்தான்.

உடனே சந்நியாசியைப் பார்த்தேன். முதலில் தாடியால் அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த முகத்தைக் காணவில்லை. அதற்குப் பதில் களைசொட்டும் அவ்விளம்முகம் சிரித்துக்கொண்டி

ருந்தது. என் மனைவிக்குக் காட்டினேன். பார்த்தாள் என் மனைவி. திடீரென அவள் முகம் தளரப்பட்டது. கண்கள் கலங்கின விம்மி விம்மி அழத்தொடங்கினாள். இலட்சுமியைத் கூட்டிக்கொண்டு அவ்வறையினின்றும் வெளியேறினேன். வெளி விறாந்தைக்கு போய் "ஏன் அழுகிறாய்?" இலட்சுமி எனக் கேட்டேன். சந்நியாசி சொன்ன கதையை அவளும் திருப்பிச் சொன்னாள். என் சந்தேகம் சரியாய் முடிந்தது.

சந்நியாசியைப் பார்க்க அறைக்குப் போனேன். அங்கே அவரைக் காணவில்லை. ஒரு துண்டுக் கடிதம் மட்டுமே அவர் படுக்கையில் இருந்தது. ஆவலுடன் அக்கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்.

"இலட்சுமியின் தாய் என்னை மரணத்தறுவாயில் கேட்டுக் கொண்டபடி அவளுக்கு அடைக்கலம் தர ஆதரிக்க வேண்டியது என் கடமை. ஆனால் என் கடமையைத் தாங்கள் நிறைவேற்றிவிட்டீர்கள். அதன் பொருட்டு என்றும் நான் தங்களுக்கு அடிமை." என எழுதப் பட்டிருந்தது. இலட்சுமிக்கு கடிதத்தைக் காட்டினேன். கடிதம் நனைந்து விட்டது அவள் கண்ணீரால்.

ஈழகேசரி
17.11.1940,
24.11.1940

ஏழைப்பெண்

வடிவு

இது ஒரு புதிய வாத்தியக் கருவியோ" எனப் பிறர் ஐயுறும்படி வண்டுகள் ரீங்காரஞ் செய்துவதுபோல் ஜிலுஜிலு என்று காற்றை எழுப்பிக் கொண்டிருக்கிறது. "றோஸ் கொட்டேச்" ஆபிஸ் அறையின் மின்சார விசிறி ஒன்று. அதன் கீழ் நாற்புறமும் சோபாக்கள் அலங்க ரிக்க, கையிற் பாக்கர் வாகுமெரிக் பேனா பிரகாசிக்க, கண்ணில் தங்க மூக்குக் கண்ணாடி விளங்க வீற்றிருக்கிறார் "இந்திராமில்" முதலாளி வரதராஜலு ஐயங்கார்.

அவர் வரண்ட வதனம் ஏதோ ஒரு உணர்ச்சியால் தாக்கப்பட் டிருக்கிறார் என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது. நாடியிற் கையை வைத்துக் கொண்டு ஆழ்ந்த யோசனையிலிருந்த ஐயங்கார், "இந்த இடத்துக்கு ஒரு இராசா போல இருக்கும் என்னையா இந்தப் பிச்சைக் காரப் பெண் ஏமாற்றுவது?" என்று முறுமுறுத்துக் கொண்டு அவசர அவசரமாக எழுந்தார். அந்த அறைக்கும் அங்குமிங்குமாகச் சிறிது நேரம் உலாவினார். மறுகணம் ஏதோ எண்ணியவராய் "சுப்பன், சுப் பன்" என்று கத்தினார். அவர் காலாலிட்ட வேலையைத் தலையாற்

செய்யக் காத்துக் கொண்டிருக்கும் வேலைக்காரச் சுப்பன் பதட்டத்துடனும் பரபரப்புடனும் ஓடிவந்து உத்தரவை எதிர்பார்த்தபடியே தலைவணங்கி நின்றான்.

"அடே சுப்பன்! இங்கே வா. போய் அந்தப் போக்கிரிப்பயல் முத்தண்ணாவைச் சீக்கிரம் வரும்படி சொல்லி அழைத்துக்கொண்டு வா" எனக் கர்ஜனை செய்தார்.

"அப்படியே கூட்டிண்டு வர்றேன் எஜமான்" என்று சொல்லிவிட்டு அங்கு நின்றும் அகன்றான் சுப்பன்.

2

இயற்கை வனப்பெல்லாம் சேர்ந்து செழித்திருக்கும் தோட்டமொன்று. அதன் மத்தியில் ஒரு சிறு குடிசை. அதற்குள் தீனமான குரலில் இருவர் கீழ்க்காணுமாறு சம்பாசித்துக் கொண் டிருக்கின்றனர்.

"ஆ! கடவுளே! பெண்ணாய்ப் பிறந்து நான் படும் வேதனை போதும் போதும். ஐயோ! தன்னுடைய பொருளென்னும் அதிகார மிடுக்கினால்தானே அந்தக் காமவெறி பிடித்த முதலாளி என்னைப் பெண்டாளக் கேட்டான். ஐயோ! தெய்வமே! ஏழைகளாகிய எங்களின் கற்புக்கும் விலையில்லையா? பணக்காரர் செய்யும் அட்டூழியங்களுக்கும் ஒரு எல்லை வேண்டாமா?" என விம்மி விம்மிப் பேசிக் கொண்டிருக்கிறது ஒரு பெண்குரல்.

"அடி! கறுப்பாயி! என்ன குடி முழுகிவிட்டதுபோல் அழுது வைக்கிறியே எஜமான் விருப் பத்துக்கு மாறாக நடக்கலாமாடீ! அப்படி ஏதும் நடந்தால் எங்கள் வயித்திலே மண்தான் என்பது உனக்குத் தெரியாதாடீ இருக்க, நம்ம எஜமான் உன்னை என்ன கேட்டார்? எங்களுக் கதையும் கொஞ்சம் விபரமாகச் சொல்லேன்" என ஒரு ஆண்குரல் குடிவெறியுடன் பேசியது.

இவர்கள் பேச்சைக் கொண்டு புருசனும் மனைவியுந்தான் என்று ஊகித்துக் கொள்ள முடியும். "நேற்று மாலை நீ இங்கே இல்லை. நான் குடிசையிருந்து சமையல் செய்து கொண்டிருந்தேன். அந்தத் துரோகி தோட்டம் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்திருக்க வேணும். நான் குடிசையில் தனியாயிருப்பதைக் கண்டு " உன் அழகுக்காகத்தான் உன் புருசனுக்கு வேலை கொடுத்தேன்" என்று சொல்லிக் கொண்டு என் தோளின்மேற் கையைப் போட்டான்" (என்று சொல்லும் பொழுதே அவள் கண்கள் கலங்கி நீர் தாரை தாரையாகச் சொரியத் தொடங்கிற்று) "சட்டென நான் அவன் கைகளைத் தட்டிவிட்டு ஓடிப்போய்த் தோட்டத்துள் ஒளிந்துகொண்டேன். சிறிது நேரம் அங்குமிங்கும் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டான் அந்த ஏமாந்த சோணகிரி" என்றாள்.

"அடி! ஆத்தே! கற்பிலை நீதாண்டி சந்திரமதி! அடி கறுப்பாயி கற்பு, கற்பென்று உளறுகிறாயே. ஏழையளாகிய எங்களுக்கு என்னடி கற்பு. நான் ஒத்துக் கொண்டால் உனக்கென்னடி கவலை. நீ நம்ம எஜமான் எண்ணத்துக்கு உடன்பட்டு நடப்பாயானால் தோட்டத்துத் தண்ணி ஊத்துறதாடி என் வேலை. மனேஜர் வேலை கிடையாதாக்கும். எஜ மான் உன்மேலே மனம் வைச்சது ஏதோ எங்கள் பூர்வ புண்ணியந்தான் என்று நினைத்துக் கொள்" என்றான் அப்படி.

"முத்தாண்ணா! முத்தாண்ணா!!" என யாரோ அழைத்த சத்தங்கேட்டுச் சம்பாசணையை நிறுத்திவிட்டு இருவரும் வெளியே வந்தனர்.

"முத்தாண்ணா; உன்னை எஜமான் கையோடு கூட்டிக் கொண்டு வரச் சொன்னார்" என்றான் வேலைக்காரச் சுப்பன்.

முத்தண்ணாவுக்கு எஜமான் ஏன் வரச் சொன்னார் என்று நன்கு விளங்கிவிட்டது. கறுப்பாயியைப் பார்த்தான். பல்லை நெறுமினான். "இதெல்லாம் உன்னாலை தான்" என உறுமினான். அடுத்த விநாடி சுப்பனுடன் சென்றுவிட்டான் முத்தாண்ணை.

3

முத்தண்ணாவைக் கூட்டிக் கொண்டு வரும்படி சுப்பனை அனுப்பிவிட்டு மனநிம்மதியற்றிருந்த ஐயங்கார் நிலைகொள்ளாது அங்குமிங்கும் உலாவிக் கொண்டே கீழ்க்காணுமாறு தன் மனதுட் பேசிக் கொண்டிருந்தார்.

"கறுப்பாயின் அழகு என்னை வசப்படுத்தியதாலேயே அந்த மடையன் முத்தாண்ணாவுக்கு வேலை கொடுத்தேன். என் எண்ணத்துக்கு எதிராய் நடந்து கொண்டவர்கள் இங்கே இல்லை. அங்ஙனமிருந்த இந்தச் சிறுக்கிக்கு மட்டும் என்ன கற்பு? என்ன அகங்காரம்? அன்று என் கையை முறித்துவிட்டது போலல்லவா தூக்கி எறிந்துவிட்டாள். அடீ! கறுப்பாயி, உன்மேல் நான் வைத்த அன்பெல்லாம் வன்பாய் மாறிவிட்டது. இதோ! உன் அகங்காரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார் ஒரு ஆசனத்தில்.

"எஜமான், கும்பிர்றேன்" எனச் சொல்லித் தெண்டஞ் சமர்ப்பித்தான் அங்கு வந்து முத்தண்ணா. ஆஹாஹா! என அசட்டுச் சிரிப்புச் சிரித்தார் ஐயங்கார். "அடே, முத்தண்ணா இந்தா நோட்டீஸ் 24 மணித்தியாலத்துள் இந்தத் தோட்டத்தை விட்டு நீயுங் கறுப்பாயியும் புறப்பட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால்..." என அவசரச் சட்டம் வைத்தார் எஜமான்.

முத்தண்ணா ஏதோ பேச வாயெடுத்தான். "அடே! சுப்பன் இவனைப் பிடித்துத் தள்ளிவிடு" எனத் திருவாய் மலர்ந்தார் ஐயங்கார்.

4

வேலை போனதுமன்றி இருக்கவும் இடமில்லையே என்ற ஆத்திரத்துடன் முத்தண்ணா தன் குடிசைக்கு வந்தான். குடிசையிலுள்ள காட்சியைக் கண்டு திகைத்து விட்டான்.

"தன் சொந்த மனைவியை ஏதோ சில சில்லறைச் சௌகரியங்களுக்காய் விபசாரத்துக்குத் தூண்டிவிடும் பேடியாகிய புருசனுடன் கூடி வாழ்வதிலும் பார்க்கச் செத்துவிடுவதே மேலானது. அன்றியும் இப்பொழுது என் புருசன் அந்த வெறியன் வீட்டுக்குப் போகிறான். அங்கே நிச்சயமாய் வேலைபறிபோகும். அப்பொழுது "கறுப்பாயியைக் கூட்டிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு இங்கே வந்து என்னை வலோற்காரஞ் செய்வான். அதற்குள் நான் எனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்" எனக் கறுப்பாயி தீர்மானித்தாள். மரணமே அவளின் சிறந்த விடுதலைக்குரிய வழியாயிருந்தது. எனவே அங்கிருந்த சிறுகயிற்றின் உதவியைக் கொண்டு தற்கொலை செய்து கொண்டாள்.

செய்வதின்னதெனத் தெரியாது தயங்கினான் முத்தண்ணா. அவன் தலை சுழல ஆரம்பித்தது. அவள் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தது தானே என்பதை முடிவு செய்து கொண்டான். தலையைப் பிய்த்தான். வேஷ்டியைக் கிழித்தான். பைத்தியங்கொண்டவன் போல் பின்வருமாறு பிதற்றத் தொடங்கினான். "ஆ! கறுப்பாயி! என்னை மன்னிப்பாயா? தன் சொந்த மனைவியைச் சோம்பேறித்தனமாய் விபசாரத்துக்குத் தூண்டிய பேடியாகிய இந்தப் பாவியை மன்னிப்பாயா? பரிசுத்தவதியாகிய உன் உடலில் இப்பாவியின் நச்சுக் கைகள் தீண்டிய குற்றத்தை மன்னிப்பாயா? ஐயோ! என் கறுப்பாயி நீதான் உத்தமி, பத்தினி, பதி விரதை" என்று கூறிக் கொண்டே ஆவேசங்கொண்டவன் போல் ஓடினான். குடிசையின் பக்க லில் குழி ஒன்று தோண்டினான். தன் மனைவியின் பிணத்தைக் கொண்டு போய்ப் புதைத் தான். நேரே ஐயங்காரின் பங்களாவுக்கு ஓடினான். ஐயங்கரைக் கண்டவுடன் அவன் ஆவே சம் உச்சநிலையை அடைந்தது. "பணத் திமிரினால் பாபம் இது, புண்ணியமிது எனப் பகுத் தறிய முடியாது மயங்கிநிற்கும் பேடிகளே! உங்கள் கர்வம், திமிர், அகங்காரம் என்ப வற்றிற்கு ஒரு எல்லையில்லையா? அடே காமவெறிபிடித்த கசடனே என் மனைவியைப் போன்ற எத்தனை வனிதாமணிகளை உன் துர் எண்ணங்களாற் கொலை செய்து விட்டாயோ? பாவி! உன் கண்ணெதிரில் நின்றாலும் பாபம். இதோ போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே சென்றுவிட்டான் ஏழை முத்தண்ணா.

சரோஜினி

1950களில் வெளிவந்த வரதர் புதுவருஷ மலரில் இவரின் 'காதலும் கல்யாணமும்' என்ற சிறுகதை வெளிவந்தது. இவரின் உண்மைப் பெயரும் அறியுமாறில்லை.

❖ *காதலும் கல்யாணமும்*

காதலும் கல்யாணமும்

சரோஜினி

யார், கமலாவா? பார்த்து வெகுகாலமாச்சு! குடும்ப வாழ்க்கை எப்படிச் போகிறது?"

"...ம்...போகிறது!"

"மூன்று வருடத்துக்குள்ளே சலித்துப் போச்சா?...ம்... அதற் குள்ளே இரண்டு குழந்தைகளுக்குத் தாயாவதென்றால்..."

"அப்படியில்லைச் சரோ! குழந்தைகளும் இல்லாவிட்டால் சீவியம் பாலைவனமாய்விடுமே!"

"ஏன் காதல் வாழ்வு கசந்துவிட்டதோ?"

"கசக்கவில்லை.... ஆனால் அதன் கவர்ச்சி போய்விட்டது சரோ!"

மூன்று வருடங்களுக்கு முன்...

என்றுமில்லாத ஒரு குதூகலம் முகத்திலே படரக் கமலா, வந்தாள். என்னைப் பார்த்து அவள் சிரித்த அந்த மெல்லிய சிரிப்பு - அவள் மனத் துள்ளே பொங்கிக்கொண்டிருந்த இன்ப வெள்ளத்தின் துளியாகத் தெறித்தது.

"என்ன கமலா!..."

"இங்கே வா சரோ!" என்று என்னை அறைக்குள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

உள்ளே போனதும் சிரித்தாள். அந்தச் சிரிப்புத்தான் எவ்வளவு ஆனந்தமானது! இன்பமும் நாணமும் கலந்து அச்சிரிப்பை அழகுசெய்தன.

"கமலா, விஷயத்தைச் சொன்னேன். நானும் சேர்ந்து சிரிக்கிறேன்" என்றேன். அவள் ஒன்றும் பேசாமல் மறைத்து வைததிருந்த ஒரு "என்பலப்"பை எடுத்து என்னிடம் தந்தாள். ஆவலோடு அதைத் திறந்து பார்த்தேன்.

அழகான ஒரு இளைஞனின் படம் அது!

"ஓ!" என்று நான் கூவினேன். "அதுதானே பார்த்தேன். இன்றைக்குத் தேவியார் ஆகாயத்திலே பறக்கிறாரே. என்ன சங்கதி என்று நினைத்தேன்! அப்படிச் சொல்லேன்! எல்லாம் நிச்சயமாகிவிட்டதா? "ஐயா" ஜம்மென்று மன்மதக் குஞ்சு மாதிரியே இருக்கிறார்!- நீ அதிஸ்டக்காரிதானடி!"

"இந்தா பார் சரோ! இதுக்குத்தான் உனக்கு ஒன்றும் காட்டக் கூடாதென்கிறது! துவங்கி விட்டாயே உன்னுடைய அலம்பலை!" என்று சொல்லிக் கமலா படத்தைப் பறிக்க வந்தாள். நான் அதை அவளிடம் கொடுக்காமலே "அடி அம்மா, கொஞ்சம் சும்மா இரு. உன்னுடைய காதலரை நான் ஒன்றும் தின்று விடமாட்டேன். சும்மா பார்த்துவிட்டுத் தந்துவிடுகிறேன்" என்றேன்.

"நீ ஏன் பார்க்கிறாய் அதை?"

"ஓகோ, பார்க்கவும் கூடாதோ? இப்பவே இப்படியென்றால், ஆசாமி வந்துவிட்டால்..."

"சரோ! சும்மா விளையாடாதே..."

நான் படத்தைப் பார்த்துக்கொண்டே "கமலா, ஒரே ஒரு குறை. இந்தக் கண்ணுக்கும், மூக்குக்கும், முக அமைப்புக்கும்... ஒரு சின்ன "ஹிட்லர் மீசை" யாவது இருந்தால் அள்ளி ஏறியும் பார்..." என்று சொல்லிவிட்டு பேனாவை எடுத்தேன்.

கமலா பாய்ந்து வந்தாள்: "சரோ! சொல்லிவிட்டேன். பகிடியில்லை! ஐயா அம்மா கேட்டால் படத்தைத் திருப்பிக் கொடுக்கவேணும். சேட்டைவிடாதே!"

நான் சிரித்துக்கொண்டே "கொஞ்சம் பொறு கமலா!" என்றேன்.

"பொறுக்கவும் வேண்டாம், கிறுக்கவும் வேண்டாம். படத்தைத் தா இங்கே!"

அவளுக்கு உண்மையாகவே கோபம் வந்துவிடும் போலிருந்தது. "சரியம்மா உன்னுடைய மனுஷனை என்னிடம் எதற்கு? இந்தா, என் கைபட்ட இடத்தைத் துடைத்து வைத்திரு!" என்று சொல்லிக் கொடுத்தேன்.

"சும்மா உனக்கு எந்த நேரமும் குரங்குச் சேட்டைதான்!" என்று சொல்லி படத்தை வாங்கிக்கொண்டாள்.

"ஓமோம். மதனகாமராஜர் வந்துவிட்டார். இனி நாங்களெல்லாம் குரங்குகளாய்த்தான் விடுவோம்!"

"சரோ!"

"அது கிடக்கட்டும் கமலா! ஐயாவுக்கு என்ன வேலையாம்? எவ்வளவு சம்பளம்? குணம் போக்குவாக்கு எல்லாம் எப்படியாம்?"

"ஜி.பி.ஓ. வில் வேலை செய்கிறார். 400 ரூபா அளவில் சம்பளம் வருமாம். தாய் தகப் பனுக்கு ஒரே பிள்ளையாம். இருபதினாயிரம் அளவில். சொத்திருக்கிறதாம்... ஆள் வலு ஸ்ரை யில்தானாம்..."

"அதுதான் படத்தைப் பார்த்தால் தெரிகிறதே! நீ அதிர்ஷ்டக்காரிதான். ஏதோ ஆனந்தசாகரத்தில் நீந்தும் போது எங்களையும் மறந்துவிடாதே!"

"உன்னோடு வம்பளக்க நேரமில்லை. அம்மா தேடுவா. நான் போய் விட்டுப் பிறகு வருகிறேன்" என்று சொல்லி விட்டுக் கமலா எழுந்தாள்.

"அம்மா தேடுவாவா?... சரி சரி ; போ போ ; இனி எங்களோடு கதைக்க ரசிக்குமா? அந்த நேரத்தில் அறையினுள்ளே கதவைச் சாத்திவிட்டிருந்து மனுஷனின் படத்தைப் பார்த் துக்கொண்டிருந்தாலாவது..."

"போ சரோ!" என்று கூறிவிட்டுக் கமலா ஓடிவிட்டாள்.

இந்த நினைவினால் நான் சிரித்தேன்.

"என்ன சரோ?"

"ஒன்றுமில்லை. அன்றொருநாள் அவருடைய படத்தை எனக்குக் காட்டக் கொண்டு வந்தாயே, அந்த நினைவு வந்தது!" என்றேன்.

"சிரிப்புத்தான்" என்று கமலாவும் சிரித்தாள்!

வரதர் புதுவருஷ மலர்
1950

ஸ்ரீமத் பண்டிதர் வ.சு.இராஜ ஐயனார்

பண்டிதர் வ.சு. இராஜ ஐயனாரவர்கள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். இவருடைய மாயக்குதிரை என்ற நெடுங்கதை 1936 ஈழகேசரி ஆண்டு மடலில் வெளிவந்தது. இறுக்கமான புணர்ச்சி விதிக்குட்பட்டு எழுதப்பட்ட சரித்திரக் கதையே மாயக்குதிரை ஆகும். யதார்த்தமற்ற கற்பனைக் கதையாகவே இந்நெடுங்கதை விளங்குகின்றது.

❖ மாயக் குதிரை

மாயக் குதிரை

பண்டிதர் வ. சு. இராஜ ஐயனார்

உருவ வழிபாடு மிகுதியும் இருந்த பண்டைய நாளிலே, பாரசீக நாட்டில் ஆண்டுப்பிறப்பு விழா அங்கு நடக்கும். எல்லாக் கொண்டாட்டங் களிலும் தலைமையுஞ் சிறப்பும் பெற்றிருந்ததெனக் கொள்ளுதல் வேண்டும். எல்லா நகரங்களிலும் பட்டினங்கள் சிற்றூர்களிலும் வீடுகள் தோறும் ஆண்டுப்பிறப்பு, நிரம்பவும் பொருள் செலவழித்துக் கொண் டாட்டப்பட்டு வந்தது. பாரசீக மன்னவனரண்மனையிலும், அவன் அத் தாணி, பட்டி முதலிய மண்டபங்களிலும் ஆடலும் பாடலும் கண்டார். இறும்பூதெய்து மாறு, ஆண்டுப்பிறப்பின் பொருட்டுச் சிறப்பாக நடந்து வந்தன. மிகவும் ஈரநெஞ்சமும் பரந்த நோக்குமுடையனான அம் மன்னன், தன் எல்லைக்கு நெடுந் தொலைவிலுள்ள நாடுகளிலும் அயல் நாடுகளிலும், ஆழ்ந்த அறிவாலும், தம்மதி வளத்தாலும் இறும்பூ தான ஆராய்ச்சிகள் செய்வராயின் அவரை வருவித்து அவர் செய்த பெருஞ் செய்கையைப் பாராட்டி, அதன் பொருட்டு அவர்க்கு மிகுந்த பரிசுகளும் நல்கி வந்தனன். இவ்வாறு, ஆண்டுப்பிறப்புப் பரிசு நல்கிய நல்நாளில் ஒருகால், அவடவேந்தன் தன் அவையத்தாரோடு சூழ விருந்து அரிய தொழில்கள் செய்துவந்தாரை, அவரவர் செய்த

வேலைகளாற் சீர்தூக்கிப் பார்த்து. அவரவர் தகுதிக்கேற்பப் பரிசுகளும் வழங்கி மதிப்புச் செய்து, இவ்வாறே ஆண்டுப் பிறப்பு விழா முடித்து, இவை குலைத்துக் தன்மாடம் நோக்கிப் போவானாயினன்.

போவான் தன்முன்பு, இதற்கு உயிர் உண்டு எனப் பார்த்தவர் சொல்லுமாறு, எழில் சிந்தும் ஓர் ஓவியக் குதிரையைக் கொணர்ந்து, வைத்து அவன் அடிகளில் வீழ்ந்து வணங்கி எழும்பாதவன் ஒருவனைக் கண்டான். எம்பெருமானே! யான் கடையேனாய்க் காலந் தாழ்ந்து வந்தேனாயினும் தாங்கள் எஞ்ஞான்றுங் கண்டிராத, வியத்தகுநலம் பெருகச் செய்த இக் குதிரையினைக் கொண்டுவந்தேன்;அதனைச் சீர்தூக்கிப் பார்த்து, அதன் அரிய வேலைப்பாட்டிற்கேற்ப, அடியேற்குப் பரிசுதந்தருளல் வேண்டும் என்று, நின்றனன்.

ஓவியக் குதிரையின் எழில்கண்டு தன்னியல் மறந்த அம்மன்னவன், பரதவன் நிலையினையும், அவன் கொண்ர்ந்த குதிரையின் வேலைப் பாட்டினையும், ஒரு சிறிது நெடிது நோக்கினான். நோக்கினான், இக்குதிரை திருத்தமான தச்சனால், நன்கு செய்யப்பட்டிருக்கின்றதாயினும், இதனைச் செய்தானிலும், வல்லான் மற்றொருவனால். இதனினும் திறம்பட வேறொன்று செய்யப்படலாம் என யான் கருதுகின்றேன் என உரைததான். ஐயனே! குதிரையின் புற உருவத்தைக் கொண்டு மட்டும், அதனைச் சீர்தூக்கிப் பார்த்தல் கூடாது. அதனை, இயக்கும்முறையும் ஒன்று உளது. ஒருவற்கு, அது யான் அறிவிப்பு, அறிதல் அல்லது மற்றெவற்றானும் கைலாராது குதிரையை, யான் ஊர்ந்து வான் வெளியினைக் கடந்து, எத்துணை நெடுந்தொலைவுகள் உளவோ அவற்றுக்கெல்லாம் செல்ல மாட்டுவேன். நிறுத்த வேண்டுக்கால் எல்லாம், எளிதே நிறுத்தவும் மாட்டுவேன், இவைதாம் இக் குதிரையின் வியத்தகு இயல்புகளாம். இவை தம்மைப் பிறர் எவருமறியார். யான், இதனை ஊர்ந்து, அதன் வியப்பினை நுந்தமக்கெல்லாம் வெளிப்படுத்தும் பொருட்டுத் தாங்கள் பணித்தால் அதனை மேற்கொள்ளும் அவாவுடையேன் என்றனன் பரதவன். வியப்பிற்குரிய செயல்களைக் கண்டு உவந்திருக்கும் இயல்பினனான் அப்பாரசீக மன்னன், பரதவன் சொன்னவற்றை ஆராய்ந்து காணும் சுழிபேரவாவுடையனாய், அக் குதிரையின் அரும் இயல்பினை, அதனை இயக்கி வருதலாற் காட்டும்படி அப்பரதவனுக்குப் பணித்தான். பணியை மேற்கொண்ட பரதவன் தன் குதிரையின் மேலேறி அதன் இயக்கப்பொறிகள் மேல் தன் கால்களை வைத்துத் தான் செல்லும் நெறியினைக் காட்ட வேண்டுமென வினாவினாற்கு, வேந்தன் சொல்லுவான்;பரதவனே நினக்குமுன்பு நின்கண் எல்லையில் தெரிகிற மாமலையினைப் பாராய்! அம்மாமலையோ அடுக்கடுக்காயுளன் விலங்கல்களையுடையது. நீ உயரப் பறந்து செல்லுதலைப் புறக்கண்ணாற் காண்டல் கூடாதாகலின், நினது வெற்றிக் கடையாளமாய், அடுக்கல் உச்சியின் புறத்தே வளரும் அங்குள்ள ஈச்சங்கிளை ஒன்றினைத் திரும்பி வருங்கால் நீ கொண்டுவருதல் வேண்டும் என்றனன், இவற்றைக் கேட்ட பரதவன் நன்குதிரையின் கழுத்தின் கீழேயுள்ள பொறிக்கட்டையினைத் துடுக்கென ஊன்றினானாக, பரதவனையுங் கொண்டு மாயக்குதிரை வான்நோக்கி எழுந்து பார்ப்பவர் கட்புலனுக்கெட்டாதாய் மலையின் நோக்கிப் பறந்தது. பறந்த சிறிது நேரத்திற்குள் எல்லாம், ஈச்சங்கிளையோடு பரதவன் தான் முன்புநின்ற இடத்திற்கு வந்தான்; மீளவும் வந்தனனாக, வேந்தன்பால் சென்று, ஐயனே! தாங்கள் விரும்பின அடையாளம் இங்கே கொணர்ந்தேன், இதனைப் பாருங்கள் என்று அவனை வணங்கி எழுந்தான். பரதவனே! நின் வியத்தகு குதிரையின் சிரிப்பாட்டினை

நின்னால் யான் அறிந்து கொண்டேன் ஒரு பொருளை அதன் புறத் தோற்றத்தைக் கொண்டு மட்டும், அதனைத் தீர்த்தல் ஏதமாம் என்பதற்கு நின் குதிரையும் நீயும் ஓர் எடுத்துக் காட்டா யினீர் கண்டீர். நின் குதிரையின் மேம்பாட்டைக் கண்ட என் உள்ளம் அதனைப் பெறுதற்கு மிகுதியும் விழைகின்றது. நீ இதனைப் பொருளின் பொருட்டு விலை செய்வையாயின், நினக்கு நிரம்பவும் பொருள் கொடுத்து யான் இதனைப் பெற்றுக் கொள்கின்றேன் என்றனன் வேந்தன். வேந்தே! தங்கள் போன்ற மன்னர் மன்னர் இதன் பெருமை, அருமை என்ற வற்றை நன்கு அறியமாட்டுவர் என்பதனை யான் அறிவேன். இனி, இவ்வரிய குதிரையை விலை செய்ய யான் ஒருப்படேன் என்றாலும், தங்கள் போன்ற அரசர் பெருமக்கள் பொருட்டு. இவர்க்கு இனியதான ஒன்றை, அவர் பயன்படுத்தி மகிழ்கண்டு அவர்க்குத் துணையாய் நிற்கும் இயல்புடையேன். இதனை விலை செய்தலிலுமோ ஓர் உண்மை உளது. இவ்வரிய குதிரையைச் செய்த கம்மியன்பால் முதன் முதலாக யான் இதனைப் பெற்ற போது யான் பெற்றெடுத்த என் அருமைப் புதல்வியை இதனுக்கிணையாக யான் அவனுக்குக் கொடுத் தேன் என்பதுதான் அவ்வுண்மையாகும். ஆதலால், வேந்தே இதனைப் பிறர்க்கு வழங்கும் போதும், இதற்கு மற்றும் இணையான ஒன்றனை அவர்பாற் பெறினல்லது, யான் இதனை வழங்குவேனல்லேன் என்றனன் பரதவன். "இணையான ஒன்று" எனப் பரதவன் சொல்லக்கேட்டு, மகிழ்ந்திருந் தவனான மன்னவன் பரதவற்குச் சொல்லுவான்! பரதவனே! யான் செங்கோலோச்சும் இப்பெரிய எல்லையினை உடைய நாட்டினைப் பாராய்! கடற்கரை மணலினும் பலவாய் வாழுங் குடிகளைக் கொண்ட பட்டினங்களும், பரக்கங்களும், ஆவணங்கள், அங்காடி மறுகுகளும் அதன்கண் உள்ளன. மதிப்புச் செய்தற்கரிதான், பொன் னும், வயிரமும், மாணிக்க முதலிய மணிகளும் அங்கு மிகுதியாம். இவற்றை நினக்கு "இணையா நல்கி" அவற்றுக்கெல்லாம் செங்கோலனாய் நின்னை மணிமுடி கவித்து வைத்து, நின் அரிய குதிரை ஒன்றனை மட்டும் நின்பாற் பெறும் விருப்பினையுடையேன் என்றனன். வேந்தனே! தாங்கள் அருளிய நல்லுரைகள் மிகவும் இனியனவாயினும், குதி ரைக்கு அவை ஒரு சிறிதும் இணையாவனவல்ல என, உண்மையையான் கிளந்து சொல்லக் கேட்டு கவலாதீர்கள். பாரசீக நாட்டு அரசினங்குமரியல்லது, மற்றெதுதானும் என் அரிய குதிரைக்கு முற்றும் ஒப்பாதாது; அம்மயிலியலாளை, ஆருயிர்க்கிழத்தியாக, யான் கொள்ளப் பெறினல்லது என் விழுமிய குதிரையை விலைசெய்ய ஒருப்படேன் என்றனன் பரதவன். இவ்வாறு பரதவன் உரைப்பதைக் கேட்டு, பாரசீக மன்னவன் அவையத்தாரும் மெய்காவலரும் பிறரும், பரதவன்தன் பேராசைக்கு அவனை என எள்ளி நகையாடிப் போந் தார். மன்னவன் தன் மைந்தனும், பாரசீக அரசகட்டிலுக்கு உரியோனுமான இளவரசன் இவற்றைக்கேட்டுப் பொறானாய் மனம் புழுங்கினன். குதிரையின் அரிய செயலால், அதனைப் பெறுதலில் மிக விழைந்து நின்றவனான பாரசீகமன்னன் பரதவன் விருப்பிற்கு இணங்க ஒருப்பட்டானாயினும் அது கண்டு பிறர் யாதுசொல்வர் கொல் என நினைந்து மெய் அயர்ந்து நின்றான்.

பரதவற்கு யாது செய்வல் என்று மன்னன் அயர்ந்துநின்ற தன் அரிய தந்தையை நோக்கி, எந்தாய்! ஏழ்மையும் மாயம்வல்லோனுமான இப்பரதன், காலமும் இடனும் கருதாது சொன்னவற்றைக் கேட்டபோதே அதனை மறுத்துக் கூறாமல் அது குறித்துத் தாங்கள் நீள நினைவதென்னை? அரிய என் அரசினையும், உடன்பிறந்த நல்ல என் தங்கையையும் இக்குதிரை ஒன்றன் பொருட்டு யான் பிரிந்து வாழ்வேனோ! பகைப்புலத்தார் அடிவணங்க,

நிலவுல கெல்லையில் ஒரு தனிச் செங்கொலோச்சி எல்லாத் திசைகளிலும் தன் புகழ்க் கொடியை நாட்டினான் பாரசீத நாடடு வேந்தனல்லனோ? இவற்றை ஏழ்மைப் பரதவன் அறி யான் கொல்லோ? எந்தாய்! நிற்குடிமைக்கும் பிறப்பிற்கும் நின் ஆன் மறத்திற்கும் குறைவு வராமல் எதனையும் தாங்கள் செய்தல் வேண்டும், என அச்சிளங்குமரன் உறுதிமொழி உரைத்தான். மகனே! யான் சொல்லவனவற்றையும் கேட்பாய்! பரதவன் விரும்பிய "இணை" நல்கி அவன்பால் இவ் விழுமிய குதிரையை யான் பெற்றிலேனாயின், அவ்வாறு அவற்கு ஒன்று பிறன் ஒருவன் வழங்கி அக்குதிரையைப் பெற்று அதனால் வரும் இன்பம் நுகர்ந்தனனாயின், யான் அது கண்டு வாழ்வேனோ? என்பெருமைக்கும் யான் நுகரும் இன்பத்துக்கும் அது பிழை யாகும் அல்லவோ? ஆனால் நின் பிறப்புக்கும் நின் தகைமைக்கும் ஏற்ப நீ சொன்னவற்றைக் கேட்டு யான் மகிழ்கூருகின்றேன். இந்த நிலை உலகத்தில் தனக்கு எவ்வாற்றானும் இணை ஒன்றில்லாத இச்சிறிய குதிரையினை வைத்திருந்து அதனைப் பயன்படுத்தலால் வரும் பெரும் புகழைப் பெறுதலில் யான் தாழ்க்கலாமோ? என நினைந்து மட்டும் வருந்துகின்றேன். எங்ஙன மாயினும் யான் ஒன்று செய்வல்; என அருமைக் கோமகளை அவற்கு அளிப்பல் என உறுதி கூறாமல், வேறு ஓர் ஆற்றல் அதற்கு இணையான மற்றொரு பொருத்தம் செய்கின்றேன். குதிரையின் விழுப்பம் நோக்கி அப்பரதவனும் அத்துணை உயர்ந்த விலை கேட்டானாயினும் அவ்வுயர்ந்த விலை பெறுதலில் ஒருகால் அவற்கு விருப்பம் செல்லாதொழியலாம். என்றாலும், குழந்தாய்! முதலில் நீ அக்குதிரையை ஊர்ந்து அதன் செவ்விய நல்லியன்பினை எனக்கு எடுத்துரைப்பாயாயின் இனி யான் அவன் றனோடு செய்தற்கு முயலும் பொருத்தத்திற்கு அது மிக வாய்ப்பாகும். எங்ஙனமாயினும் தான் குறித்ததனை யன்றி மற்றொன்றை அப் பரதவன் பெறுவான் என்பதில் யான் ஐயமுடையேன் என்றனன் வேந்தன். இவ்வாறு வேந்தனுரைத் தவற்றை எல்லாம் கசந்துநின்று கேட்ட அப்பரதவன் மிக மகிழ்ச்சியும் களிப்பமுடையனாகி அரசனும் அவன்தன் மைந்தனுந் அறிவுறுத்தும் பொருட்டு அங்கு அணுக்கமாய்ச் சென்று அதனை அவ்விளவல் எளிதே ஊர்ந்து செல்லுமாறு அவற்கு உதவி நல்கினான்.

அம்பு ஏய்தலில் வல்லானொருவன் வான் நோக்கி எய்த அம்புபோல, அரசிளங்கு மரனூர்ந்த அம் மாயக்குதிரை வான்வெள்ளியினைக் கடந்து அங்கு நின்றார் தம் கட்புல எல்லைக்கும் எட்டாமல் மறைந்து போயிற்று. முன்பு ஒருஞான்றும் இவ்வாறு விரைந்து பாயும் மற்றொரு குதிரையினையும் காணப்பெறாத அரசனும் அவன்றனவையத்தாரும், அரசிளங்குமரனையும் அவனூர்ந்து சென்ற குதிரையினையும் இம்மமியளவும் கட்புலனாற் காணப் பெறாதாராய்ப பெரிதும் கவன்றனர். இவ்வாறு இவர் நவில்தனைக் கண்ட அப்பரதவன் அரசன்பாற் சென்று சொல்லுவான் மன்னர் மன்னனே! குதிரை இவர்தலில் நின் மைந்தன் மிகுந்த விரைவு செய்ததனை நீங்கள் கண்டீர்கள் அன்றே யான் அதன் சூழ்ச்சிகளில் ஒரு சிலவற்றை மட்டும் காட்ட, அவ்வளவோடு தான் ஒழிந்த எல்லாம் அறிந்து செல்வான் போன்று அரசிளங் குமரன் கடிதிற்சென்றான். குதிரை கால் எனப் பரந்து செல் லுங்கால் மற்றொரு சூழ்ச்சியால் அதனை, நிலம் நோக்கித் தாழ்த்தலும், வேண்டும பக் கங்களுக்கு அதனைத் திருப்புதலும் எல்லாம் அவ்விள்ளல் என்பாற் கேட்டிலன். ஆதலாங் குதிரை ஊர்தலில் வகை தெரியானாய் அவன் பிழைத்தால் அதற்கு யான் ஆளாவேனல்லேன் என்பதனை மட்டும் எளியேன் நுக்கட்டுத் தெரிவிக்கின்றேன் என்று போந்தான்.

இவற்றைக் கேட்டு அரசன் மிகுந்த சினமுடையனாய்ப் பரதவற்குச் சொல்லுவான்; மாவல்லோய்! என் மைந்தன் நின்பால் வேண்டுமவற்றைக் கல்லாது கொன்னே செல்லா நிற்பானை நீ கூவியழைத்து அவற்றை அவற்கு மீட்டும் அறிவியாததென்னை? என வெருண்டனன். பெருமானே! நுங்கள் மைந்தன் வான்வெளியையூடுருவிச் சென்றதா னைத் தாங்களும் கண்ணாற்கண்டர்கள் அல்லிரோ? யான் முற்றும் காட்டு முன்பு என் வரைப்பில் நில்லாது அவன் சென்றான். இனி, அவன் அவ்வாறு செல்லா நிற்பானை யான் கூவியழைத்தால் அது அவற்குச் செவிப்படுமோ? கூப்பாடு தொலைவுக்கு மப்பால் மின் ஒளிபோல அவன்போய் மறைந்தனன் அன்றே ஆயினும் வேந்தே! அவனோ நிரம்பவும் கூர்த்தமதி வளமுடையனாயினன். அவன் அங்கு தடைப்படுவானாயின், அப்போது அக் குதிரையின் பிடரியிலுள்ள மற்றோர் உறுப்பைக்கண்டு, அதனைத் தைவர, அது நிலம் நோக்கி வருதலைக்காண்பான; கண்டுதான் விரும்பும் இடத்திற்கே அதனை உய்ப்பான்; குதிரையும் அவற்கு அமையும்; ஆதலால் தாங்கள் கவற்சி ஒழித்து நம்பிக்கைகொள்ளலே வாய்வதாம் என்றனன் பரதவன். இவ்வாறு பரதவன் தெருட்டவும் தெருளானாய், மன்னவன் பலபட எண்ணிஎண்ணித் தன் மைந்தன் மா இயக்கம் கைவந்திலனாய், அஞ்சி மலைகளில் வீழ்ந்து மாவுந்தானுமாய் நொறுங்கி மாண்டனனோ? அல்லது தான் சென்ற பக்கம் வாரானாய் ஏதம்பட்டு கடலுள் வீழ்ந்து மடிந்தான்கொல்லோ, என அரசிளங்குமரற்கு நேரும் இடும்பை குறித்துப் பலவாறு கருதினான். விறலோய்! நுங்கள் செல்வன் எதம்படுவான் என்று நினையாதொழிக. யான் கொணர்ந்த குதிரையுமோ மிகுந்த மாயம் உடையது. அதனை ஊர்வாறொருவன் ஊரும் வகையறியானாய் பிழைத்தானாயினும், அஃது அவனை அவன் குறித்த இடத்திற்கே உய்க்கவல்ல;நெடிய மலைகளும் அலைஎறி கடல்களும் கடக்க வல்லது. ஆனால் அவன் ஓரிடத்தையடைந்து, அங்கு முன் பயிலப்பெறாத நொதுமலரோடு யாங்ஙனம் பயிலப்பெறுவான் என்பது ஒன்றுமே கருதற் பாலது; மற்றெவ்வாறானும் அவற்கு அஞ்சுதல் இல்லை என்றனன் பரதவன். பரதவன் உரைத்த உறுதிமொழிகளால் ஆறப்பெறாத அப்பாரசீகமன்னன், அவன்பால் மிகுதியும் மூளும்சினம் பொங்கினனாகி அவற்குக் கட்டுரைப்பான்; பரதவனே! நீ சொல்பவற்றை யான் மேற்கொள்ளப்பெறேன், என் ஆருயிர் மைந்தன், மூன்றுநாள் எல்லையுள் மீளப்பெறானாயினும், அல்லது எங்காயினும் அவன் உயிரோடு உறைகின்றனன் எனப் பிறபால் அறியா தொழிவேனாயினும், அவற்கு ஈடாக நின் உயிரை வௌவும் பொருட்டு நின்றலையை நீ கொய்து தருதல் வேண்டும்; இதனை அறியக் கடவாய் என்றனன், என்று அவனைக் கடிகாவற் சிறையிலிடுமாறு தன் வினைஞர்க்குப் பணித்தான். பணித்தனனாய், ஆண்டுப் பிறப்புவிழாவை அவ்வளவில் நிறுத்தி அதனை வழக்கம்போலக் கொண்டாடானாய்த் தன் அரண்மனை புகுந்தான். இவ்வாறு தம் அரசற்கு நேர்ந்தனை நினைந்து அவன் அவையத்தாரும் நெடிது வருந்தி இருந்தனர்.

இனிப் பிசகுசா என்னும் அவ்விளவல், தான் ஊர்ந்த குதிரை தன்னையுங் கொண்டு கால்போலக் கடுகிக் குன்றுகள், மலைகள், யாறுகள், கடல்கள் வெளிகள் என்றிவையெல் லாம், தன் கண்ணுக்குத் தோன்றாத அத்துணை தொலைவு வான்வெளியினை ஊடுரு விச் செல்லக் கண்டனன். இரண்டரை நாழிகை செல்லா நிற்றலைக்கண்ட அவ்விளவல், தான் முன்பு தைவந்த பொறியினைப் பின்னும் அழுத்திக் கால் வைக்கும் மிதியினைச் கழற் றினான். கழற்றினனாக, அவன் ஊர்ந்த குதிரை முன்னிலும் விரைந்து பறந்ததனைக் கண்டு அச்சமும் திகைப்பும் அவற்கு விஞ்சியன. முன்பு தைவந்த பொறிக்கட்டையினைப்

பலவாறாய், அங்கும் இங்குமாய்த் திருப்பத் தலைப் பட்டான். திருப்பிவந்தானாயினும், குதிரை விரைதலில் குறையாது அந்த விழுக்காடே விரைவாகப் பறந்துபோயிற்று. போயதைக் கண்ட இளவற்குக் கவற்சி மிகுதமதியும் ஆயிற்று. ஆயிவன், முன்பு தான் மாவியக்கம் முற்றும் கற்றிலாமையினை நினைந்து நினைந்து மனம் வெதும்பினான். அக் குதிரையினைத் தலைமுதலாக, முகுதுகுகாறும் எல்லாம தடவிப் பார்த்தான். பார்த்தோனுக்கு அவ்வூர்தியின் வலப்புறக் காதின்கீழே முன்னையதினும் சிறியதான மற்றொரு பொறிக்குமின் காணப்பட்டது. காணப்பட்ட அப்புதிய குமிளினை அவன் திருத்தமாய்ப் பற்றி அதனை அழுத்தினான் ;அழுத்தி னாற்கு, அது தன் முனைப்பு அடங்கிக் கீழ்நோக்கி இறங்கி, இறங்கி வந்தது. கார் இருள் செறிந்து கண் ஒளி மழுங்கிய அவ்விராநாளில், காடும், வெளியும், மலையும், யாறும் என்றிவை ஒன்றும் புலப்படாதானாய் மிகவும் அமைந்தான். தான்முன்பு தன் தந்தையின் அரண்மனையில் உண்ட உணவை அன்றிப் பினி ஒன்றும் அயிலப் பெறாத அவ்விளவல், தான் இவர்ந்து போந்த மாயக் குதிரையோடு இறங்கி, இறைவனருளால் அங்குள்ளதொரு சிறந்த மாடம் ஒன்றன் பக்கலில் வந்து புகுந்தனன்.

சலவைக் கற்களால் அழுத்தப்பட்டுப் பளிங்குபோல ஒளிரும் உயர்ந்த அடுக்குகளையு டைய மாடம், அவ்வரசிளங் குமரற்குப் பெருவியப்பைத் தந்ததாயினும், பகலவன் வெப்பத்தாலும் குதிரை இயக்கத்தாலும், உண்டான இளைப்பும், வேற்றுப்புலத்தில் அவற் குண்டான அச்சமும் பிறவமெல்லாம் அகன்றுபோயின. இளைஞன் குதிரையோடு இறங்கின இடம், அம்மாடத்தின் மேலடுக்கிலாதலால், அங்கு நள்ளிரவில் எவரையும் கண்டிலன். யான் இங்கு தமியனாய் நிற்றலைப் பிறர் கண்டாராயின்அயலான் என்ன என்னை வெகுள்ளவாரல்லமோ? அவர் அவ்வாறு வெகுண்டனராயினும் அவற்கு ஏதுகாட்டித் தப்பு தற்கு என்பாற் கால படைக்கலங்களுமில என்று புகைப்படப் பலவாறு நினைந்தான். பிறப்பில் அரசிளனலாதலின் "குலவிச்சை கல்லாமற் பாயம்படும்" என்பதுபோல அவற்கு நிறையும், கடைப்பிடியும், துணிவும் முனைந்தன. அங்குள்ள மேல்மாடத்தைச் சுற்றி வந்துகொடிண் ருந்தான். உற்றிவந்தாற்கு, அங்கு ஓர் அழகுள்ள, ஒவியப்பாடுகள் அமைந்த அறை ஒன்று காணப்பட்டது. அவ்வறையின் கதவங்கட்கிடையே அயர்ந்த உறக்கத்தி லிருப்பவர் செய்யும் குறட்டை அரவங்கேட்டு. அமைதியுடையனாய் அங்கு சென்று பார்த்தான். அவ்வறையின் கண்கரிய நிறத்தினையும், குறுகிய மயிர்க்கற்றை களையுமுடைய எவன்மாதர் துயில்லா ரைக் கண்டு. அவர் அறியாமல், பின்னும் அங்கு சென்று பார்த்தான். நீலச்சிற்றாடையால், திரை இடப்பட்டிருந்த மற்றோர் அறை அங்கு காணப்பட்டது. மெல்லிய இருட்படலத்தால் மறைப்புண்ட முழுநிலாவை ஒப்ப அவ்வறையின் உள்ளே ஒரு விளக்கும் ஒளிகான்று கொண்டிருத்தலைக் கண்டனன். காண்டலும் அங்குப்போந்து அரிமா முகத்ததாகி மாணிக்கத்தாலும், சந்தனக்கட்டைகளாலும் இயன்று, சினனத்துக் கத்தரிப்பூ நிறப்பட்டினாற் கட்டிய, பசும்பொற்கட்டிலின் மேலே செந்தாமரை மலரில் உறங்கும், சிவந்த காலையும், வெள்ளிச் சிறகை யுமுடைய அன்னப்பேடென்னும்படி, ஓர் அரசிளங்கன்னி உயர்ந்துறங்கு வாளைக் கண்டனன். கண்ட அப்போதே, அவற்குக் காதல்மீக்கூர, அவன் பேயினாற் காணப்பட்டதோர் வடிவம் போலாயினான். அச்சமுடையனாயினும் அவள்பாலணுகி, அவள் விழித்தெழுமாறு குறிப்புக்கள் செய்தான். குறிப்பொலி கேட்டு அச்சம் சிறிதும் இலளாய் எழுந்தி ருந்த அவ்வரசிளஞ் செல்விக்குத் தான் குதிரை ஊர்ந்ததும், வேற்றுப் புலம் போந்ததும் தனக்கு நேரந்ததூஉம் பிறவுமெல்லாம் நுவன்று, தான் நெடுந்தொலையிலுள்ள, பயிலப்

பெறாத புத்தான் ஆயினும் தனக்கு இடர்வாராமற் றன்னைப் பாதுகாக்கும்படி குவளைக் அறை இரந்து நின்றான்.

வங்க நல்நாட்டு இளவரசியான அம்மடமான், அவ்விளவற்கு ஆற்றுமுறை கூறி, என் இனிய இந்நெடுமாடத்தில் மட்டுமன்றி வங்கநாடெங்கணும் நினக்கும் துன்புவாராது நீ நின் மனம் போல வாழ்குவை; கவற்சி ஒழிக என்றாள். இதுகேட்ட பிரகுசா என்னுமிளவல் அவட்கு நன்றிமொழி கூறி னானாக, அவன்பட்ட பருவரல் ஒழியுமாறு அவற்கு வேண்டும். இனிய உணாக்களும் பசும்பாலும் அவற்கு வழங்கும்படி தன் ஏவன்மாதற்குச் சொன்னாள் ஏவலர் அவற்கு வேண்டும் உணாவும், அவன் உறைதற்கு இடனும் நல்கினார். ஆண்மையும், நேர்மையும், கள்ளமில்லா இயல்பும் நிரம்பிய அவ்விளவல், இவ்வுயரிய மாடத்துள் யாங்ஙனம் புகுந்தான். காவலர், ஏவலர் என்றிவரையறியானாய் இங்கு வருதற்கு மற்றிவன்மாயம் மிகுந்தான்கொல்! என்று அவன் மாடம் நுழைந்த வரலாற்றை எல்லாம் மீளவும் மீளவும் நினைத்தால் உறக்கம் பெருளாய், அவன்பால் ஊழ்உந்தா நிற்ப, மனன் ஈர்ப்ப, மனையறம்படுதற்கு வரும் நினைவை அழுத்தினாள். தன் பாங்கியரை யழைத்துச் சொல்வாள்! தோழிமீர்!! இங்கு நம்மாடத்து ஒருபால் தங்கும், புதியவனான அவ்விளவலை நீங்கள் அறிதீர் அல்லிரோ? அவனைப்பற்றி நும்மனத்துப்பட்டது யாது? நுங்கள் உள்ளக் குறிப்பினை எனக்கு ஒழியாமல் உரைப்பீர் என்றலும் அவர் தம் அரசிக்கு ஓதுவாராயினர். எங்கள் ஆருயிர்க் கேளே! எழில்கலங்கனிந்த இவ்விளவல், தன் புறச் செயல்களாலும், அவன்றன் அகக் குறிப்புக்களானும் மன்னவர் மரமைச் சார்ந்தவன் என்பதிற் தடையில்லை. இவன் போன்ற நல்வியல்பு வாய்ந்த அரச இளைஞன், ஒருவன், எங்கள் நாட்டிலும், அதற்கு அயல்நாடுகளிலும், எங்கும் காண்டலரிது. இவ்வியல்புகள் மிக்கானிவனை, நீ வதுவை அயர்ந்ததனையாயின் நினக்கு ஒப்பாரும் மிக்காரும் பிறர் உளராகார், ஆதலால், நீ விரைந்து, நின் தந்தையான வங்கப்பெருமானுக்கு இவ்வுண்மையினை அறிவுறுத்தி, அவ்வினியாற்கு நீ கடிதிற் காதன்மனைவியாதல் வேண்டும். யாங்கள் எல்லோரும் இதனை விரும்புகின் றோம். இவ்வாறு தோழியர் மிகுதியுமுரைப்பினும் அவர் உரைத்தவற்றை அத்துணை பாராட்டாநாள் போல் அவர்க்குக் காட்டி அவரையகன்று அவ்விளவல் உறையும் உறையுள் நோக்கிச் சென்று, அவன்றன்னொடு பலவாறு பேசிக் கொண்டிருந்தான். இளவல், தன் மாயக் குதிரையினையும், அது கொண்டு வந்த பரதவனியல்பினையும், தன் தந்தை அதன்பால் விருப்பம் கொண்டதனையும், தான் அதனை ஆராய்வான் ஊர்ந்து சென்று வங்கநாடு புகுந்ததனையும் பிறவற்றையுமெல்லாம் அவட்கு எடுத்து மொழிந்தான். இவ்வாறு நங்கை யும் நம்பியும், தாம்தாம் பட்டபாடு, அடைந்தபேறு என்று இவை தம்மைக் கலந்து உரையாடி னாராக, இருவர் தமக்கும் ஒத்த மனப்பாங்காலும், மற்றையதிருவாலும் காதல் முளைத்துப் பெருகத் தொடங்கிற்று. இவருள், அரசிளைஞன் மிகுந்த காதலையுடையனாய், அரசிளை யாள்பால் நேயம் மிகுந்தனனாயினும், தான் தன் தந்தையால் மீளற்கு மனங்கொண்டு, பாரசீக நாட்டுக்கு மீளும் குறிப்பை அவட்குத் தெரிவித்தான். அவளும் இவன் பிரிவதனை ஆற்றாளாயினள். அந்நங்கையை ஆற்றுவான் வேண்டி அவட்கு அறிவுதெருட்டினான். நங் காய்! நின் காதலையும், நின் சீரிய இயல்பினையும் யானறிவேன். யான், என் தந்தை பாற்சென்று மீளவருங்கால் நின்பொருட்டு வரைவுவேண்டி இங்கு வருவல். அத்துணை நாள்காறும் நீ ஆறுதல் செய்யாயாயின் இப்போதே என்னோடு வருவாய். நின்னையுங் கொண்டு, யான் பாரசீக நாட்டிற்கு மீள்வேன் என்றுரைத்தாற்கு, அரசிளங்குமரி, மிக

மகிழ்மீக்கூர்ந்து தன் காதல்மிக்க அரசிளவலோடு உடன்போதற்கு ஒருப்பட்டனள் ஒருப் பட்டாளுக்கு ஓர் ஐயம்தோன்றிற்று. இவ்வரிய குதிரையயை ஊரும் பழக்கமும் இவற்கு முற்ற வும் கைவந்திலது. யாங்கடந்து செல்லும் நெறியும், மலையும், காடும், யாறும், கடலும், வெய்ய பாலைவெளியுமாய் சேண் நெடுத் தொலைவிலுள்ளது. வங்கநாட்டிலிருந்து பாரசீக நாட்டிற்குச் செல்லுதல், நினைத்தற்கே அரிதாயிரா நின்றதென நெடிது. நினைந்தாளாயினும், அவன்பால் அவட்கு முறுகிக் காழ்த்துநின்ற காதலை யுடைய காமம் அவற்றை முற்றும் நினைவிற்கு வராமல் மறைத்துவிட்டது. அடுத்தநாள், அக்காதலரிருவரும் புற்பாடு குறித்தார். இளைஞன் தன் குதிரையைத் திருப்பிப் பாரசீகநாட்டின் நேராக அதனைத் திருப்பிவைத்தான். வைத்துக்கொண்டே தனக்கு எதனினு மினியளான வங்கத்து அரசிளஞ் செல்வியைத் தன் பின்பக்கம் வைத்துத் தானும் குதிரை இவர்ந்து வழக்கம் போல் அசைவுக் கட்டைகளை முறையே அழுத்தினான். அரசிளங்கன்னியும், காந்தளைப் பற்றிய முல்லைக்கொடியை ஒத்து, அவ்விளவலை இறுகப் பற்றினாளாக, அவ்விருவரையுங்கொண்டு அம் மாயக்குதிரை ஐந்து நாழிகை எல்லையில், நெடிய மலைகளும், யாறுகள், கடல்களும், பாலைவெளிகளும் எல்லாங் கடந்து பாரசீகநாட்டு நன்னகர் முற்றம் வந்தடைந்தது. வருதலும் அங்கு நிற்றலை விரும்பானாய் அவ்வெந்திரக் குதிரையை இயக்கித் தன் தந்தையின் அரண்மனை மேல் மாடம் புகுந்தான். புகுந்து அங்குள்ளதோர் அழகிய பளிக்கறையில் தன் காதலியை வைத்து அவட்கு வேண்டுவன வெல்லாமளிக்கும்படி தன் ஏவலருக்குப் பணித்து அரசன்பால் விரைந்து போயினான். நகர் இடந்தோறும், இவற்குறித்து இவற்கு யாது நேர்ந்தது கொல் என அலமந்திருந்த அந்நகரமாந்தர், இவ்விளவலைக் குதிரையின் மேல்;நகரத்தெருவிற் கண்டு பெரிது மகிழ்ச்சியும் வியப்புமுடையராயினார். தந்தைபாற் சென்ற இளவல் வேத்தவை சூழ இருந்து, அரசியற்றிருத்தம் நோக்கி அவரோடு ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த பாரசீக வேந்தனைக் கண்டான். மைந்தனைக் காணப்பெறானாய் அது பற்றி உயிர் ஊசலஆடப் பார்த்திருந்த அவன் தந்தை, கண் இழந்து மீண்டும் அதனைப் பெற்றானை ஒப்பக் கது மெனஎழுந்து, தன்பக்கல் வந்த காதன்மைந்தனை இறுகத்தழுவி அழுகையும், முறுவலும் உடையனாயினன். மைந்த நின் மாயக்குதிரை எங்குள-து? அதனால் நினைக்கு் நேர்ந்த தென்னை? என இவற்றைமட்டும் அரசன் வினாயினான். என் ஆருயிர் முதலே! யான் குதிரையூர்தலிற் பிழைத்து மிகுதியும் நொந்தேனாயினும், நின் நல்வினை வயத்தாலும் இறை வன் பேரருளாலும், நலமிக்க வங்க நாட்டு மன்னவன் மாடமாளிகையின் உச்சிக் கூடம் சென்று புக்கென, புக்கயான், அவ்வேந்தன் மடமகளால் எல்லா வரிசையும் பெற்றேன். பெற்றயான், எனக்கு எல்லாவற்றானும் ஒத்த திருவினளான அம்மடந்தை யொடுகாதற் கிழமையும் பெற்றேன். யான் நின்னை மணன் அயரவேன் என்றும் உறுதிமொழியும் அவட்கு அளித்தேன். அவளும் அது பொருட்டுப் பூவை விட்டகலாத நறுவியமணம் போல் வாளாய், மாயக்குதிரையினை என்னோடுமிவர்ந்து இங்கு வந்து எனது அரண்மனைக் கடிமாடத்துத் தங்கிநிற்கின்றனள். ஐயனே! அவட்கு யான் உரைத்த சூள் பொய்யாமல் அத னைக் காத்தற்பொருட்டு அவளை எனக்கு வதுவை அயர்வித்தல் வேண்டுமெனக் கிளந்து தன் தந்தையை அடிவணங்கி எழுந்தான். எழுந்தானைப் பின்னுந்தழி, மைந்த நீ ஐயம் கொள்ளா தொழிவாய். நின் இன்னல்தீர்த்து, நின் உயிரைப் பாதுகாத்த அவ்வரசிளங் கும ரியை, யான் இப்போதே சென்று கண்டு அவட்கு வரிசைகள் செய்தலுமன்றி, நின் தலையளிக்குப் பெருமையும் உரனுமுண்டாம்படி நீ செய்த காதல் சிறக்குமாறு இம்மாநகர்

களிக்க, நினக்குமவட்கும் ஒரு நன்மணவிழவு நடத்தி வைத்தற்கு விழைந்தேன் என்றனன் பாசீக மன்னன். நகர்காவலரை அழைத்தான் ;வங்கநாட்டரசிளஞ்செல்விக்கு மணவணி காண்டற்பொருட்டு. இம்மாநகரை அழகுசெய்மின்! வாயில்கள், முன்றில்கள் தோறும் நிறை குடம் வைம்மின்!! ஆவணம், அங்காடிகள் எங்கும் மகாதோரணம் நாற்றுமின்!!! தெருக்கள், மறுகுகள், அதர் என்றிவை எல்லாம், திருத்துமின்கள்!!! காவற் கூடத்துப் பிழைசெய்து வந்தோரை எல்லாம் போகவிடுமின் என்று அவர்க்குப் பணித்து. மாயக்குதிரை கொணர்ந்த அப்பரதவனைத் தன்முன் வர அழைத்தான். சிறையிலிருந்து வந்து தன்முன் நின்ற, பரத வனைப் பார்த்துச் சொல்லுவான், ஓ! பரதவனே! என் ஆருயிரர் மைந்தன் ஏதம்படானாய் மீண்டு இங்குவந்தனன். அதனால் நீயும் உயிர் பிழைத்தனை. ஆனால் நினக்கு, ஒன்று உரைப்பேன். அதனைக் கேட்பாயாக. இப்பாரசீக நாட்டெல்லைக்குள் நில்லாயாய் இப்போதே நீ, அதன் எல்லையை விட்டகன்று போதல் வேண்டும். இதனைக்காவாயாயின், நின் உயிரைப் பறிகொடுத்து நீ மாண்டு ஒழிவாய் என்று அரசன் அவற்கு இட்டான். இவற்றை எல் லாம் அரசன்பாற் கேட்ட பரதவன்; பிரகுசா என்னும் இளவல் மாயக்குதிரையோடு மீண்டு வந்ததும், வருங்கால வங்க நாட்டரசகுமரியைத் தன்னோடு கொணர்ந்ததும், அவளை, அரசன் பளிங்கு மாடத்து வைத்து வந்ததும், அரசனும் அவன்றன் மைந்தனும் அரண் மனையில் இல்லாமல், வேத்தவையோர் சூழ அத்தாணி மண்டபத் திருத்தலும் பிறவு மெல்லாம் காவற் கூடத்து ஏவலர் சொல்லக் கேட்டு அறிந் திருந்தனனாகலின், நொடிப் போதும் தாளானாய் அரசிளங்குமரி உறையும் உறையுள் நோக்கிச் சென்றான். சென்றோன், அங்கு அரசிளஞ்செல்விக்குக் காவலாய் நின்ற மனைகாவலனைக்குறுகி, அவற்குச் சொல்லுவான். காவல் வல்லோய்! அரசனாலும் அவன்றன் மைந்தனாலும் யான் இங்கு அனுப்பப் பட்டேன். அரசனும், அவன்றன் வேத்தலையோரும், அரசிளஞ்செல்விக்குச் சிறப்புச் செய்ய விரையா நின்றார்;அது பொருட்டு அவளை இக் குதிரை யிலேற்றிக் கடிதில் அங்கு கொணருமாறு எனக்கு இட்டார். இவற்றை நீகேளாய் என்றனன். பரதவனையும், அவன் சிறையிலிடப்பட்டு விடுவிக்கப்பட்டதனையும் முன்பு அறிந்திருந்த மனைகாவலன், அரசிளங்குமரி உறையுட் புகுந்து, பரதவன் வந்த வரலாற்றை அவட்கு எடுத்துரைத்தான். அவன் உரைத்தது கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தனளாகித் தன் காதற்கினிய அரசிளைஞன்பாற் போதற்கு எழுந்துவந்தனள். தான் குறித்த விரகு முற்றும் வாய்ப்பானதுகண்ட பரதவன் கொண்ட உவகைக்கு வரைப்பில் லாதாயிற்று. சுதுமென, மாயக் குதிரையை யெடுத்துத் தான் கருதிய வழிக்கு நேராகவைத்து அதன் மேலேறினான். தான் சூழ்ந்த சுள்ளமறியாத மனைகாவலனைக்கொண்டு அரசிளங் குமரியையும் குதிரை மேலேற்றுவித்தான். குதிரைமேல் எழும்பும் பொருட்டு எந்திரக் குமிழ் களை வலிதாய் அழுத்தினான். மாயக்குதிரையும் முடுகி எழுந்து வான்வெளியை ஊடுருவிச் சென்றது. செல்லாநின்ற மாயக் குதிரையினையும், அதன்மேற் சென்ற, பரதவனையும் அரசிளங் குமரியையும், அரசிளங்கன்னியிருந்த உறையுள் நோக்கிவந்த அரசனும் அவன் றன் படை யினரும் தாம்சென்ற வழி இடைக்கண் கண்டனர். சிறைசெய்ததனுக்கும், சிறை யினின்று விடுவித்து, அவற்குரைத்த கட்டுரையினுக்கும் பொறானாகி, நமக்கும், நம் பாரசீக நாட்டிற்கும், அவமதிப்பையும், கீழ்மையினையும் உண்டாக்கும்பொருட்டு, அப்பரதவன், அவ்வடாச்செயலைச் செய்தனன் என வெகுண்டுரைத்து, வானைநோக்கியவனாய், அவ்வள வில் மன்னன் அழன்றுகின்றனன். இவர் படையோடு செல்லுதலையும், இவ்வாறு வசை மொழிகள் சொல்லுதலையும், காதினாற் கேட்ட பரதவன் பின்னும் விரைந்து விரைந்து

உயரமாயச் சென்று, இவர் கண் எல்லைக்கு அப்பாற்சென்று மறைந்தான். அவனைத் தொடர்ந்து பற்றிக்கொண்டு வருவதற்கு ஏற்ற வாயில்கள் இல்லாதவனான பபரசீகமன்னன், தன்மைந்தற்கு மணவணி குலைந்து அவன் மனமடிதற்கும், தன் ஆண்மையும், ஆள் வினையும் எல்லாம் மாசுபடிதற்கும், தீவினைசூழப் பெற்றோனாய், வறிதே தன்மனைக்குத் திரும்பினான். இவற்றைக் கேட்ட அரசிளவல், இடிமுழக்கம் கேட்ட அரவம் போல் நடுநடுங்கி நெட்டுயிர்த்து, வழிக்கண் நின்றானாயினும், தன்மனத்து அப்போதே தோன்றிய ஓர் உணர்வுப் பற்றி, விரைவினால் அரசிளங்குமரி தங்கிய பளிக்கு மாடம் வந்து சேர்ந்தான். அரசிளவலைக் கண்ட மனை காவலன் அவன் அடிகளில் வீழ்ந்து உயிரற்ற மரம் போலக்கிடந்து அழத் தொடங்கினான். அவனைத் தூக்கி நிறுத்திய அரசிளைஞன் அவற்குச் சொல்லுவான் காவலோய்! நீ அழுதலை ஒழிப்பாய். அரசிளங்குமரியை இழந்தது நின் பிழையன்று. பரதவன் மாயத்தை முற்றவும் தெரிந்து கொள்ளாத என்பிழைதான் அஃதென்ற றிவாய். உண்டற்கு இனியநீர் இல்லாது வற்றிப் போக வறிதாய் ஒழிதல் ஆற்றின் பிழையன்று கண்டாய். என அவற்கு வாய்ப்பான நன்மொழி புகன்றது. அவற்பிரிந்து அரண்மனை காவலன்பாற் போந்தான். போந்து அவற்குச் சொல்லுவான்! நம் அரண்மனைக்கு அயற் புற மாகக் கூட்டங் கூட்டமாய் வாழும், சோனகத் துறவியர் மறுகுகளை நீ அறிவாய் அல் லையோ? விரைந்து அம்மறுகுகள் ஒன்றற்குச் செல்லுவாய்! சென்று அவர் தலை வனை யடைந்து அவன்பாலுள்ள துறவு உடைகளை வாங்கிக்கொண்டு நீ கடிது வரல் வேண் டும் என்றனன். அரண்மனை காவலன் விரைந்து சென்று, அவ்வுடைகளை வாங்கிக் கொண்டு வந்து, அரசிளைஞற்குக் கொடுத்தான். அரசகுமரற்குரிய தன் உயர்ந்த உடைகளைக் களைந்து, துறவியர்க்குரிய அக் காளி உடைகளை அணிந்த அவ்விளவல், தன் இன்னு யிர்க் காதலியைத் தொடர்ந்து, எவ்வாற்றானும் அவளை மீண்டும் பெறுதற்கு விழைந்த னனாகி அரண்மனை வாயிலையகன்று அந்நகர் நெடுந் தெருவில் வந்து சேர்ந்தனன்.

இனி, அரசிளங்குமரியோடு வான் வெளியினைக் கடந்துசென்ற பரதவன் தான் புறப்பட்ட அன்று மாலைநாளிலே நெடிதுவழிக்கொள்ள மாட்டானாய் உடல் இளைப்பும் பசியும் நிரம்ப, இவை தீர்த்து உடல்நலம் எய்தும் பொருட்டுத் தன் குதிரையின் விரைந்த செலவை மாற்றி, நிலத்தில் அது தங்கும்படி மற்றைய எந்திரக்குமிளைத் தடவினான். மாயக் குதிரையும் ஆறி ஆறி மெல்லெனவந்து, காசுமீரமென்னும் அழகிய வளநாட்டின் மலைப்புறத்துள்ள உயர்ந்த குளிர்ந்த சோலைநடுவில் மொழு, மொழு என அருவி பாய்ந்து கொண்டிருக்கும், பச் சென்று மத்தங்காய்ப்புல் அடர்ந்த வெளியில் நின்றது. பாரசீகமன்னன் பளிக்குமாடத்தில் அன்று வைகறைதான் உண்ட சிற்றுணாவைவிடப் பிறது ஒன்று மயிலப்பெறாத அரசி ளஞ்செல்வி, பசியினாலும் உடல் அயர்வினாலும், அயலான் தன்னை வஞ்சஞ் செய்தான் என்ற மன எரிவினாலும் மிகுதியும் வாடி இருந்தனள். அங்குள்ள, முத்துப்போல மிளிரும் சுனைநீரைப் பருகினாள். தன்னை மாயத்தாற் கவர்ந்த கள்வன் வழங்கிய உணவைத் தன் உடல் நிலைபேறு குறித்து மட்டும் ஒரு சிறிது அருந்தினாள். அருந்தினாளாயினும் இக் கொடியோன் கையிலிருந்து நீங்குதலில் தன் உயிர்க்கு இடுக்கண்வரினும் அதனைப் பாராட் டாளாய்த் தான் காதலித்த பாரசீக அரசிளைஞனை மீண்டும அடைதலில் உறைத்து நின்றனள். அவனை அகன்று அந்நெடுமரக்காவினுட், புகுந்து, தப்பிப்போதற்கு எழுந்தாள். முகக்குறிகளால் இவள் தன்னை நீங்கிப் போதற்கு முனைகின்றனள் எனத் தெரிந்த பரதவன், அரசிளங்குமரியைப் பற்றிப்பிடித்து அங்குள்ள அருவி அருகில் அவளை நிறுத்தும்படி பரதவன்

எழுந்தான். எழுந்தானுக்கு, நகர காவலரும் அவர் தலைவனுமாய், அரபிக் குதிரைகளில் வளப்பம் மிகுந்த அச்சுனை குறித்து, முடுகி, முடுகி வருவோர் இரைச்சல்கள் செவிப்பட்டன. மலை முழைஞ்சுகளில் வைகும் விலங்குகளை வேட்டமாடும் பொருட்டுச் சென்று திரும்பிய காசுமீர மன்னவன் அங்குச் சுனைக்கயலில், நின்று கலாம்விளைக்கும் பரதவனைவும் அவன் கொணர்ந்த வங்கநாட்டரசிளங் குமரியையும் கண்டனன். கண்டனனாகி, அம்மடநல்லாள் தன் எழில் நலத்தையும் இவன்றன் ஏழ்மையையும் சீர்தூக்கிப் பார்தான். பார்த்தோனுக்கு நிரம்பவும் ஐயப்பாடுகள் உண்டாயின. ஏழ்மையும் விரகும் உடையோய்! நீ யாவன்? இவ்விளமாதரார் யாவள்? நீவிர் இங்குப் போந்ததென்னை? மான் போலும் நோக்கும் மயில் போலும் ஒசிவும் உடையளான இவ்விளையாள், அலமந்து சுழன்ற மனத்தினனாய், மக்கள் பயிலப்பெறாத இக்கானகத்து நடுவே, குரவை இடுதல் எற்றுக்கு? என வினாயினாற்குப் பரதவன் சொல்லுவான் ;இம்மாதரார், என்மனைக்கு விளக்கமான எனது வாழ்க்கைத் துணைவியாவள். கணவனும் மனைவியுமாய் யாங்கள் இங்குப் போந்தேம். இவற்றையெல்லாம் வினாவலால்துமக்கு ஆவதுண்டோ? எனக் கடுகடுத்துச் சொல்லினான். இவ்வாறு பரதவன் சொல்லக் கேட்டுப் பெருஞ்சினங் கொண்ட அரசிளங்குமரி, ஆண்மை யில்லாப்பட்டிமகனே!! நீ வாய் வளரமல் வெறும் பொய் உரைப்பதேன் எனப்புகன்று தன் முன்பு நின்ற காசுமீர மன்னற்குச் சொல்லுவாள், ஐயனே! எல்லாம் வல்ல இறைவன்றிரு வருளால் நீர் இங்குவந்து எதிர்ப்பட்டீர். இக்கொடியோன் கூறிய பொய்மாற்றத்தை நம்பாதீர். யானோ, பாரசீகநாட்டு அரசிளங்குமரனான பிசகுசா என்னும் என் காதலற்கு, வதுவை ஆற்று தற்கு நேர்ந்துவைத்த வங்கநாட்டு அரசிளங்குமரியாவேன். மற்றிவனோ, தீ இயல்பும், கொடு மையும், பழியும் நிறைந்து வஞ்சம்வல்ல பரதவனாவான். இங்கு நிற்கும் இம்மாயம் மிகுந்த ஓவியக் குதிரையில், எவருமறியாமே விரகுசெய்து என்னையும் ஏற்றி இக்கானகத்துக் கொண்டு வந்தான். இப்போது, யான், வேட்டுவன் கையில் அகப்பட்ட மான்பெட்டை போலச் சுழலா நின்றேன், என எல்லாம் விளம்பினாள். இவள் உரைத்தது முற்றும் உண்மையாம் என உணர்ந்து கொண்ட காசுமீர வேந்தன் கடுஞ்சீனம் முண்டனனாய்த் தன் ஏவலரை ஏவிக் கொடியனான பரதவன் தலையை வெட்டுவித்து அங்குள்ள ஒரு புதரில் அவன் தலையையும், மற்றொரு கிடங்கில் அவன் உடலையும் எறிவித்தான். சிலநாட்கள் முன்பு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பரதவன் எதாயினும் ஒரு படைக்கலமும் தன்கையில் இல்லா தானாகிக் காசுமீர மன்னவன் கையில் அகப்பட்டு இவ்வாறு மடிந்து ஒழிந்தான்.

இனி இவ்வாறு, கொடியனான பரதவன் கையிலிருந்து நீங்கிக் காசுமீர வேந்தன் பாலடைந்த அரசிளங்குமரி, நரிக்குப் தப்பிப் பிழைத்துப் புலியைக் குறுகிய பெண்மானை ஒத்தனள். ஓர் இமைப்போதும் தாழானாகிக் காசுமீர வேந்தன், தான் வேட்டமாடும் குதிரை மேல், அவ்விளையாளையேற்றிக் கடுகிய செலவையுடையவனாய்த் தன் கடிமனைக்கு மீண்டனன். அங்குள்ள அழகிய அறை ஒன்றில் அவளை வைத்து, அவட்கு வேண்டுவன எல்லாம் வழங்கி, அவட்கு ஏவல் செய்யுமாறு, ஏவன்மடவாரையும் மனை காவலனை யும் நிறுவிவைத்தான். சில நாழிகைகள் இவ்வாறு கழிந்தன. அரசிளங் குமரியும் அயர்வு தீர்ந்து, பரதவற்கு நேர்ந்தது, அவற்கு வாய்வதாம் என நினைந்து, தன் காதலனையடையும் வழி யாது என நினைந்தனளாய் இருந்தாள். அயர்வு தீர்ந்திருந்த, அவர்மாட்டுக், காசுமீர மன்ன வன் சென்று, அவள் வரலாறு முற்றும் முடிவு போக அறிந்தபின் அவளை மணம் புணர்தல் வேண்டுமென்னும் குறிப்பினனாகி, அக்குறிப்பை அவட்குத் தெருட்ட விழையானாய் விரகு

ஒன்றினால் மீண்டும் தன்மனை புகுந்தான். காசுமீர வேந்தன் செய்தவரிசைகள் கண்டு அவன் கருத்தறியாமல் மிகவும் மகிழ்ந்திருந்த வங்கத்தரசிளஞ் செல்வி, ஆடலும் பாடலும் செய்தும், செய்தன கண்டும், போது போக்கினாள், மனைவந்து சேர்ந்த அரசன், தனக்கும் அப்புதியாளுக்கும் மணவிழா நடத்தற்கு வேண்டும், எல்லா ஒழுங்குகளும் செய்தான். அரண்மனையிலும் காசுமீர நகரத்திலும், சிற்றூர்களிலும் உள்ளார் எவரும் மணவிழவு காண்பான் வரல்வேண்டுமென எங்கும் முரசறைவித்தான். நகரமாந்தரும் பிறரும் தம்ம ரசற்கு மணவணி காண்டற்கு இயைந்த எல்லா நெறிகளும் கடைப்பிடித்தனர். இவ்வாறு, தன்னை மணன் ஆற்றுதற்கு, விரகு ஒன்று சூழ்ந்தனன். அரசன் ஒருவாறு நன்கு தெரிந்து கொண்ட வங்க நாட்டரசிளங்குமரி, மயக்கம் பெரிதுமுடையாளாய்த் தான் காதலித்த பாரசீக நாட்டரசிளவலை நினைந்து நினைந்து நெட்டுயிர்ப்புடையாளாயினள். பித்தம் தலைக் கேறினாற் போன்று கொன்னே புலம்பினாள், எழுந்தாள, ஓடினாள், அழுதாள், விழுந்தாள், தன்முன்பு வந்து தனக்கு நன்மொழியுரைத்துப் பாங்காயிருந்த ஏவன் மடவாரைச் சினந்து அவரைப்பற்றிப் பிடித்துப் பிடித்துச் சுழற்றினாள். கண்டோர் எல்லாம், இவட்கு மயக்கம் உண்டாயிற்று எனக் கூவிக்கொண்டு மன்னவன் மாடம் விரைந்தனர். இவற்றைக் கண்ட காசுமீர வேந்தன், ஏமாற்றம் மிகுதியும் உடையனாகிக் கிடந்து நுழைவான் ஒருவன் தனக் கும் கீழ் நுழைலோன் பிறன் ஒருவனைக் கண்டோனை ஒத்தனன். தன்அரண்மனையில் உறையும் அரசமருத்துவரை அழைத்து இவ்விளையாட்கு நேர்ந்த மருளைத்தீர்க்குமாறு பணித்தான். அரச மருத்துவரும் தத்தமக்கு வாய்த்த மருத்து வன்மையெல்லாங் காட்டியும் அவட்கு மயக்கம் தெளிந்தி லாமையின் தங்கள் தங்கள் நிலைகளையும் இழந்து வேற்றுநாடு புகுந்தனர். காசுமீர நாட்டிலும், அதற்கயல் நாடுகளிலும் எங்கும் மருள்தீர்க்கும் வன்மை மிகுந்த கைவல்ல மருத்துவருக்குச் செய்தி போக்கி அரசிளங்குமரிக்கு மயக்கம் தெளிவிக்கும் மருந்து தரும் வன்மை யுடையார்க்குப் பொன்னும் பவளமும் முத்தும் அளித்து வரிசைகள் செய்தற்கு ஏற்பாடுகள் செய்து வைத்தான். பொய் சொல்லித் தன்னை ஏமாற்றம் செய்தோர் தலைகளைக் கொய்வித்து எறிவித்தும் வந்தான். மருள்தீர்க்கும் பொருட்டுச் சென்று உயிரி ழந்த மருத்துவரும், மந்திரம் வல்லோரும் எண்ணிறந்தோராயினும் வங்க நாட்டரசிளங் குமரி, எவராயினுந் தன்பால் வந்து கைநாடியினைத் தேர்ந்து தன்பொய்மைமருளை அறியமாட்டுவார் என நினைந்து, தன்னை அணுகி வருவாரைப்பற்றி அவர் தலைகளைத் திருகியும் அவர் கண்களைப் பிதுக்கியும் இவ்வாறு அவர்க்குச் சுழிபேரச்சத்தினை விளைத்து வந்தனள். இதன் பொருட்டு, அவளைக் காணுதலினும் தம்முயிரைப்பறி கொடுத்தலே நல மாம் எனக் கருதி எல்லாரும் அவளைத் தமியளாய் இருக்க வைத்து அகன்று போயினார். காசு மீர மன்னனும் கவற்சி பெரிதுமுடையனாகி, வல்லமருத்துவர் யாவர் நம்பால் வருவர் என, எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இனிப் பாரசீகநாட்டிலிருந்து சோனகத் துறவு வடிவுகொண்டு குதிரைமேல் ஏறி நாடுகளும் நகரங்களும் பாலைவெளிகளுமக கடந்து, வங்காள நாட்டரசிளங் குமரியைத் தேடுவான் போந்த பிரகுசா என்னுமிளவல் பரத நாட்டின் எல்லைவந்து சேர்ந்தனன். தான் குறித்த பொருள்பற்றிச் சென்றுழி எல்லாம் ஆராய்ச்சி செய்து வந்தான். தான் செல்லும் மார்க்கம் இன்னதென அறியானாயிலும், தன் காதலியின் பாற்கொண்ட கழிபெரும் பற்றினால் அந் நெடுவழி எல்லாம் அவற்கு ஒரு கூப்பாடு தொலைவெனத் தோன்றலாயின. பரதநாட்டிற் புகுந்த இளவல் தான் ஊர்ந்து வந்த மாவினை அங்கொருபால் நிறுத்தித் துறவிதான் இவன்

எனப் பிறர் தெரிந்து கொள்ளும் நெறிமுற்றும் கடைப்பிடித்து, அங்குள்ள ஆவண மறுகு ஒன்றிற் புகுந்தான். ஆணவ வழிக் கண்ணும், அங்காடிக்கரையிலும், பட்டினம் பாக்கங் களிலும், கூடுவாரெவரும், வங்கநாட்டரசிளங்குமரியைக் காசுமீரவேந்தற்கு வதுவை ஆற்ற நேர்ந்த போது அவட்கு மருள் வந்ததனையும், அது தீர்க்கச் சென்ற கைவல்ல மருத்துவர் பலர், அங்குச் சென்று சென்று மயக்கம் தீர்த்தலிற் பிழைத்தனராய், அரசனால் மடிவெய்தி வருவார் தம்மையும் பொருளாய்ப் பேசுவாரையன்றிப் பிறரை எங்குங் கண்டிலன். இவ்வாறு ஊரார் ஆம்பலும் அலருமாய்ப் பேசும் குறிப்பினை மனத்துள் அடக்கிக் கதுமெனவெழுந்து தன் குதிரைமேல் இவர்ந்து காசுமீர நாட்டெல்லைப்புறம் சென்று சேர்ந்தான். அந்நகரத்து அரண்மனைத் தெருவில் நகைவிற்கும் கடைக்காரனைச் சென்று சேர்ந்து, அவன்றன்னால் எல்லா வரலாறுகளும் தீர்ததெளியத் தேர்ந்து, மருள்கொண்ட மாதரார், தன் இன்னுயிரக் காதலியாவள் எனத் துணிவு கொண்டனனாகி, அவள் பான்சென்று அடைதற்கு வாய்ப்பான விரகு ஒன்று சூழ்ந்தனன். அவ்வூர் மருத்துவர்க்கு ஏற்ற உடைகள் உடுத்து, நீண்டு கறுத்து வளர்ந்த தாடியுடையனாய், மயக்கங்கொண்ட மடவால் தங்கும் அரண்மனை வாயிலைக் குறுகினான். அங்கு எதிர்க்கப்பட்ட காவலற்குத் தனது வரவும், தான் மயக்கந் தெளிவிக்கும் மருந்து கைவரப் பெற்றிருத்தலும், மனம் மருண்டார் பலர் தன்பால் வந்து தன் மருத்து முறை யினால் அது தீர்ந்து நலம் எய்தப் பெற்றமையையும், பிறவுமெல்லாம் அம்மனைகாவலற்கு எடுத்தோதி னனாகித் தனக்கு அவ்வரசிளங்குமரியைக் காட்டி வைக்குமாறு வேண்டி நின்றான்

வாயிற் காவலன், இதுபொருட்டு இங்குவந்து தமது அலுவலிற் பிழைத்தோர் பலர் உயிர்மாண்ட தகைமையும், எவராயினும் அம்மாதரார் மயக்கம் தெளிவிப்பாராயின் அவர்க்கு நிரம்பிய வரிசைகளும், அரசனால் உயர்ந்த பரிசுகளும் எய்தும் எனவும் அவற்கு உரைத்து; இப்புதியோன் வரவையும் அவன் உரைத்துப் போந்த வென்றி மொழிகளையும் காசுமீர மன்னற்குத் தெரிவித்தான். அரசிளங்குமரியை மணந்துகொள்ளுமதல்லது மற றொன்றும் நினைவில் வரப்பெறாத காசுமீர வேந்தன் அப் புதியோனைக் கதுமென அழைத்து வரச் சொன்னான். அவனை அம்மாதர் உறையும் மாடத்துக்குக் கொண்டு சென்றனன். மருத்துவரைக் காண்டலைச் சிறிதும் விழையாத அம்மடவாலை. அவட்காணாமல் அவளைக் காணும் ஓர் அணிமைக்கண் வைத்து அவற்குக் காட்டினான். காண்டலும் தன் காதற்கினிய அரசிளங்குமரி அவளேயாம் எனப் பிறந்த துணிவும், காணப்பெறாத அவளைக் காண்டலால் அவற்குப் பிறந்த பெருமகிழ்வும் உடையனான பாரசீக அரசிளைஞன், மிக விரைந்து அந்நோயினைத் தான் அறவே மாற்றுதல் கூடும் எனக் கட்டுரைத்து வேந்தற்கு நிரம்பவும் மன அமைதியைப் பெருக்கினான். பெருக்கிவந்தே அரசற்குரைப்பான். மன்னர் பெரும்! இம் மாதரார் மயக்கந் தெளிவிக்கும் மருந்து என்பாலுள்ளது. மாறாதநோய் இவள் பெற்றனள் என்பது அடாது. ஆனால் யான் அவளைத் தமியராய்க்கண்டு உரையாட விடை தரல் வேண்டும். மருத்துவரைக்காண, அவள் விழைவுகொள்ளாள் என்பது யான் மேற்கொள் ளும் மந்திரமுறையினாற் போய் ஒழியும், பிறர் எவரும் அப்போது அங்குவராதிருத்தல் வேண் டும் என்றனன். இவ்வாறு அவ்விளவல் கூறிய துணிவு மொழிகளால் அரசன் தெளிவுடை யனாகி, அவன் கருத்துக்கு இசைந்து. அம்மாதர் உறையும் மாடத்தின் கதவங்களைத் திறந்து வந்த புதிய மருத்துவனை அங்கு தமியனாப்புக்கு அவளோடு கலந்துரையாடச் செய்வித்தான். நெடிதுபோது இவனைக் காணாளாகிய அவ்வரசிளங்குமரி, புதுவடிவத்தால் இவன்றன்னை

அறியாளாகி வழக்கம் போல் வரும் மருத்துவருள் இவனுமொருவனாம் என நினைந்து, மானைக்கண்டு அதன் மேற்பாயும் வேங்கை போல அவன்மேற் கடுஞ்சினங்கொண்டு எழுந்தனள். எழுந்தாட்கு, அச்சம் சிறிதுமிலனாய் அவளைக்குறுகி "வங்கநாட்டு அரசிளமயிலே"யான் மருத்துவன் அல்லேன்; அவ்வடிவு நின்பொருட்டுத் தாங்கிய பாரசீக நாட்டரசிளங்கோ யான் அல்லேனோ என அவட்கு மெல்லெனக் கிளந்தான். அவன் குரல் ஒலி கேட்டலும், இவன் அன்றே யான்குறித்த காதலன் எனத் தெளிந்து எல்லையில்லா உவகையுடையளாகி, அவன் றனைத்தழி; மற்றைக் காதல் குறிகள் எல்லாம் செய்தனள். செய்து முன்பு தன்னைப் பரதவன் மாயமாய்க் கொண்டுபோன அன்றுமுதலாய் இன்றுகாறும் அவ்விளவிற்கு நிகழ்ந்தவெல்லாம் ஒவ்வொன்றாய் வினாவினாள். அளவிளவலும் அவட்கு எல்லமுரைத்து, அன்றுமுதல் அவட்கு நேர்ந்தனவும், காசுமீர அரசன்பால் அவள் அடைந்த வரலாறும் அவள் சொல்லக் கேட்டுத் திருத்தமாய் அறிந்து கொண்டான். அறிந்துகொண்ட இளவல் அவள்பொருட்டுத் தான் எடுக்கும் எல்லா எடுப்புக்களையும் மாறாமற் செய்தனளாயின், காசுமீர மன்னவன் சூழலுக்குப் பிழைத்து, அவளோடு மீளவும் தன் பாரசீகநாட்டிற்குப் போவான் என அவட்கு உரைப்ப, அதற்கு எல்லாம் அவளும் மனம் பொருந்தினாள். அரசிளவல் பரதவற்கு நேர்ந்தது அவற்கு நிரம்பவும் தகும் என நினைந்து காசுமீர மன்னனைச் சென்று அடைந்தான். அடைதலும், தன் மருத்து வகையால், அவள் பாதி நயப்பட்டனள் எனவும், காசுமீர எல்லைப்புறம் அவள் வந்த வரலாறு முற்றுமறிந்தனனாயின், அவட்கு ஏற்ற மருந்தும், முறையும் நாடி, அவள்கொண்ட நோய், முடியமாற்றுவான் எனவும் எல்லாம் அவற்கு நுவன்றான். அரசிளங்குமரியைக் காணப்போன மருத்துவரை எல்லாம் அவள் பற்றியுந், திருகியும் வந்தனள். ஆனால் இவனை அவள் யாதுஞ்செய்திலள். இவன், வல்ல மருத்துவனே ஆதல் வேண்டுமென, நினைந்து மகிழ்வு மிக்க மன்னவன், அவற்கு அவள் வந்த வரலாறு முற்றும் உரைத்து, அவள் இவர்ந்து வந்த மாயக்குதிரையினையும் காட்டி வைத்தான். அரசிளவல் அம்மன்னற்குச் சொல்லுவான், வேந்தனே! இவள் இவர்ந்து வந்த குதிரையிலும் சிறிது இவட்கு மருந்துளது, அதனை யான் அறிவேன். ஆதலால் நாளை வைகறைப் போது, அரண்மனை வெளிமுற்றத்தில் அக்குதிரையினைக் கொண்டுவந்து நிறுத்தி இவள் முன்பு வந்தபோதணிந்து இருந்த கலன்களும் எல்லாம் அணிந்தனளாகிப் பின்னும் அதன்மேல் அவள் இவருதல் வேண்டும். அப்போது பரதவனைப்போல் அதனை யான் இயக்கிவந்து அதன் மாயத்தைத் தெளிந்து அதுபொருட்டு வேண்டுமவற்றை யான் செய்ய, நோய் முற்றும் தீர்ந்தனளாகி அம்மாதர் பண்டைநிலையினைப் பெறுவாள் என்றான். மாயக் குதிரையின் இயல்புகளையும் பாரசீகநாட்டு அரசிளங்குமரன் எடுத்த சூழல்களையுமெல்லாம் ஒரு சிறிதும் தெளிந்து கொள்ளாத காசுமீர மன்னற்கு, அப்புதியமருத்துவன் பால் மிகுந்த நம்பிக்கையும் அரசிளங்கன்னிகையைக் கடிதில் மணன் அயர்வல் என்ற ஊக்ககத்தாற் பொங்கி எழுந்த மகிழ்வும் வலுப்பெற்றன. பெற்றனனாகிய வேந்தன் மாதர் உறையுட் புகுந்து அங்கு அவள் இனிய முகத்தினளாய் இருத்தலையும் கண்டு உடலம் பூத்தான். தன் அவையத்தாரை எல்லாம் கூட்டுவித்துத்தன் பால்வந்த புதிய மருத்துவன்றன் மிகுதிப்பாட்டினை மீக்கூறி அவனைப் புகழ்ந்தான். அவற்கு ஏற்ற உயர்ந்த பரிசில் யாது என வினவினான். ஏனாதி, காவிதி என்ற பொற் பரிசில்களை அவற்கு வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்தான். அவற்கு ஏற்ற வரிசைகள் செய்வித்துத் தன் அரண்மனையிலுள்ள அழகிய மாடம் ஒன்றில் ஏவலர் பணிகொள்ள அவன் இனிது வதியுமாறு எல்லா வசதிகளும் செய்வித்தான்.

அடுத்த நாள் வைகறையில் அரண்மனை வெளிமுன்றிலில் எவரும் கூடுமாறு பறை அறைவித்து. அங்கு ஆடலும் பாடலும், முரசும், யாழும், குழலும் என்று இவைமிகுதற் பொருட்டு ஏற்ற ஒழுங்குகளும் உண்டாக்குவித்தான். அரசிளங் கன்னியை நறுநீராட்டிப் புழுகும், கத்தூரியும், பிறவுமெல்லாம் பூசுவபூசி, முல்லையே, மருவே, தாழையே, என்று சூடுவன் சூடி, உயர்ந்த பொற்சரிகை விளிம்பு கோத்த நீலப்பட்டாடை உடுத்திக், காசுமீர நாட்டுள்ள ஒன்பது நன்மணிகளும் குயிற்றிப் பச்சைப் பசும் பொன்னால் இயன்ற நற்கலன்களை அவட்குப் பூட்டி, ஒப்பனைசெய்து. அவள்தன் மாயக் குதிரையோடு அங்கு அவளைக் கொணருமாறு செய்வித்துத் தன் பள்ளியறை புகுந்தனன். இவ்வாறு அரசன் குறித்த அடுத்தநாள் வைகறையில், காசுமீரநாடு மிகுந்த ஆரவார முடையதாயிற்று. எல்லா நகரங்கள், பட்டினம், சிற்றூர்களிலுமிருந்து, ஆடவர் மகளிர் எல்லாரும் தம் அரசன்றன் அரண்மனை முன்றிலுக்கு வந்து கூடினார். அரசனும் அவன்றன் அமைச்சரும், படையிலுள்ளாரும் வந்து சேர்ந்தனர். மாயக்குதிரையும் அங்குகொண்டு வரப்பட்டது. அரசன்றன் களஞ்சிய அறையிலுள்ள விலையுயர்ந்த, பொன்னாலும், முத்து, வயிரம் முதலிய மணிகளாலும் இயன்ற கலன்கள் எல்லாமணிந்து நிலமாது மயக்கந் தெளிவிக்கும் மருந்து சரணவந்தாளை ஒத்து வங்கநாட்டரசிளங்குமரியும் வந்தனள். முன்பு அங்குவந்திருந்த பாரசீக நாட்டரசிளங்குமரன், மருத்துவ வடிவுடையனாய் எல்லார்க்கும் நடுவண் வந்தான். மாயக்குதிரையைப் பலவாறு ஆராய்ந்து எல்லா அவையத்தாரும் வியப்பெய்தும்படி, அரசிளங் குமரியை அதன்பாலேற்றினான். முன் அவன் செய்த முறையின்படி, குதிரையைச் சூழவர அமைத்து வைத்திருந்த கிடங்கில், அகிற்கட்டைகளால் நெருப்பை எரிவித்து மூண்டெழும் அந்நெருப்பில், நறுமணப் பொடிகளை நிரம்பவும் தூவித் தூவித் சூழந்துவந்தான். குறிப்பொலிகளாற் சிலவற்றை மந்திரம்போல மொழிந்தான். நறுமணப்புகைபட்டு, த்தன் அலமால் தீர்ந்ததென நினைவுகொண்ட அம்மாதர் முகம், நிறைமதியாமென விளங்கித் தோன்றியது. தோன்றியது கண்ட மன்னவனும், அப்பேரவையும் இவன்பால் மதிப்பு மிகுதியும் உடையராகி, இவன் திறமையினையும், அவற்கு வாய்த் திருந்த மருத்துவ அறிவினையும் பாராட்டிப் பாராடடிப் பேசுவாராய் அங்கிருந்தனர். சிந்தூரக் கட்டைகளின் மேல பரவிய அகில்களிற் பற்றிய நெருப்போ, அந்நகரம் முற்றும் பரவிச்சென்றது. தான், தனக்கினியாளோடு குதிரையின் மேனோக்கிச் செல்லற்கு ஏற்ற அமையம் பார்த்திருந்த அவ்வரசவிளைஞன், கதுமெனப் பாய்ந்து மாயக்குதிரையில் இவர்ந்து அதன் இயக்கப்பொறிக் கட்டைகளை நன்கு அழுத்தினான். குதிரைமேல இருந்த அரசிளங் கன்னியும், தன் இருக்கையினை வழுவாமல் பற்றிக்கொண்டனளாய்த் தன்கால் மிதியி னைச் சீர்ப்படுத்தினாள். பாரசீக இளவலையும், வங்கநாட்டரசிளங் குமரியையும் கொண்டு துடுக்கென வான்நோக்கி எழுந்த மாயக் குதிரை யினைக் காணாத, அக்கூட்டத்து மாந்தர், "ஓ!! காசுமீர அரசே!!! அரசிளங்குமரியர். அடைக்கலமென நின்பால் வருவாருளராயின், முன்பு, அவர்தம் உறுதிமொழி தேறாமல், அவரை நயக்கநினையாதொழிவாய்" என்னும் வான மொழியினை மட்டும் கேட்டனராய் ஏமாந்து சுழன்றார். தங்கள்பால் வந்த அப்புதியோன் மருத்துவன் அல்லன் எனவும், அவன் அம்மாதர் மனத்துக்கொண்ட பாரசீக அரச இளவல் தான் என்றும், விரைந்து தெளிந்தார். அரசன், தன் ஆராய்வுக் குறைவுக்கும், மாதர்பால் செல்லும் நிறையிலாத தன் உள்ளப் பான்மைக்கும் ஏற்ற பயன்பெற்று, நிரம்பவும், அழன்று, அழன்று கொண்டிருந்தான்.

இனி மாயக்குதிரையிற் சென்ற அவர் இருவரும், மிகவும் விரைந்தனராகிப் பொழுதுசாயு முன்பு, பாரசீகநாட்டு அரசன் அரண்மனை சென்று அடைந்தனர். இவர் வரவு கண்ட பாரசீக மன்னவன், இழந்த தன் மணிகளை மீளவும் பெற்ற நாகம் போல, உவகைக் கடலுள் நீந்தினான். ஒரு சிறிதும் தாழானாய், வங்கநாட்டு வேந்தற்குத் தூதுபோக்கி, அவன் றன் மடமகள் வரலாறுகள் முற்றும் அவற்குத் தெரிவித்துத் தன் தனிமைந்தற்கும் அவ்வரசன் மடமகட்கும் வரைவுகுறித்து அவற்கு ஓலை போக்கினான். பாரசீக நாட்டுத் தூதுவர்பால் எல்லாம் திருத்தமாய்த் தெரிந்துகொண்ட வங்கநாட்டு மன்னன் தன் மகட்கு மணவினை காண்டற்குத் தன்வரவினையும், அம்மணவினைக்குத் தான் வேண்டும் உதவிகள் செய்தலையும், விடை ஓலைத் திருமுகத்தால் பாரசீக மன்னவற்குத் தெரிவித்தனன்.

ஈழகேசரி ஆண்டு மலர்
1936

திரு.ஏ.சி. இராசையா

திரு. ஏ.சி. இராசையா ஈழகேசரி தொடக்கக் காலத்தில் சிறுகதைகளை எழுதியவர். இவர் எழுதிய நவீன கோவலன் சிறுகதை இறுக்கமான மொழி நடையில் வெளிவந்தது. இவரின் சிறுகதையில் வடமொழிச் சொற்கள் ஏராளம். மனைத்தக்க மாண்புடையாள் எவ்வாறு இருந்தல் வேண்டுமென்பதை இக்கதை பேசுகிறது.

❖ நவீன கோவலன்

நவீன கோவலன்

திரு. ஏ. சி. இராசையா

மனோன்மணியென்பவள் ஒரு நாட்டுப்புறப் பெண். தமிழில் ஐந்தாம் வகுப்புவரையிலும் வாசித்தவள். ஆங்கிலம் அவளுக்குச் சுத்த சூன்யம். வீட்டுவேலைகளில் மட்டும் கெட்டிக்காரி. சுகபெலமும் புஷ்டியும் பளபளப்புமான தேகக்கட்டைக் கொண்டவள். இயற்கையெழில்படைத்தவள். காந்திமிக்க ரூபவதி. ஆயினும் பெண்ணின் நிறத்தைப்பற்றி என்னவோ கழுவிய நெருப்புத் தழலுக்கு உவமானமாக வைத்துத்தான் பேசிக்கொள்ளுகிறார்கள். அப்படித்தானிருந்தபோதிலும் மகா லட்சுமியின் நிர்த்தனம் அவள் வதன பிம்பத்திற் சதா தாண்டவமாடிக்கொண்டுதானிருந்தது. அவளுக்கு ஏறக்குறைய பதினெட்டு வயதிருக்கலாம்.

சோதிவேல் மனோன்மணியின் தந்தை . அவர் ஓர் வறிய கமக்காரன். உயர்ந்த மரபிற்றோன்றியவர். ஒழுக்கம் மிகுந்த உத்தமர். சோதிவேலின் மனைவி சுறுசுறுப்புள்ளவள். தனது முயற்சிகளிற் கண்ணுங்கருத்துமாயிருப்பவள். படிப்பறியாப் பேதையாயிருந்த போதும் அவள் தன் பத்தாவைத் தெய்வம்போல் மதிக்குமோருத்தமி.

அவர்கள் வறுமைப் பேற்றைச் சதா சுதந்தரமாகக் கொண்டவள். காலையில் பழையது வைத்துச் சாப்பிடுவார்கள். நடுப்பகல் வேளையில் கஞ்சி தான் அவர்கள் பசியையாற்றுஞ் சஞ்சீவி. சாயந்தரங்களில் கூழ் ஆக்கிக் குடிப்பார்கள். "பசித்தார் பொழுதும்போம் பாலோடன்னம் புகித்தார் பொழுதும்போம்" வறுமைப்பிணி காரணமாக அக் குடும்பம் வருந்திக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மனத்திருப்தியுஞ் சந்தோஷமுமான வாழ்க்கையே ஆங்கு நிலவியிருந்தது. சோதிவேல் தமது புதல்வியை நல்ல பழக்க வழக்கங்களிற் பயிற்றி வருவதையே நோன்பாகக் கொண்டனர். தமது சீருஞ் சிறப்பும் செல்வமுமெல்லாம் அந் த மனோன்மணியென்ற தமதேக புத்திரிதானென்பது அவர் கருத்து.

சோதிமதி உயர்பெரும் வனப்பினளாய் விளங்கியமையால் அவளையோர் தனிகன் காதலித்துத் தனதில்லக்கிழத்தியாக்கினன். அவர்களுக்கு மனோகரனென்ற ஒரு குமாரனுண்டு. அவன் பீ.ஏ. பரீட்சையிற் சித்தியெய்தியபின் ஓராங்கில கழகத்திற் றலைமையாசிரியனாகக் கடமைபார்த்துக்கொண்டிருக்கிறான். தனது உடன்பிறப்பாளனாகிய சோதிவேலின் குமாரத்திக்கே மனோகரனை மணம் முடித்து வைக்கவேண்டுமென்ற பேராவல் சோதிமதிக்குண்டு. அதற்குத் தந்தையும் மைந்தனுஞ் சம்மதித்த பாடில்லை. "பட்டிக்காட்டுப் பரத்தை யையா நான் கல்யாணம் பண்ணிக் கொள்வது? ஆடவரைக் கண்டுவிட்டால், பூச்சாண்டியைக்கண்டு குழந்தைகள் பயந்து ஒழித்துக்கொள்வது போல மறைந்து விடுவது! வீட்டால் வெளிக்கிழம்பிப்போய்ச் சுத்த ஆகாயத்தின் சுகத்தை நுகர்வதில்லை. ஆங்கிலத்தில் ஒரு அறுப்புந் தெரியாது. தமிழையுஞ் சரிவரக் கற்றுக் கொள்ளவில்லை. பறைக் கறுப்பியை வென்ற பக்காக் கறுப்பி! அதற்குட் கடைகெட்ட தரித்திரம். தற்கால நாகரீகமென்பது என்ன நிறமென்று கூடத் தெரியாது. எனது சிநேகிதர் யாராவது வந்து விட்டால் அவர்களை உபசரியாமல் ஓடோடியும் போய் அறைக்குட் புகுந்து விடுவாள். தரித்தி ரத்திற்கு ஆடையாபரணங்களை வாங்கித்தான் கொடுத்தாலும், காலத்திற்குகந்தவாறு அவைகளையணிந்து கொள்ளவியலாது. இவளை நான் வதுவை செய்து கொண்டு கட்டியழ வேண்டுமென்பதுதான் அம்மாவின் விருப்பம் போலும்! எனது நண்பருமேனையோரும் என்னைக் கேலி செய்து சிரிக்கும்படியாய் நான் ஏன் தான் இடங்கொடுக்க வேண்டும்! சீச்சீ, வேண்டாம் கேவலம் நாகரீகமறியாத இந்த நாட்டுச் சரக்கையா நான் கொள்ள வேண்டும்! ஒருகாலமும் முடியாது." என்று மனோகரன் அடிக்கடி தனக்குள் சொல்லிக்கொள்வது வழக்கம். ஆனால் மனோன்மணியோவெனில் தனது அத்தானாகிய மனோகரனில் ஆழமான காதல் கொண்டிருந்தாள். அவன் மனமுவந்து தன்னை மணந்து கொண்டாற்சரி, அல்லாவிடில் தான் கன்னிகையாகவிருந்தே காலத்தைக் கழிப்பதென மனதில் நிர்ணயஞ் செய்திருந்தாள். அவன் வெளிவெளியாய்த் தன்னைக் கர்நாடகப் பேர்வழியென் றும், தரித்திராதேவியின் புத்திரியென்று மின்னோரன்ன பலவசை மொழிகள் கூறியிகழ்ந்து பேசி வருவதை அவளறியாதிருக்கவில்லை. எப்படித்தான் அவன் அவளை இகழ்ந்து கொண்ட போதும் அவளுக்கு அவன் மீதுள்ள காதல் அற்பமேனும் குறைந்திற்றில்லை. மகத் தான உண்மைக்காதல் யாவையுஞ் சகித்துத் தன் சாதலை வெல்லும்பான்மை வாய்ந்ததன்றோ ! நிற்க,

மனோகரன் இருபத்தைந்தாவது வயதில் தனது மனதிற்குப் பிடித்த மங்கையொருத்தியை மணஞ்செய்து கொண்டான். அவள் பெயர் சுந்தரதேவி. பாரிய தனவந்தனொரு

வனுக்குக் கனிஷ்ட புத்திரியாயுள்ளவள். ஆங்கிலம் நன்கு கற்றுத் தேறியவள். அவள் தமிழன்னையின் தோன்றல்தான். ஆகையால் அவள் தமிழ்ப்பாஷை பேசுவது சகசமென்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதானில்லை. நாலு தமிழ்மொழிகளைச் சரிவரச் சேர்த்து முறைப்படி பேசுவதற்கு அவளால் முடியாது. தமிழென்பது அவளுக்குத் தட்டுப்பாடான விஷயம். ஆகவே ஆங்கிலம் பேசத்தெரியாதவர்களை அவள் அருவருப்பது வழக்கம். கீழைத்தேச ஆங்கில அவதாரம் போன்று விளங்கிய அவள், தாய்ப்பாஷை பேசுவது இழி வெனுங் கொள்கையுடையவளாயிருந்தது நூதனமன்று. தன்னையீன்ற அன்னை வயி றெரிய, இன்னோரந்நிய வன்னையை யணைந்து அவளை மேலாக மதித்துத் தழுவி விளையாடுவது கொடிய வம் த்தனமல்லவா? நமது சுந்தரதேவியும் அவ்வகுப்பினள்தான். அதுமட்டுமா! அவளோர் தற்கால நாகரீகத்தின் தனித்தோன்றல். தற்பெருமை வாய்ந்தவள். கர்வங் கொண்டவள். பகவான்மீது பக்தியில்லாதவள். பணச்செருக்குப் படைத்தவள். ஆனா லும், அரிவையென்னவோ அழகிதான். அதற்குச் சந்தேகமில்லையெனினும் நோய்செறிந்த யாக்கையைக்கொண்டவள். அத்தகைய வனிதை சுந்தரதேவியையே மனோகரன் தனக்கு மனையாளாக்கிக் கொண்டனன். அவனுக்கு வேண்டியவளும் அப்படிப்பட்ட வொருத்திதான். கல்யாணம் முடித்து மாத மொன்றாகிவிட்டது. அதுவரையும் தம்பதிகள் என்னவோ ஒற்றுமை யுடன் தான் வாழ்ந்தனர்போல விளங்குகிறது. வந்ததப்பா சண்டமாருதம்! ஒருவர்க்கொருவர் கருத்தில் வேறுபாடு. ஒருவர் மேலொருவர் சந்தேகம். "கிள்ளுப்பிறாண்டு: நுள்ளுப் பிறாண்டு" அதிருப்தியான பேச்சு வார்த்தைகள் முற்றி, அடிபிடி சண்டைகளாக மாறின. ஓயாத சச்சரவு நிகழ்ச்சிகள்....தனது மனைவியெவ்விதம் நடக்கவேண்டுமென்று மனோகரன் விரும்புகி றானோ, அதற்கு நேர் விரோதமாயும் முற்றும் முரண்பாடாயும் நடந்து கொள்வதே சுந்தர தேவிக்குத் திருப்தி. அவனுக்கு அவள் அடங்கி நடப்பதில்லை. முன்னறிமுகமுள்ள ஆடவரு டன் தாராளமாய்த் தமாஷ்பேசி உடல்குலுங்க நகைப்பதற்குப் பெண் "ஒன்றாம் நம்பர்" பேர்வழி. இது தான் மனோகரனுக்கு ஆகப்பெரிய வயிற்றெரிச்சல். நாணம், மடம், அச்சம், பயிர்ப் பென்னும் லக்ஷணங்கள் வேளைகாலத்தோடே அவளிடமிருந்து செலவு பெற்றுக்கொண்டு போய்விட்டன. மனோகான் பாடசாலையிலிருக்குந் தருணம், சில வேளை களில் அவள் வெளியே போய் வருவதுமுண்டு. கணவனென்ற மட்டு மரியாதையொருசொட்டு மில்லாத அப்பெண்ணில் மனோகரனின் காதல் தலைகாட்டுவ தெங் கனம்? அதுமாத்திரமல்ல, அவள் நடத்தையிலும் அவனுக்குச் சந்தேகமுதயமானது, கால கோடி விஷத்துக்கொப்பாய் அவளை வெறுத்தான். தன் சொந்த மைத்துனியாகிய மனோன் மணியை நினைத்தான். தன்னைத்தானே நொந்தான். கண்ணீருகுத்தான். அவன் மனஞ் சலிப்படைந்து இடிந்து போனது. மனோன்மணியின் அடக்கவொடுக்க மரியாதையான வாழ்க் கையையும், அவள் குணாகுணங்களையுஞ் சீர்தூக்கிப்பார்த்தான். தற்கால நாகரீகப் பேய்க்கு அடிமைப்பட்டிருக்கும் பெண்களை மனைவிமாராக்குவது போன்ற மூடத்தனம் வேறெதுவு மில்லையெனவுணர்ந்தான். கர்நாடக நாகரீகம் படைத்த நாட்டுப் புறப்பெண்களே சகல வகைகளிலுங்குடித்தன வாழ்க்கைக்குகந்தவர்களெனத் தேர்ந்தான். "தனக்கெளியது சம்பந்தம்" என்பதையோர்ந்தான். "பீ. ஏ.," படித்தென்ன! உபாத்திமைத்தொழில் புரிந்தென்ன! அநுபவமல்லவா மக்களுக்கு அவசியமாய் வேண்டப்படுவது! இப்போது தான் மனோகர னுக்கு அநுபவம்-அறிவுஆற்றல் முதலியன உதயமாயின போலும்! அநுபவமே, சிறந்த அறி வையும் நிறைந்த ஆற்றலையுமளிக்கு மோர் தனிப்பெருங்கருவியாகும்.

செல்வி மனோன்மணி தனது சிறு குடிசையில் விசனமே உருவெடுத்தாற் போன் றிருந்தாள். ஆயினுந் தனது கடமைகளிற் கவனஞ் செலுத்தாதிருக்கவில்லை. தான் முழுமன தோடுங் காதலித்துவந்த மனோகரன் வேறொரு பெண்ணைப் பாணிக்கிரகணஞ் செய்து கொண்டது அவளுக்கு உண்மையிற் பெரிய கவலை தான். அவன் தன்னைப் பாரியாக்கிக் கொள்வா னென்ற திடமான நம்பிக்கையவளுக்கிருந்திருக்கவில்லையாதலால் அவள் எமாற்றமடைய ஏது வில்லாதிருந்தது. மனதிற்குள் வருத்தந்தான். வகுத்தான் வகுத்தபடியே சகலமும் நடைபெறவேண்டிய நிருபமிருக்கையில் வருந்தித்தான் ஆவதென்ன? பக்குவ தசையடைந்த பராயந்தொட்டுத் தனதுள்ளத்தைக் கவர்ந்த கள்வன்மீது அவளுக்கேற்பட்டி ருந்தகாமல், அவளையுமறியாமல் ஒருபுறம் மலை போல வளர்ந்து கொண்டுதான் போகிறது. மறுபுறமாய் வியாகூலப்பெருக்கு அவளைச் சூழ்ந்து நின்று வதைத்து வதைத்து ஆழ்த்திக் கொண்டிருக்கிறது. அவளின் மனோநிலையை யாரறியவல்லார்! -அறிந்துதான் - ஆவ தென்ன? - மனோகரன் மணம் முடித்துக்கொண்டபின் சொற்ப சம்பளம் பெற்றுவரும் ஒரு குமாஸ்தாவை மனோன்மணிக்கு வரனாக வரிக்க அவள் பெற்றோர் முன்வந்தனர். மனோன்மணி தான் இல்வாழ்க்கையில் ஈடுபடுவதில்லையென்று ஒரே பிடிவாதமாய்ச் சாதித் தனள். அது காரணமாக அவள் பெற்றார் மனமுடைந்தவர்களானார்கள். மனோகரனு மிச் செய்தியையறிந்து மட்டற்ற மனத்துயரடைந்து வருந்தினான். தனது இன்னுயிர்க் காதலன், கொண்ட பெண்டின் குறும்புத்தனத்தாற் கொடிய துன்பதுயரங்களையனுபவித்து வருகிறா னென்ற செய்தி மனோன்மணியின் செவிக்கெட்டியது. அதைக் கேட்ட நேரம் தொடக்கம் நெருப்பிடைப்பட்ட புழுவைப்போன்று துடிக்கலானாள். அனலிடுமெழுகென அவளுள்ளம் உருகியது. அவனனுபவிக்குந் துன்ப துயரங்களையெல்லாம், தானேயனுபவிப்பது போன்று வருந்தினாள். தனது காதலனைத் துன்புறுத்துக் காரிகைமீது அவளுக்குக் கோப முங் குரோதமுமொருங்கேயெழுந்தன. அவள் மீது தான் குரோதங் கொள்வதால், தனது காதலனுக்கேற்படும் பயனெதுவுமில்லையெனவுணர்ந்து, அப்பெண்மணியைத்திருத்தி, மனோகரனுக்கு ஆனந்தத்தையும் மனமகிழ்ச்சியையும் மெய்யின்பத்தையுமவள் மூலம ளிக்கவேண்டுமென நிர்ணயஞ் செய்தாள். அது எப்படியாகும்? அனேக புத்திமதிகளைப் புகட்டி அடிக்கடி அவளுக்கு அநாமதேயக் கடிதங்களையெழுதிவிடுத்தாள். அவைகளில் பெண்கள் புருஷருக்கு அடங்கி நடக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், தங்கள் உ யிரினும் பெரிதாய் அவர்களை மதித்து அன்பு பாராட்ட வேண்டிய கடமையைப்பற்றியும், அவர்களைக் கண் கண்டதெய்வமாய்க் கொண்டாடவேண்டு மென்பதைப்பற்றியும், கஷ்ட துன்பங்கள் மத்தியில் அவர்களுக்கு ஆறுதலளிக்கவேண்டிய முறைகளைப் பற்றியும், இன்னும் பல நீதிகளை யொழுக்கங்களைப் பற்றியும், விஸ்தரித்தெழுதிக்கொண்டு வந்தாள்.

சுந்தரதேவிக்குத் தமிழ்ப்பாஷை தெரிந்தாற்றானே அவள் அவைகளை வாசித்துணர முடியும்! அக்கடிதங்களை அவள் அசட்டையாய் எங்கேயாவது வைத்து விடுவாள். மனோகரன் அவைகளையெல்லா மெடுத்து வாசித்துவிட்டுக் கவனமாக வைத்துக்கொள் வான். அவைகள் யாரால் எழுதப்படுவன வென்பதை அவன் நாளடைவிற்றெரிந்து கொண டான். அப்போது அவன் மன நிலைமையெவ்வாறிருந்திருக்கக்கூடுமென்பதை நேயர்களே எளிதில் விளங்கிக்கொள்வார்கள். தானெழுதிய கடிதங்கள் சுந்தரதேவியின் மனதில் நல்லு ணர்ச்சியை யேற்படுத்தவில்லையென்பதைத் தெரிந்தபோது, தன் காதலனைப் பற்றிய விசனம் மனோன்மணிக்குப் பெருகத்தொடங்கியது. கடமைகளிற் கருத்தற்றாள். மனோ வியாதியாற் பீடிக்கப்பட்டாள். ஊணுறக்கமின்றித் துரும்பாக மெலியலானாள். அந்த நிலைமை

யிலும், சுந்தரதேவியை நல்வழிப்படுத்தித் தன் காதலனை யின்ப வாழ்க்கையில் வழி நடத்திக்கொள்வதற்கு வேறேதாவது உபயந் தட்டுப்படுமாவென்று சிந்தித்துக்கொண்டேயிருந் தனள் எம் மெல்லி நல்லாள்.

மனோகரன் தான் உயிருள்ள மட்டுஞ் சுந்தரதேவியுடனிருந்து நித்தியவேதனையை அடையத்தான் வேண்டுமாவென்று தனக்குள் எண்ணமிடலானான். நவீன நாகரீகத்தில் ஆசையை வைத்ததாகிய அந்த ஒரே ஒருகுற்றத்திற்காக, உயிருள்ள மட்டும் வருந்தவைப்பது தெய்வத்திற்கடுக்குமாவென நொந்தான். கடைசியாக அவன் ஒரு முடிவிற்கு வந்தான். அந்தத் தகுதியற்ற பந்தத்திலிருந்து எதுவிதமுந் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமென் றெண்ணியவனாய், அவ் விஷயத்திலவசர முயற்சிகளெடுக்கலானான். பகீரதப் பிரயத்தனங் களெடுத்துக்கொண்டான். அவனது தீவிர முயற்சிகளிற் பலனில்லாதிருக்கவில்லை. சுந்தர தேவி தனது பழைய நண்பனொருவனுடன் அந்தரங்க நட்பு வைத்திருந்த விஷயம், மாறு வேடம் பூண்டு, துப்பறியுந்தொழிலிலீடுபட்டுக் கொண்டிருந்த மனோகரனுக்கு முதலாவதாகத் தெரிய வந்தது. அதன் பின் அவன் வேட்டைநாய் போல் மணம் பிடித்து, பக்காத் திருடனைப் போற் பதுங்கிப் பதுக்கித் திரிந்து அவர்களைக் கவனிக்கலானான். ஒருமாத காலத்திற்குள் அவன் அவ்விருவரையும் நாலைந்து படம்பிடித்தான். அவைகளில் மூன்று அவர்கள் தனிமையிற் சோடியாய் வீற்றிருந்து சல்லாபிப்பது. நாகேந்திரமென்ற அந்தவாலிபன் மடி மீது, சுந்தரதேவியிருந்து அவனுக்கு முத்தங்கொடுப்பது ஒன்று. கடைசியாய் எடுக்கப்பட்ட படத்தை அவன் நமக்குக் காண்பிக்கவில்லை. அதிலேதோ விசேஷ விபரீதமிருப்பதென்பது தான் நமது யூகமாகும்.

மனோகரன் வெகு பொறுமையுடனிருந்து யாவையுந் திருப்திகரமாய்ச் முடித்துக் கொண்ட பின், மனதைக்கலைத்துக் கொண்டு வழக்கம்போலத் தன் வீட்டிற்குச் சென்றான். அப்போது இரவு சுமார் 8 மணியிருக்கும். சுந்தரதேவி வெளி “விறாந்தை” யிலிருந்தும் சாய்மான நாற்காலியொன்றிற் சாய்ந்த வண்ணமிருந்தனள். மனோகரன் அவள் முன்பு சென்று, ஒவ்வொரு படமாக அந்தப் புகைப்படங்களையெல்லாம் அவளுக்குக் காண்பித்த னன். அவளதைச் சற்றேனுஞ் சட்டைசெய்யாதவள் போல், அவ்விடமிருந்தெழுந்து அறை யொன்றிற்குட் சென்று விட்டாள். ஒரு இராக்ஷசச் சிரிப்பு! அதைத்தொடர்ந்து அட்டகாசமான உறுமலொன்று! இந்தச் சேஷ்டைகள் மனோகரனிடமிருந்து வெளிப்பட்டன. அடுத்தபடியாய் அவன் அவளைத் தொடர்ந்து அறைக்குட்சென்று, அவளது கூந்தலைப்பற்றியிழுத்து வந்து அவளை வெளியே தள்ளி, ஓர் உதைகொடுத்து, “ஓடு! உன் வீட்டை நாடியோடிப் போய்விடு. உயிரவேண்டாமாயின் எனதில்லம் நாடு. நாளைக்கு நல்லவேளை பார்த்து நாகேந்திரனை நாயகனாக்கிக் கொள்ளத் தவறிவிடாதே. உன்னைப்போன்ற பெண்களிருக்குமட்டும் கூற்று வனுக்கு வேலை சுலபந்தான்” என்று கோபாவேசத்துடன் குமுறினான். அவள், “தலை தப்பி யது தம்பிரான் புண்ணியமென்று நினைத்துக்கொண்டு, அரைமைல் தூரத்திற்கப்பாலுள்ள தன் மாளிகையைநோக்கி விரைந்து சென்றனள். அடுத்தநாள் விவாகரத்து வியாஜ்ஜியம் மனோகரனாற்றொடரப்பட்டது. இரண்டு மாதங்களின் பின் அவ்வழக்கு விளங்கப்பட்டு, புகைப்படங்களின் சாட்சியை முக்கியமாகக் கொண்டு, கஷ்டமின்றிக் கல்யாணந் தள்ளும்படி யானது. நாகேந்திரன் அவளை மணக்க மறுத்துவிட்டான். “மனோகரனின் மனைவியாயி ருந்து கொண்டு, அவனையே மாற்றி விட்டு, என்னுடன் அந்தரங்க நட்பு வைத்திருந்த நீ, என்னை மணம்புரிந்து கொண்டபின் இன்னொருவனுடன் கள்ளக்காதல் கொள்வது, நடவாத

காரியமாகுமா? உன் பணத்தைக் கொண்டுபோய்க் குப்பையில் வீசு. உன்னையென் மனைவியாக ஒருபோதுமே யேற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூறி அவளை நிராகரித்து விட்டான். அவள் தற்சமையம் ஓர் தனக்காரத்தசியாயிருந்து வருகிறாளென வதந்தியொன்று உலாவுகிறது.

வியாஜ்ஜியத்தில் மனோகரன் ஜெயமடைந்ததுதான் தாமதம். ஓடினான்! எங்கே? வேறெங்கே! மனோன்மணியின் குடிசையை நோகி ஒரு கடிதக்கட்டுடன் - ஓடினான். முற்றத் திற்போனதும், "மனோன்மணீ! என் காதலிளங்குயிலே!! இக்கசடனை மன்னித்து உன் திவ்வியகாட்சியையளிப்பாயாக!!!" என்று இரந்து கூறி நின்றான். கலீர் கலீரெனச் சிலம்பொலி புலம்பியார்ப்ப, தலையைக் கீழேகவியவிட்டு, அன்னமென நடந்து வந்து அவன் முன் அம்மானிளம்பேடு பிரசன்னமாயினள். சித்தப்பிரமை கொண்டவன் போல், அவன் மனோன் மணியண்டை யோடிப் போய், அவளைக் கட்டியணைத்து ஆலிங்கனஞ்செய்து, ஆனந்த பாஷ்பஞ்சொரிய அவளுக்கு முத்தமார் பொழிந்து கூத்தாடினன். தான் செய்த பிழைக ளெல்லா வற்றையும் பொறுத்துத் தன்னை நாயகனாக ஏற் றுக்கொள்ளுமாறு பெரிதுமிறைஞ்சி வேண்டிக்கொண்டான். அவள் சுந்தரதேவிக்கெழுதிய கடிதக்கட்டையவளிடங்கொடுத்து, நீ என்மீது வைத்துள்ள தெய்வீகக் காதலை இக் கடிதங்கள் மூலமாகவே நான் அறியலானேன். கண்மணீ! உன்னை நான் என் பெண்தெய்வமாகவே சதா கொண்டாடுவேனென்பதை உறுதியாய் நம்பவாயாக! உனது அப்பழுக்கற்ற குணங்களே என்குபேர செல்வம். களங்க மற்ற உனது மெய்க் காதலே எனது சீதனம். என் காதற் களஞ்சியமே! விலைமதிக்க முடியாத மாணிக்கமொன்றை நான் கண்டடைந்தேன். அதனால் நான் அடையும் ஆனந்தத்திற் கிணையாய் வேறெதையும் ஒப்பிடமுடியாது. எனக்கு உலகாநுபவத்தையூட்டிய தனிப் பெருஞ் சிறப்பு உனக்கேயுரியது" என்று கூறி ஆனந்தத் தாண்டவமாடினன். மனோன் மணி மௌன நிலையிலிருந்துகொண்டு பேரின்பக் கண்ணீர் பெருக்கினள். சில நாட்களின் பிறகு அவர் களின் திருமண வைபவம் இனி து நிறைவேறியது. மனோன்மணி தன் கணவனைக் கண் கண்ட தெய்வமாய் மதித்துக் கொண்டாடி வந்தனள். குடித்தன வீரம்படைத்த குணமுள்ள தாரத்தைப் பெற்றதால், மனோகரனின் சீவியம் ஒளிபெற்றது.

மாளிகையைச் சூழ்ந்துள்ள மா பெரும் பூஞ்சோலை, அதில் இருகாதலர். அதுவும் விவா கமாகிய காதலர். ஆனந்தமயமாயும் அன்பின் சொரூபமாயும் விளங்குமக் காதலரி ருவரும் அந்த நந்தன வனத்திலிருந்து இன்பமாய் வார்த்தையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யார் தெரியுமா ? அவர்களே நமது மனோகரனும் மனோன்மணியுமாவர். "தத்தக் கப்பித் தக்க" வென்று தாண்டித் தாண்டி அவர்கள் முன் ஆண் குழந்தையொன்று சிரித்த முகத்துடன் வந்து கொண்டிருக்கிறது. இருவரும் அதற்கு நேராக ஓடிச்சென்று, அதன் கைகளை யொவ்வொன்றாய்ப் பற்றிக் கொண்டு, ஏககாலத்தில், - எங்கள் செல்வம்!" என்று மகிழ்ச்சி ததும்பக் கொஞ்சிக் கூறி, அவர்கள் குழந்தையாகிய அந்தப் பாலனுக்கு மாறி மாறி முத்தமீந்து உவகை பூத்தனர். முத்தத்தாலேற்பட்ட ஆக்கினை பொறுக்கமுடியாமல் செல்வன் சிரித்தபடி விட்டான் அடி! ஒன்று அப்பனுக்கு. மற்றது அம்மைக்கு. ஒரே சிரிப்பு! ஒரேயானந்தம்!! ஒரேயார்ப்பரிப்பு!!! "இல்லறமல்லது நல்லறமன்று"

என்னே இல்லற மாண்பு!

ஈழகேசரி - 07.06.1936, 14.06.1936

செ. சந்திரபாலகணேசன்

1938 இல் நற்பவளத் திரட்டு சிறுகதைத் தொகுதி தந்த செ. சந்திரபால கணேசனும் ஈழகேசரியில் சிறுகதைகள் பலவற்றை எழுதிய சந்திரபாலகணே சனும் ஒருவரா என்பதை அறிய முடியவில்லை. இவரின் சிறுகதைகள் போதனைச் சிறுகதைகளாக அமைந்தன. சாதியத்துக்கு எதிரான குரலாக இவருடைய கமல தீபம் அல்லது நாற்றச் சிப்பியின் நல்லமுத்து சிறுகதை அமைகிறது.

- *கமலதீபம் அல்லது நாற்றச் சிப்பியின் நல்ல முத்து*

கமல தீபம் அல்லது நாற்றச் சிப்பியின் நல்லமுத்து

செ.சந்திரபாலகணேசன்

"நான் கூறுவதை நீங்கள் ஒருபோதுமே கவனிப்பதில்லை. இவ ளென்ன கூறுவதென்று நினைக்கின்றீர்கள் போலும். நாம் செல்வந்த ராய் இருந்தால் அதனிமித்தம் மற்றவர்களை அடிமைப்படுத்த முயல லாமா? அநியாயமாய் வறியவர்கள் மீது கோபிக்கலாமா? இச் செய்கை களைக் கடவுள் ஏற்பாரா? உங்கள் செய்கையை உங்கள் மனச்சாட்சி பிழை என்று தானும் கூறவில்லையா? வெள்ளியிட்ட கால்கட்கு வெறுங் கால்கள் அடிமையா? இன் சொற்களாலும் நற்செய்கைகளாலுமன்றி, வன் சொற்களாலும் வன்செய்கைகளாலும் இவ்வுலகம் எப்போதாவது மகிழ்ச்சியடையுமா? உங்கள் முன்னிலையில் தினமும் வந்து வெறுங் கையுடன் வீடுசெல்லும் ஏழைகட்கு நீங்கள் சொல்லியும், செய்தும் வருகிற அநியாயங்களைப் பன்முறை பார்த்திருந்த படியாற்றான் இவற் றையெல்லாம் சிறியவளாகிய நான் தங்கட்குக் கூறமுற்பட்டேன். என் னையும் நான் கூறி யவற்றையும் எள்ளி நகையாடாது உங்கள் உள்ளத் திலுறையச் சிறிதிடங் கொடுங்கள்," என்று கூறிக் கொண்டே வயது 16 நிரம்பாக் கமலம் தன் தந்தை முன்னிலையில் கைகூப்பி நின்றாள்.

துர்நாற்றமுடைய சிப்பிக்குள் அவதரிக்கும் விலைமதிக்க முடியாத முத்தைப் போல் நம் கமலம், செல்வமும், பெருமையும், கோபமும், தன்னலமும், தீண்டாமையும் ஒருங்கே யமையப் பெற்ற விஸ்வரூபர் என்னும் தனவந்தருக்குப் புத்திரியாய் அவதரித்தாள். நம் விஸ்வரூபரிடம் ஈகை என்னும் குணம் காவோலைச் சாதான். ஏழைகளைக் கண்டாலிவர் முகம் இஞ்சி யுண்ட குரங்கு முகம் போலாய்விடும். "கொடிது! கொடிது! வறுமை கொடிது! அதனிலும் கொடிது இளமையில் வறுமை!" என்னும் ஆன்றோர் வாக்குக்கிணங்க, இளமை வறுமையால் பீடிக்கப்பட்ட அநேக சிறுவர்களும் சிறுமிகளும் தினமும் வந்து நல்லுண வையே அறியாத தம் வயிற்றை எக்கிக்கொண்டு அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் ஒருமுறை இருமுறையல்ல் பன்முறைபுரிவார்கள். ஐயோ! நம் விஸ்வரூபரை விட்டு நீங்கும் போது இச்சிறார்கள் உடன் கொண்டு போவதெதென்று - நினைக்கின்றீர்கள்? சோற் றையல்ல, சொர்ணத்தையல்ல, கந்தையையல்ல, காசையல்ல, மணியையல்ல, வெள்ளி யையல்ல நம் விஸ்வ ரூபரின் திருவாயினின்றும் புறப்படும் இன்சொற் சிறிதும் கலப்பற்ற வன் சொற்களையே.

"உனக்கு உலகத்தின் மாதிரி ஒன்றுமே விளங்காதுமேனை. சும்மா நாலாறு புஸ்தகங்களையும் இரண்டொரு பத்திரிகைகளையும் கரைத்துக் குடித்து இரண்டொரு சோத னைகளைப் பாஸ் செய்துவிட்டு எனக்குப் புத்தி புகட்ட முன்வந்து விட்டாய். எங்கட் கிருக்கும் பணத்திற்கு பிறரை நாம் எவ்வளவு ஆட்டாட்டி வைக்கலாம். பிறர் எம்மை எவ்வளவு விதமாய் நடத்தவேண்டும். இப்போஎல்லாம் குறைந்து கொண்டேவருகிறது. என்னக் கண்டால் கைகட்டி வாய் பொத்தி, தெருக்கானில் ஒதுங்கும் தோடி நாகன் நேற்று மிக ஆடம்பரமான உடையுடன் நான் வருகிறேன் என்றும் கவனிக்காது கையில் குடை பிடித்துக்கொண்டு எதிரே வந்தான். நான் அவனை நோக்கி, "நீ என்ன பிள்ளையடா? (என்ன ஜாதி) என்றேன். அதற்கவன் "நான் ஆண்பிள்ளை, என்று பதிலளித்துக் கொண் டே சென்றுவிட்டான். நேற்று நீ கல்லூரியிலிருந்து வரும் பொருட்டு மோட்டாரனுப்ப நீ உன்னுடன் படிக்கும் தோட்டிச் சிறு மிகளையெல்லாம் அருகிருத்தி வந்தாய். குளித்து விட்டு வீட்டிற்குள் நுளையச் சொன்னதற்கு என்னைப் பரிகாசஞ் செய்கிறாய். நேற்றுக் காலையில் கழுவின இரதத்தை உன்செய்கை யாலல்லவா நேற்றுப் பின்னேரமும் கழுவுவித்தேன். உன் ஜாதி என்ன? உனக்கிருக்கும் செல்வமென்ன? நீ இனிமேலிருக்கப்போகும் நிலைமை என்ன? இவற்றையெல்லாம் நீ கவனியாது பள்ளிக்கூடத்தில் ஒன்றாய்ப் படிப்பதற்காக அத்தோட்டிச் சிறுமிகளை உன் அருகே அமர்த்தி வந்தாயே. நீ வரும்போது உன் உற்றார், உறவினர், சிநேகிதர் எத்தனை பேர் உன்னை உற்று நோக்கியிருப்பார்கள், அவர்கள் முன் நான் நாளைக்கு எப்படி முளிப்பது? சோதனை முடியவும் உன்னை ஒருவரின் கையில் ஒப்படைக்க முயற்சி செய்துவரு மிக்காலத்தில் நீ ஏதோ விபரீதமாய் நடக்கத் துணிந்து விட்டாய்? என்று கூறிக்கொண்டே சாய்வு நாற்காலியை விட்டெழுந்தார்.

தந்தையே! சிறிதுட்காருங்கள். தங்கள் வார்த்தைக்கெதிர்வார்த்தை பகர்கிறேன் என்றென்மேல் சினம் கொள்ளன்மின். நம்மவரிடம் படிந்திருக்கும் சாதி வித்தியாசம் பாராட்டுங் குணத்திற்குச் சாவுமணியடிபட்டுவிட்டது. தீண்டாமை என்னும் கொடிய பிசாசை, காந்தி முனிவன் என்னும் மந்திரவாதி சாத்வீகமென்னும் மாத்திரைக் கோலால் ஓட்டிக் கொண்டே வருகிறார். எம்மிடம் பணமிருப்பின் அது எம்மோடு. அதற்காக ஏழைகளை அடிமைப்படுத்திக் கட்டி ஆழ முயலலாமா? ஏழைகளை வன்சொற்களால் வையலாமா?

எத்தனை கஷ்டங்களையவர்கள் அனுபவிக்கவேண்டியிருக்கிறது? அக்கஷ்டங்களை நம் போன்றோர் ஈகை, தயை, அன்பு, பொறை, இன்சொல் முதலியவற்றால் குறைக்காது எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல் வன்சொற்களாலும் இரக்கமற்ற செய்கைகளாலும் அன்னவர்களின் மனத்துயரைக் கூட்டலாமா? ஏழைகளைக் கண்டால், கடு கடு! சுடு சுடு! வெடு வெடு! என்கிறீர்களே. வறுமையும் செல்வமும் ஒருவர் பங்கல்ல குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்த முடியுடைமன்னரும் நடையால் மெலிந்து ஓர் ஊர் நண்ணுவதும், அறத்தொடு பிச்சை கூவியிரந்தவர்கள் அரசோடிருந்தரசாள்வது மியற்கையாகலின் நாம் நம்மிடமிருக்கும் பணத்தை ஒருபொருட்டாய் எண்ணலாமா? மேலும் பிறக்கும்பொழுது நாம் கொண்டுவர வில்லை. இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை. இடை நடுவில் கிடைத்த இச்செல்வம் சிவன் தந்தது. கற்றகல்வி கற்றபடி ஒழுகுதலினால் பயன்படுதல்போலப் பெற்ற செல்வமும் ஈகையினாலல்லவா சிறப்புறும். நம்மிடம் செல்வமிருப்பின் அஃதைச் சீரிய முறையில் செலவுசெய்து என்று மழியாப் பேரின்பத்துக் கேதுவாய புண்ணியத்தைச் சம்பாதிப்பதை ஒழித்து, "பணத்தைக்காக்கும் பூதம்" என்னு மிழிவுரையைச் சம்பாதிக்க முயலலாமா? என்று தொடர்ந்து கூறுவதற்கிடையில் டெலிப்போனில் (Telephone) மணியடித்தது. உடனே நம் கமலம் போய் ஏதோ சிறிது நேரம் பேசினாள். "யாரது? என்ன சம்பாஷித்துக் கொண்டீர்கள்", என்றார் நம் விஸ்வரூபர். "அப்பா! இப்போது என்னுடன் பேசியவர் தான் ஸ்ரீமதி விமலராணி. ஏழைகள் கஷ்ட நிவாரண சங்கத்தலைவி. "சமத்துவ ராணி" "பத்திரிகாசிரியை" "பணப் பித்தர்க்குச் சவுக்கடி" என்னும் அருமை நூலை எங்கட் கீந்த செல்வி. தீண்டாமை ஒழிப்புச் சங்கக் காரியதரிசி. ஏழைகள் கஷ்ட நிவாரண சங்கத்திற்கு எம் போன்ற தனம் படைக்கப் பெற்றோரே அங்கத்தினராயிருந்து ஊழியஞ் செய்ய விரும்புகிறேன் என்று நேற்று ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்கவர் சம்மதித்திருக்கிறார். நான் ஏழைகள் கஷ்ட நிவாரண சங்கத்திற்கு ரூபா நாற்பதும் தீண் டாமை ஒழிப்புச் சங்கத்திற்கு ரூபா முப்பத்தைந்தும் மாதாமாதம் கொடுத்து வர உடன்பட்டிருக்கிறேன். என் சகோதர சகோதரிகள் நாளொன்றிற்கு ஒரு நேர உணவு தானுமில்லாது பட்டினிப் பேயாலாட்கொள்ள நான் மாத்திரம் ஆறு நேரமும் விலாப்புடைக்க உண்டு மோட்டார்ச் சவாரி செய்ய விரும்பவில்லை, என்று கூறி முடிக்கவே நம் விஸ்வரூபருக்கு கோபமும் ஆத்திரமும், துக்கமும், வெட்கமும், மாறி மாறித்தோன்றித் தாண்டவமாடின.

என் செய்வார் பாவம். ஒரேயொரு புத்திரி. கண்டித்தால் மோசம் விளையுமென் பதுமவர் உள்ளத்தில் நல்ல வேளையாய் உதிக்கவர் கடு கடு! சுடு சுடு! வெடு வெடு! என்று ஏதேதோ உளறினார். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்றபடி தங்கச்சியொன்றுக்கு மூளை மாறியோடுகிறது என்று கூறிக்கொண்டே உட்சென்று அங்கிருந்த பணியாட்களையும் அநாவசியமாய் ஏசி, இரண்டொருவருக்கு இரண்டோரடியுமீந்து விட்டுத் தன் அறைக்குட் சென்று முகம் குப்புறப்படுத்துக்கொண்டார். நம் கமலமும் வழக்கம்போல் ராட்டையில் நூல் நூற்கச் சென்றுவிட்டாள். "நீங்கள் தலையால் நடந்து என் உயிரிருக்க ஊனை உண்டாலும் என் மனச்சாட்சிக்குப் பிழையற்ற ஈகை என்னும் அருங்குணத்தை அகற்றவே மாட்டேன்" என்று கூறிக் கொண்டே நம் செல்வி கமலம் தினமும் தூய வாழ்க்கையாகிய ஈகை வாழ்க்கையிலீடுபட்டு அதைச் சிறப்புற நடாத்திவருகிறார். விஸ்வரூபர் என் செய்வார்: ஒரேயொரு பிள்ளை. ஏதா வது இறுக்கிப் பேசினால் பிழைவரும் என்றெண்ணி வாழா இருக்கிறார். வாழ்! நம் கமலம் வாழ்க! அம்மணியைப் பின்பற்றுவோர் எல்லாரும் வாழ்க!

"குற்றங்களைந்து குணமழைந்து கொளல், கற்றறிந்த பயனுடையார் கடன்."

●

ரா.சு

ரா.சு என்ற புனைபெயரில் எழுதியவர் பெயர் அறியுமாறில்லை. இவர் ஈழ கேசரியில் எழுதிய 'மலாயாக் கடிதம்' ஈழத்தவர் யுத்த காலத்தில் மலாயா, சிங்கப் பூரில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வெளிப்படுத்துகிறது. சம்பவங்களின் கோர்வையாக இச்சிறுகதை எழுதப்பட்டுள்ளது.

❖ மலாயாக் கடிதம்

மலாயாக் கடிதம்

ரா.சு

I

ஆபீஸ் பையன் கடிதங்களையெல்லாம் ஒவ்வொருவருடைய மேசைகளிலும் வைத்துச் சென்றான். அவசர அவசரமாக எனக்கு வந்த கடிதங்களைப் புரட்டினேன். ஒன்று சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தது. ஒரே குதூகலம். என்னருமைச் சகோதரன் கடிதந்தான் அது. கையெழுத்து, விலாசம் எல்லாவற்றிலுமிருந்து அறிந்து கொண்டேன். சிங்கப்பூரைப் பிரிட்டிஷார் திரும்பவும் பெற்ற நாட்தொடக்கம் ஆவலுடனும், ஏக்கத்துடனும், உற்றார், உறவினர்களின் கடிதங்களை யாழ்ப்பாணத்தின் ஒவ்வொருவரும் காத்திருந்த காலமல்லவா?

சிலர் தந்தி கொடுத்திருந்தார்கள். சிலர் ஆகாய விமானங்களில், சண்டைக் கப்பல்களில் வந்த ஆங்கில நண்பர்கள் மூலம் கடிதங்கள் கொடுத்துவிட்டிருந்தார்கள். அவற்றால் ஊரில் ஒரே அமர்க்களம். "குசு குசு" பேச்சுக்களுக்கு எல்லையில்லை. "சிங்கப்பூரில் அநேகர் இறந்து விட்டனராம். சிலருக்கு கால் இல்லையாம். சிலரை சீனக்கொள்ளைக் கூட்டத்தினர் தூக்கிச் சென்றுவிட்டனராம். சிலரை "கொமியூனிஸ்" கட்சியினர் கொன்றுவிட்டார்களாம், ஜப்பானிய அதிகாரவர்க்கத்தார்

சிலரை சித்திரவதை செய்துவிட்டனராம். பலர் சிறைச் சாலைகளில் உணவு, உடையின்றி வாடி வதங்குகின்றனராம். வேறு பலர் சுபாஸ்போஸின் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்களாம். இப்படிப் பல கதைகள்.

பஞ்சம், நோய், கொலை, களவு, நரசோரம், வதை என்பனவெல்லாம் அந்த நாட்டில் மலிந்து கிடக்கக் கேட்ட யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள், தங்கள் உற வினர்களைப் பற்றி கவலைதானே. விவாகம் செய்தவர்களையெல்லாம் பட்டாளத்தில் சேர்த்துவிட்டார்களாம். சேரமறுத்தவர்களுக்கெல்லாம் கடும் தண்டனை என்று கேள்விப் பட்ட எனக்கு அண்ணரின் கடிதத்தை உடைத்து வாசிக்கவும் மனம் கூசியது. அடுத்த மேசையிலிருந்து வேலை செய்த நண்பன் கணபதியைப் பார்த்தேன். அவரும் கடிதங்களு டன் பிசைந்து கொண்டிருந்தார். ஆம், மலாயக் கடிதங்களுடன்தான்.

அண்ணரின் கடிதத்தை வாசித்ததில் எனக்கு ஒரு அளவிற்குத் திருப்தி. ஜப்பானியர் விவாகஞ் செய்யாதவர்களையெல்லாம் பட்டாளத்தில் சேர்க்கிறார்கள் என்ற பீதி அங்கும் இருந்ததாம். உடனே யாழ்ப்பாணத்தாரெல்லாம் சேர்ந்து ஓர் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார்களாம். அகப்பட்ட பெண்ணுக்கும் வசதியான இளைஞருக்கும் விவாகம் செய்து வைப்பதென்பதே தான் இவ்வொப்பந்தம். பெண் பெற்றவர்கட்கெல்லாம் பெரிய சந்தோஷம். "இருந்தாலும் இருந்தோம். உணவு, உடைக் கஷ்டம். குண்டுவீச்சுப் பயம். அதிகாரவர்க்கத் தின் கொடுமை, நோய், துன்பம், கொள்ளை, கலக்கம் எல்லாம் அனுபவித்தோம். காரிய மில்லை. யாழ்ப்பாணத்தில் எங்கள் உறவினர்களை எண்ணி ஏங்கினோம். இப்போது சீதன மில்லாமல் வசதியாக எங்கள் பெண்களுக்கு விவாகம் வாய்ந்தனவே. யாழ்ப்பணத்தில் சென்று அலைந்து தாலி, கூறை, கல்யாணச் செலவு, மாப்பிள்ளையின் தகப்பன் கடன், தாய்க்கு நகை, சகோதரியின் சீதனம் என்ற இன்னோரன்ன வரிசைகளைக் கொடுத்தும் ஒரு நல்ல மாப்பிள்ளை எடுக்க முடியுமோ என ஏங்கித் தவித்தோம். இறைவன் கருணை கூர்ந்து சவால்களுக்கு இந்த ஊரில் இவ்வளவு கஸ்ரங்களுக்கிடையில் இந்த நன்மையேனும் செய்தாரே" என்று ஏதோ ஆறுதல் அடைந்தனராம். ஒரு நாளைக்கேனும் எங்கள் பிள்ளைகள் சந்தோஷமாய் இருந்தால் போதுமென்பதே அவர்களின் சித்தாத்தம். அண்ணன் கல்யாணமும் இந்த அழகில் நடந்தேறியதாம்.

நல்ல காலம், எங்கள் தகப்பனார் இறந்து போனார். சீதன விஷயம் அவர்களின் வயிற் றெரிச்சலை கிளறியிருக்கும். ஊர், சனம், சாதி என்பவற்றை அவர் சகித்துக் கொள்ளார். நிச்ச யமாக அண்ணரை திட்டிக் கடிதம் எழுதியிருப்பார். பெண்ணுடன் யாழ்ப்பாணம் வரவிடு வாரோ என்பது ஒரு பிரச்சினையாகிவிடும். தாயார் புறுபுறுப்பார். "பிறகு சண்டை பிடித்தாலும், புது மருமகளைக் காண எந்தப் பெண்ணுக்குத் தான் பிரியமிராது" எனக்கு உள்ளூர மகிழ்ச்சி. வேறு ஒன்றுமில்லை. அண்ணரைச் சாட்டி பிற்போடப்பட்ட எனது கலியாணத்திற்கு "இனி என்ன தடை" என்பதுதான். இந்த மகிழ்ச்சியில் கந்தோர் வேலை நடந்து கொண்டிருந்தது. மத்தியான லீவு கணபதியை அழைத்துக் கொண்டு வழக்கம் போல, ஆனந்தபவன் ஹொட் டலுக்கு கிளம்பினேன்.

I

நண்பன் கணபதி கடிதம் வாசித்து முடிந்தபாடில்லை. அவன் மனங்கலங்கிய நிலையை முகம் வடிவாகக் காட்டியது. அவனுக்கும் அதே மலாயக் கடிதம்

சகோதரியிடமிருந்து வந்தது. அவனின் ஒரே சகோதரி தையல் நாயகியை நான் அறிவேன். நாங்கள் இந்துக்கல்லூரியில் படிக்கிறகாலம் கணபதியுடன் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி செல்வேன். உதைப்பந்தாட்டக் கோஷ்டியில் நாங்கள்ளிருவரும் சேர்ந்திருந்தோம். கணபதிதான் அவ்வருடத் தலைவன். அவ்வருடம் சீனியர் பரீட்சையைப் பற்றி எங்களுக்கு அக்கறை குறைவு. சம்பத்திரிசியார் கல்லூரியுடன் நடக்கும் பந்தாட்டத்தில் வெற்றி எப்படி யும் எடுக்கவேண்டுமென்று தான் அவர் ஐப்பசி மாதம், கணபதி பந்தாட்டத்திற்கு அன்று வரவில்லை. விசாரித்தளவில் மைத்துனன் ஒருவன் மலையாவிலிருந்து வந்திருக்கிறார் என்றும், அவருடைய சகோதரிக்கு விவாகம் நடத்த உத்தேசம் என்றும் தெரிந்தது. இதனால் அவன் பந்தாட்டத்திலிருந்தும் ஒரு கிழமைக்கு ஓய்வுபெற்றது நூதனமல்ல.

“அனேக காலமாக குமராக இருந்த பெண் இப்போது ஒருவர் சிங்கப்பூரிலிருந்து ஆறு மாதலீவில் வந்திருக்கிறார். ஏராளமான பொருள் கொண்டுவந்து நல்லாகச் செலவழிக்கிறார். சொறப குடிகாரன் போலே! “யார் உங்கே குடிப்பதில்லை? அவருக்கு ஏதோ பெரிய ஸ்ரேஷனில் வேலையாம், நல்ல வரும்படியுமாம் கணபதியின் தகப்பனிற்கு நல்ல கொடுத்து வைத்த சம்பந்தம்” என்று எங்கள் வீட்டிலேயே பேசிக் கொண்டனர். விவாகத்தினத்தன்று ஒரே தடபுடல். கலியாணப் பந்தல் நாலு மணவறைகளுடன் பொலிந்தது. நல்ல திறமான ஐந்து கூட்ட மேளம். “கூழாவடி” சோடி வெள்ளைக் குதிரைகள் பூட்டிய அலங்கார ரதத்தில் மணமக் கள் ஊர்வலம். பட்டாசு அதர் வெடிகள் காதைத் துளைத்தன. வான விளையாட்டுக்கள் வேறு பக்கம். அதிகமேன்? “வாசலில் கட்டியிருந்த இரண்டு வாழைக்குலைகளையும் மரத்துடன் எப்படி பழுக்கவைத்தெடுத்தார்கள்“ என்று பலரும் பேசிப் புகழ்ந்தனர். அன்று பகல் முகூர்த் தத்திற்குத் தாலி கட்டியும், மாப்பிள்ளை பெண்ணை அழைத்து வீடு சேர விடிந்து விட்டது. பந்தலுக்குள் கம்பளங்களில் படுத்து நித்திரையாகிவிட்ட என்னை விடியத்தான் எழுப்பி னார்கள். நாலாஞ் சடங்கிற்கு நல்ல பெரிய ஆட்டுக்கடா, சாராயம் எல்லாம். இரவு சதிர்க் கச்சேரி, சிங்கப்பூர் மாப்பிள்ளைகளுக்குத் தான் பெண்கொடுக்க வேண்டும் என்று அங்கு நின்ற கிழவிகள் கூட பேசிக்கொண்டனர். இப்போது 18 வருடங்களுக்கு முன் சிங்கப்பூரை ஜப்பான் “சோணன்” ஆக்குவான் என்று யார் எண்ணினான். அதுஒரு காலம்.

III

கணபதியைத் தட்டினேன். மத்தியானம் சாப்பிட நேரமாகிவிட்டது என அவன் அறிந் தான். அவனுக்கு கதைக்க வரவில்லை. சகோதரியின் கடிதத்தை என்னிடம் கொடுத்தான் - பதட்டத்துடன் விரித்துப் படித்தேன்.

சிவமயம்

படுக்கை நம்பர் 8
பெரிய ஆஸ்பத்திரி
கோலாலம்பூர் - 4-11-45

இறைவன் அருளை முன்னிட்டு வாழும் என் மேல் அன்புள்ள சகோதரன் கணபதிக்குச் சர்வமங்களமும் உண்டாவதாக. இவ்வளவு காலமும் எங்கள் கடிதம் காத்திருந்த உங்க ளுக்கு இந்தப் பாவி தனியே கயரோக ஆஸ்பத்திரியில் கிடந்து தன் அந்திய காலத்தில் இதை எழுத வேண்டி வந்ததற்குப் பெரிதும் வருந்துகிறேன். இவ்விதம் கடிதம் எழுதுவாரென்று

காத்திருக்கவில்லை. ஏதோ புண்ணியவசத்தால் இவ்வளவு வசதியாகிலும் வந்தது எனது பிள்ளைகள் செய்த தவம்தான். இன்னும் வாரங்களோ, நாட்களோ என்ற கணக்கில் எனக்கு இவ்வுலக வாழ்வு எஞ்சியிருக்கிறது. என் அருமைக் கணவர், "எங்கள் மச்சான்" இப்போ ஒரு வருடங்களுக்கு முன் இதே ஆஸ்பத்திரியில் கயரோகத்தால் மாண்டு போனார். அவரது சொற்ப குடிப்பழக்கம் யுத்த காலத்தில் பல இடஞ்சல்களால் நாளாந்தம் கூடிவந்தது. குடிக்கேற்ற விதமான நல்ல உணவு அவருக்குக் கிடைக்கவில்லை. ஜப்பானிய அரசாங்கத்தாரின் பல நெருக்குதல்கள், வேலை ஸ்தலத்தில் ஆகாய விமானக் குண்டுகளின் பயம், உணவில்லாமல் இரவு, பகலாக உறக்கமில்லாத வேலை. ஜப்பானிய பொலிஸ் அல்லது சீனக்கொள்ளைக் கூட்டம், அல்லது வேறு ஆள்தூக்கிக் கூட்டம் வீட்டில் என்ன செய்து விட்டாரோ என்ற ஏக்கம். யாழ்ப்பாணத்தில் கிளட்டுத் தாய், தகப்பன் எப்படி அந்திய காலத்தில் கஸ்ரப்பட்டுப் போனார்களோ என்ற கவலை. குடும்பத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, பிள்ளைகள் படிப்பின்றி திரிகிறார்கள் என்ற துக்கம் இந்த இரண்டு இளம் பெண்களையும் எதிர்காலத்தில் என்ன செய்வது குமரப்பிள்ளைகளல்லவா? ஊரில் ஒரு வீடுதானும் கட்டிவிட்டேன் இல்லையே என்ற யோசனை ஒரு பக்கம்.

துக்கத்தை தீர்க்க குடி கூடினது மரவள்ளிக் கிழங்கைவிட உணவு பெரும் பாடுதான். இந்த நிலைபரத்தில் ஒரு இருமல் தொடங்கியது. ஆழ்மெலிந்து வந்தது. ஆரம்பத்தில் ஜப்பானிய விமானங்கள் தாக்கினபோது, ஒரு இரும்பாணி பறந்து காலில் தாக்கினது. சிகிச்சையால் எல்லாம் மாறியிருந்தது. கஸ்ர காலத்திற்குப் போலும் பிறகு கொதிவலியுடன் வேதனை கொடுக்கத் தொடங்கியது. எக்ஸ்ரே செய்து பார்த்ததில் காலுக்குள் ஒரு சிறுதுகள் இரும்புதான் இப்படி ஆரம்பித்தது என்று கூறினர். பிறகு உள்ளுக்கு அழுகல் தாவினது, என்றும், நீரிழிவும் இருப்பதால் மாற்றுவது கஸ்ரம் என்றும் கூறினார். ஈற்றில் டாக்டர்கள் கால் கழட்டுவதெனத் தீர்மானித்தனர். வைற்றுக்கோளாறு ஆரம்பித்தது. அதற்குக் காரணம் பற்கள் என பல வைத்திய நிபுனர்கள் பற்களைப் பிடிங்கி விட்டனர். இவற்றையெல்லாம் ஒருவிதமாக சகித்துக் கொண்டிருக்கும் போது, ஒருநாள் இருமித் துப்பினார் இரத்தத்துடன் சளி கண்டது. சீ! என்ன வாழ்க்கை!!

டாக்டர்கள் கசம் என்றனர், பிறகு படிப்படியாக அவர் உருக்குலைந்து போய், ஈற்றில் எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார். தம்பீ! நாங்கள் பட்ட கஸ்ரங்கள் அளவில் தகப்பன் இறந்ததும் பிள்ளைகள் ஏங்கிவிட்டன. எனக்கு ஒரு வலிப்பு. விறைப்புப் போல, அன்று நடந்தன அதிகம் தெரியாது. அடுத்த அயல்வீட்டு யாழ்ப்பான அன்பர்கள் அன்றைக் கருமங்களைச் செய்தனர். நல்ல காலமாக வீட்டில் இரண்டு பசுமாடுகள் நின்றன. பால்கறந்து விற்றும், சிறுவேலைகள் செய்தும், எனது இளைய பாலன்கள் இரண்டும் பிளைத்து வந்த பணத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்தோம். சரியாக ஒரு மாதம் கழித்து எனக்கும் இருமல் கண்டது. வீட்டிலிருந்து பார்த்தோம். சரி வருவதாயில்லை. ஆஸ்பத்திரிக்கு வந்தும் நாலு மாதங்கள் ஆகின்றன. பிள்ளைகளை அடுத்த வீட்டில் ஆட்களுடன் விட்டுத்தான் வந்தேன்.

நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்புவேன் என்று நம்பவில்லை. ஐயோ என் பிள்ளைகள் கதி என்னவென்றுதான் விளங்கவில்லை. ஆகையால் தம்பி! கப்பல் வசதி

வந்ததும் குழந்தைகளை உவ்விடம் அழைத்துப் பாதுகாத்துக் கொள்ளவும். எனக்கு அப்பு தந்த சீதனங்களைத்தான் எனது இரண்டு பெண்பிள்கைளுக்கும் பிரித்துக் கொடுத்து எங்கே யாகிலும் நல்ல கலியாணம் செய்து வைக்கவும். பையன்களுக்கு உவ்விடம் இலவசக்கல்வி வசதியுண்டென்று பேசிக்கொள்கின்றனர். அப்படியானால் ஏதோ இரண்டு சொல்லுப் படிக்கவைத்து நீரும் வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களை மனிதராக்கிவிடும். வேறு நான் என்ன சொல்வது. இவ்வளவும் நான் சொல்ல எனது மூத்தமகள் எழுதினாள். இனி என்னால் முடியாது. இறைவன் உங்களைக் காப்பாராக!

அன்புள்ள சகோதரி - தையல்நாயகி.

கணபதியின் தங்கையின் கடிதம் வாசிக்கமுன் என் கண்களும் கலங்கிவிட்டன. இன்னும் என்னதான் மனிதருக்கு வரவேண்டும் "காத்திருந்த சகோதரியின் கடிதம் மச்சான்" என்று கணபதி விம்மி விம்மி அழுதான்.

ஈழகேசரி
21.04.1946

உமா

ஈழகேசரியில் உமா என்ற பெயரில் எழுதியவரை அறியுமாறில்லை. இவர் எழுதிய 'சௌந்தரவல்லி' கட்டிறுக்கமான மொழிநடையில் எழுதப்பட்ட சிறு கதையாகும். பெண்நிலைவாதக் கருத்துக்களைத் தம் சிறுகதையில் புகுத்திய வராக உமா காணப்படுகிறார்.

❖ *சௌந்தரவல்லி*

சௌந்தரவல்லி

உமா

அம்மா, அம்மா எங்கிருக்கிறீர்கள்?;"

"சௌந்தரா,ஏன் இதோ படுக்கையறையில்"

"அம்மா, இதோ பாருங்கள் மாமாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அவர் என்னைத் திரும்பவும் பாடசாலை போகட்டாம்"

மேற்கூறிய சம்பாசனை சாவித்திரி என்னும் ஓர் ஸ்திரிக்கும் அவளது புதல்வி சௌந்தரவல்லிக்குமிடையில் ஒருநாள் நடுப்பகலில் அவர்கள் வீட்டில் நடந்தது. கடிதத்தைக் குறித்துக் கூறிக்கொண்டே சௌந்தரவல்லி தனது மாதா இருக்குமிடத்திற்கு ஓடினாள். அவளது வதனம் மனமகிழ்ச்சியால் மலர்ந்தது. கையில் லிகிதத்துடன் மாதாவிடம் ஓடி, அம்மா கடிதத்தைப் படிக்கிறேன் கேளுங்கள் என்று பார்த்து வாசிக்கத் தொடங்கினாள்.

"அன்புள்ள சௌந்தரா!

உனதன்பான கடிதம் எனது மனதைக் கவர்ந்து அளவற்ற மகிழ்ச்சியளித்தது. நீ மேலும் படிக்க வேண்டுமென அவாவுவது நான்

இவ்வளவு காலமும் உன்னில் வைத்திருந்த அன்பைப் பன்மடங்காக்குகின்றது. உனது பெற்றோர் உன்னைப் பாடசாலைக்கனுப்பாது விடுத்தல் மடமையாகும். அவர்கள் உமது படிப்பிற்குச் செலவு செய்யக் கஷ்டப்படுவது உண்மையே. ஆனால் நீ உண்மையாகவே கல்வியை அவாவுவதால் நான் வேண்டிய அளவு செலவழிக்கத் தயாராயிருக்கிறேன். இவ்விடயத்தை உனது பெற்றோரிடம் கூறி அவர்களோடு யோசனை செய்து உங்கள் விருப்பத்தை அறிவிக்கவும் நீ கட்டாயம் அங்குள்ள சிறந்த பெண் பாடசாலைக்கேகுவது முக்கியம்.

கடவுளருளால் இங்கு நானும் நம்மின பந்துகளும் சுகமே வதிகின்றோம். அங்கு உங்களின் சேமத்தையிட்டு இன்னும் தேவையான விசயங்களையும் எழுத வேண்டியது. வீட்டில் எல்லாரையும் விசாரித்தாகச் சொல்லவும்.

இங்ஙனம்
உனதன்புள்ள மாமா
சே.ராஜா.

கடிதம் படித்து முடிந்ததும் சாவித்திரி மகளை நோக்கி "அம்மா சௌந்தரா, படித்து படித்து நீ என்னதான் செய்யப்போகிறாயோ அறியேன். பள்ளிக்கூடம் போக முடியாதென்றும் அதற்காக மனவருத்தமுற வேண்டாமென்றும் மாமாவுக்கு கெழுதம்மா" என்றாள்.

சௌந்தரம் : அம்மா நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? இவ்வளவு தூரம் நமக்காகப் பரிந்து எழுதும் போது அதைமறுத்தால் மாமாவின் மனம் புண்படுமல்லவா?"

சாவித்திரி: "எல்லாம் உன்னால்தானே வந்தது. முன்னமே சொன்னேன். மாமாவிற்கு இதைப் பற்றியொன்றும் கூறவேண்டாமென்று. கேட்டீர்களில்லையே அப்பாவும் மகளும்"

சௌந்: "என்ன உங்களிடம் கேட்காமல்நான் எழுதினேனா? ஓம் எழுதிப்பாரேன்" என்று நீங்கள் சொல்லவில்லையா?

இவ்விதம் அன்னையும் புதல்வியும் தர்க்கிக்கும்போது சுந்தரலிங்கம் என்னும் சௌந்தராவின் தந்தை அங்கு வந்தார். வரும்போதே "சௌந்தரா இன்று கடிதம் வந்ததா அம்மா" என்று வினவிக் கொண்டே வந்தார்.

"ஆம் அப்பா, இதோ மாமாவின் கடிதம்" என அதைச் சௌந்தரம் கொடுத்தாள். விசயத்தையறிந்ததும் மிஸ்டர் சுந்தரம் "சாவித்திரி, ராஜா சௌந்தராவின் நன்மைக்காகவே ஏதும் செய்வான். ஆகையால் நாமிதை மறுப்பது அழகல்ல. யோசித்து நாளை எழுதுவோம்" என்று கூறி அவர்களின் சண்டையைத் தீர்த்தார். பின் அவர்கள் மூவரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தத்தம் வேலைகளைக் கவனிக்கலாயினர்.

மிஸ்டர் சுந்தரலிங்கம் யாழ்ப்பாணத்தில் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். தனது பூர்வீக சொத்தாகிய சில தோட்டங்களின் வரும்படியைக் கொண்டே சம்சார வாழ்க்கை நடத்தி வந்தார். அவர் சாவித்திரியை மணமுடித்து இரு வருடங்களுக்குப் பின் சௌந்தரா பிறந்தாள். ஆனால் அவளுக்குப் பின் சந்ததியில்லாமையினால் ஏகபுதல்வியை அவர்கள் மிகச் செல்லமாய் வளர்த்தனர். இயற்கையாகவே புத்தி கூர்மையுடையவளான சௌந்தரவல்லி

பாடசாலையில் தமது திறமையை நன்கு காட்டிவந்தாள். மங்கைப்பருவமடைந்த 13ஆவது வயதில் அவள் ஆங்கிலம் ஏழாவது வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். இனிப் பாட சாலைக்கு அனுப்புவது அவ்வூர் வழக்கத்திற்கு விரோதமாக இருந்தாலும் மேற்படிப்புக்குப் போதிய பணம் இல்லாததாலும் சாவித்திரியும் சுந்தரமும் அவளது படிப்பை நிறுத்த முயற்சித்தனர்.

ஆனால் சிறு வயது முதல் தன் மீது வாஞ்சையாய் இருந்த ராஜு மாமாவிடம் சௌந்தரா தனக்குப் படிக்க விருப்பம் என்றும் பெற்றோர் தன்னை வீட்டில் நிறுத்த அவாவுகிறதாகவும் பெற்றோரின் சம்மதத்தின் பின் எழுதிவிட்டாள். அவரின் மறுமொழியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது அக்கன்னியின் மனவியாகூலமோ அளவிறந்தன. தான் இவ்வள வுடன் கல்வியை அபிவிருத்தியாக்காவிட்டால் இவ்வளவு நாளும் பட்ட பாடு வீணாகுமே என்றும் தான் படிப்பை நிறுத்தினால் அதிக நாள் கன்னியாய் இருக்க முடிதென்றும் தாய் தந்தையர் சீக்கிரத்தில் யாரையேனும் தனக்கு மணமுடித்துவிடுவார் என்றும் பின்தான் சந்தோசமா இருக்க முடியாதென்றும் அவள் எண்ணினான். ஆகவே அன்று மாமாவின் கடிதம் வந்ததும் அவள் தாயிடம் ஓடி ஏமாற்றமான பதிலையே கேட்டாள்.

அதிஸ்டவசமாக சுந்தரலிங்கம் கல்வியில் வேட்கையுடையவராய் இருந்தார். மகளை நன்கு படிப்பித்து பின் தகுந்த இடத்தில் அவளுக்கு விவாகம் முடிக்க வேண்டும் எனக் கருதினார். சாவித்திரியோ எல்லா மாதர்களைப் போன்று தனது மகளுக்குச் சீக்கிரத்தில் மண முடித்துப் பார்க்க வேண்டும் என்று கருதினாள். அன்று பின்னேரம் சுந்தரலிங்கம் சாவித் திரிக்குச் சமாதானம் கூறி சௌந்தராவைப் பாடசாலைக்கு அனுப்புவதால் கேடொன்றும் இல்லை என்றும் அதனால் நன்மையே விளையும் என்றும் எடுத்துக்காட்டினார். அதன் விளைவாக சௌந்தரா ராஜு மாமாவின் விருப்பப்படி தன் தந்தையின் உதவியால் "கன்னி சாஸ்திரி மடம்" என்னும் ஓர் கிறிஸ்தவ பாடசாலைக்குப் போக ஏற்பாடாகி இருக்கிறது என்றும் மாமா பொருளுதவி செய்வதற்கு நன்றி கூறுவதாகவும் வரைந்து மாமாவிற்கு ஒரு கடிதம் அனுப்பிவிட்டாள்.

இதற்குப் பின் நாலு வருடங்கள் சென்றுவிட்டன. சௌந்தரா இப்போது மற்றிக்குலேசன் Matriculation பரீட்சை தேறிவிட்டு வீட்டிலிருந்தாள். அவள் தான் படித்த பாடசாலையில் கிறிஸ்தவப் பெண்கள் சிலர் விவாகத்தை வெறுத்து கடவுள் தியானத்திலும் ஏழைகளுக்கும் உதவியற்றோருக்கும் உதவி புரிவதைக் கண்டு தானும் அவ்வாறு ஏனிருக்கக் கூடாது என எண்ணினாள். சிறு குழந்தை முதலே தனது மதத்தில் பற்றுடையவளாய் இருந்ததால் தனது வாழ்நாளை கடவுள் தியானத்தில் கழிப்பதற்கு அவள் அவாவினாள். இவ்விதம் மனப்பான் மையுடன் இருக்கும்போது ஒருநாள் தான் வழக்கமாய் படிக்கும் அறையிலிருந்து பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது பக்கத்து அறையில் தனது மாதாவும் பிதாவும் தன் னைப் பற்றிச் சம்பாசித்ததை கவனித்து சற்று நேரம் கவனமாய்க் கேட்டாள்.

சுந்தரம்: சாவித்திரி நீ கூறுவதைப் பார்த்தால் சௌந்தராவுக்கு விவாகம் ஆகுமுன்பே இறந்து போவதைப் போன்றன்றோ நினைக்க வேண்டியிருக்கிறது. என்ன மடைத்தனம்.

சாவித்திரி: பின் என்னதான் செய்யப்போகிறீர்களோ?அவள் இப்படியே இருந்து விடு கிறதா? வயதும் பதினெட்டும் ஆகின்றதே.

சுந்தரம்: மற்ற இடங்களில் எல்லாம் தற்காலத்தில் 25 வயதில்தான் பெண்கள் மணமுடிக்கின்றனர். அதுவும் பெண்ணின் விருப்பமின்றி நாம் ஒன்றும் செய்யக்கூடாது.

சாவித்திரி: ஆமாம்! வெள்ளைக்காரரைப் போன்று செளந்தராவையும் பழக்குங்கள். அவள் அவன் வேண்டாம், இவன் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பாள். ஐயோ வேண்டாம் வேண்டாம்! அவள் இன்னும் கெட வேண்டாம்.

சுந்தரம்: இப்போது என்ன அவசியம். ராஜு இங்கு வருகிறதாக எழுதியிருக்கிறான். அவனுடன் யோசிப்போம். இப்போது நீ போய் தேத்தண்ணி கொண்டுவா. பாவம் இன்னும் செளந்தரம் குழந்தைபோன்று களங்கமற்று இருக்கிறாள். அவளை மணவாழ்க்கையில் புகுத்த என் மனம் இணங்கவில்லை.

சாவித்திரி : எனக்குத் தெரியாது. ஏதாவது ஒழுங்கு பண்ணினால் தான் என் மனம் சாந்தியடையும். அவள் வயதுப் பெண்கள் இரு குழந்தைகளுக்கும் தாயுமாகிவிட்டனர். நான் போகிறேன். இதே சிந்தனையால் சாகிறேன்.

இவ்வளவையும் கவனித்த செளந்தரம் தனது பெற்றோர் தன்னை யாருக்கோ விவாகஞ் செய்யப்போவதாகவும் ஆனால் தந்தை இப்போது மணத்திற்கு இணங்கவில்லையென்றும் ஊகித்துவிட்டாள். பாவம் அந்நேரம் அவள் மனம் படாதபாடுபட்டது. ஓர் பறவை போன்று சுயேட்சையாய் வாழ்ந்த அவள் இனிக் கட்டுப்பட்டு நடப்பதென்பது அசாத்தியமென்று தோன்றிற்று. இத்தனை வருடங்களும் அதாவது பெண் பாடசாலை சென்றது முதல் தான் கன்னியாகவே காலங்கடத்த உத்தேசித்தனளேயன்றி பெற்றோர் அதற்கு இடையூறு நினைப்பர் என எண்ணிணவளல்லள். இப்போது பெற்றோரின் சம்பாசனையில் ஓர் பகுதியைக் கவனித்த பின் அவள் மனத்தில் ஓர் புயல் உண்டாயிற்று. என்ன செய்வது? தனது தீர்மானத்தை மாற்றுவதா, அல்லது பெற்றோருக்குத் தனது எண்ணத்தை வெளியிடுவதா? ஆனால் அங்ஙனம் செய்தால் மாதா, பிதா வயிறெரிவரே. தங்கள் ஒரே குழந்தை தாங்கள் களங்கமற்றவள் என எண்ணியிருந்த ஏகபுதல்வி இப்படிச் சகலதையும் கண்டறிந்தவள் போல் பேசவந்துவிட்டளே என மனங்கசிவரே. என் செய்வது? இவ்விதம் அடுத்த சில தினங்களாகத் தன் மனதுடன் பேராடி விவாக வாழ்க்கையையே உத்தமம் எனத் தேர்ந்தெடுத்தாள்.

இதற்கு முக்கிய காரணம் ராஜு மாமாவின் வருகைதான்.

அவர் பல வருடங்களுக்குப் பின் செளந்தராவின் ஊருக்கு வந்து அவள் இல்லத்திலே தங்கினார். அப்போது ஓர் சமயம் தமது அருமை மருமகளை நோக்கி " என்ன செளந்தரா உனது பாடசாலை உபாத்தியாயினிகளைப் போல நீயும் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஒரு தவப்பெண்ணாகப் போகிறாயாமே?" என்று தமாசாக வினாவினார். அப்போது செளந்தரம் தனது மதப்பற்று முகத்தில் பிரதிபலிக்க "ஏன் மாமா நான் கிறிஸ்தவ மதத்தில் சேருவான். எனது மதத்திற்கு உண்மையாய் இருந்து தவப்பெண்ணாகி எல்லோருக்கும் தொண்டாற்றுவேன்" என்று வீரமொழிகள் பகன்றாள். அச்சமயம் மிஸ்டர் ராஜன் சிரித்தாரென்னும் பின் தருணம் கிடைத்தபோது அவள் கூறியது சரியென்றும் சசாத் சிவபெருமானே பார்வதியை மணம் செய்திருக்கும்போது அவரைப் பின்பற்றுவோரும் அங்ஙகணமே மணவாழ்க்கை நடாத்த வேண்டுமென புத்திபுகட்டினார். இப்புத்திமதி இவ்விளமங்கையின் கூரிய அறிவை சற்றே

தடுமாறச் செய்து மனதைத் திருப்பிவிட்டது. அவள் தனது தீர்மானத்தை மாற்றி சம்சார வாழ்க்கையில் ஈடுபட எண்ணினாள்.

ஆனால் தனது பெற்றோர் யாரைத் தனது மணாளனாகத் தேர்ந்தெடுக்கின்றனரோ என்ற எண்ணம் மனதைப் பீடிக்கலாயிற்று. ராஜசிங்கம் முன் அவள் சிறுமியாய் ஓர் கலவன் பாடசாலையில் படிக்கும்போது சில வேளையில் அவளை அழைத்துக் கொண்டு போயி ருக்கிறேன். அப்போது அவள் கீழ் வகுப்பிலும் அவன் மேல் வகுப்பிலும் படித்துக்கொண்டி ருந்தனர். ராஜசிற்கும் தந்தைவழியில் சௌந்தரத்துக்கு உறவினனாயுமிருந்தான். பின் அவன் அப்பாடசாலையை விட்டு ஆண்கள் பயிலும் பாடசாலையொன்றில் சேர்ந்து பரீட்சை களில் முதலாவதாகத் தேறினதாகக் கேள்விப்பட்டிருக்கிறாள். பரீட்சை தேறினவர்கள் பத்தியில் அவனது பெயரையும் பத்திரிகைகளில் கண்டிருக்கிறாள். இப்போது அவன் ஓர் அழகிய வாலிபனாய்ச் சற்குணன் என்னும் பெயர்பூண்டு கொழும்பில் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தான். ஸி.ஸி. என். பரீட்சை எடுக்கப்போவதாகக் கேள்வி.

ஆம், சௌந்தரம் மணவாழ்க்கையிலீடுபட எண்ணினது முதல் ராஜசிங்கம் அவளது களங்கமற்ற மனதை மாசுறச் செய்தான். அவன் பாவம்! எத்தனையோ மைல்களுக்கப்பால் படிப்பிலீடுபட்டிருக்கும் அவ்விளைஞன் இப்பேதைப் பெண்ணின் மனோநிலையை அறியான். ஆனால் அவனது அழகிய உருவம் (சிறுவனாயிருக்கும்போதுதான் சௌந்தரம் அவனைப் பார்த்தது. ஆனால் அவன் போட்டோவைப் பார்த்திருந்தாள்), குணம், கல்வி எனும் பூசணங்களினால் இலங்கப்பெற்று அவளது மனதைக் கலவரப்படுத்தியது.

ராஜு மாமாவும் ஒரு வாரமளவும் தங்கிவிட்டுத் திரும்பிவிட்டார். அவரும் தனது பெற் றோரும் சம்பாசித்ததை பேதை சௌந்தரம் அறியாள். “எல்லாம் ஈசன் செயல்” என்றபடி இப்பெண் ஒருபோதும் கேட்டுமறியாத ஒரு வாலிபனைப் பற்றிப் பேச்சு நடந்தது. மிஸ்டர் ராஜா வும் சென்று ஆறு மாதங்கள் கடந்தன. இவ்வளவு நாட்களும் சௌந்தரா பல ஆகாயக் கோட் டைகள் கட்டினாள். தந்தையும் அன்னையும் மெதுவாகப் பேசும் வார்த்தைகள் சில அவள் காதுகளில் தற்செயலாய் விழுந்தன. எல்லாம் அவளைப் பற்றித்தான்.

ஆனாலும் முன்னொருமுறை தந்தை புதல்வியின் சம்மதமின்றி மணவாளனைத் தேர்ந்தெடுப்பதில்லை எனக் கூறியதென்ன? இப்போது அவரின் செய்கை சௌந்தராவை மயக்கின. ஆனால் யாதுமறியாதவள் போலவே அவள் நடித்தாள். ராஜு மாமா மீண்டும் ஒரு முறை யாழ். நகருக்கு வந்தபோதுதான் சௌந்தரவல்லிக்கு முழு விசயமும் விளங்கியது. மாமா வந்து இரண்டாவது நாள் சுந்தரம் ஜோலியாய் வெளியே போயிருந்தார். சாவித்திரி அடுக்களையில். அப்போது மிஸ்டர் ராஜன் சௌந்தராவுடன் தமாசாகப் பேசிக்கொண்டி ருந்தார். அவர்கள் எப்போதும் தமிழும் ஆங்கிலமும் கலந்துதான் பேசுவர்.

“ஆமாம் சௌந்தரா.. ஆமா இனி ஓர் ஹௌஸ் மிஸ்ரெஸ் (வீட்டு எஜமானி) ஆகப் போகிறாயே? பட்டம் பெற்று உத்தியோகத்திலிருப்பவரென்றால் “ஈஸியா” (Easy - இலேசு)

“என்ன, மாமா, கேலி செய்கிறீர்கள்? மிஸ்ரெஸ்ஸாவது, மண்ணாங்கட்டியாவது?”

“என்ன உனக்குத் தெரியாதா?”

“என்ன தெரியாது? வீண்கதையல்லவா இதெல்லாம்? ஹிட்லர் இனி எந்த ஊரைத் தாக்குவான்?”

“சௌந்தரா,? உனது அப்பா ஒன்றுஞ் சொல்லவில்லையா? என்ன மடைத்தனம்! நான் சொல்லிவிடுகிறேனே. (சற்று மெதுவான குரலில்) மிஸ்டர் ஸ்வாமி ஒரு பி.ஏ. (B.A) இப்போது “அக்றிகல்சுரல் டிபாட்மெண்”டில் பயிர்ச்செய்கை அதிகாரியாக) தற்சமயம் வேலையா யிருக்கிறார்.

ஆழ்ந்த புத்தியும் சிறந்த கல்வியும் உடையவர். அவரைத் தான் உனக்குக் கொடுப்பதா கப் பேச்சு” இவ்வளவும் சொல்ல சாவித்திரியும் தேநீருடன் அங்கு வந்தாள். ஆகவே இந்தப் பேச்சு அவ்வளவுடன் நின்றது.

இச்சம்பாசனை நடந்த இரண்டாவது நாள், நிச்சய தாம்பூலம் கொடுக்க அன்றே முதல் முறையாக மிஸ்டர் ஸ்வாமி மனைவியாகப் போகும் மங்கையைப் பார்க்க வந்தார். இச் சம்ப வம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்த சவுந்தரம் எண்ணாததெல்லாம் எண்ணினாள்.

“ராஜசிங்கம் அவனை மறக்க வேண்டுமா? தந்தையிடம் அல்லது மாமாவிடம் இவ் விவாகம் எனக்குப் பிரியமில்லை என்று சொல்வோமா? எவ்வளவு மதியினும் எதற்காகவோ ஆசைப்பட்டென்றோ இங்ஙனம் என் விருப்பம் கேளாது படுகுழியில் தள்ளுகின்றனர்! ஆனால் நான் இதைப் பற்றிப் பேசினால் என்ன திமிர்? என்று பேசமாட்டார்களா” எனப் பல வாறு ஏங்கினாள். ஆனால் பயனென்ன அவளின் விருப்பம் கேட்கப்படவுமில்லை. மற்ற வர்கள் அவளின் பதைப்பை அறியாது தத்தம் வேலைகளைக் கவனித்தனர்.

கடைசியாக சாவித்திரியின் உதவியால் சௌந்தரம் மணப்பெண் போன்று அலங்க ரிக்கப்பட்டாள். ஆனால் “வெள்ளை உடுப்பே தரிப்பேன்” எனப் பிடிவாதஞ் செய்து அங்ஙனமே வெள்ளையுடையில் சரஸ்வதி போன்று விளங்கினாள். மணாளன் வருகிறாரே என்று மங்கைக்கு மனஞ் சஞ்சலமடைந்தது. மற்றவர்கள் அருகில் இல்லாதபோது அழுது வியா குலத்தை ஒருவாறு சமாதானப்படுத்தினாள். மிஸ்டர் ஸ்வாமியும் வந்தார். ஆனால் பெண்ணைப் பார்த்து ஏமாற்றமடைந்தார்.

புன்னகை முகத்தில் தாண்டவமாட தன்னைத் தரிப்பாள் எனத் தான் நம்பிய நங்கை, நகையின்றி விசாரமே வதனத்தில் விளங்க நாற்காலில் பதுமை போன்று வீற்றிருந்தாள்! அவரை ஏறெடுத்துப் பார்க்கவுமில்லை. பொதுவாகக் காதலரிடையே நடக்கும் நாடகமெதுவும் நடக்கவுமில்லை. ஆனால் ஐந்து நிமிசங்களுக்குப் பின் ஸ்வாமி ராஜூமாமாவுடன் ஏதோ இரகசியமாகப் பேசினார். அதன் பின் மாமா அவளை அவளது அறைக்கு அழைத்துப் போய் “சௌந்தரா நீ ஏன் துக்கமுகத்துடன் காணப்படுகிறாய்? மிஸ்டர் ஸ்வாமியை உனக்குப் பிடிக்கவில்லையா? வெட்கமின்றி உண்மையைச் சொல்லம்மா?” என்றார். அவ்வளவுதான் இவ்வளவு நேரமும் குமுறிக் கொண்டிருந்த கண்ணீர் ஆறாகப் பெருக்கெடுக்கத் தொடங் கியது. மாமா திரும்பவும் வற்புறுத்தவே தலையை அசைத்துக் கொண்டே “இல்லை” என் றாள். எந்நேரமும் புன்னகை ததும்ப தன்னுடைய பெண் இன்று அழுவதைக் காண மாமா வுக்குப் பொறுக்கவில்லை. தனது கைக்குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்துக் கொண்டே “நீ அழாதேயம்மா உனது விருப்பமின்றி எதுவும் செய்யமாட்டேன். பின் பேசிக்

கொள்வோம் அழாதே" எனத் தேறுதல் கூறிச் சென்றார். மிஸ்டர் ராஜசிங்கம் பி.ஏ. ஓர் வீட்டில் சாய்மான நாற்காலியில் சாய்ந்து கொண்டு தன் இளம் மனைவியைப் பார்த்து புன்னகை புரிகி றார். சௌந்தரவல்லி, ஆமாம் அவள்தான் ராஜசிங்கத்தின் மனைவி. அருகிலிருக்கும் மேசை யில் சாய்ந்து கொண்டே விசனத்துடன் தனது பர்த்தாவின் காலடிகளைப் பார்த்துக் கொண்டி ருக்கிறாள். அப்போது அவள் கணவன் "சௌந்தர் இதுதான் உனது படிப்பின் அழகோ? சீ சௌந்தர் ஏன் துக்கப்படுகிறாய்?" எனத் தனது குரலிலேயே விசனம் பிரதிபலிக்க வினா வினார்.

இக்கேள்விகளுக்கு மறுமொழியாக மௌனமே சாதித்தாள் அம்மங்கை. மீண்டும் ஆடவன் "கண்ணே ஏன் விசனிக்கிறாய்? எங்கே சொல் பார்ப்போம். முன் நான் உன்னைக் காணுமுன்னும் இப்படித்தான் அழுதுகொண்டிருந்தாயோ? 19 வருடங்களாக நானில்லாமல் நீ உயிருடன் இருக்கவில்லையா? இப்போது உத்தியோகத்தை ஒப்புக் கொண்டு பின் நான் தெண்டித்து இங்கேயே மாற்றலாகி வரக்கூடும். ஒவ்வொரு நாளும் தான் கடிதம் எழுதுவேன் என்கிறேனே" எனத் தேற்றினார்.

இங்ஙனம் இக்காதலர் காட்சியளிக்க மிஸ்டர் ராஜன் அங்கு வந்து சௌந்தராவின் விச னம் நிறைந்த முகத்தைப் பார்த்து, "ஓகோ அவர் இன்று போகிறாரோ? என்ற துக்கமோ. சரித ான், ஏன் ராஜசிங்கம் நீ வேலையை வேண்டாம் என்று எழுதிவிட்டு, இவளுடன் இருந்து விடேன்" என்று கேலி செய்தார். அப்போது யுவன் "ஏன் சௌந்தர் அப்படியே நான் செய்யவா? கொஞ்சக்காலத்துக்குப் பின் நானும் நீயும் பிச்சையெடுக்க வேண்டியதுதான். எப்படியென் றாலும் இருவரும் ஒன்றாய்ப்போய் இருப்போமா? இதற்குத்தான் சொல்கிறேன், (மிஸ்டர் ராஜனைப் பார்த்து) சௌந்தரம் ஸ்வாமியை விவாகஞ் செய்திருந்தால் அவர் கூட்டிக் கொண்டு தன் ஊருக்குப் போய்விடுவார். இருவரும் ஒன்றாயிருக்கலாம். இடையில் நான் வந்து சேர்ந்தேன். பூஜை வேளையில் கரடி புகுந்தது மாதிரி, ஒருவேளை சௌந்தரம் அவரை நினைத்துத்தான் வருந்துகிறாளோ" என்றான் கபடச் சிரிப்புடன்.

கண்ணீர் நிறைந்த கண்களில் ஒருவித ஒளி பிரகாசிக்க அதரத்தில் புன்னகை தவழ மாமாவை வெட்கத்துடன் நோக்கிவிட்டு தன் அன்பு முழுவதையும் சொறிந்திருந்த பர்த் தாவைப் பார்த்து "சீ" என்றாள் அவள்.

அப்போது ஒரு வருடத்துக்கு முன் நடந்த சம்பவங்கள் அவள் மனக்கண்முன் தோன் றின. "மிஸ்டர் ஸ்வாமி அவளைப் பார்க்க வந்தபொழுது அவள் விசனத்துடன் இருந்ததால் மாமா அவளை அழைத்துத் தேறுதல் கூறி பின் ஸ்வாமியுடன் ஏதேதோ சம்பாதித்தார். அதன் பின் அவளது பெற்றோருடன் யோசித்துப் பிறகும் அவளிடம் "சௌந்தரா, நான் கேட்கும் வினாக்களுக்கு விடைதருவாயா?" என்றார். ஆனால் மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது. உதாரணமாக அவர் நீ வேறுயாரையும் காதலிக்கிறாயா? ஏன் ஸ்வாமியை வெறுக்கிறாய்?" என்பன போன்றே கேட்டார்.

அக்கன்னிகை ராஜசிங்கம் தான் இதற்கெல்லாம் அஸ்திவாரம் என்றெல்லாம் கூற நாணினாள். அச்சமயம் மாமா, ஸ்வாமி அவளது விசனத்திற்குள் காரணம் இருக்க வேண் டும் எனவும் பெண்ணின் விருப்பம் இன்றி விவாகஞ் செய்தல் பாவம் என்றும் தான் அவளை நேசித்தாலும் படித்தவளாகையால் அவள் விருப்பமின்றிச் செய்தல் அநீதியெனக் கூறி தனக்கு

விசயத்தில் கோவமில்லையென்றும், பெண்ணுக்கு விருப்பம் ஏற்படுமாகில் இன்னொரு முகூர்த்தத்தில் கல்யாணத்தை நடத்தலாமெனக் கூறிச் சென்றதாகவும் அவளுக்குத் தெரிவித்தார். ஆஹா இதுவன்றோ பெருந்தன்மை! இது சௌந்தராவின் பெற்றோருக்கு அரிய பாடமாயிற்று. அதன்பின் ஒருவருடத்தின் பின் பிறகு நமது "சிங்கம் பி.ஏ. பரீட்சையில் சித்தியடைந்து ஸி.ஸி.எஸ் அம்முறை அரசாங்கத்தால் வைக்கப்படாததால் பலரின் சிபாரிசின் மேல் ஓர் வங்கியில் Bank உத்தியோகம் பெற்றான்.

யாழ் நகருக்கு வந்தபோது தன் பள்ளித் தோழி சௌந்தரத்தைப் பற்றிக் கேள்வியுறவே அவள் மீது பிரேமை ஏற்பட்டுவிட்டது. தெய்வ சந்தர்ப்பமாக ராஜசிங்கம் ஒருமுறை லீவில் யாழ்ப்பாணத்தில் இருக்கும்பொழுது மிஸ்டர் ராஜனும் அங்குவந்தார். இருவரும் கொழும் பில் நன்கு பழகியவர்களாததால் ராஜசிங்கம் சௌந்தராவின் வீட்டுக்கு ஒருநாள் அழைக் கப்பட்டான். அப்போது பார்க்க வேண்டுமே யுவதியின் ஆனந்தத்தை! தேநீர் சிற் றுண்டியுடன் அளிக்கப்பட்டது. இவளது குதூகலத்தைக் கவனித்து மிஸ்டர் ராஜன் அவள் சம்மதம் பெற்று பெற்றோரிடமும் ஆலோசித்து விவாகத்தை இனிது நடத்தி வைத்தார்.

இப்போது சௌந்தரம் ராஜசிங்கம் ஸ்வாமியைக் குறித்தும் மனதில் அவனைப் புகழ்ந் தும் தனக்கு இச்சந்தோசமான வாழ்வை கொடுத்தவன் அவனே என அகமகிழ்கிறாள்.

●

கசின்

ஆசிரியராகப் பணியாற்றி அதிபராக ஓய்வு பெற்ற கனகசபை சிவகுருநாதன் கசின் என்ற புனைபெயரால் நன்கறியப்பட்டவர். 1963 களில் இலங்கை கலை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் இருந்தவர். இவருடைய "வண்டியில், வளர்ந்தகதை, சகடயோகம், இராசமணிச் சகோதரிகள், இதய ஊற்று, தேடிவந்த செல்வம், கற்பகம், நிதானபுரி, சொந்தக்காரன் என நாவல்கள் பலவற்றை எழுதியவர். மணியோசை, நூலும் நூற்கயிறும், வனசஞ்சாரம், இது காதலல்ல, பச்சைக்கிளி, பஞ்சும் நெருப்பும், தமிழன்தான், குந்து மாணிக்கம் முதலான சிறு கதைகளையும் எழுதியுள்ளார். இவரின் சிறுகதைகள் கசின் சிறுகதைகள் என்ற பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. இயற்றமிழ் வித்தகர் என அறியப்பட்ட கசின் 13.01.2003 இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

- வனசஞ்சாரம்
- இது காதலல்ல
- கதவைச் சாத்தினாள்

வன சஞ்சாரம்

கசின்

நான் ஒருவன்தானா? உலகத்தில் எந்த வாலிபனுக்கு, எந்தப் பெண்ணுக்குத்தான் விவாகம் செய்துகொள்ளவேண்டும் என்று ஆசை யில்லை. ஆனால் பெற்றோர்கள் விவாகம் பேசிக்கொண்டு சென்றால், பிள்ளைகள் விவாகம் செய்ய விருப்பமில்லாதவர்கள்போல் இப்போது வேண்டாம்; ஆ; ஊ; என்று விவாகம் இழுத்துச் சாக்குப் போக்குச் சொல்லி, இறுதியில் விவாகம் செய்வார்கள். ஆனால் நான் அந்த அள வுஞ் செய்யாது, 'எனக்கு விவாகம் செய்ய நல்ல விருப்பம்' என்று வெளிச் சமாகச் சொல்லியும், எனக்கு இன்னும் விவாகம் நடக்க வில்லை.

இது என் மனக்குறை. இந்தக் குறை எப்பொழுது தீருமோ? அந்த நாளை நினைத்து என் மனம் ஏங்கித் தவம் கிடக்கிறது. 'தேடிப் போனால் கிடையாது' என்பது ஒருவேளை உண்மைதானா? அல்லது செவ்வாய்க்குற்றம் என்று சொல்லப்படுகிற அந்தப் பொல்லாத குற்றம் என் விசயத்தில் தலைப்படுகிறதோ? அந்த நாளும் வந்திடாதோ?.

இவ்வளவும் நான் தினமும் சிந்திக்கும் விஷயம். இதை முதலில் வெட்கமில்லாமல் சொல்லியிருக்கிறேன். ஏனெனில் பின்னால்

சொல்லப்போகிற சம்பவங்களுக்குள் உங்கள் மனம் லயிக்காமல், எனது அடிப்படை என்ன என்பதை நீங்கள் மறவாமல் இருப்பதற்காகத்தான்.

2. மெய்க்கஞ்சி வித்தியாசாலை

மெய்க்கஞ்சி வித்தியாசாலை, முன்பு கவர்னராயிருந்த யாரோ ஒரு வெள்ளைக்காரன் யாழ்ப்பாணப் பட்டினத்தில் கட்டப்பட்ட வித்தியாசாலை. யோசித்துச் செய்கிற காரியங் களிலும், யோசியாமற் செய்கிற காரியங்கள் சித்திப்பதுகூட, யோசியாமல் வைத்த பெயர் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது பாருங்கள். இந்த வித்தியாசாலையில் அடி யேனைத் தவிர 'பிறின்ஸிப்பல்' ஆசிரியர் மாணவர்கள் அனைவரும் மெய்பேச அஞ்சு வார்கள். மெய்க்கஞ்சி வித்தியாசாலை அல்லவா? எவ்வளவு பொருத்தம்!

பிறின்ஸிப்பல் 'இன்று இன்ஸ்பெக்டர்' வருவார், உற்சாகமாகப் படிப்பிக்க வேண்டும்;; என்று சொன்னால் நிச்சயம் அன்று 'இன்ஸ்பெக்டர்' வரமாட்டார். ஆசிரியர்கள் ஒவ்வொரு வரும் என்னைத் தனித்தனி கண்டு 'இன்று மீற்றிங்' கில் 'பிறின்ஸிப்ப' லில் உள்ள குறை யெல்லாவற்றையும் நேரே எடுத்துச் சொல்லப்போகிறேன்" என்று சொல்வார்கள். ஒருவரும் ஒன்றும் பேசமாட்டார்கள்.

நான்தான் அகப்படுவேன். மாணவர்கள், "இன்று கோவிலுக்குப் போனோம் சேர்; இன் றைக்கு நூறு கணக்குத் தாருங்கள். "நாளைக்கு முழுதும் செய்து வருகிறோம்" என்பார்கள். ஒரு கணக்கும் செய்து வரார்கள். அவர்களின் என்ன குறை, வித்தியாசாலை மெய்க்கஞ்சி வித்தியாசாலை.

இச்சந்தர்ப்பத்தில் வித்தியா பகுதிக்காரரிடமிருந்து, மூன்று மாதங்களுக்கு, வவுனியா பகுதியிலுள்ள அரசினர் பாடசாலைக்கு பதிற்றலைமை ஆசிரியராகக் கடமையாற்ற வேண் டும் என்று உத்தரவு வந்தது. 'பிறின்ஸிப்பலு'க்கு பெரிய மகிழ்ச்சி. "காட்டுக் காய்ச்சல் வாங்கி களைத் தெளித்து வருவார், தம்பி ; என்று சொல்லிக் கொண்டார். மூன்று மாதத்திற்குள் விவா கம் நடக்கும் என்று சொன்ன குருவிச் சாத்திரக்காரனைத் தேடிப்பிடிக்க வேண்டுமென்று எனக்கு ஆத்திரமாயிருந்தது.

3. காதலியார் சம்மளங்குளம்

நான் சென்ற பாடசாலையின் ஊருக்கு 'காதலியார் சம்மளங்குளம்; என்று பெயர். இந்த மாதிரியான பெயரும் இல்லாவிட்டால் எனக்கு அங்கு செல்ல சிறிதும் விருப்பம் இருந் திருக்காது. 'காதலி யார்?' என்ற சொல் என்னை அங்கு செல்லத் தூண்டியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

காதலியார் சம்மளங்குளம் மாங்குளம் வரையும் புகையிரதத்தில் சென்று பின் பத்து மைல் பஸ்ஸில் சென்று, பின் பத்து மைல் நடுக்காட்டின் ஊடே வண்டியாற் செல்லவேண்டும்.

குளமும், வயல் வெளியும், ஐந்து ஆறு குடிசைகளும் உள்ள ஒரு சிறு கிராமம். சுற்றிவர யானை, புலி, கரடி வசிக்கும் காடு. வனவிலங்குகளின் இராச்சியத்தில், ஒரு சிறு பகுதியில் மனி தன் தந்திரமாக வாழ்க்கை நடத்துகிறான். வனவவிலங்குகள் மாத்திரம் தங்களுக்குள் ஒற்றுமையாகப் படை எடுத்துவரின் மனிதர்கள் எந்த மூலைக்கு?

மனிதர்களே, நீங்கள் எங்களிலும் பார்க்க அதிகம் திருந்திய சாதிகள் அல்லர்; என்பதை அங்குள்ள குரங்குகள் எனக்கு அடிக்கடி ஞாபகமூட்டி வந்தன. சந்தையிலே குரங்கை ஆட்டிப் பிழைக்கும் குறவனுக்கும், என்னை இந்தக் காட்டிலே ஆட்டும் வித்தியா பகுதிக்கும் யோசித்துப் பார்க்கும்பொழுது அதிகம் வித்தியாசமில்லை.

எனக்கு அங்கே போன நாட்தொடக்கம் நெஞ்சுப் படபடப்பு ஒரு நாளும் குறைவதில்லை. கரடி, புலி, யானை என்ற எண்ணம் என்னை விட்டு அகலவுமில்லை. நித்திரையிலும் கரடியையோ புலியையோ யானையையோ கண்டு அலறுவேன்.

அவ்வூரவர்கள் புது உபாத்தியாயர் என்று என்னை உபசரித்து, "நீங்கள் மிருகங்களுக்குச் சற்றும் பயப்படவேண்டாம், அவைகள் மனிதரை ஒன்றும் செய்யமாட்டா" என்று ஆறுதல் கூறி, எனக்கு வேண்டுவன புரிந்தார்கள். வேறு என்னதான் அவர்களால் செய்ய முடியும்.

4.நிஜமயில் பாடக் கேட்டேன்

காதலியார் சமளங்குளம் மிகவும் பெருங்குளம். அகலமான கட்டு. பார்க்க மிகவும் அழகாக இருக்கும். மறுநாள் மாலை குளக்கட்டு வழியே உலாவிக்கொண்டு சென்றேன். நீரை அளாவிக்கொண்டு வரும் குளிர்ந்த காற்று மிகவும் சுகமாக இருந்தது. ஒரு பக்கம் பச்சைப் பசேலென்ற வயல்வெளியும், மறுபக்கம் இருண்ட நீர்நிலையும், மனதுக்கு ஒரு அமைதியைக் கொடுத்தது.

கொக்குகளுக்கும், மனிதர்களுக்கும் ஏதும் கோபம் உண்டோ தெரியவில்லை. கொக்குகளுக்கு எருமைக் கடா வாகனம் என்பதைக் குளக்கரைகளில் கண்ணாற் கண்டும், 'இயமனுக்கு எருமைக்கடா வாகனம்' என்று சொல்கிறார்களே.

இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு செல்கையில் சில மயில்கள் தோகை விரித்து ஆடக் கண்டேன். என் சீவியத்தில் முதன் முதற் கண்ட அபூர்வ காட்சி, கடவுள் மனிதனை கவலையின்றிச் சீவிக்க வேண்டுமென்று எத்தனையோ இயற்கைக் காட்சிகளைப் படைத்தார். தனது முழுச் சக்திகளையும் கூட்டி தோகை மயிலைப் படைத்தார். தோகை மயில் ஆடும் பொழுது மெய் மறந்த ஆனந்தம் எவர்க்கும் உண்டாக்கும்.

குளக்கரையில் தோகை மயில் அழகாக ஆடிக்கொண்டிருக்கும்போது குளக்கட்டில் அழகாக வளைந்து சென்ற அழுத்தமான மருதமரக் கொப்பில் இருந்துகொண்டு ஒரு நிஜமயில் பாடக்கேட்டேன். மயில் ஆடுமேயல்லாமல் பாடமாட்டாது என்பது எனது புத்தக அனுபவம். மயில் பாடுகிறதே என்று ஆச்சரியத்தால் விழித்தேன். 'அக்கினியென்றறியாயோ கற்புடைய மங்கையரை; என்று அழுத்தியது அந்த மயில். திரும்பியோடிவிடலாமா, என்று யோசித்தேன். வனமோகினியாற்றான். அகப்பட்டுக்கொண்டேன். காட்டிற் திரியும் மோகினித் தெய்வத்துக்கு சாவித்திரியில் நாரதரின் பாட்டு எப்படித் தெரியவந்தது?

நெஞ்சு படபடக்கக் கால்கள் கிடுகிடுக்க நின்றேன். சிறிது தூரத்தில என்னைநோக்கி ஒரு கரடி வந்துகொண்டிருந்தது. எனது நிலமையை நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்னும் உயிர் உடலை விட்டுப் பிரியவில்லை யென்பது மாத்திரமே எனக்கு நிச்சமாய்த் தெரிந்தது.

இந்த நிலைமையில் மரக்கொப்பில் இருந்த நிஜமயில் கீழே குதித்தது. புன்சிரிப்போடு நீங்கள் தானா புது உபாத்தியாயர் என்று கேட்டது. என்னால் ஒன்றும் பேசமுடியவில்லை. கறுப்புக் கோட்டும் நீள மீசையுமாக அந்த நிஜக்கரடி 'போகலாமா அம்மா' என்று கேட் டுக்கொண்டு வந்தது. கரடியும் மயிலும் போய் மறையும்வரையில் கண்கொட்டாமல் பார்த் துக்கொண்டு நின்றேன். 'கற்புடைய மங்கையரை அக்கினியென்றறியாயோ' என்ற கானம் பின்பும் என் காதில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

5. புலியும் மயிலும்

அன்றிரவு என் சிந்தனையைவிட்டு அந்த நிஜமயில் அகலவேயில்லை. காலையில் எழுந்து என் அறைக்கு வெளியே வந்தேன். என்னை நோக்கி ஒரு புலி வந்துகொண்டிருந்தது. அறைக்கு உள்ளே போய் கதவைப் பூட்டிக் கொள்வதுதான் வழி. நல்ல வேளையாக அப்படிச் செய்ய முன் புலிக்குப் பின்னால் வந்த அந்த நிஜ மயிலைக் கண்டேன். புலியும் மயிலும் கூடித் திரியும் தர்ம இராச்சியம் என்று யோசிப்பீர்கள்!

எனது பாடசாலைக்கு அருகில் நிலம் அளக்கும் சேவையர் கூடாரம் அடித்திருந்தார். அவரின் பெயர் முத்துக்குமாரு. அவரது சொந்த ஊர் யாழ்ப்பாணத்து நல்லூர் செட்டித்தெரு.

அவரது முகமும் முறுக்கிய மீசையும், வெண் தலையும், அவருடைய புலிவரிப் போர் வையும், எனது மனத்திலும் அவரைப் புலியென நினைக்கச் செய்தது. அவர் தனது மகளு டன் அங்கே இருந்தார். மகளின் பெயர் வனலட்சுமி. வனங்களில் சஞ்சாரம் செய்பவர் ஆகை யால் தனது மகளுக்கும் வனலட்சுமி எனப் பெயர் வைத்துவிட்டார்போலும். சுருக்கமாகக் கூப்பிடுவதற்காக வனா என்று கூப்பிட்டு அது பின் திரிந்து வானா என்றாகி விட்டது.

இனி நிஜமயில்; என்னும் எனது பெயரை மாற்றி 'வானா' என்று அவர்கள் பெயரையே வைத்துக்கொள்ளுவோம். முதல்நாள் கண்ட கரடி அவரின் அத்தியந்த வேலைக்காரன்.

நானும் சேவையரும், மகளும் காலை,மாலைகளில் கூடிச் சம்பாசிப்பது வழக்கமாகி விட்டது. அவர்களுடைய சம்பாசணை தந்தையும் மகளும் போல் அல்லாது நண்பர்கள் மாதிரி இருந்தது. எதையும் வெளித்திறந்து தெளிவாகப் பேசினார்கள்.

6. நெருப்புப்பெட்டி வியாச்சியம்

ஒரு நாள் மாலை நாங்கள் மூவரும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, எங்கள் கவனத் துக்கு அவ்வூரிலுள்ள ஒரு தம்பதிகளால் கொண்டுவரப்பட்ட நெருப்புப்பெட்டி சம்பந்தமான வழக்கு ஒன்று கொண்டுவரப்பட்டது.

சேவையருக்கு ஆறு சிங்கள வேலையாட்கள் உண்டு. அவர்களுக்குச் சிறிதும் தமிழ் தெரியாது. நிலம் அளக்கும் தொழிலில் உதவி புரிவதற்காக அவர்கள் இருந்தனர். அவர்கள் இன்னொரு கூடாரத்தில் இருந்தனர். அவர்களில் ஒருவன் அவ்வூர் வீடு ஒன்றில் இரவில் புகுந்திருக்கிறான்.

அவ்வூரில் ஆண்கள் இரவில் வீட்டில் தங்குவது இல்லை. வயற் காவலுக்குச் சென்று விடுவார்கள். சிங்கள வேலைக்காரன் சென்று வீட்டிலுள்ள பெண்களைக் கூப்பிட்டிருக்கிறான்.

அவள் விளக்குக் கொழுத்த நெருப்பெட்டியை எடுத்திருக்கிறாள். சிங்களவன் நெருப் பெட்டியைப் பறித்து மடிக்குள் வைத்துக்கொண்டான். அந்த ஊரில் அந்த நெருப்புப் பெட்டி அருமையானதும் கிடைத்தற்கருமையானது என்று அவனுக்குத் தெரியாது. அவள் சத்தம் போட்டிருக்கிறாள்.

சிங்களவன் நெருப்புப் பெட்டியுடன் ஓடிவிட்டான். இந்த வழக்கு அவளாலும் அவள் புரு சனாலும் எங்கள் முன்னிலையில் கொண்டுவரப்பட்டது. அவர்களுடைய நெருப்புப்பெட்டி சிங் களவர்களுடைய கூடாரத்தில் கண்டெடுக்கப்பட்டது. வழக்கு ருசுவாகி வருகிற சந்தர்ப்பத்தில் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

7. சோத்துப் பொக்கன் வாழ்க

சேவையரின் வெண்தலை மத்தியில் ஒரு பயங்கரான பிராணி பாய்ந்து வந்து இருந்துகொண்டது. சேவையர் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். அப்பிராணி உடனே என்னைக் குறி பார்த்துப் பாய்ந்தது. நான் போர்க்களத்தில் துரிதமாக நிற்கும் போர் வீரனைப்போல குறி பிழைக்கும் படியாகச் சிறிது சாய்ந்து கொடுத்தேன்.

நான் இருந்த மூன்று காற் கதிரை சரிந்து விழவே நான் 'வானா' வின் மேல் விழும் பாக்கியம் அடையப்பெற்றேன். மிகவும் தாக்கமான விழுக்காடானபடியால் உடனே எழுந்திருக்க முடியவில்லை. இந்த அமளியில் அந்தப் பயங்கரப்பிராணி எங்கோ மறைந்துவிட்டது. சிங்களவர் போல்க்கம்பு (போல்க் கம்பு என்பது வெந்நிறம் செந்நிறமும் மாறிமாறிப் பூசப்பட்ட நீளத்தடி; நில அளவைகளில் உபயோகிக்கப்படும் கருவிகளில் ஒன்று), கத்தி, அலவாங்கு இவைகளுடன் அந்தப் பிராணியைத் தேடினர். வழக்குக் கொடுக்க வந்த மனிதன் அதைக் கொல்லக்கூடாதையா, அதன் பெயர் பொக்கன்; என்றான். அவன் மனைவி, இல்லை, அதன் பெயர் சோத்துப் பொக்கன்:

அது வீட்டினுள் இருப்பது செல்வம்" என்றாள். சோத்துப் பொக்கன் வாழ்க. 'சோத்துப் பொக்கன் என்ற அந்தப் பயங்கரபிராணி என்ன? என்று நீங்கள் யோசிப்பீர்கள். அது ஒரு பெரிய தவளை. மிகவும் பெரிய தவளைகளை அந்த ஊரவர்கள் சோத்துப்பொக்கன் என அழைக்கின்றனர்.

8. விவாகம் வேண்டாம்.

இன்னொரு நாள்: சேவையர் தனது மகள் விவாகம் வேண்டாம் என்று சொல்லுகிறாள்: என்று சொன்னார். இவள் எனக்கு எதிர்மறையாக இருக்கிறாள். நான் விவாகம் வேண்டும் என்று வெளிச்சமாகச் சொல்கிறவன் அல்லவா? அடிப்படை மனப்பான்மையில் இருவருக்கும் வித்தியாசம் இருக்காது என நினைக்கிறேன்.

இவளுடைய குட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று மனதுள் நினைத்துக் கொண்டு 'பிடிமின், பிடிமின்' என்ற கருத்தில் 'விடுமின் விடுமின்' என்று கூறும் பெண்களை விளக்கும் கலிங்கத்துப் பரணிச் செய்யுளையும் சேவையருக்கு விளங்கப்படுத்தி பெண்கள் பல கருத்தை மனத்தில் வைத்துக்கொண்டு 'விவாகம் வேண்டாம் என்று சொல்லுவார்கள்' என்றேன். 'என் னென்ன கருத்தை மனதில் வைத்துக்கொண்டு விவாகம் வேண்டாம் என்று சொல்லு வார்கள்' என்று சற்று விவரமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்.

அது பாருங்கள்: ஒவ்வொருவர் விசயத்தில் ஒவ்வொரு வகையாக இருக்கும். விரிப்பிற் பெருகும் இரண்டொரு விசயங்களைப் பிரதானத்தைக் கொண்டு பொதுவாக எடுத்துச் சொன்னால் பெண்கள் தாம் ஒருவர் மேல் காதல் கொண்டிருக்கும்போது, பெற்றோர் வேறு புருசர்களைப் பேசிக்கொண்டு வந்தாலும் விவாகம் 'வேண்டாம்' என்று சொல்வார்கள்.பேசி வந்த புருசன் அழகில்லாதவனாக இருந்தாலும் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்லுவார்கள். பெண்கள், பெரிய உத்தியோகஸ்தர்களை நினைத்துக்கொண்டு இருக்கும்போது வெறும் ஆசிரியர்களைப் பேசிக்கொண்டு சென்றாலும் 'விவாகம் வேண்டாம்' என்று சொல்வார்கள். இப்படிப் பல என்று இழுத்து முடித்தேன்.

'வானா' அப்படியானால் இந்த நியாயங்கள் ஆண்களுக்கு விதி விலக்கானவையா?; என்று கேட்டாள்.

நியாயங்கள் 'பெண் ஆண் கட்சி தோரணையில் செல்கிறது: ஆபத்தாகவும் முடியலாம் என்று நினைத்து, 'என்னைப் பொறுத்தவரையில் இவைகள் விதிவிலக்கானவையே' ஆனால், இவையெல்லாம் விதியைப் பொறுத்தவையே' நிகழவேண்டியவற்றுக்கு எவ்விடத்தும் வாயில்கள் உண்டு. என்று குறிப்பாக முடித்தேன்.

பின்பு விவாதம், விதி, மதியைப் பற்றிச் சென்றது. நான் எழும்பி வரும்பொழுது அவள் என்னைப் பார்த்துச் செய்த குறுநகை, அன்று என்னை நித்திரை கொள்ளவிடவில்லை.

9. காய்ச்சலில் ஒரு புது வகை

நானும் 'வானா'வும் மறுநாள் மாலை குளக்கட்டில் உலாத்தும்போது 'தனக்குக் காய்சசல் காய்கிறதா' என்று தொட்டுப் பார்க்கும்படி கேட்டாள். நான் தொட்டுப் பார்த்துவிட்டு, 'அக்கினி யென்றறியாயோ,கற்புடைய மங்கையரை' என்றேன்.

வானா கலகலவென்று சிரித்துவிட்டு 'அன்று நீங்கள் ஏன் பயந்துபோய் நின்றீர்கள்' என்று கேட்டாள்.

"அக்கினி என்று, எச்சரிக்கை செய்யும்பொழுது, எப்படிப் பயப்படாமல் நிற்கலாம்? 'வானா', சிறிது யோசித்துவிட்டு, அக்கினிக்கும் காதலுக்கும் ஏதும் சம்பந்தம் உண்டா' என்று கேட்டாள்.

"அக்கினிக்கும் காதலுக்கும் சம்பந்தம் இருக்கலாம்" ஆனால் ஒரு ஆசிரியருக்கும் காதலுக்கும் எழுத்தளவில் தவிர ஒரு சம்பந்தமும் இரா; என்பது நிச்சயம்.

அப்படியானால் ஆசிரியர்களுக்குக் காதல் என்பதே கிடையாதா?

ஆசிரியர்களுக்குக் காதல் இருக்கலாம். ஆனால் ஆசிரியர்களைக் காதலிப்பவர்கள்தான் எவருமில்லை.

'சரி நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று வைத்தால்.....'

வைக்கலாம்; ஏனெனில் இந்த ஊரின் பெயர் காதலியார் சம்மளங்குளம்;

இந்த நேரத்தில் (சிவபூசையில்) கரடி குறுக்கிட்டது. 'வானா' வின் அந்த அத்தியந்த வேலைக் காரன் "காதலியார் சம்மளங்குளம் அல்ல" கலியாணம் முடித்த சம்மளங்குளம்'

என்று சொல் லுங்கள். ஒவ்வொரு வீடாகத் திரிந்தும், ஒரு தோடம்பழம் தரமாட்டேன்' என்று விட்டார்கள் என்று சலித்துக் கொண்டு வந்தான்.

9. ஐம்பதுக்கைம்பது

மறுநாள் காலை 'ஐம்பதுக்கைம்பது' கொள்கையைப் பற்றி உங்களது அபிப்பிராயம் என்ன? என்று கேட்டுக்கொண்டு 'வானா' வந்தாள்.

சிங்களவருக்குச் சைவ சித்தாந்தம் தெரியாமல் இருக்கலாம்: ஆனால், தமிழனுக்குத் தெரிவது நூதனமல்ல. சைவ சித்தாந்தத்துக்கும் ஐம்பதுக் கைம்பதுக்கும் என்ன சம்பந்தம்?

சைவசித்தாந்தமே ஐம்பதுக்கைம்பது மயமானது. சைவசித்தாந்தத்தின்படி கடவுளே சிவனும் சக்தியுமாக ஐம்பதுக்கைம்பது மயமானவர். உலகமே ஐம்பதுக்கைம்பது மயம். ஸர்வம் ஐம்பதுக்கைம்பது மயம் ஜகத்.

ஒரு கோணத்திலிருந்து மற்றொரு கோணத்துக்குக் கதையை இழுத்துக்கொண்டு போக, ஆசிரியர்கள் எல்லோருக்கும் தெரியுமா?

ஒரு பெண், அப்புக்காத்துக்கள், டாக்குத்தர்கள், இஞ்சினியர்கள் இப்படிப்பட்டவர்களோடு பேசிக்கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு வெறும் ஆசிரியருடன் பேசிக்கொண்டிருக்கிறாள், என்றால் ஆசிரியர்களுக்குத் திரிகோண சாஸ்திரமல்ல; சர்வகோண சாஸ்திரமும் தெரிந் திருக்க வேண்டும்.

எவளாயினும், வாழ்க்கை முழுவதும் சந்தோசமாக இருப்பதை விரும்புவாளா? அப்புக் காத்துக்கள், டாக்குத்தர்கள், இஞ்சினியர்கள் என்ற பெயரைக் கண்டு விரும்புவார்களா?

எனக்கு விசம் தலைக்கேறிவிட்டது. “அது நிற்க ஐம்பதுக்கைம்பது நியாயத்தை இழுக்க வேண்டிய காரணம் என்ன?” என்றேன்.

“இன்றைக்கு நான் அரைவாசிப் பிள்ளைகளைப் படிப்பிக்கப் போகிறேன். நீங்கள் அரை வாசிப் பிள்ளைகளைப் படிப்பியுங்கள்.”

“முடியாது முழுப் பிள்ளைகளையும் நீங்கள் படிப்பியுங்கள். நான் இன்று நித்திரை கொள்ளப் போகிறேன்.

“அப்படியானால் நானும் நித்திரை கொள்ளப்பாகிறேன்.”

இந்த நேரத்தில் பழையபடியும் கரடி நுழைந்தது. வானா கோப்பியை வாங்கி “ஐம்பதுக் கைம்பது இந்தாருங்கள், சாப்பிடுங்கள்” என்று தந்தாள்.

அரசியல் மொழிகள் ஐம்பதுக்கைம்பதில் தோற்றுப் போனாலும், எங்கள் வாழ்க்கையில் ஐம்பதுக்கைம்பது இம்மி அளவும் தவறாமல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஈழகேசரி
23.01.1949,
30.01.1949

இது காதலல்ல

கசின்

நெல்சன் புதிய பஸ் சரீரத்தைக் கண்டுபிடித்தது, முன் ஆசனத்துக்குப் போட்டியிடுபவர்களின் பெருக்கத்தை உத்தேசித்ததாயுமிருக்கலாம்.

சாதாரண காலங்களில் வெறும் முறை கூறுகிற உறவினர்களிலும் ஆபத்துக் காலங்களில் கற்பித்தாவது முறை கூறுகிற அன்னியன் விசேடமானவன். சாதாரண காலங்களில் கோயிலுக்குச் சென்று வணங்குவதிலும் விசேட காலங்களில் சென்று வணங்குவதால் பல நன்மைகளைப் பெறவும் கூடும். அதிலும் கன்னிப் பெண்கள் ஆலய தரிசனத்துக்குச் செல்வதானால், நேரடி நடவடிக்கையில் இறங்கின மாதிரித்தான்.

1. செல்வச்சந்நிதி

சிலர் பிறக்கும் பொழுதே தொந்தரவுகளோடு பிறக்கிறார்கள். சிலர் தொந்தரவுகளை இடையிலே விலைக்கு வாங்கிக்கொள்கிறார்கள். இரண்டாவது வகையில்தான் நான் சேர்ந்தவன். எனது நண்பன் சிறி அம்பலவாண பிள்ளையைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. அவனுக்கு

உலகத்தில் எவரோடும் உறவாக இருக்கத் தெரியாது. ஆனால் என்னோடு மாத்திரம் உறவாக இருக்கிற வித்தை அவனுக்குத் தெரியும். அவனால் எந்த இடத்திற்காவது போய் நல்ல மாதிரித் திரும்பி வரத் தெரியாது. ஆனால் வழியில் என்னை எதனிலாகிலும் மாட்டி வைத்து விட்டுவர அவனுக்கு நன்றாகத் தெரியும். எனது பிரயாணத்துக்கு முன்னால் நான் பிரதானமாகக் கவனிப்பது அம்பலவாணிக்குத் தெரியாமல் போய்வர வேண்டும் என்பதைத்தான். ஆனால் நான் வண்டியில் ஏறினதும் எனக்கு முன்னால் அவன் வண்டியில் இருப்பான்.

"எங்கடா போகிறாய்?" என்றால் "நீ எங்கே?" என்று திரும்பிக் கேட்பான்.

"நான் கொழும்புக்கு"

"நானும் கொழும்புக்கு"

"இல்லை கண்டிக்கு"

"நானும் கண்டிக்குத்தான்"

என்ன செய்யலாம்? படவேண்டிய கஸ்டங்களைப் பட்டுத் திரும்ப வேண்டியதுதான்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் தங்கியிருக்கும் எனது உறவினர் ஒருவரைப் பார்த்து வருவதற்காக நான் சென்றகிழமை சென்றேன். வழக்கப்படி பஸ்ஸில் அம்பலவாணி இருந்தான். ஏதோ சந்நிதி முருகன் அருளினால் ஒரு தொந்தரவும் இல்லாமல் சென்று சந்நிதி முருகனையும் வணங்கிவிட்டு, எனது உறவினரையும் கண்டு திரும்பிவந்து தொண்டைமானாற்றுப் பாலத்துக்கு அருகிலே பஸ்ஸுக்காகக் காத்து நின்றோம். எங்களுக்குச் சிறிது தூரத்தில் ஒரு இளம்பெண்ணும், ஒரு வயது சென்ற மனுசியும் (அவள் தாய்) பஸ்ஸுக்காக காத்துநின்றார்கள். அவள் அம்பலவாணியை ஒரு மாதிரிப் பார்ப்பதையும், அம்பலவாணி அவளை ஏதோ உரிமையுடன் பார்ப்பதையும் அவதானித்த நான், "யாரடா அவள்?" என்று கேட்டேன். தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டான். அம்பலவாணியிடம் இப்படியான விசயங்களை மறைக்கும் குணம் கிடையாது. பஸ் வந்தது. அது நிறையச் சனங்கள். எங்களையும் ஒரு மாதிரி மிதிபலகையில் ஏற்றிக் கொண்டார்கள். அங்கே நின்ற பெண்களை ஏற்றமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அம்பலவாணி மனுசியை விட்டுவிட்டு நான் எப்படி வருகிறதென்று இறங்கி விட்டான். எனக்குச் சிரிப்பும் தாங்க முடியவில்லை. கோபமும் தாங்க முடியவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு நேரெதிரான குணங்களால் தாக்கப்பட்டால் எப்பிடியிருக்கும். பஸ்ஸோ கடைசி பஸ். நின்றால் மறுநாள்தான் வீடு. அம்பலவாணியோ அவர்களை தனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டு இப்பொழுது மனுசி என்கிறான். அவள் காதில் அவளின் தாயின் காதில் நன்றாக மனுசி என்ற பதம் கேட்டிருக்கும். அவர்கள் சண்டைக்கு வரப் போகிறார்கள். பஸ் போய்விட்டது. அம்பலவாணியை இன்றோடு கைகழுவி விடுகிற நோக்கத்துடன் பஸ்போகும் திசையை நோக்கிக்கொண்டு நின்றேன். அம்பலவாணி அவர்களுக்கு ஏதோ சொல்லிவிட்டு என்னிடம் வந்தான். அவர்கள் கோயில் நோக்கிப் போனார்கள். என்னையும் "இனி என்ன செய்வோம்; கோயிலுக்குப் போவோம்" என்று கேட்டான். உனக்குத் தெருவெல்லாம் மனுசியாக நிற்கும்பொழுது கோயிலடிக்குக் கூடப் போகத்தேவையில்லையே என்றேன். "இவள் தானடா மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன்கோவில் மூன்றாம் கிழமை இராத் திருவிழாவில் நான் தேடித்திரிந்தவள்" என்றான்.

2. பன்றித்தலைச்சி

பன்றித் தலைச்சி அம்மன் கோயில் இராத் திருவிழாவிற்கு "இராஜேஸ்வரி செற்" சின்ன மேளம் வருகின்றதென்று அம்பலவாணி என்னையும் வரிந்து இழுத்துக்கொண்டு போனான். திருவிழா ஊர்வலம் நடக்கும்பொழுது அம்பலவாணி என்னையும் கையிற்பிடித்து இழுத்துக்கொண்டு பெண்கள் எல்லாரையும் நின்று நின்று குறிப்பாகப் பார்த்துக்கொண்டு சென்றான். "இது ஏதடா வம்பு; இப்படிப் பார்க்க கன்னத்தில் வாங்கவேண்டி வந்தாலும் வரும். "என்னை மாத்திரம் விட்டுவிட்டு நீ நன்றாகப் பார்த்துவா" என்று மன்றாடினேன். அவனுடைய இரும்புப் பிடியில் இருந்து எப்படி விலக முடியும்?. ஓடியோடி எல்லா மூலையும் பார்த்துக் களைத்துப் போனான். அம்பலவாணி சந்நிதி கோயிலில் மனுசி என்ற பெண்ணும் தாயும் கால் கழுவ வந்து நின்றார்கள். அம்பலவாணி தண்ணீரை அள்ளி அந்தப் பெண்ணுக்குக் கொடுக்க ஓடிச் சென்றான். இடையில் வந்த ஒருவர் ஐயா, உங்கள் மனைவிக்குக் கொடுக்க முன்னர் இந்தப் பிள்ளைக்குக் கொஞ்சம் கொடுங்கள் என்று கெஞ்சினாராம். அந்த மனைவியைத்தான் தேடித் திரிகிறேன் என்று சொன்னான்.

யாரையோ யாரோ மனைவி என்று சொன்னால் நீ ஏன் தேடித் திரிகிறாய் என்றேன். அவள்தான்டா வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் சென்றுவந்து நான் சொன்ன பெண் என்று சொன்னான்.

3. வற்றாப்பழை அம்மன்

அம்பலவாணி என்றுமே இல்லாத அதிசயமாகத் தன்னந்தனியாக வற்றாப்பழைப் பொங்கலுக்குச் சென்றான். பஸ்ஸில் முன் ஆசனத்தில் இடம்பிடிப்பதற்காக யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்கு நேரத்தோடு போய் விட்டான். அம்பலவாணியையும் முந்திக்கொண்டு மூக்குக் கண்ணாடி அணிந்த இளந்தம்பதிகள் முன் ஆசனத்தைப் பிடித்துக் கொண்டார்கள். அம்பலாவாணிக்கு பின்னுக்குத்தான் இருக்க ஒரு இடம் கிடைத்தது. சனங்கள் நிரம்பிய பின், அதே பெண் (பின்னர் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலில் சந்திக்கப்போகின்ற, அதன் பின்னர் செல்வச் சந்நிதி கோயிலில் சந்திக்கப்போகின்ற பெண்) பஸ்ஸுக்கு வந்தாள். இந்தத் தடவை அவளின் தாயார் இல்லை. அத்தோடு அவள் கோயில் தரிசனத்துக்காகவும் செல்ல வில்லை.

முன் ஆசனத்தில் இருந்த புருசனைப் பின்னுக்கு வரும்படியும் "இவள் அந்தப் பெண் ணோடு இருக்கட்டும்" என்று கண்டக்டர் கேட்டுப் பார்த்தார். முன்னுக்கு இருந்த புருசன் சிறி தும் இசையவில்லை. அம்பலவாணிக்கு அருகில் நெருக்கத்தோடு நெருக்கமாக அவள் இருந்துகொண்டாள். அம்பலவாணியை ஒரு அப்பாவி என்று நினைத்தாளோ!. என்ன நினைத்தாளோ இருந்து விட்டாள் பஸ் புறப்பட்டுவிட்டது.

முறிகண்டிப் பிள்ளையார் கோவிலில் பஸ் நிற்பதும் ஓடிப்போய் கால் கழுவதும் எல்லோ ரும் அறிந்ததே. அங்கே அம்பலவாணிக்குப் பின்னால் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலில் நடக்கப்போகின்ற சம்பவம் அப்படியே நடந்தது. "ஐயா உங்கள் மனைவிக்குக் கொடுக்க முன் இந்தப் பிள்ளைக்குச் சிறிது தண்ணீர் ஊற்றுங்கள் என்று தண்ணீர் அள்ளிய அம்பல வாணியைப் பார்த்து ஒருவர் கேட்டார். முறிகண்டியை விட்டு பஸ் சென்றதும் மழை பெய்யத்

தொடங்கிவிட்டது. முன் ஆசனத்தில் இருந்த தம்பதிகளுக்கு கண்ணாடி உடைந்து அற்றுப் போன முற்பக்கத்தால் மழை வீசி உத்தரியம் முதல் உடுப்பு ஈறாக நனைத்து விட்டது.

பஸ்ஸின் இஞ்சினுக்கு தண்ணீர் விடுகிற குழாய்க்கு மூடியில்லை. வாழைக்குலையின் அடித்தாரில் அது அடைக்கப்பட்டிருந்தது. அது என்ன மாதிரியோ கழன்று விழுந்துவிட்டது. குளாய்க்குள்ளால் ஒருவித சத்தத்தோடு கொதிதண்ணீர் வீசியது. இளந் தம்பதிகளில் மழைத் தண்ணீர் வீசிக் குளிர்ந்த முகத்தில் கொதிதண்ணீர் வீசியது பொருத்தமுடைத்தானாலும் அவர்களின் மூக்குக் கண்ணாடிகளின் நிலமையை யோசித்துப் பாருங்கள். மாங்குளத்தில் இஞ்சின் கோளாறு பண்ண பஸ் பூரண வேலை நிறுத்தம் செய்து விட்டது. அவசரமானவர் களையும் பெண்களையும் பின்வந்த பஸ்களில் ஒரு மாதிரி அனுப்பினார்கள். (அவசரமான வர்கள் என்றால் கண்டக்ரருக்கு அறிந்தவர்கள் என்று அர்த்தம்). அம்பலவாணி பாடு திண் டாட்டமாய் போய்விட்டது. அவளையும் மனைவியென்று பிறரால் சுட்டப்படுபவர்களையும் ஏற்றினார்கள். அவள் அவரை (புருசனை என்ற கருத்தில்) விட்டுவிட்டு எப்படிநான் வருவது என்று துணிந்து கூறினாள். அம்பலவாணியும் ஏற்றப்பட்டான். அந்தப் பெண்ணின் துணிகரக் கூற்றால் அன்று அம்பலவாணியும் போய்ச் சேர்ந்தான் என்று சொல்லுங்களேன்.

இவ்வளவு சந்தர்ப்பங்களும் ஈஸ்வரனாலேயே ஈஸ்வரனுடைய சந்நிதானங்களி லேயே எங்களைச் சேர்த்து வைப்பதற்காகவே அருளப்பெற்றவை என்ற அவளுடைய வாதத்தை ஏற்றுக்கொண்டு அவளுடைய மிதந்த முன் வாய்ப்பற்களையும் பொருட்படுத்தாது அம்பலவாணி அவளை ஈசுவர சந்நிதானத்திலேயே விவாகம் செய்துகொண்டது காதலன்று ஈஸ்வர லீலையா?

(கதையைத் தலைகீழாகச் சொன்னதுக்கு வாசகர்கள் மன்னிக்க வேண்டும்)

அடிக்குறிப்பு

இதை எழுதிவிட்டு "உன்னை மாங்குளத்தில் அவள் புருசன் என்று சொல்லி ஏற்றிக்கொண்டு போன சந்தோசத்தில், நீ தொண்டைமானாறில் அவளை மனைவி என்று சொல்லி ஏற்றிக்கொண்டு போகப் பார்த்தாய்: ஒரு சமயம் அவர்கள் ஏற்றிக்கொண்டு போயிருந்தால் பின்பு எந்தக் கோயிலுக்குப் போக எண்ணியிருந்தாய்?" என்ற சந்தேகத்தை அவனிடம் நேரிற் கேட்டறியப் போனேன். நான் சென்று செருமினதையும் கவனியாமல் அவர்கள் அறைக்குள் இருந்து சம்பாதித்த சம்பாசனையைக் கேட்ட பின் நான் மேலே எழுதின "இது காதலல்ல" என்ற தலையங்கத்தை மாற்றவேண்டி இருக்கிறது.

◆◆◆

"நான் ஈஸ்வரனை எதை வருந்திக் கேட்கிறனோ அதை நிறைவேற்றுவது வழக்கம்.!

" ஏன்"

"நான் உங்களையே எனக்குப் புருஷனாக்க வேண்டும் என்று பன்றித்தலைச்சியம்மன் கோயிலிலும் செல்வச் சந்நிதி கோயிலும் வருந்திக் கேட்டேன். அப்படியே நிறைவேறினது.

" அப்படியானால் உனக்கு என்மேல் அன்று தொடக்கம் காதல் தானா?"

" ஏன் உங்களுக்கு இல்லையா?"

"பஸ்ஸுக்குள் நடந்த லீலைகள் எதைக் குறித்தது?"

" நான் நினைத்தேன், ஒரு வேளை எனதுமிதந்த, ஒரு வேளை எனது மிதந்த...."

"அப்படியல்லாமில்லை... அடுத்த வீட்டுப் பொன்னம்மாவின் மிதந்த பல்லை நான் பழிப்பதைக் கண்டு, அம்மா அப்பவே சொல்லிவிட்டாள்.

" உனக்கு மிதந்த பல்லுக்காரிதான் வருவாளென்று"

"பேசுந்தரமோ காதல் பரவசமானால்...."

ஈழகேசரி
15.09.1949

கதவைச் சாத்தினாள்

கசின்

கதவைப் படீரென்று சாத்தினாள். நான் திரும்பிப் பார்த்தேன். கதவைப் பூட்டியும் விட்டாள். இப்படிச் செய்வாள் என்று நான் எதிர்பார்க்க வில்லை. ஆனால் அவள் கதவைப் பூட்டியது எனக்கு பெருமகிழ்ச்சி. இன்பத்தினால் என் நரம்புகள் எல்லாம் துடிதுடித்தன. எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. நானும் நாலைந்து நாள்களாக இதற்கு வழியென்னவென்று யோசித்து யோசித்து அலுத்துவிட்டேன். என்னுடைய தந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை.

சாரதாவும் இதற்கு வழி என்னவென்று என்னைப் போல் யோசித் திருக்கிறாள் என்று நான் நினைக்கவில்லை. அவள் கதவைப் படீ ரென்று சாத்தினபோதுதான், எனது மன உணர்ச்சியே அவளுக்கும் இருந்தது என்று எனக்குத் தெரிந்தது. ஆனால் நான் சிறிதும் அக்க றையின்றித் திரிகிறேன் என்று அவள் நினைத்திருக்கின்றாள். அவள் கதவைச் சாத்திய வேகத்திலிருந்தும் அவள் முகக் கடுப்பிலிருந்தும் அது தெரிந்தது.

அவளுக்கு எனது எண்ணம் தெரியவில்லையே என்பதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. எனக்கு ஓரளவு மகிழ்ச்சியும் உண்டு. இன்னும் நான் காட்டிக்கொடாமல், "இப்படிப் பொழுதுபட்டதும் படாததுமாகப் படுக்கைக்குப் போனால் மற்றவர்கள் என்ன சொல்லுவார்கள்: என்று மெதுவாகச் சொன்னேன்.

"மற்றவர்கள் என்று ஏன் சொல்லுகிறீர்கள்" அருணாசலம் என்று சொல்லுங்கள்: நீங்கள் அருணாசலத்தைக் கலியாணம் செய்வற்கு என்னை ஏன் கலியாணம் செய்தீர்களோ தெரியவில்லை; என்று படபடப்பாகப் பேசினாள்.

எனக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. அவளும் சிரித்தாள். இந்தச் சிரிப்பொலிக்குள் வெளியிருந்தும் ஒரு ஒலி கேட்டது. அருணாசலம் என்னைக் கூப்பிட்டான். இரண்டு மூன்று சத்தம் கூப்பிட்டான். நான் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அருணாசலம் திரும்பிப் போவ தாய்க் காணவில்லை. பின்னர் கூப்பிட்டான். நான் அவனுக்கு மறுமொழிசொல்ல வாய் உண்ணினேன்.

ஆனால் கூப்பிடத் தொடங்கினதும் சாரதா என்னைக் கவனமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள். நான் அவனுக்கு மறுமொழி சொல்ல வாய் உன்னினதும், உடனே அவள் எனது வாயைக் கெட்டியாகப் பொத்திக்கொண்டாள். இதுவும் நான் எதிர்பார்க்கவில்லை. நான் அவளிலிருந்து திமிறி அருணாசலத்தை விசாரித்திருக்கலாம், அவள் எனக்கு விருப்பமா னதைத்தானே செய்தாள். பேசாமல் இருக்க எனக்குத் துணிவில்லை.

அருணாசலத்துடன் இருந்து பேசுவதற்கு எனக்கு உண்மையில் விருப்பமில்லை. ஆனால் அவன் கூப்பிட்டபொழுது, ஏன் என்று விசாரியாமல்விட எனது இயற்கை உணர்ச்சி விடவில்லை. ஒருவன் கூப்பிடும் பொழுது, ஏன் என்று கேட்காமல் இருக்க முடியுமா? எனக்குச் சிறிதும் விருப்பமில்லாமலே நான் ஏன் என்று கேட்க உன்னினேன். இப்படித் தத்தளித்த எனக்கு ஓர் உறுதுணையாக, அவள் என் வாயைப் பொத்தினாள். 'நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது தாயம்; என்ற மாதிரி சிறிதும் விருப்பமின்றி ஏன் என்று கேட்க நினைத்த எனக்கு, அவள் வாயைப் பொத்தினது ஒரு சாட்டாகப் போய்விட்டது.

அவள் வாயைப் பொத்தினதும், அவளுடைய சமயோசித புத்தியினாலும், அவளுடைய ஸ்பரிசத்தினாலும், நான் ஆனந்த பரவசமாகிவிட்டேன். அதோடு அருணாசலம் மேற்கொண்டு கூப்பிட்டுக் கொண்டு நிற்கிறானே என்ற பயமும் மனதில் இருந்தது. ஏதோ நல்ல காலமாக அருணாசலம் போய்விட்டான்.

அருணாசலம் போய்விட்ட சம்பவம் நீங்கள் ஏதோ சாதாரண சம்பவம் என்று நினைக் கக்கூடாது. அது உலக அதிசயங்களில் ஒன்று. சூரிய சந்திரர்களின் கதி வேறுபாட்டுக்கு அதை ஒப்பிடலாம். இந்தப் பெரிய அதிசயம் நிகழச் செய்தவள் எனது அருமைச் சாரதா அல்லவா? அவளுக்கு நான் பதிலுக்குச் செய்யக்கூடியதென்ன? வையகமும் வானமும் ஈடாகுமோ? என்னால் முடிந்ததெல்லாம் ஒரு சிறு முத்தம் தானே. நான் விவாகம் செய்து இன்னும் சரியாக நான்கு மாதங்கள்கூட ஆகவில்லை. சாரதாவின் அகத்திலும் எங்கள் அகத்திலும் ஆக இந்த நாலு மாதமும் கழிந்துவிட்டன. பட்டணத்தில் குடியேறி ஆறேஆறு நாட்கள்தான். நாங்கள் கழித்த நான்கு மாதங்களிலும் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் பட்டணத்தில் நாங்கள் தனியே சீவிப்பதைப் பற்றித்தான்.

தம்பி, அக்கா, மாமன், மைத்துனன் ஆகியவர்களின் தொந்தரவுகளின்றி சிவபூசையில் நுழையும் கரடிகளின் தொந்தரவுகளின்றி, வானத்தின் உச்சியில் பறக்கும் சோடிப் பட்சிகள் போல, சுற்றுப்புறமுள்ள சர்வ உலகத்தையும் மறந்து, சீவிக்கலாம் என்று கற்பனை மேற் கற்பனை செய்திருந்தோம்.

"நான் உங்களோடு பட்டணத்தில் தனிக்குடித்தனம் செய்யவரவில்லை. இங்கே எல்லோரும் தங்களுக்குள் சிரிக்க, என்னையே சுற்றித் சுற்றித் திரியும் நீங்கள், பட்டணத்தில் தனிக்குடித்தனம் செய்ய வந்தால், குரங்கின் கையில் கொடுத்த பூமாலை மாதிரிக் கசக்கிப் பிழிந்து விடுவீர்கள்; என்று பாதி வெற்றியும் பாதி பகிடியும் போலச் சொல்வாள். அப்படியானால், 'நான் உன்னோடு கூடிப்பேசுவதும் சிரிப்பதுவும் உனக்குப் பிடிப்பதில்லை என்று சொல்லு".

ஐயையோ அப்படி யார் சொன்னது? மற்றவர்கள் சிரிக்கிறார்கள் என்றல்லவா சொன் னேன்; என்று கதையைப் புரட்டிப் பேசுவாள். அந்த நேரத்தில் ஒருவர் பேசுவதில் உள்ள சரி பிழைகள் மற்றவருக்குத் தெரியாது. பேசுபவர்க்கும் தான் என்ன பேசுகிறேன் என்று சரியாகத் தெரியாது, இருவரும் தன் வசமிழந்து அன்பு வசப்பட்டு தம்மியராகிய நிலையிற் பேசுவது அல்லவா?

பட்டணத்துக்குப் போனால் நீங்கள் நெடுகலும் சினிமாவுக்கு வரச் சொல்லி கேட்பீர்கள்: எனக்குச் சினிமா என்றாலே பிடிக்காது என்று வேண்டுமென்றே சொல்லுவாள். இப்படி நாங்கள் தனிக்குடித்தன வாழ்க்கையின் கற்பனையிலேயே சஞ்சரித்தே வந்தோம். நாங்கள் பட்டணம் வந்தபோது எங்களைப் புகையிரத நிலையத்தில் நண்பன் அருணாசலம் வரவேற்றான். அருணாசலமும் நானும் ஒரே கலாசாலையிலே படித்து ஒரே கந்தோரிலேயே உத்தியோகம் பார்த்து வந்தோம்.

நான் விவாகம் செய்து கொண்டு குடித்தன வாழ்க்கையை ஆரம்பிக்கவே, அவன் எதிர்வீட்டை வாடகைக்கு ஒழுங்கு செய்து கொண்டு அதில் தாயுடன் வசித்து வந்தான். நானும் அவனும் ஒரு வீட்டில் இருக்கும் காலத்தில் இரவு பத்துப் பதினொரு மணியளவிலும் இருந்து கதைப்போம். ஜகவர்லால் நேரு, அட்லி முதலிய ராஜதந்திரிகளின் கதை தொடக்கம் அடுத்த வீட்டுப் பொன்னம்மாவின் கதை வரை ஊர் வதந்திகள் எல்லாம் கதைத்துக் கதைத்து முடியாமல் அரைமனத்தோடு நித்திரைக்குப் போவோம். மாதக்கணக்காக, வருடக் கணக்காக நாங்கள் இதே மாதிரிச் சீவித்து வருகிறோம்.

இந்த அந்நியோன்னியத் தொடர்பின்மேல் முற்றிக் கனிந்த நட்பின் மேல் நேற்று இடையிலே வந்து புகுந்த சாரதா ஆட்சி செலுத்துவாள் என்று அருணாசலம் என்ன யார்தான் நம்புவார்கள்?

பெரிய வீராதி வீரர்கள், வீரமார்த்தாண்டர்கள் ஒரு பெண்ணின் கடை விழியிலிருந்து செல்லும் கூரிய பார்வையின் முன்னால் மண்டியிட்டார்கள் என்று இதிகாசங்கள் கூறும்போது நான் சாரதாவுக்கு முன்னால் தோப்புக் கரணம் போட்டாலும் ஆச்சரியப்படத்தேவையில்லை.

நானும் சாரதாவும் எத்தனையோ திட்டம்போட்டு அவளோடு தொடங்கிய குடித்தன வாழ்க்கைக்கு ஆரம்ப சகுனமாக, அருணாசலம் வீட்டில் முதல்நாள் விருந்து நடந்தது. அன்றே சாரதாவுக்கு அருணாசலத்தின் மேல் பகை மூண்டுவிட்டது.'நண்பர்கள் என்றால்

இப்படி எந்நேரமும் புருஷன் பெண்சாதி மாதிரி ஒட்டிக்கொண்டு திரிகிறதா?' என்று என்னிடம் சொன்னாள்.

சாரதா பல திட்டங்களை தனக்குள் எண்ணியிருந்தாள். நான் கந்தோரால் வருவதைக் காவல்நின்று வெளிக்கேற்றில் வந்து கூடிக் கொண்டு வரவேண்டுமென்று எண்ணியிருந் தாள். காலையில் கந்தோருக்குப் போகும் பொழுது "வெளிக்கேற்று வரையும் வந்து நான் மறையும் வரையும் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு வருவேன் என்று எண்ணியிருந்தாள்.

நான் கந்தோரால் வந்தவுடன் எனது கந்தோர்ப் புதினங்களைத் தான் கேட்டும், தான் புதினப் பத்திரிகைகளில் வாசித்தவற்றை எனக்குச் சொல்லிச் சம்பாஷிக்க வேண்டும் என் றெல்லாம் நினைத்திருந்த சாரதாவின் எண்ணங்கள் எல்லாவற்றையும் அருணாசலம் சிதறடித்து விட்டான்.

என்னைச் சாரதாவின் இடத்தில் வைத்துப் பார்த்தால், நான் அவளைக் கொலைகூடச் செய்திருப்பேன். சாரதா பொறுமைசாலி. நான் காலையில் கந்தோருக்குப் புறப்பட ஐந்து நிமிங் களுக்கு முன்னரே அருணாசலம் என்னைக் கூட்டிப்போக வந்துவிடுவான். சாரதா என்ன செய்வாள் பாவம், பல்லைக்கடித்துக்கொண்டு உள்ளே நிற்பாள். மாலையில் கந்தோரால் திரும்பி வரும்போது அருணாசலம்கூட வருவான். வெளிக்கேற்றிலும் ஒரு ஐந்து நிமிடம் நின்று கதைத்துவிட்டத்தான் போவான்.

சாப்பிட்டு இரவு ஏழு மணிக்கெல்லாம் என்னோடு பேசுவதற்கு வந்து விடுவான். பிறகு எங்கள் பேச்சு முடிய இரவு பன்னிரண்டு மணி வரையிலும் சிலசமயம் செல்லக்கூடும். அதில் வெடிச்சிரிப்புகளும் கனைப்புகளும் கலந்து கலகலப்பாகவும் சுவாரஸ்யமாகவும் எங்கள் கதை செல்லும்.

சாரதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும். சில சமயம் நான் அருணா சலத்திடம் "அலுப்பாய் இருக்கிறது போடா; என்று சொல்லி எழும்புவேன். அவன் முதுகில் ஒரு குத்துப்போட்டுப் பிடித்து இருத்திவிடுவான். நான் இரசமில்லாமல் அவன் கதையை என் னவோ நினைத்துக்கொண்டு கேட்டுக்கொண்டு இருப்பேன். அவன் இடையிலே ஒரு குறுக்குக் கேள்வி போட்டு என்னைத் தன்னுடைய கதைக்குத் திருப்புவான். நான் அவனு டைய கதையை அருவருப்போடு கேட்பதை அவன் உணரவில்லை.

நான் அவனோடு கதைத்துவிட்டுப் படுக்கைக்குப் போகும்போது பொழுது சாரதா நல்ல நித்திரையாய்க் கிடப்பாள். அவள் நித்திரை இல்லாமல் விழிப்பாக இருந்தால் உடனே ஒரு புயல் அடிக்காது விடாது. எனது நல்ல காலம் அதிகமாக நித்திரையாகவே இருப்பாள். இப்படி எங்கள் தினசரி நடக்க வேண்டிய இன்ப சந்தர்ப்பங்களுக்கு அருணாசலம் கரடியாக நின்றான். இரவில் அவனைக் கதைக்க வராமற் செய்வதற்கு என்ன வழியென்று நானும் சாரதாவும் தனித்தனியே யோசித்துக் கொண்டே இருந்தோம்.

அன்று அருணாசலம் வரச் சற்றுப் பிந்திவிட்டான். சாரதா சாப்பாடானதும் படுக்கை அறைக்குள் விரைவாகப் போய் படுக்கையைத் தட்டிப்போட்டாள். இந்தாருங்கோ என்று என்னை அழைத்தாள். நான் அறையுள் நுழைந்ததும் கதவைப் படாரென்று சாத்தினாள்.

"காவலன் றன் மைந்தனு மக்
கன்னிகையும் நானுமங்கு
தேவ சுகங்கண்டு
விழியே திறக்கவில்லை
ஆவி கலப்பி
னமுது சுகந்தனிலே
மேவியங்கு மூடி
யிருந்த விழி நான்கு"

நானும் சாரதாவும் செய்துகொண்ட ஒழுங்கின்படி, அருணாசலத்துக்கு விவாகம் செய்துவைத்து விடவேண்டுமென்ற, தீர்மானத்தோடு மறுநாள் அருணாசலத்தின் தாயோடு பேசினேன். தனக்கு இப்போது வேண்டாமென்று சொல்லித் திரிந்த அருணாசலம், முதனா ளிரவு தனது தாயாருக்கு தான் மிகவிரைவில் விவாகம் செய்ய வேண்டுமென்று சொல்லி விட்டானாம்.

ஈழகேசரி
06.06.1949

கலைப்பித்தன்

1950 களில் ஈழகேசரியில் எழுதிய கலைப்பித்தனின் உண்மைப் பெயரை அறியுமாறில்லை. குடும்பத்தில் சந்தேகத்தால் விளையும் மனப்போராட்டத்தை 'போராட்டம்' என்ற கதையில் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியவர்.

- போராட்டம்

போராட்டம்

கலைப்பித்தன்

ஆவி பிரியும் வரை சந்தேகம். பிரிந்த பிறகு மாறாத் துக்கம். அறிந்தது அவ்வளவுதான். ஆத்மா அடங்கவில்லை. சந்தேகம் என்னைச் சந்தியில் நிற்க வைத்துவிட்டது. மித்துரு சத்துருவானான். அன்பு அஞ்ஞானமாகியது. இன்பமும் இருளாகியது. வாழ்வு வாடியது. என்னே! எல்லாம் என்காலம். சுரேன்தான் கெட்டவனா? சாருனிதான் கெட்டவளா? அப்படியுமல்ல. சீ! என்ன வாழ்க்கை! வாழ்க்கை என்பது போராட்டம்; வாழ்க்கை என்பது வேள்வி, "வாழ்க்கை என்பது கடல். புண்ணில்லாத போராட்டம். தீயில்லாத வேள்வி. புயலில்லாத கடல். இப்படியெல்லாம் சொல்கின்றார்கள். இவற்றையெல்லாம் சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொள்பவனுக்குத்தான் வாழ்க்கையின் உண்மையான கருத்து விளங்கும்" என்று காண்டேகர் சொன்னது எவ்வளவு உண்மை. இப்பயங்கர உலகில் சாந்தியோடு வாழ முடியுமா? இது விளங்காத ஒருவிஷயம்;

விடை பெறாத ஒரு கேள்வி.

சுரேன் - ஆம், நானும் அவனும் பள்ளிக்கூடத் தோழர்கள். அவன் பெரிய பணக்கார வீட்டுப்பிள்ளை. அவன் அப்பா ஒரு சிறை அதிகாரி.

சுரேனின் நட்பை எல்லோருமே விரும்புவார்கள். அப்படி விரும்பியவர்களில் நானும் ஒருவன். காலக்கெடுவில் எங்கள் நட்பு வளர்ந்தது. எப்படி வளர்ந்ததோ அப்படியே தளர்ந்தது.

மாலைவேளை கல்லூரியிலிருந்து வரலானேன். அந்தச் சிறிய மெத்தை வீட்டை என் கண்கள் நாடிச் சென்றன. குஞ்சத்தருகே ஆனந்தப் புன்முறுவலுடன் நின்ற சாருனியின் அழகை என் கண்கள் அள்ளிப் பருகின.

அப்புறம் எங்கள் இருவருக்குள் அனேக வாதப் பிரதிவாதங்கள். அவள் வேறு யாருமில்லை. ஒன்றுவிட்ட அத்தை மகள். திருப்பிப் பார்த்தேன். சுரேன் நின்றான். என் மனம் சுருக்கென்றது. உலகத்தில் நடக்கும் காரியங்களில் இது ஒன்றும் பெரியதல்ல. சுரேன் என்னைக் கேலி செய்தான். அவனது ஏளனச் சொற்கள் என் உள்ளத்தைத் துளைத்தன. அன்றிலிருந்து விரோத வித்து வளர ஆரம்பித்தது.

அன்று சாருனியின் பிறந்ததினம். விருந்துகென எங்கள் குடும்பத்தாரை அழைத்திருந்தனர். நானும் சென்றேன். வெகுஅலங்காரத்துடன், உல்லாசமாகத்தான். படிக்கட்டைத் தாண்டி உள்ளே அடியெடுத்து வைத்தேன். மனம் பகீரென்றது. சுரேனை வெகு ஆவலுடன் உபசரித்துக் கொண்டிருந்தாள் சாருனி. உள்ளே போவதா, வெளியே திரும்புவதா? என்ற சந்தேகம் எழும்பியது. மனம் மன்றாடியது. துக்கம் தொண்டையை அடைத்தது. திடங்சற்கற்பத்துடன் வீடு திரும்பினேன். என்னை ஏளனம் செய்த சுரேன் அதே சாருனியின் உபசார வார்த்தைக்கு உயிரையும் ஒப்புவிப்பான் போலத் தோன்றியது. விரோத வித்துப் பூத்துக் காய்க்கத் தொடங்கியது. உலகத்தில் வாழ்வதற்கே இடமில்லை என்றெண்ணினேன்.

அன்றோ சுரேனிடமிருந்த கொஞ்ச அன்பும் குறைந்தது. ஏன்? அடியோடு அழிந்தது.

“பிரபா, நீயேன் விருந்துக்கு வரவில்லை?” என் அம்மாவின் அன்புக் குரல் இது.

“வயிற்றுவலி அம்மா, அதுதான் வீடுவரையிலும் வந்த நான் திரும்பி வந்துவிட்டேன்” என்றேன்.

“ஏதாவது கஷாயம் போட்டுத் தரட்டுமா?” என்றாள் என் பேதை அம்மாள்.

“வேண்டாம் அம்மா, இப்பொழுது வலி இல்லை” என்றேன். கசாயம் போடுகிறாளாம்! பாவம்! என் அம்மாளுக்கு என்ன தெரியும் என் மனவேதனை.

◆◆◆

சாருனிக்கு இருபது வயதாகியும் இன்னும் கலியாணம் ஆகவில்லை. அவர்கள் சொந்தத்தில் படித்தவனாக நான் ஒருவன் தான் இருந்தேன். சாருனியின் தகப்பனார் என்னை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள விரும்பினார். நானோ பிடிவாதமாக மறுத்தேன். என் கொள்கை குடும்பத்தாருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. காற்காசுக்கு வழியில்லாதது கல்லூரிற் படிக்கும் என் வார்த்தை அவர்கள் காதில் ஏறவில்லை. நான் வேண்டாமென்று சொல்லும் காரணத்தையும் அவர்கள் கேட்கவில்லை. கேட்டாலும் நான் சொல்லப் போவதில்லை. தர்மசங்கடமான ஒருநிலை!

எப்படியோ எனக்கும் சாருனிக்கும் மணம் நிறைவேறியது. மணம் நடந்ததிலிருந்து பிணக்குத்தான். அது இருக்கட்டும். கலியாண ஊர்வலம் வீதிவழியே வந்தது. சுரேன் ஜன

னல் வழியாக சாருனியை விழுங்கி விடுபவன் போல் பார்த்தான். எனக்கு அப்போது ஒரு கண் அதிகமாக இருந்திருக்குமேயானால் அவனை எரித்திருப்பேன். எனக்கு அவ்வளவு ஆத்திரம். ரோஜா மலரைப் புழு அரிப்பது போல் என் மனத்தைச் சந்தேகம் அரிக்கலாயிற்று.

கலியாணமாகி ஒன்றரை வருடம் உருண்டோடியது. அன்றுவரை நான் சாருனியோடு பேசியதே இல்லை. நான்தான் சலனமற்றவனாயிற்றே. கடைசியாக அவளே வந்து தன் வலக் கையினால் என் தோளை உலுக்கினாள். எனக்கு ஆச்சரியம் அதிகரித்தது; குதர்க்கம் கூத்தாடியது. "சீ! மானங் கெட்டவளே, தோளை விடு" என்றேன். அவள் கன்னம் கறுத்தது. தேகம் துவண்டது. கண்கள் கலக்க மடைந்தன. அப்பொழுது அவளைச் சாசகக்காரி என்றெண்ணினேன். இப்பொழுது ஏக்கமடைகிறேன்.

அன்று படுத்தவள் தான் சாருனி. முப்பதாவது நாள் அமாவாசை இருட்டு. அல்லலுற்றது என்மனம். அன்புடன் என்னை அருகில் அழைத்தாள். அப்பொழுதும் எனக்குச் சந்தேகத் தான். பாசத்தால் பரிதவித்தேன். அவன் எதிரே இருந்த புத்தகத் தாங்கியை காட்டினாள். அதில் வெகு பத்திரமாக இரு காகிதச் சுருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அதில் ஒன்றைப் படிக்கச் சொன்னாள். படித்தேன். அந்தக் கடிதம் சுரேன், சாருனிக்கு எழுதியது. தூய அனபு அதில் கலந் திருந்தது. என் தலை சுற்றியது. வஞ்சம் காட்டியது. துரோகத்தைத் தொலைக்க எண்ணியது என்மனம். எனது முகமாற்றத்தை அறிந்து கொண்டாள் சாருனி; யமனோடு வாதாடிக் கொண் டிருக்கும் தருணம் என்னோடும் வாதாடினாள். தன் அபயக் குரலில்.

"இன்னும் சந்தேகம் தீரவில்லையா?"

"யார் மேல்?"

"ஏன்? என் மீதுதான்"

"இதன் அர்த்தம்..."

"இன்பம் என்பது இன்னதென்று அறியாமல் இடர்பட்டது எதனால், கடிதத்தைப் படித்ததும் தெரியவில்லையா?"

"தெரியாது" என்றேன்.

"மற்றொரு கடிதத்தையும் பார்த்தால் சந்தேகம் தீரும்"

"அருமைத் தங்கை சாருனிக்கு:

ஆசி பல. சில நாட்களாக நீ சோகமே உருவெடுத்தாற் போலிருக்கும் காட்சியைப் பார்த்து எனக்கு ஒரே திகிலாக இருக்கிறது. உன் புன்முறுவல் இப்போது எங்கே போயிற்று? சாரு, என் அன்புத் தங்காய், எனக்கு உடன் பிறந்த சோதரிகள் இல்லை. அந்தக் குறை நீயிருப் பதால் எனக்குத் தெரியவில்லை. உன் தூய்மையான அன்புதான் என் வாழ்வின் துயரங்க ளையெல்லாம் சகித்துக் கொள்ளச் செய்கிறது. என் நண்பன் பிரபாகன் - ஆமாம், உன் கண வனைத்தான் சொல்கிறேன். என்னைப் பற்றி அவன் தப்பபிப்பிராயங் கொண்டிருப்பதாக தெரிகிறது. உண்மையைச் சொல்கிறேன், நான் கள்ளமில்லாதவன் என்பதை அவன் அறிந்து கொண்டானானால் எனக்கு எவ்வளவு நிம்மதியாயிருக்கும். நம் தேசத்தின் பின்னலை பிர

பாகரன் விளக்கிக் கொள்ளாதது எனக்குப் பெரிதும் வியப்பாக இருக்கிறது. நமது சகோதர அன்பை அவன் இன்னமும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லையே என்பதை எண்ணும் போது கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. பரவாயில்லை காலம் அவனை மாற்றிவிடும். அவன் முன் கோபக்காரன். அதை அறிந்து அவனுக்கு நீதான் பணிவிடைகள் செய்ய வேண்டும். அவனுக்கு நகைமுகங் காட்டி நற்பணியாற்று. எல்லாம் தெரிந்த உனக்கு நான் சொல்ல என்ன இருக்கிறது? விரைவில் எனக்குத் திருமணம் நடைபெறும். அழைப்பிதழ் அனுப்புகிறேன். எப்படியாவது பிரபாகரனைச் சமாதானப்படுத்தி தம்பதிகளிருவரும் சேர்ந்து வந்து என் திருமணத்தை நடத்தி வையுங்கள். உங்கள் இருவருக்கும் என் அன்பு கலந்த நன்றி.

இப்படிக்கு
அன்பு மறவாத அண்ணா
சுரேன்

மனக்கலக்கத்துடன் கடிதத்தைப் படித்து முடித்தேன். என் மனம் மாறியது. ஆ! நிரபராதியை அபராதி என்று தவறாக எண்ணிவிட்டோமே என்று ஏங்கினேன். அமைதி குலைந்தது. சில வினாடிக்கெல்லாம் கதவிடிக்கும் சத்தம் கேட்டுத் திறப்பதற்குச் சென்றேன். சோர்ந்த என் உள்ளம் சிதறியது. சுரேன் கலியாணப் பத்திரிகையுடன் காட்சி தந்தான். இங்கே நடந்த வாக்கு வாதங்களை எல்லாம் அவன் கேட்டுக் கொண்டிருந்திருப்பான். ஏனெனில் அவன் முகம் அவ்வளவு வேறுபட்டுக் காணப்பட்டது. கலியாணப் பத்திரிகை காற்றாய்ப் பறந்தது. “சகோதரி” என்று அலறி வீழ்ந்தான். சாருனியின் காலில். “என்னாலா உனக்கு இந்தக் கதி” என்றான் ஏக்கத்துடன் மறுகணம் மூர்ச்சையானான்.

“சுரேன் அண்ணா” இத்தனைக்கும் மேல் அவளால் பேசமுடியவில்லை. சாருனியின் மனம் சமீபித்தது. அவள் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். அவள் சாந்தி அடைந்தாள் என்னைபோலவே சுரேனும் ஊர் சுற்றுகிறான். எங்களிருவருக்கும் சந்தேகம் தீர்ந்தது. ஆனால் சாந்தி நெருங்க மறுத்தது.

ஈழகேசரி
20.08.1950

டி.எஸ்.வி. வேலு

டி. எஸ். வி. வேலு ஈழகேசரியில் சரித்திரக் கதைகளை எழுதியவர். இவர் எழுதிய 'சுமித்திரா' என்னும் சிறுகதை ஔரங்கசீப் மன்னன் ஆட்சிக் காலத்தில் இந்துக்கள் அனுபவித்த வன்கொடுமைகளைக் கூறுவதுடன் இராஜ புத்திரர்களின் வீரத்தையும் எழுத்துரைக்கிறது.

- சுமித்திரா

சுமித்திரா

டி. எஸ். வி.வேலு

முகலாய மன்னன் ஔரங்கசீப்பின் அரசாட்சிக்காலம்.

ஔரங்க சீப் இந்தியா முழுவதையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்ததற்கு அவன் சேனையிலுள்ள ஜஸ்வந்சிங்கே காரணம்.

சௌத், சர்தெஸ்முகி என்ற வரிகள் விதிக்கப்பட்டிருந்தும் கூட 1679இல் ஜஸ்யா என்னும் வரியையும் புதிதாக விரித்தார்கள். ஔரங்க சீப் நடத்திவரும் முஸ்லிம் ஆட்சியில், முஸ்லிம் அல்லாதார் முஸ்லிம் ஆக்கப்பட்டனர்.

இந்துக்களும் அநேக கஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்தது.

இவற்றையெல்லாம் பொறுமையுடன் சகித்தனர் சிலர். கையிலே வாள் தாங்கிக்கொண்டு கண்டனக்காரர்களைக் கண்டதுண்டமாக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர் வேறுசிலர்.

கடைசியாக ஒருநாள் நடந்த சம்பவம் அவர்களைப் பொறு மையை இழக்கச் செய்துவிட்டது.

கடைத்தெருவில் சென்றுகொண்டிருந்த இராஜபுத்திர ஸ்திரிகளை மது உண்டு மயங்கி யிருந்த முஸ்லிம்கள் சிலர் வழிமறித்தனர். அவர்களின் கற்புக்குக் களங்கம் விளைவித்தனர்.

எரிமலையைப் போன்று வெறிகொண்டெழுந்தனர் இராஜபுத்திரர்கள். சுமித்ராதேவி யின் தலைமையில் ஒருகூட்டம் அரச அவைக்களத்தை நோக்கிச் சென்றது.

குர்ஆன்படித்துக்கொண்டிருந்த ஔரங்க சீப்பிற்கு வாயிற் புறத்தில் கட்டப்பட்டிருந்த மணியின் ஓசை காதில் விழுந்தது.

நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு குர்ஆன் படித்து நல்லவனாகப் பார்க்கி றாயா? என்பது போலிருந்தது அந்த மணியின் ஓலம்.

ஔரங்க சீப் வெளியே நின்றான். சுமித்ராவின் கண்கள் நெருப்பினாலே தகித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தான்.

"இனப் போராட்டத்தை எழுப்பிவிட்ட மன்னரே! மக்கள் மகிழ்ச்சியைக் குலைக்க வரி கள் விதித்தாய்... இந்துக்களிற் சில இழிச்சவாயர்களை இனமாற்றமுஞ் செய்தாய். உன் கோபாவேசத்தால் எங்கள் கோவில்களைக் கோரமயமாக்கினாய். ஒரு நாட்டில் ஒரே மன்னன் கீழ் வாழும் மக்களுக்கு இருதிறப்பட்ட ஆட்சியா? கழிப்புடன் கந்தர்வலோகம் போன்ற வீட்டில் வசிக்கின்றார்கள் ஒருசாரார்.

அவர்களுக்கு வரியில்லை. அரசாங்கத்தில் உத்தியோகமுண்டு. ஆனால் மற்றொரு சாரார் நாள்முழுவதும் கஷ்டப்பட்டு நலிந்து மெலிந்து ஏதோ கொஞ்சப் பணம் சம்பாதித்தால் அவன் சம்பாதிக்கும் பணத்தைப் போல் இருபங்கு வரி கொடுக்க வேண்டியிருக்கிறது.

"போதும் உன் பிரசங்கம்" என்றார்.

யாவரும் எதிர்பாராதபடி வெளிக்கதவு அடைக்கப்பட்டது. அடைக்கப்பட்ட அதே நேரத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். இரகசியக் கோட்டைக்கு அழைத்துச் சென்றனர்.

மறுநாள் அரசவை கூடியது. "மன்னருக்குத் துரோகமான முறையில், மரியாதையின்றி மன்னனை அவமதித்ததற்காகச் சுமித்திரா ராஜத்துவேசக் குற்றவாளிகளில் ஒருவராகச் சேர்க் கப்பட்டாள் என்று சுமித்ராவிற்கு அறிவிக்கப்பட்டது. தவிர, சுமித்ராவின் தலையை ராஜ துவே சக் குற்றவாளிகளின் தலைதொங்கவிடப்பட்டிருக்கும் இடத்திலே தொங்கவிடப்படும்" என்றும் கூறப்பட்டது.

இன்னும் இரண்டு மணிநேரம் தான் அவள் உயிர் அவள் உடலில் இருக்கும். சூரியோத யமானதும் அவள் அங்கம் இரு பாகங்களா கூறப்படும். இனிமேல் அவள் எப்பொழுது அந்த நான்கு மணியை மறுபடியும் கேட்கப்போகின்றாள்? அந்த நான்கு மணி அவளிடம் கடைசித் தடவையாக விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டது.

ஐந்து மணி அடித்தது. அதுவும் அவளுக்குக் கடைசித் தடவைதான். " இனிமேல் தான் நீ இந்த மணியோசையைக் கேட்கமுடியாதே. இப்பொழுதே கேட்டுவிடு. என்பது போன்று அது பலமாக அடித்ததாம்.

சிறைக்கோட்டத்தின் மேற்படியால் யாரோ இறங்கிவரும் காலடிச் சத்தம் கேட்டது. ஆனால் ஒரு ஆள் காலடிச் சத்தம்தானே கேட்கிறது. கதவிலுள்ள பூட்டின் துவாரத்தில் சாவியை வைத்துக்கதவு திறக்கப்படுவதை உணர்ந்தாள்.

என்ன ஆச்சரியம்! கொலை செய்வதற்காகத் தன்னைக் கொண்டுபோகவரும் கொடூர உருவத்தை நினைத்துக்கொண்டிருந்ததற்கு மாறாக, கொலையினின்றும் தன்னை விடு விக்க வருபவன் போல் ஒருவன் வந்தால்?

ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். வந்தவன் ஜஸ்வந்த்சிங்.

"சுமித்திரா என்றான். பதில் கிடைக்கவில்லை.

" முத்திராயிற்குப் போய்விட்டு இப்பொழுது தான் வந்தேன். உன்னைத் தப்புவிக்கவே...;;

"நிறுத்து உன் பேச்சை. இராஜபுத்திர குலத்தில் உதித்தவன்தானா நீ? என்னைக் கோழை என்று நினைத்தாயா?"

முத்துப் போன்ற இரு கண்ணீர்த் துளிகள் இருவர் கண்களிலிருந்தும் உதிர்ந்தன, உடனே மண்டிபோட்டு உட்கார்ந்தான் ஜஸ்வந்த்.

" சுமித்திரா என்னை... மன்னித்துவிடுவாயா?"

" மன்னிப்பு எதற்கு நிலைமையை உணர்த்தினேன். அவ்வளவு தானே"

"ஹூம், என் அந்திய காலம் அன்னியரால்..."

" சுமித்திரா அதற்கு நீ அஞ்சாதே அதற்கு நான் இருக்கிறேன்! இதோ இதை எடுத்துக் கொள். உன் உயிரை நீயே மாய்த்துக்கொள்" என்று ஒரு சிறிய கூர்மையான வாளை வீசி எறிகின்றான்.

சுமித்ராவின் கண்கள் பிரகாசிக்க ஆரம்பித்தன. வாளை எடுத்தாள். மறுகணம் அவள் கையிலிருந்த வாள் அவள் உடலில் பாய்ந்தது. வீழே விழுந்தாள்.

"ஜந்வந்த் ஔரங்கசீப்பின் கையில் என் தலை அகப்படாமல் இருக்க...." "என் உயி ரையே வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்" என்றான். சுமத்ராவின் உயிர் அவள் உடலை விட்டு நீங்கியது.

ஒன்றும் புரியாதவனாய் நின்றுகொண்டிருந்த ஜஸ்வந்த் கொலையாளிகள் வரும் காலடிச் சத்தம் கேட்கவே திடுக்கிட்டான். சட்டென்று தன் இடையிலிருந்த நீண்ட வாளை உரு வினான். அதை அவன் சுமித்ராவின் கழுத்தில் செலுத்தினான். இப்பொழுது சுமித்ரா தலை வேறு முண்டம் வேறாகக் கிடந்தாள். இரத்தத்தில் அமிழ்ந்து கிடந்த அவள் கூந்தலைக் கையி லந்திக் கொண்டு சிறையின் மற்றொரு பக்கமாக ஔரங்க சீப்பின் மசூதியின் பக்கம் குதித்தான்.

தலையில்லா முண்டமாய் இரத்தத்தில் அமிழ்ந்து கிடந்ததைக்கண்டு திகைத்து நின்ற கொலையாளிகள் யாரோ குதிக்கும் சத்தம் கேட்டு, மசூதியின் பக்கம் அவர்களும் குதித்தனர். அப்பொழுது ஔரங்கசீப் தொழுகையிலிருந்தார்.

விஷயம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. காவலாளிகள் ஜஸ்வந்தைப் பிடித்துக்கொண்டு வருவதற்குள் அவனே வந்துவிட்டதாகவும், சற்று நேரத்தில் ஔரங்கசீப்பின் முன்னிலையில் நிறுத்தப்படுவானென்று ஏகக் கூட்டம் கூடியிருந்தது.

ஔரங்கசீப் சிம்மாசனத்தில் அமர்ந்தார். ஜஸ்வந்தின் பரிதாபகரமான நிலையைக் கண்டு அவர் கண்கள் இருசொட்டுக் கண்ணீர்விட அவர் கண்கள் எப்படித்தான் சம்ம தித்தனவோ?

ஔரங்கசீப்பைப் பார்த்து ஜஸ்வந்தின் கையிலிருந்த சுமித்திராவின் தலை கேலிப் புன்னகை பூப்பது போலிருந்தது. "அறிவுகெட்ட மன்னன், அகம்பாவமுள்ள மன்னன்: அதிகார வர்க்க மன்னன்" என்று அன்று திரும்பிச் சொன்ன வார்த்தைகளையே இன்றும் சொல்வது போலிருந்தது.

" ஹூம் உன் ஆள்களால் கொலை செய்யலாம் என்று நினைத்திருந்தாய்? முடிந்ததா?" என்று பேசுவது போன்றுமிருந்ததாம்....

நிசப்தத்தைப் பிளந்துகொண்டு ஒரு வீரன், நெடுந்தூரப் பிரயாணம் செய்து களைத்துப் போய் அரசனிடத்தில் ஏதோ முக்கிய விடயம் சொல்பவனைப் போல் ஓடி வந்தான்.

" அரசே வடமேற்கு எல்லையில் எதிரிகள் நம்மீது சண்டை தொடுக்க போர்ப் படை களைத் தயார் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் கொஞ்சநேரம் தாமதித்தாலும் அவர்கள் நாட்டினுள் பிரவேசித்துவிடுவார்கள்" என்றான்.

அரசனுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. சிம்மாசனத்தினின்றும் கீழே இறங்கிவந்து ஜஸ்வந்தை அணைத்துக்கொண்டார். "நீங்கள் இருவரும் எனக்குப் புதிய பாடம் கற்பித்தீர்கள். ஆனால்... இப்பொழுது.... நான் உன்னிடம் ஒன்று கேட்டுக் கொள் கிறேன். நீ இந்தச் சண்டையிலும் போர்புரிய வேண்டும்" எனப் பரிந்துகேட்டான்.

" உயிர் போகும் வரையிலும் இராஜபுத்திரர்கள் சண்டை செய்யத் தயார்" என்றான்.

போர்க்களம்: கோட்டை வாயிலின் வெளிப்புறத்தில், கோட்டைக்குள் நுழைய முடி யாமல் தவித்துக் கொண்டிருந்தன. ஔரங்கசீப் படைகள். கோட்டைக்குள்ளிருந்து அம்புகள் சரமாரியாக வெளியே வந்து கொண்டிருந்தன.

இவற்றிற்கிடையில் ஜஸ்வந்த் கோட்டைக்குள் குதித்து உள்ளே சென்றான். கோட்டைக் கதவுக்குக் காவலாக இருந்த சிலரைத் தோற்கடித்தான். அவர்கள் சைன்யம் முழுவதும் கோட்டைச் சுவருக்குச் சிறிது தூரத்திலுள்ள மணி மண்டபத்திலிருந்துகொண்டு சமர் புரிந்தான்.

அகோரமாகச் சண்டை செய்து கொண்டிருக்கையில் யாரோ ஒருவன் செய்த அம்பு ஜஸ்வந்தின் மேல் பட்டுவிட்டது.

வலியைத் தாங்கிக் கொண்டு, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, மிகவும் கஷ்டப்பட்டுக் கோட்டைத் தாழ்ப்பாளைத் திறந்துவிட்டான். அவன் உயிரும் சென்றுவிட்டது.

ஔரங்கசீப்பின் படைகள் ஆவேசத்துடன் உள்ளே நுழைந்தன. வெற்றியடைந்த ஔரங்க சீப்பின் படைகள் சர்வசாதாரணமாகவே வெளியேறிக்கொண்டிருந்தன. பல்லக்கில் வந்து கொண்டிருந்த ஔரங்கசீப் கோட்டை வாயில் அருகில் வந்தவுடன் திடீரென்று நிறுத்தச் சொன்னார்.

இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த ஜஸ்வந்தின் உருவத்தைத் தன் மார்பில் அணைத்தார். அவன் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர் இரத்த மயமாகவிருந்த அவன் உடலில் உதிர்ந்தது.

இந்துக்கள் தங்களின் இரு கண்கள் போல் பாவித்து வந்த அந்தக் கோவில் அன்று இடிக் கப்பட்டு அங்கு ஓர் மசூதி எழுந்தது. இன்று அதுவம் இடிக்கப்பட்டது.

ஜஸ்வந்தின் கையில் வெட்டப்பட்ட இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த சுமித்திராவின் தலை இருப்பது போன்று கொடூரமான ஒரு நிலையை அவ்விடம் அலங்கரித்து நின்றது.

ஈழகேசரி
18.01.1948

தமிழ்மணி அம்பிகைபாகன்

யாழ்ப்பாணத்திலுள்ள நாவற்குழியில் 17.02.1929 இல் பிறந்த அம்பிகை பாகன் கணித ஆசிரியராகக் கடமையாற்றியவர். கொழும்பு கல்வி வெளியீட் டுத் திணைக்களத்தில் தமிழ் பாடநூல் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரின் முதற் சிறுகதையான 'இலட்சியச் சோடி' தினகரனில் வெளிவந்தது. ஈழத்தின் சிறந்த கவிஞராக மதிக்கப்படும் இ.அம்பிகைபாகன் என்ற அம்பி நல்லதொரு சிறுகதை ஆசிரியராக விளங்கியுள்ளார். ஈழகேசரியில் பதினொரு சிறு கதைகள் வரையில் எழுதியுள்ளார். விஞ்ஞானக் கட்டுரைகள் நிறைய எழுதியுள்ளார். மருத்துவர் கிறீன் பற்றி வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றினை எழுதியுள்ளார். "அந்தப் பாவை" இவருக்கு புகழ் தந்த சிறுகாவியமாகும். இவரது கவிதைகளின் தொகுதி "அம்பிக் கவிதைகள்" எனும் பெயரில் வெளிவந்தது. இவை தவிர வேதாளம் சொன்ன கதை, அம்பிப்பாடல், கொஞ்சும் தமிழ், யாதும் ஊரே, ஒரு யாத்திரை, உலகளா விய தமிழர் முதலான நூல்களையும் எழுதியுள்ளார்.

- *புதுமையில்லை*
- *இலட்சியச் சோடி*

புதுமையில்லை

இ.அம்பிகைபாகன்

என்றுமில்லாத ஒரு முகபாவத்துடன் அறையுட் புகுந்தான் பத்மநாதன். அவனது முகத்திலே துன்பரேகை படர்ந்திருந்தது. ஆனால், இதையெல்லாம் அவதானிக்க அவளுக்கு நேரமேது? பாவம், தனக்கென்றுள்ள கடமைகளிற் கண்ணும் கருந்துமாக இருந்தாள் காமாட்சி.

பத்மநாதன், ஓர் ஏழைக் குடும்பத்திற் பிறந்தவன். சிறு பராயத்திலேயே, தந்தையையுமிழந்தான். அதனால்,வறுமையிலேயே வளர நேர்ந்தது. ஆனாலும் அவனது மனமோ "ஏழை"யாக இருந்து விடவில்லை. கஷ்டப்பட்டுக் கல்வி கற்று, அரசாங்கத்தில் ஓர் உத்தியோகமும் பெற்றான்.

தந்தையை இழந்த பத்மனும், கணவனை இழந்த காமாட்சியும் - மகனுந் தாயும்- தனிமையிலேயே வாழ்ந்தனர். ஒன்றாக வாழ்ந்த அவ்விருவரும் மிகவும் ஐக்கியமாக வாழ்ந்தார்கள். ஒருவரையொருவர் மிகவும் நேசித்தார்கள். கணவன் மீது செலுத்த வேண்டிய அன்பையும் காமாட்சி தனது மகன் மீதே செலுத்தினாள் போலும்! பத்மனும் தாயையே தனது உயிரெனக் கருதி ஒற்றுமையாக இருந்து வந்தான்.

மகனைப் பிரிந்து வாழும் வேளைகளில் காமாட்சிக்கு ஏதோ போல் இருக்கும். அவளது மனம் எதுக்கெல்லாமோ சென்று ஏம்பலித்துக் கொண்டிருக்கும். மகன் எப்போது திரும்பு வான் என்று அல்லற்பட்டுக் கொண்டிருக்கும். கந்தோரிலிருந்து திரும்பி அறையுட் சென்றதும் செல்லாததுமாகத் தேநீருடன் பின்தொடர்வாள். பின்புதான் தனது வேலைகளைக் கவனிப் பாள்.

தனது ஒரே மகன் மீது. இல்லை ஒரே உயிரின் மீது "மலடி" என்ற கறை தன் மீதுபடிய விடாது தவிர்த்துவைத்த அந்தப் புத்திரன் மீது அந்த பெற்ற மனம் அவ்வளவு அன்பு வைத்திருந்தது அசாதாரணமல்லவே?

பெற்றமனம்

அன்றும்.... அவன் திரும்பும் நேரங்கழிந்தும், அவன் வந்து சேரவில்லை! அவள் மனம், துடித்துக் கொண்டிருந்தது. அன்று காலை நடந்த சம்பவம், அவளை வதைத்துக் கொண்டிருந்தது. ஆனாலும், இருண்ட மனத்திரையின் அடிவானத்தில் ஒரு நம்பிக்கை உதித்தது. எதுவும் அவனது மனதைக் கல்லாக்கிவிடமாட்டாது என்ற நம்பிக்கை, அவளுக்கு ஆறுதல் அளித்தது.

அவ்வேளையிலே...

அவன் திரும்பினான்...

ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தபடியால் தேநீருடன் பின் தொடரவில்லை. காமாட்சி சற்றுத் தாமதித்தே சென்றாள். ஆனால் மகன் எங்கே? ஒரு கணம், திகைத்து நின்றாள். கிணற்றண்டை சென்றிருக்கலாம் என்று எண்ணினாள். தேநீரும் கையுமாக அங்கே சென்றாள்...

"தம்பி...பத்மன்!!

"......"

விடையில்லை!... பத்மன் எங்கே! கிணற்றருகே சென்றாள். அங்குமிங்கும் பார்த்தாள். கூப்பிட்டுப்பார்த்தாள். அந்த மனம் இருந்த நிலையில், கிணற்றுக்குள்ளும் பார்க்கத் தூண்டி முகத்தின் உருவமே...!

"மகன் எங்கே?"

இது அவளது இதயத்துடிப்பு. பிள்ளைப்பாசம், அவளை ஏதோ செய்துகொண்டிருந்தது. காலை தொடங்கி, அந்திநேரமளவும் காணாத்தினால் அவள் மனந் தளர்ந்திருந்தது. வெறிபிடித்தவள் போன்று வேகமாக நடந்தாள் அவள்...

"தம்பீ... பத்மன்...!!

அவளது குரலின் எதிரொலியே நான்கு திசையிலிருந்தும் மிதந்து வந்தது. திரும்பவும், மகனது அறையுட் புகுந்தாள் காமாட்சி. எங்கும் பார்த்தாள். பலமுறை கூப்பிட்டுப் பார்த்தாள்.

விடையில்லை!

ஏதோ சிந்தித்தாள், அவள்...

அவனுக்கு ஏதும் சுகயீனமோ என்னவோ என்று எண்ணி அவனது படுக்கையறைக்கு ஓடினாள். பாவம் அவ்வளவு ஆவலுடன் சென்ற அப்பெற்றவள் மனம், அந்நிலையில், மக னைக் காணச் சகிக்கவில்லை...

"தம்பீ........ உடம்புக்கு என்ன" என்ற காமாட்சி, கற்சிலை போன்று நின்றாள். அவன் கட்டிலிற் படுத்துக்கொண்டிருந்தான். இடையிடையே, "கருணா!" என்று அவன் முணு முணுப்பது அவள் செவியில் விழுந்தது.

"பத்மன்!.... என்ன?" என்று ஆவலுடன் வினாவினாள். மகனருகே ஓடினாள். தனது வலக்கையை அவனது நெற்றியில் வைத்துப் பார்த்தாள். மனதிற் குமுறிய கவலைக்கடல் பெருகுவது போன்று கண்ணீர் பெருகி வழிந்தோடியது.

"கருணா" என்று அவன் அழைத்ததையும், அவள் மறந்துவிடவில்லை. "கருணா... கருணா..." என்று யாரோ விடாது முணுமுணுப்பது போன்றிருந்தது. அவளுக்கு என்ன செய்வதென்று அறியாது நின்று பதறினாள். எப்படியும் பெற்ற மனமல்லவா?

அவர்கள் தொடர்பு

என்ன செய்வதென்றே தெரியாது, பத்மனின் நண்பன் ஆனந்தனை அழைப்பித்தாள் காமாட்சி. வந்தவன், பத்மநாதனின் கட்டிலிலேயே அமர்ந்து, அவனுடைய சுகவீனம் என்ன என்று வினாவினான். ஆனால், இடையிலேயே "கருணா, கருணா!" என்று பத்மன் முணு முணுப்பதை அவனுஞ் செவியுற்றான்.

"என்ன தம்பி?..." என்றாள் காமாட்சி.

"ஒன்றுமே பேசுகின்றானில்லை. ஆனால்,... ஏதும் விசேஷம் நடந்ததுண்டோ? 'கருணா கருணா' என்கின்றானே! மனதிலே ஏதோ...."

இப்படி அவன் பேசத் தொடங்கியதும் காமாட்சியின் கண்களினின்றும், நீர்த்துளிகள் உருண்டோடிக் கன்னங்களில் தவழ்ந்தன. அந்நீர்த்துளிகளிலும் பிள்ளைப்பாசம் பிரகாசித் தது.

"ஏன் தம்பி? உனக்கு...கூடி வாழ்ந்து இவன்,அவள் மீது எவ்வளவு அன்பாக நடந்தான் என்பதை நீயும் அறிவாய் தானே? நான் ஒன்றுமே செய்யவில்லை. விசயமும் அவ்வளவு பார தூரமாக ஒன்றும் நடைபெறவில்லை. அவளுடன் இனிமேற் பேசுவது கூடாது. அது வேண் டாம். இனிமேலாகுதல், அவளுடன் கூடிக் குழந்தைகள் போன்று நடந்து கொள்வதை நிறுத்து என்று மட்டும் சொன்னேன்" என்றாள் காமாட்சி.

"என்ன காரணத்திற்காக அவ்வாறு கண்டித்தீர்கள்? அவளும் வளர்ந்தவள். இருபத்தி ரண்டு வயசிருக்கும். அவனுக்கும் இருபத்தைந்து மட்டில் இருக்கும். ஆனால் மண் சோறு சமைத்து விளையாட்டுத் தொடங்கி, ஒன்றாகவே விளையாடினார்கள் அல்லவா? இப் போதும்

சகோதரங்கள் போன்று மிகவும் அன்னியோன்னியமாகப் பழகி வருகிறார்கள் அல்லவா? அவர்களைப் பிரித்து வைக்க வேண்டிய அவசியம் என்ன?”

தம்பீ… ஆனந்தா! நீ அறியாது பேசுகிறாய். இருவரும் வளர்ந்தவர். அவர்களுடைய தொடர்பை மிகவும் கேவலமாகப் பேசுகின்றார்கள் பலர். என் காதுகளுக்கு எட்டாதிருந்தால் ஒன்றுமில்லை. ஆனால், இனியும் நான் பேசாதிருப்பது நன்றன்று. அவனது மனதை நான் அறிவேன். ஒருசமயம், ஊர் இப்படியெல்லாம் பேசுவதை அவன் அறிந்தால்,… அவள் மீது ஏன் வடு வைப்பான் என்று சொல்லி அவளையே…”

“அவளையே.. மணந்து கொள்ளப்போகிறேன் என்று பிடிவாதஞ் செய்வானாக்கும்?”

“ஆம். அதுவேதான் எனக்கு யோசனை அப்படிப் பிடிவாதஞ் செய்தால் மணந்தே தீருவான்…”

“மணஞ் செய்தால், அதில் என்ன தவறு? அவர்கள் சந்தோசமாக வாழமாட்டார்களா? அவள்தான் படிக்காதவளா? என்ன விதத்தில் அவள் குறைந்தவள்?”

அச்சந்திப்பு

இந்த இடத்தில் காமாட்சி சற்றுஅதிகாரத்துடன் பேசினாள்…

“ஆனந்தா! என்ன பேசுகிறாய்? அவனுக்கு அவளைவிட நல்ல சீதனத்துடன் ஒரு பெண்ணைப் பெற இயலாதா? அவள் அழகியா, என்ன? அவளைவிட அழகானவள் கிடைக்கமாட்டாளா?”

“அம்மா! நீங்கள் அறியாது பேசுகிறீர்கள். அவர்களூடே தோன்றி, வளரும் அன்பை நீங் கள் சரியாக அறிந்துகொள்ளவில்லை. தவிர அவர்களின் அன்பு முதிர்ந்து விட்டது. இன்று பிரிந்து வாழ இயலாதவர்களாகவே இருக்கிறார்கள்.

“கருணாவும் இவனும் … ஒன்றாக வாழ்ந்து , கல்வி கற்றவர்கள். தினமுஞ் சந்தித்துத் தமதூடே ஒருவித பாசத்தை வளர்த்தார்கள். இச்சந்திப்பு அவர்களிடையே காதலாக அரும்பி விட்டது. ஏன்? ஒருவரை நாளுஞ் சந்தித்தால், எந்த விரும்பத்தகாத குணமுடை யவராயினும் எவ்வளவு அவலக்ஷணமானவராயினும், ஒருவித விருப்பும், அழகும் அவர்களிலே தோன்றுகிறதல்லவா? இது இயற்கையல்லவா? இவர்களது அன்பு காதலாக மலர்ந்ததில் என்ன புதுமை?”

“அவளது அழகிலோ பணத்திலோ அவன் மயங்கிவிடவில்லை. அவளது குணமே அவனை வசீகரித்தது. அவள் நடந்து கொண்ட மாதிரி, பல வருசப் பழக்கம் இவையே இந்த அன்பின் அடிப்படை.

“பாவம், என்ன இருந்தாலும் அவனும் ஒரு மனிதன். அவனுடையதும் ஒரு மனித உள் ளம். இதயத்துடிப்பும், ஏமாற்றமும் அவனையும் பாதிக்கும். ஏன்? அவனுக்குச் சுகமில்லை என்று நீங்கள் எவ்வளவு வருந்துகிறீர்கள்? அவ்வளவு வருத்தம் அவனுக்கும் ஏற்படுந்

தானே? வித்தியாசம் ஒன்றே! அவனுடையது காதல்: உங்களுடையது, பிள்ளைப்பாசம். ஆனால் ஒன்றிலும் பார்க்க மற்றையது ஒரு விதத்திலும் குறைந்ததல்ல!

"காதல் என்றால் ஏதோ விரும்பத்தகாதது; சமூகத்திற்கு ஒவ்வாதது என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால் அந்தக் கறையை நீக்குவது கஷ்டமான காரியமல்ல. ஆனால் உள்ளத்திற் படிந்து எழும் உணர்ச்சியை அடக்கி மறைப்பது, இயலாது! எத்தனிப்பதே, அபாயமானது! ஈற்றில் அது பீறிக்கொண்டு வெளியேறுஞ் சக்தியைப் பெற்றுவிடுகின்றது"

இவ்வாறு, உணர்ச்சிவசப்பட்ட ஆனந்தன், அதிகமாகப பேசிவிட்டான். தன்னை மறந்து நின்று, எல்லாவற்றையும் கேட்ட காமாட்சி "தம்பி!... இப்போது என்ன செய்வது?" என்று ஆனந்தனைக் கேட்டாள்.

"ஒன்று மட்டும் நான் சொல்லுவேன். அவனையிட்டுக் கவலைப்படாது இருப்பதற்கு ஒரு வழியை மட்டும் கூறுவேன். அவனுக்குமாறாக நடக்காதீர்கள். மனதிற் கவலை குடி புகவிடாதீர்கள்.

"நீங்கள் விரும்புவது எதுவோ, அதையே அவனும் கடைப்பிடித்து நடப்பதை நீங்கள் விரும்பினால், அதைச் செய்ய ஓர் அவா அவனில் ஏற்படுமாறு நீங்கள் செய்ய வேண்டும். அந்த அவாவை ஏற்படுத்தி விட்டீர்களானால், நீங்கள் வெற்றி பெற்றவராவீர்கள். பலாத்காரஞ் செய்து, ஒரு விடயத்தைச் செய்விப்பது தோல்வியேயன்றி வெற்றியல்ல!"

"தம்பி! இருந்துகொள் நான் போய் தேநீர் கொண்டு வருகிறேன்.. பத்மநாதனின் மனநிலையை மாற்றி, அவனுடைய இஷ்டப்படி செய்யச் சொல்லு.." என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

"என்ன பத்மநாதா…?"

"நீ உண்மையிலே புத்திசாலிதான்.."

"எப்படியும் அது பெற்றமனமல்லவா?அதிலே அன்பும் இரக்கமும் என்றும் கசிந்து கொண்டே இருக்குமல்லவா?"

அதுசரி, நாம் செய்த கள்ளத்தை நாங்கள் ஏமாற்றிய முறையை அறிந்தால்.. இந்த அன்பு, இரக்கம் எல்லாம் என்ன செய்யும்? ஆத்திரத்தை மூட்டாதா?"

"ஏன் கோபங் கொள்ள, என்ன இருக்கிறது? தான் வைத்திருந்த அன்பை மகனும் அறிந்திருக்கிறான் என்று சந்தோசப்படத்தானே இடமுண்டு"

மறுகணம் காமாட்சி தேநீர்க் கோப்பைகளுடன் காட்சியத்தாள். ஆனந்த மிகுதியினால் அவள் அக்கோப்பைகளை கீழே போட்டுவிடுவாள் போலிருந்தது. அப்படி அவை தவறி வீழ்ந்தாலும் அதிலுந்தான், புதுமையில்லை.

10.06.1950

இலட்சியச்சோதி

அம்பிகைபாகன்

மோஹறன்

நான் சென்றேன்.... என் உள்ளத் துடிப்பில், அவள் எண்ணத்தில் மயங்கிச் சென்றேன். என்னைச் சூழ்ந்திருந்த கருந்துகிலைப் பிரித்துச் சென்றேன். அவளிடஞ் சென்றேன்.

காரிருளினூடாகச் செல்லும் எனக்கு, என்ன இங்கு நேருமோ என்ற அச்சம் என் மனதிற்குடிகொள்ளவில்லை. இரவின் கருந்து கிலைப் பிரித்து, இன்பத்தின் இல்லத்தை நான் நாடுவதை யாரும் கவ னிப்பாரோ என்று என் மனம் பதறவில்லை. எதிர்பாராத முறையில் “எம் மிருவரையும் யாரும் கைது செய்ய மாட்டாரா என்று என் உள்ளம் குமுறவில்லை.

“ஆனால்...

“உண்மையாகவே என்னை மணஞ் செய்வீர்களா?”

என்று அவள் கேட்டாளே அதற்கு விடை என்ன? அவளது பெற் றோரின் தீர்ப்பு என்ன? அவர்கள் எமது காதற் செடியினின்றும், மலர்

களைப் பறித்துவிட்டால் எமது வருங்கால வாழ்க்கையின் நிலை என்ன? வானிலே தோன்றும் இவ்விருள், எனது மனதிலும் இருள் சூழப் போ என்றது என்பதன் அறிகுறியா?

இவைகளுக்குத் தகுந்த விடை தேடி அலைந்தது என் மனம். அது முட்புதர்களினூடாகச் சென்றது. கற்பாறைகளுடன் மோதிச் சென்றது. கால்கள் தள்ளாடின. பிரகாசம் நிறைந்த இன்ப எல்லையை நாடுகின்றேனா அல்லது இருள் சூழ்ந்த துன்ப எல்லயை நாடுகின்றேனா என்று துடித்துச் சென்றது என் மனம். இந்த நிலையிலே.. “அண்மையில் ஒருவருமில்லையா?” என்ற கேள்வி என்னை நிறுத்தியது. என் மனத்தின் பிரயாணத்தையுமே நிறுத்திவிட்டது. நெடுந்தூரப் பிரயாணத்தினால் உண்டான அலுப்பினாலோ என்னவோ, விடைகொடுக்கத் தாமதித்தது என் மனம் .... பின் இந்த வேளையிலா? வேறுமொருவரா? பேதை மனம்” என்ற சொற்கள் என் உதடுகளைப் பிரித்தன.

இருவரும் சென்றோம் : கிணற்றின அருகே அமர்ந்தோம். அவளுடைய முகம் மலர்ந்திருந்ததா? அவளது மென்மையான வார்த்தைகள் வெளியேறும் பொழுது, அவளுடைய உதடுகள் அசைந்தனவா? “வேறு யாரும் வருவாரோ?“ என்று அவளுடைய உள்ளம் கலங்கியதா?

இந்தச் சந்தேகங்களைக் கேட்காமல் தீர்த்துக்கொள்ள விரும்பினேன். ஆனால், அறிய வழியில்லாது தவித்தேன். பல நிமிஷகளாகத் தவித்தேன். அதை அறிந்த சந்திரன், எமது நிலையைப் பார்க்க எண்ணினானோ என்னவோ, தன் முன்னிருந்த கருந்திரையைப் பிரித்தான். எம்மை உற்று நோக்கியவன், நிற்க நாணமுற்றுப் போலும், நகர்ந்து சென்றான்!

“யாரேனும் வருவாரோ” என்று அவள் அஞ்சினாள்! ஆம்; அவளது உள்ளத்தைப் படம் பிடித்த முகமே எனக்கு அதைத் தெரிவித்தது.

“சரோஜா! என்ன இன்னமுமா அஞ்சுகிறாய். இந்த வேளையில், இந்த இடத்தில் ....” என்றேன், அவள் என்னைத் தடுத்து, “அன்பு நேற்று அம்மாவுடன் வாதாடினேன், என் மண விஷயம் பற்றி. என் மனக் கதவைத் திறந்து காட்டியே விட்டேன். அதன் பின், ஒவ்வொரு நிமிஷமும், என் மீது கண்வைத்திருக்கிறாள்! ஒருவேளை, இப் பொழுதும் ...” என்றாள்.

“பேதை மனம்!” என்று உன்னியதை வெளியிட நா மறுத்தது. “இந்த நள்ளிரவிலே, உன் அம்மா விழித்திருந்து உன்னைக் கவனிப்பாளா” என்று மட்டும் பேசியது.

பதில் இல்லை. சொற்ப நேரம் மௌனம் குடிகொண்டது. ஆனாலும் அது நிலைத்திருக்கவில்லை. அவளே பேசினாள்.

“என் அன்பே! உள்ளத்திலே தாண்டவமாடும் உத்தமரே! தங்களையே மணக்க வேண்டும் என்று என் தாயாருடன் எவ்வளவில் வாதாடினேன்? அவள் அன்பையுமிழந்தேன்! அந்த உள்ளம், பெற்றவள் மனம், எவ்வளவில் வேதனைப்படுமென்று அறியாது பேசினேனா? அவளுடைய உள்ளம் எவ்வளவிற் குமுறும் என்று அறியாது நான் பேசவில்லை. ஆனால், என் வாழ்க்கையை இன்பம் நிறைந்ததாக அமைக்க வல்ல தங்களை அடைய எவரையும் வெறுக்கத் தயார் செய்து விட்டேன்.”

“சரோஜா!” என்றேன். என் உள்ளம் மலர்ந்து! அந்தக் குளிர்ச்சி என் வார்த்தையிலே மிதந்து நின்றது!

“ஆம், மோஹறன் எனது கணவன்: சரோஜா அவனது மனைவி“ என்று அம்மாவுக்குக் கூறிவிட்டேன். இனி எல்லாம் உங்களைப் பொறுத்ததுதான்” என்றாள். என் மீது ஒரு பாரம் சுமத்தப்பட்டது!

சரோஜா

“லக்ஷ்மணன் ஒரு “பி.ஏ., பி. ஓ. எல். நல்ல குணமானவன். கட்டழகன். அவனைத் தான் உனக்கு மணஞ் செய்து…” இவ்வாறு அம்மா கூறினாள். ஏன்? கட்டு மீறிய வைகையாறு போன்று, கரையில்லாது போயிருப்பாள்! ஆனால், நான் இடைமறித்து “மணம்” என்றேன்.

“உனக்கு வயசு இருபது. நீ இன்னும் கன்னியாக இருப்பது, எமக்கு அழகல்ல. எமது குலத்திற்கு ஒத்ததல்ல. நம்மவர் வழக்கத்திலே, பதின்மூன்று வயசிலேயே மணத்தை முடித்து வைப்பர். நீ படித்துக்கொண்டிருந்தாய். நானும் இவ்வளவு நாளும் பொறுத்தேன். ஆனால். இனிமேல்… ஏன்? அப்பா, லக்ஷ்மணனின் சம்மதமுமே பெற்று விட்டார். வருகிற மாசம் கல்யாணத்தையும்… என்று ஏதோ வெல்லாம் பேசிக்கொண்டே போனாள், நான் குறிக்கிட்டு “அம்மா! என்றேன்.

“சரோஜா !” என்றாள். ஒரு நிமிஷநேரம் நான் திகைப்புற்றிருந்தேன், என் சிந்தனைக் கடலிலே அலைகள் எழுந்தன. அதிலே சென்ற படகுகளை அலைத்து வதைத்தன….

என் மன நிலையை விளக்குவது ஆபத்தானதா? ஒரு கஷ்டமும் பயக்காதா? பெபற்ற வள் உள்ளம் பதைக்கதா?.

காதலைப் பற்றிப்-பச்சை பச்சையாய் எல்லாம் சொல்வதா? என் லக்ஷ்யத்தைக் கூறுவதா, விடுவதா? தற்காலத்திற்கும், எனது அம்மாவின் கொள்கைகளின் ஆதிகாலத்திற்கு மிடையே எத்தனை ஆண்டுகள் எல்லை போடுகின்றன! நாம் நோக்கும் எதிர்காலத்தின் பிரகா சத்தை அம்மா அறிவாளா?

மனதைத் தைரியமாக்கினேன். “என்ன நடந்தாலும், இன்று அப்பா இல்லையே! நானும் அம்மாவுந்தானே போர் செய்வது, பார்ப்பது, கேட்பது எல்லாம்?“ என்று எண்ணி னேன். பேசவே தொடங்கினேன்….

“அம்மா உங்களுக்கு நான் பல விஷயங்கள் கூறவேண்டும். நீங்கள் வருந்தக்கூடும். என்னை வெறுக்கக்கூடும். பெற்ற உள்ளம் குமுறக்கூடும். ஆனாலும், நானும் சொல்லியே ஆகவேண்டும்.

“அம்மா! சற்றுநேரம் சிந்தியுங்கள்….

“அன்பையும், தொண்டையும் அடிப்படையாகக் கொண்ட சைவ சமயம் எமது கையில் இருக்கிறதா? இவ்வாறு கூறுதல் எவ்வளவு மடைமை ? இறைவனருளைப் பெற, எமதூடாகச் செல்ல வேண்டுமா, ஒருவன்? ஸ்மிருதி என்கிறோம் ஆகமம் என்கிறோம். உண்மையில் நமக்கு நல்ல மேல் நிலையைக் கொடுக்கின்றன அவை. ஆனால், அவற்றை எழுதியது யார்? நம்முடைய மூதாதையர்தானே.

"அம்மா பிறப்பிலேயே உயர்வு தாழ்வு பாராட்டுவது எத்துணை அறிவீனம்? நம்மைப் பற்றி நாமே புகழ்வதுதான் எவ்வளவு கேவலம்? விளக்குப் பிரகாசிக்க வேண்டுமாயின், நீரையா தகழியில் ஊற்றுவது?"

" ஆலயம்: ஆராதனை நடக்கும் இடம் அம்மா. இறைவனது இல்லம் அம்மா! இவற்றை அறியாது, இறைவனின் முன்பு நாமே சிறந்தவர்கள் என்று கூறுவது கேவலம் அம்மா! நான் இத்தகைய குலத்தைப் பரப்பமாட்டேன்... மாட்டேன்... இத்துரோகத்தைச் செய்ய முன் வரமாட்டேன்...

இவ்வளவு பேசக் கேட்ட அம்மாவின் கண்கள் சிலிர்த்தன. உதடுகள் துடித்தன. முகம் பொருமியது. கைகளை அவள் பிசைந்தாள். என்னை இடைமறித்து "சறோஜா நீ... என் மகள்?" என்றாள்.

அவ்வார்த்தைகளிலேயே ஆத்திரம் தொனித்தது!

"ஆம், அம்மா! உங்களது வயிற்றில் அவதரித்த அதே சறோஜாதான். ஆனால்... புத்து லகுட் புகுந்துள்ள சறோஜா. எல்லோரும் ஓர் குலம்என்பது உணர்ந்துள்ள சறோஜா! புது உலகம் ஒன்றைக் கனவு கானும் சறோஜா!

"என் அன்பன்.... மேஹறன் அவன்... வாழ்க்கையைக் கனவுலகிற்குச் கொண்டு வர உதவி செய்ய உடன்பட்டு விட்டார்!

மணந்தான் ஆகவில்லை. ஆனால், கருத்தொருமித்து, காதல் வாழ்க்கையை நடாத்து கிறோம். வளர்பிறை என அது நாளும் வளர்கிறது. பிரகாசம் கூடுகிறது." என்ற என்னை, "என்ன? என்ன ? எ...ன்...ன?" என்று இடைமறித்தாள் அம்மா! அவளுடைய வார்த்தை களிலே கோபப் பொறிகள் புதைந்து கிடந்தன.

நான் தொடர்ந்தேன்... "அம்மா! மோஹறன் எனது கணவனாக வரத் தகுதி -இல்லாத வனா? எனது இன்ப வாழ்க்கைக்குத் தேவையானது என்ன? கருத்தொருமித்த காதலனா, பெற்றோர் விரும்பிய மருமகனா? தூய்மையான காதலன்; நம்பிக்கை வைத்த காதலன், மோஹறன். அவனை... அவரைவிட வேறு ஒருவரை நான் கணவன் என்றே சொல்லமாட் டேன்!

"உங்களது விருப்பத்திற்கு மணஞ் செய்தால், நான் இன்பமாக வாழ முடியுமா? உங் களது ஜாதிபேதத்தையும் தற்புகழ்ச்சியையும் ஆதரித்தால், தருமநெறியை வளர்க்கலாமா?"

"அம்மா! எமது காதல் மொட்டு, மலரவேண்டும்; நறுமணம் பரப்பவேண்டும். கண் கவர் எழிலுடன் தோன்ற வேண்டும். அதற்கு நீங்களும் உதவிபுரிய வேண்டும்..."

"எனது கழுத்திலே கயிறுபோட முன்வராதே சரோஜா! லக்ஷ்மணனை மணந்து,..." என்று அம்மா தொடங்கினாள்.

நான் மட்டும் பேசாது இருந்தேனா?

"முடியாது. அவனுடைய பேச்சே வேண்டாம். அம்மா! அம்மா! மணமாலையை ஒரு கண்ணியென்று கருதிவிடச் செய்யாதீர்கள். எத்தனையோ காதலுள்ளங்களிலே புயலினை

வீசச் செய்து. கடுஞ் சேதஞ் செய்து, காதலரைப் பாழாக்கிய உமது சகோதரர் போன்று நடந்து விடாதீர்கள். எமது காதல் மொட்டைக் கருக்கி விடாதீர்கள். எமது இன்பக் கோட்டைகளை இடித்து விடாதீர்கள். எமது காதல் மலரைச் சாம்பிவிழச் செய்யாதீர்கள்...

"காதல் என்னும் பாசத்தாற் கட்டுண்டு, பிரிவின் கொடூரத்தால் உயிர் துறந்தோரை இகழ்ந்து பேசுவதே உங்களது பிறவிக்குணம். அப்படி நமக்கும் நேரிடச் செய்யாதீர்கள் எம்மை ஒன்று சேர்த்து வையுங்கள்... அம்மா! இன்னும் என்னைப் பலாத்காரஞ் செய்யா தீர்கள் " என்று ஒரே பேச்சிற் பேசி முடித்தேன்.

"எல்லாம் அவர் வரட்டும். பார்ப்போம்" என்றாள் அம்மா. அவ்வார்த்தையிலும் அனல் வீசியது!

*　　　*　　　*

எனக்கோ, நித்திரை வெகு தூரத்திலே தோன்றியது. மனதிலே, சூறாவளி ! கண்களிலே நீரூற்று! உடலிலே நடுக்கம்! கற்பனைக் கண்ணின் முன்... ஒரே இருள்!... இரவும் நீங்கியது.

அம்மா ஒன்றுமே பேசவில்லை. என்னைப் பார்க்கும் போதெல்லாம் அவளது முகத் திலே கசப்புக்குறி படர்ந்தது ஆம்! அந்தப் பெற்றவள் உள்ளம் குமுறியது! ;

இரவு "அவர் வருவார்" என்ற எண்ணம் மனதில் முளைத்தது! தேன் கூட்டில் ஒரு கல் எறிந்தால், எவ்வாறிருக்கும்? அதேபோல, என் மனக்கூட்டிலிருந்தும் எத்தனையோ எண் ணங்கள் பறந்தன! "அவர் என்னைச் சந்திப்பார்" என்ற கல்லே தான் அவ்வளவுக்கும் கார, ணம். அக்கல்லுத் தாக்கிய நோவினால், போய்ப்படுத்தேன். ஆனால், உள்ளம் மட்டும் உறங் கியதா? அதற்கிடையில், அம்மாவின் முகம் தெரிந்தது! அதுவும் யன்னலினூடாகத்தான்! மறைந்து நின்று என்னைப் பார்த்தான், அவள்!

சற்று அடங்கிய தேன் கூட்டிலே, வேறுமோர் கல்லு!

"இன்று இரவும் இப்படித் தான் கவனிப்பாளா?" இரவும் வந்து சேர்ந்தது.

அம்மா படுத்தாள். நானும் தானே....?

சிலமணி நேரஞ் சென்றதும், எழுந்து பார்த்தேன். அம்மா நன்றாகத் தூங்கினாள்! "அவர்" வருநேரமும் வந்தேவிட்டது!

பார்த்தேன் காத்திருந்தேன் நள்ளிரவினூடாக என் கண்கள் நோக்கின. மனக் கண் ணும், இருளினூடாகத் தான் நோக்கியது. தடாகத்தினுள்ளே, தனிமையில் நின்று தவிக்கும் தாமரை நங்கை போலக் - காத்திருந்தேன். காதலன் வரும் திக்கை நோக்கி வருந்திக்கொண் டிருந்தேன், அம்மா எழுந்தாளா? என்னைக் கவனித்தாளா?" என்ற பயம் ஈட்டி போல் உள்ளத் தைத் தாக்கியது.

பதைபதைத்துத்தோடினேன்,அவள் தூங்கிய அறைக்குள் எட்டிப்பார்த்தேன். அவள் உ ள்ளம் நிம்மதியாக இருந்ததோ, என்னவோ ஆழ்ந்த தூக்கத்திலே அமிழ்ந்து கிடந்தாள்.

வீட்டு வாசலின் அருகே போய்க்காத்திருந்தேன். மனக் கண்ணின் முன்னே நின்ற மோஹன் கண்முன் எப்போது தோன்றுவார் என்று கலங்கிக் கொண்டிருந்தேன். வேறு

யாரும் வருவாரோ என்று விழித்துக்கொண்டிருந்தேன், "அம்மா எழுந்தாளா?" என்று ஏங்கிக்கொண்டிருந்தேன். குளிர்மதி கூட, என்னைத் தனிமையிலே தான் தவிக்கவிட்டான். எட்டிக் கூடப்பார்க்கவில்லை, அவன். ஏன், எனது வாழ்க்கை உலகில் அவள் கூடத்தானே தவிக்கவிட்டாள்! அவன் எப்போது தோன்றுவான் என்று ஏம்பலித்துக் கொண்டிருக்தேன்.

பார்வதி அம்மாள்.

சரோசா; என் ஒரேபிள்ளை. அவளைப் பெறுவதற்கு எத்தனை பிரார்த்தனை! எத்தனை விரதங்கள்! இவ்வளவு கஷ்டங்களைப்பட்டுப் பெற்ற பிள்ளை - எமது ஒரே பிள்ளை எமக்கு, எம் குலத்திற்கு ஈனம் விளைக்க எத்தனிக்கிறதே!

இல்லை. இறைவன் மீது ஏன் வீண்பழி போடுவான்? எல்லாம் என்னுடைய பிழை. எமது குலமரபிற்கு மாறாக நான்தான் நடந்து விட்டேன், வேறு எந்தப்பிள்ளை இருபது வயசு மட்டும் கன்னியாகக் காத்திருக்கிறாள்? பதின்மூன்று அல்லது பதின்நான்கு வயதிலே ஒரு வனுடன் கூடி வாழ்க்கையை நடத்துகிறாளல்லவா? இவளுக்கும் பதின்மூன்று வயசிலே கல் யாணம் பேச, நான்தானே மறுத்தேன். படிக்கப் போகிறேன் என்று அழுதவளைத் தேற்ற எண்ணியது நான்தானே? எமது குலத்திற்கு மாறாக நான்தானே நடந்துவிட்டேன்! அவள் படிக்கவேண்டும் என்று அவருடன் போராடியதும் நான்தானே! அந்த வேளையில் இந்தப் பெற்ற மனம் வேதனைப்பட்டது. அவள் சொட்டிய ஒவ்வொரு கண்ணீர்த்துளியும், ஒவ்வொரு குண்டு போல என் நெஞ்சிலே தாக்கின! அதையெல்லாம் அறிந்தவளாயின்... இப்படிச் செய் வாளா? பெற்று வளர்த்த அன்பை மறந்து, படிக்கவைத்த நன்றியை மறந்து, காதல் வாழ்க்கை, புதுவாழ்க்கை என்று ஏதோவெல்லாம் பேசுகிறாள். யாருடன் நோவது? யாரை நோவது

அப்பப்பா! எமது குலத்திற்குத்தான் எத்தனை வடுக்கள்.... ஏன்? யோசித்துப் பார்த்தால்....

அவளிலும் பிழையில்லை! நம்மவர் செய்வதெல்லாம் சரியானவையா? பகுத்தறிவுக்கு ஒத்தவையா? இரகசியமாக எத்தனைபேர் குடிக்கறார்கள்! மாமிசம்கூடப் புசிக்கிறார்கள்! வெளி யிலே மட்டும் "ஆகமம், முறை ஆசாரம்" என்று பேசுகிறார்கள்! எத்தனை விலைமகளிருடன் இருட்டிலே கூடுகிறார்கள். வெளியில் சுத்தம் உயர்வு தாழ்வு "பேசுகிறார்கள்!.... சே... கேவலம்...

என்ன செய்வது? என்ன இருந்தாலும், அவள் செய்பவை எமது குலத்திற்கு மாறா னவை. எமக்குங் கூட ஈனம் விளைக்கக்கூடியவை. அவைகளைச் சரியான வழியே கொண்டு வர வேண்டியது எனது கடமை. ஆனால், அதற்கு வழி? என்ன சொன்னாலும் எதிர்வார்த்தை சொல்கிறாளே!

ஐயோ! சாப்பாடு கூட இல்லாமல் வாடுகிறாள்! என்ன செய்தாலும், என் மகள், என் மகள் தானே?

சே! நேர்முகமாக என்னை அவமரியாதை செய்த அவள்; எமது குலத்திற்கு ஈனம் விளைக்க முன்வரும் அவள்; எமது முகத்திலே - கரி பூ ச முன்வந்த அவள், எனது மகளா?

இல்லை! அவளிலே பிழை ஒன்றுமேயில்லை. எல்லாம் எனது பிழை! அவள் படித்தாள்.

உலகை அறிந்தாள். பலருடன் கூடி வாழ்ந்தாள். சாதிபேதத்தின் விதையைக் கண்டு பிடித்தாள். இதற்கெல்லாம் இடங்கொடுத்த நான்தான் குற்றவாளி! அவன் படித்தவள், அதன்படி ஒழுகமுற்பட்டு விட்டாள்... பலருமறியக் குற்றஞ் செய்வது, திரைமறைவிற் பஞ்சமாபாத கங்களைச் செய்வதிலும் பார்க்கச் சிறந்தது தானே?

அட பாழ்பட்ட உள்ளம் இவ்வளவு அவமரியாதை செய்த அவள் மீது இரக்கம் காட்டு கிறது. அவள் செய்வன சரியானவை என்று நிரூபிக்கின்றது. ஏன்? அவள் சாப்பிடாது படுத்ததும், யன்னலினூடாக எட்டிப்பார்க்கச் செய்தது !

யார் என்ன சொன்னாலும், அவளுடைய மனதை இனி மாற்ற முடியாது. அவளோ, ஒரு பிடிவாதக்காரி. இந்த வாதம் தற்காலப்பிள்ளைகள் எல்லோருக்குமே இருக்கிறது! ஒவ்வொரு பிள்ளையின் இரத்தத்துடனும் கலந்திருக்கிறது! ஆனால், அவருக்கும் இந்த வாதம் இருக்கத் தானே செய்கிறது.! யாருடைய வாதம் மாறும்? யாரிடம் இருக்கிறது மருந்து? "அவர்" தகப்பன் அவள், மகள். தகப்பனைப் போலத்தான் பிள்ளையுமிருக்கும்... என் தலை சுழல்கின்றது. இனி, அவரும் அவளும் செய்வதெல்லாவற்றையும் பார்த்து க்கொண்டிருப்போம்

மோஹன்.

அவள் என் மீது பழியைப் போட்டுவிட்டாள். அவள், என் வாழ்வின் லக்ஷ்யம் இன்பத் தின் இல்லம்.

இல்லற இன்பம் ஒன்றுண்டாயின், அதைத் தரவல்லவள் அவள் ஒருத்தியே. நாம் இரு வரும் உடன்பட்டால், பெற்றோர் என்ன செய்யலாம்? உற்றார் என்ன செய்யலாம்? சாதி என்ன செய்யும்? மதம் என்ன செய்யும்?

வாலிபப் பராயத்திலே, இந்தக் காதல் வளர்ந்திருக்கிறது. உண்மை விளங்கி, உண வளித்திருக்கிறது. சாதிமத பேதத்தின் எல்லையை மீறும் சக்தி உண்டாகிவிட்டது. இதற்கு அணைபோட எண்ணுவது அறியாமை!

காதல், உள்ளத்திலே உணர்ச்சியை உதயமாக்குகிறது! காதலுணர்ச்சி, கடுங்காற்றி லும் வலிது; புயலிலும் மோசமானது, சூறாவளியிலும் அபாயமானது! இவற்றை அறியாத அறிவிலிகளுடன் பேசுவதில் ஏதும் பயனுண்டா?

எது விதத்திலும், நான் அவளை அடைந்தே தீரவேண்டும். தகப்பனின் பிடிவாதத்திற்கு மருந்து ஒன்று தான் உண்டு. அவரை அலக்ஷ்யம் செய்வதுதான்,

அழகிய ரோஜாப் பூவைப் பறிக்கும்போது முட்கள் கீறத்தான் செய்யும். அதற்காகப் பயப்படலாமா? இனிய தேன் வேண்டுமாயின், குளவிகள் தாக்கும் என்று நினைத்து அஞ்சலாமா? கண்கவர் கமலத்தை விரும்பினால், வாள் போன்ற கொடிகளும், சேறும் வருத் தும் என்று வருந்துவதா? மேட்டிலே சென்று கொண்டிருந்தால், பள்ளம் வராது என்று எண்ணலாமா....?

இரவு ஆட்சி செய்யும் வேளையிலே, சந்திரன் தூங்குகின்ற நேத்திலே, அவளை நான் அழைத்துச் சென்றால்... அம்மா , அப்பா என்ன செய்யலாம்? அவளும் நானும், அம்மா அப்பா வாகிவிடுவோமே!

ஈழகேசரி - 26.11.1950

"த தீ சி."

த தீ சீ என்ற புனை பெயரில் சிறுகதை எழுதியவர் யாரென்பதை அறியுமா றில்லை. 1937 ஈழகேசரி ஆண்டு மடலில் இவரின் 'சுக்கிரதிசை' என்ற சிறுகதை வெளிவந்தது.

❖ சுக்கிரதிசை

சுக்கிரதிசை

"த தீ சி."

மறுநாட் காலையில் மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவர்களுக்கு மத்தியிலே ஸ்ரீவேங்கடராமையா நிறுத்தப்பட்டார். அவருக்குத் தமிழ் கற்பிக்கும் படி அவருடைய தமையனார் எழுதிய கடிதம் முன்னமே அப்புலவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. அன்று ஒரு நாள் திரு மலைராயனுடைய அவைப் புலவர்கள் காளமேகத்தை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லுவது ஒரு பழங்கதை. நடந்தது நடவாததைக் கண்டது ஆர். இன்றைக்கு உண்மையாகவே அந்தப் புலவர்கள் ஸ்ரீராமையாவைக் கண் கொட்டாமல் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

பெரும்பாலருடைய பார்வை வயிற்றுப் பிரதேசத்தில் தங்கி விட்டது. சிலர் இந்த வயிறு எங்கே தொடங்கி எங்கே முடிகிறது! அதன் சுற்றுப் பிரமாணம் என்ன! உயரமென்ன!; என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் அந்த உதர பிரமாண்டத்தை வலம் வருகின்ற வேட்டியில் நீளம் எவ்வளவு" என்று கணக்கிடத் தொடங்கினர். மற்றொருவர் "வால் போல் வளர்ந்து கீழிறங்கிப் பின்பு மேலெழுகின்ற தாறு

வேட்டியின் வேறானது ஒன்றே" என்று ஆராய்ச்சி நடத்தினர். வேறொருவர் "வேட்டிக்கு மேலே அரையைச் சூழ்ந்து வருகின்ற கச்சில் எத்தனை சால்வைகள் பொருத்தப்பட்டிருக் கின்றன" என்று அடிக்கடி எழுந்து பார்த்தார். "வயிற்றுக்குத் தலையெம்மாத்திரம்! தலைக்குக் குடுமி எம்மாத்திரம்! ஒவ்வா அளவுகளை என்ன செய்வது" என்று ஒரு சிலர் திகைத்தார்கள். "கால்களைக் கண்டவர்கள் கால்களையே கண்டார்கள். கைகளைக் காணுகிறவர்களும் அப்படித்தான்" என்று ஒருவர் ராமாயணம் பாடினார்.

உருண்டு திரண்ட கைகள், உரல் போன்ற களைக்கால்கள், ஒன்றோடொன்று மோது கின்ற தொடைகள், பிடரி மடிப்புக்கள் எல்லாம் ஒவ்வோர் புதுமையை புலப்படுத்திக் கொண்டே யிருந்தன. தாம்பூலந் தரித்து சிவந்த வாயும், அகன்று நீண்ட மூக்கும், தலையசையாமல் தாமே புறப்பட்டு அங்கும் இங்கும் அசைந்து நோக்குங் கண்களும் எவர்களுக்கும் அச்சத்தை விளைத்தன.

"இரு சகோதரர்" என்ற கதையில் ஒரு பகுதி.

ஒரு புலவர் "இவன் கும்பகர்ணன்" என்று தீர்மானித்துக்கொண்டு, மற்றவர்களையும் ஒத்துக் கொள்ளும்படி நெருங்கினார். ராமையாவின் தோற்றம் எப்படியிருந்தாலும் பரவப் பூசிய விபூதிப் பிரசாதங்களும், மதுரைச் சந்தனமும், மீனாட்சியம்மையின் குங்குமமும் மலையருவி போல எழுந்து வளைந்து தொங்குகின்ற உபவீதத்தோடு சேர்ந்து அப்புலவர்க ளின் மனசைக் கொள்ளைக் கொண்டு விட்டன. இங்ஙனமாக காட்சியனுபவத்தில் சிறிது நேரங்கழிந்தது.

அதன் பிறகு "இராமையாவை எந்த வகுப்பில் வைப்பது" என்ற பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டது. சிலர் "எழுத்துப் பரீட்சையொன்று நடத்தியாக வேண்டும்" என்றார்கள். வேறு சிலர் "வாய்மொழிப் பரீட்சை போதுமானது" என்றார்கள். இதற்கிடையில் ஒரு புலவர் எழுந்து "குற்றியலுகரத்துக்கும் அன்மொழித் தொகைக்கும் பேதம் யாது?" என்று கடாவினார். "தஞ்சாவூர்ச் சத்திரத்துக்கும் திருவையாற்றுப் பெரிய சத்திரத்திற்கும் இடைத்தூரம் பதின் மூன்று கல்" "அரைமணி நேரத்தில் பஸ் வண்டியில் போகலாம்" என்று மறுமொழி வந்தது. இலக்கிய தருக்க பாடங்களிலும் பரீட்சிக்கிறதற்குப் பலர் எழுந்தார்கள். இடையிடையே சிரிப்பும் சம்பாசனைகளும் நடைபெற்றன. தலைமைப் புலவரின் பார்வை எங்கும் அமைதியை நிலவச் செய்தது. எழுந்த புலவர்கள் இருந்து விட்டார்கள். தலைமைப் புலவர் சொல்லுகிறார்.

"அப்பா! ராமையா! உனக்காவது உன் அண்ணனுக்காவது தமிழ்ப் பாஷையில் ஏன் துவேஷம் ஏற்பட வேண்டும். அந்தப்பாஷை தன்னளவில் கிடந்து போகட்டும். உன் அண்ணனிலும் பார்க்க நீ பெரிய வருமானம் பண்ணுகிறதற்கு வழியிருக்கிறது. இந்த மதுரை மாநகரில் எத்தனையோ நாடகசபைகள் இருக்கின்றன. அத்தனை சபையும் உன்னை விரும்பி வரவேற்கும். எந்த நாடகத்திலும் நீ விதூசகனுக்கு வரலாம். இப்பொழுது நடக்கும் கிருஷ்ணலீலையில் தானும் உனக்கு இடம் இருக்கிறது. கம்சன் அனுப்பிய பூதனா தேவியின் தர்மபுருஷனாகக் கூட நீ நடிக்கலாம். நீ அதற்குக் லாயக்கு. போய் வா."

ராமையாவின் தலை அங்கு இங்கு சரிய முடியாதாயினும், ஒரு பக்கத்திற்கு சரிவது போல் காட்டி மரியாதை செய்து, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டது. தெருவிலே செல்லும்

போது முன்னும் பின்னும் பக்கங்களிலுமாக அநேக பிள்ளைகள் ராமையாவை சூழ்ந்து கொண்டு சென்றார்கள். இது விஷயம் ராமையாவுக்கு தெரியாது. எட்டு முழவிட்டார்த்தமுள்ள ஒரு வட்டப்பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை ராமையா எவ்விதம் பார்க்க முடியும். எங்களுக்குப் பிடரியும் ராமையாவுக்கு இந்தப் பிரதேசமும் ஒன்று தான். தொந்திக்குக் கீழும் புறங்காலின் ஓரங்களிலும் நடக்கிற சம்பவங்கள் ராமையாவுக்க தெரியாமல் இருப்பது நூதனமல்ல. ஸ்ரீ கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் கொண்டு போவது போன்ற காட்சியை அருந்தத் தெருவிலே ஸ்ரீராமையா செய்து வைத்தார்.

எதிரிலே தூரத்தில் வருகின்ற வண்டிகள் மோட்டார்கள் வேறுவழிகளில் விலகியும், தெருவோரங்களில் ஒதுங்கியும் சென்றன. இராசப்பிரதிநிதி வரப்போவதாக அந்த தெரு சிறிது கர்வங் கொண்டது. அங்கும் இங்கும் செல்லுகின்ற பட்டணத்துச் சனங்கள் ஸ்ரீரங்கப் பெருமாளுக்கு யாரோ இடும்ப வாகனஞ் செய்தனுப்புவதாகப் பேசிக் கொண்டு போனார்கள். ஒரு மனிதனுக்கு நெடுங்காலமாக இருந்து வந்த ஒரு விக்கல் வருத்தம் ஸ்ரீராமையாவின் தரிசன விசேஷத்திலே தீடீரென்று நின்று போய்விட்டது. அப்படியே ஒரு சிறுவனுக்கு இருந்த முறைக் காய்ச்சலும் போய்விட்டது.

அங்கேயுள்ள நடனசபைகளுள் பாலர் கானகசபை மிகப்பிரசித்தமானது. அந்தச் சிறுவர்கள் அந்தச் சபைக்கு ஸ்ரீராமையாவை மெல்ல மெல்ல கொண்டு போய்ச் சேர்த்தார்கள். சபை முதலாளி அவரை வரவேற்று வேண்டிய சௌகரியங்களை செய்து வைத்தார்.

அன்றிரவு சாரங்கதாரா நாடகம். அது நடந்து கொண்டிருக்கும் பொழுது இடையிலே ஒரு முறை ராமையாவை காட்டுவதாக உத்தேசித்தார்கள். ராமையாவுக்கு விசேஷ அலங்கார மொன்றும் செய்து வைக்கவில்லை. விபூதி, சந்தனம், குங்குமம், இந்த மூன்றோடும் அடுத்த இயற்கையான அலங்காரம் மாத்திரம் செய்யப்பட்டது. கையில் ஒரு தருப்பைக் கட்டும் கமக் கட்டுள் ஒரு மான்றோல் சுருளும் மாத்திரம் விசேஷமாகச் செய்து வைக்கப்பட்டன.

திரையை மெல்ல மெல்ல நீக்கி, கொப்பூழ்க் குட்டையை முதலிற்காட்டி, அதன் பிறகு செப்பாற் செய்யப்பட்ட ஒரு பெரிய குடில் போன்ற வயிற்றுப் பிரதேசத்தின் ஏகதேசத்தையும், பின்பு இடைவெளியின்றி இணைந்த இரு தூண்கள் போல உருண்டு திரண்ட உதடுக ளையும், அவற்றுக்கு மேல் நீண்டு சழிந்த மூக்கின் பரப்பையும் படிப்படியே காண்பித்து, அதற்கு மேல் குடில்களின் முகட்டில் குவிந்து முடிந்த ஒரேயொரு முடிச்சு அதனையுந் தோற்றுவித்துக் கொண்டு, அந்தச் சரீரப் பிரமாண்டத்தோடு கொட்டாது விழித்துக் கொண்டி ருக்கும் கண்கள் முழுவதிலும் ஏககாலத்தில் நுழைந்து எங்கும் பிரசனமாய் எங்கும் ராமையா விளங்கினார்.

அவருடைய புறப்பட்ட கண்கள் முகக்கட்டையை விலகி உருண்டு திரண்டு அங்குமிங்கும் புரண்டு பிறழ்ந்தன.

எங்கும் ஒரே அமர்க்களம். கால்மணி அரைமணி முக்கால்மணி ஒருமணியும் ஆய்விட்டது. இன்னும் அடங்கவில்லை.

தோள் கண்டர் தோளெகண்டார்
தொடு கடற் கருங்கல் போன்ற
தாள் கண்டார் தாளே கண்டார்
தடக்கைககண் டாருமஃதே

இ-ள் தொடுகடல் ஈண்டுப் பாற்கடல் கருங்கல் மந்திரமலை. ஏனைய வெளி ஏகாரங்கள் பிரிநிலை. விரிப்பிற் பெருகும். அவ்வளவில் அமைக.

எதற்கும் ஒரு அருமை வேண்டுமல்லவா? திடீரென்று திரை வீழ்ந்தது. ஒரு சிலர் அந்த நாடக மேடையில் ஏறித் திரையைப் பிடித்துக் கிழித்து ஏனைய பாத்திரங்களை வராமற் செய்வோம் என்று கூட எண்ணினார்கள். என்ன செய்வதுஞ் அந்த இடம் பொறுத்த நகரம். பொலிஸ் பந்தோபஸ்து அதிகம். ஒருவாறு பொறுமை குடிகொண்டது. எல்லோரும் ராமையா ராமையா என்று கூப்பிட்டார்கள். ராமையா ஒன்றும் பேசாமலே போய்விட்டார்.

மற்றநாள் காலையில் முதலாளியின் மாளிகையை நூற்றுக்கணக்கான சனங்கள் முற்றுகையிட்டார்கள். முதலாளிக்கு விஷயம் விளங்கிவிட்டது என்று எழுதிய விளம்பரப் பலகை வாசலிலே தொங்கவிடப்பட்டது. வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் சீக்கிரம் சீக்கிரமாக நடைபெற்றன. எட்டுமணி தொடக்கம் டிக்கற் விற்பனை நடந்து கொண்டிருந்தது.

பத்துமணியடித்தது. சனங்கள் ஒருவர் மேலொருவர் ஏறிவிழுந்து உள்ளே நுழைந்தார்கள். உடனே கதவு பூட்டப்பட்டது. ஒருமுறை வந்தவர்கள் ஐந்து நிமிசத்துக்கு மேல் தரிசனஞ் செய்யக் கூடாது. அவர்கள் வெளியிலே போகிறதற்கு வேறாரு வாசல் வகுக்கப்பட்டிருந்தது. ஐந்து நிமிசத்துக்கு ஒருமுறை ஒரு மணியடிக்கும். அப்பொழுது வாசற்கதவு திறக்கப்படும். உள்ளே நிற்கிறவர்கள் வெளியிலே போவார்கள். வெளியிலே நிற்கிறவர்கள் உள்ளே வருவார்கள். இந்த ஒழுங்குகளைப் பல பொலிஸ் கனவான்கள் நடத்தி வைத்தார்கள்.

உள்ளே ஒரு நீளச் சுவரை இடித்து, இருப்புச் சலாகைகளை நாட்டி ஒரு நீண்ட யன்னல் செய்யப்பட்டிருந்தது. அதற்குப் புறத்திலே நின்றுதான் தரிசனஞ் செய்ய வேண்டும்.

ஒரு பெரிய விஸ்தாரமான அறை. அதற்கு நடுவிலே ஒரு கருங்கல்லுப் பீடம். அதில் ஒரு குறுகிய இருப்புலக்கையை நாட்டி, அதன் நுனியில் பல பலகைகளினால் ஆக்கப்பட்ட ஒரு வட்ட வடிவிலான பலகை சுழன்று வரக் கூடியவாறு பொருத்தப்பட்டிருக்கின்றது. வட்டப் பலகையின் விட்டம் இருபது முழம். பலகையின் ஓரங்களில் சுற்றிவரப் பல கால்கள். அக் கால்களின் அடியில் இரும்பிலான பீலிச் சில்லுகள். அந்தச் சில்லுகள் வட்ட வடிவாக நிலத்தில் பதித்த இருப்புத் தண்டவாளத்தில் இயைந்திருக்கின்றன. சுவரிலே ஒரு மின்சாரப் பொத்தான். அதை அழுத்துகிறதற்கேற்றவாறு அந்த ஆசனம் சுழன்று வரும்.

அந்த ஆசனத்தில் பல மெத்தைகள். திண்டுத் தலையணைகள் ஏற்ற விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட அந்தத் திவ்விய ஆசனத்தின் மீது ஸ்ரீராமையா அமர்ந்தருளினார்.

படுக்கிறதற்கு – சிறிது சாய்கிறதற்கு – நிமிர்ந்து வீற்றிருக்கிறதற்கு எதற்கும் அந்த ஆசனத்தில் இடமுண்டு. மலசல விமோசனம், திருமஞ்சனம், போசனம், சயனம்,

இத்தியாதிசத் கருமங்களுக்கெல்லாம் சுலபமாக இனிது முடிகிறதற்கு அந்த ஆசனம் இடம்கொடுத்துக் கொண்டிருக்கிறது.

கை கால் பிடிக்க – அவயவ விஷேசங்களை உழக்க – பரிமளகந்த புஷ்பாதிகளால் அலங் கரிக்க ஒவ்வொரு கருமத்துக்கும் ஒவ்வோர் ஆள். வேண்டிய உணவுப் பண்டங்களை ஒரு முறை நினைக்க வேண்டியது. அவையெல்லாம் வந்து குவிந்துகொண்டேயிருக்கும்.

மேலே மின்சார விசிறிகள் வேண்டிய அளவுக்கு வீசிக் கொண்டிருக்கின்றன. பக்கங்க ளிலே பார்வைக்கினிய பொருள்கள். இந்திர வாழ்க்கை ராமையாவின் வாழ்க்கைக்கு எம் மாத்திரம்? இரவில் ஒருமுறை நாடகத்துக்குப் போய்வர வேண்டியது. வேறு எதற்கும் இடம் பெயர வேண்டாம்.

அந்த நாரயணன் - திருவரங்கப்பெருமாள் ஆதிசேசனில் எழுந்தருளியதாகச் சனங்கள் பேசிப்பேசித் தரிசனஞ் செய்தார்கள். அங்கே அந்த யன்னலுக்கருகில் ஒரு சல்லிப்பெட்டி. நாடக நாட்களில் முதன்முதல் விலையாகும் டிக்கற் பணத்தை அதிற் போட்டு வைப்பது வழக்கம். அறியாமை நிறைந்த பெண்கள் திருவரங்கப் பெருமாளுக்குச் செலுத்த வேண்டிய காணிக் கையை அதிலே தானே செலுத்திவிட்டார்கள்.

ராமையாவின் முதுகுப்புற விசேசங்களை- பக்க சமாச்சாரங்களை யாராவது பார்க்க விரும்பினால், அங்கே நிற்கிற ஒருவர் அந்தப் பொத்தானை ஒருமுறை அழுத்துவார். உடனே அந்த ஆசனம் மெல்லமெல்லச் சுழன்று வரும். அப்பொழுது ராமையா சிரிப்பார்.

அந்த வாரம் முழுவதும் பத்திரிகைகளிலெல்லாம் ராமையாவின் படங்களும், பிர தாபங்களுமே வெளிவந்தன. பல நகரங்களிலுள்ள நாடக முதலாளிகள் ராமையாவை அனுப்பிவைக்கும்படி தபால், தந்திகள் ஒன்றன் பின் ஒன்றாக நூற்றுக்கணக்கில் அனுப்பி வைத்தார்கள். அந்த முதலாளி சீதாராமையன் அவற்றையெல்லாம் புதைத்துவிட்டான். ராமையாவுக்குப் பூலோக சமாச்சாரமே தெரியாது. இதுநிற்க:

ஒருநாட் காலையில் கல்யாணசுந்தரம் ஐயர் தம்மிடம் வந்த சிலரோடு பேசிக்கொண் டிருந்தார். அப்பொழுது தபாற்காரன் சில கடிதங்கள், பத்திரிகைகள் கொண்டுவந்து கொடுத் தான். சுந்தரம் ஐயர் ஒரு ஆங்கில தினசரியை எடுத்துப் பிரித்துப் பார்த்தார். முதல் பக்கத்தில் ராமையாவின் ஒவ்வோர் அவயத்துக்கும் தனித்தனி படங்கள். மற்றப் பக்கத்தில் முழுஉருவத்தின் பிரமாண்டமான படம்: அடுத்த பக்கத்தில் நாடக பிரதாபங்கள்: தரிசன விஷேசங்கள். நாலாவது பக்கத்தில் ராமையாவின் சீவிய வரலாற்றுச் சுருக்கம்.

ஐயருக்குக் கண் இரண்டும் சிவந்தது. அந்தப் பத்திரிகையைப் பிசைந்து, படாதபாடு பதினேழும் பட்டு, உருட்டித்திரட்டி அப்பால் எறியப்பட்டது. "அவன் எனக்குத் தம்பியுமல்லன், நான் அவனுக்குத் தமயனுமல்லன்" என்ற நிர்ணபத்தை அங்கேயிருந்தவர்கள் முன்னிலை யில் அரங்கேற்றிவிட்டு திடீரென்று எழுந்து ஒரு அறைக்குள் பிரவேசம் செய்தார் சுந்தரம் ஐயர்.

அந்த நிர்ணயம் ராமையாவின் சுரோத்திரேந்திரியப் பிரதேசங்களிலும் எட்டியிருக் கலாம். ஆனால் அதைப் பொருட்படுத்த இது தருணமல்ல.

அஷ்ட ஐசுவரிய இஷ்ட வைபவங்களில் ஸ்ரீராமையா முழுகிக் கொண்டிருந்தார். மூன்று மாசம் பறந்தது.

நாலாவது மாசம். நாடக மேடைகள் சினிமா மேடைகளாய் மாறின. காப்பிக் கிளப்புக்கள், வீட்டுச் சுவர்கள், மூலை முடுக்குக்கள் எங்கே பார்த்தாலும் ராமையாவின் திருவுருவப் படங்கள். இனி, யாருக்குத் தரிசனம் வேண்டும். அதுவுங் குறைந்து குறைந்து நின்று போனது. சுக்கிரன் அத்தமித்தான்.

இனி...?

•

ஈழகேசரி ஆண்டு மலர்
1939

ராஜேஸ்வரி

ராஜேஸ்வரி என்ற புனை பெயரில் எழுதியவரை அறியுமாறில்லை. ஈழகேசரியில் இவர் எழுதியவர். ஈழகேசரியில் இவர் எழுதிய "கடைசிக் கந்தாயம்" என்னும் சிறுகதை வெளிவந்துள்ளது.

❖ கடைசிக் கந்தாயம்

கடைசிக் கந்தாயம்

ராஜேஸ்வரி

அன்று Go as you please டிக்கெற் ஆரம்பமாய தினமாதலால், ஜனங்களும் மிகவும் மலினமாகவே கொழும்புப் புகையிர ஸ்தானத்தில் காணப்பட்டார்கள். மூன்றாவது வகுப்பு வண்டியில் ஜனநெருக்கம் அசாத்தியமாக இருந்ததும் அல்லாமல், மிகவும் அகோரமாகவும் இருந்தது. அவ்வண்டியிலே பத்மநாதனும் எவ்விதமோ கஸ்ரப்பட்டு ஏறிக் கொண்டான். இவ்வளவு நெருக்கடியிலும் அவனுக்கு ஏதோ அதிஷ்ட வசமாகப் போலும் சாளரத்தினூடாகப் பார்க்கக்கூடியதாக இருந்தது. சிறிது நேரம் அவன் வண்டியின் வேகத்தில் மறைந்து செல்லும் மரங்களையும், வயல்களையும் உற்றுப் பார்த்த வண்ணமும், புகை வண்டியின் ஆட்டங்களையும் ஓட்டங்களையும் அசட்டையீனமாக உணர்ந்து கொண்டும் இருந்தான். வானமெல்லாம் இருள் மயமாகி அந்த காரமே குடிகொண்டிருந்தது. காற்று என்ற நாமமே அற்றிருந்தது. உஷ்ணத்தினாலும் அமைதியின்மையாலும் அலுப்புற்ற பத்மநாதன் தன்னைச் சுற்றிலும் இருந்த ஜனங்களைப் பார்க்கலானான். மூன்றாவது வண்டியில் அதுவும் - ஜன நெருக்கமான வண்டியில் - பிரயாணம்

செய்தால் அதற்குள்ளிருக்கும் பல அசௌகரியங்களைக் குறித்தோ அன்றி அசுத்தங்களைக் குறித்தோ கூறவேண்டியதில்லை.

இவ்வித நெருக்கடியிற்கிடையே பத்மநாதனும், இவற்றினையெல்லாம் ஒரு சிறிதும் பொருட்படுத்தாது அவன் அவளது தந்தையின் இல்லத்தில் அன்று விட்டுப் பிரிய நேர்ந்த தனது மனைவியான ரதியையே கண்களை மூடியபடி நினைத்தவண்ணம் இருந்தான்.

அவளுடன் அவன் களித்த கடைசி இரவன்று நடந்தவைகள் எல்லாம் அவனது மனக்கண் முன் தோன்றவே அவனுக்கு அவள் மீது ஒருவித வெறுப்பு உண்டாயிற்று. ரதியின் பழிப்பும் நெளிப்பும் அவனால் சகிக்க முடியாது போகவே அவளைக் கொன்றுவிட்டாளோ என்னும் நிலையில் அவனது மனம் துடிதுடித்தது. தன் உணர்வு வரவே அவளின் நினைவையே உதறித் தள்ளிவிட்டு தாம் மணம் செய்த அவ்விரண்டு வருடங்களுக்கு இடையில் நடந்தேறிய எல்லாவற்றையும் குறித்துச் சிந்திக்கலானான். எவ்வளவுதான் படித்தென்ன? ஒரு பெரிய பட்டதாரியாய் இருந்தல் என்ன? எம்.ஏ பட்டம் பெற்றும் என்ன? சிவில் சேர்விஸ்சுக்குப் போய் என்ன? தோல்வி எவ்விதம் இருந்தும் என்ன? எத்தனை விண்ணபப் பத்திரங்களையும், எத்தனை நற்சாட்சிப் பத்திரங்களையும் அனுப்பித்தால் என்ன? எத்தனை பேட்டிகளுக்குத் தான் சென்றால் என்ன? எங்கும் எவையும் அவனை நிராகரித்தன. தகப்பனாரின் வேண்டா வெறுப்பான பொறுமையும் தமையனாரின் பரிகாசச வார்த்தைகளும், பெண்டாட்டியின் வேற்றுமையும், கொடுஞ் சொற்களும் - எல்லாம் அவனுக்கு என்றைக்குச் சிவகிருபை வருமோ என்ற கீர்த்தனத்தில் உள்ள" உண்டானபோது கோடி உறமுறையோர்கள் வந்து கொண்டாடித் தொண்டாகிக் கொள்வார் தனங்குறைந்தால் பெண்டாட்டியும் வெறுத்துப் பேசுவாள் ஐயையோ இந்தச் சண்டாள உலகத்தைத் தள்ளிவிடக் கதியில்லை" எனும் அடிகளையே நினைவுறுத்தின. என்ன செய்வான்: யாரோடு நோவான்: யார்க் கெடுத்துரைப்பான், பாவம்! தகப்பனாரை நோகலாமா? இல்லை. தகப்பனார் தானே அவனது எதிர்காலத்தைக் கருதி தம்முடைய திரவியம் எல்லாவற்றையும் வாரியிறைத்துத் தோல்வியுற்றார். இனி அவரால் என்னதான் செய்ய முடியும்? யாரையும் நோவதில் பயனில்லை. பின்னரேன் அறிவிலியாகிய ரதியைக் குறித்துக் கவலைப்படுவான்? அவள் யந்திரங்களை ஒத்த கல்லூரிகளில் கல்வி கற்றுப் பரீட்சைகளிலும் எத்தனையோ சித்திகளை அடைந்தும் தான் என்ன? "வெள்ளந்தனைய மலர் நீட்டம்: மாந்தர் தம்உள்ளந்தனைய துயர்வு" என்பதனை ஒப்ப அவளது உள்ளத்தளவு உயர்வே (அறிவு) இருந்தது. அறிவாளியாயின் - புத்தியுள்ளவளாயின், ஊர் வம்பு பேசுதலே தொழிலாகக் கொண்டுள்ளவர்களின் வார்த்தைகளைக் கேட்டு, மனமுடைந்திருக்கும் என்னை, நடுநிலை பிறழ்ந்து வேண்டா வெறுப்பாக நடத்துவாளா? என்னே உலகம்! எல்லாம் விதியின் பயனே!

இவ்வாறு எல்லாம் எண்ணி மனமுடைந்து கொண்டிருந்த பத்மநாதனுக்கு நித்திரா தேவி பிரசன்னமாகவே, அவன் தான் கண்ணில் அணிந்திருந்த கண்ணாடியைக் கழற்றிப் பக்கத்திலிருந்த ஆசனத்தில் வைத்துவிட்டு நித்திரையானான். இத்தனை சப்பதங்கட் கிடையும் நன்றாகத் தூங்கினான்.

எவ்வளவு நேரம் தூங்கியிருப்பான் என்பது அவனுக்கே தெரியாது. யாரோ ஒருவர் அவனைத் தட்டியதும் திடுக்குற்று எழுந்தான் - கைக் கடிகாரத்தைப் பார்த்தான் - அது விடியற்

காலை ஐந்து மணியென்பதைக் காட்டிற்று. மன்னியுங்கள், உங்களது கண்ணாடி தட்டுப்பட்டுக் கீழே விழுந்து விட்டது ஆனால் நல்ல வேளையாக அது உடையவில்லை; இவ் வார்த்தைகளைக் கேட்டதுமே, பத்மநாதன் தனது முகத்தைத் திருப்பித் தனக்கு எதிரே முற்றும் கதருடை அணிந்து நிற்பவர் ஒருவரைக் கண்ணுற்றான். அவரது புன்னகை தவழும் வதனத்தில் இரக்கம், சாந்தம், பொறை, அடக்கம் முதலாய அரிய குணங்கள் மிளிர்வதைக் கண்ணுற்றான்.

பத்மநாதனும் மாறுத்தரமாக நன்றி செலுத்தினான். ஆனால், மறுபடியும் அவனால் உறங்க முடியவில்லை. அக்கதருடை அணிந்திருந்த பெரியாரது கனிந்த பார்வையானது அவனுடைய மனதைக்கொள்ளை கொண்டு விட்டது. பின்னர் ஓர் எண்ணம் உதித்ததும், அவன் எழுந்து உட்கார்ந்த வண்ணம் மன்றாட்டமாக, ஆம் நான் மிகவும் கவலையீனமாக இருந்துவிட்டேன். அது பொடியாய்ப் போயிருந்தால் தான் நான் என்ன செய்திருக்க முடியும். இருந்தாலும் காரியமில்லை எனப் பகர்ந்தான்.

ஏனில்லை? ஏனில்லை? எனப் பத்மநாதன் அவ் அந்நியரை வினாவினான். தத்தளித்து உழன்று நீ சாக விரும்பும்போது உனது ஜனங்களை உன்னை வெறுத்து உனது நிலையையும் அறியாது பகிடி செய்யும்போது நீ எப்படிப் போனால்தான் என்ன? வீண் - பயனற்ற - ஒன்றுக்கும் உபயோகமில்லாத சீவியத்தைக் காட்டிலும் தற்கொலையே சாலச் சிறந்தது - ஏற்றதாம் - ஆனால் அதற்கு நீயோ மிகவும் சிறியவன். நீ உன்னைக் கொலை செய்வதற்குத்தான் எண்ணியிருந்தாலும் அதனை ஆழ்ந்து, ஆராய்ந்து, அறிந்து செய்ய விரும்பமாட்டாயா? பச்சைப் பசேலென மரங்கள் புற்கள் நந்தவனங்கள் அழகிய பட்சியாலங்கள் மனோகரமான அத்தமானங்கள் என்னே இயற்கை அன்னையின் அழகு நீ இறக்கும் முன் இயற்கை அன்னையின் வசீகரத் தோற்றங்களைப் பார்த்து அனுபவித்தால் என்ன? அவைகளை ஏன் நீ மறுக்கிறாய்?

உங்களுக்கு அசாதாரணமான எண்ணங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், நீங்கள் சொல்வதிலும் உண்மை இருக்கின்றது எனப்பகன்றான் பத்மநாதன். "திறந்த கண்களுடன் இற" - ஆம் அதுவும் இன்றி "திறந்த கண்களுடன் சீவி" (இரு). ஆனால், ஒன்று - என் உள்ளத்தில் இருக்கும் வெறுப்பை உங்களால் உணர முடியாது - அறியமாட்டீர்கள் பாருங்கள் நான் தக்க போதிய கல்வியுடன் இருந்தும் இருபத்தைந்தில் முதுமையும் மனச் சஞ்சலமும் தகப்பன் மனைவி உடன்பிறந்தார் சுற்றத்தார் எல்லாருமே என்னைக்காண வெறுக்கிறார்கள். சுய மரியாதையுடனாவது செல்வதற்கு எனக்கொரு புகழிடம் இல்லையே என மனம் வருந்தினான்.

ஆனால், சகோதரா! உன்னுடைய வாழ்க்கையில் நீ செய்ய வேண்டியது இன்னும் அநேகம் இருக்கின்றன என அவ் அந்நியர் புகன்றார்". "ஓ அநேகமா! அப்பா வேண்டவே வேண்டாம் மிகவும் வந்தனம்."

"அவ் அந்நியர் பதிலளிப்பதற்குள் புகை வண்டியும் தனது வேகத்தைக் குறைத்து வைகறையில் வெளிறிய பயங்கரத் தோற்றங்களுடன் காணப்பட்ட வெறும் வண்டித் தொடர்களையும் தண்டவாளங்களையும் கடந்து உருண்டு சென்று யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் நின்றது. தனது படுக்கையையும் பெட்டியையும் தூக்குவதற்காகப் பத்மநாதன் ஒரு

கூலியை அழைத்தான். பக்கத்திலிருந்த அவ் அந்நியரும் தாமும் இறங்குவதற்கு ஆயத்த மானார். அவரிடம் ஒரு தலையணையும் ஒரு சிறிய தோற்பையுமே இருந்தன. அவ் அந்நியர் வண்டியை விட்டு இறங்கியதும் நமஸ்காரம் சென்று வருகிறேன் என்றார். இதைக் கேட்டதும் பதமநாதனுக்குத் தனக்குள்ளே ஒருவித தனிமையும், வெறுமையும் இருப்பதை உணர்ந் தான். இம் மனிதரைத் தனது வாழ்க்கையிலிருந்து நழுவ விடப்படாதென எண்ணினான்.

"வேண்டாம் நில்லுங்கள்! யான் உங்களுடன் பேச வேண்டும். நீங்கள் எங்கே செல்லுகிறீர்கள்? நீங்கள் யார்?"

நாங்கள் இவ்விடத்திலிருந்து இவ்விதமாக ஒன்றும் பேசமுடியாது. யான் ஒரு கமக் காரன். இங்கிருந்து இருபத்தைந்து மைலுக்கு அப்பாலுள்ள பூநகரி என்னுங் கிராமத்தில் வசிக்கிறேன். அங்கு பஸ் வண்டியில் தான் செல்ல வேண்டும். அது இன்னும் அரை மணி நேரத்தில் புறப்பட்டுவிடும்.

அதுதான், எவையும் எனது வாழ்க்கையிலிருந்து தோன்றி மறைகின்றன. இம்மனிதர் கூட. ஆனால்... ஆனால்.... அவர் எதற்கு அப்படியாக வேண்டும்? யானேன் அவருடன் அவ ரது கமத்திற்குச் செல்லலாகாது? என இவ்வாறெல்லாம் எண்ணமிட்ட பத்ம நாதனுக்கு, ஒரு புறம் வெட்கமாகவும் இருந்தது. இருந்தும் அவனே அவரைக் கேட்கவும் வேண்டியிருந்தது. யான் உங்களுடன் வந்தால், உங்களுக்குச் சிரமமாக இருக்குமா? யான் பரீட்சைகளினாலும் பட்டணவாசத்தினாலும், முக்கியமாக வாழ்க்கையினாலும் நொந்து அலுத்துப் புண்பட்டுப் போயிருக்கிறேன்... ஆகையினால் உங்களுடன் சிறிது காலத்தைக் கழிக்க விரும்புகிறேன்.

ஏன் கூடாது? தாராளமாக வரலாமே? தயவு செய்து எனது குடிசைக்கு வாருங்கள். யான் ஓர் எளிய வாழ்க்கையை நடாத்துபவன். என்னால் என்னென்ன உமக்கு அளிக்க முடியுமோ அவைகளையெல்லாம் மனப்பூர்வமாகவும் சந்தோசமாகவும் உதவுவேன்;

பத்மநாதனுக்கு இது ஒரு பேருதவியாகவும், மன ஆறுதலாகவும், சந்தோசமாகவும் இருந்தது என்பதைக்கூறவும் வேண்டுமா? அவனுக்கு இவ்வார்த்தையானது புண்பட்ட நெஞ்சிற்குதவிய சஞ்சீவி போன்றிருந்தது. அவனுக்கு இன்னும் ஒரு முறை கடைசியாகச் ஸிவில் ஸேவிஸ் பரீட்சை எடுப்பதற்குச் சில மாதங்களே இருந்தன. இருந்தும் ஒரு சில தினங் களை இவ்விதம் கழிப்பதனால் ஒரு வித நஷ்டமும் இல்லை... கடைசிக் கந்தாயம். பின்னர்... வருங்காலத்தைக் குறித்த எண்ணங்களையெல்லாம் அத்துடன் நிறுத்தி விட்டுப் புதிய கூட்டாளிகளுடன் தொடர்ந்து சென்று, புகை வண்டி நிலையத்தின் மறுகோடியிலுள்ள தண் ணீர்க் குழாய்க்குச் சென்று, கை, கால், முகமெல்லாம் நன்றாகக் கழுவிக் கழுவிச் சுத்தம் செய்து, விபூதி தரித்துக் கடவுளைத் தியானித்த பின்னர், ஒரு போசனசாலைக்குச் சென்று, கொஞ்சம் பாலும், சில இனிப்புப் பதார்த்தங்களையும், பழங்களையும் வாங்கி அருந்தி னார்கள்.

இவ்வளவில் நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டது. வானம் நல்ல பிரகாசமாகவும், தெளிவாகவும் இருந்தது. யாழ்ப்பாணம் புகைவண்டி நிலையம், தலைமன்னார், கொழும்பு முதலிய இடங்கட்குச் செல்லும் ஜனங்களினாலும், கூலிகளினாலும் சாமான்களினாலும் புத்துயிர் பெற்றிருந்தது. பத்மநாதனும் அவனரு நண்பருமாகத் திரும்பவும் தங்களது சாமான்

களும் போட்டாரும் இருந்த இடத்துக்கு வந்து சாமான்களை எடுத்துக்கொண்டு, நிலையத்தை விட்டு வெளியேறிப் பஸ் நிலையத்தை அடைந்தார்கள்.

பூநகரிக்குச் செல்லும் பஸ் பிரயாணிகள் வந்து நிறையச் சேரும் வரையிலும் காத்திருந்தது. ஏற்கனவே அதில் ஏழு அல்லது எட்டுப் பிரயாணிகள் இருந்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம், பஸ் நிரம்பியதும், அது தனது பிரயாணத்தைத் தொடங்கிற்று. பஸ் செல்லத் தொடங்கியதும் அது திறந்த கான்கள் வழியாகவும், இருண்ட நெருங்கிய வீடுகள் உள்ள வழியாகவும், பாழடைந்த மனைகளைக் கடந்தும், குப்பை கூழங்கள் சிதறுண்டு கிடக்கும் வழிகளினூடாகவும், சென்றுகொண்டிருக்கும்பொழுது, பத்மநாதனுக்குத் தன்னையுமறியாது ஒரு வெறுப்புடன் கூடிய திடுக்காட்டம் - நடுக்கம் உண்டாயிற்று. அதன் பின்னர், நல்ல சாலைகளினூடாக, அழகிய தோட்டங்களுடன் கூடிய நாகரீகமான பங்களாக்களையும் கடந்து நாட்டுப் புறத்தை அடைந்தது.

நல்ல தண்மை பொருந்தியதென்றாலும், நல்ல பசுமையான இயற்கை அன்னையின் தோற்றங்களும், அகன்ற வயல்வெளிகளும் பத்மநாதனைப் பரவசப்படுத்தின. அதுவுமின்றி அவனது புண்பட்ட மனதிற்கு ஒரு சமய சஞ்சீவி போன்றுமிருந்தது. ஏதோவெல்லாம் தனது நண்பனிடம் அறியவேண்டும் எனத் திரும்பிய பத்மநாதன், அவர் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைக் கண்டு, இடையூறு செய்யாது வாளாவிருந்தான். சிறிது நேரம் கழிந்த பின்னர் அந்த நண்பர் இவனைத் திரும்பிப் பார்த்ததும், பத்மநாதன், “ முதலாக நீங்கள் யார் என்பதை யான் அறிய விரும்புகிறேன். நீங்கள் ஒரு சாதாரண கமக்காரர் போன்று தோன்றவில்லையே! - உங்களைப் பார்த்தால் ஒரு கற்றவரைப் போன்று புலப்படுகின்றதே! - ஆம், சந்தேகமேயில்லை. நீங்கள் பட்டணங்களையும், பட்டண வாழ்க்கையையும் ஆங்காங்குள்ள நாகரிகங்களையும், இன்னும் இவைபோன்ற பலவற்றையும் கண்டு கழித்திருக்கிறீர்கள். யான் கேட்பது மிகையாயின் - தவறாயின், என்னைத் தயைகூர்ந்து மன்னியுங்கள்”

என்னைக் குறித்த நீர் என்ன அறிய விரும்புகிறீரோ, அவற்றையெல்லாம் என்னிடம் தாராளமாகக் கேட்கலாம். ஆம், “யான் படித்தவனே; உம்மைப் போன்று யானும் தற்காலம் பள்ளிக்கூடம் எனும் யந்திரத்திற்குள் அகப்பட்டு வெளியேறியவன். அதுவுமன்றி எனது பெயரின் பின்னால், எம். ஏ.,எம்.எஸ். ஸி., என்றும் பெருமை வாய்ந்த எழுத்துக்களை எழுதக் கூடியவனாயுமிருக்கிறேன். எனது இறந்த கால வாழ்க்கையைக் குறித்துக் கூறுகிறேன். யான் இந்தியாவிலுள்ள ஒரு வித்யாபீடத்தில் சயன்ஸ் பேராசிரியனாக இருந்தேன். அப்படி இருந்து வருங்காலத்தில், அங்கு நடைபெறும் பயனற்ற கல்வித் திட்ட முறைகளும், உணர்ச்சியற்ற யந்திரங்களை ஒத்த கலாசாலை வாழ்க்கையும் எனக்கு மிகவும் வெறுப்பை அளித்தன. இவ்வித வெறுப்புத் தோன்றவே, எனது எதிர்காலத்தைக் குறித்துச் சிந்திக்கலானேன். “கடவுள் கட்டளை” போலும்! அதே சமயத்தில்தான் மகாத்மா காந்தியின் சுயசரிதையைப் படிக்கலானேன். விரித்துக் கூறுவனேன் - அவரது கொள்கைகளெல்லாம் எனது மனதிற்கும், நோக்கங்களுக்கும் மிகவும் உவப்பாகவும், பொருத்தமாகவும் இருந்தன - மதுவையுண்ட வண்டு போன்று இருக்கலானேன். இவ்வித மனோநிலையிலிருக்கும் பொழுதே, காந்தியடிகள் ஆரம்பித்த உப்புச் சத்தியாக் கிரகத்திற்கும் (விடுமுறை நாட்களாதலால்) இங்கிருந்து இந்தியா செல்லலானேன். - அதன் பயனாக ஏழு மாசக் கடூழியச் சிறைவாசமும் அனுபவித்

தேன். சிறை வாசம் முடிந்து வெளியேறியதும், இனி என்ன செய்யலாம், ஆசிரியத் தொழிலோ போய்விட்டது. எனது நோக்கங்களையும், ஆவல்களையும் அப்பரம்பொருளே அறிந்து என்னை இவ்விதம் செய்தார் போலும் என எண்ணினேன். எவ்வளவுதான் யோசித்தும் என் னால் ஒரு முடிவுக்கும் வருவதற்கு முடியவில்லை. கடைசியாக ஒருநாட் காலை எனது காலைக் கடன்கள், பூஜையெல்லாம் முடித்துக் கொண்டு காப்பியும் அருந்திய பின்னர் எனது வீட்டு விராந்தையில் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி, எதிரே காணப்பட்ட கதிர்கள் வந் துள்ள பச்சைப் பசேலென்ற வயற்பரப்பை நோக்கிய வண்ணம் திரும்பவும் சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். சிறிது நேரத்திற்கெல்லாம், அவ்வயல்வெளியே என்னை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டது எனச் சொல்லலாம். இனிமேல் ஆசிரியத் தொழில் பார்ப்பதில்லை எனத் தீர்மானம் செய்தேன். எனது சம்பாத்தியத்திலிருந்து யான் சேமித்து வைத்திருந்த தொகையைக் கொண்டு இங்கு (பூநகரி) ஒரு வயற் காணியை விலைக்கு வாங்கி, அதில் ஒரு சிறிய குடிசையுங் கட்டிக் குடியேறினேன். இவைகளெல்லாம் நடைபெற்று வருடங்களும் எத்த னையோ ஆய்விட்டன. இது கஷ்டமில்லாத வாழ்க்கையன்று. ஆயினும் எனக்கு இது ஆறு தலையும், சந்தோசத்தையும், மனச் சாந்தியையும், உள்ளக் குளிர்ச்சியையுந் தரக்கூடிய தொரு சீவியமாகவே இருக்கிறது. இவைகளே எனது வரலாறு" எனக் கூறி முடித்தார்.

"நீங்கள் கடைசியாகக் கூறியது மிகவும் உண்மையேயாயினும், பட்டணங்களில் வசித்த தங்களுக்கு அதற்கு நேர் மாறான கிராம சீவியமும், புத்தகங்கள், கூட்டாளிகள், கேளிக்கைகளுமில்லாத வாழ்க்கை வெறுப்படைய வில்லையா"

"நீங்கள் அவ்விதம் கூறுவது சரியன்று. எல்லாம் அவரவர் நோக்கத்தைப் பொறுத்ததே. புத்தகங்களுக்கு ஒரு குறைவுமில்லை. வேண்டிய அளவுக்கு என்னிடம் இருக்கின்றன. புதுப் புத்தகங்கள் வெளிவரின் வாங்கியும் கொள்ளுவேன். இனிக் கூட்டாளிகளுக்கோ குறை வில்லை. கிராமத்தார் மிகவும் கெட்டித்தனமும் வாய்ச்சாதுரியமும் உள்ளவர்கள். மற்ற வர்களைப் போன்றே இவர்களிடமும் சுகமும், துக்கமும், நன்மையும், தீமையும், சிரிப்பும், அழுகையும் கலந்திருக்கின்றன. எளியவர்களும் பணப்பற்றுள்ளவர்களுங் கூட, முரடாக இருந்தாலும், இயற்கையான போக்குள்ளவர்கள். இதுவுமல்லாமல் எஞ்சிய நேரங்களில் எனக்கு நூல் நூற்பதே பரமானந்தம். இவைகளன்றி எனக்கு வேறு பொழுது போக்க வேண்டி யதில்லை. என்னில் ஒரு மாறுதலை யான் உணருகிறேன். அது என்னவெனில், யான் வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்துவிட்டேன் என்பதே"

பத்மநாதனுக்கு மறுமொழியொன்றும் சொல்ல நாவெழவில்லை. அவனது நண்பனின் வாக்கில் ஒருவித குறைகளும் காணப்படவில்லை. பின் கூறுவானேன்! அவனே அந் நண்ப ருடன் ஒரு வாரத்திற்குத் தங்கி, அவரது வாக்கின் உண்மையைத் தானே உணரப் போகின் றான்.

இவர்கள் செல்லும் பாதை குக்கிராமங்களுக்கூடாகவும், வயல்களுக்கூடாகவும், இரு மருங்கிலுமுள்ள மட்குடிசைகளுக்கூடாகவும், புளியந்தோப்பு, மாந்தோப்பு, குளங்கள், குட்டைகட் கூடாகவும், பாம்மைப் போல் வளைந்து வளைந்து சென்றது. அங்கங்கு ஒருவர் இருவராகப் பஸ் பிரயாணிகள் இறங்கியும், ஏறியுங் கொண்டிருந்தார்கள். கடைசியாகப் பத்துப் பதினொரு மணியளவில் பஸ் பூநகரியை அடைந்தது. பத்மநாதனும் அவனுடைய நண்

பரான சின்னத்தம்பியாரும் பஸ்ஸைவிட்டு இறங்கினார்கள். பூநகரிக் கிராமங்களுக்குள் ஓர் குக்கிராமம். ஒரு வெற்றிலை, புகையிலை, சுருட்டுக் கடை, ஒரு சிறிய தபாற்கந்தோர், பெரிய விருஷங்கள், அதன் கீழ் கிராமத்து ஜனங்கள், தூரத்திலுள்ள வயல்களில் மட் குடிசைகள் - இவைகளே அங்கு காணப்பட்டவைகள்.

“ஐயாவை ஊரிலே கனநாளாகக் காணவில்லையென” மளிகைக் கடைக்காரக் கார்த்திகேசு சின்னதம்பியாரை வரவேற்றான்.

“ஆம் கார்த்திகேசு, எனது சகோதரன் கொழும்பிற் சுகமில்லாது ஆஸ்பத்திரியில் இருந்தமையினால் நான் போக நேர்ந்தது. கடவுள் கிருபையால் இப்போ இருந்ததிற் சுகம்”

சின்னத்தம்பியார் ஒரு ஆலமரத்தடியில் சும்மா நின்ற ஒரு வாலிபனையழைத்து, “அப்பா, இந்தப் படுக்கையையும் பெட்டியையும் எனது வீட்டிற் கொண்டு வந்து கொடுப்பாயா?” எனக் கேட்டார். “அதற்கென்ன ஐயா? உங்களுடைய வீடு வெகுதூரம். ஆனாலும் நீங்கள் ஏழைகளுக்கு மிச்சம் இரங்குகிறவரானபடியால் நான் கொண்டு வருகிறேன்” என்றான் அவன்.

சூரியன் ஏற ஏறச் சூடும் அதிகரித்தது. அவர்கள் மூவரும் ஏகதேசம் இரண்டு அல்லது இரண்டரைக் கட்டைவரையில் தோப்புக்கட்கூடாகவும், வயல்களுக்கூடாகவும் சென்று ஒரு அழகிய சிறிய மூன்று பக்கங்களிலும் விறாந்தைகளுள்ளதும், வெள்ளையடித்ததுமான ஒரு வீட்டையடைந்தார்கள். இவர்களைக் கண்டதும், பத்து வயதுடைய ஒரு ஆண்குழந்தையும், ஐந்து வயதுடைய ஒரு பெண் குழந்தையுமாக ஓடோடியும் வந்து தமது தகப்பானாராகிய சின்னத் தம்பியாரின் இரு கைகளையும் இருவருவமாக இறுகப் பிடித்துக் கொண்டு சந்தோசத்தினால் துள்ளிக் குதித்தார்கள்.

அவர்கள் வீட்டையடைந்ததும் பத்மநாதன் களைப்பினால் ஆனால் சந்தோசத்துடன் அவனது விருந்துத் தலைவரும் நண்பருமான சின்னத் தம்பியார் அளித்த ஆசனத்தில் அமர்ந்தான்.

பகல் சீக்கிரம் கழிந்தது. பத்மநாதன் அக்குடிசையிற் குடிகொண்டிருந்த அமைதியையும் ஆறுதலையும் கண்டு பரவசப்பட்டான். அவன் அவர் அளித்த அந்த எளிய ஆனால் ருசியான காய்கறி, பழவகை, தயிர் முதலியவைகளடங்கிய உணவை உண்ட பின்னர் சிறிது தூங்கினான். வெயில் தாழ்ந்ததும் சின்னதம்பியர், பத்மநாதனையும் அழைத்துக் கொண்டு, தனது வயல்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டும், அதனைக் குறித்து அவனுடன் சம்பாசித்துக் கொண்டும் செல்லலானார். இடையிடையே சின்னத்தம்பியார், உழுவோனை எங்காவது முக்கிய ஏவலாக அனுப்ப நேர்ந்தால் தானே ஏரைப் பிடித்து உழுவார். பொழுதுபடுவதற்கு ஒருமணி நேரத்துக்கு முன் வீடு வந்து சேர்ந்தார்கள். அப்படியிருந்தும் சின்னத்தம்பியாருக்கு வேலை ஒழிந்த பாடில்லை. சுற்றுப்பக்கங்களில், உள்ளவர்களில் ஒருவர் தமக்குச் சுகமில்லையென மருந்து கேட்பதும், இன்னுமொருவர் தமது மனைவி இறந்துவிட்டதாகவும், அதனைத் தகனம் செய்வதற்கு இயன்ற பண உதவி கேட்பதும், இன்னுமொருவர் தனது தந்தையற்ற மகளுக்கு ஒரு மணம் முடித்து வைக்கும்படி கேட்பதும் இன்னுமொரு கூட்டம் சண்டையிட்டுச் சமரசத்திற்கு வருவதும், இவை போன்ற அநேகம் தொல்லைகள் வந்து கொண்டே

யிருந்தன. பத்மநாதன் தனது நண்பரின் பொறுமையையும், உறுதியையும், அவரின் நிதானத்தையும் வாக்குச் சாதுரியத்தையும் கண்டு வியப்புற்றான். இத்தனை சொற்ப காலத்தில் சின்னத்தம்பியார் அக்கிராமத்திலுள்ள ஜனங்களின் அன்பைப் பெற்றதனைக் குறித்து அதிசயித்தான்.

இரவு போசனத்தின் பின், பத்மநாதனும், சின்னத்தம்பியாருமாக முற்பக்கத்திலுள்ள தோட்டத்தில் ஒரு புற்பாயை விரித்து, நிலவில் உட்கார்ந்து சிறிது நேரம் இருவரும் மௌன மாயிருந்தார்கள். கடைசியாகப் பத்மநாதன் சின்னத்தம்பியாரைப் பார்த்து, நண்பரே, எனக்கு இவ்வளவு காலமும் கிடைக்கப்பெறாத அமைதியையும், ஆறுதலையும் இங்கே அடையப் பெற்றேன். இருந்தும், எனக்கு மிகவும் மனச்சஞ்சலமாகவே இருக்கிறது. யான் சர்வகலா சாலையில் மிகவுந் திறமையாக முன்னேறி வந்தமை பற்றி, என் தகப்பனாருக்கு என்னைக் குறித்து அதிக உயர்ந்த நோக்கங்கள் இருந்தன. இருமுறைகளாக யான் சிவில் ஸேவிஸில் தோற்றேன் இன்னும் ஒருமுறை தான் எனக்குப் பரீட்சை எடுப்பதற்குத் தருணம் இருக்கிறது. இவ்விரு வருடங்களுக்கிடையிலும் எல்லோரையும் போலவே யானும், எனக்குவந்த ஒரு பதவிக்கு எவ்வளவோ அலைந்து திரிந்து கஸ்டப்பட்டேன். ஆனால் எங்கும் தோல்வியே தலைகாட்டிற்று. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் உண்டான வெறுப்பானது இன்னும் என் உள்ளத்தில் கொதித்துக் கொண்டே இருக்கிறது. என் மனைவிகூட, நான் அவளின் தயவில் இருப்பவனைப் போல் நினைத்து அனுதாபத்தையும் பொறுமையையுமிழந்து பேசத் தொடங்கிவிட்டாள். ஆனால் அவள் உலகமே அறியாத சிறுமி. காலஞ் செல்லச் செல்ல எல்லா வற்றையும் உணருவாள் போலும். ஆனால் ஒன்று அதுதான் ஸிவில்ஸேவிஸின் கடைசி கந்தாயம். பரீட்சையிற் தேறினாற் சரி. இல்லாவிடில் யான் என்ன செய்வதென்பதே எனக்குத் தெரியவில்லை. எனது வருங்காலத்தைக் குறித்து நினைப்பதற்கு நேற்றைய இரவு வரையிற் பயந்தேயிருந்தேன். அதுவுமன்றி, எனது மனைவியான ரதியை விட்டுப் பிரிந்ததும் பெரிதும் வெறுப்பாயிருந்தது. அதனால் எனது இந்நிர்ப்பந்தமான வாழ்க்கைக்கே ஒரு முடிவு எடுத்தாலென்ன என்ற ஒரு முரட்டு எண்ணமும் உதித்தது. இப்போது நீங்களே எனக்கு நம்பிக்கையையும் திடத்தையும் அளித்தீர்கள். யான் திரும்பவும் உங்களிடமே இவ்வயற் பிரதேசத் திற்கும் கிராமத்திற்கும் வந்து, உங்களைப் போலவே சீவிப்பேன்" சின்னத்தம்பியார் இப்பிரதிக்கினையால் மிகவும் தூண்டப்பட்டவராய், பத்மநாதன் சொல்பவைகளை மிகவும் கூர்மையாகக் கேட்டவண்ணம் சிறிது மௌனமாக விருந்தார்.

பின்னர் அவர், "தம்பி உம்மைப் போன்ற வாலிபர்கள் அநேகர் உளர். எமது பள்ளிக் கூடங்களெல்லாம் ஒரு மிதியந்திரங்களே. தாய் தகப்பகன்மாரும் அதனைக் குறித்து, நேர காலத்துடன் உணர்வதில்லை. அவர்களின் குழந்தைகள் பட்டதாரிகளாக மிளிரல் வேண்டும். பட்டதாரிகளான சில வருடங்களின் பின்னரே, அது பாசாணம் போல் வேலை செய்யத் தொடங்கும். சிரித்து விளையாடவும் உழைத்துச் சீவிக்கவும் வேண்டியவராக வாலிபர்களெல்லோரும் தங்களது பிரயோசனமற்ற நிலைமையாலும் தோல்வியாலும் தலைவணங்கப் பெற்றவராய், அவரது காலநேரத்திற்கு முன்னரே வயோதிபராகின்றனர். இதற்கு அவர்களுக்கு ஒரேயொரு வழியேயுண்டு. அது கிராமாந் தரங்களிலுள்ள கமத்தொழிலே. இதுவே உமக்கும், உம்மைப் போன்றவர்களுக்கும் ஏற்றதொரு விமோசனமாகும். நிலத்தைப் பண படுத்துங்கள் புதிய புதிய வழிவகைகளை. விளைவை அதிகரிப்பிப்பதற்கும் அவைகளுக்கு

நோய்வராது தடுப்பதற்கும் இன்னும் இவை போன்ற பலவற்றிற்கும் உம்மைப் போன்ற வாலிபர்களையே எமது மாநிலத்தாய் எதிர்பார்க்கிறாள்.

கல்வியில்லாதவர்களுக்கு கற்றுக் கொடுத்ததும், ஒருவருடனொருவர் சண்டையிடாது ஒற்றுமையாகச் சீவித்துத் தனது தாய் நாட்டிற்கும் இயன்ற தொண்டைச் செய்யக் கற்பியுங்கள். ஸிவில்ஸேவிஸிலும் மற்றும் அதுபோன்ற உத்தியோகங்களிலும் பயனின்றும். இதுவே உனது கடைசிக் கந்தாயம். நீரும் உம்மைப் போன்றவர்களுமாகப் பெரிய பதவியெனக் கரு தும் அடிமைத் தொழில்களினாலும் எமது தாய்நாடு காப்பாற்றப்படமாட்டாது. நிலத்தைப் பண்படுத்துங்கள், பஞ்சாயத்தையும் திண்ணைப் பள்ளிக்கூடங்களையும் புனருத்தாரணஞ் செய்யுங்கள். இங்கேயே மரணத்தையும் அழிவையுமல்லாது, அமைதியையும் ஆறுத லையுமுண்டுபண்ணுங்கள். இவைகளே யானுமக்கு அளிக்கக் கூடிய புத்திமதி. உமது விருப் பங்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு உமது தாய்நாட்டுக்குத் தொண்டு செய்வதற்காகச் சீவி"

சின்னத்தம்பியாரின் வார்த்தைகளெல்லாம் அவனது மனதில் நன்றாகப் பதிந்தன. அவன் இன்னுமொரு நாள் அதிகமாகத் தயங்கலானான். மனத்துள் எவ்வளவோ போராட் டங்களுடன் ஒருவாறு ஒரு முடிவுக்கு வரலானான். அவன் திரும்பவும் ஊருக்கே சென்று, நான்கு மாதங்களும் கடுமையாகக் கஷ்டப்பட்டுக் கடைசி முறையாக அவனது அதிர்ஷ் டத்தைப் பார்ப்பது அவன் பரீட்சையில் தோல்வியுற்றாலும் எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டுப் பூநகரிக்கே செல்வது.

பங்குனி 1935இல் நாடு முழுவதும் அடக்குமுறையின் பயனாகச் சுதந்திரத்துக்காகச் சத்தியாக்கிரகப் போர் ஆரம்பித்தது. கூட்டங்களுக்கும் சொற்பொழிவுகளுக்கும் கைது செய்வ தற்கும் ஒரு எல்லையில்லை. முக்கியமானவர்களெல்லோரும் கைதியாக்கப்பட்டார்கள். எத்தனையோ தொண்டர்படைகள், தங்களுக்கு விழும் அடிகளையும் குற்றச்சாட்டுக்க ளையும் பறிமுதல்களையும் பொறுமையுடன் ஏற்றதுமின்றி மறியற் கூடத்திற்கும் செல்லனா னார்கள்.

அவ்வூர்த் தீர்ப்பு நிலையத்தில் அன்று கூட்டம் அதிகமாகவே இருந்தது. இராஜத்துவேச வழக்குகளே அதிகமாக இருந்தன. ஸ்ரீமான் பத்மநாதன், சி.சி.எஸ்., சரியாகப் பத்துமணிக்குத் தீர்ப்பு நிலையத்திற்குக் கோபத்துடன் பிரசன்னமானார். அவருக்குக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்ட நாள் தொடக்கம் வேலை சற்று அதிகமாகவே இருந்தது. முக்கியமாக அன்று காலையில், தம் மனைவியுடன் பிணங்கிக் கொண்டே தீர்ப்பு நிலையத் திற்குச் செல்வதற்குப் புறப்பட்டுச் சென்று காரில் ஏறியபொழுது கடைசி நேரத்தில் அது உடன் புறப்பட மறுத்ததுவே கோபத்திற்குக் காரணமாகும்.

திரும்பத் திரும்பத் தேசியக் கைதிகளே வந்து கொண்டிருந்தார்கள். சட்டவிரோதமான சங்கங்களின் அங்கத்தவர்களும் ஜனங்களிடையே தேசப்பற்றையும் ஆங்கில அரசாட்சியில் வெறுப்பையும் உண்டாக்கக் கூடிய தான உணர்ச்சியுடன் சொற்பொழிவு நிகழ்த்தியவர்களும் வரிகொடுப்பதற்கு மறுத்தவர்களும் இவர்களின் குற்றங்களுக்குத் தகுந்த விதம் முறையே பகிரங்கமாகப் பேசுவதற்கு 144வது பிரிவின்படி ஒருவருடத்திற்கு வாய்ப்பூட்டு ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனை மூன்று மாதக் கடூழியச் சிறைவாசம் அல்லது 500 ரூபாய்

அபராதம். தீர்ப்புத் தலம் மத்தியானச் சாப்பாட்டுக்காக விடப்பட்டது. பின்னரும் சிறிது நேரத்தால் ஆரம்பமானது. தனது மணிக்கட்டில் அணிந்திருந்த கடிகாரத்தில் மணி மூன்றரையாயிருப்பதைப் பார்த்தமும் அவன் பொறுமையிழந்து அவதிப்படலானான். இவைகளெல்லாம் எப்போ தொலையுமென அவதிப்பட்டான். இந்த அரசாட்சியாரும் தேசத்திற்காகப் பாடுபடுபவர்களும் நாசமாய்ப் போக என முணுமுணுத்தான். பொது விசாரணைக்காரனின் குரல் இரைந்தது.

நீதிபதியவர்களே! பூநகரியென்னுங் கிராமத்திலிருப்பவரான திரு. சின்னதம்பியவர்களே இவ்வழக்கின் குற்றவாளி. இவர் சட்டத்திற்கு விரோதமான சங்கத்திற்கு அங்கத்தவராகவும், பொதுக்கூட்டங்களிற் பேசப்படாதென்ற தடையுத்தரவை மீறிப் பேசியவரெனவும் குற்றம் சாட்டப்படுகிறார்.

இன்று காலையிலே இச்சட்டங்களை மீறலானார்.

சின்னத்தம்பி - இப்பெயர் பத்மநாதனுக்கு மிகவும் பழக்கமுள்ளதாகத் தொனித்தது. அவனது மனம் திடுக்குற்றது. சின்னதம்பி பூநகரி புகையிரத்திற் சந்திப்பு, பஸ் வண்டியிற் பிரயாணம், அவரது கிராமவீடு, தனது உயிரைக் காப்பாற்றிய சின்னத்தம்பியார் இவை யாவும் ஒரு கண நேரத்தில், அவனது மனக்கண்முன் தோன்றி மறையலாயின. பத்மநாதன் கூண்டில் ஏறிநிற்கும் கைதியைப் பார்த்தான். அவர் கதருடை அணியப் பெற்றவராயும், பொறுமையும், சகிப்புத்தன்மையும், புன்முறுவலுடனுங் கூடிய ஒரு சாந்த ஸ்ரூபியாகக் காணப்பட்டார்.

பொலிஸ் அதிகாரி தனது வாக்குமூலத்தைக் கொடுத்ததும் குற்றவாளி தனது வாக்குமூலத்தைக் கொடுத்தார்.

“யான் காங்கிரஸில் ஓர் அங்கத்தவன்” யான் ஒன்றையுமே மறுக்கவில்லை. எல்லாவற்றையுமே ஒத்துக் கொள்கிறேன். வேண்டுமென்றே சட்டத்தை மீறலானேன். சுதந்திரத்திற்கு இதுவே எமது கடைசியழைப்பு. தற்காலம் ஒரு சுயமரியாதையுள்ள ஒருவன் பின்பற்றக் கூடியதையே யான் செய்தேன். எனது கடமையையான் செய்தேன். இனி நீங்கள் உங்களது கடமையைச் செய்ய வேண்டுமாய் நான் வேண்டிக் கொள்ளுகிறேன்”இதற்கிடையில் பத்மநாதனின் மனக்குழப்பம் ஒருவாறு தீர்ந்தது அவனுக்குச் சின்னதம்பியாருக்காக ஒன்றுஞ் செய்யமுடியவில்லை. அவனுக்குத் தீர்ப்பும் தானாகவே வாய்க்கு வந்தது.

கைதியே தனது குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறார். அவர் தமது கிராமத்தைச் சுற்றுலுமுள்ள கிராமங்களிலெல்லாம் மிகவும் செல்வாக்குடைய வராதலாலும் அவர்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதாலும் அவர் குற்றவாளியாகப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறபடியாலும் நல்ல படிப்பினையான தண்டனை விதித்தல் வேண்டும். இதைவிடக் குறையத்தீர்க்கக் கூடியதாக எனக்குத் தெரியவில்லை. ஆதலால் யான், அவரை முதலாவது குற்றத்திற்காக மூன்று வருடக் கடூழியச் சிறையும், இரண்டாவது குற்றத்திற்காக 500 ரூபாய் அபராதமும் விதிக்கிறேன்”

பத்மநாதன் தீர்ப்பு நிலையத்தைவிட்டு அகன்றதும் வெளியிலிருந்த ஜனங்களின் ஜயகோசங்கள் வானைப் பிளந்தன.

பத்மநாதன் வீட்டையடைந்து முகங்கழுவி, உடைகளையும் மாற்றிச் சற்று ஆறியதுதான் தாமதம், சின்னத்தம்பியாரின் அமைதியான புன்சிரிப்பே அவனை வதைத்தது.

இராசமாளிகைக் கூட்டத்திற்குச் செல்வதற்கு நேரமாகிவிட்டது. ஆனால் அவன், தான் உக்கிச் சிதறிப்போவதுபோல உணர்ந்தான். அதன் காரணமாக ஒரு டோஸ் விஸ்க்கியையும் சோடாவையும் உள்வாங்கினான். கூட்டங்களால் மிகவும் சங்கடம். ஆனால் கமிசனர்மாரை யும் காரியதரிசிமாரையும் சந்திக்கப்பட வேண்டியவர்களே. எவ்விதமாகவிருந்தாலும் இராச மாளிகையழைப்பு ஒரு கட்டளையாகவேயிருந்தது.

ரதி பொறுதியற்று இருந்தாள். இனிப்புறப்படாவிட்டால் குறித்த நேரத்திற்குப் பிந்தி விடுவார்கள். வாசலில் காத்திருந்த காரில் ஏறிச் சென்றார்கள். இவர்கள் ஏறிச் சென்ற கார் ஒரு தெருவின் வழியாகத் திரும்பியது. பொலிஸ் கார் ஒன்று எதிரே செல்வதையும் அதன் பின் னால் ஆண்களும் பெண்களுமாக நிறைந்த கூட்டமொன்று தேசியக் கொடிகளுடன் தேசிய கீதங்களுடனும் பின் சொல்லுவதையும் பத்மநாதன் கண்டான். அவனது கார் பொலிசாரின் காரை அணுகியதும் காக்கியுடையுடன் பொலிஸ்மார் இருவரும் கைவிலங்கிடப் பெற்ற வரான சின்னத்தம்பியாரும் அதற்குள் இருப்பதைக் கண்டான் பத்மநாதன். உடனே தனது முகத்தை ஒருபுறமாகத் திரும்பிய வண்ணம், சாரதியிடம் காரை வேகமாகச் செலுத்தும்படி உத்தரவிட்டான். உடனே காரும் ஜனங்களையெல்லாம் விலத்திச் சென்றது.

ரதி தனது கணவனின் முகம் வெளிறித் துன்பப்படுவதைக் கண்டாள். "நீங்கள் இருந் தாப்போல் வாடியிருப்பதுமன்றி, மனக்கஷ்டமும் இருப்பது போன்று தெரிகிறதே. காரண மென்ன? நாங்கள் அரசர் மாளிகைகன்றோ சொல்கிறோம். தூக்குமரத்திற்கல்லவே. உங்க ளைப் பார்த்தால் யாரையோ கொலை செய்தவர் போன்றிருக்கிறீர்களே? ஆம் யான் யாரையோ கொலை தான் செய்துவிட்டேன். என்னையே எனது மனச்சாட்சியையே யான் கொலை செய்தேன்.

ஈழகேசரி ஆண்டு மலர்
1939

எஸ்.என். சொக்கநாதபிள்ளை

எஸ்.என். சொக்கநாதபிள்ளை ஈழகேசரியில் எழுதியவர். இவருடைய நெருடிய கதை 'பாசம்' என்ற பெயரில் ஈழகேசரியில் வெளிவந்துள்ளது.

❖ பாசம்

பாசம்

எஸ்.என்.சொக்கநாதபிள்ளை

அந்த காரம் சூழ்ந்த இரவு. பெரும் புயலுடன்கூடிய மழைக்குப் பின் இருக்கும் ஓய்வு. மரங்களிலிருந்தும் வீட்டு ஜல தாரைகளில் இருந்தும் கொட்டிக்கொண்டிருக்கும் ஜலத்துளிகளின் சப்தம். இடையிடையே நீரில் வதியும் ஜந்துக்களின் குதூகலமான சம்பாசனை. இவற்றைத் தவிர வேறொன்றையும் கேட்ட முடியவில்லை. ஜப்பானுக்குப் பயந்து இருளில் மண்டிக்கிடக்கும் கொழும்பு - சுடலைபோன்ற பயங்கர அமைதியுடனிருந்தது. மாடிவீடு முதல் மரம் செடிவரை எல்லாம் அக்கும்மிருட்டில் பயங்கர தோற்றமளித்தன. உறவினரொருவரைப் பார்த்துவிட்டு கொழும்பின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். மழை காரணமாக இடைவழியில் ஒதுங்கியிருக்கவேண்டி நேரிட்டதால், அப்பயங்கர வேளையில் நடந்து கொண்டிருந்தேன். பழக்கமான பாதையானபடியால் கால்கள் தம்வழிச் சென்றன. மனம் எங்கோ எல்லாம் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பயங்கர உறுமல். அதையடுத்துக் கண்ணைப் பறிக்கும் ஓர் ஒளி தோற்றமளித்தது. ஏதோவொன்றின்மீது முட்டுகின்றேன் என்ற உணர்வு தோன்றிற்று. பின் என்ன நடந்ததோ தெரியவில்லை.

கண்களைச் சிறிது திறந்தேன் உடலெல்லாம் ஒரே நோவு. தலை மிகவும் கனதியாக விருந்தது. ஒரு சொகுசான படுக்கையில் கிடக்கிறேன். பலர் என் பக்கத்தில் நிற்கின்றனர். மின்சார ஒளி பிரகாசித்தது. இந்த நிலையும் அதிகநேரம் நீடிக்கவில்லை. தலையைச் சுற்றுவதுபோல் தோன்றிற்று. ஸ்மரணை இழந்துவிட்டேன். மறுபடியும் கண்விழித்த போது சூரியன் ஒளி பிரகாசமாகத் தெரிந்தது. எங்கோ ஓர் அறையில் ஓர் கட்டிலில் கையிலும் காலிலும் தலையிலும் கட்டுக்களுடன் படுத்துக்கிடக்கிறேன் என்பது தெரிய வந்தது. இடாம்பீகமற்று, ஆனால் வெகு அடக்கமாக, அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது அவ்வறை. நாலைந்து கதிரைகள், ஒரு மேசை, புஸ்தகங்களுள்ள ஒரு அலுமாரி, நான் படுத்திருந்த கட்டில், இவைதான் அவ்வறையில் இருந்தன. சுடர்விட்டெரியும் தூண்டாமணியின் ஒளியில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட நடன நடராசனின் அழகிய படமொன்று காட்சியளித்தது. விளித்த கண்கள் எதிரிலிருந்த அப்படத்தையே பார்த்தன. இரு வாயில்களும் நாலைந்து ஜன்னல்களும் அவ்வறைக்கு இருந்தன.

இரு வாயில்களுக்கு இடையில் ஜன்னலில்லாத சுவர்ப்புறமாக என் கட்டில் இருந்தது. கட்டிலில் படுத்திருந்தபடி பார்த்தால் உதயசூரியன் தோற்றம் ஆனந்தத்தை ஊட்டும். இவையெல்லாம் சில நிமிசங்களில் தோற்றியவை. யான் ஒரு புது இடத்தில் எழும்பமுடியாத நிலையிலிருக்கிறேன் என்று புலனாயிற்று. என்ன சம்பவித்தது என்றும் விளங்கவில்லை. உடலெல்லாம் நோவு. தாங்கொணா வேதனை.

பேசமுடியாதவாறு நாவறட்சி. யாரையாவது கூப்பிடலாமென்றால் என்னால் இயலவு மில்லை. யாரைக்கூட்பிடுவது என்றும் தோன்றவிவில்லை.

இந்நிலையில் அறையுள் பலர் பிரவேசித்தனர். எங்கோ பார்த்தவர்கள் போன்ற ஒரு ப்ரேமையன்றி யாரென்று புரியவில்லை. ஒருமுறை கண்ணை இமைத்தேன். அவர்கள் மனிதர்கள், எனக்குதவுவதற்றே நிற்கிறார்கள் என்று தீர்மானம் செய்தேன். முன்னணியில் டொக்டர் ஒருவர். அவருக்குப் பின் 50 வயதுவரை மதிக்கத்தக்க ஒரு ஆண்மகன். அவர் பக்கத்தில் 40 வயது வரையுடைய ஓர் அம்மணி. அவர்களைச்சுற்றி அவர்கள் பிள்ளைகள் போலும் 5, 6 பேர் நின்றனர். எல்லோர் முகத்திலும் கவலையும் ஆவலும் குடிகொண்டி ருந்தன. டொக்டர் பரிசோதிப்பதற்காக அவர்களெல்லாம் வெளியே சென்றனர். வெகு சீக்கிரமாகச் சோதனைகளையெல்லாம் முடித்துக்கொண்டு திருப்தியான முகபாவத்துடன் வெளியே சென்றார் டொக்டர். போகும்போது அவர்களிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போனார். அவர்களெல்லோரும் என் பக்கத்தில் வந்தனர். என்னால் பேச முடியவில்லை. சிரமத்துடன் நீர் வேண்டுமென்று சைகை காட்டினேன். அவ்வம்மையார் சூடான ஏதோவொரு நீராகாரத்தை என் வாயில் விட்டார். ஆயாசமெல்லாம் எவ்வளவோ தீர்ந்து சிறிது பேசக்கூடியதாக விருந்தது.

இந்நிலையில்தான் நாலுநாட்களின் முன் மசங்காமரச் சந்தியில் ஏதோவொன்றின்மீது சறுக்கி துர் அதிர்ஷ்டவசமாக அவ்விடத்தில் வந்த அவர்கள் மோட்டார் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்து என்றும், அவர்களால் காப்பாற்றப்பட்டு அவர்கள் வீட்டிலிருக்கிறேன் என்றும், அன்று காலை வரையில் ஸ்மரணையற்று ஏதேதோவெல்லாம் பிதற்றிக் கொண்டிருந்தேன் என்றும் அதால் அவர்கள் மிகவும் பயந்திருந்ததாகவும், என் சட்டைப் பையிலிருந்த விலாசத்தால் நான் இருக்குமிடத்தை அறிந்து என்னுடனிருப்பவர்களுக்கும் அறிவித்து

அவர்கள் தினமும் வந்து பார்த்துப் போவதாகவும், என்னிலை நான் வேலைசெய்யும் காரியா லயத்துக்கும் அறிவிக்கப்பட்டு ஒரு மாதலீவு டொக்டர் சிபாரிசின் பேரில் கிடைத்திருப்பதாகவும் அறிந்தேன்.

ஈஸ்வரன் ஒருவரையும் கைவிடமாட்டார். இன்னல்காட்டி இன்ப மூட்டுவான். ஆபத்து வேளையில் அபயமளிப்பான்.

கை கால்களில் ஏற்பட்ட காயங்களை விடத் தலையில் ஏற்பட்ட காயம் மிகப் பயங்கர மானதென்றும், நான் உயிர் பிழைப்பேனா என்றுகூட முதலிரண்டு தினங்களில் எல்லோரும் சந்தேகமுற்றதாகவும், டொக்டர் நம்பிக்கை இழக்காது தம் சக்தி முழுவதையும் பிரயோகித்து என் உயிருக்காகப் போராடினார் என்றும், அப்போது கணமும் என்னைப் பிரியாதிருந்து அவ்வம்மையாரும், அவர் குடும்பத்தாரும் சிகிச்சை செய்ததாக அறிய என்மனம் இன்ன தென்றறியா உவகையால் நிரம்பியது.

இனி என் உயிருக்கு ஆபத்தில்லை. இரண்டு வாரம்வரை படுக்கையை விட்டு எழுந்து நடமாட முடியாது, நடமாடக் கூடாது. மிகவும் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் என்பது வைத் தியர் கட்டளை. அதை அவ்வம்மையாரும் மற்றையோரும் சிரமேற்கொண்டு நிறை வேற்றினர்.

கொழும்பிற் பிரபல்யமடைந்திருக்கும் அந்த டொக்டர் ஏழை பணக்காரரென்று வித்தி யாசமின்றி எல்லாரையும் தம் சகோதரர்கள் போன்று எண்ணி அன்பாய் நடத்துவதால், அவர் கொடுக்கும் மருந்தைவிட அவரின் பணிவுடன் கூடிய அன்பான நடத்தையொன்றே வியாதி யஸ்தர்களை சீக்கிரம் குணமடையச் செய்யும். மருந்தாக இருந்தது. வைத்தியரின் தன்ன லங்கருதா நடத்தை, தாய்மை அன்புடன் கூடிய அவ்வம்மையின் அரும்பணி எல்லாம் சேர்த்து என்னை எல்லோரும் எதிர்பார்த்ததைவிட அதி சீக்கிரத்திலேயே சௌக்கியமடையச் செய்துவிட்டது. இரண்டு வாரத்துள் நடைபயிலும் நிலமையைக் கூட அடைந்தேன். புனர்ஜன்மம் எடுத்தேன் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவ்வம்மையார் பெயர் வள்ளிநாயகி. அவர் புருஷன் பெயர் நமசிவாயபிள்ளை. அவர் கொழும்பில் பிரசித்திபெற்ற ஒரு ஆங்கில கலாசாலையின் பிரதமாசிரியர், அவருக்கு மூன்று பெண்களும் மூன்று ஆண்களும் பிள்ளைகள். மூத்த பெண் வீட்டில் தாயாருடன், மற்றப் பெண்கள் பாடசாலை யொன்றில் குருஸ்தானத்தில், மற்றவர்கள் கல்வி பயில்கிறார்கள். அவர்களெல்லாம் காலை 8 மணிக்கே பாடசாலைக்குப் புறப்பட்டுவிட்டார்களானால் பின் சாயந்தரம் 5 மணிவரையில் திரும்புவார்கள்.

அவர்கள் வரும்வரையில் வீடு சத்தஞ் சந்தடியின்றி அமைதியாக இருக்கும். எல்லோரும் வந்துவிட்டால் வீடு கலகலத்துக் கொண்டிருக்கும் வீட்டில் அவ்வம்மையாரும் அவர் மூத்த பெண்ணும் வேலைக்காரப் பையனொருவனும் தானிப்பார்கள். பள்ளிக்கூடம் செல்வோர்க்குச் சாப்பாடு ஆயத்தஞ் செய்வதிலும் அவர்களுக்கு நீராட்டி உடுத்தி அனுப்பு வதிலும் பின் மத்தியானம் சாப்பாடு தயார் செய்து அவர்களுக்கு அனுப்புவதிலும் அவர்கள் திரும்பிவருமுன்பே சிற்றுண்டியுடன் அவர்களை எதிர்பார்த்திருந்து அவர்கள் களைப்பை ஆற்றி உற்சாகமூட்டியபின் இரவு சாப்பாடு தயார் செய்வதும், எல்லோர்க்கும் அளித்து

மறுதினம் காலையில் நடைபெற வேண்டியவற்றுக்கு ஆயத்தம் செய்து உறங்கு வதும்தான் அவர் நித்திய கடமைகள். அவர் நித்திரைக்கு எப்போது செல்கிறாரோ எப்பொழுது விழித் தெழுகிறாரோ என்று மற்றவர்களுக்குத் தெரிவதில்லை. கண் விழித்தால் பின் தூங்கும் வரை யில் வேலை செய்கிறா என்றால் அதுவுமில்லை. பகலில் போதிய ஓய்வு பெறுகிறார். அந்நேரத் தைக் கூட வீணாக்காது தமிழ் அன்னையை, தமிழ்மொழியிலுள்ள உயர்ந்த காவியங்கள், புராணங்கள், இலக்கியங்கள், எல்லாவற்றையும் கற்கிறார். அவற்றைக் கற்பதுடனின்றித் தன் பிள்ளைகளுக்கும் முன்மாதிரியாயிருக்கிறார். புதினப் பத்திரிகையைக் கூட வாசிக்கிறார். வருவிருந்தை அகமும் முகமும் மலர்ந்து வரவேற்றுபசரிக்கிறார். பெருமையோ கர்வமோ சற்றுமின்றி இடாம்பீகமின்றித் தன் குடும்பத்தை நடத்துகிறார். தன் கணவன் - தன் பிள்ளைகள் தவிர வேறோருவரும் இல்லையென்று எண்ணுவதில்லை. தனக்கென்று எதையும் விரும்பாது, ஏழையாயினும் அன்புடன் அவருக்கு உதவுகிறார்.

எந்நேரமும் மலர்ந்திருக்கும்முகத்திற் களங்கமென்பதைக் காணவே முடியாது. அவர் பிள்ளைகளும் அவர் குணங்கள் நிறையப்பெற்றிருந்தனர்.

ஆங்கிலக் கல்வி அவர்களிடை சிறிது தூரம் அந்நிய (அ)நாகரியத்தைத் தலைகாட்டி னும், தாய்மை என்னும் அன்பில் அது தன் கோர சொரூபத்தைக் காட்டமுடியவில்லை. இதி காச காவியங்களில் வரும் பழம் தமிழ்நாட்டுத் தெய்வீக பெண்களைப் போன்று அவரைக் கண்டேன்.

நானிருந்த அறை சமயலறையின் சமீபத்திலிருந்தமையின் எப்போதும் அம்மையாரின் தும் அவர் மூத்த பெண்ணினதும் பார்வையியிலேயே இருந்தேன். அதனால் எனக்கு ஏதாவது தேவையானபோது என் விருப்பமறிந்தளித்து ஒருவித குறைவுமின்றிச் செய்துவிட்டனர். சிற்சில சமயம் என்னால் அவர்கள் அன்புப் பணியைத் தாங்கமுடியாது திணறவேண்டியும் ஏற்படும். அப்போ தெல்லாம் விதியின் விளையாடலையும் சிலகாலங்களின் முன் என்னை விட்டுப் பிரிந்த, என்னை ஈன்ற அன்னையையும் நினைவுகூரும் படியாய் விடுகிறது. கண் ணில் தூசி படியாது இமை காப்பது போல் என்னைக் காத்த அன்னை என்னை விட்டுப் பிரிந் ததும் எனக்கு உலகமே இருண்டுவிட்டது போலிருந்தது. தந்தையாரதும் சகோதரங்களினதும் அன்பு எனக்கு அக் குறையை நிவர்த்தி செய்யவில்லை. போதாதற்கு அவர்களன்பு கூட அடிக்கடி கிட்டாதவாறு (வயிற்றை நிரப்பவென்றே நினைக்கிறேன்) கொழும்பு வரவேண்டிய தாயிற்று. ஆபிஸில் இயந்திரம் போன்ற ஒரே வேலை.

சாயந்தரம் வீடு திரும்பினால் என்னைப்போன்று யந்திரம் போல் வேலை செய்துவிட்டுத் திரும்பியிருக்கும் நண்பர்கள் எல்லோரும் ஒரேவிதமான மனவருத்தத்துடன் ஆறுதலின்றி ஏக்கமாக நித்திரை கொள்வோம். அதுவுமொரு நித்திரையா? விடிந்தால் பழைய பல்ல விதான். எப்போதாவது பிறந்த ஊருக்கு வந்தால் ஆனந்தம் - ஆறுதலெல்லாம் கிட்டும். இது வும் நாலைந்து தினங்களுக்குத்தான். திரும்பவேண்டுமே என்பதை எண்ண உற்சாக மெல் லாம் போகத்தொடங்கும். புறப்பட்டு வண்டி ஏறினால் பழைய ஏக்கமும் கவலையும்தான். அந் நிய ஊர்களில் அறிந்தோர் எத்தனை பேரிருப்பினும் தன் ஊரவன், உறவினன், உடன் பிறந்தான் ஒருவனைக் கண்டாற் காணாத காட்சியொன்றைக் கண்டதுபோல் உள்ளம் மகிழும். இவ்வித நிலையில் இருந்து வந்த எனக்கு எதிர்பாராத நிலையில் ஏற்பட்ட விபத்து பெரும் மாறுதல்களை யெல்லாம் கொடுத்து என்னை ஒரு புது மனுசனாக்கியது.

எவ்விதமான தாயன்பு கிடையாது பல வருடங்கள் ஏங்கினேனோ அவ்வன்பை அச்சில தினங்களில் எழுந்து நடமாடவும் கூடாத நிலையில் பெறக் கூடியதாக நேருமென்று எண்ணியிருந்தேனுமல்ல. யாரோ முன்பின் அறியாதவர்கள்; நான் இவ்வுலக ஞாபகமே இன்றி இருந்தபோது எதிர்பாராத நிலையில் ஏற்பட்டது அவர்கள் சந்திப்பு. சில நாட்களிற் பிரிக்க முடியாத அல்லது பிரியமுடியாத நிலையை ஏற்படுத்துமென்று கனவிலும் கருதியிருக்க முடியுமா? தம்மால் இவ்வித நிலைக்கு நான் உள்ளாகவேண்டி ஏற்பட்டதே என்ற பச்சாத்தாபத் தாலோ, அன்றேல் விதிவசத்தாலோ அவ்வீட்டிலிருக்கும் ஒவ்வொருவரும் என்னிடம் அத்யந்த நேயம் பாராட்டினர். ஒவ்வொருவரும் எவ்வித மனோபவத்துடன் என்னிடம் நடக்கிறார்களென்று என்னாற் கடைசி வரையிற் கண்டுபிடிக்க முடியாது போனதும் தம் மூத்த புதல்வன் போன்றே தம் மூத்த சகோதரன் போன்றோ எண்ணும் எண்ணியவர்களிடம் என்னால் அப்படியே எண்ணி மனச்சஞ்சலமின்றி நடந்துகொள்ள முடியாமல் போனதும் ஆச்சரியமானதுதான். எல்லோரும் எவ்வித வித்தியாசமுமின்றி என்னுடன் ஊடாடியபோதும் அந்த ஒரு மாதகாலமும் உடனிருந்து எனக்குப் பலவித பணிகளையும் செய்த அவ்வம்மை யாரிடமும், அவர் மூத்த மகள் ஈஸ்வரியிடமும் அன்பா, மரியாதையா என்று என்னால் அப்போது கண்டுபிடிக்க முடியாததொன்று அதிகரித்திருந்தது.

சிறுபிள்ளைபோல் அக்குடும்பத்தவரொவ்வொருவருடைய உதவியுடனும் நடைபழகி, நன்றாக நடந்து என் தேவைகளைப் பூரணமாகப் பிறர் உதவியின்றி செய்யக்கூடுமென்ற நிலை வந்த அந்த ஒரு மாதத்தில் அக்குடும்பத்தைப் பற்றி இயன்றளவு அறிந்துகொண்டேன். இந்நிலையில் "ஆபிஸி"ற்கு போகக் கூடிய தைரியம் ஏற்பட்டுவிட்டதால் முன்போல் அவர்கள் வீட்டிலிருந்து சுமார் 3மைல் தூரம் வரையிலிருந்த நண்பருடன் இருந்த வீட்டிலிருந்து ஆரம்பித்தேன். இதில் அவர்களுக்கு போய்வர எவ்வளவோ அதிருப்தி. இருப்பினும் நண்பர் கள் வேண்டுதலை மறுக்க முடியாமையும் என்பிடிவாதமும் அவர்களைச் சம்மதிக்கும்படி செய்துவிட்டது. ஆயினும் தினம் "ஆபீஸா"ல் போகும்போது அவர்கள் வீடு சென்று இளைப் பாறித் திரும்பும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது.

என் பெயர் செகராசசேகரன். "சேகரர்" என்றே என்னை அனைவரும் கூப்பிடுவார்கள். காரியாலயத்தில் எல்லோரிடமும் நல்லபிள்ளை வேசம் போட்டு நடப்பதால் எல்லோரும் என் னிடம் மரியாதை காட்டினர். காரியாலயத் தலைவர் எல்லோருக்கும் நல்லவரானதால் அவரிட மிருந்தும் கஷ்டம் கிடையாது. ஒரு மாதம் வரை வேலையொன்றுமின்றியிருந்ததால் சோம் பல்- அதனால் அதிக நேரம் வேலை செய்ய மனம் வருவதில்லை. இரண்டு மூன்று மணித் தியாலமாவது காரியாலயத்தில் நித்திராதேவியுடனிருந்துவிட்டு அன்றேல் யாருடனாவது அரட்டைக்கச்சேரி நடத்திவிட்டு 4 மணி ஆகுமுன்பே காரியாலயத்தை விட்டுக் கிளம்பிவிடு வேன். வேலைக்குப் போவது ஓர் சம்பிரதாய வேலை என்ற மாதிரியாய்விட்டது. கூலிக்கு மாரடிக்க வேண்டுமே என்பதற்காய் ஏதாவது செய்வதுடன் தீர்ந்துவிடுகிறது.

என்னுடன் வேலை செய்பவர்களெல்லாம் சம்சாரிகள். வீட்டுக்குத் தவறாது பணமனுப்ப வேண்டும். மனைவி மக்களின் சுகமெப்படி என்றெல்லாம் கவலைப்படுவார்கள். எனக்கு அவ்வித நிலையில்லை. என் பணம் போய்த்தான் வீட்டில் சகோதரர்களும் தந்தையும் காலம் நடத்தவேண்டும் என்ற அவசியமுமில்லை. காரியாலயத்தில் சற்று உயர்ந்த பதவியிலிருந்த தால் நல்ல வேதனங் கிடைத்தது. சகாக்களுக்குத் தேவையான உற்காசப் பேர்வழி

எல்ோரையும் கிண்டல் செய்து எப்போதும் குதூகலமாயிருப்பதால் எல்லோரும் என்னை விரும்பினர். ஆகவே எனக்கு விரோதிகளும் கிடையாது. இவ்வாறு வருடங்கள் சென்றன. ஐரோப்பிய யுத்தம் உச்ச நிலையை அடைந்து யப்பானும் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலம். வேலை அதிகமாயிற்று. முன்போன்ற ஆறுதலும் கிட்டவில்லை. இந்நிலையில் மலைநாட்டுப் பகுதியிலுள்ள ஓரிடத்துக்கு என்னை மாற்றப் போவதாக வதந்தி உலாவிற்று. அடுத்த மாதத்திலேயே அவ்விதம் மாற்றம் செய்திருப்பதாக அறிக்கைளும் கிடைத்தது.

நமசிவாயபிள்ளையும் பென்சன் பெற்று அம்மாதத்திலேயே தன் பிறந்தவூராகிய அளவெட்டிக்கு தன் குடும்பத்தாருடன் புறப்பட்டார். இக்கால தூதுவன் கடிதமூலம் எப்போதும் தொடர்பு இருக்கும் என்று இருபகுதியாரும் வாக்குறுதி செய்தோம். கோட்டை ரயில்வே ஸ்டேசனில் அவர்களை ரயிலேற்றி கிடைக்காதவொன்றைப் பறிகொடுத்துவிட்டது போன்ற ஏக்கத்துடன் நின்றேன். எல்லோரையும் நான் பிரிய வேண்டியிருக்கிறதே, என்னை அவர்கள் பிரியவேண்டியிருக்கிறதே என்று வருந்தினாலும் எம்மை மீறிவந்த கண்ணீரை அடக்கி விட்டோம். ஒருநாள் பழகியவராய் இருப்பினும் அவர்களைக் கூடப் பிரிவது எவ்வளவு கஷ்ட மானது. ரயில் நகர ஆரம்பித்ததும் ஈஸ்வரி கூப்பிய கரத்துடன் கண்ணீர்விட்டுக் கொண்டி ருந்த காட்சியை என்னால் மறக்கமுடியாது போய், என்னை எவளவு தூரம் கலக்கிற்றென்று யாரறிவர்?. மற்றையோர் என் பார்வைக்கு எதிர்ப்பக்கமாக இருந்தமையின் அவர்கள் முகங் களை கடைசிச் சந்தர்ப்பத்தில் பார்க்க முடியாது போயிற்று. எவ்வாறோ விடுதி சேர்ந்தேன்.

அடுத்த வாரமே என் இடம்மாற்றமும் நடைபெற்றது. இயற்கை வளத்தால் நிறைந்த மலைநாட்டிலிருந்த இடத்தில் எங்கள் கந்தோர். கந்தோரை அடுத்தே வசிக்கும் வீடு. சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் ஓர் குலம்போன்று அங்கு பழகினோம். பாமர சனங்களிடையே இவ்வித வித்தியாசத்தை அங்கிருந்த நாட்களில் ஒருபோதும் நான் கண்டதில்லை.

ஊரின் இயற்றை வளத்தில் மகிழ்ந்து, ஊரின் இயற்கை வளத்தில் நமசிவாயபிள்ளை யின் குடும்பத்தார் ஒவ்வொருவருக்கும் என் கற்பனைத் திறனையெல்லாம் கொட்டிக் கடிதங்கள் வரைவேன். அவர்கள் எனக்குச் செய்த கைமாறில்லாத தொண்டினைப் புகழ்ந்து பக்கம் பக்கமாக எழுதுவேன். அப்போதெல்லாம் இதில் எனக்கு அதிருப்தியோ, வெறுப்போ உண்டாவ தில்லை. அவர்கள் தம் அன்பெல்லாம் சொரிந்து எழுதுவர்.

அவ்வப்போது... தனித்தனியேனும் ஒருமித்தும் கடிதங்கள் வரும். என் கற்பனை களைக்கூட அவர்கள் எவ்வளவு உண்மையென்று ரசிக்கிறார்கள் என்று அவர்கள் கடிதங்களைப் பார்த்து ஆச்சரியமுறுவேன்.

வீட்டிலிருந்தும் வள்ளிநாயகியிடமிருந்தும், ஈஸ்வரியிடமிருந்தும்தான் அடிக்கடி கடிதம் வருவதால் அவைகள் எப்போ வருமென்று ஆவலுடன் காத்திருப்பேன். இருவருடைய கடி தங்களும் ஒரேமாதிரியாக இருப்பினும் என் உள்ளத்தில் வெவ்வேறான உணர்ச்சியை ஊட் டத் தொடங்கின. உடனிருந்து ஊடாடியபோது இருந்த மனோபாவம், மாறி அவர்கள் செயல் ஒவ்வொன்றும் ஞாபகம் உண்டாக உண்டாக, முன்னையது என்னை வாழ்விக்க வழி காட்ட வந்த தெய்வஜோதியென்றும், பின்னையது என் வாழ்வுக்கு உறுதுணையாகும் கொழுகொம் பென்றும் என்னுள்ளம் கற்பனை செய்ய ஆரம்பித்தது. அதன் போக்கை நான்

தடைசெய்யவில்லை. ரயிலில் அவர்கள் செல்லும்போது ஈஸ்வரி கண்ணீர்விட்டது இவ்வித மான உணர்ச்சியால்தானென்று எண்ணினேன். என் எண்ணம் தப்பிதமானது என்று அப்போது என் சிந்தையில் உதிக்கவில்லை.

அவர்களிடம் இருந்து வாரம் தவறாது கடிதம் வந்துகொண்டே இருக்கும். நானும் தவ றாது எழுதினேன். கந்தோர் வேலைகள் கூடக்கூட இவ்வழக்கம் என்னளவில் மாறி, மாத மொருமுறையாகி பின் இரண்டு மூன்று மாதத்திற் கொன்றென்ற வழக்கமாகிவிட்டது. சிற்சில இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டி ஏற்பட்டுக்கொண்டிருந்ததால்,வரும் கடிதங் களையும் உடன் பார்க்க முடியாதும் போய் விடும். என் உடல்நிலைபற்றி சந்தேக முறுவதாக அவர்கள் எழுதியிருப்பின் ஏதாவது நாலுவரி எழுதுவேன்.

என் கஷ்ட நிலையை உணர்த்த விரும்புவதுமில்லை. "நாங்களும் உங்கள் நலனை விரும்புவோர் இருக்கிறோம் என்ற நினைவிருப்பின் அப்போதாவது ஏதாவது...." என்று எழுதுவார்கள். நானிருக்கும் உண்மை நிலையை உணர்ந்திருப்பின் இவ்விதம் குறைபட் டிருக்க மாட்டார்கள் என்பது உண்மை. பிரிவு ஒவ்வொருவருவரையும் மற்றையோரிடம் அதிக அன்பைச் செலுத்தச் செய்கிறது என்பதை உணர்ந்திருந்தும் - தாம் ஏதாவது தப்பிதம் செய்துவிட்டோமோ என்ற மனப்பயம்தான் இவ்வாறு செய்கிறது போலும்.

கொழும்பை விட்டுச்சென்றும் ஒன்றரை வருடம் போய்விட்டது. அது வரையில் சொந்த ஊரையோ, என் தந்தை, சகோதரங்களையோ காண வேண்டும் என்ற அவா பன்முறை உண்டாகியும், அதற்கு "லீவு" கிடையாமையின் அவ் ஆவல் வீணாவதாயிற்று. எப்போது பூர்த்தியாகுமோ என்று எண்ணியிருந்தேன்.

நாலைந்து நாட்களாக நாகரீக உலகத்திலிருந்து வெகு தொலைவிலிருக்கும் மலை நாட்டுக் கிராமங்கள் சிலவற்றிற் சுற்றிற் திரிந்து அன்று காலைதான் வந்து சேர்ந்தேன். எனக்கு வந்த மேசையிலிருந்த கடிதங்களைப் புரட்டினேன். கல்யாண அழைப்பொன்று என் கவனத்தை முதலில் இழுத்தது.

"கொழும்பு பிரதம தபால் நிலைய பிரதம எழுத்தாளர் சிரஞ்சீவி,

நடராஜனுக்கும், கொழும்பு "ப்ரேமோதய" வித்தியாசாலையின் பிரதமாசிரியராக இருந்து இளைப்பாறிய ஸ்ரீ நமசிவாயபிள்ளையின் சிரேஷ்ட புத்திரி சௌபாக்கியவதி ஈஸ்வரிக்கும் நிகழும் தாரண வருடம் தை மாதம் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் சுபவேளையில் விவாக மகோற்சவம் நடைபெற இருப்பால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர, குடும்ப சமேதராகச் சமூகமளித்து தம்பதிகளை ஆசீர்வதித்துப் போகுமாறு வேண்டு கிறோம்...." என்று அச்சிடப்பட்டிருந்தது. ஒருமுறை வாசித்துப் பார்த்தேன். மீண்டும் மீண்டும் வாசித்தேன். யார் மீது ஏன் என்று எனக்கே புரியா வண்ணம் அளவு மீறிய கோபம் உண்டாயிற்று. அதிர்ஷ்டவசமாக வேறோரு வரும் பக்கத்தில் இன்மையால் என்கோபம் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அக்கடிதத்தை வீசி எறிந்துவிட்டு சாய்வு நாற்காலியொன்றிற் சாய்ந்தேன். பிரயாண அலுப்பு. அயர்ச்சியான நிலை. கூப்பிய கரத்துடன் கண்ணீர் வடிய ஈஸ்வரி ரயிலில் தோன்றிய காட்சி திடுக்கிட்டெழுந்தேன். அதுவெறும் ப்ரேமை என்பதைக் கண்டேன். மனம் நிலை

கொள்ளாது சஞ்சலமடைந்தது. ஒன்றிலும் மனதைச் செலுத்தவும் முடியவில்லை. மீண்டும் மேசையிலிருந்த கடிதங்களைப் புரட்டினேன். ஈஸ்வரியின் கையால் எனக்கு விலாசமிட்ட கடிதமொன்றி ருந்தது. அவசர அவசரமாகக் கடிதத்தை உடைத்தேன்.

"காதலா! உம்மைப் பிரிந்து எவ்வாறிருப்பேன். எனக்கு மணமுடிக்க என் பெற்றோர் தீர்மானித்துவிட்டனர். இற்றைக்கு நாலாம் நாள் கல்யாணம். அதற்குமுன் வந்து அடியாளைக் காக்கவிடின் என் உடலைக் காணும் பாக்கியம் கூடத் தங்களுக்குக் கிடையாது. எந்நேரமும் தங்களை நினைந்துருகும்..." என்றெல்லாம் நாவல்களில் வருவதுபோன்று அதிலெழுதி யிருக்காதா? நான் தீரத்துடன் நடந்து அவள் கையைப் பற்றமாட்டடேனா என்றெல்லாம் சில நிமிசங்களுக்கிடையில் என் மனம் கற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டது.

அழகிய பொருளோ, அருமையானதாகவோ ஒன்றிருந்துவிட்டால் அது தனக்குத்தான் சொந்தமென்று உள்ளம் விரும்புகிறது. அதுபோன்ற ஆசை மற்றவர்களுக்கும் இருக்கும். இருக்கிறது என்று மனம் ஒருபோதும் ஒப்பு வதில்லை. அவ்விதம் மனம் ஒப்புமாயின் உலகில் சண்டை பூசல்கள் ஏன் உண்டாகப்போகிறது. பெண்கள் உள்ளம் எத்தகைய மென்மை யானது, அதில் உதிக்கும் அன்பு தாயன்பா, சகோதர அன்பா, காதலன்பா என்பதை உணர் வது கஷ்டம். விவேகியாகிய நான் அதுபோன்றுதான் ஈஸ்வரி என்னிடம் காட்டிய மாசு மறுவற்ற அன்பு சகோதர அன்பென்பதை உணரமாட்டாது அதைக் காதலென்று எண்ணி என்ன துரோகம் செய்ய நினைத்தேனென்று எண்ணி பச்சாத்தாபமுற்றேன். வெட்க முற்றேன்.

கண்ணீர் கூட விட்டேன். ஈஸ்வரிக்கு விவாகமென்று அறிந்த உடன் என்னைத் தவிர வேறொருவரும் அவளிடம் உரிமை பாராட்டக்கூடாது என்று பொறாமையால் ஆத்திரமுற்ற மனம், அக்கடிதத்தை வாசித்ததும் தன்னிலை மாறிக் குதூகலமடைய ஆரம்பித்தது. (காத லன்பை எதிர்பார்த்த எனக்கு ஈஸ்வரியின் கடிதம் எவ்வாறு சகோதரன்பை ஊட்டி யிருக்கு மென்று வாசகர்கள் ஆச்சரியமுறலாம். என்னளவில் காதலென்று கற்பனை செய்து இருந் தன்றி அதை வெளியில் காட்டியிருக்கவில்லையல்லவா. மற்றொன்று என் மனம் இவ்வித கற்பனையைச் செய்யத் தொடங்கியபின் ஈஸ்வரியுடன் சேர்ந்து பழக சந்தர்ப்பம் கிடையாமை யும் ஒன்று. ஆடவர்களைப் போல் பெண்கள் சபல உள்ளம் படைத்தவர்களுமல்ல. காத லன்பை விட சகோதர அன்பை உலகில் பெறுவது கஷ்டமானது என்பதை அனுபவத்தாலன்றி அறியமுடியாது. அவ்விதம் உணர்ந்தவன் எவனும் சகோதர அன்புக்காகத் தான் வாடுவான். என்மனச் சஞ்சலத்தை மாற்றி அமைதியுறச் செய்த கடிதம் இதுதான்.

அன்பே உருவாய் எமதருமை அண்ணா!

பரம்பொருளருளால் நாமெல்லோரும் நற்ஷேமமே இருக்கிறோம். தங்கள் சுகமும் அறிய அவாவுறுகிறோம்.

எக்காரணம் கொண்டோ தங்கள் கடிதங்களை முன்போல் காணமுடியாதிருக்கின்றது. எம்அறியாமையால்தங்களுக்குஏதாவதுஅபசாரம்செய்துவிட்டோமோஎன்றுவருந்துகிறோம். அல்லது என்னுடன் பிறவா அந்நியர் தானே என்று எம்மை உதாசீனம் செய்கிறீர்களோ. உலகத்தார் முன் தாங்கள் எம்முடன் பிறவாதிருக்கலாம். ஆயின் ஈஸ்வரன் கிருபை எம்மைப் பிணைத்திருக்கிறது அன்பெனும் பாசத்தால், என்னிடமிருந்த அந்நிய அநாகரிகமெல்லாம்

நீங்கி நல்வாழ்வுக்கு வழிகாட்டிய சற்குரு தாங்கள். அல்லும் பகலும் தங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்குவதில்லை. உலகிற் கிடைத்தற்கரிய அன்பு தாயன்பும் சகோதர அன்பும் தான்.

"என் தாயில்லையென்று சில காலம் வருந்திய குறையை தாங்கள் தங்கள் அன்பால் நீக்கித் தாய்மையின் இனிமையை எனக்குக் காட்டினீர்கள்" என்று அம்மாவுக்கு எழுதுவீர்கள். அதுபோன்றுதான் எமக்கு ஒரு அண்ணனில்லாக் குறையை நீக்கித் தங்கள் சகோதர அன்பால் எம் சுகம் கவர்ந்தீர்கள். வயதில்குறைந்த நான் தங்களை வாழ்த்தவில்லை. தாங்கள் எங்கிருப்பினும் பரம்பொருளருளால் என்றும் குறைவற்ற சுகத்துடனிருக்க வேண்டுமென்பதே பிரார்த்தனை. நிற்க.

அடுத்து வரும் தினங்களன்று எங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் விசேடத்தை இதுவரை அறிந்திருப்பீர்கள். இதற்கு முன்பும் எழுத விரும்பி னேன். பெண்மைக் குணம் தடுத்துவிட்டது. அதற்குக் கோபிக்கமாட்டீர்களென்று எண்ணுகிறேன். உற்றார் உறவினரால் வீடு நிறைந்திருக்கிறது. இருப்பினும் தங்களில்லாதது எமக்கெல்லாம் ஒரே சூன்மயமாக இருக்கிறது. கல்யாண ஆயத்த தடபுடலில் எம் தாய் தந்தையர்க்குச் சகவாசமின்மையால் நானே எழுதுகிறேன். தங்களை நாமெல்லாம் பார்த்து எத்தனை நாட்கள் போய்விட்டன.

நாங்கள் தங்களிடம் செலுத்தும் அன்பு, சகோதர அன்பு உண்மையிருக்குமானால் தாங்கள் வந்திருந்து என்னை வாழ்த்தும் பாக்கியம் பெற்றவளாவேன் என்பிற்கால குடும்ப வாழ்க்கை இன்பமயமாக நிறைந்திருக்குமென்பதற்கு ஒரு சுபசகுனமாக இருக்கத் தங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறென். அடியால் ஆவலைப் பூர்த்தி செய்ய அருளுமாறு பரம்பொருளை வேண்டு கிறேன்.

தங்களன்பையே வேண்டும்
அன்பான தங்கை - ஈஸ்வரி.

கடிதத்தைப் பன்முறை படித்தேன். சென்று போன நாட்களை நினைவு கூர்ந்தேன். எழுந்து நடமாட முடியாத நிலையில் அவர்கள். யான் ஒரு அந்நியனாக இருக்கவும் அவ்விதம் கருதாது என்னைப் பேணிக் காத்ததை நினைவு கூர்ந்தேன். அன்புடனணைத்து கைக்கு விலங்கிட நினைத்தேனே என்று எண்ண, என் மேலேயே ஆத்திரமுண்டாயிற்று. இரண்டு வார லீவு வேண்டுமென்று கொழும்புக்கு மேலதிகாரிக்குத் தந்திமூலம் விண்ணப்ப மனுப்பி னன். அதிஷ்டவசமாக "லீவு"ம் கிடைத்தது. அன்று சாயந்தரமே புறப்பட்டு ரயிலில் ஒரு வழியா இடம்பிடித்து யாழ்ப்பாணமடைந்தேன். கலியாணத்திற்கு இரு தினங்களிருந்தன. அத்தனை நாட்களாகக் காணாதிருந்த கடனெல்லாம் சேர்ந்து பேச்சுப் பிரவாகமாக ஓடிற்று.

மாப்பிள்ளை நடராசன் என் நண்பன். கலியாணமும் வெகுசிறப்பாகவே நடைபெற்றது. மணக்கோலத்தில் புத்தழகு பொலிய ஈஸ்வரி என்னை வணங்கினாள். காமாந்திரனாக அவள் வாழ்வைக் கெடுக்க எண்ணினேனே என்று நினைவுண்டாக என்னையுமறியாது பெருகிய நீரையுமடக்கிக் கொண்டு "பரிதியும் ஒளியும்போல் என்றும் குன்றா இன்பத்துடன் தீர்க்க சுமங்கலியாக வாழப் பரம்பொருள் அருள்வான்" என்று இருதயபூர்வமாக ஆசி கூறினேன். கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிய மலர்ந்த முகத்துடன் கணவனுடன் கைகோத்துத் தன் இன்ப இல் வாழ்வை ஆரம்பித்தாள் ஈஸ்வரி.

ஈழகேசரி - 30.06 1946, 07.07.1946, 14.07.1946

ரகுநாதன்

மட்டக்களப்பு மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி சஞ்சிகை வாயிலாக அறியப்பட்டவர் ரகுநாதன். வடிவ நேர்த்திமிக்க இவருடைய சிறுகதைகள் வாழ்க்கையின் நடப்பியலில் கட்டுண்டவை. சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் உண்டாகும் இன்னல்களைத் தம் சிறுகதையில் கையாண்டவர்.

- நோட்டுப் பணம்

நோட்டுப் பணம்

ரகுநாதன்

"**டங்**... டங்... ங்..."

உறங்கிக் கிடந்த அந்த மௌன இரவின் அமைதியைக் கிழித்துப் பயங்கர ஓசை அலைகளை சிதறிக் கொண்டு வெகு தூரத்திற்கப் பாலுள்ள மாதா கோவில் மணிக்கூண்டு மணி 10 அடித்து ஓய்ந்தது.

டாக்டர் ஜீவரட்சகனுக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. பஞ் சணை அவருக்குப் பலனளிக்கவில்லை. நித்திராதேவி அவரை வஞ் சித்து விட்டாள் போலும்!.

அவர் இன்னும் படுக்கையில் புரண்டுகொண்டேயிருக்கிறார். அன்று பகல் நடந்த ஒரு சம்பவத்திற்கு விளக்கம் தேடி அவர் மனம் அலைந்தது. அந்தப் "புரியாத புதிர்" அவர் சிந்தனையைக் குழப்பிய டித்ததோடு மட்டுமல்லாமல் பயத்தையும் ஊட்டியது.

திடீரென்று அவர் மனக்கண் முன்னே அந்த மனுஷ்யரின் உருவம் தெரிகிறது. பட்டு ஜிப்பா மணிக்கட்டுக் கைவரை புரள பெரிய மடிப்புக் கரை மேலுத்தரியம் மார்பிலே தவழுகிறது. வண்டியும்

தொந்தியுமாக ஆசாமி பெரிய மனுஷர்தான்! ஆனால்...? வாடிவதங்கிய முகம். அவர் கண்களிலிருந்து இரண்டு நீர் வீழ்ச்சிகள். நாத் தடுமாறுகிறது. குரல் கம்முகிறது. விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே அவர் பேசிய வார்த்தைகள் கேட்கிறது.

ஸார்! இது என் ஒரே பொண்ணுங்க. அதிர்ஷ்டமில்லாக் குழந்தை! நாலு வயசாயிருக்கும் போதே அவ அம்மா போயிட்டா... இத்தனை காலமும் எவ்வளவு அன்பாய் வளர்த்து நாளும் நட்சத்திரமுமாய்ப் பார்த்து ஒரு ஆம்படையான் கையிலே கொடுத்தேன்... அது இப்போது கர்ப்பிணி ஸார்! பத்தாவது மாதம்!... பிறக்கிற குழந்தை தாய்க்கு எமனாம், ஸார்! குழந்தை உயிரோடே இருந்தால் தாய் சாவுமாம். என் பொண்ணை நீங்கதான் காப்பாத்தனும் ஸார்.

சிந்தனை கலைந்து ஒரு காட்சி தெரிகிறது. நின்று கொண்டிருக்கும். ஒரு 'பியூக்" மோட்டாருக்குள் ஆயாசத்துடன் ஒரு பெண் சாய்ந்து கிடக்கிறாள். அவள் முகம் வெளிறிக் கிடக்கிறது. துக்கச்சாயல் நர்த்தனம் புரிகிறது.

காட்சி மறைகிறது. டாக்டர் தன் சிந்தனையைத் திருப்பிக் கொள்கிறார். அது சுழல்கிறது.

"பாவம், பொண்ணு மேலே அவருக்கு உயிர் போலயிருக்கு. இல்லா விட்டால் இப்படி எண்ணுவாரா...? குழந்தையைக் கொன்று விட்டால் பொண்ணு தப்பிவிடுவாளாம்..... யாராவது அறிந்தால்....?

அவர் உடல் பயத்தால் வியர்த்தது. விளக்கம் தேடியலைந்த அவர் மனத்திரையில் ஒரு ராச்சச கேள்வியடையாளம் குத்திட்டு நின்றது...?

எழுந்து லைட்டைப் பொருத்திவிட்டு மேசையருகில் வந்து உட்கார்ந்தார். விரிந்து கிடந்த ஒரு ஆங்கிலக் கவி நூலில் அவர் பார்வை வட்டமிட்டது. மிகச் சிறிய எழுத்து லைட்டும் "டிம்" பண்ணியது. எழுத்து ஓடவில்லை. புத்தகத்தைத் தூக்கி முகத்துக்கருகே பிடித்துப் பார்த்தார்... ஊ ஹூம்!

எழுந்து "கோட் ஸ்டாண்ட்" இருக்குமிடத்துக்குப் போனார். கோட் பைக்குள் கையை வைத்து எதையோ துளாவினார். அவர் தேடிய "ஸெஸ் பிரேம் கண்ணாடி" அதற்குள் இல்லை. கையோடு ஒரு கரகரப்பான காகிதத் துண்டு வெளியேறியது. வெறும் கடதாசியல்ல அந்தப் பொருள் நூறு ரூபா நோட்டு!

நடக்கப்போகும் ஒரு சதிச் செயலுக்கு அந்த ஆசாமி தந்த "அட்வான்சு". இப்போது அவருக்குக் கண்ணாடி தேவைப்படவில்லை. அதை மறக்கடித்து விட்டது இந்த நோட்டுப் பணம்! கைக்குள்ளடங்கியதாலேற்பட்ட சுருக்கங்களை அழுத்திக்கொண்டு மேசையடிக்குத் திரும்பினார்.

அந்த நோட்டுப்பணத்தை மேசை மீது வைத்து அதைக் காற்றடித்துக் கொண்டு போகாமல் ஒரு பேப்பர் வெயிட்டை அதன்மேல் வைத்தார். பளிங்கினாற் செய்யப்பட்டது அந்தப் பேப்பர் வெயிட்".

அவருக்கு இப்போது வேண்டிக் கிடந்தது ஒரு வெள்ளைச் சுருட்டு! எங்கெல்லாமோ தேடி ஒரு "சாம்பியன்" சிகரெட்டை எடுத்து பற்றவைத்தார்.

சிகரெட்டிலிருந்து வெளிப்பட்டுச் சுருள் சுருளாக கிளம்பி மேலே செல்லும் சிறு சிறு மேகமண்டலங்களுடன் அவர் உள்ளமும் உயர்ந்து கொண்டே போயிற்று. திடீரென்று அவர் அந்த நோட்டுப் பணத்தை நோக்கினார். அடாஹ்! என்ன ஆச்சரியம்!

அந்த நோட்டுப் பணத்தின் மேலிருந்த பளிங்கினூடே ஒரு காட்சி தெரிந்தது. நோட்டிலுள்ள வர்ணக் கோடுகள் சித்திரங்கள், பளிங்கின் உதவியால் ஒருங்கு சேரும்போது ஏற்பட்ட காட்சி அது திரையில் சுழலும் படம் போல நகருகிறது ஒரு சித்திரம். வானளாவி வளர்ந்த ஒரு தென்னந் தோப்பின் மேற்பாகம் காட்டப்படுகிறது. தொடர்ந்து மனதை ஈர்க்கும் இளநீர்க் குரும்பைகள், தென்றலில் சலசலக்கும் ஓலைகள் - வரண்டு காட்சியளிக்கும் பனைகள், அதன் மட்டைகளுக்கிடையே மண்டிக்கிடக்கும் நுங்குகள் சுற்றிச் சுழல்கின்றன.

தனியே ஒரு பனை மரம்!.... அதன் பாளைகளில் முட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. காட்சி கீழே இலங்குகின்றது. அதே பனையிலிருந்து ஒரு மரமேறும் தொழிலாளி இறங்கிக் கொண்டிருக்கிறான். அவன் பின்பக்கத்தில் ஒரு முட்டி தொங்கிக் கொண்டிருக்கின்றது.

கீழே ஒரு பெண். அவள் முகத்தில் இன்ப நிலவு வழிகிறது. கையிலே ஒரு டம்ளர். "ஏய் ராமு! நேற்று தந்தாயே பதநீர் என்ன அருமையாக இருந்தது" குழைந்தது அவள் குரல்.

'உன் குரலின் இனிமையை விடவா?" அரும்பு மீசை வாலிபன் இப்படி "காதல் விளக்கம்" செய்தான்.

குழிந்தது அவள் கண்ணாடிக் கன்னம். அவன் தொடர்ந்தான். "வேண்டுமானால் எப்போதுமே தருவேனே "அவள் சிரித்தாள்."அதற்குப் பெறுமானம்? இது போதாதா? ; அவள் தலை குனிகிறது.

அவள் கையிலிருந்த டம்ளரை வாங்கி முட்டியிலிருந்து ஊற்றுகிறான் அவன். காட்சியை இருள் கௌவுகிறது.

திரையிலே ஒரு கலண்டர் காணப்படுகிறது. கடகட வென்று சில திகதி தாள்கள் உதிர்ந்து போகின்றன. நாட்கள் பல ஓடிவிட்டன என்பதைக் குறித்தது போலும் அக்காட்சி!

தொடர்ந்து காமிராவின் மாயா ஜாலங்களில் காதலர்-ராமு-கமலா-சந்திப்புக் காட்சிகளில் அழகான பகுதிகள் அகப்பட்டு அசைந்தோடுகின்றன. அழகான ஒரு பூஞ்சோலை. அதன் நடுவே ஒரு கள்ளறையில் ராமு உட்கார்ந்திருக்கிறான். அவன் முகம் எதையோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் காட்டுகிறது.

அவன் பின்னே அவள் வருகிறாள். அடிமேலடி வைத்து அன்ன நடை! சிரிப்பு அவள் முகத்தில் பொருமுகிறது. அவள் கண்களைப் பொத்துகிறாள். திடுக்கிட்ட ராமு அவசரமாக அவள் கைகளை விடுவித்துக் கொண்டு திரும்பிப் பார்க்கிறான். "கல கல" என்று அவள் சிரிப்பொலியில் பூஞ்சோலை அதிர்கிறது. டபக்" கென்று காட்சி கர்ணமிடுகிறது. அனல் கக்கும் கண்கள், துடிக்கும் மீசை இவற்றுடன் ஒருவர் காட்சியளிக்கிறார். அவர் அருகே அந்தப் பெண் கமலா பயபக்தியுடன் தலையைக் குனிந்தபடி நின்று கொண்டிருக்கிறாள். அவர் உறுமல் காதைக் குடைகிறது.

'நமது ஜாதி என்ன, அந்தஸ்தென்ன எல்லாவற்றையும் மறந்து ஒரு மரமேறியுடன் சல்லாபமா...?

'பாவம்! தாயில்லாக் குழந்தை என்று எண்ணி உன் விருப்பம் போல விட்டபடியால் இப்படி நடந்து கொண்டாயா?

எதையுமே கண்டிக்காமல் விட்டுக்கொடுத்தது என் மேல் தான் தப்பு ஆமா!"

'அட அதுதான் ஒசந்த வீட்டுப் பிள்ளை. தெரிந்தோ தெரியாமலோ நடந்து கொண்டால் இந்த எளியவனுக்குத்தான் என்னமதி? நம்ம வீட்டு முத்தத்திலே மிதிக்க அருகதையில்லா நாய்.

இவ ரொம்பப் படித்திட்டாவாம். எனக்குப் படிப்பிக்கிறா. சாதியில்லியாம். சாத்திரம் ஏமாத் தாம்! "ஏடி கமலா! போடி உள்ளே இனிமேல் அடக்களைப் பிப்புறம் தலையை நீட்டினாயோ அது பிறகு தெரியும் ஆமா". கமலா உள்ளே போகிறாள்.

அவர் மேலும் பேசுவது கேட்கிறது. "நெருப்புடன் விளையாடுகிறது இந்தப் பஞ்சு, பார்த்துக் கொள்கிறேன் இந்தப் பதரை!"

மறுபடியும் அந்தப் பெரிய மனுஷர் பரமானந்தம் பிள்ளையின் வெற்றிச் சிரிப்போடு காட்சி திடீரெனத் திரும்புகிறது.

'தொலைந்தது அந்தத் தொல்லை! இனி மறுகாரியம் பார்க்க வேண்டியது தான்!" மேள வாத்தியங்களுடன் ஒரு கலியாணக் காட்சியைப் பார்க்கிறார்.

டாக்டர் ஜீவரட்சகன். வாழைகள், கமுகுகள், தோரணங்கள், வர்ணக் கடதாசிகள் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன.

பிராமணர் ஓமம் வளர்த்துக் கொண்டிருக்கிறார். மனையில் கமலாவும் ஒரு வாலிபனும் இருக்கிறார்கள். கமலாவின் தந்தை பரமானந்தம் பிள்ளை கம்பீரமாக வீற்றிருக்கிறார்.... தூரத்தில் நடைபெறும் காட்சி ஒன்றும் இடையே வந்து புகுந்து மறைகிறது.

ஒரு வழக்கு மன்றம்! குற்றவாளிக் கூண்டுலே ராமு வாடி வதங்கிய முகத்துடன் நிற்கிறான். ஒரு வழக்கறிஞர் எழுந்து நின்று கேள்விப் பாணங்களையடுக்குகிறார். அவர் முகத்தில் வெற்றிப் புன்னகை முகாம் இடுகிறது.

இந்தக் காட்சிதான் அது!

திடீரென்று வாத்திய குழாம் காதைத் துளைக்கிறது. பிராமணர் எழுந்து பலமாக ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்.

கமலாவின் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறுகிறது. திரையின் மேலே ஒரு வட்டத்தில் ராமுவின் கரங்களில் விலங்கு மாட்டப்படுகிறது.

காட்சி மாறுகிறது.

வீதியில் இருவர் பேசிக்கொண்டு போகிறார்கள் "திருட்டுப் பயல்! தின்ற வீட்டுக்கே இரண்டகம் செய்தால்?

"பட்டணத்திலே அவன் ஒரு பாக்டரியில் வேலை செய்தானாம். திடீரென்று ஒரு வேலை நிறுத்தம் நடந்ததாம் அங்கே! காரணம் விசாரித்தால் ராமு என்று தெரிந்ததாம். விடுவாரா அந்த பாக்டரி முதலாளி. வேலையிலிருந்து நீக்கிவிட்டார்"

'ஊம் பிறகு"

"வேலை கிடைக்காமல் அலைஞ்சுதாம் இந்த நாய்! வழியிலே எங்கேயோ கண்ட பரமானந்தம் பிள்ளை வா அப்பா! நான் வேலை தாரேன் என்று கூட்டிக்கொண்டு வந்து பிழைக்க வைச்சார்"

"அதுக்கு திருட்டிலேதான் மனம் போச்சு!" "எப்படியென்றாலும் அது சாதிப் புத்தி பாருங்க" தெருவின் மூலை வரையில்தான் அவர்களைத் தெரிகிறது. மீண்டும் பரமானந்தம் பிள்ளை வீடு. கலியாணக் காட்சியின் அரைகுறைச் சோடனைகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவர் பங்களாவின் முன் ஒரு புத்தம் புதிய கார் நின்று கொண்டிருக்கிறது. மாப்பிள்ளைக்குக் கொடுத்த ஸ்ரீதனம் போலும்! பரமானந்தம் பிள்ளையின் மாப்பிள்ளை அதில் வந்து ஏறிக் கொள்கிறார். கமலா வெளியே நிற்கிறாள். அவள் முகம் சோபையற்றுக் கிடக்கிறது.

"கமலா! கவலைப்படாதே கெதியில் வந்து அழைத்துக் கொண்டு போகிறேன்"
"எங்கோ ஒரு முறை உன் சிரிப்பு"

"கிர் கிர்"

கார் புழுதியை கிளப்பிக் கொண்டு போகிறது. அது மறையும் வரை பார்த்துக் கொண்டு நிற்கிறாள். புழுதி மண்டலம் திரையை மறைக்கிறது. மீண்டும் திரையிலே ஒரு மாதக் கலண்டர்! 8 இதழ்கள் கிழிக்கப்படுகின்றன.

அமைதி நிலவும் ஒரு அறை தெரிகிறது. அங்கே கட்டிலில் கமலா படுத்துக்கொண்டிருக் கிறாள். அவள் முகம் வெளிறிக் காணப்படுகிறது. இடையிடையே பெருமூச்சு அமைதியைக் குலைக்கிறது.

காட்சி உருண்டு இன்னொரு அறையைப் படம் பிடிக்கிறது.

பரமானந்தம் பிள்ளை ஆழ்ந்த யோசனையிலிருக்கிறார். அவர் அருகில் ஒரு கிழவி - அவர் தாய்! அவள் பேசுகிறாள்.

"யாராவது அறிந்தால்...?"

"கல்யாணமாகி 8 மாதம் முடியவில்லை. அதற்கிடையில் நான் சொன்னேன்டாப்பா, படிக்க வைச்ச பலன் இது அறிந்து கொள்" "அம்மா! எனக்கொரு யோசனை வருகிறது". அவர் புருவம் சுருங்குகிறது. "டாக்டரிடம் போய் ...

வார்த்தை முடிவதற்குள் மோட்டாரின் சத்தம் கேட்கிறது. பரமானந்தம் பிள்ளை தம் மகளுடன் காரில் உட்கார்ந்திருக்கிறார். வெயிலின் வேகம் மோட்டாரில் பளிச்சிட அது உறுமிக் கொண்டு ஓடுகிறது.... கிணிங்... கிணிங்... கிணிங்...

டாக்டர் ஜீவரட்சகன் வீட்டு டெலிபோன் மணி ஒலிக்கிறது. அவர் பிரமை - நோட்டுப் பணத்தில் தெரிந்த காட்சி - எல்லாம் கலைகிறது." எழுந்து டெலிபோன் ரிஸீவரை காதில் வைக்கிறார்.

"கலோ ! யார் பேசறது?!" "நான் தான் ஸார்! நேர்ஸ் லீலா"

"என்ன விசேடம் அர்த்த ராத்திரியில்?"

"நேற்று வந்தாளே ஒரு பெண் 12ஆம் நம்பர் வார்ட்டுக்கு. அவள் பிரசவித்து விட்டாள். பெயர் கமலாவாம்...."

"கமலாவா? பரமானந்தம் பிள்ளையின்..."

"ஆமாம் அவர் மகள்தான். ஆனால்..."

"என்ன லீலா! ஆனால்..."

"ஒன்றுமில்லை ஸார்! அந்தக் குழந்தை செத்துப் பிறந்திருக்கு"

"ஆ! அப்படியா?"

"பொண்ணுக்கு ஒன்றுமில்லையே?"

"இல்லை ஸார்! அது நல்ல சுகமாயிருக்கு"

"ம்.. சரி..."

நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன. கமலா இன்னும் வார்ட்டிலேயே இருக்கிறாள். டாக்டர் ஜீவரட்சகன் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக ஒரு வாலிபன் வந்தான்.

டாக்டர் நிமிர்ந்து பார்த்தார். "அடே சுந்தர் ! நீ இங்கே ஏன் வந்தாய்?"

"நம்ம வைப் இங்கே இருக்காள் பாருங்கோ கமலா! மாமா தந்தியடித்திருந்தார். இன்று காலைதான் வந்தேன்".

டாக்டர் திகைத்துப் போனார். சுந்தர் அவர் தூரத்து இனம்!" கமலாவா. அவள் உன் மனைவியா? பாவம் குழந்தை!"

"எல்லாம் விதி பாருங்கோ ..."

இன்னும் அந்த ஊரிலே ஒரு கதை! பரமானந்தம் பிள்ளையின் பெண் சுந்தரின் மனைவி கமலா "குறை மாதத்தில் பிள்ளையைப் பெற்று அது இறந்துவிட்டது" என்று.

எம்.எஸ்.பாலு

மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி சிற்றிதழ் வாயிலாக அறியப்பட்டவர். மட்டக்களப்பு வந்தாறுமூலையைச் சேர்ந்த இவர் "பிள்ளைப் பாசமா? விதியின் சூழ்ச்சியா" என்ற சிறுகதையை பாரதியில் எழுதியவர். சாதியப் பிரச்சினைக்கு கலப்புத்திருமணமே தக்கவழி என்பதை தம் சிறுகதை வாயிலாக வெளிப் படுத்தியவர்.

❖ *பிள்ளைப் பாசமா விதியின் சூழ்ச்சியா*

பிள்ளைப் பாசமா? விதியின் சூழ்ச்சியா?

எம்.எஸ்.பாலு

மாலை சுமார் ஆறு மணியிருக்கும். கதிரவன் தனது வேலையிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். காலையில் மேய்க்கக் கொண்டு சென்றிருந்த பசுக்கூட்டங்களையும் எருமைகளையும் அவற்றின் மேய்ப்பாளர்களான சிறுவர்கள் சாய்த்து வந்துகொண்டிருந்தார்கள். நீர்க்காக்கைகளும் ஊர்க்காக்கைகளும் கதிரவனின் அஸ்தமனத்தால் மனங்கசந்தன போல உப்போடை எனும் சிறு குளத்தைத் தாண்டிப் பறந்து கொண்டிருந்தன. வேளாண்மைக் காவலுக்குப் போகின்றவர்களும் கையில் பன்றி வெருட்டிகளையும் ஓலைச்சுருள்களையும் எடுத்துக்கொண்டு வயல்களை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள். அந்த வேளையில்தான் முத்துலிங்கமும் கிரான் புல்லு வேலை ஸ்தலத்திலிருந்து வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் கையில் சிலமரக்கறிகளும், வரால் முதலிய குளத்து மீன்களும் இருந்தன. வேலை செய்து களைத்த உடலையும், வேலை ஸ்தல அதிகாரியாயிருக்கும் ஒரு வரண்ட பிரமச்சரியனான மகானுபாலனின் சகிக்க முடியாத தூஷணைகளால் தாக்குண்டு நொந்து போன உள்ளத்தையும் சுமந்து கொண்டு வந்தான். தன் கணவன் வரும் நாளென்று

முன்னமேயே தெரிந் திருந்த நாகம்மாள் அவனுக்குக் குளிக்க வெந்நீரும், பருகத் தேநீரும் வைத்துக் காத்துக்கொண்டிருந்தாள். களைப்போடு வந்த முத்துலிங்கம், குளித்துவிட்டுத் தேநீரும் பருகித்தான் களைப்பை ஆற்றிக்கொண்டான்.

சிறிது நேரத்துக்குப் பின் இருவரும் இராப்போசனத்தையும் முடித்துக் கொண்டு ஆறுத லாய்ப் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள். படுத்துக் கொண்டே முத்துலிங்கம் தன் மனை வியிடம் அதிகாரிகளின் அட்டூழியங்களை விபரித்துக்கொண்டு "எல்லாம் என் ஒரு மகனுக் குத்தானே.

ஆண்டவனே இம்முறை எப்படியாவது என் பிள்ளை பரீட்சையில் தேறிவிட வேண்டும் முருகா" என்று வேண்டிக்கொண்டே கண் அயர்ந்து விட்டான். தேகக்களைப்பால் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த முத்துலிங்கத்துக்கு, வாசலில் சைக்கிள் மணி அடித்தது கனவில் கிருஷ்ணன் கோயிலில் மணி அடிப்பது போலிருந்தது. இந்த மணிச் சத்தத்துக்குக் காது கொடுத்துக்கொண்டிருந்த நாகம்மாள் "இந்தாருங்க கடப்பில் சைக்கிள் மணியடித்துக் கேட் குது. அது என்ன கொஞ்சம் பாருங்க" என முத்துலிங்கத்தை அரட்டினாள். அதற்குள் சைக்கிள் மணி ஓசையோடு கலந்து வந்த "அண்ணே தந்தி ஒன்று." என்ற சத்தத்தைக் கேட்டதும் "வாறன் தம்பி" என்றே சொல்லிக்கொண்டே விளக்கேற்ற நெருப்புப் பெட்டியைத் தேடினான். அதுவும் அந்த அவசர நேரத்தில் அவன் கண்களுக்கும் கைகளுக்கும் அகப்படாமல் எங்கோ போய் ஒழிந்து கொண்டது. அவனுக்கு வந்த ஆத்திரத்தில் நாகம்மாளையும் கடிந்து விட்டு, கதவைத் திறந்து கொண்டு வாசலை நோக்கி ஓடினான். தந்திக்காரன் "உங்களுக்குப் புளியந்தீவில் இருந்து ஒரு தந்தி வந்திருக்கிறது" என்று தந்தியை நீட்ட முத்துலிங்கம் "அதை நீதான் வாசித்துக் காட்டு தம்பி" என்று சொன்னான். சைக்கிள் விளக்கு வெளிச்சத்தில் அதில் "உன் மகனைக் காணவில்லை. பாடசாலை அதிபர்" என்று இருந்ததைத் தந்திக்காரன் படித்ததும், நெருப்புப் பெட்டியைத் தடவியெடுத்து விளக்கேற்றிக் கொண்டிருந்த நாகம்மாள் "ஐயோ! என்மகனே" என்ற சத்தத்தோடு விழுந்து மூர்ச்சையாகி விட்டாள்.

தந்திக்காரனையும் அனுப்பிவிட்டுக் கலங்கிய மனத்தோடு, பீறிட்டுக் கொண்டு வரும் திகிலையும், துக்கத்தையும் அடக்கிக்கொண்டு உள்ளே போன முத்துலிங்கம் இந்தக் காட்சியைக் கண்டதும், பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு வந்துவிட்டான். இந்த அதிர்ச்சிகளால் தாக்கப்பட்ட முத்துலிங்கம் பேயாட்டக்காரன் கத்துவது போல் என்னவெல்லாமோ உளறி, அழுது கர்ஜித்துவிட்டான். இந்தக் கோரச் சத்தம் அயல் வீட்டுக்காரரையும் திடுக்கிட வைத்து நித் திரைக்கும் கல்தா கொடுக்கச் செய்துவிட்டது. அடுத்த வீட்டு ஐயாத்துரையும், மனைவி அழ கம்மாவும், இன்னும் சிலரும் ஓடி வந்தவர்கள், முத்துலிங்கத்தின் பயங்கர அழுகையையும், மூர்ச்சையாகிக் கிடக்கும் நாகம்மாளின் உடலையும் கண்டு திகைத்துப்போனார்கள். இவர் களோடு கூடப் பயந்த அழகம்மா தனது பயத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் அவசர அவசரமாக ஓடிப்போய், ஒரு பாத்திரத்தில் தண்ணீர் கொஞ்சம் கொண்டுவந்து ஏதோ வாயில் முணுமுணுத்துக் கொண்டே முத்துலிங்கத்துக்கும், மனைவிக்கும் மாறி, மாறி முகத்தில் பலமாகத் தெளித்தாள். அந்தத் தண்ணீரின் ஸ்பரிசம் பட்டதும் முத்துலிங்கத்தின் அழுகையும் ஓய்ந்து, ஒருவித களைப்புள்ளவனாகப் பக்கத்திலுள்ளவர்களில் யாரையோ தேடுவது போல் திருதிருவென்று விழித்துப் பார்த்தான். இந்தப் பார்வையைக் கண்டு அருகிலிருந்தவர்கள் பயந்தார்களென்றாலும், அவனுக்குத் தேறுதல் சொல்ல முனைந்துவிட்டார்கள். இந்தச்

சிஷ்ருட்சைகளால் ஒருவாறு தெளிவடைந்த முத்துலிங்கம் நாகம்மாளை வினவினான். "நாகம்மாளுக்கு அந்த விஷ்ணுமூர்த்தி கருணையால் ஒன்றுமில்லை, நீ சும்மா படுத் துக்கொள்" என்று ஐயாத்துரை சொல்லி முத்துலிங்கத்தின் கவலையைச் சிறிது தளர்த்தி விட்டான். தண்ணீர் தெளித்தும் பிரக்ஞையில்லாத நாகம்மாளுக்கு, அழகம்மா குழையடித்து விபூதி பூசி, சில மந்திரங்களைச் சொல்லிச் சிகிச்சை செய்தும் பயனில்லாமையால், கூலிக்குக் கார் பிடித்து நாகம்மாளைப் பட்டின வைத்தியசாலைக்கு கொண்டு போகவேண்டிய நிர்ப் பந்தம் ஏற்பட்டுவிட்டது. உடனே அழகம்மா, ஐயாத்துரையிடம் கார் ஒன்று பிடித்துக் கொண்டு சீக்கிரம் வாருங்களென்று சொல்ல, ஐயாத்துரை அடுத்த வீட்டுக்காரன் பாவிலுப்பிள்ளையிடம் சைக்கிளையும் வாங்கி, அவனையும் அழைத்துக் கொண்டு கூலிக்குக் கார் பிடிக்க அடுத்த ஊருக்கு கிளம்பி விட்டான். இவர்களின் இந்த அர்த்தராத்திரி வருகையைக் கண்ட கொள்ளை லாபத்தில் பெயர் போன வாடகைக்காரர் முதலாளி முப்பது ரூபா தந்தால் இந்த வேளை பட்டினத்துக்குக் கார் விடலாம். ஆனால் பணம் முழுவதையும் இப்போதே தந்துவிட வேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறியதைக் கேட்ட ஐயாத்துரையும், பாவிலுவும் கையில் காசு கொண்டு போகாதவர்களாதலால் ஐயாத்துரையின் கையிலிருந்த மோதிரத்தையும், பாவிலுவின் கடுக்கனையும் (மின்னியையும்) கழற்றி நம்பிக்கையாக வைத்து விட்டுக் காரைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். இவர்களின் வரவையே ஆவலோடு எதிர்பார்த்துக கொண்டிருந்த அழகம்மாவும், மற்றும் பெண்களும் காரைக் கண்டதும் உடனே நாகம்மா ளையும் ஏற்றிக்கொண்டு, முத்துலிங்கத்துக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவனுக்குத் துணை யாக அழகம்மாவின் மகனையும், மனைவியையும், இன்னும் சிலரையும் வைத்துவிட்டு அழகம்மாவும், ஐயாத்துரையும் பாவிலுப்பிள்ளையுமாகப் பட்டின வைத்தியசாலைக்குப் போய்ச்சேர இரவு சுமார் இரண்டு மணியாகிவிட்டது.

வைத்தியசாலையில் எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. யாரிடம் போவது, யாரைக் காண்பது என்று சிந்தித்துக்கொண்டே அந்தத் திண்ணையின் ஓர் மூலையில் அயர்ந்த நித்தி ரையில் ஆழ்ந்திருந்த ஒரு பணி ஆளை எழுப்பினார்கள். இவர்களின் அரட்டலால் துன்புறுத் தப்பட்டிருந்த அந்தப் பணியாள், இவர்களுக்கு எவ்வளவு திட்ட முடியுமோ அவ்வளவுக்கும் திட்டியே விட்டான். அதையும் பொருட்படுத்தாது பாவிலுப்பிள்ளை மிகத் தாழ்ந்த குரலில் "ஐயா கடுமையான வருத்தமுள்ள ஒரு பெண்ணைக் கொண்டு வந்திருக்கிறோம். தயவு செய்து கொஞ்சம் டாக்டரிடம் சொல்லுங்கள்" என்று கூறினான். இவர்களின் இந்தப் பரிதாப வேண்டு கோளிற்கிசைந்த அந்தப் பணியாள், தான் போக மறுத்துவிட்டு டாக்டரின் வீட்டைக் காட்டி விட்டு மறைந்து போனான். டாக்டரின் வீட்டை நோக்கிக் கிளம்பிய பாவிலுப்பிள்ளை வீட்டின் படலை (Gate) பூட்டியிருப்பதைக் கண்டு சற்று யோசித்து விட்டு ஏதோ ஒரு முடிவுக்கு வந்த வனைப் போல் படலையையும் ஏறிக் கடந்து சென்று மண்டபக் கதவை மெல்லத் தட்டினான். ஒரு பதிலும் இல்லை. பின் சிறிது பலமாகத் தட்டியதும் டாக்டரின் மெய்க்காப்பாளனான "ஜிமி" என்னும் பெரிய நாய் பாய்ந்து வந்து பாவிலுப்பிள்ளையின் கையையும், காலையும் பலமாகக் கடித்து விட்டது. இந்த எதிர்பாராத தாக்குதலுக்குட்பட்டு வேதனையைப் பொறுக்க முடியாமல் பாவிலுப்பிள்ளை போட்ட கூச்சலாலும், நாயின் வீர கர்ஜனையாலும் நித்திரை கலைக்கப்பட்ட "டாக்டர் பெருமான் கோபாவேசத்தோடு தடார் என்று கதவைத் திறந்து கொண்டு நாயைக் கூப்பிட்டு அறைக்குள் தள்ளிவிட்டுத் தனக்குத் தெரிந்த தமிழில் என்னா ஓய் றாவிலே வந்து தாச்சல் பண்றது. என்னா பயித்தியமா? இதி என்னா காலிலே? என்று காலைப் பார்த்து மிகக்

கடுமையான குரலில் கேட்டார். நாய் கடிந்த வேதனையையும் தாங்கிக்கொண்டு, நோயாளி யின் பரிதாபத்தை “ஐயா ஒரு பெண்ணுக்கு அவஸ்தையான வருத்தம். மூச்சில்லை, வெகு தூரத்திலிருந்து கூலிக்குக் கார் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறோம். இதைச் சொல்லித் தங் களை அழைத்துப் போகலாமென்று தான் வந்தேன். தங்கள் நாய் இந்த அநியாயத்தைச் செய்துவிட்டது.” என்று அழுதுகொண்டே கூறினான். தன் நாயின் மீது பழி சுமத்துவதை விரும்பாத டாக்டர், ”மிச்சம் பேசாதே ஓய். பேய் மாதிரி” என்று அவனை அதட்டி விட்டுத் தனது பரிசோதனைக் குழாயையும் கையில் எடுத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு வந்து காரில் மூச்சற்றுக் கிடந்த நாகம்மாளைப் பரிசோதித்து விட்டுப் பாவிலுப்பிள்ளையின் காயங்களுக்கும் ஏதோ மருந்தைப் பூசிவிட்டும், ஊசிமூலம் ஏற்றி விட்டும் பாவிலுப்பிள்ளையின் காதிலே நாகம் மாள் இறந்துவிட்டதாகக் கூறி விட்டார். இந்தச் சேதியைக் கேட்டதும் தனக்கு வந்த துக்கத் தையும் அடக்கிக்கொண்டு பாவிலு போய்க் காருக்குள்ளிருந்த ஐயாத்துரையிடமும், அழகம்மா விடமும் கூறியதும் அழகம்மா தலையில் கையை வைத்துக்கொண்டே “கோ“வென்று அழத் தொடங்கிவிட்டாள். ஐயாத்துரையின் கண்களும் கலங்கிவிட்டன. டாக்டரும் பிரேதத்தை நன் றாகப் பரிசோதித்துப் பார்த்து விட்டுத் “திடீரென அடைந்த இருதய அதிர்ச்சியால் ஏற்பட்ட மர ணம்“ என்று தன் குறிப்புப் புத்தகமொன்றில் பதிந்து கொண்டு அவர்களுக்குப் போக உத்தரவுச் சீட்டும் வழங்கியனுப்பிவிட்டார். இவர்கள் நாகம்மாளின் பிரேதத்தை இரவு சுமார், நான்கு மணியளவில் வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள். இவர்களின் செய்தியறிய ஆவலோடு துடித்துக் கொண்டிருந்து கலங்கிய மனத்தினனான முத்துலிங்கமும், மற்றும் ஐயாத் துரையின் மகனும், மருமகளும், மற்றவர்களும் அழகம்மாவின் அழுகையைக் கேட்டதும் பட படத்த நெஞ்சுடன் படலையை நோக்கி ஓடினார்கள். அங்கு காருக்குள் நாகம்மாள் பிரே தமாகக் கிடப்பதைக் கண்டதும் எல்லோரும் அழத் தொடங்கிவிட்டார்கள். ஆரம்பத்திலேயே மனதைப் பீதிக்குப் பலி கொடுத்த முத்துலிங்கம், இந்த இயற்கையின் விபரீதத்தைக் கண்டு தாழமாட்டாதவனாய் அங்குள்ள தூண் ஒன்றில் தன் தலையைப் பலமாக மோதிக் கொண்டான்.

திடீரென அவன் செய்த அந்த வேலையால் அவனுடைய மண்டை உடைந்து தலையிலிருந்து. இரத்தம் பீறிட்டுக் கொண்டு வந்ததோடு உயிரும் எமலோகம் சென்று விட்டது. இந்தப் பரிதாபகரமான கோரக் காட்சியைக் கண்டு சகிக்க முடியாத மக்கள் எல்லோ ரும் பிரேதங்களுக்குச் செய்ய வேண்டிய சுகாதார வேலைகளை முடித்து ஒரே இடத்தில் இருவரையும் வளர்த்தி வைத்துக் கொண்டு கதிரவனின் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். விடிந்ததும் கிராம விதானையின் விசாரணையின் பின், அவரின் உத்தியோக பூர்வமான அழைப்பைக் கண்டுவந்த மரண விசாரணை அதிகாரி முத்துலிங்கத்தின் பிரேதத்தைப் பரி சோதித்து இறுதியில் “தூணில் பலமாக மோதப்பட்டு மண்டை உடைந்ததால் மரண மெய்தினார்” என்று தனது தீர்ப்பைப் பதிவு செய்து கொண்டு சென்று விட்டார்கள். பிற்பகல் ஐந்து மணியளவில் பிள்ளையின் பாசத்தால் உயிர்நீத்த சதிபதிகளான நாகம்மாளையும், முத்துலிங்கத்தையும் அடுத்த இடுகாட்டில் அடக்கம் செய்தாகிவிட்டது. இவை நடந்து சுமார் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியும் முத்துலிங்கத்தின் மகன் பேரின்பநாயகத்தைப் பற்றி எதுவித தகவலும் எட்டவில்லை. ஒரு நாள் காலை முத்துலிங்கத்தின் விலாசமிடப்பட்ட ஒரு தபாலைக் கொண்டு, ஆள் தெரியாமல் திண்டாடிக் கொண்டு வந்த தபால்காரன் ஜனங்கள் கூடியிருக்கும் சந்திக்கு வந்து அந்தத் தபாலைக் காட்டி வினாவினான் அதிலிருந்தவர்கள் கூட,

முத்துலிங்கத்தை மறந்துவிட்டார்கள். அதில் ஒருவர் "எங்கிருந்து வருகின்றது" என்று வினவ அவன், இந்தியாவிலிருந்து வருகிறது. ஓர் கலியாணக் கடிதம் போல் தென்படுகிறது என்று சொன்னான். இந்தச் செய்தி அவர்களை இன்னும் ஆராய்ச்சியிலிறக்கி விட்டது. சடுதியாக அவ்விடத்துக்குக் கிராம விதானை வந்ததும் இந்தப் பிரச்சினையை அவ்விடத்திலிருந்தவர் கள் கிளப்ப, அதற்கு விதானை "ஒரு வேளை இறந்து போன முத்துலிங்கமாயிருக்கலாம் என்று கூறிக் கொண்டே என்ன முத்துலிங்கமென்று வந்திருக்கிறது? என்று கேட்க அவன் அ.முத்துலிங்கம் என்று வந்திருக்கின்றது என்று, பதில் சொல்ல "அப்போ சரிதான் இறந்த முத்துலிங்கந்தான்" என்று தபாலை வாங்கிக் கொண்டு, ஐயாத்துரைக்கு அழைப்பனுப்பி அவனைக் கொண்டே தபாலைப் பிரித்துப் பார்த்தால் தபால்காரன் கூறியது போல் கலியாணப் பத்திரந்தான் ஒன்றிருந்தது. அதன் முகப்பில் மகாத்மா காந்தியின் திரு உருவப்படமும், இரு மருங்கிலும் இந்திய தேசிய மூவர்ணக் கொடிகளும் பொறிக்கப்பட்டிருந்தன. கீழே "ஜெய் ஹிந்த்! வந்தே மாதரம், மகாத்மா காந்திக்கு சாந்தி" என்ற வாசகத் தொடரோடு இசைராஜ் திரு நிறைச் செல்வன் மு.பேரின்பநாயகத்திற்கும், இசையரசி திருநிறைச் செல்வி ச.பாக்கிய வதிக்கும் திருமணம் நடக்கவிருப்பதாகக் கண்டிருந்தது. இப் பத்திரத்தைக் கண்ட அக்கிரா மத்து மக்கள் எல்லாரும் தங்கள், தங்கள் கற்பனைக் கெட்டியவாறு பேரின்பத்தையும் அவன் வாழ்க்கையின் மாறுதலையும், கலை ஆர்வத்தையும், அதனால் அவனடைந்த வெற்றியை யும், அந்த வெற்றியைக் கண்டு மகிழக் கொடுத்துவையாத துர்ப்பாக்கிய சாலிகளான பெற்றோரின் அகால மரணத்தையும் பற்றிப் பலவாறு பேசிக்கொண்டார்கள்.

ஒரு வாரத்தின் பின் இந்தியாவிலிருந்து வெளியாகும் ஒரு வாரப் பதிப்பின் இதழொன்றில் இந்தப் புதுத் தம்பதிகளின் படமொன்று பிரசுரிக்கப்பட்டுக் கீழ்க்கண்டவாறு எழு தியிருந்தது. "இசை ராஜ் திருநிறைச் செல்வன் மு.பேரின்பநாயகமவர்கள் இலங்கையில் பிறந்து, இந்தியாவில் சர்வ கலாசாலையொன்றில் இசைக்கலை பயின்று இசைராஜ் பட்டம் பெற்றவர். இவர் தன்னுடன் படித்த மாணவி இசையரசி திருநிறைச் செல்வி ச. பாக்கியவதி யென்னும் ஹரிஜனப் பெண்ணை மணந்திருக்கிறார். இவருடைய இந்தத் தியாகத்துக்காக, புனித போக்குக்காகப் புகழ்ந்து இந்திய காங்கிரஸ் தலைவர்களும், பெரிய பிரமுகர்களும் வாழ்த்துச் செய்திகளையனுப்பியதோடு, அநேகர் திருமணச் சடங்கிலும் பங்குபற்றி இப்புதுத் தம்பதிகளை ஆசீர்வதித்தேகினர். இவர்களுடைய கலாசாலை சக மாணவ, மாணவிகளின் இசை விருந்துகளும் இனிது நடந்தேறின. ஆயிரத்துக்கதிகமான மாணவர்கள் விவாகச் சடங்கில் பங்குபற்றி இவர்களை மகிழ்வித்தனர். இலங்கையின் வீரத்தமிழர் மரபிற் பிறந்து வாலிப உலகத்தில் வானளாவப் பிரகாசித்து, மற்றோருக்கு வழிகாட்டும் மறையாத ஜோதி, தீண்டாமை அரக்கனுக்குத் தீரமுடன் தீ மூட்டிய திடசித்தன், மகாமகான் மகாத்மாஜீயின் ஆசீர் வாதத்தை யேந்திய சாந்தன், திருநிறைச் செல்வன் மு.பேரின்பநாயகத்தை வாயார வாழ்த் துகிறோம். ஹரிஜனப் பெண்ணாகப் பிறந்தும், அகில உலகத்தையும் ஆகர்சிக்கக் கூடிய இசைக்கலையில் தேர்ச்சி பெற்றுத் தனக்குவந்த மணாளனைப் பெற்றுக்கொண்ட திரு நிறைச்செல்வி ச.பாக்கியவதியின் பாக்கியத்தைக் கண்டு பரவசமடைகின்றோம். எல்லாம் வல்ல இறைவன் தம்பதிகளை ஆசீர்வதிப்பாராக, வாழ்க பேரின்பநாயகம் பாக்கியவதி" என்று குறிப்பிடப்பட்டிருந்ததைக் கண்ட பேரின்பநாயகத்தின் உற்றார் உறவினர்களும் மற்றும் பேர் களும் "இதுதான் விதியின் சூழ்ச்சி" என்று கூறிக்கொண்டனர்.

●

அழகு

ஈழகேசரி 1936 ஆம் ஆண்டு மலரில் அழகு என்ற புனைபெயரில் "மன நிம்மதி" என்ற சிறுகதையை எழுதியவரை அறிந்துகொள்ள முடியவில்லை. சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்ட இச்சிறுகதை சமூகத்தின் பரிதாப நிலைக்கு காரணமான பலவகைப்பிரச்சினைகளை அலசுகிறது.

❖ மன நிம்மதி

மன நிம்மதி

அழகு

மனோகரமான மாலைக்காலம்; மனத்திற்கோர் இன்பந்தரும் மந்தமாருதம்; மக்களை மகிழ்ச்சியுறச் செய்தது. சோலைமலையிலுள் ளோர் அனைவரும் ஆனந்தத்துடன் தத்தம் ஆடல்களிலும் பாடல்க ளிலும் ஈடுபட்டிருந்தனர். ஆயின், ஏழைக் குடிசையொன்றினுள், சாய்வு நாற்காலியின் மீது வாட்டமுற்ற முகமும் குழிந்த கண்களும் மெலிந்த உடலுமுள்ள இளைஞனொருவன் கலையேயுருவாயமைந்த தோற றத்துடன் சாய்ந்து படுத்திருந்தான். பல்லாயிரக்கணக்கான எண்ணங் கள் அவன் உள்ளத்திற் தோன்றி மறைந்தன. அவன் மனம் கொந்தளிப் பேற்றபட்ட கடலலை போற் தத்தளித்துக் கொண்டிருந்தது. திடீரென அவன் பைத்தியம் கொண்டவனைப்போற் தன் தலைமயிர்களைக் கை விரல்களாற் பிய்த்துக் கொண்டான். அதற்குக் காரணம் இவ்வெண் ணங்கள் யாவற்றையும் பீறிட்டுக் கொண்டெழுந்த அவனது நாட்டின் நிலைமையைப் பற்றிய உணர்ச்சியேயாகும்.

சோலைமலை என்பது பாரத நாட்டின் வடக்கின் கண்ணுள்ள ஓர் அழகிய சிறு கிராமம். அயலிலுள்ள கிராமங்கட்கோர் திலகமென

விளங்கிய அவ்வூர், நாட்டுப் பறத்திலிருந்த போதிலும், ஆங்கிலக் கல்வியிலும் மேல்நாட்டு நவநாகரீகத்திலும் பழக்கவழக்கமுடைய அநேக மக்கட்கு ஓர் வாசஸ்தானமாயிருந்தது. அவ்வூரைக் கண்ணுறும் அயல்நாட்டு மக்கள் அங்குள்ள பண்டை ஆலயங்களின் வனப்பை யும்; விளையாட்டு மைதானம், கல்விச்சாலை, சங்க மண்டபம் முதலியவற்றையும் பார்த்து ஆனந்தமடையாதிரார். இத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டில் கோசல வம்சம், நயினாவம்சம் என்னுமிரு கோத்திரங்கள் பண்டை நாட்டொட்டே இருந்து வந்தன. பல்லாண்டுகளாகச் சமா தானமும், நாட்டு நலனுங் கருதி உழைத்து வந்த அவ்விரு வம்சங்களும் அந்நிய நாட்டு நாக ரீகத்தின் விளைவாலும் குடியின் கொடுமையாலும் தம்மைத்தாமே தலைவரென மதிக் குஞ் சில செல்வந்தரின் அக்கிரமங்களாலும் தம்முள் வேறுபட்டு நாட்டின் சேமத்தை நாச முறச் செய்ய எத்தனித்தன. ஒருவரையொருவர் தாழ்ச்சியுறச் செய்யவும் அவர்கள் பெரும் பாடுபட்டு உழைத்தனர். கோசலவம்சத்தில் உள்ளானொருவன் கீர்த்தியுடன் வாழ்வனானால் நயினா வம்சத்தானுக்கு அது பெரும் மரண வேதனையைக் கொடுக்கும். அவ்வாறே நயினா வம்சத் தில் ஒரு புகழ்ச்சிக்குரிய பணி செய்யப்பட்டால் அது கோசல வம்சத்தாரின் மனத்தைப் புண் படுத்தும். இவ்வாறே நாட்டில் எவ்வித நற்கருமங்களும் நடப்பதற்கு இடையூறாயிருந்த இரு கட்சிகளின் பகையும் வளர்ந்து வளர்ந்து நாட்டிற்குத் தீரா அவமானத்தை உண்டாக்கிவிட்டது. கோசல வம்சத்தாராற் செய்யப்பட்ட நாட்டின் பணி வேலைகள் யாவும் மறுகட்சியினரால் நசிக் கப்பட்டுக் கொண்டேயிருந்தன. இவற்றை ஆலோசிக்கும் பொழுது தேச சேவையே பிறவியின் இலட்சியம் எனக் கொண்டே இளைஞன் சந்திரனின் மனம் புண்படாமலிருக்க முடியுமா? இதை நினைந்து நினைந்து அவன் உடல் துரும்பாக இளைத்து விட்டது. கல்வி கற்கும் பொழுது கசிந்துருகுவான்; உண்ணும் பொழுதும் எண்ணுவான்; நித்திரைக்குச் செல்லும் பொழுதுஞ் சித்தங் கலங்குவான்; எத்தொழில் செய்யும் பொழுதும் அவனுக்கு இவ்வெண் ணம் அண்மையில் நிற்கும். நாட்டின் விடுதலைக்குரிய மார்க்கம் யாதென்பதை அவன் பலப்பலவாறாக ஆலோசித்தான். மீட்சிக்குரிய ஒரு வழியும் அவன் புத்தியிற் புலப்படவில்லை.

வருடங்கள் சில சென்றன. பாலசந்திரன் நகரத்திலுள்ள ஓர் தபாற் கந்தோரில் உதவியதிபராகக் கடமை பார்த்து வந்தான். அவனது குடும்பத்தாரின் கவலை சிறிது சிறிதாக ஒழிந்தது. ஆனாலும் நாட்டின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட இளைஞனுக்கு நகரத்தில் எந்த நேரமும் வேலைசெய்துகொண்டு அடிமைக்குழியில் வாழ்வது பரம கஷ்ட மாகவிருந்தது. எனினும் தன் குடும்பத்தாரின் வறுமையை ஒழிக்க வேறுவழியின்மை யால் கடமையை ஒருவாறு செய்து வந்தான். ஆனால் இப்பொழுதும் அவனுக்கு நாட்டின் கேவல நிலை மறந்து போய்விடவில்லை. அடிக்கடி அது அவன் உள்ளத்திற் புகுந்து சொல் லொனா வேதனையை உண்டாக்கும். எத்தனை நாட்களுக்கு இவ்வாறு மன ஆறுதலின்றி அவனால் வேலை செய்ய முடியும். ஆகவே வெகு சீக்கிரம் உழைப்பிற்கு வேறுவழி பார்த் துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தான் சந்திரன்.

பாலசந்திரன் ஊரிலுள்ள வியாபார ஸ்தலமொன்றிற் கணக்கனாக நியமிக்கப்பட்டான். ஞாயிற்றுக் கிழமை தோறும் ஒய்வு நாட்கள், அன்றியும் விரும்பியபோது ஒய்வெடுத்துக் கொண்டாலும், கண்டிப்பாரெவருமில்லை. ஓய்வு நாட்களிற் சந்திரனை வீட்டிற் காண முடியாது. வீடு தோறுஞ் சுற்றித் திரிந்து சனங்களைக் கண்டு ஏதேதோ பேசுவான். ஒரு நிமிஷமாவது சும்மா இருக்கமாட்டான். தன் கிராமத்திலுள்ள இரு கட்சியாருக்குமிடையே

ஒற்றுமையுண்டாக்க அவன் படாதபாடுபட்டான். ஆனால் தேசத் தொண்டரைப் பிடித்து வாட்டும் பாழாய்ப்போன உடல்நோய் சந்திரனையும் பிடித்துக் கொண்டுவிட்டது. அவன் உடல் வரவர மெலிந்து படுக்கையிற் கிடக்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது. அளவுக்கு மிகுதியாகப் பேசுவதனால் அவனுடைய இருதயத்தில் நோய் உண்டாயிருப்பதாக வைத்தியர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். சில காலமாவது மௌனமாயிருந்து உடலைத் தேற்றிக் கொள்ளாவிட்டால் உயிருக்கே ஆபத்துவரக் கூடுமென அவர்கள் கூறினார்கள். அடுத்த வெள்ளிக்கிழமை கூடவிருக்கும் கூட்டத்தில் தான் பேசாதுவிட்டால் இதுவரையுங் கஷ்டப் பட்டு உழைத்த பணிகள் யாவும் விழலுக்கிறைத்த நீர் போலாகுமென்பதை நினைத்த பொழுது, சந்திரனின் விழிகளிரண்டும் நீரைப் பெருக்கின்றன. எப்படியாவது அன்று தன் பெற்றோரறியாமல் கூட்டத்திற்குச் சென்று பேசுவதென்று அவன் தீர்மானித்துவிட்டான்.

வெள்ளிழக்கிழமை சாயந்தரம் நான்கு மணிக்குச் சோலைமயிலுள்ள விளையாட்டு மைதானத்தில் சந்திரனின் இடையறா முயற்சியின் பயனாக ஏராளமான சனத்திரள் காணப்பட்டது. ஊரிலுள்ள ஆண், பெண், சிறுவர்களில் அநேகர் அவ்விடத்திற்குச் சமூகமாயிருந்தனர். சனத்திரளின் பெருக்கைக் கண்ட இளைஞன் சந்திரனுக்குண்டான ஆனந் தத்திற்கோர் எல்லையில்லை. கூட்டம் ஆரம்பமானது. தலைவரும் அநேகப் பெரியோர்களும் ஒற்றுமையின் மகத்துவத்தைக் குறித்துச் சொற்பொழிவுகளாற்றி விட்டுத் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர். பலத்த கரகோஷத்திடையே மேடையில் எழுந்தான் பால சந்திரன். கிராமத்தில் இரு கட்சிகள் உண்டாகிய காலந்தொட்டு இன்றுவரையும் நடைபெற்ற அட்டூழியங்களையும், அதனால் நாடு அடைந்துவருங் கேவல நிலையையும் ஒன்றுபட்டு வாழ்வதாலேற்படும் பயன்களையும், நாட்டார் ஒற்றுமையடைய உழைக்க வேண்டிய வழிகளையும் சபையோர் மனங்கசிந்துருகும்படி பிரசங்கஞ் செய்தான் இளைஞன். கூட்டம் கலைந்தது. அனைவரும் தத்தம் இல்லங்களை நோக்கிச் சென்றனர். ஆயின் அந்தோ! பாலச்சந்திரன் வாயிலும், மூக்கிலுமிருந்து சடுதியாக இரத்தம் பெருகத் தொடங்கியது. பார்த்தோர் மனம் நடுங்கியது. எவ்வளவு முயன்றும் இரத்தோட்டத்தைத் தடைப்படுத்த முடியவில்லை. அனைவரையும் வீடு போகும்படி அனுப்பிவிட்டு தன் கட்டிலிற் போய் படுத்துக் கொண்டான் சந்திரன். இரா முழுவதும் வேதனையால் நித்திரையின்றி அங்குமிங்கும் புரண்டுபுரண்டு கஷ்டமுற்றான்.

நாட்கள் பல சென்றும் சந்திரனால் எழுந்திருக்க முடியவில்லை. அவன் சுற்றத்தால் யாவரும் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். பாலசந்திரன் குணமடைவானென்ற நம்பிக்கையை அனைவருமிழந்திருந்தனர். அவன் பெற்றோருஞ் சகோதரரும் அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமுடையவராய்க் காணப்பட்டனர். தன்னுடைய ஆக்க வேலைகளெல்லாம் அழிவடைவதையும், நாட்டில் முன்போலவே பொறாமையும் வஞ்சகமுங் குடிகொள்வதையும், மக்களிடையே ஏற்பட்டுள்ள அருவருப்பான கலகங்களையும், சந்திரன் காலத்துக் காலம் தன் நண்பர்கள் மூலம் அறிந்து வந்தான். நயினா வம்சத்திற் தன்னைத்தானே ஒப்பற்ற தலைவனென மதிப்பவனும், தன்னை ஏழை மக்களனைவரும் அடிபணிய வேண்டுமென விரும்பியவனும், தன் செல்வமனைத்தையும் மறுகட்சியினரின் குடிசை களை அழிப்பதற்கே செலவு செய்பவனும், கிராமத்தின் அலங்கோல நிலைக்கு மூலவேர் போன்றிருப்பவனுமான அப்பாசாமி நயினார் என்பவனின் அடாச் செயல்களைப் பற்றிச் சந்திரன் முன் அநேக தடவைகளில் ஆலோசித்திருக்கிறான். இச்சமயம் சந்திரனின் மனம் ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தது போலக் காணப்பட்டது.

அந்தகாரமான நடு நிசி. பயங்கரமான கொடிய காரிருள் எங்குஞ் சூழ்ந்திருந்தது. சோலைமலையில் அனைவரும் நிம்மதியாக நித்திரையிலாழ்ந்திருந்தனர். கையில் ஓர் மின்சார வெளிச்சத்தையுங், கட்டியான வேறொரு பொருளையுங் கொண்ட ஓர் எழும்புந் தோலுமான உருவம் செல்வன் அப்பாசாமியின் பங்களாவை நோக்கி அசைந்தசைந்து நடந்து கொண்டிருந்தது. அவ்வுருவம் பங்களாவையடைந்ததும் படுக்கையறையின் யன்னல் மூலமாக மின்சார வெளிச்சத்தின் உதவியால் எதையோ கூர்ந்து கவனித்தது. அடுத்த நிமிடம் அவ்வுருவின் கையிலிருந்த வெடிகுண்டு படுக்கையில் இருந்த மனிதனின் மார்பிற் படாரென வீசப்பட்டது. சீக்கிரம் மெலிந்த உருவம் திரும்பி வந்த வழியே சென்று எவருமறியாமற் தன் படுக்கையிற் படுத்துக் கொண்டது. இன்றே தனது மாபெருங் கடமையை நிறைவேற்றி விட்டதாகப் பாலசந்திரன் மகா சந்தோஷமடைந்தான். அவன் உள்ளத்தில் எல்லையில்லாத ஓர் ஆனந்த உணர்ச்சி தோன்றியமைந்தது. வாழ்க்கையில் என்றுந் தன்னை அணுகாத மன நிம்மதியுடன் அவன் படுக்கையில் ஆனந்தமாகத் தூங்கினான். ஆனால்.... தூக்கத்திலிருந்து அவன் திரும்ப எழுந்திருக்கவில்லை.

காடையர்களுக்குக் குடிவகைகள் கொடுக்கவும், இழிதொழில்களிற் பணத்தை வாரியிறைக்கவும் ஒரு முட்டாள் தனவந்தர் இல்லாமையாற் சோலைமலை இன்று தன் பண்டைப் பெருமைகளுடன் சாந்த நிலையிலிருக்கிறது.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
கற்றவவானினும் நனி சிறந்ததுவே"

●

பொன்னழகு மைந்தன்

1935 ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மலரில் எழுதிய பொன்னழகு மைந்தனின் உண்மைப் பெயர் அறியுமாறில்லை. இவர் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். காந்தியின் சிந்தனையால் கவரப்பட்டு தமிழிலக்கிய உலகுக்கு பிரவேசித்தவர். இவருடைய கமலாவின் கனவு அல்லது கதருடைக் காதல் சிறுகதை கதருடையின் மகத்துவத்தையும் தேசத்தின் மீது நாம் கொண்டிருக்க வேண்டிய பக்தியையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

❖ *கமலாவின் கனவு அல்லது கதருடைக் காதல்*

கமலாவின் கனவு அல்லது கதருடைக் காதல்

பொன்னழகு மைந்தன்

"நம்பள் ஊரு பம்பாயிருக்கிறான். நம்பளகி புல்லே இல்லை. நா இப்போ வூட்டுக்குப் போவிருக்கிறான்." என்று கூறிக்கொண்டு ஒரு பாய் ஒரு வீட்டிற் புடவை விற்று விட்டுத் திரும்பும் சமயம் வந்தார் ஒரு சாஸ் திரி. அவர் தாடித் தாத்தா, தங்கமான மனிதர். வீட்டுக்குரியவர் அவரை அன்புடனழைத்தனர். ஆசனமுதவினர். ஆசனத்தமர்ந்த சாஸ்திரியார் "இங்கே கொடு பாய், உனது கையை. ரேகையைப் பார்த்துப் பலன் சொல்லுகிறேன். கொடுப்பாயா ரூபா ஒன்று" என்று கேட்டார். "நீ நம்ப ளுக்கு உம்மேசொன்னாக் கூடக்கொடுக்கும். இல்லேனோ இரண்ட ணாத்தான் கொடுக்கும்" என்றார் பாய்.

"உனக்கு ஒருவருடத்தால் ஓர் ஆண்மகவு பிறக்கும். மிக அதிஷ்ட முள்ள ஆம்பிளை. அம்மகவு கல்விக் கடல். கற்றவர் விழுங்கும் கனி. மற்றவரறியா மாணிக்க மலையாகிய அவன் பிறநாடு சென்று உயர் ஞானம் பெறுவான்" என்று சாஸ்திரி கூறி முடியுமுன் "உம்மே தானோ ஐயா? நம்மிடத்தில் பணமில்லையே" என்றார் பாய்.

உண்மை தான். நீ இப்போது குதிரைப்பந்தயச் சீட்டொன்று எடுத்திருக்கிறாய். அதனால் வருகிற மாசம் உனக்கு 50,000 ரூபா வரும். (ஓ கோ! கோ!! ஐயா கெட்டிக்காரம் தெரிந்துட்டு. கும்பிட்றேன், சாமி சொல்லுங்க சொல்லுங்க)

றைக்குச் சில மாதங்களின் முன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதில் இங்கிருந்து பயிற்சி பெற்ற பத்துப்பேரும், வண. வில்லவரசிங்கம் என்னும் குருவும் வசித்து வருகின்றனர். இவ் விதமே இடங்கள் தோறும் இதன் கிளைச்சபைகள் - தாபிக்கப்படுமென எண்ணக் கிடக்கின் றது.

இவர்களது தோட்டத்தில், எலுமிச்சை, தோடை, மாதுளை, நாரத்தை, முந்திரிகை, பப்பா, கோப்பி, கரும்பு, சணல், துவரை, அகத்தி, கொக்கோ, கத்தரி, பாகல், தக்காளி, வெண்டி, புடோல், பீர்க்கு, வாழை, மிளகாய்க்கன்று, சாமை, குரக்கன், புகையிலைக்கன்று, பயறு முத லிய பயிர்கள் காலத்துக்குக் காலம் உண்டாக்கப்படுகின்றன. இவற்றுக்கு இருவாழிகொண்ட இயந்திரத்தாலேயே நீர் பாய்ச்சப்படுகின்றது. இத் தோட்டத்தை விட, ஓர் பூந்தோட்டமும் மருந் துக்குச் சேர்க்கக்கூடிய சில மூலிகை வகைகளும் இங்கு உண்டு. இத் தோட்டங்களிரண்டும் உருவத்திற் சிறியனவாகவிருப்பினும், பெரும் பயனளித்துக்காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பான்மையில் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. இக்தோட்டத்திற் கிடைக்கும் பழ வர்க்கங்களைக்கொண்டு பல - விதமான அமிர்தங்கள் செய்து குறைந்த விலைக்குக் கொடுத்துவருகின்றனர். இவ்வமிர்தங்களால் பலவித நோய்கள் குணமடைந்து வருகின்றன வென அவற்றை வாங்கி உபயோகித்தார் கூறுகின்றனர்.

இங்கு தேனீ, புறா, கோழி, மாடு முதலியனவும் வளர்க்கப்படுகின்றன. தற்போது இவர் கள் வசிக்கும் இல்லம் போதியதாகக் காணப்படாமையால், இவ்வாச்சிரமத்துக்குச் சமீபமாக ஓர் இல்லத்தைப் புதிதாக அமைப்பதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆரம்பத் தில் ஆறு பிரமச்சாரிகளுடன் தொடங்கப்பட்ட இச்சபையில் தற்போது முப்பத்துநாலு பிரமச்சா ரிகள் சேர்ந்திருப்பதே இதன் வளர்ச்சியைக் காட்டுவதாகும். இப்பிரமச்சாரிகள் இந்தியா விலி ருந்தும், இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்து சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் என்னும் இருபாஷைகளின் மூலம் சமயபோதனை செய்யப்படுகின்றது. நாளடைவில் ஏனைய பாஷையாளருக்கும் அவரவர் பாஷையில் சமய போதனை செய்யக் கூடிய ஒழுங்குகள் செய்யப்படும். இவ்வாச்சிரமத்துக்குப் பலரும் பலவிதமான உதவிகளைப் புரிந்து வருகின்றனர். இவ்வித கத்தோலிக்க ஆச்சிரமம் ஆங்கில நாட்டிலன்றி இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் இல்லை. ஆதலால், உலகமெங்கனும், ஒவ்வொரு சமயத்த வரும் இவ்வித ஆச்சிரமங்களை அமைத்துக் கடவுள் நெறியை வளர்க்க வேண்டு மென்பதே எமது பேரவாவாகும்.

ஆகா!இன்னுஞ் சொல்கிறேன் கேள். இரண்டு நாட்களால் உனக்கு ஒரு தத்து. தெரு வீதியில் வண்டி, கார் ஆகியவைகள் கவனம். (ஆ! சாமி நம்பள் செத்துப் போமா?) இல்லை இல்லை, நீ சாகமாட்டாய். நீ செத்தால் ஒருவருடத்தால் எப்படிப் பிள்ளை கிடைக்கும்.

“இவ்வளவுக்கும் பத்து ரூபா கொடுத்தாற்றான் மிகுதி சொல்லலாம்” என்று சாஸ்திரி கேட்டவுடன் பாய் தான் வியாபாரஞ்செய்து வைத்திருந்த பத்து ரூபா சொச்சத்தில் பத்து ரூபாவையும் சாஸ்திரியாரிடத்திற் கொடுத்து மிகுதியைத் தனது வழிச் செலவுக்குப் பையிற் போட்டு வைத்தார்.

இவ்வளவு தான் வேறொன்றுங்கூறவியலாதெனக் கூறிச் சாஸ்திரி அவ்விடத்தை விட்டகன்றார்.

நமது பாய்க்கு அன்றிரவு நித்திரையே கிடையாது. தமக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையைப்பற்றி யோசிக்கத் தொடங்கினார். பல யோசனைகளின் பின் ஒருவாறு இரண்டு மூன்று நாட்களில் கைவசமிருந்த துணிகளைக் கேட்டவிலைக்கு விற்று விட்டு ஊருக்குப் போவதாகத் தீர்மானித்தார். தமது நாயகிக்குத் தான் கூடிய சீக்கிரத்தில் ஊருக்குத் திரும்பி வருவது பற்றியும் சாஸ்திரியார் கூறிய அதிஷ்டங்களைப் பற்றியும் கடிதம் எழுதி அனுப்பினார். இரண்டு நாட்களில் கைவசமிருந்த சரக்குகளை வீடுவீடாகச் சென்று விற்றுவிட்டார். பணம் இரு நூறு ரூபாவரையிற் சேர்ந்தது.

பாய் பிரயாணமாகி வண்டிவரக் குறிப்பிட்ட நேரத்துக்கு மூன்று மூன்றரை மணித்தியாலங்களுக்கு முன் புகையிரத ஸ்தானம் வந்து சேர்ந்தார். மூன்றாம் வகுப்புச் சீட்டெடுத்தால் ஒருசமயம் இடமில்லாது போகுமென்ற யோசலையால் இரண்டாம் வகுப்புக்குச் சீட்டெடுத்தார். புகையிரதம் ஒரு மைலுக்கப்பால் வருஞ் சத்தம்கேட்டது. நமது பாய் இருந்த விடத்தில் இருந்து எழுந்து கைப்பைபுடன அவசரப்பட்டு நின்றார். புகையிரதம் கண்ணுக்குப் புலப்பட்டது. பாய் ஒரு சமயம் புகையிரம் அந்த ஸ்தானத்தில் தங்காது போய்விடுமோ வென்று போசித்துக் கீழே இறங்கி வண்டி வரும் பாதையில் நின்று சிறு நேரம் தாமதிக்கும்படி, கைகாட்டினார். இதற்கிடையில் புகயிரதக் கூலியாள் ஒருவன் திடீரென இவரைப் பிடித்திழுத்து ஸ்தான மேடைக்குக் கொண்டுபோனாராயினும் இவரது கால் ஒன்று வண்டியின் சக்கரத்துக்குள் அகப்பட்டுவிட்டது. இஃது இவ்வாறாக;

பாயின் கடிதத்தை வாசித்தவுடன். “அந்தப் பரம் பொருள் தான் சாஸ்திரி வடிவாகச் சென்று நாயகனைச் சோதித்து இருக்கிறார் இது அவரின் அருட்டிருவிளையாடல் எமக்கு ஆண்பிள்ளை பிறக்கும் என்பது - நிச்சயம் என்று மனசிலெண்ணிப் பெரியதொரு உவகை கொள்ளலும், இரண்டு மூன்று நாட்களில் திருப்புவதாக எழுதி இருந்தாரே இன்னும் வரக் காணவில்லையே என்று யோசித்துத் துன்பங்கொள்ளலுமாகிய இரண்டும் ஒரு கணத்தில் காணப்பட்டன. சரோஜா பாய்க்கு லடபாய் பிரதம வைத்தியசாலையிற் கடினமான வருத்தமாய் இருக்கிறார் என்னும் செய்தி தந்திமூலம் கிடைத்தது. சரோஜா பாய்க்கு மனஞ் சகிக்கவில்லை. இரண்டு மூன்று , தினங்களில் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தாள். அன் றைய தினமே லடபாய்க்குக் குதிரைப் பந்தயத்தில் ரூபா - 50,000 கிடைத்திருப்பதாகச் செய்தி கிடைத்தது. மூன்று வாரங்களால் பாய் சுகமடைந்து விட்டார். சுகமடைந்தும் முடவனாகவே இருந்தார். சிறிது நாட்களில் இருவரும் ஊருக்குச்சென்றார்கள்.

ஒராண்டின் பின் ஒர் ஆண் குழந்தை பிறந்தது. ஐந்து வயதானதும் வித்தியாசாலைக்கு அனுப்பினார்கள். பிள்ளையோ சற்குணன். அழகில் மன்மதன் கல்வியில் சமபன்; கொடையிற் கர்ணன் என்னும் படியானான்.

மகனின் கல்வியையிட்டுப் பாய் ஒரு சதமேனுஞ் - செலவிடவில்லை.

இவனது கல்வித்திறமையையும் புத்திக்கூர்மையையும் வித்தியாசாலை அதிகாரிகள் கண்டு பரிசில் வழங்கித் தங்கள் பொறுப்பிலேயே கல்வியூட்டுவித்தார்கள். கல்லூரிப் படிப்புப்

பதினாறு வயசில் முடிந்தது. அவன் இங்கிலாந்தேகிக் கற்றுப் பரிஸ்டராக வேண்டும். அதற்கு உதவி செய்ய வேண்டுமெனப் பிதாவை வேண்டினான். பிதாவும் உடனே விடையளித்து 50,000 ரூபாவையும் - வங்கியில் இட்டு இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார். .

மகேந்திரபாய் ஒக்ஸ்பேட் சர்வகலாசாலையில் உயர்தர பரீட்சைகளுக்கு வாசித்துக் கொண்டிருக்குக் காலங்களில் பாராளுமன்றத்துக்குப் போய்ச் சேர்ச்சியில் முதலிய பிற் போக்கான அங்கத்தவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதுண்டு. சில சமயங்களில் தனது சுய

* ஒருநாள் சரோஜா அன்பு காரணமாக, மகனைப் பார்த்து “மகனே! நீ கெட்ட பிள் ளைகளுடன் சகவாசஞ் செய்வதுண்டா? அப்படிப்பட்டவர்களோடு நட்புக்கோடல் ‘பன்றி யுடன் கூடிய கன்றும்...’ “இல்லையம்மா! ஒருபோதும் இல்லை. நான் கெட்ட பிள்ளைகளுடன் கூடுவ தில்லை. ஆனால் கெட்டபிள்ளைகள் என்னுடன் கூடி ‘கன்றுடன் கூடிய பன்றியும் பால் குடிக் கும்” என்ற பிரகாரம் திருந்தி விடுவதுண்டு ” என்று பதில் உரைத்தான்.

தேசத்தை அரசாட்சி செய்யும் ஆங்கிலேயரின் ஆட்சி முறைகளைப்பற்றி நினைப்பது முண்டு. இவருக்குத் தன்னையறியாது அரசியல் விடயங்களில் ஒரு பெரும் பற்று வந்து விட்டது. ஆங்கிலேயர் பலர் இந்தியா இலங்கை முதலிய தேசங்களிற் பெரிய பதவிகளை வகித்து வருவதும் தம்மிலும் பார்க்கச் சிறப்பற்றவர்களுக்குச் சிவில் சேவிஸ் முதலிய உத்தி யோகங்கள் கொடுக்கப்பட்டு அவர் கடமை பார்ப்பதும் இவரது மனத்திற்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஆனால் அவர்களிற் சிலர் சில சமயங்களிற் குடிசனங்களுக்குச் செய்யும் அவமரியாதை முதலியவற்றை யோசித்தபோது அவர்களில் மனவெறுப்புக்கொண்டார். இவ்வளவில் இவருடைய மனதில் தேசாபிமானமும் சுயநாட்டுப் பற்றும் குடிகொண்டு விட் டன. இவர் சிவில் சேவிஸ் பரீட்சையிற் சித்தியடைய வேண்டுமென்ற எண்ணத்தை விட்டார். எனது சகோதரர் இந்த நிலையில் வருந்த நான் அரசினரின் கீழ் மேன்மை பொருந்திய உத்தியோகங்களை ஏற்றுப் பொருளீட்டுவதின் பயன் யாது? இவர் சுயநாட்டுக்காகச் சேவை புரியவேண்டுமென்று பலவாறு யோசிக்கத் தொடங்கினார். சிறிது காலத்திற் சர்வசலாசாலைப் பட்டங்களை பெற்றுக்கொண்டும் பரிஸ்டராகப் பதிவு செய்து கொண்டும் சுயதேசத்துக்குத் திரும்பினார். இது நிற்க,

வங்காளத்தில் ஓர் பெருந் தனவந்தரின் ஏகபுத்திரியான கமலா என்பவள்,.. அழகில் ரதிபோன்று யாவரின் மனதையுங் கவர்ந்து வந்தாள். இவள் சர்வகலாசாலையில் பீ. ஏ. பட்டம் பெற்றவள். அவ்வூர்ச் சனங்கள் எல்லோரும் இவளது குணாதிசயங்களை மெச்சி வந்தார்கள். ஒருநாள் இரவு இவள் ஓர் கீர்த்தி பெற்ற பரிஸ்டருடன் கூடிச் சென்று ஓர் பூங்கா வனத்தி லிருப் பது போல கனவு கண்டாள். இது சம்பவத்தை மறுநாள் கமலா தனது தோழிப் பெண்களிடம் வேடிக்கையாகச் கூறினாள். பெண்களும் “அதன் பின்னும் எங்களைக் கவனிப்பார்களா? பரிஸ்டரும் நீங்களுமாகத்தான் இருப்பீர்கள் சரி ஆகட்டும்.” என்று வேடிக் கையாகக் கூறி னார்கள். ஒருநாள் அவளது தகப்பனார் சில பாட்டுத் தட்டுகளை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார். “கற்புள்ள மங்கையர் மேலே விழக் கண்டோமே யன்னிய நாட்டுச் சேலை” என்று அந்தத் தட்டொன்றில் பாடியிருக்கக் கேட்டு மனம் பதைபதைத்து” நான் உடுத்திருப்பது

முதற்றாமான பிரித்தானிய பட்டல்லவா? எனது கற்புக்குப் பங்கம் வந்து விட்டதே"யென நினைத்துத் தன் வசமிருந்த அந்நியநாட்டுச் சேலைகளனைத்தையும் தீக்கிரையாக்கினாள். இதை அறிந்ததும் பிதாவுக்குக் கோபம் மூண்டது. பலவாறாகத் தனது அருமை மகளைத் தூஷித்தார். ஆயினும் மகள் தெளிவாக விடயங்களைத் தகப்பனாருக்கு எடுத்துரைத்தாள். பெற்றோரேயன்றி வீட்டுப் பணிமக்களையும் கதரே உடுக்கச் செய்தாள். பாரதி பாடலை வீணையுடன் பலநாற் படித்துவந்தாள். வந்தே மாதரமென்பதும் "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே" - "கதர்க்கப்பல் கொடி தோணுதே" "தாழ்த்தப்பட்ட சோதரைத் தாங்குவாருண்டோ" என்றாற்றொடக்கத்துப் பாடல்களும் கமலா வீட்டுத் தெருவாற் செல்பவர்களின் செவிகளில் வீழ்ந்து கொண்டிருக்கும். இது மாத்திரமா! எப்போது நான் சுயநாட்டுக்குத் தொண்டு புரிவேன் எப்போது பிதா விடை அளிப்பார் என்பவைகளே கமலாவுக்கு நித்தமும் யோசனைக்கு வரும். கமலாவின் பெற்றோர் இந்தப் பிள்ளையென்ன? "கான மயிலாடக் கண்டிருந்த..." என்ற பிரகாரம் வீட்டு வேலையற்ற பெண்கள் சிலர் பிள்ளைகளைத் தெருவழியே அலையவிட்டுச் சத்தியாக் கிரகஞ்செய்து திரிவதைக்கண்டு தானும் அவர்களுடன் செல்லவேண்டுமெனத் தலையை உடைக்கிறாளே. யாரேனும் ஒருவனின் கையிற் கொடுத்து விடுவோம்" என்று சம்பாஷித்துக் கொண்டிருக்கும் சமயம் ஓர் கடிதம் கிடைத்தது. "இறைவனருளால் இன் புற்றிருக்கும் அன்புடை மைத்துனருஞ் சகோதரியும் - அறிவது: எனது மகன் சிவில் சேவிஸ் இரண்டாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டு வேறு ஜில்லாவுக்குக் கலைக்டராக வருகிற மாசம் போகயிருக்கிறான். கமலாவின் காரியத்தை நிறைவேற்றி வைக்கத் தங்களுக்கு விருப்பமானாற் சிக்கிரம் விடை அனுப்பவும்"" என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

கமலா மேன்மாடத்தில் தேசீயம் என்னும் தலையங்கத்துடன் திரு. மகேந்திரா M. A. (Oxon) L.L.B.பரிஸ்டர் அவர்களால் எழுதப்பட்ட வியாசத்தைப் பத்திரிகையில் படித்துக் கொண்டிருந்தாள்: இவளுடைய பிதா மேன்மாடத்துள் பிரவேசித்துப் பிள்ளாய்! என்ன வாசித்துக் கொண்டிருக்கிறாய்? (விடயத் தலையங்கத்தை எட்டிப் பார்த்துவிட்டு) ஓகோ! தேசியமாம். அதுதான் உனக்கு எப்போதும். இருக்கட்டும். இங்கேவா: இப்படி உட்கார்ந்து கொள். உனது மைத்துனன் இராஜாபாய் சிவில் சேவிஸ் பதவி உத்தியோகத்தில் உயர்த்தப்பட்டு வேறு ஜில்லாவுக்குப்போக இருக்கிறாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. அதற்கு முன் உனது திருமணத்தை முடித்து அவர் கையில் உன்னைக் கொடுக்கவேண்டியிருக்.... " சரி! சரி! பிதாவே! இது தான் தாங்கள் எனக்குச் செய்யவேண்டிய அரிய காரியம். மன்னிக்க வேண்டும். குரங்கின் கையிற் பூமாலை போற்தானிருக்கும். என்னால் முடி யாது" என்று அருவருப்பாகக் கூறினாள் கமலா.

பிதா உண்மையாகவே இது போன்ற விடை காத்திருக்கவில்லை. ஆதலால் தட தடப்பாகப் பேசத்தொடங்கிச் சிவில் சேவிஸிலிருக்கும் பெருங் கலைக்டரை மணஞ் செய்யா விட்டால் வேறு யாரைக் கலியாணஞ் செய்யப் போகிறாய்? கவணர் வேண்டுமா? என்ன பிள்ளை பேதமை. ஆங்கிலத்தில் பி. ஏ. யா சித்தியடைந்து இருக்கிறாய்? சொந்த மைத்துனன்; பதவியிலோ "கலைக்டர்" உனக்கு இது கிடைக்கக் கூடிய காரியமா? வீண் எண்ணங்களை விட்டு விடு! என்றார்."பிதாவே! மன்னிக்க வேண்டும். "கலைக்டர்" என்ற தினால் மயங்கி விடுவதா? உத்கியோகத்தை மாத்திரம் பார்த்தாற் போதுமா? குணாதிசயங்கள் பார்க்க வேண்டாமா? தங்கள் மருகன் ஆங்கில நாட்டில் இருந்தபோது நடந்து கொண்ட மாதிரியை

அறியவில்லைப்போலும்... அன்னிய தேசத்தவரின் கட்டளைப்படி ஊழியஞ்செய்துதான் தங்கள் மருகன் பொருளீட்டுகிறார். தனது தேசத்தவராகிய சகோ தரருக்கு மாறாக ஆங்கிலேயருடன் ஒத்துழைக்கிறார். அன்னிய நாட்டு உடை நடை பாவனைகளைப் பின்பற்றி நடக்கிறார். பிதாவே! வேண்டாம்! வேண்டாம். என்னால் முடியாது! இதோ இந்த வியாசத்தில் சிவில் சேவிசிலுள்ள இந்தியரைப் பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது பாருங்கள்" என்று அழுத்தமாய்க் கூறி விட்டுப் பத்திரிகையைப் பிதாவிடம் கொடுத்தாள், பிதாவும் பத்திரிகையுடன் மாடத்தைவிட்டகன்றார். கமலாவின் தகப்பனார் பத்திரிகையில் உள்ள விஷயத்தைப் படித்ததும் மயங்கிவிட்டார். இந்த மகேந்திரா என்னும் பரிஸ்றர் யாரென்று யோசித்தார். புலப்படவில்லை. பத்திரிகையின் பக்கங்களை ஒவ்வொன்றாகப் பார்க்த் தொடங்கினார். உயர்தர நீதிமன்றத்தில் ஓர் பெரிய வழக்கு விசாரணை செய்யப்பட்டதாகவும், பரிஸ்டர் மகேந்திரா நீதிபதிக்கு எடுத்துக்காட்டிய சட்ட அனுசரணைகளாலும், அவரது வாக்கு வன்மையாலும் அவர் ஏற்பட்ட பக்கத்துக்கே அனுகூலமாகத் தீர்வையாய் இருப்பராகவும் ஒரு பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்தது. நமது கிழவனார் எடுபட்டுவிட்டார். தனக்கும் தனது மைத்துனனுக்கும் காணிசம்பந்தமாக இருக்கும் சிவில் வழக்கிற்கும் மகேந்திராவையே ஏற்படுத்துவதாக நிச்சயித்துத் தன து தரணி மூலமாகவும் கேந்திராவுக்குக் கடிதம் அனுப்பினார். அது போன்ற வழக்குகளுக்குத் தான் 50,000 ரூபா வாங்குவதாகவும், அதற்கு மேற்படத் தான் தனது ஊரில் இருந்து உவ்விடம் வருதற்குச் செலவு கொடுத்தால் வருவதாகவும் பதிலளித்தார். கமலவின் தகப்பனார் அதற்குடன்பட்டு இவரை வரும்படி எழுதினார். வழக்கு விசாரணைக்கு முதனாள் சாயந்தரம் பரிஸ்டர் மகேந்திரா கமலாவின் ஜில்லாவுக்கு வந்து விட்டார். தனது வேதன விஷயமாகச் சம்பாஷிப்பதற்காகக் கமலாவின் தகப்பனாரிடம் வந்தார். கமலாவின் தகப்பனாரும் மகேந்திராவின் அழகையும், தோற்றத்தையும், வாக்குவன்மையையும் கண்டு மயங்கிவிட்டார், சிற்றுண்டி வழங்கியபின் தனது பூங்காவனத்துக்கு அழைத்துச்சென்றார். தோழிமார்கள் வாசமலர்க்கொடியில் ஊசலாடவும் நறுமலர் கொய்துமாலை புனையவும் இன்னும் பலப்பல துறைகளிலும் பிரிந்து செல்லப் பூங்காவனத்தில் தமியளாய் நின்ற கமலா தான் ஓரிரவு கனவிற் கண்ட புருஷோத்தமன் தனது தகப்பனாருடன் பூங்காவனத்துக்கு வருவதைக் கண்டு நாணமுற்று மயங்கி நின்றாள். தகப்பனார் மகேந்திராவை அறிமுகப்படுத்தியதும் தான் பத்திரிகை வாயிலாக அன்பு கொண்டு இருந்தவரும் கனவிற்கண்ட வரும் ஒருவராக இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்து தலை குனிந்த வண்ணம் யோசிக்கத் தொடங்கினாள். மகேந்திரா கமலாவின் கட்டழகையும் மடபத்தைதயும் கவனித்ததும் அவரை அறியாமலே மனம் அவள் பாற சென்றுவிட்டது. கதர்ச் சேலை கட்டியிருப்பதைக் கண்டு அதிக சந்தோஷப்பட்டு, "ஓர் பிரபுவின் ஏகபுத்திரி கதருடை. அணிந் திருக்கிறாள் போலும்? "என்று புன்சிரிப்புடன் கேட்க, கமலா" ஆங்கிலநாடு சென்று பாண்டித்திய பட்டம் பெற்று விளங்குவோர் கதர் உடை அணிவதானால் அதன் மகிமையை என்சொல்வது! அதன் மகிமை அறிந்தே நானும் அணிந்தேன் என்றுசிரிப்பும் கதையுமாகக் கூறினாள். தகப்பனாருக்கும் இவர்களின் மனக்கொள்கையினொற்றுமை புலப்பட்டது. பரிஸ்டர் தனது விடுதிச் சாலைக்குச் சென்றார். கமலாவும் தகப்பனாரும் வீடு சென்றனர். கமலா மகேந்திராவுக்குத் தனது காதலைக் கடிதம் மூலம் தெவித்தாள். மகேந்திராவும் கழிபேருவகை கொண்டு பதிற் கடிதம் வரைந்தார். கமலா தனது தாயாரிடம் தனது மன எண்ணத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமெனக் கூறினாள், வழக்கு விசாரணை முடிய மூன்று நாட்கள் சென்றன. நீதிபதி

பரிஸ்டர் மகேந்திராவைப்பற்றிப் புகழ்ந்துரைத்து வழக்கைக் கமலாவின் பிதா சார்பாகவே தீர்த்தார். கமலாவும் இது செய்தியை அறிந்து உவகைக் கடலில் ஆழ்ந்தாள். கமலாவின் தகப்ப னாருக்கும் தாயாருக்கும் மகேந்திரா மீது அன்புமிக்கது. அவர்களும் கமலாவின் எண் ணங்களுக்கு இசைந்தார்கள். கமலா கடிதம் மூலமாக எல்லாச் செய்திகளையும் மகேந்தி ராவுக்கு அறிவித்து வந்தாள். மகேந்திரா தனது பெற்றோருக்கு இது சம்பவத்தைக் கூறி விடை பெற்று அவர்களுடன் கமலாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். திருமணச் செய்தி யாவருக்கும் அறிவிக்கப்பட்டது. அநேக பிரபுக்கள் சமுகத்தில் விவாகம் நடைபெற்றது. சிறிது காலத்தின் பின் இருவருந் தேச நன்மைக்காகத் தமது பொருள்களைத் தியாகஞ் செய்யத் தொடங் கினார்க ள். ஆங்கிலேயர் என்றால் இவர்களுக்கு அக்கினிப் பாயாசம் போலிருக்கும். விவாகஞ் செய்த பின் மிகவும் சொற்ப காலத்துக்குள் நீதிமன்றத்துக்குப் போகும் வேலையை விட்டுவிட்டார். மகேந்திரா விவாகஞ் செய்யுமுன் பரிஸ்டராக இருவருடங்களிற் சம்பாதித்த தொகை வங்கிக் கணக்கின்படி ஏறக்குறைய இருபது லட்சம் ரூபா. தாய் தந்தையர் கமலாவுக குக் கொடுத்த தொகை ஏறக்குறைய நாற்பது லட்சம் ரூபா. இப்போது இவ்வறுபது லட்சம் ரூபாவையும் தங்கள் உடல்பொருள் ஆவி ஆகிய எல்லாவற்றையும் தாய்நாட்டிற்காக அர்ப்பணம் செய்து தியாக புருடர்களாக யாவர் மதிப்பையும் பெற்று விளங்குகின்றனர்.

ஈழகேசரி ஆண்டு மடல் - 1935

எஸ். என்

மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி சிற்றிதழ் ஊடாக அறியப்பட்ட என்.எஸ். "விதியின் விளையாட்டு" என்ற சிறுகதையை எழுதியவர். பாத்திரங்களின் குணப்பண்புகள், மனோநிலைகளை தனிமனித எண்ணஅலைகளுக்கூடாக வெளிப்படுத்தும் எஸ்.என்னின் "விதியின் விளையாட்டு" சிறுகதை காதலினால் ஏற்படும் மன உழைச்சல்களை சிறப்பாகச் சித்திரிக்கின்றது. இவருடைய புனை பெயரும் அறியுமாறில்லை.

❖ விதியின் விளையாட்டு

விதியின் விளையாட்டு

எஸ்.என்

மாலை மணி நான்கிருக்கும். மரங்களடர்ந்த ஒரு நதிக்கரையருகே தினசரியொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். ஆற்று நீரின் வழியே மெல்லெனத் தவழ்ந்து கொண்டிருந்த இளந்தென்றல் என் மனதைப் பரவசமடையச் செய்தது. கிளைக்குக் கிளை தத்தித் தத்தி விளையாடிக் கொண்டிருந்த பறவைகளின் இனிய கானமும் என்னை இன்புறுத்திற்று. இதனிடையே தினசரியிலிருந்த ஒரு கட்டுரையின் தலைப்பெயர் என் மனதைக் கவர்ந்தது. முடிவுவரை வாசித்தேன். சலனமற்றிருந்த என் மனதை அக்கட்டுரை சிதறடித்துவிட்டது. என்னுடைய வாழ்க்கையிலேற்பட்ட பழைய சம்பவங்களையெல்லாம் கிளறி விடுவதாக இருந்தது அது.

நானும் ராஜமும் இணை பிரியாத உறவினர்கள். தாயார் எனக்குச் சிறுவயதாயிருக்கும் போதே இறந்து விட்டாள். குழந்தைகள் நானும் கமலாவும்தான். என் தங்கையாக்கும் அவள். அம்மா இறந்தது ஏதோ கனவு போலத் தெரிகிறது எனக்கு. அம்மா இறந்த பின்னர் அப்பாவின் தங்கையாகிய எங்கள் அத்தையின் வீடே சொந்த வீடாகி

விட்டது எங்களுக்கு. எனக்கு அத்தையின் வீட்டில் விளையாடுவதென்றால் ஓர் அலாதியான இன்பம். அதன் காரணம் எனக்கு அப்போது விளங்கவில்லை. அத்தான் தியாகு எங்களூர் தமிழ்ப் பாடசாலையிலிருந்து விலகிச் சங்கீதம் கற்பதன் பொருட்டு அண்ணாமலைப் பல் கலைக்கழகத்திற்குச் சென்றது எனக்கு இப்போதும் நன்றாக ஞாபகத்திலிருக்கிறது. அப்போது நான் நான்காவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன்.

நாட்களும் மாதங்களும் போய் வருடங்கள் பல மின்னலைப் போல் மறைந்து சென் றன. காலமும் செல்லச் செல்ல உலகமும் மாறிக்கொண்டு தானே போகின்றது. கமலாவும் ராஜமும் கன்னிப் பருவத்தை அடைந்தனர். எனக்கு அப்பொழுது வயது இருபதுக்கு மேலி ராது. அத்தான் தியாகு எங்களூர் தமிழ்ப் பாடசாலையில் சங்கீத ஆசிரியராக நியமனம் பெற்று விட்டான். பாடசாலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களிலுங்கூட நாங்கள் சங்கீதம் பயின்று வந்தோம். இப்படியாக வருடங்கள் இரண்டு மறைந்தன. இடைவிடா பயிற்சியின் காரணமாக எங்களது சங்கீத ஞானமும் வளர்ந்து கொண்டே போயிற்று. என் தங்கை கமலா பிடில் வாசிப்பதில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தாள். ராஜமும் அவளைப் பார்க்கிலும் குறைந்த நிலையி லில்லை. நானும் ஓரளவு பாடுவேன். லய வாத்தியமாகிய மிருதங்கம் வாசிப்பதில் எனக்கு ஆர்வமதிகம். எனினும் நான் கற்றது கைமண்ணளவும் இல்லையே என்ற எண்ணம் என் மனதை வருத்திற்று. இதனால் வேறெங்கேயாயினும் போய் இன்னும் கலை பயில வேண்டு மென எண்ணினேன். அத்தான் "அதெல்லாம் வேண்டியதில்லை கூடிய சாதனையினா லேயே எல்லாம் திருந்தி விடும்" எனக் கூறினான். இதனால் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டேன், எனினும் எங்களூரில் சங்கீத ஞானத்தில் எங்களைவிடச் சிறந்தவர்கள் இல்லை என்பதில் எங்களுக்குப் பெருமை இராதா என்ன?

எங்கள் தேகமும், கலையும் எவ்வாறு விருத்தி அடைந்து வந்தனவோ, அவ்வாறே எங்களிடையே அதாவது நாங்கள் ஒருவர் பேரில் ஒருவர் கொண்டிருந்த அன்பும் விருத்தி யடைந்து கொண்டுதான் வந்தது. நான் ராஜத்திடம் கொண்டிருந்த அன்பு, காதல் என்னும் அடுத்த படியில் கால் வைத்துவிட்டதென்பது எனக்குத் தெரியாமலில்லை. எதிர்பாராத விதமாக அத்தானும், என் தங்கை கமலாவும் காந்தர்வ முறைப்படி திருமணம் செய்துகொண்டனர். இது விஷயமாக எனக்கு எவர் பேரிலாவது கோபமோ, மனவருத்தமோ கிடையாது. ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயப்படுத்திக்கொள்ள எவ்வளவோ உதவியாக இருந்தது அந்தச் சந் தர்ப்பம் எனக்கு. அது எனது ராஜம் என்றும் எனக்கே உரியவள் என்பதுதான். அதற்கான காலத்தினை நான் எவ்வளவோ பொறுமையுடனும், ஆசையுடனும் எதிர்பார்த்திருந்தேன். அத்தான் தியாகுவுக்கு நான் ராஜத்தை மணந்து கொள்வதென்பது கொஞ்சங்கூடப் பிடிக்காத விஷயம் என்பது எனக்கு அப்போது எவ்வாறு விளங்கும்? ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்துக் குவியல் குவியலாகப் பணமூட்டைகளைக் குவித்து வைத்திருக்கும் அச காய சூரனான தனவந்தனொருவனுக்கோ, அன்றேல் பண்பட்ட தனது தாய்மொழியையும், சொந்த நாகரிகத்தையும் மறந்து அந்நிய நாகரிகத்தின் அதிமட்டரகமான கொள்கைகளைக் கண்ணை மூடிக்கொண்டு கடைப்பிடித்துத் தெருவோரங்களிலும், மூலைமுடுக்குகளிலும் கண்ட பெண்களுக்கெல்லாம் கண் சிமிட்டிப் பல்லிளித்து திரியும் வாலிபனொருவனுக்கோ அவுளைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினானாக்கும் அவன்.

எத்தனையோ தருணங்களில் நானும் ராஜமும் ஒன்றாக சினிமாவுக்கும், கோயில் உற்சவங்களுக்கும், வேறு விஷேட வைபவங்களுக்கும் சென்றிருக்கிறோம். இரா வேளை களில் படுக்கைக்குப் போக நடுநிசி ஆகிவிடும். அதுவரையும் எங்கள் பிற்கால வாழ்க்கை யையிட்டு ஆகாயக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருப்போம். அவளை விட்டுப் பிரிவதென்றால் எனக்கு எதையோ பறிகொடுத்துவிட்டுப் போவது போன்றிருக்கும். அன்று எங்களூர் பட மாளி கையில் “மோஹினி” என்ற பிரபல்யமான படம் காட்டப்படுவதாக இருந்தது. ஊர் முழுவதும் ஒரே குதூகலம். இதற்குத் தவறாமல் அவளையும் அழைத்துப் போக வேண்டுமென்ற விருப் பத்துடன், அவள் வீட்டை நோக்கி நடந்தேன். அவளை சந்தித்ததும் நேரடியாக என் எண்ணத் தைத் தெரிவித்தேன். ராஜத்தை என் விருப்பத்திற் கிணங்கச் செய்யப் பெரிதும் முயன்றும், என் முயற்சி அன்று பயனளிக்காமற் போனது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. என்று மில்லாத முரட்டுப் பிடிவாதத்துடன் காட்சியளித்தாள் அவள். ஏதேதோ வீண் நியாயங் களை யெல்லாம் அடுக்கிக் கொண்டே போனாள். அன்று அவள் பேச்சு உயிர் உணர்ச்சியற்று இருந் தது. எல்லையற்ற ஏமாற்றத்துடன் இவள் வீட்டை விட்டு வெளியேறினேன். அன்று இரவு முழு வதும் எனக்கு நித்திரையே இல்லை. அதன் பின்னர் அவள் வீட்டுப் பக்கம் அடியெடுத்துக்கூட வைக்கவில்லை.

பொழுது மறைவதற்கு இரண்டு மணி நேரமிருக்கும். மந்தமாருதம் இலேசாக வீசும் பகற்காலத்திலேற்பட்ட உஷ்ணத்தைச் சாந்தி பண்ணிக் கொண்டிருந்தது. நானும் வழக்கப்படி எனது மிருதங்கத்தை எடுத்துக் கொண்டு எங்கள் வீட்டுக்குப் பின்கோடியிலுள்ள மாந் தோப்பிற்குச் சென்று அதனை அப்பியாசித்துக் கொண்டிருந்தேன். கால் மணிநேரம் கூடச் சென்றிருக்காது. “யாரது? அத்தானாக்கும்” என்று ஒரு குரல் எங்கிருந்தோ ஒலித்தது. திரும்பிச் சத்தம் வந்த திக்கை நோக்கினேன். ரதி தேவியோ என ஐயுறும் வண்ணம் வந்து கொண்டி ருந்தாள் ராஜம் அழகு சொட்ட “ஆம் உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்” என்று கூறியவாறு என்னையும் மறந்து ஏதோ ஒரு பாட்டை ஆரம்பித்தேன். இதற்குள் என் பக்கத்தி லேயே வந்து உட்கார்ந்து விட்டாள் அவள். நான் பாடி முடிவதற்குள் ராஜம் ஒரு பாட்டை ஆரம் பித்தாள். நானும் அவளுடன் சேர்ந்து பாடினேன். இப்படி அளவளாவிக் கொண்டிருந்ததில் எவ்வளவு நேரம் சென்றதென்பது எனக்குத் தெரியாது. உணர்ச்சிவசப்பட்டு அத்தருணத்தில் எப்படி இருந்தோம் என்பது ஞாபகத்தில் இல்லை. ஆனால் இரு இளங்காதலர்கள் எவ்வாறு சல்லாபித்துக் கொண்டிருக்க முடியுமோ அப்படித்தான் இருந்திருப்போம் என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறுவேன். எதிர்பாராத விதமாக யாரோ விசையாக நடந்து வரும் சத்தம் கேட்டுத் திரும்பினேன். அத்தான் தியாகு எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவனது முகத் தோற்றம் பார்ப்பதற்குக் கோரமாக இருந்தது. அவனைப் பார்க்கவும் என் கண்கள் மறுத்தன. அவன் என் பக்கத்துக்கே நெருங்கி விட்டான். “நம் குலத்துக்கே என்றும் அழியாத அவமானத்தை உண்டாக்கத் துணிந்து விட்டாயா துரோகி? உனக்கு எங்கிருந்து இவ்வ ளவு துணிச்சலேற்பட்டது? உண்ட வீட்டிற்கிரண்டகம் செய்த நயவஞ்சகப் பதரே! உனது ஆகாயக் கோட்டைகளெல்லாம் எவ்வாறு நாசமாகின்றன பார்” என்று வாயில் வந்தபடியெல்லாம் திட்டிக்கொண்டே போனான். “அண்ணா அவர் நிரபராதி” என்றாள் ராஜம். அவள் இதைக் கூறி முடிப்பதற்குள் தியாகு என் உயிருக்கே சமானமான எனது மிருதங்கத்தைப் பற்றி இழுத் தெடுத்துப் பலமாக பக்கத்திலிருந்த மரத்தின் மேல் இடித்தான். மரத்தில் மோதுண்ட வேகத்தில் சின்னாபின்னமாகிவிட்டது அது. என்னையும் அறியாமல் என் கண்களிலிருந்தும் நீர் தாரை

தாரையாக வெளிப்படலாயிற்று. எனது மனக் கோட்டைகளும் இவ்வாறே சிதறுண்டு போனால் என்ற ஓர் எண்ணம் என் மனதை வருத்தியது. வருவது வரட்டும் என எண்ணிய வாறு பக்கத்திற் கிடந்த ஓர் தடியை எடுத்து "நீ இனிப் பிணம் என்று கூறியவாறு அவன் தலையை நோக்கி அடித்தேன்" அத்தான் என்று கத்தினாள் ராஜம். திடீரெனத் தியாகு விழுந் தான் கீழே. மறுமுறையும் அடிப்பதற்காகத் தடியை ஓங்கினேன். அதனிடையே "உன் தங்கை யின் வாழ்க்கை நலனைக் குறித்தாவது அவனைத் தாக்காதே" என்றது என் மனம். நான் பித்தனைப் போலாகிவிட்டேன். பிடித்தேன் ஓட்டம். அன்றைய இராப்பொழுதை ஓர் தேநீர்க் கடையின் பின்கோடியிலுள்ள திண்ணையில் எவருக்கும் தெரியாமல் போக்கினேன். ஆனால் அதிகாலையில் கடையில் நிம்மதியாகத் தேநீர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது இரண்டு போலீஸ் காரர்கள் என்னைக் கைது செய்தனர். விஷயத்தை மிஞ்சவிடாமற் செய்ய என் உறவினர்கள் பெரிதும் முயன்றும் ஒரு பயனும் கிட்டவில்லை . சிறைச்சாலைக் கதவு எனக்கா கத் திறந்திருந்தது. உள் நுழைந்தேன். ஆறு மாத காலத்தை அதற்குள்ளே கழித்து வெளி யேறினேன். அத்தான் தியாகு வைத்தியசாலையிலிருந்து வெளியேற இரண்டு மாதங்கள் பிடித்ததாகக் கேள்வி.

இப்போது அத்தானும் நானும் பழையபடி உறவினராய் விட்டோம். நான் புதியதோர் வாத்தியத்தை வாங்கிக்கொண்டேன். முன்னர் போல் இருவரும் ஒருமித்துச் சங்கீதக் கச்சேரி கட்குச் சென்றுதான் வந்தோம். ஆயினும் என்ன? எனது வாத்திய நாதத்தில் ஜீவனே இல்லை. மனம் ஒன்று நினைத்தால் கை ஒன்று செய்து கொண்டிருக்கும். மன நிம்மதியின்றி எதைத் தான் சரிவரச் சாதிக்க முடியும். சமூகத்திற்குப் பயந்து ராஜத்தைத் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை. ஆனால் அவள் தினமும் எங்கள் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டுதானிருந்தாள். என்னைக் காணும்போது அவள் வதனத்தில் ஓர் புன்முறுவல் மாத்திரம் தோன்றும். ஆனால் அப்புன்னகையில் உணர்ச்சியில்லை. ஏதோ ஒன்று அவள் மனதை மிகவும் வருத்துகிற தென்றுதான் அவள் முகத்தோற்றத்திலிருந்து நான் புதிதாக அறிந்து கொண்டது.

செல்வன்

மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி சிற்றிதழில் "சதி செய்த விதி" என்ற சிறுகதையை எழுதியவர். சிறுகதையின் உருவ அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியவர். இவரின் "சதி செய்த விதி" சிறுகதை காதலை முதன்மைப் படுத்தி எளிமையான மொழிநடையில் தெளிவாக எழுதப்பட்ட சிறுகதையாகும். இவரின் உண்மைப் பெயரை அறியுமாறில்லை

❖ சதி செய்த விதி

சதி செய்த விதி

செல்வன்

அந்தி வேளை காலையில் இரைதேடச் சென்ற பறவையினங்கள் யாவும் களிப்புடன் தத்தம் இல்லம் நோக்குகின்றன. கன்றுகளை நினைந்த ஆவினங்கள் கதறி ஓடுகின்றன. வான வெளியிலே சூரிய னின் இரத்தக் கறை மாறுகிறது. இடைக்கிடை வெள்ளிகள் முளைக் கின்றன. சுத்தக் காற்று வாங்கச் சுற்றித்திரிந்த மக்கள், சுயவுணர்வற்று வீட்டை நாடுகின்றனர். ஆனால் இரண்டு உருவங்கள் பரந்த வெண் மணலிற், கவிந்த உருவங்களுடன் காட்சியளிக்கின்றன.

நிமலா-சேகரன் இவர்களிருவருமே அங்கு காணப்பட்டவர்கள். சேகரன் நிமலாவின் அத்தை மகன். இளமை தொட்டே இருவரும் ஒரே கலாசாலையிற் கல்வி பயின்று வந்தனர். நிமலாவின் தந்தை ஒரு பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர். கூடிய வருமானமுடைய ஆஸ்திகட்கு உடைமையானவர். சுருங்கக் கூறின், ஒரு ஜமீந்தார் என்று சொல்ல லாம். நிமலா இவருக்கு ஏக புத்திரி, எனவே அவருடைய சொத்துகள் யாவும் அவளையே எதிர்நோக்கிக் கொண்டிருந்தன. நிமலா, உத்தி யோகத்தை நாடிக் கல்வி கற்கச் சென்றவளல்ல. எனவே, அவள் எட்டாம்

வகுப்பைக் கிட்டியவுடன் பாடசாலை செல்வதினின்றுந் தடுக்கப்பட்டாள். சேகரனோ, இளமையிலேயே தாயைப் பறிகொடுத்த ஏழை, சேயைக் காப்பாற்றும் நோக்கத்தோடு சேகரனின் தந்தை மறுமணம் செய்து கொண்டார். சேயைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சிற்றன்னை நாளடைவில், சேய்க்குக் கூற்றனானாள். இவ்விதமான இடுக்கண்களுக்கிடையிலும் சேகரன், கல்வியில் பெருமுயற்சியுடையவனாயிருந்ததினால் அரசினர் ஸ்கொலசிப் கிடைத்தது. மேற்படிப்பிற்காகச் சீமை செல்ல ஆயத்தமானான்.

சிற்றன்னையின் கொடுமையினின்றும் விடுதலை பெறுவது அவனுக்கு ஓரளவில் சந்தோசத்தை அளித்தது. ஆயினும் சிற்றன்னையின் கொடுமையை மறக்கச்செய்த அவ்வின் முகத்தை, ஆம் நிமலாவைத்தான் பிரிந்து செல்வதென்றால் அவனுக்குக் கஷ்டமாகவே பட்டது. ஆம் சிற்றன்னை தனக்குச் செய்து வந்த கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் போன்ற இன்மொழிகளும், இன் முகமுங்காட்டியவள் நிமலா ஒருத்திதான். அவளின் முயற்சியாலேயே அவன் இந்நிலையையடைந்தானென்று கூறின் மிகையாகாது. இந்தக் கட்டத்திலே தான் இருவரின் சந்திப்புமேற் பட்ட து.

நிமலா பேசலுற்றாள். “அத்தான்! தாங்கள் கட்டாயம் சீமைக்குச் செல்ல வேண்டும், தங்களைப் பிரிவது எனக்கு மாத்திரம் கஷ்டமில்லையென்று நினைத்தீர்களா? ஆயினும் உங்கள் நன்மையை - ஆம் - என் நன்மையையுந்தான் நாடியே நான் சொல்கின்றேன், தாங்கள் போயே தீரவேண்டும். தாங்கள் என் மன உறுதியைக்கண்டு திடுக்கிடவேண்டாம். இம்மன உறுதிக்குக் காரணமில்லாமலும் இல்லை. எந்தந்தை எனக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் எனக்கு ஒரு பட்டதாரியையே வரனாக வரைய வேண்டுமென்று எண்ணங்கொண்டுள்ளார். இதற்கிடையில் என் மனதில் தாங்கள் இடம்பெற்றுவிட்டீர்கள். தங்களின் புனிதமான ஸ்தானத்தில் நான் வேறொருவனுக்கு இடங்கொடுக்க முடியாது. நான் இப்போ எனக்குக் கலியாணம் அவசரமில்லை எனவும், இரண்டு வருடங்களின் பின்பே நான் கலியாணஞ்செய்வதாக உறுதிபூண்டிருப்பதாகவும் கூறியுள்ளேன். அஃதேன் என்பது தங்களுக்குத் தெரியும். இரண்டு வருடங்களாற்றானே தங்களின் படிப்பு முடிகிறது. அத்தான்! தங்கட்கு என்மேல் உண்மையிலேயே அன்புண்டானால், என் காதலைத் தாங்கள் உண்மையிலேயே ஏற்றுக் கொண்டீர்களானால், நிச்சயமாகச் சீமை செல்ல வேண்டும்” என்று ஒரு நீண்ட பெருமூச்சுடன் கூறி முடித்தாள்.

சேகரன் என்ன செய்வதென்றறியாது ஒருகணம் திகைத்தானாயினும், நிமலாவின் வேண்டுகோளை அவனால் நிராகரிக்க முடியவில்லை. மனதைத் திடப்படுத்திக் கொண்டு, போவதென்றே தீர்மானித்துவிட்டான்.

கப்பல் அலைக்கலை அசைந்தசைந்து ஆடிக்கொண்டே சென்றது. சேகரனின் மனமும் நிலைகொள்ளாமல் ஊசலாடிக் கொண்டே இருந்தது. “நிலை ஓரிடம் நினைவோரிடம்” என்ற மாதிரி சேகரன் கப்பலிலிருந்தானாயினும், நிமலாவின் உறுதியையும், தான் இனிமேல் நடத்தப் போகுஞ் சீமை வாழ்க்கையையும் மாறிமாறி நினைந்து கொண்டே சென்றான்.

கப்பலில் சேகரனின் நண்பன் ராகவனும் பிரயாணஞ் செய்தான். ஆம் அவனும் மேற்படிப்பிற்காகச் சீமை செல்கின்றவனாயினும் அரசினர் “ஸ்கொலசிப்” இன்றி பணத்தினுதவியால் பணத்தைக் கட்டிப் படிக்கச் செல்லுபவன். ராகவனின் துணை சேகரனுக்கு ஒருவாறு

ஆறுதலளித்தது. ராகவன் முன்பு பலதடவைகளில் சீமை சென்றுள்ளவனாதலால், சீமையில் பழகுவது சேகரனுக்கு மிக இலகுவாயிற்று. இருவருமொரே இடத்திலேயே ஜாகை வசதி ஏற்படுத்திக் கொண்டனர். மாதாமாதம் தவறாமல் சேகரனுக்கு அரசாங்கத்திடமிருந்து பண உதவி கிடைத்தது. அதைக்கொண்டு சேகரன் தன் நிலைமையைச் சமாளித்து வந்தான். வெளி ஆடம்பரங்களில் அதிகம் ஈடுபடாத சேகரன், தன் கல்வித் திறமையினால் ஆசிரியர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரனானான்.

முதலாவது வருடப் பரீட்சை முடிந்தது. அப்பரீட்சையில் சேகரன் எல்லாரிலும் முதலாவதாகச் சித்தியடைந்ததினால் ஆசிரியர்களின் புகழுக்கிலக்காகினதுமல்லாமல், அரசினரின் நன்கொடைப் பணமும் உயர்ந்த து.

சீமை சென்ற சேகரனை நினைந்து நிமலா வருந்தினாளாயினும், உள்ளுள் சந்தோஷமுறவே செய்தாள். தனக்கு வரனாகக் கிடைக்கப் போகுஞ் சேகரன் ஒரு B.A பட்டதாரியாய் வரும் நன்னாளை எண்ணி உளம் பூரிப்பாள். சேகரனைத் தான் மணப்பது தன் தந்தைக்கு விருப்பமில்லையாயினும், நாளடைவில் அவரின் மனதைத் திருப்பி விடலாமென நினைத்தாள். அவளின் நினைவு கனவாகப் போகுமென அவள் அப்போது நினைக்கவில்லை.

நிமலாவின் தந்தையின் காரியாலயத்திற்குச் சீமைப் பட்டதாரி வரதராஜன் M.A. அவர்கள் மார்ச் முதலாம் தேதி, உத்தியோகம் பார்க்க வருவதாகக் கட்டளை வந்திருந்தது. சில நாட்களாய் எல்லாரும் வரதராஜன் அவர்களைப் பற்றியே வம்பளக்க ஆரம்பித்துவிட்டனர். மார்ச் முதலாம் திகதியும் வந்தது. புதிய ஆபீசரும் வந்து சேர்ந்தார். சுமார் ஐந்தரை அடி உயரம் இருக்கலாம். புது நிறம், அலைகளின் மடிப்புப் போன்று சுருண்ட கேசம், வசீகரமான தோற்றம். இவைகள் யாவும் நிமலாவின் தந்தையை கபளீகரம் செய்தன. உத்தியோக விடயமாக புது ஆபீசரும், சுப்பிரமணியரும் - ஆம் அவர்தான், நிமலாவின் தந்தை சந்திப்பதுண்டு. அத்தருணங்களில் அவர்களிடை உண்டாகும் பேச்சுக்களின் மூலம் வரதராஜன் மணம் முடியாத பிரமச்சாரி என்றும், ஒரு நல்ல குடும்பத்திலே பிறந்தவரென்றும் சுப்பிரமணியர் அறிந்தார். "அவனைத் தான் மருமகனாக அடைந்தாலோ" என்று அவர் மனம் நினைக்கலாயிற்று.

காலம் வேகமாகச் சுழன்றது. வரதராஜனும், சுப்பிரமணியரின் வீட்டுக்கு வந்து போகத் தலைப்பட்டான். அத்தருணங்களில், நிமலா அவனின் கண்களில் படாமலில்லை. தந்தையின் நட்பினால், சகோதரப் பான்மையுடன் கலகலப்பாய் நடக்கத் தலைப்பட்டாள் நிமலா. அவளின் வசீகரமான பார்வை, கபடமற்ற பேச்சு, ஒளி வீசும் முகம் என்பன வரதராஜனையே ஆட்கொண்டன என்று கூறின் மிகையாகாது.

ராகவனின் நட்பிற்குடன்பட்ட சேகரன் காலஞ்சுழலச் சுழல, வெறும் வேடிக்கைகளிலும், கேளிக்கைகளிலும் ஈடுபடலானான். ராகவன் செல்லாத களியாட்டங்களை விரல்விட்டு எண்ணிவிடலாமென்றால், சேகரன், செல்லாதவைகளும் அவ்வாறுதான். ராகவனைவிடப் படிப்பிலே மேம்பட்ட சேகரன், ராகவன் நட்பினால், பெரிதும் பாதிக்கப்பட்டான். படிப்பில் குறையத் தலைப்பட்டான். ஆசிரியர்களின் நற்புத்தியும் நல்ல பலன் அளித்தில. அதனால் சேகரன், தனது 2ஆம் வருடப் பரீட்சையில் தவற வேண்டி ஏற்பட்டது.

சேகரனின் தோல்வியும், வரதராஜனின் தொடர்பும் நிமலாவைத் திடுக்கிடச் செய்தன. இரண்டு வருடங்களின் பின், மீண்டும், நிமலாவிற்கு வரன் தேடும் முயற்சியிலீடுபட்டார் சுப்பிரமணியர். இப்போது நிமலாவினால் ஒரு சமாதானமும் கூற முடியாது போய் விட்டது. சேகரனிடமிருந்து அவளால் ஒன்றுமறியமுடியவில்லை. இறுதியில் தகப்பனின் வேண்டு தலுக்குச் செவிசாய்க்கவே வேண்டியிருந்தது. நிமலாவின் முடிவைப் பெற்ற சுப்பிரமணியரின் முயற்சியில் வரதராஜனே வெற்றி பெற்றான். முடிவில் ஸ்ரீமான் வரதராஜன், M.A. அவர்களுக்கும், ஸ்ரீமதி நிமலா அவர்கட்கும் விவாகம் சிறப்பாக நடந்தேறியது.

கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும், பணத்தினுதவியால் "பாஸ்" பண்ணிய ராகவன், இரண்டு வருடங்களின் பின்னால் தாய்நாடு திரும்பினான். தனிமையில் விடப்பட்ட சேகரனுக்கு அப்போதான் நிமலாவின் உறுதி உதயமாயிற்று. நிமலாவை நினைத்த சேகரன் மீண்டும் ஊன்றிப் படிக்க விரும்பினான். விரும்பியவாறு படித்து ஆறுமாதத்தால் நடந்த "ஸ்பெஷல்" பரீட்சையில் சித்தியடைந்தான். பரீட்சையில் தேறியவன் பட்டம் பெற்று வீடுவந்தான்.

அப்போதுதான் அவனுக்கு நிமலாவின் நிலைமை புரிந்தது. தந்தையின் வற்புறுத்தலின் பேரிலும், சேகரனின் ஏமாற்றத்தின் பேரிலும், வரதராஜன், M.A. அவர்களை மணந்து கொண்டு உத்தியோக மாற்றத்தின் பேரில் வயலார் சென்றுவிட்டாள் என்ற செய்தியை அவன் நண்பர்கள் மூலம் அறியலானான். அவனுக்கு அஃது பெரிய ஏமாற்றமாயும், பேரிடி போன்று மிருந்தது.

அரசாங்கத்தினுதவியுடன் அயலூர் சென்று படித்த சேகரனுக்கு, அரசாங்கம் உத்தி யோகமுமளித்தது. உத்தியோகத்திற்கூட விருப்பமில்லாத சேகரன் வெறும் பொம்மை யாகவே இருந்து வந்தான். பட்டின சீவியத்தில் வெறுப்புற்ற சேகரன், தானாகவே வேறோ ரூருக்கு, மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டான். அம்மாற்றமே அவனின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளியை வைத்தது.

சேகரன் மாற்றங்கேட்டுக் கொண்டது, ஒரு கிராமம். அங்கு ஒரு சிறிய ஆபீஸ் உண்டு. அங்குள்ள தலைமை ஆபீஸருக்கு உதவியாகவே சேகரனை மாற்றியிருந்தனர். கட்டளை யைக் கையிலெடுத்த சேகரன் கிராமத்தை நோக்கிச் சென்றான். அன்று சனிக் கிழமை முன் பின் அறியாத கிராமத்தில் உத்தியோகத் தொடர்பால் தலைமையாபீஸரின் வீட்டிற்கே நேரிற் சென்றான். ஆபீசரின் வீடு மூடப்பட்டிருந்தது. ஒரு சந்தடியுமின்றி அமைதியாய்க் காட்சியளித் தது. அவனின் மனமும் அமைதியை நாடித் தானே அங்கு சென்றது.

கதவில் சேகரன் தட்டிய சப்தம், அமைதியை மீறிக் கேட்டது. வீட்டினுள்ளிருந்து "யார்?" என்று ஒரு குரல் கேட்டது. அக்குரல் ஒரு கணம் திடுக்கிட வைத்ததாயினும், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு "நான்தான்" என்று கூறினான், சேகரன். படாரென்று திறக்கப்பட்டது. அதே சமயத்தில் சேகரனின் முகமும் பேயறைந்தது போற காணப்பட்டது. ஆம் - அவனெதிரில் நின்றவள் நிமலாதான். சேகரன் ஏன் வந்தேனென்று நினைத்துத் திரும்ப எத்தனித்தான். ஆனால், நிமலாவின் ஆகர்ணசக்தி அவனைத் திரும்ப விடவில்லை.

அவ்விடத்திலே எவ்வளவு நேரம் நின்றனரென்பது ஒருவருக்குந் தெரியாது. சுயவுணர்வற்ற சேகரன் தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருப்பதாயும், பக்கத்தில் வைக்கப்

பட்டிருந்த காப்பி ஆறிக்குளிர்ந்து போயிருப்பதையும், தன்னெதிரில் நிமலா கலங்கிய கண்களுடன் நிற்பதாயுங் கண்டான். யார் யாருக்காக அங்கு வந்தாரென்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. நிமலாவின் சோகப்பார்வை, "அத்தான்! என்னை மன்னிக்க மாட்டீர்களா?" என்று மன்றாடுவது போற் காணப்பட்டது.

சேகரன் சீமைக்குச் செல்லப் புறப்படும் பொழுது தைரியத்துடன் பேசிய அதே நிமலா தான் இப்போதுந் தைரியத்துடன் பேசலுற்றாள். அவன் சீமைக்குச் சென்ற பின் புது ஆபீஸரின் வரவையும், அவரின் வருகையினால் தனது தந்தையிடமேற்பட்ட மாறுதலையும் கடைசியில், தங்களிடமிருந்து தானொரு தகவலுமறியாத படியால் தன் வாழ்விலேற்பட்ட அதிர்ச்சியையும் உணர்ச்சியுடன் கொட்டி முடித்தாள். தற்போது உத்தியோக விடயமாகத் தன் கணவன் அயலூர் சென்றிருப்பதாயும், இன்றிரவு வரமாட்டாரென்றுங் கூறினாள். இவைகளைக் கற்ப துமை போற் கேட்டுக்கொண்டிருந்த சேகரன் ஏதும் பேசச் சக்தியற்றவனாய் "நிமலா! என்னை-ஆம் இப்பாவியை - மன்னித்துவிடு" என்ற ஒரு வாக்கியத்துடன் நடையைத் திருப்பி னான்.

அடுத்த நாள் வெளியான தினசரியில் ஸ்ரீமான் சேகரன் M.A. அவர்களின் பிரேதம் ஐராவதி ஆற்றில் மிதந்ததாயும், ஆற்றைக் கடக்கும் பொழுது அலையினால் இழுப்புண்ட தினால் ஏற்பட்ட மரணமென்றுங் கண்டிருந்தது. அவனிறந்ததின் உண்மைக் காரணம், நிமலாவொருத்திக்குத் தானே தெரியும்.

●

வ.அ.இராசரத்தினம்

வ. அ. இராசரத்தினம் - ஈழகேசரிப் பண்ணையில் உருவாகியவர். 1950இற்கும் 1957 இற்கும் இடையில் ஈழகேசரியில் 28 சிறுகதைகள் எழுதியுள்ளார். அவற்றுள் தோணி (1953) ஈழத்திற்குப் புகழ் சேர்த்த உன்னதமான சிறு கதையாகும். மஞ்சரியில் பிரசுரமானது. செ. யோகநாதனின் ஈழத்துச் சிறுகதைத் தொகுதியான வெள்ளிப் பாதசரத்திலும் இந்து கலாசார அமைச்சின் சுதந்திரப் பொன்விழாத் தொகுதியிலும் மீளப் பிரசுரமானது. ஈழத்துச் சிறுகதைத் துறைக்குப் புதிய வனப்பும் வளமும். தந்தவர். கிழக்கிலங்கை மூதூரைச் சேர்ந்தவர். ஆரம்பத்தில் கவிதைகள் யாத்தவர். இவரது சிறுகதைகள் பதினைந்து தொகுக்கப்பட்டு தோணி என்ற தலைப்பில் வெளிவந்தது. அண்மையில் இவருடைய சிறந்த எல்லாச் சிறுகதைகளும் (ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது) ஒரு பெருந்தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. ஈழகேசரியில் இவர் எழுதிய நாவல் கொழுகொம்பு பின்னர் நூலாக வெளிவந்தது. துறைக்காரன், கிரௌஞ்சப்பறவைகள் இவரின் ஏனைய நாவல்கள். தாகூர், மாப்பசான், அன்ரன் செகோவ் ஆகியோரின் சிறு கதைகளை மொழி பெயர்த்துள்ளார்.

- கோணற் தராசு
- இதய தாபம்
- வாழ்க்கை
- பாலன் வந்தான்

கோணற் தராசு

வ.அ. இராசரத்தினம்

ஆசிரியர்களும் ஆசிரியைகளும் மிகுந்த இன்றைய நாட்டிலே, ஒருவரை ஒருவர் மணந்து கொள்வது ஏற்றதாகுமா? என்ற ஓர் புரட்சிகரமான சிந்தனையைத் தூண்டி விடுகிறார் கதாசிரியர். படிப்பித்த ஆயாச மேலீட்டால் “கொஞ்சம் தண்ணீர் தா” என்பீர்கள் அவளை. அவளும் அலுப்படைந்து வந்தவள்தானே அந்த அலுப்பினால் “போய் எடுத்துக் குடியுங்கள்” என்பாள் அவள். கரும்பாயிருந்த மனைவி வேம் பாகி விடுகிறாள். பாவம் இருவரிலும் பிழை இல்லை.

உங்கள் படித்த மனைவி தாகூரின் “புயலில் ரசமான கட்டத்தை வாசித்துக்கொண்டிருக்க, உங்கள் மூத்த மகன் மடியிலேறி வீழ்ந்து அவள் வாசிப்பை குழப்ப, அவள் அவன் முதுகில் இரண்டு போட அதைச் சகித்துக்கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை என்று ஆசிரி யையின் தந்தை, பெண் கேட்க வந்த ஆசிரியரிடம் கூறுகின்றார்.

தீர்ப்பை அளிப்பது நேயர் கடமை.

அது வாழ்க்கையின் சிக்கலான பிரச்சினைகளைச் சிந்தனைத் திரைகள் மறைத்துக் கொண்டிருந்த ஆசிரிய கலாசாலை வாழ்க்கை. நான் வெளி யேறும் வருடம்.... அவள் முதலாம் வருடம்.

எல்லாக் காதலர்களையும் போல நாங்களும் கல்யாணஞ் செய்து கொள்வது, முடியாமற் போனால் உயிரை மாய்த்துக்கொள்வது எனத் தீர்மானித்துக்கொண்டோம். எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு இதைவிட வேறு முடிவுக்கு வருவது ஏனோ சாத்தியமில்லை!

அன்று ஓர் சனிக்கிழமை. சாரமற்ற - சாரமற்றதான விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தோம் இருவரும். பேச்சுவாக்கில் "இந்த விவகாரத்திற்கு அப்பா சம்மதிப்பாரா?" என்ற பிரச்சினையைக் கிளப்பினாள் அவள்.

இதுவரை எனக்காகவே அவள் இவ்வுலகில் அவதாரம் எடுத்திருக்கிறாள் என எண்ணிக்கொண்டிருந்த எனக்கு அக்கேள்வி எனக்கும் அவளுக்கும் "ஸ்னானப் பிராப்தி" கூட இல்லை என்பதை வெட்டொன்று துண்டு இரண்டாக எடுத்துக்காட்டியது. நானும் காதலனாக இல்லாமல் "நான்" ஆனேன். ஒரு நிமிஷம் "சும்மா" நின்றிருப்பேன். பின்,

"ஏன் அவர் சம்மதிக்கமாட்டாரா? என்றேன் நான். குரல் கொஞ்சம் மாறுபட்டிருந்தது.

"அப்படித்தான் தெரிகின்றது" என்றாள் அவள்.

"ஏன்....?" "ஏன் என்றுதானே எனக்குத் தெரியவில்லை....." என்றிழுத்தாள் அவள்.

அதற்கு மேல் அவளோடு நான் பேச விரும்பவில்லை. சிறிது யோசித்து எதற்கும் அவள் அப்பாவையே கேட்டு விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டு போய் வருகிறேன்" என்று அவளிடம் விடை பெற்றுக்கொண்டு என் விடுதியை வந்தடைந்தேன்.

மறுநாளே சிரமப்பட்டு இரண்டு நாள் லீவு எடுத்துக்கொண்டு அவள் கிராமத்திற்கு - அவள் வீட்டிற்குத்தான் - வந்தேன்.

அது சாதாரணமான வீடுதான். இரண்டு அறைகள். முன் மண்டபம்... ஓரிரண்டு மேசைகள்... நாலைந்து கதிரைகள் சுவரில் அங்குமிங்குமாகச் சில படங்கள்... அவ்வளவு தான்.

அந்தக் கதிரையிற் சாய்ந்து கிடந்தவர் அவள் அப்பா தானா...? என்னால் நம்பவே முடிய வில்லை அப்படி. பயந்த, துவண்ட கொடி போன்ற சரஸ்வதி எங்கே? திருகிய உடலும், முறுக்கிய மீசையுமாய்க் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இவர் எங்கே?

நான் வந்ததை அவருக்கு அறிவிக்கும் முகமாகக் காலைத் தரையிற் பலமாகத் தட்டினேன். எதிர்பார்த்தபடி அவரும் என்னைப் பார்த்தார் ஏறிட்டு. இரண்டு நிமிஷங்கள் அப்படியே நின்றேன். பின் ஒருவாறு தைரியமாக "நான்தான் சிவானந்தம்" என்றேன் நான்.

"ஓ. வாருங்கள்" என்றே கதிரையைக் காட்டினார் அவர். மறுபடியும் மௌனம். மௌனத்தைக் கலைக்க அவர் விரும்பவில்லை. அகம்பாவக் காரர்!"

இப்படியெல்லாம் பேச வேண்டும் என ராத்திரி முழுதாக ஒத்திகை நடத்தி வந்திருந்த எனக்குக்கூட எப்படி பேச்சை ஆரம்பிப்பது? என்பது தெரியவில்லை. தைரியத்தை வலிந்தழைத்துக் கொண்டு ஏதோ வாயசைத் தேன் . "சரஸ்வதி எழுதியிருப்பாள்" என்பதாகச் சொற்கள் உதிர்ந்தன. வியர்த்துக் கொட்டியது எனக்கு.

"நானும் எழுதியிருந்தேன்" என்றார் அவர் வெடுக்கென்று. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்றாலும் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. ஆள் கொஞ்சம் காரசாரமானவர். அதற்குத் தக்கதாகப் பேசிக் கொள்ள வேண்டும் என மனதில் தீர்மானித்துக்கொண்டேன். காதல் வேண்டாம் என்பவர்களின் வாதம் எனக்கும் சிறிது தெரியும்!

சாதாரணமாக இருந்துகொண்டு "எங்கள் நட்பு..." என நான் தொடங்க. "எனக்குப் பிடிக்கவில்லை " என்று முடித்துவிட்டார் அவர். அதன்பின் நடந்த எங்கள் சம்பாஷனையை ஏன் நான் உங்களுக்கு மறைக்கவேண்டும். இதோ வருகிறது, அது.

"பிடிக்கவில்லை என்றால் "... இது நான்.

"விருப்பமாகவில்லை " இது அவர்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்"

"வேறு ஒரு மாதிரியும் சொல்ல முடியாமையால்"

"ஏன் எங்கள் நடப்பில்"

"அர்த்தமில்லை ."

"நாங்கள் அப்படி நினைக்கவில்லை"

"நீங்கள் நினைப்பது பற்றி எனக்குக் கவலையில்லை."

"........."

"......."

"நீங்கள் என்னைச் சந்தேகிக்கிறீர்கள்?" இது என் கேள்வி.

"சந்தேகிக்கும் வழக்கமே எனக்கில்லை"

"அப்படியானால் ஏன் எங்கள் நட்பை எதிர்க்கிறீர்கள்"

"உங்கள் இருவருடைய நன்மைக்காகவுந்தான்"

நான் வேண்டுமென்றே சிரித்துக் கொண்டு "மனமொத்த இருவரைப் பிரித்து வைப்பதில் என்ன நன்மையைக் காணப்போகின்றீரகளோ?'

"என்றேன். அவர் கொஞ்சம் ஆத்திரமாகக் காணப்போகிறேன் என்ற நம்பிக்கை இருப்ப தனாற்றான் பிரிக்கவும் போகின்றேன்" என்றார்.

"எங்களிருவர் கூட்டுறவினால் ஏன் நன்மை ஏற்படாது"

"ஏற்படும் என்றுதானா எண்ணுகிறீர்கள்" என்று இகழ்ச்சி தோன்றக் கேட்டார் அவர்.

"நிச்சயமாக ஏற்படும், அந்த நம்பிக்கையினாற்தான் இந்த முடிவுக்கு...."

"அதிகமாக ஏன் பேச வேண்டும். அந்த முடிவுதான் சரியில்லை என்கிறேன் நான்" என்றார் அவர்.

நான் சிறிது தாமதித்தேன்! தலையடி எப்படி அடிக்கலாம் என்ற சிந்தனையில், அவர் சிந்தனையைக் கலைத்தார்.

“அது சரி. நீங்கள் ஏன் சரஸ்வதியை விரும்புகிறீர்கள்”

எனக்கு இந்தக் கேள்விக்குப் பதில் தெரியும். ஆனால் வெளியிடத்தான் முடியவில்லை . சிரமப்பட்டு ”ஏனோ என் மனம் அவளை விரும்புகின்றது” என்று சொல்லி வைத்தேன்.

அவர் குறும்பாகச் சிரித்துக் கொண்டே “அதுதான் கேட்கிறேன். மனம் ஏன் அவளை விரும்புகிறதென்று” என்றார்.

எனக்கு அக்கேள்விக்கு விடை தெரியவில்லை. சிலை போல நின்றேன். அவர் மறு படியும் பேசத் தொடங்கினார்.

“சரஸ்வதிக்கு ஓர் தங்கை இருக்கிறாள். சரஸ்வதியைவிட அழகி. ஆனால் அவளைப் போல ஆசிரியை அல்ல. ஆறாம் வகுப்புத்தான் படித்திருக்கிறாள் அவளை...”

அவர் முடிக்க முன்னமே ”சரஸ்வதியைவிட என் மனதில் வேறெவருக்கும் இட மில்லை” என்று பலமாகச் சொன்னேன்.

அவரும் பலமாகச் சிரித்துக் கொண்டே “எனக்குத் தெரியும் நீங்கள் அப்படிச் சொல்வீர் கள் என்று, நீங்கள் இதுவரை சரஸ்வதியைக் காணவேயில்லை என எண்ணிக்கொள் ளுங்கள். அப்படியிருந்தாற்கூட அவள் தங்கையை விரும்புவீர்களா? அதுதான் வேண்டாம். உங்கள் ஊரிலேயே நீங்கள் ஒருத்தியை ஏன் விரும்பவில்லை. சிந்தித்துப் பார்த்தாற “சரஸ்வதி ஓர் ஆசிரியை. உழைக்கக் கூடியவள். என்ற எண்ணம் தானே! ஆம் சரஸ்வதியை யல்ல சரஸ்வதியின் சம்பளத்தைத் தானே நீங்கள் காதலிக்கிறீர்கள். அதனாற்றான் சொன் னேன். உங்கள் நட்பு எனக்குப் பிடிக்கவில்லை என்று. பணத்தைத் தள்ளிப் பார்த்தால் உங்களிருவரிடையில் ஏதாவது பாசம் இருக்கிறதா, நெஞ்சிற் கையை வைத்துச் சொல்லுங் கள்” என்று நிறுத்தினார் அவர்.

கல்லூரியிற் “கட்டற்ற காதல்” வேண்டும் என்று சண்டப் பிரசண்டம் பண்ணும் எனக்கு, அக்கேள்விகளுக்கு விடை வரவேயில்லை. திரும்பவும் மௌனியானேன்.

பின் இந்தக் கேள்வியில் அவர் வாய் அடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் ”நீங்கள் சரஸ்வதிக்குக் கல்யாணமே செய்து வைக்கப் போவதில்லையா?” என்று பெருமிதத்துடன் கேட்டேன்.

“ஏனில்லை. நிச்சயமாகக் கல்யாணஞ் செய்து வைக்கத்தான் போகின்றேன். ஆனால் உங்களைப் போன்ற பணமோகங் கொண்ட, சுயநலமிகட்கு இல்லை”.

எனக்கு ஆத்திரம் பிய்த்துக்கொண்டு வந்தது. “பணத்தாசை என்கிறீர்களே. தங்களுக்கு இல்லாமலா அவளை ஆசிரியையாக்குறீர்கள்” என்றேன் பதட்டமாக

அவர் சாந்தமாக “இல்லை, இல்லை. நீங்கள் எண்ணுவது பிழை, வயதிருக்கிறது கொஞ்சம் படிக்கட்டுமே, அந்தப் படிப்பினால் அவள் தன் பிள்ளைகளைச் சரியாக வளர்க்கவும், வாழ்க்கையை இன்பமுள்ளதாகவும் போக்கலாமே என்ற எண்ணந்தான். அதல்லாமல் உங்களைப் போல அவள் ஊதியத்தை விரும்பவில்லை நான்” என்றார்.

“உங்கள் பேச்சைப் பார்த்தால் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே. இன்பமாக வாழ்க்கை நடத்த அவளைப் படிப்பிக்கிறேன் என்கிறீர்கள். ஆனாற் பணம் வேண்டாம் என்கிறீர்கள். பணம் இல்லாமல் இன்பம் வந்துவிடுமா என்ன?”

“அப்படியாயின் பணத்தினாற் இன்பம் உண்டாகின்றதென்பது உங்கள் எண்ணமா?” ”இல்லை, இல்லை இன்பமாய் இருக்கப் பணமும் தேவை”

“பணத்தால் வரும் இன்பத்திற்காகத்தானே சரஸ்வதி உங்களுக்குத் தேவை”

எனக்கு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமற் போய் விட்டது. அவர் கேட்ட கேள்விக்கு “ஆம்” என்று சொல்வதைத் தவிர வேறு பதிலே இல்லை. ஆனாலும் என் வாயிலிருந்து “ஆம்” என்ற பதிலும் வரவில்லை .

அவர் இதழ்க் கடைகளில் நகை தவழ மறுபடியும் தொடர்ந்தார். ”பணம் வேண்டுமா பணம் நீங்கள் இருவரும் துரும்பாக உழைத்து நூற்றைம்பது ரூபா சம்பாதிக்க மாட்டீர்கள். மாதம் ஐந்நூறு, ஆயிரம் எனச் சம்பளம் பெறுபவர்கள் சந்தோஷமாகவா இருக்கிறார்கள்?”

நான் பேச வாயெடுத்தேன். அவர் விடாமற் தொடர்ந்தார். “உங்கள் இஷ்டப்படியே நீங் கள் இருவரும் இணைந்து விடுகிறீர்கள் என வைத்துக் கொள்வோம், உங்கள் இருவருக்கும் வேறு வேறு இடங்களில் உத்தியோகமாகிவிட்டால் .... உங்களை நினைந்து அவள் உருக. அவளை நினைந்து நீங்கள் கசிய..... அப்பாடா வேண்டாம், வேண்டாம்.... அது போகட்டுமே. அவள் போகுமிடமெல்லாம் அல்லிராட்சியமாகவா இருக்கும். ஆசிரியத் தொழிலிலே எத்தனையோ ஆடவரோடு அண்டிப் பழக வேண்டிவரும். அப்படி இருக்கையில் உங்க ளிடையே சிறிது சந்தேகம் தோன்றிவிட்டால்... நான் சொல்லவில்லை நீங்கள் சந்தேகிப்பீர்கள் என்று .... அப்போ பார்க்க வேண்டுமோ...?

“போதும் போதும் இருவருக்கும் வேறு வேறு பாடசாலைதானா கிடைக்கவேண்டும” இது ஆக்ரோஷத்தோடு இடைமறித்து நான் கேட்டேன் கேள்வி. அவர் மறுபடியும் தொடர்ந் தார்.

“ஒன்றாகத்தான் கிடைக்கிறது என்றிருக்கட்டும். பாடசாலை முடிந்ததும் இருவரும் அலுத்துக் களைத்து வீட்டுக்கு வருகிறீர்கள். ஆயாசம் மேலிட நீர் “கொஞ்சந் தண்ணிதா” என்பீர் அவளை, அவளும் அலுப்படைந்து வந்தவள்தானே, அந்த அலுப்பினால் “போய் எடுத்துக் குடியுங்கள்” என்பாள். முதலில் மனைவி எனக்கு அமைச்சலாயில்லையே என்ற ஓர் மனக்குறை உங்களுக்கு. அது வளர்ந்து ஓர் மனக்கசப்பு.... அதுவும் வளர்ந்தால் ... ஆம். கரும்பாயிருந்த மனைவி வேம்பாகி விடுவாள். பாவம் ! இருவரிலும் பிழையில்லை .

நீங்கள் மனைவியிடமிருந்து அன்பு, ஆதரவு, பொறுமை, கீழ்ப்படிவு இவைகளை எதிர் பார்ப்பீர்கள். நீங்கள் மட்டுமல்ல, ஆண்கள் எல்லோரும் எதிர்பார்ப்பது இவைகளைத்தான், அவள்... உங்களோடு சரிநிகர் சமான மானவள்... நான் எந்தவிதத்திலும் இவருக்கு குறைவில்லையே என எண்ணுவாள். உங்கள் இருவர் மனோபாவமும் இரு எதிர்த்த முனை களை நோக்கியிருக்கும். இந்த மனோபாவம் வளர வளர நீங்கள் ஒன்று சொன்னால் அவள் ஒன்பது சொல்வாள். “தடிக்கழுதை”, “முட்டாள்” “எருமை” என்பீர்கள். நீங்கள் ஆசிரியரல் லவா? அகராதி தெரியுமல்லவா உங்களுக்கு? ”இந்த எருமைக்கு நீங்கள் ஒன்றும்

உழைத்துப்போடத் தேவையில்லை என்பாள்" அவள். "வாயைப் பாரு..." என்பீர்கள் நீங்கள். "வாய்க்கென்ன என்பாள் அவள். இப்படியாகத் தொடர்ந்தால்... எண்ணிப் பாருங்கள் உங்கள் இன்ப வாழ்க்கை..."

எனக்கு அவர் அதிகப் பிரசங்கித்தனத்தைக் கேட்கப்பிடிக்கவில்லை. வேண்டா வெறுப்புடன் கேட்டேன் நான். அவரும் விடாப்பிடியாகத் தொடர்ந்தார்.

"உங்கள் படித்த மனைவி தாகூரின் "புயலில்" ரசமான கட்டத்தை வாசித்துக் கொண்டிருக்க, உங்கள் மூத்த மகன் மடியிலேறி வீழ்ந்து அவள் வாசிப்பைக் குழப்ப, அவள் அவன் முதுகில் இரண்டு போட அதைச் சகித்துக் கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை. அம்மாவை நன்றாகத் தெரியாத இளைய மகனை நீங்கள் வேலைக்காரியிடமிருந்து ஆவலுடன் வாங்க, வீட்டினுள் தைத்துக்கொண்டிருந்த உம் சகதர்மிணி சன்னல் வழியாக அதைக் கண்டு "வேலைக்காரியுடன் என்ன பேச்சு? - என்று விபரீதமாக விளங்கிக் கோபிக்க, அவள் கோபத்தை சகித்துக்கொள்ள வேண்டியது உங்கள் இன்ப வாழ்க்கை. அவள் வசவுகளை வாங்கிக் கொண்ட நீங்கள் அடுத்த நாள் பாடசாலைக்குப் போனதும் "பாடக்குறிப்பு எழுதவில்லையா? என அதிகாரத் தொனியோடு அவளைக் கேட்க, குறிப்பு எழுதாமற் படிப்பிக்க முடியாதா? என அவள் பதிலுக்கு உங்களைக் கேட்க, இந்த அலங்கோலத்தைக் கண்டு மற்ற ஆசிரியர்கள் சிரிக்க, அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான் தங்கள் இன்பவாழ்க்கை. சரஸ்வதியை இத்தகைய வாழ்க்கைக்குப் பங்காக்கத்தானா நீங்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டீர்கள்? பணம் என்கிற கோணற் தராசில் வாழ்க்கையை அளவிட்டு மணம் செய்து கொள்ள அனுமதியா கேட்கிறீர்கள்? தயவுசெய்து சிறிது சிந்தியுங்கள். நான் சொல்வது சரியா பிழையா. என்று சிந்தனையின் பின் சொல்லுங்கள் "சரஸ்வதி வேணுமா என்று? இப்படிச் சொல்லி நிறுத்தினார் அவர்.

எனக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. "யோசித்துச் சொல்லுகிறேன்" எனச் சொல்லிவிட்டு வந்தேன். என்ன யோசித்தும் என்ன? என் மனத்தராசுதான் கோணிக்கொண்டு சரஸ்வதி பக்கமே இழுக்கிறது. நீங்கள் சொல்லுங்கள். எனக்கு சரஸ்வதி வேண்டுமா, வேண்டாமா என்று.

●

இதய தாபம்

வ.அ. இராசரத்தினம்

கோடை விடுமுறையின் பின் பாடசாலை ஆரம்பமாயிற்று. அவள் வரவேயில்லை. தமிழ்நாட்டின் இரு கோடிகளிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக இருவரும் வந்தோம். இப்போது அவள் போய்விட்டாள். ஆனால், என் இதயப் பாறையில் சிந்தனைச் சிற்பி செதுக்கிச் சென்ற அவள் உருவம்...

மறுபடியும் சந்திப்போம் என்ற நியதியிற் பிரிந்தாற் கூட மனம் ஆறிப்போய்விடும். ஆனால்... அவளை மறுபடியும் சந்திப்பது சாத்தியமா? தமிழ்நாட்டின் ஏதாவது ஒரு மூலையிலே தாலி கட்டிய கணவனோடு மலரும் மணமுமாக, அவளைக் காண நேரிட்டால் ..... அல்லது பிள்ளைகளைக் கையிற் பிடித்துக்கொண்டு கணவனை இழந்த விதவைக் கோலத்தில் அவளைக் காண நேரிட்டால்...

சுயநலத்தின் சூழலிற் சுற்றியிருப்பதெல்லாம் தனக்கேனவே எண்ணும் மனிதனுக்கு, கற்பனை எந்த விதத்திலும் தோல்வியுணர்ச்சியைத், துக்கத்தைத்தான் கொடுக்கறது. திடீரென்று என்னை நானே ஞாபகப்படுத்திக்கொண்டு இந்த வேண்டாத கற்பனைக்கு முற்றுப் புள்ளி

யிட்டேன். கானகத்தின் மத்தி யில் தனிமையின் சூழ்நிலையில் குரல் கொடுத்துக் குமுறத் தெரியாத குழந்தையைப் போல என் எண்ணங்கள் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றன. இதயம் என்னும் எரிமலையிலிருந்து உள்ளத் துடிப்பு என்னும் அனற்குழம்பு வெளி வந்தது. மறு கணம் இறந்து போன, இறந்து கொண்டிருந்த, சம்பவங்கள் ஒன்றோடொன்று மோதிச் சுக்கு நூறாயின.

2

சிங்கள நாட்டில், வயிற்றுப் பிழைப்புக்காக வந்து குடியேறிய இந்தியரின் குழந்தைக ளுக்கு ஆசிரியனாக நான் சென்றிருந்தேன். அந்தப் பெரிய பாடசாலையின் தமிழ்ப்பிரிவுக்கு நான் ஒருவன் தான் ஆசிரியர், அதிபர், "இன்ஸ்பெக்டர்" எல்லாம். பேசுவதைக் கூட விளங்கிக் கொள்ள முடியாத அந்த இடத்தில் ஆபிரிக்கக் காட்டிற் புகுந்த தேச ஆராய்ச்சியாளனைப் போலத் திகைத்த நான், தனியனாய்ச் சூழ்நிலையோடு ஒட்டாத துறவியாய், வாழ்க்கையை நடத்தினேன். என் வாழ்க்கையும் எப்படியோ ஓடிக்கொண்டுதான் இருந்தது.

ஒருவருடம் கழிந்தது. காருண்யம் மிகுந்த அரசினர் அந்தப் பாடசாலைக்கு இன்னொரு ஆசிரியரை, அவளை, அனுப்பியிருந்தனர். தங்கச் சிலைக்குப் பொன்முலாம் பூசியது போல அவள் ஒரு தனி அமைப்புடன் விளங்கினாள்.

தமிழ் நாட்டிலிருந்து வந்த அவளுக்குச் சிங்களம் தெரியாது. வழி தப்பி வந்து விட்டவள் போலத் திகைத்துக் கொண்டிருந்த அப்பெண்ணுக்கு என்னை விட்டால் வேறு பேச்சுத் துணை கிடையாது.

பாடசாலை விஷயத்தையிட்டுப் பேச ஆரம்பித்த நாங்கள் வேறு பல காரியங்களையும் பேசினோம். தமிழன் என்ற இன உணர்ச்சி எங்கள் இருவரிடையும் வளரலாயிற்று. நாளொரு சண்டையும் பொழுதொரு சம்பாஷணையுமாக எங்கள் உறவு வளர்ந்தது.

அன்று... இன்று போல அன்றும் அவள் பாடசாலைக்கு வரவில்லை. பெண்கள் விடுதியில் இருந்து வந்த மாணவி ஒருத்தி என்னிடம் ஒரு துண்டுக் கடிதத்தைக் கொடுத்தாள். பரபரப்பாக அதைப் பிரித்துப் பார்த்தேன். "தயவு செய்து சாயந்தரம் என்னை வந்து சந்தியுங்கள் விரும்பினால்" என அதிற் கண்டிருந்தது.

ஏதாவது தேக அசௌக்கியமாக இருக்கலாம் என்று சாதாரணமாக எண்ணிக் கொண்டே எனது வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் என் சட்டைப்பைக்குள் சாதாரணமாக வைக்கப்பட்டிருந்த அத்துண்டுக் கடிதம்... விளம்புக்குறிகட்குள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அந்த விரும்பினால் என்ற வார்த்தை... அந்த வார்த்தைக்கு நான் எடுத்துக்கொண்ட பொருள்...

இந்த எண்ணச் சுழல்களுக்கிடையில் நேரம் ஓடியது. பாடசாலைமணி கடைசிமுறை யாக அடித்து ஓய்ந்தது. நானும் என் விடுதிக்கு என்றுமில்லாத உற்சாகத்துடன் சென்றேன்.

ஒரு வருடமாக அந்தப்பாட சாலையிற் கடமையாற்றியிருக்கிறேன். பெண்கள் விடுதிப் பக்கம் இன்றுவரை சென்றதே இல்லை. இன்று போக வேண்டும். விரும்பினால் தான் போக வேண்டும். சாப்பாட்டையும் மறந்து என்னை அலங்கரித்துக்கொண்டேன்.

அவளும் என்னைப்போல ஓர் ஆசிரியனாக இருந்தால் நானும் " அவனும்" எவ்வளவு அந்நியோன்னியமாக இருந்திருப்போம். ஆனால் அவள் பெண். நாங்கள் இருவரும்

தாராளமாகப் பழகுவதைச் சமூகம் விபரீதமாகத்தான் எண்ணும். ஏற்கனவே எங்கள் இரு வரையும் பற்றிப் பாடசாலைச் சிங்கள ஆசிரியர்களிடையே ஓர் சந்தேகம். இந்த நிலையில் அவளைச் சந்திக்க நான் விடுதிக்கே போனால்... என் சிந்தனை இந்த ரீதியில் நிதானமாகச் சுழன்றது. மறுகணம் புன்சிரிப்புத் தவளும் அவள் முகம் என் முன்னால் மின்னி யது. நான் நடந்து சென்றேன்.

3

அவள் அறைக் கதவு என் வரவை எதிர்பார்த்து நின்றது. மெதுவாகத் தட்டினேன். "உள்ளே வரலாமே" யென்றாள் மெல்லிய குரலில்.

எழுந்திருக்கவேண்டுமே என்ற எண்ணமேயின்றி அவள் படுத்துக்கொண்டேயிருந் தாள். கட்டிலின் மூலையில் அடுக்கப்பட்டுக் கிடந்த தலையணைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, கன்னத்தை ஒரு கையாற் தாங்கிக்கொண்டு, காலைத் தரையிற் தொங்க விட்டுக்கொண்டே வளைந்து நெளிந்து கிடந்தாள். கிடந்தபடியே "அப்படியிருங்களேன்" என்று நாற்காலியைக் காட்டினாள்.

இதற்கு முன் ஒருபொழுதும் அவள் எனக்கு எழுந்து மரியாதைசெய்யத் தவறியதில்லை. எதாவது சுகவீனமான இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டே நானும் அமர்ந்தேன்.

"ஏதாவது சுகவீனமா?" என்றேன்.

"இல்லை மனம்..."

"ஏன் வீட்டிலிருந்து எதாவது கடிதம் வந்ததா?"

"அப்படி ஒன்றுமில்லை."

"ஒன்று மில்லாவிட்டால் நான் போகிறேன்."

"உங்கள் விருப்பம்" என்றாள் அவள்.

சம்பாஷணை அத்துடன் அறுந்து விடுவதை விரும்பாத நான் விஷயத்தை வேண்டு மென்றே வேறுதிக்குக்கு மாற்றினேன். "யாழ்ப்பாணம் என்றீர்களே, யாழ்ப்பாணத்தில் எவ்விடம்?" என்று கேட்டாள்.

"நல்லூர்" என்றாள் அவள்.

"நாவலர் பிறந்த நல்லூரா? பொருத்தம் எதுமற்ற இந்தக் கேள்வியை ஏளனம் தொனிக் கக் கேட்டேன்."

"ஏன், சுவாமி ஞானப்பிரகாசர் கூடத்தான" என்று பெருமிதத்துடன் சொல்லிக் கொண்டு உட்கார்ந்தாள்.

"காரியமில்லை, படுத்திருக்கலாமே" என்றேன் நான்.

"இங்கே எனக்குப் பொழுது போறதில்லை. உங்கட்கு எப்படிப் பொழுது கழிகிறது" என்றேன்.

"புற்றீசல் போல தமிழ் நாட்டிலிருந்து கிளம்பும் புதுப் புதுப் பத்திரிகைகளும், விலை வரச மான "சிகரெட்டும்" இருக்கும் போது பொழுதுபோவதற்கு என்ன கவலை"

"அவைகளையும் தான் எவ்வளவு நேரம் கட்டியழலாம்"

"ஒழிந்த நேரத்திற் பத்திகைகட்கு கதை கட்டுரை எழுதுவேன்."

"ஓ எழுத்தாளரா? உங்கள் கதைகளை இதுவரை நான் பார்த்ததில்லை! ஒருவேளை இந்தச் சம்பாசணையையே கதையாக எழுதிவிடுவிர்களோ?"

"வானம்பாடி பிறர் கேட்கவேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுவதில்லை. அதற்கு எதைப் பாடவேண்டும், எப்படிப் பாடவேண்டும் என்றும் தெரியாது. இந்த விவாதம் எல்லாம் ஏன்? எதற்காக என்னை அழைத்தீர்கள் ?

"வானம்பாடியைப் போன்று பகுத்தறிவற்ற, தெளிவாகச் சிந்திக்கத் தெரியாத, ஓர் இலட்சியமுமே இல்லாத அப்பாவிகள் தாம் இப்படி ஏதாவது ஒரு சந்திப்பை அடிப்படையாக வைத்துக்கொண்டு பழைய, உளுத்துப்போன கதையான காதலைப் பற்றி. அதன் அடிமுடி யையே கண்டு பிடித்து விட்டவர்களைப் போலப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளிவிடுகிறார்கள். அதற்காகத்தான் நானும் கேட்டேன், இந்தச் சம்பாஷணையையே கதையாக எழுதிவிடுவீர் களோ? என்று. அதற் காக நீங்கள் ...."

தோல்வியுற்றதை உணர்ந்த நான், "ஏன் என்னை அழைத்தீர்கள்?" என்று சற்று உதாரமாகவே கேட்டேன்.

அவள் பதில் பேசவில்லை. "இப்படி அனாவசியமாகப் பேசிக்கொள்ள வேண்டியிருந் திருக்கும் என்று தெரிந்திருந்தால் நான் இங்கு வந்திருக்கவே மாட்டேன். இனி என்னை இங்கு தேவையின்றி அழைக்காதீர்கள்" என்று இரைந்து கொண்டே நான் அறையை விட்டுக் கிளம்பினேன்.

அடுத்த இரண்டு நாட்களும் நான் அவளுடன் பாடசாலையிற் கூடப்பேசவில்லை. அவள் ஏன் என்னை அழைத்தாள் என்பதைக் கூடத் தெரி ந்து கொள்ள முடியவில்லை.

மூன்றாம் நாள். அன்று கோடை விடுமுறைக்காகப் பாடசாலை மூடப்படவேண்டிய நாள். ஓய்வு நேரத்தில் அவள் என் வகுப்பிற்கு வந்தாள். "அன்று தங்களை விடுதிக்கு அழைத்தது தவறானால், சம்பாஷணையின் போக்கில் ஏதாவது தவறாகச் சொல்லியிருந்தால், எல்லாவற்றையும் மன்னித்து விடுங்கள்" என்றாள். அவள் கண்களில் நீர் ததும்பியிருந்தது. நான் பேச்சற்று நின்றேன். அவள் பேசுகின்றாள் :

"இந்த இடத்தில் உங்களுடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டு என்னால் வாழவே முடியாது. அடுத்த விடுதலை தொடங்கும் போது நான் இங்கு வராமலும் விடலாம்." அவள் கண்கள் கண்ணீரை உருட்டிவிட்டன.

அதற்கு மேல் அவள் அங்கு நிற்கவில்லை. என் பதிலைக் கூட எதிர்பார்க்காமற் போய்விட் டாள். கண்களில் நீர் வழியக் கடைசி முறையாகப் போயே விட்டாள்!

வழக்கம்போலப் பாடசாலைக் கடிதங்களைப் பையன் ஒருவன் என் கையிற் கொடுத் தான். அதில் ஒன்று அவளுடைய கடிதம்.

அவசரம் அவசரமாகப் பிரித்துப் படித்தேன். அன்று எதையோ சொல்ல வேண்டும் என்று உங்களை அழைத்தேன். அதைச் சொல்லத்தான் முடியவில்லை. அதன் பயன் உங்கள் கோபத்தைப் பெற்றுக் கொண்டது தான். இனி உங்கள் முகத்தில் விழிக்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. விழிக்கவும்மாட்டேன் என்று தான் எண்ணுறேன். என் அன்பின் பரி சாக இந்தப் படத்தையாவது வைத்துக்கொண்டிருங்கள்" என்றிருந்தது அந்தக் கடிதத்தில்.

அவள் படத்தை முன்னால் வைத்துக்கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். அந்தப் படம் என்னைப் பார்த்துக்கேட்டது:"சாதாரணப் பெண் ஒருத்தி உன்னிடம் காட்டக்கூடிய அன்பைத்தான் நான் உன்னிடம் காட்டினேன், என் நிர்மலமான இதயத்தில் உன்னை எத்தனை உயரத்தில் வைத்துப் பூசித்தேன். அன்று உன்னை விடுதிக்கு அழைத்தபோது என்ன சொல்ல எண்ணியிருப்பேன் என்பதை உன்னால் விளங்கியிருக்க முடியாதா? உன்னைப் பிரியும் கடைசித் தினத்தில் "வராவிட்டாலும் விடலாம்" என்று சந்தேகத்துடன் சொன்னபோது நீ எனக்கு என்ன பதில் தந்தாய்? நீ என்னிடம் பேசிய போது உணர்ச்சியற்ற மரக்கட்டையாகவா பேசினாய் அல்லது என்னைப்போல நீயும் என்னை நேசித்திருந்தாயா னால் அந்த நேசத்தை என் வெளிப்படுத்தத் தவறினாய்.... சமூகக் கட்டுப்பாட்டுக்குப் பயந்த கோழைதானா நீ?"

பாடசாலை மணி அடித்தது. அக்காதற் பரிசின் மேல் இரு கண்ணீர்த் துளிகள் விழுந்து சிதறின.

ஈழகேசரி
1.10.2019

வாழ்க்கை

வ.அ. இராசரத்தினம்

செல்லையா

காரியாலயத்துக்குப் புறப்படும்போது அவள் மத்தியானச் சாப்பாட்டையும் கையோடுதான் தந்து விடுகிறாள். ஐந்து மணிக்கு முன்னாடியே படுக்கையை விட்டெழுந்து, நித்திரைத் தூக்கத்தையும் கவனியாது, ஈரவிறகோடு போராடி ஏழுமணி வண்டிக்குக் காலைச் சாப்பாட்டையும், மத்தியானச் சாப்பாட்டையும் தயாரித்து விடுவாள். பார்க்கப் போனால் கந்தோரில் இடைவேளைச் சாப்பாடு எனக்கு அவசியமே இல்லை.

அவள் இவ்வளவு பிரயாசையோடெழுந்து கஷ்டப்படுவது இருவருக்காகவுந்தான், இலிகிதர் வேலையிற் கிடைக்கும் சொற்ப சம்பளத்திற் சட்டை மடிப்புக் குலையாமல், என்னைப் போலொத்தவர்களின் தரத்தோடு வாழவேண்டுமானால் அதற்கு இருவருந்தான் செட்டாக இருக்கவேண்டும்..

ஆனால் காரியாலயத்தில் வேலைபார்க்கும் அனைவரும் என்னைப்போற் செட்டாகவா இருக்கிறார்கள்? வீடு என்ற எண்ணமே அற்ற

வாலிபர்கள். பெறும் சம்பளத்தின் ஒரு பகுதியைக் கோப்பிக் கடைக்காரனுக்குக் கொடுத்து விட்டு, மீதியைத் தம் விருப்பம்போற் செலவு செய்கிறார்கள். இந்த வாலிபர்களோடு நாம் சரிசம மாக இல்லாவிட்டாலும் அதி கம் தாழ்ந்து போகாமலாவது சீவிக்க வேண்டாமா?

நாலரை மணிக்குக் காரியாலயவேலை ஓய வேண்டியதுதான் தாமதம் எல்லாரும் விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறார்கள். என்னைப்போன்ற குடும்பஸ்தர் அவர்களிலிருந்து ஒதுங்கி நிற்கலாம் என்றால் அது முடிகிற காரியமா? கையைப் பிடித்துக் கோப்பிக் கடைக்கு இழுக்கிறான் ஒருவன்! இப்படி மிச்சம் பிடித்து என்ன கோட்டையா கட்டி வைத்திருக்கிறாய் என்று பரிகசிக்கிறான் வேறொருவன்.

ஒருநாள் எனக்குச் சிறிது தலைவலி. மேலதிகாரியிடம் சொல்லிவிட்டுக் காற்று அனு பவிப்பதற்காக வெளியே நின்றேன். உள்ளே பேச்சுக்குரல் கேட்டது. "என்னப்பா இந்தச் செல்லையா சுத்தக் கருமியாய் இருக்கிறானே" என்றது ஒரு குரல். "இப்படித் தலைவலியிருக் கும் ஒரு கோப்பை கோப்பி குடிக்க மாட்டேன் என்கிறானே" என்றது அடுத்த குரல். "நாலரை மணி மட்டும் எழுது எழுது என்று எழுதிவிட்டு ஒரு கோப்பி தானும் சாப்பிடாமல் நேரே வீட்டுக்குப் போய்விடுகிறானே" என்றது இன்னோர் குரல்." அதுவும் பத்து மைல் போக வேண்டும் அவன்" என்று திருத்தியது. அடுத்ததால், "அட இதுமட்டுந்தான், அவன் வண்ணா னிடமே உடுப்புப் போடுறேதில்லையாமே" என்ற கடைசிக் குரலோடு எல்லோரும் காரியால யக் கட்டிடம் அதிரும்படி சிரித்தார்கள்.

இவை எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுநின்ற எனக்கு அழவேண்டும் போல இரு ந்தது. என்னவோ கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காக நானும் கோப்பிக் கடைக்குப் போகத் தொடங்கினேன்.

என்னைப்போன்ற இலிகிதர்களின் கண்ணில் - மண்ணைத் தூவத்தானே காரியாலயத்துக்கு முன்னாலேயே முகாம் போட்டிருக்கிறார்கள் கோப்பிக் கடைக்காரர்கள். ஓர் உழுந்து வடைக்கும் கோப்பிக்கும் மாதம் ஒன்பது ரூபா ஆகிவிடுகிறது. இந்தச் செலவைச் சரிக்கட்டுவதற்காக நான் பொய் சொல்ல வேண்டும். நூற்றைம்பது ரூபா சம்பளம் பெறும் நான் நூற்று நாற்பது தான் என் சம்பளம் என்று கலப்பற்ற பொய் ஒன்றைக் கட்டிய மனைவிக்குச் சொல்லியே ஆக வேண்டும்!

தவமணி

பட்டினத்திற் குடியிருந்தால் மிதமிஞ்சிய வீட்டு வாடகை, அத்தோடு "சினிமா" என்ற வேறு செலவு அவரின் நூற்று நாற்பது ரூபா சம்பளத்தில் வாழ்க்கையைச் சமாளிக்க முடியாது என்று எண்ணித்தான் இந்தக் கிராமத்தில் வந்து குடியேறினோம்.

கிராமத்திலே தண்ணீர் கலவாத பால் கிடைக்கலாம் வாடி வதங்காத காய்கறிகள் கிடைக்கலாம். வாரந்தவறாமல் வரும் வண்ணானும் கிடைக்கலாம். ஆயினும் செலவு செலவுதானே. நானும் என்னாலானவரை முயற்சித்து அவருடைய சம்ளத்திற்குள்தான் வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருந்தேன், மத்தியானச் சாப்பாடு "கிளப்பிலே சாப்பிட்டாற் செலவு அதிகமாகிவிடும் என்று அக்காலையிலேயே எழுந்து அவருக்குச் சாதம் சமைத்துக் கட்டிக்கொடுத்தேன். பன்னாடையையும் அடிமட்டையையும் எரித்து விறகுக்குக் கொடுக்கும் பணத்தை மீதப்படு த்தினேன்.

இதெல்லாம் யாருக்காக அவருக்கும் அவருடைய இரண்டு பிள்ளைகளுக்குமாகவும் தான்.

இவ்வளவு செட்டாகச் சீவித்தாலும் மாதம் பத்துப் பதினைந்து ரூபாய்க்கு முட்டு வந்து விடுகிறது.

இவர்பாடு எப்படியென்றால் இவ்வளவு நாட்களாக மாதம் பத்து ரூபாயை மறைத்து வரு கிறார். இன்றைக்கு ஒரு பத்து ரூபாய் என் கையில் இருந்தால் வண்ணானுக்கும் கொடுத்து இந்த வாரக் "கூப்பன்" சாமானையும் வாங்கி விடலாம்.

எதற்காகப் பத்து ரூபாயை மடக்குகிறார்? ரயிலுக்குத்தானும் என்னிடமிருந்தே பணம் வாங்குகிறார். காரியாலயத்தில் ஏதும் விசேடமிருந்தால் அதற்கும் என்னிடந்தான் பணம் வசூலிக்கிறார்.

அவர் பத்து ரூபாயை எடுத்துக்கொண்டாலும் பாதகமில்லை. உழைக்கிறவர் அவர் தானே என்று சொல்லி இருந்துவிடலாம். ஆனால் இந்தப் பிச்சைக்காரப் பத்து ரூபாய்க்காக ஏன் கட்டின மனைவியிடம் ஓர் அபாண்டமான பொய்யைச் சொல்லவேண்டும்? அப்பாவி மாதிரி நடிக்கவேண்டும்?

எதோ பேச்சுவாக்கில் அவள் புருஷனுக்கும் இவருக்கும் நூற்றைம்பது ரூபாய்தான் சம்பளம் என்று தங்கம் சொல்லிவிட்டுப் போனாள். இல்லாவிட்டால் நான் இவ்வளவு நாளும் ஏமாந்தது போல ஏமாற வேண்டியவள்தான். வரட்டும் எதற்காக இந்தப் பச்சைப். பொய்யைச் சொன்னீர்கள் என்று கேட்டுவிட் டுத்தான் அடுத்த காரியம்.

செல்லையா

இந்தப் பெண்களே இப்படித்தான் என்று தங்கம் சொன்னாள் என் மனைவி கேட்டா ளாம். அதை ஏன் எனக் கேட்டு எனக்கு நூற்றைப்பது ரூபாதான் சம்பளம் என்று நான் ஒப்புக் கொள்ளும் வரையிலும் அவள் விடவேயில்லை.

ஆனாலும் யோசித்துப் பார்த்தால் அவள் கட்சியில் நியாயமே இருக்கிறது. எனது ஒரு வேளைச் சிற்றுண்டிக்காக மாதம் பத்து ரூபாய் பறந்துவிடுகிறது. ஆனால் நூற்றுநாற்பது ரூபாயை வைத்துக்கொண்டு மூன்று வேளையும் தவறாமல் நான்கு ஆத்மாக்களுக்கு அவள் சோறு போடவேண்டும். மற்றச் செலவுகளையும் செய்து கொண்டு சாப்பாடும் கொடுத்துத்தான் விடுகிறாள். அதன் சூட்சுமம் அவளுக்குத் தான் வெளிச்சம்!

நானும் அந்தச் சாயந்திரக் கோப்பியைவிட்டால் எனக்கு ஒன்றும் குறைந்துவிடாது. நண்பர்கள் பரிகாசம் செய்தால் உலகம் தெரியாதவர்களின் பேச்சு என்றெண்ணி இருந்து விடலாம்.

ஆனால் அந்தக் கோப்பிக் கடைக்காரன்தலைக் கறுப்பைக் கண்டதுமே "ஐயா! வராமற் போகிறீரகளே" என்று அழையாமல் அழைக்கிறான். மரியாதைக்காகவாவது ஓரிரண்டு நாட் கள் அந்தக் கடைக்குப் போய்த்தான் ஆக வேண்டும்:

ஆனால் இந்த மாதம் எனச்குச் சம்பளம் கூடும். ஏனெனில் சேவையில் இன்னொரு வருடத்தைப் பூர்த்தியாக்கி விட்டேன். வாழ்க்கைப் புள்ளியும் கூடியிருக்கிறதாம். எல் லாமாகச் சேர்ந்து நூற்று எழுபது ரூபாய் வரலாம்.

மீதமாக வரும் இருபது ரூபாயில் கோப்பிக் கடைக்காரனுக்கும் கொடுத்து மிச்சத்தில் அவளுக்கு வீட்டுக்குக் கட்ட ஒரு சேலையும் வாங்கிவிடலாம். அவன் கையில் அப்படியே நூற்றைம்பதையும் கொடுத்துவிடலாம். அப்படியானாற் கூட என் சம்பளம் நூற்றறுபது ரூபா என்று பொய் சொல்லத்தானே வேண்டும் அட தெய்வமே!

தவமணி

நான் தான் எவ்வளவு இராச்சதத் தனமாக அவரிடம் நடந்துகொண்டேன். காலை ஏழு மணிக்குப் போனால் இரவு ஏழு மணிக்குத்தான் வீட்டுக்கு வருகிறார். பன்னிரண்டு மணித்தியாலம் பறந்துழைக்குமவர், தான் உழைக்கும் பணத்திற் பத்து ரூபாய் எடுத்துக் கொள்வதை நான் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கவில்லை.

இன்று நூற்றைம்பது ரூபாயையும் கொண்டுவந்து நீதிமன்றத்திலே தண்டப் பணம் கட்டியது போல் என் கையில் தந்தபோது நான் நன் என் தவறை உணர்ந்தேன். உணர்ந்து விசித்து விசித்து அழுதேன்.

உங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று பத்து ரூபாயைக் கொடுத்தபோது "வேண்டாம்" என்று வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகச் சொல்லி என் கிராதகத் தனத்தைக் குத்திக் காட்டினாரோ என்னவோ.... கடைசியாகக் காலையில் அவர் காரியால யத்துக்குப் போகும்போது சட்டைப்பையில் அந்தப் பத்து ரூபாய்த் தாளை வைத்தேன். ஒரு நிம் மதி பிறந்தது எனக்கு. இன்று காரியாலயத்திலிருந்து அவர் வீடு வந்தவுடன் மன்னிப்புக் கேட்டுவிட்டுத்தான் மறு காரியம்.

செல்லையா

இருபதாந் திகதியன்று, எட்டு வருடங்கட்குப் பிறகு அண்ணனைப் பட்டினத்திற் கண்டேன். ஏதோ அவசர காரியமாகத் தான் வந்ததாகவும வீட்டுக்கு வர நேரமில்லை உடனே திரும்ப வேண்டும் என்றும் சொன்னார்.

போகிறவர் கையில் ஏதாவது கொடுத்துவிட வேண்டாமா? மூன்று யார் பட்டுத் துணியும் இரண்டு விஸ்கோத்துப் பெட்டிகளும் வாங்கிக் கொடுத்தேன் குழந்தைகள் கையிற் கொடுங்கள்" என்று சொல்லி. இவற்றுடன் செலவு இருபது ரூபாய், பிறந்த வீட்டுப் பாசமல்லவா? அதையாவது செய்ய வேண்டும் என்று மனம் சொல்லிற்று.

அத்தோடு அவளுக்குச் சேலை வாங்க வேண்டும் என்ற எண்ணமும் போயிற்று கோப் பிக்சடைக்காரனுக்கு ....?

எதிர்பார்த்தபடி சம்பளம் நூற்றெழுபது ரூபா கிடைத்தது. அண்ணனுக்கு வாங்கிக் கொடுத்த சாமான்களுக்கு இருபது போக மீதி சரியாக நூற்றைம்பது ரூபா. கோப்பிக் கடைக் காரன் கண்களிற் படாமல் நேரே வீட்டுக்குப் போனேன். வேண்டா வெறுப்போடு அவளிடம் பணத்தைக் கொடுத்தேன். இம் மாதச் சம்பளம் நூற்றைம்பது ரூபாய் தான் என்று ஒரு பொய் யும் சொல்லிவிட்டேன்.

பாவம் அவளும் அப்படியே நம்பிவிட்டாள்! அத்தோடு முன்னர் என்னைக் கடிந்ததற்காக நொந்து கண்ணீரும் விட்டு விட்டாள்!

இன்று என்னையறியாமலே என் சட்டைப் பையில் பத்து ரூபாய் வைத்திருக்கிறாள்! கோப்பிக் கடைக்காரன் பயமும் எனக்கில்லை.

நேற்று என் சம்பளம் நூற்றைம்பது ரூபா என்று அவளிடம் பொய் சொன்னேன். மறதியாக நேற்றுக் காசைத் தராமற் போய்விட்டேன் என்று இன்று கோப்பிக் கடைக்காரனுக்குப் பொய் சொல்லப் போகிறேன்.

ஈழகேசரி
5.11.1950

பாலன் வந்தான்

வ.அ. இராசரத்தினம்

"எங்கள் வீட்டுக்குப் பாலன் வருவானா?" என்று ஆயிரந் தடவை கேட்டுவிட்டாள் பிலோமினா. அன்று விடிந்தால் நத்தார்த் திருநாள்.

"நிச்சயமாக வருவார்" என்ற பதிலைத்தான் திருப்பித் திருப்பிச் சொல் லிக்கொண்டிந்தாள் அம்மா.

"அவர் எப்போது அம்மா"

"இரவைக்குத்தான் வருவார்"

"அவர் வந்தா எனக்குச் காட்டுவாயா அம்மா?"

"ஓ, கட்டாயமாகக் காட்டுவேன்."

"அவர் எப்படி அம்மா இருப்பார்?

"தம்பியைப் போல அழகாக இருப்பார்."

"அவர் என்னோடு விளையாட வருவாரா?"

"அவரும் உன்னைப்போலக் குழந்தைதானே. விளையாடக் கட்டாயமாக வருவார்."

"ஏன் அம்மா அவர் பகலிலே வரமாட்டார்?"

"அவர் பகலிலே வர அம்மா விடமாட்டா"

"போ அம்மா, நீ பொய் சொல்கிறாய்?"

"உண்மையாகத்தான். அம்மா பொய்யா சொல்வேன். சரி, இப்போ நீ போய் விளை யாடு. என் பாலனுக்கும் உன க்கும் பலகாரம் செய்து வைக்கிறேன்."

"நான் பாலனுக்கு அடித்தால் அவரும் அடிப்பாரா அம்மா"

"சே, அவர் நல்லபிள்ளை . குழந்தைகளுக்கு அடிக்கவே மாட்டார்."

"அப்போ நானும் அடிக்கமாட்டேன். ஏனம்மா இப்போ போய் அவரைக் கூட்டி வாவேன்?"

"இப்போ அவருடைய அம்மா விடமாட்டா. சரி, சரி, தொந்தரவு செய்யாமற் போய் விளை யாடு. இராத்திரிக்குத்தான் அவர் வருவார்." அம்மாவின் குரலில் கோபம் தொனித்தது.

பாலன் இன்னும் வரவில்லையே என்ற ஏக்கம், அவர் வரமாட்டாரோ என்ற அவ நம்பிக்கை, அம்மா சொல்வதெல்லாம் உண்மையாகவே இருக்கவேண்டுமே என்ற ஆவல், அம்மாவின் கோபக்குரல் பிலோமினாவின் சின்னஞ் சிறு இதயத்தைக் குழப்பின.

தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே மெல்ல மெல்ல நடந்து தன் சகபாடிகள் விளை யாடிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தாள். அங்கிருந்த ஒவ்வொரு குழந்தையும் பாலன் தன் வீட்டிற்குத்தான் வருவதாகச் சொல்லிக்கொண்டிருந்தது.

"இல்லை, உங்க வீட்டுக்கு வரமாட்டார். எங்க வீட்டுக்குத்தான் வருவார். எங்க அம் மாவைக் கேட்டுப் பாருங்கள்" என்று ஆத்திரத்தோடு சொன்னாள் பிலோமினா.

"இல்லை, எங்க வீட்டுக்குத் தான் வருவார். எங்க அப்பா சொன்னாரே" என்றாள் எதிர் வீட்டு ஸ்டெல்லா.

அன்று குழந்தைகள் கண்ணாம்பூச்சி விளையாடவில்லை. மண்வீடு கட்டவில்லை. வண்ணாத்திப்பூச்சி பிடிக்கப் போகவும் இல்லை. வட்டமாகக் கூடியிருந்து அர்த்த ராத்திரியில் வரப்போகும் தேவபாலனைப் பற்றித் தங்கட்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லிக் கொண டிருந்தன.

இரவின் கருநிழல் உலகிற் கவிய ஆரம்பித்தது. அந்தச் சின்னஞ் சிறுசுகள் எல்லாம் தங்கள் தங்கள் வீடு திரும் பின.

பிலோமினா வீட்டு வாயிற் படியில் ஏறும்பொழுதே "பாலன் வந்துவிட்டாரா அம்மா?" என்று கேட்டாள்.

"இன்னும் வரவில்லையே கண்ணே" என்ற அம்மாவின் குரல் அடுக்களையிலிருந்து பதிலாக வந்தது.

"இருட்டானதும் வருவார் என்றாயே?"

"பன்னிரண்டு மணிக்குத் தான் அவர் வருவார். போய் அப்பாவோடு இருந்து கொள் நான் இதோ வந்து விடுகிறேன்" என்றாள் அம்மா. அன்று அம்மாவிற்குப் பிலோமினாவினால் அதிகம் தொந்தரவு இல்லை. வரப்போகும் பாலனைச் சொல்லிச் சொல்லித்தன் வேலைகளை எல்லாம் கவனித்துக்கொண்டிருந்தாள்.

2

பிலோமினா அறைக்குள் சென்றாள். அங்கே மேசைக்கு முன்னால் அப்பா நின்று கொண்டிருந்தார். மேசை மீது சாராயப் போத்தல் ஒன்று திறந்தபடி இருந்தது. அவர் முன்னால் சுவரிலே மாட்டுக் கொட்டிலிற் பிறந்திருந்த கிறீஸ்துநாதரின் படம் ஒன்று இருந்தது. அப்பா "பூசை செய்துகொண்டு" இருந்தார்!

இம்மாதிரியான நேரத்தில் அப்பாவிடம் ஏதுமே கேட்கக்கூடாது என்பது சின்னஞ் சிறு பிலோமினாவுக்கும் தெரியும் ! அண்ணாந்து சுவரில் இருந்த படத்தைப் பார்த்தாள். ஆனால் உண்மைப் பாலனைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் அவள் மனதிற்கு அந்தச் சலன மற்ற வெறும் படம் திருப்தியைக் கொடுக்கவில்லை. அறையை விட்டு வெளியேறினாள்.

"அம்மா, நான் வாசலிலே நின்று பாலன் ஸ்டெல்லா வீட்டிற்குப் போகிறாரா என்று பார்க்கிறேன்" என்றாள் பிலோமினா.

அடுப்பிலே வேலையாயிருந்த அம்மாவும் "ஆம்" என்றாள், பிலோமினா வாசலுக்கு வந் தாள். கதவு தாளிடப்பட்டிருந்தது. அங்கு நின்றபடியே "அம்மா, கதவைத் திறவேன்" என்று சப்தமிட்டாள். "இருட்டிலே வெளியே போகக்கூடாது. பேசாமல் உள்ளே போ" என்றாள் அம்மா.

"பாலன் ஸ்டெல்லா வீட்டிற்குப் போய்விடுவாரே" என்று அழத்தொடங்கினாள் பிலோ மினா. குழந்தையின் அழுகை அதிகரிக்கவே தெருவிற் பார்த்துவிட்டுக் கெதியாக வந்து விடு" என்ற நிபந்தனையோடு கதவைத் திறந்தாள் அம்மா. அவள் வேலைகள் எல்லாம் முடிந்திருந்தன.

பிலோமினா தெருவில் வந்து நின்று கண்ணுக்கெட்டிய தூரம் வரை பார்த்தாள். ஆனால் மார்கழி மாதத்தின் மையிருளைக் கிழித்துக்கொண்டு ஒளிப்பிழம்பாக ஒரு குழந் தையுருவம் அங்கே வரவில்லை. ஏமாற்றத்துடன் உள்ளேபோனாள்.

"பாலன் வரவில்லையே அம்மா".

"நான் தான் சொன்னேனே அவர் பன்னிரண்டு மணிக்குத்தான் வருவார் என்று. நாம் முகம் கழுவிப் புதுச்சட்டை போட்டுக்கொண்டு அப்பாவோடு கூடக் கோயிலுக்குப் புறப்படும் போது அவர் வந்துவிடுவார்." என்றாள் அம்மா. அப்போது அர்த்த ராத்திரிப் பூசைக்காகக் கோயி லில் முதலாம்மணி அடித்தது.

அம்மா பிலோமினாவை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். அங்கே அப்பா உணர்வே அற்றவராகக் கதிரையில் சரிந்து கிடந்தார். தலை அலங்கோலமாகக் கண்கள் வெந்து, வாயில் எச்சில் வடிய விகாரமாகப் பார்ப்பதற்குப் பயங்கரமாகக் காணப்பட்டார். மேசையில் இருந்த போத்தல் வெறுமையாக இருந்தது. வீட்டு மூலையில் இருந்த குத்து விளக்குச் சுடர் பிலோமினாவின் உள்ளம் போலத் துடித்தது. படத்திலிருந்த தேவபாலன் அப்பா வின் கோலத்தைக்கண்டு பிலோமினாவைப் போலவே பயந்து நடுக்கினார். அம்மா மேலே அடி எடுத்து வைக்கச் சக்தியற்றவளாய் ஸ்தம்பித்து நின்றாள்!

பிலோமினாவால் அதிக நேரம் பொறுமையாக நிற்க முடியவில்லை. "ஏன் அம்மா இன்னும் பாலன் வரவில்லை?" என்று கேட்டாள்..

"இந்தக் குடிகாரன் வீட்டுக்கெல்லாம் அவர் வரமாட்டார்" என்றாள் அம்மா கோபத்தோடு.

பிலோமினாவின் குழந்தையுள்ளம் அக்கணமே நொறுங்கித் தகர்ந்தது. விசித்து விசித்து அழத் தொடங்கினாள். அம்மா ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாக வந்த ஆத்திரத்தை எல்லாம் அப்பிஞ்சு முதுகிலே தீர்த்தாள். இவ்வளவும் "ஞானத்திலிருந்த அப்பாவிற்குத் தெரியவில்லை.

அழுது சோர்ந்த பிலோமினா தரையிலேயே படுத்து நித்திரையாகிவிட்டாள். அம்மா மனமுடைந்து போய்க் கதிரையில் சாய்ந்து கொண்டு சுவரில் இருந்த படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

திடீரென்று கோயில்மணிகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து ஒலித்துப் பாலன் வந்து விட்டதை அறிவித்தன. அம்மா பிலோமினாவைத் திரும்பிப் பார்த்தாள். அழுது வீங்கிச் சிவந்திருந்த கன்னங்களில் விளக்கொளி பிரதிபலித்தது. பகலெல்லாம் பாலனைத் தேடித் தேடி அலுத்த அவள் கண்கள் சலனமற்றுக் குவிந்திருந்தன. பவளம்போலச் சிவந்த அவள் அதரங்களிற் புன்முறுவல் ஒன்று தவழ்ந்து நெளிந்தது. அடுத்த கணம் "பாலன் ஸ்டெல்லா வீட்டுக்குப் போகிறாரே" என்று பிதற்றினாள்.

ஈழகேசரி
24.12.50

சேனநானா

இச்சிறுகதையைப் புனைபெயரில் எழுதிய சேனநானா கொக்குவிலைச் சேர்ந்த பண்டிதர் செ. நடராசாவாக இருக்கலாம் எனக் கூறுவாருமுளர். ஆயினும் உண்மையை அறிய முடியவில்லை. மனதால் நினைத்தவனையே திருமணம் செய்ய வேண்டும் என இருந்த பெண்ணின் உள்ளத்துணர்வுகளைக் கற்புக்கு இலக் கியம் என்ற சிறுகதையில் துலாம்பரமாகக் காட்டியவர். அக்கால நாடக வழக்கை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையாகும்.

❖ கற்புக்கு இலக்கியம்

கற்புக்கு இலக்கியம்

சேனநானா

"நண்பரே! என்ன விசேடம்?" "இன்றைக்கு அப்படி விசேடமாகச் சொல்ல ஒன்றுமில்லை. ஆனால் ரஷியாவில் ஜேர்மானியர் ஓட்டம் பிடிக் கின்றனராம். நிற்க, "இன்று எங்கள் இஞ்சினியர் என்னோடு கொஞ்சம் சீறிவிட்டார். என்ன. காரணமோ?" "வல்லைறோட்டு வேலைக்கு அனு மதித்த தொகை மிகக் கூடிவிட்டதாம்." "ஏன் அப்படிக் கூடும்படி நேர்ந் தது? அதற்கு உம்மோடு என் சீறவேண்டும்?" "வாரும், கடற்கரையால் உலாவிக்கொண்டு பேசிக்கொண்டே போவோம்" என்று சொல்லித் தில் லையர் என்னும் பி. டபிள்யு. கிளாக்கர் தம் நண்பர் சிவநேசரையும் அழைத்துக்கொண்டு பண்ணைக் கடற்கரைத் தெருவால் கிழக்கு நோக்கி மெல்ல நடந்து செல்கின்றனர். காற்று வாங்குவதற்கும் பேசு வதற்கும் ஏற்றனவாயிருந்தன அந்த இடமும் காலமும், தில்லையர் மேலும் தொடர்ந்து, "இஞ்சினீயர் அந்த நாட்களில் நேரமின்மையாற் கவனிக்கவில்லைப்போலும். ஓவசியர் குறித்ததிருந்த தொகையைச் சரியென்று காட்டி நானே அனுமதித்து எழுதி விட்டேன். காசுத் தொகை யையும் ஓவசியர் பெற்றுக்கொண்டார். "இனி என்ன செய்யலாம்?" என்றார்.

சிவ : அப்படியானால் இனி அவருக்குக் கொடுக்க வேண்டிவருந் தொகையில் கழிக்கலாம் தானே?

தில் : இல்லை. அது ஒன்றும் சரிவராது இனி . ஆனால் இஞ்சினீயருக்குத்தான் இதனால் என்ன? என்று சொல்லிக் குறைப்பட்டார். சிவநேசர், "உமக்கும் இதில்..." என்று சொல்லி நிறுத்தித் தில்லையரது முகத்தைப் பார்த்தார். அவர் சிரித்துக்கொண்டே "தெரியாதா! பி.டபிள்யு. டீ.யில் நடக்கிற காரியங்கள்" என்று இழுக்க, இச்சம்பாஷணை இவ்வளவில் முடிந்தது. தில்லையர் முகத்தில் திடீரென இருள் கவிந்தது. அவர் ஒன்றும் பேசாது தலையைக் குனிந்து கொண்டே சிறிது தூரம் போனார் .

சிவ : "அன்பரே ! என்ன யோசனை?"

தில் : "அப்படி விசேடமாக ஒன்றும் இல்லை. ஆனால் ... உமக்குத் தெரியுந்தானே எனது குடும்ப நிலைமை. மூத்தமகள் பருவம் அடைந்தவளாய் இருக்கிறாள். பல இடங்களிலிருந்தும் மணம் பேசிவந்தார்கள் தான். ஆனால் வீட்டிலே ...

சிவ : வீட்டாரின் விருப்பம் என்ன? உமக்கு எங்கே விருப்பம்?

தில் : அவை எல்லாம் ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை. என்ன செய்யலாம்?

சிவ : சரி , எவை எப்படிக் கிடந்தாலும். உமது மகளுடைய மனம் எங்கே செல்கிறது?

தில் : இதென்ன கேள்வி! அவளுடைய எண்ணத்துக்கெல்லாம் நாங்கள் இடங்கொடுக்க முடியுமா?

சிவ : இல்லை ஐயா ! உங்கள் மகளுக்கு எந்த இடத்தில் சம்மதமோ அதுதான் சம்மந்தம். இங்கே பாரும் என் தலையை. எனக்கு வயது அறுபத்திரண்டு.

தில் : சரிதான் காணும். நானும் இந்த இலங்கையில் பாராத இடமும் இல்லை. பழகாத நண்பரும் இல்லை. அறியாத இஞ்சினியருமில்லை. உமது வார்த்தை வீண் பேச்சுத்தானே. பாரும், ஒருபெண் தனது குலத்துக்கு அடாததைச் செய்யத் துணிந்தாலும் சும்மா விட்டு விடுவீர்போலும். ஆதலால் பலவற்றையும் ஆலோசித்துத்தான் ஆக வேண்டும் எதுவும். ஆனால், ஒருபிள்ளையைப் பாடுபட்டுப் பெற்று வளர்த்துப் படிப்பித்து நன்மை பெறலாம் என இருக்கும் பெற்றோருக்கு மாறுபண்ணுமானால், அந்தப்பிள்ளை குடியைக் கெடுக்க வந்ததல்லவா? அதனால், நாம் முந்தி அதனைத் தொலைத்தால் என்ன ?

சிவ : "அப்படியெல்லாம் ஏன் கடுமையாகப் போகவேண்டும்? அது இருக்க, முதலில் உமது மகளின் விருப்பத்தைச் சொல்லும். இப்படி வாரும் - இது நல்ல இடம் - இங்கே உட்கார்ந்து பேசுவோம்." இருவரும் அங்கு நின்ற ஒரு பூவரச மரத்தடியில் ஒருவரையொருவர் நோக்கியவாறு உட்கார்ந்தனர். மெல்லென நல்ல தென்றலுந் தவழ்ந்தது. அந்திவானம் சிரித்தாற்போல மேலைக்கடலில் சூரியனும் இலங்கினான்.

தில் : நண்பரே என்னுடைய அனுபவத்தில், மணப்பெண்ணுடைய விருப்பத்துக்கு மாறாகப் பலவந்தப்படுத்தி மணஞ்செய்த இரண்டு மூன்று குடும்பங்கள் நல்ல நிலைமையில் இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

சிவ : அது சரிதான், இருக்கலாம். ஒன்றின் இயல்பைப் பரும்படியாய்ப் பார்த்துவிட்டு வெளித் தோற்றத்தைக்கொண்டு அதன் தன்மை இப்படித்தான் என்று சொல்லுதல் பொருந் தாது. நுட்பமாய் நோக்கினாலும் அறிவுடையோர் அறிவாரேயன்றி, அறிவில்லார் அறியமாட்டார். அவ்விதமான குடும்பங்கள் "காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித் - தீதில் ஒருகருமம் செய்ப" என்பதற்கு இலக்கியமாகுமோ? அன்றி, அவர்கள் இருவரும் "காகத்து இருகண்ணிற்கு ஒன்றே மணி அமைந்தாங்கு" உடல் வேறெனினும் உயிர் ஒன்றாக வாழ்வாரோ? ஒப்ப முடிந்தால் மனைவாழ்க்கை முன் இனிதே" என்றவர் பெண்பாலாரைத் தவிர்த்துக் கூறினாரோ?

தில் : சரி, எல்லாம் உலகத்தில் நீதிசாத்திரங்கள் கூறியபடி தான் நிகழ்கின்றனவோ ? அதிகம் .... என் ... கதை....

சிவ : இல்லை; ஆனால்....,

தில் : இல்லை என்று விட்டீரே. போதும், அவ்வளவுந்தான் எனக்குத் தேவை.

சிவ : ஐயா! எந்த வந்தத்துக்கும் வைத்தியம் செய்யலாமாம் பிடிவாதத்திற்கு வைத்தியம் இல்லை என்பார்கள். நண்பரே! கடவுள் அறிவைத் தந்தால் வாழ்க்கையில் அத னைக் கைக்கொண்டு தான்நடக்க வேண்டும்.

தில் : சரி, "சட்டம்பியார் சொன்னபடி கேட்கத்தான் வேண்டும். இது விஷயத்தில் என்னை என்ன செய்யச் சொல்கின்றீர்?

சிவ : உமது மகளுடைய மனவிருப்பத்தை எனக்குத் தெரிவியும்.

தில் : "இராசம் துரைராசாவின் மேல் தான் மனம் வைத்திருப்பதாகத் தாயார் சொல்லியி ருக்கிறார். "அவர் யார் துரைராசா?" "எங்கள் வீட்டுக்கு அதிகமாய் வந்து போகிறவன். தெரியாதா, நீங்களும் பார்த்திருப்பீர்கள்."

"எப்படி நிலைபரம்? உழைப்பென்ன?" "நிலம்புலம் வீடு ஒன்றுமே அவனுக் கென இல்லை. தமிழ்ச் சட்டம்பியார் வேலை தான். தெரியாதா அவருடைய உழைப்பு "உமது மகளுடைய மனம் இரசிப்பதற்கு அவனிடத்தில் என்ன விசேஷ குணம்?" "சங்கீத ஞானம் உள்ளவன். இராமாயணக்கதைகளும் பிறவும் நல்ல இரசபாவத் தோடு பேசுவான்." "அப்படியா! ஆள் எப்படி?" "அளவான உயரம் நல்ல தேகக்கட்டு நிறம் சிவலை, தலை - அடர்த்தியான சுருண்ட மயிர் பக்கங்களிற் படிந்திருக்கும். பார் வைக்குக் கொஞ்சம் அழகானவன் தான்." "அவன் யார் பகுதியைச் சேர்ந்தவனோ?" "என் மனைவிக்குச் சொந்தக்காரன் அவர்தான் தன் பக்கத்து ஆள் என்று அவனி டத்தில் பட்சமும்... ஆனால் தன் மகளை அவனுக்கு விவாகஞ் செய்ய மனம் இல்லை." "ஏன் அப்படி ! அவர்களுக்கு வேறு எங்கே விருப்பம்?" "பொருள் இல்லாத வன் உழைப்புப் போதாதவன் என்று தான். அவர்களுக்கு அப்புக்காத்து சோமசுந் தரம் வீட்டில் தான் மனம் செல்கிறது." "நல்லது, உங்களுக்கு எங்கே செய்ய விருப் பம்?" "எனது கந்தோரில் எனக்குக் கீழ் உத்தியோகத்தராய் இருக்கும் சபாரத்தினத் திற்குத்தான். அவனும் எனது மருமனாக வந்தால் இன்னும் ஒரு படி உயர்வான்."

"ஆ! பாவம் ! துரோகம் செய்து போடாதேயும், குருவிக் கூட்டைக் கலைத்தது போல்"

தில் : என்ன! என்னுடைய உற்ற நண்பனாக இருந்தும் எனது மனப்போக்கைத் தெரியாது பின்னரும் இவ்வாறு சொல்கின்றிரோ? எனது குடும்பத்துக்கு முதன் முதல் வரும் பேர்வழி குடும்பம் முழுவதையும் பார்க்கத்தக்கவனாக அல்லவா இருக்கவேண்டும்.

குடும்பம் நிலைகெட்டால் எங்கள் வாழ்வுதான் யாதோ? இந்தச் சாத்திரங்களைப் பேசிப் பொழுது போக்கலாமே தவிர வாழ்வைச் சீர்பெறச் செய்தல் என்பது முடியாது.

தில்லையர் இவ்வாறு மனக்கசப்புடன் கூறக் கேட்டுச் சிவநேசரும் "நல்லது, நேரமா யிற்று, நான் இங்கே ஓரலுவலாய்ப் போய்வரவேண்டும் நீரும் எழும்பும்" என்று சொல்லி எழுந்து கிழக்கு முகமாய் நல்லூருக்கு வழிக்கொண்டார். தில்லையரும் தமது வீட்டை நோக்கி வழிக்கொண்டார். அப்போது மாலையிருள் கவிந்து எங்கும் பரந்தது. பூமியிலுள்ள பொருட்கள் அவ்விருளில் மறைவதாயின. கார்காலமானபடியால் வானத்திலும் வடக்குத் திசையாக முகில்கள் கறுத்து எழுந்தன. தில்லையது மனத்தைப்போல் எல்லாத்திசையையும் இருள் மூடிக் கொண்டது. நகர வெளிச்சத்தின் உதவியால் அவரும் நடந்து சென்றார். சிவநேசரின் உறுதிமொழிகள் ஒருபுறமாக, விவாக விஷயத்தில் அவரது மனைவியின் முரண்பாடு ஒருபுறமாக, மகள் இராசத்தின் மாறுபாடு ஒருபுறமாக, நடுக்கடலில் புயலில் அகப்பட்ட தோணி போல அவர் மனம் சுழன்றது; நடையுந் தளர்ந்தது. ஒருவாறு நடந்து போய்ப் பெரிய தெருவில் அமைந்துள்ள தமது வீட்டுட் புகுந்தார். தமது அறைக்குள் நுழைந் தார் உடுப்பைக் கழற்றினார். வீட்டு உடையை அணிந்தார் வெளியே வந்து விறாந்தையிலி ருந்த சாய்மணை நாற்காலியில் தொப்பென்று விழுந்தார். மேலே தொங்கிக்கொண்டிருந்த விளக்கைப் பார்த்தவண்ணம் சித்தப்பிரமை பிடித்தவர்களைப் போற் கிடந்தார் அசைவற்று.

இராசம் தன் படிப்பறையில் இருந்து "கற்புக்கரசி" அல்லது, "திலகவதியின் சீலம்" - என்னும் தமிழ்ப் பெண்மணியின் சரித்திரத்தை வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் வாசித்தது அவள் தந்தையின் காதிலும் பட்டது. அவள் வாசிக்கிறாள் :- "சித்திரா தனது மகள் திலகவதிக்கு மணஞ்செய்ய அளகாபுரியை ஆளும் குபேரனைப் போன்ற சம்பத்துள் எவனைத்தான் தெரிந்தெடுத்தல் தக்கதென நினைத்திருந்தாள். பராசேனன் தன்னருமைப் புத்திரிக்கு ஆண்மையில் வீமனும் அறிவில் ஆதிசேடனும் போன்ற மணமகனே தக்கா னென்று திசைகள் தோறும் ஒற்றரை ஏவித் தேடுவித்தான், திலகவதியோ காமனைப் பழிக் கும் கட்டழகும் உயர்சீலமும் கல்வியழகும் வாய்ந்த தன் காதலனையே - அவன் செல்வ சம்பத்தில்லாதவனே எனினும் - மணப்பதென மனந்துணிந்திருந்தாள். தாய் தந்தையர் வேறு எவரையேனும் மணம் பேசி முடிக்க முயன்றால் தான் உயிர் துறப்பதெனவும் உறுதி கொண்டாள்."

"அடி ! பேதாய்!! பெண்களுக்கும் ஒரு மனஉறுதியா? துணிவா? ஏது, பைத்தியத்தனமாக உந்தப் புத்தகத்தை ஏன் படிக்கிறாய் நிறுத்து. நீயும் உவ்வகையில் ஆளாகத்தான் நினைவோ?" என்று இடி இடித்தாற்போன்று கர்ச்சித்தார் தில்லையர். இராசத்தின் கையில் இருந்த புத்தகம் சத்தத்தின் அதிர்ச்சியால் நழுவிற்று, இராசம் திடுக்கிட்டு இடியேறு கேட்ட அசுணம் போல் உயிரொடுங்கித் தாய் பக்கத்தை அடைந்தாள். என்செய்வாள்! பாவம்!! தில்லையரும் கதிரையிற் சாய்ந்தார். தாய் இராசத்தை அணைத்துத் தேற்றினள். சுவர்மணிக் கூண்டும் டிங் டிங்! என்று பத்து அடித்தது. சுந்தரம்மாளும் தில்லையரை "ஏன்? இன்னும் நேரமாகவில்லையா? எழும்புங்கள்" என்றாள் மிக்க பரிவுடன். தில்லையர் "இன்று எனக்கு உடம்பு போதாது. நீங்கள் போய் ஏதோ பார்க்கிறதைப் பாருங்கள்" என்றார். மனைவி கிட்டச் சென்று "ஏன் அதிக யோசனை? மனத்தை விடவேண்டாம். நாளைக்குக் கந்தோருக்குப் போகிறதில்லையா? எழும்புங்கள்" என்று கையில் பிடித்தாள். உடனே அவரும் எழுந்து

சமயலறைக்குப் போனார். "இராசம் சாப்பிட்டுவிட்டாளா?" என்றார் தில்லையர் . "பிள்ளைகள் எல்லாருக்கும் கொடுத்து நித்திரைக்கனுப்பிவிட்டேன். நீங்கள் பாருங்கள்" என்றாள் அவரது மனைவியும்.

தில்லையரும் மனைவியும் போசனம் முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போயினர். தில்லையருக்கு அன்று இரவு முழுவதும் நித்திரை இல்லை. மகளுடைய விவாக நினைவு தான். மனைவியோடும் "குசு குசு" என்று பல நியாயங்களையும் அவிழ்த்துவிட்டார். தான் பிள் ளைகள் உள்ளவரென்றும் குடும்பபாரத்தைத் தானில்லாக்காலத்தும் பார்க்கத் தக்கானொரு வனையே முதலில் குடிக்குள் நுழைத்தல் வேண்டும் என்றும் அதற்குத் தக்கான் சபாரத்தி னமே என்றும் மனைவி முன்னிலையில் முடிவு செய்தார். மனைவி அயர்ந்து தூங் கினாள். அவரோ மனத்தில் எடுத்த காரியம் முடித்தல் அவசியம் என்னும் அவாவினால் வெளி விறாந் தைக்கு வருவதும் உள்ளே படுக்கையறையில் இருப்பதும் மணிக் கூட்டில் மணியை எண்ணு வதுமாக இருந்தார். இராப்பொழுது இன்று நீடித்து நிற்கிறதே என்றும் யோசித்தார்.

மணி ஐந்து அடித்தது. தில்லையர் தலைவாயிற் கதவைத் திறந்து கொண்டு சபாரத்தினம் வீட்டுக்குப் போனார்.

இராசம் இரவு முழுவதும் நித்திரை இன்றி அவஸ்தைப்பட்டாள். கார்கால முகில்கள் போல் அவன் மனத்தில் துக்கங்குவிந்தது. மழையிருளில் நெறிக்கொள்ளும் பேதையைப் போல் அவள் மனம் மயக்க இருளில் தத்தளித்தது. தந்தையின் கர்ச்சனை ஒரு காலத்தும் கேளாத அதிர்ச்சியாயிருந்தமையால் அவள் நெஞ்சை அதிரச்செய்தது. அவளது இரத்த நாடி கள் காட்டாற்றுப் பெருக்குப்போல் வேகமாயோடின. இவ்வாறே , தன்வசமின்றி இருந்த அன் னாளது உடலில் உயிர் அகத்ததோ புறத்ததோ என நிலைகுலைந்தது. படுக்கையின் மேல் உடலில் உயிர் துடிப்பது போல் பக்கத்துக்குப்பக்கம் புரண்டாள், முகம் குப்புறக் கிடந்தாள். ஊழிக்காலத்துத் தீ அக்கடிய காற்றோடு கூடி ஊதினாற்போலச் சிறிது நேரத்துக்கெல்லாம் நெட்டுயிர்த்தாள். சில மணி நேரஞ் சென்றபின் உயிர் சிறிது தேறி அறிவென்னும் ஒளி ஒன் றைப் பற்றியது. "உலகின்கண் பாவம் முழுவதையும் திரட்டிப் பெண்ணெனன் உருவாக் கினான் வேதா என்பதும் பொய்மொழியாமோ? ஈசா! முன்னாளில் என்ன பழி செய்தேன்? பெண்பிறந்து படும் பாடெத்துணையோ? அறிவிலிகள் பெண்களுக்குச் சம உரிமை இல்லை என்கின்றனர். மேலைத் தேசத்துப் பெண்கள் பாக்கியசாலிகள் தான். கீழைத்தேசத்திலும் இந்தியத் தலைவிகளாக விளங்கும் கமலாதேவி, சரோசினிதேவி ஆகியோரின் உழைப்புப் பெண்களை விடுதலைபெறச் செய்வதில் வெற்றியளிப்பதாக தமிழ்நாட்டில் அதுவும் இக் குடும்பத்தில் பிறந்த எனக்கும் ஒரு எண்ணத்தின் கனவுதானும் கைகூடுமா? என் செய்ய லாம்?" என்றெல்லாம் அவள் மனத்தில் அறிவுப்புயல் அடிக்க, சிந்தனைத் திரைகள் ஒன்றன் பின் ஒன்றாய் எழுந்தன. கண்ணினின்றும் நீர் கடையால் ஒழுகித் தலையணையை நனையச் செய்தது.

பட்சிசாலங்கள் சூரியன் வரவை உணர்த்துமாறு போல ஆரவாரித் தன. கருந்திரையாற் போர்க்கப்பட்ட உலகினைத் தன்கரங்களை நீட்டி அப்போர்வையினின்றும் நீக்குவான் போலச் சூரியனும் உதயமானான். அறை ஜன்னல் வழியே சூரியனது கதிர்கள் இராசத்தின் முகத்தில் தாவின. படுக்கையினின்றும் அவள் எழுந்தாள். அதிகாலை ஏது! காரின் சத்தம்?"

என்று மனம் துணுக்குற்றவளாய் ஜன்னல் வழித் தன் கண்களைச் செலுத்தினாள். தங்கள் வாசலுக்கருகில் கார் நின்றதும் அறணித்த கட்டைக் கறுவலான இளங்குமரன் ஒருவன் சட்டென்று கார்க்கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான் - தில்லையரும் பின் தொடர்ந்தனர். இராசத்தின் நெஞ்சில் கல்விழுந்தது. படுக்கையின் மேல் தொம்“ என வீழ்ந்தாள்.

தில்லையர், “அம்மா தம்பி வந்துவிட்டார். மேசைக்குத் துணி வேறு விரித்தீர்களா? கம்பளத்தை எடுத்துக் கதிரையின் மேல் போட்டீர்களா? என்ன செய்கிறீர்கள்?” என ஆரவாரமாய் மணவீட்டில் வேலை பார்ப்பவர் போல் நின்று துடித்தார். வீட்டில் நிசப்தம். மணமகனை நடைகூடத்து மத்தியில் வட்டமேசைக்குப் பக்கத்தில் சித்திரக் கதிரையின் மேல் இருத்தினர். சபாரத்தினம் முகமலர்ச்சியும் புன்சிரிப்பும் உடையராய் அதிஉற்சாகத்தோடு வீற்றிருந்தார். வைரரத்தினம் பதித்த மோதிரத்தைக் கழற்றுவதும் போடுவதுமாய் உள் விறாந்தையை நோக்கி எதிர்பார்த்தார். தில்லையர் உள்விறாந்தையில் நின்று பல்லை நெரித்து, கண்ணை விழித்து, மனைவியை விரட்டினர். சுந்தரம்மாள் இராசத்தின் படுக்கையறைக்குப் போவதும் வெளியே வருவதுமாய், பிள்ளை ஆயத்தப்படுகிறாள் என்று சில நிமிஷங்களைப் போக்கினார். நேரம் காலை எட்டு மணியாயிற்று. இராசம் சுகமில்லை என்று படுக்கையில் தான் தில்லையரும் விறாந்தையில்தான்; சபாரத்தினமும் நடைகூடத்தில்தான். சுந்தரம்மாள் கணவனிடம் இரகசியமாக மகள் இராசத்திற்குச் சுகமில்லை. உயிரோடொத்த காரியம் மிகவும் பொறுமையாகத்தான் பார்க்க வேண்டும் மோதிரம் மாற்றும் சடங்கை மற்றையதோடு சேரவும் வைத்திருக்கலாம். இப்போது ஒருவிதமாய் வந்தவரைத் திருத்தி பண்ணி அனுப்புங்கள் என மொழிந்தாள். தில்லையரும், வேறு வழியின்றி அதற்கு இசைவுகொண்டு “தம்பிக்குக் கோப்பி வைத்தாயா?” என்று உரத்த குரலில் மனைவியை உசாவினர். கோப்பியும் வைக்கப்பட்டது. சபாரத்தினம் அருந்தினர். அருந்தும் பொழுது தில்லையர் கிட்ட இருந்து ”இருந்தாற்போல் பிள்ளைக்குச் சுகமில்லை. எழும்ப முடியாமற் - கிடக்கிறாள். இடாக்குத்தரும் அதிகாலை வந்து பார்த்து மருந்து கொடுத்திருப்பதாகத்தாய் சொன்னார்.“ஆதலால் இன்னொரு நாளில் எல்லாச் சடங்கையும் ஒருசேர வைப்போம். கந்தோருக்கு நேரமாகிறது. போவோம். நானும் வருகிறேன்” என்று உடுப்பை மாட்டிக்கொண்டு காரில் ஏறிவிட்டார். காரும் விர் என்று கந்தோருக்கு ஓடிற்று. சபாரத்தினத்துக்கும் மனம் சோர்ந்தமாதிரியாய் இருந்தது. தந்தை சென்றுவிட்டார் என்பதை அறிந்த இராசத்துக்கு மனநோயில் பாதி கழிந்தது. கொல்லைப் பக்கம் சென்று தனது கடமைகளை முடித்தாள். “சனிக்கிழமை இன்று ஆதலின் நண்பர் நிச்சயமாய் வருவார்“ என்னும் கருத்தால் ஒருபிடி உணவு, கூடவும் உண்டாள்; தனது அறையில் றேந்தை வேலை செய்து கொண்டிருந்தாள்.

“அக்கா! என்ன செய்கிறீர்கள்? சின்னக்குழந்தை எங்கே?” என்று சொல்லிக்கொண்டு உள் நுழைந்தார் துரைராசா கையில் ஒன்றை வைத்துக்கொண்டு. இக்குரல் செவியிற்பட்டதும் இராசம் கண்ணாடியிற் பார்த்துத் தன்னைத் திருத்திக்கொண்டு வேகமாய் உள் வீட்டு விறாந் தையில் வந்து உட்கார்ந்தாள் கைவேலையோடு. சுந்தரம்மாள் கொல்லைக் கதவால், உள்ளே வந்து “தம்பியோ? பிள்ளைகளோடு இருந்து பேசும் வருகிறேன்” என்று சொல்லி விட்டு மாட்டுக் கொட்டிற்பக்கமாய் மாடுகளுக்குத் தீன் வைக்கப் போனாள்.

துரைராசா காதலோடும் இராசத்தைப் பார்த்தார். இராசமும் படபடப்போடு அதிகாலை நிகழ்ச்சிகளைச் சொன்னாள் . துரைராசா “நீர் ஏன் சம்மதமாய்ப் போகக்கூடாது?” என்றார்.

இராசம் மிக்க நாணத்துடன் துரைராசாவை கடைக்கண்ணாற் பார்த்துவிட்டு உங்களை ஒழிய இந்தப் பிறவியில் இல்லை" என்று பிரதிக்ஞை செய்தாள் . துரைராசாவும் தன்னைத் தெரியாமலே உம்மைத்தான் யானும் விவாகம் செய்தால்" என்று பிரதிக்ஞை செய்தார். பின்பு, "நான் என் செய்வேன். உமது பெற்றோர் மாறாயிருப்பதால்" என்று முகங் கறுத்து மொழிந் தார். இராசம் "இந்தப் பிறவிக்கு இவர்களால் தடை எனின் அடுத்த பிறவிக்கென்றாலும் காத்திருப்பேன்" என்றாள் மிக்க துணிவுடன் துரைராசாவுக்கு இராசத்தின் நிலைமையும் அவளது பெற்றோரின் மாறும் கவலையை உண்டுபண்ணியது நடைகூடத்தில் இருந்த கதிரையின் மேல் சாய்ந்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்தார். கவலையைக் காட்டாமல், சுந்தரம்மாளுடனும் பிள்ளைகளுடனும் வழக்கம்போல் இசையோடும் கதையோடும் காலக் ஷேபம் செய்தபின் இராசமும் தானும் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணமே துரைராசா வீட்டுக்கேகினார்.

தாயைத் தன் கைக்குள் அணைத்துக்கொண்டே சபாரத்தினத்தின் சடங்கிற்கு இராசம் மறுத்து விட்டாள். பின், தாய் கோரியதையும் மறுத்தனள். வேறும் பேசிவந்த மணங்களுக் கும் உடன்பட்டாளில்லை. வருடங்கள் எட்டுக் கழிந்தன. தில்லையருக்கும் சுந்தரம்மாளுக் கும் மகள் விஷயத்தில் மனம் சலித்தது. இறுதியாக, மகளுடைய எண்ணத்துக்கு ஒருவாறு உடன்பட்டனர். நல்ல நாளில் நல்ல ஓரையில் காதலரிருவர்க்கும் மணவிழா அதிவிமரி சையாக நடந்தேறியது. பெரியோர் இராசத்தின் கற்புநிலையின் திண்மையை மெச்சினர். பெண்கள் அவளது மனோதிடத்தைப் பாராட்டினர். தில்லையரின் நண்பர்கள் சிலர் இச்சிறுக்கிக்கு இத்துணை மனவலியா? என்று வன்பு பாராட்டினர். எல்லாரும் பெண்பிள்ளை நல்ல கெட்டிக்காரிதான் என்று புகழ்ந்து கூறினர். துரைராசாவும் இசாசமும் கருத்தொத்த இல்லற தருமத்தை இனிது நடாத்தினர்.

கலாநிதி
ஏப்ரல் - 1943

ந.நாகலிங்கம்

1950களில் ஈழத்து இலக்கியத்துக்குள் பிரவேசித்த ந. நாகலிங்கம் நடப்பியல் கதைகள் பலவற்றை ஈழகேசரியில் எழுதியவர். நடைமுறை வாழ்க்கையை அதில் உட்பொதிந்துள்ள உண்மைகளை தமது சிறுகதைகளில் துல்லியமாக வெளிப்படுத்தியவர். இவருடைய சிறுகதைகள் பல ஆசிரியர் வாழ்வுடன் தொடர்புடையதாகப் படைக்கப்பட்டமையால் இவர் ஒரு ஆசிரியராக இருக்கலாம் என நந்தினி சேவியர் போன்றோர் குறிப்பிடுவர்.

- வேதனை
- மானம் பெரிது

வேதனை

ந. நாகலிங்கம்

எடுத்ததற்கெல்லாம் மாதம் முடியட்டும், சம்பளம் எடுத்துத் தந்து விடுகிறேன் என்று ஒரு சாட்டுச் சொல்லிக் கடன்காரரை அனுப்பி வைப் பதுதான் உத்தியோகஸ்தர் வேலை. கடன்காரரிடமிருந்து தப்பித்துக் கொள்ள இந்த மாதாந்தப்படி உதவி செய்வதையிட்டு அவர்கள் போற்றா மல் இருக்கமுடியுமா? அதிலும் எடுத்த சம்பளத்தை அடுத்த நிமிடமே கொடுத்துத் தீர்த்து விட்டு எதிரே வரும் மாதத்தின் வேதனத்தை எதிர் பார்க்கும் தமிழாசிரியருக்கு மாதச் சம்பளமென்ற முறையில்லாவிட்டாற் கடன்காரைத் தட் டிக் கழிக்க வேறேதேனும் உபாயம் உண்டா ? சம்பள த்தை எடுத்ததும் எத்தனையோ சிந்தனைகள், ஆசைகள்: ஆனால்... நடைமுறையிற் சிதைந்து போனவை...

அன்று சம்பளத்தினம். தலைமையாசிரியர் என்னுடைய சம்ப ளத்தைத் தந்தார். வழக்கமாகப் பெற்ற சம்பளத்தைவிடப் பதினைந்து ரூபாய் அதிகமாகக் கிடைத்தது. "இது ஏன் இப்படி" என்று கேட்டேன். "உங்களுடைய சம்பள உயர்ச்சிப் பணமும் கூடுதலான பஞ்சப்படியும் சேர்ந்துதான் இவ்வளவு அதிகரித்தது" என்றார். "அப்படியா? சந் தோஷம்!" என்று சொல்லிக்கொண்டேன். அதே நேரம் கவலைத்தேவி குடிபுகநேரம் செல்லவில்லை.

எத்தனையோ நாட்களாகப் பாடசாலைக்குக் குறித்த நேரம் தவறிச் சென்றிருக்கின் றேன். எத்தனையோ தடவை தலைமைபாசிரியரிடம் மன்னிப்புக் கோரியிருக்கின்றேன். ஏன்? சென்ற மாதத்திலேதானே நான் பாடசாலைக்குச் செல்லும் நேரத்திற்கு முன்பே வித்தியாதரிசிமார் வந்திருந்து கொண்டு என்னைக் கண்டதும், “இப்போது நேமென்ன உபாத்தியார்? சரியாக நாற்பது நிமிடம் பிந்திவந்திருக்கிறீர்கள். இப்படி இருந்தால் பாடசாலை எப்படி உருப்படும்?“ என்று அதிகார தோரணையிற் கண்டித்திருந்தனரே. இத்தனைக்கும் காரணமென்ன? கடிகாரம் ஒன்றிருந்தால் இவ்வித தவறுகட்கு இடமிருக்குமா? இவர்களிட மெல்லாம் அநாவசியமாக நொண்டிச் சாக்குகள் ஏன் சொல்ல வேண்டும். மற்ற உத்தியோகஸ் தர்கள் எல்லோர் கையிலும் தான் கடிகாரம் தோன்றுகின்றதே. என் உடன் ஆசிரியர்களிற் சிலர் கூடக் கட்டியிருக்கிறார்களே. நான் ஏன் ஒன்று கட்டிக் கொள்ள முடியாது. இன்னும் ஒரு பதினைந்து ரூபாய்தானே தேவை. முப்பது ரூபாவுக்கு ஒரு “யப்பான்” கைக் கடிகாரம் வாங்கிக் கொள்ளலாமே. ஆனாற் பதினைந்து ரூபாவை எடுத்துவிட்டால் வீட்டுச் செலவு எவ்விதம் நடைபெறும். சரி. கடிகாரம் வாங்கியே தீருவது. மனைவி கேட்டால் ஏதாவது ஒரு சாக்குச் சொல் லிக் கொள்வது.

பாடசாலைக் கடைசி மணி அடித்தது. மாணவரை வீட் டுக்கனுப்பிவிட்டு நானும் எனது வீடுநோக்கி நடந்தேன். “மனைவியிடமே முழுப் பணத்தையும் கொடுத்துவிட்டு“ ஒரு கைக்கடி காரத்திற்கு முப்பது ரூபாய் வேண்டுமெனச் சொல்லி அவளிடமிருந்து வாங்கிக்கொண்டால் என்ன? வேண்டாம் வேண்டாம். கடிகாரம் பெரிதா? கடன்காரரர் தொல்லை பெரிதா? இவ்வாறு என்னைத் திகைக்க வைத்து விடுவாளே. நான் முப்பது ரூபாவை எடுத்துக்கொண்டு மீதி யைக் கொடுத்தால் எங்கே மீதியென்றால்.... இதுவரை அவள் என்னிடம் அப்படிக் கேட்டதில்லையே. நானும் அப்படிச் செய்ததில்லையே. “இந்த யோசனைகளின் மத்தியில் எனது வீட்டையும் தாண்டிச் சென்று விட்டேன் என்பது என் முன்னால் சென்ற பாடசாலைப் பையன், “எங்கே ஐயா போகிறீர்கள்” என்று கேட்டபோது தான் தெரியவந்தது. திரும்பிப் பரபரவென்று வீட்டையடைந்தேன். மனைவியிடம் கையிலிருந்த பணத்தைக் கொடுத்தேன் மறுகணம் எங்கள் சம்பாஷணை தொடங்கியது.

“வீட்டுச் செலவுக்கு மாத்திரமே இது போதாதே! “பின் வேறென்ன செலவு“? “எத்தனை நாளைக்கிப்படி இருப்பது? குழந்தைகட்குப் பாடசாலைக்குப்போக உடுப்பில்லாமல் இருக் கிறார்கள். சிறுவனின் பிறந்தநாள் வருகிறது நாளைக்கு. நானுந்தான் எத்தனை நாளைக்கு இப்படி வீட்டுக்குள்ளே இருப்பது. ஒரு நல்லநாள் பெருநாளிலாவது வெளிக்கிட்டு எங்காவது போவதில்லையா? அதைவிட அடுத்தவாரம் என் தங்கையின் விவாகமும் நடைபெறவிருக் கின்றது. அதற்கு இந்தத் துப்பட்டித் துணியுடனா போவது? உங்களைப் போன்ற ஒரு உபாத்தி யாயருடைய மனைவிதானே லலிதாவும். அவள் தினம் புதுப்புதுச் சேலையுடுத்திக் கொண்டு வீதியிலே தன் கணவ னுடன் ஒய்யாரமாக உலாவுவதை நீங்கள் காணவில்லையா”

“நீ சொல்வது அத்தனையும் உண்மை. லலிதா என்போன்ற உபாத்தியாயருடைய மனைவி தான். ஆனால் அவள் கணவன் உன் போன்றதொரு ஏழைப் பெண்ணின் கணவ னல்லவே.“இந்த வார்த்தை அவளுக்கு மனதில் தைத்து விட்டதோ என்னவோ, கற்சிலை போல், இல்லை பொற் சிலைபோல், வாயடைத்து நின்று விட்டாள்.

இந்தப் பத்து வருட வாழ்க்கையில் நடைபெற்ற எங்கள் சம்பாஷணைகளில் தான் அவள் மனவேதனைப்பட்டதையறிந்தேன், நான் போற்றத்தான் வேண்டும். என்னுடைய சொற்ப சம்பளத்தில எங்கள் மானத்தைக் காக்க அவளாலன்றி வேறொருவராலும் முடியாது. ஏழைப் பெண் ஒருத்தியைக் கைப்பிடித்ததனாற்றான் இன்றுவரை எனது வாழ்க்கை அமைதியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் இன்று விதியின் வேடிக்கை போலும்.

இந்தப் பாழும் சம்பளத்தினம் ஏன் வந்தது. என் உள்ளத்தின் அமைதியைக் கெடுத்துவிட்டதே. ஒரு உத்தியோகஸ்தன், அதிலும் ஒரு தமிழாசிரியன், தன் சீவிய நாட்களில் வேதனையை அனுபவிப்பது வேதனம் பெறும் தினம் போலும்.

அவள் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் பசுமரத்தாணி போல் என் நெஞ்சின் ஆழத்திற் பதிந்தன. ஆம், எத்தனை மாதங்களாகத்தான் அவளையும், குழந்தைகளையும் ஏமாற்றிவிட்டேன். அடுத்த மாதம் வாங்குவோம் அடுத்த மாதம் வாங்குவோமென்று ஒன்றிரண்டல்ல. அரை வருடத்தையல்லவா போக்கிவிட்டேன். அதைவிட அவளை மனம் வேறு நோகச் செய்துவிட்டேனே. இந்த யோசனைகட்கிடையே எவ்வளவு நேரம் என்னையே மறந்திருக்தேன் என்று தெரியவில்லை.

"அப்பா! அப்பா! எனக்குப் புதுச்சட்ட இருச்சே அம்மா வாஞ்சிச் சஞ்ச" என்று தனக்கே உரித்தான மழலைச் சொல்லிற் பேசி என் மௌனத்தைக் கலைத்தான் எனது கடைசிச் குழந்தை "எங்கேயடா என் கண்ணே" என்றேன் நான். "இஞ்சபார் அம்மாவுக்கும் இருச்சே" என்று சொல்லி ஒரு பார்சலை நீட்டினான்.

வாயடைத்து நின்ற அவள், அவள் தான் என் மனைவி, அப்போது தான் உணர்வு பெற் றவளாய் "வழக்கமாக நாங்கள் துணி வாங்கும் அந்த லத்திபாய் இந்தப் பக்கமாக வந்தான். நான் அப்போது தெருவோரத்தில் நின்றேன். என்னைக் கண்டதும், அம்மா துணி-மணி யேதும் வாங்கவில்லையா?" என்றான். நான் துணி வாங்கப் பணம் இல்லையே என்றேன். "பாரவாயில்லை பிறகு எடுத்துக்கொள்ளலாம். உங்களுக்கு விரும்பியதை வாங்கிக் கொள்ளுங்கள் " என்று தன் பிடவைப் பொட்டணியை அவிழ்த்தான். அதைக் கண்டதும் பிள்ளைகளும் "உடுப்பு வாங்கித் தாம்மா," என்று அழத் தொடங்கிவிட்டார்கள். நான் அந்தச் சேலையை முதலில் எடுத்தேன். அது எனக்கு மிகவும் பிடித்தது. விலை இருபது ரூபாவாம். பின் பில்ளைகளுக்குச் சட்டை தைக்கலாம் என்று மற்றத் துணிகளை எடுத்தேன். அவற்றின் விலை பத்து ரூபாய். எல்லாமாக முப்பது ரூபாய். நம்மிடம் இப்போது ஏது பணம்? விருப்பமில் லாவிட்டால் திருப்பிக் கொடுத்துவிடலாம்" என்று என் மனத்தின் ஆழத்தைச் சோதிப்பவள் போல் கூறினாள்.

அவள் என்னைக் கேளாது வாங்கியது சரியோ பிழையோ அதிருக்க வாங்கிய துணியை, அதுவும் அவள் தனக்குப் பிடித்திருக்கிறதென்று கூறிய சேலையைத் திருப்பிக் கொடுத்தால் அவள் மனம் என்ன பாடுபடும். இல்லைத் திருப்பிக்கொடுக்கலாமென்றாலும் அந்த "பாய்" அதற்கு ஒருப்படுவானா? உண்மையைச் சொல்லி அவனிடம் கொடுத்தாலும் நம்மைப்பற்றி எவ்வளவு ஏளனமாக நினைப்பான். அவனைத்தான் திருப்திப்படுத்தினாலும் பிள்ளைகள் செய்யும் கூச்சல் மன வேதனையாக இராதா? அடுத்த வாரம் நடக்கப்போகும் அவள் தங்கையின் கலியாணத்திற்கு உடுப்பில்லையென்ற காரணத்திற்காக அவ்

வைபவத்திற் பங்குபற்றாமல் இருப்பதா? அது அவர்கட்குத் தெரிந்தால் என் மானம் காற்றில் பறந்து விடாதா? வேறு செய்வதற்கென்ன இருக்கிறது? கடிகாரத்தின் ஆசையை அல்ல அதன் தேவையை மனதோடு நிறைவேற்றிக்கொள்ள வேண்டியது தான். இப்படியெல்லாம் எண்ணமிட்டது என் மனம். எந்தப் பணம் என்னை, இல்லை எங்கள் அனைவரையும், இவ் வளவு நேரமும் கவலையில் ஆழ்த்தியதோ அதை, அந்த முப்பது ரூபாயை, அவளிடம் ஒரு கெட்டுயிர்ப்புடன் ஒப்படைத்தேன்.

ஈழகேசரி
15.10.1950

மானம் பெரிது

ந.நாகலிங்கம்

கோடை விடுமுறைக்காகப் பாடசாலை மூடப்படும் தினம். இரு நூறு மைல் தூரத்துக்கப்பாலுள்ள சொந்த வீட்டிற்குச் சென்று பெற்றோர், சகோதரர், இனசனத்தாரோடு உல்லாசமாக ஒரு மாத காலத்தைப் போக் கலாமே என்ற குதூகலம். தவிர, அன்று பாடசாலையில் நடைபெறப் போகும் நாடகத்தில் நான் பழக்கிய சிறு நாடகமும் சிறந்த ஸ்தானம் வகிக்கப் போகிறதென்ற ஒரே மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியில் அன்று சற்றுநோம் முன்னதாகவே பாடசாலைக்குச் சென்றுவிட்டேன். என்று மில்லாத வகையிற் பாடசாலை வாயிலில் நின்று கடுகடுத்த முகத்துடன் காட்சி கொடுத்தார் பாடசாலை முகாமைக்காரர். என்னைக் கண்டது தான் தாமதம், உரத்த தொனியில், "உமது நாடகத்தை நிறுத்தி விட வேண்டும் அது மிக ஒழுக்கக் கேடானது. எங்கள் பாடசாலையில் நடிக் கக்கூடியதல்ல" என்று பிடுங்கி அடுக்கினார். நியாயமற்ற முறையிலே தமிழன் தலைவணங்கான் என்பதைக் காட்டுவதற்காக நான் அவருடன் வாதாடினேன். நான் கூறுவதை அவர் கிரகித்துக்கொள்வ தாக இல்லை. - நிறுத்தவேண்டியதே என்று அதட்டிவிட்டார். அவரோ பாடசாலையின் முகாமைக்காரர். நானோ ஏழைத் தமிழாசிரியன்.

வாதாடுவதாற் பயனொன்றுமில்லை. வீண்தொல்லைகட்காளாகவேண்டியதுதான். நிறுத்து வதென்ற முடிவுக்கு வராமல் வேறு என்ன செய்ய முடியும்? இந்தத் திடீர் மாறுதலுக்குரிய காரணம் யாது என்பதை அறிவதில் என் சிந்தனையைச் செலுத்தினேன்.

தமிழ் அறவே தெரியாத ஒருவர் என் நாடகத்திற் குறை கூறுவதென்றால்... அதை நன்றாக விளங்கியிருக்க வேண்டாமா? நன்றாக விளங்குவதற்கு எவ்வளவு மெய்ப்பாட்டுடன் மாணவர் நடித்திருக்கவேண்டும். அதற்காக அதைப் பழக்கிய என்னையும், நடித்த மாணவர்களையும் போற்றுவார்கள் என்றல்லவா எதிர்பார்த்தேன், என் மீது எதும் துவேஷமா அவருக்கு, இந்த மாற்றத்தின் மர்மம் தானென்ன?

இப்போதுதான் நினைவுக்கு வருகிறது. அன்று அந்த விஷமக்காரி சொன்னாளே உன்னை என்ன செய்கிறேன் பார் என்று. அவளின் மாய்மாலத்தால் வந்த விபரீதம்தானே இது. இல்லை; அப்படியிருக்காது. எத்தனையோ இளஞ்சிறார்களுக்குக் கற்பித்து, அவர்களின் மனவெழுச்சிகளை நன்கு அறிந்த தாய்மையன்புடைய ஒரு பெண் என் மேல் உள்ள கோபத் திற்காக இளஞ்சிறார்களின் மனதையும் புண்படுத்த நினைப்பாளா என்று எண்ணலானேன்,

நாடகத்திற் பசிகெடுத்த மாணவர் வாடிய முகத்தோடு என்னைச் சூழ்ந்து நின்றனர். அவர்களுக்கு மனத்தாக்கம் அதிகமாகாது தேறுதல் சொல்கிறேன். அந்த நேரத்தில் "என்ன மாஸ்டர்? சதியாலோசனைச் சங்கமே" என்று சொல்லிக் "களுக்"கெனச் சிரித்துச் சென்றாள் அந்த நவநாகரிக யுவதி. ஒருவார காலமாக என் முகத்தையே ஏறிட்டு நோக்காத அந்தப் பெண் இன்று ஏளனச் சிரிப்புடன் சென்றதின் காரணம் எங்கள் மனச்சோர்வுக்குத் தாமே மூலகாரணம் என்பதை அறிவிப்பதற்கா? தன் வெற்றிக்கறிகுறியாகத்தான் இந்தக் கேலிச் சிரிப்புப்போலும்.

தமிழ்மொழியின் அருமை பெருமை யறியாத அந்நிய சமூகத்தினரிடையிலே தமிழ் கற் கும் சில மாணவருக்காக, இலங்கையின் தென்கோடியிலுள்ள ஓர் ஆங்கில பாடசாலைக்குத் தமிழாசிரியனாக நான் சென்றேன். அந்தப் பாடசாலைக்கு நான் மாத்திரமே "தமிழாசிரியன். எல்லா வகுப்புகட்கும் தமிழ்ப்பாசை, இலக்கியம் கற்பிக்க வேண்டியது என் பொறுப்பு. அங்கு தான் அவளும் ஆசிரியை. அவளுடைய வகுப்பு ஒரு தனியறையில் நடைபெற்றது. தினம் ஒரு தடவை அவளுடைய வகுப்பிற்கும் பாடத்திற்குச் செல்வேன். அவளுக்கோ தமிழ் தெரியாது. ஆனால் நான் தமிழ் கற்பிக்கும் போதெல்லாம் அதை மிக ஆவலுடன் கேட்டுக்கொண்டிருப்ப வள்போற் காணப்பட்டாள். நான் வகுப்பிலிருந்து போகும் வரையும் அவள் வகுப்பறையை விட்டு நகருவதே இல்லை! இப்படி நாட்கள் பல சென்றன.

தவணைப் பரீட்சைக்காக மாணவர்கள் ஆயத்தம் செய்யுங்காலம். நான் வழக்கம் போல் அவள் வகுப்புக்குச் சென்றேன். அன்று என்று மில்லாத வகையிற் கூப்பிய கரங்களுடன் என்னை வாவேற்றாள். எனக்குப் பெரியதொரு அதிர்ச்சியாகவிருந்தது. மாணவரும் ஆச்ச ரியப்பட்டிருப்பார்கள். அவர்களும் விழித்த கண் இமையாமல் எங்களையே நோக்கினர். அவள் என்னை நோக்கி மன்னியுங்கள், தவணைப் பரீட்சை சம்பந்தமாய்ச் சில முக்கிய விஷ யங்கள் உங்களுடன் பேசவேண்டியிருக்கிறது. மாணவர்களைச் சிறிதுநேரம் வெளியே போகச் சொல்வீர்களா!" என்றாள். நானும் ஆலோசியாது "ஆம்" என்று சொல்லி அவர்களை வெளியேறச் செய்தேன். அவள் என் பக்கத்தில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்

கொண்டு அதில் அமர்ந்தாள். ஆனால் ஒன்றும் பேசுவதாயில்லை. மௌனத்திற் சில நிமிடங்கள் கழிந்தன. ஏதோ பேசவேண்டுமென்று சொல்லிக்கொண்டு இப்படியேன் இருக்கிறாள். நாமாவது தொடங்குவமே என்று நினைத்து அவளை நிமிர்ந்து பார்த்தேன். அன்று அவள் தன்னை நன்கு அலங்கரித்திருப்பது அப்போது தான் என் கண்ணிற்பட்டது. அவள் அதரங்கள் ஏதோ சொல்வதற்குத் துடித்துக்கொண்டிருந்தன. “தவணைப் பரீட்சை சம்மந்தமாய் ஏதோ பேசவேண்டுமென்றீர்களே“ என்று சம்பாஷணையை நான் தொடங்கினேன். எங்கள் சம்பாஷணை ஆங்கிலத்தில் நடைபெற்றதென்பதை இங்கு நினைவூட்டுகிறேன். “பரீட்சை விஷயமா. அது தான் எல்லாம் முன்னரே பேசியாகிவிட்டதே” என்று புன்னகை புரிந்தாள் அவள்.“வேறு என்ன விஷயமாகப் பேசவேண்டும். வீண்வம்பளப்பதற்கா அதற்கு இப்போது நேரமில்லை பாடசாலை நேரத்தில் தனியறையில் இந்தக் கேலிச் சேட்டைகளை வைத்துக்கொள்ள நான் விரும்பவில்லை என்று சொல்லிக்கொண்டே ஆசனத்தை விட்டெழுந்தேன். அவள் என் கையைப் பிடித்தமர்த்தி “ஏன் இவ்வளவு அவசரம்? என்மேற் கோபமா ஒரு முக்கியமான விஷயமாகத்தான் உங்களோடு பேசவிரும்பினேன். அதற்காகத்தான்“ என்று இடையில் நிறுத்திவிட்டாள். இது என்ன இவள் விளையாட்டு. விஷயத்தை இன்னதென்று வெளிப்படுத்தாது - வீண் காலதாமதம் செய்கின்றாளே. இதை யாராவது கண்டால் என்ன நினைப்பார்கள் என்று எண்ணிக்கொண்டு “சீக்கிரம் சொல்லி முடி. எனக்கு உன்னைப் போல் வேறு வேலை இல்லையா?“ என்றேன். அவள் “அன்பரே! நான் உங்களைத் தனிமையிற் சந்திக்க வேண்டுமென்று பல நாட்களாக விரும்பினேன். தருணம் கிடைக்கவில்லை. இன்றுதான் என் விருப்பத்தைத் தெரிவிக்கத் தருணம் கிடைத்திருக்கிறது. எனக்குத் தமிழ் கற்க மிக விருப்பம். தமிழ் தெரிந்திருந்தால் மன உணர்ச்சிகளை எவ்வளவு நன்றாக வெளியிடக்கூடும். உங்கள் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசையினாற்றான் நீங்கள் கற்பிக்கும் போது அதை மிகக் கவனமாகக் கேட்டு வந்தேன். என்றாலும் சரியாக விளங்கவில்லை. உங்கள் மொழியின் பெருமை தானோ என்னவோ எனக்கு உங்கள் மேலே காதல் உண்டாய் விட்டது” என்றான்.

இதைக் கேட்டதும் என் நெஞ்சு படபடவென்று அடிக்கத் தொடங்கியது. சங்கடத்தில் மாட்டிக்கொண்டேனே. சந்தர்ப்பமறியாமலல்லவா பேசுகிறாள். சங்கடத்தில் மாட்ட நினைக்கிறாளே. “காதலா! என் மேலா! கேலி செய்கின்றயா? அல்லது சித்தசுவாதினம் அற்ற நிலையில் இருக்கிறாயா?” என்று சொல்லி எழுவதற்கு முயன்றேன். அவள் மீண்டும் கையைப் பிடித்தமர்த்தி “நான் கேலி செய்யவில்லை. சித்தசுவாதினம் அற்ற நிலையிலுமில்லை. ஏமாற்றிவிட்டு எழுந்துசெல்ல நினைக்கிறீர்களா? உண்மையையே கூறுகின்றேன். என்னைப்பற்றி நீங்கள் அறிய வேண்டாமா? என் தந்தை ஒரு பிரபல அப்புக்காத்து. நீங்கள் அறிந்திருக்கக் கூடும். என் தாயோ ஒரு தனவந்தரின் செல்வக் குமாரி. அவர்களின் தூய காதலென்னும் பூஞ்செடியில் புஷ்பித்த ஒரேயொரு மலர்தான் நான். செல்லமாக வளர்ந்து வந்தேன். எத்தனையோ வாலிபர் என்னைச் சுற்றி வட்டமிடலாயினர். நான் உத்தியோகத்தையோ. உயர்ந்த பணத்தையோ விரும்பியிருந்தால் இன்று உயர்ந்த இடத்தில் வாழ்க்கைப்பட்டிருப்பேன். ஆனால் உண்மை காதலுக்கு இவை அவசியமா? நம்மை யாராலும் பிரிக்க முடியாது என்று சொல்லிக்கொண்டே என் கரம்பற்றி தன்பக்கம் இழுத்தாள். தீயில் மிதித்து போல் நிலையை அடைந்தது என் மனம், உடம்பு, வெயர்க்கத் தொடங்கியது. ஐயோ! அந்த யன்னல் வழியாக யாரோ பார்ப்பது போலத் தோன்றுகிறதே. மானம்

கெட்டுவிட்டதே. நயமாகப் பேசியே இவளை மடக்க வேண்டும். அல்லது தப்புவதற்கு வழியில்லையென்று முடிவு செய்துகொண்டேன். பின்னர் அவளைப் பார்த்துப் பேசலானேன். "சகோதரி! உங்கள் நிலையை உணராது இவ்விதம் கூறுகின்றீர்களே. உங்கள் நிலைக்கும் எனக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமல்லவா இருக்கிறது. எத்தனையோ உயர்ந்த செல்வந்தரும்; உத்தியோகத்தரும் இருக்கும்போது ஏழைத் தமிழாசிரியனாகிய என்மேல் உங்கள் காதல் பிறந்தது. இந்த விஷயத்தில் ஏனோ உங்கள் அறிவு மங்கிவிட்டது. இப்படியும் ஒரு பெண் இந்த உலகத்தில் உண்டா? தன்னிலும் மேம்பட்ட ஒரு ஆடவனையோ, அன்றேல் தன்னிலும் மேலான ஒருவனையோ தானே விரும்புவாள். காதலுக்கு இவை அவசியமில்லை நீங்கள் கூறலாம். காதலென்றால் என்ன? கருத்தொருமித்த இரு உள்ளங்களுக்கிடையில் உண்டாகும் அன்புணர்ச்சி தானே! அப்படியாயின் இது காதலுமல்லவே. உங்கள் சமூகம் வேறு, மதமும் வேறு. இந்தப் பொருந்தாச் சமயத்தாரை மணந்துகொள்ள உங்கள் சமய குருமாரோ, பெற்றோரோ சம்மதிப்பாளர்களா? மதம் மாறும்படியல்லவா கேட்பார்கள். பட்டம் பதவிகளுக்காகவும், வேறு எந்த நியமங்கட்காகவும் நான் என் மதத்தை மாறிக் கொள்ள முடியாதே. அப்படியாயின் வீண் பழிச் சொற்களுக்கு நான் ஆளாக வேண்டுமே. மானம் பெரிதென்பதை உங்களுக்க வற்புறுத்த விரும்புகிறேன். அதைவிடத் தன்னிலும் உயர்ந்த அந்தஸ்துடைய ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டியிருப்பேன். அவள் அடிமையாகத் தாழ்வு மன்பான்மை கொண்டு நடப்பவன் நானல்ல. நம்மிடையே ஒற்றுமைக்கு வழியேது? இந்த எண்ணங்களை மறந்துவிடுங்கள்" என்று சொல்லிக் கொண்டு எழுந்து செல்ல முயன்றேன். அவள் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "வீண் நியாயங்கள் செல்லித் தப்பவா பார்க்கிறீர்கள். விடமாட்டேன்" என்றாள். சண்டாளி. "என்னைக் கெடுத்துவிடவா நினைத்தாய்?" என்று தைரியத்துடன் கூறிக் கொண்டே அவள் "பிடியிலிருந்தும் விடுவித்துக் கொண்டு விரைவாக வெளியே ஓடிவந்தேன். "உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று அவள் ஆத்திரத்துடன் பேசினாள்.

வெளியில் வந்த நான் நின்றவண்ணமே யோசிக்கலானேன். இவள் உண்மையில் ஒரு பெண்தானா? இப்படியான பெண்களும் உலகத்தில் இருக்கிறார்களா? பாடசாலை நேரத்தில் வகுப்பறை நேரத்தில் இவ்வளவு துணிவாகத் தன் காரியத்தைச் சாதிக்கத் துணிந்தவள் வெளியிடங்களில் யாருமற்ற சூழலில் வாலிபரை மயங்கவைத்துப் பாழாக்கி இருக்கமாட்டாளா? என் சிநேகிதரிற் சிலர்கூட இவளைப் பற்றி என்னென்னவெல்லாம் கூறினார்கள். அத்தனையம் அவள் மேலுள்ள வெறுப்பினால் அவர்கள் கூறும் வார்த்தைகள் என்றல்லவா நான் நினைத்தேன். இவள் விரித்த மோக வலையிற் சிக்காத நான் என் மானத்தைக் காப்பாற்றினேன். பணத்துக்காகவும் பதவிக்காகவும் இப்பெண்ணை நான் விரும்பியிருந்தால் மரியாதைதான் ஏது? மானம் பெரிதல்லவா? "உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்றாளே! என்ன செய்துவிடுவாள். முகாமைக்காரரிடம் இல்லாத பொல்லாத வார்த்தைகளைக் கூறி என்னைச் சங்கடத்தில் மாட்டிவிடுவதற்கு நினைப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? இவளது புறங்கூறலை அவர் கேட்பாரா? என்னைப் பற்றி இதுவரை நன்றாகத் தெரிந்திருக்கமாட்டாரா? தெரிந்திருந்தும் ஏன்? தன் சுயநலத்துக்காக மற்றவரை எவ்வளவோ புறங்கூறி மனச்சாட்சிக்கு மாறாக நடந்து கொள்ளும் ஆசிரியர்கள் நம்மிடையே இருக்கும் போது அவர்களைக் குறைகூறுவதற்கென்ன இருக்கிறது. அதிலும் "பெண் என்றால் பேயுமிரங்கும்" என்பார்களே பெண்தான் தன் காரியத்தைச் சாதிக்கக்

கண்ணீரென்ற ஒரு ஆயுதத்தைக் கைக்கொண்டிருக்கிறாளே! அதைவிட அவளே ஒரு செல்வாக்குள்ள பெண். அவளோடு எத்தனையோமுறை பேசி மகிழ்வதை நான் கண்டிருக்கிறேன். அவர்களுக்கிடையில் அந்தரங்க நட்புக் கூட உண்டெனப் பேசியிருக்கிறார்களே. எவ்வித துன்பத்துள் மாட்டிவிட கங்கணம்கட்டிக்கொண்டிருக்கிறாளே!

சமூகத்திற் புதைந்து கிடக்கும் ஊழல்களையெடுத்து அம்பலப்படுத்தி மக்கள் வாழ்க்கையைப் புனிதமடையச் செய்ய வேண்டுமென்பதற்காகவே நான் அந்தச் சிறு நாடகத்தை எழுதியிருந்தேன். அதுவுமன்றி அதைக் கஷ்டப்பட்டுப் பழக்கினேன்.

ஒருமாதகாலமாக ஓர் ஆசிரியனும் மாணவரும் கரிசனையெடுத்துப் பழக்கிய ஒரு நாடகத்தை ஒரே நிமிடத்தில், அதனை அரங்கேற்றி மகிழவிருக்கும் அதே நேரத்தில் நிறுத்த வேண்டுமென்று மறுத்துரைப்பதற்கு ஒரு முகாமையாளருக்குத் துணிவேற்பட்டதென்றால் இது அவர்கள் அதிகாரப் பெருமையோ, அன்றேல் உண்மையைக் கண்டுகொள்ள முடியாத சிறுமதியோ அல்லது ஆசிரியன் தனதடிமை, அவன் உணர்ச்சியற்ற மரக்கட்டை என்ற தப்பெண்ணமோ யாரறிவார்?

உத்தியோகம் பெரிதல்ல. மானமே பெரிதென்பதை நினைத்து விலகுதற் கடிதத்தை அதே நேரத்தில் சமர்ப்பித்தேன்.

19.11. 1950,
ஈழகேசரி.

நடமாடி

நடமாடி என்ற பெயரில் எழுதியவர் கே.வி. இராசரத்தினம் ஆகும். இவர் சிறுகதை, நாடகம் ஆகிய இருதுறைகளில் ஈடுபட்டவர். இவருடைய சிறுகதை களில் அங்கதமும், இனப்பற்றும், மொழிப்பற்றும் நிறைந்திருக்கும். சிற்பி சரவணபவனுக்கு முன் கலைச்செல்வி என்ற பெயரில் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டு வந்தவர்.

❖ பஞ்சப்படி வாழ்க!

பஞ்சப்படி வாழ்க!

நடமாடி

கலியாணத்தரகர் முருகேசரம்மானை அறியாதவர்கள் கிடையாது. தொண்டு கிழவர் தொடக்கம் பள்ளிக்கூடமரணவர் வரைக்கும் எல்லாரும் அவரை "முருகேசரம்மான்" எனறுதான் அழைப்பார்கள். என்றும் அவருக்கு ஒரே வயது போலும். முருகேசரம்மான் இனிய சுபாபமுடையவர். தேனொழுகப் பேசித் தம் கட்சியை நிலைநாட்டுவதில் மகா நிபுணர்.

காதில் வைரக்கடுக்கன்கள் ஜொலிக்க நெற்றியில் திரி புண்டரமாகப் பூசப்பெற்ற திருநீற்றுக்குமேல் சந்தனப் பொட்டு விளங்கவை தீகத்தின் கோட்டையாகிய சிறிய சிகையுடனும் கக்கத்தில் குடையுடனும் அவர் காட்சியளிக்கும் போது யாரோ ஒரு கன்னிக்கும் காளைக்கும் முடிச்சுப் போடுவதற்கு முனைந்து நிற்கிறாரென்று முடிவு கட்டிவிடலாம். பொருத்தமில்லாத சாதகங்களைக் கூடத் தன் சாமர்த்தியத்தினால் பொருந்தும்படி செய்துவிடுவார். கலிகால மன்மதன் என்று கூட இவரைச் சொல்லலாம். ஆனால், கேவலம் மன்மதன் போல் அவர் மலர்கணையை நம்பித் தனது வேலையைச் செய்வதில்லை. அவர் உபயோ

பிக்கும் கணையெல்லாம் சர்வ வல்லமையுள்ள பணம் என்னும் கணையேயாகும். யௌவன சுந்தரியென்றாலும் சீதனமில்லை என்று சொன்னவுடன் கையை விரித்து விடுவார்! ஆனால் பணக் குவியலுக்கு மேல் வீற்றிருக்கும் மார்க்கட் சுந்தரியென்றாலோ அடுத்தநாளே ஜோடி தேடிப் பிடித்துவிடுவார்.

நம்மூர் ஆண்களின் விஷயம் அவருக்கு நன்றாகத் தெரியும். பணமென்றவுடன் அவர்கள் பறந்தடித்துக்கொண்டு போவார்கள் என்பது அவர் அறிந்ததொன்று. முருகேசாம்மான் சிறு சோதிடரும் கூட. பெண்ணின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் செவ்வாய் என்று கவலைப்படாதீர்கள். பதினொராமிடத்திலிருந்து வியாழன் பார்த்திருக்கிறார். மிகவும் யோகமுள்ள ஜாதகம் இது. கலியாணம் முடிந்தவுடனே மாப்பிள்ளைக்கு உத்தியோகம் உயர்ந்தாலும் உயரும். அப்புறம் முருகேசரம்மான் சொன்னார் என்று சொல்லுவீர்கள்" என்றிப்படியே அளந்து கொட்டி மற்றவர்களைத் திணற அடிப்பார். தற்காலத்தில் தாங்கள் பெண்ணைப் பார்த்துத்தான் நிச்சயம் செய்ய வேண்டுமென்று பிடியாய்ப் பிடிக்கும் பிள்ளைளிருக்கிறார்களே, அவர்களைக் கண்டால் முருகேசரம்மானுக்குப் பிடியாது. "காலிகள்! நாங்களெல்லாம் பெண் பார்த்துத்தானா கலியாணம் செய்தோம். பெற்றோர்கள் பார்த்தார்கள் கலியாணம் முடித்து வைத்தார்கள். நாங்கள் கெட்டுப் போனோமா? இப்பொழுதும் உன் மாமியிருக்கிறாளே, என் காலில் முள்தைத்தால் அவள் தன் இரு கண்களாலும் நீர் சொரிவாள். இவர்கள்ளென்றாலோ பெண்ணைப் பார்க்க வேண்டுமாம். ஏது இவர்கள் சில காலஞ்சென்றால் அமெரிக்கா தேசத்தில் நடை முறையிலிருக்கிறதென்று சொல்லுகிறார்களே, சோதனைக் கலியாணம் என்று, அது போல் சோதனைக் கலியாணம் செய்தபின் தான் கலியாணம் செய்ய ஒத்துக்கொள்வார்கள் போல் தோன்றுகிறது" என்று லெக்சர் அடிப்பார். அவர் பிழைப்பில் மண்போடுபவர்கள் அல்லவா அவர்கள்? எனவே அவர்களைச் சும்மா விடுவாரா அவர்?

முருகேசம்மான் நேற்று முன்தினம் கக்கத்திற் சொருகிய குடையுடன், கையிலே தினசரி ஒன்றைப் பிடித்துக் கொண்டு ஓடி வந்தார். அவர் வரும் அவசரம் என்னைத் திக்கு முக்காடச்செய்தது. என்றுமில்லாத திருநாளாக அவர் என்னை நோக்கி வருவது எனக்கு மிகுந்த அதிசயத்தையுண்டு பண்ணியது. "வாருங்கோ, சவுக்கியந்தானே!" என்றேன். "எல்லாரும் சவுக்கியந்தான்". "வாழ்க மந்திரி சபை" என்று பரபரப்புடன் தினசரியை என் பக்கம் காட்டினார்.

"சங்கதி என்ன? உங்களுக்கேதாவது பட்டம் கிட்டம் வரப்போகின்றதா? ஏது மந்திரி சபைக்குப் பிரமாதமான வாழ்த்து" என்றேன்.

"பத்திரிகையைப் பாரும், அப்புறம் சொல்லும், நான் சரியா பிழையா என்று" என்றார் முருகேசரம்மான்.

நான் பத்திரிகையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தேன், அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றும் உத்தியோகஸ்தருக்கும் கொடுக்கும் பஞ்சப்படியைச் சிறிது உயர்த்திவிடுவதென்று மந்திரி சபை தீர்மானம் செய்திருக்கிறதென்ற செய்தி அப்பத்திரிகையில் கொட்டை எழுத்தில் பிரசுரிக்கப்பட்டி ருந்தது. பஞ்சப்படி விகிதமும் தரப்பட்டிருந்தது. எனக்கு முருகேசரம்மானுக்குச் சந்தோஷமூட்டக்கூடிய செய்தி என்னவென்று தெரியவில்லை. மிரள விழித்தேன். "படிப்பாம்

படிப்பு, இந்தச் சிறு விஷயம் பிடிபடவில்லை" என்று என்னைப் பரிகாசம் செய்தார் முருகேசர்.

"பரிகாசம் வேண்டாம் உங்கள் குதூகலத்துக்குக் காரணத்தைச் சொல்லுங்களேன். நானும் சேர்ந்து உங்களுடன் வாழ்த்துகிறேன்" என்றேன். "பஞ்சப்படி விகிதத்தைப் பாரும் பிரமச்சாரிகளுக்கு ஒரு விகிதமும் மணமானவர்களுக்கு இரட்டிப்புமாகக் காணப்பட வில்லையா?" என்றார். ஆம் அப்படியென்றால் உங்களுக்கு அதனால் என்ன பயன்?" என் றேன். "மூளையைப் பாவியும் காணும்" சும்மா படித்துக் கொண்டிருந்தால் மாத்திரம் கெட்டிக் காரனாகி விடமாட்டீர்! பிரமச்சாரிகள் இப்பொழுது பஞ்சப்படி கூடுதலுக்காக என்னுடைய தயவை நாடமாட்டார்களா? அப்பொழுது சண்டை நாட்களில் கிடைத்த வரும்படி எனக்குக் கிடைக்காதா?" என்றார்.

"சண்டை நாட்களில் என்ன மாதிரி வரும்படி கிடைத்தது?" என்றேன் நான்.

"என்ன மாதிரியா? இதுவும் தெரியாதா? சண்டைக்குப் புறப்படும் சிப்பாய்களுக்கு மணமானவர்களாயிருந்தால் பிரிவுச் சம்பளம் கொடுத்தார்கள். ஆனபடியாற் பட்டாளத்திற் சேரும் ஒவ்வொருவனும் நான் முந்தி நீ முந்தி என்று கலியாணம் செய்ய முன்வந்தனர். என்பாடு இராப் பகலாக வேலை செய்ய வேண்டியிருந்தது. வரும்படியும் மிதமிஞ்சி வந்தது. ஒரு "கார்" கூட வாங்குவதற்கு நான் திட்டம் போட்டுக்கொண்டிருக்கும் போது சண்டையும் முடிவடைந்தது. என்பாடும் திண்டாட்டமாகிவிட்டது. வாழ்க்கைத்தரம் உயர்ந்து கொண்டு போகவே கலியாணம் செய்துகொள்ள எங்கள் ஊர் வாலிபருக்குத் தைரியம் இல்லாது போயிற்று. "கார்" வைத்துக்கொள்ள நினைத்த நான் வயிற்றுச் சோற்றுக்கு அரோகரா சொல்லும் நிலைமைக்கு வந்துவிட்டேன். கலியாணத் தரகர்மார் யாவரும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தி அதன் மூலம் எங்கள் பரிதாப நிலைமையை முதல்மந்திரியாருக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ள வேண்டுமென்று யோசித்தேன். ஆனால் முடிகிற காரியமா? எங்கள் சகாக்களிடத்து ஒற்றுமையில்லை. ஒருவனை ஒருவன் தட்டி யுண்ணப் பார்க்கிறான். இந்த அழகில் சங்கமாவது? விண்ணப்பமாவது? இப்படியெல்லாம் சிந்தித்து மனக்கவலை கொண்டிருக்கும்போது பஞ்சப்படி உயர்த்தப்பட்ட செய்தி கிடைத்தது. ஓடோடியும் சென்று ஒரு பத்திரிகையை வாங்கினேன். வாசித்து வாசித்து மகிழ்ந்தேன். என் சந்தோஷத்தை யாரிடமும் சொல்லாவிட்டால் தலை வெடித்துவிடும் போலிருந்தது. அது தான் உங்களைக் காண ஓடோடியும் வந்தேன்" என்றார்.

ஓகோ! உமது விஷயம் "நெல்லுக்கிறைத்த நீரின் கதைதான் " என்றேன் நான்.

ஈழகேசரி
03.12.1950

சரஸன்

ஈழகேசரிப் பத்திரிகை வாயிலாக நன்கறியப்பட்டவர். சரஸன், சரஸ்வதி தாசன், என்ற புனைபெயரில் எழுதியவர் ஒருவர்தானா என்பதை அறியமுடிய வில்லை. ஆனால் இருவருடைய சிறுகதைகளையும் உற்று நோக்கும் போது ஒத்த தன்மைகள் பல காணப்படுகின்றன. இவ்விருவருடைய சிறுகதைகளும் எடுத் துரைப்பு முறையால் வேறுபட்டாலும் குறிப்பாக மொழிநடையில் ஒருங்கிசைவு காணப்படுகிறது. சமுதாயத்தின் இருப்பினை எதார்த்தவாத அழகியலோடு சிறு கதைகளில் வெளிப்படுத்தியவர்களுள் முதன்மையானவர் சரஸன். நுண்மன அடுக்குகளில் இசை ஏற்படுத்தும் பிரேமையை ஆண், பெண் உறவை மென்னு ணர்வோட்டத்தில் “பவானியின் நினைவு” சிறுகதையில் வெளிப்படுத்தியவர்.

❖ பவானியின் நினைவு

பவானியின் நினைவு

சரஸன்

“சாந்தா, இன்றைக்கு நீ கல்யாணி இராகம் பாடவேண்டும். மற்ற இராகங்களையெல்லாம் உன்னிடம் கேட்டுவிட்டேன். கல்யாணி தான் பாக்கி. இன்று அதைப் பாடிவிடவேண்டும்.” என்றாள் என் பிரிய சிநேகிதி ருக்மணி.

இதைக் கேட்டவுடன் என் முகம் சுருங்கியதை அவள் கவனித்து விட்டாள்.

“சாந்தா, ஏன் உன் முகம் இப்படிச் சுருங்கிவிட்டது? நான் கேட்டது பிசகா?” என்றாள் ருக்மணி.

“ருக்மணி, நீ கேட்டதில் பிசகொன்றுமில்லை. ஆனால் நான் அந்த இராகத்தை மட்டும் பாடுவதில்லை என்று தீர்மானித்திருக்கி றேன். அம்மாதிரி வாக்குக் கொடுத்திருக்கிறேன்” என்றேன். எனது குர லில் ஏக்கம் தொனித்தது.

“ஏன் அப்படி ? யாருக்கு வாக்குக் கொடுத்திருக்கிறாய்? வேடிக்கை யாய் இருக்கிறதே!” என்றாள் ருக்மணி.

என் கணவருக்குத்தான். ருக்மணி. அது ஒரு சோகம் நிறைந்த கதை. அதை ஞாபகப்படுத்தி விட்டாய். சரி. கூறு கின்றேன். கேள்" என்று கதையை ஆரம்பித்தேன்.

"நான் ஒரு ஏழைக் குடும்பத்தில் தோன்றியவள். தாயின் கர்ப்பத்திலிருந்தபோதே தந்தையை இழந்துவிட்டேன். திக்கற்ற என் தாய் பல இன்னல்களுக்கிடையில் என்னைப் பெற்று வளர்த்தாள். ஜீவனோபாயத்திற்கு ஒரு பணக்காரர் வீட்டில் சமையல் வேலை செய்துவந்தேன். வருஷங்களும் ஓடின.

எனக்கு வயது பத்து நிரம்பியது. நாங்கள் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர் ஒரு சங்கீத வித்துவான். குழந்தைகளுக்கு வாய்ப்பாட்டுச் சொல்லிக் கொடுப்பவர். அயல் வீட்டுக்குப் பல பெண் குழந்தைகள் பாட்டுக் கற்றுக்கொள்ள வருவார்கள் . அவர்கள் எல்லோரும் பாடகரிடம் சங்கீதம் கற்கும்போது, நானும் எங்கள் வீட்டிலிருந்து கொண்டே அதில் கவனமும் கருத்தும் செலுத்துவேன். நாளடைவில் எனக்கும் மற்றப் பெண்களுக்குப்- பாடமான ஜண்டை வரிசைகள், வர்ணங்கள் முதலியன பாட வந்து விட்டன. பாடமானவைகளை மெதுவாய்ப் பாடிப் பார்த்துக்கொள்வேன்.

ஒருநாள் இம்மாதிரி நான் பாடிக்கொண்டிருந்ததைப் பாட்டு வாத்தியாரின் மனைவி கேட்டுக்கொண்டிருந்தாள். அவளுக்கு என்ன தோன்றிற்றோ, கணவனிடம் ஏதோ சொல்லியி ருக்கிறாள். இல்லாமற் போனால், என்னை ஏன் அன்று வாத்தியார் கூப்பிடவேண்டும்? நானும் அவர் அறைக்குள் நுழைந்தேன். "குழந்தாய் சாந்தா, நீ நன்றாய்ப் பாடுகிறாயாமே! எங்கே உனக்குத் தெரிந்ததைப்பாடு?" என்றார் அன்புததும்ப. நானும் சற்றுச் சங்கோஜத்து டன் பாட ஆரம்பித்தேன். கடைசியாக, அவர் பெண்களுக்குச் சொல்லிக் கொடுத்த விரி போணி" என்ற பைரவி வர்ணத்தைப் பாடிக்காட்டினேன்.

நான் பாடியதைக் கேட்ட வாத்தியாரின் முகம் மலர்ந்தது. "சாந்தா, இனிமேல் உனக்கும் சொல்லித்தருகிறேன். நீயும் சொல்லிக் கொள்" என்று ஆதரவுடன் கூறினார் அவர். நான் மட் டற்ற மகிழ்ச்சி கொண்டேன்.

நான் எங்கள் அறைக்குத் திரும்பியதும், வாத்தியார் தன் மனைவியாரிடம் சொல் லிக்கொண்டிருந்த வார்த்தைகள் என் காதில் விழுந்தன.

"பார்த்தாயா? நம் வீட் டுக்கு வரும் அத்தனை குழந்தைகளில் ஒன்றாவது இந்தப் பெண் மாதிரிப் பாடக்காணோமே. நான் கத்திக்கத்தி என் தொண்டை நீர் வந்துவதோடு சரி. ஆனால் நான் அதுகளுக்குச் சொல்லிக்கொடுப்பதைக் கருத்துடன் கேட்டு இந்தப் பெண் எப்படிப் பாடு கிறாள்! சாரீரம்கூடப் பிரமாதமாய் அமைந்திருக்கிறது. சொல்லிக் கொடுத்தாலும் இம்மாதிரிக் குழந்தைகளுக்குச் சொல்லித் தரவேண்டும். நமக்கும் பேர் உண்டு அதுகளும் விருத்திக்கு வரும். பாவம்! ஏழைப் பெண் பிழைத்துப் போகட்டும். பணம், காசு இல்லாவிட்டாலும் நல்ல சங்கீத ஞானத்தையாவது பகவான் கொடுத்திருக்கிறாரே!" இம் மாதிரிச் சொன்னார் வாத்தி யார் தன் மனைவியிடம்.

அதுமுதற்கொண்டு, தினமும் எனக்கு அவர் சம்பிரதாயப்படி சங்கீதம் போதிக்கத் தொடங்கினார். இரண்டு வருஷங்களில், பல கீர்த்தனங்கள், இதரவகைகள் எல்லாம் பாட மாயிற்று எனக்கு.

நாளடைவில் நான் பிரமாதமாகப் பாடவும் தொடங்கினேன். என்னைப் பாடச் சொல்லக் கேட்பதில் வாத்தியார் பரமசந்தோஷமடைவார். தவிர, அவருக்குத் தெரிந்த பல நண்பர்களை வீட்டுக்கு அழைத்துவந்து, என்னைப் பாடச்சொல்லி, அவர்கள் கேட்கச் செய்வார். அவர்கள் ளும் மெய்ம்மறந்து என் சங்கீதத்தில் ஈடுபடுவார்கள், "பலே! பாடகரே, சரியான சிஷ்யையைத் தயார் செய்து விட்டீர்கள், போங்கள்!" என்று அவர்கள் உற்சாக மிகுதியால் கூறும் போது, வாத்தியார் புளகாங்கிதம் அடைவார். நான் இத்தனை நன்றாய்ப் பாடுவதற்குக் காரணம் தான் தான் என்பதில் ஒரு அலாதி மகிழ்ச்சி. இருக்காதா?

இவ்விடத்திலே ஒரு விஷயங் கூறவேண்டும். நான் இம்மாதிரிப் பாடுவது என் தாயாருக்குப் பிடிக்கவில்லை . பாட்டுப்பாடுவது அதுவும் பல ஆண்கள் முன்னிலயில் ஒரு ஈனமான காரியம் என்பது அவள் கருத்து. சில சமயம் அவளே என்னைத் தண்டிக்கவும் செய்தாள். அந்தச் சமயத்தில் எனக்காக வக்காலத்து வாங்கிப் பேச வந்து விடுவாள் பாடகரின் மனைவி.

"மாமி, நம் சாந்தா எப்படிப் பாடுகிறாள் என்பது உங்களுக்குத் தெரியாது. நாளைக்குப் பாருங்கள். அவள் பாட்டுக்காகவே, உங்களுக்குக் காலரை கூடச் செலவில்லாமல், ஒருவன் வந்து கொத்திக்கொண்டு போய்விடப்போகிறான் அவளை. அப்போது சொல்வீர்கள்!" என்பாள். என் தாயாரும் இதைக்கேட்டதும் வாயடைத்துப்போவாள். ஏனெனில், அன்றாடம் ஜீவனத் திற்கே "ததிங்கணத்தோம்" போடும்போது, நாளைக்கு எனக்கு விவாகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்போது பணத்துக்கு எங்கே போவது என்ற எண்ணம் அப்போது தான் அவள் மூளையில் உதயமாயிற்று.

எனக்குப் பல இராகங்கள் பாட அப்பியாசம் ஏற்பட்டதாயினும், கல்யாணி இராகத்தில் ஒரு பிரத்தியேகப் பிரேமை ஏற்பட்டது. அந்த இராகத்தைப் பாடுவதில்தான், மற்றெந்த இராகங் களையும் விட, அதிக உற்சாகம் கொள்வேன். நாளடைவில், அந்த இராகமே எனக்கு மிகவும் அழகாய்ப்பாட அமைந்துவிட்டது. சில வித்வான்கள் சில குறிக்கப்பட்ட இராகங்களை விசேஷ மாய்க் கையாண்டு பெயர் வாங்குவது போல், "எனக்கும் கல்யாணி இராகம் விசேஷ இராக மாய்ப் படிந்துவிட்டது. உண்மையைச் சொல்லப்போனால், என் வாத்தியாரே, நான் கல்யாணி இராகம் பாடும்போது மெய்ம் மறந்து போவார் என்றால் வேறென்ன சொல்லக் கிடக்கிறது.

நாளடைவில் , ரேடியோவிற் பாடவும் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. தவிர, பாடகரின் உதவியால் எனக்குச் சங்கீதம் பயிற்றவும், போதிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. வருமானமும் கிடைக்கத் தலைப்படவே, முதற்காரியமாக வயதுபோன என் தாயார் சமையல் செய்து கஷ்டப்படுவதை நிறுத்தினேன். என் தாயார் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தாள், என்னை நன்றி யறிதலுடன் நடத்தினாள். எனக்கும் ஓர் ஆத்மதிருப்தி ஏற்பட்டது.

இந்த நிலையில் திடீரென்று ஒரு சம்பவம் நிகழ்த்துவிட்டது. என்னை வாழ்க்கையில் முன்னுக்குக் கொண்டு வந்த பாட்டுவாத்தியார் காலமாகிவிட்டார். அவருடைய மனைவியும், தன் பிறந்த ஊருக்குச் சென்றுவிட்டாள்.

பின்பு நாங்கள் வேறொரு வீட்டிற்கு மாறினோம். அவ்விடத்திலேயே ஒரு சங்கீத வகுப்பு நடத்திவந்தேன். பல பெண் குழந்தைகள் வகுப்பிற் சேர்ந்து சங்கீதம் கற்றார்கள்.

இப்படியாக ஆறு வருஷங்கள் சென்றன. எனக்கும் வயது இருபது ஆகிவிட்டது. என் தாயாருக்கு எனது கல்யாணத்தைப்பற்றிய விசாரம் கடந்த சில வருஷங்களாய்த் தலைப்பட

ஆரம்பித்தது. என்னிடமும் அதைப்பற்றிப் பேசி வந்தாள். என் தொழிலுக்கும், தன்மைக்கும் பொருத்தமான ஒருவரை நானே தேடி மணந்து கொள்வதாய்ச்சொல்லி வந்தேன்.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு நாள் என் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒருவர் புதிதாய்க் குடி வந்தார். சுமார் வயது முப்பத்தைந்து இருக்கலாம். அவர் பார்ப்பதற்கு மிகவும் வசீகரமாய்த் தானிருந்தார். அவருடன் கூட ஏழெட்டுவயதுள்ள ஒரு அழகிய பெண் மட்டும் இருந்தாள். இவர் களைத் தவிர வேறு எவரையும் காணவில்லை.

அவரைப் பார்த்தது முதல் என் மனம் அவரைப் பற்றிய விவரம் அறிய ஆவல் கொண் டது. ஏன் என்று மட்டும் அப்போது எனக்குத் தோன்றவில்லை. நான் அவர்களைக் கவனித்து வந்ததிலிருந்து, அவர்கள் ஒரு விடுதியிலிருந்து சாப்பாடு தருவித்துக்கொள்வதாய்த் தோன் றியது. தான் வெளியே போகும்போது, தன் பெண்ணையும் கூடவே அழைத்துப் போகிறார். இதையெல்லாம் பார்த்தபோது, ஒரு வேளை அவர் தன் மனைவியை இழந்துவிட்டாரேர் அந் தப் பெண் அவருடைய குழந்தைதானே? வேறு பெண் திக்கில்லையோ அவர்களுக்கு, என்று ஊகித்தேன்.

என் ஊக்கம் நூற்றுக்கு நூறு பங்கு உண்மைதான் என்று சீக்கிரத்திலேயே புல னாயிற்று. ஒரு நாள் வீட் டுக்கு அவரே அந்தப் பெண் குழந்தையுடன் வந்தார்.

“இங்கு சங்கீத வகுப்பு நடத்துவது தாங்கள் தானே என்றார். “ஆம்,” என்றேன்.

“இவள் என் பெண். இவளுக்கும் சங்கீதம் கற்றுக் கொடுக்க வேண்டும்,” என்றார்.

ஆகா! அவர் பேச்சில் தான் எத்தனை வினையம்! குரலில் தான் எவ்வளவு இனிமை!

அதற்கென்ன அப்படியே செய்கிறேன்” என்றேன் இதையெல்லாம் கேட்டுக்கொண்டி ருந்த என் தாயார், அவரைப் பற்றிய விருத்தாத்தங்களை அறிய - ஆவல் கொண்டு, அவரைக் கேள்வி மேல் கேள்வி கேட்டாள். அவர் கூறிய பதி லின் சாராம்சம் வருமாறு :

சுந்தரேசன் என்பது அவர் பெயர். சங்கீதத்தில் மிகப் பிரியம். அரசாங்கத்தில் நல்ல உத்தி யோகம். சம்பளம் இருநூறு ரூபாய். அவருடைய மனைவி பவானி இரண்டு ஷங்களுக்கு முன் ஷயரோகத்தினால் மாண்டுபோனாள். உடன் இருக்கும் பெண் அவர்களுடைய குழந் தைதான். பவானி அற்புதமாகப் பாடுவாள், சங்கீதத்தில் அளவு கடந்த பிரேமை கொண்டவள். சொல்லப்போனால் அவள் அத்தனை சிறுவயதில் இறந்து போனதற்குக் காரணங் கூடச் சங்கீதம் தான் என்று கூடச் சொல்லலாம். அவள் இறந்த பிறகு, மறு விவாகம் செய்து கொள்ள விரும்பவில்லை.

மேற்கூறிய விவரங்களை அவர் கூறும்போது, அவர் கலக்குவதைக் காண எனக்கும் மனம் வேதனைப்பட்டது! சொல்லத் தெரியாத அன்பும் அனுதாபமுக் கொண்டேன் அவரிடமும் அவருடைய பெண்ணிடமும். குழந்தையை அன்புடன் அணைத்துக்கொண்டேன். என் தாயார் உண்மையிலேயே அழுது விட்டாள். “நீங்கள் கவலைப்படவேண்டாம். குழந்தையை நாங்களே கவனித்துக்கொள்கிறோம். எங்களிடமே இருக்கட்டும்” என்றாள் கனிவுடன்,

அவர் என் தாயாரையும் என்னையும் நன்றியறிதலுடன் உற்றுநோக்கினார். சில தினங் களுக்குப் பின் அவருக்கும் எங்கள் வீட்டிலேயே ஒரு அறை கொடுத்தோம். அதிகம் சொல்லு வானேன்? எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவே அவர்கள் ஆகிவிட்டார்கள்.

II

இப்போது அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்படவே, எனக்கு அவர் மீது அன்பு அதிகரித்தது. இதை அவரும் உணர்ந்திருக்க வேண்டும். அத்துடன் அவருக்கும் என் மீது பிரியம் ஏற்பட்டிருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், ஒரு நாள். அவர் என் வேடிக்கை யாக "பாக்கியம், உன் சின்னம்மா உன்னைக் கூப்பிடுகிறார் பார்" என்று கூறி, என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூக்க வேண்டும்?

உண்மையில் அவர் அம்மாதிரிக் குறிப்பிட்டது எனக்கும் பேரானந்தத்தைத் தந்தது. நானும் அவரும் பழகும் முறையைப் பார்த்த என் தாயாருக்கு உள்ளூரத் திருப்திதான்.

கூடிய சீக்கிரத்திலேயே நானும் அவரும் சாஸ்திரப்படி சதிபதிகளானோம். சிறுமி பாக்கியத்திற்கு நிறையக் கீர்த்தனங்களும் உருப்படிகளும் சொல்லிக் கொடுத்தேன். பள்ளிக் கூடத்திலும் சேர்ந்து படித்தாள் அவள். என் சொந்தக் குழந்தை போலவே பாக்கியத்தை நடத்தி வந்தேன்.

எங்கள் கல்யாணத்துக்குப் பிறகு நான் என் கணவருடன் பாங்காய்க் குடித்தனம் செய்வதைப் பார்த்துச் சந்தோஷிக்கக் கொடுத்து வைக்காமல் என் தாயார் சீக்கிரத்திலேயே இறந்து போனார். ஆனால், வெகு திருப்தி ஏற்படத்தான் செய்திருக்கும் அவளுக்கு. அன்று ஒருநாள் என் பாட்டு வாத்தியாரின் மனைவி குறிப்பிட்டது போல ஒரு காலணா செல வில்லாமல் என கல்யாணம் நடந்தது பற்றித்தான !

எனக்கு முன்பு போலச் சங்கீத வகுப்பு நடத்துவதில் அத்தனை உற்சாகமும் இல்லை அவசியமும் இல்லை என்று கூற வேண்டும். எனவே, சங்கீத வகுப்பை நிறுத்திவிட்டேன். ஆனால் நான் மட்டும் தவறாமல் பாடுவேன். வெள்ளிக்கிழமைகளிலும், மற்றைய முக்கிய தினங்களிலும் சுவாமியின் படத்துக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு தம்புரா சுருதியுடன் பாடிவந்தேன். என் கானத்தில் லயித்துப் போவேன். என் கணவரும் சூழ்நிலையை மறந்து லயித்து உட்கார்ந்து விடுவார்.

ஒரு வெள்ளிக்கிழமையன்று, இம்மாதிரி நான் பாடிக் கொண்டிருந்தேன். எனக்குப் பிடித்தமான கல்யாணி இராகத்தை ஆலபானம் செய்யத் தொடங்கினேன். அந்த இராகத்தில் மெய்ம்மறந்து ஈடுபட்டேன். பாடி முடியும் சமயம் பாக்கியம் பரபரப்புடன் என்னிடம் வந்தாள்.

"சின்னம்மா, அப்பா ஏனோ தெரியவில்லை விம்மி விம்மி அழுகிறார்" என்றாள்.

தம்புராவைக் கீழே வைத்து விட்டு அவசர அவசரமாய் அவர் அறைக்குட் சென்றேன். நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பெரு கியது. எனக்கு விஷயம் ஒன்றும் புலனாகவில்லை.

"என்ன இது? ஏன் இப்படிக் காணப்படுகிறீர்கள்?" என்ற கேள்விக்குறி என் முகத்தில் தோன்ற அவரை ஆவலுடன் நோக்கினேன். ஒன்றும் பதில் இல்லை. "என்ன பேசாமல் இருக் கிறீர்கள்? எதற்காக இந்தக் கலக்கம்?" என்றேன், மேலும் ஆவல் தூண்டியவளாய்.

கம்மிய குரலுடன் ஆரம்பித்தார் அவர்.

"சாந்தா, பழைய சோகக் கதை ஞாபகத்துக்கு வந்து விட்டது" என்றார்.

என்ன கதை அது? இப்போது ஏன் ஞாபகத்துக்கு வரவேண்டும்? காரணம்?" என்றேன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு.

"நீ சற்று முன் பாடினாயே கலயாணி இராகம். அதுதான் காரணம்."

"எனக்கு வியப்பு ஒருபுறம், ஆச்சரியம் ஒருபுறம். நான் பாடிய கல்யாணி இராகத்துக்கும், அவர் கலங்குவதற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? விளங்காத புதிராக அல்லவா இருக்கிறது. மீண்டும் அவரைப் பரிதாபமாய் நோக்கினேன்.

என் கணவர் ஒரு நிதானத்துக்கு வந்தார். பின்பு தொடங்கினார்.

"சாந்தா, நீ இப்போது பாடிய கல்யாணி இராகம் கடந்து போன ஒரு துக்க சம்பவத்தினை நினைவூட்டிவிட்டது. உன் மூத்தாள் பவானி உன்னைப்போலவே நன்றாய்ப் பாடுவாள் என்று முனபே சொன்னேன். மற்றெந்த இராகங்களை விடக் கல்யாணி இராகம் மிகப் பிரமாதமாய்ப் பாடுவாள். அதையே அடிக்கடி பாடுவாள் அவள். எனக்கும் அதைக் கேட்கக் கேட்கத் தெவிட் டாது. மெய்ம்மறந்து கேட்டுக்கொண்டிருப்பேன்.

பாக்கியம் பிறந்து அவளுக்கு மூன்று வயது நிரம்பும் வரை எங்கள் வாழ்க்கை இன்ப மாய்த்தான் கழிந்துவந்தது. பின்பு திடீரென்று பவானியைக் காசநோய் பீடித்து விட்டது. ஆரம்பத்தில் அஜாக்கிரதையுடன் இருந்துவிட்டபடியால் நோய் முற்றும்வரை நாங்கள் கவனிக்கவில்லை.

எத்தனையோ சிகிச்சை முறைகளைப் பார்த்தோம். பல வைத்தியர்கள் கூறியபடி பல சுகவாசஸ்தலங்களுக்குப் போய்ப் பார்த்தோம். ஒன்றுக்கும் குணப்படவில்லை.

இந்த நிலையில் பவானி மட்டும் ஒரு விஷயத்தை விடாமற் கைக்கொண்டு வந்தாள். அதுதான் அவளுடைய சங்கீதப் பைத்தியம். தேகம் அவ்வளவு மோசமான நிலையில் இருந்துங்கூட, அவள் உட்கார்ந்து பாடத்தொடங்கிவிடுவாள். என்னையும் பக்கத்தில் உட் கார்ந்து கேட்டு ரசிக்கும்படி செய்வாள். நான் என்ன தடை செய்தாலும் தோல்விதான் எனக்கு. நான் சிவனே என்று அவள் பக்கத்தில் உட்காரந்து கேட்கத் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை. அந்தச் சுகவீன நிலையிலுங் கூட அவள் பாடுவது கேட்கக் கானமிருத மாய்த்தானிருந்தது. அதுவும் அவள் தனக்குப் பிடித்தமான கல்யாணி இராகத்தை எடுத்துக் கொண்டால், கேட்கவே வேண்டியதில்லை! தன் சரீர நிலையைக்கூடப் பொருட்படுத்தாமல் பாடுவாள். பாடி முடிந்ததும் ஆயாசத்துடன் தொப்பென்று படுககையில் சாய்வாள்.

இப்படி கடந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவள் அப்படிப் பாடிக்கொண்டிருந்த போது டாக்டர் வந்துவிட்டார். அவர் மிகவும் கடிந்து கொண்டார். இம்மாதிரிப் பாடினால் சீக்கிரமே நோய் முற்றி உயிருக்கே ஆபத்துண்டாக ஏதுவாகும் என்றும், படுக்கையை விட்டு எழுந்திருக்கக் கூடாதென்றும், பேசவும் கூடாதென்றும் எச்சரித்து விட்டுச் சென்றார்!

சில தினங்கள வரை பவானி படுக்கையிலே மௌனமாய் இருந்தாள். ஆயினும் நீடித்து அவளால் அவ்வாறு இருக்க முடியவில்லை. மெல்லப் படுத்தபடியே ஈனக்குரலில் பாடத்தான் செய்தாள்.

அன்று மாலை நான் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பியதும் பவானி படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். என் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பவள்

போலக் காணப்பட்டது. அறைப் பார்த்ததும் எனக்கேற்பட்ட கோபத்தால் அவளையும், வீட்டில் சகாயத்திற்கு வந்துள்ள என் ஒன்று விட்ட அத்தையையும் கடிந்து கொண்டேன்.

நான் கடிவதையும் பொருட்படுத்தாமல் பவானி கூறினாள் "இப்படி உட்காருங்கள் . கல் யாணி இராகத்தில் ஒரு புது விஷயம் கற்பனையில் உதயமாயிற்று. பாடிக் காட்டுக்றேன் கேளுங்கள்" என்று உடனே பாடவும் தொடங்கி விட்டாள். என் கோபம், பவானியின் உடல் நிலை, என்பொறுப்பு எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டன. கட்டுண்ட நாகம்போலச் செயலற்றுச் சங்கீதத்தில் என் மனம் ஒன்றிப்போய்விட்டது. நான் அதுவரை கேட்காத வகை யில் கல்யாணி இராகம் அத்தனை புதுப்பொலிவுடனும், நவநவமான சங்கதிகளுடனும் திகழ்ந்தது. முன்பு எப்போதையும் விடச் சாரீரமும் அன்று பிரமாதமாய் அமைந்தது. சுமார் இருபது நிமிஷங்கள் பாடியபின், சாரீரத்திலே ஒரு தளர்ச்சி, ஒரு ஆயாசம் ஏற்பட்டது . சரீரத்திலும் அசதி தோன்றியது. அப்படியே பக்கவாட்டில் சாய்ந்தாள். நல்லவேளை! நான் அவளைத் தா ங்கிக்கொண்டிராவிடில் கட்டிலிலிருந்து கீழே தரையில் விழுந்திருப்பாள்.

மெல்லக் கட்டிலில் அவளைப் படுக்கவைத்தேன், அவள் முகத்தை நோக்கினேன். மிரள மிரள விழித்தன. கண்கள் சுழன்று சுழன்று வட்டமிட்டன. மிகப்பயங்கரமான காட்சியாக இருந்தன. "அத்தை, அத்தை" என்று ஆவேசம் வந்தவன் போலக் கூவினேன். அத்தை வருவதற்குள் பவானியின் தலை இரண்டுமுறை ஆட்டங்கொடுத்து நின்றுவிட்டது.

அவள் அலறிப் புடைத்துக் கொண்டு வந்தும் பவானியின் உயிரற்ற உடலைத்தான் காண முடிந்தது. என்னையும் பாக்கியத்தையும் திண்டாடும்படி விட்டு விட்டு, தனக்குப் பிடித்தமான கல்யாணி இராகத்தைப் பாடி யவண்ணம் போய்ச் சேர்ந்தாள் பவானி.

அன்று முதல் கலயாணி இராகத்தை மட்டும் நான் கேட்பதில்லை. மற்றவகையில் அந்த இராகம் எத்தனை சோபையும் ரஞ்சகமும் பொருந்தியதாயினும், என்னைப் பொறுத்தவரை, என் வாழ்க்கையில் ஏற்பட்ட மனப்புண்ணில் கோலிடுவது போல் ஆகிவிட்டது அது. கச்சேரிகளில் கூடச் கல்யாணி இராகம் பாடப்பட்டால் எழுந்து வெளி பேயறிவிடுவேன்.

அன்று முதற்கொண்டு இன்றளவும் அந்த இராகத்தைக் கேட்கவில்லை. இன்று நீ அதைப் பாடியதைக் கேட்டதும் பழைய சம்பவங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்து விட்டன. என்னைக் கலங்கும்படி செய்து விட்டது, உன்னை ஒன்று கேட்கிறேன் சாந்தா. இனிமேல் நீ என் பொருட்டு இக்கல்யாணி இராகத்தைமட்டும் பாடாமல் இருப்பாயா? உனக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்றார் என் கணவர் கெஞ்சியவாறு.

அம்மாதிரி அவர் கெஞ்சிக் கலங்கியது மிகப் பரிதாபமாயிருந்தது. "சர்" என்று ஒப் புக்கொண்டேன். அன்றுமுதல் கல்யாணி இராகத்தை நான் பாடுவதை விட்டொழித்தேன், என் உயிருக்குயிரான அந்த இராகத்தை, என் கணவரின் அபிலாஷையைப் பூர்த்திசெய்யும் பொருட்டுத் தியாகம் செய்தேன். அப்படித் தியாகம் செய்வது முதலில் சத்துக் கடினமாய்த் தானிருந்தது. சில போராட்டமும் நடந்தது என் மனதிலே. நம் அபிலாஷைப்படி நடப்பது; பெரிதா? அல்லது கணவரின் விருப்பத்திற்கிணங்கி கடந்து அவரைத் திருப்தி செய்வது உகந்ததா? என்று எண்ணினேன் "பெண்களுக்குத் தன் கணவன்மார்களின் இஷ்ட ப்படி நடந்து அவர்களை மகிழ்விப்பதுதான் உத்தமம். அதன் பயனாய்த் தங்கள் சொந்த

விருப்பங்களைத் தியாகம் செய்யும்படி சேர்ந்தாலும் செய்து விட வேண்டியதுதான்" என்பது உள்ளுணர்ச்சி தீர்மானமாய்க் கூறியது. இதில் ஒரு வேடிக்கையும் பார்த்தாயா? என் கணவருக்குக் கிடைத்த இரு மனைவிகளும் நல்ல சங்கீத ஞானம் படைத்தவர்களாய் அமைந்தது. அதை விட வேடிக்கை என்னவெனில் இருவருக்கும் கல்யணி இராகத்தின் மீது ஏற்பட்ட பிரமாதமான பிரேமை.

ஆகையால் ருக்மணி இனி மேல் என்னைக் "சல்யாணி இராகம் பாடும்படி வேண்ட மாட்டாயே" என்று கூறி முடித்தேன்.

ஒரு நீண்ட பெருமூச்சுடன் எழுந்து விடை பெற்றுக் கொண்டாள் என் தோழி ருக்மணி.

●

அபலை

மட்டக்களப்பு மண்டூரப் பிரதேசத்தில் இருந்து வெளிவந்த பாரதியில் "விதி கிழித்த கோடு.... சமூகம் காட்டிய பாதை என்ற சிறுகதையை எழுதிய 'அபலை' யின் உண்மைப் பெயர் அறியுமாறில்லை. வறுமையின் கொடுமையால் பெண்கள் பாதை தடுமாறிச் செல்வதனை இச்சிறுகதை சித்திரிக்கிறது. பெண்கள் நிலை தடுமாறிச் செல்வதற்கு ஆண்கள் தான் காரணம் என்பதை இக்கதை சுட்டிக்காட்டுகிறது.

❖ விதி கிழித்த கோடு... சமூகம் காட்டிய பாதை

விதி கிழித்த கோடு... சமூகம் காட்டிய பாதை

அபலை

நான் ஒரு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. ஒரு நீதிபதிக்கோ, அல்லது வேறொரு அரசாங்க உத்தியோகஸ்தனுக்கோ அன்றேல் ஏராளமான ஏக்கர் பொன் கொழிக்கும் வயல் நிலங்களை வைத்துக்கொண்டு ஏழைக் குடியானவர்களை வாட்டிப் பிழிந்து சுகபோக வைபவத்தில் வாழும் நிலச்சுவான்தார் ஒருவருக்கோ, கறுப்பு மார்க்கெட்டில் வியாபாரம் செய்து கொழுத்த பணமூட்டை ஒருவருக்கோ மகளாகப் பிறக்கவில்லை. ஒரு சாதாரண ஏழைத் தொழிலாளியின் மகளாகத்தான் பிறந்தேன். ஆனால் கண்டோர் மயங்கும் அழகியாகப் படைத்துவிட்டான் இறைவன் என்னை. இப்படியின்றி என்னை ஒரு குரூபியாகப் படைத்திருந்தால் நான் வறுமையையும் எதிர்த்துப் போராடி இன்று ஒரு நிம்மதியான, கண்ணியமான வாழ்க்கையிலீடுபட்டிருப்பேன். நாம் வேண்டுவது போல ஆகிவிடுகிறதுதானில்லையே இந்த உலகில். அப்பாவின் கூலி வேலை மூலமாகத்தான் எங்கள் சீவியம் கழிந்தது. நாங்கள் அப்பாவுக்கு நான்கு பெண்கள். அம்மா சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் இறந்துவிட்டாள். நானும் எனது மூத்த சகோதரியும் விவாகமாகும் வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருந்தோம்.

அப்பா அதைப்பற்றிக் கவலைப்பட்டவராகத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் எதிர்பாராத விதமாக எங்கிருந்தோ ஒரு பெண்ணைக் கொண்டுவந்து தனக்கு இரண்டாவது மனை வியாக்கிக் கொண்டார். எங்கள் உடற்பசி அவருக்கெங்கே தெரியப்போகிறது.

என் மூத்த சகோதரி அதிகமாக எங்களுடன் வீட்டில் இருப்பதில்லை. இடையிடை யேதான் வந்து போவாள். அவள் இளமையிலிருந்தே பட்டணத்தில் ஒரு கௌரவம் வாய்ந்த நடுத்தரக் குடும்பத்தினரோடு ஒட்டிக்கொண்டிருந்தாள். நானும் எனது இளைய சகோதரி களிருவரும் வீட்டில்தானிருந்தோம். எனது வயதுக்குத் தக்கவாறு அங்கங்கள் வளர்ச்சி யடைந்து கொண்டிருந்தன. அழகான உடைகள் அணிந்து கொண்டு எல்லாரையும் போல் இலட்சணமாக இருக்க எனக்கு ஆசைதான். ஆனால் அதற்கெல்லாம் தகப்பனாரின் வருவாய் போதவில்லை. கந்தைத் துணியணிந்தே காலத்தைப் போக்கவேண்டியிருந்தது. கந்தையா னாலும் கசக்கிக் கட்டு என்று முன்னர் படித்ததற்கிணங்க ஓரளவு சுத்தமான உடையில் இருக் கப் பார்த்துக்கொண்டேன். இருவேளை உணவாவது திருப்தியாக உட்கொள்ள வேண்டு மென்று கூறியது வயிற்றுப் பசி. ஆனால் ஒரு வேளைகூடத் திருப்தியாகச் சாப்பிட முடியாது எங் கள் வீட்டில். என் தகுதிக்குத் தக்கவாறு ஒரு கண்ணியமான கண் நிறைந்த கணவனோடு கூடி இன்ப வாழ்க்கை நடத்த வேண்டுமென்று வற்புறுத்தியது என் உடற்பசி. அதற்கும் வழி பிறப்பதாக இல்லை இலகுவில். இந்த நிலையில் அப்பாவுடன் தொழில் முறையாகச் சம்பந்தம் வைத்துக்கொண்டார் ஒரு புது மனிதர். அவருக்கு வயது முப்பதுக்கு மேலிராது. விவாகமாகி ஒரு குழந்தையும் உண்டு அவருக்கு. ஊரில் விவாகமாகுமுன்னரே எத்தனையோ... உண்டு என்று கேள்வி. அவரை நான் நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லை. அவர் அடக்கமுடியாத காமப்பசியுடன் என்னை அரைக் கண்ணால் நோக்கும் பொழுதெல்லாம் அவரை அப்படியே எரித்து விட்டாலும் பாதகமில்லை என்றிருந்தது எனக்கு. ஆனால் அவர் வரவைத் தடுத்து வைக்கக் கூடிய திறமை எனக்கு அப்போது இல்லை. இவர் போன்ற கசடர்களால்தான் இன் றைய உலகம் பாழாகப் போகிறது. இப்படிப்பட்டவர்களும் வாழ்வதனால்தான் அநேக பெண்கள் தங்கள் கற்பைக் காற்றில் பறக்கவிட்டு, ஆண்களின் மிருகத்தனமான உடற்பசியை ஆற்றும் இயந்திரங்களாக மாறிவிடுகின்றனர். மானமிழந்த பெண்கள் வாழவும், வயிற்றுப் பசியைப் போக்கவும் வகை தெரியாது இரவாயினும் சரி, பகலாயினும் சரி உணர்ச்சியின்றி உலுத்தர்களின் சுகபோக மெஷின்களாக மாறிவிடுகின்றனர். இதுதானே இன்றும் நடப்பது.

நாட்கள் பல கடந்தன. அந்தப் புதிய மனிதருடன் தினமும் இன்னொரு வாலிபர் வந்து போய்க்கொண்டிருந்ததை என்னால் கவனிக்காமலிருக்க முடியவில்லை. அந்த இளைஞர் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரிந்திருந்தும் அவரை அடிக்கடி காண வேண்டுமென்று என் கண்கள் துடித்துக்கொண்டிருந்தன. அவரது கட்டுக் குலையாத தேக மும், அளவான சுருள்களுடன் கூடிய கேசங்களும், வசீகரமான நடையும் என்னைத் திணற அடித்தன. அவரைப் பற்றி எனக்கு எவ்வளவெல்லாமோ தெரியும். அப்படியிருந்தும் அவரைப் புறக்கணிக்க முடியவில்லை. அவராகவே வலிய வந்து என்னைச் சுற்றிக்கொண்டிருக்கும் போது, அதுவும் இடையில் ஒருவன் எங்களுக்குச் சாதகமாக நிற்கும் போது நான் அசைவற்று மோன நிலையிலிருக்க நான் என்ன தபசியா? தபசிகளும் வேளாவேளைகளில் ... நான் அவர் அழகாகப் பின்னிய வலையில் விழுந்தேன். சிலந்தியின் வலையில் விழுந்த சிறு பூச்சி போல. நாங்கள் இருவரும் அறிமுகமான பின்னர் மூன்றாம் மனிதர் சற்று விலகியிருந்து தான் எங்களைக் கவனித்து வந்தார்.

நான் புதிய இளைஞருடன் இலகுவில் உடற்சம்பந்தம் வைத்துக் கொள்ளவில்லை. அவர் என்னையே மணந்து கொள்வதாகச் சத்தியம் செய்தார். நான், "கேவலம் உங்கள் தகு திக்குத் தக்கவளல்ல" என்றேன். அவர் "நீ, சேற்றில் முளைத்த செந்தாமரை, சிப்பியில் விளைந்த முத்து, குப்பையிலே மலர் கொஞ்சும் குருக்குத்தி" என்றெல்லாம் என்னைப் புகழ்ந் தார். இல்லை முகஸ்துதி செய்தார். அன்றிலிருந்து என் மன உறுதி கலைந்தது. அப்புறம் அவரிடம் நன்றாக நெருங்கிப் பழக ஆரம்பித்து விட்டேன். நாள் தவறினாலும் அவர் என்னிடம் வந்து போகத் தவற மாட்டார். ஆரம்பத்தில் சிலகாலம் எனக்கு உடைக்கோ, உணவுக்கோ நவ நாகரிக வஸ்துக்களுக்கோ பஞ்சமே கிடையாது. அதெல்லாம் கிடைத்தன அவரிடமிருந்து. அவர் அடக்கமுடியாத உடற்பசியினால் என்னைச் சுற்றிக் கொண்டேயிருந்தார். அவர் என் மீது கொண்டுள்ள அன்பின் மிகுதியினால் தான் அப்படியிருக்கிறார் என எண்ணினேன். ஒரு நாள் "நீங்கள் என் ராஜா" என்றேன். "நீ என் ராணி" என்றார். "நிச்சயமாகவா?" என்றேன். "சத்தியமாக" என்றார். "யார் இதற்குச் சாட்சி" என்றேன். "இதோ நம்மைப் பார்த்துக் கொண்டி ருக்கின்றனவே இந்தச் சந்திரனும், நட்சத்திரங்களும் போதாதா என்ன?" என்றார். இப்படி மாதங்கள் சில கடந்தன. நானும் எங்கள் சேர்க்கையின் பலனை அடைந்துவிட்டேன். அவ ருக்கு அப்போதும் உடற்பசி தீர்ந்தபாடில்லை. நான் அவர் போக்கைக்கண்டு ஆச்சரியப் பட்டவளாய்

"இப்படி நீங்கள் இனிமேல் என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கக் கூடாது." அவர் இடைமறித்தார்.

"அப்படியென்றால் இதற்கென்ன அர்த்தம்?"

"இன்னுமா தெரியவில்லை உங்களுக்கு?"

"என்ன என்ன " என்று ஆத்திரப்பட்டார் அவர்.

"எனக்கு இப்போது நான்காவது மாதம்"

அவர் முகத்தோற்றம் மாறுபட்டதைக் கண்டு நான் திடுக்கிட்டேன். "இதை ஏன் இவ்வ ளவு காலமும் மறைத்து வைத்திருந்தாய்" என்றார் மிகவும் கடுகடுத்த குரலில். "இதில் என்ன மறைத்துவைக்க இருக்கிறது."

ஆண், பெண் சேர்க்கையே இனவிருத்திக்காகத்தானே ஆக்கப்பட்டது இறைவனால். நாம் ஈருடல் ஒருடலாக வாழ்ந்தோம் கடந்த ஆறுமாத காலமாக, அதன் பேறுதான் இது".

"நான் இவ்வளவு விரைவில் இப்படி நேருமென்று எதிர்பார்த்திருக்கவில்லை. இதைக் கூடிய கெதியில் இல்லாமற் செய்ய வேண்டும்".

நான் "ஹா" என்று துடித்தேன்.

அவர் சிரித்தார் ஒரு பேய்ச்சிரிப்பு. அன்றிலிருந்து அவர் என்னை நெருங்குவதே கிடை யாது. ஆனால் என் வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்கத் தீவிர முயற்சியெடுக்கத் தொடங்கி விட்டார். அடிக்கடி மருந்துப் பொட்டலங்களுடன் வந்து சேர்வார். அப்போதும் கூட நான் அவர் வஞ்சகத்தை உணரவில்லை. ஆரம்பத்தில் அவர் தந்த மருந்துகளையெல்லாம் உட் கொண்டுவிட்டேன் அவர்பேரில் நான் வைத்திருந்த அன்பின் மிகுதியால். அதனால் எவ்வித

பிரயோஜனமும் கிட்டவில்லை. என் வயிற்றிலிருந்த சிசு வளர்ந்துகொண்டுதான் வந்தது. அன்றொரு நாள் ஒரு மருந்துடன் வந்து சேர்ந்தார். "இப்போது எனக்கு எட்டாவது மாதம். இனி மருந்தினால் எவ்வித பயனும் ஏற்பட்டுவிடாது. அப்படியானால் நான் தான் இறக்க நேரிடும். நான் போன பின்னர் உங்கள் பாடு..." என்றேன்.

அவர் மிகவும் சாந்தமான குரலில் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசினார். "இது கருவைச் சிதைக்கக்கூடிய மருந்தல்ல. முன்னர் அருந்திய மருந்துகளினால் உனக்கு ஏதாவது வந்துவிடாமலிருக்க வேண்டுமே அதற்குத்தான் இது" என்றார். நான் மருந்தை வாங்கிக் கொண்டு சென்றேன். ஆனால் அதை எந்த நியாயத்தைக் கொண்டும் உட்கொள்ளக்கூடாதென்ற ஒரு பிடிவாதம் என்மனதில் உதித்தது. வயது போன ஒரு பாட்டியிடம் கொடுத்தேன். அவர் தந்த மருந்தை, வஞ்சனையின் முடிப்பை,

அவள் "இது நஞ்சு, எட்டாவது மாதக் கருவை இதனால் சிதைக்க முடியாது. உன் உயிருக்கே உலை வைக்கும் ஏற்பாடுதான் இது" என்றாள்.

நான் திடுக்கிட்டேன், விஷப்பூண்டின் மீது மிதித்தவள் போல. நான் இதை நம்பமுடியவில்லையே என்றேன். "நம்புவதற்கும் நம்பாமலிருப்பதற்கும் என்ன இருக்கிறது இதில்" என்று கூறியவாறு கொஞ்சம் மருந்தை எடுத்து ஒருபிடி சோற்றில் புரட்டி வெளியே போட்டாள். எங்கிருந்தோ பறந்து வந்த இரண்டு காக்கைகள் ஒன்றையொன்றை முந்திக்கொண்டு சாப்பிட்டன அந்தச் சோற்றை. ஆனால் அவை இரண்டும் சில நிமிஷங்களில் சீவனற்று விழுந்தன நிலத்தில். அன்று நான் அந்த மருந்தை மறைத்து வைத்து உட்கொண்டிருந்தால் என் கதை ஒருவாறு மறைந்திருக்கும். இச் சோக நாடகம், புரையோடிப்போயிருக்கும் சமூக ஊழல்கள் உங்கள் கற்பனைக்கும் எட்டாததாகிவிடும்.

அன்று போனவர் போனவர்தான். நான் அதன் பின்னர் அடைந்த கஷ்டங்களுக்கோ அளவில்லை. அவரிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. நான் உரிய காலம் வந்ததும் ஒரு குழந்தைக்குத் தாயானேன். ஒரு வேளை உணவுக்கே திண்டாடும் எனக்கு குழந்தை வேறு பிறந்துவிட்டது. நான் உணவு விஷயத்தில் எவ்வித பத்தியத்துடனும் இருக்கவில்லை. பழையபடி கிடைத்ததை உண்டு வந்தேன். இறந்தாவது போய்விடுவோமென்றால் பிள்ளைப்பாசம் குறுக்கே நின்றது. எனக்கே உடல் முழுவதையும் மூடுவதற்குப் போதுமான துணியில்லை. அப்போது குழந்தைக்கு எங்கிருந்து கிடைக்கும் கம்பளி உடைகள். இப்படியாக நாட்கள் போய் மாதங்கள் சில கடந்தன. நான் இவ்வித நிலைமைக்கு வந்தது எவரால் என்பது ஊர் முழுக்கத் தெரிந்தே விட்டது. ஒருநாள் குழந்தையையும் தூக்கிக்கொண்டு எப்படியும் அவரை நேருக்கு நேர் சந்தித்து விடுவதென்ற நோக்கத்துடன் நடந்தேன் அவர் வீட்டை நோக்கி. ஆனால் இடைவழியில் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார் அவர் எதையோ யோசித்தவாறு.

அவர் பக்கத்தில் போனதும் "ராஜா" என்றேன். நான் வழக்கமான குரலில். அவர் நெருப்பை மிதித்தவர் போல் பதறி எழுந்தார்.

"இதோ உங்கள் குழந்தை" என்றேன்.

"இதுவா? என் குழந்தையா?"

"வேறு யார் குழந்தையாம்?"

"ஓகோ எனக்குத் தெரியாதென்றா நினைத்து விட்டாய் அந்த....க்குப் பிறந்த குழந்தையல்லா இது"

நான் மின்சார அதிர்ச்சிக்குட்பட்டாற் போலப் பின்வாங்கினேன்.

"கடவுளே. நீதான் இதற்குப் பதில் கூறமாட்டாயா?" என்று கூறியவாறு இரு காதுகளையும் இறுகப் பொத்திக் கொண்டேன்.

"கள்ளி.ஜாலமா பண்ணுகிறாய். இதெல்லாம் என்னிடமா பலிக்கும்?" எனக்கு மீண்டுமோர் தாக்குதல். என் சப்த நாடிகளும் ஒடுங்கிவிட்டன. "இந்த அவச் சொற்கள் உங்கள் வாயிலிருந்தா வெளிவந்தன. உயிர் பிரிவதனாலும் நம் சம்பந்தம் அற்றுப் போகாது. நாம் அழிவற்ற அமரதம்பதிகள். இதோ வானத்தில் நம்மைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு அழகாகப் பவனி வருகின்றதே இந்தச் சந்திரன். அவனுக்குத் துணையாகப் பக்கத்தில் செல்கின்றனவே தாரகைகள் சாட்சியாக என்று, அன்று அந்த ஆற்றங்கரையில் பரந்த வெண்மணலிலே நிலவொளியில் என் உடலைச் சக்கையாகப் பிழிந்து இன்பத்தின் சாற்றை அள்ளி அள்ளிக் குடித்துக் கொண்டிருந்தீர்கள். அதே உணர்ச்சியுள்ள இதய அஸ்திவாரத்திலிருந்து உருவாகி வெளிவந்த வார்த்தைகள் தானா இது" என்றேன்.

"நீ என்னை எப்படியோ மயக்கிவிட்டாய். எனக்கு முன்னரேயே நீ அவனைப் பழக்கம் செய்து கொண்டாய். பின்னர் பெயருக்கு வந்து சேர்ந்தேன் நான்"

என்னாற் பொறுக்க முடியவில்லை. என்னை அறியாமலே என் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிப்பட்டன. "இதுவரை நான் உங்களைக் கண்கண்ட தெய்வமென்று மதித்தேன். கற்பின் கனியே என்று என் மார்பகத்தில் உங்கள் கரங்களை வைத்தீர்கள். நீங்கள் வயிற்றுப் பசியறியாத உயர்வகுப்பு என்றேன். எல்லாப் பசியையும் ஒருங்கே போக்கடிக்கவல்ல தெய்வீகப் பெண் நீ என்று கூறியவாறு என் உடல் இன்பத்தில் திளைத்துக் கிடந்தீர்கள். நான் உங்கள் காலில் படிந்த தூசிக்கும் பெறாதவள் என்றேன். மதிப்பிடற்கரிய மாணிக்கம் நீ என்று உங்கள் மடியிற் சாய்ந்திருந்த என் முகத்தைப் பின்னால் வளைத்து முத்தமாரிகள் பொழிந்தீர்கள் உங்கள் ஆசை தீரும்வரை. நான் உங்கள் பேச்சையும் செயலையும் முற்றாக நம்பினேன். உங்களையே என் இதய பீடத்தில் வைத்துப் பூஜித்தேன். நான் கருத்தரித்ததும் நீங்கள் என்னைவிட்டுப் பிரிந்தீர்கள். அன்றிலிருந்து என் சுகதுக்கங்களைப் பற்றி அக்கறையில்லாமற் போயிற்று உங்களுக்கு. பின்னர் என் வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்க மூலிகைகள் தேடிக் காடு கரம் எல்லாம் சுற்றினீர்கள். மூங்கிற் சோலைகளெல்லாம் அலைந்தீர்கள். உங்கள் பேரில் கொண்ட அன்பின் மிகுதியால் நீங்கள் தந்த மருந்துகளையெல்லாம் உட்கொண்டேன். ஆனால் கடைசி மருந்து இது உன் சுகத்துக்காக என்று கூறி விஷம் கொடுத்தீர்கள். நான் அவ்வளவுக்குப் பொல்லாதவளாகிவிட்டேன் உங்களுக்கு. நான் இவற்றையெல்லாம் நன்குணர்ந்த பின்னரும் உங்களைப் புறக்கணிக்கவில்லை. எப்போதாவது என்னை வந்து ஏற்றுக்கொள்வீர்கள், எனக்கும் உங்கள் குழந்தைக்கும் வாழ்வளிப்பீர்கள் என்றெல்லாம் எண்ணினேன். இன்றுதான் என் எண்ணத்தில் மண்விழுந்தது. அன்று என்னைப் போற்றிய வாயால் இன்று தூற்றுகிறீர்கள். உங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ததாக, என்மேற் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் உங்கள் மனச்சாட்சி என்னை நிரபராதி என்று தீர்ப்பளிக்கும்.

நான் உடுக்கப் போதுமான துணியின்றி உண்ண உணவின்றி வயிற்றில் குழந்தையுடன் பட்டினி கிடந்தேன். நீங்கள் வயிறு நிரம்பும் வரையும் அறுசுவை உண்டி அருந்திவிட்டு அவ்வுணவு ஜீரணமாகவேண்டி உயர்ந்த விலையுள்ள அயல்நாட்டு மருந்துப்புட்டிகளைக் காலி செய்து கொண்டிருந்தீர்கள். நான் குழந்தையைப் பெற்ற பின்னரும் குளிரில் போர்த்த சாதாரண கந்தைத் துணியாவது இல்லாமல் தவித்தேன். நீங்கள் இலவம்பஞ்சு மெத்தையில் கூட "ஸ்வெற்றர்" போட்டுக்கொண்டு இறக்குமதி செய்யப்பட்ட உரோமக் கம்பளி மேற்போர் வையுடன் நித்திரை செய்தீர்கள். நான் உங்களை எண்ணி எண்ணித் தவித்துக்கொண்டி ருந்தேன். நீங்கள் போதையேறிய சுழற்றும் கண்களுடன் ஊரில் உண்ண உணவும், உடுக்க உடையுமின்றித் திரிந்த எத்தனையோ கற்பரசிகளைப் பலாத்காரமாகக் கற்பழித்துத் திரிந்தீர்கள். யாராவது அறிந்தவர்கள் கண்ணிற்பட்டதும் வயிற்றுவலிக்கு மருந்து தேடிப் போனேன். நாளை வயல் விதைப்புக்குக் கூலியாட்களை ஒழுங்கு செய்ய வந்தேன் என்று இல்லாததையும் பொல்லாததையும் கூறி உங்கள் குற்றத்தை மறைக்க முயன்றீர்கள். இவ்வ ளவுக்கும் நான் இறந்து போயிருக்க வேண்டும். நான் உங்கள் வஞ்சனையை அறிந்திருக்க வில்லை. உங்கள் அன்பு திரும்பவும் கிடைக்குமென்றிருந்து ஏமாந்து போனேன். விவாக மின்றியே நான் உங்களால் ஒரு குழந்தைக்குத் தாயாகியதால் என் மூத்த சகோதரிக்குப் பேசி யிருந்த விவாகமும் தடைப்பட்டுப் பின்னர் வேறொருவரை முடித்து வைக்க வேண்டியதா யிற்று. இப்படியெல்லாமிருந்தும் நான் இப்போது விபச்சாரி, கணிகை, கற்பு நெறிதவறியவள், சமூகத்துக்கே உபயோகமற்றவள் அப்படித்தானே. நீங்கள் உயர்வகுப்பு, அதனால் உங்கள் பேரில் எவ்வித குற்றமுமில்லையென்று பேசுகிறீர்கள்."

"சீ நாயே மூடு உன் வாயை" என்றார் அவர். "ஆம் இன்று நான் நாய். அன்று சிங்கக் குட்டி, யானைக்குட்டி, நீங்கள் தனம் படைத்தவர்கள். எண்ணிறகடங்காத ஏழை எளியவர் களை அடக்கி ஒடுக்கி அவர்கள் உழைப்பைக் கொண்டு வயிறு வளர்க்கும் பெருச்சாளிகள். நீங்கள் எதுவும் செய்யலாம். யாரையும் ஏமாற்றலாம். பொய்யையும் மெய்யாக்கலாம். மெய் யையும் பொய்யாக்கலாம். பொழுது விடியும் வரை தெருத்தெருவாகப் பெண் வேட்டையாடித் திரிந்து விட்டுப் பின்னர் கண்ணியமான வெள்ளை உடையில் மற்றவர்கள் கண்ணில் மண்ணைத்தூவலாம். நீங்களும் உங்களைப் போன்றவர்களும்தான் வாழப்பிறந்தவர்கள். என்னைப் போன்ற ஏழை எளியவர்களுக்கு வாழ்வே கிடையாது இந்த உலகத்தில். அதுவும் என் போன்ற அழகியாகப் பிறந்துவிட்டால் அவர்கள் பாடு அதோ கதிதான். உங்களைப் போன்றவர்கள் காலடியில் கிடந்து கசங்குண்டு நாசமாக வேண்டியதுதான். இதுதானே உங்கள் எண்ணம். ஆனால் ஒரு அபலைப் பெண்ணின் வாழ்வைச் சீர்குலையச் செய்த பாவம் உங்களைச் சும்மா விட்டுவைக்காது. சும்மா இருந்த என்னை ஒரு குழந்தைக்குத் தாயாக்கி அலையவிட்டு விட்டீர்கள். இனி நான் எவ்வளவு கேவலமான வாழ்க்கையையும் நடத்தக்கூடியவாறு சந்தர்ப்பங்கள். சதி செய்தாலும் அதற்குப் பொறுப்பாளி நீங்கள்தான். நீங்கள் ஒரு உயர்ந்த குடும்பத்தில் விவாகம் செய்துகொண்டு ஆரம்பத்தில் சுகபோக வாழ்க்கை நடத்தலாம். ஏழை எளியவர்களை அடக்கி ஆளலாம். ஆனால் என்றோ ஒரு நாளைக்கு உங்கள் பொருள் பண்டங்கள் எல்லாம் உங்கள் சொந்தத் துர்க்கிரியைகளினால் அழிந்து போகும். உங்கள் உடல் வலிமை சிதைந்து போகும். இன்று உங்கள் காலடியிற் கிடந்து கசங்கும் தொழிலாளரிடம் நீங்கள் உதவி கேட்பீர்கள். ஒரு "கப் ரீ"க்கு உங்கள் மானத் தைக் காற்றில் விட்டு வாயைத் திறப்பீர்கள். அவர்கள் நீங்கள் முன்னர் செய்த அநியாயங்

களைக், கொடுமைகளை மறந்து விட்டு உங்களை உள்ளன்புடன் ஆதரிப்பார்கள். அவர்கள் குடிக்கும் கஞ்சியிற் பாதியை உங்களுக்குத் தருவார்கள். தாங்கள் தலைக்கு அணையாக வைத்துப் படுக்கும் வைக்கோல் சாக்கையும், படுக்கைக்கு உபயோகிக்கும் கிழிந்த ஓலைப்பாயையும் தருவார்கள். அப்போதுதான் நீங்கள் உங்கள் அற்பத்தனத்தைக் கண்டு அருவருப்பீர்கள். அவர்களது பண்பட்ட மனிதத்தன்மையைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். உங்கள் மனச்சாட்சி உங்கள் உடலையும், உள்ளத்தையும் அரித்து அரித்துத் தின்று கொண்டிருக்கும். அப்போதுதான் நீங்கள் எனக்குச் செய்த துரோகச் செயலை நினைந்து பச்சாதாபப்படுவீர்கள். மனிதரிடம் மட்டுமல்ல, இறைவனிடமும் மன்னிப்புக் கேட்டு நிற்பீர்கள். இனி உங்களிடம் பேசுவதற்கு எதுவுமேயில்லை நான் போகிறேன்"

அவர் அசைவற்றுச் சிலைபோலிருந்தார். நான் வந்த வழியே திரும்பினேன். காலம் கடந்தது. நான் விபச்சாரி என்பதாக எனக்குச் சமூகம் பெயர் சூட்டிற்று, எந்தத் துணிவுள்ள, சமூக முன்னேற்றத்தில் அதிகம் கவலை கொண்டுள்ள வாலிபனாவது என்னை மணந்து கொள்ள முன்வரவில்லை . ஏன்? நான் விபச்சாரியாம். இனிச் சும்மா இருப்பதில் காசுக்குப் பய னில்லை. மீண்டும் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டேன். அது அப்பாவுடன் வேலை செய்து வந்த குடும்பஸ்தருக்குத்தான். ஆசை தீர்ந்த பின்னர் அவரும் என்னைக் கைவிடவேண்டிய தாயிற்று. பின்னர் எனது மைத்துனர் (மூத்த சகோதரியின் கணவரின் சகோதரன்) "அழகு ராணி" என்பதற்காக என்னை மனைவியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார். இவரும் எவ்வளவு காலம் என்னுடன் நிலைத்திருப்பார் என்று திட்டமாகக் கூறமுடியாது. என்றைக்கோ ஒரு நாள் அவர் ஆசை தீர்ந்த பின்னர், அழகற்றவளாகத் தென்படுவேன் நான் அவர் கண்களுக்கு. அவர் வேறொரு பெண்ணைத் தேடிப்போவார். இனி நான் ஆண்களின் அற்ப சுகத்திற்காக என் முந்தானையை விரிக்க வேண்டியது தான். அப்போதுதான் என் சீவியம் ஒருவாறு கழியும். இதுதான் நான் எதிர்பார்த்திருப்பது. ஏன்? விதி கிழித்த கோடு. சமூகம் காட்டிய பாதை எல்லாம் அது ஒன்றுதான்.

இன்று எத்தனையோ பெண்கள் என்னைப்போல, நான் எதிர்பார்த்திருப்பது போல் வாழ்விழந்து, மானமிழந்து "வேசிகள்" என்ற பெயருடன் வாழ்வதற்கு யார் பொறுப்பாளி? இன்றைய சமூகம் தானே. ஏழைக் குடும்பங்களிடையே ஆண்டவன் அழகான பெண்களைப் படைப்பது உயர் வகுப்பினரின் உபயோகத்திற்குத்தானா? இல்லவேயில்லை. வருங் காலத்தில் இந்த அநாகரிகமான, தர்மமற்ற, முறைகேடான வழக்கம் ஒழிய வேண்டும். நம் சமூகத்திடையேயிருந்து வருங்காலத்தில் படித்த பெண்களும் ஆடவரும் புரட்சிகரமான ஒரு நேர்மையான பாதையிற் போய் நம்நாடு சிறந்து விளங்கப் பாடுபட வேண்டும். அடிமைத்தனம் அகல வேண்டும். சுரண்டும் அதிகார வர்க்கத்தினரை அடியோடு தொலைக்க வேண்டும். ஏழைப் பெண்களும் சுகமாக, மானமாக வாழவேண்டும் என்ற விரிந்த பண்பட்ட மனப்பான் மையுடன் தொண்டு புரிய வேண்டும். வையகமும் வானகமாய் மாறவேண்டும். இதுவே எனது உடைந்த உள்ளத்திலிருந்தும் வெளிவரும் வேண்டுகோள். இனி உங்கள் பாடு.

பாரதி

279321

கிராமத்துப் புழுதியின் வாசத்தை அள்ளித் தெளித்த கதைகள் இந்தத் தொகுதியில் உள்ளன. மண்ணோடு மண்ணாக வாழ்ந்த மனிதர்களையும், இரத்தமும் சதையுமான அவர்களின் வாழ்க்கையையும் உயிர்த் துடிப்போடு இக்கதைகள் பேசுகின்றன. இயற்கையின் சௌந்தரியத்தை இக்கதைகள் மீட்டுப் பார்க்க வைக்கின்றன. அழகிய ஒரு வாழ்க்கை இருந்து மறைந்து போன துயரத்தைச் சொல்கின்றன. நினைவுக் கிளர்த்தலைச் செய்து, கழிவிரக்கம் கொள்ள வைக்கின்றன.

ஒரு நூற்றாண்டு கடந்தும், தொழிநுட்பஞ் சார்ந்து பல மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்ட போதும் ஒரு பாரம்பரியம் இன்றும் தொடர்வதற்கு ஆதாரமான வாழ்வை இக்கதைகள் பேசுகின்றன. இவை எமது பாரம்பரியத்தின் ஆவணங்கள். காலத்தின் கருவூலங்கள்.

இயல்வாணன்

9789557331072

நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற்) லிமிட்டெட், 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.